வில்லிபாரதம்

பாகம் (6) [௬] ஆறு.

பீஷ்ம, கர்ண, துரோண

பருவம்

வீடும, துரோண, கர்ண

பர்வம்

ஸ்ரீ

வில்லிபுத்தூரார்

இயற்றிய

மகாபாரதம்

விட்டும துரோண கன்ன பருவங்கள்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர்

இயற்றிய உரையுடன்

வை. மு. நரசிம்மன்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் கம்பெனி

17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி,

சென்னை-5.

ஹேவிளம்பி ௵ ஐப்பசிமீ } 1957 [விலை ரூ. 8—50

இரண்டாம் பதிப்பு

வீட்டும பருவம் 1 - முதல் 10 - வரையுள்ள பாரங்களும், துரோண பருவம் 1-முதல் 33 வரையுள்ள பாரங்களும் வள்ளலார் அச்சகத்தி லும்; மற்றையவை ஆனந்தாபார்வதி அச்சகத்திலும் அச்சிடப்பட்டன,

பொருளடக்கம்.

முகவுரை.

அருந்தமிழன்பர்காள்!

படிப்பதற்கு மிக இனிய வில்லிபுத்தூரார் பாரதத்துப் போர்ச் சருக்கங்கட்கு, காலஞ்சென்ற ஸ்ரீ. உ. வே. வை. மு. சடகோபராமாநுஜாசார்ய ஸ்வாமிகளும், ஸ்ரீ. உ. வே. சே. கிருஷ்ணமாசார்யஸ்வாமிகளும் உரைகண்டு வெளியிட்டிருந்தமை இத்தமிழுலகு நன்கறியும். அவற்றுள் சல்லிய சௌப்திக பருவங்களடங்கிய பதினெட்டாம் போர்ச்சருக்கம் முன்னரே அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது. எஞ்சிய பதினேழுநாட் போர்ச்சருக்கங்களும் கிடைப்பது வெகு அருமையாய் விட்டதனாலும், பலரும் அப்பகுதிகளை வேண்டுவதனாலும், அவ்வுரையையே பார்வையிட்டுச் சில திருத்தங்கள் செய்தும், சங்கப்பதிப்பிலுள்ள பாடங்களோடு ஒத்துப் பார்த்து அப்பதிப்பிற் சிறப்புற்றிருந்த பாடங்களை மேற்கொண்டும் மூலமும் உரையுமாக இந்தப்பகுதியை வெளியிட்டனர் எனது தமப்பனாராகிய ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யஸ்வாமி அவர்கள். அப்பதிப்பில், அபிதானசூசிகையகராதி, அரும்பதவகராதி, சில அருந்தொடர்கள் முதலியன இறுதியிற் சேர்க்கப்பட்டன. இந்த இரண்டாம்பதிப்பு முதற்பதிப்பையொட்டியே அமைக்கப்பட்டிருப்பினும், சில அரிய விடயங்கள் உரிய இடங்களிற் சேர்க்கப்பட்டு மிளிர்கின்றன. மற்றும், செய்யுண்முதற்குறிப்பகராதியும் இப்பதிப்பில் இணைக்கப்பட்டுள்ளது. இப்பதிப்பு அச்சாகுங்கால், அரிய விடயங்கள் சேர்த்தல், அச்சுப்பிழைதிருத்தல் முதலிய பல்லாற்றானும் தமது பேருழைப்பினை நல்கி, இப்பதிப்பைச் செம்மையுற ஆக்குதற்கு உதவியவர் சென்னை விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத்தமிழ்ப் பேராசிரியர், வித்வான் C. ஜெகந்நாதாசார்யர், M.A., L.T. Dipl. Geog. என்பவர். அவருடன் உதவி புரிந்தவர் ஈகை ஸ்ரீ. E. S. வரதாசார்யர் B. A. இவ்விருவர் திறத்தும் நன்றியறிதலுடையேன்.

இந்நூல் செவ்வன் முற்றுப்பெறத் தோன்றாத்துணையாயிருந்த தேர்கடவிய பெருமானின் கழலிணைகளை அநவரதமும் வழுத்துவேன்.

ஹேவிளம்பி ஆ }
ஐப்பசி மீ }

வை. மு. நரசிம்மன்.

மகாபாரதம்

பாடிய

வில்லிபுத்தூரார் வரலாறு.

வில்லிபுத்தூராரென்பவர், தமிழில் மகாபாரதம் பாடிய ஒரு மகா கவி; இவர் **பிராமணசாதியிற்** பிறந்தவர். இவருடைய **மதம்** திருமண் காப்புத்தரிக்கும் **வைஷ்ணவ** மென்பது, இப்பாரதத்தின் முதலிலும் இந்நூற் சருக்கங்களின் தொடக்கம்பலவற்றிலும் இவர் ஸ்ரீமகா விஷ்ணுவின் விஷயமாகவே பலவாறு கடவுள் வாழ்த்துக் கூறியுள்ள தனாலும், "எங்கள் மாதவன்" என்று நூலைத் தொடங்கி யிருப்பதனா லும், வில்லிபுத்தூராழ்வாரெனத் திருநாமமுடைமையாலும், ஒன்ப தாம்போர்ச்சருக்கத்துக் காப்புச்செய்யுளில் "ஓராறுபேதசமயங் களுக்கு முருவாகிநின்ற வொருவ, **னீராறுநாம முரைசெய்து மண்கொ டிடுவார்கள்** காணுமிமையோர்" எனத் துவாதசோர்த்துவ புண்டரத் தைச் சிறப்பித்துக் கூறியதனாலும், பதினைந்தாம்போர்ச்சருக்கத்துக் காப்பில் "கொத்தவிழ்த்த சோலைமன்னு குருகையாதி நெஞ்சிலே, வைத்த முத்திநாதன்" என நம்மாழ்வாரையும், பத்தாம்போர்ச்சருக் கத்துக் காப்பில் "**கலியனெங்கள் மங்கையாதி** கண்டுகொண்ட நாமமே" எனத் திருமங்கையாழ்வாரையும் கூறியுள்ளதனாலும் தெளி வாகும்.

நடுநாடென்று சொல்லப்படுகிற திருமுனைப்பாடி நாட்டில் **சனியூரிலே** பிராமணசாதியிலே வைஷ்ணவமதத்தில் **வீரராகவாசாரிய** ரென்பவர்க்குத் திருக்குமாரராய்த் திருவவதரித்து *வில்லிபுத்தூ ராழ்வாரென்று இயற்பெயர்பூண்ட இவர் **பாரதம்பாடிய காரணம்:—** இவர் இளமையிலே நல்லாசிரியரையடுத்துக் கல்விகற்று, இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழிலும் மிகவல்லவராய் வடமொழியி லும் மிக்கதேர்ச்சிபெற்று, ஆசு மதுரம் சித்திரம் விஸ்தாரம் என் னும் நால்வகைக் கவிகளையும் மிகஎளிதில் அமிழ்தினும் இனியன வாகப்பாடவல்லவராய், சேர சோழ பாண்டியரென்னுந் தமிழ்நாட்டு மூவேந்தர்களாலும் மிக்க சிறப்புடன் விரும்பியழைக்கப்பட்டு ஆங் காங்குச்சென்று தமது கல்வித்திறத்தைப் பலவகையாலுங் காட்டி அவர்களைக் களிப்பித்து, அவர்கள் அன்போடு அபிமானித்து மிகுதி யாகவழங்கிய சிறந்த பல பெரும்பரிசுகளைப்பெற்று, பற்பல கவிகள் பாடித் திருமாலை இரவும் பகலும் எப்பொழுதுந் துதித்துக்கொண்டு, தமிழ்நாடு முழுவதிலும் தமது கல்விப்பெரும்புகழைப் பரவச்செய்து வந்தார். அங்ஙனமே வருகையில், முற்கூறிய திருமுனைப்பாடிநாட் டிலே **வக்கபாகை** யென்னும் இராசதானியில் வீற்றிருந்து செங்கோல் செலுத்திய கொங்கர்குலத்துத்தோன்றிய **வரபதியாட்கொண்டா**

---

*வில்லிபுத்தூராழ்வாரென்பது - ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவ தரித்த பெரியாழ்வார்க்கு வழங்கும்: அதனையே இவர்க்கு இட்டன ரென்க. இச்சொல் வில்லிபுத்தூராரென்றும் வழங்கப்பெறும்.

னென்கிற அரசன், இவ்வில்லிபுத்தூராரது கல்வி கேள்வித் திறமைகளைக் கேள்வியுற்று இவரை வரவழைத்து அநேக சன்மானங்கள் செய்து தனது ஆஸ்தானபண்டிதராக அமைத்துவைத்து, ஒருநாள் இவரை நோக்கி 'வடமொழியில் ஸ்ரீவேதவியாசமகாமுனிவரால் விரித்துரைக்கப்பட்ட மகாபாரத சரித்திரத்தைச் செந்தமிழில் விருத்தப் பாடல்களினால் ஒருபெருங் காப்பியமாகப் பாடித் தந்தருளல்வேண்டும்' என்று பிரார்த்திக்க, இவர் க்ருஷ்ணனுடைய சரித்திரம் ஆங்காங்குவருவதுபற்றி அவ்வேண்டுகோளுக்கு இசைந்து மகாகாவியமாகச் சொற்சுவை பொருட்சுவைகள் மிக்கு விளங்கும்படி நல்ல நடையிலே அதனைப் பாடியருளினார்.

இவர், தம்காலத்திற் கல்விச்செருக்கு அடைந்திருந்த புலவர்கள் பலரையும் தமது வித்தியாசாமர்த்தியத்தால் வென்று, அவ்வெற்றிக்கு அடையாளமாக, தோற்றுப்போன புலவர்களின் காதுகளைத் தமதுகையிலே எப்பொழுதும் ஆயுதமாகவைத்துக் கொண்டுள்ள துறட்டுக்கோலால் மாட்டியிழுத்து அறுத்துவந்தன ரென்பது, "குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டிய னிங்கில்லை **குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி, யெட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை** யிரண்டொன்று முடிந்து தலையிறங்கப்போட்டு, வெட்டுதற்கோ கவி யொட்டக்கூத்த னில்லை விளையாட்டாக் கவிதைதனை விரைந்துபாடித், தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே" என வழங்குந் தனிப்பாடலினால் அறியப்படும். இவர் காலத்து அரசர்கள் இவரிடத்தில் மிகவும் அன்புவைத்திருந்ததனால், இவர் இங்ஙனஞ்செய்ய இடங்கொடுத்து வந்தார்கள்.

இவருடைய **காலம்** - பாயிரத்தில் "நான்காஞ்சங்கமென முச்சங்கத் தண்டமிழ்நூல் கலங்காமல் தலைகண்டானே" என்று இவர் காலத்திலிருந்த வரபதியாட்கொண்டானென்னும் அரசனைக் கூறியிருத்தலாலும், அவ்வரசனை இரட்டையர்களும் பாடியிருத்தலாலும், அவ்விரட்டையரால் பாடப்பட்ட இராசநாராயணசம்புவராயனென்பான் கி. பி. 1331 - 1383 - வரை ஆட்சிபுரிந்தவனென்று சாசன வாராய்ச்சியாளர் கூறுவதாலும் இவர் காலம் கடைச்சங்கத்தார் காலத்துக்குப்பின் பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதி யாகுமென்றும், அருணகிரியார்காலமும் இதுவே யென்றும் கூறுவர்.

இவ்வில்லிபுத்தூரார் சிவத்துவேஷம் பாராட்டுகிற வீர வைஷ்ணவ ரல்லர். அது - முதலில் விநாயகஸ்தோத்திரஞ் செய்திருத்தலாலும், அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கத்திலும் அருச்சுனன்தவநிலைச்சருக்கத்திலும் பதின்மூன்றாம்போர்ச்சருக்கத்திலும் சைவசம்பிரதாயத்துக்கு வழுவுறாதபடி சிவபிரானைச்சிறப்பித்தும் இதரதேவர்களைத் தாழ்த்தியுங் கூறியதனாலும் நன்கு புலனாகின்றது. அன்றியும், வியாசர் புராணங்களில் ஒவ்வொரு தேவரை ஒவ்வோரிடத்திற் சந்தர்ப்பத்துக்கேற்பச் சிறப்பித்துக் கூறியிருத்தல் போலவே, இவரும் தமதுநூலில் சூரியன் அக்கினி யமன் முதலிய மற்றைத்தேவர்களையும் சமயம்வந்தவிடத்துப் பக்ஷ

பிரதமில்லாமற் சிறப்பித்துக் கூறியிருக்கின்றார். (தம்மையாதரித்த வக்கபாகை வரபதியாட்கொண்டானை ஆங்காங்கு உபமானமுகத் தாற் சிறப்பித்துக் கூறியுள்ளார்.)

கடைச்சங்கப்புலவர்களுள் ஒருவராகிய **பெருந்தேவனாரென்பவர்** பாரதம்பாடியுள்ளார். அந்நூலுள் பழையஉரைகளிற் கிடைக்கின்ற சிலபாடல்களன்றி, மற்றையவை காணப்படவில்லை. பிறகு ஒன்பதாம் நூற்றாண்டில் மூன்றாம் நந்திவர்மன் காலத்துப் பெருந்தேவனாரென்று பெயர்வழங்கப்பெற்ற ஒருவர் மகாபாரதத்தைத் தமிழில் வசனமும் பாடலுமாக விரவிவருகிற 'சம்பு' என்கிற நடையிலே பாடியிருக்கின்றனர்; பெரும்பாலும் வெண்பாக்களால் அமைந்ததுபற்றி, அந்நூலுக்குப் **பாரதவெண்பா**வென்று பெயர். அதிற் சிலபகுதிகளே இப்போது கிடைக்கின்றன. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரும்பாக்கத்து அருணிலைவிசாகன் பாரதத்தை இனிய செந்தமிழ்ப்படுத்தினன் என்று திருவாலங்காட்டுச் சாசனம் கூறும்; இந்நூல் வழக்கு வீழ்ந்ததுபோலும். இவ்வில்லிபுத்தூரார் நாலாயிரத்து முந்நூற்றுச் சொச்சம் பாடல்களாற் பாரதத்தைப் பாடினார். இவர் பாடிய பாரதம் வடமொழி வியாசபாரதத்தின் வழிநூலென்னத்தட்டில்லை: "மண்ணிலாரண நிகரென வியாதனார் வகுத்த, எண்ணிலா நெடுங்காதையை யானறிந்தியம்பல்" என்று இவர்தாமே அவையடக்கத்திற் கூறியிருப்பது காண்க. இப்பாரதத்துக்கும் இதன்முதனூலாகிய வியாசபாரதத்துக்கும் இடையிடையே கதையமைதிகள் சிற்சில வேறுபடுவது "முன்னோர்நூலின் முடிபொருங்கொத்துப், பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி, அழியாமரபினது வழிநூலாகும்" என்ற வழிநூலிலக்கண விதிப்படி இவ்வாசிரியராற் பிறநூல் மேற்கோள்கொண்டு அமைக்கப்பட்டதாதல் வேண்டுமென அறிக: வடமொழியில் **அகஸ்த்யபட்ட** ரென்பவர்செய்த **பாலபாரதத்தோடு** இந்நூல் பலவிடங்களிலும் ஒத்திருக்கின்றது: ஆயினும், நூலாசிரியர் தமது பாரதத்துக்குப் பாலபாரதத்தை முதனூலென்று சொல்லவில்லை.

வில்லிபுத்தூரார் தமது பாரதத்திற் பாடியது, முதற்பத்துப் பருவமே; மற்றை யெட்டுப் பருவங்கள் அவராற் பாடப்படவில்லை. அதற்குக் காரணம்:—நூல் முழுவதையும் பாடினால், பாண்டவர்கள் கிருஷ்ணபகவான் என்கிற மகாபுருஷர்களது மரணசரித்திரத்தைத் தம் வாயாற் சொல்லவேண்டுமே யென்று கருதி, "கனை கடற்பா ரளித்து அவரு மங்கரி லறநெறியே கருதிவாழ்ந்தார்" என மங்களகரமாகச் சரித்திரத்தைப் பாடிமுடித்தனரெனக்கொள்வது தகுதியுடையது. வில்லிபுத்தூரார்பாடிய பாரதத்திலே சுருக்கமாகக் கதையைத் தொகுத்துக்கூறும் முந்நூறு நானூறு பாடல்கள் தவிர மற்றை நாலாயிரஞ் செய்யுட்களை யெடுத்துக்கொண்டு, பிற்காலத்தில் நல்லாப்பிள்ளை யென்பவர், புதிதாகத் தாம் பதினோராயிரம் பாடல்பாடி இடையிடையிற் கோத்தும், இறுதியிற் சேர்த்தும் பாரதம் பதினெட்டுப்பருவங்களையும் பூர்த்தி செய்தார்; அது **'நல்லாப்பிள்ளைபாரதம்'** என வழங்கும்: அந்நூலாசி

ரியர், இற்றைக்கு நூற்றுநாற்பத்தேழு வருடங்களின்முன் இருந்தவர். இதுதவிர, இற்றைக்கு 200-வருடங்களின்முன் இருந்த அஷ்டாவதானம் - அரங்கநாதகவிராயர் பாடிய பாரதத்தின் பிற்பகுதியும் ஒன்று உளது; அது, ஏறக்குறைய 2500 - செய்யுளுடையது. இனி, மாவிந்தம் என்னும் பெயரால் தமிழில் பாரதக் கதையைச் சொல்லும் ஒருநூலுண்டு என்றும் கூறுப: மற்றும், பழைய காஞ்சிப்புராண ஆசிரியர் ஒரு பாரதத்தை இயற்றியுள்ளாரென்று அப்புராணச் சிறப்புப்பாயிரம் தெரிவிக்கின்றதென்றும் அந்நூல் இப்போது கிடைக்கவில்லையென்றும் கூறுப.

இவர் மகாபாரதமொன்றுதவிர வேறுநூலெதுவும் பாடியிருப்பதாகத் தெரியவரவில்லை.

இவர் தமது நூலிற் பெரும்பாலும் வடமொழிகளைத் தனிமொழியாகவும் தொடர்மொழியாகவும் இன்னமொழியின் சம்பந்தமானதென்று எளிதில் தெரியவொண்ணாதபடி திரித்தும் மொழிபெயர்த்தும் உபயோகித்திருத்தலால், வடமொழியிலும் மிகவல்லவரென நன்குவிளங்குகின்றது. தமிழில் எந்தநூலாசிரியரும் வடமொழிகளை இவரவ்வளவு எடுத்துக்கொள்ளவில்லை. வடசொற்களைத் தமிழ்க்காப்பியத்தில் நுழைக்கிற வழக்கம் இவர்காலந் தொடங்கித்தான் அதிகமாயிருத்தல்வேண்டும். இவர் பாடல்களில்-உவமை, உருவகம், எடுத்துக்காட்டுவமை, தற்குறிப்பேற்றம், வேற்றுப்பொருள்வைப்பு, பிறிதுமொழிதல், உயர்வுநவிற்சி முதலிய பொருளணிகள் அமைந்திருப்பதுமாத்திரமேயன்றி, மடக்கு [யமகம்], பிராசம் முதலிய சொல்லணிகளும் ஆங்காங்கு அமைந்திருத்தலையும், இவரது செய்யுள்நடை பலவிடத்து முடுகுதலுடையதாதலையும், பலவகைச்சந்தங்கள் சந்தப்போலிகள் வண்ணங்கள் பொருந்தியிருத்தலையும், யுத்தவருணனை எல்லா நூல்களினும் இந்நூலிற் சிறத்தலையும் காணலாம்.

வில்லிபுத்தூரார் பாரதம்

வில்லிபுத்தூராருடைய பாரதம் என்று விரியும்: வில்லிபுத்தூராரியற்றிய பாரதம் என்க: தொக்குநின்ற ஆறும்வேற்றுமை, செய்யுட்கிழமைப் பொருளது. பாரதம் என்னுஞ் சொல்லுக்கு - பரதனது வம்சத்தைப்பற்றிய நூலென்றுபொருள். இங்குக் குறித்த பரதனென்பவன் - சந்திரவமிசத்தில் துஷ்யந்தமகாராசனுக்குச் சகுந்தலையினிடந் தோன்றிப் பிரசித்திபெற்ற ஓரரசன். பரதவம்சத்துத்தோன்றினவர், பாரதர்; (அவராவார் - பாண்டவரும், துரியோதனாதியரும்.) அவர்களது சரித்திரத்தை உணர்த்தும் நூல் பாரதமெனப்பட்டது; இது - வடமொழித்தத்திதாந்த நாமம். இனி, வருணச்சிரமதருமம் இராசதருமம் மோட்சதருமம் நீதிமுதலிய சிறந்த உறுதிப்பொருள்களை யெல்லாம் அறிவிப்பதனால் முனிவர்கள் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து மற்றையெல்லா நூல்களினும் மிகுந்த பாரம் [அதாவது - மகிமை] உடைமைபற்றி,

இந்நூலுக்குப் பாரதமென்னும்பெயர் இடப்பட்டதென்றுங் கொள்ளலாம். இருக்கு முதலிய நான்குவேதங்களோடு ஒப்ப ஐந்தாம் வேதமென்று சிறப்பித்துக்கூறப்படுவதும், மிகச்சிறந்த பகவத்கீதையைத் தன்னுள் பீஷ்மபர்வத்திலும் விஷ்ணுஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தை ஆநுசாஸநிகபர்வத்திலும் அடக்கிக்கொண்டிருப்பதும், இந்நூலுக்கு எல்லா நூல்களினுஞ் சிறந்த மேம்பாடாம். இந்நூலை முதலில் வடமொழியிற்செய்தவர், ஸ்ரீவேதவியாசமகாமுனிவர்; இவரால் வைக்கப்பட்ட 'பாரதம்' என்கிற முதனூலின் பெயரே வழிநூலாகிய இத்தமிழ்நூலுக்கும் பெயராயிற்று. பாரதத்துக்கு **'ஜயம்'** என்றும் ஒரு பெயருண்டு.

இது, இதிகாசம் இரண்டனுள் ஒன்று. மற்றொன்று - இராமாயணம். உபதேசபரம்பரையில் வந்த ஒருவருடைய பழைய சரித்திரமொன்றைப் பிரதானமாக எடுத்துப் பலகிளைக்கதைகளோடு புணர்த்து விரித்துக்கூறும்நூல் இதிகாசமென்றும் [இதிகாசம் - பழையவரலாறு], உலகத்தின் தோற்றம் ஒடுக்கம் முனிவர்கள் அரசர்கள்மரபு அவர்களுடைய சரித்திரங்கள் மநுவந்தரம் என்னும் ஐந்துவிஷயங்களை விரிவிக் கூறும் நூல்-புராணமென்றும் [புராணம் - ஐந்து இலக்கணங்களுடன் பழையவரலாறுகளை புணர்த்தும் நூல்] வேறுபாடு உணரத்தக்கது. புராணம் - பிராமம்முதலாகப் பதினெட்டுவகைப்படும். இந்த இதிகாசபுராணங்கள், வேதத்தின்கருத்து இன்னதென்று நியாயப்பிரமாணங்களால் தேற்றி விளக்குதல்பற்றி வேதத்திற்கு உபப்பிரஹ்மணங்களென்று சொல்லப்படும்: உபப்பிரஹ்மணமென்றால் வளர்ப்பதென்று பொருள். இவற்றுள், புராணங்களினும் இதிகாசம் பிரபலமான பிரமாணமென்றும், அதுபற்றியே இதனை 'இதிகாச புராணம்' என முன்னர் வைத்துக் கூறுவதென்றும் அறிக.

இப்பாரதத்தில் பெருங்காப்பிய இலக்கணங்கள் பலவும் வருவதை ஆங்காங்குக் காண்க.

பாரதம் - அந்தந்தப்பாகத்தின் விஷயத்தைக் குறிக்குஞ் சொற்களால் ஆதிபருவம், சபாபருவம், ஆரணியபருவம், விராடபருவம், உத்தியோகபருவம், வீட்டுமபருவம், துரோணபருவம், கன்னபருவம், சல்லியபருவம், சௌப்திகபருவம், ஸ்திரீபருவம், சாந்திபருவம், ஆநுசாஸநிகபருவம், அசுவமேதபருவம், ஆசிரமவாசபருவம், மௌசலபருவம், மகாபிரத்தானபருவம், சுவர்க்காரோகணபருவம் எனப் பெயர்பெற்ற பதினெட்டுப்பருவங்கள் அடங்கியுள்ளது. அவற்றுள்,

ஆறுவது

வீட்டுமபருவம்.

பீஷ்மபர்வம் என்ற வடசொற்றொடர் திரிந்தது. பீஷ்மனது சம்பந்தமான பருவமென்று ஆறும்வேற்றுமைத்தொகையாகக் கொள்க; விஷயமாகவுடைமை, வேற்றுமைப்பொருளாகிய சம்பந்

தம். இனி, இரண்டாம் வேற்றுமையுருபும்பயனுந்தொக்கதொகை யாக, பீஷ்மனைப்பற்றிய பருவ மெனினும் அமையும். பீஷ்மன் துரியோதனதியர் சேனைத்தலைவனாய்நின்று பத்துநாள் போரை நடத்திய கதையைக் கூறும் பாகமென்று பொருள். பருவம்=பர்வம்: கணுஎன்று பொருள்: கரும்பு மூங்கில் முதலியவற்றிற்கு ஏகதேசமாகிய [ஏகதேசம் - ஒருபகுதி] கணுப்போல, நூலுக்கு ஏகதேசமாகிய உறுப்பைப் பருவமென்றது-உவமவாகுபெயர்.

கீழ் ஆதிபருவம்முதலாகவும், மேல் சௌப்திகபருவம்முதலாகவும் கதாநாயகரான பாண்டவரது சரித்திரபாகத்தின் விஷயத்தைக்குறிக்குஞ் சொற்களாற் பர்வங்களுக்குப் பெயரிட்டுவரும் ஆசிரியர், இங்கு வீட்டுமபருவம், துரோணபருவம், கன்னபருவம், சல்லியபருவம் எனத்துரியோதனதியரோடு சேர்ந்தவரைப்பற்றின சொற்களாற் பெயரிடக் காரணம் என்னையோ வெனின்?—எதிரிகளது சிறப்பை நன்குஎடுத்துக்காட்டி அப்படிப்பட்டவர்களை இவர்கள் வென்றிட்டார்க ளெனக் கதாநாயகரைப் பெருமைப்படுத்தவேண்டி யென்க. இனி, பீஷ்மவதபர்வ மென்பது மத்தியமபதலோபமாய்ப் பீஷ்மபருவமென நின்றது, திரிந்ததென்றலும் ஒன்று.

முதற்போர்ச்சருக்கம்

பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நடந்த பதினெட்டுநாளை யுத்தத்தில் முதல்நாள்யுத்தத்தைக் கூறும் பாகமென்று பொருள்.

கதைத்தொடர்ச்சி:—இப்பரதகண்டத்திலே அஸ்தினபுரியில் சந்திரகுலத்திலேயுதித்துச் செங்கோல்செலுத்திய சந்தனுவுக்கு முதல்மனைவியாகிய கங்கையின்குமாரர் பீஷ்மரென்பவரும், இரண்டாம்மனைவியாகிய யோஜனகந்தியின்மகன் விசித்திரவீரியனென்பவனும் இருந்தார்கள். [முன்னர்ச்சத்தியவதியென்னும்பெயரோடு இருந்து பராசரமுனிவரோடுசேர்ந்து வியாசரைப்பெற்றுப் பின்பு அப்பராசரரருளாற் கன்னிப்பருவமடைந்த இந்தக் கந்தவதியினிடம் சந்தனுவுக்குப்பிறந்த முதற்குமாரனை சித்ராங்கதன், அப்பேருள்ள ஒருகந்தருவனாற் கொல்லப்பட்டு இறந்தான்.] முன்னைய விரதத்தின்படி வீடுமர் விசித்திரவீரியனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தார். விசித்திரவீரியனதுபத்தினியாகிய அம்பிகையினிடத்துத் திருதராஷ்டிரனும், அம்பாலிகையினிடத்துப் பாண்டுவும், சந்ததிவிருத்தியின்பொருட்டுத் தாய்சொற்கடவாத வியாசபகவானருளாற் பிறந்தனர். அம்பிகையாலேவியனுப்பப்பட்ட சூத்திரப்பெண்ணினிடத்து வியாசரருளால் அவதரித்த விதுரனென்னுங்குமாரனும் இருந்தான். திருதராட்டிரன் பிறவிக்குருடனதலால், விதுரனை மந்திரியாகவைத்துக்கொண்டு, பாண்டு, திருதராட்டிரனுக்கு முடிசூட்டித் தானே இராசாங்ககாரியம் பார்த்துவந்தான். பாண்டுவுக்கு மனைவியுடன் சேரக்கூடாதென்று சாபம் நேரிட்டதனல், அவனனுமதிப்படி அவனது மூத்தமனைவியாகிய குந்தி தனக்கு இளமையில் துருவாசமுனிவனுபதேசித்திருந்த மந்திரத்தின் மகிமையால் வந்த யமதருமராசனல் யுதிஷ்டிரனையும்,

வாயுதேவனால் பீமசேனனையும், தேவேந்திரனால் அருச்சுனனையும் பெற்றாள். [முன்பு கன்னிப்பருவத்துச் சூரியனால் குந்தியினிடம் பிறந்தவன், கர்ணன்.] அவளுடைய சக்களத்தியான மாத்திரி, குந்தியால் அம்மந்திரமுபதேசிக்கப் பெற்று அசுவினிதேவர்களால் நகுலன், சகதேவன் என்னும் இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றாள். திருதராட்டிரனுக்குத் துரியோதனன் துச்சாதனன் முதலிய நூறு பிள்ளைகளும், துச்சளையென்னும் ஒரு பெண்ணும் காந்தாரியிடம் பிறந்தார்கள். [பஞ்சபாண்டவர்களுள் தருமனும் வீமனும் துரியோதனாதியர் நூற்றுவரினும் மூத்தவ ரென்றும், அருச்சுனன் முதலிய மற்றைமூவரும் துரியோதனாதியர்க்கு இளையவரென்றும் அறிக.] பாண்டு சிலகாலத்துக்குப்பின் இறந்துபோனான். அப்பொழுது மாத்திரி சககமனஞ்செய்தாள். பின்பு பாண்டவருந் துரியோதனாதியரும் கிருபாசாரியர் துரோணாசாரியரிடத்து வில் வித்தை கற்கும் போதே, துரியோதனாதியர் பொறாமையினால் பாண்டவரிடத்து ஞாதிப்பகைகொண்டு பலதீமைகள் செய்துவந்தார்கள். வருகையில் அரக்குமாளிகையிலிட்டுத் தங்களையெரிக்கும்படி துரியோதனாதியர் செய்த யத்தனத்தைப் பாண்டவர்கள் விதுரரால்தெரிந்து தப்பிப் பிராமண வேடம்பூண்டு திரிந்து, திரௌபதியின் சுயம்வரத்துக்குச் சென்று, அங்குக் கட்டியிருந்த யந்திரத்தை அறுத்து அருச்சுனன் திரௌபதியைக்கொண்டுவர, தாயார்சொற்படி அந்த ஒருத்தியை ஐவரும் மணஞ்செய்துகொண்டு அஸ்தினபுரத்துக்கு வந்தார்கள். வந்தவுடனே திருதராட்டிரன் இவர்களை இந்திரப்பிரஸ்தத்திலும், துரியோதனன் முதலியோரை அஸ்திநபுரியிலும் இருந்து அரசாளும்படி இராச்சியத்தைப் பங்கிட்டுக்கொடுத்தான்.

பின்பு தருமபுத்திரன் தனதுதம்பிமார் நால்வரைக்கொண்டு திக்குவிசயஞ்செய்து ராஜசூயயாகம்முடித்து வெகுமகிமையுடன் விளங்கினான். அது கண்டு பொறாமைகொண்டு துரியோதனன் யுதிட்டிரனைத் தந்திரமாகத் தன்னிடம் அழைப்பித்துத் தன் மாமனான சகுனியைக்கொண்டு அவனுடன் சூதாடுவித்து அவனது செல்வம் முழுவதையும் பறித்துக்கொண்டு அவனையும் அவனது தம்பிமாரையும் அவர்களதுமனைவியான பாஞ்சாலியையும் அடிமையாக்கி, அவளைத் தீண்டக்கூடாத காலத்தில் துச்சாதனனைக் கொண்டு சபையிற் பலாத்காரமாகக் கொண்டுவந்து துகிலுரியச் செய்தான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனுக்கிரகத்தால் அவள் மேன்மேல் ஆடைவளரப்பெற்று மானங் காத்துக்கொண்டாள். பின்பு அவளது கற்பின் பெருமைக்கு அஞ்சித் திருதராட்டிரன் அவர்களை அடிமைத்தனத்தினின்றும் நீக்கிச் செல்வத்தையுங் கொடுத்தனுப்ப, துரியோதனாதியர் அதனை மறுத்து அவற்றையெல்லாங் கவர்ந்துகொண்டு, மறுசூதாடி அடிமை நீங்கின அவர்களைப் பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷம் அஜ்ஞாதவாசமும் [அஜ்ஞாதவாசமாவது - ஒரு வருஷம் தம்மை இன்னாரென்று அறியவொண்ணாதபடி நாட்டில் மறைந்துவசித்தல்] செய்துவந்தால் அரசுபெறலாமென்று ஏற்பாடுசெய்து அனுப்பினார்கள்.

அங்ஙனமே பாண்டவர்கள் திரௌபதியுடனே சென்று பன்னி ரண்டு வருஷம் காமியவனம்முதலிய இடங்களில் வசித்துப் பின் மாறுவேடம்பூண்டு விராடநகரத்தில் ஒருவருஷகாலம் அஜ்ஞாத வாசஞ்செய்தனர். அந்தப்பதின்மூன்றாவது ஆண்டினிறுதியில் துரியோதனன், பாண்டவர்கள் விராடநகரத்தில் இருக்கலாமென ஒருவாறுஊகித்து உணர்ந்து, அவர்களைக் கண்டுபிடிக்கும்படி படையெடுத்துச்சென்று, அந்நாட்டை இருபுறத்தும்வளைத்துப் பசுக்கூட்டத்தைக் கவர்ந்துசெல்ல, அருச்சுனனொழிந்த நால்வரும் விராடனுடன் சென்று தென்புறத்தில் திரிகர்த்தரையும், விராட குமாரனை உத்தரனுக்குத் தேரூர்ந்துசென்ற பேடிவடிவான அருச் சுனன் வடபுறத்தில் துரியோதனாதியரையும் போரில் வெல்ல, அப்போது முன்னையஏற்பாட்டின்படி பதின்மூன்றுவருடமுங் கழிந்துவிட்டனவாதலால், பாண்டவர்களுந் திரௌபதியும் நிஜ ரூபத்தோடுவெளிப்பட்டனர். பின்பு விராடராசன் அவர்களுக்கு விசேஷ உபசாரஞ்செய்து தூதர்கள் மூலமாகச் செய்தியைத்தெரி வித்து ஸ்ரீகிருஷ்ணன் முதலான பந்துக்களையும் மற்றும் அரசர் களையும் வரவழைத்து, கிருஷ்ணனுடன்பிறந்தவளான சுபத்திரையி னிடத்து அருச்சுனனுக்குப் பிறந்த குமாரனை அபிமந்யுவுக்குத் தன்மகளான உத்தரையைச் சுபமுகூர்த்தத்தில் மணம் புரிவித் தான்.

பின்பு பாண்டவர்கள் விராடனால் அமைக்கப்பட்ட உபப்பிலா வியமென்ற பட்டணத்தையடைந்து கிருஷ்ணன் முதலியவர் களுடனே இராச்சியம் பெறும் உபாயத்தை ஆலோசித்து முடிவு செய்து உலூகனென்னும் அந்தணனைத் திருதராட்டிரனிடந் தூதனுப்ப, அவ்வேதியன் சென்று செய்தி கூறுகையில், அங்குத் துரியோதனன், துரோணர்முதலிய பெரியோர்கள்பலர் சொல்ல வுங் கேளாமல் கர்ணன்முதலிய சிற்றினத்தவரின் கருத்தையே முக்கியமாகத்தழுவிச் சிறிதும்இராச்சியங் கொடுக்கமாட்டே னென்று மறுத்துவிட, அச்செய்தியை அம்முனிவன் பாண்டவர்க் குங் கண்ணனுக்குந் தெரிவித்துச் சென்றான். அதன்பின் கண்ண பிரானைத் தந்தமக்குப் போரில் ஏற்ற துணையாகும்படி துரியோதன னும் அருச்சுனனும் ஒருங்கேசென்று வேண்ட, அப்பெருமான் தந்திரமாக, துரியோதனனுக்கு யாதவசேனை முழுவதையுந் துணை யனுப்புவதாகச் சொல்லி, தான் மாத்திரம் பாண்டவர்க்கே துணைவ னாயினன். பின் திருதராட்டிரனது வேண்டுகோளால் சஞ்சயனென் னும் முனிவன் பாண்டவர்பக்கல்வந்து 'அரசாட்சி பலபெருந் துன்பங்களுக்கும் இடமாதலால், அதனிடத்து ஆசையை விட்டு வனத்தையடைந்து பெருந்தவஞ்செய்தலே சிறந்த அறிவு' என்று வைராக்கியம்போதிக்க, பாண்டவர்கள் அதற்குச் சிறிதும் உடன் படாது மறுத்து விட்டனர். அதன்பின்பு பாண்டவர் மீண்டும் ஆலோசித்துக் கண்ணபிரானையே தூதனுப்ப, அப்பிரான்சென்று சொன்ன நீதிகளையுஞ் சற்றும் உட்கொள்ளாமல் துரியோதனன் சிறிதும் அவர்களுக்கு இடங்கொடுக்கமாட்டேனென்று துணிவாய்க் கூறிவிட்டதுமன்றி அங்குக் கிருஷ்ணனைக்கொல்லும்படி ஒரு தந் திரமுஞ்செய்ய, கிருஷ்ணபகவான் தனது திவ்வியசக்தியால் மிகப்

பெரிதாக விசுவரூபமெடுத்து அதற்குத்தப்பி மீண்டு பாண்டவரிடம்வந்து அங்குநடந்த செய்திகளை யெல்லாந் தெரிவித்தருளினன். பின்பு, பாண்டவர் ஏழு அக்ஷௌஹிணிசேனையையும், கௌரவர் பதினொரு அக்ஷௌஹிணிசேனையையுந் திரட்டிக்கொண்டு, குருக்ஷேத்திரத்தில் வந்து எதிர்த்து உக்கிரமாகப் பெரும்போர் செய்ய ஆயத்தமாயினர்.

1.—கடவுள் வாழ்த்து.

மேவரு ஞான னந்த வெள்ளமாய் விதித்தோ னாதி
மூவரு மாகி யந்த மூவர்க்குண் முதல்வ னாகி
யாவரும் யாவு மாகி யிறைஞ்சுவாரிறைஞ்சப் பற்ப
றேவரு மாகி நின்ற செங்கண்மா லெங்கள் கோவே.

(இதன் பொருள்.) மேவு அரு - அடைதற்கு அருமையான, ஞானம் ஆனந்தம் வெள்ளம் ஆய் - ஞானம் ஆநந்தம் என்னும் இவற்றின் மிகுதிமயமாய், விதித்தோன் ஆதி மூவர்உம் ஆகி - படைத்தற்றொழிற்கடவுளான பிரமன் முதலிய திரிமூர்த்திகளுந் தானாய், அந்த மூவர்க்குள் முதல்வன் ஆகி - அத்திரிமூர்த்திகளுள்ளுந் தலைவனாய், யாவர்உம் யாஉம் ஆகி - எல்லாவுயர்திணைப் பொருள்களும் எல்லா வஃறிணைப் பொருள்களுமாய், இறைஞ்சுவார் இறைஞ்ச பல் பல் தேவர்உம் ஆகி - (தந்தம்மை) வணங்குதற்குரியவர்கள் வணங்கும்படி (அந்தந்த மதத்துக்குரிய) பலபல தேவர்களின் வடிவமுமாய், நின்ற - (என்றும் அழியாது) நின்ற, செம் கண் மால் - சிவந்த திருக்கண்களையுடைய திருமால், எங்கள் கோ - எங்களுக்குத் தலைவனாவன் ; (என்றவாறு.)

வீட்டுமபருவம் தொடங்கப்போவதால், கடவுள்வாழ்த்து முதலிற் கூறுகின்றார். ஞானவெள்ளமாய் என்றது - எல்லாவற்றையும் எப்பொழுதும் ஐயந்திரிபற அறியும் அறிவின்மிகுதியையுடையவனையென்றபடி. ஆனந்த வெள்ளமாய் என்றது, எல்லாவின்பங்களினும் மேம்பட்ட நிரதிசயப்பேரின்பத்தையே எப்பொழுதும் உடையவனையென்றபடி. மனமொழிமெய்களுக்கெட்டாத பேரறிவு பேரின்பங்கள், இங்கு 'மேவருஞானானந்தவெள்ளம்' எனப்பட்டன. விதித்தோனாதிமூவருமாகி என்றது, பிரமருத்திரர்க்கு அந்தராத்மாவாய் நின்று அவர்களைக்கொண்டு படைத்தல் அழித்தல் தொழில்களை நிகழ்த்தித் திருமால் தானேன நிலையில் நின்று காத்தற்றொழிலைப் புரிந்தருளுதலால்; "ஆக்குமாறயனாமுதலாக்கிய வுலகங், காக்குமாறு செங்கண்ணிறை கருணையங்கடலாம், வீக்குமாறரனாமவை வீந்தநாள் மீளப், பூக்குமாமுத லெவனவன்பொன்னடிபோற்றி" என இந்நூலின்முதற் கடவுள் வாழ்த்திலுங் கூறினர்: "நான்முகனை நாராயணன் படைத்தானன்முகனுந், தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்" என்ற சித்தாந்தத்தின்படி திரிமூர்த்திகளுள்ளும் மற்றையிருமூர்த்திகளுக்குங் காரணமாகிய மூர்த்தி திருமா லாதலால், 'அந்த மூவர்க்குண்முதல்வனாகி' என்றார்: "முதலாவார் மூவரே யம்மூவருள்ளும், முதலாவான் மூரிநீர்வண்ணன்" என்றார் பொய்கையாழ்

வாரும். 'மூவர்க்குமுதல்வனாகி' என்றபாடத்துக்கு - திருப்பாற் கடலிலெழுந்தருளியுள்ள திருமாலின் வியூகமூர்த்திகளாகிய வாசுதேவன் சங்கர்ஷணன் பிரத்யும்நன் அநிருத்தன் என்ற நால்வருள் பிரதான மூர்த்தியான வாசுதேவன பிரமவிஷ்ணுருத்ரரூபிகளாய்ப் படைத்தல் காத்தல் அழித்தல் தொழில்களைச் செய்யும் மற்றை மூவர்க்குங் காரண னாதலால், அந்நிலையைக்கருதி அங்ஙனங் கூறிய தென்க; "மூவரா யவர்களுக்கு முதல்வனாகிய மூர்த்தி" என்றார் கீழ்க் கிருட்டிணன் தூதுசருக்கத்தும். "ஸர்வம் விஷ்ணுமயம்ஜகத்" என்றபடி சகல சேதநாசேதநங்களின் உள்ளும் புறம்பும் எம்பெருமான் வாசியறக் கலந்துநிற்றலின், 'யாவரும்யாவுமாகி' என்றது; "யாவையும் யவருந் தானாய்," "அண்டத் தகத்தான் புறத்துள்ளான்" என்றார் திருவாய்மொழியிலும். "தமருகந்த தெவ்வுருவ மவ்வுரு வந்தானே, தமருகந்த தெப்பேர்மற் றப்பேர்-தமருகந்த, தெவ்வண்ணஞ் சிந்தித் திமையா திருப்பரே, யவ்வண்ண மாழியா னாம்," "நும்மின்கவிகொண்டு நும்நு மிட்டாதெய்வ மேத்தினாற், செம்மின் சுடர்முடி யென்றிரு மாலுக்குச் சேருமே" என ஆழ்வார்களருளிச்செய்தபடி உலகத்தில் அந்தந்த மதத்தவர் கொண்டாடுந் தெய்வமெல்லாம் எம்பெருமானது சொரூபமே யாதலால் 'இறைஞ்சுவாரிறைஞ்சப் பற்ப றேவருமாகி' என்றும், கடவுள் எப்பொழுதும் அழியாது நித்தியனாயிருத்தலால் 'நின்ற' என்றுங்கூறினார். 'எங்கள்கோவே' என்றார், தம்போலியரையும் உளப்படுத்த: தம் கோத்திரத்தவரை உளப்படுத்த எனினுமாம். திருமாலின் திருவவதாரவிசேஷமாகிய கண்ணபிரான் இங்ஙனம் தானிருக்கிற உண்மைத்தன்மையை அருச்சுனனுக்குக் காட்டியருளுகிற செய்தி இச்சருக்கத்திற் கூறப்படுதலால், அதற்கேற்ப இங்ஙனங்கடவுள்வாழ்த்துக் கூறினார்: மேல் நிகழ்கிறசரித்திரத்தின் குறிப்பைச் சொல்லினாலாவதுபொருளினாலாவது கருத்தினாலாவது ஒருவாறுதோன்றக் கடவுள்வாழ்த்துக் கூறுதலும் மகாகவிகளது மரபாம்.

பல + பல + தேவர் = பற்பறேவர்; பலவென்பது - தன்முன் தான்வரவும் வேறுவரவும் அகரங்கெட லகரம் விகாரப்பட்டதன்றி, வருமொழித் தகரவொற்றுத் திரிய நிலைமொழியீற்றுலகரங் கெட்டதென்க: [நன் - உயிர் - 20: மெய். 34, 26.]

இதுமுதற் பதினேழுகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகி வந்த **அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தங்கள்.** (1)

2.—இதுமுதல் ஆறுபாடல்கள்-கண்ணன் அருச்சுனனுக்குத் தத்துவங்களை உபதேசித்தமையைக் கூறும்.

மாயையென்றுரைத்திதன்பான்மனமெனுமைந்தன்றோன்றித்
தூயநல்லறிவன்றன்னைத்தோற்றமின்றுக்கிவைத்தான்
தாயொடுதந்தைமக்கடாரமென்றிவர்பால்வைத்த
நேயமுமவன்றனாலேநிகழ்ந்ததோர்நினைவுகண்டாய்.

(இ - ள்.) மாயை என்ற ஒருத்திதன்பால் - மாயையென்ற ஒருத்தியினிடத்தில், மனம் எனும் மைந்தன் தோன்றி - மனமென்கிற ஒருபுத்திரன் உண்டாகி, தூய நல் அறிவன் தன்னை - பரிசுத்தமான நல்ல ஞானமென்கிறவனை, தோற்றம் இன்று ஆக்கி வைத்தான் - வெளிப்படாதபடி செய்திட்டான்; தாயொடு தந்தை மக்கள் தாரம் என்ற இவர்பால் வைத்த நேயம்உம் - தாய் தந்தை பிள்ளைகள் மனைவி என்கிற இவர்களிடத்து வைத்த அன்பும், அவன் தனால் நிகழ்ந்தது ஓர் நினைவு கண்டாய் - அந்த மனமென்பவனால் உண்டானதொரு எண்ண மென்றே அறிவாய்; (எ - று.)—இவை ஆறுபாடல்களும், பகவத்கீதையின் சுருக்கமான சாராமிசம்.

மாயையாவது - உள்ளதை இல்லாததாகவும், இல்லாததை உள்ளதாகவும், ஒன்றை மற்றொன்றாகவுங்காட்டும் எம்பெருமானது ஒருசக்தி. மனம் அந்தமாயைக்கு வசப்பட்டபோது, பொருள்களின் நிலையை உள்ளபடி அறியுந் தத்துவஞானம் தோன்றுவதில்லை; ஆகவே, நிலையுள்ளபொருள்களை நிலையில்லாதனவென்றும், நிலையில்லாதபொருள்களை நிலையுள்ளனவென்றும் மாறுபட அறியும் விபரீதஞானம் தலையெடுக்கும்; அதனாலேயே, நித்தியமான ஆத்மாவுக்கு யாதொரு சம்பந்தமும் படாமல் அநித்தியமான தேகத்தையே பற்றிய தாய்முதலியோரிடத்துச் சுற்றத்தவரென்ற பொய்யபிமானம் உண்டாகி நிலைநிற்கின்றது என்றதாம். ஒருத்திதன்பால், பால் - ஏழனுருபு. என்ற - ஈறு தொக்கது; என்று எனஎடுத்து எண்ணிடைச்சொல்லுமாம். கண்டாய் என்பது -- காண்பாயெனப் பொருள்படுதல், காலவழுவமைதி; இனி இதனை இடைச்சொல் தன்மைப்பட்டுத் தேற்றப்பொருள் தருவ தென்றுங் கொள்ளலாம். வடமொழியில் "மாயா" என்பது பெண்பாற்சொல்லாதலால், அதனை இங்குப் பெண்ணாகவும், மற்றை மனமும் அறிவும் பெண்பாற்சொற்களல்லவாதலின், அவற்றை ஆணாகவும் உருவகப்படுத்தினர்; உருவகவணி. (2)

3. குயின்றவைம்பொறிவாய்நின்றுகுறித்தவைம்பொருளுந்தானே
அயின்றுமுக்குணங்களோடுமறுவகைப்படைகளோடும்
பயின்றரசாளுமந்தமனமெனும்பகைவனுங்குத்
துயின்றபோதொளித்துநின்றதோன்றலுந் தோன்றுங்கண்டாய்.

(இ - ள்.) குயின்ற - (உடம்பிற்) பொருந்திய, ஐம் பொறி வாய்- (மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும்) பஞ்ச இந்திரியங்களினிடமாக, நின்று - இருந்து, குறித்த - (முறையே அப்பஞ்சேந்திரியங்களுக்கு விஷயமாக) அமைக்கப்பட்ட, ஐம் பொருள்உம் - (ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்னும்) ஐந்துபுலன்களையும், தானே அயின்று - தானே அனுபவித்து, முக்குணங்களோடுஉம்-- (சத்துவம் ரஜஸ் தமஸ் என்னும்) மூவகைக்குணங்களுடனும், அறுவகை படைகளோடுஉம் - (காமம் கோபம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் என்னும்) ஆறுவகைச் சேனைகளோடும், பயின்று - கூடிப்பழகி, அரசு ஆளும் - அரசாட்சிசெய்கிற, அந்த மனம் எனும் பகைவன் - கீழ்க்கூறின மனமென்கிற சத்துருவானவன், துயின்ற போது - தூங்கிய பொழுது, ஆங்கு ஒளித்து நின்ற தோன்றல்உம்-

அவனால் தோற்றமிலனாய் நின்ற (தூயநல்லறிவனென்கிற) புருஷனும், தோன்றும் - வெளிப்பட்டுவிளங்குவான்; (எ - று.)—'கண்டாய்' என்பதற்குக் கீழ்உரைத்தவாறு உரைக்க.

பஞ்சேந்திரியங்களுக்கு வசப்பட்டு அவற்றின் புலன்களிலே முக்குணங்களோடும் மற்றும்பல தீச்சிந்தைகளோடும் மனத்தை அதுபோகிறவழிப்படி யதேச்சையாக விட்டிடாமல் அடக்கிவைத்தால் தத்துவஞானம் உண்டா மென்பது கருத்து. அரிஷட்வர்க்கமென்றும் உட்பகை யென்றுங் கூறப்படுகிற காமம் முதலிய ஆறினையும் யானை தேர் குதிரை வில் வாள் வேல் என்னும் அறுவகைப்படைகளாக **உருவகப்படுத்தி**னர்; மனமென்னும் பகைவன் விவேகமாகிய அரசனைப் போர்செய்து அடக்குதற்கு இவை துணை நிற்றலாலென்க. அரசாளுதல் - கருதியபடியெல்லாஞ்செல்லுதல். அந்த மனம் - மாயையினிடத்துத்தோன்றி அறிவைத் தோற்றமின்றாக்கிவைத்த மன மென்றவாறு. தோன்றல் - விளங்குந்தன்மையன் புருஷன்; இதில், அல் - கருத்தாப்பொருள்விகுதி. இது - ஆண்பாற்சிறப்புப்பெயர். முக்குணங்களை மந்திரிகளாகக்கொள்க. மனத்தின் தூண்டுதலாலே ஐம்பொறிகள் ஐம்புலன்களின்வழியே செல்லுதலால், 'பொறிவாய்நின்று பொருளயின்று' என்றார்; "உண்டற்குரிய வல்லாப்பொருளை, உண்டன போலக் கூறலு மரபே" என்ற வழுவமைதியால், 'அயின்று' எனப்பட்டது. போது - மரூஉ. (3)

4. **அந்தநல்லறிவன்றன்னையறிந்தவரறிஞராவார்**
தந்தையால்வகுக்கப்பட்டசராசரப்பொருள்கடோறும்
வந்தவான்றீம்பானெய்போலுயிர்க்குயிராகிவாழும்
பந்தமதுணர்ந்துநேரேபார்க்குங்காற்பகையார்நண்பார்.

(இ - ள்.) அந்த நல் அறிவன் தன்னை - அந்தச் சுத்தஞானமென்கிற புருஷனை, அறிந்தவர் - (உள்ளபடி) உணர்ந்தவரே, அறிஞர் ஆவார் - புத்திமான்களாவார்கள்; தந்தையால் வகுக்கப்பட்ட - (எல்லாப்பிரபஞ்சத்துக்கும்) பரமபிதாவான கடவுளால்அமைக்கப்பட்ட, சர அசரம் பொருள்கள்தோறுஉம் - சஞ்சரிப்பனவும் சஞ்சரியாதனவுமாகிய எல்லாப்பொருள்களிலும், ஆன் வந்த தீம் பால் நெய்போல் - பசுவினிடமாக வந்த இனிய பாலினிடத்து நெய் போல, உயிர்க்கு உயிர் ஆகி வாழும் - (சகல) சீவாத்துமாக்களினுள்ளும் அந்தராத்துமாவாய் (மறைந்து அப்பரமான்மா) வாழ்கின்ற, பந்தம்அது - சம்பந்தத்தை, நேரே உணர்ந்து - வழுவற அறிந்து, பார்க்கும் கால் - ஆலோசிக்குங்காலத்து, பகை யார் நண்பு ஆர் - (ஒருவனுக்குப்) பகைவர் எவர்? நண்பர் எவர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

எல்லாச்சீவான்மாக்களிடத்தும் பரமான்மா ஒருதன்மையாகவே பொருந்தியிருக்கையில் அவற்றில் சிலவற்றைப் பகையாகவும் சிலவற்றை நண்பாகவும் கருதுவது மாயாகாரியமேயன்றி வேறன்று என்பதாம். பால் நெய் - விட்டுப் பிரியாது உள்ளுறைதற்கு உவமம். சராசரம் - உம்மைத்தொகை: தீர்க்கசந்தி: எழு

வகைப்பிறப்பினுள், தேவர் மக்கள் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன என்ற ஆறும் - சரமும், ஸ்தாவரம் - அசரமுமாம். தந்தையால்-எல்லாப்பிராணிகளுக்கும் பிதாமகனை படைத்தற் கடவுளாகிய பிரமதேவனுலென்றுமாம். பகை, நண்பு - அவற்றையுடையார்க்குப் பண்பாகுபெயர். யார் என்றதில், வினு - எதிர்மறை குறித்தது. ஆர் - யார்என்றதன் மரூஉ. (4)

5. உம்பருமுனிவர்தாமும்யாவருமுணரராவொன்றை
இம்பரின்றுனக்குநானேயிசைவுறவுணர்த்தாநின்றேன்
ஐம்பெரும்பூதத்தானுமமைத்தனவுடலம்யார்க்கும்
நம்பனுமொருவனுள்ளேஞானியாய்நடத்துகின்றான்.

(இ - ள்.) உம்பர்உம் - தேவர்களும், முனிவர்உம் - முனிவர்களும், யாவர்உம் - மற்றும் எல்லோரும், உணரா - அறியாத, ஒன்றை-ஒரு தத்துவப்பொருளை, இம்பர்-இவ்விடத்து, இன்று - இப்பொழுது, உனக்கு—, நானே—, இசைவு உற - பொருந்தும்படி, உணர்த்தாநின்றேன்-அறிவிக்கிறேன்; (கேள்): யார்க்குஉம்-எல்லாப்பிராணிகளுக்கும், உடலம்-சரீரங்கள், ஐ பெருபூதத்தான்உம் அமைத்தன-ஐந்து பெரிய பூதங்களாலுஞ் செய்யப்பட்டன; உள்ளே-அவற்றினுள்ளே, ஞானி ஆய் - ஞானசொரூபியாய், நம்பன்உம் ஒருவன் - ஒப்பற்ற கடவுளொருவன், நடத்துகின்றான் - (இருந்து எல்லாத் தொழில்களையும் அவற்றைக்கொண்டு) செய்விக்கிறான்; (எ - று.)

சடைப்பூதங்களினுள்ளே மனிதன் புகுந்து அவற்றைக்கொண்டு தொழில் நடத்துதல்போல, பகவான் சேதநாசேதநங்களினுள்ளேயிருந்து தொழில் நடத்துகின்றன னென்க. ஐம்பெரும் பூதம் - பஞ்சமகாபூதம்; நிலம் நீர் தீ காற்று வானம் என்பன: பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் எனப்படும். இப்பஞ்ச பூதங்களைப் பஞ்சீகரணம் பண்ணுதலாலேயே பிரபஞ்சப்பொருள்கள் உண்டாகின்றன; பஞ்சீகரணம்பண்ணுதலாவது - பிருதிவியில் ஒருபாதி பிருதிவியும், மற்றைப்பாதி அப்பு தேயு வாயு ஆகாசங்களும், இவ்வாறே, மற்றைப்பாதி அதுவும் பாதிமற்றைநான்குமாகக் கலக்கச் செய்தல். 'யார்க்கும்' எனச் சிறப்புடையுயர்திணைமேல்வைத்துக் கூறினாராயினும், அஃறிணைப்பொருள்களையும் உபலக்ஷணத்தாற் கொள்க. நம்பன் - (யாவராலும்) நம்பிச் சரணமடையப்படுபவன் எனக் காரணப்பெயர்; நம்பு - பகுதி, அன் - விகுதி: இனி, நம் என்பது பகுதியாக நமக்கு இன்னானென்னும் பொருள்படுவதோர் உயர்ச்சிச்சொல்லென்றுங் கொள்ளலாம். உணர்த்தாநின்றேன், ஆநின்று - நிகழ்கால விடைநிலை. தாம்- அசை. (5)

6. என்னைநீபுகலக்கேண்மோவெங்குமாயாவுமாகி
மன்னியபொருளும்யானேமறைக்கெலாமுடிவும்யானே
உன்னையான்பிரிவதில்லையொருமுறைபிரிந்துமேனள்
நன்னிலாவெறிக்கும்பூணுய்நரனுநாரணனுமானேம்.

(இ - ள்.) நல் - அழகிய, நிலா - சந்திரகாந்தியோடொத்த காந்தியை, எறிக்கும் - வீசுகின்ற, பூணுய் - ஆபரணங்களையுடைய அருச்சுனனே! என்னை—, புகல - (இத்தன்மையனென்று யானே)

சொல்ல, நீ—, கேண்மோ - கேட்பாயாக்; எங்குஉம்-ஆய் - எல்லா விடங்களிலும் பொருந்தி, யாஉம்ஆகி - எல்லாப்பொருள்களுமாய், மன்னிய-அழியா துநிலைபெற்ற, பொருள்உம்-பரம்பொருளும், யான்ஏ-நானே; மறைக்கு எலாம் முடிவுஉம்-வேதங்களுக் கெல்லாம் முடிவான பொருளும், யானே—; உன்னை—, யான்—, பிறிவது இல்லை - (எப்பொழுதும்) விட்டுநீங்குவதில்லை; மேல் நாள் - முற்காலத்தில், ஒரு முறை - ஒருதரம், பிறிந்து - நீங்கி, நரன்உம் நாரணன்உம் ஆனேம் - நரநாராயணராய் அவதரித்தோம்; (எ - று.)

முன்னொருகாலத்தில் குருசிஷ்யகிரமத்தை உலகத்தில் அனைவர்க்கும் விளக்கும்பொருட்டு நரனென்னும் சிஷ்யனும் நாராயணனென்னுங்குருவுமாகப் பதரிகாச்சிரமத்தில் திருமால்தோன்றிச் சிஷ்யனுக்குக் குரு தத்துவப் பொருள்களை உபதேசிப்பதாக வீற்றிருக்கின்றனர்; "நரநாரணனாயுலகத்தறநூல், சிங்காமை விரித்தவனெம்பெருமான்" என்பது பெரிய திருமொழி. அவர்கள் தாமே இங்கு முறையே அருச்சுனனுங் கண்ணனுமாக அவதரித்தவர்; இங்கும் அருச்சுனனைச் சிஷ்யனாக்கிக் கண்ணன் குருவாய் நின்று தத்துவம் விளக்கியருளுதல் காண்க; இதுபற்றியே, அருச்சுனனுக்கு, நரனென்று ஒருபெயர். கேண்மோ, மோ - முன்னிலையசை. நாரணன் - நாராயணன் என்பதன் விகாரம்: நார + அயந எனப் பிரியும்: சிருஷ்டிப்பொருள்களுக் கெல்லாம் இருப்பிடமானவ னென்றும், பிரளயப்பெருங்கடலை இருப்பிடமாகவுடையவ னென்றும், மற்றும் பல்வாறும் பொருளுரைப்பார். "செய்கின்ற கிறியெல்லாம் யானே யென்னும் செய்வானின் றன்களும் யானே யென்னும், செய்துமுன்னிறந்தவும் யானே யென்னுஞ் செய்கைப் பயனுண்பேனும் யானே யென்னும், செய்வார்களைச் செய்வேனும் யானே யென்னும்" என்றும், "உற்றார்க ளெனக்கில்லை யாருமென்னும் உற்றார்க ளெனக்கிங் கெல்லாரு மென்னும், உற்றார்களைச் செய்வேனும் யானே யென்னும் உற்றார்களையழிப்பேனும் யானேயென்னும்" என்றுந் திருவாய்மொழியிற் கூறியுள்ளவற்றின் கருத்துக்களை இங்கே யுணர்க. கொல்பவனும் கொல்லப்படுபவனும் கொலைத்தொழிலும் கொல்விப்பவனும் எல்லாம் நானே யாதலால், நீ உன்னைக் கொல்பவனாகவும், சுற்றத்தவரைக் கொல்லப்படுபவராகவும் மாறுபாடாக நினைத்துப் பந்து வதத்தைப் பற்றிச் சிறிதுஞ் சிந்திக்கவேண்டா என்று உபதேசித்துக் கண்ணபிரான் அருச்சுனனது மனத்தடுமாற்றத்தை யொழித்தருளுகிறான். ஏகாரங்கள் - பிரிநிலையோடு தேற்றம். மறைக்கெலாமுடிவு - வேதாந்தசித்தாந்தம். மறைமுடிவு என்றது, வேதத்தின்பாகங்கள் இரண்டனுள் பகவானைப்பற்றிச் சொல்வதாய்ப் பிரமகாண்டமெனப்படுகிற உபநிஷத்துக்களை. இரண்டாமடியிலுள்ள உம்மைகள் இரண்டனுள், முன்னது - எதிரதுதழுவியதும், பின்னது - இறந்ததுதழுவியது மாம். (6)

7. பின்னொருபிறப்பின்யாமேயிராமலக்குமப்பேர்பெற்றேம்
இந்நெடும்பிறப்பினீயும்யானுமாயீண்டுநின்றேம்
நின்னிடைமயக்குமிந்தநேயமுமொழிகவென்று
தன்னிலையவற்குக்காட்டித்தத்துவந்தெளிவித்தானே.

(இ - ள்.) பின் ஒரு பிறப்பின் - பின்பு ஒரு அவதாரத்திலே, யாம்ஏ - நர்மிருவருமே, இராம லக்குமர் பேர் பெற்றோம் - ராமலக்ஷ்மணரென்னும் பெயரை யடைந்தோம்; இ நெடு பிறப்பில் - இந்தப் பெரிய அவதாரத்திலே, நீஉம் யான்உம் ஆய் ஈண்டு நின்றோம் - அருச்சுனனாகிய நீயும் கிருஷ்ணனாகிய நானுமாய் இங்கு நின்றோம்; (ஆதலால்), நின்னிடை - உன்னிடத்திலுள்ள, மயக்குஉம் - திகைப்பையும், இந்த நேயம்உம் - (உறவினரென்றும் நண்பினரென்றுங் கொண்ட) இந்த அபிமானத்தையும், ஒழிக - நீங்குவாயாக, என்று - என்று அருளிச்செய்து, தன் நிலை அவற்கு காட்டி - தனது உண்மை நிலையான விசுவரூபத்தை அவ்வருச்சுனனுக்குக் காண்பித்தலுஞ் செய்து, தத்துவம் தெளிவித்தான் - உண்மையுணர்வை மனந் தெளியும்படி செய்தருளினான்; (எ - று.)

தான் உபதேசித்த உண்மைப்பொருளை அருச்சுனனுக்குக் கட்புலனாக்கி அவனுடைய திகைப்பைத் தீரவொழித்தற்குக் கண்ணன் தன்னிலையை அவற்குக் காட்டியருளினான். ஒருகாலத்தில் தேவர்களெல்லோரும் இராவணன்முதலிய இராக்கதர்களின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் ஸ்ரீமகாவிஷ்ணுவைச்சரணமடைந்துவேண்ட, அவர் தசரதசக்கரவர்த்திதிருமகனாய் ஸ்ரீராமனாகி லட்சுமணபரத சத்துருக்கன ரென்னும் தம்பிமார்மூவருடனே திருவவதரித்து அரக்கர்களனைவரையும் அழித்து நல்லோரைக் காத்தருளினர். இராமன் கண்ணனும், லக்ஷ்மணன் அர்ச்சுனனு மாதலால், முதலடியில் 'இராமலக்குமப்பேர்பெற்றோம்' என்ற கிரமத்திற்கேற்ப இரண்டாமடியில் 'யானும் நீயுமா யீண்டுநின்றோம்' என முறைப்படிவைக்காதது - எதிர்நிரனிறைப் பொருள்கோளின்பாற்படும்; [நன். பொது. 63]: கீழ்க்கவியில் "நரனுநாரணனு மானோம்" என்றதையும் இதனோடு சேர்க்க. லக்ஷ்மணன் ஆதிசேஷனது அவதாரமாதல் மாத்திரமேயன்றித் திருமாலினது அம்சமுமாதல்போல, அர்ச்சுனனும் இந்திரனது அவதாரமாதல் மாத்திரமேயன்றித் திருமாலினதுஅமிசமுமாவ னென அறிக. இராமலக்குமர்-வடசொற்றிரிபு. ராமனென்பதற்கு - தன்திறத்தில் யாவரும் மனங்களித்திருக்கப்பெற்றவ னென்பது பொருள்; சகலசற்குணங்களும் பொருந்தினவனென்பது கருத்து. லக்ஷ்மணனென்பதற்கு - (உத்தமபுருஷ) லக்ஷணங்கள் பலவற்றையும் உடையவனென்றும், (பகவத்கைங்கரிய) லக்ஷ்மியோடுகூடியவனென்றும் பொருளாம். இராமலக்குமர் + பேர் = இராமலக்குமப்பேர்; "சில விகாரமா முயர்திணை." மயக்கு - மயங்கு என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். மயக்காவது - பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் விபரீத ஞானம். (7)

8.—உபதேசத்தால் தெளிந்த அருச்சுனன் ஸ்ரீகிருஷ்ணனைப் போற்றிச் செருச்செய்யச் செல்லுதல்.

ஆங்கவன் றெளிந்து தேறி யறம்பொருளின்ப முற்றிப்
பாங்கினானின்னையெய்தும்பயனெனக்குரைத்தாயென்று
பூங்கடிக்கமலநாறும்பொன்னடிபோற்றியான்செய்
தீங்கெலாம்பொறுத்தியென்றுசெருச்செயுமாறுபூண்டான்,

(இ - ள்.) ஆங்கு - அப்பொழுது, அவன் - அவ்வருச்சுனன், தெளிந்து - மயக்கந்தெளிந்து, தேறி - (நல்லுணர்வு) தேர்ந்து, 'அறம் பொருள் இன்பம் முற்றி - தருமஅர்த்தகாமமென்னும் மூன்றுபுருஷார்த்தங்களையும் முடிய ஒழித்து, பாங்கினால் - (பிரபத்தியாகிய பரம) உபாயத்தால், நின்னை எய்தும் - உன் திருவடியையடைந்து உய்தலாகிய, பயன் - நல்லபிரயோசனத்தை, எனக்கு உரைத்தாய் - அடியேனுக்கு அருளிச்செய்தாய்,' என்று - என்று (கண்ணனைநோக்கி உபசாரவார்த்தை) கூறி, பூ கடி கமலம் நாறும் பொன் அடிபோற்றி - சிறந்த பரிமளமுடைய செந்தாமரைமலர் போலத்தோன்றுகின்ற அழகிய (கண்ணனது) திருவடிகளை வணங்கி, யான் செய் தீங்கு எலாம் பொறுத்தி என்று - 'நான் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்தருள்வாயாக' என்று (அபராதக்ஷாமணமுங்) கூறி, செரு செயும் ஆறு பூண்டான்-போரைச் செய்யும்படி மேற்கொண்டான்; (எ - று.)

" ஆயாவென் மைத்துனனே யாழித்தேர்ப் பாகாநான், பேயானுரைத்த பெரும்பிழைகள் - மாயா, பொருபடைக்கை மாலே பொறுத்தருள்வாயென்று, திருவடிக்கே வீழ்ந்தான் தெளிந்து " என்பது பாரதவெண்பா. ஆங்கு - அவ்விடத்திலென்றுமாம்; என்றது, போர்க்களத்தில் தேர்த்தட்டை. கீதையில் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ [எல்லாவுபாயங்களையும் முற்றவிட்டு என்னையொருவனையே நீ அடைக்கலமாக அடைவாய்]" என்ற பகவானது பிரதானமானவாக்கியத்தின் கருத்தை அனுசரித்து 'அறம்பொருளின்பமுற்றிப் பாங்கினால் நின்னையெய்தும் பயனெனக்குரைத்தாய்' என்பதற்குப் பொருள் கூறப்பட்டது; " பரனைநினைந் திம்மூன்றும், விட்டதே பேரின்ப வீடு "என ஔவையார் கூறியதையும் அறிக. அறம்பொருளின்பம் - இம்மூன்றும் திரிவர்க்க மெனப்படும்: இவற்றுள் அறமாவது-மனு முதலிய நூல்களில் விதித்தனசெய்தலும், விலக்கியனஒழிதலுமாம்; (இன்னவை செய்யத்தக்கவை யென்றும் இன்னவை செய்யத்தகாதவை யென்றும் நூல்களால் வரை) அறுக்கப்பட்டமைபற்றி, அறமென்று பெயர். பொருளாவது-தருமவழியிற்சேர்க்கப்பட்ட பொன் மணி நெல் முதலவாகும். இன்பமாவது - ஒருகாலத்து ஒருபொருளால் ஐம்புலனும் அனுபவிக்குஞ் சிறப்புடையதான சிற்றின்பம். அறம் - இம்மைமறுமைவீடென்னும் மூன்றையும், பொருள் - இம்மை மறுமை யென்னும் இரண்டையும், இன்பம் - இம்மையொன்றையும் தருவதாதல், 'அறம்பொருளின்பம்' என்ற முறைமைக்குக் காரணம். பொன் - ஆபரணத்துக்குக் கருவியாகுபெயர் எனினுமாம். தீங்கெலாம்-"பலபேசியதிபாதக மெனக்கருதி யான்மலைவுறேனினி" என்றவை. (8)

9.—பிறகுதேரின்மீதேறிக்கொண்டு கிருஷ்ணன் பாண்டவருடன் வீடுமனைக் குறுகி, 'நீ எதிர்ப்பின் எம்மால் வெல்ல முடியுமோ?' எனல்.

பூண்டவெம்பரித்தேர்மீதப்பொய்யிலாமெய்யினனும்
பாண்டவர் தாமுமாதப்பகீரதிமைந்தன்றன்பால்

ஈண்டினுனெய்திநீயேயிவருடன்மலேயின்மற்றுன்
காண்டகுபோரின்வென்றுகளங்கொளத்தகுமோவென்றுன்.

(இ - ள்.) (இங்ஙனம் அருச்சுனனது மயக்கத்தையொழித்து அவனைப் போர்புரிய உடன்படுத்தினபின்பு), அ பொய் இலா மெய்யினுன்உம் - அசத்தியமில்லாத சொரூபத்தையுடைய அந்தக் கண்ணபிரானும்,—பாண்டவர் தாம்உம் ஆக - பஞ்சபாண்டவர்கள் உடன்வர, பூண்ட வெம்பரி தேர் மீது - பூட்டிய உக்கிரமான குதிரைகளையுடைய தேரின்மேலே, (சென்று), பகீரதி மைந்தன் தன் பால் - கங்கைகுமரனுன வீடுமனிடத்து, ஈண்டினுன் எய்தி - நெருங்கிச்சேர்ந்து, (அவனைநோக்கி), 'நீஏ இவருடன் மலேயின்-(யாவரினுஞ் சிறந்த) நீயே இப்பாண்டவர்களுடன் எதிர்த்தால், காண் தகு உன் போரின்-(யாவரும் அதிசயித்துப்) பார்க்கத்தக்க உனதுயுத்தத்தில், (இவர்கள்), வென்று - (உன்னைச்) சயித்து, களம்கொள தகும் ஓ- போர்க்களத்தை ஆக்கிரமிக்க முடியுமோ?[முடியாதன்றே],' என்றுன்- என்றுவினவினுன்; (எ - று.)

பெரியோரைப்பணிந்து அவரனுமதியும் ஆசியும்பெற்றுப் போர் புரிதலே வெற்றியை விளக்கு மென்ற நூற்கொள்கை, இங்கு அறியத்தக்கது. பீஷ்மன் தான் நினைத்தபொழுது உயிரைவிடுதல் முதலிய பெருவரங்களைப் பெற்றவனும், யாவராலும் வெல்ல முடியாத பராக்கிரமசாலியுமாதலால், அவனை வெல்லுதற்கு அவனையே உபாயங் கேட்குமாறு, மாயவன் இங்ஙனஞ் சென்று வினவினுன். மெய்யினுனும் பாண்டவர்தாமுமாக ஈண்டினுன் என்றுன்-பால்விரவிச் சிறப்பினுல் ஒருமுடிபுஏற்றது; பால்வழுவமைதி: [நன். பொது. 27.] இரண்டாமடியில் தாம், தன் - அசைகள். பகீரதி - பாகீரதீஎன்ற வடசொல்லின்விகாரம். பகீரதசக்கரவர்த்தியாற் பூலோகத்திற் கொணரப்பெற்றதுபற்றிக் கங்கைக்குப் பாகீரதியென்று பெயர். கங்காநதியின் பெண் தெய்வம் பிரமசாபத்தினுல் மானுடமகளாய்த் தோன்றியபோது அவ்வாறுன சாபத்தினுலேயே சந்தனுவாகப்பிறந்த வருணதேவனுக்கு வீடுமன் புத்திரனுகப்பிறந்தானுதலால், அவனை 'பகீரதிமைந்தன்' என்றுர். ஈண்டினுன் - முற்றெச்சம். நீயே, ஏகாரம் - உயர்வுசிறப்பு. மற்று-அசை; வினைமாற்றுமாம்: பின்புஎன்றுமாம். காண் - முதனிலேத் தொழிற்பெயர். காண்டகு - காணுதற்குத்தக்கஎன நான்கனுருபாக விரிக்க. களம் வென்றுகொளத்தகுமோ எனமொழிமாற்றியுரைத்தல் நேராம். ஓ-எதிர்மறை. (9)

10 —இதுவும் அடுத்தகவியும் - வீடுமன் தன்னைவெல்லும் உபாயத்தைக் கூறியதைத் தெரிவிக்கும்.

மற்றவன் றருமராசன்மைந்தனேயவனிக்கெல்லாம்
கொற்றவனுகுமென்னைக்கொல்லநீயுபாயங்கேண்மோ
அற்றைவெஞ்சமரிற்சீறுமம்பையென்றெருத்திதானே
செற்றிடத்தவமுஞ்செய்துசிகண்டியாய்ப்பிறந்துநின்றுள்.

இதுமுதல் மூன்று கவிகள் - குளகம்.

(இ - ள்.) (அதுகேட்டு), அவன் - அவ்வீடுமன், '(இனி), தருமராசன் மைந்தன்ஏ - அறத்துக்குத்தலைவனுன யமனது குமாரனுன

யுதிஷ்டிரனே, அவனிக்கு எல்லாம் கொற்றவன் ஆகும் - பூமிமுழுவதுக்கும் அரசனாவன்; என்னை கொல்ல—, நீ—, உபாயம் கேண்மோ - உபாயத்தைக் கேட்பாயாக; அற்றை - அந்நாளில் [முன்னொருகாலத்தில் என்றபடி], சீறும் - (என்மேற்) கோபித்த, அம்பை என்ற ஒருத்தி-அம்பையென்னும்பேரை யுடைய ஒரு பெண், வெம் சமரில் தானே செற்றிட-கொடிய போரில் தானே (என்னைக்) கொல்லும்படி, தவம்உம் செய்து - தவத்தையும் பண்ணி, சிகண்டி ஆய் பிறந்துஉம் நின்றாள்-சிகண்டி யென்னும்பெயருள்ள ராஜகுமாரனாய்ப் பிறந்துமிருக்கிறாள்; (எ - று.)—இப்பாட்டில் 'அவன்' என்னும் எழுவாய், மேல் பன்னிரண்டாங் கவியில் 'என்றனன்' என்ற வினையைக் கொண்டுமுடியும்.

பின்னிரண்டடியிற் குறித்த வரலாறு:—காசிராசனது பெண்கள் மூவரைத் தன் தம்பியான விசித்திரவீரியனுக்கு மணம்புரிவிக்கும் பொருட்டுச் சுயம்வரத்தில் வீடுமன் வலியக் கவர்ந்து தேரேற்றிக் கொண்டுசெல்லுகையில் அரசர்கள் பலர் எதிர்த்துவந்து தோல்வியடைய, அவர்களுள் சிறிதுபோரில்முன்னிட்ட சாலுவனிடத்தில் அம்பையென்பவள் மனத்தைச்செலுத்தியதனால் பிறகு வீடுமன் அந்தச்சாலுவனிடத்திற்சேருமாறு அவளையனுப்பிவிட, அந்தச் சாலுவன் 'பகைவன் கவர்ந்துபோன உன்னை யான் கொள்ளேன்' என்று மணம் மறுத்துவிட்டதனால், அவள் பின்பு வீடுமனை மணஞ் செய்துகொள்ளும்பொருட்டுப் பலவாறுமுயன்றும் பயன்படாது போக, பின்னர் அவள் வனஞ்சென்று தவஞ்செய்து அவ்வீடுமனை மறுபிறவியிற் கொல்லும்படி சிவபெருமானிடம் வரம்பெற்று அக்கினிபிரவேசஞ் செய்து பாஞ்சாலதேசத்தரசனாகிய துருபதராசனிடத்திற் பெண்ணாகப்பிறந்து சிகண்டியென்றுபெயர்பெற்று ஆணென வழங்க வளர்ந்தனள்: பிறகு ஸ்தூணனென்ற யட்சனால் வரமாகத் தனது பெண்தன்மையைமாற்றி ஆண்தன்மை கொடுக்கப் பெற்றனளென்பது.

அற்றை வெம்சமரிற்சீறும் என்பதற்கு - யாற்றொழுக்காக, அந்நாளில் (யான் பரசுராமனோடு) செய்த கொடிய போரில் (யானே வென்றதனாற்) கோபமுற்றஎன்றும் உரைக்கலாம். சாலுவனால் மறுக்கப்பட்ட அம்பையென்பாள் பரசுராமனைச்சார்ந்து தன் கருத்தைத் தெரிவிக்க, அந்த அம்பையின் வேண்டுகோளை நிறைவேற்றுவிக்கக் கருதிப் பரசுராமன் வீடுமனோடுபொருது தோற்றனனென்க. தருமராசன் என்ற சொற்போக்கு - 'தந்தையையொப்பான் மைந்தன்' என்றபடி இவனும் தருமநெறி சிறிதுந் தவறாதவனென்பதை விளக்கும். ஏ-பிரிநிலை. உம்மைகள் - முறையே எதிரதும் இறந்ததுந் தழுவிய எச்சம். ()

11. **பன்னுசீரியாகசேனன்குமரனைப்பத்தாநாளில்**
என்னெதிரமரிற்காட்டிலியான் படையாவுந்தீண்டேன்
பின்னவன்வெகுண்டுசெய்யும்பெருமிதங்கண்டுமீண்டு
கன்னனைவெல்லநின்றகாளைகைக்கணையால்வீழ்வேன்.

(இ - ள்.) பன்னு - (யாவராலும்) எடுத்துச்சொல்லப்படுகிற, சீர் - புகழையுடைய, யாகசேனன் குமரனை - துருபதராசனது

குமாரனை அந்தச் சிகண்டியை, பத்துஆம் நாளில் - பத்தாவது யுத்ததினத்தில், அமரில் - போரில், என் எதிர் காட்டில் - எனது எதிரில் நிறுத்திக்காட்டினால், யான்படை யாஉம் தீண்டேன் - (பெண்ணாயிருந்து ஆணான அவனோடு போர்செய்ய) நான் ஆயுதங் களில் எவற்றையுந் தொடவும்மாட்டேன்; பின் - பின்பு, அவன் வெகுண்டு செய்யும் - அந்தச்சிகண்டி கோபித்துப்போர் செய்கிற, பெருமிதம் - பராக்கிரமத்தை, கண்டு - பார்த்து, மீண்டு - பின்பு, கன்னனை வெல்ல நின்ற காளை கை கணையால் வீழ்வேன் - கர்ணனைச் சயிக்குமாறு உறுதியாய்நின்ற இளவீரனை அருச்சுனனது கையிலுள்ள அம்பினால் (அடிபட்டுப் போர்க்களத்தில்) விழுவேன்;

யாகசேனனென்பது, துருபதனுடைய மற்றொருபெயர். இவன்குமரனென்றது, சிகண்டியை. பெருமிதம் - மிக்க அளவு; ஒருவன் மற்றையோரினுஞ் சிறந்துவிளங்குதற்குக் காரணமாகுதலால், பெருமிதமென்று பராக்கிரமத்துக்குக் காரணப்பெயர்: 'வீரத்தினைப் பெருமிதமென்றெண்ணினான்; என்னை? எல்லாரோடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதமெனப்படும் என்றற்கு என்பது,' என உரைத்ததை அறிக. 'கன்னனை வெல்லநின்றகாளை' என்றது, திரௌபதியைத் துகிலுரிந்தபோது அருச்சுனன் 'துரியோதனனுக்கு உற்ற துணையான கர்ணனை யான் கொல்வேன்' என்று சபதஞ் செய்துள்ளானாதலாலென்க: கர்ணனிடத்துத் தனக்குள்ள துரபிப்பிராயத்தாலும், அருச்சுனனுக்கு ஒரு ஆசீர்வாதமாகவும், வீடுமன் இவ்வாறு கூறினான்: இனி, நடப்பவற்றைஅறியும் எதிர்காலவுணர்ச்சியாற் கூறினனுமாம்.காளை-அதுபோன்றவனுக்கு உவமவாகுபெயர். (*11*)

12.—பின்புவீடுமன் 'நீ இருக்கையில் வெற்றிஇவர்க்கே' என்ன, க்ருஷ்ணன் துரோணனிடஞ் செல்லுதல்.

நின்றனையருளொடாங்கேநீலமாமேனியாய்நீ
வென்றிமற்றிவரேயல்லால்வேறியாரெய்துகிற்பார்
என்றனனென்றபோதப்பிதாமகனிருதாள்போற்றி
நின்றவர்தம்மைக்கொண்டுசிலைமுனிநிலையிற்போனான்.

(இ - ள்.) நீலம் மா மேனியாய் - நீலநிறமுள்ள அழகிய திருமேனியை யுடையவனே! நீ—, ஆங்கே - அந்தப்பக்கத்திலே [பாண்டவர்திறத்திலே], அருளொடு - கருணையுடனே, நின்றனை - (துணைசெய்ய) நின்றாய்; (ஆகையால்), இவர்ஏ அல்லால் - இப்பாண்டவர்களேயன்றி, வேறு யார்—, வென்றி - வெற்றியை, எய்துகிற்பார் - அடையவல்லவராவர்? [எவருமில்லை யென்றபடி], என்றனன் - என்று (வீடுமன் கண்ணனை நோக்கிக்) கூறியருளினான்; என்ற போது - அங்ஙனங்கூறினபொழுது, (கண்ணபிரான்), அ பிதாமகன் இரு தாள் போற்றி நின்றவர் தம்மை கொண்டு - (தமது) பெரியபாட்டனை அவ்வீடுமனது உபயபாதத்தை வணங்கி நின்ற பாண்டவர்களைக் கூட்டிக்கொண்டு, சிலை முனி நிலையில் போனான்-விற்றொழிலில்வல்ல துரோணாசாரியன் நிற்கிறவிடத்துச் சென்றான்; (எ - று.)

நீலம் ஆம் மேனியாய் என்றும் எடுக்கலாம். மற்று - அசை.

13.—துரோணனைக்கிட்டியதும், க்ருஷ்ணன் 'நீ அருளினால் தான் இப்பாண்டவர்க்கு வெற்றி' என்று அவனிடம்கூறுதல்.

போயவர்குருவின்பாதம்போற்றிமுன்னிற்பச்செங்கண்
மாயவனவனைநோக்கிவாகையந்தாமஞ்சூட
நீயிவர்க்களித்தியாகிலுண்டலானின்னைவையம்
தாயவர்தமக்கும்வேறலரிதெனச்சாற்றினானே.

(இ - ள்.) அவர்-அப்பாண்டவர்கள், போய்—, குருவின் பாதம் போற்றி - (தமது) வில்லாசிரியனான துரோணனது அடிகளை வணங்கி, முன்நிற்ப - எதிரிலே நிற்க, (அப்பொழுது), செம் கண் மாயவன் - சிவந்த திருக்கண்களையும் மாயையையுமுடைய கண்ணன்,— அவனை நோக்கி - அத்துரோணனைப் பார்த்து, 'வாகை அம் தாமம் சூட - (வெற்றிக்குரிய) அழகிய வாகைப்பூமாலையைச் சூடும்படி, நீ—, இவர்க்கு அளித்தி ஆகில் - இப்பாண்டவர்க்குக் கருணைசெய்வாயானால், உண்டு அலால் - வெற்றியுண்டேயல்லாமல், நின்னை வேறல் - உன்னைச்சயித்தல், வையம் தாயவர் தமக்குஉம் அரிது - உலகங்களை அளவிட்ட திருமாலுக்கும் அருமையானது,' என சாற்றினான் - என்றுசொன்னான்; (எ - று.)

துரோணன் அஸ்திரசஸ்திரங்களில் அதிசாமர்த்தியமுடையவனாய் அனைவர்க்கும் அழித்தற்கரியனாதலின், அவனைக்கொல்ல அவனையே உபாயங்கேட்குமாறு, மாயவன் அவனிடஞ்சென்று தோத்திரிக்கின்றானென்க. முன் - இடமுன். குருவென்னும் வடசொல்லுக்கு - (அஜ்ஞாநமாகிய மன) இருளை யொழிப்பவனென்று பொருள். வாகை - பூவுக்கு, முதலாகுபெயர். தாமம் - வடசொல். வையம் தாயவர் என்றபெயர், அவ்வெம்பிரானது நினைத்தவற்றை நினைத்தவாறே முடிக்கவல்ல ஸர்வசக்தியை விளக்கும்.

வையந்தாவிய கதை:—மகாபலியென்னும் அசுரராசன் தன் வல்லமையால் இந்திரன்முதலியயாவரையும் வென்று மூவுலகங்களையும் தன்வசப்படுத்தி அரசாண்டு செருக்குக்கொண்டிருந்தபொழுது, அரசிழந்ததேவர் திருமாலைச் சரண மடைந்து வேண்ட, அவர் வாமனாவதாரமெடுத்துக் காசியபமுனிவருக்கு அதிதிதேவியினிடந் தோன்றின பிராமணப் பிரமசாரியாகி, வேள்வியியற்றி யாவர்க்கும் வேண்டிய அனைத்தையுங் கொடுத்துவந்த அந்தப்பலியினிடஞ் சென்று, தவஞ்செய்வதற்குத் தன் காலடியால் மூவடி மண் வேண்டி, அதுகொடுத்தற்கு இசைந்து அவன் தத்தஞ்செய்த நீரைக் கையிலேற்று, உடனே திரிவிக்கிரமனாகி ஆகாயத்தையளாவி வளர்ந்து, ஓரடியால் மண்ணையும் ஓரடியால் விண்ணையும் அளந்து மற்றோரடியால் அவனையும் பாதாளத்தில் அழுத்தி அடக்கினார் என்பது. வேறல் - தொழிற்பெயர். (13)

14.—இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்; துரோணன் தன்னை வெல்ல உபாயங்கூறியதைத் தெரிவிக்கும்.

மன்மகன்றருமன்வென்றுவையகமெய்தநிற்பான்
என்மகனெனக்குமுன்னேயிறந்தனனென்றுவானில்

வின்மகபதியையொக்கும்வேந்தர்முன்சொல்லிற்சூரன்
றன்மகன்மகனேபின்னைச்சாபமென்றெடுக்கிலேனே.

(இ - ள்.) 'சூரன் தன் மகன் மகனே-சூரனென்னும் அரசனது புத்திரனான வசுதேவனது குமாரனே! மன் மகன் தருமன்-பாண்டு ராசனதுபுத்திரனான யுதிட்டிரன் தான், வென்று - (பகைவரைச்) சயித்து, வையகம் எய்த நிற்பான் - (இனிப்) பூமியை அடையநிற்ப வன்; வானில் - சுவர்க்கத்தில்வாழ்கிற, வில்-ஒளியையுடைய, மக பதியை - தேவேந்திரனை, ஒக்கும் - போன்ற, வேந்தர் முன் - அர சர்களது முன்னிலையில், என் மகன் எனக்கு முன்னே இறந்தனன் என்று சொல்லின் - என்குமாரனான அசுவத்தாமா யானிறப்பதற்கு முன்னே (போரில்) இறந்தானென்று (தகுந்தவர் யாராவது) சொன்னால், பின்னை - அதன்பின்பு, சாபம் என்று எடுக்கிலேன் - வில்லென்று கையில் எடுக்கவும்மாட்டேன்; (எ - று.)—இங்ஙனங் கூறினதனால், துரோணனுக்குப் புத்திரன்பக்கலுள்ள மிக்கஅன்பு விளங்கும்.

தேரில் விற்பிடித்துநிற்கையில் என்னைக் கொல்லவல்லாரில்லை யாதலால், நம்பத்தகுந்த புருஷனைக் கொண்டு எனக்கு மிகவும் அநிஷ்டமான நிகழ்ச்சியொன்று நிகழ்ந்ததாகக் கூறின், கையிற் பிடித்த சாபத்தைச் சோகத்தினால் விட்டிடுவேன்: அப்போது என்னைக் கொல்லலா மென்று உபாயங் கூறினானென்று வியாச பாரதம் கூறும். "என்மகனே யென்முன்னிறந்தானெனுமாற்ற, மன்னவையுட் கேட்பிக்க வல்லையேல் - பின்னை, அடலுக வென் றிண்டோ ளம்புகவா வென்கை, யுடலுகவா வென்ற னுயிர்" என்பது, பாரதவெண்பா. மகபதியென்னும் வடமொழிப்பெயர்க்கு - யாகத்துக்குத் தலைவனென்று பொருள்; நூறு அசுவமேதயாகங் களைச் செய்து இந்திரபதவி பெறுதலால், இவனுக்கு இப்பெயர். இந்திரன், அரசர்க்குச் செல்வத்திலுஞ் சிறப்பிலும் உவமை. சூரனது பௌத்திர னாதலால், கண்ணனுக்கு 'சௌரி' என ஒரு திருநாமமுங் காண்க. சூரன் - ஶூரனென்னும் வடமொழித்திரிபு.

15\. என்பெருஞ்சாபங்கைவிட்டியானெதிர்நிற்றலானும்
தன்பெருஞ்சாபத்தாலுஞ்சமரிடைத்திட்டத்துய்மன்
வன்புடனெனக்குக்கூற்றாய்மலைகுவன்மலைந்தவன்றே
நின்பெருங்கருத்துமுற்றுமேகுவீர்நீவிரென்றான்.

(இ - ள்.) (அவ்வாறு), என் பெரு சாபம் கைவிட்டு யான் எதிர் நிற்றலான்உம் - எனது பெருமையையுடையவில்லைக் கையி னின்றுஒழித்துவிட்டு [நிராயுதபாணியாய்] நான் எதிரிலே நிற்ப தாலும், தன் பெரு சாபத்தால்உம் - தனது [த்ருஷ்டத்யும்நனது] பெரிய வரத்தாலும், சமரிடை - போரிலே, திட்டத்துய்மன்—, வன் புடன் - வலிமையுடனே, எனக்கு கூற்று ஆய்-எனக்கு யமனாய், மலை குவன்-போர்செய்வான்; மலைந்த அன்றுஏ - (அங்ஙனம்) போர்செய்த அப்பொழுதே, நின் பெரு கருத்து முற்றும்-உனது பெரிய எண்ணம் நிறைவேறிவிடும் [நான் இறந்திடுதல் திண்ணம்]; நீவிர் ஏகுவீர் - நீங்கள் போங்கள், என்றான் - என்று (துரோணன் கண்ணனையும் பாண்டவரையும் நோக்கிக்) கூறினான்; (எ - று.)

"இற்றைக்கு மூவைந்தா நாளி லிகலமருட், கொற்றப்போர் மன்னவனே கூசாதே - வெற்றிகொளும், பாஞ்சாலன் புத்திரன் கைப்படுவேனென்றுரைத்தான், ருன்சாயு மாறே தரித்து" என்றார் பெருந்தேவனாரும். 'தன்பெருஞ்சாபம்' என்றது, தன் தந்தையான துருபதன் துரோணனைக் கொல்லும்பொருட்டு ஒருபுத்திரனுண்டாகவேண்டுமென்றுசெய்த யாகத்தில் தான் தோன்றிநின்றதை. இதனை 'சாபம்' என்றது, பிறனையழித்தலாகிய பயனைத் தவறாது விளைத்தலாலாம். வன்புடன் - துரோணனுேன என்மீது தந்தை தொடங்கி வருகிற தீராப்பகைமையுடனேயென்றும் உரைக்கலாம். பெருங்கருத்து - துரோணனையழித்தல், பாண்டவர்க்கு வெற்றியை விளைத்தல், பூபார நிவ்ருத்தி. சாபம் - வடசொல்திரிபு; "சாபமே சபித்தல் வில்லாம்" என்னும் நிகண்டினால் இருபொருளு முடையதாதலை அறிக. விட்டியான் - குற்றியலிகரம். வன்பு - பண்புப்பெயர். (பிராணிகளது உடம்பையும் உயிரையும் வேறுவேறாகப் பிரித்துக்) கூறுபடுத்தல்பற்றி, யமனுக்குக் கூற்றென்று பெயர்; இனி, (பிராணிகளின் ஆயுட்காலத்தைக்) கூறாக்கி வரையறைசெய்தல்பற்றிய பெயருமாம். யமன் தவறாது அழித்தற்கு உவமை. (15)

16.—யுதிஷ்டிராதியர் தம்படைத்தொகுதியைச் சேர்தல்.

முனிவனைவிடைகொண்டேகிமுகுந்தனுந்தாமுமுன்னம்
தனிவனந்திரிந்துமீண்டோர்தானையங்கானிற்புக்கார்
பனிவனநிறைந்தபொய்கைக்கரைநிழற்பரப்புந்தேமாங்
கனிவனமென்னயார்க்குமுதவிகூர்கருணைக்கண்ணார்.

(இ - ள்.) (பின்பு), பனி வனம் நிறைந்த பொய்கை கரை-குளிர்ச்சியையுடைய நீர் நிரம்பின குளத்தினது கரையிலே, நிழல் பரப்பும் - நிழலைப் பரவச்செய்கிற, கனி தேமா வனம் என்ன - பழங்களோடு கூடிய தேமாமரத்தோப்புப்போல, யார்க்குஉம் உதவிகூர் - யாவர்க்கும்நன்றிசெய்தல் மிகுந்த, கருணை கண்ணார்-அருளோடுகூடிய நோக்கத்தையுடையவர்களாகிய, முகுந்தன்உம் முன்னம் தனி வனம் திரிந்து மீண்டோர் தாம்உம் - கண்ணபிரானும் முன்னே ஒப்பற்ற காட்டில் அலைந்து திரும்பிவந்த பாண்டவர்களும், முனிவனை விடைகொண்டுஏகி -- துரோணனிடத்து உத்தரவு பெற்றுக்கொண்டு சென்று, தானை அம் கானில் புக்கார் - அழகிய (தமது) சேனையாகிய காட்டினுள்ளே சென்றார்கள்; (எ - று.)—க்ருபன் சல்லியன் இவர்களையும் கிட்டி யுதிஷ்டிராதியர் அவர்களாசியும் அனுக்கிரகமும்பெற்று மீண்டனரென்று வியாசபாரதம் கூறும்.

தன்னிடம்வந்தவர் யாவராயினும் அவர்களின்விடாய் தணியும்படி நீர்பருகி வீற்றிருத்தற்குத் தண்ணிழலையும் பசிதீர உண்ணுதற்கு இனியகனியையும் அளித்து உதவும் பொய்கைக்கரை மாம்பொழில்போலப் பகைவர் நண்பர் அயலார்என்னும் பேதங் கருதாது தம்மைவந்தடைந்தவர் யாவர்க்கும் பலவகையாலும் உதவிசெய்பவர்இவரென்பார், இங்ஙனங் கூறினார். "பயன் மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ, நயனுடை யான்கட் படின்" என்ற திருக்குறளையும், "நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க, படுபனை யன்னர் பலர்நச்சவாழ்வார்," "அழல்மண்டு போழ்தி னடைந்தவர்கட்

கெல்லாம், நிழன்மரம்போல் நேரொப்பத் தாங்கிப்-பழுமரம்போற், பல்லார் பயன்றுய்ப்பத் தான் வருந்தி வாழ்வதே, நல்லாண் மகற்குக் கடன்" என்ற நாலடியாரையும், "பார்கெழுபழுமரம்பழுத்தற்ருகவும்" என்ற கம்பராமாயணத்தையும் இங்கேயறிக. வநம் - வடசொல்; இது-நீரென்றும் காடென்றும் பொருள்படுதலை "வனமே காடும் நீரு மழகும்" என்ற திவாகரத்தாலு மறிக. தேமா-தேன்போலினிய பழங்களைத் தருவதொரு மாமரவிசேடம்; இதன் எதிர்மொழி-புளிமா. தேன் + மா = தேமா. முனிவனை-உருபு மயக்கம். 'முன்னந் தனிவனந்திரிந்துமீண்டோர்தானையங்கானிற் புக்கார்' என, முன்பு பலவருஷகாலங் காட்டிலேதிரிந்து இனி வனவாசம் வேண்டாஎன்று திரும்பினவர்கள் மீண்டுமொருகாட்டிற் பிரவேசித்தன ரென்று ஒருசமத்காரந் தோன்றக் கூறியது, **பொருத்தமின்மையணி**யென்னும் **அஸங்கதியலங்கார**மாகும். சேனையைக் காடென்றது, அடர்த்தியாலும் அச்சந்தருதலாலுமென்க.(16)

17.—படையை வியூகம் வகுத்தபின் பாண்டவரின் தூசிப்படை துரியோதனன் படையுடனே எதிர்க்கச் செல்லுதல்.

கொற்றவர் தம்மை யேழக் குரோணிவெஞ் சேனை யோடும்
பற்றுடை யசல மாகும் பான்மையால் வியூக மாக்கி
வெற்றிதந் தருள்கென் றேத்தி விந்தையை வணங்கி மாயோன்
சொற்றபின் றூசி யோடு தூசிசென் றுற்ற தன்றே.

(இ - ள்.) மாயோன் - கண்ணபிரான், ஏழ் அக்குரோணி வெம் சேனையோடும் - ஏழு அக்ஷௌஹிணியென்னுந் தொகையுள்ள பயங்கரமான சேனையுடனே, கொற்றவர்தம்மை - அரசர்களை, பற்று உடை அசலம் ஆகும் பான்மையால் வியூகம்ஆக்கி - (ஒன்றோடொன்று) தொடர்ச்சியுள்ள மலை யென்னுந் தன்மையால் அணி வகுப்புச்செய்து, வெற்றி தந்தருள்க என்று ஏத்தி விந்தையை வணங்கி - சயத்தைக் கொடுத்தருள்வாயாகவென்று துதித்துப் (போர்க்களத்துக்குரிய தெய்வமாகிய) துர்க்கையை வணங்கி, சொற்ற பின் - (போர்செய்யும்படி) சொன்னபின்பு, தூசி - முற்படை, தூசியோடு-(எதிரிகளுடைய) முற்படையுடனே, சென்று உற்றது-(போருக்குப்) போய் நெருங்கிற்று; (எ - று.)—அன்றே - ஈற்றசை.

'படைவகுப்பாவது - வியூகம்; அஃது - எழுவகையுறுப்பிற்ருய் வகையால்நான்காய் விரியால் முப்பதாம். உறுப்பு ஏழாவன - அரம் முதல் தோட்டியீருயின. வகைநான்காவன - தண்டம், மண்டலம், அசங்கதம் [அஸம்ஹதம்], போகம் என இவை. விரி முப்பதாவன - தண்டவிரி பதினேழும், மண்டலவிரி இரண்டும், அசங்கதவிரி ஆறும், போகவிரி ஐந்தும் எனஇவை. இவற்றின்பெயர்களும் இலக்கணமும் ஈண்டுஉரைப்பின் பெருகும்; அவையெல்லாம் வடநூல்களுட் கண்டுகொள்க' என்பது, திருக்குறள் பரிமேலழகருரை. அசலவியூகமாக்குதலாவது - நால்வகைச்சேனைகளையும் மலைபோல் வடிவு அமையும்படி ஒழுங்குபடநிறுத்துவது; சிறுசேனையைக் கொண்டே பெரியசேனையை வென்று அழிக்கவல்லதும், இந்திரனால் ஏற்படுத்தப்பட்டதும், **அசல**மென்று பிரசித்தமானதும், வச்சிர

மென்று பெயருள்ளதுமான வியூகமாக வகுக்கப்பட்டதென்று வியாசபாரதங் கூறுகின்றது. ஒரு வேஷத்தை மேற்கொண்டவன் அதற்குஉரிய குணந்தொழில்களையெல்லாம் உடையனுகவேண்டுவது இயற்கை யாதலால், தேவாதிதேவனுன திருமால் இங்குத் தான் கொண்ட மநுஷ்யாவதாரத்துக்கேற்பத் துர்க்கையை வணங்கினனென்க. பற்று உடை அசலம் - (பகைவர்களது) வெல்லும் ஆசையை ஒழிக்கிற அசலவியூகம் எனவுங் கொள்ளலாம். (17)

வேறு.

18.—முரசம் முழங்குதல்.

புரசை யானைப் பொருபரித் தேருடை
அரசன் மாத்துவ சத்தன வாதலாற்
குரைசெய் வான்பணைக் குப்பைகள் யாவினும்
முரச சால முழங்கின சாலவே.

(இ - ள்.) புரசை - கழுத்திடுகயிற்றையுடைய, யானை-யானைகளையும், பொரு பரி - போர்செய்யவல்ல குதிரைகளையும், தேர் - இரதங்களையும், உடை-உடைய, அரசன்-யுதிஷ்டிரராசனது, மா துவசத்தன ஆதலால் - பெருமையையுடைய கொடியில் (தாம்) இருப்பனவாகையால், முரச சாலம்-பேரிகைகளின் கூட்டங்கள், குரை செய்வான் பணை குப்பைகள் யாவின்உம்-ஒலித்தலைச் செய்கின்ற பெரிய போர்ப் பறைகளின் கூட்டங்க ளெல்லாவற்றினும், சால முழங்கின-மிகுதியாக ஒலித்தன; (எ - று.)

பாண்டவசேனையில் இயல்பாக வெற்றிக்கு அறிகுறியாகவும் போரில் ஊக்கத்தையுண்டாக்கி வளர்த்தற்பொருட்டும் முரசங்கள் அடிக்கப்பட்டு மிகுதியாக முழங்குதலை, தலைவனுனதருமனது கொடியில் தம்உருவம் எழுதப் பெற்றுள்ளதென்ற செருக்கினுலாகிய களிப்பின் மிகுதியால் அதிகமாகமுழங்கினதாக ஒருகாரணங் கற்பித்துவருணித்ததனுல், இது, ஏதுத்தற்குறிப்பேற்றவணி. மதம் பிடித்தகாலத்தில் யானையின்மேல் ஏறுதற்கு ஒரு ஆதாரமாக, எப்பொழுதும் யானைக்கழுத்தில் கயிறுகட்டிவைத்தல் இயல்பு. காலாட்சேனையைஉபலக்ஷணத்தாற் பெறவைத்தார். முரஜஜாலம் - வடசொற்றொடர்.

இதுமுதற் பதினேழுகவிகள் - பெரும்பாலும் முதற்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். ()

19.—சங்குகளொலித்தல்.

மலர்ந்தபற்பவனநிகர்பைந்துழாய்
அலங்கல்வித்தகனேந்தினவாதலால்
வலம்புரிக்குலம்வாழ்வுபெற்றேமெனுச்
சலஞ்சலத்தொடுஞ்சங்கொடுமார்த்தவே.

(இ - ள்.) மலர்ந்த பற்பவனம் நிகர் - மலர்ந்த தாமரைக் காட்டையொத்த, பைந் துழாய் அலங்கல் வித்தகன் - பசுநிறமான திருத்துழாய் மாலையையணிந்த ஞானசொரூபியான திருமாலின்

வடிவமான கண்ணபிரானல், ஏந்தின - (கையிற்) பிடிக்கப்பட்டவை, ஆதலால்-,வாழ்வு பெற்றேம் என-சிறப்புப்பெற்ருே மென்று களித்து, வலம்புரி குலம் - வலம்புரிச் சங்குகளின் கூட்டங்கள், சலஞ்சலத்தொடுஉம் - சலஞ்சலமென்னுஞ் சங்குகளோடும், சங்கொடுஉம்-இடம்புரிச்சங்குகளோடும், ஆர்த்த - ஒலித்தன ; (எ - று.)

வலம்புரிச்சங்குகளின் மிக்க முழக்கத்திற்கு, கண்ணன்கையிலிருப்பது நம்மினமே யென்ற களிப்பைக் காரணங் கற்பித்ததனல், இப்பாட்டும் - ஏதுத்தற்குறிப்பேற்றவணி. நிகர் வித்தக னென இயையும். திருக்கண்கள் திருக்கைகள் திருவடிகள் திருமுகம் திருவாய் திருவுந்தி முதலிய அவயவங்களெல்லாம் செந்தாமரைமலர் போலுதலால், திருமாலின் திருமேனிக்குத் தாமரைக்காட்டை உவமை கூறியது; "கைவண்ணந் தாமரை வாய்கமலம் போலுங் கண்ணிணையு மரவிந்த மடியு மஃதே" எனத் திருநெடுந்தாண்டகத்திலுங் காண்க. பற்பவனம் - பத்மவநமென்றவடசொல்திரிபு. துழாய் - துளஸீ : வடமொழி. அலங்கல் - தொங்கியசைவது என மாலைக்குக் காரணக்குறி: இதில், அல் - கருத்தாப்பொருள்விகுதி. திருமாலின் கையிலுள்ளது - பாஞ்சசந்நியமென்னும் வலம்புரிச்சங்கு. வலம்புரி, சலஞ்சலம், இடம்புரி என்பன - சங்கின்சாதிபேதம். "இப்பி யாயிரமே சூழ்ந்த திடம்புரி யென்று கூறு, மொப்பில்சங் காயிரஞ்சூழுறும் வலம்புரி யென்றேதும், அப்படி யதுவுஞ் சூழ்ந்த சலஞ்சல மாகு மற்றைத், தப்பிலாச் சலஞ்சலங்கள் சார்ந்தது பாஞ்சசன்னியம்" என்ற நிகண்டுசெய்யுளால், இவற்றில் ஒன்றினு மொன்று ஆயிரமடங்கு சிறந்ததெனை உய்த்துணர்க. வலம்புரி - வலப்பக்கமாக உட்சுழிந்திருக்குஞ் சங்கு. (19)

20.—இருபுறத்துச்சதுரங்கசேனைகளும் ஒன்றையொன்று எதிர்த்தல்.

சென்றுதேர்களுந்தேர்களுஞ்சேர்ந்தன
வென்றிவேழமும்வேழமுமூர்ந்தன
நின்றவாசியும்வாசியுநேர்ந்தன
வென்றிவீரரும்வீரருமேவினர்.

(இ - ள்.) (இரண்டுசேனைகளிலும்), தேர்களும் தேர்களும்—, சென்று சேர்ந்தன - போய் (ஒன்றேடொன்று) நெருங்கின; வென்றி-சயத்தையுடைய, வேழம்உம் வேழம்உம் - யானைகளும்யானைகளும், ஊர்ந்தன - (ஒன்றேடொன்று எதிர்த்து) நடந்தன; நின்ற- தவறுது நின்ற, வாசிஉம் வாசிஉம் - குதிரைகளும் குதிரைகளும், நேர்ந்தன - (ஒன்றேடொன்று) எதிர்த்தன; வென்றி-சயத்தையுடைய, வீரர்உம் வீரர்உம் - காலாள்வீரர்களும் காலாள் வீரர்களும், மேவினர்-(ஒருவரோடு ஒருவர்) பொருந்தினர்; (எ - று.)

தேர் யானை குதிரைகள், இங்கு அவற்றின்மீது ஏறியுள்ள வீரரையுங் குறிக்கும். வாஜி - வடசொல். (20)

21.—இதுமுதல் நான்குகவிகள் - இருபுறத்தவரும் கைகலந்து பொருதலைக் கூறும்.

பாரவாளமும்வாளமும்பாய்ந்தன
கூரவேல்களும்வேல்களுங்குத்தின

வீரசாபமுஞ்சாபமும்வீக்கின
தூரவாளியும்வாளியுந்தோய்ந்தவே.

(இ - ள்.) (இருதிறத்திலும்), பாரம் - பெரிய, வாளம்உம் வாளம் உம் - வாளாயுதங்களும் வாளாயுதங்களும், பாய்ந்தன - (ஒன்றின்மே லொன்று) பாய்ந்தன; கூர - கூர்மையையுடைய, வேல்கள்உம் வேல் கள்உம் - வேலாயுதங்களும் வேலாயுதங்களும், குத்தின - (ஒன்றை யொன்று) குத்தின; வீரம் - போர் வலிமையையுடைய, சாபம்உம் சாபம்உம் - விற்களும் விற்களும், வீக்கின - (ஒன்றையொன்று) அழித்தன; தூரம் - நெடுந்தூரத்திலுஞ் செல்லுந்தன்மையுள்ள, வாளிஉம் வாளிஉம் - அம்புகளும் அம்புகளும், தோய்ந்த - (ஒன் றின்மேலொன்று) பொருந்தின ; (எ - று.)

வாள்வீரரோடு வாள்வீரரும், வேல்வீரரோடுவேல்வீரரும், வில் வீரரோடு வில்வீரரும் எதிர்த்துப்பொருததை உபசாரவழக்காக ஆயுதங்களின்மேல் ஏற்றிக் கூறினர். பாரவாளம், வீரசாபம், தூரம் - வடசொற்கள். வாளம் என்ற வடமொழியே, வாள்என விகாரப்பட்டுநிற்பது; இனி, வேறு தமிழ்மொழி யென்னின், அம் - சாரியை யென்க. கூர - கூரென்னும் பகுதியின்மேற் பிறந்த குறிப் புப்பெயரெச்சம் ; இனி, கொடியதென்னும்பொருள் தரும் க்ரூரமென் னும்வடசொல் திரிந்ததாக்கொள்ளினும் பொருந்தும். (21)

22. இட்டதார்முடிமன்னவரோடெதிர்
இட்டதார்முடிமன்னவரெய்தினர்
பட்டவர்த்தனப்பார்த்திவர்தம்முடன்
பட்டவர்த்தனப்பார்த்திவரெய்தினர்.

(இ - ள்.) (இருபடையிலும்), இட்ட தார் - அணிந்தமாலையை யுடைய, முடி மன்னவரோடு - கிரீடந்தரித்து அரசாளும் மகுடவர்த் தனரென்னும் அரசர்களோடு, இட்ட தார் முடி மன்னவர் - அத் தன்மையரான மகுடவர்த்தனர், எதிர் எய்தினர் - எதிரிற்பொருந் தினர்; பட்டவர்த்தனப் பார்த்திவர் தம்முடன் - (கிரீடமின்றி) நெற் றிப்பட்டத்தை மாத்திரங்கட்டி அரசாளும் பட்டவர்த்தனரென்னும் அரசர்களோடு, பட்டவர்த்தனப் பார்த்திவர் - அத்தன்மையரான அரசர்கள், எய்தினர் - பொருந்தினர்; (எ - று.)

ஒத்தவீரர்கள் ஒருவரோடொருவர் எதிர்த்தல் தருமயுத்த மாதலின், இங்ஙனங் கூறினர். (22)

23. மந்திரத்தவர்தம்முடன்மாமதி
மந்திரத்தவர்வந்தெதிர்மோதினர்
தந்திரத்தவர்தம்மிசையேசெலத்
தந்திரத்தவர்சாயகமேவினர்.

(இ - ள்.) மா மதி - சிறந்த அறிவையுடைய, மந்திரத்தவர் தம்முடன் - மந்திரிகளுடனே, மந்திரத்தவர்-மந்திரிகள், எதிர் வந்து மோதினர் - எதிர்த்துவந்து தாக்கினர்கள்; தந்திரத்தவர் தம் மிசைஏ செல-படைத்தலைவர்கள்மேலேயே செல்லும்படி, தந்திரத்

தவர்-படைத்தலைவர்கள், சாயகம் ஏவினர் - அம்புகளைச் செலுத்தினார்கள்; (எ - று.)

மந்த்ரம் - ஆலோசனை, தந்த்ரம் - சேனை: அவற்றையுடையவர், மந்திரியுந் தந்திரியுமாவர். ஸாயகம் - வடசொல். மாமதி - மத்திம தீபம். (23)

24. மண்டலீகர்தம்மார்புறையாகவே
மண்டலீகர்தம்வாட்படையோச்சினர்
சண்டவார்சிலைசாமந்தர்வாங்கவே
சண்டவார்சிலைசாமந்தர்வாங்கினர்.

(இ - ள்.) மண்டலீகர் தம் மார்பு உறை ஆக - மண்டலாதிபதிகளான அரசர்களது மார்பு உறையாக இருக்கும்படி, மண்டலீகர்—, தம் வாள்படை ஓச்சினர் - தங்களது வாளாயுதத்தை வீசினார்கள்; சாமந்தர் - சாமந்தராசர்கள், சண்டம்வார் சிலை வாங்க - உக்கிரமான நீண்ட வில்லை வளைக்க, (அவர்க்குஎதிரில்), சாமந்தர் சண்டம்வார் சிலை வாங்கினர்—; (எ - று.)

மண்டலீகன் - நாற்பதுகிராமம் ஆள்பவன்: ஒருகோடி கிராமம் ஆள்பவன் மகுடவர்த்தனனென்றும், மகுடவர்த்தனர் நாலாயிரவரை வணக்கியாள்பவன் மண்டலீகனென்றும் ஒருசாரார் கூறுவர். ஒரு பேரரசனுக்குக் கீழ்ப்பட்டு அவனுடையநாட்டின் கடைக்கோடியையாளுஞ் சிற்றரசர்க்கு ஸாமந்தரென்று பெயர்; வடசொல். உறை - படைக்கூடு; (ஆயுதங்கள்) உறுவது உறை யென்க் காரணப் பெயர். தமதுவாள் முழுவதும் பிறரதுமார்பினுள்ளே சென்று நுழையும்படி வீசின ரென்பார், 'மார்பு உறையாக ஓச்சினர்' என்றார். (24)

25.—இதுவும் அடுத்த கவியும் – அடிபட்ட வீரரின் வருணனை.

முடியிழந்தநிருபர்முகுந்தனல்
இடிபடுந்தலைராகுவொடேயினர்
அடியிழந்தவராதபன்றேர்விடுந்
தொடிநெடுங்கைவலவனிற்ருேன்றினர்.

(இ - ள்.) (அவ்யுத்தத்தில்), முடி இழந்த நிருபர் - தலையறுபட்ட அரசர்கள், முகுந்தனல் இடிபடும் தலை ராகுவொடு ஏயினர்-திருமாலால் துணிக்கப்பட்ட தலையையுடைய இராகுவோடு ஒத்தார்கள்; அடி இழந்தவர் - கால்களை இழந்தவர்கள், ஆதபன் தேர் விடும் தொடி நெடு கை வலவனின் தோன்றினர் - சூரியனது தேரைச் செலுத்துகிற தொடியென்னும் அணியையணிந்த கைகளையுடைய சாரதியான அருணன்போலக் காணப்பட்டனர்; (எ - று.)—**உவமையணி.**

ஆதபன் - நன்றாகத் தபிப்பவன்; தபித்தல் - காய்தல். தேரோட்டுவதில் அவனுக்குள்ள கைத்திறமையை விளக்க, 'தேர்விடுந்தொடி நெடுங்கை வலவன்' என்றார். வலவன் - வல்லவன்; இன்-ஐந்தனுருபு, ஒப்புப் பொருளது. இராகுவொடு என்பதில், மூன்றனுருபு - ஐந்தாவ

தற்குரிய ஒப்புப்பொருளில் வந்தது, உருபுமயக்கம். ஏயினர், ஏய் - பகுதி, இன்-இறந்தகால இடைநிலை: இப்பகுதியினடியாகச் செயவெனெச்சம் 'ஏய்ப்ப' என வருதல் காண்க.

துருவாசமுனிவரது சாபத்தால் கடலினுட்புக்கொளித்த தேவலோகத்துச்செல்வங்களை மீண்டும்பெறும்பொருட்டுத் திருமாலின் கட்டளையால் தேவர்கள் அசுரர்களைத் துணைக்கொண்டு பாற்கடல் கடைகையில் உண்டான அமிருதத்தை அத்திருமால் தாம் எடுத்து, மிகஅழகிய மோகினியென்னும் பெண்வடிவத்தால் அசுரர்களை மயக்கி, அமரர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்தருளுகையில், இராகுவென்னும் ஓரசுரன் தானிருத்தற்குரிய அவுணர்கூட்டத்தைவிட்டுத் தேவர்கோட்டியினிடையிலேபுக்குக் கையேற்று அமிருதத்தை வாங்கியுண்ண, அதனைச் சூரியசந்திரர் குறிப்பித்தமாத்திரத்தில், எம்பெருமான் அவனை அகப்பையாலடித்துத் தலைவேறு உடல் வேறாக்க, அமிருதமுண்டதனால் உயிர்நீங்காத அத்தலையும் உடம்பும், விஷ்ணுவின் அனுக்கிரகத்தால் இராகுகேதுக்களென இரண்டு கிரகங்களாகிச் சூரியன்முதலிய ஏழுகிரகங்களோடு சேர்ந்து, சிற்சிலகாலத்து, தம்மேற் கோள்சொன்ன சூரியசந்திரர்க்குப் பகையாய் அவர்களை மறைக்கின்றன என்பது, முன்னிரண்டடியிற் குறித்த கதை. படைத்தல் தொழிலில் தனக்கு உதவியாகும்படி பிரமனாற் படைக்கப்பட்ட உபப்பிரமர் ஒன்பதின்மரில் ஒருவனாகிய காசியபமுனிவனது மனைவிமார்கள் பலருள் கத்துரு என்பவள்,ஒருநாள் ஆகாசமார்க்கத்தே சென்ற உச்சைச்சிரவ மென்னும் வெள்ளைக்குதிரையைக் கருநிறமுடையதென்று மாறுபாடாகக் கூற, அதனைமறுத்து விநதை வெண்ணிறமுடையதென்று உள்ளபடி கூறவே, இதுகாரணமாக இருவர்க்கும் மாறுபாடுண்டாகி 'யாருரை பொய்யாகிறதோ அவள் மற்றவட்கு அடிமையாகக்கடவள்' என்று தம்மில் சபதம் நியமித்துக்கொள்ள, கத்துரு தனது மக்களாகிய கருநாகங்களால் அவ்வெண்பரியை மறைப்பித்துக்காட்டி வஞ்சனைவழியால் விநதையைத் தனக்கு அடிமையாக்கி 'நீ உன்மகனால் தேவலோகத்திலிருந்து அமிர்தங் கொணர்ந்து என்மக்களுக்குக் கொடுக்கையில், உனது இவ்வடிமைத் தன்மை ஒழியும்' என்று விடைகூற, பின்பு விநதை தன் கணவனருளால் ஆயிரம் வருஷகாலங்கழித்துப் பலிக்கும்படியான இரண்டு அண்டங்களைப் பெற்று அடைகாத்துவருகையில், ஐந்நூறுவருஷங் கழிந்தவாறே ஒருநாள் 'பெண்புத்தி பின்புத்தி' ஆதலால் தனது அடிமைத்தனத்தை விரைவிலொழித்தலிலே கருத்துக்கொண்டு ஒரு முட்டையை யெடுத்து உடைக்க, அதனுள் காலம்நிரம்பாமையால் இடைக்குக்கீழ்ப்பட்ட அவயவங்களில்லாமல் பாதிவடிவமாயிருந்த குமாரனொருவன் தோன்றி, அருணனெனப் பெயர்பூண்டு சூரியனுக்குச் சாரதியாயின னென்பது, பின்னிரண்டடியிற் குறித்த கதை. இவன், கருடனது தமையன். (25)

26. பூபர்தங்கள்புயங்களுமார்பமுஞ்
சாபவெங்கணைதைத்துகுசோரியால்
தீபமென்னவுஞ்செம்மலர்க்கோடுடை
நீபமென்னவுநின்றனராண்மையால்.

(இ - ள்.) பூபர் - அரசர்கள், தங்கள் - தங்களுடைய, புயங்களும் - தோள்களிலும், மார்பம்உம் - மார்பிலும், சாபம் வெம் கணை - (பகைவர்) வில்லால்எய்த கொடியஅம்புகள், தைத்து - பாய்ந்து, உகு - (அவ்வழியே) பெருகுகிற, சோரியால் - இரத்தத்தால், தீபம் என்னஉம் - சோதிவிருட்சங்கள்போலவும், செம் மலர் கோடுஉடை நீபம் என்னஉம் - செந்நிறமான பூக்களைக்கொண்ட கிளைகளையுடைய (செங்) கடம்பமரம்போலவும், ஆண்மையால் நின்றனர் - வீரத்தன்மையோடு நின்றார்கள் ; (எ - று.)

செந்நிறம்பற்றிய உவமை. போரிற் பின்வாங்காமல் எதிர்நின்று முகத்தினும் மார்பினும் விழுப்புண்படுதலே ஆண்மைவிளங்கும் வழியாதலால், 'ஆண்மையால் நின்றனர்' என்றார். தீபம் - தீபமரம் ; சோதி விருக்ஷம் : இது, பகலில் தன்னொளி தோன்றாமல் இரவில் தோன்றப் பெறுகின்றதொருமரம் ; இரவெரி எனவும்படும். 'செந்தழலொளியிற்பொங்குந் தீபமாமரங்கள்' என்றது பெரிய புராணம். பூபர் - பூமியைக்காப்பவர்; வடசொல். மார்பம் —அம் - சாரியை. சொரிவது, சோரி. தீபம், நீபம் - வடசொற்கள். மரம் - வீரர்க்கும், கிளைகள் - அவர் அவயவங்களுக்கும், மலர்கள் - செந்நீருக்கும் ஒப்பாம். தைத்து = தைக்க : எச்சத்திரிபு. (26)

27.—நான்குகவிகள் - போர்வீரர்களின் பெருவீரம் புலப்படுத்தும்.

கையில்வாளிதொலைந்தபின்காய்ந்துதம்
மெய்யில்வாளிகள்வாங்கிவில்வாங்கினார்
பொய்யிலாமொழிப்பூபதிசேனையின்
மையிலாண்மையினார்சிலமன்னரே.

(இ - ள்.) பொய் இலா மொழி-(சிறிதும்) அசத்தியமில்லாத வார்த்தைகளையுடைய, பூபதி - யுதிட்டிரமகாராசனது, சேனையில்- சேனையிலே, மை இல் ஆண்மையினர் - குற்றமில்லாத பராக்கிரமத்தையுடையவர்களான, சில மன்னர் - சிலஅரசர்கள், கையில் வாளி தொலைந்த பின்-(தங்கள்) கையிலிருந்த அம்புகளெல்லாம் (பகைவர்மேலெய்து) ஒழிந்துபோனபின்பு, காய்ந்து - (பகைவர்மேற்) கோபங்கொண்டு, தம் மெய்யில் வாளிகள் வாங்கி- தமதுஉடம்பில் (பகைவரால் எய்யப்பட்டுத் தைத்துஉள்ள) அம்புகளைப் பறித்தெடுத்து, வில் வாங்கினார்-வில்லைவளைத்து எய்தார்கள்; (எ - று.)

இதனால், அவர்களது கலங்காதஉறுதிநிலை விளங்கும். இது, **நூழிலாட்டு;** அதாவது உடலிற்புதைந்த படையைப்பறித்துப் பகைவர்மேல்விடுதல். இது - புறப்பொருளின் பகுதியாகிய தும்பைத்திணைக்குரிய துறைகளில் ஒன்று ; புறப்பொருள் வெண்பாமாலையில் "களங்கழுமிய படையிரிய, வுளங்கிழித்த வேல் பறித்தோச்சின்று " எனக் கூறிய இலக்கணத்தையும், 'மொய்யகத்து மன்னர் முரணினி யென்னுங்கொல், கையகத்துக் கொண்டான் கழல் விடலை—வெய்ய, விடுசுடர் சிந்தி விரையகலம் போழ்ந்த, படுசுடரெஃகம் பறித்து" எனக் காட்டிய இலக்கியத்தையும், "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்" என்ற திருக்குறளையுங் காண்க. எய்தலாகிய காரியத்தை வில்வாங்குத

லாகிய காரணத்தாற் குறித்தது **உபசாரவழக்கு.** பொய்யில் ஆம் மொழி பூபதி என எடுத்தால், பொய்யின்பாற்பட்ட சொற்களை யுடைய ராஜராஜனான துரியோதன னென்று ஆகும். ஆண்மை- பௌருஷம். சில - குறிப்புப்பெயரெச்சம். (27)

28. **வலக்கையற்றுவிழவுமனத்தொரு**
கலக்கமற்றவெங்கார்முகத்தார்சிலர்
துலக்கெயிற்றுக்கணைதொடுத்தார்தொடை
யிலக்கமற்றபடையிலக்காகவே.

(இ - ள்.) வலம்கை அற்று விழஉம் - (தமது) வலக்கை (எதிரிகள் வழங்கின ஆயுதங்களால்) அறுந்து விழவும், மனத்து ஒரு கலக்கம் அற்ற - (தம்) நெஞ்சிலே (தைரியமில்லாமை) கலங்குதல் சிறிதுமில்லாத, வெம் கார்முகத்தார் - பயங்கரமான வில்லையுடைய வர்களாகிய, சிலர் - சிலவீரர்கள்,—தொடை - தொடர்ச்சியாகவுள்ள, இலக்கம் அற்ற - எண்ணில்லாத, படை - (பகைவர்) சேனைகள், இலக்கு ஆக - எய்யுங்குறியாக, துலக்கு எயிறு கணை தொடுத்தார்- விளங்குந்தன்மையுள்ள (தமது) பற்களால் அம்புகளை (வில்லில்) தொடுத்து எய்தார்கள்; (எ - று.)

வலக்கையற்றவர், அம்பெய்யக் கையில்லாமையால், பல்லால் தூணியிலிருந்து அம்புகளையெடுத்து இடக்கையிற்பிடித்துள்ள வில்லில் தொடுத்தனரென்பதாம். இது - போரில் அவர்களுக்கு உள்ள ஊக்கமிகுதியை விளக்கும். தொடை - போர்மாலையைச்சூடிய என்றுமாம். கார்முகம் - வடசொல்; தொழிலில் வல்லதென்று அவயவப்பொருள். துலக்கு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். தொடை-தொடுத்தல்; ஐ - விகுதி. இலக்கு-லக்ஷ்யம் : வடசொல். இலக்கமற்ற...... இலக்காக - **முரண்தொடை.** 'துலக்கெயிற்றுப்படை' என்று பிரதிபேதம். (28)

29. **தாளிரண்டுடைச்சிங்கமன்னர்சமர்**
வாளிரண்டொர்தொடையினில்வாங்கினர்
கோளிரண்டுமெனக்குறுகார்தடந்
தோளிரண்டுந்துணிந்தெதிர்வீழவே.

(இ - ள்.) தாள் இரண்டு உடை சிங்கம் அன்னர்- இரண்டுகால் களையுடைய சிங்கத்தைப் போன்ற சிலவீரர், சமர்-போரில், குறு கார் தட தோள் இரண்டுஉம்-பகைவர்களது பெரிய இரண்டு தோள்களும், கோள் இரண்டுஉம் என - (ராகுகேதுக்களாகிய) இரண்டு கிரகங்கள் போல, துணிந்து எதிர் வீழ - அறுபட்டு எதிரிலே விழும்படி, வாள் இரண்டு ஒர் தொடையினில் வாங்கினர்- இரண்டுவாளாயுதங்களை ஒருவிச்சில் வீசினார்கள்; (எ-று.)

சமகாலத்தில் எதிரியின் இரண்டுதோளும் அற்றுவிழும்படி இரண்டுவாள்களையெடுத்து ஒருங்குவீசினரென்பதாம். இதிலும் ஊக்கமிகுதி விளங்கும். தாளிரண்டுடைச் சிங்கம் - **இல்பொரு ளுவமை;** எந்தப்பிராணியையுங் தவறாதுகொல்லவல்ல தன்மையி லும், பிறர்க்கு அதிபதியாகுந்தலைமையிலும் சிங்கமாகிய விலங்கை

பொத்த மனித ரென்க: இனி, உள்பொருளுவமையாக, (திருமால் கொண்ட) இரண்டு கால்களையுடைய நரசிங்கமூர்த்தியை யொத்த பராக்கிரமமுடையாரென்றுங் கொள்ளலாம். சிங்கம் - ஸிம்ஹ மென்னும் வடமொழித்திரிபு; (யானை முதலிய பெரியவிலங்குகளை யும்) இம்சிக்க [கொல்ல] வல்லதென்று பொருள். தொடை - பிர யோகிக்குந்தரம் ஒன்று. கோளிரண்டு - எளிதில்அற்றுவிழுதற்கு உவமை. கோள்-காலத்தைஅளந்து கொள்வது என்று காரணப் பெயர். குறுகார் - (தம்மோடு) சேராதவர்: பகைவர். 'சமர்' என்ற விடத்து 'சிலர்' என்றும் பாடம். (29)

30. ஓடிமுட்டலிற்றேர்களுடைந்தன
நாடிமுட்டலினாகங்கள்வீழ்ந்தன
கூடிமுட்டலிற்கொய்யுளைமாய்ந்தன
சாடிமுட்டலினாள்களுஞ்சாய்ந்தனர்.

(இ - ள்.) (இருபடையிலும் ஒன்றோடொன்று), தேர்கள்—, ஓடி முட்டலின்-விரைந்துசென்று தாக்குதலால், உடைந்தன—; நாகங்கள் - யானைகள், நாடி முட்டலின் - தேடிச்சென்று மோது தலால், வீழ்ந்தன - கீழே விழுந்தன; கொய் உளை - கத்தரிக்கப்பட்ட பிடரிமயிரையுடைய குதிரைகள், கூடி முட்டலின்-நெருங்கிமோது தலால், மாய்ந்தன-இறந்தன; ஆள்கள்உம்-காலாள்வீரரும், சாடி முட்டலின்-மோதித்தாக்குதலால், சாய்ந்தனர்-அழிந்தனர்; (எ-று.) —சாய்ந்தன என்றும் பாடம்.

நாகம்-மலையில்வாழ்வதென்று பொருள்; வடசொல். நகம் - மலை, அசையாதது, கொய்யுளை-வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. 'ஆடிமுட்டலின்' என்ற பாடத்துக்கு, ஆடுதல்-போராடல். (30)

31.—தொந்தயுத்தம்.

பற்றிநின்றொருவன்படைவாளெதி
ருற்றவன்றலைசிந்திடவோச்சினான்
அற்றதன்றலைகொண்டவனுந்தனைச்
செற்றவன்றலைசிந்திடவீசினான்.

(இ - ள்.) ஒருவன் - ஒருவீரன், வாள் படை பற்றி நின்று - வாளாயுதத்தை(க் கையில்) பிடித்துநின்று, எதிர் உற்றவன் தலை சிந்திட - எதிரிற்பொருந்தின பகைவனது தலை சிதறும்படி, ஓச்சி னான்-வீசினான்; அற்ற தன் தலைகொண்டவன்உம் - (அங்ஙனம்) தன்தலைஅறுபட்ட எதிரியும், தனைசெற்றவன் தலைசிந்திட-தன்னை யழித்தவனது தலை சிதறும்படி, வீசினான் - (வாளை) வீசினான்;

தொந்தயுத்தமாக இரண்டுவீரர் வாளையேந்தி வீராவேசத் தோடு விரைந்து போர்செய்கையில், ஒருவன் மற்றொருவன்கழுத் தில் வாளை வீசித் தலையை யறுத்துத் தள்ள, அங்ஙனம் தலையறு கிறவனது கையில் ஓச்சின வாளும் முன் அவன்குறித்த குறிப்படி எதிரியின்கழுத்தில் விழுந்து தலையையறுத்த தென்பதாம்;

விரைந்துதொழில்செய்பவரது உடம்பு தலையறுபட்டபின்பும் சிறிது பொழுது முன்னையதொழிலை விடாதுசெய்தல், இயல்பு: "கைகொடு கால் கொடு தம்மின் வெகுண்டு கவந்த மலைந்தனவே," "தழல் விழி வாரண வீரர் முடித்தலை தடிவன சக்கரமே, யழலுமிழ் வாள்கள் சுழற்றின மீளவு மாவன சக்கரமே," "கருமுகில் முட்டின பட்டவர் கட்கனல் காலுமரும்புகையே" என்பர் மேற் பதினாறும்போர்ச்சருக்கத்தும். சுந்தோபசுந்தர்போல இருவரும் ஒருவரால் ஒருவர் அடிபட்டு ஒருங்குஒழிந்தனரென்க. "அடுசிலைபகழிதொடுத்து விடப்புகு மளவினி லயமெதிர்விட்டவர் வெட்டின, ருடல்சிலவிரு துணிபட்டன பட்டபினொருதுணி கருது மிலக்கை யழிக்குமே" என்ற கலிங்கத்துப்பரணிச் செய்யுளோடு இதை ஒப்பிடுக. இனி, அவனும்-அத்தலையற்றவனும், அற்ற தன் தலை கொண்டு - அறுந்த தனது தலையினால், தனை செற்றவன் தலை சிந்திட வீசினான்-தன்னையழித்தவனது தலைசிதறும்படியெறிந்தானென்று உரைப்பாருமுளர்; என்றது, தலையறுந்த முண்டம் அத்தலையைக் கையிலெடுத்து எறிந்து எதிரியின் தலையை அழித்ததென்றவாறும்: இது அசம்பாவிதமெனத் தோற்றலாம். (31)

32.—மூன்றுகவிகள்-போர்வீரர்களின் ஆண்மைச்செயலைக் கூறும்.

புங்கமெய்புதையப்புதையச்சிலர்
சிங்கமென்னச்செருக்களத்தாடினார்
கங்கமிட்டபைங்காவணநீழலில்
அங்கைகொட்டியலகைநின்றாடவே.

(இ - ள்.) கங்கம் இட்ட - கழுகுகளாற் செய்யப்பட்ட, பை காவணம் - குளிர்ச்சியான பந்தலின், நீழலில்-நிழலிலே, அலகை-பேய்கள், நின்று—, அம் கை கொட்டி - உள்ளங்கைகளைத் தட்டிக் கொண்டு, ஆட - கூத்தாடாநிற்க, செரு களத்து - போர்க்களத்தில், சிலர் - சிலவீரர்கள், புங்கம் மெய் புதைய புதைய - அம்புகளின்கூர்நுனி (தம்) உடம்பிலே மிகுதியாகத் தைத்தழுந்தவும், சிங்கம் என்ன - சிங்கங்கள்போல, (பராக்கிரமசாலிகளாய்), ஆடினார் - போர்செய்தார்கள்;

போரில் உயிர்நீங்கின உடல்களைத் தின்னவந்த கழுகுகள் ஆகாயத்தே இடைவிடாமற் பரவிப் பந்தல்போகட்டாற்போன்றன என்பது மூன்றுமடியின்கருத்து; போர்க்களத்திற் பேய்கள் தங்கட்கு இரையாகப் பிணங்கள் மிகுதியாகக் கிடைத்தலால், வந்து மகிழ்ந்து கூத்தாடுதல் இயல்பு. புங்கம், கங்கம் - வடசொற்கள். பைங்காவணம் என்பதில், பசுமை - குளிர்ச்சியின்மேலது. நீழல் - நீட்டல். அங்கை கொட்டுதலைத் தாளவொற்றாகக் கொள்க. ஆடினார் என்பதற்கு - அவற்றுடன் கூத்தாடிநின்றார் என்றும் உரைக்கலாம்: என்றது, கோபத்தோடு விரைந்துபோர்செய்துநின்ற வீரர்களது உடல் தலையறுபட்டபின் பதைபதைத்துக் கைகால் துடிப்பதையாம். (32)

33. வாளியாயிரந்தைத்தவழியெலாம்
ஓளியாகவொழுகுங்குருதியால்

தாளிலானடத்துந்தடந்தேருடை
மீளியாமெனநின்றனர்வீரரே.

(இ - ள்.) வாளி ஆயிரம் தைத்த வழி எலாம் - (தம்உடம்பில் பகைவர்எய்த) பலபாணங்கள் தைத்த துளைகளெல்லாவற்றி லிருந்தும், ஓளி ஆக ஒழுகும் - ஒழுங்காகப்பெருகுகிற, குருதியால்- இரத்தத்தால், வீரர் - சில வீரர்கள், தாள் இலான் நடத்தும் - கால்களில்லாத அருணனுற் செலுத்தப்படுகிற, தட தேர் உடை- பெரிய இரதத்தையுடைய, மீளி என - பெருமையிற்சிறந்த சூரியன் போல, நின்றனர் - நின்றார்கள் ; (எ - று.)

தன்மைத்தற்குறிப்பேற்றவணி. மிக்க செந்நிறமுடைமைபற்றி வந்தது. சூரியனுக்குக் கிரணங்கள் ஆயிரமாதலால், 'வாளியாயி ரந்தைத்தவழியெலா மொழுகுங்குருதி' எனப்பட்டது. வாளி யாயிரம் என்பதில், ஆயிரம் என்பது - மிகப்பலவென்னுமாத்திர மாய் நிற்கும். ஓளியாக - இடைவிடாது தொடர்ச்சியான தாரைக ளாக என்றபடி. தொடைகளில்லாமைபற்றி, அருணனுக்கு வட மொழியில் 'அநூரு' என்று ஒருபெயர் உண்மையின், 'தாளி லான்' என ஒருபெயர் கூறினர். சூரியனுடைய ரதம் பதினாயிரம் யோசனை விசாலமுள்ள தாதலின், 'தடந்தேர்' எனப்பட்டது. ஆம் - அசை. (33)

34. வெட்டி னாரவர் மெய்யிற் படாமைநின்
றொட்டி னாரிமைப் போதினி லோடியே
தட்டி னாருடலைத் தழுவிக் கொடு
கட்டி னார்விழுந் தார்சில காளையர்.

(இ - ள்.) சில காளையர் - சிலவீரர்கள், வெட்டினார் - (பகை வரால்) வெட்டப்பட்டார்கள்; ஒட்டினார் - (தாம் பகைவரைக் கொல் வதாக முன்னே) சபதஞ்செய்தவர்களாகிய, அவர் - அவ்வீரர்கள், மெய்யின் படாமை நின்று - அந்தச்சபதவுண்மையினின்றுந் தவறு மல் நிலைநின்று, இமை போதினில் ஓடி - ஒருமாத்திரைப்பொழுதி னுள்ளே விரைந்துசென்று, தட்டினார் உடலை தழுவி கொடு - (தம்மை) வெட்டினவராகிய அவ்வீரரது உடம்பை அணைத்துக் கொண்டு, கட்டினார் விழுந்தார் - கட்டிவிழுந்தார்; (எ - று.)

என்றது, ஒருவரை யொருவர் கொல்வதாகப் பிரதிஜ்ஞை செய்து மிக்க கோபாவேசத்தோடு விரைந்து தொந்தயுத்தஞ் செய்கிற இரண்டுவீரருள் ஒருவன் மற்றொருவனை முதலில் வெட்ட, முன் தொடர்ச்சியால், உடனே அவ்வெட்டுண்டஉடல் வெட்டினவன்மேல் சென்றுவிழுந்து அவனைத்தழுவி யணைத்துக் கீழே தள்ளிக் கொன்று அவ்வீரவாதத்தை உண்மையாக நிறைவேற்றிற்று என்ற வாறும்; இது - மிக்கவீரத்தை விளக்கும். இமை, நொடி, மாத்திரை என்பன - ஒருபொருளன; காலநுட்பமுணர்த்தும். இப்பாட்டுக்குப் பிறவாறு உரைப்பாராயினும் உய்த்துணர்ந்து பொருந்துமாயிற் கொள்க. (34)

வேறு.

35.—இருபக்கத்தைச்சார்ந்த பலதேசத்துமன்னவரும் மாறுபட்டுப்பொருதல்.

கொங்கர் போசலர் போசர் சிங்களர் குகுத ராரியர் துளுவருங்
கங்கர் சோனகர் யவனர் சீனர் கலிங்கர் தத்தர் தெலுங்கரும்
வங்கர் கோசலர் தமிழர் குண்டல ரொட்டர் மாளவர் மகதரும்
இங்கு மங்கு மணிந்து நின்றவ ரெதிர்மு னைந்தன ரிகலியே.

(இ - ள்.) இங்குஉம் அங்குஉம் அணிந்து நின்றவர் - பாண்டவர் பக்கத்தும் கௌரவர்பக்கத்தும் (ஆக இரண்டுபக்கங்களிலும்) அணியிற் பொருந்திநின்றவர்களாகிய, கொங்கர் போசலர் போசர் சிங்களர் குகுதர் ஆரியர் துளுவர்உம் கங்கர் சோனகர் யவனர் சீனர் கலிங்கர் தத்தர் தெலுங்கர்உம் வங்கர் கோசலர் தமிழர் குண்டலர் ஒட்டர் மாளவர் மகதர்உம் - இந்நாட்டுவீரர்களெல்லோரும், இகலி-பராக்கிரமங்கொண்டு, எதிர் முனைந்தனர்-எதிர்த்துப் போர்செய்தார்கள்;

ஸ்ரீகாளஹஸ்தி, பீமேசுவரம், ஸ்ரீசைலம் என்னும் மூன்று சிவ லிங்க ஸ்தானங்களை எல்லையாகவுடைய தேசம், திரிலிங்கதேச மெனப் படும்; அதுவே தெலுங்குஎன மருவிற்று. தமிழ்நாட்டின் எல்லையை "குணகடல் குமரி குடகம் வேங்கடம், எனுநான் கெல்லையி னிருந் தமிழ்க் கடலுள்" என்றதனு லறிக. சிங்களம் - ஸிம்ஹளம்: வட சொல். விந்தியமலைக்கும் இமயமலைக்கும் இடையிலே கிழக்கும் மேற் கும் கடலெல்லையாகவுள்ள பூமி, ஆரியாவர்த்த மென்னப்படும்; அதி லுள்ளவர் - ஆரியர். சிங்களம், துளுவம், கங்கம், சோனகம், சீனம், கலிங்கம், தெலுங்கம், வங்கம், கோசலம், தமிழ் இவை - பதினெட்டுப் பாஷைகள்வழங்குந் தேயங்களி னுட்பட்டவை. அணிந்து நின்றவர் - அணிவகுக்கப்பட்டு ஒழுங்குபடநின்றவ ரென்க. இப்பாட்டில் முதன் மூன்று அடிகள் அடைமொழியில்லாமல்வந்தது, ஒரு அழகாம். கோசல மென்பது-க உசல எனப் பிரிந்து, பிரமனுக்கு உல்லாசத்தை [மகிழ்ச்சியை]த் தருவ தெனப் பொருள்படும். 'தமிழர்' எனப் பொதுப் படக்கூறியது, சேரசோழ பாண்டியர் மூவரையுங் குறிக்கும் த்ரவிட மென்னும் வடமொழி, தமிழெனத் திரிந்து நின்றது; இனி, தமியென் னும் வினைப்பகுதியடியாப் பிறந்து தனக்கு இணையில்லாத பாஷை யெனப் பொருள் தருவதென்பாரும், இனிமையென்னும் பொரு ளுணர்த்தும் தமிழ் என்னும் சொல் எல்லாப்பாஷைகளினும் இனிய தாகிய இப்பாஷைக்கு ஆகுபெயராய் வழங்கிற்றென்பாரும், மற்றைப் பல பாஷைகளிலில்லாமல் தன்னிடத்தில் மாத்திரமே தனியாகவுள்ள ழகரமென்னும் எழுத்தை யுடையதென அன்மொழித்தொகைக் காரணக்குறி யென்பாரு முளர்.

இதுமுதற் பதினைந்து கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள். (35)

36.—வீடுமற்கெதிராக அருச்சுனன் போர்தொடங்கலும் இருவர்சேனையும் வளைதல்.

விசையன்வெஞ்சிலைவீடுமற்கெதிரமர்தொடங்கலும்வெருவவெண்
டிசையுமொன்றவளைந்துகொண்டனவிருவர்தம்பொருசேனையு
மிசையெழுந்துகளாலிமைத்தனர்மேலைநாகரும்வெங்கழுத்
தசையநின்றுசுமந்திளைத்தனர்கீழைநாகருமடையவே.

(இ - ள்.) விசையன் - அருச்சுனன், வெம் சிலை வீடுமற்கு எதிர் - (பகைவர்க்குக்) கொடிய விற்போரில் வல்ல பீஷ்மனுக்கு எதிரிலே, அமர் தொடங்கலும் - போரைச் செய்யத்தொடங்கின வளவில், இருவர் தம் பொரு சேனைஉம்-போர்செய்யவல்ல இரண்டு திறத்தாரது சேனைகளும், எண் திசைஉம்வெருவ - எட்டுத்திக் குக்களும் அஞ்சும்படி, ஒன்ற வளைந்துகொண்டன - ஒன்றாக ஒருங்குசூழ்ந்துகொண்டன; (அப்பொழுது), மிசை எழும் துகளால் - மேலெழுந்த புழுதி படுதலால், மேலை நாகர்உம் - மேலுலகத்துள்ள தேவர்களும், இமைத்தனர் - (தமது இமையாக்கண்களை) இமை மூடினார்கள்; கீழைநாகர்உம் அடைய-கீழுலகத்துள்ள சர்ப்பசாதி யார் எல்லோரும், நின்று சுமந்து வெம் கழுத்து அசைய இளைத்த னர்-(அந்த மிக்கபாரத்தை) நிலைநின்று சுமந்து வெவ்விய (தமது) கழுத்துக்கள் வருந்த இளைப்படைந்தார்கள் ; (எ - று.)

விசையன் - எதுகைநோக்கிய இடைப்போலி. எண்திசை - ஆகுபெயர். அடையவென்பதை மேலைநாகர்க்குங் கூட்டுக. மேலை, கீழை என்பவற்றில், ஐ-சாரியை. கம்-இன்பம், அதன் எதிர்மறை- அகம்; அது, துக்கம்: அது இல்லாதது - நாகம்; சுவர்க்க லோகம் எனக் காரணங் காண்க. சேனைமிகுதியைவிளக்குந் தொடர் புயர்வுநவிற்சியணி இதனிற் காண்க. (36)

37.—வீடுமனுக்கும் அருச்சுனனுக்கும் துணையாகச் சிலமன்னவர் வருதல்.

உகவைதன்னெடுவீடுமற்குறுமுதவியாகமகீபனுஞ்
சகுனிசல்லியனவவரையும்பலதம்பிமாரையுமேவினான்
மிகுகொடுஞ்சினவீமன்விந்தரனபிமனாதியர்விசயனுக்
கிகனெடும்படையரசனேவலினுதவியாம்வகையெய்தினார்.

(இ - ள்.) மகீபன்உம் - துரியோதனராசனும், உகவைதன் னெடு-(போரில்) உற்சாகத்துடனே, சகுனி சல்லியன் அவரைஉம் - சகுனியும் சல்லியனும் ஆகியவர்களையும், பல தம்பிமாரைஉம் - (தனது) தம்பியர் தொண்ணூற்றென்பதின்மருள் அநேகம்பேரை யும், வீடுமற்கு உறும் உதவி ஆக - பீஷ்மனுக்குமிக்க துணையாம்படி, ஏவினான்-கட்டளையிட்டனுப்பினான்; மிகுகொடு சினம்-மிக்க பயங்கர மான கோபத்தையுடைய, வீமன் விந்தரன் அபிமன் ஆதியர் - பீம சேனனும் விந்தரனும் அபிமந்யுவும் முதலியவர்கள், இகல்நெடு படை அரசன் ஏவலின்-வலிய பெரிய சேனையையுடைய யுதிட்டிர ராசனது கட்டளையினால், விசயனுக்கு உதவி ஆம் வகை எய்தினார்- அருச்சுனனுக்குத் துணையாம்படி வந்தடைந்தார்கள்; (எ - று.)

பலதம்பிமார் - துச்சாசனனையுந் துன்முகனையுஞ் சித்திராங்கனையுமுள்ளிட்டார் நாற்பத்தொன்பதின்மரெனவும், விந்தரன் - பூதிவிந்த னென்பவனெனவும், 'ஆதியர்' என்றது-திட்டத்துய்மனையுஞ் சாத்தகியையும் எனவும் பெருந்தேவனார் பாரதத்தால் விளங்கும். * பி - ம் : சல்லியனிவரையும். (37)

38.—வீமன் வீடுமனுடன்பொருது அவனுக்குத் துணையாய் வந்த சகுனிமுதலானோரையும் பின்னிடச்செய்தல்.

வன்பணைக்கொடிமீதுபன்னிருவாளிமெய்க்கவசத்தின்மேல்
ஒன்பதிப்படியேவிவீடுமன்மெய்ந்நடுங்கவுடற்றினான்
மன்பரப்பொடுசகுனிசல்லியன்வந்ததம்பியரனைவரும்
பின்படப்பலகணைதொடுத்தனன்வருசதாகதிபிள்ளையே.

(இ - ள்.) வரு - (அங்ஙனம் அருச்சுனனுக்குத் துணையாக) வந்த, சதாகதிபிள்ளை-வாயுகுமாரனான வீமன், வீடுமன்-பீஷ்மனது, வன் பணைகொடி மீது-வலிய பனைமரத்தின்வடிவமெழுதிய துவசத்தின்மேல், பன்னிருவாளி - பன்னிரண்டு பாணங்களும், மெய் கவசத்தின்மேல்-உடம்பிலணிந்த கவசத்தின்மேல், ஒன்பது (வாளி) - ஒன்பது பாணங்களும், இப்படி ஏவி-(ஆக) இவ்வாறு பிரயோகித்து, மெய் நடுங்க-(அவ்வீடுமன்) உடல் நடுங்கும்படி, உடற்றினான் - போர் செய்தான் ; (அன்றியும்), மன் பரப்பொடு வந்த-மிக்க யுத்தவேகத்துடனே (வீடுமனுக்குத் துணை) வந்த, சகுனி சல்லியன் தம்பியர் அனைவர்உம்-சகுனியும் சல்லியனும் (துரியோதனனது) தம்பிமார் பலருமாகிய எல்லோரும், பின் பட-பின்னிடையும்படி, பலகணை தொடுத்தனன்-அநேக பாணங்களை யெய்தான்; (எ - று.)

"நினைப்பரிய கூர்வாளி நீள்வரைத்தோள் வேந்தன், பனைக்கொடிமேற் பன்னிரண்டு பாய்ச்சி - நுனைப்பகழி, யொன்பதுகொண்டாங்கவன்ற னெண்கவசத் திண்புறுத்தி, முன்பதிர வெய்தான் முனிந்து" என்றார் பாரத வெண்பாவிலும். பணைக்கொடி - தாலத்துவஜம். கவசம் - இரும்பு முதலியவற்றாலாகிய உடம்பின்மேற் சட்டை. முதலடியிலுள்ள வாளி யென்பது, இரண்டாமடியிலும் எடுத்துக்கூட்டப்பட்டது; அன்றி, ஒன்பது என்பதை எண்ணலளவையாகுபெயராகக் கொள்ளலுமாம். பரப்பு - பரபரப்பு. பின்பட-புறங்கொடுத்தோட, தோற்க. ஸதாகதி யென்ற வடமொழிப் பெயர்க்கு - எப்பொழுதுஞ் சஞ்சரித்தலை யுடையவனென்று பொருள். பிள்ளை - இருதிணைக்கும்வரும். மன்பரப்பொடு கணை தொடுத்தனன் என இயைத்தலுமாம். (38)

39.—அபிமன்னு வீடுமனது தேர்க்குதிரையை யழித்தலும் உத்தரன் சல்லியனோடு பொருதலும்.

ஏசிலாதுயர்தன்பிதாவினெழிற்பிதாமகனேறுதேர்
வாசிநாலும்விழத்தொடுத்தனன்வாளியாலபிமன்னுவும்

---

* பி - ம் : என்பது வருமிடங்களிலெல்லாம் பிரதிபேதம் என்ற பொருளது.

மாசிலாவிறலுத்தரன்றிறன்மத்திராதிபனுடனுடன்
ருசிலாவடலப்புமாமழைசிந்தினன்முகிலஞ்சவே.

(இ - ள்.) அபிமன்னுவும்—, ஏசு இலாது உயர்-குற்றமில்லாமல் [மிக்கபுகழ்பெற்று] சிறந்த, தன்பிதாவின்-தனது தந்தையான அருச்சுனனது, எழில் பிதாமகன்-அழகிய (பெரிய) பாட்டனை வீடுமன், ஏறு-ஏறியுள்ள, தேர்-இரதத்திற் பூட்டிய, வாசி நால்உம் - குதிரைகள் நான்கும், வாளியால் விழ தொடுத்தனன் - (தனது) அம்பினால் இறந்துகீழ்விழும்படி யெய்தான்; மாசு இலா விறல் உத்தரன்-குற்றமில்லாத வெற்றியையுடையஉத்தரகுமாரன், திறல் மத்திர அதிபனுடன் உடன்று - வலிமையையுடைய மத்திரதேசத்தரசனை சல்லியனோடு பொருது, முகில் அஞ்ச-மேகமும் அஞ்சும்படி, ஆசு இலா அடல் அம்பு மா மழை சிந்தினன்-குற்றமில்லாத வலிமையையுடைய மிக்க பாணவருஷத்தைச் சொரிந்தான்; (எ-று.)

"பேரொலிநீர்க் கங்கை பெருஞ்சிறுவன் றேர்பூண்ட, போரொலிமா நான்கினையும் பொன்றுவித்தான்-கூரிய, வேல்வண்ணன் போர்முகத்து வெவ்வாளி நான்கினன், மால்வண்ணன்றங்கை மகன்" என்பது வெண்பாப்பாரதம். முன்னே உத்தரகோக்கிரகண காலத்துத் துரியோதனதியர் சேனையைக் கண்டவளவிலே அஞ்சிக் குதித்தோடின உத்தரகுமாரன் பின்பு அருச்சுனனருளால் அஸ்திர சஸ்திரசாஸ்திரப் பயிற்சியில் மிகச்சிறந்தவனாயின னென்பது தோன்ற, 'மாசிலா விறல்' என்றார். விறலுக்கு மாசு-போரிற் பின் வாங்குதல். உடலல்-இங்கே, போர் செய்தல். அம்பு என்னும் மென்றொடர், வன்றொடராயிற்று. 'அப்புமழை' என்றதில், 'முகிலஞ்ச' என்றதற்குஏற்ப, நீர்மழையென்ற பொருளுந் தொனிக்கும்; அம்பு என்றும், அப்பு என்றும் வடமொழியில் நீருக்குப் பெயர். தனது இடைவிடாப்பெருமழையும் இந்தப் பாணமழைக்கு ஈடாகாதென முகில் அஞ்சுமென்க. அப்பு மழையென்ற தொடரை-பாணங்களாலாகிய மழையெனவாயினும் பாணங்களாகிய மழையெனவாயினும் விரிக்க: மென்றொடர் இருவழியிலும் வன்றொடராம். அம்புக்குக் குற்றம் - குறித்த இலக்குத்தவறுதலும், அவ்விலக்கை அழியாதுவிடுதலும். பி - ம் : 'வாளிநால்.' (39)

40.—சல்லியன் உத்தரனைக் கொல்லுதல்.

வாவிமேல்வருபுரவிவீழவும்வலவன்வீழவுமற்றுளார்
ஆவிவீழவுமவனெடுத்தவிலற்றுவீழவுமமர்செய்தான்
பாவியோடினிவில்லெடுப்பதுபாவமென்றொருபாரவேல்
ஏவினனெதிர்சென்றுசல்லியனிவனும்வானகமேறினன்.

(இ - ள்.) (இங்ஙனம் உத்தரன் அம்புமழை பொழிந்து), வாவி மேல் வரு புரவி வீழஉம் - தாவிக்கொண்டு (தன்மேல்) வருகிற (சல்லியனது) தேர்க்குதிரைகள் இறந்துவிழவும், வலவன் வீழஉம்- (அவனது) தேர்ப்பாகன் இறந்துவிழவும், மற்று உளார் ஆவி வீழஉம் - (தேர்காப்பவர் முதலாக) மற்றும் (அவனுக்குத் துணையாக) உள்ளவீரர்களது உயிர் அழியவும், அவன் எடுத்த வில் அற்று வீழஉம் - அச்சல்லியன் கையிலேந்தியுள்ள வில் துணி

பட்டுவிழவும், அமர் செய்தான் - போர்செய்தான்; (அப்பொழுது), சல்லியன்—, பாவியோடு இனி வில் எடுப்பது பாவம் என்று - இந் தப்பாவியோடு இனிமேல் வில்லெடுத்துப்போர்செய்வது நல்ல தன்றென்றுகருதி, எதிர் சென்று ஒரு பாரம் வேல் ஏவினன்-உத் தரனெதிரிற்போய் பரியதொருவேலாயுதத்தை (அவன்மேல்) எறிந் தான்; (எறிந்தமாத்திரத்தில்), இவன்உம் - உத்தரனும், வானகம் ஏறினன் - தேவலோகமடைந்தான்; (எ - று.)

விற்போரில் உத்தரனை வெல்லமாட்டாமல் சல்லியன் உக்கிர மான வேலையெடுத்து வீச, அது பட்டவளவில் உத்தரன் இறந்தா னென்பதாம். அமர்செய்தா னென்பதை அமர்செய்ய எனவும், ஏவினனென்பதை ஏவ எனவும் முற்றெச்சமாக்கின், ஒருவாக்கிய மாம். நித்தியமாதலால் என்றும் அழியாத உயிரை 'வீழ' என் றது, அது உடம்பினின்று நீங்குதலை. பாவி - பாபீயென்னும் வடமொழித்திரிபு; தீவினையுடையானென்று பொருள்: இங்கே இது கொடியவனென்னுமாத்திரமாய் நின்றது: "அழுக்கா றென வொரு பாவி" என்ற குறளில், 'இருமையுங் கெடுத்தற்கொடுமைபற்றி, அழுக்காற்றினைப் பாவியென்றார்: கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின்' எனப் பரிமேலழக ருரைத்தவாறு அறிக. தன்னைப் பலவகையாலும் அழித்த கொடுமைபற்றி, உத்தரனைச் சல்லியன் பாவியென வெறுத்தனனென்க. பாவம் - பாபம்; இது வும், இங்கே, நற்செய்கையன்று என்றமாத்திரமாய் நின்றது. போரிற் பின்வாங்காது பகைவராலிறந்தவர் வீரசுவர்க்கம்புகுவ ரென்பது நூற்றுணிபாதலால், 'வானகமேறினன்' என்றார். இறந்தானென்பதை 'வானகமேறினன்' என வேறொருவகையாற் கூறினதை, பரியாயவணியென்பர் தண்டியாசிரியர். கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாது அப்பொருள்தோன்ற வேறு வகையாற்கூறுதல், இவ்வணியினிலக்கணமாம்; இதனைப் பிறி தினவிற்சியணி என்று கூறுதலும் உண்டு. *(40)*

41.—பாண்டவசேனை உத்தரனிறந்ததனாற் பெருங்கலக்க மடைய வீமன் போர்செய்ய வருதல்.

இன்றுபட்டனன்மச்சர்கோமகனென்றுதங்களினேரலார்
ஒன்றுபட்டுமிகைத்தெழுந்தனரூழிவாயெழுமுததிபோல்
அன்றுபட்டகலக்கமப்படியைவர்தம்படையமரின்மேல்
வென்றுபட்டமணிந்தவாரணமென்னவந்தனன்வீமனே.

(இ - ள்.) 'மச்சர் கோ மகன் - (பாண்டவர்களுக்கு அரிய அஞ் ஞாதவாசத்தில் பெரிய துணையாய்நின்ற) விராடராசனது புத்திர னை உத்தரன், இன்று பட்டனன் - இப்பொழுது இறந்தான்,' என்று - என்றகாரணத்தால், (மகிழ்ந்து), நேரலார் - பகைவர்கள் [துரியோதனன்பக்கத்தார்], தங்களில் ஒன்றுபட்டு - தங்களுக் குள் ஒன்றுசேர்ந்து, ஊழிவாய் எழும் உததிபோல் - கல்பாந்த காலத்திலே பொங்கியெழுகிற கடல்போல, மிகைத்து எழுந்தனர்- செருக்குக்கொண்டு கிளர்ந்தார்கள்; ஐவர்தம் படை - பாண்டவ **சேனை, அன்று பட்ட** கலக்கம்-(விராடகுமாரன் இறந்தானென்று)

அப்பொழுது அடைந்த மனத்துயரமும், அப்படி-அதற்கேற்றவாறே யிருந்தது; (பின்பு), வென்று பட்டம் அணிந்த வாரணம் என்ன - (பகை) வென்று (நெற்றியில்) வீரபட்ட மணிந்த யானை போல, (பகைவர் அஞ்சும்படி கம்பீரமாய்), வீமன் - வீமசேனன், அமரின்மேல் வந்தனன் - போர்செய்தற்கு வந்தான்; (எ - று.)

துரியோதனன் பக்கத்தார் உத்தரனிறந்ததற்காக எவ்வளவு மகிழ்ந்தனரோ, அவ்வளவு விசனப்பட்டார்கள் அதற்காகப் பாண்டவ சேனையா ரென்பார், 'அப்படி' என்றார். மச்சர்கோ - மத்ஸ்யதேசத்தார்க்கு அரசன். நேரலார் - தம்மோடு மனமிணங்காதவர்; எனவே. பகைவராயிற்று. கற்பமுடிவுதோறுங் கடல் பொங்கியெழுந்து உலகை மூடியழிக்கு மென்பது, நூற்கொள்கை. யானை - வீரனுக்கு, நடை வலிமை காம்பீரியங்களால் உவமை. வாரணம்-தற்சமவடமொழி. (41)

42.—வீமன் போரில் வரவே எதிரிகள் பின்னிடைய, அப்போது துரியோதனன் வரக் கண்டு வீமன் சினத்தல்.

தாமன்மேல்வரவரவுடைந்திடுதமமெனும்படிதண்டுடன்
வீமன்மேல்வரவரவுடைந்தனர்மேவலார்கள்வலம்புரித்
தாமன்மேல்வரவரவுகண்டுதரிக்கிலாதெதிர்சென்றனன்
காமன்மேலரனென்னநெஞ்சுகனன்றுகண்கள்சிவக்கவே.

(இ - ள்.) தாமன்-ஒளிவடிவமான சூரியன், மேல் வரவர-வானத்திலே உயர்ந்துவரவர, உடைந்திடு-அழிந்தொழிகிற, தமம் எனும்படி-இருள்போல, வீமன் தண்டுடன் மேல் வர வர - வீமசேனன் (தனது சத்துருகாதினியென்னும்) கதாயுதத்தோடு தம்மேல் எதிர்த்துவரவர, மேவலார்கள்-எதிர்ப்பக்கத்தார், உடைந்தனர் - அழிந்தொழிந்தனர்; (அப்பொழுது), வலம்புரி தாமன் - நஞ்சாவட்டைப்பூமாலையையுடைய துரியோதனன், மேல் வர - வீமன்மேல் எதிர்த்துவர, (வீமன்), வரவு கண்டு-(அவனது) வருகையைப் பார்த்து, தரிக்கிலாது - சகிக்காமல், நெஞ்சு கனன்று-மனங்கோபித்து, கண்கள் சிவக்க - (அதனால்) கண்கள் செந்நிறமடைய, காமன்மேல் அரன் என்ன-மன்மதன்மேற் பரமசிவன்போல, எதிர் சென்றனன் - (அத்துரியோதனன்மேல்) எதிர்த்துச்சென்றான்; (எ - று.)

இப்பாட்டிற்கூறிய உவமையிரண்டனுள், முன்னது-இருந்தவிடந்தெரியாதபடி உடனே அழிதற்கும், பின்னது - தவறாமல் விரைவில் எளிதில் அழிதற்கும் உவமை. தாமம் - வடசொற்றிரிபு: இது-ஒளியும் மாலையுமாதலை "தாம மொளியுந் தார்மாலையுமாம்" என்ற திவாகரத்தாலு மறிக. சூரியனுக்கு 'தாமநிதி' என்று வடமொழியில் ஒருபெயர். தமஸ் - வடசொல். மேவலார் - விரும்பிச்சேராதவரென்று காரணப்பொருள். காமன் என்பதற்கு - (ஆண்பாற்கும் பெண்பாற்கும் ஒன்றற்கொன்று) ஆசையை விளைப்பவனென்றும், (யாவருங்கண்டு) விரும்புங் கட்டழகுடையவ னென்றும் பொருள். அரன் - ஹரன்; இவ்வடமொழிப்பெயர், அழித்தற்றொழிற் கடவுளானமைபற்றியது: இனி, அரனென்பதற்கு - அடியவரது அருந்துயரை அழிப்பவ னென்றும் பொருள்கொள்ளலாம். துரியோதன

னுக்கு அடையாளப்பூமாலை, நந்தியாவட்டம். ஒருகாலத்தில் கைலாச கிரியிற் சிவபெருமான் சனகர்முதலிய நால்வர்க்கு யோக நிலைமையை உணர்த்துதலினிமித்தம் தாம் யோகஞ்செய்துகொண்டிருக்கையில், பிரமனேவலால் மலரம்புகளை யெய்து தமது தவத்தைக் கெடுக்கலுற்ற மன்மதனைச் சினந்து நெற்றிக்கண்ணை விழித்து அதன்நெருப்புக்கு இரையாய் உடம்பெரிந்து சாம்பராய்ப் போம்படிசெய்தன ரென்பது ஈற்றடியிற் குறித்த கதை. (42)

43.—வீமன் துரியோதனனைச் சார்ந்தாரோடு நிகழ்த்திய கடும்போர்.

செண்டினல்வசுகிரிதிரித்திடுசெழியனென்னவெடுத்தகைத்
தண்டினலெதிர்சென்றுதேரணிதிரியவன்பொடுசாடினன்
மண்டினர்மணிமுடியும்வேழமும்வாசியும்பலதுணிபடக்
கெண்டினன்முனைநின்றபன்னககேதுவோடமர்மோதினன்.

(இ - ள்.) செண்டினல்-(சிவபிரான் கொடுத்தருளின) செண்டை ஆயுதமாகக்கொண்டு அதனால், வசுகிரி-பொன்மலையாகிய மகா மேருவை, திரித்திடு-சுழலச்செய்த, செழியன் என்ன-பாண்டியன் போல, எதிர் சென்று-எதிர்த்துப்போய், கை எடுத்த தண்டினல் - (தன்) கையிலேந்திய கதாயுதத்தால், மண்டினர்-(துரியோதனனைச் சுற்றிலும்) நெருங்கியுள்ள அரசர்களது, தேர் அணி-தேர்களின் வரிசைகள், திரிய-நிலைகெடும்படி, வன்பொடு சாடினன் - வலிமை யோடு அடித்து, (அவர்களது), மணி முடிஉம்-இரத்தினகிரீடமும், வேழம்உம்-யானைகளும், வாசிஉம்-குதிரைகளும், பல துணிபட-அநே கந்துண்டுகளாகும்படி, கெண்டினன்-பிளந்து, முனை நின்ற பன்னக கேதுவோடு - எதிரில்நின்ற பாம்புக்கொடியனை துரியோதன னுடனே, அமர் மோதினன்-போர்செய்பவனானான்; (எ- று.)

வஸு - செல்வம், வடசொல்; இது, இங்கே சிறப்பாய்ப் பொன்னையுணர்த்திற்று. செழியனென்பது - செழுமையுடையவ னெனப் பொருள்படும்: பாண்டியனைக் குறிப்பது. கெண்டுதல் - கிண்டுதல், கண்டித்தல். பி - ம்: தறிய. கிண்டினன்.

முதலடியிற் குறித்த கதை:—மலயத்துவசபாண்டியனது மக ளாகிய தடாதகைப்பிராட்டியைச் சுந்தரபாண்டியவடிவமாகி மணம் புரிந்துகொண்ட சிவபெருமான் அவளிடம் தமக்குப்பிறந்த குமார னாகிய உக்கிரபாண்டியனுக்கு முடிசூட்டி அவனுக்குப் பகையாகும் கடலையும் இந்திரனையும் மேருவையும்வெல்லுமாறு வேலும் வளையும் **செண்டும்** அளித்துப் போயினர்; பின்னர் அவன் ஒருகால் தன் நகர்மேற் பொங்கியெழுந்த ஏழுகடல்களையும் வேலெறிந்து வற்றச் செய்துவென்றான்; ஒரு காலத்தில் தன் நாட்டிற் பொதியமலையில் மேய்ந்திருந்த மேகங்களைப் பிடித்து அவன் தளைசெய்ய, அது கேட்டுத் தன்னையெதிர்த்து யுத்தஞ்செய்த தேவேந்திரன்மீது வளையையெறிந்து மகுடபங்கப்படுத்திச் சயித்தான்; மற்றொரு காலத்தில் தன்நாட்டில் பஞ்சம்நேரிட்டபொழுது மேருகிரியை யடைந்து நிதிதேடி அது இருக்குமிடந்தெரியாமையால் அதன்மேற் செண்டைவீசி, அதற்கு ஆற்றாமல் அம்மலையரசன் எதிரில்வந்து

கொடுத்த பொருள்களை யெல்லாம் பெற்றுவந்தா னென்பது கதை. 'செண்டிறு லிமகிரி திரித்திடு சென்னியென்ன' என்ற பாடத்துக்கு-ஒரு செண்டினாலே இமயமலையைத் திருப்பிய சோழன் போல என்று பொருள்; அதற்குக் கதை வருமாறு:—பூர்வத்தில் மிக வலிமைகொண்ட கரிகாலனென்னுஞ் சோழராசன், சேரபாண்டியர் முதலிய அரசரெவரும் இங்குத் தன்னையெதிர்த்துப் போர்செய்யும் வல்லமையுடைய ரல்லாமையால், பேர்ரிலே பேராசையையும் தோள்தினவையும்உடையவனாய் 'வடதிசை பெருந்திசையாதலால், அங்கேயாவது பகைபெறலாம்' என்று எண்ணிப் போர்விருப்பத் தோடு புறப்பட்டுச்சென்று அங்கும் எதிர்ப்பவர் எவரையும் பெறாமல் அப்பாற் செல்லுமளவிலே, இமயமலை இவனை வழிதடுப்பது போலக் குறுக்கிட்டு எதிரிற் காணப்பட, அதுகண்டு அவன் 'இதுபகையாக நின்று என்னை விலக்கி எதிரிட்டது' என்று கருதிக் கோபங்கொண்டு அதைப் புறங்காண்பதற்காகவும், அதற்கு வடக்கிலுந் தனது ஆஞ்ஞை செல்லுவதற்காகவும், தனது போர் விருப்பத்தையும் தோள்தினவையும் தணித்துத் தன்பெருவலிமையையும் வெற்றியையும் வெளியிடுவதற்காகவும், சாத்தனென்னுந் தெய்வத்தின் அருளால் தான் பெற்ற ஒருசெண்டை ஆயுதமாகக்கொண்டு அந்தமலையின்மேல் எறிந்து அதனால் அதை அடித்துத்திருப்பி அம்மலையின் மேற்புறத்திலே தனது கொடியாகிய புலியை வெற்றிக்கு அடையாளமாக எழுதுவித்து, பின்பு கோபந்தணிந்து மீண்டும் அக்கிரியை முன்போலவே திருப்பிச் சரிசெய்து நிறுத்தினான் என்பதாம்; இதைச் சிலப்பதிகாரத்தாலும் கலிங்கத்துப்பரணியாலும் அறிக. (43)

44.—இதுவும் அடுத்த கவியும் – வீமன் துரியோதனனோடு நிகழ்த்திய கடும்போரைத் தெரிவிக்கும்.

மோதியாயிரபேதமாகமுனைந்துதங்களிலிருவருஞ்
சாதியாதனவில்லைமீளிமடங்கலேறனதன்மையார்
காதியாடமர்புரியுமேதினிகாவலன்குனிகார்முகஞ்
சேதியாவொருகைகொடேறியதேரெடுத்தெதிர்சிந்தினான்.

(இ - ள்.) (அப்பொழுது), மீளி-வலிமையையுடைய, மடங்கல் ஏறு - ஆண்சிங்கத்தை, அன - ஒத்த, தன்மையார் - தன்மையை யுடையவர்களாகிய, இருவர்உம் - (வீமனும் துரியோதனனும் ஆகிய) இரண்டுபேரும், தங்களில் - தமக்குள் (ஒருவரோடொருவர்), மோதி - தாக்கி, ஆயிரம் பேதம் ஆக முனைந்து - மிகப்பலவகைகளாகப் போர்செய்து, சாதியாதன - செய்து முடிக்காத யுத்த வகைகள், இல்லை—; (பின்பு வீமன்), காதி ஆடு அமர் புரியும் மேதினி காவலன் - வருத்திவெல்லவல்லபோரைச்செய்யும் நிலவுலகத்தரசனான துரியோதனனது, குனி கார்முகம் - வளைந்த வில்லை, சேதியா - துண்டுபடுத்தி, ஒருகை கொடு - (தனது) ஒருகையால், ஏறிய தேர் எடுத்து எதிர் சிந்தினான்-(அவன்) ஏறியுள்ள தேரைத் தூக்கி எதிரில் வீசியெறிந்தான்; (எ - று.)

வீரருக்குச் சிங்கவுவமை, நடை வலிமை நோக்கு தைரிய காம்பீரியங்களால் என்க. இருவரும் சமபலமுடையவ ராதலின், இரு

வருக்கும் ஒருவமை கூறினர். சாதியாதன இல்லை - போர்த்திறமைகளெல்லாவற்றையுஞ் செய்தன ரென்பதாம்; இரண்டு எதிர்மறை உடன்பாட்டையுணர்த்தித் துணிவுகுறித்தன. மடங்கல் - (பிடரிமயிர்) மடங்குதலையுடையதெனக் காரணப்பெயராம்; பிடரிமயிருடைமைபற்றி, சிங்கத்துக்கு வடமொழியில் 'கேஸரீ' என ஒருபெயர் வழங்குதலுங் காண்க. ஏறு - ஆண்பாற்பெயர்; கருத்தாப்பொருளீறுபுணர்ந்துகெட்ட காரணக்குறி. மேதிநீ - (திருமாலாற் கொல்லப்பட்ட மதுகைடப ரென்னும் அசுரர்களது) உடற்கொழுப்பினால் நனைந்தமைபற்றி, பூமிக்கு இப்பெயர்; மேதஸ் - கிணம். (44)

45. ஆரழிந்தனவுருளழிந்தனவச்சழிந்தன்வச்சிரத்
தேரழிந்துகொடிஞ்சியும்பலசின்னமானதுமன்னனும்
போரழிந்தனனென்றுசேனைபுறக்கிடாவருபொழுதினிற்
கூரழிந்ததெனக்குறித்தணிநின்றகாவலர்கூடினர்.

(இ - ள்.) (அப்பொழுது, துரியோதனனது தேர்ச்சக்கரத்தின்), ஆர் - இலைகள், அழிந்தன—; உருள் - சக்கரங்கள், அழிந்தன—; அச்சு - இரிசுகள், அழிந்தன—; வச்சிரம் தேர் அழிந்து - வச்சிரம்போல் உறுதியான தேர் சிதைந்து, கொடிஞ்சிஉம் பல சின்னம் ஆனது - தேர்மொட்டும் பல துண்டுகளாய்விட்டது; (அப்பொழுது), மன்னன்உம் போர் அழிந்தனன் என்று - துரியோதனனும் போரில் தோற்றானென்ற காரணத்தால், சேனை புறக்கு இடா வரு பொழுதினில் - (அவனது) சேனை புறங்கொடுத்து வருகிற சமயத்தில், அணி நின்ற காவலர் - (அவனது) சேனை வகுப்பில் நின்ற அரசர்கள் (பலர்), கூர் அழிந்தது என குறித்து - (நமது) திறமை கெட்டதென்று கருதி, கூடினர் - ஒருங்குதிரண்டார்கள்; (எ - று.)

"ஆரே கூர்மையு மாத்தியு மாகுந், தேராழி யகத்திற் செறியுறுப்புமாகும்" என்ற திவாகரத்தாலும், "ஆர்கெழு குறடு சூட்டாழிபோன்று" என்ற சீவகசிந்தாமணியாலும், அதன் உரையாலும், தேர்ச்சக்கரத்தின் இடையிலேயுள்ள இலைகள் ஆரெனப்படுமென விளங்கும். உருள் - சக்கரத்துக்குக் காரணப்பெயர். அச்சு - உருள்கோத்தமரம்; இது-அக்ஷமென்னும் வடசொல்லின் சிதைவு. வச்சிரம் - ஒருவகையிரத்தினமென்றாவது, இந்திராயுதமென்றாவது, மரவச்சிரமென்றாவது கொள்க. கொடிஞ்சி-தாமரைமலரின் வடிவமாகச் செய்து தேரின்முன்னிடத்து வைக்கப்படுவதோருறுப்பு என்பர். சிந்நம் - வடசொல். புறக்கு - உருபுமயக்கமாக இரண்டாம்வேற்றுமையின் பொருளில் வந்த நான்காம்வேற்றுமையென்றாவது, இதில் கு - சாரியை யென்றாவது கொள்க. (45)

46.—துரியோதனனுக்குப் பக்கபலமாக அவனுடைய மைத்துனன்மார் வருதல்.

பரித்ததேரொடுபரிதியைச்செறிபரிதிபோலிருபக்கமுந்
தரித்தவேலினர்தாரைவாளினர்தாமவில்லினராகவே

விரித்தவெண்குடைமன்னர்சூழ்தரவீமனிற்பதோர்மேன்மைகண்
டெரித்தநெஞ்சொடுவிரைவின்மைத்துனரானகொற்றவரெய்தினர்.

(இ - ள்.) விரித்த வெள் குடை மன்னர் - விரித்துப்பிடித்த வெண் கொற்றக்குடையையுடைய அரசர்கள் (பலர்),—தரித்த வேலினர் - பிடித்த வேலாயுதமுடையவர்களும், தாரை வாளினர் - கூர் நுனியையுடைய வாளாயுதத்தையுடையவர்களும், தாமம் வில்லினர் ஆக - ஒளியையுடைய வில்லையுடையவர்களுமாக,—பரிதியை செறி பரிதி போல் - சூரியனைச் சூழ்ந்த பரிவேடம்போல, இரு பக்கம்உம் சூழ்தர-(தனது) இரண்டுபக்கத்திலுஞ் சுற்றிநிற்க,—வீமன் - வீமசேனன், பரித்த தேரொடு - (தன்னைத்) தாங்கிய தேருடனே, நிற்பது-(இடையில்) நிற்பதாகிய, ஓர் மேன்மை - ஒரு கம்பீரத்தோற்றத்தை, கண்டு - பார்த்து, எரித்த நெஞ்சொடு-பொறாமைகொண்டு தவித்த மனத்துடனே, மைத்துனர் ஆன கொற்றவர் - (துரியோதனனுக்கு) மைத்துனன்மார்களான அரசர்கள், விரைவின் எய்தினர்-துரிதமாக அருகுவந்துசேர்ந்தார்கள்; (எ - று.)

பகையிருளொழித்துத் தேரின்மீது விளங்குதலால் வீமனுக்குச் சூரியனும், அவனைச் சூழ்ந்துநின்று விளங்குதலால் மன்னர்க்குப் பரிவேடமும் உவமை. பரித்த தேரொடு என்பதை 'மன்னர் சூழ்தர' என்பதனோடும் இயைக்கலாம். பரிதி - வடசொல்; சூரியனுக்குச் சமீபத்தில் சிலகாலங்களில் சூழ்ந்துதோன்றும் மண்டல வடிவமான ரேகை; இதற்கு - பரிவேஷமென்றும் பெயர்; தென்மொழியில் 'ஊர்கோள்' எனப்படும். பக்கம் - பக்ஷம்; வடசொல். மைத்துனரான கொற்றவர் - துரியோதனனது மனைவியான பானுமதிக்கு உடன்பிறந்த முறையாகுபவர். தாமம் - போர்மாலைசூடிய என்றும், நாணிக்கயிற்றையுடைய என்றுங் கொள்ளலாம். பி - ம்: மத்திரரான கொற்றவர். (46)

47.—வீமன் கதாயுதத்தினல் வந்தவரோடு சீறி அவரிரியப்பொருதல்.

எய்துமைத்துனரெய்துதெவ்வரொடெண்ணில்போர்செயவிண்ணி
செய்துபெற்றனதேரினின்றுமிழிந்துளானனிசீறினன் [டைச்
மொய்திறற்பவமானனன்றுமுருக்குமுக்குவடென்னவே
கைதவப்படைமன்னர்மாமுடிசிதையவங்கொருகதையினல்.

(இ - ள்.) எய்து மைத்துனர்-(இவ்வாறு) வந்த துரியோதனன் மைத்துனன்மார், எய்து-(பாணங்களைப்) பிரயோகித்து,தெவ்வரொடு-(வீமன் முதலிய) பகைவர்களுடனே, எண் இல் போர் செய-அளவில்லாத பெரும் போரைச் செய்யாநிற்க,—விண் இடை செய்து பெற்று அன தேரினின்றும் இழிந்துளான் - தேவலோகத்திலே செய்யப்பட்டு(த் தான்) பெற்றாற்போன்ற (தனது) இரதத்தினின்று இறங்கியுள்ளவனாய், (வீமன்),—மொய் திறல் பவமானன் அன்று முருக்கு முக்குவடு என்னவே-மிக்க வலிமையையுடைய வாயுதேவன் அக்காலத்தில் [முன்பு ஒரு காலத்தில்] முறித்துத்தள்ளின (மேரு மலையின்) மூன்று சிகரங்கள்போல, கைதவம் படை மன்னர் மா முடி சிதைய-வஞ்சனை

யையுடைய சேனைகளைக்கொண்ட அவ்வரசர்களது பெரிய தலைகள் சிதறிவிழும்படி, அங்கு-அப்பொழுது, ஒரு கதையினால் - (தனது) ஒப்பற்ற கதாயுதத்தால், நனி சீறினான்-மிகக் கோபித்து அடித்தான்;

மிகவலிமையுடையவனான வீமனுக்கு வாயுவும், அவனால் தள்ளப்பட்ட மன்னர் தலைகளுக்கு மகாமேருசிகரங்களும் உவமை. வீமன் வாயுகுமாரனாதலால் அவனுக்கு வாயுவை உவமையாக்கியும், படை மன்னர் வஞ்சகனான துரியோதனனைச் சார்ந்தவ ராதலால் அவருக்குக் கைதவம் என்ற அடைமொழி கொடுத்துங் கூறினார். விண்ணிடைச் செய்துபெற்றனதேர்-விரைந்து செல்லுதலிலும், வலிமையிலும், அழகிலும், சிறப்பிலும் தேவவிமானம் போன்ற தேர்என்க. பவமர்நன், கைதவம் - வடசொற்கள். முக்குவடு-திரிகூடம். அங்கு-அவ்விடத்து என்றுமாம். இல்போர் - பண்புத்தொகை. அடித்தலாகிய காரியத்தை நனிசீறுதலாகிய காரணத்தாற் கூறினார்; உபசார வழக்கு. பெற்றன-பெற்றாலன்ன, அல்லது பெற்றதன்ன. முடி - கிரீடமுமாம். பி - ம்: எய்துமத்திரர். **மூன்றுமடியிற் குறித்த கதை:**—முன் ஒருகால் வாயுதேவனுக்கும் ஆதிசேஷனுக்கும் தமக்குள் யார்பலசாலியென்று விவாதமுண்டாக, அதனைப் பரிசோதித்தறியும்பொருட்டு வாயுதேவன் மேருமலையின் சிகரத்தைப் பெயர்த்துத்தள்ளுவதென்றும், ஆதிசேஷன் அது பெயரவொட்டாமற் காத்துக்கொள்வதென்றும் ஏற்பாடு உண்டாகி, அங்ஙனமே இருவரும் தேவர்முதலியோரது முன்னிலையில் தத்தம் வலிமையைக் காட்டத்தொடங்கியபொழுது, ஆதிசேஷன் தனது ஆயிரம் படங்களாலும் மேருமலையின் ஆயிரஞ் சிகரங்களையுங் கவித்துக்கொண்டு பெயரவொட்டாமற் பல நேரங் காக்க, பின்னர் வாயுதேவன் தன் வலிமையால் அம்மலைச்சிகரங்களில் மூன்றைப் பெயர்த்துக் கொண்டுபோய்த் தென்திசையில் தள்ளிவிட்டானென்பது. (47)

48.—தன்தம்பி யிறந்ததனாற் பெருஞ்சினங்கொண்டு சுவேதன் வில்லொடு தோன்றுதல்.

அம்பரத்தவர்கண்டுநின்றவரதிசயித்திடவானின்மே
லிம்பரிப்படிதெவ்வர்வெம்படையிரியவன்பொடுதிரியவே
தம்பிபட்டனனென்றுகொண்டெழுசாகரத்தெழுதழலெனத்
தும்பையுற்றுமிலைச்சியீசனளித்தவில்லொடுதோன்றினான்.

(இ - ள்.) அம்பரத்தவர் - மேலுலகத்தவரான தேவர்கள், வானின்மேல் - ஆகாயத்திலே (இருந்து), கண்டு நின்றவர் - (தனது போர்த்திறத்தைப்) பார்த்துக்கொண்டு நின்றவர்களாய், அதிசயித்திட - ஆச்சரியப்படும்படி, இம்பர் - இவ்விடத்திலே [போர்க்களத்தில்], தெவ்வர் வெம் படை இரிய - பகைவர்களது கொடிய சேனைகள் பயந்தோடுமாறு, வன்பொடு - வலிமையோடு, இப்படி திரிய - (வீமன்) இவ்வாறு [கதாயுத்தஞ்செய்து] சஞ்சரிக்க,—(மற்றொரு பக்கத்தில் சுவேதன்) 'தம்பி பட்டனன் என்று' கொண்டு - (தனது) தம்பியான உத்தரன் இறந்தானென்று அறிந்து, எழுசாகரத்து எழு தழல் என - பொங்குந்தன்மையதான கடலினின்று மேற்கிளர்

கிற வடவாமுகாக்கினிபோல, தும்பை உற்று மிலேச்சி - (போர்க்கு உரிய) தும்பைப்பூமாலையை விரும்பிச் சூடிக்கொண்டு, ஈசன் அளித்த வில்லொடு - சிவபிரான் (தனக்குத்) தந்தருளின வில்லுடனே, தோன்றினன் - (போர் செய்யப்)புறப்பட்டான்; (எ - று.)

அம்பரத்திற்சஞ்சரிப்பவர்-அம்பரத்தவர். ஸாகரம் - சகரசக்கரவர்த்தி புத்திரரால் தோண்டப்பட்டதென்று பொருள்; வடமொழித் தத்திதாந்த நாமம்: இந்திரனால் ஒளிக்கப்பட்ட சகரசக்கரவர்த்தியின் அசுவமேதயாகக் குதிரையைத் தேடுகையில் அவனது இரண்டாம்மனைவியின் புத்திரர் அறுபதினாயிரவர் பாதாளஞ் செல்லுதற்கு வழியாகத் தோண்டிய பள்ளமே பின்பு நீர்நிறைந்து ஒரு கடலாயிற் றென வரலாறு காண்க. கடலிடையிலே ஒரு பெண் குதிரையின் முகத்தில் எப்பொழுதும் தீப்பற்றியெரிகிறதென்றும், அது மழைநீர் முதலியவற்றால் கடல் பொங்காதபடி அதிகநீரை அப்பொழுதப்பொழுது உறிஞ்சிநிற்பதென்றும், அதுவே கல்பாந்தகாலத்தில் கடலினின்று வெளிவந்து உலகை எரித்தழிக்குமென்றும் நூற்கொள்கை. எழுசாகரம் என்பதற்கு-ஏழுவகையான கடலென்று உரைப்பாருமுளர். தும்பை-அதன் பூமாலைக்கு இருமடியாகுபெயர். ஈசன் என்ற வடசொல்லுக்கு - எல்லா ஐசுவரியமுமுடையவனென்று பொருள். கோபக்கினியாற் சொலித்தல்பற்றியும், சேனைக்கடலிடை விளங்குதல்பற்றியும், சுவேதனுக்கு வடவைத்தீயை உவமைகூறினர்.

சுவேதன் முன்னொருகாலத்தில் தேவலோகத்திற் போயிருந்தபொழுது வசுக்கள் அவனை மயிலென்னும் பறவையாகும்படி சபித்து அவன்பேரெழுதிய அம்பொன்றை அவன்மே லெறிய, அதுபட்டவுடனே அவன் மயிலாகித் தந்தையாகிய விராடனிடம் வந்துசேர, அதனையறியாத அவன் கோபித்துத் துரத்திவிட, மைந்தன் பறந்து சென்று தவஞ்செய்து சிவபிரானருளால் சாபவிடை பெற்று வில் முதலிய ஆயுதங்களும் கவசங்களும் பெற்றனனென்ற வரலாறுபற்றி, ஈசனளித்தவில்' எனப்பட்டது; "சிவன் றன்னைநோக்கிச் சிவேதன்றவஞ்செய்தவாறு, மவன்றனருளாற் பல வாயுதம்பெற்றவாறும்" என்றார் கீழ் வெளிப்பாட்டுச்சருக்கத்தும். (48)

49.—சுவேதன் எதிரிட்டவரை வென்றுகொண்டு சல்லியனுள்ளவிடத்தைவினவிச் சென்றுசேர்தல்.

சங்கி னங்கண்மு ழங்க வும்பணை முரசி னங்கட ழங்கவுந்
துங்க வெங்களி றிவுளி தேரொடு தானை மன்னவர் சூழவும்
எங்கு நின்றன னெங்கு நின்றனன் மத்தி ரத்தர சென்றுபோ
யங்கு நின்றம கீபர் வென்னிட வவனை முந்துற வணுகினன்.

(இ - ள்.) (இவ்வாறு தோன்றின சுவேதன்), சங்கு இனங்கள் முழங்கஉம் - சங்கவாத்தியங்களின் வகைகள் ஒலிக்கவும், பணை முரசு இனங்கள் தழங்கஉம் - பெரிய பேரிகைகளின் வகைகள் ஒலிக்கவும், துங்கம் வெம்களிறு இவுளி தேரொடு தானை மன்னவர்

சூழஉம்-உயர்ந்த கொடிய யானைகளும் குதிரைகளும் இரதங்களும் காலாட்படையும் ஆகிய சதுரங்க சைனியத்தோடு (பல) அரசர்கள் (தன்னைச்) சூழ்ந்துவரவும், மத்திரத்து அரசு எங்கு நின்றனன் எங்கு நின்றனன் என்று போய் - (என் தம்பியைக் கொன்றவனை) மத்திரதேசாதிபதியாகிய சல்லியன் எவ்விடத்துள்ளான் எவ்விடத்துள்ளான் என்றுசொல்லித் தேடிச்சென்று, அங்கு நின்ற மகீபர் வென் இட - அவ்விடத்தில் [தான் போகிறவழியில்] நின்ற பகையரசர்கள் புறங்கொடுத்தோடும்படி, (பொருது), அவனை முந்துற அணுகினன் - அச்சல்லியனை முற்படக் கிட்டினன்; (எ - று.)

அடுக்கு - கோபமும் விரைவும் பற்றியது. அரசு - அரசனுக்குப் பண்பாகுபெயர்: இது-சொல்லால் அஃறிணையாயினும் பொருளால் உயர்திணையாகையால், நின்றனன் என்ற ஆண்பால்முற்றைக் கொண்டது. வென் - வெந். (49)

வேறு.

50.—சுவேதன் சல்லியனோடு வீரவாதஞ்சொல்ல, பிறகு இருவருங் கைகலந்து பொருதல்.

சல்லியனெ னப்பெயர்த ரித்துவரு கோமுன்
வல்லியமெ னத்தகுசி வேதனமர் வல்லான்
பல்லியமு ழக்கியதெ னப்பலவும் வீரஞ்
சொல்லியொரு வர்க்கொருவர் தொடுசிலை குனித்தார்.

(இ - ள்.) அமர் வல்லான் - போர்செய்தலில் வல்லவனாகிய, வல்லியம் என தகு சிவேதன் -(கொடிய பராக்கிரமத்திற்) புலியென்று சொல்லத்தக்க சுவேதகுமாரன், சல்லியன் என பெயர் தரித்து வரு கோ முன் - சல்லியனென்று பெயர்பெற்றுவந்த அவ்வரசனெதிரில், பல் இயம் முழக்கியது என - பலவகைவாத்தியங்களை முழங்கச்செய்ததுபோல, (உரத்தகுரலாக), பலஉம் வீரம் சொல்லி-பலவகைவீரவாதங்களை யெல்லாஞ் சொன்னபின்பு, (இருவரும்), ஒருவர்க்கு ஒருவர் தொடு சிலை குனித்தார் - ஒருவரோடொருவர் அம்புதொடுத்தற்குரிய வில்லை வளைத்துப் போர்செய்தார்கள்; (எ - று.)

சொல்லி - எச்சத்திரிபு. தொடுசிலை - வினைத்தொகை.

இதுமுதற் பத்தொன்பது கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளங்காய்ச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (50)

51.—அப்போது துரியோதனன் தம்பிமார் அறுவரைச் சல்லியனுக்குத் துணையாக அனுப்புதல்.

ஒருவருமிவர்க்குநிகரில்லையெனவுற்றே
யிருவருமலைந்திடவிராசகுலராசன்
பருவரல்கொண்மத்திரபதிக்குதவியாகென்
றருவரையொடொத்தபுயரறுவரைவிடுத்தான்.

(இ - ள்.) இருவர்உம் - (சல்லியன் சுவேதன் என்னும்) இவ்விரண்டுபேரும், இவர்க்கு ஒருவர்உம் நிகர் இல்லை என-இவர்களுக்கு ஒருத்தரும் ஒப்பில்லையென்று சொல்லும்படி, உற்று மலைந்திட - மிகுதியாகப் போர்செய்ய, (அப்பொழுது), இராச குலராசன் - அரசர்களுடைய கூட்டத்திற்குத் தலைவனாகிய துரியோதனன், பருவரல் கொள் மத்திரபதிக்கு உதவி ஆக என்று - (அப்போரில்) இளைப்பை யடைகிற மத்திரதேசத்தரசனை சல்லியனுக்குச் சகாயமாகக்கடவ ரென்று, அரு வரையொடு ஒத்த புயர் அறுவரை விடுத்தான்-அழித்தற்கரிய மலையோடு சமானமான தோள்களை யுடையவர்களான (தனது தம்பிமார்கள்) ஆறுபேரைத் துணையனுப்பினான்; (எ - று.)

இவர்கள் துரியோதனன் தம்பிய ரென்பது, அடுத்தகவியில் "தரணிபதி தம்பியர்கள்" என்பதனால் விளங்கும். ஆயுதங்களால் அழிக்கமுடியாத வலிமையிலும், பருமையிலும், உயர்ச்சியிலும், மலை- தோளுக்கு உவமை. 'இராசராசன்' என்று துரியோதனனுக்கு ஒரு பெயர். பருவரல் - வருந்துதல்; பருவா - பகுதி. உதவி - உதவிசெய் பவர்க்குத் தொழிலாகுபெயர். (51)

52.—மூன்றுகவிகள் - சுவேதன் எதிர்த்துவந்தவரை வென்றமை கூறும்.

தரணிபதிதம்பியர்கடானையொடுவந்தே
யிரணமுகமொன்றுமயிலோனெனவெதிர்த்தார்
திரணறைகொடார்புனைசிவேதனவரந்தக்
கரணம்வறிதாகும்வகைகணைபலதொடுத்தான்.

(இ - ள்.) தரணிபதி தம்பியர்கள் - (இங்ஙனம் அனுப்பப்பட்ட) பூமிக்குத்தலைவனான துரியோதனனது தம்பிமார்கள், தானையொடு - சேனையுடனே, இரணம் முகம் ஒன்றும் மயிலோன் என-போர்க்களத்தினிடத்தை யடைகிற மயிலை(வாகனமுங் கொடியுமாக) உடைய முருகக்கடவுள்போல, வந்து எதிர்த்தார்—; (அப்பொழுது), திரள் நறை கொள் தார் புனை சிவேதன் - திரண்ட தேனைக் கொண்ட பூமாலையைச் சூடிய சுவேதன், அவர் அந்தக்கரணம் வறிது ஆகும் வகை- அவர்களது மனம் அழியும்படி, கணை பல தொடுத்தான் - அநேக பாணங்களை (மேன்மேல்) பிரயோகித்தான்; (எ - று.)

தம்பியர் அறுவரும் உடலாற்பலராயினும் மனத்தால் ஒருவரே யாதலாலும், சுப்பிரமணியமூர்த்தி உருவம் பலவாயினுந் தாம் ஒருவரேயாதலாலும், இவ்வுவமை ஏற்கும். முருகக்கடவுளுவமை பல பராக்கிரமங்களோடு ஆறுவடிவமாக வருதற் கென்க. சுப்பிரமணியனது வடிவம் ஆறுகூறுகச்சென்றது, சூரபதுமனை அழித்த பொழுதென்க; இங்கே "அறுவேறு வகையினஞ்சுவரமண்டி" என்ற திருமுருகாற்றுப்படை காண்க. அயிலோனெனப் பிரித்து, வேலாயுதத்தையுடையவனெனக் கொள்ளலுமாம்; 'வேலன்' என்று சுப்பிரமணியனுக்கு ஒருபெயர். வறிதாகும்வகை-வறுமையுடையதாகும்படி; எண்ணஞ் சிறிதும் இல்லாமற் கலங்கும்படி; இடைவிடாது எய்த

லின்ன திரிகளதுமனம் யாதாயினுமொன்றைச் சிந்திக்கவுஞ் சிறிதும் அவகாச மில்லையாயிற் றென்க. ரணமென்னும் வடமொழி, முதலில் இகரம்பெற்று, இரணம்என நின்றது; [நன் - பத - 21.] (52)

53. முரண்டெதிருமன்னவர்முரண்கொள்சிலையோரொன்
றிரண்டுசிலையாகவொருவீரனிவையெய்தான்
திரண்டுவருமன்னர்முடிசிந்தியுடன்மண்மேற்
புரண்டுவிழவாளிமழைதூவுபுயல்போல்வான்.

(இ - ள்.) திரண்டு - (தம்மில்) கூடி, வரு - (போருக்கு) வருகிற, மன்னர் - பகையரசர்களது, முடி-தலையை, சிந்தி - சிதறி, உடல் மண் மேல் புரண்டு விழ-(அவர்கள்) உடம்பு தரையிலே விழுந்து உருளும் படி, வாளி மழை தூவு-பாணவருஷத்தைச் சொரிகின்ற, புயல் - காள மேகத்தை, போல்வான் - ஒப்பவனான, ஒரு வீரன்-(சுவேதனாகிய) வீர னொருத்தன், முரண்டு எதிரும் மன்னவர் - பகைமைகொண்டு எதிர்த் துப்போர்செய்யும் அந்தஆறு அரசர்களது, முரண் கொள் சிலை-வலி மையைக் கொண்ட வில், ஓர் ஒன்று இரண்டு சிலை ஆக - ஒவ்வொன் றும் இவ்விரண்டு வில்லாகும்படி, இவை எய்தான்-இந்தப்பல அம்பு களைச் சொரிந்தான்; (எ - று.)

கீழ்க்கவியில் 'அவரந்தக்கரணம் வறிதாகும்வகை கணைபல தொடுத்தான்' என்றதையே இக்கவியில் விவரித்து நன்குவிளக்கிக் கூறினராதலால், 'கணைபல' என்றதை இவையென அண்மைச் சுட்டாற் குறித்தார். ஓரொன்று இரண்டுசிலையாக-ஒவ்வொன்று இரண்டு துண்டாக என்றபடி; ஒன்றை இரண்டாக்குதல் வல்லவர் தொழி லாதலின், இதில், ஒருவில் இரண்டு வில்லாக என ஒரு சமத்காரமுந்தோன்றக் கூறினமை காண்க; "அறுவர் சிலையினையு மாறிரண்டு கூறாக்கி" என்றார் பாரதவெண்பாவிலும். புரண்டு விழ-விழுந்துபுரள என விகுதிபிரித்துக் கூட்டுக. (53)

54. தேரும்விசைகூரிவுளியுஞ்செறிபனைக்கைக்
காருமயில்வாள்சிலைதரித்துவருகாலாள்
யாரும்வெடிபூளைவனமென்னவொருதானே
யூருமொருதேரனிலமொக்குமெனநின்றான்.

(இ-ள்.) (பகைவர்களது), தேர்உம்-இரதங்களும், விசை கூர் இவுளி உம்-வேகம் மிக்க குதிரைகளும், செறி பனை கை கார்உம்-(வலிமை) மிக்கபனைமரம்போன்ற துதிக்கையையுடைய மேகம் போன்ற யானைகளும், அயில் வாள் சிலை தரித்து வரு காலாள்- வேல் வாள் வில் என்னும் ஆயுதங்களை யேந்திவருகிற காலாள் களும், யார்உம்-(ஆக நால்வகைச்) சேனையோரும், வெடி பூளைவனம் என்ன-வெடித்த இலவம்பஞ்சுத்தொகுதியை யொத்திருக்க, ஒரு தானே ஊரும் ஒருதேர் - வேறுதுணையில்லாத தான் ஒருவனே ஏறிச்செல்லும் (தனது) இரத மொன்று, அனிலம் ஒக்கும் என (அவ்விலவம்பஞ்சுகளைப் பறக்கடிக்கிற) காற்றை யொக்கு மென்று சொல்லும்படி, நின்றான் - (வெற்றிகொண்டு) நின்றான்; (எ - று.)

ஒரு காலத்தில் பலபேரைப் புறங்காட்டியோடச் செய்து நிற்றற்கு, காற்று இலவம்பஞ்சைச் சிதறச்செய்தல் உவமையெனக் காண்க. பனைக்கைக் கார்எனவே, யானையாயிற்று. கார் - உவமையாகுபெயர். காலாள்-வேற்றுமைத்தொகை. அநிலம்-வடசொல்.

55.—துரியோதனனுரைப்பச் சுவேதனை வீடுமனெதிர்த்தல்.

பட்டனவொழிந்துபலபடையுமிவனம்பிற்
கெட்டநிலைகண்டுரககேதனனுரைப்பத்
தொட்டவரிவில்லினொடுசூறையனிலம்போல்
விட்டபரிமாவிரதவீடுமனெதிர்ந்தான்.

(இ - ள்.) இவன் அம்பின் - இந்தச்சுவேதனது பாணங்களால், பட்டன ஒழிந்து - இறந்தசேனைகள்போக, பல படைஉம் - (இறவாத மற்றை) அநேகஞ்சேனைகளும், கெட்ட - தோற்றுஓடின, நிலை - நிலைமையை, கண்டு - பார்த்து, உரக கேதனன் - பாம்புக்கொடியனை துரியோதனன், உரைப்ப - சொல்ல,—சூறை அனிலம் போல் விட்ட பரி மா இரதம் வீடுமன் - பெருஞ்சுழல்காற்றுப்போல மிகவிசையாக விடப்படுகிற குதிரைகளைப்பூட்டிய தேரையுடைய பீஷ்மன், தொட்ட வரி வில்லினொடு - (கையிற்) பிடித்த கட்டமைந்தவில்லினுடனே, எதிர்ந்தான்-(சுவேதனெதிரில்) வந்தான்; (எ - று.)

'இவனம்பின்' என்றது - மத்திமதீபம். சூறையனிலம்போல் எதிர்ந்தான் எனினும் அமையும். விரதமெனப்பிரித்துரைக்கவும் இடமுண்டு. (55)

56.—மூன்று கவிகள்–வீடுமன் சுவேதனோடு மும்முரமாகப் பொருது இளைத்தமையைக் கூறும்

மத்திரனைவிட்டுமிசைவந்தமகிபதிமேல்
அத்திரமும்விட்டவனடற்சிலையறுத்தான்
சித்திரமெனும்படிதிகைத்தனன்விராடன்
புத்திரன்விடுங்கணைபொருதுபுலிபோல்வான்.

(இ - ள்.) (அப்பொழுது சுவேதன்), மத்திரனை விட்டு - சல்லியனை நீங்கி, மிசைவந்த மகிபதிமேல் அத்திரம்உம் விட்டு - தன்மேல் எதிர்த்து வந்த வீடுமராசன்மேல் அம்புகளையும் எறிந்து, அவன் அடல் சிலை அறுத்தான் - அவ்வீடுமனது வலிமையையுடையவில்லை அறுத்துத்தள்ளினான்; (தள்ளவே), புலி போல்வான் - (பலபராக்கிரமங்களிற்) புலியை யொப்பவனாகிய வீடுமன்,விராடன் புத்திரன் விடும் கணை பொருது - விராடகுமாரனான சுவேதன் விடுகிற அம்புகளைப் பொறுக்கமாட்டாமல், சித்திரம் எனும்படி திகைத்தனன் - எழுதுசித்திர மென்று சொல்லும்படி பிரமித்து நின்றான்; (எ - று.)

சந்தனுவின் மூத்தகுமாரனான இவனே நிலவுலகத்துக்குஉரிய அரசனாதலின், மகிபதியென்றார். சித்திரம் - செயலறுதற்குஉவமை. 'அத்திரமும்விட்டு' என்றஉம்மை - 'மத்திரனைவிட்டு' என்றதனை நோக்கிய இறந்தது தழுவிய எச்சம். (56)

57. வீடுமனுமீளவொருவிற்கொடுசிவேதன்
சூடுமுடிவீழவொருசுடுகணைதொடுத்தான்
கோடுசிலைவாளிபலகொண்டிவனவன்றேர்
நீடுகொடியாடையைநிலத்துறவிழுத்தான்.

(இ - ள்.) (அப்பொழுது), வீடுமனும்—, மீள ஒரு வில்கொடு-மறுபடி ஒருவில்லை யெடுத்துக்கொண்டு, சிவேதன் சூடு முடி வீழ-சுவேதன் தரித்துள்ள கிரீடம் கீழ்விழும்படி, ஒருசுடு கணை தொடுத்தான்-உக்கிரமான ஒரு அம்பை எய்தான்; இவன் - இந்தச்சுவேதன், கோடு சிலை வாளி பல கொண்டு - வளைந்தவில்லினின்று எய்த பல அம்புகளால், அவன் தேர் நீடுகொடி ஆடையை - அவ்வீடுமனது தேரிற் கட்டிய உயர்ந்த (பனைக்) கொடிச்சீலையை, நிலத்துஉற - தரையிலே விழும்படி, விழுத்தான் - அறுத்துத் தள்ளினன்; (எ - று.)— 'நிலத்துறவழித்தான்' என்றும் பாடம்.

சுடுகணை - வினைத்தொகை; பகைவரை நெருப்புப்போல அழிக்க வல்ல அம்பென்க: நெருப்பில்வைத்துக் காய்ச்சிவடித்த அம்பெனினுமாம். (57)

58. பின்னையுமவன்றனிபிடித்துவருசாபந்
தன்னையுமிவன்பலசரங்கொடுதுணித்தான்
மின்னையுநகும்பகழிவீடுமன்வெகுண்டாங்
கென்னவமர்செய்வதினியென்றுதளர்வுற்றான்.

(இ - ள்.) பின்னைஉம் - (கொடிச்சீலையை யறுத்ததுமாத்திரமேயன்றிப்) பின்னும், இவன்-சுவேதன், அவன் தனி பிடித்து வரு சாபந் தன்னைஉம்-வீடுமன் ஒப்பில்லாமற் கையிலேந்திவந்த அவ்வில்லையும், பல சரம்கொடு துணித்தான்-அநேகபாணங்களால் அறுத்துத்தள்ளினன்; மின்னைஉம்நகும் பகழி வீடுமன் - (ஒளியால்) மின்னலையும் இகழ்ந்துசிரிக்கும்படியான அம்புகளையுடைய வீடுமன், ஆங்கு - அப்பொழுது, இனி வெகுண்டு என்ன அமர் செய்வது என்று தளர்வு உற்றான் - 'இனிமேல் (நாம் இவனோடு) கோபித்து என்ன போர்செய்வது?' என்று சோர்வையடைந்தான்; (எ - று.)

வீடுமன் இரண்டுமுறை வில்லெடுக்க, அவ்விரண்டுமுறையும் அவன் வில்லைச் சுவேதன் உடனே அறுத்ததனால், இனி இவனோடு விற்போர்செய்யமுடியாதென்று கருதி மனந்தளர்ந்து, எங்ஙனம் போர்செய்வதென்றனன் என்பதாம். நகுதல் - பரிகசித்தல். ஆங்கு-அதனாலென்றுமாம். மின்னையும், உம்மை - உயர்வுசிறப்பு; அதன் ஒளிமிகுதியை விளக்கும். பி-ம்:—பிடித்தவரிசாபம். (58)

59.— துரியோதனன் சொல்லினால் பல அரசர் பக்கபலமாக வீடுமனைக் கிட்டுதல்.

தளர்ந்தநிலைகண்டுதுரியோதனனரும்போர்
விளைந்ததுசிவேதனுடன்வீடுமனிளைத்தான்
இளந்தலையுறுதபடியேகுமினெனப்போய்க்
கிளர்ந்தமுடிமன்னர்பலர்கிட்டினர்விரைந்தே,

(இ - ள்.) தளர்ந்த நிலை கண்டு - (அங்ஙனம் வீடுமன்) சோர்வடைந்த நிலைமையைப் பார்த்து, துரியோதனன்—, (அரசர்களை நோக்கி), 'சிவேதனுடன் அரு போர்விளைந்தது - சுவேதனோடு பொறுத்தற்கரியபோர் உண்டாயிற்று; (அதில்), வீடுமன் இளைத்தான்—: (ஆகையால்), இளந்தலைஉறாதபடி - (நமக்கு) இழிவு உண்டாகாதபடி, ஏகுமின்-(வீடுமனுக்குத்துணையாகச் சுவேதனோடு போர்செய்யச்) செல்லுங்கள்,' என - என்று சொல்ல, (அது கேட்டு), கிளர்ந்த முடி மன்னர் பலர்-விளக்கமுற்ற கிரீடத்தையுடைய அரசர்கள் அநேகர், விரைந்து போய் கிட்டினர் - துரிதமாகச்சென்று (வீடுமனுக்குப் பக்கபலமாகச் சுவேதனுக்கு எதிரே) நெருங்கினார்கள்; (எ-று.)

இளந்தலை-கீழ்மை. கிளர்ந்த என்பதை மன்னர்க்கு அடைமொழியாக்கின், போரில்ஊக்கங்கொண்ட என்று பொருளாம். (59)

60.—இதுவும் அடுத்த கவியும் - துரியோதனனேவலால் வந்தவரைச் சுவேதன் வலியழித்தமை கூறும்.

அந்தமுடிமன்னவரநேகரையுமுன்னம்
வந்தவழிமீளவும்வரும்படிதுரந்தான்
தந்தம்வரிவில்லுமணிதாரும்விடுதேருஞ்
சிந்தவெரிகால்வனசிலீமுகம்விடுத்தே.

(இ - ள்.) (அப்பொழுது சுவேதன்), அந்த முடி மன்னவர் அநேகரைஉம்-அவ்வாறு வந்துஎதிர்த்த கிரீடாதிபதிகளான அரசர்கள் பலரையும், தம்தம் வரி வில்உம் அணி தார்உம் விடு தேர்உம் சிந்த - தங்கள் தங்களது கட்டமைந்த வில்லும் தரித்தபூமாலைகளும் செலுத்துந் தேர்களும் சிதறும்படி, எரிகால்வன சிலீமுகம் விடுத்து-(மிக்க உக்கிரத்தன்மையால்) நெருப்பை வெளிவீசுவனவான அம்புகளை எய்து, முன்னம் வந்த வழி மீளஉம் வரும்படி-முன்னே அவர்கள் வந்தவழியாகவே திரும்பிச் செல்லும்படி, துரந்தான்-ஓட்டினான்;

முன்னம் வந்தவழி மீளவும்வரும்படி என்றது, போரிற் சிறிதும் பயன் பெறாதவராகுமாறு என்ற கருத்தை விளக்கும். தம்தம் - அவரவரது என்க. சிலீமுகம்-வடசொல்; கூர்மையான நுனியையுடைய தென்று பொருள். (60)

61. வெவ்வனலநேர்குருராசனையும்வேறோ
ரைவரையுமேவினன்முனைந்தனர்களவருஞ்
செவ்வரைகள்போல்பவர்சிரங்களும்வளைக்குங்
கைவரிவிலுந்துணிபடக்கணைதொடுத்தான்.

(இ - ள்.) (இவ்வாறு வீடுமனுக்குத் துணையாகத் தான் அனுப்பின அரசர்களையெல்லாம் சுவேதன் வென்று துரத்தியதை நோக்கித் துரியோதனன்), வெவ் அனலம் நேர் - வெவ்விய அக்கினியையொத்த [மிக்கபராக்கிரமமுடைய], குருராசனைஉம் - குருதேசத்தரசனையும், வேறு ஓர் ஐவரைஉம் - மற்றுமொரு ஐந்து அரசர்களையும், ஏவினன் - (வீடுமனுக்குத் துணையாகச்

சுவேதன்மீது) அனுப்பினன்; அவர்உம் - (அங்ஙனம் அனுப்பப் பட்ட) அரசர்களும், முனைந்தனர்கள் - (சுவேதனையெதிர்த்துப்) போர்செய்தார்கள்; (அப்பொழுது அச்சுவேதன்), செவ் வரைகள் போல்பவர்-அழகிய மலைகளை யொப்பவர்களாகிய அவர்களது, சிரங் கள்உம்-தலைகளும், வளைக்கும் கை வரிவில்உம் - வளைத்துநாணேற் றப்பட்ட கையிற்பிடித்த கட்டமைந்த விற்களும், துணிபட - அறு படும்படி, கணை தொடுத்தான் - அம்புகளைஎய்தான்; (எ - று.)

அநலம் - வடசொல். அரசர்க்கு மலையுவமை - எதற்குங்கலங் காத உறுதி நிலைமைக்கும், கம்பீரமான தோற்றத்துக்கும், நெடுந் தூரத்தாரும் அறியும் உயர்ச்சிக்கும் என்க. (61)

62.—சுவேதன் வீடுமனையெதிர்த்து மேம்படுதல்.

கங்கைமகன்மற்றுமொருகார்முகம்வளைத்துச்
சிங்கமெனவப்பொழுதுறுக்கியெதிர்சென்றான்
அங்கவனகைத்தொருதனம்புகொடுமீளப்
பங்கமுறவிற்றுணிபடுத்தியெதிர்நின்றான்.

(இ - ள்.) அப்பொழுது—, கங்கை மகன்-வீடுமன், மற்றுஉம் ஒரு கார்முகம் வளைத்து - வேறொரு வில்லை வளைத்து, சிங்கம் என- சிங்கம்போல, உறுக்கி எதிர் சென்றான் - கோபித்துச் சுவேதனெ திரிற் (போர்செய்யப்) போனான்; அங்கு - அப்பொழுது, அவன் - அச்சுவேதன், நகைத்து - சிரித்து, தன் ஒரு அம்பு கொடு-தனது ஓரம்பினால், மீள பங்கம் உற - மறுபடியும் (அவ்வீடுமன்) அவமா னத்தையடையும்படி, வில் துணி படுத்தி-(அவனது) வில்லையறுத் துத்தள்ளி, எதிர் நின்றான் - (தனதுமேன்மை தோன்ற) எதிரில் நின்றான்; (எ - று.)

இங்கே, நகை-வீரத்தெழுந்த வெகுளிநகை; இனி, வீடுமன் கீழ் இருமுறை வில் அறுபட்ட இழிவை நோக்கிய பரிகாசமுமாம்.

63.—தேவர்கள் சுவேதன்வலிமையை மதித்தல்.

ஆனபொழுதந்தரநெருங்கியமரகாணும்
வானவர்விராடபதிமைந்தனைமதித்தார்
வேனிலவன்மேனுதல்விழித்தவனளிக்குங்
கூனல்வரிசாபமிதுகொண்டனன்வரத்தால்.

இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்.

(இ-ள்.) ஆன பொழுது - இவ்வாறான அச்சமயத்தில், அந்த ரம் நெருங்கி அமர் காணும் வானவர்-ஆகாயத்தில் திரண்டுநின்று போர்வினோதத்தைப் பார்க்கிற தேவர்கள், விராடபதி மைந்தனை மதித்தார் - விராடராசனதுகுமாரனான சுவேதனைக் கொண்டாடின வர்களாய்,—'வேனிலவன்மேல் நுதல் விழித்தவன் அளிக்கும் - மன்மதன்மேல் நெற்றிக்கண்ணை விழித்தெரித்த சிவபிரான் (தனக் குக்) கருணையோடு கொடுத்த, கூன் நல்வரி சாபம் இது - வளை வான சிறந்த கட்டமைந்த இவ்வில்லை, வரத்தால் கொண்டனன்-

(தான் செய்த தவத்திற்கு) வரமாகச் சுவேதன் பெற்றான்; (எ - று.) —இப்பாட்டில் 'மதித்தார்' என்னும் முற்றெச்சம், அடுத்தபாட்டில் 'என்றனர்' என்ற முற்றோடு முடியும்.

பூமியிற் போர்நடக்கும்பொழுது அக்காட்சியைத் தேவர்கள் வானிலிருந்து காணுதல் இயல்பென்ப. வேனிலவன் - வேனிற் பருவத்துக்குஉரியவன்; வேனில்என்றது - இங்கே இளவேனிலை: அது - சித்திரை வைகாசி மாதங்களாகிய வசந்தகாலம்; அக்காலத்தில் ஆடவர்க்கும் மகளிர்க்கும் மிக்க வேட்கையை விளைத்துப் போர்த்தொழிலில் மன்மதன் ஊக்கமிகுதலால், அவனுக்கு, வேனிலவ னென ஒருபெயர். (63)

64.—வஞ்சனையால்தான் இவனை வெல்லவேணுமென்று தேவர்கள் கூறுதல்.

ஏறனையவீடுமனிளைத்தபடிகண்டால்
வேறவனைவில்லமரில்வெல்லவுரியார்யார்
மாறுபடுவெஞ்சமரில்வஞ்சனையிலன்றிக்
கோறலரிதென்றனர்குலப்பகைமுடிப்பார்.

(இ - ள்.) (அந்தச்சுவேதனுக்குமுன்), ஏறு அனைய வீடுமன் இளைத்தபடி கண்டால் - ஆண்சிங்கத்தையொத்த வீடுமன்தானே (போரில்) சோர்வடைந்தவிதத்தை நோக்குமிடத்து, வில் அமரில் அவனை வெல்ல உரியார் வேறு யார் - விற்போரில் அச்சுவேதனைச் சயிக்கத்தக்கவர் வேறு எவருளர்? [ஒருவருமில்லை யென்றபடி]; (ஆகையால்), மாறு படு வெம் சமரில் - (ஒருவரோடொருவர்) பகைத்துச்செய்யுங் கொடியயுத்தத்தில், வஞ்சனையில் அன்றி கோறல் அரிது - வஞ்சனைவழியிலல்லாமல் [நியாய வழியில்] (அவனைக்) கொல்லுதல் முடியாது,' என்றனர் - என்றுசொன்னார்கள்; குலம் பகை முடிப்பார் - (தமது) இனத்துக்குப் பகையாயிருப்பவனை ஒழிப்பவராகிய தேவர்கள்; (எ - று.)

தேவர்கூட்டத்திற்சேர்ந்தவரான வசுக்களுக்குப் பகையாகி அவர்கள் சாபத்தால் பூலோகத்தில் தோன்றின சுவேதனை அவ் வசுக்களில் ஒருவனான வீடுமனைக்கொண்டு கொல்லவேண்டு மென்னுங் கருத்தோடு தேவர்கள் இங்ஙனம் உபாயங் கூறினதனால், 'குலப்பகைமுடிப்பார்' என்றார். மிருகேந்திரனாகிய சிங்கம்போல வீடுமன் எல்லாவரசர்க்கும் மேம்பட்டவனாதலாலும், சிங்கம் யானை முதலிய விலங்குகளை எளிதில் அழித்தல்போல வீடுமன் பகைவர்களை எளிதிலழிக்கவல்ல னாதலாலும், 'ஏறனையவீடுமன்' என்றது. வீடுமன்என்றதன் இறுதியில், உயர்வுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. 'வில்லவரில்' என்ற பாடத்துக்கு - வில்வீரருள் என்க. "ஆடரவம் பூண்டவரனார்தம் பாற்பெற்றுக், கூடமருள் வெல்லுங் கொடுஞ்சிலையா - னோடேநீ, வல்லாண்மை செய்யில்வலிதொலையான் வஞ்சனையால், வில்லாண்மையோடொழிய வெல்," "வஞ்சனையாற் கொல்லிவனை வாழ்வேந்தே மற்றவன்கை, வெஞ்சிலையுண்டாக வெலற்

படான்—அஞ்சுடர்கண், மின்னுயிர்க்கும் வெள்வேல் விராடன் குல மதலே, யின்னுயிர்க்குங் காலமிது" என்பன பாரத வெண்பா. (64)

65 —வீடுமன் தேவர் சொல்லையறிந்து சுவேதனைநோக்கி, 'வில்லன்றி வேறுபடை உனக்குத் தெரியாதோ?' எனல்.

ஓகைநிகழெண்வகைவசுக்களிலொருத்த
னாகியநராதிபதியம்முறையறிந்தான்
வாகைவரிவில்லொழியவாளயில்களென்னும்
வேகமுறுவெம்படைகள்கற்றிலைகொல்வெய்யோய்.

இதுவும், மேற்கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) ஓகை நிகழ் - களிப்புப்பொருந்தின, எண் வகை வசுக்களில் ஒருத்தன் ஆகிய நராதிபதி - அஷ்டவசுக்களில் ஒருவனான பீஷ்மராசன், அ முறை அறிந்தான் - (தேவர்கள் குறித்த) அவ் விதத்தை அறிந்தவனாய், (சுவேதனைநோக்கி), வெய்யோய்-பராக்கிரம முடையவனே! (நீ), வாகை வரி வில் ஒழிய - வெற்றிமாலையைத்தரித்த கட்டமைந்த வில்லின் தொழில்மாத்திரத்தையே யன்றி, வாள் அயில்கள் என்னும் வேகம் உறு வெம் படைகள் கற்றிலை கொல் - வாளும்வேலுமென்கிற உக்கிரதன்மை பொருந்திய வெவ்விய ஆயுதத்தொழில்களை அறிந்தாயில்லையோ? (எ- று.)—"என்றெதிர்சிவேதனொடு இயம்புதலும்" என அடுத்தகவியோடு இயையும்.

அந்தத்தேவர்கள் வார்த்தையைக் கேட்டவுடனே, இனி இவனை எளிதிற் கொல்லலாமென வீடுமன் மகிழ்ச்சியோடு போரில் ஊக்கமிக்கதனால், 'ஓகைநிகழ்நராதிபதி' என்றது. அஷ்டவசுக்கள் - அத்வரன், அநலன், அநிலன், ஆபன், சோமன், துருவன், பிரத்யூஷன், பிரபாசன் என இவர். இவர்களுட் பிரபாசனே வீடுமனாய்ப்பிறந்தவன். சுவேதனுக்கு ரோஷமுண்டாய் அவன் வில்லை விட்டு வேறுபடைக்கலத்தை எடுக்கச் செய்யும்பொருட்டு வஞ்சனையாக இவ்வாறு கூறினான் வீடுமன். சுவேதனுக்கு வெற்றிதருவது வில்லேயாதலின், அதனை 'வாகைவில்' என விசேடித்தது. (65)

66.—மூன்றுகவிகள்—வாட்படைகொண்டு பொருஞ் சுவேதனை வீடுமன் அம்பினாற்பொருது கொன்றமையைக் கூறும்.

என்றெதிர்சிவேதனொடியம்புதலும்வெள்கிக்
குன்றுசிலைகொண்டவனளித்தசிலைகொள்ளான்
வென்றிவடிவாளுருவிமேலுறநடந்தான்
நின்றவனும்வேறொருநெடுஞ்சிலைகுனித்தான்.

(இ - ள்.) என்று - என்று இவ்வாறு, சிவேதனொடு - சுவேதனுடனே, எதிர் இயம்புதலும் - எதிரிற்சொன்னவளவிலே, (அச்சுவேதன்), வெள்கி - நாணமுற்று, குன்று சிலைகொண்டவன் அளித்த சிலை கொள்ளான் - மகாமேருகிரியை வில்லாகக்கொண்ட சிவபிரான் (தனக்குக்) கொடுத்தருளினவில்லைக் கைக்கொள்ளாமல் (நீக்கி), வென்றி வடி வாள் உருவி - வெற்றியைத்தரத்தக்க கூர்மையான

வாளாயுதத்தை உறையினின்று எடுத்துச்சுழற்றி, மேல் உற நடந்தான் - வீடுமன்மேலே பொருந்தச் சென்றான்; (அப்பொழுது), நின்றவன்உம் - (எதிரில்) நின்ற வீடுமனும், வேறு ஒரு நெடுசிலை குனித்தான் - (தானும் வாளையெடுக்காமல்) மற்றொருநீண்டவில்லை யெடுத்து வளைத்தான்; (எ - று.)

எதிர்சிவேதனென வினைத்தொகையாக எடுத்து, எதிர்த்து நின்ற சுவேதனென்றுங் கொள்ளலாம். தனக்கு விற்போரொழிந்த வாட்போர் வேற்போர்களில் திறமையில்லை யென்று வீடுமன் இகழ்ந்ததனால், வெள்கினான். தான் கையிலுள்ளவரையில் வெற்றியைத்தரவல்ல தென்றசிறப்பு, 'குன்றுசிலைகொண்டவனளித்த சிலை' என்றதனால் விளங்கும்.

மகாமேருமலையைப் பரமசிவன் வில்லாக ஏந்தியது, திரிபுரசங்கார காலத்திலென்க. தாரகாசுரனது புத்திரர்களாகிய வித்யுந்மாலி தாரகாட்சன் கமலாட்சன் என்னும் மூவரும் மிக்கதவஞ்செய்து மயனென்பவனால் சுவர்க்க மத்திய பாதாள மென்கிற மூன்று இடங்களிலும் முறையே பசும்பொன் வெண்பொன் கரும்பொன்களால் அரண்வகுக்கப்பட்டு ஆகாயமார்க்கத்திற் சஞ்சரிக்குந்தன்மையுடைய மூன்றுபட்டணங்களைப் பெற்று, மற்றும் பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்த இடங்களிற் பறந்து சென்று பல இடங்களையும் பாழாக்கிவருகையில், அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால், சிவபெருமான் பூமியைத் தேராகவும், சந்திர சூரியரைத் தேர்ச்சக்கரங்களாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், ஆதிசேஷனை நாணாகவும், விஷ்ணுவை வாயுவாகிய சிறகமைந்து அக்கினியைமுனையாகவுடைய அம்பாகவும், மற்றைத் தேவர்களைப் பிற போர்க்கருவிகளாகவும் அமைத்துக்கொண்டு யுத்தசன்னத்தராகிச் சென்று போர்செய்ய யத்தனித்துப் புன்சிரிப்புச்செய்து அசுரர் அனைவரையும் பட்டணங்களோடு எரித்தருளின ரென்பது கதை. (66)

67. வாளினெதிர்வெஞ்சிலைவளைத்துவயவீரன்
தோளிணையிலொன்றுதுணியக்கணைதொடுத்தான்
காளையொருகைவிழவுமற்றையொருகையான்
மீளவும்வெகுண்டுசுடர்வாளினையெடுத்தான்.

(இ - ள்.) (இங்ஙனம் வீடுமன் மாறுபாடாக), வாளின் எதிர் - (சுவேதன் எடுத்த) வாளுக்கு எதிரிலே, வெம் சிலை வளைத்து - (தான்) கொடிய வில்லை வளைத்து, வய வீரன் தோள் இணையில் ஒன்று துணிய - (இதுவரையில்) வெற்றியைப்பெற்ற வீரனாகிய சுவேதனது புயங்களிரண்டில் ஒன்று அறுபடும்படி, கணை தொடுத்தான் - அம்பு செலுத்தினான்; (அப்பொழுது), காளை - சுத்தவீரனான சுவேதன், ஒரு கை விழஉம் - ஒருகை அற்றுவிழவும், (சிறிதும் பாராட்டாமல்), மீளஉம் வெகுண்டு - மீண்டுங்கோபங்கொண்டு, மற்றை ஒரு கையால் -

வேறொருகையினால்,சுடர் வாளினை எடுத்தான்-ஒளியையுடைய வாளாயுதத்தை யெடுத்தான்; (எ - று.)

முதலில் வலக்கையால் வாளைஎடுத்துவந்தவன் அவ்வலக்கை வீடுமனால் அறுக்கப்பட்டவளவில் இடக்கையால் வாளை யேந்தினன் என்பதாம். அப்பொழுதும் வில்லையேந்தாமல் வாளையே யேந்தினான், வீடுமனது பழிப்புக்கு இடங்கொடாமைப்பொருட் டென்க. வலக்கை யற்றவர் இடக்கைவில்லில் எயிற்றுப்படை தொடுத்தல்கூடுதலைக் கீழ் இச்சருக்கத்து இருபத்தெட்டாங்கவியிற் காண்க. (67)

68. எடுத்தவடி வாளினொடு மெண்ணில்பல பாணந்
தொடுத்துவரு வீடுமனை மாமுடி துணிப்பான்
அடுத்துவரு போதவ னழன்றொரு சரத்தால்
நடுத்தகை யுறாமலவ னல்லுயிர் கவர்ந்தான்.

(இ - ள்.) எண் இல் பல பாணம் தொடுத்து வரு வீடுமனை - அளவில்லாத அநேகம் அம்புகளை எய்துவருகிற பீஷ்மனை, மாமுடி துணிப்பான் - பெரியதலையையறுக்கும்பொருட்டு, எடுத்த வடி வாளினொடும்-(ஒருகையில்) ஏந்திய கூரிய வாளாயுதத்துடனே, அடுத்து வரு போது-(சுவேதன்) நெருங்கிவரும்பொழுது, அவன் - அந்தவீடுமன், அழன்று-கோபித்து, ஒரு சரத்தால் - ஒப்பற்ற அம்பினால், நடு தகை உறாமல்-இடையிலே தடைப்படாமல், அவன் நல் உயிர் கவர்ந்தான் - அச்சுவேதனது நல்லஉயிரை (உடம்பினின்று) வலியவாங்கினான் [அவனைக்கொன்றான் என்றபடி], (எ - று.)

இப்பாட்டில், நடுத்தகையுறாமல் என்றது, சிறந்தகுணமாகிய நடுவுநிலைமை தன்பக்கல் பொருந்தாதபடி என்றபொருளையும் உணர்த்தும்; தான்கூறியபடி வில்லைவிட்டு வேறுபடைக்கலமேந்திய வீரனோடு தானும் அப்படைக்கலத்தையே ஏந்தாது விற்கொண்டு போர்விளைத்தது, உத்தமவீரனான வீடுமனுக்கு நடுவுநிலைமை தவறுதலாம்: நடுவு நிலைமை - பக்ஷபாதமில்லாததன்மை. தகை - தடையென்னும்பொருளில், முதனிலைத்தொழிற்பெயர்; மற்றொருபொருளில், தகை - தகுதி, சற்குணம்: இது - தொழிலடியாப் பிறந்தாயினும் பொருளாற் பண்புப்பெயர். வீடுமனை மாமுடிதுணிப்பான் - இரண்டுசெயப்படுபொருள்வந்த வினை; இது வடமொழி நடை; இதனை வடநூலார் த்விகர்மகர்த்தரிப்ரயோகமென்பர். இனி, தமிழ்நடையாக, வீடுமனை முடியிலே துணிக்கும்பொருட்டு என்றாவது, உருபுமயக்கமாய் வீடுமனதுமுடியைத் துணிக்க வென்றாவது கொள்ளலாம். வீடுமனைப்போல வஞ்சனைகருதாமல் நீதியாக மானத்தைப் பாதுகாத்து வாட்போர்செய்து இறந்ததுபற்றி, சுவேதனுயிர் நல்லுயிரெனப்பட்டது. அப்பொழுது உபயோகித்தது, பிரமாஸ்திரம்: "சென்று திசைவணங்கத் தெய்வப் படை நினைந்து, துன்று நெடுஞ்சிலைநாண் தோளளைப்ப - மன்றுலகில், மன்னுயிரைத் தான் படைத்தான் மந்திரத்தால் மற்றவன்ற, னின்னுயிரைப் போக்கினனெய்து" என்பது, வெண்பாப்பாரதம். பி - ம்: யோதவனுமற்றொரு. (68)

வேறு.

69.—சுவேதன்பட்டதற்கு வானோரும் துரியோதனன் பக்கத்து அரசரும் மகிழ்தல்.

பூழிபட நிலமிசையப் பொற்சுண்ணங் கமழ்மேனிப் புதல்வன் வீழ வாழிமொழிந் துளமகிழ்ந்தா ரந்தரதுந் துபிமுழங்க வானோ ருள்ளார் ஊழிபெயர்ந் துலகேழு முள்ளடக்கித் திசைநான்கு முகளித் தேறி யாழிபரந் தார்ப்பதென வார்த்தனரப் பெருஞ்சேனை யரசரெல்லாம்.

(இ - ள்.) பொன் - பொன்நிறமான, சுண்ணம் - சுகந்தப்பொடி, கமழ் - மணம்வீசப்பெற்ற, மேனி - (தனது) உடம்பிலே, பூழி பட - புழுதிபடிய, அ புதல்வன் - அந்தச்சுவேதகுமாரன், நிலம்மிசை - தரையிலே, வீழ - இறந்துவிழ,—வானோர் உள்ளார் - ஆகாயத்தில் (போர்காண) வந்துள்ளவரான தேவர்கள், வாழி மொழிந்து - வாழ்த்துக்கூறி, அந்தரம் துந்துபி முழங்க - ஆகாயத்தில் தேவ துந்துபி வாத்தியம் முழங்காநிற்க, உளம் மகிழ்ந்தார்-மனமகிழ்ச்சி கொண்டார்கள்; ஆழி - கடல், ஊழி - கற்பமுடிவுகாலத்திலே, பெயர்ந்து-தன்நிலை மாறி [பொங்கி], உலகு ஏழ்உம் உள் அடக்கி - ஏழுலகங்களையுந் தன்னுள்ளே அடங்கச்செய்து, திசை நான்குஉம் உகளித்து ஏறி-எல்லாத் திக்குக்களிலும் கடந்துகிளர்ந்து, பரந்து-பரவி, ஆர்ப்பது என - ஆரவாரிப்பதுபோல, அ பெரு சேனை அரசர்எல்லாம் - பெரிய அந்தக் கௌரவசேனையிலுள்ள அரசர்கள் யாவரும், ஆர்த்தனர்-ஆரவாரித்தார்கள்; (எ - று.)

சிறந்தவீரன் மண்ணுலகத்தைவிட்டுத் தமதுவிண்ணுலகத்துக்கு விருந்தானதும், தமது இனத்தவரான வசுக்களில் ஒருவனை வீடுமன் வெற்றி கொண்டதும், தேவர்கள் மனமகிழ்ந்து பேரிகை கொட்டி வாழ்த்துக்கூறினதற்குக் காரணம். சுண்ணம் - சூர்ணமென்னும்வடமொழிச்சிதைவு. வாழி மொழிந்து - வாழியென மொழிந்து என்க. வானோர் உளம்மகிழ்ந்தார்-"உயர்திணை தொடர்ந்த பொருள் முதலாறும், அதனொடுசார்த்தினத்திணை முடிபின" என்ற விதிபற்றி, அஃறிணையாகிய சினைப்பெயர் உயர்திணையாகிய முதலின் முடிபைக் கொண்ட திணைவழுவமைதி. ஊழி-பிரமனாயுள். உலகேழ் - பூலோகம் புவர்லோகம் ஸுவர்லோகம் மஹர்லோகம் ஜநலோகம் தபோலோகம் ஸத்யலோகம் என்னும் மேலுலகேழும், அதலம் விதலம் ஸுதலம் தராதலம் ரஸாதலம் மஹாதலம் பாதாளம் என்னுங் கீழுலகேழுமாம். உகளித்து, உகளி-பகுதி.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் ஒன்பதுகவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரிரண்டும் மாச்சீரும், மற்றைநான்கும் காய்ச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள்; இவற்றில் ஆறுஞ்சீர் தேமாச்சீராகவே நிற்கும். (69)

70.—இதுமுதல் மூன்றுகவிகள் - படுகளச்சிறப்புக் கூறும்.

**உடைந்ததடந்தேருருள்களுகுகுருதிப்புனரேறுமும்பர்வானில்
அடைந்தவயவருக்குவழியாயுசுடர்மண்டலத்தின்சாயைபோலும்**

மிடைந்தகுடைகாம்பற்றுமிதப்பனவுங்கரியபுகர்வேற்கண்மாதர்
குடைந்தநறும்பரிமளச்செங்குங்குமநீரிடையெழுந்தகுமிழிபோலும்.

(இ - ள்.) உடைந்த தட தேர் - (போரில்) உடைபட்ட பெரிய தேர்களின், உருள்கள் - சக்கரங்கள்,—உகு குருதி புனல்தோறுஉம்- பெருகுகிற இரத்தவெள்ளங்களிலெல்லாம், உம்பர் வானில் அடைந்த வயவருக்கு வழிஆய சுடர் மண்டலத்தின் சாயை போலும் - மேலுலகத்து வீரசுவர்க்கத்திற் சேர்ந்த வீரர்களுக்குவரும் வழியாய் நடுவு துளைபட்ட சூரியமண்டலத்தின் நிழல்களை யொக்கும்; காம்பு அற்று மிதப்பன - காம்பு அறுபட்டு (இரத்தத்தில்) மிதப்பனவாகிய, மிடைந்த குடைஉம் - நெருங்கியகுடைகளும்,—கரிய புகர்-கருமையான நிறத்தையுடைய, வேல் கண் - வேலாயுதம்போன்ற கண்களையுடைய, மாதர் - மகளிர், குடைந்த - நீராடின, நறு பரிமளம் செம்குங்குமம் நீரிடை - நல்லவாசனையையுடைய சிவந்தகுங்குமக்குழம்போடு கலந்த நீரிலே, எழுந்த - தோன்றிய, குமிழி-குமிழிகளை, போலும்—; (எ-று.)

தன்மைத்தற்குறிப்பேற்றவணி. போர்க்களத்தில் அழிந்தசேனைகளின் உடம்பினின்று பெருகிய இரத்தவெள்ளத்தில் கிடந்த தேர்ச் சக்கரங்கள் - வீரசுவர்க்கமடைபவர் சூரியமண்டலத்தைத் துளைத்துக் கொண்டு செல்லுதலால், நடுவில் துவாரம்பொருந்திய அம்மண்டலத்தின் பிரதிபிம்பங்கள் அவ்விரத்தவெள்ளத்தில் விளங்குவனவற்றைப் போலு மென்பது, முன்னிரண்டடியின் கருத்து. உகுகுருதிப்புனல் தோறும் என்பது **மத்திமதீபம்.** போரிற் பின்வாங்காது இறந்தவர் வீரசுவர்க்கம் அடைந்து இன்புறுவரென்பதும், அங்ஙனம் அடைகையில் இரவிவட்டத்தைப் பிளந்துகொண்டு அதனிடைவழியாய்ச் செல்லுவரென்பதும் நூற்கொள்கை. கண்ணுக்கு வேல் உவமை-கூர்மைக்கும் வடிவுக்கும் வேட்கைநோய் விளைத்து ஆடவரை வருத்துதற்கு மென்க. "மாதர் காதல்" என்ற தொல்காப்பியத்து உரிச்சொல்லியற் சூத்திரத்தால், மாதரென்றது - விருப்பத்தை யுணர்த்துவதோர் உரிச்சொல்லாம்; அது - ஆகுபெயராய், விரும்பப்படும் அழகையுடைய மகளிரைக் குறிக்கும். இரத்தம் செந்நீராதலால், 'குருதிப்புனல்' எனப்பட்டது. குங்குமச்செங்குழம்பு - அம்மகளிருடம்பிற்பூசியது. குமிழ்ப்பது-குமிழி: மொக்குள்; இ-கருத்தாப்பொருள்விகுதி. (70)

71. வெங்கலங்கற்கடுங்குருதி வெள்ளத்துக் கொடியாடை மிதக்குந்தோற்றஞ், செங்கலங்கற்புதுப்புனலில் விளையாடித்திரிகின்றசேல்கள்போலும், பொங்கலங்கனிருபர்தலைபுனைமகுடத்துடன் கிடப்பபொறியார்வண்டு, தங்கலங்கல்வண்கனகசததளபங்கயமுகுளசாலம்போலும்.

(இ - ள்.) வெம் - பயங்கரமான, கலங்கல் - கலக்கத்தையுடைய, கடு - மிக்க, குருதி வெள்ளத்து - இரத்தவெள்ளத்திலே, கொடி ஆடை - துவசச்சீலைகள், மிதக்கும் - மிதந்தலைகிற, தோற்றம் - காட்சி,—செம் - செந்நிறமுள்ள, கலங்கல் - கலக்கத்தையுடைய, புது

புனலில் - புதுநீர் வெள்ளத்தில்,' விளையாடி திரிகின்ற—, சேல்கள் - சேல்மீன்களை, போலும் - ஒக்கும்; பொங்கு - விளங்குகிற, அலங்கல் - போர்ப்பூமாலையைச் சூடிய, நிருபர் - அரசர்களது, தலை - தலைகள், புனை மகுடத்துடன் - அணிந்த கிரீடத்துடனே, கிடப்ப - (அவ் விரத்தத்தில்) விழுந்துகிடப்பவை,— பொறி ஆர்வண்டு தங்கு - புள்ளிகள் பொருந்தின வண்டுகள் மொய்த்தற்குரியனவும், அலங்கல் - ஒளிசெய் தலையுடையனவுமாகிய, வண் கனக சததள பங்கய முகுள சாலம் போலும் - அழகிய பொன்மயமான நூற்றிதழ்த் தாமரையரும்பின்தொகுதியை ஒக்கும்; (எ - று.)

கிரீடத்தோடுகூடிய தலைகள், அடியகன்று மேலே முறையே குறுகி யிருத்தலால், தாமரையரும்புபோலும். வீரர்கள்முகத்தின் விளக்கத்தையும் அவர்கள்கிரீடம் பொன்மயமாயிருத்தலையும் நோக்கி, உபமானத்தை 'வண்கனகபங்கயம்' என்றார். 'வண்டு தங்கு' என்ற உபமானத்தின் அடைமொழியை நோக்கி, உபமேயத்தில் கிரீடத்து உச்சியில் நீலமணிகள் பதிக்கப்பட்டுள்ளன வெனக் கொள்ளினுமாம். வண்டுக்குப்பொறிபோல நீலமணிக்கு ஒளி யென்க. தன்மைத்தற்குறிப்பேற்றவணி. செங்கீருக்கு உவமையாதற் பொருட்டு, செங்கலங்கற்புதுப்புனல் கூறினார். இரண்டும், வடிவுவமை. சேல்-மீனின்ஓர்சாதி. சிறியவும் பெரியவுமாகிய கொடிச்சீலைகள், சேலினங்களை யொக்கும். கநகஶததளபங்கஜமுகுளஜாலம் - வடசொற்றொடர். சததள பங்கஜம் - நூற்றிதழ்த்தாமரை. பங்கஜம்-சேற்றிற்பிறப்பது; தாமரைக்குக் காரணவிடுகுறிப்பெயர். (71)

72. எண்ணிழந்தகுருதிநதியிருமருங்குங்கரிபரியாள்கரைகளாகக், கண்ணிழந்த பறையிடையே செருகியகால்வாய்த்தலையின் கண்கள் போலும், மண்ணிழந்துபடுமரசர்மணிக்கலங்கள் பலசிந்திவயங்கு தோற்றம், விண்ணிழந்துபரந்தசெழுங்கடலிடையேமீனினங்கள் வீழ்ந்தபோலும்.

(இ - ள்.) எண் இழந்த - அளவில்லாத, குருதி நதி - இரத்தப் பெருக்காகிய ஆற்றிற்கு, இரு மருங்குஉம் - இரண்டுபக்கங்களிலும், கரி பரி ஆள் - (விழுந்துகிடக்கிற) யானைகளும் குதிரைகளும் காலாட்களும், கரைகள் ஆக - கரைகளாய் அமைந்திருக்க, கண் இழந்த பறை - (அடிக்குமிடமாகிய) தோற்கண்ணை இழந்த பேரிகைகள், இடையே செருகிய - நடுநடுவே பொருந்திய, கால் வாய் தலையின் கண்கள் போலும் - வாய்க்கால்களின் தொடக்கத்திலுள்ள மதகின் கண்களை யொக்கும்; மண் இழந்து-நிலவுலகத்தை விட்டு (உயிர்) நீங்கி, படும் - இறந்துவிழுந்துகிடக்கிற, அரசர்-அரசர்களது, மணி கலங்கள் பல - அநேகம் இரத்தினாபரணங்கள், சிந்தி - (அவ்விரத்த வெள்ளத்திலே) சிதறி, வயங்கு-விளங்குகிற, தோற்றம் - காட்சி,—மீன் இனங்கள் - நக்ஷத்திரக்கூட்டங்கள், விண் இழந்து - ஆகாயத்தைவிட்டு, பரந்த செழுகடலிடைஎவீழ்ந்த- விசாலமான நீர்நிறைந்த கடலினிடத்தே விழுந்திருப்பனவற்றை, போலும்-ஒக்கும்; (எ - று.)

முன்னது - வடிவுவமையும், பின்னது-நிறமும் ஒளியும்பற்றிய உவமையுமாம். செந்நிறமுள்ள இரத்தவெள்ளத்தைச் செந்நிற முள்ள புதியயாற்றுநீர்ப்பெருக்காகவும், அதனிரண்டு பக்கத்தும் விழுந்துகிடக்கிற உயிர்நீங்கிய உடல்களை அதன்கரைகளாகவும் வருணித்தார்: நடுத்தோல் கிழிந்து நீங்க இடையிடையே விழுந்து கிடக்கிற போர்ப்பறைகளின் துவாரங்களின் வழியாய் அவ்விரத்தம் பாய்ந்து அப்பாற் செல்வது, ஆங்காங்குள்ள கால்வாய்த்தலைமதகு கண்களில் அப்புதுவெள்ளம் பாய்ந்துசெல்வதை யொக்குமென்க. பல்வேறு நிறத்தனவான இரத்தினங்களைப் பதித்த ஆபரணங்கள் அநேகம் ஆங்காங்குச் சிதறிக்கிடந்து விளங்குதல், பல்வேறு நிறத் தனவாய் விளங்கும் நட்சத்திரங்களின்கூட்டம்போலும். **தன்மைத் தற்குறிப்பேற்றவணி.** இவ்வணிக்கு, முதலடியில் **உருவகம்** அங்கமாய் வந்தது. பி - ம் : வீழ்வபோலும். (72)

73 —சூரியாஸ்தமன வருணனை.

பட்டநுதற்களியானைப்பாண்டவர்தம்படைத்தலைவன்பட்டானாகத்
தொட்டகழற்றடமகுடச்சுடர்வடிவாண்மகிபரெலாந்துணுக்கமெய்தி
விட்டபடங்கியல்பாடிவீடணைந்தார்வெயிலோனுமேல்பாற்குன்றிற்
கிட்டவவன்வடிவமுமிக்குருதியினூற்சிவந்ததெனக்கிளர்ந்ததம்மா.

(இ - ள்.) பட்டம்-பொற்பட்டத்தைதயணிந்த, நுதல்-நெற்றியை யும், களி-மதக்களிப்பையுமுடைய, யானை-யானைச்சேனையையுடைய, பாண்டவர் தம்-பாண்டுகுமாரர்களது, படை தலைவன்-சேனாதிபதி யான சுவேதன், பட்டான் ஆக-இறந்தவனாய்விட,—தொட்ட கழல்-அணிந்தவீரக்கழலையும், தட மகுடம் - பெரியகிரீடத்தையும், சுடர் வடி வாள் - விளங்குகிற கூரிய வாளாயுதத்தையுமுடைய, மகிபர் எலாம்-(அந்தச்சேனையின்) அரசர்யாவரும், துணுக்கம் எய்தி-கலக் கத்தையடைந்து, விட்ட படங்கு இயல் பாடி வீடு அணைந்தார் - (தாங்கள் காலையில்) விட்டுவந்த கூடாரம் அமைந்த பாசறையிற் போய்ச்சேர்ந்தார்கள்; (அச்சமயத்தில்), வெயிலோன்உம் - உஷ்ண கிரணனான சூரியனும், மேல் பால் குன்றில் கிட்ட-மேற்குத்திக்கி லுள்ள அஸ்தகிரியிற் போய்ச் சமீபிக்க, (அப்பொழுது), அவன் வடிவம்உம்-அச்சூரியனது மண்டலமும், இ குருதியினால் சிவந்தது என - (போர்க்களத்திலுள்ள) இவ்விரத்தந் தெறித்து அதனாற் செந்நிறமடைந்ததுபோல, கிளர்ந்தது - செந்நிறமாய் விளங்கிற்று ; (எ - று.)—அம்மா - ஈற்றசை; மிக்கதூரத்தில் வானத்திலுள்ள சூரியமண்டலத்திலும் இவ்விரத்தம்தெறித்த தென்பதுபற்றிய வியப்பிடைச்சொல்லெனினும் அமையும்.

நான்காமடி - ஏதுத்தற்குறிப்பேற்றவணி; என வென்னும் உருபு தொடர்ந்துவந்தது. அந்திப்பொழுதில் மிக்குத்தோன்றுகிற சூரிய மண்டலத்தின் செந்நிறத்தை, இரத்தத்தாற் சிவந்ததென்று உத் பிரேக்ஷித்தார். யானை - மற்றைச்சேனைகட்கும், வாள் - மற்றையாயு தங்கட்கும் உபலக்ஷணம். யானைப் பாண்டவர் - யானைபோன்ற

பாண்டவ ரென்றுமாம். விட்ட படங்கு இயல் - தொங்கவிட்ட பெருங் கொடி பொருந்தின என்றுங் கொள்ளலாம். (73)

74 —இதுவும், மேற்கவியும் - புத்திரசோகமுற்ற விராடனுக்கு வேந்தர் உபசாரங்கூறுதலைத் தெரிவிக்கும்.

திருநெடுமான்முதலானதேர்வேந்தர்விராடனுழைச்சென்றுன்மைந்த ரிருவருமின்றொருபடியேவெஞ்சமரிலெஞ்சினரென்றிரங்கலையா பொருமுனையில்வீடுமனைப்புறங்கண்டுநிருபரெலாம்பொன்றவென்று விரகுடன்வாளெடுப்பித்தபிறகன்றேதொடுசரத்தால்வீழ்ந்ததென்றார்.

(இ - ள்.) திரு நெடு மால் முதல் ஆன - சிறந்த பெருமைக் குண முடைய கண்ணபிரான்முதலாகிய, தேர்வேந்தர் - ரதாதிபதிகளான அரசர்கள், விராடனுழை சென்று-விராடராசனிடத்திற்போய், 'ஐயா- தலைவனே! உன் மைந்தர் இருவர்உம்-(உத்தரனும் சுவேதனுமாகிய) உனதுகுமாரர் இரண்டுபேரும், இன்று-இன்றைக்கு, ஒருபடிஏ - ஒரே வகையாக, வெம்சமரில்-கொடியபோரில், எஞ்சினர்-இறந்து விட்டார் கள், என்று-என்றகாரணத்தால், இரங்கல் - (நீ) வருத்தப்படவேண் டாம்; பொரு முனையில் - போர்செய்யுமிடத்தில், வீடுமனை புறம் கண்டு-பீஷ்மனை முதுகுகாட்டியோடச்செய்து, நிருபர் எலாம் பொன்ற வென்று-மற்றைப்பகையரசர் யாவரும் அழியும்படி. வெற்றிகொண்டு, விரகுடன் வாள் எடுப்பித்த பிறகு அன்றுஓ - வஞ்சனையாக (வில்லை விட்டு) வாளையெடுக்கும்படி (வீடுமன்) செய்த பின்பன்றோ, தொடு சரத்தால் வீழ்ந்தது-(அவ்வீடுமன்) தொடுத்த பாணத்தால் இறந்து விழுந்தது,' என்றார்-என்று (புகழ்ச்சி தோன்ற உபசாரமொழி) கூறி னார்கள்; (எ - று.)

இங்ஙனம் பொதுப்படக்கூறினும், ஏற்புழிக்கோடல் என்னும் உத்தியால், 'பொருமுனையில் நிருபரெலாம்பொன்ற வென்றுவீழ்ந் தது' என்பதை இருவருக்கும், மற்றதைச் சுவேதனுக்குமாத்திரமும் கொள்க. திருநெடுமால் - இலக்குமிகொழுநனும், திரிவிக்கிரமனாய் நீண்டவடிவுடையவனுமான கண்ணபிரானென்றுங்கொள்ளலாம். இறத்தலை எஞ்சுதலென்றசொல்லாற் குறித்தது - மங்கலவழக்கு. வீழ்ந்தது - தொழிற்பெயர், வினைமுற்றின் தன்மைப்பட்டது; இங் ஙனம் வருவதை வடநூலார் பாவேப்ரயோகமென்பர். (74)

75. பேய்செய்தவரங்கனையபெருங்கானிற்றிரிவோர்க்குப்பெற்ற காதற், றாய்செய்தவுதவியினுந்தகுமுதவிபலசெய்தாய்சமருடின்றுன், சேய்செய்தவுயிருதவிதேவரெலாந்துதிக்கின்றார் செறிந்தோர்தம்மில், நீசெய்தபேருதவியார்செய்தாரெனவுரைத்தானெறிசெய்கோலான்.

(இ - ள்.) 'பேய் செய்த அரங்கு அனைய - பேய்கள் (தாம் கூத் தாடுதற்குச்செய்த) நாடகசாலையைப் போன்ற, பெருகானில் - பெரிய காட்டிலே, திரிவோர்க்கு - அலைந்தளங்களுக்கு, பெற்ற காதல் தாய் செய்த உதவியின்உம் தகும் உதவி பல செய்தாய் - (மக்களைப்) பெற்ற அன்புடைய தாய் (அம்மக்களுக்குச்) செய்யும் உபகாரத்தி

னும் சிறந்த அநேக உபகாரங்களை (மிக்க அன்போடு) செய்தருளினாய்; (அதுவுமன்றி), சமரூடு - போரிலே, இன்று - இன்றைக்கு, உன் சேய் செய்த-உனதுமக்கள் செய்த, உயிர் உதவி-(தன்தனது) பிராணனைக் கொடுத்தலாகிய உபகாரத்தை, தேவர் எலாம் துதிக்கின்றார் - (இம் மண்ணுலகத்து மனிதர்மாத்திரமேயன்றி விண்ணுலகத்துத்) தேவ ரெல்லோரும் புகழ்கிறார்கள்; செறிந்தோர் தம்மில்-உற்ற நண்பர்களில், நீ செய்த பேர்உதவி யார் செய்தார் - (நேராகவும் மக்கள்மூலமாகவும்) நீ செய்த பெரியஉதவிபோன்ற உதவியை வேறு எவர்செய்தார்? [ஒருவருமில்லை யன்றோ?]', என உரைத்தான்-என்று உபசாரமொழி கூறினான்: (யாரெனில்),—நெறி செய் கோலான் - நீதிமுறைமையைச் செய்யுஞ் செங்கோலையுடைய தருமபுத்திரன்; (எ - று.)

விராடன் செய்தது "காலத்தினாற் செய்தநன்றி" ஆதலின், அதற்கு ஒத்ததும் மிக்கதும் வேறு இல்லை யென அறிக. நெறிசெய் என்ற அடைமொழியில், தான் நல்வழியில் நடத்தலும், குடிகளைச் சன்மார்க்கத்திற் செலுத்துதலும் ஆகிய இரண்டும் அடங்கும். பிசாசங்கள் யதேச்சையாகத் திரியுங் கொடுங்காடென்பார், 'பேய் செய்தவரங்கனைய பெருங்கான்' என்றார். யாவரன்பினும் தாயன்பு சிறத்தலால், 'பெற்றகாதல்தாய்' என்றார். சேய் என்ற உயர்திணைப் பெயர் - சாதியொருமையாய், இரண்டு குமாரரையும் உணர்த்திற்று. உயிருதவி - "அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார், என்பு முரியர் பிறர்க்கு" என்றபடி தம்மோடுதொடர்ச்சியுடையார் பொருட் டுத் தமதுஉயிரையு மிழந்து உதவியது. அரசனாற் செய்யப்படும் முறைமை ஒருபாற்கோடாது செவ்விய கோல்போலுதலால், செங்கோ லென்றும், கோலென்றுங் கூறப்படும்; வடநூலாரும் தண்ட மென் பர். அரங்கு - ரங்கமென்னும் வடமொழித்திரிபு; நடம்பயிலிடம். இப் பாட்டில், திரிவோர்க்கு என்றதைத் தன்மைக்குப்படர்க்கைவந்த இட வழுவமைதி யென அறிக. இனி, இப்பாட்டில், 'நெறிசெய்கோலான்' என்றதை - கண்ணபிரானெனக் கொண்டால், திரிவோர்க்கு என்ற படர்க்கை, வழாநிலையாம். (75)

76.—தருமபுத்திரனுக்கு விராடன்கூறும் உத்தரம்

உன்னுயிர்போனீவளர்த்தவுத்தரன்றனுயிருமுருத்தெழுஞ்சிவேதன்
தன்னுயிரும்போரரசர்தாமிருந்துகொண்டாடச்சமரிலீந்தார்
என்னுயிருநினதன்றியாரதினிச்சதுர்முகத்தோனீன்றபாரின்
மன்னுயிருக்குயிரனையாயென்வுரைத்தான்வளமலிசீர்மச்சர்கோமான்.

(இ - ள்.) 'சதுர் முகத்தோன் - நான்குமுகங்களையுடைய பிரம தேவன், ஈன்ற - படைத்த, பாரில் - நிலவுலகத்திலுள்ள, மன் - நிலை பெற்ற, உயிருக்கு - எல்லாவுயிர்களுக்கும், உயிர் அனையாய் - உயிரை யொத்தவனே! [பேரன்புடையவனே!], உன் உயிர்போல் நீ வளர்த்த - உனதுஉயிரைப்போல(ப் பாவித்து மிக்கஅன்போடு) நீ வளர்த்த, உத்தரன் - உத்தரகுமாரன், தன்-தன்னுடைய, உயிர்உம்- உயிரையும், உருத்து எழும் - (பகைவர்மேற்) கோபித்துக்கிளம்புகிற, சிவேதன்—, தன் - தன்னுடைய, உயிர்உம்-உயிரையும், போர் அரசர்

தாம் இருந்து கொண்டாட - போர்த்திறத்தையுடைய அரசர்கள் இருந்து புகழும்படி, சமரில்-போரில், ஈந்தார் - கொடுத்தார்கள்; இனி-இனிமேல், என் உயிர்உம் நினது அன்றி யாரது-எனது உயிரும் உனக்குஉரியதேயல்லாமல் வேறுயாருக்குஉரியது? [எவர்க்குமுரியதன்று என்றபடி]; என உரைத்தான்-என்று (தருமனை நோக்கிக்) கூறினன்: (யாவனெனில்), வளம் மலி சீர் மச்சர் கோமான் - எல்லாவளப்பங்களும் நிறைந்த சிறப்பையுடைய மத்ஸ்ய தேசத்தார்க்குத் தலைவனான விராடமகாராசன்; (எ - று.)

எவர்க்கும் உயிரினும் அன்புக்கு விஷயமானது பிறிது இன்று ஆதலால், அதுவே சிறந்தஅன்புக்குப் பொருந்தின உவமையாக எடுத்துக்கூறப்படும். தருமபுத்திரன் கங்கபட்டனாக இருந்த அஞ்ஞாதவாசகாலமாகிய ஒருவருஷத்தில் உத்தரனை மிகுந்த அன்போடு பாராட்டிவந்ததையே கொண்டு, உபசாரமாக, 'உன்னுயிர்போல் நீ வளர்த்தவுத்தரன்' என்றது. 'என்னுயிரு நினதன்றியாரதினி' என்றது, நானும் என்னுலியன்றவளவு பெரும்போர்செய்து உன் பொருட்டாகவே உயிருதவுவேனென்றதாம்; அங்ஙனமே அவன்செய்து முடித்தலை மேற்காண்க. தருமன்உலகத்து உயிர்களையெல்லாம் தன்னுயிர்போலவே பாவித்து நன்கு காக்குமவனாதலாலும், எல்லாவுயிர்களின் அன்புக்கும் இடமாகுபவனாதலாலும், அவனை 'சதுர்முகத்தோனீன்றபாரின் மன்னுயிருக்குயிரனையாய்' என விளித்தான்; இப்படிப்பட்ட சற்குணசம்பந்நனை உன்திறத்தில் நாங்கள் உயிர்துறப்பது எங்களுக்கு உற்றதொழிலேயாமென்பது, இதனாற்போதரும். வீரர்பெருமையை வீரரேயறிவராதலால், 'போரரசர்கொண்டாட' எனப்பட்டது, பி-ம்: வீந்தார், வீழ்ந்தார். (76)

77.—சூரியோதய வருணனை.

முப்பொழுது முணர்கேள்வி முகுந்தனுடன் பாண்டவரு முடிசாய்த் தாங்கண், எப்பொழுது விடிவதென நினைதருமெல் லையின் வல்லே யிரண்டு போரும், அப்பொழுது காண்டற்கு வருகின்ருனெனத்தடந்தே ரருக்கன் வந்தான், மைப்பொழுதுஞ் சிவேதனெதிர் மத்திரத்தான் வருதினிபோன் மாய்ந்த தம்மா.

(இ - ள்.) முப் பொழுதுஉம்-மூன்றுகாலத்துச் செய்திகளையும், உணர்-அறிந்த, கேள்வி-நூற்கேள்விகளையுடைய, முகுந்தனுடன் - கண்ணபிரானுடனே, பாண்டவர்உம்—, ஆங்கண் - அவ்விடத்திலே [பாசறையில்], முடிசாய்த்து - தலைசாய்த்து [படுத்து], எப்பொழுது விடிவது என நினைதரும் எல்லையின் - (நாம் வெற்றிகொள்ளுமாறு) எப்பொழுது உதயமாகுமென எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில்,—தட தேர் அருக்கன்-பெரியதேரையுடைய சூரியன், இரண்டு போர்உம் காண்டற்கு அப்பொழுது வல்லே வருகின்ருன் என - இருதிறத்தாருடையபோரையும் பார்க்கும்பொருட்டு அப்பொழுது விரைவாகவருகிறவன் போல, வந்தான் - வந்துஉதித்தான்; (அங்ஙனம் உதித்த சூரியனது முன்பு), மை பொழுதுஉம் - இருட்பொழுதாகிய

இராத்திரியும், சிவேதன் எதிர் மத்திரத்தான் வரூதினிபோல்-சுவேதனது எதிரிலே மத்திரதேசாதிபதியான சல்லியனது சேனைபோல, மாய்ந்தது - (இருந்தவிடந்தெரியாமல்) அழிந்தது; (எ-று.)—அம்மா-ஈற்றசை; அழித்தற்கரிய இருள் எளிதில் ஒழிந்தது பற்றிய வியப்பிடைச்சொல்லென்றுமாம்.

முன்நடந்தவை, இப்பொழுது நடக்கிறவை, இனிநடப்பவை என்னும் அனைத்தையும் அறியும் திரிகாலஞானி, திருமால். கேள்வியாவது-கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்; இது - கற்றவர்க்கு அதனாலாகிய அறிவை வலியுறுத்துதலும், கல்லாதவர்க்கும் அவ்வறிவை உண்டாக்குதலும் ஆகிய சிறப்புடைமையால், எடுத்துக்கூறப்பட்டது. முற்று முணர்ந்த முழுமுதற் கடவுளுக்கு ஒருவரிடம் தாம் கேட்டறிய வேண்டுவது ஒன்றும் இன்றாயினும், ஆராத அருளாற் கொண்ட அவதாரவிசேடத்திற்கு ஏற்பக் கண்ணன் சாந்தீபினிமுதலியோர் பக்கல் நூற்பொருள்களைக் கற்றுங் கேட்டும் ஒழுகியதனால், பரத்துவம் சௌலப்பியம் என்னும் அவ்விரண்டு திருக்கலியாணகுணங்களும் விளங்க, 'முப்பொழுது முணர்கேள்வி முகுந்தன்' என்றார். இனி, மூன்று காலங்களிலும் உள்ளார் அனைவராலும்கேட்டு அறியப்படும் புகழுடைய கண்ணனெனினும் அமையும்; கேட்கப்படும் பொருள்களெல்லாவற்றினும் எம்பெருமான்புகழ் சிறத்தலாலும், செவிபடைத்ததற்குப்பயன் அதனைக்கேட்டலே யாதலாலும், அது, கேள்வியெனப்பட்டது. முதல்நாட்போரில் தாம் அடைந்த தோல்வி நீங்க மறுநாள் போர்செய்யவேண்டுமென்று எழுந்த மிக்கசிந்தையால், பாண்டவர்பக்கத்தார் பொழுதுவிடிவதை எதிர்நோக்கியிருந்தனரென்க. தேவர்கள் தத்தம்வாகனத்தின்மீது வானத்து வந்து போர்காணுதல் இயல்பாதலாலும், சூரியன் 'கண்' எனப்படுபவனாதலாலும், 'இரண்டுபோருங் காண்டற்கு வருகின்றானென' என்று உத்பிரேட்சித்தார். சுவேதனெதிர் மத்திரத்தான் வரூதினி மாய்ந்ததைக் கீழ் (இச்சருக்கத்து) ஐம்பத்துநான்காம்பாட்டிற்காண்க. சுவேதனது சிறந்த பராக்கிரமத்தில் ஆழ்ந்த சிந்தை அவனிறந்த பின்பும் மீண்டதில்லையாதலால், கவி அதனை உவமை கூறியதோடு இச்சருக்கத்தை முடித்தார்.

கேள்வி - தொழிலாகுபெயர். ஆங்கண் - அக்கண்என்பதன் மெலித்தலாகிய அங்கண் என்பதன் நீட்டல்; இனி, ஆங்குஎன்ற இடைச்சொல்லின்மேல், அண் - இடப்பொருள்காட்டும் விகுதியென்றலும், 'ஆன்' என்றது கண் என்பதனோடு சேர்கையில் திரிந்ததென்றலும் உண்டு. அர்க்கன், வரூதினீ - வடசொற்கள். (77)

முதற்போர்ச்சருக்கம் முற்றிற்று.

இரண்டாம் போர்ச்சருக்கம்

1.—கடவுள் வணக்கம்.

எந்த வெந்த யோனி பேத மெங்கு மெங்கு முள்ளன
அந்த வந்த யோனி தோறு மாவி யான தன்மையைச்
சிந்தை யின்க ணொருக ணத்தி னிகழு மாறு தேவர்கோன்
மைந்த னுய்ந்தி டப்பு கன்ற வள்ள ருள்வ ணங்குவாம்.

(இ - ள்.) எந்த எந்த யோனி பேதம் - எந்தஎந்தப் பிறப்பு வகைகள், எங்குஉம் எங்குஉம் உள்ளன - எல்லாவுலகங்களிலும் எல்லாவிடங்களிலும் இருக்கின்றனவோ, அந்த அந்த யோனி தோறுஉம் - அந்தந்தப் பிறப்புக்களிலெல்லாம், ஆவி ஆன தன்மையை - (பரமாத்மாவாகிய தான்) உயிர்க்குஉயிராய் உள்ளுறையும் இயல்பை, சிந்தையின்கண் ஒரு கணத்தில் நிகழும் ஆறு - மனத்திலே ஒருக்ஷணப்பொழுதிலே பதிந்திடும்படியாக, தேவர்கோன் மைந்தன் உய்ந்திட - தேவர்களுக்கரசனாகிய இந்திரனது புத்திரனான அருச்சுனன் ஈடேறும்படி, புகன்ற - (கீதை) உபதேசித்தருளிய, வள்ளல் - வரையாது அருளுந்தன்மையனான கண்ணபிரானது, தாள் - திருவடிகளை, வணங்குவாம் - நமஸ்கரிப்போம்; (எ - று.)

கீழ்ச்சருக்கத்தில் பகவான் பார்த்தனுக்குப் பரமார்த்தம் பகர்ந்தருளிய பெருங்கருணையில் இவ்வாசிரியர்க்கு உண்டான ஈடுபாட்டின் மேலீட்டினால், அடுத்த இச்சருக்கத்துக்கு அச்சிறப்பையேசொல்லிக் கடவுள்வாழ்த்துக் கூறுகின்றார். பலவருஷகாலம் பணிவிடை செய்து வழிபட்டார்க்கே உபதேசித்தற்குரிய நற்பொருளை அருச்சுனனுக்கு அருளாற்கூறியருளின உதாரகுணம் விளங்க, 'வள்ளல்' என்றார். "ஊர்வ பதினொன்று மொன்பது மானிடம், நீர் பறவை நாற்காலோர் பப்பத்தாம்-சீரிய,பந்தமாந்தேவர் பதினாலயன்படைத்த, வந்தமில்சீர்த் தாவர நாலைந்து" என்பதனால், ஏழுபிறப்பின் எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதம் இன்னவை யென விளங்கும். ஒருகணத்தில் - மிகவிரைவில் என்றபடி. உய்தல் - உஜ்ஜீவித்தல், கரையேறுதல். உய்ந்திட - இம்மையில் பகையொழித்துப் பிழைக்க, மறுமையில் நற்கதிபெற எனக் கொள்க. வணங்குவாம் என்ற பன்மைக்குக் காரணம், கீழ்"எங்கள்கோ"என்றவிடத்து உரைக்கப்பட்டது.

இதுமுதற் பன்னிரண்டுகவிகள் - பெரும்பாலும் ஈற்றுச் சீரொன்று விளச்சீரும்,மற்றையாறும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரியசந்தவிருத்தங்கள். (78)

2.—திட்டத்துய்மனை நோக்கி ஸ்ரீகிருஷ்ணன் 'நீ சேனாபதியாகிப்பொருக' என்று பணித்தல்.

சோணமேகமென்னவாளிதூவுதிட்டத்துய்மனைச்
சேனைநாதனாகிநீசெருச்செய்கென்றுசெப்பினான்

வானையாதியானபூதபேதமாகிமாயையா
யேனைஞானரூபியாகியாவுமாயவெம்பிரான்.

(இ - ள்.) வானை ஆதி ஆன - ஆகாயத்தை முதலாகவுடைய, பூதபேதம் ஆகி - பூத வகைகளின்வடிவமாய், மாயை ஆய் - மாயையின்வடிவமாகி, ஏனை ஞானரூபி ஆகி - (அம்மாயைக்கு) வேறான தத்துவஞானசொரூபியாய், யாஉம் ஆய - (இன்னும் பிரபஞ்சத்து உள்ள) எல்லாப்பொருளுந் தானேயாய்நின்ற, எம் பிரான் - நமக்கெல்லாந்தலைவனான கண்ணபிரான்,(அப்பொழுது), சோனை மேகம் என்ன வாளி தூவு திட்டத்துய்மனை-இடைவிடாப் பெருமழைபொழியுங் காளமேகம்போல அம்புமழையைச்சொரிகிற திட்டத்துய்மனை (நோக்கி), நீ சேனைநாதன் ஆகி செரு செய்க என்று செப்பினன்-'(இனி) நீ சேனைத்தலைவனாய்ப் போர்செய்வாயாக' என்று சொல்லியருளினன்;

திட்டத்துய்மனைச் சேனாபதியாக்கினது, இவன் துரோணனைக் கொல்லும்வல்லமையுடையா னாதலாலும்,அத்துரோணனிடத்து வில் முதலிய ஆயுதவித்தையனைத்தையுங் கற்றறிந்தவ னாதலாலும், பாண்டவர்க்கு அன்புள்ள மைத்துன னாதலாலும், முன்னம் சுவேதனிருக்கையிலேயே சேனைத்தலைமையில் இளவரசாக அமைக்கப்பட்டவ னாதலாலும் என அறிக. தன்னையொழிந்த நான்குபூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமான பெருமையையுடையது ஆகாயமாதலால், அதனை முதலதாக்கி 'வானையாதியான பூதம்' என்றார் ; ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று அக்கினியும், அக்கினியிலிருந்து சலமும், சலத்திலிருந்து நிலமும் பிறந்தனென வேத மோதும். பூத பேதம் - ஐம்பெரும் பூதங்கள். எம்பிரான் என்றது, எல்லாவுயிர்களையும் உளப்படுத்தி. மாயையாகி - பிரபஞ்ச சிருஷ்டிக்குக் காரணமான பிரகிருதிதத்துவத்தின் வடிவமா யென்றும் உரைக்கலாம். (79)

3.—இருவர் சேனையும் போர்க்களஞ்சேர்தல்.

ஐவர்சேனையிங்கெழுந்ததங்கெழுந்ததடலுடைத்
தெவ்வர்சேனைவெகுளியோடெழுந்திரண்டுசேனையும்
பவ்வமோரிரண்டெழுந்துபடர்வதென்னவெருவருங்
கவ்வையோடுவந்துவெங்களத்திடைக்கலந்தவே.

(இ-ள.) இங்கு-இந்தப்பக்கத்தில், ஐவர் சேனை-பாண்டவர்சேனை, எழுந்தது - (போருக்குப்) புறப்பட்டது ; அங்கு - அந்தப்பக்கத்தில், அடல் உடை தெவ்வர் சேனை - வலிமையையுடையபகைவர்களான துரியோதனாதியரது சேனை, எழுந்தது - (போருக்குப்) புறப்பட்டது ; (இவ்வாறு), இரண்டு சேனையும்—, வெகுளியோடு எழுந்து - கோபத்தோடு புறப்பட்டு, பவ்வம் ஓர் இரண்டு எழுந்து படர்வது என்ன - ஒப்பற்ற இரண்டுகடல்கள் கிளம்பி (ஒன்றன்மே லொன்று) செல்வது போல, வெருவரும் கவ்வையோடு வந்து - (கேட்பவர்) அஞ்சத்தக்க பேராரவாரத்துடனே வந்து, வெம் களத்திடை-கொடியபோர்க்களத்திலே, கலந்த - சேர்ந்தன; (எ - று.)

தன்மைத்தற்குறிப்பேற்றவணி. பவ்வம், கவ்வை - பௌவம், கௌவை என்பவற்றின் போலி. ஐவர் - தொகைக்குறிப்பு. கலந்த - முற்று. (80)

4.—தூளிப்பெருக்கமும் பல்லியவொலியும்.

வெம்பராகம்வெளியிலுற்றெழுந்தபோதுவேழவிற்
சம்பராரிதகனநாளினன்றெழுந்ததன்மையென்
றும்பரார்நடுங்கினருருத்துவீழுமுருமென
விம்பரார்நடுங்கினரிரங்குபல்லியங்களால்.

(இ - ள்.) (அந்தச் சேனைகளாற் கிளப்பப்பட்ட), வெம் பராகம் - மிகுந்த தூளிகள், வெளியில் உற்று எழுந்த போது - வெளியிலேதோன்றி மேலெழுந்தபொழுது, வேழம் வில் சம்பராரி தகனம் நாளின் அன்று எழுந்த தன்மை என்று - கருப்புவில்லை யுடைய மன்மதனை யெரித்த தினமாகிய அப்பொழுதில் (சிவபிரானது நெற்றிக்கண்ணின் நெருப்பின் புகை) மேலெழுந்த விதத்தை யொக்கு மென்றுகருதி, உம்பரார் நடுங்கினர் - மேலுலகத்துள்ள தேவர்கள் மிகஅஞ்சினர்கள்; இரங்கு பல் இயங்களால் - ஒலிக்கிற (அச்சேனைகளிலுள்ள) அநேக வாத்தியங்களின் முழக்கத்தால், உருத்து வீழும் உரும் என - கர்ச்சித்துவிழுகிற இடியென்றுகருதி, இம்பரார் நடுங்கினர் - இவ்வுலகத்துள்ள மனிதர்கள் மிக அஞ்சினர்கள்; (எ - று.)

மயக்கவணி. பராகம், சம்பராரி, தஹநம் - வடசொற்கள். சம்பராரி - சம்பர அரி எனப் பிரியும்; சம்பரனென்னும் அசுரனுக்குச்சத்துரு வென்று பொருள்: இவ்வசுரனை மன்மதன் கண்ணபிரானுக்கு ருக்குமிணிப்பிராட்டியிடத்துப் பிரத்யும்நனென்னும் புத்திரனாகப் பிறந்தபொழுது கொன்றனனென்ன வரலாறு. (81)

5.—இதுவும், மேற்கவியும் - குளகம்: சேனைத்தலைவனோடு தருமபுத்திரன் களத்தில் அணிவகுத்துநிற்றலைக் கூறும்.

அளவின்மன்னரேறுதேர்களாறிரண்டுபத்துநூ
றிளவலோடுகசதுரங்கமங்களோடுமிடம்வரப்
பளகமன்னவெழுபதிற்றுப்பத்துநூறுதேரொடும்
வளவராதிமன்னரோடுநகுலராசன்வலம்வர.

(இ - ள்) இளவல் - (பாண்டவருள்) இளையவனான சகதேவன், அளவு இல் மன்னர் ஏறு - எண்ணிறந்த அரசர்கள் ஏறியுள்ள, ஆறு இரண்டு பத்து நூறு - பன்னீராயிரமென்னுந் தொகையுள்ள, தேர்களோடு - இரதங்களுடனும், கச துரங்கமங்களோடும் - யானைகள் குதிரைகளுடனும், இடம் வர - இடப்பக்கத்திலே வரவும், நகுலராசன்—, பளகம் அன்ன - மலைகளைப்போன்ற, எழுபதிற்று பத்து நூறு தேரொடும் - எழுபதினாயிரந்தேர்களுடனும், வளவர் ஆதி மன்னரோடும் - சோழர்முதலிய அரசர்களுடனும், வலம் வர - வலப்பக்கத்திலே வரவும்,—(எ - று.)—'நாயகன் நின்றனன்' என மேற்கவியில் முடியும்.

துரங்கமம் - துரிதமாகச்செல்வ தெனக் காரணப்பெயர். ஓடுகச துரங்கமங்களென வினைத்தொகையாக எடுத்து, ஓடுந்தன்மையனவான என்றும் உரைக்கலாம்: அப்பொழுது, தேர்களென்பது-மூன்ரும்வேற்றுமைத் தொகை. நகுலராசன் - நகுலனுகியராசனென இருபெயரொட்டு. (82)

6. மிடல்கொள்வாளமைச்சரோடுவிரைவின்வீரர்பின்வர
முடுகுசேனையபிமன்வீமன்விசயன்மாயன்முன்செல
நடுவுநால்வகைப்படும்பதாதியோடுநாயகன்
கடகநாதனுடனணிந்துநின்றனன்களத்திலே.

(இ - ள்.) மிடல் கொள் வாள் அமைச்சரோடு - வலிமையைக் கொண்ட ஆயுதங்களையேந்திய மந்திரிகளுடனே, விரைவின் வீரர் - (போரில்) விரைதலையுடைய வீரர் (பலர்), பின் வர - பின்னே வரவும்,—முடுகு சேனை-ஊக்கங்கொண்ட சேனைகளுடனே, அபிமன் வீமன் விசயன் மாயன் - அபிமந்யுவும் வீமசேனனும் அருச்சுனனும் கண்ணனும், முன் செல - முன்னேபோகவும்,—நடுவு - நடுவிலே, நால் வகை படும் பதாதியோடு - நாலுவகைப்பட்ட சேனைகளுடனே, நாயகன் - தலைவனுன தருமபுத்திரன், கடகம் நாதனுடன்-சேனைத்தலைவனுகிய திட்டத்துய்மனுடனே, களத்தில்-போர்க்களத்தில், அணிந்து நின்றனன்-அணிவகுத்துநின்ருன்;

அமைச்சர் - (எப்பொழுதும் அரசனது) அருகி லிருப்பவ ரென்று பொருள் : மந்திரிகளுக்குத் தமிழில் 'உழையிருந்தான்' எனவும், 'உழையன்' எனவும் பெயர்வழங்குதல் காண்க. விரைவின்வர என இயைத்தலுமாம். பதாதி - காலாட்சேனை; இது-இங்கே, சேனைமாத்திரமாய் நின்றது; இங்ஙனம் சிறப்புப்பெயர் பொதுப்பொருளையும், பொதுப்பெயர் சிறப்புப்பொருளையும் உணர்த்துதல் ஒருவகைப்பாஷை வழக்கம். நால்வகைப்படும் பதாதி - சதுரங்கசேனை. பி - ம் :—மிடலும்வாண்மிலேச்சரோடுவீட்டும். (83)

7 —வீடுமன் அணிவகுத்துத் துரியோதனனுடன் களத்தில் வந்துநிற்றல்.

மாடிரண்டுமெண்ணில்கோடிமன்னர்சேனைநிற்கவும்
பீடுகொண்டநேகமன்னர்பேரணிக்கணிற்கவும்
சூடுதும்பைமண்டலீகர்தூசியாகநிற்கவும்
வீடுமன்மகீபனேடுநடுவண்வந்துமேவினன்.

(இ - ள்.) மாடு இரண்டுஉம் - இரண்டு பக்கங்களிலும், எண் இல் கோடி - அளவிறந்த கோடிக்கணக்கான, மன்னர் - அரசர்களது, சேனை - சேனைகள், நிற்கவும்—, அநேகம் மன்னர் - பல அரசர்கள், பீடு கொண்டு - பராக்கிரமத்தையுடையராய், பேர் அணிக்கண்-பெரியபின்னணிச்சேனையிலே, நிற்கவும்—, சூடு தும்பை-அணிந்த தும்பைப்பூமாலையையுடைய, மண்டலீகர் - மண்டலாதிபதிகளான அரசர்கள், தூசி ஆக - முன்னணிச்சேனையாக, நிற்கவும்—, நடுவண்-(இவர்கள்) நடுவிலே, வீடுமன்-பீஷ்மன், மகீபனேடு- துரியோதன அரசனுடனே, வந்து மேவினன்-வந்து சேர்ந்தான் ; (எ-று.)

சூடுதும்பைமண்டலீகர் என்றது, வடமொழிநடை; தும்பை சூடு மண்டலீகர் என மொழிமாற்றுதல், நேராம். 'எண்ணில்கோடி' என்ற அடைமொழியை மன்னர்க்குஞ் சேனைக்குங் கூட்டுக. முன்னே 'மாடி ரண்டும்' என வந்ததனாலும், பின்னே 'தூசி' என வருவதனாலும், நடுவில் 'பேரணி' என்றது பின்னணியாயிற்று. பி - ம்: மகீபரோடு. ()

8.—இருதிறத்துச் சேனைக்குங் கைகலந்த போர்.

வீசுகொண்டலுடனெதிர்ந்துகோடையுந்திவீசவே
மூசுகொண்டலோரிரண்டுமுடுகிநின்றுபொழிவபோல்
தூசிநின்றவீரரோடுதூசிவீரர்வில்வளைத்
தாசுகங்கள்வீசவீசவந்தரம்புதைந்தவே.

(இ - ள்.) வீசு கொண்டலுடன் எதிர்ந்து - வீசியடிக்கிறகீழ்காற் றோடு எதிரிட்டு, கோடை உந்தி வீச - மேல்காற்று மோதி வீசுதலால், மூசு கொண்டல் ஓர் இரண்டு - நெருங்கிய இரண்டு மேகங்கள், முடுகி நின்று - (ஒன்றோடொன்று) பகைத்துநின்று, பொழிவபோல் - மழை பெய்வனபோல,— தூசிநின்ற வீரரோடு - (ஒருபக்கத்து) முன்னணிச் சேனையில்நின்ற வீரர்களுடனே, தூசிவீரர் - (மற்றொருபக்கத்து) முன்னணிச்சேனைவீரர்கள், வில்வளைத்து - வில்லைவளைத்து, ஆசுகங் கள் வீச வீச - அம்புகளை மேன்மேல் வீசுதலால், அந்தரம் புதைந்த - ஆகாயவெளிகள் மறைந்தன; (எ - று.)

பெருங்காற்றோடுகூடிப் பெருமழை பொழிவதுபோல, வீரர்கள் ஒருவர்மேல் ஒருவர் அம்புகளை அளவில்லாமற் சொரிந்து ஆகாயத் தைமறைத்தார்களென்பதாம். "குணக்கெழுகாற்று மேகமுங் கொண் டல்," "வெயிலுங்காந்தளு மேற்றிசைக்காற்றுங் குதிரையும் வேனிலுங் கோடையாகும்" என்ற பிங்கலந்தையை இங்கே அறிக. பொழிவ - பெயர்; பொழிவனவாகிய கொண்டலோரிரண்டுபோ லென்க. ஆசு கம் - விரைந்துசெல்வதென்று பொருள்; ஆசு-விரைவு: வடமொழி அவியயம். (85)

9.—இதுவும் அடுத்த கவியும்-திருஷ்டத்யும்நனும் துரோண னும்பொர, திருஷ்டத்யும்நன் தோற்றோடியமை கூறும்.

சொற்கையாதவாய்மைவல்லதுருபதன்குமாரனும்
விற்கையாசிரியனுமுற்றெதிர்ந்து தம்மில்வெகுளவே
பொற்கைவெஞ்சராசனம்பொழிந்தகோலிழிந்தவா
னுற்கையென்னவொருகைமாமுகங்களூடொளித்தவே.

(இ - ள்.) (அப்பொழுது), சொல் கையாத-சொல்வெறுக்கப்படாத [இன்சொல்லையுடைய], வாய்மை வல்ல - உண்மைபேசுதலில் வல்ல வனை, துருபதன் குமாரன்உம் - துருபதராசனது புத்திரனை திட்டத்துய்மனும், வில் கை ஆசிரியன்உம் - வில்லையேந்தியகையை யுடைய துரோணாசார்யனும், உற்று எதிர்ந்து - வந்து எதிரிட்டு, தம் மில் வெகுள - தமக்குள் [ஒருவன் மேலொருவன்] கோபிக்க, (அச்சம

யத்தில்), பொன் கை வெம் சராசனம்-அழகியகையிற்பிடித்த பயங்கர மான (இருவர்) விற்களும், பொழிந்த - சொரிந்த, கோல் - அம்புகள், வான் இழிந்த உற்கை என்ன-ஆகாயத்தினின்று வீழ்ந்த எரிகொள் ளிபோல, ஒருகை மா முகங்களூடு ஒளித்த - (எதிர்ப்பக்கத்திலுள்ள) ஒற்றைக்கையை [துதிக்கையை] யுடைய விலங்காகிய யானைகளின் முகங்களிலே தைத்துமறைந்தன; (எ - று.)

உற்கை-எரிகொள்ளி;உல்கா என்னும் வடமொழித் திரிபு. சொற் கையாத என்பதற்கு-(புகழ்பவரது) சொல்லுக்கு மிக இனிய என்றும் உரைக்கலாம்; "நாகையாப்புகழான்" என்பர் மேற் பதினாம் போர்ச் சருக்கத்தும். கௌரவ பாண்டவர்க்கும்,சிகண்டி திட்டத்துய்மர்க்கும், துரோணன் வில்வித்தைபயிற்றி வைத்த குரு வாதலால், இவனை 'விற்கையாசிரியன்' என்றார். பொற்கை-பொன்னாபரணமணிந்த கையு மாம். சராசநம் - வடசொல்; அம்புகளைத் தள்ளுவ தென்று பொருள். (86)

10. வீரசாபமுடனுரைக்கும்வெய்யசாபம்வல்லவத்
தீரன்வாளியாலழிந்துசிலையுமேறுதேரும்விட்
டீரமாமதிக்குடைந்தவிருள்கொலென்னவேகினா
னாரவாரமுடன்மலைந்தவைவர்சேனையதிபனே.

(இ - ள்.) (அப்பொழுது), வீர சாபமுடன் - வீரத்தன்மைக் குரிய வில்லின் தொழிலிலும், உரைக்கும் வெய்ய சாபம்-கோபித்துச் சொல் லுங் கொடிய சாபமிடுதலிலும், வல்ல - வல்லவனான, அ தீரன்-தைரி யசாலியான அந்தத்துரோணாசார்யனது, வாளியால் - அம்புகளால், ஆரவாரமுடன் மலைந்த ஐவர்சேனை அதிபன்-பேரொலியோடு எதிர்த் துப்போர்செய்த பாண்டவர்சேனைக்குத்தலைவனான திட்டத்துய்மன், அழிந்து - தோற்று, சிலைஉம் ஏறு தேர்உம் விட்டு - கைவில்லையும் ஏறியதேரையும் ஒழித்து, ஈரம் மாமதிக்கு உடைந்த இருள் கொல் என்ன - குளிர்ச்சியையுடைய பெரிய பூர்ணசந்திரனுக்குத் தோற்ற இருள்போல, ஏகினான் - சென்றான்; (எ - று.)

எளிதில் அழிதற்கு உவமை. துரோணன் அந்தணனாய் நின்றே அரசர்க்குரிய வில்வித்தையையும் முழுதுமறிந்துள்ள சிறப்புத் தோன்ற, 'வீரசாபமுடனுரைக்கும் வெய்யசாபம்வல்ல வத்தீரன்' என்றார்; வில்லாலுஞ் சொல்லாலும் பகைவரையழிக்கவல்லவ னென்பது, இத்தொடரின் கருத்து. வெகுளிகொண்டு சபித்தாலும் அருள்கொண்டு அனுக்கிரகித்தாலும் அந்தந்தப்பயன்களைத் தவறா மல் தந்தேவிடும் நிறைமொழியை யுடையவன் இவனென்பது விளங்க 'உரைக்கும் வெய்யசாபம்வல்ல வத்தீரன்' என்றதனால், இவனது அந்தணவொழுக்கம் நன்குவிளங்கும். சாபமென்ற ஒரு சொல்லே வெவ்வேறுபொருளில் மீளவும் வந்தது-மடக்கு என்னுஞ் சொல்லணி; இதனை வடநூலார் யமகமென்பர். பொருளணியில் **சொற்பின்வருநிலையணி** யெனப்படும். இருள்கொல், கொல்-அசை.

11.—சேனுபதிதோற்கவே வீமசேனன் உக்கிரமாகப் பொருதல்.

உடைந்துடைந்துசேனைமன்னன்வருதல்கண்டுருத்துவான்
மிடைந்தகொண்டலெனவதிர்ந்துவீமசேனன்வேலையைக்
கடைந்தகுன்ருெடொத்ததேர்கடாவிவந்துமுனிவனே
டடைந்தமன்னருட்கியோடவொருகணத்திலமர்செய்தான்.

(இ - ள்.) சேனை மன்னன்-(தங்கள்) சேனைத்தலைவனை திட்டத்துய்மராசன், உடைந்து உடைந்து வருதல் - (இங்ஙனம்) தோற்றுத் தோற்று வருதலை, கண்டு - பார்த்து, வீமசேனன்—, உருத்து - கோபங்கொண்டு, வான் மிடைந்த கொண்டல் என அதிர்ந்து - ஆகாயத்திற்பொருந்திய மேகம் போலக் கர்ச்சித்து, வேலையை கடைந்த குன்ருெடு ஒத்த தேர் கடாவிவந்து - (முன்னே) திருப்பாற்கடலைக் கடைந்திட்ட மந்தரமலையோடு சமமான (தனது) இரதத்தைச் செலுத்திவந்து, முனிவனேடு அடைந்த மன்னர் உட்கி ஓட-அந்தண குலத்தானுகிய அத்துரோணனும் (அவனுக்குத் துணையாகச்) சேர்ந்துள்ள அரசர்களும் தோற்றுப் பயந்தோடும்படி, ஒரு கணத்தில் அமர் செய்தான்-ஒருக்ஷணப் பொழுதிலே போரைச்செய்தான்;

உடைந்து உடைந்து என்ற அடுக்கால், திட்டத்துய்மன் மீண்டும் வேறு வில்லையெடுத்துக்கொண்டு வேருெருதேரின்மே லேறிச் சென்று துரோணனேடு பொருவதுந் தோற்பதுமாக இங்ஙனம் பல முறை நிகழ்ந்ததென விளங்கும். முன்ஞெரு காலத்தில் துருவாசமுனிவரது சாபத்தாற் கடலினுட்புக்கு ஒளித்த சுவர்க்கலோகத்துச் செல்வங்களையெல்லாம் மீளவும் பெறும்பொருட்டு இந்திரன்முதலிய தேவர்கள் திருமாலின்நியமனப்படி அசுரர்களுடன் கூடிச்சென்று மந்தரமலையை மத்தாகநாட்டி வாசுகி யென்னும் பெரும்பாம்பைக் கடைகயிருகப்பூட்டித் திருப்பாற்கடலைக் கடைந்தன ரென்பது கதை. மந்தரகிரி பாற்கடலைக் கலக்கியதுபோல, வீமன்தேர் போர்க்கடலைக் கலக்குதல்பற்றியது, இவ்வுவமை. (88)

12.—வீமசேனன் உக்கிரமாகப் பொரவே, கலிங்க மன்னனுன சக்ரதேவன் யானைவீரர்களோடு வந்து அவனை எதிர்த்தல்.

உக்ர மாக வீமன் வந்த வுறுதி கண்ட நேகபோர்
விக்ர மாம தத்த டக்கை வேழ வீரர் தம்முடன்
வக்ர சாப மழைபொ ழிந்து வடக லிங்க மன்னவன்
சக்ர தேவன் முகிலெ றிந்த வுருமெ னத்த லைப்பெய்தான்.

(இ - ள்.) வீமன் - வீமசேனன், உக்ரம் ஆக வந்த - (இவ்வாறு) கடுமையாக எதிர்த்துவந்த, உறுதி-மனவுறுதியை, கண்டு-பார்த்து, வட கலிங்கம் மன்னவன்-வட கலிங்கதேசத்து அரசனுகிய, சக்ர தேவன்-சக்கரதேவ னென்பவன்,அநேகம் போர் விக்ரம் மா மதம் தடகை வேழம்வீரர் தம்முடன்-பலவகைப் போர்த்திறமையையும் மிக்கமத சலத்தையும் பெரியதுதிக்கையையுமுடைய யானைகளின்மே லேறிய புலவீரர்களுடனே, வக்ர சாபம் மழை பொழிந்து-வளைவான வில்லைக்

கொண்டு அம்புமழையைச் சொரிந்துகொண்டு, முகில் எறிந்த உரும் என-மேகமிடித்த இடிபோல [மிகப்பயங்கரமாக], தலைப்பெய்தான் - எதிர்த்து வந்தான்; (எ - று.)

விக்ரம்-விக்ரமம் என்பதன் விகாரம்; பராக்கிரமம். சக்ரதேவன் முகிலெறிந்த உருமென எனஎடுத்து, தேவராசனை இந்திரன் (தனக்கு வாகனமான) மேகத்தை (வச்சிராயுதங்கொண்டு) அடித்தலா லுண்டான இடிபோல என்றும் உரைக்கலாம்; ஶக்ரன் - வடசொல். தலைப்பெய்தல்-முன்னே கலத்தல். அநேகபோர் - நிலைமொழி வட சொல்லாதலால், வலிஇயல்பு. (89)

வேறு.

13.—கலிங்கராசனுடன்வந்த யானைப்படைகளை வீமன் வென்றமை.

கதிக்கடுந் தேரினின் றிழிந்து காலிங்கன்
மதிக்குமும் மதகரி வந்த யாவையுந்
துதிக்கைவன் கரங்களாற் சுற்றி யெற்றினான்
விதிக்கொரு விதியனான் வீம சேனனே.

(இ - ள்.) (அப்பொழுது), விதிக்கு ஒரு விதி அனான்-ஊழ்வினைக் கும் ஒருஊழ்வினையை யொத்தவனாகிய, வீமசேனன்—, கதி கடு தேரினின்று இழிந்து - வேகம்மிக்க (தனது) இரதத்தினின்று இறங்கி,— காலிங்கன்-அந்தக் கலிங்கநாட்டுமன்னனான சக்ரதேவன், மதிக்கும் - நன்குமதித்த, மும்மதம் கரி வந்த யாவைஉம் - மூன்றுமதங்களை யுடைய யானைகள் (போருக்கு) வந்தன எல்லாவற்றையும், வல் கரங் களால் துதிக்கை சுற்றி எற்றினான் - (தனது) வலியகைகளால் துதிக் கையைப் பிடித்து வீசினான்; (எ - று.)

பதினாயிரம் யானைபலங் கொண்டவனாதலால், இங்ஙனம் எளிதிற் செய்தான். 'விதிக்கொருவிதியனான்' என்றது - மற்றையோருடைய போர்ச்செயல்களெல்லாம் விதியை அனுசரித்துப் பயன்தரும்: இவனது போர்ச்செய்கையையோ, விதி தான்அனுசரிக்கும் என்ற வாறு; எனவே, பகைவரை எதிர்த்துத் தவறாமற் கொல்ல வல்லவன் என்றதாம்; "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந் துறும்" என்றபடி எல்லாவுபாயங்களையுந் தடுத்துவிட்டுத் தான் தவறாமற் பலிப்பதாகிய ஊழ்வினையையுந் தன் கருத்தின்படி நடத் தத்தக்க பராக்கிரமமுடையா னென்க. விதிக்குஎன்றதன் இறுதியில் உயர்வுசிறப்புஉம்மை விகாரத்தால் தொக்கது. பீமஸேனன்-பயங்கர மான சேனையையுடையான். காலிங்கன்-தத்திதாந்தநாமம். மும்மதம்- கன்னம் இரண்டு, குறியொன்று ஆக மூன்றிடங்களினின்று பெருகு வன. துதிக்கை வன்கரங்களால் - யானைத்துதிக்கைபோன்ற தனது வலிய கைகளாலென்றுங் கொள்ளலாம். பி- ம் : காலிங்கர்.

இதுமுதற் பத்துக் கவிகள் - பெரும்பாலும் மூன்றாஞ்சீ ரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய **கலி விருத்தங்கள்,** (90)

14.—இதுமுதல் ஐந்துகவிகள் – வீமனுற்போரிலடிபட்ட யானைகளை வருணிப்பன.

மின்பொழிபடையுடைமேவலாருட
லென்புகவிபங்களையெடுத்தெறிந்தவா
தன்பெருந்துணைவனுந்தாமமாருதி
வன்புடன்பறித்தெறிவரைகளென்னவே.

(இ - ள்.) 'தன் பெரு துணைவன் ஆம் - தனது [வீமனது] பெரிய தமையனான, தாமம் மாருதி - ஒளியையுடைய வாயுகுமாரனான அநுமான், வன்புடன் பறித்து எறி - வலிமையோடு பேர்த்து வீசிய, வரைகள் - மலைகளாம்,' என்ன - என்றுஉவமை கூற,— மின் பொழி - மின்னல்போன்ற ஒளியைச் சொரிகிற, படை உடை - ஆயுதங்களையுடைய, மேவலார் - பகைவர்களது, உடல் என்பு - உடம்பிலுள்ள எலும்புகள், உக - சிந்தும்படி, இபங்களை - யானைகளை, (வீமன்), எடுத்து எறிந்த—, ஆ - விதம், (என்னே !) (எ - று.)

முடிக்குஞ்சொல் வருவித்து முடிக்க. எடுத்தெறிந்தவாற்றை மேலிற்கவிகளிற் காண்க. இபம் - வடசொல். ஆ - ஆறு என்பதன் கடைக்குறை. அடுத்த தமையன் தருமனாதலின், அனுமானை 'பெருந்துணைவன்' என்றது; துணைவன் - உடன்பிறந்தவன்: பிராதா. அனுமான் கேசரியென்னும் வாநரராசனது மனைவியாகிய அஞ்சநாதேவியினிடம் வாயுதேவனால் முன்புபிறந்தவனாதலால், பின்பு வாயுவினாற் குந்தியினிடம் பிறந்த வீமனுக்கு அண்ணனாவன். தாமம்மாருதி - மாலையையுடைய அனுமா னென்றுமாம்; இந்திரன் இளமையில் இவனுக்கு ஒருபொற்றாமரைமாலை யளித்ததாகவும், பட்டாபிஷேககாலத்தில் இராமபிரான் திவ்வியமான ஒரு முத்தாரத்தைச் சீதாபிராட்டியைக்கொண்டு கொடுப்பித்ததாகவும், இராமாயணவரலாறு. தாமம் - இருபொருளிலும், வடசொல். மாருதி- தத்திதாந்தநாமம்: மருத் - வாயு. அனுமான் மலைகளைப் பறித்தெறிந்தது, இலங்கைக்குச்செல்லக் கடலில் அணைகட்டிய பொழுதிலென்க. வலிமையும் பருமையும் பற்றிய தற்குறிப்பேற்றவுவமையணி. பி - ம் : எறிந்தனன். *(91)*

15. வெம்பிமேல்வருதிறல்வீமன்மும்மதத்
தும்பிமேல்விழவிழத்தும்பிவீசுவ
பம்பிமேலெறிதருபவனனாற்கட
லம்பிமேல்விழவிழுமம்பிபோன்றவே.

(இ - ள்.) வெம்பி - கோபங்கொண்டு, மேல் வரு - (பகைவர்) மேல்வருகிற, திறல் - பலத்தையுடைய, வீமன்—, மும் மதம் தும்பி மேல் விழ விழ - மூன்றுமதங்களையுடைய யானைகளின்மேல் அடுத்தடுத்து விழும்படி, வீசுவ - எடுத்துஎறிவனவான, தும்பி - யானைகள்,—பம்பி மேல் எறிதரு பவனனால் - நெருங்கிமேல்வீசுகிற வாயுவினால், (வீசியெறியப்பட்டு), கடல் - கடலிலே, அம்பிமேல் விழ விழும் - மரக்கலங்களின்மேல் அடுத்தடுத்து விழுகிற, அம்பி- மரக்கலங்களை, போன்ற - ஒத்தன ; (எ-று.)

தற்குறிப்பேற்றவுவமையணி. வடிவுவமை. மரக்கலத்துக்கு யானை உவமைகூறப்படுதலே, "களிறுங் கந்தும் போல நளிகடற், கூம்புங் கலனுந் தோன்றும்", "பொருமால்களிறு போன்றோர் வங்கம்" என்ற முன்னோர் செய்யுட்களிலுங் காண்க. பம்பிமேலெறிதரு பவனன் - பெருங்காற்று. கீழ்ப்பாட்டில் தம்பிக்குத் தமையனை யும், இப்பாட்டில் மைந்தனுக்குத் தந்தையையும் உவமைகூறினர்.

16. வருகளிறொருகையால்வாங்கிவீசலிற்
பொருபணைமண்ணுறப்புதையவீழ்ந்தன
விரிதிரைநெடுங்கடல்விசும்புதூர்த்தநா
ளிருநிலமிடந்திடுமேனம்போன்றவே.

(இ - ள்.) வரு களிறு - (தன்மேல் எதிர்த்து) வருகிற யானைகளை, ஒரு கையால் வாங்கி வீசலின் - (வீமன்) ஒருகையால் எடுத்து எறிதலால், பொரு பணை மண் உற புதைய வீழ்ந்தன - போர்செய்யுங்கருவியான தந்தம் பூமியிலே நன்றாகப் புதையும்படி (கவிழ்ந்து கீழ்) விழுந்த அவ்யானைகள்,—விரி திரை நெடு கடல் விசும்பு தூர்த்த நாள் - பரவிய அலைகளையுடைய பெரிய கடல் (பொங்கி மேலெழுந்து) ஆகாயத்தை மறைத்தகாலத்தில், இரு நிலம் இடந்திடும் - பெரிய பூமியைக் (கோட்டாற்) குத்திபெடுத்த, ஏனம் - (திருமாலின் திருவவதாரமான) வராகமூர்த்தியை, போன்ற - (தனித்தனி) ஒத்தன ; (எ - று.)

வடிவுந் தொழிலும் நிறமும் பற்றிய உவமை. ஒருகாலத்திற் பூமியைப் பாயாகச்சுருட்டியெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிப் போன இரணியாக்கனை, திருமால், தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளால், மகா வராகரூபமாகத் திருவவதரித்துக் கொன்று, பிரளய ஆபத்தையடைந்த பூமியைக் கோட்டாற் குத்தி யெடுத்துக் கொண்டுவந்து பழையபடி விரித்தருளின ரென்பது கதை. வீழ்ந் தன - பெயர் ; எழுவாய். இனி, வீழ்ந்தனவாகிய வரு களிறு என இயைத்தலுமாம். (93)

17. கழலணிபொலங்கழற்காளைகைகளா
லெழவெழமதகரியெடுத்துவீசலின்
விழுவனவன்றிமேல்விசையிற்போவன
பழையகற்சிறகுடன்பறப்பபோன்றவே.

(இ - ள்.) கழல்-காலிலே, அணி - தரித்த, பொலம் கழல் - பொன்னாலாகிய வீரக்கழலையுடைய, காளை - சிறந்தவீரனை வீமன், கைகளால்—, மத கரி - மதயானைகளை, எடுத்து—, எழ எழ - மேலே மிகுதியாகச் செல்லும்படி, வீசலின் - எறிதலால், (அப் பொழுது), விழுவன அன்றி - (கீழே) விழுகிறயானைகள் ஒழிய, மேல் விசையின் போவன - மேலே [ஆகாயத்தில்] வேகத்தோடு செல்லும் யானைகள்,—பழைய சிறகுடன் பறப்ப கல் போன்ற - முன்னிருந்த (தமது) இறகுகளுடன் (ஆகாயத்திற்) பறப்பனவான மலைகளை யொத்தன ; (எ- று.)

பறப்ப - வினையாலணையும்பெயர். முன்னொருகாலத்தில் மலைக ளெல்லாம் பறவைகள்போல இறகுடையனவாயிருந்து அவற்றால் உலகமெல்லாம் பறந்து திரிந்து பலவிடங்களின்மேலும் உட்கார்ந்து அவ்விடங்களையெல்லாம் பிராணிகளுடனே அழித்துவர, அதனை முனிவர் முதலியோரா லறிந்த தேவேந்திரன் சினந்து சென்று தனது வச்சிராயுதத்தால் அவற்றின் சிறகுகளை அறுத்துத் தள்ளி விட்டா னென்பது கதை. பி - ம். பழையதம். (94)

18. புகலுறுகலிங்கர்கோன்போரில்வென்னிட
விகலுடனெடுத்தெடுத்திவனெறிந்தபோ
தகல்வெளிமுகடுறவதிர்ந்துமேலெழு
முகபடமுகில்கள்வான்முகில்கள்போன்றவே.

(இ - ள்.) புகல் உறு - (சிறப்பித்துச்) சொல்லத்தக்க, கலிங்கர் கோன் - கலிங்கதேசத்தார்க்கரசன், போரில் வென் இட - போரில் புறங்கொடுக்கும்படி, இவன்-இவ்வீமன், இகலுடன் எடுத்து எடுத்து - வலிமையோடு தூக்கித்தூக்கி, எறிந்தபோது - (மதயானைகளை ஒன் றன்மேல் ஒன்றை) வீசியபொழுது,—அகல் வெளி முகடு உற - பரந்த ஆகாயவெளியிலே பொருந்த, அதிர்ந்து மேல் எழும் - இடித்துக் கொண்டு மேற்கிளம்புகிற, முகபடம் முகில்கள் - முகபடாத்தைக் கொண்ட அவ் யானைகள், வான் முகில்கள்-ஆகாயத்திற் சஞ்சரிக்கிற மேகங்களை, போன்ற-ஒத்தன; (எ - று.)

புகல் என்னும் வினைப்பகுதியின்மேல், உறு - துணைவினை; இனி புகலுறு - (போர்க்களத்தினுட்) புகுதலையடைந்த என்றுங் கொள்ள லாம். இவ்வுரைக்கு, புகல் - புகு என்னும் பகுதியின் மேற் பிறந்த தொழிற்பெயர். முகபடமுகில்கள் - அடையடுத்த உவமவாகுபெயர். வென் - முதுகு. பி-ம்: முகில்கள் வான்முகில்களை முகப்பபோன்றவே.

19.—முன்னணி சிதையவே, கலிங்கராசன் வில்லோடு பொரவருதல்.

வென்னிடுகடகரிவீரன்வீமன்முன்
முன்னணிகலங்குறமுறிந்தவாறுகண்டு
என்னிதுவெனமொழிந்தேறுதேரொடுந்
தன்னொருசிலையொடுந்தானுந்தோன்றினன்.

(இ - ள்.) (இவ்வாறு), வீமன் முன் - வீமசேனனெதிரிலே, வென் இடு கட கரி - புறங்கொடுத்த மதயானைகள், முன் அணி - (தனது) முற்படையிலே, கலங்குற முறிந்த ஆறு - கலக்கமுண்டாக அழிந்த விதத்தை, கண்டு-பார்த்து, வீரன்-வீரனான கலிங்கராசன், என் இது என மொழிந்து - இது என்னவீரமென்று சொல்லிக்கொண்டு, ஏறு தேரொடுஉம்-(தான்) ஏறிய தேருடனும், தன் ஒரு சிலையொடுஉம் - தனது ஒப்பற்ற வில்லுடனும், தான்உம் தோன்றினன் - தானும் எதிர்த்துவந்தான்; (எ-று.)

என்னிதுவீரமென்று வீமனுடைய வீரத்தைக் கொண்டாடினன் கலிங்கராசனென்க. கடம் - யானைக்கன்னம்: வடசொல்: மதநீர்க்கு ஆகுபெயர். (96)

20.—கலிங்கராசன் ஏவ, பல அரசர் வீமனை வளைத்தல்.

களத்திடைமடிந்தனகலிங்கன்வேழமென்
றுளத்தழல்கண்ணிணைசிவப்பவுந்திடத்
தளத்தரணிபரெனுந்தானையானைகள்
வளைத்தனமருத்தின்மாமடங்கறன்னையே.

(இ - ள்.) 'வேழம் - (தனது) யானைகள், களத்திடை - போர்க்களத்திலே, மடிந்தன - (வீமனால்) அழிந்திட்டன,' என்று - என்ற காரணத்தால், உளத்து-மனத்தில்தோன்றிய, அழல் - கோபாக்கினியால், கண் இணை - (தனது) இரண்டுகண்களும், சிவப்ப - செந்நிறமடைய,—கலிங்கன் - கலிங்கராசன், உந்திட - தூண்டிச்செலுத்த,— (அப்பொழுது), தளம் தரணிபர் எனும் தானை யானைகள் - (அவன்) சேனையிலுள்ள அரசர்களாகிய யானைக்கூட்டங்கள், மருத்தின் மா மடங்கல்தன்னை - வாயுதேவனது பெரியசிங்கம்போன்ற புத்திரனை வீமனை, வளைத்தன-சூழ்ந்து கொண்டன; (எ - று.)

அரசர்களிடத்து யானையின் தன்மையையும், வீமனிடத்துச் சிங்கத்தின் தன்மையையும் ஏற்றிக் கூறியது - உருவகவணி. கலிங்கனது சேனையிலுள்ள யானைகள் அழிந்த பின்பும் அச்சேனை வீரர்களாகிய யானைகள் வீமனைச் சூழ்ந்தன வென ஒருவகைச் சாதுரியந் தோன்றக் கவி கூறினர். முன்நிற்க மாட்டாமல் எளிதில் அழிதற்கு உவமை. சீவக சிந்தாமணியில் "முழைமுகத்திடியரி வளைத்த வன்ன மள்ளரின்...மழைமுகத்த குஞ்சரம் வாரியுள் வளைத்தவே" என்றவிடத்து 'அரியை யானை வளைத்தல் - இல்பொருளுவமம்' என ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்தவாற்றை இங்கே அறிக. தளம்-கூட்டமுமாம். யானைத்தானைகள்-யானைச்சேனைகள். மடங்கல்-உவமையாகுபெயர். (97)

21.—கலிங்கமன்னன் சேனையோடு பொருதழிய, வீடுமன் வீமன்மீது உடன்றுவருதல்.

கந்தடர்களிற்றுடன்கலிங்கபூபதி
மைந்தருஞ்சேனையும்பொருதுமாய்ந்தபின்
இந்திரனாற்சிறகிழந்தகுன்றுபோற்
சிந்தைநொந்துடன்றனன்சேனமன்னனே.

(இ - ள்.) கந்து அடர் களிற்றுடன் - கட்டுத்தறியை முறிக்கும் இயல்புள்ள மதயானைகளோடு (வந்த), கலிங்க பூபதி - கலிங்க நாட்டரசன், மைந்தர்உம்-(தனது) மக்களோடும், சேனைஉம்-சேனைகளோடும், பொருது-(வீமனுடன்) போர்செய்து, மாய்ந்த பின் - அழிந்தபின்பு,— சேனை மன்னன் - சேனைத்தலைவனான வீடுமன், இந்திரனால் சிறகு இழந்த குன்றுபோல் சிந்தை நொந்து - தேவேந்திரனால் இறகுகளையிழந்திட்ட மலைபோல மனம் வருந்தி, உடன்றனன் - கோபித்து (வீமனை) எதிர்த்துப்போர் செய்தான்; (எ - று.)

மூன்றாமடியால், கலிங்கன் விடுமனுக்குப் போரில் உற்ற துணை யாகவுள்ளவ னென விளங்கும். கந்து=ஸ்கந்தம்: மரக்கிளையின் பெயராகிய இந்த வடமொழி இலக்கணையாய், கட்டுத்தறியைக் காட்டும். யானை கட்டுத்தறி முறிப்ப தாதலை "தூணும் விலங்கு முறிப்பது" என மேற் பதினேழாம் போர்ச்சருக்கத்தில் வருவதனு லுங் காண்க. இந்திரன் - வீமனுக்கும், சிறகு - கலிங்கனுக்கும், குன்று - வீடுமனுக்கும் உவமை. (98)

22. — மூன்றுகவிகள் – வீமன் வீடுமனுடன் கடும்போர் புரிந்து ஆகவமுழுவதிலும் ஆரவம்மிகுத்ததலைக் கூறும்.

வீமனுந் தனதுதேர் மேல்கொண் டாங்கொரு
தாமவே லவன்புயத் தடத்தி லோச்சினன்
மாமரு மாலையான் றானு மற்றவ்வே
ரோமர மொன்றினாற் றுணித்து வீழ்த்தினன்.

(இ - ள்.) வீமனும்—, தனது தேர் மேல் கொண்டு - தன்னுடைய தேரின்மேல் ஏறிக்கொண்டு, ஆங்கு-அப்பொழுது, ஒரு தாமம் வேல்-ஒளியையுடையதொரு வேலாயுதத்தை, அவன் புயம் தடத்தில்-அந்த வீடுமனது தோளினிடத்தில், ஓச்சினன் - குறிக் கொண்டு எறிந்தான்; மா மரு மாலையான்தான்உம் - மிக்க வாசனையையுடைய மாலையையுடைய அவ்வீடுமனும், அ வேல் - அந்த வேலாயுதத்தை, தோமரம் ஒன்றினால் - (தான் எறிந்த) தோமரமென்னும் ஓராயுதத்தால், துணித்து வீழ்த்தினன் - துண்டித்துத் தள்ளினன்; (எ - று.)

தோமரம் - இருப்புலக்கைக்கும், கைவேலுக்கும், பேரீட்டிக்கும் பெயர். தாமவேல்-வெற்றிமாலையைச் சூடிய வேலுமாம். மற்று - அசை. கீழ் 13-ஆம் பாட்டில் வீமன் தேரினின்று இறங்கினமை கூறியதனால், இங்கே 'தேர்மேல்கொண்டு' என்றார். (99)

வேறு.

23. ஓடுமிர தத்திவுளி நாலுமுட லற்றுவிழ வோரோர்கணை தொட்டி ரதமு, மீடுகுலை யத்துவசம் வீழவனி கத்தவரு மேக வெதிர் முட்டு தலுமே, நீடுவரை யொப்பதோர் கதாயுத மெடுத் தணுகி நேர்பட வடித்த னனரோ, வீடுமன் மனத்தனைய தேர்வலவ னைக்கடிதின் வீமனெனும் வெற்றி யுரவோன்.

(இ - ள்.) (அதுவுமன்றி, வீமனது), இரதத்து - தேரிற்பூட்டிய, ஓடும்-விரைந்துசெல்லுந்தன்மையனவான, இவுளி நால்உம் - குதிரைகள் நான்கும், உடல் அற்று விழ-உடம்பு துணிந்து விழும்படியும், இரதம்உம் ஈடு குலைய - அத்தேரும் வலிமைகெடும்படியும், துவசம் வீழ-அத்தேர்க்கொடி அறுந்துவிழும்படியும், அனிகத்தவர்உம் ஏக- (அவன்) சேனையிலுள்ள வீரர்களும் (புறங்கொடுத்து) ஓடும்படியும், ஓர் ஓர் கணை தொட்டு - (ஒவ்வொன்றுக்கு) ஒவ்வொரு அம்பை எய்து, எதிர் முட்டுதலும் - (வீடுமன்) எதிர்த்துப் போர் செய்தவளவில்,—வீமன் எனும் வெற்றி உரவோன்-வீமனென்கிற

சயத்தைத்தரும் பலத்தையுடைய வீரன், கடிதின்-விரைவாக, நீடு வரை ஒப்பது ஓர் கதாஆயுதம் எடுத்து அணுகி-நீண்ட மலையை யொப்பதொரு கதாயுதத்தை யெடுத்துக்கொண்டு அருகிற்சென்று, வீடுமன் மனத்து அனைய தேர் வலவனை-வீடுமனது மனத்தை யொத்த தேரைச் செலுத்தும் பாகனை, நேர் பட அடித்தனன்-குறி தவறாது காயம்படும்படி அடித்தான் ; (எ - று.)

கதைக்கு மலைஉவமை - பெருவடிவத்துக்கும், வலிமைக்கும், அழித்தற்கு அருமைக்கும், அச்சந்தருவதற்கு மென்க. மனத்தனைய-மனத்துக்கு மிகவும் இஷ்டமான என்றபடி ; இதனைத் தேருக்கும் வலவனுக்கும் அடைமொழியாக்கலாம் : தேருக்கு ஆக்கும்போது, மனத்துஅனைய-மனோவேகத்தை யொத்த எனப் பொருள்கொள்ளினும் இழுக்காது. உரவோன் என்பதில், உரவு-பகுதி ; அது-பலம்: தேகபலம், ஆயுதபலம், சேனைபலம், மனோபலம், புத்திபலம், தெய்வ பலம் முதலிய பலவகை வலிமைகளையும் உணர்த்தும்.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் பத்துக்கவிகள் - பெரும்பாலும் முதலைந்துசீரும் கூவிளங்காய்ச்சீர்களும், ஆறுவது தேமாச்சீரும், ஏழாவது புளிமாச்சீருமாகிய எழுசீராசிரியவிருத்தங்கள். (*100*)

24. **வேகமுடனிப்படியவ்வீமனுமுடற்றியடல்வீடுமனொ டொத்தமுதுபோர், மோகரவிதத்தரசர்மாமகுடரத்நமுடன்மூளை கடெறிக்கவடியா, நாகமொடெடுத்திவுளிதேர்சிதறமுற்றவொரு நாழிகையிலெற்றிவரவே, யாகவமுழுக்கவுருமேறெறிவதொக்கு மெனவாரவமிகுத்ததறவே.**

(இ - ள்.) இ படி - இவ்விதமாய், வேகமுடன் - விரைவோடு, அவ்வீமனும்—, உடற்றி - போர்செய்து, அடல் வீடுமனொடு ஒத்த-வலிமையையுடைய பீஷ்மனோடு பொருந்திய, முது போர் மோகரம் விதத்து அரசர் - பழமையான [பெரிய] யுத்தத்தில் உக்கிரமான தன்மையையுடைய அரசர்களது, மா மகுடம் ரத்நமுடன் - பெரிய கிரீடத்திற்பதித்த இரத்தினங்களுடனே, மூளைகள்-தலைமூளைகளும், தெறிக்க-சிதறும்படி, அடியா-அடித்து, நாகமொடு இவுளி தேர் - யானைகளோடு குதிரைகளையுந் தேர்களையும், எடுத்து—, சிதற - (அவை பொடியாய்ச்) சிந்தும்படி, ஒரு நாழிகையில் - ஒரு நாழிகைப் பொழுதிலே, முற்ற - (அச்சேனை) முழுவதிலும், எற்றி வர - தாக்கிக்கொண்டு வருகையில், ஆகவம் முழுக்க - அப்போர்க்களம் முழுவதும், உரும் ஏறு எறிவது ஒக்கும் என - பேரிடிவிழுவதுபோலுமென்னும்படி, அற - மிகவும், ஆரவம் மிகுத்தது - இரைச்சல் அதிகப்படப்பெற்றது ; (எ - று.)

ஆஹவம், ஆரவம் - வடசொற்கள். பெரியதையுஞ் சிறந்ததையும் ஏறென்றல், மரபு. பி - ம் : இப்படியில். சிதறி. (*101*)

25.—இதுவும், மேற்கவியும்-குளகம்: அபிமனும்வந்து கடுமையாகப் பொருவதைத் தெரிவிக்கும்.

மீளவும்வளைத்தசிலை வீடுமனதிர்த்தகுரல் வீமனொடுருத்திரு வருங், காளமுகிலுக்குமுகினேர்மலைவதொக்கவெரிகா லுநயனக்

கடையினர், மூளவெதிர்முட்டியெதிர்சேனையு நிலத்துதிரமோது பொழுதத்துவெகுளா, வாளபிமன்வெற்றிவரிவார்சிலைகுனித்துவய வாளிகடொடுத்துவரவே.

(இ - ள்.) வளைத்த சிலை வீடுமன் - வளைத்த வில்லையுடைய பீஷ்மன், அதிர்த்த குரல் வீமனொடு - உரத்தகுரலையுடைய வீமனுடனே, மீளஉம் உருத்து - மறுபடியும் கோபித்துவர,—இருவர் உம் - (வீடுமன் வீமன் என்னும்) இரண்டுபேரும், காளம் முகிலுக்கு நேர் முகில் மலைவது ஒக்க - கார்காலத்துக் கரிய மேகத்துக்கு எதிரில் மற்றொருமேகம் போர்செய்வதுபோல, எரி காலும் நயனம் கடையினர் - நெருப்பையுமிழுங் கடைக்கண்ணையுடையவர்களாய், மூள - கோபம்மூள, எதிர் முட்டி - எதிரில்தாக்கி, எதிர் சேனைஉம் நிலத்து உதிர - (தன் தன்) எதிர்ப்பக்கத்துள்ள சேனையும் தரையிலே பொடியாய்ச் சிந்தும்படி, மோது பொழுதத்து-தாக்கிப் போர்செய்யும் பொழுது, வாள் அபிமன் - ஆயுதப்பயிற்சியில்வல்ல அபிமந்யு, வெகுளா-கோபங்கொண்டு, வெற்றி வரி வார் சிலை குனித்து - சயத்தைத்தருகிற கட்டமைந்த நீண்ட வில்லை வளைத்து, வய வாளிகள் தொடுத்து வர-வலிய அம்புகளைப் பிரயோகித்துவர,—(எ - று.)— 'நகுவோன் ஒத்தனன்' என மேற்கவியில் முடியும்.

உருத்து - உருக்க. கடையினர் - குறிப்புமுற்றெச்சம். இடைவிடாது ஆயுதமழைபொழிதலின், முகில்உவமை. இவர்களை முகில் என்றதற்கேற்ப ஆர்த்தகுரலை இடிமுழக்கமாகவும், எரிகாலுதலை மின்னலொளியாகவும், கைவில்லை இந்திரவில்லாகவுங் கருதுக. (102)

26. **வார்சிலையைவட்டவடிவாம்வகைவணக்கியெதிர்மாறுபடவுற்றுவருவோ, ரோரொருவர்நெற்றிதொறுமோரொருவடிக்கணைகளூடுருவவிட்டுநகுவோன், மேருவைவளைத்துநெடுவாசுகிபிணித்து மழைமேகநிகர்மெய்க்கணைதொடா, வாரழலின்முப்புரமுநீறெழநகைத்த வரவாபரணனொத்தனனரோ.**

(இ - ள்.) வார் சிலையை - நீண்ட வில்லை, வட்டம் வடிவு ஆம் வகை-வளைந்தவடிவமாகும்படி, வணக்கி - வளைத்து, எதிர் மாறு பட உற்று வருவோர் ஓர் ஒருவர் நெற்றிதொறும்உம்-(தனக்கு) எதிரிலே பகைமைபொருந்த நெருங்கிவருகிற வீரர் ஒவ்வொருவரது நெற்றியிலும், ஓர் ஒரு வடி கணைகள் ஊடுருவ விட்டு - ஒவ்வொரு கூரிய அம்பைத் துளைத்துச்செல்லும்படி பிரயோகித்து, நகுவோன் - (அவர்களை நோக்கி இகழ்ந்து) சிரிப்பவனான அவ்வபிமன்,—மேருவை வளைத்து - மகாமேருகிரியை (வில்லாக) வணக்கி, நெடு வாசுகி பிணித்து - நீண்டவாசுகியென்னும் பெரும்பாம்பை (நாணியாக)க் கட்டி, மழை மேகம் நிகர் மெய் கணை தொடா - மழைபொழியுங் காளமேகத்தையொத்த திருமேனிநிறத்தையுடைய (திருமாலாகிய) அம்பைத் தொடுத்து, ஆர் அழலின் முப்புரம்உம் நீறு எழ நகைத்த- மிக்கதீயால் திரிபுரமுழுவதுஞ் சாம்பராய்ச்சிதறும்படி புன்சிரிப்புச் செய்த, அரவுஆபரணன் - சர்ப்பங்களை ஆபரணமாகவுடைய சிவபிரானை, ஒத்தனன் - போன்றனன்; (எ - று.)

அழித்தற்கடவுளாகிய உருத்திரமூர்த்தி உவமை, தவறாது எளிதில் பகையழிக்கும் ஆற்றலுக்கு என்க. வாசுகி - அஷ்டமகா நாகங்களுள் ஒன்று. "பொன்னங் குடுமி மேருவரை சிலையாய்ச் சேடன் புரிநாணாய்க், கன்னித்துளவத் திருநெடுமால் கணையாய்" எனவும், "தடநெடு வடவரை சாபமும், படவர விறைபகர் நாரி யும், மடல்விரி துளவினன் வாளியும்" எனவும் பல புராணங்களில் திரிபுரசங்காரகாலத்து ஆதிசேஷன் வில்நாணியாக இருந்ததாகக் கதை பிரசித்தமாகவிருக்க, இங்கு 'நெடுவாசுகிபிணித்து' என்றது புராணாந்தர கல்பாந்தர கதையைப்பற்றியதாதல்வேண்டும்; இனி, மேரு இமயம் மந்தரம் இவற்றில் ஒன்றை மற்றொன்றாகக் கவிகள் அபேதமுற வழங்குதல்போல, மகாநாகமென்ற பொதுமைபற்றி, ஆதிசேஷனை வாசுகியென்று அபேதமாகக் கூறியதென்றுங் கொள்ளலாம்: இங்ஙனம் ஒற்றுமை நயம்பற்றிக்கூறும் மரபை "ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த, வாழிவரையின் மணித் தாம்பே—ஊழியான், பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டு கின்ற, நாணே யகல நட" என்ற பாடலிலுங் காண்க. வட்டம் - வ்ருத்தமென்னும் வடமொழிச் சிதைவு. மெய்க்கணை - தவறாதஅம் பென்றுமாம். "பின்னைதழுவுங்கணை" என்றாற்போல, திருமா லுக்கு உரிய அடைமொழி கொடுத்து 'மழைமேகநிகர்மெய்க்கணை' என்றார். ஆர் அழலின் - அழித்தற்கரிய அனலினை லென்றுமாம். **அரவாபரணனென்ற விவரம்:**—ஒருகாலத்திற் பரமசிவன் தன்னைமதி யாத தாருகவனத்திலுள்ள முனிவர்களது கருவத்தைப் பங்கஞ் செய்யவும், அவர்கள் மனைவிமார்களின் கற்புநிலையைப் பரிசோதிக் கவுங் கருதித் தாம் ஒருவிடசங்கமத் திருவுருவங்கொண்டு அவ ரில லந்தோறுஞ்சென்று பிக்ஷாடனஞ்செய்து, தம்மைநோக்கிக் காதல் கொண்ட அம்முனிபத்தினியரது கற்புநிலைமையைக் கெடச்செய்ய, அதுகண்டு பொறாமற் கோபம்மூண்ட அம்முனிவர்கள் அபிசார யாகமொன்று செய்து அவ்வோமத்தியினின்றும் எழுந்த நாகங்கள் பூதங்கள் மான் புலி முயலகன் வெண்டலை முதலியவற்றைச் சிவனைக் கொன்றுவரும்படி ஏவ, சிவபெருமான், தம்மேற் பொங்கி வந்த நாகங்களை ஆபரணங்களாகவும், பூதங்களைத் தமதுகணங்க ளாகவுங் கொண்டு, மானைக் கையிலேந்தி, புலியைத் தோலையுரித்து உடுத்து, முயலகனை முதுகிற் காலால் ஊன்றி, வெண்தலையைக் கையிற்பற்றிச் சடையின்மேல்அணிந்து, இங்ஙனமே அவற்றை யெல்லாம் பயனிலவாகச்செய்துவிட்டன னென்பது. (*103*)

27.—வீமனையும் அபிமனையும்

துரியோதனன் ஏவலாற் பலஅரசர் வளைதல்.

மேவலர்விதப்படையும்வீடுமனுமுட்கும் வகைவீமனும்விறற் புதல்வனும், பூவலயமுற்று மெழுகாலவிறுதிப்பரவைபோலிகல் விளைத்தபொழுதிற், கூவலினிலைப்புனலுமீதெழுவதொத்ததொரு கோபமொடுசர்ப்பதுவசக், காவலனுரைப்பவிருவோரையும்வளைத் தனர்கள்காவலரெனைப்பலருமே.

(இ - ள்.) (இவ்வாறு), வீமனும்—, விறல் புதல்வன்உம் - வெற்றியையுடைய (அருச்சுனனது) குமாரனான அபிமந்யுவும்',—

மேவலர் விதம் படையும் வீடுமன்உம் உட்கும் வகை - பகைவர்களது பலவகைச்சேனைகளும் (அச்சேனைத்தலைவனான) பீஷ்மனும் அஞ்சும்படி, பூவலயம் முற்றுஉம் எழுகாலம் இறுதி பரவை போல்- பூமண்டலமுழுவதிலும் பொங்கிப்பரவுகிற கல்பாந்தகாலத்துப் பிரளயப்பெருங்கடல்போல [யாவரையும் அழிக்குமாறு], இகல் விளைத்த பொழுதில் - போரைச்செய்தசமயத்தில், சர்ப்ப துவசம் காவலன் - பாம்புக்கொடியையுடைய துரியோதனராசன், கூவலின் நிலைபுனல்உம் மீது எழுவது ஒத்தது ஒரு கோபமொடு - கிணற்றினுள் நின்ற நீர் மேற்கிளம்புவதைப் போன்ற[உள்ளிருந்து வெளிக்கிளம்பின] ஒரு பெருங்கோபத்துடனே, உரைப்ப - (முனைந்துசெல்லும்படி) கட்டளை கூற, காவலர் எனை பலர்உம் - அரசர்களெல்லோரும், இருவோரைஉம் வளைத்தனர்கள் - (வீமனும் அபிமன்யுவு மாகிய) அவ்விரண்டுபேரையுஞ் சூழ்ந்துகொண்டார்கள்.

வீமனும் விறற்புதல்வனும்-அன்புடைமைபற்றி, தம்பிமகனை அவன் மகன்போலக் கூறியது. புனலும், உம் - அசை; இழிவு சிறப்புமாம். பரவை - பரவியது. 'கூவலினிலைப்புனலுமீதெழுவதொத்தவொரு கோபம்' என்பதற்கு- கிணற்றுநீருங் கொதித்து மேற்கிளம்பத்தக்கதாகிய கடுங்கோபமென்று உரைப்பாருமுளர். பி-ம்: கோபமொடுமத்தினபுரிக். (*104*)

28.—அருச்சுனன் வீமஅபிமன்யுக்களைக் குறுகுதல்.

தானவர்சமத்துமிருதோள்வலியுமற்றுமுனைதானைபுறகிட்டழியவே
வானவர்துதிக்கவயவாகைபுனையக்கடவுள்வாழ்வினிதளித்துவருவோன்
மீனவனெனத்தகையகாளையொடெடுத்தகதைவீமனைவளைத்தனரெனக்
கூனல்வரிவிற்பகழிதூவியிரதத்தின்மிசைகூவியவரைக்குறுகினன்.

(இ - ள்.) தானவர் - (நிவாதகவசரும் காலகேயரு மாகிய) அசுரர்கள், சமத்துஉம்இருதோள் வலிஉம் அற்று - (தங்கள்) சாமர்த்தியமும் இரண்டு தோள்களின்பலமும் ஒழிந்து, முனை - போர்க்களத்திலே, தானை - சேனைகளுடனே, புறகு இட்டு- (முன்னே) முதுகுகொடுத்து, அழிய - (பின்பு) அழிந்திடவும்,—வானவர் துதிக்க-தேவர்கள் புகழவும்,—வய வாகை புனைய-வெற்றிக்குரிய வாகைப்பூமாலையைச் சூடவும், கடவுள் வாழ்வு இனிது அளித்து வருவோன் - (இந்திரன் முதலிய) தேவர்களுக்கு வாழ்க்கையை இனிமையாகக் கொடுத்துவந்த தன்மையனாகிய அருச்சுனன்,— 'மீனவன் என தகைய காளையொடு-மீன்வடிவமெழுதிய கொடியையுடைய மன்மதனென்று (அழகிலும் பேராற்றலிலுஞ்) சொல்லத்தக்க (தன்மகனான) அபிமனுடனே, எடுத்த கதை வீமனை-ஏந்திய கதாயுதத்தையுடைய வீமனையும், வளைத்தனர்-(பகையரசர்களெல்லோரும் ஒருங்கு) சூழ்ந்தார்கள்,' என - என்று அறிந்து, கூன் நல் வரி வில் பகழி தூவி - வளைந்த சிறந்த கட்டமைந்த (தனது காண்டீவமென்னும்) வில்லினின்று அம்புகளைத் தொடுத்து, கூவி-(அவ்வரசர்களைப் போருக்கு) அழைத்துக்கொண்டு, இரதத்தின் மிசை - தேரின்மீது, அவரை குறுகினன் - அந்த அண்ணனையும் புதல்வனையும் சமீபித்தான்; (எ - று.)

அருச்சுனன் கைலாசத்துச் சென்று தவமியற்றிப் பரமசிவனிடத்துப் பாசுபதம்முதலியன பெற்றபின்பு அங்குவந்து அழைத்துப்போன தந்தையாகிய இந்திரனுடனே தேவலோகஞ்சேர்ந்து, அங்குத் தேவர்களதுவேண்டுகோளின்படி அவர்கட்குப்பகைவராய்ப் பலநாளாகப் பெருந்துன்ப மியற்றிவந்த கடலிடையிலுள்ள தோயமாபுரவாசிகளான நிவாதகவசரென்னும் அசுரர் மூன்று கோடிபேரையும், அந்தரத்துள்ள இரணியபுரவாசிகளான காலகேயரென்னும் அசுரர் அறுபதினாயிரவரையும் ஆங்காங்குச் சென்று போர்செய்து அழித்தொழித்தனன் என்பது, கீழ் ஆரணியபருவத்து வரலாறு. சமத்து - ஸமர்த்தசப்தபவம். பி-ம்:-[1] சமத்து மிகு'. (105)

29.—அருச்சுனன் பகழிதூவிச் செல்லும்போது அரசர் கெட்டுச்சிதற வீடுமன் திகைக்க, படைஞர் தம்படைவீடுபுகுதல்.

வீசுபகழித்துளியின்மேகமெனவிற்கொடிவன்மேலுறநடக்குமளவிற்
றேசுடையருக்கனெதிர்மூடுபனியொத்தரசர்தேரணிகெடச்சிதறினர்
மாசுணமணிக்கொடிமகீபதிபடைத்தலைவன்வார்சிலைவளைத்திலனெடும்
பாசறைபுகக்கடவினர்கடகளிற்றினணிபாய்பரியணிப்படைஞரே.

(இ - ள்.) (இவ்வாறு), வீசு பகழி துளியின் மேகம் என - நெடுந்தூரம் விரைந்தெறிகிற அம்புகளாகிய மழைநீர்த்துளிகளையுடையதொரு மேகம்போல, வில் கொடு - காண்டீவவில்லை(க் கையில்) ஏந்திக்கொண்டு, இவன் - இவ்வருச்சுனன், மேல் உற - (பகைவர்)மேலே பொருந்த, நடக்கும் அளவில் - (போருக்குச்) செல்லுமளவில்,—தேசு உடை அருக்கன் எதிர் மூடு பனி ஒத்து - ஒளியையுடைய சூரியனுக்கு எதிரிலே மூடுபனிபோன்று, அரசர் - பகையரசர்கள், தேர் அணி கெட - தேர்வரிசைகள் அழியும்படி, சிதறினர் - (முன்நிற்கமாட்டாமற்) சிதறுண்டுபோனார்கள்; (அப்பொழுது), மாசுணம் மணி கொடி மகீபதி படை தலைவன் - பாம்பையெழுதிய அழகியதுவசத்தையுடைய துரியோதனராசனது சேனாதிபதியான வீடுமனும், வார்சிலை வளைத்திலன் - (தனது) நீண்ட வில்லை வளைக்கவும்மாட்டிற்றிலன்; (அங்ஙனந்திகைத்துநின்றிடவே), கடம் களிற்றின் அணி - மதயானைவரிசையிலும், பாய் பரி அணி - தாவிச்செல்லுந்தன்மையனவான குதிரைகளின்வரிசையிலும் (இருந்த), படைஞர் - சேனாவீரர்கள், நெடு பாசறை புக - பெரிய (தமது) பாடிவீட்டிற் செல்ல, கடவினர் - (தம்தம்வாகனங்களை ஏவிச்) செலுத்தினர்கள்; (எ - று.)

தேரணிகெட்டதனால், பின்பு மற்றையிரண்டணியே கூறினர். சிறந்த ஆயிரங்கிரண முடைமையால், 'தேசுடையருக்கன்' எனப்பட்டான். மூடுபனி - சூரியனெதிர்ப்படுதற்குமுன் உலகை மூடியிருந்த பனி யென இறந்தகாலவினைத்தொகை; இருந்தவிடந்தெரியாமல் எளிதில் அழிதற்கு உவமை. மணிக்கொடி - இரத்தினங்களைப் பதித்த காம்பையுடைய கொடியுமாம். மேகத்துக்கும் இந்திரவில் உள தாதலால், 'மேகமென விற்கொடு' என்றார். தேசு=தேஜஸ்: படைஞர் - ஆயுதவீரருமாம். (106)

30.—சூரியாஸ்தமனவருணனை.

**வேலையமுதுக்குவருவானவர்களொத்தனர்கள்வீடுமன்முதற்படைஞரா
லாலநிகரொத்தனனனீகினிதொலைத்தொருதனுண்மைநிலையிட்டுவருவோன்
மேலினியிமைப்பொழுதுநாம்வெளியினிற்கிலிவன்மேலிடுமெனக்கருதினுன்
போலெழுவயப்புரவியூருமிரதத்திரவிபோயுததியிற்சொருகினுன்.**

(இ - ள்.) (அப்பொழுது அஞ்சிச் சிதறியோடின), வீடுமன் முதல் படைஞர் - பீஷ்மன்முதலான சேனைவீரர்கள், வேலை அமுதுக்கு வருவானவர்கள் ஒத்தனர்கள் - பாற்கடலில்தோன்றிய அமிருதத்தைப் பெறுதற்கு வந்த தேவர்களைப் போன்றார்கள்; அனீகினி தொலைத்து - (அங்ஙனம் சத்துரு) சேனையை யோட்டி, ஒரு தன் ஆண்மை நிலை இட்டு வருவோன் - ஒப்பற்ற தனதுபராக்கிரமத்தை நிலைநிறுத்தி வருபவனுன அருச்சுனன், ஆலம் நிகர் ஒத்தனன் - (அப்பொழுது பாற்கடலினின்று யாவரும் அஞ்சுமாறு எழுந்த) காலகூடவிஷத்தை உவமையாகப் பொருந்தினுன்; (அச்சமயத்தில்), எழு வய புரவி ஊரும் இரதத்து இரவி - ஏழு வலியகுதிரைகள் பூண்டுநடத்துந் தேரையுடைய சூரியன், இனி மேல் நாம் வெளியில் இமைப்பொழுது நிற்கில் இவன் மேலிடும் என கருதினுன் போல் - நாம் இனிமேல் வெளியிலே ஒரு கணப்பொழுது நின்றாலும் இவ்வருச்சுனன் நம்மேலும் (அழிக்க) வருவானென்று எண்ணினுன்போல, உததயில் போய் சொருகினுன் - (மேல்) கடலிற் போய் மறைந்தான்; (எ - று.)—படைஞரால், ஆல் - ஈற்றசை.

முன்னிரண்டடி - **உவமையணி**யும், பின்னிரண்டடி - **ஏதுத்தற்குறிப்பேற்றவணி**யுமாம். மண்ணுலகத்தில் ஆண்மைநிலையிட்டு வருபவன் அங்கு எதிர்ப்பவரில்லாமையால் விண்ணுலகத்துப் பாய்ந்து எதிரில் நிற்குந் தன்மேல் பொருதிடுவானே எனச் சூரியன் அஞ்சினுன். சூரியன் அஸ்தமித்தலை மேல்கடலில் மறைதலாகத் தோற்றம்மாத்திரத்தைக்கொண்டு கவிகள் வருணிப்பர். வீடுமன் முதலியோரை வானவர்களென்றதற்கேற்ப, வெற்றியை அமுதமாகக் கொள்க. அமுதுக்கு - நான்காம்வேற்றுமை, பொருட்டுப் பொருளது. 'படைஞரார்' என்ற பாடத்துக்கு, ஆர் - விகுதிமேல் விகுதி. ஆலம் - ஹாலம்: வடசொல். எழுபுரவி - பண்புத்தொகை; சூரியனது தேர்க்குதிரை ஏழெனப் பெயர்பெற்ற தொன்றே யென்பாரும், ஒரு குதிரைக்கு ஏழுபெயர்களென்பாரும், ஏழுகுதிரைகளென்பாரும், ஏழுகுதிரைகளில் ஒன்று ஏழென்று பெயர்பெற்றதென்பாரும் எனப் பல திறத்தவராவர்.

31.—மாலைப்பொழுது வருணனை.

**ஆதபனொளித்ததிசையோவொளிசிவந்ததறவாழ்குருதிமெத்துகையினுன்
மாதிரமுமைக்கடலுமாநிலமுமுட்டவொருமாசறுசிவப்புவடிவா
யேதிலிருள்புக்குலவலாமிடமறக்கடையினேறனலியொத்ததிகலிப்
பாதகமிகுத்தகொலைவாணிருபர்தத்தமதுபாடிநகர்புக்கனர்களே.**

அருச்சுனன் கைலாசத்துச் சென்று தவமியற்றிப் பரமசிவ னிடத்துப் பாசுபதம்முதலியன பெற்றபின்பு அங்குவந்து அழைத்துப்போன தந்தையாகிய இந்திரனுடனே தேவலோகஞ்சேர்ந்து, அங்குத் தேவர்களதுவேண்டுகோளின்படி அவர்கட்குப்பகைவராய்ப் பலநாளாகப் பெருந்துன்ப மியற்றிவந்த கடலிடையிலுள்ள தோயமாபுரவாசிகளான நிவாதகவசரென்னும் அசுரர் மூன்று கோடிபேரையும், அந்தரத்துள்ள இரணியபுரவாசிகளானகாலகேயரென்னும் அசுரர் அறுபதினாயிரவரையும் ஆங்காங்குச் சென்று போர்செய்து அழித்தொழித்தனன் என்பது, கீழ் **ஆரணியபருவத்து வரலாறு.** சமத்து - ஸமர்த்தசப்தபவம். பி-ம்:-[1]சமத்து மிகு'. (105)

29.—அருச்சுனன் பகழிதூவிச் செல்லும்போது அரசர் கெட்டுச்சிதற வீடுமன் திகைக்க, படைஞர் தம்படைவீடுபுகுதல்.

வீசுபகழித்துளியின்மேகமெனவிற்கொடிவன்மேலுறநடக்குமளவிற்
றேசுடையருக்கனெதிர்மூடுபனியொத்தரசர்தேரணிகெடச்சிதறினர்
மாசுணமணிக்கொடிமகீபதிபடைத்தலைவன்வார்சிலைவளைத்திலனெடும்
பாசறைபுகக்கடவினர்கடகளிற்றினணிபாய்பரியணிப்படைஞரே.

(இ - ள்.) (இவ்வாறு), வீசு பகழி துளியின் மேகம் என - நெடுந்தூரம் விரைந்தெறிகிற அம்புகளாகிய மழைநீர்த்துளிகளையுடையதொரு மேகம்போல, வில் கொடு - காண்டீவவில்லை(க்கையில்) ஏந்திக்கொண்டு, இவன் - இவ்வருச்சுனன், மேல் உற- (பகைவர்)மேலே பொருந்த, நடக்கும் அளவில் - (போருக்குச்) செல்லுமளவில்,—தேசு உடை அருக்கன் எதிர் மூடு பனி ஒத்து- ஒளியையுடைய சூரியனுக்கு எதிரிலே மூடுபனிபோன்று, அரசர்- பகையரசர்கள், தேர் அணி கெட - தேர்வரிசைகள் அழியும்படி, சிதறினர் - (முன்நிற்கமாட்டாமற்) சிதறுண்டுபோனார்கள்; (அப்பொழுது), மாசுணம் மணி கொடி மகீபதி படை தலைவன்-பாம்பையெழுதிய அழகியதுவசத்தையுடைய துரியோதனராசனது சேனாதிபதியான வீடுமனும், வார்சிலை வளைத்திலன் - (தனது) நீண்ட வில்லை வளைக்கவும்மாட்டிற்றிலன்; (அங்ஙனந்திகைத்துநின்றிடவே), கடம் களிற்றின் அணி - மதயானைவரிசையிலும், பாய் பரி அணி - தாவிச்செல்லுந்தன்மையனவான குதிரைகளின்வரிசையிலும் (இருந்த), படைஞர் - சேனாவீரர்கள், நெடு பாசறை புக - பெரிய (தமது) பாடிவீட்டிற் செல்ல, கடவினர் - (தம்தம்வாகனங்களை ஏவிச்) செலுத்தினார்கள்; (எ - று.)

தேரணிகெட்டதனால், பின்பு மற்றையிரண்டணியே கூறினார். சிறந்த ஆயிரங்கிரண முடைமையால், 'தேசுடையருக்கன்' எனப்பட்டான். மூடுபனி - சூரியனெதிர்ப்படுதற்குமுன் உலகை மூடியிருந்த பனி யென இறந்தகாலவினைத்தொகை; இருந்தவிடந்தெரியாமல் எளிதில் அழிதற்கு உவமை. மணிக்கொடி - இரத்தினங்களைப் பதித்த காம்பையுடைய கொடியுமாம். மேகத்துக்கும் இந்திரவில் உள தாதலால், 'மேகமென விற்கொடு' என்றார். தேசு=தேஜஸ்: படைஞர் - ஆயுதவீரருமாம். (106)

30.—சூரியாஸ்தமனவருணனை.

**வேலையமுதுக்குவருவானவர்களொத்தனர்கள்வீடுமன்முதற்படைஞரா
லாலநிகரொத்தனனனீகினிதொலைத்தொருதனுண்மைநிலையிட்டுவருவோன்
மேலினியிமைப்பொழுதுநாம்வெளியினிற்கிலிவன்மேலிடுமெனக்கருதினன்
போலெழுவயப்புரவியூருமிரதத்திரவிபோயுததியிற்சொருகினன்.**

(இ - ள்.) (அப்பொழுது அஞ்சிச் சிதறியோடின), வீடுமன் முதல் படைஞர் - பீஷ்மன்முதலான சேனைவீரர்கள், வேலை அமுதுக்கு வருவானவர்கள் ஒத்தனர்கள் - பாற்கடலில்தோன்றிய அமிருதத்தைப் பெறுதற்கு வந்த தேவர்களைப் போன்றார்கள்; அனீகினி தொலைத்து - (அங்ஙனம் சத்துரு) சேனையை யோட்டி, ஒரு தன் ஆண்மை நிலை இட்டு வருவோன்-ஒப்பற்ற தனதுபராக்கிரமத்தை நிலைநிறுத்தி வருபவனான அருச்சுனன், ஆலம் நிகர் ஒத்தனன் - (அப்பொழுது பாற்கடலினின்று யாவரும் அஞ்சுமாறு எழுந்த) காலகூடவிஷத்தை உவமையாகப் பொருந்தினன்; (அச்சமயத்தில்), எழு வய புரவி ஊரும் இரதத்து இரவி-ஏழு வலியகுதிரைகள் பூண்டுநடத்துந் தேரையுடைய சூரியன், இனிமேல் நாம் வெளியில் இமைப்பொழுது நிற்கில் இவன் மேலிடும் என கருதினன் போல் - நாம் இனிமேல் வெளியிலே ஒரு கணப்பொழுது நின்றாலும் இவ்வருச்சுனன் நம்மேலும் (அழிக்க) வருவானென்று எண்ணினன்போல, உததயில் போய் சொருகினன்- (மேல்) கடலிற் போய் மறைந்தான்; (எ - று.)—படைஞரால்,ஆல்-ஈற்றசை.

முன்னிரண்டடி - **உவமையணியும்**, பின்னிரண்டடி-**ஏதுத்தற்குறிப்பேற்றவணியு**மாம். மண்ணுலகத்தில் ஆண்மைநிலையிட்டு வருபவன் அங்கு எதிர்ப்பவரில்லாமையால் விண்ணுலகத்துப் பாய்ந்து எதிரில் நிற்குந் தன்மேல் பொருதிடுவானோ எனச் சூரியன் அஞ்சினன். சூரியன் அஸ்தமித்தலை மேல்கடலில் மறைதலாகத் தோற்றம்மாத்திரத்தைக்கொண்டு கவிகள் வருணிப்பர். வீடுமன் முதலியோரை வானவர்களென்றதற் கேற்ப, வெற்றியை அமுதமாகக் கொள்க. அமுதுக்கு - நான்காம்வேற்றுமை, பொருட்டுப்பொருளது. 'படைஞரார்' என்ற பாடத்துக்கு, ஆர் - விகுதிமேல் விகுதி. ஆலம் - ஹாலம்: வடசொல். எழுபுரவி - பண்புத்தொகை; சூரியனது தேர்க்குதிரை ஏழெனப் பெயர்பெற்றதொன்றே யென்பாரும், ஒரு குதிரைக்கு ஏழுபெயர்களென்பாரும், ஏழுகுதிரைகளென்பாரும், ஏழுகுதிரைகளில் ஒன்று ஏழென்று பெயர்பெற்றதென்பாரும் எனப் பல திறத்தவராவர்.

31.—மாலைப்பொழுது வருணனை.

**ஆதபனொளித்ததிசையோவொளிசிவந்ததறவாழ்குருதிமெத்துகையினுன்
மாதிரமுமைக்கடலுமாநிலமுமுட்டவொருமாசறுசிவப்புவடிவா
யேதிலிருள்புக்குலவலாமிடமறக்கடையினேறனலியொத்ததிகலிப்
பாதகமிகுத்தகொலைவாணிருபர்தத்தமதுபாடிநகர்புக்கனர்களே.**

(இ - ள்.) (அப்பொழுது), ஆதபன் ஒளித்த திசைஓ-சூரியன் மறைந்த மேற்குத்திக்குமாத்திரமோ, ஒளி சிவந்தது-(தன்)ஒளி செந்நிறமடைந்தது; மா திரம்உம்- திக்குக்களும், மை கடல்உம்-கரிய கடலும், மா நிலம்உம்-பெரியபூமியும், முட்ட-முழுவதும், அற ஆழ் குருதி மெத்துகையினல்-மிகவும் ஆழ்ந்துள்ள இரத்தவெள்ளம் மிகுதலால், ஒரு மாசு அறு சிவப்புவடிவு ஆய்-களங்கமில்லாத ஒரு சிவந்தவடிவத்தையுடையதாய், ஏதில் இருள் புக்கு உலவல் ஆம் இடம் அற-பகையாகிய இருள் பிரவேசித்துச்சஞ்சரித்தற்கு ஏற்ற வெற்றிட மில்லாதபடி, கடையின் ஏறு அனலிஒத்தது-(யுகத்தின் முடிவில் (கடலினின்று) வெளியெழுந்து பரவும் படபாமுகாக்கி னையைப் போன்றது; (அச்சமயத்தில்), இகலி பாதகம் மிகுத்த கொலை வாள் நிருபர்-(ஒருவரோடொருவர்) மாறுபட்டுப் பாவத்தை மிகச் செய்யுங் கொலைத்தொழிலையுடைய ஆயுதங்களையேந்திய (இரு திறத்து) அரசர்களும், தம்தமது பாடி நகர் புக்கனர்கள் - தங்கள் தங்களது படைவீட்டிற் போய்ச்சேர்ந்தார்கள்; (எ-று.)

'ஆதபனொளித்ததிசைஒளிசிவந்தது' என்றது,சூரியாஸ்தமன காலத்தில் தோன்றுஞ் செவ்வானத்தை. இரத்தத்துக்கும் நெருப் புக்கும் உவமை செந்நிறம்பற்றியது. மாநிலம்முழுதும் குருதிமெத் துகையினற் சிவந்தது என்றது - பிறிதின்குணம்பெறலணி. அங்ஙனம் சிவந்த நிலத்தைக் கடையினேறு அனலியொத்ததென வருணித் தது-தன்மைந்தற்குறிப்பேற்றவணியாம். படைவீடு நகரம்போலப் பல பிராணிகள் ஒருங்குதிரண்டு வசிக்கும்படி விசாலமாக ஒழுங்குபட அமைக்கப்பட்டுள்ள தென்ற சிறப்பு விளங்க, 'பாடி நகர்' என்றார்; ஸ்ரீவேதவியாசரும் படைவீட்டுக்கு அஸ்தினபுரியை உவமை கூறி யுள்ளார். திசையோ, ஓ - பிரிநிலை. ஏது இன்மை - யாதொருசம் பந்தமுமில்லாமையென அயலையுணர்த்திப் பகையைக் குறிக்கும். ஒளியும் இருளும் ஒன்றுக்கொன்று மாறுபாடுடைய தாதலால், 'ஏதிலிருள்' எனப்பட்டது. "கோறல், பிறவினை யெல்லாந் தரும்" என்பவாகலின், 'பாதகமிகுத்த கொலை' என்றது. பி-ம்:— கடலி னேறனலி. (*108*)

32.—சூரியோதயவருணனை.

கூளிகள்செ ருக்கிநட மாடுகளம் விட்டரசர் கோமகனை யுற்றளவிலே
வாளபிம னுக்குமொரு தேர்விசய னுக்குநம்வ சுதினிபுறக்கி டுவதே
நாளைமுது கிட்டவரை யாருயிர்செ குத்திடுவ னெனவு ரைத்த னனிரா
மீளவுமு தித்தனன்வி ரோசனன்மு தற்பகலில் வீரர்வி றலைக்க ருதியே.

(இ - ள்.) கூளிகள் - பெருங்கழுகுகள் [அல்லது பேய்கள்], செருக்கி - (மிக்கதசையாகிய நல்லுணவு தமக்குக் கிடைத்தத னல்) மிகக்களித்து, நடம் ஆடு - கூத்தாடப்பெற்ற, களம் - போர்க்களத்தை, விட்டு - நீங்கி, அரசர் - (கௌரவசேனையின்) அரசர்கள், கோமகனை-இராசராசனன துரியோதனனை, உற்ற அளவில்-சேர்ந்தவளவில்,—(அவன் அவ்வரைநோக்கி), 'வாள் அபி மனுக்குஉம் - ஆயுதப்பயிற்சியையுடைய அபிமந்யுவுக்கும், ஒரு தேர் விசயனுக்கு உம் - ஒருதேரையுடைய அருச்சுனனுக்கும், நம்

வரூதினி - நமதுசேனை, புறக்கு இடுவதுஏ - பின்னிடுவதா? நாளை முதுகிட்டவரை - நாளைக்கு யாவராயினும் புறங்கொடுப்பராயின் அவரை, நான்—, ஆர் உயிர் செகுத்திடுவன்-கொல்வேன்,' என- என்று, இரா-அவ்விராத்திரியில், உரைத்தனன் - கூறினன்; (பின்பு), விரோசனன் -சூரியன், முதல் பகலில் வீரர் விறலைகருதி- முந்தினநாளில் (காட்டிய) அபிமன்யு அருச்சுனன்என்ற இவ்வீர ரின் போர்த்திறத்தை(ப்பார்க்க) எண்ணி, மீளஉம் உதித்தனன் - மீண்டும் தோன்றினன்; (எ - று.)

நான்காமடி-ஏதுத்தற்குறிப்பேற்றம். புறங்கொடுத்தலில் சேனைவீரர் க்கு அச்சமுண்டாக்குதற்பொருட்டு, துரியோதனன், இங்ஙனம் கூறினன்; அவர்கள் புறங்கொடுப்பது உயிராசைபற்றியே யாத லால், அதுஒழியுமாறு கூறியது. இதற்கு -வெவ்வேறுவகையாகப் பொருளுரைப்ப தெல்லாம் சுற்றுவழியாதலின், பொருந்தா தென விடுக்க. முதற்பகலில் வீரன்விறலைக் கருதி யென்றபாடத்திற்கு, வீரன் - அருச்சுனனென்க: இனி, முன்நாளில் துரியோதனன் சொன்ன பௌருஷத்தை (மறுநாள்பார்க்க) எண்ணி யென்றும் உரைக்கலாம்.புறக்கிடுவதே என்ற ஏகாரம்-வினவகையாற் சிறிதுந் தகுதியன் றென இழிவை விளக்கும். நாளைமுதுகிட்டவர்-இயல்பு பற்றி, எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி. விரோசநன்-வடசொல்;விசேஷமாக விளங்குபவ னென்றுபொருள். பி - ம்:—உரைத்தனனரோ. (109)

இரண்டாம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

மூன்றும்போர்ச்சருக்கம்.

1.—கடவுள்வாழ்த்து.

தந்த முறியி லவர்வைத்த தயிர்பால் வெண்ணெ யெட்டாமற்
குந்தி யுரலின் மிசையேறி யிளங்கோ வியர்முன் கூத்தாடி
நந்தன் மனையி லசோதையிரு நயனங் களிக்க விளையாடு
மைந்த னிருதா ளொருநாளு மறவா தாரே பிறவாதார்.

(இ - ள்.) தம் தம் உறியில்-தங்கள் தங்கள் உறிகளின்மேல், அவர்வைத்த-அந்தந்த ஆயர்மகளிர் வைத்திட்ட, தயிர் பால் வெண்ணெய்-தயிரும் பாலும் வெண்ணெயும், எட்டாமல் - (குழந்தைப்பருவமுள்ள தனக்கு) எட்டாமையால், உரலின்மிசை குந்தி ஏறி-உரலின்மேலிருந்து ஏறி, இள கோவியர் முன் கூத்து ஆடி-இளமைப்பருவமுடைய கோப ஸ்திரீகளின் எதிரில் (பல வகை) நடனஞ்செய்து, நந்தன் மனையில் - நந்தகோபரதுவீட்டிலே, அசோதை இரு நயனம் களிக்க-யசோதைப்பிராட்டியின் இரண்டு கண்களும் (கண்டு) களிக்கும்படி, விளையாடும்-விளையாடின, மைந் தன்-இளம்பிராயமுடையனான கண்ணனது, இரு தாள்-உபயதிரு

வடிகளே, ஒரு நாள்உம் மறவாதார்ஏ-ஒருபொழுதும் மறவாதவர்களே, பிறவாதார்-பிறப்பில்லாதவராவர்; (எ -று .)

ஒருநாளும் மறவாதார்-இடைவிடாது தியானிப்பவரென்றபடி. "பிறவிப் பெருங்கடனீந்துவர் நீந்தா, ரிறைவ னடிசேரா தார்" என்றபடி எம்பெருமானை இடைவிடாது தியானிப்பவர்க்குப் பிறவியறுதலும் அங்ஙனம் தியானியாதவர்க்குப் பிறவியறுமையு மாகிய இரண்டும் நியமமாதலால், 'மறவாதாரே பிறவாதார்' எனக் கூறினர். பிறவாதா ரென்றதனால், பிறப்பற்றுக் கருமசரீரமொழிந்து திவ்வியசரீரம்பெற்று மீளாதமுத்தியுலகஞ் சேர்ந்து நிரதிசயவின்பமடைந்து அங்கு என்றும் ஒருபடிப்பட வாழ்வரென்பதாம். 'செய்யுட் கேற்புழி" என்றதனால், அவர் என்னுஞ் சுட்டுப்பெயர் கோவியரென்னும் இயற்பெயரின்முன் வந்தது. வெண்ணெய் = வெள்நெய் - உருக்காதநெய். பசுக்களைக் காப்பவனென்ற காரணத்தால், இடையனுக்கு - வடமொழியில் 'கோபன்' என்று பெயர்; அதன்பெண்பாலான கோபீ யென்பது விகாரப்பட்டு, கோவி யென்று ஆகி, பின்பு பலர்பால்விகுதியேற்றுக் கோவிய ரென்று நின்றது. நந்தன் என்ற வடசொல்லுக்கு - ஆனந்தமுடையவனென்றும், யஸோதா என்ற வடசொல்லுக்கு - (தனது நற்குண நற்செய்கைகளால் தான் பிறந்த குலத்துக்கும் புகுந்தகுலத்துக்கும்) புகழைத் தருபவ ளென்றும் பொருள். மைந்தன் - அழகனும், மிடுக்கனுமாம். 'அசோதையிரு நயனங்களிக்க விளையாடும் மைந்தன்' என்ற விடத்து, 'முழுதும் வெண்ணெய் அளைந்து தொட்டுண்ணும்' என்ற பெருமாள் திருமொழிப்பாடலும் 'ஏரார்ந்தகண்ணி யசோதை' என்ற திருப்பாவைத் தொடர்க்கு வியாக்யாநமும் நினைக்கத்தக்கது. ஒருநாளும் என்ற உம்மை - இழிவுசிறப்பு. ஏகாரம்-பிரிநிலை.

வடமதுரைக்குச் சமீபத்திலுள்ள கோகுலபிருந்தாவனமெனப்படுகிற திருவாய்ப்பாடியிலுள்ள இடையர்களுக்கெல்லாந் தலைவர் நந்தகோபரும், அவரது மனைவி யசோதையு மாவர்; இவர்கள், கண்ணனை வளர்த்த தந்தைதாயர். வசுதேவரும் தேவகியும் கம்சனால் சிறையிலிருத்தப்பட்டுத் தளை பூண்டிருக்கையில் திருமால் தேவகியினிடம் எட்டாவது கருப்பத்திற் கண்ணனாய் அவதரிக்க, அக்குழந்தையைக் கம்சன் வழக்கப்படி கொன்றுவிடக் கூடுமென்கிற அச்சத்தால் தாய்தந்தையர் அத்தெய்வக்குழவியின் அனுமதிபெற்று அந்தச்சிசுவை அதுபிறந்த நடுராத்திரியிலேயே நந்தகோபரது திருமாளிகையிலே இரகசியமாகக்கொண்டு சேர்த்துவிட்டு அங்கு அப்பொழுது யசோதைக்கு மாயையின் அம்சமாய்ப் பிறந்திருந்ததொரு பெண்குழந்தையை யெடுத்துக்கொண்டுவந்துவிட, அதுமுதல் கம்சனைக் கொல்லுகிறவரையில் இளம்பருவத்திலெல்லாம் கண்ணபிரான் அவ்வாய்ப்பாடியிலேயே பலவகைத் திருவிளையாடல்கள் புரிந்து வளர்ந்தருளின ரென்பது வரலாறு.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - மூன்று ஆறுஞ் சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களு மாகிய அறுசீராசிரிய விருத்தங்கள். (110)

2.—இருதிறத்தவரும் படைகளை வியூகமாக வகுத்தல்.

ஏலாவமரின்மூன்றுநாளிரண்டுபடையுந்திரண்டேறக்
காலார்திண்டேர்வீடுமனும்வகுத்தான்கடுங்காருடயூகம்
மேலாம்வென்றிப்பாண்டவர்தம்வெஞ்சேனையைக்கொண்டெஞ்சாமற்
றேலாவர்த்தசந்த்ரப்பேர்வியூகம்வகுத்தான்றுளவோனே.

(இ - ள்.) அமரின் மூன்றும் நாள் - யுத்தத்தின் மூன்றுவது தினத்தில், இரண்டு படைஉம் - இருதிறத்துச்சேனைகளும், திரண்டு - (தம்மிற்) கூடி, ஏலா - எதிர்க்க, ஏற - (போர்க்களத்தே விரைந்து) செல்ல,—கால் ஆர் திண் தேர் வீடுமன்உம் - சக்கரங்களமைந்த வலிய தேரையுடைய பீஷ்மனும், கடு காருடயூகம் வகுத்தான் - பயங்கரமான கருடவியூகமாக(த் தன் சேனையை) அணிவகுத்தான்; துளவோன் - திருத்துழாய்மாலையை யுடைய கண்ணன்,—மேல் ஆம் வென்றி பாண்டவர் தம் வெம் சேனையை கொண்டு - மேன்மையான வெற்றியையுடைய பாண்டவர்களது உக்கிரமான சேனையைக்கொண்டு, எஞ்சாமல் - (வீடுமனுக்குக்) குறையாமல், தோலா அர்த்த சந்த்ரம் பேர் வியூகம் வகுத்தான் - தோல்வியடையாத அர்த்தசந்திரமென்னும் பெயருடைய வியூகத்தை அமைத்தருளினன்; (ஏ - று.)

கருடவடிவத்தின் வாயிடத்தில் வீடுமனும், கண்களில்துரோணனும் கிருதவர்மாவும், சிரசில் அசுவத்தாமனுங் கிருபனும், கழுத்தில் பூரிசிரவன் சலன் சல்லியன் பகதத்தன் ஜயத்திரதன் என்பவரும், புறத்தில் தம்பிமாருடன் துரியோதனனும், வாலில் விந்த அநுவிந்தரும், வலச்சிறகில் மாகதருங்கலிங்கரும், இடச்சிறகில் பிருகத்பலனும் காரூசரும் மற்றும் பலவீரர் சூழ இருந்தனரென்றும்; அர்த்தசந்திரவடிவத்தினது தென்கோட்டில் பீமசேனனும், வடகோட்டில் அருச்சுனனோடுகூடிய கண்ணனும், மத்தியத்தில் விராடன் துருபதன் திருஷ்டகேது திருஷ்டத்யும்நன் சிகண்டி சாத்தியகி உபபாண்டவர் அபிமந்யு கடோத்கசன் என்னும் இவரோடு யுதிட்டிரனும் மற்றும்பலவீரர் சூழ இருந்தனரென்றும் வியாசபாரதத்திற் கூறியுள்ளது. கருடனது வடிவம்போலப் படைவகுக்கப்படுவது காருடவியூகமும், பாதிச் சந்திரனது வடிவம் போலப்படைவகுக்கப்படுவது அர்த்தசந்திரவியூகமுமாம். கருட சம்பந்தமானது - காருடம்; தத்திதாந்தம். யூகம் - வடசொற்றிரிபு. திருவள்ளுவர் "கால்வல் நெடுந்தேர்" என்றுற்போல, 'காலார்திண்டேர்' என்றார்; இனி, இத்தொடருக்கு- (வேகத்திற்) காற்றையொத்த வலியதேரென்றும் உரைக்கலாம். படைவகுப்பது சேனபதியின் தொழிலாக இருக்கவும் ஸ்ரீக்ருஷ்ணனே அர்த்தசந்திரவியூகம்வகுத்தானென்றது, அவனது திருவுள்ளத்தையறிந்தே சேனபதி வியூகம்வகுத்தமையைக் குறிப்பிக்கும். (111)

3.—இருதிறத்துச்சேனைகளும் பொரத்தொடங்குகையில், பல போர்ப்பறைகளும் முழங்குதல்.

போரேதொடங்கியிருபடையும் புகுந்தபொழுதிலுகந்தொலைத்த
காரேதொடங்கிக்கார்கோள்வெங் கடுங்கால்கலிகொண்டார்ப்பனபோல்

வாரேதொடங்கும்பணைக்குலமு மணிக்காகளமுமுடன்முழங்கப்
பாரேதொடங்கியெவ்வுலகு மடைவேசெவிடுபட்டனவே.

(இ - ள்.) இரு படை உம் - இருதிறத்துச்சேனையும், போர் தொடங்கி - யுத்தத்தைச் செய்யத்தொடங்கி, புகுந்த பொழுதில்- (போக்களத்தில்) அடைந்தபொழுது,—உகம் தொலைத்த - கல் பாந்தகாலத்தில் (உலகத்தை) அழிக்கலுற்ற, கார் தொடங்கி - மேகம்முதலாக, கார்கோள் - கடல்களும், வெம் கடு கால்-கொடிய சண்டமாருதமும், கலி கொண்டு ஆர்ப்பன போல்-முழக்கத்தைக் கொண்டு ஆரவாரிப்பனபோல, வார் தொடங்கும் பணை குலம் உம்- தோற்கயிற்ருற்கட்டப்பட்ட பறைகளின்கூட்டமும், மணி காகளம் உம் - அழகிய எக்காளமென்னும் வாத்யவிசேஷமும், உடன் முழங்க - ஒருங்குஒலிக்க, (அதனல்), பார் தொடங்கி ஏ உலகு உம்- பூமிமுதலாக எல்லாவுலகங்களிலுமுள்ள பிராணிகளும், அடைவு ஏ செவிடு பட்டன-முறையே செவிடாய்விட்டன; (ஏ - று.)—ஏகா ரங்கள் ஆறும் - அசைநிலை.

உகந்தொலைத்த காரே தொடங்கிக் கார்கோள்வெங்கடுங்கால் கலிகொண்டார்ப்பனபோல் என்பதற்கு - சர்வசங்காரகாலத்தில் அனைத்தையும் அழித்தற்பொருட்டு இடைவிடாப்பெருமழை பொழியும் மேகம் முதலாக ஒருங்குபொங்கியெழும் கடல் இடை யாக மிகக்கொடிதாகவீசும் பெருங்காற்று இறுதியாக உள்ள மூன்றுபொருள்களும் முழங்கிப் பேராரவாரத்தை விளைப்பன போலவென்று கருத்து. அளவிறந்த ஓசையைக் கேட்டால் காது செவிடாம்: அன்றியும், உலகத்தில் எங்கும் ஒருவர்பேசும்பேச்சு மற்றவர்க்கு இப்பேராரவாரத்தால் கேட்கவில்லையென்ற கருத்துங் கொள்ளலாம். பல பிராணிகள் அழியுங் கால மாதலின், கல்பாந்த காலத்தை உவமைகூறினது ஏற்கும். கடலினின்று மேகத்தால் (நீர்) கொள்ளப்படுதலால், கடலுக்குக் கார்கோள் என்றுபெயர்; 'கார்முகக்கப்படுதலின், கடல் கார்கோள் என்று பெயர்பெற்றது; ஆகுபெயர்' என்பர் நச்சினர்க்கினியர். தொடக்குதல் - கட்டுதல்: இது - மூன்ருமடியில் எதுகை நயம்நோக்கித் தொடங்கும் என மெலிந்தது. காகளம் - சிறுசின்னம்; இது - இடைக்குறைவிகார மாய்க் காளமெனவும் வழங்கும். உகம் - யுகமென்னும் வட மொழித் திரிபு; இது - இலக்கணையாய், யுகமுடிவையுணர்த்தி, இங்கே, கல்பாந்தகாலத்துக்கு வந்தது. (112)

4.—வீடுமன் துரோணன்முதலியோர், ஸ்ரீக்ருஷ்ணனுடனே அருச்சுன னபிமன்யுஇவர்களை வளைத்தல்.

சொல்லார்கேள்விக்கங்கைமகன் றுரோணன்முதலாமதிரதரு
மெல்லாரிரதகயதுரங்க மேலாளுடனேகாலாளும்
வில்லான்முன்னுட்டமைத்துரந்த வீரன்றனையுஞ்சிறுவனையும்
மல்லால்வஞ்சமல்லடர்த்த மாயன்றனையும்வளைத்தாரே.

(இ - ள்.) சொல் ஆர் - சொற்கள்நிறைந்த, கேள்வி - நூற் கேள்விகளையுடைய, கங்கை மகன் - வீடுமனும், துரோணன் -

துரோணனும், முதல் ஆம் - முதலாகிய, அதிரதர் உம் - அதிரதர்களும், எல் ஆர் - ஒளி நிறைந்த, இரத கய துரங்கம் - தேர்யானை குதிரைகளில், ஏல் - பொருந்தின, ஆளுடனே - வீரர்களொடு, காலாள் உம் - பதாதிவீரர்களும்,—வில்லால் முன் நாள் தமை துரந்த வீரன் தனை உம் - வில்திறமையால் முந்தினநாளில் [இரண்டாநாட்போரில்] தம்மைத் துரத்திய வீரனான அருச்சுனனையும், சிறுவனை உம் - அருச்சுனன் மகனான அபிமன்னுவையும், (அருச்சுனனுக்குப் பாகனாகவுள்ள), மல்லால் வஞ்சம் மல் அடர்த்த மாயன் தனை உம் - இளம்பருவத்திலே மற்போரால் வஞ்சனையையுடைய மல்லர்களை அழித்த ஆச்சரியசக்தியையுடைய கண்ணபிரானையும், வளைத்தார் - சூழ்ந்துகொண்டார்கள்; (எ - று.)

துரோணகும்பத்தில் [பதக்களவுகொண்ட பாத்திரத்தினின்று] பிறந்தமைபற்றி, துரோணன் என்று பெயர்; துரோணம்-பதக்கு: இனி, துரோணமென்று வில்லுக்குப் பெயருண்மையால், வில்வன்மைபற்றிவந்த பெயரென்னவுமாம். கஜம் - கயமென மொழியிடையில் ஜகரம் யகரமாயிற்று. ஏலாள் - வினைத்தொகை; ஏலுதல் -பொருந்துதல். மேலாள் எனப் பதம்பிரித்து உரைத்தல் மோனைத்தொடைக்குச் சிறவாதாம். மல்-மல்லர்க்குத் தொழிலாகு பெயர். கம்ஸசபையிற் கிருஷ்ணபலராமர் செல்லுகையில், அவனால் வஞ்சனையாக ஏவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர் வந்துஎதிர்த்து உக்கிரமாகப் பெரும்போர்செய்ய, அவர்களையெல்லாம் இவ்யாதவவீரர் இருவரும் மற்போரினாலேயே கொன்று வென்றிட்டன ரென்பது கதை. பி - ம்: வீரன்றனையுஞ் சிறுபதத்தே. (113)

5.—துரியோதனன்முதலியோர் வீமனை வளைத்தல்.

சூரர்க்கெல்லாமுதலெண்ணுந் துரியோதனனுந்தம்பியரு
மாரக்கவிகைக்காந்தாரன் முதலாவுள்ளவவனிபருஞ்
சேரத்திரண்டுகரிகளொரு சிங்கம்வளைத்ததெனச்சிங்க
வீரத்துவசனின்றுழிப்போய் வளைத்தார்சமரம்விளைத்தாரே.

(இ - ள்.) சூரர்க்கு எல்லாம் முதல் எண்ணும் துரியோதனன் உம் - எல்லா வீரர்களுக்கும் முதலிலெண்ணப்படுகிற துரியோதனனும், தம்பியர் உம் - (அவனது) தம்பிமார்களும், ஆரம் கவிகை-முத்துக்களாலாகிய குடையையுடைய, காந்தாரன் முதல் ஆ உள்ள அவனிபர் உம் - காந்தாரதேசத்தரசனான சகுனி முதலாகவுள்ள அரசர்களும், சேர திரண்டு - ஒருசேரக்கூடி, கரிகள் ஒரு சிங்கம் வளைத்தது என - பலயானைகள் ஒரு சிங்கத்தைச் சூழ்ந்ததுபோல, சிங்கம் வீரம் துவசன் நின்ற உழி போய் வளைத்தார் - சிங்கத்தின் வடிவத்தையெழுதின வீரத்தன்மைக்கு அறிகுறியான கொடியையுடைய வீமசேனன் நின்றவிடத்திற் சென்று அவனைச் சூழ்ந்துகொண்டு, சமரம் விளைத்தார்-போரைச் செய்தார்கள்; (எ - று.)

வீமனது எளிதில் வெல்லு மாற்றலுக்கும், அவன்முன் பகை வரது வீரமின்மைக்கும் ஏற்ற உவமை கூறினர். சூரர்க்கெல்லாம் முதலெண்ணும் - சூரர்களெல்லாருள்ளுஞ் சிறந்த வென்றபடி. தம்பியர் - துச்சாசனன் முதலியோர். ஆரம் - ஹாரம்: பி-ம்:— காந்தாரர். (114)

6.—இருதிறத்துப்பெருவீரருஞ் செய்த கடும்போர் வருணனே.

வரத்தான்மறையாற்றும்பெற்ற வரிசாபங்கள்பிடித்ததனிக்
கரத்தான்மறைந்ததவரவர்தங் கடைக்கண்படைக்கண்விரைந்துவிடுஞ்
சரத்தான்மறைந்ததகல்வானந் தரணிதலமச்சரந்துணித்த
சிரத்தான்மறைந்ததுகுகுருதிச் சேற்ருன்மறைந்ததிசைநான்கும்.

(இ - ள்.) வரத்தால் - (தேவர்கள் முதலியோர் தந்தருளிய) வரத்தினாலும், மறையால் - மந்திரத்தாலும், தாம் பெற்ற - தாங்கள் பெற்றுக்கொண்டுள்ள, வரி சாபங்கள் - கட்டமைந்த விற்களை, பிடித்த - உறுதியாக ஏந்தியுள்ள, தனி கரத்தால் - ஒப்பற்ற கையினால், அவர் அவர்தம் கடைக்கண் - அந்தந்தப் போர்வீரரது கண்ணின்கடை, மறைந்தது—; படைக்கண் - (வில்லாகிய அந்த) ஆயுதத்தில், விரைந்து விடும் - துரிதமாகப் பிரயோகிக்கிற, சரத்தால் - அம்புகளினால், அகல் வானம் - பரந்த ஆகாயம், மறைந்தது—; அ சரம் - அந்த அம்புகள், துணித்த - அறுத்துத்தள்ளிய, சிரத்தால் - (பகைவர்கள்) தலைகளால், தரணி தலம் - பூமியினிடம், மறைந்தது—; உகு - (அத்தலைகளினின்று) பெருகிய, குருதி சேற்றால் - இரத்தக்குழம்பினால், திசை நான்கு உம் - நாற்றிசைகளும், மறைந்த - மறைந்தன; (எ-று.)

அப்பொழுது போரில் வீரர்பலர் தாம் வரமாக அஸ்திரப்பிரயோகத்துக்கு உரிய மந்திரத்தோடு பெற்றுள்ள விற்களைத் தந்தங்கையில் ஏந்தித்தம்தம் கண்ணுக்குநேராக முன்னேபிடித்து அவற்றில் அளவிறந்த அம்புகளைத்தொடுத்து அவற்றால் எதிரிகள் தலைகளைவீழ்த்தி எங்கும் இரத்தமயமாக்கின ரென்பதாம். மறையால் என்பதற்கு - தக்கமந்திரத்தை ஜபித்த பலத்தால் என்றும், மந்திரோபதேசத்தோடு என்றுங் கருத்துக் கொள்ளலாம். ஒவ்வொருவர்க்கும் அநேகஞ் சிறந்த விற்கள் உண்மை தோன்ற, 'சாபங்கள்' எனப் பன்மையாற் கூறினர். கடைக்கண் - கண்கடை: முன்பின்னுகத்தொக்க ஆரும்வேற்றுமைத்தொகை: இலக்கணப்போலி. படையென்னும்பொதுப்பெயர் - இங்கே சிறப்பாய் வில்லையுணர்த்தி, சுட்டுப்பெயர் மாத்திரமாய் நின்றது. மறைந்த - முற்று. பி-ம்:—திரைநான்கும். (115)

7.—கடோற்கசனம்புகளால் துரியோதனன் பிரஜ்ஞையற்று விழுதல்.

துவசம்பிளந்துதேருருந் துரகம்பிளந்துசுடர்மணிப்பொற்
கவசம்பிளந்துமார்பகமும் பிளந்தாடுருவக்கடோற்கசன்ருன்
நவசந்திரமாமுனைவாளி தொடுத்தான்ருெடுத்தநாழிகையின்
அவசம்பிறந்துதம்பியர்முன் விழுந்தானெருவர்க்கழியாதோன்.

(இ - ள்.) (அப்படிப்பட்ட கடும்போரில் துரியோதனனது), துவசம் - கொடியை, பிளந்து—, தேர் ஊரும் துரகம் - இரதத்தைச் செலுத்துங் குதிரைகளை, பிளந்து—, சுடர் மணி பொன் கவசம் - விளங்குகிற இரத்தினங்களைப் பதித்ததும் பொன்னலாகியதுமான கவசத்தை, பிளந்து—, மார்பு அகம் உம் - மார்பினிடத்தையும், பிளந்து—, ஊடு உருவ - உள்ளே நுழைந்துசெல்லும்படி, கடோற்கசன்—, நவ சந்திரன் மா முனை வாளி - புதுமையான (பாதிச்) சந்திரன் வடிவமான பெரிய [சிறந்த] கூர்நுனியையுடைய அம்புகளை, தொடுத்தான்—; தொடுத்த நாழிகையின் - பிரயோகித்த மாத்திரத்தில், ஒருவர்க்கு அழியாதோன் - எவர்க்குந்தோலாதவனான துரியோதனன், அவசம் பிறந்து - (தன்வசந் தப்பிப்) பரவசமாய் [மூர்ச்சித்து என்றபடி], தம்பியர் முன் - தம்பிமார்களெதிரில், விழுந்தான்—; (எ - று.)

தம்பிமார் பலர் அருகிலிருந்தும் அவன் இப்படி பங்கப்படலாயிற்றென்ற இழிவு தோன்ற, 'தம்பியர்முன் விழுந்தான்' என்றார். சந்திரவாளி-அர்த்தசந்திரபாணம்; பிறைமுகவம்பு எனவும்படும். நவ - ஒன்பது, வாளி எனினும் அமையும். நாழிகையென்னுஞ் சிறப்புப்பெயர், இங்கே பொதுவாய்க் காலமாத்திரத்தை யுணர்த்திற்று. ந+வசம்=அவசம். அவசம் பிறந்து - தன்வசமில்லாமை யுண்டாய்; மெய்ம்மறந்து: வசம் -சுவாதீனம். கடோற்கசன் என்னும் வடமொழிக்கு - குடம்போலும் பெரிய மயிர்முடியுடையவனென்று காரணப்பொருளுரைப்பர்; கட உத் கசம் அன் எனப்பிரியும்: கடம் - குடம், உத் - அதிகம், கசம் - மயிர்முடி. (116)

8.—அப்போது அபிமன்யு துரியோதனனுடைய பாகனை மாய்த்தல்.

நாகந்துவசமெனவுயர்த்தோ னடுங்காமுன்னநண்ணலரை
மாகந்தனிற்சென்றமர்கடந்து வருமைந்துடையோன்றிருமைந்தன்
வேகம்படநின்றொருசமர வேலான்மீண்டுமவ்வேந்தன்
பாகன்றனதுமருமத்திற் பாய்ந்தானவனுமாய்ந்தானே.

(இ - ள்.) நாகம் துவசம் என உயர்த்தோன் - பாம்பைக் கொடியாக உயரத்தில் தூக்கியுள்ள துரியோதனன், நடுங்கா முன்னம் - (இவ்வாறு கடோற்கசனம்பினால்) சோர்தற்கு முன்னே, நண்ணலரை மாகந்தனில் சென்று அமர் கடந்து வரு மைந்து உடையோன் திரு மைந்தன் - (தேவர்களுக்குப்) பகைவர்களான நிவாதகவச காலகேயர்களைப் பெரிய ஆகாய மார்க்கத்திற் போய்ப் போரில்வென்றுவந்த வலிமையையுடைய அருச்சுனனது சிறந்த குமாரனான அபிமந்யு, வேகம் பட நின்று - விரைவாக (எதிரில் வந்து) நின்று, ஒரு சமரம் வேலால் - போருக்குரிய ஒரு வேலாயுதத்தால், மீண்டும்-, அ வேந்தன் பாகன் தனது மருமத்தில் பாய்ந்தான் - அத்துரியோதனராசனுடைய தேர்ப்பாகனது மார்பில் எறிந்தான்; (எறியவே), அவன் உம் மாய்ந்தான் - அந்தச்சாரதியும் இறந்தான்; (எ - று.)

துரியோதனனைத் தேற்றுதற்குப் பாகனது துணையும் இல்லை யானதை இதில் தெரிவித்தார். நண்ணலரை மாகந்தனிற் சென்று அமர்கடந்துவரு மைந்துடையோன் திருமைந்தன்என்ப தற்கு-(இந்திரனுலேவப்பட்டுப்) பகைவர்களாய் வந்து துரியோதன தியர்களைக் கட்டித் தூக்கிக்கொண்டு போன சித்திரசேனன் முதலியவர்களைப் பெரிய வானத்திற் பாய்ந்து போரில் வென்று வந்த வலிமையையுடையனை வீமசேனனது சிறந்தகுமாரனாகிய கடோத்கசனென்று உரைப்பினும் அமையும். மீண்டும்-துரியோதனனைக் கடோற்கசன் வீழ்த்தினதல்லாமல் என்றபடி. நண்ணலர் - பொருந்ாதவர்: பகைவர். மாகம்=மஹாகம்: வடசொல். வேகம்படப் பாய்ந்தான் என இயைப்பினுமாம். (117)

9.—துரியோதனன் சோர்ந்துவீழ்ந்தமைகேட்டு வீடுமன் அருச்சுனனை விட்டு அங்கு எழுதல்.

விழுந்தான்வேலாற்றேர்ப்பாகன் வெஞ்சாயகத்தால்விறல்வேந்தர்
தொழுந்தாளரசன்றானுமுயிர் சோர்ந்தானென்னுந்தொனிகேட்டுச்
செழுந்தார்வாகைவிசயனையுந் திருமாலையும்விட்டொருமுனையா
யெழுந்தான்மந்தாகினிமைந்த னிளைத்தோர்தமக்கோரெயில்போல்வான்.

(இ-ள்.)'தேர் பாகன்-(துரியோதனனது)சாரதி,வேலால்-(பகைவன் எறிந்த) வேலாயுதத்தால், விழுந்தான் - இறந்துவிழுந்திட்டான்; விறல்வேந்தர் தொழும் தாள் அரசன் தான்உம்-வலிமையையுடைய அரசர்கள் பலர் வணங்கும் பாதத்தையுடைய துரியோதனராசனும், வெம் சாயகத்தால்-கொடியபகைவனம்பால், உயிர் சோர்ந்தான்-மூர்ச்சித்தான்,' என்னும்-என்று (சேனைவீரர்) கூவுகிற, தொனி-சத்தத்தை, கேட்டு—,இளைத்தோர் தமக்கு ஓர் எயில் போல்வான் - (போரில்) இளைத்தவர்க்கு ஒருமதில்போலப் பாதுகாவலாகவுள்ளவனாகிய, மந்தாகினி மைந்தன்-கங்காபுத்திரனான வீடுமன், செழு தார் வாகை விசயனைஉம் திருமாலைஉம் விட்டு - (தன்னுலெதிர்க்கப்பட்டுநின்ற) அழகிய வாகைப்பூமாலையைச்சூடிய அருச்சுனனையும் கண்ணனையும் விட்டுநீங்கி, ஒரு முனை ஆய் எழுந்தான் - ஒரேவேகமாய்ப்புறப்பட்டு (த் துரியோதனனிடம்) வந்தான்; (எ - று.)

செழுந்தார்வாகை யென்றது, முந்தினநாளில் வீடுமனாதியோரைவென்ற சயத்தை விளக்குதற்கு. இளைத்தோர்தமக்கோரெயில்போல்வான்-இது இங்கே ஸாபிப்பிராய விசேஷணம்: கருத்துடையடைமொழி. ஸாயகம், த்வநி-வடசொற்கள். திருமால் - திருமகளிடத்து மால்கொண்டவனென்க; மால்-ஆசைப்பெருக்கம்: சிறந்த மாயவனுமாம். மந்தாகிநீ - ஆகாச கங்கைக்குப் பெயர். (118)

10.— வீடுமன் துரியோதனன்மூர்ச்சையைத் தெளிவித்தல்.

வண்டாரலங்கல்வலம்புரியோன் மார்பந்துளைத்தவாளிவழி
கண்டானெடுத்துத்தாழ்ந்ததிருக் கையாலணைத்துக்காற்றேரிற்
கொண்டானுவிதருமருந்து கொடுத்தானவனுங்கொடுத்தமருந்
துண்டானுண்டகணத்தினின்மீண் டுணர்ந்தானுலகேழுடையானே.

(இ - ள்.) (வந்த வீடுமன்),—வண்டு ஆர் அலங்கல் வலம்புரியோன் மார்பம் துளைத்த வாளி வழி கண்டான் - வண்டுகள் ஒலிக்கப்பெற்றநஞ்சாவட்டைப்பூமாலையையுடைய துரியோதனனது மார்பை ஊடுருவின அம்புசென்ற வழியைப் பார்த்தான்; தாழ்ந்த திரு கையால் எடுத்து அணைத்து - நீண்டுதொங்குகிற அழகிய (தன்)கைகளால் (அத்துரியோதனனை) எடுத்துத் தழுவி, கால் தேரில்கொண்டான்-சக்கரவலிமையையுடைய (தனது)தேரின்மீது வைத்துக்கொண்டு, ஆவி தரும் மருந்து கொடுத்தான்-உயிரைத் தரவல்ல திவ்விய ஔடதத்தை (அவனுக்குக்) கொடுத்தான்; உலகு ஏழ் உடையான் அவன்உம்-ஏழு தீவுகளாகிய பூமிமுழுவதையும் (தனதாக) வுடையனான அத்துரியோதனனும், கொடுத்த மருந்து உண்டான்-(வீடுமன்) தந்த மருந்தையுட்கொண்டான்; உண்ட கணத்தினில்-உட்கொண்ட அந்த க்ஷணத்தில்தானே, மீண்டு உணர்ந்தான்-மறுபடி உணர்ச்சிபெற்றான்; (எ - று.)—மூர்ச்சைதெளிந்து முன்போலாயினனென்றபடி. (119)

11.—வீடுமன் துரியோதனனை அணியில் நிறுவியபின் வீமன்முதலியோர் பின்னிடக் கடும்போர்புரிதல்.

மன்னன்றனையச்சந்தனுவின் மைந்தன்பெரும்பேரணிநிறுவிப்
பொன்னங்குன்றேயிவன்சிலையு மிவனேகாணும்புராரியென
மின்னுங்கழற்கால்வீமனுடன்வெம் போர்விளைத்துவிடலைபராய்
முன்னின்றவரும்பின்னிடத்தன் முனைவாளியினல்வினைசெய்தான்.

(இ - ள்.) (இவ்வாறு தேற்றி), மன்னன்தனை - துரியோதனராசனை, அ சந்தனுவின் மைந்தன் - சந்தனுகுமாரனான அவ்வீடுமன், பெரு பேர் அணி நிறுவி-மிகப்பெரிய படைவகுப்பிலே நிறுத்தி, (பின்பு), 'இவன் சிலைஉம் பொன் அம் குன்றுஏ இவன் புர அரிஏ காணும்' என-'இவனது வில்லும் பொன்மயமான அழகிய மகாமேருமலையே: இவனும் திரிபுரத்தையழித்திட்ட பரமசிவனே: பாருங்கள்' என்று (தன்வில்லையுந் தன்னையும்பற்றி அனைவருங்) கூறும்படி, மின்னும் கழல் கால் வீமனுடன்-விளங்குகின்ற வீரக்கழலையணிந்த பாதத்தையுடைய வீமசேனனும், வெம் போர் விளைத்துவிடலையர் ஆய் முன்நின்றவர்உம் - (துரியோதனனோடு) கொடியபோரைச் செய்து இளவீரர்களாய் முன்னேநின்ற கடோற்கசனும் அபிமந்யுவும், பின் இட-புறங்கொடுக்கும்படி, தன் முனை வாளியினால் வினை செய்தான்-தனது கூரிய அம்புகளால் போர்த்தொழிலைப் புரிந்தான்; (எ - று.)

நிறுவி, நிறுவு-பகுதி. பெரும்பேர்-சிறப்புணர்த்தும் அடுக்கு; இனி, மிக்கபுகழையுடைய வென்றும் உரைக்கலாம். காணும் என்பதை முன்னிலையசையென்றும்,தேற்றமென்றும் கொள்ளினுமாம்.

12.—வீடுமன் தருமன்சேனையிற் பலரையும் கொன்றுகொண்டு திரிதல்.

மருமங்களினும்புயங்களினும் வதனங்களினுங்கண்களினுஞ்
செருமுர்படிவெங்கணைமாரி சிந்திச்சிந்திச்சிரந்துணித்துத்
தருமன்சேனைப்பரவையெலாந் தானேயாகித்தலைநாளிற்
பொருமந்தரமால்வரைபோலத் திரிந்தான்வெம்போர்புரிந்தானே.

(இ-ள்.) (வீடுமன்), மருமங்களின்உம்-(எதிரிகளுடைய) மார்புகளிலும், புயங்களின்உம்-தோள்களிலும், வதனங்களின்உம்-முகங்களிலும், கண்களின்உம்-கண்களிலும், செருமும்படி - தைத்து நெருங்கும்படி, வெம் கணை மாரி சிந்தி சிந்தி-கொடிய அம்பு மழையை மிகுதியாகப்பெய்து, சிரம் துணித்து-(அவர்கள்) தலைகளை யறுத்து, தருமன் சேனை பரவை எலாம்-யுதிட்டிரனது சேனாசமுத்திரம் முழுவதிலும், தான் ஏ ஆகி-தானொருவனேயாய், தலைநாளில் பொரு மந்தரம் மால் வரை போல திரிந்தான்-முன்னொருகாலத்தில் (திருப்பாற்கடலில்)பொருந்திய [கடைந்த] பெரிய மந்தரகிரிபோலச் சுழன்று, வெம் போர் புரிந்தான்-கொடியபோரைச் செய்தான்; (எ - று.)—முதலடியிற்கூறிய நான்கிடமும், அம்பெய்தற்குச் சிறந்த இலக்குக்களாம். செருமும், செருமு-பகுதி. மர்மம், வதநம், மந்தரம் - வடசொற்கள். (121)

13.—வீடுமன் மும்முரமாகக் கொன்றுகொண்டிருக்கவும், அருச்சுனன் கண்டுங் காணான்போலிருத்தல்.

மலையொத் ததிருங் கடகளிறும் வயமா வணியு மான்றேருந்
தொலையத் தொலைய யாவரையுஞ் சுடுவெங் கணையாற் றுரந்துதுரந்
தலையத் தரங்க மெறிகடல்வாய் வடவா னலம்போ லவனின்ற
நிலையைக் கண்டுங் காணான்போ னின்றான் விசய னிகரில்லான்.

(இ - ள்.) மலை ஒத்து அதிரும் கடகளிறுஉம் - மலைபோல நின்று கர்ச்சிக்கும் மதயானைகளும், வய மா அணிஉம் - வலிய குதிரைவரிசைகளும், மான் தேர்உம் - குதிரைகளைப் பூட்டிய தேர்களும், தொலைய தொலைய-மிகுதியாக அழியும்படி, யாவரைஉம் - (பகைவர்கள்) எல்லோரையும், சுடு வெம்கணையால் துரந்து துரந்து - அழிக்கவல்ல கொடிய அம்புகளால் துரத்தித்துரத்தி, அலைய தரங்கம் எறி கடல்வாய் வடவானலம் போல் - அலையும்படி அலைகளைவீசுகிற கடலில் படபாமுகாக்நிபோல, அவன் நின்ற - அவ்வீடுமன் (பாண்டவசேனை மத்தியில்) நின்ற, நிலையை-தன்மையை, கண்டுஉம் - பார்த்தும், நிகர் இல்லான் விசயன் - ஒப்பற்றவனான அருச்சுனன், காணான் போல் நின்றான் - பாராதவன் போல(ப் போர் செய்யாது திகைத்து) நின்றான், (எ - று.)

படபாநலம் - வடசொற்றொடர்; கடலினிடையே பெண்குதிரையொன்றின் முகத்தி லுள்ளதும், மழை முதலியவற்றால் வருகிற நீரினால் கடல் பொங்காதபடி அந்நீரை உறிஞ்சுவதும், யுகாந்தகாலத்தில் அங்குநின்று எழுந்து உலகங்களை யொழிப்பதுமாகிய தீ: படபா - பெண்குதிரை; அநலம் - நெருப்பு. நிகரில்லான் காணான்போல் நிற்பதே! என்றபடி. இனி, நிகரில்லான் - இகழ்ச்சிக்குறிப்பினதுமாம். (122)

வேறு.

14.—வீடுமன் கடும்போர்புரிகையில் பொராதிருந்த அருச்சுனனை ஸ்ரீகிருஷ்ணன் சினந்து, சக்கரமெடுத்தல்.

கானெரி துற்றென வீடும னிப்படி காதிம லைந்திடவு
மானநி னைத்திலை சாபமெ டுத்திலை வாளிதொ டுத்திலைநீ

யேனிது னக்கென மாயனு ரைத்தவ னேறிர தத்திழியா
வானதெ னக்கினி யாகவெ னத்தனி யாழியெ டுத்தனனே.

(இ - ள்) (அப்பொழுது), 'கான் எரி துற்று என - காட்டில் தீப்பற்றி யெரித்தாற்போல, வீடுமன் இ படி கா திமலைத்திட உம்- பீஷ்மன் இவ்வாறு தாக்கிப்போர்செய்யவும், நீ—, மானம் நினைத்திலை - மானத்தை(ப் பாதுகாக்க) எண்ணினையில்லை; சாபம் எடுத்திலை - வில்லை (க் கையில்) ஏந்தினையில்லை; வாளி தொடுத்திலை - அம்பை யெய்தாயுமில்லை; உனக்கு ஏன் இது - உனக்கு ஏன் இந்தக்குணம்?' என - என்று, மாயன் - கண்ணபிரான், உரைத்து - (அருச்சுனனைநோக்கிச்) சொல்லி, அவன் ஏறு இரதத்து இழியா-அவ்வருச்சுனன் ஏறியுள்ள தேரினின்று (தான்) இறங்கி, இனி எனக்கு ஆனது ஆக என - 'இப்பொழுது எனக்கு ஆனது ஆகட்டும்' என்று கூறி, தனி ஆழி எடுத்தனன் - ஒப்பற்ற (தனக்குரிய சுதரிசனமென்னுஞ்) சக்கராயுதத்தை ஏந்தியருளினான்.

இங்ஙனம் செய்தது, எதிர்ப்பவர் இல்லாமல் வீடுமன் மிகுதியாகப் பொருத போரை நோக்கி வரம்புகடந்தெழுந்த ஆவேசத்தாலென்க. 'போரிற்படையெடேன்' என்று முன் துரியோதனனுக்குக் கூறியிருந்த சபதம் தவறுதலால், கண்ணன் 'தனக்கு எந்தப்பழி வந்தாலும் வருக' என்று 'ஆன தெனக்கினியாக' என்றான். கீழ் வாசுதேவனைப்படைத்துணையழைத்த சருக்கத்தில் "போரிற் படையெடா தொழிமின்" என்று வேண்டிய துரியோதனனுக்கு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி "நடையுடைப் புரவித் திண்டேர் நானிவற் கூர்வ தன்றி, மிடைபடையேவிநும்மோ டமர்செயேன்வேந்த" என்று வாக்குத்தத்தஞ்செய்ததை இங்ஙனந்தவறலாமோ வெனின்;—போரில் ஆயுதமெடுப்பதில்லையென்று கண்ணன் கூறியதைக் கேள்விப்பட்டு வீடுமன் கண்ணனைத் தான் போரில் ஆயுதமெடுப்பிப்பதாகத் துரியோதனனுக்குமுன் பிரதிஜ்ஞைசெய்திருந்தனனாதலால், எம்பெருமான் 'தனதுசபதந் தவறினும் தவறுக; தனது அன்பனாகிய வீடுமனது சபதம் பொய்க்கலாகாது' என்று தன் திருவுள்ளத்தி லெழுந்த திருவருளால் இப்படிச்செய்தான். பரமாத்மாவாகிய கண்ணன் விரதந்தவறினால் அகர்மவசியனும் நிரங்குசஸ்வதந்திரனுமான அவனுக்கு வருவதொருகுற்றமில்லை; ஆத்மகோடிகளில் ஒருவனான வீடுமன் விரதந்தவறினாலோ அத்தீவினையால் மறுமையில் யமதண்டனைக்கு உள்ளாவன்: ஆதலால், தனது சிறந்தபக்தனும் பரமபாகவதர்களில் ஒருவனாக எண்ணப்படுபவனும் ஆகிய வீடுமனை ஊழ்வினையொழித்துப் பரமபதத்துச் சேர்ப்பிக்கவேண்டு மென்ற பெருங்கருணையே இங்ஙனம் வரம்புகடந்ததற்கு ஏற்ற காரணமாம். இதனால், தனது வாய்மையைத் தவறியாயினும், அடியார்களுக்கு வருகிற ஆபத்தைப் போக்கிக் காத்தருளுகிற பகவானது பேரருளுடைமை விளங்குகின்றது. பி-ம்:—மலைத்திடவே.

இதுமுதற் பத்துக்கவிகள் - ஈற்றுச்சீரொன்று கூவிளங்காய்ச்சீரும், மற்றையைந்துங் கூவிளச்சீர்களுமாகிய அறுசீராசிரியச் சந்தவிருத்தங்கள். (123)

15.—அப்போது அருச்சுனன் தொடர்ந்துசென்று போர்புரியாதபடி ஸ்ரீக்ருஷ்ணன்தாளிணை பற்றுதல்.

ஆழியெடுத்தனன்வீடுமனைப்பொ ருதாவியழித்திடுவா
னூழிமுகக்கனல்போலெழுமப் பொழுதோடியருச்சுனனுந்
தாழிதனக்குமுன்வீடுகொடுத்தரு டாளிணையைப்பிடியா
வாழியுனக்கிவனோவெதிர்வித்தக மாயவெனத்தொழுதான்.

(இ - ள்.) (இங்ஙனம் கண்ணபிரான்), ஆழி எடுத்தனன் - சக்கரத்தை யேந்திக்கொண்டு, பொருது - போர்செய்து, வீடுமனை ஆவி அழித்திடுவான் - பீஷ்மனைக்கொல்லும்பொருட்டு, ஊழி முகம் கனல் போல்-பிரளயகாலத்துத் தீப்போல, எழும் அப்பொழுது-புறப்பட்டுச்சென்றஅந்தச்சமயத்தில், அருச்சுனனும்—, ஓடி - (அவ்வெம்பெருமானைத் தொடர்ந்து) விரைந்துசென்று, தாழிதனக்கு முன் வீடு கொடுத்தருள் தாள் இணையை பிடியா - தயிர்த்தாழிக்கு முன்னே முத்தியைக்கொடுத்தருளின (அவனது) உபயபாதத்தை(த் தன்கைகளாற்) பிடித்துக்கொண்டு,'வித்தக - ஞானசொரூபியானவனே! மாய - ஆச்சரியசக்தியுடையவனே! வாழி-வாழ்வாயாக; உனக்கு இவன்ஓ எதிர் - (வரம்பிலாற்றலையுடைய) உனக்கு இவ்வீடுமனோ எதிராவன்?' என-என்றுகூறி, தொழுதான்-நமஸ்கரித்தான்; (எ-று.)

'அருச்சுனனால் வீடுமனை வெல்லமுடியாமற் போகவே, கண்ணன் தன் சபதந்தவறியாயினும் சக்கரமெடுத்துப் போர்புரியலாயிற்று' என்று தனக்கு உண்டாகும் பெரும்பழிக்கு அஞ்சி அருச்சுனன் கண்ணனைப் போர்புரியாதபடி திருவடிபிடித்து வேண்டுபவனானன். வரையறைகடந்த கண்ணனது பெருங்கருணைக்குக் கண்ணெச்சில்பட்டு ஏதேனுந் தீங்குவிளையுமோ வென்று தன் மனத்தில் திடுக்கென்று உண்டான சங்கையால், அந்தத் திருஷ்டிதோஷம் உண்டாகாமலிருக்கவேண்டுமென்று வாழியென வாழ்த்தினான்; இங்ஙனம்பகவானை வாழ்த்துதல், பொங்கும் பரிவையுடைய பெரிய பக்தர்களது மரபு. அதிக விருப்பத்தால் அவசியமில்லாதவிடத்திலும் பயசங்கையுண்டாதல், இயல்பு. இவனோ என்ற ஓகாரம்-இழிவுசிறப்போடு எதிரல்லனென எதிர்மறையையுங் குறிக்கும்.

'தாழிதனக்குமுன்வீடுகொடுத்தருள் தாளிணை' என்பதிலடங்கியசரிதை:— ஒருநாள் கண்ணன் யசோதை பால்கொடாததற்காக வெகுண்டு தயிர்த்தாழிகளை யுடைத்து உருட்டிவிட்டு, அதுகண்டு தன்னையடிக்கக்கோலெடுத்து வந்த அவளுக்கு அகப்படாதபடி ததிபாண்டனென்பவனது மனையிலே மறைய, அவன் கண்ணனது திருவடித்தாமரைகளைப் பிடித்துக்கொண்டு 'எனக்கு முத்தியளிக்கவேண்டும்' என்ன, கண்ணன் 'தாய் என்னை அடிக்க வருகிறாள்: என் காலை விடு' என்று சொல்ல, அவன் 'நீ எனக்கும் எனக்குவேண்டிய இருபத்தெட்டுமனையிலுள்ளோருக்கும் எனது தயிர்த்தாழிக்கும் பரமபதம் கொடாயானால், யான் உன்காலைவிடாமல்

உன்னையசோதைதகையிற் காட்டிக்கொடுப்பேன்' என்று கூற, ஸ்ரீகிருஷ்ணன் உடனே அவன் வேண்டுகோளின்படியே முத்தியருளிச் சென்றனனென்பது. ''பந்தித்தடம்புடைசூழரங்கா ததிபாண்டனுன்னைச், சந்தித்த நாண்முத்திபெற்றதென்னோதயிர்த் தாழியுமே'' என்றார் ஐயங்காரும். (124)

16.—ஸ்ரீக்ருஷ்ணன்ஆயுதமெடுத்தது கண்டு நடுங்கி வீடுமன் தன்தேரினின்று இறங்குதல்.

வாசவன்முற்பெறு காளைதொழத்தொழ மாறுபடச்சினவுங்
கேசவனிப்படி மேல்வருகிற்பது கேவலமுற்றுணரா
நாசநமக்குறு காலநணித்தென நாடிநடுக்கமுடன்
தேசணிபொற்றட மேருவெனத்திரி தேரினைவிட்டிழியா.

இதுமுதல் நான்கு கவிகள் - குளகம்.

(இ - ள்.) முன் வாசவன் பெறு காளை - முன்னே இந்திரன் பெற்ற புத்திரனான அருச்சுனன், தொழ தொழ - மிகுதியாக வணங்கவும், (தணியாமல்), மாறுபட சினவும் - பகைமைதோன்றக் கோபங்கொள்ளுகிற, கேசவன் - கண்ணபிரான், இ படி மேல் வருகிற்பது - இவ்வாறு தன்மீது (எதிர்த்துப் போருக்கு) வருவதை, கேவலம் உற்று உணரா - நன்றாக உற்றுப்பார்த்து அறிந்து,—(வீடுமன்),—நமக்கு நாசம் உறு காலம் நணித்து என நாடி - 'நமக்கு அழிவு நேருங் காலம் கிட்டியது' என்று ஆலோசித்து, நடுக்கமுடன் - அச்சத்துடனே, தேசு அணி பொன் தட மேரு என திரி தேரினைவிட்டு இழியா - ஒளிபொருந்தின பொன்மயமான பெரிய மேருமலைபோலத் திரிகின்ற தனது இரதத்தை விட்டுஇறங்கி,—(எ - று.)—'இழியா' என்றது, ''எனப் பல நாடியுரைத்தனன்'' (19) என்பதனோடு முடியும்.

உள்ளமும் உடம்பும் நடுங்குதல், அச்சமென்னுஞ் சுவைக்குரிய மெய்ப்பாடாம். வாஸவன் என்னும் வடசொல்லுக்கு-அஷ்டவசுக்கள் தலைவனென்றும், எல்லா ஐசுவரியமுமுடையவனென்றும் பொருள்; வசு - தேவர்களில் ஓர் இனம்: அல்லது, செல்வம். கேசவன் - பிரமனையும் உருத்திரனையும் தன் அங்கத்திற் கொண்டவனென்று பொருள்படும்: க - பிரமன், ஈச-சிவன்; ''பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்து'' என்றார் திருமங்கையாழ்வாரும்; இனி, இதற்கு - அழகிய மயிர்முடியையுடையவனென்றும், கேசியென்னும் அசுரனைக்கொன்றவனென்றும் பொருள்கள் உண்டு. கேவலம் - தனிமையாக என்றும், தனது சிறந்த ஞானத்தாலென்றும் பொருள் கொள்ளலாம். நமக்கு - தனித்தன்மைப் பன்மை. (125)

17.—மூன்றுகவிகள்-வீடுமன் கண்ணனைப் பலவாறு துதித்ததைக் கூறும்.

ஆரணகற்பித மாதவவச்சுத வாழியிடைத்துயிலுங்
காரணசிற்குண ரூபமலர்க்கொடி காதன்மனத்துறையும்

நாரணவற்புத வானவருக்கொரு நாயகநிற்பணியும்
வாரணமுத்தி விசாலதலத்திடை வாழ்வுறவைத்தவனே.

(இ - ள்.) ஆரணம் கற்பித - வேதங்களிற்கூறிய நியமத்தை யுடையவனே! மாதவ - மாதவனென்னும் பெயரையுடையவனே! அச்சுத - அச்சுதனென்னும் பெயரையுடையவனே! ஆழியிடை துயிலும் - கடலிலே அறிதுயிலமர்ந்தருளும், காரண - பிரபஞ்ச காரணனே! சித் குண ரூப - ஞானத்தையே குணமாகவும் வடிவமாகவும் உடையவனே! மலர் கொடி காதல் மனத்து உறையும் - செந்தாமரைமலரில் வாழும் பூங்கொடிபோல் மெல்லிய வடிவமுடைய திருமகளது அன்புள்ள மனத்தில் (எப்பொழுதும்) வசித்தருளும், நாரண - நாராயணனென்னும் பெயரையுடையவனே! அற்புத - ஆச்சரியசக்தியுடையவனே! வானவருக்கு ஒரு நாயக - தேவர்கட்கு ஒப்பில்லாத தனிநாயகனே! நின் பணியும் வாரணம் - உன்னை வணங்குவதொரு யானையை, முத்தி விசால தலத்திடை - மோக்ஷமாகிய பெரிய உலகத்தினிடத்தே, வாழ்வு உற - பேரின்பவாழ்க்கையையடையும்படி, வைத்தவனே - சேர்ப்பித்தருளியவனே! (எ - று.)

ஆரண கற்பித என்பதற்கு - வேதமந்திரங்களால்(ஓரிடத்து) ஆவாகனஞ் செய்யப்படுபவ னென்றும் பொருள்கொள்ளலாம். மாதவன் - திருமகள்கணவன். அச்சுதன் - தன்னைச்சரணமடைந்தவர்களை நழுவவிடாதவன் அல்லது அழிவில்லாதவன். திருப்பாற்கடலிலும் மற்றைக்கடல்களிலும் பிரளயசமுத்திரத்திலும் எம்பெருமான் பள்ளிகொண்டு யோகநித்திரை செய்தருளுகின்றனனென நூல்கள் கூறும். கொடி - உவமையாகுபெயர். சித்குணரூப, அத்புத, நாயக, வாரணம், முக்திவிஸாலதலம்-வடசொற்கள். ஒருநாயகன் - ஆதிநாயகன். நிற்பணியும் - "நின்னீறியல்பாம்" என்ற விதிக்கு மாறாக னகரந் திரிந்தது; இரண்டாம் வேற்றுமைச் சிறப்புவிதியால். முக்தி - (இவ்வுலகப்பற்றுக்களை) விட்டு அடையுமிடமெனக் காரணப்பெயர்; 'வீடு' என்னுந் தமிழ்ப் பெயரும் இதன்பொருள் கொண்டதே.

'வாரணம் முத்திதலத்து வாழ்வுறவைத்தவன்' என்பதிலடங்கியகதை:— இந்திரத்யும்நனென்னும் அரசன் மிக்க விஷ்ணுபக்தியுடையவனாய் விஷ்ணு பூஜைசெய்கையில், ஒருநாள் அகஸ்தியமகாமுனிவர் அவனிடம் எழுந்தருள, அப்பொழுது அவன் கருத்து முழுவதையும் திருமாலைப்பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனால் அம்முனிவர்வருகையை யறியாமல் அவருக்கு உபசாரமொன்றுஞ் செய்யாதிருக்க, அவர் தம்மை அலட்சியஞ்செய்தா னென்று கருதிக் கோபித்து 'நீ யானைபோலச் செருக்குற்றிருந்ததனால், யானையாகக் கடவை' என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒருகாட்டில் யானையாகத்தோன்றினனாயினும், முன்செய்த விஷ்ணுபக்தியின் மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந்தாமரை மலர்களைக்கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசித்துவருகையில், ஒருநாள் பெரியதொரு தாமரைத்தடாகத்தில் அருச்சனைக்காகப்

பூப்பறித்தற்குப் போயிறங்கினபொழுது, அங்கே (முன்னீர்நிலையில் நின்று தவஞ்செய்துகொண்டிருந்த தேவலரென்னும் முனிவரது காலைப் பற்றியிழுத்து அதனாற் கோபங்கொண்ட அவரது சாபத்தால்) பெரிய முதலையாய்க் கிடந்த ஹூஹூவென்னுங்கந்தருவன் அவ்யானையின்காலைக் கௌவிக்கொள்ள, அதனை விடுவித்துக் கொள்ளமுடியாமல் கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்று கூவியழைக்க, உடனே திருமால் ஸ்ரீகருடவாகனாரூடராய் அங்கு எழுந்தருளித் தமது சக்கரத்தைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன்வாயினின்றும் விடுவித்து இறுதியில் அதற்கு முத்தியை அருள்செய்தனரென்பது. (126)

18. ஆவியழித்தனை தூணிலுதித்தட லாடகனைத்தலைநாண்
மாவலியைச்சிறு மாணுருவத்துடன் வார்சிறைவைத்தனையால்
ஏவிலரக்கனை வீழவடர்த்தனை யானொரிலக்கெனவோ
நீவலியிற்சின மூளுமனத்தொடு நேமியெடுத்ததுவே.

(இ - ள்.) தலை நாள் - முன்னொருகாலத்தில், தூணில் உதித்து - ஒரு கம்பத்திலே தோன்றி, அடல் ஆடகனை-வலிமையையுடைய இரணியனை, ஆவி அழித்தனை - உயிர்நீக்கினாய்; சிறு மாண் உருவத்துடன் - சிறிய பிரமசாரி ரூபத்தோடு (சென்று), மா வலியை - மகாபலிசக்கரவர்த்தியை, வார்சிறை வைத்தனை - நீண்டசிறையிலே வைத்திட்டாய்; அரக்கனை - இராக்கதராசனை இராவணனை, வீழ-இறந்துவிழும்படி, ஏவில்-அம்பினால், அடர்த்தனை-அழித்தாய்; நீ - (இப்படிப்பட்ட பேராற்றலையுடைய) நீ, வலியின்-வலிமையொடும், சினம் மூளும் மனத்தொடு - கோபம் பற்றின மனத்துடனும், நேமி எடுத்தது - (போர்செய்தற்குச்) சக்கராயுதத்தைக் கையில் ஏந்தினது, யான் ஒர் இலக்கு எனவோ - நான் (உனக்கு ஏற்ற) ஒரு லக்ஷ்யமென்று கருதியோ? (எ - று.)— ஆல், ஏ - ஈற்றசைகள்.

இந்திரன்முதலிய தேவர்களுட்பட மூவுலகத்தாரையும் வென்று அடக்கியாண்ட இரணியன் மகாபலி இராவணன் என்னும் இவரை முன்பு ஒவ்வொரு அவதாரத்தில் தந்திரமாக எளிதில் வென்றுஒழித்த உனது திவ்விய சக்திக்குச் சாதாரண மனிதரில் ஒருவனான யான் சிறிதும் எதிர்த்துப் பொருதற்குஏற்ற இலக்கல்லனென எம்பெருமானது பெருமையும் தனதுசிறுமையுந் தோன்ற இங்ஙனங்கூறித் துதித்தான் வீடுமனென்க. ஆடகன் - ஹாடகனென்னும் வடமொழித் திரிபு; பொன்னிறமானவனென்று இதற்குப் பொருள்: ஹாடகம் - நால்வகைப் பொன்களுள் ஒன்று; (மற்றவை - கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் எனப்படும்.) இரணியன் இரணியகசிபு என்ற பெயர்களுக்கும் பொருள் இதுவேயாதலால், இரணியனை 'ஆடகன்' என்றார்; இரணியம் - பொன். தலைநாள் என்பதை மற்றையவற்றிற்குங் கூட்டுக. மாவலி, உரு, இலக்கு - வடசொற்சிதைவுகள். மாணியென்பது இங்கு விகாரப்பட்டு 'மாண்' என நின்றது. இனி, மாணுருவம் என்பதற்கு -

பண்புத்தொகையாக, மாட்சிமைப்பட்ட ரூபமென்று உரைப்பாருமுளர். சிறை - காவலிடம்: பாதாளத்தில் பலிசக்கரவர்த்தியுள்ளவிடத்துக்கு விஷ்ணு காவலாக எப்பொழுதும் வாயிலி லிருக்கிறரென வுணர்க. அதனையே 'மூன்றடி தருகிறேன் றுமென்றாய், கொடுத்தவிரண்டடியொழியமற்றை யோரடி நிலத்தையுந்தாராய்' என்று திருமால் பலியைக் கடன்காரர்க்குரிய சிறையிலே யிட்டதாகக் குறித்தார்: "ஒருகுறளா யிருநிலம் மூவடிமண் வேண்டியுலகனைத்து மீரடியா லொடுக்கி யொன்றுந், தருகவெனு மாவலியைச் சிறையில் வைத்த தாடாளன்" என்னும் ஆழ்வாரருளிச் செயலை இங்கே யறிக. ஏவில், இல் - ஐந்தனுருபு ஏது. இனி, ஏ வில் எனப்பிரித்து, அம்பையும் வில்லையு முடைய என்றும் பொருள் கொள்ளலாம்.

முதலடியிற்குறித்தகதை:—தேவர் மனிதர் விலங்கு முதலிய பிராணிகளாலும், ஐம்பெரும் பூதங்களாலும் தனக்கு மரணமில்லாதபடி அளவற்றவரங்களைப்பெற்றுத் தேவர்முதலியவர்க்குங் கொடுமை யியற்றித் தன்னையே கடவுளாக வணங்கச் செய்து வந்தவனும், இரணியாக்கனது உடன்பிறந்தவனு மான இரணியன் தன்புத்திரனான பிரகலாதாழ்வான் தன்பெயர் சொல்லிக் கல்விகற்காமல் நாராயணநாமஞ் சொல்லி வரவே அவனைக் கொல்லுதற்கு என்ன உபாயஞ் செய்தும் அவன் பகவானருளால் இறந்ிலனாக, இரணியன் மகனைநோக்கி 'நீ சொல்லும் நாராயணனென்பான் எங்குஉளன்? காட்டாய்' என்ன, அப்பிள்ளை "சாணினு முளனோர் தண்மை யணுவினைச் சதகூறிட்ட, கோணினு முளன் மாமேருக் குன்றினுமுள னிந் நின்ற, தூணினுமுள னீசொன்ன சொல்லினு முளன்இத் தன்மை, காணுதி விரைவின்" என்று சொல்ல,உடனே இரணியன் நன்றென்று சினந்து தூணைப் புடைக்க, அதில்நின்றும் பகவான் மனிதரூபமுஞ் சிங்கவடிவமுங் கலந்த நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றித் திருக்கைந்நகங்களால் அவன்மார்பைப் பிளந்து அழித்திட்டாரென்பது. (127)

19. வானரகிற்புகு தாமலெனக்குயர் வானுலகைத்தருவான்
நீனினைவுற்றது போனபிறப்பிலென் னீடுதவப்பயனே
யானுமினிப்பிற வாமலளித்தரு ளீசவெனப்பரவா
ஞானமனத்தொடு நாகுழறப்பல நாடியுரைத்தனனே.

(இ - ள்.) வான் நரகில் புகுதாமல் - (மறுமையில் நான்) பெருநரகத்திற் செல்லாதபடி, உயர் வான் உலகை எனக்கு தருவான் - சிறந்த முத்தியுலகத்தை எனக்குக் கொடுத்தருள, நீ நினைவு உற்றது - நீ எண்ணியது, போனபிறப்பில் என் நீடு தவம் பயன்ஏ - முற்பிறப்புக்களில் யான் செய்திருந்த மிகுந்த தவத்தின் பலமேயாம்; (ஆதலால்), ஈச - கடவுளே! யான்உம் இனிபிறவாமல் அளித்தருள் - (எளியவனான) நானும் இனிப் பிறப்பெடுக்காதபடி (அப்பரமபதத்தைத்) தந்தருள்வாய், என - என்றுசொல்லி, பரவா-துதித்து, ஞானம் மனத்தொடு -தத்துவஞானம்பொருந்திய சுத்தசித்தத்துடனே, நா குழற - (தேகம் பக்திமிகுதியால் பரவசப்

பட்டமைபற்றி) நாக்குத் தடுமாற, பல நாடி உரைத்தனன் - (மற்றும்) பல துதிமொழிகளையும் ஆராய்ந்து கூறினான்,(வீடுமன்.)

எம்பிரானது திருவுள்ளத்துக்கு எதிரானவர் நரகமடைவ ரென்பதும், எப்படிப்பட்டவராயினும் எம்பிரானாற் கொல்லப்படு வாராயின் அவர்செய்த கருமத்துக்கெல்லாம் அக்கொலைமாத் திரமே தண்டனையாய்முடிய அவர்கள் கருமமொழிந்து உடனே முத்திபெறுவ ரென்பதும் ஆகிய நூற்கொள்கைகளைக் கருத்தி னுட்கொண்டும், தன்மீது சினந்து எம்பிரான் கையிற் சக்கர மேந்திப் போர்செய்யவந்ததனால் தனக்கு இனி வெகுவிரைவில் அவ்வெம்பிரானால் மரணம்நேர்தல் திண்ண மெனக் கருதியும், இங்ஙனம் வீடுமன் கூறியது. இங்ஙனம் அவனால் அழித்தருளப் பட்டு முத்திபெறுதற்கேற்றதவத்தைத் தான் இப்பிறப்பில் செய்ததில்லை யென்று எண்ணி, 'போனபிறப்பிலென்னீடுதவப் பயனே' என்கிறான். ஏ - தேற்றம். நீடுதவம் - நெடுங்காலஞ்செய்த தவமென்க. இருவினையும் அற்று முத்திபெற்றவர்க்கு மீளவும் பிறப்பெடுத்தல் இல்லை யாதலால், 'இனிப்பிறவாமலளித்தருள்' எனப்பட்டது. யானும் என்ற உம்மை - தனது தாழ்வைவிளக்கு தலால் இழிவுசிறப்பாவதோடு, கீழ்க்கவியில் வந்த இரணியனாதி யோரை நோக்குதலால் இறந்ததுதழுவிய எச்சமுமாம். பி - ம்— மாநரகில், யானரகில், நாகுழறிப் பலநாமம். (128)

20.—அருச்சுனன்வேண்டுகோளினால் ஸ்ரீக்ருஷ்ணன் தேரின்மீது ஏறுதல்.

ஆரியனப்பொழு தாறினனிற்கவு மாடலருச்சுனனுந்
தாரவடிக்கணை யாயிரமுய்ப்பதொர் சாபம்வளைத்ததிரா
யாரெதிர்நிற்பினும் யாவர்தடுப்பினும் யானினியிப்பகலே
சேரமுருக்குவ னேறுகெனத்தன தேர்மிசைபுக்கனனே.

(இ - ள்.) அ பொழுது - அவ்வாறு வீடுமன் துதித்த பொழுது, ஆரியன் - யாவரிலுஞ்சிறந்த கண்ணபிரான், ஆறினன் நிற்கஉம் - (கொண்ட கோபந்) தணிந்து நின்றவளவிலே, ஆடல் அருச்சுனன்உம் - வெற்றியையுடைய அருச்சுனனும், தாரை வடி கணை ஆயிரம் உய்ப்பது ஓர் சாபம் வளைத்து அதிரா - ஒழுங்காக வுள்ள கூரிய மிகப்பல அம்புகளை ஒருங்குசொரிவதான ஒப்பற்ற (தனது காண்டீவமென்னும்) வில்லை வளைத்து ஆரவாரஞ்செய்து, 'இனி - இனிமேல், யார் எதிர் நிற்பின்உம் - (எனது) எதிரிலே யார் வந்துநின்றாலும், யாவர் தடுப்பின்உம் - (என்னை) எவர் தடுக்க முயன்றாலும், (சிறிதும் பின்வாங்காமல்), யான்—, இ பகல்ஏ - இந்த மத்தியானகாலத்திலேயே, சேர முருக்குவன் - (அவரெல்லோரையும்) ஒருசேர அழிப்பேன்; ஏறுக - (நீ எனது தேரில் முன்போல) ஏறியருள்வாயாக', என - என்று (கண்ணனைப்) பிரார்த்தித்து, தன தேர்மிசை புக்கனன் - தனது இரதத் தின்மேல் ஏறினான்; (எ - று.)

யாரெதிர்நிற்பினும் யாவர்தடுப்பினும் என்றதனால், எத்துணை வலியராயினும் எவ்வகை உறவினராயினும் யான் இப்பொழுது

எதிரிகளை அழியாது விடேனென்றவாறு. அருச்சுனன் = அர்ஜ்ஜுநன்; வடசொற்றிரிபு: இதற்கு-வெண்ணிறமுடையவனென்பது பொருள்: இது - முதலில் இந்நிறமுடைய கார்த்தவீரியமகாராசனுக்குப் பெயராயிருந்து, பின்பு, அவனைப்போன்ற சௌரிய தைரியங்களையுடைய பார்த்தனுக்கு இட்டுவழங்கப்பட்டது; இது-உவமவாகுபெயரின்பாற்படும். பார்த்தன் கருநிறமுடையவனாதலால், அவனுக்கு அருச்சுனனென்பது நிறம்பற்றிவந்த பெயரென்றல் பொருந்தாது. இனி, "குருச்சுடர் மணிசெய் பச்சைக் கொழுந்துடற் பொலிவு நோக்கி, அருச்சுன னென்ப ரீதென்னரும் பெயர் வந்த பான்மை" என்னும் நல்லாப்பிள்ளைபாரதச் செய்யுளைக்கொண்டு, அருச்சுனனென்பது - பசுமைநிறம் பற்றிவந்த பெயரென்றலு மொன்று. அன்றியும், பார்த்தன் (பார்வதிபோல) முதலில் [பிறந்தபொழுது] வெண்ணிறமுடையவனாயிருந்து உடனே கருமைநிறமடைந்தானென்று கூறுவதுமுண்டு. தாரை-கூர்நுனியுமாம். தாரையுய்ப்பது-மழைபொழிவதுபோலமிகுதியாக எய்வதுஎனவும் கொள்ளலாம். அதிரா - நாணேற்றி அந்நாணியைக்கைவிரலால்தெறித்து டங்காரத் தொனியையுண்டாக்கிச் சிங்கநாதமுஞ் செய்து என்க. (129)

21.—இதுவும் அடுத்த கவியும்.அருச்சுனன் செய்த கடும்போரைத் தெரிவிக்கும்.

நீறுப டுத்தினன் மாமகு டத்திர ணீணில வைப்படையச்
சேறுப டுத்தினன் மூளைக ளிற்றிசை சேர்குரு திப்புனலால்
ஆறுப டுத்தின னோரொரு வர்க்கெதி ராயிரம் வைக்கணையால்
ஈறுப டுத்தினன் வீடுமன் விட்டவர் யாவர்பி ழைத்தவரே.

(இ - ள்.) (உடனே அருச்சுனன்),—மா மகுடம் திரள் - (பகையரசர்களது) பெரிய கிரீடங்களின் தொகுதியை, நீறு படுத்தினன் - பொடியாக்கினான்; மூளைகளின் - (அவ்வீரர்களது) மூளைகளால், நீள் நிலம் வைப்பு அடைய சேறு படுத்தினன் - பெரிய பூலோகத்தின் இடம்முழுவதுஞ் சேறாக்கினான்; திசை சேர் குருதி புனலால் - எல்லாத்திக்குக்களிலும் பாய்கிற இரத்தவெள்ளத்தால், ஆறு படுத்தினன் - பலஆறுகளை யுண்டாக்கினான்; ஓர்ஒருவர்க்கு எதிர் ஆயிரம் வை கணையால்-(தன்னையெதிர்த்த) ஒவ்வொரு வீரருக்கும் எதிராக(த் தான்எய்த) ஆயிரம் ஆயிரம் கூரிய அம்புகளால், ஈறுபடுத்தினன் - (அவர்களுக்கு) அழிவை யுண்டாக்கினான்; (அப்பொழுது), வீடுமன் விட்டவர் யாவர் பிழைத்தவர் - வீடுமனொழிந்த வீரர் எவர் பிழைத்தார்? (எ - று.)—எவரும் பிழைக்கவில்லை; மிகப்பலர் இறந்தனர் என்பதாம்.

இனி, வீடுமன் விட்டவர் யாவர் பிழைத்தவர் என்பதற்கு - அருச்சுனனோடு போர்செய்யும்படி வீடுமனால் ஏவியனுப்பப்பட்டு எதிர்த்த வீரர்களில் யார்பிழைத்தார்? எவருமில்லை என்றுஉரைப்பாரு முளர். பி-ம்:—திரை சேர்குருதி, தசைசேர்குருதி. விட்டமர்.

22. வாயுவடிக்கணைவாசவன்வைக்கணைவாருணமெய்க்கணைசெந்
தீயின்வடிக்கணைதேவர்சுடர்க்கணைசேரவிடுத்தமையால்
ஆயமுனைப்படுதேரணிபட்டனவாளணிபட்டனவெங்
காய்கரிபட்டனபாய்பரிபட்டனகாவலர்பட்டனரே.

(இ - ள்.) வாயு வடி கணை - வாயுவைத்தெய்வமாகவுடைய கூரிய அம்பையும் [வாயவ்யாஸ்திரத்தையும்], வாசவன் வை கணை - இந்திரனைத் தெய்வமாகவுடைய கூரிய அம்பையும் [ஐந்திராஸ்திரத்தையும்], வாருணம் மெய் கணை - வருணனைத்தெய்வமாகவுடைய உண்மையான [தவறுதலில்லாத] அம்பையும் [வாருணாஸ்திரத்தையும்], செம் தீயின் வடி கணை - சிவந்த அக்கினியைத் தெய்வமாகவுடைய கூரியஅம்பையும் [ஆக்நேயாஸ்திரத்தையும்], தேவர் சுடர் கணை - (மற்றும் பல) தேவர்களுக்குஉரிய ஒளியையுடைய அஸ்திரங்களையும், சேர - ஒருசேர, விடுத்தமையால்.(அருச்சனன்) பிரயோகித்ததனால்,—ஆயம் - கூட்டமான, முனை படு - போர்க்களத்தில் எதிர்ப்பட்ட, தேர் அணி - தேர்வரிசைகள், பட்டன-அழிந்தன: ஆள் அணி - காலாள்வரிசைகள், பட்டன—; வெம் காய் கரி - கொடிய சீறுகிற யானைகள், பட்டன; பாய் பரி - பாய்ந்துசெல்லுந்தன்மையனவான குதிரைகள், பட்டன—; காவலர் - (இந்நால்வகைச்சேனைக்கும்) அரசராகவுள்ளவர்களும், பட்டனர் - அழிந்தார்கள்; (எ - று.)

வாருணம் - தத்திதாந்தநாமம். ஆய எனப் பிரித்தால், ஆகிய எனப்பொருள்படும். பி-ம்:—ஆயுமுனைப்படு. (131)

23.—அருச்சுனன் கடுமையாகப்பொரவே பகையரசர் அஞ்சியொளித்தமை.

நாடியொ ளித்தனர் சூழ்புனன் மத்திர நாடன்மு தற்பலருங்
கூடியொ ளித்தனர் மாரத ரிற்றிறல் கூரும்வ யப்படையோர்
ஓடியொ ளித்தன ராடம ரிற்றுரி யோதன னுக்கிளையோர்
வாடியொ ளித்தனர் மாகத ரொட்டியர் மாளவர் குச்சரரே.

(இ ள்.) (இன்னும் அப்பொழுது), ஆடு அமரில் - (அருச்சுனன்) செய்த போரில், புனல் சூழ் மத்திரநாடன் முதல் பலர்உம்- நீர்சூழ்ந்த மத்திரதேசத்தரசனான சல்லியன் முதலிய பல சமரத வீரர்களும், நாடி ஒளித்தனர் - (எதிர்த்தற்குஅஞ்சி) இடந்தேடியொளித்துக்கொண்டார்கள்; மா ரதரில் திறல் கூரும் வய படையோர் - மகாரதவீரர்களில் வலிமைமிகுந்த வெற்றியைத்தரும் ஆயுதத்தையுடைய சோமதத்தன்முதலியோர், கூடி ஒளித்தனர் - ஒருங்குகூடி மறைந்தார்கள்; துரியோதனனுக்கு இளையோர் - (அர்த்தரதவீரரான) துரியோதனனதுதம்பிமார், ஓடி ஒளித்தனர்-; மாகதர் - மகததேசத்தாரும், ஒட்டியர் - ஓட்ரதேசத்தாரும், மாளவர் - மாளவதேசத்தாரும், குச்சரர் - கூர்ச்சரதேசத்தாரும் ஆகிய அரசவீரர்கள், வாடி ஒளித்தனர் - வாட்டமுற்று ஒளித்தார்கள்; (எ - று.)

துரியோதனனுக்கு - நான்காமுருபு, முறைப்பொருளது. ஒட்டியர், குச்சரர் - வடசொற்சிதைவுகள். (132)

வேறு

24.—அருச்சுனன் கடும்போர்செய்தல்கண்டு ஸ்ரீக்ருஷ்ணன் உவந்திருக்க, வீடுமன்முதலியோர் துரியோதனனைக் காத்தவண்ணம் பாசறைசேர்தல்.

பார்த்த னம்பினுன் மேவ லார்படைப் பரவை சாயவே விரவுகோவியர்
தூர்த்த னன்புடன் கண்டு வந்துதன் றொக்க சேனையின் பக்க மெய்தினுன்
சேர்த்த வெம்பனைக் கொடிம கீபனும் வில்வினோதனுஞ் செல்வ மைந்தனுங்
காத்து நின்றுதங் காவ லன்றனைக் கொண்டு பாசறை கடிதி னெய்தினர்.

(இ - ள்.) (இவ்வாறு), பார்த்தன் அம்பினால்-அருச்சுனனது பாணங்களால், மேவலார் படை பரவை-பகைவர்களது சேனாசமுத்திரம், சாயவே - அழிந்திடவே,—விரவு கோவியர் தூர்த்தன் - (தன்னோடு) கலந்த கோபஸ்திரீகள் பலரிடத்திலும் அன்புள்ளவனான கண்ணபிரான், கண்டு-(அதனை) நோக்கி, அன்புடன் உவந்து-அன்போடுமகிழ்ந்து, தொக்க தன் சேனையின் பக்கம் எய்தினன்-(கூட்டமாகத்) திரண்டுள்ள தன் சேனையின்பக்கத்தை யடைந்தான்; சேர்த்த வெம் பனை கொடி மகீபன்உம்-கட்டிய கொடிய பனைமரத்தின்வடிவமெழுதிய கொடியையுடைய அரசனான வீடுமனும், வில் வினோதன்உம்-வில்வித்தையையே பொழுதுபோக்கும் விளையாட்டாகவுடைய் துரோணாசாரியனும், செல்வம் மைந்தன்உம்-(அவனது) செல்வப்பிள்ளையான அசுவத்தாமனும், தம் காவலன்தனை காத்து நின்று-தங்கள் அரசனான துரியோதனனை (அருச்சுனனம்பால் அழிவடையாதபடி சூழ்ந்து) நின்று பாதுகாத்துக் கொண்டு, கொண்டு பாசறை கடிதின் எய்தினர்-(அவனை) அழைத்துக்கொண்டு (தமது) படைவீட்டுக்கு விரைவிற் சென்று சேர்ந்தார்கள்; (எ-று.)

'பார்த்தனம்பினால் மேவலார் படைப்பரவைசாயவே' என்றது-கண்ணன்தொழிலும் வீடுமன்முதலியோர்தொழிலுமாகிய இரண்டுக்குங் காரணம். பார்த்தன் என்னும் வடமொழிப்பெயர்க்கு - பிருதையினது மகனென்று காரணப்பொருள்; தத்திதாந்தநாமம். பிருதை யென்பது-குந்தியின் இயற்பெயர்: பார்த்தனென்பது, இங்கு அருச்சுனனுக்குச் சிறப்பாக வழங்கிற்று; தாய்க்கு இளைய மகனிடத்தில் அன்பு மிகுதியென்ற பொது நியாயம், இதற்குக் காரணமாகலாம். தூர்த்தன்-வடசொல்; இதற்கு-வஞ்சகனான காமுக னென்றுபொருள்: கண்ணன் ஆயர்மங்கையர்பலரிடத்து இங்ஙனம் ஒருங்குகாதலுடையனாதலை "கருமலர்க் கூந்த லொருத்திதன்னைக் கடைக்கணித் தாங்கே யொருத்தி தன்பால், மருவி மனம் வைத்து மற்றொருத்திக் குரைத்து ஒருபேதைக்குப் பொய் குறித்துப், புரிகுழன் மங்கை யொருத்தி தன்னைப் புணர்தி யவளுக்கும் மெய்யனல்லை, மருதிறுத்தா யுன் வளர்த்தி யூடே வளர்கின்றதா லுன்றன் மாயை தானே" என்ற பெருமாள்திருமொழிப்பாசுரத்தாலு மறிக. பக்கம் - பக்ஷம்: வடசொல். **'வில்வினோதனும்' என்றவிடத்து 'திறல்துரோணனும்' என்றும் பாடம்.**

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவும் ஏழுகவிகள் - பெரும்பாலும் முதல் மூன்று ஐந்து ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், இரண்டு நான்கு ஆறு எட்டாஞ்சீர்கள் கூவிளச்சீர்களு மாகிய **எண்சீராசிரிய விருத்தங்கள்.** (133)

25.—இதுமுதல் மூன்று கவிகள் - படுகளச்சிறப்பு.

வெஞ்சரத்தினல்விசயன்வென்றபோர்மிகுகளத்தின்வாய்விசையொடற்றன
குஞ்சரத்தின்வீழ்கைகணகமேகுருதிவட்டமும்பரிதிவட்டமே
பஞ்சரத்தொடுந்திரியுமானையின்பக்கமெங்கணும்பட்டுமூழ்கிய
செஞ்சரத்தின்மேற்சிறகர்பண்டுவச்சிரமரிந்திடுஞ்சிறகர்மானுமே.

(இ - ள்.) வெம் சரத்தினல் - கொடிய அம்புகளைக்கொண்டு, **விசயன்** - அருச்சுனன், வென்ற - சயித்தற்கிடமான, போர் மிகு **களத்தின்வாய்** - போர்த்தொழில்மிகுந்த யுத்தகளத்திலே, **விசையொடு அற்றன** - விரைவில் அறுபட்டனவான, குஞ்சரத்தின்வீழ் **கைகள்** - யானைகளின் கீழ்விழுந்த துதிக்கைகள், நாகமே - பெரும்பாம்புகளின்வடிவமேபோலும்; குருதிவட்டம்உம் - வட்டவடிவமாகத் தேங்கிய இரத்தப்பெருக்கும், பரிதி வட்டமே - சூரியமண்டலமேபோலும்; பஞ்சரத்தொடுஉம் திரியும் - அம்பாரிகளோடு திரிகிற, ஆனையின் - யானைகளின், பக்கம் எங்கண்உம் - (உடலின்) இருபுறத்தி லெங்கும், பட்டு மூழ்கிய - தைத்து அழுந்திய, செம் சரத்தின் மேல் - சிவந்த அம்புகளின்மீதுள்ள, சிறகர் - இறகுகள், பண்டு வச்சிரம் அரிந்திடும் சிறகர் மானும் - முன்னொருகாலத்தில் (தேவேந்திரனது) வச்சிராயுதத்தால் அறுபட்ட (மலைகளின்) சிறகுகளையே போலும்; (எ - று.)

யானையின் கரியபெரியவடிவத்துக்கு மலையும், அதன்மேல் தைத்துள்ள அம்பினிறகுகளுக்கு அவற்றின் இறகும் உவமை. அழகுக்காகவும்விரைந்து செல்லும்பொருட்டாகவும் அம்புகளுக்கு இறகுகட்டுதல், இயல்பு. **தற்குறிப்பேற்றவணி.** மானும் என்னும் வினைமுற்றை, மற்றை யிரண்டு வாக்கியங்களிலுங் கூட்டுக. 'கைகள் நாகமே குருதிவட்டமும் பரிதிவட்டமே' என்ற சேர்த்தியால், இரத்தமண்டலமாகிய சூரியமண்டலத்தைப்பிடித்தற்கு அருகில் வந்த இராகு வென்னுங் கரும்பாம்பென்று அருகில் வீழ்ந்துள்ள யானைத்துதிக்கையைக் குறித்ததாகக் கொள்க. குஞ்சரம் - காட்டுப்புதர்களிற் சஞ்சரிப்பது; மத்தகத்துக்குக் கீழுள்ள குழிகளை யுடையதென்றுமாம். குஞ்சம்-புதரும், கும்பஸ்தலங்களுக்குக்கீழுள்ள குழிகளும். பஞ்சரம் - வடசொல்: கூடென்றுபொருள்; இது இங்கே இலக்கணையாய் அம்பாரிக்குக் கொள்ளப்பட்டது. யானைமீது அம்பாரிகட்டுதல், இயல்பு: இனி, பஞ்சரம் - கழுகுஎன்று பொருள்கொண்டு, யானையாற் கொல்லப்படும்பிராணிகளை யுண்ண யானையுடன் கழுகுந் திரியுமென்பர், ஒருசாரார். சிறகர் - குற்றியலுகரம், 'அர்' பெற்றது. (134)

26. கொற்றமன்னர்சென்னியினணிந்தபொற்கோளம்யாவையுந்தாளமாகவே
யற்றைவெஞ்சமத்தடலருச்சுனனுண்மைபாடிநின்றலகையாடுமால்

முற்றவெம்பிணக்குவையும்வேழமுமுடுகுவாசியுந்தேருமொய்ம்புறத்
துற்றகுன்றெனவொன்றுபட்டெழச்சொரியுமூளையாறருவியொக்குமே.

(இ - ள்.) கொற்றம் மன்னர் - வலிமையையுடைய (இறந்த அரசர்கள்), சென்னியின் அணிந்த - தலையில் அணிந்திருந்த, பொன் கோளம் யாவைஉம் - பொன்மகுடங்களையெல்லாம், தாளம் ஆக ஏ-தாளமாகக் (கையில் ஏந்திக்கொண்டு), அலகை-பேய்கள், ஆற்றை வெம் சமத்து அடல் அருச்சுனன் ஆண்மை பாடிநின்று-அன்றையதினத்துக் கொடியயுத்தத்திற்காட்டிய அருச்சுனனது பராக்கிரமத்தைப் பாடிக்கொண்டுநின்று, ஆடும் - கூத்தாடும்; வெம் பிணம் குவைஉம் - கொடிய பிணங்களின் கூட்டமும், வேழம்உம்-(இறந்த) யானைகளும், முடுகு வாசிஉம்-(முன்பு) விரைவையுடைய (இறந்த) குதிரைகளும், தேர்உம் - (அழிந்த) தேர்களும், முற்ற - (போர்க்களம்) முழுவதிலும், மொய்ம்பு உற துற்ற குன்று என - வலிமை மிக நெருங்கிய மலைகள்போல, ஒன்றுபட்டு எழ - ஒன்றுசேர்ந்து உயர்ந்து தோன்ற, சொரியும் மூளை - (அவற்றினின்று) பெருகுகிற நிணம், ஆறு அருவி ஒக்கும் - (அம்மலையினின்று) ஆறுகளாகப்பெருகும் நீரருவிபோலும்.

கோளம் - வட்டவடிவமாகத் தலையிலணிவதோர் ஆபரணம். கோலம் என்று ஓதி - தலைக்கோலமென்பாரு முளர். பேய்கள் பாடியாடுதற்குக் காரணம், தமக்கு நிரம்பப் பிணங்களாகிற இரை கிடைத்த களிப்பு. இங்ஙனம் கிடைத்தற்குக் காரணம் போரில் எதிரிகள்சேனையை அழித்த அருச்சுனனது ஆற்றலே யாதலால், அதனைப் புகழ்ந்து பாடுவனவாயின. முதலிரண்டடியில் **தும்பைத் திணையில் பேய்க்குரவை** என்ற துறையின் கருத்தமையக்கூறினர். பின்னிரண்டடியில் **தற்குறிப்பேற்றவணி** காண்க. மூன்றாமடியிற் பிண மென்றது, மனிதரது உயிர்நீத்தவுடலை. யாறு என்றும் பிரிக்க லாம். (135)

27. பமரமும்மதக்கரிவிலாவின்வேல்பட்டவாய்நிணம்பறியநிற்பன
குமரன்வேலின்வாயனலமூர்தருங்கோடுடைத்தடங்குன்றமொக்குமால்
அமரர்கோன்மகன்செங்கையம்பினுலற்றவீரர்தந்தலைகள்கௌவியச்
சமரபூமிசேர்ஞாளிமானுடத்தலைவிலங்கினின்றன்மைசாலுமே.

(இ - ள்.) பமரம் - வண்டுகள்மொய்க்கப்பெற்ற, மும் மதம் - மூன்று வகைமதத்தையுடைய, கரி - யானைகள், விலாவின் வேல் பட்டவாய் நிணம் பறிய நிற்பன - (தத்தம்) விலாப்புறத்தில் (எதிரியின்) வேல் பாய்ந்த இடத்திலே கொழுப்புவெளிப்பட அழிந்துநிற்பவை,—குமரன் வேலின் வாய்-முருகக்கடவுளால் எறியப்பட்ட வேலாயுதந் தைத்தவிடத்திலே, அனலம் ஊர்தரும்-நெருப்புப்பற்றப்பெற்ற, கோடு உடை தட குன்றம் ஒக்கும் - சிகரத்தையுடைய பெரிய கிரௌஞ்சகிரியைப் போலும்; அமரர்கோன் மகன் செம் கை அம்பினுல் அற்ற வீரர் தம் தலைகள் கௌவி - தேவேந்திரகுமாரனான அருச்சுனனது சிவந்தகைகளால்விடப்பட்ட அம்புகளால் அறுபட்ட வீரர்களது தலைகளைக் கௌவிக்கொண்டு, அ சமரபூமி சேர் - அந்தப்போர்க்களத்திற் பொருந்திய, ஞாளி -

நாய்கள், மானுடர் தலை விலங்கின் இன் தன்மை சாலும்-மனிதத் தலையோடுகூடிய மிருகங்களின் இனிய தன்மையைப்பொருந்தும்.

'ஆண்டலைப்புள்' போல மானுடத்தலைவிலங்கும் உண்டென்க; புருஷமிருகமென ஒருவகை வழங்குகிறது. பமரம் - ப்ரமரமென்னும் வடமொழித்திரிபு. விலா - வயிற்றுப்புறம். மலை - யானைக்கும், மலையைத்துளைத்தவேல் - யானையின்மீது தைத்த வேலுக்கும், அனல் - இரத்தத்தோடுகூடிய நிணத்துக்கும் உவமை. விலங்கு - 'திர்யக்' என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு; குறுக்காக நிற்பதென்று பொருள். ஆல், ஏ - ஈற்றசைகள்.

குமரன் வேலின்வாயனல்மூர்தரும் கோடுடைக்குன்றமென்பதிலடங்கிய கதை:—சிவபிரானது இளையகுமாரனாய்த் தேவர்வேண்டுகோளால் அசுரர்களையொழித்தற்குத் தேவசேனாபதியாம்பொருட்டு அவதரித்த முருகக்கடவுள், சூரபதுமனைப் பொருது அழித்தற்குச் செல்லும் வழியிடையே கிரௌஞ்சனென்னும் அசுரன் பெரியமலை வடிவங்கொண்டு அக்கடவுளை நலிவதாக எதிர்வந்துநிற்க, அதன்மேல் அப்பெருமான் தனது தெய்வத்தன்மையுள்ளவேற்படையை யேவி அதனைப்பிளந்து அழித்திட்டன னென்பது, கதை: பரசுராமனும் சுப்பிரமணியனும் பரமசிவனிடம் வில்முதலிய ஆயுதப் பயிற்சியைச் செய்துமுடித்தபின்பு இவர்களுள் உயர்வுதாழ்வு அறியும் பொருட்டுச் சிவபிரான் உமாதேவியின் முன்னிலையிலே இவர்களுக்குக் கிரௌஞ்சமலையைச் சுட்டிக்காட்டி இதனைத் துளைத்திடு மென்று நியமிக்க, பரசுராமன் அம்பெய்து அதனைத் துளையிட்டுக் காட்ட, முருகக்கடவுள் வேலாயுதத்தை அனற்பொறிகிளம்ப வீசியெறிந்து அம்மலையைப் பிளந்திட்டன னென்றும் கதை கூறப்படும். (136)

28.—சூரியாஸ்தமனவருணனை.

அன்றுவெஞ்சரத்தொடுதறிந்தவாளரசர்சோரிமெய்ப்பட்டதாதலிற்
சென்றுசெங்கதிர்ச்செல்வன்வாருணத்திசையடைந்துவெண்டிரையின்மூழ்கினன்
நின்றருச்சுனன்பொரமறந்ததும்நெடியசெங்கண்மானேமிதொட்டதும்
பின்றைவில்லெடுத்தவன்மலைந்ததும்பேசினன்மகீபதிபிதாமகன்.

(இ - ள்.) அன்று - அத்தினத்திலே, வெம் சரத்தொடு - (அருச்சுனனது) கொடிய அம்புகளால், தறிந்த - அறுபட்ட, வாள் அரசர் - ஆயுதங்களையுடைய அரசர்களது, சோரி - இரத்தம், மெய் பட்டது ஆதலின் - (தனது) உடம்பில் வந்து தெறித்ததாதலால், (அவ்விரத்தக்கறையைக்கழுவியொழிக்கும்பொருட்டு), செம் கதிர் செல்வன் - சிவந்த கிரணங்களைச் செல்வமாகவுடைய சூரியன், சென்று - போய், வாருணம் திசை அடைந்து - வருணனது சம்பந்தமான மேற்குத்திக்கை யடைந்து, வெள் திரையில் மூழ்கினன் - வெண்மையான அலைகளையுடைய (அங்குள்ள) கடலிலே நீராடினன் [மறைந்தான் என்றபடி]: (பின்பு), மகீபதி பிதாமகன் - துரியோதனராசனது பெரியபாட்டனான வீடுமன், அருச்சுனன் நின்று பொர மறந்ததும்-அருச்சுனன் (போர்க்

களத்தில் திகைத்து) நின்று போர்செய்யமறந்ததையும், நெடிய செம் கண் மால் நேமி தொட்டதுஉம் - நீண்ட சிவந்தகண்களை யுடைய திருமால் (அதனை நோக்கித் தான் போர்செய்தற்குச்) சக்கரமேந்தினதையும், பின்றை வில் எடுத்து அவன் மலைந்தது உம் - அதன்பின்பு வில்லையெடுத்து அவ்வருச்சுனன் போர்செய்ததையும், பேசினான் - (பாராட்டித் தன்படைவீரரோடு) கூறினான்.

மெய்என்றது, மண்டலத்தை. அந்திமாலைப்பொழுதில் சூரிய மண்டலத்தில் மிகுதியாக இயல்பில்தோன்றுஞ் செந்நிறத்தைச் செந்நீர்தெளித்ததனாலாகிய தெனக்குறித்தனர்; முன்னிரண்டடியில் ஏதுத்தற்குறிப்பேற்றவணி, தொடர்புயர்வுநவிற்சியணியை அங்கமாகக் கொண்டு வந்தது. சரத்தொடு என்பதில், 'ஒடு' உருபு - கருவிப் பொருளது. ஆள் அரசர் எனப் பிரித்து,ஆளுதற்றொழிலையுடைய மன்னரென உரைத்தல் மோனைத்தொடைக்கு மிகப்பொருந்தும். வருணன் மேற்குத்திக்குப்பாலகனாதலால், மேற்றிசை'வாருணத் திசை' எனப்பட்டது. பிதாமகன் - வீடுமன், மகிபதி - துரியோதனராசனோடு, பேசினான் என்று அநுவயித்துப்பொருள்கூறுதலு மொன்று. பி - ம்: அமர்மலைந்ததும். (137)

29.—இருசேனையும் அற்றையிரவுபோக்கினவகை.

தருமன்மாபெருஞ்சேனைதன்னுளார்தங்களாதரத்தொடுதனஞ்சயன்
பொருவிலாண்மையும்வீமன்மாமகன்பொருதவீரமும்புகழ்ந்துபாடினார்
அரவகேதனன்சேனைதன்னுளாரழிந்தமன்னருக்கழுதரற்றினார்
இருவர்சேனையுங்கண்படாமலன்றிரவுபட்டதென்னென்றியம்புவாம்.

(இ - ள்.) தருமன் மா பெரு சேனை தன்னுளார் - தருமபுத்திரனது சிறந்த பெரிய சேனையிலுள்ள வீரர்கள், தங்கள் ஆதரத்தொடு - தமக்குரிய அன்புடனே, தனஞ்சயன் பொரு வில் ஆண்மைஉம்-அருச்சுனன் போர் செய்த வில்லின் திறத்தையும், வீமன் மா மகன் பொருத வீரம்உம்-வீமனது சிறந்தகுமாரனான கடோற்கசன் போர்செய்த வீரத்தன்மையையும், புகழ்ந்து பாடினார் - புகழ்ந்து துதித்தார்கள்; அரவகேதனன் சேனை தன்னுளார் - பாம்புக்கொடியனான துரியோதனனது சேனையிலுள்ளவர்கள், அழிந்த மன்னருக்கு அழுது அரற்றினார்-(தம்பக்கத்தில்) இறந்த அரசர்க்காகப்புலம்பிக் கதறினார்கள்; (இவ்வாறு), இருவர் சேனைஉம் - இருதிறத்தாரது சேனைகளும், கண் படாமல்- தூங்காமல், அன்று இரவு - அன்றையிராத்திரி முழுவதும், பட்டது - அடைந்தநிலைமையை, என் என்று இயம்புவாம் - (யாம்) என்னவென்றுசொல்வோம்? (எ - று.)—சொல்வது அரிது என்றபடி.

ஆதரத்தொடு புகழ்ந்துபாடினார் என இயையும். தநஞ்சயன் என்னும் வடமொழிப்பெயர்க்கு - செல்வத்தைச் சயித்தவனென்று பொருள்; தருமபுத்திரன் ராஜசூயயாகஞ் செய்யவேண்டியபொழுது, அவன்கட்டளையால் அருச்சுனன் வடதிசையிற் சென்று பல அரசர்களை வென்று அவர்கள் செல்வத்தைத் திறை

யாகக் கொண்ார்ந்ததனால், இவனுக்கு இப்பெயர் வந்தது; இனி, இதற்கு-வெற்றியையே செல்வமாகக் கொள்பவ னென்றும் பொருள் கொள்ளலாம். பட்டது - முறையே அடைந்த இன்பமும் துன்பமும். பி - ம்: தருமன்மாமகன்சேனை. (138)

30.—மறுநாள் சூரியோதய வருணனை.

நென்னலங்கையிற் கொண்ட தென்னையே நேமி யாகவந் நீலமேனியான்
இன்ன மும்பொரத் தேடு மாகவத் தின்று மென்றுகொண் டெண்ணி யேகொலோ
தன்னெ டுந்தனிச் சயில மும்பொலந் தபனி யத்தடஞ் சயில மாகவே
மின்னெ டுஞ்செழுங் கதிர்பரப்பினுன் வெய்ய வேழ்பரித் தேர்வி பாகரன்.

(இ - ள்.) ' அ நீலம் மேனியான் - நீலநிறமுள்ள திருமேனியையுடைய அக்கண்ணபிரான், நென்னல் - நேற்று, நேமி ஆக - சக்கரமாக, அம் கையில் கொண்டது - அழகிய (தனது) திருக்கையில் எடுத்துப் பிடித்தது, என்னையே—; (ஆதலால்), இன்னமும்—, இன்றுஉம் - இன்றைக்கும், ஆகவத்து - போர்க்களத்தில், பொர - போர்செய்யும்பொருட்டு, தேடும் - (என்னைத்) தேடுவான்,' என்று கொண்டு எண்ணி ஏ கொல்ஓ - என்று நினைத்துத்தானோ, வெய்ய ஏழ் பரி தேர் விபாகரன் - வெவ்விய ஏழு குதிரை பூண்ட தேரையுடைய சூரியன், தன் நெடு தனி சயிலம் உம் பொலம் தபனியம் தடம் சயிலம் ஆக - தனது உயர்ந்தஒப்பற்ற உதயகிரியும் அழகிய பொன்மயமான பெரிய மகாமேருகிரியாகும்படி [செந்நிறமடையுமாறு], மின் நெடு செழு கதிர் பரப்பினுன் - விளங்குகிற நீண்ட மிக்க (தனது) சிவந்தகிரணங்களைப் பரவச்செய்தான் [உதித்தான் என்றபடி]; (எ - று.)

ஏதுத்தற்குறிப்பேற்றவணி. சூரியன் திருமாலினதுசக்கராயுதத்தின் அமிசமாதலால், இங்ஙனங் கூறினது. என்றுஎண்ணிக்கொண்டுகொலோ எனமொழிமாற்றி யுரைப்பினும் அமையும். சைலம், தபநீயம், விபாகரன் - வடசொற்கள். சைலம்-சிலாமயமானது: சிலை - கல். தபநீயம்-(நெருப்பில்) தபிக்கப்பட்டு விளங்குவது; தபித்தல் - எரித்தல். விபாகரன் என்பது-விசேஷமாக ஒளியைச் செய்பவ னென்றும், விசேஷகாந்திக்கு இருப்பிடமானவ னென்றும் பொருள்படும்; முறையே வி பா கரன் என்றும், வி பா ஆகரனென்றும் பிரியும்: வி - விசேஷம், பா - பிரகாசம். (139)

மூன்றும்போர்ச்சருக்கம் முற்றிற்று.

நான்காம்போர்ச்சருக்கம்.

1.—கடவுள்வணக்கம்.

தேடிய வகலிகை சாபந் தீர்த்ததாள்
நீடிய வுலகெலா மளந்து நீண்டதாள்
ஓடிய சகடிற வுதைத்துப் பாம்பின்மே
லாடியுஞ் சிவந்ததா ளென்னை யாண்டதாள்.

(இ - ள்.) என்னை ஆண்ட தாள் - என்னை அடிமையாக ஆட் கொண்டருளிய (திருமாலினது) திருவடிகள்,—தேடிய - (எங்கு உள்ளாளென்று) தேடத்தக்க [இன்னுளென்று அறியவொண் ணுதபடி வேற்றுருவடைந்த], அகலிகை - அகலியையினது, சாபம் - சாபத்தை, தீர்த்த - (ஸ்ரீராமாவதாரகாலத்தில்) நீக்கி யருளிய, தாள் - திருவடிகளும், நீடிய உலகு எலாம் - நீண்ட உலகங்களெல்லாவற்றையும், அளந்து - (திரிவிக்கிரமாவதார காலத்தில்) அளவாநின்றுகொண்டு, நீண்ட - நீண்டுசென்ற, தாள் - திருவடிகளும், ஓடிய - (தன்னைக்கொல்லும்பொருட்டு) விரைந்துவந்த, சகடு - சகடாசுரன், இற - அழியும்படி, உதைத்து - (கிருஷ்ணுவதாரகாலத்திலே) உதைத்து, பாம்பின் மேல் ஆடிஉம் - (காளியனென்னும்) நாகத்தின்மேல் கூத்தா டியும், சிவந்த - செந்நிறமடைந்த, தாள் - திருவடிகளுமாம்.

தமக்குஉரிய கடவுளினது சீர்பாதங்களின் பற்பல மகிமையை எடுத்துக் கூறியவாறு. 'தேடியவ்வகலிகை' என்ற பாடத்துக்கு - அவ்வகலிகையுள்ள விடத்தில் தாமாகச்சென்று என்று பொருள் கூறுக. சகடு - ஶகடம் என்னும் வடமொழித் திரிபு: பண்டி யென்று பொருள். ஆடியும், உம் - இறந்ததுதழுவியது. 'உதைத்தும்' எனப் பாடங்கொள்ளின், இரண்டும்-எண்ணும்மை.

அகலிகை - அஹல்யா என்னும் வடமொழித் திரிபு: இச் சொல்லுக்கு அழகில்லாமையில்லாதவளென்று பொருள்: மிக்க அழகுடையவளென்று கருத்து; ஹலம் என்றுல் விரூபம்: ஹல்யம் - அழகின்மை. இவள்-கௌதம முனிவரது மனைவி: சநகமகாராசாவுக்குப் புரோகிதராகிய சதாநந்தமுனிவரது தாய். பிரமதேவர் பூர்வத்தில் ரூபத்திலுங் குரலிலும் பேதமில்லாமல் ஒருபடிப்படவே பிரஜைகளைப் படைத்துவந்தார்; பின்பு, ஒருவர்க் கொருவர் வேற்றுமையின்றி யிருப்பது நலமன்றெனக் கருதி, முன்படைத்த பிரஜைகளுக்கு அந்தந்த அங்கங்களிலுள்ள சிறப் பையெல்லா மெடுத்து, அதைக்கொண்டு அழகுமிகுந்த பெண் ணொருத்தியைச் சிருஷ்டித்து, அவளுக்கு அஹல்யையென்று பெயரிட்டார்; அப்பொழுது இந்திரன் இம்மேலான பெண்ணுக் குத் தக்ககொழுநன் மேலான தானேயன்றி வேறில்லை யென்று செருக்குற்றிருந்தான்; படைத்தற்கடவுள் அவளை அவனுக்குக் கொடாமல் கௌதமமுனிவரிடம் கொடுத்து 'இவளைப் பாது காத்துவாரும்' எனக் கட்டளையிட்டார்; அவ்வாறே அவர் வெகு காலம் பாதுகாத்துப் பின்பு பிதாமகக்கடவுளிடங் கொணர்ந்து விட்டார்; கௌதமரது மனஞ் சபலப்படாம லிருந்ததையும்,அவரது தவநிட்டையையுங் கண்டு, நான்முகக்கடவுள் உவந்து அம்முனி வருக்கே அவளை மனைவியாக்கினுர்; இந்திரனே பொருமை கொண்டு வேற்றுருவத்தால் அவளைக் கற்பழிக்கக் கருதினுன்: இவ்வாறு பலநாளாய்ப்பெருங்காதல்கொண்டிருந்த தேவேந்திரன் ஒருநாள் நடுராத்திரியில் கௌதமராச்சிரமத்துக்கு அருகேவந்து பொழுதுவிடியுங்காலத்துக் கோழிகூவுவது போலக் கூவ, அது கேட்ட முனிவர் சந்தியாகாலஞ் சமீபித்துவிட்டதெனக்கருதி

யெழுந்து காலைக்கடன் கழிக்கும்பொருட்டு நீர்நிலைநோக்கிப் புறப் பட்டுச்செல்ல, அப்பொழுது இதுவேசமயமென்று இந்திரன் அம் முனிவருருக்கொண்டு ஆச்சிரமத்துட்சென்று இவளோடு கலக் கையில், இவளும் 'தன்கணவரல்லன், இந்திரன்' என்று உணர்ந் தும் விலக்காமல் உடன்பட்டிருக்க, அதனை ஞானக்கண்ணாலறிந்து உடனே மீண்டுவந்த அம்முனிவர் இவளைக் கருங்கல்வடிவமாம் படியும் இந்திரனை உடம்புமுழுவதிலும் ஆயிரம்பெண்குறியை யடையும்படியுஞ் சபித்து, உடனே அவர்கள் அஞ்சிநடுங்கிப் பல வாறு வேண்டிக்கொண்டதற்கு இரங்கி, முறையே, 'ஸ்ரீராமனது திருவடிப்பொடி படுங்காலத்து இக்கல்வடிவம் நீங்கிச் சுயவுருவம் பெறுக' என்றும், 'அப்பெண்குறிகள் பிறர்க்குக் கண்களாகப் புலப்படும்' என்றும் அவர்களுக்கு அநுக்கிரகிக்க, அவ்வாறே கல்லுருவமாய்க் கிடந்த அகலியை, ஸ்ரீராமலக்ஷ்மணர் விசுவா மித்திரரோடு மிதிலைக்குச் செல்லும்போது ஸ்ரீராமனது திருவடித் துகள் பட்டமாத்திரத்தில் சாபம்நீங்கி இயற்கையுருவமடைந்தா ளென்பது, **முதலடியின் கதை.** 'கோதமன்றன் பன்னிக்கு முன்னை யுருக் கொடுத்ததிவன், போதுநின்ற தெனப்பொலிந்த பொலன் கழற்காற்பொடிகண்டாய்' என்றது கம்பராமாயணம். கௌதமர் இந்திரனை ஆண்குறியிழக்கும்படியும், அகலிகையை அரூபியாகி உணவில்லாமற் பலநாள் சாம்பலிலே கிடக்கும்படியுஞ் சபித் திட்டன ரென்றும், இந்திரனைப் பகைவன்கையிலே அகப்பட்டுப் பேரவமானமடையும்படி சபித்ததாகவும், இன்னும் சிறிது வேறு படுத்தியும் இவ்வரலாறு நூல்களிற் கூறப்படும்.

மூன்றாமடியிற்குறித்த சரித்திரம்:—நந்தகோபகிருகத்தில் ஒரு வண் டியின் கீழ்ப்புறத்தில் தொட்டிலிற் பள்ளிகொண்டிருந்த ஸ்ரீகிருஷ் ணன், ஒருகால் அச்சகடத்தில் கம்ஸனால் ஏவப்பட்ட அசுர னொருவன் வந்து ஆவேசித்துத் தன்மேலே விழுந்து தன்னைக் கொல்லமுயன்றதை அறிந்து, பாலுக்கு அழுகிறபாவனையிலே தன் சிறிய திருவடிகளை மேலேதூக்கியருள அவ்வடிகளால் உதை பட்டமாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழேவிழுந்து அசுர னுள்பட அழிந்ததென்பது.

இதுமுதல் நான்குகவிகள் - பெரும்பாலும் மூன்றாஞ் சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய **கலிவிருத்தங்கள்.** (*140*)

2.—பாண்டவசேனை அர்த்தசந்திரவியூகமாகவே வகுக்கப்படுதல்.

நற்பகலிடைவருநளினநயகன்
பொற்பகலுறவொளிபுரியுநேமியான்
பிற்பகலணியையும்பிறங்குசேனையான்
முற்பகல்வியூகமேயாகமுட்டினான்.

(இ - ள்.) நல் பகலிடை வரும் - நல்ல மத்தியானகாலத்திலே காணப்படுகிற, நளினம் நாயகன் பொற்பு - தாமரைக்குக் கொழு

நளனசூரியனது விளக்கமும், அகலுற - நீங்கும்படி, ஒளி புரியும்-(தான் மிகுந்த) பிரகாசத்தைச்செய்கிற, நேமியான்- (சுதர்சந மென்னுஞ்) சக்கராயுதத்தையுடைய கண்ணபிரான்,—பின் பகல் அணியைஉம் - அடுத்தநாளின் [நான்காநாளின்] படைவகுப்பையும், பிறங்கு சேனையால் - (வெற்றியால்) விளங்குகிற (பாண்டவர்களின்) சேனைகளைக்கொண்டு, முன் பகல் வியூகம்ஏ ஆக - (இதற்கு) முந்தின நாளின் [மூன்றாநாளில் அமைத்த]வியூகமாகவே [அர்த்தசந்திரவியூகமாகவே], மூட்டினான் - வகுத்திட்டான் ;

"ஸுதர்ஶநம் பாஸ்கரகோடி துல்யம்" என்றபடி எம்பெருமானது திருவாழி கோடிசூரியப்பிரகாச முடையதாய் விளங்குதலால், 'நளினநாயகன் பொற்பு அகலுற வொளிபுரியுநேமி'என்றார். நளிந நாயகன்-வடசொற்றொடர். (141)

3.—துரியோதனன் பக்கத்தவரும் காருடவியூகமாகவேவகுக்கப்பட, இருசேனையும் போர்ப்பறை முழங்க ஆர்த்தல்.

கார்முகில்வண்ணனைக்கண்டுகாணலார்
தாமுமவ்வியூகமேசமைத்துமுந்தினர்
ஏமமோடெதிர்முனைந்திருவர்சேனையும்
போர்முரசெழவெழப்பொங்கியார்த்தவே.

(இ - ள்.) கார் முகில் வண்ணனை கண்டு-கரிய மேகம்போன்ற திருநிறத்தையுடைய கண்ணபிரானைப் பார்த்து [கண்ணன் முந்தினநாள் வியூகமாகவே அன்றும் அமைத்ததை நோக்கி யென்றபடி], காணலார்-பகைவர்கள், தாம்உம்-தாங்களும், அ வியூகம்ஏ சமைத்து முந்தினர்-அந்த [மூன்றா நாளில் வகுத்தகாருட] வியூகமாகவே அணிவகுத்து(ப் போருக்கு) முற்பட்டார்கள்; (அப்பொழுது),இருவர் சேனைஉம்-இருதிறத்தாரது சேனைகளும், ஏமமோடு -களிப்புடனே, எதிர் முனைந்து-எதிரெதிராக வந்து கலந்து, போர் முரசு எழ எழ-போருக்குரிய பறைகள் மிகுதியாக முழங்க, பொங்கி ஆர்த்த-ஊக்கங்கொண்டு ஆரவாரித்தன; (எ - று.)

போர்ப்பறையோசையைக் கேட்குந்தோறும் வீரர்க்குப் போரில் உற்சாகம் மிகுதியாக உண்டாதல் இயற்கை யாதலால், 'போர்முரசெழவெழப் பொங்கியார்த்த' என்றார். இச்செய்யுளில் ஒன்று நான்காம் அடிகளில் ரகர வொற்றிடைவந்த ஆசெதுகை காண்க.

4.—வீமனை வேழப்படை வளைதல்.

ஏழிரு புவனமு மேந்து மேருவைச்
சூழ்வன கிரிக்குழாஞ் சுற்று மாறுபோற்
பாழியம் புயகிரிப் பவனன் மைந்தனை
வேழவெம் படையுடை வேந்தர் சூழவே.

(இ-ள்.) ஏழ் இரு புவனம்உம் ஏந்து மேருவை-பதினாலு உலகங்களையுந் தாங்கவல்ல மகாமேருகிரியை, சூழ்வன கிரி குழாம் சுற்றும் ஆறு போல்-சுற்றிலுமுள்ள மலைகளின் கூட்டம் சூழ்ந்துநிற்கும் விதம் போல,—பாழி அம் புய கிரி பவனன் மைந்தனை-வலிமை

யையுடைய அழகிய மலைபோலுந் தோள்களையுடைய வாயுகுமாரனை வீமனை, வெம் வேழம் படை உடை வேந்தர் சூழ - கொடிய யானைச்சேனையையுடைய பகையரசர்கள் (வந்து) வளைந்துகொள்ள, —(எ-று.)—இதில் 'சூழ' என்ற வினையெச்சத்துக்கு, மேற் பதினொருபாடல்களிலுள்ள 'தோலாயின' முதலிய முற்றுக்களெல்லாம் முடிக்குஞ்சொல்லாம்.

உவமையணி. மலை, மேலே எவ்வளவு உயர்ந்து காணப்படுகிறதோ, அவ்வளவு கீழிலும் பொருந்திப் பூமியைத் தாங்குதலால், 'பூதரம்' எனப்படுகிறதன்மைபற்றி, 'ஏழிருபுவனமுமேந்து மேரு' என்றார். 'ஏழிரும்புவனம்' என்ற பாடத்திற்கு - ஏழுதீவுகளாகவுள்ள பெரிய பூமியென்று பொருளாம். (143)

வேறு.

5.—அவ்யானைச்சேனையை, வீமன் தனது ஆற்றலாற் பலவாறு சிதறடித்தமையை, பதினொருபாடல்கள் வருணிக்கும்.

ஆலா லமெனக் கதுவா வதிரா
மேலாள் விழவீ மன்வெறுங் கைகளா
லேலா வுடலென் புகமோ தவெறுந்
தோலா யினசிற் சிலதோ லினமே.

(இ - ள்.) (அப்பொழுது), வீமன்—, ஆலாலம் என - ஹாலாஹல விஷம்போல, கதுவா-பெருஞ்சினம்பற்றி, அதிரா - ஆரவாரஞ்செய்து, மேல் ஆள் விழ - (அவ்யானைகளின்) மேலிருந்த வீரர் கீழ்விழும்படி, வெறு கைகளால் ஏலா - (ஆயுதமெதுவு மேந்தாததனது) வறுங்கைகளால் (யானைகளை) எடுத்து, உடல் என்பு உக மோத-(அவற்றின்) உடம்பி லுள்ள எலும்புகளெல்லாம் உதிரும்படி தாக்கியதனால், சில்சில தோல் இனம்-சிலசில யானைக்கூட்டங்கள், வெறு தோல் ஆயின - வெறுந்தோல்மாத்திரம் மிகுந்தவையாயின; (எ-று.)

யானைக்கு இயற்கையாகவுள்ள தோல்என்னும் பெயர்க்கு இங்கே கவிசாதுரியமாக ஒருகாரணங் கற்பித்துக் கூறியதனால், இது - 'நிருக்தி' என்னும் பிரிநிலைநவிற்சியணியின்பாற் படும். இயற்கைப்பெயர்களுக்குக் காரணங்கற்பித்தல், இவ்வணியின் இலக்கணம். இவ்வணியை அடுத்த பலகவிகளிலுங்காண்க. இதில் தோல் என்ற சொல் அடுத்து வெவ்வேறு பொருளில் வந்தது-மடக்கென்னுஞ்சொல்லணி. "யானையும் வனப்பு மதனுந் தோல்வியுந், தோலென் றுரைப்பர் தோற்பலகையு மாகும்" என்னும் பிங்கலந்தையை இங்கே யறிக. வீமன் பதினாயிரம் யானை பலங்கொண்டவனாதலால், யானைகளை இங்ஙனம் எளிதில் அழிக்கலாயிற்று. ஆலாலம் - வடமொழித்திரிபு; இது, தவறாது அழித்தற்கு உவமை.

இதுமுதல் பதினெட்டுக்கவிகள் - பெரும்பாலும் எல்லாச்சீர்களும் மாச்சீர்களாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள்; இவற்றை, முதற்சீர் மாச்சீரும், இரண்டாஞ்சீர் கனிச்சீரும், மூன்றாஞ்சீர் காய்ச்சீருமாகிய சிந்தடி நான்குகொண்டுவந்த வஞ்சிவிருத்தங்களாக அலகிடினுமாம். (144)

6. மேல்வாய்தமகையொடுமேலெழவுந்
தோல்வாயவைகீழ்விழவுந்துணியா
மால்வாரணம்வாய்கள்கழன்றனமுன்
னுல்வாயெனுநாமநலம்பெறவே.

(இ-ள்.) மேல் வாய் தம கையொடு மேல் எழஉம் - மேல்வாய் தமது துதிக்கையோடு மேற்கிளம்பவும், தோல் வாய் கீழ் விழஉம்- தோல்மயமான கீழ்வாய் கீழே தாழவும், அவை துணியா-அவ் விரண்டுவாய்களுந் தனித்தனி அறுபட்டு, மால் வாரணம்-பெரிய மதயானைகள், முன் நால்வாய் எனும் நாமம் நலம் பெறவே-(தொங்கு கின்ற வாயையுடைமையால் தமக்கு) முன்னமேயுள்ள நால்வா யென்னும்பெயர் (இப்பொழுது எண்ணிலுைம்) சிறப்புறும்படி, வாய்கள் கழன்றன-வாய்கள் கிழியப்பெற்றன; (எ-று.)

தொங்குகிற வாயை யுடைமையால் வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாக முன்பு நால்வாயென்று பெயரிடப் பட்டுள்ள யானைகள், அப்பொழுது, மேல்வாய் கீழ்வாய் என்னு மிரண்டும் வீமன்செய்த போரில் தனித்தனி துணிபட்டு நான்கு வாயையுடையனவாய், பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன் மொழித்தொகையாகவும் நால்வா யென்னலாம்படியாயின என்க.

7. மதிவெண்குடைமாருதிவன்புடனே
குதிகொண்டொருகைகொடுகுத்துதலா
லதிர்சிந்துரவல்லுரமத்தனையு
மெதிர்சிந்துரமாகியிளைத்தனவே.

(இ - ள்.) மதி வெண் குடை மாருதி -பூர்ணசந்திரன்போன்ற வெண்கொற்றக்குடையையுடைய வாயுகுமாரனான வீமன், வன் புடனே - வலிமையோடு, குதி கொண்டு - பாய்ந்து, ஒரு கைகொடு குத்துதலால் - (தனது) ஒருகையினால் [முஷ்டியால்] குத்தின தனால், அதிர் சிந்துரம் - முழங்குந்தன்மையனவான யானைகள், வல் உரம் அத்தனைஉம் எதிர் சிந்துரம் ஆகி-வலிய (தமது)உடம்பு முழுவதும் எதிரிலே பொடிபட்டு, இளைத்தன-மெலிந்தன;(எ- று.)

யானையைக் குறிக்கும்பொழுது, ஸிந்துரமென்னும் வடசொல் லுக்கு - சிந்துதேசத்தில் சஞ்சரிப்பதென்று பொருள். உரம் - மார்பு; உரஸ் என்னும் வடமொழித்திரிபு: இது இலக்கணையாய், இங்கே உடம்பை யுணர்த்திற்று. நான்காமடியில், ஸிந்தூரம் - செந்துகள். (146)

8. உடலிற்றசையாவுமுடைந்துநெடுங்
குடலற்றுவிழும்படிகுத்துதலான்
மிடல்பற்றியவீமன்வெறுங்கைகளா
லடலத்திகளத்திகளாயினவே.

(இ - ள்.) உடலில் தசை யாஉம் உடைந்து - உடம்பிலுள்ள சதைகளெல்லாம் சரிந்து, நெடு குடல் அற்று விழும்படி - நீண்ட குடலும் அறுந்து கீழ்விழும்படி, மிடல் பற்றிய வீமன் - வலிமை

பொருந்தின வீமசேனன், வெறு கைகளால் குத்துதலால் - ஆயுத மில்லாத (தனது) கைகளால் குத்தியதனால், அடல் அத்திகள் அத்திகள் ஆயின - வலிமையையுடைய யானைகள் எலும்புமாத் திர மாயின ; (எ-று.)

உயிர்வாழ்ந்தபொழுதுள்ள அத்தியென்னும் பெயர் உயிர் நீங்கினபின்பு வேறுவகையாலும் இருந்த தென்பது, கவியினது சதுரப்பாடு. அத்தி என்பது - இவ்விருபொருளு முடையதாதலை "யானையு மொருமரப் பெயருமென்பு, மார்கலிப் பெயரு மத்தியென் ருகும்" என்ற பிங்கலந்தையினாலுமறிக. அத்தியென்பது - யானையைக் குறிக்கும்பொழுது, ஹஸ்தீயென்னும் வடமொழித் திரிபென்றும்; எலும்பைக் குறிக்கும்பொழுது, அஸ்தியென்னும் வடமொழித் திரி பென்றுங் காண்க. ஹஸ்தம் - கை, இங்கே துதிக்கை; அதனையுடையது - ஹஸ்தீ. தசை - ஊன். (147)

9. கந்தாவகன்மொய்ம்புறுகானைபுயக்
கந்தாலமர்செய்துகலக்குதலிற்
றந்தாவளசேனைதரிப்பறவே
தந்தாவளமுற்றனசாயுறவே.

(இ - ள்.) மொய்ம்பு உறு - வலிமைமிகுந்த, கந்தாவகன் கானை - வாயுவினது குமாரனான வீமன், புயம் கந்தால் - (தனது) தோள்களாகிய தூண்களால், அமர் செய்து கலக்குதலின் - போர் செய்து கலங்கச்செய்ததனால், தந்தாவளம் சேனை - யானைச் சேனைகள், தரிப்பு அற - (பின்வாங்காது) எதிர்நிற்றல் இல்லை யாம்படி, சாய் உற - அழிவுண்டாக, (அஞ்சி), தம் தாவளம் உற்றன - தமது இருப்பிடத்தை அடைந்தன; (எ - று.)

இச்செய்யுளில் முன்னிரண்டடிகளிலும் பின்னிரண்டடிகளி லும் முதலில் எழுத்துக்கள் தனித்தனி ஒத்துநின்று பொருள் வேறுபட்டு வந்தது - யமக மென்னுஞ் சொல்லணி. கந்தவஹ னென்னும் வடசொல்லுக்கு-வாசனையை வகிப்பவ னென்றும், தந்தாவளம் என்னும் வடசொல்லுக்கு - தந்தங்களை யுடைய தென்றும் பொருள். கந்து - ஸ்கந்தமென்னும் வடமொழித்திரிபு. சாயுற - மீளஎன்றுமாம். தாவளம் - இடமாதலை "சரண மாவாசம் பக்கந்தாவள நியமந் தாமம்" என்னும் நிகண்டினாலு மறிக. சாய்-முதனிலைத் தொழிற்பெயர். (148)

10. வெவ்வாயுவின்மைந்தன்வெகுண்டொருதோன்
மொய்வாகுவில்வைத்தெதிர்மோதுதலாற்
கைவாலதிமெய்தலைகால்கள்கரந்
தவ்வாரணம்வாரணமாகியதே.

(இ - ள்.) வெம் வாயுவின் மைந்தன் - கொடிய வாயுவினது குமாரனான வீமன், வெகுண்டு - கோபித்து, ஒரு தோல் - ஒரு யானையை, மொய் வாகுவில் வைத்து - வலிய கையில் எடுத்துக் கொண்டு, எதிர் மோதுதலால்-எதிரேதாக்கியதனால், கை வாலதி

மெய் தலை கால்கள் கரந்து - கையும் வாலும் உடம்பும் தலையும் கால்களும் மறைந்து, அ வாரணம் - அந்தயானை, வாரணம் ஆகியது - கோழிபோலச் சுருண்டது; (எ - று.)

வாரணமாகியது என்பதற்கு - சங்குபோலாயிற்று என்று உரைப்பாருமுளர். "யானையுங் கோழியுஞ் சங்கும் வாரணம்" என்ற திவாகரத்தை இங்கு அறிக. வாரணம் - கடலென்றுகொண்டு, எல்லா வுறுப்புக்களும் தெரிதலின்றிக் கருநிறமொன்றே தெரிதலால், இவ்வாறு கூறியதென உரைவகுத்தாரு முளர்: அது சிறவாதென்பது மேற்பாடலை நோக்கின் விளங்கும். வாகு - இங்கே கை; "தோளுற்றொரர்தெய்வந் துணையாய்" என்ற சிந்தாமணியில், 'தோள்' என்பதுபோல. (149)

11. **கம்பித்தனகாருடல்பேருயிருங்**
கும்பித்தனவாயுகுமாரனிவ
னம்பொற்கரபங்கயமள்ளுதலிற்
றும்பிக்குலமாயினதும்பிகளே.

(இ - ள்.) கார் உடல் கம்பித்தன - கரிய உடல் நடுங்கின வாகும்படியும், பேர் உயிர்உம் கும்பித்தன - பெரிய உயிரும் உள்ளடங்கினவாம்படியும், வாயு குமாரன் இவன் - வாயுவின்மகனான இவ்வீமன், அம் பொன்கரம் பங்கயம் அள்ளுதலின் - அழகிய பொன்னிறமான தன் கைகளாகிய தாமரைமலர்களில் எடுத்ததனால், தும்பிகள் - யானைகள், தும்பி குலம் ஆயின-வண்டின் கூட்டமாயின; (எ - று.)

"தும்பியே களிறு வண்டாம்" என்ற நிகண்டையுங் காண்க. கம்பித்தன, கும்பித்தன - வடசொல்லடியாப்பிறந்த பலவின்பால் முற்றெச்சங்கள்; கம்பம்-நடுக்கம்: கும்பித்தல்-ஒடுங்குதல். கரிய பெரிய யானைகள், கரியசிறிய வண்டுகள்போல உடல்சுருங்கின என்க. யானையை வண்டென்பதற்கு ஏற்ப, வீமன்கையைத் தாமரைமலரெனறார்: உருவகவணி. பி-ம்: தம்பித்தனகாருடல்.

12. **பொன்னாகமணிப்புயன்வெங்கதையான்**
முன்னாகமலைந்துமுருக்குதலா
லெந்நாகமுநாகமெனும்படியே
மன்னாகவமெங்குமடிந்தனவே.

(இ - ள்.) பொன் நாகம் மணி புயன் - பொன்மலையாகிய மகாமேருபோன்ற அழகிய தோள்களையுடைய வீமன், வெம் கதையால் - கொடிய (தனது) கதாயுதத்தால், முன் ஆக மலைந்து - எதிராகப் போர்செய்து, முருக்குதலால் - அழித்ததனால், எ நாகம் உம் - எல்லா யானைகளும், நாகம் எனும் படியே - மலைகளென்று உவமைசொல்லும்படி, மன் ஆகவம் எங்கும் - பெரிய போர்க்களம் முழுவதிலும், மடிந்தன - இறந்துவிழுந்துகிடந்தன; (எ - று.)

"நாகம் விண் குரங்கு புன்னை நல்தூசு மலைபாம்பி யானை" என்பது நிகண்டு. பொன் ஆகம் எனப் பிரித்தால், அழகிய

அல்லது ஐயலக்ஷ்மிதங்குகிற மார்பென்னலாம். நாகம் - யானையைக் குறிக்கும்பொழுது, மலையில் வாழ்வதென்றும் [நகம்-மலை]; மலையைக்குறிக்கும்பொழுது, சலியாததென்றும் காரணங் காண்க. பி-ம்: மின்னுக மணிப்புயன். (151)

13. கோடுங்கரமும்பறியக்குதிகொண்
டோடுங்குருதிப்புனலூடுடல
மூடும்படியாவருமூழ்குதலா
லாடுங்கயமாயினவக்கயமே.

(இ - ள்.) கோடுஉம் கரம்உம் பறிய - தந்தங்களுந் துதிக்கையும் பிளந்தொழிய, குதிகொண்டு ஓடும் - (அப்பொழுது அந்தக் கொம்புங் கோடும் பறியுண்ட இடத்தினின்று) பாய்ந்தோடுகின்ற, குருதி புனலூடு - இரத்தவெள்ளத்தில், உடலம் மூடும் படி யாவர்உம் மூழ்குதலால் - (தம்தம்) உடம்பு மறையும்படி பலரும் மூழ்கவிருந்ததனால், அ கயம்-அவ்யானைகள், ஆடும் கயம் ஆயின - நீராடுதற்குரிய குளங்களாயின; (எ - று.)

தந்தங்களுந் துதிக்கையும் பறியப் பாயும் இரத்தப்பெருக்குக்கு, கரைகளும் மதகும் உடையப் பாயும் புதுநீர்வெள்ளம் உவமையாம். 'குளமுமாழமு நீருங் குறையுங், களிறும் பெருமையு மென்மையுங் கயமெனல்" என்பது பிங்கலந்தை. கயம் - யானையைக் குறிக்கும்பொழுது, கஜமென்னும் வடமொழித் திரிபாம். புனலூடு, ஊடு - ஏழனுருபு. உடலம், அம்-சாரியை. (152)

14. வீசுந்தமகைம்முதன்மெய்ம்முழுதுங்
கூசும்படிசிற்சில்குழம்புகளாய்
மூசுங்களபக்குலமொய்ம்பனுடற்
பூசுங்களபக்களிபோன்றனவே.

(இ - ள்.) மூசும் சில் சில் களபம் குலம்-நெருங்கிவருகிற சிலசில யானைகளின்கூட்டம்,—கூசும்படி - (பார்ப்பவர்) அஞ்சும்படி, வீசும் தம கை முதல் மெய் முழுதுஉம் குழம்புகள் ஆய் - முன்னேவீசுகிற தம்முடைய துதிக்கை முதலாக உடம்புமுழுவதுங் குழைசேருகி, மொய்ம்பன் உடல் பூசும் களபம் களி பேர்ன்றன - வலிமையையுடைய வீமசேனனது உடம்பில் பூசுதற்கு எதிர்வைத்த கலவைச்சந்தனக்குழம்பை யொத்தன;

"கலவையும் யானைக் கன்றுங் களபம்" என்றார் பிங்கலந்தையிலும். களபம்-யானையைக்குறிக்கும்பொழுது, வடசொல்; பத்துப் பிராயத்து யானைக்கன்றுக்குப் போதகமென்றும்,—முப்பதுபிராயத்து யானைக்கன்றுக்குக் களபமென்றும் பெயர்கூறுதல், வடமொழிமரபு. கலவை - குங்குமப்பூ முதலிய பல்வகைவாசனைப்பண்டங்கள் கலக்கப்பெற்ற செந்நிறச்சாந்து. கலவை, வெற்றிமகளை மணந்திடுதற் கென்க. (153)

15. கிரியேயெனவந்தெதிர்கிட்டினபுன்
பொரியேயெனவானிடைபுக்கனபோ

ரரியேறனையான்வலிமைக்கவர்தங்
கரியேகரியல்லதுகண்டவர்யார்.

(இ - ள்.) கிரிஏ என வந்து எதிர் கிட்டின-மலைகளேயென்று உவமை கூறும்படி எதிரில் வந்து நெருங்கின யானைகளெல்லாம், புல் பொரிஏ என வானிடை புக்கன - அற்பமானநெற்பொரிகளே யென்று உவமை கூறும்படி (அப்பொழுது வீமனால் எளிதில் எறியப்பட்டு) ஆகாயத்திற் பறந்தன; போர் அரி ஏறு அனையான் வலிமைக்கு - போரில் ஆண்சிங்கத்தை யொத்தவனான வீமனது பலத்துக்கு, அவர் தம் கரிஏ கரி அல்லது - அவர்களது [பகைவர்களது] யானைகளே சாட்சியல்லாமல், கண்டவர் யார் - (வேறே உள்ளபடி) கண்டவர் எவர்? [எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

எவருங் கண்கொண்டு காணவொண்ணாதபடி உக்கிரமாக வீமன் யானைகளைத் தனதுபேராற்றலால் அழித்திட்டன னென்பதாம். "கரியென்பதிருந்தை சான்று கறையடி சேகு நாற்பேர்" என்பது நிகண்டு. பலபலவகையர்க வீமனால் அழிக்கப்பட்ட யானைகளைக்கொண்டே அவனதுவல்லமையை நன்கு அறியலாம் என்பது, பின்னிரண்டடியின் கருத்து. பற்பல யானைக்கூட்டத்தை ஒருங்கே அலட்சியமாக அழித்தல்பற்றி, இங்கே வீமசேனனுக்குச் சிங்கவேற்றை உவமைகூறினார். (*154*)

16.—வீமன் இங்ஙன் கடுமையாகப் பொருவதனால் எதிர்மன்னர் தம்வாகனங்களோடு வென்னிடுதல்.

இவ்வாறுவெகுண்டிவனேற்றுதலுங்
கைவாரணவேலைகலக்கமுறத்
தெவ்வாகியமன்னவர்தேர்களொடும்
வெவ்வாசிகடம்மொடும்வென்னிடவே.

இதுவும், மேற்கவியும் குளகம்.

(இ - ள்.) இ ஆறு - இப்படி, வெகுண்டு-கோபங்கொண்டு, இவன்-இவ்வீமன், எற்றுதலும்-தாக்கினவளவிலே, கை வாரணம் வேலை-துதிக்கையையுடைய யானைச்சேனையாகிய கடல், கலக்கம் உற-மிகக்கலங்க,—தெவ் ஆகிய மன்னவர் - பகைவராகிய அரசர்கள், தேர்களொடுஉம்-இரதங்களோடும், வெம் வாசிகள் தம்மொடுஉம்-உக்கிரமான குதிரைகளோடும், வென் இட - புறங்கொடுத்தோட,—(எ - று.)—'உடைகின்றமை கண்டு உரகத்துவசன்... அவன்மேற்போனான்' என அடுத்த கவியிலே முடியும்.

வாரணமென்பது-யானை கோழி சங்கு தடை முதலிய பலபொருள் குறிக்கும் ஒருபெயர்த்திரிசொலாதலால், அது இங்கே இன்னபொருளதென வெளிப்படையாக்குதற்கு, 'கைவாரணம்' என்றார்.

17.—அதுகண்டு துரியோதனன் வீமன்மீது சேறல்.

உடைகின்றமைகண்டுரகத்துவசன்
குடையுங்கொடியுங்குளிர்மாமுரசும்
படையுஞ்சிலதம்பியரும்பலரும்
புடைகொண்டுவரப்போனானவன்மேல்.

(இ - ள்.) உடைகின்றமை-(இங்ஙனம் தன்சேனை) அழிகின்றதை, கண்டு-பார்த்து, உரகம் துவசன்-பாம்புக்கொடியனான துரியோதனன், குடைஉம் கொடிஉம் குளிர் மா முரசுஉம் படைஉம் சில தம்பியர்உம் பலர்உம் புடைகொண்டு வர-வெண்கொற்றக்குடையும் துவசமும் அச்சத்தைத்தருகிற பெரியபேரிகைகளும் சேனைகளும் சிலதம்பிமார்களும் வேறுபலரும் பக்கத்திற்சூழ்ந்துவர, அவன் மேல் போனான்-அவ்வீமன்மீது (போருக்குச்) சென்றான்; (எ-று.)— இனி,குளிர் மா முரசு-ஒலிக்கிற சிறந்தபேரிகை யெனவுமாம். (156)

18.—துரியோதனன் வீமனுடைய வில்லும் கவசமும் அழியக் கணை தொடுத்தல்.

வீமற்கெதிர்நின்றவன்வில்லறவுஞ்
சேமக்கவசஞ்சிதைவுற்றிடவும்
நாமக்கணையேவினனாயகனா
மாமுத்தமதிக்குடைமன்னவனே.

(இ - ள்.) நாயகன் ஆம்-(குருநாட்டுக்குத்) தலைவனாகிய, மா முத்தம் மதி குடை மன்னவன் - சிறந்த [பெரிய] முத்துக்களினாலாகிய பூர்ணசந்திரன்போன்ற வெண்கொற்றக்குடையையுடைய துரியோதனராசன், வீமற்கு எதிர் நின்று-(போய்) வீமசேனனுக்கு எதிரிலே நின்று, அவன் வில் அறஉம்-அவனது வில் துணிபடவும், சேமம் கவசம் சிதைவுற்றிடஉம்-(உடம்புக்குப்) பாதுகாப்பாகவுள்ள (அவனது) கவசம் அழிவடையவும், நாமம் கணை ஏவினன்-அச்சத்தைத்தருகிற அம்புகளைச் செலுத்தினான்; (எ - று.)

சேமம்-க்ஷேமம் என்னும் வடமொழித்திரிபு. நாம் - அச்சப்பொருளுணர்த்துவதோர் உரிச்சொல்: அம்-சாரியை. (157)

19.—வீமன் துரியோதனன்மீது கடுமையாகக் கணைதொடுத்தல்.

ஆறம்பினிலற்றரவத்துவச
நூறம்பகன்மார்பினுழைந்தனபின்
வேறம்புதொடுத்திலன்வீமனவன்
மாறம்புதொடுத்தனன்மற்றிவன்மேல்.

(இ-ள்.) (அப்பொழுது வீமன்விட்ட), ஆறு அம்பினில்-ஆறு பாணங்களால், அரவம் துவசம்-(துரியோதனனது) பாம்புக்கொடி, அற்று-அறுபட, நூறு அம்பு-(அவ்வீமனது) நூறுபாணம், அகல் மார்பில் நுழைந்தன-(துரியோதனனது) பரந்த மார்பிலே புதைந்து ஊடுருவின; பின்-அதன்பின், வீமன்—, வேறு அம்பு தொடுத்திலன்-வேறுபாணம் தொடுத்தானில்லை; அவன் - அத்துரியோதனன், மற்று-பின்பு, இவன்மேல்-இவ்வீமன்மேல், மாறு அம்பு தொடுத்தனன்-எதிரம்புகளைப் பிரயோகித்தான்; (எ - று.)

அரவத்துவசன் மார்பில் நூறம்பு நுழைந்த அப்பொழுதில் வீமன் வேறம்புதொடுக்காமை, தழிஞ்சியென்னும் புறப்பொருள் திணையின்பாற்படும்; அது-சாய்ந்தார்மேற் படாமை. (158)

20.—துரியோதனன் கடுங்கணைவிடவே வீமன் வெகுளுதல்.

சிங்கக்கொடியற்றணிதேர்சிதைவுற்
றங்கத்தினுழைந்தனவம்புகளுந்
துங்கக்கடகத்திரடோள்புடையா
வெங்கட்கனல்வீமன்வெகுண்டனனே.

(இ - ள்.) (துரியோதனன்விட்ட அம்புகளால்), சிங்கம் கொடி அற்று-சிங்கத்தின்வடிவமெழுதிய (வீமனது) துவசம் துணிபட, அணி தேர் சிதைவுற்று-அழகிய தேரும் அழிவடைய, அங்கத்தின்உம் அம்புகள் நுழைந்தன - வீமனுடம்பிலும் துரியோதனனம்புகள் தைத்துச்சென்றன; (அப்பொழுது), வெம் கண் கனல் வீமன் - உக்கிரமானகண்களிற்கோபாக்கினியுடைய வீமசேனன், துங்கம் கடகம் திரள் தோள் புடையா-உயர்வானவையும் கடகமென்னும் ஒருவ்கையணியை யணிந்தவையும் திரண்டுள்ளவையுமான தனது தோள்களைக் (கைகளால்) கொட்டி, வெகுண்டனன் - சினங்காட்டினான்; (எ-று.)--அற்று, உற்று-எச்சத்திரிபுகள். இரண்டாம் அடியில் உம்மை மாறுக. தோள்புடைத்தல்-கோபாவேசம்.

21.—வீமன்நொந்தானென்று தம்பிமார்முதலியோர் துணையாகவருதல்.

நொந்தானிவனென்றுநுதிக்கதிர்வே
லந்தார்முடிமன் ரநேகருடன்
வந்தார்பலதம்பியர்மைத்துனருங்
கொந்தார்தொடைவீரகுமாரருமே.

(இ - ள்.) (அப்பொழுது), இவன் நொந்தான் என்று - இவ்வீமன் (துரியோதனனம்புகளால்) வருத்தமுற்றானென்று கருதி, நுதி கதிர் வேல் அம் தார் முடி மன்னர் அநேகருடன் - கூர்நுனியையும் ஒளியையுமுடைய வேலாயுதத்தையும் அழகிய மாலையையும் கிரீடத்தையு முடைய பல அரசர்களுடனே, பல தம்பியர் மைத்துனர்உம் - தம்பிமரும் மைத்துனன்மாருமாகிய அநேகம்பேரும், கொந்து ஆர் தொடை வீர குமாரர்உம் - பூங்கொத்துப் பொருந்தின மாலையையுடைய வீரர்களான இராசகுமாரர்களும், வந்தார் - (வீமனுக்கு உதவியாக) வந்தார்கள்; (எ - று.)

நுதி - வடசொல். மைத்துனர் - இங்கே, மனைவியின் உடன் பிறந்தவர்; என்றது, திரௌபதிக்கு உடன்பிறந்தமுறையாகுபவரை. கொந்து-எதுகை நோக்கிய மெலித்தல். கொந்து ஆர் தொடை- திரட்சிபொருந்தின மாலை யென்றும் உரைக்கலாம். (160)

22.—துரியோதனன்பக்கத்தும் பலமன்னர் துணையாகத்திரளுதல்.

மலரும் குடைமன் னவர்வந் தமைகண்
டலரும் கொடிவா ளரவோ னருகே
பலரும் கரிதேர் பரியா ளுடனே
சிலரும் புவிபா லர்திரண் டனரே.

(இ - ள்.) (இவ்வாறு வீமனுக்குத் துணையாக), மலரும் குடை மன்னவர் வந்தமை - பரந்துவிளங்கும் வெண்கொற்றக்குடையையுடைய பலஅரசர்கள் வந்ததை, கண்டு—, பலர்உம் கரி தேர் பரி ஆளுடனே - யானைவீரரும் தேர்வீரரும் குதிரைவீரரும் காலாள் வீரரும் ஆகிய (நால்வகை) வீரர்அநேகரோடும், புவிபாலர் சிலர் உம் - சிலஅரசர்களும், அலரும் கொடி வாள் அரவோன் அருகு உஏ திரண்டனர் - விரிந்துவிளங்கும் துவசத்திலே கொடியபாம்பின் வடிவத்தையுடைய துரியோதனனது அருகிலே (உதவியாக வந்து)கூடினார்கள்; (எ - று.)

வாள்அரவு-வாள்போலஉக்கிரமான அரவென்க; இனி, ஒளியையுடைய பாம்பெனினுமாம். மூன்றுமடியை, கரிதேர்பரி ஆள் பலருடனேயும் என மொழிமாற்றுக. புவிபாலர் - பூமியைக் காப்பவர். (161)

வேறு.

23.—இருபடையிலும் மன்னர் கடுமையாகப்பொருது ஆவியிழத்தல்.

எதிர்ந்தார் மன்ன ரிருதிறத்து மொருவர்க் கொருவ ரிடையிடைநின்
றதிர்ந்தார் சிறுநாண் பேரொலியா லுடையா வல்ல வகிலாண்ட
முதிர்ந்தார் போரிற் றொடுகணையான் முரட்டோ டுணிந்து முடிதுணிந்தும்
உதிர்ந்தார் தத்த முடனிலத்தி லுயர்ந்தா ராவி யுயர்வானில்.

(இ - ள்.) இரு திறத்துஉம் - இரண்டுபக்கத்திலும்,மன்னர் - பல அரசர்கள், ஒருவர்க்கு ஒருவர் எதிர்ந்தார் - ஒருவரோடு ஒருவர் எதிரிட்டார்கள்; இடை இடை நின்று - (அவ்யுத்தகளத்தின்) இடந்தோறும் பொருந்திநின்று, சிறு நாண் அதிர்ந்தார் - சிறியவில்நாணியை (க் கைவிரலால் தெறித்து) ஒலிசெய்தார்கள்; பேர் ஒலியால் - அந்தப் பெரிய ஓசையினால், அகில அண்டம் உடையா அல்ல - எல்லாவண்டங்களும் (மிகஅதிர்ந்து) உடைபடாதனவல்ல[யாவும் உடைபட்டன]; (இன்னும் அவர்), தொடுகணையால் போரில் முதிர்ந்தார் - பிரயோகிக்கின்ற அம்புகளால் போர்செய்தலில் மிக்கார்கள்; (பின்புபகைவர்படைக்கலங்களால்), முரண் தோள் துணிந்துஉம்-வலிமையையுடையதோள்கள் அறுபட்டும், முடி துணிந்துஉம்-தலையறுபட்டும், தம் தம் உடல் நிலத்தில் உதிர்ந்தார் - தம்தமது உடம்பு தரையிலே சிதறப்பெற்றார்கள்; ஆவி உயர் வானில் உயர்ந்தார்-(தத்தம்) உயிர் சிறந்த வீரசுவர்க்கத்தில் ஏறப்பெற்றார்கள் [இறந்தார்கள்]; (எ - று.)

மன்னர் உடல் உதிர்ந்தார், ஆவி உயர்ந்தார் - திணைவழுவமைதி: 'பேரொலியாலுடையாவல்லவகிலாண்டம்' என்ற வாக்கியம், வில்நாணொலியைச் சிறப்பித்துக்கூறவந்த இடைப்பிறவரல்.

இதுமுதற் பத்துக் கவிகள் - கீழ்ச்சருக்கத்தின் முதற்கவி போன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள். (162)

24.—வீமன் துரியோதனனுடையவில்முதலியனதுணியஎய்து நகைத்தல்.

தாமத்தெரியல்வலம்புரியோன்றடந்தாமரைக்கைத்தனுத்தறியச்
சேமக்கவனப்பவனகதிப்பரிமாநான்குஞ்சிரந்துணிய

மாமொட்டொடிந்துகொடுஞ்சியுடன்மான்றேர்சிதையமார்புருவ
நாமக்கணைகள்பலபடவில்லுகைத்தானின்றுநகைத்தானே.

(இ - ள்.) (அப்பொழுது),—தாமம் - ஒளியையுடைய, வலம்புரி தெரியலோன் - நஞ்சாவட்டைப் பூமாலையையுடைய துரியோதனனது, தட தாமரை கை - பெரிய தாமரைமலர்போன்ற கையிலுள்ள, தனு - வில், தறிய - முறிபடவும்,—சேமம்-நன்மையுள்ள, கவனம் பவனம் கதி - நடையிலே வாயுவினது சஞ்சாரத்தையொத்த [விரைந்த], பரிமா நான்கு உம் - (துரியோதனனது தேர்க்) குதிரைகள் நாலும், சிரம் துணிய - தலை அறுபடவும்,—மா மொட்டு ஒடிந்து கொடுஞ்சியுடன் மான் தேர் சிதைய - பெரிய மொட்டு என்னுந் தேருறுப்பு ஒடிபட்டுக் கொடுஞ்சியென்னும் உறுப்போடு குதிரைகள்பூட்டிய (துரியோதனனது) தேர் அழியவும், மார்பு உருவ - (அவன்) மார்பு துளைபடவும், நாமம் கணைகள்-அச்சத்தை விளைக்கும்படியான அம்புகளை, பலபட - பலவாக, வில் உகைத்தான் - (தனது) வில்லினின்று செலுத்தி, (வீமன்), நின்று நகைத்தான் - எதிர்நின்று (அவனது தோல்வியை நோக்கிச்) சிரித்தான்; (எ - று.)

இங்கே, நகைப்பு-பகைவனை இகழ்தல் காரணமாகப் பிறந்தது. இப்பாட்டுக்கு 'வீமன்' தோன்றா எழுவாயென்பதை, அடுத்தகவியில் "அவனைப் பெற்றெடுத்தோன்" என்பதனா லறிக. வலம்புரித் தெரியலோன் என்பது-கைத்தனு, பரி, தேர், மார்பு என்ற நான்கோடும் இயையும். மொட்டு - தேரில்வீரன்ஏறியிருக்கும்ஆசனமென்றும், தேரின் கூம்பு என்றும் கூறுவர். கொடிஞ்சி - தாமரைமுகைவடிவாகச்செய்த தேருறுப்பு என்றனர் நச்சினார்க்கினியர். மா என்னும் விலங்கின் பொதுப்பெயர், னகரமெய்ச்சாரியை பெற்று இங்கே சிறப்பாய்க் குதிரையை உணர்த்திற்று. *(163)*

25.—சகுனிமுதலியோர் துரியோதனனை எடுத்தணைத்தல்.

முன்னாளமரிற்கடோற்கசன்முன்முனைவெஞ்சரத்தான்மூழ்குவித்தான்
பின்னாண்மீளப்பிறைக்கணையாற்பிளந்தானவனைப்பெற்றெடுத்தோன்
என்னாவிரங்காமெய்ந்நடுங்காவெடுத்தாரணைத்தார்சகுனியுமப்
பொன்னார்தடந்தேர்ச்சல்லியனுமுதலாவுள்ளபூபாலர்.

(இ - ள்.) (அப்பொழுது), சகுனியும்—, பொன் ஆர் தட தேர் சல்லியன் உம்-பொன்னினா லமைந்த [அழகுநிறைந்த] பெரிய தேரையுடைய சல்லியனும், முதல் ஆ உள்ள - முதலாகவுள்ள, அ பூபாலர்-அந்த [துணை வந்த] அரசர்கள்,—'முன் நாள் அமரில்-முந்தின [மூன்றாவது] நாட் போரில், கடோற்கசன்—, முனை வெம் சரத்தால்-கூர்நுனியையுடைய கொடிய அம்புகளால், மூழ்குவித்தான்-(நமது துரியோதனனை) முழுகச் செய்தான்; பின் நாள்-அடுத்த இந்நாளில், அவனை பெற்று எடுத்தோன் - அக்கடோத்கசனைப் பெற்றதந்தையான வீமன், பிறை கணையால் மீள பிளந்தான்-அர்த்தசந்திரபாணங்களால் மறுபடியும் (இத்துரியோதனனைப்)பிளந்திட்டான்,' என்னா - என்றுசொல்லி, இரங்கா - மன

மிரங்கி, மெய் நடுங்கா - (இவனுக்கு என்னாகுமோ என்று எழுந்த அச்சத்தால் தம்) உடம்பு நடுங்கி, எடுத்தார் அணைத்தார் - (அத் துரியோதனனை) எடுத்து அணைத்துக்கொண்டார்கள்; (எ - று.)

கடோற்கசன் துரியோதனனை முனைவெஞ்சரத்தால் மூழ்கு வித்ததைக் கீழ்ச்சருக்கத்தில் "துவசம்பிளந்து" என்ற ஏழாங்கவி யிற் காண்க. சரத்தால் மூழ்குவித்தல்-மேலே அம்புமழைபொழி ந்து நிறைத்து அவனுருத்தெரியாது மறைத்தல். இங்கே 'பிறைக் கணை' என்றதனால், கீழ்க்கவியில் 'நாமக்கணை' என்றது-பிறைமுக வம்புகளை யென்க. அச்சல்லியனென இயைத்தால், அகரச்சுட்டு-வஞ்சனைவழியால் துரியோதனனுக்குத் துணைவனான தன்மையைக் குறிக்கும். சல்லியன் தேர்செலுத்துதலில்வல்லவனாதலால், தேர்ச் சல்லியனெனப்பட்டான். (164)

26.—துரியோதனன் தளர்ந்ததுகண்டு அவன்தம்பிமார் போரில்மூளுதல்.

தம்முன்றளர்ந்தநிலைகண்டுதரியாராகித்தம்பியர்க
ளெம்முன்பொருதற்கிசைவார்களிசைவீரென்றென்றிகல்கூறித்
தெம்முன்செவிகள்செவிடுபடச்சிறுநாணெறிந்துதேர்கடவி
முன்முன்கடிதிற்கணைபொழிந்தார்முகுந்தன்றடுத்தமுகில்போல்வார்.

(இ-ள்.) தம் முன் - தங்கள் தமையனாகிய துரியோதனன், தளர்ந்த - தளர்ச்சியடைந்த, நிலை - நிலைமையை, கண்டு - பார்த்து, தம்பியர்கள் -(அவனது) தம்பிமார்கள் பலர், தரியார் ஆகி - மனம் பொறாதவர்களாய், எம்முன் பொருதற்கு இசைவார்கள் இசைவீர் என்று என்று இகல் கூறி - 'எங்களெதிரிற் போர்செய்வதற்குப் பொருந்துபவர்கள் பொருந்துவீர்களாக' என்று பலமுறை (தங்கள்) வல்லமையை யெடுத்துச்சொல்லி, தெவ் முன் - பகைவர்களெதிரில், செவிகள் செவிடு பட சிறு நாண் எறிந்து - (கேட்பவரின்) காதுகள் (ஒலிமிகுதியால்) செவிடாகும்படி சிறிய வில்நாணியைத் (தம் கைவிரலால்) தெறித்து (ப்பேரொலியை உண்டாக்கி), தேர் கடவி -(தம் தம்) தேரைச் செலுத்திக்கொண்டு, முன் முன் - (ஒருவர்) முன் (ஒருவராக) முந்திவந்து, கடிதின் - விரைவாக, முகுந்தன் தடுத்த முகில் போல்வார் - கண்ணபிரானால் (கோவர்த்தன மலையைக்கொண்டு) தடுக்கப்பட்ட மேகம் போல்பவர்களாய், கணை பொழிந்தார் - அம்புமழையைச் சொரிந்தார்கள்; (எ - று.)

இரண்டாம்அடி-வீரவாதம். முன்முன்வருதல், போரில் அவர் களுக்கு உள்ள ஊக்கத்தை விளக்கும். முகுந்தன் தடுத்த முகில் போல்வார் என்ற உவமை, அவர்கள் வீமனை ஒன்றுஞ்செய்யமாட் டாமல் அவனால் எளிதில் வெல்லப்படுதலைக் குறிக்கும். தம்முன் - தமக்குமுன்பு பிறந்தவன்: முன்-காலவாகுபெயர். தெவ்-பகைமை, உரிச்சொல்; பகைவர்க்குப் பண்பாகுபெயர். தெவ் + முன் = தெம் முன். இசைவார்கள் இசைவீர்-முன்னிலையிற் படர்க்கைவந்த இட வழுவமைதி. இச்செய்யுளில் இனவெதுகை காண்க. (165)

27.—இதுவும் அடுத்த கவியும்-வீமன் வந்தவரை யெதிர்த்துவென்று ஐந்துதம்பிமாரைச் சுவர்க்கம் அனுப்பினமை கூறும்.

**வின்மேல்விசையிற்கடும்பாணமேன்மேனிறுத்திவேந்தரைப்பார்த்
தென்மேனினைவென்றவரவர்பேரிரதந்துணித்துச்சிலைதுணித்துத்
தன்மேல்வந்ததம்பியரிற்றரியாதுடன்றவைவர்க்கு
மன்மேலெய்தவாளியெனத்தொடுத்தானைந்துவயவாளி.**

(இ - ள்.) (அப்பொழுது வீமன்), வில்மேல் - (தனது) வில்லிலே, விசையின் - வேகத்தோடு, கடு பாணம்-கொடிய்அம்புகளை, மேல்மேல் நிறுத்தி - மேலேமேலே வைத்துத் தொடுத்து, வேந்தரை பார்த்து-(எதிர்த்து வந்த அந்த) அரசர்களைநோக்கி, மேல் நினைவு என் என்று - இனிமேல் (உங்கள்) ஆலோசனை என்னவென்று (இகழ்ச்சிதோன்றச்) சொல்லி, அவர் அவர் - அந்தந்த அரசர்களது, பேர் இரதம்-பெரியதேர்களை, துணித்து-அழித்து, சிலை-விற்களை, துணித்து-அறுத்து, தன்மேல் வந்த தம்பியரில் தரியாது உடன்ற ஐவர்க்குஉம் - தன்மேல் (போருக்கு) வந்த (துரியோதனன்) தம்பிமார்களுள் பொறுக்கக்கூடாதபடி [மிகுதியாகப்] போர்செய்த ஐந்துபேருக்கும், மன் மேல் எய்த வாளி என (கீழ்த்) துரியோதனன்மேல் (தான்) தொடுத்த அம்புகள்போல, ஐந்து வய வாளி-வெற்றியைத்தருதற்குரிய ஐந்துபாணங்களை, தொடுத்தான்-செலுத்தினன்; (எ - று.)

முன்இரண்டடி - வீமனதுதொழில்; துணித்துத்தொடுத்தான் என்க: துரியோதனன் தம்பிமாரது தொழிலாயின், துணித்துத் தன்மேல்வந்த என்க. என் மேல்நினைவு என்றது, இனி அழிவுநிச்சயம் என்பதைக் காட்டும். ஐவர்பெயர் - அடுத்த கவியிற் கூறப்படும். மன்மேல்எய்தவாளி - கீழ் 24-ஆம் பாட்டிற் காண்க. (166)

**28. சேனவிந்துசுதக்கணன்பொற்றேர்ப்பிங்கலசன்சலாசந்தன்
ஆனவீமவாகுவெனுமடல்வாணிருபரைவரையும்
வானுடாளும்படிவிடுத்தான்வன்பாற்றம்மையைவரையுங்
கானுள்கென்றகாவலனைப்போல்வான்வீரக்கழல்வீமன்.**

(இ - ள்.) வன்பால் - கொடுமையால், தம்மை ஐவரைஉம் - (பாண்டவர்களாகிய) தங்களைந்து பேரையும், கான் ஆள்க என்ற- 'காட்டையாளுவீர்களாக' என்று சொல்லியனுப்பின, காவலனை - துரியோதனராசனை, போல்வான்-ஒப்பவனாகிய, வீரம் கழல்வீமன்-வீரக்கழலையுடைய வீமன்,—சேனவிந்து—,சுதக்கணன்—,பொன் தேர்-பொன்னாலாகிய தேரையுடைய, பிங்கலசன்—,சலாசந்தன்—, ஆன-(போரில்) நீங்காத, வீமவாகு—,எனும்-என்று பேர்சொல்லப்படுகிற, அடல் வாள் நிருபர் ஐவரைஉம் - வலிமையையுடைய வாளாயுதத்தையுடைய அரசர்கள் ஐந்து பேரையும், வான் நாடு ஆளும்படி விடுத்தான் - வீரசுவர்க்கத்தை ஆளும்படி அனுப்பினன்; (எ - று.)

துரியோதனனும் வீமனும் சமபலமுடையவராதலாலும் துரியோதனன் பஞ்சபாண்டவரை இந்நாட்டைவிட்டு வனமடையச்

சொல்லி அனுப்பியது போல, வீமன் இப்பொழுது துரியோதனன் தம்பிமாரைவரை இவ்வுலகத்தைவிட்டு விண்ணுலகமடையும்படி அனுப்புதலாலும், வீமனுக்குத் துரியோதனனை உவமைகூறினர். வாணுடாளும்படிவிடுத்தல்-கொல்லுதல்: பிறிதினவிற்சி. பீமபாஹு-வடசொல்; பகைவர்க்குப் பயங்கரமான தோள்களையுடையானென்று பொருள். ஆளுதல் - இங்கே, சேர்தல். வன்பால் - பலாத்காரமாக என்றபடி. ஸேநாபதி, ஸுஷேணன், ஸுலோசநன் ஜலஸந்தன், பீமபாஹு என வடநூலிற் பெயர் காணப்படுகிறது.

29.—தருமபுத்திரன்பக்கத்து வீமன் முதலியோர் ஆங்காங்குப் போர்புரியவே துரியோதனன்சேனை யுடைதல்.

ஒருபால்வீமன்சிலைவிசயனொருபாலொருபாலபிமன்னு
வொருபானகுலன்சாதேவனொருபாலொருபாலுரகேச
னொருபாலரக்கன்பாஞ்சாலனொருபாலடலுத்தமபானு
வொருபாலுடன்றுபொரப்பொரவேயுடைந்ததரசன்பெருஞ்சேனை.

(இ - ள்.) ஒரு பால் - ஒருபக்கத்தில், வீமன்-வீமசேனனும், ஒரு பால்—, சிலை விசயன் - வில்லில்வல்ல அருச்சுனனும், ஒரு பால்—, அபிமன்னு - அபிமன்யுவும், ஒரு பால்—, நகுலன் - நகுலனும், ஒரு பால்—, சாதேவன் - சகதேவனும், ஒரு பால்—, உரக ஈசன் - நாகர்களுக்குத் தலைவனான இராவானும், ஒரு பால்—, அரக்கன் - கடோற்கசனும், ஒரு பால்—, பாஞ்சாலன் - பாஞ்சாலதேசத்து அரசனான துருபதனும், ஒரு பால்—, அடல் உத்தமபானு - வலிமையையுடைய உத்தமௌஜஸும், உடன்று பொர பொர-கோபங்கொண்டு மிகுதியாகப்போர்செய்ய,(அதனால்) அரசன் பெரு சேனை - துரியோதனராசனது பெரியசேனை, உடைந்தது - தோற்றுப் பின்னிடைந்தது; (எ - று.)

இராவான் போர்செய்யுந்தன்மை கீழ்க் களப்பலியூட்டுசருக்கத்தின் கு, எ - பாட்டுகளிற் கூறப்பட்டது. அரக்கன் - பொதுப் பெயர் சிறப்புப்பொருளை யுணர்த்திற்று. உத்தமௌஜஸ் - பாஞ்சாலரிற் சேர்ந்தவன். (168)

30.—அப்போது பகதத்தனென்பான் உடைந்தோடுஞ் சேனைக்கு அபயமளித்துப் பாண்டவர்சேனையோடெதிர்த்தல்.

விண்ணாடருக்காவெஞ்சமத்திலசுராதிபரைவென்கண்டோன்
மண்ணாளரசர்மகுடசிகாமணியேபோல்வான்மாமரபாற்
பண்ணார்பஞ்சகதிமான்றேர்ப்பகலோனன்னபகதத்தன்
எண்ணார்துரக்கவரும்படையையஞ்சலென்றென்றெதிர்சென்றான்.

(இ - ள்.) வெம் சமத்தில் - கொடிய (தேவாசுர) யுத்தத்தில், விண் நாடருக்கு ஆ - தேவர்களுக்கு உதவியாக (ச்சென்று),அசுர அதிபரை வென் கண்டோன் - அசுரத்தலைவர்களை முதுகுகாட்டியோடச்செய்தவனும், மா மரபால் - சிறந்த வமிசமுறைமையால், மண் ஆள் அரசர் மகுட சிகாமணிஏ போல்வான் - பூமியை ஆளுகிற அரசர்களது கிரீடத்திலுள்ள பிரதான ரத்தினத்தை

யொப்பவனுமாகிய, பண் ஆர் - அலங்காரமமைந்த, பஞ்ச கதி - ஐவகை நடைகளையுடைய, மான் - குதிரைபூண்ட, தேர் - இரதத்தையுடைய, பகலோன் அன்ன - சூரியனை யொத்த, பகதத்தன்—, எண்ணார் துரக்க வரும் படையை - (அப்பொழுது) பகைவர்கள் துரத்துதலால் (தோற்றோடி) வருகிற கௌரவ சேனையை, அஞ்சல் என்று என்று - அஞ்சவேண்டாஎன்று பலமுறைசொல்லிக்கொண்டு, எதிர் சென்றான் - பகைவர்க ளெதிரிற் (போருக்குச்) சென்றான்; (எ - று.)

ஒருகாலத்திலே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் தோல்வியடைந்த தேவேந்திரன், திருமாலின் பௌத்திரனும் நரகாசுரனது மகனும் அவன்காலத்திற்குப்பின் கண்ணனால் இளமையில் பரிபாலனஞ்செய்யப்பட்டவனும் ஆகிய பகதத்தனைத் துணையழைக்க, இவன் அவ்விந்திரன் வேண்டுகோளின்படி சென்று அசுரரையொழித்து இந்திரனுக்குஅரசாட்சியை நிலைநிறுத்தினனென்பது, வரலாறு; மேல் பன்னிரண்டாம்போர்ச் சருக்கத்திலும் ''முருகனென வெற்றி நேமி முகிலென முரணவுணருக்கு வாழ்வு கெடவுயர், சுரபதி தனக்கு வாழ்வு வரும்வகை சுரருலகளித்த தோழ னிவனரோ'' என்று கூறுவர். அரசர் மகுடசிகாமணியே போல்வான் - அரசர்கள் தலைமையாகவைத்துக் கொண்டாடத்தக்கவ னென்றபடி. பஞ்சகதி - மல்லகதி மயூர கதி வானரகதி வியாக்கிரகதி இடபகதி என்பன: இனி, நச்சினார்க்கினியர் ''விக்கிதம் வற்கிதம் வெல்லு முபகண்டம், மத்திமஞ்சாரியோடைந்து'' எனக் குதிரைகட்கு ஐவகைநடை கூறியுள்ளார். புறப்பொருள் வெண்பாமாலையுரையாசிரியர் 'விக்கிதம் வற்கிதம் உபகண்டம் ஐவம் மாஜவம் என்னும் இப்பஞ்சதாரை' என்பர். மற்றும், ஆஸ்கந்திதம், தோரிதகம், ரேசிதம், வல்கிதம், புலுதம் எனவும்படும்: அவற்றுள், நிச்சலமாக அதிவேகமும் அதிமந்தமுமாகாமற் சமமானகதி, ஆஸ்கந்திதம்; அதைக்காட்டிலும் அதிகமாய்ச் சதுரமானகதி, தோரிதகம்: தாளகதியுடன் வட்டமிட்ட நடை, ரேசிதம்; வேகத்தினாலே முன்னங்காலைத்தூக்கிவரும் நடை, வல்கிதம்; அவ்வளவு வேகமாகவும் சமமாகவும் போகுகை, புலுதம். எண்ணார் என்றது, கீழ்க்கவியிற் கூறிய வீமன்முதலியோரை. (169)

31.—பகதத்தன் செய்த கடும்போர்.

அலைகால்வெள்ளக்கருங்கடல்போலதிராநின்றவாகவத்தின்
மலைகால்பெற்றுவருவதுபோல்வருதிண்பனைக்கைமாமிசையான்
சிலைகால்வளைத்துத்தீவாய்வெஞ்சரங்கொண்டடையார்சிரங்கொண்டான்
கொலைகால்செங்கட்கரியநிறக்கூற்றந்தனக்குங்கூற்றன்னான்.

(இ - ள்.) கொலை கால் - (தனக்கு உரிய) கொல்லுதல் தொழிலை வெளியிடுகிற, செம் கண் - (கோபத்தாற்) சிவந்த கண்களையும், கரிய நிறம்-கருநிறத்தையுமுடைய, கூற்றம் தனக்கு உம்-யமனுக்கும், கூற்று அன்னான் - ஒரு யமனை யொத்தவனாகிய அந்தப்பகதத்தன்,—அலை கால் - அலைகளைவீசுகிற, வெள்ளம் -

நீர்வெள்ளத்தையுடைய, கரு கடல் போல்- கரியசமுத்திரம்போல, அதிராநின்ற - ஆரவாரிக்கிற, ஆகவத்தில் - போர்க்களத்திலே, மலை கால் பெற்று வருவது போல் வரு - ஒருமலை (நான்கு) கால்களையுடையதாய் வருவதுபோல வருகிற, திண்-வலிய, பனை கை மா மிசையான் - பனைமரம்போன்ற துதிக்கையையுடைய யானையின்மேலேறியவனாய்,— சிலை கால் வளைத்து-வில்லின்கோடிகளை வளைத்து, தீ வாய் வெம் சரம்கொண்டு-நெருப்பையுமிழ்கிற நுனியையுடைய கொடிய(தன்) அம்புகளால், அடையார்சிரம் கொண்டான் - (பல) பகைவர்களின் தலைகளை அறுத்திட்டான். (எ - று.)

இவன் ஏறிவரும் பட்டத்துயானைக்குச் சுப்பிரதீகமென்று பெயர்; "இதற்கு நாம் முறைசெயின் நிலையுடைய சுப்ரதீகம்" என்பர், மேல் பன்னிரண்டாம்போர்ச்சருக்கத்தில். மலை கால் பெற்று வருவது - இல்பொருளுவமை. சிலைகால்வளைத்தல் -வில்லின் தண்டத்தை வளையச்செய்தல். அடையார்-(தன்னைச்) சேராதவர். யமனுக்குத் தான் அஞ்சாமல் யமனைத் தான் அஞ்சுவிப்பவனென்பது, நான்காம் அடியின் கருத்து. (170)

32.—பகதத்தனால் தம்சேனைக்குநேர்ந்த தளர்வைக் கடோற்கசன் பார்த்தல்.

தாரா ரோடைத் திலகநுதற் சயிலம் பதினா யிரஞ்சூழ
வாரா நின்ற மதகயத்தின் வன்போர் வலியு மனவலியுஞ்
சேரார் வணங்கும் பகதத்தன் றிண்டோள் வலியுஞ் சிலைவலியும்
பாரா நின்ற கடோற்கசன்றன் படையின் றளர்வும் பார்த்தானே.

(இ - ள்.) தார் ஆர் - கிண்கிணிமாலைகள் நிறைந்த, ஓடை திலகம் நுதல்-பட்டத்தையும் சிந்தூரத்திலகத்தையும் அணிந்த நெற்றியையுடைய, சயிலம் பதினாயிரம் - மலைபோன்ற பதினாயிரம் யானைகள், சூழ -(தன்னைச்) சூழ்ந்து வர, வாராநின்ற-(இடையிலே) வருகிற, மதம் கயத்தின் - (சுப்பிரதீக மென்னும் அந்த) மதயானையினது, வல் போர் வலிஉம் - வலிய போர் வல்லமையையும், மனம் வலிஉம் - மனத்திலுள்ள போர்க்களிப்பையும், சேரார் வணங்கும் பகதத்தன் - பகைவர்கள் வணங்கத்தக்க பகதத்தனது, திண் தோள் வலிஉம் - உறுதியான தோள்களின் வலிமையையும், சிலை வலி உம்-வில்லின் வலிமையையும், பாராநின்ற-பார்த்துநின்ற, கடோற்கசன்—, தன் படையின் தளர்வுஉம் - (அவனாலுண்டான) தன்பக்கத்துச்சேனையின் தளர்ச்சியையும்,பார்த்தான்—; (எ - று.)

இனி, தார்-அலங்காரத்துக்காக அணியும் பூமாலையுமாம். ஓடை-நெற்றிப்பட்டம்; இது - பொன்னினால் அமைவது: ஆடையாலமையும் முகபடாம் சூழி யெனப்படும்: இவ் வேறுபாட்டை "விழுச்சூழிய விளங்கோடைய" என்னும் மதுரைக்காஞ்சியின் உரைநோக்கி அறிக. சயிலம்=சைலம்: உவமையாகுபெயர். மனவலி - பகதத்தனது மனோபலமுமாம். (171)

வேறு.

33.—கடோற்கசன் மாயவேடங்கொண்டு பகதத்தனோடு போர்தொடங்குதல்.

ஆய போதி லாயிர நூறு மதமாவு
மேய தீய காலனை யொக்கு மேலாளுஞ்
சாய கம்முஞ் சாபமும் யாவுந் தானேயா
மாய வேடங் கொண்டவ னோடு மலைவுற்றான்.

(இ - ள்.) (பார்த்த கடோற்கசன்,)—ஆய போதில் - அப்படியான அச்சமயத்தில்,—ஆயிரம் நூறு மதம் மாஉம் - லக்ஷம்மத யானைகளும், மேய - (அத்தொகையாகப்) பொருந்திய, தீய - கொடிய, காலனை ஒக்கும் - யமனையொத்த, மேல் ஆள்உம் - (அந்தயானைகளின்) மேலுள்ள வீரர்களும், சாபம்உம் - (அவர்களது) விற்களும், சாயகம்உம் - (அவ்விற்களால் எய்யப்படும்) அம்புகளும், (ஆகிய), யாஉம் - எல்லாம், தான்ஏ ஆம் - தானேயாகிய, மாயம் வேடம் - மாயாவடிவத்தை, கொண்டு - எடுத்துக்கொண்டு, அவனோடு மலைவுற்றான் - அந்தப்பகதத்தனோடு போர் செய்யத்தொடங்கினான்; (எ - று.)

அரக்கனாதலால், மாயாரூபங்கொண்டான். சாயகம்மும் - விரித்தல். தானேயாஎன்று எடுத்து - தானேயாக என்றுமாம்.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் பத்துக்கவிகள் - பெரும்பாலும் மூன்றாஞ்சீர் விளச்சீரும், ஐந்தாவது மாங்காய்ச்சீரும், மற்றைமூன்றும் மாச்சீர்களு மாகிய நெடிலடிநான்கு கொண்ட கலிநிலைத்துறைகள். (172)

34.—கடோற்கசன் மாயையால் எங்கும் தானும் வேழமுமேயாகிப் பகதத்தன்மீது போதல்.

சங்கமூதத்தார்முரசார்ப்பமுழவார்ப்பப்
பொங்கும்பூழியாழிவறக்கும்படிபோதச்
சிங்கங்குன்றிற்செல்வதுபோலச்சிலையோடு
மெங்குந்தானும்வேழமுமாகியெதிர்சென்றான்.

(இ - ள்.) சங்கம் - சங்குகள், ஊத - ஊதப்பட்டு முழங்கவும், தார் - சேனைக்குஉரிய, முரசு - பேரிகைகள், ஆர்ப்ப - ஆரவாரிக்கவும், முழவு - (மற்றைப்)பறைகள், ஆர்ப்ப - ஒலிக்கவும், பொங்கும் பூழி - மேற்கிளம்பும் தூளிகள், ஆழி வறக்கும்படி போத - கடல்களும் நீர்வற்றும்படி பரவவும், (கடோற்கசன்), சிங்கம் குன்றில் செல்வது போல - ஒருசிங்கம் ஒருமலையின்மேல் ஏறிப்போவதுபோல, சிலையோடுஉம் - (தன்கை) வில்லுடனே, எங்குஉம் தான்உம் வேழம்உம் ஆகி - (மாயையால்) எவ்விடத்திலும் தானும் (தன்) யானையுமாய், எதிர் சென்றான் - பகதத்தனெதிரிற் போனான்; (எ - று.)

சிங்கம் - பராக்கிரமசாலியான கடோற்கசனுக்கும், மலை - வலியபெரிய யானைக்கும் உவமை. மிகுதியாகக் கிளம்பின புழுதி

கள் படிந்து கடல்நீரை வறட்டுமென, யானைச்சேனையால் மேலெழுப்பப்பட்ட தூளிகளின் மிகுதியைக் கூறியவாறு. தார்முரசு - மாலையையணிந்தமுரச மென்று உரைப்பாருமுளர். தானும் வேழமுமாகி எதிர்சென்றான் - உயர்திணையும் அஃறிணையும் விரவிச் சிறப்பினால் உயர்திணை ஒருமை முடிபேற்ற திணைவழுவமைதி. பி - ம்:—சங்கமெழத் தாரைகள் முரசார்ப்ப முழவிம்ம.(173)

35.—கடோற்கசனுடைய வேழப்படைத்தொழிலும் பகதத்தனுடைய வேழப்படைத்தொழிலும்.

மைபோலார்த்துமும்முறைதானமழைசிந்திக்
கைபோய்முட்டிக்கையொடுதத்தங்கால்வீசி
மெய்போல்வெம்போர்செய்தனவீரன்விறல்வேழம்
பொய்போனின்றவருபகதத்தன்போர்வேழம்.

(இ - ள்.) வீரன் - வீரத்தன்மையுள்ள கடோற்கசனது, விறல் - (மாயை) வலிமையினாலாகிய, வேழம்-யானைகள்,—மை போல் ஆர்த்து - மேகங்கள்போல முழங்கியும், மு முறை தானம் மழை சிந்தி-மூன்றிடங்களினின்றும் மதநீர்மழையைச் சொரிந்தும், கை போய் கையொடு முட்டி - முன் சென்று (தம்) துதிக்கையால் (பகையானைகளின்) துதிக்கையோடு மோதியும், தம் தம் கால் வீசி - தம் தமது கால்களை வீசியும், மெய் போல் வெம் போர் செய்தன - உண்மையான யானைகள்போலக் கொடியபோரைச் செய்தன; வரு - (எதிர்த்து) வந்த, பகதத்தன் - பகதத்தனது, போர் வேழம் - போருக்குரிய உண்மையான யானைகள், பொய் போல் நின்ற - (கீழ்க்கூறிய முழக்கம் முதலியன ஒழிந்து) பொய் யானைகள்போ லாயின; (எ-று.)

தொழிலால் பொய் மெய்யும், தொழிலொழிதலால் மெய் பொய்யும் ஆயின வென வியப்புத்தோன்றக் கூறினார். தானம் - வடசொல். (174)

36. – கடோற்கசனுடைய மாயாவீரர்வெல்லுதல்.

நின்றார்நின்றபடிகடிதாகநெடிதோடிச்
சென்றார்கண்டசிந்துரம்யாவுந்தீயம்பிற்
கொன்றார்மற்றக்கொற்றவர்யாருங்கொலையுண்டார்
வென்றானன்றேவீமன்மகன்சேனையில்வீரர்.

(இ - ள்.) வீமன் மகன் சேனையில் - கடோற்கசனது யானைச் சேனையிலுள்ள, வீரர் - (மாயையினாலாகிய) வீரர்கள், நின்றார் - எதிர்த்துநின்றார்கள்; நின்ற படி - (அவ்வாறு) நின்ற முறைமையாகவே, கடிது ஆக-வேகமாக, நெடிது ஓடி சென்றார் - மிகுதியாக ஓடி (நெருங்கி)ப் போனவர்களாய், கண்ட சிந்துரம் யாவும் - (எதிரிற்) காணப்பட்ட (பகதத்தனது) யானைகளை யெல்லாம், தீ அம்பின் கொன்றார் - கொடிய (மாயையாலாகிய) அம்பினால் கொன்றுவிட்டார்கள்; மற்று - பின்பு, அ கொற்றவர் யாரும் - அவ்யானைகளின்மேலுள்ள (பகதத்தனைச்சார்ந்த) வீரர்களெல்

லொரும், கொலையுண்டார் - (இவர்களாற்) கொல்லப்பட்டார்கள்; வென்றார் - (இவ்வாறு கடோற்கசனது பொய்ச்சேனையார் பகதத்தனது மெய்ச்சேனையாரைச்) சயித்துவிட்டார்கள்; (எ - று.)— அன்றோ - தேற்றம்; இதில் - வியப்புந்தோன்றும். (175)

37.—சூரியாஸ்தமன வருணனை.

ஆனதானதாகவமெங்குமானைப்போர்
போனபோனமைந்தர்பிழைப்பீர்போமென்றென்
றானமெய்தாதவ்விறைபோனனுயிரோடும்
போனகண்டகாய்கதிரோனும்புறமிட்டான்.

(இ - ள்.) 'ஆகவம் எங்கும் - போர்க்களம் முழுவதிலும், ஆனை போர் - யானைச்சண்டை, ஆனது ஆனது - மிகுதியாகஉண்டாயிற்று; போன போன மைந்தர் - ஓடிப்போன வீரர்களெல்லோரும், பிழைப்பீர் - உயிர்வாழ்வீர்கள்; (ஆதலால்), போம் - (தப்பி) ஓடிப்போங்கள்', என்று என்று-என்று பலமுறைசொல்லி, அ இறை - அந்த(ப் பகதத்த)ராசன், ஊனம் எய்தாது - அழிவையடையாமல், உயிரோடுஉம் போனான்-உயிரோடும் (புறங்கொடுத்துச்) சென்றான்; போன கண்ட-(அப்படிச்) சென்றதைப் பார்த்த, காய் கதிரோன்உம் - சுடுகிற கிரணங்களையுடைய சூரியனும்,புறம் இட்டான் - (தானும் கடோற்கசனது யானைச்சேனைக்கு அஞ்சிப்) புறங்கொடுப்பவன்போல மறைந்துசென்றான்; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. மைந்தர் பிழைப்பீர். இடவழுவமைதி. போன=போனது: விகாரம். (176)

38.—அப்போது இருதிறத்தாரும் பாசறை சேர்தல்.

பூந்தண்மாலைப்பஞ்சவரானைப்போர்வென்று
சேர்ந்தசேர்ந்தமன்னவரோடுந்திறலோடுந்
தாந்தம்பாடிவீடுபுகுந்தார்தரையாளும்
வேந்தனோடும்பாசறைபுக்கான்வீடும்மன்.

(இ - ள்.) பூ - பூக்களாலமைந்த, தண் - (தேனினாற்) குளிர்ந்த, மாலை - வெற்றிமாலையை யணிந்த, பஞ்சவர் - பஞ்சபாண்டவர்கள், ஆனை போர் வென்று - அந்த யானைப்போரில் சயித்து, சேர்ந்த சேர்ந்த மன்னவரோடுஉம் - (தங்களோடு) மிகுதியாக வந்துசேர்ந்த அரசர்களுடனும், திறலோடுஉம் - வெற்றியுடனும், தாம் தம் பாடிவீடு புகுந்தார் - தாங்கள் தங்களது படைவீட்டை யடைந்தார்கள்; வீடும்மன்-வீடுமன், தரை ஆளும் வேந்தனோடுஉம் - பூமியை ஆளுகிற துரியோதனராசனுடனே, பாசறை புக்கான்-(தன்)படைவீட்டை யடைந்தான்; (எ - று.)

ஈற்று அடியால், துரியோதனனுதியர் சேனையிலுள்ள மற்றையரசர்கள் பலரும் பாண்டவர்சேனைக்குத் தோற்றுச் சிதறினரென்பது தொனிக்கும். வீடும்மன்-விரித்தல். (177)

39.—காந்தாரி தம்புதல்வர் ஐவர் இறந்ததற்குக் கலங்கிக் கண்ணீர்வடித்துச் சோர்வுறல்.

பூண்பாய்மார்பிற்புத்திரர்தம்மைப்பொலிவோடுங்
காண்பாளைவர்க்கண்டிலள்பெற்றகாந்தாரி
சேண்பாலெய்தச்சென்றனரோவென்றிருகண்ணீர்
தூண்பாலாகிச்சோர்தரவுள்ளஞ்சோர்வுற்றாள்.

(இ - ள்.) பெற்ற-(துரியோதனாதியர் நூற்றுவரைப்) பெற்ற (தாயான), காந்தாரி—, பூண் பாய் மார்பின் புத்திரர் தம்மை - ஆபரணங்கள் பரவிய மார்பையுடைய (தன்) பிள்ளைகளையெல்லாம், பொலிவோடுஉம்-மகிழ்ச்சியுடனே, காண்பாள் - (தினந்தோறும்) காண்பவள், ஐவர் கண்டிலள்-(அன்றையதினம் அவர்களுள்) ஐந்துபேரைக் காணாதவளாய்,—சேண் பால் எய்த சென்றனர்ஓ என்று-'வீரசுவர்க்கத்தினிடத்தை அடையப் போயினார்களோ?' என்றுசொல்லி, இரு கண் நீர் தூண் பால் ஆகி சோர் தர - (தன்) இரண்டு கண்களினின்றும் நீர் தூணின்தன்மையை யொத்து [பெருந்தாரையாக]ப் பெருக, உள்ளம் சோர்வு உற்றாள் - மனத்தளர்ச்சியை யடைந்தாள்; (எ - று.)

காந்தாரி-திருதராட்டிரனது மனைவி: சகுனியின் உடன்பிறந்தவள். தூண்பாலாகி-(தான்) தூண்போலசைவற்று எனினுமாம். சென்றனரோ, ஓகாரம்-இரக்கம். சேண்-ஆகாயம்; சுவர்க்கத்துக்கு இடவாகுபெயர். (178)

40.—காந்தாரி வருந்தியது.

கொன்னேகுந்திமைந்தரிருக்கக்கொலையுண்டீர்
முன்னேமுன்னுமுன்னமுடிந்ததின்றென்னா
மின்னேயென்னமெய்குலையாமண்மிசைவீழ்ந்தாள்
என்னேயென்னேயென்றினையாநின்றென்செய்தாள்.

(இ - ள்.) 'குந்தி மைந்தர்-பாண்டவர்கள் ஐவரும், கொன்னே இருக்க-அழிவடையாமலேயிருக்க, கொலை உண்டீர்-(நீங்கள்மாத்திரம்) கொலைப்பட்டீர்கள்; முன்னே முன்னும் முன்னம் - முன்னே (அவர்கள்) எண்ணின எண்ணம், இன்று முடிந்தது-இன்றைக்குப் பலித்தது', என்னா-என்று சொல்லி, மெய் குலையா-உடம்பு நடுங்கி, —மின்னே என்ன-மின்னல் விழுவதுபோல, மண்மிசை வீழ்ந்தாள்-தரையிலே விழுந்து, என்னே என்னே என்று-இது என்னதுக்கம்! என்னதுக்கம்!! என்று, இனையா நின்று-மனம்வருந்திநின்று, என் செய்தாள்-என்னபாடுபட்டாள்! (எ - று.)—மிகுந்த விசனமடைந்தாள் என்றபடி.

திருதராஷ்டிரனது 'மனைவியாகிய தனக்குப் பாண்டுவின் மனைவியாகிய குந்தியினிடம் உள்ள பங்காளிக்காய்ச்சலால், 'குந்தி மைந்தர்' என்றாள்; (ஆதியிலும் குந்திக்கு முதலில் பிள்ளைபிறந்தது கேட்டு இவள் மிகப்பொறாமையுற்றுத் தன் கருக்கொண்ட வயிற்றைக் கல்லாற் குத்திக்கொண்டது காண்க.) முன்னே முன்னும்

முன்னம்-என்மக்களைக் கொல்லவேண்டுமென்ற எண்ணம். என்னே என்னே-சோகக்குறிப்பு. மாத்திரியினிடம் பிறந்த நகுல சகதேவரையும் சேர்த்து 'குந்திமைந்தர்' என்று இங்கே அபேத மாகக் கூறியது, அந்த மாத்திரிக்குப் புதல்வரைப் பெறும் மந்திர முபதேசித்தவள் குந்தி யாதலாலும், பாண்டுவோடு மாத்திரி சககமநஞ்செய்து இறந்துவிட அவ்விருவரையும் குந்தியே அன் போடுவளர்த்தன ளாதலாலும் என்க. பி-ம்:—முடிந்ததெனமுன்னு, முடிந்ததின்னென்னு. (179)

41.—கவிக்கூற்று: காந்தாரி அன்றுதான் வருத்தமின்னதென்று அறியத் தொடங்கினளெனல்.

வீருர்கற்பின்மின்னனையாளைவிறல்மைந்தர்
ஏருமன்றிலேற்றவுமாமன்றென்னுதாள்
ஊருவன்பிற்கண்ணறைமன்னனெருதேவி
யாருவெள்ளத்துன்புறவன்றேயடியிட்டாள்.

(இ - ள்.) வீறு ஆர்-பெருமைமிக்க, கற்பின்-பதிவிரதா தரும த்தையுடைய, மின் அனையாளை-மின்னற்கொடியையொத்த திரௌ பதியை, விறல் மைந்தர்-வலிமையையுடைய (தன்) பிள்ளைகளான துரியோதனனும் துச்சாதனனும், ஏரு மன்றில் ஏற்றஉம்-(பெண் கள்) செல்லத்தகாத இராசசபையிலே (பலாத்காரமாகச்) செலுத்த வும், ஆம் அன்று என்னுதாள்-(இது) தக்கதன் றென்று சொல் லிர்தவளாகிய, ஊரு அன்பின் - சிறிதும் உண்டாகாத அன்பை யுடைய, கண்ணறை மன்னன் ஒருதேவி-பிறவிக்குருடனுன திருத ராட்டிரனது ஒப்பற்ற மனைவியான காந்தாரி, ஆரு - தணியாத, துன்பு-(புத்திர)சோகமாகிய, வெள்ளம்-வெள்ளத்திலே, உற-சேர் வதற்கு, அன்றே அடி இட்டாள் - அன்றைத்தினமே கால்வைத் தாள் [தொடங்கினுள்]; (எ - று.)

துரியோதனுதியர் நூற்றுவருள் சிலர் முந்தி இறந்த தினம் அத்தினமேயாதலால், 'அன்றே யடியிட்டாள்' என்ருர். தகுதியன் றென்று சொல்லாதவளென்றதனுல், தகுதியென்று உடன்பட்டவ ளென்பது பெறப்படும். அத்தீவினையின்பயனே புத்திரசோகத்தை யனுபவிக்கச்செய்ததென்றவாறு. கண்ணறைமன்னனெருதேவி- கண்ணில்லாதவனுக்கு ஏற்றதேவி. ஏற்றவும், உம்-இழிவுசிறப்பு.

42.—சூரியோதய வருணனை.

ஆளாய் மாய்ந்த வேந்தரி டந்தோ றழுமோசை
கேளா வெப்போ தேகுவ மென்றக் கிளர்கங்குன்
மீளா வோடிற் றத்திசை வானேன் மிளிர்சென்னிச்
சூளா மணிபோல் வந்தது காலைச் சுடரம்மா.

(இ - ள்.) ஆள் ஆய் மாய்ந்த - வீரர்களாயிருந்து இறந்த, வேந்தர்-அரசர்கள்பொருட்டாக, இடம் தோறு அழும்-பல இடங் களிலும் அழுகிற, ஓசை-ஓசையை, கேளா-(நாம்) கேட்காமல், எ போது ஏகுவம் என்று - எப்பொழுது நீங்குவோமென்று கருதி,

அ கிளர் கங்குல் - அந்த (இருள்) நிறைந்த இரவானது, மீளா ஓடிற்று-மீண்டு ஓடிவிட்டது; (அப்பொழுது), காலை சுடர் - உதய காலத்துக்கு உரிய ஒளியாகிய சூரியன்,—அ திசை வானோன் - அந்தத்திக்கில் [கீழ்திசையில்] உள்ளவனான தேவேந்திரனது, மிளிர் - விளங்குகிற, சென்னி சூளாமணி போல்-முடியில் அணிந்த கிரீடம் போல, வந்தது-உதித்துவிளங்கிற்று; (எ - று.)—அம்மா-ஈற்றசை.

புலம்பல் கேட்பவர்க்கு அவ்விடத்தைவிட்டு நீங்கக் கருத்துண்டாதல், இயல்பு. இயற்கையாக இரவுகழிந்ததற்கு இப்படிப்பட்டதொரு காரணத்தைக் கற்பித்துக் கூறியது-ஏதுத்தற்குறிப்பேற்றவணி. 'காலைச்சுடர் வந்தது' என்பதை நோக்கி, 'அத்திசை' என்றது-கிழக்கைக் குறிக்கும்; செய்யுளாதலின், சுட்டு முன்வந்தது. 'அத்திசை வானோன்' என்றது, கிழக்குத்திக்குப் பாலகனாகிய இந்திரனை. சூளாமணி-சூடாமணி என்னும் வடசொல்லின் போலி; தலையில் அணியும் இரத்தினமென்று பொருள்: சூடா-தலை. சூரியனைக் காலைச்சுடரென்றும், சந்திரனை மாலைச்சுடரென்றுங் கூறுதல் ஒரு மரபு. பி-ம்:—வானோர். (181)

நான்காம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

ஐந்தாம்போர்ச்சருக்கம்.

1.—கடவுள்வாழ்த்து.

கருமாமு கிற்கோல நெஞ்சத்தி ருத்துங்க ருத்தெய்துமேல்
அருமாத வன்றானு மவன்முத்தி தருகைக்கு மவனேகுரு
தருமாலை மணநாறு தாளானை வண்டேறு தண்ணந்துழாய்
மருமாலை புனைகின்ற திருமாலை யல்லாது வல்லார்கள்யார்.

(இ - ள்.) கரு - கருநிறமான, மா-அழகிய, முகில் - மேகம் போன்ற, கோலம்-(திருமாலின்) திருமேனியை, நெஞ்சத்து -(தன்) மனத்திலே, இருத்தும் - பதியவைக்கிற, கருத்து-எண்ணம், எய்தும் ஏல்-(ஒருவனுக்கு) உண்டாகுமானால், அரு மா தவன்தான் உம் அவன்-(பிறராற்செய்தற்கு) அரிய பெரிய தவத்தைச் செய்தவனும் அவனே; முத்தி தருகைக்குஉம் அவனே குரு - (தன்னை அடைந்தவர்களுக்குப்) பரமபதத்தைக் கொடுத்தற்கும் அவனே ஞானாசிரியனாவன்; (ஆதலால்),—தரு-கற்பகவிருட்சத்தின் மலர்களாலாகிய, மாலை-மாலைகளின், மணம்-வாசனை, நாறு-மணக்கப்பெற்ற, தாளானை-திருவடிகளையுடையவனும், வண்டு ஏறு-வண்டுகள் மொய்க்கின்ற, தண்-(தேனினாற்) குளிர்ந்த, அம் - அழகிய, மரு-வாசனையையுடைய, துழாய் மாலை - திருத்துழாய்மாலையை, புனைகின்ற-தரிக்கிற, திருமாலை அல்லாது-திருமாலென்னுந் திருநாமமுடையவனு மாகிய ஆதிதேவனை யல்லாமல், வல்லார்கள் - சிறந்தகடவுளர், யார்-யாவர் (உளர்)? (எ - று.)

திருமாலினது வடிவத்தை ஒருகால் தியானிப்பவன், அரும் பெருந்தவஞ்செய்தவனும், தன்னையடைந்தவர்களுக்கு முத்திதர

வல்ல சிறந்த ஆசிரியனும் ஆவன்; ஆதலால், திருமாலையொழிய வேறு சிறந்த கடவுள் இல்லை என்பது கருத்து. கருநிறத்திற்கும், காண்பவர் மனத்துயரந் தீர்க்கவல்ல குளிர்ச்சிக்கும், கைம்மாறு கருதாது கருணைமழைசொரிதற்கும், எம்பெருமானுக்கு நீலமேகம் உவமை. விரதங்களால் உணவு சுருக்குதல், வெயில் மழை பனி களில் வருந்துதல் முதலிய சிரமம் சிறிதும் இல்லாமல் முத்தியைப் பெறும் உபாயமாதலால், பகவானைத் தியானித்தல் அருமாதவ மாயிற்று. "ஞானமனுட்டானமிவை நன்றாகவே யுடைய, ஞானகுருவை யடைந்தக்கால்—மாநிலத்தீர், தேனார்கமலத் திருமாமகள் கொழுநன், தானே வைகுந்தந் தரும்" என்றபடி நல்லாசிரியரை யடுத்து அவர்கள்முகமாகவே முத்திபெறவேண்டுதலால், 'முத்தி தருகைக்கு மவனே குரு' என்றார். தரு-வடசொல். கற்பக மலர் களின்மாலை, இந்திரன்முதலிய தேவர்களால் திருமாலினது திரு வடிகளில் கொணர்ந்து சமர்ப்பிக்கப்பட்டவை. தேவர்கள்மாலையில் வண்டுமொய்த்தல் இல்லை யாயினும் சிறந்த அருளுடைமை தோன்ற, 'வண்டேறுதுழாய்' எனப்பட்டது. துளசிமாலை-திரு மாலுக்கு உரியது. முன் இரண்டடியால், திருமாலினது அடியார் களின் மகிமையை எடுத்து நன்குவிளக்கி, அது மூலமாகப் பின் இரண்டடிகளில் அத்திருமாலின் ஒப்புயர்வற்ற மேன்மையை விளக்கினார். தரு-மலருக்கு முதலாகுபெயர்.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள்-பெரும்பாலும் முதல் நான்கு சீரும் மாங்காய்ச் சீர்களும், ஈற்றுச்சீ ரொன்று மாங்கனிச்சீரு மாகிய நெடிலடி நான்கு கொண்ட கலிநிலைத்துறைகள். (182)

2.—வாச்சியப் பேரொலியோடு தருமன்சேனைவெள்ளம் புறப்படுதல்.

வரசங்கமுந்தாரையுஞ்சின்னமும்பொன்மணிக்காளமு
முரசங்களுந்துந்துபியுமெங்குமெழவிம்மமுழவிம்மவே
கரைசிந்துதிரைசிந்துநுரைசிந்துவிரைசிந்துகணமென்னவே
யரசன்பெருஞ்சேனைவெள்ளம்புறப்பட்டதணியாகவே.

(இ-ள்.) வர சங்கம்உம்-சிறந்த சங்குகளும், தாரைஉம்-தாரை யென்னும் ஊதுகருவியும், சின்னம்உம்-சின்னமென்னும் ஊதுகரு வியும், பொன் மணி காளம்உம்-பொன்னினாலும் இரத்தினங்களா லும் அலங்கரிக்கப்பட்ட எக்காளமென்னும் ஊதுகருவியும், முர சங்கள்உம்-பேரிகைகளும், துந்துபிஉம்-துந்துபியென்னும் வாத்தி யமும், எங்குஉம்-எவ்விடத்தும், எழ-ஓசையெழும்படி, விம்ம - ஒலிக்கவும், முழ-மத்தளங்கள், விம்ம-முழங்கவும்,—கரை சிந்து - கரையை மோதுகிற, திரை - அலைகளை, சிந்து - வீசுகிற, நுரை சிந்து-நுரை சிந்தப்பெற்ற, விரை சிந்து கணம் என்ன - விரைந்து வரும்படியான கடல்களின் கூட்டம்போல, அரசன் பெரு சேனை வெள்ளம் - தருமராசனது பெரிய சேனைகளின் கூட்டம், அணி ஆக புறப்பட்டது - வரிசையாகப் (போருக்குப்) புறப்பட் டது; (எ - று.)

வெள்ளம் - ஓர் பெருந்தொகையுமாம். வரசங்கம் - திருமாலின் பாஞ்சசன்னியமும், அருச்சுனனது தேவதத்தமும், மற்றும் பல வலம்புரிச்சங்குகளும்; இது - வடமொழித்தொடர். 'வரிசங்கம்' என்றபாடத்துக்கு - கோடுகளையுடைய சங்கு என்க. காளம் - காகளம் எனவும்படும். முரசு முதலிய மூன்றும் - அடிக்கப்படும் வாச்சியவகைகள். மூன்றுமடியிலுள்ள சிந்து என்னுஞ் சொற்களில், ஈற்றது - ஸிந்து என்னும் வடசொல்; மற்றவை - தமிழ் வினைப்பகுதி: சொற்பின்வருநிலையணி. (183)

3.—துரியோதனன் சேனைவந்து சேர்ந்தபின் இருதிறச்சேனையும் பொர எதிருறுதல்.

விருதாயிரங்கோடிமுரசாயிரங்கோடிமேன்மேலெழப்
பொருதானையுடன்வந்தணைந்தார்புறந்தந்தபூபாலருங்
கருதாவரக்கன்கொடுந்தானையிறைவன்கடுந்தானையென்
றிருதானையும்போலவெதிருற்றவிருமன்னரிருதானையும்.

(இ - ள்.) ஆயிரம் கோடி விருது - மிகப்பலவான பிருதுகளும், ஆயிரம் கோடி முரசு - மிகப்பலவான பேரிகைவாத்தியங்களும், மேல் மேல் எழ - மிகுதியாக ஒலிக்க, புறம் தந்த பூபாலர்உம்- (முந்தினநாளில் தோற்று) முதுகுகொடுத்த (துரியோதனன் சேனை) அரசர்களும், பொரு தானையுடன்-போர்செய்யுஞ் சேனைகளுடனே, வந்து அணைந்தார் - (போர்க்களத்துக்கு) வந்துசேர்ந்தார்கள்; (இவ்வாறு வந்த), இரு மன்னர் இரு தானைஉம் - (தருமன் துரியோதனன் என்னும்) இரண்டு அரசர்களது இரண்டு சேனைகளும்,—கருதா அரக்கன் கொடு தானை-(பிறரைப் பொருளாக) மதியாத இராவணனது கொடிய இராக்கதசேனையும், இறைவன் கடு தானை - (யாவர்க்குந்) தலைவனான இராமபிரானது பயங்கரமான வானரசேனையும், என்ற இரு தானைஉம் போல - என்ற இரண்டு சேனைகளும் போல, எதிர் உற்ற - எதிரிலே நெருங்கின; (எ - று.)

அசுராமிசமாய்த் தீயொழுக்கமுடைய துரியோதனாதியரது முடிவில் தோல்வியடைவதான சேனைக்கு இராவணனது சேனையும், தேவாமிசமாய் நல்லொழுக்கமுடைய பாண்டவரது முடிவில் வெற்றிபெறுஞ் சேனைக்கு இராமனதுசேனையும் உவமையாம். கீழ்த் தருமன்சேனையை முன்னும், (செ-2) துரியோதனன் சேனையைப் பின்னும் கூறிய முறைமைக்கு மாறுபடக் கூறியது - எதிர்நிரனிறைப்பொருள்கோள். கருதா அரக்கன் - (தனக்குவருந் தீங்கைத் தானாகவும் பிறர்சொல்லவும்) எண்ணாத இராக்கதனுமாம். என்ற என்பதன் ஈறு தொக்கது. விருது -அரசரது வீரம் கல்வி வெற்றி முதலியவற்றைத் துதிபாடகர் முதலியோர் எடுத்துக்கூறிப் புகழ்வது: வெற்றிக்கு அறிகுறியான கொடியெனினுமாம். பூபாலர் - பூமியைக் காப்பவர்; வடசொல். (184)

4.—விசயன் ஸ்ரீக்ருஷ்ணனுடன் தேரிற் போருக்கு வருதல்.

அரக்கர்க்குமுதல்வானளித்தோருமெமரின்றுமவர்போலுமைத்
துரக்கைக்குநின்றேனெனத்தெவ்வர்தம்மோடுசொல்லிற்றெனக்
குரக்குக்கொடித்தேரின்மிசையேறிவிசையோடுகூத்தாடவே
புரக்கைக்குநின்றோனுடன்செங்கண்விசயன்புறப்பட்டனன்.

(இ - ள்.) 'முதல் - பூர்வகாலத்தில், அரக்கர்க்கு வான் அளித்தோர்உம்-(இராவணசேனையிலுள்ள) இராக்கதர்களுக்கு (ப்போரிற் கொன்று) வீரசுவர்க்கங் கொடுத்தவர்களும், எமர் - எங்கள் இனத்தவரே [வானரவீரர்களே] யாவர்; இன்றுஉம் - இந்நாளிலும், அவர் போல் - அக்குரக்குவீரர்போல, உமை துரக்கைக்கு நின்றேன் - உங்களை ஒழித்தற்கு (யான் இங்கு வந்து) நின்றேன்', என - என்று, தெவ்வர் தம்மோடு - பகைவர்களாகிய துரியோதனுதியர்களோடு, சொல்லிற்று என - சொல்லியதுபோல, குரங்கு கொடி - குரங்கின்வடிவமெழுதிய துவசம், தேரின்மிசை ஏறி - (தனது) தேரின்மேற் பொருந்தி, விசையோடு கூத்தாட - வேகத்தோடு நடனஞ்செய்ய, செம் கண் விசயன் - (கோபத்தாற்) சிவந்த கண்களையுடைய அருச்சுனன், புரக்கைக்கு நின்றோனுடன் - (தன்னைப்) பாதுகாக்கும்பொருட்டுத் துணைநின்ற கண்ணபிரானுடனே, புறப்பட்டனன் - (போருக்கு) வந்தான்; (எ - று.)

அருச்சுனனுக்குக் குரங்குக்கொடி, காண்டவதகனகாலத்தில் அக்கினிதேவனால் அளிக்கப்பட்டது. பின்பு வீமசேனன் புஷ்பயாத்திரையாக அளகாபுரிக்குச்சென்றபொழுது, இடையில் அநுமானைக் கண்டு வணங்கி வேண்டி, போர்க்களத்தில் அருச்சுனனது தேர்த்துவசத்தில் வந்து நின்று மகிழ்ந்து கூத்தாடும்படி வரம்பெற்றான். அவ்வாறு அருச்சுனனது குரங்குக்கொடியில் அநுமான் ஆவேசித்து நின்று அக்கொடி காற்றில் வேகமாக அசையும் பொழுது கூத்தாடுதலை, துரியோதனாதியரைவீரவாதங் கூறி வெருட்டுவதாகக் கற்பித்து வருணித்தார்; **தற்குறிப்பேற்றவணி.** கீழ்ப்பாட்டில், துரியோதனன்சேனைக்கு இராவணசேனையை உவமைகூறியவர், இங்கு அதை யழிக்க அநுமான் வந்ததைக் கூறினர். குரக்குக்கொடி - வேற்றுமையில் மென்றொடர் வன்றொடராயிற்று. புரக்கைக்கு - பூமிக்குப்பாரமாகவுள்ள துஷ்டர்களை யொழித்துச் சிஷ்டர்களைப் பரிபாலநஞ்செய்யும் பொருட்டு என்றுங் கொள்ளலாம். பி ம்: மிசையோடி. (185)

5.—வீடுமனோடு பொர அவனின்றவிடத்து ஸ்ரீகிருஷ்ணன் தேர்செலுத்துதல்.

அரனின்றனன்போலவவனின்றதேரொத்தவணிதேர்மிசைப்
பொரநின்றநந்திமைந்தனெடுசென்றுமுனைநின்றுபொரவெண்ணியே
சரநின்றகுனிசாபவிசயன்றனைக்கொண்டுசங்கங்குறித்
துரநின்றவவனெஞ்சுடைப்பாகன்ரமன்றேருகைத்தூரவே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) அரன் நின்றன்ன் போல - சிவபிரான் (போருக்கு வந்து) நின்றாற்போல, அவன் நின்ற தேர் ஒத்த அணி தேர்மிசை பொர நின்ற - அச்சிவபிரான் (திரிபுர சங்காரகாலத்தில்) ஏறி நின்ற (பூமியாகிய) தேரைப்போன்ற அழகியதொருதேரின்மே லேறிப் போர்செய்யவந்துநின்ற, நதிமைந்தனொடு - கங்காநதியின் புத்திரனான வீடுமனுடனே, சென்று முனை நின்று பொர எண்ணி - போய் எதிரில்நின்று போர்செய்யக் கருதி,—சரம்நின்ற குனி சாபம் விசயன் தனை கொண்டு - அம்புகள் (அழியாது) நிலை பெற்ற வளைவான (காண்டீவ) வில்லையுடைய அருச்சுனனைக் கூட அழைத்துக்கொண்டு, சங்கம் குறித்து - (தனது பாஞ்சசன்னிய மென்னுஞ்) சங்கை முழக்கிக்கொண்டு, உரம் நின்ற அவன்நெஞ்சு உடை பாகன் - தைரியம் நிலைபெற்ற அவ்வருச்சுனனது மனத் திற்கு ஏற்ற தேர்ப்பாகனான கண்ணபிரான்,—மான் தேர் உகைத்து ஊர - குதிரைகள் பூட்டிய தேரை நடத்திக்கொண்டு செல்ல,—(எ - று.)—'ஊர்கின்ற' (6) என்பதனோடு இயையும்.

அரனுவமை, அழித்தற்கு. உரம் - ஞானபலமென்பாருமுளர். பி - ம்: உரநின்ற வன்னெஞ்சுடைப் பாகன். (186)

6.—தேர்வந்தவளவில் கலிங்கேசர்முதலோர் குறுக்கிட்டு அடிபட்டுப் புண்படுதல்.

ஊர்கின்றதேரோடியுயர்கங்கைமகனின்றவொருதேருடன்
சேர்கின்றவெல்லைக்கலிங்கேசர்முதலானதெம்மன்னர்போய்
நேர்கின்றவிசயன்றனுடன்மோதியவனேவுநெடுவாளிபட்
டீர்கின்றபுண்வாயில்வார்கின்றசெந்நீரினிடைமூழ்கினர்.

(இ - ள்.) ஊர்கின்ற - (இவ்வாறு கண்ணன்) செலுத்துகிற, தேர் - (அருச்சுனனது) இரதம், ஓடி - வேகமாகச் சென்று, உயர் கங்கை மகன் நின்ற ஒரு தேருடன் - சிறந்த கங்காபுத்திரனான வீடுமன் நின்ற ஒப்பற்ற தேருடனே, சேர்கின்ற எல்லை - (எதிர்த்துச்) சேர்கிற சமயத்தில்,—கலிங்க ஈசர் முதல் ஆன தெவ் மன்னர் - கலிங்கதேசத்தலைவர்கள் முதலாகிய பகையரசர்கள், போய் - (எதிர்த்துப்) போய், நேர்கின்ற விசயன் தனுடன் மோதி - எதிர்ப்பட்ட அருச்சுனனுடனே போர்செய்து, அவன் ஏவு நெடு வாளி பட்டு - அவ்வருச்சுனன் பிரயோகித்த நீண்ட பாணங்கள் (தம்மேல்) தைத்து, ஈர்கின்ற - (தம்உடலைப்) பிளக்கிற, புண் வாயில் - புண்களின் வழியே, வார்கின்ற - பெருகுகிற, செம் நீரினிடை - இரத்தத்திலே, மூழ்கினர் - அழுந்தினார்கள்; (எ - று.)

7.—கலிங்கேசர் அலைப்புண்டதுகண்டு வீடுமன் அருச்சுனனை எதிர்த்து வில் முதலியன அறுபடுதல்.

செல்லுங்கலிங்கேசரலையுண்டநிலைகண்டுசிவனென்றுபார்
சொல்லும்பெருஞ்செம்மல்பல்லங்களவன்மேற்றொடுத்தேவினன்

கொல்லுங்கொடும்பாணமவையைந்துவிசயன்கொதித்தேவினன்
வில்லுந்தன்வின்னுணும்விறலம்புமுடனற்றுவிடைகொள்ளவே.

(இ - ள்.) செல்லும் - (அருச்சுனனை எதிர்த்துச்) சென்ற, கலிங்க ஈசர்-கலிங்கநாட்டு அரசர்கள், அலையுண்ட - (அருச்சுனனால்) வருத்தமடைந்த, நிலை - நிலைமையை, கண்டு - பார்த்து, சிவன் என்று பார் சொல்லும் பெருசெம்மல் - (அழித்தல்தொழிலில்) சிவபிரான் (போல்வான்) என்று உலகத்தவராற் சொல்லப்படுகிற சிறந்த வீரனான வீட்டுமன், அவன் மேல் பல்லங்கள் தொடுத்து ஏவினான் - அந்த அருச்சுனன்மேல் அம்புகளை (வில்லில்) தொடுத்து எய்தான்: (அப்பொழுது), விசயன்- அருச்சுனன், கொதித்து - கோபங்கொண்டு, தன் வில்உம் வில் நாண் உம் விறல் அம்புஉம் உடன் அற்று விடைகொள்ள - (அவ்வீடுமன்) தனதுவில்லும் அவ்வில்லின்நாணியும் (அவ்வில்லில் எய்யப்படும்) வலிமையையுடைய அம்புகளும் ஒருசேர அழிந்து மீண்டு செல்லும்படி, கொல்லும் கொடு பாணம் அவை ஐந்து- (பகைவரைக்) கொல்லவல்ல கொடிய ஐந்துபாணங்களை, ஏவினான்- செலுத்தினான்; (எ - று.)

விறலம்பும் என்றவிடத்து 'அடனாணும்' எனச் சில பிரதிகளிற் பாடங்காணப்படுகிறது; அப்பொழுது, அடல் நாண் அற்று வலிமையும் வெட்கமுங்கெட்டு என்க. பல்லம், பாணம் - வட சொற்கள். (188)

8.—இதுவும் அடுத்த கவியும்-வீமனுடன் மன்னர்பலரும் துச்சாதனன் முதலியோரும் பொருது தோற்றோடினமை கூறும்.

இவர்கொண்டசெற்றத்தொடிவ்வாறுபோர்செய்யவிகல்வீமனைப்
பவர்கொண்டநெடுவேலைபோல்வந்துமொய்த்தார்கள்பலமன்னரும்
கவர்கொண்டமுனைவாளியவர்மார்புதோறுங்கழன்றோடவே
தவர்கொண்டுசெற்றான்முன்னளகேசனமர்வென்றதனியாண்மையான்.

(இ - ள்.) இவர் - (அருச்சுனன் வீடுமன் என்ற) இவ்விருவரும், கொண்ட செற்றத்தொடு - (தாம் தாம்) கொண்ட பராக்கிரமத்துடனே, இ ஆறு போர் செய்ய - இப்படி (ஒருபுறத்தில்) போர்செய்துகொண்டிருக்க, — (மற்றொரு புறத்தில்), இகல் வீமனை - வலிமையையுடைய வீமசேனனை, பல மன்னர்உம் - அநேக அரசர்களும், பவர் கொண்ட நெடு வேலை போல்-(பிரளய காலத்தில்) நெருங்குதலைக் கொண்ட பெரிய கடல்கள்போல, வந்து மொய்த்தார்கள் - வந்து நெருங்கிச் சூழ்ந்தார்கள்; (அப்பொழுது), முன் அளகேசன் அமர் தனி வென்ற ஆண்மையான் - முன்னே குபேரனது போரில் தனியே வெற்றிகொண்ட பராக்கிரமமுடைய வீமன், தவர்கொண்டு-(தன்) வில்லை(க் கையில்) ஏந்தி, (அம்புதொடுத்து), கவர் கொண்ட முனைவாளி - (பகைவருயிரைக்) கவர்தலைக் கொண்ட கூர்நுனியையுடைய (அந்த) அம்புகள், அவர் மார்பு தோறுஉம் கழன்று ஓட -

அப்பகைவர்களின் மார்பு தோறும் வெளிப்பட்டு ஓடும்படி, செற்றான் - அழித்தான்; (எ - று.)

அளகேசன் - அளகாபட்டணத்துக்குத்தலைவன். பாண்டவர் வனவாசஞ்செய்கையில், அங்கு வந்து விழுந்த ஒருசிறந்த பூவைப் பார்த்து ஆசைப்பட்டுத் திரௌபதி, அப்படிப்பட்ட பூவைக்கொண்டுவந்துதரும்படி வேண்ட, வீமன் குபேரனது அளகாபுரியிற் சென்று அங்குள்ள சோலையிற் பூப்பறிக்கத்தொடங் கினபொழுது, குபேரன் கட்டளையால் யக்ஷர் முதலிய பலர் சேனை யோடு வந்து எதிர்க்க, அவர்களை யெல்லாம் இவன் ஒருவனாகவே வென்றிட்டா னென்பது, கீழ்ப்புட்பயாத்திரைச்சருக்கத்து வரலாறு. தனிஆண்மையான் - அசகாயசூரன். பவர்கொண்ட-(பவழக்) கொடியைக்கொண்ட என்றலும் ஒன்று. பி - ம்:—மார்பு தோளும்.

9. துச்சாதனன்றம்பிமார்மைந்தர்மற்றுஞ்சகுனிசல்லியன்
எச்சாபமுடிமன்னரும்பின்னருந்துன்னியெதிர்சீறினர்
அச்சாபமொன்றாலுமன்றவ்வவர்க்கம்பனேகந்தொடுத்
துச்சாசனஞ்சொல்லிநின்றானவ்வடன்மன்னருடனோடவே.

(இ - ள்.) பின்னர்உம்-பின்பு, துச்சாதனன் - துச்சாசனனும், தம்பிமார்-(அவனது) தம்பியர் பலரும், மைந்தர்-(அவர்களுடைய) புத்திரர்களும், மற்றுஉம்-இன்னும், சகுனி-சகுனியும், சல்லியன்-சல்லியனும், சாபம் முடி எ மன்னர்உம்-வில்லையேந்திய கிரீடாதி பதிகளான அரசர்கள்பலரும், எதிர் துன்னி-வீமனெதிரில்வந்து நெருங்கி, சீறினர்-கோபித்துப் போர்செய்தார்கள்; (அப்பொழுது வீமன்), அ சாபம் ஒன்றால்உம் - அந்தத் (தனது) ஒரு வில்லைக் கொண்டே, அன்று-அப்பொழுது, அ அவர்க்கு-(வந்து எதிர்த்த) அந்தந்த அரசர்களுக்கெல்லாம், அனேகம் அம்பு தொடுத்து-(ஒவ் வொருவர்க்கும்) பல பாணங்களைச் செலுத்தி, அ அடல் மன்னர் உடன் ஓட-வலிமையையுடைய அந்த அரசர்கள் ஒருசேர விரைந்து ஓடிப்போம்படி, உச்சாசனம் சொல்லி நின்றான் - (கொல்வேன் கொல்வே னென்று வீரவாதமாகக்) கொலை கூறி நின்றான்;(எ-று.)

துஶ்ஶாஸநன்-கொடிய கட்டளையுடையான். உச்சாஸனம் - கொலை: மேலான ஆக்கினையென்றுமாம். கீழ்ப்பாட்டில், 'தவர் கொண்டு' என்றதை நோக்கி, 'அச்சாபம்' எனச்சுட்டினார். 'சீறி னார்' எனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். (190)

10.—தம்பிமாரோடிவருவதுகண்டுசீறித் துரியோதனன் வீமனைநெருங்குதல்.

செருத்துப்புடைத்தோடிவருதம்பியர்க்கண்டுசெற்றத்துடன்
கருத்துப்புகைந்துட்கலங்கிக்கடைக்கண்கள்கனல்காலவே
மருத்துத்தருங்காளைநின்றானையின்றாவிமலைவேனென
வுருத்துந்தடந்தேரின்மிசைவந்தடுத்தானுரககேதனன்.

(இ-ள்.) செருத்து - போர்செய்து, புடைத்து-(வீமனால்) அடி பட்டு, ஓடி வரு-(புறங்கொடுத்து) ஓடிவருகிற, தம்பியர் - (தன்)

தம்பிமார்களை, கண்டு-பார்த்து,—உரக கேதனன்-பாம்புக்கொடிய ஞன துரியோதனன்,—செற்றத்துடன் - கோபத்துடனே, கருத்து புகைந்து-மனங்கொதித்து, உள் கலங்கி-உள்ளே கலக்கமடைந்து, கடை கண்கள் கனல் கால-(தன்) கண்ணின் கடைகள் கோபாக்கினியைச் சொரிய, மருத்து தரும் காளை தன்னை இன்று ஆவி மலைவேன் என - 'வாயுபெற்றபிள்ளையாய்நின்ற வீமனை இப்பொழுது (போர்செய்து) உயிரழிப்பேன்' என்று (வீரவாதஞ்) சொல்லி, உருத்து-அதட்டிக்கொண்டு, தட தேரின்மிசை வந்து அடுத்தான்-பெரிய தேரின்மேலே வந்து (வீமனை) நெருங்கினன்; (எ - று.)—தம்பியர்க்கண்டு—இரண்டாம்வேற்றுமைச் சிறப்புவிதி. (191)

11.—இரண்டுகவிகள்-துரியோதனன் வீமனையெதிர்த்து வலிகெடுதலைக் கூறும்.

பேராதநிலைநின்றுவன்போடுசாபம்பிடித்தெங்கணுஞ்
சோராதவய்வாளியீரைந்துசேரத்தொடுத்தேவினன்
ஆராவமுடனிட்டகவசம்பிளந்தோடியாண்மைக்கெலாம்
வீராபிடேகஞ்செய்வயவீமனகன்மார்பின்மிகமூழ்கவே.

(இ-ள்.) (வந்து அடுத்த துரியோதனன்), பேராத நிலை நின்று -சலியாத ஒரு நிலையிலே நின்று,வன்போடு சாபம் பிடித்து-வலிமையோடு வில்லைக் கையில் ஏந்தி,—ஆண்மைக்கு எலாம் வீர அபிடேகம் செய் வய வீமன்-பராக்கிரமத்துக்கெல்லாம் (தலைவனாகத் தன்) வீரத்தனத்தால் பட்டாபிஷேகஞ்செய்யப்பெற்றுள்ள வலிமையையுடைய வீமசேனனது, இட்ட கவசம்-(மேலே) தரித்த கவசத்தை, பிளந்து ஓடி-பிளந்துகொண்டு சென்று, அகல் மார்பில்-(அவனது) பரந்த மார்பிலே, மிக மூழ்க-மிகுதியாக அழுந்தும்படி, எ கண்உம் சோராத வய வாளி ஈர்ஐந்து-எவ்விடத்தும்(பகைவெல்லுதலில்) சோர்தலில்லாத வலிமையையுடைய பத்துப் பாணங்களை, ஆராவமுடன்-ஆரவாரத்துடனே, சேர தொடுத்து ஏவினன்-ஒருசேரப் பிரயோகித்தான்; (எ - று.)

நிலை என்றது-போரில் வில்வளைத்து அம்பைஎய்வார்க்கு உரிய நிலை. அது-பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரதியாலீடம் என நான்கு வகைப்படும்: இவற்றுள், ஒருகாலில்நின்று ஒருகால் முடக்கல் - பைசாசநிலை: இருகாலும் பக்கல்வளைய மண்டலித்தல்-மண்டலநிலை:வலக்கால் மண்டலித்து இடக்கால் முந்துறல்-ஆலீடநிலை: வலக்கால் முந்துற்று இடக்கால் மண்டலித்தல் - பிரதியாலீடநிலை: இனி, பிரதியாலீடம், ஆலீடம், சமபதம், விசாகம், மண்டலம் என் நிலை ஐந்தென்பாரும் உளர். ஆராவம் - வடசொல்: பேரொலி: வீரவாதத்தாலாகுவது. இனி, ஆர் ஆவமுடன் எனப் பிரித்து, நிறைந்த அம்பறாத்தூணியோடு கவசமும் பிளந்து என இயைப்பாருமுளர். 'ஆண்மைக்கெலாம் வீராபிடேகஞ்செய்' என்பதற்கு - பராக்கிரமசாலிகள் எல்லோர்க்குள்ளுந் தலைமைபெற்ற என்றவாறு. (192)

12. ஈமந்தொ றுஞ்சென்று நடமாடு கழலைய னெதிராய்வருங்
காமன்ற னுடன்மேல்வி ழித்திட்ட நுதலிற்க னற்கண்ணெனத்
தாமம்பு னைந்தார மணநாறு மார்பத்த டந்தோயவே
வீமன்றொ டுத்தானொ ரெதிரம்பு பார்மன்னன் மிடல்சாயவே.

(இ - ள்.) ஈமம் தொறும் - மயானங்களிலெல்லாம், சென்று - போய், நடம் ஆடு - கூத்தாடுகிற, கழல் - சீர்பாதங்களையுடைய, ஐயன் - தலைவனான சிவபிரான், எதிர் ஆய் வரும் காமன் தன் உடல் மேல் விழித்திட்ட - எதிரியாய் (ப் போருக்கு) வந்த மன்மதனது உடம்பை இலக்காக் கொண்டு அதன்மேல் விழித்துப்பார்த்த, நுதலில் கனல் கண் என - நெற்றியிலுள்ள நெருப்புக்கண்போல, — தாமம் புனைந்து ஆர மணம் நாறும் மார்பம் தடம் தோய - மாலைகளைத் தரித்து மிகவாசனைவீசுகிற மார்பினிடத்திலே பதியவும், பார் மன்னன் மிடல் சாய - பூமியைஆளும் அரசனான அத்துரியோதனன் (அதனால்) வலிமைகெடவும், வீமன் - வீமசேனன், ஓர் அம்பு எதிர் தொடுத்தான் - ஒருபாணத்தை எதிரிலே செலுத்தினான்.

சிவபிரான் வீமனுக்கும், நெற்றிக்கண் அம்புக்கும், மன்மதன் துரியோதனனுக்கும், அழித்தலும் அழிக்கப்படுதலு மாகிய தொழில்பற்றி உவமை. சர்வசங்காரகாலத்தில் எல்லாப்பிராணிகளும் அழியப்பெற்ற உலகமுழுவதும் இடுகாடு ஆவதனால், அவ்விடம் முழுவதிலும் அப்பொழுது சிவபிரான் உமாதேவி கண்டு உள்ளம் மகிழும்படி திருநடனஞ் செய்கின்றன ரென்பது, சைவசம்பிரதாயம். நடம் - வடசொல். ஆரம் மணம் நாறும் என எடுத்து, சந்தனக்குழம்பு கமழப்பெற்ற எனினுமாம். ஓரெதிரம்பு - துரியோதனன் தானாகவந்து விட்ட பல அம்புகளுக்கு மாறாகச்செலுத்தப்பட்ட ஒரு அம்பு. (193)

வேறு

13.—வீமன்மீது பூரிசிரவா வந்து பொருதல்.

ஓரம்பினு லைந்தேழுல குடையானலம ரவே
வீரம்புனை வீமன்குனி வில்லோடெதிர் நிற்கப்
போரம்பர வுலகாள்பவர் புகழ்பூரிச வாவந்
தீரம்புதொ டுத்தானொரு தேர்மேலின னிவன்மேல்.

(இ - ள்.) ஏழ் உலகு உடையான் - ஏழுதீவுகளாகவுள்ள பூமி முழுவதையும் தனதாகவுடைய துரியோதனன், ஓர் அம்பின் உலைந்து அலமர - (தனது) ஒரு அம்பினால் வருந்திக்கலங்கும்படி (செய்து), வீரம் புனை வீமன் - வீரத்தன்மையைப்பெற்றுள்ள வீமசேனன், குனி வில்லோடு எதிர் நிற்க - வளைந்தவில்லுடனே எதிரில்நிற்க, — (அப்பொழுது), — அம்பரம் உலகு ஆள்பவர் - ஆகாயத்திலுள்ள சுவர்க்கலோகத்தை அரசாளுகிற (இந்திரன் முதலிய) தேவர்களால், போர் புகழ் - யுத்தத்திற் புகழப்படுகிற, பூரிசவா - பூரிசிரவசு என்னும் அரசன், ஒரு தேர் மேலினன் வந்து - ஒருதேரின்மேல் ஏறினவனாய் வந்து, இவன்மேல் ஈர் அம்பு தொடுத்தான் - இவ்வீமன்மேல் இரண்டு பாணங்களைச் செலுத்தினான்; (எ - று.)

வீரம்புனை - பராக்கிரமத்தை ஆபரணமாகக்கொண்ட என்க. பூரிஸ்ரவா: என்னும் வடசொல், திரிந்தது: இவன் சோமதத்த னென்பவனதுமகன்; அதனால், சௌமதத்தியென்றும் ஒரு பெயர் பெறுவன். இவன் துரியோதனன்பக்கத்து அதிரதவீரரில் ஒருவன். பி- ம்: அலம்வர.

இதுமுதல் இச்சருக்கம்முடியுமளவும் பதின்மூன்று கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் மாங்கனிச்சீர்களுமாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள்.

14.—அதுகண்ட சாத்தகி பூரிசிரவாவோடு பொருதல்.

இவனாண்மையைமதியாதெதிரெய்தானெனவெய்திற்
பவனாகதிபெறுதேரி னனளினபதியிளவல்
அவனாருயிர்கவர்வேனெனவம்பொன்றுதொடுத்தான்
தவனான்மறைதெரிபூரிசவாவுஞ்சரம்விட்டான்.

(இ - ள்.) (அப்பொழுது), நளினபதி இளவல் - திருமகள் கணவனான கண்ணபிரானது தம்பியாகிய சாத்தகி, (வீமன்மேல் பூரிசிரவன் அம்பெய்தது கண்டு), இவன் ஆண்மையை மதியாது எதிர் எய்தான் என -'இவ்வீமனது பராக்கிரமத்தை நன்கு மதிக் காமல்(பூரிசிரவன்) இவனெதிரில் அம்பு தொடுத்தான்' என்று, வெய்தின் - கடுமையான கோபத்தோடு, பவனாகதி பெறுதேரினன் - வாயுவேகத்தைப்பெற்ற தேரைச் செலுத்தியவனாய் (வந்து), அவன் ஆர் உயிர் கவர்வேன் என-'அந்தப் பூரிசிரவனது அருமையான உயிரை (நான் இப்பொழுது) வாங்குவேன்' என்று (வீரவாதஞ்) சொல்லி, அம்பு ஒன்று தொடுத்தான் - ஒருபாணத்தை (அவன்மேற்) செலுத்தினான்; தவனால் மறை தெரி பூரிசவாஉம் - தவஞ்செய்து அதனால் (அஸ்திரத்துக்குரிய) மந்திரங்களையறிந்துள்ள பூரிசிரவனும், சரம் விட்டான்-(சாத்தகியின் மேல்) எதிரம்பு தொடுத்தான்; (எ - று.)

பவநாகதி - வடமொழித்தொடர், எதுகைநயம் நோக்கி நீண்டது. நளினா - தாமரைமலரில் வாழ்பவள்: அவள்கணவன் - நளிநாபதி; வடசொற்றொடர். தவன் = தவம்: இறுதிப்போலி; இனி, உயர்திணைப்பெயராகக்கொண்டு, தவஞ்செய்துள்ள முனிவனால் மந்திரங்களை யறிந்த எனினுமாம். (195)

15.—மூன்றுகவிகள்-சாத்தகியும் பூரிசிரவாவும் முதலில் விற்போர்புரிந்து பிறகு வாட்போர்புரிதலைக் கூறும்.

ஏணற்றுயர்வரைமார்பினரிருவோர்களுமொருவோர்
காணற்றெழிலரிதாமுறைகடிதிற்கணைதொடவே
நாணற்றனவெஞ்சாபமுநடுவற்றனவெனினுங்
கோணற்றனபுகல்வாளொருகுறையற்றதவர்க்கே.

(இ - ள்.) ஏண் அற்று - வளைவு இல்லாமல், உயர் - நீண்டு வளர்ந்துள்ள, வரை - மலைபோல (வலியதாய்)ப் பரந்த, மார்பினர் -

மார்பையுடையவர்களாகிய, இருவோர்கள்உம் - (சாத்தகி பூரிசிரவா என்னும்) இருவரும், ஒருவோர் தொழில் காணல் அரிது ஆம் முறை - ஒருவரும் (தமது) தொழில் வகையைக்காண முடியாததாகும்படி, கடிதின் - விரைவாக, கணை தொட - அம்புகளை யெய்ய;—(அதனால்), நாண் அற்றன - (இருவரது)வில்நாணிகளும் அறுந்தன; வெம் சாபம்உம் நடு அற்றன - கொடியவிற்களும் நடுவிலே துணிபட்டன; எனின்உம்-என்றாலும் [ஆயினும்], அவர்க்கு - அவ்விரண்டு வீரர்கள்விஷயமாக, கோண் அற்றன புகல்வான் - குற்றமில்லாத புகழ்மொழிகளைச் சொல்லுதற்கு, ஒரு குறை அற்றது - சிறிதுகுறையும் இல்லை;(எ-று.)

சிறிதும்பழியில்லாத புகழ் பெறும்படி இருவரும் பின்வாங்காமல் தம்மாலியன்றவளவு போர்விளைத்தனரென்பதாம். வில்லையேந்துதல் வளைத்தல் நாணேற்றல் அம்பெடுத்தல் அதனைவில்லில் தொடுத்தல் பகைவர்மேல் விடுத்தல் முதலிய தொழில்கள், செய்யுங் கைவிரைவால் எவர்க்கும்வகுத்துக்காணவொண்ணாதபடியிருந்தனஎன்பது இரண்டாம் அடியின் கருத்து. ஏண் ஆற்று உயர் மார்பு என எடுத்து, குற்றமில்லாமற் சிறந்த மார்பு எனினுமாம்.

16. ஒருகேடகவுரைதேறினருளமேயெனவமரிற்
பொருகேடகநட வுங்கனபொற்றேர்மிசையிழியா
முருகேடவிழ்தார்மார்பினர்முனைவாளமிரண்டோ
டிருகேடகமிருகையினுமிருவோரு மெடுத்தார்.

(இ-ள்.) முருகு-வாசனையையுடைய, ஏடு அவிழ் தார்-பூவிதழ்கள் விரிந்த மாலையைத்தரித்த, மார்பினர் - மார்பை யுடையவர்களாகிய, இருவோர்உம்-இந்த இரண்டுபேரும்,—ஒரு கேள் தக-ஒற்றுமையான சினேகம் பொருந்த, உரை தேறினர்-(ஒருவர்)பேச்சை (ஒருவர்) நம்புபவரான சினேகிதரது, உளம்ஏ என - மனம்போல, (செய்தொழிலில் ஒற்றுமைப்பட்டு),—அமரில்-போர்க்களத்திலே, நடவும்-செலுத்தப்படுகிற, கேடகம்பொரு-விமானத்தை யொத்த, கனம் பொன் தேர்மிசை-பெரியபொன்னாலாகிய தேர்களின்மேலிடத்தினின்றும், இழியா-இறங்கி,—முனை வாளம் இரண்டோடு-கூர்நுனியையுடைய இரண்டுவாளாயுதத்துடனே, இருகேடகம் - இரண்டு கேடகங்களையும், இரு கையின்உம் எடுத்தார் - இரண்டு கையிலும் எடுத்துக்கொண்டார்கள்; (எ - று.)

சமகாலத்தில் ஒருவரால் ஒருவர் வில் அறுபட்ட இவ்விருவரும் தேரினின்று இறங்குதல், வலக்கையில்வாளையும் இடக்கையிலே கேடகத்தையும் ஏந்துதல் என்னுந் தொழில்களை மாறுபடாது ஒருங்கேசெய்ததுபற்றி, ஒருவருக்கொருவர் பகைவரான இவருக்கு, ஒருவரோடொருவர் ஒத்தமனமுள்ள உயிர்நண்பரை உவமை கூறினர். இரண்டாமடியில், கேடகம்-வடசொல்: வானத்திற் சஞ்சரிப்பதென்ற காரணம்பற்றி விமானத்தைக்காட்டும். இனி, கேடுஅகம்நடவும் என்பதற்கு-கேட்டை அவ்விடத்திற் செலுத்தும் என்றும், கேட்டைத்தன்னிடத்தினின்றுஓட்டுகின்ற என்றும் பொருளுரைத்தாருமுளர். கனபொன் - இலைமொழி வட

மொழியாதலின், வலி இயல்பு. முருகு-தேனுமாம். கேடகம் - தன் மேற் பிறர் எறியும் படைக்கலங்களைத் தடுப்பதொரு கருவி; பரிசை. 'தக' என்பது தேறுதலோடு இயையும். பி - ம்: கேடறநடவும். ( )

17. படிவாயுடுபதியுந்தினபதியும்பொருதெனவே
தொடிவார்கரதலமொன்றியதுறுதோலிடைமறையா
வடிவாண்முனையசையாவிசைவருசாரிகள்பயிலா
விடிவாய்முகிலதிராவெதிரெதிர்சீறினரிப்பால்.

(இ-ள்.) படிவாய்-பூமியிலே, உடுபதிஉம்-சந்திரனும், தினபதி உம்-சூரியனும், பொருது என - (வந்து) போர்செய்தாற்போல, தொடி வார் கரதலம் ஒன்றிய துறு தோலிடை மறையா - தொடியென்னும்அணியைஅணிந்த நீண்ட (தம்) கைகளினிடத்திற்பொருந்திய நெருங்கிய கேடயத்தினுள்ளே மறைந்தும், வடி முனை வாள் அசையா-கூரிய நுனியையுடைய வாள்களைச் சுழற்றியும், விசை வரு சாரிகள் பயிலா-வேகமாக வருகிற (இடசாரி வலசாரி யென்னும்) நடைகளை நடத்தியும், இடி வாய் முகில் அதிரா-இடிபொருந்தின மேகம்போலச் சிங்கநாதஞ்செய்தும், எதிர் எதிர் சீறினர்-எதிரெதிராகநின்று கோபித்துப்போர்செய்தார்கள்: (அதுநிற்க), இப்பால்-இந்தப்பக்கத்தில்,—(எ-று.)—"துரகம்...கரிமா சீறின" என மேற் கவியில் முடியும்.

"ஓடிய ஞாயி றுவாமதியோ டொத்தாற்போல், கேடகங்களோரிரண்டுங் கேழ்கிளர-ஆடமரில், தாக்கினார் சாரிகைகள் சந்தித்தா ராயுதங்கள், ஒக்கினார் தம்மி லுடன்று" என்றார் பெருந்தேவனாரும். சந்திர சூரியருவமை-தேககாந்தியோடுகூடிய சாத்தகி பூரிசிரவாக்களுக்குப் பொருந்தும்; வட்டவடிவமான கேடயத்துக்குக் கொள்ளுதலும் ஒன்று. முதலடி-இல்பொருளுவமை. உடுபதி - நக்ஷத்திரங்களுக்குத் தலைவன். தினபதி-நாளுக்குத் தலைவன். தோலமைத்துச் செய்யப்படுதலால், கேடகத்துக்கு 'தோல்' என்பது - கருவியாகுபெயர். (198)

18.—இரண்டுபக்கத்திலும் மன்னவரும் சதுரங்கசேனைகளும் ஒன்றோடொன்று பொருதல்.

தோலாதடலொடுசீறினதுரகத்தொடுதுரக
மேலாளொடுமேலாள்வரிவில்லாளொடுவில்லாள்
ஏலாமுடியரசோடரசிரதத்துடனிரதங்
காலாளொடுகாலாண்மதகரிமாவொடுகரிமா.

(இ - ள்.) துரகத்தொடு துரகம் - குதிரைகளோடு குதிரைகளும், இரதத்துடன் இரதம் - தேர்களோடு தேர்களும், மத கரிமாவொடு கரிமா-மதயானைகளோடு யானைகளும், மேல் ஆளொடு மேல் ஆள் - (இவற்றின்) மேலுள்ள வீரர்வகையோடு வீரர்வகையும், வரி வில் ஆளொடு வில் ஆள் - கட்டமைந்த வில்லின் வீரர்வகையோடு வில்வீரர்வகையும், முடி அரசோடு அரசு - கிரீடாதிபதிகளான அரசர்வகையோடு அரசர்வகையும், காலாளொடு

காலாள் - பதாதிவகையோடு பதாதிவகையும், ஏலா - எதிர்த்து, தோலாது-தோல்வியடையாமல், அடலொடு சீறின - வலிமையோடு கோபித்துப்போர்செய்தன; (எ - று.)

உயர்திணைப்பெயர்களெல்லாம் சாதியுணர்த்துவனவாக வைத்து 'சீறின' என அஃறிணைப்பன்மைமுற்றுக் கொடுத்து முடித்தார். (199)

19.—இதுமுதல் மூன்றுகவிகள்-படுகளச்சிறப்பு.

நீடுங்கடகரியின்கரநிரையற்றனநதியா
யோடுங்குருதியின்வாளைகளெனவோடினவொருசார்
கோடுஞ்சிலையம்பிற்றலையரியுண்டனகுறைநின்
றாடுந்தொறுமுடனாடுவவலகைக்குலமொருசார்.

(இ - ள்.) (அப்போர்க்களத்தில்), ஒரு சார் - ஒருபக்கத்தில், நிரை அற்றன-வரிசையாக அறுந்துவிழுந்தனவான, கட கரியின் நீடும் கரம்-மதயானைகளின் நீண்ட துதிக்கைகள், நதி ஆய் ஓடும் குருதியின் - ஆறுகளாக விரைந்துபெருகுகிற இரத்தவெள்ளத்திலே, வாளைகள் என ஓடின-வாளைமீன்கள் போல ஓடின; ஒரு சார் - மற்றொருபக்கத்தில், கோடும் சிலை அம்பின் - வளைந்த வில்லினால் விடப்பட்ட (பகைவரது) பாணங்களால், தலை அரியுண்டன-தலை அறுபட்டனவான, குறை - உடற்குறைகள், நின்று ஆடும் தொறுஉம் - நின்று ஆடும்பொழுதெல்லாம், அலகை குலம் - பேய்களின் கூட்டம், உடன் ஆடுவ-கூடநின்று கூத்தாடுவன; (எ - று.)

முன்னிரண்டடி - வடிவுவமை. தலையரியுண்டன குறை-கபந்தமெனப்படும். தலைநீங்கியஉடல் முன்தொடர்ச்சியால் சிறிதுநேரம் கைகால்களை அசைத்துத் தொழில்செய்தலையும் பதைபதைத்துத் துடிப்பதையுமே, 'நின்று ஆடுதல்' என்றது: இனி, "பேரொத்த வாயிரம்பேர் மடிந்தாற்பிறக்குங்கவந்தம், நேரொத்தவாடும்" என்றபடி, ஒத்த ஆயிரம்வீரர் மடிந்தால் கவந்தமெழுந்து ஆடுமென்று கூறுதலுமுண்டு. கவந்தம் ஆடும்பொழுது பேய்கள் உடன் ஆடுவது, அவற்றைத் தாம் உண்ணலாமென்ற களிப்பினாலென்க. (200)

20. கோல்கொண்டவைசிலைகொண்டவைவாள்கொண்டவைகூர்வாய்
வேல்கொண்டவைபவைதம்முடன்விழுகைத்தலமொருசார்
கால்கொண்டுகுசெந்நீர்விரிகளமேகனமதா
மால்கொண்டகரிக்கோடிளமதியாவனவொருசார்.

(இ - ள்.) கோல் கொண்டவை-அம்புகளை எடுத்தவையும், சிலை கொண்டவை-வில்லைப் பிடித்தவையும், வாள் கொண்டவை-வாளையேந்தியவையும், கூர் வாய் வேல் கொண்டவை - கூரிய நுனியையுடைய வேலைத்தரித்தவையுமா யிருந்து, அவை தம் முடன் விழு - அவற்றுடனே அறுந்து கீழ்விழுந்த, கைத்தலம் - கைகள், ஒரு சார் - ஒருபக்கத்தில், (கிடந்தன); ஒரு சார் - ஒரு

பக்கத்தில், கால் கொண்டு உகு செந்நீர் விரிகளம்வ - வாய்க்கால் களாகிப்பெருகுகிற இரத்தம் பரந்த போர்க்களமே, ககனம் அது ஆ - (செவ்) வானமாக, மால் கொண்ட கரி கோடு - மதமயக்கங் கொண்ட யானைகளின் தந்தங்கள், இள மதி ஆவன - பிறைச் சந்திரனாக இருப்பன; (எ - று.)

முதல்வாக்கியத்துக்கு முற்று வருவிக்கப்பட்டது. இரண்டாவதுவாக்கியம் - வடிவொப்புமைபற்றிய **உருவகவணி.** உபமேயத்தில் 'செந்நீர்விரி' என்ற அடைமொழிக்கு ஏற்ப, ககனம் 'செவ்வானம்' எனப்பட்டது. பி - ம்: கைக்குலம். (201)

21. **முந்நீர்தருபவளங்கொடுமுன்னஞ்சமைவனபோற்**
செந்நீரின்மிதந்தோடுவதேராழிகளொருசார்
நன்னீர்மழைபொழிசெம்புனனதிவாய்வருநுரைபோ
லந்நீரிடைபுகுமூளைகளலைபாய்வனவொருசார்.

(இ - ள்.) ஒரு சார் - ஒருபக்கத்தில், தேர் ஆழிகள்-தேர்ச் சக்கரங்கள், முந்நீர் தரு பவளங்கொடு முன்னம் சமைவன போல்-கடலிலுண்டாகிற டவழத்தால் முன்னமே செய்யப்பட்டவை போல, செந்நீரில் மிதந்து ஓடுவ - இரத்தத்திலே மிதந்துஓடுவன; ஒருசார்—, நல் நீர் மழை பொழி செம் புனல் நதிவாய் வரும் நுரை போல் - நல்லநீரை மேகம்சொரிவதனாற் பெருகிய சிவந்த புதுநீர்வெள்ளத்தையுடைய நதியிலே வருகிற நுரைகள் போல, அ நீரிடை புகும் மூளைகள் அலை பாய்வன - அவ்விரத்தநீரிலே விழுந்த (வெண்மையான) மூளைகள் (எப்புறத்தும்) அலைவன;

நல்நீர்மழை - உலகத்துக்கு நன்மைசெய்யுந் தன்மையுள்ள மேகமென்றுமாம். **தற்குறிப்பேற்றவுவமையணி.** (202)

22.—போர்க்களத்து இறந்த மன்னவரின் தொகை.

வையாரயில்கணைதோமரம்வாள்கப்பணமுதலாங்
கையாயுதமுழுகுந்துளைவழிசெம்புனல்கால
மெய்யாயிரவிதமாய்விழவெம்போரிடையிருபத்
தையாயிரமுடிமன்னவரகல்வானமடைந்தார்.

(இ - ள்.) வை ஆர் - கூர்மை மிகுந்த, அயில் - வேலும், கணை-அம்பும், தோமரம்-ஈட்டியும், வாள்-வாளும், கப்பணம் - யானைநெருஞ்சிமுட்படையும், முதல் ஆம்-முதலாகிய, கை ஆயுதம் -(பகைவர்) கையிலுள்ள ஆயுதங்கள், முழுகும் - (தம் உடம்பில்) அழுந்திய, துளை வழி - துவாரத்தின் வழிகள், செம் புனல் கால-இரத்தத்தைக் கக்கவும், மெய் ஆயிரம் விதம் ஆய் விழ - உடம்புகள் பலவகைத்துண்டுகளாய் விழவும், வெம் போரிடை-கொடிய அப்போரிலே, இருபது ஐ ஆயிரம் முடி மன்னவர் - இருபத்தைந்து ஆயிர மென்னும் தொகையுள்ள கிரீடாதிபதிகளான அரசர்கள், அகல் வானம் அடைந்தார் - விசாலமான வீரசுவர்க்கத்தை அடைந்தார்கள் [இறந்தார்கள் என்றபடி]; (எ - று.)— கப்பணம் - இரும்பால் பெருநெருஞ்சிமுள்ளின் வடிவமாகச் செய்

யப்படும் ஓர் ஆயுதவிசேடம். இருபத்தையாயிரம்-இருபதினாற் பெருக்கிய ஐயாயிரம்: லக்ஷம் என்றலும் ஒன்று. (203)

23.—சூரியாஸ்தமன வருணனை.

இவ்வாறுமுனைந்தாருயிரிருசேனையுமடிய
மைவானுலகிடமற்றதுவயவீரர்நெருக்கா
லவ்வானவர்தமதாலயம்வலம்வந்தவருக்கன்
செவ்வானுறுகுடபால்வரையிடமென்றதுசேர்ந்தான்.

(இ - ள்.) இ ஆறு - இப்படி, முனைந்து - போர்செய்து, இரு சேனைஉம் - இருதிறத்துச் சேனைகளும், ஆர் உயிர் மடிய - அருமையான உயிர் நீங்க [இறக்க], வய வீரர் நெருக்கால் - (உடனே வீரசுவர்க்க மடைந்த) வலிமையையுடைய அவ்வீரர் களது நெருக்கத்தால், மை வான் உலகு இடம் அற்றது - கரிய ஆகாசத்திலுள்ள சுவர்க்கலோகம் வெற்றிடம் (சிறிதும்) இல்லையாயிற்று; (அப்பொழுது), அ வானவர் தம்து ஆலயம் வலம் வந்த அருக்கன் - அந்தத் தேவர்களது இருப்பிடமான மேருமலை யைப் பிரதக்ஷிணமாகச் சூழ்ந்துவந்த சூரியன், செவ் வான் உறு குட பால் வரை இடம்என்று - செவ்வானம் பொருந்திய(மேற்குத் திசையிலுள்ள) அஸ்தகிரியை (த் தனக்கு) இடமாக்கருதி, அது சேர்ந்தான்-அம்மலையைஅடைந்தான் [அஸ்தமித்தான்.]

பூமியின் மத்தியிலுள்ள மேருமலையை வானத்திலே சுற்றி வருந்தன்மையுள்ள சூரியன் இயல்பாக மறைந்ததை, தேவர்க ளுக்கு இருப்பிடமாகிய சுவர்க்கலோகமும் மேருகிரியும் போரி லிறந்து விண்ணுலகடைந்த வீரர்களால் நெருங்கியிருப்பதைப் பார்த்து அங்கு எங்கும் தனக்கு இடம்பெறாமல் மேற்குத்திசை மலையைத் தனியே இடமாகக்கொண்டு சூரியன் சேர்ந்தாற்போலு மென உத்பிரேக்ஷித்தார்: **தற்குறிப்பேற்றவணி.** வானத்துக்கு வடிவ மில்லையாயினும், 'மைவான்' என்பது - தோற்றமாத்திரத்தைக் கொண்டு. (204)

24.—இருதிறத்து மன்னவரும் பாசறைபுகுதல்.

எப்போதுமரும்போரினிலிதயங்களிகூர்வார்
கைப்போதுறுபடைசெம்புனல்வழியேயுயிர்காய்வா
ரொப்போதுதலரியாரிருதிறமன்னருமொருவா
வப்போதனிகத்தோடுமகன்பாசறைபுக்கார்.

(இ - ள்.) எ போதுஉம் - எப்பொழுதும், அரும் போரினில் - அருமையான போர்செய்தலிலே, இதயம் களி கூர்வார் - மனங் களிப்பு மிகுபவரும், போது கை உறு - தாமரைமலர்போன்ற (தங்கள்)கைகளிற் பொருந்திய, படை - ஆயுதங்களால், செம் புனல் வழிஏ - இரத்தம் பெருகியவழியாகவே, உயிர் - பகைவரு யிரை, காய்வார் - கொல்லுபவரும், ஒப்பு ஓதுதல் அரியார்- (எவரையும்) உவமை சொல்லுதற்குக் கூடாதவர்களும் ஆகிய, இரு திறம் மன்னர்உம் - இரண்டுபக்கத்து அரசர்களும், அ

போது - அப்பொழுது, அனிகத்தோடும் - சேனைகளுடனே, ஒருவா - (போர்க்களத்தை) நீங்கி, அகல் பாசறை புக்கார் - விசாலமான படைவீட்டை அடைந்தார்கள்; (எ - று.)

'படை செம்புனல் கடலுண்டது கால்வார்' என்ற பாடத்துக்கு - ஆயுதங்களாற் கடல்கொள்ளும்படியான [மிகஅதிகமான] இரத்தத்தைப் பெருக்குபவர்களும் என்க. அகல்+பாசறை= அகன்பாசறை; "குறில்செறியாலள" என்னுஞ்சூத்திரத்து 'பிற' என்ற மிகையால் அமைக்கப்படும். (205)

25.—மறுநாள் சூரியோதய வருணனை.

இரவென்றிருள் கெழுநஞ்சினி ளந்திங்களெ யிற்றோ
ரரவுண்டது தான்மீளவு மிழ்ந்தென்னவ ருக்க
னுரவுங்குட திசைநீனிற வுததிக்குளொ ளித்தோன்
விரவுங்குண திசைவேலையின் மிசைவந்துகி ளர்ந்தான்.

(இ - ள்.) இருள் - இருட்டாகிய, கெழு நஞ்சின் - மிகுந்த விஷத்தையும், இள திங்கள் - கலைகுறைந்த (பிறைச்) சந்திரனாகிய, எயிறு - கோரப்பல்லையுமுடைய, இரவு என்ற - இராத்திரியாகிய, ஓர் அரவு - ஒரு கரும்பாம்பினால், தான் உண்டு-தான் உண்ணப்பட்டு, அது மீள உமிழ்ந்து என்ன-அப்பாம்பினால் மறுபடி உமிழப்பட்டாற்போல, அருக்கன்-சூரியன்,உரவுகுட திசை நீல் நிறம் உததிக்குள் ஒளித்தோன் - வலிமையுடைய மேற்குத் திக்கிலுள்ள நீலநிறத்தையுடைய கடலிலே (முந்தினநாள் மாலைப் பொழுதில்) மறைந்தவன், விரவும் குண திசை வேலையின் மிசை வந்து கிளர்ந்தான் - பொருந்திய கிழக்குத்திக்கிலுள்ள கடலின் மேலே (மறுநாளுதயத்தில்) தோன்றி விளங்கினான்; (எ - று.)

உண்ணப்பட்டாற்போல அஸ்தமித்தவன் உமிழப்பட்டாற்போல உதித்தனனென்பதாம்: சூரியன் சிலகாலத்தில் இராகுவென்னும் கரும்பாம்பாலுட்கொள்ளப்படுதலைக் கருதி, இங்ஙனம் கூறினர். உருவகவணியை அங்கமாகக்கொண்டுவந்த தன்மைத்தற்குறிப்பேற்றவணி. என்றிருள் - விகாரம். 'உரவுக்குட திசை' என்பது - உரவுங்குட திசை யென ஓசையின்பம் நோக்கிமெலித்தல்பெற்றது. நீல் - கடைக்குறை. பி-ம்: உமிழ்ந்தோனென. (206)

ஐந்தாம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

ஆறும்போர்ச்சருக்கம்.

1.—கடவுள்வாழ்த்து.

கோயிலா ளுடையபைங் கொண்டலார் கண்டுயில்
பாயலாய் வாழநீ பாக்கியஞ் செய்ததென்
தீயலா துவமைவே றில்லெனத் தீயநின்
வாயெலா நஞ்சுகால் வாளெயிற் றுரகமே.

(இ - ள்.) தீ அலாது உவமை வேறு இல் என-அக்கினி யல்லது வேறு உபமானம் இல்லை யென்று சொல்லும்படி, தீய நின் வாய் எலாம் நஞ்சு கால் - கொடிய உனது வாய்களெல்லாவற்றி னின்றும் விஷத்தைக் கக்குகிற, வாள் எயிறு - வாள்போலக் கொடிய பற்களையுடைய, உரகமே-பாம்பே [ஆதிசேஷனே!], நீ—, கோயில் ஆள் உடைய - திருவரங்கமென்னுந் திருப்பதியை ஆளு தலையுடைய, பைங் கொண்டலார் - பசுநிறமான நீர்கொண்ட மேகம்போன்ற திருமால், கண் துயில் - அறிதுயில்செய்தருளப் பெற்ற, பாயல் ஆய் வாழ - படுக்கையாய் வாழ்வதற்கு, செய்தது பாக்கியம் என் - செய்துள்ள நல்வினைப்பயன் யாதோ? (எ - று.)

மிகக்கொடிய பாம்புகளுக்கெல்லாம் அரசனும் நெருப்புப் போலத் தவறாது கொல்லவல்ல விஷத்தை எல்லாவாயினின்றும் உமிழ்பவனும் பயங்கரமான விஷப்பற்களை யுடையவனு மான நீ எம்பெருமானுக்குத் திருப்பள்ளி மெத்தையாவதற்குச் செய்த பாக்கியத்தை எளியவனான எனக்குக் கூறினால், கொடுந்தன்மை யையுடைய யானும் அந்நல்வினையைச் செய்து அப்பிரான் அகத் தில் வந்து தங்கப்பெற்று உய்ந்திடுவேனென்பது குறிப்பு. அள விறந்த நல்வினையைச் செய்திருந்தாலொழிய எம்பெருமான் இடை விடாது தன்னிடத்தில் வந்து தங்கும்படியான பெரும்பேற்றைப் பெறுதல்கூடாதென்பதாம். திருமாலின் திருப்பதிகள் நூற்றெட் டனுள் முதலதான திருவரங்கத்துக்கு, வைஷ்ணசம்பிரதாயத்தில் 'கோயில்' என்று ஒரு பெயர். பசுமை கருமை நீலநிறங்களை (ச் சிறிதுவேறுபாட்டைக் கருதாமல்) அபேதமாகக்கூறுங் கவிகளது மரபுபற்றி, நீலமேகத்தை 'பைங்கொண்டல்' என்றார். பாயல், அல் - சாரியை. பாக்யம் - வடசொல். கோயில் - கோவில் என்பதன் இலக்கணப்போலி; கோ + இல்: சிறந்த இடம்.

இதுமுதல் பதினெட்டுக் கவிகள் - பெரும்பாலும் எல்லாச்சீர் களும் விளச்சீர்களாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள்.

2.—பாண்டவர், சேனையோடு போர்க்களங்குறுகுதல்.

பயிலும்வெம்பாசறைபாண்டவரைவருந்
துயிலுணர்ந்தணிபசுந்துளபமாலடிபணிந்
தயிலுநஞ்சனையபோரடுகளங்குறுகினார்
சயிலவெங்கடகரித்தானையுந்தாமுமே.

(இ - ள்.) பாண்டவர் ஐவரும்—, பயிலும் வெம் பாசறை - (தாம்) பழகிய விருப்பத்திற் கிடனான படைவீட்டிலே, துயில் உணர்ந்து - தூக்க மொழிந்து எழுந்திருந்து, அணி பசு துளபம் மால் அடி பணிந்து - அழகிய பசுநிறமான திருத்துழாய்மாலையை யுடைய கண்ணபிரானது திருவடிகளை வணங்கி, (அவனனுமதிப் படி அவனுடனே), சயிலம் வெம் கட கரி தானை உம் தாம் உம்-மலை போன்ற கொடிய மதயானைகளின் சேனைகளும் தாமுமாக, அயி லும் நஞ்சு அனைய அடு போர் களம் குறுகினார்-உண்கிற விஷ த்தை யொத்த [மிகக்கொடிய] (பகைவரைக்) கொல்லும் போர்க்

களத்தை அடைந்தார்கள்; (எ - று.)—கரி - மற்றை மூன்றுவகை அங்கங்களுக்கும் உபலக்ஷணம். (208)

3.—த்ருஷ்டத்யும்நன் தன்சேனையை மகரவியூகமாக வகுத்தல்.

பகுத்தபல்லணிகளின்பான்மையக்குரோணியான்
மிகுத்தவெஞ்சேனையாம்வெள்ளநீர்வேலையைத்
தொகுத்துவண்டிமிர்தொடைத்துருபதன்றிருமகன்
வகுத்தனன்புறமிடாமகரமாவியூகமே.

(இ - ள்.) வண்டு இமிர் தொடை-வண்டுகள் ஒலிக்கப்பெற்ற பூமாலையைத் தரித்த, துருபதன் திரு மகன் - துருபதராசனது சிறந்த குமாரனான திட்டத்துய்மன்,—பகுத்த - பிரிக்கப்பட்ட, பல் அணிகளின் பான்மை-பலவகை அணிகளின் தன்மையையுடைய, அக்குரோணியால்-அக்ஷௌஹிணியென்னும் தொகையால், மிகுத்த-மிகுதியாகவுள்ள, வெம் சேனை ஆம்-பயங்கரமான (தனபக்கத்துச்)சேனையாகிய,வெள்ளம் நீர் வேலையை-நீர்வெள்ளத்தையுடைய கடலை, தொகுத்து - ஒருங்குசேர்த்து,—புறம் இடா - (பகைவர்க்குப்) புறங்கொடுக்காத, மா மகர வியூகம் - பெரிய மகர வியூகமாக, வகுத்தனன்-அணிவகுத்தான; (எ - று.)

பல் அணி - சதுரங்கசேனைகளின் வரிசைகள். மகரவியூகம் - சுறுமீன் வடிவமாகச் செய்யும் படைவகுப்பு. மகரத்தின் தலையிடத்தில் அருச்சுனனும், கண்களில் நகுல சகதேவரும், வாயில் பீமசேனனும், கண்டத்தில் அபிமந்யு கடோற்கசன் சாத்யகி தருமபுத்திரன முதலியோரும், புறத்தில் விராடனும் திட்டத்துய்மனும், இடப்பக்கத்தில் கேகயநாட்டரசர் ஐவரும், வலப்பக்கத்தில் திருஷ்டகேதுவும சேகிதானனும், கால்களில் குந்திபோசனும் சதாநீகனும், வாலில் சிகண்டியும் இராவானும் நின்றனரென்று வியாச பாரதங் கூறும். (209)

4.—வீடுமன் தம்பக்கத்தவரோடு போர்க்களங்குறுகுதல்.

போகமுந்தருமமேயானமெய்ப்புனிதனும
நாகவெங்கொடியுடைநாயகக்குரிசிலும்
வேகவெம்படையுடைவேந்தருஞ்சேனையும்
ஆகவங்குறுகினாரரவம்பெருகவே.

(இ - ள்.) தருமம் ஏ போகம் உம் ஆன-அறத்தையே இன்பமுமாகக் கொண்ட, மெய் புனிதன் உம்-சத்தியந்தவறாத பரிசுத்த குணமுடைய வீடுமனும்,நாகம் வெம் கொடி உடை-பாம்பையெழுதிய கொடிய துவசத்தையுடைய, நாயகன் குரிசில் உம்-(யாவர்க்கும்) தலைமையரசனான துரியோதனனும், வேகம் வெம் படை உடை - (போரில்) விரைவையும் வெவ்விய ஆயுதங்களையு முடைய, வேந்தர் உம்-அரசர்களோடும், சேனை உம்-சேனைகளோடும், ஆரவம் பெருக-முழக்கம் மிக, ஆகவம் குறுகினர்-போர்க்களத்தை அடைந்தார்கள்; (எ - று.)

வீடுமன் அறத்தையே இன்பமுமாகப் பாவித்ததை, தந்தைக்கு மணஞ் செய்விக்கும்பொருட்டுத் தான் மணஞ்செய்வதை விட்டு இவ்வுலகவின்பத்தைத் துறந்ததனால் அறிக. அதன் பொருட்டு முன்னே இவன் தேவர்முன்னிலையில் செய்த சபதம் தவறாமல் உறுதிநிலையாயுள்ள தன்மையை நோக்கி, 'மெய்ப்புனிதன்' என்றார். (210)

5.—வீடுமன் தன்சேனையைக் கிரௌஞ்சவியூகமாக வகுத்தல்.

பொருஞ்சமங்கருதியாள்புரவிதேர்போதகந்
தெரிஞ்சுகொண்டீரிருதிசையினுஞ்செல்லவே
பெருஞ்சனந்தன்னையப்பீடுடைவீடுமன்
கரிஞ்சமென்றுள்ளபேர்வியூகமுங்கட்டினன்.

(இ - ள்.) ஆள்-காலாட்களும், புரவி - குதிரைகளும், தேர் - தேர்களும், போதகம்-யானைகளும், பொரும் சமம் கருதி - பொர வேண்டும் போரை நினைந்து, தெரிஞ்சு கொண்டு-(தன் குறிப்பை) அறிந்துகொண்டு, ஈர் இரு திசையின் உம் செல்ல - நான்குதிக்குக்களிலும் பரவும்படி, பெரும் சனம் தன்னை-பெரிய அச்சேனைவீரர்களை, அ பீடு உடை வீடுமன்-பெருமையையுடைய அந்தப்பீஷ்மன், கரிஞ்சம் என்று பேர் உள்ள வியூகம் உம் கட்டினன் - கரிஞ்சமென்று பெயருடைய வியூகமாக அணிவகுத்தான்; (எ - று.)

கரிஞ்சம்-க்ரௌஞ்சம் என்னும் வடமொழித் திரிபு போலும். அன்றில்,கிரௌஞ்சம் என்பன-ஒருபொருட்சொற்கள்; ஆதலால், கிரௌஞ்சவியூகமாக வகுத்தன னென்க. கிரௌஞ்சவியூகம்-அன்றிற்பறவையின் வடிவமாகச் செய்யப்படும் படைவகுப்பு. அப்பறவையின் வாயிடத்தில் துரோணனும், கண்களில் அசுவத்தாமனும் கிருபனும், தலையில் பல அரசர்களோடு கிருதவர்மாவும், கழுத்தில் பல அரசர்களோடு துரியோதனனும், மார்பில் பல அரசர்களோடும் பெருஞ்சேனையோடும் பகதத்தனும்,இடச்சிறகில் தன் சேனையோடு சுசர்மாவும், வலச்சிறகில் யவனர் முதலிய பல அரசர்களும், புறத்தில் சுருதாயுவும் சதாயுவும் சௌமதத்தியும் நின்றனர் என்று முதனூல் கூறும். அன்றில் - எப்பொழுதும் ஆணும் பெண்ணும் கூடியே நிற்பதும், கணப்பொழுது ஒன்றையொன்று விட்டுப்பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறாமல்ஒன்றை யொன்று இரண்டுமூன்றுதரம் கத்திக்கூவி அதன்பின்பும் தன் துணையைக் கூடாவிட்டால் உடனே இறந்துபடுவதுமான ஒருவகைப்பறவை. கருதி, தெரிஞ்சுகொண்டு என்ற வினைகளுக்கு ஏற்ப, 'தேர்' என்றது-அதனை நடத்துபவரையே குறிக்கும். பி-ம்: தெரிந்து. (211)

6.—இருபடைவீரர்களும் நெருங்கிப்பொருதல்.

இந்திரன்முதலியவிமையவர்தங்களா
லந்தரமிடனறவரவுனைந்தலமர
வந்துவந்திருபெரும்படைஞருமாறுபட்
டுந்தினர்முந்தினரொட்டினர்முட்டினர்.

(இ - ள்.) இந்திரன் முதலிய இமையவர் தங்களால் - (போர் காணவந்த) இந்திரன்முதலான தேவர்களால், அந்தரம் இடன் அற - ஆகாயவெளிவெற்றிடமில்லையாகவும், அரவு உளைந்து அலமர - (தமது அதிபாரத்தைப் பொறுக்கமாட்டாமல்) ஆதிசேஷன் வருந்திக் கலங்கவும், இரு பெரு படைஞர்உம் - இருதிறத்துப் பெருஞ்சேனைவீரரும், வந்து வந்து - நெருங்கிவந்து, மாறுபட்டு - (ஒருவரோடொருவர்) எதிர்த்து, உந்தினர் - (ஆயுதங்களைச்) செலுத்தி, முந்தினர் - முற்பட்டு, ஒட்டினர் - வீரவாதஞ்செய்து, முட்டினர் - தாக்கிபபோர்செய்தார்கள்; (எ - று.)- இமையவர் - இமையாதவர்; இமையில் விசேஷமுடையவர்; இமயமலையில் வாழ்பவர். (212)

7.—துரோணாசார்யன் வீமன்மேல் போருக்கு நெருங்குதல்.

பரவிநால்விதவயப்படைஞருஞ்சூழவா
ளிரவிநான்வெம்பகையிருளினுக்கென்றுதன்
புரவிநான்மறையெனப்பூண்டதேர்தூண்டினன்
விரவினன்வீமன்மேல்விற்கையாசிரியனே.

(இ - ள்.) நால் விதம் வய படைஞர்உம் - நான்குவகைப்பட்ட வலிமையையுடைய சேனைவீரர்களும், பரவி சூழ - பரந்து (தன்னைச்) சூழ்ந்து வர,—வில் கை ஆசிரியன் - வில்லைத் தரித்த கையையுடைய ஆசாரியனான துரோணன், வெம் பகை இருளினுக்கு நான வாள் இரவி என்று - 'கொடிய பகைவர்களாகிய இருளை யொழிப்பதற்கு நான் ஒளியையுடைய சூரியன்' என்று கூறி, நால் மறை என புரவி பூண்ட தன் தேர் தூண்டினன்-(திரிபுரசங்கார காலத்தில் சிவபிரானுக்குக் குதிரைகளாக விருந்த) நான்குவேதங்கள்போல(ச் சிறந்த) குதிரைகளைப் பூட்டியுள்ள (தனது)தேரைச் செலுத்தினவனாய், வீமன்மேல் விரவினன்-வீமசேனன்மேல் (போருகருகு) நெருங்கினான்; (எ - று.)

துரோணனது தேர்க்குதிரைகளுக்குச் சிவனது வேதக்குதிரைகளை உவமை கூறியதனால், துரோணன அழித்தல்தொழிலில் சிவன்போல்வானென்பது தொனிக்கும். நான்குவேதடிவல்ல துரோணனது குதிரைகளுக்கு நான்குவேதங்களை உவமைகூறியது ஏற்கும். இருளினுக்கு - நானகாம் வேற்றுமை, பகைப்பொருளது. விற்கையாசிரியன் என்றதை - இரண்டாம்போர்ச்சருக்கத்து ஒன்பதாம்பாட்டிலுங் காண்க. (213)

8.—வீமன் துரோணனுடைய தேர்க்குதிரைகளையும் பாகனையும் அழித்தல்.

சிலைவரம்பெறுதலிற்றேசிகன்சீறவும்
நிலைபெறும்புகழினனெஞ்சினஞ்சல்செயா
மலையினும்பெரியதேர்வலவனும்புரவியுந்
தலையறும்படிசரந்தனுவளைத்துதையினன்.

(இ - ள்.) தேசிகன் சீறஉம்-வில்லாசிரியனான துரோணன (இவ்வாறு) கோபித்து(த் தன்மேல்) போருக்கு வரவும், நிலை பெறும் புகழினன் - (அழியாது) நிலைபெற்ற கீர்த்தியை

யுடைய வீமன், வரம் சிலை பெறுதலின் - (தான் அவனிடம்) சிறந்த வில்வித்தையைப் பெற்றவனாதலால், நெஞ்சின் அஞ்சலி செயா-மனத்தில் (அவனுக்கு) நமஸ்காரத்தைச் செய்து, தனு வளைத்து - வில்லைவளைத்து, மலையின் உம் பெரிய தேர் வலவன் உம் புரவி உம் தலை அறும்படி - மலையைக்காட்டிலும் பெரியதாகவுள்ள (அவனது) தேரைச் செலுத்தும் பாகனும் தேர்க் குதிரைகளும் தலைதுணியும்படி, சரம் உதையினான் - அம்புகளைச் செலுத்தினான்; (எ - று.)

வெளிப்படையாகக் கைகூப்பிவணங்குவது போரில் தோல்விக்கு அறிகுறியாக முடியுமாதலால், மனத்தில் அஞ்சலிசெய்தான். தலைதெரியாது எதிர்த்துச்செய்யும் போரிலும் வீமன் குரு பக்தியை விடாத சிறப்புபற்றி, 'சீறவும்' என்றதை அடுத்து 'நிலைபெறும்புகழினான்' என்றார். தேசிகன - குரு; வடசொல். அஞ்சலி - கைகூப்பித்தொழுதல்; வடசொல். நெஞ்சின - மனப் பூர்வமாக எனினுமாம். பி - ம்: பெறுதிறற்றேசிகன். (214)

9.—பின்னும் பல அரசர்களை வீமன் அழிக்க, அப்போது தன்னுடன் பொருமாறு சல்லியன் அங்குத் தோன்றுதல்.

சூழிவெங்கசரததுரகதநிருபரை
வீழவெங்கணைகளான்மெய்துளைத்தளவிலே
தாழநின்றிலனெழிற்சல்லியன்றன்னொடே
தோழவின்றமர்செய்கென்றொருதிசைத்தோன்றினன்.

(இ - ள்.) (இவ்வாறு வீமன் துரோணனது தேர்ப்பாகனையுங் குதிரைகளையும் அழித்துத் தேரைப் பயனற்றதாக்கி), சூழி வெம் கசம் - முகபடாத்தையுடைய கொடிய யானைகளும், ரதம் - தேர்களும், துரகதம்-குதிரைகளும், (என்னும் இவற்றின்மேலுள்ள), நிருபரை - அரசர்களை, வீழ-(இறந்து கீழ்) விழும்படி, வெம் கணைகளால் - கொடிய (தனது) அம்புகளால், மெய் துளைத்த அளவிலே - உடம்பைத் துளைசெய்தமாத்திரத்திலே, — எழில் சல்லியன் - அழகையுடைய சல்லியன, தாழ நின்றிலன்-தாமதமாக நிற்காதவனாய், (வீமனைநோக்கி), 'தோழ - தோழனே! இன்று தன்னொடே அமர் செய்க - இப்பொழுது என்னுடனே போர்செய்வாயாக,' என்று-என்று சொல்லிக்கொண்டு, ஒரு திசை தோன்றினன் - ஒருபக்கத்திலே வந்தான்; (எ - று.)

தனது மருமக்களான நகுல சகதேவர்களுக்கு இரண்டாந் தமையனான வீமனைச் சல்லியன் 'தோழ' என விளித்தது, போரில் தன்னோடொத்த பல பராக்கிரமமுடையவனாதலால் எனக. அன்றியும், சல்லியன பகைவர் பக்கத்திற் சேர்ந்தும், முந்தின அன்பை மறவாமல், 'தோழ' என அழைத்தனனெனக. இனி, பின் இரண்டடிகட்கு—தாழ நின்றிலன் - (துரோணன் தேரின்றிக்) கீழே நிற்கமாட்டாதவனாய், எழில் சல்லியன் தன்னொடே தோழ இன்று அமர்செய்க என்று - அழகுள்ள சல்லியனுடனே 'தோழ!

இப்பொழுது (நீ எனக்காக வீமனை யெதிர்த்துப்) போர்செய்வாய்' என்று சொல்லி, ஒரு திசை தோன்றினன் - (அவ்விடம்விட்டு) மற்றோரிடத்துக்குப் போயினான் என்பாருமுளர். துளைத்தளவில்-தொகுத்தல், (215)

10.—சல்லியன்வில்லை வீமன் துண்டித்து அவனைத் தேரொடுந் தூக்கி யெறிதல்.

வல்லைவெஞ்சமர்செயவல்லைநீவருகென
வில்லையுந்துணிசெய்துவெல்லவந்தவனையுந்
தொல்லைவெங்கரியெனத்தேரொடுந்தோண்மடுத்
தெல்லையம்புவியின்மேலெற்றினான்வீமனே.

(இ - ள்.) (அப்பொழுது), வீமன்—, (சல்லியனை நோக்கி), 'நீ வெம் சமர் செய வல்லை-நீ கொடிய போரைச் செய்ய வல்லவன்; (ஆதலால்), வல்லை வருக - விரைவில் வருவாயாக,' என - என்று சொல்லி (எதிர்கொண்டு அழைத்து), வில்லைஉம் துணிசெய்து - (சல்லியனது) வில்லையுந்துண்டாக்கி, வெல்ல வந்தவனைஉம் - (தனனைச்) சயிக்க வந்த அச்சல்லியனையும, தொல்லை வெம் கரி என - முன்னொருநாள் கொடிய யானைகளை எடுத்து எறிந்தாற் போல, தேரொடுஉம் தோள் மடுத்து-தேரோடு தோளிலேஎடுத்து, அம் புவியின் எல்லைமேல் எற்றினான்-அழகிய பூமியிலே மோதினான்; (எ - று.)

தொல்லை என்றது, நான்காம்போர் நாளை. அந்நாட்போரில் வீமன் யானைகளைக் கைகளால் எடுத்து எறிந்ததைக் கீழ் நான்காம் போர்ச்சருக்கத்தில் ஐந்து பத்துப்பதினோராங் கவிகளிற் காண்க. முதலடியிலுள்ள வல்லை யென்னுஞ் சொல் இரண்டனுள், முந்தினது - வன்மையென்னும பண்படியாப் பிறந்த முன்னிலை யொருமைக் குறிப்பு முற்று; பிந்தினது - விரைவுப்பொருளுணர்த்தும் வல் என்னும் இடைச்சொல் ஐகாரச்சாரியை பெற்றது. (216)

11.—சல்லியனது சலிப்புக்கண்டு வீமன் வீரவாதங்கூற, துரியோதனன் அங்குவருதல்.

சல்லியன்றன்பெருஞ்சலிவுகண்டங்கையி
னெல்லியங்கனியினிநேரலாருயிரெனப்
பல்லியங்களுமெழப்பாந்தளம்பொற்கொடி
அல்லியந்தெரியலானங்குவந்தணுகினான்.

(இ - ள்.) (இவ்வாறு தான் எற்றியதனால் நேர்ந்த),சல்லியன் தன் பெரு சலிவு கண்டு - சல்லியனது மிகுந்த தளர்ச்சியைப் பார்த்து, வீமன் இனி நேரலார் உயிர் அம் கையின் நெல்லி அம் கனி என - 'இப்பொழுது பகைவர்களது உயிர் உள்ளங்கைநெல்லிக்கனிபோல (என்கைவசத்தது)' என்றுவீரவாதங்கூற,— பாந்தள் அம் பொன் கொடி அல்லி அம் தெரியலான்-பாம்பை யெழுதிய அழகிய பொற்காம்பையுடைய துவசத்தையும் அக

விதழ்களால் தொடுத்த அழகிய மாலையையுமுடைய துரியோதனன், பல் இயங்கள்உம் எழ - பலவகைவாத்தியங்களும் ஒலிக்க, அங்கு வந்து அணுகினன்-அவ்விடத்தில் [வீமனெதிரில்] வந்து நெருங்கினன்; (எ - று.)

உள்ளங்கைநெல்லிக்கனி, கவிகளால் தெளிவுக்கு உவமை கூறப்படும். இரண்டாமடிக்கு - 'இனிமேல் (நாம் வீமனை எதிர்க்காமலிருந்தால் அவனுக்குப்) பகைவர்களான நம்முடைய சேனையாரது உயிரெல்லாம் அவன்கைவசத்ததாம்'என்றுகருதி எனவும் உரைக்கலாம். அன்றி, துரியோதனன் கூறிய வீரவாதமெனஉரையிடினுமாம். (217)

12.—துரியோதனன் தம்பிமார்முதலினேரொடுஞ்சேர்ந்து அம்புமாரிபொழிதல்.

வெம்புயவீமன்மேல்வில்வளைத்தாயிரம்
அம்புகண்மாரிபோலார்த்தெழவீசினர்
தும்பையந்தார்முடிச்சூழ்படைமன்னருந்
தம்பியர்யாவருமாமனுந்தானுமே.

(இ - ள்.) தான்உம் - (அவ்வாறு வந்த) துரியோதனன் தானும், தமபியர் யாவர்உம் - (அவனது) தம்பிமார்களெல்லோரும், மாமன்உம் - (அவர்கள்) மாமனான சகுனியும், தும்பை அம் தார் முடி - தும்பைப்பூவினலாகிய அழகியமாலையைச்சூடிய மயிர்முடியையுடைய, சூழ் படை மன்னர்உம் - சூழ்ந்துள்ள சேனையரசர்களும், வெம் புயம் வீமன் மேல் - கொடிய தோள்களையுடைய வீமசேனன்மேல், (எதிர்த்து), வில் வளைத்து - (தம் தம்) வில்லை வணக்கி, ஆயிரம் அமபுகள் - மிகப்பலபாணங்களை, மாரி போல்-மழைபோல, ஆர்த்துஎழ- ஆரவாரித்துச் செல்லும்படி, வீசினர்-எய்தார்கள்; (எ - று.)—'தும்பையந்தார்முடி' என்பதை, தம்பியர் முதலியோர்க்குங் கூட்டலாம். (218)

13.—மைந்தர் முதலியோர் புடைவர, வீமன் துரியோதனுதியரை யெதிர்த்தல்.

தோன்றரித்துவசனுஞ்சோகமில்பாகனூர்
வான்றடந்தேரொடும்வருகெனச்சென்றெதிர்
ஊன்றினன்மைந்தருமிளைஞருமுயிரையே
போன்றமைத்துனரும்வாணிருபரும்புடைவர.

(இ - ள்.) தோன்று அரி துவசன்உம்-விளங்குகிற சிங்கத்தையெழுதிய கொடியையுடைய வீமசேனனும்,—மைந்தர்உம் - (தன்) பிள்ளைகளாகிய கடோற்கசன் முதலியோரும், இளைஞர்உம்-தம்பியரான அருச்சுனன் முதலியோரும, உயிரைஏ போன்ற - உயிரையொத்து மிக அன்புள்ள, மைத்துனர்உம் - மைத்துனன்மாரான திட்டத்துய்மன் முதலியோரும், வாள் நிருபர்உம-ஆயுதமேந்திய (மற்றும் பல) அரசர்களும், புடை வர-பக்கத்திலே வர,—சோகம்

இல் பாகன் ஊர்வான் தட தேரொடுஉம் - (போரில்) சோர்த லில்லாத சாரதி செலுத்திய சிறந்த பெரிய தேருடனே, சென்று - போய், வருக என எதிர் ஊன்றினன் - (துரியோதனன் முதலியோரை) 'வருவீர்களாக' என்றுசொல்லி எதிர்த்து நிலைநின்றான்.

அரித்துவசன், மைந்தர்முதலியோர் புடைவரத் தேரொடுஞ் சென்று ஊன்றினனென்க. யோகம் - வடசொல். 'உயிரையே போன்ற' என்ற அடைமொழியை 'மைந்தர்' முதலியோர்க்குக் கூட்டுதலு மொன்று. (219)

14.—இருபுறத்து வீரரும் பொருமாறு நெருங்குதல்.

நின்றிருசேனையுநேர்படவேலினும்
வன்றிறல்வில்லினும்வாளினுமலைவுறக்
குன்றனதோளினரிருவருங்கொக்கரித்
தொன்றினர்வில்வளைத்தொருவருக்கொருவரே.

(இ - ள்.) இரு சேனைஉம்-இருதிறத்துச் சேனைகளும், நேர்பட நின்று-(ஒன்றுக்கொன்று) எதிராக நின்று, வேலின்உம் - வேல்களாலும், வல்திறல் வில்லின்உம்-கொடிய வலிமையையுடைய விற்களாலும், வாளின்உம்-வாள்களாலும், மலைவு உற-போரைச் செய்ய,—குன்று அன தோளினர் இருவர்உம்-மலையையொத்த தோள்களையுடையவரான (வீமன் துரியோதனன் என்ற) இரண்டுபேரும், வில் வளைத்து - (தம் தம் வில்லை வளைத்து, கொக்கரித்து - கர்ச்சித்துக்கொண்டு, ஒருவருக்கு ஒருவர் ஒன்றினர் - ஒருத்தருக்கொருத்தர் நெருங்கினர்; (எ - று.) (220)

15.—வீமதுரியோதனரின் கைகலந்த போர்.

அவனுமம்பிவனுரத்தழகுறவெழுதினன்
இவனுமம்பவன்மணித்தோளின்மேலெழுதினன்
புவனமெங்கணுமிகப்பொறியெழப்போர்செய்தார்
பவனனுங்கனலியுநிகரெனும்பரிசினர்.

(இ - ள்.) அவன்உம் - துரியோதனனும், இவன் உரத்து - வீமன்மார்பிலே, அம்பு - பாணங்களால், அழகு உற எழுதினன்- அழகாகப் பதிவுசெய்தான்; இவன்உம் - வீமனும், அவன் மணி தோளின்மேல் - துரியோதனனது அழகிய தோள்களின்மேல், அம்பு - அம்புகளால், எழுதினன் - பதிவுசெய்தான்; (இவ்வாறு), பவனன்உம் கனலிஉம் நிகர் எனும் பரிசினர்-காற்றும் நெருப்பும் (தமக்கு) உவமை யென்றுசொல்லப்படுந்தன்மையையுடைய அவ்விருவரும்,—புவனம் எ கணும் மிக பொறி எழ போர் செய்தார் - பூமிமுழுவதிலும் மிகுதியாக(க் கோபாக்கினியின்) பொறிகள்சிந்தும்படி யுத்தம்பண்ணினார்கள்; (எ- று.)

அம்பெய்தற்கு மார்பு தோள் சிறந்த இலக்காதல் தோன்ற, 'அழகுறஎழுதினன்' என்றார். அவன்-வந்தவன். இவன்-எதிரூன்றி நின்றவன். (221)

16.—வீமன் துரியோதனனை அம்பெய்து வருத்துதல்.

வரத்தின்முன்பெறுகதைவன்மையும்வின்மையுஞ்
சிரத்தினின்றெண்ணவோர்பேர்பெறுஞ்சேவகன்
சரத்தினுங்கடுகுதேர்ச்சர்ப்பகேதனனையன்
றுரத்தின்வெங்கணைகள்பட்டுருவவில்லுதையினான்.

(இ - ள்.) வரத்தின் - வரத்தினாலே, முன் பெறு - முன்னே பெற்ற, கதை - கதாயுதத்தினது, வன்மைஉம் - வலிமையிலும், வின்மைஉம் - வில்லின் திறத்திலும், சிரத்தின் நின்று எண்ண- (தன்னைத்) தலைமையாகவைத்து (யாவரும்) மதிக்கும்படி, ஓர் பேர் பெறும் - ஒப்பற்ற புகழைப் பெற்ற, சேவகன் - வீரனான வீமன்,—அன்று - அப்பொழுது, சரத்தின்உம் கடுகு தேர் சர்ப்பகேதனனை - (வில்லினின்று விடப்பட்ட) அம்பைக்காட்டிலும் விரைவாகவருகிற தேரையுடைய பாம்புக்கொடியனான துரியோதனனை, உரத்தின் வெம் கணைகள் பட்டு உருவ - மார்பிலே கொடிய அம்புகள் பட்டு ஊடுருவும்படி, வில் உதையினான் -வில்லினின்று (அம்புகளைச்) செலுத்தினான்; (எ - று.)

காண்டவதகனகாலத்தில் அக்காட்டுத்தீயினின்று அருச்சுனனால் உயிர் பிழைப்பிக்கப்பட்ட மயனென்னும் அசுரசிற்பி, பின்பு அவ்வுதவிக்குக் கைம்மாறாக, பாண்டவர்களுக்கு இராசசூயயாகத்துக்குரிய ஒரு சிறந்த இரத்தினமண்டபத்தை அமைத்துக் கொடுத்தது மன்றி, வீமசேனனுக்கு ஒரு கதாயுதத்தையும், அருச்சுனனுக்கு ஒரு சங்கத்தையும கொடுத்தா னென்றவரலாறு கொண்டு, இங்கே 'வரத்தின்முன்பெறு கதை' எனப்பட்டது.

17.—வீமன், துரியோதனன் தம்பியரைப் புண்படுத்திப் பலரையும் உயிர் வதைத்தல்.

தான்விடுங்கணைகளிற்றம்பியர்தம்மையுந்
தேன்விடுந்தெரியலானெய்துபுண்செய்துபின்
ஊன்விடும்படிதுளைத்துருவுபல்பகழியால்
வான்விடும்பேரையும்வானிலுய்த்தனனரோ.

(இ - ள்.) (இவ்வாறு துரியோதனனை வருத்தியபின்பு),—தேன் விடும் தெரியலான் - தேனைச்சொரிகிற பூமாலையையுடைய வீமன்,—தான் விடும் கணைகளின் - தான் செலுத்தும் அம்புகளால், தம்பியர் தம்மைஉம் எய்து புண் செய்து- (துரியோதனன்) தம்பிமார்களையும் துளைத்துப் புண்படுத்தி,—பின் - பின்பு, ஊன் விடும்படி துளைத்து உருவு பல் பகழியால் - (பகைவருயிர்) உடம்பை நீங்கும்படி (அவ்வுடம்பைத்) துளைசெய்து ஊடுருவுந்தன்மையுள்ள பல பாணங்களால், வான் விடும் பேரைஉம் வானில் உய்த்தனன் -(அப்பொழுது) வீரசுவர்க்கத்துக்குச் செலுத்தத் தக்கவர்களையும் அவ்விடத்துக்குச் செலுத்தினான [கொன்றான்]; (எ-று.) —அரோ - ஈற்றசை.

சிற்சிலரைக் காயப்படுத்திச் சிற்சிலரைக் கொன்றனென்பதாம். ஊன் விடும்படி என்பதற்கு - சதை வெளிப்படும்படி என்று உரைப்பாருமுளர். (223)

18.—துரியோதனன் பக்கத்தார் வீமனுக்குப் புறங்கொடுக்க, வானோர் பூமாரி பொழிதல்.

வாவருங் கவனமாக் கடுகுதேர் வலவர்போய்
ஏவருஞ் சிலைகள்போ யிருபுய வலிமைபோய்
யாவரும் பண்டுதா மிடுபுற மிட்டனர்
தேவருங் கண்டுவந் தலர்மழை சிந்தினர்.

(இ - ள்.) (அப்பொழுது வீமன் முன்னிலையில்), யாவர்உம் - (எதிர்த்த துரியோதனன் சேனையார்) எல்லோரும், வா வரும் கவனம் மா-தாவிவருகிற வேகத்தையுடைய குதிரைகளும், கடுகு தேர் - வேகமாகச்செல்லுகிற இரதங்களும், வலவர் - சாரதிகளும், போய் - ஒழியப்பெற்று, ஏ வரும் சிலைகள் போய் - அம்புகள் (தொடுத்தற்குப்) பொருந்திய விற்களொழியப்பெற்று, இரு புயம் வலிமை போய் - இரண்டு தோள்களின்பலமும் ஒழியப்பெற்று, பண்டு தாம் இடு புறம் இட்டனர்-பழமையாகத் தாம் கொடுக்கிற புறத்தை இப்பொழுதும் கொடுத்தார்கள் [முதுகுகாட்டி யோடினார்கள்]; கண்டு - (அதனைப்) பார்த்து, உவந்து - (வீமனது வல்லமைக்கு) மகிழ்ந்து, தேவர்உம் - (வானத்தில் நின்ற) தேவர்களும், அலர் மழை சிந்தினர்-(வீமன்மேற்)பூமாரி பொழிந்தார்கள்;(எ-று.)

துரியோதனாதியர்க்குப் புறங்கொடுத்தல் இன்றைக்குமாத்திரமே புதியதன்று, முன்னமே அமைந்துள்ளது என்பதுதோன்ற 'பண்டு தாம் இடுபுற மிட்டனர்' என்றார். இங்ஙன் புறங்கொடுத்தலை, கீழ் நடந்த போர்களிலும் சிற்சிலவிடத்துக் கூறிப்போந்தார். வாவரும் - வாவிவரும் என்பதன் விகாரம். (224)

வேறு.

19.—விகன்னன் முதலியோர் பொருமாறுவர, அபிமன்யு விகன்னனெதிரிற் சென்று சேர்தல்.

ஏய வரிசிலை வீம னொடுபொரு போரி லனைவரும் வென்னிட
மேய விழியிலை யாய பதிதரு வீரர் பலரும்வி கன்னனும்
ஆய முதிர்சின மூள விரைவுடன் மீள வரவபி மன்னுவுந்
தூய வரிசிலை வாளி கொடுதன தேர்கொ டவனெதிர் துன்னினன்.

(இ - ள்.) ஏய - (அம்புகளை) ஏவிய, வரி சிலை - கட்டமைந்த வில்லையுடைய, வீமனொடு - வீமசேனனுடனே, பொரு - தாக்கிச் செய்த, போரில்-யுத்தத்தில், அனைவர்உம் வென் இட - (இவ்வாறு துரியோதனன் முதலியோர்) எல்லோரும் புறங்கொடுக்க,—(பின்பு),—மேய விழி இலை ஆய பதி தரு - பொருந்தின கண்களில்லையான திருதராட்டிரமகாராசன் பெற்ற (புத்திரரான), வீரர் பலர்உம் விகன்னன்உம் - பராக்கிரமமுடைய பல அரசர்களும்

விகர்ணனென்பவனும், ஆய முதிர் சினம் மூள - பழமையான முதிர்ந்த கோபம் அதிகப்பட, விரைவுடன் மீள வர -வேகத்தோடு மறுபடி(போருக்கு) வர, அபிமன்னுஉம் - அபிமந்யுவும், தூய வரி சிலை வாளி கொடு - குற்றமில்லாத கட்டமைந்த வில்லையும் (பல) அம்புகளையும் உடன்கொண்டு, தன தேர் கொடு - தன்னுடைய தேர்மேலேறிக்கொண்டு, அவன் எதிர் துன்னினான்-அவ்விகர்ணனெதிரிலே சென்றுசேர்ந்தான்; (எ - று.)

இவர்கள், கீழ்த் துரியோதனனோடுவந்து வீமனோடு எதிர்த்துத்தோற்றவராதலால்,'மீளவர' என்றார். விகன்னன்-விகர்ணன்; வடசொல்திரிபு; இவன் துரியோதனனது இளையதம்பியரில் ஒருவன்; இராவணன் தம்பியருள் விபீஷணன் போல, நீதிகளை நன்குஉணர்ந்து நடுவுநிலைமையோடு நியாயவழியையே பேசுகிற நற்குணமுடையவன். கீழ்ச் சூதுபோர் நடந்தகாலத்தில் துரியோதனனேவலால் துச்சாசனன் திரௌபதியை முடிபிடித் திழுத்து வந்த பொழுதும் இவன் நீதியையெடுத்துக்கூறினான்: பின்பு, கிருஷ்ணன் தூதுவந்த சமயத்தில், துரியோதனனும் திருதராட்டிரனும் அவனைக்கொல்லும்படி ஆலோசித்தபொழுதும், இவன் தகுதியன்றென மறுத்தான்; இந்நற்குணம்பற்றியே, மேல் யுத்தத்தில் வீமன் இவனைச் சபதப்படி விதியாற் கொல்லவேண்டிய பொழுதும் மிக இரங்குவன்: இவனது நல்லுணர்வை நன்கு மதித்து, கவி இவனை அடுத்த பாட்டில் 'ஞான விகனன்' என்பர்; இப்படிப்பட்ட சிறப்புடையவனாதலால், இவனை மற்றையோரினும் பிரித்தெடுத்து இங்கே தலைமையாக்கிக் கூறினார். இவனுக்கு வீமனிடத்துக் கோபம் இயல்பாகவுள்ளதன்று, தன் தமையனான துரியோதனனுக்குச் சோற்றுக்கடன் கழிக்கும்பொருட்டாக ஆகியது என்பது தோன்ற, 'ஆயமுதிர்சினம்' எனப்பட்டது. 'மேய விழியிலையாயபதி தரு' என்ற அடைமொழி-வீரர்பலர்க்கும் விகர்ணனுக்கும் உரியது. ஏய=ஏவிய: மேய=மேவிய. மூன்றும் அடியின் முதலில் 'மாய' எனப் பிரித்து, பகையழிய என்றும், மாயம் எனப் பிரித்து, முதிர் மாயம் சினம் - மிகுந்த பொய்க் கோபம் [செயற்கையாகக்கொண்ட கோபம்] என்றும்கூறினுமாம். பி - ம்: அவரெதிர்.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் பத்துக் கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களு மாகிய கழிநெடிலடிநான்குகொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள். (225)

20.—அபிமன்யு விகன்னனுடைய தேர்முதலியவற்றை அழிக்கை.

மானவபிமனுஞான விகனனைவாளிபலபலவேவமே
லானவிரதமுமாவும்வலவனுமாழிகளுமுடனற்றபின்
தானவிரதமுருமல்விசையொடுதந்தியருகுறுசித்திர
சேனனெனுமிளையோனதணிபெறுதேரின்மிசைகடிதேறினன்.

(இ - ள்.) மானம் அபிமன் உம்-பெருமையையுடைய அபிமந்யுவும், ஞானம் விகனனை-நல்லறிவுடைய விகர்ணனை, பலபல வாளி

ஏவ-மிகப்பலவான அம்புகளையேவி எதிர்க்க, (அதனால் அவனது), மேல் ஆன இரதம்உம்-சிறந்த தேரும், மாஉம்-தேர்க்குதிரைகளும், வலவன்உம் - தேர்ப்பாகனும், ஆழிகள்உம் - தேர்ச்சக்கரங்களும், உடன்அற்ற பின்-ஒருசேர அழிந்தபின்பு,—தான-அவ்விகர்ணன், அ இரதம் உறுமல் - (அழிந்த) அத்தேரிற் பொருந்தாமல், விசையொடு தத்தி-வேகத்தோடு பாய்ந்து, அருகு உறு சித்திரசேனன் எனும் இளையோனது அணி பெறு தேரின்மிசை-பக்கத்துப்பொருந்திய சித்திரசேனனென்னும் இளவீரனது அழகுபெற்ற தேரின் மேல், கடிது ஏறினான்-விரைவாக ஏறினான்; (எ - று.)

மூன்றும்அடியில், அவிரதம்-அவ்விரதம் என்பதன் தொகுத்தல்; இனி, அ விரதம் என்றுபிரித்து-அந்த [தோல்விக்குஉரிய] ஒய்வை, உறுமல்-அடையாமல் என்றும்,அப்படிப்பட்ட பழிப்பைப் பெறுமல்என்றும் பொருள் கொள்ளலுமாம்; விரதம் - ஒழிவு: விரஸம் - நிந்தை: வடசொற்கள். சித்ரஸேநன் - பலவகைச் சேனையையுடையானென்று காரணப்பொருள்; வடமொழிப்பெயர். சித்திரசேனனென்பவன் துரியோதனனுடைய தம்பியரில் ஒருவனென்பர் ஒருசாரார். மேல்ஆன - தான் மேலேறிய என்றுமாம். இளையோன் - (போரில்) இளைப்படையாதவனுமாம். (226)

21.—பிறகு துரியோதனன்தம்பிமார் சயத்திரதன் பகதத்தன் இவர்கள்போர, இவர்களை அபிமன்யு அம்பினால் மோத்துதல்.

மற்றையிளைஞருமைத்துனனுமதமத்தகயபகதத்தனுஞ்
செற்றவிகனனுமுற்றுமிவனொடுசெற்றியமர்பொருகிற்றினர்
வெற்றியபிமனும்விற்கையுடனவர்விட்டகணைகள்விலக்கிமார்
பெற்றுகணையனைவர்க்குமவரவரெய்த்துவிழவிழமோத்தினன்.

(இ - ள்.) மற்றை இளைஞர்உம்-(விகர்ணனொழிந்த) மற்றைத் துரியோதனன் தம்பிமார் பலரும், மைத்துனன்உம் - இவர்களுடன் பிறந்தவளது கணவனான சயத்திரதனும், மதம் மத்தம் கயம் பகதத்தன்உம் - மதத்தினால் களித்துள்ள யானைச்சேனையையுடைய பகதத்தனும், செற்றம் விகனன்உம்-கோபத்தையுடைய விகர்ணனும், முற்றுஉம் - (ஆகிய) எல்லோரும், இவனொடு - இவ்வபிமனுடனே, செற்றி அமர் பொருகிற்றினர்-நெருங்கிய போரைச் செய்தார்கள் ; (அப்பொழுது), வெற்றி அபிமன்உம் - சயத்தையுடைய அபிமந்யுவும், வில் கையுடன்-வில்லைப்பிடித்த கையுடனே, அவர் விட்ட கணைகள் விலக்கி-அவர்கள் (தன்மேல்) எய்த அம்புகளைத் (தான் எய்யும் அம்புகளால்) தடுத்து, (உடனே), மார்பு எற்று கணை-(பகைவர்) மார்பைத் தாக்கும் டியான அம்புகளை, அனைவர்க்குஉம் - அவர்களெல்லோர்க்கும், அவர் அவர் எய்த்து விழ விழ - அவரவர்கள் களைத்து மிகுதியாக விழும்படி, மொத்தினன்-செலுத்தினான்; (எ-று.)

மதமத்தகஜபகதத்தன்-வடசொற்றொடர். கீழ்த்தனது தேர்க்குதிரை சாரதிகளை அழித்தது பற்றி,விகர்ணன் அபிமந்யுவினிடம்

கோபங்கொண்டதனுல், 'செற்ற விகனன்' என்ருர். செற்ற எனப் பெயரெச்சமாகக்கொண்டு, (அபிமனுற்) பங்கப்பட்ட எனினுமாம். பொருகிற்றினர் என்ற இறந்தகாலமுற்றில், கில்-ஆற்றலுணர்த்தும் இடைநிலை, து-சாரியை. (227)

22.—அப்போதும் விகன்னனை வருந்துமாறு அபிமன்யு அம்பினுற் பொருதல்.

நெடியவரிசிலைநிமிரமுறைமுறைநெடியவிசையுடன்விசியுநா
ணிடியுமுகிலெனவகிலவெளிமுகடிடியவதிர்பெருநகையுடன்
கொடியவிகனனைமடியவவனுடல்கொடியகுடருகுகுருதிநீர்
வடியவிருபுயமொடியவுதையினன்வடியகணையொருநொடியிலே.

(இ - ள்.) (மற்றும் அபிமந்யு), நெடிய வரிசிலை - நீண்ட கட்டமைந்த (தன்) வில், முறை முறை - அடிக்கடி, நிமிர-நிமிர்ந்துநிற்கவும்,—நெடிய விசையுடன் - மிகுந்த வேகத்தோடு, விசியும் - இழுக்கப்பட்ட, நாண் - வில்நாணி, இடியும் முகில் என-இடிக்கிற மேகம்போலொலிக்கவும், —அகிலம் வெளி முகடு - அண்டகோளத்தின் மேல்முகடு, இடிய - அதிரவும்,—அதிர் பெரு நகையுடன்- ஆரவாரிக்கிற பெருஞ்சிரிப்புடனே,—கொடிய விகனனை - (பகைவர்க்குப்) பயங்கரனுன விகர்ணனை (எதிர்த்து),—அவன் உடல் மடிய - அவனுடம்பு வருந்தவும்,—கொடிய குடர் உகு குருதி நீர் வடிய - வலிமையையுடைய அவன்குடலினின்று பெருகுகிற இரத்தநீர் வழியவும்,—இரு புயம் ஒடிய - (அவனது) இரண்டு தோள்களும் காயப்படவும்,—வடிய கணை - கூர்மையுடைய அம்புகளை, ஒரு நொடியில்-ஒருமாத்திரைப்பொழுதிலே, உதையினன் - செலுத்தினன்; (எ - று.)

வடிய என்னுஞ் சொல்இரண்டனுள், முன்னது-வடிஎன்னும் வினைப்பகுதியடியாப்பிறந்த செயவென்னும் வினையெச்சம்: பின்னது - வடி என்னும் பெயரடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். சிலை முறைமுறை நிமிர்தல் - அம்பை யிழுத்துவிடும்பொழுதுதோறும் வில்லின் வளைவு சிறிது மாறல். கொடிய குடர்-கொடிபோல்சுற்றியுள்ள குடருமாம். குடர் - போலி. பி - ம்: விசையுடன்வீசினன். (228)

23.—அபிமன்யுவின் வீரத்தைக் கண்டு பகைஞர் அஞ்சுதல்.

மன்னர்மணிமுடிமன்னுகழலினன்மன்னனிளவல்விகன்னனை
முன்னருறுகணைபின்னர்விழவிழமுன்னரமர்பொரமுன்னினன்
பொன்னசலநிகரன்னபுயவபிமன்னுவொருவனுமின்னுநா
மென்னவமர்பொரவின் ரனுகுவதென்னவெருவினர்துன்னலார்.

(இ - ள்.) 'பொன் அசலம் நிகர் அன்ன - பொன்மலையான மேருவையொத்த, புயம் - தோள்களையுடைய, அபிமன்னு ஒருவன் உம் - அபிமன்யு ஒருத்தனும்,—மன்னர் மணி முடி மன்னு - (வந்து வணங்குங்காலத்தில்) அரசர்களது இரத்தினகிரீடங்கள்

பொருந்தப்பெற்ற, கழல் கழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய (பாதத்தையுடைய), மன்னன் - துரியோதனராசனது, இளவல் - தம்பியான, விகன்னனை - விகர்ணனை,—முன்னர் உறு கணை - முன்னே [மார்பில்] பொருந்திய அம்புகள், பின்னர் விழ விழ - (ஊடுருவிக்கொண்டு) பின்னே மிகுதியாக விழும்படி, முன்னர் அமர் பொர முன்னினான்-எதிரில்நின்று போர்செய்யத் தொடங்கி விட்டான்; இன்னும்-பின்பும், நாம்—, என்ன அமர் பொர -என்ன போரைச் செய்வதற்கு, இன்னர் அணுகுவது - இப்பொழுது (அபிமந்யுவை) நெருங்குவது?' என்ன - என்று கருதி, துன்னலார் - பகைவர்கள், வெருவினர் - அஞ்சினார்கள்; (எ - று.)

'அபிமந்யு வேறுதுணையில்லாமல் தானொருவனாகவே இராசராசனான துரியோதனனது தம்பியான விகர்ணனை மார்பு துளைக்கும்படி பல அம்புகளை எய்தானென்றால், நாம் அவ்வபிமந்யுவோடு எதிர்த்து என்ன போர் செய்யமாட்டுவோம்?' என்று எதிரிகள் பலர் அஞ்சினரென்பதாம். நிகர் அன்ன என்ற இடத்து - திருக்கோவையாரில், "கோளரிக்குந் நிகரன்னார்" என்பதற்கு - 'கோள் வல்ல அரிமாவிற்கு மறுதலைபோல்வார்' என்றும், 'கோளரிக்கு ஒப்பாகிய அத்தன்மையர் எனினும் அமையும்' என்றும் பேராசிரியர் கூறியது அறியத்தக்கது. ஒருவனும், உம் - இழிவு சிறப்பு; அவனது துணையின்மையையும், இளம்பிராயத்தையும் காட்டும். இன்னர் - இத்தன்மையரெனினுமாம். இப்பாட்டு - மெல்லோசையால் மிக்கது. முன்னும் பின்னு முள்ள இவ்வகை விருத்தங்களில் ஒவ்வொருபாட்டும் ஒவ்வொரு ஓசைவிகற்பம் பொருந்தப் பாடப்பட்டுள்ளவாறு காண்க. (229)

24.—அபிமன் போர்வெல்ல, தந்தைமார் எதிர்கொண்டு மகிழ்ந்து அவனைத் தழுவுதல்.

அன்றையமரினிலொன்றுபடவவரங்கமயர்வுறுபங்கமே
தென்றுமொழிவதுதந்தமனையுறவெந்தநிருபருமுந்தினர்
வென்றுபொருமுனைநின்றவபிமனைவிஞ்சுமுவகைகொணெஞ்சுடன்
சென்றுதழுவினரிந்துவரவெழுசிந்துவெனமகிழ்தந்தைமார்.

(இ - ள்.) அன்றை அமரினில் - அன்றையதினத்துப்போரில், ஒன்று பட - ஒருசேர, அவர் அங்கம் - (விகர்ணன் முதலிய) பகையரசர்களது உடம்பு, அயர்வுஉறு-தளர்ச்சியடைந்த, பங்கம் - தோல்வியை, ஏது என்று மொழிவது - (யாம்) என்னவென்று எடுத்துச் சொல்வது? எந்த நிருபர்உம் - (துரியோதனன் பக்கத்தில்) எல்லா அரசர்களும், தம் தம் மனை உற - தங்கள் தங்கள் வீட்டை அடைவதற்கு, முந்தினர் - (ஒருவரினும் ஒருவர்)முற்பட்டார்: (அப்பொழுது), இந்து வரவு எழு சிந்து என - சந்திரன் உதிக்கப்பொங்குகிற கடல்போல, மகிழ் தந்தைமார் - மகிழ்ச்சி கொண்ட (அபிமனது) தந்தையரான பாண்டவர், வென்று பொரு முனை நின்ற அபிமனை- வெற்றி கொண்டு போர்க்களத்திலேநின்ற அபிமந்யுவை, விஞ்சும் உவகை கொள்நெஞ்சுடன் - மிகு களிப்புக் கொண்ட மனத்துடன், சென்று தழுவினர்—; (எ - று.)

சந்திரனது வரவைக் கண்டமாத்திரத்தில் கடல் பொங்குவதற்குக் காரணம், தன்னிடத்திலிருந்து உண்டானதுபற்றித் தனக்குப் பிள்ளைமுறையாகிய அச்சந்திரனைக் காணுதலாலாகுங் களிப்பு என்று கூறுவது கவிமரபு: அதுபற்றி, அபிமனதுவெற்றியைக் கண்டுகளிக்கிற அவன் தாதையர்க்கு, சந்திரனது வரவைக் கண்டு பொங்குங் கடல் உவமை. (230)

25.—இதுமுதல் மூன்றுகவிகள்-படுகளச்சிறப்பு.

கோடுமுதலொடுவாளிகளினிறவீழ்வபலகடகுஞ்சரங்
காடுபடுதுளவோன்முன்வரவிடுகஞ்சன்மழகளிறொக்குமால்
ஓடுகுருதியினூடுவடிவொருபாதிபுதைதருமோடைமா
நீடுமுதலையின்வாயின்வலிபடுநீலகிரியைநிகர்க்குமால்.

(இ - ள்.) (அப்போர்க்களத்திலே),—கோடு - தந்தங்கள், முதலொடு - அடியோடு, வாளிகளின் இற - (எதிரிகளின்) பாணங்களால் அழிய, வீழ்வ-விழுந்துகிடப்பனவான, பல கடம் குஞ்சரம் - அநேகமதயானைகள்,—காடு படு துளவோன் முன் - காட்டிற் பொருந்திய திருத்துழாயைத் தரித்த கண்ணபிரானுக்கு முன்னே, வர - செல்லும்படி, கஞ்சன் - கம்சன், விடு - ஏவிய, மழ களிறு - இளமையான (குவலயாபீடமென்னும்) யானையை, ஒக்கும் - ஒத்திருக்கும்; ஓடு குருதியின் ஊடு - ஓடுகிற இரத்தவெள்ளத்தினிடையே, வடிவு ஒரு பாதி புதைதரும் - உடம்பில் ஒருபாதி அழுந்திய, ஓடைமா - நெற்றிப்பட்டத்தையுடைய யானைகள்,—நீடு முதலையின் வாயின் - நீண்ட முதலையினது வாயினால், வலி படு - வலிமையொழிந்த, நீலகிரியை - நீலநிறமுள்ள மலைபோன்ற (கஜேந்திரனென்னும்) யானையை, நிகர்க்கும்—; (எ - று.)

முன் இரண்டடியிற் கூறிய உவமை-யானைகள் தந்தம் வேரோடு ஒழிய இறந்து விழுந்து கிடந்ததற்கும், பின் இரண்டடியிற் கூறிய உவமை - பாதியுடம்பு வெளித்தெரியாது மறைய ஒடுங்கியதற்கு மென்க. துளசி - முல்லை நிலத்திற்கு உரியதாதலால், 'காடுபடுதுளவு' எனப்பட்டது; இனி, 'காடுபடுதுளவோன்' என்பதற்கு - முல்லைநிலத்துக்குத் தெய்வமாகப் பொருந்திய கண்ணபிரானென்றும் கொள்ளலாம். நீலகிரி - கருநிறமுடைய யானைக்கு, உவமையாகுபெயர். வீழ்வ - பெயர். ஆல் இரண்டும் - அசை.

வில்விழாவென்கிற வியாஜம்வைத்துக் கம்சனால் வரவழைக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணபலராமர்கள், கம்ஸனரண்மனையை நோக்கிச் செல்லுகையில், அவனது அரண்மனைவாயில் வழியில் தம்மைக் கொல்லும்படி அவனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயாபீடமென்னும் மதயானை கோபித்துவர, அவ்யாதவ வீரர் அதனையெதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியையெடுப்பதுபோல எளிதிற்பறித்து அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அடித்து உயிர்தொலைத்து உள்ளேபோயினரென்பது, இரண்டாம் அடியின் கதை. (231)

26. மாலுமதகடசாலநுதலுமருப்புமொருகையும்வதனமுந்
தோலுமொழியவுளானதசைபலபேய்கணுகர்தருதும்பிமா
நாலுமறைகளுமோலமெனவகல்வானமெனமுழுஞானமே
போலுமெனவொளிர்மேனியுடையவர்போர்வையுரியதள்போலுமே.

(இ-ள்.) மாலும்-மயங்குதற்குக் காரணமான, மதசாலம்-மதப் பெருக்கைக்கொண்ட, கடம்-கன்னங்களையுடைய, நுதல்உம்-நெற்றியும், மருப்புஉம்-தந்தங்களும், ஒரு கைஉம்-ஒன்றாகிய துதிக்கையும், வதனம்உம்-முகமும், தோல்உம்-(உடம்பின்) தோலும், ஒழிய-நீங்க, உள் ஆன தசை-உள்ளே பொருந்திய சதைகளை, பல பேய்கள் நுகர்தரு - அநேகம் பேய்கள் உண்ணப்பெற்ற, தும்பிமா - யானைகள்,—நாலு மறைகள்உம்-நான்கு வேதங்களும், ஓலம் என-அபயமிட்டழைக்கவும், அகல் வானம் என-பரந்தஆகாய மென்று சொல்லவும், முழு ஞானம்ஏ போலும் என-பூர்ணமான அறிவையே ஒக்கு மென்று சொல்லவும், ஒளிர்-விளங்குகிற, மேனி உடையவர்-திருமேனியையுடைய சிவபிரானுக்கு, போர்வை - போர்வையாக உள்ள, உரி அதள்-உரிக்கப்பட்ட(யானைத்)தோலை, போலும்-ஒக்கும்.

உடம்பிலுள்ள உறுப்புக்கள் ஒழியத் தோலுரிப்பட்ட யானைகள், சிவபிரானால் முன்பு தோலுரிக்கப்பட்ட யானையை யொக்கு மென்க. தமது துன்பத்தை யழிக்கும்பொருட்டு யாவராலும் அபயங்கூறி அடையப்படுங் கடவுள் இவரே யென்றும், ஆகாசமூர்த்தி யென்றும், பூர்ணஞானசொரூபி யென்றும் வேதங்களாற் புகழப்பட்டுத் தேசோமயமாய் விளங்குபவர் சிவபிரானென்பது, பின்னிரண்டடிகளில் விளங்கும். சாலம்-ஜாலம் என்னும் வடசொல்லின் விகாரம்: இனி ஜலமென்பதன்விகாரமெனக் கொண்டு, நீர் என்றுமாம். அன்றி, 'மதகடசாலும்' என்று பாடங்கொண்டு, மதநீரைக் கொண்ட கன்னமாகிய சாலும் என்று பொருளுரைப்பாருமுளர்: சால்-நீர்ப்பாத்திரம். போர்வை-போர்க்கப்படுவது. யானைத்தோலுரித்த கதை:—அருந்தவமியற்றிப் பெருவரம்பெற்ற கஜாசுரனென்பவன் தேவர் முனிவர் முதலியோரை இடைவிடாது வருத்தித் துரத்த, அஞ்சியோடின அவர்களது பிரார்த்தனையால் பரமசிவன் தம்மை யெதிர்த்துப் போர்செய்யவந்த அவ்வசுரனைக் காலாலுதைத்துத் தள்ளிக் கொன்று தோலை உரித்துப் போர்த்தருளின தென்றாயினும், தாருகவனமுனிவரேவிய யானையினுட்சென்று உருத்திரமூர்த்தி உடலைப்பிளந்து அதனுரிவையைப் போர்த்துக்கொண்டதென்றாயினுங்கொள்க. (232)

27. சேனையிபமுகமற்றுவிழுவனசென்றுதிசைவழிகவ்விவிண்
போனவயவர்கள்படைகொடெதிரெதிர்பூசல்புரியிருபூதமுஞ்
சோனைமழைமுகில்வாகன்முதலசுரேசர்தொழுதுதுதிக்கவே
யானைமுகவசுரேசனுடனமராடுமுதல்வனையொக்குமே.

(இ - ள்.) சேனை-அச்சேனையிலே, அற்று விழுவன-அறுந்து விழுந்தனவாகிய, இபம் முகம்-யானைகளின் முகங்களை, திசை வழி சென்று கவ்வி-(அவை விழுந்துள்ள) திக்குக்களின் இடங்களிலே ஓடிப்போய் (வாயினால்) கௌவி யெடுத்துக்கொண்டு, விண்போன

வயவர்கள் படைகொடு-(இறந்து) வீரசுவர்க்கஞ்சென்ற வீரர்களது ஆயுதங்களை(த் தம் கைகளில்) ஏந்திக்கொண்டு, எதிர் எதிர் பூசல் புரி-எதிரெதிராக நின்று(ஒன்றோடொன்று) போர்செய்கிற, இரு பூதம்உம்-இரண்டு பூதங்களும், சோனை மழை முகில் வாகன் முதல-விடாப்பெருமழைபொழியும் மேகத்தை வாகனமாகவுடைய இந்திரன் முதலிய, சுரேசர்-சிறந்த தேவர்கள், தொழுது துதிக்க-(தன்னை வந்து) வணங்கித் தோத்திரஞ்செய்ததனால், யானை முகம் அசுரேசனுடன் அமர்ஆடு - யானைமுகத்தையுடைய அசுரராசனோடுபோரைச்செய்த, முதல்வனை - தலைவனானவிநாயகக்கடவுளை, ஒக்கும்—; (எ - று.)

மாகதனென்னும் முனிவனுக்கு விபுதையென்னும் அசுர கன்னிகையினிடத்தில் யானைமுகமாய்ப் பிறந்த **கஜமுகாசுரனென்பவன்** அநேகவரங்களைப் பெற்றுத் தன்னுடன் பிறந்த பல அசுரர்களுடனே உலகத்துக்கு அளவிறந்த பலவகைத் தீங்குகளை இழைத்து வருகையில், தேவர்களின் வேண்டுகோளால் **அவனைக்** கொல்லும்பொருட்டுச் சிவபிரானது மூத்த குமாரராய் யானைமுகக்கடவுளாக அவதரித்த **விநாயகமூர்த்தி**, இந்திரன் முதலிய தேவர்களின் பிரார்த்தனையாற்சென்று எதிர்த்துப் போர்செய்து அவ்வசுரனை **அழித்திட்டனர்** என்பது **கதை**. அவ்வசுரன் இரணியன்போலத் தேவர்களாலும் அசுரர்களாலும் மனிதர்களாலும் மிருகங்களாலும் மற்றும் பல பிராணிகளாலும் (தனித்தனி) இறவாதபடி வரம்பெற்றிருந்தனனாதலால், அவனைச் சிவபிரான் யானைமுகமும், தெய்வப்பிறப்பும், பூதவடிவமும் கொண்ட ஒருபுத்திரனை யுண்டாக்கி அவனால் அழித்தருளினரென்க. அவன் படைக்கலங்களாலும் அழியாதபடி வரம்பெற்றனனாதலால், அவன்மேல் விநாயகர் தமது தந்தமொன்றை யொடித்து வீசி அதனால் கொன்றனரென்று நூல்கள் கூறும். யானைமுகத்தை வாயிற்கௌவியவையும், அங்குள்ள பிணங்களைத் தின்பதில் தமக்குஉண்டான மாறுபாட்டினாலும் விளையாட்டினாலும் தம்மில் ஒன்றோடொன்று போர்செய்கிறவையுமான பூதங்களுக்கு, ஒருவரோடொருவர் போர்செய்த பயங்கரரூபியான கஜமுகாசுரனும் கைகால்வயிறுகளில் பூதவடிவங்கொண்ட யானைமுகக்கடவுளும் உவமை யெனக் காண்க. முதல - குறிப்புப் பெயரெச்சம். வயவர்-வலிமையுடையவர். எல்லாச் சுபகாரியங்களிலும் முதலில் பூசிக்கப்படுகிற தலைமைபற்றி, விக்கிநேசுவரரை 'முதல்வன்' என்றார். பி - ம்: தசைவழி. (233)

28.—சூரியாஸ்தமனமும், மறுநாள் சூரியோதயமும்.

இமைய மணுகினன் விசயன் மதலையை யின்றை யமரினி யுங்களுக்
கமையு மெனமுத லனிக மடையவு மணியு மவனிபர் நால்வருந்
தமைய ஹெடுதம பதியி னணுகினர் தங்க விரைவொடு கங்குல்போய்ச்
சிமைய மணுகினன் மீள நனியிருள் சிதைய வுதய திவாகரன்.

(இ - ள்.) (சூரியன்),—விசயன் மதலையை-அருச்சுனனது புத்திரனை அபிமன்னுவை (நோக்கி),'இன்றை அமர் இனி உங்களுக்கு அமையும்' என-இன்றைய தினத்துப்போர் இப்பொழுது உங்களுக்குப் போதுமெனறு (கூறியவன் போல), முதல்-முத

லிலே, இமையம் அணுகினன்-(அஸ்தமந) கிரியை அடைந்தான் [அஸ்தமித்தான்]; (உடனே), அனிகம் அடையஉம் - சேனைக ளெல்லாவற்றோடும், அணியும் அவனிபர் நால்வர்உம் - அழகு பொருந்திய (வீமன் முதலிய) நான்கு அரசர்களும், தமையனொடு- (தங்கள்) தமையனான தருமபுத்திரனுடனே, தம பதியின் அணு கினர் தங்க - தமதுபடைவீட்டிற் சேர்ந்து தங்க,—கங்குல் விரைவொடு போய் - இராத்திரி துரிதமாகக் கழிய, மீள - பின்பு, நனி இருள் சிதைய - மிகுந்த இருள் அழியும்படி, உதயம் திவாகரன் - உதயகாலத்துச் சூரியன், சிமையம் அணுகினன் - உதயகிரியை அடைந்தான் [உதித்தான்]; (எ-று.)

சூரியன் இயல்பாக அஸ்தமித்ததை அன்றையதினம் சிறப் பாகப் போர்செய்த அபிமனைநோக்கி 'இவ்வளவோடு இன்றைப் போர் போதும்' எனக்கூறிச் சென்றதாக உத்பிரேக்ஷித்தார். முதல் இமையமணுகினன் திவாகரன், கங்குல்போய் இருள்சிதைய மீளச் சிமையம்அணுகினன் என ஒருவாக்கியமாகவே முடித்தலு மொன்று. இமயம், சிமயம் என்பன - எதுகைநோக்கி இடைப் போலிபெற்றன. இமயம் - இங்கே, மலையென்னுமாத்திரமாய், சிறப்புப்பெயர் பொதுப்பொருளை யுணர்த்திற்று; பின் வருவதை நோக்கி அஸ்தகிரி யாயிற்று. தமையன் - தம் ஐயன் எனப்பிரிந்து தம்தந்தைபோல்வானென்று பொருள்படும்; 'தமையன் தந்தை போல் மதிக்கத்தக்கவன்' என்பது - நூல்வழக்கு. திவாகரன் - பகலைச்செய்பவன்; வடமொழிப்பெயர்; 'பகலவன்' என்பது - இதற்கேற்ற தமிழ்மொழி. உதயச்சிமயமென மொழிமாற்றியுரைப் பினும் அமையும். சிமயம் - மலையுச்சி; இங்கே, மலைக்குச் சினை யாகுபெயர். (234)

ஆறும்போர்ச்சருக்கம் முற்றிற்று.

ஏழாம்போர்ச்சருக்கம்.

1.—கடவுள்வாழ்த்து.

உரலும் வேதமுந் தொடர நந்தகோ னுடன சோதைகண்டுருக வாழ்வுகூர்
தரணி மீதுசெங் கையு மாமுழந் தாளும் வைத்துவைத் தாடு மாயனுர்
விரவி நின்றமா மருதி னூடுதா மெத்தெ னத்தவழ்ந் தருளி மீளவும்
புரியு நீள்கடைக் கண்ணும் வண்ணமும் போற்று வார்கண்மெய் புளக மேறுமே.

(இ - ள்.) உரல்உம் வேதம்உம் தொடர - (தன்னைக் கட்டி வைத்த) உரலும் (தன்னையே புகழ்கிற) வேதங்களும் உடன்வர வும், நந்தகோனுடன் அசோதை கண்டு உருக - (தன்னை வளர்த்த தந்தைதாயராகிய) நந்தகோபனும் யசோதையும் பார்த்து மனமுரு கவும், வாழ்வு கூர் தரணி மீது செம்கைஉம் மா முழந்தாள்உம் வைத்து வைத்து - வாழ்க்கைமிகுந்த பூமியின் மேல் சிவந்த (தன்) கைகளையும் அழகிய முழங்கால்களையும் மாறிமாறி எடுத்து வைத்து, ஆடும் மாயனுர்-திருவிளையாட்டுச்செய்கிற கண்ண

பிரான். விரவி நின்ற மா மருதினூடு - (ஒன்றோடொன்று) கூடி நின்ற பெரிய மருதமரங்களின் நடுவிலே, தாம் மெத்தென தவழ்ந்து - தாம் மெதுவாகத்தவழ்ந்து சென்று, அருளி - (அந்த மருதமரங்களுக்கு) நற்கதிகொடுத்து, மீளஉம் புரியும - திரும்பிப் பார்த்தருளுகின்ற, நீள் கடைக்கண்உம் - நீண்ட கடைக்கண்களை யும், வண்ணம்உம் - அழகையும், போற்றுவார்கள் - துதிப்பவர் களது, மெய்-உடம்பு, புளகம் ஏறும்-மயிர்ச்சிலிர்ப்பு மிகப்பெறும்;

இங்கே, உடம்பில் ரோமாஞ்சமுண்டாதல் - அன்புமிகுதியா லாகும் மெய்ப்பாடாம். வேதமுந் தொடர - ''தொடர்ந்த நான்மறை பின்செல'' என்றது காண்க. கண்ணனைப்பெற்ற தந்தைதாயரான வசுதேவனும் தேவகியும், கண்ணனது குழந்தைதிருவிளையாடல் களைக் காணப்பெறாமல், வளர்த்த தந்தைதாயரான நந்தகோபனும் யசோதையுமே அவற்றைக் கண்டு களிக்கப்பெற்ற அருமை தோன்ற, 'நந்தகோனுடன் அசோதை கண்டு உருக' என்றார். பூமிதேவியின் பாரத்தை நிவிருத்தி செய்யும்பொருட்டுக் கண்ணன் தன்னிடம்வந்து திருவவதரிக்கப்பெற்றதனாலும், அப் பெருமானது திருக்கைகளும் திருவடிகளும் தன்மீது பரிசிக்கப் பெற்ற பாக்கியவிசேஷத்தை யுடைமையாலும்,பூமியை'வாழ்வுகூர் தரணி' என்றார். குழந்தை தவழும்பொழுது பின்னே திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு செல்லும் இயல்புபற்றி, 'தவழ்ந் தருளி மீளவும் புரியும் நீள் கடைக்கண்' என்றது. கடைக்கண் - கடாக்ஷம். பகவான் தன்னுடைய பரத்துவத்தைவிட்டுச் சௌலப் பியத்தைக் கைக்கொண்டு உரலுடன் கட்டுப்பட்டு எளிமையாக இருந்த இவ்வரலாறு, ''பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்க ளுக்கரிய, வித்தகன் மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள், மத்துறுகடைவெண்ணெய் களவினி லுரவிடையாப்புண்டு, எத்திறம் உரலினோ டிணைந்திருந் தேங்கிய எளிவே'' என்று கூறி நம்மாழ்வார் ஈடுபட்டு ஆறுமாதகாலம் மோகித்துக்கிடக்கும்படி யான மகிமை யுடையதனால்,இவ்வரலாற்றைப் போற்றுபவர்களது மெய்புளகமேறும் என்றார். அருளி மீளவும் புரியும்-(அம் மரங்க ளுக்கு)முன்னையநிலையை மறுபடி கொடுத்தருளின எனப் பொருள் கொள்ளலுமாம். நந்தகோன்-நந்தன்கோன் எனப் பிரியும்: இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. ஈற்றேகாரம் - தேற்றம். புளகம் - வடசொல். மெத்தென - மந்தக்குறிப்பு.

கண்ணன் குழந்தையாயிருக்குங்காலத்தில் துன்பப்படுத்து கின்ற பல திருவிளையாடல்களைச் செய்யக்கண்டு கோபித்த நந்த கோபரின் மனைவியான யசோதை, ஒருநாள் கிருஷ்ணனைத் திரு வயிற்றிற் கயிற்றினாற் கட்டி ஓருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலை யிழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவிலே எழுந்தருளியபொழுது, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தவளவில், முன் நாரதர்சாபத்தால் அம்மரங்களாய்க்கிடந்த நளகூபரன் மணிக்கிரீவ னென்னும் குபேரபுத்திரர் இருவரும் சாபந்

தீர்ந்து சென்றனரென்பது கதை. இந்தக் குபேரபுத்திரர்கள் முன்பு ஒரு காலத்தில் பலதெய்வமகளிருடனே ஆடையில்லாமல் ஜலக்கிரீடை செய்துகொண்டிருக்கையில், நாரதமகாமுனிவர் அங்கு எழுந்தருள, மங்கையரனைவரும் நாணங்கொண்டு ஆடையெடுத்து உடுத்து நீங்க, இந்த மைந்தர்மாத்திரம் மதுபாந மயக்கத்தால் நிர்வாணமாகவே யிருக்க, நாரதர்கண்டு கோபங்கொண்டு 'மரங்கள் போலிருக்கிற நீங்கள் மரங்களாவீர்'என்று சபித்து, உடனே அவர்கள் வேண்டிக்கொண்டதற்கு இரங்கி, 'நெடுங்காலஞ் சென்றபின்பு திருமால் உங்களை யடையுஞ் சமயத்தில் இவ்வடிவமொழிந்து முன்னைய வடிவம் பெற்று மீள்வீர்' என்று சாபவிடை கூறிப் போயினரென அறிக.

இச்சருக்கத்திலுள்ள பத்துப்பாடல்களும் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்து ஏழாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றைநான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (235)

2.— பாண்டவசேனையும் கௌரவசேனையும் களங்குறுக, வியூகமாக வகுக்கப்படுதல்.

இருவர்சேனையுஞ்சேனைமன்னருமிகலியேபலதிசைகளெங்கணு
முரசமாதிவெம்பணைமுழங்கவேமுன்னைவெங்களம்பின்னுமெய்தினர்
மரகதாசலம்போலுமேனிமாமாயனச்சுமாசுணவியூகமுந்
தரணிகாவலன்றன்பிதாமகன்சகடவியூகமுந்தான்வகுக்கவே.

(இ - ள்.) இருவர் சேனைஉம்-இருதிறத்தாரது சேனைகளும், சேனை மன்னர்உம்-அந்தச்சேனைகளிலுள்ள அரசர்களும், இகலி-பகைமைகொண்டு, பல திசைகள் எங்கண்உம் முரசம் ஆதி வெம் பணை முழங்க-எல்லாத்திக்குக்களினிடம் முழுவதிலும் பேரிகை முதலிய பயங்கரமான போர்ப்பறை கோஷிக்க, முன்னை வெம் களம் பின்உம் எய்தினர்-முந்தின நாள்களில் அடைந்த கொடிய போர்க்களத்தை அந்நாளிலும் அடைந்தார்கள்:(அங்கு ஒரு பக்கத்தில்) மரகத அசலம் போலும் மேனி மா மாயன் - மரகதரத்தினமயமானதொரு மலையை யொத்த திருமேனியையுடைய மிக்க மாயையுள்ள கண்ணபிரான், நஞ்சு மாசுணம் வியூகம்உம் - விஷத்தையுடைய சர்ப்பத்தின் வடிவமான வியூகத்தையும், (மற்றொருபக்கத்தில்), தரணி காவலன் தன் பிதாமகன் - பூமியையாளும் அரசனான துரியோதனனது பாட்டனான வீடுமன், சகடம் வியூகம்உம் - வண்டிவடிவமான வியூகத்தையும், வகுக்க - அமைக்க,—(எ-று.)— 'பாண்டியன் அஞ்சி யோடினான்' என்று அடுத்த கவியோடு குளகமாக இயையும். வகுக்கவே, களம் எய்தினர் என இக்கவியிலேயே இயைத்தலு மொன்று. தான் - அசை.

ஏழாம்நாட்போரில் பாண்டவசேனை வச்சிரவியூகமாவும், கௌரவசேனை மண்டலவியூகமாகவும் வகுக்கப்பட்டதாக முதனூலில் உள்ளது. பி - ம்: பணைகொழிக்கவே. (236)

3.—பாண்டியன் துரோணனுக்குத் தோற்றுப்போக, கடோற்கசன் வருதல்.

மன்றனிம்பநாண்மாலைமௌலியான்மாறன்மீனவன்வழுதிபஞ்சவ
னன்றுபஞ்சவர்க்காகவேயுடன்றந்தணற்குடைந்தஞ்சியோடினன்
துன்றுமாயமால்யானைகொண்டுபோர்யானைமன்னரைத்தொல்லமர்க்கணே
வென்றுகண்டவர்புறமவர்க்கிடான்மீளவந்தனன்வீமன்மைந்தனே.

(இ - ள்.) மன்றல் - வாசனையையுடைய, நிம்பம் - வேப்பம்பூவினாலாகிய, நாள் மாலை - புதியமாலையை, மௌலியான் - முடியிற் சூடியவனும், மீனவன் - மீனக்கொடி யுடையவனும், மாறன் வழுதி பஞ்சவன் - மாறன்முதலிய பெயர்களையுடையவனுமான பாண்டியராசன், அன்று - அப்பொழுது, பஞ்சவர்க்காகவே உடன்று - பாண்டவர்களுக்காகவே போர்செய்து, அந்தணற்கு உடைந்து - துரோணாசாரியனுக்குத் தோற்று, அஞ்சி ஓடினன்—; துன்று - நெருங்கிய, மாயம் மால் யானை - மாயையினாலாகிய மத யானைகளை, கொண்டு - அமைத்துக்கொண்டு, போர் யானை மன்னரை - போர் செய்யவல்ல (உண்மை) யானைகளின்மேலேறிய (பகதத்தன் முதலிய) அரசர்களை, தொல் அமர்க்கண் - பழைய [நான்காநாட்] போரிலே, வென்று - சயித்து, அவர் புறம் கண்டு - அவர்களை முதுகுகண்டு [முதுகுகாட்டியோடச் செய்து], அவர்க்கு (புறம்) இடான் - அவர்களுக்கு (எப்பொழுதும் தான்) புறங்கொடாதவனாகிய, வீமன் மைந்தன்-கடோற்கசன், (இன்றைப்போரில்), மீள-மறுபடி, வந்தனன்-வந்தான்; (எ-று.)

நிம்பம் - வடசொல்; இது - அடையாளப்பூ. சேரசோழபாண்டியர்க்கு, பனை ஆத்தி வேம்பின் பூமாலைகளும் வில் புலி மீன் கொடிகளும் முறையே உரியன. மாறன் - (எவரையும்) மாறுபட்டு அழிக்கவல்லவன். புறம் - மத்திமதீபம். பி - ம்: மாலைவேலினன்.

4.—சாத்தகிக்குச் சுதாயு தோற்க, வீமன் சகுனிசல்லியரை வெல்லுதல்.

முகினிறங்கொண்மாமேனிமாயனூர்முன்பிறக்கவேபின்பிறந்தவன்
புகுநிலந்தனிற்சற்றுநின்றிலன்பொருசுதாயுதன்போர்பொறுமையிற்
சகுனியும்பெருஞ்சேனைமுன்வரத்தக்கசல்லியன்றானுமோடவே
மிகுநிறங்கொள்பைந்தாமவாகைபோர்வென்றுசூடினன்வீமசேனனே.

(இ - ள்.) முகில் நிறம் கொள் - மேகம்போன்ற (கரிய) திருநிறத்தைக் கொண்ட, மா மேனி - அழகிய திருமேனியையுடைய, மாயனார் - கண்ணபிரான், முன் பிறக்க - முன்னே (யதுகுலத்து வசுதேவனிடம்) திருவவதாரஞ் செய்ய, பின் பிறந்தவன் - பின்பு (அக்குலத்துச் சத்யகனிடத்திலே) தோன்றின [கண்ணன் தம்பியான] சாத்தியகி, புகும் - (போருக்குச்) சென்ற, நிலந்தனில் - இடத்திலே, பொரு சுதாயு - (வந்து) போர்செய்த சுருதாயு என்பவன், சற்றும் நின்றிலன்-சிறிதும் முன் நிற்கமாட்டாதவனாயினான்; தன் போர் பொறாமையின் - தனது யுத்தத்தைச் சகிக்கமாட்டாமையால், சகுனியும்—, பெரு சேனை முன் வர தக்க- பெரிய சேனை (தன்) முன்னே வரப் பொருந்திய, சல்லியனும்—,

ஓட - (தோற்று) ஓட, வீமசேனன்—, போர் வென்று -அப்போரில் வெற்றிகொண்டு, மிகுநிறம் கொள் பை வாகை தாமம் சூடினன் - (அவ்வெற்றிக்கு அறிகுறியாக) மிகுந்த ஒளியைக்கொண்ட குளிர்ச்சியான வாகைப்பூமாலையைத் தரித்தான்; (எ-று.)

தன் என்றது, வீமனை. 'தன்போர் பொருமையின்' என்றதை **மத்திமதீப**மாகக் கொண்டு, சாத்தகியினது போரைப் பொருமையால் என்று உரைத்து, சுதாயு நின்றிலன் என முன் வாக்கியத்தோடும் கூட்டலாம். பெருஞ்சேனை முன் வரத்தக்க - பெரிய சேனைக்குத் தலைவனாய் முன்னே வரத்தக்க (சௌரிய தைரியங்களையுடைய) எனினுமாம்; பெரிய சேனைக்கு முன்னே எதிர்த்துவரத் தக்க என்றுங் கொள்ளலாம். சுதாயு - வடசொல் திரிபு; இவன்-வருணபகவானுக்குப் பர்நவாதையினிடம் பிறந்தவன். கையில் ஆயுதமில்லாதவன்மேல் தன் ஆயுதம் எறியப்பட்டால் தான் இறக்கும்படியும், வேறொருவிதத்திலும் இறவாதபடியும் வரம் பெற்றவன். (238)

5.—நான்குகவிகள்-அருச்சுனனுடையவும் வீடுமனுடையவும் கடும்போரைக் கூறும்.

உயர்ந்தமேருவோடொத்திலங்குதேருலகளந்ததாள்வலவனூரவே
செயந்தன்மாபெருந்துணைவன்வன்பெருஞ்சேனைதன்னொடுஞ்சென்றுபற்றினன்
வியந்ததேரின்மேன் முப்புரங்களும்வென்றமீளிபோனின்றவீடும
னியைந்துபோரினுக்கெதிரவில்வலோரிருவர்விற்களுமெதிர்வளைந்தவே.

(இ - ள்.) உயர்ந்த மேருவோடு ஒத்து இலங்குதேர் - (எல்லா மலைகளினும்) உயர்ந்த மகாமேருமலையோடு ஒத்து(ப் பொன்மயமாய்ப் பெரியதாக) விளங்குகிற தேரை, உலகு அளந்த தாள் வலவன் ஊர - உலகங்களை அளவிட்ட திருவடிகளையுடைய (கண்ணனாகிய) சாரதி செலுத்த, செயந்தன் மா பெரு துணைவன்-(இந்திரகுமாரனான) ஜயந்தனது சிறந்த பெருமையுள்ள தம்பியான அருச்சுனன், வல் பெரு சேனை தன்னொடுஉம் சென்று - வலிய பெரிய சேனைகளுடனே போய், பற்றினன் -(வீடுமனைத்) தொடர்ந்தான்; வியந்த தேரின்மேல் - (காண்பவர்) அதிசயித்தற்குக் காரணமான (சிறந்த பெரிய) தேரின்மேலே, மு புரங்கள்உம் வென்ற மீளிபோல் நின்ற - திரிபுரங்களையுஞ் சயித்த பராக்கிரமசாலியான சிவபிரான்போல நின்ற, வீடுமன் - அவ்வீடுமனும், போரினுக்கு இயைந்து - (அவ்வருச்சுனனோடு)போர்செய்தற்கு உடன்பட்டு, எதிர - எதிர்நிற்க,(உடனே), வில்வலோர் இருவர் விற்கள்உம் - விற்போரில் வல்லவரான இவ்விரண்டுபேரின் விற்களும், எதிர் வளைந்த - (ஒன்றுக்கொன்று) எதிரிலே வளைந்தன; (எ - று.)

உயர்தல்-ஓங்குதலும், சிறத்தலும். 'உலகளந்ததாள்வலவன் தேரூர' என்ற தொடரில் எம்பெருமானது அளவிறந்த ஆற்றலும் அடியவர்க்கெளிமையும் விளங்கும். செயந்தன் - இந்திரனுக்கு இந்திராணியிடம் பிறந்த புத்திரன்: இந்திரனுக்குக் குந்தியினிடம்

பிறந்த அருச்சுனன் காலத்தாற் பிந்தியவனுதலால்,செயந்தனுக்கு அருச்சுனன் தம்பியாவன். பி - ம்: எதிரில் வல்லரோர். (239)

6. ஒருவரெய்தவம்பொருவர்மேலுருதோரோரம்பினுக்கோரோரம்புதொட்
டிருவரும்புகுந்தெய்தவல்லபமின்னதாகுமென்றுன்னலாகுமோ
வரிவில்வெங்கடகரியின்வந்ததாரகனுமாமயிற்குகனுமன்றியே
மருவுவெங்குரற்கொண்டல்வாகனும்வலனும்ராமராவணருமென்னவே.

(இ-ள்.) வரி - கட்டமைந்த, வில் - வில்லுடனே, வெம் கட கரியின் வந்த - வெவ்விய மதயானைமுகமாக வந்த, தாரகன்உம் - தாரகாசுரனும், மா மயில் குகன்உம் - சிறந்த மயில்வாகனத்தை யுடைய சுப்பிரமணியனும்,—அன்றி - அல்லாமல், மருவு வெம் குரல் கொண்டல் வாகன்உம் - பொருந்திய பயங்கரமான இடி முழக்கத்தை யுடைய மேகத்தை வாகனமாகக்கொண்ட தேவேந்திரனும், வலன்உம் - பலாசுரனும்,—(அன்றியும்), ராமராவணர் உம் - ஸ்ரீராமபிரானும் இராவணனும்,—என்ன - என்னும் இவர்கள்போல,—இருவர்உம் - (அருச்சுனன் வீடுமன் என்ற) இரண்டு பேரும், புகுந்து - (போர்க்களம்) அடைந்து, ஒருவர் எய்த அம்பு ஒருவர்மேல் உருது - ஒருத்தர் தொடுத்த பாணம் மற்றொருத்தர் மேற் படாதபடி, ஓர் ஓர் அம்பினுக்கு ஓர் ஓர் அம்பு தொட்டு எய்த - ஒவ்வொரு அம்புக்கும் ஒவ்வொரு எதிரம்பை (வில்லில்) தொடுத்துப் பிரயோகித்த, வல்லபம் - போர்த்திறமை, இன்னது ஆகும் என்று - இப்படிப்பட்டதாகு மென்று, உன்னல் ஆகும்ஓ- (மனத்தில்) நினைத்தலுங் கூடுமோ? (எ - று.)—என்னுதற்கும் முடியாதெனவே, சொல்லுதற்குஞ் செய்தற்கும் முடியாமை பெறப்படும்.

ராவணன் - கூவினவன்; கைலாசகிரியின் கீழ்க் கைய்கப்பட்டுக்கொண்டபொழுது பேராரவாரமிட்டதுபற்றி, இவனுக்கு இப்பெயர் சிவபிரானால் அளிக்கப்பட்டது. இனி, ராவணன் - கூச்சலிடச் செய்தவ னென்றுங் கொள்ளலாம்; தான் செய்யும் பல துன்பங்களால் உலகத்தாரை அலறிக் கதறிக் கூவச்செய்தான் இவன். இனி, விஶ்ரவஸின்மகன் என்னும் பொருளில் ஆதேசம் வந்து ராவணன் என்று ஆயிற்று என்றும் இப்பெயர்க்குக் காரணங் கூறுவர். இப்பாட்டின் பின் இரண்டடிகளில் **எதிர்நிரனிறைப்பொருள்கோள்** உள்ளது. அருச்சுனனுக்கு-முருகக்கடவுளும், இந்திரனும், இராமனும்; வீடுமனுக்கு-தாரகனும், வலனும், ராவணனும் உவமையாவர். என்ன எய்தஎன்க.

சுப்பிரமணியக் கடவுளால் வேல்கொண்டு பிளக்கப்பட்ட சூரபதுமனது உடம்பின் கூறுஇரண்டும் மயில்வடிவமும் கோழி வடிவமும் பெற்று அக்கடவுளருளால் அப்பிரானுக்கு வாகனமுங் கொடியுமாய் அமைந்த சிறப்பைக் கருதி, 'மாமயில்' என்றார். குஹன் என்னும் வடசொல்லுக்கு - அஞ்ஞான இருளைப் போக்குபவ னென்று பொருள்; கு - இருள்; இது இப்பொருளதாதலை 'குரு' என்ற சொல்லிலுங் காண்க. இனி, இச்சொல்லுக்கு-

(பகைவர் படையினின்றும் தன்படையைக்) காத்துக்கொள் கின்றவனென்றுமாம்.

தாரகன் - அசுரேசன்மகளாகிய மாயையென்னும் பெயர் பெற்ற சுரசையென்பவள் காசியபமகாமுனிவரைக் கூடிப்பெற்ற புத்திரர்மூவரில், சூரபதுமனுக்கும் சிங்கமுகனுக்கும் இளையவன்; யானைமுகத்தோடு பிறந்தவன். சூரபத்மன் தாரகன் சிங்கமுகன் என்ற இம்மூவரும் பரமசிவனைக்குறித்து யாகமுந் தவமுஞ் செய்து அவரருளால் அளவிறந்த வரங்களைப்பெற்றுச் செருக்குற்றுத் தமது குருவாகிய சுக்கிரபகவானது தீய உபதேசத்தால் மற்றும் பல ஆயிரம் அசுரர்களோடு சென்று இந்திரன் முதலிய தேவர்க ளனைவரோடும் போர்செய்து வென்று பற்பல வகையாக உல கத்தை வருத்தினவளவில், அத்துன்பம் பொறுக்கலாற்றாத தேவர்கள் திருக்கைலாயமடைந்து பரமசிவனைத் தொழுது துதி செய்து 'தேவரீரைப்போல ஒரு புத்திரனை யுண்டாக்கி அக்குமார னால் அசுரர்களை யழித்து எங்கள் துன்பத்தைப் போக்கிக் காத் தருளல்வேண்டும்' என்று பிரார்த்திக்க, சிவபெருமான் அவ் வேண்டுகோளுக்கு இரங்கிக் குமாரக்கடவுளை யுண்டாக்கி அனுப்பி யருள, அவர் வீரவாகுதேவர் முதலான சிவபுத்திரர்களோடும் மற்றும் பல லக்ஷம் வீரர்களுடனும் போய் யுத்தஞ்செய்து அவ்வ சுரர்க ளனைவரையும் அழித்துத் தேவர்களைக் காத்தருளின ரென்பது கதை. தாரகாசுரனோடு முருகக்கடவுளுக்குப் போர், அவ்வசுரனுக்கு இருப்பிடமான கிரௌஞ்சகிரியினிடத்திலே நடந்தது.

சிவபெருமானைக் குறித்து அரிய தவஞ்செய்து போரில் யாவரையும் வெல்லும் ஆற்றலையும், தான் இறப்பின தன்னுடைய உடம்பிலுள்ள தாதுக்கள் நவரத்தின மாதல்வேண்டு மெனபதை யும் வரமாகப் பெற்ற பலாசுரனென்பவன், இந்திரனைப் போருக்கு அழைக்க இருவர்க்கும் பெரும்போர் நிகழ்ந்தது; அப்போரில் முன் நிற்கமாட்டாது தோற்ற இந்திரன், பின்பு அவனை வஞ்சனையால் வெல்லக்கருதிச்சென்று புகழ்ந்து குறையிரந்து வேண்டி யாகபசு வாக வரித்து உடன்பட்டுவந்த அவனை யூபஸ்தம்பத்திற்கட்டிக் கொன்றான் என்பது கதை. (240)

7. கரியணிக்குளெக்கரிகள்புண்படாகடவுதேரிலெத்தேர்கலக்குரு
பரிநிரைக்குளெப்பரிதுணிப்புருபாகர்தம்மிலெப்பாகர்வீழ்கலார்
நரனும்வெற்றிகூர்வசுவுமுற்றபோர்நவிலுகிற்கினுநாநடுங்குமா
லிருதளத்தினுமிருவரம்பினுமேவுணுதபேரெந்தமன்னரே.

(இ - ள்.) (அப்பொழுது), கரி அணிக்குள் - யானைவரிசை களிலே, எ கரிகள் புண் படா - எந்த யானைகள்தாம் காயப்படா தவை? கடவு தேரில்-செலுத்தப்படுகிற தேர்வரிசைகளிலே, எ தேர் கலக்கு உறு - எந்தத் தேர்கள்தாம் கலக்க மடையாதவை? பரி நிரைக்குள் - குதிரைப்பந்திகளிலே, எ பரி துணிப்பு உறு - எந்தக் குதிரைகள்தாம் வெட்டுப்படாதன? பாகர் தம்மில் - (இவற் றைச்) செலுத்துபவர்களில், எ பாகர் வீழ்கலார் - எந்தப் பாகர்

தாம் - இறந்து விழாதவர்? இரு தளத்தின்உம் - இரண்டு சேனைகளிலும், இருவர் அம்பின்உம் - இந்த இரண்டுபேரது பாணங்களாலும், ஏவுறாத பேர்-எய்யப்படாதவர், எந்த மன்னர்-எந்த அரசர்தாம் (உளர்)? [எவருமில்லை யென்றபடி]; (இவ்வாறு], நரன்உம் - நரனது அவதாரமான அருச்சுனனும், வெற்றி கூர் வசுஉம் - சிறப்பு மிகுந்த வசுவினது தோற்றமான வீடுமனும், உற்ற - பொருந்தின, போர் - யுத்தத்தை, நவிலுகிற்கின்-சொல்லத் தொடங்கினால், நாஉம் நடுங்கும் - (பேசுங்கருவியான) நாக்கும் அஞ்சும்; (எ - று.)

இதில் நால்வகைச்சேனையிலும் எல்லாம் அடிபட்டதன்மை கூறப்பட்டது. அப்போர், சொல்லுதற்கு அரிது என்பதாம். கீழ்ப் பாட்டில், 'உன்னலாகுமோ' என எண்ணமுடியாதென்றவர், இப் பாட்டில் 'நவிலுகிற்கினும் நாநடுங்கும்' எனச் சொல்லலாகாமையை வெளியிட்டார். ஏவுறாத, உண்-செயப்பாட்டுவினைப் பொருளுணர்த்தும் இடைநிலை. ஆல் - ஈற்றசை. (241)

8. வேறுபோரினிப்பொருதல்வேண்டுமோவிசயன்வீடுமனென்னும்வீரர்தஞ்
சீறுபோரிடைத்திசையடங்கலுஞ்சிவந்தகோலமெய்க்கவந்தமாடுமால்
கூறுபோர்பொரக்கருதிவெங்களங்கொண்டுதங்களிற்கொல்லலுற்றநா
ளாறுபோரினும்பட்டபேரினுமறுமடங்குபேரன்றுபட்டதே.

(இ - ள்.) விசயன்வீடுமன் என்னும் வீரர்தம்-அருச்சுனன் பீஷ்மன் என்கிற இரண்டு வீரர்களது, சீறு போரிடை-கோபித்துச் செய்த யுத்தத்திலே, திசை அடங்கல்உம்-எல்லாத்திக்குக்களிலும், சிவந்த கோலம் மெய் கவந்தம் ஆடும்-(இரத்தத்தாற்) சிவந்த நிறத்தையுடைய வடிவமுள்ள கவந்தங்கள் (எழுந்து) கூத்தாடும்; (இருதிறத்தாரும்), கூறு போர் பொர கருதி - (சிறப்பித்துச்) சொல்லப்படுகிற போரைச் செய்யஎண்ணி, வெம் களம் கொண்டு-கொடிய போர்க்களத்தை யடைந்து, தங்களில்கொல்லல் உற்ற - தம்மில் (ஒருவரையொருவர்) கொல்லத்தொடங்கிய, ஆறு நாள் போரின்உம - (கீழ நடந்த) ஆறுநாளை யுத்தத்திலும், பட்ட பேரின்உம் - இறந்த சேனைத்தொகையினும், அறு மடங்கு பேர்-ஆறளவுகொண்ட சேனைத்தொகை, அன்று பட்டது - அந்தஏழா நாட்போரில் இறந்தது; (என்றால்), இனி வேறு போர் பொருதல் வேண்டும்ஓ - இனிமேல் மற்றும் போர்செய்தல் வேண்டுமோ? (எ - று.)—அவ்வளவோடு அன்றையதினத்துப்போர் முடிந்தது என்க. (242)

9.—சூரியாஸ்தமனவருணனை.

பாரவாளினுங் கூரவேலினும் பகழிவாயினும் பட்டபட்டபோர்
வீரர்வானின்மேல்வழிநடத்தலான்மெய்தளர்ந்துவேதனைமிகுத்தபின்
சேரநீருநும்பாடியெய்துவீர்செருவினேந்ததிச்சேனையென்றுபோ
யாரவாரநீடாழியெய்தினனொழியொன்றுடைத்தேரருக்கனே.

(இ-ள்.) பார வாளின்உம்-பெரிய வாள்களாலும், கூர வேலின் உம்- கூர்மையையுடைய வேல்களாலும், பகழி வாயின்உம் -

அம்பு நுனிகளாலும், பட்ட பட்ட - மிகுதியாக இறந்த, போர் வீரர்- யுத்தவீரர்கள், வானின் மேல் - ஆகாயத்திலே [வீரசுவர்க்கத்தை நோக்கி], வழி நடத்தலான்-(தன் மண்டலத்தைப்பிளந்துகொண்டு அதன்) வழியே செல்லுதலால், ஆழி ஒன்று உடை தேர் அருக்கன் - ஒற்றைச்சக்கரத்தையுடைய தேரையுடைய சூரியன், மெய் தளர்ந்து-(தன்) வடிவந்தளர்ச்சிபெற்று, வேதனை மிகுத்த பின் - துன்பத்தைமிகுதியாகப்பெற்றபின்பு, (இருதிறத்தாரை யும்நோக்கி), 'சேர - ஒருசேர, நீர்உம் - நீங்களும், நும் பாடி எய்துவீர் - உங்கள் படைவீட்டை அடையுங்கள்: இ சேனை—, செருவில் நொந்தது - போரில் வருந்திற்று', என்று - என்று (சொல்லியவன் போல), போய்—, ஆரவாரம் நீடு ஆழி எய்தினன் - பேரொலி மிகுந்த (மேல்) கடலைச் சேர்ந்தான் [அஸ்தமித்தான்]; (எ-று.)

தன்மைத்தற்குறிப்பேற்றவணி. கீழ் முதற்போர்ச்சருக்கத்தில் "உம்பர், வானிலடைந்த வயவருக்கு வழியாயசுடர்மண்டலம்" என்றது காண்க. நீரும், உம்மை - 'நானும் என்னிடத்தை அடைவேன்' என்பதை உணர்த்தலால், எதிரதுதழுவியஎச்சம். பி- ம்: பேர்வீர வானின்மேல். (243)

10.—மறுநாள் சூரியோதயவருணனை.

வெங்க ளந்தனிற் பகன்ம லைந்தபோர் மெய்வி டாய்கெடக் கைவி டாதுபோய்த்
திங்க ளின்குலத் திருவர் தம்பெருஞ் சேனை மன்னரும் பாடி யெய்தினர்
இங்க ளந்தவா றப்பு றத்துவா னெல்லை தானளந் திந்த மன்னவர்
தங்கள் வெஞ்சமங் காண மாமணிச் சயில மெய்தினன் றபனன் மீளவே.

(இ - ள்.) திங்களின் குலத்து - சந்திரகுலத்திலே (பிறந்த), இருவர்தம் - இருதிறத்தாரது, பெரும் சேனை - பெரிய சேனையில் (உள்ள), மன்னர்உம் - அரசர்களும்,—வெம் களந்தனில் பகல் மலைந்த போர் மெய் விடாய் கெட - கொடிய போர்க்களத்திலே பகல்முழுவதும் (தாம்) செய்த போரிலாகிய உடலில்தோன்றிய களைப்புத் தணிய, கைவிடாது போய்-தொடர்ச்சியாகச்சென்று, பாடி எய்தினர் - (தங்கள்) படைவீட்டை யடைந்தார்கள்; தபனன்- சூரியன், இங்கு அளந்த ஆறு - (பூமிமத்தியிலுள்ள மகாமேருமலையின் தென்திசையாகிய) இப்பக்கத்தை(ப் பகலில் தான் செல்லுதலால்) அளந்ததுபோலவே, அ புறத்து வான் எல்லை தான் அளந்து - (அம்மலையின்) வடபுறத்திலுள்ள ஆகாயஎல்லையை (இராத்திரியில்) தான் அளவிட்டு, மீள - பின்பு, இந்த மன்னவர் தங்கள் வெம் சமம் காண - இவ்வரசர்களது கொடிய போரைப் பார்ப்பதற்கு, மா மணி சயிலம் எய்தினன் - சிறந்த இரத்தினங்களையுடைய உதயகிரியை அடைந்தான் [உதித்தான்]; (எ - று.)

பயன்தற்குறிப்பேற்றவணி. நிலத்தில்நடக்கும்போரை அச்சமும் வருத்தமுமின்றிக் காண்பதற்கு உயர்ந்த இடத்திலிருத்தல் இனிதாகுதலால், 'சமங்காணச் சயிலமெய்தினன்' என்றார்; இங்கே "குன்றேறி யானைப்போர்கண்டற்றால்" எனத் திருக்குறளிற்

கூறியதைக் காண்க. உதயகிரியில் சிந்தூர அருவிவீழ்ந்த சிந்தூராகரத்திற் சிறந்தமாணிக்கம் பிறத்தலால், அம்மலை 'மாமணிச்சயிலம்' எனப்பட்டது. சூரியன் ஒவ்வொருநாளும் மேரு மலையைச் சுற்றிவருகிறானென்றும், இவன் அம்மலையின் தென் புறத்தில் விளங்குங்காலம் நமக்குப் பகலும், வடபுறத்திலிருக்குங் காலம் நமக்கு இரவுமாகிறதென்றும், இவ்வாறே பகலிரவுகள் வடபுறத்திலுள்ளார்க்கு மாறுபடக்காணுமென்றும் நூற் கொள்கை; அதுபற்றி 'இங்களந்தவா றப்புறத்துவானெல்லை தானளந்து' என்றார். (244)

ஏழாம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

எட்டாம்போர்ச்சருக்கம்.

1.—கடவுள்வாழ்த்து.

பூத்த நாபியந் தாமரைப் பூவில் வந்துபல் பூதமுஞ்
சேர்த்த நான்முகப் புனிதனு முனிவர் யாவருந் தேவரும்
ஏத்த நாலுவே தங்களுந் தேட நின்றதா ளெம்பிரான்
பார்த்தன் மாமணித் தேர்விடும் பாக னானதெப் பான்மையே.

(இ-ள்.) நாபி - (தன்னுடைய) கொப்பூழிலே, பூத்த - உண்டான, அம்-அழகிய, தாமரைப்பூவில்—,வந்து - பிறந்து, பல் பூதம்உம் - பலவகைப்பிராணிவர்க்கங்களையும், சேர்த்த-படைத்த, நால்முகம் புனிதன்உம்-நான்கு முகங்களையுடைய பரிசுத்தகுண முள்ளவனான பிரமதேவனும், முனிவர் யாவர்உம் - இருடிகளெல் லோரும், தேவர்உம் - தேவர்களெல்லோரும், ஏத்த - துதிக்கவும், நாலு வேதங்கள்உம் தேட - நான்குவேதங்களும் (உண்மைகாண மாட்டாமல்) ஆராய்ந்துதேடவும், நின்ற - பொருந்தின, தாள் - திருவடிகளையுடைய, எம் பிரான் - நமக்கெல்லாமதலைவனான திருமால், பார்த்தன் மா மணி தேர் விடும் பாகன் ஆனது - அருச்சுனனது சிறந்த அழகிய தேரைச் செலுத்தும்சாரதியானது, எ பான்மைஏ - எத்தன்மையோ? (எ - று.)

பிரமன்முதலிய தேவர்களெல்லோர்க்கும், முனிவர்களெல் லோர்க்கும், வேதங்களுக்கும் பலநாளாகப் புகழ்ந்து தேடிப்பார்க் கவும் காணவொண்ணாத கழலிணைகளையுடைய கடவுள், அந்தப் பரத்துவத்தை இருந்ததுதெரியாதபடி விட்டு மனிதர்களிலொரு வனான அருச்சுனனுக்குத் தேர்செலுத்தும் ஆளாக அமர்ந்த சௌலப்பியம் எத்தன்மைத்து எனக் கூறி வியந்து அதில் தமக்கு உள்ள ஈடுபாட்டை ஆசிரியர் விளக்குகிறார். வேதங்களால்இன்ன முந்தேடிக் காணவொண்ணாமை அவ்வேதத்திலேயேகூறியுள்ளது. நாபீ, பூதம் - வடசொற்கள். யாவரும் - மத்திமதீபம். ஈற்று ஏகாரம் - வியப்பை விளக்கும்.

இதுமுதல் ஒன்பதுகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ் சீரும் மாச்சீர்களும், மற்றையவை விளச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தம். (245)

2.—தருமபுத்திரன் சேனையோடு போர்க்களங்குறுகுதல்.

நெருநலிப்பெருஞ்சேனையோநிலைதளர்ந்ததச்சேனையைப்
பொருநிலத்தினிற்புறமிடப்பொருதுமென்றுறக்கருதியே
வருநிலத்தெழுந்தூளியால்வானயாறுநீர்வற்றவுந்
தருநிலத்துளோர்காணவுந்தருமன்வந்தனன்சமரிலே.

(இ - ள்.) 'இ பெரு சேனை ஓ - (நமது) இந்தப் பெரியசேனை யோ, நெருநல் - நேற்று, நிலை தளர்ந்தது - வலிமைநிலை தளர்ச்சி யடைந்தது; (ஆதலால் இன்றைக்கு), பொரு நிலத்தினில்- போர்செயயுமிடத்திலே, அ சேனையை புறம் இட பொருதும் - எதிர்ப்பக்கத்துச் சேனையை முதுகுகொடுக்கும்படி போர்செய்து அழிப்போம்,' என்று உற கருதி - என்று மிகுதியாக எண்ணி,— தருமன் -யுதிட்டிரன்,--வரு நிலத்து எழும் தூளியால் வானம் யாறு நீர் வற்றஉம்-(தன்சேனைகள்) வருகிற பூமியினின்று மேற்கிளம்பும் புழுதிகள் போயப்படிதலால் ஆகாசகங்காநதி நீர் வறளவும், தரு நிலத்துஉளோர் காணஉம்-(கறபக) விருக்ஷங்களையுடைய சுவர்க்க லோகத்திலுள்ள தேவர்கள் (வானத்தில்வந்துபோர்) காணவும், சமரில் வந்தனன்-போர்செய்ய வந்தான; (எ - று.)

கீழ் ஏழாம்போர்ச்சருக்கத்திலே அத்தினத்தில் இருதிறத்துச் சேனையும் வெற்றி தோலவி அடைந்தது கூறுமல் சமமாக இருந் ததுபோலக் கூறி முடித்த ஆசிரியர், இங்குப பாண்டவசேனை அந் நாளில் தோற்றதாகவும், கௌரவசேனை வென்றதாகவுங் கூறியத ஞல், இத்தனமையை அங்கே கூட்டிக்கொளக. இவ்வாறு கவிகள் எங்கேனும் ஒரிடத்தில் கூறியதை ஏற்றவிடத்துப் பொருத்திக் கொள்ளவேண்டும் மரபைப் பலகாவியங்களிலும் காணலாம. இச் செய்தியை அங்குக்கூருமல்விட்டது, இங்குக்கூறுவோ மென்ற கருத்திஞலே ஆதல்வேண்டும்: இது-முபபத்திரண்டுவகை யுத்தி களுள் 'உரைத்தும்'என்றதன்பாற படும். ஏழாநாளில் கௌரவசேனை வென்றது, அடுத்தகவியிலுங் கூறப்படும். இனி, இத்தனைநாளில் பாண்டவர்கள போரில்மேமபட்டு நின்றதுபோல்அல்லாமல் ஏழா நாள் இருதிறத்தாரும் ஒருநிகராகஇருந்ததே துரியோதனுதியர் வென்றதாகக் கூறியதெனின் ஏற்கும். பொருநிலம்-போர்க்களம். மூன்ருமடி-உயர்வுநவிற்சி. (246)

3.—இருதிறத்தாரும் சேனையை வியூகம் வகுத்தல்.

வென்றுபோனபோர்மேன்மையால்விலோதனப்பணிக்காவலன்
இன்றும்வேறுமென்றக்களத்தெண்ணில்சேனையோடெய்தினுன்
துன்றுகங்கையின்றிருமகன்றாசியூகமுந்துளபமால்
வென்றிகூர்பெருஞ்சகடமாம்வெய்யயூகமுஞ்செய்யவே.

(இ-ள்.) விலோதனம்-கொடியிலே, பணி-பாம்பையுடைய, காவலன்-துரியோதனராசன், போர் வென்று போன மேன்மையால் - (ஏழாநாட்) போரில் (எதிரிகளைத் தாம்) சயித்துப்போன சிறப்பினால், இன்றுஉம் வேறும் என்று - இன்றைத்தினமும் (நாம்) சயிப்போமென்று கருதி, அ களத்து-அந்தப் போர்க்களத்திலே, எண் இல் சேனையோடு-அளவில்லாத சேனைகளுடனே, எய்தினான் -வந்துசேர்ந்தான்; (அங்கு), துன்று கங்கையின் திரு மகன்-(சேனாபதியாகப்) பொருந்தின கங்காநதியின் சிறந்த புத்திரனான வீடுமன், தூசியூகம்உம்-(தம்சேனையைக்கொண்டு) தூசியென்னும் வியூகத்தையும், துளபம் மால் - திருத்துழாயையுடைய கண்ணபிரான், வென்றி கூர் பெரு சகடம் ஆம் வெய்ய யூகம்உம்-(தம்சேனையைக் கொண்டு) வெற்றி மிகுதற்குக் காரணமானபெரியவண்டிவடிவமான கொடியவியூகத்தையும், செய்ய-வகுக்க,—(எ - று.)—"வலம்புரித் தாரினான் வீமனைவளைத்துவந்தெதிர்திளைத்தனன்" என அடுத்த கவியோடு குளகமாகத் தொடரும். செய்ய எய்தினான் என இப் பாட்டிலேயே முடித்தலுமாம்.

தூசிஎன்ற சொல்லுக்கு-குதிரையென்று ஒருபொருள் உள்ளதனால், 'அசுவவியூகம்' என்று ஒருவியூகம் அமைத்ததாகப் பொருள்காணலாம்: எட்டாம்நாளில்வீடுமன் கூர்மவியூகம் வகுத்ததாகவும், திருஷ்டத்யும்நன் ஸ்ருங்காடக [நாற்சந்தி] வியூகம் வகுத்ததாகவும் வியாசபாரதத்திலுள்ளது. வேறும் என்று-வெல்வோமென்று வீரவாதஞ்செய்து என்றுமாம். பி-ம்:சூசியுகமும்.

4.— துரியோதனன் வீமனோடுபொரத் தம்பிமாருடன் வளைத்துவந்து நெருங்குதல்.

தொலைவிலங்கழற்றுணைவரேதுணைவராகவெஞ்சூறைபோற்
கொலைவிலங்கையன்பிறைமுகக்கூரவாளியன்றேரினன்
மலைவிலங்குதோள்வீமனைவளைத்துவந்தெதிர்திளைத்தனன்
தலைவிலங்கலுக்கரசெனத்தகும்வலம்புரித்தாரினன்.

(இ - ள்.) தலை விலங்கலுக்கு - (எல்லா மலைகளினும்) சிறந்த இமயமலைக்கும், அரசு என தகும் - அரசனென்று சொல்லத்தக்க, வலம்புரி தாரினன் - நஞ்சாவட்டைப்பூமாலையையுடைய துரியோதனன்,—கொலை வில் அம் கையன் - கொல்லுதலைச்செய்யும் வில்லை யேந்திய அழகிய கையை யுடையவனும், பிறை முகம் கூர வாளியன் - பிறைச்சந்திரன்போல நுனியமைந்த கூர்மையை யுடைய (அர்த்த சந்திர)பாணங்களை யுடையவனும், தேரினன் - தேரின்மேல் ஏறியவனுமாய்,—தொலைவு இல் அம் கழல் துணைவர்ஏ துணைவர் ஆக - தோல்வியில்லாத அழகிய வீரக் கழலையுடைய (தன்) தம்பிமார்களே சகாயராய்வர, வெம் சூறை போல் - கொடிய சுழல்பெருங்காற்றுப் போல, மலை விலங்கு தோள் வீமனை வளைத்து - மலையும் (எதிராகாமல்) விலகும்படியான [மிகவலிய] தோள்களையுடைய வீமசேனனைச் சூழ்ந்து, எதிர்வந்து திளைத்தனன் - எதிரில்வந்து நெருங்கினான்; (எ - று.)

இப்பாட்டில், அடிகளைப் பொருளுக்கு ஏற்றவிடத்தில் எடுத்துக்கூட்டியது-அடிமறிமாற்றுப்பொருள்கோள். இனி, இரண்டாம் அடியை வீமனுக்கு அடைமொழியாகக் கொள்ளினும் அமையும். இமயமலைக்குத் தென்புறத்ததாகிய பரதகண்டம் முழுவதையும் அரசாண்டவனென்ற கருத்தை, மலையரசனாகிய இமயத்துக்குத் தலைவனென்று விளக்கினர்; இனி, (தைரியத்தில்) இமயமலை போல்பவனெனினுமாம். விலங்கலுக்கரசு மேருமலையென்பாருமுளர். விலங்கல்-ஒருபுறத்தே விலகியிருப்பதெனக் காரணக்குறி.

5.—இதுவும் அடுத்த கவியும்-துரியோதனன்தம்பிமாரில் எண்மரை வீமன் கொன்றமையைக் கூறும்.

தும்பிமேன்மதத்திடைவிழுந்தும்பிபோல்விறற்றேன்றலுந்
தம்பிமாருமுற்றெய்தவெஞ்சாயகங்கண்மெய்தைக்கவே
வெம்பிவீமனுந்தன்சரம்விண்டலத்திலிவ்வேந்தனுக்
கெம்பிமாரிலின்றெண்மர்போயிடம்பிடிக்கவென்றேவினன்.

(இ - ள்.) தும்பி மேல் - யானையின்மேலுள்ள, மதத்திடை - மதசலத்திலே, விழும் - (கூட்டமாக வந்து) விழுந்து மொய்க்கிற, தும்பி போல் - வண்டுகள்போல, விறல் தோன்றல்உம் தம்பிமார் உம் உற்று - வலிமையையுடைய துரியோதனராசனும் (அவனது) தம்பிமார்களும் (வீமனை) நெருங்கி, எய்த - பிரயோகித்த, வெம் சாயகங்கள் - கொடிய அம்புகள், மெய் தைக்க-(தன்)உடம்பிற் பட,—வீமன்உம் - வீமசேனனும், வெம்பி - கோபங்கொண்டு, எம்பிமாரில் எண்மர் இன்று விண் தலத்தில் போய் இ வேந்தனுக்கு இடம் பிடிக்க என்று - 'என் தம்பியரில் எட்டுப்பேர் இன்றைக்கு வீரசுவர்க்கத்திற்சென்று (பின்பு வரும்) இத்துரியோதனனுக்காக அங்கு இடம் அமைத்து வைப்பார்களாக' எனக்கூறி, தன் சரம் ஏவினன் - தன் அம்புகளை (அவர்கள்மேல்) செலுத்தினன்; (எ - று.)

தும்பி - வண்டின் சாதிபேதம். யானைமதத்தில் மொய்க்கிற வண்டுகள் - வீமன்மேல் ஒருங்கு நெருங்கிய துரியோதனாதியர்க்காயினும், அவர்களம்புகளுக்காயினும் உவமையாம். அவர்களும் அம்புகளும் அவனை மிகுதியாகவருத்தமாட்டாமையையும் அவற்றை வீமன் சிறிதும் மதியாத மேன்மையையும் இவ்வுவமை விளக்கும். துரியோதனனுக்குத் தம்பியர் வீமனுக்கும் தம்பியரேயாதலால், 'எம்பிமார்' என்றான். எண்மர்பெயர், அடுத்த கவியிற் கூறப்படும். தமக்குத்தலைவனான அரசன் ஓரிடத்திற்குச் செல்லுதற்கு முன்னமே அவனைச்சேர்ந்தவர்கள் தாம் சென்று இடமமைத்தல் இயல்பு; அத்தன்மையை இங்கே வீமன் பகைவர்க்குச் சமத்காரமாகக் கூறினன். இடமமைக்க என்னாது, இடம்பிடிக்க என்றது - அப்பொழுது போரில் அளவில்லாமல் மேல்மேல் இறக்கிற வீரர்களால் சுவர்க்கம் இடம்நெருங்கியிருக்கு மென்பது பற்றி யென்க. இங்ஙனம் கூறியதனால், துரியோதனனைத் தான் விரைவில் தவறாதுகொல்லுதல் உணர்த்தப்பட்டது. (249)

6. முந்தவன்றுசென்றுசுகன்மைந்தனுசுகமூழ்கவே
சுந்தரன்விசாலக்கணன்வீரவாசிபௌதுண்டனு
மந்தமாமகோதரனுடன்மாகவிந்துவுமபயனுஞ்
சிந்தினார்களந்தன்னிலாதித்தகேதுவுஞ்சேரவே.

(இ - ள்.) அன்று - அப்பொழுது, ஆசுகன் மைந்தன் - வாயுகுமாரனான வீமனது, ஆசுகம் - அம்புகள், முந்த சென்று - விரைவாகப் போய், மூழ்க - (அவர்களுடம்பில்) அழுந்த,— சுந்தரன்—, விசாலக் க(ண்) ணன்—, வீரவாசி—, பௌதுண்டனும்—, அந்த—, மா - பெரிய, மகோதரனுடன்—, மாகவிந்துவும்—, அபயனும்—, ஆதித்தகேதுவும்—, [இப்பெயர்கொண்ட துரியோதனன் தம்பிமார் எண்மரும்], சேர-ஒருசேர, களந்தன்னில்-போர்க்களத்திலே, சிந்தினார் - உயிர்நீத்தார்கள்; (எ - று.)

சிந்தினார் என்று சொன்னது - மங்கலவழக்கு. சுநாபன், விசாலாக்ஷன், பஹ்வாசி, பண்டிதன், மகோதரன், குண்டதாரன், அபராஜிதன், ஆதித்யகேது என இவர்கள்பெயர் வியாசபாரதத்திற் கூறப்பட்டுள்ளது. சுநாபன் சுந்தரன் என்பனவும், விசாலாக்ஷன் விசாலக்கண்ணன் என்பனவும், பஹ்வாசி வீரவாசி என்பனவும், அபராஜிதன் அபயன் என்பனவும் காரணப்பெயர்களாகக் கருதுமிடத்துப் பெரும்பாலும் பொருளில் ஒற்றுமைப்படும். மகோதரன் = மகா உதர அன் - பெருவயிறுடையான். ஆதித்யகேது - சூரியக்கொடியுடையவன். பௌதுண்டனும்என்றவிடத்து 'பண்டிதனுமே' எனப் பாடங்கொள்ளலாம். குண்டதாரன், மாகவிந்து என்றவை-ஒற்றுமைப்படவில்லை. மூன்றும் அடியின் முதலில், மந்தம் ஆம் எனப்பிரித்து - மந்த புத்தியுடைய எனப் பொருள் கொள்ளலுமாம். ஆசுகன்-விரைந்து செல்பவன்; வாயு: ஆசுகம் - விரைந்து செல்வது; பாணம்: வடசொற்கள். அன்று முந்தச்சென்று - அப்பொழுது (அவர்கள் போருக்கு) முற்பட வந்து எனினுமாம். (250)

7.—தம்பிமாரெண்மர் இறந்ததுகண்ட வருத்தத்தோடு துரியோதனன் வீடுமனைக் குறுகுதல்.

அற்றகந்தரமுயிரினோடந்தரம்புகத்துள்ளவு
மிற்றபேருடம்பவனிமேலெடுத்தவில்லுடன்வீழவு
முற்றதம்பியர்மாய்தல்கண்டுள்ளுடைந்துபோயுரனுடைக்
கொற்றவன்பெருங்குருகுலக்குரிசினின்றுழிக்குறுகினான்.

(இ - ள்.) அற்ற கந்தரம் - (வீமனால்) அறுபட்ட கழுத்து [தலை], உயிரினோடு - உயிருடனே, அந்தரம் புக - ஆகாயத்திலே பொருந்த, துள்ளஉம்-எழும்பிக் குதிக்கவும்,—இற்ற பேர் உடம்பு-(தலை)போன பெரிய உடம்பு, எடுத்த வில்லுடன் - (கையிற்) பிடித்த வில்லுடனே, அவனி மேல் வீழ உம் - தரையிலே விழுந்திடவும், உற்ற தம்பியர் மாய்தல் - மனமொத்த (தன்) தம்பிமார் இறத்தலை, கண்டு—, உரன் உடை கொற்றவன் - வலிமையையுடைய வீரனான துரியோதனன், உள் உடைந்துபோய் - மன

மழிந்து, குருகுலம் பெரு குரிசில் நின்ற உழி-குருகுலத்துப் பெரிய அரசனான வீடுமன் நின்றவிடத்தில், குறுகினன் - சேர்ந்தான்.

கந்தரம் - தலையைத் தரிப்பது; கம் - தலை: கழுத்தின் பெயர், இங்கே தலைக்கு இலக்கணை. (251)

8.—இதுவும், மேற்கவியும்-ஒருதொடர்: துரியோதனன் வீடுமனிடம் சிலகூறிப் புலம்பலைத் தெரிக்கும்.

தன்பிதாமகன்செய்யதாடனதுமௌலிமேல்வைத்துநின்
றுன்பிதாவின்மேலன்பினுலுலகும்பியர்க்குதவுவா
யென்பிதாவுநீயாயுநீயென்றிருந்தனனெம்பிமார்
முன்பிதாமருத்தென்னுமம்முதல்வனுன்முடிவெய்தினர்.

(இ - ள்.) (துரியோதனன்), தன் பிதாமகன்-தனது (பெரிய) பாட்டனான வீடுமனது, செய்ய தாள் - சிவந்தபாதங்களை, தனது மௌலிமேல் வைத்து - தனது தலையின்மேல் சூடி [வணங்கி], நின்று - (அருகில்) நின்று, (அவனைநோக்கி), 'உன் பிதாவின் மேல் அன்பினால் - உனது தந்தையினிடத்து அன்பினாலே, உலகம் - இராச்சியத்தை, உம்பியர்க்கு- உன தம்பிமார்களுக்கு, உதவுவாய் - கொடுத்தவனே! என் பிதாஉம் நீ - எனக்குத் தந்தையும் நீயே; யாய்உம் நீ - என் தாயும் நீயே, என்று இருந்தனன் - என்றுகருதியிருந்தேன்; (இப்படியிருக்கையில்), எம்பிமார் - என் தம்பியர், முன் பிதா மருத்து என்னும் அ முதல் வனால் - முன்னே (இவனைப்) பெற்ற தந்தை வாயு வென்று கூறப் படுகிற அந்தப்பெரியவீமனால், முடிவு எய்தினர் - அழிவையடைந் தார்கள்; (எ - று.) —இப்பாட்டில், 'வைத்துநின்று' என்பதற்கு, அடுத்தபாட்டில் "வேந்தர் வேந்து" - எழுவாய். வைத்துநின்று "என உரைசெய்தான்" என்க.

இரண்டாமடியில், உன்பிதாஎன்றது-சந்தனுவையும், உம்பியர் என்றது- சித்திராங்கதனையும், விசித்திரவீரியனையுங் குறிக்கும். முதல் மனைவியான கங்கை வீடுமனைப் பெற்றுச் சந்தனுவைவிட்டு நீங்கியபின், சந்தனு, செம்படவன் வளர்த்த மகளாகிய பரிமள கந்தியென்பவளைக் கண்டு காமுற்று மணம்பேச, அவள் தந்தை 'மநுநீதிமுறைப்படி மூத்தமனைவியின் குமாரன் அரசாள, என் மகளுக்குப் பிறக்கும் பிள்ளை அரசின்றிக் கீழ்மைப்பட்டிருப்பா னதலால், நான் உனக்கு மகளைக் கொடேன்' என்று சொல்ல, அதை அறிந்த பீஷ்மன், தந்தைக்கு மணஞ்செய்வித்தற். பொருட்டு, தான் மணஞ்செய்து கொள்வதில்லை யென்றும், இராச்சியத்தைத் தன் தம்பிக்கே கொடுப்பதாகவும் தேவர்கள் முன்னிலையில் பயங்கரமான சபதஞ் செய்து, அம்மகளைத் தந்தைக்கு மணஞ்செய்வித்து, பின்பு அவளுக்குப் பிறந்த சித்தி ராங்கதன் விசித்திரவீரியன் என்பவர்க்கே முன்னைய வர்க்குப்படி அரசாட்சியைக் கொடுத்தானென வரலாறு அறிக. இவ்வாறு தம்பி யரிடத்தில் மிகுந்த அன்புகொண்ட நீ, அவர்களில் ஒருவனுக்குப் பௌத்திரனான என்னை உபேக்ஷிக்கலாமோ? உன்தம்பியர்உனக்கு அருமையாயிருந்ததுபோல, என் தம்பியர் எனக்கும் அருமை

யன்றோ? அவர்கள் இறக்கப் பார்த்திருப்பது தகுதியோ? என்ற கருத்துத் தோன்ற இவ்வாறு கூறினன். வீடுமன் முனைந்து போர்செய்திருந்தால் தன் தம்பியர் இவ்வாறு இறந்திரா ரென்ற எண்ணத்தால், இவ்வாறு கூறியது. (252)

9. **நீவி னைத்தலைச் சேனையின் றலைவ னாகிமுன் னிற்கவே**
வீவெ னக்குவே றில்லையென் றெண்ணி னேனென வேந்தர்வேந்
தோவி யத்தின்மெய் யுணர்வழிந் துள்ள ழிந்துகொண் டுரைசெய்தான்
வாவி நித்தில மென்னவே மலர்ந்த கண்கணீர் மல்கவே.

(இ - ள்.) 'நீ—, வினைத்தலை - (போர்த்) தொழிலிலே, சேனையின் தலைவன் ஆகி - சேனைத்தலைவனாய், முன் நிற்கவே - முன்னே நிற்பதனால், வேறு வீவு எனக்கு இல்லை என்று எண்ணினேன் - (வாழ்வுக்கு) வேறான அழிவே எனக்கு உண்டாகாதென்று நினைத்திருந்தேன்', என - என்று, வேந்தர் வேந்து - ராஜராஜனான துரியோதனன், ஓவியத்தின் - சித்திரப்பாவைபோல, மெய் உணர்வு அழிந்து - (அதிகசோகத்தால்) உடம்பின் உணர்ச்சி ஒழிந்து, உள் அழிந்துகொண்டு-மனம் வருந்திக்கொண்டு, மலர்ந்த கண்கள் - பரந்த (தன்) கண்களினின்றும், நீர்—, வாவி நித்திலம் என்ன - நீர்நிலைகளில்வெளித்தோன்றுகிற முத்துக்கள்போல, மல்க - நிறைய, உரை செய்தான் - கூறினான்; (எ - று.)

என உரைசெய்தான் என இயையும். வாவி - வாபீ: வடசொல். வாவியில் நித்திலம் - சங்கு முதலியவற்றினின்று உண்டாவன; இனி, நித்திலம் என்பதை உவமையாகுபெயராகக் கொண்டு, முத்துப்போலத் தெளிவான குளத்துநீர் கண்ணீர்க்கு உவமையெனினும் அமையும். (253)

வேறு.

10.—இதுமுதல் ஏழு கவிகள்-ஒருதொடர்: இவ்வாறு சோகித்துக்கூறிய துரியோதனனுக்கு வீடுமன் கூறுவன.

இரங்கனீ சிறிது மைய வெறிபடை யெடுப்ப தியாரும்
உரங்கள்போ யமரிற் சாகா துய்ந்தன ரோட வன்றே
சரங்களா லயிலால் வாளாற் றம்பகை செருத்துத் தாமுஞ்
சிரங்கள்வே றுடல்கள் வேறாக் கிடப்பதே செல்வ மம்மா.

(இ - ள்.) ஐய - ஐயனே! நீ—, சிறிதும் இரங்கல்-கொஞ்சமும் வருந்தாதே; (உலகத்தில்), யார்உம் - எல்லோரும், எறிபடை எடுப்பது - (பகைவர்மேல்) வீசத்தக்க ஆயுதங்களை யேந்துவது, அமரில் - போரில், உரங்கள் போய் சாகாது - வலிமைகள் அழிந்து இறவாமல், உய்ந்தனர் ஓட அன்றே - தப்பிப்பிழைத்தவர்களாய் ஓடிப்போகும் பொருட்டன்று; சரங்களால் - அம்புகளாலும், அயிலால் - வேல்களாலும், வாளால் - வாள்களாலும், தம் பகை செருத்து - (தம்மால் இயன்றவளவு) தமது பகைவர்களை அழித்து, (தம்மால் இயலாதவிடத்துப் பகைவர்களால் அழிந்து), தாம்உம் சிரங்கள் வேறு உடல்கள் வேறு ஆ கிடப்பது ஏ - தாங்களும் தலைகள் வேறும் உடல்கள் வேறுமாக விழுவதே,

செல்வம்- (வீரர்க்குச்) சிறப்பாம்; (எ - று.) — அம்மா - ஈற்றசை; இவ்வுண்மையை உணராமல் துரியோதனன் துன்பமுற்றதைப் பற்றிய வியப்பை நன்கு விளக்கும் இடைச்சொல்லுமாம்.

போரிற் படையெடுத்துச் சென்றால், வெற்றியுந் தோல்வியும் ஒருவர் பங்கன்று; போரிற் பகைவரை வெல்லுதல்போலவே, பகைவரால் இறத்தலும் வீரர்க்குச் சிறப்பேயா மென்பதாம். பௌத்திரனை 'ஐய' என்றது - மரபுவழுவமைதி. போய் என்ற வினையெச்சம் - சாகாது என்பதில் சா என்ற பகுதியைக் கொள்ளும். கிடப்பதே, ஏ - பிரிநிலை.

இதுமுதற் பதினான்கு கவிகள் - ஒன்று நான்காஞ்சீர்கள் விளச்சீர்களும் மற்றவை மாச்சீர்களுமாகிவந்த அறுசீராசிரியவிருத்தங்கள். (254)

11\. இருந்தனம்படைத்தமாக்களின்பமுமறனுமஞ்சார்
விருந்தெதிர்சிறிதுமஞ்சார்மேம்படவாழுமில்லோர்
பொருந்தியவிறப்பையஞ்சார்போதமெய்யுணர்ந்தமாந்தர்
அருந்தவமுனிவரஞ்சாரரசருமடுபோரஞ்சார்.

(இ - ள்.) இரு தனம் படைத்த மாக்கள்-மிகுந்தசெல்வத்தைப்பெற்ற மனிதர்கள், இன்பம்உம்அறன்உம்அஞ்சார்-(அதைச் செலவழித்துத்தாம்) இன்பமடைதற்கும் (பிறர்க்குத்)தருமஞ்செய்தற்கும் பின் வாங்கமாட்டார்கள்; மேம்பட வாழும் இல்லோர் - மேன்மையாக இல்லறத்தில் வாழ்பவர், விருந்து எதிர் சிறிதுஉம் அஞ்சார்-விருந்தினரை யெதிர்கொள்ளுதற்குச் சிறிதும் பின்னிடமாட்டார்கள்; போதம் மெய் உணர்ந்த மாந்தர்-ஞானத்தால் தத்துவப்பொருள்களை யறிந்த மனிதர்கள், பொருந்திய இறப்பை அஞ்சார்-(இயல்பாகப்) பொருந்திய மரணத்துக்குப் பயப்படமாட்டார்கள்; முனிவர்-இருடிகள், அரு தவம் அஞ்சார்-(செய்வதற்கு) அருமையான தவத்தைச் செய்வதற்கு வருந்தமாட்டார்கள்; (அவ்வாறே), அரசர்உம் அடு போர் அஞ்சார்-அரசர்களும்கொலைக்கிடமான போர்த்தொழிலுக்கு அஞ்சமாட்டார்கள்; (எ - று)

போதமெய்யுணர்தல் - நிலையாகவுள்ள பொருள்கள் நிலையில்லாத பொருள்கள் என்பவற்றின் தன்மையை உள்ளபடியறிதல்; இதுவே தத்துவஞானம். தநம், போதம் - வடசொற்கள். விருந்து-புதுமை; புதியராய்வந்தவர்க்குப் பண்பாகுபெயர். எதிர்-எதிர்கொள்ளுதல்: முதனிலைத்தொழிற்பெயர். 'ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு' என்றபடி பிறந்தவுயிர் எப்பொழுதாயினும் இறத்தல் நிச்சயமாதலால், 'பொருந்தியஇறப்பு' என்றது. அரசர் அடுபோரஞ்சாரென்று சொல்லவேண்டிய இடத்து, அப்ரஸ்துதமாகத் தனம்படைத்தார் இன்பமும் போகமுமஞ்சார் முதலிய அஞ்சாமையுடையவரையெல்லாஞ் சேர்த்து 'அஞ்சார்' என்பதைப் பலமுறை கூறிய இது-சொற்பொருட்பின்வந்ததீபகவணி. (255)

12\. இன்னமொன்றுரைப்பக்கேண்மோவிருசெவிக்கேருதேனு
முன்னரசாண்டவேந்தர்முறைமையிற்சிதைந்ததுண்டோ

மன்னவைதன்னினின்றமாசிலாவடமீன்போல்வாள்
தன்னிருகண்ணீரின்னமிவைகொலோதருவதம்மா.

(இ - ள்.) இரு செவிக்கு ஏருது ஏன்உம் - (உனது) இரண்டு காதுகளிலும் (ஒபபாக) நுஞ்ழயாதாயினும், இன்னம் ஒன்று உரைப்ப கேள் - இன்னுமொருசெய்தியை (யான்) சொல்ல (நீ) கேட்பாய்; முன் அரசு ஆண்ட வேந்தர் - (உனக்கு) முன் அரசாட்சி செய்த அரசர் (எவராயினும்), முறைமையில் சிதைந்தது உண்டுஓ - நீதியில் தவறினது உண்டோ? [இல்லையென்றபடி]; மன் அவை தனனில் - இராசசபையிலே, நின்ற - (முன்பு உன்னால் துச்சாதனனைக்கொண்டு வலியப்பிடித்து இழுத்துவரப்பட்டு) நின்ற, மாசு இலா வடமீன் போல்வாள்தன் - குற்றமில்லாத அருந்ததியை ஒப்பவளான திரௌபதியினது, இரு கண் நீர் - இரண்டுகண்களினின்று பெருகிய நீர், இன்னம் இவை கொல்ஒ தருவது - இனி இத்தீங்குகளைமாத்திரமா விளைப்பது?—(எ - று.) அம்மா - ஈற்றசை. இரக்கப்பொருளதுமாம்.

இன்னும் பலதீங்குகளைத்தருமென்றபடி; உனக்கும் மரணத்தையுண்டாக்குமெனக் குறிப்பித்தவாறும். இவைகொலோ தருவது, இன்னம் தருவது எனத் தனித்தனிகூட்டி முடிப்பினுமாம். "ஏழை யழுத கண்ணீர் கூரியவாளொக்கும்", "தோற்றத் தாற்பொல்லார் துணையிலர் நல்கூர்ந்தார், மாற்றத்தாற் செற்றுரெனவலியார் - ஆட்டியக்கால், ஆற்று தவரழுத கண்ணீ ரவையவர்க்குக், கூற்றமாய் வீழ்ந்து விடும்", "அல்லற்பட்டாற்றுதழுத கண்ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை" என்பன காண்க. மாசு இலா-கற்பு நிலைமையிற் கலங்குதலில்லாத என்க; "கலங்கலில் கற்பினருந்ததி" என்றார் கம்பரும். அருந்ததி-வசிஷ்ட முனிவரது மனைவி. கற்புடையார்பலரினும் இவளுக்கு மேன்மை என்னவெனின ? - நக்ஷத்திரநிலையிலும் கணவனைப் பிரியாதிருக்கை. அதனை இங்ஙனம் அறிக:—வடக்கில் சப்தருஷி மண்டலமென்று (இரண்டாயிரத்தெழுநூறுவருஷங்களுக்கு ஒரு சுற்றுச்சுற்றுகிற) நக்ஷத்திரக்கூட்டமொனறு இருக்கிறது. அதில் நானகுநக்ஷத்திரங்கள் நீண்ட சதுரமாய்ப் பெட்டிப்பண்டிபோலிருக்கின்றன; அவற்றினமுனபுறத்து அடியில் நடுவளைந்த ஏர்க்காலைப்போல மூனறுநட்சத்திரங்கள் இருக்கின்றன: இவற்றில் நடு நட்சத்திரம் வசிஷ்டநட்சத்திரம. அதனடியிற்கிட்டினதாய் நுட்ப நோககினுற் காணப்படத்தக்கதொரு நக்ஷத்திரம் இருக்கின்றது; அதுதான அருந்ததி நக்ஷத்திரம். வடமீன - வடக்கில் மின்னுவதெனக் காரணப்பெயர். எதிர்காலங் குறிக்கும் இனியென்னும் இடைச்சொல் - விகாரப்பட்டு, இன்எனறு ஆகி, அம் சாரியை பெற்று, இன்னம் என நிற்கும். கேண்மோ, மோ-முனனிலையசை.

13. கால்வருகவனமான்றேர்க்கன்னனுங்கன்னபாக
மால்வருகலுழிவேகமாவலான்சகுனிதானும்
நூல்வருபழுதில்கேள்விநும்பியுநீயுமிந்த
நால்வருங்குறித்தவெண்ணநாளையேதெரியுமையா

(இ - ள்.) ஐயா - ஐயனே! கால் வரு - காற்றுப்போல (வேகமாக) வருகிற, கவனம் - நடையையுடைய, மான் - குதிரைகளைப் பூட்டிய, தேர் - தேரைச் செலுத்தலில்வல்ல, கன்னன்உம் - கர்ணனும், கன்னம்பாகம்-கன்னங்களினிடத்திலே, மால் வரு - மிகுதியாகவழிகிற, கலுழி-கலங்கல்நீராகிய மதசலத்தையுடைய, வேகம் - உக்கிரத்தன்மையுள்ள, மா - யானையைச் செலுத்துதலில், வலான் -வல்லவனாகிய, சகுனிதான்உம்-, நூல் வரு பழுது இல் கேள்வி - நூற்களிலே பொருந்திய குற்றமில்லாத கேள்விகளையுடைய, நும்பிஉம் நீஉம் - உன் தம்பியான துச்சாதனனும் நீயும், இந்த நால்வர்உம் - இந்த நாலு பேரும், குறித்த - முன்பு எண்ணின, எண்ணம் - தீயசிந்தையின் பயன், நாளை ஏ தெரியும் - நாளைக்கே தெரிந்துவிடும்; (எ - று.)—நாளையே தெரியும் - விரைவிலே உங்களுக்கு முழுவதும் அழிவுண்டாமெனறபடி.

பெரியோர்கள் பலர் சாஸ்திரங்களிலுள்ள நீதிகளை எடுத்துச் சொல்லக்கேட்டும் இயல்பான துர்க்குணத்தை விடாத இழிவு தோன்ற, 'நூல்வருபழுதில் கேள்வி நும்பியும் நீயும்' என்றார்; இனி, இகழ்ச்சியுமாம். முன்னிலையோடு படர்க்கையை உளப்படுத்தி முன்னிலையாக முடியாமல் 'நால்வர்' எனப் படர்க்கையாற் குறித்தது- இடவழுவமைதி. வழாநிலையாயின, 'நால்விர்' எனநிற்கும். இவர்கள் குறித்த எண்ணம் - பாண்டவரைப் பலபடியாலும் கெடுத்தல். கால்வரு - கால்களாற் பாய்ந்துவருகிற என்றுமாம். இதைத் தேருக்கு அடைமொழி யாக்கினால், சக்கரம்பொருந்திய என்று பொருள். 'தேர்க்கன்னன்' என்றதில், கர்ணன் தேர்ப்பாகன்மகனென்ற இழிவும தோன்றும். கன்னன்முதலியநால்வர் துஷ்டசதுஷ்டரெனப்படுவர். நாளையே, ஏ - தேற்றம். (257)

14. விதுரனும்வெஞ்சொலாற்றான்வில்லினையொடித்துநின்றான்
அதிரதனாலன்றியங்கர்கோனமரில்வாரான்
முதிர்படைவிசயன்வீமன்மூண்டமர்புரியுங்காலை
யெதிரினிநானுநீயுமல்லதிங்கிலக்குவேறார்.

(இ - ள்.) விதுரனும்—, வெம் சொல் ஆற்றான் - (உனது) கடுஞ்சொல்லைப் பொறுக்கமாட்டாதவனாய், வில்லினை ஒடித்து நின்றான் - வில்லை யொடித்துப் போய்நின்றான்; அங்கர் கோன் - கர்ணன், அதிரதன் ஆனால் அன்றி - (தன்னை) அதிரதனாக வைக்காமற்போனால், அமரில் வாரான் - போரில் வரமாட்டான்: இனி - இனிமேல், முதிர் படை - மிகப்பயின்ற ஆயுதங்களையுடைய, விசயன் வீமன் - அருச்சுனனும் பீமனும், மூண்டு - கோபத்தோடு வந்து, அமர் புரியும் காலை - போர்செய்யும்பொழுது, எதிர் - (அவர்களை) எதிர்க்கவல்லவர், நான்உம் நீஉம் அல்லது - நாம் இருவருமே யல்லாமல், இங்கு - இந்தப்பக்கத்தில், இலக்கு வேறு ஆர் - (அவர்களுக்கு எதிர்க்கும்) குறியாய்நிற்பவர் வேறு யாவர்? [எவருமில்லையென்றபடி]; (எ - று.)

அருச்சுனனையும் வீமனையும் ஒருங்கே எதிர்க்கும் வல்லமையுடையானென்று தன்னால் கருதப்பட்ட விதுரனும், அவ்வாறே

துரியோதனனுற் கருதப்பட்ட கர்ணனும் உதவாமற்போனமையைக் கூறினன். நின்றுன்-இங்கு வாராதுநின்றுன் என்க. இனி-வாராத பின்பு என்றபடி. (258)

15. புரிந்தறம்வளர்க்குநீதிப்பொய்யிலாமெய்யனங்கே
செருந்தவிழ்துளபமாலைத்திருநெடுமாலுமங்கே
அருந்திறலமரிற்பொன்றுதங்கிருந்தவரையிங்கும்
இருந்தவர்காண்பதல்லால்யார்கொலோவிறக்கலாதார்.

(இ-ள்.) புரிந்து-விரும்பி, அறம்-தருமத்தை, வளர்க்கும்-விருத்திசெய்கிற, நீதி-நியாயததையுடைய, பொய் இலா மெய்யன் - பொய்யில்லாத மெய்ம்மையையுடைய யுதிட்டிரன், அங்கே - அப்பக்கத்திலே (உள்ளான); செருந்து அவிழ-வாசனை வீசப்பெற்ற, துளபம் மாலை-திருத்துழாய்மாலையையுடைய, திரு நெடு மால்உம்-சிறந்த பெரிய கண்ணபிரானும், அங்கே - அப்பக்கத்திலே (உள்ளான்); (ஆதலால்), அரு திறல் அமரில்-அருமையான வலிமையாற் செய்யும் போரில், பொன்றுது - இறவாமல், அங்கு இருந்தவரை - அப்பக்கத்தில் இருந்தவர்களை, காண்பது அல்லால் - பார்ப்பதேயல்லாமல், இங்குஉம் இருந்தவர் - இப்பக்கத்திலுள்ளவர்களுள், இறக்கலாதார் யார்கொல்ஓ - (இன்னும்) இறக்க மாட்டாதவர் யாவர்உளர்? (எ - று.)

அப்பக்கத்தில் தருமனது சத்தியபலமும் கண்ணனதுதெய்வபலமும் இருத்தலால், பலர் இறத்தலில்லை; இப்பக்கத்தில்உங்கள் தீச்செய்கைப் பயனும், விதுரன் கர்ணன் இவர்களது உதவியின்மையும் இருத்தலால், மற்றும்பலரும இறத்தல் கூடுமென்றுன். செருந்து - தேனும், இதழுமாம்; இச்சொல்லுக்குச் சந்தருப்பத்திற்குஏற்ப இப்பொருள்கள் கொள்ளப்பட்டன. 'திருந்தவிழ்' என்ற பாடம் பொருத்தம். இங்கும்—உம் - இசைநிறை. மாலும்—உம் - இறந்ததுதழுவிய எச்சத்தோடு உயர்வுசிறப்பு. மெய்க்கு 'பொய்யிலா' என்ற அடைமொழி கொடுத்தது, அதன் எப்பொழுதுந் தவருத உறுதிப்பாட்டை யுணர்த்தும். (259)

16. விடுகநீகவலவேண்டாமேலுனக்குறுதிசொன்னேன்
முடுகவாளமரிற்சென்றுமுனைமுனைந்தாரையின்றே
யடுகமற்றென்றிலொன்றிலாங்கவர்தங்கள்கையாற்
படுகவாவென்றுதேர்மேற்சென்றனன்பரிதிபோல்வான்.

(இ - ள்.) நீ—, கவல வேண்டா - கவலைப்படவேண்டாம்; விடுக - (அக்கவலையை) ஒழித்துவிடுவாயாக; மேல்-இனி நடக்க வேண்டிய காரியத்துக்கு, உனக்கு—, உறுதி சொன்னேன்-உறுதிமொழி கூறுகிறேன்: வாள் அமரில் - ஆயுதங்களைக்கொண்டு செய்யும் போரிலே, முடுக சென்று - விரைவாகப்போய், முனை முனைந்தாரை- அப்போர்க்களத்திலே போர்செய்தவர்களை, இன்றே அடுக - இப்பொழுதே கொல்வோமாக; (அல்லது), ஆங்கு - அவ்விடத்து (அப்போரில்), அவர் தங்கள் கையால் படுக - அப்பகைவர்களது கையால் இறப்போமாக; வா - (புறப்பட்டுப் போர்

செய்ய நீ) வா, என்று - என்றுசொல்லி, பரிதி போல்வான் - சூரியன்போல் விளங்குபவனான வீடுமன், தேர்மேல்—, சென்றனன் - (போருக்குப்) போனான்; (எ - று.)—இப்பாட்டின் மூன்றுமடியிலுள்ள 'ஒன்றில்' என்றசொல் இரண்டும் - விகற்பப்பொருளன: ஒன்றில், போர்செய்து பகைவரைக்கொல்வோம்; ஒன்றில், போரில் அவர்களால் இறப்போம் என்க. மற்று - வினைமாற்று.

இங்ஙன் ஒன்றற்கு மாறான இருதொழிலை ஒத்தவலிமையுடையனவாக வைத்துக்கூறுவது விகற்பாலங்கார மெனப்படும். வேண்டாம் எனவும் பிரிப்பர். சொன்னேன் - இயல்புபற்றி நிகழ் காலம் இறந்தகாலமான வழுவமைதி. பி-ம்: முன்முனைந்தாரை.

17.—அப்போது கடோற்கசன் மாயையாற் பல வடிவுகொண்டு பகைஞரை மாய்த்து வருதல்.

காயிருங்களிற்றின்மேலான்கடோற்கசக்காளைதானோர்
ஆயிரம்வடிவாய்முந்தியரசர்பேரணியையெல்லாந்
தோயிருட்பிழம்போடுற்றசோனையம்புயலிற்றோன்றி
மாயிருவிசும்பிற்றாராகணமெனமாய்த்துவந்தான்.

(இ - ள்.) (அப்பொழுது), கடோற்கசன் காளை - கடோற்கசனாகிய (வீம) குமாரன், தான்—,-காய் இருங் களிற்றின் மேலான்- கோபிக்குந்தன்மையுள்ள பெரிய ஒரு ஆண்யானையின்மே லேறியவனாய், தோய் இருள் பிழம்போடு உற்ற சோனை அம் புயலின் தோன்றி - திரண்ட இருளின் தொகுதியோடு பொருந்திய விடாமழைபொழியும் அழகியகாளமேகம்போல விளங்கி, ஓர் ஆயிரம் வடிவு ஆய் முந்தி-(மாயையாற்) பலவடிவங்கொண்டு வந்து, மா இருவிசும்பில் தாரா கணம் என - மிகப்பெரிய ஆகாயத்திலே பொருந்திய நட்சத்திரங்களின் கூட்டம்போல் (மிகுதியாக அடர்ந்துள்ள), அரசர் பேர் அணியை எல்லாம்-பகையரசர்களது பெரிய சேனைகளையெல்லாம், மாய்த்து வந்தான் - அழித்துக்கொண்டு வந்தான்; (எ - று.)

கரியயானையின்மேல் வந்த கடோற்கசனுக்கு இருளினோடு பொருந்திய காளமேகம் உவமை. மழைபொழி காளமேகம் நட்சத்திரங்களை மறைப்பது போல, யானையோடுவந்த கடோற்கசன் பகைவர்சேனைகளை ஒழித்தன னென்க. மாயிரு - ஒருபொருட்பன்மொழி; உரிச்சொற் புணர்ச்சி: "யாமுன் உயிர்வரின் யகரமெய் தோன்றும்". தாராகணம் - வடசொற்றொடர். (261)

18.—ஒருபுறத்தில் இராவான் பலவடிவுகொண்டு பொருதல்.

ஒருபுடையிவன்போர்செய்யவொருபுடையுரககன்னி
யருளுடைமைந்தனெண்ணிலாயிரமுருவமாகி
யிருபுடையினும்போர்வேந்தரெலிகள்போலேங்கியப்பாற்
பொருபடையுருண்டுபோகப்பொருவில்வெம்பூசல்செய்தான்.

(இ - ள்.) ஒரு புடை இவன் போர் செய்ய-ஒருபக்கத்திலே இந்தக்கடோற்கசன்(இவ்வாறு)போரைச்செய்துகொண்டிருக்க,—ஒரு புடை - மற்றொரு பக்கத்தில், உரக கன்னி அருள் உடை மைந்தன் - நாககன்னிகையாகிய உலூபியினது அன்புள்ளபுத்திரனான இராவான், எண் இல் ஆயிரம் உருவம் ஆகி - அளவில்லாத பலஆயிரம்வடிவங்கொண்டு, போர் வேந்தர் - போர் செய்யவல்ல அரசர்கள், எலிகள் போல் ஏங்கி-(பாம்பின் முற்பட்ட) எலிகள் போல அஞ்சி வருந்தி, பொரு படை - போர்செய்யும் சேனைகளோடு, இருபுடையின்உம் உருண்டு போக - இரண்டுபக்கங்களிலுஞ் சிதறிப்போகும்படி, அம்பால் - அம்புகளால், பொருவு இல் வெம் பூசல் செய்தான் - ஒப்பில்லாத கொடிய போரைச்செய்தான்.

நாககன்னிகைமகனான இவன், தலையின்மேற் படத்தோடு கூடிச் சிறிது பாம்புவடிவம் உடையனாதலால், இவனுக்குமுன் ஒடுங்கின அரசர்களுக்கு எலிகளை உவமைகூறினர்; இங்கே "ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை, நாக முயிர்ப்பக் கெடும்" என்ற திருக்குறளை யுணர்க. பல எலிகள் கூடி ஆரவாரித்தாலும் ஒருபாம்பினால் எளிதில் அழிதல்போல, பலர் திரண்டு ஆரவாரித்து வந்து இவனொருவனால் அழிவடைந்தன ரென்க.

19.—அப்போது பகாசுரன்தம்பி வீமன்மேற் பொரவருதல்.

இப்பகன்முடியுமுன்னேயாரையுமுடிப்பனென்னுப்
பைப்பகன்மகுடமைந்தன்பலபெரும்படையுமாகி
யப்பகலடுபோர்செய்யவன்றமரழிந்துமாய்ந்த
மெய்ப்பகனிளவலந்தவீமன்மேல்வெகுண்டுவந்தான்.

(இ - ள்.) 'இ பகல் முடியும் முன்னர் - இந்தப்பகற்பொழுது முடிவதற்கு முன்னே, யாரைஉம் முடிப்பன்-(பகைவர்கள்) எல்லோரையும் அழிப்பேன்', என்னா - என்றுகூறி, பை பகல் மகுடம் மைந்தன் - படத்தையும் ஒளியையுடையகிரீடத்தையு முடைய இராவான், பல பெரு படைஉம் ஆகி - (தான் ஒருவனே மாயையால்) பல பெரிய சேனைகளுமாக வடிவங்கொண்டு, அ பகல் - அன்றைத்தினத்திலே, அடு போர் செய்ய - கொல்லும்போரைச் செய்துகொண்டிருக்க,—அன்று அமர் அழிந்து மாய்ந்த மெய் பகன் இளவல்-முன்னொருகாலத்திலே போரில்(வீமனால்) அழிந்து இறந்த வடிவத்தையுடைய பகாசுரனது தம்பியான(அலம்புசனென்னும்) அரக்கன், அந்த வீமன்மேல் வெகுண்டு - (தன்தமையனைக் கொன்றவனான) அவ்வீமசேனன்மேற் கோபங்கொண்டு, வந்தான் - (பாண்டவசேனையை)எதிர்த்து வந்தான்; (எ - று.)

வேத்திரகீயநகரத்தின் புறத்தி லுள்ளதொரு வனத்தில் வசித்துக்கொண்டு, பகாசுரனென்பவன், அவ்வூரிலுள்ள வீடுகளிலிருந்து நாள்தோறும் ஒருவண்டியுணவையும் ஓரிளமகனையும் தனக்கு முறைப்படி திறையாகப்பெற்று உண்டுவாழ்ந்திருந்தான்; இருக்கையில், பாண்டவர்கள் அரக்கு மாளிகையினின்று தப்பி யுய்ந்து பிராமணவேடம்பூண்டு குந்தியோடுகூட அவ்வூரில் ஓர்

அந்தணன்மனையிற் சென்று தங்கியிருக்க, ஒருநாள் அவ்வீட்டுக்குரிய முறை நேர்ந்தது; நேரவே, தன்மகனுக்கு அழிவுண்டாவதனை நோக்கி வருந்திப் புலம்பிய அவ்வீட்டுவேதியன்மனைவியினது சோகத்தைத் தணித்துக் குந்தி தன்மகனான வீமனையனுப்ப, இவன் சென்று அவனுக்கென்றுகொடுத்த உணவையெல்லாந் தானுண்டு அவனுடன் பொருது அவனையழித்து அவ்வூரவர்க்கு இடையூறில்லாதபடி செய்தனனென்பது கதை. அந்தப் பகாசுரனது தம்பியான அலம்புசன், அதுமுதல் வீமனிடத்துப் பகைகொண்டு, பின்பு பாரதயுத்தத்தில் வீமனைக்கொல்வதாகத் துரியோதனனோடு சொல்லி, மற்றும் பல அரக்கர்களோடு அவன் பக்கத்தில் துணையாய் வந்துநின்றானெனக. (263)

20.—இரண்டுகவிகள்: உடன்வந்த அரக்கரைமாய்த்து அலம்புசனை இராவான் புறங்கொடுக்கச் செய்தமையைக் கூறும்.

என்னுடன்பிறந்தோன்றன்னையுதிட்டிரனிளவல்கொன்றான்
தன்னுடல்பிளப்பேனென்றுதானைவல்லரக்கரோடு
மன்னுடன்சொல்லிநிற்பான்வந்தெதிர்மலைந்தகாலை
மின்னுடைமுகில்போற்சென்றான்வீமனுக்ிளையோன்மைந்தன்.

(இ-ள்.) 'என் உடன் பிறந்தோன் தன்னை - எனது உடன் பிறந்தவனான பகனை, யுதிட்டிரன் இளவல்கொன்றான்-தருமபுத்திரனது தம்பியான வீமன் (முன்னே) கொன்றிட்டான்; தன உடல் பிளப்பேன் - (அதற்குப்பிரதியாக) அவ்வீமனுடம்பை (நான்) பிளந்திடுவேன்,' என்று—, மன்னுடன்-துரியோதனராசனுடனே, சொல்லி—, நிற்பான்-(அவனுக்குப் படைத்துணையாய்) நிற்பவனாகிய அலம்புசன், தானை வல் அரக்கரோடு-சேனையாகத்திரண்ட வலிய பல அரக்கர்களுடனே, வந்து—, எதிர் மலைந்த காலை - எதிரிற் போர்செய்தபொழுது, வீமனுக்கு இளையோன் மைந்தன்-வீமனது தம்பியான அருச்சுனனது புத்திரனான இராவான், மின் உடை முகில்போல்-மின்னலையுடைய மேகம்போல, சென்றான் - (அவனை எதிர்த்துப்)போனான்; (எ-று.)

யுதிஷ்டிரன் - போரிற் பின்வாங்காதவன். இராவானது தேககாந்தியை நோக்கி, 'மின்னுடை முகில்' என்றது. (264)

21. வலம்புரித்தாமவேந்துக்காகவேமலைவான்வந்த
அலம்புசனோடுஞ்சென்றோரடங்கலுமரக்கர்மாயக்
குலம்பழுதற்றமைந்தன்கொண்டபல்லுருவத்தோடும்
புலம்புறப்பொருதானந்தவரக்கனும்புறந்தந்தானே.

(இ - ள்.) வலம்புரி தாமம் வேந்துக்காக - நஞ்சாவட்டைப் பூமாலையுடைய துரியோதனனுக்கு உதவியாகவே, மலைவான் - போர்செய்வதற்கு, வந்த—, அலம்புசனோடும் - அலம்புசனுடனே, சென்றோர் - வந்தவர்களாகிய, அரக்கர் அடங்கலும் - எல்லாவரக்கர்களும், மாய - அழியும்படி, குலம் பழுது அற்ற மைந்தன் - (தந்தைதாயரது) குலங்களில் ஒருகுற்றமுமில்லாத

இராவான், கொண்ட பல் உருவத்தோடும்-(தான்) கொண்ட பலவடிவத்துடனே, புலம்பு உற - (அவ்வலம்புசன்) தனிமைப் படும்படி, பொருதான் - போர்செய்தான்; (செய்யவே), அந்த அரக்கன்உம புறம் தந்தான் - அவ்வலம்புசனும் முதுகுகொடுத் தான்; (எ- று.)

புலம்பு என்பது-தனிமையுணர்த்தும் உரிச்சொல்; "புலம்பே தனிமை" என்பது, தொல்காப்பியம். இனி, புலம்புற - விசனப் படஎன்றலுமொன்று. பி - ம்: அலமபுதரேனுடும், அலம்பசுரேனுடும்.

22.—இதுவும் அடுத்த கவியும்-அலம்புசன் கருடன்வடிவுகொண்டுமீளவந்து இராவானை அழித்தமை கூறும்.

அஞ்சினன்போனபின்னரரவினையடர்க்குமாய
வெஞ்சினக்கலுழனாகியுருமெனமீளவந்தான்
நஞ்சினையுமிழும்வெவ்வாய்நாகங்களனைத்துமொன்று
யெஞ்சினபோலநின்றானிருதருக்கிறுதிசெய்தான்.

(இ - ள்.) (அவ்வலம்புசன்),—அஞ்சினன் போன பின்னர் - பயந்து புறங்கொடுத்துப் போனபின்பு, அரவினை அடர்க்கும்வெம் சினம் மாயம் கலுழன் ஆகி - பாம்புகளை நாசஞ்செய்யும் கொடிய கோபத்தையுடைய மாயையாலாகிய ஒருகருடனது வடிவமாய், மீள - பின்பு, உரும் என - இடிபோல [பயங்கரமாக], வந்தான்—; (அப்பொழுது), நிருதருக்கு இறுதிசெய்தான் - (முன்னே) அரக் கர்களுக்கு அழிவைச்செய்த அவ்விராவான், (அந்தக்கருடனைக் கண்டமாத்திரத்தில்), நஞ்சினை உமிழும வெம் வாய் நாகங்கள் அனைத்துஉம் ஒன்று ஆய் எஞ்சின போல நின்றான்-விஷத்தைக் கக்குகிற கொடியவாயையுடைய பாம்புகளெல்லாம் ஒருசேர ஒடுங்கினபோல (வலிமை யொடுங்கி) நின்றான்; (எ - று.)

அரக்கனும் இராவானும் மாயையினல்பலபலவடிவங்கொண்டு பலபலவகையாகப் போர்செய்து வருகையில், இராவான் மாயை யால் பலபாம்புகளின் வடிவத்தை அடைய, அரக்கன் மாயையால் கருடவடிவங்கொண்டு அப்பாமபுகளை அழிக்கவே, இராவான் திகைப்படைந்துநின்றான் என முதனூலிற கூறியதையுங் காண்க. பாம்புகளை அஞ்சுவிக்குந்தன்மை பற்றியும், அரக்கனுக்கு இடியு வமை ஏற்கும். நிருதர் - நைர்ருதர், வடசொல்: நிருருதியென்னுந் திக்பாலகி மரபில் தோன்றினவர். கலுழன் - கருடன் என்னும் வடசொல்லின் திரிபு. (266)

23. நின்றவன் றன்னை யந்த நிருதனும் வடிவா ளோச்சிக்
கொன்றனன் கொன்று னுகக் குருகுலத் தரசன் சேனை
வென்றன னரக்க னென்று விரிகடல் போல வார்த்த
தன்றவ னடர்த்த மாய மார்கொலோ வடர்க்க வல்லார்.

(இ - ள்.) நின்றவன் தன்னை - (அங்ஙனம் ஒடுங்கி) நின்ற இராவானை, அந்த நிருதன்உம் - அந்த (அலம்புசனென்ற) இராக் கதனும், வடி வாள் ஓச்சி-கூரிய வாளாயுதத்தை வீசி, கொன்

றனன்—; கொன்றான் ஆக - கொல்ல, குருகுலத்து அரசன் சேனை-துரியோதனனது சேனை, அரக்கன் வென்றனன என்று - இராக்கதன் சயித்திட்டான் என்றகாரணத்தால், விரி கடல் போல ஆர்த்தது - (பிரளயகாலத்துப்) பொங்குங் கடல்போல ஆரவாரித்தது; அன்று அவன் அடர்த்த மாயம் - அப்பொழுதுஅந்த இராக்கதன் போர் செய்த மாயையை, அடர்க்க வல்லார் ஆர் கொல்ஓ-எதிர்த்துப் போர் செய்து அழிக்கவல்லவர் யாவர் உளர்? (எ - று.)—மாயையால் மிகவும் உக்கிரமாகப் போர்செய்தனனென்றபடி. ஈற்றடி - கவிக்கூற்று. (267)

வேறு.

24.—அசுவத்தாமனும் துரோணனும், பாஞ்சாலர்பலரும் தோற்கப் பொருதல்.

பூஞ்சா யகன்கைப் பொருசாபம்பொ சிந்து கண்ணற்
றீஞ்சா றுபாயுஞ் செழுநீர்வயற் செந்நெல் வேலிப்
பாஞ்சா லநாடர் பலரும்படப் பாணம் விட்டார்
தாஞ்சா பம்வாங்கி மறைமைந்தனுந் தந்தை தானும்.

(இ - ள்.) பூ சாயகன் - மலர்களை அம்பாகவுடைய மன்மதனது, கை - கையிலேயுள்ள, பொரு சாபம் - போர்செய்தற்குரிய வில்லாகிய கரும்புகள், கண்ணல் - கணுக்கள்தோறும், தீம் சாறு பொசிந்து பாயும் - இனிமையான இரசம் ஊறிப்பெருகப்பெற்ற, செழு நீர் வயல் - மிகுந்த நீர்வளத்தையுடைய கழனிகளையும், செந்நெல் வேலி - செந்நெற்பயிர்நிலங்களையுமுடைய, பாஞ்சால நாடர் பலர்உம் - பாஞ்சாலதேசத்து அரசர்கள் பலரும், பட - தோற்கும்படி, மறை மைந்தன்உம் தந்தைதான்உம் - வேதம் வல்ல குமாரனான அசுவத்தாமனும் (அவனது) தந்தையாகிய துரோணாசாரியனும், தாம் சாபம் வாங்கி - தாங்கள் வில்லை வளைத்து, பாணம் விட்டார் - அம்பு தொடுத்தார்கள்; (எ - று.)

பாஞ்சாலநாடர் - யாகசேனன், திட்டத்துய்மன் முதலியோர்; இவர்களுக்கும் துரோணஅசுவத்தாமர்களுக்கும் ஒருவரோடொருவர் பழமையாகவே பகைமையுள்ளது, பிரசித்தம். கணுக்களினின்று சாறுபெருகுதலைக் கண்களால் நீர்பெருகுதலாகக் கற்பிக்கக் கருதி, 'கண்ணல் தீஞ்சாறு பாயும்' என்றார்போலும். செழு நீர்-செழிப்பானதன்மையையுடைய என்றுமாம். வேலி-ஊர்சூழ்ந்த கழனி. மன்மதனது அம்புகள் தாமரைமலர், அசோக மலர், மாமலர், முல்லைமலர், நீலோற்பலமலர் என்னும் ஐந்துமாம். கரும்புகளில் தானாகவே சாறுபெருகுகிறதெனச் செழிப்பு விளக்கியவாறு. கண்ணல், 'ஆல்' உருபு - தோறும் என்னும் பொருளுடையது.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் பதினாறு பாடல்கள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்று மாங்கனிச்சீரும் மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய நெடிலடி நான்கு கொண்ட கலிநிலைத்துறைகள்.

25.—அபிமன்யு இராவானிறந்ததுகேட்டுப் பலமன்னர்கெடக் கடும்போர் புரிதல்.

பட்டான்றுணைவனெனக்கேட்டுப்பரிவுபொங்க
விட்டான்மணித்தேர்வளைத்தான்றனிவெய்யசாபந்
தொட்டான்பகழியபிமன்னுதொடுத்தலோடுங்
கெட்டாரரசன்பெருஞ்சேனையிற்கேடில்வேந்தர்.

(இ - ள்.) (பின்பு), அபிமனனு—, துணைவன் பட்டான் என கேட்டு-(தன்) உடன்பிறந்தவனுன இராவான் இறந்தானென்று சொல்ல (அச்செய்தியை)க் கேட்டறிந்து, பரிவு பொங்க - துயரம் மிக, மணி தேர் விட்டான-அழகிய(தன) தேரை(ப் பகைவர்சேனையிற்) செலுத்தி, தனி வெய்ய சாபம வளைத்தான் - ஒப்பற்ற கொடிய (தன்) வில்லை வளைத்து, பகழி தொட்டான் - அம்புகளைத் தொடுத்தான்; தொடுத்தலோடும் - (அங்ஙனம்) செலுத்தினவளவிலே, அரசன் பெரு சேனையில் கேடு இல் வேந்தர் - துரியோதனராசனது பெரிய சேனையிலுள்ள குற்றமில்லாதஅரசர்கள், கெட்டார் - தோற்றூர்கள்; (எ - று.)

இதுவரையிலும் எந்தப்போரிலும் பங்கப்படாதவ ரென்பார், 'கேடில் வேந்தர்' என்றூர். இராவான், அபிமன்னு என்ற இருவரும் அருச்சுனனது குமார ராதலால், இராவானை அபிமன்னுவின் துணைவ னென்றது. (269)

26.—மைந்தனிறந்ததுகேட்டுச் சீறி வீமன் பொர நடத்தல்.

மைந்தன்களத்தின்மடிந்தானெனவாயுமைந்தன்
தந்தம்பறியுண்டெதிர்சீறியதந்தியென்ன
வெந்தங்கமுற்றுமனந்தீயெழமேனடந்தான்
சிந்தந்திகழவெழுதுந்திறற்சிங்கமன்னுன்.

(இ - ள்.) சிந்தம் - (பகைவர்) வெல்லப்படுந்தன்மை, திகழ - விளங்க, எழுதும் - (தன்கொடியில்) எழுதப்பட்ட, திறல் சிங்கம்-வலிமையையுடைய சிங்கத்தை, அன்னுன்-ஒத்தவனுகிய, வாயு மைந்தன் - வாயுகுமாரனுன வீமன், மைந்தன் களத்தில் மடிந்தான் என - (தன் தம்பியாகிய அருச்சுனனது) புத்திரனுன இராவான் போர்க்களத்தில் இறந்தா னென்று அறிந்து,—தந்தம் பறியுண்டு எதிர் சீறிய தந்தி என்ன-(தன்) தந்தம் (பகைவரால்) பறிக்கப்பட்டு அவரெதிரிலே கோபங்கொண்டு போருக்குச் சென்ற யானைபோல, அங்கம் முற்றும் வெந்து-(அவனிறந்ததனுலாகிய சோகத்தால்) உடம்புமுழுவதும் தவித்து, மனம் தீ எழ-மனத்தில் கோபாக்கினி கொதிக்க, மேல் நடந்தான் - (பகைவர்சேனை) மேல் (போருக்குச்) சென்றுன்; (எ - று.)

வீமனுக்கு இராவானிடம் உள்ள அன்பை விளக்க, 'தம்பி மைந்தன்' என்னுது, 'மைந்தன்' என அபேதமாக் கூறியது. சிங்கக்கொடியானுக்குச் சிங்கத்தையே உவமைகூறினுர். யானைக்குத் தந்தம்போல, வீமனுக்கு இராவான் சிறந்த அங்க மென்க. தந்த

முடையது, தந்தி; வடசொல். ஜிதமென்னும் வடசொல்லின் விகார மாகிய சித மென்பது, எதுகைநோக்கி, சிந்தம் என விரித்தல்விகா ரம்பெற்றது; இனி, சிந்தம் என்பதற்கு-இடத்துக்குஏற்ப, கொடிச் சீலையில் எனப் பொருள்கொள்ளினும் அமையும். (270)

27.—வீமன் சினத்தோடுவருவதுகண்டு துரியோதனன் பலரோடு அவனெதிரே சீறிவருதல்.

சினத்தோடுநம்மேல்வருகின்றனன்செம்மலென்று
இனத்தோடுசெல்லும்பிறைவாளெயிற்றேனமென்ன
மனத்தோடியைந்ததிருத்தம்பியரோடுமன்னர்
சனத்தோடும்வந்தானெதிர்சீறித்தரணிவேந்தன்.

(இ-ள்.) 'சினத்தோடு-கோபத்தோடு, செம்மல்-சிறந்தவீரனான வீமன், நம்மேல் வருகின்றனன்-நம்மேல் (எதிர்த்து) வருகின்றான்,' என்று-என்றுஅறிந்து,—தரணி வேந்தன்-நிலவுலகத்துக்கு அரசனான துரியோதனன்,—எதிர் சீறி-எதிரிற்கோபித்து, மனத்தோடு இயைந்த திரு தம்பியரோடுஉம்-(தன) மனத்தோடொத்த சிறந்த தம்பிமார்களோடும், மன்னர் சனத்தோடுஉம்-(மற்றும்) அரசர் கூட்டத்தோடும், இனத்தோடு செல்லும் பிறை வாள் எயிறு ஏனம் என்ன-(தன்)கூட்டத்தோடு வருகிறபிறைச்சந்திரன்போலும் ஒள்ளிய கோரப்பற்களையுடைய பன்றிபோல,வந்தான் - (வீமனோடு போர்செய்ய) வந்தான்; (எ - று.)

கீழ்க்கவியில் வீமனது பலபராக்கிரமங்கள் விளங்க அவனுக்கு யானையையும் சிங்கத்தையும் உவமைகூறியவர், இங்கே துரியோதனனது இழிவுதோன்ற இவனுக்குப் பன்றியை உவமைகூறினர்.

28.—அரசர்பலரும் வீமனை வளைத்துக்கொண்டு கிளைத்துப் போர்விளைத்தல்.

திளைத்தாரரசர்திகிரிக்கிரியென்னவோடி
வளைத்தார்கனகவரைபோல்வருமன்னன்றன்னை
யுளைத்தாரனைவோர்களுமோரொருபாணமேவித்
துளைத்தார்கிளைத்தார்விளைத்தாரமர்தூண்டுதேரார்.

(இ - ள்.) அரசர் அனைவோர்கள்உம்-(துரியோதனனும் அவன் தம்பிமார்களும் முதலிய) அரசர்கள் எல்லோரும், தூண்டு தேரார்-செலுத்தின தேரையுடையவர்களாய், ஓடி - விரைந்துசென்று, திளைத்தார் - இடைவிடாது நெருங்கியவர்களாய்,—கனகம் வரை போல் வரும் மன்னன் தன்னை-பொன்மயமான மேருமலைபோல (ஓங்கிச் செந்நிறமுடையவனாய்) வருகிற வீமராசனை, திகிரி கிரி என்ன-(உலகத்தை வளைந்துள்ள) சக்கரவாளகிரிபோல, வளைத்தார்-சூழ்ந்தவர்களாய், உளைத்தார்-ஆரவாரஞ்செய்து, ஓர் ஒரு பாணம் ஏவி-(ஒவ்வொருத்தரும்)ஒவ்வொருஅம்பைச் செலுத்தி, துளைத்தார்-(அவ்வீமனுடம்பைத்) துளைசெய்து, கிளைத்தார் - ஊக்கங்கொண்டு, அமர் விளைத்தார்-போர்செய்தார்கள்; (எ - று.)

அனைவோர்-ரகர வீற்று அயல் அகரம் ஓவாயிற்று. (272)

29.—வீமன் சூழ்ந்தோரை வலிகெடுத்துத் துரியோதனன்தம்பிய ரெழுவரை மாய்த்தல்.

எடுத்தானொருதன்சிலைவீமனுமெண்ணில்பாணந்
தொடுத்தானவர்மேலிமைப்போதையிற்சூழ்ந்துளோரைக்
கெடுத்தானரசற்கிளையோரெதிர்கிட்டிமீண்டும்
படுத்தானெழுவரிவன்வாளியிற்பட்டுவீழ்ந்தார்.

(இ - ள்.) (அப்பொழுது), வீமனும்—, தன் ஒரு சிலை எடுத்தான்-தனது ஒப்பற்ற வில்லையெடுத்து, அவர்மேல் எண் இல் பாணம் தொடுத்தான்-அவ்வரசர்கள்மேல் அளவிறந்தஅம்புகளைத் தொடுத்து, இமைப்போதையின் - ஒரு நொடிப்பொழுதினுள்ளே, சூழ்ந்துஉளோரை கெடுத்தான்-(தனனை) வளைந்துள்ள அவர்களை யெல்லாம் நிலைகெடுத்து, அரசற்கு இளையோர் எதிர் கிட்டி - துரியோதனன் தம்பிமார்களின் எதிரிலே சமீபித்து, மீண்டும் எழுவர் படுத்தான்-மறுபடியும் (அவர்களில்)ஏழுபேரை அழித்தான்; (அவர்கள்), இவன் வாளியின் பட்டு வீழ்ந்தார்-இவனது அம்புகளால் இறந்து விழுந்தார்கள்; (எ - று.)

எழுவர்பெயர், மேற்கவியிற் கூறப்படும். கீழ் இச்சருக்கத்து ஐந்தாங்கவியை நோக்கி, 'மீண்டும்' என்றார். போதை - ஐயீற்றுடைக் குற்றுகரம். (273)

30.—இரண்டுகவிகள் - துரியோதனன்தம்பியர் எழுவர்தலை வானிற் சென்றது கூறும்.

அறமிக்கசொற்குண்டலபோசனனுதியக்கன்
திறமிக்கதீர்க்கநயனன்சிலைத்திம்மவாகு
மறமிக்கவேற்குண்டலன்குண்டலதாரன்மன்னூற்
றுறைமிக்ககேள்விக்கனகத்துசனனதோன்றல்.

இதுவும், மேற்கவியும்-குளகம்.

(இ-ள்.) அறம் மிக்க சொல்-தருமமமிகுந்த சொற்களையுடைய, குண்டலபோசன்—, அனுதியக்கன்—, திறம் மிக்கவலிமை மிகுந்த, தீர்க்கநயனன்—,சிலை-வில்லில்வல்ல, திம்மவாகு—,மறம்மிக்க-பராக்கிரமம்மிகுந்த, வேல்-வேலில்வல்ல, குண்டலன்—, குண்டலதாரன்—, மன் நூல்-நிலைபெற்ற சாஸ்திரங்களின், துறை - வழிகளிலே, மிக்க-மிகுந்த, கேள்வி-கேள்விகளையுடைய, கனகத்துசன் ஆன தோன்றல்-கநகத்வஜனாகிய அரசன்,—(எ - று.)

குண்டபேதன், அநாத்ருஷ்டி, தீர்க்கலோசநன், தீர்க்கபாகு, சுபாகு, வைராடன், கநகத்வஜன் என்று இவர்கள்பெயர் முதநூலிற் காணப்படுகிறது. தீர்க்கநயநன என்பது - நீண்டகண்களையுடையா னென்றும், குண்டலதாரன் என்பது குண்டலந்தரிப்பவனென்றும், கநகத்வஜன் என்பது-பொற்கொடியையுடையா னென்றும் பொருளபடும். அறம்-தீங்குமாம். பி - ம்: கருடத்துசனன தோன்றல். (274)

31. இப்பேரெழுவர்சிரமேழுமெழுந்துதுள்ளி
மைப்பேரெழிலியகல்வானிடைவந்தவெல்லை
ஒப்பேதெனவாசவன்கேட்டலுமோங்கல்விந்தை
கைப்பேரெழிற்பைங்கழங்கென்றனர்கண்டவானோர்.

(இ - ள்.) இ பேர் எழுவர் - இந்தப்பேரையுடைய ஏழுபேர்களின், சிரம் ஏழும் - (வீமனால்அறுபட்ட) தலைகள் ஏழும், எழுந்து துள்ளி - (உடம்பைவிட்டு) எழும்பிக்குதித்து, மை பேர் எழிலி அகல் வானிடை-கரியபெரிய மேகங்களையுடைய பரந்த ஆகாயத்திலே, வந்த எல்லை - வந்தபொழுது,— வாசவன்- இந்திரன், ஒப்பு ஏது என கேட்டலும் - (இவற்றிற்குச்) சமானம் எது வென்று கேட்டவளவிலே,—கண்ட வானோர் - பார்த்துநின்ற தேவர்கள், 'ஓங்கல் விந்தை-உயர்ச்சியையுடைய வீரமகளது, கை- கையினால் (எடுத்து)ஆடப்படுகிற, பேர் - பெரிய, எழில் -மேலெழு தலையுடைய, பைங்கழங்கு - அழகிய அம்மனைக்காய்கள் (இவற்றிற்கு உவமை)', என்றனர் - என்று சொன்னார்கள்; (எ - று.)

ஓங்கல் விந்தை - மலைகளிற் சஞ்சரிக்குந் துர்க்கையுமாம். ஓங்கல்-உயர்வென்னும் பொருளில் தொழிற்பெயரும், மலையென்னும் பொருளில் தொழிலாகுபெயருமாம். போர்க்களத்துக்குத் தலைவி துர்க்கை யாதலாலும், பராக்கிரமத்திற்குஉரியவள் வீரமகளாதலாலும், இவர்களாடிய கழங்கென்று அத்தலைகளைக் கூறுதல் ஏற்கும். விந்தியமலையில்வீற்றிருத்தல்பற்றி,துர்க்கைக்கு 'விந்தை' எனறு பெயர்; 'விந்த்யவாஸிநீ' என்ற வடமொழிப் பெயருங் காண்க. (275)

32.—துரியோதனன் வீமனுக்குப் புறந்தருதல்.

அறந்தந்தவாழ்க்கைமுடிக்கின்றனையாகிநீயும்
இறந்தந்தரத்திலினியேகுகவென்றுசீறி
மறந்தந்தசீயக்கொடியோன்கொடிமாசுணத்தோன்
புறந்தந்தபோரிற்புறந்தந்தனன்போகலுற்றான்.

(இ - ள்.) மறம் தந்த - பராக்கிரமம் பொருந்திய, சீயம் - சிங்கத்தின் வடிவமெழுதிய, கொடியோன் - துவசத்தையுடைய வீமன்,—(பின்பு துரியோதனனை நோக்கி), 'அறம் தந்த - (பலர்க்குத்) தீங்கு செய்த, வாழ்க்கை - (உனது) உயிர்வாழ்வை, முடிக்கின்றனை ஆகி - ஒழிக்கிறவனாய், நீயும்—, இனி - இப்பொழுது, இறந்து—, அந்தரத்தில் ஏகுக - வீரசுவர்க்கத்துச் செல்வாயாக,' என்று - என்று சொல்லி, சீறி-கோபிக்க,—கொடி மாசுணத்தோன் - பாம்புக்கொடியையுடைய அத்துரியோதனன், புறந்தந்த போரில் - (தான் இதுவரையில்) பாதுகாத்துவந்த அந்த யுத்தத்திலே, புறந்தந்தனன போகல் உற்றான் - முதுகுகொடுத்துச் செல்லத் தொடங்கினான்; (எ - று.)

அறம் - தீமையாதலை 'அறம்பாடுதல்' என்னுமிடத்துங் காண்க. அறம்-(நன்மை) அறுதல்; தொழிற்பெயர். இனி, அறம் தந்தவாழ்க்கை என்பதற்கு-முற்பிறப்பின் நல்வினையினாலாகிய

அரசவாழ்வு என்றும், இல்லறம் நடத்தும்வாழ்வு என்றும் உரைப்பினும் அமையும்: இனி, இங்கு அறம் என்றது - எதிர்மறையிலக்கணையால் பாவத்தைக் காட்டுமென்னலுமாம். வாழ்க்கை-தொழிற்பெயர். சீயம் - ஸிம்ஹம்என்னும் வடமொழிச்சிதைவு. புறந்தருதல்-பாதுகாத்தலும், தோற்றலும். பி - ம்: பொரமாசுணத்தோன்.

33.—சூரியாஸ்தமன வருணனை.

கந்தேயனையபுயவீமன்கணைகள்பட்டுத்
தந்தேரழிந்துபடுமன்னவன்றானையென்ன
மந்தேகரெல்லாமலைவுற்றுமடிந்துவீழச்
செந்தேரருக்கன்குடபாற்றிசைசென்றுசேர்ந்தான்.

(இ - ள்.) கந்துஏ அனைய - தூண்களையேயொத்த, புயம் - தோள்களையுடைய, வீமன் - பீமசேனனது, கணைகள் - அம்புகள், பட்டு - (மேல்) படுதலால், தம் தேர் அழிந்து படும் - தமது தேர் அழிந்து தோற்கிற, மன்னவன் - துரியோதனராசனது, தானை என்ன - சேனைபோல,—மந்தேகர் எல்லாம் - மந்தேகரென்னும் அசுரர்யாவரும், மலைவுற்று-போர்செய்து, மடிந்து வீழ - இறந்து விழும்படி, செம் தேர் அருக்கன் - சிவந்த தேரையுடைய சூரியன், குட பால் திசை - மேற்குத்திக்குப்பக்கத்தை, சென்று சேர்ந்தான் - போய்அடைந்தான் [அஸ்தமித்தான்]; (எ - -று.)

மந்தேகாருணமென்னும் துவீபத்தில் வாழும் மந்தேகரென்னும் அரக்கர்கள் உக்கிரமானதவத்தைச்செய்து பிரமனிடத்து வரம்பெற்று அதனாற் செருக்கி எப்பொழுதும் சூரியனை வளைந்து எதிர்த்துத் தடுத்துப் போர்செய்கின்றன ரென்றும், அந்தணர்கள் ஸந்தியாகாலங்களில் மந்திரபூர்வமாகக் கையில் எடுத்துவிடும் அர்க்கியதீர்த்தங்கள் வச்சிராயுதம்போலாகி அவர்கள்மேல் விழுந்து அவர்களை அப்பால் தள்ளிச் சூரியனது சஞ்சாரத்துக்குத் தடையில்லாதபடிசெய்கின்றன வென்றும் வேதங் கூறும். மூன்றாமடியால், பிராமணர்கள் சந்திசெய்ய என்பது தொனிக்கும். பி - ம்: மன்னவர். (277)

34.—இதுமுதல் மூன்றுகவிகள்-படுகளச்சிறப்பு.

தளவொத்தமூரற்றலமானைத்தருமன்மைந்தன்
வளமிக்கவெம்போர்க்களம்வென்றுவதுவைசெய்வான்
உளமுற்றளித்தகலன்போலுமுகுகலன்கள்
பிளவுற்றவேழநுதனித்திலப்பெட்டிபோலும்.

(இ - ள்.) உகு கலன்கள் - (அப்போர்க்களத்திலே) சிந்திக்கிடக்கிற (சேனையின்) ஆபரணங்கள்,—தருமன் மைந்தன் - தருமபுத்திரன், வளம்மிக்க வெம் போர் களம் வென்று - சிறப்புமிகுந்த கொடியயுத்தகளத்திலே (பகைவரைச்) சயித்து, தளவு ஒத்த - முல்லையரும்புகளைப்போன்ற, மூரல்-பற்களையுடைய, தலம் மானை-பூமிதேவியை, வதுவைசெய்வான் - மணஞ்செய்துகொள்ளும்படி, உளம் உற்று-விரும்பி,அளித்த-(அவளுக்குப் பரிசாகக்)கொடுத்த,

கலன் - ஆபரணங்களை, போலும் - ஒக்கும்; பிளவு உற்ற-பிளவைப் பெற்ற, வேழம் நுதல் - யானைகளின் நெற்றிகள், (முத்துக்களை யுடைமையால்), நித்திலம்பெட்டி போலும் - (தருமன் பூமியாகிய பெண்ணை மணஞ்செய்யப் பரிசு கொடுக்கும்) முத்துப்பெட்டியை ஒக்கும்; (எ-று.)

தலமானை வதுவைசெய்தல் என்றது, இராச்சியாபிஷேகஞ் செய்து கொள்ளுதலை. பூமியைப் பெண் என்றதற்கு ஏற்ப, பெண்ணுக்குரிய 'தளவொத்த மூரல்' என்ற அடைமொழியைக் கொடுத்தார். **தன்மைத்தற்குறிப்பேற்றவணி.** 'தளவொத்த......அளித்த' என்பதை, நித்திலப்பெட்டிக்குங் கூட்டுக. தளவு - முல்லை; பூவுக்கு முதலாகுபெயர்: இது - வெண்ணிறத்திலும் அழகிலும், மகளிர்பற்களுக்கு உவமை. மான் - பெண்ணுக்கு உவமையாகு பெயர்; மான்போன்ற பார்வையுடையவள். நித்திலப்பெட்டி-நித்தி லங்களை வைத்துள்ளபெட்டி. சிறந்த யானைகளின் தலையிலிருந்து முத்து உண்டாகுமென்பது, நூற்கொள்கை. (278)

35. **பூட்டற்றவில்லின்மிசைசோரிப்புனலின்வீரர்**
வாட்டற்றவீரல்பலசுற்றிவயங்குதோற்றம்
வேட்டற்பொருட்டாற்புவிமானுக்குவேந்துசூட்டுஞ்
சூட்டற்றுமுற்றுங்குடர்வாசத்தொடையலற்றே.

(இ - ள்.) சோரி புனலின் - இரத்தப்பெருக்கிலே, (இறந்து விழுந்த), வீரர் - வீரர்களது, வாட்டு அற்ற - மெலிதல் இல்லாத [கொழுத்துள்ள], ஈரல் பல - ஈரல்கள் அநேகம், பூட்டு அற்ற வில்லின்மிசை - (நாணியின்) கட்டு அறுந்துவிழுந்துள்ள வில்லின் மேலே, சுற்றி வயங்கு-சூழ்ந்துகொண்டு விளங்குகிற, தோற்றம் - காட்சி,—வேட்டல் பொருட்டால் - கலியாணஞ்செய்துகொள்ளும் நிமித்தமாக, புவி மானுக்கு - பூமிதேவிக்கு, வேந்து சூட்டும் - யுதிட்டிரன் சூட்டுகிற, சூட்டு - நெற்றிச்சூட்டை, அற்று-ஒக்கும்; குடர் முற்றுஉம்-(அருகில் விழுந்துள்ள) குடல் முழுவதும், வாசம் தொடையல் அற்று - (விவாகஞ் செய்யும்பொருட்டுப் பூமிதே விக்கு யுதிட்டிரன் சூட்டிய) வாசனையையுடைய மணமாலையை ஒக்கும்; (எ-று.)

இதுவும் - **தன்மைத்தற்குறிப்பேற்றவணியே.** நாணியற்றுச் சிறிது வளைவுபடத் தரையில் விழுந்துகிடக்கிற வில்லின்மேல் ஈரல் சூழ்ந்து விளங்குதல் - பூமிதேவியின் வளைவான நெற்றியில் வட்ட மாகச் சூட்டிய பூமாலைபோலு மென்றும், தரையிலே நீண்டுபரந்து விழுந்து கிடக்கிற குடல் பூமிதேவியின் தோளிலிட்ட பூமாலை போலுமென்றும் வருணித்தார். சூட்டப்படுவது சூட்டு: நெற்றி மேல் வட்டமாக அணியும் மாலை. தொடுக்கப்படுவது-தொடையல்; மார்பிலிடும் மாலை. வாட்டு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

36. **குலமாநிருபருடல்சோருங்குருதிவெள்ளம்**
பலமாநதிபோய்த்திரைவேலையிற்பாய்ந்ததோற்றம்

நிலமான்விளிம்புசிவப்பேறியநீலவாடை
நலமாகமன்றற்குடுத்தென்னநவில்லாமே.

(இ - ள்.) குலம் - (சிறந்த) குலங்களிற் பிறந்த, மா - பெரிய, நிருபர்-அரசர்களது, உடல் - உடல்களிலிருந்து, சோரும்-பெருகுகிற, குருதி வெள்ளம் - இரத்தப்பெருக்கு, பல மா நதி போய் - அநேகம் பெரிய நதிகளாய்ச் சென்று, திரை வேலையில் பாய்ந்த-அலைகளையுடைய கடலிலே பாய்ந்திட்ட, தோற்றம்-காட்சி,—நிலம் மான் - பூமிதேவி, விளிம்பு சிவப்பு ஏறிய நீலம் ஆடை - கரைகளிற் செந்நிறம் பொருந்திய நீலநிறமுள்ள சேலையை, நலம் ஆக-அழகாக, மன்றற்கு - கலியாணத்தின்பொருட்டு, உடுத்(த)து என்ன - உடுத்துக்கொண்டது போலுமென்று, நவிலல் ஆம்-சொல்லத்தக்கதாம்; (எ - று.)

பூமியைச்சூழ்ந்த கடலின் ஓரங்களின் இரத்தவெள்ளம் பாய்ந்துள்ளது, பூமிதேவி சிவப்புக்கரையுள்ள நீலச்சேலையைத் தரித்தது போலுமென்று வருணித்தார்; தற்குறிப்பேற்றவணி விளிம்பு - ஓரம். பி - ம்: நிருபர் குடர். (280)

37.—இருதிறத்தவரும் பாடி புகுதலும் கங்குல்வருதலும்.

தன்பாடிபுக்கான்புறந்தந்ததரணிவேந்தன்
மின்பாடிலங்குங்கணைவெஞ்சிலைவீமனோடு
மன்பாடிபுக்கான்பெரும்போரிடைமாய்ந்தமன்னர்
தென்பாடிபுக்கார்குடிபுக்கதுசேர்ந்தகங்குல்.

(இ - ள்.) புறம் தந்த - (வீமனுக்கு) முதுகுகொடுத்த, தரணி வேந்தன்- துரியோதனராசன், தன் பாடி புக்கான் - தனது படைவீட்டையடைந்தான்; மின் பாடு இலங்கும் - மின்னலின் தன்மையாய் விளங்குகிற, கணை - அம்புகளைத் தொடுக்கிற, வெம் சிலை - கொடியவில்லையுடைய, வீமனோடு-வீமனுடனே, மன்-தருமராசன், பாடி புக்கான் - (தன்) படைவீட்டை யடைந்தான்; பெரு போரிடை மாய்ந்த மன்னர் - பெரிய அப்போரிலே இறந்த அரசர்கள், தென் பாடி புக்கார் - தெற்கிலுள்ள (யம) புரத்தைச் சேர்ந்தார்கள்; சேர்ந்த கங்குல் - வந்த இராத்திரி, குடி புக்கது - நன்றாகக் குடிபுகுந்தது; (எ - று.)

வீரசுவர்க்கஞ் செல்பவரும் யமதரிசனம் பெற்றே செல்ல வேண்டுதலால், 'தென்பாடிபுக்கார்' என்றார்; பாடி - ஊர். கங்குல் குடிபுக்கது - இராத்திரி தொடங்கிற்று என்பதாம். பாடு-தன்மை.

38.—ஸ்ரீ க்ருஷ்ணன் இராவானிறந்ததற்கு வருந்தல் கூடாதெனக் காரணங் கூறுதல்.

அன்றேகளத்திற்பலியூட்டியவாண்மைவீரன்
இன்றேயிறந்தானிதற்குன்னியிரங்கலீரென்று
ஒன்றேமொழியுமுரவோன்முதலைவருக்குங்
குன்றேகவித்தகுடைக்கோவலன்கூறினனே.

(இ - ள்.) குன்றுஎ குடை கவித்த - கோவர்த்தனகிரியையே குடையாக எடுத்துப்பிடித்த, கோவலன் - பசுக்களைக் காத்தலில் வல்லவனான கண்ணபிரான்,—ஒன்றுஎ மொழியும் உரவோன் முதல் ஐவருக்குஉம் - ஒருவகையாகவே [சத்தியமாகவே] பேசும் வலிமையையுடைய தருமன் முதலிய பஞ்சபாண்டவர்க்கும்,— 'அன்றுஎ - முன்னொருநாளிலேயே, களத்தில்-போர்க்களத்தில், பலி ஊட்டிய-(தன்னைக் காளிக்குப்) பலியாக நிவேதனஞ்செய்த, ஆண்மை வீரன்-பராக்கிரமமுடைய வீரனான இராவான், இன்றுஎ இறந்தான்-இன்றைத்தினத்தில்தான் இறந்திட்டான்; இதற்கு- இதற்காக, உன்னி இரங்கலீர் - (நீங்கள்) சிந்தித்து வருந்த வேண்டா', என்று—, கூறினான் - உபசாரஞ்சொல்லியருளினான்.

கோவலன், ஐவருக்கும், இரங்கலிரென்று கூறினான் என்க. அன்றைக்கே தன்னைக் கொய்து பலிகொடுத்தவன் இதுவரையில் உயிர்வாழ்ந்திருந்ததற்கு மகிழவேண்டுவதேயொழிய,இன்றைக்கு இறந்ததற்கு வருந்தக்காரணமில்லையென்றான். இரங்கலீர் -ஏவற் பன்மை எதிர்மறை. (282)

39.—சூரியோதய வருணனை.

உன்னிக் களத்தி லுயிர்வீடு முரக மைந்தன்
சென்னிக் கதிர்மா மணிசிந்திய சோதி யெல்லாம்
தன்னிற் கவர்ந்தா னெனப்பண்டையிற் றும மேனி
மின்னிப் பரிதி குணபாற்றிசை மேவி னனே.

(இ - ள்.) களத்தில் உயிர் வீடும் - போர்க்களத்திலே உயிர் விட்ட, உரகம் மைந்தன் - நாககன்னிகைகுமாரனான இராவானது, சென்னி-தலையிலுள்ள, கதிர் மா மணி - விளக்கத்தையுடைய சிறந்த மாணிக்கம், சிந்திய - வெளியிட்ட, சோதிஎல்லாம்-ஒளிகளை யெல்லாம், உன்னி - எண்ணி [கருத்தோடு], தன்னில்கவர்ந்தான் என - தன்னிடத்துக் கவர்ந்துகொண்டவன்போல, பண்டையின் மேனி தாமம் மின்னி-முன்னையிருந்ததிலும்(தன்) உடம்பு ஒளி மிகப்பெற்று, பரிதி - சூரியன், குணபால் திசை மேவினன் - கிழக்குத்திக்கினிடத்தை அடைந்தான்; (எ - று.)

முன் அஸ்தமித்தபொழுது இருந்த ஒளியினும் இப்பொழுது உதிக்கையில் இயல்பாக மிகுந்துள்ள சூரியனொளியை இராவானது தலைமாணிக்கத்தினின்று ஒளிகவர்ந்து மிகுந்ததாக உத்பிரேக்ஷித்தார். உன்னி - (ஆண்மையையே) கருதி என்று உரைத்து, 'உயிர் வீடும்' என்பதோடு கூட்டலுமாம். வீடும்-விடும் என்பதன் நீட்டல். சிறந்தசாதிநாகத்தின் தலையில் மிகுந்த ஒளியையுடைய மாணிக்கம் உள்ள தென்றல், மரபு. (283)

எட்டாம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

ஒன்பதாம்போர்ச்சருக்கம்.

1.—கடவுள்வாழ்த்து.

பேராறு மூழ்கி மறைநூல் பிதற்றி மிடறும் பிளந்து பிறவித்
தூராறு மாறு நினையாம லுங்க டொழிலே புரிந்தசுமடீர்
ஓராறு பேத சமயங்க ளுக்கு முருவாகி நின்ற வொருவன்
ஈராறு நாம முரைசெய்து மண்கொ டிடுவார்கள் காணு மிமையோர்.

(இ - ள்.) பேர் ஆறு மூழ்கி - பெரிய புண்ணியநதிகளிலே நீராடியும், மறை நூல் பிதற்றி மிடறுஉம் பிளந்து - வேதசாஸ்திரங்களை ஓதிக் கண்டம் வருந்தியும், பிறவி தூர் ஆறும்ஆறு நினையாமல் - பிறப்புக்கு வேராகிய கருமம் ஒழியும்விதத்தை எண்ணாமல், உங்கள் தொழில்ஏ புரிந்த - உங்கள் கர்ரியங்களையே செய்துகொண்டிருந்த, சுமடீர் - அறிவில்லாதவர்களே! ஓர் ஆறு பேதம் சமயங்களுக்குஉம் - ஒரு ஆறுவகைப்பட்ட மதங்களுக்கும், உரு ஆகி நின்ற - (அதற்குஏற்ற தெய்வ) வடிவமாய் நின்ற, ஒருவன் - ஒப்பற்ற திருமாலினது, ஈர் ஆறு நாமம்-பன்னிரண்டு திருநாமங்களை, உரைசெய்து-சொல்லி, மண் கொடு இடுவார்கள் - திருமணையெடுத்துத் தரித்துக்கொள்பவர்கள்தாமே, இமையோர் - முத்திபெற்றவராவர்; காணும் - (இதனை) அறியுங்கள்; (எ - று.)

முத்திபெறுவதற்கு ஏதுவான தத்துவஞானத்தைப்பெற்று பிரபத்திமார்க்கத்தையும் அதற்குஏற்ற அநுஷ்டாநத்தையும் பெறுமல், பாவந்தீர்ந்து புண்ணியமுண்டாகும் வழியையே ஆராய்ந்த வண்ணம் புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தல் வேதசாஸ்திரங்களைப் படித்தல் முதலிய நற்செய்கைகளைச் செய்தல் பயனற்றதென்பதாம். மறைநூல் - இருபெயரொட்டு: இனி வேதங்களும் சாஸ்திரங்களுமென உம்மைத் தொகையுமாம். சாஸ்திரங்களின் சார மறியாமல் அவற்றைக் கற்றலின் இழிவை விளக்குதற்கு, 'பிதற்றி மிடறும் பிளந்து' என்றார். தூர்-வேர்; பிறவித்தூர்-ஆசையென்றுங்கொள்ளலாம்: என்றது, அவித்தையை; "அவாவென்ப வெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும், தவாஅப் பிறப்பீனும் வித்து" என்ற திருக்குறளைக் காண்க. உங்கள் தொழிலே புரிந்த என்றது, உயிர்க்கு உறுதிதேடாமல் உடம்புக்கு உறுதி தருவனவாகிய உண்பன உடுப்பன முதலிய பொருள்களையே தேடிச் சம்பாதித்தலை.

பேதசமயங்கள்-ஒன்றேடொன்று மாறுபட்ட மதங்களென்றுமாம். **ஓராறுபேதசமயங்கள்**-வைஷ்ணவம் சைவம் சாக்தம் சௌரம் காணபதம் கௌமாரம் என்னும் ஆறும் வைதிகமதமென்றும்; கபிலமதம் கணாதமதம் பதஞ்சலிமதம் அக்ஷபாதமதம் வியாசமதம் ஜைமினிமதம் என்னும் ஆறும் வேதாந்தமதமென்றும்; பௌத்தம் ஜைநம் பைரவம் காளாமுகம் லோகாயதம் சூநியவாதம் என்னும் ஆறும் புறச்சமயமென்றும் கூறப்படும். இவற்றிற் கெல்லாம் ஏற்ற அந்தந்தத்தெய்வமாய்த் திருமால் வீற்றிருக்குந் தன்மை, கீழ் முதற்போர்ச்சருக்கத்துக் கடவுள்வாழ்த்தில் "இறைஞ்சுவா

ரிறைஞ்சப்பற்பல் தேவருமாகி" என்றவிடத்துக் கூறப்பட்டது. ஈராறுநாமம்-கேசவன், நாராயணன்,மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதனன், திரிவிக்ரமன், வாமனன்,ஸ்ரீதரன், இருடீகேசன், பதுமநாபன், தாமோதரன் என்பவை. இந்தத் துவாதசநாமங்களை முறையேசொல்லி உடம்பில் பனனிரண்டிடத்தில் முறையே திருமணிட்டுக்கொள்ளுதல், ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயம்: அது-துவாதசோர்த்துவபுண்ட்ர மெனப்படும். காணும் - தேற்றமுமாம். திருவாய்மொழியில் "அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்" என்றவிடத்து, 'அமரர்கள்' என்றதுபோல, இங்கே 'இமையோர்' என்றது - முத்தியுலகத்தில் நிரதிசய ஆநந்தமனுபவிக்கும் நித்தியசூரிகளைக் குறிக்கும். தன்னை நெற்றியிலே தரித்த பிராணிகளை த்தையும் இறுதியிற் கருமமொழித்து மீளுதலில்லாத முத்தியைப் பெறுவிப்பது திருமண்காப்பென்னும் ஊர்த்துவபுண்ட்ரக்குறி யென்கிற மகிமையை "என்றும் நான்முகன் முதல்யாரும் யாவையும், நின்ற பேரிருளினை நீக்கி நீணெறிச், சென்று மீளாக்குறி சேரச்சேர்த்திடு, தன்திரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே" எனக் கம்பர் கூறுவர். சுமடர் - சுமடர் என்பதன் ஈற்றயல் திரிந்த விளி.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாங்காய்ச்சீர்களும், இரண்டு நான்கு ஆறுஞ் சீர்கள் தேமாச்சீர்களும் ஏழாவது புளிமாச்சீரு மாகிய **எழுசீராசிரியவிருத்தங்கள்.** (284)

2.—இதுமுதல் ஏழுகவிகளில், எட்டாம்போர்நாளிரவில் துரியோதனன் படைவீட்டில் நடந்ததொருசெய்தியைத் தெரிவிக்கிறார்.

முன்போருடைந்துதனதில்லடைந்தமுடிமன்னன்முன்னையிரவிற்
றன்போலுமாமனவனோடுகேடுதருதம்பியோடுகருதிப்
பின்போதில்வண்மையொழிவானையோடியழையென்றுபேசவவனும்
மின்போலிறந்தவிளையோர்கள்பாடுவினவாவிருந்தபொழுதே.

இதுமுதல் ஐந்துகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) முன் - முன்னே [எட்டாம்போர்நாள் மாலைப்பொழுதில்], போர் உடைந்து-யுத்தத்தில் (வீமன்முன்) தோற்று, (பின்பு), தனது இல் அடைந்த - தன் படைவீட்டை யடைந்த, முடி மன்னன் - கிரீடாதிபதியான துரியோதனராசன், முன்னை இரவில் - முன்னிராத்திரியிலே, தன் போலும் மாமனவனோடு - (தீக்குணம் தீத்தொழில்களில்) தன்னையொத்த மாமனாகிய சகுனியோடும், கேடு தரு தம்பியோடு-(தமக்கும் பிறர்க்கும்) தீங்கை விளைக்கிற தம்பியான துச்சாதனனோடும், கருதி-ஆலோசித்து, பின் போதில் வண்மை ஒழிவானை ஓடி அழை என்று பேச-(முன்பகற்பொழுது முழுவதும் தானஞ்செய்து) பின்பகற்பொழுதில் தானமொழிபவனான கர்ணனை விரைந்துசென்று அழைத்துவா என்று (துச்சாதனனை நோக்கிச்) சொல்ல, அவன்உம் - (அவ்வாறு துச்சாதனனால் அழைத்துக் கொண்டுவரப்பட்ட)கர்ணனும், மின் போல் இறந்த இளையோர்கள் பாடு வினவா இருந்த பொழுது-மின்னல்போல (நிலையில்லாமல்) இறந்துபோன தம்பி

மார்களின் தன்மையைப் பற்றி(த்துரியோதனனை) விசாரித்திருந்த சமயத்து,— (எ - று.)

முன்னையிரவு-இராத்திரியின் முன்பாகம். முற்பகல் முழுவதிலும் தானஞ்செய்து பிற்பகலில் தானமொழிதல் கர்ணனது இயல்பாதலை "அடுத்ததானமும் பரிசிலு மிரவலர்க் கருளுடன் முற்பகலளவும், கொடுத்து" என்றதனாலும் அறிக. தன்போலும் வேறு உவமைபெறாத என்றுமாம். (285)

3. மாவில்லெடுத்தென்னிளையோர்கள்கந்தவகன்மைந்தன்முன்புசிவன்முன்
பூவில்லெடுத்தமதனனவாறுபுகல்கிற்பதல்லவனிகக்
கோவில்லெடுத்தென்மறைநாலும்வல்லகுருவில்லெடுத்தெனினிமேல்
நீவில்லெடுக்கிலனைவேமுமுய்துநினையாரும்வாகைபுனையார்.

(இ - ள்.) என் இளையோர்கள்-எனது தம்பிமார்கள் (இருபது பேர்), கந்தவகன் மைந்தன் முன்பு-வாயுகுமாரனான வீமனுக்கு எதிரில், மா வில் எடுத்து-பெரிய வில்லை யேந்தி(ப் போர்செய்து), சிவன் முன் பூ வில் எடுத்த மதன் ஆன ஆறு-சிவபிரானெதிரிலே புஷ்ப வில்லையெடுத்துப்போர்செய்த மன்மதன்போல் (எளிதில்) அழிந்த விதம், புகல்கிற்பது அல்ல - சொல்லுந்தரமுடையதல்ல; அனிகம் கோ-(எனது) சேனைத்தலைவனாகிய பீஷ்மன், வில் எடுத்து - வில்லையெடுத்துப் போர்செய்து, என்-என்னபயன்? மறை நால்உம் வல்ல குரு வில் எடுத்து என்-நான்குவேதங்களையும் வல்ல ஆசிரியனான துரோணன் வில்லையெடுத்துப் பொருது என்னபயன்? இனிமேல்—,நீ—,-வில் எடுக்கில் - வில்லையெடுத்துப் போர்செய்தால், அனைவேம்உம் உய்தும்-நாங்கள் எல்லோரும் பிழைப்போம்; நினையார்உம் வாகை புனையார்-பகைவர்களும் வெற்றிமாலை சூடமாட்டார்கள்; (எ-று.)—இது-கர்ணனை நோக்கித் துரியோதனன் கூறுவது.

'பூவில்லெடுத்த' என்றது, 'புஷ்பதந்வா' என்னும் மன்மதனது வடமொழிப்பெயரின் பொருள்பற்றி: காமநூலென்னும் பூவிசேடம் காமனுக்கு வில்லாமென்று தமிழ்நூலிலும், மன்மத தந்திரமென்னும் புஷ்பம் மன்மதனுக்கு வில்லா மென்று வடநூலிலுங் கூறுமாறு உணர்க; இனி, பூ வில் எடுத்த - புஷ்பபாணங்களையுடைய கரும்புவில்லைத் தரித்த என்றுமாம். (286)

4. என்னுஞ்சொலண்ணல்செவியேறநெஞ்சமெரியேறவெய்தின்மொழிவான்
முன்னுந்தைதந்தையுரைசெய்தமேன்மையறியாய்கொலம்பொன்முடியாய்
தன்னுந்துதேரும்வரிவில்லுமுண்டுசரமுண்டுநாளையவனே
உன்னுங்களத்திலவர்வானமாளவுலகாளுவிப்பனுனையே.

(இ - ள்.) என்னும் சொல்-என்று (துரியோதனன்) சொன்ன வார்த்தை, அண்ணல் செவி ஏற-பெருமையையுடைய கர்ணனது காதில் பட, (அதனைக் கேட்டவுடனே), (அக்கர்ணன்), நெஞ்சம் எரி ஏற - மனத்தில் கோபாக்கினி மிக, வெய்தின் - கடுமையாக, மொழிவான் - சொல்லுவான்: (என்னவென்றுஎனில்,)— முன்-முன்னே [அணிவகுத்தபொழுது], உந்தை தந்தை-உனது தந்தை

யான திருதராஷ்டிரனது (பெரிய) தந்தையான வீடுமன், உரை செய்த-(என்னை அர்த்தரதனாகச்)சொன்ன, மேன்மை-செருக்கை, அறியாய்கொல் - அறிந்திலேயோ? அம பொன் முடியாய் - அழகிய பொன்னினாலாகியகிரீடத்தை யுடையவனே! தன - அவ்வீடு மனது, உந்து தேர்உம்-செலுத்தப்படுகிற தேரும், வரி வில்உம் - கட்டமைந்த வில்லும், உண்டு - உள்ளன; சரம் உண்டு - அம்புகள் உள்ளன; அவனை - அவ்வீடுமனே, நாளை-நாளைக்கு [இனி மேல் என்றபடி], உன்னும் களத்தில் - கருதிச்செய்யும்போரிலே, அவர் வானம் ஆள - (பாண்டவராகிய) அப்பகைவர்கள் (இறந்து) வீரசுவர்க்கமடைய, உனை உலகு ஆளுவிப்பன் - உன்னையே உலகமாளும்படி செய்வான்; (எ - று.)—இதுவும், மேற்கவியும் கர்ணனது மறுமொழி. பின்னிரண்டடி பிறகுறிப்பு. வி - ம்: செவியேறவெய்தினிடிபோலதிர்ந்து. (287)

5. விற்கவ்வுவாளியடலைவர்மீதுவிடவஞ்சிவீரரெதிரே
புற்கவ்வுமாகில்விரைவோடுகங்குல்புலராமுன்வந்துபொருவேன்
சொற்கவ்வையாகநினையற்ககொன்றுசுரர்நாடளிப்பனினியுன்
சிற்கவ்வைதீரவவருக்குநின்றதிருமாலினுக்குமெனவே.

(இ - ள்.) வில் கவ்வு வாளி - வில்லில்தொடுக்கிற அம்புகளை, அடல் ஐவர்மீது விட-வலிமையையுடைய பஞ்சபாண்டவர்கள்மேற் செலுத்துதற்கு, அஞ்சி - பயந்து, (அவ்வீடுமன்), வீரர் எதிரே-பலவீரர்கள்முன்னிலையிலே, புல் கவ்வும ஆகில் - (தனதுதோல்வி தோன்ற வாயினால்) புல்லைக் கௌவியெடுப்பானானால், விரைவோடு வந்து - (நான்) துரிதமாக வந்து, கங்குல் புலரா முன - இராத்திரி கழிந்து விடிவதற்குமுன்னமே, பொருவேன் - (உன்பக்கத்துப்) போர்செய்வேன; சொல் - (எனது) சொல்லை, கவ்வை ஆக நினையற்க-வீணொலியாக நினையாதிருப்பாயாக; இனி உன் சில் கவ்வை தீர - இனிமேல் உனது சில கவலைகள நீங்கும்படி, அவருக்கு உம் - அப்பாண்டவர்களுக்கும், நின்ற திருமாலினுக்குஉம்- (அவர்களுக்குஉதவியாய்) நின்ற கண்ணனுக்கும், கொன்று சுரர் நாடு அளிப்பன் - கொன்று வீரசுவர்க்கத்தைக் கொடுத்திடுவேன்,என-என்று(கர்ணன்) சொல்ல,—(எ - று.) — "இம்மொழி சென்று கங்கைசுதனுக்கு உரைக்கவென" என அடுத்த கவியோடு தொடரும்.

கவ்வு, கவ்வை = கௌவு, கௌவை: முதற்போலி.தோற்றவர் வாயினாற் புல்லைக்கவ்வுதல், மரபு. கௌவை - துன்பமும், பழி மொழியுமாம். (288)

6. துச்சாதனவிம்மொழிசென்றுகங்கைசுதனுக்குரைக்கவெனவே
நச்சாடராவையனையானுமங்கொர்நொடியுற்றபோழ்தினடவா
எச்சாபமன்னுமணியூகமானவிரதந்தனக்குநடுவோர்
அச்சாணியானவவனுக்கிவன்சொலடைவேபுகன்றனனரோ.

(இ - ள்.) (என்று கர்ணன்சொன்ன வார்த்தையைக் கேட்டுத் துரியோதனன் தனது அடுத்த தம்பியை நோக்கி), 'துச்சாதன -

துச்சாசனனே! இ மொழி - இந்தக் கர்ணன்வார்த்தையை, சென்று - (நீ) போய், கங்கை சுதனுக்கு உரைக்க - வீடுமனுக்குச் சொல்வாயாக', என-என்று சொல்ல,—நஞ்சு ஆடு அரா வை அனையான்உம் - விஷத்தையுடையதும் (படமெடுத்து) ஆடுந் தன்மையதுமான பாம்பை யொத்த கொடிய அத்துச்சாசனனும், அங்கு -அவ்வீடுமனுள்ளவிடத்தில், ஓர் நொடி உற்ற போழ்தின்- ஒரு நொடியளவு பொருந்தினபொழுதிலே, நடவா - சென்று சேர்ந்து,—சாபம் என்னும் - விற்கள்பொருந்திய, அணி - அழகிய, எ யூகம் ஆன - எல்லாச்சேனைகளுமாகிய, இரதந்தனக்கு - தேருக்கு, நடு - நடுவிலே, ஓர் அச்சு ஆணி ஆன - ஒரு அச்சாணி யையொத்த, அவனுக்கு - அவ்வீடுமனுக்கு, இவன் சொல் - இந்தக்கர்ணனது வார்த்தையை, அடைவே புகன்றனன்-ஒழுங் காகச் சொன்னான்; (எ - று.)—அரோ - ஈற்றசை. இது-கர்ணன் கூறியதை வீடுமனிடம் தெரிவிக்குமாறு துரியோதனன் துச்சாத னனிடஞ் சொல்ல, அவன் அங்ஙனே கூறியதைத் தெரிவிக்கும்.

வியூகத்தையே இரதமாக உருவகஞ்செய்து, வீடுமனை அச் சாணியாக உருவகஞ்செய்தார். அச்சு - சக்கரங்கோக்கும் மரம். ஆணி - அச்சக்கரம்கழலாமல் அச்சின்நுனியில் செருகுவது. அந்த ஆணி தான் ஒன்றாய் ஓரிடத்திலிருந்து கொண்டே மிகப் பெரிய தேர்முழுவதுக்கும் ஆதாரமாயிருத்தல் போல, வீடுமன் தான் ஒருவனாய் ஓரிடத்திலிருந்து கொண்டே வில்முதலிய ஆயு தங்களையுடைய பெரியசேனை முழுவதுக்கும் ஆதாரமாயிருந்து நடத்தும் வலிமையையுடையவனென்க. (289)

7. பேரன்புகன்றமொழிகேள்விசெய்துபெரியோன்முகிழ்த்துநகையா
வீரம்புகன்றெனினிநானுமக்குவிசயற்செறுத்தன்முடியா
தீரந்துறந்தவொருநூறுபேரைமகுடந்துணிப்பலெனவே
நேரன்றமர்க்கணுரைசெய்தவாய்மைநிறைவேறுநாளையுடனே.

இதுமுதல் எட்டுக்கவிகள் - குளகம்.

(இ - ள்.) பேரன் புகன்றமொழி-பௌத்திரனான துச்சாசனன் சொன்னவார்த்தையை, கேள்வி செய்து - கேட்டலைச்செய்து [கேட்டு], பெரியோன் - பெரியபாட்டனானவீடுமன், முகிழ்த்து நகையா-சிறிதாகச்சிரித்து [புன்சிரிப்புச் செய்து], 'இனி - இப் பொழுது, நான்—, உமக்கு - உங்களுக்கு, வீரம் புகன்று-வீரவாத மானவார்த்தையைச் சொல்லுதலால், என் - என்னபயன்? விசயன் செறுத்தல் - அருச்சுனனைக் கொல்லுதல், முடியாது - (எவர்க்கும் எப்பொழுதும்) ஆகாது; ஈரம் துறந்த - (மனத்தில்) இரக்கமில் லாத, ஒரு நூறு பேரை - (துரியோதனாதியர்) நூற்றுவரையும், இனி—, மகுடம் துணிப்பல் - தலையறுத்திடுவேன், என-என்று, நேர் - (யாவர்க்கும்) எதிரிலே, அன்று - (திரௌபதியைத் துகிலு ரிந்த) அக்காலத்தில், உரை செய்த - (வீமன்)சொன்ன, வாய்மை- சபதவார்த்தையும், நாளை உடனே-இனி விரைவிலேயே, அமர்க்கண் - போரில், நிறைவேறும் - தவறாமல் நடந்துவிடும்; (எ-று.) —இப்பாட்டில், 'நகையா' என்பது, "என்றுவிடைநல்கி"

என அடுத்த கவியில் தொடரும். இதுவும் அடுத்த கவியும், அது கேட்ட வீடுமன் பதில்கூறி விடைகொடுத்தமையைத் தெரிவிக்கும்.

பாட்டன்பெயரைப் பௌத்திரனுக்கு இடுவது பெரும்பாலும் உலகமரபாதலால், அம்மகன்மகனுக்கு, பேரன் என்பது-காரணப் பெயர். வீமன் செய்த சபதத்தை "பாஞ்சாலிக் கரசவையிற் பழுதுரைத்தோனுடலெனது படையர் மேழி, போஞ்சாலி னிணஞ் சொரியத் துணைவரொடு குலமாளப்பொருவன் யானே" எனக் கீழ்ச் சூதுபோர்ச்சருக்கத்திற் காண்க. மகுடம் - தலைக்கு, தானியாகுபெயர். பி - ம்: துணிப்பனினியென். (290)

8. ஒருநாளுநீவிர்பொறுமின்களும்மையுலகாளுவிக்கவருவோர்
வருநாடொடங்கியமர்செய்துதெவ்வைமடிவிப்பர்சொன்னவகையே
குருநாடுமற்றைவளநாடுமெய்திநுமரோடியைந்துகுழுமிப்
பெருநாளிருந்துநனிவாழ்திரென்றுவிடைநல்கிவிட்டபிறகே.

(இ - ள்.) ஒரு நாள்உம் நீவிர் பொறுமின்கள் - (இன்னும்) ஒருநாள் மாத்திரம் நீங்கள் பொறுத்துக்கொண்டிருங்கள்; உம்மை உலகு ஆளுவிக்கவருவோர் - உங்களை உலகத்தையாளும்படி செய்ய(த் துணையாய்) வருபவர், வரு நாள் தொடங்கி - (அவ் வொருநாள்கழித்தபின்)வருகிற நாள் முதல், அமர் செய்து - போர்செய்து, சொன்ன வகைஏ - (தாம்) சொன்ன விதமாகவே, தெவ்வை மடிவிப்பர் - பகைவர்களை அழித்திடுவார்; (அதன்பின் நீங்கள்), குரு நாடுஉம் - இந்தக்குருநாட்டையும், மற்றை வளம் நாடுஉம் - வளங்களையுடைய மற்றைநாடுகளையும், எய்தி - (உங்களுக்குஉரியவையாக) அடைந்து, நுமரோடு இயைந்து - உங்களுடைய பந்துமித்திரர்களோடு சேர்ந்து, குழுமி - கலந்து, பெரு நாள் இருந்து - பலகாலம் (உயிரோடு) இருந்து, நனி வாழ்திர் - நன்றாக வாழ்வீர்,' என்று - என்றுசொல்லி, விடைநல்கி - (துச்சாதனனுக்கு) விடைகொடுத்து, விட்ட பிறகு - (அவனை) அனுப்பின பின்பு,—(எ-று.)—"கண்ணுந் துயின்று" என அடுத்தகவியோடு தொடரும்.

இந்த எட்டுநாளும் பொறுத்தீர்கள்: இன்னும் ஒருநாள் பொறுங்கள்: பத்தாநாளில் நான் அழிவேன். அதன்பின் உங்களைக் காப்பவர் காக்கட்டும்: அவர்கள் பகைவரை அழிக்கட்டும்; நீங்கள் அரசாண்டு வெகுகாலம் க்ஷேமமாக வாழுங்களென்றனனென்பதாம். ஒருநாளும், உம் - இறந்ததுதழுவிய எச்சத்தோடு இழிவுசிறப்பு. நீவிர் - முன்னிலைப்பன்மைப்பெயர்: இது முதல் வேற்றுமைக்குமாத்திரமே வரும். 'வருவோர்' என்றது கர்ணனை; இகழ்ச்சிப்பன்மை. (291)

9 —இதுவும் அடுத்தகவியும்-வீடுமன்துயின்றெழுந்து போர்க்களங்குறுகி அணிவகுத்துநின்றமை கூறும்.

கண்ணுந்துயின்றுதுயிலும்முணர்ந்துசிறுகாலையுள்ளகடனும்
எண்ணுங்கருத்தின்வழியேயியற்றியிகன்மன்னர்சூழவரவே

மண்ணுங்குலுங்கவரையுங்குலுங்கவெழுதூளிமாதிரமுமால்
விண்ணும்புதைக்கவடலாகவத்தின்மிசைசென்றுபுக்குவிரகால்.

(இ - ள்.) கண்உம் துயின்று - கண்மூடியுறங்கி, (இராத்திரி கழிந்த பின்), துயில்உம் உணர்ந்து - தூக்கமும் விழித்து, சிறு காலை உள்ள கடன்உம்-உதயகாலத்திற் செய்யவேண்டிய (சந்தியாவந்தனம் முதலிய) கடமைகளையும், எண்ணும் கருத்தின் வழிஏ - நினைத்தற்குக் கருவியான மனத்தின் வழியாக [மனவமைதியோடு], இயற்றி - செய்துமுடித்து,—(பின்பு), இகல் மன்னர் சூழ்வர - வலிமையையுடைய அரசர்கள் (தன்னைச்) சுற்றிலும் வரவும், (அந்தப் பாரத்தினால்), மண்உம் குலுங்க (அசலையாகிய) பூமியும் நடுங்கவும், வரைஉம் குலுங்க-(அசலமர்கிய) மலைகளும் சலிக்கவும், எழு தூளி மாதிரம்உம் மால் விண்உம் புதைக்க - மேற்கிளம்பின புழுதி திக்குக்களையும் பெரியஆகாயத்தையும் மூடவும்,அடல் ஆகவத்தின்மிசை-கொடிய போர்க்களத்திலே, சென்று புக்கு-போய்ச் சேர்ந்து, விரகால் - தந்திரமாக,—(எ - று.)—" மானவுரவோன்—அணிசெய்து" என மேற்கவியோடு தொடரும். (292)

10. நாகங்குறித்தகொடிமன்னர்மன்னைநடுவேநிறுத்தியடைவே
பாகங்கடோறுமொருகோடிமன்னர்பகதத்தனோடுநிறுவிப்
பூகம்பமாகவினமோடலம்புசனுமுன்புபோகவொருபேர்
யூகஞ்சருப்பதோபத்ரமாகவணிசெய்துமானவுரவோன்.

(இ - ள்.) நாகம் - பாம்பின்வடிவத்தை, குறித்த - எழுதிய, கொடி - துவசத்தையுடைய, மன்னர் மன்னை - ராஜராஜனை துரியோதனனை, நடுஏ நிறுத்தி - சேனைமத்தியிலே நிற்கச்செய்து, அடைவுஏ - முறையே, பாகங்கள் தோறும் - எல்லாப்பக்கங்களிலும், ஒரு கோடி மன்னர் - ஒருகோடி அரசர்களை, பகதத்தனோடு-பகதத்தனுடனே, நிறுவி - நிற்கச்செய்து, பூ கம்பம் ஆக - (அதிபாரத்தால்) பூமியில் நடுக்கமுண்டாம்படி, இனமோடு-(தன்) கூட்டமாகிய பல அரக்கர்களோடு, அலம்புசன்உம்-அலம்புசனென்னும் இராக்கதனும், முன்பு போக - (சேனையின்) முன்னே செல்லும்படி, சருப்பதோபத்ரம் ஒரு பேர் யூகம் ஆக - ஸர்வதோபத்ரமென்னும் ஒரு பெரிய படைவகுப்பாக, அணி செய்து - (சேனைகளை) அணிவகுத்து, மானம் உரவோன்-பெருமையையும் வலிமையையுமுடைய வீடுமன்,—(எ - று.)—"அமர்க்கண் நின்றான்" என அடுத்த கவியோடு தொடரும்.

சருப்பதோபத்ரம் - வடசொல்திரிபு; அதாவது - நாற்புறத்திலும் எங்கு நின்று பார்த்தாலும் ஒரேவிதமாகக் காட்சிதோன்றும்படி சேனையை வகுத்தவியூகம; இது-சித்திரகவிகளில் ஒன்றாகவும் வழங்கும். ஒன்பதாநாட்போரின் தொடக்கத்தில் சில உத்பாதங்கள் உண்டானதாக முதனூலிற் கூறியுள்ளது; அதை இப்பாட்டில், 'பூகம்பமாக' என்றதனால் குறிப்பித்தார் போலும். (293)

11.—மூன்றுகவிகள்-யுதிட்டிரன்பக்கத்தார் போர்க்களங்குறுகி அணிவகுத்துநின்றமை கூறும்.

நின்றனமர்க்கணவரங்குநிற்கவிவரிங்குநென்னனிருதன்
கொன்றனெனத்தன்மதலைக்கோரெண்மரெழுவோரைநீடுகொலைசெய்
தொன்றுகமன்னர்பலராவிகொண்டவுரவோனுமும்பர்பகைபோய்
வென்றனுமற்றையிளையோருமொன்றின்விரகற்றகோவுமுதலோர்.

(இ - ள்.) அமர்க்கண் நின்றான் - போர்க்களத்தில் நின்றிட்டான்; அவர் அங்கு நிற்க - அந்தத்துரியோதனன் பக்கத்தவர்கள் அவ்வாறுநிற்க,—இங்கு - இப்பக்கத்தில், நென்னல்-நேற்று, நிருதன்-(அலம்புசனென்னும்) இராக்கதன், கொன்றான் என - (இராவானைக்) கொன்றிட்டானென்று, தன் மதலைக்கு - தனது (தம்பியின்) மகனான இராவானுக்காக (இரங்கி), (அதற்கீடாக), ஓர் எண்மர் எழுவோரை - (துரியோதனன் தம்பிமார்களுள்) ஒருஎட்டுப்பேரையும் (மற்றும்) ஏழுபேரையும், நீடு கொலை செய்து-பெருங்கொலைசெய்து [ஒருங்கே அழித்து], ஒன்று ஆக - (அவர்களோடு) ஒருசேர, மன்னர் பலர் ஆவி கொண்ட-(மற்றும்) பலஅரசர்களது உயிரைக் கவர்ந்த, உரவோன்உம் - வலிமையையுடைய வீமனும், உம்பர் பகை - தேவர்களுக்குப் பகைவரான நிவாதகவசகாலகேயர்களை, போய் வென்றானஉம் - சென்று சயித்த அருச்சுனனும, மற்றை இளையோர்உம் - மற்றைத்தம்பியரான நகுல சகதேவரும், ஒன்றின் விரகு அற்ற - ஒருவகையிலும் வஞ்சனையில்லாத, கோ உம் - தலைவனான தருமனும், முதலோர் - முதலியவர்களாகிய, இவர் - இந்தப்பக்கத்தார்,—(எ - று.)—" களத்தினிடைவந்து " என வருங் கவியோடு தொடரும்.

ஒன்றின்விரகற்ற - மனம் மொழி மெய் என்னுந்திரிகரணங்களின் சிந்தை சொல் செயல் என்னும் மூவகைத்தொழிலிலும் வஞ்சனையில்லாத. (294)

12. மற்றுள்ளமன்னர்புடைபோதமுன்னர்மழைமேனிமாயன்வரவே
உற்றுள்ளவீரரொடுசேனைநாதனணிநிற்கவொண்கொயுளைமா
முற்றுள்ளவெங்குமெழுபூழிதுள்ளமுரசங்கடுள்ளமிகவுஞ்
செற்றுள்ளமேவுகனறுள்ளவந்துசெருவெங்களத்தினிடையே.

(இ - ள்.) மற்று உள்ள மன்னர் - மற்றுமுள்ள அரசர்கள் பலர், புடை போத - பக்கங்களில் வரவும், மழை மேனி மாயன-நீலமேகம் போலுந் திருமேனியையுடைய கண்ணன, முன்னர் வர - முன்னேசெல்லவும், உற்றுள்ள வீரரொடு - கூடப்பொருந்தியுள்ள வீரர்களுடனே, சேனை நாதன் - (தம்) சேனைத்தலைவனான திட்டத்துய்மன், அணி நிற்க - படை வகுப்பின் முன்னே நிற்கவும், ஒள் கொய் உளை மா - பிரகாசமாக கத்தரிக்கப்பட்ட பிடரிமயிரையுடைய குதிரைகள், முன் துள்ள-முனனேகுதித்துச் செல்லவுப, எழு பூழி - மேலெழுகிற புழுதி, எங்கும் துள்ள - எல்லாவிடத்தும் பரவவும், முரசங்கள்-யுத்தபேரிகைகள், மிகஉம் துள்ள-மிகுதியாக ஒலிக்கவும், செற்று உள்ளம் மேவு கனல்-கோபித்து மனத்

திற்பொருந்திய தீ [கோபாக்கினி], துள்ள - மூண்டெரியவும்,— வெம் செரு களத்தினிடை வந்து-கொடிய போர்க்களத்திலே வந்து, —(எ - று.)—"அமராடலுற்ற பொழுது" என வருங் கவியோடு தொடரும். சொற்பொருட்பின்வருநிலையணி. (295)

13. செம்பற்ப ராக முடிமா மதாணி செறிதொங்கல் வாகுவலயம்
பைம்பற்ப ராக மலர்வல்லி யோடு திருமேனி சோதி பயில்வான்
வெம்பற்ப ராக வரையூக மாக முறையால ணிந்து வெயில்கால்
அம்பற்ப ராக பதியென்ன நிற்க வமராட லுற்ற பொழுதே.

(இ - ள்.) செம்-சிவந்த, பற்பராகம் - பதுமராகரத்தினங்களைப் பதிக்கப்பெற்ற, முடி-கிரீடமும், மா-சிறந்த, மதாணி-பதக்கம், செறி-பொருந்திய, தொங்கல்-ஆரங்களும், வாகு வலயம் - தோள் வளைகளும், பை-குளிர்ந்த, ராகம் பற்பம் மலர்-செந்தாமரைப்பூவிலே (வீற்றிருக்கிற), வல்லியோடு - பூங்கொடிபோல்மெல்லிய திருமகளுடனே, திரு மேனி-(தன்னுடைய) அழகிய வடிவத்தில், சோதி பயில்வான் - ஒளிவிளங்கப்பெற்றவனாகிய கண்ணபிரான்,—வெம்-(பகைவர்களுக்குப்) பயங்கரமானதும், ராகம் - (தம்மவர்க்கு) ஆசையை (வளர்ப்பதும்), வரை-மலைபோல (எதற்குஞ் சலியாததுமாக வுள்ள), பற்பயூகம் ஆக-பத்மயூகமாக, முறையால்-ஒழுங்காக, அணிந்து-(பாண்டவசேனையைப்) படைவகுத்து,—வெயில் கால்-உஷ்ண கிரணத்தை வீசுகிற, அம் பற்பம் ராகம் பதி என்ன - அழகிய தாமரைக்கு அன்புள்ள கணவனான சூரியன்போல, நிற்க-விளங்கிநிற்க,—அமர் ஆடல் உற்ற பொழுது - (எதிரிகளோடு) போர்செய்யத் தொடங்கினபொழுது, —(எ - று.)—"அலம்புசன் வந்தனன்" என அடுத்த கவியோடு முடியும்.

எம்பெருமானது திருமேனியில் கிரீடம் முதலிய ஆபரணங்களும் இலக்குமியும் விளங்குந் தன்மையை முன் இரண்டடிகளில் விவரித்தார். சூரியனைக் கண்டமாத்திரத்தில் மலர்தலும், காணாதபொழுது குவிதலுமாகிய இயல்புபற்றித் தாமரைக்குச் சூரியனைக் கணவனென்றல், மரபு. முதலடியில், பற்பராகம் - பத்மராகம் என்னும் வடமொழித் திரிபு; நவரத்தினங்களுள் மாணிக்கத்தின் வகைகளில் ஒன்று. பதுமம் - செந்தாமரைமலர்போன்ற, ராகம் - செந்நிறமுள்ளது என்று காரணப்பெயர். மதாணி - பேரணிகலனென்பர். பாஹுவலயம் - வடசொற்றொடர். பின் மூன்று அடிகளிலும், பற்பம் - பத்மம் என்னும் வடமொழித் திரிபே. ராகம் என்னும் வடசொல்லுக்கு - இரண்டாம் அடியில் செந்நிறமென்றும், மூன்றும் அடியில் ஆசையென்றும், நான்காம் அடியில் அன்பென்றும்பொருள். பைம் பற்பம் - வாடாமல் பசுமையாகவுள்ள தாமரை யென்றுமாம். வல்லி-கொடிபோன்ற பெண்ணுக்கு உவமவாகுபெயர். மூன்றுமடியில் பற்பராகவரையூகம் என்றே எடுத்து - பற்பராகமணிதோன்றுதற்குஇடனாகை வரைவடிவான வியூகம் [அசலவியூகம்] என்றலும் ஒன்று. (296)

வேறு.

14.—வீமனுடன்பொர அலம்புசன் வருதல்.

இந்திரனு மேனையிமை யோர்களு நடுங்க
வந்தரமு மெண்டிசையு நின்றதிர வதிரர்
வெந்திறல லங்கல்புனே வீமனுடன் மலைவான்
வந்தனன லம்புசன்வ லம்புனைபு யத்தான்.

(இ - ள்.) வலம் புனை புயத்தான்-பலத்தைக்கொண்ட தோள்களையுடையவனாகிய, அலம்புசன்-அலம்புசனென்னும் அரக்கன்,—இந்திரன்உம் ஏனை இமையோர்கள்உம் நடுங்க - தேவேந்திரனும் மற்றைத்தேவர்களும் நடுக்கமடையவும், அந்தரம்உம் எண் திசைஉம் நின்று அதிர-மேலுலகமும் எட்டுத்திக்குக்களும்மிக அதிர்ச்சிபெறவும், அதிரா-கர்ச்சனைசெய்துகொண்டு, வெம் திறல் அலங்கல் புனை வீமனுடன் மலைவான்-கொடியபோருக்கு (அடையாளமாகத் தும்பைப்பூ) மாலை சூடிய வீமனுடனே போர்செய்வதற்கு, வந்தனன்—; (எ - று.)—வலம் - வடசொல் திரிபு.

இதுமுதல் பதினைந்து கவிகள்-கீழ் முதற்போர்ச்சருக்கத்தின் ஐம்பதாங்கவி போன்ற கலிவிருத்தங்கள். (297)

15.—அலம்புசன்வருவதுகண்டு வீமன் தேரினின்று இறங்கி அவ்வரக்கனெதிரே யோடுதல்.

செருவில்வெருவாநிருதசேகரன்வயப்போர்
மருவுசுடர்வாளினுடன்வந்தநிலைகாணு
விரவிவருதேரனையதேரின்மிசையிழியா
வுருமுருமெனுவிரைவினேடியெதிர்வந்தான்.

(இ - ள்.) செருவில் வெருவா - போரில் அஞ்சாத, நிருத சேகரன் - அரக்கர்களுக்கு முடியணிபோலச்சிறந்தவனான அலம்புசன், வய போர் மருவு-வலியபோரைச் செய்தற்குப்பொருந்திய, சுடர் வாளினுடன் - ஒளியையுடைய வாளாயுதத்துடனே, வந்த - (தன்னையெதிர்த்து) வந்த, நிலை-நிலைமையை, காணு - பார்த்து,—(வீமன்) இரவி வரு தேர் அனைய தேரின் மிசை இழியா-சூரியன் வருகிற தேரையொத்த (தன்) தேரின் மேல் நின்றுஇறங்கி,உரும் உரும் என-(காண்பவர்) இடி இடி என்று சொல்லும்படி, விரைவின் எதிர் ஓடிவந்தான் - வேகமாக (அவ்வரக்கனது)எதிரில் ஓடிவந்தான்; (எ - று.)— அடுக்கு-அச்சம்பற்றியது. இரவிவருதேர் தடைப்படாது விரைந்து செல்லுதற்கு உவமை. (298)

16.—வீமன் அலம்புசனுடைய ஒருதோளைத் துணித்தல்.

யாளியொரிரண்டிகல்புரிந்ததெனவிகலா
மீளிமையினுலும்வலியாலும்விறன்மிக்கோன்
வாளின்மிசைவாளதனைவைத்தடலரக்கன்
றோளிலொருதோணிலமுறும்படிதுணித்தான்.

(இ - ள்.) (இவ்விருவரும்), யாளி ஓர் இரண்டு இகல்புரிந்தது என - ஓர் இரண்டுயாளிகள் (ஒன்றோடொன்று) போர்செய்தது போல, இகலா - (தம்மில்)போர்செய்ய, — (பின்பு அப்போரில்), மீளிமையினால்உம் வலியால்உம் விறல் மிக்கோன் - பராக்கிரமத்தாலும் தேகபலத்தாலும் சிறப்புமிகுந்த வீமன், வாளின்மிசை வாள்அதனை வைத்து - (அப்பகைவனது) வாளின் மேல்(தன்) வாளை வைத்து, (தாக்கிஅதைத் துணித்து), அடல் அரக்கன் தோளில் ஒரு தோள் நிலன் உறும்படி துணித்தான்-கொடிய அவ் விராக்கதனது தோள்களில் ஒருதோளையும் தரையிலே விழும்படி வெட்டித்தள்ளினான்; (எ - று.)—யாளி - சிங்கம்; வேறொரு விலங்குமாம். (299)

17.—அலம்புசன் 'மற்போர்புரிக' என்று வீமனை நெருங்குதல்.

அற்றதிரடோடுணியவச்சமறவேநின்
றுற்றுழியும்வாளுரகமென்னவுளனாகி
மற்றையொருதோளின்மிசைதட்டியினிமற்போர்
பற்றுகெனவீமனுடல்பற்றுபுபுகுந்தான்.

(இ - ள்.) அற்ற - (இவ்வாறு வீமனால்) அறுக்கப்பட்ட, திரள் தோள் - திரண்ட (தனது) ஒரு தோள், துணிய - துண்டித்து, விழவும், (அவ்வரக்கன்), அச்சம் அற நின்று - பயமில்லாமலே சலியாமல்நின்று, உற்றஉழி உம் - (அத்)துன்பம் நேர்ந்தவிடத்தும், வாள் உரகம் என்ன உளன் ஆகி - கொடியபாம்புபோல (ச் சீற்றத்தை)உடையவனாய், மற்றை ஒரு தோளின் - மற்றொரு தோளினால், மிசை தட்டி -(உடம்பின்)மேல் தட்டிக்கொண்டு, இனி மல் போர் பற்றுக என-'இனி மற்போர்தொடங்குவாயாக' என்று (வீமனை நோக்கிச் சொல்லி), வீமன் உடல் பற்றுபு புகுந்தான் - அவ்வீமனது உடம்பைத் தொடர்ந்து நெருங்கினான்; (எ-று.)

உற்றுழி, பற்றுகென - தொகுத்தல் விகாரம். பற்றுபு-செய்பு என்னும் வாய்பாட்டுத் தெரிநிலை வினையெச்சம்; 'பு' விகுதியே இறந்தகாலங் காட்டும். உளனாகி - கையையுடையவனாயென்பாருமுளர். (300)

18.—வீமனும் அலம்புசனும் கடுமையாக மற்போர்புரிதல்.

குத்துவர்திரிப்பரிருகுன்றனையதோள்கொண்
டொத்துவர்வயப்புலிகளென்னவுடனோடித்
தத்துவருரத்தொடுரமுழ்கமுதுகர்போன்
மொத்துவர்சினத்தொடெதிர்முட்டுவர்சிரத்தால்.

(இ-ள்.) (இவ்விருவரும் ஒருவரையொருவர்), குத்துவர் - (கையால்) குத்துவார்கள்; திரிப்பர் - (எடுத்துச்) சுழற்றுவார்கள்; இரு குன்று அனைய தோள் கொண்டு - இரண்டுமலையையொத்த தோளால், ஒத்துவர் - மோதுவார்கள்; வய புலிகள் என்ன - வலிமையையுடைய புலிகள்போல, உடன் ஓடி-விரைந்து ஓடிவந்து,

உரத்தொடு உரம் மூழ்க - மார்போடு மார்புஅழுந்த, தத்துவர் - பாய்வார்கள்; சினத்தொடு - கோபத்தோடு, மொத்துவர் - அடிப்பார்கள்; முது தகர்போல் - பெரிய ஆட்டுக்கடாக்கள்போல, சிரத்தால் எதிர் முட்டுவர் - தலையால் எதிரில் தாக்குவார்கள்;(எ - று.) எதிர்க்கும்போது இருவர் தோளும் இருகுன்றனைய என்றபடி.

19.—அரக்கன் மற்போரில் தோற்று வில்லெடுக்க, இருவரும் விற்போர் புரிதல்.

மல்வலியழிந்துபிறைவாளெயிறரக்கன்
வில்வலியறிந்திடுதுமென்றுவில்லெடுத்தான்
கல்வலியதோள்விடலைகன்றிவில்லெடுத்தான்
தொல்வலியினோடிருவருங்கணைதொடுத்தார்.

(இ - ள்.) மல் - (அங்ஙனஞ்செய்த) மற்போரில், பிறை வாள் எயிறு அரக்கன் - பிறைச்சந்திரன்போன்ற கூர்மையான பற்களை யுடைய அலம்புசன், வலி அழிந்து-பலமொடுங்கி, வில் வலி அறிந்திடுதும் என்று - '(இனி) விற்போரில் (நமக்குள்ள) வலிமையை அறிவோம்' என்றுசொல்லி, வில் எடுத்தான் - (அவ்வொற்றைக்கையில்) வில்லை யெடுத்துக்கொண்டான்; கல்வலிய தோள் விடலை - கற்போல்வலிமையுடைய தோள்களையுடைய வீரனான வீமனும், கன்றி - கோபித்து, வில் எடுத்தான்—; (உடனே), தொல் வலியினோடு - பழமையான [முதிர்ந்த] பலத்துடனே, இருவர்உம்-இந்தஇரண்டு பேரும், கணை தொடுத்தார்-அம்புகளைத் தொடுத்தார்கள்; (எ-று.)

ஒருகையற்று மற்றொருகையில் வில்லையேந்திய அரக்கன் பற்களால் அம்பையெடுத்துத் தொடுத்து விடுத்தா னெனஅறிக: அதைக்குறிப்பிக்கவே, 'எயிறரக்கன்' என்றார்; முதற்போர்ச்சருக்கத்தின் 28 ஆம் பாட்டை இங்கே காண்க. எயிறரக்கன் - சிறுபான்மை வேற்றுமையில் உயிர்த்தொடர் றகர வொற்று இரட்டாது நின்றது. விடலை-ஆண்பாற்சிறப்புப்பெயர். (303)

20.—வீமஅலம்புசரின் போர்த்திறனைத் தேவர்கள் கொண்டாடுதல்.

கணைகளவையொன்றினுடனொன்றெதிர்கடித்துப்
பிணைபட விழுந்தசெயல்கண்டுநனிபேதுற்
றிணையிலதிவர்க்கினியிரண்டனிகினிக்கும்
புணையுமிவரென்றனர்புரந்தரனொடிமையோர்.

(இ - ள்.) கணைகள் அவை - (இரண்டுபேரும் பிரயோகித்த) அம்புகள், ஒன்றினுடன் ஒன்று எதிர் கடித்து - ஒன்றோடொன்று எதிரிலே கௌவிக்கொண்டு, பிணை பட விழுந்த - இரண்டும் ஒருபடியாகக் கீழ்விழுந்திட்ட, செயல் - செய்கையை, கண்டு - பார்த்து, நனி பேது உற்று-மிகுதியாக மதிமயக்கத்தையடைந்து [திகைத்து], புரந்தரனொடு இமையோர் - (போர்காண வானத்து வந்த) இந்திரனும் (மற்றைத்) தேவர்களும், 'இவர்க்கு இனி இணை இலது - இவ்விருவர்க்கும் வேறு உவமையில்லை; இரண்டு அனி

கினிக்கும் - இரண்டுசேனைகளுக்கும், புணை உம் - (போர்க்கடலைக்கடக்கத்) தெப்பமாகவுள்ளவர்களும், இவர் - இவர்களே,' என்றனர் - என்றுசொல்லிக் கொண்டாடினார்கள்; (எ - று.)— பிணைபட - ஒன்றோடொன்றுகலக்க. (303)

21.—இதுமுதல்ஐந்துகவிகள்-வீமஅலம்புசர்புரிந்த கடும்போரில் வீமனால் அரக்கனுயிரழிய மற்றையரக்கர்கள் கெட்டமையைக் கூறும்.

மலையினையும்வாசுகியையும்பொருவுநாணுஞ்
சிலையுமறமேலொருசெழுங்கணைதொடுத்தான்
தொலைவில்பகையானபகன்மார்புமிருதோளுங்
குலைகுலையுமாறுபலகுத்தினுயிர்கொண்டான்.

(இ - ள்.) தொலைவு இல் - அழிதலில்லாத, பகை ஆன் - (பலஉயிர்களுக்குப்) பகைவனான, பகன்-பகாசுரனது,மார்புஉம்—, இரு தோள் உம்—, குலைகுலையும் ஆறு - நடுநடுங்கி அழியும்படி, பல குத்தின் - (ஆயுதமில்லாமல்) பல கைக்குத்துக்களால்,உயிர் கொண்டான்-அவனுயிரை(முன்பு) பறித்தவனான வீமன், (அவன் தம்பியான அலம்புசனது), மலையினைஉம் வாசுகியைஉம்பொருவும் சிலைஉம் நாண்உம் - (சிவபிரானுக்கு வில்லாகிய) மேருவையும் (வில்நாணியாகிய) வாசுகியையும் ஒத்த வில்லும் நாணியும், அற-துணிபடும்படி, மேல் - அவனெதிரிலே, ஒரு செழு கணை தொடுத்தான் - சிறந்த ஒருஅம்பைச் செலுத்தினன்; (எ - று.)

இரண்டாம்போர்ச்சருக்கத்து "மேருவை வளைத்து நெடு வாசுகி பிணித்து" என்றது காண்க. இனி, முதலடிக்கு - மந்தர மலையையும் அதைச் சுற்றிக் கடைகயிறான வாசுகியையும் ஒத்த எனப்பொருள் கொள்ளுதலும் ஒன்று. மலையினைப் பொருவும் சிலையும், வாசுகியைப் பொருவும் நாணும் என மாறவேண்டுதலால், பெயர்களும் பெயர்ப்பயனிலைகளுமாய் நின்ற **எதிர்நிரனிறைப் பொருள்கோள்.** குலைகுலைதல்-இரட்டைக்கிளவி. குத்து - முதனிலைத் தொழிற்பெயர். பி- ம்: நனிகுத்தி. (304)

22. மந்தரருமந்தரருமென்னவமர்மலைவா
னந்தரமிதல்லவெனவந்தரநெறிப்போய்க்
கந்தரநெடுங்கிரிகரத்தினிலெடுத்தச்
சுந்தரன்வயங்குதிரடோடனிலெறிந்தான்.

(இ - ள்.) மந்தரம்உம் மந்தரம்உம் என்ன - இரண்டுமந்தர மலைகள்(இருந்து அவை ஒன்றோடொன்று போர்செய்தாற்)போல, அமர் மலைவான்-(வீமனுடன்) போர்செய்பவனான அலம்புசன், இது அந்தரம் அல்ல என - இப்படிப் போர்செய்தல் (வெல்வதற்கு) உபாய மன்றென்று கருதி, அந்தரம் நெறி போய்-ஆகாச மார்க்கத்திற் சென்று, கந்தரம் நெடு கிரி - மேகங்கள் தவழும்படியான பெரிய ஒருமலையை, கரத்தினில் எடுத்து-ஒற்றைக்கையில் எடுத்து, அ சுந்தரன் வயங்கு திரள் தோள் தனில் எறிந்தான் - அழகிய அந்த வீமனது விளங்குகிற வலியதோளின்மேல் வீசியெறிந்தான்; (எ - று.)

மந்தரமும் மந்தரமு மென்ன - இல்பொருளுவமை; இருவரும் வலிமையில் ஒத்தவரென்பதை விளக்கும். இதல்ல - ஒருமைப் பன்மைமயக்கம். இது அந்தரமல்ல என - இந்தப்பூமி (நாம் போர் செய்தற்கு ஏற்ற) இடமல்லவென்று எண்ணி எனினுமாம். கந்தரம்-நீரைத்தரிப்பது: மேகம்: வடசொல். இனி, கந்தரம் - குகையுமாம். பி - ம்: எடுத்துச். (305)

23. எறியுமளவிற்குரிசிலிளவறிருமைந்தன்
குறியினெடுவெஞ்சிலைகுனித்தருகுநின்றான்
பொறியிலவன்வீசியபொருப்பொரணுவாகி
முறியும்வகைபல்பகழிமுகிலெனவிடுத்தான்.

(இ - ள்.) எறியும் அளவில்-(அரக்கன் மலையை வீமன் தோளில்) வீசிய அளவில்,—குறியின் நெடு வெம் சிலை குனித்து அருகு நின்றான் - (வீமனுக்குத் துணைசெய்யுங்) கருத்தோடு கொடியவில்லைவளைத்து அவனருகில நின்றவனாகிய, குரிசில் இளவல் திரு மைந்தன - அவ்வீமராசனது தம்பியான அருச்சுனனது சிறந்த புத்திரனான அபிமந்யு, பொறியில் அவன் வீசிய பொருப்பு ஓர் அணு ஆகி முறியும் வகை-(வீமனது) தோளில் அவ்வரக்கன் எறிந்த அந்தமலை ஒரு சிறுபொடியாய் அழியும்படி, பல் பகழி-பல அம்புகளை, முகில் என - மேகம் (மழைபொழிவது) போல, விடுத்தான் - செலுத்தினான்; (எ - று.)

குறியினெடு - இலக்கை எதிர்நோக்கி என்னவுமாம். பொறி இலவன் என எடுத்து, (ஒருதோளாகிய) உறுப்பில்லாதவ னென்றும், அறிவற்றவனென்றும், (இனிவாழும்) விதிஇல்லாதவ னென்றும் கொள்ளினுமாம். (306)

24. வில்லபிமன்வெங்கணைகள்விசையொடவனெறியுங்
கல்லசலநீறுபடுவித்ததிறல்கண்டே
கொல்லவினிவேண்டுமெனவெய்யதொருகூர்வேல்
வல்லடலரக்கனகன்மார்பின்மிசைவிட்டான்.

(இ - ள்.) வில் அபிமன் வெம் கணைகள்-விற்போரில்வல்ல அபிமனது வெவ்விய அம்புகள், விசையொடு-வேகத்தோடு, அவன் எறியும் கல் அசலம் நீறு படுவித்த - அவ்விராக்கதன் (தன்மேல்) வீசின கல்மலையைப் பொடிபடச்செய்த, திறல்-வல்லமையை, கண்டு - பார்த்து,—(வீமன்), இனி கொல்லவேண்டும் என-'இனி இவ்வரக்கனைக் கொன்றுவிடவேண்டும்' என்று கருதி, வெய்யது ஒரு கூர் வேல் - கொடியதொரு கூர்மையையுடைய வேலாயுதத்தை, வல் அடல் அரக்கன் அகல் மார்பின்மிசை விட்டான் -மிகுந்தவலிமையையுடைய அலம்புசனது பரந்த மார் பின்மேல் எறிந்தான்; (எ - று.)

அசலத்திற்குக் கல்என்ற அவசியமில்லாத அடைமொழி கொடுத்தது, அதன் உறுதியைக் குறிக்கும். வல் அடல் - ஒரு பொருட்பன்மொழி. விட்டான் என்பதற்கு - (வீமன்) தோன்றா எழுவாயாதலை, மேல் 27 - ஆம் பாட்டால் அறிக. விசையொடு

நீறுபடுவித்த என இயையும்; விசையொடு எறியும் என இயைப்பினும் அமையும். (307)

25. விட்டவடிவேலுருவவேலுருவுமுன்னே
பட்டவனும்வீழவிருபாலும்வருசேனை
முட்டவுமிவன்கணைமுனைக்கெதிரிலக்காய்க்
கெட்டனர்நிசாசரர்கள்கிரிகளெனவீழ்ந்தார்.

(இ - ள்.) விட்ட - (வீமன்) எறிந்த, வடி வேல் - கூர்மையான வேலாயுதம், உருவ - (அவ்வரக்கனுடம்பைத்) துளைக்க, வேல் உருவும் முன்ஏ - அவ்வேல் (அங்ஙனம்) ஊடுருவுதற்கு முன்னே [ஊடுருவினவளவிலே என்றபடி], அவன்உம் - அந்த அலம்புசனும், பட்டு வீழ - இறந்து கீழ்விழ, இருபால்உம் வரு சேனை முட்டஉம் - (அவ்வரக்கனது) இரண்டு பக்கத்திலும் உடனவந்த சேனைமுழுவதும், இவன் கணை முனைக்கு எதிர் இலக்கு ஆய் - இவ்வீமனது அம்புநுனிக்கு எதிர்ப்பட்ட லக்ஷ்யமாகி, நிசாசரர்கள்- (அச்சேனையிலுள்ள பல) இராக்கதர்கள், கெட்டனர் - அழிந்தவர்களாய், கிரிகள் என வீழ்ந்தார்-(சிறகு அறுபட்ட) மலைகளைப்போல விழுந்திட்டார்கள்; (எ - று.)

நிசாசரர் - இராத்திரிகாலத்திற் சஞ்சரிப்பவர்; காரணப்பெயர்; நிசிசரரெனவும் வரும்: வடசொல்: அரக்கர்க்குப்பகலினும் இரவில் வலிமை மிகுதி. முட்டவும் - நெருங்கித்தாக்கவும் எனினுமாம். முட்ட=முற்ற. ஆய் - ஆக எனத் திரித்தலுமாம். (308)

26.— வீமன் கதாயுதத்தாற் பலரை மாய்த்தல்.

ஆறுபடிநூறுபடியாயிரமரக்கர்
மாறுபடுபாடைவடமன்னரொருகோடி
யூறுபடவெங்கதைகொடன்றவனுடைக்கச்
சேறுபடுமூளைகடெறித்தனசிரத்தால்.

(இ - ள்.) ஆறு படி நூறு படி ஆயிரம் அரக்கர் - அறுநூறுயிரம் இராக்கதர்களும், மாறுபடு பாடை வட மன்னர் ஒரு கோடி- (ஒருவரோடொருவர்) பேதப்பட்ட பாஷைகளையுடைய வடதேசத்திலுள்ள அரசர்கள் ஒரு கோடிபேரும், ஊறு பட - காயப்படும் படி, அவன் - அவ்வீமன், அன்று-அப்பொழுது, வெம் கதை கொடு-கொடியகதாயுதத்தால், உடைக்க - பிளக்க,— (அவர்களுடைய), சிரத்தால் - (பிளந்த) தலைகளால், சேறு படும் மூளைகள் தெறித்தன - சேறாகப்பொருந்திய மூளைகள் வெளிச்சிந்தின;

படி - அளவு, மடங்கு. ஆறுபடி நூறு - ஆறளவுகொண்ட நூறு: அறுநூறு: அவ்வளவுகொண்ட ஆயிரம் - ஆறுபடிநூறுபடியாயிரம் [அறுநூறுயிரம்]. படிதல்-அமைதல்என்பாருமுளர். பாடை-பாஷா. பி - ம்: மூளைகடிறந்தனர். (309)

27.—தேவர்கள் வீமனைப் புகழ்தல்.

முற்பகலின்மைந்தனைமுருக்கியவரக்கன்
பிற்பகலில்வீழவடிவேல்கொடுபிளந்தான்

சொற்பகலிலானிளவலென்றனர்துதித்தார்
அற்பகலிலாவுலகில்வாழமரரெல்லாம்.

(இ - ள்.) (அப்பொழுது), அல் பகல் இலா உலகில் வாழ் அமரர் எல்லாம் - (இவ்வுலகிற்போல) இராத்திரியும் பகலு மில்லாத சுவர்க்கலோகத்தில் வாழ்கிற தேவர்கள் யாவரும்,'முன் பகலில்-முந்தினநாளிலே, மைந்தனை - அருச்சுனன் மகனை இராவானை, முருக்கிய-கொன்ற, அரக்கன்-அலம்புசன், பின்பகலில்-அடுத்தநாளிலே, வீழ-இறந்துவிழும்படி, சொல் பகல் இலான் இளவல்-(சொன்ன) சொல் மாறுதலில்லாத தருமனுக்குத் தம்பியான வீமன், வடிவேல் கொடு பிளந்தான் - கூர்மையான வேலாயுதத்தால் (அவனைப்) பிளந்திட்டான்,' என்றனர் - என்று சொல்லி, துதித்தார்-(வைரந்தீர்த்த வீமனது திறமையைக்) கொண்டாடினார்கள்; (எ - று.)

சூரியனது உதய அஸ்தமனங்களாலாகிய பகல் இரவு என்னும் காலவேறுபாடுகள் அச்சூரியமண்டலத்துக்கு மிகமேலுள்ள தேவலோகத்தில் இல்லையாதலால், 'அற்பகலிலா வுலகு' எனப்பட்டது. மூன்றாமடியில், பகல்-பகுதல்: தொழிற்பெயர்: பகு - பகுதி, அல் - விகுதி. முற்பகல், பிற்பகல் என்பன-இங்கே, ஒருபகலின் முன்பின்பகுதியை உணர்த்துவன அல்ல: ''முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற்கண்டுவிடும்'' என்ற திருக்குறள் இங்குக் காணத்தக்கது. (310)

28.—அருச்சுனனம்பாற் பல மன்னர் மடிதல்.

காசியர்கள் சேதியர்கண் மாளவர்க லிங்கர்
பூசலிடை யேழுபதி னாயிரவர் பொங்கிக்
கேசவ னடாவுகிளர் தேர்கெழு சுவேத
வாசியுடை யான்விசயன் வாளியின்ம டிந்தார்.

(இ - ள்.) காசியர்கள் - காசிநகரத்தாரும், சேதியர்கள்-சேதிநாட்டாரும், மாளவர் - மாளவதேசத்தவரும், கலிங்கர்-கலிங்கநாட்டவரும் ஆகிய, ஏழு பதினாயிரவர் - எழுபதினாயிரம்பேர், பூசலிடை - போரிலே, பொங்கி - உக்கிரமாகஇருந்து [கடும்போர் செய்து],—கேசவன் நடாவு - கண்ணன் செலுத்துகிற, கிளர்தேர்-விளங்குகிற தேரில், கெழு-பொருந்திய, சுவேதவாசி உடையான் - வெள்ளைக்குதிரைகளையுடையவனாகிய, விசயன் - அருச்சுனனது, வாளியின் - அம்புகளால், மடிந்தார் - இறந்தார்கள்; (எ - று.)

நான்குவெள்ளைக்குதிரைகள் பூட்டியதொரு சிறந்ததேர், அக்கினிதேவனால் அருச்சுனனுக்குக் காண்டவதகனகாலத்தில் அளிக்கப்பட்டது: இவ்வெள்ளைப்பரிகளை யுடைமையால், 'சுவேதவாகனன்' என்று அருச்சுனனுக்கு ஒருபெயர். ஸ்வேதவாஜீ - வடமொழித்தொடர். கெழு-சாரியையுமாம். (311)

வேறு.

29. — தம்சேனை அழிதல்கண்டு வீடுமன் சினந்து போர்க்குச் செல்லுதல்.

துரகத் தடந்தேர்த் தனஞ்சயன்கை வரிவெஞ் சாபஞ் சொரிகணையா
லுரகத் துவசன் பெருஞ்சேனை யொருசா ருடைய வொருசாரிற்
சருகொத் தனில குமரன்கைத் தண்டா லுடையக் கண்சிவந்து
கருகித் திருகி மேனடந்தான் கங்கா நதியா டிருமைந்தன்.

(இ - ள்.) துரகம் - குதிரைகள்பூட்டிய, தட - பெரிய, தேர் - தேரையுடைய, தனஞ்சயன் -அருச்சுனனது, கை-கையிற்பிடித்த, வரி - கட்டமைந்த, வெம் சாபம் - கொடிய வில், சொரி-பொழிந்த, கணையால் - அம்புகளால், உரகம் துவசன் பெரு சேனை-பாம்புக் கொடியனுன துரியோதனனது பெரியசேனை, ஒரு சார்-ஒருபக்கத் தில், உடைய - அழியவும்,—ஒரு சாரில் - மற்றொருபக்கத்தில், அனிலகுமரன் கை தண்டால் - வாயுகுமாரனுன வீமனதுகையி லுள்ள கதாயுதத்தால், சருகு ஒத்து - (பெருங்காற்றிற்பட்ட) உலர்ந்த இலைகள்போல, உடைய - (துரியோதனசேனைகள்)அழிய வும்,—(கண்டு), கங்காநதியாள் திரு மைந்தன் - கங்கைநதியின் சிறந்தபுத்திரனுன வீடுமன், (கோபத்தால்), கண் சிவந்து-கண்கள் செந்நிறமடைந்தும், கருகி - முகங்கறுத்தும், திருகி - மாறுபட்டு, மேல் நடந்தான் - (எதிரிகள்) மேல் போருக்குச் சென்றான்; (எ - று.) —கருகி - மனந்தவித்து என்றுமாம்.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - கீழ் நான்காம்போர்ச் சருக்கத்தின் இருபத்து மூன்றுங்கவிபோன்ற அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தங்கள். (312)

30.—வீடுமன்முதலோர் பாஞ்சாலர் முதலானுரோடு பொருதல்.

பட்டக்களிற்றுப்பாய்புரவிப்பைம்பொற்றடந்தேர்ப்பாஞ்சாலர்
திட்டத்துய்மன்முதலானோர்சிகண்டியுடனேயெதிர்தோன்ற
வட்டக்கவிகைவீடுமனுமன்னற்கிளையகாளையரு
மெட்டுத்திக்கிற்காவலருமவரோடெய்தியிகல்செய்தார்.

(இ - ள்.) (அப்பொழுது), பட்டம் களிறு-நெற்றிப்பட்டத்தை யுடைய யானைகளையும், பாய் புரவி - பாய்ந்துசெல்லுங் குதிரை களையும், பைம் பொன் தட தேர் - பசும்பொன்னாலாகிய பெரிய தேர்களையுமுடைய, பாஞ்சாலர் - பாஞ்சாலதேசத்து அரசர்க ளாகிய, திட்டத்துய்மன் முதலானோர் - திருஷ்டத்யும்நன் முத லியவர், சிகண்டியுடனே எதிர் தோன்ற - சிகண்டியோடு எதிரில் வர,—வட்டம் கவிகை வீடுமன்உம் - வட்டவடிவமான குடையை யுடைய பீஷ்மனும், மன்னற்கு இளைய காளையர்உம் - துரியோதன ராசனுக்குத் தம்பியான வீரர்களும், எட்டு திக்கில் காவலர்உம் - எட்டுத்திசையினின்றும் (வந்துள்ள மற்றும் பல) அரசர்களும், அவரோடு எய்தி இகல் செய்தார் - அவர்களோடு நெருங்கிப் போர்செய்தார்கள்; (எ - று.) (313)

31.— வீடுமன்கணையால் பாஞ்சாலரிற்பலர் தமதுவாகனங்களோடு படுதல்.

வரிவெஞ்சிலைக்கைக்கௌரவர்க்குமுதலாமுதல்வன்வடிக்கணைகள்
தெரியுங்கணத்திற்றெரியாமற்றேருந்தாமுஞ்சிலர்பட்டார்
கரியுந்தாமுஞ்சிலர்பட்டார்கலுழ்வாய்மதுகைக்கால்வேகப்
பரியுந்தாமுஞ்சிலர்பட்டார்படாதாருண்டோபாஞ்சாலர்.

(இ - ள்.) வரி - கட்டமைந்த, வெம் - கொடிய, சிலை-வில்லை யேந்திய, கை - கையையுடைய, கௌரவர்க்கு முதல் ஆம் முதல்வன் - (அக்காலத்திலுள்ள) குருகுலத்தார்க்குள் மூத்தவனை சிறந்த வீடுமன், வடி கணைகள் - கூர்மையான அம்புகளை, தெரியும் கணத்தில்-ஆராய்ந்து விடும்பொழுதே,—(பகைவர்களில்), தெரியாமல் - (அழிவது) தெரியாமல், தேர்உம் தாம்உம் சிலர் பட்டார்- தேர்களும் தாங்களுமாகச் சிலர் அழிந்தார்கள்; கரிஉம் தாம்உம் சிலர் பட்டார் - யானைகளுந் தாங்களுமாகச் சிலர் அழிந்தார்கள்; கலுழ் வாய் மதுகை கால் வேகம் பரிஉம் தாம்உம் சிலர் பட்டார்- நுரையையுடைய வாயையுடையனவும் வலிமையையுடையனவும் காற்றுப்போன்ற வேகத்தையுடையனவுமாகிய குதிரைகளுந் தாங்களுமாகச் சிலர் அழிந்தார்கள்; (இவ்வாறு), பாஞ்சாலர்-பாஞ்சால தேசத்தாருள், படாதார் உண்டுஓ - (வீடுமன்முன்) பங்கப்படாதவர்கள் உளரோ? [யாவரும் பங்கப்பட்டனர்]; (எ - று.)—கால் வேகம்-கால்களின் விசையுமாம். 'கலிவாய்' என்ற பாடத்துக்கு ஒலி அல்லது செருக்கு வாய்ந்த பரி என்க: "கலிமான்" என்று குதிரையைக் கூறுதல் காண்க. (*314*)

32.—வீடுமன் சிகண்டியின்கணைக்கு இலக்காதல்.

நீயுங்ககனங்குடியேறநின்பேருடலநீணிலத்திற்
றேயும்படிநிற்பொரநின்றேனென்றேசொல்லாயிரஞ்சொல்லிச்
சேயுந்தனக்குநிகரில்லாச்சிகண்டிகடுங்காற்சிலைவாங்கிக்
காயுங்கணைகட்கிலக்கானுன்காமன்கணைக்குங்கலங்காதான்.

(இ - ள்.) (அப்பொழுது), சேய்உம் தனக்கு நிகர் இல்லா - முருகக்கடவுளும் (பலபராக்கிரமங்களில்) தனக்கு ஒப்பாகப்பெறாத, சிகண்டி—, (வீடுமன்முன் வந்து), 'நீஉம் ககனம் குடி ஏற - நீயும் மேலுலகத்தை அடையவும், நின் பேர் உடலம் - உனது பெரிய உடம்பு, நீள் நிலத்தில் தோயும்படி - பெரியபூமியிலே விழும்படியும், நின் பொர - உன்னைப் போர்செய்து அழிக்க, நின்றேன் - வந்துநின்றேன்', என்று—, சொல் ஆயிரம் சொல்லி - மிகப்பலவான வீரவாதங்களைச் சொல்லிக்கொண்டு, கடு கால் சிலை வாங்கி- பயங்கரமான விற்கழுந்தை வளைத்து, காயும் - கோபித்துளறிகிற, கணைகட்கு - அம்புகளுக்கு,—காமன் கணைக்குஉம் கலங்காதான் - மன்மதனது அம்புக்கும் சலியாத வீடுமன், இலக்கு ஆனன் - குறியானான்; (எ - று.)

சிகண்டி வீரவாதஞ்செய்து வீடுமன்மேல் கொடிய அம்புகளை எய்தனனென்பதாம். காமன்கணைக்கும், உம் - உயர்வுசிறப்பு;

அது-எல்லாவுயிர்களையும் தன்வசப்படுத்துகிற மன்மதபாணத்தின் பேராற்றலை விளக்கும். காமன் கணைக்கும் கலங்காதான், என்றது, எந்தமகளிரையும் விரும்பி மணஞ்செய்யாத வீடுமனது விரதவுறுதியை விளக்கும். (315)

33.—அப்போது துச்சாதனன் அம்பெய்து சிகண்டியின் கொடி தேர் வில் இவற்றைச் சிதைத்தல்.

வில்லோன்சரங்கள்படநகைசெய்தவன்மேற்றனதுவில்வளையாத்
தொல்லோனின்றநிலைகண்டுதுச்சாதனன்றன்சுடுசரத்தாற்
பல்லோர்வியப்பத்தங்கள்குலப்பகைவன்சேனுபதியிளவல்
செல்லோடணவுநெடுங்கொடியுந்தேருஞ்சிலையுஞ்சிதைவித்தான்.

(இ - ள்.) வில்லோன் - வில்லில்வல்லவனான சிகண்டியினது, சரங்கள் - அம்புகள், பட - (தன்மேற்) படவும், தொல்லோன் - பெரியவனான வீடுமன், நகை செய்து-சிரித்துக்கொண்டு, அவன்மேல் தனது வில்வளையா-அச்சிகண்டியின்மேல் (எதிர்த்தற்குத்) தனது வில்லை வளைக்காமல், நின்ற—, நிலை-நிலைமையை, கண்டு—, துச்சாதனன்—, தன் சுடு சரத்தால் - தனது வெவ்விய அம்புகளால், பல்லோர் வியப்ப - (காண்பவர்) பலரும் அதிசயிக்கும்படி, தங்கள் குலம் பகைவன் சேனுபதி இளவல் - தங்கள்குலத்துக்குப் பகைவனான தருமனது சேனைத்தலைவனாகிய திட்டத்துய்மனுடைய தம்பியான அந்தச்சிகண்டியினது, செல்லோடு அணவு நெடுகொடிஉம் - மேகத்தோடுபரிசிக்கிற நீண்ட துவசத்தையும், தேர்உம் - தேரையும், சிலைஉம் - வில்லையும், சிதைவித்தான் - அழியச்செய்தான்; (எ - று.)

பெண், முன்புபெண்ணாயிருந்தவன், பெண்பெயருடையான், பெண்வடிவுகொண்டவன் என இவர்மீது அம்புதொடுப்பதில்லையென்பது, வீடுமனது விரத மாதலால் முதலிற் பெண்ணாகப் பிறந்து பின்பு யக்ஷனது அருளால் ஆண்தன்மையைப் பெற்ற சிகண்டியுடன் வீடுமன் போர்செய்யவில்லை யென்க. நகைசெய்தது - அவன் இயற்கையில் ஆண்தன்மையில்லாத இழிவைக் கருதி யென்க. முதனூலில் சிகண்டியைத் திட்டத்துய்மனது தமையனென்று கூறியுள்ளதற்கு ஏற்ப, 'தங்கள்குலப்பகைவன் சேனுபதி யிளவல்' என்பதற்கு - அன்மொழித்தொகையாக, திட்டத்துய்மனைத் தம்பியாகவுடையவனென்று பொருள்கொள்ளுமாம். செல் - செல்லுவது, காரணக்குறி. பி - ம். செல்லோடளாவு. (316)

34.—சிகண்டிதோற்றது கண்டு அருச்சுனன்தேரைச் செலுத்திவர எதிரிகள் புறமிடல்.

இவனேவிலக்காமென்பகழிக்கென்பான்போலவெங்குலத்தி
லவனேசெங்கைச்சிலைவீழ்த்தானரசன்றம்பிக்கழிந்திவனுந்
தவனேதயத்திலிருவென்னச்சாய்ந்தானென்றுதனஞ்சயன்றன்
பவனேதயத்தேர்நடுவிட்டான்பணியார்தாமும்புறமிட்டார்.

(இ-ள்.) (அதுகண்டு), 'எம் குலத்திலவன்ஓ - எங்கள் குலத்தில் மூத்தவனை வீடுமனே, என் பகழிக்கு இவன்ஓஇலக்கு ஆம் என்பான் போல - 'எனது அம்புகளுக்கு (இயற்கையில்) ஆண்மையில்லாத இச்சிகண்டியோ ஏற்ற குறியாவன்' என்று இகழ்பவன்போல, செம் கை சிலை வீழ்த்தான் - (சிகண்டியோடு) போர்செய்யாமல் சிவந்த கையிற்பிடித்துள்ள (தன்) வில்லைக் கீழே போகட்டான்; (பின்பு), இவன் உம் - இச்சிகண்டியும், அரசன் தம்பிக்கு அழிந்து - துரியோதனராசனது தம்பியான துச்சாதனனுக்குத் தோற்று, தவன(ன்) உதயத்தில் இருள் என்ன - சூரியனது உதயகாலத்தில் இருள்கெடுதல்போல, சாய்ந்தான் - உறுதிநிலைகெட்டான்', என்று - என்று அறிந்து, தனஞ்சயன்- அருச்சுனன், தன்-தனது, பவன(ம்) உதயம் தேர்-காற்றுவருதல் போன்ற (வேகத்தையுடைய) தேரை, நடு விட்டான் -(எதிரிகளின் சேனை) மத்தியிலே செலுத்தினன்; (அப்பொழுது) பணியார் தாம் உம் புறம் இட்டார் - பகைவர்களும் புறங்கொடுத்து ஓடினார்கள்;

'இவனே' என்பது முதல் 'சாய்ந்தான்' என்றது வரையில் அருச்சுனன் எண்ணும் எண்ணம்; அதனுள், 'இவனே இலக்காம் என்பகழிக்கு' என்றது, வீடுமன்மனத்திற் கருதியதை: தபநோதயம், பவநோதயம்-குணசந்திபெற்ற வடமொழித் தொடர்கள். பணியார்-வணங்காதவர். பி-ம்: அழிந்தவனும். (317)

35.—கவிக்கூற்று: அருச்சுனன் வென்ற சிறப்பு.

பார்த்தன்கணையாற்பட்டவரைப்பங்கேருகத்தோன்பலகோடி
நாத்தந்திலனேயெண்ணுதற்குநாமார்புகலத்தேமாலை
மாத்தந்திகளும்புரவிகளுந்துணியத்துணியவழிசோரி
நீத்தந்தன்னுல்வடவைமுகநெருப்பொத்ததுகார்நெடுவேலை.

(இ-ள்.) (அப்பொழுது) பார்த்தன் கணையால் - அருச்சுனனுடைய அம்புகளால், பட்டவரை - இறந்தபகைவர்களை, எண்ணுதற்கு - கணக்கிட்டுச் சொல்லுதற்கு, பங்கேருகத்தோன் - தாமரைமலரில் வாழும் பிரமன், பலகோடி நா தந்திலன்ஏ - அநேக கோடி நாக்குக்களைக் கொடுத்தானில்லையே! நாம் புகல ஆர்-(ஒருநாக்கையுடைய) நாம் (அவர்களை எண்ணிச்) சொல்லுதற்கு யார்? [சொல்லத்தரமுடையோமல்லோம் என்றபடி]; தேன் மாலை - தேனையுடைய பூமாலைகளைத் தரித்த, மா தந்திகள் உம் - பெரியயானைகளும், புரவிகள் உம்-குதிரைகளும், துணிய துணிய - மிகுதியாக வெட்டுப்பட, வழி-(அவற்றினின்று)பெருகுகிற, சோரி நீத்தந்தன்னுல் - இரத்தவெள்ளஞ் சென்று பாய்தலால், கார் நெடு வேலை - கருநிறத்தையுடைய பெரியகடல், வடவை முகம் நெருப்புஒத்தது- படபாஎன்னும் பெண்குதிரையின் முகத்தினின்று வெளிப்படும் நெருப்புப்போலச் செந்நிறமடைந்தது; (எ - று.)

மிகப்பலவாகிய நாக்குக்கள் இருந்தால்மாத்திரமே அப்போர்த் திறத்தைச் சொல்லுதல்கூடு மென்பது, முன்னிரண்டடிகளின்

கருத்து. கருங்கடல் குருதியாற் சிவந்தது என்பது, பின்வாக்கியத்தின் கருத்து: பிறிதின்குணம்பெறலணி. பங்கேருஹம் - சேற்றில் முளைப்பது; வடசொல்: தாமரைக்குக் காரணவிடுகுறி. தேமாலை—[நன்-மெய்-கக] நீத்தம்-நீந்தப்படுவது. (318)

36.—மூன்றுகவிகள்-வீடுமன் கடும்போர்புரியச் சதாநீகன் வந்தெதிர்த்து உயிரொழிந்தமை கூறும்.

மன்னுஞ்சேனைபடக்கண்டவாட்சந்தனுவின்றிருமைந்தன்
பின்னுந்தனதுசிலையேந்திப்பேணாரெவரும்பின்காட்டத்
துன்னும்பகழிமழைபொழிந்துதுரக்கும்பொழுதுவிராடபதி
என்னுங்குரிசிறனக்கிளையோனிராமற்கிளையோனெனத்தக்கோன்.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) மன்னும் - நிலைபெற்ற, சேனை - (தம்பக்கத்துச்) சேனை, பட-(அருச்சுனனால்) அழிய, கண்ட—, வாள் சந்தனுவின் திரு மைந்தன் - ஆயுதப்பயிற்சியில் வல்ல சந்தனுமகாராசனது சிறந்தபுத்திரனான வீடுமன்,—பின்னும் தனது சிலை ஏந்தி - மீண்டும் தன்னுடைய வில்லை வளைத்து, பேணார் எவரும் பின் காட்ட - பகைவர்கள்எல்லோரும் புறங்காட்டி அழியும்படி, துன்னும் பகழி மழை பொழிந்து - நெருங்கிய அம்புமழையைச் சொரிந்து, துரக்கும் பொழுது - (எதிர்ப்பக்கத்துச் சேனையை) ஓட்டுகிற சமயத்தில், விராடபதி என்னும் குரிசில் தனக்கு இளையோன் - விராடதேசத்தரசனென்கிற வீரனுக்குத் தம்பியும், இராமற்கு இளையோன் என தக்கோன் - இராமபிரானுக்குத் தம்பியாகிய இலக்குமணனென்று சொல்லத்தக்கவனும்,—(எ - று.)— (ஆகிய) "சதானிகன்" என அடுத்த கவியோடு தொடரும்.

சிகண்டி எதிரில் வந்தபொழுது, வீடுமன் தன்கைவில்லைக்கீழ் எறிந்ததனாலே, 'பின்னுந் தனது சிலை யேந்தி' என்றார். இலக்குமணன்-போர்த்திறத்துக்கும், தமையனுக்குக் கீழ்ப்படிந்திருக்குந் தகுதிக்கும் உவமை. (319)

37. பண்ணும்பரிமான்றேருடையான்படைத்தேர்மன்னர்பலர்சூழ
வெண்ணுஞ்சிலைக்கைச்சதானிகன்வந்தெதிரூன்றுதலுமெண்டிசையு
மண்ணுந்திகைக்கும்படிமலைந்தான்மன்பேருயிருக்காருயிருங்
கண்ணும்போல்வான்கருதலர்க்குக்கடுங்காலெழுப்புங்கனல்போல்வான்.

(இ - ள்.) பண்ணும்-அலங்கரிக்கப்பட்ட, பரி மான் - குதிரைகளைப் பூட்டிய, தேர் உடையான்-இரதத்தையுடையவனும் ஆகிய, எண்ணும் சிலை கை சதானிகன்-(யாவரும்) நன்குமதிக்கும் வில்லையேந்திய கையையுடைய சதாநீகனென்பவன், படை தேர் மன்னர் பலர் சூழ-சேனைகளையுடைய ரதாதிபதிகளான அரசர்கள்பலர்(தன்னுடன்) சூழ்ந்துவர, எதிர் வந்து ஊன்றுதலும்-வீடுமனெதிரில் வந்து (போருக்கு) நின்றவளவில்,—மன் பேர் உயிருக்கு - (உலகத்தில்) நிலைபெற்ற மிகுந்த பிராணிகளுக்கெல்லாம், ஆர் உயிரும்

கண்உம் போல்வான்-அருமையான உயிரையும் கண்ணையும் ஒத்து அன்புக்குஇடமானவனும், கருதலர்க்கு-பகைவர்களுக்கு, கடு கால் எழுப்பும் கனல் போல்வான்-மிகுந்தகாற்றினால் வளர்க்கப்பட்ட அக்கினியை யொத்து அழிவுசெய்பவனு மாகிய வீடுமன், எண் திசைஉம் மண்உம் திகைக்கும்படி - எட்டுத்திக்கிலுள்ளாரும் பூலோகத்தவரும் (கண்டு) பிரமிக்கும்படி, மலைந்தான்-போர்செய் தான்; (எ - று.)

திசை, மண்-ஆகுபெயர். எவர்க்கும் உயிரினும் சிறந்தது வேறுஇன்று ஆதலாலும், எல்லாவுறுப்புக்களினும் கண் சிறத்த லாலும், அன்பு வைக்கப்படுதலில் அவற்றை வீடுமனுக்குஉவமை கூறினர். (320)

38. உற்றுச்சமரில்வில்லெடுத்தவுரவோன்றன்னையுடலோடும்
அற்றுச்சென்னிவேருகிவீழத்துணித்தேயம்பொன்ருற்
செற்றுக்கங்கைமகனிற்பச்சேராரோடத்தேரோனும்
இற்றுத்தெரித்தமகுடமெனவீழ்ந்தான்புணரிக்கிடையந்தோ.

(இ-ள்.) சமரில்-போரில், உற்று-எதிரில்வந்து, வில்எடுத்த-வில்ஏந்திப்பொருத, உரவோன் தன்னை-வலிமையையுடைய சதானிகனை, கங்கை மகன்-வீடுமன், உடலோடுஉம் சென்னி அற்று வேறு ஆகி வீழ-உடம்புந்தலையும் அறுபட்டுத் தனித்தனிவிழும் படி, அம்பு ஒன்றால் துணித்து - ஒருபாணத்தால் துண்டுபடுத்தி, செற்று-அழித்து, நிற்ப-(வெற்றியோடு) நிற்க,—(அதுகண்டு), சேரார் ஓட-(மற்றைப்) பகைவர்கள் பயந்துஓட, (அச்சமயத்தில்), தேரோன்உம்-(சிறந்த) தேரையுடையசூரியனும், இற்று தெறித்த மகுடம் என-(தலைதுணிபட்டுவிழுகையில்) கழன்று சிதறிவிழுந்த (அச்சதானிகனது) கிரீடம்போல, புணரிக்கு இடை வீழ்ந்தான்-மேல்கடலிடையிலே விழுந்தான் [அஸ்தமித்தான்]; (எ - று.)—அந்தோ-ஐயோ: ஹந்த என்னும் வடமொழிச் சிதைவான இது-சதானிகன் இறந்ததற்குக் கவி இரங்கியதைத் தெரிவிக்கும்.

இப்பாட்டின் ஈற்றடி-சூரியாஸ்தமனவருணனை. எப்போதும் தேர் மீதே வருவதனால், சூரியனுக்கு 'தேரோன்' என்று ஒருபெயர் கொடுத்தார். (321)

39.—இருதிறத்துச்சேனைவீரரும் சுவேதனையும் சதாநீகனையும் அழித்ததுகுறித்து வீடுமனைப்பற்றிக் கூறியது.

திலத்திற்சின்னம்படமுன்னஞ்சிவேதனுடல்கொண்டுயிர்செகுத்தான்
தலத்திற்கனகமுடிசிந்தச்சரத்தாலழித்தான்சதானிகனை
வலத்திற்றிகிரிதனையுருட்டுமான்றேர்மச்சத்தவனிபர்தங்
குலத்திற்கிவனேகூற்றென்றார்கூற்றுங்குலையுங்கொலைவேலார்.

(இ - ள்.) (அப்பொழுது), கூற்றுஉம் குலையும்கொலைவேலார்-யமனும் அஞ்சும்படியான கொலைத்தொழிலைச்செய்யும் வேலை யுடைய (இரண்டுபக்கத்து) வீரர்களும், ('வீடுமன்), முன்னம்-முன்னே [முதல்நாட்போரில்], திலத்தின் சின்னம் பட-எள்ளின்

காய் பிளப்பதுபோலத் துண்டுபடும்படி, சிவேதன் உடல் கொண்டு உயிர் செகுத்தான்-சுவேதனது உடம்பை (இலக்காக)க் கொண்டு அவனுயிரை ஒழித்தான்; (இன்றைக்கு), கனகம முடிதலத்தில் சிந்த-பொற்கிரீடமணிந்த தலை தரையிலேசிதறிவிழும்படி, சதானிகனை—, சரத்தால் அழித்தான்-அம்பினாற் கொன்றான்;(ஆதலால்), வலத்தில் திகிரிதனை உருட்டும்-வலிமையால் ஆஜ்ஞாசக்கரத்தைச்செலுத்துகிற,மான் தேர் மச்சத்து அவனிபர்தம்-குதிரைகள் பூண்ட தேரையுடைய மத்ஸ்யதேசத்து அரசர்களது,குலத்துக்கு-, இவன்ஏ கூற்று-இவ்வீடுமனே யமனவன்,' என்றார்-என்று சொன்னார்கள்; (எ - று.)

விராடனதுமைந்தனையும் அவன்தம்பியான சதாநீகனையும் வீடுமனொருவனே கொன்றிட்டதுபற்றி, இங்ஙன் கூறினர். திகிரி-தேர்ச்சக்கரமுமாம். பி-ம்: சிதைத்தான். (322)

40.—இருதிறத்துச் சேனாபதியரும் தம்மவரோடு பாசறைபுகுதல்.

சேந்தநெடுங்கண்முரிபுருவத்திட்டத்துய்மன்சேனையொடுஞ்
சார்ந்தநிருபரைவரொடுந்தானுந்தன்பாசறையடைந்தான்
பாந்தளுயர்த்ததுவசனுடன்பைம்பொற்கவரிமதிக்கவிகை
வேந்தருடனும்போய்ப்புகுந்தான்றன்பாசறையில்வீடுமனும்.

(இ - ள்.) சேந்த-(கோபத்தாற்) சிவந்த, நெடு கண்-நீண்ட கண்களையும், முரி-(கோபத்தால்) நெறித்த, புருவம்-புருவங்களையுமுடைய,திட்டத்துய்மன்—,சேனையொடுஉம்-(பாண்டவ)சைனியத்துடனும், சார்ந்த நிருபர் ஐவரொடுஉம்-(தலைவராகப்) பொருந்திய பாண்டவராசர் ஐந்துபேரொடும், தானும்—, தன் பாசறைஅடைந்தான்-தனதுபடைவீட்டைச் சேர்ந்தான்; வீடுமனும்—, பாந்தள் உயர்த்த துவசனுடன் - பாம்பை உயரத்தில் எழுதிய கொடியையுடைய துரியோதனனோடும், பை பொன் கவரி - பசும் பொன்னாலாகிய காம்பையுடைய சாமரங்களையும், மதி கவிகை - பூர்ணசந்திரன் போன்ற வெண்கொற்றக்குடையையு முடைய, வேந்தருடன்உம் - அரசர்களுடனும்,தன் பாசறையில் போய் புகுந்தான்-தனது படைவீட்டிற் போய்ச்சேர்ந்தான்; (எ - று.)

சேந்த - சிவந்த: மரூஉ; பொன் - பொற்காம்புக்குக் கருவியாகுபெயர். 'பைம்பொற்கவரி மதிக்கவிகை' என்பதை, மத்திமதீபமாகப் பாந்தளுயர்த்த துவசனுக்குங் கூட்டுக. (323)

41.—மறுநாள் சூரியோதயவருணனை.

சென்ற பரிதி யாயிரம்பொற் சிகரப் பொருப்புக் கப்புறத்து
நின்ற விருளை யிப்புறத்து நீங்கா வண்ணங் குடியேற்றி
ஒன்ற வுலக முற்றதுயி லுணர்த்து வான்போ லுதயமெனுங்
குன்ற மிசைநின் றனைவரையுங் கரத்தா லெழுப்பக் குணக்கெழுந்தான்.

(இ - ள்.) சென்ற பரிதி - (முந்தினநாள் மாலைப்பொழுதில்) அஸ்தமித்த சூரியன், ஆயிரம் பொன் சிகரம் பொருப்புக்கு அப்புறத்து நின்ற இருளை - பொன்மயமான ஆயிரங்கொடுமுடிகளை

யுண்டய மேருகிரிக்கு வடபுறத்தில் நின்ற இருட்டை, இ புறத்து நீங்கா வண்ணம் குடி ஏற்றி - (அவ்விரவில்) இத்தென்புறத்தில் நீங்காதபடி தங்கச்செய்து, (அவ்விரவு கழிந்த பின்பு), உலகம் ஒன்ற உற்ற துயில் உணர்த்துவான் போல்-உலகத்து உயிர்க ளெல்லாம் ஒருசேர அடைந்த தூக்கத்தை (ஒழித்து) விழிக்கச் செய்பவன் போல, உதயம் எனும் குன்றம்மிசை நின்று அனை வரையும் கரத்தால் எழுப்ப-உதயகிரியென்கிற மலையின்மேல் (தான்) நின்றுகொண்டு எல்லோரையும் (தன்) கைகளால் [கிர ணங்களால்] எழுப்பும்படி, குணக்கு எழுந்தான் - கீழ்திசையில் தோன்றினன் [உதித்தான்]; (எ - று.)

பூமிமத்தியிலுள்ள மகாமேருகிரிக்கு இப்புறத்தில் இருட் பொழுதாம் பொழுது, அப்புறத்தில் பகற்பொழுதாதலை இருளைக் குடியேற்றியதாகவும், உதயகாலத்திற் சூரியகிரணம் உலகத்தில் விளங்க எல்லாப்பிராணிகளும் துயிலொழிந்து எழுதலைச் சூரியன் தன்கைகளால் உலகத்து உயிர்களைத் தொட்டுத் துயிலெழுப்புவ தாகவும் வருணித்தார். இத்தற்குறிப்பேற்றவணிக்கு, கரம் என்ற சொல்லின் சிலேடை அங்கமாக நின்றது. (324)

ஒன்பதாம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

பத்தாம்போர்ச்சருக்கம்.

1.—கடவுள்வாழ்த்து.

வலியி லன்று தந்தை செற்ற மைந்த னுக்கு வந்தபேர்
நலிவெ லாம கற்று நாம நாலி ரண்டெ ழுத்துடன்
பொலியு நாம மறைகள் சொன்ன பொருள்வி ளக்கு நாமமுன்
கலிய னெங்கண் மங்கை யாதி கண்டு கொண்ட நாமமே.

(இ - ள்.) அன்று - முன்னொருகாலத்தில், வலியில் - கடுமை யாக, தந்தை செற்ற - பிதாவான இரணியனாற் கோபித்துவருத் தப்பட்ட, மைந்தனுக்கு - இளம்பிள்ளையான பிரகலாதனுக்கு, வந்தபேர் நலிவு எலாம் - நேர்ந்த பெருந்துன்பங்களையெல்லாம், அகற்றும் - நீக்கியருளின, நாமம் - திருநாமமும்,—நால் இரண்டு எழுத்துடன்-எட்டு எழுத்துக்களோடு, பொலியும் - விளங்குகிற, நாமம் - திருநாமமும்,—மறைகள் சொன்ன பொருள் - வேதங்கள் சொல்லிய அருத்தங்களையெல்லாம், விளக்கும் - விளங்கத்தெரி விக்கிற, நாமம் - திருநாமமும்,—முன் - முன்பு, கலியன் - கலிய னென்னும் பெயருடையவரும், எங்கள் மங்கை ஆதி - திருமங்கை யென்னும் ஊருக்குத் தலைவருமாகிய எங்கள் திருமங்கையாழ்வார், கண்டுகொண்ட - அறிந்து கொண்ட, நாமமே - திருநாமமேயாம்;

தன்மகனான பிரகலாதன் தன்கட்டளைப்படி தன்பெயரைச் சொல் லிக் கல்விகற்காமல் நாராயணநாமம் சொல்லிவரவே, தந்தையான இரணியன் மிகக்கோபங்கொண்டு பாம்புகளையும் யானைகளையும் நெருப்பையும் விஷத்தையும் காற்றையும் மற்றும்பலவுபாயங்களை

யும் கொண்டு அம்மகனை மிகவும்வருத்த, அவன் நாராயணநாமோச்சாரணபலத்தால் சிறிதும் துன்பமுறாமல் அந்த அபாயங்களெல்லாவற்றினின்றும் நீங்கினன் என்பது-பிரசித்தம். "நம்பெருமாளெட்டெழுத்தின் பெருமை நவிலுமதோ, சம்பரன் மாயப்புரோகிதர் சூழ்வினை தாரணிவாள், வெம்படை மாசுணம் மாமத வேழம் விடம் தழல் கால், அம்பரமேமுதலானவை பாலனுக்கு அஞ்சினவே" என்றார் திருவரங்கத்துமாலையிலும். "ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்த்தம்" என்றும், "ஸர்வவேதாந்தஸாரார்த்த:" என்றும் நூல்களிற் கூறப்படுதல்பற்றி, 'மறைகள் சொன்ன பொருள் விளக்கு நாமம்" என்றார்.

கலியன்-மிடுக்குடையவன்; கலி-வலிமை. இவர் பெருமாளைக் கொள்ளையிடும்பொழுது, சகலவஸ்திராபரணங்களையுங் கவர்ந்தபின் திருவடிவிரலிலுள்ளதிருவாழியைப் பல்லாற் கடித்துவாங்கின மிடுக்கால், இவரைத் திருமால் கலியனென்று பேரிட்டு அழைத்தனர். எங்கள் என்றபன்மை-தன்னைச்சேர்ந்தவர்களையுங் கூட்டியது. 'எங்கள்மங்கையாதி' என்றதனால், வில்லிபுத்தூராரது ஸ்ரீவைஷ்ணவஅபிமானமும் திருமங்கைமன்னன்பாசுரத்தில் இவர்க்குள்ள ஈடுபாடும் விளங்கும். திருமங்கையாழ்வார் - ஸ்ரீவைஷ்ணவசம்பிரதாயத்தில் சிறந்த பக்தர்களாக வழங்கப்படுகிற ஆழ்வார்கள் பதின்மருள் ஒருவர்; சோழநாட்டில் திருமங்கையென்ற தலத்தில் பிறந்தவர்; இவர் ஒரு சோழராசனிடத்தில் மந்திரியாயிருந்து அவனது திறைப்பொருளையெல்லாம் பாகவதாராதனம்பண்ணிச் செலவுசெய்து மற்றும் அந்தக்கைங்கரியத்தை நடத்தும்பொருட்டு வழிபறித்துப் பொருள்தேடிவருகையில், திருமால் இவருக்குத் திருவருள்செய்யக்கருதித் தாம் பிராட்டியுடனே கலியாணக்கோலங்கொண்டு மிகுந்தஆபரணங்களோடும் திரண்டசெல்வத்தோடும் அவ்வழியிலே செல்ல, இவர் கூட்டத்தோடு சென்று அவர்களை வளைத்துவழிபறித்துப் பொருள்களையெல்லாங் கட்டிவைத்து எடுக்கத்தொடங்க, அது எடுக்க முடியாமையாலே, அவ்வெம்பெருமானைநோக்கி 'நீ என்ன மந்திரவாதம் பண்ணினாய்' என்றுசொல்லி வருத்திக்கேட்க, அப்பொழுது ஸ்ரீமந்நாராயணன் 'அந்தமந்திரத்தை உனக்குச்சொல்லுகிறேன் வா' என்று தனக்குரிய அஷ்டாக்ஷரமகாமந்திரத்தை இவருக்கு உபதேசித்தருளிக் காட்சிகொடுக்க, இவரும் பெருமானைச் சேவித்து ஞானக்கண்பெற்று "வாடினேன்.........நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்" என்றுதொடங்கிப் பெரியதிருமொழி முதலிய திவ்வியபிரபந்தங்களைப் பாடிப் பெருமையுற்றுப் பேறு பெற்றனரென்பது வரலாறு.

இதுமுதல் பதினாறு கவிகள்-ஈற்றுச்சீரொன்று விளச்சீரும் மற்றவை மாச்சீர்களுமாகிய எழுசீராசிரியவிருத்தங்கள். (325)

2.—இரண்டுகவிகள்-தருமன்தன்சேனையோடு போர்க்களஞ்சேறுக, முந்தியவியூகமாகவே சேனை அணிவகுக்கப்படுதல்.

தருமராசன்மதலைபஞ்சசயனநின்றெழுந்தபின்
கருமமானகாலையிற்கடன்கழித்துநேமியம்

பெருமனோடுசென்றுதக்கபெற்றிபேசிவெற்றியிற்
பொருமகீபர்சூழநின்றவிளைஞரோடுபோதவே.

இதுமுதல் நான்கு கவிகள் - குளகம்.

(இ - ள்.) தருமராசன் மதலை-யமதருமராசனது புத்திரனை யுதிட்டிரன், பஞ்சசயனம் நின்று-படுக்கைமெத்தையில் நின்று, எழுந்த பின்-துயிலொழிந்து எழுந்தபின்பு, காலையில் கடன் ஆன கருமம் கழித்து-உதயகாலத்திற் செய்யத்தக்க கடமைகளாகிய (சந்தியாவந்தநம் முதலிய வைதிகத்) தொழில்களைச் செய்து முடித்து, நேமி அம் பெருமனோடு சென்று தக்க பெற்றி பேசி - சக்கராயுதத்தையுடைய அழகியபெருமையையுடைய தலைவனை கண்ணபிரானிடம்போய் அவனோடு (அன்றைக்குச்செய்யத்) தக்க தன்மைகளைப்பற்றிப் பேசி, வெற்றியின் பொரு மகீபர் சூழ- சயத்தையுடைய போர்செய்யவல்ல அரசர்கள் (தன்னைச்) சூழ்ந்து வர, நின்ற இளைஞரோடு போத-கூடநின்ற தம்பிமார்களோடு புறப் பட,—(எ-று.)—"ஆகவத்துள் அணிய" என அடுத்தகவியோடு தொடரும்.

பஞ்சசயனம்-அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, மயில் தூவி, வெண்பஞ்சு என்னும் இவ்வைந்துபொருளாற் செய்யப் பட்ட மெத்தை; "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணம், உறுதூவி சையையோ ரைந்து" என்றார், முன்னோரும்; இனி, திருப்பாவையில், "மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறி" என்றவிடத்து, 'பஞ்சவிதமானபடுக்கையாவது-அழகு, குளிர்த்தி, மார்த்தவம், பரிமளம், தாவள்யம் ஆக இவை; அஞ்சுஉருவிட்டுச் செய்த படுக்கை யென்றுமாம்: பஞ்சாலேசெய்தபடுக்கை யென்னவு மாம்' என்று பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானமிட்டருளியுள் ளார். பெருமன்-பெருமான் என்பதன் குறுக்கல். (326)

3. திரண்டுபல்லியங்கடேவர்செவிபுதைக்கவானிடைப்
புரண்டெழுந்ததூளிகண்புதைக்கமெய்பதைக்கவே
முரண்டொடங்குசேனைவந்துமுன்னர்நாளையூகமே
யரண்டொடங்குயூகமாகவாகவத்துளணியவே.

(இ - ள்.) பல் இயங்கள் - அநேகவாத்தியங்கள், திரண்டு- (தம்மிற்) கூடி (முழங்கி), தேவர் செவி புதைக்க-தேவர்களுடைய காதுகளை அடைக்கவும், வானிடை புரண்டு எழுந்த தூளி-ஆகா சத்தில் துள்ளியெழுந்த புழுதிகள், கண் புதைக்க-(தேவர்களது இமையாக்) கண்களை மறைக்கவும், மெய் பதைக்க-(போர்செய் வதற்கு) உடம்பு பதறவும்,—முரண் தொடங்கு சேனை-போரைச் செய்யத்தொடங்குகிற (தங்கள்) சேனை, ஆகவத்துள்வந்து-போர்க் களத்தில் வந்து, முன்னர் நாளை யூகமே அரண் தொடங்கு யூகம் ஆக அணிய-முந்தியநாளில் (செய்த பதும) வியூகமே (அன்றைக் குக்) காவலைச்செய்யும் வியூகமாகும்படி அணிவகுத்துநிற்க,— (எ-று.)—"வீடுமன்எனும்மன் (4) தேரிலேறினன்" (5) என அடுத்த கவிகளோடு தொடரும்.

தருமன்சேனை ஒன்பதாநாளிற்போலவே,பத்தாநாளிலும் பதும வியூகமாகப் படைவகுக்கப்பட்டதென்க. மெய்பதைக்க - செவி புதைத்தலாலும் கண்புதைத்தலாலும் தேவர் உடல் வருந்த என்றலும் ஒன்று. (327)

4.—இரண்டு கவிகள்-வீடுமன் நித்தியக்கடனைமுடித்துத் தன்தேரிலேறினமையைக் கூறும்.

வீடுமன்னெனுந்தடக்கைவீரமன்னும்வெஞ்சுடர்க்
காடுமன்னுபரிதியைக்கரங்குவித்திருந்தபின்
தோடுமன்வலம்புரித்துலங்குதாமநிருபனும்
நீடுமன்னர்பலரும்வாயிலிருபுறத்துநிற்கவே.

(இ - ள்.) (அப்பொழுது), வீடுமன் எனும்-பீஷ்மன் என்கிற, தட கை வீரம் மன்உம்-பெரியகைகளையுடைய வீரத்தன்மையுள்ள அரசனும், வெம்சுடர் காடு மன்னு பரிதியை - உஷ்ணமான ஒளிகளின் தொகுதி பொருந்திய சூரியனை,கரம் குவித்து இருந்தபின்-கைகூப்பித்தொழுது [சந்தியாவந்தனம் முதலியன முடித்து] இருந்தபின்பு,—தோடு மன் - இதழ்கள் நிறைந்த, வலம்புரி-நஞ்சாவட்டைமலர்களாலாகிய, துலங்கு - விளங்குகிற, தாமம்-மாலையையுடைய, நிருபன்உம்-துரியோதனராசனும், நீடு மன்னர் பலர்உம்-பெரிய மற்றும்பல அரசர்களும், வாயில் இருபுறத்துஉம் நிற்க-(தன் இருப்பிடத்து) வாயிலில் இரண்டுபக்கத்திலும் வந்து நிற்க,—(எ - று.)—"நீடுதேரிலேறினான்" என அடுத்த கவியோடு முடியும்.

வீடுமன்னெனும், ன்-விரித்தல். பரிதியைக் கரங்குவித்திருத்தல்-உபஸ்தாநமும், ஸூர்யநமஸ்காரமுமாம். திரிபு என்னுஞ்சொல்லணி காண்க. (328)

5. வனைந்திலங்குகழலுமுத்துவடமும்வாகுவலயமும்
புனைந்தசெம்பொன்மவுலியோடுபொற்பின்மீதுபொற்பெழ
முனைந்தடங்கவின்றுநாமுடித்தும்வெய்யபோரெனு
நினைந்துதன்பனைப்பதாகைநீடுதேரிலேறினான்.

(இ - ள்.) வனைந்து இலங்கு - அணியப்பட்டு விளங்குகிற, கழல்உம் - வீரக்கழலும், முத்துவடம்உம் - முத்தாரங்களும்,வாகுவலயம்உம் - தோள்வளைகளும், புனைந்த செம் பொன் மவுலியோடு - தரித்த செம்பொன்னாலாகிய கிரீடமும், பொற்பின்மீது பொற்பு எழ - (தனதுஉடம்பின்) அழகின் மேல் அழகியதாய்ப் பொருந்த, 'இன்று - இன்றைக்கு, நாம்—, அடங்க-(பகை)ஒழியும்படி, முனைந்து - உக்கிரமாக முயன்று, வெய்ய போர் முடித்தும் - கொடியபோரை முடித்துவிடுவோம்,' என நினைந்து-என்று எண்ணி, தன் - தனது, பனை பதாகை நீடு தேரில் - பனைக்கொடியையுடைய உயர்ந்த தேரின்மேல், ஏறினான்—; (எ - று.)

"அழகின்மே லழகுபெற அணியனைத்து மணிந்தருளி" என்றார், கலிங்கத்துப்பரணியிலும். பத்தாநாளில் தான் அழிவ

தாக முன்லே சொல்லியுள்ளானாதலால், இவ்வாறு நினைத்தான். முனைந்து - பொருது எனினுமாம். (329)

6.—வீடுமன் போர்க்களஞ் சேர்தல்.

சுற்றறாதவில்லினன்றொடைமிடைந்ததூணியன்
கொற்றவாகைவாளினன்கூரவீரவேலினன்
மற்றுமாயுதங்களோடுமன்னரோடும்வார்முர
செற்றுமாரவத்தினோடுமடுகளத்தினெய்தினன்.

(இ-ள்.) சுற்று அறாத - கட்டு நீங்காத, வில்லினன் - வில்லை யுடையவனும், தொடை மிடைந்த - அம்புகள் நெருங்கிய, தூணியன் - புட்டிலை யுடையவனும், கொற்றம் வாகை வாளினன் -வெற்றிக்குஅடையாளமான வாகைப்பூமாலையைச்சூடின வாளை யுடையவனும், கூர வீரம் வேலினன் - கூர்மையையுடைய வீரத் தன்மைக்குஉரிய வேலாயுதத்தை யுடையவனுமாய், மற்றும்ஆயு தங்களோடுஉம்-வேறு பல படைக்கலங்களுடனும், மன்னரோடு உம்-எல்லா அரசர்களோடும், வார் முரசு எற்றும் ஆரவத்தினோடு உம்-தோற்கயிற்றாற்கட்டிய பேரிகைகள் அடிக்கப்படும் முழக்கத் தோடும், அடு களத்தின் எய்தினன் - போர்செய்தற்குரிய களத் தில் சேர்ந்தான் (வீடுமன்); (எ - று.)—தொடை - தொடுக்கப் படுவது; அம்பு. (330)

7.—முன்னைநாள்வியூகமே வீடுமனும் வகுத்துநிற்க, ஸ்ரீக்ருஷ்ணன் அருச்சுனனிடம் இன்று வீடுமனுக்குவிமானமளிப்பாயெனல்.

தானுமுன்னணிந்தவாறுதானையைநிறுத்தியச்
சேனைமன்னன்வந்துநின்றநிலைமைகண்டுசெங்கண்மால்
வானினின்றிழிந்தகங்கைமைந்தனுக்குவானுலாம்
யானமின்றளித்தியென்றுவிசயனோடிசைக்கவே.

இதுமுதல் ஆறுகவிகள் - குளகம்.

(இ - ள்.) அ சேனை மன்னன் - அந்தச்சேனைத்தலைவனான வீடுமன்,— தான்உம் - (பாண்டவர்கள்போலவே) தானும், முன் அணிந்த ஆறு-முந்தின நாளிற் படைவகுத்தவிதமாகவே [சருவ தோபத்திரவியூகமாக], தானையை நிறுத்தி - (தன்) சேனையை (அணிவகுத்து) நிற்கச்செய்து, வந்து நின்ற - (எதிரில்) வந்து நின்ற, நிலைமை-நிலைமையை, கண்டு—,—செம் கண் மால்-சிவந்த திருக்கண்களையுடைய கண்ணபிரான், விசயனோடு - அருச்சுன னுடனே, 'வானினின்று இழிந்தகங்கை மைந்தனுக்கு-ஆகாயத்தி னின்று இறங்கிய கங்கையின் குமாரனான வீடுமனுக்கு, வான் உலாம் யானம் - மேலுலகத்துக்குச் செல்லும் விமானத்தை, இன்று - இன்றைத்தினத்தில், அளித்தி - கொடுப்பாய்,' என்று இசைக்க - என்றுசொல்ல,—(எ - று.)—"விசயன் (8) என்ற போது (11)" எனமேற்கவிகளோடு தொடரும்.

வானுலாம் யான மளித்தல்-இறந்து தேவவிமானமேறிச் சுவர்க்கஞ்செல்லும்படி செய்தல். 'வானினின்று இழிந்த' என்ற

தைக் கங்கைக்கு அடைமொழியாக்கினல், பகீரதன் கங்கை கொணர்ந்த சரித்திரத்தையும், மைந்தனுக்கு அடைமொழியாக்கினுல் சாபத்தால் பிரபாசவசு பீஷ்மனுன வரலாற்றையும் குறிக்கும். யாநம் - வாகனம்; வடசொல். (331)

8.—அருச்சுனன்சிறப்பு.

போரினண்டர்பகையைமுன்புபொருதுவென்றவின்மையான்
மூரிவெங்கொடிக்குரங்குமுன்னடக்குமேன்மையான்
வாரிதங்கொண்மேனியான்வனம்புகுந்துவருதலான்
யாருமின்றிராமனென்னவிசையநின்றவிசயனே.

(இ - ள்.) முன்பு - முன்னொருகாலத்தில், அண்டர் பகையை- தேவர்களுக்குப் பகைவர்களை, போரின் பொருது - யுத்தத்தில் தாக்கி, வென்ற - சயித்த, வின்மையான்-வில்லின் திறத்தாலும், முன் - (தனதுதேரின்) முன்னிடத்தில், மூரி வெம் கொடி-வலிமையையுடைய பயங்கரமான துவசத்தில், குரங்கு நடக்கும் - அனுமான் பொருந்திய, மேன்மையான் - பெருமையாலும்,—வாரிதம் கொள் - மேகத்தையொத்த, மேனியான் - திருமேனியினுலும்,—வனம் புகுந்து வருதலான் - காட்டிற்சேர்ந்து (வசித்து) வந்ததனுலும், யார் உம் இன்று இராமன் என்ன - யாவரும் இக்காலத்தில் (இவன்) இராமபிரான் என்று சொல்லுதற்கு, இசைய நின்ற - ஏற்றபடி நின்ற, விசயன் - அருச்சுனன்,— (எ - று.)— ,'என்றபோது" என மேற் பதினேராங்கவியோடு இயையும்.

விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீராமமூர்த்திக்கும் அருச்சுனனுக்கும் சில ஒற்றுமைநயங்காட்டி உவமைகூறினர். இராமனுக்கு, அண்டர்பகையை வெல்லுதல் - இராவணுதி இராக்கதரை அழித்தல்; அருச்சுனனுக்கு, அண்டர்பகையை வெல்லுதல்-நிவாதகவச காலகேயர்களை வதைத்தல். அனுமக்கொடியும், நீலமேனியும்- இருவர்க்கும் உண்டு, இராமனுக்கு வனம்புகுதல்-பதினன்குவருஷமும், அருச்சுனனுக்கு வனம்புகுதல்-பன்னிரண்டு வருஷமுமாம்; இனி, இரண்டாமடிக்கு - இராமனுக்கு ஆகும்பொழுது, வலிய கொடிய நீண்ட குரங்கின்சேனை முன்னேசெல்லப்பெற்ற பெருமையால் என்று உரைப்பினும் அமையும்; கொடி - நீளம். வாரிதம் - வடசொல்; நீரைக் கொடுப்பதென்று பொருள். (332)

9.—இரண்டுகவிகள்-வீரவாதமாக அருச்சுனன் கண்ணனேடு கூறுவன.

சிலைபதாகையிவுளிதேர்செழுங்கனலளித்தன
வலவன்யாரெனிற்குறிப்பொடென்னையாளவந்தநீ
தலமகீபரல்லதேவர்தானவரெதிர்ப்பினுங்
கொலைபடாமலேவர்போவர்குன்றெடுத்தகோவலா.

(இ-ள்.) குன்று-கோவர்த்தனமலையை, எடுத்த-(குடையாக) எடுத்துப்பிடித்த, கோவலா-பசுக்களைக் காத்தலில் வல்லவனே ! சிலை-(எனது) காண்டீவவில்லும், பதாகை-குரங்குக்கொடியும், இவுளி-(வெள்ளைக்) குதிரைகளும், தேர்-(சிறந்த) தேரும், செழு

கனல் அளித்தன-சிறந்த அக்கினிதேவனால் கொடுத்தருளப்பட்டவையாம்; வலவன் யார் எனில்-(எனக்குத்) தேர்ப்பாகன் யாரென்றால், குறிப்பொடு என்னை ஆள வந்த நீ-திருவுள்ளக்கருத்தோடு என்னைப்பாதுகாத்தருளுதற்குஎழுந்தருளின நீயாவாய்;(ஆதலால்) தலம் மகீபர் அல்ல-நிலவுலகத்து அரசர்கள் மாத்திரமேயல்ல; தேவர் தானவர் எதிர்ப்பினஉம்-(மற்றையுலகத்திலுள்ள) தேவர்களும் அசுரர்களும் (ஒருங்கேவந்து) எதிர்த்தாலும், கொலை படாமல் ஏவர் போவர்-(என்றால்) கொல்லுதல் படாமல் யாவர் தப்பிப் போவார்? (எ - று.)—எவ்வரையும் தப்பாமற் கொல்லவல்லேனென்பதாம்.

பதாகை-பெருங்கொடி. மகீபர் அல்ல - திணைவழுவமைதி; 'அல்லர்' எனப் பாடங்கொள்ளின், வழாநிலையாம்: இனி, அல்ல என்பதை, வேறு இல்லை உண்டு என்பனபோல, இருதிணையைம்பால் மூவிடத்துக்கும் பொதுவென்றலும் ஒன்று: இது, புதியன புகுதல். பி.-ம்: அளித்தனன். (333)

10. எந்தையாகதுணைவராகதனயராகவெந்தைதன்
தந்தையாகநீயுரைக்கில்யாரையுந்தறிப்பன்யான்
முந்தையாரணங்களுக்குமுடிவினின்றபொருளையென்
சிந்தையாரமுற்றுவித்துவினையறுத்தசெம்மலே.

(இ-ள்.) முந்தை-பழமையான, ஆரணங்களுக்கு-வேதங்களுக்கெல்லாம், முடிவில்-முடிவாகிய உபநிஷத்துக்களில், நின்ற-பொருந்திய, பொருளை-அர்த்தத்தை, என் சிந்தை ஆர-எனது மனம் கொள்ளும்படி, முற்றுவித்து-முடிய உபதேசித்து, வினை அறுத்த-(எனது) கருமத்தை ஒழித்த, செம்மலே-பெருமையிற் சிறந்தவனே! எந்தை ஆக-என் தந்தையாயினும் ஆகுக; துணைவர் ஆக-(எனது) உடன்பிறந்தவராயினும் ஆகுக; தனயர் ஆக-பிள்ளைகளாயினும் ஆகுக; எந்தைதன் தந்தை ஆக-எனது பாட்டனாயினும் ஆகுக; யாரைஉம்-(வந்து எதிர்ப்பவர்) எல்லோரையும், நீ—, உரைக்கில்-அழிக்கச்சொன்னால், யான் தறிப்பன்-நான் அழித்திடுவேன்; (எ - று.)

கீழ், சுற்றத்தாரிடத்துப் பாசபந்தத்தால் "யான்மலைவுறேனினி" என்றவன், பின்பு கீதோபதேசத்தால் பற்றற்றுப் பகவானது கட்டளையையே பிரதானமாகக்கொண்டு இங்ஙனம் கூறினான். உற்றஉறவினரையும் ஒரு பொருளாக்கொள்ளாமல் எம்பெருமானையே உறுதுணையாகக்கொண்ட உறுதி இதில் விளங்கும். ஆரணங்களுக்கு முடிவில் நின்ற பொருளை மனம்நிரம்ப விளைவித்தல் என்றது, வேதாந்தசாரார்த்தமான கீதையைத் தனக்கு உபதேசித்தருளியதை. ஆக-வியங்கோள். (334)

11.—சேனையோடு வீடுமன்வந்துநிற்க, அருச்சுனனைச் சார்ந்துநின்ற மன்னர் அவன்மீது அம்புகளைத் தூவுதல்.

என்றபோதுவந்துதேவவிரதனின்றவெல்லையிற்
குன்றமன்னதேர்கடாவியருகணைந்தகொற்றவர்

ஒன்றுபட்டசேனையோடியாவரும்முடன்றுபோய்
நின்றசேனைநிருபன்மேனிரைத்துவாளிதூவவே.

(இ - ள்.) என்றபோது-என்று (அருச்சுனன் கண்ணனிடம்) சொன்ன பொழுது,—குன்றம் அன்ன தேர் கடாவி அருகு அணைந்த கொற்றவர் யாவர்உம்-மலையையொத்த (தம் தம்) தேரைச் செலுத்திக்கொண்டு அருச்சுனனருகில் வந்த அரசர்களெல்லோரும், ஒன்று பட்ட சேனையோடு-தம்முடன் கூடியசேனைகளுடனே, தேவவிரதன் வந்து நின்ற எல்லையில்-பீஷ்மன் (போர்க்களத்தில்) வந்துநின்ற இடத்திலே, உடன்று போய்-பகைமை கொண்டு சென்று, நின்ற சேனை நிருபன்மேல்-(எதிரில்) நின்ற சேனைத் தலைவனான அவ்வீடுமன்மேல், வாளி நிரைத்து தூவ-அம்புகளை வரிசையாகச் செலுத்த,—(எ - று.)—"பலரும் எய்தவாளி மெய் படப்பட" என அடுத்த கவியோடு தொடரும். யாவரும் முடன்று-விரித்தல். (335)

12.—அப்போது வீடுமன் தளர்ச்சியுறுதல்.

பலருமெய்தவாளிமெய்படப்படப்பனித்துநாப்
புலரநொந்துகங்கைமைந்தனிதயமும்புழுங்கினன்
மலருகின்றவார்பனிக்குடைந்துசாலமாழ்கிநீ
டலருமந்தநிறமழிந்தவம்புசாதமென்னவே.

(இ - ள்.) பலர்உம்-(அவ்வரசர்கள்) அநேகரும், எய்த-பிரயோகித்த, வாளி-அம்புகள், மெய் பட பட-(தன்) உடம்பிலே மிகுதியாகத் தைக்க, கங்கை மைந்தன்-வீடுமன், பனித்து-வருந்தி, நா புலர-(அவ்வருத்த மிகுதியால்) நாக்கு உலர, நொந்து—,—மலருகின்ற வார் பனிக்கு உடைந்து-பரவுகிற மிகுந்த பனிக்கு வருந்தி, சால மாழ்கி-மிகுதியாக வாடி, நீடு அலரும் அந்த நிறம் அழிந்த-பெரிதாக மலர்ந்துவிளங்குகிற தனக்குரிய நிறம் கெட்ட, அம்புசாதம் என்ன-தாமரைபோல, (உடம்பு மெலிந்து), இதயம்உம் புழுங்கினன்-மனமும் தவித்தான்; (எ - று.)

எப்பொழுதும் மிக அழகிதாக விளங்குந்தன்மையதான தாமரை பனிக்காலத்தில் வாடுதல்போல, எப்பொழுதும் பலபராக்கிரமங்களையுடைய வீடுமன் அப்பொழுது பகைவர் எய்த அம்புகளால் மெலிந்தனனென்பதாம். காலவித்தியாசத்தாலாகும் தீங்கை நன்கு விளக்குவது, இவ்வுவமை. இதயம் = ஹ்ருதயம். அம்புஜாதம் - நீரிற் பிறப்பது; வடசொல். மலருகின்ற வார்பனி-மூடுபனி. நீடு-பகுதியே வினையெச்சப்பொருள்பட்டது. (336)

13.—வீடுமன் மன்னரெய்த அம்புகளை விலக்குதல்.

துன்னிமித்தமும்பலதொடர்ந்துசெய்யவெய்யவா
மந்நிமித்தநன்னிமித்தமாகுமென்றகந்தெளிந்
துன்னிமித்திரர்க்குநாளுமுதவிசெய்யுமுறுதியோன்
வின்னிமித்தவாளியாலவ்வாளிகள்விலக்கினன்.

(இ - ள்.) (அச்சமயத்தில்), துன்னிமித்தம்உம் பல - அநேக துர்நிமித்தங்களும், தொடர்ந்து செய்ய- தொடர்ச்சியாக உண்டாக, (அதுகண்டு), மித்திரர்க்கு நாள்உம் உதவி செய்யும்உறுதியோன் - சிநேகிதர்களுக்கு எந்நாளிலும் உபகாரஞ்செய்யும் உறுதிக்குணத்தையுடைய வீடுமன், வெய்ய ஆம் அ நிமித்தம் நல் நிமித்தம் ஆகும் என்று உன்னி - கொடியனவாகிய அந்தத்தீநிமித்தங்களை நல்லநிமித்தங்களாகுமென்று கருதி, அகம் தெளிந்து-மனம்தெளிவடைந்து, வில் நிமித்தம் வாளியால் - வில்லைக்கருவியாகவுடைய (தான்) எய்யும் அம்புகளால், அ வாளிகள் விலக்கினன் - (பகைவரது) அந்த அம்புகளை விலகச் செய்தான்; (எ - று.)

நிமித்தம் - பின்வரும்பயனை முன்னே தெரிவிக்குங் குறி: அது - துர்நிமித்த மென்றும், சந்நிமித்த மென்றும் இருவகைப் படும். துர்நிமித்தம் - தீநிமித்தம்; பினவருந்தீமையைத் தெரிவிக்குங் குறி. சந்நிமித்தம் - நல்நிமித்தம்; பின்வரும்நன்மையைத் தெரிவிக்குங் குறி. துர்நிமித்தம் - ஆடவர்க்கு இடக்கண் இடத்தோள் இவை துடித்தல் முதலியன. தனக்கு விரைவில் நேரும் அபாயத்தை முன்னர்த் தெரிவிக்கிற தீநிமித்தங்களைச் சுபநிமித்தங்களாக வீடுமன் கருதியது, உலகவாழ்க்கையில் பற்றுஅற்றதனாலும், உயர்ந்த மறுமைக்கதியை அடையும் உவப்பினாலும், நீதிநெறிதவறாத பாண்டவர்வெற்றிபெறுதல் நியாய மென்ற கருத்தினாலு மென்க. அம்புதொடுத்தற்கு வில் கருவி யாதலால், 'வில் நிமித்தவாளி' எனப்பட்டது. மித்ரன் என்னும் வடசொல்லுக்கு- அளவறிந்து காப்பவனென்று காரணப்பொருள் உரைப்பர். (337)

14.—மாற்றரசர் வென்னிட வீடுமன் எய்தல்.

துருபதேயர்மகதநாடர்வெங்குலிங்கர்சோனகர்
கருநடேசர்சிங்களர்கடாரபூபர்கௌசலர்
தருமராசன்மதலைசேனைமுதுகிடச்சரங்கள்போய்
ஒருவர்போலவனைவர்மேலுமுருவவெய்துறுக்கினன்.

(இ - ள்.) தருமராசன் மதலை சேனை - தருமபுத்திரனது சேனையிலே, துருபதேயர் - துருபதநாட்டரசர்களும், மகதநாடர்- மகததேசத்தரசர்களும், வெம் குலிங்கர் - கொடிய குலிங்கதேசத்தரசர்களும், சோனகர் - சோனகநாட்டரசர்களும், கருநட ஈசர் - கர்நாடகதேசத்தரசர்களும், சிங்களர்-சிங்களதேசத்தரசர்களும், கடார பூபர் - கடாரதேசத்தரசர்களும், கௌசலர்-கோசலதேசத்தரசர்களும், முதுகு இட - புறங்கொடுக்கும்படி, ஒருவர் போல அனைவர் மேல்உம் சரங்கள் போய் உருவ-ஒருத்தர்மேற் போலவே எல்லார்மேலும் அம்புகள் சென்று ஊடுருவும்படி, எய்து உறுக்கினன் - தொடுத்துக் கோபித்தான், (வீடுமன்); (எ - று.)

வெய்து உறுக்கினன் எனப் பிரித்து, கடுமையாகச் சினங் கொண்டான் எனினுமாம். துருபதேயர், கௌசலர் - தத்திதாந்த நாமம். கருநடம், சிங்களம் - கர்ணாடம், ஸிம்ஹளம் என்னும் வட

சொற்களின் திரிபுகள். பி-ம்: மச்சநாடர் வெங்கலிங்கர். கருநடேசர் செஞ்சியர். (338)

15.—இதுவும் அடுத்த கவியும் - வீடுமனுலெய்யப்பட்ட மன்னவ ரடைந்த நிலைமையைக் கூறும்.

முடிதுணிந்துபின்புவீழமுன்னடந்துடற்றுவார்
அடிதுணிந்துவிழவிருந்தலங்கல்வில்வணக்குவார்
கொடிதுணிந்துவிற்றுணிந்துகோறொடுத்தகையுடன்
தொடிதுணிந்துசோரிவெள்ளநதியினூடுசோருவார்.

(இ - ள்.) (தருமன் சேனைவீரர்கள் வீடுமனம்புகளால்), முடி துணிந்து பின்பு வீழ-(தம்) தலை அறுபட்டுப் பின்னே விழுந்திட, முன் நடந்து உடற்றுவார்-முன்னேசென்று போர்செய்பவர்களும், அடி துணிந்து விழ-(தம்)கால்கள் அறுந்துவிழ, இருந்து-கீழிருந்து கொண்டு, அலங்கல் வில்வணக்குவார் - போர்மாலையைச் சூடிய (தம்) வில்லை வளைப்பவர்களும், கொடி துணிந்து - (தம்) துவசம் அறுபட்டு, வில் துணிந்து - வில் அறுபட்டு, கோல் தொடுத்த கை தொடியுடன் துணிந்து - அம்பையெய்கிற கை தொடியென னும் வளையோடு துணிபட்டு, சோரி வெள்ளம நதியினூடு சோருவார்-இரத்தப்பெருக்காகிய ஆற்றிலே தளர்ந்துவிழுபவர்களும் ஆனார்கள்; (எ - று.)

முன் இரண்டடிகள், தலையும் கால்களும் அறுபட்டபின்பும் முண்டங்கள முன்தொடர்ச்சியால் சிறிதுபொழுது தொழில்செய் தலைக் கூறி அம்முகமாக அவர்களது வீராவேசத்தை விளக்கும். கொடிதுணிந்து வில்துணிந்து கைதுணிந்து சோருவார்-சினைவினை முதல்கொண்டது. கையுடன தொடிதுணிந்து - உருபு பிரித்துக் கூட்டப்பட்டது. வில்லையுங் கோல்தொடுத்த கையையும் உடன் கூறியதற்கு ஏற்ப, கொடி - கொடிபோல மெல்லிதாய் நீண்டுள்ள வில் நாணி என்றலும் பொருந்தும்; மேல் 22 - ஆம் கவியில் "கைவரிவிலற்று நெடுநாணிநடுவற்று வளர்கைத் தலமுமற்று விழவே" எனபதைக் காண்க. பி - ம: நதியினூடுசுழலுவார்.

16. மருத்தெறிந்த பூழி யென்ன வந்த வாம டங்குவார்
உருத்தெறிந்த வுருமி னொந்த வுரக மென்ன வுட்குவார்
ஒருத்த ரோட வென்னி தென்ற நேக ரஞ்சி யோடுவார்
விருத்தன் வில்வ ளைத்த வாண்மை விசய னுக்கு மிசையுமோ.

(இ - ள்.) (இன்னும் தருமன்சேனையார்), மருத்து எறிந்த பூழி என்ன-காற்றினால் வீசியெறியப்பட்ட புழுதிபோல, வந்த ஆ மடங்குவார் - வந்த வழியே திரும்புவார்கள்; உருத்து எறிந்த - உக்கிரமாய் இடித்த, உருமின - இடியினால், நொந்த - வருந்திய, உரகம் என்ன - பாம்புகளபோல, உட்குவார் - அஞ்சி ஒடுங்குவார் கள்; ஒருத்தர் ஓட - (முன்பு) ஒருவர் பயந்து ஓட, அநேகர் - (மற் றும்) பலர், இது என் என்று-இது என்ன அபாயகாரணமென்று கருதி, அஞ்சி ஓடுவார் - பயந்து ஓடுவார்கள்; (இங்ஙனம் ஆகும் படி), விருத்தன் வில் வளைத்த ஆண்மை-(யாவரினும்) மூத்தவ

னை வீடுமன் வில்லைவளைத்துப் போர்செய்த பராக்கிரமம், விசய னுக்குஉம் இசையும்ஓ - அருச்சுனனுக்கும் பொருந்துமோ? [பொருந்தாது]; (எ - று.)

வில்லின் திறத்தில் அனைவரினும் பேர்பெற்ற அருச்சுனனும் செய்யமுடியாத விற்போரை வயோவிருத்தனை வீடுமன் அப்பொழுது செய்தனனென்பதாம். காற்றினால் மேலெழுப்பப்பட்ட புழுதிகள் மீண்டும் பூமியிலே அடங்குதல்போல, மிகவிசையாக மேல்வந்த வீரர்கள் வீடுமனிடம் தோற்று வந்தவழியே மீண்டன ரென்பது, முதலடியின் கருத்து. வ்ருத்தன் - வடசொல்; கிழவன்.

வேறு.

17.—சோழராசனும் கிருபன் முதலியோரும் வீடுமனுக்குஉதவியாக வருதல்.

வெம்புயவி சாலவட மேருவொரி ரண்டுடைய வீடுமனை நீடுமுனைவாய்
அம்புதமெ ழுந்துபொழி கின்றவழி யோடிவரு மனிலமென வந்த ணுகினர்
செம்பியனு மாகிருப னுஞ்செறிது ரோணனொடு சேயொடுசெ யத்தி ரதனுந்
தம்பியரு மாமனுஞ்ச யிந்தரொடு வெய்யபக தத்தனொடு சல்லி யனுமே.

(இ - ள்.) (அப்பொழுது), நீடு முனைவாய் - பெரிய அப்போர்க் களத்திலே, செம்பியன்உம் - சோழனும், மா - சிறந்த, கிருபன் உம் - கிருபாசாரியனும், செறி - வலிமைமிகுந்த, துரோணனொடு- துரோணாசாரியனும், சேயொடு-அவன்மகனான அசுவத்தாமனும், செயத்திரதன்உம் - சைந்தவனும், தம்பியர்உம்-(துரியோதனன்) தம்பிமார்களும், மாமன்உம் - (அவர்கள்) மாமனான சகுனியும், சயிந்தரொடு - சிந்துதேசத்தரசர்களும், வெய்ய - கொடிய, பகதத்தனொடு - பகதத்தனும், சல்லியனும்—, (என்னும் இவர்கள்), —அம்புதம் எழுந்து பொழிகின்ற வழி ஓடி வரும் அனிலம் என - மேகம் வானத்திலெழும்பி மழைபொழிகிற இடத்திலே (அதற்கு உதவியாக) ஓடி வருகிற காற்றுப்போல, வெம் புயம் விசாலம் வட மேரு ஓர் இரண்டு உடைய வீடுமனை - வலிய தோள்களாகிய பெரியவடதிசையிலுள்ள மேருமலைகளிரண்டையுடைய பீஷ்மனை, வந்து அணுகினர்-வந்து சேர்ந்தார்கள்; (எ - று.)

மழையோடு பலதிசைக்காற்றுஞ் சேர்ந்து உலகத்தை வருத்தத்தொடங்கினாற்போல, வீடுமனோடு பல அரசர்கள் கூடி எதிர்ச்சேனையை அழிக்கத் தொடங்கினரென்பதாம். மேருஇரண்டு - இல்பொருளுவமை. மேரு எவ்விடத்திலுள்ள தென்றால், நமக்கு வடக்கிலுள்ள தென வேண்டுதலின், அதனை 'வடமேரு' என விளங்கக் கூறினர். அம்புதம் - நீரைக்கொடுப்பது; வடசொல். முன்னே சயத்திரதன் என வந்ததனால், பின்னே சயிந்தர் என்றது, அவன் ஒழிந்த சிந்துநாட்டரசர்களை: சயிந்தர் = ஸைந்தவர்.

இதுமுதல் இருபத்தொருகவிகள் - பெரும்பாலும் முதலைந்து சீரும் விளங்காய்ச்சீர்களும், ஆறாவது தேமாச்சீரும், ஏழாவது புளிமாச்சீரும் ஆகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். (341)

18.—வீடுமனுக்குத் துணையாக வந்தவரெய்த அம்புகளை அருச்சுனன் விலக்குதல்.

**மனஞ்செய்வலிகூர்கசதுரங்கமபதாதியிரதத்துடன்வளைந்துபலருந்
தனஞ்சயமடங்கலெதிர்சாபமும்வளைத்தெதிர்சரங்களுமுகைத்தமர்செய்தார்
கனஞ்சலதிமொண்டுகொடெழுந்தனையவண்ணனொருகார்முகம்வணக்கியொருநூ
றினஞ்சரமொரோர்தொடையிலேவியவரேவுசரம்யாவுமெதிரேவிலகினன்.**

(இ - ள்.) பலர்உம் - (இவ்வாறு) பலஅரசர்களும், மனம் செய் வலி கூர்-மனத்திற்பொருந்திய வலிமை [தைரியம்] மிகுந்த, கச துரங்கம பதாதி இரதத்துடன்-மிகுந்த யானை குதிரை காலாள் தேர் என்னும் நால்வகைச் சேனைகளுடனே, வளைந்து - சூழ்ந்து கொண்டு, தனஞ்சய(ன்) மடங்கல்எதிர்-அருச்சுனனாகிய சிங்கத்தினெதிரே, சாபம்உம் வளைத்து - வில்லையும் வளைத்து, எதிர் சரங்கள்உம் உகைத்து - அவன்மேல் அம்புகளையும் செலுத்தி, அமர் செய்தார் - போரைச் செய்தார்கள்; (அப்பொழுது), கனம் சலதி மொண்டு கொடு எழுந்து அனைய வண்ணன் - மேகம் கடல்நீரை முகந்துகொண்டு எழுந்தாற்போன்ற கருநிறத்தையுடைய அருச்சுனன், ஒரு கார் முகம் வணக்கி - (காண்டீவமென்னும் தனது) ஒருவில்லை வளைத்து, ஒரு நூறு இனம் சரம் ஓர் ஓர் தொடையில் ஏவி - ஒவ்வொருநூறுதொகுதியான அம்புகளை ஒவ்வொருதொடுக்குந்தரத்திலும் பிரயோகித்து—(அந்த அம்புகளால்), அவர் ஏவு சரம் யாஉம் எதிர்ஏ விலகினன் - அப்பகைவர்கள் (தன்மேல்) ஏவிய அம்புகளையெல்லாம் எதிரிலே விலகச்செய்தான்; (எ-று.)

விலக்கினன் என்ற பிறவினை, சந்தவின்பத்திற்கேற்ப, தொகுத்தல் பெற்றது. 'மனஞ்செய்வலிகூர்' என்ற அடைமொழி இரதத்துக்குப்பொருந்தாதாதலின், சதுரங்கசேனையில் இரதத்தை இறுதியில் வைத்தார். சலதி-நீர்தங்குமிடம். பி - ம்: தனஞ்சயன் மடங்கவெதிர். (342)

19.—ஒருபக்கத்தில் அருச்சுனன் பகைவெல்ல, மற்றொருசார் வீமன் தண்டு கொண்டு விரைதல்.

**தேருதயபானுவெனநின்றவிசயன்றனெதிர்தெவ்வர்பனியென்னவகலத்
தாருதயமாநிருபர்வேலைசுவறத்தனதுதண்டுதனிகொண்டுகுதியா
வோருதவியின்றிமுடியோடவர்சிரங்களுமுடைந்துமுதுகிட்டுடையவே
மாருதசகாயனெனமாருதனெனக்கடவுண்மாருதசுதன்கடுகினன்.**

(இ - ள்.) தேர் உதய பானு என நின்ற-தேரோடு உதித்தலையுடையசூரியன்போல விளங்கிநின்ற, விசயன் தன்-அருச்சுனனது, எதிர் - எதிரிலே, தெவ்வர்-பகைவர்கள், பனி என்ன-மூடுபனி போல, அகல-(இருந்த இடந்தெரியாது) நீங்க,—(மற்றொருபக்கத்தில்), கடவுள் மாருத சுதன் - வாயுதேவனது குமாரனான வீமசேனன், தார் உதயம் ஆம் நிருபர் வேலை சுவற-முன்னணிச்சேனையிலே விளங்கித்தோன்றுதலையுடைய அரசர்களாகிய கடல்வற்றும்படி, தனது தண்டு கொண்டு தனிகுதியா - தன்னுடைய

கதாயுதத்தை எடுத்துக் கொண்டு தனியே [ஒப்பில்லாமல் அல்லது வேறு உதவியில்லாமல்] (தேரினின்று) குதித்து, அவர்-அப்பகைவர்கள், ஓர் உதவி இன்றி-(தம்மைக்காத்தற்குத்) துணைவருபவர் ஒருவரும் இல்லாமல், முடியோடு சிரங்கள் உம் உடைந்து - கிரீடங்களோடு தலைகளும் உடைபட்டு, முதுகு இட்டு-புறங்கொடுத்து, உடைய-அழியும்படி, மாருத சகாயன என-காற்றைத் துணைவனுகவுடைய அக்கினி போலவும், மாருதன் என - காற்றுப்போலவும், கடுகினுன்-விரைந்து வந்தான்; (எ - று.)

அக்கினியை உவமைகூறுதற்கேற்பக் கடல்வற்றுதலும், வாயுவை உவமை கூறுதற்கேற்பக் கடுகிவருதலுங் கூறிஞர். மேல் 21-ஆம் கவியில் 'முந்துபடைவீரர்' என வருதலை நோக்கி, தார் என்பதற்கு - முற்சேனையென்று பொருளுரைக்கப்பட்டது. இனி, தார் உதயம் மா எனப் பிரித்து, போர்மாலையோடு எதிரிலே தோன்றுதலையுடையசிறந்த நிருபரெனினுமாம். மாருதசகாயன் -பஹுவ்ரீஹிஸமாஸம்பெற்ற வடசொல்தொடர். மாருதசுதன் ஒருதவியின்றிக் கடுகினுன் என்று இயைத்து உரைப்பினுமாம்.

20.—வீமனுடைய வீரச்செயல்.

ஏறிவருதேருடனெடுத்தெறிதருஞ்சிலரையிருபணைகள்பற்றியிறுகச்
சீறிவரும்யானையொடெடுத்தெறிதருஞ்சிலரையைந்துகதியுஞ்சிவணவே
மாறிவருவாசியொடெடுத்தெறிதருஞ்சிலரைவஞ்சினமும்வெஞ்சினமுடன்
கூறிவரும்வாளரசரேறியணிநின்றரதகுஞ்சரதுரங்கமவிழவே.

(இ - ள்.) (வீமன்), வெம் சினமுடன் - கடுங்கோபத்தோடு, வஞ்சினம்உம் கூறி வரும்-வீரவாதங்களையுஞ் சொல்லிவருகிற, வாள் அரசர் - கொடியபகையரசர்கள, ஏறி—, அணி நின்ற-ஒழுங்காக நின்ற, ரதகுஞ்சர துரங்கம-தேர் யானை குதிரைகள், விழ-கீழ விழும்படி, ஏறிவருதேருடன எடுத்துசிலரை எறிதரும்-ஏறிவருகிற தேரோடு கையால்தூக்கிச் சில அரசரை எறிவான்; இரு பணைகள இறுக பற்றி-இரண்டுதந்தங்களையும் (தன்கைகளால்) உறுதியாகப்பிடித்து, சிறி வரும் யானையொடு எடுத்து சிலரை எறிதரும்-கோபித்துவருகிற யானையோடு தூக்கிச் சில அரசரை எறிவான; ஐந்து கதிஉம சிவண - ஐவகைநடைகளும்பொருந்த, மாறி வரு-எதிர்ப்பட்டுவருகிற, வாசியொடு-குதிரையுடனே, எடுத்து-தூக்கி, சிலரை எறிதரும்-சிலஅரசரை எறிவான்; (எ - று.)

இனி, 'வஞ்சினமும்... ..விழ' என்பதை அடுத்தகவியில் 'நொந்து'என்பதோடு இயைப்பினும் அமையும். வஞ்சினம்-சபதம். ஐந்துகதி-நான்காம் போர்ச்சருக்கம், 30-ஆம் பாடலினுரையிற் காண்க. (344)

21.—தன்சேனை வீமனுக்குப் புறங்கொடுத்தது கண்ட துரியோதனன்கட்டளையால் ஐந்துலட்சம்வீரர் வீமனை யெதிர்த்தல்.

முந்துபடைவீரர்மிகநொந்துகதைவீமனெதிர்முதுகிடுதல்கண்டுமுனியா
வைந்துறமுநூறுபடியாயிரவர்வின்மையிலருச்சுனனையொத்தவடலோர்

உந்துரககேதனனுரைப்பமுகிலேழுமுடனூழியிறுதிப்பொழிவபோல்
வந்துவடிவாளிமழைசிந்தினர்பராக்கிரமவாசியிபமாவிரதரே.

(இ - ள்.) முந்து படை வீரர்-(போருக்கு) முற்பட்டுவந்த சேனை வீரர்கள், கதை வீமன் எதிர்-(சத்துருகாதிநியென்னுங்) கதாயுதத்தையுடைய வீமசேனனது எதிரிலே, மிக நொந்து-மிகுதியாக வருந்தி, முதுகு இடுதல்-புறங்கொடுத்தலை, கண்டு - பார்த்து, உந்து உரக கேதனன்-உயர்ந்தபாம்புக்கொடியையுடைய துரியோதனன், முனியா - கோபங்கொண்டு, உரைப்ப - (அவ்வீம அருச்சுனரை எதிர்க்கும்படி கட்டளை) கூற,—ஐந்து உறழும் நூறு படி ஆயிரவர்-ஐந்தினுற்பெருக்கப்பட்ட நூறென்னும் அளவையுடைய ஆயிரமென்னுந்தொகையுடையவர்களும் [ஐந்துலக்ஷம்பேரும்], வின்மையில் அருச்சுனனை ஒத்த அடலோர்-விற்போர்வல்லமையில் அருச்சுனனைப்போன்ற வலிமையையுடையவர்களுமாகிய, பராக்கிரமம் வாசி இபம் மா இரதர்-பகைவெல்லும்ஆற்றலையுடையகுதிரை யானை பெருந்தேர் என்பவற்றில் ஏறிய வீரர்கள்,—முகில் ஏழ்உம் -ஏழுமேகங்களும், உடன்-ஒருசேர, ஊழி இறுதி-கல்பாந்தகாலத்தில், பொழிவ போல் - (வந்து) மழை பொழிவனபோல, வந்து-(திரண்டு எதிர்த்து) வந்து, வடி வாளி மழை சிந்தினர் - கூர்மையான அம்பின்மழையைப் பொழிந்தார்கள்; (எ - று.)

பராக்கிரமம்-பர ஆக்கிரமம் எனப் பிரியும்; பரர்-பகைவர், (அவர்களை) ஆக்கிரமித்தல்-வென்றுவசப்படுத்தல்; இது-வீரர்க்கு அடைமொழி. உறழ்தல்-பெருக்கல். உந்துதல்-உயர்தல், ஏறுதல். ஊழி-பிரமனுயுள்; அல்லது, பிரமனது தினம். பிரமனதுநாள் ஒவ்வொன்றன் பகலிறுதியிலும் பிரமனுயுளிறுதியிலும், ஏழுமேகங்களும் விரைந்து ஒருங்கு எழுந்து அளவிறந்த மழைபொழிந்து உலகங்களை யழிக்குமென்பது நூற்கொள்கை. பொழிவ=பொழிவது: விகாரம். (345)

22.—அருச்சுனன் சென்று எதிரிகள் பொழியும் அம்புமழையை விலக்குதல்.

வெவ்வனமெரிக்கடவுளுண்டிடவணக்குமொருவில்லியுமவ்வில்லொடெதிர்போ
யவ்வவர்தொடுத்துவிடுமம்புகளனைப்பலவுமவ்வகைதொடுத்துவிலகிக்
கைவரிவிலற்றுநடுநாணினடுவற்றுவளர்கைத்தலமுமற்றுவிழவே
வைவரிவடிக்கணைகளேவினன்மணித்திகிரிவலவன்விடுதேரில்வருவோன்.

(இ - ள்.) மணி - அழகிய, திகிரி - சக்கராயுதத்தையுடைய, வலவன்-பாகனாகிய கண்ணபிரான், விடு - விசையாகச் செலுத்துகிற, தேரில்-இரதத்திலே, வருவோன் - வருபவனும், வெம் வனம்-கொடியகாண்டவவனத்தை, எரி கடவுள் உண்டிட - அக்கினிதேவன் புசிக்க, வணக்கும் - (தான்) வளைத்த, ஒரு வில்லிஉம்-ஒப்பற்றவில்லையுடையவனுமான அருச்சுனனும், அ வில்லொடு-(காண்டீவமென்னும்) அந்த வில்லுடனே, எதிர்போய்-எதிர்சென்று, அ அவர் தொடுத்து விடும் அம்புகள் எனை பலஉம்-அந்தந்தப் பகைவீரர்கள் (வில்லில்) தொடுத்து விடுகிற அம்புகள் எல்லாவற்றையும், அ வகை தொடுத்து-அவர்கள் தொடுக்கும்

வகையாகவே எதிரம்பு தொடுத்து, விலகி-விலக்கி, (அவர்கள்), கை வரி வில் நடு அற்று - கையிற்பிடித்த கட்டமைந்த விற்கள் நடுவில் துணிபட்டு, நாணின் நடு அற்று - வில்நாணியின் நடுவிடமும் துணிபட்டு, வளர் கை தலம்உம் அற்று - வளர்ந்துள்ள கைகளினிடங்களும் துணிபட்டு, விழ - கீழ்விழும்படி, வை வரி வடி கணைகள் - கூர்மையான நீண்ட வடிக்கப்படுதலையுடைய அம்புகளை, ஏவினன் - (அவர்கள்மேல்) செலுத்தினான்; (எ - று.)

அருச்சுனன் பகைவரெய்த அம்புமழையை விலக்கி மற்றும் பல பாணங்களைச் செலுத்தி அவர்களது வில்லையும் வில்நாணியையும் கைகளையும் அறுத்துத்தள்ளினனென்பதாம். மிகப் பசித்து அந்தணவடிவத்தோடுவந்த அக்கினி பகவானுக்கு அருச்சுனன் காண்டவவனத்தை அதிலுள்ளசராசரங்களுடனே விருந்தளித்தபொழுது, அந்த அக்கினியினிடத்தினின்று காண்டீவமென்னும் வில்லைப் பெற்று, அதினின்று தொடுத்த அம்புகளால், அப்பூஞ்சோலையிலுள்ள பிராணிகள் தப்பி வெளியிற்செல்லாதபடி அவற்றையெல்லாம் கொன்று தள்ளியும், அவ்வனத்துக்குஉரிய இந்திரனால் ஏவப்பட்டுவந்து ஏழுமேகங்களும் பொழிந்த அடைமழையைச் சரக்கூடுகட்டித்தடுத்தும் பின்னும் தேவேந்திரன் பெருங்கோபங்கொண்டு தேவர்களுடன்வந்து எதிர்க்க அவர்களை விற்போரில் வென்றும் அருச்சுனன் திறங்காட்டினனென்பது, கீழ்க் காண்டவதகனச்சருக்கத்து வரலாறும். விலகி-விகாரம். (346)

23.—வீமார்ச்சுனர்பொர, யாவரும் பறந்துபோதல்.

தருமன்முதலைவரையும்வென்றிடுதுமென்றுதுச்சாதனனொடைவரிளையோர்
பொருமுனையின்வீடுமன்முனின்றவர்களல்லதுபுகன்றநரபாலரெவரும்
பருமமதமாபுரவிதேர்கொடுபறந்தனர்படாதவர்கெடாதகதையுஞ்
செருமுனைசராசனமுமுடையவிருவோருநனிசீறியமர்செய்தபொழுதே.

(இ - ள்.) கெடாத - அழியாத, கதைஉம் - (சத்துருகாதினியென்னும்) கதாயுதத்தையும், செரு முனை - போரை உக்கிரமாகச் செய்கின்ற, சராசனம் உம் - காண்டீவவில்லையும், உடைய—, இருவோர்உம் - (வீம அருச்சுனர்) இரண்டுபேரும், நனி சீறி - மிகக் கோபித்து, அமர் செய்த பொழுது - போர் செய்த அச்சமயத்தில்,—தருமன் முதல் ஐவரைஉம் வென்றிடுதும் என்று - தருமபுத்திரன் முதலிய பஞ்சபாண்டவரையும் சயித்திடுவோமென்று (வீரவாதங்) கூறி, பொரு முனையின் - போர்செய்யுமிடத்திலே, வீடுமன் முன் - பீஷ்மனுக்குமுன்னே, துச்சாதனனொடு நின்றவர்கள் - துச்சாதனனுடன் வந்து நின்றவர்களாகிய, ஐவர் இளையோர் அல்லது - அவன்தம்பிமார் ஐந்து பேர்மாத்திரமேயல்லாமல், புகன்ற நரபாலர் எவர்உம் -(மற்றும் வீரவார்தம்) கூறிய அரசர்களெல்லோரும், படாதவர் - இறவாதவர்களாய், பருமம் மதம் மா புரவி தேர்கொடு - அலங்காரத்தையுடைய மதயானைகளும் குதிரைகளும் தேர்களு மாகிய (தங்கள்) வாகனங்களைக்

கொண்டு, பறந்தனர் - (அஞ்சி) ஓடினார்கள்; (எ - று.)—யாவரும் பயந்து ஓடிப் பிழைத்தனரென்பதாம். புகன்ற-சிறப்பித்துக்கூறப் பட்ட எனினுமாம். பருமம் - பருமையுமாம். (347)

24.—வீடுமன் தருமபுத்திரனுக்குத் துணையானதேர்வீரர்களைக் கடுமையாக எதிர்த்தல்.

விண்ணவரிலுற்றெழுவர்கண்டுகளிகூரவிறல்வீடுமன்விருப்பினுடனே
கண்ணிணைநெருப்பெழவுடன்றினிநமக்குமிதுகாலமெனமாலைபுனையும்
வண்ணவரிவிற்றலைவணக்கிவிதமானபலவாளிகடெரிந்துதருமற்
கெண்ணுமிரதத்தலைவரனைவரையும்விட்டிலனிமைப்பொழுதினெய்தனனரோ.

(இ - ள்.) (அப்பொழுது), விறல் வீடுமன் - பராக்கிரமத்தை யுடைய பீஷ்மன், விண்ணவரில் எழுவர் உற்று கண்டு களி கூர - (போர்காணும்) தேவர்களில் ஏழுவசுக்கள் (அவர்களினத்தவனான தனது போர்த்திறத்தைக்) கவனித்துப்பார்த்துக் களிப்புமிகும்படி, விருப்பினுடன்-போர் விருப்பத்தோடு, கண் இணை நெருப்பு எழ உடன்று - இரண்டுகண்களிலும் தீப்பொறி கிளம்பப் பெருங்கோபங்கொண்டு, இனி நமக்கு உம் இது காலம் என - இனிமேல் நமக்கும் (போர்முடித்தற்குக்) காலம் இதுவே யென்றுகருதி, மாலை புனையும் வண்ணம் வரி வில் தலை வணக்கி - போர்மாலையைத் தரித்த அழகியகட்டமைந்த வில்லின்கோடியை வளைத்து, விதம் ஆன பல வாளிகள் தெரிந்து - பலவகைப்பட்ட அநேக அம்புகளை ஆராய்ந்து எடுத்து, தருமற்கு எண்ணும் இரதம்தலைவர் அனைவரை உம்-தருமபுத்திரனுக்கு(த் துணைவராக) மதிக்கப்பட்ட தேர் வீரர்களெல்லாரையும், விட்டிலன் - (ஒருவரையும்) விடாதவனாய், இமை பொழுதின் எய்தனன் - ஒருகணப்பொழுதிலே அம்பு செலுத்தி யெதிர்த்தான்; (எ - று.)—அரோ - ஈற்றசை.

அஷ்டவசுக்களுள் பிரபாசன் வீடுமனாதலால், அவனொழிந்தோரை'எழுவர்' என்றது. தனக்கு அழிவுகாலம் அருகிலிருத்தலால், அதற்குமுன் தனது போர்த்திறம் முழுவதையும் காட்டக் கருதினனென்பார், 'இனி நமக்கும் இதுகாலமென' என்றார்.

25.—மூன்றுகவிகள்-வீடுமன்செய்த கடும்போரினால் அரசர்கள் அங்கமற்று இறந்தமை கூறும்.

எத்தனைமுடித்தலைகளெத்தனைபுயக்கிரிகளெத்தனைகரக்கமலம்வே
றெத்தனையுடற்சுமைகளெத்தனையுறுப்பினிணமெத்தனைகொடிக்குடர்களு
மெத்தனைநிணத்தடிகளெத்தனைநரப்புவகையெத்தனையெலுப்புநிரைமே
லெத்தனைமணித்தொடைகளெத்தனைமலர்க்கழல்களிற்றனகளத்தினிடையே.

(இ - ள்.) (அவ்வாறு வீடுமன் உக்கிரமாகப் போர்செய்த பொழுது), களத்தின் இடை-போர்க்களத்திலே, இற்றன - துணிபட்டனவான, முடி தலைகள்-கிரீடத்தையுடைய தலைகள், எத்தனை-எவ்வளவு! புயம் கிரிகள்-மலைபோலும் தோள்கள், எத்தனை—! கரம் கமலம்-தாமரைமலர்போலும் கைகள், எத்தனை—! வேறு-இன்னும், உடல் சுமைகள்-பருத்த உடம்புகள், எத்தனை—!உறுப்

பின் நிணம் - உடம்பிலுள்ளகொழுப்புகள், எத்தனை—! கொடி குடர்கள்உம்-கொடிபோலச்சுற்றிய குடல்களும், எத்தனை-! நிணம் தடிகள்-கொழுத்துள்ள தசைத்திரள்கள், எத்தனை—! நரம்பு வகை-நரம்புகளின்வகைகள், எத்தனை—! எலும்பு நிரை-எலும்புகளின் வரிசைகள், எத்தனை—! மேல்-இன்னும், மணிதொடைகள் -அழகியதுடையென்னும் உறுப்புகள், எத்தனை—! மலர் கழல்கள் -தாமரைமலர்போன்ற கால்கள், எத்தனை—! (எ - று.)

மிகப்பல வீரர்கள் தலைமுதலியன சின்னபின்னப்பட்டு அழிந்தன ரென்பதாம். தொடையெனினும், துடையெனினும் ஒக்கும். நரப்புவகை, எலுப்பு நிரை-மென்றொடர் வன்றொடராயின. பி. ம்: குடல்களோடு. (349)

26. விரிந்தனவு ரங்களும்வெ குண்டனம னங்களும்வி ழுந்தனப சுங்குருதிநீர், நெரிந்தனவெ லும்புகளி ழிந்தனகொ ழுந்த சைநி மிர்ந்தனந ரம்பின் விசியுஞ், சரிந்தனபெ ருங்குடர்து ணிந்தனசி ரங்கடைத வழ்ந்தனநெ டும்புருவமு, மெரிந்தனமு கங்களுமெ ழுந்தனசி ரங்களுமி றந்தனர்க டுங்க ணிளையோர்.

(இ - ள்.) (மற்றும் பலவீரர்களது), உரங்கள்உம்-மார்புகளும், விரிந்தன-பிளந்தன; மனங்களும்—, வெகுண்டன - கோபங்கொண்டன; பசு குருதி நீர்-புதிய இரத்தப்பெருக்குகள், விழுந்தன-கீழ்ப்பாய்ந்தன; எலும்புகள்—, நெரிந்தன-நொருங்கின; கொழு தசை-கொழுத்த சதைகள், அழிந்தன—; நரம்பின் விசிஉம்-நரம்புகளின் கட்டுக்களும், நிமிர்ந்தன - நெக்கு விட்டன; பெரு குடர் - பெரிய குடல்கள், சரிந்தன—; சிரம்-தலைகள், துணிந்தன - அறுபட்டன; நெடு புருவம்உம்-நீண்ட புருவங்களும், கடை தவழ்ந்தன - நுனி நெறித்தன; முகங்களும்—, எரிந்தன-தீந்துபோயின; சிரங்கள்உம்-தலைகளும், எழுந்தன-(உடலினின்று துணிபட்டு) மேலெழுந்தன; (இவ்வாறு போரில் வீடுமனம்புகளால்), கடுங் கண் இளையோர்-பயங்கரமான கண்களையுடைய வீரர்கள், இறந்தனர்—; (எ - று.)

வெகுண்டனமனங்களும், கடைதவழ்ந்தனநெடும்புருவமும் என்ற இரண்டும்-அவர்கள்கொண்ட கோபத்தையும், மற்றவை அவர்கள் பலவகையாக அழிந்ததையும் விளக்கும். எரிந்தனமுகங்களும் என்பதற்கு-முகங்கள் கோபாக்கினியாற் கொதித்தன எனினும் அமையும். கடுங்கண் என்றது, கோபக்கண்களை; இனி, கடுமையான தன்மையுமாம். பி-ம்: முகங்களுமிடிந்தனமனங்களும்.

வேறு.

27. சோமகரின் மச்சரிற் றென்னரிற் றுளுவரிற் றுருப தேயரில் வளவரிற்
றேமருவ லங்கற்கு லிங்கரிற் சேரரிற் சிஞ்சிய ரில்வெஞ்ச மர்விடா
மாமகுட வர்த்தனரின் மண்டலிக ரிற்பட்ட வர்த்தனரின் மற்றிவ் வுரவோ
னேமருக ணக்கிலக் காகாத மன்னவர்க ளெம்மன்ன ரென்று மொழிவாம்.

(இ - ள்.) சோமகரில் - சோமககுலத்தவரிலும், மச்சரில்-மத்ஸ்ய தேசத்தவரிலும், தென்னரில் - பாண்டியநாட்டவரிலும், துளுவரில்-துளுவதேசத்தவரிலும், துருபதேயரில்-துருபததேசத்தவரிலும், வளவரில்-சோழநாட்டவரிலும், தேன் மருவு அலங்கல்-

தேன்பொருந்தின போர்மாலையையுடைய, குலிங்கரில் - குலிங்க தேசத்தவரிலும், சேரரில்-சேரநாட்டவரிலும், சிஞ்சியரில் - சிஞ்சி நாட்டவரிலும், வெம் சமர் விடா-கொடிய போரை நீங்காத, மா மகுடவர்த்தனரில் - பெரியமகுடவர்த்தனர்களிலும், மண்டலிகரில்-மண்டலிகர்களிலும், பட்டவர்த்தனரில் பட்டவர்த்தனர்களிலும், இ உரவோன் ஏமருகணைக்கு இலக்கு ஆகாத மன்னவர்கள்-(வீடுமனுகிய) இவ்வீரன மிகுந்தகளிப்போடுஎய்த அம்புகளுக்குக் குறியாகாமல் தப்பின அரசர்கள், எ மன்னர் என்று மொழிவாம்-எந்த அரசரென்று (யாம்)' கூறுவோம்? (எ - று.)—மற்று-அசை.

எனவே, ஒருவரும் தவறுமல் எல்லோரும் வீடுமனம்புக்கு இலக்காயினரென்பதாம். ஏமருதல்-மிகுகளிப்புறுதல்; ஏமா என்னும்பகுதி விகாரப்பட்டு வினைத்தொகையில்வந்தது. இனி, ஏமரு -(காண்பவர்) திகைத்தற்குக் காரணமான என்றுங் கொள்ளலாம்: ஏ மரு-எய்யுந்தொழில் மருவுகின்ற என்றலும் ஒன்று. பின்னே துருபதேயர் என வருதலால், முன்னே சோமகர் என்றது - அக்குலத்தவருள் துருபதேதசத்தவரொழிந்தவரையே குறிக்கும்; இனி, துருபதேயர் என்பதை-த்ரௌபதேயர் என்பதன் விகாரமாகக்கொண்டு, திரௌபதீபுத்திரரான உபபாண்டவர் ஐவரென உரைத்தல், முன்னும் பின்னும்வந்த நாட்டவரினத்தோடு பொருந்தாதாம். கீழ் இச்சருக்கத்தின் பதினான்காங் கவியையுங் காண்க. முனவந்த பல நாடுகளின் சேர்த்தியால், சிஞ்சியென்பது - ஒருநாடென்று கொள்ளப்பட்டது. தெனனர்-தென்னுட்டவர்.

இது-கீழ்க்கூறிய விருத்தவகையில் சிறிது ஓசைவேறுபட்டது.

வேறு.

28.—அதுகண்டு ஸ்ரீக்ருஷ்ணன் சொல்ல, அருச்சுனன் வீடுமனுடன் பொர வில்வளைத்தல்.

மேலெழுந்து தம்படையை நீடுகங்கை மைந்தனடு மேன்மை கண்டி ரங்கி வெகுளா, ஞாலமுண்ட செம்பவள வாய்மலர்ந்து கொண்டிவனை நாமுரண்டொ டங்க விதுவே, காலமென்று மன்றல் கமழ் கார்முகுந்தன் வெம்புரவி கால்கொள் சந்த னங்க டவவே, கோலவெஞ்ச ரங்களடை வேதெரிந்து கொண்டுசிலை கோலினன்ற னஞ்சயனுமே.

(இ - ள்.) (இவ்வாறு), நீடு கங்கைமைந்தன்-பெரிய வீடுமன், மேல் எழுந்து - மேன்மேற் கிளர்ந்துவந்து, தம் படையை அடு - தம்பக்கத்துச் சேனையைஅழிக்கிற, மேனமை-சிறப்பை, கண்டு—, மன்றல் கமழ் கார் முகுந்தன் - (திருமேனியில்) திவ்வியபரிமளம் வீசப்பெற்ற கருநிறமுடைய கண்ணபிரான், இரங்கி - மனமிரங்கி, வெகுளா - கோபங்கொண்டு,—ஞாலம் உண்ட செம் பவளம் வாய் மலர்ந்து - (பிரளயகாலத்தில்) உலகங்களை அமுதுசெய்கிற சிவந்த பவழம்போன்ற(தன்) திருவாய்மலரைத் திறந்து,இவனை கொண்டு நாம் முரண் தொடங்க இதுஎ காலம் எனறு - இச்சிகண்டியை எதிர்கொண்டு நாம் போரைத் தொடங்குதற்கு இதுவே சமயமென்று சொல்லி, வெம் புரவி கால் கொள் சந்தனம் கடவ - வேக

மாலை குதிரைகளையும் சக்கரங்களையும் கொண்ட தேரை (வீடும னெதிரில்) செலுத்த,—தனஞ்சயன் உம்-அருச்சுனனும், கோலம் வெம் சரங்கள் அடைவுஏ தெரிந்து கொண்டு-அழகியகொடிய அம்புகளை முறையே ஆராய்ந்தெடுத்து, சிலை கோலினன் - (போர் செய்ய) வில்வளைத்தான்; (எ - று.)

பிரளயகாலத்தில் திருமால் உலகங்களைத் திருவயிற்றில் வைத்துக் கொண்டு பாதுகாக்கின்றமைபற்றி, 'ஞாலமுண்டவாய்' என்றார். சந்தனம் = ஸ்யந்தநம். இவனைக்கொண்டு - கதையை உட்கொண்டுவந்த சுட்டு.

இதுமுதற் பத்துக்கவிகள் - இச்சருக்கத்து 17-ஆம் கவி போன்ற விருத்தவகையிற் சேர்ந்தனவே யாகும். (352)

29.—ஸ்ரீக்ருஷ்ணனுடைய பாஞ்சசன்னியமுழக்கம்.

ஓதம்வந்தெ ழுந்ததென மேகநின்ற திர்ந்ததென வூழியும்பெயர்ந்த தெனவே
மாதிரங்க ளுஞ்செவிடு போயகண்ட மும்பொதுளி வாய்பிளந்த தண்ட முகடுஞ்
சீதரன்செ ழுந்துளப மாதவன்ற யங்கருண சீதபங்க யங்கொ டிருவி
னாதன்வெஞ் சமங்கருதி யூதுகின்ற சங்கின்முழு நாதம்வந்தெ ழுந்த பொழுதே.

(இ - ள்.) சீதரன் - ஸ்ரீதரனென்னும் ஒருதிருநாமமுடையவனும், செழு துளபம் - சிறந்த திருத்துழாய்மாலையையணிந்த, மாதவன்-மாதவனென்னும் ஒருதிருநாமமுடையவனும், தயங்கு - விளங்குகிற, அருணம்-செந்நிறமுடைய, சீதம்-குளிர்ந்த, பங்கயம்-தாமரைமலரை, கொள்-(இடமாகக்) கொண்ட, திருவின்-இலக்குமியினது, நாதன் - கணவனும் ஆகிய கண்ணபிரான, வெம் சமம் கருதி - கொடியபோரை உத்தேசித்து, ஊதுகின்ற-(அப்பொழுது தன திருவாய்மலரில்வைத்து) ஊதின, சங்கின்-(பாஞ்சசன்னியமென்னுந் திவ்விய) சங்கத்தினது, முழு நாதம் - பேரொலிமுழுவதும், வந்து எழுந்த பொழுது - வெளிப்பட்டு மிகுந்தபொழுது, ஓதம் வந்து எழுந்தது என - கடல்கள் பொங்கிவந்ததென்று சொல்லவும், மேகம் நின்று அதிர்ந்தது என - மேகங்கள் நிலைபெற்று இடிமுழங்கிற்று என்று சொல்லவும், ஊழிஉம்பெயர்ந்தது என-கல்பகாலம் மாறிற்றென்று சொல்லவும், மாதிரங்களஉம் செவிடு போய் - எல்லாத்திசையிலுள்ளவர்களும் செவிடுபட்டு, அகண்டம்உம் பொதுளி - எல்லாவுலகங்களும் தாக்கி, அண்டம் முகடுஉம் வாய் பிளந்தது-அண்டகோளத்தின் மேல்முகடும் (அதிர்ச்சியால்) வெடித்தது; (எ - று.)

மாதிரம் - ஆகுபெயர். ஸ்ரீதரன்-திருமகளைத் திருமார்பில் தரிப்பவன்: மாதவன்-திருமகள்கணவன். பின்னே 'திருவின் நாதன்' என வந்ததனால், மாதவன் என்னும் பெயர் - இடுகுறிமாத்திரமாய் நின்றது; இனி, (வாமனாவதாரத்தில்) பெருந்தவமுடையா னெனினுமாம். அருணசீதபங்கஜம் - வடமொழித் தொடர். (353)

30.—அருச்சுனன் சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு போர்தொடங்கி வீடுமனெதிரிற் போதல்.

தூரியங்கறங்கநரபாலர்சங்கினங்களணிதோறுநின்றுநின்றுகுமுறத்
தேர்களுந்துரங்கமொடுவேழமுங்கலந்துவருசேனைமண்டலங்களுடனே
பேர்பெறுஞ்சிகண்டிதலையாகமுன்புகொண்டுலகுபேருமன்றுமின்றுகொலெனப்
போர்தொடங்கிவென்றிபுனைவீடுமன்றடங்கணெதிர்போயினன்றனஞ்சயனுமே.

(இ - ள்.) தூரியம் கறங்க - வாத்தியங்கள் முழங்கவும், நரபாலர் சங்கு இனங்கள் - அரசர்களது சங்கங்களின் கூட்டங்கள், அணி தோறுஉம்-அப்படைவகுப்பினிடந்தோறும், நின்று நின்று குமுற - மிகுதியாகப் பொருந்தி ஆரவாரிக்கவும், தேர்கள்உம் துரங்கமொடு வேழம்உம் கலந்து வரு சேனை மண்டலங்களுடனே - இரதங்களும் குதிரைகளும் யானைகளும் கூடிவருகிற சேனைக்கூட்டங்களுடனே, தனஞ்சயனஉம் - அருச்சுனனும் ,பேர் பெறும் சிகண்டி தலை ஆக முன்பு கொண்டு - பிரசித்திபெற்ற சிகண்டியைத் தலைமையாக முனனே நிறுத்தி, உலகு பேரும் அன்றுஉம் இன்றுகொல் என - 'உலகங்கள் அழியும அந்த உகாந்தகாலமும் இன்றைக்கோ?' எனறு (யாவரும்) அஞ்சுமபடி, போர் தொடங்கி -யுத்தத்தைச் செய்யதொடங்கி, வெனறி புனை வீடுமன் தட கண் எதிர் போயினன் - சயத்தைக்கொண்ட பீஷ்மனது பெரிய கண்களினெதிரிற் செனருன; (எ - று.)—பேர் பெறும் - வீடுமனைக் கொல்லப் பிறந்தவனென்று புகழ்பெற்ற என்க. (354)

31.—சிகண்டியைக்கண்டதும் ஆயுதத்தைப்போகட்டு வீடுமன் நிற்க, எதிரிசாபம்முதலியன துணியும்படி துச்சாதனன் அம்புதூவுதல்.

காதிவெங்கொடும்பகழியேவுதிண்சிகண்டிதலைகாணலுங்குனிந்துநகையா
வாதியம்பையின்றுபகைமூளவந்ததென்றுதனதாயுதந்துறந்துவிரைதேர்
மீதுகங்கைமைந்தனொருதான்வெறுங்கைநின்றளவின்மேனடந்துசென்றுபொருதுச்
சாதனன்சரங்கள்பலதூவினன்பரிந்தெதிரிசாபமுந்துணிந்துவிழவே.

(இ - ள்.) காதி-எதிர்த்து, வெம் கொடு பகழி ஏவு திண் சிகண்டி-மிகக்கொடிய அமபுகளைச் செலுத்துகிற வலிமையையுடைய சிகண்டியினது, தலை-முகத்தை, காணலும - பார்த்தமாத்திரத்திலே,—கங்கை மைந்தன் -வீடுமன ,—குனிந்து-(இயற்கையில் ஆண்மையில்லாத அவனோடு போர்செய்ய நாணித்) தலைகுனிந்து, நகையா-சிரித்து, 'ஆதி அமபை பகை-முனபு அம்பையினுலாகிய பகைமை, இன்று மூள வந்தது-இப்பொழுது பலிக்கவந்தது', என்று - என்று எண்ணி, தனது ஆயுதம் துறந்து-தனனுடைய ஆயுதங்களைக் கீழேபோகட்டு, விரை தேர் மீது-துரிதமாகச்செல்லும் (தனது) தேரின்மேல், ஒரு தான் -தான் தனியாய், வெறு கை நின்ற அளவில்-வெறுங்கையோடு நின்றபொழுதில்,—பொரு துச்சாதனன்-போர்செய்யவல்ல துச்சாசனன, பரிந்து-(வீடுமனுககாகப்) பரிவுகொண்டு, மேல் நடந்து சென்று - அச்சிகண்டியின்மேல் எதிர்த்துப்போய், எதிரி சாபம்உம் துணிந்து விழ-அப்பகைவனது

வில்லும் அறுபட்டுவிழ, பல சரங்கள் தூவினன் - அநேகபாணங்களைப் பிரயோகித்தான்; (எ-று.)

சாபமும் என்ற எச்சவும்மையால், அவனது இதயமும்தேரும் பிளத்தல் விளங்கும்; அடுத்த கவியிலுங் காண்க. சிகண்டி தலை காணலும்-சிகண்டியை எதிரிற் கண்டவுடனே என்றுமாம். ஒரு தான்-ஒப்பில்லாத தான் என்றுமாம. எதிரி-எதிர்ப்பவன். பி-ம்: பகழிமோது. மீளவந்தது. (355)

32.—சிகண்டி வந்தவழி மீள, வீடுமன் ஸ்ரீக்ருஷ்ணனது திருமேனியும் புண்படச் சரம்விடுதல்.

சாகநின்றிலன்றுருபதேயனெஞ்சமின்றிவரிசாபமின்றிவண்கொடிகொடேர்
வாகமின்றிவந்தவழிமீளநின்றசந்தனுகுமாரனுஞ்சரங்கள்விடவே
யூகமும்பிளந்துசுரராசன்மைந்தன்முந்திரதமூருகின்றசெங்கணெடுமான்
மேகமுங்கருங்கடலுநீலமுங்கலந்ததிருமேனியுஞ்சிவந்ததறவே.

(இ-ள்.) (அப்பொழுது), துருபதேயன்-துருபதராசகுமாரனான சிகண்டி, நெஞ்சம் இன்றி-மனமழிந்து, வரி சாபம் இன்றி-கட்டமைந்த வில் இல்லாமல், வண் கொடி கொள் தேர் வாகம் இன்றி-அழகியகொடியைக்கொண்ட தேராகிய வாகன மில்லாமல், சாக நின்றிலன்-இறக்க நிற்காதவனாய், வந்த வழி மீள-வந்தவழியே திரும்பிச்செல்ல, (பின்பு), நின்ற—, சந்தனுகுமாரன்உம்-சந்தனு ராசபுத்திரனான வீடுமனும், சரங்கள்விட-அம்புகளைச்செலுத்த,— யூகம்உம்-(பாண்டவரது) படைவகுப்பும், பிளந்து-முறிபட்டு, சுரராசன் மைந்தன் முந்தி ரதம் ஊருகின்ற செம் கண் நெடுமால்-தேவேந்திரகுமாரனான அருச்சுனனுக்கு முன்நின்றுதேர்செலுத்துகிற சிவந்தகண்களையுடைய சிறந்த கண்ணபிரானது, மேகம்உம் கரு கடல்உம் நீலம்உம் கலந்த திரு மேனிஉம்-மேகத்தின் தன்மையும் கரியகடலின் தன்மையும்நீலரத்தினத்தின் தன்மையும் பொருந்தின அழகிய வடிவமும், அறசிவந்தது-மிகச் செந்நிறம் பெற்றது;

அங்ஙனமானது, வீடுமன் விசையாக விட்ட அம்புமழைபட்டு இரத்தங்குழம்பியதனாலென்க. பிளந்து-பிளக்க எனத் திரிக்க. சாகநின்றிலன் என்றது, இன்னும் சிறிதுபொழுது சிகண்டி அங்கு நின்றிருந்தால் துச்சாதனனாற் கொல்லப்பட்டேயிருப்பானென்பதை நன்குவிளக்கும். துருபதேயன்-வடமொழித் தத்திதாந்தநாமம். தேர்வாகம்-தேர்க்குதிரையுமாம். (356)

33.--அருச்சுனன் சிகண்டியையிட்டுவந்துமுன்னேநிறுத்தி, அவனம்புகளோடு தன் அம்புகளை வீடுமன் மேனியிற் செலுத்துதல்.

போனதிண்சிகண்டிதனைமீளவுங்கொணர்ந்துபொருபூசலுங்கடந்திரதமே
னீநிலஞ்சனின்கணையுமேவுகென்றுவெஞ்சமரினேர்நடந்துசென்றுவிசயன்
கூனலங்கிதந்தசிலைகோலியம்பொடம்புபலகூடநெஞ்சழன்றுதையினுன்
வேனிலம்புமுன்புதுதையாதிலங்குமம்பொன்வரைமேனியெங்கணும்புதையவே.

வில்லும் அறுபட்டுவிழ, பல சரங்கள் ஏவினான் - அநேகபாணங்களைப் பிரயோகித்தான்; (எ-று.)

சாபமும் என்ற எச்சவும்மையால், அவனது இதயமும் தேரும் பிளத்தல் விளங்கும்; அடுத்த கவியிலும் காண்க. சிகண்டி தலை காணலும்-சிகண்டியை எதிரிற் கண்டவுடனே என்றுமாம். ஒரு தான்-ஒப்பில்லாத தான் என்றுமாம். எதிரி-எதிர்ப்பவன். பி-ம்: பகழிமோது. மீளவந்தது. (355)

32.—சிகண்டி அந்தவழி மீள, வீடுமன் ஸ்ரீக்ருஷ்ணனது திருமேனியும் புண்படச் சரம்விடுதல்.

சாதனின்றிலன்றுருபதேயனெஞ்சமின்றிவரிசாபமின்றிவண்கொடிகொடேர்
வாகமின்றிவந்தவழிமீளநின்றசந்தனுகுமாரனுஞ்சரங்கள்விடவே
யூகமும்பிளந்துசுரராசன்மைந்தன்முந்திரதமூருகின்றசெங்கணெடுமால்
மேகமுங்கருங்கடலுநீலமுங்கலந்ததிருமேனியுஞ்சிவந்ததறவே.

(இ-ள்.) (அப்பொழுது), துருபதேயன்-துருபதராசகுமாரனான சிகண்டி, நெஞ்சம் இன்றி-மனமழிந்து, வரி சாபம் இன்றி-கட்டமைந்த வில் இல்லாமல், வண் கொடி கொள் தேர் வாகம் இன்றி-அழகிய கொடியைக்கொண்ட தேராகிய வாகனமில்லாமல், சாகின்றிலன்-இறக்கநேர்ந்தவனாய், வந்த வழி மீள-வந்தவழியே திரும்பிச்செல்ல, (பின்பு), நின்ற—, சந்தனுகுமாரன் உம்-சந்தனுராசபுத்திரனான வீடுமனும், சரங்கள் விட-அம்புகளைச்செலுத்த,—யூகம் உம்-(பாண்டவரது) படைவகுப்பும், பிளந்து-முறிபட்டு, சுரராசன் மைந்தன் முந்தி ரதம் ஊருகின்ற செம் கண் நெடுமால்-தேவேந்திரகுமாரனான அருச்சுனனுக்கு முன்நின்று தேர்செலுத்துகிற சிவந்தகண்களையுடைய சிறந்த கண்ணபிரானது, மேகம் உம் கரு கடல் உம் நீலம் உம் கலந்த திரு மேனி உம்-மேகத்தின் தன்மையும் கரியகடலின் தன்மையும் நீலரத்தினத்தின் தன்மையும் பொருந்தின அழகிய வடிவமும், அற சிவந்தது-மிகச் செந்நிறம் பெற்றது;

அங்ஙனமானது, வீடுமன் விசையாக விட்ட அம்புமழைபட்டு இரத்தங்குழம்பியதனாலென்க. பிளந்து-பிளக்க எனத் திரிக்க. சாகின்றிலன் என்றது, இன்னும் சிறிதுபொழுது சிகண்டி அங்கு நின்றிருந்தால் துச்சாதனனாற் கொல்லப்பட்டேயிருப்பானென்பதை நன்குவிளக்கும். துருபதேயன்-வடமொழித் தத்திதாந்தநாமம். தேர்வாகம்-தேர்க்குதிரையுமாம். (356)

33.—அருச்சுனன் சிகண்டியைவிட்டுவந்துமுன்னேநிறுத்தி, அவனம்புகளோடு தன் அம்புகளை வீடுமன் மேனியிற் செலுத்துதல்.

போனதின்சிகண்டிதனைமீளவுங்கொணர்ந்துபொருபூசலுங்கடந்திரதமே
னீநிலஞ்சரின்கணையுமேவுகென்றுவெஞ்சமரினேர்நடந்துசென்றுவிசயன்
கூனலங்கிதந்தசிலைகோலம்பொடம்புபலகூடநெஞ்சழன்றுதையினன்
வேனிலம்புமுன்புதுதையாதிலங்குமம்பொன்வரைமேனியெங்கணும்புதையவே.

(இ - ள்.) (அப்பொழுது), விசயன்-அருச்சுனன், போன திண் சிகண்டிதனை-(அவ்வாறு) புறங்கொடுத்துச்சென்ற வலிய சிகண்டியை, மீளஉம் கொணர்ந்து - மறுபடியும் அழைத்துக்கொண்டு வந்து, (அவனை நோக்கி), 'நீ—,அஞ்சல்-பயப்படாதே; பொரு பூசல் உம் கடந்து-செய்தற்குரிய போரையும் மிகுதியாகச் செய்யக்கருதி, இரதம்மேல்-தேரின்மேலே, நில்-(தைரியங்கொண்டு) எதிர்த்து நில்; நின் கணைஉம் ஏவுக-உனது அம்புகளையும்செலுத்துவாயாக', என்று-என்றுசொல்லி, (அவனை முன் நிறுத்தி), வெம் சமரில்-கொடிய அப்போரிலே, நேர் நடந்து சென்று-(தானும் வீடுமனை) எதிர்த்துப் போய், அங்கி தந்த கூன் நல் சிலை கோலி - அக்கினி கொடுத்த வளைத்தற்குரிய அழகிய (தனது காண்டீவ) வில்லை வளைத்து, அம்பொடு அம்பு பல கூட-(சிகண்டிவிடும்) அம்புகளுடனே (தனது பல) அம்புகளும் சேர,—வேனில் அம்பு முன்பு துதையாது இலங்கும் - வசந்தகாலத்துக்குரிய (மன்மதனது) பாணங்கள் முன்பு ஒருபொழுதும் பதியப்பெறுமல் விளங்குகிற, அம் பொன் வரை மேனி எங்கண்உம்-அழகிய பொன்மயமான மேருமலை போன்ற (வீடுமனது சிவந்த) உடம்புமுழுவதிலும், புதைய-தைத்து அழுந்தும்படி, நெஞ்சு அழன்று உதையினன்-மனத்திற் கோபங்கொண்டு செலுத்தினன்; (எ - று.)

துரியோதனுதியர்மே லுள்ள கோபம், அவர்கள்சேனைத்தலைவனை வீடுமன்மேலும் சென்ற தென்க. இங்கே, திண்சிகண்டியென்றது-இகழ்ச்சி. ஈற்றடி - வீடுமன் எப்பொழுதும் சிறிதும் காமவசப்படாதவ னென்பதை விளக்கும். வேனில் என்பதைக் காலவாகுபெயராய், அக்காலத்துக்குரிய மன்மதனுக்குக் கொள்ளினும் அமையும். பி - ம்: பலபூசலும். உகையினன். (357)

34.—வீடுமன் தன்னுடலிற்புதைந்தவை அருச்சுனனம்பின் வலிமையாலென்று தெரிந்து மகிழ்தல்.

தோளுநெஞ்சமுஞ்சிரமுமார்பமுந்தொடங்கிநிலைதோறும்வந்துவந்துருவவே
சாளரங்கொளங்கவழியோடுகின்றவிந்துமுகசாயகங்கைகொண்டுபிடியா
நாளறிந்தெதிர்ந்துபொருவோனுமைந்தனன்றுமுதனுமமுஞ்சிகண்டியிவனெய்
வாளியொன்றுமிங்கெமையுருநனஞ்சயன்செய்பெருவாழ்விதென்றறிந்துமகிழா.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) தோள்உம் நெஞ்சம்உம் சிரம்உம் மார்பம்உம்—, தொடங்கி - (என்னும் இவ்வுறுப்புக்கள்) முதலாக, நிலை தோறு உம் - உயிர்நிலைகளிலெல்லாம், வந்து வந்து உருவ - (அம்புகள்) மிகுதியாக வந்து ஊடுருவிச்செல்ல, சாளரம் கொள் - (முழுவதும் பலதுளைபட்டுப்) பலகணியின் தன்மையை அடைந்த, அங்கம்வழி-(தன்) உடம்புவழியாக, ஓடுகின்ற - (அப்பாற்) செல்லுகிற, இந்து முகம் சாயகம் - சந்திரன்போன்ற வடிவமுள்ள [அர்த்த சந்திர] பாணங்களை, கை கொண்டு பிடியா - (தன்) கைகளாற் பிடித்து, (அவற்றில் பதிந்துள்ள அருச்சுனன்பெயரைப் பார்த்து), 'நாள் அறிந்து - (நாம் முன்புசொன்ன பத்தாம்போர்) நாளையறிந்து,

எதிர்ந்து பொருவோன்உம் - நம்மை எதிரிட்டுப் போர்செய்பவ னும், மைந்தன்-(நமது வமிச) புத்திரனான அருச்சுனனே; நன்று- (இவன்கையால் நாம் அழிவது) நல்லதே; (ஆனால்), முதல் நாமம் உம் சிகண்டி - தலைமையான பேர்மாத்திரத்துக்குமே சிகண்டி (எதிரில் உள்ளான்); இவன் எய் வாளி ஒன்றுஉம் இங்கு எமை உரு-இச் சிகண்டி தொடுக்கிற அம்புகளொன்றும் இங்கு எம் மைச் சேரமாட்டா; இது தனஞ்சயன் செய் பெரு வாழ்வு - இவ் வாறு என்னுடம்பைஊடுருவும்படி அம்புதொடுத்தல்அருச்சுனன் செய்யும் பெருஞ்சிறப்பேயாம்', என்று அறிந்து —, மகிழா - மகிழ்ச்சிகொண்டு,—(எ - று.)—"கூறினன்" என அடுத்த கவி யோடு முடியும்.

'இவனெய்வாளியொன்றும் இங்கு எமை உரு' என்றதனால், வீடுமனைக் கொல்லுதற்கு வியாஜமாக நிற்பதுமாத்திரம் சிகண் டிக்கு உண்டேயொழிய, அவனது அம்புகளுக்கு வீடுமனது தெய்வயாக்கையைத்துளைக்கும் ஆற்றலில்லையெனவிளங்குகிறது. கீழ் முதற்போர்ச்சருக்கத்தின் பதினோராங்கவியை இங்கே காண்க. பொருவோன்உம் மைந்தன் அன்றுஎனஎடுத்து-போர் செய்பவனும் இயற்கையாண்மை யுடையவனல்லனென்றும், முதல்நாமம்உம் சிகண்டி - எனஉடம்பிறப்பதியும் பாணங்களில் முதற்பெயரே சிகண்டி [அவற்றின்மேல் அருச்சுனன்பெயரும் பின் உள்ளது] என்றும் உரைப்பினுமாம். (358)

35.—வீடுமன் துரியோதனன்தம்பிமாரை 'உங்களாலொன்றும் இங்குச் செய்யலாகாது: மேல்ஆகவேண்டுவதை ஆய்க' என்று கூறுதல்.

நாமவெங்கொடுங்கணையினுநமநொந்தனஞ்சமரநாளுமின்றுமுந்தவினிநீர், போம டங்கநுந்தமையனீள்பதம்பொருந்தியுறுபோரறிந்துகொண்டுபொருவீ, ராமதன்றி யென்செயினுமாவதொன்றுமின்றுதனியாண்மைபொன்றலென்றருகுசேர், கோம டங்கறம்பியர்களாகிநின்றமைந்தரொடுகூறினன்பனங்கொடியனே.

(இ - ள்.) (அப்பொழுது), பனங்கொடியன் - பனைக்கொடியை யுடைய வீடுமன், அருகு சேர் - (தன்) அருகிற் பொருந்திய, கோ மடங்கல் தம்பியர்கள் ஆகி நின்ற மைந்தரொடு-இராசசிங்கமாகிய துரியோதனனது தம்பிமார்களாய்ப் பொருந்திய வீரர்களுடனே, 'நாமம் வெம் கொடு கணையின் - அச்சத்தைத்தருகிற மிகவுங் கொடிய அம்புகளால், நாம்உம் சமரம் நொந்தனம்-நாமும்போரில் வருந்தினோம்; நாள்உம் இன்று-(நமக்கு அபாயத்தை விளைக்கிற) தினமும் இன்றைக்கே; இனி - இனிமேல், நீர் அடங்க - நீங்க ளெல்லோரும், முந்த போம் - விரைவாகச் செல்லுங்கள்; நும் தமையன் நீள் பதம் பொருந்தி - உங்கள்தமையனான துரியோத னனது சிறந்த இடத்தை யடைந்து, உறு போர் அறிந்து கொண்டு - இனிச்செய்யவேண்டும் போரைத்தெரிந்துகொண்டு, பொருவீர் - போர்செய்யுங்கள்; அது ஆம் அன்றி - அங்ஙனஞ் செய்வது தகுதியாகுமே யல்லாமல், என் செயின்உம் ஆவது ஒன்றுஉம் இன்று - (நீங்கள்) என்ன முயற்சி செய்தாலும் (எனதுஅபாயத்தைத் தடுப்பதற்குத்) தக்கவழி ஒன்றும் இல்லை;

எதிர்ந்து பொருவீரனும் - நம்மை எதிரிட்டுப் போர்செய்பவனும், மைந்தன்-[மைந்]து வலிச புத்திரனை அருச்சுனனோ: நன்று. (இவனைக் கையால் நாம் அழிவது இல்லை: (ஆனால்), முதல் நாமம் உம் சிகண்டி - தலைமையான பெயர் ஆகத் சிகண்டி (எதிரில் உள்ளான்); இவன் எய்வாளி ஒன்றும் இவனது எமை உறு-இச சிகண்டி தொடுக்கிற அம்புகள் ஒன்றும் இவனது எம்மைச் சேராமாட்டா; இது தனது செய்யு செய்பவாமல் - இவ் வாறு என்னுடைய மனத்திற்கு அம்பு தொடுத்தல் அருச்சுனனே செய்யும் பெருஞ்சிறப்பேயாம், என்று அறிந்து — மகிழா - மகிழ்ச்சிகொண்டு,—(ஏ - று.)—"கூறினன்" என அடுத்த கவியோடு முடியும்.

'இவனெய்வாளியொன்றும் இங்கு எமை உறா' என்றதனால், வீடுமனைக் கொல்லுதற்கு வியாஜமாக நிற்பதுமாத்திரம் சிகண்டிக்கு உண்டேயாழிய அவனது அம்புகளால் வீடுமனது தேகவலியாக்கைகளைத் துளைக்கும் ஆற்றலில்லாமையான வாளாகக் கிடந்தது; முதற்போர்ச்சருக்கத்தின் பதினொராம்கவியை இங்கே காண்க. பொருவீரனும் மைந்தன் அன்றனை எதிர்த்துப் போர் செய்பவனும் இயற்கையாண்மை யுடையவனல்லனென்றும், முதல்நாமம் சிகண்டி - என உடம்பிறப்பியம் பாணைகளில் முதற்பெயர் சிகண்டி அவற்றின்மேல் அருச்சுனனெயராம் பின் உள்ளது என்றும் உரைப்பினுமாம். (358)

35.—வீடுமன் துரியோதனன்தம்பிமாரை "உங்களாலொன்றும் இங்குச் செய்யலாகாது: மேல்ஆகவேண்டுவதை ஆய்க" என்று கூறுதல்.

நாமவெங்கொடுங்கணைபொழிந்தொருதனைச்சமரநாளுமிளைஞர்களுநீர், போமடங்கருந்தலைவனிபதம்பொருந்தியுறுபோரறிந்துகொண்டுபோகவே; நாமுன்செய்துயாவதொன்றுமின்றுதனியாண்மைபோனதல்லதென்றுஞ்சொ, னேமடந்தைபெயர்களாகிநின்றமைந்தரொடுநின்றபனைக்கொடியனே.

(இ - ள்.) அப்பொழுது, பனைக்கொடியனே - பனைக்கொடியையுடைய வீடுமன், அருகு சேர் - தன்னருகில் பொருந்திய. சேமடங்கல் தம்பியர்கள் ஆகின்ற மைந்தரொடு-இராசசிங்கமாகிய துரியோதனனது தம்பிமாராய்ப் பொருந்திய வீரர்களுடனே, நாமம் வெம் கொடு கணையின் - அச்சத்தைத் தருகிற மிகவுங்கொடிய அம்புகளால், நாம் உடம் சமரம் விளைத்தனம்-நாமும்போரில் வருந்தினோம்; நாள் உம் இன்று-(யமகாது அபாயத்தை விளக்கிற) தினமும் இன்றைக்கே; இனி - இனிமேல், நீர் அடங்க - நீங்கள் எல்லாரும், முந்த போம் - விரைவாகச் செல்லுங்கள்; நும் தலைவன் நீள் பதம் பொருந்தி - உங்கள் தலைவனான துரியோதனனது சிறந்த இடத்தை யடைந்து உறு போர் அறிந்துகொண்டு - இனிச்செய்யவேண்டும் போரைத் தெரிந்துகொண்டு, பொருவீர் - போர்செய்யுங்கள், அது ஆம் அன்றி - அங்ஙனஞ் செய்து தந்தியாகிய யமனால், என செயினும் ஆவது ஒன்றும் இல்லை - (நீங்கள்) என்னமுயற்சி செய்தாலும் (என்து அபாயத்தைத் தடுப்பதற்கு) தக்கவழி ஒன்றும் இல்லை;

(ஆதலால்), தனி ஆண்மை பொன்றல் - தனியே உங்கள் பராக்கிரமம் அழிவடையவேண்டாம்', என்று கூறினன்—; (எ - று.)

வீடுமனுக்கு உதவியாகப் போர்செய்யவந்த துரியோதனன் தம்பிமாரை நோக்கி வீடுமன் 'இனி நீங்கள் எனக்குஉதவிசெய்து பொருதலிற் பயனில்லை; நான் இன்று அழிவது நிச்சயம்; இனிச் செய்யவேண்டுவதைப்பற்றி உங்கள் தமையனோடு ஆலோசித்துச் செய்யுங்கள்; இப்பொழுது அருச்சுனனையெதிர்த்து வீணாய் வலிமைகெடாதிர்' என்று அறிவுகூறினான். தனது சேனைத் தலைமை யொழிந்ததை 'நாளுமின்று' என்றதனாலும், 'தனி' என்றதனாலும், வீடுமன் விளக்கினான். பதம்-பாதமென்றலுமாம். பொன்றல் - எதிர்மறைவியங்கோள். கோமடங்கல் - அரசரிற் சிறந்தவன்; பகையை எளிதில் ஒழிப்பவன். பனை + கொடி= பனங்கொடி; [நன், உயிர், 53.] நாளும் இன்று என்பதற்கு - (நாம்வாழும்) நாளும் (இனி) இல்லை எனினும் அமையும். (359)

36.—அம்பாகியஅணையில் வீடுமன்சாயத் தேவர்கள் கற்பகமலர்மாரிபொழிதல்.

கோடுகொண்டசெம்பவளநாதம்வந்துவந்துசெவிகூடமுன்புநின்றநிலையே
நாடிநெஞ்சழிந்துதிருநாமமன்புடன்றனதுநாகுழன்றுகொண்டுநவிலா
வோடுகின்றவம்பொழியநீடுடம்படங்கமுனையூரநின்றவம்பொரணைபா
வீடுமன்கிடந்தகிடைதேவர்கண்டுவந்தனர்கண்மேல்விழுந்ததம்பொன்மலரே.

(இ - ள்.) செம் பவளம் - சிவந்தபவழம்போன்ற (கண்ணபிரானது) திருவாய்மலரிலே, கொண்ட - வைத்து ஊதப்பட்ட, கோடு - (பாஞ்சசன்னியமென்னும்) சங்கத்தினது, நாதம்-ஒலி, வந்து வந்து செவி கூட - மிகுதியாகவந்து (தனது) காதுகளிலே பொருந்த,—வீடுமன்—,—முன்பு நின்ற நிலை நாடி - எதிரில் [அருச்சுனனது தேரின் முன்னே] (கண்ணபிரான்) எழுந்தருளி நின்ற நிலைமையையே நெஞ்சிற்கொண்டு [தியானித்து], நெஞ்சு அழிந்து - மனமுருகி, திரு நாமம் - (அக்கண்ணபிரானது) திருப்பெயர்களை, அன்புடன் - பக்தியோடு, தனது நா குழன்று நவிலா கொண்டு - தனது நாக்குத் தழுதழுக்கச் சொல்லிக்கொண்டு, ஓடுகின்ற அம்பு ஒழிய நீடு உடம்பு அடங்க முனை ஊர நின்ற அம்பு ஒர் அணை ஆ - (ஊடுருவி அப்பால்) ஓடுகிற அம்புகள் ஒழிய(த் தனது) நீண்ட உடம்புமுழுவதிலும் ஒருமுனை பொருந்த நின்ற அம்புகளையே ஒருபடுக்கையாகக்கொண்டு, கிடந்த - (அந்த அம்பாகிய அணையில்) விழுந்துகிடந்த, கிடை - கிடக்கையை, தேவர் கண்டு - தேவர்கள் பார்த்து, உவந்தனர்கள் - மகிழ்ந்தார்கள்; அம் பொன் மலர் - (அங்ஙனம் மகிழ்ந்த தேவர்களாற் சொரியப்பட்ட) அழகிய பொன்மயமான (கற்பக) மலர்த்தொகுதி, மேல் விழுந்தது - (அந்தவீடுமன்)மேல் விழுந்தது; (எ - று.)

தன் உடம்பை ஊடுருவி நீங்கின அம்புகள் ஒழிய, மார்பில் தைத்து முதுகின்வழி புறப்பட்டு நிற்கும் அம்புகளின்மேல் விழுந்திட்டனனென்பது, மூன்றாமடியின் கருத்து. பக்திமிகுதியாலும்,

சோர்வினாலும், நாக்குழறும். அம்புஅணை - பரதல்பம். முன்பு நின்றநிலை - யோகநிலையென்பாருமுளர். கிடை - கிடக்கும் நிலை. குழன்று - குழல என்னும் எச்சத்திரிபு; குழல் - பகுதி. கோடு - வளைந்துள்ளது. முனை - நுனி. (360)

37—போரிலே வீடுமன் எஞ்சியதுகண்டு யாவரும் வருந்துதல்.

போரிலெஞ்சி னன்குருகு லேசனென்று கண்டபுரு கூதன் மைந்த னும்பு னைதுழாய், வீரனுந்து னைந்துவரு தேரினின்றி ழிந்திருகண் வீழும்பி னின்மு ழுகினர், சேரவந்தி ரண்டுவகை யாகிவெங்க ளங்குறுகு சேனையுந்தி ரண்டல றவே, யாருநெஞ்ச ழிந்தனர்கள் யாருநொந்து நைந்தனர்கள் யாருநின்றி ரங்கி னர்களே.

(இ - ள்.) *'குருகுல ஈசன் - குருகுலத்தலைவனான வீடுமன், பேரில் எஞ்சினன் - யுத்தத்தில் அழிந்தான்', என்று—, கண்ட - பார்த்தறிந்த, புருகூதன் மைந்தன்உம்-இந்திரகுமாரனான அருச்சுனனும், புனை துழாய் வீரன்உம் - தரித்த திருத்துழாய்மாலையையுடைய கண்ணபிரானும், துனைந்து வரு தேரினின்று இழிந்து - விரைந்து வருகிற தேரினின்று இறங்கிவந்து, இரு கண் வீழும் அம்பினில் முழுகினர் - (தமது) இரண்டுகண்களினின்றும் விழுகிற நீரில் மூழ்கினர்கள் [மிகக்கண்ணீர்விட்டார்கள்]; இரண்டு வகை ஆகி வெம் களம் குறுகு சேனைஉம் - இரண்டுபகுப்பாய்க் கொடிய போர்க்களத்தையடைந்துள்ள சேனைகளும், சேர திரண்டு வந்து - ஒருசேரக் கூடி (வீடுமன் விழுந்தவிடத்து) வந்து, அலற - அழுது கதற, யார்உம் - (இரு திறத்திலும்) எல்லோரும், நெஞ்சு அழிந்தனர்கள்-மனம் அழிந்தார்கள்; யார்உம்—,நொந்து நைந்தனர்கள் - வருந்தி மெலிந்தார்கள்; யார்உம்—, நின்று இரங்கினர்கள் - (திகைத்துநின்று) விசனமுற்றார்கள்; (எ - று.)*

அழிந்தவனாகிய வீடுமன் அம்பினில் மூழ்கியதுபோலவே, அழித்தவராகிய கிருஷ்ணஅருச்சுனரும் அம்பினில் மூழ்கினரென ஒரு சமத்காரம தோன்றக் கவிகூறினர். பாண்டவதுரியோதனியரென்னும் இருவகையார்க்கும் வீடுமன் மூத்தபாட்டனாதலால், இவனழிவுக்கு எல்லோரும் இரங்குவாராயினர். புருஹூதன் - வடசொல்; புரு - மிகுதியாக, ஹூதன் - (யாகங்களில்) அழைக்கப்படுபவன் என்றும்; புரு-புரு என்னும் அசுரனை, ஹூதன்-கொன்றவன் என்றும் பொருள்படும். பி -ம்: அம்பினால். திரண்டுவரவே. (361)

வேறு.

38.—வீடுமன் உத்தராயணகாலம் வருமளவும் உயிர்விடேனென யோகத்தாலுயிரை வைத்துக்கொண்டிருத்தல்.

ஆக மெங்குந் தங்கு மம்பி னணைமேல் வீழ்வான்
யோகங் கொண்டே யுயிரை யோடா வண்ண நிறுவி
மாகஞ் சூழும் பரிதி வடபா லெய்து மளவும்
நாகங் காணே னென்ன ஞானத் தோடே வைக.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) ஆகம்எங்கும் தங்கும் - (தன்) உடம்பு முழுவதிலும் பொருந்திய, அம்பின் - அம்புகளாகிய, அணை மேல்-படுக்கையின் மேல், வீழ்வான் - விழுபவனாகிய வீடுமன், 'மாகம் சூழும் பரிதி - வானத்தைத வலம் வருகிற சூரியன், வடபால் எய்தும் அளவுஉம் - வடபுறத்தை அடையுமளவும் [உத்தராயணம் வருமளவும்], நாகம் காணேன் - மேலுலகத்தை அடையமாட்டேன்', என்ன - என்று எண்ணி, உயிரை ஓடா வண்ணம் யோகம் கொண்டு நிறுவி - தன் உயிரை (உடம்பைவிட்டு) நீங்காதபடி யோகவலிமையால் நிறுத்தி, ஞானத்தோடே வைக-நல்லறிவோடு தங்க,— (எ - று.) — "எவரும்,...அன்னான்பாதஞ் சென்னிமேற்சொண்டழுதார்" என வருங்கவியோடு முடியும்.

ஆடிமாசம்முதல் மார்கழிமாசம்வரையிலும்தக்ஷிணாயனமாகிய ஆறு மாசம் தேவர்களுக்கு இரவு: தைமாசம் முதல் ஆனிமாசம் வரையிலும் உத்தராயணமாகிய ஆறுமாசம் அவர்களுக்குப் பகல்: ஆக, மனிதமானத்தால் ஒரு வருஷம் தேவமானத்தால் ஒருநாளாம்: தேவர்களுக்கு இரவாகிய தக்ஷிணாயனத்தில் இறந்தவர்களுக்கு நற்கதியில்லை யென்றும், உயர்கதிபெறுபவர் உத்தராயணத்திலே இறப்பரென்றும் நூற்கொள்கை யாதலால் வீடுமன், தக்ஷிணாயனத்தில் உயிர்விடாமல் உத்தராயணத்தை எதிர்நோக்கி உயிர்த்திருப்பவனானான். சூரியன் வடபுறமாக ஒதுங்கிச் சஞ்சரிக்குங்காலம் உத்தராயணம்; தென்புறமாகச் சஞ்சரிக்குங் காலம் தக்ஷிணாயனம். யோகமாவது-இயமம் முதலிய எட்டு இலக்கணங்களோடு நின்று செய்யுந் தவம். யோகம் வல்லார்க்கு வேண்டின பொழுது உயிரைவிடும் உறுதிநிலை கைகூடுதலால், 'யோகங் கொண்டே உயிரை நிறுவி' என்றார். வேண்டியபொழுது உயிர் விடும்படி வீடுமனுக்குத் தந்தையால் வரம் கொடுக்கப்பட்டிருந்ததென்றும் நூல்கள் கூறும்: மேல் 43-ஆம்பாட்டில் "வரத்தின் பயனாலுயிரை நிறுத்தும்மன்னன்" என்று இந்நூலாசிரியருங் கூறுவர். பி ம்: இரவி.

இதுமுதற் பதினாறுகவிகள்-எல்லாச்சீரும் மாச்சீராகிய கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (362)

39.—தருமன் முதலானாரும் துரியோதனன் முதலானாரும் வீடுமன்பாதத்தைச் சென்னியிற்கொண்டு அழுதல்.

இங்குந்தருமன்முதலாவுள்ளமன்னரெவரும்
அங்குந்துரியோதனனையாதியானவரசர்
பொங்குங்கடலாலுலகம்பொன்றுமன்றுபோலச்
சிங்கமன்னான்பாதஞ்சென்னிமேற்கொண்டழுதார்.

(இ - ள்.) இங்குஉம்-இந்தப்பக்கத்திலும், தருமன் முதல் ஆ உள்ள மன்னர் எவர்உம்-யுதிட்டிரன் முதலாகவுள்ள அரசர்களெல்லோரும், அங்குஉம்-எதிர்ப்பக்கத்திலும், துரியோதனனை

ஆதி ஆன அரசர்-துரியோதனனை முதலாகவுடைய அரசர்களும், பொங்கும் கடலால் உலகம் பொன்றும் அன்று போல-பொங்குகின்ற கடலினால் உலகங்களழியும் அந்தயுகாந்த காலத்திற் (பிராணிகள் வருந்துவது) போல, சிங்கம் அன்னான் பாதம்சென்னி மேல்கொண்டு அழுதார்-சிங்கத்தை யொத்தவனான வீடுமனது திருவடிகளைத் தலைமேல் வைத்துக்கொண்டு புலம்பினார்கள்; (எ - று.)

பாதம் சென்னிமேற் கொண்டு - திருவடிமீது முடிபடும்படி சாஷ்டாங்கமாக விழுந்து தண்டனிட்டு என்க. நற்குணநற்செய்கைகளையுடைய பாண்டவர் பக்கல் அபிமானத்தால் 'இங்கும்' என்றும், தீக்குணம் தீச்செய்கைகளையுடைய எதிரிகள் பக்கல் வெறுப்பால் 'அங்கும்' என்றும் கவி கூறினார். பி - ம்: பொங்குங் கனலால். (363)

40.— இதுவும், மேற்கவியும்-ஒருதொடர்; இருதிறத்தாரும் புலம்பல்.

மறமும்வாகுவலியும்வல்வின்முதலெப்படையின்
திறமுந்தேசும்வாழ்வுஞ்சீருங்கேள்விச்செலவும்
நிறமுமுண்மையறிவுநெறியும்புகழுந்திகழ்பேர்
அறமும்பொன்றுநின்னோடையாவந்தோவந்தோ.

(இ - ள்.) ஐயா-தலைவனே! மறம்உம்-பராக்கிரமமும், வாகு வலிஉம்-தோள்வலிமையும், வல் வில் முதல் எ படையின் திறம் உம்-வலியவில் முதலிய எல்லாஆயுதங்களின் வல்லமையும், தேசு உம்-ஒளியும்,வாழ்வுஉம்-(மதிப்போடு) வாழ்தலும்,சீர்உம்-சிறப்பும், கேள்வி செலவுஉம் - நூற்கேள்விகளின்படி ஒழுகும் ஒழுக்கமும், நிறம்உம்-பெருமையும், உண்மை அறிவுஉம்-தத்துவஞானமும், நெறிஉம்-நீதிவழியும், புகழ்உம்-கீர்த்தியும், திகழ் பேர் அறம்உம்-விளங்குகிற சிறந்த தருமமும், (என்னும் இவையெல்லாம்), நின்னோடு பொன்றும்-(உலகத்தில்) உன்னுடனே அழியும்; அந்தோ அந்தோ—! (எ - று.)

உன்போலப் பராக்கிரமம் முதலியன உடையார் ஒருவரும் இனி உலகத்திலில்லை யென்பதாம். தேசு-க்ஷத்திரியதேஜஸ். அந்தோ அந்தோ, அடுக்கு-இரக்கம். நிறம்-நற்குணமுமாம். (364)

41. தந்தையின்பமெய்தத்தவமேயின்பமாகச்
சிந்தைதெளியுஞானச்செல்வாசெஞ்சேவகனே
முந்தைமரபுக்கெல்லாமுதல்வானாலமுழுது
மெந்தையாளவைப்பாரினியார்கோவேயென்றார்.

(இ - ள்.) தந்தை இன்பம் எய்த-பிதாவாகிய சந்தனு (இரண்டாவது மணஞ் செய்து) இன்பமடையும்பொருட்டு, தவம்ஏ இன்பம் ஆக சிந்தை தெளியும்-துறவறவொழுக்கத்தையே உலகவின்பமாகக்கருதி மனந்தெளிந்த, ஞானம் செல்வா-தத்துவஞானமாகிய செல்வத்தையுடையவனே! செம் சேவகனே-நீதிதவறாத வீரனே! முந்தை - பழமையான, மரபுக்கு எல்லாம் - குருகுலத்திற்பிறந்த

எங்கள் எல்லோர்க்கும், முதல்வா-மூத்தவனே! எந்தை-எமது வமிச பிதாவே! கோவே-தலைவனே! ஞாலம் முழுது உம் ஆள வைப்பார் இனி யார்-பூமிமுழுவதையும் (எங்களை) அரசாளும்படி (முடிசூட்டி) வைப்பவர் இனி வேறுயாவர் உளர்? என்றூர்-என்றுசொல்லி (இரு திறத்தாரும்) புலம்பினூர்கள்; (எ - று.)

"போகமுந்தரும மேயானமெய்ப்புனிதன்" என்றூர், ஆறும் போர்ச்சருக்கத்தும். எந்தை-அண்மைவிளி; அன்புபற்றிவந்த மரபுவழுவமைதி. (365)

42.—அழும் மைந்தர்க்கு வீடுமன் தேற்றரவு கூறுதல்.

அழுதமைந்தர்தம்மையஞ்சலென்றென்றூற்றி
எழுதுதொல்லைவினையையாரேவிலக்குகிற்பார்
உழுதுவாளியுருவவுங்கண்முன்னர்வீழ்ந்தேன்
பழுதொன்றில்லையிதுவேப்பயனென்பவத்தாலென்றான்.

(இ-ள்.)(அப்பொழுது வீடுமன்), அழுத மைந்தர் தம்மை-(இங்ஙனம்) புலம்பின குருகுலகுமாரர்களை, அஞ்சல் என்று என்று-பயப்படாதீர்கள் என்று பலமுறை சொல்லி, ஆற்றி - துயரந்தணித்து, 'எழுது தொல்லை வினையை விலக்குகிற்பார் யார் ஏ-நியமிக்கப்பட்ட பழமையான கருமப் பயனைத் தடுக்கவல்லவர் யாவர்? [எவருமில்லையென்றபடி]; வாளி உழுது உருவ-அம்புகள் தைத்து ஊடுருவ, உங்கள் முன்னர் வீழ்ந்தேன்-உங்களெதிரில் அழிந்து விழுந்தேன்; (ஆதலால் எனக்கு), பழுது ஒன்று இல்லை-ஒருதீங்கு மில்லை; இதுஏ என் பவத்தால் பயன் - இதுவே எனது (அரசப்) பிறப்பினுல் பெற்ற பலன்', என்றான் - என்றுசொன்னான்; (எ - று.)

இப்பாட்டின் மூன்றுமடியால், பகைவரம்பால் போரிற் புண்பட்டு வீழ்தல் வீரர்களுக்குச் சிறப்பென்றும், பலபந்துக்களது முன்னிலையில் இறத்தல் யாவர்க்கும் சிறப்பென்றும் விளங்கும்.

43.—அருச்சுனன் வீடுமன்சொற்படி அம்புகளால் அவன் முடியைத் தாழாது உயரும்படி செய்தல்.

சரத்தின்சயனம்பஞ்சசயனங்களினுமினிதென்
சிரத்தின்றாழ்வுதீர்ப்பாய்திண்டோள்விசயாவென்ன
வரத்தின்பயனுலுயிரைநிறுத்துமன்னன்மகிழ
வுரத்தினம்பான்முடியையுயரும்வண்ணமுயர்த்தான்.

(இ - ள்.) (பின்பு அருச்சுனனை நோக்கி), வரத்தின் பயனுல் உயிரை நிறுத்தும் மன்னன்-(தந்தைகொடுத்த) வரத்தின் பலத்தால் உயிரை (உடம்பு விட்டு நீங்காதபடி யோகங்கொண்டு) நிறுத்தியுள்ள பீஷ்மராசன், 'திண்தோள் விசயா - வலியதோள்களையுடைய அருச்சுனனே! சரத்தின் சயனம்-(உனது) அம்புகளாலாகிய படுக்கை, பஞ்ச சயனங்களின்உம் இனிது - ஐவகைப் பொருள்களால் அமைந்த மெத்தையினும் (எனக்கு) இனிமையாக

வுள்ளது; என் சிரத்தின் தாழ்வு தீர்ப்பாய் - எனது தலை தாழ்ந் திருத்தலை நீக்குவாய் [தலைக்கு உயரஞ்செய்வாய்]', என்ன-என்று சொல்ல,—(உடனே அருச்சுனன்), மகிழ-(அவ்வீடுமன்) மகிழும் படி, உரத்தின் அம்பால்-வலிமையையுடைய (தனது) அம்புக ளால், முடியை உயரும் வண்ணம் உயர்த்தான்-(அவ்வீடுமனது) சிரசை உயர்ந்திருக்கும்படி தலையணை செய்தான்; (எ - று.)

மீண்டும் மூன்று அம்புகளைத் தொடுத்து வீடுமன்தலையை அருச்சுனன் உயர்த்தினனென முதனூல் கூறும். சுத்தவீரர்கள் போரிற்பட்டபுண்ணைப் பொருளாகக் கருதாராதலாலும், வீடுமன் துன்பத்தையே இன்பமாக நினைக்கும் இயல்புடையவனாதலாலும், 'சரத்தின் சயனம் பஞ்சசயனங்களினும் இனிது' என்றான். (367)

44.—வீடுமன் துரியோதனனுடைய கண்ணீரைத் துடைத்துக் கன்னனைச் சேனாபதியாக்கிப் பொரக் கூறுதல்.

சொரியுங்கண்ணீர்துடைத்துத்துரியோதனனைநோக்கி
வரியுஞ்சாபக்கன்னன்மன்னர்க்குருமேறன்னான்
தெரியுங்காலத்தவனைச்சேனைத்தலைவனாக்கிப்
புரியும்போருநாளைப்புரிமினென்றுபுகன்றான்.

(இ - ள்.) (பின்பு வீடுமன்), சொரியும் கண் நீர் துடைத்து - (துரியோதனனது) கண்களினின்று பெருகுகிற நீரைப் போக்கி [சமாதானப்படுத்தி], துரியோதனனை நோக்கி—, 'மன்னர்க்கு உரும் ஏறு அன்னான் - பகையரசர்களுக்குப் பேரிடியையொத்த வனும் [தவறாதுஅழிவுசெய்பவனும்], தெரியும் காலத்தவன் - ஆராய்கிறகாலத்தையுடையவனும் ஆகிய, வரியும் சாபம் கன்னனை - கட்டமைந்த வில்லையுடைய கர்ணனை, சேனை தலைவன் ஆக்கி - (இனிச்) சேனாபதியாகவைத்துக்கொண்டு, புரியும்போர் உம்-செய்யவேண்டிய யுத்தத்தையும், நாளை புரிமின் - நாளைமுதல் செய்யுங்கள்',என்று புகன்றான் - என்றுசொன்னான்; (எ - று.)

ஒன்பதாநாளிரவில் துரியோதனனுடன் கூடிய பொழுது கர்ணன் சொன்னதை, துச்சாதனன் தமையன்சொற்படி வீடும னிடம் தெரிவிக்க, அப்போது "ஒருநாளுநீவிர் பொறுமின்க ளும்மை யுலகாளுவிக்கவருவோர், வருநாடொடங்கியமர்செய்து தெவ்வைமடிவிப்பர்......வாழ்திர்" என்று கூறியதற்கு ஏற்ப, வீடுமன் இங்ஙன் கூறுகின்றானென்க. தெரியுங்காலத்தவன் என்பதற்கு - தான்வந்து போர்செய்யும்பொருட்டு எனதுஅழிவு காலத்தை எதிர்நோக்கியிருப்பவனென்றும், பகைவெல்லும் அர சர்க்கு அவசியம் அறியவேண்டிய காலநிலைமையை அறியுந்தன் மையனென்றுங் கருத்துக் கொள்ளலாம். இது பரிகாசமாகக் கூறியதென்னலாம். வீடுமன் இவ்வார்த்தை சொல்லும்பொழுது பத்தாநாள் சூரியாஸ்தமனகாலம் சமீபத்தி லிருந்ததனால், 'நாளைப்புரிமின்' என்றான். (368)

45.—யுதிட்டிரன் வீடுமனுக்குத் தங்குமிடம் அமைக்க, அங்கு அவன் உத்தராயணகாலத்தை நோக்கியிருத்தல்.

கோயிறருமன்செய்யக்கூர்வெஞ்சரமேயணையா
நோயிலயர்வுமெய்யினுழையக்காலநோக்கி
வீயின்முத்தியில்லையென்னவிருந்தான்விருந்தாய்ச்
சேயின்முதியகேள்வித்தெள்ளாரமுதநுகர்வான்.

(இ - ள்.) சேயின் - முருகக்கடவுள்போல், முதிய கேள்வி தெள் ஆர் அமுதம் - பழமையான நூற்கேள்வியாகிய தெளிவான அரிய அமிருதத்தை, விருந்து ஆய் நுகர்வான் - புதிதுபுதிதாக அமுதுசெய்பவனாகிய வீடுமன்,—தருமன் கோயில் செய்ய-(தனக்குத்) தங்குமிடத்தை யுதிட்டிரன் ஒழுங்காக அமைக்க, கூர் வெம் சரம் ஏ அணை ஆ - கூர்மையானகொடிய அம்புகளையே படுக்கையாகக்கொண்டு, நோய் இல் அயர்வு உம் மெய்யில் நுழைய-பிணியில்லாமலே தளர்ச்சியும் உடம்பில்தோன்ற, வீயின் முத்தி இல்லை என்ன - (தக்ஷிணாயநமாகிய இப்பொழுது) இறந்தால் முத்திகிடையாதென்று கருதி, காலம் நோக்கி - (உத்தராயணம்வருங்) காலத்தை எதிர்நோக்கி, இருந்தான் - பிழைத்திருந்தான்; (எ - று.)

சுப்பிரமணியமூர்த்தி கல்வி கேள்விகளில் மிகச்சிறந்தவரென்பது பிரசித்தம். நோயில்யாவும் என்றும் படிக்கலாம்: அங்ஙனம் படிப்பின், நோய் இல் - துன்பந்தராமல், யாவும் - அம்புகளெல்லாம், மெய்யினுழைய என்க: சுத்தவீரனும் பற்றற்றவனுமான வீடுமன், தன் உடம்பில் அம்புகள் பதிந்த வருத்தத்தைப் பொருளாகக் கருதாமல், அப்புண்களை ஆற்றும் பொருட்டு நல்லவைத்தியர்கள் சிறந்தமருந்து முதலியவற்றோடு வந்ததையும் மறுத்து, அத்துன்பத்தையே இன்பமாகப் பாவித்த மனத்தூய்மை தோன்ற, 'நோயில் யாவுமெய்யினுழைய' என்றார்; இத்தன்மை முதனூலால் நன்குவிளங்கும்: இதற்கு, நோயில் என்பதில், இல் என்னும் பகுதியே வினையெச்சத்தன்மை பட்டதென்றாவது, இன்றி என்பது இல்என விகாரப்பட்டதென்றாவது இலக்கணமறிக: திருமாலையில் ''காவலில் புலனை வைத்து'' என்றவிடத்து, இல் என்பதற்கு-இல்லாதபடி யென்று ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான மிட்டருளி யிருத்தல்காண்க. அமிருதம் நாவுக்கு இனிமை தருதல்போல, நூற்கேள்வி செவிக்கு இனிமை தருதலால், 'கேள்வித் தெள்ளா ரமுதம்' என்றது. (369)

46.—சூரியாஸ்தமன வருணனை.

இன்றுன்மைந்தன்பட்டானென்றுதந்தைக்கிசைப்பான்
சென்றுபரிதிமேலைத்திக்கினெல்லைசேர்ந்தான்
அன்றுவருணனன்பாலழுதசெந்நீராருய்
மன்றவெங்கும்பரந்ததொக்குஞ்செக்கர்வானம்.

(இ-ள்.) இன் று உன் மைந்தன் பட்டான் என்று-இன்றைக்கு உனது மகன் அழிந்தானென்று, தந்தைக்கு இசைப்பான் - (வீடுமனது) தந்தையாகிய வருணனுக்குக் கூறும்பொருட்டு, பரிதி-

சூரியன், சென்று-போய், மேலை திக்கின் எல்லை சேர்ந்தான் - மேற்குத்திக்கின் இடத்தை யடைந்தான் [அஸ்தமித்தான்]; (அப்பொழுது), செக்கர் வானம் - (அத்திசையில் காணப்படும்) செவ்வானம், அன்று வருணன் அன்பால் அழுத செந்நீர் ஆறு ஆய் எங்கு உம் பரந்தது ஒக்கும்-அப்பொழுது அவ்வருணன் (மகனிடத்து) அன்பினால் அழுத சிவந்த கண்ணீர் ஆறாகி எவ்விடத்தும் பரவியதை யொக்கும்; (எ - று.)—மன்ற-தெளிவையுணர்த்துவதோர் இடைச்சொல்; ஐயச்சொற்களும், உவமைச்சொற்களும், துணிபுச்சொற்களும் கூட்டிச்சொல்லுதலும் தற்குறிப்பேற்றவணியின் இலக்கண மாதலால், 'மன்ற' என்ற துணிபுச் சொல்லைக் கொடுத்தார்: **தற்குறிப்பேற்றவணி.**

வீடுமனது தந்தையானசந்தனு வருணனது அவதார மென்பது, முன் கூறப்பட்டது. அதிகசோகத்தால் உடம்பிலுள்ள இரத்தமே கண்ணீராகப் பெருகிய தென்பார், 'அன்பாலழுத செந்நீர்' என்றார்போலும். 'தங்கண், உள்ளநீரெல்லாமாறி யுதிரநீரொழுக நின்றான்' என்றார் கம்பரும் கும்பகருணன் வதைப்படலத்து. இனி, புதுநீர் வெள்ளம் செந்நிறமுடைத்தாயிருக்குந் தன்மைபற்றி அச்செம்மையை வருணன் கண்ணிற்புதிதாய்வருகிற நீர்ப்பெருக்குக்கு ஏற்றிக் கூறிய தெனினும் அமையும். (370)

47.—இருசேனையும் பாசறைபுக, வீடுமனிறந்ததைச் சஞ்சயன்மூலமாகத் துரியோதனன் தன்தந்தைக்குத் தெரிவித்தல்.

பாண்டுமன்னன்புதல்வர்படையும்பாடிபுக்க
தாண்டுபாடிபுக்கதரவத்துவசன்படையும்
மீண்டுமுதல்வன்பட்டதெந்தைக்குரைமினென்று
தாண்டுமான்றேர்மைந்தன்சஞ்சயனைவிடுத்தான்.

(இ - ள்.) ஆண்டு-அப்பொழுது, பாண்டு மன்னன் புதல்வர் படை உம்-பாண்டவர்களது சேனையும், பாடி புக்கது-படைவீட்டை யடைந்தது; அரவம் துவசன் படை உம்-துரியோதனன்சேனையும், பாடி புக்கது-படைவீட்டை யடைந்தது; (அப்பொழுது), தாண்டு மான் தேர் மைந்தன்-தாவிப் பாயுங்குதிரைகளைப்பூட்டிய தேரையுடைய குமாரனான துரியோதனன், ஈண்டு முதல்வன் பட்டது எந்தைக்கு உரைமின் என்று-இப்பொழுது நமதுகுலத்துப் பெரியவனான வீடுமன் அழிந்ததை என் தந்தைக்கு [திருதராஷ்டிரனுக்கு]ச் சொல்லு மென்று, சஞ்சயனை விடுத்தான் - சஞ்சயமுனிவனை அனுப்பினான்; (எ - று.)

ஸஞ்சயன்-வடசொல்; இவன் கவல்கணனென்பவனது குமாரன்; ஆதலால், இவனுக்குக் காவல்கணி யென்று ஒருபெயரும் வடமொழியில் வழங்கும்; இவன், திருதராஷ்டிரனுக்கு மிகவும் இஷ்டனான நண்பன்; இவன் அவனுக்குச் சிலசமயங்களில் தேர் செலுத்துதலும் உண்டு. இவன் நாள்தோறும் பகலில் போரில் நடக்கிறசெய்தியை அறிந்துபோய் இரவில் திருதராட்டிரனுக்குச் சொல்லிவந்தான். (371)

48.—அதுகேட்ட திருதராஷ்டிரன் கண்ணீர்வடியவாடுதல்.

முனியுநகரிற்சென்றுமுகுரானனனுக்குரைப்பக்
கனியுமன்பின்வெள்ளங்கண்ணீராகிச்சொரிய
இனியென்மைந்தர்க்குறுதியில்லையென்றென்றேங்கிப்
பனிவெண்மதியங்கண்டபங்கயம்போலானுன்.

(இ-ள்.) (அவ்வாறே), முனிஉம்-சஞ்சயனும், நகரில் சென்று-அஸ்தினபுரத்திற் போய், முகுரானனனுக்கு உரைப்ப-திருதராட்டிரனுக்குச் செய்திசொல்ல, (அதுகேட்டவுடனே அவன்), கனியும் அன்பின்-(வீடுமனிடத்து) நெஞ்சுருகிய அன்பினுல், கண்ணீர் வெள்ளம் ஆகி சொரிய—, இனி என் மைந்தர்க்கு உறுதி இல்லை என்று என்று - இனிமேல் என்பிள்ளைகளுக்கு வலிமையில்லையென்று பலமுறைசொல்லி, ஏங்கி-விசனப்பட்டு, பனிவெண் மதியம் கண்ட பங்கயம்போல் ஆனுன்-குளிர்ந்த வெண்ணிறமான சந்திரனைப் பார்த்த தாமரைமலர்போலாயினுன் [வாடி மெலிந்தான்];

முகுராநநன் என்ற வடமொழிப்பெயர்க்கு-கண்ணுடிபோன்ற முகமுடையவ னென்று பொருள். முகுரம்-கண்ணுடி, ஆநநம்-முகம். கண்ணுடி தான் பிறராற்காணப்பட்டுப் பிறரைத் தான் காணும் உணர்ச்சி யில்லாதது போல, தான் பிறராற் காணப்பட்டுப் பிறவிக்குருடனுதலாற் பிறரைத் தான் காணுத முகத்தையுடையவ னென்றவாறு; இனி, கண்ணுடிபோல விளக்கமுடைய முகமுடைய னென்றுமாம். "வயக்குறு மண்டிலம் வடமொழிப்பெயர் பெற்ற, முகத்தவன்" என்ருர் கலித்தொகையிலும். பி-ம்: என்றென்றிரங்கி. (372)

49.—திருதராஷ்டிரன் பெருஞ்சோகமடைந்து கதறுதல்.

மண்மேல்விழுந்தானெழுந்தான்மானம்போனதென்றுன்
கண்மேலெற்றியின்றேகண்ணுமிழந்தேனென்றுன்
விண்மேலுள்ளோர்செல்வம்வீறுபெற்றதென்றுன்
புண்மேலனலுற்றென்னப்புலர்ந்தான்முதல்வன்புதல்வன்.

(இ - ள்.) (பின்பு), முதல்வன் புதல்வன் - (குருகுலத்துப்) பெரியவனுனவீடுமனுக்கு(த்தம்பி) மகனுன திருதராஷ்டிரன், மண் மேல் விழுந்தான்-தரையிலே விழுந்திட்டான்; எழுந்தான்—; மானம் போனது என்றுன் - (எனது) பெருமையழிந்தது என்று சொன்னுன்; கண்மேல் எற்றி-(தன்) கண்மேல் (கையால்) மோதிக்கொண்டு, இன்றுஏ கண் உம் இழந்தேன் என்றுன்-இன்றைக்கே (நான்) கண்ணையுமிழந்தே னென்றுகூறினுன்; விண்மேல் உள்ளோர் செல்வம் - தேவலோகத்திலுள்ளோரது ஐசுவரியம், வீறு பெற்றது - (வீடுமன் இனி அநுபவிக்கப்பெறுதலால்) சிறப்புப் பெற்றது, என்றுன் - என்றுஞ் சொன்னுன்; புண்மேல் அனல் உற்று என்ன புலர்ந்தான்-புண்ணின் மேல் நெருப்புப்பட்டாற் போல மிகவருந்தினுன்; (எ - று.)

முன்னமே தன்மக்கள்சிலர் இறந்ததனால் மனம்வருந்திய திருதராட்டிரன் இப்பொழுது குலத்தலைவனும் சேனாபதியும் தன்னைவளர்த்த தந்தையுமான வீடுமனும் அழிந்த செய்தியைக் கேட்டு அவ்வருத்தத்தின்மேல் மிக்கவருத்தமுற்றானென்பதாம். நான்காமடி - துன்பத்தின்மேல் துன்பமடைதற்கு உவமை; "புண்ணிலாம்பெரும்புழையிற் கனல்நுழைந்தாலென" எனக் கம்பர் கூறியதுங் காண்க. இனி, முதல்வன் புதல்வன் என்பதற்கு - யாவர்க்கும் முதல்வனாகிய திருமாலினது அவதாரமான வியாசமுனிவனுக்கு மகனாகிய திருதராட்டிர னென உரைத்தலுமொன்று. இரண்டாமடியால், வீடுமனைத் திருதராட்டிரன் தனக்குக் கண்ணாகக் கருதியிருந்தமை விளங்கும். பி-ம்: அயிலுற்றென்ன. (373)

50.—இனிச்சேனாபதியாகுபவர் யாரென்று துரியோதனன் எண்ணுகையில், கர்ணன் தான் சேனாபதியாவேனெனல்.

செங்கணரவக்கொடியோன்சேனாபதியாய்நாளை
யிங்குமுனையினிற்பார்யாரென்றெண்ணுமெல்லை
அங்கர்பூபன்யானேயமரார்வானத்தமரக்
கங்கைமைந்தன்சொன்னபரிசேகாப்பனென்றான்.

(இ - ள்.) செம் கண் அரவம் கொடியோன் - (கோபத்தாற்) சிவந்த கண்களையுடைய துரியோதனன், 'இங்கு - இப்பக்கத்தில், சேனாபதி ஆய் - சேனைத்தலைவனாய், நாளை - நாளைக்கு, முனையில்- போர்க்களத்தில், நிற்பார்-நிற்கவல்லவர், யார்—?' என்று எண்ணும் எல்லை - என்று ஆலோசிக்கும் பொழுது,—அங்கர் பூபன் - அங்க நாட்டாரரசனான கர்ணன், 'யானே—, அமரார் வானத்து அமர - பகைவர்கள் மேலுலகத்துச் செல்லும்படி, கங்கை மைந்தன் சொன்ன பரிசே - வீடுமன்சொன்னபடியே, காப்பன் - (சேனைத் தலைவனாய் நம்சேனையைக்) காப்பேன்,' என்றான்-என்றுசொன்னான்; (எ - று.)

கங்கைமைந்தன் சொன்னதை, கீழ் நாற்பத்துநான்காங்கவியிற் காண்க. கர்ணன் வீடுமனிடஞ் சென்று அவனைக் கண்டு பேசித் தான் சேனாபதியாகும்படி அவனிடம் விடைபெற்றுவந்தானென இங்கே முதனூல் கூறும். அமரார் - (தம்மை) விரும்பிச் சேராதவர். பி - ம்: அமரிற்றலைவனாகி. (374)

51.—தனக்குத் துணையாக நிற்பவர் ஒருவருமில்லையென்று அக்கர்ணனைத் துரியோதனன் விலக்கித் துரோணனைச் சேனாபதியாகெனல்.

தானுதிகனேநீவெஞ்சமரிற்சேனைத்தலைவ
னுலரசாய்நிற்பார்யாரென்றவனைவிலக்கி
மீனார்கொடியோன்றன்னைவென்றவேதக்கொடியோய்
சேனாபதியாகென்றான்றீவாய்நாகக்கொடியோன்.

(இ - ள்.) (அதுகேட்டு), தீ வாய் நாகம் கொடியோன்- விஷாக்கினியை உமிழும் வாயையுடைய பாம்பைக் கொடியிலுடைய துரியோதனன், (கர்ணனை நோக்கி), 'தான அதிகனே - ஈகையால் மேம்பட்டவனே! நீ—, வெம்சமரில் - கொடியயுத்தத்தில், சேனை தலைவன் ஆனால்-சேனாதிபதியாய் விட்டால், அரசு ஆய் நிற்பார் யார் - (என்னுடன் பிரதான) அரசனாய்நிற்பவர் வேறுயாவர்?[எவருமில்லையே என்றபடி],' என்று-என்றுசொல்லி, அவனை விலக்கி-அக்கர்ணனை (ச்சேனைத்தலைமைபூணுதலினின்று) விலக்கி, (துரோணனை நோக்கி), 'மீன ஆர் கொடியோன் தன்னை- மீன்பொருந்தின கொடியையுடைய மன்மதனையும், வென்ற- (போர்த்திறத்தில்) சயித்த, வேதம் கொடியோய் - வேதமெழுதிய கொடியை யுடையவனே! சேனாபதி ஆக-(நீ) சேனைத்தலைவனாகுக,' என்றான்-என்று பிரார்த்தித்தான்; (எ - று.)

காமமுதலிய குற்றங்களை ஒழித்தவனென்றும், மன்மதனை வென்ற சிவபிரானோடொத்தவனென்றும் மூன்றாமடிக்குக் கருத்துக்கொள்ளல் சாலும். உயர்ந்த சாதியில் சிறந்தகுலத்திற்பிறந்தவனாதலாலும், பிராய அறிவு ஒழுக்கங்களில் முதிர்ச்சியுடையவனாதலாலும், அஸ்திரசஸ்திர வித்தைகளில் சிறந்த அநேகர்க்கும் ஆசிரியனாதலாலும், துரோணன் சேனைத்தலைவனாக்கப்பட்டான்.

52.—துரோணன் சேனாபதியாயிருத்தற்கு உடம்பட, யாவருந் துயிலுதல்.

சிலையாசிரியன்வேந்தர்வேந்தன்சேனைதனக்குத்
தலையாய்மன்னர்யாருந்தன்னைவந்துசூழக்
கொலையார்பகழிவெள்ளமார்பந்தோறுங்கோத்துத்
தொலையாவெம்போர்தொலைக்கத்துணிந்தானெவருந்துயின்றார்.

(இ-ள்.) சிலை ஆசிரியன்-வில்லாசிரியனாகிய துரோணன், வேந்தர் வேந்தன் சேனை தனக்கு தலை ஆய்-துரியோதனனதுசேனைக்குத் தலைவனாய், மன்னர் யார்உம் தன்னை வந்து சூழ - அரசர்களெல்லோரும் தன்னை வந்துசூழ்ந்திட,—கொலை ஆர் - கொல்லுதல் தொழில் மிக்க, பகழி வெள்ளம் - பாண வருஷத்தை, மார்பம் தோறுஉம்-(பகைவீரர்களது) மார்பிலெல்லாம், கோத்து - தொடுத்து, தொலையா வெம் போர்-நீங்காத கொடிய போரை, தொலைக்க- செய்துமுடிக்க, துணிந்தான்-நிச்சயித்தான்; (பின்பு அவ்விரவில்), எவர்உம் துயின்றார்-எல்லோரும்உறங்கினார்கள்; (எ - று.)—பி-ம்: சேனைக்கெல்லாம். (376)

53.—சூரியோதய வருணனை.

வருணன் மைந்தன் பாடு வருணற் குரைத்து மீளத்
தருண மைந்தன் விசயஞ் சதம கத்தோன் கேட்ப
இருணி றைந்த கங்கு லேங்கி முன்னே யோட
அருணன் பொற்றேர் தூண்ட வருக்கன் குணபா லடைந்தான்.

(இ - ள்.) அருக்கன் - சூரியன், வருணன் மைந்தன் பாடு வருணற்கு உரைத்து - வருணனுக்குக்குமாரனான வீடுமன் அழிந்ததை (முந்தினநாள்மாலையில்) வருணனுக்குச் சொல்லி, மீள - பின்பு, தருணம் மைந்தன் விசயம் சதமகத்தோன் கேட்ப - இளமையையுடைய மகனான அருச்சுனனது வெற்றியை (அவன் தந்தையான) இந்திரன் கேட்க(ச் சொல்லும்படி), இருள் நிறைந்த கங்குல் ஏங்கி முன்னே ஓட - இருட்டுநிறைந்தஇராத்திரி பயந்து முன்னேஓட, பொன் தேர் அருணன் தூண்ட - (தனது) அழகியதேரை அருணன் செலுத்த, குணபால் அடைந்தான் - கீழ்திசையைச்சேர்ந்தான்; (எ - று.)

தற்குறிப்பேற்றவணி. கீழ் நாற்பத்தாறுங்கவியிற் கூறியதை இப்பாட்டின் முதலில் அனுவதித்தார். சதமகத்தோன் - நூறு (அசுவமேத) யாகங்களைச் செய்தவன். கேட்ப, ஓட, தூண்ட, அடைந்தான் என்க. (377)

பத்தாம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

வீட்டுமபருவம்

முற்றுப்பெற்றது.

செய்யுள் முதற்குறிப்பகராதி

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
29	13	தோனருமல்	தோன்ருமல்
30	42	தனமையி	தன்மையி
31	6	இமசிக்க	இம்சிக்க
40	29	பாண்டினேயக்	பாண்டியனேக்
47	33	ஓருவரே	ஒருவரே
51	19	விரிவில்	வரிவில்
80	18	வருத்த	வ்ருத்த
,,	34	காலாற்	காலால்
100	32	நீனினே	நீநினே
101	24	தார	தாரை
125	31	தோஞ்டு	தோடுஞ்
136	41	பாகன்ாம	பாகன்மா
151	33	ஓன்றை	ஒன்றை
152	1	வீட்மடு	வீட்டும
161	10	குடருகுருதி	குடருகுகுருதி
,,	37	வின் ர	வின்னர
203	9	என்னும்	மன்னும்
209	2	ஓர்	ஓர்
221	42	கொடிமுடி	கொடுமுடி
243	16	பெருல்	பெருமல்

மற்றும் பிழைகள் காணப்படினும் திருத்திக் கொள்ளவும்.

———

ஏழாவது

துரோணபருவம்

வீட்டுமபருவம் என்பதற்குப் பொருள்கூறியது போலவே, இந்தத் துரோணபருவமென்ற வடசொற்றொடர்க்கும் பொருளைக் கூறிக்கொள்க. துரோணன் - பரத்துவாச முனிவனது குமாரன்; கிருபாசார்யனுடன் பிறந்தவளான கிருபியின் கணவன்; அசுவத்தாமனது தந்தை: சகல சாஸ்திரங்களையும் தன்பிதாவினிடம் கற்றுப் படைத்தொழிலைப் பரசுராமனிடத்து ஏழுநாளிற் பயின்றவன். துரியோதனனுதியர்க்கும் பாண்டவர்க்கும் அஸ்திர சஸ்திரங்களைக் கற்பித்த ஆசிரியன். [முதலிற் சிறிதுகாலம் கிருபனும், பின்பு பிரதானமாகத் துரோணனும் கௌரவபாண்டவர்க்கு வில்வித்தை பயிற்றி வைத்தன ரென அறிக.] இவன் துரியோதனனுதியர்க்கு இரண்டாவது சேனைத்தலைவன். வைதிக விரதாநுட்டானஞ்செய்கையில் தேவர்களா லேவியனுப்பப்பட்ட மேநகையின் கட்டழகைக் கண்டு காதல்கொண்ட பரத்துவாச மகாமுனிவனது விருப்பத்தால் ஒரு துரோணகும்பத்தில் பிறந்தமைபற்றி இவனுக்குத் துரோண னென்று பெயர்: துரோணகும்பம் - பதக்களவு கொண்ட பாத்திரம். இனி, துரோணம் என்று வில்லுக்குப் பெயருண்மையால், துரோணனென்பது - வில்வன்மைபற்றிவந்த பெயரென்னவுமாம். இவன், அங்கிவேசமுனிவன்பக்கலிலும் படைகள் தேர்ந்தான்.

பதினோராம்போர்ச்சருக்கம்

பத்து + ஒன்று = பதினொன்று: உம்மைத்தொகையில் நிலைமொழி ஈற்று உயிர்மெய்கெட இன்சாரியைதோன்றிற்று; [நன். உயிர். 47.] ஒன்று+ஆம்=ஓராம்: ஒன்று ஈற்றுயிர்மெய் கெட்டு னகரம் ரகரமாய் முதல் நீண்டது; [நன் - உயிர்: 38, 39.]

1.—கடவுள் வாழ்த்து

காயமும் புலனு மந்தக் கரணமு மாகி யெல்லாத்
தேயமும் பரந்து நின்று மீளவுஞ் சித்துஞ் சுத்த
மாயமு மாகி நீங்கி வருபெரு ஞான னந்த
மாயவெம் பெருமா னென்னை யாண்டரு ளாழி யானே.

(இ - ள்.) காயம்உம் - உடம்பும், புலன்உம் - (அதிலுள்ள) பஞ்ச இந்திரியங்களின் உணர்வும், அந்தக்கரணம்உம் - (அவ்வுணர்வுக்கிடமான) மனமும், ஆகி - (என்னும் இவற்றின்) வடிவமாய், எல்லாம் தேயம்உம் பரந்து நின்று - எல்லாவிடங்களிலும் பரவி நிலைபெற்று, மீளஉம்-மறுபடியும், சித்துஉம் சுத்தமாயம்உம் ஆகி நீங்கி - உயிரும் பரிசுத்தமான மூலப்பிரகிருதியுமாய் (அவ்வவ்விடங்களினின்று) பிரிந்து, வரு-(இங்ஙனம் * கற்பந்தோறும் மாறிமாறி) வருகிற, பெரு ஞான ஆனந்தம் ஆய எம்பெருமான்-(மற்றையறிவுகளினுஞ்) சிறந்த பேரறிவும் (மற்றையின்பங்களினுஞ்) சிறந்த

* கல்பம் - இங்கே, பிரமனுயுள்; பிரமனது தினமன்று.

பேரின்பமும் என்னும் இவற்றின் சொரூபமான கடவுள்,—என்னை ஆண்டு அருள் ஆழியானே - என்னை அடிமைகொண்டு கருணைசெய்கிற சக்கரபாணியான திருமாலே யாவன்; (எ - று.)

சிருஷ்டிகாலந்தோறும் எல்லாத்தத்துவங்களின் வடிவமாய் அவற்றினாலாகிய பிரபஞ்சரூபமாகக் காணப்பட்டுப் பிரளயகாலந் தோறும் அவையாவுந் தன்னுள் ஒடுங்கச்செய்து முற்றுணர்வு வரம்பிலின்பங்களின்மயமாய் நிற்கிற முழுமுதற்கடவுள், ஸ்ரீமந் நாராயணனே யென்பதாம். பிரபஞ்சத்தின் உத்பத்தி ஸ்திதி விநாசங்களுக்குப் பகவானே காரண மென்பது இதில் விளங்கும்; 'காயமும் புலனு மந்தக்கரணமு மாகி' என்றதனால் உற்பத்தியும், 'எல்லாத்தேயமும் பரந்து நின்று' என்றதனால் ஸ்திதியும், 'மீளவுஞ் சித்துஞ் சுத்தமாயமு மாகி நீங்கி' என்றதனால் விநாசமூ மெனக் காண்க.

புலன்களைக்கூறியதில் அவற்றில் தோன்றிய பஞ்சபூதங்களும், அவற்றின்கூறாகிய ஐந்துஞானேந்திரியங்களும், ஐந்து கருமேந்திரியங்களும் அடங்கும். பூதங்களைந்து-ஆகாசம் வாயு அக்கினி ஜலம் பூமி என்பன. ஞானேந்திரியங்களைந்து - மெய்வாய்கண் மூக்குச் செவிகள். கர்மேந்திரியங்களைந்து - வாக்கு பாணி பாதம் பாயு உபத்தம் என்பன. ஐம்புலன்களுக்கும் மனத்துக்கும் இடமாதலாலும், ஐம்புலன்களின் காரியமாகிய பஞ்சபூதங்களின் சேர்க்கையால் ஆகியதாதலாலும், உடம்பு முன்கூறப்பட்டது. காயமும் புலனு மந்தக் கரணமுமாகி என்றதனால், இவற்றிற்குக்காரணமான அகங்காரம் மகாந் புருஷன் [உயிர்] பிரகிருதி என்பனவும் பெறப்படும். ஆகவே, இருபத்தைந்து தத்துவங்களும் பகவானதுசொரூபம் என்றதாயிற்று. இவ்விருபத்தைந்து தத்துவங்களும் அல்லது உலகெனப் பிறிதொன்றில்லை யென்று அறிக.

மீளவும் என்றது, பிராகிருதப்பிரளயகாலத்தில் [பிராகிருதப் பிரளயம் - பிரமனுயுள் முடிவில்வரும் பிரளயம்.] தத்துவங்களெல்லாம் ஒடுங்கும் நிலையை. சிருஷ்டிகாலத்தில் எந்தப்பொருளினின்று எந்தப்பொருள் உண்டாயிற்றோ அந்தமுறைக்கு எதிராகப் பிரளயகாலத்தில் காரியப்பொருள் தன்காரணப்பொருளில் அடங்கிக்கொண்டு செல்லச்செல்ல இறுதியில் புருஷனும் பிரகிருதியும் பரமாத்மாவில் லயப்படவேண்டியனவாய் நிற்கிற தன்மையை 'மீளவுஞ் சித்துஞ்சுத்தமாயமுமாகி நீங்கி' என்றது. பிரகிருதியின் வ்யக்தஸ்வரூபம் அவ்யக்தஸ்வரூபம் என்ற இரண்டுதன்மைகளுள், இங்கு சுத்தமாயையென்று கூறியது - அவ்யக்தஸ்வரூபத்தை; அதாவது - பொறிகளுக்குப் புலனாகாத தன்மையை: [வ்யக்தஸ்வரூபம்-சராசரவடிவமாகப் புலப்படுந் தன்மை.] ஆனது பற்றியே, 'சுத்தமாயம்' எனப்பட்டது. பிரகிருதியை 'மாயம்' என்றது, விசித்திரசிருஷ்டியைப் பண்ணுகையாலே. இனி, சுத்தமாயம் என்பதற்கு வேறுபொருளுரைத்தல், விசிஷ்டாத்வைத சித்தாந்தத்துக்கு ஒவ்வாது. சித்து - உணர்வுள்ளது.

பெருஞானம்-முற்றுமுணர்தல், சர்வஜ்ஞதை, ஐயந்திரிபில்லாத இயற்கையறிவு. பெருமையை ஆனந்தத்துக்குங் கூட்டுக. பேரா

னந்தம் - துக்க சம்பந்தமில்லாமல் நித்தியமாயும் வரம்பில்லாததாயு முள்ள சுகம். பெரு ஞானனந்தமாய என்றது - எல்லாவற்றையும் எப்பொழுதும் ஐயந்திரிபற அறியும் அறிவின்மிகுதியை இயல்பிலுடையனும், எல்லாவின்பங்களினும் மேம்பட்ட நிரதிசயப்பேரின்பத்தை எப்பொழுதும் உடையனுயு முள்ள வென்றபடி. இப்படி கர்மவசமான பிரபஞ்சரூபமாகத் தோன்றுதல் நிலைத்தல் அழிதல்களை அடைந்தாலும், இவை யாவும் பகவானது இச்சைமாத்திரத்தால் நிகழ்தலால் அப்பெருமானுக்குக் கர்மசம்பந்தம் நிகழாமைபற்றி, ஞானனந்தங்களுக்குக் குறைவில்லை யென்பார், இவ்வாறுகூறினர். **பி - ம்:** மீளவுஞ் சிதைத்துச்.

இதுமுதல் பதினெட்டுக்கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய **அறுசீராசிரிய விருத்தங்கள்:** இவற்றில் மூன்று ஆறுஞ் சீர்கள் தேமாச்சீர்களாகவே நிற்கும். (1)

2.—கவிக்கூற்று: இன்னது கூறுவோமென்றல்.

பகிரதிமைந்தன்சேனுபதியெனப்பத்துநாளு
மிகல்புரியியற்கையெல்லாமியம்பினமினிமேலந்தத்
துகளறுகேள்விவேள்வித்துரோணவாசிரியன்செய்த
புகலருமைந்துநாளைப்பூசலும்புகலலுற்றும்.

(இ - ள்.) பகிரதி மைந்தன்-கங்கையின்புத்திரனை பீஷ்மன், சேனுபதி என - சேனைத்தலைவனுக (இருந்து), பத்து நாள்உம் - (சென்ற) பத்துத்தினங்களிலும், இகல் புரி-போர்செய்த, இயற்கை எல்லாம் - தன்மைகளெல்லாவற்றையும், இயம்பினம் - (கீழ் வீட்டுமபருவத்தில்) கூறிமுடித்தோம்; இனிமேல்—, துகள் அறு - குற்றமில்லாத, கேள்வி - நூற்கேள்விகளையும், வேள்வி - யாகங்களையுமுடைய, அந்த துரோண ஆசிரியன் - அந்தத் துரோணுசாரியன், செய்த—, புகல் அரு - சொல்லுதற்கு அருமையான, ஐந்து நாளை பூசல்உம் - ஐந்துநாளைப்போரையும், புகலல் உற்றும் - (இப்பருவத்தில்) கூறத்தொடங்கினேம்; (எ - று.)

பகிரதி - பாகீரதி யென்னும் வடமொழித்தத்திதாந்தநாமத்தின் குறுக்கல்; பகீரதனுற் கொணரப்பட்ட தென்று காரணப்பொருள். **பகீரதன்**-சூரியகுலத்துப் பிரசித்தனை ஓரரசன். இவன், கபிலமுனிவனது சாபத்தாற் சாம்பலானவரும் சகரசக்கரவர்த்தி குமாரரும் தனதுபாட்டனுக்குச் சிற்றப்பன்மாருமாகிய அறுபதினுயிரவரை நற்கதிபெறுவித்தற்பொருட்டு அவர்களுடற்பொடியை நனைத்தற்காகத் தேவலோகத்திலிருந்து ஆகாசகங்காநதியை முன்பு கீழுலகத்துக்குக் கொணர்ந்தானென வரலாறு காண்க. யாகஞ் செய்தல் செய்வித்தல் என்னும் இருதொழிற்கும் உரியவர் அந்தணரே யாதலால், 'வேள்வித்துரோணவாசிரியன்' என்றார். புகல்-புகலுதல்: முதனிலைத்தொழிற்பெயர்; இனி, புகல் அரும் - (எளிதில்) பிரவேசிக்க வொண்ணுத எனப் பொருள்கொண்டால், புகல் - புகுஎன்னும் பகுதியின்மேற் பிறந்த தொழிற்பெயராம். வீடுமன் தலைமைபூண்டு நடத்தின பத்துநாட்போரினும் துரோ

ணன் தலைமைபூண்டு நடத்தின ஐந்துநாட் போரில் கொல்லப்பட்ட அவனுடைய பகைவர் பக்கத்தார் மிகப்பலராதலின், இதனை 'புகலரும்' என விசேடித்தது. (2)

3.—பாண்டவர் போர்க்களங் குறுகுதல்.

சென்றனன்கங்கைமைந்தன்றினகரன்மைந்தன்செல்வான்
நின்றனன்றுரோணன்மைந்தனீடமர்முனைந்துசெய்யான்
வென்றனமினிநாமென்றுமெய்ம்முகில்வண்ணன்சொல்லக்
குன்றனகுவவுத்தோளார்வெங்களங்குறுகினாரே.

(இ - ள்) 'கங்கை மைந்தன் - வீடுமன், சென்றனன் - வலியடங்கிப்போய்விட்டான்; தினகரன் மைந்தன் - சூரியனுக்கு மகனான கர்ணன், செல்வான் நின்றனன் - இறந்துசெல்பவனாய் நின்றான்; துரோணன் மைந்தன் - துரோணாசாரியன்மகனான அசுவத்தாமனோ, நீடு அமர் - பெரிய போரை, முனைந்து செய்யான் - உக்கிரங்கொண்டு செய்யமாட்டான்; (ஆதலால்), இனி—, நாம்—, வென்றனம் - (பகைவரைச்) சயித்தேவிட்டோம்,' என்று—, மெய் முகில் வண்ணன் - சத்தியத்தையுடைய மேகம்போலும் (கரியதிரு மேனி) நிறத்தையுடைய கண்ணபிரான், சொல்ல—,(மகிழ்வோடு), குன்று அன குவவு தோளார் - மலையையொத்த திரண்ட தோள்களையுடைய பாண்டவர்கள், வெம் களம்-கொடிய போர்க்களத்தை, குறுகினார் - அடைந்தார்கள்; (எ - று.)

'தினகரன்மைந்தன் செல்வான் நின்றனன்' என்றது—கற்ற கல்வியெல்லாம் தக்கசமயத்தில்உதவாமல் மறந்துபோய்விடக்கடவதென்று குருவாகிய பரசுராமனிடத்தும், போர்க்களத்தில் உடம்பு பகைவரம்பாற் சிதைந்து தேர்ச்சக்கரமும் நிலத்திலழுந்திவிடக்கடவதென்று ஒரு முனிவனிடத்தும் கர்ணன் சாபங்கள் பெற்றிருத்தலும், உயிர்நிலையாகிய கவசகுண்டலங்களை இந்திரனுக்குக்கொடுத்து இழந்ததும், நாகாஸ்திரத்தை அருச்சுனன்மேல் இரண்டாம்முறை விடுவதில்லை யென்றும் மற்றைப்பாண்டவர் நால்வரையும் கொல்வதில்லையென்றும் குந்திக்கு வரமளித்ததும்முதலிய தக்ககாரணங்கள் பற்றியும், திருமாலின் இயல்பான திரிகாலஞானத்தாலுமாகும். **'தினகரன்மைந்தன்' என்ற விவரம்**:—பாண்டவர்கள் தாயான குந்தி தேவி கன்னிகையாயிருக்கும்பொழுது தனக்குத் துருவாசமுனிவருபதேசித்த மந்திரத்தைப் பரீட்சித்தறியும்பொருட்டுச் சூரியனை நினைத்து அம்மந்திரத்தை உச்சரிக்க, உடனே அத்தேவன் வந்து அவளுக்கு அநுக்கிரகித்ததனால், அவளிடம் பிறந்த புத்திரன், கர்ணன்; இவனை, பிறந்தபொழுதே குந்தி பழிக்கு அஞ்சி ஒருமிதக்கும் மரப்பெட்டியில் வைத்துப் பூட்டிக் கங்கையாற்றில் விட்டிட, அதனைத் திருதராட்டிரனது தேர்ப்பாகனான அதிரதனென்பவன் கண்டு எடுத்துத் திறந்து பார்த்துக் கொண்டுபோய்த் தன் மனைவியாகிய ராதையும் தானுமாக வசுசேனனென்று பெயரிட்டு வளர்த்தான்: இவனுக்குக் கர்ணன் என்ற பெயர் ஆகாசவாணி யிட்டது. இவன் பின்பு துரியோதனனுக்குப் பிராணசினேகிதனாகி அவனருளால் அங்கதேசத்துக்கு அரசனாயினான்.

கண்ணன் துரியோதனனிடந் தூதுசென்றபொழுது விசுவ ரூபத்தின் பின் அசுவத்தாமனைத் தனியேயழைத்து அவனுடன் சில பேசிக்கொண்டிருக்கையில், தன்கைம்மோதிரத்தைக் கீழேநழுவ விட, அதனை அசுவத்தாமன் இயல்பாக எடுத்துக்கொடுக்கையில், கண்ணபிரான் வாங்கிக்கொள்ளாமல் 'சூரியனைப் பரிவேஷம் சூழ்ந் துள்ளது பார்' என்னவே, அவன் ஆகாயத்தை நோக்கினான் ; இத னைத் தூரத்தினின்று பார்த்திருந்த துரியோதனனியர்க்கு 'அசுவத் தாமன் கண்ணன்கைம்மோதிரத்தைத் தன்கையில்வாங்கிப் பூமி யைத்தொட்டு ஆகாயத்தைநோக்கிச் சூரியன்சாட்சியாக ஏதோ சப தஞ் செய்துதந்தான்' என்று அசுவத்தாமனிடம் அவநம்பிக்கை யுண்டாக, அதனால் அவர்கள் அவனை இரகசியமான ஆலோசனை களுக்கு உடன்கொள்ளாராயினர் : ஆகவே, இவனுக்கும் அவர்க ளிடம் அபிமானம் குறைந்தது; ஆனதுபற்றியே, 'துரோணன் மைந்தன் நீடமர் முனைந்து செய்யான்' என்றான். இங்ஙனம் கண் ணன் தந்திரமாக மித்திரபேதஞ்செய்ததே, மேல் துரோணனிறப்ப தன்பின்பு இவனைச் சேனாபதியாக்காததற்கும் முக்கியகாரணமாம். துரோணன் மனைவியான கிருபியின் அழகைக் கேட்டும் ஒருகால் கண்டும் மிகக்காதல்கொண்ட சிவபிரானருளினாற் குதிரையினிடம் பிறந்தவன் அசுவத்தாமன்.

வெல்வம் என்னாது வென்றனம் என இறந்தகாலத்தாற் கூறி னது, விரைவுந் தெளிவும் பற்றிய காலவழுவமைதி; [நன். பொது. 33.] தெய்வாமிசமான கண்ணன் கூறியவை யாவும் அங்ஙனமே தவறாமல்நடத்தலால், 'மெய்ம்முகில்வண்ணன் சொல்ல' என்றார்.

4.—துரியோதனன் படைவீரருடனும் துரோணனுடனும் போர்க்களஞ் சேர்தல்.

மாதனத்தளகையாளுமன்னெனவானிற்பாக
சாதனக்கடவுளென்னத்தகும்பெருந்தரணிவேந்தன்
சேதனப்படைஞரோடுஞ்சேனையின்காவலான
வேதநற்குருவினோடும்வெங்களம்வந்துசேர்ந்தான்.

(இ - ள்) மா தனத்து - மிக்க செல்வத்தையுடைய, அளகை ஆளும் மன் என - அளகாபுரியை ஆளுகிற அரசனான குபேரனென் றும், வானில் - சுவர்க்கத்தில் (அரசனாய்வாழ்கிற), பாகசாதனன் கடவுள் என்ன - இந்திர தேவ னென்றும், தகும் - (உவமை) சொல்லத்தக்க, பெரு - சிறப்புள்ள, தரணி வேந்தன் - நிலவுலகத்து அரசனாகிய துரியோதனன், சேதனம் படைஞரோடு உம் - (பகை வரை) வெட்டுந்தன்மையுள்ள ஆயுதவீரர்களுடனும், சேனையின் காவல் ஆன - சேனையைப் பாதுகாப்பவனாகிய, வேதம் நல் குருவி னோடு உம் - வேதம்வல்ல சிறந்த ஆசிரியனான துரோணனுடனும், வெம் களம் - கொடியபோர்க்களத்தில், வந்துசேர்ந்தான்—;(எ-று.)

குபேரனும் தேவேந்திரனும் துரியோதனனுக்குச் செல்வச் சிறப்பில் உவமை. குபேரன், பிரமனிடம் பெருவரம்பெற்று அத னால் நவநிதிநாயகனும் தநாதிபதியும் திக்குப்பாலகருள் ஒருவனு மாகி, பின்பு தந்தையின் கட்டளையால் கைலாசத்திற் சென்று

அங்கு அளகையென்னும் திவ்வியநகரியை அமைத்து அதில் புஷ்பக விமானம் முதலிய பெருவிபவங்களுடன் வாழ்ந்து சிவபிரானுக்கு நண்ப னெனப்படுஞ் சிறப்புள்ளவ னாதலால், 'மாதனத்து அள கையாளும் மன்' எனப்பட்டான். மன் - பெருமை: அதனையுடைய மன்னவனுக்குப் பண்பாகுபெயர். பாகசாதனக்கடவுள் - இந்திர னாகிய தேவ னென இருபெயரொட்டுப் பண்புத்தொகை; பாகசாஸ நன் - பாகனென்னும் அசுரனைக் கொன்றவனென்று காரணப் பொருள்; (பாகன் - விருத்திராசுரனுடன் பிறந்தவன்.) தரணி - (பொருள்களைத்) தரிப்பது எனக் காரணக்குறி. சேதநம் - சேதித் தல்; இனி, 'சேதனப்படைஞர்' என்பதற்கு-அறிவுள்ள சேனைவீர ரென்று உரைத்தல் சிறிதும் சிறவாது. (4)

5.—வீடுமனில்லாத துரியோதனசேனை பொலிவிழந்திருத்தல்.

மதியிலாவிசும்புஞ்செவ்விமணமிலாமலருந்தெண்ணீர்
நதியிலாநாடுஞ்செம்பொனரம்பிலாநாதயாழும்
நிதியிலாவாழ்வுந்தக்கநினைவிலாநெஞ்சும்வேத
விதியிலாமகமும்போலும்வீடுமனிலாதசேனை.

(இ - ள்) (அப்பொழுது), வீடுமன் இலாதசேனை-பீஷ்ம னில் லாத அக்கௌரவசேனை,—மதி இலா விசும்புஉம் - சந்திரனில்லாத ஆகாயத்தையும், செவ்வி மணம் இலா மலர்உம் - நல்ல வாசனை யில்லாத பூவையும், தெள்நீர் நதி இலா நாடுஉம் - தெளிவானநீரை யுடைய ஆறு இல்லாத தேசத்தையும், செம் பொன் நரம்பு இலா - சிவந்தபொன்போ லருமையான நரம்பின் அமைதி இல்லாத, நாதம் யாழ்உம் - ஒலிக்கு இடமான வீணையையும், நிதி இலா வாழ்வுஉம் - செல்வமில்லாத குடிவாழ்க்கையையும், தக்க நினைவு இலா நெஞ்சு உம் - தகுந்த நல்லெண்ண மில்லாத மனத்தையும், வேதம் விதி இலா மகம்உம் - வேதங்களிற்கூறிய விதிமுறையொழுக்க மில்லாத யாகத்தையும், போலும்-ஒக்கும்; (எ-று.)—பொலிவிழந்திருக்கும் என்றபடி. 'போன்ற' என்ற பாடத்துக்கு- போன்றது' என்பதன் விகார மென்னலாம்.

'நட்சத்திரமில்லாத வானம்போலவும், காற்றில்லாத ஆகாயம் போலவும், பயிரில்லாத நிலம்போலவும், திருத்தமில்லாத சொற் போலவும், பலிசக்கரவர்த்தியில்லாத அசுரசேனைபோலவும், கணவ னில்லாத மனைவிபோலவும், நீரில்லாத நதிபோலவும் இருந்தது, வீடுமனில்லாத குருசேனை' என்று வியாசபாரதத்திற்கூறியுள்ளது. உபமானம் உபமேயம் உவமவுருபு என்ற மூன்றும் விரிந்து நிற்கப் பொதுத்தன்மை மாத்திரம் தொக்கிருத்தலால், **பொதுத்தன்மைத் தொகையுவமையணியாம்.** தெளிவானநீரின்வளமில்லாத நதி இருந் தும் பயனில்லை யாதலால், 'தெண்ணீர்நதியிலாநாடு' எனப்பட்டது. மற்றையிசைக் கருவிகளினும் வீணையில் ஸ்வரத்துக்குரிய அக்ஷரங் களின் உச்சாரணை நன்கு அமைதலாலும், செவிக்கு இனிய ஓசை யுடைமையாலும், 'நாதயாழ்' எனப்பட்டது. **பி-ம்:**—தக்கநரம்பிலா. மிக்கநினைவிலா. (5)

6.—இரண்டுபக்கத்துச் சேனாபதிகளும் தம்சேனையை அணிவகுத்தல்.

பகடுதேர்புரவிகாலாள்பலவகைப்பட்டசேனை
சகடமாவியூகமாகவகுத்தனன்றனு நூல்வல்லான்
திகடருகவுஞ்சயூகமாகவேதிட்டத்துய்மன்
துகடருசாதுரங்கம்யாவையுந்தொகுத்துநின்றான்.

(இ - ள்.) (அந்நாளில்), பகடு-யானைகளும், தேர் - தேர்களும், புரவி - குதிரைகளும், கால் ஆள் - காலாள்களும் (என்னும் சதுரங்கங்களும்), பலவகை பட்ட-பலபகுப்பாக அமையப்பெற்ற, சேனை - கௌரவசேனையை, தனு நூல் வல்லான் - வில்வித்தையில் வல்லவனான துரோணாசாரியன், மா சகடம் வியூகம் ஆக - பெரிய சகடமென்னும் வியூகமாக, வகுத்தனன் - அணிவகுத்தான்; துகள் தரு-(வன்மையாக நடத்தலால்) புழுதியை மேலெழுப்புகிற, சாதுரங்கம் யாவைஉம்-(பாண்டவரது) நால்வகைச்சேனைகளெல்லாவற்றையும், திட்டத்துய்மன் - திருஷ்டத்யும்நன், திகழ்தரு - விளங்குகிற, கவுஞ்சயூகம் ஆகஏ - கிரௌஞ்சமென்னும் வியூகமாக, தொகுத்து நின்றான் - திரண்டு அமையச்செய்து நின்றான்; (எ - று.)

காலாள் - வாகனமின்றிக் கால்களால் நடக்கும் ஆண்மகன்; பதாதி. தநு நூலாவது - வில்முதலிய ஆயுதங்களிற் பயிலும்வகைகளையும், பகைவெல்லுதற்குரிய மந்திரம்முதலிய பிரயோகங்களையும் அறிவிக்கிற ஆயுதசாஸ்திரம். திகழ் + தரு = திகடரு ; இப்புணர்ச்சி "பதினேந்தோடெண்ணிரண்டாய்" என்ற வீரசோழிய விலக்கண விதிப்படி அமைந்தது. இனி, 'திகழ்' என்பது ழகரளகரப்போலியால் திகள் என நிற்க, அக் குறில்செறியாத ளகரம் அல்வழியில் வந்த தகரம் திரிந்தபின் கெட்டதெனினும் அமையும் ; இச்சந்தியை மரூஉமொழியில் அடக்குதல், ஒருசாரார்கொள்கை. சாதுரங்கம் - வடமொழிப்புணர்ச்சி. யாவையும், யாவினா - எஞ்சாமை குறிக்கும்; உம்மை - முற்றுப்பொருளது. பி - ம்:-கிரிஞ்சயூகம். (6)

7.—இருசேனாபதியரும் மன்னவர் சூழநின்று இடைவிடாது அம்புபொழிதல்.

படையுடையிருவர்சேனாபதிகளும்பனிவெண்டிங்கட்
குடையுடைநிருபர்சூழவரூதினிக்குழாங்கள்சூழ
நடையுடைத்தடந்தேருந்திநாகரும்பனிக்கும்வண்ணந்
தொடையுடைவாளிமாரிசோனையம்புயலிற்பெய்தார்.

(இ - ள்.) படை உடை - ஆயுதங்களையுடைய, இருவர் - (கௌரவர் பாண்டவர் என்னும்) இருதிறத்தாரது, சேனாபதிகள் உம் - சேனைத்தலைவர்களான துரோணனும் திட்டத்துய்மனும்,— பனி - குளிர்ச்சியான, வெள் - வெண்ணிறமுடைய, திங்கள்-பூர்ண சந்திரன்போன்ற, குடை உடை - (கொற்றக்)குடையையுடைய, நிருபர் - (தத்தம்பக்கத்து) அரசர்கள், சூழ - சுற்றிலும்வரவும்,— வரூதினி - சேனைகளின், குழாங்கள் - கூட்டங்கள், சூழ - சூழ்ந்து வரவும்,—நடை உடை - (விரைந்த) நடையையுடைய, தட - பெரிய, தேர் - (தம்தம்) தேரை, உந்தி - செலுத்திவந்து, நாகர்உம் பனிக்கும் வண்ணம் - (பார்த்த) தேவர்களும் அஞ்சிநடுங்கும்படி,

தொடை உடை-தொடுக்கப்படுந்தன்மையுள்ள, வாளி- அம்புகளின், மாரி - மழையை, சோணே அம்புயலின்-விடாப்பெருமழைபொழிகிற அழகிய மேகம்போல, பெய்தார் - (ஒருவர்மேல் ஒருவர் இடைவிடாமற்) சொரிந்தார்கள்; (எ - று.)

இனி, 'நாகரும்பனிக்கும்வண்ணம்' என்பதற்கு - (பாரமிகுதியால் பாதாளலோகத்திலிருந்து பூமியைத்தாங்குகிற ஆதிசேஷன் முதலிய) நாகர்களும் வருந்தும்படி எனினும் அமையும். தொடையுடைவாளி - ஒன்றையொன்று தொடர்தலையுடைய அம்புகளெனினுமாம். உவமையணி. வரூதம் - ரதகுப்தி, தேர்க்காவல்; அதனையுடையது - வரூதினீஎன ஏதுப்பொருள். நாகரும், உம் - உயர்வுசிறப்பு. (7)

8.—சகதேவனும் சகுனியும் பொருதல்.

மருத்துவர்மைந்தர்தம்மிலிளவலும்வலியசூது
கருத்துடன்பொருதுவென்றமாமனுங்கலந்துதம்மில்
ஒருத்தரையொருத்தர்வேறலரிதெனவுடன்றுவேக
சரத்தொடுசரங்கள்பாயச்சராசனம்வாங்கினாரே.

(இ - ள்.) மருத்துவர் - (தேவ) வைத்தியரான அசுவினிதேவர்களின், மைந்தர்தம்மில் - குமாரர்களான நகுலசகதேவர்களுள், இளவல்உம் - இளையவனான சகதேவனும், வலிய சூது - வலிமையையுடைய சூதுபோரை, கருத்துடன் - (வஞ்சனை) நினைப்புடனே, பொருது - செய்து, வென்ற - (பாண்டவரைச்) சயித்த, மாமன் உம் - (துரியோதனனுதியரின்) மாமனான சகுனியும், தம்மில் கலந்து- தமக்குள் [ஒருவரையொருவர்] நெருங்கி, ஒருத்தரை ஒருத்தர் வேறல் அரிது என - ஒருவரை மற்றொருவர் வெல்லுதல் முடியாதாம்படி [சமமாய்], உடன்று - உக்கிரங்கொண்டு, வேகம் சரத்தொடு சரங்கள் பாய - விரைவுள்ள அம்புகளோடு அம்புகள் பாய்ந்து எதிர்கோத்து நிற்கும்படி, சராசனம் வாங்கினார் - வில்லை வளைத்துப் போர்செய்தார்கள்; (எ - று.)

மருந்தின்தன்மையையறிந்து வியாதிக்கு ஏற்றபடி உபயோகித்தலால், மருத்துவரென்று வைத்தியர்க்குப் பெயர்; மருத்துவர் - மருந்தையுடையவர்; மருந்து - பகுதி. பொருது என்ற வினைக்கு ஏற்ப, சூது, போரெனப்பட்டது. போர் முதலிய எவ்வகை முயற்சிகளாலும் பெறுதற்கரிய இராச்சியம் முதலிய செல்வங்களை எளிதிற்பெறுவித்த உறுதியைக் கருதி, 'வலியசூது' என்றார். இனி, வலிமை - கொடுமையுமாம். வேறல், வெல் - பகுதி. (8)

9.—சகதேவன் சகுனியை வெல்லுதல்.

ஒருகணைதொடுத்துப்பாகனுயிர்கவர்ந்துயர்த்தகேது
விருகணைதொடுத்துவீழ்த்திரதமாத்தொலையநான்கு
பொருகணைதொடுத்துவஞ்சன்பொருவருமார்பிலாறு
வருகணைதொடுத்துவர்கைமலைந்தனன்வஞ்சமில்லான்.

தொடை உடை - தொடுக்கப்படுந்தன்மையுள்ள, வாளி - அம்புகளின், மாரி - மழையை, சோனை அம்புயலின் - விடாய்பெருமழைபொழிகிற அழகிய மேகம்போல, பெய்தார் - (ஒருவர்மேல் ஒருவர் இடைவிடாமற்) சொரிந்தார்கள்; (எ - று.)

இனி, "நாகரும்பனிக்கும்வண்ணம்" என்பதற்கு - (பாரமிகுதியால் பாதாளலோகத்திலிருந்து பூமியைத்தாங்குகிற ஆதிசேஷன் முதலிய) நாகர்களும் வருந்தும்படி எனினும் அமையும். தொடையுடைவாளி - ஒன்றையொன்று தொடர்தலையுடைய அம்புகளெனினுமாம். உவமையணி. வரூதம் - ரதகுப்தி, தேர்க்காவல்; அதனையுடையது - வரூதினியென வேதுப்பொருள். நாகரும், உம் - உயர்வுசிறப்பு. (7)

8.—சகதேவனும் சகுனியும் பொருதல்.

மருத்துவர்மைந்தர்தம்மிலிளவலும்வலியசூது
கருத்துடன்பொருதுவென்றமாமனுங்கலந்துதம்மில்
ஒருத்தரையொருத்தர்வேறலரிதெனவுடன்றுவேக
சரத்தொடுசரங்கள்பாயச்சராசனம்வாங்கினாரே.

(இ - ள்.) மருத்துவர் - (தேவ) வைத்தியரான அசுவினிதேவர்களின், மைந்தர் தம்மில் - குமாரர்களான நகுலசகதேவர்களுள், இளவல்உம் - இளையவனான சகதேவனும், வலிய சூது - வலிமையையுடைய சூதுபோரை, கருத்துடன் - (வஞ்சனை) நினைப்புடனே, பொருது - செய்து, வென்ற - (பாண்டவரைச்) சயித்த, மாமன் உம் - (துரியோதனனுடைய) மாமனான சகுனியும், தம்மில் கலந்து - தமக்குள் [ஒருவரையொருவர்] நெருங்கி, ஒருத்தரை ஒருத்தர் வேறல் அரிது என - ஒருவரை மற்றொருவர் வெல்லுதல் முடியாதபடி [சமமாய்], உடன்று - உக்கிரங்கொண்டு, வேகம் சரத்தொடு சரங்கள் பாய - விரைவுள்ள அம்புகளோடு அம்புகள் பாய்ந்து எதிர்கோத்து நிற்கும்படி, சராசனம் வாங்கினார் - வில்லை வளைத்துப் போர்செய்தார்கள்; (எ - று.)

மருந்தின் தன்மையையறிந்து வியாதிக்கு ஏற்றபடி உபயோகித்தலால், மருத்துவரென்று வைத்தியர்க்குப் பெயர்; மருத்துவர் - மருந்தையுடையவர்; மருந்து - பகுதி. பொருது என்ற வினைக்கு ஏற்ப, சூது, போரெனப்பட்டது. போர் முதலிய எவ்வகை முயற்சிகளாலும் பெறுதற்கரிய இராச்சியம் முதலிய செல்வங்களை எளிதிற்பெறுவித்த உறுதியைக் கருதி, 'வலியசூது' என்றார். இனி, வலிமை - கொடுமையுமாம். வேறல், வெல் - பகுதி. (8)

9.—சகதேவன் சகுனியை வெல்லுதல்.

ஒருகணைதொடுத்துப்பாகனுயிர்கவர்ந்துயர்த்தகேது
விருகணைதொடுத்துவீழ்த்திரதமாத்தொலையநான்கு
பொருகணைதொடுத்துவஞ்சன்பொருவருமார்பிலாறு
வருகணைதொடுத்துவர்கைமலைந்தனன்வஞ்சமில்லான்.

(இ - ள்.) (பின்பு), வஞ்சம் இல்லான் - வஞ்சனையில்லாதவனாகிய சகதேவன்,—ஒரு கணை தொடுத்து-ஓரம்பைப் பிரயோகித்து, (அதனுல்), பாகன் உயிர் கவர்ந்து - (சகுனியின் தேர்ச்) சாரதியினது உயிரை (உடம்பினின்று) பறித்து [பாகனைக் கொன்று], உயர்த்த கேது - (அவன்தேரில்) உயரக்கட்டிய துவசத்தை, இரு கணை தொடுத்து வீழ்த்தி - இரண்டுஅம்புகளைப் பிரயோகித்து (அவற்றுல்) அறுத்துத்தள்ளி, இரதம் மா தொலைய - தேரிற்பூட்டிய குதிரைகள் (நான்கும்) அழியும்படி, நான்கு பொரு கணை தொடுத்து - போருக்குரிய நான்கு அம்புகளைப் பிரயோகித்து, வஞ்சன் - வஞ்சனையுடையவனுன அச்சகுனியின், பொரு அரு மார்பில்- ஒப்பில்லாத மார்பிலே, வரு ஆறு கணை தொடுத்து - (ஒன்றன்பின் ஒன்றுக) வருகிற ஆறு அம்புகளைப் பிரயோகித்து, வாகை மலைந்தனன் - வெற்றிமாலை சூடினுன்; (எ - று.)

முதலில் இருவர்க்கும் சிறிதுபொழுது சமமாகப் போர்நிகழ, பின்பு போரில் இன்னுரை இன்னுரால் வெல்லலாயிற்று என இயல்பையெடுத்துக் கூறுதல், மரபு. மலைதல் - சூடுதல்: "மலைதலு மிலைதலும் வேய்தலுஞ் சூடுதல்" என்பது, பிங்கலந்தை. வஞ்சன் என்றதை, பாகன் கேது இரதம் என்றவற்ருேடுங் கூட்டுக. பாகு - யானை தேர் குதிரைகளைச் செலுத்துந் தொழில்: அதனையுடையான் - பாகன். தொலைய என்னும் செயவெனெச்சம், காரியப்பொருளதாதலால், எதிர்காலம். வாகை யென்னும் மரத்தின் மலர்களாலாகிய மாலையைப் போர்வெற்றிக்கு அறிகுறியாக வீரர்கள் சூடுதல், முறைமை. வஞ்சகச்சூதில் வல்லவனுதலால், சகுனியை 'வஞ்சன்' என்ருர்; "ஸதமாயன்" என்ருர் முதனூலாரும். சகதேவன் வஞ்சமில்லானுதலை, கீழ்ப் பழம்பொருந்து சருக்கத்திலும் கிருஷ்ணன் தூதுசருக்கத்திலும் கண்ணனுக்கும் இவனுக்கும் நடந்த சம்பாஷணைகளாலும், (முகூர்த்தங்கேள்விச் சருக்கத்தில்) அடுத்துக்கேட்ட துரியோதனனுக்குச் சிறிதும் வஞ்சனையின்றி நல் முகூர்த்தம் வைத்துக்கொடுத்ததனுலும் அறிக. பி - ம்: மிலைந்தனன். **(9)**

10.—**சகதேவன் கதாயுதப்போரிலும் சகுனியை வெல்லுதல்.**

உகுநிணச்சேற்றிலூன்றியோடுதற்குன்னுவான்போற்
சகுனியத்தேரினின்றுமிழிந்துகைத்தண்டமேந்த
நகுலனுக்கிளையோன்ருனுநகுமணிவலயத்தோண்மேன்
மிகுதிறற்றண்டுகொண்டேவென்னிடப்பொருதுமீண்டான்.

(இ - ள்.) உகு - (போர்க்களத்தில் இறந்த பிராணிகளின் உடம்பினின்று) வெளிப்படுகிற, நிணம் - கொழுப்பாகிய, சேற்றில்- சேற்றிலே, ஊன்றி - (ஆதாரமாக) ஊன்றிக்கொண்டு, ஓடுதற்கு (தான்) ஓடிப்போவதற்கு, உன்னுவான் போல் - எண்ணுபவ[ன்] போல, சகுனி—, அ தேரினின்றும் இழிந்து-அந்த(த் தனது) [ர]தத்தினின்றும் இறங்கி, கை தண்டம் ஏந்த - கையிற் கதாயுத[த்தை] எடுத்துக்கொள்ள,—(அப்பொழுது), நகுலனுக்கு இளை[யோன்]

((இ-ள்.)) ((பின்பு)), வஞ்சம் இல்லான் - வஞ்சனையில்லாதவனாகிய சகதேவன்,—ஒரு கணை தொடுத்து-ஓரம்பைப் பிரயோகித்து, ((அதனால்)), பாகன் உயிர் கவர்ந்து - (சகுனியின் தேர்ச்) சாரதியினது உயிரை ((உடம்பினின்று)) பறித்து [பாகனைக் கொன்று], உயர்த்த கேது - ((அவன்தேரில்)) உயரக்கட்டிய துவசத்தை, இரு கணை தொடுத்து வீழ்த்தி - இரண்டுஅம்புகளைப் பிரயோகித்து ((அவற்றால்)) அறுத்துத்தள்ளி, இரதம் மா தொலைய - தேரிற்பூட்டிய குதிரைகள் ((நான்கும்)) அழியும்படி, நான்கு பொரு கணை தொடுத்து - போருக்குரிய நான்கு அம்புகளைப் பிரயோகித்து, வஞ்சன் - வஞ்சனையுடையவனான அச்சகுனியின், பொரு அரு மார்பில் - ஒப்பில்லாத மார்பிலே, வரு ஆறு கணை தொடுத்து - ((ஒன்றன்பின் ஒன்றாக)) வருகிற ஆறு அம்புகளைப் பிரயோகித்து, வாகை மலைந்தனன் - வெற்றிமாலை சூடினான்; ((எ - று.))

முதலில் இருவர்க்கும் சிறிதுபொழுது சமமாகப் போர்நிகழ, பின்பு போரில் இன்னானை இன்னான் வெல்லலாயிற்று என இயல்பை யெடுத்துக் கூறுதல், மரபு. மலைதல் - சூடுதல்: "மலைதலு மிலைதலும் வேய்தலுஞ் சூடுதல்" என்பது, பிங்கலந்தை. வஞ்சன் என்றதை, பாகன் கேது இரதம் என்றவற்றோடுங் கூட்டுக. பாகு - யானை தேர் குதிரைகளைச் செலுத்துந் தொழில்: அதனையுடையான் - பாகன். தொலைய என்னும் செயவெனெச்சம், காரியப்பொருளதாதலால், எதிர்காலம். வாகை யென்னும் மரத்தின் மலர்களாலாகிய மாலையைப் போர்வெற்றிக்கு அறிகுறியாக வீரர்கள் சூடுதல், முறைமை. வஞ்சகச்சூதில் வல்லவனாதலால், சகுனியை 'வஞ்சன்" என்றார்: "பாதமாயன்" என்றார் முதனூலாரும். சகதேவன் வஞ்சமில்லானாதலை, கீழ்ப் பழம்பொருந்து சருக்கத்திலும் கிருஷ்ணன் தூதுசருக்கத்திலும் கண்ணனுக்கும் இவனுக்கும் நடந்த சம்பாஷணைகளாலும், (முகூர்த்தங்கேள்விச் சருக்கத்தில்) அடுத்துக்கேட்ட துரியோதனனுக்குச் சிறிதும் வஞ்சனையின்றி நல் முகூர்த்தம் வைத்துக்கொடுத்ததனாலும் அறிக. பி - ம்: மிலைந்தனன். (9)

10.—சகதேவன் கதாயுதப்போரிலும் சகுனியை வெல்லுதல்.

உகுநிணச்சேற்றிலூன்றியோடுதற்குன்னுவான்போற்
சகுனியத்தேரினின்றுமிழிந்துகைத்தண்டமேந்த
நகுலனுக்கிளையோன்றானுநகுமணிவலயத்தோண்மேன்
மிகுதிறற்றண்டுகொண்டேவென்னிடப்பொருதுமீண்டான்.

(இ-ள்.) உகு - (போர்க்களத்தில் இறந்த பிராணிகளின் உடம்பினின்று) வெளிப்படுகிற, நிணம் - கொழுப்பாகிய, சேற்றில் - சேற்றிலே, ஊன்றி - (ஆதாரமாக) ஊன்றிக்கொண்டு, ஓடுதற்கு - (தான்) ஓடிப்போவதற்கு, உன்னுவான் போல் - எண்ணுபவன் போல, சகுனி—, அ தேரினின்றும் இழிந்து-அந்த(த் தனது) இரதத்தினின்றும் இறங்கி, கை தண்டம் ஏந்த - கையிற் கதாயுதத்தை எடுத்துக்கொள்ள,—(அப்பொழுது), நகுலனுக்கு இளையோன்

தான்உம் - நகுலனுக்குத் தம்பியான சகதேவனும், (தேரினின்று இறங்கி), நகு-பிரகாசிக்கிற, மணி-இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற, வலயம்-வளையையணிந்த, தோள்மேல்-(தன்) கையில், மிகு திறல் தண்டுகொண்டுஏ-மிக்கவலிமையையுடைய கதாயுதத்தை எடுத்துக் கொண்டே, வென் இட - (அச்சகுனி) முதுகுகொடுக்கும்படி, பொருது - போர்செய்து, மீண்டான் - திரும்பி(த் தேர்மீது) ஏறினன்; (எ - று.)

தேரினின்று இறங்கிக் கையிற் கதையை யேந்திய சகுனி, சிறிதுபொழுதேனும் எதிர்த்துநின்று அவ்வாயுதங்கொண்டு போர் செய்யமாட்டாமல் உடனே அஞ்சிப் புறங்கொடுத்துத் தோற்று ஓடுதலால், அவனுக்கு அப் படைக்கலம் போர்க்கருவியாகாது, வழுக்குதலுடைய சேற்றுநிலத்திற் சறுக்கிவிழாமல் ஓடுதற்கு உதவியாகிற ஊன்றுகோல்மாத்திரமாகப் பயன்பட்டதென்றார்; இது - **தற்குறிப்பேற்றவணி.** அத்தேர் - பாகனும் துவசமும் குதிரையும் இழந்த தேர். **பி-ம்:** இளையகோவும். (10)

11.—துரியோதனன் வீமனோடு பொருதல்.

மதாசலமகுடமான்றேர்வாம்பரிவயவர்வெள்ளப்
பதாதியெம்மருங்கும்போதப்பார்த்திவர்நிழலிற்போதப்
பிதாமகனிறந்தானென்றுபேதுறுநிருபன்போந்து
சதாகதிமைந்தனோடுந்தாக்கினன்றபனன்போல்வான்.

(இ - ள்.) மத அசலம் - மதத்தையுடைய மலைகள் போன்ற யானைகளும், மகுடம் மான் தேர் - சிகரத்தையுடைய குதிரைகள் பூட்டிய தேர்களும், வாம்பரி - தாவிச்செல்லுங் குதிரைகளும், (என்னும் இவற்றில் ஏறிய), வயவர் - வீரர்களும், பதாதி வெள்ளம் - காலாள்களின் கூட்டமும், எ மருங்குஉம் போத - எல்லாப் பக்கங்களிலும் (சூழ்ந்து) வரவும், பார்த்திவர்-அரசர்கள், நிழலின்-(தனது) நிழல்போல, போத - (நீங்காது உடன்)வரவும்,—தபனன் போல்வான் - சூரியன்போல விளங்குபவனுன, பிதாமகன் இறந்தான் என்று பேது உறு நிருபன் - பெரியபாட்டனை வீடுமன் அழிந்தானென்று மதிமயக்கமடைந்த துரியோதனராசன்,—போந்து - வந்து, சதாகதி மைந்தனோடுஉம் - வாயுபுத்திரனை வீமசேனனுடனே, தாக்கினன் - எதிர்த்துப்பொருதான்; (எ - று.)

பார்த்திவர் - பிருதிவியை ஆளுபவர்; தத்திதாந்தநாமம்: ப்ருதிவீ - பூமி; ப்ருது என்னும் அரசனால் சீர்ப்படுத்தப்பட்டமை பற்றிய பெயர். இறந்தான் என்றது, இங்கே இலக்கணை; வலிமை முழுதுமொடுங்கி இறந்தாற்போலானு னென்றபடி. பேது - பேதம் என்னும் வடசொல்லின் விகாரம். 'தபனன் போல்வான்' என்பதனை, வீமனுக்கு அடைமொழியாக்கினும் பொருந்தும், மேல் அவனே வெல்லுதலால். (11)

12.—வீமன் துரியோதனனோடு அவனைச் சார்ந்தாரையும் வெல்லுதல்.

அரிக்கொடியரியேறன்னனரவவெங்கொடியுமற்று
வெருக்கொள்பேரரவமன்னன்வில்லுமுனற்றுவீழ

வெரிக்கணேயேவிச்சூழ்ந்ததரணிபரெதிர்ந்தவேந்தர்
கரிக்குலமிவுளிதிண்டேர்மடியவெங்கணேகடொட்டான்.

(இ - ள்.) அரி-சிங்கத்தின்வடிவமெழுதிய, கொடி-துவசத்தை யுடைய, அரி ஏறு அன்னன் - ஆண்சிங்கத்தை யொத்தவனுன வீமன்,—வெரு கொள் பேர் அரவம் அன்னன் - (காண்பவர்) அச் சங்கொள்ளுதற்குக் காரணமான பெரிய பாம்பை யொத்த துரியோ தனனது, அரவம் வெம் கொடிஉம் - பாம்பின்வடிவமெழுதிய பயங் கரமான துவசமும், அற்று - அறுந்து, வில்உம் - (அவன்கை) வில் லும், அற்று - அறுபட்டு, முன் வீழ - (அவையிரண்டும்) எதிரிற் கீழ்விழும்படி, எரி கணே - நெருப்புப்போன்ற கொடிய அம்புகளே, ஏவி - செலுத்தி,—(அதன்பின்), சூழ்ந்த தரணிபர் - (அவனேச்) சுற்றிநின்ற அரசர்களும், எதிர்ந்த வேந்தர் - (தன்னே) எதிர்த்த அவ்வரசர்களின், கரி குலம் - யானேக்கூட்டங்களும், இவுளி - குதிரைகளும், திண் தேர் - வலிய தேர்களும், மடிய - அழியும்படி, வெம் கணேகள் - கொடிய அம்புகளே, தொட்டான் - பிரயோகித் தான்; (எ - று.)

அரி - ஹரி: (யானேமுதலிய பெரிய விலங்குகளேயும்) அரிப்ப தென்று பொருள். 'வெருக்கொள்பேரரவமன்னன்' எனத் தோல்வியுறுந் துரியோதனனேக்குறித்ததாகவுமாம். தரணிபர் - பூமியையாள்பவர். ஏவித்தொட்டான் என இயையும்; ஏவிச் சூழ்ந்த என இயைத்து உரைப்பினுமாம். பி - ம்:-போரரவம். (12)

13.—துரியோதனன் புறங்கொடுப்பதுகண்டு சல்லியன்வந்து வீமனேயெதிர்த்தல்.

பல்லியமுழங்கமன்னர்படப்படப்பரித்தேரோடும்
வில்லியறுனேவேந்தன்வென்னிடும்விரைவுகாணுச்
சொல்லியவிற்கைவாயுசுதனுடனுருமேறென்னச்
சல்லியன்முனேந்துவீரசாயகமேவினனே.

(இ - ள்.) பல் - அநேகமான, இயம் - வாத்தியங்கள், முழங்க- ஆரவாரிக்க, (போருக்குவந்து அப்போரில்), மன்னர் பட பட-(தன் னுடன்வந்த) அரசர்கள் மிகுதியாக அழிய, வில் இயல் தானே வேந்தன் - விற்கள் பொருந்திய சேனேயையுடைய துரியோதனன், பரி தேரோடுஉம்-குதிரைகள் பூண்ட தேருடனே, வென் இடும் - (வீமனுக்குப்) புறங்கொடுக்கிற, விரைவு - வேகத்தை, காணு - பார்த்து, சல்லியன்—, உரும் ஏறு என்ன முனேந்து - பேரிடிபோல உக்கிரங்கொண்டுவந்து, சொல்லிய வில் கை வாயு சுதனுடன் - கீழ்க்கூறின வில்லேயேந்திய கையையுடைய வாயுகுமாரனுன வீமனே, வீரசாயகம் ஏவினன் - வலிய அம்புகளேத் தொடுத் தான்; (எ-று.)

பல் இயம்-கொட்டுவனவும் ஊதுவனவும் ஆகிய தோற்கருவி துளேக்கருவி கஞ்சக்கருவி நரப்புக்கருவி எனப்படும் அநேகவாத்தி யங்களேக் காட்டும் பொதுச்சொல்லாதலால், 'முழங்க' எனப் பொதுவினே கொடுத்தார். சல்லியன் - (பகைவர்க்கு) அம்பு நுனி போல் (வருத்தஞ்செய்)பவன் என்பது பற்றிய காரணப்பெயர்;

சல்யம - அம்புமுனை. இவன், மத்திரதேசத்து அரசன் ; பாண்டு மகாராசனது இரண்டாம் மனைவியாகிய மாத்திரிக்கு உடன் பிறந்தவனாதலால், நகுலசகதேவர்க்கு மாமனாவன். எய்பவனது பராக்கிரமத்தை அம்பின்மே லேற்றி, 'வீரசாயகம்' என்றது. வாயுஸுதன், சல்யன், வீரஸாயகம் - வடசொற்கள். சொல்லிய-(சிறந்தவனென்று) சொல்லப்பட்ட எனினுமாம்.

தருமபுத்திரன் துரியோதனனை யெதிர்த்துத் தாக்கி நாகபாசத்தாற்கட்டிவைக்க, துரோணன் வந்து கருடாஸ்திரத்தால் அந்நாக பாசத்தை விடுவித்துத் துரியோதனனை மீட்டுக்கொண்டு சென்றதாகப் பெருந்தேவனார் கூறியுள்ளார். (13)

14.—சல்லியனைக் குறுக்கிட்டு நகுலன் எதிர்த்தல்.

தம்முனோடுடன்றுவந்தசல்லியகுமாரன்றன்னை
எம்முடனெதிர்ப்பையாகிலிமைப்பொழுதிகல்செய்கென்று
வெம்முனைகடந்தபொற்றேர்வெஞ்சிலைநகுலன்றோன்றி
அம்முனைகவந்தமாடவவனொடும்போர்செய்தானே.

(இ - ள்.) தம் முனோடு - தனது தமையனான வீமனுடன், உடன்று வந்த-எதிர்த்துவந்த, சல்லிய(ன்) குமாரன் தன்னை - சல்லியனாகிய ஆண்மகனை (நோக்கி), 'எம்முடன் எதிர்ப்பை ஆகில்-எம்மோடு எதிர்க்கவல்லையானால், இமை பொழுது இகல் செய்க - ஒரு மாத்திரைப்பொழுது போர்செய்வாயாக,' என்று - என்று சொல்லிக்கொண்டு,—வெம் முனை கடந்த - கொடிய (பல) போரை வென்ற, பொன் தேர் - அழகிய தேரையும், வெம் சிலை - கொடிய வில்லையுமுடைய, நகுலன்—, தோன்றி - எதிர்ப்பட்டு, அ முனை கவந்தம் ஆட - அப்போர்க்களத்தில் தலையற்ற உடற்குறைகள் கூத்தாடும்படி, அவனொடுஉம் போர் செய்தான் - அச்சல்லியனோடும் போரைச்செய்தான் ; (எ - று.)

சல்லியன் வீமனை யெதிர்க்கச் செல்லுகையில், நகுலன் வீரவாதங் கூறிக்கொண்டு இடையில் வந்து அவனையெதிர்த்துப் பொருதன னென்பதாம். தம்பியாகிய என்னை வென்றபின்பன்றோ தமையனான வீமனை நீ எதிர்க்கத் தகுதியுடையாய் என்றுகருதி வந்ததுதோன்ற, 'தம்முனோடுடன்று வந்த சல்லியனை' என்றார். சல்லியகுமாரன் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பி - ம் : அவனுடனடுபோர்செய்தான். (14)

15.—நகுலனுக்குச் சல்லியன் புறந்தந்துபோதல்.

மோகரித்தொன்றிரண்டுமூன்றுநாலைந்தம்பேவிப்
பாகனைச்சிலையைப்பொற்றேர்ப்பதாகையைப்பரியைவீழ்த்தி
ஆகமுற்றுருவவெய்தானருச்சுனனிளவன்மாரும்
போகமத்திரத்தார்கோவும்புறந்தந்துபோகலுற்றான்.

(இ - ள்.) அருச்சுனன் இளவல் - அருச்சுனனது தம்பியான நகுலன்,—மோகரித்து - வீராவேசங் கொண்டு, ஒன்று இரண்டு மூன்று நால் ஐந்து அம்பு ஏவி - ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து அம்புகளைத் (தனித்தனி) தொடுத்து, (அவற்றால் முறையே),

பாகனை - சாரதியையும், சிலையை - வில்லையும், பொன் தேர் பதாகையை-அழகிய தேரின் கொடியையும், பரியை - (நான்கு) குதிரைகளையும், வீழ்த்தி-அழித்துத்தள்ளி, ஆகம் உற்று உருவ - (அச்சல்லியன்) மார்பில் பொருந்தி ஊடுருவிச்செல்லும்படி, எய்தான் - பிரயோகித்தான்; (அதனால்), மாறு போகம் மத்திரத்தார் கோஉம் - நீங்காத செல்வ அனுபவத்தையுடைய மத்திரதேசத்தார்க்கு அரசனை சல்லியனும், புறம்தந்து போகல் உற்றான்-முதுகுகொடுத்துச் செல்லத்தொடங்கினான்; (எ - று.)

ஓரம்புஏவிப் பாகனையும், இரண்டு அம்புஏவிச் சிலையையும், மூன்று அம்புஏவித் தேர்ப்பதாகையையும், நாலம்புஏவித் தேர்ப் பரியையும் வீழ்த்தி, ஐந்து அம்பு ஆகம்உற்று உருவுமாறு எய்தானென **முறைநிரனிறைப்பொருள்கோளாக** உரைத்தார். மோகரித்து-கோபத்தோடு ஆரவாரித்து என்றுமாம். ஆகம் முற்று உருவ எனப்பிரித்து - உடம்புமுழுவதுந் துளைக்க எனினுமாம். வில்வித்தையிலும் பராக்கிரமத்திலும் நகுலனுக்கு உள்ள சிறப்பு விளங்க, 'அருச்சுனனிளவல்' என்றார். போகம் - மத்திரத்தார்க்காவது கோவுக்காவது அடைமொழியாக்கொள்ளின் இன்பமனுபவித்தலும், மத்திரத்துக்கு அடைமொழியாக்கொள்ளின் பயிர் விளைவுமாம். போகம், மத்ரம் - வடசொற்கள். (15)

16.—**கர்ணனும் விராடனும் பொருதல்.**

சையமோரிரண்டுதம்மிற்பொருதெனத்தடந்தேருந்தி
வெய்யவன்மகனுமவீரவிராடனுமெதிர்ந்தவேலை
வையகங்கம்பமுற்றுமாசுணநடுங்கமேன்மே
லெய்யும்வெங்கணையால்வானத்தெல்லையுமறைந்ததன்றே.

(இ - ள்.) ஓர் இரண்டு சையம் - ஒப்பற்ற இரண்டுமலைகள், தம்மில் பொருது என-தமக்குள் எதிர்த்துப் போர்செய்தாற்போல, தட தேர் உந்தி - பெரிய (தம்தம்) தேரைச் செலுத்தி, வெய்யவன் மகன்உம் - சூரியபுத்திரனை கர்ணனும், வீர விராடன்உம் - வீரத்தன்மையுடைய விராடராசனும், எதிர்ந்த வேலை - (தம்மில்) எதிரிட்ட பொழுதில்,—வையகம் கம்பம் உற்று - (அவ்வதிர்ச்சியால்) பூமி நடுக்கமடைந்து, மாசுணம் நடுங்க - (அப்பூமியைத் தாங்கும் ஆதிசேஷனாகிய) பெரும்பாம்பும் அசைய, மேல் மேல் எய்யும் வெம் கணையால் - மேன்மேல் இடைவிடாது தொடுக்கிற கொடிய அம்புகளால், வானத்து எல்லைஉம் மறைந்தது - ஆகாயத்தினிடமும் மறைபட்டது; (எ - று.)—அன்றே - ஈற்றசை; தேற்றமுமாம்: அப்பொழுதே என்றுமாம்.

சையம் - ஸஹ்யமென்பதன்விகாரம்: குடகுமலைக்குப் பேராகிய ஸஹ்யமென்ற சிறப்புப்பெயர் மலையென்ற பொதுப்பொருளைத் தந்ததென்க; இனி, சைல மென்னும் வடசொல்லின் விகாரமென்றலும் ஒன்று. மலைகள் - தேருக்காயினும், வீரர்க்காயினும் உவமம். பொருதென - பொருதாலென என எச்சத்திரிபாகவாவது, பொருதஎன எனத் தொழிற்பெயர் விகாரமாகவாவது கொள்ளத்தக்கது. மேல்மேல் - அடுக்கு, இடைவிடாமை பற்றியது. (16)

17.—துருபதனும் பகதத்தனும் வேழப்போர் புரிதல்.

துருபதயாகசேனநிருபனுந்தும்பைசூடி
வருபகதத்தனென்னுமடங்கலேறனையகோவும்
ஒருபகன்முழுதுந்தங்களூக்கமுமுரனுந்தேசும்
பொருபடைவலியுங்காட்டிப்போதகப்பூசல்செய்தார்.

(இ - ள்.) துருபத யாகசேன நிருபன்உம் - துருபதனென்றும் யாகசேனனென்றும் பெயருள்ள (பாஞ்சாலதேசத்து) அரசனும், தும்பை சூடிவரு - தும்பைப்பூமாலையைத் தரித்துவருகிற, பகதத்தன் என்னும் - பகதத்தனென்கிற, மடங்கல் ஏறு அனைய கோஉம் - சிறந்த ஆண்சிங்கத்தை யொத்த அரசனும் (இவ்விருவரும்), ஒரு பகல் முழுதுஉம் - அவ்வொருநாளைப் பகற்பொழுது முழுவதிலும், தங்கள்-தங்களுடைய, ஊக்கம்உம் - (போரில்) உற்சாகத்தையும், உரன்உம் - (தேக) வலிமையையும், தேசுஉம் - பராக்கிரமத்தையும், பொரு படை வலிஉம் - போர்செய்கிற ஆயுதங்களின் பலத்தையும், காட்டி-(பலரும் அறிய) வெளியிட்டு, போதகம் பூசல் செய்தார் - யானைப்போரைச் செய்தார்கள் ; (எ - று.)

துருபதயாகசேனநிருபன் - திரௌபதியின் தந்தை. தும்பை யென்னுஞ் செடியின் பெயர், அதன் பூவினாலாகிய மாலைக்கு இருமடியாகுபெயர். இப்பூமாலை, போர்செய்வார்க்கு உரியது. பகதத்தன் - (பிராக்ஜ்யோதிஷபுரத்து அரசனும் வராகமூர்த்திக்குப் பூமிதேவியினிடம் பிறந்தவனும் கண்ணனாற் கொல்லப்பட்டவனுமாகிய) நரகாசுரனது மகன். மடங்கல் - (பிடரிமயிர்) மடங்குதலுடைய தென ஆண்சிங்கத்துக்குக் காரணக்குறி. மடங்கலென்றதே ஆண்சிங்கத்தைக் குறித்தலால், 'ஏறு' என்றது - சிறப்பை உணர்த்தும். உரன் - அறிவுமாம். தேசு - தேஜஸ். போதகப்பூசல் - யானைமேலிருந்து யானைச் சேனைகளோடு பொருந்திப் போர் செய்தல். போதகம் - பத்துவருஷத்து யானைக்குட்டி; இங்கே யானையென்னுமாத்திரமாய் நின்றது. 'உரனும்' என்றவிடத்து 'முரணும்' என்றும் பாடம். (17)

18.—சிகண்டியின் வீரம்.

துன்றுவெங் கழற்காற் சோம தத்தனுஞ் சூழ்ந்து நின்ற
வன்றிறல் வேந்தர் தாமும் வாளமர் புறந்தந் தோட
அன்றுவீ டுமனை வென்ற வாண்டகை சிகண்டி யென்பான்
இன்றுபோர் செய்த வீர மெம்மனோர்க் கியம்ப லாமோ.

(இ - ள்.) துன்று - நெருங்கிய, வெம் - பயங்கரமான, கழல் - வீரக்கழலையணிந்த, கால்-காலையுடைய, சோமதத்தனும்—,சூழ்ந்து நின்ற-(அவனுக்கு உதவியாய்ச்) சுற்றிலும் நின்ற, வல் திறல் வேந்தர்தாம்உம் - கொடிய வலிமையுடைய அரசர்களும், வாள் அமர் - வாளினாற்செய்யும்போரில், புறம் தந்து ஓட-முதுகுகாட்டியோடும்படி, அன்று வீடுமனை வென்ற ஆண் தகை சிகண்டி என்பான் - அந்நாளில் [முந்தின பத்தாம்போர்நாளில்] பீஷ்மனைச் சயித்த ஆண்மைக்குணமுடையவனான சிகண்டி யென்பவன், இன்று - இந்

நாளில் [பதினோராம்நாளில்], போர் செய்த—, வீரம் - பராக்கிரமம், எம் அனோர்க்கு - எம்மைப்போன்றவர்களுக்கு, இயம்பல் ஆம்ஓ - சொல்லுதல் கூடுமோ? [சொல்லமுடியாது என்றபடி]; (எ - று.)

சோமதத்தன் - குருவமிசத்தவனான பிரதீபனுடைய புத்திரர் மூவருள் ஒருவனான பாகிலீகனுக்குப் புதல்வன்: கலிங்கநாட்டரசனென்பாருமுளர். ஆண்தகை - உயர்திணைப்பெயராதலின், அதன் முன் வலி மிகவில்லை. என்பான் - முதல்வேற்றுமைச் சொல்லுருபு. **பி - ம்:** ஆண்டகைச்சிகண்டி. செய்த வண்ணம். (18)

வே று.

19.—அபிமன்யுவும் லட்சண குமாரனும் பொருதல்.

தேர்த்திரள் பரித்திரள் கரித்திரள் சேனையின்
கோத்திரள் புடைவரக் குடைவரக் கொடிவரப்
பார்த்திவன் மதலையும் பார்த்தன்மா மதலையுந்
தூர்த்தனர் விசும்பையுந் தொடுத்தன தொடைகளால்.

(இ - ள்.) தேர் திரள் - தேர்களின் கூட்டமும், பரி திரள் - குதிரைகளின் கூட்டமும், கரி திரள் - யானைகளின் கூட்டமும், சேனையின் கோ திரள்-சேனையின் சம்பந்தமான அரசர்களின் கூட்டமும், புடை வர-பக்கங்களிற் சூழ்ந்துவரவும், குடை வர - குடைகள் (உடன்) வரவும், கொடி வர - துவசங்கள் (உடன்) வரவும், பார்த்திவன் மதலைஉம் - துரியோதனராசனுக்குப் புத்திரனான லக்ஷணகுமாரனும், பார்த்தன் மா மதலைஉம் - அருச்சுனனுக்குச் சிறந்த புத்திரனான அபிமந்யுவும், (ஒருவரோடு ஒருவர் எதிர்த்து), தொடுத்தன தொடைகளால் - (தாம் தாம்) பிரயோகித்தனவான அம்புகளால், விசும்பைஉம் தூர்த்தனர் - (பரந்த) ஆகாயத்தையும் நிறைத்தார்கள்; (எ - று.)

அபிமந்யு-அருச்சுனன் தீர்த்தயாத்திரைசென்றபோது அவனுக்குக் கண்ணன் தங்கையான சுபத்திரையினிடம் பிறந்தவன். விசும்பையும், உம் - உயர்வுசிறப்பு; அது - அதன் அளவிறந்தபரப்புடைமையை விளக்கும். புடைவர, குடைவர, கொடிவர என்றவற்றில் எண்ணும்மை தொக்கது, வினைச்செவ்வெண். அக்காலத்து இராசராசனாய்ப் பூமியை அரசாண்டவன் துரியோதனனே யாதலால், அவனை 'பார்த்திவன்' என்றார்.

இதுமுதல் பதினைந்து கவிகள் - பெரும்பாலும் எல்லாச்சீர்களும் விளச்சீர்களாகிய அளவடி நான்கு கொண்ட **கலிவிருத்தங்கள்.**

20.—நான்குகவிகள் - அவ்விருவரும் பொர, முடிவாக, அபிமன்யு லக்ஷணகுமரனைத்தலைமயிரைப்பிடித்துத் தேரிற்கொண்டுபோனமைகூறும்.

மொய்கணைபிற்படமுந்துதேருந்தவும்
பெய்கணைகணையுடன்பின்னிமுன்வீழவு
மெய்கணையபிமனுமிலக்கணகுமரனுங்
கைகணைதரநெடுங்கார்முகம்வாங்கினர்.

(இ - ள்.) மொய் - நெருங்கிய, கணை - அம்புகளும், பின் பட - (வேகத்தில்) பின்னிடும்படி, முந்து தேர் - சிறந்த (தம்தம்) தேர்,

உந்தஉம் - (மிக்க விசையாய்ச்) செலுத்தப்படவும், பெய் கணை - (தம்மில் ஒருவரால்) சொரியப்பட்ட அம்பு, கணையுடன் பின்னி - (மற்றொருவரால் விடப்பட்ட) அம்போடு சிக்கி, முன் வீழஉம் - எதிரில் விழுந்திடவும்,—எய் கணை - தொடுக்கிற அம்புகளையுடைய [அம்புதொடுக்கவல்ல என்றபடி], அபிமன்உம் - அபிமந்யுவும், இலக்கணகுமரன்உம் - லக்ஷணகுமாரனும், கை கணை தர-வலக்கை அம்பு (எடுத்துக்) கொடுக்க, நெடு கார்முகம் வாங்கினர் - நீண்ட (தம்) வில்லை வளைத்துப் போர்செய்தார்கள் ; (எ - று.)

முதலடியில், கணை என்பதன் இறுதியில் உயர்வுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. அபிமன், இலக்கணகுமரன் - வடசொல் திரிபுகள். அபிமந்யு என்னும் வடமொழிப்பெயர், மிக்ககோப முடையா னென்னும் பொருளுடையது. இப்பாட்டில் அடிதோறும் 'கணை' என வந்த சொல் ஒருபொருளையே குறித்தலால், **சொற்பொருட்பின்வருநிலை.** பி - ம் : தேருந்தியும். (20)

21. இன்சிலைமதனவேளெனவருங்குமரனவ்
வன்சிலைவில்லிதான்மகிழ்வுறுங்குமரனை
நன்சிலைநடுவுறநாணொடுந்துணியவே
தன்சிலைகொண்டுவெஞ்சாயகமேவினான்.

(இ - ள்.) (அப்பொழுது), இன்-இனிமையான, சிலை-(கரும்பு) வில்லையுடைய, மதனன் வேள் என - மன்மதன்போல, வரும் - வருகிற, குமரன் - லக்ஷணகுமாரன், அ-அந்த, வன் சிலை வில்லி தான் மகிழ்வுஉறும்-வலிய (மேரு) மலையை வில்லாகவுடைய சிவபிரான் மகிழ்ச்சிமிகுதற்குக் காரணமான, குமரனை - அருச்சுனபுத்திரனை அபிமந்யுவை, நல் சிலை - (அவனது) சிறந்த வில், நாணொடுஉம் - நாணியுடனே, நடு உற துணியஏ - நடுவிலே பொருந்தத் துணிபடும்படியாகவே, தன் சிலை கொண்டு - தனதுவில்லினால், வெம் சாயகம் ஏவினான் - கொடிய அம்புகளைச் செலுத்தி யெதிர்த்தான் ; (எ - று.)

இன்சிலை-சுவையினிய வில் ; எனவே, கரும்பாயிற்று. முருகவேளை விலக்குதற்கு, 'மதனவேள்' என்றார். மதனன் - ஆண் பெண்களை மதமடையச் செய்கிறவன் : வடசொல். லக்ஷணகுமாரனென்பது-அழகிய மைந்தனெனப் பொருள்படுதலால், அப்பெயரை 'மதனவேளெனவருங் குமரன்' எனக் குறித்தார். அக்குமரன் என இயையும். அவ் வன்சிலைவில்லி யென இயைத்தால், அ - உலகறிசுட்டாம். அருச்சுனன்போலவே அபிமன்யுவும் சிறந்த சிவபக்தனாய் அப்பிரானதுதிருவுள்ளத்தை உவக்கச்செய்பவனாதலால், 'வன்சிலை வில்லிதான் மகிழ்வுறுங் குமரன்' என்றார் ; அத்தன்மையை இச்சருக்கத்தின் 23-ஆம் கவியிலும், பதின்மூன்றாம்போர்ச் சருக்கத்தின் 50 - ஆம் கவியிலுங் காண்க. சிவபிரான் மகாமேரு மலையை வில்லாகக்கொண்டது, திரிபுரசங்காரகாலத்திலெனஅறிக. 'சாயகம் ஏவினான்' என்பது - எதிர்த்தான் என ஒருசொல்மாத்திரமாகி, 'குமரனை' என்ற செயப்படுபொருளுக்கு முடிக்குஞ் சொல்லாம் ; இனி, குமரனது சிலை யென உருபுமயக்கமாக உரைப்பினும் அமையும். **பி - ம் :** நடுவற. (21)

22. அற்றவிற்றுணிகளாலரியையும்பாகையுஞ்
செற்றனன்சென்றனன்றேரொடுந்தேருகக்
கொற்றவர்நூற்றுவர்க்குரியவக்குமரனைப்
பற்றினனுயிரொடும்பாண்டவர்குமரனே.

(இ-ள்.) (அதன்பின்), பாண்டவர் குமரன் - பாண்டவர்களுக்கு உரியகுமாரனான அபிமன், அற்ற வில் துணிகளால்-(எதிரியின் அம்பால்) அறுபட்ட (தனது) வில்லின் துண்டுகளிரண்டாலும், அரியைஉம் பாகைஉம் செற்றனன் - (பகைவனது தேர்க்) குதிரைகளையும் பாகனையும் அடித்துஅழித்து, தேரொடுஉம் தேர் உக-(தனது) தேரினால் (அவனது) தேர்சிந்தும்படி, சென்றனன் - (தாக்கிச்)சென்று, கொற்றவர் நூற்றுவர்க்கு உரிய அ குமரனை - வெற்றியையுடைய (துரியோதனாதியராகிய) நூறு அரசர்களுக்கும் உரிய குமாரனான அவ்விலக்கணனை, உயிரொடுஉம் பற்றினன் - உயிரோடு பிடித்துக்கொண்டான்; (எ - று.)

அரி = ஹரி : வடசொல்திரிபு : இப்பலபொருளொருசொல் - இங்கு, குதிரையைக் குறித்தது. பாகு - பாகனுக்குப் பண்பாகு பெயர். நூற்றுவர் - தொகைக்குறிப்பு. துரியோதனாதியர் நூறு பேருக்கும் இலக்கணனிடத்தும், பாண்டவரைவர்க்கும் அபிமனிடத்தும் அபேதமாகவுள்ள அன்பு தோன்ற 'நூற்றுவர்க்குரிய அக்குமரன்' என்றும், 'பாண்டவர்குமரன்' என்றுங் குறித்தார்.()

23. வீயினால்வென்றபோர்வில்லியைக்கண்ணுதற்
றீயினால்வென்றவன்றிகழ்தருஞ்சிந்தையோன்
காயினான்வார்குழல்கைப்படுத்தெதிருறப்
போயினானவனொடும்பொன்னெடுந்தேரின்மேல்.

(இ-ள்.) வீயினால் - மலரம்புகளால், வென்ற - (உலகமுழுவதையும்) சயித்த, போர் வில்லியை-போரில்வல்ல (கரும்பு)வில்லையுடைய மன்மதனை, நுதல் கண் தீயினால் - (தனது) நெற்றிக்கண்ணின் நெருப்பினால், வென்றவன் - சயித்திட்டவனான பரமசிவன், திகழ்தரும் - விளங்கப்பெற்ற, சிந்தையோன் - மனத்தையுடைய அபிமன்,—காயினான்-(தன்னைக்) கோபித்து எதிர்த்தவனான இலக்கணனது, வார் குழல் - நீண்ட தலைமயிரை, கை படுத்து - கையிற் பிடித்து, அவனொடுஉம் - அவனுடனே, பொன் நெடு தேரின்மேல் - அழகிய பெரிய (தனது) இரதத்தில், எதிர் உற போயினான் - (முன் வந்தவழிக்கு) எதிராக மீண்டுசெல்பவனானான் ; (எ - று.)

வீ-மலர். கடவுள் அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தில் அவர் நினைந்தவடிவோடு விரைந்து சென்று வீற்றிருத்தலால், 'வென்றவன்திகழ்தருஞ் சிந்தையோன்' என்றார். காயினான் என்ற தெரிநிலை வினையாலணையும்பெயரில், இன்-இறந்தகால இடைநிலை. 'எதிரற' என்ற பாடத்துக்கு - எதிர்ப்பவரில்லாமலென்க. (23)

24.—அப்போது அபிமனைச் சயத்திரதன் தகைதல்.

முந்துவாளபிமனம்மூரிவிற்குமரனை
யுந்துதேர்மீதுகொண்டோடலுமொருபுடைச்

சிந்துபூபதிசெயத்திரதன்வெஞ்சினமுற
வந்துவெங்குனிசிலைவாளியிற்றகையவே.

இதுவும், வருங் கவியும் - குளகம்.

(இ - ள்.) முந்து - சிறந்த, வாள் - ஆயுதப்பயிற்சியையுடைய, அபிமன்—, மூரி வில் - வலியவில்லையுடைய, அ குமரனை - அவ் விலக்கணனை, உந்து தேர்மீது - கொண்டு - செலுத்தப்படுகிற (தனது) தேரின்மேற் பிடித்து வைத்துக்கொண்டு, ஓடலும் - வேக மாகச்செல்லுமளவில்,—ஒரு புடை - ஒரு பக்கத்திலிருந்து, சிந்து பூபதி செயத்திரதன் - சிந்துதேசத்தரசனான ஜயத்ரதனென்பவன், வெம் சினம் உற - கடுங்கோபமுண்டாக, வந்து - (எதிரில்) வந்து, வெம் குனி சிலை வாளியின் - கொடிய வளைந்தவில்லினின்று (எய் யப்படும்) அம்புகளால், தகைய - தடுத்துப்போர்செய்ய,—(எ - று.) —"மன்னவன் றோளுரந் தொலைந்தபின்...தேர்ம(ன்)னர், ... அமர் செய்தார்" என அடுத்த கவியில் தொடர்ந்து முடியும்.

முதலில் அபிமனது வில்லைத் தன்வில்வலியால் துணித்திட்டன னாதலால், 'மூரிவிற்குமரன்' எனப்பட்டான். வாள் - ஆயுதப் பொதுப்பெயராய் நின்றது. ஜயத்ரதன் - துரியோதனுதியருடன் பிறந்தவளான துச்சளையின் கணவன்; சிந்துதேசத்தரச னாதலால், ஸைந்தவனென்றும் இவனுக்கு ஒரு பெயர் வழங்கும். பி-ம்: வன் செயமுற. (24)

25.—சயத்திரதன் வலிதொலைய, பிறகு கர்ணன் முதலியபலர் அபிமனொருவனை வளைதல்.

மடங்கலைவளைவதோர்சிலம்பிநூல்வலையெனத்
தொடங்கியமன்னவன்றோளுரந்தொலைந்தபின்
திடங்கொடோளங்கர்கோன்முதலியதேர்மன
ரடங்கவந்தபிமனுமொருவனோடமர்செய்தார்.

(இ - ள்.) மடங்கலை - ஆண்சிங்கத்தை, வளைவது - சூழ்ந்து அகப்படுத்துவதான, ஓர் - ஒரு, சிலம்பி நூல் வலை என - சிலந்தி யென்னும் பூச்சியின் நூலினாலாகிய வலைபோல, தொடங்கிய - (அபிமனை வளைந்துகொள்ளத்) தொடங்கின, மன்னவன் - சயத் திரதராசன், தோள் உரம் தொலைந்த பின் - (அவ்வபிமனுயுதங் களால் தன்) தோள்வலிமை அழிந்த பின்பு,—திடம் கொள் - வலிமையைக்கொண்ட, தோள் - தோள்களையுடைய, அங்கர் கோன் முதலிய - அங்கதேசத்தார்க்கு அரசனான கர்ணன் முதலான, தேர் ம(ன்)னர்-இரதாதிபதிகளான அரசர்கள், அடங்க - எல்லோரும், வந்து - (எதிர்த்து) வந்து, அபிமன் ஆம் ஒருவனோடு - அபிமந்யு வாகிய ஒருத்தனுடனே, அமர் செய்தார் - போர் செய்தார்கள்

சயத்திரதனுக்கும் அபிமந்யுவுக்கும் விளைந்த மகாயுத்தத்தில் தேருஞ் சிலையும் அழிப்புண்ட அபிமன், கதாபாணியாய்ப் பாய்ந்து புடைத்துச் சயத்திரதனை முடிபிடித்து இழுத்துத் தேரினின்று கீழ்விழத் தள்ளினு னென்று பாரதவெண்பாவிற் கூறியுள்ளது. மடங்கலை வளைவதோர் சிலம்பி நூல்வலை - **இல்பொருளுவமை;**

சைந்தவனது முயற்சி சிறிதும் பயன்படாமையின், இவ்வுவமை கூறினர். தோளுரம் - புஜபலம். திடம் - த்ருடம் என்னும் வட சொல்லின் திரிபு. பரமசிவனது நெற்றிக்கண் நெருப்புக்கு இரையாகி எரிபட்ட மன்மதனது அங்கம் [உடம்பு] விழுந்த இடத்துக்கு, அக்காரணத்தால் 'அங்கதேசம்' என்று பெயர். (25)

26.—எதிர்த்துவந்தவர்களை அபிமன் முதுகுகொடுத்தோடச் செய்தல்.

வந்தவர்வந்தவர்வாணுதனிலைதொறுஞ்
சிந்துரத்தூளியாற்றிலகமிட்டனனெனக்
கொந்துறுகணைமுனைக்குருதிநீர்மல்கவே
வெந்திறல்வில்லின்வென்கண்டனன்வீரனே.

(இ - ள்.) வந்தவர் வந்தவர்-(அங்ஙனம் தன்னை) மேன்மேல் எதிர்த்துவந்த அரசர்களது, வாள் நுதல் நிலை தொறுஉம் - பிரகாசமான நெற்றியினிடந்தோறும், சிந்துரம் தூளியால் திலகம் இட்டனன் என-சிந்துரச்செம்பொடியால் திலகமிட்டவன்போல், கொந்து உறு கணை முனை - குத்துதல் பொருந்திய அம்புகளின் நுனியால், குருதி நீர் மல்க - இரத்தப்பெருக்கு நிறைய(ச்செய்து), வீரன் - அபிமன், (அவர்களையெல்லாம்), வெம் திறல் வில்லின் - கொடிய வலிமையையுடைய விற்போரால், வென் கண்டனன் - முதுகு கொடுக்கச்செய்தான்; (எ - று.)

வந்தவர் வந்தவர் - அடுக்கு, மிகுதிகாட்டும். சிறந்த இலக்காதலின், நெற்றி கூறப்பட்டது; மேல் 28 - ஆங் கவியில் முகங் கூறுவதுங் காண்க. கொந்து - முதனிலைத்தொழிற்பெயர். 'கொத்து' என்பதன்மெலித்தலெனக் கொண்டால், கொந்துறு - திரட்சிபொருந்திய என்க. பி - ம்: இட்டனரென. (26)

27.—அப்போது சல்லியன்வந்து அபிமனை முன்வளைதல்.

சென்றதேர்யாவையுந்தன்னொருதேரினுல்
வென்றுமாமன்னவன்மகனையுமீதுகொண்
டன்றுபோம்வெஞ்சிலையாண்மைகண்டபிமனை
வன்றிறற்சல்லியன்வந்துமுன்வளையவே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) (இவ்வாறு அபிமன்), சென்ற தேர் யாவைஉம் - (எதிர்த்து) வந்த தேர்களெல்லாவற்றையும், தன் ஒரு தேரினுல் - தனது ஒருதேரினுலே, வென்று-சயித்து, மா மன்னவன் மகனைஉம்- பெரிய துரியோதனராசனது குமாரனுன இலக்கணனையும், மீது கொண்டு - (அத்தேரின்)மேல் வைத்துக்கொண்டு, அன்று - அப்பொழுது, போம்-(மீண்டு) சென்ற, வெம் சிலை ஆண்மை - கொடிய வில்லின்திறத்தை, கண்டு - பார்த்து, வல் திறல் சல்லியன்-கொடிய வலிமையையுடைய சல்லியன், வந்து—,அபிமனை—,முன் வளைய - எதிரில் வளைந்துகொள்ள,—(எ - று.) "விசயன்மதலை...அடைசினுன்" என அடுத்த கவியோடு முடியும்.

அபிமன் தான் அதிரத னாதலால், ஒருவனாகவே தன் தேர் குதிரை சாரதிகளுக்கு அழிவுவராமற்காத்துப் பற்பலதேர்வீரரோடு பொருதன னென்பார், அதனை உபசாரவழக்காகத் தேரின்மே லேற்றி 'சென்றதேர்யாவையுந் தன்னொருதேரினால் வென்று' என் றார். ஆண்மை - பராக்கிரமம். (27)

28.—அபிமன் சல்லியன்மீது அம்புசெலுத்துதல்.

சித்திரபானுவிற்சீறிமுற்செல்லுமம்
மத்திரராசனைவருகநீவருகவென்
றத்திரநாலிரண்டவன்முகத்தடைசினான்
மித்திரர்செல்வமாம்விசயன்மாமதலையே.

(இ - ள்.) சித்திரபானுவின் - (இருளையழிக்கிற) சூரியன் போல, (விளக்கமுடையனாய்), சீறி முன் செல்லும் - கோபித்து எதிரில் வருகிற, அ மத்திர ராசனை - அந்த மத்திரதேசத்தரசனான சல்லியனை, மித்திரர் செல்வம் ஆம் விசயன் மா மதலை - நண்பர்க் குச் செல்வத்தையொத்த அருச்சுனனது சிறந்த குமாரனான அபிமன், நீ வருக வருக என்று - 'நீவருவாயாக வருவாயாக' என்று (ஆதரந்தோன்ற) அழைத்து, அத்திரம் நால் இரண்டு - எட்டு அம்புகளை, அவன் முகத்து அடைசினான் - அச்சல்லியனது முகத் திற்செலுத்தினான்; (எ - று.)

சித்ரபாநு வென்னும் வடமொழிப்பெயர் - ஆச்சரியகரமான கிரணங்களை யுடையவ னென்று பொருள்படும்: இச்சொல், அக் கினியையும் காட்டும். வருகவருக - அடுக்கு, போரிலுள்ள உற்சா கத்தோடு விரைவையுங் காட்டும். நாலிரண்டு - சில என்றமாத்தி ரம்: "நஞ்சீயர்செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு" என்ற விடத்துப்போல. செல்வம்போலச் சமயத்தில் சினேகிதர்களுக்குப் பலவாறு உதவுபவ னென்பார், 'மித்திரர் செல்வமாம்' என்றார்; இது - விசயனுக்காயினும், அவன் மதலைக்காயினும் அடைமொழி யாம். மித்ரர் என்னும் வடசொல்லுக்கு - அளவறிந்துகாப்பவ ரென்று பொருள். (28)

29.—பின்னும் பாகனை அபிமன் வேலினால் மாய்க்க, சல்லியன் கதையுடன் தேரினின்றிழிதல்.

தோளிரண்டினுநடுத்துளைபடப்பாகன்மேன்
மீளவுங்கொடியதோர்வீரவேலேவினான்
நீளவெங்கதையுடனீள்வரையிழிதரும்
யாளிபோற்சல்லியனிரதம்விட்டிழியவே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) தோள் இரண்டினும் - (அச்சல்லியனது) இரண்டு தோள்களிலும், நடு துளை பட - நடுவில் துவாரமுண்டாம்படி, (இரண்டு அம்பு செலுத்தி), மீளவும் - பின்பு, பாகன்மேல் - (அச் சல்லியனது) சாரதியின்மேல், கொடியது ஓர் வீரம் வேல் - கொடு மையையுடையதும் பராக்கிரமத்துக்கு உரியதுமான ஒரு வேலா யுதத்தை, ஏவினான்-(அபிமன்) எறிந்தான்; (அதனால் அப்பாகன் இறக்கவே தேர் செலுத்துபவரில்லாமையால்), சல்லியன்—, நீளம் வெம் கதையுடன்-நீட்சியையுடைய கொடிய கதாயுதத்துடனே, நீள்

வரை இழிதரும் யாளி போல் - உயர்ந்த மலையினின்று இறங்குகிற யாளிபோல, இரதம் விட்டு இழிய - தேரை விட்டு இறங்க,— (எ - று.)—"அவன் வருதலும், அனிலன்மாமதலை மொத்தினன்" என அடுத்த கவியில் முடியும்.

'மீளவும்' என்றதனால், 'அம்புசெலுத்தி' என்பது வருவிக்கப் பட்டது. இனி, இப்பாட்டை அடுத்த கவியோடு தொடர்வதென்னுமல், சல்லியன் நீளவெங்கதையுடன் நீள்வரையிழிதரும் யாளி போல் இரதம்விட்டு இழியுமாறு, (அபிமன்), தோளிரண்டிலும் நடுத் துளைபடப் பாகன்மேல் மீளவும் கொடியதோர் வீரவேலேவினன் என இயைத்துப் பொருள்கூறி முடிக்கவுமாம். (29)

30.—அதுகண்டு வீமன் சல்லியனைத் தரையிற் சாயக் கதைகொண்டு மொத்துதல்.

வன்புடனபிமன்மேன்மற்றவன்வருதலும்
அன்புடன்கண்டுபேரனிலன்மாமதலைபோய்
என்புடன்புயநெரிந்தினமணிமகுடமு
முன்புடன்சாயவேதண்டினன்மொத்தினன்.

(இ - ள்.) (இங்ஙனம் தேரினின்று இறங்கி), அவன் - அச்சல்லியன், வன்புடன் - கொடுமையுடன், அபிமன்மேல்—, வருதலும் - வந்தவளவிலே, பேர் அனிலன் மா மதலை-பெருமையையுடையவாயுவின் சிறந்தகுமாரனான வீமன், கண்டு-(அவன்வருதலைப்) பார்த்து, அன்புடன் - (அபிமனிடத்து) அன்போடு, போய் - (அச்சல்லியனையெதிர்த்துச்)சென்று,—என்புடன் புயம் நெரிந்து - (அவனது) எலும்போடு தோள்களும் நொருங்கி, இனம் மணி மகுடம்உம் சாய - பலவகைப்பட்ட இரத்தினங்களைப் பதித்த (அவனது) கிரீடமும் சரியும்படி, முன்புடன் - வலிமையோடு, தண்டினால் மொத்தினன் - (தனது சத்துருகாதினியென்னும்) கதாயுதத்தால் அடித்தான்; (எ - று.)

முன்பு உடன் மொத்தினன் எனப்பிரித்து, அவனை அபிமன் அடிப்பதற்குமுன்பு விரைவில் தான் அடித்தானென்றலும் ஒன்று. மற்று-அசை; மற்றவன் என எடுத்து, எதிரியான அவனெனினுமாம். வாயுவுக்குப் பெருமை - எல்லாச் சரப்பொருள்களுக்கும் பிராணரூபமாயிருத்தல். (30)

31.—தனக்கு இழுக்கென்று அபிமன்யு அயர்வுறுகையில், இலக்கணகுமாரன் தப்பியோடித் தன்தேரி லேறுதல்.

தலக்கணேசல்லியன்வீழ்தலுந்தந்தையோ
டலக்கணுற்றடியனேனுண்மையென்றுமெனக்
குலக்கணியான்விற்குமரனின்றயர்தலும்
இலக்கணகுமரனுந்தனதுதேரேறினன்.

(இ - ள்.) (இப்படி வீமனால் மொத்தப்பட்டு), சல்லியன்—, தலக்கண்ஏ-தரையிலே, வீழ்தலும்-விழுந்தவளவில், குலக்கு அணி ஆன வில் குமரன்-(பாண்டவரின்) குலத்துக்கு ஓர் அலங்காரமான வில்வித்தையில் வல்ல அபிமன், அலக்கண் உற்று - (தன்னை எதிர்த்துவந்த சல்லியனைத் தான் வெல்லுமுன் வீமன் இடையில் வந்து வென்றதற்கு) வருத்தமடைந்து, தந்தையோடு - (தன்பெரிய)

தந்தையான அவ்வீமனோடு, அடியனேன் ஆண்மை என் ஆம் என - '(நீ இவ்வாறுசெய்தால்) எனது பராக்கிரமம் யாதுபயன்படுவதாம்?' என்றுபேசி, நின்று அயர்தலும் - (சிறிது) சோர்ந்துநின்றவளவில், இலக்கணகுமரனும்—, தனது தேர் ஏறினன் - (இதுவே சமயமென்று அவன்கையினின்று தப்பியோடித்) தனது தேர்மேல் ஏறிக்கொண்டான்; (எ - று.)

அபிமன் சுத்தவீர னாதலால், வீமன் இடையிற்புகுந்து தன் பகைவனை வென்றதற்கு வருந்தினன். தனது வலிமையாற்றல்களாலும் வில்லின்திறத்தாலும், தான் பிறந்த குலத்துக்கு விளக்கமுண்டாக்குபவனென்பார், 'குலக்கணியான விற்குமரன்' என்றார். குலம் கணி எனப் பிரித்து, தன்குலப்பெருமையை மதிப்பவனென்று பொருள் கொள்ளுதலு மொன்று. குலத்துக்கு என்பது - குலக்கு என அத்துச்சாரியை தொக்கது: செய்யுள்விகாரம். (31)

32.—கிருதவன்மா சல்லியனைத் தன்தேரின்மே லேற்றி, இலக்கணகுமாரனோடு அச்சல்லியனையும் உய்யக்கொண்டுபோதல்.

தரையில்வீழ்சல்லியன்றன்னையுந்தனதுபே
ரிரதமேலேற்றியவ்விலக்கணகுமரனுங்
குரிசிலையன்றுயக்கொண்டுபோயினனரோ
கிருதவன்மாவெனுங்கிளர்முடிநிருபனே.

(இ - ள்.) கிருதவன்மா எனும் - கிருதவர்மா வென்கிற, கிளர் முடி நிருபன் - விளங்குகிற கிரீடத்தையுடைய அரசன், தரையில் வீழ் சல்லியன்தன்னை உம் - பூமியில் விழுந்த சல்லியனையும், தனது பேர் இரதமேல் ஏற்றி - தனது பெரிய தேரின்மேல் ஏற்றிக்கொண்டு, அ இலக்கணகுமரன் ஆம் குரிசிலை-அந்த லக்ஷணகுமாரனாகிய வீரனையும், அன்று - அப்பொழுது, உய கொண்டு - தப்பிப்பிழைக்கும்படி (தன்னுடன்கூட்டிக்) கொண்டு, போயினன் - (அப்பால்) சென்றனன்; (எ - று.)—அரோ - ஈற்றசை; செய்யுளினிறுதியில் வருவதுமாத்திர மன்றி, அடியினிறுதியிலும், வாக்கியத்தினிறுதியிலும்வரும் இடைச்சொல்லும் பொருள்தராதாயின் ஈற்றசையெனவே படும்.

கிருதவன்மா-துரியோதனன் கண்ணனைப் படைத்துணையழைக்கப்போனபொழுது, அவ்வெம்பிரானால் அவனுக்குத் துணையாகத் தந்த யாதவசேனைக்குத் தலைவனாக அனுப்பப்பட்டவன், இவன்; யதுகுலத்தில் இருதிகனென்பவனது குமாரன். (32)

33.—தருமபுத்திரன்பக்கத்து அரசர்வென்றதனால் துரியோதனன் தன்சேனையோடு திரும்புதல்.

பொரும்பொருமுனைதொறும் புண்ணியன் சேனையிற்
பெரும்பெருந் தரணிபர் பேறுடன் வேறலால்
அரும்பெருங் கொடியின்மே லரவவே றெழுதினன்
திரும்பினன் பல்வகைச் சேனையுந் தானுமே.

(இ - ள்.) (இவ்வாறு அந்நாளில்), பொரும் பொரும் முனை தொறும்-போர்செய்யுமிடந்தோறும், புண்ணியன் சேனையில் பெரு

பெரு தரணிபர் - நல்வினையையுடைய தருமபுத்திரனது சேனையிலுள்ள பெரியபெரிய அரசர், பேறுடன் வேறலால் - பாக்கியத்தோடு வெல்லுதலால்,—அரு பெரு கொடியின்மேல் அரவம் ஏறு எழுதினன் - அரிய பெரிய துவசத்தின்மேற் பெரும்பாம்பின்வடிவமெழுதப்பெற்றுள்ள துரியோதனன், பல்வகை சேனை உம் தான் உம் திரும்பினன்-பலவகைச்சேனைகளுந் தானுமாக(ப் படைவீட்டுக்கு) மீண்டான் ; (எ - று.)—பலவகைச்சேனையுந் தானுந்திரும்பினன்-திணைவிரவியெண்ணிச் சிறப்பினால் ஆண்பால்முடிபு ஏற்றது ; [நன். பொது. 27.] (33)

வேறு.

34.—சூரியாஸ்தமனவருணனை.

தண்டே கொண்டு வீமனெனுஞ் சண்ட பவனந் தாக்குதலாற், றிண்டே ரென்னப் பட்டதெல்லாஞ் சிதைகின் றதுகண்டிதயம்வெரீஇப், பண்டே யுள்ள வோராழித் தேரோ டொளித்துப் பரிகளுடன், கொண்டே யருக்க னவ்வளவிற் குடபான் முந்நீர் குளித்திட்டான்.

(இ - ள்.) வீமன் எனும்-வீமசேனனென்கிற, சண்ட பவனம் - கொடுங்காற்று, தண்டுஏ கொண்டு - (தனது) கதாயுதத்தினாலே, தாக்குதலால் - மோதியடித்ததனால், திண் தேர் என்னப்பட்டது எல்லாம்-வலிய தேரென்று பெயர்கூறப்பட்ட பொருள் யாவும், சிதைகின்றது-(போர்க்களத்தில்) நொருங்கியழிகின்றதை, கண்டு - பார்த்து,—அருக்கன்-சூரியன், இதயம் வெரீஇ - (தனது தேருக்கும் அபாயமுண்டாகுமோவென்று) மனமஞ்சி, பண்டே உள்ள ஓர் ஆழி தேரோடு - பழமையாகவேயுள்ள ஒற்றைச்சக்கரத்தையுடைய (தனது) தேருடன், பரிகள் உடன் கொண்டு - குதிரைகளையும் கூடக்கொண்டு, ஒளித்து - மறைந்து, அ அளவில் - அச்சமயத்தில், குடபால் முந்நீர் குளித்திட்டான்-மேற்குப்பக்கத்திலுள்ள கடலில் முழுகினான் ; (எ-று.)

சூரியன் மண்டலத்தோடு இயல்பாக மறைந்ததற்கு, தனது தேருக்கும் வீமன்கதை விரைவாகத்தாக்குதலால் சிதைவுண்டாகுமோ வென்று அஞ்சியோடி யொளித்ததாகக் கவி காரணங்கற்பித்துக் கூறினமையால், **ஏதுத்தற்குறிப்பேற்றவணி.** சூரியனதுதேர் சம்வத்ஸரசொரூபமான ஒருசக்கரத்தையுடைய தென்றும், அதில் காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தி, த்ரிஷ்டுப், ஜகதீ என்கிற சந்தங்க ளேழுமே குதிரைகளாகப் பூட்டப்பட்டுள்ளன வென்றும் புராணங் கூறுதலால், 'ஓராழித்தேர்' என்றும், 'பரிகள்' என்றுங் கூறினர். சூரியன் தேர் மற்றையதேர்கள்போலன்றி மிகப்பழையதாகவும், ஒருசக்கரத்தையுடையதாகவும் எளிதில் அபாயமடையத்தக்க நிலைமையிலிருந்த தென்பது தோன்ற, 'பண்டேயுள்ளவோராழித்தேர்' என்றது.

முந்நீர்-மூன்றாகிய தன்மையை யுடையது : மூன்று தன்மைகள்-பூமியைப் படைத்தல் காத்தல் அழித்தல் என்பன; நீரினின்று நிலம் பிறந்ததென வேத மோதுதலால் படைத்தலும், நீரின்றி உலகம் பிழையா தாதலால் காத்தலும், இறுதியில் நீரினால் மூடப்பட்டு

உலக மழிதலால் அழித்தலும் ஆக முத்தொழில்களும் கடலுக்கு உரியனவாயின. வீமனை வாயுவாக உருவகப்படுத்தினர்; இது-வீமனது வலிமை மிகுதியை விளக்கும். சண்டபவநம் - வட மொழித்தொடர். என்னப்பட்டது எல்லாம் - ஒருமைப்பன்மை மயக்கம். வெரீஇ - சொல்லிசையளபெடை. பண்டு-ஏழாம்வேற்றுமையிடப் பொருளுணரநின்று பழமைகுறிக்கும் இடைச்சொல்.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் பன்னிரண்டுகவிகள் - பெரும்பாலும் மூன்றுஞ்சீரும் ஆறுஞ்சீரும் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (34)

35.—பாண்டவர் பக்கத்தார் யாவரும் படைவீட்டில் இரவு இனிது கண் துயிலல்.

சென்றநிருபர்புறநாணத்திண்டோளபிமன்முதலான
வென்றிநிருபர்குழூஉக்கொண்டுவிறலார்சேனைவேந்தருடன்
மன்றல்கமழுந்துழாய்மவுலிமாலுந்தாமும்பாடிமனை
யொன்றியினிதிற்கண்டுயின்றாருரனுந்திறலுமுடையோரே.

(இ - ள்.) உரன்உம் - பலத்தையும், திறல்உம் - பராக்கிரமத்தையும், உடையோர் - உடையவர்களான, திண் தோள் அபிமன் முதல் ஆன-வலிய தோள்களையுடைய அபிமந்யு முதலிய, வென்றி நிருபர் - வெற்றியையுடைய அரசர்கள், சென்ற நிருபர் புறம் நாண-(எதிர்த்து) வந்த பகையரசர்கள் புறங்கொடுத்து வெட்கமடைய,— குழூஉகொண்டு - தாம் ஒருதிரளாகக்கூடி, விறல் ஆர் சேனை வேந்தருடன் - வெற்றி மிக்க சேனைகளோடும் மற்றையரசர்களோடும், மன்றல் கமழும் துழாய் மவுலி மால்உம் தாம்உம் - வாசனைவீசுகிற திருத்துழாய்மாலையைச்சூடிய திருமுடியையுடைய கண்ணபிரானும் தாங்களுமாக, பாடி மனை ஒன்றி - படைவீட்டை யடைந்து, (அங்கு), இனிதின் கண்துயின்றார் - மகிழ்ச்சியோடு கண்மூடித் தூங்கினார்கள்; (எ - று.)

சென்ற நிருபர் புறம் நாண - துரியோதனனுடன் சென்ற அரசர்கள் மற்றொருபுறத்தில் நாணமடைய என்றுங் கொள்ளலாம். மௌலி என்னும் வடசொல், மவுலி யெனப் போலிபெற்றது. (35)

36.—துரியோதனன் பாதிராத்திரியளவும் உடன்சேர்ந்தாரோடு இலக்கணகுமாரன் அபிமனிடம் அகப்பட்ட தாழ்வுக்கிரங்கி உளம் நோதல்

பானாளளவுந்துயிலாமற்பாந்தட்டுவசன்றனக்குயிர்நண்
பானார்பலரும்வாள்வேந்தரமைச்சர்பலருமிளையோருஞ்
சேனாபதியுஞ்சூழவிருந்தபிமன்கையிற்றிருமைந்தன்
தானாடமரிலகப்பட்டதாழ்வுக்கிரங்கியுளநொந்தார்.

(இ - ள்.) பாந்தள் துவசன் தனக்கு-பாம்புக்கொடியையுடைய துரியோதனனுக்கு, உயிர் நண்பு ஆனார் - பிராணசினேகிதரான, வாள் வேந்தர் பலர்உம் - ஆயுதப்பயிற்சியில்வல்ல அரசர்கள் அநேகரும், அமைச்சர் பலர்உம் - (அவனது) மந்திரிமார் எல்லோரும், இளையோர்உம் - (அவன்) தம்பிமார்களும், சேனாபதிஉம் - சேனைத் தலைவனான துரோணனும், (ஆகிய எல்லோரும்), பால் நாள்

அளவுஉம் துயிலாமல் - பாதிராத்திரிவரையிலுந் தூக்கங்கொள்ளாமல், சூழ இருந்து - (அவனைச்) சுற்றிலு மிருந்துகொண்டு,— அபிமன் கையில்-அபிமனது கையிலே, திரு மைந்தன் - லக்ஷ்மணகுமாரன், தான்—, ஆடு அமரில்-செய்த போரில், அகப்பட்ட - அகப்பட்டுக்கொண்ட, தாழ்வுக்கு-அவமானத்துக்கு, இரங்கி - பச்சாத்தாபப்பட்டு, உளம்நொந்தார் - மனம் வருந்தினார்கள் ; (எ-று.)

பால்-பகுதி, பாதி. நாள்-சிறப்பாய், இங்கே, இரவைக்குறித்தது. உயிர்நண்பு-உயிர்போன்ற நண்பு ; உவமைத்தொகை. திருமைந்தன்-அழகிய மைந்தன் ; இது - இலக்கணகுமாரனென்பதற்கு ஒருபரியாயநாமமாக நிற்கும். யாவரும் உளம் நொந்தார் - உளமென்னுஞ் சினைப்பெயராகிய அஃறிணையெழுவாய் யாவரும் என்னும் உயர்திணையெழுவாயின் பயனிலையாகிய நொந்தார் என்னும் உயர்திணைவினையைக் கொண்டுமுடிதலால் வழுவாகி, தொடர்புண்டாயிருத்தல்பற்றிச் சார்த்திமுடித்தலால், வழுவமைதி யாயிற்று. 'நொந்தான்' என்ற பாடத்துக்கு, 'பாந்தட்டுவசன்'-எழுவாய். (36)

37.—துரியோதனன் துரோணனைநோக்கி,

'நாளைத்தருமனை யகப்படுத்தினல்தான் செற்றந்தீரும்'எனல்.

தனுவேதத்தின்கேள்விக்குஞ்சதுர்வேதத்தின்வேள்விக்குஞ்
செனுவேயுன்னையல்லதினிச்செய்துமுடிக்கவல்லவர்யார்
மனுவேயனையவுதிட்டிரனைநாளைச்சமரில்மற்றிதற்கோ
ரனுவேயென்னவகப்படுத்தினல்லாற்செற்றமருதென்றான்.

(இ - ள்.) (அப்பொழுது துரியோதனன், துரோணனை நோக்கி), 'தனுவேதத்தின் கேள்விக்குஉம் - வில்வித்தையின் உபதேசத்துக்கும், சதுர் வேதத்தின் வேள்விக்குஉம் - நான்குவேதங்களிற் கூறியபடி செய்யும் யாகங்களுக்கும், செனுவே - இடமாகவுள்ளவனே ! (இப்பொழுது நான் சொல்லுந் தொழிலை), உன்னை அல்லது இனி செய்து முடிக்க வல்லவர் யார் - உன்னை யல்லாமல் செய்துமுடிக்க வல்லமையுடையவர் வேறு யாவர் உளர் ? [எவருமில்லை]; (அத்தொழில் யாதெனில்,—), நாளை சமரில் - நாளைக்கு நிகழும் போரில், இதற்கு ஓர் அனுவே என்ன-'இலக்கணனை அபிமன் அகப்படுத்திய) இவ்வவமானத்துக்கு ஓர் இனமாக, மனுவே அனைய உதிட்டிரனை மனு சக்கரவர்த்தியையொத்த தருமபுத்திரனை, அகப்படுத்தின் அல்லால்-(உயிரோடு) பிடித்திட்டாலல்லாமல், செற்றம் அருது - (என்னுடைய) இப்பகைமை தணியாது', என்றான்—;

மனு - நல்லொழுக்கத்திலேயே தான் ஒழுகுதலோடு எல்லோரையும் அங்ஙனம் நடப்பித்து எல்லாநற்குணங்களோடுங் கூடிப் பிரசித்திபெற்றவனாதலால், தருமனுக்கு உவமை கூறப்பட்டான். ஏ-உயர்வுசிறப்பு. சதுர்வேதம்-இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன. செனு - ஜநுஷ் என்னும் வடசொல்லின் திரிபு ; முதல் அகரம் எகரமானது, மோனைப்பொருத்தத்திற்காக ; ஏகாரம் மிக்கது-விளியுருபு. மற்று - அசை; வினைமாற்றுமாம். அநு என்பது-

பின்பு என்னும் பொருள்தரும் வடமொழியிடைச்சொல்: அநுவாதம், அநுகமநம், அநுசுருதி முதலியவற்றிற் காண்க; இது-இங்கே, முன் நடந்ததை யொப்பப் பின்நடப்பது என்ற பொருளை உணர்த்தி, பழிக்குப்பழி வாங்குதலென்ற கருத்தை விளக்கும். ஏ-தேற்றம். செற்றம்-பகைமை நெடுங்காலம் நிகழ்வது : வைரம் ; செறு - பகுதி.

38.—இதுவும், மேற்கவியும் குளகம் - துரோணன்கூறும் உத்தரம்.

பெற்றோன்றனினுஞ்சதமடங்குவலியோன்வீமன்பின்னிற்கப்
பொற்றோள்விசயன்முன்னிற்கப்பொரும்போர்முனையிற்போருதவி
யற்றோர்போலவில்வலியாலறத்தோன்றன்னையகப்படுத்தன்
மற்றோர்பிறப்பிற்றெரியாதிப்பிறப்பின்முடிக்கமாட்டேமால்.

(இ - ள்.) 'பெற்றோன் தனின் உம் - (தன்னைப்) பெற்றதந்தையான வாயுவினும், சதம் மடங்கு - நூறுபங்கு அதிகமான, வலியோன்-வலிமையுடையனான, வீமன்—, பின் நிற்க - பின்னே (பாதுகாத்து) நிற்கவும், பொன் தோள் விசயன் - அழகியதோள்களையுடைய அருச்சுனன், முன் நிற்க-முன்னே (பாதுகாத்து) நிற்கவும், போர் பொரும் முனையில்-போர்செய்யுமிடத்தில் [யுத்தகளத்தில்], அறத்தோன் தன்னை - தருமங்களை யுடையவனான யுதிட்டிரனை, போர் உதவி அற்றோர் போல-போரில் உதவிசெய்பவரையுடையரல்லாதவரை (அகப்படுத்துதல்)போல, வில் வலியால் அகப்படுத்தல் - வில்லின் வலிமையால் (உயிரோடுபற்றி) வசப்படுத்தலை, மற்று ஓர் பிறப்பில் தெரியாது - மற்றொருசன்மத்தில் (எம்மால் நிறைவேற்ற முடியுமோ முடியாதோ அது) தெரியாது: இ பிறப்பில்—, முடிக்க மாட்டேம் - நிறைவேற்ற வல்லமை யில்லோம் ; (எ - று.)—ஆல் - ஈற்றசை ; ஆதலாலெனினுமாம்.

வாயுவின் வலிமை பிரசித்தம். "பிதுச்சதகுணம் புத்ரஃ" என்றவாறு அவ்வாயுவினும் மிகப்பலமடங்கு வலியவன் வீமனென்க. (38)

39. செவ்வாய்வைக்கும்வலம்புரிக்கைத்திருமால்செம்பொற்றேரூர
வெவ்வாய்வாளிவில்விசயன்மெய்ம்மைத்தருமனணிநின்ற
அவ்வாயிமைப்போதணுகாமற்காப்பார்சிலருண்டாமாகில்
இவ்வாய்நாளையகப்படுத்தித்தரலாமென்றுனெழின்மறையோன்.

(இ-ள்.) செவ் வாய் - சிவந்த திருவாய்மலரிலே, வைக்கும் - வைத்து ஊதப்படுகிற, வலம்புரி - (பாஞ்சசந்யமென்னும்) வலம்புரிச்சங்கை யேந்திய, கை-திருக்கையையுடைய, திருமால்-திருமகள் கொழுநனான கண்ணபிரான், செம் பொன் தேர் - சிவந்த பொன்னினாலாகிய தேரை, ஊர-(பாகனாய்நின்று) செலுத்த, வெவ் வாய் வாளி வில் விசயன் - கொடிய நுனியையுடைய அம்புகளையும் வில்லையுமுடைய அருச்சுனன், மெய்ம்மை தருமன் அணி நின்ற அ வாய்-சத்தியத்தையுடைய தருமபுத்திரன் அணிவகுப்பில் நின்ற அவ்விடத்தில், இமை போது - ஒருமாத்திரைப்பொழுதாவது, அணுகாமல்-சமீபித்துவரவொட்டாதபடி, காப்பார்-(அவனைத்) தடுப்பவர், சிலர்-(யாராயினும்) சிலர், உண்டு ஆகில்-உள்ளாரானால்,—இ வாய்-

இவ்விடத்து [போர்க்களத்தில்], நாளை - நாளைக்கு, அகப்படுத்திதரல் ஆம் - (தருமபுத்திரனை நான்) பிடித்துக்கொடுத்தல் கூடும்,' என்றான்-என்று (துரியோதனனைநோக்கிச் சபையிற்) கூறினான்: எழில் மறையோன்-அழகிய வேதம்வல்ல துரோணன்; (எ-று.)— 'ஆம்' இரண்டில், முதலது - அசை.

அருச்சுனனது வெற்றிக்கு முக்கியகாரணம் கண்ணன் தேர் செலுத்துதலாதலாலும், அக்கண்ணபிரான் தான் சங்கநாதஞ் செய்து அவ்வொலிமாத்திரத்தால் பகைவர்சேனைகள் நடுங்கியொடுங்கும்படி செய்தலாலும், 'செவ்வாய் வைக்கும் வலம்புரிக்கைத் திருமால் தேரூர' என்றான்: தருவேனென்று திண்ணமாகக்கூறாமல், ஒருகால் அகப்படுத்தல்தொழில் நடக்கலாமென்ற ஐயந்தோன்ற, 'தரலாம்' என்றானென்னலாம். தருமன்-தருமபுத்திரனென்றதன் நாமைகதேசம்; தருமத்தினின்று தவறாதவனென யுதிஷ்டிரனுக்குக் காரணக்குறியுமாம்: 'தந்தையே மைந்தனாகிறான்' என்னும் நூல்வழக்குப்பற்றி, தருமபுத்திரனை 'தருமன்' என்றாரென்றலும் உண்டு. காத்தல் - தடுத்தல். (39)

40.—திரிகர்த்தராசன்முதலான சஞ்சத்தகவரசர் தருமனுக்கு உதவாதபடி அருச்சுனனை வளைப்பதாக வஞ்சினங் கூறுதல்.

திகத்தராசன்முதலாகச்சஞ்சத்தகரிற்சிலமன்னர்
உகத்திற்கடையிற்கனல்போல்வாரொருவர்க்கொருவருரைமுந்திச்
சகத்துக்கொருவனெனும்விசயன்றம்முற்குதவிசெய்யாமல் [னார்.
மகத்திற்சனிபோல்வளைக்குவம்யாமெனவஞ்சினமும்பலசொன்

(இ-ள்.) (அச்சமயத்தில்), திகத்த ராசன் முதல் ஆக - திரிகர்த்ததேசத்து அரசன் முதலாக, சஞ்சத்தகரில் - சம்சப்தகரிற் சேர்ந்த, உகத்தின் கடையில் கனல் போல்வார்-கல்பாந்தகாலத்தில் (உலகத்தையழிக்கிற) அக்கினிபோலக் கொடியவர்களான, சில மன்னர்-சில அரசர்கள், ஒருவர்க்கு ஒருவர் உரை முந்தி-ஒருத்தரினுமொருத்தர் வார்த்தை முற்பட்டு, 'சகத்துக்கு-உலகத்தில், ஒருவன் எனும்-ஒப்பற்றவனென்று சொல்லப்படுகிற, விசயன்-அருச்சுனன், தம் முற்கு-தமையனான தருமனுக்கு, உதவி செய்யாமல்-(போரில்) துணைசெய்யாதபடி, யாம்—,மகத்தில் சனிபோல் - மகநட்சத்திரத்துச் சனிபோல, வளைக்குவம் - (நாளைக்கு அவ்வருச்சுனனைத்தடுத்துச்) சூழ்ந்துகொள்வோம்,' என-என்றுசொல்லி, (அதற்கு ஏற்ப), பல வஞ்சினம்உம் சொன்னார் - பலசபதங்களையுஞ் சொன்னார்கள்; (எ-று.)—அவற்றை மேல் மூன்றுகவிகளிற் காண்க.

த்ரிகர்த்தராஜன் - வடசொல்தொடர்; இவனுக்கு ஸுசர்மா வென்பதுபெயர். த்ரிகர்த்தமென்பது-லாஹூர் ஜில்லாக்கருகிலிருப்பதான ஜலந்தர் (Jalandur) என்று வழங்கும் ஊர்என்பர். ஸம்சப்தகராவார் - போர்தொடங்குமுன்னமே பலவகைச்சபதஞ்செய்து பின் அவ்வாறே நடத்திக்காட்டும் வீரர்கள்; இவர்கள் த்ரிகர்த்தராஜபுத்திரர்களும் அவர்களை யனுசரித்தவர்களுமாகி ஒன்பது

கோடித் தொகையினராவரென்று வியாசபாரதம் கூறும். இப் பெயர் நன்றாகச்சபதஞ்செய்பவ ரென்று பொருள்படும். இவர்கள் இவ்வாறே பன்னிரண்டு பதின்மூன்றாநாட்போர்களில் அருச்சுனனை அறைகூவித் தனியே அழைத்துக்கொண்டுபோய் வெகுவாகப் பெரும்போர் செய்வர். சில - குறிப்புப்பெயரெச்சம். உகம் - யுக மென்னும் வடசொல்லின் விகாரம்; அது - காலத்தின் ஒருபேரெல் லைக்குப் பெயர்: அது-இலக்கணையாய், பலயுகங்கள் கூடிய கற்பத்தை யுணர்த்தும்; கற்பம்-பிரமனது தினம். ஒவ்வொருபிரமகற்பத்தின் பகல்முடிவிலும் தீ எழுந்து உலகங்களை எரித்தழிக்கு மென்பது, புராணக்கொள்கை; அது பிரளயகாலாக்கினியெனப்படும். ஒரு வர்க்கு - நான்காம்வேற்றுமை, எல்லைப்பொருளில்வந்தது. ஜகத், மகம், சநி-வடசொற்கள்.

மகத்துச்சனி பெருந்தீங்குதருதற்கு உவமையாதலை "மகத்திற் புக்கதோர்சனியெனக்கானாய் மைந்தனே மணியே மணவாளா, வகத் திற்பெண்டுகள் நானொன்று சொன்னா லவ்ழையேற்போ குருடா வெனத்தரியேன், முகத்திற்கண்ணிழந் தெங்ஙனம்வாழ்கேன் முக் கணா முறையோ மறையோதீ, யுகைக்குந் தண்கடலோ தம்வந் துலவுமொற்றியூரெனுமூருறைவானே" என்ற சுந்தரமூர்த்திநாய னார் தேவாரத்திலும், "அடையார்தமக்கு, மகத்திற்சனியன்னசந் திரவாணன்" என்ற தஞ்சைவாணன் கோவையிலும் காண்க. மக நட்சத்திரத்திற் பிறந்தவனுக்குச் சனிதசையில் மரணந்தப்பா தென்று 'நக்ஷத்ரபலம்' என்னுஞ்சோதிடநூலால் தெரிகிறது. அன் றியும், சனி மகத்திற்சஞ்சரிக்கும்பலன் சிலதேசங்களுக்கும் சில மனிதர்களுக்கும் யானைகளுக்கும் பீடை யென்று நூல்கள் கூறும். மகம் - இருபத்தேழு நட்சத்திரங்களுள், பத்தாவது நட்சத்திரம். இது - இலக்கணையாய், சிங்கராசியையுங் குறிக்கும்: எங்ஙன மெனின்,—இரண்டேகால்நட்சத்திரம் ஒருராசி யென்னும் வரை யறைப்படி மகமும் பூரமும் உத்தரத்தில் முதற்பாதமும் சிங்கராசி யாதல் காண்க. சிங்கம் சனிக்குப் பகைவீடாதலால், மகத்திற் சனி வருத்துதற்கு உவமை கூறப்பட்ட தென்றலும் ஒன்று; சிங்கம் சனிக்குப் பகைவீடாதலைச் சோதிடநூலால் அறிக. மேலும், சிங்க லக்கினத்துக்குச் சனி பாபகிருகமுமாவன். இன்னும் மகச்சனியன் கொடுமைகளைச் சோதிடம்வல்லார்வாய்க் கேட்டுணர்க. சனி - நவக்கிரகங்களுள் ஏழாமவன்; சூரியனது மகன். இனி, உத்தர நட்சத்திரத்திற் பிறந்தவன், அருச்சுனன்; அது, அவனது பற்குன னென்ற பெயராலும், "**பங்குனிநிறைந்ததிங்க** ளாதபன்பயின்ற நாளில், வெங்குனிவரிவில்வாகைவிசயனும் பிறந்தா னென்றிப், பங்குனனென்னுநாமம் பகுதியாற்படைத்திட்டானே" என்ற சம்ப வச்சருக்கத்துச் செய்யுளாலும், வடநூலாலும் தெரிகிறது. அவனை அந்நட்சத்திரத்து முதற்பாதத்தில் [சிங்கராசியில்] பிறந்தவ னெனக்கொண்டால் அவனுக்குமகத்துச்சனி ஜந்மச்சனியும், மற் றையபாதங்களில் [கன்னியாராசியில்] பிறந்தவனெனக் கொண் டால் பன்னிரண்டாமிடத்துச் சனியுமாகும்; இரண்டும் பெருந் தீங்குவிளைப்பன. பன்னிரண்டாமிடம் ஜந்மஸ்தானம் இரண்டா மிடம் இம்மூன்றிலும் சனிநிற்றல், ஏழரைநாட்சனியென்று கொடு

மையிற் பிரசித்திபெற்றது. இந்தச்சனி ஸ்தாநப்ரஷ்டம் தந்க்ஷயம் மரணம் முதலிய பெருந்தீங்குகளைச் செய்யுமென்பது, நூல்துணிபு. இங்கு, வேறிடத்தில் தனியே அழைத்துப்போய்ச்சூழ்ந்து மிகவருத்துதற்கு ஏற்ற உவமையாம். (40)

41.—இதுமுதல் மூன்று கவிகள் - சஞ்சத்தகர்கள் கூறும் வஞ்சினங்கள்.

அருளேவடிவுகொண்டனையோனருகங்கமரிலணுகாமல்
உருளேரிரதத்தருச்சுனனையொருநாண்முழுதுந்தகைந்திலமேன்
மருளேகொண்டுகுடிவருந்தமனுநூல்குன்றிவழக்கழியப்
பொருளேவெஃகுமரசரைப்போற்புகுவேம்யாமுநரகென்றார்.

(இ-ள்.) 'அமரில்-போர்க்களத்தில், அங்கு-எதிர்ப்பக்கத்திலே, அருள்ஏ வடிவுகொண்டு அனையோன் அருகு - கருணையே ஒருபுருடவடிவங்கொண்டாற்போன்ற தருமபுத்திரனது சமீபத்தில், அணுகாமல்-சேரமுடியாதபடி, உருள் ஏர் இரதத்து அருச்சுனனை - சக்கரங்கள் (வலிய) அழகிய தேரையுடைய அருச்சுனனை, ஒரு நாள் முழுதுஉம் தகைந்திலம்ஏல்-நாளையொருதினம் முழுவதிலும் (நாங்கள்) தடுத்திடோமாயின்,—குடி மருள் கொண்டு வருந்த-(தம் நாட்டுச்) சனங்கள் (இன்னது செய்வதென்று அறியாமல்) திகைப்பையே கொண்டு வருந்தவும், மனு நூல் வழக்கு குன்றி அழிய - மனுதர்ம சாஸ்திரத்தின் நீதி குறைபட்டு அழியவும், பொருளே வெஃகும் - (குடிகளின்) செல்வத்தையே (கவர) விரும்புகிற, அரசரை போல்-கொடுங்கோன்மன்னர்களைப்போல, யாம்உம் நரகு புகுவேம் - நாங்களும் நரகத்திற்சேர்வோம்,' என்றார்-என்று (திரிகர்த்தன் முதலியோர்) சபதஞ்செய்தார்கள்; (எ-று.)

தருமச்செய்கைகளுக்கும் மறுமைநற்கதிக்குங் காரணமான கருணையை இயல்பில் மிகுதியாகவுடையனென்பார், 'அருளே வடிவு கொண்டனையோன்' என்றார். பகைவரே இங்ஙனம் தருமனைச் சிறப்பித்துக் கூறினரென்றது கொண்டு, அவனது நற்குணவமைதியை நன்கு உணர்க. (41)

42. மறனிற்சிறந்தபுயவலியால்வரைபோன்றனிலன்மைந்தனெனப்
புறனிற்பானைத்தம்முனிடைப்போகாவண்ணந்தகைந்திலமேல்
அறனிற்கொண்டதன்மனையாளமளித்தலத்தினழுதிரங்கப்
பிறனிற்றேடும்பெரும்பாவிபெறும்பேறெமக்குமபேறென்றார்.

(இ - ள்.) 'அனிலன் மைந்தன் என-வாயுவின் குமாரனென்று சொல்லப்பட்டு, புறன் நிற்பானை-(எப்பொழுதும் தருமன்) பின்னே (பாதுகாவலாய்) நிற்பவனான வீமனை, தம்முனிடை போகா வண்ணம்-(அங்ஙனம் துணைசெய்தற்குத்) தமையனான யுதிட்டிரனிடத்துச் செல்லவொட்டாதபடி, மறனில் சிறந்த புயம் வலியால் - பராக்கிரமத்தோடுகூடிச் சிறப்புற்ற (எங்கள்) தோள்களின் வலிமையால், வரைபோன்று-மலை (குறுக்கிட்டு வழிதடுத்தல்)போல, தகைந்திலம் ஏல் - தடுத்திடோமாயின்,—அறனின் கொண்ட - தருமமாக மணஞ்செய்துகொள்ளப்பட்ட, தன் மனையாள் - தனக்குஉரிய

மனைவி, அமளி தலத்தின் - படுக்கையிடத்திலே, அழுது இரங்க - புலம்பி வருந்தும்படி, (அவளைவிட்டு), பிறன் இல் தேடும் - அயலான்மனையாளைத் தேடிச்செல்கிற, பெருபாவி-பெரிய தீவினையுடையவன், பெறும்-(மறுமையிற்) பெறுகிற, பேறு-நரககதி, எமக்குஉம் பேறு-எங்களுக்கும் பெறுங்கதியாகுக,' என்றூர் - என்றும் சபதஞ் செய்தார்கள் ; (எ - று.)

பலமிருந்தும் பராக்கிரமமில்லையாயின் சிறப்புறுதாதலால், 'மறனிற்சிறந்த புயவலி' எனப்பட்டது. 'மறனிற்சிறந்த புயவலியால் வரைபோன்று' என்பதனை 'நிற்பான்' என்பதனோடு கூட்டி, வீமனுக்கு விசேடணமாக்குதலும் ஒன்று. கீழ் ''வீமன் பின் நிற்க'' என்று துரோணன் கூறினதற்கேற்ப, 'புறனிற்பான்' என்றூர். வீமனைக்குறித்துச் சபதஞ்செய்ததும், அத்துரோணன்வார்த்தையை யனுசரித்தே.

'அறனிற்கொண்ட தன்மனையா ளமளித்தலத்தி னழுதிரங்கப் பிறனிற்றேடும் பெரும்பாவி' என்றது, தன்மனையாள் வீட்டிலிருந்து வருந்தவிட்டு அயலான்மனையாளிடத்து விரும்பிச்செல்வதன் குற்றங்களை நன்குவிளக்கும் பொருட்டேயன்றி, தன்மனையாளழுதிரங்காவிடின் பிறன்மனையாளிடஞ் செல்லலாமென்று கூறியதன்றெனக் கொள்க ; இந்த மகாபாவி பெறும்பயனை ''வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து பிறர் பொருள் தாரமென்றிவற்றை, நம்பினா ரிறந்தால் நமன்தமர் பற்றி யெற்றிவைத் தெரியெழுகின்ற, செம்பினா லியன்ற பாவையைப் பாவீ தழுவென மொழிவதற்கஞ்சி, நம்பனே வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்து ளெந்தாய்'' என்னுந் திருமங்கையாழ்வார் பாசுரங்கொண்டும், ''காதலாள் கரிந்துயைக் கடியவே கனிந்து நன்றி, யேதிலான்தாரம் நம்பி யெளிதெனவிறந்தபாவத், தூ துலை யுருகவெந்த வொள்ளழற் செப்புப் பாவை, ஆதகா தென்னப் புல்லி யலறுமால் யானை வேந்தே'' என்னுஞ் சிந்தாமணிச்செய்யுளாலும், ''தங்கிருட்போதில் தலைச்சென்றயல்மனை, யங்குமகிழ்ந்தாளவ ளிவள்காணெனச், செங்கனலேயெனவெம்பியசெம்பினிற், பொங்கனற்பாவைகள் புல்லப்புணர்ப்பார்'' என்னுஞ் சூளாமணிச்செய்யுளாலும் அறிக. (42)

43\. கன்றூல்விளவின்கனியுதிர்த்தோன்கடவுந்திண்டேரவனுகை
வன்றூட்டடக்கைமாருதியேயாகவமரின்மறித்திலமேல்
என்றூநாளைமுனிபோரினெனுநன்றியினுஞ்செய்நன்றி [றூர்.
கொன்றூர்தமக்குக்குருகுலத்தார்கோவேயாமுங்கூட்டென்

(இ-ள்.) 'குரு குலத்தார் கோவே-குருவமிசத்து அரசர்களுக்குத்தலைவனான துரியோதனனே! கன்றூல்-ஒருகன்றைக்கொண்டு, விளவின்கனி-விளாமரத்தின்பழத்தை, உதிர்த்தோன் - உதிரச்செய்தவனான கிருஷ்ணன், கடவும் - செலுத்துகிற, திண் தேரவன் ஆக-வலிய தேரையுடைய அருச்சுனனேயானாலும், வல் தாள் - கொடிய போர்முயற்சியையும், தடகை - பெரியகைகளையு முடைய, மாருதி ஏ ஆக-வீமசேனனேயானாலும், (இவர்கள்), அமரின்-(எதிரில்வந்து) அமைந்தால், என்று ஆம் நாளை-(இவ்விரவு கழிந்து) சூரிய னுதிக்

கும் நாளையதினத்தில், முனி போரின்-கோபித்துச் செய்யும் யுத்தத்தில், மறித்திலம்ஏல்-(தருமனருகிற் சேராதபடி அவர்களைத்) தடுத்திடோமாயின்,—எ நன்றியின்உம்-எல்லாத்தருமங்களுள்ளும், செய்நன்றி - (தமக்குப் பிறர்) செய்த உபகாரத்தை, கொன்றார்தமக்கு - அழித்தபாவிகளுக்கு, யாம்உம் கூட்டு - நாங்களும் இனமாவோம்', என்றார்-என்றும் (அவர்கள் சபதஞ்) செய்தார்கள்; (எ - று.)

பசுவதை, சிசுவதை, பிராமணவதை முதலிய பெரும்பாதகங்களைச்செய்தார்க்காயினும் அப்பாவத்தினின்று நீங்கத்தக்க பிராயச்சித்தங்கள் உண்டு; செய்ந்நன்றிமறந்தவனுக்கோ எவ்விதபரிகாரமுமில்லை என்பது, நூல் துணிபு. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்ற திருக்குறளையும் காண்க. இனி, தாள்தடக்கை- முழங்காலளவும் நீண்ட பெரிய கை [ஆஜாநுபாகு] எனினுமாம்; இது-உத்தம விலக்கணம். அன்றி, வலிய கால்களையும் பெரியகைகளையு முடைய என்றலுமொன்று. 'சூரியனுதிக்கிறநாளை' என்றது, உலகவழக்கு; ஆனதுபற்றி, 'என்று.ஆம் நாளை' என்றார். எல்-ஒளி; அதனையுடையது என்று எனச் சூரியனுக்குக் காரணப்பெயர். 'மறித்திலமே யென்றுனை' எனப் பாடங்கொண்டு, 'மறித்திலமே யென்றால்' என்று பதம் பிரித்து உரைப்பது தகுதியாம். நன்றிகொல்லுதல் - நன்றியை மறத்தலும், கைம்மாறு செய்யாமையும், தீங்கு செய்தலும். குரு என்பவன் - சந்திரகுலத்தில் பிரசித்திபெற்ற ஓரரசன்; அவனால், அக்குலம் குருகுல மென்றும், அந்நாடு குருநாடு என்றும் குருக்ஷேத்திர மென்றும், அக்குலத்திற்பிறந்தவர் கௌரவரென்றுங் கூறப்படுதல் காண்க.

கன்றால் விளவின்கனியுதிர்த்த கதை:—கம்சனுலேவப்பட்ட கபித்தாசுரன், விளாமரத்தின்வடிவமாய், கண்ணன் தன்கீழ்வரும்பொழுது மேல்விழுந்து கொல்வதாக எண்ணி வந்துநிற்க, அதனையறிந்து, கிருஷ்ணபகவான், அவ்வாறே தன்னைமுட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின்வடிவங்கொண்டு தான் மேய்க்குங் கன்றுகளோடு கலந்திருந்த வத்ஸாசுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளாமரத்தின்மேலெறிய, இருவரும் இறந்து தமது அசுரவடிவத்துடனே விழுந்திட்டனரென்பதாம். இதனால், பகைகொண்டு பகையையழித்த கண்ணனது விசித்திர சக்தி விளங்கும். (43)

44.—வஞ்சினமுரைத்த வேந்தர்க்குச் சிறப்புச்செய்து ஆசிரியனையும் விடுத்துத் துரியோதனன் தன்கோயிலடைதல்.

இவ்வாறுரைத்தவேந்தர்தமக்கெய்துஞ்சிறப்புச்செய்தகற்றிக்
கைவார்சாபமுனிவரன்றன்கழற்கால்வணங்கியேகுகெனச்
செவ்வாய்மலர்ந்துமானத்தாற்றிறலால்வாழ்வாற்செகத்தொருவர்
ஒவ்வாவரசன்றன்கோயிலடைந்தான்விபுதர்க்கொப்பானே.

(இ - ள்.) மானத்தால்-பெருமையினாலும், திறலால் - வலிமையினாலும், வாழ்வால் - செல்வவாழ்க்கையாலும், செகத்து ஒருவர்

ஒவ்வா-உலகத்தில் ஒருத்தரும் (தனக்கு) ஒப்பாகப்பெருத, அரசன்-ராஜராஜனும், விபுதர்க்கு ஒப்பான் - (இன்பவாழ்க்கையில்) தேவர்களுக்கும் உவமையாகுபவனும் ஆகிய துரியோதனன்,—இ ஆறு உரைத்த-இங்ஙனம் (தனித்தனி) கூறின, வேந்தர்தமக்கு - அரசர்களுக்கு, எய்தும்-(செய்தற்குப்) பொருந்திய, சிறப்பு செய்து-நல்ல சன்மானங்களைச் செய்து, அகற்றி - (அவர்களை) அனுப்பிவிட்டு,—கை வார் சாபம்-கையில் நீண்ட வில்லையுடைய, முனிவரன்தன் - பிராமண சிரேஷ்டனான துரோணனது, கழல் கால் - வீரக்கழலணிந்த திருவடிகளை, வணங்கி-நமஸ்கரித்து, ஏகுக என செவ்வாய் மலர்ந்து-(நீ) செல்வாயாக என்று சிவந்த (தன்) வாயைத் திறந்து கூறிவிட்டு, தன் கோயில் அடைந்தான் - தனது சிறந்தவிடத்தைச் சேர்ந்தான்; (எ - று.)

"இடையிருவகையோரல்லது நாடிற், படைவகைபெறுஅ ரென்மனுர் புலவர்" என்ற தொல்காப்பியச்சூத்திரத்து, 'நாடின் என்பதனுல், ஒருசார் அந்தணரும் படைக்குஉரிய ரென்பது கொள்க; அவர் இயமதங்கியாரும், துரோணனும், கிருபனும் முதலாயினுரெனக் கொள்க' என்றும், 'படைப்பகுதி யென்பன-வேலும் வாளும் வில்லும் முதலாயின' என்றுங் கூறியதனுல், 'முனிவரன்தன் கழற்கால்' என்றது பொருந்தும். அன்றியும், துரோணனை வீடுமன் கௌரவபாண்டவர்க்கு வில்லாசிரியனுக்கியபொழுது, அவனுக்கு அரசர்க்குஉரிய அங்கங்களையெல்லாம் கொடுத்ததாக ஆதிபருவத்திற்கூறியுள்ளது. செவ்வாய்மலர்ந்து - காரியம் காரணத்தாற் கூறப்பட்டது; உபசாரவழக்கு. பி - ம்: வெவ்வேறுரைத்த வேந்தர்க்கு வேண்டுஞ்சிறப்பு. (44)

45.—மறுநாட் சூரியோதய வருணனை.

கங்குற் சிலைநூன் முனிவனுடன் கழற்கா லரசன் பணித்தமை கேட், டங்குத் தரியா திவன்கரத்தே யருள்கூர் நெஞ்ச னகப்படு மென், றிங்குத் துயில்வார் யாவரையு, மிருபா ளையத்தி னிடந்தோறுஞ், சங்கக் குரலாற் றுயிலெழுப்பித் தபனன் குணபாற் றுன் சேர்ந்தான்.

(இ - ள்.) சிலை நூல் முனிவனுடன் - வில்வித்தையில்வல்ல துரோணனுடனே, கழல் கால் அரசன் - வீரக்கழலையணிந்த பாதத்தையுடைய துரியோதனன், பணித்தமை - (தருமனைப் பிடித்துத் தரும்படி) சொன்ன கடுஞ்சொல்லை, கேட்டு—, கங்குல்-இராத்திரி, 'இவன் கரத்தே-இத்துரோணன் கையிலே, அருள் கூர் நெஞ்சன் - கருணைமிகுந்த மனத்தையுடைய தருமன், அகப்படும் - அகப்பட்டுக் கொள்வானே,' என்று-என்றுஎண்ணி இரங்கி, அங்கு தரியாது - அவ்விடத்தில் நில்லாமல் நீங்கிச்சென்றது; (அதுசெல்ல), இங்கு-இப்பால், தபனன்-சூரியன்,—இரு பாளையத்தின் இடம் தோறும் - இருதிறத்துப் படைவீடுகளி னிடங்களிலெல்லாம், துயில்வார் யாவரைஉம் - தூங்குகிறவர்களெல்லோரையும், சங்கம் குரலால் துயில் எழுப்பி - சங்கவாத்தியத்தின் தொனியால் தூக்கம்விழிக்கச்செய்துகொண்டு, தான்—, குண பால் சேர்ந்தான்-கிழக்குத்திக்கில் அடைந்தான் [உதித்தான்]; (எ - று.)

இயல்பாக இரவுகழிந்ததைத் துரியோதனன்வார்த்தைகேட்டு அங்கு நிற்க மனம்பொருமற் சென்றதாகவும், சூரிய னுதிக்கையில் சங்கநாதத்தால் யாவருந் துயிலொழிதலைச் சூரியன் துயிலெழுப்பி வந்ததாகவும் வருணித்தலை, தற்குறிப்பேற்றவணி. 'அருள்கூர்நெஞ்சனகப்படுமென்று' என்பதை மத்திமதீபமாக மேல்வாக்கியத்துக்குங் கூட்டலாம். முதலடியில், முனிவன் அரசனுடன் பணித்தமையென உருபுமாற்றி, துரோணன் துரியோதனனுடன் (நாளை அகப்படுத்தித்தருவதாகக்) கூறினமை என்றும் உரைக்கலாம். நெஞ்சன் அகப்படும் - செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது. சூரியோதயகாலத்தில் எங்குஞ் சங்கூதுதல் இயல்பாதலை, "புள்ளுஞ்சிலம்பினகாண் புள்ளரையன் கோயில், வெள்ளைவிளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ, பிள்ளாயெழுந்திராய்" என்ற திருப்பாவையாலும் அறிக. **(45)**

பதினோராம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

பன்னிரண்டாம் போர்ச்சருக்கம்.

1.—கடவுள் வாழ்த்து.

பொய்யாத தவமுனிபின் போயருளித் தாடகைதன்
மெய்யாவ நிகரென்ன வெஞ்சரத்தா லழுத்தியபின்
மையாழி முகில்வண்ணன் வாங்கியன பூங்கமலக்
கையாலு மொருசாபங் காலாலு மொருசாபம்.

(இ - ள்.) மை ஆழி முகில் வண்ணன் - மையும்கடலும்மேகமும்போன்ற கருநிறத்தையுடைய இராமபிரான், பொய்யாத-பொய்யாகாத, தவம் - தவவொழுக்கத்தையுடைய, முனி பின் - விசுவாமித்திரமுனிவனது பின்னே, போய் - சென்று, அருளி - கருணைகொண்டு, தாடகைதன் மெய் - தாடகையின் உடம்பு, ஆவம் நிகர் என்ன - அம்பறுத்தூணிக்கு ஒப்பென்னும்படி, வெம் சரத்தால் - கொடிய அம்புகளால், அழுத்திய பின் - பதித்தபின்பு,—(அப்பிரானது), பூ கமலம் கையால்-அழகிய தாமரைமலர்போன்ற திருக்கையினால், ஒரு சாபம்உம் - ஒரு வில்லும், காலால் - திருவடியினால், ஒரு சாபம்உம் - ஒரு சபிப்பும், வாங்கியன - வாங்கப்பட்டன [முறையே, வளைக்கவும் நீக்கவும் பட்டன]; (எ - று.)

'மெய்ஆவம் நிகரென்ன' என்றதற்கு - அம்புகள் மிகுதியாக உடம்பினுள் பொருந்த என்று கருத்து. வாங்குதல் என்பது -சிலேடையால், வளைதலும் நீங்கலுமாகிய இருபொருளை உணர்த்தின. சாபம்-வடசொல்திரிபு: இது இவ்விருபொருளு முடையதாதலை "சாபமே சபித்தல் வில்லாம்." என்னும் நிகண்டினாலு மறிக. சாபம் என்ற ஒருசொல்தானே ஓரடியில் வெவ்வேறு பொருளில் வந்தது, மடக்கு என்னுஞ் சொல்லணி.

வசிஷ்டமகாமுனிவனது தவவலிமையை ஒருகால் கண்டு அவ்வாற்றலே மெய்ம்மையானதென்றும் மற்றைய ஆற்றல்களெல்லாம் பொய்ம்மையானதென்றுந் துணிந்து அரசாட்சியைவிட்டுநாற்றிசையுஞ்சென்று பற்பல இடையூறுகளைக்கடந்து நெடுங்காலந்தவம்

புரிந்து முடிவில் தான்முன்புகருதிய பிரமவிருடிப் பட்டத்தைப் பெற்ற பெருஞ்சிறப்புடைய ஞதலால், கௌசிகன் 'பொய்யாத தவ முனி' எனப்பட்டான். பயிர்செழித்தற்பொருட்டுக் களைபறித்தல் போலச் சிஷ்டபரிபாலநத்திற்காகத் துஷ்டநிக்கிரகஞ்செய்தல் கருணையின் காரியமே யாதலால், 'அருளி' எனப்பட்டது.

தாடகை - மலைகளில் சஞ்சரிப்பவள்; இவள்-சுகேது என்னும் யக்ஷனது மகள்; சுந்தனென்பவனது மனைவி; ஆயிரம்யானை வலிமைகொண்டவள். கணவன் அகஸ்தியமகா முனியின் கோபத்தீக்கு இலக்காய்ச் சாம்பரானதை யறிந்த இவள், தன்புத்திரர்களாகிய சுபாகுமாரீசர்களுடனே அம்முனிவனை எதிர்த்துச் சென்ற பொழுது, அவரிட்டசாபத்தால் தன்மக்களோடு இராக்கதத்தன்மை யடைந்தனள். பின்பு முனிவர்களது யாகாதிகளைக்கெடுக்கிற இவர்களை அழித்துத் தன்வேள்வியைக் காக்கும்பொருட்டுவிசுவாமித்திர முனிவன் தசரதசக்கரவர்த்தியினிடம் அனுமதிபெற்று இளம்பிராய முடைய இராமலக்குமணரை யழைத்துக் கொண்டுபோனபொழுது, அம்முனிவனுச்சிரமத்துக்குச் செல்லும் வழியிடையிலே வந்து எதிர்த்த **தாடகையை** ஸ்ரீராமன் முனிவன் கட்டளைப்படி பெண்ணென்று பாராமற் **பொருது கொன்றருளி**னன்.

கையா லொருசாபம் வாங்கியது:—ஜனகமகாராசன் பரமசிவனுற் கொடுக்கப்பட்டதொரு பெரிய வலிய வில்லையெடுத்து வளைத்தவற்கே தன்மகள் சீதையைக் கலியாணஞ் செய்துகொடுப்ப தென்று கந்யாசுல்கம் வைத்திருக்க, வேள்விமுடித்த விசுவாமித்திரனுடன் மிதிலைக்குச் சென்ற ஸ்ரீராமன் அவ்வில்லை வளைத்துச் சானகியை மணஞ்செய்துகொண்டனனென்பதாம்.

காலாலும் ஒருசாபம் வாங்கியது:—அகலிகை விருத்தாந்தம்; நான்காம் போர்ச்சருக்கம் முதற்பாடலுரையிற்காண்க.

இதுமுதற் பதினைந்து கவிகள் - பெரும்பாலும் நாற்சீர்களும் காய்ச்சீர்களாகிய அளவடி நான்கு கொண்ட **கலிவிருத்தங்கள்**. (46)

2.—ஒற்றரால் துரியோதனன் பாசறையில் நிகழ்ந்தவையறிந்து யுதிட்டிரன் உக்கிரமாகப் பொரக் கருதுதல்.

அற்றராபதிகருதியாசானேடுரைத்தவெலாம்
ஒற்றராலக்கணத்தேயுணர்ந்தமுரசக்கொடியோன்
மற்றராவணைதுறந்தமாயனுக்கும்விசயனுக்குஞ்
சொற்றராபதநெருங்கத்தொடைத்தும்பைபுனைந்தானே.

(இ - ள்.) அல் - (முந்தினநாளின்) இராத்திரியில், தராபதி - பூமிக்கு அரசனான துரியோதனன், கருதி - ஆலோசித்து, ஆசானேடு - துரோணாசாரியனுடனே, உரைத்த எலாம் - சொன்ன வார்த்தைகளையெல்லாம், ஒற்றரால் - (தனது) வேவுகாரர்களால், அ கணத்தே - அந்த க்ஷணத்திலேயே, உணர்ந்த - அறிந்த, முரசம் கொடியோன் - பேரிகையின்வடிவத்தை யெழுதிய துவசத்தை யுடைய தருமபுத்திரன், மற்று - பின்பு, அரா அணை துறந்த மாயனுக்கும் - ஆதிசேஷனாகிய சயநத்தை விட்டுவந்த திருமாலாகிய கண்ணபிரானுக்கும், விசயனுக்கும்-அருச்சுனனுக்கும், சொற்று -

(அச்செய்தியைச்) சொல்லி,—அராபதம் நெருங்க - வண்டுகள் நெருங்கிமொய்க்க, தும்பை தொடை புனைந்தான் - (போருக்குரிய) தும்பைப்பூமாலையைச் சூடினான்; (எ-று.)—உக்கிரமாகப் போர் செய்ய நிச்சயித்தான் என்பதாம்.

ஆங்காங்கு நடப்பவற்றை ஒற்றியறிந்துவருவதால், ஒற்றர் என்று பெயர்; ஒற்றுதல் - அடுத்து நின்று உண்மையைக் கிரகித்தல். இவர் - தூதரினும் வேறுபட்டவர்; வடமொழியில், 'சாரர்' எனப்படுவர். அராபதம் - அறுபதம் என்பதன் விகாரம்போலும். "பனிக்கடலுள் பள்ளிகோளைப் பழகவிட் டோடிவந்து, என் மனக் கடலுள் வாழவல்ல மாயமணாளநம்பீ" என்றாற்போல, 'அராவணை துறந்த மாயன்' என்றார்; இது - உபசாரம். "படஞ்செய் நாகணைப் பள்ளி நீங்கினன்" என்றார் கம்பரும். 'அராத்துறந்த' என்றது 'அராவணை துறந்த' என்றதனால், அவ்வாதிசேஷன் இங்குப் பலராமனாய் அவதரித்துள்ள தன்மை தொனிக்கும். ஆசான்—ஆசார்யன் என்னும் வடசொல்லின் விகாரம். (47)

3.—பாண்டவசேனை மண்டலவியூகமாக வகுக்கப்படுதல்.

கருங்களவின்கனிவண்ணன்கனைகழற்கால்வேந்தரொடும்
பெருங்களஞ்சென்றெய்தியபின்பேணார்கள்வெருக்கொள்ள
இருங்களிறுதேர்பரியாளிருமருங்கும்புடைசூழ
வருங்களிகொள்வரூதினியைமண்டலமாவகுத்தானே.

(இ - ள்.) கரு களவின் கனி வண்ணன் - கரிய களாப்பழம் போன்ற திருமேனிநிறத்தையுடைய கண்ணன்,—கனை கழல் கால் வேந்தரொடுஉம் - ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த பாதத்தை யுடைய அரசர்களுடனே, பெருகளம் சென்று எய்திய பின்-பெரிய போர்க்களத்தைப் போய் அடைந்த பின்பு, இரு - பெரிய, களிறு - யானைகளும், தேர் - தேர்களும், பரி - குதிரைகளும், ஆள் - காலாள்களும், (ஆகிய சதுரங்கமும்), இரு மருங்குஉம் - இரண்டு பக்கங்களிலும், புடைசூழ - திரண்டு சூழ்ந்துநிற்க, வரும் - வருகிற, களி கொள் - (போரில்) உற்சாகத்தைக்கொண்ட, வரூதினியை - (பாண்டவ) சேனையை, பேணார்கள் வெரு கொள்ள - பகைவர்கள் (கண்டு) அச்சங்கொள்ளும்படி, மண்டலம் ஆ வகுத்தான் - மண்டலமென்னும் வியூகமாக அணிவகுத்தான்; (எ - று.)

மண்டலம்-வியூகத்தின் வகை நான்கனுள் ஒன்றென்பர். நாற்புறத்தும் வட்டமாகச் சேனையை நிறுத்துவது மண்டல மென்றும், அது ஸர்வதோபத்ரம் துர்ஜயம் என இரண்டுவகைப்படு மென்றும் காமந்தக மென்னும் வட நூல் கூறும். களா - ஓர்செடி. புடைசூழ என்பதில், 'புடை' என்னும்பகுதியே புடைத்து என வினையெச்சப்பொருள்பட்டது. (48)

4.—அந்த வியூகத்தின் முன்புறம் முதலியவற்றில் அருச்சுனன் முதலோர் நிறுத்தப்பட்டமை.

பின்னிறுத்திமாருதியைப்பேரணியிற்பலவகையா
மன்னிறுத்தியிருபாலுமருத்துவர்மைந்தரைநிறுத்தி

மின்னிறுத்துநெடுவாளி விசயனையுங்குமரனையு
முன்னிறுத்திநடுநின்றான்முரசநிறுத்தியகொடியோன்.

(இ - ள்.) முரசம் - பேரிகையின் வடிவத்தை, நிறுத்திய-எழுதிப்பதித்த, கொடியோன் - துவசத்தையுடைய தருமன்,—மாருதியை - வீமனை, பின் நிறுத்தி - (தனது) பின்புறத்திலே நிற்கச் செய்து, பேர் அணியில் - பெரிய அணிவகுப்பிலே, (ஆங்காங்கு), பல வகை ஆம் மன் நிறுத்தி - பலவகைப்பட்ட அரசர்களை நிற்கச் செய்து, இரு பால்உம் - இரண்டு பக்கங்களிலும், மருத்துவர் மைந்தரை நிறுத்தி -அசுவிநீதேவர்களின் குமாரர்களான நகுலசகதேவர்களை நிற்கச்செய்து, மின் நிறுத்தும் - ஒளியை(த்தன்னிடம்) நிலைநிறுத்திய [நீங்காமற்கொண்ட], நெடு வாளி - நீண்ட அம்புகளையுடைய, விசயனை உம் குமரனை உம் - அருச்சுனனையும் (அவன்) மகனை அபிமனையும், முன் நிறுத்தி—, நடு நின்றான்—(தான்) நடுவில் நின்றான் ; (எ-று.) (49)

5.—துரியோதனன்பக்கத்துச்சேனை கருடவியூகமாக வகுக்கப்படுதல்.

இப்பான்மற்றிவர்நிற்பவிரவுரைத்தமொழிப்படியே
தப்பாமற்றிகத்தகுலத்தலைவனுஞ்சஞ்சத்தகருந்
துப்பார்வெஞ்சிலைத்தடக்கைத்துரோணன்முதலனைவோரும்
அப்பால்வந்தணிகருடவியூகம்வகுத்தணிந்தாரே.

(இ - ள்.) இ பால் - இவ்விடத்து, இவர் - இவர்கள், நிற்ப-(இவ்வாறு) நிற்க, அ பால் - எதிர்ப்பக்கத்தில், இரவு உரைத்த மொழி படிஏ - இராத்திரி சொன்ன வார்த்தையின்படியே, தப்பாமல் - தவறாமல், திகத்தகுலம் தலைவன்உம் - திரிகர்த்ததேசத்து அரசர்கூட்டத்து குத் தலைவனை சுசர்மாவும், சஞ்சத்தகர்உம் - ஸம்சப்தகர்களும், க்துப்புஆர் - வலிமைநிறைந்த, வெம்சிலை-கொடிய வில்லை யேந்திய, தட கை - பெரியகைகளையுடைய, துரோணன் முதல் அனைவோர்உம் - துரோணன் முதலிய எல்லாவீரர்களும், வந்து—, அணி கருட வியூகம் வகுத்து அணிந்தார் - சேனையை அழகிய கருடவியூகமாக அணிவகுத்துநின்றார்கள் ; (எ - று.)

கருட வியூகம் - கருடன்வடிவமாகச் செய்யும் படைவகுப்பு ; இதுவும் கீழ்ச்சருக்கத்தில் கூறிய சகடவியூகமும், போகமென்னும் வியூகத்தின் பேதங்களிற் சேர்ந்தன. முதனூலிலும் கருடவியூகம் வகுத்ததாகவே யுள்ளது. மற்று - அசை ; வினைமாற்றுமாம். பி-ர்; மகரவியூகம், (50)

6.—திரிகர்த்தபதி முதலியோர் அருச்சுனனை யறைகூவிப்பொருதல்.

காரணிபோற்பொருப்பணிபோற்காற்றணிபோற்களிற்றணியுந்
தேரணியும்பரியணியுந் திரிகத்தகுலபதியும்
நாரணகோபாலரெனுநராதிபரும்வாள்விசயன்
காரணமாவறைகூவிக்கடுங்கொடுங்கார்முகம்வளைத்தார்.

(இ - ள்.) கார் அணி போல் - மேகங்களின் வரிசை போன்ற, களிறு அணிஉம் - யானைகளின் வரிசையும், பொருப்பு அணிபோல்-மலைகளின் வரிசைபோன்ற, தேர் அணிஉம்-தேர்களின் வரிசையும்,

காற்று அணிபோல்-காற்றின் வரிசைபோன்ற, பரி அணிஉம் - குதிரைகளின்வரிசையும், திரிகத்த குல பதிஉம் - திரிகர்த்தர் கூட்டத்து அரசனும், நாரண கோபாலர் எனும் - நாராயணகோபாலரென்கிற, நர அதிபர்உம்-அரசர்களும், வாள் விசயன் காரணம் ஆ - ஆயுதப் பயிற்சியில்வல்ல அருச்சுனன் விஷயமாக, அறைகூவி-போர்செய்ய அழைத்துக்கொண்டு, கடு கொடு கார்முகம் வளைத்தார் - மிகக் கொடுமையான (தம்) வில்லை வளைத்து வந்தார்கள் ; (எ - று.)

விசயன்காரணமா அறைகூவி - அருச்சுனனைத் தம்முடன் போருக்கு வலிய அழைத்து என்றபடி. 'காரணிபோற்பொருப்பணி போற் காற்றணிபோல்' என்ற உபமானங்கள், முறையே 'களிற் றணியுந் தேரணியும் பரியணியும்' என்ற உபமேயங்களோடு இயை தலால், **முறைநிரனிறைப்பொருள்கோள்.** அணிகளும், பதியும், அதிபரும் வளைத்தார் - திணைவிரவி யெண்ணிச் சிறப்பினால் உயர்திணை முடிபுஏற்றது ; [நன். பொது. 27.] நாராயண கோபாலர்-கண்ணனுக்குப் பதினாறாயிரம் கோபஸ்திரீகளிடம் பிறந்தவர்கள். கீழ்த் துரியோதனன் கண்ணனைப் படைத்துணையழைக்கப் போனபோது அவனால் துரியோதனனுக்குத் துணையாகக் கொடுக்கப்பட்டனர் இவரென அறிக. நாராயணன் - திருமால், கோபாலர் - இடைச்சாதியார் ; இவ்விருவர்சம்பந்தமு முள்ளதனால், நாராயணகோபாலரென்று இவர்க்குப் பெயர். நாரணன்—நாராயணன் : சிருஷ்டிப் பொருள்களுக்கெல்லாம் இருப்பிடமானவ னென்றும், பிரளயப் பெருங்கடலை இருப்பிடமாகவுடையவனென்றும் பொருள்படும். கோபாலர் - பசுக்களைப் காப்பவர். (51)

7.—தருமனைக் காக்க ஏற்பாடுசெய்து விடைபெற்றுக்கொண்டு சென்று அருச்சுனன் அறைகூவினர்மேல் அம்புமழை பொழிதல்.

ஆர்த்துவருமவர்நிலைகண்டரசனைநீரிமைப்பொழுது
காத்திடுமினெனநின்றகாவலரோடுரைசெய்து
கோத்தருமன்பணித்ததற்பின்கோதண்டமுறவாங்கிப்
பார்த்தனுமன்றவரெதிர்போய்ப்பலவாளிமழைபொழிந்தான்.

(இ - ள்.) ஆர்த்து வரும் - (இப்படி போருக்கு அழைத்து) ஆரவாரித்துவருகிற, அவர் - அவர்களது, நிலை - உறுதிநிலையை, கண்டு-பார்த்து, பார்த்தன்உம் - அருச்சுனனும், அரசனை நீர் இமை பொழுது காத்திடுமின் என - 'யுதிட்டிரராசனை நீங்கள் ஒருமாத்திரைப்போது பாதுகாத்திருங்கள்' என்று, நின்ற காவலரோடு உரைசெய்து - (அங்கு) நின்ற (தன்பக்கத்து) அரசர்களுடனே சொல்லி,—கோ தருமன் பணித்ததன்பின்-அத்தருமராசன் கட்டளையிட்டபின், கோதண்டம் உற வாங்கி - (காண்டீவமென்னும் தன்) வில்லை நன்றாகவளைத்து, அன்று-அப்பொழுது, அவர் எதிர்போய் - அவர்களெதிரிற்சென்று, பல வாளி மழை - அநேக அம்புமழையை, பொழிந்தான்— ; (எ - று.)

வீமன் விராடன் துருபதன் பாண்டியன் நகுலசகதேவர் திட்டத்துய்மன் திட்டகேது முதலியசோமகர் சிருஞ்சயர் கடோற்கசன் என்னும் இவர்களின் வசத்தில் தருமபுத்திரனை ஒப்பித்து அருச்சு

னன் சென்றனென்று பெருந்தேவனார் பாரதத்தால் தெரிகிறது. துருபதராசபுத்திரனும் அதிரதனுமாகிய ஸத்தியஜித்து என்பவனைத் தருமனைக் காக்குமாறு அருச்சுனன் சொல்லிச் சென்றதாக வியாசபாரதம் கூறும். கோதண்டமென்னும் இராமன் வில்லின் பெயர், சிறப்பினால் அருச்சுனன்வில்லைக் குறித்தது; இனி, இச்சிறப்புப்பெயர், பொதுப்பெயராக, வில்லென்றமாத்திரமாகவும் வழங்கியதென்னலாம். (52)

8.—அருச்சுனன் சஞ்சத்தகரோடு கடும்போர் செய்தல்.

தூளியேயண்டமுறத்தூர்த்துமுதலகல்விசும்பை
வாளியேதூர்க்கும்வகைமலைவாங்குசிலைவாங்கி
யாளியேறனையானுமவனிபருங்கவந்தமுடன்
கூளியேநடமாடக்கொடுஞ்சமரம்விளைக்குங்கால்.

இதுவும் மேற்கவியும் - குளகம்.

(இ - ள்) ஆளிஏறு அனையான்உம் - ஆண்சிங்கத்தை யொத்த அருச்சுனனும், அவனிபர்உம்-(திரிகர்த்தன் முதலிய) அரசர்களும், —முதல்-முதலில், தூளிஏ - (தமது வாகனங்களால் மேலெழுப்பப்பட்ட) புழுதியே, அண்டம் உற - உலகவுருண்டை முழுவதும் செல்லும்படி, தூர்த்து - நிறைத்து, (அதன் பின்பு), அகல் விசும்பை - பரந்த ஆகாயத்தை, வாளிஏ - (தமது) அம்புகளே, தூர்க்கும் வகை - நிறைக்கும்படி, மலை வாங்கு சிலை வாங்கி - மலையையொத்த (தம்தம்) வில்லை வளைத்து, கவந்தமுடன் கூளிஏ நடம் ஆட - தலையற்ற உடற்குறைகளும் பேய்களுமே கூத்தாடும்படி, கொடு சமரம் விளைக்கும் கால்-(ஒருவரோடொருவர்) கொடிய போரைச் செய்யும்பொழுது,-(எ-று.)—"சிலையின் குருவந்தான்" என அடுத்த கவியோடு முடியும்.

மலை யென்பதற்கு - (யாவருங்கண்டு) மலையத்தக்கதென்று காரணமுரைப்பர்; மலைதல் - அஞ்சுதல். இங்கே, மலையென்றது, பரமசிவனுக்கு வில்லான மகாமேருவை. பேய்கள் - அங்குப் பிணந்தின்ன வந்தவை. கூளி - பெருங்கழுகுமாம். இவை கூத்தாடுதற்குக் காரணம், அங்கே தமக்கு மிகுதியாக இரை கிடைத்தலால். **அதிசயோக்தியலங்காரம்.** (53)

9.—துரோணன் சயத்திரதன்முதலானோர்பலர்சூழத் தேர்மேல் வருதல்.

கொடித்தலைவேற்சயத்திரதன்சவுபலன்குண்டலன்முதலா
முடித்தலைவாளடனிருபர்முப்பதினாயிரர்சூழ
விடித்தலைமாமுரசியம்பவிபதுரகப்படைசூழக்
கொடித்தலைமான்றடந்தேரான்குனிசிலையின்குருவந்தான்.

(இ - ள்.) கொடிது அலை வேல் - கொடியதாய்ச் சுழல்கிற வேலாயுதத்தையுடைய, சயத்திரதன் - சயத்திரதனும், சவுபலன் - சகுனியும், குண்டலன் - குண்டலனும், முதல் ஆ-முதலாக, முடி தலை - கிரீடமணிந்த தலையையும், வாள் - ஆயுதங்களையும், அடல் - வலிமையையுமுடைய, நிருபர் முப்பதினாயிரர்-முப்பதினாயிரம் அரசர்கள், சூழ - சூழ்ந்து வரவும், இடி தலை - இடிபோன்ற முழக்கத்தைத் தம்மிடத்திலுடைய, மா முரசு - பெரிய பேரிகைகள், இயம்ப

ஒலிக்கவும், இப துரகம் படை சூழ - யானை குதிரைகளின் சேனைகள் சுற்றிலும் வரவும், குனி சிலையின் குரு - வளைந்த வில்லின் ஆசாரியனான துரோணன், கொடி தலை மான் தட தேரான் - துவசத்தை மேலுடையதும் குதிரைகள் பூட்டியதுமான பெரிய தேரிலேறியவனாய், வந்தான் - (தருமனை எதிர்க்க) வந்தான் ; (எ - று.)

கொடிது+அலை = கொடித்தலை; சிறுபான்மை உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தில் தகரவொற்று இரட்டிற்று : எருத்துமாடு என்றாற்போல. இனி, கொடிதலை வேல் என எடுத்து, காக்கைகள் வட்டமிடும் நுனியையுடைய வேலென்றலும் ஒன்று ; "பாற்றினஞ் சுழலும் வைவேல்" என்றாற்போல : காக்கைகள், அவ்வேலி லொட்டிய தசையையும் அவ்வேலாற் கொல்லப்படும் பிராணிகளையும் தின்ன விரும்பி வந்தவை. இனி, கொடியினிடத்து வேலின் வடிவத்தையுடைய எனவும் பொருள்படும். இனி, 'தடித்தலைவேல்' என்று பாடங்கொண்டு, தடி தலை வேல் எனப் பிரித்து - தசை பொருந்திய நுனியையுடைய வேலென்றாவது, தடித்து அலைவேல் எனப் பிரித்து - மின்னல் போல் அசைந்து விளங்குகிற வேலென்றாவது பொருள் கொள்ளுதல் பொருந்தும். தடி - வில் என்பாருமுளர். ஸௌபலன் - வடசொல் : சுபலனது மகனென்று பொருள்: தத்திதாந்தநாமம். ஸுபலன் - நல்ல வலிமையுடையான் ; இவன் - காந்தாரதேசத்து அரசன் : திருதராட்டிரன் மனைவிக்கும், சகுனிக்குந் தந்தை. பி - ம்: இடித்தலைமாமுகிலனையவிபதுரகம் புடைசூழ. (54)

10. அப்போது திருஷ்டத்யும்நன் துரோணனுக்கு எதிரிற்செல்லுதல்.

வந்தகுருக்குருகுலமாமன்னுடன்போர்புரிவதன்முன்
பந்தமுறப்பாஞ்சாலர் பற்பதினாயிரர்சூழ
முந்தவயப்பணைமுழங்கமுழங்கொலிநீர்கொதிப்பதுபோல்
அந்தமுனிக்கெதிர்நடந்தானைவர்சேனாபதியே.

(இ - ள்) வந்த குரு - (அவ்வாறுவந்த) துரோணன், குரு குலம் மா மன்னுடன் - குருகுலத்துச் சிறந்த அரசனான தருமனுடன், போர் புரிவதன் முன் - போர்செய்வதன்முன்னே, ஐவர் சேனாபதி - பாண்டவர்சேனைத் தலைவனான திட்டத்துய்மன்,-பந்தம் உற - நெருக்கம் மிக, பாஞ்சாலர் பல்பதினாயிரர் - அநேகம் பதினாயிரக்கணக்காகவுள்ள பாஞ்சாலதேசத்துவீரர்கள், சூழ - சூழ்ந்துவரவும்,—முழங்கு ஒலி நீர் கொதிப்பது போல் - ஆரவாரிக்கிற ஓசையையுடைய நீரையுடைய கடல் பொங்குவதுபோல(ச் சினம்பொங்க),—வயம் பணை-வெற்றிக்கு அறிகுறியான வாத்தியங்கள், முந்த-முன்னே, முழங்க-மிக ஒலிக்கவும், அந்த முனிக்கு எதிர் நடந்தான்-அந்தத் துரோணனெதிரிற்சென்றான் ; (எ - று.)

குருக்குருகுலமெனச் சந்தவின்பநோக்கி யிரட்டித்தது. பி - ம்: ஒலிப்பதுபோல். (55)

11.—திருஷ்டத்யும்நன் பலரை அம்பெய்து மாய்த்தல்.

இருவர்பெருஞ்சேனையுமுற்றெதிரெதிராயுதமேந்தி
ஒருவரொருவரைவேறற்கொண்ணுதவமருடற்றச்

செருவிலரியேறனையான்றிட்டத்துய்மனும்வெகுண்டு
பொருசிலைவெங்கணைபொழிந்தான்போர்வேந்தர்பலர்மடிந்தார்

(இ - ள்.) இருவர் பெரு சேனை உம் - (இந்த) இருதிறத்தாரது பெரிய சேனைகளும், எதிர் எதிர் உற்று-ஒன்றற்கொன்று எதிராகப் பொருந்தி, ஆயுதம் ஏந்தி-ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு, ஒருவர் ஒருவரை வேறற்கு ஒண்ணாத அமர் - ஒருதிறத்தார் மற்றொருதிறத்தாரைச் சயித்தற்கு முடியாத போரை, உடற்ற-உக்கிரமாகச்செய்ய, (அப்பொழுது), செருவில் அரி ஏறு அனையான் - போரில் ஆண்சிங்கத்தை யொத்தவனான, திட்டத்துய்மனும்—, வெகுண்டு-கோபித்து, பொரு சிலை-போருக்குரிய வில்லினின்று, வெம் கணை-கொடிய அம்புகளை, பொழிந்தான்-சொரிந்தான்; (அதனால்), போர் வேந்தர் பலர் மடிந்தார் - போர்செய்கிற பகையரசர் அநேகர் இறந்தார்கள்; (எ - று.)—பி-ம்: ஆயுதமெடுத்தங்கு. (56)

12.—திருஷ்டத்யும்நனுலழிந்த சேனை துரோணனை யடைதல்.

துன்முகனைப்புறங்கண்டுதுன்மருடன்முனைசாய்த்து
கன்முகமாங்காந்தாரர்கலிங்கர்கவுசலர்நிடதர்
புன்முகராயிளைத்தோடப்பொருதழித்தான்பொருதழிந்த
மன்முகவெம்பெருஞ்சேனைமறையவன்பாலடைந்தனவே.

(இ - ள்.) (திட்டத்துய்மன்), — துன்முகனை - துர்முகனென்னும் அரசனை, புறம் கண்டு - முதுகுகொடுக்கச்செய்தும்,—துன்மருடன் - துர்மர்ஷணனென்பவனது, முனை - போரை, சாய்த்து - ஒழித்தும்,—கல் முகம் ஆம் - கல்லின்தன்மையுடைய, காந்தாரர் - காந்தாரதேசத்துவீரரும், கலிங்கர் - கலிங்கதேசத்துவீரரும், கவுசலர் - கோசலதேசத்துவீரரும், நிடதர் - நிஷததேசத்து வீரரும், புல் முகர் ஆய் - வாடிய முகமுடையவர்களாய், இளைத்து ஓட - மெலிந்து தோற்று ஓடும்படியும், பொருது - போர்செய்து, அழித்தான் - சிதைத்தான்; பொருது அழிந்த - (அங்ஙனம்) போர்செய்து சிதைந்த, மன் முகம் வெம் பெரு சேனை - மிகுதியைத்தன்னிடத்திலுடைய கொடிய பெரிய சேனைகள், மறையவன்பால் அடைந்தன - துரோணாசாரியனிடம் சேர்ந்தன; (எ-று.)

துர்முகன் என்பதற்கு - கொடிய முகமுடையவனென்றும், துர்மர்ஷணன் என்பதற்கு - (பகைவரால்) பொறுக்கவொண்ணாதவனென்றும் பொருள். இவ்விருவரும் துரியோதனன்தம்பியர். துன்மருடன் - மகாரதவீரரில் ஒருவன். கீழ் அணிவகுப்புச்சருக்கத்தில் இவனை மகாரதனாகவும், மற்றைத் துரியோதனன் தம்பிமார்களை அர்த்தரதராகவும் பிரித்து வகுத்துக் கூறியுள்ளமை காண்க. கல்-வலிமைக்கு உவமை. கல்முகமாங் காந்தாரர் - கல்நெஞ்சரான காந்தாரருமாம்; என்றது, அந்நாட்டரசனான சகுனி கொடுமனத்தவனாதலால். கோஸலம் என்ற வடசொல்-க உஸல எனப் பிரிக்கப்பட்டு, படைத்தற்கடவுளான பிரமனும் உல்லாஸப் படத்தக்க தென்னும் பொருளைத் தரும். இப்பெயரால் அந்நாட்டின் சிறப்பு விளங்கும். நிடதம் - நிஷதம் என்னும் வடசொல்லின் திரிபு; இதற்கு - (பலருந்) தங்குமிட மென்று வடநூலார்

பொருளுரைப்பர். புல்முகராய் - புல்லைக் கவ்விய வாயையுடையவராய் என்றுங் கொள்ளலாம்; புற்கௌவுதல் - தோல்விக்கு அறிகுறி. (57)

13.—மூன்றுகவிகள் - துருபதன் முதலியோரை வென்று துரோணன் மாற்றார்பலரை மடிவித்தலைக் கூறும்.

மறைவாய்வெஞ்சிலைமுனிவன்வரூதினிதன்னிலையழிந்து
குறைவாவந்தமைகண்டுகோதண்டமெதிர்வாங்கித்
துறைவாய்வெங்கனல்போலுந்துருபதன்கைச்சிலைதுணியப்
பிறைவாய்வெங்கணைதொடுத்துப்பிறைமுடியோனெனச்சென்றான்

(இ-ள்.) மறை வாய் - வேதங்களையோதிய வாயையும், வெம் சிலை - கொடிய வில்லையுமுடைய, முனிவன் - துரோணன், வரூதினி - (தனது) சேனை, தன் நிலை அழிந்து - தனக்குஉரிய உறுதிநிலை கெட்டு, குறைவு ஆ வந்தமை - குறைவாக வந்ததனை, கண்டு - பார்த்து, கோதண்டம் எதிர் வாங்கி - வில்லை எதிரிலே வளைத்து, துறை வாய் வெம் கனல் போலும் - வேள்வித்துறைவாய்ந்த வெவ்விய அக்கினி போன்ற [மிகக்கொடிய], துருபதன் - துருபதராசகுமாரனை திட்டத்துய்மனது, கை சிலை - கையிலுள்ள வில், துணிய - துண்டாகும்படி, பிறை வாய் வெம் கணை தொடுத்து - பிறைச்சந்திரன்போன்ற [வளைவான] நுனியையுடைய கொடிய அம்பைத் தொடுத்துக்கொண்டு, பிறை முடியோன் என - இளஞ் சந்திரனையணிந்த சடைமுடியையுடைய சிவபிரான்போல, சென்றான் - (உக்கிரமாக எதிர்த்துச்) சென்றான்; (எ-று.)

குறைவா வருதல் - சென்றபொழுதினுந் தொகை குறைவாக மீளுதலும், அவமானமுண்டாகப் பின்னிடுதலும். துறை - வேதவிதியொழுக்கம். கனலுவமையும், சிவனுவமையும், எதிர்க்கும் பொருளைத் தவறாது அழித்தற்கு என்க. துருபதபுத்திரனை 'துருபதன்' என்றார், தருமபுத்திரனை 'தருமன்' என்றாற்போல. (58)

14. சத்தியகேதுவின்சாபஞ்சரமொன்றாலிரண்டாக்கிச்
சித்திரவெஞ்சிலையாண்மைச்சிகண்டியையுஞ்சிலையறுத்திட்
டுத்தமோசாமுதலாவுள்ளகொடுந்திறல்வேந்தர்
தத்தமுயிருடன்போகத்தானையெலாமடிவித்தான்.

(இ - ள்.) (சென்ற துரோணன்),—சத்தியகேதுவின் - சத்தியகேதுவென்னும் பாஞ்சாலராசனது, சாபம் - வில்லை, சரம் ஒன்றால் - ஓரம்பினால், இரண்டு ஆக்கி - துணித்து, சித்திரம் - அழகிய, வெம் - கொடிய, சிலை - வில்லின் திறத்தில், ஆண்மை - பராக்கிரமத்தையுடைய, சிகண்டியையும்—, சிலை அறுத்திட்டு - வில்லையறுத்து, உத்தமோசா முதல் ஆ உள்ள - உத்தமோசா என்னும் அரசன் முதலாகவுள்ள, கொடு திறல் வேந்தர் - கொடிய வலிமையையுடைய அரசர்கள், தம் தம் உயிருடன் போக - தங்கள் தங்களது உயிரோடு புறங்கொடுத்துப் போகும்படி, தானை எலாம் - (பாண்டவ) சேனையையெல்லாம், மடிவித்தான் - அழியச்செய்தான்; (எ-று.)

சத்தியகேது - உண்மைக்குக் கொடிகட்டியுள்ளவ னெனப் பொருள்படும்; இவனைக் காசிராஜ வமிசத்தவனான விபுவின் தந்தையென்று கூறுகின்றனர். ஒன்றை இரண்டாக்குதல் வல்லார்செயலாதலால் அங்ஙனம் செய்தானென ஒருசமத்காரந் தோன்ற 'இரண்டாக்கி' என்றார். அளவிறந்த அழிவற்ற செல்வவொளிகளுக்குச் சிகண்டமென்றுபெயர்; அதனையுடையவன், சிகண்டீ; இது, திருமாலின் ஆயிரநாமங்களுள் ஒன்று; அதுவே இவனுக்குப் பெயராக இடப்பட்டதுபோலும். பி - ம்: சிகண்டியையுந் தேரழித்திட்டு. உத்தமபானுவை. (59)

15. தாண்டியவெம் பரிநகுல சாதேவர் வென்னிட்டார்
பாண்டியனு முதுகிட்டான் பாஞ்சாலர் புறமிட்டார்
ஈண்டியவெங் களத்தவிந்தா ரெத்தனையா யிரம்வேந்தர் [லே.
தூண்டியவெம் பரிநெடுந்தேர்த் துரோணன்கைத் தொடையா

(இ-ள்.) (அப்பொழுது), தூண்டிய - செலுத்திய, வெம் பரி - வேகமான குதிரைகளைப்பூட்டிய, நெடு தேர் - பெரிய தேரையுடைய, துரோணன் - துரோணனது, கை - கையினால் (விடப்பட்ட), தொடையால் - அம்புகளால், தாண்டிய வெம் பரி நகுல சாதேவர் - தாவிச்செல்லுகிற வேகமுள்ள குதிரைத்தொழிலில் வல்ல நகுலனும் சகதேவனும், வென் இட்டார் - முதுகுகொடுத்தார்கள்; பாண்டியன் உம் - பாண்டியநாட்டரசனும், முதுகு இட்டான் - முதுகுகொடுத்தான்; பாஞ்சாலர் - பாஞ்சாலராசர்கள், புறம் இட்டார் - முதுகு கொடுத்தார்கள்; (இவைஇன்றி), ஈண்டிய - நெருங்கிய, வெம் - கொடிய, களத்து - போர்க்களத்தில், அவிந்தார் - இறந்தவர், எத்தனை ஆயிரம் வேந்தர் - மிகப்பலவாயிரம் அரசர்களாவர்; (எ - று.)

நகுலன் குதிரைத்தொழிலில்வல்லவனாதலால், 'தாண்டியவெம் பரி நகுலன்' எனப்பட்டான். தோற்றுப்பின்னிடைதலென்ற ஒரு பொருளை, வென்னிட்டார், முதுகிட்டான், புறமிட்டார் என வெவ்வேறு சொற்களாற் குறித்தது - பொருட்பின்வருநிலையணி. இங்கே பாண்டியனென்றது, அருச்சுனன்மனைவியான சித்திராங்கதையின் தந்தையாகிய சித்ரவாகனனை. (60)

வேறு.

16.—துரோணனும் தருமனும் நெருங்குதல்.

வடுத்தரு வெஞ்சி லீமுகமும் வணக்குகொ டுஞ்ச ராசனமும்
எடுத்தும னங்க தாவுசின மெழுப்பவெ ழுங்கொ ரோர்நொடியில்
நடுத்தகை வின்றி வானவரு நடுக்குறு கின்ற போர்முனையில்
அடுத்தனர் வன்ற போதனனு மடற்றரு மன்கு மாரனுமே.

(இ-ள்) (பின்பு), வானவர்உம்-தேவர்களும், நடுக்கு உறுகின்ற- (கண்டுஅஞ்சி) நடுக்கமடையும்படியான, போர் முனையில் - போர்க்களத்தில், வல்தபோனன்உம் - வலிமையையுடைய துரோணாசாரியனும், அடல் தருமன் குமாரன்உம் - வலிமையையுடைய தருமபுத்திரனும், மனம் - (தம்தம்) மனத்தில், கதாவு-மிகுதியாகப் பொருந்திய, சினம் - கோபம், எழுப்ப - (தம்மைத்) தூண்ட, வடு தரு - விரணத்

தழும்பை யுண்டாக்குகிற, வெம் - கொடிய, சிலீமுகம்உம் - அம்புகளையும், வணக்கு-வளைத்தற்குரிய, கொடு-கொடிய, சராசனம்உம்-வில்லையும், எடுத்து-எடுத்துக்கொண்டு, எழுந்து - புறப்பட்டு, நடு தகைவு இன்றி - இடையிலே தடையில்லாமல், ஓர் ஓர் நொடியில் - ஒவ்வொரு மாத்திரைப்பொழுதிலே, அடுத்தனர் - (ஒருவரையொருவர்)நெருங்கினார்கள்; (எ - று.)

ஆறிப்போவதான புண்ணை யுண்டாக்குவதென்பதனினும், ஆறாதுகிடக்கும் வடுவை யுண்டாக்கு மென்பது சிறப்பாதலால், 'வடுத்தரு சிலீமுகம்' என்றார். 'கதுவுசினம்' என்றும், 'எழுப்ப வெழுந்தோர் நொடியில்' என்றும், 'நடுத்தகைவின்வானவரு நடுக்குறுவெம்போர் முனையில்' என்றும் வழங்குகிற பாடம், சந்தவமைதிக்கு வழுவாம். இனி, அடுத்த பாடல்முதல்தான் விருத்தம் வேறுபடுகின்றதென்று கொள்வார்க்கு, இந்தப்பாடங்கள் ஏற்கும். பி-ம்: எழுப்பவெழுந்த தோர் நொடியில்.

இதுமுதல் பத்துக் கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் கருவிளச்சீர்களும், இரண்டாஞ்சீரும் ஐந்தாஞ்சீரும் தேமாச்சீர்களும், மூன்றாஞ்சீரும் ஆறாஞ்சீரும் கூவிளங்காய்ச்சீர்களுமாக வந்த **அறுசீராசிரியச்சந்தவிருத்தங்கள்**. 'தனத்தன தந்த தானதன தனத்தன தந்த தானதன' என்பது, இவற்றிற்குச் சந்தக்குழிப்பாம். *(61)*

17.—இருதிறத்துச்சேனைகளும் தம்மில் பொருதல்.

அதிர்த்தனசங்கசாலமுதலனைத்துவிதங்கொள்காகளமும்
உதிர்த்தனவண்டகோளமுறவொலித்துடுவின்குழாமுழுதும்
விதிர்த்தெனசெங்கைவாளொடயில்விழித்தனகண்கடீயுமிழ
வெதிர்த்தனதங்கள்சேனைகளுமெதிர்ப்படுமைந்தர்போர்பொரவே.

(இ - ள்.) (அப்போர்க்களத்தில்), சங்க சாலம் முதல் - சங்குகளின் கூட்டம்முதலாக, அனைத்து விதம் கொள் - மிகப்பலவகைகளைக் கொண்ட, காகளம்உம் - வாத்தியங்கள்யாவும், அதிர்த்தன - முழங்கினவாய், அண்டகோளம் உற - உலகவுருண்டைமுழுவதிலும், ஒலித்து - சப்தித்து, உடுவின்குழாம் முழுதுஉம் - நக்ஷத்திரக்கூட்டம் முழுவதையும், உதிர்த்தன-(அதிர்ச்சியால்) உதிரச்செய்தன; செம் கை - (வீரர்களது) சிவந்த கைகள், வாளொடு அயில் - வாளையும் வேலையும், விதிர்த்தன - வேகமாக அசைத்தன; கண்கள் - (அவ்வீரர்கள்) கண்கள், தீ உமிழ - நெருப்பைச் சொரியும்படி, விழித்தன-(கோபத்தோடு) திறந்து உற்றுநோக்கின; (இவ்வாறு), எதிர் படு மைந்தர் - (ஒருவர்க்கொருவர்) எதிர்ப்பட்ட வீரர்கள், போர் பொர - போர்செய்ய, தங்கள் சேனைகள்உம் - அவர்களது (யானைமுதலிய) சேனைகளும், எதிர்த்தன - (ஒன்றோடொன்று) எதிரிட்டுப்பொருதன; (எ - று.)

காகளம் - எக்காள மென்றும்வழங்கும்; ஊதப்படுவதொரு வாத்திய விசேஷம்: இச்சிறப்புப்பெயர், இங்கே, வாத்தியங்களுக்குப் பொதுப்பெயராய் நின்றது. பி - ம்: போர்செயவே. *(62)*

18.—இதுமுதல் நான்குகவிகளால், சதுரங்கசேனைகளை முறையே வருணிக்கின்றார்; அவற்றுள், இது - யானைவருணனை.

மதித்துமதங்களேழினுமெய்வனப்புறுகொண்டன்மானுவன
கதித்துநெடுங்கைவீசியுடுகணத்தைமுகந்துவாருவன
மிதித்துரகன்பணமணிகள்விழித்துவெகுண்டுலாவுவன
கொதித்திருகண்களாலுமெரிகொளுத்தினகும்பவாரணமே.

(இ-) கும்பம் வாரணம் - (அப்போர்க்களத்திலுள்ள) மஸ்தகத்தையுடைய யானைகள், மதங்கள் ஏழின்உம் - எழுவகைமதங்களாலும், மதித்து - கொழுத்து, மெய் - (கறுத்த) உடம்பினால், வனப்பு உறு கொண்டல் மானுவன - அழகு மிக்க காளமேகத்தையொத்திருப்பன; கதித்து - கோபித்து, நெடு கை வீசி - நீண்ட துதிக்கையை மேல்வீசி, உடு கணத்தை - நக்ஷத்திரக்கூட்டத்தை, முகந்து வாருவன - மிகுதியாகமொண்டு எடுப்பன; உரகன் - (கீழிருந்து பூமியைத் தாங்குகிற) ஆதிசேஷனது, பண மணிகள் - படங்களிலுள்ள மாணிக்கங்களை, மிதித்து - (கால்வலிமைமிகுதியால்) துவைத்து, வெகுண்டு - கோபங்கொண்டு, விழித்து - (அக்கோபந்தோன்றக்) கண்விழித்து, உலாவுவன - சஞ்சரிப்பன; கொதித்து - மனம்வெதும்பி, இரு கண்களாலும்—, எரி கொளுத்தின - தீயைச் சொரிந்தன;

மதங்களேழ் - இரண்டுகண்கள், இரண்டுகன்னங்கள், இரண்டு துதிக்கைத்துளைகள், ஆண்குறி என்பவற்றினின்று பாய்கின்றவை. துதிக்கைநீண்டிருத்தல் உத்தம கஜலக்ஷண மாதலால், 'நெடுங்கை' என்றார். உடுகணம், பணமணி, கும்பவாரணம் - வடமொழித்தொடர்கள். கோபமிகுதியால் கண் மிகச்சிவந்து கொடுமையாகத் தோன்றுதலை 'கொதித் திருகண்களாலு மெரிகொளுத்தின' என்றது. கும்பம்-குடம்; அதுபோன்ற வடிவமுடைய மஸ்தகத்துக்கு உவமவாகுபெயர். 'மிதித் துரகன்பணமணிகள் விழுத்தி' என்ற பாடம் சிறந்தது; அதற்கு - தாம் மிதித்தலால் ஆதிசேஷன்படத்து மாணிக்கங்களைக் கீழ்விழச்செய்து என்று பொருள். முதலடி **உவமையணியும்**, மற்றையவை - **உயர்வுநவிற்சியணியு**மாம். **பி - ம்:** பணமுடிகள் விதிர்த்து. (63)

19.—தேர்வருணனை.

வரைக்குலமென்றுகூறிடினவ்வரைக்குவயங்குநேமியில
நிரைக்குநெடும்பதாகையிலநிறத்தகொடிஞ்சியாதியில
உரைப்படவுந்துபாகரிலநகைத்ததுரங்கராசியில
விரைத்துவிரைந்துலாவலிலவெனச்செருமண்டுதேர்பலவே.

(இ-ள்,) வரை குலம் என்று - மலைகளின்கூட்டமென்று, கூறிடின் - (உவமை) சொல்லலாமென்றால், அ வரைக்கு - அம்மலைகளுக்கு, வயங்கும் நேமி இல - விளங்குகிற சக்கரங்கள் இல்லை; நிரைக்கும் - வரிசையாகநாட்டப்பட்ட, நெடு பதாகை - நீண்ட துவசங்கள், இல - இல்லை; நிறத்த - நல்லநிறமுள்ளவையாய்விளங்குகிற, கொடிஞ்சிஆதி - கொடிஞ்சிமுதலிய உறுப்புக்கள், இல - இல்லை;

உரை பட - புகழுண்டாக, உந்து - செலுத்துகிற, பாகர் - சாரதிகள், இலர்-இல்லை; உகைத்த-செலுத்தப்படுகிற, துரங்க ராசி-குதிரைகளின் கூட்டங்கள், இல-இல்லை; இரைத்து-ஆரவாரித்துக்கொண்டு, விரைந்து உலாவல்-வேகமாகச்செல்லுந்தொழில்கள், இல - இல்லை, என-என்று சொல்லும்படி, செரு மண்டு-அப்போரிற் பொருந்திய, தேர்-தேர்கள், பல - அநேகங்களாம்; (எ - று.)

வலிமை பருமை உயர்ச்சிகளில் ஒப்பனவாயினும், சக்கரம் முதலியன இல்லாமையால் மலைகளுந் தேர்களுக்கு ஒப்பாகா என்பதாம். இப்பாட்டில் உபமானமாகிய மலையினும் உபமேயமாகிய தேருக்கு நேமி முதலியன உண்மையாகிய விசேடங் கூறியதனால், **வேற்றுமையணி.** கொடிஞ்சி-கொடிஞ்சு என்றும் வழங்கும். உரை பட-(குதிரைகளை அதட்டுஞ்) சொல் உண்டாக என்றுமாம். **பி - ம்:** பாகரில. (64)

20.—குதிரை வருணனை.

உகத்தின்முடிந்தநாளலையோடொலித்தெழுசங்கவேலையென
மிகப்புகைகொண்டுவானுலகும்வெடித்திடமண்டுதேயுவென
நகச்சிகரங்கள்சாயவெதிர்நடப்பனசண்டவாயுவென
விகற்செய்துசெம்பராகமிசையெழுப்பினதுங்கவாசிகளே.

(இ-ள்.) உகத்தின் முடிந்த நாள் - கல்பத்தின் முடிவுகாலத்தில், அலையோடு ஒலித்து எழு-அலைகளோடு ஆரவாரித்துப் பொங்குகிற, சங்கம் வேலை என - சங்குகளையுடைய கடல்போலவும்,— (அக்காலத்தில்), மிக புகை கொண்டு - புகையை மிகுதியாகக்கொண்டு, வான்உலகுஉம் வெடித்திட-மேலுள்ள தேவலோகமும் வெடிக்கும்படி, மண்டு - மூண்டெரிகிற, தேயு என - காலாக்கினி போலவும், (அக்காலத்தில்),—நகம் சிகரங்கள் சாய - மலைகளின் உச்சிகள் சரியும்படி, எதிர் நடப்பன - எதிர்த்துச்செல்வனவான, சண்டம் வாயு என-கொடியகாற்றுக்கள் போலவும்,—துங்கம் வாசிகள் - உயர்ந்த குதிரைகள், இகல் செய்து - போரைச்செய்து, செம் பராகம் - சிவந்த புழுதிகளை, மிசை எழுப்பின - மேலே (கால்களால்) கிளப்பின;

ஆரவாரத்துக்கும் அணிபடவருதற்கும் கடலும், அஞ்சத்தக்க கொடுமைக்குத் தீயும், வேகத்துக்கு வாயுவும் என ஏற்றபடி ஒப்புமை கண்டுகொள்க. **உவமையணி.** கல்பாந்தகாலத்தில் உலகையழிக்கக் கடல்பொங்கியெழுதலும், பெருந்தீப் பற்றியெரிதலும், பெருங்காற்று விசையோடுஅடித்தலும், இயல்பு. சப்தமருத்துக்களென்ன வாயு எழுவகைப்படுதலால், 'நடப்பன' என அதனைப் பன்மையால் விசேடித்தார். (65)

21.—காலாள் வருணனை.

விளைத்தனர்தொந்தமாகவமர்மிகைத்தனர்தந்தம்வீரமுட
னுளைத்தனர்சிங்கசாபமெனவுறுக்கினர்சென்றுமேன்முடுகி
வளைத்தனர்கொண்டவார்சிலைகள்வடித்தசரங்களாலுழுது
திளைத்தனர்வென்றிகூரும்வகைசெருக்களமெங்குமாடவரே.

(இ - ள்.) செரு களம் எங்குஉம் - அப்போர்க்களத்தில் எவ்விடத்தும், ஆடவர் - காலாள்வீரர்கள்,—தொந்தம் ஆக - இவ்விரண்டுபேராக, அமர் விளைத்தனர் - (ஒருவரோடொருவர்) போரைச் செய்தார்கள்; தம் தம் வீரமுடன் - தங்கள் தங்கள் பராக்கிரமத்தோடு, மிகைத்தனர் - செருக்கினார்கள்; சிங்க சாபம் என - சிங்கக்குட்டிகள்போல, உளைத்தனர் - கர்ச்சித்தார்கள்; சென்று மேல் முடுகி - எதிர்சென்று மேல்நெருங்கி, உறுக்கினர் - அதட்டினார்கள்; கொண்ட வார் சிலைகள் - (தாம்) ஏந்திய நீண்ட விற்களை, வளைத்தனர் - வளைத்தார்கள்; வடித்த சரங்களால்-வடிக்கப்பட்ட அம்புகளால், வென்றி கூரும் வகை - வெற்றிமிகும்படி, உழுது-(பகைவருடம்பைக்)கிளறி, திளைத்தனர் - மகிழ்ந்தார்கள்;

தொந்தம், சிங்கசாபம்-த்வந்த்வம், ஸிம்ஹஶாபம் என்னும் வடசொற்களின் திரிபுகள். சாபம் [சாபம்]என்று குட்டிக்குப் பெயர்; இதனை, மேல் பதினெட்டாம்போர்ச்சருக்கத்தில் "காண்டரிய கேசரிவெஞ்சாப மன்னர்" என்னுமிடத்துங் காண்க. சாபம் என்பது - இளமைப்பெயராவதொரு வடசொல் என்று அறியாதார், சாபச்சிங்கமென மொழிமாற்றி, வில்லையுடைய சிங்கம்போல வென்று நவிந்துபொருள்கொண்டு இடர்ப்படுவர். உழுதலென்ற வினைக்கு ஏற்ப, சரத்தைக் கலப்பையாகவும், பகைவருடலைக் கழனியாகவும், போரைப் பயிராகவும், வெற்றியை விளைவாகவும் கொள்க. திளைத்தல் - இடைவிடாது பயிலுதலுமாம். பி - ம்: திளைத்தனர் வென்றி கூருவகை. (66)

22.—யுதிட்டிரனுக்கும் துரோணனுக்கும் கைகலந்த போர்.

மிகைத்தனர்தும்பைமாலைமுடிமிலைச்சினரின்றுசாலுமென
நகைத்தனர்தங்கடேருமெதிர்நடத்தினர்சண்டவேகமொடு
பகைத்தனரங்கம்யாவுமிசைபடப்படநஞ்சுகால்பகழி
யுகைத்தனரன்றையாடமரிலுதிட்டிரனுந்துரோணனுமே.

(இ - ள்.) அன்றை ஆடு அமரில் - அன்றைத்தினத்தில் நடந்த போரில், உதிட்டிரனும் துரோணனும்—, மிகைத்தனர் - செருக்கினார்கள்; தும்பைமாலை - (போருக்குஉரிய) தும்பைப்பூமாலையை, முடி மிலைச்சினர் - (தமது) சிரசில் சூடினார்கள்; இன்று சாலும் என - இன்றைக்கு (இப்போர்) தகுமென்று, நகைத்தனர் - சிரித்தார்கள்; தங்கள் தேர்உம்-தம் தம் தேரையும், எதிர் நடத்தினர் - (ஒருவர்க்கொருவர்) எதிரிற்செலுத்தினார்கள்; சண்ட வேகமொடு-கொடிய உக்கிரத்துடனே, பகைத்தனர்-பகைமை பாராட்டினார்கள்; அங்கம் யாஉம்-உடம்பினுறுப்புக்கள் எல்லாவற்றிலும், மிசை படப்பட-மேலே மிகுதியாய் ஊன்றும்படி, நஞ்சு கால் பகழி-விஷத்தைச் சொரிகிற அம்புகளை, உகைத்தனர்-செலுத்தினார்கள்; (எ - று.)

சண்டவேகமொடு தேரை எதிர் நடத்தினர் என இயைப்பினும் அமையும். படப்பட-அடுக்கு, மிகுதி. பகைவரை யழித்தற்காக அம்புநுனியில் விஷந்தடவுதலும் உண்டு; தவறுமற்கொல்லுங் கொடுமையால் விஷத்தன்மையை வெளியிடும் அம்பு என்றலும்

இயையும். இன்று சாலும் என - இன்றைக்கே (போர்) முடியு மென்று எனினுமாம். பி - ம்: மிலைச்சினரிந்த்ர்சாலமென. (67)

23.—தருமன் குருவின்பதாகை முதலியவற்றை ஒழியுமாறு செய்தல்.

சினத்துமுனைந்தபோரில்வருசிலைக்குருவின்பதாகையற
மனத்தினுமுந்துமாதுணியவயத்துடனுந்துபாகன்விழ
வனைத்துருளுஞ்சதாவியிடவடுக்குறநின்றதேரழிய
வினத்தொடையைந்துபூபதியுமிமைப்பொழுதின்கணேவினனே.

(இ - ள்.) சினத்து-கோபத்தோடு, முனைந்த-முயன்று செய்த, போரில்-யுத்தத்தில், வரு-(எதிர்த்து) வந்த, சிலை குருவின்-வில்லாசிரியனான துரோணனது, பதாகை - (வேதக்)கொடி, அற-அறுபடவும், மனத்தின்உம் முந்து - மனோவேகத்தினும் முற்படச்செல்லுகிற, மா-குதிரைகள், துணிய-துண்டாகவும், வயத்துடன் - வலிமையோடு, உந்து - தேர்செலுத்துகின்ற, பாகன்-சாரதி, விழ - இறந்து கீழே விழவும், அனைத்து உருள்உம் - தேர்ச்சக்கரங்களெல்லாம் சதாவியிட-சிதைந்து விழவும், அடுக்கு உற நின்ற-(அனேக அங்கங்கள் ஒன்றன்மேலொன்றாக) அடுக்கியிருக்கின்ற, தேர்—, அழிய - அழியவும், இனம் தொடை ஐந்து - ஒருசாதியான ஐந்து அம்புகளை, பூபதிஉம் - பூமிக்குத்தலைவனான யுதிட்டிரனும், இமை பொழுதின் கண் - ஒருமாத்திரைப்பொழுதிலே, ஏவினன் - (அக்கொடி முதலிய ஐந்தன்மேலும் தனித்தனி) செலுத்தினான்; (எ - று.)

ஒருபொருளை நினைத்த மாத்திரத்தில் மனம் அப்பொருள் எவ்வளவு தூரத்திலிருப்பினும் அவ்விடத்தே செல்லுதலால், மனம், வேகத்துக்குச் சிறந்த உவமையாகக் கூறப்படும். 'விழ' என்றது - மங்கலவழக்கு. (68)

24.—இதுவும் அடுத்த கவியும் குளகம்: படையிழந்த துரோணனைத் தருமன் ஏகுமாறுசொல்ல அவன் ஏகுதல்.

தனித்துமலைந்தபோரிலெழுதலத்தரசன்கைவாளிகளில்
அனத்தம்விளைந்துநாணொடுவிலறத்துணியுண்டதாகவமுன்
முனிக்குலமென்றுமாதிமறைமுதற்குருவென்றுமேன்மையுற
இனிக்கணையொன்றுமேவுகிலமினிப்பறவஞ்சலேகெனவே.

(இ - ள்.) தனித்து மலைந்த போரில்-(வேறு எவருந் துணையில்லாமல் தருமனும் துரோணனும் தொந்தயுத்தமாகத்) தனித்துச் செய்த போரிலே, எழு தலத்து அரசன் - ஏழுதீவுகளாகவுள்ள பூமி முழுவதுக்கும் இராசனான தருமனது, கை வாளிகளில் - கையினாலெய்யப்பட்ட அம்புகளால், அனத்தம் விளைந்து - (துரோணனுக்குத்) தீங்கு உண்டாகி, நாணொடு வில் அற துணியுண்டது - நாணோடுகூடிய வில் இரண்டாம்படி துணிக்கப்பட்டது; (அப்பொழுது),ஆகவம் முன்-போர்க்களத்திலே, (தருமன் துரோணனை நோக்கி), 'முனிகுலம் என்றும் - (நீ பிறந்தசாதி) பிராமணசாதியாதலாலும், ஆதி மறை முதல் குரு என்றும் - பழமையான வேதம் வல்ல சிறந்த ஆசிரியனாதலாலும், மேன்மை உற-(உன்பக்கல் எமக்குக்) கௌரவபுத்தியிருத்தலால், இனி கணை ஒன்றுஉம் ஏவுகிலம் -

இனிமேல் அம்பொன்றையும் (உன்மீது யாம்) செலுத்தோம்: அஞ்சல் - பயப்படாதே; இளைப்பு அற-சோர்வு நீங்க, ஏகு - செல்வாய்,' என-என்றுசொல்ல,—(எ - று.)—'முனி போயினன்' என அடுத்த கவியில் முடியும்.

இங ஙனம் ஏகென விடுத்தது - தழிஞ்சி என்னும் புறப்பொருள் துறையின்பாற்படும்; அது-சாய்ந்தவர்மேல் செல்லாமல் தழுவுவது. இப்படித் தருமன் பெருமைதோன்றக் கூறினதால், அப்பொழுது துரோணனுயிர் தருமன் வசத்ததாயிருந்தது என்பது போதரும். ஏழுதீவுகள்-சம்பு, பிலட்சம், குசம், கிரௌஞ்சம், சாகம், சால்மலி, புஷ்கரம் என்பன. அனத்தம்=அநர்த்தம். துணியுண்டது, உண் - செயப்பாட்டுவினைப் பொருளுணர்த்தும் விகுதி. ஆஹவம் - வடசொல். முன் - ஏழனுருபு. பி - ம்: ஆகவமும். இளைப்புற. (69)

25. அறத்தின் மகன்ற னாண்மையினை யழித்துயி ரெஞ்சி டாவகைதன், மறத்தொடு கொண்டு போவலென மதித்தெதிர் வந்த சாபமுனி, திறத்தினி வன்கை யேவுகணை செயித்தது கண்டு நாணிமெலி, வுறத்தளர் சிந்தை யோடுதன துடற்சுமை கொண்டு போயினனே.

(இ - ள்.) அறத்தின் மகன்தன் - தருமபுத்திரனது, ஆண்மையினை-பராக்கிரமத்தை, அழித்து - அழியச்செய்து, உயிர் எஞ்சிடா வகை - (அவனது) உயிர் ஒழியாதபடி [உயிருடன் என்றபடி], தன் மறத்தொடு - தனது வலிமையால், கொண்டுபோவல் என - (அவனைப்) பிடித்துக்கொண்டுபோவேனென்று, மதித்து-எண்ணி, எதிர் வந்த - (அவனெதிரிற் போருக்கு) வந்த, சாபம் முனி - வில்வல்ல துரோணன், திறத்தின் - போர்த்திறமையை யுடைய, இவன் - இத்தருமனது, கை-கையினால், ஏவு - எய்யப்பட்ட, கணை - அம்புகள், செயித்தது - (தன்னை) வென்றதை, கண்டு—, நாணி - வெட்கப்பட்டு, மெலிவு உற-வாட்டமுண்டாக, தளர் சிந்தையோடு-சோர்ந்த மனத்துடனே, தனது உடல் சுமை கொண்டு - தனது உடம்பாகிய பாரத்தைச் சுமந்துகொண்டு, போயினன் - (மீண்டு) சென்றான்; (எ - று.)

போரில் தன்மாணாக்கனாற் பரிபவப்பட்ட துரோணாசாரியன் உயிர் நீங்காது உடம்போடிருத்தலை ஒருபாரமாகக்கருதினனென்பதும், அவனுக்கு அப்பொழுது உடம்பும் ஒருபாரமாகும்படி சோர்வு உளதாயிற்று என்பதும் தோன்ற, 'உடற்சுமைகொண்டு' என்றார். மறத்தொடு, ஒடு-கருவிப்பொருளது. பி - ம்: ஏவு பல.

வேறு.

26.—தோற்றோடிய துரோணன் வேறொருதேரி லேறுதல்.

தருமன் மைந்த னுடன்ம லைந்து சமரி லஞ்சி யோடியுங்
கரும நன்று படநி னைந்த கலச யோனி பின்னையு
முரண்மி குந்து டற்ற வேகொன் முந்த வோட வேகொலாம்
விரைவு டன்சி னங்க டாவ வேறொர் தேரி லேறினன்.

(இ - ள்.) (இவ்வாறு), தருமன் மைந்தனுடன் - தருமபுத்திரனுடனே, மலைந்து - போர்செய்து, சமரில் - அப்போரில், அஞ்சி - பயந்து, ஓடிஉம் - (தோற்று முதுகுகொடுத்து) ஓடியும்,—கருமம் - (தான் வெல்லவேண்டுங்) தொழிலை, நன்று பட-நன்றாக, நினைந்த - ஆலோசித்த, கலச யோனி - பாத்திரத்தை(த் தனக்கு)ப் பிறப்பிடமாகவுடைய துரோணன், பின்னைஉம்-மறுபடியும், முரண் மிகுந்து உடற்றஏ கொல் - வலிமை மிக்குப் போர்செய்தற்காகவேயோ? முந்த ஓடஏ கொல் ஆம் - விரைவாக ஓடிப்போவதற்காகவேயோ? விரைவுடன் - துரிதத்தோடு, சினம் கடாவ - கோபந் தூண்ட, வேறு ஓர் தேரில் ஏறினன் - மற்றொருதேரின்மீது ஏறினான்;

துரோணன் முன்புதோற்றதற்கு நாணி மற்றொருதரத்திலாயினும் வெல்லும்பொருட்டு வேறொருதேரின்மேலேறியதை, இதுவும் முன்போலத் தோல்வியர்கவே முடிதலால், கவி சமத்காரமாக 'முரண்மிகுந்துடற்றவேகொல் முந்தஓடவேகொல்' என்று கூறினார். அவன் இவ்விரண்டாந் தரத்திலும் புறங்கொடுத்தலை, மேல் 43-ஆங் கவியிற் காண்க. 'கருமநன்று பட நினைந்த' என்பதற்கு - செய்தொழில்களை நன்றாக ஆராய்ந்தறிந்த என்று இயற்கை குறிப்பதாக் கொள்ளினுமாம். கலசயோனி - வடசொற்றொடர்; வேற்றுமைத்தொகையன்மொழி; இப்பெயர் - பெரும்பாலும் அகத்தியனுக்கும், சிறுபான்மை வசிட்டனுக்கும் வழங்கும். பி - ம்: நினைந்து. கதாவ.

இதுமுதல் பத்தொன்பது கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச் சீரொன்று விளச்சீரும், மற்றையாறும் மாச்சீர்களு மாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட **ஏழுசீராசிரிய விருத்தங்கள்.** (71)

27.—இதுமுதல் நான்குகவிகள் - குளகம்: பாண்டவர்பக்கத்து வீரர்களன்றுவளைய, துரியோதனன்பக்கத்துச் சேனைவீரர்களும் திரளமுனைந்த போர் நிகழ்ந்தது கூறும்.

தங்கண்மன்னனம்முனைத்தனித்துவென்றவின்மையுந்
துங்கவென்றியின்றியேதுரோணனுரழிந்ததும்
அங்குளங்கனன்றுமீளவணிகொடேரினனதுஞ்
சிங்கமென்னவருகுநின்றசிறுவர்கண்டுசீறியே.

(இ - ள்.) தங்கள் மன்னன்-தங்கள் அரசனான யுதிட்டிரன், அ முனை-அப்போரிலே, தனித்து வென்ற - தனியாய்நின்று சயித்த, வின்மைஉம்-வில் வன்மையையும், துங்கம் வென்றி இன்றிஏ-சிறந்த வெற்றியில்லாமலே, துரோணனுர் அழிந்ததுஉம்-துரோணாசாரியர் தோற்றதையும், மீள-பின்பு, உளம் கனன்று-(அந்தத் துரோணர்) மனங்கொதித்து, அங்கு - அவ்விடத்தில், அணி கொள் தேரின் ஆனதுஉம் - அலங்காரங்கொண்ட மற்றொருதேரில் ஏறியதையும், சிங்கம் என்ன அருகு நின்ற சிறுவர்-சிங்கங்கள் போலத் தருமனருகில் நின்ற இளவீரர்கள், கண்டு—, சீறி - (துரோணர்மீது) கோபித்து,—(எ-று.)—"முனியை வளைய" என அடுத்தகவியோடு தொடரும். (72)

28. முந்திமுந்திமச்சராசனேடுசேனைமுதல்வனும்
குந்திபோசனதியானகுலமகீபர்யாவரும்
வந்துசூழவேழமீதுவயமடங்கல்செல்வபோல்
அந்தவேதமுனியையோடியக்கணத்ில்வளையவே.

(இ-ள்.) மச்ச ராசனேடு - மத்ஸ்யதேசத்தரசனான விராடனுடன், சேனை முதல்வன்உம் - சேனைத்தலைவனான திட்டத்துய்மனும், குந்திபோசன் ஆதிஆன-குந்திபோஜதேசத்தரசன் முதலான, குலம் மகீபர் யாவர்உம் - உயர்குலத்தில் தோன்றிய அரசர்களெல்லோரும், முந்தி முந்தி - ஒருவர்க்கொருவர் முற்பட்டு, சூழ வந்து-சுற்றிலும் வந்து, வேழம்மீது - ஒருயானையின்மேல், வய மடங்கல் - வலிமையையுடைய பலசிங்கங்கள், செல்வ போல் - (எதிர்த்துச்) செல்வனபோல, ஓடி-விரைந்து, அந்த வேதம் முனியை - வேதம் வல்ல அத்துரோணனை, அ கணத்தில் - அந்தக்ஷணத்தில், வளைய - வளைந்துகொள்ள,—(எ - று.)—"செருச்செய்தார்" என மேல் முப்பதாங்கவியில் முடியும்.

மச்சம்-வடசொற்சிதைவு; நீர்வளமிகுதியால் எங்கும் மீன்கள் மலிந்திருத்தல்பற்றி, மத்ஸ்யதேசமெனப் பெயர்போலும். குந்திபோசன்-பாண்டவர் தாயாகிய குந்தியின் உடன்பிறந்த முறையாகுபவன்; இவன்பெயர் 'புரஜித்' என்பதை முதனூலால் அறிக. (73)

29. கன்னனாதிசகுனியாதிகலிங்கதேசனாதியா
மன்னனாதியாகவங்குமறையவன்பெரும்படை
தென்னனாதிநகுலனாதிதிட்டத்துய்மனேடபி
மன்னனாதியாகவிங்குதிட்டிரன்வரூதினி.

(இ-ள்.) கன்னன் ஆதி - கர்ணன் முதலாகவும், சகுனி ஆதி - சகுனி முதலாகவும், கலிங்கதேசன் ஆதி ஆ - கலிங்கநாட்டரசனான சோமதத்தன் முதலாகவும், மன்னன் ஆதி ஆக-(யாவர்க்கும்) அரசனான துரியோதனன் முதலாகவும், அங்கு - அப்பக்கத்தில், மறையவன் பெரு படை - வேதியனான துரோணனது பெரியசேனையிலும், —தென்னன் ஆதி-பாண்டியன் முதலாகவும், நகுலன் ஆதி-நகுலன் முதலாகவும், திட்டத்துய்மனேடு அபிமன்னன் ஆதி ஆக - திட்டத்துய்மனும் அபிமந்யுவும் முதலாகவும், இங்கு-இப்பக்கத்தில், உதிட்டிரன் வரூதினி - தருமனது சேனையிலும்,—(எ-று.)—"மன்னர் தாமும் மன்னர் தாமும் செருச்செய்தார்" என வருங்கவியோடுமுடியும். 'திட்டத்துய்மனதிமால், பின்னனதியாகவிங் குதிட்டிரன் பெரும்படை' என்ற பாடத்தில், மால்பின்னன்-சாத்தகி யென்க. ()

30. நின்றசேனைமன்னர்தாமுநின்றவந்நிலத்திடைச்
சென்றசேனைமன்னர்தாமுமெங்கணுஞ்செருச்செய்தார்
என்றுகூறியெதிருரைத்தல்யாவருக்குமுடிவுரு
தொன்றுநூறுசின்னமாவுடைந்ததோரொருடலமே.

(இ - ள்.) நின்ற-(அப்பக்கத்தில்) நின்ற, சேனை மன்னர்தாம் உம்-சேனைகளோடுகூடிய அரசர்களில் இன்னாரின்னாரும், நின்ற அ நிலத்திடை - அங்ஙனம் நிற்கப்பெற்ற அக்குருக்ஷேத்திரத்தி

னிடத்து, சென்ற - போய்ச்சேர்ந்த, சேனை மன்னர் தாம்உம்-சேனைகளோடுகூடிய (இப்பக்கத்து) அரசர்களில் இன்னாரின்னாரும், எங்கண்உம் - எல்லாவிடத்தும், செரு செய்தார் - போர்செய்தார்கள், என்று கூறி-என்று பகுப்பிட்டு, எதிர் உரைத்தல் - நேராகச்சொல்லுதல், யாவருக்குஉம்-எவருக்கும், முடிவு உறுது-முடியாது; (அப்போரில்), ஓர் ஓர் உடலம் - (போர்வீரர் பலரது) ஒவ்வொரு உடம்பும், ஒன்று நூறு சின்னம் ஆ - ஒவ்வொன்று நூறுதுண்டுகளாக, உடைந்தது-சிதைந்தது; (எ-று.)

கீழ்க்கவியிற்கூறிய முறைமைக்கு ஏற்ப, இக்கவியில், 'நின்ற சேனைமன்னர்' எனத் துரியோதனன் பக்கத்தாரையும், 'சென்ற சேனைமன்னர்' எனத் தருமன்பக்கத்தாரையும், முறையே குறித்தது - **முறைநிரனிறைப்பொருள்கோள்.** குருக்ஷேத்திரம் அப்பொழுது துரியோதனனாளுகைக்கு உட்பட்டிருந்ததனால், அதில் 'நின்றமன்னர்' அவரும், 'சென்றமன்னர்' இவருமாவர். பி-ம்: என்றுகூறியிகலுரைக்கில். (75)

31.—துரியோதனன்பக்கத்து நால்வகை வீரரிலும் பலர் இறந்தமை.

வேல்விதத்தும்வாள்விதத்தும்வில்விதத்துவிடுநெடுங்
கோல்விதத்துமுடிதுணிந்தகொற்றமன்னர்சற்றலார்
நூல்விதத்துமிக்ககேள்விநோன்சிலைக்கைம்முனிபடைக்
கால்விதத்துரததுரங்ககயவிதத்துவயவரே.

(இ-ள்.) நூல் விதத்து - சாஸ்திரங்களின் வகைகளிலே, மிக்க-மிகுந்த, கேள்வி - பொருட்கேள்விகளையுடைய, நோன் சிலை கை முனி - வலிய வில்லையேந்திய கையையுடைய துரோணனது, படை-சேனையிலுள்ள, கால்விதத்து - காலாள்வகைகளையும், ரதம் துரங்கம் கயம் விதத்து - தேர் குதிரை யானை இவற்றின் வகைகளையும் (ஆகச் சதுரங்கங்களையும்) உடைய, வயவர்-வீரர்களுள், (பகைவர்களது), வேல் விதத்துஉம் - வேல்களின் வகைகளாலும், வாள் விதத்துஉம்-வாள்களின் வகைகளாலும், வில் விதத்து விடு - விற்களின் வகைகளால் எய்யப்பட்ட, நெடு கோல் விதத்துஉம் - நீண்ட அம்புகளின் வகைகளாலும், முடி துணிந்த-தலையறுபட்ட, கொற்றம் மன்னர்-(முன்பு) வெற்றியையுடைய அரசர்கள், சற்று அலார்-கொஞ்சமல்லர் [மிகப்பலர் என்றபடி]; (எ-று.)

வேல்விதம் - குத்துவேல், எறிவேல், கைவேல் முதலியன. வாள்விதம்-பெருவாளும், உடைவாளும் முதலியன. கோல்விதம் - நெட்டம்பு, மொட்டம்பு, பிறைமுகவம்பு முதலியன: அஸ்திரங்களும் இதில் அடங்கும். அஞ்சிப் பின்னிடாது பொருது அழிந்தமையின், 'கொற்றமன்னர்' எனப்பட்டார். உயர்திணைப்பொருளாதலின், காலாள்களை முன்னர்க் கூறினர்; 'துறக்கம் புகு வேட்கையுடைமையின் காலாளை முற்கூறி' என்பர், நச்சினார்க்கினியர். காலாள்வகைகள் - வில்வீரர், வாள்வீரர், வேல்வீரர். கொல்வது கோல் எனக் காரணக்குறி. (76)

32.—இரண்டுகவிகள் - தருமன்பக்கத்துச் சேனாவீரரின் செயல் கூறும்.

குத்துவார்படைக்கலங்கள்கொண்டுமற்குறிப்பினான்
மொத்துவாரிரண்டுதேருமுட்டவிட்டுமொய்ம்பினால்

ஒத்துவார்களிற்றினின் றுமொருகளிற்றின்முதுகுறத்
தத்துவார்துரங்கமங்கடாரையாகவேறுவார்.

(இ - ள்.) (தருமன்பக்கத்து வீரர்கள்), படைக்கலங்கள் கொண்டு-ஆயுதங்களினால், குத்துவார் - (எதிரிகளைக்) குத்துவார்கள்; மல் குறிப்பினால் - (ஆயுதங்களையொழித்து) மற்போர்செய்யுங்கருத்தால், மொத்துவார் - (வெறுங்கைகளால்) அடிப்பார்கள்; தேர் இரண்டுஉம் முட்ட விட்டு - பகைவர் தேர் தம்தேர் என்ற இரண்டும் (ஒன்றையொன்று) தாக்கும்படி செலுத்தி, மொய்ம்பினால் ஒத்துவார் - (பின்பு) வலிமையோடு விலகுவார்கள்; களிற்றினின்றுஉம்-(ஒரு) யானையினின்றும், ஒரு களிற்றின் முதுகு உற - மற்றொரு யானையின் முதுகிலே பொருந்த, தத்துவார் - பாய்வார்கள்; துரங்கமங்கள் - பலகுதிரைகளை, தாரை ஆக ஏறுவார்-ஒழுங்காக ஏறிச்செலுத்துவார்கள்; (எ - று.)

தாரையாக-வரிசையாக எனினும், பலவகைக்கதிகள்பொருந்த எனினும் அமையும். ஒத்துதல்-பொருந்துதலுமாம். தாரை - வடசொற்றிரிபு. (77)

33. கொற்றவாளின்முடியிழந்தகுறையுடம்புவாளுடன்
கற்றசாரியோடுமக்கணக்கறிந்துபுகழுவார்
அற்றகால்களற்றகைகளாயுதங்களாகவே
யெற்றுவார்படைக்கலனிழந்துநின்றவீரரே.

(இ - ள். (தருமன்சேனையார்),—கொற்றம் வாளின் - வெற்றியையுடைய (தங்கள்) வாள்களால், முடி இழந்த-தலையையிழந்த, குறை உடம்பு-(எதிரிகளின்) உடற்குறைகள், வாளுடன்-(கையிற்பிடித்த) வாளாயுதத்துடனே, கற்ற சாரி - (முன்பு தாம்) பயின்றுள்ள (வலசாரி இடசாரி முதலிய) நடைவிகற்பங்களில், ஓடும் - (தலைபோனபின்பும் சிறிதுபொழுது) விரைந்து செல்லுகிற, அ கணக்கு - அந்தநிலைமையை, அறிந்து-கண்டுஉணர்ந்து, புகழுவார் - கொண்டாடுவார்கள்; படைக்கலன் இழந்து நின்ற - ஆயுதங்களை (எதிரிகளால்) தோற்றுநின்ற, வீரர்-(மற்றும்பல) வீரர்கள், அற்ற கால்கள் அற்ற கைகள் ஆயுதங்கள் ஆக ஏ - (போர்க்களத்தில்) அறுந்து விழுந்துகிடக்கிற (ஆடவரது) கால்களையும் அப்படிப்பட்ட கைகளையுமே படைக்கலமாக எடுத்துக்கொண்டு, எற்றுவார்-(அவற்றால் பகைவரைத்) தாக்குவார்கள்; (எ - று.)

அற்றகால்களும் அற்றகைகளுந் தம்முடையனவே யென்றலும் தகுதி; "இருதுடையற்றிருக்கு மறவர்க ளெதிர்பொரு கைக்களிற்றின்வலிகெட, ஒருதுடையைச்சுழற்றி யெறிவர்களொருதுடையிட்டுவைப்பரெறியவே" என்ற கலிங்கத்துப்பரணியைக் காண்க. முடியிழந்தகுறையுடம்பு—கபந்தம். (78)

34.—நால்வகைச்சேனையும் பட்டமை.

சொன்னவாறுகுறியுமுள்ளதுரகதந்துணிந்தன
கன்னவாறுசொரிமதக்களிற்றினங்கள்வீழ்ந்தன
பின்னவாறுபட்டனபிறங்குதேர்பதாதிக
ளின்னவாறுபட்டனவெனக்குறித்தியம்பொணு.

(இ - ள்.) (அப்பொழுது துரோணன்சேனையில்), சொன்ன ஆறு குறிஉம் உள்ள-(அசுவநூல்களிற்) கூறியுள்ளபடி எல்லா நல்லிலக்கணங்களையுமுடைய, துரகதம் - குதிரைகள், துணிந்தன - அறுபட்டன; கன்னம்-கபோலங்களினின்று, ஆறு சொரி - ஆறாகப் பெருகுகிற, மதம் - மதநீரையுடைய, களிறு இனங்கள் - யானைக் கூட்டங்கள், வீழ்ந்தன - இறந்துகீழ் விழுந்தன; பிறங்கு தேர் - விளங்குகிறதேர்கள், பின்னம் ஆறு பட்டன - பிளவுத்தன்மையை அடைந்தன; பதாதிகள்-காலாட்கூட்டங்கள், இன்ன ஆறு பட்டன என குறித்து இயம்பு ஒணு-'இவ்விதமாக அழிந்தன' என்று குறிப்பிட்டுச் சொல்லமுடியாதவையாயின; (எ - று.)

குறி - அடையாளம். 'சொன்னஆறு குறியுமுள்ள' என்பதற்கு - (குதிரை நூல்களில் நல்லிலக்கணமாகக்) கூறின (பிறப்பிடம், நிறம், சுழி, குரல், உறுப்பமைதி, நடை என்னும்) ஆறுதன்மைகளையுமுடைய என்றும் உரைக்கலாம். 'பதாதிகள்' என்பது- இங்கே, அஃறிணையின்பாற் பட்டதனால், 'பட்டன', 'இயம்பொணு' என்னும் அஃறிணைப்பன்மைமுற்றைக் கொண்டது. சிலபிரதியில், இந்தப்பாடல் அடுத்தபாடலின்பின் உள்ளது. (79)

35.—யுதிட்டிரன் பக்கத்தவரின் செருக்குமொழியும், துரியோதனன் பக்கத்தவரின் இரக்கமொழியும்.

உங்கள்சேனைகெட்டதென்றுதிட்டிரன்றளத்துளார்
திங்களன்னகும்பயோனிசேனைதன்னையிகழுவார்
எங்கள்சேனைகெட்டதுங்களிறைவன்வின்மையாலெனத்
தங்கள்சேனையந்தணன்றளர்ந்ததற்கிரங்குவார்.

(இ - ள்) உதிட்டிரன் தளத்து உளார் - தருமன்பக்கத்தின் சேனையிலுள்ளவர்கள், திங்கள் அன்ன கும்பயோனி சேனை தன்னை - பூர்ணசந்திரனையொத்த துரோணனது சேனையை, உங்கள் சேனை கெட்டது என்று - 'உங்கள்சேனை தோற்றது' என்று, இகழுவார் - நிந்திப்பார்கள்; (அதற்கு அவர்கள்), உங்கள் இறைவன் வின்மையால் எங்கள் சேனை கெட்டது என - 'உங்களரசனுன தருமனது வில்லின்திறத்தால் எங்கள் சேனை அழிந்தது' என்று ஒப்புக்கொண்டு, தங்கள் சேனை அந்தணன் தளர்ந்ததற்கு இரங்குவார் - தங்கள் சேனைத்தலைவனுன துரோணன் தளர்ச்சியடைந்ததற்கு மனம் வருந்துவார்கள்; (எ-று.)

அப்பொழுது அவர்கள் தோல்வி அவர்களே ஒத்துக்கொள்ளும்படியிருந்த தென்பது, பின்னிரண்டடிக்குக் கருத்து. திங்களுவமை- கலைநிரம்புதற்கு. பி - ம்: திறத்துளார். (80)

36.—இருதிறத்துச்சேனையும் ஒத்துப்பொருகையில் கடோத்கசன் பாண்டவசேனைக்குத் துணையாதல்.

இருதளத்துநின்றமன்னரிருவராகவிகலியே
யொருதளத்துமன்னரென்னவொத்துநின்றுடற்றினர்
பொருதளத்திலிங்ஙனின்றுபோர்புரிந்தபொழுதிலே
வருதளத்தொடுதவினன்மருத்துவீமன்மைந்தனே.

(இ - ள்.) (பின்னும்), இரு தளத்துஉம் - இரண்டு சேனைகளி லும், நின்ற - (இறந்தவர்போக மிச்சமாய்) நின்ற, மன்னர் - அரசர் கள், இருவர் ஆக - இவ்விரண்டுபேராக, இகலி - (தம்மில்) மாறு பட்டு, ஒரு தளத்து மன்னர் என்ன ஒத்து நின்று - ஒருசேனையர சர்போல நெருங்கிநின்று, உடற்றினர் - போர்செய்தார்கள்; இங் ஙன் - இவ்வாறு, பொரு தளத்தில் - போர்க்களத்திலே, நின்று - நெருங்கிநின்று, போர் புரிந்த பொழுதில்-யுத்தஞ்செய்தசமயத்தில், மருத்து வீமன் மைந்தன் - வாயுகுமாரனான வீமசேனனது புத்திர னான கடோத்கசன், வரு தளத்தொடு - கூடவருகிற சேனையுடனே, உதவினன் - (பாண்டவசேனைக்குத்) துணையானான்; (எ - று.)

37.—கடோற்கசன் அபிமன் மற்றும் காவன்மன்னர் துரோணன்மேல் நடக்க, பகைச்சேனை பறத்தல்.

நிருதகன்னிமகனுநேமிநீலவண்ணன்மருகனுங்
கருகிநெஞ்சழன்றுவந்தகாவன்மன்னர்யாவருஞ்
சுருதியன்னதூமொழித்துரோணன்மேனடக்கவே
பரிதிகண்டபனியெனப்பகைத்தளம்பறந்ததே.

(இ - ள்.) நிருதகன்னி மகன்உம் - இராக்கதகன்னிகையான இடிம்பியின் புத்திரனான கடோற்கசனும், நேமி நீல வண்ணன் மருகன்உம் - சக்கராயுதத்தையுடைய நீலநிறமுள்ள கண்ணபிரா னது மருமகனான அபிமந்யுவும், (மற்றும்), நெஞ்சு கருகி - மனங் கோபித்து, அழன்று வந்த - சீறிக்கொண்டுவந்த, காவல் மன்னர் யாவர்உம் - (இராச்சியத்தைக்) காக்குந்தன்மையுள்ள அரசர்க ளெல்லோரும், சுருதி அன்ன தூ மொழி - வேதவாக்கியத்தை யொத்த சுத்தமானசொற்களையுடைய, துரோணன்மேல்—, நடக்க- எதிர்த்துச்செல்ல, பகை தளம் - பகைவரான துரியோதனாதியரது சேனை, பரிதி கண்ட பனி என - சூரியமண்டலத்தைக்கண்ட பனி போல, பறந்தது - (இருந்தவிடந்தெரியாதபடி உடனே) விரைந்து ஓடிற்று; (எ - று.)

மருகன் - மருமகன்: இங்கே, உடன்பிறந்தவள்மகன்: கண்ண னது தங்கை சுபத்திரைமகன். உண்மையானவும், வீண்படாதன வும், யாவராலும் சிறந்தபிரமாணமென்று அங்கீகரிக்கப்படுவனவும், இலக்கணமமைந்தனவும், பொருள் நிரம்பினவுமான நிறைமொழி யென்பார், 'சுருதி யன்ன தூமொழி' என்றார். (82)

38.—புறங்கொடுத்தமன்னர்யாவரும் துரியோதனனைச் சார்தல்.

பறந்துபோய்நெடும்பணிப்பதாகையானையெய்தினர்
பிறந்துபோய்வளர்ந்தபின்பிறப்புணர்ந்தபெருமனுந்
துறந்துபோயவிதுரன்முன்றுணித்தவில்லெனத்துணிந்
திறந்துபோனமன்னரன்றிநின்றமன்னரெவருமே.

(இ - ள்.) துறந்து - (பாண்டவர் துரியோதனாதியர் என்னும் இருதிறத்தார்க்கும் உதவிசெய்தலை) விட்டு, போய - (தீர்த்தயாத் திரை) சென்ற, விதுரன்—, முன் துணித்த - முன்னே (துரியோ தனசபையில்) ஒடித்தெறிந்த, வில் என - வில்போல, துணிந்து -

(உடம்பு) இரண்டுதுண்டுபட்டு, இறந்துபோன—, மன்னர் அன்றி - அரசர்க ளல்லாமல், நின்ற - (இறவாமல் மிச்சமாய்) நின்ற, மன்னர் எவர்உம் - (துரியோதனசேனை) அரசர்களெல்லோரும்,— பிறந்து - (ஒருத்திமகனாய் ஓரிடத்துப்) பிறந்து, போய் - (உடனே அவ்விடத்தைவிட்டு) நீங்கி, வளர்ந்த பின் - (பின்பு ஒருத்திமகனாய் ஓரிடத்தில்) வளர்ந்த பிறகு, பிறப்பு உணர்ந்த - (தன்) பிறப்பு வரலாற்றை யறிந்துகொண்ட, பெருமன்உம் - சிறந்த அரசனான கர்ணனும்,—பறந்து போய் - வேகமாகச்சென்று, நெடு பணி பதாகையானொடு - நீண்டபாம்பை யெழுதிய கொடியையுடைய துரியோதனனுடன், எய்தினர் - சேர்ந்தார்கள்; (எ - று.)

நெடுமை-பணிக்கும், பதாகைக்கும் அடைமொழியாம். பிறப்பு உணர்ந்தது, பாண்டவர்க்காகத் தூதுவந்தபொழுது கண்ணன் இரகசியமாகச்சொன்னதனாலும், அதன்பின் அவன்கட்டளைப்படி குந்தி வந்து கூறியதனாலும் என்க. பெருமன் - பெருமானென்பதன் விகாரமுமாம். கண்ணன் பாண்டவர்க்குத் தூதாய்வந்தமைபற்றி அவனையும், அவனுக்குத் தன்வீட்டில் இடங்கொடுத்து விருந்து செய்து உபசரித்தமைபற்றி விதுரனையும், துரியோதனன் பலவாறு இராசசபையில் தூஷிக்க, விதுரன் கடுங்கோபங்கொண்டு 'பாதகனாகிய உன்பொருட்டுப் போர்செய்யேன்: இத்தனைநாளாய் உன் சோற்றையுண்டமைபற்றி உனக்கு எதிராகப் பாண்டவரோடு சேர்ந்தும் பொரேன்' என்றுசொல்லித் தனது வில்லை இரண்டு துண்டாக முறித்துப்போகட்டுவிட்டுத் தீர்த்தயாத்திரைக்குப் பலராமனுடன் சென்றிட்டானென்பது, கீழ்உத்தியோகபருவத்துவந்த வரலாறு. விதுரன் - வில்முதலிய படைத்தொழில்களில் மற்றை யாவரினும் மிகவல்லவன்; இவனை, யமதருமராசனதுஅமிசமென்றும், பரமபாகவதர்களில் ஒருவ னென்றும் நூல்கள் கூறும். (83)

39.—இரண்டுகவிகள் - புறங்கொடுத்துவந்ததுணர்ந்த துரியோதனன், சேனைகளை நெருங்கச்செல்ல ஏவித் தானும் பொரச்செல்லுதல் கூறும்.

வதிட்டனுந்துதிக்கும்வாய்மைவரிசிலைக்கைம்முனிவனோ
டுதிட்டிரன்புரிந்தபோருரைக்கவேயுணர்ந்துளான்
பதிட்டிதம்பிறந்ததின்றுபாண்டவர்க்குஞாலமென்
றதிட்டமொன்றுமுணர்கலானுமனிலவேகமாயினன்.

(இ-ள்.) (துரியோதனனைச்சேர்ந்தஅரசர்கள்யாவரும்), வதிட்டன்உம் துதிக்கும் - வசிஷ்டமகாமுனிவனுந் தோத்திரஞ் செய்யும்படியான, வாய்மை - சத்தியவார்த்தையையும், வரி சிலை கை - கட்டமைந்தவில்லையேந்திய கையையுமுடைய, முனிவனோடு - துரோணனுடனே, உதிட்டிரன் புரிந்த - தருமபுத்திரன்செய்த, போர் - யுத்தத்தின் தன்மையை [துரோணனைத் தருமன் வென்றதை], உரைக்கவே - சொல்லவே, உணர்ந்துளான் - (அதனை) அறிந்தவனாய், அதிட்டம் ஒன்றுஉம் உணர்கலான்உம் - வினைப்பயனைச் சிறிதும் ஆலோசித்தறியாதவனான துரியோதனனும், 'இன்று-இப்பொழுது, பாண்டவர்க்கு - பாண்டு புத்திரர்க்கு, ஞாலம் - பூலோகம், பதிட்டிதம் பிறந்தது - நிலைநின்றதாய்விட்டது,' என்று - என்றுஎண்ணி, அனிலம் வேகம் ஆயினன் - வாயுவேகமுடையவனாய் வந்தான்;

நல்வினை தீவினைகளின் தன்மையையும் அவற்றின்பயனையும் சிறிதாயினும் அறிந்திருப்பின் பாண்டவர்க்கு அரசுகொடாமை முதலிய அநீதிகளைப் புரியானென்பார், 'அதிட்டமொன்று முணர் கலான்' என்றார். வதிட்டன் - வஸிஷ்டன் என்னும் வடசொல் லின் திரிபு; இதற்கு-(பஞ்சஇந்திரியங்களை) நன்றாக வசப்படுத்தின வன் என்று காரணப்பொருள்: ஞானத்திற் குடிகொண்டவ னென் றுங் கூறுவர். இவன் - பிரமனது புத்திரன்: வைதிக லௌகிக ஒழுக்கங்களில் மிகச்சிறந்தவன். சூரியகுலத்தரசர்க்குப் புரோகித னும் பிரதானமந்திரியுமான இவன்போலவே, துரோணனும்கௌர வர்க்குக் குருவும் சிறந்தமந்திரியும் ஆனதால், 'வதிட்டனுந்துதிக் கும்வாய்மை வரிசிலைக்கைம்முனிவன்' என்றார். உம்-உயர்வுசிறப்பு. பதிட்டிதம்-ப்ரதிஷ்டிதம் என்னும் வடசொல் சிதைந்தது; இதற்கு- நிலைநிறுத்தப்பட்டது என்று பொருள். தெளிவுபற்றி, 'பதிட்டி தம் பிறந்தது' என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது; **காலவழு வமைதி.** அதிட்டம்-அத்ருஷ்டம்: இதற்கு-கண்ணாற் காணப்படாத தென்று அவயவப்பொருள். (84)

40. விட்டவிட்டரததுரங்கவேழவாகனத்தொடுந்
தொட்டதொட்டசிலையொடுந்துணிந்துவெங்களத்திடைப்
பட்டபட்டநிருபர்தங்கள்பாடுகாணவெண்ணியோ
முட்டமுட்டவேகுகென்றுதன்படைக்குமுந்தினன்.

(இ - ள்.) விட்ட விட்ட-மேன்மேற்செலுத்தின, ரதம் - தேர் களும், துரங்கம்-குதிரைகளும், வேழம் - யானைகளுமாகிய, வாகனத் தொடுஉம் - வாகனங்களுடனும், தொட்டதொட்ட - மிகுதியாக(க் கையில்)ஏந்திய, சிலையொடுஉம் - வில்லுடனும், துணிந்து - துண்டு பட்டு, வெம் களத்திடை-கொடிய போர்க்களத்தில், பட்ட பட்ட - மிகுதியாக இறந்த, நிருபர்தங்கள் - (தன்பக்கத்து) அரசர்களது, பாடு - நிலைமையை, காண - பார்க்க, எண்ணிஓ - நினைத்தோ, (துரி யோதனன்), முட்ட முட்ட ஏகுக என்று-மிகநெருங்கச் செல்லுங்க ளென்று (தன்சேனையரசரை நோக்கிச்) சொல்லிக்கொண்டு, தன் படைக்கு முந்தினன் - தனது சேனைக்கு முற்பட்டு வந்தான்;

துரியோதனன் வந்தது, மேல் போரிற் பகைவரை வெல்லுத லாக முடியாமையால், அதனை, போர்க்களத்தில் அழிந்த அரசர்கள் பட்டபாட்டைப் பார்க்கக்கருதியோ வந்தானென்று சமத்காரமாக **உத்பிரேட்சித்தார்.** (85)

41.—இரண்டுகவிகள்-அபிமன் தானொருவனாக எண்ணில்லாத சேனைகளை யழித்தல் கூறும்.

முந்தவந்தமன்னனுமுரண்கொள்வாகையரசரும்
வந்தவந்தசேனையும்வகுத்தணிந்துமுனையவே
யந்தவந்தமுனைகடோறுமந்தவந்தவீரர்மெய்
சிந்தவந்துடற்றினன்சிலைத்தடக்கையபிமனே.

(இ-ள்.) முந்த வந்த - (இங்ஙனம்) முற்பட வந்த, மன்னன் உம்-துரியோதனனும், முரண் கொள் - வலிமையைக்கொண்ட, வாகை-வெற்றிக்கு உரிய, அரசர்உம் - (அவன்பக்கத்து) அரசர்களும், வந்த வந்த-(அவர்களுடன்) மிகுதியாய்வந்த, சேனைஉம்—, வகுத்து அணிந்து-ஒழுங்காக அணிவகுக்கப்பட்டுநின்று, முனையஏ-போர்செய்யவே,—அந்த அந்த முனைகள்தோறுஉம் - அந்தந்தப் போர்க்களத்தினிடங்களிலெல்லாம், அந்த அந்த வீரர் மெய் சிந்த - அவ்வவ்வீரரது உடம்பு அழிந்து கீழ்ச்சிந்தும்படி, சிலை தட கை அபிமன் - வில்லைப்பிடித்த பெரியகையையுடைய அபிமந்யு, வந்து உடற்றினன் - எதிர்த்துவந்து போர்செய்தான்; (எ-று.) (86)

42. சிந்திவாளிமழைகளோடுசிலைவளைத்துமுடுகுதே
ருந்திவாரிமேகமென்னவமர்செய்தானுமொருவனே
யந்திவானமொத்ததக்குருதிநீர்கொளடுகளந்
தந்திவாசிதேர்களோடுடைந்ததெண்ணிறுனையே.

(இ-ள்.) முடுகு தேர் - விரைந்துசெல்லுந்தன்மையதான தேரை, உந்தி - (எங்கும்) செலுத்தி, ஓடு சிலை - விரைவாகத் தொழில்செய்கிற வில்லை, வளைத்து - வணக்கி, வாளி மழைகள் - அம்புமழைகளை, சிந்தி - சொரிந்துகொண்டு, வாரி மேகம் என்ன - நீர்கொண்ட மேகம்போல, அமர்செய்தான்உம் - (எதிரில்) போர் செய்தவனும், ஒருவன்ஏ - (அபிமன்)ஒருத்தனே; (அவனால்),எண் இல் தானை-அளவிறந்த (பகைவர்)சேனை, தந்திவாசி தேர்களோடு-யானைகள் குதிரைகள் தேர்கள் என்பவற்றோடு, உடைந்தது-அழிந்தது; அ குருதி நீர் கொள் - அப்படி (அழிந்தபிராணிகளின்) இரத்தப்பெருக்கைக்கொண்ட, அடு களம் - போர்க்களம், அந்தி வானம் ஒத்தது - மாலைப்பொழுதிற் காணப்படுஞ் செவ்வானத்தையொத்தது; (எ-று.)

அபிமனுக்கு நீர்கொண்டமேகம் - நிறத்துக்கும், விசையோடு வருதற்கும், வில்ஏந்துதற்கும், அம்புமழைசொரிதற்கும் உவமை. செவ்வானம் - நிறத்திற்கு உவமை. மழைகளோடு - மழைகளை யெனினுமாம். பி-ம்: உற்றகுருதி நீரிலக்களம். (87)

43.—துரோணன் தருமனுக்குத் தோற்று, பலவீரர்காக்க முனையினின்று விலகுதல்.

ஏறுதேரழிந்துசாபமிற்றுமுற்றுமின்றியே
வேறுதேருமின்றிநின்றுவில்லெடுத்தவேதியன்
கூறுதேருதிட்டிரன்குனித்தவிற்குடைந்துபன்
னூறுதேர்தனைப்புரக்கநொய்தினிற்கழற்றினன்.

(இ-ள்.) நின்று - (தருமநெறியில்)நின்று, வில்எடுத்த-வில்லையேந்திப் போர்செய்த, வேதியன் - துரோணாசாரியன், (அவன்எய்த அம்புகளால்), ஏறு தேர் அழிந்து - (தான்)ஏறிய தேர் சிதைந்து, சாபம் இற்று - கைவில்லுந்துணிந்து, முற்றுஉம் இன்றி - (மற்றையாயுதங்கள்) அனைத்தும் இல்லாமலே, கூறு தேர் உதிட்டிரன் குனித்த விற்கு உடைந்து - சிறப்பித்துச் சொல்லப்படுகிற தேர்வீரனை தருமன் வளைத்த வில்லுக்குத் தோற்று, வேறு தேர்உம்

இன்றி - (மீண்டுமேறிப்போர்செய்தற்கு) வேறொருதேரும் இல்லாமல், பல் நூறு தேர் தனை புரக்க - பல நூறுதேர்வீரர்கள்(தன்னைப்) பாதுகாக்க, நொய்தினில் - விரைவில், கழற்றினன் - (தன்னை) அச்சேனையினின்று) நீக்கிக்கொண்டான் ; (எ-று.)

போரினின்று விலகுதற்றொழிலைச் செய்வதற்கே வருத்தப்படவேண்டியதாயிற் றென்ற பொருள் தோன்ற, 'கழற்றினன்' எனப் பிறவினையாற் கூறினர் ; இனி தன்வினைப்பொருளைப் பிறவினைச் சொல்லாற் குறித்தாருமாம். இனி இதனை, கழறினன் என்றதன் விரித்த லெனக்கொண்டு, அநேகநூறுதேர்வீரர் தன்னைப் பாதுகாக்கும்படி தந்திரமாகச்சொன்னன் என்று உரைப்பாரு முளர். விற்குஉடைந்து, நான்கனுருபு - பகைப்பொருளின்பாற்படும். பி-ம்: தேருமேறிநின்று. (88)

44.—அதுகண்ட பகதத்தன் தருமன் சேனையை எதிர்க்கவருதல்.

முனியு மேனை யானை தேரின் முடுகி வந்த நிருபருங்
குனிசி லைக்கை யபிமன் வெங்க ணைக்கு வென்கொ டுக்கவே
யினிந மக்கு நல்ல கால மென்று சீறி யெய்தினன்
றனித மிக்க சலத மன்ன சதம கன்ச காயனே.

(இ - ள்.) முனியும் - கோபங்கொண்ட, யானை தேரின் முடுகி வந்த - யானைகளின்மேலும் தேர்களின்மேலும் விரைவாகவந்த, ஏனை நிருபர்உம் - (துரியோதனன் முதலிய) மற்றையரசர்களெல்லோரும், குனி சிலை கை - வளைந்தவில்லைப்பிடித்த கையையுடைய, அபிமன்-அபிமந்யுவினது, வெம் கணைக்கு - கொடிய அம்புகளுக்கு, வென் கொடுக்கஏ - முதுகுகொடுக்கவே,—(அச்சமயத்தில்), தனிதம் மிக்க - இடிமிகுந்த, சலதம் - மேகத்தை, அன்ன - ஒத்த, சதமகன் சகாயன் - இந்திரனது துணைவனான பகதத்தன், இனி நமக்கு நல்ல காலம் என்று - (போர்வலிமைகாட்டற்கு) இப்பொழுது நமக்கு நல்ல சமயமென்று, சீறி எய்தினன் - கோபங்கொண்டு எதிர்த்து வந்தான்; (எ - று.)

சிறந்தபோர் எப்பொழுதுநேருமோ என்று சமயத்தை எதிர்பார்த்திருக்குஞ் சுத்தவீர னாதலால், 'இனி நமக்கு நல்ல காலம்' என்றான். இவன் வருகிற ஆரவாரத்துக்கு 'தனிதமிக்கசலதம்'என உவமைகூறினர். முனியும் - எதிர்காலப்பெயரெச்சம் ; இதற்கு - துரோணனும் என்று பொருள் கூறுதல், இவ்விடத்துக்குப்பொருந்தாது. பகதத்தனைச் சதமகன் சகாயனென்ற விவரம், நான்காம் போர்ச்சருக்கத்துக் கூறப்பட்டது. (89)

வேறு.

45.—மூன்றுகவிகள் - பகதத்தன்வருஞ் சிறப்புக் கூறும்.

அதிதவள மத்த வார ணமுமுத லமுதமத னத்தி லாழி மிசை வரு, மதகளிறு சுத்தமாக விவனும மகபதியெ டுத்த கார்மு கமுமவ, னெதிர்தர வெடுத்த சாப மிவனுட னிகல்செயநி னைக்க யாவருளரென, விதமுறவ குத்த யானை யணியுடன் விருதுபக தத்த ராசனுதவவே.

இதுமுதல் ஏழுகவிகள் - குளகம்; அவற்றில், முதல் மூன்றரைச் செய்யுள் ஒருதொடரும், மற்றவை ஒருதொடருமாம்.

(இ - ள்.) 'அதி தவளம் - மிக வெண்ணிறமான, மத்த வாரணம்உம் - மதம்பிடித்த (இவனது) யானையும், முதல் - பூர்வ காலத்தில், அமுத மதனத்தில் - தேவாமிருதத்துக்காகக் கடைகையில், ஆழிமிசை - திருப்பாற்கடலின்மேல், சுத்தம் ஆகவரும் - வெண்ணிறமாகத் தோன்றிய, மதம் களிறு - (ஐராவதமென்னும் இந்திரனது) மதயானையேபோலும்; இவன்உம்—, அ மகபதி - அந்த இந்திரனே போல்வான்; எடுத்த கார்முகம்உம் - (இவன்கையில்) ஏந்திய வில்லும், அவன் - அவ்விந்திரன், எதிர்தர - (பகைவர்) எதிர்க்கையில், எடுத்த - (கையில்) எடுத்த, சாபம் - வில்லேபோலும்; இவனுடன் இகல்செய நினைக்க-இவனோடு (எதிர்த்துப்) போர்செய்தற்கு நினைக்கவும், யாவர்உளர் - எந்தவீரர் தகுதியுள்ளார்?' என - என்று, விருது உதவ - (துதிபாடகர்) பிருதாவளிகளைக்கூற,—விதம் உற வகுத்த - பலவகையாகப் பகுக்கப்பட்ட, யானை அணியுடன் - யானைச்சேனையுடனே,—பகதத்தராசன்—,—(எ - று.)—" களத்திலானபொழுதிலே" என 47-ஆங் கவியோடு தொடரும்.

இவன் ஏறிவரும் பட்டத்துயானைக்கு 'சுப்பிரதீகம்' என்று பெயர்; இது தேவயானையென்றும், இந்திரனால் இவனுக்கு அளிக்கப்பட்டதென்றுங் கூறப்படும்; இது நூறாயிரம்யானைபலமுடையதென்று பெருந்தேவனார் பாரதத்து உரைநடையால் தெரிகிறது. இவனதுவில்லைப் பெருந்தேவனார் " கடவுட்சிலை " என்றதையும் இங்கே யறிக. மத்தவாரணம், அம்ருதமதநம், சுத்தம்-வடசொற்கள். விருது - பிரதாபத்தை வெளியிடும் வாக்கியங்கள்; வெற்றியென்று கூறினருமுளர். அம்மகபதியென்பது, சந்தவின்பத்துக்காகத் தொக்கது. பி-ம் :—உயர்மகபதி.

இதுமுதற் பத்துக்கவிகள் - பெரும்பாலும் ஒன்று ஐந்தாஞ்சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களும், இரண்டுமூன்று ஆறுஏழாஞ்சீர்கள் தேமாச்சீர்களும், நான்கு எட்டாஞ்சீர்கள் கருவிளச்சீர்களும் ஆகிய கழிநெடிலடி நான்குகொண்ட **எண்சீராசிரியச்சந்த விருத்தங்கள்.** 'தனதனன தத்த தான தனதன தனதனன தத்த தான தனதன' எனச் சந்தக்குழிப்புக் காண்க. (90)

46. இருபதுபதிற்றுநூறுகளிறுள விவனினுமிகுத்தவீரர்கடவுவ, ரொருபதுபதிற்றுநூறுமழகளி றுவமையெனமிக்கவாகுவலியினன், முருகனெனவெற்றிநேமிமுகிலென முரணவுணருக்கு வாழ்வுகெடவுயர், சுரபதிதனக்குவாழ்வுவரும்வகை சுரருலகளித்த தோழனிவனரோ.

(இ - ள்) இருபது பதிற்று நூறு களிறு - இருபதினாயிரம் யானைகள், உள - (இவனுக்கு) உள்ளன; (அவற்றை), இவனின்உம் மிகுத்த வீரர்-இவனைக்காட்டிலுஞ் செருக்கிய வீரர்கள், கடவுவர்-செலுத்துவார்கள்; இவன்—, ஒருபது பதிற்றுநூறுமழ களிறு உவமைஎன-பதினாயிரம் இளையஆண்யானைகள் ஒப்பு என்றுசொல்லும்படி, மிக்க-மிகுந்த, வாகு வலியினன்-தோள்வலிமையையுடையான்;

முருகன் என - (தேவசேனாபதியான) சுப்பிரமணியமூர்த்திபோலவும், வெற்றி நேமி முகில் என - சயத்தைத்தருகிற சக்கராயுதத்தையுடைய மேகம்போன்ற திருமால்போலவும், முரண் அவுணருக்கு வாழ்வு கெட - வலிமையையுடைய அசுரர்களுக்கு வாழ்க்கையொழிய, உயர் சுரபதிதனக்கு - சிறந்த தேவேந்திரனுக்கு, வாழ்வு வரும் வகை - நல்வாழ்க்கையுண்டாகும்படி, சுரர் உலகு அளித்த - தேவலோகத்தை (மீட்டு)க்கொடுத்த, தோழன் - சிநேகிதன்; (எ-று.) அரோ - ஈற்றசை. கீழ்ச்செய்யுளில் 'பகதத்தராசன்' எனப் பெயரைக் குறித்த ஆசிரியர், இப்பாட்டால், அவனது சிறப்புக்களைத் தெரிவித்தார்; ஆதலின், இது - குளகத்தில் இடைப்பிறவரலாக நின்றது. பி - ம்:—கடவுவ.

'பதினாயிரம்யானைப் பலமுடையான் நூறாயிரம்யானையின் பலமுடையதோர் சுப்பிரதீபமென்னும் மதஹஸ்தியை மேற்கொண்டு' என்றார், பெருந்தேவனாரும். முருகு - தெய்வத்தன்மை, இளமை, வலிமை; அவற்றையுடையவன் - முருகன்: சூரபதுமன் முதலிய அசுரர்களைச் சங்கரித்தற்காகவே அவதரித்தவனாதலால் முருகனையும், பற்பலசமயங்களில் பகைவரை யொழித்து அமரரைக் காத்ததனால் திருமாலையும், பகதத்தனுக்கு அசுரசங்காரத்திலும் தேவபரிபாலனத்திலும் உவமைகூறினார். முகில் - உவமையாகுபெயர். 'சுரபதிதனக்கு' என்பதை 'வாழ்வுவரும்வகை' என்றதோடும், 'சுரருலகளித்த' என்றதோடும், 'தோழன்' என்றதோடும் கூட்டுக. பாற்கடலைக் கடைந்தகாலத்து அதினின்று உண்டானதொரு சுரையை [வாருணியென்னும் ஒருவகை மதுவை]ப் பானஞ்செய்தது பற்றித் தேவர்க்குச் சுரர் என்றும், அதனைப்பானஞ்செய்யாதது பற்றி மற்றொருதிறத்தார்க்கு அசுரர் என்றும் பெயர். (91)

47. எழிலணிதடக்கைமேருகிரிநிக ரிபசிரமதைக்கமோதியுருமென, மொழியுறவதிர்த்துநீடுபுயகிரி முறைமுறைதடிக்கவேகமொடுபுகை, பொழிசினமனத்தின்மூளவவிரொளி புனைநுதல்வெயர்க்கவாயுகதியென, விழிவழிநெருப்புவீழவிரைவுடன் விறன்மிகுகளத்திலான பொழுதிலே.

(இ - ள்.) எழில் அணி-அழகுபெற்ற, தட கை - பெரியதுதிக்கையையுடைய, மேரு கிரி நிகர் இபம் - மகாமேருமலையையொத்த (தான் ஏறிய) யானையினது, சிரம் - தலையை, அதைக்க - அழுந்தும்படி, மோதி - (கையால்) அடித்து,—உரும் என - இடியோசைபோல, மொழி உற - சொற்கள் வெளிப்படும்படி, அதிர்த்து - ஆரவாரித்து,—நீடு புய கிரி - உயர்ந்த மலைகள்போன்ற தோள்கள், முறை முறை தடிக்க - மேல்மேல் பூரிக்க,—புகை பொழி சினம் - புகையைச்சொரிகிற கோபத்தீ, வேகமொடு - உக்கிரமாக, மனத்தில் மூள - நெஞ்சிற்பற்றியெழ,—(அதனால்), அவிர் ஒளி புனை நுதல் - விளங்குகிற ஒளியைக்கொண்ட நெற்றி, வெயர்க்க-வேர்வையடையவும்,—விழிவழி - கண்களின்வழியாய், நெருப்பு வீழ - தீச்சிந்தவும், —வாயு கதி என - காற்றின் ஓட்டம்போல், விரைவுடன் - வேகத்தோடு, விறல் மிகு களத்தில் - வெற்றிமிக்க போர்க்களத்திலே,

ஆன பொழுதில் - (அந்தப்பகதத்தன்) வந்த சமயத்தில்,—(எ-று.) —" திருகின,***முடுகினர் " என மேற்கவியில் முடியும்.

'எழிலாவது - வளர்ந்தமைந்தபருவத்தும் இதுவளர்ந்துமாறிய தன்றி இன்னும் வளருமென்பது போன்று காட்டுதல்' என்றார், நச்சினார்க்கினியர். மொழி - யானையை அதட்டுதற்குக் கூறுஞ் சொற்களும், வீரவாதமும். புயகிரி - முன்பின்னாகத் தொக்க உவமைத்தொகை. மிக்ககோபாவேசத்தால் தோள்கள் புடைபருத்தலும், உடம்புவேர்த்தலும், கண்கொடிதாதலும் இயல்பு. (92)

48.—அப்போது புறங்கொடுத்த துரியோதனன் பக்கத்தார் பொரமீள, தருமனும் அபிமனும் எதிர்கொள இருதிறத்தார்க்கும் போர்நிகழ்தல்.

பொருதுபுறகிட்டசேனையிவன்வருபொலிவொடுபுறக்கிடாதுதிருகின, வரவினையுயர்த்தகோவுமிளைஞருமவனிபருமொத்துமீளமுடுகினர், முரசெழுதுபொற்பதாகைநிருபனுமுதலமர்செகுத்தவாகையபிமனு, மிருகைமலர்கொட்டியாடியெதிர்கொளவிருபடையுமுற்றபூசல்விளையவே.

(இ-ள்.) பொருது புறகு இட்ட சேனை-(கீழ்ப்) போர்செய்து பின்னிட்ட (துரியோதனன்) சேனைகள், இவன் வரு பொலிவொடு-இப்பகதத்தன் (துணை)வருகிற உற்சாகத்தால், புறக்கிடாது திருகின - பிற்படாமல் (போருக்குத்) திரும்பின; அரவினை உயர்த்த கோஉம் - பாம்புக்கொடியை உயர நாட்டிய துரியோதனனும், இளைஞர்உம் - அவன் தம்பிமார்பலரும், அவனிபர்உம் - (மற்றை) அரசர்களும், ஒத்து - கூடி, மீள முடுகினர் - மறுபடி வேகமாகவந்தார்கள்; (அங்ஙனம் வந்தவர்களை), முரசு எழுது பொன் பதாகை நிருபன் உம் - முரசத்தின்வடிவத்தையெழுதின அழகிய கொடியையுடைய தருமனும், முதல் அமர் செகுத்த வாகை அபிமன்உம் - முந்தின போரில் (பகையை) அழித்த வெற்றியையுடைய அபிமந்யுவும், இரு கை மலர் கொட்டி ஆடி - (உற்சாகத்தோடு) தாமரைமலர்போன்ற (தம்தம்) கைகளிரண்டையும் தட்டிக் கூத்தாடிக்கொண்டு, எதிர் கொள - எதிர்கொள்ள,—இருபடைஉம் - இருதிறத்துச்சேனைகளிலும், உற்ற பூசல் விளைய - மிக்கபோர் உண்டாக,—(எ - று.)— " வாயு குமரன் குத்தி " என வருங்கவியோடு தொடரும்.

பிறகு என்பதுபோல, புறகு என்பதும்-பின் என்னும்பொருள் தருவதோர் இடைச்சொல்லாம். புறகு+இடாது—புறக்கிடாது; உயிர்த்தொடரில் சிறுபான்மை ககரவொற்று இரட்டிற்று. பொற்பதாகை - பொற்காம்பு அமைந்த துவசமுமாம்; பொன் - அதனாலாகிய தண்டத்துக்குக் கருவியாகுபெயர். 'முதல் அமர்' என்றது-பதினொன்றாநாட்போரையும், இப்பன்னிரண்டாநாட்போரில் இதற்கு முந்திநடந்ததையும். (93)

49—மூன்றுகவிகள் - பகதத்தனுக்கும் வீமனுக்கும் நிகழ்ந்த கைகலந்த போரைக் குறிக்கும்.

நிசிசரனெடுத்தவாதிகயிலையுகிரலவிதற்கெனுமுன்வருகரி, விசையுடனடத்திவீமனெனவணவன் விறன்முடிதுணித்துமீள்வனினியென, வசைபலபிதற்றிவேகமுடன்வரும்வலியபகதத்தன்வாகு

கிரிகளை, யோசிதரவளைத்துமார்புசுழிதரவொருகைகொடுகுத்திவாயு குமரனே.

(இ - ள்) 'நிசிசரன் - இராக்கதனான இராவணன், எடுத்த - (கைகளால்) தூக்கின, ஆதி கயிலேஉம் - பழமையான கைலாசகிரியும், இதற்கு நிகர் அல - இவ்யானைக்கு ஒப்பன்று', என - என்று சொல்லப்பட்டு, முன்வரு - சிறப்பாக வருகிற, கரி - (தனது வெள்ளை) யானையை, விசையுடன்நடத்தி - வேகமாகச்செலுத்திக் கொண்டு, 'வீமன் எவண் - வீமன் எவ்விடத்தில் (உள்ளான்)? அவன் விறல் முடி துணித்து-அவனது வலிமையையுடைய தலையைத் துண்டித்து, இனி மீள்வன் - பின்பு திரும்புவேன்', என - என்று, வசைபலபிதற்றி -பலநிந்தைமொழிகளைச் சொல்லிக்கொண்டு, வேகமுடன்வரும் - விரைவாகவருகிற, வலிய பகதத்தன் - வலிமையையுடைய பகதத்தனது, வாகு கிரிகளை - மலைகள் போன்ற கைகளை, ஓசிதர–ஒடியும்படி, வாயுகுமரன்-வீமன், வளைத்து-(தன்கைகளாற் பிடித்து) மடக்கிவிட்டு, மார்பு சுழிதர - (அவன்) மார்பு குழிபடும்படி, ஒரு கைகொடு குத்தி - (தனது) ஒருகையாற்குத்தி,—(எ-று.) —"கதைகொடு அடித்து" என அடுத்த கவியில் தொடரும்.

இவன்கூறிய வீரவாதம் மேல் பயன்பெறாது முடிதல்பற்றி, **'பிதற்றி'** என்றார். வாகுகிரிகளை வளைத்தல் - தோள்களைத்தழுவுதலுமாம். வெள்ளிமலையாதலால், கைலையை வெள்ளையானைக்கு எடுத்துக்கூறினர். **இராவணன் கைலையெடுத்தது:**—இராவணன்திக்கு விசயஞ் செய்கையில் குபேரனோடு எதிர்த்துப் பொருது அவனை வென்று அவனது புஷ்பகவிமானத்தைப்பறித்து அதன்மேலேறிக் கொண்டு கைலாசமலைக்குமேலாக ஆகாசமார்க்கத்திலே விரைந்து மீண்டுவருகையில், அம்மலையின் மகிமையால் விமானந்தடைப்பட்டு நிற்க, அதற்குக்காரணம் இன்னதென்று அறியாது திகைக்கையில், நந்தி எதிரில்வந்து 'சிவபிரானுக்குத் தங்குமிடமான திருக்கைலாயத்தின் பெருமை இது' என்று சொல்லவும் கேளாமல் தசமுகன் தனதுபிரயாணத்துக்குத் தடையாகிய இம்மலையை இப்பொழுதே வேரோடுபறித்து எடுத்து அப்பால் எறிந்துவிட்டுத் தடையின்றி மேற்செல்வேனென்று கூறி விமானத்தினின்றும் இறங்கித் தனது இருபதுகைகளையும் அம்மலையின்கீழ்க்கொடுத்து அதனைப்பெயர்த்து அசைத்தனனென்பது **கதை**. ஓசிதர - துவளஎன்பாருமுளர். **பி-ம்:** குழிதர, சுளிதர. *(94)*

50. **கதைகொடுபனைக்கைவீசியெதிர்வருகடகரியினெற்றியோடையணியொடு,புதைபடவடித்துமீளவிசையொடுபுரவியிரதத்தின் மீதுகுதிகொள, விதயமலர்செற்றமூளவிவனவனெதிர்சிலைவளைத்து வாளிநிரைபட, வுதையவுதைபட்டவாளி தனதுகை யுயர்கதை புடைத்துவீழமுனியவே.**

(இ - ள்.) பனை கை வீசி - பனைமரம்போன்ற துதிக்கையை வீசிக்கொண்டு, எதிர்வரு - எதிர்த்துவருகிற, கட கரியின் - (பகதத்தனது) மதயானையினது, நெற்றி—, ஓடை அணியொடு - முகபடாத்தோடும் (பட்டமாகிய) ஆபரணத்தோடும், புதைபட - உட்குழியும்படி, (வீமசேனன்), கதைகொடு - (தனது) கதாயுதத்தால்,

அடித்து—, மீள - பின்பு, விசையொடு - வேகத்துடனே, புரவி இரதத்தின்மீது - குதிரைகள்பூண்ட தேரின்மேல், குதிகொள - பாய்ந்து ஏறிக்கொள்ள,—(அதனால்), இவன்-பகதத்தன், இதயம் மலர் செற்றம் மூள - இதயகமலத்தில் கோபம் மிக, அவன் எதிர்- அவ்வீமனெதிரில், சிலை வளைத்து - வில்லை வளைத்து, வாளி - அம்புகளை, நிரைபட - கூட்டமாக, உதைய - செலுத்த,—உதைபட்ட வாளி - (அங்ஙனம்) செலுத்தப்பட்டுவந்த அம்புகள், தனது கை உயர்கதை புடைத்து வீழ - தன்னுடைய [வீமனுடைய] கையிலுள்ள சிறந்தகதாயுதத்தில் தாக்கிவிழ, முனிய - (அதனால் வீமன்) கோபங்கொள்ள,—(எ-று.)—"வாளிநெடுமழை***விலகின" என அடுத்த கவியோடு குளகமாய் முடியும்.

பனைமரம்-துதிக்கைக்கு, திரண்டுஉருண்டு நீண்ட வடிவத்தால் உவமம். ஓடையணி-பன்மையீறுபெறாதஅஃறிணையும்மைத்தொகை. இதயம், தாமரை மலர்வடிவமானதொரு மாம்ஸாகாரமாகவுள்ளதனால், 'இதயமலர்' எனப்பட்டது. பி - ம் : பனைக்கை. முனைய.

51. ஒருவரையொருத்தர்வேறலரிதரிதொருபடிசெருச்செய்தாலுமினியென, விருவருமெடுத்தசாபமொலிபட வெதிரெதிர்தொடுத்தவாளிநெடுமழை, யொருவருடலத்தின்மூழ்கிமுனையுறவுருவுதொழிலற்றுநூலின்முறைமையி,னிருவரும்விலக்கவோடிவிலகினவெதிரெதிர்கடித்துவானமறையவே.

(இ - ள்.) ஒருபடி - ஒரேவிதமாக, செரு செய்தால்உம் -போர் செய்தாலும், இனி - இனிமேல், (இவர்கள்), ஒருவரை ஒருத்தர் வேறல் அரிது அரிது என -ஒருத்தரை யொருத்தர் வெல்லுதலில்லையென்னும்படி, இருவர்உம் - அந்தஇரண்டுபேரும், எடுத்தசாபம் - பிடித்த விற்களினின்று, ஒலிபட - ஓசையுண்டாக, எதிர் எதிர் தொடுத்த - எதிரிலேஎதிரிலேசெலுத்தின, வாளி நெடு மழை - பெரிய அம்புமழைகள்,—ஒருவர் உடலத்தில் மூழ்கி முனை உற உருவு தொழில் அற்று - ஒருவருடம்பில்தைத்துக்கூர்நுனி பொருந்த(அவ்வுடம்பை)ஊடுருவிச்செல்லுஞ் செயலில்லாமல், நூலின் முறைமையின் இருவர்உம் விலக்க-ஆயுதசாஸ்திரத்தின் முறைமைப்படி அவ்விரண்டுபேரும் விலக்குதலால், எதிர் எதிர் கடித்து - (இடைவழியிலே ஒன்றையொன்று) எதிரிலே எதிரிலே பற்றிக்கொண்டு, வானம் மறைய - ஆகாயத்தினிடம் மறையும்படி, ஓடி விலகின - விரைந்துமீண்டன ; (எ - று.)

பகதத்தன் வீமன் என்ற இரண்டுபேரும் ஒருவரெய்த அம்பு மற்றொருவர்மேற் படாதபடி ஊக்கத்தோடு எதிரம்புகோத்துப் பொருதல்பற்றி, இருவ ரம்புகளும் இடையிலே ஒன்றையொன்று கௌவிக்கொண்டு கீழ்விழுந்திடுதலால், அப்போர் வெற்றிதோல்விகளாகிய பயனைப் பெறாதாயிற்றென்க. பி-ம் : அரிதென. (96)

52.—இரண்டுகவிகள் - பகதத்தன் ஏறிவந்த யானையின் சிறப்பு.

மகரிகைமருப்புநாலுமுளவெனில்வலியகுணதிக்கில்வாரணமுமெதிர், நிகரலவிதற்குநாமமுரைசெயினிலையுடையசுப்ரதீகமிதன்

வலி, பகரிலிபமெட்டுநாணுமெதிரெறிபடைகளுணர்வுற்றபோரி லெரிவரு, புகர்முககரக்கபோலமதகரிபொருதொழிலுரைக்கலாகு மளவதோ.

(இ - ள்.) மகரிகை - பூணையணிந்த, மருப்பு நால்உம் - நான்கு தந்தங்களும், இதற்கு-இவ்யானைக்கு, உள எனில்-உள்ளனவானால், வலிய குணதிக்கில் வாரணம்உம் - வலிமையையுடைய கீழ்திசை யானையான ஐராவதமும், எதிர் நிகர் அல - (இதற்கு) ஏற்றதைப் பாகாது; நாமம் உரை செயின் - (இதற்குப்) பெயர் இன்னதென்று சொன்னால், நிலை உடைய சுப்ரதீகம் - உறுதி நிலைமையையுடைய சுப்பிரதீகம் (என்பதாம்); இதன் வலி பகரில் - இதன் வலிமை யைக் கூறலுற்றால், இபம் எட்டுஉம் நாணும்-அஷ்டதிக்கஜங்களும் (தமக்கு இப்படிப்பட்ட வலிமையில்லையே யென்று) வெட்கப்படும்; எதிர் எறி-எதிரிலே வீசுதற்குரிய, படைகள்-ஆயுதங்களை, உணர்வு உற்ற-(யாவரும்) அறிந்துபிரயோகிக்கிற, போரில் - யுத்தகளத்தில், எரி வரு - தீஎழுகிற, புகர்முகம் - செம்புள்ளிகளையுடைய முகத்தை யும், கரம் - துதிக்கையையும், கபோலம் மதம் - கன்னங்களினின்று பெருகுகிற மதசலத்தையுமுடைய, கரி - (இப்பகதத்தன்) யானை, பொரு - போர்செய்கிற, தொழில்—, உரைக்கல் ஆகும் அளவதோ - (எவராலேனுஞ்) சொல்லுதற்குத்தக்க அளவுள்ளதோ? (எ-று.)

மகரிகை - யானைக்கொம்பிற்பூண்; சுறுமீனின்திறந்தவாயின் வடிவமாகச்செய்யப்படுவது: மகரமென்பதனடியாப்பிறந்த காரணப்பெயர்; மகரம் - சுறுமீன். இனி, துதிக்கைமேல் எழுதப்படும் மகரிகாபத்திரமுமாம்; அது - சுறுமீன்வடிவமாக எழுதப்படுஞ் சித்திரரேகை; "மகரிகை தரித்த மதமா" என்றார், முதற்போர்ச் சருக்கத்தும். நான்குதந்தங்களையுடைய அந்த ஐராவதத்தினும் இரண்டுதந்தமுடைய இந்தச்சுப்பிரதீகத்துக்குக் குறைவு இரண்டு தந்தம் மாத்திரமே; வலிமை அழகு உத்தமவிலக்கணம் அறிவு வெண்மை பாரந்தாங்குதல் உயர்ந்தவேந்தனையேந்தல் முதலிய சிறப்புக்களில் ஐராவதத்தினும் சுப்பிரதீகம் மேம்பட்டது என்பது- முதல்வாக்கியத்துக்குக் கருத்து. உபமானத்தோடு உபமேயத்துக்கு உள்ள வித்தியாசத்தை விளக்கியதனால், வேற்றுமையணி. 'இதற்கு' என்பதை மத்திமதீபமாக இரண்டு வாக்கியத்துக்குங் கூட்டுக. ஸுப்ரதீகம் என்ற வடசொல்—ஸு - நல்ல, ப்ரதீகம் - அவயவங் களையுடையது எனப் பொருள்படும். எரிவருபுகர்-அனற்பொறியை யொத்த செம்புள்ளிகளுமாம்; யானைமுகத்தில் செம்புள்ளிகளிருத் தல், உத்தமவிலக்கணம்: "தீயுமிழ் சிறுகணுஞ் செம்புகருமுடைத் தாய்" என்றது காண்க. முன்னே கரம் என வந்ததனால், பின்னே 'கரி' என்றது - துதிக்கையுடையதென்னுங் காரணப் பொருள் குறியாது, யானை யென்னுமாத்திரமாய் நின்றது. கபோல மதகரி - வடசொல்தொடர். பி - ம்:—வாரணமுமினி. நாமுமுரை செயின். படைகளுலவுற்ற. (97)

53. கரிகளையெடுத்துவானினிடையிடைகரநுதிகொடெற்று நீடுபிறைங்க, ரிருபணைமருப்பினுலுமவரவரெதிரெதிருடைக்கு நேமியிரதமு, முரனுடையசித்ரவால்கொடொருபடியொலியொடு

புடைக்கும் வாசிவிழவிழ, வரவபயமிட்டுவீழநடை பயிலடிகொடு
துகைக்கும் வீரரணியுமே.

(இ - ள்.) (அவ்யானை),—கரம் நுதி கொடு-(தன்) துதிக்கையின் நுனியினால், கரிகளை எடுத்து - யானைகளை (உயர) எடுத்து, வானின் இடை இடை-ஆகாயத்தினிடந்தோறும், எற்றும்-வீசியெறியும்; நீடு-நீண்ட, பிறை நிகர்-இளஞ்சந்திரனை யொத்த, இரு பணை மருப்பினால்உம் - பருத்த தந்தங்களிரண்டினாலும், அவர் அவர் எதிர் எதிர் - அவ்வவ்வீரர்களது எதிரிலே எதிரிலே, நேமி இரதம் உம் - சக்கரங்களையுடைய தேர்களையும், உடைக்கும்—; உரன் உடைய - வலிமையையுடைய, சித்ரம் வால்கொடு - அழகிய வாலினால், வாசி விழ விழ-குதிரைகள் மிகுதியாக விழும்படி, ஒலியொடு-ஓசையுடன், ஒரு படி புடைக்கும் - ஒருவிதமாய் அடிக்கும்; அரவு-(பூமியைத்தாங்குகிற) ஆதிசேஷன், அபயம் இட்டு வீழ - (பார மிகுதியை ஆற்றாமல்) அபயம் வேண்டிக் கீழ்விழும்படி, நடை பயில் - நடத்தலைச் செய்கிற, அடி கொடு - கால்களால், வீரர் அணிஉம் - காலாள்வீரர்களது கூட்டத்தையும், துகைக்கும் - மிதித்துத் துவைக்கும்; (எ - று.)

இப்பாட்டின் நான்கு வாக்கியங்களால், அந்தப்பகதத்தன்யானை பாண்டவரது நால்வகைச்சேனையையும் தன் உறுப்புக்களால் அழித்தலை விளக்கினார். கரநுதி, சித்ரம்-வடமொழிகள். வால் - வால மென்னும் வடசொல்லின் விகாரம். யானைத்தந்தத்துக்குப் பிறையுவமை-வளைவு வெண்மை ஒளிகளாலென்க. 'அவரவர் எதிர் எதிர்' என்பதை முந்தினபிந்தின வாக்கியங்களுக்குங் கூட்டுக; அவ்வவ்வீரர் பார்த்தும் பரிகாரமொன்றுஞ் செய்யமாட்டாமல் நிற்க என்க. அபயமிடுதல்-பயப்படாதேயென்று வாக்குத்தத்தஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தல், அடைக்கலங்கொள்ளல். 'உரனுடைய சித்திரவாலதிகொடொருபடிபுடைக்கும் வாசிவிழ விழ' என்ற பாடம், சந்தத்துக்குப்பொருந்தாது. பி - ம்: அணியையே. (98)

54.—பகதத்தனாலும் அவன்யானையினாலும் தம்சேனை இளைத்ததுகண்டு தருமன் ஸ்ரீகிருஷ்ணனை நினைத்தல்.

அமர்செய்பக தத்த னாலு மவன்விடு மருவிமத வெற்பி னாலு
மணிகெழு, தமபடைபி ளைத்த தாக விரகொடு தருமனுணர் வுற்று
வேறோர் திசையினி, லிமிழ்முரச ரற்று பூசல் புரிதரு மிளையவ
னடத்து தேரின் வலவனை, நிமலனைய னைத்து மான வொருவனை
நினையினன்ம னத்தி னோடு பரவியே.

(இ - ள்.) (இப்படி), அமர்செய் - போர்செய்கிற, பகதத்தனாலும்—, அவன் விடும்-அவன் ஏவின, அருவி மதம் வெற்பினால்உம்-மதநீரருவியையுடைய மலைபோன்ற யானையினாலும், அணி கெழு தம படை-அழகுமிக்க தம்முடைய சேனை, இளைத்தது ஆக - சோர்வடைய,—(அப்பொழுது), தருமன்—,விரகொடு உணர்வு உற்று -

நல்லுபாயமேற்பட ஆலோசித்து,—வேறு ஓர் திசையினில் - வேறொருதிக்கிலே, இமிழ் முரசு அரற்று பூசல் புரிதரும் - ஒலியை யுடைய பேரிகைகள் ஆரவாரிக்கிற பெரும்போரைச் (சஞ்சத்தக ரோடு) செய்கிற, இளையவன் - (தன்) தம்பியான அருச்சுனன், நடத்து-ஏறிச்செல்கிற, தேரின்-இரதத்தின், வலவனை - சாரதியும், நிமலனை-குற்றமற்றவனும், அனைத்துஉம் ஆனஒருவனை - எல்லாச் சராசரங்களின் வடிவமான ஒருத்தனுமாகிய கண்ணபிரானை, மனத் தினோடு பரவி-கருத்தினோடு துதித்து, நினையினன் - நினைத்தான் [தியானித்தான்]; (எ-று.)

நிமலன் - தான் கருமசம்பந்தமில்லாதவனாதல் மாத்திரமே யன்றி, தனக்குச் சரீரமாகவுள்ள சராசரங்களின் வினைகளுந் தொடரப்பெறாதவன். "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்றபடி சகல சேதநாசேதநங்களின் உள்ளும் புறம்பும் எம்பெருமான் வாசியறக் கலந்துநிற்றலின், 'அனைத்துமான ஒருவன்' என்றார். 'அனைத்து' என்பது-சொல்லால் ஒருமையாயினும், பொருளால் பன்மைகுறிக்கும். 'தேரின் வலவனை, நிமலனை, அனைத்துமான வொருவனை' என்றவற்றால், எம்பெருமானது சௌலப்பியமும், பரத்துவமும், ஜகச்சரீரகத்வமும் விளங்கும். 'இமிர்முரசெற்றுபூசல்' என்ற பாடம், சந்தத்துக்குப் பொருந்தாது; 'இமிர்முரசமெற்று' என்றிருப்பின் பொருந்தும். விறலொடுணர்வுற்று என்ற பாடத்துக்கு - உறுதியாக ஆலோசித்து என்க. (99)

வேறு.

55.—சஞ்சத்தகரைவென்ற அருச்சுனனோடு தருமன்செய்தியை ஸ்ரீக்ருஷ்ணன் கூறுதல்.

நினைவுற்ற பொழுதெழுது முரசுற்ற கொடிநிருப னியமித்த
படிதரியலார், முனைமட்க வமர்பொருது செயமுற்றி யுவகைபெறு
முகிலொத்த வடிவி னெடுமால், புனைவிற்கை யடுபகழி திசைசுற்று
மறையநனி பொழிகொற்ற விசய னுடனே, வினைமுற்றி யுயர்தரும
னுடனிற்றை யரியவமர் விளைவுற்ற தெனவு ரைசெய்தான்.

(இ-ள்.) நினைவு உற்ற பொழுது - (அங்ஙனம் தருமபுத்திரன்) தியானித்தவளவிலே,—எழுது முரசு உற்ற - எழுதப்பட்ட பேரிகைவடிவம் பொருந்தின, கொடி - துவசத்தையுடைய, நிருபன்-தருமபுத்திரன், நியமித்தபடி-கட்டளையிட்டபடி, தரியலார் முனை மட்க - பகைவர்கள் போரில் அழியும்படி, அமர் பொருது - போர் செய்து, செயம் முற்றி - வெற்றி மிக்கு, உவகை பெறு - மகிழ்ச்சி பெற்ற, முகில் ஒத்த வடிவின் நெடு மால்-மேகத்தை யொத்த திருமேனியையுடைய பெருமைக்குணமுள்ள கண்ணபிரான்,—கை - (தன்) கையில், புனை-தரித்த, வில்-வில்லினின்று, அடு பகழி-கொல்லும் அம்புகளை, திசை சுற்றுஉம் மறைய-திக்குக்கள் முழுதும் மறையும்படி, நனிபொழி - மிகுதியாகச் சொரிகிற, கொற்றம் விசயனுடனே - வெற்றியையுடைய அருச்சுனனோடு,—'இற்றை - இப்பொழுது, வினை முற்றி உயர் தருமனுடன் - போர்த்தொழிலில் மிகப்பயின்று [தேறிச்] சிறந்த யுதிட்டிரனோடு, (பகைவர்க்கு)

அரிய அமர் விளைவு உற்றது - பொறுத்தற்கரிய போர் நேர்ந்தது, என-என்று, உரை செய்தான்-சொல்லியருளினன்; (எ - று)

கீழ் ஏழாம்பாட்டில் "கோத்தருமன் பணித்ததற்பின்" என்றதற்கு ஏற்ப, 'நிருபன் நியமித்தபடி' என்றார், அருச்சுனனுக்கு நியமித்தது, அவன் சாரதியான கண்ணனுக்கும் அமையும். 'நியமித்தபடி பொருது' என்றதனால், கண்ணனது அடியார்க்கெளிமை பெறப்படும். அர்ச்சுனனது வடிவத்தில் ஆவேசித்துத் தொழில் செய்பவன் திருமாலே யாதலால், 'அமர்பொருது செயமுற்றி' எனப் போரும் வெற்றியும் கண்ணன்மேலும் ஏற்றிக் கூறப்பட்டன. பி - ம்: பகழிமழை,

இதுமுதல் பன்னிரண்டு கவிகள்-பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ் சீர்கள் புளிமாங்காய்ச்சீர்களும், இரண்டு நான்காஞ் சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களும், ஆறு ஏழாஞ் சீர்கள் புளிமாச்சீர்களுமாகிய **எழுசீரர்சீரியச் சந்தவிருத்தங்கள்.** இவற்றிற்கு 'தனதத்த தனதனன தனதத்த தனதனன தனதத்த தனன தனனா' என்பது சந்தக்குழிப்பு. (100)

56.—பகதத்தனைக்கொல்லவருகஎன்று ஸ்ரீக்ருஷ்ணன் அருச்சுனனிடங் கூறுதல்.

ஒருபத்தொடுறழொருபதுறழ்பத்தொடுறழொருபதுடையெட்டுவிருதருயிர்நீ, தெரிவித்தபகழிகொடுமடிவித்துவலிமையொடுசிலைவெற்றியுற வமர்செய்தாய், முரணற்றதிவணினியுன் னுயிரொத்த தமையனொடு முனைபுக்கு விரைவினணுகா, வரையொத்த களிறுடைய பகதத்தனுயிர்கவரவருகிற்றிநொடியிலெனவே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) (கண்ணன் அருச்சுனனை நோக்கி), 'ஒருபத்தொடு உறழ் ஒருபது உறழ் பத்தொடு உறழ் ஒருபது உடை எட்டு விருதர்-எண்பதினாயிரம் வீரர்களது, உயிர் - உயிரை, நீ—, தெரிவித்த பகழி கொடு-(பெரியோரால்) அறிவிக்கப்பட்ட அம்புகளால், மடிவித்து-(இப்பொழுது) அழித்து, வலிமையொடு-பலத்துடனே, சிலை-வில்வித்தையில், வெற்றிஉற - சயமுண்டாம்படி, அமர் செய்தாய்-போரைச்செய்தாய் ; (ஆதலால்), இவண் - இவ்விடத்தில், முரண் அற்றது - (உனக்குப்) பகை ஒழிந்தது ; இனி - இனிமேல், (நீ), விரைவின் - துரிதமாக, முனை புக்கு - போர்க்களத்தினுட் பிரவேசித்து, உன் உயிர் ஒத்த தமையனொடு அணுகா - உனது உயிரைப் போன்ற தமையனான தருமனுடனே சேர்ந்து, வரை ஒத்த களிறு உடைய பகதத்தன் உயிர் கவர - மலையைப்போன்ற யானையையுடைய பகதத்தனது உயிரை (அவனுடம்பினின்றும்) பறிக்கும் பொருட்டு, நொடியில்-இந்நொடிப்பொழுதிலே, வருகிற்றி-(உடன்) வருவாய்,' என-என்று சொல்லி,—(எ - று.)—'அணுகினன்' என அடுத்தகவியில் முடியும். அன்று சஞ்சத்தகரில் மடிவித்தவர், எண்பதினாயிர வீரரென்க.

உறழ்தல் - எண்கூட்டிப்பெருக்கல். பத்தோடு பெருக்கிய பத்து - நூறு, அதனோடு பெருக்கிய பத்து - ஆயிரம், அதனோடு பெருக்கிய பத்து - பதினுயிரம்: அதனையுடைய எட்டு - எண்பதினுயிரம். தெரிவித்த பகழி - (கிருபனும் துரோணனும் பரமசிவனும் கண்ணபிரானும்) கற்றுக்கொடுத்த அஸ்திரசஸ்திரங்கள். எக்காலத்தும் ஒருபடிப்பட நித்தியமாய் அழிவில்லாததான உயிருக்குமடிதல்-உடம்பினின்று நீங்குதல். விருது - வலிமை, வீரம், வெற்றி; அவற்றையுடையவர் - விருதர். பி - ம்: கிருபர். (101)

57.—ஸ்ரீ க்ருஷ்ணன் அருச்சுனனோடு பகதத்தனை யணுகுதல்.

அரியொத்த பரிகடவிமனமொத்த விரதமிசையமரர்க்கு முதல்வன்மகனோ, டெரிபற்றிவருமனில மெனவெற்றி வரிவளையு மிதழ்வைத்தவ் வொருநொடியிலே, கிரிமுற்று மரிவதொரு கிளர்வச்ரனெனவுதய கிரியுற்ற பரிதியெனவே, கரிசுற்றும் வரவிகட கரடக்கைம்மலையில் வருகணைவிக்ரமனையணுகினுன்.

(இ - ள்.) அரி ஒத்த - (வேகத்தில்) வாயுவைப்போன்ற, பரி - குதிரைகளை, கடவி-செலுத்திக்கொண்டு, மனம் ஒத்த இரதமிசை-மனத்தையொத்த தேரின் மீது, அமரர்க்கு முதல்வன் மகனோடு - தேவர்களுக்குத் தலைவனுன இந்திரனுக்குப் புத்திரனுகிய அருச்சுனனுடன், எரி பற்றி வரும் அனிலம் என - நெருப்போடு தொடர்ந்து வருங் காற்றுப்போல, வெற்றி வரி வளைஉம் இதழ் வைத்து - சயத்துக்கு (அடையாளமாக)க் கோடுகளையுடைய தன் சங்கத்தையும் வாயில்வைத்து ஊதிக்கொண்டு, அ ஒரு நொடியிலே - அந்த ஒரு மாத்திரைப் பொழுதிலே, (கண்ணன்),—கிரி முற்றுஉம் அரிவது ஒரு கிளர் வச்ரன் என - மலைகளெல்லாவற்றையும் இறகறுப்பதொரு விளங்குகிற வச்சிராயுதத்தையுடைய இந்திரன் போலவும், உதயகிரி உற்ற பரிதிஎன - உதய பருவதத்தின் மேற் பொருந்தின சூரியன் போலவும்,—கரி சுற்றும் வர - யானைகள்(தன்னைச்) சுற்றிலும் வர, விகடம் கரடம் கை மலையில் வரு - களிமயக்கத்தையும் மதசலத்தையும் துதிக்கையையுமுடைய மலைபோன்ற யானையின் மீது வருகிற, கணை விக்ரமனை - அம்புத்தொழிலிற் பராக்கிரமத்தையுடைய பகதத்தனை, அணுகினுன் - சமீபித்தான்; (எ - று.)

அரி - ஹரி; வடசொல்: (அகப்பட்டபொருள்களை) அடித்துக்கொண்டு வருவது என்று பொருள். ஏறியவீரரது உள்ளக்கருத்தையொத்துச் செல்லுவதென்பார், 'மனமொத்த இரதம்' என்றூர்; மனோவேகம்போலச் செல்லுந் தேர் என்றலும் ஒன்று. (திருமால் வீற்றிருக்கும் இடமாதல்பற்றி) இதய கமலத்தை யொத்த தேரென்றலும் அமையும். நெருப்பு-பகையழிக்கும் அருச்சுனனுக்கும், காற்று - அவனைத் தூண்டித் தொழில் செய்விக்குங் கண்ணனுக்கும் வினையுவமை. வடமொழி மகாபாரதத்திலும் இவ்வுவமை விவரித்துக் கூறப்பட்டுள்ளமை காண்க. அவ்வொருநொடியிலே-தருமன் நினைத்தவுடன் மிகவிரைவிலே என்றபடி. மூன்றுமடி-யானை மீது வரும் பகதத்தனுக்கு உவமை. இந்திரன், ஐராவதயானையின்மேல்

ஏறிவருதல்பற்றி, உவமை கூறப்பட்டான். இந்திரன் செல்வ வாழ்க்கைபற்றியும், பரிதி தேககாந்தியும் பகையிருளொழிக்குந்தன்மையும் பற்றியும் உவமையாவர். வச்ரன் என்னும்பெயரால் இந்திரனைக் குறித்தலை, மேல் 65 - ஆங் கவியிலுங் காண்க. பி - ம்: வச்ரமென, வச்ரியென, சக்ரனென, கணைவித்தகனே. (102)

58.—இதுவும் அடுத்த கவியும் - பகதத்தன் பொருது அருச்சுனனைத் தளர்வுறச் செய்தமை கூறும்.

அனிலத்தின் மதலையொடு வயிர்த்து மலையுமுனைபமர் விட்டு முகிழ்நகைசெயா, வினியிற்றைய மரிலரிதெளிதொட்டியெதிர் பொருதலென மத்தகரியின் மிசையான், மனமுற்று மழல்கதுவ மொழிமுற்றுமடி நிகரவலிபட்ட சிலையைவளையா, மினலொத்த கணைபலவும் வசையற்ற புகழுடைய விசயற்குமிசை யுதவினன்.

(இ - ள்.) (அப்பொழுது), மத்தகரியின் மிசையான் - மதம் பிடித்த யானையின்மேலுள்ளவனான பகதத்தன்,—அனிலத்தின் மதலையொடு - வாயுவின் புத்திரனான வீமனுடனே, வயிரத்து மலையும் - பகைமையோடு போர்செய்கிற, முனை அமர்-கொடியபோரை, விட்டு - ஒழித்து,—முகிழ் நகை செயா - அரும்புகிற புன்சிரிப்பைச் செய்து,—'இனி—, இற்றை அமரில் - இன்றைப் போரில், எளிது ஒட்டி எதிர் பொருதல் - சுலபமாகச் சபதஞ்செய்து (அவ்வாறே) எதிர்த்துப் போர் செய்தல், அரிது - அருமையானது,' என - என்று எண்ணி,—மனம் முற்றுஉம் - மனம்முழுவதிலும், அழல் கதுவ - கோபத்தீப்பற்றவும், மொழி முற்றுஉம் - (வீரவாதமான) சொற்களெல்லாம், இடி நிகர - இடிமுழக்கத்தை ஒத்திருக்கவும், வலி பட்ட சிலையை வளையா-உறுதி மிக்க வில்லை வளைத்து, மினல் ஒத்த கணை பலஉம்-மின்னலைப்போன்ற [விளங்குகின்ற] அம்புகளநேகங்களை, வசை அற்ற புகழ் உடைய விசயற்குமிசை - பழிப்பில்லாத கீர்த்தியையுடைய அருச்சுனன் மேலே, உதவினன் - பிரயோகித்தான்;

'தேவர்களை இருதிணையாகவுங் கூறலாம்' ஆதலால், இங்கே 'அனிலம்' என அஃறிணையாகக் கூறப்பட்டது. வைரம் என்னும் வடசொல், போலிபெற்றது. முனை அமர் - சிறந்த போருமாம்; முந்தின போரெனினுமாம். மின்னல்-தொழிலாகுபெயர். விசயற்கு மிசை - உருபுமயக்கமாக, அருச்சுனனது மேலே யென்க. பி - ம்: வயிரித்து. (103)

59. அவன் விட்டசுடுகணைகள் கொடிமற்கடமு நடுவணற வெட்டியதிதவளமா, கவனத்தின்முடுகியடுபரிகொத்தியுடலிலிடு கவசத்தைமறையநுழையூச், சிவனுக்குமலரிலுறைபிரமற்குமுணர் வரியதிகிரிக்கைவலவனையுமிச், சவனத்தின்மிகுதுயரமுறுவிக்கவ வசமிகுதளர்வுற்றதனுவிசயனே.

இதுமுதல் மூன்று கவிகள் - குளகம்.

(இ - ள்.) அவன் விட்ட - அப்பகதத்தன் பிரயோகித்த, சுடு கணைகள்-பகையழிக்கவல்ல அம்புகள்,—(அருச்சுனனது), மற்கடம்

கொடிஉம் - குரங்கின் வடிவமெழுதின துவசத்தையும், நடுவண் அற - நடுவிலே அறும்படி, வெட்டி - துணித்து,—அதி தவளம் - மிக் வெண்மையானவையும், மா கவனத்தின் முடுகி அடு - மிக்க நடையில் விசைகொண்டு பொருந்துபவையுமான, பரி-குதிரைகளை, கொத்தி - பேதித்து,—உடலில் இடு கவசத்தை - உடம்பில் தரித்த கவசத்தை, மறைய-(முழுவதும்) மறையும்படி, நுழையூ-நுழைந்து, சிவனுக்குஉம்—, மலரில் உறை-தாமரை மலரில்வாழ்கிற, பிரமற்கு உம் - பிரமனுக்கும், உணர்வு அரிய - அறிதற்கு முடியாத, திகிரி கை வலவனைஉம்-சக்கரத்தையேந்துங் கையையுடைய (பார்த்த) சாரதியான கண்ணனையும், இ சவனத்தில்-இப்போரில், மிகு துயரம் உறுவிக்க - மிக்க துன்பமடையச்செய்ய,—அவசம் மிகு தளர்வு உற்ற - தன்வசந் தப்புந்தன்மை மிகும்படியான தளர்ச்சியை யடைந்த, தனு விசயன்-விற்போரில்வல்ல அருச்சுனன்,—(எ-று.) —'தனதுசிலைகுனிவித்து' என அடுத்த கவியோடு தொடரும்.

மூன்றும் அடியால், "பத்துடையடியவர்க்கெளியவன் பிறர் களுக்கரிய வித்தகன்" என்ற இரண்டுதன்மைகளும் நன்குவிளக்கப் பட்டன. வலவனையும், உம் - உயர்வுசிறப்போடு இறந்ததுதழுவிய எச்சம். சவனம் என்பதை ஸவநம் என்ற வடசொல்லின்திரிபு என்க; வேள்வியென்று பொருளாம்: பொருதல் 'களவேள்வி' எனப் படுதல் காண்க. 'ஜவநம்' என்ற வடசொற்றிரிபு என்றால், வேகத் தால்மிக்க தென்று காரணப்பொருள்படும். மர்க்கடம், அதிதவளம், கவசம், அவசம் - வடசொற்கள். தநு - உடம்பையுடைய எனினு மாம். பி - ம்:—தவளவெங். சிவமுற்ற. வலவனையுமே. (104)

60.-மூன்றுகவிகள்-அருச்சுனன் தன் பராக்கிரமத்தைக் காட்டியமைகூறும்.

உரமிக்க தனதுசிலைகுனிவித்துமதிபின்வகிருவமிக்குமடு பகழி யால், வரமிக்கதவளநிறமதவெற்பையெதிர்கடவிவருவெற்றியவனி பதிநீள், கரமுற்றசிலைகவசமறவெட்டிவிடுகணைகள்கணைவிட்டு விலகவவனும், சரம்விட்டொரயில்விசயனிரதத்தின்வலவன்மிசை தமரத்தினுடனெறியவே.

(இ-ள்.) உரம் மிக்க - வலிமை மிகுந்த, தனது சிலை - தன் வில்லை, குனிவித்து - வளைத்து,—மதியின் வகிர் உவமிக்கும்-சந்திர, னது பிளப்போடு ஒப்புமைகூறப்படுகிற, அடு பகழியால் - அழிக்க வல்ல அர்த்தசந்திரபாணங்களால்,—வரம் மிக்க-மேன்மை மிகுந்த, தவளம் நிறம் - வெண்ணிறத்தையுடைய, மதம் வெற்பை-மதத்தை யுடைய மலைபோன்ற யானையை,எதிர் கடவி வரு-எதிரிற் செலுத்தி வருகிற, வெற்றி அவனிபதி - சயத்தையுடைய அரசனான பகதத்த னது, நீள் கரம் உற்ற - நீண்ட கையிற் பொருந்தின, சிலை-வில்லும், கவசம் - உடற்கவசமும், அற - துணிபடும்படி, வெட்டி - பிளந்து, விடு கணைகள்-(அவன் தன்மேல்) விடும் ஆயுதங்களை, கணை விட்டு- எதிரம்பு கோத்து, விலக - (அருச்சுனன்) விலக்க,—அவன்உம் - அப்பகதத்தனும், சரம் விட்டு - அம்பையொழித்து, ஓர் அயில்-ஒரு வேலாயுதத்தை, விசயன் இரதத்தின் வலவன்மிசை-அருச்சுனனது தேர்ப்பாகனான கண்ணபிரான்மேல், தமரத்தினுடன் - ஆரவாரத்

தோடு, எறிய-வீச,—(எ - று.)—"அயிலதனை*** தறிவித்து" என வருங் கவியோடு தொடரும்.

உவமித்தல்-ஒத்தல். அவநீபதி-வடமொழித்தொடர்; பூமிக்குத் தலைவன். விலக=விலக்க. சந்தவின்பம்நோக்கிவந்தது. பி - ம்: அவனிபதிதன். அவன்மா. (105)

61. எறிகுற்ற வயிலசுரருயிர் செற்றவயிலதனையெதிர்முட்ட விடுபகழியாற், றறிவித்துமகபதிதன்மகன் முக்கணிறைவனொடுசரி யொத்துமுறுவல்புரியா,வெறிமத்தகரடமுகபடமொத்தபுகர்கொண் முகவிகடக்கைம்மலையணியெலா, முறியத்தன்வரிவிலுமிழ்முனை பட்ட பகழிமழைமுகில்வற்கமெனமுடுகினன்.

(இ-ள்.) மகபதிதன் மகன் - இந்திரனுக்குக் குமாரனான அருச்சுனன்,—எறிகுற்ற அயில் - (பகதத்தன் கண்ணன்மேல்) எறிந்த ஆயுதமும், அசுரர் உயிர் செற்ற அயில் - (முன்பு) அசுரர்களது உயிரை அழித்த வேலும் ஆகிய, அதனை—,எதிர் முட்ட விடு பகழியால்-எதிரிலே தாக்கும்படி பிரயோகித்த அம்புகளால், தறிவித்து - துண்டுபடச்செய்து,—மு கண் இறைவனொடு சரி ஒத்து - மூன்று திருக்கண்களையுடைய தலைவனான சிவபிரானுடன் மிகவும் ஒத்து, முறுவல் புரியா - கோபநகை செய்து,—வெறி - கோபாவேசத்தையும், மத்த கரடம் - மதநீர்கொண்ட கபோலங்களையும், முகபடம் ஒத்த புகர்கொள் முகம் - முகபடாத்தைப்போன்ற செம்புள்ளிகளைக் கொண்ட முகத்தையும், விகடம் - மதமயக்கத்தையும், கை - துதிக்கையையுமுடைய, மலை - மலைபோன்ற (பகதத்தன்) யானைகளின், அணி எலாம் - வரிசைகள் யாவும், முறிய -அழியும்படி, தன் வரி வில் உமிழ்-தனது கட்டமைந்த வில்லினால் வெளிவிடப்பட்ட, முனைபட்ட பகழி மழை - கூர்மை மிக்க அம்புமழையை, முகில் வற்கம் என-மேகக்கூட்டம்போல, முடுகினன் - விரைவிற் செலுத்தினன்; (எ - று.)

சிவபிரான் சிரித்துப் புரந் துடைத்ததனால், 'இறைவனொடு சரியொத்து முறுவல் புரியா' என்றார். சரியொத்து-முழுவதும் ஒத்து எனக் கருத்துக் கொள்ளலாம். முகபடம் - யானைக்கு அலங்காரமாக முகத்தின்மேல் இடும் போர்வை. முகத்தின்மேல் உத்தம விலக்கணமாகிய செம்புள்ளிகள் நிறைந்திருத்தல், செந்நிறப்பட்டாடைபோர்த்தது போன்று உள்ளதனால், 'முகபடமொத்த புகர் கொள் முகம்' எனப்பட்டது. அசுரர்-தேவர்க்கு எதிரானவர்; இச்சொல்-பகைவருயிரைக் கவர்பவ ரென்றுங்காரணப் பொருள்படும்: அஸு - உயிர். முனைபட்ட பகழி-போரில் மிகப்பயின்ற அம்பு எனினுமாம். எறி குற்றம் அயில் என்று பிரித்து - நீங்கிய குற்றத்தையுடைய [குற்றம் நீங்கிய]வேல் என்றும் பொருள் கூறலாம். பி - ம்: பகழியிற். முகபட சித்ரபுகர்கொள். (106)

62. அணிகெட்டுமதகரிகள்கரமற்றுவிழமுதியசிரமற்றுவிழவருகுதாழ், மணியற்றுவிழநெடியகுடரற்றுவிழமுறைகொள்வயிறற்று விழவுடலெலாந், துணிபட்டு விழவிசிறு செவியற்று விழவலிய தொடையற்றுவிழமகரிகைப், பணிபெற்றபணைகளொடுபதமற்று விழவுமுதுபடுவித்தபலபகழியே

(இ - ள்.) மத கரிகள் - மதயானைகள், அணி கெட்டு - ஒழுங்கு கெட்டு, கரம் அற்று விழ-துதிக்கையறுந்துவிழவும், முதிய சிரம் அற்று விழ-பழமையான [முற்றின வலிய] தலை யறுந்துவிழவும், அருகு தாழ் மணி அற்று விழ - பக்கங்களில்தொங்குகிற மணிகள் அறுந்துவிழவும், நெடிய குடர் அற்று விழ- நீண்ட குடல் அறுந்து விழவும், முழைகொள் வயிறு அற்று விழ -மலைக் குகையை யொத்த [உள்விசாலமான] வயிறு அறுந்துவிழவும், உடல் எலாம் துணி பட்டு விழ - உடம்புமுழுவதும் துண்டாகி விழவும், விசிறு செவி அற்று விழ - (எப்பொழுதும்) வேகமாக வீசுகிற காதுகள் அறுந்து விழவும், வலிய தொடை அற்று விழ - வலிமையையுடைய தொடையென்னும் உறுப்புக்கள் அறுந்து விழவும், மகரிகை பணிபெற்ற பணைகளொடு - பூணுகிய ஆபரணத்தைத்தரித்த தந்தங்களுடன், பதம்-கால்களும், அற்று - அறுபட்டு, விழ - விழவும், பல பகழி - (அருச்சுனனது) அநேக அம்புகள், உழுது - நன்றாகப்பாய்ந்து, படுவித்த-அழித்தன; (எ - று.) பி - ம்: உடல்களும். (107)

63.—அப்போது பகதத்தன் திருமால் தந்திருந்த வேலை எறிய, ஸ்ரீக்ருஷ்ணன் அதனை மார்பிலேற்றல்.

**பெயர்பெற்றகரிவயவர் பிணமிக்கவமரினிடைபிறகிட்டு முறி
யுமளவே, சயசக்ரதரனையிவன் வழிபட்டபொழுதுதருதழலுக்ரமு
டையதொருவேல், வயமுற்ற சிலை விசயனுடலத்திலெறிவது தன்
வடிவத்திலுறவுதவினா, னயர்வுற்றவுணர் வினலமென முத்தி முதல்
வனெனவருகுற்றரதவலவனே.**

(இ - ள்.) (இங்ஙனம் எய்யப்பட்ட அருச்சுனனம்புகளால்), பெயர் பெற்ற கரி வயவர் - பிரசித்திபெற்ற யானைவீரர்கள், பிணம் மிக்க அமரினிடை- பிணங்கள்மிகுந்த அப்போர்க்களத்திலே, பிறகு இட்டு முறியும் அளவே - பின்னிட்டு அழியும் அத்தருணத்தில்,— இவன் - பகதத்தன், சய சக்ர தரனை - வெற்றியையுடைய சக்கராயுதத்தை யேந்திய திருமாலை, வழிபட்ட பொழுது - (தான் முன்பு)பூசித்தகாலத்தில், தரு-(அப்பெருமானால் தனக்குக்)கொடுக்கப்பட்ட, தழல் உக்ரம் உடையது ஒரு வேல் - நெருப்புப்போலுங் கொடுமையுடையதொரு வேலாயுதத்தை, வயம் உற்ற சிலை விசயன் உடலத்தில் எறிவது - வெற்றிபொருந்தின வில்லையுடைய அருச்சுனனது உடம்பின்மேல் வீசியெறிய அவ்வேல், தன் வடிவத்தில் உற - (அவ்வருச்சுனனுடம்பிற்படாமல்) தன்உடம்பிற்படும்படி [தன் மார்பிற்பொருந்துமாறு ஏற்று],—முத்தி முதல்வன் என அருகு உற்ற-மோக்ஷத்துக்குத்தலைவனென்று சொல்ல(அவ்வருச்சுனனது) சமீபத்திற் பொருந்திய, ரதம் வலவன் - தேர்ப்பாகனான ஸ்ரீ கிருஷ்ணபகவான், அயர்வு உற்ற உணர்வின் நலம் என - மனக்கவற்சியிலுதவிய அறிவின் நற்பயனென்று சொல்லும்படி, உதவினான் - துணைசெய்தருளினான்; (எ - று.)

பகதத்தன் தனக்கு முன்பு திருமால் கொடுத்திருந்ததொரு வேற்படையை அப்பொழுது அருச்சுனனைக்கொல்லும்படி அவன் மார்பின்மேலெறிய, அதனைத் திருமாலின் அவதாரமாகிய கண்ண

பிரான் தன்மார்பில் ஏற்றுக்கொண்டன னென்பதாம். அயர்வு-மனக்கவற்சி யென்றபொருளதா தலே, "உலகுடன் பெறினுங் கொள்ளலரயர்விலர்" என்ற புறநானூற்றிலுங் காண்க. சக்ரதரன், உக்ரம் - வடசொற்கள் திரியாது நின்றன: திரித்துப் பாடமோதினல், சந்தவின்பம் கெடும். பி - ம்: அளவில். (108)

64.—பகதத்தன்வேல் ஸ்ரீகிருஷ்ணன்மார்பில் மாலேயாய்விளங்கத் தேவர்கள் புகழ்தல்.

பருமித்தகளிறுவிடுபகதத்தனெறியுமுதுபகைசெற்றுவருகொடியவேன், மருமத்தினிடைமுழுகுபொழுதத்திலதுபுதியமணிவற்கமிகுதொடையலாய், நிருமித்தபடிதனது புயவெற்பின்மிசையொளிரநிகரற்றகருணேவடிவைக், கருமத்தின் முதலேயிமையவர்சித்தமொடுதொழுதுகரையற்றபுகழுரைசெய்தார்.

(இ - ள்.) பருமித்த - பருமையையுடைய, களிறு-யானேயை, விடு-செலுத்துகிற, பகதத்தன்—,எறியும்-வீசிய, முது பகை செற்று வருகொடிய வேல்-பழமையானபகைவர்களே அழித்துவருகிற கொடுமையையுடைய அந்தவேலாயுதம், மருமத்தினிடை முழுகு பொழுதத்தில் - (கண்ணபிரானது) மார்பினிடத்திலே அழுந்தியபொழுதில், அது—, நிருமித்தபடி - (அப்பெருமான்) நியமித்தபடி, புதிய மணி வற்கம் மிகு தொடையல் ஆய்-புதுமையான இரத்தினங்கள் மிக்கதொரு ஆரவடிவமாய், தனது புயம் வெற்பின் மிசை ஒளிர - அவ்வெம்பெருமானது மலேகள் போன்ற தோள்களின்மேல் விளங்க, (அவ்வற்புதத்தைக் கண்டு), இமையவர் - தேவர்கள், நிகர் அற்ற கருணே வடிவை-ஒப்பில்லாத திருவருளின் மூர்த்தியானவனும், கருமத்தின் முதலே - (அவரவர்செய்த) வினேகளுக்கெல்லாம் காரணமானவனும் ஆகிய கண்ணனே, சித்தமொடு - மனக்கருத்துடனே, தொழுது - வணங்கி, கரை அற்ற புகழ் - அளவில்லாத (அவனது) கீர்த்திகளே, உரைசெய்தார் - எடுத்துக்கூறித் துதித்தார்கள்;

திருமால் தந்த வேலாதலால், அது அப்பெருமானது திருவவதாரமான கண்ணபிரானே ஒன்றும் ஊறு செய்யமாட்டாது அவனது சங்கல்பத்தின்படி ஓர் ரத்தினஹாரவடிவமாக அவன்மார்பில் விளங்கிற்றுஎன்க. இங்ஙனம் அன்பனுன அருச்சுனன்பக்கல் வரம்பு கடந்து கருணேசெய்ததுபற்றி,'கருணே வடிவு' என்ருர். பருமித்த - கல்லணேயையுடைய எனினுமாம். இதுவரையிலும் எப்போரிலும் அவ்வேல் எறியப்பட்டாரைக் கொல்லாது தவறியதில்லேயென்ற தன்மையை, இப்பாட்டில் 'முதுபகைசெற்றுவரு கொடியவேல்' என்றதனுலும், கீழ்ப்பாட்டில் 'தழலுக்ரமுடையதொருவேல் என்றதனுலும் விளக்கினுர். திருமால் சகல சேதநாசேதநங்களின் உள்ளும்புறம்பும் இருந்துகொண்டு அவற்றைக்கொண்டு தொழில்செய்தலால், 'கருமத்தின்முதல்' என்ருர்: இனி, ஊழ்வினேக்கும் முதற்காரணமானவனென்றும்; கேள்வி தவம் முதலிய சற்கருமங்களுக்கெல்லாம் தலேவனென்றும்; கருமத்திற்கேற்ற பயனேயளிப்பவனென்றும் கூறலாம். (109)

65.—இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்: இதுதான் பகதத்தனுயிரைக் கவர்தற்குச் சமயமென்று ஸ்ரீகிருஷ்ணன் படைகொடுக்க, விசயன் அது கொண்டு பகதத்தனைக் களிற்றுச்சேனையோடு வீழ்த்தியமை கூறும்.

இது நிற்க யமனைநிகர்பகதத்தனுயிர்கவரவிதுபக்வமெனவிசய னோடு, டுதரத்தின் முழுதுலகுகுடிவைத்தபுய லுரைசெய்துறுதிக்கண் விடுபகழிதா,னிதயத்தினுடனருளவுயர்வச்ரன்மதலைதொழுதிருபொ ற்கைம்மலர்கொடுகொளா, வதிரத்தனெதிர்களிறு பொரவிட்டநொ டியிலவனகலத்தினுருவவிடவே.

(இ - ள்,) இது நிற்க—; உதரத்தில் முழுது உலகு குடி வைத்த புயல் - (தன்து) திருவயிற்றிலே உலகமுழுவதையுந் தங்கவைத்த மேகம்போன்ற கண்ணபிரான், விசயனோடு-அருச்சுனனுடன், யமனை நிகர் பகதத்தன் உயிர் கவர இது பக்வம் என உரைசெய்து- யமனை யொத்த பகதத்தனது உயிரை வாங்குதற்கு இது தக்க பொழுது என்றுசொல்லி, உறுதிக்கண் விடு பகழிதான் - தவறுத விதத்திலே பிரயோகிக்கப்படுவதான அம்பை, இதயத்தினுடன் அருள-திருவுள்ளத்தோடு (அவனுக்குக்) கொடுத்தருள,—உயர் வச்ரன் மதலை-சிறந்த இந்திரனது புத்திரனை அருச்சுனன், தொழுது- (கண்ணனை) வணங்கி, இரு பொன் கை மலர் கொடு - அழகிய தாமரைமலர் போன்ற (தனது) இரண்டு கைகளாலும், கொளா- (அந்தஅம்பைப்) பெற்றுக் கொண்டு,—அதிர தன் எதிர் களிறு பொர விட்ட நொடியில்-அதிர்ச்சியுண்டாம்படி தன்எதிரிலே யானையைப் போர்செய்தற்குச் செலுத்தின சமயத்தில், அவன் அகலத்தின் உருவ விட-அப்பகதத்தனது மார்பில் ஊடுருவிச் செல்லும் படி (அதனைப்) பிரயோகிக்க,—(எ - று.)—''பகதத்தனும் பட்டு அவனூர்ந்த.பகடும் பட்டு'' என மேல் 67-ஆங் கவியோடு இயையும்.

இங்கே கண்ணன் கொடுத்தது, தனது நாராயணாஸ்திரம்; ''விரிகடல் வண்ணன் றன் வெவ்வாளி யேவப், புரிகடல்சூழ் பூதல த்துப்பொங்கிக்—கரியுண், மலைதுமிக்கு மால்யானை மன்னு பகதத் தன், தலைதுமியப் போயிற்றே தான்'' என்ற பாரதவெண்பாவை அறிக. யமன் என்ற வடசொல் - (பிராணிகளை) அடக்குபவ னென்று பொருள்படும். யமனுவமை, தவறுமற் கொல்லுதற்கு. ''ஒருகையாற் கொள்ளார் கொடாஅர் குரவர்க்கு'' என்ப வாத லால், இருகைகொடு கொண்டான்; இங்ஙனங்கொள்ளுதல், உப சாரம். 'இருபொற்கைம்மலர்கொடு' என்பதை, மத்திமதீபமாக 'தொழுது' என்பதனோடுங் கூட்டலாம். இதயம் - மனதில் தோன் றும் அன்புக்கு ஆகுபெயர். பொற்கை - பொன்னாபரணமணிந்த கையுமாம். பி -ம்: பகழியொன்று. ***(110)***

• 66. பரிதத்தநீவருமிரத மிசைதத்த வெதிர்முடுகு பகதத்தனுடன் முழுதுநீ, டெரிதத்தி யுகுவதென வுகுவித்த குருதிநதியிடைதத்த வலிகெ ழுவுதோட், கிரிதத்த மகுடமொடு தலைதத்த வொருரசத

கிரிதத்த விழுவ தெனவே, கரிதத்த மறியலகை கடைதத்தி யுவகையொடு களமுற்று நடம நவிலவே.

(இ - ள்.) பரி - குதிரைகள், தத்த - தாவிச்செல்ல, வரும் - வருகிற, இரதம்மிசை -(அருச்சுனனது) தேரின்மேல், தத்த - பாயும்படி, எதிர் முடுகு - எதிரிலே (யானையோடு) விரைந்துவருகிற, பகதத்தன் - பகதத்தனது, உடல் முழுவதுஉம் - உடம்புமுழுவதிலும், நீடு எரி தத்தி உகுவது என-மிக்க நெருப்புப்பற்றிச் சிந்துவதுபோல, உகுவித்த-சொரிவித்த, குருதி நதி-இரத்தவாறு, இடை தத்த - அவ்விடத்திலே பெருகவும், வலி கெழுவு தோள் கிரி - பலம் மிக்க மலைகள்போன்ற தோள்கள், தத்த - ஓடியவும், மகுடமொடு தலை தத்த - கிரீடத்தோடு தலை சிதறவும், ஒரு ரசத கிரி தத்தி விழுவது என - வெள்ளிமலை யொன்று முறிந்துவிழுவதுபோல, கரி தத்த-(வெள்ளை) யானை இறந்துவிழவும், மறி அலகை-(எதிர்ப்பட்டாரை) அகப்படுத்துந்தன்மையுள்ள பேய்கள், கடை தத்தி - அவ்விடத்தில் நெருங்கி, உவகையொடு - மகிழ்ச்சியுடனே, களம் முற்றுஉம் - போர்க்களம் முழுவதிலும், நடம் நவில-கூத்தாடவும், —(எ-று.)—"பகதத்தனும் பட்டு அவனூர்ந்த பகடும் பட்டு" என அடுத்த கவியோடு தொடரும்.

'தத்த' என ஒருசொல்லே பலவிடத்தும் வந்தது, **சொற்பின் வருநிலையணி.** 'வினைப்பகுதிகள் வேண்டியபொருளை விளக்கும்' என வடநூலார் கூறிய நியாயத்தால், இக்கவியில் 'தத்த' என்னுஞ்சொல்லுக்கு - சந்தர்ப்பத்திற்கு ஏற்பப் பல பொருள் உரைக்கப்பட்டது. ரஜதம், நடம்-வடசொற்கள். பி - ம்: கெழுபுயக். (*111*)

வேறு,

67\. பகதத் தனும்பட் டவனூர்ந்த பகடும் பட்டுப் புடைசூழச்
சிகரக் கிரிபோ லணிநின்ற சேனைக் களிறும் பட்டமைகண் [யும்
டிகலிற்பொழிகார்வெஞ்சிலைக்கையிமையோர்தலைவன் குமரனை
புகழ்தற் கரிய பாகனையும் புகழா ரில்லைப் பூபாலர்.

(இ - ள்.) (அருச்சுனனெய்த கண்ணனம்பினால்), பகதத்தனும்--,பட்டு-இறந்து, அவன் ஊர்ந்த பகடுஉம்-அவன் ஏறிச்செலுத்திய சுப்பிரதீக யானையும், பட்டு-இறந்து, புடை சூழ - (அவனது) பக்கங்களிற் சுற்றிலும், சிகரம் கிரி போல்-உச்சியையுடைய மலைகள்போல, அணி நின்ற - ஒழுங்கு படநின்ற, சேனை களிறுஉம் - சேனையாகவுள்ள யானைகளும், பட்டமை - இறந்ததை, கண்டு - பார்த்து,— பூபாலர் - அரசர்கள்,—இகலின் பொழி-வலிமையோடு மழைபொழிகிற, கார் - காளமேகம்போன்ற, வெம் சிலை கை இமையோர் தலைவன் குமரனைஉம் - கொடிய வில்லை ஏந்திய கையையுடைய தேவராசகுமாரனான அருச்சுனனையும், புகழ்தற்கு அரிய பாகனைஉம்- துதிக்க முடியாத [அளவிறந்த மகிமையுடைய] பார்த்தசாரதியான கண்ணனையும், புகழார் இல்லை – கொண்டாடிப் பேசாதாரில்லை; (எ - று.)

இருதிறத்து அரசர்களிலும் எவரும் புகழாதவரில்லை: எல்லோரும் புகழ்ந்தனரென்பதாம். உபமேயமாகிய யானையின் மேல்தவிசைக் கருதி, உபமானமாகிய மலையை 'சிகரக்கிரி' என விசேடித்துக் கூறினார். கார் - இருவர்க்கும் உவமை; சிலைக்கு ஒப்பெனினுமாம். மனமொழிமெய்களுக்கு எட்டாத மாயவனாதலால், 'புகழ்தற்கரிய பாகன்' என்றார்; இதனால், பகவானது வாசாமகோசரத்வம் வெளியாம். பி - ம்: புகழாதில்லை.

இதுமுதற் பதினாறுகவிகள் - கீழ்ச்சருக்கத்தின் முப்பத்துநான்காங்கவிபோன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள். (112)

68.—அப்போது காந்தாரர் கொல்வதாக அருச்சுனனைப் புடைசூழ்தல்.

விருதுஞ்சங்கும்பல்லியமுமேன்மேலதிரவிற்போரில் [தார்
பொருதின்றிவனைக்கொன்றன்றிப்போகோமென்னப்புடைசூழ்ந்
மருதுஞ்சகடும்விழவுதைத்தவலவன்கடவவாயுவெனக்
கருதும்புரவித்தேரூருங்கழற்காவலன்மேற்காந்தாரர்.

(இ - ள்.) (அதன்பின்பு), காந்தாரர்-காந்தாரதேசத்து அரசர்கள், விருதுஉம் - பிருதாவளிகளும், சங்குஉம்—, பல் இயம்உம் - அநேக வாத்தியங்களும், மேல்மேல் அதிர - மிக அதிகமாகமுழங்க, 'வில் போரில்-வில்லினாற் செய்யும் யுத்தத்தில், இன்று-இன்றைக்கு, பொருது - போர்செய்து, இவனை - இவ்வருச்சுனனை, கொன்று அன்றி-கொன்றாலல்லாமல், போகோம்-விட்டுப்போகமாட்டோம்', என்ன - என்று (வீரவாதஞ்) சொல்லிக்கொண்டு,—மருதுஉம் சகடுஉம் விழ உதைத்த-மருதமரங்களும் வண்டியுங் கீழ்விழும்படி (திருவடியால்) உதைத்திட்ட, வலவன்-பாகனான கண்ணன், கடவ-செலுத்த,—வாயு என கருதும் - (விசையால்) காற்றென்று எண்ணத்தக்க, புரவி-குதிரைகளைப் பூட்டிய, தேர்-தேரின்மேல், ஊரும்-ஏறிவருகிற, கழல் காவலன்மேல் - வீரக்கழலையுடைய அருச்சுனராசன்மேல், புடைசூழ்ந்தார் - நாற்புறத்துஞ் சூழ்ந்துகொண்டார்கள்: (எ - று.)—விருது - வெற்றியைக்குறிக்கும் சின்னம் முதலிய ஊதுகருவிகளுமாம். பி - ம்: விறற்போரில். (113)

69.—அருச்சுனனம்பால் சகுனிதனயரிருவர் இறத்தல்.

காந்துந்தறுகட்காந்தாரர்கடுவெங்கனல்போற்கண்சிவந்தங் [றிச்
கேந்துஞ்சிலையாற்கணைமழைபெய்தெழிலிக்கணம்போலெதிருன்
சாந்தும்புழுகுங்கமழ்வாகுச்சகுனிதனயர்தலைப்போரிற்
சேர்ந்தன்றிறந்தார்விடசெயனுஞ்செயனுமெனும்போர்ச்செயவீரர்.

(இ - ள்.) காந்தும் - கோபித்துவந்த, தறுகண்-அஞ்சாமையையுடைய, காந்தாரர்-காந்தாரதேசத்து அரசருள், சாந்துஉம் புழுகுஉம் கமழ் வாகு சகுனி தனயர் - சந்தனமும் கஸ்தூரிப்புழுகும் வாசனைவீசுகிற தோள்களையுடைய சகுனியின் புத்திரர்களான, விடசெயன்உம் செயன்உம் எனும் - வ்ருஷஜயன் ஜயன் என்னும் பெயருடைய, போர் செய வீரர் - போரில் வெற்றியையுடைய வீரர்கள், அன்று - அப்போது, கடு வெம் கனல்போல் - மிக்கொடிய

நெருப்புப்போல, கண் சிவந்து - (கோபத்தாற்) கண்கள் சிவக்கப் பெற்று, தலை போரில் - போர்க்களத்தின் முன்னிடத்தில், சேர்ந்து- சென்றுசேர்ந்து, அங்கு - அவ்விடத்தில், எழிலி கணம்போல் - மேகக்கூட்டம்போல, ஏந்தும் சிலையால் கணை மழை பெய்து - (கையில்) எடுத்த வில்லினால் அம்புமழையைச்சொரிந்து, எதிர் ஊன்றி-(அருச்சுனன்) எதிரில் நிலைத்துநின்று, இறந்தார்-(அவன் எய்த அம்புகளால்) அழிந்தார்கள் ; (எ - று.)

'கணைமழை' என்ற உருவகம், 'எழிலிக்கணம்போல்' என்ற உவமைக்கு அங்கமாகவந்தது. சகுனிக்கு இப்பெயர்களுடன் புத்திரர் இருவர் இருந்ததாக வியாசபாரதத்தால் தெரியவில்லை. பி - ம்: கனல்போலவியக்கணப் போதில். சரமழை. எதிரூன்ற. விட சேனன். எனும்பேர். **(114)**

70.—**கவிக்கூற்று: அருச்சுனன் வீரர் பலரையுங் கொன்றதைக் குறித்த பாராட்டு.**

சஞ்சத்தகர்விண்குடியேறத்தானேயடர்த்தான்பகதத்தன்
விஞ்சைக்கடவுள்சிகரநிகர்வேழத்துடனேவிழப்பொருதான்
வஞ்சச்சகுனிமைந்தரையுமலைந்தான்விசயன்வடிக்கணையா
லெஞ்சப்பொருதநரபாலர்க்கிலக்கேதன்றங்கெண்ணுதற்கே.

(இ - ள்.) அன்று - அன்றைத்தினத்தில்,—விசயன் - அருச்சுனன், தானே - தானொருவனாகவே [பிறர் துணையில்லாமலே], சஞ்சத்தகர் விண்குடி ஏற-(அநேக) ஸம்சப்தகர்கள் வீரசுவர்க்கத்தில் சென்று தங்கும்படி, வடிகணையால்-கூர்மையான அம்புகளால், அடர்த்தான் - அழித்தான்; (அன்றியும்), பகதத்தன்—, விஞ்சை கடவுள் சிகரம் நிகர் - வித்தியாதரராசனான குபேரனது மலையாகிய கைலாசத்தை யொத்த, வேழத்துடனே - வெள்ளை யானையுடனே, விழ - இறந்துவிழும்படி, பொருதான்-போர்செய்தான்; (மற்றும்), வஞ்சம் சகுனி மைந்தரைஉம் - வஞ்சனையையுடைய சகுனியின் குமாரர்களையும், மலைந்தான் - அழித்திட்டான்; (ஆதலால்), எஞ்ச பொருத நரபாலர்க்கு - பகையழியும்படி போர்செய்த (தருமன் முதலிய) அரசர்களுக்கு, அங்கு - எதிர்ப்பக்கத்தில், எண்ணுதற்கு- (ஒருபொருளாக) மதிக்கப்படுதற்கு, இலக்கு - ஏற்றகுறி, ஏது - யாது உள்ளது ? (எ - று.)

அருச்சுனனொருவனே இத்தனைபெயரை அன்றைக்கு அழித்திட்டனனென்றால், மற்றைத் தருமன் முதலியோர்க்கெல்லாம் எதிர்த்து அழித்திடுதற்கு ஏற்ற இலக்காவார் எவருமில்லை யென்பதாம். சுவர்க்கம் மேலிடத்திலுள்ளதாதல்பற்றி, 'குடியேற' எனப்பட்டது. சீவகசிந்தாமணியில் "விஞ்சைக்கிறைவன்" என்றவிடத்து, 'விஞ்சை-குணப்பண்பு பண்புடைப்பொருள்மேல் நின்ற ஆகுபெயர்' எனஉரைத்தார் நச்சினார்க்கினியர். வித்யாதரர் - பதினெட்டுத் தேவகணங்களுள் ஒருசாதியார் ; இவர்களுக்கும் யக்ஷர் கந்தருவர் முதலிய மற்றுஞ்சிலவகையார்க்கும் குபேரன் அரசனாதலை, கீழ்ப்புட்ப்யாத்திரைச் சருக்கம், மணிமான்வதைச் சருக்கம்

இவற்றிற் கூறியவற்றாலும் அறிக. அவனுக்கு இடமான அளகாபுரி கைலாசமலையின் ஒருசாருள்ள தென்று புராணம் கூறும். சிகரம் என்ற மலையுச்சியின் பெயர் - இங்கே, மலைக்குச் சினையாகு பெயர். இனி, விஞ்சைக்கடவுள் சிகரம் என்பதற்கு - வித்யாதரர்களுக்கு இருப்பிடமான வெள்ளிமலை யென்றுங்கொள்ளலாம். ஈற்றடிக்கு - போர்செய்து அழிந்த அரசர்மிகப்பலரென்று கருத்துக் கொள்வாருமுளர். (115)

71.—இதுஇங்ஙன் நிற்க, மற்றொருபால் சகுனி தருமனுடனே போர்புரியப்புகுதல்.

இங்கிப்படிபோருடன்றெழுந்தசகுனியிவன்கையெரிகணையாற்
பங்கப்பட்டவரசொழியப்படாதவரசர்பலரோடுஞ்
சிங்கத்தனியேறெனச்செம்பொற்றேர்மேனின்றதருமனுடன்
புங்கப்படையாலமர்புரியப்புகுந்தான்மதுகைப்புலிபோல்வான்.

(இ - ள்) இங்கு-இவ்விடத்தில் [அருச்சுனனெதிரில்],(நடந்த செய்தி), இபடி - இவ்விதமாம்! (மற்றொருபக்கத்தில்), போர் உடன்று எழுந்த - போர் செய்தற்குக் கோபித்துப் புறப்பட்ட, மதுகை புலி போல்வான்-(பராக்கிரமத்தில்) வலிமையுடைய புலியையொப்பவனான, சகுனி—, இவன் கை எரிகணையால் பங்கப்பட்ட அரசு ஒழிய படாத அரசர் பலரோடுஉம் - இவ்வருச்சுனனது கையாலெய்யப்பட்ட அழிக்கவல்ல அம்புகளால் அழிவடைந்த அரசர்கள் தவிர அழிவடையாத பல அரசர்களுடனே(கூடி), தனி சிங்கம் ஏறு என செம்பொன் தேர்மேல் நின்ற தருமனுடன் - ஒப்பற்ற ஆண்சிங்கம்போலச் சிவந்த பொன்மயமான தேரின்மீது நின்ற யுதிட்டிரனுடனே, புங்கம் படையால் அமர் புரிய - அம்புகளாகிய ஆயுதங்களால் போர்செய்தற்கு, புகுந்தான்-சென்றான்; (எ - று.)

தருமனுக்கும் சகுனிக்கும் வலிமை முதலியவற்றில்உள்ள ஏற்றத்தாழ்வு தோன்ற, சிங்கத்தையும் புலியையும் உவமை கூறினார். பலரோடும்புகுந்தான் என்க. தனி நின்ற என்றும் இயைக்கலாம். புங்கப்படை - அம்புகளின் தொகுதியுமாம்; தொகுதியாகிய ஆயுதங்களுமாம். (116)

72.—தருமபுத்திரன் கணை தூவ, சகுனி இலக்காகாமற் பின்னிடுதல்.

சோரத்துடனீபொருதடர்த்தசூதன்றிவைமெய்துளைத்துருவும்
வீரப்பகழியுனையிவற்றால்வெல்வேனெனப்போர்வில்வாங்கி
யீரக்கருணைமுகத்தண்ணலெய்தானவற்றுக்கெட்டாமற்
பேரப்பேரத்தேர்கடவிப்பின்னிட்டவர்க்குமுன்னிட்டான்.

(இ - ள்.) (அதுகண்டு), ஈரம் கருணை முகத்து அண்ணல் - குளிர்ச்சியான அருள் (வெளித்தோன்றும்) முகத்தையுடைய அரசனான யுதிஷ்டிரன்,(சகுனியைப்பார்த்து),'நீ சோரத்துடன் பொருது அடர்த்த சூது அன்று-நீ வஞ்சனையோடு போர்செய்து வென்ற சூது போ ரன்று (இது)! இவை—, மெய் துளைத்து உருவும் வீரம் பகழி- உடம்பைத் துளைசெய்து ஊடுருவுகிற வலிமையையுடைய அம்புகள் [சூதாட்டம் ஆடும் பாசிகைகள் அல்ல]! உனை - (முன்பு என்னைச் சூதுகருவியால் வென்ற) உன்னை, இவற்றால் வெல்வேன் - (இப்பொழுது) இம்மோது கருவிகளால் சயித்திடுவேன்,' என - என்று

(வீரவாதங்)கூறி, போர்வில் வாங்கி-போருக்குரிய வில்லைவளைத்து, எய்தான் - (பல அம்புகளைப்) பிரயோகித்தான்; (உடனே சகுனி), அவற்றுக்கு எட்டாமல் - அவ்வம்புகளுக்கு இலக்காகாதபடி, பேர பேர தேர் கடவி - பிற்படப் பிற்படத் (தன்) தேரை விசையோடு செலுத்திக் கொண்டு, பின் இட்டவர்க்கு முன் இட்டான் - புறங்கொடுத்தவர்களுள் முந்திச்சென்றவனானான்; (எ - று.)

'இது சூது போரன்று, மோதுபோர்: என் கையிலிருப்பவை பாசிகையல்ல, பகழிகள்' என்றது - விலக்கணி; இதனை வடநூலார் **ப்ரதிஷேதாலங்காரம்** என்பர்; பிரசித்தமானதாகியும் அபிப்பிராயத்தோடு கூடியு மிருக்கின்ற விலக்கைச் சொல்லுதல், இதன் இலக்கணம். இதில், அம்பிற் சூதின்தன்மையில்லாமை பிரசித்தமாக விருக்கவும், 'அன்று' என்னும் விலக்கு, நீ சூதாட்டத்தன்றி அம்பிற் சமர்த்தனல்லை யென்னும் இகழ்ச்சியை உட்கொண்டிருக்கின்றது. 'அவற்றிற்கு எட்டாமல்' என்றும், 'பின்னிட்டவர்க்கு முன்னிட்டான்' என்றுங் கூறினது-சமத்காரம். தருமனம்புகளுக்கு எட்டாமலிருக்கவும், முன்னிடவும்-இவையல்லது வேறு உபாயமில்லையென்றவாறு. (117)

73.—சகுனியுடனேவந்து தருமனுடன்பொருத அரசருள் அழிந்தவர்போக மற்றையோர் ஊர்புகுதல்.

உடனேவந்துபொருநிருபரொருவர்க்கொருவருதிட்டிரன்கை
விடநேர்கணையாலேவுண்டுவிளிந்தாரொழிந்தார்வெஞ்சமத்திற்
கடனேதமக்கென்றூர்புகுந்தார்காலைச்செந்தாமரைமலர்ந்த
தடநேரென்னநிறம்பெற்றதப்போதந்தச்சமபூமி.

(இ - ள்.) உடனே - அச்சகுனியுடனே, வந்து—, பொரு - போர்செய்த நிருபர் - அரசருள், ஒருவர்க்கு ஒருவர் - ஒருவரினும் ஒருவர், உதிட்டிரன் கை விடம் நேர் கணையால்-தருமன்கையிலுள்ள விஷத்தையொத்த அம்புகளால், ஏவுண்டு - (மிகுதியாக) எய்யப்பட்டு, விளிந்தார் ஒழிந்தார்-இறந்தவர்கள்போக மிச்சமானவர்கள், வெம் சமத்தில் - கொடியபோரில், தமக்கு கடன் ஏ என்று -(புறங்கொடுத்தல்) தமக்கு முறைமையே யென்று கருதி, ஊர் புகுந்தார் - (தம்) ஊரை யடைந்தார்கள்; அ போது - அப்பொழுது, அந்த சம பூமி - அந்த யுத்தகளம், காலை செம் தாமரை மலர்ந்த தடம் நேர் என்ன - உதய காலத்திற் செந்தாமரைமலர் மலரப்பெற்ற தடாகம் ஒப்பென்னும்படி, நிறம் பெற்றது - விளக்கமடைந்தது; (எ - று.)

பலமுறை தோற்று ஓடிப் பழகிவிட்டதனால், நிருபர்புதுமை கருதி நாணாமல் தமக்குக் கடனேயென்று ஊர்புகுந்தனரென்க. செந்தாமரைமலர்ந்த தடம், இரத்தத்தால் செந்நிறம் பெறுதற்கு உவமையாதலுமாம். இறந்த அரசர்களது இரத்தத்தோடு கீழ் விழுந்த முகங்களைச் செந்தாமரைமலர்களென்னலாம். ஸமபூமி - (போர்செய்தற்கு ஏற்ப) மேடுபள்ளமில்லாமல் எங்குஞ் சமமாகவுள்ள குருக்ஷேத்திர மென்றலுமாம். பி - ம்: எய்வுண்டு. (118)

74.—மற்றொருபக்கத்தில் துரோணன்முதலியோர் வீமனுடன் எதிரிடுதல்.

ஆசாரியனுந்திருமகனுமடல்வேலங்கர்பெருமானுந்
தூசாருரகக்கொடிநெடுந்தேர்த்துரியோதனனுந்தம்பியரும்

வீசாநின்றமாருதம்போல்மேல்வந்தடுத்தவீமனுடன்
கூசாதெதிர்ந்துவெம்பகழிகோத்தார்விசும்பைத்தூர்த்தாரே.

(இ - ள்.) (மற்றொருபக்கத்தில்), ஆசாரியன்உம் - துரோணனும், திருமகன்உம்-(அவனது) சிறந்தகுமாரனான அசுவத்தாமனும், அடல்வேல் அங்கர் பெருமான்உம்-வலிமையையுடைய வேலாயுதத்தையுடைய அங்கதேசத்தார்க்குத் தலைவனான கர்ணனும், தூசுஆர்-சீலையிற்பொருந்தின, உரகம் - பாம்பின் வடிவத்தையுடைய, நெடுந்தேர் - பெரிய தேரையுடைய, துரியோதனனும்—, தம்பியர்உம் - (அவன்) தம்பிமார் பலரும்,—வீசாநின்ற மாருதம் போல் மேல் வந்து அடுத்த வீமனுடன்-வீசுகிற பெருங்காற்றுப்போலத் தம்மேல் வந்து நெருங்கிய வீமசேனனுடனே, கூசாது எதிர்ந்து-கூச்சமில்லாமல் எதிரிட்டு, வெம் பகழி கோத்தார் - கொடிய அம்புகளைத் தொடுத்து, விசும்பை தூர்த்தார்-(அவற்றால்) ஆகாயத்தை நிறைத்தார்கள்; (எ - று.)

இவர்களுக்கு வீமனை யெதிர்க்கவல்ல ஆற்றல் இன்மைதோன்ற 'கூசாது எதிர்ந்து' என்றார்: 'விசும்பைத் தூர்த்தார்' என்றதனால், அவர்எய்த அம்புகள் வீமனை ஒன்றுஞ் செய்யமாட்டாமை தொனிக்கும்; அத்தன்மையை அடுத்த கவியில் விளங்கக் காண்க. சிவபிரானது அருளாற் பிறந்த புத்திரனாதலால், அசுவத்தாமன் 'திருமகன்' எனப்பட்டான். இங்கே வேலைக்கூறி, மற்றையபடைகளையெல்லாம் உபலக்ஷணத்தாற் பெறவைத்தார்; இனி, பகையைத் தவறாது அழிக்கவல்ல தொரு வேற்படையைக் கர்ணன் இந்திரனிடம் பெற்றுள்ளதனால், 'அடல்வே லங்கர்பெருமான்' என்றாரெனினுமாம். ( )

75.—**பகைவரெய்த அம்புகள் வீமன்மேற்படாமல் சிதறினமை.**

கெடுமோகெருடனுரகர்க்குக்கிரிவெஞ்சரபந்தனையரிகள்
அடுமோசக்ரபாணியுடனமருந்துவரோவசுரேசர்
நெடுமேருவின்முக்குவடொடித்தானேயப்புதல்வன்பேருடலிற்
படுமோதொடுத்தபகழிபருப்பதஞ்சேர்மழைபோற்பாறினவே.

(இ - ள்.) உரகர்க்கு - சர்ப்பராசர்க்கு, கெருடன்—, கெடும்ஓ-அழிவனோ? கிரி வெம் சரபந்தனை-மலையிலுள்ள கொடிய சரபத்தை, அரிகள் - சிங்கங்கள், அடும்ஓ - கொல்லமாட்டுமோ? அசுர ஈசர் - அசுரத்தலைவர்கள், சக்ரபாணியுடன்-சக்கராயுதத்தையேந்திய திருக்கையையுடைய திருமாலுடனே, அமர் உந்துவர்ஓ - போரை முடிக்க வல்லரோ? (அவைபோல),— நெடு - உயர்ந்த, மேருவின் - மேருமலையின், மு குவடு - மூன்றுசிகரங்களை, ஒடித்தான்-ஒடித்தவனான வாயுவின், நேயம் புதல்வன்-அன்புள்ள புத்திரனான வீமனது, பேர் உடலில் - பெரிய உடம்பில், தொடுத்த பகழி - (பகைவர்) ஏவிய அம்புகள், படும்ஓ - தைக்கமாட்டுமோ? (மாட்டாமல்), பருப்பதம் சேர் மழை போல் - கல்மலைமேல் விழுந்த மழைத்துளிகள்போல, பாறின - (உள்ளிறங்குதலின்றி) வெளிச்சிதறின; (எ - று.)

வீமனைப் பகைவர் வெல்லமாட்டாமைக்குத் திருஷ்டாந்தங் காட்டியதனால், **எடுத்துக்காட்டுவமையணி.** சரபம் - எட்டுக்கால்களை

யுடையதும், சிங்கத்தைக்கொல்லவல்லது மானதொரு மிருகவிசேடம்: இதனைப் பறவையென்பாரும் உளர். வீமனது மிக்கவலிமையை விளக்கும்பொருட்டு, அவனை 'நெடுமேருவின் முக்குவடொடித்தான் நேயப்புதல்வன்' என்றது; **கருத்துடையடைகொளியணி:** நான்காமடி- **உவமையணி.** ஓகாரங்கள் - எதிர்மறை. (120)

76.—நான்குகவிகள் - எதிர்த்தவர்கள் அஞ்சுமாறும் புகழுமாறும் வீமன் தன்வலிமைகாட்டியதைக் கூறும்.

பொல்லாவவுணர்வைகியமுப்புரநீறெழவன்றரன்வளைத்த
வில்லாமென்னவலியவிறல்வில்லொன்றெடுத்துவிறல்வீமன்
எல்லாமன்னவருமூர்ந்தமெல்லாவிரதங்களுமிமைப்பின்
வல்லானெறிந்தபம்பரம்போற்சுழலும்படிகால்வளைத்தானே.

(இ - ள்.) (அப்பொழுது), விறல் வீமன் - வலிமையையுடைய வீமசேனன், பொல்லா அவுணர் வைகிய - தீக்குணமுடைய அசுரர்கள் தங்கிய, மு புரம் - மூன்றுபட்டணங்கள், நீறு எழ-சாம்பலாம்படி, அன்று - அக்காலத்தில், அரன் வளைத்த - சிவபிரான் வளைத்த, வில் ஆம் என்ன - (மேருமலையாகிற) வில்லாகும் (இது) என்னும்படி, வலிய - வலிமையையுடைய, விறல் - வெற்றியைத்தருகிற, வில் ஒன்று - ஒரு வில்லை, எடுத்து—,—எல்லா மன்னவர்உம்ஊர்ந்த - எல்லாவரசர்களும் ஏறிவந்த, எல்லா இரதங்கள்உம் - தேர்களெல்லாம், இமைப்பின் - கண்ணிமைப்பொழுதிலே, வல்லான் எறிந்த பம்பரம் போல் சுழலும்படி - வல்லவன் சுழற்றியெறிந்த பம்பரம் போலச் சுற்றும்படி, கால் வளைத்தான் - (இரண்டு) கோடியையும் வணக்கினான்; (எ-று.)

உவமையணி. பொல்லா-பொல்லாமை என்ற எதிர்மறைப்பண்பின் அடி; இதற்கு உடன்பாடு - பொற்பு, அல்லது பொலிவு: (பொன் என்னுஞ் சொல் தொல்காப்பியவிதியால் ஈறுதிரிந்துநின்ற 'பொல்' என்பது - இவற்றில் பகுதியா மெனவுய்த்துணர்க.) கால்-வில்லின் தண்டம். (121)

77. ஒன்றுமுதலாப்பலபகழியோரோர்தொடையிற்றொடுத்தேவி
யன்றுமுதன்மையுறமலைந்தவரசருடலந்தொறுமூட்டி
யின்றுமுதலாயோதனத்திலேறேமென்னும்படியாகக் [தான்.
கொன்றுமுதற்பின்வருமுரகக்கொடியோன்மனமுங்கொதிப்பித்

(இ - ள்.) (வீமன்),—முதல் - முதலில், ஒன்று முதல் ஆ பல பகழி - ஒன்றுமுதலாக அநேகம்அம்புகளை, ஓர் ஓர் தொடையில் தொடுத்து ஏவி - ஒவ்வொரு தொடுக்குந்தரத்திலே பிரயோகித்துச் செலுத்தி, (அவற்றை), இன்று முதல் ஆயோதனத்தில் ஏறேம் என்னும்படி ஆக-'இன்றைத்தினம் முதல் [இனி] போரில் எதிர்த்திடோம்' என்று கருதும்படி, அன்று முதன்மை உற மலைந்த அரசர் உடலம் தொறுஉம் மூட்டி-அப்பொழுது சிறப்பு பொருந்தப் போர்செய்த அரசர்களது உடம்பெல்லாம் உட்புகுவித்து, கொன்று-(அவர்களை) அழித்து, —பின் - பின்பு, வரும் உரகக்கொடியோன் மனம்உம் கொதிப்பித்தான் - வருகிற துரியோதனனது மனத்தை

யும் (தன்பெருமிதத்தால்) கொதிக்கச்செய்தான்; (எ - று.)— முதன்மை-முதலாந்தன்மை; முன்னிடுதல். ஊட்டி என்றும் பிரிக்கலாம். ஆயோதநம் - வடசொல். பி - ம்: முதன்மையுடன். (122)

78. கொதித்தானரசனெனவரிவிற்குனித்தாரிளைஞர்குனித்ததுகண்
டதிர்த்தான் வீமன்றன்கணையாலறுத்தான்வில்லுமணிநாணும்
விதித்தான்வரினும்வீமனுடன்விற்போர்புரிதலரிதென்று
மதித்தார்தம்முனினைத்ததெல்லா முடிக்குஞ்சமரவரிவில்லார்.

(இ - ள்.) அரசன் கொதித்தான் என - துரியோதனன் மிகக் கோபித்தா னென்று அறிந்து, இளைஞர்-(அவன்) தம்பிமார், வரி வில் குனித்தார்-(வீமனெதிரில்) கட்டமைந்த விற்களைவளைத்தார்கள்; குனித்தது கண்டு-(அவர்) வளைத்ததைப் பார்த்து, வீமன் —,அதிர்த்தான்-ஆரவாரித்து,தன் கணையால்-தனது அம்புகளால், வில்உம் அணி நாண்உம்- (அவர்கள்) வில்லையும் (அதிற்) பொருந்திய நாணியையும், அறுத்தான்—; (அறுக்கவே), தம் முன் நினைத்தது எல்லாம் முடிக்கும் சமரம் வரி வில்லார் - தங்கள் தமையனை துரியோதனன் கருதிய தொழில்களையெல்லாம் தாம் நிறைவேற்ற வல்ல போருக்குரிய கட்டமைந்த வில்லையுடைய அத்தம்பிமார், 'விதி தான் வரின்உம்-(உலகத்தைப்) படைத்தவனான பிரமதேவன் தானேவந்தாலும், வீமனுடன் வில்போர் புரிதல் அரிது -(அவனுக்கும்) வீமனோடு வில்யுத்தஞ்செய்தல் முடியாது' என்று மதித்தார் - என்று எண்ணினார்கள்; (எ - று.)—விதித்தான்-இன்னபடி நடக்க வேண்டுமென்று நியமித்த முதற்கடவுளு மாம். (123)

79. நின்றார்நின்றபடிகொடித்தேர்நிருபன்றனையுமிளைஞரையும், வன்றாள் வரிவிற்குருவினையுமைந்தன்றனையுங்கன்னனையும், பொன்றாழ்மார்பிற்பலபடைக்கைப்பூபாலரையுங்கொல்லாமற்,கொன்றான் வாயுகுமரன்றன்கோலாகல வெங் கொடுங்கணையால்.

(இ - ள்.) வாயு குமரன் - வீமன், தன் - தனது, கோலாகலம்-ஆரவாரத்தையுடைய, வெம் கொடு கணையால்-மிகக்கொடிய அம்புகளால், கொடி தேர் நிருபன்தனைஉம் - கொடிகட்டிய தேரிலுள்ள துரியோதனராசனையும்,இளைஞரைஉம்-(அவனது) தம்பிமாரையும், வல் தாள் வரி வில் குருவினைஉம்-வலிய முயற்சியையும் கட்டமைந்த வில்லையு முடைய துரோணாசாரியனையும், மைந்தன்தனைஉம் - (அவன்) மகனான அசுவத்தாமனையும், கன்னனையும்—,பொன் தாழ் மார்பின்-பொன்னாரந் தொங்குகிற மார்பையும், பல படை கை-அநேக ஆயுதங்களை யேந்திய கைகளையுமுடைய, பூபாலரைஉம் - (மற்றை) அரசர்களையும், நின்றார் நின்ற படி-அவரவர் (திகைத்து) நின்றவாறே நிற்க, கொல்லாமல் கொன்றான்—;(எ - று.)

வல் தாள் - வலிய கழுந்துமாம். கோலாஹலம் - வடசொல் கொல்லாமல் கொன்றான்-பிராணாபாயமில்லாமல் மரணவேதனைப் படுத்தினன்: தன்னையொன்றும் வருத்தாதிருக்கத் தான் வருத்தினான் என்றலும் ஒன்று: "செய்யாமற்செய்தவுதவி" என்றாற் போல. 'நின்றார் நின்றபடி' என்பதை, (மதித்த தம்பிமார்) நின்றவாறே திகைத்துநின்றாரெனக் கீழ்க்கவியோடு தொடர்ச்சியாக்குவாரும் உளர். (124)

80.—எதிர்த்தவர் புறங்கொடுத் தோடுதல்.

இளைத்ததடையப்பெருஞ்சேனையினிநாமொன்றுக்கீடாகோம், வளைத்தசிலையோ டிவனிற்கமாயன்றன்னோ டவனிற்கத், துளைத்த கணையாற்றுரோணன்வலிதொலைத்தோனிற்கமலைத்திவரைத், திளைத் தலரிதென்றக்களத்திற்பொன்றுவரசர்சென்றுரே.

(இ - ள்.) (பின்பு), அ களத்தில் - அப்போர்க்களத்தில், பொன்று அரசர் - இறவாது சேடித்த அரசர்கள், 'பெரு சேனை அடைய-பெரிய சேனை முழுவதும், இளைத்தது - சோர்வடைந்து விட்டது; இனி - இனிமேல், நாம்—,ஒன்றுக்கு ஈடு ஆகோம் - ஒரு தொழில்செய்தற்கும் வலியுடையமல்லோம்; வளைத்த சிலையோடு - வணக்கிய வில்லுடனே, இவன் - வீமன், நிற்க—,மாயன் தன்னோடு- கண்ணபிரானோடு, அவன் - அருச்சுனன், நிற்க,—துளைத்த கணை யால் துரோணன் வலி தொலைத்தோன் - துளைசெய்த அம்புகளால், துரோணனது வலிமையை (முன்) ஒழியச்செய்த தருமன், நிற்க— இவரை மலைத்து திளைத்தல் - இவர்களை எதிர்த்து நெருங்குதல், அரிது - (எவர்க்கும்) முடியாது,' என்று - என்றுஎண்ணி, சென் றுர் - (புறங்கொடுத்துப் பாசறைக்குப்) போயினுர்; (எ-று.)

ஒன்றுக்கு ஈடாகோம் - சிறிதும் போர்செய்யவல்லோமல் லோம் என்றபடி; ஓரம்புக்கேனும் எதிராகோம் எனினும் அமை யும். 'வளைத்தசிலையோடு' என்றதற்கு இனமாக 'மாயன்தன்னோடு என்றதனுல், ஆயுதம் வீரனுக்கு உதவுதல்போலக் கண்ணன் அருச்சுனனுக்கு உதவுந் தன்மை குறிப்பிக்கப்பட்டது. பி. - ம் அக்கணத்தில். (125)

81.—பாண்டவர் மகிழ்ச்சியோடு பாசறைசேர்தல்.

பெரும்பே ரறத்தின் றிருமகனைப் பிடிப்பானெண்ணி முடிப் பான்போற், பொரும்போ ரரசருடன் வந்தபொற்றேர் முனியும் புறம்போனுன், பரும்பேருரகக் கொடிவேந்தன் பட்டான் மிகவும் பரிபவமென், றரும்போரரசர்களித்தாடவவருந்தம் பாசறையடைந் தார்.

(இ - ள்.) பெரு - பெருமைக்குணமுடைய, பேர் அறத்தின் திரு மகனை - சிறந்த தருமராசனது அழகிய குமாரனை யுதிட்டி ரனை, பிடிப்பான் எண்ணி-(உயிரோடு) பிடித்துக்கொள்ளக் கருதி, முடிப்பான் போல் - (அவ்வாறு) நிறைவேற்றவல்லான்போல், போர் பொரும் அரசருடன் வந்த - போர்செய்யவல்ல (பல) அரசர் களோடு கூடிவந்த, பொன் தேர் முனிஉம் - அழகிய தேரையுடைய துரோணனும், புறம் போனுன் - புறங்கொடுத்து(ப் பாசறைக்கு)ச் சென்றுன்; பரு பேர் உரகம் கொடி வேந்தன் - பருத்தபெரிய பாம் புக்கொடியையுடைய துரியோதனன், மிகஉம் பரிபவம் பட்டான் - மிகவும் அவமானமடைந்தான், என்று - என்றகாரணத்தால், அரு போர் அரசர் - (செய்தற்கு) அரிய போரில்வல்ல (தன்பக்கத்து) அரசர்கள், களித்து ஆட - மிகமகிழ்ந்து கூத்தாட, அவர்உம் - அப்பாண்டவர்களும், தம் பாசறை அடைந்தார் - தமது படை வீட்டைச் சேர்ந்தார்கள்; (எ - று.)

மக - பண்பாகுபெயர். 'முடிப்பான் போல்' என்றது, முடிக்க மாட்டாமை விளக்கிற்று. பி - ம்: பேரரசர். (126)

82.—சூரியாஸ்தமனவருணனை.

காரிற் குளிர்ந்து குழைந்தசெழுங் கானம் பூத்த தெனக்கவினிப்
பாரிற் பிறந்து சிறந்தவிதப் பன்மா நிறத்த பரியனைத்தும்
போரிற் புகுந்து மடிதற்குப் புறந்தந் தஞ்சிப் போவான் போற்
றேரிற் றுரகங் கொண்டோடிக் குடபா லடைந்தான் றினகரனும்.

(இ - ள்.) காரின்-மேகத்தால் [மழைவளத்தால்], குளிர்ந்து - குளிர்ச்சிபெற்று, குழைந்த - தளிர்த்த, செழு கானம் - செழுமை யான காடு, பூத்ததுஎன-பூப்பூத்தது போல, கவினி-அழகுபெற்று, பாரில் பிறந்து - பூமியில் தோன்றி, சிறந்தவிதம் - சிறப்புப்பெற்ற வகையிற்சேர்ந்த, பல் மா நிறத்த - பல சிறந்த நிறங்களையுடைய, பரி அனைத்துஉம் - குதிரைகளெல்லாம், போரில் புகுந்து மடிதற்கு- யுத்தத்தில் புகுந்து இறந்ததற்கு [இறந்தது கண்டு என்றபடி], அஞ்சி - பயந்து, புறந்தந்து - முதுகுகொடுத்து, தேரில் துரகம் கொண்டு - (தனது) தேரிற்பூண்ட குதிரைகளை (அழியாதபடி) உடன் கொண்டு, ஓடி போவான் போல்—, தினகரன்உம்-சூரியனும், குடபால் அடைந்தான்-மேற்குப் பக்கத்தைச் சேர்ந்தான்; (எ-று.)

சூரியன் அஸ்தமித்ததற்கு, போரில் மிகப் பலவாகிய குதிரைகளெல்லாம் அழிதலைப் பார்த்துத் தன் குதிரைகளுக்கும் அழிவுண்டாகுமோ வென்று அஞ்சி முன்நில்லாமல் அக்குதிரைகளுடன் விலகிச் சென்றதாகக் காரணங் கற்பித்தார்; ஏதுத்தற்குறிப்பேற்ற வணி; ஒவ்வொன்று ஒவ்வொரு நிறமும் ஒவ்வொன்றே பலநிறமும் உடையனவா யிருத்தலும், வநாயு பாரசீகம் காம்போசம் பாஹ்லிகம் முதலிய தேசங்களில் பிறத்தலும், குதிரைகளுக்கு உத்தமவிலக்கண மாதலால், 'கானம்பூத்ததெனக் கவினிப் பாரிற் பிறந்து சிறந்த பன் மாநிறத்தபரி' என்றார்; "உருத்திகல் செய் புலி புளியங் கழுதை செந்நாயொண்பூசை நரியினுடன் கரியகாகம், தரித்தவழல் புகை நிறமும் புனையாவாகித் தருக்கி மருத்தெனுங் கவனத்தன்மையெய்தி விரித்தகதிர் வெண்டரளந் திங்கள் நீல மென் கமலத்தாது செழுங் கனகம் காயா, அரத்தமலர்நல்ல பசுங்கிள்ளைபோல அமைந்தவொளி தயங்கிய வங்கத்தவாகி" என்றதனாலும் குதிரைகளின் நிறங்கள் விளங்கும். கவினி - இறந்தகால வினையெச்சம். கவின் என்றது- அவயவங்களின்அமைதி, நற்சுழிகளின் பொருத்தம் முதலியவற்றை. பி - ம்: கவினிற். சிறந்தவிந்த. (127)

வேறு.

83.—புறந்தந்த துரியோதனன்பக்கத்தார் துரியோதனனைச்சார்ந்து இறந்தவர்க்கு இரங்கி, பகதத்தன் வலிமையைக் கூறுபவராதல்.

அறந்தந்த மைந்தற்கும் வீமற்கும் விசயற்கு மபிமற்குமே
புறந்தந்த வயவீர ரெல்லாரு மரசன்பு றஞ்சார்பிருந்
திறந்தந்த யூகத்து வாராத மன்னர்க்கி ரங்காவழா
மறந்தந்த வேழத்து டன்பட்ட பகதத்தன் வலிகூறினார்.

(இ - ள்.) அறம் தந்த மைந்தற்குஉம் - தருமராசன் பெற்ற புத்திரனுன யுதிட்டிரனுக்கும், வீமற்குஉம்—, விசயற்குஉம்-அருச்சுனனுக்கும், அபிமற்குஉம் ஏ-அபிமனுக்கும், (ஆக இந்நாலுபேருக்குமே), புறம் தந்த - முதுகு கொடுத்த, வய வீரர் எல்லார்உம் - வலிமையையுடைய (துரியோதனன் பக்கத்து) வீரர் யாவரும், (சூரியன் அஸ்தமித்தபின்),—அரசன் புறம் சார்பு இருந்து - துரியோதனனது பின்பக்கத்திலே யிருந்துகொண்டு, இறந்து அந்த யூகத்து வாராத மன்னர்க்கு - (அன்றைத்தினம்) மரித்து அந்தக் கூட்டத்தில் வந்திடாத அரசர்களுக்காக, இரங்கா அழா-மனமிரங்கிப் புலம்பி, மறம் தந்த வேழத்துடன் பட்ட பகதத்தன் வலி கூறினர் - கொடுமை விளக்கிற யானையோடு இறந்த பகதத்தனது பலத்தைப் பாராட்டி எடுத்துக் கூறினார்கள்; (எ-று.)

முன் இருக்க முகமில்லாமையால், புறஞ்சார் பிருந்தாரென்க: இனி, புறஞ்சார்பு - சுற்றிடமுமாம். 'அந்த யூகம்' என்றது - அப்பொழுது தாம் கூடிய கூட்டத்தை; இனி, யூகத்து இறந்தது என இயைப்பின், படைவகுப்பில் மரித்து என்க. இரங்குதல் - விசனப்படுதல். வழா மறம் என எடுத்து, தவறுத வலிமை யெனினுமாம். அறம் - அறக்கடவுள்; அஃறிணையாற் கூறியது.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் பதினொரு கவிகள் - பெரும்பாலும் ஐந்தாஞ்சீரொன்று மாங்கனிச்சீரும் மற்றை நான்கும் மாங்காய்ச்சீர்களுமாகிய நெடிலடிநான்குகொண்ட **கலிநிலைத்துறைகள்.** **(128)**

84.—சொன்னசொல்லை நிறைவேற்றுமைக்காகக் கர்ணன் துரோணனைப் பரிகசித்தல்.

மன்னர்க்குமன்னன்றன்முன்வைகுமுனிதன்னைமதியாமனீ
நென்னற்கலங்காமலுரைசெய்தவுரையின்றுநிலையானதே
கன்னப்பெயர்க்காளைமறையந்தணர்க்கென்னகட்டாண்மையுண்
டென்னச்சிரித்தான்வணங்காதவர்க்கென்றுமிடியேறனன்.

(இ-ள்.) (அச்சமயத்தில்), மன்னர்க்கு மன்னன் தன் முன் வைகும் - ராஜராஜனுன துரியோதனனுக்கு எதிரில் வீற்றிருந்த, முனி தன்னை - துரோணனை (ப்பார்த்து), (அவனை ஒரு பொருளாக மதியாமல்),—வணங்காதவர்க்கு என்றுஉம் இடி ஏறு அனன் - (தன்னை) வணங்காதவர்களுக்கு [பகைவர்களுக்கு] எப்பொழுதும் பேரிடிபோல் அழிவுசெய்பவனுன, கன்னன் பெயர் காளை - கர்ணனென்னும் பெயருள்ள வீரன், 'நீ—, மதியாமல்-ஆலோசனையில்லாமல், நென்னல் - நேற்று, கலங்காமல்—கலக்கமில்லாமல் [உறுதியாக], உரை செய்த - (தருமனைப் பிடித்துக்கொடுப்பேனென்று) கூறின, உரை - சபதவார்த்தை, இன்று - இன்றைக்கு, நிலை ஆனது ஏ - உண்மையாய் நடந்தேறிற்றே! மறை அந்தணர்க்கு - வேதமோதுவதே தொழிலாகவுள்ள பிராமணர்க்கு, என்ன கட்டு ஆண்மை உண்டு - என்ன உறுதியான வீரமுள்ளது?' என்ன - என்று (நிந்தையாகக்) கூறி, சிரித்தான் - (பரிகாசமாக) நகைத்தான்; (எ - று.)

கர்ணன் எப்பொழுதும் தன்னைத் தான் மேலாகநினைக்கும் பெருஞ் செருக்குடையவ னாதலால், இங்ஙனஞ் செய்தான். மதியாமல் என்ன என்று இயைத்து உரைத்தலும் ஒன்று. நிலையானது என்றது, பிறகுறிப்புவகையால், நிலைப்படாதுபோனதைக் குறிக்கும்; ஏ-இகழ்ச்சி. 'வணங்காதவர்க்கு என்றும் இடியேறனான்' என்பதை, அடுத்தபாட்டில் வரும் 'குரு' என்பதற்கு அடைமொழியாக்கி, குளகமாக்கொள்ளினும் அமையும். (129)

85.—இதுமுதல் ஏழு கவிகள் - துரோணன் கூறும் எதிர்மொழியைத் தெரிவிக்கும்.

தெருமந்தசிந்தைச்சிலைக்கைக்குருக்கண்சிவப்பேறவே
யுருமுந்திகைக்கக்கொதித்தங்கர்பதியோடுறக்கூறுவான்
கருமந்தவாவிற்றிறற்கன்னனேயல்லகழன்மன்னரிற்
றருமன்றன்முன்னிற்கவல்லார்கள்யாரித்தளந்தன்னிலே.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ-ள்.) (அதுகேட்டு), தெருமந்த-கலங்கின, சிந்தை-மனத்தையுடைய, சிலை கை குரு-விற்பிடிக்குங் கையையுடைய துரோணன், கண் சிவப்பு ஏற - கண்கள் செந்நிறம் மிகவும், உருமும் திகைக்க-இடியும் அஞ்சித் திடுக்கிடவும், அங்கர்பதியோடு-அங்கநாட்டார்க்கு அரசனான கர்ணனுடன், கொதித்து - கோபித்து, உற கூறுவான் - பொருந்த உத்தரஞ் சொல்லுவான்:—கருமம் தவா-செய்யுந்தொழில் தவறாத, வில் திறல் - வில்வன்மையையுடைய, கன்னனே அல்ல - கன்னன்மாத்திரமே யல்லன்: இ தளந்தன்னில் - இந்தப்பக்கத்துச் சேனையி லுள்ள, கழல் மன்னரில் - வீரக்கழலையுடைய அரசர்களில், தருமன்றன் முன் நிற்க வல்லார்கள் யார்-யுதிட்டிரனது முன்னிலையில் (எதிர்த்து) நிற்கவாயினும் வல்லமையுடையார் எவர்?(எ-று.)

'கருமந்தவாவிற்றிறல்' என்ற அடைமொழிகளைக் கர்ணனுக்குத் துரோணன் கொடுத்தது, அவன் அங்ஙனம் தன்னைத் தானே கருதி நன்குமதித்துச் செருக்கிநிற்கிறானென்பதை வெளியிடுதற்கு; இகழ்ச்சியுமாம். உருமும், உம் – உயர்வுசிறப்பு. கன்னனே, ஏ - பிரிநிலையோடு உயர்வுசிறப்பு. பி - ம்: வன்றிறல். (130)

86.இன்றல்லநாளைக்குமாகின்னவைக்கண்ணிருந்தோர்களிற்
சென்றல்லலுறமோதியறன்மைந்தனைத்தங்கள்சிலையாண்மையால்
வென்றல்லதணுகாதவீரர்க்குவிடைநல்குவிறன்மன்னநீ
நன்றல்லவீரத்திலோரஞ்சொலுவதென்றுநனிசீறினான்.

(இ - ள்.) இன்று அல்ல - இன்றைக்கே அன்று: நாளைக்கு உம் ஆம் - நாளைக்காயினும் (தருமனைப்பிடிக்க முயலல்) ஆம்; விறல் மன்ன - வெற்றியையுடைய அரசனே! நின் அவைக்கண் இருந்தோர்களில்-உனது சபையி லுள்ளவர்களுள், சென்று-(எதிர்த்துப்) போய், அறன் மைந்தனை - தருமபுத்திரனை, அல்லல் உற மோதி - துன்பமுண்டாம்படி தாக்கி, தங்கள் சிலை ஆண்மையால் - தங்கள் வில்லின் திறத்தால், வென்று அல்லது அணுகாத - சயித்தல்லது திரும்பிவராத, வீரர்க்கு—, நீ—, விடை நல்கு - அனுமதி கொடுப்

பாய்; வீரத்தில் - பராக்கிரமவிஷயத்தில், ஓரம் சொலுவது - (ஒருவரை ஒருவர்) பக்ஷபாதமாக (நிந்தித்துப்) பேசுவது, நன்று அல்லன்லதன்று, என்று - என்றுசொல்லி, நனி சீறினன், - மிகக்கோபித்தான்; (எ - று.)

மன்ன - துரியோதனனை நோக்கிய விளி. இன்றல்ல நாளைக்குமாம் - நேற்றுச் சொன்னபடி இன்றைக்கு நான் தருமனைப்பிடிக்க முடியாமற் போய்விட்டாலும், கர்ணன்போன்றவர் எவரேனும் இன்று சபதஞ்செய்து அங்ஙனமே நாளைக்கு நிறைவேற்றப்பார்க்கலாமென்றவாறு. நாளைக்கு மா எனப்பிரித்து, நாளைக்கு என்பதை 'சென்று' என்பதனோடும், 'மா' என்பதை 'அவை' என்பதோடும் இயைத்தலுமாம். சிலைக்கைக்குரு (85) சீறினன்(86)என இயையும். 'அல்ல' - ஒன்றன்பாலுக்கு வந்தது. பி-ம் : அறன்மன்னனை. (131)

87. **வில்லாண்மை யாவர்க்கு மின்றென்றெனைப்போல மிகு வஞ்சினஞ், சொல்லாமலறன் மைந்தனைப் போர்மலைந்துங் கடோளாண்மையால், வல்லாரினிக்கொண்டு வம்மின்கள் வந்தாலிம்மண் ணொன்றுமோ, அல்லாதவுலகிற்குமிருநாலுதிக்கிற்குமவர்வீரரே.**

இதுமுதல் ஐந்து கவிகள் - ஒருதொடர்.

(இ - ள்) 'யாவர்க்குஉம் - (என்னையொழிய வேறு) எவருக்கும், வில் ஆண்மை இன்று - வில்லின் திறமை இல்லை,' என்று—, எனை போல - யான் சபதஞ்செய்ததைப்போல, மிகு வஞ்சினம் சொல்லாமல் - மிக்க சபதவார்த்தைகளைக் கூறுமலே,—வல்லார் - வல்லவர்கள், உங்கள் தோள் ஆண்மையால் - உங்களது புசபராக்கிரமத்தால், போர் மலைந்து - போர்செய்து, அறன் மைந்தனை - தருமபுத்திரனை, இனி—, கொண்டு வம்மின்கள் - பிடித்துக்கொண்டு வாருங்கள்; வந்தால் - (அவ்வாறு) வந்தால்,— அவர் - அப்படிக் கொண்டு வருபவரே,—இ மண் ஒன்றும்ஓ - இந்தப்பூலோகமொன்றுக்கு மாத்திரமோ, அல்லாத உலகிற்குஉம் - மற்றையுலகங்களுக்கும், இரு நாலு திக்கிற்குஉம் - எட்டுத்திக்குக்களுக்கும், வீரர் - (சிறந்த) வீரராவர்; (எ - று.)

நான் நேற்றுச்சபதஞ்செய்து இன்று தவறிப்போனேனென்று இகழ வேண்டா; உங்களில் வல்லவர் எவரேனும் முந்திச் சபதஞ் செய்யாவிடினும், நாளைமுதல் என்றைக்காவது தருமனைப் பிடித்து வருக: வந்தால், அவனின் மிக்கவீரன் எவ்வுலகத்தினு மில்லை யென்பதாம். நான் தருமனை நாளையகப் படுத்துத் தரலா மென்று முந்தினநாட்சொல்லியதை, வில்லாண்மை வேறு யாவர்க்கும் இல்லையென்று எண்ணிச் சபதஞ்செய்ததாகக் கன்னன் கருதினனென்று உட்கொண்டு, 'வில்லாண்மையாவர்க்குமின்றென்று எனைப்போல மிகுவஞ்சினஞ் சொல்லாமல்' என்று நிட்டூரமாகத் துரோணன் கூறுகிறான்; இனி, 'என்னைப்போல யாவர்க்கும் வில்லாண்மையின்று' என்று பெருஞ்சபதம்பேசாமல் என இயைத்துக் கூறினுமாம். வல்லார் வம்மின்கள் - முன்னிலையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி ; இனி, வல்லார் - வல்லவர்களே! என அண்மைவிளியுமாம். பி - ம்: என்றனைப்போல. அவன் வீரனே. (132)

88 எம்போலவரிவில்லெடுத்தெய்யயார்வல்லரெனும்வீரரும்
வெம்போரில்வந்தாலோரணுவுக்குநில்லாதுவிளிகிற்பரால்
வம்போதியென்பேறுவல்லாண்மைபுனையந்தவில்லாளிகூர்
அம்போடிராமன்கையடலம்புமுவமிக்கிலதிபாவமே.

(இ - ள்.) 'எம் போல - எம்மைப்போல, வரி வில் எடுத்து - கட்டமைந்தவில்லை யேந்தி, எய்ய-(அம்பு) செலுத்த, யார் வல்லர்- யாவர் வல்லமையுடையார்? [எவருமில்லை யென்றபடி],' எனும்- என்று (பெருமிதம்) பேசுகிற,வீரர் உம்—,வெம் போரில் வந்தால்- கொடிய யுத்தத்தில் வந்தால், ஓர் அணுவுக்குஉம் நில்லாது - ஓர் அணுப்போலவாயினும் முன்நிற்கமாட்டாமல், விளிகிற்பர் - அழிந்திடுவர், ஆல் - ஆதலால், வம்பு ஓதி என் பேறு - வீண்வார்த்தை பேசி யாதுபயன்? வல் ஆண்மை புனை - வலிய பராக்கிரமத்தை ஆபரணமாகக் கொண்ட, அந்த வில் ஆளி - வில்வீரனை அத்தருமனது, கூர் அம்போடு கூர்மையையுடைய அம்புகளுடனே, இராமன் கை அடல் அம்புஉம் - ஸ்ரீராமபிரான்கையிலுள்ள வலியஅம்புகளையும், உவமிக்கில் - ஒப்புமை கூறினால், அதி பாவம் - மிக்க தீவினையாம்; (எ - று.)

போரில் வெற்றிதோல்விகள் ஒருதலையல்ல என்பது, முன்னிரண்டடியின் கருத்து. சிறிதும் மெய்யாகாது முழுப்பொய்யாகுமென்பார், அதனை வற்புறுத்துதற்கு 'அதிபாவம்' என உறுதிமொழியாற் கூறினர். இராமனென அடைமொழிகொடாமற் கூறினர், இராமர் மூவருள்ளுஞ் சிறப்புடைய தசரதராமனையே குறிக்கும். ராமன் என்னும் வடமொழிப்பெயர்க்கு - தன்திறத்தில் யாவரும் மனங்களித்திருக்கப்பெற்றவ னென்பது பொருள்; சகல சற்குணங்களும் பொருந்தினவனென்பது கருத்து. ஆல் - விகாரம். அம்பும், உம் - உயர்வுசிறப்பு. இராமனம்பின் மகிமை, அதிப்பிரசித்தம்; அதனினுஞ் சிறந்தது தருமனம்பு எனப் புகழ்ந்து கூறியவாறு. (133)

89 கொத்தொத்ததொடையொத்தவளவொத்தசிறகொத்தகுதையொத்தவொன், றொத்தொத்து முனையோடுமுனைதத்தி விழுமாறுடன் றேவினன், றத்தொத்த புரவித்தடந்தேர்ம னென்னோடு சாதித்ததும், வித்தொத்தென்வாளியவன் விட்ட வடிவாளி விளைவொத்ததே.

(இ - ள்) கொத்து ஒத்த-திரட்சியில் ஒத்தவையும், தொடை ஒத்த - தொடுக்கும்வகையில் ஒத்தவையும், அளவு ஒத்த - அளவிலொத்தவையும், சிறகு ஒத்த-இறகில் ஒத்தவையும், குதை ஒத்த-அடியில் ஒத்தவையும் ஆகிய அம்புகளை, ஒன்று ஒத்து ஒத்து முனையோடு முனை தத்திவிழும் ஆறு - (யான் எய்த அம்புகள்) ஒவ்வொன்றோடும் பொருந்திப் பொருந்தி நுனியோடு நுனிபட்டு (அவை) விழும்படி, உடன்று ஏவினன்-கோபித்து(த் தருமன்) செலுத்தினன்; தத்து - தாவிச்செல்லுகிற, ஒத்த புரவி -(ஒன்றோடொன்று) ஒத்த குதிரைகளைப் பூட்டிய, தட தேர் - பெரிய தேரையுடைய, மன் - அத் தருமராசன், என்னோடு சாதித்ததுஉம் - மற்

றும் என்னோடு போர்செய்ததை (க் கூறினால்), என் வாளி-யான்எய்த அம்பு, வித்து ஒத்தது - விதையைப் போன்றது; அவன் விட்ட—,வடி வாளி - கூரிய அம்பு, விளைவு ஒத்தது-விளைச்சலைப் போன்றது; (எ - று.)

யான் ஓரம்பு எய்தால் அதற்கு எதிராக அவன் பல அம்புகளை எய்திட்டனனென்பதாம். ஒருவிதை பலவிதைகளுண்டாம்படி விளைதலின், வித்தையும் விளைவையும் உவமைகூறினார். தொடை என்பதற்கு - அம்பென்று பொருள் கூறினால், ஒத்தஅளவு என எடுத்து-சாஸ்திரவிதியோடு ஒத்துள்ள [மாறுபடாத] அள வென்க. ஒத்த புரவி - நூல்முறைமைக்குத் தக்க குதிரை யெனினுமாம். சாதித்தல் - தொடங்கியதைச் சோர்வின்றி நிறைவேற்றலுமாம். ஒத்தல்-, உவமித்தலும், பொருந்தலும். பி - ம் : குதையொத்தவந்து. (134)

90. வன்மைக்கு வயவீமன் வின்மைக்கு முகிலூர்தி மகனன்றிவே, றின்மைக்கு மாவிந்தை கிரிகன்னிகரியென்ப ரெம்மன்னரும், வின்மைக்கும் வன்மைக்கு மிளையோரை யனையாரை மிக வெண்ணலாம், தன்மைக்கு நிலையான தருமற்குநிகர்யார் தனித்தெண்ணவே.

(இ - ள்.) 'வன்மைக்கு - வலிமையில், வய வீமன் - வெற்றியையுடைய வீமசேனனும், வின்மைக்கு - வில்லின்திறத்தில், முகில் ஊர்தி மகன் - மேகங்களை வாகனமாகவுடைய இந்திரனுக்குக் குமாரனான அருச்சுனனும், அன்றி-அல்லாமல், வேறு இன்மைக்கு - வேறு (எவரும் சிறந்தவர்) இல்லாமைக்கு, கிரி கன்னி - இமயமலையின்மகளான பார்வதியினமிசமான, மா விந்தை - சிறந்த துர்க்கை, கரி-சாக்ஷி,' என்பர் எ மன்னர்உம் - என்று எல்லா அரசரும் கூறுவர்; வின்மைக்குஉம்-வில்லின் திறத்திலும், வன்மைக்கு உம் - வலிமையிலும், இளையோரை அனையாரை - தம்பிமார்களான வீமஅருச்சுனர்களைத் தனித்தனியொக்கும் வீரரை, மிக எண்ணல் ஆம் - (உலகத்தில்) மிகுதியாகக் (குறித்துக்) கணக்கிடலாம்; தன்மைக்கு - (வின்மை வன்மை என்ற அவ்விரண்டு) தன்மைகளிலும், நிலை ஆன - உறுதிபெற்ற, தருமற்கு - யுதிட்டிரனுக்கு, தனித்து எண்ண - தனியேகுறித்துக் கணக்கிட, நிகர் யார் - ஒப்பாகுபவர் யாவர்? [எவருமில்லை என்றபடி]; (எ-று.)—இது, துரோணன் தன் சொந்த அபிப்பிராயத்தை வெளியிட்டது.

வீம அருச்சுனர்க்கு ஒப்புமை கிடைத்தல் கூடும்; தருமனுக்குக் கிடைக்காது என்க. முகில்ஊர்தி-அன்மொழித்தொகை; மேகங்களை இந்திரனுக்கு வாகன மென்றல், மரபு. போருக்குஉரியதேவதை துர்க்கை யாதலால், அவள் சாட்சியெனப்பட்டாள். விந்தியமலையில் வீற்றிருத்தல் பற்றி, துர்க்கைக்கு 'விந்தை' என்று பெயர்; விந்த்ய வாஸிநீ' என்பர், வடமொழியாரும்: உமாதேவி தக்ஷகன்னிகையாயிருந்த உடம்பைத் துறந்து, தன்னை மகளாகப்பெறும் பொருட்டுப் பலநாளாகத் தவம்புரிந்துவந்த பர்வதராசனுக்குப் பெண்ணாகத்

தோன்றிப் பார்வதியென்று பெயர்பெற்றாள். தன்மைக்கு நிலைஆன-குணத்திற்கு இடமான எனினுமாம். பி-ம்: வடவிந்தகிரி கன்னி. (135)

91. அதிர்வார்களதிர்மின்களதிரப்பொரும்போரிலறன்மைந்தனே
டெதிர்வார்களுண்டாகிலிக்கங்குல்சென்றாலினிக்காணலாம்
முதிர்வாய்மையாலென்னபயனென்றுவெஞ்சாபமுனியேகினன்
கதிர்வார்முடிக்கோவுமரசர்க்குவிடைதந்துகண்டுஞ்சினன்.

(இ - ள்.) அதிர்வார்கள் அதிர்மின்கள் - வீராவாரஞ்செய்பவர்கள் செய்யுங்கள்; அதிர பொரும் போரில் - நடுக்கமுண்டாம்படி செய்யும் யுத்தத்தில், அறன் மைந்தனோடு எதிர்வார்கள் - தருமபுத்திரனோடு எதிர்க்கவல்லவர்கள், உண்டு ஆகில் - உள்ளாரானால், இ கங்குல் சென்றால் - இவ்விராத்திரி கழிந்தால், இனி - பின்பு [நாளைமுதல்], காணல்ஆம்-(அவர் திறத்தைப்) பார்க்கலாம்: முதிர் வாய்மையால் - வரம்புகடந்த வாய்ப்பேச்சுமாத்திரத்தால், என்ன பயன்—? என்று - என்றுசொல்லிவிட்டு, வெம் சாபம் முனி - கொடிய வில்லில்வல்ல துரோணன், ஏகினன் - (தன்இடத்துக்குச்) சென்றான்; கதிர் வார் முடி கோஉம் - ஒளியையுடைய நீண்ட கிரீடத்தையுடைய துரியோதனனும், அரசர்க்கு - (கர்ணன் முதலிய) அரசர்களுக்கெல்லாம், விடை தந்து - (செல்ல) அனுமதிகொடுத்து, கண் துஞ்சினன் - தூங்கினன்; (எ - று.)

முன்னிரண்டடிகளோடு துரோணன் மறுமொழி முற்றுகின்றது. பின்னிரண்டடிகள் - அவ்வாறுகூறிய துரோணன் ஏக, யாவர்க்கும் விடைகொடுத்துத் துரியோதனன் துயின்றமையைத் தெரிவிக்கும். அதிர்வார்கள் அதிர்மின்கள் - வழூவமைதி. கதிர்-சூரியன்போன்ற என்றுமாம். பி - ம் : யாவர்க்கும் விடைதந்து. ()

92.—பாண்டவர்கள் கண்துயிலுதல்.

மகதத்தரிற்சூரசஞ்சத்தகரிலுள்ளமகிபாலரும்
பகதத்தனுந்துள்ளியெதிர்வந்தகாந்தாரபதிமைந்தருந்
தகதத்தவெனவெங்களத்தூடுவிழவென்றதனுவேதியுஞ்
சுகதத்தமுறவோடவென்றோர்களுங்கண்டுயின்றார்களே.

(இ - ள்.) மகதத்தரில் - மகததேசத்துவீரரிலும், சூர சஞ்சத்தகரில் - வீரர்களான சஞ்சப்தகரிலும், உள்ள - சேர்ந்த, மகிபாலர் உம் - அரசர்களும், பகதத்தனும்—, துள்ளி எதிர் வந்த காந்தார பதி மைந்தர்உம் - மகிழ்ச்சியோடு கூத்தாடிக்கொண்டு எதிர்த்து வந்த காந்தாரதேசத்து அரசனான சகுனியின் பிள்ளைகள் இரண்டு பேரும், தகதத்த என வெம் களத்தூடு விழ - தகதத்தவென்னும் ஓசையுண்டாகக் கொடிய போர்க்களத்தில் இறந்து கீழ்விழவும்,—வென்ற தனுவேதிஉம் - பகைவெல்லுந்தன்மையுள்ள வில்வித்தை வல்ல துரோணனும், சுக தத்தம் உற ஓட - இன்பத்தையிழத்தலுண்டாகப் புறங்கொடுத்தோடவும்,—வென்றோர்கள்உம்-சயித்த பாண்டவர்களும், கண் துயின்றார்கள் - நித்திரைசெய்தார்கள் ;

மகிபாலரும் பகதத்தனும்...மைந்தரும் களத்தூடுவிழவும், தனுவேதியும் ஓடவும் வென்றோர்களும் என்க. தகதத்த - ஒலிக் குறிப்பு. பொருளை யிழந்தாரை 'தத்தஞ் செய்துவிட்டார்' என் னும் வழக்குப்பற்றி, 'சுகதத்தம் உற' என்பதற்கு - இவ்வாறு பொருள்கொள்ளப்பட்டது: இனி, இன்பத்தை அளித்தருளுதலுண் டாக எனினும் அமையும்; எதிரி இரங்கி உயிரோடுவிட்டு அபயப் பிரதானஞ் செய்தருளும்படி என்று கருத்து: பகைவர்க்கு வெற்றி யின்பத்தைக் கொடுத்தல் பொருந்த என்றலுமொன்று. தனுவேதி யும் என்பதற்கு - வில்லாயுதத்தையுடைய விசயனும் என்றும், 'சுகதத்தமுறவோடி' என்று பாடங்கொண்டு, தத்தம்-தம்தமக்கு, சுகம்உற - சுகமுண்டாக, ஓடி என்றும் கூறினாரு முளர். **(137)**

93.—சந்திராஸ்தமனமும், மறுநாட் சூரியோதயமும்.

நிலையான வயவீர ருந்தேவ ராய்நின்ற நிலைகண்டுவெண்
கலையானி ரம்புஞ்செ ழுந்திங்க ளேகக்க டைக்கங்குல்வா
யலையாழி முழுநீல வுறைநின்று மாணிக்க மணியாழிபோ
லுலையாத வொளிகொண்ட கதிராயி ரத்தோனு முதயஞ்செய்தான்.

(இ - ள்.) நிலைஆன வய வீரர்உம் - (போரிற்பின்னிடாமல்) நிலைபெற்ற வலிமையையுடைய வீரர்கள் பலரும், தேவர் ஆய்நின்ற- இறந்து தேவர்களாகி நின்ற, நிலை - நிலைமையை, கண்டு - பார்த்து, வெள் கலையால் நிரம்பும் செழு திங்கள் - வெண்ணிறமான அமிருத கிரணங்களால் நிறைந்துள்ள செழிப்பான சந்திரன், ஏக - அப்பாற் செல்ல [அஸ்தமிக்க],—கடை கங்குல் வாய் - அவ்விரவின்முடி வில், உலையாத ஒளி கொண்ட கதிர் ஆயிரத்தோன்உம் - அழியாத பிரகாசத்தைக் கொண்ட ஆயிரங்கிரணங்களையுடைய சூரியனும், அலை ஆழி முழு நீலம் உறைநின்று - அலைகளையுடைய கருங்கட லாகிய பெரிய நீலநிறமுள்ள உறையினின்று, மாணிக்கம் மணி ஆழி போல் - மாணிக்க ரத்தினமயமான சக்கரம்போல, உதயம் செய் தான் - உதித்தலைச்செய்தான் [உதித்தான்]; (எ - று.)

சந்திரன் தேவர்களுக்குத் தன்கலைகளாகிய அமிருதத்தை உண வாகக் கொடுக்குந்தன்மைய னாதலால், போரிலிறந்து தேவசரீரம் பெற்று வீரசுவர்க்கம்புக்கவர்க்கு விருந்திடும்பொருட்டுச் சென்றா னென்று சந்திராஸ்தமநத்தை வருணித்தார்; **பயன்தற்குறிப்பேற்ற வணி.** ஆழி - மோதிரமென்பாருமுளர். உறை - இங்கே, ஆபர ணம் வைக்குங்கூடு. **மாணிக்கம்** - வடசொல்லின் திரிபு; செந்நிற முள்ள இரத்தினம். (கருமாணிக்கம் என நூல்களில் வருவது, இல்பொருளுவமை.) பின்இரண்டடி - **உவமையணி.** கதிர் ஆயிரத் தோன் - ஸஹஸ்ரகிரணன். 'உறையின்று' என்ற பாடத்துக்கு- உறையில்லாமல் என்க. **பி - ம்:** அணியாழிபோல், மணியாடி போல். **(138)**

பன்னிரண்டாம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

பதின்மூன்றும் போர்ச்சருக்கம்.

1.—கடவுள் வணக்கம்.

சங்கையி லாவகை யமபட ராலுயிர் தளர்பொழு தத்தருகே
மங்கையர் சூழவி ருந்தழு துள்ளம யக்கினும் யான்மறவேன்
கங்கையு நான்மறை யுந்துள வுங்கமழ் கழலிணை யுந்திருமா
லங்கையின் மீதொளிர் சங்கமு நேமியு மஞ்சன மேனியுமே.

(இ - ள்.) சங்கை இலா வகை - சந்தேக மில்லாதபடி [நிச்சய மாக], யம படரால் - யமனது வேலையாட்களால், உயிர் - (எனது) சீவன், தளர் பொழுதத்து - வருத்தமடையுங்காலத்தில், அருகு ஏ - (எனது) சமீபத்திலே, மங்கையர் – இளம்பெண்கள் [உரியமகளிர்], சூழ இருந்து - சுற்றிலும் இருந்து கொண்டு, அழுது - புலம்பி, உள்ளம் மயக்கின் உம்-(என்) மனத்தை மயக்கமடைவித்தாலும்,—யான்—,—திரு மால் - திருமகள்கணவனான ஸ்ரீமகா விஷ்ணுவினது, கங்கைஉம் நால் மறைஉம் துளவுஉம் கமழ் கழல் இணைஉம் - கங்காநதியும் நான்குவேதங்களும் திருத்துழாயும் பரிமளிக்கிற உபயதிருவடிகளையும், அம் கையின்மீது ஒளிர் சங்கம்உம் நேமிஉம் - அழகிய திருக்கைகளின்மேல் விளங்குகிற சங்க சக்கரங்களையும், அஞ்சனம் மேனிஉம் - மைபோற்கரிய திருமேனியையும், மறவேன் - மறக்க மாட்டேன்; (எ-று.)—எப்பொழுதும் இடைவிடாது சிந்திப்பேனென்பதாம்.

இது - தியானமென்னும் மனவணக்கம். மரணவேதனையோடு மாதர் பாசத்துக்கு உட்படுங்காலத்திலும் எம்பெருமானை மறவேனென்று தமது மனவுறுதியை விளக்கினார். உலகத்திற்பிறப்பெடுத்த உயிர் என்றைக்கேனும் ஒரு நாளில் இறத்தல் நிச்சய மாதலால், 'சங்கையிலாவகை' என்றார். சங்கையிலாவகை தளர்பொழுதத்து என்று இயைப்பின்-அளவு இல்லாமல் துன்பப்படும்பொழுது என்க. கங்கை கமழ்தல்-கங்காநதி தோன்றுதல். திருமால் திரிவிக்கிரமனாய் உலகமளந்த காலத்தில் மேலேசென்ற தொரு திருவடியைச் சத்திய லோகத்தில் பிரமன் தன்கைக்கமண்டலதீர்த்தத்தாற் கழுவிவிளக்க, அந்த ஸ்ரீபாததீர்த்தமே கங்கையாய்ப் பெருகிற்றென்பது, கதை. நான்மறைகமழ்தல் - வேதங்கள் இடைவிடாது துதித்தலும், சரண மடைதலும்.

இதுமுதற் பத்தொன்பது கவிகள் - பெரும்பாலும் ஆறுஞ்சீரொன்று கூவிளங்காய்ச்சீரும், மற்றையைந்தும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (139)

2.—துரோணன் தருமனோடு வன்புடன்பொர எண்ணுதல்.

நஞ்சவியாளமுயர்த்தபதாகைநராதிபனேவலினால்
விஞ்சவருதினிமன்னர்திரண்டனர்விசயனைமேலிடுவா
னெஞ்சவராலழிவுண்டதபோதனனெருநலினுங்கடுகிப் [னனே.
பஞ்சவர்கோமுதல்வன் றனைவன்பொடு படைபொர வெண்ணி

(இ - ள்.) நஞ்சம் - விஷத்தையுடைய, வியாளம் - பாம்பின் வடிவத்தை, உயர்த்த - உயரத்திலெழுதியுள்ள, பதாகை-கொடியையுடைய, நரஅதிபன் - துரியோதனராசனது, ஏவலினால் - கட்டளையினால், வரூதினி மன்னர் - சேனைகளையுடைய அரசர்கள் (பலர்), விசயனை மேலிடுவான் - அருச்சுனனை வெல்லும்பொருட்டு, விஞ்ச திரண்டனர்-மிகுதியாக ஒருங்குகூடினார்கள்; அவரால்-அவ்வரசர்களால், நெஞ்சு அழிவுண்ட - மனம்வருந்திய, தபோதனன்-துரோணன், நெருநலின்உம் கடுகி - நேற்றைப்பொழுதினும் விரைந்து, பஞ்சவர் கோ முதல்வன்தனை - பாண்டவரைவருள் முந்தினவனான தருமராசனை, வன்பொடு - வலிமையோடு, படை பொர - ஆயுதங்களாற் போர்செய்ய, எண்ணினன் - கருதினான்; (எ - று.)

துரியோதனன்கட்டளையால் அநேக அரசர்கள் அருச்சுனனை வெல்லத் திரண்டது, 'நாங்கள், அருச்சுனன் தருமனுக்கு உதவியாகாதபடி தடுத்திடுகிறோம்; நீ முன் சொன்னபடி தருமனைப் பிடித்திடு, பார்ப்போம்' என்னுங் கருத்தை வெளியிட்டுத் துரோணனுக்கு வருத்தத்தை மூட்டுதலால், 'நெஞ்சு அவராலழிவுண்டதபோதனன்' என்றார். அவரால்-கர்ணன் முதலியோரால் எனினுமாம். பாண்டவரால் எனக்கொண்டு, முந்தினநாட் போரிற் பட்ட பரிபவத்தைக் குறித்ததாகவும் உரைக்கலாம். நஞ்ச என எடுத்தால், குறிப்புப் பெயரெச்சமாம். வ்யாளம் - வடசொல். கோ முதல்வனை-முதல்வனாகிய கோவை யென்க. (140)

3.—இலக்கணமைந்தன் முதலோர் படைவகுப்பில் வந்து நிற்றல்.

இலக்கணமைந்தனுமைந்துடைமன்னவனிளைஞருமெம்முனையுங்
கலக்குறவென்றகலிங்கருமுட்படுகாவலர்பற்பலருஞ்
சிலைக்கைவயம்பெறுசிந்துநராதிசெயத்திரதன்சிரமா
நிலக்கணெழுந்துகள்வானிடைசென்றிடநின்றனர்பேரணியே.

(இ - ள்.) இலக்கண மைந்தன்உம்-லக்ஷணகுமாரனும், மைந்து உடை மன்னவன் இளைஞர்உம் - வலிமையையுடைய துரியோதனன் தம்பிமாரும், எ முனைஉம் - எல்லாப்போர்களிலும், கலக்கு உற - (பகைவர்க்குக்) கலக்க முண்டாம்படி, வென்ற - (முன்பு) சயித்துள்ள, கலிங்கர்உம் - கலிங்கநாட்டு வீரரும், உள் படு - (என்னும் இவர்கள்) உள்ளிட்ட [இவர்கள்முதலான], காவலர் பல்பலர்உம் - மிகப்பல அரசர்களும், சிலை கை வயம் பெறு - வில்லையேந்திய கையின் வலிமை பெற்ற, சிந்து நர ஆதி-சிந்துதேசத்துச் சனங்களுக்குத் தலைவனாகிய, செயத்திரதன் - ஜயத்ரதனை, சிரம் ஆ-(தங்களுக்குத்) தலைமையாகக் கொண்டு, நிலக்கண் எழும் துகள் வானிடை சென்றிட - (சேனைகளால்) பூமியிலே மேலெழுந்த தூளி ஆகாயத்திற் செல்லும்படி, பேர் அணி நின்றனர்-பெரிய படைவகுப்பில் ஒருங்கு நின்றார்கள்; (எ-று.) **(141)**

4.—துரோணன் தன்சேனைகளைச் சக்கரவியூகமாக வகுத்தல்.

அக்கரம்யாவுமுணர்ந்தசிலைக்குருவாசுரர்சேனைநடுச்
சுக்கிரனார்நிகரென்னவகைப்படுதூசியின்மாமுறையே

யெக்கரமும் படைகொண்டெழு சேனையையெயில்கள் வளைப்பன
சக்கரயூகம்வகுத்திரதத்திடைச்சயமுறநின்றனனே. [போற்

(இ-ள்) அக்கரம் யாஉம் உணர்ந்த - எல்லாஇலக்கணங்களை யும் அறிந்த, சிலை குரு - வில்லாசிரியனான துரோணன், ஆசுரர் சேனை நடு - அசுரர்களது சேனையின் மத்தியில், சுக்கிரனார் - (அவர் களுக்குச்சேனைத்தலைவராய் நிற்கிற) சுக்கிராசாரியர், நிகர்-(தனக்கு) ஒப்பு, என்ன - என்று சொல்லும்படி, வகை படு தூசியின் மா முறைஏ - பிரிக்கப்படுகிற படைவகுப்பிற்குரிய சிறந்தமுறைமைப் படியே, எ கரம்உம் படை கொண்டு எழு சேனையை - கைகளிலெல் லாம் ஆயுதங்களேந்திக்கொண்டு (போருக்கு) எழுந்த சேனைகளை, எயில்கள் வளைப்பன போல் - மதில்கள் சூழ்வனபோல, (சுற்றிலும் இடைவிடாது சூழ்ந்திருக்கும்படி), சக்கரயூகம் வகுத்து - சக்கர வியூகமாக அணிவகுத்து, இரதத்திடை - தேரின்மீது, சயம் உற நின்றனன் - வெற்றியுண்டாக நின்றான்; (எ - று.)

பதின்மூன்றாநாளில் துரோணன் பதுமவியூகம் வகுத்ததாகவும் அதனுள் அபிமன் அகப்பட்டு இறந்ததாகவுமே பிரசித்தம்; இங்ஙனமே முதனூலாகிய வடமொழி வியாசபாரதத்திலு முள்ளது; பெருந்தேவனாரோ 'காலிங்கராசனையும் கௌசலேசுரனையும் வணி கரையும் சூரசேனரையும் சுற்று முற்றும் அதற்கு விளிம்பாக நிறுத்தி, லக்ஷணகுமாரனையும் எழுபத்தாறாயிரந்தேராட்களையுந் துரியோதனனையும் நடுவண் நிறுத்தி, சயத்திரதனையும் பல பதினா யிரம் யுத்த வீரரையும் தூசிமுகத்தின்கண் நிற்பாராக்கிச் சக்கர மென்னும் யூகம் வகுத்து' என்றார். சக்கரவியூகம் - சக்கரவடிவ மாகச் சேனையை ஒழுங்குபட நிறுத்துதல். நாற்புறத்தும் பயமுண் டாம்போது சக்கரவியூகம் வகுக்கத்தக்கதென்றும், அது எட்டுச்சுற் றுடன் ஒருவழியையே யுடையதென்றும், சுக்கிரநீதி கூறும்; அம் முறைமையை அறிந்து சமயோசிதமாகச் செய்த வல்லமைக்கு, சுக்கிரனையே உவமை கூறினார்: வடநூலிலும் இவ்வுவமை கூறப் பட்டுள்ளது.

அக்கரம் - அக்ஷரம்; எழுத்து: எனவே, அதனோடு ஒற்றுமை யுடைய சொல்லும் அடங்கிற்று; இது - ஆகுபெயராய் இலக்கண நூலை யுணர்த்துதலை, "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ் விரண்டும், கண்ணென்ப வாழுமுயிர்க்கு" என்றவிடத்திலுங் காண்க. இனி, அக்கரமென்பது - எல்லா நூலுக்கும் இலக்கணை யென்றலும் ஒன்று. ஏகாக்ஷரம், பஞ்சாக்ஷரம், ஷடக்ஷரம் அஷ்டா க்ஷரம், துவாதசாக்ஷரம் முதலிய மந்திரங்களுமாம். அக்கரம்-அழி யாப் பொருள் என்று கூறினாருமுளர், ஆசுரர் - அசுரர் என்பதன் நீட்டல். சுக்கிரன் - அசுரர்க்குக்குருவும், புரோகிதனும், பிரதான மந்திரியும், படைத்தலைவனுமாவன்; ஆர் என்னும் பலர்பால்விகுதி, சிறப்புப்பொருளது. கரம் - பக்கமுமாம். (142)

5.—தருமன் மாற்றாரெண்ணத்தை யுணர்ந்து அருச்சுனனிடம் அதனைத்தெரிவித்துப் போர்க்களத்து உக்கிரமாக நடத்தல்.

ஒப்பறுபோரினில்வாகைபுனைந்தவுதிட்டிரனன்றடையார்
தப்பறவெண்ணியவெண்ணமுணர்ந்துதனஞ்சயனுக்குமுரைத்

தப்பறுகோடையில்வெங்கதிரோனெனவாகவனீடளவித்
துப்புறுசிந்தைமகீபர்வரூதினிசூழநடந்தனனே.

(இ - ள்.) ஒப்பு அறு - உவமையில்லாத, போரினில்-(முந்தின நாளை) யுத்தத்தில், வாகை புனைந்த - வெற்றி மாலையைச் சூடிய, உதிட்டிரன்—, அன்று - அன்றைக்கு, அடையார் - பகைவர்கள், தப்பு அற - தவறுதலில்லாதபடி, எண்ணிய - ஆலோசித்த, எண்ணம் - நினைப்பை, உணர்ந்து - (ஒற்றரால்) அறிந்து, தனஞ்சயனுக்குஉம் உரைத்து-(அதனை) அருச்சுனனுக்குங் கூறி, அப்பு அறு கோடையில் வெங்கதிரோன் என - நீர்வற்றிய கோடைக்காலத்துச் சூரியன்போல [மிக உக்கிரமாக], நீடு ஆகவம் அளவி - பெரிய போர்க்களத்தைச் சேர்ந்து, துப்பு உறு சிந்தை மகீபர் வரூதினி சூழ-வலிமைமிக்க மனத்தையுடைய அரசர்களும் சேனைகளும் சுற்றிலும் வர, நடந்தனன் - வந்தான்; (எ - று.)—எண்ணம் - இரண்டாங்கவியிற் கூறியது. பி - ம்: ஆகவநீள்வரிவில். **(143)**

6.—பாண்டவரின் சேனை மிகுதி.

ஈரிருதேரினர்மூவகையானையரெண்ணறுமாமிசையோ
ரோரிருநாலுடையையிருபூமியிலுள்ளபதாதருடன்
பாரிருநாலுதிசாமுகமும்படையோடுபரந்துவரும்
பேரிருமானவரூதினியின்றிரள்பேசுறலாமளவோ.

(இ - ள்.) ஈர் இரு தேரினர் - நால்வகைத் தேர்வீரர்களும், மூ வகை யானையர் - மூன்றுவகை யானையின்மேலேறிய வீரர்களும், எண் அறு மா மிசையோர் - கணக்கற்ற குதிரைகளின்மேலேறிய வீரர்களும், ஓர் இரு நால் உடை ஐ இரு பூமியில் உள்ள பதாதருடன் - பதினெட்டுத் தேசங்களிலுள்ள காலாள்வீரர்களும் ஆகிய இவர்களோடு, பார் இரு நாலு திசாமுகம்உம் - பூமியின் எட்டுத் திக்குக்களினிடத்திலும், படையோடு பரந்து வரும்-ஆயுதங்களோடு பரவிவருகிற, பேர் இரு மானம் வரூதினியின் திரள் - பிரசித்தி பெற்றதும் பெரியதும் மானத்தைக்காப்பதுமான(பாண்டவ)சேனையின் கூட்டம், பேசுறல் ஆம் அளவுஓ - சொல்லுதற்கு ஏற்ற அளவுடையதோ? (எ-று.)— அன்று; சொல்லவொண்ணாதபடி அளவிறந்தது என்பதாம்.

அதிரதர், மகாரதர், சமரதர், அர்த்தரதர் எனத்தேர்வீரர் நால் வகைப்படுவர். **அதிரதர்** - முழுத்தேரரசர்; அவராவார் - ஒருதேரில் ஏறிநின்று தம்தேர் குதிரை சாரதிகளுக்கு அழிவுவாராமற் காத்துப் பலவாயிரந் தேர்வீரரோடு எதிர்த்து வேறு துணையில்லாமலே போர்செய்து வெல்லும் வல்லமை யுடையார். அவரிற் சிறிது தாழ்ந்தவர் - **மகாரதர்**; இவர் பதினோராயிரந் தேர் வீரரோடு பொருபவர். **சமரதர்** - ஒரு தேர் வீரனோடு தாமும் ஒருவராய் எதிர்க்க வல்லவர். **அர்த்தரதர்**-அவ்வாறு எதிர்க்குமளவில் தம் தேர்முதலிய வற்றை இழந்து போம்படியானவர்; இவர் இருவர் சேர்ந்தால், ஒரு சமரதனுக்கு ஒப்பாவர். இனி, இரண்டுசக்கரம் நான்குசக்கரம் ஆறு சக்கரம், எட்டுச்சக்கரம் என்றாற்போலத் தேரில் நான்குவகை கூறவுங் கூடும்,

மூவகையானை - கிரிசரம், நதிசரம், வனசரம் என்பன : "கிரி சரம் வனசரம் நதிசர மென்றிவை, நிலைபெறு நிலமென நிறுத்திசி ஞேரே" என்ற பன்னிருபாட்டியலாலும், "கிரிசரம் வனசரம் நதிசர மடுத்துப், பெறுமே யானை பிறந்த நிலப்பெயர்" என்ற பிங்கலந்தை திவாகரங்களாலும் இலக்கண விளக்கவுரையாலும் அறிக; இவற்றுள், கிரிசரம்-மலையிற்பிறந்தது; நதிசரம்-யாற்றுச் சார்பிற் பிறந்தது; வனசரம்-காட்டிற்பிறந்தது. இனி, வேறும் **யானையின் மூன்று வகை - பத்ரம், மந்த்ரம், ம்ருகம்** என்பன: "இவற்றின் இலக்கணம் வருமாறு:—தேனின்நிறம் போன்ற நிறமுள்ள தந்தமும் மிக்க வலிமையும் ஒத்தஅவயவமும் வட்டமானவடிவமும் அழகியமுகமும் அவயவச்சிறப்பு முடையது, **பத்ரம்**. பருத்தவயிறும் சிங்கநோக்கும் பருத்ததோலுள்ள கழுத்து துதிக்கைகளும் நடுத்தரமான அவயவமும் நீண்ட உடம்புமுடையது, **மந்த்ரம்**. பருத்ததல்லாத கழுத்தும் பருத்த காது துதிக்கைகளும் பருத்தகண்களும் குறுகியஉதடு குறிகளும் குள்ள வுடம்பு முடையது, **ம்ருகம்**. பத்ரத்துக்கு உயரம் ஏழு முழமும், நீளம் எட்டு முழமும், வயிற்றின் சுற்றளவு பத்து முழமுமாம்; மந்த்ரத்துக்கு இவ்வளவினும் ஒவ்வொரு முழம் குறைவும், ம்ருகத்துக்கு அதனளவினும் ஒவ்வொருமுழம் குறைவு மாகும்; பத்ரத்துக்கும் மந்த்ரத்துக்கும் நீளம் ஓரள வென்பதும் உண்டு. பத்ரத்தின் மதநீர் பசுமையாகவும், மந்த்ரத்தின் மதநீர் மஞ்சளாகவும், ம்ருகத்தின் மதநீர் கருமையாகவும் இருக்கும்.

இனி, 'எண் இருமா' என்ற பாடத்துக்கு— "மங்காளன் சாரங்கன் கங்காநீலன் மௌவழகன் கொங்காளன் சன்ன சம்பான், குங்குமச்சோரன் கரியான் நீலன் சாரன் குலவுமள்ளான் உரஞ்சிவந்தான் நல்லான் பொல்லான், தங்குகாநங்காற்செம்பான் என்று கூறும் தன்மையுள பன்னிறமும்புனைந்த சாதித், துங்கமிகும் பரியிவை" என்று திருவாதவூரர்புராணத்துக் கூறிய பதினைந்துவகையும், சீவகசிந்தாமணியுரையிலும் வைஷ்ணவசம்பிரதாயத்திலும் வழங்குகிற 'நம்பிரான்' என்னும் வகையும் என்ப.

ஓரிருநாலுடை யையிரு பூமி - எட்டுஎன்னும் எண்ணை இறுதியிலுடைய பத்தாகிய நாடுகள்; சிங்களம், சோனகம், சாவகம், சீனம் துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம், திரவிடம் என்பன-**பதினெட்டுப் பாஷைவழங்குந்** தேயங்களாம். அன்றி, 'ஓரிருநாலுடை யையிருபூமி' என்பதற்கு - எட்டோடுபெருக்கிய ஏழாகிய ஐம்பத்தாறு தேசங்கள் என்றும் உரைக்கலாம். கீழ்ப் படையெழுச்சிச்சருக்கத்தில் "ஐயிரண்டெண்பூமி" என்றது இங்ஙனமே இருபொருள்படும். இனி, பதினெட்டுத்தீவுக ளெனினுமாம். இப் பாட்டு - **எண்ணுவண்ணம்**; அது - எண்பயின்றுவருவது: "எண்ணுவண்ணமெண்ணுப்பயிலும்" பி - ம்: பதாதியுடன். (*144*)

7.—பாண்டவசேனை மகரவியூகமாக வகுக்கப்படுதல்.

வருபடைதன்னைநிறுத்திவிதம்படமகரவியூகம்வகுத்
தொருபகல்யூகமுமிப்பகலுக்கினியொப்பலவென்றிடவே

குருபதியுந்திருமாலுமதிக்கவணிந்தடுகோளரிபோற்
றுருபதன்மைந்தனுநின்றனனந்தரதுந்துபிமீதெழவே.

(இ-ள்.) துருபதன்மைந்தன்உம் - (பாண்டவசேனபதியாகிய) துருபத குமாரனை திட்டத்துய்மனும், வரு படைதன்னை - (போருக்கு) வருகின்ற (தன்) சேனையை, விதம் பட நிறுத்தி - ஒழுங்குபட நிற்கவைத்து, மகரவியூகம் வகுத்து - மகரவியூகமாக அமைத்து, 'இ பகலுக்கு - இந்நாளைவியூகத்துக்கு, இனி ஒரு பகல் யூகம் உம் - வேறு ஒரு நாளை யூகமும், ஒப்பு அல - ஒப்பாகமாட்டாது', என்றிட - என்று (கண்டவர்) கருதவும், குருபதிஉம் - குருகுலத்தலைவனை தருமனும், திருமால்உம் - கண்ணனும், மதிக்க-நன்கு மதிக்கவும், அணிந்து - அணிவகுத்து, அடு கோள் அரி போல் - (மற்றைவிலங்குகளை) அழிக்கவல்ல வலிய ஆண்சிங்கம்போல, அந்தர துந்துபி மீது எழ - ஆகாயத்தில் (தேவர்கள் கொண்டாடி முழங்குந்) துந்துபிவாத்தியம் மிக்குஒலிக்க, நின்றனன் - (தனது தலைமைதோன்ற) நின்றிட்டான்; (எ-று.)

முன்னே பயகாரண முள்ளபொழுது மகரவியூகம் அமைக்கத் தக்கதென்றும், அது நான்குகால்களையும் நீண்டபருத்தமுகத்தையும் இரண்டுவாயையு முடைய தென்றும் சுக்கிரனார்கொள்கை. நிலவுலகத்தில் வியக்கத்தக்க செய்கையைக் கண்டால், தேவர்கள் வானத்தில் துந்துபிமுழக்குதல், இயல்பு. பெருந்தேவனார் பாரதவசனத்தில் மண்டல மென்னும் வியூகமென்று கூறியுள்ளது. (145)

8.—அணிவகுத்துஇருசேனையும்நின்றபின் சஞ்சத்தகர் அருச்சுனனை அறைகூவ அவனேகுதல்.

இத்தகவாகவணிந்திருசேனையுமெதிர்முனையும்பொழுதின்
முத்தகவெண்குடைமன்னவனேவலின்முற்பகலின்படியே
மத்தகமாமுதலாகியநான்மைவருதினிதன்னொடுசஞ்
சத்தகர்வந்தறைகூவவெகுண்டுதனஞ்சயனேகினனே.

(இ - ள்.) இ தகவு ஆக - இவ்விதமாக, இரு சேனைஉம் - இருதிறத்துச் சேனைகளும், அணிந்து-அணிவகுக்கப்பட்டு, எதிர் முனையும் பொழுதில் - (ஒன்றுக்கொன்று) எதிரிலே போர் செய்யும் பொழுதில்,—முத்து அகம் வெள்குடை மன்னவன் ஏவலின்-முத்துக்களைத் தன்னிடத்தேயுடைய ஒற்றை வெண்கொற்றக்குடையையுடைய துரியோதனனது கட்டளைப்படி, முன் பகலின்படி ஏ - முந்தினநாளிற்போலவே, சஞ்சத்தகர் - சம்சப்தகர்கள், மத்தகம் மா முதல் ஆகிய - மஸ்தகத்தையுடைய யானை முதலான, நான்மை வரூதினி தன்னொடு - நால்வகைச்சேனைகளுடனே, வந்து-(எதிரில்) வந்து, அறை கூவ - வலிவிற் போருக்கு அழைக்க, தனஞ்சயன் - அருச்சுனன், வெகுண்டு - கோபித்து, ஏகினன் - (அவர்களோடு போர்செய்யச்) சென்றான்; (எ - று.)

தன்னைப் போருக்கு அழைப்பாரோடு தவறாமற்பொருதலை விரதமாகப் பூண்டவனாதலால், அருச்சுனன் இங்ஙனஞ் செல்பவனானான். சஞ்சத்தகர் அருச்சுனனைத் தனியே அழைத்துப்போனது

தென்திசையி லென முதனூலால் தெரிகிறது. மத்தக மா - மஸ்தகத்தையுடைய மிருகம்; எனவே, யானையாம். நான்மை என்றது - எண்ணையே உணர்த்திற்று. (146)

9.—அருச்சுனன் அம்புமழைபொழிய, மாற்றார்சேனை யுடைதல்.

மால்விடுதேர்மிசையான்வரிசாபம்வளைத்ததுமல்லிகல்வெங்
கோல்விடுபூசலும்வில்லுடனேபொழிகொண்டல்வியப்பெனலா
மேல்விடுதேர்களும்யானையும்வாசியும்வீரருமெய்யுருவக்
கால்விடுதாரையெழுஞ்சருகென்னவுடைந்தனர்கையறவே.

(இ-ள்.) மால் - திருமால், விடு - செலுத்துகிற, தேர்மிசையான் - தேரின்மீது உள்ளவனான அருச்சுனன், வரி சாபம் வளைத்ததுஉம்-கட்டமைந்த வில்லை வணக்கினதையும், மல் இகல்-வலிமையோடு பராக்கிரமித்துச் செய்த, வெம் கோல் விடு பூசல்உம்-கொடிய அம்புகளைப் பிரயோகிக்கிற போரையும், வில்லுடனே பொழி கொண்டல் வியப்பு எனல் ஆம் - இந்திரவில்லோடு (கூடி) மழை பொழிகிற காளமேகத்தின் அதிசயிக்கத்தக்க தன்மை யென்று சொல்லலாம்; மேல் விடு - அவன்மேல் (எதிர்த்துச்) செலுத்தப்படுகிற, தேர்களும்—, யானைஉம் - யானைகளும், வாசிஉம் - குதிரைகளும், வீரர்உம் - காலாள்வீரர்களும், மெய் உருவ - (அவ்வம்புகளால்) உடல் துளைபட, கால் விடு தாரை எழும் சருகு என்ன - காற்றுவீசுகிற வேகத்தால் மேலெழுகிற உலர்ந்த இலைகள்போல, கை அற-செய்தொழி லொன்று மில்லாமல், உடைந்தனர்-தோற்று அழிந்தனர்; (எ - று.)

முதல்வாக்கியத்தில், காளமேகம் - அருச்சுனனுக்கும், இந்திரவில் - அவனது காண்டீவவில்லுக்கும், நீர்மழை - அம்புமழைக்கும், இரண்டாம் வாக்கியத்தில், காற்றின்வேகம் - அம்பின் வேகத்துக்கும், சருகு-சேனைக்கும் உவமையாம். தேர்களும் யானையும் வாசியும் வீரரும் உடைந்தனர் - அஃறிணையும் உயர்திணையும் எண்ணி, சிறப்பினால் உயர்திணைமுடி பேற்றன. இகல்பூசல் - வினைத்தொகை. இனி, மல்லிகல் - ஒருபொருட்பன்மொழி யென்றலும் ஒன்று: மிக்கவலிமை யென்க. 'மல்லிகைவெங்கோல்' என்ற பாடத்துக்கு - (மன்மதனது மலரம்பு ஐந்தனுள் மோகத்தையுண்டாக்குகிற) நவமல்லிகையம்புபோலக் கொடிய அம்பு என்க. தாரை - ஒழுங்குமாம். பி - ம்: மெய்யுருவி. (147)

10.—இதுவும் அது.

பட்டவரெத்தனையாயிரர்நின்றுபடாமலுயிர்ப்புடன்வென்
னிட்டவரெத்தனையாயிரரஞ்சலினேகுகவென்றமர்வாய்
விட்டவரெத்தனையாயிரர்தங்குலமேன்மையும்வெந்திறலுங்
கெட்டவரெத்தனையாயிரரன்றுகிரீடிதொடுங்கணையால்.

(இ-ள்.) அன்று - அப்பொழுது, கிரீடி தொடும் கணையால் - அருச்சுனன் எய்த அம்புகளால், பட்டவர் - இறந்த பகைவீரர், எத்தனை ஆயிரர் - மிகப்பலவாயிரந்தொகை யுடையார்; நின்று - (எதிரில் நிலைத்து) நின்று, படாமல் - இறவாமல், உயிர்ப்புடன் - உயிருடனே, வென் இட்டவர் - முதுகு கொடுத்தவர்கள், எத்தனை

ஆயிரர்—; அஞ்சலின் - (தாம்) பயப்படுதலால், ஏகுக என்று - நீங்கிச்செல்லுங்களென்று (அவனாற் சொல்லப்பட்டு), அமர்வாய் விட்டவர் - போரில் நீங்கினவர்கள், எத்தனை ஆயிரர்—; தம் குலம் மேன்மைஉம் - தங்கள்குலத்தின் பெருமையும், வெம் திறல்உம் - கொடிய வலிமையும், கெட்டவர் - அழிந்தவர், எத்தனை ஆயிரர்—?

அமர் வாய்விட்டவர் என எடுத்து, போரில் வாய்திறந்து சொல்லப்பட்டவர் எனினுமாம்; அஞ்சுபவரை அழித்தல் நீதியன்றாதலால், அப்படிப்பட்டவர், உயிரோடு ஓடிப்போங்களென்று சொல்லி அவனால் அருளோடு விடப்பட்டனரென்க; "அரிவையர் வெஞ்சமரஞ்சுவோர் பெருங், குரவரென்றிவர்களைக் கோறல் பாவமே" எனக் கீழ் நிரைமீட்சிச்சருக்கத்தில் வந்தது காண்க. **கிரீடி** என்ற வடசொல்லுக்கு - கிரீட முடையவ னென்று பொருள்; இந்திரன் அருச்சுனனைத் தன் உலகத்துக்கு அழைத்துப்போன பொழுது, அங்குத் தன் ஆசனத்தில் அருத்தாசனங் கொடுத்து அதிலிருக்க வைத்து, முன்பு தனக்குப் பிரமதேவன் தந்தருளியிருந்ததொரு இரத்தின கிரீடத்தைச் சூட்ட, அதனைத் தரித்ததுபற்றி, அருச்சுனனுக்கு 'கிரீடி' என்று பெயர். 'எத்தனையாயிரர்' என்பது பல முறை ஒரே பொருளில் வந்ததனால், **சொற்பொருட்பின்வருநிலையணி.** பி - ம்: ஏகுவமென்று. (148)

11.—படுகளச்சிறப்பு.

ஓரொருடம்பினிலாயிரமாயிரமுற்பலவாளிபடத்
தாரைபடும்படிபொழிமுகிலொத்தனர்சமர்முனையிற்றரியார்
மாரனையங்கமெரித்தருள்கண்ணுதல்வடிவமெனும்படியே
பாரொருபாதிசிவந்ததுமேனிபரந்தெழுசோரியினால்.

(இ - ள்.) சமர் முனையில் - யுத்தகளத்தில், ஓர் ஓர் உடம்பினில்-(பகைவரது) உடம்புதோறும், ஆயிரம் ஆயிரம் - பல ஆயிரக் கணக்கான, உற்பலம் வாளி - கருங்குவளைமலர் போன்ற [கொல்லுந்தன்மையையுடைய] (அருச்சுனனது) அம்புகள், பட - தைத்தலால், தரியார் - (உடம்புமுழுவதும் புண்பட்டு இரத்தஞ்சொரிகிற) அப்பகைவர்கள், தாரை படும்படி பொழி முகில் ஒத்தனர் - நீர்ப்பெருக்கு இடைவிடாதிருக்கும்படி சொரிகிற மேகத்தைப் போன்றார்கள்; பார் - அவ்யுத்தபூமி, மாரனை அங்கம் எரித்தருள் கண்ணுதல் வடிவம் எனும்படியே - மன்மதனை உடம்பை யெரித்தருளிய நெருப்புக்கண்ணை நெற்றியிலுடைய சிவபிரானது திருமேனிபோல, மேனி பரந்து எழு சோரியினால் - (அப்பகைவர்) உடம்பினின்று வெளியெழுந்து பரவிய இரத்தத்தால், ஒரு பாதி சிவந்தது - (துரியோதனாதியர் சேனையுள்ள) ஒருபாதியிடம் செந்நிறமாயிற்று;

உத்பலம் என்னும் வடசொல், திரிந்தது. மன்மதனது பஞ்சபாணங்களுள் நீலோற்பலமலராகிய அம்பு கொல்லுந்தன்மையதாதலால், அது அருச்சுனனம்புக்கு உவமை கூறப்பட்டது; "முழுநீலம், கொல்லும் மதனம்பின் குணம்" என்றது காண்க. சிவபிரானது அர்த்தநாரீசுவரவடிவத்தில், சிவரூபமாகவுள்ள வலப்பக்கம் சிவந்தும், உமை ரூபமாகவுள்ள இடப்பக்கம் கறுத்தும் இருத்

தலால், 'கண்ணுதல் வடிவமெனும்படி ஒருபாதி சிவந்தது' என்ருர்: உவமையணி. மாரன் என்ற வடசொல்லுக்கு - (ஆடவரையும் மகளிரையும் காதல்நோயால்) மரணவேதனைப்படுத்துபவனென்று காரணப் பொருள். கண்நுதல் - வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. சொரிவது - சோரியெனக் காரணப்பெயர்.

சிவவடிவம் இரண்டுதன்மைகலந்த விவரம்:—பிருங்கியென்னும் மகாமுனி பரமசிவனை மாத்திரம் பிரதக்ஷிணஞ்செய்யக் கண்ட பார்வதீதேவி, தன் பதியைநோக்கி 'முனிவன் என்னைப்பிரதக்ஷிணஞ்செய்யாமைக்கு ஏது என்ன?' என்றுவினவ, உருத்திரமூர்த்தி 'இஷ்டசித்திபெற விரும்புபவர் உன்னையும், மோக்ஷம்பெற விரும்புபவர் என்னையும் வழிபடுவர்' என்ன, அதுகேட்ட தேவி பெருமானோடு பிரியாதிருக்குமாறு தவம்புரிந்து வாமபாகம் பெற்றன ரென்பது. (149)

12.—மற்ருெருபக்கத்தில் திருஷ்டத்யும்நன் துரோணன்மேல் வில் வளைத்தல்.

இந்திரன்மாமகனிங்கிவர்தம்முடனிம்முறைபோர்புரியச்
சந்திரசூரியமண்டலமொத்தணிதானையிரண்டுமுனைந்
துந்தியவேலையினுந்திகளுடையுந்திரதத்திடைபோ
யந்தணன்மேல்வரிசாபம்வளைத்தனனைவர்படைத்தலைவன்.

(இ-ள்.) இந்திரன் மா மகன் - தேவேந்திரனது சிறந்த குமாரனான அருச்சுனன், இங்கு - இவ்விடத்தில், இவர்தம்முடன் - இச்சஞ்சசத்தகவீரர்களுடனே, இ முறை - இவ்விதமாக, போர் புரிய - யுத்தஞ்செய்துகொண்டிருக்க, சந்திர சூரிய மண்டலம் ஒத்து அணி - சந்திரமண்டலத்தையும் சூரியமண்டலத்தையும் போன்று (எதிரெதிரில்) ஒழுங்குபடத் திரண்டுள்ள, தானை இரண்டும்உம் - இருதிறத்துச்சேனைகளும், முனைந்து - போர்கலந்து, உந்திய வேலையின் - தாக்கிய சமயத்தில்,—ஐவர் படை தலைவன் - பாண்டவர் சேனாதிபதியான திட்டத்துய்மன்,—உந்திகள் நால் உடை-நான்கு சக்கரங்களையுடைய, உந்து இரதத்திடை-உயர்ந்த தேரிலே, போய்—, அந்தணன்மேல் - துரோணாசாரியன்மேல், வரி சாபம் வளைத்தனன் - கட்டமைந்த வில்லை வளைத்துப் போர் செய்தான்; (எ - று.)

உந்தியென்பது உருளையாதலை "உந்தி தேருருளே யாறேயுவரி நீர்ச்சுழியே கொப்பூழ்" என்னும் நிகண்டினுலும் அறிக. உந்துதல்- உயர்ச்சி, செலுத்தல், தள்ளுதல். (150)

13.—துரோணன் திருஷ்டத்யும்நனுடைய துவசத்தோடு கவசமழித்தல்.

நூலொடுசாபம்வளைத்தவன்மற்றிவனெய்தினுகைத்தவடிக்
கோலொடுகோன்முனையற்றுவிழத்தொடுகுனிசிலைநாணழியச்
சேலொடுசேல்பொருசீலமெனும்படிதேர்களிரண்டுமணிக்
காலொடுகால்பொரவன்றுவசத்தொடுகவசமழித்தனனே.

(இ-ள்.) மற்று - பின்பு, அவன் - துரோணன், நூலொடு சாபம் வளைத்து - தநுர்வேதமுறையோடு ஒப்ப வில்லை வளைத்து,

நொய்தின் உகைத்த - விரைவாகப் பிரயோகித்த, வடி கோலொடு- கூர்மையான அம்புகளால், இவன் - திட்டத்துய்மனது, கோல் - அம்புகள், முனை அற்று - நுனியறுந்து, விழ - கீழ்விழவும், தொடு- (கையில்) ஏந்திய, குனி சிலை - வளைந்த வில்லின், நாண் - நாணி, அழிய - துணிபடவும், சேலொடு சேல் பொரு சீலம் எனும் படி தேர்கள் இரண்டுஉம் மணி காலொடு கால் பொர - சேல்மீனோடு சேல்மீன் போர்செய்யு மொழுங்கு போலு மென்னும்படி தன்தே ரும் திட்டத்துய்மன் தேரும் அழகிய கால்களோடு கால்கள் தாக்க, வல் துவசத்தொடு கவசம் அழித்தனன் - (அத்திட்டத்துய்மனது) வலிய தேர்க்கொடியையும் உடற்கவசத்தையும் அழித்தான்;

நொய்தின் - அலட்சியமாக, எளிதாக, மென்மையாக எனவும் பொருள்கள் படும். கால் என்றது - தேரின் ஏர்க்கா லென்றேனும், முன்நிற்குந் தூண்களென்றேனும் சக்கர மென்றேனும் கொள்க. கோலொடு, ஒடு - கருவிப் பொருளது. சீலம் - வடசொல். *(151)*

14.—கவிக்கூற்று: துரோணன் செய்த போரின் சிறப்பு.

அருமுனியாதிவதிட்டனுமன்குலவாதியுமந்தணனும்,பெருமுனி தானுமுடற்றியபோர்சிலர்பின்பொருதாருளரோ,வொருமுனி யேழ் கடலுங்கரமொன்றிலொடுக்கினன்மன்னனைமேல்,வருமுனி வென் றனன்முனிவருடன்பொரவல்லவர்யார்புவிமேல்.

(இ-ள்.) (முன்பு), அரு முனி ஆதி - (உலகத்தில்) அருமை யான முனிவர்களுக்கு முதல்வனான, வதிட்டன்உம் - வசிட்டனும், மன் குலம் ஆதிஉம் - க்ஷத்திரியசாதியில்தோன்றிய சிறந்தவனான விசுவாமித்திரமகாமுனிவனும், அந்தணன் ஆம் பெரு முனிதான் உம் - பிராமணசாதியனான சிறந்த முனிவனாகிய பரசுராமனும், உடற்றிய - பெருங்கோபங்கொண்டுசெய்த, போர்-யுத்தம்போன்ற யுத்தத்தை, பின் - பின்பு, பொருதார் - செய்தவர், சிலர் உளர் ஒ - சிலபேராயினும் இருக்கின்றனரோ? [எவருமில்லை என்றபடி]; ஒரு முனி - ஒப்பற்ற அகஸ்தியமகாமுனிவனொருவன், ஏழ் கடல் உம் - ஏழுசமுத்திரத்தையும், கரம் ஒன்றில் ஒடுக்கினன் - (தனது வலிமையால்) ஒருகையிலொடுங்கச்செய்தான்; (இப்பொழுது), மன்னனை - இராசனான திட்டத்துய்மனை, மேல் வரு முனி - எதிர்த்துவந்த முனிவனான துரோணன், வென்றனன் - சயித்தான்; (ஆதலால்), முனிவருடன் பொர வல்லவர் - முனிவர்களோடு போர்செய்யவல்லவர், புவிமேல் யார் - பூலோகத்தில் யாவர்உள ளார்?

'திட்டத்துய்மனை முனி வென்றனன்' என்ற சிறப்புப் பொருளை (வேறுசில திருஷ்டாந்தங்களுங் காட்டி) 'முனிவருடன் பொரவல்லவர் யார் புவிமேல்' என்ற பொதுப்பொருளால் விளக்கி யதனால், **வேற்றுப்பொருள்வைப்பணி.** ஏழ்கடல்-உவர்நீர், கருப்பஞ் சாறு, கள், நெய், தயிர், பால், நன்னீர் இவற்றின்மயமானவை.

அறிவு ஒழுக்கங்களில் ஒப்புயர்வின்மையை உணர்த்துதற்கு 'அருமுனி' என்றும், வசிஷ்டன் பிரமனது குமாரனாய்ப் படைப்பின் தொடக்கத்தில் மற்றைமுனிவர்களுக்கு முந்தித் தோன்றியதனால்

'முனியாதி வதிட்டன்' என்றும், விசுவாமித்திரன் க்ஷத்திரியசாதியில் காதியென்னும் ராசருஷிக்குக் குமாரனாய்த் தோன்றினவனாயினும் தனதுஉத்பத்திக்குக் காரணமான சருவின் [சரு - ஒருவகைச் சோறு] பேதத்தால் பிராமணத்தன்மையைப் பெற்றுப் பின்பு பலகாலம் பெருந்தவம் புரிந்து பிரமவிருடியானதனால் அவனையும் முனிவர்களுட் சேர்த்துங் கூறினர்.

குசனென்னுஞ் சந்திரகுலத்து அரசனது குமாரனான காதியின் புத்திரியும் கௌசிகியென்னும் மறுபெயருடையவளுமாகிய சத்தியவதியை மணஞ்செய்து கொண்ட ருசீகனென்னும்முனிவன், அந்தத் தன் மனைவிக்கும் அவள் தாய்க்கும் அவரவர் சாதிக்கு ஏற்றசிறந்த புத்திரசந்தான முண்டாம்படி பிரமமந்திரத்தாலும் அரசமந்திரத்தாலும் இரண்டுசருக்களை யமைத்துக் கொடுத்தான்: அவற்றில், பிரமசருவைத் தாயும், அரசச்சருவை மகளுமாக அவர்கள் மாற்றியுண்டு, அதற்கேற்றபடி கருக்கொண்டனர்; அதனை அப்பொழுது அவரவருடம்பிலொளியால் அறிந்த ருசீகன், தன் மனைவியைநோக்கி 'சருவை மாற்றி யுண்டகாரணத்தால், நீ கோபகுணமுள்ள பராக்கிரமசாலியான புத்திரனைப் பெற, உன் தாய் சாந்தகுணமடையும் புதல்வனைப் பெறுவள்' என்று கூற, அது கேட்டு வருந்திய சத்தியவதி கணவனைமிகப்பிரார்த்தித்து 'என் மகன் அங்ஙனமாகாதபடி அருள் செய்யவேண்டும்' என்று வேண்ட, முனிவன், அத்தன்மை புத்திரனுக்கு இலதாகவும் பௌத்திரனுக்கு உளதாகவும் அருள் செய்தனன்: ஆதலால், காதிமைந்தனான விசுவாமித்திரன் தவஞ்செய்தலாகிய அந்தணவொழுக்கத்தையும், ருசீகனதுமகனான ஜமதக்நியின் குமாரனாகிய பரசுராமன் சினந்துபோர்செய்யும் அரசவொழுக்கத்தையும் பூண்டன ரென வரலாறுகாண்க. இத்தன்மைகள், 'மன்குலவாதியும் அந்தணனும் பெருமுனிதானும்' என்றவற்றாற் குறிப்பிக்கப்பட்டன.

விசுவாமித்திரன் பலவரசர்களைப் போரில் வென்றதன்றி, வேட்டைக்குச் சென்றபொழுது தனக்கும் தனதுசேனைக்கும் காமதேனுவைக் கொண்டு விசேஷமாக விருந்திட்டு உபசரித்த வசிட்டனுடன் அத்தெய்வப்பசுவைக் கவர்ந்துபோதற் பொருட்டாகப் பெரும்போர் செய்தவாறும், அப்போரில் வசிஷ்டன் தன்கைப்பிரமதண்டத்தை 'நீ எதிர்ப்பாய்' என்று ஏவி விசுவாமித்திரன் விட்ட ஆயுதங்களையெல்லாம் விழுங்குவித்து மற்றும் அவன் பிரயோகித்த பாசுபதாஸ்திரத்தைத் தான் விழுங்கி அவனைப் பங்கப்படுத்தினவாறும், உலகத்திலே எவரும் அழிப்பவரில்லாமையாற் கொழுத்துத்திரிந்து கொடுமையியற்றி வந்த க்ஷத்திரியவம்சங்கள் பலவற்றைப் பற்றநாசஞ் செய்யும்பொருட்டு நாராயணனமிசமாய் அவதரித்த **பரசுராமன்**, தனது தந்தையின் ஓமதேனுவைக்கவர்ந்து அவனைக்கொன்றிட்டதுகாரணமாக, (திக்குவிசயஞ்செய்த இராவணனைச் சிறையிலிட்ட) கார்த்தவீரியார்ச்சுனனையும் அவனது குமாரர்களையுங் கொன்று அழித்து, அக்காரணத்தாலேயே க்ஷத்திரியவம்சம் முழுவதன் மேலுங் கோபாவேசங்கொண்டு உலகத்திலுள்ள அரசர் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்திட்டவாறும், பிரசித்தம்.

அகத்தியன் கடலைக் கரத்திலொடுக்கிய கதை :—இந்திரன் முதலிய தேவர்கள், தம்பகைவனாகிய விருத்திராசுரன் மற்றும்பல அசுரர்களுடனே கடலில் ஒளித்துக்கொண்டபோது, அகத்தியமகா முனிவனை வந்து பிரார்த்திக்க, அம்முனிவரன், அக்கடலின் நீரைத் தனது ஒருகையால் முற்றும் முகந்துபருகியருளி, உடனே ஒளித்திருந்த அவ்வசுரரை இந்திரன் கொன்றபின், அவர்வேண்டுகோளின்படி மீண்டும் உமிழ்ந்தன னென்பதாம். *(152)*

15.—**இருதிறத்துச் சேனையோரும் துரோணன்திறலைப் புகழ்தல்.**

வந்தெதிர்முட்டுதலுந்தனதேரினைமாறுபடத்திருகிச்
சிந்தையுமானமும்வீரமும்விட்டொருசெயலறவென்னிடலுந்
தந்திரநாதனுடைந்தனனென்றிருதானையின்மன்னவரும்
அந்தணனாண்மையும்வன்மையும்வின்மையுமன்றுதுதித்தனரே.

(இ - ள்) வந்து எதிர் முட்டுதலும் - (துரோணன்) வந்து எதிரில் தாக்கியவளவில், (திட்டத்துய்மன்), தனதேரினை மாறுபட திருகி - தன்னுடைய தேரைப் பின்னாகத் திருப்பிக்கொண்டு, சிந்தை உம் மானம்உம் வீரம்உம் விட்டு - எண்ணத்தையும் மானத்தையும் பராக்கிரமத்தையும் இழந்து, ஒரு செயல் அற - செய்யுந்தொழிலொன்று மில்லாமல், வென் இடலும்-புறங்கொடுத்தவளவிலே,—தந்திர நாதன் உடைந்தனன் என்று-(பாண்டவர்) படைத்தலைவன் தோற்றா னென்று அறிந்து, இரு தானையின் மன்னவர்உம்-இரண்டு சேனையின் அரசர்களும், அன்று - அப்பொழுது, அந்தணன்-முனிவனான துரோணனது, ஆண்மைஉம் - பராக்கிரமத்தையும், வன்மை உம் - வலிமையையும், வின்மைஉம் - வில்தொழில்திறத்தையும், துதித்தனர் - புகழ்ந்து கொண்டாடினார்கள் ; (எ-று.)—'தனதேர்' —இங்கு வருமொழி ஒருமையாயிருக்கும் பொழுது 'அ' உருபு வந்தது. *(153)*

16.—**தருமபுத்திரன் திருஷ்டத்யும்நனைத் தழுவி முகமன்கூறுதல்.**

வேதியன்விட்டசரங்களினொந்துவெரீஇவருமன்னவனைத்
தாதவிழ்பொற்றொடைமார்பிலணைத்துயர்தருமனுரைத்தருள்வான்
நீதவறிற்பினையார்நிலைநிற்பவர்நிருபர்சிகாமணியே
மோதியிளைத்தனையாறுகெனப்பலமுகமன்மொழிந்தனனே,

(இ - ள்.) வேதியன் விட்ட சரங்களின் - துரோணன்எய்த அம்புகளால், நொந்து-வருந்தி, வெரீஇ வரும் - அஞ்சி ஓடிவருகிற, மன்னவனை - திட்டத்துய்மனை,—உயர் தருமன்-சிறந்த யுதிட்டிரன், —தாது அவிழ் பொன் தொடை மார்பில் அணைத்து – பூந்தாதுகள் சிந்துகிற அழகிய மாலையைத் தரித்த மார்பிலே பொருந்தத் தழுவிக்கொண்டு, உரைத்தருள்வான்-கருணையோடு தைரியங் கூறுபவனாய், —'நிருபர் சிகாமணியே - அரசர்களுக்குத் தலைமேலணியும் இரத்தினம்போன்றவனே ! நீ தவறின்-(துரோணனுக்குமுன்) நீயே பின்னிட்டால், பினை யார் நிலைநிற்பவர் - வேறுயாவர் உறுதியாய் நிற்க வல்லார் ? மோதி இளைத்தனை - போர்செய்து சோர்ந்தாய்; ஆறுக - (அவ்விளைப்புத்) தணிவாயாக,' என-என்று, பல முகமன் மொழிந்தனன் - அநேக உபசார வார்த்தைகளைக் கூறினான் (எ - று.)

தாது - மகரந்தப்பொடி. நீ தவறின் - உன்னைவிட்டாலென்று மாம். பின்னை - என்பது, வேறு என்னும் பொருளில் வந்தது. நிருபர்சிகாமணி-அரசர்கள் தலைமேல்வைத்துக்கொண்டாடத்தக்கவனென்றபடி. (154)

17.—இதுமுதல்மூன்றுகவிகள்-ஒருதொடர்: 'நீ சக்கரவியூகத்தைப்பிளந்து வெல்க'என்று அபிமனைத் தருமன்தழுவி விடைகொடுத்தனுப்பியமைகூறும்.

தன்னெதிர்மாமயிலோனெனநின்றதனஞ்சயன்மாமகவைப்
பொன்னெதிர்பேரொளியருள்வடிவாகியபூபதிவருதியென
நின்னெதிர்போரினினிற்பவர்வேறிலர்நேமிவியூகமுநீ
முன்னெதிராவமர்புரிபொழுதன்றிமுரண்குலையாதினியே.

(இ - ள்.) (பின்பு), பொன் எதிர் - பொன்னையொத்த, பேர் ஒளி-மிக்க உடம்பி னொளியையுடைய, அருள் வடிவு ஆகிய-கருணையின் வடிவமான, பூபதி - தருமராசன்,—தன் எதிர்-தனது எதிரில், மா மயிலோன் என நின்ற - சிறந்த மயிலைக் (கொடியும் வாகனமுமாக) உடைய முருகக் கடவுள்போல நின்ற, தனஞ்சயன் மா மகவை - அருச்சுனனது சிறந்த புத்திரனை அபிமனை, வருதி என - வா வென்று அழைத்து, 'நின் எதிர் - உனது எதிரில், போரினில் நிற்பவர் - யுத்தத்தில் நிற்கவல்லவர், வேறு இலர் - எவருமில்லை; இனி—, நீ—, முன் எதிரா - முன்னே எதிர்த்துச்சென்று, அமர் புரி பொழுது அன்றி-போர் செய்யும்பொழுதிலல்லாமல், நேமி வியூகம் உம் - சக்கரவியூகமும், முரண் குலையாது - வலிமை யழியாது;' (எ - று.)—இப்பாட்டில், 'என' என்ற வினையெச்சம், மேல் பத்தொன்பதாம்பாட்டில் வருகிற "புல்லுக வென்றனன்" என்பதிலுள்ள 'என்றனன்' என்ற முற்றோடு முடியும்; இப்பாட்டின் பின் இரண்டடிமுதல் **19**-ஆம் பாட்டில் "புல்லுக" என்பதுவரை - தருமன் அபிமனை நோக்கிக் கூறிய வார்த்தைகள்.

முருகன் - அபிமனுக்கு, இளமை அழகு பலம் பகைவெல்லும் பராக்கிரமம் சிவபிரானருள்பெற்றமை இவற்றில்உவமை. தருமன் செந்நிறமுள்ளவனாதலால், 'பொன்னெதிர்பேரொளி' எனப்பட்டது; இனி, இத்தொடருக்கு-பிருகஸ்பதியையொத்த சிறந்த ஞானமுடைய என்றும் பொருள் கொள்ளலாம். கருணைநிரம்பியவனென்றும், அக்கருணையின் அமைதி இவனது தோற்றங் கண்டமாத்திரத்திலே விளங்கு மென்றுங் கூறுவார், 'அருள்வடிவாகிய' என்றார். ( )

18. என்னையழைத்துடனென்னலுடன்றுவென்னிட்டவில்லாசிரியன், மன்னைவளைத்தொருசக்கரயூகம்வகுத்தெதிர் நின்றனனு, னின்னையளித்ததராபதிதன்னையுநின்னையுமேயொழியப், பின்னையெடுத்தவிலோடெதிர்சென்றுபிளந்திடவல்லவர்யார்.

(இ - ள்.) 'நென்னல் - நேற்று, என்னை—, அழைத்து - (போருக்குக்) கூப்பிட்டு, உடன் - என்னுடனே, உடன்று-போர்செய்து, வென் இட்ட - புறங்கொடுத்த, வில் ஆசிரியன் - வில்லில்வல்ல துரோணாசாரியன், (அக்கறுவையுட்கொண்டு இன்றைக்கு), மன்னை வளைத்து - (தன்சேனை) அரசர்களைச் சூழநிறுத்தி, ஒரு சக்கரயூகம்

வகுத்து-ஒப்பற்ற சக்கரவியூகமாக அணிவகுத்து, எதிர் நின்றனன்- எதிரில் (போருக்கு) நின்றான்; நின்னை அளித்த - உன்னைப்பெற்ற, தராபதிதன்னைஉம் - அருச்சுனராசனையும், நின்னைஉம்ஏ - உன்னையும் ஆக உங்களிரண்டுபேரையும், ஒழிய - தவிர, எடுத்த விலோடு- ஏந்திய வில்லுடனே, எதிர் சென்று - எதிரிற் போய், பிளந்திட வல்லவர் - (அந்தவியூகத்தைச்) சிதைத்திடவல்லவர், பின்னை யார்- வேறு யாவர் உளர்? (எ - று.)

'அபிமந்யு அருச்சுனன் கிருஷ்ணன் (கிருஷ்ணனது குமாரனான) பிரத்யும்நன் இந்நால்வருமொழிய வேறு ஐந்தாமவனொருவன் பதும வியூகத்தைப் பிளக்கவல்லானல்லன்' என்று வியாசபாரதங் கூறுகிறது. உடன் - விரைவில் என்றுமாம்; இதனை 'வென்னிட்ட' என்றதனோடு கூட்டலுமாம். ஆல் - ஈற்றசை. பி - ம்:—என்னை வளைத்திட. (156)

19.—புல்லுக வென்றனன் மார்புற வன்பொடு புல்லியி மைப்பொழுதிற், செல்லுக வென்றனன் வன்சம ரத்திடை சென்றுமிகப் பகையைக், கொல்லுக வென்றன நின்புய மேவரு கொற்றவை தன்னருளால், வெல்லுக வென்றன னன்றுது ரோணனை வென்ற பெருந்தகையே.

(இ - ள்.) 'புல்லுக - (என்னை வந்து) தழுவுவாயாக,' என்றனன்-என்று சொல்லி,—அன்று துரோணனை வென்ற பெருந்தகை - முந்தின நாளில் துரோணனைச் சயித்த பெருமைக்குணமுடைய தருமன், மார்பு உற அன்பொடு புல்லி - (அபிமனை) மார்பிலே பொருந்தப் பிரீதியோடு அணைத்துக் கொண்டு, இமை பொழுதில் செல்லுக என்றனன் -'மிகவிரைவில் செல்லுவாயாக' என்றுங் கூறினவனாய், 'வன் சமரத்திடை சென்று - கொடியபோரிற் போய், பகையை மிக கொல்லுக - பகைவர்களை மிகுதியாகக் கொல்லுவாயாக,' என்றனன்-என்றுங் கூறி, 'நின் புயம்-உனது தோள்களில், மேவரு - பொருந்திய, கொற்றவைதன் - துர்க்காதேவியின், அருளால்—, வெல்லுக - (பகை) வெல்வாயாக,' என்றனன் - என்றுங் கூறினான்; (எ - று.)

போருக்கு உரிய தேவதை துர்க்கையாதலாலும், அவளருளே வெற்றிக்குக் காரண மாதலாலும், 'கொற்றவை தன்னருளால் வெல்லுக' என்றான். வீரம் தோளின்திறமையா லுண்டாதலால், வீர மகளாகிய அவளைத் தோளின்மேல் தங்குகிறவளாகக் கூறுதல் கவிசமயம். 'கொற்றவை' என்னும் பெயருக்கு - வெற்றியைத் தருபவ ளென்று காரணப்பொருள் கூறலாம். (157)

வேறு.

20.—மூன்றுகவிகள் - அபிமன் யுத்தசன்னத்தனாய்ச் சென்றமை கூறும்.

மூத்த தாதைதன் னேவ லிற்கழன் முளரி கைதொழு துரனுறச்
சேர்த்த நாணுடை வில்லன் வெய்யதெ ரிந்த வாளியன் முதுகுறக்
கோத்த தூணியன் வாண்மு தற்பல கொற்ற முற்றிய படையினன்
பார்த்தன் மாமக னிரத மீதுயர் பரிதி யாமென வேறினான்.

(இ - ள்.) பார்த்தன் மா மகன்-அருச்சுனனது சிறந்த புத்திரனை அபிமன், மூத்த தாதைதன் ஏவலின்-(தனது) பெரிய தந்தையான தருமனது கட்டளைக்கு இணங்கி, கழல் முளரி கை தொழுது-(அவனது) தாமரை மலர்போன்ற பாதங்களைக் கைகூப்பி வணங்கி, உரன் உற சேர்த்த - வலிமை பொருந்தக்கட்டிய, நாண் உடை - நாணியையுடைய, வில்லன் - வில்லை யுடையவனும், தெரிந்த - ஆராய்ந்தெடுத்த, வெய்ய வாளியன் - கொடியஅம்புகளை யுடையவனும், முதுகு உற கோத்த - (தனது) முதுகிற் பொருந்த மாட்டிய, தூணியன் - அம்பறாத்தூணியை யுடையவனும், வாள் முதல் - வாள் முதலான, பல - அநேகமான, கொற்றம் முற்றிய - வெற்றி மிக்க,, படையினன் - ஆயுதங்களை யுடையவனுமாய், இரதம் மீது - (தனது) தேரின்மேல், உயர் பரிதி ஆம் என - சிறந்த சூரியன்போல, ஏறினன்—;(எ - று.)

கழல் முளரி - முன்பின்னாகத் தொக்க உவமத்தொகை; தொடர்ச்சி தோன்றக் கூறுமையின் உருவகமாக்கி யுரைத்தற்கு இங்கே இயைபு இன்று. முளரி - முட்களையுடைய அரியை [அரையை] யுடையது என வேற்றுமைத்தொகையன்மொழியாகிய காரணப்பெயர். சூரியனுவமை - விரைந்தோடுஞ் சிறந்த தேர்மீது ஏறுதற்கும், விளக்கத்துக்கும், பகையிருளொழித்தற்குமாம்.

இதுமுதற் பத்தொன்பது கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள்மாச்சீர்களும், மற்றைநான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட ஏழுசீராசிரியவிருத்தங்கள்.

21. வீரவார்கழல்கழலின்மீதுவிளங்கமார்பினில்வெண்ணிலா
வாரமாலைதுலங்கமாசுணவலயம்வாகுவிலழகெழச்
சேரவானமதிருளகற்றுமிரண்டுசெஞ்சுடரென்னவே
சாரமாமணிகுண்டலங்கள்வயங்கமௌலிதயங்கவே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) வீரம் - பராக்கிரமத்துக்கு அறிகுறியான, வார் - நீண்ட, கழல் - கழலென்னும் அணி, கழலின்மீது - பாதத்தின் மேல், விளங்க - பிரகாசிக்கவும், மார்பினில்—, வெள் நிலா - வெண்ணிறமான சந்திரகாந்தி போன்ற ஒளியை வீசுகிற, ஆரம் மாலை - முத்துமாலை, துலங்க - அசைந்துவிளங்கவும், மாசுணம் வலயம் - பாம்பின்வடிவந்தோன்றத் தொழில்செய்யப்பட்டுள்ள வளை, வாகுவில்-தோள்களில், அழகு எழ - அழகோடுவிளங்கவும், வானம் அது - ஆகாயத்தில், சேர - ஒரு சேர, இருள் அகற்றும் - இருட்டைப் போக்குகிற, இரண்டு செம் சுடர் என்ன - இரண்டு சிவந்த சூரியர்கள் (இருந்தாற்) போல, சாரம் மா மணி குண்டலங்கள்-சிறந்த பெரிய இரத்தினம்பதித்த குண்டலமென்னும் காதணிகள், வயங்க - விளங்கவும், மௌலி - கிரீடம், தயங்க - பிரகாசிக்கவும்,—(எ-று.)—"தேர் செலுத்தினன்" (22) எனமுடியும்.

மூன்றாமடி - இல்பொருளுவமை. வானமது, அது - பகுதிப்பொருள்விகுதி. செஞ்சுடர் என்பதை - அடையடுத்த பண்பாகுபெயரென்றாவது, பண்புத்தொகையன்மொழி யென்றாவதுகொள்க

சாரம் ஆம் அணி யென்று பதம்பிரித்துப் பொருள் கொள்ளலாம். விளங்க, துலங்க, எழ வயங்க, தயங்க என ஒரு பொருள் குறித்த பலசொற்கள் வந்தது - பொருட்பின்வருநிலையணி.

22. இனஞ்செய் கேண்மைகொடு ருபதேயனு மெண்ணில் கோடிமகிபருங், கனஞ்செய்தூரியமெழவெகுண்டெறிகாலெனும் படிகைவரத், தினஞ் செய்நாதனடாவுதேர் நிகர்தேர் விரைந்து செலுத்தினன், றனஞ்சயன்றலைநாண் முயன்றதவம்பலித்தன தன் மையான்.

(இ - ள்.) தனஞ்சயன் - அருச்சுனன், தலைநாள் - முற்காலத்தில் [பூர்வசந்மத்தில்], முயன்ற - ஊக்கத்தோடு செய்த, தவம்—, பலித்து அன-(இங்ஙனம்) பயன்பட்டாற் போன்ற, தன்மையான் - சிறந்த தன்மையையுடைய குமாரனை அபிமன்,—இனம் செய்-உறவாகச் செய்கிற, கேண்மை - சிநேககுணத்தை, கொள் - கொண்ட, துருபதேயன்உம்-துருபதபுத்திரனை திட்டத்துய்மனும், எண் இல் கோடி மகீபர்உம் - அளவிறந்த கோடிக்கணக்கான அரசர்களும், கனம் செய் தூரியம் எழ-பெருமைசெய்கிற வாத்தியங்கள் முழங்க, வெகுண்டு எறி கால் எனும்படி - கோபித்து வீசுகிற பெருங்காற்றென்று (உவமை) சொல்லும்படி, கை வர - பக்கங்களில் (உதவியாய்) வர,—தினம் செய் நாதன் நடாவு தேர் நிகர் தேர் - நாளையுண்டாக்குகிற தலைவனை சூரியன் செலுத்துகிற தேரை யொத்த (தன்) தேரை, விரைந்து செலுத்தினன் - துரிதமாகச் செலுத்தி வந்தான்; (எ - று.)

சூரியன்தேர் - ஓய்வின்றி விரைந்து செல்லுதற்கு உவமம். தவஞ்செய்திருந்தாலன்றி இப்படிப்பட்ட அருமையான உத்தம புத்திரனைப் பெறுதல் கூடாதென்பார், 'தவப்பயனன்ன தன்மையான்' என்ரூர்;"மகன்றந்தைக்கு ஆற்று முதவியிவன்றந்தை,யென்னோற்ருன் கொல்லெனுஞ்சொல்" என்றது காண்க: அறிவு ஒழுக்கங்களிலும், பலபராக்கிரமங்களிலும் மிகச்சிறந்தவனென்க. நட்பு மிக்க அன்பை விளைத்துச் சுற்றத்தார்க்குஉரிய உரிமையை உண்டாக்குதலால், 'இனஞ்செய்கேண்மை' எனப்பட்டது. கனம்செய் தூரியம் - மேகவொலியைச்செய்கிற தூரியமுமாம்: அவை, முரசம் முதலியன. *(160)*

23.—அபிமன் அம்புகளைச் சக்கரவியூகத்துள்ள வீரரின்மீது ஏவுதல்.

ஓதைகொண்டணிநின்றசக்கரயூகமன்னருரந்தொறுங்
கோதைதங்குகரத்தில்வில்லுதைகூரவாளிகுளிக்கவே
சீதைகொண்கனுமேவலாருயிர்தென்புலத்திடுதன்பெருந்
தாதையுந்தரமெனவிமைப்பிடைதாவுதேரினனேவினன்.

(இ - ள்.) தாவு தேரினன் - தாவிச்செல்லுந் தேரையுடைய அபிமன்,—ஓதை கொண்டு-ஆரவாரத்தைச் செய்துகொண்டு,சக்கர யூகம்-சக்கரயூகத்திலே, அணி நின்ற - ஒழுங்காய் நின்ற, மன்னர் - பகையரசரின், உரம்தொறுஉம்-மார்பிலெல்லாம்,—கோதை தங்கு - நாணை பூட்டிய, கரத்தில் வில் - (தன்) கைவில்லினல், உதை - தள்ளப்படுகிற, கூர வாளி - கூர்மையுள்ள அம்புகள், குளிக்க - மூழ்கும்படியும்,— சீதை கொண்கன்உம் - சீதையின் கணவனை

இராமபிரானும், மேவலார் உயிர் தென் புலத்து இடு - பகைவர்களின் உயிரைத் தெற்குத்திக்கில் [யமலோகத்தில்] செலுத்துகிற, தன் பெரு தாதைஉம் - தனது சிறந்ததந்தையான அருச்சுனனும், தரம் என - (தனக்கு) ஒப்பென்று சொல்லுமாறு,—இமைப்பிடை - கணப்பொழுதிலே, ஏவினான் - பாணப்பிரயோகஞ்செய்தான்; (எ - று.)

கோதை தங்கு கரம் - உடும்புத்தோலாலாகிய முன்னங்கைச் சட்டைதங்கிய கரமுமாம்: கோதா - வடசொல். சீதை - ஸீதா என்னும் வடசொல்லின் திரிபு; இதற்கு - கலப்பையுழுசாலென்று முதலிற் பொருள்: சனகமகாராசன் வேள்விக்காகச்சாலையுழுத போது, பிராட்டி பூமிதேவியின்மகளாய்க் கலப்பையுழுபடைச் சாலிற் காணப்பட்டதனால், சீதையென்று திருநாமம்; இது - இடவாகுபெயரின்பாற்படும். (161)

24.—அபிமனம்பினால் சக்கரவியூகத்துஅணி சிதறுதல்.

அச்சுதப்பெயர்மாதுலன்புகலரியமந்திரமன்பினோ
டுச்சரித்தொருநொடியினிற்பலகோடிபாணமுடற்றினான்
எச்சிரத்தையுமெப்புயத்தையுமிடைதுணித்தலினடையமுன்
வச்சிரத்தவனுரைசெய்சக்கரமாறிலாவணிபாறவே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) அச்சுதன் பெயர் மாதுலன் புகல் - அச்சுதனென்னும் ஒரு திருநாமத்தையுடைய (தன்) மாமனான கண்ணபிரான் (தனக்கு) உபதேசித்துள்ள, அரிய மந்திரம் - அருமையானதொரு மந்திரத்தை, அன்பினோடு உச்சரித்து - பக்தியோடு சொல்லி, ஒரு நொடியினில் - ஒருமாத்திரைப்பொழுதிலே, பலகோடி பாணம் - அநேகங்கோடி அம்புகளை, உடற்றினான் - பெருங்கோபத்தோடு பிரயோகித்தான்; (அவைகள்), எ சிரத்தைஉம்-(பகைவரது) தலைகளெல்லாவற்றையும், எ புயத்தைஉம்-தோள்களெல்லாவற்றையும், இடைதுணித்தலின் - நடுவிலே துண்டித்தலால்,—வச்சிரத்தவன் முன் உரைசெய் - வச்சிராயுதமுடைய இந்திரன் முன்பு உபதேசித்துள்ள, சக்கரம் - சக்கரவியூகத்தினது, மாறு இலா அணி - ஒப்பில்லாத ஒழுங்கு, அடைய பாற - முழுவதுஞ் சிதைய,—(எ - று)— 'பற்றினான்' என அடுத்த கவியில் முடியும்.

முன்னிரண்டடியிற்குறித்தது, வைஷ்ணவாஸ்திரம். 'முன் வச்சிரத்தவனுரைசெய்சக்கரம்' என்றதனால், சக்கரவியூகத்தின் உபதேசபரம்பரை இந்திரனிடத்தினின்று வந்ததென்று தெரிகிறது. 'என்பது, ஸ்ரீவாசுதேவன் பக்கல் பெற்றதோர் அஸ்திரத்தினை யுச்சரித்து..............சக்கரயூகத்தைப் பிளந்து உள்புக்கு' என்றது, பெருந்தேவனார் பாரதம். மாதுலன் - மாதாவினுடன்பிறந்தவன். மாறு இலா - மாறுபடுதலில்லாத எனினுமாம். பாற உடற்றினானென முத்தகமுமாம். (162)

25.—அபிமனைத் துரோணன் எதிர்த்துத்தோற்றல்.

மல்லலம்புயவபிமன்வெஞ்சரமழையனைத்தையுமாலெனப்
பல்லவெங்கணைகொடுவிலக்கிமுனைந்துவந்தெதிர்பற்றினான்

வெல்லவந்ததுரோணமாமுனிவிறலழிந்ததுகுருவெனுஞ்
சொல்லழிந்ததுவில்லழிந்ததுதேரழிந்ததுதொடைகளால்.

(இ-ள்.) மல்லல் - வலிமையையுடைய, அம்-அழகிய, புயம் - தோள்களையுடைய, அபிமன் - அபிமந்யுவினது, வெம் சரம் மழை அனைத்தைஉம்-கொடிய அம்புமழை முழுவதையும், (துரோணன்), மால் என-கண்ணபிரான் போல, பல்ல வெம் கணை கொடு விலக்கி- பலவாகிய கொடிய (தன்) அம்புகளைக்கொண்டு தடுத்து, முனைந்து வந்து - கோபித்து வந்து, எதிர் பற்றினன் - எதிரில் தகைந்தான்; தொடைகளால்-(அப்பொழுது அபிமனெய்த) அம்புகளால், வெல்ல வந்த துரோண மா முனி-சயிக்கவந்த துரோணாசாரியனது, விறல்- பராக்கிரமம், அழிந்தது—; குரு எனும் சொல் - ஆசிரியனென்னும் புகழ், அழிந்தது—; வில் அழிந்தது—; தேர் அழிந்தது—; (எ-று.)

இந்திரனது அம்புமழையை மலைகொண்டு தடுத்த க்ருஷ்ணனை யொப்ப, 'மாலென' என்றார். பல்லம் வெம் கணை எனப்பிரித்து - பல்லமாகிய வெவ்வியகணையெனினுமாம். (163)

26.—பின்புஎதிர்த்த அசுவத்தாமன் அபிமன்கணையில் மூழ்குதல்.

தந்தைவென்னிடுமுன்னர்முப்புரதகனனேநிகர்மகன்மிகச்
சிந்தைகன்றிவெகுண்டுதேரொடுசென்றுகால்வளைசிலையினு
லுந்துகின்றசிலீமுகம்பலபகைமுகங்களிலுருவவே
முந்தினனவனப்புமாரியின்முழுகினனுடன்முற்றுமே.

(இ-ள்.) (இவ்வாறு யாவும் அழிந்து), தந்தை வென் இடு முன்னர் - (தனது) பிதாவான துரோணன் புறங்கொடுக்கு முன்னே, மு புரம் தகனனே நிகர் மகன் - திரிபுரசங்காரஞ்செய் திட்ட சிவபிரானையே போன்ற புத்திரனான அசுவத்தாமன், வெகுண்டு - கோபித்து, சிந்தை மிக கன்றி - மனம் மிகவெதும்பி, தேரொடு சென்று-(தன்) தேருடன்போய், கால் வளை சிலையினால் - கழுந்து வளைந்த (தன்) வில்லினால், உந்துகின்ற - பிரயோகிக்கிற, சிலீமுகம் பல - அநேகம் அம்புகளால், பகை முகங்களில்-பகைவர்க ளது முகங்களிலே, உருவ - துளைத்துச் செல்லும்படி, முந்தினன் - போரில் முற்பட்டு, (உடனே), அவன் அம்பு மாரியின் - அந்த அபிமனது அம்புமழையில், உடல் முற்றுஉம் முழுகினன்-(தனது) உடம்புமுழுவதும் மூழ்கப்பெற்றான்; (எ-று.)

சிவாநுக்கிரகத்தாற் பிறந்த குமாரனாதலால், அவனுக்குச் சிவ பிரானையே உவமைகூறினார். புரதஹநன் - வடமொழித்தொடர். 'கால்வளைசிலை' என்பதற்கு - பாதத்தால் ஒருகோடியை அழுத்தி வளைக்கப்பட்ட வில்லென்றுமாம். 'முழுகினன்' என்ற வினைக்கு ஏற்ப, 'அப்புமாரி' என்பது - நீர்மழை யென்றும் பொருள்படும்; தொனி. அம்பு, அப் என்ற வடசொற்கள், நீரின்பெயராம். (164)

27.—கன்னன் அபிமனையெதிர்த்துப் பின்னிடுதல்.

கன்னனென்றுலகெண்ணும்வீரனுமொய்ம்புடன்பலகணை
கள்வான், மின்னெழுங்கொருகோடியென்னநிறுத்திமெய்யுறவீசி

ஞன், அன்னவன்பகழிக்குலங்களநேகமோகரமாகையா, லென்ன
வெஞ்சமமினிநமக்கெனவேறுதேருடனேகிஞன்.

(இ - ள்.) (பின்பு), கன்னன் என்று உலகு எண்ணும் வீரன் உம் - கர்ணனென்று பெயர்பெற்று உலகத்தாரால் (கௌரவமாக) எண்ணப்படுகிற பராக்கிரமசாலியும், மொய்ம்புடன்-வலிமையோடு, பல கணைகள் - அநேக அம்புகளை, வான் மின் ஒழுங்கு ஒரு கோடி என்ன - ஆகாயத்திற்காணப்படும் மின்னலின் வரிசைகள் மிகப்பல போல, நிறுத்தி-வில்லில் தொடுத்து, மெய்உற வீசிஞன்-(அபிமனது) உடம்பிற் படும்படி பிரயோகித்தான்: (ஆயினும்), அன்னவன் பகழி குலங்கள் அநேகம் மோகரம் ஆகையால் - அவ்வபிமனது அம்புக் கூட்டங்கள் மிக உக்கிரமாயிருத்தலால்,—இனி நமக்கு வெம் சமம் என்ன என - 'இனிமேல் நமக்கு (அவனேடு) கொடிய போர் செய்யும் ஆற்றல் யாது உள்ளது?' என்று (கருதி), ஏறு தேருடன் ஏகிஞன் - (தான்) ஏறிவந்த தேரோடு பின் சென்ருன்; (எ - று.)

ஒருகோடி - மிகப்பலவாகிய எண்ணிற்கு ஒன்று எடுத்துக் காட்டியவாறு. வில் முதலிய ஆயுதங்கள் அழிந்தமை தோன்ற, 'ஏறு தேருடன் ஏகிஞன்' என்ருர். வேறு எனப் பதம்பிரித்தல், மோனைத்தொடைக்குச் சிறவாது. (165)

28.—கிருபனும் கிருதவர்மனும் எதிர்த்து, அபிமனுடைய
ஒருதொடுப்பிலே வெருவியோடுதல்.

கிருபமாமுனிதானுமேதகுகிருதவன்மனுமோர்புறத்
திருவராண்மையுநிலைபெறும்படிசென்றுதூவினரேவிஞல்
ஒருவனேயிவனிவனெடுத்ததுமொருசராசனமம்பிலே
வெருவியோடினர்தங்களோரிருவில்லுமற்றுவெறுங்கையே.

(இ - ள்.) கிருபன் மா முனி தான்உம் - சிறந்த கிருபாசாரியனும், மேதகு கிருதவன்மன்உம்-மேன்மை பொருந்திய கிருதவர்மா வென்னும் யதுகுலத்தரசனும், ஓர் புறத்து-ஒரு பக்கத்தில், இருவர் ஆண்மை உம் நிலை பெறும்படி - தங்களிரண்டுபேரது பராக்கிரமமும் நிலைத்து நிற்கும்படி, சென்று - (எதிர்த்துச்) சென்று, ஏவிஞல் தூவினர் - அம்புகளால் பொழிந்தார்கள்; (அப்பொழுது), இவன் ஒருவன்ஏ - (எதிர்ப்பவன்) இவ்வபிமந்யு ஒருத்தனே தான்; இவன் எடுத்ததுஉம் ஒரு சராசனம் - இவன் (கையில்) ஏந்தினதும் ஒரு வில்தான்; (அங்ஙனம் இருந்தும்), அம்பிலே - (இவனது) அம்புகளாலே, (அவ்விரண்டு பேரும்), தங்கள் ஓர் இரு வில்உம் அற்று - தங்களது வில்லிரண்டும் அறுபட்டு, வெறு கை-ஆயுதமில்லாத கைகளையுடையவராய், வெருவி ஓடினர்—அஞ்சி ஓடிப்போனர்கள்; (எ - று.) (166)

29.—அபிமனல் சகுனியின் மகன் முதலோர் இறந்துவிழ,
மற்றையாவரும் நடுங்கி யோடுதல்.

சகுனியுந்திருமகனுமற்றுளதமருமேலிடுதானையோ
டிகனெடுங்களம்வென்றுகொள்குவமென்றுவந்தெதிரணுகிஞர்

மகன்விழுந்தனன்மார்பின்மூழ்கியவாளியொன்றினின்மற்றுளார்
மிகநடுங்கியொடுங்கியோடினர்வீழுமன்னர்கள்வீழவே.

(இ - ள்.) (அதன்பின்பு), சகுனியும்—, திரு மகன்உம் - (அவனது) சிறந்த புத்திரனும், மற்று உள தமர்உம் மற்றுமுள்ள உறவினர்களும், மேல் இடு தானையோடு - மேலெழுந்துவருகிற சேனையுடனே, நெடு இகல் களம் வென்று கொள்குவம் என்று - 'பெரிய போர்க்களத்தில் (பகைவனைச்) சயித்துக் கைப்பற்றுவோம்' என்று கருதி, எதிர் வந்து அணுகினர் - எதிரில் வந்து நெருங்கினார்கள்; (உடனே அவர்களுள்), மகன் - சகுனிபுத்திரன், மார்பில் மூழ்கிய வாளி ஒன்றினில் - (தன்) மார்பில் முழுவதும்புதைந்த ஓரம்பால், விழுந்தனன் - இறந்து கீழ்விழுந்தான்; வீழும் மன்னர்கள் வீழ - (போர்வெல்ல) விரும்பிவந்த அரசர்கள் இறந்துவிழ, மற்று உளார் - மற்றும் (இறவாது) உள்ளவர்கள், மிக நடுங்கி ஒடுங்கி ஓடினர் - (அச்சத்தால்) மிகநடுக்கமுற்று வலிமை குன்றி ஓடிப்போனார்கள்;

சகுனிமகன் உலூகனென்றும், அவனைச் சகதேவன் கொன்றானென்றும் வியாசபாரதத்தால் தெரிகின்றது. மேலிடுதானை-சிறப்புப்பெற்ற சேனையெனினுமாம். 'மார்பில்மூழ்கிய வாளி ஒன்றினில்' என்பதைப் பிந்தினவாக்கியத்துக்குங் கூட்டுக. வீழ்தல் என்பது - விரும்புதலாதலை "தாம் வீழ்வார்மென்றோள் துயில்" எனத் திருக்குறளிலுங் காண்க. இனி, 'வீழுமன்னர்கள் வீழ' என்பதற்கு - இறக்கும் அரசர்கள் தவிர என்றும் பொருள் கொள்ளலாம். (167)

30.—விகன்னன் முதலியோர் பொரவர, அபிமன் அவர்களை அவமதிப்புப்படச்சொல்லி விடுத்தல்.

வின்முகந்தெழுவாளிவாளிவிலக்கவந்தவிகன்னனுந்
துன்முகன்றலையாகமற்றுளதுணைவருஞ்சமர்துன்னினார்
நன்முகம்பெறுவிசயன்மைந்தனுநானுமக்கெதிரன்றுநீர்
பின்முகம்படவோடியின்றுயிர்பிழையுமென்றுரைபேசினான்.

(இ - ள்.) (அதன்பின்), வில் முகந்து எழு - வில்லினாற் கொள்ளப்பட்டு வெளிப்படுகிற, வாளி - (தன்) அம்புகள், வாளி விலக்க-(அபிமனது) அம்புகளைத் தடுக்கும்படி, வந்த—, விகன்னன் உம் - விகர்ணனென்பவனும், துன்முகன் தலை ஆக - துர்முகனென்பவன் முதலாக, மற்று உள துணைவர்உம் - இன்னுமுள்ள துரியோதனன் தம்பிமார்களும், சமர் துன்னினார்-போரில் நெருங்கினார்கள்; (நெருங்க), நல் முகம் பெறு - அழகிய முகத்தைப் பெற்ற, விசயன் மைந்தன்உம் - அருச்சுனனது புத்திரனை அபிமனும், (அவர்களை நோக்கி), 'நான் உமக்கு எதிர் அன்று-நான் உங்களுக்குச் சமமானவனல்லன் [மிகமேம்பட்டவன்]; நீர் - நீங்கள், பின் முகம் பட ஓடி-முகம்பிற்படும்படி [முதுகுகாட்டி] விரைந்து சென்று, இன்று- இப்பொழுது, உயிர் பிழையும் - சீவித்திடுங்கள்', என்று—, உரை பேசினான் - வார்த்தை சொன்னான்; (எ - று.)— நான் உமக்கு எதிர் அன்று, 'அன்று' என்னும் எதிர்மறைப் பொதுக்குறிப்பு முற்று - இங்கே தன்மையொருமைக்கு வந்தது. (168)

31.—மற்றுமுள்ள பலரும் அபிமனுக்குத் தோற்றேகுதல்.

மற்றுமற்றுமுனைந்துவந்துமலைந்தவெஞ்சினமன்னர்மெய்ம்
முற்றுமுற்றுமிவன்கைவாளிகண்முனைபுதைந்திடமூழ்கலா
லிற்றவிற்றபடைக்கலங்களுமெய்த்தவெய்த்தபதாதியு
மற்றவற்றவிதங்கொள்வாகமுமாகியேகினரடையவே.

(இ - ள்) மற்றும் மற்றும் - இன்னும் இன்னும், முனைந்து வந்து - உக்கிரங்கொண்டுவந்து, மலைந்த-போர்செய்த, வெம் சினம் மன்னர் - கொடிய கோபத்தையுடைய அரசர்கள், மெய் முற்றுஉம் முற்றுஉம் - (தங்கள்) உடம்பு முழுவதிலும் இடைவிடாமல், இவன் கை வாளிகள்-இவ்வபிமன் கையம்புகள், முனை புதைந்திட-நுனியழுந்தும்படி, மூழ்கலால் - தைத்து ஊடுருவுதலால், இற்ற இற்ற படைக்கலங்கள்உம் - மிகத்துணிபட்ட ஆயுதங்களையும், எய்த்த எய்த்த பதாதிஉம் - மிகஇளைத்த காலாள்களையும், அற்ற அற்ற விதம் கொள் வாகம்உம் ஆகி-மிக அறுபட்ட யானை குதிரை தேர்என்ற இவற்றின் வகைகளையு முடையவர்களாய், அடைய ஏகினர் - எல்லோரும் ஓடிப்போனார்கள் ; (எ - று.)

வாஹம் - தாங்குவதெனக்காரணப்பொருள்படும். பி - ம் : விதங்களாகியும். (169)

32.—அபிமன் தனியே சக்கரவியூகத்துள் இவ்வாறு கடும்போர்புரிய வீமன் தருமனிடத்து வருத்தத்தோடு கூறத்தொடங்குதல்.

இளையவன்றனிமதலைதெவ்வரிளைக்கவிப்படியிகல்செயத்
தளையவிழ்ந்தவலங்கன்மீளிசமீரணன்றிருமதலைபோய்
வளையவன்சிலைமன்னவன்கழன்மலர்வணங்கிவணங்கலா
ருளையவந்தமர்முடுகிநின்றமைகண்டுசோகமொடுரைசெய்தான்.

(இ - ள்.) இளையவன் தனி மதலை - தம்பியான அருச்சுனனுடைய ஒப்பற்ற புத்திரனான அபிமன், தெவ்வர் இளைக்க - பகைவர்கள் சோர்வடையும்படி, இ படி இகல் செய-இவ்வாறு போரைச் செய்ய,—தளை அவிழ்ந்த - (அரும்புகளின்) முறுக்கு விரிந்த, அலங்கல் - போர்மாலையைத் தரித்த, மீளி - சிறந்தவீரனாகிய, சமீரணன் திரு மதலை-வாயுவினது சிறந்த புத்திரனான வீமன், வணங்கலார் - பகைவர்கள்பலர், வளைய - (தன்னைச்) சூழ்ந்து கொள்ள, (சகாயமில்லாத அபிமனொருத்தனே), உளைய - (அவர்களெல்லோரும்) வருந்தும்படி, வந்து-(எதிர்த்துச்) சென்று, அமர் முடுகி நின்றமை-போரை உக்கிரமாகச் செய்துநின்றதன்மையை, கண்டு—,—சோகமொடு-(துணையில்லாத அபிமனுக்குச் சோர்வுண்டாகுமே யென்ற) துன்பத்துடனே, போய் - (தருமனிடம்) சென்று, வல் சிலை மன்னவன் - வலிய வில்லையுடைய அத்தருமராசனது, கழல் மலர்-தாமரை மலர்போன்ற திருவடிகளை, வணங்கி - நமஸ்கரித்து, உரைசெய்தான்-(சிலவார்த்தைகள்) சொல்பவனானான் ; (எ-று.)—அவற்றை, அடுத்த கவிமுழுவதிலும், அதற்கடுத்த கவியின் முதலிலும் காண்க.

ஸமீரணன் என்ற வடசொல்லுக்கு - நன்றாகச் சஞ்சரிப்பவனென்று பொருள். 'வணங்கலார் உளைய வந்து அமர்முடுகிநின்

றமை' என்பதற்கு - பகைவர்கள்பலர் அபிமன் வருந்தும்படி வந்து போரைக் கொடுமையாகச்செய்து நின்ற தன்மையை யென்றுஉரைப் பாரு முளர். *(170)*

33.—வீமன் தருமனை நோக்கிக்கூறுவது.

தோலநேகமநேகநேமிதுரங்கமங்களநேகநீள்
வேலநேகமநேகம்வாள்வரிவில்லநேகவிதம்படக்
காலநேகமெழுந்ததொத்தமராடுகின்றகளத்திடைப்
பாலனேகடிதேகிவெம்முனைபயிலுவானொருபாவமே.

இதுமுதல் மூன்று கவிகள் - குளகம்.

(இ - ள்.) 'தோல் அநேகம் - பல யானைகளும், அநேகம் நேமி-பல தேர்களும், துரங்கமங்கள் அநேகம் - பல குதிரைகளும், நீள் வேல் அநேகம் - நீண்ட பல வேல்களும், அநேகம் வாள் - பல வாள் களும், வரிவில் அநேக விதம் - கட்டமைந்த பலவகை விற்களும், பட - பொருந்த, கால் அநேகம் எழுந்தது ஒத்து - பலதிசைக் காற் றுக்களும் கிளர்ந்துவீசுவது போன்று, அமர் ஆடுகின்ற - போர் செய்கிற, களத்திடை - யுத்தகளத்திலே, பாலன்ஏ - இளங்குமர னை அபிமனொருவனே, கடிது ஏகி - விரைவிற்சென்று, வெம்முனை பயிலுவான் - கொடியபோரைச் செய்து பொருந்துவான்; ஒரு பாவம்ஏ - (இங்ஙனம் அவனைத் தனியே பகைவர்சேனாசமூகத்தி னிடையில் போருக்கு விட்டுப் பார்த்திருப்பது) ஒப்பற்ற பெரும் பாவமேயாம்; (எ - று.)

களிற்றுத்தானை தேர்த்தானை பரித்தானை வேற்றானை வாட் டானை விற்றானை என்ற அறுவகைச்சேனைகளும், இப்பாட்டின் முதலிரண்டடிகளிற் குறிக்கப்பட்டன. கால் அநேகம் - எட்டுத் திக்குக்களினின்றும் வீசும் பலவகைக்காற்றுகள்; இனி, சப்தமருத் துக்களுமாம். அவற்றின் பெயர் - ஆகவம், பிரவகம், சம்வகம், உத் வகம், விவகம், பரிவகம், பராவகம் என்பன; இவ்வெல்லாக்காற்றுக் களும் உகாந்தகாலத்தில் ஒருங்கு எழுந்து உலகையழிக்கும். நேமி-சக்கரம்; இது - சினையாகுபெயராய், தேரைக் குறித்தது. பட என் பதற்கு - அழிய என்றும் உரைக்கலாம். பாலனே, ஏ - பிரிநிலை, பாவமே, ஏ - தேற்றம். *(171)*

34.—தருமனிடம் விடைபெற்றுக்கொண்டு வீமன் அபிமனுக்குத் துணையாகும்பொருட்டுச் செல்லுதல்.

எனக்குநீவிடைநல்குகென்றவனிருபதந்தொழுதியாரினுந்
தனக்குநேர்தனையல்லதில்லெனவெல்லவல்லதொர்தண்டினன்
மனக்குநேர்வருதேரினன்பலமண்டலீகருமன்னருஞ்
சினக்குழாமுறுசேனையும்புடைசூழவன்றெதிர்செல்லவே.

(இ - ள்.) 'எனக்கு—, நீ—, விடை நல்குக - (அபிமனுக்குத் துணைசென்று போர்செய்ய) அனுமதிகொடுப்பாயாக', என்று - என்றுசொல்லி(த்தருமனைப் பிரார்த்தித்து), அவன் இரு பதம் தொழுது - அவனது உபயதிருவடியை வணங்கி,—தனக்கு நேர் - தன்க்குச் சமானம், தனை அல்லது - தன்னையேயன்றி, யாரின்உம்

இல் - (வேறு மனிதர் தேவர் முதலிய) யாவருள்ளும் இல்லை, என- என்று சொல்லும்படி, வெல்வு வல்லது ஓர் தண்டினன் - பகைவரைச் சயிக்கவல்லமையையுடைய தொரு(சத்துருகாதினியென்னும்) கதாயுதத்தையுடைய வீமன், மனக்கு நேர்வரு தேரினன் - (தன்) மனத்துக்கு ஒத்த தேரின்மேலேறினவனாய், பலமண்டலீகர்உம் - அநேக சிற்றரசர்களும், மன்னர்உம்-அரசர்களும், சினம் குழாம் உறு சேனைஉம் - கோபத்தையுடைய கூட்டமாகப்பொருந்திய சேனைகளும், புடைசூழ - பக்கங்களிற் சூழ்ந்துவரும்படி, அன்று - அப்பொழுது, எதிர்செல்ல - எதிர்த்துச்செல்ல,—(எ - று.)—'சக்கர மண்டலம் ஈயை ஒத்தது'என அடுத்த கவியோடுமுடியும். தொழுதியாரினும் - குற்றியலிகரம். (172)

35.—வீமன்செல்லச் சக்கரவியூகச்சேனை பொலிவிழந்து சிதறுதல்.

சாயையொத்தெழுசேனையோடெதிர்தடவிமன்குலவடவியிற்
றீயையொத்துவிளங்குமாருதிசென்றுமண்டியதிசையெலா
மாயையொத்தொருவடிவுமின்றிவகுத்தசக்கரமண்டலம்
ஈயையொத்ததுகலுழனொத்தனனீறிலாவரியேறனன்.

(இ-ள்.) மன் குலம் அடவியில் - பகையரசர்களது கூட்டமாகிய காட்டிலே, தீயை ஒத்து-(அதனை யெரித்து அழிக்கும்) நெருப்பைப் போன்று, விளங்கும் - பிரகாசிக்கிற, மாருதி-வாயுபுத்திரனான வீமன்,—சாயை ஒத்து எழு சேனையோடு - நிழலையொத்து (விடாது கூடப்புறப்பட்டு) வருகிறசேனையுடனே, எதிர் தடவி - எதிரிலே (வீரர்களைத்)தேடிக்கொண்டு, சென்று மண்டிய-போய் நெருங்கின, திசை எலாம் - பக்கங்களிலெல்லாம், வகுத்த சக்கர மண்டலம் - (துரோணனால்) பகுத்தமைக்கப்பட்டுள்ள சக்கரவியூகம், மாயை ஒத்து ஒரு வடிவுஉம் இன்றி-மாயையைப் போன்று ஒரு வடிவமுங் காணப்படாதபடி, ஈயை ஒத்தது - ஈக்கூட்டம்போலச் சிதறிற்று; (சிதற), ஈறு இலா அரி ஏறு அனன் - அழிவில்லாத ஆண்சிங்கத்தைப்போன்ற வீமன், கலுழன் ஒத்தனன் - கருடன்போன்று எதிரற்று விளங்கினான்; (எ-று.)

சிதறிய எதிரிகள்கூட்டத்துக்குப் பறவைகளுள் எளியதாகிய ஈயை உவமைகூறியதற்கு ஏற்ப, அவற்றைச் சிதறடித்த வீமனுக்குப் பறவைகளுள் வலியதாகிய கருடனை உவமைகூறினார், 'ஈறிலா அரியேறு' என்றது, திருமாலின் திருவவதாரமான நரசிங்கமூர்த்தியையுமாகும். மாயை - உள்ளதை இல்லாததாகவும், இல்லாததை உள்ளதாகவும், ஒன்றை மற்றொன்றாகவும் அற்புதங்காட்டும் மந்திரசக்தி. மண்டலம் - வட்டமாகத்திரண்ட படை. (173)

36.—கலிங்கர் முதலிய வீரர் வீமனோடு பொருதல்.

கலிங்கர்சோனகர்மகதர்கன்னடர்கங்கர்கொங்கணர்கௌசலர்
தெலுங்கராரியர்துளுவர்பப்பரர்சீனர்சாவகர்சிங்களர்
குலிங்கர்மாளவர்களமரொட்டியர்குகுரர்கொப்பளர்கூபகர்
புலிங்கசாலமெனச்சதாகதிபுதல்வனோடுறுபோர்செய்தார்.

(இ - ள்) (அதுகண்டு), கலிங்கர் சோனகர் மகதர் கன்னடர் கங்கர் கொங்கணர் கௌசலர் தெலுங்கர் ஆரியர் துளுவர் பப்பரர்

சீனர் சாவகர் சிங்களர் குலிங்கர் மாளவர் களமர் ஒட்டியர் குகுரர் கொப்பளர் கூபகர் - இந்நாட்டுவீரர்கள், புலிங்க சாலம்என - தீப் பொறிகளின் கூட்டம்போல, சதாகதி புதல்வனோடு - வாயுபுத்திர னுன் வீமனுடன், உறு போர் செய்தார் - மிக்கபோரைச்செய்தார் கள்; (எ - று.)

போசம்என்பதுதவிரப் போசலமென்று ஒருதேசம் கூறப்படு தல்போல, கொப்ப மென்பது தவிரக் கொப்பளமென்பது ஒருநாடு போலும். இப்பாட்டில் முதல்மூன்று அடிகள் - அடைமொழி யின்றிவந்தது ஓர் அழகாம். (174)

37.—வீமனுடன்வந்த பலமன்னர் சக்கரவியூகத்திலிருந்த வீரர்களை வெட்டுதல்.

பொருதபற்பலபாடைமன்னவர்பொன்னிலங்குடிபுகுதவே
விருதவித்தகனுடன்வரும்பலபாடைமன்னவர்வெட்டினர்
ஒருதிறத்தவலீமுகங்களுறுக்கியோடியுடன்றநா
ணிருதர்பட்டதுபட்டிறந்தனர்நேமியுட்படுநிருபரே.

(இ-ள்.) பொருத - (எதிர்த்துப்) போர்செய்த, பல்பலபாடை மன்னவர் - (துரியோதனன்சேனையிலுள்ள) பலபல பாஷைகளைப் பேசும் அரசர்கள், பொன் நிலம் குடிபுகுத - பொன்னுலகமான தேவலோகத்திலுள்ள வீரசுவர்க்கத்திற் குடியேறும்படி, - விருதன் வித்தகனுடன் வரும் பல பாடை மன்னவர் - வீரனும் அறிவுடை யவனுமான வீமனுடன்வந்த அநேகபாஷைபேசும் (பலதேசத்து) அரசர்கள், வெட்டினர் - துணித்தார்கள்; (துணிக்கவே), நேமியுள் படும் நிருபர் - சக்கரவியூகத்திற் பொருந்திய (துரியோதனனைச் சார்ந்த) அரசர்கள்,—ஒரு திறத்த வலீமுகங்கள் உறுக்கி ஓடி உடன்ற நாள் - ஒரேவிதத் தன்மையுடையனவான (இராமனுடன் சென்ற) குரங்குகள் சினங்கொண்டு ஓடிப்போர் செய்த காலத்தில், நிருதர் பட்டது - அரக்கர்கள் அடைந்த துன்பத்தை, பட்டு-(தாம்) அடைந்து, இறந்தனர்—; (எ - று.)

வலீமுகம் - வடசொல்; தோற்சுருக்கங்கொண்ட முகமுள்ள தென்று காரணப்பெயர். பி - ம்: ஒருதலத்து, ஒருதிறத்து. வலீ முகங்கொடு, சிலீமுகங்கள். (175)

38.—வீமன் தண்டுகொண்டு சக்கரவியூகத்தைப் பிளத்தலைத் துரியோதனன் காணுதல்.

மண்டு கொண்டலின் மிகவ திர்ந்துமருத்தின்மைந்தனுருத்தெழுந்
தண்டு கொண்டுவி யூக மாகிய சக்க ரத்தையு டைத்தலால்
விண்டு கொண்டுமு ருக்கு மாருதி மீள வந்தன னுமெனக்
கண்டுகொண்டனன்வெஞ்சினக்கனனின்றுகாய்தருகண்ணினன்.

(இ - ள்.) மருத்தின் மைந்தன் - வாயுபுத்திரனான வீமன்,— மண்டு கொண்டலின்-நெருங்கிய காளமேகம்போல, மிக அதிர்ந்து- மிகுதியாக ஆரவாரித்து, உருத்து - கோபித்து, எழும் தண்டு கொண்டு - உயர்ந்த (தனது) கதாயுதத்தால், வியூகம் ஆகிய சக்க ரத்தை உடைத்தலால் - சக்கரவியூகத்தை உடைத்ததனால்,—வெம்

சினம் கனல் நின்று காய்தரு கண்ணினன் - கொடிய கோபாக்கினி நிலைபெற்றுமூண்டெரிகிற கண்களையுடையவனான துரியோதனன், —'விண்டு கொண்டு முருக்கும் - மலைகளைப்பறித்தெடுத்து (அவற்றால் பகையை) அழிக்கிற, மாருதி -வாயுகுமாரனான அநுமான், மீள வந்தனன் ஆம் - திரும்பவும் (போருக்கு) வந்தான்போலும்' என - என்று, கண்டுகொண்டனன் - அறிந்துகொண்டான்; (எ - று.)

கதைகொண்டு கொடுமையாகப்போர்செய்து பகையையழிக்கிற வலிமைமிக்க தம்பியான வீமனைக்கண்டு, மலைகொண்டு கொடுமையாகப் போர்செய்து பகையையழித்த வலிமைமிக்க தமையனான அநுமன் வந்திட்டானோ என்று துரியோதனன் கருதினான். முன் திரேதாயுகத்தில் இராமபிரானது தூண்டுதலால் அரக்கரை யழித்தற்கு வந்தமைபோல, துவாபரமாகிய இப்பொழுது கண்ணபிரானது தூண்டுதலால் அரசரையழித்தற்கு வந்தனனென்று கருதினனென்பது, 'மீள' என்றதனால் விளங்கும். விண்டு - விஷ்ணு என்னும் வடசொல்லின்சிதைவாய், வியாபித்ததெனப்பொருள்படும்: எனவே மலைக்காயிற்று. 'வெஞ்சினக்கனல்நின்றுகாய்தரு கண்ணினன்' என்பது துரியோதனனுதலை, மேல் 41-ஆங் கவியில் 'புயங்ககேது' என வருவதனால் அறிக. வியூகமாகிய சக்கரம் - சக்கரவியூகம். (176)

வேறு.

39.—வீமன் வருவதுகுறித்துத் தன்சேனையரசரைநோக்கித் துரியோதனன் கூறுதல்.

நபமுகின்மு ழங்கி யேறி யிடிவிட நடுநடுந டுங்கி மாயு மர
வென, வுபரியெழு கின்ற சீயம் வரவர வுடையுமிப சங்க மோடு
வனவென, வபிமனொரு வன்கை யேவி னமபடை யடையநெளி
கின்ற தாய பொழுதினில், விபினமிசை மண்டு தீயோ டனிலமும்
விரவுமியல் பந்த வீம னணுகிலே.

இது முதல் நான்குகவிகள் - குளகம்.

(இ - ள்.) 'நபம் - ஆகாயத்திற்சஞ்சரிக்கிற, முகில் - மேகம், முழங்கி - ஆரவாரித்து, ஏறி - மேல்நின்று, இடிவிட - இடியிடித்ததால், நடுநடுநடுங்கி - அளவில்லாத அச்சங்கொண்டு, மாயும்-இறக்கிற, அரவு என - பாம்புகள்போலவும்,—உபரி எழுகின்ற - மேலே பாயுந்தன்மையுள்ள, சீயம் - சிங்கம், வரவர - அடுத்துவருதலால், உடையும் - வலிமை குலைகிற, இப சங்கம் - யானைக்கூட்டங்கள், ஓடுவன என-ஓடுபவைபோலவும்,—அபிமன் ஒருவன் கை ஏவின் - அபிமந்யு ஒருத்தனது கையம்புகளால், நம படை அடைய - நம்முடைய சேனை முழுவதும், நெளிகின்றது ஆய - மிகவருந்துகிறதான, பொழுதில் - இச்சமயத்தில்,—அந்த வீமன் அணுகில் - அந்த வீமசேனனும் (அவனுக்குத் துணையாகநெருங்கிச்)சேர்ந்தால், (அது), விபினம்மிசை மண்டு தீயொடு - காட்டிற் பற்றியெரிகிற நெருப்புடனே, அனிலம்உம் விரவும் - காற்றுங் கலக்கிற, இயல்பு - தன்மையாம்; (எ - று.)

நபம் - வடசொல். நடமுகில் என்பதற்கு - கார்காலத்துமேகமென்று பொருள்கொள்ளுதலும் பொருத்தம்; ஆவணிமாசத்தைக்

குறிக்கின்ற 'நபா:' என்னும் வடசொல், நபம் எனச்சிதைந்து, இலக்கணையாய், கார்காலத்தை உணர்த்தும்; ஆவணிபுரட்டாசி மாதங்கள் வர்ஷாகால மாதலால். உபரி, இபஸங்கம், விபிநம் - வடசொற்கள். ஒருசிங்கத்தைக்கண்டு யானைகள் பலவும் வலி அழிதல், பிரசித்தம். ஏவின் - ஐந்தாம்வேற்றுமை விரி: ஏ-முதல்வேற்றுமை.

இதுமுதல், பன்னிரண்டு கவிகள் - கீழ்ச்சருக்கத்தின் 45-ஆங் கவிபோன்ற **எண்சீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தங்கள்.** 'தன தனன தந்த தான தனதன தனதனன தந்த தான தனதன' என்பது, இவற்றிற்குச் சந்தக்குழிப்பாதலால், இச்சந்தம் சிறிது வேறுபட்டது. (177)

40.—துரியோதனன் தன்சேனையோரை நேர்க்கி வீமஅபிமன்னுக்களைப் பிரித்துப் பொருதாலே எளிதில்வெல்லலாமென்று உபாயம் கூறுதல்.

சகுனியுடன்விந்துபூரிமுதலியதரணிபரடங்கவேகிமகபதி, மகன்
மகனொடிங்குருதபடி யெதிர்வளைமின்வருகந்தவாகன் மதலையை
விகனனுமடங்கல்போலு மிளைஞரும் விருதர்பலருந் துரோணன்
மதலையு, மிகன்மலையிலிந்த நாழிகையிலிவரிருவரையும்வென்று
கோறலெளிதரோ.

(இ - ள்.) 'விந்துபூரி முதலிய - விந்துபூரி யென்பவன் முதலான, தரணிபர் அடங்க - அரசர்களெல்லோரும், சகுனியுடன் - சகுனியுடனே, ஏகி -சென்று, வரு கந்தவாகன் மதலையை-எதிர்த்து வருகிற வாயுகுமாரனான வீமனை, மகபதி மகன் மகனொடு இங்கு உருதபடி - இந்திரகுமாரனான அருச்சுனனது புத்திரனாகிய அபிமனுடன் இவ்விடத்துச் சேராதபடி, எதிர்வளைமின் - எதிரில் வளைத்துக்கொள்ளுங்கள்; (அங்ஙனம்வளைய), விகனன்உம் - விகர்ணனும், மடங்கல்போலும் இளைஞர்உம் - சிங்கம்போன்ற (மற்றைத்) தம்பிமார் பலரும், விருதர் பலர்உம்-(மற்றும்) அரசர்கள் அநேகரும், துரோணன் மதலைஉம் - அசுவத்தாமாவும், இகல் மலையில் - (அபிமனுடன்) போர்செய்தால், இந்த நாழிகையில் - இவ்வொரு நாழிகைப்பொழுதிலே, இவர் இருவரைஉம் - (வீமன் அபிமன் என்னும்) இவர் இரண்டுபேரையும், வென்று கோறல் - சயித்தலும் கொல்லுதலும், எளிது - எளியதாம்; (எ-று.) - அரோ- ஈற்றசை; தேற்றமுமாம்; 'இடைச் சொற்கள் இடத்துக்கேற்றபடி பல பொருள்தர உரியன'.

விந்து, பூரி என இரண்டுபேராக எடுத்தால், பூரி என்பது-பூரிசிரவா என்னும் அரசனைக் குறிக்கும்; இங்ஙனம் ஒருபெயரின் ஒரு பகுதி அப்பெயர்முழுவதையும் உணர்த்துதலை வடநூலார் '**நாமைகதேஸே நாமக்ரஹணம்**' என்பர். பூரிஸ்ரவஸ் என்பவன், அதிரதத்தலைவரில் ஒருவன்; பூரி எனவும் ஓர்அரசன் உண்டு. மகபதிமகன் மகன் - இந்திரனது பேரன். தரணிபர் அடங்க எதிர் வளைமின் - இடவழுவமைதி. (178)

41.—துரியோதனன்மொழி கேட்டவீரர், இருவரோடும் பொரமுடுகுதல்.

எனவுயர்புயங்ககேதுவுரைசெயவிவனைவிடைகொண்டுவீரரவைவரு
புனைடடவணிந்தகாலபுகிலெனமுரசினமுழங்கவோடியெதிரெதிர்

கனலெனவெகுண்டுசேனைபலபலகசரததுரங்கராசியுடன்வர
வனிலகுலமைந்தனுனபதியொடுமபிமனெடும்வந்துபோரின்
முடுகவே.

(இ - ள்.) என - என்று, உயர் புயங்க கேது - உயர்ந்த பாம்புக்கொடியையுடைய துரியோதனன், உரை செய - கட்டளைகூற, வீரர் அனைவர்உம் - போர்வீர ரெல்லோரும், இவனை விடைகொண்டு - இத்துரியோதனனிடம் அனுமதிபெற்று, காலம் முகில் என - கார்காலத்து மேகம்போல, முரசுஇனம் முழங்க - வாத்திய வகைகள் ஆரவாரிக்க, ஓடி - விரைந்துசென்று, முனைபடஅணிந்து - போர்க்களத்திலே பொருந்த ஒழுங்குபட நின்று, கனல் என வெகுண்டு - அக்கினிபோலக் கோபாவேசங்கொண்டு, சேனை பல பல - மிகப்பலவாகிய சேனைகள், கச ரத துரங்க ராசியுடன் வர - யானை தேர் குதிரைகளின் கூட்டத்துடனே வர, அனில குலம் மைந்தன் ஆன பதியொடுஉம் - வாயுவின் சிறந்த புத்திரனும் (வீரர்க்குத்) தலைவனுமான வீமனுடனும், அபிமனொடுஉம் - அபிமந்யுவுடனும், எதிர் எதிர் வந்து - எதிரிலே எதிரிலே வந்து, போரில்முடுக - யுத்தத்தில் நெருங்க,—(எ - று.)—'வாயுமதலை வாளி உதையினன்' என அடுத்த கவியோடு குளகமாய் முடியும்.

உயர்தல் - சிறத்தலும், மேலிருத்தலும். காலமுகில்-யுகாந்த காலத்து மேகமுமாம்; காளமேக மென்றலுமாம். முரசு-இங்கே, வாத்தியப்பொது. 'குலமைந்தன்' என்றதில், குலம் என்பது-சிறப்புப் பொருளது. *(179)*

42.—இதுவும், மேற்கவியும்-தன்னுடன் எதிர்த்தாரை வீமன் அழித்தல் கூறும்.

விழிமலர்சிவந்துகோலமதிநுதல்வெயர்வரவிரண்டுதோளுமுறை
முறை, யழகுறவிளங்கமூர னிலவெழவணிமகர குண்டலாதிவெயி
லெழ, முழவினொடுசிங்கநாதமெழவெழமுடுகியெதிர்சென்று மோதி
யவரவ, ரெழில்வடிவ மெங்கும் வாளியுதையின னிரதமிசை நின்ற
வாயுமதலையே.

(இ - ள்.) இரதம்மிசை நின்ற வாயு மதலை-தேரின்மேல்நின்ற வீமன்,—விழி மலர் சிவந்து-தாமரைமலர்போலுங் கண்கள்(கோபத்தால்) செந்நிறம்பெற்று, கோலம் மதி நுதல் - அழகிய சந்திரன் போன்ற நெற்றியில், வெயர் வர - (கோபாவேசத்தால்) வேர்வையுண்டாகவும், இரண்டு தோளும்—, முறை முறை - மாறிமாறி(ப்புடைபருத்து) [பூரித்து], அழகு உற விளங்க - அழகுமிக விளங்கவும், மூரல் - புன்சிரிப்பின், நிலவு எழ - வெள்ளொளி வீசவும், அணி மகர குண்டல(ம்)ஆதி-அழகிய மகரகுண்டலம் முதலிய ஆபரணங்களின், வெயில் - சூரியகாந்திபோன்ற சிவந்த ஒளி, எழ - வெளித்தோன்றவும், முழவினொடு-வாத்தியகோஷத்துடனே, சிங்கநாதம் - சிங்க கர்ச்சனைபோன்ற (தன்) கனைப்பொலியும், எழ எழ - மிகுதியாகத் தோன்றவும், முடுகி எதிர் சென்று-வேகமாக எதிரிற்போய், மோதி - தாக்கி, அவர் அவர் எழில் வடிவம் எங்குஉம் - அந்தந்தப் பகைவீரரது அழகிய உடம்பு முழுவதிலும், வாளி உதையினன் - அம்புகளைச் செலுத்தினன்; (எ - று.)

இங்கே, 'மதி' என்றது, அஷ்டமீ திதியிலுள்ள பாதிச்சந்திரனை; அதுவே நெற்றிக்கு வடிவத்திலும் ஒளியிலும் உவமையாம். பி - ம்: நிலவுடன். (180)

43. மணிமுடிசிரங்களோடுதறிபடவலயமொடணிந்ததோள்கடறிபட, வணிகழலொடுந்துதாள்கடறிபடவயிலொடுகரங்களானதறிபட, நணியவிரதங்கள் சாயவிவுளிக ணடுவறவளைந்த சாபமுதலிய, துணிபடவழிந்துமீளநடவினர் துவசபுயகன்பதாதிநிருபரே.

(இ - ள்.) (வீமனம்புகளால்), சிரங்கள் - தலைகள், மணி முடியோடு - இரத்தினகிரீடத்தோடு, தறிபட - துணிபடவும், அணிந்த தோள்கள் - அழகிய புயங்கள், வலயமொடு - வளைகளுடனே, தறிபட - துணிபடவும், உந்து தாள்கள் - உயர்ந்த கால்கள், அணி கழலொடு - அழகிய வீரக்கழலுடனே, தறிபட - துணிபடவும், கரங்கள் ஆன - கைகளானவை, அயிலொடு - (ஏந்திய) வேலுடனே, தறிபட - துணிபடவும், நணிய - அருகில் வந்த, இரதங்கள் - தேர்கள், சாய - அழியவும், இவுளிகள் - குதிரைகள், நடுஅற - (உடம்பின்) நடுவிலே அறுபடவும், வளைந்த சாபம் முதலிய - வளைந்த வில் முதலிய ஆயுதங்கள், துணிபட - துண்டுபடவும், அழிந்து—, துவச புயகன் பதாதி நிருபர் - கொடியிற் பாம்பையுடைய துரியோதனனுடைய சேனையரசர், மீள நடவினர் - பிற்படச் சென்றார்கள்; (எ - று.)

உந்து தாள் - (அவரவரைச்) செலுத்துங்கால் எனினுமாம். ஆன, முதலிய - பெயர்கள். கரங்களான என்பதில், 'ஆன' என்பது - முதல்வேற்றுமைச் சொல்லுருபு. பதாதி - இங்கே, சேனைப்பொது.

44.—தன்னுடன் எதிர்ந்தாரை அபிமன் அழித்தல்.

விசயன்மகனுந் தன்மீதுவரும்வரும் விருதருடலங்கள் யாவு நிரைநிரை, தசைகுருதி யென்பு மூளையிவை யிவைதரணிமிசைசிந்தி வேறுபடவிழ, வசையவிரதங்கடாவிவளைதருமணிசிலையுமம்புமாகி முனைமுனை, திசைதொறுநடந்து சீறரவியெதிர்திமிர படலங்களான வடையவே.

(இ - ள்.) விசயன் மகன்உம் - அபிமந்யுவும்,—தன்மீது வரும் வரும் - தன்மேல் மிகுதியாக வருகிற, விருதர் - வீரர்களது, உடலங்கள் யாஉம் - உடம்புகளெல்லாம், நிரை நிரை - வரிசை வரிசையாய், தசை குருதி என்பு மூளை இவை இவை தரணிமிசை சிந்தி - சதை இரத்தம் எலும்பு மூளை என்னும் இவற்றையெல்லாம் தரையிற் சொரிந்து, வேறு பட - (உயிர்) வேறாகி நீங்க, விழ - இறந்துகீழ் விழும்படி, அசைய இரதம் கடாவி - அசைந்துசெல்லும்படி தேரைச் செலுத்தி,—வளை தரும் அணி சிலைஉம் அம்புஉம் ஆகி - வளைந்த அழகிய வில்லும் அம்பும் (கைகளில்) உடையனாய்,—முனை முனை திசைதொறுஉம் நடந்து - போர்க்களத்தில் (அவரவர்) எதிர்க்கிற இடந்தோறும் சென்று, சீற - கோபித்துப் போர்செய்ய,—அடைய - (அவ்வெதிரிகள்கூட்டம்) எல்லாம், ரவி எதிர் திமிர(ம்) படலங்கள் ஆன - சூரியன்முன் இருட்கூட்டம்போல ஆயின; (எ - று.)

மாற்றார்கூட்டங்கள் இருந்தவிடமுந் தெரியாதபடி மிகவிரைவில் மிகஎளிதில் அழிந்தன என்க. எழுவகைத்தாதுக்களுள் இங்

குக் கூறப்படாத தோல், மச்சை, சுவேதநீர் என்பன, 'இவையிவை' என்பதனாற் குறிக்கப்பட்டன. ஆன - முற்று; உவமவுருபு. (182)

45.—இருவரெதிரிலும் தன்படைபின்னிட, கண்ட துரியோதனன் சினந்து சைந்தவனிடம் சொல்லலுறுதல்.

இருவரெதிரும்பொருமன்முடுகியவிருபடையுநொந்துமீளவவனிபன், வெருவொடுதளர்ந்துபோனநிருபரைமிகவசைமொழிந்து போதநகைசெய்து, கருகிமுகநெஞ்சுகோபவனல்கொடுகதுவிநயனங்கள்சேயநிறமுற, வருகுவநசிந்துராசதிலகனொடபரிமிதமின்சொலாகவுரைசெய்தான்.

(இ - ள்.) முடுகிய - வேகமாக எதிர்த்துச்சென்ற, இருபடை உம் - தன் சேனையின் பகுப்பு இரண்டும், இருவர் எதிர் உம்-(வீமன் அபிமன் என்னும்) இரண்டுபேரின் எதிரிலும், பொருமல்-(அவரவரம்பின் கொடுமையைப்) பொறுக்கமாட்டாமல், நொந்து - வருந்தி, மீள-பின்னிட,—(அதுகண்டு), அவனிபன் - துரியோதனராசன்,— வெருவொடு தளர்ந்து போன நிருபரை - அச்சத்தோடு சோர்ந்து ஓடிய அரசர்களை, மிக வசை மொழிந்து-மிகவும் நிந்தையாகப் பேசி, போத நகை செய்து - மிகவும் (இகழ்ச்சியாகச்) சிரித்து,—நெஞ்சு கோபம் அனல்கொடு கதுவி-மனம் கோபாக்கினியாற் பற்றப்பட்டு, முகம் கருகி - (அதனால்) முகங் கறுத்து, நயனங்கள் சேய நிறம் உற-கண்கள் சிவந்தநிற மடைய,—அருகு வரு சிந்துராசதிலகனொடு-(தன்) பக்கத்தில் வருகிற சிந்துதேசத்து அரசனும் திலகம் போலச் சிறந்தவனுமான சயத்திரதனுடன், இன் சொல் ஆக - இனிய உபசாரமொழியாக, அபரிமிதம்-அளவில்லாத பல வார்த்தைகளை, உரைசெய்தான் - சொல்லினான் ; (எ - று.)—துரியோதனன் இன்சொலாக வுரைசெய்ததை மேல் மூன்று கவிகளிற் காண்க.

நயனம், ஸிந்துராஜதிலகன், அபரிமிதம் -வடசொற்கள், சேய-குறிப்புப்பெயரெச்சம். பி - ம் : உரைசெய்தே. (183)

46.—மூன்றுகவிகள்-சைந்தவனைநோக்கித் துரியோதனன்புகழ்ந்து அபிமனை உயிர்கவர்வதற்குச் செய்யவேண்டுவது இன்னதெனத் தெரிவித்தலைக் கூறும்.

மறனுடையைசெம்பொன்மேருகிரிநிகர்வலியுடையையவென்றி கூருமரசிய, லறனுடையைபஞ்சபாணனெனவடிவழகுடையை நின்றசேனையரசரி, னிறனுடையைதிங்கள்சூடியனதிநிறைபுனல் பரந்துலாவுமவுலியர், திறனுடையமன்றனுறுமலரடிதெளிவொடு பணிந்தஞானமுடியினை.

எழுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) '(நீ), மறன் உடையை - பராக்கிரமமுடையாய் ; செம்பொன் மேரு கிரி நிகர் - சிவந்த பொன்மயமான மகாமேரு மலையையொத்த, வலிஉடையை - வலிமையை உடையாய்; வென்றி கூரும்-வெற்றி மிக்க, அரசு இயல்-அரசாட்சியையும், அறன் - தருமத்தையும், உடையை— ; பஞ்சபாணன் என - ஐந்து அம்புகளையுடைய மன்மதன்போல, வடிவு அழகு உடையை - உடம்பின்

அழகையுடையாய்; நின்ற சேனை அரசரில்-(இங்கு) நின்ற சேனையி லுள்ள அரசர்களுள், நிறன் உடையை - மேன்மையை யுடையாய்; திங்கள் சூடி-சந்திரனைத் தரித்து, வியன் நதி நிறை புனல் பரந்து உலாவும் - ஆகாச (கங்கா) நதியினது நிறைந்த நீர் பரவித் தளும்பப்பெற்ற, மவுலியர் - திருமுடியையுடைய பரமசிவனது, திறன் உடைய-மகிமையையுடைய, மன்றல் நாறும் மலர் அடி - பரிமளம் வீசுகிற தாமரைமலர்போன்ற திருவடிகளை, ஞானம் தெளிவோடு பணிந்த - தத்துவஞானத்துக்கு உரிய தெளிவோடு வணங்கிய, முடியினை-சிரத்தையுடையாய்; (எ - று.)

அரசியல் - சேனை, குடிகள், செல்வம், மந்திரி, நண்பர், அரண் என்னும் ஆறு இராசாங்கமுமாம். இனி, அரசியலறன் - அரசியல் ஆறில் அறநிலையறம், அறநிலைப்பொருள், அறநிலையின்பம் என்னும் மூன்றுமாம்: மற்றவை - மறநிலையறம், மறநிலைப்பொருள், மறநிலையின்பம் என்பன. அவையாவன:—நான்கு சாதியாரும் தம்தம் வருணவொழுக்கத்திற் பிறழாது நிலைபெறப் பாதுகாத்தல் - அறநிலையறம்; நல்நெறியில் நின்று தம்தம் நிலையினால் முயற்சி செய்து பெறும் பொருள்-அறநிலைப்பொருள்; குலமும் ஒழுக்கமும் குணமும் பருவமும் ஒத்த கன்னிகையை அக்கினிசாட்சியாக விவாகஞ்செய்து அவளோடு கூடிவாழ்தல் - அறநிலையின்பம்: நிரைமீட்டுப் பகைவென்று செஞ்சோற்றுக் கடன்கழியாதாரைத் தண்டித்துக் குறைவறச் செய்தல் - மறநிலையறம்; பகைவர் பொருளும் திறைப்பொருளும் குற்றஞ்செய்தோரைத் தண்டித்தலால் வரும் பொருளும் சூதில் வெல்பொருளும் - மறநிலைப்பொருள்; ஏறு தழுவியும், வில்லில்தொடுத்த அம்பினாற் குறியெய்தும், பொருள்கொடுத்தும், வலிந்தும் மகளிரைக்கொண்டு மணஞ்செய்தல் - மறநிலையின்பம். திருவடிக்குத் திறன் - தன்னைச்சரணமடைந்தார்க்கு வேண்டிய வேண்டியாங்கு எய்துவிக்கும் வல்லமை. தெளிவு - ஐயந்திரிபில்லாமை. (184)

47. வயவிசயனின்றதேர்கடவிவரும்வலவன்மருகன்றனோடு வரைபுரை, புயமுடையதண்டவீமனுறிலிருபொருநரையுமின்று பூசல்பொரவரி, தயலிவரகன்றுபோகிலமர்பொரவறவுமெளிதுண்டு பாயநுதலெரி, நயனனருள்கொன்றை மாலைதனை யிவர்நடுவிடிலிரண்டுபாலுமகல்வரே.

(இ - ள்.) 'வயம் - வெற்றியையுடைய, விசயன்-அருச்சுனன், நின்ற-பொருந்திய, தேர் - தேரை, கடவி வரும் - செலுத்திவருகிற, வலவன் - சாரதியான கண்ணனுக்கு, மருகன்தனோடு - மருமகனான அபிமனுடனே, வரை புரை புயம் உடைய-மலையையொத்த தோளையுடைய, தண்டம்-கதையில்வல்ல, வீமன்—, உறில்-கூடிவிட்டால், இரு பொருநரைஉம் - (இந்த) இரண்டு போர்வீரரையும், இன்று பூசல் பொர அரிது - இப்பொழுது (எதிர்த்துப்) போர்செய்ய முடியாது; இவர் - இவ்விரண்டுபேரும், அயல் - வெவ்வேறு இடத்தில், அகன்று போகில் - (தனித்தனி) விலகிச்சென்றால், அமர் பொர அறஉம் எளிது - (இவர்களோடு) போர்செய்ய மிகவும் எளியதாம்; உபாயம் உண்டு - (அவ்வாறு இவர்களைக் கூடாமற் செய்

தற்கு) ஓர் உபாயம் உள்ளது; (அது யாதெனில்), —நுதல் எரி நயனன்-நெற்றியில் நெருப்புக்கண்ணையுடைய சிவபிரான், அருள் - (உனக்குக்) கொடுத்தருளிய, கொன்றை மாலைதனை-கொன்றைப்பூ மாலையை, இவர் நடு இடில் - (வீமன் அபிமன்யுஎன்ற) இந்த இரண்டுபேர்களுக்கு மத்தியிற் போகட்டால், இரண்டு பால்உம் அகல்வர் - (அதனைத்தாண்டி ஒருவரோடொருவர் சேராமல் இவர்) இரண்டுபக்கங்களிலும் பிரிந்துசெல்வார்கள்;' (எ - று.)—ஏ - தேற்றம்.

நுதலெரிநயனனருள் கொன்றைமாலையென்பதிலடங்கிய கதை :— பாண்டவர் வனவாசஞ்செய்கையில் ஒருநாள் வேட்டைக்குப்போ யிருந்த சமயம் பார்த்துச் சயத்திரதன் சென்று ஆச்சிரமத்தில் தனித் திருந்த திரௌபதியை வலியக்கவர்ந்து தேரேற்றிக்கொண்டுசெல்ல, பின்பு மீண்டுவந்து செய்தியுணர்ந்த பாண்டவருள் வீமன் சினந்து தருமன்கட்டளையால் அருச்சுனனோடும் எதிர்த்துச்சென்று பொருது தன்வலியால் அவனை முடிபிடித்திழுத்துத் தரையில்தள்ளிக் கைகால் களால் அடித்தும் உதைத்தும் வலியடக்கி உயிருடன் பற்றிக் கொண்டு திரௌபதியையும் மீட்டுத் தருமனிடங் கொண்டு வந்து 'இவனைக் கொன்றிடுவதே ஏற்ற தண்டனை' என்றுகூற, அதற்குத் தருமன் 'பெருங்குற்றமுடையனாயினும் நெருங்கின சுற்றத்தானா கிய இவனைக் கொன்றிடின், நம்முடையதங்கை துச்சளைக்கு அமங் கலியம் உண்டாகும்; ஆதலால், அங்ஙனஞ் செய்யவேண்டா ; வேறு வகையாகப் பங்கப்படுத்தி உயிருடன்விடுவதே தகுதி' என்று கருணை யுடன் கூற, அத்தமையனார்கட்டளையைக் கடக்கமாட்டாத வீமன் அச்சைந்தவனை ஐங்குடுமிவைத்து அம்பாலே தலையைச் சிரைத்துக் கழுதையின்மேலேற்றிப் பரிபவப்படுத்தி அனுப்பிவிட, அங்ஙனம் அவமானப்பட்ட சிந்துராசன் பாண்டவரைக் கொல்லுமாறு வரம் பெறும்பொருட்டு இமயகிரியிற்சென்று தவஞ்செய்து பரமசிவனைத் தியானித்துப் பலநாள் பிராயோபவேசமாகக் கிடக்க, பிரதியக்ஷ மான சிவபிரான் 'ஸ்ரீகிருஷ்ணசகாயரான அப்பாண்டவர்களைக் கொல்லுதலும் வெல்லுதலும் உன்னா லாகுவதன்று; பெரும் போரில் ஒருநாள் அருச்சுனனொழிந்தோரைத் தகைவதற்கே யாகும்' என்று தனது கொன்றைப்பூ மாலையையும், பகைவெல்லவல்ல வொரு கதாயுதத்தையும் அன்போடு கொடுத்தருளினனெனக் காண்க. 'தான் முன்னம் வீமசேனனால் அபசயப்பட்ட அவமானந் தீரவேண்டிப் பரமேசுவரனை நோக்கித் தபசுபண்ண, ஆங்கு அவ னும் பிரசந்நனாய் 'உன் அபிப்ராயம் என்?' என்றலும், 'பாண்ட வரைச் சயஞ்செய்யுமாறு எனக்கு அருள்செய்வாயாக' என்றலும், 'சக்கரபாணிசகாயராகிய பாண்டவரை வெல்லவரிது; மற்றவரை ஒருகால் மானபங்கப்படுத்தி' என்று தன்சடாமகுடத்துக் கொன்றை மாலையைப் பிரசாதிப்ப, பெற்றுப் போந்த அக்கொன்றைமாலை யால், வீமசேனன் துணைபுகுதாது விலக்கியிட்டான் சயத்திரதன்' என்று பெருந்தேவனார் கூறியவாறு உணர்க. (185)

48. அரன்முடியணிந்ததாமமிதுவெனவடிகொடுகடந்துபோக
வெருவுவர், பரவைங்கர் நம்பநாதியவனிபர் பலருடன் வளைந்து
கோலியமரிடை, வரமுறவணங்குநாளி லருள்செய்து மனமகிழ

மங்கைபாகனுதவிய,வுரனுடையதண்டினலிவ்வபிமனையுயிர்கவர்த லின்றுசாலவுறுதியே.

(இ - ள்.) 'அரன் முடி அணிந்த தாமம் இதுஎன - சிவபிரான் திருமுடியில் தரித்த மாலை இதுவென்று, அடி கொடு கடந்து போக வெருவுவர் - (வீமனும் அபிமனும் தமது) கால்களால் (அதனைத்) தாண்டிச்செல்ல அஞ்சுவார்கள்; (அச்சமயத்தில்) பரவைநிகர் நம் பதாதி-கடல்போன்ற நமது சேனையிலுள்ள, அவனிபர் பலருடன் - அரசர்கள் அநேகருடனே, வளைந்து கோலி-இடைவிடாமற் சூழ்ந்து, அமரிடை - போரில், வரம் உற வணங்கு நாளில் மங்கைபாகன் அருள் செய்து மனம் மகிழ உதவிய உரன் உடைய தண்டினால் - வரம்பெறும்படி வணங்கியகாலத்தில் சிவபிரான் கருணைசெய்து மனம்மகிழ (உனக்கு)க்கொடுத்த வலிமையுள்ள கதாயுதத்தால், இ அபிமனை உயிர் கவர்தல்-இந்தஅபிமந்யுவைக் கொல்லுதல், இன்று சால உறுதிஏ-இப்பொழுது மிகநன்மைதரும் உபாயமாம்;' (எ-று.)

மங்கைபாகன் - உமாதேவியை (இட)ப்பக்கத்தி லுடையவன். எப்பொழுதும் மங்கைப்பருவத்தையே உடைமையால், உமாதேவி 'மங்கை' எனப்பட்டாள். உறுதி-காரியவாகுபெயர். ஏ தேற்றம்.

49.—சயத்திரதனும் துரியோதனன்கூறிய உபாயத்தைச்செய்ய உடன் பட்டு, சிவபெருமானருளிய கொன்றைமாலையை யெறிதல்.

எனவிவன்மொழிந்தபோ திலவனிவனிணையடி வணங்கியாது நினைவினி, யுனதுநினைவெஞ்சிடாம லபிமனையுயிர்கவர்வ னென்று தேறவுரைசெய்து, கனகதருமன்றன் மாலையெனவொளிர்கடியிதழி யந்தண்மாலை பரமனை, மனனுறவுணர்ந்து நாவினிகழ்தரு மறை யொடுவளைந்துவீழவெறியவே.

(இ - ள்.) என - என்று, இவன் - துரியோதனன், மொழிந்த போதில்-சொன்னபொழுதிலே,—அவன்-சயத்திரதன், இவன் இணை அடி வணங்கி-துரியோதனனது உபயபாதத்தை நமஸ்கரித்து, 'யாது நினைவு-(வேறு) என்ன எண்ணம் உள்ளது? [ஒருசிந்தையும் பட வேண்டுவதில்லை]; இனி - இப்பொழுதே, உனது நினைவு எஞ்சிடாமல்-உன்கருத்துக்குக் குறையுண்டாகாதபடி, அபிமனை உயிர் கவர்வன்-அபிமந்யுவைக் கொல்வேன்,' என்று—, தேற - (துரியோதனன்) மனந்தெளியும்படி, உரைசெய்து-சொல்லி,—(சயத்திரதன்), —பரமனை - (எல்லாரினுஞ்) சிறந்த சிவபிரானை, மனன் உற உணர்ந்து - மனத்திலே பொருந்தத் தியானித்து, கனக தரு - பொன் மயமான கற்பகவிருட்சத்து மலர்களினாலாகிய, மன்றல் - பரிமளமுள்ள, மாலைஎன - மாலைபோல, ஒளிர் - விளங்குகிற, கடி - வாசனையையுடைய, அம் - அழகிய, தண் - (தேனினாற்) குளிர்ந்த, இதழி மாலை - கொன்றைப்பூமாலையை, நாவில் நிகழ் தரு மறையொடு - நாக்கில் உச்சரிக்கப்படுகிற மந்திரத்துடனே, வளைந்து வீழ எறிய - (அபிமன்தேரைச்) சூழ்ந்துவிழும்படி வீசிப் போகட,—(எ - று.)—"எறிதொடையல்வளைந்து சூழவருதலும்" என அடுத்தகவியோடு தொடரும்.

பொன்னுலகமாகிய சுவர்க்கத்தில் உள்ளனயாவும் பொன்மய மாதலால் 'கனகதரு' எனப்பட்டது. கனகத்தை மலருக்கு அடையாக்கினுமாம்; கொன்றைமலர் பொன்னிறமாதலால், கனகதருமலரோடு உவமிக்கப்பட்டதென்க. இதழி-நிறைந்த இதழ்களையுடையதெனக் காரணப்பெயர்போலும். மறை - மறைக்கப்படுவது என மந்திரத்துக்குக் காரணக்குறி; "மந்த்ரம் யத்நேந கோபயேத்" [மந்திரத்தை முயற்சியால் மறைக்கவேண்டும்] என்பது, விதி. (187)

50.—வென்றுமீளுகையில்,சிவபிரான்மாலை குறுக்கிட, அபிமன் கடவாது பகையைமுறியடித்து மடிவதாகத்துணிந்துபொருதல்.

எறிதொடையல் சங்க பாணிமருமக னிகலுமமர்வென்று மீளு மளவையி, னெறியிடைவி ளங்கிவாள கிரியென நிமிர்வுறவளைந்து சூழ வருதலு, மறிவுடனி றைஞ்சி யாதி பகவன தணிமுடிய லங்க லாகு மடையலர், முறியவினி மண்டு போரி லமர்செய்து முடிதுமென வந்து மீள முடுகவே.

(இ - ள்.) எறி தொடையல்-(சயத்திரதனால்) வீசப்பட்ட அம்மாலை, சங்கபாணி மருமகன் இகலும் அமர் வென்று மீளும்அளவையில்-சங்கத்தைக் கையிலுடைய கண்ணனுக்கு மருமகனான அபிமன் எதிர்த்துச்செய்த போரில்செயித்து (வீமனுடன் சேர்தற்கு)த் திரும்புமளவில், நெறியிடை - வழியிலே, விளங்கி - பிரகாசித்து, வாள கிரி என - சக்கரவாளமலைபோல, நிமிர்வு உற - விளக்கம் பொருந்த, சூழ வளைந்து வருதலும் - சுற்றிலுஞ் சூழ்ந்து பொருந்தியிட,—(அதுகண்டு அபிமன்), அறிவுடன் இறைஞ்சி - (இது இறைவனதுமாலையென்ற) அறிவோடு வணங்கி, 'ஆதி பகவனது அணி முடி அலங்கல் ஆகும் - முதற்கடவுளான சிவபிரானது அழகிய திருமுடியில் தரித்த மாலையாகும்; (இதனைத் தாண்டிடுதல் தகுதியன்று); (ஆதலால்), இனி—, மண்டு போரில் - நெருங்கிய யுத்தத்தில், அடையலர் முறிய - பகைவர் அழிய, அமர் செய்து - போர் செய்து, முடிதும்-இறப்போம்,' என - என்றுஎண்ணி, மீள வந்து முடுக - திரும்பிவந்து போர்செய்யத்தொடங்க,—(எ-று.)—" இதழித்தொடைவிலங்கியது" என் மேல் 52-ஆங் கவியோடு முடியும். பி - ம்: நெறியிடைவிலங்கி.

சக்கரவியூகத்தினிடையில் தனியனாய் அகப்பட்டுக்கொண்ட தனக்கு வேறுஎவரும் துணையில்லாமையாலும், அவ்வியூகத்தினின்று மீண்டுவருதற்குத் தான் முழுவதும் வழியறியாமையாலும், அபிமன்முடிவோமென்று கருதினன். சக்கரவாளமலை - பூமியைச் சூழ்ந்த கடலைச்சுற்றிலும் கோட்டைமதில்போலச் சூழ்ந்துள்ளதொரு பருவதமென்ப. ஆதிபகவன் - இருபெயரொட்டு. (188)

வேறு.

51.—மூன்றுகவிகள்—அம்மாலையைக் கடத்தற்கு அஞ்சி வீமன்வெளிநின்றமை கூறும்.

பரிசனகு மாரன்விடு, மெரிகணைக ளான்முடுகு
தரியலர்ப தாதியடை, நெரியவரு காலையிலே.

(இ - ள்.) பரிசன குமாரன் - வாயுகுமாரனான வீமன், விடும் - (தான்) பிரயோகிக்கிற, எரி கணைகளால் - உக்கிரமான அம்புகளால், முடுகு தரியலர் பதாதி படை - விரைந்துபோர்செய்த பகைவர்களது சேனைக்கூட்டம், நெரியவரு காலையிலே - சிதைய மீளுகிற பொழுதிலே,—(எ - று.)—"என்று குறுகலும்" என வருங் கவியோடு இயையும்.

எரிகணை - பகைவரையழிக்கும் அம்பும், விளங்குகிற அம்பும், நெருப்பில் வைத்து வடிக்கப்பட்ட அம்புமாம்: வினைத்தொகை. பதாதிபடை - நிலைமொழி வடமொழியாதலின், இயல்பு.

இதுமுதல் இருபத்தெட்டுக் கவிகள் - பெரும்பாலும் இரண்டு சீர்களும் விளங்காய்ச்சீர்களாகிய குறளடி நான்குகொண்ட **வஞ்சித் துறைகள்**. இவற்றிற் சிறுபான்மை மாச்சீர்களும் வந்துள்ளன.

52. விறலபிமனின்றகள, முறுதுமினியென்றுநனி
குறுகலும்விலங்கியது, நறையிதழியந்தொடையே.

(இ - ள்.) 'விறல் - வெற்றியையுடைய, அபிமன்—, நின்ற - பொருந்தின, களம் - இடத்தை, இனி - இப்பொழுது, உறுதும் - (நாம்) அடைவோம்,' என்று - என்று எண்ணி, (வீமன்), நனி குறுகலும் - மிகச்சமீபித்தவளவிலே,—நறை-வாசனையுடைய,அம்-அழகிய, இதழி தொடை - கொன்றைப்பூமாலை, விலங்கியது -குறுக்கிட்டது; (எ - று.)

நறை - தேனுமாம்: இதனை 'ஐ' விகுதிபெற்ற பண்புப்பெயரென்னலாம். ஈற்று ஏகாரத்தை இங்குப் பிரிநிலை யென்னலாம்.

53. இன்றமரின்யாருமுயிர், பொன்றிடினுமீசனணி
கொன்றைகடவேனெனமுன், னின்றனனராதிபனே.

(இ - ள்.) (அதுகண்டு), நர அதிபன் - வீமராசன், 'இன்று - இன்றைக்கு, அமரின் - போரில், யார்உம் - எல்லோரும், உயிர் பொன்றிடின்உம் - உயிரழிவாராலும், (யான்), ஈசன் அணி கொன்றை - சிவபிரான் தரித்த கொன்றைப்பூமாலையை, கடவேன் - தாண்டமாட்டேன்', என - என்றுகருதி, முன் நின்றனன்-முன்னே நின்றுவிட்டான்; (எ - று.)

இங்ஙனங் கூறியதனால், வீமனது சிவபக்தி மிகுதி விளங்கும். கொன்றை - அதன் மலர்மாலைக்கு இருமடியாகுபெயர். (191)

54.—அபிமனுக்குத் தான் உதவாமைக்கு வீமன் நொந்து கூறலுறுதல்.

முந்துவடிவாளமரின், வந்தணுகுவான்மதலை
நிந்தனைகொலாமிதென, நொந்துசிலகூறினனே.

(இ - ள்.) 'முந்து - சிறந்த, வடி வாள் அமரின் - கூர்மையான ஆயுதங்களைக்கொண்டு செய்யும்போரில், வந்து அணுகுவான்-வந்து நெருங்கியுள்ளவன், மதலை -குமாரனான அபிமன்: இது-(அவனுக்கு தான் உதவியாகாத) இத்தன்மை, நிந்தனை ஆம் - பழிப்புக்குக் கார

ணமாம்,' என - என்று எண்ணி, நொந்து - வருந்தி, (வீமன்), சில கூறினன் - சில (கோபவார்த்தைகளைக்) கூறுபவனானான்; (எ - று.) —அவற்றை, மேல்மூன்றுகவிகளிற் காண்க.

நிந்தனை இது - காரணம் காரியமாக உபசரிக்கப்பட்டது. கொல் - அசை. பி - ம்: முந்தமுடிவானமரில். (193)

55.—மூன்றுகவிகள் - வீமன் நொந்து கூறியமையைத் தெரிவிக்கும்.

இந்தமதுமாலையிடை, தந்தபிமனாருயிரை
யுந்தியிடவோவெளிது, சிந்துபதிசேவகமே.

(இ - ள்.) 'சிந்து பதி சேவகம் - சிந்துதேசத்தரசனது வீரம்,— இந்த மது மாலை இடைதந்து - தேனையுடைய இக்கொன்றைப்பூ மாலையை நடுவிலே போகட்டு, அபிமன் ஆர் உயிரை உந்தியிடஓ - (தனிப்பட்ட) அபிமந்யுவின் அருமையான உயிரைப் போக்கிவிடு தற்கோ (வல்லது)? எளிது - (அவ்வீரம்) எளிமையையுடையது;' (எ - று.)—எளிமை - இகழப்படுந்தன்மை; தாழ்வு. தருமயுத்த மாகவன்றி வேறுசூழ்ச்சிசெய்து கடவுள்மாலையைக் குறுக்கிடுவித் துத் துணையில்லாதபடி தனிப்படுத்திக் கொல்ல முயலுதல் பழிக்கத் தக்கதென்றதாம். (193)

56. விரகுபடவெப்பொழுது, முரணமர்தொடக்கும்வலி
யுரகதுவசற்கொழிய, வரசரிலெவர்க்குளதோ.

(இ - ள்.) 'எப்பொழுதும்—, விரகு பட-வஞ்சனையாக, முரண் அமர் தொடக்கும் - மாறுபட்ட போரைத் தொடங்கிச்செய்கிற, வலி - வலிமை, உரக துவசற்கு ஒழிய - பாம்புக்கொடியனான துரி யோதனனொருவனுக்கே தவிர, அரசரில் எவர்க்கு உளதுஓ-அரசர் களில் வேறுயார்க்கேனும் உள்ளதோ? (எ - று.)

'உரகதுவசன்' - கொடுமையை விளக்குகிற சாபிப்பிராயவிசே டியம்: கருத்துடையடைகொளியணி; பரிகராங்குராலங்காரம். (194)

57. தன்மகனையுஞ்சமரில், வன்மையொடுகொன்றொழிய
மன்முனைதிரண்டிடினு, மென்மகனிறந்திடுமோ.

(இ - ள்.) மன் - (பல) அரசர்கள், முனை - போர்க்களத்தில், திரண்டிடின்உம் - கூட்டம்கூடி எதிர்த்துப்போர்செய்தாலும், என் மகன் - எனது புத்திரனான அபிமன், தன் மகனைஉம் சமரில் வன்மையொடு கொன்றுஒழிய - அத்துரியோதனனுக்குக் குமார னை இலக்கணனையும் போரில் வலிமையாற் கொன்றாலன்றி, இறந்திடும்ஓ - இறந்திடுவானோ? (எ-று.)—பி - ம்: மடிந்திடுமோ.

இங்ஙனம் கூறியதனால் அபிமனது பல பராக்கிரம விஷயத்தில் வீமனுக்கு உள்ள நம்பிக்கை வெளியாம். தம்பிமகனிடத்தில் அபேத மாகவுள்ள அபிமானத்தால், 'என்மகன்' என்றான். 'தன்' என் றது படர்க்கையாதலால், இங்கே, துரியோதனனைக் குறித்தது; (இது, வடமொழியில் ஸர்வநாம சப்தங்களுள் ஒன்றும்.) மன் - சாதிப்பெயராய், இராசசமூகத்தை உணர்த்தியது. (195)

58.—**வீமன் அங்கொன்றைமாலையைக்கடவாது வணங்கிச்செல்லுதல்.**

என்றிதழிமாலைதனை, நின்றுதொழுதன்பினொடு
சென்றனனிடிம்பனைமுன், வென்றதிறல்வீமனுமே.

(இ - ள்.) *இடிம்பனை - இடிம்பாசுரனை, முன் வென்ற-முன்பு சயித்த [கொன்ற], திறல்-வலிமையையுடைய, வீமனும்—, என்று-என்றுசொல்லி, இதழி மாலைதனை அன்பினொடு நின்று தொழுது - கொன்றைப்பூ மாலையைப் பக்தியோடு எழுந்து நமஸ்கரித்து, சென்றனன் - மீண்டுசென்றான் ; (எ - று.)*

தேரில்வீரர்வீற்றிருத்தல் இயல்பாதலின், 'நின்றுதொழுது' எனவேண்டிற்று. *(196)*

59.—**மாலைகடவாத அபிமன் பகைநடுவில் உக்கிரத்தேசொடு நிற்றல்.**

மாலைகடவாமல்வரு, பாலனரசர்க்குநடு
வேலைவடவைக்கனலி, போலொளிரநின்றனனே.

(இ - ள்.) *மாலை கடவாமல் - கொன்றைமாலையைக் கடக்க மாட்டாமல், வரு - மீண்டுவந்த, பாலன் - இளையவனான அபிமன், அரசர்க்கு நடு - பகையரசர்களுக்கு மத்தியில், வேலை வடவை கனலி போல் - கடலின்மத்தியில் படபாமுகாக்கினிபோல, ஒளிர நின்றனன் - விளக்கமாக நிலைநின்றான் ; (எ - று.)*

பகையரசர் குழாத்தினிடையில் அகப்பட்டுள்ள அபிமனொருவன் தானே அக்கூட்டமுழுவதையுஞ் செருக்கடக்கவல்லனாந் தன்மைக்கும், தேககாந்திமிகுதிக்கும், கடலிடையுள்ள வடவையனலை உவமைகூறினார். *(197)*

60.—**இரண்டுகவிகள் - அர்த்தரதரான எதிரிகள் அம்புமழை பொழிதலைக்கூறும்.**

யாளியெனநின்றவய, மீளியைவளைந்துபல
வாளிகள்பொழிந்தனர்கள், கூளிகணடஞ்செயவே.

(இ - ள்.) *யாளி என நின்ற - யாளியென்னும் மிருகவிசேஷம் போல (மிகவலியனாய்) நின்ற, வய மீளியை - வெற்றியையுடைய வீரனான அபிமனை, (பகையரசர்கள்), வளைந்து - சூழ்ந்துகொண்டு, கூளிகள் நடம் செய - பேய்கள் கூத்தாட, பல வாளிகள் - அநேக பாணங்களை, பொழிந்தனர்கள்-; (எ - று.)*

அபிமனை 'யாளி' என்றதற்கு ஏற்ப, பகையரசரை யானையென்னாமையால், **ஏகதேசவுருவகம். பி-ம்:** *மீளிமிசைவந்துபல.* *(198)*

61. பற்பலருமர்த்தரதர், விற்பலவணக்கியெதிர்
சொற்பொலிவயப்பகழி, சிற்சிலதொடுத்தனரே.

(இ - ள்.) *பல் பலர் உம் அர்த்தரதர் - மிகப்பலரான அர்த்தரத வீரர்கள், வில்பல வணக்கி-(தம்தம்) விற்கள் பலவற்றை வளைத்து, எதிர் - அபிமனெதிரில், சில் சில - சிலசிலவாகிய, சொல் பொலி வய பகழி - புகழ் விளங்குகிற வலிய அம்புகளை, தொடுத்தனர் - பிரயோகித்தார்கள் ; (எ - று.)* *(199)*

62.—எய்த அம்புகளை விலக்கி அபிமன் பகைஞரைப் பலகணை சிந்துதல்.

பெய்கணையடங்கவிவ, னெய்கணைவிலக்கியிட
மொய்கணையனந்தமவர், மெய்கணையவுந்தினனே.

(இ - ள்.) *பெய் கணை அடங்க - (அவர்கள்) சொரிந்த அம்பு களையெல்லாம், இவன் எய் கணை - இந்தஅபிமனெய்த அம்புகள், விலக்கியிட-(இவன்மேல் வந்திடாதபடி இடையிலே) தடுத்துவிட, (பின்பு இவன்), மொய் அனந்தம் கணை - நெருங்கின அளவில்லாத அம்புகளை, அவர் மெய்கள் நைய - அந்த அர்த்தரதர்களது உடம்பு கள் வருந்தும்படி, உந்தினன் - செலுத்தினான் ; (எ - று.) — ந + அந்தம் = அநந்தம் ; எல்லை யில்லாதது.* (200)

63.—மூன்றுகவிகள் - கன்னனை அபிமன் பொருது வென்றமை கூறும்.

கன்னனுமடங்கலபி, மன்னுவுமுடன்றுமுனை
முன்னிரதமுங்கடவி, மன்னமர்தொடங்கினரே.

(இ - ள்.) *(பின்பு), கன்னன்உம் - கர்ணனும், மடங்கல் அபி மன்னுஉம்-ஆண்சிங்கம்போன்ற அபிமந்யுவும், உடன்று-கோபித்து, முனை முன் இரதம்உம் கடவி - போர்க்களத்தின் முன்னிடத்தில் தேரைச்செலுத்துதலுஞ்செய்து, மன் அமர் தொடங்கினர் - பெரிய போர்செய்யத் தொடங்கினார்கள் ; (எ - று.)* (201)

64. அங்கர்பதிதேரிலிவன், வெங்கணைகணாலுவிட
மங்குலெனநாலுதுர, கங்களும்விழுந்தனவே.

(இ - ள்.) *அங்கர் பதி தேரில்-அங்கநாட்டார்க்கரசனான கர்ண னது இரதத்தின்மேல், இவன்-அபிமன், வெம் கணைகள் நாலு விட- கொடிய நான்கு அம்புகளைச் சொரிய, (அதனால்), நாலு துரகங்கள் உம் - (அக்கன்னனது தேர்க்) குதிரைகள் நான்கும், மங்குல் என - மேகங்கள்போல, விழுந்தன - (இறந்து கீழ்) விழுந்தன ; (எ-று.)*

வெள்ளைக்குதிரைகளாதலால், கீர்கொள்ளாத வெள்ளைமேகம் உவமையென்க ; இவ்வாறே வியாசபாரதத்திலுங் கூறியுள்ளது.

65. தொடுத்தசிலைகோலியவ, னெடுத்தசிலையுங்கொடியு
நடுத்தறியவெட்டிமுனை, கெடுத்தனனனந்தரமே.

(இ - ள்.) *அனந்தரம் - பின்பு, (அபிமன்), தொடுத்த சிலை கோலி - பிடித்த வில்லை வளைத்து, (எய்த அம்புகளால்), அவன் எடுத்த சிலைஉம் கொடிஉம் நடு தறிய வெட்டி - அக்கன்னன் ஏந்திய வில்லையும் (அவனது கச்சைக்) கொடியையும் நடுவிலே முறியும் படி துணித்து, முனை கெடுத்தனன் - (அவனது) போரை அழித் தான் ; (எ - று)*

தொடுத்த - அம்பு தொடுக்குந்தன்மையுள்ள எனினுமாம் ; இனி, சிலை கோலித் தொடுத்த என மொழிமாற்றி, வில்லை வளைத் துத் தொடுத்த அம்புகளால் என்றலுமொன்று : இவ்வுரைக்கு, தொடுத்த - பலவின்பாற்பெயர். (203)

66.—இதுவும், மேற்கவியும்-குளகம்: துரியோதனன்தம்பிமார் பொருது தோற்றமை கூறும்.

இரவிமகனேகுதலு, மரவதுசன்றுணைவர்
விரவினர் விளைந்துதம, புரவியணிதேர்படவே.

(இ - ள்.) (இங்ஙனம் தோற்று), இரவி மகன் ஏகுதலும் - சூரியபுத்திரனான கர்ணன் சென்றவளவில்,—அரவ துவசன் துணைவர் - பாம்புக்கொடியனான துரியோதனனது தம்பிமார், விளைந்து விரவினர் - மிகுதியாகச் சூழ்ந்து,—தம புரவி அணி தேர் பட-தங்களுடைய குதிரைகள் பூட்டிய தேர் அழிய,—(எ - று.)—"கணைதைக்க முதுகிட்டனர்" என அடுத்த கவியில் முடியும். 'அரவதுவசன்' - சந்தவின்பம் நோக்கிய இயல்பு. (204)

67. விட்டவிரதத்தினொடு, வட்டவரிவிற்குரிசி
றொட்டகணைதைக்கவவர், கெட்டுமுதுகிட்டனரே.

(இ - ள்.) வட்டம் வரி வில் குரிசில் - வளைவான கட்டமைந்த வில்லையுடைய அபிமன், தொட்ட - தொடுத்த, கணை – அம்புகள், தைக்க - தைத்தலால், அவர்-அத்துரியோதனன் தம்பிமார், கெட்டு - தோற்று, விட்ட இரதத்தினொடு - விட்ட தேருடனே [தேரை நீங்கியவர்களாய்], முதுகு இட்டனர்-புறங்கொடுத்தார்கள்;(எ-று)

மோனைக்குப் பொருத்தமாக, விட்ட விரதத்தினொடு எனப் பிரித்து, தாம் வென்றே மீளுவோமென்னும் விரதத்தை விட்டவர்களாய் எனினுமாம்: ஒடு-மூன்றனுருபு, அடைமொழிப்பொருளது. வட்டம் - வ்ருத்தம் : வடசொல். (205)

68.—மூன்றுகவிகள் - துரோணனும் குமாரனும் அபிமனையெதிர்த்துத் தோற்றவை கூறும்.

சுகனிகர்துரோணனொடு, மகன்விசயன்மைந்தனெதிர்
முகனமரில்வந்துபுர, தகனனெனநின்றனரே.

(இ - ள்.) சுகன் நிகர் துரோணனொடு-சுகமுனிவனை யொத்த துரோணனும், மகன்-(அவன்) மகனான அசுவத்தாமனும், விசயன் மைந்தன் எதிர் - அருச்சுனபுத்திரனான அபிமந்யுவின் எதிரில், முகன் அமரில் - முற்போரில், புரதகனன்என-திரிபுரமெரித்த பரமசிவன் போல, வந்து நின்றனர்,—(எ - று.)

சுகன் - வேதவியாச புத்திரன் ; அவ்வியாசபகவானினும் மேம்பட்ட அறிவொழுக்கங்களையும், வைராக்கியத்தையும் உடையவன் ; பகவானது அமிசமானவன்; பரமபாகவதர்களில் ஒருத்தன்; பாகவத புராண சரித்திரத்தைப் பரீக்ஷித்து மகாராசனுக்குக் கூறியவன்: கிளியினிடமாகப் பிறந்ததனாலும், கிளிமூக்கை யுடைமையாலும், சுகனெனப் பெயர். இவனைத் துரோணனுக்கு உவமைகூறினது, ஞானசீலங்களின் மேன்மைக்கு. எதிர் முகன்-எதிர்முகத்தில் என்றுமாம். புரதகனனுவமை, உக்கிரத்தன்மையில். (206)

69. நிற்குநிலைநின்றுவரி, விற்களும்வளைத்தா
ருற்கைகளினூறுபல, பொற்கணைதொடுத்தார்.

(இ - ள்.) (எதிர்த்துவந்த அவ்விரண்டுபேரும்), நிற்கும் நிலை நின்று - (தாம்) நிற்றற்கு உரிய நிலையிலே நின்று, வரி விற்கள்உம் வளைத்தார் - கட்டமைந்த (தம்) விற்களையும் வளைத்து, உற்கைகளின் - அனற்கொள்ளிகள் போல, நூறு பல பொன் கணை - பல நூற்றுக்கணக்கான அழகிய அம்புகளை, தொடுத்தார்— ; (எ-று.)

நிலை - யுத்தத்தில் வில் வளைத்து அம்பினை யெய்வார்க்கு உரிய நிலை. உற்கை - உல்கா என்னும் வடமொழியின் திரிபு. நூறு என்பதை வினைத்தொகையாக எடுத்தால், அழிக்கிற எனப்பொருள் ; இனி, மோனைப்பொருத்தத்திற்காக ஊறு எனப் பதம் பிரித்தால், அச்சொல் - இடையூறு, கொலை, தழும்பு, தீமை, பரிசம் எனப் பொருள்படும்; அவற்றைச் செய்யவல்ல என்க. (207)

70. வருகணைவிலக்கியெதிர், பொருகணைகளாலே
யொருவனெரிமைப்பொழுதி, லிருவரையும்வென்றான்.

(இ - ள்.) ஒருவன் - தனியனான அபிமன், எதிர் பொரு கணைகளால் - (தான்) எதிரில் எய்கிற அம்புகளால், வரு கணை விலக்கி - (தன்மேல்) வருகிற (துரோண அசுவத்தாமரது) அம்புகளைத் தடுத்து, ஓர் இமை பொழுதில் - ஒரு மாத்திரைப் பொழுதிலே, இருவரைஉம் வென்றான்—; (எ - று.) (208)

71.—துரோண அசுவத்தாமர் புறங்கொடுத்தமை.

தேர்முகமிழந்துமிரு, கார்முகமிழந்தும்
போர்முகமிழந்துமவர், நேர்முகமிழந்தார்.

(இ - ள்.) அவர் - அவ்விரண்டுபேரும்,—(அபிமனம்புகளால்), தேர் முகம் இழந்துஉம் - தேராகிய இருப்பிடத்தை யிழந்தும், இரு கார்முகம் இழந்துஉம் - இரண்டுவிற்களையும் இழந்தும், போர்முகம் இழந்துஉம்-போர் செய்யுந்தன்மையை யிழந்தும், நேர் முகம் இழந்தார்-(அவனுக்கு) எதிர்முகமாக இருத்தலையும் இழந்தார்கள் [புறங்காட்டிப் போயினர் என்றபடி]; (எ-று.)—தேர் முகம் - தேர்முதலியனவும், போர்முகம் - போர்க்களமுமாம். (209)

72.—துன்முகன் பொருது முடிதறிதல்.

துன்முகனுமன்றமரின், முன்முனமர்செய்தே
வன்மிகமறிந்ததென, நன்முடிதறிந்தான்,

(இ - ள்) அன்று-அப்பொழுது, துன்முகன்உம்-துர்முகனென்பவனும், அமரில் - போர்க்களத்தில், முன் முன் அமர் செய்து-முந்தி முந்தி வந்து போர்செய்து, வன்மிகம் மறிந்தது என - புற்றுச் சரிந்ததுபோல, நல்முடி தறிந்தான் - (அபிமனம்பால் தனது) அழகிய கிரீடம் அழியப்பெற்றான் ; (எ - று.)

வன்மிகம் - வல்மீகமென்னும் வடசொல்லின் திரிபு. துர்முகன் துரியோதனன் தம்பி யாதலாலும், அவனை அபிமன் கொன்றனனென்றால் நூற்றுவரையுங்கொல்வே னென்ற வீமன்சபதம் பொய்க்குமாதலாலும், மேல் இவனை வீமன் கொல்வதனாலும், 'முடிதறிந்தான்' என்பதற்கு - இவ்வாறு பொருள் கொள்ளப்பட்டது. துர்

முகனென வேறோரரசனுள னெனக்கொண்டால், தலைதுணிபட்டு விழுந்தா னென்னலாம். (210)

73.—நான்குகவிகள் - அபிமனோடு சல்லியனும் அவன் மகனும் பொருகையில் மகனிறக்கத் தந்தை புறங்கொடுத்தமை கூறும்.

சித்திரவில்வீரனெனு, மத்திரர்பிரானும்
புத்திரரிலாதியுரு, மித்திரனும்வந்தார்.

(இ - ள்.) சித்திரம் வில் வீரன் எனும் - அழகிய வில்லில் (சிறந்த) வீரனெனப்படுகிற, மத்திரர் பிரான்உம் - மத்திரதேசத்தார்க்கு அரசனான சல்லியனும், புத்திரரில் - (அவனது) மக்களுள், ஆதி - முதல்வனான, உருமித்திரன்உம் - உருமித்திரனென்பவனும், வந்தார் - (எதிர்த்து) வந்தார்கள்; (எ-று.)

துணைவரோடும் புத்திரரோடும் போர்புரி சேனையோடும், மத்திரபதி சுயோதனன் சூழ்ச்சியால் அவனுக்குப் படைத்துணையாயினன் ஆதலால், சல்லியபுத்திரனும் துரியோதனன்பக்கத்தவனவன்.

74. வந்தபிமனோடமரின், முந்தியிருவோருஞ்
சிந்துகணைமாரிகளி, னந்தரமடைத்தார்.

(இ - ள்.) வந்து—, அபிமனோடு—, அமரில் முந்தி - போரில் முற்பட்டு, இருவோர்உம் - அவ்விரண்டுபேரும், சிந்து கணை மாரிகளின் - (தாம்) சொரிந்த அம்புமழைகளால், அந்தரம் அடைத்தார் ஆகாயத்தை மறையச்செய்தார்கள்; (எ - று.)—பி - ம்: மறைத்தார். (212)

75. அவரவரெடுத்தவிரு, தவருநடுவெட்டா
விவர்கணைவிலக்குவன, கவர்கணைதொடுத்தான்.

(இ - ள்.) (உடனே அபிமன், தன் அம்புகளால்), அவர் அவர் எடுத்த இரு தவர்உம் - இவ்விரண்டுபேரும் எடுத்துவந்த இரண்டு விற்களையும், நடு வெட்டா - நடுவிலே துண்டித்து, இவர் கணை விலக்குவன - இவர்களது அம்புகளைத் தடுப்பனவான, கவர் கணை- (பகைவருயிரைக்) கவரவல்ல அம்புகளை, தொடுத்தான்-(இவர்கள் மேற்) பிரயோகித்தான்; (எ - று.)—கவர்கணை - நுனியிலே பிளப்புள்ள அம்பும், ஒன்று பலவாகும் அம்புமாம். (213)

76. மைந்தனொருவாளியினி, லந்தரமடைந்தா
னொந்துபலவாளியொடு, தந்தைபுறகிட்டான்.

(இ - ள்.) (அப்பொழுது), மைந்தன் - சல்லியபுத்திரன், ஒரு வாளியினில் - (அபிமனது) அம்புஒன்றால், அந்தரம் அடைந்தான் - வீரசுவர்க்கஞ் சேர்ந்தான் [இறந்தான்]; (பின்பு), தந்தை - அவன் தந்தையான சல்லியன், நொந்து-(புத்திரசோகத்தால்) வருந்தி, பல வாளியொடு - (தன்மேல் தைத்த) அநேக பாணங்களுடனே, புறகு இட்டான் - முதுகுகொடுத்தான்; (எ - று.) (214)

77.—அபிமனது உறுதிநிலைமைகண்ட மகாரதர்பலர்உடைந்துபோதல்.

வென்றபிமன்வாளமரி, னின்றநிலைகண்டே
யொன்றுபடமாவிரதர், சென்றனருடைந்தே.

(இ-ள்.) (இவ்வாறு), அபிமன்—, வாள் அமரில்-ஆயுதங்களைக் கொண்டு செய்யும்போரில். வென்று - (அவர்களைச்) சயித்து, நின்ற—, நிலை - உறுதி நிலையை, கண்டுஎ-பார்த்தமாத்திரத்தாலே, மா இரதர்-மகாரதவீரர் (பலர்), ஒன்றுபட-ஒருசேர, உடைந்து சென்றனர் - அழிந்துபோயினர்; (எ - று.)

வாளமர் - கொடியபோர் எனவுமாம். மோனைக்கும் இடத்திற்கும் ஏற்ப, 'வில்லமரில்' எனப் பாடங்கொள்ளுதல், சிறக்கும். *(215)*

78.—**கவிக்கூற்று: அபிமனாலடிபட்டவர் மிகப்பலரெனல்.**

கெட்டவர்க ளின்னரென, முட்டவுரைக் கொண்ணு
பட்டவரநேகரிவன், விட்டகணையாலே.

(இ-ள்.) இவன் விட்ட கணையால்ஏ - அபிமன் எய்த அம்புகளாலே, பட்டவர் - இறந்தவர், அநேகர்-பலர்; கெட்டவர்கள் - தோற்று ஒழிந்தவர்கள், இன்னர் என - இவ்வளவின ரென்று, முட்ட உரைக்க ஒண்ணு-முழுவதும் சொல்லமுடியாது; (எ - று.)

உரைக்க என்னும் வினையெச்சமே தொழிற்பெயர்ப்பொருளதாய், ஒண்ணு(து) என்னும் ஒருமைமுற்றுக்கு எழுவாயாம்; இனி, 'உரைக்கொண்ணூர்' எனப்பாடமிருப்பின்நலம். கெட்டார்-காணாது போனவரெனினுமாம், *(216)*

வேறு.

79.—**இரண்டுகவிகள் - சக்கரவியூகத்தைப்பிளந்துநடுநிற்கும் அபிமனைக் குறித்த வருணனை.**

முற்சக் ரயூகம் பிளப்புண்டபின் முன்பி னோடும்
பொற்சக் ரமென்ன வெறித்தாமம்பொ லிந்து சூழ
விற்சக் ரமாக மணித்தேரினின் மீது நிற்பான்
கற்சக் ரமாக நடுவூர்செங் கதிரொ டொத்தான்.

(இ-ள்.) சக்ரயூகம் - (துரியோதனனது) சக்ரவியூகம், முன் பிளப்புண்ட பின் - (தன்அம்புகளால்) முன்னிடம் பிளக்கப்பட்ட பின்பு, முன்பினோடுஉம் - வலிமையுடனே, வெறி தாமம்-வாசனையையுடைய வெற்றிமாலை, பொன் சக்ரம் என்ன - பொன்வட்டம் போல, பொலிந்து சூழ - (தன்கழுத்தைச்) சுற்றிலும் விளங்க, வில் சக்ரம் ஆக-(கையிற்பிடித்த) வில் வட்டமாக வளைந்திருக்க, மணி தேரின்மீது - மணிகள்கட்டிய தேரின்மேல், நிற்பான்-(சக்கரவியூகத்தின்மத்தியில் தனியே) நின்றுவிளங்குபவனான அபிமன், கல் சக்ரம் ஆக - சக்கரவாளமலை சூழ்ந்துநிற்க, நடு ஊர் - (அதன்) நடுவிடத்தில் [ஆகாயத்திற்] செல்லுகிற, செம் கதிரொடு - சிவந்த கிரணங்களையுடைய சூரியனை, ஒத்தான்—; (எ - று.)

பொற்சக்ரம் - வட்டமாகிய பொன்னாரம். 'வெறித்தாமம் பொலிந்து சூழ' என்பதற்கு - பரிமளமுடைய (சிவனது) கொன்றைப்பூமாலை (தன்னைச்) சுற்றிலும் விளங்க என்றும் உரைக்கலாம். கதிரொடுஒத்தான்-மூன்றுருபு இரண்டாம்வேற்றுமைக்கு உரிய ஓட்டுப்பொருளில் வந்தது; உருபுமயக்கம். **பி-ம்:** மொய்ம்பினோடும். எறிதாமம். கற்சக்ரநாகம்.

(இ-ள்.) (இவ்வாறு), அபிமன்—, வாள் அமரில்-ஆயுதங்களைக் கொண்டு செய்யும்போரில், வென்று-(அவர்களைச்) சயித்து, நின்ற—, நிலை-உறுதி நிலையை, கண்டுஎ-பார்த்தமாத்திரத்தாலே, மா இரதர்-மகாரதவீரர் (பலர்), ஒன்றுபட-ஒருசேர, உடைந்து சென்றனர்-அழிந்துபோயினர்; (எ-று.)

வாளமர்-கொடியபோர் எனவுமாம். மோனைக்கும் இடத்திற்கும் ஏற்ப, 'வில்லமரில்' எனப் பாடங்கொள்ளுதல், சிறக்கும். **(215)**

78.—கவிக்கூற்று: அபிமனாற்பட்டவர் மிகப்பலரென்க.

கெட்டவர்க ளின்னரென, முட்ட வுரைக் கொண்ணு
பட்டவரநேகரிவன், விட்ட கணையாலே.

(இ-ள்.) இவன் விட்ட கணையாலே-அபிமன் எய்த அம்புகளாலே, பட்டவர்-இறந்தவர், அநேகர்-பலர்; கெட்டவர்கள்-தோற்று ஒழிந்தவர்கள், இன்னர் என-இவ்வளவினரென்று, முட்ட உரைக்க ஒண்ணு-முழுவதும் சொல்லமுடியாது; (எ-று.)

உரைக்க என்னும் வினையெச்சமே தொழிற்பெயர்ப்பொருளதாய், ஒண்ணு(து) என்னும் ஒருமைமுற்றுக்கு எழுவாயாம்; இனி, "உரைக்கொண்ணுர்" எனப்பாடமிருப்பின் நலம். கெட்டார்-காணுது போனவரெனினுமாம். **(216)**

வேறு.

79.—இரண்டுகவிகள் - சக்கரவியூகத்தைப்பிளந்துநடுநிற்கும் அபிமனைக் குறித்த வருணனை.

முற்சக்ர யூகம் பிளப்புண்டபின் முன்பினோடும்
பொற்சக்ர மென்ன வெறித்தாமம்பொலிந்து சூழ
விற்சக்ர மாக மணித்தேரின்மீது நிற்பான்
கற்சக்ர மாக நடுவூர்செங் கதிரோ டொத்தான்.

(இ-ள்.) சக்ரயூகம்-(துரியோதனனது) சக்ரவியூகம், முன் பிளப்புண்ட பின்-(தன் அம்புகளால்) முன்னிடம் பிளக்கப்பட்ட பின்பு, முன்பினோடும்-வலிமையுடனே, வெறி தாமம்-வாசனையையுடைய வெற்றிமாலை, பொன் சக்ரம் என்ன-பொன்வட்டம் போல, பொலிந்து சூழ-(தன்கழுத்தைச்) சுற்றிலும் விளங்க, வில் சக்ரம் ஆக-(கையிற்பிடித்த) வில் வட்டமாக வளைந்திருக்க, மணி தேரின்மீது-மணிகள்கட்டிய தேரின்மேல், நிற்பான்-(சக்கரவியூகத்தின்மத்தியில் தனியே) நின்றுவிளங்குபவனான அபிமன், கல் சக்ரம் ஆக-சக்கரவாளமலை சூழ்ந்துநிற்க, நடு ஊர்-(அதன்) நடுவிடத்தில் [ஆகாயத்திற்] செல்லுகிற, செம் கதிரோடு-சிவந்த கிரணங்களையுடைய சூரியனை, ஒத்தான்—; (எ-று.)

பொற்சக்ரம்-வட்டமாகிய பொன்னாரம். 'வெறித்தாமம் பொலிந்து சூழ' என்பதற்கு-பரிமளமுடைய (சிவந்து) கொன்றைப்பூமாலை (தன்னைச்) சுற்றிலும் விளங்க என்றும் உரைக்கலாம். கதிரோடுஒத்தான்-மூன்றனுருபு இரண்டாம்வேற்றுமைக்கு உரிய துல்யப்பொருளில் வந்தது; உருபுமயக்கம். பி-ம்: மொய்ம்பினோடும். எறித்தாமம். கற்சக்ரவாளம்.

இதுமுதல் ஐந்துகவிகள்-பெரும்பாலும் மூன்றுஞ்சீரொன்று புளிமாங்கனிச்சீரும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய நெடிலடி நான்குகொண்ட கலிநிலைத்துறைகள். (217)

80. வடாதுந்தெனாதும்பரராசர்வகுத்தநேமிக்
குடாதுங்குணாதுமவற்றுட்படுகோணநான்கும்
விடாதுந்துதேரின்மிசையெங்கும்விராயபோது
சடாதுங்கமௌலிப்புரசூதனன்றன்னையொத்தான்.

(இ - ள்.) பரராசர் - பகைவரான அரசர்கள், வகுத்த - அமைத்த, நேமி - சக்கரவியூகத்தில், வடாதுஉம் - வடக்குப்பக்கத்திலும், தெனாதுஉம்-தெற்குப்பக்கத்திலும், குடாதுஉம்-மேற்குப்பக்கத்திலும், குணாதுஉம் - கிழக்குப்பக்கத்திலும், அவற்றுஉள்படு- அந்நான்கு பெருந்திசைகளின் இடையிற் பொருந்திய, கோணம் நான்குஉம் - (தென்கிழக்கு தென்மேற்கு வடமேற்கு வடகிழக்கு என்னும்) நான்கு மூலைத்திசைகளிலும், எங்கும்உம்-(ஆக) எல்லா விடத்திலும், விடாது உந்து தேரின்மிசை - விடாமற் செலுத்துந் தேரின்மேல், விராய போது-(போர்க்குப்) பொருந்திய பொழுதில், (அபிமன்), சடாதுங்கம் மௌலி -(கபர்த்த மென்னுஞ்) சடையையுடைய உயர்ந்த முடியையுடைய, புரசூதனன் தன்னை-திரிபுர மெரித்தபரமசிவனை, ஒத்தான்—; (எ - று.)

அளவிறந்த பகைவர்கூட்டத்தின்மத்தியில் அஞ்சாது வீரத்தோடுநின்று தானொருவனே தொழில்செய்தற்குப் பரமசிவன் உவமம். பரராஜர், கோணம், ஜடாதுங்கமௌலி, புரஸூதநன்-வடசொற்கள், வடாது - வடக்கிலுள்ளது; இது-மரூஉமொழி-மற்றை மூன்றையும் அங்ஙனமே காண்க. விராய - விராவு என்னும்பகுதி, ஈறுதொக்கது. (218)

81.—அபிமன் வென்றமைக்கு நாணித் துரியோதனன் அவன்மீது பல்லாயிரவர்சூழத் தன்மகனைச் செலுத்துதல்.

வின்மைந்துகொண்டுதகுவோர்தமைவென்றவீர
னன்மைந்தனுக்குமுதுகிட்டனரென்றுநாணி
மன்மைந்தரெண்ணில்பதினாயிரர்வந்துசூழத்
தன்மைந்தனையுமுடனேவினன்சர்ப்பகேது.

(இ - ள்.) 'வில் மைந்துகொண்டு - வில்லின் வலிமையால், தகுவோர்தமை வென்ற - (நிவாதகவசர் காலகேயர் என்னும்) அசுரர்களைச் சயித்த, வீரன் - பராக்கிரமசாலியான அருச்சுனனுடைய, நல் மைந்தனுக்கு - சிறந்த புத்திரனான அபிமனுக்கு, முதுகு இட்டனர்- (தன்சேனையார்) புறங்கொடுத்தார்கள்,' என்று - என்றகாரணத்தால், நாணி - வெட்கப்பட்டு,—சர்ப்ப கேது-பாம்புக்கொடியனான துரியோதனன்,—எண்ணில் பதினாயிரர் மன் மைந்தர் வந்து சூழ- அளவிறந்த பதினாயிரக்கணக்கான இராசகுமாரர்கள் சுற்றிலும் வர, தன் மைந்தனைஉம் - தன்மகனான இலக்கணனையும், உடன் ஏவினன்-விரைவில் எதிர்செலுத்தினான்; (எ - று.)—தகுவர். (219)

82.—இரண்டுகவிகள் - வந்துபொருத யாவரும் முதுகிட்டமை கூறும்.

மேல்வந்தவேந்தன்மகனும்பலவேந்துமூழிக்
கால்வந்துவேலைக்கடறன்னைக்கலக்குமாபோல்
நூல்வந்தகொற்றச்சிலையாசுகநொய்தினேவி
மால்வந்தகைக்குன்றனையானைமுன்வந்துசூழ்ந்தார்.

(இ - ள்.) ஊழி கால் - பிரளயகாலத்துப் பெருங்காற்று, வந்து—, வேலை கடல்தன்னை - கரையையுடைய கடலை, கலக்கும் ஆ போல் - கலங்கச்செய்யும் விதம்போல, (சேனைசமூகத்தைக் கலங்குவிக்கும்படி), நூல் வந்த - தநுர்வேதமுறைப்படி பொருந்தின, கொற்றம் சிலை - வெற்றியையுடைய வில்லினலெய்யப்படுகிற, ஆசுகம் - அம்பை, நொய்தின் ஏவி - (எதிரிகள்மேல்) விரைவாகச் செலுத்தி, மால் கைவந்த குன்று அனையானை - திருமாலாகிய கண்ணனது கையிற் (குடையாகப்) பொருந்திய கோவர்த்தனமலையையொத்தவனான அபிமனை, மேல் வந்த வேந்தன் மகன்உம் - எதிர்த்து வந்த துரியோதனகுமாரனான இலக்கணனும், பல வேந்துஉம் - (மற்றும்) பல அரசர்களும், முன் வந்து சூழ்ந்தார் - எதிரில்வந்து வளைந்து கொண்டார்கள் ; (எ - று.)

ஊழிக்கால் - அபிமனுக்கும், வேலைக்கடல் - பகைவர்சேனைக்கும் உவமை. கலக்குமாபோல் ஏவி என்க. இந்திரனேவலால் எல்லா மேகங்களுஞ் சூழ்ந்தும் கண்ணனெடுத்த கோவர்த்தனகிரியை யாதொன்றும் ஊறுசெய்ய மாட்டாமைபோல, துரியோதனனேவலால் மிகப்பல அரசர் சூழ்ந்தும் அபிமனை யாதொன்றுஞ் செய்ய மாட்டாமையின், இவ்வுவமை கூறினர். (220)

83. முன்முன் புமுந்திப் பலரேவிய மூரி வாளி
தன்முன் புதூவு மலர்போலிரு தாளில் வீழ
வின்முன் புடையோ னொருவில்லின்வி சித்த வம்பாற்
பின்முன் புபட்ட பலகோடிபி றங்கு சேனை.

(இ-ள்.) பலர் - அநேகவீரர்கள், முன் முன்பு முந்தி - (ஒருவரினும் ஒருவர்) முன்பாக விரைந்துமுற்பட்டு, ஏவிய - பிரயோகித்த, மூரி வாளி - வலிமையையுடைய அம்புகள், தன் முன்பு - அவ்வபிமனதுஎதிரில், தூவும் மலர்போல் - தூவிய பூக்கள்போல, இரு தாளில் வீழ - இரண்டு பாதங்களிலும் வந்துவிழுந்திட,—(அப்பொழுது), வில் முன்பு உடையோன் - வில்லின்வலிமையையுடைய அபிமன், ஒரு வில்லின் - (தனது) வில் ஒன்றைக்கொண்டு, விசித்த - இழுத்து விட்ட, அம்பால் - அம்புகளால், பல கோடி பிறங்கு சேனை - அநேக கோடிக்கணக்கான விளங்குகிற பகைவர்சேனைகள், பின் முன்பு பட்ட - பின்முன்னாகப் புறங்கொடுத்தழிந்தன ; (எ - று)

கீழ் அபிமனுக்குச் சிவபிரானை உவமை கூறிப்போந்தனராதலால், இங்கு, அவன்மேலெய்யப்பட்ட அம்புகளுக்கு மலர்களை உவமை கூறினர். இருதாளில் தூவுமலர்போல் என மொழிமாற்றினுமாம். பின்முன்புபடுதல் - மார்பு பின்பும் முதுகு முன்னுமாக மீளுதல். (221)

வே று.

84.—வென்றஅபிமன் புலிபோன்று மேற்செல்லுதல்.

அரவு யர்த்தவன் மதலையொ டடலுடை யரசர் புத்திர ரனை வரு மெழுபரி, யிரவி பொற்கதிர் தெறுதலி னிரிதரு மிருளெனத் திசை திசைதொறு முதுகிட, வுரனு டைப்பணை முழவுறழ் திணி புய னொருச மர்த்தனு மொருதனி யிரதமும், விரவி முற்பொரு கள மழ குறும்வகை விறல்வ யப்புலி யெனவெதிர் முடுகவே.

(இ-ள்.) அரவு உயர்த்தவன் மதலையொடு-பாம்புக்கொடியை உயர எடுத்த துரியோதனனுக்குக் குமாரனான இலக்கணனுடன் (வந்த), அடல் உடை அரசர் புத்திரர் அனைவர்உம் - வலிமையை யுடைய (மற்றை) இராசகுமாரர்களெல்லோரும்,—எழு பரி இரவி- ஏழு குதிரைகளையுடைய சூரியனது, பொன் கதிர்-பொன்னிறமான அல்லது அழகிய கிரணம், தெறுதலின் - அழித்தலால், இரிதரும் - சிதறியோடுகிற, இருள் என - இருள்போல, திசை திசைதொறும் - எல்லாத்திக்குக்களிலும், முதுகு இட - புறங்கொடுத்தோடும்படி, —உரன் உடை-வலிமையையுடைய, பணை - பருத்த, முழவு உறழ் - மிருதங்கமென்னும் வாத்தியத்தை (வடிவத்தில்) ஒத்த, திணி புயன் - வலிய தோள்களையுடைய, ஒரு சமர்த்தன்உம் - அசகாயசூர னான அபிமனொருத்தனே, ஒரு தனி இரதம்உம் விரவி - ஒப்பற்ற (தன்) ஒருதேரின்மீது பொருந்தி, முன் பொரு களம் அழகு உறும் வகை-எதிரிற் போர்செய்கிற யுத்தகளத்தின் இடம் அழகுமிகும் படி, விறல் வயம் புலி என - வெற்றியையும் வலிமையையுமுடைய புலிபோல, எதிர் முடுக-எதிர்த்துநெருங்க, (எ - று)—"இளையவித் தகன் எதிருறவருதலும்" (85)என இயையும்; குளகம்.

பெருந்திசையும் கோணத்திசையு மெனத் திசை இருவகைப் படுதலால், 'திசைதிசைதொறும்' என்றார். மூன்றும்அடியில், உம் மைகள் இரண்டும் - இழிவுசிறப்பாய், தனித்திருக்குந்தன்மையைக் காட்டும். இவற்றில் குற்றெழுத்துக்கள் பயின்றுவந்தது, குறுஞ் சீர்வண்ணம்; இவற்றில்வந்த சில ஐகாரங்களும் குறுக்கமாதலால், குற்றெழுத்தோ டொக்கும்.

இதுமுதல் ஏழு கவிகள் - ஒன்று ஐந்தாஞ் சீர்கள் புளிமாச்சீர் களும், இரண்டு ஆறாஞ் சீர்கள் கூவிளச்சீர்களும், மற்றைநான்கும் கருவிளச்சீர்களுமாகிய கழிநெடிலடிநான்குகொண்ட எண்சீராசிரியச் சந்தவிருத்தங்கள். 'தனன தத்தன தனதன தனதன தனன தத்தன தனதன தனதன' எனச் சந்தக் குழிப்புக் காண்க. (222)

85.—ஆறுகவிகள் - அப்போது எதிர்ப்பட்ட இலக்கணகுமாரனொடுபொருது அபிமன் அவனது தலையைத்துணித்தமை கூறும்.

வளையமுத்துதிர்விழியுடைவரிசிலைமதனன்மைத்துனனவனிபர் பலரையு, மிளையெனப்புற மிடவமர்பொருதபினிளையவித்தகனெதி ருறவருதலு, முளையெயிற்றிளநிலவெழவகல்வெளிமுகடுடைப்ப தொர்நகைசெய்துகடவின, னுளைவயப்பரியிரதமுமிரதமுமுரனொ டொத்தினவுருள்களுமொடியவே.

(இ - ள்.) வளைய - சுற்றிலும், முத்து உதிர் - முத்துக்கள் சிந்துகிற, விழி உடை - கணுக்களையுடைய, வரி சிலை - கட்டமைந்த (கரும்பு) வில்லையுடைய, மதனன் - மன்மதனுக்கு, மைத்துனன் - அத்தைமகனான அபிமந்யு,—இளை என - மேகம் போல, அவனிபர் பலரைஉம் புறம் இட அமர் பொருதபின் - அரசர்கள் அநேகரையும் முதுகு கொடுக்கும்படி போர் செய்த பின்பு, இளைய வித்தகன்-இலக்கணகுமாரன், எதிர் உற வருதலும்- எதிரிற் பொருந்த வந்தவளவில்,—முளை எயிறு-முளைத்துள்ள பற்களின், இள நிலவு - இளமையான சந்திரகாந்திபோன்ற வெள்ளொளி, எழ - வெளித்தோன்றும்படி, அகல் வெளி முகடு உடைப்பது ஓர் நகை செய்து-பரந்த (அண்டகோளத்தின்) மேல்முகட்டை (அதிர்ச்சியால்) உடையச்செய்வதான ஒருபெருஞ் சிரிப்பைச் செய்து, கடவினன் - (அவன் மேல் தன் தேரைச்) செலுத்தினான்; (செலுத்தவே), உளை வய பரி இரதம்உம் இரதம்உம் - பிடரிமயிரையுடைய வலிய குதிரைகளையுடைய இருவர்தேர்களும், உருள்கள்உம் உடைய- சக்கரங்களும் உடையும்படி, உரமொடு ஒத்தின - வலிமையோடு (ஒன்றையொன்று) தாக்கின; (எ-று.)

சிறந்தகரும்பினின்று முத்துப் பிறக்குமென்பது நூற்கொள்கையாதலால், கரும்புவில்லை 'வளையமுத்துதிர்விழியுடை வரிசிலை' என்றார். 'வளையமுத்துதிர்' என்பதற்கு-தான் வளைதலால் முத்தைச் சொரிகிற எனினுமாம். விழி என்பது - கண்ணை உணர்த்த, அது - கணுவைக் குறிக்கும்; இங்ஙனம் குறித்தல், வடநூலில் 'லக்ஷித லக்ஷணை' எனப்படும்: தமிழ் நூலில் ஆகுபெயரிலக்கணத்திலாவது, பிறகுறிப்புவகையிலாவது இது அறிந்து அடக்கத்தக்கது;(திவ்வியப் பிரபந்தத்தில், பக்தியை "எட்டிரண்டு" [பத்து] என்றும், சிந்தாமணியில் புத்திசேனனை "திங்கள் [மதி] விரவியபெயரினான்" என்றுங் கூறியவை இத்திறத்தன.)

அத்தை மைந்தனை 'மைத்துனன்' என்பது, முற்காலவழக்கு; பாண்டவர்களைக் கண்ணனுக்கு 'மைத்துனன்மார்' என்று பலவிடத்திலும் கூறுதல் காண்க. இங்கே, 'மதனன்' என்றது, மன்மதனது அமிசமான பிரத்யும்நனை. சிவபிரான் மன்மதனை யெரித்த காலத்தில் அம்மன்மதன் மனைவியான ரதீதேவி மிகவருந்திப்பரமசிவனைச் சரணமடைந்து பலவாறு பிரார்த்திக்க, அக்கடவுள் அவளுக்கு மாத்திரம் அவன் ரூபமுடையவனாகவும், மற்றையோர்க்கு ரூபமில்லாதவனாகவும் இருக்கும்படி அருள்செய்ய, அவ்விரதி 'என்கணவன் என்னை உருவமுடையவனாய் மீளவும் கூடுங்காலம் எப்பொழுது?' என்று வினவ, 'பூமிபாரநிவ்ருத்தியின் பொருட்டுத் திருமால் கண்ணனாகத் திருவவதரிக்கையில், அப்பிரானுக்குக் குமாரனாய்க் காமன் தோன்றி நின்பால் கூடுவன்' என்று சிவபெருமான் அருளிச்செய்திருந்தான்; அதன்படி பின்பு கண்ணனுக்கு மனைவியும் திருமகளின் திருவவதாரமுமான ருக்மிணிப்பிராட்டியினிடம் மன்மதன் பிரத்யும்நனென்னுங் குமாரனாகத் தோன்றினனென வரலாறு காண்க. பிரத்யும்நனது தந்தையான கிருஷ்ணனுக்கு உடன்பிறந்தவளான சுபத்திரையினிடந் தோன்றினமைபற்றி, அபிமன், மதனன்மைத்துனனாவன். 'வளையமுத்துதிர்விழி' என்ற சொற்போக்கில், முற்

றும் முத்துப்போன்ற நீர்த்துளி சிந்துகிற கண்கள்என ஒருபொருள் தொனிக்கும். கரும்புவில்லை 'வளையமுத்துதிர்விழியுடை வரிசிலை' என்றும், அபிமனை 'மதனன் மைத்துனன்' என்றும் சுற்றுவழியாற் சொன்னது-'பர்யாயோக்தம்' என்னும் அலங்காரம்; தமிழில், **பிறிதின விற்சியணியெனப்படும்:** கருதிய பொருளை அதற்குரியவிதத்தாற் கூறாது மற்றொருவிதத்தாற் கூறுவது அது.

"மங்குலு மிளையு மாலு மம்புதமும், விண்டுவு மென்றிவை மேகப் பெயரே" என்ற பிங்கலந்தையால், இளையென்பது மேகமாதல் அறிக. இனி, 'இளையென' என்பதற்கு - சுற்றுவேலியை அழித்தல்போல எனினுமாம்; "**இளை** புய விளமை **வேலி** தலைக்காவ லிவை நாற்பேரே" என்ற நிகண்டினால், இதன் பலபொருள்களும் விளங்கும். இங்கே, மேகம் - அம்பு மழைபொழிதற்கு உவமை. இளைய வித்தகன் - வித்தகவிளையவனென மொழி மாறுக; இது - லக்ஷ்ண குமார னென்பதற்கு ஒரு பரியாயப் பெயராக நின்றது. **பி - ம்:** உடையவே. (223)

86. ரகுகுலத்தவனிளவலுநிசிசரரிறையளித்தருளிளவலுமிருவரு நிகரெனத்துணைவிழிகடைநிமிர்தரநெறிகடைப்புருவமுமிகமுரிதர, முகிலிடித்தெனவெழுகடல்களுமிகமொகுமொகுத்தெனவனிலமுமனலமு, முகமுடித்தெனமுறைமுறைபலபலவுரையெடுத்தனரொருவரொடொருவரே.

(இ - ள்.) ரகு குலத்தவன்-ரகுவென்னும் அரசனது வமிசத்திலவதரித்த இராமபிரானுக்கு, இளவல்உம் - தம்பியான இலக்குமணனும், நிசிசரர் இறை - இராக்கதர்க்கு அரசனான இராவணன், அளித்து அருள் - பெற்று அன்போடு வளர்த்த, இளவல்உம்–இளங்குமரனான இந்திரசித்தும், நிகர் - (தமக்கு) ஒப்பு, என - என்று (கண்டவர்) சொல்லும்படி, இருவர்உம் - (அபிமன் இலக்கணன் என்னும்) இரண்டுபேரும், துணை விழி–(தம்தம்) கண்களிரண்டும், கடை நிமிர்தர-(கோபத்தால்) நுனி விழிக்கவும், புருவம்உம் - புருவங்களும், நெறி கடை-நெறித்த நுனியையுடையனவாய், மிக முரிதர - மிகவும் முரிபடவும், முகில் இடித்து என - மேகங்கள் இடித்தாற் போலவும், எழு கடல்கள்உம் மிக மொகுமொகுத்து என-ஏழு கடல்களும் மிகவும் ஒலித்தாற் போலவும், அனிலம்உம் அனலம் உம் உகம் முடித்து என - காற்றும் நெருப்பும் உகாந்தகாலத்தில் (உலகத்தை) முடிக்க எழுந்தாற்போலவும், ஒருவரொடு ஒருவர் - ஒருத்தரோடு ஒருத்தர், முறை முறை - மாறிமாறி, பல பல உரை எடுத்தனர் - அநேகம் வீரவாதங்களைக் கூறத்தொடங்கினார்கள்; (எ - று.)—அவற்றைமேல் இரண்டு கவிகளிற் காண்க. **பி - ம்:** அனிலமுமனிலமும்.

சூரியகுலத்தில் ரகுவென்பவன் திக்குவிசயஞ்செய்து பிரசித்திபெற்ற ஓரரசனாதலால், அவன்மரபிற் பிறந்த ஸ்ரீராமனை 'ரகுகுலத்தவன்' என்றார்; 'ராகவன்' என்ற ஒரு திருநாமமுங் காண்க. மேல், கொல்பவனான சிறந்த அபிமனுக்கு இலக்குமணனும், கொல்லப்படுபவனான கொடிய இலக்கணனுக்கு இந்திரசித்தும் உவமையெனக் காண்க: இதில், அயோக்கியனான இராவணன் துரியோதனனுக்கு

ஒப்புமையாதலும் ஏற்கும். விழிகடை நிமிர்தல் - கோபத்தோடு கடைக்கண்களால் உறுக்கிவிழித்துப்பார்த்தல். நெறி கடைப் புருவம் மிகமுரிதல் - கோபத்தாற் புருவத்தை மிகுதியாக நெறித்தல். மொகுமொகுத்தல் - ஈரடுக்கு ஒலிக்குறிப்பு; இரட்டைக்கிளவி.. (224)

87. ஞெலிமரத்தினுமனனெரியெழவெழநிருபர்விட்டனகசரத துரகமு, மெலிவெழப்பிறகிடவுநின்னொருதனிவிறல்குறித்திரதமு மெதிர்கடவினை, யொலிபடுத்தெதிர்வரின்விரிசுடரெதிருலவுவிட்டிலினுயிரழிகுவையென,வலியுறுத்தினனவனிபன்மதலையைவலியவச்சிரன்மதலைதன்மதலையே.

(இ - ள்.) 'ஞெலி மரத்தின்உம் - அரணிக்கட்டையினின்று உண்டாவதனினும், மனன் எரி எழ எழ-மனத்தில் கோபாக்கினி மிகுதியாக உண்டாக, நிருபர் -அரசர்கள், விட்டன-(எதிர்) செலுத்தினவையான, கச ரத துரகம்உம் - யானைகளும் தேர்களும் குதிரைகளும் (எல்லாம்), மெலிவு எழ - தளர்ச்சிமிக, பிறகு இடஉம் - பின்னிட்டுஓடவும், (நீ), நின் ஒரு தனி விறல் குறித்து - (துணையில்லாமல்) தனிப்பட்ட நின் ஒருத்தனது வலிமையை நன்குமதித்துக்கொண்டு, இரதம்உம் எதிர் கடவினை - தேரையும் (என்) எதிரிற் செலுத்தினாய்; (இங்ஙனம்), ஒலி படுத்து எதிர் வரின் - ஆரவாரத்தை மிகுதியாகச்செய்து எதிரில்வந்தால், விரி சுடர் எதிர் உலவு விட்டிலின் - பரவியெழுகிற விளக்கி னெதிரிற்பட்ட விட்டிலென்னுஞ்சிறுபறவைபோல, உயிர் அழிகுவை - இறப்பாய்,' என - என்று, அவனிபன் மதலையை - துரியோதனராசன்மகனான இலக்கணனை (நோக்கி), வலிய வச்சிரன் மதலைதன் மதலை - வலிமையையுடைய வச்சிராயுதத்தையுடைய இந்திரனது மகனான அருச்சுனனுடைய புத்திரனாகிய அபிமன், வலி உறுத்தினன்-வலிமையோடு உறுத்திக் கூறினான்; (எ - று)—இது - அபிமனுடைய வீரவாதம்.

ஞெலிமரம் - தீக்கடைந்தெடுக்கப்படும் மரம்: "அரணி ஞெலி கோல் ஞெகிழி தீக்கடைகோல்" என்பது பிங்கலந்தை: "தீயைத் தரு கோலே ஞெலிகோ லென்ப" என்ற நிகண்டுங் காண்க. விட்டில் - பறந்து விளக்கில் வீழ்ந்து அழிவதொரு செந்து. (225)

88. இவனுமப்பொழுதெதிரொலியெனநனியிகலருச்சுனன்மதலையையுனதுயி, ரவனிபர்க்கெதிர்கருவனொருநொடியளவையிற்பொருதெனமுனையணுகினன், சிவன்வளைத்தபொன்மலையினும்வலியினசிலைவளைத்தனரிருவருமெறிதரு, பவனன்மைக்கடல்வடவையையுமிழ்தருபவனமொத்ததுபடுகளமுழுதுமே.

(இ - ள்.) இவன்உம் - இலக்கணனும், அப்பொழுது—, எதிர் ஒலி என-பிரதித்தொனிபோல, நனி-மிகுதியாக, இகல் அருச்சுனன் மதலையை-வலிய அருச்சுனனுக்குக் குமாரனான அபிமனை (நோக்கி), '(யான்), பொருது-போர்செய்து, ஒரு நொடி அளவையில்-ஒருகைந்நொடிப்பொழுதினுள்ளே, உனது உயிர்-உன் உயிரை, அவனிபர்க்கு எதிர் - அரசர்களெதிரில், கவருவன் - வாங்கிவிடுவேன்,' என - என்று (வீரவாதஞ்) சொல்லிக்கொண்டு, முனை அணுகினன் -

எதிரிற் சமீபித்தான்; (பின்பு), இருவர்உம்-இந்த இரண்டுபேரும், சிவன் வளைத்த பொன் மலையின்உம் வலியின சிலை வளைத்தனர் - சிவபிரான் (முன்பு ஒருகால் வில்லாக) வணக்கிய பொன்மயமான மகாமேருகிரியினும் வலிமையையுடைய (தம்) வில்லை வளைத்துப் பொருதார்கள்; (அச்சமயத்தில்), படு களம்முழுதுஉம்-அப்போர்க் களம் முழுவதும், எறிதரு பவனன்-வீசுகிற காற்று, மை கடல் வடவையை முனிதரு-கரியகடலிலுள்ள படபாமுகாக்கினியைச் சினந்து எழுப்புகிற, பவனம்-காற்றை, ஒத்தது—; (எ - று.)

தன்னைநோக்கி அபிமன் கூறியவாறே இலக்கணன் தான் அவனைநோக்கிக் கூறினானென்பதை, 'எதிரொலியென'என்ற உவமையால் விளக்கினார். பவநம் - வடசொல். எறிதருபவனன் மைக்கடல்வடவையை முனிதரு பவன மொத்தது-போர்க்களம் மிகக் குழப்பமடைந்தது என்றவாரும். எரிகிற நெருப்பைக் காற்று மிகுவித்த லியல்பு. பவநம் - இடத்தையென்று கூறுவாருமுளர். பி - ம்: வடவையின். முனிதருபருவம். (226)

89. துரகதத்துடல்கெழுமினசிலகணைதுவசமற்றிடவிரவினசில கணையிருவர்நெற்றியுமெழுதினசிலகணையிருபுயத்திடைசொருகின சிலகணை யரணியொத்தெரிகதுவினசிலகணையகன்முகட்டையு முருவினசிலகணை, முரணிலக்கணகுமரனுமபிமனுமுடுகியிப்படி முரணமர்புரியவே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) (இருவரும் ஒருவர்மேல்ஒருவர் எதிர்த்து எய்த அம்புகளுள்), சில கணை - சில அம்புகள், துரகதத்து உடல்-(எதிரியின்) தேர்க்குதிரைகளின் உடம்பில், கெழுமின - நிறைந்தன; சில கணை—, துவசம் அற்றிட - கொடி அறும்படி, விரவின - கலந்தன; சில கணை—, இருவர் நெற்றிஉம் - இரண்டுபேரது நெற்றியிலும், எழுதின - பதிந்தன; சில கணை—, இரு புயத்திடை - இரண்டு தோள்களிலும், சொருகின - தைத்தன; சில கணை—, அரணி ஒத்து அரணிக்கட்டைபோன்று, எரி கதுவின-தீயை உண்டாக்கின; சில கணை—, அகல் முகட்டைஉம்-பரந்த ஆகாயத்தின் மேலிடத்தையும், உருவின - ஊடுருவிச்சென்றன; முரண் - வலிமையையுடைய, இலக்கணகுமரனும் அபிமனும்—, முடுகி - முனைந்து, இ படி - இவ்வாறு, முரண் அமர் புரிய - கொடும்போரைச்செய்ய,—(எ - று.)—"கணை ***முழுகின" என அடுத்தகவியோடு முடியும்; இனி, இச்செய்யுளைக் குளகமாக்காமல் 'அமர்புரிய' என்பதை, 'கெழுமின' என்பது முதலியவற்றோடு முடித்தலும் ஒன்று. அரணி - தீக்கடைகோல்.

90. மழைமுகிற்குலநிகர்திருவடிவினன் மருகன் முட்டியு நிலையுமெய் வலிமையு, மழகுறத்தொடு கணைகுரு பதிமக னவயவத்தினி லடைவுற முழுகின, கழல்க ளற்றன விருதொடை நழுவின கவச மற்றது கரமலர் புயமுடன், முழுது மற்றன வொளிவிடு நவமணி முகுட மற்றது முகிழ்நகை முகனொடே.

(இ - ள்.) மழை - மழையைப்பொழிகிற, முகில் - காளமேகத்தின், குலம்-இனத்தை, நிகர் - ஒத்த, திரு வடிவினன்-(கரிய)

திருமேனியையுடைய கண்ணனுக்கு, மருகன்-மருமகனான அபிமன், முட்டிஉம் - (வில்லைப்பிடிக்குங்)கைப்பிடியும், நிலைஉம் - நிற்கிற நிலைமையும், மெய் வலிமைஉம்-தேகபலமும், அழகு உற - அழகாகப் பொருந்த, தொடு-எய்த, கணை-அம்புகள், குரு பதி மகன்-குருகுலத் தலைவனான துரியோதன புத்திரனாகிய இலக்கணனது, அவயவத்தினில் - உடம்பின் உறுப்புக்களில், அடைவு உற - பதியும்படி, முழுகின - முழுவதுந் தைத்தன; (அவற்றால், அவனது), கழல்கள் - கால்கள், அற்றன - அறுப்புண்டன; இரு தொடை - இரண்டு தொடைகளும், நழுவின - கீழ்விழுந்தன: கவசம்-உடற்கவசம், அற்றது-அறுபட்டது: கரம் மலர் - தாமரைமலர்போன்ற கைகள், புயமுடன் - தோள்களுடனே, முழுதும் அற்றன - முழுவதும் அறுபட்டன; ஒளி விடு - ஒளியை வீசுகிற, நவமணி - நவரத்தினங்களைப் பதித்த, முகுடம் - கிரீடம், முகிழ் நகை முகனொடே - அரும்புகிற (புன்) சிரிப்பையுடைய முகத்துடனே, அற்றது—; (எ - று.)

முட்டி-முஷ்டி யென்னும் வடசொல்லின் திரிபு. நவமணி - கோமேதகம், நீலம், பவழம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம்' முத்து, வைடூரியம். வைரம் என்பன. முகுடமெனினும் மகுடமெனினும் ஒக்கும். 'முகிழ்நகை முகன்' என்றதனால், போரில் இலக்கணனுக்கு இருந்த உற்சாகம் விளங்கும். முகன் முகுடத்தொடு அற்றது என உருபுபிரித்துக்கூட்டி யுரைக்க. (228)

வேறு.

91.—புதல்வனிறந்ததுகேட்டுத் துரியோதனன் கண்ணீர்வடித்து வெம்பி துரோணன் முதலியவரோடு சில கூறலுறுதல்.

இலக்கண குமரன் வெங்கா னெரித்தவன் குமர னேவா
லலக்கணுற் றுவி மாய்ந்தா னமரிடை யென்று கேட்டுக்
கலக்கணீர் சொரிய நின்று கண்ணிலி குமரன் வெம்பி
வலக்கணோர் முனிவ ரோடு மன்னவ ரோடுஞ் சொல்வான்.

(இ - ள்.) (இவ்வாறு), 'இலக்கணகுமரன்—, வெம் கான் எரித்தவன் குமரன் ஏவால் - கொடிய காண்டவவனத்தை எரியச் செய்திட்ட அருச்சுனனுக்குப் புத்திரனான அபிமன்யுவின் அம்புகளால், அமரிடை-போரில், அலக்கண் உற்று-துன்பமடைந்து, ஆவி மாய்ந்தான் - உயிரொழிந்தான்,' என்று கேட்டு - என்று கேள்விப்பட்டு, கண் இலி குமரன் - பிறவிக்குருடனான திருதராட்டிரனுக்குப் புத்திரனான துரியோதனன், கலம் கண் நீர் சொரிய நின்று - மிக்க கண்ணீர் வடிய நின்று, வெம்பி - தாபங்கொண்டு, வலக்கண் நேர் - (தனக்கு) வலக்கண்ணையொத்த, முனிவரோடுஉம் - (துரோணன் கிருபன் முதலிய) அந்தணர்களுடனும், மன்னவரோடுஉம் - அரசர்களுடனும், சொல்வான் - (ஒருவார்த்தை) சொல்பவனானான்; (எ - று.)—அதனை அடுத்த கவியிற் காண்க.

கிருஷ்ணனும் அருச்சுனனும் ஒருநாள் பூம்பந்து விளையாடுகையிலே, அக்கினிபகவான் மிகப்பசித்து அந்தணவடிவங் கொண்டு வந்து 'இந்திரனது காவற்காடாய் யாவர்க்கும் அழிக்கவொண்ணாத

படியாய் நிலவுலகத்திலிருக்கின்ற காண்டவவனமென்னும் பூஞ் சோலையை அதிலுள்ள சராசரங்களுடனே எனக்கு விருந்திடவேண்டும்' என்று வேண்ட, கிருஷ்ண அருச்சுனர்கள் அங்கேபுக்கு ஒதுங்கியிருக்கின்ற அசுரர் முதலிய துஷ்டர்களை அழித்தருள வேண்டுமென்னும் நோக்கத்தால், 'நீ இதனைப் புசி' என்று இசைந்து அளிக்க, உடனே நெருப்புப்பற்றி யெரித்ததென்பது, கதை. அங்ஙனம் எரிக்கையில், இந்திரன் சினந்து பெய்வித்த பெருமழையைச் சரக்கூடுகட்டித் தடுத்தும், கோபித்துத் தேவர்கூட்டத்துடன் வந்து பொருத இந்திரனைப் புறங்கொடுத்தோடச்செய்தும், அவ்வனத்தினின்று தப்பியோடுகிற பிராணிகளை அம்பெய்து கொன்று தழலில் விழுத்தியும் பலவாறு உதவிபுரிந்தமையால், **அருச்சுனன் 'வெங்கானெரித்தவன்'** எனப்பட்டான்.

கலம் - ஒரு முகத்தலளவு; பன்னிரண்டுமரக்கால் கொண்டது; இதனை இங்கு, மிகுதியை விளக்குதற்கு எடுத்துக்கூறினர். "கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை" என்றபடி கண் சிறந்த உறுப்பாதலால், சிறந்த அங்கமாகியவ ரென்றற்குக் கண்ணை உவமைகூறினர். ஆடவர்க்கு வலக்கண் சிறத்தலால், அதனைக் குறித்தார். இனி, வலக்கண் என்பதற்கு - மேன்மையையுடைய கண்ணென்றல், பொருத்தம்; "இடக்கணுக வலக்கணுக விரண்டு மொக்கும்" எனக் கீழ்ச் சஞ்சயன்றூதுசருக்கத்தில் வந்தது காண்க.

இதுமுதற் பதினாறு கவிகள் கீழ்ப் பதினொன்றாம்போர்ச்சருக்கத்தின் முதற்கவிபோன்ற **அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள்.**

92.—துரியோதனன் 'என் மைந்தனைக் கொன்றவனைக் கொல்லாவிடின் இவ்வரசு முதலியன வேண்டா' எனல்.

மன்னவர்மைந்தரோடென்மைந்தனைக்கொன்றமைந்தன்
றன்னையுமிமைப்பிற்சென்றுசயமுறச்செகுத்திலீரேற்
பின்னையிவ்வரசும்வேண்டேன்பெருமிதவாழ்வும்வேண்டே
னென்னுயிர்தானும்வேண்டேனென்றனனிராசராசன்.

(இ - ள்.) 'மன்னவர் மைந்தரோடு - (பல) ராசகுமாரர்களுடனே, என் மைந்தனை - என்மகனான இலக்கணனையும், கொன்ற—, மைந்தன் தன்னைஉம் - அருச்சுனன் புத்திரனை அபிமந்யுவையும், இமைப்பில் - கண்ணிமைப்பொழுதிலே, (நீங்கள்), சென்று—, சயம் உற-வெற்றியுண்டாக, செகுத்திலீர் ஏல் - பகையழித்திடீராயின், பின்னை - பின்பு, (யான்), இ அரசுஉம் வேண்டேன்-இந்த அரசாட்சியையும் விரும்பேன்; பெருமிதம் வாழ்வுஉம் வேண்டேன் - பெருந்தன்மையையுடைய இன்பவாழ்க்கையையும் விரும்பேன்; என் உயிர் தான்உம் வேண்டேன்-எனது உயிரையும் விரும்பேன்,' என்றனன் - என்று (தன்சேனைவீரர்களை நோக்கிக்) கூறினான்: இராசராசன் - துரியோதனன்; (எ - று.)—பி - ம்: கொன்றுசயமுற. (230)

93.—அபிமனைக் கொல்வதாக அவர்கள் சபதஞ்செய்தல்.

தனித்தனியரசரெல்லாந்தாளிணைபணிந்துபோற்றிப்
பணித்துயிர்பொன்றிவீழப்பார்த்தன்மாமகனையின்னே

குனித்தவின்னிமிராவண்ணங்கொடுஞ்சமர்க்கொன்றிலேமே
லினித்தனுவென்றுபோரிலெடுக்கிலேமிறைவவென்றார்.

(இ-ள்.) (அதுகேட்டு, அரசர் எல்லாம்—, தனி தனி—, தாள் இணை பணிந்து - (துரியோதனனது) உபயபாதத்தை வணங்கி, போற்றி - துதித்து, 'இறைவ - அரசனே! பணித்து உயிர் பொன்றி வீழ - (உடம்பு) நடுக்கமுற்று உயிரொழிந்து கீழ்விழும்படி, பார்த்தன் மா மகனை - அருச்சுனனுக்குச் சிறந்த புத்திரனான அபிமனை, இன்னே - இப்பொழுதே, குனித்த வில் நிமிரா வண்ணம்-வளைத்த வில் வளைவு மாறாமல், கொடு சமர்-கொடிய போரில், கொன்றிலேம் ஏல் - (நாங்கள்) கொன்றிடோமாயின், இனி - பின்பு, தனு என்று போரில் எடுக்கிலேம்-வில் என்று யுத்தத்தில் ஏந்துவோமல்லோம்,' என்றார் - என்று சபதங் கூறினார்கள்; (எ-று.) (231)

94.—இரண்டுகவிகள் - அசுவத்தாமன் துரோணன் முதலியோர் பலர் திரண்டுவளைந்து, அபிமன்மீது கோடிக்கணக்காக அம்புபொழிதலைக்கூறும்.

குன்றவில்லவனையொக்குங்குமரனும்பகைகளாறும்
வென்றவின்முனியுமற்றும்வேந்தராயருகுதொக்கு
நின்றவில்விருதர்யாருநிருபன்மாமதலையாவி [தார்.
பொன்றவில்வளைத்தோன்றன்னைப்புலிவளைந்தென்னச்சூழ்ந்

(இ-ள்.) குன்றம் வில்லவனை ஒக்கும் - மேருமலையை வில்லாகக்கொண்ட சிவபிரானைப் போன்ற, குமரன்உம் - துரோண புத்திரனான அசுவத்தாமனும், பகைகள் ஆறுஉம் வென்ற-உட்பகையாகிய ஆறு குற்றங்களையும் சயித்த, வில்முனிஉம் - வில்வில்வல்ல துரோணாசாரியனும், மற்றும்—, வேந்தர் ஆய்-அரசர்களாய், அருகு தொக்கு நின்ற - பக்கத்திற் கூடி நின்ற, வில் விருதர் யார்உம்-வில் வீரரெல்லோரும், நிருபன் மா மதலை ஆவி பொன்ற வில் வளைத்தோன்தன்னை - துரியோதனராசனது சிறந்த குமாரனான இலக்கணனது உயிர் ஒழியும்படி வில்லை வளைத்துப் பொருத அபிமனை, புலி வளைந்து என்ன சூழ்ந்தார் - புலிகள் சூழ்ந்துகொண்டாற் போலச் சூழ்ந்து கொண்டார்கள்; (எ - று.)

பகைகள் ஆறு-காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன; வடநூலார் 'அரிஷட்வர்க்கம்' என்பர். இவற்றை வெல்லுதல் - இவை தன்னிடம் உண்டாகாதபடி விலக்குதல். புலி வளைந்தென்ன - புலியைச் சூழ்ந்தாற்போல எனினும் அமையும். ()

95. போரொருமுகத்தாலன்றிப்பொருப்பொன்றிற்புணரியேழுங்
காரொருமுகமாய்மொண்டுகணக்கறப்பொழியுமாபோற்
றேரொருவளையமாகச்சென்றுதிண்சிலைகள்கோலி
யோரொருவீரர்கோடியாசுகமுடற்றினாரே.

(இ - ள்.) கார் - மேகங்கள், புணரி ஏழ்உம் - ஏழுகடல்களின் நீரையும், மொண்டு-முகந்துஎடுத்துக்கொண்டு, பொருப்பு ஒன்றில்- ஒரு மலையின்மேல், ஒரு முகம் ஆய் - ஒரேதன்மையாய், கணக்கு அற பொழியும் ஆ போல் - அளவில்லாமல் மழைபொழியும் விதம்

போல, போர் - அப்போரில், ஒரு முகத்தால் அன்றி - ஒரு முகமாக வல்லாமல் [பலமுகங்களாக], தேர் ஒரு வளையம் ஆக சென்று - (அபிமனது) தேரைச் சுற்றிலும் ஒருவளையம்போலப் போய்ச் சூழ்ந்துகொண்டு, திண் சிலைகள் கோலி - வலிய (தம்தம்) விற்களை வளைத்து, ஓர் ஒரு வீரர் - ஒவ்வொரு (பகை) வீரரும், (அபிமன் மேல்), கோடி ஆசுகம் உடற்றினர்-கோடிக்கணக்கான அம்புகளைப் பெருங்கோபத்தோடு செலுத்தினார்கள்; (எ - று.)

எவ்வளவு மழை பொழிந்தாலும் அதனால் மலை கலங்காதவாறு போல, அபிமன் கலங்காநிலைமைய னென்பதைஉவமையால் விளக்கினார். புணரி - (ஆறுகளோடு) புணர்வதுஎனக் காரணப்பெயர்; புணர்தல் - கலத்தல். (233)

96.—நான்குகவிகள் அபிமன்கடுமையாகப்பொரப் பலரும் ஆவிமாள, சகுனிதுச்சாதனன்முதலியோர் முதுகுகொடுத்தோடினமை கூறும்.

தரணிபரெய்தவெய்தசரங்களைச்சரங்களாலே
முரணறவிலக்கிப்பாதமுடியளவாகவந்தக்
கரணமும்புலனுமெய்யுங்கலங்கியக்கணத்தில்யாரு
மரணமென்றுன்னவல்வில்வளைத்தனன்வளைவிலாதான்.

(இ - ள்.) வளைவு இலாதான் - (பகைவர்க்கு) வணங்குதலில்லாதஅபிமன், தரணிபர் எய்தஎய்த சரங்களை-அரசர்கள் (தன்மேல்) மிகுதியாக எய்த அம்புகளை, சரங்களாலே - (தன்) அம்புகளாலே, முரண் அற - வலிமைகெட, விலக்கி - தடுத்து,—பாதம் முடி அளவு ஆக - கால் முதல் தலைவரையில், மெய்உம் - உடம்பும், புலன்உம் - உறுப்புக்களும், அந்தக்கரணம்உம் - மனமும், கலங்கி—,யார்உம் - எல்லாவீரரும், அ கணத்தில் - அந்தக்ஷணத்திலே, மரணம் என்று உன்ன-(தந்தமக்கு) அழிவென்று நினைக்கும்படி, வல் வில் வளைத்தனன் - வலியவில்லை வளைத்துப் பொருதான்; (எ - று.)—முரண் அற - மாறுபடுதலில்லாமல் எனினுமாம்; நேராக என்றபடி. (234

97. ஆகவந்தன்னின்முந்தமனுகுலத்தரசன்பட்டான்
கேகயன்குமரன்மாய்ந்தான்கிருபன்வில்லொடிந்துமீண்டான்
மாகதத்குரிசிலோடுமகுடவர்த்தனரநேகர்
நாகமுற்றனர்கள்கோடிநரபதிகுமரர்வீழ்ந்தார்.

(இ - ள்.) (அப்பொழுது அபிமன் அம்புகளால்), ஆகவந்தன்னில் - போரிலே, முந்த - முன்னே, மனு குலத்து அரசன் - மனுசக்கரவர்த்தியின் குலத்திற் பிறந்த அரசன், பட்டான்-இறந்தான்; கேகயன் குமரன்-கேகய தேசத்தரசனுக்குக் குமாரன், மாய்ந்தான்-இறந்தான்; கிருபன் - கிருபாசாரியன், வில் ஒடிந்து—, மீண்டான் - புறங்கொடுத்துச்சென்றான்; மாகதம் குரிசிலோடு - மகததேசத்து அரசனுடனே, மகுடவர்த்தனர் அநேகர் - அநேகம் மகுடவர்த்தனராசர்கள், நாகம் உற்றனர்கள்-வீரசுவர்க்க மடைந்தார்கள்; கோடி-கோடிக்கணக்கான, நரபதி குமரர் - இராசகுமாரர்கள், வீழ்ந்தார் - இறந்து விழுந்தார்கள்; (எ - று.)—பி - ம்: வீந்தார்.

மரித்தா ரென்ற ஒரு பொருளை, பட்டான், மாய்ந்தான், நாக முற்றனர்கள், வீழ்ந்தார் என்ற பலசொற்களால் குறித்தது-பொருட் பின்வருநிலையணி. கிருபன் கௌதமமுனிவனது பௌத்திரன்; சரத்துவந்தமுனிவனது குமாரன்; துரோணன் மனைவியாகிய கிருபியினுடன் பிறந்தவன்: கௌரவ பாண்டவர்க்கு முதல் வில்லாசிரியன். நாணற்காட்டிற் பிறந்திருந்த முனிமக்களை வேட்டைக்கு வந்த சந்தனு மகாராசன் பார்த்துக் கிருபையினால் பரிக்கிரகித்ததனால், கிருபனென்றும் கிருபியென்றும் பெயருண்டாயின வென விஷ்ணுபுராணத்தால் அறிக. வைவசுவதமநுகுலத்தவனான கோசலன் பெயர் பிருகத்பல னென்றும், கேகயன்பெயர் பிருகத்க்ஷத்ரனென்றும், மாகதன் பெயர் அசுவகேது வென்றும் முதனூலால் தெரிகிறது. (235)

98. சிலையழிந்தவரநேகர்தேரழிந்தவரநேகர்
தலையழிந்தவரநேகர்தாளழிந்தவரநேகர்
நிலையழிந்தவரநேகர்நெஞ்சழிந்தவரநேகர்
துலையழிந்தவரநேகர்தோளழிந்தவரநேகர்.

(குறிப்புரை.) சிலை - வில். தாள் - கால். நிலை - உடம்பு; உறுதிநிலைமையுமாம். துலை - வலிமை; இது - நிறைக்கோலின்பெயர்: இலக்கணையால், பாரமெனப் பொருள்பட்டு. வலிமையென்னுங் கருத்தில் வந்ததுபோலும்: ஒப்பு என்றுரு முளர். (236)

99. இனைவருஞ்சகுனிமைந்தரெழுவருந்துணைவருள்ளா
ரனைவருமாவிமாளவமரழிந்தவனும்போனான்
துனைவரும்புரவித்தேர்த்துச்சாதனன்றுணைவரோடு
முனைவருமளவிற்பாலன்முனைவெரீஇமுதுகுதந்தான்.

(இ - ள்.) இனைவு அரு - வருந்துதலில்லாத, சகுனிமைந்தர் எழுவர்உம் - சகுனியின் குமாரர் ஏழுபேரும், துணைவர்உள்ளார் அனைவர்உம்-(அவனுக்கு) உடன்பிறந்தவராயுள்ளவரெல்லோரும், ஆவி மாள - உயிரொழிய, அவன்உம் - சகுனியும், அமர் அழிந்து போனான் - போரில் தோற்றுச் சென்றான்; துனைவரும் - விரைந்து செல்கிற, புரவி - குதிரைகளைப்பூட்டிய, தேர் - தேரையுடைய, துச்சாதனன்—, துணைவரோடு - (தன்) தம்பிமாருடனே, முனைவரும் அளவில்-எதிரில் வந்தமாத்திரத்தில், பாலன் முனை வெரீஇ - இளங்குமரனான அபிமனது போருக்கு அஞ்சி, முதுகு தந்தான்—; (எ - று.)—பி - ம்: அம்பால் முகம்வெரீஇ. (237)

100.—துரியோதனன் சொல்லக்
கர்ணன் அபிமனுடன் பொரச் செல்லுதல்.

காவலருடைதல்கண்டுகன்னனைபரசன்பார்த்துக்
கேவலமல்லவிப்போர்கிரீடிவந்திவனைக்கூடில்
நீவலையாகிற்சென்றுநேர்மலைந்தடர்த்தியென்னக் [கோன்.
கோவலன்மருகன்றன்னைக்குறுகினன்கொடையாளிக்

(இ - ள்.) காவலர் - (இந்த) அரசர்களெல்லோரும், உடைதல்-

(அபிமன் முன்) அழிதலை, கண்டு-பார்த்து, அரசன்-துரியோதனன், கன்னனை பார்த்து - கர்ணனைநோக்கி, 'கிரீடி வந்து இவனை கூடில்-அருச்சுனன் வந்து இவ்வபிமனைக் கூடிவிட்டால், (பின்பு), இபோர், கேவலம் அல்ல - இந்தப் போர் (வெல்ல) எளிதன்று; (ஆதலின் விரைவிலே), நீ வலை ஆகின் சென்று நேர் மலைந்து அடர்த்தி - நீ வல்லவனாவையானால் (எதிரிற்) சென்று போர் செய்து (இவ்வபிமனை) அழிப்பாய்,' என்ன-என்றுசொல்ல, (அப்படியே), கொடையால் மிக்கோன் - ஈகைத்தொழிலாற் சிறந்த கர்ணன், கோவலன் மருகன் தன்னை குறுகினன் - கண்ணன்மருமகனான அபிமனைச் சமீபித்தான்; (எ-று.) (238)

101.—கர்ணனுந் தோற்றுப் போதல்.

மன்முரிகுவவுத்திண்டோள்வாசவன்பேரன்றன்னோடு
அன்முரியிரவிமைந்தனருஞ்சமர்விளைத்தகாலைச்
சென்முரிந்தென்னவேறுதேர்முரிந்தெடுத்தவாகை
வின்முரிந்துள்ளந்தானுமிகமுரிந்துடைந்துமீண்டான்.

(இ-ள்.) மன் - அரசர்கள், முரி - அழிதற்குக்காரணமான, குவவு திண் தோள் - திரட்சியையுடைய வலிய தோள்களையுடைய, வாசவன் பேரன் தன்னோடு - இந்திரனது பௌத்திரனான அபிமனுடனே, அரு சமர் விளைத்த காலை - (செய்தற்கு) அரியபோரை மிகுதியாகச்செய்தபொழுது, அல்முரி இரவி மைந்தன் - இருள் அழிதற்குக் காரணமான சூரியனுக்குப் புத்திரனான கர்ணன், செல் முரிந்து என்ன-மேகம் மிகச்சிதைந்தாற்போல, ஏறு தேர் முரிந்து-(அபிமனம்புகளால் தான்) ஏறியிருந்த தேர் உடைந்து, எடுத்த வாகை வில் முரிந்து-(கையிற்பிடித்த) வெற்றியைத்தருகிற வில் முரிபட்டு, உள்ளம் தான்உம் மிக முரிந்து - மனமும் மிகக்கலங்கி, உடைந்து - தோற்று, மீண்டான் - திரும்பினான் [புறங்கொடுத்தான்]; (எ-று.)

மன் என்பது - அரசச்சாதியை யுணர்த்திற்று. மல் முரி எனப் பிரித்து, மற்போர்த்தொழிலிற் சிரமப்பட்ட என்றும், மற்போர் வீரரை அழிக்கவல்ல என்றும் பொருள்கொள்ளலும் அமையும். விரைந்து செல்லுதலிலும், பெரிய வடிவத்திலும், மேகத்துக்குத் தேர் உவமை. (239)

102.—கர்ணன் அபிமனை மீண்டும் எதிர்த்துத் தோற்றல்.

தேறினன்றேறித்துச்சாதனன்றருஞ்செம்பொற்றேரி
னேறினன்மீளவில்லுமெரிகணைபலவுங்கொண்டு
தூறினனபிமன்செங்கைத்தொடைகளாலெதிர்த்தலஞ்சி
மாறினன்முகமுந்தேரும்வரிவில்லும்ழிந்துமன்னே.

(இ-ள்.) (அஞ்சிப்புறங்கொடுத்த கர்ணன், பின்பு), தேறினன்-மனந்தைரியப்பட்டான்; தேறி-தைரியப்பட்டு, துச்சாதனன் தரும் செம் பொன் தேரின் - துச்சாதனன் கொடுத்த சிவந்த பொன்மயமான தேரில், ஏறினன் - ஏறிக்கொண்டு, வில்உம் எரிகணை பல உம் கொண்டு - வில்லையும் அழிக்கிற அநேக பாணங்களையும் எடுத்துக்கொண்டு, மீள-மறுபடியும், தூறினன்-(அவ்வம்புகளைச்)

சொரிந்து, அபிமன் செம் கை தொடைகளால் - அபிமந்யுவின் சிவந்த கையால் விடப்பட்ட பாணங்களால், முகம்உம் தேர்உம் வரி வில்உம் அழிந்து-(தன்னுடைய) முகமும் தேரும் கட்டமைந்த வில்லும் அழிபட்டு, எதிர்த்தல் அஞ்சி மாறினன் - அவனெதிரில்நிற்றற்கும் பயந்து புறங்கொடுத்தான்; (எ - று.)—மன், ஓ - ஈற்றசை.

வில்லுங்கொண்டு எரிகணைபலவும் தூறினன் என்றும், தேரும் வரிவில்லும் அழிந்து முகமும் மாறினன் என்றும் மொழி மாற்றி யுரைப்பினும் அமையும். தூறுதல் - சிதறுதல். எதிர்த்தல்- பொருதலுமாம். (240)

103.—துரியோதனன் தூண்டச் சென்ற கர்ணன் தோற்று மீண்டும் அபிமனோடுபொரச் செல்லுதல்.

தூண்டினன்மேலாளாகித்துனைபரித்தடந்தேர்தூண்டி
மீண்டனன்காலாளாகிவிளிந்தனன்றெளிந்துமீளத்
தாண்டினபரித்தேர்தேடிச்சாபமுந்தேடிநெஞ்சாற் [ன்.
பூண்டனன்பொருவான்றன்கைப்பொருகணைப்புயங்கம்போல்வா

(இ - ள்) தன் கை - தனதுகையிலுள்ள, பொரு கணை - போர்செய்கிற அம்பின் வடிவமான, புயங்கம் - நாகத்தை, போல்வான் - ஒப்பவனான கர்ணன், (இங்ஙனம்), தூண்டினன் - (துரியோதனனால்) தூண்டப்பட்டவனாய், மேல் ஆள் ஆகி - (தேரின்) மேல்நிற்கும் வீரனாய், துனை பரி தட தேர் தூண்டி - விரைந்து செல்லுகிற குதிரைகளைப் பூண்ட பெரிய தேரை (முன்னே) செலுத்திவந்து, (உடனே அம்புகளால் யாவும் அழிந்து), கால் ஆள் ஆகி மீண்டனன் - (வாகனமின்றிக்) கால்களால்நடக்கும் வீரனாய்த்திரும்பி, விளிந்தனன்-தோற்றழிந்தான்; (அங்ஙன் தோற்றவன்), தெளிந்து - மனந்தைரியப்பட்டு, மீள - மறுபடி, தாண்டின பரி தேர் தேடி - தாவிச்செல்லுந்தன்மையனவான குதிரைகளைப் பூண்டதொரு தேரைத்தேடி, (அதன்மேலேறி), சாபம்உம் தேடி- வில்லொன்றையுந் தேடியெடுத்துக்கொண்டு, பொருவான் - போர் செய்யுந்தொழிலை, நெஞ்சால் பூண்டனன் - மனத்தினால் ஏற்றுக் கொண்டான்; (எ - று.)—போர்செய்யச் சித்தனானன் என்பதாம். பி - ம்: விழுந்தனன்றெளிந்து.

'தன்கைப்பொருகணைப்புயங்கம்' என்றது, கர்ணன்கையிலுள்ள நாகாஸ்திரத்தை: அதன் வரலாறு;—காண்டவதகநகாலத்தில் அவ்வனத்தினின்று ஓடுகிற பிராணிகளை அருச்சுனன் அம்பெய்துகொன்று அத்தழலிலே விழுத்தி வருகிறபொழுது, தக்ஷகனென்னும் நாகராசனதுமனைவி தன் குழந்தையான அசுவசேநனென்னுஞ் சிறுநாகத்தைத் தன்வாய்க்குள் மறைத்து வைத்துக்கொண்டு அங்கிருந்து ஆகாயமார்க்கத்தில் எழும்ப, அதுகண்டு பார்த்தன் தன் பாணத்தால் அந்த நாககன்னியின் தலையைத் துணிக்க, உடம்பு நெருப்பிலும் தலை வெளியிலுமாக விழுந்தது; அப்பொழுது, அதன் வாயிலிருந்த நாககுமாரன் வால்மாத்திரம் அறுப்புண்டு பிழைத்து எழுந்து, தன் தாயைக்கொன்ற அவன்மீது கறுக்கொண்டு, அவனுக்குப் பகைவன் யாரென்று விசாரித்து, அவனைக்கொல்லும்பொருட்டு அஸ்திரவடிவமாகக் கர்ணனை அடைந்தன னென்பதாம்,

அந்தநாகத்தைக் கர்ணனுக்கு உவமைகூறினது, கறுவுடைமைக்கும் கொடுமைக்கும் என்க. முன்னிரண்டடி-அநுவாதமென்னலாம்.

104.—**கர்ணனம்புகளால் அபிமன்யுவின் தேர்முதலியன அழிதல்.**

விற்குனித்திரவிமைந்தன்விடும்விடுங்கணைகள்பட்டுப்
பற்குனன்மைந்தன்றிண்டேர்ப்பரிகளும்பாகும்பட்டு
முற்குனித்தெய்தவில்லுமுரிந்ததுமூரித்தேரு
நிற்குநன்னிலைமைகுன்றிநேமியுநெரிந்ததன்றே.

(இ - ள்.) (இவ்வாறு), இரவி மைந்தன் - கர்ணன், வில் குனித்து - வில்லை வளைத்து, விடும் விடும் - மிகுதியாகச் சொரிகிற, கணைகள் - அம்புகள், பட்டு - தைத்ததனால், பற்குனன் மைந்தன் - அருச்சுனபுத்திரனான அபிமனது, திண் தேர் பரிகள்உம் - வலிய தேரிற்பூட்டிய குதிரைகளும், பாகுஉம் - சாரதியும், பட்டு - அழிய, முன் குனித்து எய்த வில்உம் - முன்னே வளைத்து அம்பெய்து கொண்டிருந்த (அவன்கை) வில்லும், முரிந்தது - ஒடிந்தது; மூரி தேர் உம் - வலிமையையுடைய தேரும், நிற்கும் நல் நிலைமை குன்றி - நிற்றற்குரிய நல்ல உறுதிநிலைமைகுறைபட்டு, நேமிஉம் நெரிந்தது - சக்கரங்களுஞ் சிதையப்பெற்றது; (எ - று.)—அன்று, ஏ - ஈற்றசை; அப்பொழுதே யெனினுமாம்.

பட்டு என்பது - இரண்டிடத்திலும், பட வென்னுஞ் செயவெனெச்சத்தின் திரிபு: முன்னே காரணப்பொருளதும், பின்னேஉடனிகழ்ச்சிப்பொருளதும் எனக் காண்க. அபிமன்தேர் கோங்குமரக் கொடியையுடைய தென்றும், அவன்தேர்ப்பாகன் சுமித்திர னென்றும் வடநூலால் தெரிகிறது. தேர்நேமி நெரிந்தது - சினைப்பெயர் முதல்வினையைக்கொண்ட வழுவமைதி. (242)

105.—**தேரையிழந்த அபிமன் வாளேந்தித் தரையி லிழிதல்.**

தன்னையத்தனயன்செய்ததாழ்வெலாந்தனயன்றன்னைப்
பின்னையத்தந்தைசெய்துபின்னிடாதசைந்துநிற்ப
முன்னையபுரவித்தேருமொய்த்தவெஞ்சிலையுமின்றி
மின்னையொத்திலங்கும்வாளோடவனிமேல்விரைந்துபாய்ந் [தான்.

(இ - ள்.) தன்னை அ தனயன் செய்த தாழ்வு எலாம்-(தந்தையாகிய) தன்னைப் பிள்ளையாகிய அவ்வபிமன் (முன்னே) செய்த தோல்விகளையெல்லாம், பின்னை - பின்பு, அ தந்தை - அந்தத்தந்தையாகிய கர்ணன், தனயன் தன்னை செய்து - பிள்ளையாகிய அவ்வபிமனை (அடைய)ச்செய்து, பின் இடாது-(முன்போலப்) புறங்கொடாமல்,அசைந்துநிற்ப-மகிழ்ச்சிகொண்டு முன்நிற்க, (அபிமன்), முன்னைய புரவி தேர்உம் மொய்த்த வெம் சிலைஉம் இன்றி - முன் இருந்த குதிரைபூண்ட தேரும் வலிமையுடைய கொடிய வில்லும் இல்லாமல், மின்னை ஒத்து இலங்கும் வாளோடு - மின்னலைப் போன்று விளங்குகிற வாளுடனே, அவனிமேல் - தரையில், விரைந்து பாய்ந்தான் - துரிதமாய்க் குதித்து இழிந்தான்; (எ - று.)

தன்னை அத்தனயன் செய்த தாழ்வு - தேரையும், வில்லையும் இழத்தல்; கீழ் 101, 102, 103-ஆங் கவிகளைக் காண்க. 'தனயன்

தன்னை' என்பதை உருபுமயக்கமாகத் தனயனுக்கு என்றுங் கொள்ளலாம். தந்தை - பெரிய தந்தை. தனயன்-தம்பியின் மகன். கர்ணன் அபிமன்முன் பலமுறைபின்னிட்டதனைக் கருதி, இங்கே 'பின்னிடாது' என்றார். அசைந்து-களிப்பினாற் கூத்தாடி யென்க. இனி, அசைந்து பின்னிடாது நிற்ப என மொழிமாற்றினுமாம்; இவ்வுரைக்கு, அசைதல் - சோர்தல். உன்னயப்புரவித்தேருமொத்த என்ற பாடத்திற்கு, உன்னயம் - அசுவசாஸ்திரமென்பர். (243

106.—அபிமன் வாளோடு பரிசையேந்தி மண்டலம் பயிற்றுதல்.

வாளொடு பரிசை யேந்தி மண்டலம் பயிற்றி யிற்றை
நாளொடு துறக்க மெய்த நயந்தன னின்ற வீரன்
றோளொடு புரையுஞ் செம்பொன் மேருவைச் சுடரோனாகக்
கோளொடு சூழ்வ தென்னச் சுழற்றினன் குமர ரேறே.

(இ - ள்.) இற்றை நாளொடு - இன்றைத்தினத்துடனே [இன்றைத்தினத்திலே என்றபடி], துறக்கம் எய்த - இறந்து வீர்சுவர்க்கத்தையடைய, நயந்தனன் நின்ற - விரும்பிநின்ற, வீரன் - பராக்கிரமசாலியான, குமரர் ஏறு - இராசகுமாரர்களுக்குச் சிங்கம் போன்றவனான அபிமன்,—வாளொடு பரிசை ஏந்தி-(வலக்கையில்) வாளையும் (இடக்கையில்) கேடகத்தையும் எடுத்துக் கொண்டு, மண்டலம் பயிற்றி - மண்டலமாகச் சுற்றிவருதலைச் செய்து,— தோளொடு புரையும் - (தனது) தோளோடு ஒத்த, செம் பொன் மேருவை-சிவந்த பொன்மயமான மேருமலையை, சுடரோன்-சூரியன், நாகம் கோளொடு - பாம்பின் வடிவமான (கேதுவென்னுங்) கிரகத்துடனே, சூழ்வதுஎன்ன - சுற்றுவது போல, சுழற்றினன் - (கேடகத்தையும் வாளையும் கைகளாற்) சுழற்றினன். (எ - று.)

கேடகம் - எதிரிகள் எறியும் ஆயுதங்களைத் தன்மேற் படவொட்டாமல் தடுப்பதொரு கருவி. மண்டலம்பயிற்றுதல் - வட்டமாகவருதல். இடசாரி, வலசாரி, மண்டலம், நடநம், பவுரி[தானே சுழலுதல்]என்பன-வீரர்க்குஉரிய கதிவிசேஷங்களாம். 'தோளொடு புரையும்மேரு' எனப் பிரசித்த உபமானத்தை உபமேயமாகவும் உபமேயத்தை உபமானமாகவும் மாற்றிக்கூறியது, **எதிர்நிலையணி**; வடநூலார் '**பிரதீபாலங்காரம்**' என்பர். மேரு - சலியாத அபிமனுடம்புக்கும், சூரியமண்டலம் - வட்டவடிவான பரிசைக்கும், நாகக்கோள்-கொடிய வாளுக்கும் உவமை யெனக் காண்க. கோள்-க்ரஹ மென்னும் வடசொல்லின் பொருள்கொண்டது; (காலத்தை அளந்து) கொள்வதென்று பொருள்: பகுதிநீண்ட பெயர். குமரர் ஏறு-மிருகங்களுள் அரசாகிய சிங்கம் போல, இராசகுமாரர்களுள் சிறந்தவனென்க; அல்லது, பகையரசகுமாரரான யானைகளுக்குச் சிங்கம்போன்றவனெனக் கொள்ளினுமாம். (244)

வேறு.

107.—முன்பு தோற்றோடிய நிருபர் அப்பொழுது ஒருசேர அபிமன்மேல் நெருங்குதல்.

தேர்போனது பரிபோனது சிலைபோனது சிறுவன்
போர்போனதி னிச்சென்றமர் புரிவோமென நினையாக்

கார்போனனி யதிராவிதழ் மடியாவெறி கடல்வாய்
நீர்போலுடன் மொய்த்தார்வெரு வுற்றோடிய நிருபர்.

(இ - ள்.) (அப்பொழுது), வெருவு உற்று ஓடிய நிருபர் - (முன்பு) அச்சம் மிக்கு ஓடிப்போன அரசர்கள், 'சிறுவன் - சிறு பிள்ளையான அபிமனது, தேர்—, போனது - ஒழிந்தது; பரி-தேர்க் குதிரை, போனது—; சிலை - வில், போனது—; போர் - (அவனது) யுத்தம், போனது—; இனி சென்று அமர் புரிவோம் - இனிமேல் (நாம் தைரியமாகப்) போய்ப் போர்செய்வோம்,' என நினையா - என்று எண்ணி, கார் போல் நனி அதிரா - மேகம்போல மிகுதியாக ஆரவாரித்து, இதழ் மடியா - (கோபத்தால்) உதட்டைக் கடித்துக் கொண்டு, எறி கடல்வாய் நீர் போல் - அலைவீசுகிற கடலில் யாற்று நீர்கள் (ஒருங்குவந்து விழுதல்) போல, உடன் மொய்த்தார் - ஒரு சேர (அபிமன்மேல் வந்து) நெருங்கினார்கள்; (எ - று.)—அபிமனுக்குக் கடலுவமைகூறியதனால், அவனது கம்பீரத்தன்மை விளங்கும். பி - ம் : வெருவுறவோடிய.

இதுமுதற் பத்துக்கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் மாங்கனிச்சீர்களுமாகிய **கலிவிருத்தங்கள்.** **(245)**

108.—**எதிர்த்துவந்த துச்சாதனகுமாரனை அபிமன் தலையறுத்தல்.**

துச்சாதனன்மகன்மன்னர்தொழுந்துச்சனியென்னும்
நச்சாடரவனையானினிநானேபழிகொள்வே
னிச்சாயகமொன்றாலெனவெய்தானவன்முடியோ
டச்சாயகம்வடிவாள்கொடறுத்தானடலபிமன்.

(இ - ள்.) துச்சாதனன் மகன் - துச்சாதனனது புத்திரனான, மன்னர்தொழும்-அரசர்களால் வணங்கப்படுகிற, துச்சனிஎன்னும் - துச்சனியென்று பெயர் கூறப்படுகிற, நஞ்சு ஆடு அரவு அனையான்- விஷத்தையுடைய படமெடுத்து ஆடுகிற பாம்புபோலக் கொடிய வீரன், 'இனி - இப்பொழுது, நானே - யான் ஒருவனே, இ சாயகம் ஒன்றால்-இந்த ஓரம்பினால், பழி கொள்வேன்-(அபிமனைக் கொல்லுதலாகிய) பழியை ஏற்றுக்கொள்வேன் [தவறாமற் கொல்வேன்],' என - என்று (வீரவாதஞ் செய்துகொண்டு), எய்தான்-(அபிமன் மேல் ஓரம்பைப்) பிரயோகித்தான்; (உடனே), அடல் அபிமன் - வலிமையையுடைய அபிமந்யு, அவன் முடியோடு - அந்தத் துச்சனியின் தலையுடனே, அ சாயகம் - அந்த அம்பையும், வடி வாள்கொடு அறுத்தான் - கூரிய (தன்) வாளினால் அறுத்திட்டான்; (எ - று.)

துச்சனியென்பது - துச்சாதனியென்பதன் திரிபுஆக இருக்கலாம். துச்சாசனனதுமகன் சயசேனனென்று பெருந்தேவனார் பாரதத்தால் தெரிகிறது. விரைவுதோன்ற, முடியை முன்னும் சாயகத்தைப் பின்னுங் கூறினார். பழிகொள்ளுதல் - இலக்கணனைக் கொன்றதாகிய அவன் செய்த பழிக்கு எதிர்ப்பழிவாங்குதலுமாம். பழிகொள்ளுதலென்ற சொல்லின் தகுதியால், தேர் முதலியவற்றை யிழந்த வீரனைக் கொல்லுதல் பழிப்பாமென்பது, தோன்றும். நானே, ஏ - பிரிநிலையோடு, தேற்றம். **(246)**

109.—மூன்றுகவிகள்-எதிர்த்தஅபிமன் வாளால் மும்முறைவென்று துரோணனை நகைத்தமை கூறும்.

துரியோதனன்மகனும்பொருதுச்சாதனன்மகனும்
புரியோதனமுனைவென்றமைபுரிவின்முனிகருதா
வரியோமெனுமறையாலடலம்பாயிரமெய்தான்
வரியோலிடுகழலானவைவாள்கொண்டுதுணித்தான்.

(இ - ள்.) துரியோதனன் மகன்உம் - துரியோதனனுக்கு மகனான இலக்கணனையும், பொரு துச்சாதனன் மகன்உம் - போர் செய்த துச்சாதனனுக்கு மகனான துச்சனியையும், புரி யோதனம் முனை - போர்செய்கிற யுத்தகளத்தில், வென்றமை - (அபிமன் கொன்று) சயித்ததை, புரி வில் முனி - கட்டமைந்த வில்வில்வல்ல துரோணாசாரியன், கருதா - எண்ணி, அரி ஓம் எனும் மறையால் - 'ஹரி:ஓம்' என்று தொடங்கிச் சொல்லப்படுகிற வேதமந்திரத்தைக் கொண்டு, அடல் அம்பு ஆயிரம் எய்தான் - வலிமையுடைய ஆயிரம் பாணங்களைத் தொடுத்தான்; (தொடுக்க), வரி ஓல் இடு கழலான்-அழகிய ஒலித்தல் செய்கிற வீரக்கழலையுடைய அபிமன், அவை - அந்த அம்புகளையெல்லாம், வாள் கொண்டு துணித்தான் - வாளினால் துண்டித்தான்; (எ - று.)

புரிவின் முனி என எடுத்து, அவர்கள்பக்கல் அன்பையுடைய முனிவனெனினுமாம்; புரிவு - அன்பு, இன் - சாரியை. அரிஓம் - திருமாலேபிரணவப்பொருள் என்பதைக் குறிக்குமென்ப. (247)

110. சொரியுங்கணைமழையேவுதுரோணாரியன்வில்லும்
பரியுங்கடவிரதத்தொடுபாகும்பலபலவாய்
முரியும்படிவடிவாள்கொடுமோதாவமர்காதா
விரியுஞ்சுடரெனநின்றனன்விசயன்றிருமகனே.

(இ - ள்.) (அதுவுமன்றி), விசயன் திரு மகன் - அபிமன்,—சொரியும் கணை மழை ஏவு-பொழிகிற பாணவர்ஷத்தைச் செலுத்துகிற, துரோண ஆரியன் - துரோணாசாரியனது, வில்உம்—, பரிஉம் - தேர்க்குதிரைகளும், கடவு இரதத்தொடு - செலுத்தப்படுகிற தேருடனே, பாகுஉம் - சாரதியும், பல பல ஆய் முரியும்படி - அநேகந் துண்டுகளாய் அழியும்படி, வடி வாள் கொடு மோதா-கூரிய வாளாயுதத்தால் வீசி, அமர் காதா - போரை (உக்கிரமாக)ச் செய்து, விரியும் சுடர் என நின்றனன் -(நெடுந்தூரம்) பரவுகிற [மிக்க] ஒளியையுடைய சூரியன்போல (விளக்கமுற்று) நின்றான்; (எ-று.) ( )

111. ஒருக்காலழிதேரன்றியுமுருளாழிகொடேர்மே
லிருக்கால்வரமுக்கால்வரவெக்காலுமழித்தே
பெருக்காறணைசெய்தொத்தவிர்பிள்ளைப்பிறையனையான்
செருக்கானகைசெய்தான்வரிசிலையாசிரியனையே.

(இ - ள்.) ஒரு கால் அழி தேர் அன்றிஉம் - ஒருதரம் தேரழிந்தது மாத்திர மல்லாமல், உருள் ஆழி கொள் தேர்மேல் - உருளுந் தன்மையுள்ள சக்கரங்களைப் பூண்ட வேறு தேரின் மேல், (துரோணன் ஏறிக்கொண்டு), இருகால் வர முக்கால் வர - இரண்டாந்

தரம் மூன்றுந்தரம் (மீண்டுமீண்டு) வர, எ காலும் அழித்து-எல்லா முறையிலும் (அத்துரோணனைத்) தோற்கடித்து, பெருக்கு ஆறு அணை செய்து ஒத்து - யாற்றுநீர்ப் பெருக்குக்கு அணை செய்தாற் போன்று, (அவனைத் தடுத்து),— அவிர்-விளங்குகிற, பிள்ளை பிறை அனையான் - இளஞ்சந்திரனையொத்த அபிமன், —செருக்கால்-வீரக் களிப்பினால், வரி சிலை ஆசிரியனை - கட்டமைந்த வில்லில் வல்ல துரோணனை (நோக்கி), நகை செய்தான் - (இகழ்ச்சிதோன்றச்) சிரித்தான்; (எ - று.)

"மூன்றுறுருபெண்" என்ற சூத்திர விதிப்படி ஒருகால், இரு கால் என இயல்பாக வரவேண்டியவை, இங்கு, சந்தவின்பத்திற்காக வலிமிக்குநின்றன. (249)

112.—துரோணன் அபிமனது வலக்கையை வாளோடும் வீழ்த்துதல்.

முன்னுஞ்சுருதியினுலுயர்முனிவீரனைமுனியாப்
பின்னும்பனிவரைபோலொருபெருந்தேர்மிசைகொள்ளா
மன்னுஞ்சிலைகுனியாமுனைவடிவாளொடுகையு
மின்னும்பிறைமுகவாளியின்வீழும்படிவிட்டான்.

(இ - ள்.) முன்னும் - (யாவராலும் சிறந்ததாகக்) கருதப்படுகிற, சுருதியினுல் - வேதங்களில் வல்லவனாதலால், உயர் - சிறந்த, முனி - துரோணன், வீரனை முனியா - (தன்னைப் பரிகசித்த) அபிமனைக் கோபித்து, பின்உம் - மீண்டும், பனி வரை போல் - பனிமயமான இமயமலைபோன்ற, ஒரு பெரு தேர்மிசை-ஒரு பெரிய தேரின் மேல், கொள்ளா - ஏறிக்கொண்டு, மன்னும் சிலை குனியா - பெரிய (தன்) வில்லை வளைத்து, முனை வடி வாளொடு கைஉம்-(அபிமனது) கூரிய வடிக்கப்பட்ட வாளுடன் வலக்கையும், மின்னும் பிறை முகம் வாளியின் - விளங்குகின்ற அர்த்தசந்திரபாணத்தால், வீழும்படி - துணிந்து கீழ்விழும்படி, விட்டான் - (அதனைப்) பிரயோகித்தான்; (எ-று.)— மலையரசனாதலின், இமயத்தை எடுத்துக்கூறினர். (250)

113.—வாள் வீழ அபிமன் நின்றமை.

பேணாருயிர்பருகும்பசிபெட்பப்பகுவாய்வெங்
கோணாகமுலாவந்தெதிர்கொடுநாவெறிவதுபோற்
பூணார்கடகக்கையொடுபுகர்வாளமுமண்மே
னீணாகர்வியக்கும்படிவிழமீளியுநின்றான்.

(இ - ள்.) பேணார் உயிர் பருகும் - பகைவர்களது உயிரைக் குடிக்க வேண்டுமென்ற, பசி—, பெட்ப-மிக, பகுவாய் வெம் கோள் நாகம் - திறந்த வாயையும் கொடிய வலிமையையுமுடைய சர்ப்பம், உலா வந்து - உலாவிவந்து, எதிர் கொடு - எதிரிற் பொருந்தி, நா எறிவது போல்-நாக்கை வெளிநீட்டுவதுபோல,— கடகம் பூண் ஆர் கையொடு - கடகமென்னும் ஆபரணம் பொருந்தின கையுடனே, புகர் வாளம்உம் - பளபளப்பையுடைய வாளாயுதமும், மண்மேல் - தரையிலே, நீள் நாகர் வியக்கும்படி விழ - உயர்ந்த தேவலோகத்தவர்கள் ஆச்சரியப்படும்படி (துணிந்து) விழ, மீளிஉம் - அபிமனும், நின்றான் - (சலியாது) நின்றான்; (எ - று.)

எளிதில் கவர்ந்துகொள்ளுதல் தோன்ற, 'உயிர்பருகும்' என்ருர். துஷ்டஜந்துக்கள் பெரும்பாலும் வாய்திறந்துகொண்டேயிருத்தல், இயல்பு. உலாவருதல்-புறப்பட்டு உல்லாசமாக வெளிவருதல். பாம்பு - நீண்ட அபிமன். கைக்கும், நாக்கு - வாளுக்கும் உவமை. கைக்குக் கடகம், இயற்கையடைமொழி. (251)

114.—ஒற்றைக்கையோடு பொர நிற்கும் அபிமன் வருணனை.

இருதோள்களினொருதோண்முனியிகல்வாளியின்விழவு
மொருதோள்கொடுபொரநிற்பதொர்மதவாரணமொத்தான்
கருதோகையொடளகாபதிதனயோர்கதிபெற முன்
மருதோரடியிணைசாடியமாயன்றிருமருகன்.

(இ - ள்.) அளகாபதி தனயோர் - அளகாபுரிக்கு அரசனுன குபேரனுக்குப் புத்திரராகிய (நளகூபரன் மணிக்கிரீவன் என்னும்) இருவரும், கருது ஓகையொடு-மனத்துக்கொண்ட மகிழ்ச்சியுடனே, கதி பெற - நற்கதியை யடையும்படி, முன் - முன்பு [இளமையில்], மருது-(இரட்டை) மருதமரங்களை, ஓர் இணை அடி சாடிய-ஒப்பற்ற உபயபாதத்தால் முறித்துத்தள்ளின, மாயன் - ஆச்சரிய சக்தியையுடைய கண்ணனுக்கு, திரு மருகன்-சிறந்த மருமகனுன அபிமன்,— இரு தோள்களின் - (தனது) இரண்டுதோள்களில், ஒரு தோள்—, முனி இகல் வாளியின் - துரோணனது வலிய அம்பினல், விழஉம் - துணிந்துவிழவும், (சலியாமல்),—ஒரு தோள் கொடு-ஒரு கையைக் கொண்டு, பொர - போர்செய்ய, நிற்பது - நிற்பதான, ஓர் மதம் வாரணம் - ஒரு மதயானையை, ஒத்தான்—; (எ - று.)—துதிக்கையொன்றே யுடைமையின், யானையை உவமை கூறினர். தனயோர்- தநயர்; விகாரம். (252)

115.—தேருருளையைச் சக்கரப்படையாகக்கொண்டு அபிமன் பொருதல்.

தன்மாதுலன்முதனளுரைதருமந்திரமொன்ரு
லென்மாமணியுருளொன்றினையெறிசக்கரமாக்கிக்
கன்மாரிவிலக்குங்கிரியெனமேல்வருகருதார்
வின்மாரிவிலக்காவதுகொடியாரையும்வீழ்த்தான்.

(இ - ள்.) (பின்பு அபிமன்), தன் மாதுலன் - தனக்கு மாமனுன கண்ணன், முதல்நாள் - முன்னொருகாலத்தில், உரைதரு - (தனக்கு) உபதேசித்தருளிய, மந்திரம் ஒன்ருல் - ஒருமந்திரத்தால், எல் மா மணி உருள் ஒன்றினை - பிரகாசத்தையுடைய சிறந்த இரத்தினம்பதித்த (தன்) தேர்ச்சக்கர மொன்றையே, எறி சக்கரம் ஆக்கி - (பகைவர்களைத்) துணிக்கிற சக்கராயுதமாகச் செய்து, அது கொடு-அந்த ஆயுதத்தால், கல் மாரி விலக்கும் கிரி என- (இந்திரன் பொழிவித்த) கல்மழையைத்தடுத்திட்ட கோவர்த்தனமலைபோல, மேல் வரு கருதார் வில் மாரி விலக்கா-தன்மேல் (எதிர்த்து) வருகிற பகைவர்களின் வில்லினுற் சொரிந்த அம்புமழையைத் தடுத்து, யாரைஉம் வீழ்த்தான் - எல்லோரையும் அழித்துத்தள்ளினன்;

'இவ்வகை துரோணுசாரியனுல் தோளறுப்புண்டு மற்று அதற்குத் துளங்காது மானத்தேரின்மணியாழியை மற்றைக்கையாற்

பறித்துக்கொண்டு சக்கரபாணியிடைத் தான் பயின்ற அடியோகத்தினால் ஆங்கு அதனை அபிமந்திரித்து அங்குலிப்படுத்தி அந்தரத்திடைத் திரித்துவிடுதலும்' என்பது பாரதவெண்பாவின் உரைநடை. அது கொடியாரையும்-உகரம் இகரமாயிற்று. (253)

116.—அபிமன் போர்த்திறமைகண்டு துரியோதனன் மனம்புழுங்குதல்.

ஒருகையினி லுருணேமிகொ டோடித்திசை தோறும்
வருகையற வெறிவானுயர் வனமாலியை யொத்தான்
இருகையொரு வரைமண்ணிலி றைஞ்சாமுடி யிறைவன்
பொருகையற வபிமன்பொரு போர்கண்டுபு ழுங்கா.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) ஒருகையினில் - (தனது) கையொன்றிலே, உருள் நேமி கொடு-தேர்ச்சக்கரமாகிய சக்கரத்தை யெடுத்துக்கொண்டு, திசை தோறும் ஓடி - எல்லாத்திக்குக்களிலும் சுழன்று, வரு கை அற - பொருந்தின படைவகுப்பு அழிய, எறிவான் - துணிப்பவனான அபிமன், உயர் வனமாலியை ஒத்தான் - சிறந்த வநமாலையையுடைய (சக்கரபாணியான) திருமாலைப் போன்றான்; (அப்பொழுது), இரு கை ஒருவரை மண்ணில் இறைஞ்சா முடி இறைவன் - தன்இரண்டு கைகளைக்கொண்டு [அஞ்சலிசெய்து] ஒருத்தரையும் பூமியில் வணங்காத சிரசையுடைய மன்னனான துரியோதனன்,—பொருகை அற - (எவரும் எதிர்த்துப்) போர்செய்த வில்லாதபடி, அபிமன் பொரு-அபிமந்யு செய்கிற, போர் - யுத்தத்தை, கண்டு—, புழுங்கா - மனங்கொதித்து,—(எ - று.)—''சயத்திரதனை யழையென'' என்று மேற்கவியோடு தொடரும்.

கை - படைவகுப்பு. வநமாலீ என்ற வடமொழித்திருநாமம்-வநமாலையையுடையவனென்று பொருள்படும்; வநமாலை - ஒருவகை மாலை: இது - திருமாலுக்கு உரியது. சக்கரத்தைக் கையிலேந்திய அபிமனுக்கு, வியாசரும் சக்ரபாணியையே உவமைகூறினர். (254)

வேறு.

117.—துரியோதனன் சயத்திரதனையழைக்க, அவன் வருதல்.

ஒருவ னம்படைத் தலைவர்க ளெவரையு மொருகை கொண் டடற் றிகிரியின் விழவெதிர், பொருவ தென்கொலிச் சிறுவனொ டொருபடி பொழுது சென்றதெப் பொழுதமர் முடிவது, வெருவ ருந்திறற் றரணிபர் களிலிவன் விளிய வென்றிடத் தகுமவ ரிலரினி, யருளு டன்சயத் திரதனை யழையென வவனும் வந்துபுக் கனனொரு நொடியிலே.

(இ - ள்.) 'ஒருவன் - (இந்தஅபிமன்) ஒருத்தன், நம் படைத் தலைவர்கள் எவரைஉம் - நமது சேனையிலுள்ள சிறந்தவீரர்களெல்லோரையும், அடல் திகிரியின் விழ - வலிய சக்கரத்தால் துணிந்து விழும்படி, ஒருகை கொண்டு-ஒருகையைக்கொண்டே, எதிர் பொருவது - எதிரிற் போர்செய்வது, என்கொல் - என்ன சாமர்த்தியமோ? இ சிறுவனொடு - இந்தச் சிறுபிள்ளையொருத்தனுடனே, ஒரு படி பொழுது சென்றது - இன்றையொருநாளைப்பொழுது

முழுவதும் பெரும்பாலும் கழிந்துவிட்டது; எபொழுது அமர் முடிவது - (இனி) எப்பொழுது போர் முடியும்? (இங்குள்ள), வெருவரும் திறல் தரணிபர்களில்-அஞ்சும் வலிமையையுடைய அரசர்களுள், இவன் விளிய வென்றிட தகுமவர் - இவ்வபிமன் இறக்கும்படி சயிக்கத்தக்கவர், இலர் - (எவரும்) இல்லை: (ஆதலால்), இனி—, அருளுடன்-கருணையோடு, சயத்திரதனை அழை—', என - என்று (துரியோதனன் துரோணனை நோக்கிக்) கூற, (அங்ஙனமே துரோணனால் அழைக்கப்பட்டு), அவன் உம்- அச்சயத்திரதனும், ஒருநொடியில் வந்து புக்கனன்-ஒருநொடிப்பொழுதிலே வந்து சேர்ந்தான்; (எ - று.)

சேனைமுழுவதுக்குந்தலைவனாகிய துரோணனொழியக் கிருபன் கர்ணன் முதலியோரும் சேனையின் ஒவ்வொருபகுதிக்குத் தலைவராதலால், 'நம்படைத்தலைவர்கள்' எனப்பட்டார். கீழ் யாவரும் அபிமனுக்கு அஞ்சித் திசைதோறும் ஓடியதனால், 'வெருவரும்' என்ற அடைமொழி, தரணிபர்களுக்குக் கொடுக்கப்பட்டதென்னலாம். 'அருளுடன் அழை' என்றதனால், துரோணனைநோக்கிக் கூறினனென்பது பெறப்படும்; இனி, அன்போடு (ஒருவனைநோக்கித் துரியோதனன்) கூற எனக் கருத்துக்கொள்ளினுமாம்.

இதுமுதல் பதினான்கு கவிகள் - இச்சருக்கத்தின் 84 - ஆம் கவிபோன்ற **எண்சீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தங்கள்;** ஆயினும், 'தனன தந்தனத் தனதன தனதன தனன தந்தனத் தனதன தனதன' என இவற்றிற்குச் சந்தக்குழிப்பு வேறுபடும். (255)

118.—**சிவபிரான் கதைகொண்டு அபிமனைச் உயிர்கவருமாறு சயத்திரதனுக்குச் சொல்ல, அவன் விடைபெற்றுப்போதல்.**

அருகுநின்றகொற்றவர்களுமவரவரரியதிண்டிறற்குமரருமமரிலுன், மருகனும்படப்பொருதனன்மகபதிமகன்மகன்றனைப்பசு
பதியருளிய, வுருகெழுங்கதைப்படைகொடுகவருதியுயிரையென்
றெடுத்துரைசெயவரசனை, யிருகையுங்குவித்தருளுடன்விடை
கொளுமெழில்கொள்சிந்துவுக்கொருதனிமுதல்வனே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ-ள்.) (வந்துபுக்க சயத்திரதனை நோக்கித் துரியோதனன்), 'அருகு நின்ற - சமீபத்தில் எதிர்த்துநின்ற, கொற்றவர்கள்உம்- அரசர்களும், அவர் அவர் - அந்தந்த அரசரின், அரிய திண் திறல் குமரர்உம்-அருமையான கொடிய வலிமையையுடைய குமாரர்களும், உன் மருகன்உம்-உனக்கு மருமகனான இலக்கணனும், அமரில்-யுத்தத்தில், பட-அழியும்படி, பொருதனன்-போர்செய்தவனான மகபதி மகன் மகன்தனை-இந்திரனது பௌத்திரனாகிய அபிமனை, பசுபதி அருளிய-சிவபிரான் (உனக்குக்)கொடுத்தருளின, உரு கெழும் கதை படைகொடு-அச்சம் விளங்குகிற கதாயுதத்தால், உயிரை கவருதி - உயிரைவாங்குவாய்', என்று எடுத்து உரை செய-என்று தொடங்கிச் சொல்ல, (அதற்கு உடன்பட்டு), அரசனை - துரியோதனனை,

இரு கைஉம் குவித்து-இரண்டு கைகளையுங் கூப்பித்தொழுது, அருளுடன் விடை கொளும் - (அவனுடைய) கருணையுடனே அனுமதி பெற்றுப்போன, எழில் கொள்-அழகைக்கொண்ட, சிந்துவுக்கு ஒரு தனி முதல்வன் - சிந்துதேசத்துக்கு ஒப்பற்ற தனியரசனான சயத்திரதன்,—(எ - று.)—"உரைசெய்து * * * எடுத்தனன்" என மேற்கவியில் முடியும். முதல்வன் விடைகொளும்என முடித்தலுமாம்.

இவன்மனைவிக்கு மருமகனாகவே. இவனுக்கும் மருமகனெனப்பட்டான். பசுபதி என்ற வடமொழித்திருநாமம் - இடபத்துக்குத் தலைவனென்றும் உயிர்களுக்குத் தலைவனென்றும், பொருள்படும். "உருவுட்கா்கும்" என்பது, தொல்காப்பியம். (256)

119.—சயத்திரதன் தேரை விரையச் செலுத்துமாறு சொல்லிச் சிவபிரானைத் தியானித்து ஒருகதையை யெடுத்தல்.

உரகவெங்கொடித்தரணிபனலமருமுளமகிழ்ந்திடக்கதிபலபட
வரு, துரகதம்பிணித்தணிகொளிரதமிசைதுவசமுந்தொடுத்தடலு
டைவலவனை, விரைவுடன்செலுத்துகவெனவுரைசெய்துவிழிசிவந்
துசிற்றிளமதிபுனைதரு, கரகவண்புனற்சடைமுடியவனடிகருதிநின்
றெடுத்தனனொருகதையுமே.

(இ - ள்.) உரகம் - பாம்பையெழுதிய, வெம் - பயங்கரமான, கொடி-துவசத்தையுடைய, தரணிபன் - துரியோதனராசனது, அலமரும் உளம் - கலங்கிய மனம், மகிழ்ந்திட-மகிழ்ச்சியையடைய, (சயத்திரதன்), 'கதி பலபட வரு - அநேகவகைக்கதிகள் பொருந்த வருகிற, துரகதம் - குதிரைகளை, பிணித்து - பூட்டி, அணி கொள்-அழகைக்கொண்ட, இரதம்மிசை-தேரின்மேல், துவசம்உம் தொடுத்து - கொடியையும் நாட்டி, விரைவுடன் செலுத்துக - வேகமாக(த் தேர்)செலுத்துவாய்', என - என்று, அடல் உடை வலவனை உரைசெய்து - வலிமையையுடைய (தன்) சாரதியை(ப் பார்த்து)க் கூறி,—விழி சிவந்து-(கோபத்தால்) கண்சிவந்து,—சிறு இள மதி புனை தரு-சிறிய இளஞ்சந்திரனைத் தரித்த, கரகம் வண் புனல் - (பிரமன்கைக்) கமண்டலத்தினின்று உண்டான சிறந்த கங்கை நீரையுடைய, சடை முடியவன் - சடைமுடியையுடையசிவபிரானது, அடி - திருவடிகளை, கருதி நின்று - தியானித்துநின்று, ஒரு கதைஉம் எடுத்தனன்-ஒப்பற்ற கதாயுதத்தையும் எடுத்துக்கொண்டான்; (எ - று.)

பலகதி - ஐவகைநடை; அவை - "விக்கிதம் வற்கிதம் வெல்லுமுபகண்டம், மத்திமஞ் சாரியோ டைந்து" என்பன. ஆஸ்கந்திதம் தோரிதகம், ரேசிதம், வல்கிதம், புலுதம் எனவும்படும்; இவற்றுள், நிச்சலமாக அதிவேகமும் அதிமந்தமு மாகாமல் சமமான கதி - ஆஸ்கந்திதம்; அதனினும் அதிகமாய்ச் சதுரமான கதி-தோரிதகம்; தாளகதியுடன் வட்டமிட்ட கதி - ரேசிதம்; வேகத்தினால் முன்னங் கால்களைத் தூக்கி வரும் நடை - வல்கிதம்; அவ்வளவு வேகமாகவும் சமமாகவும் போகுகை - புலுதம்: இனி, வேகமும் மெதுவுமின்றிச் சமமான நடை - ஆஸ்கந்திதம், வேகமான சமத்காரமுள்ள நடை - தெள்ரிதகம், கோணலில்லாத நேர்நடை-ரேசிதம், நாலுகாற்பாய்ச்

சல் - வல்கிதம், குதித்துக்குதித்துப்போதல் - புலுதம்என்றும் கூறு வாருமுளர். இனி, மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வாநரகதி, விருஷபகதி என்பனவுமாம். இவை - பஞ்சகதி யெனவும், பஞ்ச தாரையெனவும்படும். இவற்றோடு பஞ்சளி, முரளி, சுடால , வலநம் என்னும் நான்குங் கூட்டி நவகதி கூறுதலும் உண்டு. கரகம் - வடசொல். பரிசுத்திக்காகச் சலபாத்திரத்தை எப்பொழு தும் கையில் வைத்திருத்தல், வைதிக ரியல்பு. கங்கைப் புனலுக்கு வண்மை - தன்னில் ஒருகால்மூழ்கியவர்க்கும் அருவினையொழித்து உயர்பத மருளுவது. (257)

120.—அபிமனும் திகிரியையொழித்துக் கதாயுதத்தைக்கொண்டு கர்ச்சித்தல்.

மறலிதண்டெனக்கொலைபுரிதொழின்மிகவலியதண்டுகைக் கொளுமளவினிலிவன், விறல்புனைந்தகைத்திகிரியையொழியமுன் வினையழிந்துபற் றலர்முதுகிடவிழு, திறல்விளங்குபொற்கதை கொடுவிரைவொடு திருகிநின்கதைக்கிதுகதையெனவுரை, யுற விளம்பியப்பொருகளமுழுவதுமுருமெறிந்ததொத் துவகையொ டதிரவே.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ-ள்.) மறலி தண்டு என - யமனது தண்டாயுதம்போல, கொலைபுரி தொழில் மிக வலிய-கொலைசெய்யுந்தொழிலிலே மிகவும் வலிமையையுடைய, தண்டு-கதாயுதத்தை, கை கொளும் அளவினில்- (அந்தச்சயத்திரதன்) கையிலெடுத்துக்கொண்டவளவிலே,— இவன்- அபிமன், விறல் புனைந்த கை திகிரியை ஒழிய-வெற்றியைக்கொண்ட தன்கையிலுள்ள சக்கராயுதத்தை நீங்க (விட்டு),—முன் - முன்னே [பலபோர்களில்], பற்றலர் - பகைவர்கள், வினை அழிந்து-போர்த் தொழிலை யொழிந்து, முதுகு இட - புறங்கொடுக்கும்படி, விழு - (அவர்கள்மேல்) விழுந்ததன்மையதான, திறல் விளங்கு - வலிமை மிக்க, பொன் கதை கொடு-அழகியதொரு கதாயுதத்தை யெடுத்துக் கொண்டு, விரைவொடு திருகி - வேகமாகச் சுழற்றி, நின் கதைக்கு இது கதைஎன-'உனது கதாயுதத்துக்கு (ஏற்ற) கதாயுதம் இது' என்று, உரைஉற விளம்பி - வீரவாதத்தை மிகுதியாகச் சொல்லி, அ பொரு களம் முழுவதுஉம்-அந்தப் போர்க்களம் முழுவதிலும், உரும் எறிந்தது ஒத்து - இடியிடித்தாற்போன்று, உவகையொடு அதிர-உற்சாகத்தோடு கர்ச்சிக்க,—(எ - று.)—"இருவரும் உடற்றி னர்" என மேற்கவியில் முடியும்.

மறல் - கொலைத்தொழில்; அதனையுடையவன், மறலி. மறலி தண்டு- காலதண்டம். (258)

121.—அபிமன் சயத்திரதன் இருவரும் பொருதல்.

சினவுசிங்கமொத்திருவருமுறைமுறைதிருகிவெஞ்செருப்புரி தலினெழுமொலி, கனல்வளைந்துசுட்டனிலமுமெறிதருகடலதிர்ந் தெனக்கனமதிர்வனவென, மினல்பரந்தெழத்திசைகளின்முடிவுற வெடிகொடண்டபித்தியுமுடைதரவெழு, மனமழன்றுபொற்கிரி நிகர்தமபுயவலிமைகொண்டுடற்றினர்வயமுனியவே.

(இ - ள்.) சினவு சிங்கம் ஒத்து - கோபித்த (இரண்டு) சிங்கங்கள் போன்று, இருவர்உம்-(அபிமன் சயத்திரதன் என்னும்) இரண்டு பேரும், முறை முறை திருகி-மாறிமாறி(க் கதை) சுழற்றி, வெம் செரு புரிதலின்-கொடிய போரைச் செய்தலால், எழும்-உண்டான, ஒலி-ஓசை,—கனல் வளைந்து சுட்டு-காலாக்கினியாற் சூழ்ந்து எரிக்கப்பட்டு, அனிலம்உம் எறி தரு - காற்றும் வீசப்பெற்ற, கடல்—, அதிர்ந்து என-முழங்கினாற்போலவும், கனம்-மேகங்கள், அதிர்வன என-முழங்குவனபோலவும்,—மினல் பரந்து எழ-மின்னல் பரவிக் காணப்படுமாறும், திசைகளின் முடிவு உற - திக்குக்களின் எல்லையை அளாவ, வெடி கொடு-வெடித்தலைக் கொண்டு, அண்ட பித்திஉம் - அண்டகோளத்தின் சுவர்களும், உடைதர-உடையுமாறும்,—எழ-மிக்கொலிக்க,—மனம் அழன்று - மனங்கொதித்து, பொன் கிரி நிகர் தம புயம் வலிமைகொண்டு - மேருமலையை யொத்த தங்கள் தோள்களின் வலிமையினால், வயம் மலிய - வெற்றி மிக, உடற்றினர்-போர் செய்தார்கள்; (எ - று.) பி - ம்: கட்டனிலமும். வெடிகொள்.

ஒலிஎழ என இயையும். மின்னல்பரந்துஎழுதலும் அண்டபித்தியுடைதலும், ஆரவாரமிகுதிபற்றிய அதிர்ச்சியாலாகும். (259)

122.— அபிமன் வெற்றிபடக் கதாயுத மெறிந்தமை.

உரியசிந்துவுக்கரசனதிருபுய மொடியவென்புநெக் குடன்முரிதரவுட, னெரியவெங்குடர்க்கொடி நெடுவளையமுநிமிரவன்றொடைப் புடைமிடைநடையுற, வரியகண்கனற்பொறியெழமணி முடியழகழிந்துபொற்பிதிர்படவுதிர்பட, வெரியெழுஞ்சினத்தொடு தனதொருகையினிலகுதண்டமிட்டிகலுடனெறியவே.

இதுமுதல் நான்கு கவிகள் - குளகம்.

(இ - ள்.) சிந்துவுக்கு உரிய அரசனது - சிந்துதேசத்துக்கு உரிமையையுடைய அரசனான சயத்திரதனது, இரு புயம் - இரண்டு தோள்களும், ஒடிய - ஒடியவும், என்பு நெக்கு - எலும்புகள் நொருங்கி, உடன் முரிதர - உடனே பின்னப்படவும், உடல் நெரிய- உடம்பு நசுங்கவும், வெம் குடர் நெடு கொடி வளையம்உம் - கொடிய குடலாகிய நீண்ட கொடிச்சுற்றும், நிமிர-(அத்தன்மைநீங்கி) நீட்சியடையவும், வல் தொடை புடை-வலிய தொடைகளினிடம், மிடை நடை உற - (ஒன்றோடொன்று) நெருங்கிய தோற்றத்தையடையவும், அரிய கண் - அருமையான கண்களினின்று, கனல் பொறி எழ-தீப்பொறி கிளம்பவும், மணி முடி - இரத்தினங்கள் பதித்த கிரீடம், அழகு அழிந்து—, பொன் பிதிர்பட உதிர்பட - பொற்பொடிகள் மயமாக உதிரவும், (அபிமன்), எரி எழும் சினத்தொடு - தீப்பற்றியெழும்படியான கோபத்துடனே, தனது ஒரு கையின் இலகு தண்டம் இட்டு - தனது ஒன்றாகிய கையிலே விளங்குகிற கதாயுதத்தை வீசி, இகலுடன் எறிய - வலிமையோடுதாக்க,—(எ - று.)—"சிந்துவுக்கரசனுங் கதையெறிய" என அடுத்த கவியோடு தொடரும். பி - ம்: முரிதரவுரம்.

'சிந்துவுக்கரசனது' என்பதை, என்பு முதலிய ஆறனோடுங் கூட்டுக. தொடைப்புடை - தொடைகள் மோதுகின்ற என்றலும் ஒன்று. இப்பாட்டில் டகரம் பலவிடத்துவந்தது, 'விருத்தியநுப்பிராசம்' என்னுஞ் சொல்லணி; அதாவது - எழுத்து ஒன்றேனும் பலவேனும் இடையிட்டுப் பல்கால் வருவது. (260)

123.—சயத்திரதன் கதாயுதத்தால் எதிர்தாக்கினமை.

வசையறும்புகழ்க்குருகுலதிலகனைமருதிரண்டொடித்தவர்திருமருகனை, விசயன்மைந்தனைப்பணைமுகின்மிசைவருவிபுதர்தங்குலத்ததிபதிபெயரனை, யசைவில்வன்றிறற்பகைமுனைநிருபரையடையவென்றகட்டழகுடையபிமனை, யிசைகொள்சிந்துவுக்கரசனுமொருகதையிருகைகொண்டெடுத்திகலுடனெறியவே.

(இ - ள்.) வசை அறும் - பழிப்பு இல்லாத, புகழ் - கீர்த்தியையுடைய, குரு குல திலகனை - குருவென்னும் அரசனது குலத்துக்கு நெற்றித்திலகம் போல அழகுசெய்பவனும், மருது இரண்டு ஒடித்தவர் திரு மருகனை - இரட்டை மருதமரங்களை முறித்த கண்ணபிரானுக்குச் சிறந்த மருமகனும், விசயன் மைந்தனை - அருச்சுனனுக்குப் புத்திரனும், பணை முகில்மிசை வரு - பருத்த மேகமாகிய வாகனத்தின்மேல் வருகிற, வீபுதர் தம் குலத்து அதிபதி - தேவர்களுடைய கூட்டத்துக்குத் தலைவனான இந்திரனுக்கு, பெயரனை - பௌத்திரனும், அசைவு இல்-சோர்தலில்லாத, வல் திறல்-கொடியவலிமையையுடைய, பகை நிருபரை அடைய - பகைவர்களான அரசர்களையெல்லாம், முனை - போரில், வென்ற - சயித்த, கட்டு அழகு உடை - நிறைந்த அழகையுடையவனு மாகிய, அபிமனை - அபிமந்யுவை, இசை கொள் சிந்துவுக்கு அரசன்உம் - கீர்த்தியைக்கொண்ட சிந்துதேசத்துக்கு அரசனான சயத்திரதனும், ஒரு கதை இரு கைகொண்டு எடுத்து - ஒப்பற்ற (தன்) கதாயுதத்தை இரண்டு கைகளாலும் எடுத்து, (அதனால்), இகலுடன் எறிய - வலிமையோடு தாக்க,—(எ - று.)— "களிறனையவன்***முதுகுகண்டபின்" என வருங் கவியோடு தொடரும். (261)

124.—அபிமன் கதாயுதத்தால் தன் தேர்முதலியன அழிக்க, சயத்திரதன் சிவபிரானளித்தகதாயுதங்கொண்டு பூமியிற் குதித்துப் பொருதல்.

கரமிழந்து மற்றொருகரமிசை யொருகதைகொள் வெஞ்சினக்களிறனையவனிவ, னிரதமுந்தகர்த்துறுகதியுடன்வருமிவுளியுந்துணித்தெதிர்முனைவலவனை, முரணுடன்புடைத்தணிதுவசமும்விழமுதுகுகண்டபிற்சரபமதெனும்வகை, யரன்வழங்குபொற்கதையுடனவனியிலவனுமுன்குதித்தடலுடன்முனையவே.

(இ - ள்.) கரம் இழந்து - (முன்னே) ஒருகையை யிழந்து, மற்று ஒரு கரம்மிசை - மற்றொருகையில், ஒரு கதை கொள் - ஒரு கதாயுதத்தை யேந்திய, வெம் சினம் களிறு அனையவன் - கொடிய கோபத்தையுடைய ஆண்யானையைப் போன்றவனான அபிமன், இவன்-சயத்திரதனது, இரதம்உம்-தேரையும், தகர்த்து-உடைத்து, உறு கதியுடன் வரும் - மிக்கவேகத்தோடு வருகிற, இவுளிஉம் -

குதிரைகளையும், துணித்து - துண்டாக்கி, எதிர் முனை - எதிரில் தொழில்செய்கிற, வலவனை-சாரதியையும், முரணுடன் புடைத்து- வலிமையோடு தாக்கி, அணி துவசம்உம் - அழகிய கொடியையும், விழ - ஒடிந்து விழ (ச்செய்து), முதுகு கண்ட பின்-புறங்கொடுக்குமாறு வெல்லத் தொடங்கியவுடனே,—அவன் உம் - சயத்திரதனும், சரபம் அது எனும் வகை-(சிங்கத்தைக்கொல்லவல்ல) சரபம்போல, அரன் வழங்கு பொன் கதையுடன் - சிவபிரான் அளித்த பொன்மயமான கதையுடனே, அவனியில் முன் குதித்து - பூமியிலே வேகமாகக்குதித்து, அடலுடன் முனைய - வலிமையோடு போர்செய்ய,— (எ - று.)—"சிதறின" என அடுத்த கவியில் முடியும். களிறு - ஒருகையோடு இருத்தற்கும் உவமை. பி-ம்: அடலுடைவலவனை. ()

125.—இருவருந் தரையிற் கைகலந்து பொருதல்.

பதயுகங்களொத் தியவலிபலகணபணபுயங்கர்பற் பலமுடிசிதறின, வெதிர்கொடண்டமொத்தியவொலிதிசைகளிலிபமுநின்று மெய்ப்பிடியொடுசிதறின, கதியில்வந்தசித்திரமெனமுறைமுறை கதுவிமண்டலித்தொருபகன்முழுவது, மதிசயப்படப்பொருதன ரெதிரெதிரபிமனுஞ்சயத்திரதனுமமரிலே.

(இ - ள்.) அபிமன்உம் சயத்திரதன்உம் - அவ்விரண்டுபேரும், பதயுகங்கள் ஒத்திய - (தம்தம்) இரண்டுகால்களையும் உறுதியோடு வைத்த, வலி - வலிமையினால், பணம் - படத்தையுடைய, கணம் - கூட்டமான, பல புயங்கர் (கீழிருந்து பூமியைத்தாங்குகிற) அநேக நாகர்களது, பல் பல முடி - பலபலதலைகள், சிதறின - நொருங்கின; எதிர் கொள் - எதிரெதிரிற் கொண்ட, தண்டம் - கதாயுதம், மொத்திய - (ஒன்றோடொன்று) தாக்குவதனாலுண்டான, ஒலி - ஒலியினால், திசைகளில் நின்று-(எட்டுத்) திக்குக்களினின்று, இபம் உம் - திக்குயானைகளும், மெய் - உண்மையாக பிடியொடு-(தம்தம்) பெண்யானையுடனே, சிதறின - நிலைகுலைந்து ஓடின; (இவ்வாறு அபிமனும் சயத்திரதனும்), அமரில்-போர்க்களத்தில், கதியில் வந்த சித்திரம் என - வேகமாகவந்த புலிகள்போல, முறைமுறை கதுவி - மாறிமாறி (ஒருவரையொருவர்) பற்றி, மண்டலித்து-சுழன்றுவந்து, ஒரு பகல் முழுவது உம் - (அந்த) ஒருபகற்பொழுது முடியுமளவும், எதிர் எதிர் - எதிரிலே எதிரிலே, அதிசயம் பட - (காண்பவர்க்கு) வியப்புண்டாக, பொருதனர் - போர் செய்தார்கள் ; (எ - று.)

ஐந்தலை, இருதலை முதலாக ஒவ்வொருநாகத்துக்கே பலதலைகள் உண்மைபற்றி, 'பற்பலமுடி' எனப்பட்டது. மெய்ப்பிடியொடு - தேகபலத்தோடு எனினுமாம். வீமசேனனை வீமனென்றும், சத்தியபாமையைச் சத்தியை யென்றும், கிருதவர்மாவைக் கிருதனென்றுங் கூறுதல்போல, சித்திரகாயத்தைச் சித்திரமென்றார்: சித்திரகாயம் என்று புலிக்குப்பெயர்; (கோடுகளால்) பலவகை நிறமுள்ள உடம்புடையதென்று காரணப்பொருள். இனி, இவ்விருவருள் ஒருவன் செய்த தொழிலை மற்றொருவன் அவ்வாறே செய்தலால், 'சித்திரமென' என்பதற்கு - ஒன்றில் உள்ளபடி யெழுதப்படுகிற சித்திர வடிவம்போல என்றும் உரைக்கலாம். முறைமுறை கதுவி மண்ட

வித்து—மேல் பதினேழாம்போர்ச்சருக்கத்து வருகிற "இடம்புரிந்திடில் வலம்புரியு மெண்ணின் முறையால், வலம்புரிந்திடி லிடம்புரியு மண்டலமுமாய்" என்பதுபோலக் கொள்க. பி - ம்: மொத்தியவ்வி. இபமடங்க. (263)

126.—அபிமன்புயவலிமையைத் தேவரும் புகழ்தல்.

உலைவிறண்டினிற்பரிசனன்மதலையுமுவமையின்றெனப்பகழியின்மழைபொழி, சிலையின்வன்றொழிற்றிறலுடைமகபதிசிறுவனுந்தனக்கெதிரிலனினியென, மலையும்வெஞ்சமத்தொருதனிமுதுபுயவலிமைகண்டுபொற்புறுகழலபிமனை, யலைநெடுங்கடற்றரணிபரனைவருமமரருந்துதித்தனர் முகடதிரவே.

(இ - ள்.) உலைவு இல்-அழிதலில்லாத, தண்டினில்-கதாயுதத்தில், பரிசனன் மதலைஉம் - வாயுகுமாரனான வீமனும், உவமை இன்று - (தனக்கு) ஒப்பாகான், என-என்று (காண்பவர்) சொல்லவும்,—பகழியின் மழை பொழி-அம்புமழையைச் சொரிகிற, சிலையின் வல் தொழில்-வில்லினாற் செய்யுங் கொடிய போர்த்தொழிலில், திறல் உடை மகபதி சிறுவன்உம் - வலிமையையுடைய இந்திரன் மகனான அருச்சுனனும், தனக்கு இனி எதிர் இலன் - இவனுக்கு இனி ஒப்பாகான், என-என்று (காண்பவர்) சொல்லவும்,—வெம் சமத்து-கொடிய போர்க்களத்தில், மலையும் - (அன்றைத்தினத்தில் அபிமன்) போர் செய்த, ஒரு தனி முது புயம் வலிமை-ஒப்பில்லாத தனிப்பட்ட வலிய தோள்களின் பலத்தை, கண்டு—, அலை நெடு கடல் தரணிபர் அனைவர்உம்-அலைகளையுடைய பெரிய கடல்சூழ்ந்த பூமியைக் காக்கிற அரசர்களெல்லோரும், அமரர்உம்-தேவர்களும், பொற்பு உறு கழல் அபிமனை—அழகுமிக்க வீரக்கழலையுடைய அந்த அபிமந்யுவை, முகடு அதிர - (ஆரவாரத்தால் அண்டகோளத்தின்) மேல்முகடு அதிர்ச்சியடையும்படி, துதித்தனர் - (உரத்தகுரலோடு) தோத்திரஞ் செய்தார்கள்; (எ - று.)

வீமன் கதைத்தொழிலிலும், அருச்சுனன் வில்தொழிலிலும் மிகச்சிறந்தவரென்பது பிரசித்தம். முது புயம்-போர்த்தொழிலில் முதிர்ந்த [மிகப்பயின்ற] புயம் என்றுமாம். (264)

127.—படுகளச் சிறப்பு.

கழுகுபந்தரிட்டனமிசைவிசையொடுகழுதினங்களிட்டனபல கரணமும், மெழுகவந்தமிட்டனபலவரிவுகளிருபுறங்களிட்டன வெதிரழிபடை, யொழுகுசெம்புனற்குருதியின்வருநதியுததியுஞ் சிவப்புறும்வகைபெருகலின், முழுகியெஞ்சியிட்டனசுழியிடையிடைமுகிலின்வெங்குரற்கசரததுரகமே.

(இ - ள்.) (அப்பொழுது), கழுகு - கழுகுகள், (இறந்தவற்றைத் தின்னும்பொருட்டு), மிசை-மேலே, விசையொடு-வேகத்தோடு, பந்தர் இட்டன - பந்தல்போகட்டாற்போல இடைவிடாது பரவின; கழுது இனங்கள்-பேய்களின் வகைகள், பல கரணம்உம் இட்டன - (களிப்புமிகுதியால்) அநேக விதமான கரணங்களைப்

போகட்டன; எழு கவந்தம்-எழுந்த உடற்குறைகள், பல பவுரிகள் இட்டன-அநேகவகைப் பௌரியென்னுங் கூத்தை யாடின; எதிர் அழி படை-எதிரிலே அழிந்த சேனைகள், இரு புறங்கள் இட்டன-இரண்டுபக்கங்களிலும் விழுந்தன; ஒழுகு செம் புனல் குருதியின் வரும் நதி-வழிகிற செந்நீராகிய இரத்தவெள்ளத்தாலுண்டான ஆறுகள், உததிஉம் சிவப்பு உறும் வகை-(தான் சென்று சேருங்) கடலும் செந்நிறம் மிகும்படி, பெருகலின்-பெருகுதலால், முகிலின் வெம் குரல் கச ரத துரகம்-மேகம் போலப் பயங்கரமான முழக்கத்தையுடைய யானைதேர்குதிரைகள், முழுகி-(அவ்விரத்தப்பெருக்கில்) அமிழ்ந்து, சுழி இடை இடை-(அதிலுள்ள) சுழிகளினிடந்தோறும், எஞ்சியிட்டன-மறைந்து அழிந்தன;

கரணம்-கூத்தின் ஓர்விகற்பம்; அதனை இடுதல்-ஆடுதல். மிகப்பலர் இறக்கையில் கவந்தம் எழுந்தாடுதல், முற்கூறப்பட்டது. பவுரி-தானே சுழன்று ஆடுங் கூத்து. (265)

128.—அபிமன் கதாயுதப்போரி லிளைத்தல்.

முறைமையின்றி யெத்தரணிபர்களுமெதிர் முடுகவந்துமுற்
றெறுதலினவரவர், பொறையழிந்துகெட்டனைவரும்வெருவொடு
புறமிடும்படிக்கொருதனிபொருதபி, னிறைவலம்புரித்தொடை
கமழ்புயகிரிநிருபதுங்கன்மைத்துனனுளம்வெருவர, வறைபெருங்
கதைப்படைகொடுவலியுறவமர் புரிந்திளைத்தனனடலபிமனே.

(இ-ள்.) எ தரணிபர்கள்உம்-எல்லா வரசர்களும், முறைமை இன்றி-(ஒருவர்பின் ஒருவர் என்ற) முறைமை யில்லாமல், முடுக-வேகமாக, எதிர் வந்து-(தன்னொருத்தனை) எதிர்த்து வந்து, முன் தெறுதலின்-முன்னே போர்செய்தலால்,—அடல் அபிமன்-வலிமையையுடைய அபிமந்யு,—அவர் அவர்-வந்த வந்த அவ்வீரர்கள், பொறை அழிந்து-(துன்பத்தைப்) பொறுக்குந் தன்மை யொழிந்து, கெட்டு-தோற்று, அனைவர்உம்-எல்லோரும், வெருவொடு-அச்சத்தோடு, புறம் இடும்படிக்கு-முதுகுகொடுக்கும்படி, ஒரு தனி-தன்னந் தனியாய், பொருத பின்-போர்செய்த பின்பு,—நிறை-நிறைந்த, வலம்புரி தொடை-நஞ்சாவட்டைப் பூமாலை, கமழ்-வாசனைவீசுகிற, புயம் கிரி-மலைகள்போலுந் தோள்களையுடைய, நிருப துங்கன்-அரசரிற் சிறந்த துரியோதனனுக்கு, மைத்துனன்-உடன்பிறந்தவள் கணவனான சயத்திரதன், உளம் வெருவர-மனம் அஞ்சும்படி, அறை பெரு கதை படை கொடு-தாக்குகிற பெரிய கதாயுதத்தால், வலி உற-பலமாக, அமர் புரிந்து-(அவனுடன்) போர்செய்து, இளைத்தனன்-சோர்ந்தான்;

ஏற்கவே தன்னந்தனியனாய் அபிமன் பலருடன் பொருது இளைத்துள்ளானென்பதை, முன்னிரண்டடிகள் காட்டவந்தன. தெறுதல்-வருத்துதலென்பாருமுளர். அழிந்துகெட்டு-ஒருபொருட்பன்மொழியுமாம், அறை-சிறப்பித்துச்சொல்லப்படுகிற என்றுமாம். (266)

129.—இரண்டுகவிகள் - ஜயத்ரதன் சிவபிரானளித்த கதைகொண்டு அபிமனைத் தலைதுணித்துவீழ்த்துதலைக்கூறும்.

இவன்மயங்கிமெய்த்தளர்வுடன்மெலிவுறுமிறுதிகண்டினித்தெறுவதுகடனென, வவனிகொண்டபற்குனன்மதலையையவனருகு வந்தடுத்தணிபுயவலிகொடு, சிவனையஞ்செழுத்துரைசெய்துதொழு தொருசிகரதண்டம்விட்டெறிதலினெறிதரு, பவனனன்றுகுத்தின கிரியெனவிசைபடவிழுந்ததப்பருமணிமகுடமே.

(இ - ள்.) இவன் - அபிமன், மயங்கி—,மெய் தளர்வுடன் - உடம்பின் சோர்வுடனே, மெலிவு உறும் - வாட்டம் மிகுகிற, இறுதி - அந்திமதசையை, கண்டு—, (சயத்திரதன்), இனி தெறுவது கடன் என - 'இப்பொழுதே (இவனை) அழிப்பது செய்தொழில்' என்றுகருதி, அவனி கொண்ட பற்குனன் மதலையை - (பராக்கிரமத்தால்) பூமிமுழுவதையும் (தன்னுடையதாகக்) கொள்ளவல்ல அருச்சுனபுத்திரனான அபிமனை, அவன் அருகு வந்து அடுத்து - அவனது சமீபத்தில் வந்து நெருங்கி, சிவனை அஞ்சு எழுத்து உரை செய்து தொழுது - சிவபிரானை ஸ்ரீபஞ்சாக்ஷரமகாமந்திரத்தை உச்சரித்து வணங்கி, அணி புயம் வலி கொடு - அழகிய தோள்களின் வலிமையால், ஒரு சிகர தண்டம் விட்டு - ஒப்பற்ற நுனியையுடைய (தன்) கதாயுதத்தை வீசி, எறிதலின் - தாக்கியதனால்,—எறிதரு பவனன் - வீசுகிற வாயு, அன்று - (ஆதிசேடனோடு பகைத்த) அக்காலத்தில், குத்தின - தாக்கிக் கொடிமுடி யொடித்த, கிரி என - மேருமலைபோல, அ பரு மணி மகுடம் - அபிமனது பருத்த இரத்தினங்கள்பதித்த கிரீடம், விசை பட விழுந்தது - வேகமாகக் கீழ் விழுந்தது; (எ - று.)

மதலையை எறிதலின் என்றும், சிவனைத்தொழுது என்றும் இயையும். புயவலிகொடு-தனதுதோள்களிரண்டுக்கும் எவ்வளவு வலிமை யுண்டோ அவ்வளவையுங் கொண்டு. அஞ்சு-முழுப்போலி.

130. தலைதுணிந்துதத் திடவிழ விவனொரு தனது திண்கையிற் கதைகொடு தரியல, னிலைய றிந்துபுக் குரனுற வெறிதலி னெரிநெ ரிந்ததத் தரணிப னுடலமு, மலைம றிந்ததொத் தபிமன துடலமு மகித லந்தனிற் றரியற விழுதலி, னலையெ றிந்துமைக் கடல்புர ளுவதென வரவம் விஞ்சியிட் டதுகள மடையவே.

(இ - ள்.) (அப்பொழுது), இவன் - அபிமன், தனது ஒரு திண் கையில் கதை கொடு - தனது வலிய ஒற்றைக்கையிலுள்ள கதாயுதத்தால், தரியலன் நிலை அறிந்து புக்கு உரன் உற எறிதலின் - பகைவனான சயத்திரதனது (மார்புமுதலிய) உயிர்நிலைகளை உணர்ந்து சென்று பலம்மிக வீசியடித்தலால், அ தரணிபன் உடலம்உம் - அந்தச்சிந்துராசனது உடம்பும், நெரிநெரிந்தது-மிக நொருங்கிற்று; அபிமனது உடலம்உம் - அபிமந்யுவின் உடம்பும், (சைந்தவன் கதை தாக்கலால்), தலை துணிந்து தத்திட விழ - தலைதுணிபட்டுச் சரியவிழ, மலை மறிந்தது ஒத்து-மலை சாய்ந்ததுபோன்று, மகிதலந் தனில் - தரையிலே, தரி அற விழுதலின் - நிற்றலின்றி வீழ்ந்ததனால்,—அலை எறிந்து - அலைவீசி, மை கடல் புரளுவது என -

கரிய கடல் கரைபுரள்வது போல, களம் அடைய-போர்க்களம் முழுவதிலும், அரவம் விஞ்சியிட்டது-ஆரவாரம் மிக்கது; (எ - று.)

நிலை - கதைப்போரில் அடிக்கத்தக்க இடம். நெரிநெரிதல் - இரட்டைக்கிளவி. தரி-தரிப்பு: முதனிலைத்தொழிற்பெயர். அரவம்-ரவம்; வடசொல். (268)

வேறு.

131—இதுமுதல் நான்குகவிகள்-அபிமனதுமரணத்துக்குக் கவி இரங்கல்.

மாயனுந் திருமாமன் றனஞ்சயனுந் திருத்தாதை வானோர்க்கெல்லா, நாயனும் பிதாமகன்மற் றொருகோடி நராதிபரா நண்பாய்வந்தோர், சேயனு மபிமனுவாஞ் செயத்திரதன் கைப்படுவான் செயற்கை வெவ்வே, றுயநா ளவனிதலத் தவ்விதியை வெல்லும் வகை யார்வல் லாரே.

(இ - ள்.) (அபிமனுக்கு), திரு மாமன் - சிறந்த மாதுலன், மாயன் ஆம் - கண்ணனும்; திரு தாதை-சிறந்த தந்தை, தனஞ்சயன் ஆம்-அருச்சுனனும்; பிதாமகன் - பாட்டன், வானோர்க்கு எல்லாம் நாயன் ஆம்-தேவர்களுக்கெல்லாந் தலைவனான இந்திரனும்; மற்று - மேலும், நண்பு ஆய் வந்தோர் - சினேகமும் உறவுமாகப் பொருந்தினவர், ஒரு கோடி நராதிபர் ஆம் - ஒரு கோடிக்கணக்கான அரசர்களாம்; (இப்படியிருக்க), சேயன் ஆம் - இளங்குமரனாகிய, அபிமனு - அபிமந்யு, செயத்திரதன் கை படுவான் ஆம் - சயத்திரதனது கையால் இறப்பானும்; செயற்கை-(ஊழ்வினையின்) செய்கைகள், வெவ்வேறு ஆய நாள் - வேறுவேறுவிதமாகநிகழ்ந்தகாலத்தில், அவனிதலத்து-உலகத்தில், அ விதியை வெல்லும் வகைவல்லார்-அவ்வூழ்வினையைச் சயிக்கவல்லவர்கள், யார்-யாவர் (உளர்)? [எவருமில்லை யென்றபடி]; (எ-று.)

எல்லாச்சிறப்புக்களும் அமைந்திருக்கவும் அபிமன் அழிந்தானென்றசிறப்புப்பொருளை 'விதியை வெல்லவல்லார்யார்?' என்னும் பொதுப்பொருள் கொண்டு விளக்கியதனால் **வேற்றுப்பொருள்வைப்பணி.** "ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந்துறும்" என்ற இதனால், ஊழின்விலக்கலாகாத வலிமையை உணர்க. இக்கவியில்வந்த 'ஆம்' என்னுஞ்சொற்கள் பலவும்-உயர்வு, சிறப்பு, வியப்பு முதலிய சிலகுறிப்புக்களை விளக்கின; "கைத்தோடுஞ் சிறைகற்போயை, வைத்தோனின் னுயிர்வாழ்வானும், பொய்த்தோர் வில்லிகள் போவாராம், இத்தோ டொப்பதி யாதுண்டோ" எனக் கம்பராமாயணத்திலுங் காண்க. இது இடைச்சொல்லின் பாற்பட்டது. ஆகும்என்னும்செய்யுமென்முற்றாகக்கொள்வோமெனின் 'நராதிபராம்' எனப் பலர்பாற்பெயரோடும் வந்ததனால், அது பொருந்தாது; "பல்லோர்படர்க்கை முன்னிலை தன்மையில், செல்லாதாகுஞ் செய்யுமென்முற்றே" என்பது இலக்கணமாதலால். இரட்டுறமொழிதலால், நண்பு-உறவுமாயிற்று. நாயகன் என்ற வடசொல், நாயன் என விகாரப்பட்டது. மாயன், தனஞ்சயன், வானோர்க்கெல்லாம் நாயன் என்ற பெயர்களாற் குறித்தது, அவரவர்பெருமையை

நன்குவிளக்கும். 'சேய்' என்னும் ஆண்பாற் சிறப்புப்பெயர் அன் விகுதிபெற்றது. செயற்கையென்ற தொழிற்பெயரில், அல்-சாரியை. பி - ம்: வெல்லும்விரகார்.

இதுமுதல் பதினைந்து கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரிரண்டும் மாச்சீர்களும், மற்றைநான்கும் காய்ச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தங்கள். (269)

132. சேடன்முடிநெளியவருசெம்பொற்றேரழிவதோவந்தோ வந்தோ, கேடகவாளணிவலயக்கிளர்புயத்தோளறுவதோவந்தோ வந்தோ, கூடகவெங்கதையொன்றாற்சிந்துபதிகொல்வதோவந் தோவந்தோ, வாடமரிலருகொருவர்வாராமலிருப்பதோவந்தோவந் தோ.

(இ - ள்.) சேடன் - (கீழிருந்து பூமியைத் தாங்குகிற) ஆதிசேஷனது, முடி-தலை, நெளிய-(பாரமிகுதியைப் பொறுக்கமாட்டாமல்) வளையும்படி, வரு - வருகிற, செம் பொன் தேர் - (அபிமனது) சிவந்த பொன்மயமான தேர், அழிவதுஓ - அழிதல் தகுதியோ! அந்தோ அந்தோ - ஐயோ ஐயோ!! கேடகம் வாள்-கேடகத்தையும் வாளையும் ஏந்திய, அணி வலயம் - அழகிய வளையை அணிந்த, கிளர் புயம் - விளங்குகிற தோள்களையுடைய, தோள் - (அபிமனது) கைகள், அறுவதுஓ - அறுபடுதல் தகுதியோ! அந்தோ அந்தோ—!! கூடகம் - வஞ்சனையையுடைய, வெம் கதை ஒன்றால் - கொடியதொரு கதாயுதத்தால், சிந்துபதி-சிந்துதேசத்தரசன், கொல்வதுஓ - (அபிமனைக்) கொல்லுதல் தகுதியோ! அந்தோ அந்தோ—!! ஆடு அமரில் - செய்கிற போரில், அருகு ஒருவர் வாராமல் இருப்பதுஓ - (இவ்வபிமனது) சமீபத்தில் ஒருத்தரும் துணைவராதிருத்தல் தகுதியோ—! அந்தோ அந்தோ—!! (எ - று.)

ஓகாரங்கள்-சிறிதுந்தகுதியன் றென்று இரங்குதலை உணர்த்தும். சேஷன் என்ற வடசொல் - (பிரளயகாலத்திலும் அழியாமல்) மிகுந்து நிற்பவனென்று காரணப்பொருள்படும். வரத்தா லமைந்ததாதலின், 'கூடகவெங்கதை' எனப்பட்டது; இனி, கூடகம்-நுனியுமாம். பி - ம்: வந்துதவாமல். (270)

133. கன்னனையுந்தேரழித்தான்கந்தனிலும்வலியனேயந்தோவந்தோ, மன்னவரைவருமிருக்கமைந்தனுயிரழிவதேயந்தோவந்தோ, பொன்னுலகோர்வியந்துருகிப்புந்தியினுன் மலர்பொழிந்தாரந்தோவந்தோ, வன்னநெடுந்துவசனிவற்காயுமிகக் கொடுத்திலனேயந்தோவந்தோ.

(இ - ள்.) (அபிமன்), கன்னனைஉம் தேர் அழித்தான் - கர்ணனையுந் தேரழியச்செய்தான்; கந்தனில்உம் வலியன்ஏ - முருகக்கடவுளினும் பலசாலியேயாவன்! அந்தோ அந்தோ-!! மன்னவர்ஐவர் உம் இருக்க - பாண்டவராசர்கள் ஐந்துபேரும் உயிருடனிருக்க, மைந்தன்-அவர்கள் மகனான அபிமன், உயிர் அழிவதுஏ-இறப்பதோ! அந்தோ அந்தோ—!! பொன் உலகோர் - பொன்மயமான சுவர்க்கலோகத்திலுள்ள தேவர்கள், வியந்து - (இவன்பராக்கிரமத்தை)

அதிசயித்து, உருகி - மனமுருகி, புந்தியினல் - நல்லறிவோடு, மலர் பொழிந்தார் - (இவன்மேல்) பூமாரிபொழிந்தார்கள்! அந்தோ அந்தோ—!! அன்னம் நெடு துவசன் - அன்னப்பறவையின் வடிவத்தையெழுதிய பெரிய கொடியையுடைய பிரமன், இவற்கு - இந்த அபிமனுக்கு, ஆயு மிக கொடுத்திலன்ஏ - ஆயுளை மிகுதியாகக் கொடுத்தானில்லையே! அந்தோ அந்தோ—!! (எ - று.)

கந்தன் - ஸ்கந்தன் என்னும் வடசொல்லின் திரிபு; இதற்கு - (சத்துருக்களை) வற்றச்செய்பவ னென்பது அவயவப்பொருள்; "சேய வன்வடிவமாறுந் திரட்டிநீ யொன்ருய்ச் செய்தாய், ஆயதனுலே கந்தனுமெனுநாமம் பெற்ருன்" எனக் கந்தபுராணத்திற் கூறியபடி, (சக்திசொரூபமான உமாதேவியினுல்) சேர்க்கப்பட்டவ னென்றும் பொருள்கொள்ளலாம். இவன், தேவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கிய பரமசிவனது திருவருளால் அப்பிரானதுகுமாரனுகத் தோன்றித் தேவசேனுபதியாகிச் சூரபதுமன் முதலிய அசுரர்களை அழித்தது, பிரசித்தம். மேன்மையுடையாரது இயல்பை யுணர்ந்து அழுக்காறும் உபேட்சையுமில்லாமல் அப்பொழுதப்பொழுது கொண்டாடுதல் அறிவின்பயனுதலால், 'புந்தியினுல் மலர்பொழிந் தார்' என்ருர். (271)

134. சரமறுத்தான்வில்லறுத்தான்றேரறுத்தான்கொடியறுத் தான்சமரபூமி, யுரமறுத்தான்முதற்பொருதவுதயதினகரன்மைந்தனு டன்றுசீறிக், கரமறுத்தானடுப்பொருதகார்முகத்தின்குருவிசயன் காளைதன்னைச், சிரமறுத்தான்பின்பொருதசயத்திரதனிவன்வீரஞ்செ ப்பலாமோ.

(இ - ள்.) சமர பூமி-யுத்தகளத்தில், முதல் பொருத-முதலில் எதிர்த்துப் போர்செய்த, உதய தினகரன் மைந்தன் - உதித்தலை யுடைய சூரியனுக்குப் புத்திரனுன கர்ணன், உடன்று சீறி - பகைத்துக் கோபங்கொண்டு, (இவ்வபிமனது), சரம் - அம்பை, அறுத்தான் - துணித்தான்: வில் அறுத்தான்—; தேர் அறுத்தான்—: கொடி அறுத்தான்—; உரம் அறுத்தான் - வலிமையை அழித்தான்; (பின்பு), நடு பொருத - இடையிற்போர்செய்த, கார் முகத்தின் குரு - வில்லாசிரியனுன துரோணன், கரம்அறுத்தான் - ஒரு கையைத் துணித்தான்; பின் பொருத சயத்திரதன் - அதன்பின் இறுதியாகப் போர்செய்த சைந்தவன், விசயன் காளை தன்னை - அருச்சுனன் மகனுன இவனை, சிரம் அறுத்தான் - தலை துணித்தான்; இவன் - (இங்ஙனம் ஒருவரால் எதிர்த்துப் பொருது கொல்ல முடியாமல் பலரால் ஒருங்குகூடிப் பொருது அழிக்கப்பட்ட) இவ்வபிமனது, வீரம் - பராக்கிரமம், செப்பல் ஆம்ஓ - சொல்லமுடியுமோ? (எ - று.)—எவராலும் முழுவதும் எடுத்துச்சொல்ல முடியாது என்பதாம்.

சமரபூமி, உடன்றுசீறி, விசயன்காளைதன்னை என்றவற்றை, மற்றைவாக்கியங்களிலும் எடுத்துக்கூட்டுக. உரம் என்பதற்கு - மார்பென்று பொருள் கூறுதல் பொருந்தாமையை, கீழ் 104 - ஆங் கவி நோக்கி யுணர்க. (272)

135.—அபிமனிறந்ததுகேட்ட மாற்றலரின்செய்கை.

எட்டானைத்தம்பமுடன்சயத்தம்பநாட்டியபேரிறைவன்மைந் தன், பட்டானென்பதுகேட்டுத்திருகினார்முதுகிட்டுப்பறந்தவீர, ரொட்டாமற் செயிரமரிலுயிரிழந்த தன்புதல்வற்குருகுஞ் சோகம், விட்டான்வெஞ்சமரமினி வென்றேமென்றுட்கொண்டான் வேந் தர்வேந்தன்.

(இ - ள்.) எட்டு ஆனை தம்பமுடன் - எட்டுத்திசைகளிலும் திக்கஜங்களைக் கட்டிநிற்கிற தூண்களுடனே, சயத்தம்பம் நாட் டிய-(தனது) வெற்றிக்கொடிக்கம்பத்தை நிலைநிறுத்திய, பேர் இறை வன்-சிறந்த அரசனான அருச்சுனனுக்கு, மைந்தன் - மகனான அபி மன், பட்டான் - இறந்தான், என்பது-என்கிறசெய்தியை, கேட்டு- கேள்விப்பட்டு,—முதுகு இட்டு பறந்த வீரர் திருகினார் - (முன்பு அபிமனெதிரிற்) புறங்கொடுத்துப் பறந்தோடியவீரர்கள் (மகிழ்ந்து தைரியத்தோடு) திரும்பினார்கள்: வேந்தர் வேந்தன் - ராஜராஜனான துரியோதனன், செயிர் அமரில் - கோபத்தோடு செய்யும் போரில், ஒட்டாமல்-நிலைநிற்கமாட்டாமல், உயிர் இழந்த - இறந்த, தன்புதல் வற்கு-தனக்குமகனான இலக்கணன்பொருட்டாக, உருகும் - மனங் கரைகிற, சோகம்-விசனத்தையும், விட்டான்-நீங்கி, இனி—, வெம் சமரம் வென்றேம் என்று உள் கொண்டான் - கொடிய போரில் (பாண்டவரைச்) சயித்திட்டோமென்று கருதினான்; (எ-று.)

'ஆனைத்தம்பமுடன்' என்பதற்கு - யானைகட்டுந்தறியோடு ஒப்ப என்று பொருள்கொள்ளுதலும் பொருந்தும்; "தனித்தனியே திசையானைத் தறிகளாகச் சயத்தம்பம் பலநாட்டி" என்ற கலிங்கத் துப்பரணியைக் காண்க. 'கேட்டு' என்றதனால் நெடுந்தூரம் ஓடி யமை விளங்கும். வென்றேம் - காலவழுவமைதி. ஒட்டாமல் - வாழும் ஊழ்வினை இல்லாமலெனினுமாம். பி - ம்: போரிறைவன்.

136.—துரியோதனன் முதலிய நால்வர்தவிர யாவரும் அபிமனிறந்தமைக்கு இரங்குதல்.

ஓரிரண்டுவயவர் முனைந்துடன்பொருதலுலகியற்கை யொரு வன்றன்மேற், போரிரண்டுபுறமும்வளைந்தொருகோடிமுடிவேந் தர்பொருதுகொன்றார், தேரிரண்டுகிடையாதகுறையன்றே களத்த விந்தான்சிறுவனென்றென், றீரிரண்டுபெயரொழியமற்றுள்ளாரழு திரங்கியென்பட்டாரே.

(இ - ள்.) ஓர் இரண்டு வயவர் - இரண்டுவீரர்கள், முனைந்து- பிரயத்தனப்பட்டு, உடன் பொருதல் - (தம்மில் ஒருவரோடொரு வர்) போர்செய்தல், உலகு இயற்கை-உலகத்துஇயல்பாம்: (அங்ஙன மிருக்க), ஒருவன்தன்மேல்-(அபிமன்) ஒருத்தன்மேலே, ஒரு கோடி முடி வேந்தர்-கிரீடந்தரித்த மிகப்பல அரசர்கள், இரண்டு புறம்உம் வளைந்து-இரண்டுபக்கத்திலும் எதிர்த்துச்சூழ்ந்து, போர் பொருது- போர்செய்து, கொன்றார் - (அவனைக்) கொன்றுவிட்டார்கள்; தேர் இரண்டு கிடையாத குறை அன்றுஓ - இரண்டாவது ஒரு தேர் கிடைக்காத குறைவினாலன்றோ, சிறுவன் - இளங்குமரனான அபிமன், களத்து அவிந்தான் - போர்க்களத்தில் இறந்தான், என்று

என்று - என்று (பலவாறு) எண்ணி, ஈர் இரண்டு பெயர் ஒழிய மற்று உள்ளார்-நாலுபேர்தவிர மற்றுள்ளவர் எல்லோரும், அழுது இரங்கி-புலம்பிச் சோகித்து, என் பட்டார் - என்னபாடு பட்டார்கள்? [மிகத் துன்பமுற்றார்கள் என்றபடி]; (எ-று.)—ஏ-இரக்கம்.

ஈரிரண்டுபேர் - துரியோதனன், சயத்திரதன், சகுனி, கர்ணன் என இவர்; கர்ணனைநீக்கித் துச்சாதனனைச் சேர்த்தலும் ஒன்று. தனதுதேர் கர்ணனம்பால் அழிந்தகாலத்தில் மறுபடி ஏறிக்கொள்ளுதற்கு உதவியாக மற்றொருதேர் கிடைத்திருந்தால் அபிமனைக் கொல்ல எவராலும் ஆகாதென்பது, மூன்றும் அடியால் விளங்கும்.

137.—அபிமனிறந்தமையைத் தருமன் கேட்டல்.

தாள்விசயம்பெறமுனைந்துசக்கரயூகம்பிளந்துதானேநின்று,
வாள்விசயன்றிருமதலைவானோரும்வியந்துரைக்கமாய்ந்தானென்று,
வேள்வியினு லுண்மையினுற் றிண்மையினுற் றண்ணளியால் விற
லாற்பனூற், கேள்வியினுன்மிகுந்தெவர்க்குங்கேளானவுதிட்டிர
னுங்கேட்டானன்றே.

(இ - ள்.) வேள்வியினுல் - யாகங்களினாலும், உண்மையினுல்- சத்தியத்தினாலும், திண்மையினுல் - வலிமையினாலும், தண் அளியால் - குளிர்ந்த கருணையினாலும், விறலால் - வெற்றியினாலும், பல் நூல் கேள்வியினுல் - பல சாஸ்திரார்த்தங்களைக் கேட்டலாலும், மிகுந்து—, எவர்க்குஉம் கேள் ஆன - எல்லோர்க்கும் சினேகிதனான, உதிட்டிரன்உம் - தருமபுத்திரனும்,—'வாள் விசயன் திருமதலை-ஆயுதம்வல்ல அருச்சுனனுக்குச் சிறந்த குமாரனான அபிமன், தாள்-(தனது) முயற்சியால், விசயம் பெற - வெற்றியை யடையும்படி, முனைந்து - போர்செய்து, சக்கரயூகம் பிளந்து - சக்கரவியூகத்தைப் பேதித்து, தான் ஏ நின்று-தான்மாத்திரமே தனியாகநின்று, வானோர்உம் வியந்து உரைக்க - தேவர்களும் அதிசயித்துப் புகழ, மாய்ந்தான்-இறந்தான்', என்று கேட்டான் - என்று கேள்விப்பட்டான்; (எ - று.)—அன்றே-ஈற்றசை.

தருமன் சக்கரவியூகத்துக்கு வெளியேநின்றவனாதலால், 'கேட்டான்' என்றார். எவர்க்குங் கேளான உதிட்டிரன் - அஜாதசத்ருவென்று தருமனுக்கு ஒருபெயர்; அதற்குப் பகையில்லாதவனென்று பொருள். (275)

138.—நான்குகவிகள் - அபிமனிறந்ததற்குத் தருமன் புலம்பலைக்கூறும்.

பிறந்ததினமுதலாகப்பெற்றெடுத்தவிடலையினும் பீடுந்தேசுஞ்,
சிறந்தனையென்றுனைக்கொண் டேதெவ்வரை வென்றுலகாளச்சிந்
தித்தேனே, மறந்தனையோவெங்களையு மாலையினுல்வளைப்புண்டு
மருவார்போரி, லிறந்தனையோவென்கண்ணேயென்னுயிரேயபிமா
வின்றென்செய்தாயே.

(இ - ள்.) என் கண்ணே - எனது கண்போன்றவனே! என் உயிரே-எனது உயிர்போன்றவனே! அபிமா-அபிமந்யுவே! பிறந்த தினம் முதல் ஆக-(நீ) பிறந்தநாள் முதற்கொண்டு, பெற்று எடுத்த விடலையின்உம் - (உன்னைப்) பெற்றெடுத்த வீரனான அருச்சுனனைக்

காட்டிலும், பீடுஉம் தேசுஉம் சிறந்தனை - (நீ) பெருமையும் ஒளியும் மிக்குள்ளாய், என்று - என்ற காரணத்தால், உன்னை கொண்டு ஏ தெவ்வரை வென்று உலகு ஆள சிந்தித்தேன் ஏ - உன்னைக்கொண்டே பகைவர்களைவென்று (யான்) உலகத்தை அரசாளஎண்ணியிருந்தேனே! எங்களைஉம் - (உனது அன்புள்ள தந்தையரான) எங்களையும், மறந்தனை ஓ - மறந்துவிட்டாயோ? (மறந்திடாமல்), மாலையினால் வளைப்புண்டு - கொன்றைமாலையாற் சூழப்பட்டு, மருவார் போரில்-பகைவர்கள் செய்தபோரில், இறந்தனை ஓ-? இன்று என்செய்தாய் ஏ-இன்றைக்கு என்னசெய்துவிட்டாயே!

தந்தைக்கு 'பெற்றெடுத்த' என்ற அடைமொழிகொடுத்தல், உபசாரம். இனி, 'பெற்றெடுத்தவிடலையினும்' என்பதற்கு-யான் பெற்றுவளர்த்த (விந்தனென்னும் எனது) குமாரனினும் என்று உரைத்தல் சிறப்பன்று. என்கண், என் உயிர் - சிறப்பினால் உயர்திணையில் அஃறிணைவந்த வழுவமைதி; [நன்-பொது - 28.] பி-ம்: சிந்தித்தேன்யான். (276)

139. தேனிருக்குநறுமலர்த்தார்ச்சிலைவிசயனிருக்கவரைத்திண்
டோள்வீமன்,றானிருக்கமாநகுலசாதேவர்தாமிருக்கத்தமராய்வந்து,
வானிருக்கின்முடிவான மரகதமாமலையிருக்க வாழ்வானெண்ணி,
யானிருக்கவினையறியாவிளஞ்சிங்கமிறப்பதேயென்னேயென்னே.

(இ - ள்.) தேன் இருக்கும் - தேன் பொருந்தின, நறு - வாசனை வீசுகிற, மலர் - பூக்களாலாகிய, தார் - வெற்றிமாலையையுடைய, சிலை-(காண்டீவமென்னும்) வில்லையுடைய, விசயன் - அருச்சுனன், இருக்க - வாழ்ந்திருக்க,—வரை திண் தோள் - மலைகள்போலும் வலியதோள்களையுடைய, வீமன்—, தான் இருக்க—, மா-சிறந்த, நகுல சாதேவர்—, தாம் இருக்க—, வான் இருக்கின் முடிவு ஆன - சிறந்தவேதங்களின்அந்தத்துப்பொருளான, மரகதம் மா மலை-சிறந்த மரகதரத்தினமயமான மலை போன்ற கண்ணபிரான், தமர் ஆய் வந்து - உறவினனாய்ப் பொருந்தி, இருக்க—, யான்—, வாழ்வான் எண்ணி - (பகைவென்று அரசாண்டு) வாழக் கருதி, இருக்க—, வினை அறியா - செய்தொழிலை முற்ற அறியாத, இள சிங்கம் - சிங்கக்குட்டிபோன்ற நீ, இறப்பதுஏ - இறப்பது தகுதியோ? என்னே என்னே-(இது) என்ன அநீதி! என்ன அநீதி!! (எ - று.)—பி - ம்: விளைவறியா.

அபிமன்சக்கரவியூகத்தின் உட்செல்லுதல்மாத்திரம் உணர்ந்து மீண்டுவர விதமறியாதவனென்பது தோன்ற, 'வினையறியா இளஞ் சிங்கம்' என்றார்; இதனை முதனூலால் அறிக. 'தமராய்வந்து' என்பது, எல்லோர்க்குங் கூட்டத்தக்கது; ஆனதுபற்றியே, 'தமர்' எனப் பன்மையாற் கூறியது. மாநகுலன் என எடுத்து, குதிரைத் தொழிலில்வல்ல நகுலனென்றுமாம். நகுலசகதேவர் இரட்டைப் பிள்ளையராதலால், ஒருதொடராகக் கூறப்பட்டனர். இருக்கு - நான்குவேதங்களுள் முதலாவதன் பெயராவதே யன்றி, எல்லா வேதங்களுக்கும் பொதுப்பெயராகவும் வழங்கும். 'இருக்கின்முடிவு' என்றது - வேதத்தின்பிரிவான கர்மகாண்டம் பிரமகாண்டம் என்ற இரண்டனுள் சிறந்ததும், பிந்தினதுமான உபநிஷத்துக்களின் சித்

தாந்தமான பொருளை. மரதகம் - மரகதம்; எழுத்துநிலைமாறுதல்: இலக்கணப்போலி. மரகதம்-பச்சைரத்தினம். மரகதமாமலை-உவமையாகுபெயர்; "பச்சைமாமலைபோல்மேனி" என்றதுங் காண்க. ( )

140. நின்றனையேயெனைக்காத்துநீயேகென்றியானுரைப்பநெடுந் தேரூர்ந்து, சென்றனையேயிமைப்பொழுதிற்றிகிரியையுமுடைத் தனையேதெவ்வரோட, வென்றனையேசுயோதனன்றன்மகவுடனே மகவனைத்தும்விடங்காலம்பிற், கொன்றனையேநின்னுண்மைமீண்டு ரைக்கக் கூசினையோகுமரரேறே.

(இ - ள்.) குமரர் ஏறே - இராசகுமாரர்களுள் சிங்கம்போன்றவனே! எனை காத்து நின்றனை ஏ-(நீ இதுவரையில்) என்னை(ப் போரில்) பாதுகாத்து நின்றாயே; நீ ஏகு என்று யான் உரைப்ப - (சக்கரவியூகத்தைப் பிளத்தற்கு) 'நீ செல்' என்று நான் சொல்ல, நெடு தேர் ஊர்ந்து சென்றனை ஏ - பெரிய தேரைச்செலுத்திக் கொண்டுபோயினாயே; இமை பொழுதில்-கண்ணிமைப்பொழுதிலே, திகிரியைஉம் உடைத்தனை ஏ - சக்கரவியூகத்தையும் பேதித்தாயே; தெவ்வர் ஓட வென்றனை ஏ - (பின்பு) பகைவர்கள் ஓடச் சயித்தாயே; சுயோதனன்தன் மகவுடனே-துரியோதனன்புத்திரனான இலக்கணனுடனே, மகவு அனைத்துஉம்-(மற்றும்) இராசகுமாரர் பலரையும், விடம் கால் அம்பின்-விஷத்தை வெளிச்சொரிகிற பாணங்களால், கொன்றனை ஏ - கொன்றிட்டாயே; நின் ஆண்மை- உனது (இப்படிப்பட்ட) பராக்கிரமத்தை, மீண்டு உரைக்க-திரும்பி வந்து (என்னுடன்) சொல்ல, கூசினை ஓ - நாணங்கொண்டுவாராது சென்றாயோ? (எ - று.)

"போர்வாய்ப்பச் செய்தவைநாடாச் சிறப்புடைமை,...நலமாட்சி நல்லவர் கோள்" என்றபடி, போரில்வெற்றியுண்டாம்படி தான் செய்த செயல்களைத் தானே எடுத்துச்சொல்ல நாணுதல் சுத்த வீரரது நற்குண மாதலின், 'நின்னுண்மை மீண்டுரைக்கக் கூசினையோ' என்றான். (278)

141. உனக்குதவியொருவரறவொருதனிநின்றமருடற்றியொ ழிந்தமாற்றந், தனக்குநிகர்தானனதனஞ்சயனுங்கேட்கினுயிர்தரி க்குமோதா, னெனக்கவனிதரவிருந்ததித்தனையோமகனேயென் றென்றுமாழ்கி, மனக்கவலையுடனழிந்துமணித்தேரின்மிசைவீழ்ந் தான்மன்னர்கோவே.

(இ - ள்.) உனக்கு உதவி ஒருவர் அற - உனக்கு உதவிசெய்பவர் ஒருவருமில்லாமல், ஒரு தனி நின்று-(நீ சக்கரவியூகத்தினுள்) தன்னந்தனியே நின்று, அமர் உடற்றி-போர்செய்து, ஒழிந்த- இறந்த, மாற்றம்-செய்தியை, கேட்கின்-கேட்டால், தனக்கு நிகர் தான் ஆன தனஞ்சயன்உம்-(வேறுஉவமை பெறுமையால்) தனக்குத்தானேஒப்பான அருச்சுனனும், தான் உயிர்தரிக்கும் ஓ-தான் பிழைத்திருப்பானோ? மகனே—! (நீ), எனக்கு அவனி தர இருந்தது- எனக்கு இராச்சியத்தைக் கொடுக்க இருந்தது, இதனை ஓ-இவ்வளவு தானோ? என்று என்றுமாழ்கி-என்றுபலவாறு சொல்லிப் புலம்பிச் சோகித்து, மன்னர் கோ-அரசர்க்கு அரசனான தருமன், மனக்கவலை

யுடன்—, அழிந்து-மூர்ச்சித்து, மணி தேரின்மிசை - அழகியதேரில், வீழ்ந்தான்—; (எ - று.) (279)

142.—இதுமுதல் மூன்றுகவிகள் - வீமன் புலம்புதல்.

சங்கலாரிடைவளைத்த சக்கரத்தை யுடைப்பதற்குத் தமியேனெய்தி, யங்குலாவரு மிரதத்தரசரையுந்தொலைத்துன்னையடுப்பான்வந்தேன், பங்கெலாமரகதமாம் பவளநிறப்பொருப்புதவுபைம்பொற் கொன்றைத், தொங்கலாற் கோறுவித்த சூழ்ச்சியை யின்றறிந்திலனே தோன்றலேநான்.

(இ - ள்.) தோன்றலே - குமாரனே! சங்கலார் - பகைவர்கள், இடை வளைத்த - (நீ) நடுவிலிருக்க (உன்னைச்) சூழ்ந்துகொண்ட, சக்கரத்தை-சக்கரவியூகத்தை, உடைப்பதற்கு—, தமியேன்-தனியனை யான், எய்தி - மனம்பொருந்தி, அங்கு உலா வரும் - அந்தச் சக்கரவியூகத்தில் உல்லாசமாகப்பொருந்திய, இரதத்து அரசரை உம்-தேர்வீரர்களையும், தொலைத்து-அழித்து, உன்னை அடுப்பான் வந்தேன்-உன்னைச் சமீபித்தற்கு வந்தேன்; பங்கு எலாம் மரகதம் ஆம் - (பார்வதீரூபமான) இடப்பக்கம் முழுவதும் பச்சை ரத்தின நிறமான, பவளம் நிறம் பொருப்பு - பவழநிறத்தையுடையமலை போன்ற சிவபிரான், உதவு - கொடுத்தருளிய, பை பொன் கொன்றை தொங்கலால் - பசிய பொன்னின்நிறமான கொன்றைப் பூமாலையைக்கொண்டு, கோறுவித்த - (உன்னைக்) கொல்வித்த, சூழ்ச்சியை-வஞ்சனையை, இன்று நான் அறிந்திலன்ஏ - இன்று நான் அறிந்திட்டேனில்லையோ! (எ - று.)

சங்கு - ஸங்க மென்னும் வடமொழி விகாரப்பட்டது; கூடுத லென்று பொருள். அதனையுடையவரல்லாதவர் - சங்கலார்; எனவே, பகைவராவர். தமியேன்-ஒப்பற்ற யான், ஒன்றியான யான். அர்த்தநாரீசுவரனாதலால், இவ்வாறு கூறினார். பொருப்பு-இங்கே, உவமவாகுபெயர். 'கோறுவித்த' என்பதில், று வி என்னும் இரண்டு பிறவினைவிகுதிகள் விகுதிமேல்விகுதியாய் அடுக்கி வந்தன வெனக் கொள்ளல் வேண்டும்: கொல் என்னும் பகுதி, முதல் நீண்டு இறுதிகெட்டது - சந்திவிகாரங்கள். பி - ம்: உனை வளைத்தசூழ்ச்சியை, கோறல்புரிசூழ்ச்சியை. (280)

143. மின்னுமலிடித்ததெனவீழ்த்தபொலந்தொடையாலும் விடையோனீந்த, பொன்னார்வெங்கதையாலுமல்லதபிமனையமரிற் பொரவல்லார்யார், தன்னுண்மைநிலைநிறுத்திச்சங்கமுழக்கியவீர சிங்கசாப, வென்னுனையிறந்துபடவின்னமுநானிவ்வுயிர்கொண் டிருக்கின்றேனே.

(இ - ள்.) மின்னுமல் இடித்தது என - மின்னவில்லாமலே இடியிடித்ததுபோல, வீழ்த்த - (எதிர்பாராதிருக்கக்) கொணர்ந்து போகட்ட, பொலம் தொடையால்உம்-பொன்னிறமான கொன்றைப் பூமாலையினாலும், விடையோன் ஈந்த - இடபத்தை (வாகனமுங் கொடியுமாக) உடைய சிவபிரான் கொடுத்த, பொன் ஆர் வெம் கதையால்உம்-பொன்மயமாய்நிறைந்த கொடிய கதாயுதத்தினாலும், அல்லது-(இவ்விரண்டினாலும்) அன்றி, அபிமனை -, அமரில்-யுத்தத்

தில், பொர வல்லார் - (தம்வலிமையால்) அழிக்கவல்லவர், யார் - யாவர் (உளர்)? [எவருமில்லை யென்றபடி]; தன் ஆண்மை நிலை நிறுத்தி - தனதுபராக்கிரமத்தை நிலைநிற்கச்செய்து, சங்கம் முழக்கிய - (அதற்குஅறிகுறியாகத் தனது) வெற்றிச்சங்கத்தை ஊதி ஒலிசெய்த, வீரம் சிங்க சாபம் - வீரத்தன்மையையுடைய சிங்கக் குட்டிபோன்ற, என் ஆனை - எனது யானை போன்ற இளங்குமரன், இறந்து பட - அழிந்து ஒழிய, இன்னம்உம் - அதன் பின்பும், நான்—, இ உயிர் கொண்டு இருக்கின்றேனே - (இறவாமல்) இவ்வுயிரை வைத்துக்கொண்டிருக்கிறேனே! (எ - று.)

இப்பாட்டை நகுலன் புலம்பலாகவும், அடுத்த பாட்டைச் சகதேவன் புலம்பலாகவும் கொள்ளினுமாம். மின்னல் காணப்படுதலும், இடி முழக்கங் கேட்கப்படுதலும் என்னும் இரண்டும் உண்மையில் ஒரு தொழிலின்பயனேயாயினும், மின்னற்காட்சி முன்னும் இடிக் கேள்வி பின்னுமாகி மின்னல் தோன்றுதல் இடிமுழக்கத்தை முன்னர்த்தெரிவிக்கிற அறிகுறியாகும் இயல்பைக் கருதுக. (281)

144. எடுத்தபடையனைத்தினுக்குமெதிரில்லை யெனக்கலைக ளெல்லாமுன்னை, யடுத்ததுகண்டையாநின்னாருயிர்க்குக்கரைந்து கரைந்தையுற்றேன்யான், விடுத்தபெருந்திருத்தாதைவிழிகளிப்பப் பகைவென்றுமீளாதென்னைக், கெடுத்தனையேபிழைத்தனையென் றினியொருவர்வந்துரைக்கக்கேளேன்கொல்லோ.

(இ - ள்.) எடுத்த - (கையில்) ஏந்திய, படை அனைத்தினுக்கு உம் - ஆயுதங்களெல்லாவற்றிலும், எதிர் இல்லை - (உனக்கு) ஒப்பு இல்லை, என - என்று சொல்லும்படி, கலைகள் எல்லாம் - எல்லாக் கல்விகளும், உன்னை அடுத்தது - உன்னைச் சேர்ந்து அமைந்ததை, கண்டு—, ஐயா—! யான்—, நின் ஆர் உயிர்க்கு - உனது அருமையான உயிரின்பொருட்டு, கரைந்து கரைந்து ஐயுற்றேன் - மிக மன முருகி (முன்னமே) சங்கித்திருந்தேன்; (அதற்கு ஏற்க), விடுத்த பெரு திரு தாதை - (பகைவெல்லுதற்கு உன்னை) அனுப்பின சிறந்த பெரிய தந்தையான தருமன், விழி களிப்ப - கண்களாற் கண்டு களிக்கும்படி, பகை வென்று மீளாது - பகைவர்களை வென்று திரும்பாமல், (இறந்து), என்னை கெடுத்தனை ஏ - என்னை அழித்து விட்டாயே; இனி—, பிழைத்தனை என்று ஒருவர் வந்து உரைக்க - (நீ) பிழைத்தாயென்று ஒருத்தர் வந்து சொல்ல, கேளேன் கொல் ஓ - கேட்கமாட்டேனோ? (எ - று.)

'அதி ஸ்நேஹ: பாபஶங்கீ' என்றபடி ஒருவனுக்கு ஒருத்தனிடம் மிக்க அன்பு இருந்தால் அவனுக்கு என்ன தீங்குநேருமோ என்ற பயசங்கையே முன்னர்த் தோன்றுவது இயல்பாதலாலும், ஒப்புயர்வில்லாமல் மிக்க இளமையிலேயே கல்விமுற்றும் நிரம்பியவர் திருஷ்டிதோஷம் பட்டாற்போல அற்பஆயுளுடையராய் விரைவில் இறத்தல் உலக வியல்பாதலாலும், இவ்வாறு கூறினான். கெடுத்தல் - துன்பமடையச்செய்தல். 'உன்னைக் கெடுத்தனையே' என்ற பாட்டும் பொருந்தும்: அப்பொழுது, கெடுத்தல் - போக்கிக் கொள்ளுதல். **பி-ம்:** பெருந்தாதையிருவிழி. கேட்பேன்கொல்லோ. ( )

145.—சூரியாஸ்தமன வருணனை.

என்றென்று வீமனுந்தன் னிளையோரு மழுதரற்ற விறந்தோன் வீர, நன்றென்று தளமிரண்டி னரபாலர் பலர்திரண்டு நவிலா நிற்ப, வன்றென்று மனமருளுற் றபிமனடுதலைக்குன்றை யடுத்து மேலைக், குன்றென்று தடுமாறிப் பின்னையும்போய்த் தனதுதடங் குன்று சேர்ந்தான்.

(இ - ள்.) என்று என்று - என்று பலவாறு சொல்லி, வீமனும்—, தன் இளையோர்உம் - அவன் தம்பிமாரான நகுலசகதேவரும், அழுது அரற்ற - புலம்பிக் கதறவும், 'இறந்தோன் வீரம் - மரித்த அபிமனது பராக்கிரமம், நன்று - சிறந்தது', என்று—, தளம் இரண்டில் - இருதிறத்துச் சேனைகளிலும், நரபாலர் பலர் திரண்டு - அரசர்கள் பலர் ஒருங்குகூடி, நவிலாநிற்ப - கூறிப் புகழ்ந்துநிற்கவும், (கேட்டு, அதனால்), என்று - சூரியன், அன்று - அப்பொழுது, மனம் மருள் உற்று-மனம்மயங்கி, அபிமன் அடு தலை குன்றை - அபிமன் கொன்றுவிழுத்திய பகைவர்தலைகளா லாகிய மலையை, மேலை குன்று என்று தடுமாறி அடுத்து - மேற்குத்திக்கிலுள்ள அஸ்தகிரி யென்று மாறுகக்கருதிச் சமீபித்து, (அது அங்ஙனமல்லாமையால்), பின்னைஉம் போய் - பின்பு அப்பால் விலகிச் சென்று, தனது தட குன்று சேர்ந்தான்.- தனக்கு உரிய பெரிய அஸ்தகிரியை அடைந்தான்; (எ - று.)

தலைக்குவியலை மலையென்று மயங்கியதாகக் கூறியதனால், **மயக்கவணி:** *வடநூலார்* **'பிராந்திமதலங்காரம்'** *என்பர். 'என்று' என்ற தெய்வப்பெயர் உயர்திணையாக, 'சேர்ந்தான்' என்று கூறப்பட்டது. 'அன்று என்று' என எடுத்து - அல்லதென்று அறிந்து என்று உரைத்து, 'அடுத்து' என்பதன் பின் கூட்டினால், 'சூரியன்' என்ற தோன்றாஎழுவாய் வருவிக்க.* *(283)*

வேறு.

146.—சஞ்சத்தகரைவென்ற அருச்சுனன் அங்குநின்றுமீளுதல்.

இந்நிலத் தவனி பால ரிவ்வகை யிரங்கி யேங்கத்
தென்னிலத் தெதிர்ந்து ளாரைத் தென்னிலந் தன்னி லேற்றி
யெந்நிலத் தினுந்தன் னாண்மைக் கெதிரிலா விசயன் றானு
மந்நிலத் தகன்று மீண்டா னுற்றவா றறிவு றாதான்.

(இ - ள்.) இ நிலத்து - இப்போர்க்களத்தினிடத்திலே, அவனிபாலர் - பூமியைக் காப்பவரான அரசர்கள், இ வகை இரங்கி ஏங்க - இவ்வாறு சோகித்துப் புலம்ப,— எ நிலத்தின்உம் - எவ்விடத்திலும், தன் ஆண்மைக்கு எதிர் இலா - தனது பராக்கிரமத்துக்கு எதிரில்லாத, விசயன்தான்உம் - அருச்சுனனும், தென் நிலத்து - தெற்குத்திக்கில், எதிர்ந்துளாரை - (தன்னை) எதிர்த்துச்சென்ற சஞ்சப்தகர்களை, தென் நிலந்தன்னில் ஏற்றி - தென் திசையிலுள்ள யமலோகத்தில் குடிபுகுத்தி [கொன்று], உற்ற ஆறு அறிவுறாதான் - (இங்கு) நடந்தசெய்கையை அறியாதவனாய், அ நிலத்து அகன்று மீண்டான் - அவ்விடத்தினின்று நீங்கித் திரும்பினான்; (எ - று.)—எதிர் - ஒப்புமாம். உற்றவாறு-அபிமந்யுமரணம். **பி-ம்:** **அறிகிலாதான்.**

இதுமுதல் இருபத்திரண்டு கவிகள் - பதின்மூன்றாம்போர்ச்சருக்கத்து முதற்கவி போன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள்.()

147.—ஸ்ரீக்ருஷ்ணன் அபிமன்யுமரணத்தை நினைந்து இந்திரனை நினைத்தல்.

போனதுவருவதெல்லாம்புரையறவுணருகிற்கு
மானதிர்கனகத்திண்டேர்வலவனுமதுரைமன்னன்
றேனதிர்கடுக்கைமாலையிடுசெயத்திரதன்றன்று
லானதுங்குறித்துவானோரரசையுங்குறிக்கலுற்றான்.

(இ - ள்.) போனது வருவது எல்லாம் - நடந்ததும் நடப்பதுமாகிய செய்கைகளெல்லாவற்றையும், புரை அற-குற்றமில்லாமல், உணருகிற்கும்-அறியவல்ல, மான் அதிர் கனகம் திண் தேர் வலவன் ஆம் - குதிரைகள் பூட்டிய ஆரவாரிக்கிற பொன்மயமான வலிய (அருச்சுனனது) தேரைச் செலுத்துகிற பாகனாகிய, மதுரைமன்னன் - வடமதுரைநகரத்து அரசனான கண்ணபிரான், (அப்போது), தேன் அதிர் கடுக்கை மாலை இடு செயத்திரதன் தன்னால் ஆனதுஉம் குறித்து - வண்டுகள் ஆரவாரிக்கிற கொன்றைப்பூமாலையைப் போகட்ட சயத்திரதனா லாகிய செய்கையையும் [அபிமந்யு மரணத்தையும்] திருவுள்ளத்தில் அறிந்து, வானோர் அரசைஉம் குறிக்கல் உற்றான் - தேவராசனான இந்திரனையும் நினைத்தான்;

இந்திரனை நினைத்தது, இவன்மகனான அருச்சுனனுக்குப்புத்திர சோகத்தால் பிராணாபாயமுண்டாகாதபடி தடுக்க உபாயஞ்செய்தற்கு என்பது, மேல்விளங்கும். போனது வருவது எல்லாம் - ஒருமைப்பன்மைமயக்கம்; முக்காலத்துவரலாற்றுள், முன்பு நடந்தவற்றையும் இனி நடப்பவற்றையும் அறிதலாகிய அருமையான தன்மையைக் கூறவே, அப்பொழுது நடக்கின்றவற்றை அறிதலாகிய எளியதன்மை தானே பெறப்படும். உணர்ச்சிக்குக் குறைவு-சந்தேக விபரீதங்கள். மது என்னும் அரசனால் சீர்திருத்தி ஆளப்பட்டதனாலும், கண்ணுக்கு இனியதாயிருத்தலாலும், மதுரா என்று பெயர்; அது ஈறுதிரிந்தது. இது, முத்திதரும் நகரம் ஏழனுள் ஒன்று; மற்றவை - அயோத்தி, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பன. (285)

148.—நான்குகவிகள் - மனத்துவந்தஇந்திரனை 'உன்மைந்தனைக் காவாய்' என்ன, அவன் முனிவனாகி ஊழாலிறந்தமைந்தனோடு இறப்பேனென்று நடிக்க, ஸ்ரீக்ருஷ்ணன் அருச்சுனனைக்கொண்டு தடுத்தலைக் கூறும்.

மதித்தலுமனத்திற்றோன்றும்வலாரியைக்குறிப்பினாலுன்
கதித்தடங்திண்டேர்மைந்தனுயிரைநீகாத்தியென்னத்
துதித்தவன்றொழுதுமாயச்சூழ்ச்சியான்முனியுமாகி
விதித்தலைப்பட்டகாதற்சுதனுடன்விழுவனென்றான்.

(இ-ள்.) மதித்தலும்-(கண்ணபிரான்) கருதியவளவிலே, மனத்தில் தோன்றும் - அவன்மனத்தில்வந்து காணப்பட்ட, வலாரியை - இந்திரனை(ப்பார்த்து), (கண்ணன்), குறிப்பினால் - இங்கிதத்தால்,

'உன் - உனது, கதி தட திண் தேர் மைந்தன் - வேகத்தையுடைய பெரிய வலிய தேரையுடைய புத்திரனான அருச்சுனனது, உயிரை—, நீ—, காத்தி - (புத்திரசோகத்தால் இறவாதபடி) பாதுகாப்பாய்', என்ன - என்றுசொல்ல, அவன்-அவ்விந்திரன், துதித்து - (கண்ணனைத்) தோத்திரஞ்செய்து, தொழுது — நமஸ்கரித்து, (அதற்கு இசைந்து), மாயம் சூழ்ச்சியால் முனிஉம் ஆகி - (வேண்டியவடிவத்தைப் பெறவல்ல) மாயையின் வலிமையால் (உடனே) ஒருமுனிவேடங்கொண்டவனுமாய், விதித்தலை பட்ட காதல் சுதனுடன் விழுவன் என்றான் - 'ஊழ்வினையின்வசப்பட்டு இறந்த அன்புள்ள (என்) மகனுடன் (யான் நெருப்பில்) விழுந்து இறப்பேன்' என்று கூறினான்; (எ-று.)

இந்திரன், ஒருபிராமணவடிவங்கொண்டு, சிறிதுபொழுதுக்கு முன் இறந்த தன்புதல்வன்பொருட்டுச் சோகித்து அம்மகனுடன் அக்கினிப்பிரவேசஞ்செய்து பிராணத்தியாகம்பண்ண நிச்சயித்தவன்போல வழியிடையிற் காணப்பட்டனனென்பதாம். இந்திரன் வந்ததும் அவனுக்குக் கண்ணன் கட்டளையிட்டதும் கண்ணபிரானுடன் தேரிலிருக்கிற அருச்சுனனுக்குத் தெரியாதபடி நிகழ்ந்தது தோன்ற, 'மனத்தில் தோன்றும்' என்றும், 'குறிப்பினால்' என்றுங் கூறினார். விதியில் தலைப்பட்ட என்றும், தலைவிதியில் பட்ட என்றும் உரைத்தற்கு இடமுண்டு. வலாரி-பலாரி யென்ற வடசொல் திரிந்தது. பி - ம்: விளிவேனென்னா. (286)

149. நெறியிடையிவர்கள்காணநெருப்பினைவளர்த்துத்தானும்
பொறியுறவீழுங்காலைப்புவனங்களனைத்துமீன்றோ
னறிவுடைவிசயற்கிந்தவந்தணன்றழலில்வீழா
தெறிகணைவரிவில்வீரவிலக்குநீயீண்டையென்றான்.

(இ - ள்.) நெறியிடை-(அருச்சுனனும் கண்ணனும் செல்லும்) வழிநடுவிலே, இவர்கள் காண - இவ்விருவரும் பார்க்க, நெருப்பினை வளர்த்து-அக்கினியை மூட்டிவிருத்திசெய்து,(அம்முனிவன்), தான் உம் பொறி உற வீழும் காலை - (இறந்த தன்குமாரனோடு) தானும் அவ்வக்கினியிலே பொருந்த விழவிருக்குமவ்வளவில்,—புவனங்கள் அனைத்துஉம் ஈன்றோன் - உலகங்களையெல்லாம் உண்டாக்கியருளியவனான கண்ணன், அறிவு உடை விசயற்கு - அறிவுள்ள அருச்சுனனை நோக்கி, 'எறி கணை வரி வில் வீர-எறிகிற அம்புகளையுடைய கட்டமைந்தவில்லில்வல்ல வீரனே! இந்த அந்தணன் தழலில் வீழாது-இந்த முனிவன் நெருப்பில் விழாதபடி, நீ—, ஈண்டை-இப்பொழுது இவ்விடத்தில், விலக்கு - தடுப்பாய்,' என்றான் - என்று கூறினான்; (எ - று.)

படைத்தல்தொழிற்கடவுளான பிரமனையும் படைத்தவனாதலாலும், பிரமரூபியாயிருந்து தொழில்செய்பவன் பகவானேயாதலாலும், 'புவனங்களனைத்துமீன்றோன்' எனப்பட்டான். இரட்டுறமொழிதலால், 'ஈண்டை' என்பதற்கு - காலமும் இடமுமாகிய இருபொருள் கொள்ளப்பட்டன. பொறி-அக்கினிக்கு, இலக்கணை: இனி, பொறிஉற-மனப்பூர்த்தியாக என்றலும் ஒன்று. (287)

150. என்றலும்விசயனெய்தியெந்தைநீயெரியில்வாளா
பொன்றலுய்ந்திருந்தாலின்னம்புதல்வரைப்பெறலுமாகு
நன்றலதவத்தின்மிக்கோய்நல்லுயிர்செகுத்தலென்றுக்
குன்றினும்வலியதோளான்முனிவனைத்தழுவிக்கொண்டான்.

(இ - ள்) என்றலும்-என்று (கண்ணன்) கூறியவளவிலே,— விசயன்-அருச்சுனன், எய்தி-(அம்முனிவனருகிற்)சென்று, 'எந்தை-சுவாமி! நீ—, வாளா - வீணாய், எரியில் பொன்றல் - நெருப்பில் (வீழ்ந்து) இறக்காதே; உய்ந்திருந்தால்-பிழைத்திருந்தால், இன்னம் புதல்வரை பெறல்உம் ஆகும்-இன்னமும் புத்திரரைப் பெறுதலுங் கூடும்; தவத்தில் மிக்கோய் - தவத்திற் சிறந்தவனே! நல் உயிர் செகுத்தல் - சிறந்த (உன்) உயிரை (நீயே) போக்கிக்கொள்ளுதல், நன்று அல - நல்லதன்று,' என்று - என்று (உபசாரமொழி) கூறி, குன்றின்உம் வலிய தோளால்-மலையினும் வலிமையையுடைய (தன்) கைகளால், முனிவனை தழுவிக்கொண்டான்-அம்முனிவனை அணைத்துக்கொண்டான்; (எ - று.)

உயிரைவைத்துக்கொண்டிருந்தால் பலபுத்திரரை இன்னும் பெறுதலாகும்: மறுமையில் மோட்சமடைவதற்கும் உபாயஞ்செய்யலாகுமென்று தடுத்தனனென்க. அயலானை 'எந்தை' என்றது, உயர்வுபற்றிவந்த மரபுவழுவமைதி. அதிக சமாதான முண்டாதற்கு, 'புதல்வர்' எனப் பன்மையாற் கூறினான். வீடுபெறுமுயிரென்பான், 'நல்லுயிர்' என்றான். (288)

151. வீதலும்பிழைத்தருனும்விதிவழியன்றிநம்மா
லாதலுமழிவுமுண்டோநின்னில்வேறறிஞருண்டோ
பூதலந்தன்னில்யாவர்புதல்வரோடிறந்தாரையா
சாதலிங்கியற்கையன்றென்றருளுடன்றடுத்தகாலை.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) 'வீதல்உம் - (ஒருபிராணி) இறத்தலும், பிழைத்தல் தான்உம்-பிழைத்திருத்தலும், விதி வழி அன்றி-ஊழ்வினையின்படி நடப்பனவே யல்லாமல், நம்மால்—,ஆதல்உம் அழிவுஉம் உண்டுஓ-உண்டாதலும் அழிதலும் உண்டோ? நின்னில் அறிஞர் வேறு உண்டுஓ-உன்னினும் அறிவுடையோர் வேறு உளரோ? பூதலம்தன்னில்-உலகத்தில், யாவர் புதல்வரோடு இறந்தார்-எவர்தாம் புத்திரரோடு இறந்தவர்? ஐயா—! இங்கு-இப்பொழுது, சாதல்-(நீ) இறத்தல், இயற்கை அன்று-உலகவியல்புக்கு ஒத்ததன்று,' என்று - என்றுஞ்சொல்லி, அருளுடன் - கருணையுடனே, தடுத்த காலை - (அம்முனிவனைத்)தடுத்தபொழுது,—(எ - று.)—''நின்மகனிறந்தாலென்சொன் மறுதொழி நீயுமென்றான்'' என அடுத்த கவியோடு முடியும்.

152.—அந்தமுனிவன் வெகுண்டு 'உன்மகனிறந்தால் நீ என்சொல்லை மறுதொழி' என்று அருச்சுனனிடம் கூறுதல்.

தன்மகனுடன்றீமூழ்கத்தவிர்ந்தநற்றவனுமீள
வின்மகனாகிநின்றவிசயனைவெகுண்டுநோக்கி
யென்மகனிறக்கவென்னையிருத்தினையாயினம்ம
நின்மகனிறந்தாலென்சொன்மறுதொழிநீயுமென்றான்.

(இ - ள்.) தன் மகனுடன் - (இறந்த) தன்புத்திரனுடனே, தீ மூழ்க - நெருப்பில் பாய்தலை, தவிர்ந்த - ஒழிந்த, நல் தவன்உம் - சிறந்ததவத்தையுடைய அம்முனிவனும், மீள - பின்பு, வில் மகன் ஆகி நின்ற விசயனை வெகுண்டு நோக்கி - வில்வீரனாய்நின்ற அருச்சுனனைக் கோபித்துப்பார்த்து, 'அம்ம-(யான்சொல்வதைக்) கேட்பாயாக; என் மகன் இறந்த என்னை இருத்தினை ஆயின் - எனக்குப் புத்திரன் மரிக்க என்னை (அவனுடன் இறவாதபடி) இருக்கச் செய்தாயாயின், நின் மகன் இறந்தால் நீஉம் என் சொல் மறுத்து ஒழி - உனக்குப்புத்திரன் இறந்தால் (அப்பொழுது) நீயும் எனது வார்த்தையை மறுக்காமலிருப்பாய்,' என்றான்-என்று கூறினான்; (எ-று.) —பி - ம்: தன்மகவுடன்.

தனது கருத்தை நிறைவேறவொட்டாதபடி தடுத்ததனால், வெகுளி கொண்டான். ஆயின் - ஆதலாலெனக. 'அம்ம'-முன்னிலையிடைச்சொல். (290)

153.—அருச்சுனன்உடன்பட்டு முனிவனைமீட்டுத் தேரேறிச்செல்லுகையில் பேரோசை செவிப்படல்.

ஐயெனத்தொழுதுவீரனந்தணனுயிரைமீட்டு
மையெனக்கரியமேனிவலவனுந்தானுந்திண்டே
ரொய்யெனச்செலுத்துகாலைவேலையினோதைதானும்
பொய்யெனப்பரந்தோரோதைசெவிகளைப்புதைத்ததன்றே.

(இ-ள்.) வீரன் - அருச்சுனன், ஐஎன - (அதற்கு) இசைந்து, தொழுது - வணங்கி, அந்தணன் உயிரை மீட்டு - அம்முனிவனது உயிரை இறவாதுகாத்து, மை என கரிய மேனி வலவன்உம் தான் உம் - மேகம்போலக் கறுத்த திருமேனியையுடைய சாரதியான கண்ணனும் தானுமாக, திண் தேர் - வலிய தேரை, ஒய்யென செலுத்து காலை - விரைவாகச் செலுத்திவருகிற பொழுதில்,— வேலையின் ஓதை தான்உம் பொய் என - கடலோசையும் (தனக்கு முன்) இல்லையென்னும்படி, ஓர் ஓதை-ஒருபேரொலி, பரந்து-பரவி, செவிகளை புதைத்தது - (அவர்கள்) காதுகளை நிறைத்தது ;(எ-று.) —கேட்கப்பட்டது என்பதாம். அன்றே - ஈற்றசை.

ஐயென-உடன்பாட்டுக் குறிப்பு. ஒய்யென-விரைவுக்குறிப்பு. ஓர் ஓதை-அபிமனது மரணத்துக்குத் தருமன்முதலியோர் புலம்பும் ஆரவாரம். (291)

154.—பாசறை சேருமுன் ஸ்ரீக்ருஷ்ணன் அருச்சுனனைக் கையில்ஆயுதமொன்றும் இல்லாதபடி செய்தல்.

பாசறையணுகுமுன்னம்பாசடைப்பதுமம்போல
மாசறவிளங்குமேனிவண்டுழாயலங்கன்மூர்த்தி
யாசறுவரிவிற்காளையங்கையுமருகுநீங்காத்
தேசுறுபடைகள்யாவுமொழித்தனன்றீமைதீர்ப்பான்.

(இ-ள்.) பாசு அடை பதுமம் போல - பசிய இலைகளையுடைய செந்தாமரை போல, மாசு அற விளங்கும் - குற்றமில்லாமல்

விளங்குகிற, மேனி - திருமேனியையும், வண் துழாய் அலங்கல் - அழகிய திருத்துழாய் மாலையையு முடைய, மூர்த்தி - கடவுளாகிய கண்ணன்,—பாசறை அணுகும் முன்னம் - படைவீட்டைச் சமீபித்தற்கு முன்னமே, ஆசு அறு வரி வில் காளை - குற்றமில்லாத கட்டமைந்த வில்லையுடைய வீரனான அருச்சுனனது, அம் கைஉம் - அழகிய கைகளையும், அருகு நீங்கா-சமீபத்தை விட்டுநீங்காத, தேசு உறு படைகள் யாஉம் - ஒளி மிக்க ஆயுதங்களெல்லாவற்றையும், தீமை தீர்ப்பான் - (அவற்றாலாகுந்) தீமையை ஒழிக்கும்பொருட்டு, ஒழித்தனன் - தனியே பிரித்துவிட்டான்; (எ-று.)

அருச்சுனன் பாசறையையணுகி அங்கு அபிமன்மரணத்தை அறியும் பொழுது கையில் ஏதேனும் ஆயுதமுடையனாயிருந்தால், புத்திரசோகத்தைப் பொறுக்கமாட்டாமல் அவ்வாயுதத்தைக் கொண்டு தன்னைக் கொலைசெய்து கொள்ளக் கூடுமென்று முன் சாக்கிரதையாகக் கண்ணன் அவன் கைகளில் எந்தஆயுதமுமில்லாதபடி ஒழித்தருளினனென்பதாம். எம்பெருமானது கரிய திருமேனி பசியதாமரையிலைகள் போலவும், அத்திருமேனியிலுள்ள கண் கை கால் வாய் உந்திஎன்னும் அவயவங்கள் இடையிடையிற்பூத்த செந்தாமரை மலர்கள்போலவும் இருத்தலால், 'பாசடைப்பதுமம்போல மாசற விளங்குமேனி' என்றார். பசுமை+அடை=பாசடை; பண்புப்பெயர் ஈறு போய் ஆதிநீண்டது. தீமைதீர்ப்பான்-தன்னைச் சரணமடைந்தவர்களது துன்பங்களையெல்லாம் தானே வலியத்தீர்த்தருளுபவனெனக் கண்ணனுக்கு அடைமொழியாகவுமாம். (292)

155.—'இந்தப்பேரொலி என்?' என்று அருச்சுனன் வினவ, ஸ்ரீக்ருஷ்ணன் கண்ணீர்வடித்தல்.

அங்கையார்த்தனைத்துளோருமரற்றுபேரரவங்கேட்டுக்
கங்கையம்பழனநாடன்கண்ணனைவணங்கிநோக்கி
யிங்கயலெழுந்தகோடம்யாதெனயாதுஞ்சொல்லான்
பங்கயநெடுங்கண்சேப்பநித்திலம்பரப்பினனே.

(இ - ள்.) அனைத்து உளோர்உம் - (பாசறையிலுள்ளவர்) எல்லோரும், அம் கை ஆர்த்து - அழகிய கைகளால் அடித்துக்கொண்டு, அரற்று - கதறுகிற, பேர் அரவம்-பெரிய ஆரவாரத்தை, கேட்டு—, கங்கை அம் பழனம் நாடன் - கங்காநதிபாய்கிற அழகிய கழனிகளைக்கொண்ட குருநாட்டையுடைய அருச்சுனன், கண்ணனை வணங்கி நோக்கி—, இங்கு அயல் எழுந்த கோடம் யாது என - 'இப்பொழுது சமீபத்திலுண்டான ஆரவாரம் என்ன?' என்று கேட்க, (அதற்குக் கண்ணன்), யாதுஉம் சொல்லான்-யாதொருமறுமொழியுங் கூறாமல், பங்கயம் நெடு கண் சேப்ப - தாமரைமலர் போன்ற நீண்ட (தன்) கண்கள் செந்நிறமடைய, நித்திலம் பரப்பினன் - முத்துப்போன்ற கண்ணீர்த்துளிகளை மிகுதியாகச் சொரிந்தான்; (எ-று.)

சேப்ப - செயவெனெச்சம்: செம்மையென்பதன் விகாரமாகிய 'சே' என்பதனடியாப்பிறந்தது. நித்திலம் - உவமவாகுபெயர்; வடிவுவமை. கோடம்=கோஷம்; வடமொழி. (293)

156.—இரண்டுகவிகள் - ஒருதொடர்: அருச்சுனன் மனம்நொந்து கேட்க, ஸ்ரீகிருஷ்ணன் நடந்ததைக் கூறியதைத் தெரிவிக்கும்.

வன்கணனிளகிச்செங்கண்மாலடிவீழ்ந்துமேன்மே
லென்கணுந்தோளுமார்புமிடனுறத்துடிக்கைமாறு
நின்கணுமருவிசோரநின்றனையின்றுபோரிற்
புன்கணுற்றவர்கண்மற்றென்றுணைவரோபுதல்வர்தாமோ.

(இ - ள்.) (அதனைக்கண்டு), வன்கணன்-வலிமையையுடைய அருச்சுனன், இளகி - மனம்நெகிழ்ந்து, செம் கண் மால் அடி வீழ்ந்து - சிவந்த திருக்கண்களையுடைய கண்ணபிரானது திருவடியில் விழுந்து நமஸ்கரித்து, 'என் - எனது, கண் உம்-கண்களும், தோள் உம்-தோள்களும், மார்பு உம்—, மேல் மேல்—, இடன் உற துடிக்கை மாறு-இடப்பக்கம் மிகுதியாகத் துடித்தலை நீங்கா; நின் கண் உம் அருவி சோர நின்றனை - உனது கண்களினின்றும் கண்ணீர்ப்பெருக்கு வழிய (நீ) நின்றாய்; இன்று - இன்றைக்கு, போரில்—, புன்கண் உற்றவர்கள் - துன்பமடைந்தவர்கள், என் துணைவர்ஓ - எனது உடன்பிறந்தவரோ? மற்று-அன்றி, புதல்வர் தாம்ஓ - புத்திரரேயோ? (எ - று.)—" என்று" என மேற்கவியோடு தொடரும்.

ஆடவருக்கு இடந்துடித்தல்-துர்நிமித்தம். இடையறாது மிக்குப் பெருகுதலைக் காட்டுதற்கு, 'அருவி' எனப்பட்டது. இன்னாரென்று அறியாமையின், 'புன்கணுற்றவர் துணைவரோ புதல்வர் தாமோ' எனப் பன்மையாற் கூறினான். புன்கண் - மரணம். பி - ம்: புதல்வரோ துணைவர்தாமோ. (294)

157. திருவுளத்துணராதில்லைசெப்புகென்றயர்வான்றன்னை
மருவுறத்தழுவித்திங்கண்மரபினுக்குரியசெல்வா
வெருவுறப்பகையைவென்றவீரனேமருகனென்றென்
றருவரைத்தோளினானுக்குற்றவாறனைத்துஞ்சொன்னான்.

(இ - ள்.) திரு உளத்து உணராது இல்லை - (உனது) சிறந்த மனத்தில் அறியப்படாதது (எதுவும்) இல்லை; செப்புக-(நிகழ்ந்த உண்மையைக்) கூறுவாயாக, என்று-என்றுசொல்லி, அயர்வான் தன்னை-தளர்பவனான அருச்சுனனை, (கண்ணன்), மருவுற தழுவி-சேர அணைத்துக்கொண்டு, 'திங்கள் மரபினுக்கு உரிய செல்வா - சந்திரவமிசத்துக்கு உரிய செல்வத்துக்கு உடையவனே! வெருவுற பகையை வென்ற வீரனே-அஞ்சும்படி பகைவர்களைச் சயித்த பராக்கிரமசாலியே! மருகன் -(இன்று அழிவடைந்தவன் என்) மருமகனான அபிமன்,' என்று என்று - என்று பலமுறைசொல்லி, அரு வரை தோளினானுக்கு உற்ற ஆறு அனைத்துஉம் - அழித்தற்கரிய மலைபோன்ற தோள்களையுடைய அபிமனுக்கு நேர்ந்த தன்மைமுழுவதும், சொன்னான் - (விவரமாக எடுத்துக்) கூறினான்;

'திருவுளத்து உணராதில்லை' என்றதனால், எம்பெருமானது சர்வஜ்ஞதை வெளியிடப்பட்டது. அயர்வானாகிய வன்கணனை எனக் கீழ்க்கவியோடு தொடர்ப்படுத்துக. 'அருவரைத்தோளினா

னுக்கு' என்பதற்கு அருச்சுனனுக்கு என்று உரைத்தால், 'சொன்னான்' என்பதோடு கூட்டவேண்டும். செப்புகென்று - தொகுத்தல். பி - ம்: வீரனென்மருகனென்றென்று. (295)

158.—அதுகேட்ட அருச்சுனன் புத்திரசோகத்தால் தேரினின்று தரையிலயர்ந்து வீழ்தல்.

மைத்துனனுரைத்தமாற்றமைத்துனன்செவிக்குத்தீக்கோ
லொத்திருபுறனும்வேவவுள்ளுறச்சுட்டபோது
புத்திரசோகமென்னுநஞ்சினாற்பொன்றினான்போ
லத்தடந்தேரினின்றுமவனிமேலயர்ந்துவீழ்ந்தான்.

(இ - ள்.) மைத்துனன் உரைத்த மாற்றம் - மனைவியினுடன் பிறந்தவனான கண்ணன் சொன்னவார்த்தை, மைத்துனன் செவிக்கு - அத்தைமகனான அருச்சுனனது காதுகளுக்கு, தீ கோல் ஒத்து-கொள்ளிக்கட்டை போன்று, இரு புறன்உம் வேவ-இரண்டு பக்கங்களிலும் வேகும்படி, உள் உற சுட்ட போது-மனத்திலே பொருந்தத் தபித்தபொழுது, (அருச்சுனன்), புத்திரசோகம் என்னும் நஞ்சினால் பொன்றினான்போல் - புத்திரன் இறந்ததனாலாகிய விசனமென்கிற விஷத்தினால் இறந்தவன்போல, அ தட தேரினின்றும் - அந்தப் பெரிய இரதத்தினின்றும், அவனிமேல்-பூமியில், அயர்ந்து வீழ்ந்தான் - மூர்ச்சித்து விழுந்திட்டான்; (எ - று.)

சேர்ந்தமாத்திரத்தில் வருத்துதலால், கொடுஞ்சொல்லுக்குத் தீக்கோலை உவமைகூறினார். செவி இரண்டாதலின், 'இருபுறன்' எனப்பட்டது. (296)

159.—ஸ்ரீக்ருஷ்ணன் சைத்தியோபசாரத்தால்தெளிவிக்க, தெளிந்த அருச்சுனன் அழுதலுறுதல்.

அயர்ந்தனன்விழுந்தகோவையச்சுதன்பரிவோடேந்திப்
புயந்தழீஇயெடுத்துவாசப்பூசுநீர்தெளித்துமாற்றப்
பயந்தருகோடிக்கூடபாகலந்தணிந்துமெல்லக்
கயந்தெளிவுற்றதென்னக்கண்மலர்ந்தழுதலுற்றான்.

(இ - ள்.) அயர்ந்தனன் விழுந்த - மூர்ச்சித்துக் கீழ்விழுந்த, கோவை - அருச்சுனராசனை, அச்சுதன் - கண்ணபிரான், பரிவோடு ஏந்தி - அன்போடு தாங்கி, புயம் தழீஇ எடுத்து - கைகளால் அணைத்து எடுத்து, வாசம் பூசு நீர் தெளித்து - பரிமளத்தையுடைய பூசுதற்குரிய பனிநீரை (அவன்மேல்) தெளித்து, மாற்ற-(அவனது மூர்ச்சையைப்) போக்க,—(அவ்வருச்சுனன்), பயம்தரு-அச்சத்தைத் தருகிற, கோடி-புதுமையான, கூடபாகலம் - கூடபாகலமென்னுந் தீராப்பெருநோய், தணிந்து - குறைய, கயம்-யானை, மெல்ல தெளிவு உற்றது என்ன-மெல்லத் தெளிவை யடைந்தாற் போல, கண் மலர்ந்து - கண்களை விழித்து [தெளிந்து], அழுதல் உற்றான்- புலம்பத் தொடங்கினான்; (எ - று.)—அதனை மேல் எட்டுக் கவிகளிற் காண்க.

தணிந்து - தணிய: செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிந்தது. பரிவோடு ஏந்தியதற்கு ஏற்ப, அச்சுத னென்றார். அச்சுதன்-தன்னைச் சரணமடைந்தவர்களை நழுவவிடாதவன.

பாகலமென்பது யானைநோயின்பெயரென்று தமிழ்நிகண்டுபிங் கலந்தைகளால் தெரிகிறது. அந்நோயின் வகைகளையும், அவற்றில் பரிகாரமில்லாத கூடபாகலமென்னுங் கொடியபகுப்பின் தன்மை யையும் அடியில் வருமாறு அறிக:—உருத்திரமூர்த்தியின் கோபத்தி னின்று உண்டான ஜ்வரம் யானையிடத்திற் காணும்பொழுது அதற் குப் பாகலமென்று பெயர்; இப்பெயர்—பாகஞ்செய்வது [வேவிப் பது] என்னும் பொருளுடையது; இது-சுத்த பாகலம், பாலபா கலம், பக்வலபாகலம், ம்ருதுக்ரஹபாகலம், குக்குடபாகலம், ஏகாங் கக்ரஹபாகலம், ப்ரஸுப்தபாகலம், *கூடபாகலம், புண்டரீக பாகலம் மகாபாகலம் எனப் பத்துவகைத்து; இது-பொருந்தாதவையும் அள வுக்குவிஞ்சினவையுமாகிய உணவின்வகைகளாலாவது, மிக்கசுமை யைச்சுமத்தல் கடத்தற்கரியதைக்கடத்தல் என்னுமிவற்றாலாவது, உள்ளிருக்கும் வாயு கெடுதல்பற்றி, உளதாவது; கூடம்-விரைவிற் கொல்லுதல்: இந்நோய், தொடக்கத்திலேயே யானையைக் கொல் லுதலால், **கூடபாகல**மெனப்படும்; கூடம் - கபடம்: அதனால் [வெளித்தெரியாமலே] கொல்லும் பாகலம், கூடபாகலம் என்றும்; கூடம் - வலை: அது மிருகங்களைப்பிடித்துக்கொல்லுதல்போல யானையைப் பற்றிக்கொல்லுவது கூடபாகலம் என்றும்; கூடம் - கூட்டம்: வாதம் பித்தம் சிலேஷ்மம் என்னும் மூன்றின் தோஷங் களுஞ் சேர்ந்து உண்டாக்கின பாகலம் கூடபாகலம் என்றுங் கார ணங் கூறுவர்; இந்நோய் வந்தமாத்திரத்தில் கை கால் கண் காது வால் என்னும் உறுப்புக்கள் தம்பித்து இடிவிழுந்தாற்போல யானை கீழ் விழுந்து இறந்துவிடும்: மிக விரைவில் இறந்துவிழுந்திடுதலால் இதன்குறிகளை அறிதல் அரிது; கட்டுத்தறியிற் கட்டியிருக்கை யிலும், நீர்ப்பருகுகையிலும், கதிபயிலுகையிலும், நீராடுகையிலும் வழிநடக்கையிலும், மற்றுஞ் சிலசமயங்களிலும் இந்நோய் திடுக் கென நேரிடும். இந்நோயால் இறந்துபட்ட யானையைச் சிற்றறி வினர் இலக்கணமின்மையால் விஷந்தீண்டியதென்பர்; மற்றுஞ் சில பேதையர் பொய்யறிவாற் பேய்பிடித்ததென்பர்: அவற்றிற்கு அறிகுறியும் சிகிச்சையும் உண்டு; இதற்கோ அவையில்லை. இது, **பாலகாப்யமென்னும்** வடமொழி யானை வைத்தியநூலிற் கண்டது. (இன்னும் இதைப்பற்றி எழுதத்தக்கவற்றை விரிவஞ்சி விடுத் தனம்.) அந்நூலில் 'பாம்பும் நெருப்பும் இடியும் போலக்கொடிய இந்நோய்க்கு எப்பொழுதும் அஞ்சவேண்டும்' என்று கூறியுள்ள தற்கு ஏற்ப, இங்கே 'பயந் தரு' என்ற அடைமொழி கொடுக்கப் பட்டது. இது ஆச்சரியகரமானநோயென்றதற்கு, 'கோடி' என்ற அடைமொழி கொடுத்தார்; இதுவரையிற் கூறியதனால், கூடபாக லந்தணிந்து மெல்லக்கயந் தெளிவுற்றதுஎன்றது, **இல்பொருளுவமை யாம்**. இதனால், அருச்சுனனது மூர்ச்சை மரணத்தோடு ஒத்திருந்த தெனப் புலப்படும். கயம்=கஜம். **பி-ம்:** மாற்றிப். கோடிகூடப்பா கலம், கொடியகூடப்பாகலம். (297)

---

* மாலதீமாதவமென்னும் வடமொழிநாடகத்தில், 'அதிதீவிர மான கூடபாகலமென்னும் த்ரிதோஷஸந்நிபாதஜ்வரம் விரைவில் யானையைக் கொல்லுதல்போல, தடையில்லாத மன்மதன் சுகுமார சரீரமுடைய மாதவனை மிகவருத்துகிறான்' எனக் கூறியுள்ளது.

160.—இதுமுதல் எட்டுக்கவிகள்-அருச்சுனன்புலம்புவதைத்தெரிவிக்கும்.

போரினிற்றுணைவரோடும்புயங்ககேதனனைவென்று
பாரெனக்களித்திநீயேயென்றுளம்பரிவுகூர்ந்தே
னேருனக்கொருவரில்லாய்நீகளம்பட்டாயாகி
லாரினிச்செகுக்கவல்லாரைவருக்குரியகோவே.

ஒன்பது கவிகள் - ஒருதொடர்.

(இ-ள்.) உனக்கு நேர் ஒருவர் இல்லாய் - உனக்கு ஒப்பு ஒருத்தரும் இல்லாதவனே! ஐவருக்கு உரிய கோவே - (எங்கள்) ஐந்து பேருக்கும் உரிய அரசனே! போரினில்-யுத்தத்தில், துணைவரோடு உம்-தம்பிமார்களுடனே, புயங்ககேதனனை - பாம்புக்கொடியனான துரியோதனனை, நீயே—, வென்று - சயித்து, எனக்கு—, பார் அளித்தி-இராச்சியங்கொடுப்பாய், என்று—, உளம் பரிவு கூர்ந்தேன் - மனத்தில் ஆசைமிகுந்திருந்தேன்; நீ—, களம் - போர்க்களத்தில், பட்டாய் ஆகில் - இறந்தாயானால், இனி செகுக்க வல்லார் ஆர் - இனிமேல் (பகைவரை) அழிக்கவல்லவர் எவர்? (எ-று.) ()

161. சக்கரம்பிளந்தவாறுந்தரியலருடைந்தவாறுந்
துக்கரமானகொன்றைத்தொடையலால்வளைத்தவாறு
மெய்க்கரந்துணிந்தவாறுமீண்டுருத்தடர்த்தவாறு
முக்கரமுடனென்முன்னேயோடிவந்துரைசெய்யாயோ.

(இ-ள்.) சக்கரம் பிளந்த ஆறுஉம்-சக்கரவியூகம்(உன்னால்) பிளப்புண்ட விதத்தையும், தரியலர் உடைந்த ஆறுஉம்-(அதில்) பகைவர்கள் அழிந்தவிதத்தையும், துக்கரம் ஆன-செய்யவொண்ணாத [தெய்வத்தன்மையுள்ள], கொன்றை தொடையலால்-கொன்றைப்பூமாலையால், வளைத்த ஆறுஉம்-(உன்னைச் சயத்திரதன்) சூழ்ந்த விதத்தையும், மெய் கரம் துணிந்த ஆறுஉம்-(உன்) உடம்பில் ஒருகை(துரோணனால்)துணிபட்ட விதத்தையும்,மீண்டு-அதன் பின்பும், உருத்து அடர்த்த ஆறுஉம்-(நீ)கோபித்துப் போர்செய்த விதத்தையும், உக்கரமுடன்—வீரத்தோடு, என் முன்னே ஓடி வந்து உரைசெய்யாய்ஓ - எனதுமுன்னே (நீ) வேகமாகவந்து சொல்ல மாட்டாயோ? (எ-று.)

சக்கரம்பிளத்தல் முதல் மீண்டுருத்தடர்த்த விறுதியாக உள்ள விவரங்களையெல்லாம், கீழ்க் கண்ணன் கூறியதனால் அருச்சுனன் அறிந்தானென்க; கீழ் 157-ஆங் கவியை நோக்குக. துக்கரம் - துஷ்கரம்: வடசொல். உக்கரம் = உக்ரம்: இது, உக்கிரம் எனப் பெரும்பாலும்வரும். பி-ம்: உக்கிரம். (299)

162. பன்னகவரசன்பெற்றபாவைமாமதலைதன்னை
முன்னுறமுனையிற்றோற்றேன்மூர்க்கனேன்முடியாதுண்டோ
வுன்னையுமின்றுதோற்றேனுன்னுடன்றொடர்ந்துவாரா
தின்னமுமிருந்தனையாவென்னுயிர்க்கிறுதியுண்டோ.

(இ-ள்.) பன்னக அரசன்பெற்ற-சர்ப்பராசன் பெற்ற, பாவை-பெண்ணாகிய உலூபியினது, மா மதலைதன்னை-சிறந்தகுமாரனான இராவானை, முன் உற-முற்பட, முனையில் - போரில், தோற்றேன் -

இழந்தேன்; உன்னையும்—, இன்று - இன்றைக்கு, தோற்றேன் - இழந்தேன்; ஐயா—! இன்னம்உம் - நீ இறந்தபின்பும், உன்னுடன் தொடர்ந்து வாராது - உன்னுடன் கூட வந்திடாமல், இருந்தது - (என்உயிர் என்உடம்பில்) இருந்தது! என் உயிர்க்கு இறுதி உண்டுஓ - என்னுயிருக்கும் அழிவு உள்ளதோ? மூர்க்கனேன் - மூர்க்கனாகிய யான், முடியாது - முடிக்காததொரு தொழிலும், உண்டோ—? (எ - று.)

மூர்க்கமாவது-கொண்டதுவிடாமை; என்னசங்கடம் நேர்ந்த விடத்தும் தான் உயிரைவிடாமையால், தன்னை 'மூர்க்கனேன்' என்று பழிக்கிறான். நிரந்தரமானதும், பரிகாரமில்லாததுமான இப்படிப்பட்ட புத்திரசோக பரம்பரையை எளிதில் பொறுத்த தனக்கு வேறு பொறுக்கவொண்ணாத துயரம் எதுவுமில்லையென்பான், 'மூர்க்கனேன் முடியாதுண்டோ' என்றான். பந்நகம் என்ற வடசொல்-பத் நகம் என்று பிரிந்து கால்களால் நடவாததென்றும், பந்நம் கம் என்றுபிரிந்து வளைந்து செல்வதென்றும் பொருள்படும். பாவை - சித்திரப்பதுமைபோல் அழகியவள்; அல்லது, கண்மணிப் பாவைபோல் அருமையானவள்; உவமையாகுபெயர்.

தீர்த்தயாத்திரையாகப்புறப்பட்ட அருச்சுனன் கங்காநதியில் நீராடுகையில், அங்கு நீர்விளையாடவந்த நாககன்னிகைகளுள் உலூபியென்பவள் அருச்சுனனைக் கண்டு காமுற்று அவனைப் பிலத்துவாரவழியாய்த் தன் உலகத்துக்கு அழைத்துச்சென்று அவனை மணஞ்செய்துகொண்டு இராவானென்னும் புத்திரனைப் பெற்றாள். இவனைத் துரியோதனன் வஞ்சனையாகவந்து வேண்டி உடன்படுத்தித் தனக்குப்போரில் வெற்றியுண்டாகும்பொருட்டு அமாவாசையில் துர்க்கைக்குப்பலிகொடுப்பதென்றிருக்க, கண்ணபிரான் அதனையறிந்து முந்தினநாளாகிய சதுர்த்தசியன்றைக்கே தனது திவ்விய சக்தியால் அமாவாசையை வருவித்து இவ்விராவானையே தந்திரமாய் இந்தப்பக்கத்துக்குப் பலியாகுமாறு உடன்படுத்த, அதற்கு இசைந்து "கடியநேர்பலிதந்தாலுங் காயமர்சிலநாட்கண்டு, முடிய நேரலர்வெம்போரின் முடிவெனக் கருளுக" என்று இவன் கண்ணனை வேண்டி வரம்பெற்று அன்றையிரவில் தானே தன்உறுப்பனைத்தையுங் கொய்து யுத்ததேவதைக்குப் பலிகொடுத்ததுமன்றி, கண்ணனருளிய வரத்தின்படி பலவடிவங்கொண்டு போர்செய்து வென்று முடிவில் எட்டாம்போர்நாளில் இறந்தனன். (300)

163. கதிரவனுதிக்குமுன்னேகண்டுயிலுணர்த்தியென்னை
யதிரமர்க்கோலங்கொள்வானறிவுறுத்துரைக்கவல்லாய்
முதிரமர்முருக்கிமீண்டேனித்தனைப்போதுமுன்போ
லெதிர்வரக்காண்கிலேனிங்கில்லையோவென்செய்தாயோ.

(இ - ள்.) கதிரவன் உதிக்கும் முன்னே - சூரியனுதிப்பதற்கு முன்னமே, என்னை—, கண் துயில் உணர்த்தி - தூக்கத்தினின்று எழுப்பி, அதிர் அமர் கோலம் கொள்வான்-ஆரவாரிக்கிற போருக்கு உரிய அலங்காரத்தைச்செய்துகொள்ளும்படி, அறிவுறுத்து உரைக்க வல்லாய் - தெரிவித்துக்கூறுதல் வல்லவனே! இதனை போதுஉம் -

இவ்வளவுபொழுதும், முதிர் அமர் முருக்கி-மிக்க போரைச்செய்து, மீண்டேன்-திரும்பிவந்தேன்; முன்போல்-வழக்கம்போல, எதிர் வர காண்கிலேன் - (நீ இன்றைக்கு) எதிரில் வரக்காண்கிறேனில்லை; (நீ), இங்கு இல்லையோ—? என் செய்தாயோ—? (எ - று.) (301)

164. தந்திரமியாவுமின்றித்தனித்துநீதானேபோர்செய்
தந்தரமமையுமென்றிவ்வகலிடந்துறந்தவையா
மைந்துடனம்மைக்காணமகன்மகன்வருகின்றானென்
றிந்திரனேவவுன்னையிமையவரெதிர்கொண்டாரோ.

(இ - ள்.) தந்திரம் யாஉம் இன்றி - சேனைகளெவையுந் துணையில்லாமல், நீ தானே தனித்து போர் செய்து—, அந்தரம் அமையும் என்று - சுவர்க்கலோகமே (உன்சிறப்புக்கு) ஏற்ற இடமாகுமென்று கருதி, இ அகல் இடம் துறந்த - பரந்த இந்தப்பூமியினிடத்தை நீங்கின, ஐயா—! 'மைந்துடன் - களிப்போடு, நம்மை காண - நம்மைப்பார்ப்பதற்கு, மகன் மகன் - (நமது) பௌத்திரன், வருகின்றான்—,' என்று - என்று எண்ணி, இந்திரன்—, ஏவ - செலுத்த, இமையவர்-தேவர்கள், உன்னை—, எதிர்கொண்டாரோ - எதிரில் வந்து அழைத்துப்போனார்களோ? (எ-று.)—அந்தரம் அமையுமென்றிவ்வகலிடந் துறந்தவையா - தற்குறிப்பேற்றவணி. ()

165. தேரழிந்தெடுத்தவில்லுஞ்செங்கதிர்வாளுமின்றி
யோருதவியும்பெறாமலொழிந்துயிரழிந்தமைந்தா
போரமருடற்றிநீயப்பொன்னகரடைந்தபோதுன்
பேரமராண்மைகேட்டுப்பிதாமகனென்சொன்னானே.

(இ - ள்.) தேர் அழிந்து—, எடுத்த-(கையில்) பிடித்த, வில்லும்—, செம் கதிர்-(பகைவ ரிரத்தந் தோய்தலாற்) சிவந்த ஒளியையுடைய, வாளும்—, இன்றி - இல்லாமல், ஓர் உதவிஉம் பெறாமல் ஒழிந்து—, உயிர் அழிந்த - இறந்த, மைந்தா-மகனே! நீ—, போர் அமர் உடற்றி - சிறந்த போரைச்செய்து, (பின்பு), அ பொன் நகர் அடைந்தபோது - பொன்மயமான அந்த அமராவதிபட்டணத்தை யடைந்தபொழுது, (அங்கு), பிதாமகன் - பாட்டனான இந்திரன், உன் பேர் அமர் ஆண்மை கேட்டு - உனது பெரும்போர் வல்லமையைக் கேட்டறிந்து, (உன்னைக் குறித்து), என் சொன்னானோ - ? (எ - று.)—பேர் அமர் ஆண்மை - பிரசித்திபெற்ற பராக்கிரமமுமாம். (303)

166. மற்புயக்குன்றிலொன்றுவாளுடன்வீழப்பின்னும்
பொற்புறப்பொருதநீயப்பொன்னுலகடைந்தகாலை
யற்புதப்படைகள்வல்லாயபிமனேயமரருருங்
கற்பகக்காவும்வானிற்கங்கையுங்காட்டினாரோ.

(இ - ள்.) அற்புதம் படைகள் வல்லாய் - ஆச்சரியகரமான ஆயுதங்களில் வல்லவனே! அபிமனே—! மல் - வலிமையையுடைய, புயம் குன்றில்-மலைகள்போன்ற தோள்களில், ஒன்று—, வாளுடன்-(ஏந்திய) வாளாயுதத்துடனே, வீழ-(துணிந்து) விழவும், பின்உம்-அதன்பின்பும், பொற்புஉற - அழகு மிக, பொருத - போர்செய்த,

நீ—, அப்பொன் உலகு அடைந்த காலே-பொன்மயமான அந்தத்தேவ லோகத்தைச் சேர்ந்தபொழுது, (அங்கு), அமரர் - தேவர்கள், ஊர் உம் - (தங்களுடைய) அமராவதிநகரத்தையும், கற்பகம் காஉம்-கற்பகவிருட்சங்களையுடைய (நந்தனவனமென்னும்) பூஞ்சோலையையும், வானில் கங்கைஉம் - ஆகாயகங்காநதியையும், காட்டினார்ஓ - (உனக்குக் காண்பித்தார்களோ? (எ - று.)

புதியராய்வந்தாரை அழைத்துக்கொண்டுபோய் அவர்க்குத் தமது நகரம் முதலிய சிறப்புக்களைக் காண்பித்தல், உலகவியல்பு. கல்பகம் என்பதற்கு - (தன்னிடம் வந்து நினைத்த பொருள்களை அவரவர்க்குக்) கல்பிப்பது [உண்டாக்குவது] என்று காரணப் பொருள்; இது-சந்தாநம், மந்தாரம், பாரிஜாதம், கல்பகம், ஹரிசந்தநம் என்ற ஐந்துதேவதருக்களுள் ஒன்றற்கு உரிய பேராதலன்றி, ஐந்துக்கும் பொதுப்பெயராகவும் வழங்கும். தேவ கங்கைக்கு 'மந்தாகிநீ' என்று பெயர்; (பாதாளகங்கை - 'போகவதீ' எனப்படும்.) (304)

167. வளைத்தவின் னிமிரா வண்ணம் வாளியான் மாவுந் தேருந்
துளைத்துமுன் காலா ளாகத் துரோணனைத் துரந்த வீரா
திளைத்தவெஞ் சமரி னொந்து தனஞ்சயன் சிறுவன் மேனி
யிளைத்ததென் றிந்தி ராணி யின்னமு தூட்டி னாளோ.

(இ - ள்) வளைத்த வில் நிமிரா வண்ணம் - வணக்கின வில் நிமிராதபடி, வாளியால் - அம்புகளை எய்ததனால், மாஉம் தேர்உம் துளைத்து-குதிரைகளையும் தேரையும் பிளந்து, காலாள் ஆக-பதாதியாய்ச் செல்லும்படி, முன் - முதலில், துரோணனை—, துரந்த - ஓட்டிய, வீரா - வீரனே! 'தனஞ்சயன் சிறுவன் மேனி - அருச்சுனன் மகனது உடம்பு, திளைத்த - இடைவிடாது செய்த, வெம் சமரில் - கொடிய போரில், நொந்து-சிரமப்பட்டு, இளைத்தது-மெலிவடைந்துவிட்டது, என்று என்றுஎண்ணி, இந்திராணி - இந்திரன் மனைவி, (தனதுபௌத்திரனாகிய உனக்கு), இன் அமுது ஊட்டினாள்ஓ - இனிய அமிருதத்தை உண்பித்தாளோ? (எ - று.) (305)

வேறு.

168.—இங்ஙன் புலம்புகையில் வியாசமுனிவன் வருதல்.

என்னமக வான்மகனி ரங்கினன ரற்ற
முன்னவர்கள் பின்னவர்கண் முறைமுறைபு லம்பச்
சென்னிகரம் வைத்தனைவ ருங்கலுழி செய்ய
வன்னபொழு தாரணம ளித்தமுனி வந்தான்.

(இ - ள்.) என்ன - என்று, மகவான் மகன் - இந்திரகுமாரனை அருச்சுனன், இரங்கினன் அரற்ற - சோகித்துக் கதற,—முன்னவர்கள் - (அவனது) முன்பிறந்தவரான தருமனும் வீமனும், பின்னவர்கள்-பின்பிறந்தவரான நகுலசகதேவர்களும், முறை முறை புலம்ப-மாறிமாறி [அடுத்தடுத்து] அழ,— அனைவர்உம் - எல்லோரும், சென்னி கரம் வைத்து-தலைமேற்கைகளைவைத்துக்கொண்டு, கலுழி செய்ய - கண்ணீர்வெள்ளஞ்சொரிதலைச் செய்ய, அன்னபொழுது-

அந்தச்சமயத்தில், ஆரணம் அளித்த முனி - வேதங்களை அருளிய வியாசமாமுனிவன், வந்தான் - (அங்கு) எழுந்தருளினன்; (எ - று.)

சென்னி கரம் வைத்தல் - சோகக்குறிப்பு. வரம்பின்றியிருந்த வேதங்களைத் துவாபரயுகமுடிவில் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காகப்பகுத்து ஒழுங்குபடுத்தி அக்காரணத்தால் வ்யாஸனென்று பெயர் பெற்றவனென்பார், 'ஆரணமளித்தமுனி' என்றார்.

இதுமுதல் பதினெட்டுக்கவிகள் - பெரும்பாலும் நான்காஞ் சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளங்காய்ச்சீர்களுமாகிய **கலிவிருத்தங்கள்.** (306)

***169.*—வந்தமுனி கண்ணீர்போக்கி பலஉபதேசமொழிகூறத் தொடங்கல்.**

வந்தமுனிமற்றுமுடன்வருமுனிவரோடு
மந்தநரபாலர்கண்ணரும்புனறுடைத்துக்
கந்தனிகர்மைந்தனெடுகையறநினைக்கும்
பந்தனையறுக்குமொழிபற்பலபகர்ந்தான்.

(இ - ள்.) வந்த முனி-எழுந்தருளின வேதவியாசபகவான்,— மற்றும் உடன் வரும் முனிவரோடுஉம்-இன்னுங்கூடவந்த முனிவர்களுடனே,—அந்த நரபாலர் கண் அரும்(பு) புனல் துடைத்து-(தருமன் முதலிய) அந்த அரசர்களது கண்களில்தோன்றுகிற நீரைப் போக்கி,—கந்தன் நிகர் மைந்தனொடு - முருகக்கடவுளை யொத்த குமாரனை அடிமனுடனே, கை அற - (தாமும்) செயலற்றிருக்க, நினைக்கும் - (அப்பாண்டவர்கள்) எண்ணுகிற, பந்தனை - (அவர்களது) பாசபந்தத்தை [அன்பின் தொடக்கை], அறுக்கும்-ஒழிக்கும் படியான, பல் பல மொழி - அநேக உபதேசவார்த்தைகளை, பகர்ந்தான் - கூறுபவனானான்; (எ - று.)—அதனை, அடுத்த மூன்றுகவிகளிற் காண்க.

கையாறு - உயிர்ப்புமின்றி வினையொழிந்து அயர்தல். அரும்பு புனலென்பது, அரும்புனலென விகாரப்பட்டது: இனி, அரும்புனல் எனப் பண்புத்தொகையாக எடுத்து - அரிய [இதுவரையில் இல்லாத] நீர் எனினுமாம். (307)

***170.*—நான்குகவிகள் ஒரு தொடர்: - வியாசமுனிவனுபதேசித்துப் போதலைத் தெரிக்கும்.**

தாயரொடுதந்தையர்கடாரமொடுதனயோர்
தூயதுணைவோர்களொடுசுற்றமெனநின்றோர்
மாயையெனும்வல்லபமயக்குறுமயக்கா
லாயவுறவல்லதவரார்முடிவில்யாமார்.

(இ - ள்.) தாயரொடு - தாய்மார்களும், தந்தையர்கள் - தகப்பன்மார்களும், தாரமொடு - மனைவியரும், தனயோர் - புதல்வரும், தூய - (மனத்தில்) சுத்தியையுடைய, துணைவோர்களொடு - உடன்பிறந்தவர்களும், சுற்றம் - (மற்றும்) பந்துவர்க்கமும், என-என்று, நின்றோர்-நின்றவர்களெல்லோரும், மாயை எனும் வல்லபம்-மாயையென்கிற (பகவானுடைய) சக்தி, மயக்குறும்-(மனத்தை) மயங்கச்

செய்தலாலாகிற, மயக்கால்-மயக்கத்தினால், ஆய-உண்டான, உறவு அல்லது-சம்பந்தமே யல்லாமல், (உண்மையை நோக்குமிடத்து), முடிவில்-முடிவிலே, அவர் யார்-அந்தத் தாய்மார் முதலியஉறவினர் யார்? யாம்ஆர்? - [அவருக்கும் நமக்கும் யாதோருறவுமில்லை யென்றபடி].

கண்ணன் அருச்சுனனுக்குக் கீதை உபதேசிக்கையில், "மாயை யென்றொருத்திதன்பால் மனமெனு மைந்தன் தோன்றித், தூயநல் லறிவன் றன்னைத் தோற்றமின் றாக்கி வைத்தான், தாயொடு தந்தை மக்கள் தார மென் றிவர்பால் வைத்த, நேயமு மவன்றனாலே நிகழ்ந்த தோர்நினைவு கண்டாய்" என்றும், "பந்தம துணர்ந்து நேரே பார்க்குங்காற் பகையார் நண்பார்" என்றும் அருளிச்செய் தமை காண்க. மனம் மாயைக்கு வசப்பட்டபோது பொருள்களின் நிலையை உள்ளபடியறியுந் தத்துவஞானம் தோன்றுகிறதில்லை; ஆகவே, நிலையுள்ளபொருள்களை நிலையில்லாதனவென்றும் நிலை யில்லாதபொருள்களை நிலையுள்ளனவென்றும் மாறுபட அறியும் விபரீதஞானம் தலையெடுக்கும்; அதனாலேயே, நித்தியமான ஆத்து மாவுக்கு யாதொரு சம்பந்தமும் படாமல் அநித்தியமான தேகத்தையே பற்றிய தாய் முதலியோரிடத்துச் சுற்றத்தவரென்ற பொய்யபிமானம்உண்டாகி நிலைநிற்கின்றது; அத்திரிபுணர்ச்சியை ஒழித்து மெய்யுணர்ச்சிகொண்டு நோக்குமிடத்து, யாவும் மாயா காரியமென்றஉண்மை புலப்படு மென்பதாம். தாய்வழியிலும் தந்தைவழியிலும், பெரியதாய் சிறியதாய் பெரியப்பன் சிற்றப்பன் எனத் தாய்தந்தையர் பலராவர். சுற்றம் - (உரிய காலங்களில் வந்து) சுற்றிநிற்பதெனக் காரணப்பெயர்; அம்-கர்த்தாப்பொருள் விகுதி. மயக்கு - மயங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற் பெயர். உறவு - உறுதல்; சேர்க்கை; இத்தொழிற்பெயர் - உற வினர்க்கு ஆகுபெயராம். முதலடி - முற்றுமோனை. பி - ம்: முடி வில்யார்யார். (308)

171. வந்துபிறவாதமனையில்லைமுலைமாறித்
தந்துபரியாமலொழிதாயர்களுமில்லை
புந்தியுணர்வற்றவர்புலம்புறுவதல்லா
லிந்தவுலகத்தறிஞர்யாதினுமயங்கார்.

(இ - ள்.) (ஓர்உயிர்), வந்து பிறவாத மனை - (உடம் பெடுத்து) வந்து பிறக்காத வீடுகள், இல்லை—; (அவ்வுயிர்க்கு), முலை மாறி தந்து - முலைப்பாலை மாறிமாறிக் கொடுத்து, பரியாமல்- காப்பாற்றாமல், ஒழி - நீங்குகிற, தாயர்கள்உம் - தாய்மாரும், இல்லை—; (ஆதலால், அவ்வுயிர் நீங்கியவிடத்து), புந்தி உணர்வு அற்றவர் புலம்புறுவது அல்லால்-மனத்தில் தத்துவஞானமில்லாத வர்கள் அழுதலேயல்லாமல், இந்த உலகத்து - இவ்வுலகத்தில், அறிஞர்-மெய்யுணர்வுடையோர், யாதின்உம் மயங்கார்-எந்தவிதச் சங்கடம் நேர்கையிலுங் கலங்கமாட்டார்கள்; (எ - று.)

அநாதியான கருமத்துக்கு வசப்பட்டுப் பலபலவீடுகளில் பற்பலர் கருப்பத்திற் பிறந்தும் பிறக்கவும் இருக்கிற ஓருயிரை, தனதுமக னென்றும் பிறவாறும் உறவுமுறைபாராட்டி அன்புகொண்டு, அது

விதிவசத்தால் நீங்கிய காலத்திற் சோகிப்பது, அறிவுடையோர்க்கு உரியதன்று என்பதாம். மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கையும் அபேதமாகக்கூறுவது கவிசமய மாதலால், இங்கே மனம் 'புந்தி' எனப்பட்டது. *(309)*

172. உம்மையினும்யாருறவுணர்ந்திலமினிப்போம்
அம்மையினும்யாவருறவாவரெனவறியேம்
இம்மையினிகழ்ந்தவுறவித்தனையிரங்கன்
மும்மையுமுணர்ந்துவருமூதறிவினீரே.

(இ - ள்.) உம்மையின்உம் - கழிந்தபிறப்பிலும், யார் உறவு - (நமக்கு) எவர் சுற்றத்தவராயிருந்தவர்? (என்று), உணர்ந்திலம் - (நாம்) அறிந்தோமில்லை: இனி போம் - இனிமேல் வரப்போகிற, அம்மையின்உம் - மறுபிறப்பிலும், யாவர் உறவு ஆவர் என - (நமக்கு) எவர் சுற்றத்தவராகுபவர் என்று, அறியேம் - (நாம்) அறியமாட்டோம்; (அங்ஙனமிருக்க), இம்மையில் நிகழ்ந்த உறவு இத்தனை - இப்பிறப்பில்மாத்திரமுள்ள சுற்றமாகிய இவ்வளவுக்கு, இரங்கல் - வருந்துதல்,— மும்மைஉம் உணர்ந்து வரும் - மூன்று காலத்துச் செய்கைகளையும் அறிந்துவருகிற, மூது அறிவின் - பழமையான [சிறந்த] அறிவுக்கு (உரிய), நீர்ஏ - தன்மையாகுமோ? [ஆகாது என்றபடி]; (எ-று.)

உலகத்தில் உயிருக்கு அநாதியான கருமத்தின் தொடக்கத்தால் அளவிறந்த பிறப்புக்கள் உள; அவற்றில் ஒவ்வொருபிறப்பிலும் உறவினர் பலர் அமைதல் இயல்பே: அவற்றில் இப்பிறப்பில் உறவினராகவுள்ளவரைமாத்திரம் அறிதல் கூடுவதேயன்றி முன்பின் பிறப்பின் உறவினரை யுணர்தல் இப்பொழுது சாத்தியமில்லை; என்றதனால், உறவு நிலையில்லாததாகிய உடம்பைப்பற்றினதேயன்றி நிலையுள்ளதாகிய உயிரைப் பற்றினதன்று என்றும், முன்பும் பின்பும் உறவல்லாத உயிர் இப்பொழுது உறவாகவும், உறவாகவிருந்த உயிர் உறவன்றாகவும், ஓருறவாகவிருந்தது மற்றோருறவாகவும் எல்லாவித விகாரங்களுக்கும் இடமுண்டு என்றும் தெரிகிறது: இப்படியிருக்க, இவ்வொருபிறப்பில் உறவாகவிருந்த உயிரின் ஒழிவுக்கு விசனப்படுவது நல்லுணர்வன்று என்பதாம். இன்னும், இப்பாட்டின்முன்னிரண்டடிகளால், உடம்பின் நிலையில்லாமையையும், உயிர் என்றைக்கேனும் உடம்பினின்று நீங்குதலையே இயல்பாக வுடைய தென்பதையும் குறிப்பித்தார். இம்மை அம்மை உம்மை என்றவற்றில், பகுதியாகிய மூன்றுசுட்டெழுத்துக்களும்-முறையே சமீபம் தூரம் முன் என்னும் பொருளை யுணர்த்தின. இரண்டாமடியில் 'ஆவரென்' என்பதற்கு ஏற்ப, முதலடியில் 'ஆனரென' என்பது வருவிக்கத்தக்கது. மும்மை - மூன்றுகாலத்துச் செய்கைகளுக்கு, இருமடியாகுபெயர். நீர்மை யென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் 'நீர்' என நின்றது. இரங்கல்-தொழிற்பெயர். *(310)*

173. ஆற்றினுமதாண்மையழியாமலிருமென்றென்
றேற்றியடைவேசுருதியாவையுமெடுத்துத்
தேற்றியுரைசெய்துதனசேவடியிறைஞ்சிப்
போற்றியமகீபரைநிறுத்திமுனிபோனான்.

(இ - ள்.) (ஆதலால்), ஆற்றி - (சோகத்தைப்) பொறுத்து, நுமது ஆண்மை அழியாமல் - (அதனால்) உங்கள் பராக்கிரமம் சிதையாமல், இரும் - (மனவுறுதிநிலையோடு) இருங்கள், என்று என்று-என்று (இங்ஙனம்) பலவிதமாக, அடைவுஏ ஏற்றி - முறையாய் (அவர்கள் மனத்தில்) ஏற்கச்செய்து, சுருதி யாவைஉம் எடுத்து உரை செய்து - வேதவாக்கியங்கள்பலவற்றையும் எடுத்துச் சொல்லி, தேற்றி - (அவர்களைச்) சமாதானப்படுத்தி, தன சேவடி இறைஞ்சி போற்றிய மகீபரை - தன்னுடைய சிவந்த பாதங்களை நமஸ்கரித்துத் துதித்த அப்பாண்டவராசர்களை, நிறுத்தி-(ஒருவாறு சோகம்நீங்கிய நிலையில்) நிற்கச்செய்து, முனி - (எழுந்தருளின) அந்த வியாசமுனிவன், போனான்-(அப்பால்) சென்றான்; (எ - று.) அடைவே ஏற்றுதல் - ஒவ்வொரு விஷயத்தை ஒவ்வொருவர்க்கும் உபதேசித்தல். தேற்றுதல் - தேறப்பண்ணுதல். பி-ம்: தமசேவடி இருத்தி. அவர்போனார். (311)

174.—அப்போதும் தேறாது அருச்சுனன் அக்கினிப்பிரவேசஞ்செய்யத் தீமூட்டச் சொல்லுதல்.

தேற்றினுமகப்பரிவுதேறலரிதன்றே
யாற்றவரிதாதலினருச்சுனனரற்றி
மாற்றரியபேரழல்வளர்த்தியெனவல்லே
யேற்றதுணராதுதனதிளவலொடுரைத்தான்.

(இ - ள்.) ஆற்ற அரிது ஆதலின் - (அத்துன்பம்) பொறுக்க முடியாததாதலால், அருச்சுனன்—, அரற்றி - வாய்விட்டுப் புலம்பி, தனது இளவலொடு - தனது அடுத்ததம்பியானநகுலனுடனே, 'மாற்று அரிய - அவிக்க முடியாத, பேர் அழல் - பெருந்தீயை, வளர்த்தி - (எனது அக்கினிப்பிரவேசத்துக்காக)வளரச்செய்வாய்,' என - என்று, ஏற்றது உணராது - (செய்யத்) தக்கதை (இன்னதென்று) அறியாமல், வல்லே உரைத்தான் - விரைவிற் கூறினான்; தேற்றின்உம் - (எவ்வளவு) தேறுதல் செய்தாலும், மக பரிவு - புத்திரசோகம், தேறல் அரிது - சமாதானப்படுதற்கு முடியாதது, அன்றே - அல்லவோ? (எ - று.)

'தேற்றினாலும் புத்திரசோகம் தேறவொண்ணாததன்றோ' என்ற பொதுப்பொருள், மற்றைமூன்றடிகளாற் கூறப்படுஞ் சிறப்புப்பொருளைச் சமர்த்தித்துநின்றது-**வேற்றுப்பொருள்வைப்பணியாம்.** பி - ம்: அரிதென்றே. (312)

175.—அருச்சுனன் யார்தடுக்கவும் கேளாது அக்கினியிற்புகச் சித்தனாதல்.

மத்திரைமகன்கனல்வளர்க்கவதனூடே
மித்திரரும்யாவரும்விலக்கவும்விலங்கான்
சித்திரவில்லூடுயிர்செகுப்பனெனநின்றான்
புத்திரரிலாவிடர்பொறுத்திடலுமாமோ.

(இ - ள்.) மத்திரை மகன் - மாத்திரியின் குமாரனான நகுலன் கனல் வளர்க்க - (தமையன்கட்டளையைக் கடக்கவொண்ணாமையால் அங்ஙனமே) தீயை மூட்டிவளரச்செய்ய,—(அருச்சுனன்),

மித்திரர்உம் யாவர்உம் விலக்கவும் அதனூடு விலங்கான்-(தனது) நண்பர்களும் (மற்றும் உறவினர் முதலிய) எல்லோரும் தடுக்கவும் அக்கினிப்பிரவேசமாகிய அத்தொழிலிலே தடைப்படாதவனாய், 'சித்திரம்வில்லூடு - அக்கினியிலே, உயிர் செகுப்பன் -(என்) உயிரை (நானே) மாய்த்துக்கொள்வேன்,' என - என்றுகூறி, நின்றான் - (அக்கினிப்பிரவேசத்துக்குச்) சித்தனாய் நின்றான் ; புத்திரர் இலா இடர் - புதல்வரையொழிந்தமையாலான சோகம், பொறுத்திடல்உம் ஆம்ஓ-பொறுத்தற்குங் கூடுமோ ? (எ - று.)

இப்பாட்டில், நான்காமடி-பொதுப்பொருள்; இதனால், அருச்சுனனது செய்கையாகிய சிறப்புப்பொருளை விளக்கியது, **வேற்றுப் பொருள்வைப்பணி.** ஒருவன்மனத்தை அதுபோகிறவழியினின்று வேறு வழியில் மீட்டுக்கொணர்தலில் நண்பர் சிறத்தலால், அவரை முதலிற் கூறினார். சித்திரவில்-பலவகையான ஒளியையுடையது என அக்கினிக்குப் பண்புத்தொகையன்மொழி: (வில் - ஒளி). சித்திரபாநுஎன்ற வடமொழிப்பெயரையுங் காண்க. மத்திமை-மத்திரதேசத்து அரசனது மகள். **பி-ம்:** சித்திரவில்லோடு. (313)

176.—இரண்டுகவிகள் - ஒருதொடர் : ஸ்ரீக்ருஷ்ணன் அழைக்க இந்திரன் முனிவன் வடிவாய்வந்து அருச்சுனனைத் தடுத்தமை கூறும்.

அன்பொடுதுழாய்முதல்வனப்பொழுதழைக்க
முன்புதழன்மூழ்கலொழிமுனிவிரைவின்வாரா
நின்புதல்வனோடெரியினீபுகுதனெறியோ
வென்புதல்வனோடெனையிறப்பதுதவிர்த்தோய்.

(இ - ள்.) துழாய் முதல்வன் - திருத்துழாய்மாலையையுடைய தலைவனான கண்ணபிரான், அன்பொடு-(அருச்சுனன்பக்கல்) அன்புடனே, அப்பொழுது அழைக்க - அச்சமயத்தில் (மனத்திற் சிந்தித்துக்) கூப்பிட, முன்புதழல் மூழ்கல் ஒழி முனி - முன் (அருச்சுனனது தடையால்) அக்கினிப்பிரவேசம் நீங்கின (இந்திரனாகிய) முனிவன், விரைவின் வாரா-துரிதமாக(அருகில்) வந்து, (அருச்சுனனை நோக்கி), 'என்புதல்வனோடு எனை இறப்பது தவிர்த்தோய்-என் புத்திரனுடனே யான் இறக்க இருந்ததைத் தடுத்தவனே! நின் புதல்வனோடு நீ எரியில் புகுதல் நெறிஓ-உனது புத்திரனுடனே நீ அக்கினிப்பிரவேசஞ் செய்தல் நீதியாகுமோ ? [ஆகாது என்றபடி].

முதலவன் - எல்லாப்பொருள்களுக்கும் முந்தினவரான திரிமூர்த்திகளுள்ளும் மற்றையிருமூர்த்திக்கும் முதலாய் நிற்பவன்; உலகத்துக்கு முதலானவன். 'எனை யிறப்பது தவிர்த்தோய்' - என்னை யிறப்பதைத் தவிர்த்தோய் என இரண்டு செயப்படுபொருளாக வாவது, யான் இறப்பதைத்தவிர்த்தோய் என உருபுபிரித்துக் கூட்டலாகவாவது உரைக்க (314)

177.—முனிவன்சொல்லினால் அக்கினிப்பிரவேசந் தவிர்ந்து அருச்சுனன் நிலைகெட்டிருத்தல்.

வழிப்படவழக்கின்வழிவருகவெனமுனிவன்
மொழிப்படிபொறுத்தழலின்மூழ்குதொழின்மாறி

விழிப்புனலின்மூழ்கிமனம்வெந்துதளர்வுறுவோன்
பழிப்படுசுரத்தின்முளிபாதவமதானுன்.

(இ-ள்.) வழி படட-ஒழுங்காக, வழக்கின் வழி-நீதிவழியிலே, வருக-(நீ) பொருந்துவாயாக, என-என்று (அருச்சுனனைநோக்கி முனிவனுகி வந்த இந்திரன்) சொல்ல, முனிவன் மொழி படி-(அந்த) இருடியின் வார்த்தையின்படி, பொறுத்து-(துயரத்தைப்) பொறுத்துக்கொண்டு, அழலில் மூழ்கு தொழில் மாறி-அக்கினியிலே பிரவேசிக்குந் தொழிலொழிந்து, விழி புனலில் மூழ்கி-கண்ணீரில் முழுகி, மனம் வெந்து-மனந்தவித்து, தளர்வு உறுவோன்-தளர்ச்சி மிகுபவனுன அருச்சுனன்,—பழி படு-(யாவராலும்) இகழப்படுகிற, சுரத்தில்-பாலைவனத்திலே, முளி-உலர்ந்துகிடக்கிற, பாதவம்அது ஆனுன்-மரத்தின்தன்மை யுடையவனுனுன்; (எ-று.)

பட்டுப்போன மரம்போல நிலைகெட்டுநின்றனன் அருச்சுனனென்பதாம். 'வழிப்பட வழக்கின்வழி வருக' என்றது, கீழ் "என்மகனிறக்க வென்னை யிருத்திளையாயினம்ம, நின்மக னிறந்தாலென்சொல் மருதொழி நீயும்" என்று யான் கேட்ட வரத்துக்கு நீ உடன்பட்டபடி உறுதியாய் நிற்கவேண்டு மென்றபடி. 'அழலின் மூழ்குதொழில்மாறிப் புனலில் மூழ்கி' எனச் சமத்காரந்தோன்றக் கூறினர். 'விழிப்புனலின் மூழ்கி'-கண்ணீர் வெள்ளத்தை மிகச் சொரிந்து என்றபடி. 'அழலின் மூழ்கு தொழில் மாறிப் புனலின் மூழ்கி மனம்வெந்து' என்றதனுல், நீருட்குளிப்பினும் மனவெப்பம் தணியாதென்பதும், தீயிற்குளித்து இறந்தாலே மனவெப்பம் தணிந்திடு மென்பதும் விளக்கப்பட்டன. புனன் மூழ்கி...வெந்து என்றதில் மாறுபட்டதொழில் தோன்றியதாகக் கூறியது-விஷமாலங்காரமாகும். **பி-ம்:** பொறித்தழலின். *(315)*

178.—**அபிமனைப் போரிற்செல்லஏவினதன்பொருட்டுத் தருமன்முதலியோரை அருச்சுனன் வெகுளல்.**

காமர்பிறையன்னசிறுகாளைதனைவாளா
வேமமுறுவெஞ்சமரிலேவினர்களென்னு
மாமுரசணிந்தகொடிமன்னனையும்வண்டார்
வீமனையுநின்றவிளையோரையும் வெகுண்டான்.

(இ-ள்.) 'காமர்-அழகிய, பிறை-இளஞ்சந்திரனை, அன்ன-ஒத்த, சிறு காளைதனை-இளங்குமரனுன அபிமனை, வாளா-வீணுய், ஏமம் உறுவெம் சமரில்-உற்சாக மிக்க கொடிய போரில், ஏவினர்கள்-செலுத்தினுர்கள்,' என்னு-என்று, மா முரசு அணிந்த கொடி மன்னனை உம்-சிறந்தபேரிகைவடிவத்தைத் தரித்த துவசத்தையுடைய தருமராசனையும், வண் தார் வீமனை உம்-அழகியமாலையையுடைய வீமசேனனையும், நின்ற இளையோரை உம்-(மற்றும்) நின்ற தம்பிமாரான நகுலசகதேவரையுங்குறித்து, வெகுண்டான்-(அருச்சுனன்) கோபித்தான்; (எ-று.)

காமமருவு என்பது, காமர்என மருஉவாயிற்று. வாளா-துணையின்றித் தனியே என்றுமாம். *(316)*

179.—இதுமுதல் ஆறுகவிகள் - அடுத்தநாள் சூரியாஸ்தமனத்துக்குள் சயத்திரதனைக் கொல்வதாக அருச்சுனன் செய்யுஞ் சபதங்களைத் தெரிக்கும்.

சிந்துபதியாகியசெயத்திரதனைத்தே
ருந்தமரினாளையுருமேறெனவுடற்று
வந்திபடுமவ்வளவினாவிகவரேனேல்
வெந்தழலின்வீழ்வனிதுவேதமொழியென்றான்.

(இ - ள்.) தேர் உந்து அமரில் - தேர் செலுத்திச் செய்யும் போரில், நாளை அந்தி படும் அ அளவின்-நாளைத்தினத்தில் மாலைப் பொழுது வருகிறஅச்சமயத்திற்குள், சிந்துபதி ஆகியசெயத்திரதனை - சிந்துதேசத்து அரசனான சயத்திரதனை, உரும் ஏறு என உடற்று - பேரிடிபோல(க் கொடியதாக)ப் போர்செய்து, ஆவி கவரேன் ஏல் - (நான்) உயிர்பறிக்காதொழிவேனானால், வெம் தழலின் வீழ்வன் - வெப்பமான அக்கினியிற்குதித்து இறப்பேன்; இது—, வேதம் மொழி - வேதவாக்கியம்போலத் தவறுபடாத சபதவார்த்தை, என்றான் - என்று (அருச்சுனன் பிரதிஜ்ஞை) கூறினான்; (எ-று.)

180. இன்றபிமன்வாளமரிலின்னுயிரிழக்கக்
கொன்றவனைநாளையுயிர்கோறல்புரியேனேன்
மன்றிலொருசார்புறவழக்கறவுரைக்கும்
புன்றொழிலர்வீழ்நரகுபுக்குழலுவேனே.

(இ - ள்.) இன்று - இன்றைக்கு, அபிமன் - அபிமந்யு, வாள் அமரில் - கொடிய போரில், இன் உயிர் இழக்க - இனிமையான உயிரை ஒழியும்படி, கொன்றவனை -வதைத்தவனான சயத்திரதனை, நாளை-நாளைக்கு, உயிர் கோறல் புரியேன்ஏல் - (நான்) உயிரை யழித்தல் செய்திடேனாயின்,—மன்றில்-நியாயத்தலத்தில், ஒருசார்பு உற - (வாதிப்பிரதிவாதிகளுள்) ஒருவர் பக்கத்தில் பக்ஷபாதம் மிக, வழக்கு அற உரைக்கும் - நீதியில்லாமற் பேசுகிற, புன் தொழிலர் - இழிதொழிலையுடையவர்கள், வீழ் - விழுகிற, நரகு - நரகத்தில், புக்கு உழலுவேன் - (யான்) வீழ்ந்து வருந்துபவனாவேன்; (எ-று.)

சயத்திரதனை நாளைக்கொல்லாவிடின் மன்றேறாஞ் சொன்ன பெரும்பாவத்தை யான் அடைவேனென்பதாம். ஏ - தேற்றம்.
பி - ம்: இன்றமரில் வாளபிமன். வழக்கினை. (318)

181. மோதமரினென்மகன்முடித்தலைதுணித்த
பாதகனைநானெதிர்படப்பொருதிலேனேற்
றாதையுடனேமொழிதகாதனபிதற்றும்
பேதைமகனெய்துநெறிபெற்றுடையனாவேன்.

(இ - ள்.) மோது அமரின் - தாக்கிச்செய்யும் போரில், என் மகன் முடி தலை துணித்த - எனது புத்திரனது கிரீடந்தரித்த தலையைத் துண்டித்த, பாதகனை -பாவியான சயத்திரதனை, நான்—, எதிர்பட-(அவன் தொழிலுக்கு) எதிராக [பழிக்குப் பழிவாங்க], பொருதிலேன்ஏல் - போர்செய்து கொல்லேனாயின்,— தாதையுடனே மொழி தகாதன பிதற்றும் - தந்தையோடு (எதிர்த்துத்)

தகுதியல்லாத வார்த்தைகளை உளறுகிற, பேதை மகன் - மூடனான புத்திரன், எய்தும் - (மறுமையில்) அடையும், நெறி - நரகவழியை, பெற்றுடையன் ஆவேன் - பெற்றுள்ளவனாவேன்; (எ - று.)

போரில் எதிரியைக் கொல்லுதல் நீதியாயிருக்க, அதுசெய்த சைந்தவனை அருச்சுனன் 'பாதகன்' என்றது, வஞ்சனையாகக் கொன்றைமாலையை இடையிலிட்டு அபிமனைத் துணையிலனாக்கிய தனாலென்க. (319)

182. சேயனையவென்மதலைபொன்றவமர்செய்தோன்
மாயமுனடர்த்துவயவாகைபுனையேனேற்
றாயர்பசிகண்டுநனிதன்பசிதணிக்கு
நாயனையபுல்லருறுநரகிலுறுவேனே.

(இ-ள்.) சேய் அனைய-முருகக்கடவுளை யொத்த, என் மதலை-எனது புத்திரன், பொன்ற - இறக்க, அமர் செய்தோன் - போர் செய்தவனான சயத்திரதன், மாய - அழியும்படி, முன் அடர்த்து - எதிரில் பொருது, வயம் வாகை புனையேன்ஏல் - வெற்றிக்குரிய வாகைப்பூமாலையைத் தரித்திடேனாயின்,—தாயர் பசி கண்டுஉம் - தாயார் பசித்திருத்தலைப்பார்த்தும், (அதனைத்தீர்த்திடாமல்), தன் பசி நனி தணிக்கும் - தனது பசியை நன்றாக(ப் போசனத்தால்) தீர்த்துக்கொள்ளுகிற, நாய் அனைய புல்லர் - (கடைப்பட்ட) நாயை யொத்த அற்பகுணமுடையோர், உறும் - (மறுமையிற்) சேரும், நரகில் - நரகத்தில், உறுவேன் - (யான்) சேருவேன்; (எ-று.)—ஏ-தேற்றம்.

மற்றொன்றையும் பாராது தன்பசியைத் தீர்த்துக் கொள்ளுதலி லேயே கருத்தைச் செலுத்துதற்கு, நாய் உவமை கூறப்பட்டது. முன் - விரைவில் என்றுமாம். உம் - இழிவுசிறப்பு. (320)

183. வஞ்சனையிலென்மகனையெஞ்சமுன்மலைந்தோன்
நெஞ்சமெரியுண்ணவமர்நேர்பொருதிலேனேற்
றஞ்செனவடைந்தவர்தமக்கிடர்நினைக்கு
நஞ்சனையபாதகர்நடக்குநெறிசேர்வேன்.

(இ-ள்.) வஞ்சனையில் - வஞ்சனையால், என் மகனை - எனது புத்திரனை, எஞ்ச - அழியும்படி, முன் மலைந்தோன்-முன்பு பொருத வனான சயத்திரதனது, நெஞ்சம் - மனம், எரி உண்ண - எரிபடும் படி, அமர் - போர்க்களத்தில், நேர் பொருதிலேன்ஏல்-(அவனுக்கு) நேராக (யான்) போர் செய்திடேனாயின்,—தஞ்சு என அடைந்தவர் தமக்கு - அடைக்கலமென்றுகூறிச் சரணமடைந்தவர்களுக்கு, இடர் நினைக்கும் - தீங்குசெய்ய எண்ணுகிற, நஞ்சு அனைய பாதகர் - விஷத்தையொத்த பாவமுடையவர், நடக்கும் - (மறுமையிற்) செல்லும், நெறி - நரகவழியில், சேர்வேன்—; (எ - று.)

எரியுண்ண-மிகவருந்த, இறந்தொழிய, தகனஸம்ஸ்காரத்துக்கு இலக்காக. நேர் - எதிரில் என்றேனும், தகுதியாக என்றேனும் கொள்க. தஞ்சு-தஞ்ச மென்பதன் கடைக்குறை. தஞ்சம்-பற்றுக் கோடு, ரக்ஷகம். பாவத்துக்கு, நஞ்சு உவமை - தவறாது அழிக்குந்

கொடுமைக்கு. வஞ்சனை இல்-வஞ்சனையில்லாத, என்மகன் எனினுமாம். (321)

184. * வினையிலென்மகன்றனுடல்வேறுசெய்வித்தோனைக்
குனிசிலையினாளையுயிர்கோறல்புரியேனேன்
மனைவியுயிர்வீயநன்மகன்மனைவிகையாற்
றினையளவுமோர்பொழுதுசீவித்தவனாவேன்.

(இ - ள்.) வினையில் - (தனது வஞ்சனைத்) தொழிலால், என் மகன்தன் உடல் வேறு செய்வித்தோனை-என்புத்திரனது உடம்பை உயிர் நீங்கச்செய்த சயத்திரதனை, குனி சிலையின் - வளைந்த (என்) வில்லைக்கொண்டு, நாளை - நாளைக்கு, உயிர் கோறல் புரியேனேல் - உயிரை யழித்தல் செய்திடேனாயின்,—மனைவி உயிர் வீய - (தன்) மனையாள் இறக்க, நல் மகன் மனைவி கையால்-நல்ல (தன்) புத்திரனுக்கு மனையாளின் கையினால், தினை அளவும் ஓர் பொழுது-மிகச் சிறியதொரு பொழுதாயினும், சீவித்தவன் ஆவேன் - பிழைத்தவனது பாபத்தை யுடையவனாவேன்; (எ-று.)—என்று அருச்சுனன் வஞ்சினங்கூறி முடித்தானென்க.

அநாச்சிரமியாயிருக்கிற தோஷத்தையே இவ்வாறு குறித்ததென்க; மனிதன் எப்பொழுதும் பிரமசரியம் கிருகஸ்தம் வாநப்பிரஸ்தம் சந்யாசம் என்ற நான்கு ஆச்சிரமங்களுள் ஏதேனும் ஒன்றிலே இருத்தல் வேண்டுமென்றும், ஓராச்சிரமத்திலுஞ்சேராமல் வெறுமையாயிருத்தல் கூடாதென்றும், ஒருவனுக்கு மனைவி இறந்துபோன மாத்திரத்தில் கிருகஸ்தாச்சிரமவுரிமை போய்விடுகிறதென்றும், உடனே அவன் வேறுவிவாகஞ்செய்துகொண்டு கிருகஸ்தனாதல் அல்லது வாநப்ரஸ்த சந்நியாசங்களில் ஒன்றைச் சேர்தல் என்னும் இரண்டில் யாதாயினும் ஒன்றைச் செய்யத்தக்கவனென்றும், அவ்வாறன்றி மணம் புரிந்து கொள்ளாமல் மருமகள் முதலியோர் உபசரிக்க இல்வாழ்க்கையிலே இருக்கலாகாதென்றும், அங்ஙனமிருத்தல் பிராயச்சித்தஞ்செய்யத்தக்க பாதகமென்றும், அதுசெய்யாவிட்டால் நரகம் புகுவானென்றும் குமார விஜயம், கௌதமஸ்மிருதி முதலிய அறநூல்களால் அறியப்படுகிறது. ஈழநாட்டில் மருமகள் சமைக்க வுண்ணுதல் இழிவாகக் கருதப்படுகின்றதெனக் கேள்வி.

இனி, கையால், என்றதனை இடக்கரடக்கலாக் கொண்டு,'மகன் மனைவி கையாற் சீவித்தவன்' என்பதற்கு - மருமகளுடன் கூடி வாழ்ந்தவனென்று கருதுக்கொள்ளுதலும் ஒருவாறு பொருந்தும். மருமகளோடு கூடுதல், குரு பத்நீகமநத்துக்குச் சமமான பெரும்பாவமென்று மநு, நாரதர், வசிஷ்டர், வியாக்கிரர், யாஜ்ஞவல்க்யர் என்னும் இவர்கள் தருமசாஸ்திரங்களாலும், தாயோடு கூடுதலுக்குச் சமமான அதிபாதகமென்று விஷ்ணுஸ்மிருதியாலும் தெரிகிறது. பி - ம்: மகன்றனுயிர். தின்றவனுமாவேன். (322)

* இப்பாட்டு, யாம் கண்ட ஏட்டுப்பிரதிகளில் இல்லை. "மனைவியயலான் மருவல்கண்டுமவள் கையால்" என்று மூன்றாமடிக்குப் பாடமோதுவாருமுளர்.

185—அருச்சுனன் வஞ்சினமுரைத்ததுகேட்ட தருமன் கிருஷ்ணனோடு பேசலுறுதல்.

இன்னணமி ருந்தவர்கள் யாவருந டுங்க
மன்னவையி லன்றுபல வஞ்சினமு ரைக்கச்
சொன்னவுரை யானகனல் சுட்டசெவி யோடும்
பின்னையறன் மைந்தனெடு மாலினொடு பேசும்.

(இ - ள்.) இன்னணம் - இவ்வாறு, மன் அவையில்-இராசசபையிலே, இருந்தவர்கள் யாவர்உம் நடுங்க - (அங்கு) உள்ளவர்கள் எல்லோரும் (கேட்டு) மிக அஞ்சும்படி, (அருச்சுனன்), அன்று - அப்பொழுது, பல வஞ்சினம் உரைக்க - அநேக சபதங்களைக் கூற, —சொன்ன-(அவ்வருச்சுனன்) கூறின, உரை ஆன-சபதவார்த்தைகளாகிய, கனல்-அக்கினி, சுட்ட-(சென்று) வருத்தின, செவியோடு உம் - காதுகளுடனே [அச்சபதங்களைக் கேட்டமாத்திரத்தில் மிக வருந்தியவனாய்], பின்னை - பின்பு, அறன் மைந்தன் - தருமபுத்திரன், நெடு மாலினொடு - பெருமைக்குணமுள்ள கண்ணனுடனே, பேசும்- (சிலவார்த்தை) கூறுவான்; (எ - று.)—அவற்றை மேல் காண்க. நெடுமால் - முன்பு திரிவிக்கிரமனாய் நீண்ட மூர்த்தியுமாம்; விசுவரூபமெடுத்தருளியவனுமாம். (323)

வேறு.

186 —இதுவும், அடுத்த கவியும்-தருமன் கண்ணனை நோக்கிக் கூறுவன.

வடிசுடர் வாளியான் மொழிந்த வஞ்சினப்
படிசயத் திரதனைப் படுத்தல் கூடுமோ
பொடியன லிவன்புகிற் புகுந்து நால்வரு
மிடிபொரு மரவென விறத்த றிண்ணமே.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) வடி சுடர் வாளியான் - கூரிய ஒளியையுடைய அம்புகளையுடைய அருச்சுனன், மொழிந்த வஞ்சினம் படி-சொன்ன சபதவார்த்தையின்படி, சயத்திரதனை படுத்தல் கூடும்ஓ - சயத்திரதனைக் கொல்லுதல் முடியுமோ? (ஒருகால் அங்ஙனம் முடியாமல்), இவன் - இவ்வருச்சுனன், பொடி அனல் புகின் - சாம்பல் செய்யும்படியான அக்கினியிற் பிரவேசித்தால், நால்வர்உம் - (மற்றைநாங்கள்) நாலுபேரும், புகுந்து - (அவனுடனே தீக்)குதித்து, இடி பொரும் அரவு என இறத்தல் - இடியினால் அழியும் பாம்புபோல மரிப்பது, திண்ணம்—; (எ - று.)—ஏ - தேற்றம். பி - ம்: சுடர் வேலினான்.

இதனால், பாண்டவர் ஐவரும் உடல்வேறு உயிரொன்று என்னும்படி அந்யோந்யமாயிருப்பவரென்பது விளங்கும். நால்வரும்- தன்மையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி; 'நால்வேமும்' என்றிருப்பின், வழாநிலையாம்.

இதுமுதல் முப்பத்து மூன்று கவிகள்-பெரும்பாலும் மூன்றாஞ் சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (324)

187. முப்பதுகடிகையின்முரண்கொண்மொய்ம்பனைத்
தப்பறக்கொல்லுவேனென்றுசாற்றுமால்
அப்பெருஞ்சேனையிலவனையுள்ளுறத்
துப்புறவணிந்திடிற்றுன்னலாகுமோ.

(இ - ள்.) 'முரண் கொள்-மாறுபாடுகொண்ட, மொய்ம்பனை-வலிமையையுடைய சயத்திரதனை, முப்பது கடிகையின் - (நாளைப் பகல்) முப்பது நாழிகைக்குள்ளே, தப்பு அற - தவறாமல், கொல்லுவேன்—,' என்று—, சாற்றும் - (அருச்சுனன் இப்பொழுது சபதங்) கூறுகிறான்; அ பெரு சேனையில்-அந்தப் பெரிய கௌரவசேனையில், அவனை - அச்சயத்திரதனை, உள் உற - உள்ளிடத்திலே பொருந்த, துப்புஉற - வலிமைமிக, அணிந்திடில்-(எதிரிகள்) அணி வகுப்பில் நிறுத்தியிட்டால், துன்னல் ஆகும்ஓ - (அவனைக்) கிட்டுதல் முடியுமோ? (எ - று.)—கிட்டுதலே அரிதாயின், கொன்று சபதத்தை நிறைவேற்றுவது எவ்வாறு? என்றபடி. பி-ம்: கடிகையின்முரண்டு.

கடிகை - கடிகா என்னும் வடசொல் திரிந்தது; இருபத்து நான்கு நிமிஷங் கொண்ட பொழுது. ஆல் -ஈற்றசை; 'மால்' என எடுத்துத் திருமாலே என விளியாகக் கொள்ளினுமாம். துப்பு - துணையும், காவலுமாம். (325)

188.—ஸ்ரீகிருஷ்ணன் தருமனுக்கு அபயமளித்தல்.

எஞ்சின்மற்றென்செய்வேனென்னுமேல்வையின்
அஞ்சலென்றறன்மகனவலமாற்றினன்
கஞ்சவான்பொய்கையிற்கராவின்வாய்ப்படு
குஞ்சரந்தனக்கருள்கொண்டல்மேனியான்.

(இ - ள்.) எஞ்சின் - (அருச்சுனன்) அழிவதானால், மற்று என் செய்வேன் - (யான்) வேறு யாது செய்வேன்? என்னும் - என்று சொன்ன, ஏல்வையின்-சமயத்தில்,—அஞ்சல் என்று-பயப்படாதேயென்று சொல்லி, அறன் மகன் அவலம் ஆற்றினன் - தருமபுத்திரனது கவலையைத் தணியச்செய்தான்: (யாவனெனில்),—வான் கஞ்சம் பொய்கையில் - சிறந்த தாமரைத்தடாகத்திலே, கராவின் வாய் படு-முதலையின்வாயில்அகப்பட்ட, குஞ்சரந்தனக்கு-யானைக்கு, அருள் - கருணைசெய்த, கொண்டல் மேனியான் - காளமேகம்போலுந் திருமேனியையுடைய கண்ணபிரான்; (எ - று.)

குஞ்சரந்தனக்கருள் கொண்டல்மேனியான் அவலமாற்றினன் என்ற தொடரில், அடியார்க்கு வருந்துயரை ஆற்றுவிக்குந்தன்மையன் திருமால் என்பது பெறப்படும்: இது **கருத்துடையடைகொளியணி.** எஞ்சின்-(சபதந்) தப்பினால் என்றும், (அவன்) ஒழிந்தால் என்றும் பொருள்கள்படும். மற்று - யான் இறத்தலே யொழிய என்றபடி. அஞ்சலென்னுதல் - அபயப்பிரதானம். இரண்டாம் அடி **முற்று மோனை**யாதலால், மாற்றினனென்று பிரித்தல் சிறவாது. (326)

189.—ஸ்ரீக்ருஷ்ணன் தருமனை நோக்கி யாவர்காப்பினும் சயத்திரதனை நாளைத் தவறாமல் அருச்சுனன் கொல்வானெனல்.

இந்திரன்காக்கினுமீசன்காக்கினுஞ்
சிந்துவின்றலைவனைத்தேவர்காக்கினுங்

கந்தனிற்சிறந்தநின்கனிட்டனுனேயே
மைந்துறப்பொருதவன்மகுடங்கொள்ளுமே.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) சிந்துவின் தலைவனை - சைந்தவனை, இந்திரன் காக்கின்உம் - தேவேந்திரன் (வந்து) பாதுகாப்பனானாலும், ஈசன் காக்கின்உம்-சிவபிரான் (வந்து) பாதுகாப்பனானாலும், தேவர் காக்கின் உம்—, கந்தனின் சிறந்த நின் கனிட்டன்-முருகக்கடவுளினும் மேம்பட்ட உனது தம்பியான அருச்சுனன், நாளை ஏ-நாளைத்தினத்திலே, மைந்து உற பொருது-வலிமை மிகப் போர் செய்து, அவன் மகுடம் கொள்ளும் - அவனது தலையைத் துணித்திடுவான்; (எ - று.)

தந்தையும் தேவராசனு மாதலால் இந்திரனையும், அழித்தற்றொழிற் கடவு ளாதலால் உருத்திரனையும் இங்குத் தலைமையாக எடுத்துக்கூறினர். காக்கினும் என்ற உம்மையால், அவர்கள் காவாரென்பதும் விளங்கும். கநிஷ்டன்-வடசொல்; இளையோன். நாளையே, ஏ - பிரிநிலை. மகுடமென்ற கிரீடத்தின் பெயர் - தானியாகுபெயராய், அதற்கு ஆதாரமான தலையைக் குறித்தது. தேவர் என்ற வடசொல்-விண்ணுலகத்திலுள்ளவரென்றும், ஒளிவிளங்குபவரென்றும் பொருள்படும். ஈற்று ஏ-தேற்றம். **பி - ம்:** இமயங்.

190.—ஸ்ரீக்ருஷ்ணன் சூரியோதயத்துக்குமுன் கயிலைப்பொருப்பனைக் கண்டு வருவோமெனல்.

வெயிலெழுவதன்முனிவ்விசயன்றனொடுங்
கயிலையம்பொருப்பனைக்கண்டுமீளவுந்
துயிலுணர்த்திடும்படிதோன்றுவோமென
வயிலணியாழியானவனொடேகினான்.

(இ - ள்.) வெயில் எழுவதன் முன் - சூரியன் உதிப்பதன்முன், இ விசயன் தன்னொடு உம்-இந்தஅருச்சுனனுடனே (சென்று), கயிலை அம்பொருப்பனை - கைலாசகிரியையுடைய சிவபிரானை, கண்டு - தரிசித்து, மீளவும்-பின்பு, துயில் உணர்த்திடும்படி - (உன்னைத்) தூக்கத்தினின்று எழுப்பும்படி [பொழுதுவிடிவதற்குள்], தோன்றுவோம் - (இங்கு) வந்திடுவோம், என - என்று (தருமனைநோக்கிச்) சொல்லி, அயில் அணி ஆழியான்-கூர்மையையுடைய அழகிய சக்கராயுதத்தையுடைய கண்ணபிரான், அவனொடு - அருச்சுனனுடனே, ஏகினான் - (கயிலைக்குப் புறப்பட்டுச்) சென்றான்; (எ - று.)

இங்கே 'ஆழியான்-ஏகினான்' என்றதனால், அச்சயத்திரதனைத் தான் நேரிலே அழிக்கக் கண்ணன் வல்லமையில்லாதவனல்லனென்றும், இந்தத் திருவாழியே அவனை அழிக்கும்பொருட்டுச் சூரியனை மறைத்தற்கு நாளை உதவுவதென்றும், இங்ஙனம் கைலாசயாத்திரை சென்றது மனிதனாக அவதரித்ததற்கு உரியதொரு திருவிளையாட்டே யென்றும் குறிப்பிக்கப்படும். வெயிலெழுவதன்முன் மீளவும் தோன்றுவோம் என இரண்டடித்துங் கூட்டுக. 'வெயிலெழுவது' என்பதனை, காரியம் காரணத்தின்மேல்நின்ற உபசார வழக் கென்னலாம். திருமாலின்சுதரிசநமென்ற சக்கரம் ஆயிரம்

அரங்களை யுடைய தென்பது தோன்ற 'அயிலாழி' என்றும், 'பகவானுக்குச் சக்கரம் முதலியன பகைவர்பார்வைக்கு அச்சஞ் செய்து ஆயுதகோடியிலும், அன்பர்கண்ணுக்கு அழகியனவாய்த் தோன்றி ஆபரணகோடியிலும் அமையும்' என்ற சாஸ்திரார்த்தம் விளங்க, 'அணியாழி' என்றும் கூறப்பட்டது. (328)

191.—வழியிடையில் அருச்சுனனுக்குநேர்ந்த அயர்ச்சியை ஸ்ரீக்ருஷ்ணன் ஆற்றுதல்.

ஏகியநெறியிடையிளைத்துவாசவற்
காகியகுமரன்மெய்யயர்ந்துவீழ்தலும்
போகியினறிதுயில்புரியுநான்மறை
யோகியங்கையினணைத்துயக்கமாற்றியே.

இதுமுதல் நான்குகவிகள் - குளகம்.

(இ - ள்.) ஏகிய நெறியிடை - (கிருஷ்ணஅருச்சுனர்) சென்ற வழி நடுவிலே, வாசவற்கு ஆகிய குமரன் - இந்திரனுக்குப் பிறந்த குமாரனான அருச்சுனன், இளைத்து - மெலிந்து, மெய் அயர்ந்து - உடம்பு சோர்ந்து, வீழ்தலும் - (கீழே) விழுந்தவளவிலே,— போகியின் அறிதுயில் புரியும் நால்மறை யோகி - ஆதிசேஷனிடத்து யோகநித்திரைசெய்கிற நான்குவேதங்களாலும் புகழப்படுகிற யோகம்வல்ல கடவுளான கண்ணன், அம் கையின் அணைத்து - (தனது) அழகிய திருக்கைகளால் (அருச்சுனனைத்) தழுவி, உயக்கம் ஆற்றி - (அவனது) தளர்ச்சியைத் தணியச்செய்து,—(எ - று.)— 'ஆற்றி' என்பது, மேல் 194-ஆம் பாட்டிலுள்ள 'உரைத்தலும்' என்பதனோடு தொடரும்.

போகம் என்றால், பாம்பினுடல்; அதனையுடையது **போகீ;** இது-பாம்புக்கு வடமொழியிற் காரணப்பெயர். அறிதுயில்-எல்லாவற்றையும் அறியாநின்று செய்யுந் தூக்கம்; விழிதுயில், துயிலாத்துயில், பொய்த்துயில் எனவும் படும். யோகம் - இயமம் நியமம் முதலிய எட்டுஅங்கங்களோடு செய்யும் ஒருவகைத்தவவொழுக்கம்; அதனையுடையவன், யோகீ: இது-திருமாலின் ஆயிரத்தெட்டுத் திருநாமங்களுள் ஒன்றும். கடவுள் சிலசமயங்களில் தான் யோகு செய்து நின்றதனாலும், பிறர்க்கு யோகநிலையை உபதேசித்திருத்தலாலும், முனிவர் முதலியோரது யோகத்துக்கு விஷய மாகுதலாலும், யோகி யென்று பெயர்; பகவத்கீதையில் "யத்ர யோகேச்வர: க்ருஷ்ண:" என்றவிடத்தில், கண்ணபிரானை யோகங்களுக்குத் தலைவ னென்றதுங் காண்க. யோகம் - லோகரக்ஷணசிந்தையுமாம். உயக்கம்-தொழிற்பெயர். மாற்றி என்றும் பதம் பிரிக்கலாம் (329)

192.—இதுவும், மேற்கவியும் - கண்ணன் அருச்சுனனைப் பசியும் விடாயும் நீங்க அருந்துமாறு கூறுதல்.

உண்டிலையடிசிலுமுண்ணுந்தீம்புனல்
கொண்டிலைபசிக்கனல்கொளுந்திவீழ்ந்தனை
மண்டிலவேலினுய்மகவினன்பினாற்
கண்டிலையுலகியல்காட்டக்காட்டவே.

(இ - ள்.) மண்டு - (வலிமை) மிக்க, இலை வேலினாய்-அரசிலை வடிவமான வேலாயுதத்தை யுடையவனே! அடிசில்உம்-சோற்றை யும், உண்டிலை - புசித்தாயில்லை; உண்ணும் - குடிக்கத்தக்க, தீம் புனல் - இனிய நீரை, கொண்டிலை - உட்கொண்டாயுமில்லை; பசி கனல் கொளுந்தி - பசியாகிய தீப்பற்றி, வீழ்ந்தனை - (கீழ்) விழுந் தாய்; உலகு இயல்-(யாக்கைநிலையாமையாகிய)உலகத்தின் இயல்பை, காட்ட காட்ட - (முனிவர்கள்) நன்றாக எடுத்துக் காண்பிக்கவும், மகவின் அன்பினால்-புத்திரவாற்சல்லியத்தால், கண்டிலை - (அதனை நீ) அறிந்தாயில்லை; (எ - று.)

'சோற்றாலெடுத்தசுவர்' என்னும்படி உடம்பிற்குஉறுதிதரு கிற உணவை முற்கூறினான். 'உண்ணும் புனல்' என்றஇடத்து 'உண்ணல்' என்பது-பொதுவினை. பசி என்பது ஜாடராக்நி யெனப்படுகிற வயிற்றினுள் உள்ளதொரு தீயின் செயலே யாத லாலும், நெருப்புப் போலப் பசி சேர்ந்தவிடத்தை மிக வருத்தலா லும், 'பசிக்கனல்' எனப்பட்டது. காணுதல்-அறிதல், காட்டுதல்-அறிவித்தல். (330)

193. மாங்கனிவாழையின்கனிவருக்கையின்
தீங்கனிகன்னலிற்செய்யநீருள
வேங்கனற்பசியுநின்விடாயுமாறவே
யீங்கினிதருந்துதியேந்தலென்னவே.

(இ-ள்.) மா கனி-மாம்பழங்களும், வாழையின் கனி-வாழைப் பழங்களும், தீம் வருக்கையின் கனி-இனிய பலாப்பழங்களும், கன்ன லின் செய்ய நீர்-கருப்பஞ்சாற்றினும் செம்மையான [மிகஇனிய] நீரும், உள-(இங்கு) உள்ளன; (அவற்றை), ஏந்தல்-பெருமையிற் சிறந்தவனே! நின் - உனது, வேம் கனல் பசிஉம்-எரிகிற நெருப்புப் போன்ற பசியும், விடாய்உம் - இளைப்பும், ஆற - தணிய, ஈங்கு-இப் பொழுது [இவ்விடத்தில்], இனிது அருந்துதி - இனிமையாக உண் பாய், என்ன - என்று,—(எ - று.)—"இவையுரைத்தலும்" என அடுத்த கவியோடு தொடரும்.

மா + கனி = மாங்கனி; மரப்பெயர் முன்னர்இனமெல்லெழுத்து வரப்பெற்றது; [நன் - உயிர்-16.] மா, வாழை, வருக்கை என்பன-முக்கனியெனச் சிறப்பித்துக் கூறப்படும். கன்னலென்னுங் கரும் பின் பெயர்-அதன் இரசத்துக்கு ஆகுபெயராம். ஏந்தல் - உயர்ந்த வன்; ஆண்பாற்சிறப்புப்பெயர்: அல் - கருத்தாப்பொருள்விகுதி: இங்கே, அண்மைவிளி; ஆதலின், இயல்பு. பி - ம்: கன்னலிற் செழும்புனலுள, கன்னலிற்செய்தமாவுள. நீர்விடாயும். (331)

194.—அருச்சுனன் இன்னுஞ் சிவபூசை செய்யவில்லையே யெனல்.

சரிந்தவர்சரிவறத்தாங்குநாயகன்
பரிந்திவையுரைத்தலும்பாவைபங்கன்மேற்
புரிந்திலனின்னமும்பூசையென்றனன்
வரிந்தவெஞ்சிலைக்குமண்மதித்தவீரனே.

(இ - ள்.) சரிந்தவர் - தளர்ச்சியடைந்தவர்களது, சரிவு - தளர்ச்சி, அற-நீங்க, தாங்கும் - (அவர்களைப்) பாதுகாத்தருளுகிற,

நாயகன் - தலைவனான கண்ணன், பரிந்து - அன்புகொண்டு, இவை - இவ்வார்த்தைகளை, உரைத்தலும் - சொன்னவளவிலே,—வரிந்த வெம் சிலைக்கு மண் மதித்த வீரன் - கட்டமைந்த கொடிய வில்லின் தொழிலில் (மிகச்சிறந்தவனென்று) நிலவுலகத்தாரால் நன்குமதிக்கப்பட்டவீரனான அருச்சுனன், 'இன்னம்உம்-இன்றைத்தினம் இதுவரையிலும், பாவைபங்கன்மேல் பூசை புரிந்திலன் - உமாதேவியை வாமபாகத்திலுடைய சிவபிரான்மேல் பூசனைசெய்தேனில்லை,' என்றனன் - என்றுகூறினான்; (எ - று.)

இன்னும் யான் சிவபூசைசெய்யாமையால், உண்ணுதல் தகாதென்பதாம்; இதனால், நித்தியபூசைசெய்தாலன்றி உண்ணுதல் செய்யாத அருச்சுனனது சிவபக்திமிகுதி விளங்கும். இங்கே இளைத்து மெய்சோர்ந்து வீழ்ந்த அருச்சுனனைக் கண்ணன் கைகளால் அணைத்து எடுத்ததற்கு ஏற்ப, 'சரிந்தவர் சரிவறத் தாங்குநாயகன்' என்றார்; முதலடி - **கருத்துடையடைகொளியணி.** பிறவித்துயரத்தில் வீழ்ந்திட்டாரைக் கரையேற்றுபவன் என்றதும் இதிற் பெறப்படும். சிலைக்கு - உருபுமயக்கம். மண் - ஆகுபெயர். **பி-ம்:** மேன்மதிக்கும்.

195.—**இதுவும் மேற்கவியும் - குளகம்: 'எம்மைப்பூசைபுரி: இருவரும்ஒருவரேயென்பதைக் காண்பாய்' எனல்.**

மருவருகானகமலரினலெமைப்
பொருவருபூசனைபுரிதியையநீ
யிருவருமொருவரேயென்பதின்றுபோ
யருவரையவனடியடைந்துகாண்டியே.

(இ - ள்.) 'ஐய—! நீ—, மரு வரு - பரிமளம் மிக்க, கான் அகம் மலரினால் - காட்டினிடத்திலுள்ள பூக்களால், எமை-எம்மை, பொருவு அரு பூசனை புரிதி - ஒப்பில்லாத பூசைசெய்வாய்; (செய்த பின்பு), அரு வரை போய்-(செல்லுதற்கு) அரிய கைலாசத்துக்குச் சென்று, அவன் அடி அடைந்து - அச்சிவபிரானது திருவடிகளைச் சேர்ந்து, இருவர்உம் ஒருவர்ஏ என்பது - (அப்பரமசிவனும் யானும் ஆகிய) இரண்டுமூர்த்தியும் ஒருமூர்த்தியே யென்பதை, இன்று - இன்றைக்கு, காண்டி - பிரதியக்ஷமாகப் பார்ப்பாய்; (எ - று.)— "என்று அரி யியம்பலும்" என எடுத்த கவியோடு தொடரும்.

இதனால், '**அரியும் அரனும் ஒன்று**' என்ற **அபேதசித்தாந்தம் விளக்கப் பட்டது.** சிவபிரானுக்கு அந்தராத்மாவாக வுள்ளவனும் ஸ்ரீமந் நாராயணனே என்ற தன்மை குறிப்பிக்கப்பட்டதென **உரைப்பர்**; "சிவனா யயனாய்", "முனியே நான்முகனே முக்கண்ணப்பா", "அவாவறச்சூழ் அரியையயனையரனையலற்றி" என்ற ஆழ்வார் அருளிச்செயலுங் காண்க. மருவரு கானகம் - பொருந்திய இக் காட்டில், (இப்பொழுது) எம்மைப் பூசைசெய் எனினுமாம். மருவு அரு எனப் பிரித்தால், பெறுதற்கரிய என்று பொருளாம். **பி - ம்:** அரனடி. (333)

196.—**அருச்சுனன் சிவனாக ஸ்ரீகிருஷ்ணனைப் பூசித்தல்.**

என்றரியியம்பலுமிருமருங்கினு
நின்றநன்மலர்கொடுநிகரில்கேள்வியான்

மன்றலந்துழாய்முடிமாயன்மேன்மன
மொன்றியேசிவாகமவுரையிற்சாத்தினன்.

(இ - ள்.) என்று—, அரி-கண்ணபிரான், இயம்பலும்-கூறிய வளவிலே,—நிகர் இல் கேள்வியான் - ஒப்பிலாத நூற்கேள்வியை யுடைய அருச்சுனன்,—இரு மருங்கின் உம் நின்ற-இரண்டுபக்கங்களி லும் பொருந்தின, நல்மலர்கொடு-சிறந்த பூக்களைக் கொண்டு, மன் றல் அம் துழாய் முடி மாயன் மேல் மனம் ஒன்றிஏ - பரிமளத்தை யுடைய அழகிய திருத்துழாய்மாலையைச் சூடிய திருமுடியையுடைய அக்கண்ணபிரான்மேல் (தன்) மனம் பதியவைத்துக்கொண்டு, சிவ ஆகம உரையின் - சைவாகமங்களிற் கூறப்பட்ட சொற்களின் படியே, சாத்தினன் - இட்டு அருச்சித்தான்; (எ - று.)

வேதம் ஆகமம் என்ற இரண்டனுள், வேதம் பல தேவர் களுக்குப் பொதுவும் ஆகமம் சிவபிரானுக்குச் சிறப்பும் ஆதலாலும், ஆகமம் சிவபிரானால் அருளிச்செய்யப்பட்டதாகிச் சிவனைத் தியா னித்தல் பூசித்தல் முதலியவற்றின் முறைமைகளை வெளியிடுவ தாதலாலும், 'சிவாகமம்' எனப்பட்டது. இவ்வாகமம், இருபத் தெட்டாம். நன்மலர்-வாடாதமலர், கொன்றைமுதலிய சிவனுக் குரிய மலர். முன்னர்ப் பாசுபதம்பெறத் தவஞ்செய்யும்பொருட்டுச் செல்லுமுன் ஸ்ரீவேதவியாசரிடம் சிவபிரானுக்குரிய மந்திரத்தை அருச்சுனன் உபதேசம் பெற்றமை தோன்ற, 'நிகரில் கேள்வியான்' என்றார். மாயன்மேல் மனம்ஒன்றியே - கண்ணனைப் பரமசிவனாகப் பாவித்தே யென்றவாறு. பி - ம்: மலர்கொய்து. ஒன்றுபட்டாகம வுரையின். (334)

197.—பூசைசெய்தபின் அருச்சுனன் கனியுண்டு தேறுதல்.

சாத்தினன்றொழுதுபின்றலைவன்றாண்மலர்த்
தீர்த்தமுங்கனிகளுந்தெவிட்டவுண்டுதன்
காத்திரந்தேறினன்கருத்துந்தேறினன்
பார்த்தன்முற்றவப்பயன்பலித்தவாறரோ.

(இ - ள்.) (அருச்சுனன்), சாத்தினன் - (கண்ணன்மேல் மலர் களை) அணிந்து, தொழுது - நமஸ்கரித்து, பின்-பின்பு, தலைவன் - (எல்லாவுயிர்களுக்கும்) நாயகனான அக்கண்ணனது, தாள் மலர் - திருவடித்தாமரைமலர்களை விளக்கின, தீர்த்தம்உம் - தீர்த்தத்தை யும், கனிகள்உம்-பழங்களையும், தெவிட்ட - அதிக திருப்தியுண்டாம் படி, உண்டு - உட்கொண்டு, தன் காத்திரம் தேறினன் - தனது உடம்பு தெளிந்து, கருத்துஉம் தேறினன் - மனமுந்தெளிந்தான்; பார்த்தன்-அருச்சுனனது, முன் தவம் பயன்-முன்புசெய்த தவத்தின் பலன், பலித்த ஆறு-சித்தித்த விதம், (இதுவாம்); (எ-று.)—அரோ, ஈற்றசை; வியப்புவிளக்கும் இடைச்சொல்லாகக் கொள்ளுதலும் பொருந்தும்.

அரியையேனும் அரனையேனும் ஒருகடவுளைத் தனியேபூசித்தல் உலகத்தில் உள்தாயினும், இப்படிப்பட்ட அபேதமான பாவனை யோடு பூசனைசெய்தல் அரிதாதலின், இதனை வியந்து கூறினார். தாள்மலர்த்தீர்த்தம் - ஸ்ரீபாததீர்த்தம். (335)

198.—ஸ்ரீக்ருஷ்ணன் கருடனைநினைக்க அவன் இவரிருவரையும் ஏந்திச் செல்லுதல்.

போயருநெறியிடைப்புள்ளின்வேந்தனைத்
தூயவனினைத்தலுமவனுந்தோன்றினன்
மாயனைத்தோளினும்வலாரிமைந்தனைச்
சேயதன்கரத்தினுஞ்சேரவேந்தினான்.

(இ - ள்) (அதன்பின்பு), போய் - (அப்பால்) சென்று, அரு நெறியிடை - (செல்லுதற்கு) அரிய வழிநடுவிலே, தூயவன் - பரிசுத்தகுணமுள்ள கண்ணன், புள்ளின் வேந்தனை - பறவைகளுக்கு அரசனான கருடனை, நினைத்தலும் - (திருவுள்ளத்திற்) கருதியமாத்திரத்தில், அவன்உம் - அந்தப்பக்ஷிராசனும், தோன்றினான் - (அங்கு) வந்து, மாயனை - கண்ணனை, தோளின்உம் - (தனது) தோள்களிலும், வலாரி மைந்தனை - இந்திரகுமாரனான அருச்சுனனை, சேய தன் கரத்தின்உம் - சிவந்த தனது கைகளிலும், சேர - ஒருசேர, ஏந்தினான் - வகித்துக்கொண்டான்; (எ - று.)—சேய - குறிப்பெயரெச்சம். பி - ம்; சேயெனக். (336)

199.—க்ருஷ்ணர்ச்சுனருடன் கருடன் கயிலையைக் குறுகுதல்.

நீலமுற்றியமலையிரண்டொடொன்றுபொற்
சீலமுற்றியமலைசெல்வதென்னவே
யாலமுற்றியகளத்தையன்வெள்ளியங்
கோலமுற்றியமலைகுறுகினனரோ.

(இ - ள்.) சீலம் முற்றிய - அழகு மிக்க, பொன் மலை ஒன்று - பொன்மயமானதொரு மலை, நீலம் முற்றிய - நீலநிறம் மிக்க, மலை இரண்டொடு - இரண்டுமலைகளைச் சுமந்துகொண்டு, செல்வது என்ன - பறந்துபோவது போல, (கருடாழ்வான் கிருஷ்ணார்ச்சுனரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு), ஆலம் முற்றிய களத்து ஐயன் - விஷம்மிக்க ஸ்ரீகண்டத்தையுடைய தலைவனான சிவபிரானது, கோலம் முற்றிய - அலங்காரம் மிக்க, வெள்ளி - வெள்ளிமயமான, அம் - அழகிய, மலை - கைலாசபருவதத்தை, குறுகினான் - சமீபித்தான்.

முன்னிரண்டடி - இல்பொருளுவமை. இரண்டுநீலமலைகள் - நீல நிறமுள்ள கண்ணனுக்கும் அருச்சுனனுக்கும், பொன்மலை - பொன்னிறமுள்ள கருடனுக்கும் ஒப்பு எனக் காண்க. (337)

200.—இரண்டுகவிகள் - கருடன் வேகத்தை விளக்கும்.

மாற்றினால்விளங்குபொன்வடிவன்வெஞ்சிறைக்
காற்றினால்விசைபெறக்கழன்றுபோயின
வாற்றினாலறம்புரியம்மையோடொரு
கூற்றினன்வரைபடிகொண்டலேழுமே.

(இ - ள்.) ஆற்றினால் - நல்லநெறியினால், அறம் புரி - தருமங்களைச் செய்த, அம்மையோடு - தலைவியான உமாதேவியோடு, ஒரு கூற்றினன் - ஒருபாகத்தையுடைய பரமசிவனது, வரை - கைலாச மலையிலே, படி - படிந்துள்ள, கொண்டல் ஏழ்உம் - ஏழு மேகங்

களும்,—மாற்றினால் விளங்கு பொன் வடிவன்-உயர்ந்தமாற்றுடன் பிரகாசிக்கிற பொன் போன்ற வடிவத்தையுடைய கருடனது, வெம் சிறை - கொடிய இறகுகளின், காற்றினால்—, விசை பெற - வேகமாக, கழன்று போயின - விலகிச்சென்றன; (எ - று.)

கருடனுக்கு 'ஸ்வர்ணவர்ணன்' என்று ஒரு பெயர். சிவபிரான் இரு நாழிநெல்கொடுக்க அதுகொண்டு உமாதேவி அப்பிரானது விருப்பத்தின்படி முப்பத்திரண்டு தருமங்களையும் நடத்தினளென்பது, கதை. இனி, ஆற்றினால் அறம்புரி - சன்மார்க்கத்தில் நின்று (பரமசிவனைத் திருமணஞ் செய்யும்பொருட்டுத்) தவமியற்றிய என்றுங்கொள்ளலாம். திருக்குறளில் 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தில், அறம் என்பது - இல்லறம், தவம் என்னும் இரண்டுமாத லுணர்க. அம்மை - அம்பா என்னும் வடசொல்லின் திரிபு. அம்மையோடு ஒருகூற்றினன் - அம்பிகைக்குத் தன்வடிவத்தில் இடப்பக்கத்தைக் கொடுத்துத் தான் வலப்பக்கத்தை மாத்திரங் கொண்டு அர்த்தநாரீசுவரனாகியவன். கொண்டல் ஏழ் - சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்கிருதம், துரோணம், காளமுகி, நீலவர்ணம் என்பன. இப்பாட்டு-கருடனது வேகத்தை விளக்கியது. (338)

201. * பறிந்தனகொடுமுடிபலவும்வேரொடு
மறிந்தனசாரலின்மரங்கள்யாவையு
மறிந்தனமயின்முதலானபுள்ளினஞ்
செறிந்தனபணிந்தனசெய்யதாள்களே.

(இ - ள்.) (கருடனுடைய சிறைக்காற்றின் விசையால்), கொடுமுடி பலஉம் - வளைந்துள்ள மலைச்சிகரங்கள்பலவும், வேரொடு பறிந்தன - அடியோடு பறியுண்டன: சாரலின்-மலைச்சாரலிலுள்ள, மரங்கள் யாவைஉம்-எல்லா மரங்களும், மறிந்தன - தலைசாய்ந்தன; மயில் முதல் ஆன புள்இனம்-மயில் முதலிய பறவைக்கூட்டங்கள், அறிந்தன - (கருடன்வருவதை) அறிந்தனவாய், செறிந்தன-திரண்டனவாகி, செய்ய தாள்கள்-அந்தக் (கருடனுடைய) செவ்விய பாதங்களை, பணிந்தன - வணங்கின; (எ-று.) பி-ம்: மரங்களாயின.

202.—கருடன் சிறகுஅசைவினால்தோன்றும் ஓசையின் தன்மை.

பாண்டவசகாயனார்பறவையின்குலத்
தாண்டகையிருசிறகசையுமோதையாற்

---

* இந்தப்பாடலும் அடுத்த பாடலுமாகிய இரண்டுபாடல்கள், யாம்கண்ட ஏட்டுப்பிரதிகளிலெல்லாம் உள்ளன. சென்னை இராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள ஏட்டுப்புத்தகம் இரண்டிலும் இவை உண்டு. மேல்காட்டப்படும் 208 - முதல் 220-வரையிலுமுள்ளசெய்யுள்களும் இவ்வாறே. கோயமுத்தூரைச் சார்ந்ததொருகிராமத்திலுள்ள வித்துவான் ம-ா-ா-ஸ்ரீ முத்து நாயுடு அவர்களுடையகுமாரர் வேணுகோபாலசாமி நாயுடு அவர்களும், அந்தப்பக்கத்துப் பிரதிகள் பலவற்றை ஒத்திட்டுப் பார்த்து இங்ஙனமே தெரிவித்தனர். மதுரைச்சங்கப்பதிப்பிலும் இவையுள்ளன.

காண்டகுசடைமுடிக்காலகாலன்மெய்ப்
பூண்டனபணிகளும்புரண்டுவீழ்ந்தவே.

(இ - ள்,) பாண்டவ(ர்) சகாயன் - பாண்டவர்க்குத்துணைவனாகிய ஸ்ரீக்ருஷ்ணன், ஊர்-ஏறிச்செல்லுகிற, பறவையின்குலத்து ஆண்டகை-பறவைக்குலத்தையெல்லாம் அரசனாகியாளுந்தன்மை வாய்ந்த ஆண்மைக்குணமுள்ள கருடனுடைய, இரு சிறகு-இரண்டு இறக்கைகளும், அசையும்-அசைகின்ற, ஓதையால் - ஓசையினால்,— காண்தகு-காணத்தக்க [அழகிதாகத்தோன்றுகிற], சடைமுடி - சடைமுடியையுடைய, காலகாலன் - யமனுக்கும் யமனான சிவபெருமானுடைய, மெய் - திருமேனியிலே, பூண்டன - ஆபரணமாக அணிந்தனவான, பணிகள்உம் - பாம்புகளும், புரண்டு வீழ்ந்த - (அச்சத்தால்) கீழ் வீழ்ந்துபுரளலாயின; (எ - று.)

காலகாலனென்றவிவரம் :—ஊழ்வினையாற் பதினாறுபிராயம் பெற்ற மிருகண்டுபுத்திரனாகிய மார்க்கண்டேயனென்னும்முனிவன், கூற்றுவன்வந்து காலபாசத்தாற் கட்டியிழுக்குங்காலத்துப் பரமசிவனைச் சரணமடைய, அப்பெருமான் யமனைக் காலாலுதைத்துத்தள்ளி முனிகுமாரனுக்கு என்றும் பதினாறாகத் தீர்க்காயுசு கொடுத்தருளினனென்பதாம். இச்சரித்திரத்தால், அனுபவித்தே தீரவேண்டும் பெருவலியதாகிய ஊழ்வினையையும் தன் அடியார்க்குக்கடக்கச்செய்கிற கடவுளது பேராற்றல் புலப்படும். காலன் - பிராணிகளின் ஆயுட்காலத்தை வரையறுப்பவன். *(340)*

203.—கருடனைக் கண்ட அரமாதர் ஐயுறுதல்.

வரிந்தபைங்கனைகழல்வயினதேயனை
விரிந்தவெண்கிரியரமாதர்மீதுகண்
டெரிந்திடுவச்சிரனிந்தமால்வரைக்
கரிந்திலன்சிறகெனவையமெய்தினார்.

(இ - ள்.) வரிந்த - (காலிற்) கட்டிய, பை - பசுமையான [பசும்பொன்னாலாகிய], கனை - ஒலிக்கின்ற, கழல் - வீரக்கழலையுடைய, வயினதேயனை-கருடனை, விரிந்த வெள் கிரி அரமாதர் - (ஒளி) விளங்குகிற வெள்ளிமயமான கைலாசமலையில்வாழ்கிற தேவமாதர்கள், மீது கண்டு-மேலே [ஆகாயத்திலே] பார்த்து, 'எரிந்திடு வச்சிரன் - விளங்குகிற வச்சிராயுதத்தையுடைய தேவேந்திரன், இந்த மால் வரைக்கு - இந்தப் பெரிய மலைக்கு, சிறகு அரிந்திலன் - இறகுகளை அறுத்தானில்லைபோலும்', என - என்று, ஐயம் எய்தினார் - சங்கைகொண்டார்கள்; (எ - று.)

'இந்த மால்வரை' என்றது, கருடனது பெருவடிவத்தை. கருடனைச்சிறகறுபடாத மலையோ வென்று ஐயமுற்றதனால், **ஐயவணி.** அரமாதர்-அமரமாதர் அல்லது அரம்பைமாதர் என்பதன் விகாரம்.

204.—கைலாயவருணனை.

நிறைமதிநிகரெனநிறத்தவெள்ளியம்
பொறைமலைதிசைதொறும்பொழியும்வாணிலா

நறைமலரிதழிசேர்நாதன்வார்சடைப்
பிறைமதிநிலவினும்பிறங்கவீசுமால்.

(இ-ள்.) நிறை மதி நிகர் என - (கலைகள்) நிறைந்த [பூர்ண] சந்திரன் ஒப்பு என்னும்படி, நிறத்த - வெண்ணிறத்தையுடைய, வெள்ளி - வெள்ளி மயமான, அம் - அழகிய, பொறை மலை - (பூமியைத்) தாங்குவதான கைலாசகிரி, திசைதொறுஉம் - எல்லாத் திக்குக்களிலும், பொழியும் - சொரிகிற, வாள் நிலா - பிரகாசமான வெள்ளொளி, நறை - தேனையுடைய, இதழி மலர் - கொன்றைப்பூ, சேர் - பொருந்தின, நாதன் - தலைவனான சிவபிரானது, வார்சடை - நீண்ட சடையிலுள்ள, பிறை மதி-இளஞ்சந்திரனது, நிலவின்உம் - நிலாவொளியைக் காட்டிலும், பிறங்க-மிக்குவிளங்க, வீசும்-பரவும்; (எ-று.)—ஆல் - ஈற்றசை.

பிறைச்சந்திரன் நிலவினும் கைலாயத்தின்வெள்ளொளி மிக்க தென்பதாம். மலை பூமியைத் தாங்குவதாதலை, **பூதரம்** என்ற பெயரினாலும் அறிக. (342)

205.—அங்கு யாழிசை, வந்த விடாயைப் போக்குவதாகை.

நீரறுதருக்களுந்தழைக்கநின்றுமுன்
னாரதன்முதலியோர்நவிற்றுநாதயாழ்
பாரதவமர்புரிபச்சைமாமுகி
லாரதர்விடாயைவந்தாற்றுகின்றதால்.

(இ-ள்.) நீர் அறு தருக்கள்உம் - ஈரம் வற்றிய மரங்களும், தழைக்க - செழிக்கும்படி, முன் நின்று - (சிவபிரானது) முன்னே நின்றுகொண்டு, நாரதன் முதலியோர் - நாரதமுனிவன் முதலானவர்கள், நவிற்று - பாடுகிற, யாழ் நாதம் - வீணையின் இசை,— பாரதம் அமர் புரி-பாரதயுத்தத்தை நடத்துகிற, பச்சை மா முகில்- பசுநிறமுள்ள பெரியமேகம்போன்ற கிருஷ்ண அருச்சுனரது, ஆர் அதர் விடாயை-(செல்லுதற்கு) அரிய நெடுவழியில் வந்ததாலாகிய இளைப்பை, வந்து ஆற்றுகின்றது - (அருகில்) வந்து தணிக்கின்றது;

சங்கீத சாஸ்திரலக்ஷணத்துக்குச் சிறிதுந் தவறாத மிக இனிய இசைப்பாட்டைக் கேட்டமாத்திரத்தில் பட்டுப்போன மரங்களும் தளிர்த்துப்பூத்துக் காய்த்துப் பழுத்துச் செழிக்குமென்றல் மரபாதலால், 'நீரறுதருக்களுந்தழைக்க நவிற்று நாதயாழ்' எனப்பட்டது; "கலைத்தொழில்பட வெழீஇப்பாடினாள் கனிந்து, இலைப்பொழில் குரங்கின வீன்ற தாண் தளிர்" என்ற சிந்தாமணியையுங் காண்க. நாரதன் - தேவமுனி; பிரமனது குமாரன்; நரம் - மனிதர், அவர்களுள் உள்ள ஒற்றுமை - நாரம்: அதனை, தன்-(கலகத்தாற்) கெடுப்பவன் என்றுவது, நாரம் - ஆத்மசம்பந்தமான ஞானம்: அதனை, தன்-(பிறர்க்கு உபதேசத்தாற்) கொடுப்பவன் என்றுவது காரணப் பொருள். முகில் - உவமவாகுபெயர். (343)

206.—ஆங்கு வீசுங் காற்றின் தன்மை.

சங்கரன்மணிவரைச்சாரன்மாருதந்
திங்களினிலவுமிழ்செக்கர்வேணிமேற்

கொங்கவிழ்செழுமலர்க்கொன்றைவாசமுங்
கங்கைநுண்டுவலையுங்கலந்துவீசுமால்.

(இ-ள்.) சங்கரன் - சிவபிரானது, மணி - அழகிய, வரை - கைலாசகிரியின், சாரல்-பக்கங்களிலே (வீசுகிற), மாருதம்-காற்று,- திங்களின் நிலவு உமிழ் - சந்திரனது நிலாவைச் சொரிகிற, செக்கர் வேணி மேல் - செந்நிறமுள்ள (சிவபிரானது) சடையின்மேல் (தரித்த), கொங்கு அவிழ் - வாசனை வீசுகிற, செழு - செழிப்பான, கொன்றை மலர் - கொன்றைப்பூவின், வாசம்உம் - பரிமளத்தையும், கங்கை நுண் துவலைஉம்-(அச்சடையிலுள்ள) கங்காநதியின் சிறிய நீர்த்துளிகளையும், கலந்து வீசும் - ஒருங்கு வெளிவீசும். **(344)**

207.—அரவங்களின் மாணிக்கவொளி.

அங்குளவிடரகத்தநேகமாயிரம்
பொங்கழலுமிழ்விழிப்புயங்கமாமணி
யெங்கணுமிருளறவிலங்குசோதியாற்
கங்குலும்பகலவன்கரங்கள்காட்டுமால்.

(இ-ள்.) அங்கு உள - அவ்விடத்திலுள்ள, விடர் - மலை வெடிப்புக்களின், அகத்து-உள்ளேயிருக்கிற, அநேகம் ஆயிரம்-பல ஆயிரக்கணக்கான, பொங்கு அழல் உமிழ் விழி புயங்கம் - மிக்க கோபாக்கினியைச் சொரிகிற கண்களையுடைய நாகங்களின், மா மணி-சிறந்த மாணிக்கங்கள்,—எங்கண்உம் இருள் அற-எவ்விடத்திலும் இருள் நீங்கும்படி, இலங்கு - விளங்குகிற, சோதியால் - ஒளியினால்,—கங்குல்உம்-அந்த இராப்பொழுதிலும், பகலவன் கரங்கள் காட்டும் - சூரியனது கிரணங்கள்போலத் தோன்றும்; (எ-று.)

ஆங்குள்ள சிறந்தசாதிப்பாம்புகளின் மாணிக்கங்களுடைய ஒளியால் எங்கும் இருள்நீங்கிப் பகல்போல்விளங்கிற்றென்பதாம்.

208.—நந்தி ஸ்ரீ க்ருஷ்ணன்வருகையைத் தெரிவிக்க, சிவபெருமான் நன்றென்றுவந்து எதிர்போந்து தழுவுதல்.

செந்திருமடமயிற்கேள்வன்சென்றமை
யந்திவானிறத்தவனறிந்துமுன்னமே
நந்தியுமுரைசெயக்கேட்டுநன்றெனப்
புந்தியான்மகிழ்ந்தெதிர்போந்துபுல்லினான்.

(இ-ள்.) செந் திரு மடமயில்-செவ்விய திருவென்னும் பேரையுடைய மடப்பமுள்ள மயில்போலுஞ்சாயலையுடைய இலக்குமிக்கு, கேள்வன் - கணவனாகிய ஸ்ரீ க்ருஷ்ணன், சென்றமை - வந்துள்ள செய்தியை,—அந்திவான் நிறத்தவன் - செவ்வானம்போலுந் திருமேனியையுடைய சிவபெருமான்,—முன்னம்ஏ அறிந்துஉம் - முன்னமே அறிந்திருந்தும், நந்திஉம் உரைசெய - நந்திதேவரும் திருமுன் வந்து தெரிவிக்க, கேட்டு—, நன்று என புந்தியால் மகிழ்ந்து - நன்றென்று மனத்தினாற் சந்தோஷித்து, எதிர் போந்து - எதிர்கொண்டு, புல்லினான் - (அப்பிரானைத்) தழுவினான்; (எ-று.)— செல்லுதல் - தன்னிடத்தினின்று நடத்தல்.

திருமால் கண்ணனாகத் திருவவதரித்தபொழுது திருமகள் உருக்குமணிப்பிராட்டியாகத் தோன்றினளென்று புராணங்கூறும். 'அந்திவண்ணன்' என்று சிவபிரானுக்கு ஒரு திருநாமம். நந்தி - சிவனைச்சூழ்ந்து நிற்கிற அடியவர் கூட்டமாகிய பிரமதகணங்களுக்குத்தலைவர்; திருவாயில்காப்பவரும், சிலசமயங்களில் வாகனமுமாய் நிற்பவர்.

முன்பு அச்சிட்டுள்ள பிரதியில் இங்கு, "செந்திருமடமயில்" (208) என்ற இந்தப் பாடலுக்குப் பதிலாகக் காணப்படும் பாடல் வருமாறு:—

[* (1) செந்திருமடமயில்கேள்வன்சென்றுசெவ்
வந்திவானிறத்தினனருள்செய்வாய்மையா
னந்தியுள்விடுத்திடநரன்றனோடுதன்
புந்தியின்மகிழ்ந்துமந்திரத்துட்போயினான்.

(இ - ள்.) இளமையான மயில்போன்ற சாயலையுடையசெந்நிறமுள்ள இலக்குமிக்குக் கணவனான கண்ணன், அருச்சுனனுடனே (அந்தக்கைலாசகிரியிற்) சேர்ந்து, மாலைப்பொழுதிற் காணப்படுகிற செவ்வானம்போன்ற செந்நிறமுடைய சிவபிரான் கருணையோடு கூறிய கட்டளைமொழியின்படி (அச்சிவபிரானது வாயில்காவலராகிய) திருநந்திதேவர் உள்ளே அனுப்ப, (தனது) மனத்தில் மகிழ்ச்சிகொண்டு, ஆலயத்தினுட் சென்றான்; (எ - று.)] (346)

† 209—திருமாலை ஓராசனத்திருத்தி, அப்பிரானுடைய திருவவதாரம் முதலியவற்றைக்குறித்துச் சிவபெருமான் வினவுதல்.

ஆங்கொராசனத்திடையிருத்தியையனைப்
பாங்கினல்வினவினன்பவளமேனியான்
ஈங்கிவன்பிறந்ததுமிளைத்தபார்மகள்
தீங்கறப்புரிதருஞ்செயலுமியாவுமே.

(இ - ள்.) ஆங்கு-அங்கே, ஐயனை-தலைவனான ஸ்ரீக்ருஷ்ணனை, பவளம் மேனியான் - பவழம்போற் செந்நிறத்தவனான சிவபெருமான்,—ஓர் ஆசனத்து இருத்தி - ஓராசனத்திலே வீற்றிருக்குமாறு செய்து, ஈங்கு - இங்கே [இவ்வுலகத்திலே], இவன் பிறந்தது

* இதுவும் இன்னும் 10-பாடல்களும் இந்தச்சருக்கத்தில் 220-ஆம் பாடலுக்குள் முன்பு அச்சிட்டபிரதிகளில் மாத்திரம்உள்ளன. ஏட்டுப்பிரதிகளுள் எதிலுமில்லை. இவை முறையே இலக்கமிட்டு இந்த [] இருதலைப்பகரத்தினுள் பொழிப்புரை முதலியவற்றோடு காட்டப்படும். ஏட்டுப்பிரதியிலுள்ளனவே இந்தப்பதிப்பிற் பிரதானமாகக் கொள்ளப்பட்டன.

† இதுமுதல் 220-வரையிலுமுள்ள பாடல்கள் இங்குக்காட்டிய முறைப்படியே ஏட்டுப்பிரதிகளிலெல்லாம் உள்ளன: அச்சிட்ட சங்கப்பிரதியிலும் உள்ளன. இவற்றுள் 212, 213-இலக்கங்களிலுள்ள இரண்டுபாடல்கள்தவிர, மற்றவை மற்றை அச்சிட்ட பிரதியில் இல்லை.

உம்-இந்தத் திருமால்க்ருஷ்ணனாகத்திருவவதரித்ததும், இளைத்த-(பலதுஷ்டவரசரையும் அசுரரையும் சுமப்பதனால்) இளைப்படைந்த, பார்மகள்-பூமிதேவியின், தீங்கு-தீமை [சுமை], அற-நீங்குமாறு, புரிதரு-செய்துவருகின்ற, செயல்உம் - செய்கையும் ஆகிய, யாஉம் - எல்லாச் செய்கையையும், பாங்கினால் - பாங்காக [ஆர்வமோடு], வினாவினான் - கேட்டான் ; (எ - று.) (347)

210.—ஸ்ரீக்ருஷ்ணன் தான் செய்ததையெல்லாம் சொல்லியபின், சிவபெருமான் அருச்சுனனை வரவேற்க, அக்கடவுளை அருச்சுனன் பணிதல்.

கேசவன்புரிவெலாங்கிரீசனென்னுமத்
தேசவன்தெளிவுறச்செப்பிவிட்டபின்
வாசவன்புதல்வனைவருகவென்றலும்
பாசவன்புடனவன்பணிந்துபோற்றினான்.

(இ - ள்.) கேசவன் - கேசியென்னும் அசுரனைக் கொன்றவனாகிய க்ருஷ்ணன், புரிவு எலாம் - (தான்) செய்த செயல்களையெல்லாம், கிரீசன் என்னும் அ தேசவன்-கிரீசனென்று திருநாமம்பூண்ட ஒளியுள்ள அந்தக்கடவுள், தெளிவுஉற-நன்குதெளியும்படி, (செவ்வனே), செப்பிவிட்டபின்-சொல்லி முடித்தபின்பு,—(அச்சிவபெருமான்),—வாசவன்புதல்வனை - இந்திரனுக்குப் புதல்வனான அருச்சுனனைப்பார்த்து, வருக என்றலும் - 'வருவாயாக' என்று வரவேற்றலும்,—அவன்-அந்த அருச்சுனன், பாசம்-மனத்தைப் பிணித்தலையுடைய, அன்புடன்-அன்போடு [பக்தியோடு], பணிந்து(அந்தச் சிவபெருமானை)வணங்கி, போற்றினான் - வாழ்த்தினான் ; (எ-று.)

கிரீசன் என்ற வடசொல் - மலையிலிருக்குந் தலைவனென்று காரணப்பொருள்படும். அன்பு பற்றுதலை யுண்டாக்குதலால், 'பாசவன்பு' என்றார்.

[(2) புரநகையாலெரிபுராரிதன்முன
நரனொடுநாரணனனுகியன்பினாற்
சரணபங்கயமுறத்தாழ்ந்துபன்முறை
கரனுறமுகிழ்த்திதுகழறன்மேயினார்.

(இ - ள்.) திரிபுரத்தை சிரிப்பினால் எரித்திட்ட சிவபிரானது முன்னிலையில் [சந்நிதானத்தில்] அருச்சுனனும் கிருஷ்ணனும் சேர்ந்து, அன்பினால் (அப்பிரானது) திருவடித் தாமரைகளில் நன்றாக நமஸ்கரித்து, கைகளைச் செவ்வையாகக் கூப்பிக்கொண்டு, அநேகமுறை இவ்வார்த்தையைச் சொல்லத்தொடங்கினார்கள் ; (எ - று.)—அதனை மேற்காண்க. இதன்பின் "பொங்கரா" (212) என்றும் "விண்ணிடைத்திரிபுரம்" (213) என்றும் தொடங்குகிற பாடல்கள் முன்பு அச்சிட்டுள்ள பிரதிகளில் உள்ளன. அவற்றை, (3) (4) பாடல்களாகக்கொள்க. (348)

211.—தான் முன்பு கண்ணன்மேல் அணிந்த மலர்களைச் சிவபிரான்மீது காணலும் அருச்சுனன் இருவர்க்கும் பேதமில்லையென்று உடற்புளகமுண்டாகப்பெறுதல்.

கண்ணன்மேலணிமலரனைத்துங்காய்கனல்
வண்ணன்மேற்கண்டலுமனங்களிப்புறு

வெண்ணின்மேலிரண்டெனவிலதென்றவ்விற
லண்ணன்மேனியும்புளகரும்பினனரோ- *

(இ-ள்.) கண்ணன்மேல் அணி - (தான் முன்பு) க்ருஷ்ணன் மேற் சாத்தின, மலர் அனைத்துஉம் - மலர்களையெல்லாம், காய் கனல் வண்ணன் மேல் - எரிக்குந்தன்மையுள்ள அக்கினிபோன்ற செந்நிறமுடைய சிவபெருமான்மீது, காண்டலும்-கண்டவுடனே,— அ விறல் அண்ணல்-வெற்றி பொருந்திய பெருமையிற் சிறந்த அந்த அருச்சுனன், மனம் களிப்பு உறு - மனமகிழ்ச்சியடைந்து, 'மேல் எண்ணில் - மேலே [நன்றாக] ஆலோசிக்குமிடத்து, இரண்டு - இரண்டு பொருள் (உள்ளன), என-என்று சொல்லுமாறு, இலது- இல்லை,' என்று - என்றுகருதி, மேனிஉம் - தன்னுடல்முழுதும், (அப்பெருங்களிப்பினால்), புளகு அரும்பினன்-மயிர்க்கூச்செறியப் பெற்றான்; (எ-று.)

உலகத்துப் பரம்பொருள் ஒன்றே பலபடியாகத் தோன்றுவ தென்று உணர்ந்தனனென்றவாறு. இங்குச்சிவனது மகிமையைக் கூறு மிடமாதலால், அதற்கு ஏற்ப, இக்கவி இங்ஙனம் எழுதின ரென்பர். சிவனை யருச்சிக்கவிரும்பிய அருச்சுனன் கண்ணன் கட்டளைப்படி அப்பிரானது திருவடிகளிலே யிட்ட மலர்கள் பின்பு பரமசிவனது முடியின்மேல் காணப்பட, அதுகண்டு பார்த்தன் பர தத்துவமுணர்ந்தனனென இவ்வரலாறு வைஷ்ணவசம்பிரதாயத் திற் சிறிது வேறுபாடாக் கூறப்படும்; "தீர்த்தனுலகளந்த சேவடி மேற் பூந்தாமஞ், சேர்த்தி யவையே சிவன்முடிமேல் தான் கண்டு, பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை, பேர்த்து மொருவராற் பேசக் கிடந்ததே" என்ற திருவாய்மொழியைக் காண்க. (349)

212.—நான்குகவிகள் - அருச்சுனன் செய்யும் சிவஸ்தோத்திரம்.

பொங்கராவெயின்மணிப்பூணும்பேணுநீற்
றங்கராகமுமுவந்தணியுமேனியாய்
சங்கராமேருவெஞ்சாபம்வாங்கிய
செங்கராசிவசிவதேவதேவனே.

(இ-ள்.) பொங்கு-விளங்குகிற, அரா-நாகங்களாகிய, வெயில் மணி பூண் உம் - சூரியகாந்திபோலச் செந்நிறமாய்விளங்குகிற மாணிக்கத்தையுடைய ஆபரணங்களையும், பேணும் - விரும்பப் படுகிற, நீறு - விபூதியாகிய, அங்கராகம்உம் - உடற்பூச்சையும், உவந்து அணியும்-மகிழ்ச்சியோடு தரித்த, மேனியாய்-திருமேனியை யுடையவனே! சங்கரா—! மேரு - மேருமலையாகிய, வெம் சாபம் - கொடிய வில்லை, வாங்கிய-வளைத்த, செம் கரா-சிவந்த திருக்கையை யுடையவனே! சிவ சிவ—! தேவ தேவனே-எல்லாத்தேவர்களுக்கும் ஆதிதேவனாக வுள்ளவனே! (எ-று.) (350)

213. விண்ணிடைத்திரிபுரம்வெந்துநீறெழப்
பண்ணுடைச்செந்தழல்பரப்புமூரலாய்

* இந்தப்பாடல் முன்பு அச்சிட்டபிரதிகளில் சிறிது பாட பேதத்துடன் காணப்படுகிறது: அது (8) ஆவது பாடலாக மேலே காட்டப்படும்.

எண்ணுடைக்காமனையெரித்தபேரழற்
கண்ணுடைக்கடவுளேகாலகாலனே.

(இ - ள்.) விண்ணிடை - அந்தரத்திலே, திரி புரம் - மூன்று பட்டணம், வெந்து-எரிபட்டு, நீறு எழ-சாம்பலாய் மேலெழும்படி, பண் உடை - செய்யுந்தன்மையையுடைய, செம் தழல் பரப்பும் மூரலாய் - சிவந்த நெருப்பை வெளிவிட்ட புன்சிரிப்பையுடையவனே! எண் உடை - (யாவர்) மனத்தையும் (இடமாக) உடைய, காமனை - மன்மதனை, எரித்த - கொளுத்திய, பேர் அழல் கண்-பெரிய தீயின் வடிவமான நெற்றிக்கண்ணை, உடை - உடைய, கடவுளே—! காலகாலனே-யமனுக்கு யமனானவனே! (எ - று.)

[(5) தருவதுமுயிரெலாங்காக்குந்தன்மையு
முருவறவொழித்தலுமுன்றனுடலே
கருவராதொழிந்தவர்கருத்திற்கண்டுதே
ருருவனேயெம்மனோர்க்குரைக்கற்பாலையோ.

(இ - ள்.) எல்லாச்சீவன்களையும் படைப்பதும், பாதுகாக்கிற இயல்பும், வடிவமில்லாதபடி [அடியோடு] அழித்துவிடுதலும், உனது திருவிளையாட்டேயாம்; (மீண்டும்) கருப்பத்தில் வராதபடி பிறப்புத்துன்பத்தை நீங்கின முக்தர்கள் மனத்திலே தரிசித்து [ஞானத்தினலறிந்து] தெளியும்படியான ஏகமூர்த்தியே! எங்களைப் போன்றவர்களுக்கு (நீ) புகழ்ந்துசொல்லுந் தரமுடையையோ? [அல்லையென்றபடி]; (எ -று .)

(6) நித்தனேநிமலனேநிகழ்நின்னமனே
யத்தனேயடியவர்க்கெளியவண்ணலே
பித்தனேயாதியந்தங்கள்பேசொணு
முத்தனேயுயிர்தொறுமுலாயமுன்பனே.

(இ - ள்.) முக்காலத்திலும் ஒரேவிதமாகவுள்ளவனே! ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களின் தொடர்ச்சியில்லாதவனே! விளங்குகிற நிர்நாமனாக வுள்ளவனே! தலைவனே! அடியவர்க்கு எளிய அண்ணலே! பித்துடையவனே! முதலும் இறுதியும் சொல்லமுடியாத முத்தியுலகத்துக்கு உரியவனே! எல்லாவுயிர்களிடத்தும் பொருந்திய முதல்வனே! (எ - று.)

நின்னமன் - நிர்நாமன் என்ற வடசொல் திரிந்தது; அதற்கு - பேரில்லாதவனென்று பொருள். வியவகாரநிலையில் கடவுளுக்கு அநந்தமான திருநாமங்கள் உளவாயினும், தத்துவநிலையில் ஏற்றதொரு திருநாமமும் இல்லை யென்பதுகொள்கை; "ஊரும் பேருமுருவு மில்லான்" என்றதுங்காண்க. வில்லாலும் கல்லாலும் பிரம்பாலும் செருப்பாலும் அடியும் உதையும் படுதல் மண்சுமத்தல் விறகுவிற்றல் முதலிய இழிதொழில்களை அடியார்பொருட்டுச் செய்ததனால், கடவுள் அடியவர்க்கு எளியவனாதல் அறிக; "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்" என நடராசப்பெருமான் தன்னைத் தானே குறித்தவாறுங்காண்க. அப்பிரானது சௌலப்பியத்தோடு பரத்துவமுந்தோன்ற, 'அடியவர்க்கு எளிய அண்ணலே' என்றார். பித்து - ஆசைமிகுதி; அதனை அடியார்களிடத்தும்,

அம்பிகையினிடத்தும் உடைமையால், பித்தனெனப்பெயர்; தோலுடுத்தல், ஆடையின்றிநிற்றல், எலும்பணிதல், பெண்சுமத்தல், கூத்தாடுதல் முதலியவற்ருல் பித்தகுணமுள்ளவன்போலக் காணப்படுபவ னென்றுமாம்.

(7) என்றுபற்பலவுரையெடுத்துக்கூறியே
நின்றுளநெக்குநெக்குருகிநேயமோ
டொன்றுகண்ணருவிகளுகுத்தனேக்கியே
யன்றுமாபதியவர்க்கருள்செய்தானரோ.

(இ - ள்.) என்று இவ்விதமாகப் பல பல துதிமொழிகளை எடுத்துச்சொல்லி, (கண்ணனும் அருச்சுனனும் அருகில்) நின்றுகொண்டு, மனம் மிகநெகிழ்ந்து கரைந்து, பக்தியுடனே பொருந்தின ஆனந்தக்கண்ணீர்ப் பெருக்குக்களைச் சொரிதலைப் பார்த்து, அப்பொழுது, பார்வதிகொழுநனான பரமசிவன் அவர்களுக்குப்பிரசந்நனுனன்; (எ - று.)—கட்புலனுகத் தரிசனந்தந்தருளினனென்பதாம்.

* (8) கண்ணன்மேலணிமலரனைத்துங்காயெரி
வண்ணன்மேற்காண்டலுமகிழ்ந்துமேதினி
யுண்ணுமாதவன்சிவனுருவமென்றுணர்ந்
தண்ணலுமுடல்புளகரும்பினனரோ.

(இ - ள்.) (அங்ஙனம் பிரதியக்ஷமானபொழுது முன்பு தான்) கிருஷ்ணன்மேற்சாத்தின மலர்களையெல்லாம் சொலிக்கிற அக்கினி போன்ற செந்நிறமுடைய சிவபிரான்மேல் பார்த்தவளவிலே, சிறந்தவீரனான அருச்சுனனும் மகிழ்ச்சிகொண்டு, உலகத்தை உட்கொள்ளுகிற திருமால் சிவனது வடிவமென்று அறிந்து உடம்பில் மயிர்ச்சிலிர்ப்பு உண்டாகப்பெற்றுன்; (எ - று.)

(9) இமையநல்வரையினிதீன்றகன்னிகை
யுமையவள்கணவனெவ்வுயிர்க்குநாயகன்
சமைவுறத்துதித்திடுமடியர்தம்முக
மமைவுறுதிருவுளத்தருளினேக்கியே.

(இ - ள்.) சிறந்த இமயமலை இனிமையாகப் பெற்ற இளமகளாகிய உமாதேவிக்கு நாயகனும், எல்லாவுயிர்களுக்குந் தலைவனுமான சிவபிரான்,—பொருத்தமாகத் தோத்திரஞ்செய்கிற (தனது) பக்தர்களாகிய கிருஷ்ணர்ச்சுனரது முகங்களைச் சாந்தமான (தன்) மனத்தில் மிக்க கருணையோடுபார்த்து,—(எ - று.)—'வேண்டுவது என் என' என்று மேற்கவியோடு தொடரும்.

தக்ஷப்பிரஜாபதியினிடம் மகளாகப் பிறந்து தாக்ஷாயணியென்றும் சதியென்றும் பெயர்கூறச் சிறந்து வீற்றிருந்த அம்பிகை, பின்னொருகாலத்தில் சிவாபராதியான அம்முனிவனதுசம்பந்தமான பேரோடும் உடம்போடும் உய்ந்திருக்க மனமியலாமல், சிவபிரான்

* இந்தப்பாடல் சிறிதுபாடபேதத்துடன் ஏட்டுப்பிரதிகளில் 211-ஆம் பாடலாக உள்ளது.

கட்டளையிட்டபடியே, அவ்வுடம்பை யொழித்துத் தன்னை மகளாகப்பெறும்பொருட்டுப் பலநாளாகத்தவம்புரிந்துவருகிற மலையரசனாகிய இமவானினது எண்ணம் ஈடேறும்படி தான் ஒரு அழகிய சிறு பெண்குழந்தைவடிவமாய் அவனெதிரில் அம்மலையில் ஒரு தடாகத்தில் தாமரைமலரொன்றின்மேல் தங்கியிருக்க, அப்பர்வதராசன் அக்குழந்தையைக் கண்டு மகிழ்ந்து எடுத்துச்சென்று மனைவியாகிய மேனையினிடம் கொடுத்து வளர்த்துவர, அப்பார்வதியைப் பரமசிவன் திருமணஞ்செய்துகொண்டன னென்பது கதை.

* (10) வேண்டுவதென்னெனவிண்டுதாழ்ந்தெழீஇப்
பூண்டருள்கருணையம்புனிதவிங்கிவ
னுண்டருள்படைகளாலவுணர்க்காய்ந்தன
னீண்டுநல்குதிவிறலெய்தும் வண்ணமே.

(இ-ள்.) '(நீங்கள்) விரும்புவது யாது?' என்றுவினவ, விஷ்ணுவாகிய கண்ணன், நமஸ்கரித்து எழுந்து, ஆபரணமாகக் கொண்டருளிய திருவருளையுடைய அழகிய பரிசுத்தமூர்த்தியே! இங்குள்ள இவ்வருச்சுனன் (நீ) அப்பொழுது கொடுத்தருளிய (பாசுபதம் முதலிய) ஆயுதங்களால் (நிவாதகவசர் முதலிய) அசுரர்களை அழித்திட்டான்; இப்பொழுது, (சயத்திரதனைக் கொன்று) வெற்றியடையும்படி (இவனுக்குப் படைக்கலம்) கொடுத்தருள்வாய்; (எ - று.)—இப்பாட்டில் 'விண்டு தாழ்ந்தெழீஇ' என்றது, அடுத்தபாட்டில், 'என்று சொற்றனன்' என்பதனோடு முடியும்.

* (11) தானவர்ப் பொருபடை கொண்டு தாரணி
மானவர்ப் பொருவது வழக்கன் றுதலாற்
கூனல்விற் கணையொடு குறைவு றுததோர்
தூநிறத் தடமருள் கென்று சொற்றனன்.

(இ-ள்.) அசுரர்களைப்போர்செய்து அழித்த அவ்வாயுதங்களால் பூமியிலுள்ளமனிதர்களைப் போர்செய்து அழிப்பது, முறைமையன்று: ஆதலால், (மனிதரை அழித்தற்கு வேறு) வளைந்த சிறந்த வில்லும் அம்பும் குறைவுபடாததான ஒரு பரிசுத்தமான தன்மையையுடைய தடாகத்தை அளித்தருள்வாய் என்று கூறினார்; (எ - று.)—முன்பு ஒருகாலத்தில் பரமசிவன் தேவர்க்குப் பகைவரானார் யாவரையும் பொருது அழித்து அவ்வில்லையும் அம்பையும் அமிருதசரசில்வைத்திட்டனனென்பது, வரலாறு.] (351)

† 214. கையுறுசிலையுடன்கானவேடனென்
னையுறவந்துடனணுகியென்னுடன்
மெய்யுறவமர்புரிவினைநாடொறு
மையுறுகண்டனேமறப்பதில்லையே.

* இச்செய்யுள்கள் சிறிது பாடபேதத்துடன் ஏட்டுப்பிரதிகளில் 217, 218-ஆம் பாடல்களாக உள்ளன.

† குறிப்பு:—இதுமுதல் 220-வரையிலுள்ள பாடல்கள் முன்பு ஏட்டுப் பிரதிகளிலும் சங்கப்பதிப்பிலும் மாத்திரமே கண்டவை; அச்சிட்டுள்ள பிரதிகளில் இல்லை.

(இ - ள்.) ஐயுற - (உனது பராக்கிரமத்தைக் கண்டு யான் திகைத்துச்) சந்தேகிக்குமாறு, உடன் - உடனே [விரைவாக], கை உறு சிலையுடன் - கையிலேபொருந்திய வில்லுடனே, கானம் வேடன் என்று - காட்டிலேதிரிகின்ற வேடனுருவத்தைக்கொண்டு, வந்து—, அணுகி-(என்னைச்)சமீபித்து, என்னுடன்-என்னுடனே, மெய்உற - உண்மையாக, அமர் புரி - போர்புரிந்த, விநோத - விநோதச்செயலையுடையவனே! மைஉறு கண்டனே-(நஞ்சுண்டதனால்) கறுத்த கண்டத்தையுடையவனே! நாள்தொறுஉம் - ஒருநாளும், (நான் உன்னை), மறப்பது இல்லை—; (எ - று.) (352)

215. உமையவள்கணவனேயுகாந்தகாலனே
யிமையவில்வீரனேயென்றுகொண்டிவ
னமையுறத்துதித்தலினவனுமற்றிவன்
சமைவுகண்டையனோடுவகைசாற்றினான்.

(இ - ள்.) உமையவள் கணவனே—! யுகாந்தகாலனே-யுகாந்தகாலத்துக்கு உரியவனே! [சங்காரமூர்த்தியே!] இமையம் வில் வீரனே - மேருமலையை வில்லாகக்கொண்ட வீரனே! என்று—, கொண்டு - (வாயினாற்) சொல்லிக்கொண்டு, இவன் - இந்தஅருச்சுனன், அமைஉற - மனவமைதிதோன்ற [மனவொருமைப்பாட்டோடு என்றபடி], துதித்தலின் - தோத்திரஞ் செய்ததனால், அவன்உம் - அந்தச்சிவபெருமானும், மற்று - பின்பு, இவன் - இந்த அருச்சுனனுடைய, சமைவு கண்டு - சாந்தமான மனநிலைமையைக் கண்டு, ஐயனோடு - தலைவனான ஸ்ரீக்ருஷ்ணனோடு, உவகை-மகிழ்ச்சியோடு, சாற்றினான் - சொல்லலானான்; (எ - று.)—சிவபெருமான் கூறுவதை, அடுத்தகவியிற் காண்க.

மேரு மந்தரம் இமயம் முதலிய மலைகளை அபேதமாகக்கூறுதல் கவி சமயம்; "இமையவில்வாங்கிய வீர்ஞ்சடையந்தணன்" என்ற கலித்தொகையையுங் காண்க. இனி, இமையவில் - இமயமலையில் தோன்றிய மூங்கிலை வில்லாகவுடைய என்று உரைப்பாருமுளர்.

216.—சிவபெருமான் க்ருஷ்ணனைக் கொண்டாடுதல்.

ஆற்றினைதுயர்மயலனைத்துமெய்யுறத்
தேற்றினைசிந்தையைத்தெளிந்தவாய்மையான்
மாற்றினைமும்முறைபிறப்பும்வந்துநின்
கூற்றினையடைதலாற்பிறவிகொள்ளுமே.

(இ - ள்.) துயர் மயல் அனைத்துஉம் - (இவனுக்குஉள்ள) துயரினாலாகிய [புத்திரசோகத்தினாலாகிய] மயக்கத்தையெல்லாம், ஆற்றினை - (இப்போது) தணிப்பித்தாய்; தெளிந்த வாய்மையால் - தெளிவாகவுள்ள (உன்னுடைய) வாய்ச்சொற்களால் [கீதையை யுபதேசித்ததனால்], சிந்தையை - (இவன்) மனத்தை, மெய் உற - உண்மை நன்குபட, தேற்றினை-தெளிவுறச்செய்தாய்: (இவ்வகையினால்), மும்முறை பிறப்புஉம் வந்து-மூன்றுமுறைப் பிறவியிலும் (உன்னுடன்) வந்து, நின் கூற்றினை-உன்னுடைய அமிசத்தை, அடைதலால்-அடைந்திருத்தலினால், (இவன்), பிறவி கொள்ளும்ஏ-பிறவியையடைவனோ? மாற்றினை - (நீ இவன் பிறவியையடையாத

வாறு) மாற்றிவிட்டாய்; (எ - று.)—பி - ம்: துயரமுமறுத்து. மெய்ம்மையான்.

மும்முறைப்பிறப்பில் அருச்சுனன் திருமாலோடுகூடவந்ததனை "நரனும் நாரணனுமானேம்," "பின்னெருபிறப்பின் யாமே யிராம லக்குமப் பேர்பெற்றேம், இந்நெடும்பிறப்பில்நீயும் யானுமாயீண்டு நின்றேம்" என்று முதற்போர்ச்சருக்கத்து வந்ததனுலு முணர்க. கொள்ளுமே, ஏகாரம் - வினவகையால், எதிர்மறைகுறித்தது. உன்னுடைய அமிசம் இவனுக்கு அமைந்திருத்தலினுல், இனி இவனுக்குப்பிறப்பில்லையென்றுனென்க. (354)

217.—'வேண்டுவது யாது?' என்று சிவபெருமான் கேட்க, அருச்சுனன் பகையறுக்கும்படையை வேண்டுதல்.

* வேண்டுவதென்கொல்மற்றென்னவீரனும்
பூண்டதோர்பறையறைந்தன்றிப்போகலேன்
ஆண்டருள்படைகளாலவுணர்க்காய்ந்தனன்
ஈண்டுநல்குதிவிறலெய்தும்வண்ணமே.

(இ - ள்.) மற்று - இனி, வேண்டுவது-விரும்புவது, என்கொல்- யாது? என்ன-என்று வினவ,—வீரன்உம் - வீரனுகிய அருச்சுனனும், பூண்டது - (யான்) மேற்கொண்ட போர்த்தொழிலை, பறை அறைந்து அன்றி - (வென்று) வெற்றிப்பறையை எறிந்தல்லாமல், போகலேன்-இதனினின்று நீங்கேன்: ஆண்டு - (நான் தவம்புரிந்த) அக்காலத்து, அருள் - ( )கருணையோடுதந்த, படைகளால் - ஆயுதங்களினுல், அவுணர் - (நிவாதகவசர்முதலிய) அசுரர்களை, காய்ந்தனன்-கொன்றேன்; ஈண்டு-இப்போது, விறல் எய்தும் வண்ணம்- (நான்) வெற்றியையடையும் வகையை, நல்கு - அருள்புரிவாய்; (எ - று.)—என்று தான் வேண்டுவதை அருச்சுனன் சிவபெருமானிடம் கூறினுன் என்க. வீரனும் என்பதற்கு - ஸ்ரீக்ருஷ்ணனும் என்பாரு முளர். பி - ம்: பூண்டதோர்பகையறுத்தன்றி. விறலெண்ணும். (355)

218.—ஸ்ரீக்ருஷ்ணன் சிவபெருமானை நோக்கிக்கூறுதல்.

* தானவர்ப் பொரும்படை கொண்டு தாரணி
மானவர்ப் பொருவது வழக்கு மல்லவால்
கூனல்விற் கணைகளுங் குறைவுருதஓோர்
தூநிழற் பொய்கையுங் கொடுத்தி தோன்றலே.

நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) 'தோன்றலே - விளங்குபவனே! தானவர் பொரும் படைகொண்டு-அசுரரைக்கொல்லுதற்கு உரியபடையைக்கொண்டு, தாரணி- பூமியிலேயுள்ள, மானவர்-மனிதரை, பொருவது - போர் செய்வது, வழக்குஉம் அல்ல - முறைமையுமன்று: ஆல் - ஆதலால், கூனல் வில் - வளைவுபொருந்திய வில்லிற்பூட்டுதற்குஉரிய, கணைகள்உம் - அம்புகளும், குறைவு உருதது ஓர் தூநிழல் பொய்கை

* இச்செய்யுள்கள் சிறிது பாடபேதத்துடன் (10, 11)-ஆம் பாடல்களாக 211-ஆம் பக்கத்துக் காட்டப்பட்டுள்ளன.

உம்-(எடுக்க எடுக்க அந்தக்கணைகள்) குறைதலில்லாத ஒப்பற்ற பரிசுத்தமான சாயை பொருந்துதலுடைய பொய்கையையும், கொடுத்தி-கொடுப்பாய்,' (எ-று.)—''என்றலும்'' என மேலே தொடரும்.

தெளிவான நீரில் சாயைநன்கு விழுமாதலால், 'தூ நிழற் பொய்கை' என்றது. பி-ம்: தோழநீ. (356)

வேறு.

219.—இரண்டுகவிகள்-ஸ்ரீக்ருஷ்ணனைச் சிவபெருமான் புகழ்தலைக்கூறும்.

என்றலுமீசன கைத்துரை செய்தனன் யானென நீயெனவே
றன்றிவை யாவும ளித்திடு தற்குனை யல்லது வல்லவர்யார்
நின்றதொர் தூணிடை வந்தனை யானைமு னின்றனை கஞ்சனையுங்
கொன்றனை மன்னவை யூடிரி யப்பல கூறைகொ டுத்தனையே.

(இ-ள்.) என்றலும்-என்று (ஸ்ரீக்ருஷ்ணன்) கூறியவுடனே,—ஈசன்-சிவபெருமான், நகைத்து - சிரித்து, உரைசெய்தனன் - (பின் வருமாறு) சொல்லுபவனானான்: யான் என - யானென்றும், நீ என-நீ என்றும், வேறு அன்று - வேறு இல்லை: இவையாஉம்-இப்போது வேண்டிய வில்முதலிய எல்லாவற்றையும், அளித்திடுதற்கு-கொடுத்திடுதற்கு, உனை அல்லது - உன்னையல்லாமல், யார் வல்லவர்—? நின்றது ஓர் தூணிடை-(எதிரிலே) நின்றதாகிய ஒருதூணினிடத்திலே, வந்தனை - (இரணியனைச்சங்கரிக்க) நரசிங்கரூபியாகத்திருவவதரித்தாய்: யானை முன் நின்றனை-('ஆதிமூலமே!' என்று கூவின) யானைக்குமுன்னே (அதனைப் பாதுகாக்குமாறு) வந்து நின்றாய்: கஞ்சனை கொன்றனை - கஞ்சனைக் கொன்றாய்: மன் அவையூடு - இராசசபையிலே, இரிய-(திரௌபதியின் துயரம்) நீங்க, பல கூறை கொடுத்தனை - பல ஆடைகளைச் சுரக்குமாறு அருள்புரிந்தாய்;

இதுமுதற் பதினான்கு கவிகள் - இச்சருக்கத்தின் முதற்கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (357)

220. முன்னுருவாயினைநின் றிருநாபியின்முளரியின்வாழ்முனிவன்
றன்னுருவாகியிருந்துபடைத்தனைபலசகதண்டமுநீ
நின்னுருவாகியளித்திடுகின்றனைநித்தவிபூதியினு
லென்னுருவாகியழிக்கவுநின்றனையெம்பெருமானெனவே.

(இ - ள்.) எம்பெருமான்-எமது பெருமானே! முன்-முதலில், உரு ஆயினை -(உலகத்தையெல்லாம் வெளிப்படுத்தத் திருவுளங்கொண்டு அவ்யக்த ஸ்வரூபியாகிய நீ) உருவமுள்ளவனாகி, நின் திரு நாபியின் - உன்னுடைய திருவுந்தியிலே, முளரியின் வாழ் முனிவன் தன் - தாமரையில் வாழ்பவனாகிய இருடியின் [நான்முகனுடைய], உரு ஆகி இருந்து - உருவத்தையுடையவனாயிருந்து, பல சகத் அண்டம்உம் - பலலோகங்களையும் (தன்னிடத்துக்) கொண்ட அண்டங்களையெல்லாம், நீ—,படைத்தனை-சிருஷ்டித்தாய்: நித்தவிபூதியினால் - நித்தியவிபூதியாகிய ஸ்ரீவைகுண்டத்தில், நின் உரு ஆகி-உன்னுடைய உருவத்தையேகொண்டு [விஷ்ணுரூபத்துடனிருந்து], அளித்திடுகின்றனை - பாதுகாத்தல் தொழிலைச் செய்கின்றாய்: என் உரு ஆகி -

என்னுடைய உருவத்தை [சிவவடிவத்தை] அடைந்தவனுகி, அழிக்கஉம் நின்றனே - அழிப்பதற்கும் நின்றருளினுய்; என - என்று (புகழ்ந்து)—(எ-று.)—"ஆயிடைநின்ற கிரீடியை மூழ்கென" என மேற்கவியோடு இயையும்.

எம்பெருமானுடைய ஸ்ரீவைகுண்டலோகம் என்றும் அழியாது நித்தியமாக இருப்பதாதலால், நித்தியவிபூதியெனப்படும்: அதையொழிந்த இந்த உலகங்களெல்லாம் அப்பெருமானுடைய விளையாடலுக்கு இடனுயிருத்தலால், லீலாவிபூதி யெனப்படும் என்ப.()

221.—அருச்சுனனை அங்கொருபொய்கையில் 'நீராடுக' என்ன, அப் பொய்கையிலே ஒருநாகத்தின் வாயினின்று வில் அம்புகளுடன் ஒருமுனிவன் தோன்றுதல்.

ஆயிடைநின்றகிரீடியைமுக்கணனங்கொருபொய்கையிலே
போயிடைமூழ்கெனவப்புனலூடோர்புயங்கமெழுந்ததன்
வாயிடைவந்தனன்மாணுருவாயொருமாமுனியம்முனியச்
சேயிடைநீரிலெடுத்தனன்மற்றெருருசிலையுடன்வாளியுமே.

(இ - ள்.) (பிறகு), முக்கணன் - மூன்றுதிருக்கண்களையுடைய சிவபிரான், ஆயிடை நின்ற கிரீடியை - அவ்விடத்தில் நின்ற அருச்சுனனை (ப்பார்த்து), அங்கு ஒரு பொய்கையில்போய் இடை மூழ்கு என - அவ்விடத்திலுள்ளதொரு சரசிலே சென்று அதனில் நீராடுவாய் என்று சொல்ல,— (அங்ஙனம் அருச்சுனன் ஸ்நாநஞ்செய்தவளவிலே), அ புனலூடு - அந்தத்தடாகத்தின் நீரினின்று, ஓர் புயங்கம் எழுந்தது - ஒரு நாகம் மேல்வந்தது; அதன் வாயிடை - அதனுடைய வாயிலே, மாண் உரு ஆய் - பிரமசாரிவடிவமாய், ஒரு மா முனி - ஒரு சிறந்த முனிவன், வந்தனன் - தோன்றினுன்; அ முனி - அந்தமுனிவன், அ சேய் இடை நீரில் - நெடுந்தூரம்பரவிய இடத்தையுடைய அந்நீரினின்று, மற்று ஒரு சிலையுடன் வாளிஉம் - வேறொரு வில்லையும் அம்பையும், எடுத்தனன்—; (எ - று.)

சிந்தாமணியுரையில் நச்சினுர்க்கினியர் 'பொய்கை-மாணிடராக் காத நீர்நிலை' என்றதை இங்கே யறிக. மாண் உரு ஆய் - (பிரமதேஜசு விளங்குகிற) சிறந்த வடிவமாய் என்றுமாம். முன் அருச்சுனன் தவநிலைச்சருக்கத்தில் "ஐயனுமம்மையோ டருள்புரிந்து பின், வெய்ய பொற்றூணியும் வில்லுமந்த்ரமுந், துய்ய பாசுபத மெய்த்தொடையு முட்டியும், ஒய்யென நிலையுடனுதவினுனரோ" என்றதை நோக்கி 'மற்றெருருசிலையுடன்வாளியும்' என்ருர். (359)

222.—வந்தமுனிவன் முட்டிநிலைகளைப்பயிற்றி உருத்திரமறை யுபதேசிக்க, அருச்சுனன் பெற்றுக்கொள்ளுதல்.

முப்புரநீறெழுநாளினியற்றியமுட்டியுநன்னிலையு
மப்புரசூதனனேவலினந்தணனமரர்பிரான்மதலைக்
கொப்புறவோடுபயிற்றியிதங்கொடுருத்திரமாமறையுஞ்
செப்பினனுலவைபெற்றனன்வென்றுசெயத்திரதற்றெறுவான்.

(இ - ள்.) மு புரம் - திரிபுரம், நீறு எழும் நாளின் - எரிந்து சாம்பரான காலத்தில், இயற்றிய - (சிவபிரான்) கொண்டருளிய, முட்டிஉம் - கைப்பிடியையும், நல் நிலைஉம் - நல்ல நிற்கும்விதத்தை

யும், அ புரசூதனன் ஏவலின் - திரிபுரமழித்த அந்தப்பரமசிவனது கட்டளையால், அந்தணன்-அம்முனிவன், அமரர் பிரான் மதலைக்கு - தேவராசனான இந்திரனது புத்திரனாகிய அருச்சுனனுக்கு, ஒப்புரவோடு - தகுதியோடு, பயிற்றி - கற்பித்துக்கொடுத்து, இதம்கொடு-(அவனிடத்து) அன்புகொண்டு, உருத்திர மா மறைஉம் - உருத்திரமென்னுஞ் சிறந்தமந்திரத்தையும், செப்பினன் - உபதேசித்தான்; அவை - அவற்றை, (அருச்சுனன்), செயத்திரதன் - சயத்திரதனை, வென்று - சயித்து, தெறுவான் - அழிக்கும்பொருட்டு, பெற்றனன்-பெற்றுக்கொண்டான்; (எ - று.)

'ஒப்புரவோடு' என்ற பாடத்துக்கு - உபகாரமாக என்க. 'இதம் கொடு' என்பதற்கு நன்மைகளைக் கொடுக்கிற என்றும் உரைக்கலாம். வென்றுதெறுவான் = தெற்று வெல்வான்என விகுதி பிரித்துக் கூட்டினுமாம். (360)

223.--பிறகு வேண்டியபோது இவையெய்து மென்றுகூறிச் சிவபெருமான் திருமாலைநோக்கிப் பூமிபாரத்தைத் தீர்த்துச்செல்க எனல்.

யாதொருபோதுநினைத்தனையவ்வழியெய்துமுனக்கிவையென்
றோதியநேகவரங்கள்கொடுத்தபினுமையொருகூறுடையோன்
பூதலமாதிடர்தீரவருஞ்சமர்புரிதொழின்முற்றியபின்
சீதரநின்பதமேவுகவென்றருள்செய்துவிடுத்தனனே.

(இ - ள்.) 'யாது ஒரு போது-எந்தச் சமயத்தில், நினைத்தனை - (நீ இவற்றை) நினைத்தாயோ, அ வழி - அந்தச் சமயத்தில் [அவ்விடத்தில்], உனக்கு—, இவை - இந்த வில்லும் அம்பும், எய்தும் - வந்து சேரும்,' என்று ஓதி - என்றுசொல்லி, அநேக வரங்கள் கொடுத்த பின் - பலவரங்களை (அருச்சுனனுக்கு)க் கொடுத்தருளிய பின்பு, உமை ஒருகூறு உடையோன் - உமாதேவியை ஒருபக்கத்திலுடைய சிவபிரான், (கண்ணனை நோக்கி), 'சீதர-ஸ்ரீதரனென்னும் பெயருடையவனே! பூதலம் மாது இடர் தீர - பூமிதேவியின் துன்பம் நீங்கும்படி, அரு சமர் புரி தொழில் முற்றிய பின்-செய்தற்கரிய போர் செய்யுந்தொழிலை முடித்த பின்பு, நின்பதம் மேவுக - உனது இடத்தை அடைவாயாக'' என்று அருள் செய்து - என்று கருணையோடு சொல்லி, விடுத்தனன்-(இருவரையும்) அனுப்பினான்;

துஷ்டஅசுரர்கள் அநேகரும் கெட்ட அரசர்கள் பலரும்ஒருங்கே கூடி வசிப்பதனா லுண்டான பூமிபாரத்தை நிவிருத்திசெய்யும் பொருட்டு அப்பூமிதேவியின் பிரார்த்தனையின்படி தேவர்கள் வேண்டுகோளால் திருமால் வசுதேவகுமாரனாய்க் கிருஷ்ணனாகத் திருவவதரித்ததனால், அவ்வவதார காரியம் முடிந்தபின் தன்னடிச் சோதிக்குச் செல்லும்படி சிவபிரான் கூறினனென்க. 'நின்பதம்' என்றது-ஸ்ரீவைகுண்டத்தை. **பி-ம்:** சீதரநீவருகென்று தமிழியுரை செய்தனன்மீளவுமே. (361)

224.—க்ருஷ்ணார்ச்சுனர் மலையினின்றுபுறப்படுகையில் சூர்யோதயமாதல்.

எண்ணியகாரியமெய்தியிறைஞ்சியவிந்திரன்மாமகனுந்
திண்ணியநேமிவலம்புரிவாள்கதைசிலையுடைநாயகனும்

புண்ணியன்மால்வரைநின்றுரகாரிபுயங்களும்வன்கரமு
நண்ணியகாலையில்வெள்ளியெழுந்தது ஞாயிறெழுந்திசையே.

(இ - ள்.) எண்ணிய காரியம் எய்தி இறைஞ்சிய - நினைத்த தொழிலைப் பெற்றுவணங்கின, இந்திரன் மா மகன்உம் - அருச்சுனனும், திண்ணிய - வலிய, நேமி - சக்கரம், வலம்புரி - சங்கம், வாள் —,கதை—, சிலை-வில், (என்னும் பஞ்சாயுதங்களை), உடை-உடைய, நாயகன்உம் - தலைவனை திருமாலும், புண்ணியன் மால் வரை நின்று - பரிசுத்தமூர்த்தியான சிவபிரானது பெரிய கைலாசகிரியினின்று, உரக அரி-நாகங்களுக்குப் பகைவனை கருடனது, புயங்கள் உம் - தோள்களையும், வல் கரம்உம் - வலிய கைகளையும், நண்ணிய காலையில் - ஏறிச்சேர்ந்த பொழுதில், ஞாயிறு எழும் திசை - சூரியனுதிக்கும் திக்கில், வெள்ளி எழுந்தது-சுக்கிரன் உதித்தது; (எ-று.)

திருமாலின் சக்கரம் சுதர்சநமென்றும், சங்கம் பாஞ்சஜந்யமென்றும், வாள் நந்தகமென்றும், கதை கௌமோதகீ யென்றும், வில் சார்ங்கமென்றும் பெயர் கூறப்படும். உரகாரி - வடமொழித் தொடர். நாயகன் தோளிலும் இந்திரன்மகன் கரத்திலும் நண்ணிய என மாறி இயைதலால், எதிர்நிரனிறைப்பொருள்கோளாம். வெண்ணிறமுடைமையால், சுக்கிரனுக்கு 'வெள்ளி' என்று பெயர். 'வெள்ளியெழுந்தது ஞாயிறெழுந்திசை' என்றதனால், வைகறைப் பொழுதாயிற்று என்றவாறு; சுக்கிரோதயம், இரவின் இறுதிப்பாகத்திலே உளதாவது. பி-ம்: புண்ணியமால். (362)

225.—அருச்சுனன்செய்த சபதம் முதலியவற்றைச் சொல்லிவருமாறு தருமபுத்திரன் கடோற்கசனைத் துரியோதனனிடம் அனுப்புதல்.

இங்கிவர்மூவருமேகினர்மீளுமுனெறிமுரசக்கொடியோ
னங்குரையாடியதுரைசெயின்மண்மிசையார்வியவாதொழிவார்
பங்குனனோதியவஞ்சினமும்பசுபதியிடையேகியதுங்
கங்குலினேவினனுரைசெய்கவென்றுகடோற்கசமீளியையே.

(இ - ள்.) இங்கு - இவ்விடத்து, இவர் மூவர்உம் - (கண்ணன் அருச்சுனன் கருடன் என்னும்) இம்மூன்றுபேரும், ஏகினர் மீளும் முன் - சென்று திரும்பி வருவதற்கு முன்னே, எறி முரசம் கொடியோன் - அடிக்கப்படுகிற பேரிகையின் வடிவத்தை யெழுதின கொடியையுடைய தருமன், அங்கு - அவ்விடத்தில் [பாசறையில்], உரை ஆடியது - சொல்லியதை, உரை செயின் - சொன்னால், மண் மிசை - பூலோகத்தில், வியவாது ஒழிவார் - (கேட்டு) ஆச்சரியப்படாதொழிபவர், யார் - யாவர் (உளர்)? [எவருமில்லை]: (அது யாதெனில்):—'பங்குனன் - அருச்சுனன், ஓதிய - (நாளை அஸ்தமனத்திற்குள் சயத்திரதனைத் தான் கொல்லாவிட்டால் அக்கினிப் பிரவேசஞ்செய்வதாகச்) சொன்ன, வஞ்சினம்உம் - சபதத்தையும், (அந்தச் சபதத்தை நிறைவேற்றுதற்கு ஏற்றகருவி பெறும் பொருட்டு), பசுபதியிடை ஏகியதுஉம் - (அவ்விரவிற்) சிவபிரானிடத்து(க் கண்ணனோடு) சென்றதையும், உரை செய்க-(துரியோதனனிடத்து நீ சென்று) சொல்வாயாக,' என்று—, கடோற்கசன் மீளியை-கடோற்கசனாகிய வீரனை, கங்குலின்-(அந்தப்பதின்மூன்றுநாள்) இராத்திரியிலே, ஏவினன்-(தருமன்) கட்டளையிட்டான். ( )

226.—கடோற்கசன் மாற்றருடன் சபதம்முதலியவற்றை எதற்காகச் சொல்லுவதென்று தருமபுத்திரனை வினுதல்.

மற்றவன்முந்துறுதந்தையைவந்துவணங்கிமுன்வஞ்சனையிற்
செற்றவர்தம்முடனுற்றதுசொல்வதுசேவகமோவறிவோ
கொற்றவர்மாமுடிகமழ்கழலாய்வலிகூர்திறலுஞ்செயலு
மற்றவர்போலவுரைப்பதென்னென்றுளழன்றுபுகன்றனனே.

(இ-ள்.) (அதுகேட்டு), மற்று-உடனே, அவன்-அக்கடோற்**கசன்**, முந்து உறு தந்தையை-முன்னே பொருந்தின [பெரிய] பிதாவான தருமனை, வந்து வணங்கி-(அருகில்) வந்து நமஸ்கரித்து, 'முன் - முன்பு, வஞ்சனையின் - வஞ்சனைவழியால், செற்றவர்தம்முடன் - (அபிமனை) அழித்த அப்பகைவர்களோடு, உற்றது சொல்வது-இங்குநடந்த உண்மையைக் கூறுவது, சேவகம்ஓ - பராக்கிரமமாகுமோ? அறிவுஓ - நல்லறிவின்பயனுகுமோ? [இரண்டுமாகா என்றபடி]; கொற்றவர் மா முடி கமழ் கழலாய்-வெற்றியையுடைய அரசர்களது சிறந்த சிரசின்மேல் பரிமளிக்கிற திருவடித் தாமரையையுடையவனே! வலி கூர் திறல்உம் - வலிமையோடு மிகுந்த பராக்கிரமமும், செயல்உம்-(அதற்கு ஏற்ற) வினைத்திறமும், அற்றவர் போல-ஒழிந்தவர் போல, உரைப்பது-(நீ இவ்வாறு) சொல்வது, என் - என்னகாரணம்?' என்று—, உள் அழன்று-மனங்கொதித்து, புகன்றனன்-சொன்னுன்; (எ-று.)

வஞ்சனையிற் செற்றவர் - இளமைமுதல் பலவஞ்சகங்களால் அழித்தவருமாம். அரசர்கள் தருமன்பாதத்தின்கீழ்த் தம்தலையை வைத்து வணங்கும்பொழுது, இவ்வடிமலர் அவர்முடிமேல் மணப்பதென்க. கமழ் என்ற வினைக்குஏற்ப, கழல், தாமரையாக்கப்பட்டது. (364)

227.—முந்துறச்சொல்லிவெல்வதே பொய்ம்மையில்லாதவெற்றிவழிஎன்று தருமன் சமாதானங்கூறுதல்.

திறனறியாமலுரைத்தனைமாருதிசிறுவனெனும்படிநீ
மறநெறியேன்றுவயிர்த்தவர்கொல்வதுவஞ்சனையோவிரகோ
வறநெறியேபொருதல்லதுவெல்லுதலாண்மைகொலோவழகோ
விறனெறியாவதுபொய்யிலதென்றனன்மெய்ம்மையுணர்ந்திடுவான்

(இ-ள்.) (அதுகேட்டுக் கடோற்கசனை நோக்கி), மெய்ம்மை உணர்ந்திடுவான்-தத்துவங்களை யறிந்திட்டவனுன தருமன், 'நீ—, மாருதி சிறுவன் எனும்படி-வீமன்மகனென்றற்கு ஏற்றபடி, திறன் அறியாமல் உரைத்தனை - தகுதியை அறியாமற் கூறினுய்; மறம் நெறி - கொடுமையானவழியை, ஏன்று-மேற்கொண்டு, வயிர்த்தவர் கொல்வது - வைரங்கொண்ட பகைவரைக்கொன்றிடுவது, வஞ்சனைஓ விரகுஓ - வஞ்சகமோ (வேறுவகை) உபாயமோ? [வஞ்சனையேயாம் என்றபடி]: அறம் நெறிஏ பொருது அல்லது - தருமமார்க்கமாகப் போர்செய்தல்லாமல், வெல்லுதல்-சயித்தல், (நமக்கு), ஆண்மை கொல்ஓ - பராக்கிரமமோ? அழகுஓ - அழகுடையதோ? [இரண்டும் அன்று என்றபடி]; விறல் நெறி ஆவது - வெற்றியின் வழியாவது, பொய் இலது - பொய்ம்மையில்லாததே,' என்றனன்- என்றுகூறினுன்; (எ-று.)

முன் சிலசமயங்களில் வீமன் செய்வன தவிர்வன ஆராயாமலும் சாந்த குணத்தை மேற்கொள்ளாமலும் கோபத்தையே பிரதான மாகக் கொண்டு தருமன்கருத்துக்கு மாறுபாடாகக் கூறியுள்ளதனால், 'தந்தைபோல்வான் மைந்தன்' என்ற முறைப்படி நீ உன் தந்தை யான வீமன்போலவே பேசினையென்று கடோற்கசனைத் தருமன் கூறினான். அங்ஙனம் வீமன் பேசுதலைக் கீழ்க் கிருட்டிணன் தூது சருக்கத்தில் " விரிகுழற் பைந்தொடி நாணி வேத்தவையின் முறை யிடுநாள் வெகுளே லென்று, மரபினுக்கு நமக்கு முலகுள்ளளவுந் தீராத வசையே கண்டாய், எரிதழற் கானக மகன்று மின்னமும் வெம்பகை முடிக்க விளையா நின்றாய், அரவுயர்த்தோன் கொடுமை யினு முரசுயர்த்தோ யுனதருளுக் கஞ்சி னேனே" என்றது முதலிய வற்றால் அறிக. மறநெறியன்றி வயிர்த்தவர் சொல்வது என்ற பாடத்துக்கு - வீரமார்க்கத்தைவிட்டு (உன்போல) முன்கோபங் கொண்டவர்கள் கூறுவது வஞ்சனையாகுமே யன்றி அறிவாகாது எனக் கருத்துக்கொள்ளுக. (365)

228.—கடோற்கசன் சென்று துரியோதனன்வாயிலையடைந்து ஒன்றுசொல்லிக் கூப்பிடுதல்.

நிருதனகைத்துவணங்கிநிணங்கமழ்நீளிலைவேலினொடுங்
கருதலர் துற்றியபாசறையன்றோர்கணப்பொழுதிற்புகுதா
வொருதனிலக்கணமைந்தனிறந்தனனென்றழுதுள்ளழியும்
விருதுடைவித்தகன்வாயிலினின்றுவிளித்தனனோருரையே.

(இ - ள்.) (அதுகேட்டவுடன்), நிருதன் - இராக்கதனாகிய கடோற்கசன்,—நகைத்து-சிரித்து, வணங்கி - (தருமனை) நமஸ் கரித்து,—நிணம் கமழ்-(முன்பு குத்தப்பட்ட பகைவர்களது) உடற் கொழுப்பு நாறுகிற, நீள்-நீண்ட, இலை-அரசிலைவடிவமைந்த, வேலினொடும்-வேலாயுதத்துடனே, அன்று - அப்பொழுது, ஓர் கணம் பொழுதில் - ஒரு க்ஷணப்பொழுதிலே, கருதலர் துற்றிய பாசறை - பகைவர்கள் நிறைந்த (எதிர்ப்) படைவீட்டை, புகுதா - சார்ந்து,— ஒரு - ஒப்பற்ற, தன் இலக்கண மைந்தன் - தனது லக்ஷணகுமாரன், இறந்தனன் - (போரில்) அழிந்தான், என்று - என்றகாரணத்தால், அழுது—, உள் அழியும்-மனம் வருந்திய, விருதுஉடை வித்தகன் - (அன்றைப்போரிலேயே அபிமனைக் கொல்வித்ததனால்) வெற்றியை யுடைய சதுரனான துரியோதனனது, வாயிலில் - (இருப்பிடத்தின்) வாசலிலே, நின்று—, ஓர்உரை விளித்தனன்-ஒருவார்த்தைசொல்லிக் கூப்பிட்டான் ; (எ - று.)—தருமன் கூறியதை மடமையாகக் கருதி யதனால், நிருதன் நகைத்தான். (366)

229.—வாயில்காவலரிடம் தான் வந்த காரணத்தையும், தன்னை இன்னானென்பதையும் கடோற்கசன் தெரிவித்தல்.

எதிரெதிர்கொற்றவன்வாயிலினின்றவர்யாரெனவெய்துதலும்
அதிர்முரசக்கொடியோனரவக்கொடியரசனிடைப்பகர்வான்
முதிரவுரைத்ததொர்மொழியுளதம்மொழிமொழிதரவந்தனன்யா
னேதிரறுவெற்றியரிக்கொடியோன்மகனென்றனன்விக்ரமனே.

(இ-ள்.) (அப்பொழுது), கொற்றவன் வாயிலில் நின்றவர் - வெற்றியையுடைய துரியோதனராசனது மனைவாசலில் (காவல் செய்து) நின்றவர்கள், எதிர் எதிர் - எதிரிலே எதிரிலே, யார்என - (நீ) யார்? என்று வினவிக்கொண்டு, எய்துதலும் - வந்தவளவிலே,—விக்ரமன் - பராக்கிரமசாலியான கடோற்கசன்,—'அதிர் முரசம் கொடியோன்-முழங்குகிற பேரிகையையெழுதிய கொடியையுடைய தருமன், அரவம் கொடி அரசனிடை - பாம்புக்கொடியையுடைய துரியோதனனிடத்து, பகர்வான் - சொல்லும்படி, முதிர உரைத்தது - நன்றாகக் கூறினதான, ஓர் மொழி - ஒருவார்த்தை, உளது - இருக்கிறது; அ மொழி - அவ்வார்த்தையை, மொழிதர - (அத்துரியோதனனுடன்) சொல்லுதற்கு, வந்தனன் - வந்தேன்: யான்—, எதிர் அறு வெற்றி அரி கொடியோன் மகன் - ஒப்பில்லாத சயத்தையுடைய சிங்கக்கொடியுடையனான வீமனது புத்திரன்,' என்றனன் - என்றுசொன்னான்:

மொழி - கருவியாகுபெயராய், பலசொற்களாலாகிய வாக்கியத்தை யுணர்த்திற்று. பி-ம்: அச்சொன்மொழிந்திட. (367)

230.—கடோற்கசன் உத்தரவுபெற்று பாசறையுட்சென்று, சென்னமை தெரிவிக்கத் துரியோதனனிடம் உடன்பாடுபெறுதல்.

அம்மொழித்தீயுருமேறெனநீடவையரசர்செவிப்படவோர், செம் மொழியற்றவன்மொழிவழிசென்றொருசிறிதுமதித்தருளா, நும் மொழிவிட்டொரு மெய்ம்மொழிகேளென நோதகுநெஞ்சினனும், வெம்மொழிவித்தகவெம்மொழி நுந்தைதன் மெய்ம்மொழியென்றனனே.

(இ-ள்.) அ மொழி - அந்தக்கடோற்கசன்வார்த்தை, தீ உரும் ஏறு என-கொடிய பேரிடிபோல, நீடு அவை அரசர் செவி பட - (பாசறையினுள்) பெரிய சபையிலுள்ள அரசர்களது காதுகளிற் பட, (உடனே), ஓர் செம்மொழி அற்றவன்மொழிவழி-நல்ல வார்த்தையொன்று மில்லாதவனாகிய துரியோதனன் கட்டளையிட்ட சொல்லின்படி, சென்று-(கடோற்கசன் உள்ளே) போய், ஒரு சிறிது உம் மதித்தருளான் - (அங்குள்ளவர்கள் எவரையும்) மிகச்சிறிதும் இலட்சியஞ் செய்யாதவனாய், 'நும் மொழி விட்டு-உங்கள் வார்த்தையைநிறுத்திவிட்டு, ஒரு மெய்மொழிகேள்-(நான் சொல்லும்) ஒரு சத்தியமான வார்த்தையைக் கேட்பாயாக', என-என்று சொல்ல,— நோதகு நெஞ்சினன்உம் - (புத்திரசோகத்தால்) வருந்திய மனத்தையுடைய அத்துரியோதனனும், 'வெம் மொழி வித்தக-கடுமையான சொல்லையுடைய தூதனே! நுந்தை தன் மெய் மொழி-உன் பெரிய தந்தையின் உண்மை வார்த்தை, எ மொழி - எந்தவார்த்தை?' என்றனன்-என்று வினவினான்; (எ-று.)

செம்மொழி - நீதியும் இனிமையு முடைய வார்த்தை. தான் கூறும் தருமன் வார்த்தையை 'ஒரு மெய்ம்மொழி' என்றதனால், நும்மொழி பொய்ம்மொழி என்பது பெறப்படும்; இது - அருத்தாபத்தி. வித்தகன்-தூதன்: "வித்தகர் வினையுரைப்போர் விதியுளி

வழியுரைப்போர், உத்தம மான பண்புற் றுரைப்பவர் தூதராகும்'' என்பது நிகண்டு. (368)

231.—இதுவும், அடுத்த கவியும்-ஒருதொடர்: கடோற்கசன் அருச்சுனனது சபதம் முதலியனதெரிவித்து, தன்னைத்தூதனுப்பினதன் காரணத்தையும் தெரிவித்தமை கூறும்.

தன் றிருமைந்தனைமௌலிதுணித்தசயத்திரதன்றனைவாள் [முன்
வென்றிகொள்காவலர்காவன்மிகுப்பினும்வெயிலவன்வீழ்வதன்
கொன்றிடுவேனதுதப்பினருங்கனலூடுகுதித்திடுவே
னென்றுமொழிந்தரன்வாழ்கயிலாயமுமெய்தினன்வில்விசயன்.

(இ - ள்.) தன் திரு மைந்தனை - தனது சிறந்த புத்திரனான அபிமனை, மௌலி துணித்த - தலையைத் துண்டித்த, சயத்திரதன் தனை-சயத்திரதனை, வாள் வென்றி கொள் காவலர்-ஆயுதங்களால் வெற்றியைக்கொள்ளும் அரசர்கள், காவல் மிகுப்பின்உம் - காத்திடுதலை மிகுதியாகச்செய்தாலும், வெயிலவன் வீழ்வதன் முன் - (நாளைச்) சூரியன் அஸ்தமித்தற்குமுன்பு, கொன்றிடுவேன்—; அது தப்பின் - அங்ஙனஞ்செய்தல் தவறினால், அரு கனலூடு குதித்திடுவேன் - (மீளுதற்கு) அரிய அக்கினியிலே பிரவேசித்துவிடுவேன்; என்று மொழிந்து - என்று சபதஞ்செய்து, வில் விசயன் - வில்லில் வல்ல அருச்சுனன், (அதற்குஏற்ற கருவி பெறும்பொருட்டு), அரன் வாழ் கயிலாயம்உம் எய்தினன்-சிவபிரான் வாழ்கிற கைலாசகிரியையடைதலையுஞ் செய்தான்; (எ - று.)—பி - ம்: காவலர்வீரர் தடுப்பினும்.

232. வஞ்சனை யாலம ரிற்பகை தன்னைம லைப்பது பாதகமென், றஞ்சின னாதனி னீயறி யும்படி யையன்வி டுத்தனனா, லெஞ்சின னாளையுன் மைத்துன னென்றுகொ ளென்றனன் வன்றிறல்கூர், நெஞ்சினில் வேறொரு சஞ்சல மற்றநி சாசரன் மாமருகன்.

(இ - ள்.) 'வஞ்சனையால்—, அமரில்-போரில், பகைதன்னை - பகைவனை, மலைப்பது-அழிப்பது, பாதகம்-தீவினை,' என்று-என்று எண்ணி, அஞ்சினன் ஆதலின்-பயந்தா னாதலால், நீ அறியும்படி - நீ (இவ்வுண்மையை) உணரும்படி, ஐயன்-(என்) தலைவனான தருமன், விடுத்தனன் - (என்னைத்) தூதனுப்பினான்; 'நாளை - நாளைக்கு, உன் மைத்துனன்-உனது உடன்பிறந்தவள் கணவனான சயத்திரதன், எஞ்சினன்-இறந்தொழிந்தான்,' என்று கொள் - என்று நிச்சயித்துக்கொள், என்றனன் - என்றுகூறினான்: (யாவனெனில்),— வல் திறல் கூர் - கொடிய பராக்கிரமம் மிக்க, நெஞ்சினில் - மனத்தில், வேறு ஒரு சஞ்சலம் அற்ற - (அதற்கு) மாறான கவலை சிறிதுமில்லாத, நிசாசரன் மா மருகன் - (இடிம்பனாகிய) அரக்கனது சிறந்த மருமகனான கடோற்கசன்; (எ - று.)

இங்கே, 'வஞ்சனை' என்றது - முன்புதெரிவியாமற் பின்பு கொல்வதனையே. நாளை எஞ்சினன்-தெளிவுபற்றிய காலவழுமைதி. நிசாசரன்மாமருகன் - இடிம்பனுடன்பிறந்த இடிம்பியின்மகன். ( )

வேறு.

233.—இதுமுதல் நான்குகவிகள்-ஒருதொடர்: அதுகேட்டுத் துரியோதனன் கடோற்கசனைநோக்கிக் கூறுவன.

மன்மைந்தர் பலரொடும்போய் மறித்தொருவர் மீளாமன் மலைந்து வீழ, வென்மைந்த னிறந்திடவும் யாதொன்றும் புகலாம லிருக்கின் றேன்யான், றன்மைந்த னிறந்தனனுந் தான்றழலின் மூழ்குவனுஞ் சபதங் கூறி, வின்மைந்தின் மிகுந்தவருக் கழுதிரங்கி யரற்றுவது வீரந் தானோ.

(இ - ள்.) மன் மைந்தர் பலரொடுஉம் - இராசகுமாரர்கள் அநேகருடனே, போய் - (அபிமனையெதிர்த்துச்) சென்று, மறித்து ஒருவர் மீளாமல்-மறுபடி ஒருவருந் திரும்பிவராமல், மலைந்து வீழ - போர்செய்து (அவனால்) இறந்து விழ, என் மைந்தன் - எனது மகனான இலக்கணனும், இறந்திடஉம் - (அவனால்) அழிவுபட்டிருக்கவும், யான் - (இராசராசனான) நான், யாது ஒன்றுஉம் புகலாமல் இருக்கின்றேன் - யாதொருசபதத்தையுஞ் சொல்லாமலிருக்கிறேன்; (அங்ஙனமிருக்க), தன் மைந்தன் இறந்தனன் ஆம் - தன்மகனான அபிமன் இறந்துவிட்டானும்; (அதற்காக), தான் தழலில் மூழ்குவன் ஆம் - அருச்சுனன்தான் அக்கினியிற் பிரவேசிப்பானும்; வில் மைந்தில் மிகுந்தவருக்கு-வில்வலிமையில் மிக்க வீரர்கள் இறந்ததற்காக, அழுது - புலம்பி, இரங்கி - விசனமுற்று, சபதம் கூறி - சபத வார்த்தைசொல்லி, அரற்றுவது-கதறுவது, வீரம்தான்ஓ-பராக்கிரம நிலையாகுமோ? [ஆகாது என்றபடி]; (எ - று.)

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - இச்சருக்கத்து 145-ஆங் கவி போன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள். (371)

234. பயத்திரவினடுங்கியரன்பருப்பதம்புக்கவன்கொடுத்த படையும்வாங்கி, வயத்திரதமால்கடவவந்தெதிர்தோன்றுவனாகின் மகரமோதுங், கயத்திரவிவீழுவதன்முன்கையறுதன்புதல்வனைப் போற்களத்தின்மாளச், சயத்திரதன்கொடுங்கணையாற்றான்படுதலுறுதியெனச்சாற்றுவாயே.

(இ-ள்.) (அருச்சுனன்), நடுங்கி-(தன்சபதம் நிறைவேறுமோ மாட்டாதோ என்று) மிகஅச்சங்கொண்டு, பயத்து இரவில்-அச்சந் தருவதான இராத்திரியில், அரன் பருப்பதம் புக்கு-சிவனது கைலாச பருவதத்துக்குச் சென்று, அவன் கொடுத்த படைஉம் வாங்கி - அச் சிவபிரான்கொடுத்த ஆயுதங்களையும் பெற்றுக்கொண்டு, வயத்து இரதம் மால் கடவ - வலிமையையுடைய தேரைக் கிருஷ்ணன் செலுத்த, எதிர் வந்து தோன்றுவன் ஆகில் - (நாளைப் போரில்) எதிரில் வந்து நிற்பானானால்,—மகரம் மோதும் கயத்து-சுறாமீன்கள் பாய்கிற நீர்நிலையாகிற கடலிலே, இரவி வீழுவதன்முன் - சூரியன் வீழ்ந்து அஸ்தமித்தற்கு முன்பு, கை அறு தன் புதல்வனை போல் - (இன்று) செயலற்று அழிந்த தன்மகனான அபிமனைப்போலவே, களத்தில் - போர்க்களத்தில், மாள-உயிரழிய, சயத்திரதன் கொடு கணையால் - சயத்திரதனது கொடிய அம்பினால், தான் படுதல் - அவ்

வருச்சுனன்தான் இறப்பது, உறுதி - நிச்சயம், என-என்று, சாற்றுவாய் - (அவனுக்கு நீ போய்ச்) சொல்லுவாய்; (எ - று.)

பிறர் பலர் கூறுங்கொள்கையைப்பற்றி, கண்ணனைத் துரியோதனன் 'மால்' என்றான். மகரம்-இயல்பிற் கடலில்மாத்திரமே வாழும் பெருமீன். கயம் - ஆழமான இடம். இப்பாட்டில், திரிபு என்னுஞ் சொல்லணி காண்க. (372)

235. என்னினும்பார்தனக்குரியன்சிலைத்தொழிலிற்சிலைக்குருவாயெவரும்போற்று, மன்னினுந்தான்மிகவலியன்றண்டெடுத்தாலுந்தையினும்வலியன்சால, வுன்னினுந்தோளுரனுடையன்மதியாமலிப்படிநீயுரைக்கலாமோ. தன்னினும்போர்க்கெளியனோசயத்திரதன்றானென்றுசாற்றுவாயே.

(இ - ள்.) தான் - சயத்திரதன், பார்தனக்கு-உலகத்தை அரசாளுந்திறத்தில், என்னின்உம் - (இராசராசனான) என்னைக்காட்டிலும், உரியன் - உரியவல்லமையுடையான்; சிலை தொழிலில்-வில்லினாற்செய்யும் போர்த்தொழிலில், சிலை குரு ஆய் எவர்உம் போற்றும் மன்னின்உம் - வில்லாசிரியனாய் எல்லாராலுஞ் சிறப்பித்துக்கூறப்படுகிற தலைவனான துரோணனைக்காட்டிலும், மிகவலியன் - மிக வலிமையுடையான்; தண்டு எடுத்தால் - கதாயுதத்தை யேந்தி வந்தால், உந்தையின்உம் சால வலியன் - உன் தந்தையான வீமனினும் மிக வலிமையுடையான்; உன்னின்உம் - (அரக்கனான) உன்னைக் காட்டிலும், தோள் உரன் உடையன் - மிக்கதோள்வலிமையுடையான்; (இங்ஙனமிருக்க), மதியாமல் - (அவனை) லட்சியஞ்செய்யாமல், நீ—, இ படி உரைக்கல் ஆம்ஓ-இவ்வாறு கூறுதல் தகுதியோ? சயத்திரதன்—, தான்—, தன்னின்உம்-அருச்சுனனினும், போர்க்கு-யுத்தஞ்செய்தலில், எளியன்ஓ - கீழ்ப்பட்டவனோ? [அல்லன்], என்று—, சாற்றுவாய்-(நீ சென்று அருச்சுனனுக்குச்) சொல்லுவாய்.

'என்னினும் பார்தனக் குரியன்' என்றதனால், துரியோதனனது அரசாட்சிச்செருக்கு விளங்கும். 'சிலைத்தொழிலில் சிலைக்குருவாய் எவரும் போற்றும் மன்னினும் தான் மிகவலியன்' என்றதனால், அருச்சுனனை வில்லுக்கு ஒருவனாக மதியாமையோடு குருவையும் அலட்சியஞ்செய்தல் வெளிப்படும். வலியில் மிக்கவனான வீமனைக் கதைப்போருக்குச் சிறப்பாக எடுத்து, அவன்மைந்தனான கடோற்கசனுக்கு அவமானமுண்டாகுமாறு, அவனினுஞ் சயத்திரதனை வலியனென்றான். 'உன்னினுந் தோளுரனுடையன்' என்றது, அவனைக் கீழ்ப்படுத்த. 'இப்படி நீ உரைக்கல்' என்றது - கீழ் அவன் "எஞ்சினன் நாளை உன்மைத்துனன் என்றுகொள்" என்றதனை. பி - ம்: மிகப்பெரியன். (373)

236. ஆனையாணிலையறிவதல்லதுமற்றறிபவர்யாரணிந்தபோரி, னானையார் வெல்வரெனத் தெரியுமோவென நவின்று நகைத்தான் மன்னோ, பாளைவாய்நெடுங்கமுகின் மிடறொடியக் குலைத்தெங்கின்பழங்கள்வீழ, வாளைபாய்குருநாடு மெங்நாடுமுழுதாளுமன்னர் கோமான்.

(இ - ள்.) ஆளை-(ஒரு) மனிதனை, ஆள் - (மற்றொரு) மனிதன், நிலை அறிவது அல்லது - (எதிரில்நின்று காணப்படும்) வடிவத்தை மாத்திரம் அறிவதல்லாமல், மற்று-மற்றை வலிமை திறமைமுதலிய குணாதிசயங்களை, அறிபவர் - அறியவல்லவர், யார் - எவர்? (ஆதலால்), அணிந்த போரில் - அணி வகுத்துச்செய்யும் யுத்தத்தில், நாளை - நாளைக்கு, யார் வெல்வர் - எவர் சயிப்பர்? என - என்று, தெரியுமோ - (இன்றைக்குத்) தெரியுமோ? என - என்று, நவின்று- சொல்லி, நகைத்தான்-(பரிகாசமாகச்) சிரித்தான்: (யாவனெனில்?) —பாளை வாய் - பாளை யமைந்த, நெடுங்கமுகின் - நீண்ட பாக்கு மரத்தின், மிடறு - கழுத்து [மேலிடம்], ஒடிய - ஒடிபடவும், குலை தெங்கின் பழங்கள் - குலையாகவுள்ள தென்னைமரத்தின் முதிர்ந்த காய்கள், வீழ - கீழ்விழவும், வாளை பாய் - வாளைமீன்கள் தாவிப் பாயப்பெற்ற, குரு நாடுஉம்-குருநாட்டையும், எ நாடுஉம்-மற்றை யெல்லாநாடுகளையும். முழுது ஆளும் - முழுவதும் அரசாளுகிற, மன்னர்கோமான் - ராஜராஜனான துரியோதனன்; (எ - று.)

'நாளை யார்வெல்வரெனத் தெரியுமோ' என்ற துரியோதனனது உட்கோள், அருச்சுனனைச் சயத்திரதன் வெல்வானென்பது. மீனின்கொழுமையைக் கூறி, அதனால், நாட்டுவளத்துக்குப் பிரதானகாரணமான நீர்வளச்சிறப்பைத் தெரிவித்தவாறு; இங்ஙனம் வருணித்தல் கவிகளுக்கு இயல்பு. தெங்கின் முற்றின நெற்று பழமெனப்படுவதை "காய்மாண்ட தெங்கின் பழம் வீழ" எனச் சிந்தாமணியிலுங் காண்க. மன், ஓ - ஈற்றசை. (374)

237.—இதுவும், மேற்கவியும் - கர்ணன் கூறுதல்.

தாரரசன்மகன் றுச்சாதனன் மகன் சல்லியன்மகன் வேற்
சகுனியென்னும், பேரரசன்மகன் முதலாவெத்தனைபேர் பட்டா
லும் பெரியதன்றே, பாரரசாளுதற்கிருந்த பார்த்தன்மா மகனொரு
வன் பட்டானாகி, லாரரசுக்கினியுரியா ரந்தோவென் றுரைத்தான்மற்
றங்கர்கோமான்.

(இ - ள்.) தார் அரசன் மகன்-வெற்றிமாலையையுடைய துரியோதனது குமாரனான இலக்கணனும், துச்சாதனன் மகன் - துச்சாசனனது புத்திரனான துச்சனியும், சல்லியன் மகன் - சல்லியனது புதல்வனும், வேல் சகுனி என்னும் பேர் அரசன் மகன்-வேலில்வல்ல சகுனியென்னும் பெரிய அரசனது மைந்தனும், முதல் ஆ-முதலாக, எத்தனை பேர் பட்டால்உம் - எத்தனையோபேர் இறந்தாலும், பெரியது அன்றே-(அதுவெல்லாம்) பெரியதன்றாம்; அரசு ஆளுதற்கு இருந்த-பூமிமுழுவதையும் (இனி) அரசாட்சிசெய்ய இருந்த, பார்த்தன் மா மகன் ஒருவன்-அருச்சுனனது சிறந்த பிள்ளையான அபிமனொருத்தன், பட்டான் ஆகில்-இறந்தானானால், இனி அரசுக்கு ஆர் உரியார்-இனி அரசாட்சிக்கு எவர் உரியர்? அந்தோ - ஐயோ! என்று—, மற்று - பின்பு, அங்கர் கோமான் - அங்கநாட்டார்க்குத் தலைவனான கர்ணன், உரைத்தான் - (பரிகாசமாகக்) கூறினான்;

இராச்சியத்துக்கு உரியவரான துரியோதனன் முதலியோரது மக்கள் இறந்ததை அவர்கள் பெரிதும் பாராட்டாமலிருக்க, அர

சின்றி அலைதற்கே யுரிய அபிம னிறந்ததற்கு அருச்சுனன் அரற்று தல் ஆச்சரிய மென்றபடி. (375)

238. அங்கிருந்துசயத்திரதனுவிகவர்ந்திடுவலெனவாண்மை கூறிப், பங்கிருந்தவுமாபதிபாற்பணிந்துவரம்பெறச்சென்றான் பார்த்தனுகிற், கொங்கிருந்ததாராய்நின்குடைநிழற்கீழிதுகாலங் கூட்டங்கூடி, யிங்கிருந்தவேழையரேமென்செயமற்றிருக்கின்றே மென்றுஞ்சொன்னான்.

(இ - ள்.) கொங்கு இருந்த தாராய்-வாசனை தங்கிய மாலையை யுடைய துரியோதனனே! பார்த்தன்-அருச்சுனன், அங்கு இருந்து-எதிர்ப்பக்கத்திலிருந்து, சயத்திரதன் ஆவி கவர்ந்திடுவல் என ஆண்மை கூறி - 'சயத்திரதனது உயிரைக் கவர்ந்திடுவேன்' என்று வீரவாதஞ்சொல்லி, பங்கு இருந்த உமாபதிபால் – (தனது) வாம பாகத்திலுள்ள உமாதேவிக்குக் கணவனை சிவபிரானிடத்து, பணிந்து வரம் பெற - வணங்கி வரம்பெறும்பொருட்டு, சென்றான் ஆகில் - போயினனானால்,— இங்கு - இந்தப்பக்கத்தில், நின் குடை நிழல் கீழ் - உனது குளிர்ந்த அரசாட்சியின்கீழ், இது காலம் - இவ்வளவு காலமாய், கூட்டம் கூடி இருந்த-திரண்டிருந்த, ஏழையரேம்-எளியவரான நாங்கள், மற்று என் செய இருக்கின்றேம்-(அவ்வருச்சுனனை அழிப்ப தல்லாமல்) வேறு யாதுசெய்ய இருக்கிறோம்? என்றுஉம் சொன்னான் - என்றும் கூறினான், (கர்ணன்); (எ - று.) —கீழ்ப்பாட்டு - சபையிற் பொதுவாகவும், இப்பாட்டு - துரியோதனனை நோக்கியுங் கூறியதெனக் காண்க.

கர்ணனும் அருச்சுனனும் இளமைதொடங்கி ஒருவர்க்கொருவர் வைரங் கொண்டவ ராதலாலும் ஒருவரையொருவர் போரிற் கொல்வதாகச் சபதஞ் செய்திருத்தலாலும், இங்ஙனம் கர்ணன் அருச்சுனன்விஷயத்தில் அலட்சியமாகப்பேசினான். 'ஏழையரேம்' என்று தம்மை யிழித்துக்கூறி, அதனால் தமது சிறப்பை வெளியிடுகிறான்; இது செருக்கின் காரியம். **பி - ம்:** *இதுகாறும்.* (376)

239.—மூன்றுகவிகள்-அதுகேட்டுக் கடோற்கசன் கூறுதலைத் தெரிவிக்கும்.

இவன்மொழிந்தவிகழுரைகேட்டிடிம்பன்மருமகன்வெகுளுற் றென்சொன்னலு, மவனிதலமுழுதுமினியரசாளநினைந்திருந்தீரறி விலீர்காள், சிவனெரிசெய்புரம்போலும்பாடிவீடழலூட்டிச்சேனை யாவும், பவனன்மகன்மகனென்னும்பரிசறியத்தொலைத்திடுபடுத்து வேனே.

இதுமுதல் நான்குகவிகள் - குளகம்.

(இ - ள்.) இவன் மொழிந்த - கர்ணன் (இவ்வாறு) சொன்ன, இகழ்உரை - நிந்தைமொழியை, கேட்டு—, இடிம்பன் மருமகன் - இடிம்பனது மருமகனான கடோற்கசன், வெகுளுற்று - கோபங் கொண்டு, (கூறுவான்;—) அவனி தலம் முழுதுஉம் - பூலோகம் முழுவதையும், இனிஅரசு ஆள நினைந்து இருந்தீர் - இனி அரசாட்சி செய்ய எண்ணியிருந்தவர்களான அறிவு இலீர்காள் - புத்தியில்லாதவர்களே! என் சொன்னால்உம்-(நீங்கள்) எதைச்சொன்னாலும்,

(லக்ஷ்யஞ்செய்யாமல் நான்), சிவன் எரிசெய் புரம் போல் - சிவபிரான் எரித்திட்ட திரிபுரத்தைப்போல, உம் பாடி வீடு - உங்களுடைய படைவீட்டை, அழல் ஊட்டி - தீயுண்ணச்செய்து, சேனையாஉம்-(உங்கள்) சேனைகளெல்லாவற்றையும், பவனன் மகன் மகன் என்னும் பரிசு அறிய - வாயுகுமாரனான வீமனது புத்திரன் நானென்னுந்தன்மையை (யாவரும்) அறியும்படி, தொலைத்து - நாசஞ்செய்து, ஈடு படுத்துவேன் - பெருமையழிப்பேன்; (எ - று.)—இப்பாட்டில் 'வெகுளுற்று' என்றது, மேல் **242** - ஆம் பாட்டில் "உரைக்கும்" என்றதோடு இயையும். **பி-ம்:** இடிம்பிமகன்மிக.

என்சொன்னாலும் என்பதற்கு-(நாங்கள்)என்னசொன்னாலும் (நீங்கள் கேளாமல்) என்றும் உரைக்கலாம். அக்கினியை மூட்டி வளர்க்கத் துணையாந்தன்மை வாயுவினிடத்திலும், அரக்குமாளிகையையும் இலங்காபுரியையுந் தீயிட்டழித்ததன்மை அவ்வாயுவின் குமாரனான வீமனிடத்திலும் அனுமனிடத்திலும் உள்ளதனால், 'பவனன்மகன்மகனென்னும் பரிசறிய' என்றான். (377)

240. தசைகுருதிமிசையொழுகத்தனித்தனியேயெதிர்த்தவரைத் தலைகள்சிந்த, விசையன்வரவேண்டுமோமற்றுள்ளார்திரண்டுவர வேண்டுமோதா, னிசைபுலருமுனமுனைந்துநீறாக்கிவிடுகுவனெந்நிருபன்சொன்ன, வசைவின்மொழிமறுத்துடற்றலாகாதென்றிருக்கின்றேனறிகிலீரே.

(இ - ள்.) எதிர்த்தவரை-எதிர்த்துப் போர்செய்தவர்களை, தசை குருதிமிசை ஒழுக-சதையும் இரத்தமும் மேல்வழியும்படி, தனி தனியே—, தலைகள் சிந்த - தலைகளைச் சிதறடித்தற்கு, விசையன் வரவேண்டுமோ-அருச்சுனன்தான்(போருக்கு)வருவது அவசியமோ? மற்று உள்ளார் திரண்டு வரவேண்டுமோ தான் - மற்றுமுள்ள (வீமன் முதலிய) வீரர்கள் ஒருங்குகூடிவருதல்தான் அவசியமோ? (யான் ஒருவனே), நிசை புலரும் முனம்-இவ்விரவு விடியுமுன்னே, முனைந்து-போர்செய்து, நீறு ஆக்கி விடுகுவன்-(உங்களையெல்லாம்) பொடியாக்கிவிடுவேன்; (ஆனால்), எம் நிருபன் சொன்ன-எங்களது அரசனான தருமன் கூறின, அசைவு இல் மொழி-தளர்ச்சியில்லாத வார்த்தையை, மறுத்து - விலக்கி, உடற்றல் - (இப்பொழுது) போர் செய்தல், ஆகாது - தகுதியன்று, என்று-என்றகாரணத்தாலேயே, இருக்கின்றேன் - (நான் சும்மா) இருக்கிறேன்; அறிகிலீரே - (இதனை நீங்கள்) அறியமாட்டீர்களா? (எ-று.)—அறிகிலீரே, ஏ-அசையுமாம். **பி-ம்:** குருதிநிணம். அறிவிலீரே.

தூதுசென்று தான் கூறிய செய்தியைச்சொல்லி வரும்படியே கட்டளையிட்ட தருமனது வார்த்தைக்கு மாறாக யான் பொருதலாகாதென்கிறான். (378)

241. இருவரெதிரெதிர்தம்மிலிகல்பொருதலுலகியற்கையாருங் கூடிப், பருவமுறாத்தனிக்குதலைப்பாலகனுக்காற்றாமற்பறந்து போனீ, ரொருவனெடுந்தேரழிக்கவொருவன்மலர்க்கைதுணிக்க வொருவன்பின்னைப், பொருவனெனவுறைகூவிப்பொன்றுவித்தானிதுகொண்டோ புகல்கின்றீரே.

(இ - ள்.) இருவர் - இரண்டுபேர், எதிர் எதிர் - எதிர்க்கு எதிராக (நின்று), தம்மில் - தமக்குள் [ஒருவரோடொருவர்], இகல் பொருதல்-போர்செய்தல், உலகு இயற்கை—; (அப்படியிருக்க), யார் உம்-(நீங்கள்) எல்லோரும், கூடி-ஒன்றுசேர்ந்து, (வந்துஎதிர்த்து) பருவம் உறா-தக்கபிராயம்நிரம்பாத, தனி-ஒப்பற்ற, குதலை-மழலைச் சொற்களையுடைய, பாலகனுக்கு-இளங்குமரனான அபிமனுக்கு, ஆற்றாமல்-முன்நிற்கமாட்டாமல், பறந்து போனீர் - (முதலில்) விரைந்தோடிப்போனீர்கள்; (அப்படிப்பட்ட உங்களில்), (பின்பு) ஒருவன்—[கர்ணன்], நெடு தேர் அழிக்க-பெரியதேரைச்சிதைக்க, ஒருவன்—[துரோணன்], மலர் கை துணிக்க-தாமரைமலர்போன்ற ஒருகையைத் துண்டிக்க, ஒருவன்—[சயத்திரதன்], பின்னை-அதன் பின், பொருவன் என-(நான் உன்னோடு) போர்செய்வேனென்று சொல்லி, அறைகூவி - வலியப் போருக்கு அழைத்து, பொன்றுவித்தான் - (அபிமனை) அழியச்செய்தான்; இது கொண்டோ - இந்தப் பராக்கிரமத்தாலோ, புகல்கின்றீர் - (நீங்கள் செருக்கிப்) பேசுகின்றீர்கள்; (எ - று.)—என்று கடோற்கசன் கூறினான். ஈற்றேகாரம்-இகழ்ச்சி.

மழலையும் குதலையும் ஒருபொருளன வென்பது ஒருசாரார் துணிபு; பரிமேலழகர்கருத்தும் இதுவே. மற்றொருசாரார், குதலை-எழுத்துவடிவுபெறாததென்றும், மழலை-எழுத்துவடிவுபெற்றுச் சொல்வடிவுபெறாததென்றும் வேறுபாடுகூறுவர். இருவரெதிரெதிர் தம்மில் இகல்பொருதல் - 'த்வந்த்வயுத்தம்'. (379)

242.—அதுகேட்டுத் துரியோதனன் கூறுதல்.

வரைக்குவமை பெறுந்தடந்தோள் வீமன்மகனிப்படியே மதி
யானாகி, யுரைக்குமொழி கேட்டிருந்த வுரகமணி கொடிவேந்த
னுருத்துநோக்கி, யிருக்குமெழி லவைக்கேற்ப வியம்பாமற் றன்
மதத்தா லியம்புகின்ற, வரக்கிமக னுடனொன்றுங் கழறுதீரென்
றுரைத்தானரசர்யார்க்கும்.

(இ - ள்.) வரைக்கு-மலைக்கு, உவமை பெறும் - ஒப்பாகத்தக்க, தடதோள்-பெரிய தோள்களையுடைய, வீமன் மகன்-கடோற்கசன், மதியான் ஆகி - (தம்மை) லட்சியஞ்செய்யாதவனாய், இ படி ஏ உரைக்கும் - இவ்வாறேமேல்மேல் கூறுகிற, மொழி-வார்த்தையை, கேட்டு இருந்த—, உரகம் அணிகொடி வேந்தன்-பாம்பின்வடிவைத் தரித்த துவசத்தையுடைய துரியோதனன், உருத்து நோக்கி-கோபித்துப்பார்த்து, அரசர் யார்க்குஉம் - (அங்கிருந்த) அரசரெல்லோருக்கும், 'இருக்கும் - (நாம்) வீற்றிருக்கிற, எழில் - அழகிய, அவைக்கு - இச்சபைக்கு, ஏற்ப-தக்கபடி, இயம்பாமல்-பேசாமல், தன் மதத்தால் தனது கொழுப்பினால், இயம்புகின்ற - பேசுகிற, அரக்கிமகனுடன் - இராக்கதியின் புத்திரனான கடோற்கசனோடு, ஒன்றுஉம் கழறுதீர்-யாதொருவார்த்தையையும் சொல்லாதீர்', என்று உரைத்தான் - என்று கூறினான்; (எ - று.)

'வரைக்கு உவமைபெறுந் தோள்' என்றதற்கு-மலையினுஞ் சிறந்த தோள் என்று கருத்து. இதில் 'அரக்கிமகன்' என இகழ்ந்த வாறு. இரவில் வலிமை மிகுதியுடைய இராக்கதனான கடோற்

கசனை இப்பொழுது யாதொன்றுஞ் செய்யமுடியாதென்று கருதித் துரியோதனன் அவனுடன் எவரும் ஒன்றும் பேசவேண்டா என்று கட்டளையிட்டதாகவும் கொள்ளலாம். (380)

243.—இதுமுதல் மூன்றுகவிகள் - அதுகேட்ட கடோற்கசன் துரியோதனுதியரின் கொடுமைதோன்றக்கூறி, அருச்சுனன் திறமையைச்சொல்லி மீளுதலைத் தெரிவிக்கும்.

அந்தவுரைமீண்டிவன்கேட்டாங்கவனைநகைத்துரைப்பானரக்க ரேனுஞ், சிந்தனையில்விரகெண்ணார்செருமுகத்தில்வஞ்சகமுஞ்செய் யாரையா, வெந்திறல்கூர்துணைவருக்குவிடமருத்தார்நிரைக்கழுவில் வீழச்செய்யா, ருந்துபுனலிடைப்புதையாரோரூரிலிருப்பகற்ருருரை யுந்தப்பார்.

இதுவும் மேற்கவியும் - ஒருதொடர்.

(இ-ள்.) அந்த உரை - (இங்ஙனங்கூறிய) அத்துரியோதனன் வார்த்தையை, கேட்டு—, இவன்-இந்தக்கடோற்கசன், ஆங்கு-அப் பொழுது, மீண்டு - மறுபடியும், அவனை நகைத்து உரைப்பான்-அத் துரியோதனனைப் பரிகசித்துப்பேசுவான்;—ஐயா—! அரக்கர்ஏன் உம் - (எனதுசாதியார்) இராக்கதரேயாஞலும், (உம்மைப்போல), வெம் திறல் கூர் துணைவருக்கு - கொடிய வலிமைமிக்க உடன் பிறந்தவர்களுக்கு, சிந்தனையில் - மனத்தில், விரகு எண்ணார் - வஞ்சனையை நினைக்கமாட்டார்கள் ; செரு முகத்தில் - போர்க்களத் தில், வஞ்சகம்உம் செய்யார் - வஞ்சனைசெய்யவும் மாட்டார்கள் ; விடம் அருத்தார் - விஷத்தை உண்பிக்கமாட்டார்கள் ; நிரை கழு வில் வீழ செய்யார் - வரிசையான கழுமுனையிலே விழும்படி செய்ய மாட்டார்கள் ; உந்து புனலிடை புதையார் - பாய்கிற நீர்ப் பெருக்கில் அழுத்தமாட்டார்கள்; ஓர் ஊரில் இருப்பு அகற்றார் - (தாம் இருக்கும்) ஒரூரிலே அவர்களிருத்தலை விலக்கமாட்டார்கள் ; உரைஉம் - (சொன்ன) வார்த்தையும், தப்பார்—; (எ-று.)

இதிற்குறித்த தீங்குகள்யாவும் துரியோதனனிடம் உள்ளன வென்பதை, மேற்பாட்டில் 'இவையெல்லா மடிகளுக்கே ஏற்ப' என்று விளக்குவன். துரியோதனன் சிந்தனையில் விரகெண்ணியது, அநந்தம். **செருமுகத்தில் வஞ்சகஞ்செய்ததும்,** அபிமந்யுவதம் முதலாகப் பலவாம்.

துரியோதனுதியரும் பாண்டவரும், இளம்பிராயத்தில் ஒருநாள் கங்கையில் நீர்விளையாடி அதன் துறையில் ஒருசார் இன்னுண வுண்டு களித்துக் கண்டுயில, அவ்விரவில் துரியோதனன் வீமனைக் கொல்லும் பொருட்டுச் சகுனிமுதலானுரோடு ஆலோசித்து அவனை வலியகயிறுகளால் கைகால்களைக் கட்டி அப்பெருநதியில் எறிந்து விட, அதில்விழுந்து துயிலுணர்ந்த வீமன் தன் உடல் வலியால் அக்கட்டுக்களைத் துணித்துக்கொண்டு கரையேறிப் பிழைத்தானென் பதும்; மற்ருெருநாள் கங்கைத்துறையில் எழுக்களினுலும் இரும்பு களினுலும் செம்மரங்களினுலும் கூரிய கழுக்களை நீரின்மேல் தோன்ருதபடி நாட்டச்செய்து துரியோதனன் வீமனை 'நீரில் விளை யாடலாம் வா' என்று வஞ்சனையாக அழைத்துப்போய் 'இங்கிருந்து நீ நீரில் குதிக்கிருயா, பார்ப்போம்' என்ன, அப்பொழுது கண்ணன்

கருவண்டின் உருவங்கொண்டு கழுமனைதோறும் உட்கார்ந்திருக்க, வீமன் அதனைநோக்கி 'இது என்ன? நீரோட்டத்தில் வண்டுகள் உட்கார்ந்திருக்கின்றனவே' என்று உற்றுப் பார்க்கும்போது மூன்று அங்குலத்தின்கீழ் வசிகள் நாட்டியிருக்கக் கண்டு தன் சந்தேகப்படி அவை நாட்டியிராத இடம்பார்த்துக் குதித்துக் கரையேறி மீண்டா னென்பதும்; வேறொருநாள் துரியோதனன் வீமனுக்கு விருந்து வியாஜமாகச் சமையற்காரரைக் கொண்டு மிக்க விஷத்தைக் கொடுத்து உண்பித்து அதனுல் மயங்கியிருக்கிற சமயத்தில்அவனைக் கயிற்ருற் கட்டிக் கங்கை நீரிலே போகட்டுவிட, அதில் வீழ்ந்து பாதாளஞ்சேர்ந்த அவ்வீமனை அங்குள்ள சிறுநாகங்கள் கடிக்க, முந்தினவிஷம் இவ்விஷத்தால் நீங்கினவளவிலே, கயிற்றுக்கட்டை யும் மெய்வலியால் துணித்திட்ட அவனுக்கு, வாசுகி வாயுகுமார னென்ற அபிமானத்தோடு மிக உபசரித்து ஆங்குள்ள அமிருதகல சங்களிற் சிலவற்றையுண்பிக்க, வீமன் உண்டு மீண்டனன் என்ப தும், **கீழ் வாரணுவதச்சருக்கத்தில் வந்த கதைகள்.**

ஒரூரில் இருப்பகற்றியது - அஸ்திஞபுரத்திலிருந்து வாரணவத நகரத்திற் சென்றுவாழும்படியும், இந்திரப்பிரஸ்தநகர மேற்படுத் திக்கொண்டு செல்லும்படியும், வனம்புகுத்தியும், பாண்டவரைத் துரியோதனன் பலகால் துரத்தியது. **உரைதப்பியது** - வனவாச அஜ்ஞாதவாசங்கள் கழித்தபின்னும் நாடுதராதது. **பி-ம்:** அவன். சொல்லார். (381)

244.செழுந்தழல்வாழ்மனைக்கொளுவார்செய்ந்நன்றிகொன்றறி யார்தீங்குபூணு, ரழுந்துமனத்தழுக்குருரச்சமுமற்றருளின்றிப்பொ ய்ச்சூதாடார், கொழுந்தியரைத்துகிலுரியார்கொடுங்கானமடை வித்துக்கொல்லவெண்ணு, ரெழுந்தமரின்முதுகிடாரிவையெல்லா மடிகளுக்கேயேற்பவென்ருன்.

(இ-ள்.) (என்சாதியார் அரக்கரேயாகுலும் உம்மைப் போல), வாழ்மனை-(உடன்பிறந்தவர்கள்) வாழ்ந்துகொண்டிருக்கிற வீட்டில், செழு தழல் கொளுவார் - மிக்க நெருப்பைப் பற்றவைக்க மாட்டார்கள்; செய் நன்றி கொன்று அறியார் - (தமக்குப் பிறர்) செய்த நன்றியைச் சிதைத்தறியமாட்டார்கள்; தீங்கு பூணுர்-(அவ் வுபகாரஞ் செய்தவர்களுக்கு) அபகாரஞ்செய்தலை மேற்கொள்ள மாட்டார்கள்; அழுந்து மனத்து-கீழ்ப்பட்ட (தங்கள்) மனத்திலே, அழுக்குருர் - பொருமை கொள்ளமாட்டார்கள்; அச்சம்உம் அற்று- (பழிபாவங்களுக்குப்)பயப்படுதலுமில்லாமல், அருள் இன்றி-கருணை யில்லாது, பொய் சூது ஆடார் - (உடன்பிறந்தவர்களோடு) வஞ்ச னைக் கிடமான சூதை ஆடமாட்டார்கள்; கொழுந்தி - உடன்பிறந்த வர் மனைவியின், அரை துகில் - இடையிற்கட்டிய சேலையை, உரி யார் - அவிழ்க்கமாட்டார்கள்; (அவ்வுடன்பிறந்தவர்களை), கொடு கானம் அடைவித்து - கொடிய காட்டை யடையச்செய்து, கொல்ல எண்ணுர்-(பின்பு அவர்களைக்) கொலைசெய்யக் கருத மாட்டார்கள்; எழுந்து - (முன்னே போருக்குப்) புறப்பட்டுவந்து, அமரில் - அப் போரில், முதுகு இடார் - புறங்கொடுக்கவும் மாட்டார்கள்; இவை எல்லாம்-இங்குக்கூறிய எல்லாத்தீயொழுக்கங்களும், அடிகளுக்குஏ

ஏற்ப - தேவரீர்களுக்கே அமைந்துள்ளன, என்றான் - என்று (கடோற்கசன் துரியோதனனை நோக்கிக்) கூறினான்; (எ - று.)

துரியோதனன், வாரணாவதநகரத்தில் வஞ்சனையாக அழகியதோ ரரக்கு மாளிகையைஅமைப்பித்து அதில் பாண்டவரைவரையுங் குந்தியையும் வசிக்கச்செய்து, புரோசனனென்னுந் துர்மந்திரியையுங் குற்றேவலார் ஆறுபேரையும் கூட இருக்கநியமித்து, ஒருநாளிரவிற் பாண்டவருந்தாயும் கண்துயில்கையில் மற்றையோரைக்கொண்டு அம்மனையில் தீப்பற்றவைத்து இங்ஙனம் பங்காளிகளைத் தொலைத்துவிடுவதாகத் துணிந்திருக்க, அவ்வஞ்சகத்தை விதுரனேவிய ஒருசிற்பியால் அறிந்து அதனினின்று தந்திரமாகத் தப்பிச் செல்லும் வழியையும் அவன்பா லுணர்ந்த வீமன், அத்துர்மந்திரி முதலியோர் எரிபட்டழியும்படி தான் ஓர் இரவில் தீக்கொளுவி விட்டுத் தாயையும் உடன்பிறந்தாரையும் கைகளிலுந் தோள்களிலும் முதுகிலுமாக எடுத்துக்கொண்டு அவ்வீட்டில் இரகசியமாக அமைத்துவைத்திருந்ததொரு தூணின்கீழுள்ள சுரங்கவழியால் தப்பிச் சென்று இடிம்பவனம் முதலிய இடங்களிற் சென்று பிழைத்து வாழ, துரியோதனாதியர் பாண்டவர்களே எரிபட்டழிந்ததாகக் கருதி அகமகிழ்ந்தனரென்றது, கீழ் ஆதிபருவத்து வரலாறு. தீக்கொளுவத் துணிந்ததையும் கொளுவியதாகக்கருதி மகிழ்ந்ததையுமே கொண்டு, செழுந்தழல்வாழ்மனைக் கொளுவியதாகச் சொன்னது.

பாண்டவர் வனவாசஞ்செய்கையில் ஒருகால், துரியோதனன் தன் பெருமையைக் காட்டிப் பாண்டவர்க்குப் பொறாமையுண்டாக்கி அவரை அழுங்கச்செய்யவேண்டு மென்று ஆடம்பரத்துடனே அருகிற்சென்றபோது, இந்திரனேவலாற் சித்திரசேனனென்னுங் கந்தருவராசன் வந்து துரியோதனனைக் கயிற்றாற்கட்டி வானத்தில் தூக்கிக்கொண்டுபோக, அப்பொழுது கர்ணன்முதலானோர் எதிர்த்துப் பொருது தோற்று ஓட, பின்பு துரியோதனனது பரிதாபமான நிலைமையை அவனதுபரிவாரத்தாலறிந்த தருமபுத்திரனது கட்டளையால் வீமன் அருச்சுனனோடு சென்று கந்தருவனைவென்று துரியோதனனைமீட்டு மறுபடியும் அக்கந்தருவனால் துரியோதனனுக்குத் தீங்குநேராதபடி அவனை ஊர்வரையிலும் வழிவிடுவதாகத் துணைவர, தன் ஊர்ப்புறத்தளவும் வந்த மாத்திரத்தில், துரியோதனன், அந்நன்றியறிவு சிறிதுமில்லாமல், வீமனை நோக்கி 'என் எல்லையிற் கால்வையாதே' என்று கடுமையாகச் சொல்லித் துரத்திவிட்டமையின், செய்ந்நன்றிகோறல் துரியோதனனுக்கு உரியதாயிற்று. பாண்டவர் துரியோதனனுக்குச் செய்த உபகாரங்களும், அவன் அந்நன்றியைச் சிறிதும் பாராட்டாது அவர்களுக்குச் செய்த தீமைகளும் மிகப்பல; நூல்முழுவதிலும் ஆங்காங்குக் காணலாம்.

பாண்டவர் தம் ஆற்றலால் திக்குவிசயஞ்செய்து இராசசூயயாகம் முடித்துச் சிறப்புற, அதனைக்கண்டு துரியோதனன் அழுக்காற்றில் அழுந்திச் சகுனி முதலானாரோடு ஆலோசித்து வஞ்சனையாக அப்பாண்டவரை வரவழைத்து மாயச் சூதால் அரசு கவர்ந்து கொண்டதுமன்றி, சபையில் திரௌபதியைத் துகிலுரிந்ததும் அவர்களை வனவாசத்துக்கு அனுப்பியதும் பிரசித்தம்.

பாண்டவர் வனத்தில் வசிக்கையில், துரியோதனன் காளமாமுனியைக்கொண்டு அபிசாரயாகமொன்று செய்வித்து அவ்வோமத்தீயினின்று எழுந்த பெரும்பூதத்தைப் பாண்டவரைக்கொல்லுமாறு செலுத்தினமையும், போரிற் பாண்டவரைக்கொல்ல முயல்கின்றமையுந் தோன்ற, **'கொல்லவெண்ணூர்'** என்றான். திரௌபதி சுயம்வரகாலத்திலும், நிரைமீட்சியிலும், மற்றும் பதினெட்டுநாளிலும் போரிற் பாண்டவர்க்குமுன் துரியோதனன் புறங்கொடுத்தல் காண்க. 'அடிகள்' என்றசொல்-'பாதா:' என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பாகத் தமிழில் வழங்குவது; இதற்குச் சிறந்தவரென்று பொருள். உயர்வுக்குஉரிய இச்சொல்லால் கடோற்கசன் துரியோதனனைக்கூறியது, சந்தர்ப்பத்தால் இகழ்ச்சிவிளக்கும்; பிறகுறிப்பு. (382)

245. தேனிடறிப் பாண்முரலுஞ் செழுந்தாம விசயனுடன் செருவில் வந்தால், மானிடரிற் பொரவல்லார் சிலருண்டோ தெரியாது வானு ளோரிற், கோனிடையுற் றருகிருந்த திறல்வேந்தர் காத்திடினுங் குறித்த வீரன், றூனிடருற் றுயிரழிகை தப்பாதென் பதுமுரைத்துத் தனயன் மீண்டான்.

(இ-ள்.) தேன் - வண்டுகள், இடறி - நெருங்கிமொய்த்து, பாண் முரலும்-இசைப்பாட்டை யொலிக்கப்பெற்ற, செழு தாமம் - செழிப்பான பூமாலையையுடைய, விசயனுடன் - அருச்சுனனுடனே, செருவில் வந்தால்-போர்க்களத்தில் எதிர்த்துவந்தால், மானிடரில் - மனிதருள், பொர வல்லார்-போர்செய்ய வல்லவர், சிலர் உண்டோ - சிலரேனும் உளரோ? [எவரும் இலரென்றபடி]; வான் உளோரில்-மேலுள்ள தேவர்களுள், தெரியாது - (அருச்சுனனுடன் பொரவல்லார் உளர் என்பதுந்) தெரியாது; கோன் இடை உற்று - சிந்துதேசத்தரசனிடத்திற் பொருந்தி, அருகு இருந்த திறல் வேந்தர் காத்திடின்உம் - (உன்) பக்கத்திலுள்ள வலிமையுடைய அரசர்கள் (எல்லோரும்) பாதுகாத்திட்டாலும், குறித்த வீரன் - (அருச்சுனன் கொல்வதாக) உத்தேசித்த வீரனான அச்சைந்தவன், இடர் உற்று உயிர் அழிகை-அருச்சுனனால் துன்பமடைந்து இறத்தல், தப்பாது - தவறாது, என்பதுஉம் உரைத்து - என்பதையுஞ் சொல்லிவிட்டு, தனயன் - (வீமன்) மகனான கடோற்கசன், மீண்டான் - திரும்பி வந்தான்; (எ - று.) (383)

வேறு.

246.—இரண்டுகவிகள் - பிறகு துரோணனை நோக்கித் துரியோதனன் நாளைச் சயத்திரதனைக் காத்துவிடின் அருச்சுனன் தீக்குளிப்பானெனல்.

அரக்கனப் பேரவை யகன்ற பின்பகை
துரக்கும்வெங் குனிசிலைத் துரோணன் றன்னொடும்
பரக்கும்வெண் டிரைக்கடற் பாரெ லாமுடன்
புரக்கின்ற றவன்சில புகழ்ந்து கூறுவான்.

(இ-ள்.) அரக்கன் - கடோற்கசன், அ பேர் அவை - அந்தப் பெரிய சபையை, அகன்றபின் - நீங்கிச்சென்றபின்பு,—பரக்கும் - பரவுகிற, வெள் திரை - வெண்மையான அலைகளையுடைய, கடல் -

சமுத்திரஞ்சூழ்ந்த, பார்எல்லாம் - பூலோகம் முழுவதையும், உடன் புரக்க-ஒருசேர ஆள, நின்றவன்-(எண்ணி) நின்றவனான துரியோதனன்,—பகை துரக்கும் - பகைவரை அஞ்சியோடச்செய்யவல்ல, வெம் குனி சிலை-கொடியவளைந்த வில்லையுடைய, துரோணன் தன்னொடுஉம்-துரோணனுடனே, சில புகழ்ந்து கூறுவான் - சில வார்த்தைகளைப் புகழ்ச்சியாகச்சொல்லுவான்;- (எ - று.)—அவற்றை அடுத்த கவியிற் காண்க.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் பதினான்கு கவிகள் - இச்சருக்கத்தின் 186-ஆங் கவிபோன்ற **கலிவிருத்தங்கள்.** (384)

247. கொடிநெடுஞ்சேனையைக்கூறுசெய்துநீ
கடிகைமுப்பதுமுடன்காக்கவல்லையேல்
வடிவுடைச்சிந்துமாமகனுமுய்குவன்
வெடியனற்குளிக்குவன்விசயன்றானுமே.

(இ - ள்.) நீ—, கொடி நெடு சேனையை - துவசங்களையுடைய பெரிய (நமது) சேனையை, கூறுசெய்து-(ஒழுங்காக) அணிவகுத்து, கடிகை முப்பதுஉம் உடன்-(நாளைப்பகல்) முப்பதுநாழிகை முழுவதும், காக்க வல்லைஏல் - (சயத்திரதனைப்) பாதுகாக்கவல்லவனானால்,—வடிவு உடை - (அழகிய) வடிவத்தையுடைய, சிந்து மா மகன்உம்-சிந்துதேசத்தையாளும் சிறந்த ஆண்மகனான அச்சயத்திரதனும், உய்குவன் - பிழைத்திடுவான்; விசயன் தான்உம் - அருச்சுனனும், வெடி அனல் குளிக்குவன் - அழிக்கிற தீயில் மூழ்கியிறந்திடுவான்; (எ - று.)—என்று துரோணனிடம் துரியோதனன் கூறினான். வெடி - வெடிக்கிற எனினுமாம். (385)

248.—மற்றும் **போர்வீரரைத் துரியோதனன் வேண்டுதல்.**

நாளையோர்பகலுமேநமக்குவெய்யபோர்
காளையரனைவருங்காமின்காமினென்
றாளையுமடுகளிற்றாழிமன்னவன்
வேளைபுக்கவரினும்வீழ்ந்துவேண்டினான்.

(இ - ள்.) (பின்னரும்), 'நாளை ஓர் பகல்உம்ஏ - நாளையொரு தினத்தின் பகற்பொழுது மாத்திரமே, நமக்கு வெய்ய போர் - நமக்குக் கொடிய போர் (நிகழ்வது); காளையர் அனைவர்உம்-வீரர் யாவரும், காமின் காமின் - (சயத்திரதனைப்) பாதுகாத்திடுங்கள் பாதுகாத்திடுங்கள்,' என்று - என்று (போர்வீரரனைவரையும் நோக்கிப் பலமுறை) சொல்லி, ஆளைஉம் அடு களிறு ஆழி மன்னவன்-(தன்னை உணவளித்துக்காக்கிற) பாகனையும் கொல்லுகிற மதயானை போன்ற ஆஜ்ஞாசக்கரத்தையுடைய துரியோதனராசன், வேளை புக்கவரின்உம் - ஆபத்துக்காலத்தில் சரணமடைந்தவர்களினும் அதிகமாக, வீழ்ந்து வேண்டினான் - (அவர்களை) வணங்கிப் பிரார்த்தித்தான்; (எ-று.)

சயத்திரதனைக் கொல்லமாட்டாது அருச்சுனனொருவன் இறந்தமாத்திரத்தில் மற்றைப் பாண்டவர்நால்வரும் உடனே இறந்திட, நாளையோடு பகையொழியுமென்பது உட்கோள். ஆதலின்

வணங்காமுடிமன்னனுன இவன் இங்ஙனம் வீழ்ந்து வேண்டினன். காளையர் அனைவரும் காமின் - இடவழுவமைதி. உபகாரஞ்செய்தவர்க்கும் அபகாரஞ்செய்பவனென்பது தோன்ற, ஆளையும் அடுகளிற்றுமன்னவனென்ருர். ஆளையும் என்ற உயர்வுசிறப்பும்மையால், அதனை அவன் ஓம்புந்தன்மைவிளங்கும். வேலைபுக்கவரினும் - (மரக்கலமுடைந்து) கடலில் வீழ்ந்தவரினும் மிகுதியாக என்றும் உரைக்கலாம். (386)

249.—இதுமுதல் மூன்று கவிகள் - ஒரு தொடர் : துரோணன் தைரியங் கூறுதலைத் தெரிவிக்கும்.

மணிமதிலரணெனமன்னுசேனையை
யணிபடநிறுத்தியாமளவுங்காப்பன்யான்
பணிவுறுபுண்ணியபாவமுற்றுவ
துணிவுறத்தெரியுமோதும்பைமாலையாய்.

(இ - ள்.) தும்பை மாலையாய் - (போருக்குரிய) தும்பைப்பூமாலையையுடையவனே! யான்—, மன்னு சேனையை - நிலைபெற்ற (நமது) சேனையை, மணி மதில் அரண் என - அழகிய மதிலாகிய அரண்போல, அணி படநிறுத்தி-இடைவிடாது பொருந்த நிற்கச்செய்து, ஆம் அளவுஉம் - (என்னால்) இயலுமளவும், காப்பன் - (சயத்திரதனைப்) பாதுகாப்பேன்; பணிவு உறு - (தம்மைச் செய்தவரை) நியமித்தல் பொருந்திய, புண்ணியம் பாவம் - (அவரவர் செய்த) நல்வினை தீவினைகள், முற்றுவ - நிறைவேறும் வகைகள், துணிவுஉற தெரியும்ஓ-நிச்சயமாக முந்தி அறியப்படுமோ? [படாஎன்றபடி]; (எ-று.)

என்னாலியன்றமட்டில் யான் பாதுகாப்பேன்; யார் விதி எப்படி பலிக்குமோ? தெரியாது என்பதாம். 'பணியுறு' என்ற பாடத்துக்கு-முந்திச்செய்து பொருந்திய என்க; பணி = பண்ணி. (387)

250. முப்பதுகடிகையின்மொழிந்தவஞ்சினந்
தப்பதுபடாதெனிற்றனஞ்சயன்சிலைக்
கொப்பதொன்றில்லைமற்றுரைத்தவாசெய
லப்பதுமாசனன்றனக்குமாகுமோ.

(இ-ள்.) மொழிந்த வஞ்சினம்-(அருச்சுனன்) சொன்ன சபதம், முப்பது கடிகையின் - (நாளைப்பகல்) முப்பதுநாழிகைக்குள்ளே, தப்புஅது படாது எனின் - தவருமல் நிறைவேறிவிடுவதானல், தனஞ்சயன் சிலைக்கு ஒப்பது ஒன்று இல்லை-அருச்சுனனது வில்லுக்குச் சமமாவது யாதொன்றுமில்லை; (ஏனெனில்),—உரைத்தஆ(று) செயல் - சொன்னபடி செய்தல், அ பதுமஆசனன் தனக்கும் ஆகும்ஓ - திருமாலின் திருவுந்தித்தாமரைமலரை இருப்பிடமாகவுடைய அந்தப்பிரமதேவனுக்குத்தான் முடியுமோ? (எ - று.)

"சொல்லுதல் யார்க்குமெளிய வரியவாஞ், சொல்லியவண்ணஞ்செயல்" என்றபடி சொன்னவாறுசெய்தல் படைக்குங் கடவுளான

பிரமனுமுட்பட அரிதாதலின், அருச்சுனன் சொன்ன சபதத்தை நாளைநிறைவேற்றி விடுவானானால் அவனுக்கு ஒப்பில்லையென்பதாம். மற்று-வினைமாற்று. (388)

251. மல்லினான்மல்லரைமலைந்தமாலவட்
புல்லினானென்னினுஞ்சிந்துபூபனை
வில்லினால்வெல்லரிதென்றுமீளவுஞ்
சொல்லினான்மறைமொழித்துரோணன்றானுமே.

(இ-ள்.) (இங்ஙனஞ்சொன்ன), மறை மொழி துரோணன் - வேதவாக்கியங்களைவல்ல துரோணாசாரியன், 'மல்லினால்-மற்போரினால், மல்லரை - மற்போர்வீரரை, மலைந்த-அழித்த, மால் - கண்ணபிரான், அவண் - அவ்விடத்தில் [எதிர்ப்பக்கத்தில்], புல்லினான் என்னின்உம்-சேர்ந்துள்ளானாயினும், சிந்து பூபனை-சிந்துநாட்டரசனான சயத்திரதனை, வில்லினால் வெல் அரிது-விற்போரினால் வெல்லுதல் அரியதே,' என்று மீளஉம் சொல்லினான் - என்று திரும்பவும் சொன்னான்; (எ-று.)—தான், உம்-அசை.

துரோணன்தானும் என்ற உம்மையை உயர்வுசிறப்பு எனக் கொண்டு, இங்ஙன் அறிஞனான துரோணன் சொல்லியது தகாது என்றபொருளைக் குறிப்பதெனினுமாம். **பி-ம்:** துரோணசாதனே.

மல்லினால் மல்லரை மலைந்தகதை ;—கம்ஸனது சபையிற் கிருஷ்ண பலராமர் செல்லுகையில், அவனால் ஏவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர் அவர்களைக் கொல்லும்பொருட்டு வந்து எதிர்த்து உக்கிரமாகப் பெரும்போர் செய்ய, அவர்களையெல்லாம் இவ்யாதவ வீரரிருவரும் மற்போரினாலேயே கொன்று வென்றிட்டனரென்பது. (389)

252.—கர்ணன் தான் நாளைச் சயத்திரதனைக் காப்பதாகக் கூறுதல்.

கோப்பலருடன்பலகூறமற்றவர்
நாப்பலநவிலினுநாளைவான்பகற்
றாப்புலிநிகர்சயத்திரதன்றன்னுயிர்
காப்பல்யானென்றனன்கதிரின்மைந்தனே.

(இ-ள்.) கதிரின் மைந்தன் - சூரிய புத்திரனான கர்ணன்,— 'கோ - துரியோதனராசன், பலருடன் - அநேகராசர்களுடனே, பல கூற-(சயத்திரதனைக் காக்கும்படி) அநேகவார்த்தைகளைச் சொல்ல, (அவற்றிற்கு), அவர்-அவ்வீரர்கள், நா - (தம்) நாவினால், பல நவிலின்உம்-அநேக உத்தரங்களைச் சொன்னாலும்,—நாளை வான் பகல்-நாளைச் சிறந்த பகலில், தா புலி நிகர் சயத்திரதன் உயிர் யான் காப்பல் - வலிமையையுடைய புலியை யொத்த சயத்திரதனது உயிரை நான் பாதுகாப்பேன்,' என்றனன்-என்று (உறுதிமொழி) கூறினான்; (எ-று.)—பாண்டவரது ஆக்க அழிவுகள் நாளையொரு பொழுதின் தொழிலிலே நின்றுள்ளன வாதலின், 'வான்பகல்' என்றான். தாப்புலி-தாவுதலையுடைய புலியுமாம். **பி-ம்:** பலகூறல். (390)

253.—துர்மர்ஷணன் கூறுதல்.

அன்மருடிமிரமெய்தளவுநாளையிற்
றென்மருடெரியல்வேற்சிந்துவேந்தனைக்
கன்மருடிகிரியிற்காப்பன்யானென்றான்
றுன்மருடணனெனுந்துணைவன்றானுமே.

(இ - ள்.) துன்மருடணன் எனும் - துர்மர்ஷணனென்கிற, துணைவன் தான்உம் - (துரியோதனன்) தம்பியும்,—' அல் - இரவுக்குரிய, மருள் - மயக்கத்தைத் தருகிற, திமிரம் - இருள், எய்து அளவுஉம் - வரும்வரையிலும் [சூரியாஸ்தமனமட்டிலும்], நாளையின் - நாளைக்கு, தென் மருள் தெரியல் வேல் சிந்து வேந்தனை - வண்டுகள் (தேனை மிகுதியாகக்குடித்து) மயங்குதற்குக்காரணமான பூமாலையைத் தரித்த வேலாயுதத்தையுடைய சிந்துதேசத்தரசனை, மருள் - (காண்பவர்) அஞ்சுதற்குக் காரணமான, திகிரி கல்லின் - சக்கரவாளமலை போல் (வளைந்துகொண்டு), யான் காப்பன் - நான்பாதுகாப்பேன்,' என்றான்—;—தென் - தேன்என்பதன்குறுக்கல். பி - ம் : இரவிவீழ்.

254.—இதுவும், அடுத்தகவியும்-அசுவத்தாமன் கூறுதலைத் தெரிக்கும்.

விரற்புனைகோதைவல்வில்லின்வல்லவர்
குரற்படச்சேவகங்கூறுகிற்பரோ
வுரற்புரைநீடடியோடையானையாய்
சரற்புயலானதுதனிதஞ்செய்யுமோ.

இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்.

(இ - ள்.) உரல் புரை - உரலை யொத்த, நீடு அடி - பெரிய கால்களையும், ஓடை - நெற்றிப்பட்டத்தையு முடைய, யானையாய் - யானை போன்றவனே ! விரல் - கைவிரலினால், புனை - அழகாகத்தெறிக்கிற, கோதை - நாணியையுடைய, வல் - வலிய, வில்லின் - வில்லின் தொழிலிலே, வல்லவர் - வல்லவர்கள், குரல் பட - உரத்தகுரலுண்டாக, சேவகம் - (தம்) பராக்கிரமத்தை, கூறுகிற்பர்ஓ - எடுத்துச்சொல்லுவார்களோ ? சரத் புயல் ஆனது - சரத்காலத்து மேகமானது, தனிதம் செய்யும் ஓ - இடிமுழக்கத்தைச் செய்யுமோ ? (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி. இதனை, ஒரு சாரார் **மறுபொருளுவமை** யென்பர். ஶரத், ஸ்தநிதம் என்னும் வடசொற்கள் திரிந்தன. சரத்காலம் - கூதிர்ப்பருவம் ; ஐப்பசி கார்த்திகை மாதங்கள். (392)

255. பொருதொழில்விதம்படப்புரிந்தகாலையில்
விருதர்களிருவரும்வேறல்கூடுமோ
வொருதலைநின்றவனுடற்றும்வின்மையுங்
கருதலன்வின்மையுங்காண்டிகாவலா.

(இ - ள்.) காவலா - அரசனே ! பொரு தொழில் - போர்த்தொழிலை, விதம் பட - ஒழுங்காக, புரிந்த காலையில் - செய்தபொழுது, விருதர்கள் இருவர்உம் - இரண்டு வீரர்களும், வேறல் - சயித்தல், கூடும்ஓ - சாத்தியமோ ? [ஒருத்தர்வெல்ல மற்றொருத்தர் அழிதலே கூடுவது என்றபடி]; ஒரு தலை நின்றவன் - ஒருபக்கத்

தில் நின்ற சயத்திரதன், உடற்றும் - போர் செய்யும், வின்மை உம்- வில்லின் திறமையையும், கருதலன் - பகைவனான அருச்சுனனது, வின்மைஉம் - வில்லின் திறமையையும், காண்டி - (நாளைக்குப்) பார்ப்பாய்; (எ - று.)

இருதிறத்தவரும் தாம்தாம் பிறரைத் தவறாது வெல்வதாகத் தனித்தனி சபதஞ்செய்தால், அச்சபதத்தில் ஒன்று பங்கப்பட்டே தீரும்; ஆதலின், வாயாற்சொல்லுதலில் பயனில்லை: காரியத்திற் காட்டுதலே சிறப்பு என அசுவத்தாமன் நிஷ்பக்ஷபாதமாக நீதி கூறினான். பி-ம்: நின்றிவன். (393)

256.—யாவரும் துரியோதனனிடம் விடைபெற்றுச்செல்லுதல்.

என்றுசேனபதிமகனியம்பினான்
நின்றகாவலர்களுநிசைபுலர்ந்துழிச்
சென்றுபோர்புரிந்துநின்றெவ்வர்யாரையும்
வென்றுமீளுதுமெனவிடைகொண்டாரரோ.

(இ-ள்.) என்று—, சேனபதி மகன் - சேனைத்தலைவனாகிய துரோணனது புத்திரனான அசுவத்தாமன், இயம்பினான்-கூறினான்; (பின்பு), நின்ற காவலர்கள்உம்-(அங்கு) உள்ள அரசர்களெல்லோரும், 'நிசை புலர்ந்தஉழி-இவ்விரவு கழிந்தபொழுது [நாளைஉதயத்தில்], சென்று போர் புரிந்து - எதிர்த்துப்போய்ப் போர்செய்து, நின் தெவ்வர் யாரைஉம்-உன் பகைவர்களெல்லோரையும், வென்று மீளுதும் - சயித்துத்திரும்புவோம்,' என - என்றுசொல்லி, விடை கொண்டார் - (துரியோதனனிடம்) அனுமதிபெற்றுச் சென்றார். ()

257.—கிருஷ்ணார்ச்சுனரும் கடோற்கசனும் மீள, சூரியனுதித்தல்.

பூதனைமுலைநுகர்பூந்துழாய்முடி
நாதனும்விசயனுநலத்தொடேவிய
தூதனுமருக்கனுந்துயிலுணர்த்தினார்
சேதனர்புகழ்மொழித்திகிரிவேந்தையே.

(இ-ள்.) பூதனை முலை நுகர் - பூதனையென்னும் பேய்மகளது தனத்தையுண்ட, பூ துழாய் முடி நாதன்உம் - அழகிய திருத்துழாய் மாலையைத் தரித்த திருமுடியையுடைய கண்ணபிரானும், விசயன் உம்-அருச்சுனனும், நலத்தொடு ஏவிய தூதன்உம் - நல்லெண்ணத்தோடு (தருமன் துரியோதனனிடம்)அனுப்பின தூதனான கடோற்கசனும், அருக்கன்உம் - சூரியனும்,—சேதனர் புகழ் மொழி திகிரி வேந்தை - அறிவுடையார் புகழ்ந்துகூறுகிற சொற்களையுடைய ஆஜ்ஞாசக்கரத்தையுடைய தருமராசனை, துயில் உணர்த்தினார் - தூக்கத்தினின்று எழுப்பினார்கள்; (எ - று.)

கைலைக்குச் சென்ற கிருஷ்ணார்ச்சுனரும், துரியோதனன் பாசறைக்குத் தூதுசென்ற கடோற்கசனும் மீளுமளவில், சூரியனுதிக்க, தருமன் துயிலுணர்ந்தனனென்பதாம். பி - ம்: ஏகிய.

பூதனைமுலைநுகர்ந்த கதை:—தன்னைக் கொல்லப் பிறந்தவன் ஒளித்து வளர்கிறானென்று உணர்ந்த கம்சனால் விசேஷமான பலம்

சாமர்த்தியம் அழகு முதலிய சிறப்புக்களையுடைய குழந்தைகளைக் கொல்லும்படி யேவியனுப்பப்பட்ட பூதனையென்னும் ராட்சசி நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து தூங்கிக் கொண்டிருந்த கண்ணனாகிய குழந்தையை யெடுத்து நஞ்சுதீற்றிய தனது முலையைக் கொடுத்துக் கொல்லமுயல, பகவானுனகுழந்தை அவ்வரக்கியின் முலைகளைக் கைகளால் இறுகப்பிடித்து அவளுயிரோடும் உறிஞ்சி அவளைப் பேரிரைச்சலிட்டுக் கதறிவிழுந்திறக்கும்படி செய்த தென்பதாம். (395)

258.—அருச்சுனனோடு சென்று மீண்டசெய்தியைக் கண்ணன் தருமபுத்திரனிடங் கூறுதல்.

கயிலைபுக்கதுமரன்கணையுஞ்சாபமும்
வியன்மலர்ப்பொய்கையும்விசயற்கீந்ததும்
புயலெனக்கரியமெய்ப்பூந்துழாயவன்
றுயிலுணர்குரிசிலுக்கடைவிற்சொன்னபின்.

இதுவும், மேற்கவியும் - குளகம்.

(இ - ள்.) புயல் என கரிய-மேகம்போலக் கறுத்த, மெய்-திருமேனியையும், பூ துழாயவன் - அழகிய திருத்துழாய்மாலையையுமுடைய கண்ணன்,—துயில் உணர் குரிசிலுக்கு - தூக்கம்விழித்த தருமராசனுக்கு,—கயிலை புக்கதுஉம் - (தாம்) கைலாயத்தைச் சேர்ந்ததையும், (அங்கு), அரன் - சிவன், கணைஉம் - அம்பையும், சாபம்உம் - வில்லையும், (கணைவிற்களைக்கொண்ட), வியன் மலர் பொய்கைஉம் - பெரிய பூக்களையுடைய தடாகத்தையும், விசயற்கு - அருச்சுனனுக்கு, ஈந்ததுஉம் - கொடுத்ததையும், அடைவின் - முறையே, சொன்னபின்-கூறியபின்பு, (எ - று.)—"கடோற்கசனும் கூறினான்" என அடுத்தகவியோடு முடியும். (396)

259.—கடோற்கசன் தான் தூதுசென்று மீண்ட செய்தியைக் கூறுதல்.

பைதிகழ்மணிப்பணிப்பதாகையானிடை
யெய்தியங்குரைத்ததுமிருந்தமன்னவர்
வெய்துறப்புகன்றதுமீண்டுவந்ததுங்
கொய்தொடைக்கடோற்கசன்ருனுங்கூறினன்.

(இ - ள்.) கொய் தொடை-(பூக்களைப்) பறித்துத்தொடுத்த மாலையையுடைய, கடோற்கசனும்—,—பை திகழ்-படத்தில் விளங்குகிற, மணி-மாணிக்கத்தையுடைய, பணி-பாம்பையெழுதிய, பதாகையானிடை-துவசத்தையுடைய துரியோதனனிடத்து, எய்தி-சேர்ந்து, அங்கு - அவ்விடத்து, உரைத்ததுஉம் - (தான்) பேசினதையும், இருந்த மன்னவர் - (அங்கு) இருந்த அரசர்கள், வெய்து உற - கொடுமை பொருந்த, புகன்றதுஉம்-பேசினதையும், மீண்டு வந்ததுஉம் - (தான்) திரும்பிவந்ததையும், கூறினன்—; (எ - று.) பி - ம்: கொய்திறற், பதாகை-பெருங்கொடி யென்பர், நச்சினார்க்கினியர்.()

பதின்மூன்ரும்போர்ச்சருக்கம் முற்றிற்று.

———

பதினேன்காம்போர்ச்சருக்கம்

1.—கடவுள் வணக்கம்.

அரியதண் கலைவாண் மதியமுங் கொதிகொ ளாலமுந் தன திடத் தடக்கி, யுரியவொண் கங்கா நதிக்கொரு பதியா யுரைபெறு முயர்மகோ ததியிற், பரியதிண் சிலையோ டம்பெலா முகந்து பற் குனப் பொருப்பிடைப் பொழியுங், கரியபைம் புயலைக் கைத்தொழு மவரே கருவிலே திருவுடை யவரே.

(இ - ள்.) அரிய - (பிறர்க்கு) அருமையான, தண் - குளிர்ச்சி யாகிய, கலைவாள் - கலைகளின் ஒளியையுடைய, மதியம்உம் - சந்திரனை யும், கொதிகொள் - கொடுமையைக்கொண்ட, ஆலம்உம் - விஷத்தை யும், தனதுஇடத்து - தன்னிடத்தில், அடக்கி - அடங்கவைத்துக் கொண்டு, உரிய ஒள் கங்காநதிக்கு ஒரு பதி ஆய் - தனக்குஉரியதான சிறந்த கங்காநதிக்கு ஓர் இடமாய் [ஒரு தலைவனாய்], உரைபெறும் - புகழ்பெற்ற - உயர் மகோததியில் - சிறந்த (பரமசிவனாகிய) பெருங் கடலினின்று, பரிய திண் சிலையோடு அம்புஎலாம் முகந்து - பெரிய வலிய வில்லும் அம்பும் ஆகிய எல்லாவற்றையும் நிரம்ப எடுத்து, பற்குனன் பொருப்பிடை - அருச்சுனனாகிய மலையிடத்தே, பொழி யும் - சொரிந்த, கரிய பைம் புயலை - கருநிறமுடைய குளிர்ந்தமேகம் போன்ற கண்ணனை, கைதொழுமவர்ஏ - கைகூப்பி வணங்குந் தன்மையுடையவர்கள்தாமே, கருவிலே திரு உடையவர் - கருப்பத் திலேதொடங்கி ஐசுவரியமுடையவராவர்; (எ - று.)

கண்ணபிரான் தனது பெருங்கருணையால் பாண்டவர்க்குச் சகாயனாய் நின்று அருச்சுனனது சபதத்தை நிறைவேறச்செய்தற் பொருட்டு அவனுடன் கைலாசத்துக்குச்சென்று அதற்கு உரிய கருவிகளை அவ்வருச்சுனனுக்குச் சிவபிரானைக்கொண்டு கொடுப்பித் தருளின வரலாற்றைக் கீழ்ப் பதின்மூன்றும்போர்ச்சருக்கத்திற் கூறிவந்தபொழுது அப்பிரானது அந்தக் கலியாண குணத்தில் இவ் வாசிரியர்க்கு உண்டான ஈடுபாடு அச்சருக்கம் முடிந்தபின்பும் ஆராது தலையெடுத்து நின்றதனால், அச்செய்தியையே குறித்து அடுத்த இச்சருக்கத்துக்குக் கடவுள்வாழ்த்துக் கூறுகின்றனர்.

சிவபிரானிடத்தில் கடலின்தன்மையையும், கண்ணபிரானிடத் துக்காளமேகத்தின் தன்மையையும், அருச்சுனனிடத்துமலையின் தன்மையையும் ஏற்றிக்கூறினர்; **உருவகவணி.** மதியமும் ஆலமும் தனதிடத்து அடக்குதல் - உபமானம் உபமேயம் இரண்டுக்கும் பொருந்துதலும், பதி சிலை அம்பு என்ற சொற்கள் உபமானமாகிய கடலோடு இயையுமிடத்து முறையே கணவன் மழைக்கல் நீர் என்றும், உபமேயமாகிய சிவபிரானோடு இயையுமிடத்து முறையே இடம் வில் பாணம் என்றும் பொருள்பட்டு, **அச்சிலேடை** உருவகத் துக்கு அங்கமாய் அமைதலும் காண்க. **கடலுக்கு,** மதியை அடக்கு தல் - பாற்கடல் கடைந்தகாலத்து அக்கடல் சந்திரனது உற்பத்திக்கு இடமானதும், நாள்தோறும் சந்திரனுதித்தல் கடலினின்று தோன்றுகிறவாறுபோல இருத்தலும்; ஆலம் அடக்குதல் - பாற் கடல்கடைந்தகாலத்து அக்கடல் கொடிய ஹாலாஹலமென்னும்

விஷந்தோன்றுதற்கு இடமாயினமை: கங்காநதிக்குப்பதியாதல் - கங்கைநதியாகிய பெண்ணுக்குக் கடல் கணவனாதலும், கடல் கங்கை நதி சேருமிடமாதலும். (எல்லாநதிகளுங் கடலிற்சேர்தலும், நதீ சப்தமும் ஸமுத்ரசப்தமும் வடமொழியில் முறையே பெண்பால் ஆண்பாற் சொற்களாக அமைந்திருத்தலு மாகிய தன்மைபற்றி நதிகளை மனைவிகளாகவும் கடலை அவைகட்குக் கணவனாகவும் கூறுதல் மரபு.) பொதுப்பட 'நதிக்கொருபதியாய்' என்றுகூறாது இங்கே 'கங்காநதிக் கொரு பதியாய்' என்று எடுத்துக்கூறினது, அந்நதியின் ஒப்புயர்வற்ற சிறப்புப்பற்றி யென்க. அவ்யாற்றின் மிக்க சிறப்பு, பிரசித்தம். கடலுக்குச் சிலை-ஆலங்கட்டியும், அம்பு-சாதாரணநீர்த்துளியு மென்க. மிக்கவலிமையும், எதற்குஞ்சலியாத உறுதியும், அளவிடவொண்ணாதஉயர்வும் பொருள்வண்மையும் முதலியன உடைமைபற்றி, அருச்சுனனிடத்து மலையின் தன்மையையேற்றிக் கூறினர். கண்ணனுக்குக் காளமேகம் கருநிறத்தால் மாத்திரமே யன்றி உலகத்தின்தாபத்தை யொழிக்கிற குளிர்ந்த கருணைமழையைச் சொரியுந் தன்மையாலும் அமையு மென்க. சிவபிரானுக்கு, சந்திரனையும் விஷத்தையும் அடக்குதல்-சந்திரனைத் தலையில் தரித்தலும், விஷத்தைக் கழுத்தில்நிறுத்தலும்; கங்காநதிக்கு ஒரு பதியாதல்-கங்கையைச் சடையில் வைத்துக்கொண்டிருத்தல்; இனி, பெண்பாலாகியகங்கை சிவபிரானை நீங்காதுசேர்ந்திருக்குந் தன்மை யென்றலுமுண்டு. உபமேயமாகிய சிவபிரான் பலதேவர்களினுஞ் சிறப்புப்பெற்று மகாதேவனென்றும் மகேசுவரனென்றும் கருணைக் கடலென்றும் உயர்த்திக்கூறப்படுந்தன்மை தோன்ற, உபமானமாகிய கடலை 'உயர் மகோததி' என்று விசேடித்துக் கூறினரென்க.

பெறுதற்கரிய பொருள்களாய்ப் பரமசிவனிடமிருந்த வில் அம்புகளை அருச்சுனன் எளிதிற்பெற்றுப் பயன்படுத்திக்கொள்ளுதற்குக் கண்ணன் புருஷகாரமாய் நின்று உதவியமைபற்றி, கண்ணனை 'பரமசிவனாகிய பெருங்கடலிடத்தினின்று சிலையும் அம்பும் முகந்து பற்குனப் பொருப்பிடைப்பொழியுங் கரியபைம்புயல்' என்றார். வில் அம்புகளோடு அவற்றிற்கு உரிய முஷ்டிநிலை என்பனவும், ருத்திரமகாமந்திரமுங் கொடுப்பித்தமை, 'எலாம்,' 'பொழியும்' என்ற சொற்களாற் குறிப்பிக்கப்பட்டன வென்க.

கருவிலே திருவுடைமையாவது-கருப்பத்தி லிருக்கும்பொழுதே எம்பெருமான் தன் திருவருளால் தனதுசொரூபரூபகுண விபூதிகளைக் காட்டிக் குளிர நோக்கித் தரிசநந்தரப்பெற்று வணங்கி அப் பயிற்சியின் நிறைவினாற் பிறந்த பின்பும் ஒருகாலும் அப்பரமனை மறவாமல் எப்பொழுதும் பகவத் பக்தியாகிற ஐசுவரியத்தைப் பரிபூர்ணமாக உடையராயிருத்தல். தொண்டரடிப்பொடியாழ்வார் எம்பெருமானுக்கு அடிமைபூணாதவரை "கருவிலேதிருவிலாதீர்" என்று இகழ்ந்து அருளிச்செய்தமைகொண்டு, இவர் இங்கு எம்பெருமானுக்கு அடிமைபூண்பவரை 'கருவிலே திருவுடையவர்' என்றார். 'கருவிலே திருவுடையவர்'—கர்ப்ப ஸ்ரீமாந். பி - ம்: கரியவண்புயலை.

இதுமுதற் பதினொருகவிகள் - பெரும்பாலும் இரண்டு நான்கு ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றைநான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள். (398)

2.—தருமபுத்திரன் சேனையுடன் போர்க்குப் புறப்படுதல்.

காலையாதபனைத் தருமன்மாமதலைகைதொழுகடன் முடித்தருளிச், சாலையார்தழல்செய் வேள்வியந்தணர்க்குத் தானமுந் தகுவன வழங்கி. மாலையாமளவிற் றனஞ்சயன்மொழிந்த வஞ்சினம் வழுவறமுடிப்பான், வேலையாரரவப் பலபணைமுழங்க வெம்முரட் சேனையோடெழுந்தான்.

(இ-ள்.) காலை - (பதினான்காநாட்) சூரியோதயகாலத்தில்,— தருமன் மா மதலை - யமதருமராசனது சிறந்தகுமாரனான யுதிட்டிரன்,—ஆதபனை கை தொழு கடன் முடித்தருளி - சூரியனைக் கை கூப்பிவணங்கிச் செய்யவேண்டிய கடமைத்தொழில்களை அன்புடன் செய்து முடித்து,—சாலை-யாகசாலையில், ஆர் - பொருந்திய, தழல்-அக்கினியில், செய் - செய்கிற, வேள்வி - யாகங்களையுடைய, அந்தணர்க்கு-பிராமணர்களுக்கு, தகுவன தானம்உம் - தக்கனவாகிய தானங்களையும், வழங்கி - மிகுதியாகக் கொடுத்து,—மாலைஆம் அளவில் - (அன்றைத்தினம்) மாலைப்பொழுது வருமளவிற்குள், தனஞ்சயன் மொழிந்த வஞ்சினம் வழு அற முடிப்பான் - அருச்சுனன் (முதல்நாளிற்) சொன்ன சபதத்தைத் தவறுதலில்லாமல் நிறைவேற்றும் பொருட்டு,—வேலை ஆர் - கடலொலியையொத்த, அரவம் - ஆரவாரத்தையுடைய, பலபணை - அநேகவகைவாத்தியங்கள், முழங்க-மிக ஒலிக்க, வெம் முரண் சேனையோடு - கொடிய வலிமையையுடைய(தன்)சேனையுடன், எழுந்தான்-(போர்க்குப்) புறப்பட்டான்; (எ - று.)

மாலையாமளவில் முடிப்பான் என்க. இனி, மாலையாமளவில் மொழிந்த என இயைத்து, முந்தினநாளைமாலைப்பொழுதிற் சொன்ன என்றலுமாம். (399)

3.—அருச்சுனன் போர்க்குப் புறப்படுதல்.

அடைந்தவரிடுக்க ணகற்றுதற்கெண்ணி யாடகப் பொருப்பினாற்கடலைக், கடைந்தமுதளித்த கருணையங்கடலே கடும்பரிச்சந்தனங்கடவ, மிடைந்தொளியுமிழும் வேற்படைத்தடக்கை வீமனுமிளைஞரும்பலருங், குடைந்திருபுறனுங் கைவரமகவான் குமரனுமமர்க்களங்குறுக.

இதுவும், வருங்கவியும் - குளகம்.

(இ-ள்.) அடைந்தவர்-(தன்னைச்) சரணமடைந்த தேவர்களின், இடுக்கண் - துன்பத்தை, அகற்றுதற்கு - போக்குதற்கு, எண்ணி-நினைத்து, ஆடகம் பொருப்பினால் - பொன்மயமான மந்தர மலையைக் கொண்டு, கடலை கடைந்து-பாற்கடலைக் கடைந்து, அமுது அளித்த - (அத்தேவர்கட்கு) அமிருதத்தைக் கொடுத்த, கருணை அம் கடலே - அருளுக்கு அழகிய ஒருகடல்போல இடமாகவுள்ளவனாகிய கண்ணபிரான்தானே, கடும் பரி சந்தனம் கடவ-வேகத்தையுடைய குதிரைகள்பூட்டிய (தனது) தேரைச் செலுத்தவும்,—

மிடைந்து ஒளி உமிழும் - மிகுதியாக ஒளியை வீசுகிற, வேல் படை - வேலாயுதத்தையேந்திய, தட கை - பெரியகையையுடைய, வீமன்உம் - வீமசேனனும், இளைஞர்உம்-தம்பிமாரான நகுலசகதேவர்களும், பலர்உம் - மற்றும் பல அரசர்களும், இரு புறன்உம் - (தனது) இரண்டுபக்கங்களிலும், குடைந்து - நெருங்கி, கைவர - கைகள்போல(ஏற்றதுணையாக அடுத்து)வரவும்,—மகவான் குமரன் உம்-இந்திரகுமாரனை அருச்சுனனும், அமர் களம் குறுக-யுத்த களத்தைச்சேர்ந்திட,—(எ-று.)—"மைத்துனன்வகுத்து நின்ருன்" என அடுத்தகவியோடு தொடர்ந்து முடியும்.

கீழ்க்கவியில், 'தருமன்மாமதலை சேனையோடெழுந்தான்' என்றதில், மற்றையோர் எழுந்ததும் அடங்குமாயினும், அன்றைத் தினத்தில் சபதத்தை நிறைவேற்றவேண்டிய பாரத்தை அருச்சுனன் மேற்கொண்டுள்ளானுதலால், அவனதுவருகையைச் சிறப்பாகத் தனியேயெடுத்துக்கூறுகிருர். வீமனும் நகுலசகதேவர்களும் சாத்தகி முதலிய மற்றும் பலஅரசரும் அவனையடுத்துநின்றதற்கும் இதுவே காரணம். கடல் கடைந்ததொருகடலெனச் சமத்காரந் தோன்றக் கூறினுர். தேவர்களைக் காக்கும்பொருட்டுப் பாற்கடல் கடைந்து அமுதளித்ததுபோலவே, தேவாமிசமான பாண்டவர்களைக் காத்தற்பொருட்டுப் போர்க்கடலைக் கடைந்து வெற்றியளிக்குங் கருணாநிதி யென்பார், இங்கு அத்தன்மையைக் கூறினுர். முன்பு கடல்கடைந்தமுதளித்தவனும், இப்பொழுது கிருஷ்ணவதாரஞ் செய்தவனும் ஒருதிருமாலே யாதலால் அத்தன்மை கண்ணன் மேல் ஏற்றிக் கூறப்பட்டது. கடலே என்ற ஏகாரம் - உயர்வு சிறப்பு. குடைதல் என்பது - நீரில்விளையாடுதலையுங் குறிக்குமாதலின், ஒருதொடராய் நின்ற அடுத்த கவியிற் சேனையைக் கடலென்பதற்கு ஏற்ப, அதனிடையே செல்லுதலை 'குடைந்து' என்ருரென்னலுமாம்: அது, இங்கு, உல்லாசமாக ஊக்கத்தோடு செல்லுதலை விளக்கும். கைவர - ஒழுங்காய்வரஎனினும், படைவகுப்பில்வர எனினுமாம். (400)

4.—திட்டத்துய்மன் பாண்டவர்சேனையை அணிவகுத்தல்.

சோனையம்புயலிற்கணைதொடும்பதாதிதுரகதந்துரகதத்தடந்தேர்
யானையென்றுரைக்குநால்வகையுறுப்புமிராசமண்டலமுகமாகத்
தானையங்கடலைமிடலுறவகுத்துத்தான்முதற்பேரணியாகச்
சேனையின்பதியாமைத்துனனின்ருன்றேவரும்யாவரும்வியப்ப.

(இ - ள்.) சேனையின் பதி ஆம் - (பாண்டவ) சேனைக்குத் தலைவனை, மைத்துனன் - (பாண்டவர்களின்) மைத்துனனுகிய திருஷ்டத்யும்நன்,— சோனை - விடாப்பெருமழை பொழிகிற, அம் - அழகிய, புயலின் - மேகம்போல, கணை தொடும்-அம்புகளை மிகுதியாகப் பிரயோகிக்கிற, பதாதி-காலாள்களும், துரகதம் - குதிரைகளும், துரகதம் தட தேர் - குதிரைகள் பூண்ட பெரிய தேர்களும், யானை - யானைகளும், என்று உரைக்கும் - என்று சொல்லப்படுகிற, நால் வகை - சதுரங்கங்கள், உறுப்பு உம் - ஏற்ற அவயவங்களும், இராச மண்டலம் - அரசர்கள் கூட்டம், முகம் ஆக - முகமுமாக (அமையும்படி), தானை அம் கடலை - (தனது) அழகிய

சேனுசமுத்திரத்தை, மிடல் உற - வலிமைமிக, தேவர் உம் யாவர் உம் வியப்ப-(வானத்தில் நின்று போர்காணுந்) தேவர்களும்மற்றும் எல்லோரும் (கண்டு) அதிசயிக்கும்படி, வகுத்து-வியூகம்வகுத்து,—தான்—, முதல் பேர் அணி ஆக - அச்சேனையின் முகத்திற்கு ஒரு பெரிய அலங்காரமாக, நின்றான் - முன்நின்றான்; (எ-று.)

தானைக்கடல் - கடல்போல மிகப்பரந்த சேனையென்க; அணியணியாக வருதல்பற்றியும், அச்சந்தருதல் பற்றியும், சேனைக்குக் கடலுவமை ஏற்கும். சேனைகளை அணிவகுக்கிற கருத்து, கண்ட படி தனித்தனி பிரிந்துபரவியிருத்தலினும்ஒருவடிவமமையத்திரண்டு நிற்கையில் வெல்லுதற்கரிதாய்ப் பகைவரை எளிதிலழிக்கு மென்பதாதலால், 'மிடலுறவகுத்து' என்றார். அரசர்களை முகமாகவும், நால்வகைச்சேனைகளை மற்றை அவயவங்களாகவும் அமைத்து அணி வகுத்தன னென்க. மைத்துனன் - இங்கே, மனைவியினுடன்பிறந்தவன். (401)

5.—மூன்றுகவிகள் - குளகம்: துரோணன் கௌரவசேனையை அணிவகுத்ததைக் கூறும்.

பாப்புவெம்பதாகைப்பார்த்திவன்பணியாற்பத்திரண்டியோசனைப்பரப்பிற், றீப்புறஞ்சூழநடுவணிற்பதுபோற்செயத்திரதனையிடைநிறுவிக், கோப்புறப்பரிதேர்குஞ்சரம்பதாதிகூறுநூன்முறையணிநிறுத்திக், காப்புறத்திசைகளெட்டினுநெருங்கக்காவலர்யாரையுநிறுத்தி.

(இ - ள்.) பாம்பு-பாம்பின்வடிவமெழுதிய, வெம்-பயங்கரமான, பதாகை-கொடியையுடைய, பார்த்திவன்-துரியோதனராசனது, பணியால் - கட்டளையின்படி,—பத்து இரண்டு யோசனை பரப்பில் - இருபது யோசனை விசாலமுள்ள இடத்திலே, தீ புறம் சூழ நடுவண் நிற்பது போல் - நெருப்புப் புறத்திற் சூழ்ந்துநிற்க அதன்நடுவில் நிற்பதுபோல, செயத்திரதனை இடை நிறுவி - சயத்திரதனை (க்கொடிய பெரியசேனையின்) மத்தியிலே நிற்கச்செய்து,—கோப்பு உற - இடைவிடாமல் ஒன்றோடொன்று தொடர்ச்சியாக அமையும்படி, பரி தேர் குஞ்சரம் பதாதி-குதிரை தேர் யானை காலாள் என்ற நால்வகைச்சேனைகளையும், கூறும் நூல் முறை - (படைவகுப்பைக்) கூறுகிற சாஸ்திரங்களின் முறைமைப்படி, அணி நிறுத்தி - ஒழுங்குபடச் சுற்றிலும் நிற்கச்செய்து,—காப்பு உற - (அவனுக்குக்) காவலாக அமையும்படி, திசைகள் எட்டின்உம் - எட்டுத்திக்குக்களிலும், காவலர் யாரைஉம் - காக்குந் திறமமைந்தவர்களான அரசர்கள் பலரையும், நெருங்க நிறுத்தி-இடைவிடாது நிற்கும்படி வைத்து,— (எ - று.)—இப்பாட்டிலும், அடுத்த இரண்டு பாடல்களிலுமுள்ள 'நிறுத்தி' என்ற சொற்களெல்லாம், 7 - ஆம் பாட்டிலுள்ள 'நின்றனன்' என்றதனைக் கொண்டு முடியும்; அப்பாட்டிலுள்ள 'துரோணன்' என்பதே இவற்றிற்கெல்லாம் எழுவாய்.

பதின்மூன்றாம்போர்நாளிரவிலே கடோற்கசனால் அருச்சுனனது சபதத்தை யறிந்த துரியோதனன், துரோணனை நோக்கி 'நாளைக்குச் சைந்தவனைப் பாதுகாத்து அருச்சுனனை அனலிற் குளிப்

பிக்கவேண்டும்' என்றுமிகவும் பிரார்த்தித்தன னாதலால், இங்கே 'பார்த்திவன்பணியால்' என்றார். துரியோதனன் வேண்டிக்கொண்டதற்குத் துரோணன் ஆமளவுங்காப்பன் என்று வாக்குத்தத்தஞ்செய்துள்ளா னாதலால், மிக்ககாப்பு அமையும்படி அணிவகுக்கின்றனனென்க. அபிமனைக் கொன்ற சயத்திரதனை அருச்சுனன் சபதப்படி கொல்லவொண்ணாவண்ணம் மாலைப்பொழுதளவும்பாதுகாப்பதுவே துரியோதனனதியரது முயற்சியாதலால், இங்ஙனம் துரோணன் அவனை இடைநிறுத்திச் சுற்றிலும் வெகுதூரமளவும் சேனைகளையும்அரசர்களையும் நிறுத்தி அணிவகுப்பானாயினன். இரண்டாம்அடியில், சயத்திரதன் கொடியசேனைசூழ இடைநிற்றற்கு நெருப்புச்சூழ இடைநிற்றலை உவமைகூறியது, உவமையணி. பாணாசுரன் முதலிய சிலர்க்கு நெருப்புக்கோட்டையிருந்தது கருதி, சயத்திரதனுக்குப் பாதுகாவலாகச் சூழ்ந்த சேனைக்குத் தீயரண் உவமை கூறப்பட்டதென்க. (402)

6. தூசியின்முதனாள்வஞ்சினமொழிந்ததுன்மருடணனறனைநிறுத்தி
ஊசியுநுழையாவண்ணம்விற்பதாதிவயவரையுரனுறநிறுத்தி
வாசியிலிபத்திற்றேரிலேண்பட்டமன்னரையிருகையுநிறுத்திப்
பேசியகன்னன்சகுனிசல்லியரைப்பேரணியாகவேநிறுத்தி.

(இ - ள்.) முதல் நாள்-முந்தினநாளில், வஞ்சினம் மொழிந்த - மறுநாள் மாலைப்பொழுதளவும் சயத்திரதனைத் தான் காப்பதாகச்) சபதஞ் சொன்ன, துன்மருடணன் தனை - துர்மர்ஷண னென்ற அரசனை, தூசியில் - முன்னணிச்சேனையிலே, நிறுத்தி - நிற்க வைத்து,—ஊசிஉம் நுழையா வண்ணம்-சிறிய ஊசியும் இடையில் நுழையவொண்ணாதபடி [மிகஅடர்த்தியாக],வில் பதாதி வயவரை- வில்லில்வல்ல காலாள்வீரர்களை, உரன் உற - வலிமைபொருந்த, நிறுத்தி - (அவனுக்கு உதவியாக அவனுடன்) நிற்கச்செய்து,— வாசியில் - குதிரைகளிலும், இபத்தில் - யானைகளிலும், தேரில் - தேர்களிலும் (ஏறியுள்ள), எண் பட்ட மன்னரை-வலிமைபொருந்திய அரசர்களை, இரு கைஉம் நிறுத்தி - இரண்டு பக்கங்களிலும் நிற்கச்செய்து,—பேசிய கன்னன்-(சயத்திரதனைத் தான் பாதுகாப்பதாகப்) பிரதிஜ்ஞைகூறின கர்ணனையும், சகுனி சல்லியரை - சகுனியையும் சல்லியனையும், பேர் அணி ஆகவே நிறுத்தி - பெரிய நடுச்சேனையிற் பொருந்தும்படி நிறுத்தி,—(எ-று.)—"சகடதுண்டத்து நின்றனன் துரோணன்" என வருங் கவியோடு தொடர்ந்து முடியும்.

தூசி-முந்துற்றுப்பொருபடை. அருச்சுனன்செய்த சபதத்தைக் கடோற்கசனால் அறிந்து துரியோதனன் துரோணன்முதலானோரை நோக்கி வேண்டியபொழுது, துர்மர்ஷணன் அங்ஙனமே தான்காப்பதாக உறுதிமொழி கூறியதனை, கீழ்ச்சருக்கத்திற் காண்க. அப்பொழுது கர்ணன்முதலியோர் தாம் காப்பதாகச் சபதஞ்செய்தமை பற்றியும் 'பேசியகன்னன் சகுனிசல்லியரை' என்றது. ஊசியும், உம்மை - இழிவுசிறப்பு. எண்பட்டமன்னரை யென்றும் படிக்கலாம். எண்பட்ட - மதிப்புப் பெற்ற. (403)

7. அணிகளைந்தைந்தாலைவகைவியூகமாகியசேனையின்சிரத்து, மணிமுடிபுனைந்துவைத்தெனவலங்கல் வலம்புரிமார்பனைநிறுத்திப், பணிவுறுமவுணர்பதாகினிவகுத்தபார்க்கவனிவனெனப்பயில்போர்த், துணிவுடன்பலதேர்சூழ்வரச்சகடதுண்டத்துநின்றனன்று ரோணன்.

(இ-ள்.) அணிகள் ஐந்து ஐந்தால் - தனித்தனி ஐந்துஐந்து பகுப்பாகப் பிரிக்கப்பட்ட சேனைத்தொகுதிகளால், ஐவகை வியூகம் ஆகிய-ஐந்துவகை வியூகமாக வகுக்கப்பட்ட, சேனையின் - சேனையினுடைய, சிரத்து - முடியில், மணி முடி புனைந்து வைத்து என - இரத்தினகிரீடத்தைத் தரித்து வைத்தாற்போல, வலம்புரி அலங்கல் மார்பனை நிறுத்தி - நஞ்சாவட்டைப்பூமாலையைத் தரித்த மார்பையுடையனான துரியோதனனை நிற்கச்செய்து,— பணிவு உறும் அவுணர் பதாகினி வகுத்த பார்க்கவன் இவன் என-(தன்னை) வணங்குதல்பொருந்திய அசுரர்களுடைய சேனையை அணிவகுத்த சுக்கிராசாரியனே இவனென்று (ஒப்புமையால் தன்னைக்) கூறும்படி,— பயில் போர் துணிவுடன் - இடைவிடாமற் போர்செய்யும் உறுதியுடனே, பல் தேர்சூழ்வர-பலதேர்கள் (தன்னைச்) சூழ்ந்துவர,— துரோணன்—, சகட துண்டத்து-சகடவியூகத்தின் முகத்திலே, நின்றனன் - (தான்) நின்றான்; (எ-று.)

சதுரங்கங்கள்கூடின தனது பெருஞ்சேனைத்தொகுதியைத் தனித்தனி ஐந்தாகப்பிரித்து, அவற்றை ஐந்துவியூகமாக அமைத்து, அவற்றிற்கெல்லாம் ஒருமகுடம்வைத்தாற்போல அலங்காரமாயமையும்படி துரியோதனனைத் தலைமையாகநிறுத்தித் தான் அவ்வைந்து வியூகங்களுட் பிரதானமானதும் மற்றை நான்கையுந் தனக்குள்ளேகொண்ட மகாவியூகமுமான சகடவியூகத்தின் முன்னிடத்திலே நின்றனனென்பதாம். ஐந்துவியூகம்-சகடம், பதுமம், கர்ப்பம், சூசீ, கூடம் என்பன. அசுராம்சமான கௌரவசேனையைத் தேவாம்சமான பாண்டவரோடு பொருதற்கு அணிவகுத்த துரோணாசாரியனுக்கு அசுரகுரு ஏற்ற உவமையாவன். சகடவியூகம்-நால்வகைச்சேனைகளையும் வண்டிபோல வடிவம் அமையும்படி ஒழுங்குபட நிறுத்துதல். பதாகினி என்பது-கொடிகளையுடையதெனக் காரணப்பொருள்படும்; பதாகா - த்வஜம். பார்க்கவன் - ப்ருகு என்னும் முனிவனது சந்ததியிற் பிறந்தவன்; தத்திதாந்தநாமம். 'பலதேர் சூழ்வர' என்றது-பலதேர்வீரர் தன்னைச்சுற்றி வந்து நிற்க என்றவாறு. பி-ம்: வியூகமாக்கியச்சேனையின். (404)

8.—துரோணன்படைவகுத்ததன் சிறப்பு.

மந்தணமிருந்துகங்குலின்முதனுண்மன்னனோடியம்பியவகையே, யந்தணனணிந்தவிரகினைவிமானத்தமரருமதிசயித்துரைத்தார், சந்தணிகடகவாகுநீள்சிகரச்சயத்திரதனையொருபகலிற், கொந்தழலுரோடத்தனஞ்சயன்பொருதுகோறலோவரிதெனக்குறித்தே.

(இ-ள்.) முதல் நாள் கங்குலின் - முந்தினநாளிரவில், மந்தணம் இருந்து - ஆலோசனைச்சபையிலே யிருந்துகொண்டு, மன்னனோடு இயம்பியவகை ஏ-துரியோதனனுடன் சொன்னபடியே, அந்

7. அணிகளைந்தைந்தாலைவகைவியூகமாகியசேனையின்சிரத்து, மணிமுடிபுனைந்துவைத்தெனவலங்கல் வலம்புரிமார்பனைநிறுத்திப், பணிவுறுமவுணர்பதாகினிவகுத்தபார்க்கவனிவனெனப்பயில்போர்த், துணிவுடன்பஃறேர்சூழ்வரச்சகடந் துண்டத்துநின்றனன்று ரோணன்.

((இ-ள்.)) அணிகள் ஐந்து ஐந்தால் - தனித்தனி ஐந்தைந்து பகுப்பாகப்பிரிக்கப்பட்ட சேனைத்தொகுதிகளால், ஐவகை வியூகம் ஆகிய-ஐந்துவகை வியூகமாக வகுக்கப்பட்ட, சேனையின் - சேனையி னுடைய, சிரத்து - முடியில், மணி முடி புனைந்து வைத்து என - இரத்தினகிரீடத்தைத் தரித்து வைத்தாற்போல, வலம்புரி அலங்கல் மார்பனை நிறுத்தி - நஞ்சாவட்டைப்பூமாலையைத் தரித்த மார்பை யுடையனான துரியோதனனை நிற்கச்செய்து,— பணிவு உறும் அவு ணர் பதாகினி வகுத்த பார்க்கவன் இவன் என-(தன்னை) வணங்கு தல்பொருந்திய அசுரர்களுடைய சேனையை அணிவகுத்த சுக்கிரா சாரியனே இவனென்று ((ஒப்புமையால் தன்னைக்) கூறும்படி,— பயில் போர் துணிவுடன் - இடைவிடாமற் போர்செய்யும் உறுதி யுடனே, பல் தேர் சூழ்வர-பலதேர்கள் (தன்னைச்) சூழ்ந்துவர,— துரோணன்—, சகட துண்டத்து-சகடவியூகத்தின் முகத்திலே, நின்றனன் - ((தான்) நின்றான் ; (எ-று.)

சதுரங்கங்கள்கூடின தனது பெருஞ்சேனைத்தொகுதியைத் தனித்தனி ஐந்தாகப்பிரித்து, அவற்றை ஐந்துவியூகமாக அமைத்து, அவற்றிற்கெல்லாம் ஒருமகுடம்வைத்தாற்போல அலங்காரமா யமையும்படி துரியோதனனைத் தலைமையாகநிறுத்தித் தான் அவ் வைந்து வியூகங்களுட் பிரதானமானதும் மற்றை நான்கையுந் தனக் குள்ளேகொண்ட மகாவியூகமுமான சகடவியூகத்தின் முன்னிடத் திலே நின்றனனென்பதாம். ஐந்துவியூகம்-சகடம், பதுமம், காப்பம், சூசீ, கூடம் என்பன. அசுரர்ம்சமான கௌரவசேனையைத் தேவாம் சமான பாண்டவரோடு பொருதற்கு அணிவகுத்த துரோணாசாரிய னுக்கு அசுரகுரு ஏற்ற உவமையாவன். சகடவியூகம்-நால்வகைச் சேனைகளையும் வண்டிபோல வடிவம் அமையும்படி ஒழுங்குபட நிறுத்துதல். பதாகினி என்பது-கொடிகளையுடையதெனக் காரணப் பொருள்படும் ; பதாகா - கொடி. பார்க்கவன் - பிருகு என்னும் முனிவனது சந்ததியிற் பிறந்தவன் ; தத்திதாந்தநாமம். "பஃறேர் சூழ்வர" என்றது-பலதேர்வீரர் தன்னைச்சுற்றி வந்து நிற்க என்ற வாறு. மி-ம் : வியூகமாகியசேனையின். (404)

8.—துரோணன்படைவகுத்ததன் சிறப்பு.

மந்தணமிருந்துகங்குலின்முதனாண்மன்னனோடியம்பியவகையே, யந்தணனணிந்தவிரிவிலைவியானைத்தமரநுமதிசயித்துரைத்தார், சங் கனிகடகவாகுக்ளிசைச்சயத்திரதனைபொருபகலிற், கொந்தழனு ரோடத்தனஞ்சயன்பொருதுகோறலேயவிதெனக்குறித்தே.

((இ-ள்.)) முதல் நாள் கங்குலின் - முந்தினநாளிரவில், மந் தணம் இருந்து - ஆலோசனைச்சபையிலே யிருந்துகொண்டு, மன்ன னோடு இயம்பியவகை ஏ - துரியோதனனுடன் சொன்னபடியே, அந்

தணன் - பிராமணனான துரோணன், அணிந்த - அணிவகுத்த, விரகினை - தந்திரத்தை, (கண்டு),—விமானத்து அமரர் உம் - (வானத்தில்) விமானத்தின்மீது இருந்துகொண்டு போர்காண்கிற தேவர்களும், 'சந்து அணி - சந்தனக்குழம்பைப் பூசியவையும், கடகம் - கடகமென்னும் வளையை யணிந்தவையும், நீள் சிகரம் - உயர்ந்த மலையுச்சி போன்றவையுமான, வாகு - தோள்களையுடைய, சயத்திரதனை—, கொந்து அழல் உரோடம் தனஞ்சயன் - பற்றியெரிகிற தீத்திரள் போன்ற பெருங்கோபத்தையுடைய அருச்சுனன், பொருது - போர் செய்து, ஒரு பகலில் - இன்றை ஒருபகற்பொழுதினுள், கோறல் ஓ - கொல்லுதலோ, அரிது - அருமையானது', என குறித்து - என்று எண்ணி,—அதிசயித்து உரைத்தார் - (துரோணன் படைவகுத்த திறத்தைப்பற்றி) ஆச்சரியப்பட்டுக் கொண்டாடிப் பேசினார்கள்;

மந்தணம் = மந்த்ரம்: ஆலோசனையைக் குறிக்கிற இச்சொல் - இலக்கணையால், அதுசெய்தற்கு உரிய இடத்துக்கு வந்தது. பகைவர் படைக்கலங்களால் ஊறடையாத திண்மையும் பருமையும் உயர்வும் பற்றி, 'வாகுநீள்சிகரம்' எனப்பட்டது. கோறலோ, ஓகாரம் - தெரிநிலை. (405)

9.—அருச்சுனன் போர்தொடங்குதல்.

செய்த்தலைக்கயலும்வாளையும்பிணங்குஞ்செழும்புனற்சிந்து நாட்டரசைக், கைத்தலத்தடங்கும்பொருளெனக்காத்துக்காவலர் நின்றபேரணிகண்டு, உத்தமோசாவுமுதாமனுமுதலோரோரிருபுறத் தினுஞ்சூழ, வித்தகவலவன்முன்செலத்தடந்தேர்விசயனவ்வினை ஞர்மேனடந்தான்.

(இ-ள்.) செய்த்தலை - கழனிகளிலே, கயல் உம் - கயல்மீன்களும், வாளை உம் - வாளைமீன்களும், பிணங்கும் - (ஒன்றோடொன்று) மாறுபட்டுப் பொருகிற, செழும் புனல் - மிக்க நீர்வளப்பத்தையுடைய, சிந்து நாடு - சிந்துதேசத்தின், அரசை - இராசனான சயத்திரதனை, கைத்தலத்து அடங்கும் பொருள் என - கையிலடங்கிய பொருளைப் (பாதுகாத்தல்) போல, காவலர் - காக்குந்திறமமைந்தவர்களான அரசர்கள், காத்து நின்ற - பாதுகாத்து நின்ற, பேர் அணி - பெரிய (எதிர்ப்பக்கத்துப்) படைவகுப்பை, கண்டு - பார்த்து,—தட தேர் விசயன் - பெரியதேரையுடைய அருச்சுனன், உத்தமோசா உம் உதாமன் உம் முதலோர் - உத்தமௌஜஸ் என்பவனும் யுதாமந்யு என்பவனும் முதலான வீரர்கள், ஓர் இரு புறத்தின் உம் சூழ - (தனது) இரண்டுபக்கங்களிலும் அடுத்துவரவும்,—வித்தகம் வலவன் - திறமையுள்ள சாரதியான கண்ணபிரான், முன் செல - (தனது தேரின்) முன்னிடத்திற் பொருந்தவும், அ வினைஞர்மேல் நடந்தான் - எதிர்ப்பக்கத்துப்போர்வீரர் மேற் (போருக்குச்) சென்றான்; (எ - று.)

சிறிய கயல்மீன்கள் தங்குதற்கு உரிய கழனிகளிலும் நீர்ப்பெருக்குமிகுதியாற்பெரியவாளைமீன்கள் வந்துபாய்கின்றனவென்ற தன்மையும், சிறுமீன்களைப் பெருமீன்கள் உணவாகக்கொள்ளுதல் இயல்பாயினும் அந்நாட்டுக்கழனியில் நீர்வளத்தாற்கொழுத்துள்ள சிறியகயல்மீன்கள் வெளியிலிருந்துவருகிற பெரியவாளைமீன்களை

யெதிர்க்கும் வலிமையுடையனவென்ற தன்மையுந்தோன்ற, சிந்து தேசத்தின் நீர்வளச்சிறப்பை வர்ணித்தன ரென்க. அருச்சுனன் ஸ்வதந்திரனாகத் தொழில்செய்யாமற் கிருஷ்ணனுக்குப் பரதந்திரனாகநின்று தொழில் செய்தல் தோன்ற 'வித்தகவலவன் முன்செல விசயன் வினைஞர்மேல் நடந்தான்' என்றார். கண்ணன் தான்யார் யார்மீது போர்க்குத் தேரைச் செலுத்துகின்றானோ, அவ்வவர்மீது அருச்சுனன் போர்செய்யத்தொடங்கினனென்றவாறு. தடந்தேர் - அக்கினிபகவானாற் கொடுக்கப்பட்ட பெருமையையுடையதேர். செய் என்பது - வயலாதலை, 'நன்செய்', 'புன்செய்' என்ற வழக்கிலுங் காண்க; இது, பன்றிநாட்டில் வழங்குந் திசைச்சொல் : தலை - ஏழனுருபு. கைக்குள் அடங்கிய சிறியபொருளை எவ்வளவு நன்றாகப் பாதுகாக்கக்கூடுமோ அவ்வளவு நன்றாகச் சயத்திரதனை அரசர் பாதுகாக்க முயன்றன ரென்பது, 'கைத்தலத்தடங்கும் பொருளெனக்காத்து' என்றதனால் விளங்கும். உதாமன் = யுதாமந்யு : வடசொல்திரிபு ; இவன் துருபதனுக்கு நெருங்கின உறவினனான பாஞ்சாலராசன்: இச்சொல் - போரிற்கோபமுடையானென்னக் காரணப்பொருள்படும். பி-ம்: வலவன் செலுத்திட. (406)

10.—அருச்சுனனம்புக்குப் பகைவர்சேனை யொழிதல்.

போர்முகத்தடங்காமடங்கலேறனையான்விதம்படப்பொழிசிலீ
முகங்கள், கார்முகத்தெழுந்ததாரைபோல்வழங்கக்கார்முகத்தொ
லியினாற்கலங்கித், தார்முகத்தரசன்றம்பியோடணிந்தசாதுரங்கமு
முடனுடைந்து, நீர்முகத்துடைந்தகுரம்பெனத்துரோணனின்று
ழிச்சென்றடைந்தனவே.

(இ - ள்.) போர் முகத்து - யுத்தகளத்திலே, அடங்கா மடங்கல் ஏறு அனையான் - அடங்குதலில்லாத சிறந்த ஆண்சிங்கத்தை யொத்தவனாகிய அருச்சுனன், விதம் பட - பலவகையாக, பொழி - சொரிந்த, சிலீமுகங்கள் - அம்புகள், கார் முகத்து எழுந்த தாரை போல் - மேகத்தினிடத்தினின்று வெளியெழுந்த நீர்த்தாரைகள் போல, வழங்க - மிகுதியாக மேற்செல்லுமளவில்,—தார் முகத்து அரசன் தம்பியோடு அணிந்த சாதுரங்கம்உம்-முன்னணிச்சேனையினிடத்தேபொருந்திய துரியோதனனுக்குத் தம்பியான துச்சாசனனுடன் அணிவகுக்கப்பட்டுப் பொருந்தியிருந்த சதுரங்க சேனைகளெல்லாம், கார்முகத்து ஒலியினால் கலங்கி-(அருச்சுனனதுகாண்டீவமென்னும்) வில்லினது (நாணியின்) ஓசையாற் கலக்கமடைந்து, நீர்முகத்து உடைந்த குரம்பு என - நீர்ப்பெருக்குமிக்குப்பாய்தலாலுடைந்த கரைபோல, உடன் உடைந்து - ஒருசேரச் சிதைந்து, துரோணன் நின்ற உழி சென்று அடைந்தன - துரோணாசாரியன் நின்றவிடத்திற்போய்ச் சேர்ந்தன ; (எ - று.)

கழனியின்நாற்புறவரம்பும் மிக்கநீர்ப்பெருக்கினால் அழியுமாறு போல, கௌரவரது நால்வகைச்சேனையும் அருச்சுனனதுபாணவர்ஷத்தினால் அழிந்தனவென்க. மடங்கலேறு - எத்துணைப்பெரிய விலங்குக்கும் பின்னிடாத ஆற்றலையுடைய மிருகராஜனான சிங்கம். 'அரசன் தம்பியோடுஅணிந்த சாதுரங்கம்' என்றது - துரியோதனனுக்குத் தம்பியான துர்மர்ஷணனோடு பொருந்திநின்ற சேனை

யென்றும் பொருள்படக்கூடிய தாயினும், அடுத்தகவியின் இரண்டா மடியையும், முதனூலையும்நோக்கி இவ்வாறு பொருள் கொள்ளப் பட்டது. இரண்டாமடியில் 'கார்முகம்' என்ற சொல் - முன்னர்த் தொடர்மொழியாயும் பின்னர்த் தனிமொழியாயும் வெவ்வேறு பொருளில் வந்தது, மடக்கு. (407)

11.—அருச்சுனன் எதிர்ச்சேனையையழித்துத் துரோணனைநெருங்குதல்.

புரவிமுப் பதினா யிரங்கொடு முனைந்துபொருதிறற் கிருதவன் மாவுங், கரவிறற் கரிநூ றாயிரங் கொண்டு காதுதுச் சாதனன் றானு, மிரவியைக் கண்டமின்மினிக் குலம்போ லீடழிந் திடவுடன் றெங்குஞ், சரவிதப் படையால் விண்டலந் தூர்த்துத்தானைகா வலன் முனை சார்ந்தான்.

(இ - ள்.) முப்பதினாயிரம் புரவி கொடு - முப்பதினாயிரங் குதிரைகளை யுடன்கொண்டுவந்து, முனைந்து பொரு - மிகமுயன்று போர்செய்த, திறல் - வல்லமையையுடைய, கிருதவன்மாஉம்-கிருத வர்மா என்ற அரசனும், கரம் விறல் கரி நூறாயிரம் கொண்டு - துதிக்கையின் வலிமையையுடைய லக்ஷம் யானைகளையுடன்கொண்டு, காது - எதிர்த்துப்போர்செய்த, துச்சாதனன்தான்உம் - துச்சாசன னும், இரவியை கண்ட மின்மினி குலம்போல் - சூரியனைக்கண்ட மின்மினிப் பூச்சிக்கூட்டம்போல, ஈடு அழிந்திட - (தமது) வலிமை கெடும்படி, எங்குஉம் உடன்று-எவ்விடத்தும் போர்செய்து, விதம் சரம் படையால் - பலவகைப்பட்ட அம்புகளாகிய ஆயுதங்களால், விண்தலம் தூர்த்து - ஆகாயத்தினிடத்தை நிறைத்துக்கொண்டு, (அருச்சுனன்), தானை காவலன் முனை சார்ந்தான்-கௌரவசேனைத் தலைவனான துரோணன் போர் செய்யுமிடத்தைச் சேர்ந்தான்; (எ-று.)—பி - ம் : முனைச்சார்ந்தான்.

சூரியனில்லாதசமயத்தில் இருளில் மின்னிக்கொண்டு விளங்கி நிற்கும் மின்மினிக்குழாம் சூரியன்வந்தவளவில் அவ்விளக்கம் ஒழி தல்போல், அருச்சுனன் வருமுன் பலபராக்கிரமங் காட்டிவந்த பகை யரசர்கள் அவன் வரக்கண்டவளவிலே அவ்வாற்றல் முற்றும் ஒடுங் கின ரென்க. (408)

வேறு.

12.—மூன்றுகவிகள்-அருச்சுனனும் துரோணனும் போர்செய்தலைக் கூறும்.

சென்ற விற்ற னஞ்ச யற்கு முனைகு லைந்த சேனைவாய்
நின்ற வத்து ரோண னுக்கு நீடு போர்வி ளைந்ததால்
ஒன்றொ டொன்று துரக தங்க ளுருமின் விஞ்சி யதிர்வுறக்
குன்று குன்றொ டுற்றெ னக்கொ டிக்கொ டோர்கு லுங்கவே.

(இ - ள்.) சென்ற - (இவ்வாறு) போன, வில் தனஞ்சயற்கு உம் - விற்போரிற் சிறந்தவனான அருச்சுனனுக்கும், முனை குலைந்த சேனைவாய் நின்ற - முன்பக்கம் கலக்கமடைந்த (எதிர்ப்புறத்துச்) சேனையில் நின்றுள்ள, அ துரோணனுக்குஉம் - அந்தத்துரோணா சாரியனுக்கும்,—துரகதங்கள் - தேர்க்குதிரைகள், உருமின் - இடி யோசைபோல, ஒன்றொடு ஒன்று விஞ்சி அதிர்வுற - ஒன்றைக்

காட்டிலுமொன்று மிகுதியாகக் கனைத்தல்செய்யவும், குன்று குன்ரெடு உற்று என - மலைகள் ஒன்ரேடொன்று சமீபித்தாற்போல, கொடி கொள் தேர் குலுங்க-கொடிகட்டியுள்ள இருவர்தேர்களும் அசைந்து நெருங்கவும், நீடு போர் விளைந்தது-பெரும்போர் உண்டாயிற்று; (எ-று.)—ஆல்-ஈற்றசை.

அருச்சுனனும் துரோணனும் ஒருவர்க்கொருவர் சலியாத மகாவீரராதலால் நெடுநேரம்பொருதன ரென்க. 'முனைகுலைந்த' என்பதற்கு-வலிமைநிலையழிந்த என்றுமாம். பி-ம்: சென்றவித்தனஞ்சயற்கு.

இதுமுதல் இருபத்திரண்டு கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்றுவிளச்சீரும், மற்றையாறும்மாச்சீர்களுமாகிய **எழுசீராசிரிய விருத்தங்கள்.** *(409)*

13. முட்டியாலுநிலையினுலுமொய்ம்பினுலுமுரணுறத்
தொட்டவில்லுநிமிர்வறத்தொடுத்தவின்மையாலுமுன்
கிட்டியாசிரியனுங்கிரீடியும்பொரப்பொரப்
பட்டவில்லையிருவர்மேலும்விட்டவிட்டபகழியே.

(இ-ள்.) ஆசிரியன்உம்-துரோணுசாரியனும், கிரீடிஉம்-அருச்சுனனும், முன் கிட்டி - எதிரிலே (ஒருவரையொருவர்) நெருங்கி, முட்டியால்உம் - கையில் விற்பிடிக்குந் திறத்தினுலும், நிலையினுல் உம்-(விற்போரில்நிற்றற்குரிய) நிலைவகைகளாலும், மொய்ம்பினுல் உம்-தோள்வலிமையினுலும், முரண் உற தொட்ட வில்லு நிமிர்வு அற-வலிமைபொருந்தக் கையிலேந்திய விற்கள் நிமிர்தலொழிய [நன்ருகவளைய], தொடுத்த - அம்புதொடுத்த, வின்மையால்உம் - விற்போர்த்திறத்தினுலும், பொர பொர - மிகுதியாக (ஒருவரோடொருவர்) மேன்மேற் போர்செய்கையில், விட்ட விட்ட பகழி - (ஒருவர்மேலொருவர்)மிகுதியாக விட்ட அம்புகளெல்லாம், இருவர் மேல்உம் பட்ட இல்லை - இரண்டுபேர்மேலும் பட்டனவில்லை;

குருவாகிய துரோணன்போலவே அருச்சுனனும் வில்வித்தையில் மிக்க திறமுடையவனுதலால், இவ்விருவரும் எய்த அம்புகளெல்லாம் அவரவர் மாருக எய்த எதிரம்புகளினுல் தடுக்கப்பட்டு இடையில் ஒன்ரேடொன்று முட்டிக் கீழ்விழுந்திட்டனவே யன்றி ஒன்றேனும் இவர்களுடம்பிற் படவில்லை என்பதாம். ஆசிரீயன் - நீட்டல்விகாரம். *(410)*

14. தேரிரண்டுமிடம்வலந்திரிந்துசூழவரமுனைந்
தோரிரண்டுதனுவும்வாளியோரோர்கோடியுதையவே
காரிரண்டெதிர்ந்துதம்மின்மலைவுறுங்கணக்கெனப்
போரிரண்டுவீரருக்குமொத்தநின்றபொழுதிலே.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ-ள்.) தேர் இரண்டுஉம் - (தங்கள்) தேர்களிரண்டும் இடம் வலம் திரிந்து சூழ வர - இடசாரியாகவும் வலசாரியாகவும் மண்டலமாகவும் உலாவிவரவும்,—ஓர் இரண்டு தனுஉம் - (தங்களுடைய) ஒப்பற்ற விற்களிரண்டும், ஓர் ஓர் கோடி வாளி - ஒவ்வொன்று ஒவ்வொரு கோடிக்கணக்கான அம்புகளை, முனைந்து

உதைய-விரைந்து செலுத்தவும்,—இரண்டு கார் தம்மில் எதிர்ந்து மலைவுறும் கணக்குஎன - இரண்டுமேகங்கள் தமக்குள் [ஒன்றோடொன்று] எதிர்த்துப் போர்செய்யும்விதம்போல,—இரண்டு வீரருக்குஉம் - (துரோணன் அருச்சுனன் என்ற) இரண்டு வீரர்களுக்கும், போர் ஒத்து நின்ற பொழுதில்ஏ-யுத்தம் ஏற்றத்தாழ்வில்லாமற் சமமாக நடந்துநின்ற பொழுதிலே,—(எ-று.)—"மால் தேரை உட்செலுத்தினான்" என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

இடசாரி - இடப்பக்கமாகச் செல்லுதல். வலசாரி - வலப்பக்கமாகச் செல்லுதல். மண்டலம்-முழுவதும் சுற்றுதல். விற்கொண்டு இடைவிடாது அம்புமழைபொழிதலில் துரோணார்ச்சுனர்க்குக் காளமேகம் உவமை. காரிரண்டு எதிர்ந்துதம்மில்மலைதல் - இல்பொருளுவமை. பி - ம்: காரிரண்டதிர்ந்து. (411)

15.—அப்போது கண்ணன் துரோணனை விலகித் தேரைஉட்செலுத்தல்.

இகல்செய்வெஞ்சிலைக்கைவீரவிந்நிலந்தனக்குநின்
பகைவனின்றவந்நிலம்பதிற்றிரண்டியோசனை
புகலுகின்றபொழுதுசென்றதென்றவட்பொறுமன்மா
லுகளுகின்றபரிகொடேரையுள்ளுறச்செலுத்தினான்.

(இ - ள்.) (அப்பொழுது),—மால் - கண்ணபிரான்,—அவண் பொறுமல் - அவ்விடத்து(க் காலதாமதஞ் செய்தலை)ப் பொறுமல்,—(அருச்சுனனை நோக்கி),—'இகல் செய் - போரைச் செய்கிற, வெம் சிலை-கொடிய (காண்டீவ) வில்லை ஏந்திய, கை-கையையுடைய, வீர-வீரனே! நின் பகைவன் நின்ற அ நிலம் - உனதுபகைவனான சயத்திரதன் நின்றுள்ள அவ்விடம், இ நிலந்தனக்கு - (நாம் நிற்கும்) இவ்விடத்துக்கு, பதிற்றிரண்டுயோசனை-இருபது யோசனை தூரத்திலுள்ளது; புகலுகின்ற பொழுது சென்றது - கணக்கிட்டுச் சொல்லப்படுகிற பொழுது கழிந்திட்டது', என்று - என்றுசொல்லி,—உகளுகின்ற பரி கொள் தேரை - தாவிச்செல்லுகிற குதிரைகளைப் பூண்ட (அருச்சுனனது) தேரை, உள் உற செலுத்தினான் - (துரோணனது வியூகத்தின்) உள்ளே பாய்ந்து செல்லும்படி ஓட்டியருளினான்; (எ - று.)

கௌரவசேனாமுகத்தில் நின்றுள்ள துரோணனோடு அருச்சுனன்போர்செய்கையில் காலதாமதத்தைக்கண்டு பொறாதகிருஷ்ணமூர்த்தி, அருச்சுனனைநோக்கி 'உன்பகைவன் நின்றுள்ள இடம் இவ்விடத்துக்கு இருபது யோசனை தூரமுள்ளது: அங்ஙனிருக்கையில், இவ்வாசிரியனொருவனுடனே விடாது திறங்காட்டிப் பொருதுகொண்டிருந்தால் சபதத்தை நிறைவேற்றுதல் அரிதாய்விடும்: ஆனதுபற்றி, இப்பயனில்போரை இவ்வளவோடு நிறுத்துவாய்' என்று குறிப்பாகச்சொல்லிக்கொண்டே தந்திரமாகத் தனது தேர்க்குதிரைகளைத் துரோணனை விலகி அவனதுவியூகத்தினுட்பாய்ந்து சென்றுசேரும்படி விரைவாகச்செலுத்தினனென்பதாம். புகலுகின்ற பொழுது சென்றது என்பதற்கு - நீ சபதங்கூறின காலம் கழிந்திடுகின்றதென் இடைநிலை பிரித்துக்கூட்டிப் பொருள் கொள்ளுதல் பொருத்தம். (412)

16.—பின்பு துரோணன் அருச்சுனனைத் தொடர்ந்து நெருங்குதல்.

எதிர்த்ததேர்விழித்திமைக்குமளவின்மாயமிதுவென்
கதித்துரங்கவிசையிஞேடுகண்கரந்துகழிதலும்
அதிர்த்தடர்ந்துபின்ருெடர்ந்தடுத்தபோதருச்சுனன்
கொதித்துவந்தகுருவொடம்மதிருகிநின்றுகூறுவான்.

(இ - ள்.) எதிர்த்த-எதிரிலே நின்றிருந்த, தேர் - (அருச்சுனனது) தேரானது, விழித்து இமைக்கும் அளவில்-கண்மூடித்திறக்குமளவினுள்ளே, மாயம் இது என - மாயைபோல, கதி துரங்கம் விசையிஞேடு-நடைவல்ல குதிரைகளின் வேகத்தால், கண் கரந்து கழிதலும் - கண்ணுக்கு (எட்டாமல்) மறைந்து (நெடுந்தூரம்) போய்விட்டவளவிலே,—(துரோணன்), அதிர்த்து - ஆரவாரஞ்செய்துகொண்டு, அடர்ந்து-நெருங்கி [விடாமல்], பின்தொடர்ந்து அடுத்தபோது - (அத்தேரைப்) பின்னேதொடர்ந்து சமீபித்த பொழுது, அருச்சுனன்—,கொதித்து வந்த குருவொடு-(அங்ஙனங்) கோபங்கொண்டு வந்த அத்துரோணுசாரியனை நோக்கி, திருகி நின்று கூறுவான் - முகந் திரும்பிநின்று (சிலவார்த்தை) சொல்பவனுஞன்; (எ - று.)—அவற்றை, அடுத்த கவியிற் காண்க. அம்ம-வியப்பிடைச்சொல்.

'திருகி' என்பதற்கு-மாறுபட்டுச்சினந்து என்று பொருள்கூறுதல், மேல்வரும் அருச்சுனனது பணிவுமொழிகளோடு நோக்கப் பொருந்தாதாம். (413)

17.—அருச்சுனனது விநயமொழி கேட்டுத் துரோணன் விட்டிடல்.

ஐயநின்ெெனுடமரிழைத்தலமரருக்குமரிதுநின்
செய்யபங்கயப்பதங்கள்சென்னிவைத்தசிறுவன்யான்
வெய்யவென்சொல்வழுவுருமைவேண்டுமென்னமுறுவலித்
தெய்யவந்தமுனிவுமாறியேகுகென்றியம்பிஞன்.

(இ - ள்.) 'ஐய-ஸ்வாமீ! நின்ெெனுடு அமர் இழைத்தல் - உன்னுடன் போரைச்செய்தல், அமரருக்குஉம் அரிது - தேவர்கட்கும் அருமையானது: யான்-நானே, நின் - உனது, செய்ய பங்கயம் பதங்கள்-சிவந்த தாமரைமலர்போன்ற திருவடிகளை, சென்னி வைத்த - தலைமேற்கொண்டு வணங்குகிற, சிறுவன் - சிறியவனுவேன்; என்-(அப்படிப்பட்ட) எனது, வெய்ய சொல் - கொடுமையான சபதச்சொல், வழுவுருமை வேண்டும் - தவருதபடி அநுக்கிரகிக்கவேண்டும்', என்ன - என்று (அருச்சுனன் துரோணனை நோக்கி நல்வார்த்தை) சொல்ல, (அதுகேட்டுத் துரோணன்), எய்ய வந்த முனிவு மாறி-(அவன்மேல் அம்பு) எய்தற்கு வந்த கோபந் தணிந்து, முறுவலித்து - புன்சிரிப்புச்செய்து, ஏகுக என்று இயம்பிஞன் - 'செல்வாய்' என்று சொன்ஞன்; (எ - று.)—பி - ம்: அமர்தினைத்தல். முனியுமாறி.

'ஸ்வாமி! உன்னுடன் போர்செய்யத் தேவராலுமாகாதென்ருல், யானே உன்னையெதிர்க்கவல்லேன்?' என்று தோத்திரஞ்செய்து 'நினது சீடனுகிய அடியேன் செய்த சபதத்தை நிறைவேறச்செய்தல், குருவாகிய நினக்கு முறையன்ருே?' என்று அருச்சுனன்

வணக்கமாகச்சொல்லி வேண்டவே, துரோணன் கோபமாறி அவ னுக்குச் செல்ல விடையளித்தனனென்க. அமர் வல்லார்க்கும் நின் னுடன் அமர்செய்தல் இயலாது எனச் சமத்காரப்பொருளொன்று 'அமரிழைத்தல் அமரருக்குமரிது' என்ற சொற்போக்கில் தோன்று தல் காண்க. சிறுவன் யான் - இடவழுவமைதி. (414)

18.—பின்பு அருச்சுனன் பொருதுகொண்டு பாசவியூகஞ் சேர்தல்.

ஈசனல்வரங்கள்பெற்றவிந்திரன்றன்மதலைகாம்
போசனாதியெண்ணின்மன்னர்பொருதழிந்துவெருவியுட்
கூசநாலுபாலுநின்றநின்றசேனைகொன்றுபோய்ப்
பாசநாமவணியினின்றவீரரோடுபற்றினன்.

(இ - ள்.) ஈசனல் வரங்கள் பெற்ற - சிவபிரானாற் பலவரங் கள் அருளப்பெற்ற, இந்திரன்தன் மதலை- தேவேந்திரனுக்குக் குமாரனான அருச்சுனன், —காம்போசன் ஆதி - காம்போஜதேசத் தரசன் முதலான, எண் இல் மன்னர்-கணக்கில்லாத அரசர்கள், பொருது அழிந்து - (தன்னுடனே) போர்செய்து வலிமைசிதைந்து, வெருவி - அஞ்சி, உள் கூச - மனம் திடுக்கிடும்படி, நாலுபால்உம் நின்ற நின்ற சேனை கொன்று போய்-நான்குபக்கங்களிலும் மிகுதி யாக நின்றுகொண்டிருந்த சேனைகளைக் கொன்றுகொண்டே சென்று,—பாசம் நாமம் அணியில் நின்ற வீரரோடு பற்றினன் - பாசமென்னும்பெயருடைய அணிவகுப்பிலுள்ள வீரர்களுடனே போர்தொடர்ந்தான்; (எ-று.)

இங்கே 'பாசநாமஅணி' என்றது - கீழ்ச்சொன்ன ஐவகைவியூ கங்களுள் ஒன்றான சூசீவியூகத்தை: "பாச மூசித்துளையொடு கயிறே" என்ற திவாகரத்தின்படி ஊசித்துளையைக்குறிக்கிற 'பாசம்' என்ற சொல், இலக்கணையால், ஊசியைக்குறிக்க, அது, ஊசியின்பெயரான சூசீஎன்பதை உணர்த்துமென்க; சூசீவியூக மாவது-ஊசிபோல வடிவம் அமையச் சேனையை ஒரேவரிசையாய் ஒழுங்குபட நிறுத்துவது; இதற்கு, எறும்புவரிசை உவமைகூறப் படும். இங்கே 'காம்போசன்' என்றவன்பெயர், ஜலசந்தனென்று முதனூலால் தெரிகின்றது. இவனும் கிருதவர்மாவும் துரியோதன னும் கர்ணனும் சூசீவியூகத்திற் பிரதானமாக நின்றனரென்று அந் நூலிற் கூறப்பட்டுள்ளது. (415)

19, 20.—இவ்விரண்டு கவிகளும் - குளகம்: அருச்சுனன் கர்ணனோடு போர்செய்யக் கருதியதைக் கண்ணனிடம்கூறல்.

முன்னர்முன்னர்வந்துவந்துமுனைகடோறுமுந்துறு
மன்னர்தந்தம்வில்லும்வேலும்வாளும்வென்றிவாளியிற்
சின்னபின்னமாகவெய்துசெல்லுமத்தனஞ்சயன்
கன்னனின்றவுறுதிகண்டுகண்ணனோடுமுரைசெய்தான்.

விலங்கிநம்மையமர்திளைக்கவிடதன்விற்சுதக்கண
னலங்கல்வேலவந்திமன்னனவன்புதல்வனுதியா
வலங்கொள்வாகைவீரர்சேனைவளையநின்றகன்னனைக்
கலங்குமாறுபொருதுபோகவேண்டுமென்றுகருதியே.

(இ - ள்.) (19) முனைகள் தோறுஉம் - போர்க்களத்தின் இடங்கள்தோறும், முன்னர் முன்னர் வந்து வந்து - (ஒருத்தரினும் ஒருத்தர்) முற்பட்டு மிகுதியாகவந்து, முந்துறும் - எதிர்ப்பட்டுப் பொருகிற, மன்னர் தம்தம்-அந்த அந்த அரசர்களது, வில்உம் வேல் உம் வாள்உம் - வில்முதலிய ஆயுதங்கள்) வென்றி வாளியின் - வெற்றியைத்தருகிற (தனது) அம்புகளால், சின்ன பின்னம் ஆக - பலபலதுண்டுகளாய்முறியும்படி, எய்து-அம்புதொடுத்துக்கொண்டு, செல்லும் - செல்லுகிற, அ தனஞ்சயன் - அந்த அருச்சுனன்,— கன்னன் நின்ற உறுதி கண்டு-(அவ்விடத்திற்) கர்ணன் (பெருமிதம் பட) நிற்கிற வலிமையைப் பார்த்து,—(20) 'விடதன் - விடதன் என்னும் அரசனும், வில்சுதக்கணன்-விற்போர்வல்ல சுதட்சிணன் என்ற அரசனும், அலங்கல் வேல் அவந்தி மன்னன் - (போர்) மாலையைத் தரித்த வேலாயுதத்தையுடைய அவந்தீ நகரத்து அரசனும், அவன் புதல்வன் - அவனது புத்திரனும், ஆதி ஆ - முதலாக, வலம் கொள் வாகை வீரர் - வலிமையைக்கொண்டவரும் வெற்றியையுடையவருமானவீரர்கள், சேனை -சேனைகளோடு, வளைய-(தன்னைச்) சூழ்ந்துநிற்க, நம்மை விலங்கி அமர் திளைக்க நின்ற - நம்மைக்குறுக்கிட்டு விடாப்போர் செய்ய நின்றுள்ள, கன்னனை - கர்ணனை, கலங்கும் ஆறு - (அவ்வுறுதிநிலை) கலங்கும்படி, பொருது - போர்செய்து வென்று, போக வேண்டும் - (நாம்) அப்பாற் செல்லவேண்டும்,' என்று கருதி - என்று எண்ணி, (19) (அக்கருத்தை), கண்ணனோடு உம் உரைசெய்தான்—; (எ - று.)

பொருட்கு ஏற்றபடி சொற்களை யெடுத்துத் கொண்டுகூட்டிப் பொருளுரைத்தல், தொல்காப்பியத்திற் கூறப்பட்ட செய்யுளுறுப்பு இருபத்தாறனுள் 'மாட்டு' என்னும் உறுப்பாம். 19.—கண்ணனோடும், உம் - அசைநிலை. 20—சுதக்ஷிணன்-காம்போஜராசன் மகன். விந்தஅநுவிந்தர், அவந்தியரசர். இவை, வடநூலிற் கண்டவை. பி - ம்: அவன்மகன்றனுதியா. (416, 417)

21.—அருச்சுனன் கர்ணனை எதிரிடுதல்.

ஒக்குமென்றுசெங்கண்மாலுமுளவுகோல்கொடிவுளியைப்
பக்கநின்றபானுமைந்தன்முனையுறப்பயிற்றலு
மிக்கவெம்பதாதியோடுசூழநின்றவிருதருந்
தொக்குவந்துவிசயன்மீதுசுடுசரந்தொடுக்கவே.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) (அங்ஙனம் அருச்சுனன்சொன்னவுடனே), செம் கண் மால்உம் - சிவந்த திருக்கண்களையுடைய கண்ணபிரானும், ஒக்கும் என்று - (அது) பொருந்தும் என்று அங்கீகரித்து, உளவு கோல் கொடு - குதிரை தூண்டுங்கோலினால், இவுளியை - (தன்) தேர்க்குதிரைகளை, பக்கம் நின்ற பானுமைந்தன் முனை உற-அருகிலேயுள்ள சூரியகுமாரனை கர்ணனது முன்னே சேரும்படி, பயிற்றலும் - செலுத்தினவளவிலே,—மிக்க வெம் பதாதியோடு - மிகுதியான கொடிய காலாட்சேனையுடனே, சூழ நின்ற-(அக்கர்ணனது) சுற்றிலும் நின்ற, விருதர் உம் - வீரர்களும், தொக்கு வந்து

ஒருங்கு கூடிவந்து, விசயன்மீது - அருச்சுனன்மேல், சுடு சரம் தொடுக்க - அழிக்கவல்ல அம்புகளைச் செலுத்த,—(எ - று.)—"வயவரை***கலக்கினன்" என அடுத்த கவியோடு தொடர்ந்து முடியும்.

'ஒக்கும்' என்றது - அங்கீகாரவார்த்தை. உளவுகோல்-கசைக் கோல்.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் - அந்தாதித்தொடையமையப் பாடப்பட்டிருக்குமாறு காண்க; இது - பொருட்டொடர்நிலையிடையிலே வந்த **சொற்றொடர்நிலை.** *(418)*

22.—கர்ணனைச்சார்ந்த வீரர்களை அருச்சுனன் அழித்தல்.

சரந்தொடுத்தவயவரைச்சரத்தினிற்றனித்தனி
யுரங்குளிக்கவாகுவீழவுதரமூழ்கவொளிமுடிச்
சிரங்களற்றுமறியவென்புசிந்தவாய்கடுளைபடக்
கரந்துடிக்கவிருபதங்கடறியவேகலக்கினன்.

(இ-ள்.) சரம் தொடுத்த-(இவ்வாறு தன்மீது) பாணங்களைப் பிரயோகித்த, வயவரை-வீரர்களை,—உரம்குளிக்க-(அவர்களுடைய) மார்பில் (அம்புகள்) மூழ்கவும், வாகு வீழ-தோள்கள் (துணிபட்டு) விழவும், உதரம் மூழ்க - வயிற்றில் (அம்புகள்) அழுந்தவும், ஒளி முடி சிரங்கள் அற்று மறிய - பிரகாசமுள்ள கிரீடத்தைத் தரித்த தலைகள் துணிபட்டு விழவும், என்பு சிந்த - எலும்புகள் வெளிச் சிதறவும், வாய்கள் துளை பட - வாய்கள் துளைப்படவும், கரம் துடிக்க - கைகள் (துணிபட்டுத்) துடிக்கவும், இரு பதங்கள் தறிய - இரண்டுகால்களும் துணிபடவும், சரத்தினில் - (தனது) அம்புகளினல், (அருச்சுனன்), தனி தனி - தனியே தனியே, கலக்கினன் - கலங்கச்செய்தான்; (எ - று.)—வயவரைக் கலக்கினன் என இயையும். 'உரம்குளிக்க உதரம் மூழ்க'-மார்பும் வயிறும் அம்புகுளிக்கப் பெற என்றுமாம். *(419)*

23.—அருச்சுனனது போர்த்திறத்தைத் தேவருங் கொண்டாடுதல்.

கலக்கமுற்றுவில்லிழந்துகவனமாவிழந்துமே
லிலக்கமற்றகளிறிழந்துகொடிகொடேரிழந்துபோ
யுலக்கவிட்டளக்கர்வாயுலம்பவோடுகலமெனத்
துலக்கமிக்குவருதல்கண்டுசுரருநின்றுதுதிசெய்தார்.

(இ - ள்.) கலக்கம் உற்று-(இவ்வாறு) கலக்கத்தையடைந்தும், வில் இழந்து - விற்களை யிழந்தும், கவனம் மா இழந்து-நடைவல்ல குதிரைகளையிழந்தும், மேல்-மற்றும், இலக்கம்அற்ற களிறுஇழந்து-எண்ணில்லாத யானைகளை யிழந்தும், கொடி கொள் தேர் இழந்து - துவசத்தைக் கொண்ட தேர்களை யிழந்தும், போய் - தோற்றுப் போய், உலக்க - அழியும்படி, இட்டு - (எதிர்ப்பக்கத்து வீரர்களையெல்லாம்) செய்திட்டு,—அளக்கர்வாய் உலம்ப ஓடு கலம் என - கடலிலே ஒலியுண்டாக விரைந்துசெல்கிறமரக்கலம்போல, துலக்கம் மிக்கு வருதல் - விளக்கம்மிகுந்து (அருச்சுனன் தன்தேரின்மீது) விரைந்துவருதலை, கண்டு - பார்த்து, சுரர்உம் - தேவர்களும், நின்று - திகைத்துநின்று, துதி செய்தார்-தோத்திரஞ்செய்தார்கள்;

சிறப்புடையரான தேவரும் துதித்தன ரென்றதனால், பிறர் துதித்தமைதானே புலப்படும். மிகப்பரந்த கடலினிடையிலே தடையற ஊடறுத்துக்கொண்டு விரைந்து செல்கிற மரக்கலம், மிகப்பரந்த சேனையினிடையிலே தடையறப் பகைதொலைத்துக் கொண்டு பெருமிதத்தோடு விரைந்துசெல்கிற அருச்சுனனுக்கு உவமை. உபமானமாகிய மரக்கலத்துக்கு 'உலம்பவோடு' என்ற அடைமொழி கொடுத்துக் கூறினதனால், அருச்சுனன் தனதுவெற்றி தோன்றச் சிங்கநாதஞ்செய்துகொண்டு வந்தனனென விளங்கும். விட்டுளனப் பதம்பிரித்தும் பொருள் கொள்ளலாம். பி-ம்: துலக்க முற்று. (420)

24.—நான்குகவிகள் - கர்ணனும் அருச்சுனனும் பொருதலைக் கூறும்.

துதியினாலுயர்ந்தவண்மையுடையபானுசூனுவுங்
கதியினாலுயர்ந்தமாவொடொத்ததேர்கடாவினன்
மதியினாலுயர்ந்தகொற்றவலவனுந்துதேருடன்
விதியினாலுயர்ந்தசாபவெஞ்சமந்தொடங்கினர்.

(இ - ள்.) (அவ்வாறு அருச்சுனன் வருதலைக் கண்டு),—துதியினால் உயர்ந்த - புகழினாற் சிறந்த, வண்மை உடைய - ஈகைக் குணத்தையுடைய, பானு சூனு உம்-சூரியகுமாரனான கர்ணனும்,— கதியினால் உயர்ந்த-பலவகைநடைகளாற் சிறந்த, மாவொடு-குதிரைகளோடு, ஒத்த-கூடின, தேர்-(தனது) தேரை, மதியினால் உயர்ந்த கொற்றம் வலவன் உந்து தேருடன் - ஞானத்தினாற் சிறந்த வெற்றியையுடைய சாரதியான கண்ணபிரான் செலுத்துகிற (அருச்சுனனது) தேருடன், கடாவினன் - நெருங்கச்செலுத்தினன்; (பின்பு இருவரும்), விதியினால் உயர்ந்த - (தநுர்வேதத்திற்கூறிய) விதிகளின்படி சிறந்துள்ள, சாபம் - வில்லைக்கொண்டு செய்கிற, வெம் சமம்-கொடிய போரை, தொடங்கினர்—; (எ - று.)

வண்மை - பண்புப்பெயர்; யாசகர்க்குத் தடையில்லாமலும், வரையறையில்லாமலுங் கொடுத்தல்; புகழின் காரணம் பலவற்றுள்ளும் ஈதலே சிறந்ததென்பது தோன்ற, 'துதியினாலுயர்ந்த வண்மை' என்றார். பி - ம்: கடாவிமுன். தொடங்கினன். (421)

25. தொடங்குபோரில்வலியினாலுமதனினுந்துலங்குமெய்
விடங்கினாலும்வின்மையாலுமுவமைதம்மில்வேறிலார்
விடங்கொள்வாளிமின்பரப்பிவெய்யநாணிடிக்கவே
மடங்கல்போலிரண்டுவில்லுமண்டலம்படுத்தினர்.

(இ - ள்.) வலியினால்உம்-பலத்தினாலும், மதனின்உம் துலங்கு மெய் விடங்கினால்உம்-மன்மதனைக்காட்டிலும் மிகுதியாக விளங்குகிற உடம்பின் அழகினாலும், வின்மையால்உம் - விற்போர்த்திறத்தினாலும், தம்மில் உவமைவேறு இலார் - (தமக்குத் தாமேயன்றி) வேறு ஒப்புப்பெறாதவரான அருச்சுனனும் கர்ணனும்,—தொடங்கு போரில்-செய்யத்தொடங்கிய யுத்தத்திலே,—விடம் கொள் வாளி - (கொடுமையில்) விஷத்தையொத்த அம்புகளாகிய, மின் - மின்னல்களை, பரப்பி-பரவச்செய்து,—வெய்ய நாண் - கொடிய வில் நாணி,

இடிக்க - இடியோசையைச்செய்ய,—மடங்கல் போல் - யுகாந்த காலத்து மேகங்கள்போல, இரண்டு வில்உம்-(தமது) விற்களிரண் டையும், மண்டலம்படுத்தினர் - நன்ருகவளைத்தார்கள்; (எ - று.)

மேகம் மின்னல்பரப்பி இடிமுழக்கி வானவில்வளையப் பெறு தல்போல, இவர் அம்பு பரப்புதலுற்று நாணெலிமுழக்கி வில் வளைவு செய்தன ரென்க. நான்காமடியில் வந்த **உவமையணிக்கு**, மூன்ருமடியில் வந்த **உருவகவணி** அங்கமாதல் காண்க 'மடங்கல்' என்று கற்பாந்தகாலத்துக்குப் பெயருள்ளதனல், அது - காலவாகு பெயராய், அக்காலத்து அளவிலாமழைபொழிந்து உலகையழிக்க லுறும் மேகத்தைக் குறித்தது. மடங்கல் - இடிஎன்பாருமுளர். வலிமை அழகு வில்திறம் என்பவற்றில் அருச்சுனனுக்குக் கர்ண னும், கர்ணனுக்கு அருச்சுனனும் ஒருகால் ஒப்பாகக்கூடுமேயன்றிப் பிறர் இவர்க்கு ஒப்பாகாரென்பது 'உவமைதம்மில் வேறிலார்' என் றதன் கருத்து. விடங்கொள்வாளி - பகைவருயிரைக்கவரத்தக்க மிக்ககொடுமைவாய்ந்த அம்புஎன்றபடி; நுனியில் நஞ்சுதீற்றிய அம்புமாம். (422)

26. மண்டலம்படுத்தவில்லின்வலிகொள்கூரவாளியால்
விண்டலம்புதைந்துதங்கண்மெய்படாமல்விலகினர்
குண்டலங்கள்வெயிலுமூரல்குளிர்நிலாவும்வீசவே
மண்டலம்புகாமனேர்வயங்குவாண்முகத்தினர்.

(இ - ள்.) குண்டலங்கள் - (தம்தமது) குண்டலமென்னுங் காதணிகள், வெயில்உம் - சூரியகாந்திபோன்ற ஒளியையும், மூரல்- புன்சிரிப்பு, குளிர் நிலாஉம் குளிர்ந்தசந்திரகாந்திபோன்ற ஒளியை யும், வீச-மிகுதியாக வெளிப்படுத்த,—மண்டல் அம்பு காமன் நேர் வயங்கு - பெரும்போர்செய்கிற (புஷ்ப) பாணங்களையுடைய மன் மதனுக்கு ஒப்பாய் விளங்குகிற, வாள் முகத்தினர்-பிரகாசமுள்ள முகத்தையுடையவர்களான அருச்சுனனும் கர்ணனும்,—மண்டலம் படுத்த வில்லின்-(தாம்தாம்) நன்ருகவளைத்துப்பிடித்த விற்களினு லெய்த, வலிகொள் கூர வாளியால் - வலிமையைக்கொண்ட கூர் மையையுடைய அம்புகளினல், விண் தலம் புதைந்து-ஆகாயத்தின் இடம் மறைய, தங்கள் மெய் படாமல் - தங்களுடம்பு ஊறுபடாத படி, விலகினர்-எதிர் தடுத்தார்கள் ; (எ - று.)

இது, தம்மேல் விரைந்துவரும் அம்புகளைக் குறிதவருமல் எதி ர்ம்புகோத்து மறுத்திடுந் திறங் கூறியது. இருவரும் அம்புக்கு இலக்காகாதபடி நின்றன ரென்பதாம். மண் தலம் புகாமல் நேர் வயங்கு வாள் முகத்தினர் என்று பிரித்து - தரையைநோக்காமல் [தலை குனியாமல்] எதிராகநிமிர்ந்து விளங்குகிற ஒள்ளிய முகத் தையுடையவ ரென்று உரைத்தலும் ஒன்று. மூன்ருமடியில், வெயில் நிலா என்ற மாறுபட்ட சொற்கள்வந்தது, **முரண்தொடை**. புதைந்து-எச்சத்திரிபு. **பி - ம்:** வண்டலம்புகமலநேர், (423)

27. முகத்தினின்றகன்னனேடுமுடிமகிபரோடுநின்
றிகற்செய்கின்றகடிகையோரிரண்டுசென்றதென்றுள

மிகக்கனன்றுதேரும்வில்லுமெய்யணிந்தகவசமுந்
தகர்த்துமார்பின்மூழ்கவாளியேவினன்றனஞ்சயன்.

(இ - ள்.) முகத்தில் நின்ற - எதிரிலே தலைமையாய் நின்ற, கன்னனோடுஉம் - கர்ணனுடனும், முடி மகீபரோடுஉம் - கிரீடந் தரித்த (அவனைச்சார்ந்த) அரசர்களுடனும், நின்று இகல் செய்கின்ற - எதிர்த்துநின்று போர்செய்கிற, கடிகை - நாழிகை, ஓர் இரண்டுசென்றது - இரண்டுகழிந்திட்டது, என்று - என்றுஉட்கொண்டு,—தனஞ்சயன் - அருச்சுனன், உளம் மிக கனன்று - மனம் மிகக்கொதித்து, தேர்உம் வில்உம் மெய் அணிந்த கவசம்உம் தகர்த்து மார்பில் மூழ்க - (அக்கர்ணன்முதலியோருடைய) தேரையும் வில்லையும் உடம்பில் தரித்த கவசத்தையும் பிளந்து அவர்கள் மார்பிலும் மிகப்பதியும்படி, வாளி ஏவினன் - அம்புகளைச்செலுத்தினன்; (எ-று.)

பொழுதுகழிந்திட்டதைக் கருதி அருச்சுனன் மிகக்கோபித்து எதிரிக்குப் பலவகையழிவையுண்டாக்கும்படி சிலசிறந்த அம்புகளை உக்கிரமாகப் பிரயோகித்தனனென்பதாம். பகல் முப்பதுநாழிகைக்குட் சபதத்தைத் தவறாமல் நிறைவேற்றவேண்டுமே யென்ற கவலையால், இடையில் நாழிகை கழிதலைப்பற்றி மிகச்சினந்தான். இரண்டுசென்றது-ஒருமைப்பன்மைமயக்கம். (424)

28.—கர்ணன் தோற்க, சுதாயு அருச்சுனனை எதிர்த்தல்.

தனஞ்சயன்கையம்பினொந்துதபனன்மைந்தன்மோகியா
மனந்தளர்ந்திளைத்தபின்னர்வருணராசன்மாமகன்
கனன்றெழுந்துசேனையோடுவந்துகார்முகங்குனித்
தினங்கொள்வாளியேவினானெதிர்ந்தபோரிலீறிலான்.

(இ - ள்.) தனஞ்சயன் கை அம்பின் - அருச்சுனனது கையினால் எய்யப்பட்ட அம்புகளினால், தபனன் மைந்தன் - சூரியகுமாரனான கர்ணன், நொந்து - வருந்தி, மோகியா - மயக்கமடைந்து, மனம் தளர்ந்து - மனஞ்சோர்ந்து, இளைத்த பின்னர் - மெலிவடைந்த பின்பு,—எதிர்ந்த போரில் ஈறு இலான் - எதிரிட்டுச்செய்யும்யுத்தத்தில் அழிவில்லாதபடி வரம்பெற்றவனாகிய, வருணராசன் மா மகன் - நீர்க்கு அரசனாகிற வருணனதுசிறந்த குமாரனானசுதாயுவென்பவன், கனன்று எழுந்து - கோபங்கொண்டு புறப்பட்டு, சேனையோடு வந்து - (தன்) சேனையுடனே (அருச்சுனனெதிரில்) வந்து, கார்முகம் குனித்து - வில்லைவளைத்து, இனம் கொள் வாளி - தொகுதி கொண்ட அம்புகளை, ஏவினான் - (அருச்சுனன்மேற்) பிரயோகித்தான்; (எ-று.)

வருணராசன்மாமகன் - வருணபகவானுக்குப் பன்னவாதை யென்பவளிடம் பிறந்தசிறந்த புத்திரனாகிய சுதாயுவென்பவன் (425)

29.—அருச்சுனனம்புகள் சுதாயுவினுடம்பைத்துளைபடுத்தமாட்டாமை.

ஈறிலாதவீரன்வந்தெதிர்த்தகாலைவீரரின்
மாறிலாதவிசயன்விட்டமறைகொள்வாளியாவையுஞ்
சேறிலாதசெறுவில்வித்துசெந்நெலென்னவவனுடற்
பேறிலாமன்முனையுறப்பிளந்துகீழ்விழுந்தவே.

(இ - ள்.) ஈறு இலாத வீரன் - அழியாவரம்பெற்ற வீரனான அந்தச் சுதாயு, வந்து எதிர்த்த காலை-முன்வந்து எதிர்த்தபொழுது, —வீரரில் மாறு இலாத விசயன் - வீரர்களில் எதிரில்லாதவனான [மகாவீரனான] அருச்சுனன், விட்ட - பிரயோகித்த, மறை கொள் வாளி யாவைஉம் - மந்திரபலத்தைக்கொண்ட அம்புகளெல்லாம்,— சேறு இலாத செறுவில் வித்து செந்நெல் என்ன - சேறு இல்லாத கழனியிலே விதைத்த செந்நெல்விதைகள்போல, அவன் உடல் பேறு இலாமல்-அவனுடம்பினுள்ளே சென்று பாயப்பெறுதலில்லாமல், முனை உற பிளந்து - (அவனுடம்பிற் பட்டமாத்திரத்தில்) நுனி முழுவதும் ஒடிபட்டு, கீழ் விழுந்த-கீழே விழுந்திட்டன;

வரபலம்பெற்ற சுதாயுவின்மேல் அருச்சுனன் எய்த பாணங்களெல்லாம், அவனுடம்பைப் பிளந்து உட்சென்று ஊறுபடுத்தமாட்டாமல், அவனது வலிய உடம்பிற் பட்டமாத்திரத்தால் தாம் கூர் நுனிமழுங்கிக் கீழ்விழுந்திட்டன என்பதாம். மிக்கநீர்வளமுள்ள இடத்திலேயே விளையுந்தன்மையதான செந்நெலென்னும் ஒருவகை நெற்பயிர்விதை ஈரமில்லாதகழனியில் விதைக்கப்பட்டால் அங்குச் சிறிதும் முளைக்கமாட்டாமல் வீண்படுதலை, மற்றையோருடம்பில் ஊன்றிப் புண்படுத்தும் அருச்சுனனம்பு சுதாயுவினுடம்பிற்சிறிதும் பிரவேசிக்கமாட்டாது வீண்பட்டதற்கு உவமைகூறினார். வித்த என்று பாடங்கொண்டு, அதற்குவிதைத்தஎனப் பெயரெச்சப் பொருள் உரைத்தாருமுளர். (426)

30.—அருச்சுனன் சுதாயுவின்வில்லை அழித்தல்.

விழுந்தவாளிகண்டுபின்னும்விசயன்மூரிவிற்குனித்
தழுந்தவாளியொன்றுபத்துநூறுவன்பொடடைசினான்
எழுந்தவாளிவாளியால்விலக்கவேவியாசுகங்
கழுந்ததாகவவனெடுத்தகார்முகங்கலக்கினான்.

(இ - ள்.) விழுந்த - (இங்ஙனம் பயனின்றிக்) கீழ்விழுந்திட்ட, வாளி - (தனது) அம்புகளை, கண்டு-பார்த்து, பின்னும் - மீண்டும், விசயன்-அருச்சுனன், மூரி வில் குனித்து-வலிமையையுடைய வில்லை வளைத்து, அழுந்த - (அவனுடம்பிற்) பதியும்படி, வாளி ஒன்று பத்து நூறு-ஆயிரக்கணக்கான அம்புகளை, வன்பொடுஅடைசினான்-வலிமையோடு செலுத்தினான்; எழுந்த - (இங்ஙனம் தன்மேல் உக்கிரமாக) வந்த, வாளி - அம்புகளை, வாளியால் விலக்க - (சுதாயு தான் எய்யும்) எதிரம்புகளால் தடுக்க, (பின்பு அருச்சுனன்), ஆசுகம் ஏவி - பாணங்களைப் பிரயோகித்து, கழுந்து அது ஆக அவன் எடுத்த கார்முகம் கலக்கினான் - வைரமுள்ளதாக அந்தச்சுதாயு கையிலேந்தியுள்ள வில்லை யழித்திட்டான்; (எ-று.) (427)

31.—சுதாயுவின் கதையைக் கண்ணன் மார்பில் ஏற்றல்.

முகங்கலங்கமெய்கலங்கமுடிகலங்கமூரிமார்
பகங்கலங்கமற்றோர்தண்டருச்சுனன்றன்மேல்விட

நங்கலங்கவுருமின்வந்ததனையும்பர்நாயகன்
சகங்கலங்கவேற்றனன்றனதுமெய்யினாகவே.

(இ-ள்.) மற்று - (தனதுவில் அழிந்த) பின்பு, (சுதாயு), முகம் கலங்க-முகம் கலக்கமடையும்படியாகவும், மெய் கலங்க - உடம்பு வலிமைகுலையும்படியாகவும், முடி கலங்க - தலைசிதறும்படியாகவும், மூரி மார்பு அகம் கலங்க-வலிமையுள்ள மார்பின் இடம் சிதையும்படியாகவும், ஓர் தண்டு-ஓர் கதாயுதத்தை, அருச்சுனன்தன் மேல் விட - அருச்சுனன்மேல் வீச,—நகம் கலங்க உருமின் வந்தது அதனை -மலைசிதையும்படி (மேல்விழுகிற கொடிய பெரிய) இடிபோல வந்த அந்தத்தண்டாயுதத்தை, உம்பர்நாயகன் - தேவர்கட்குத் தலைவனான கண்ணபிரான், தனது மெய்யின் ஆக-தனது உடம்பிற்படும்படி, சகம் கலங்க ஏற்றனன் - உலகம் (கண்டு) திடுக்கிட ஏற்றுக்கொண்டான்; (எ - று.)

வில் அழிபட்டபின்பு சுதாயு பகைவனைத் தவறாமல் அழிக்க வல்லதொரு கதாயுதத்தை யெடுத்து அருச்சுனன்மேல் எறிய, அதனை, அவனுக்குப் பாகனாய் முன்னின்ற கண்ணன் தன்மார்பிற் படும்படி வலிய ஏற்றுக்கொண்டனனென்பதாம். கண்ணன் ஏற்றுக்கொண்டசூழ்ச்சி, மேல்விளங்கும். சகங்கலங்குதல் - லோகநாயகனை இவனுக்கு இதனால் என்ன அபாயம் நேர்ந்திடுமோ வென்று தம் தம் அன்புபற்றி யாவரும் சங்கித்தலாமென்க; இனி, கண்ணன் எப்பொருளுந் தானேயானவனென்பதுபற்றி 'சகங் கலங்க' என்றாரெனினுமாம். 'நகங்கலங்க' என்றது, வந்தது என்பதிலுள்ள வருதல் வினையைக் கொள்ளும். தனது, ஆது-ஆறனுருபு. (428)

32.—சுதாயு இறக்கத் தேவர்கள் கண்ணன்மீது பூமழைபொழிதல்.

ஆகவத்தில்விசயனுய்யவையன்மெய்யிலறையுமுன்
மோகரித்தெறிந்ததெவ்வன்முடிதுளங்கிமண்மிசைச்
சோகமிக்குவிழுதல்கண்டுதூரகாரியாதலான்
மாகமுற்றவமரர்செம்பொன்மழைபொழிந்துவாழ்த்தினார்.

(இ-ள்.) ஐயன் - (யாவர்க்குந்) தலைவனான கண்ணபிரான், தூர காரி ஆதலால்-வருங்காரியமறிந்து தொழில்செய்பவனாதலால், ஆகவத்தில் விசயன் உய்ய-போரிலே அருச்சுனன் இறவாது பிழைக்கும்படி, மெய்யில் அறையும்முன் - (தனது) திருமேனியில் தாக்குமாறு (அக்கதாயுதத்தை) ஏற்றுக்கொண்டவுடனே,—மோகரித்து எறிந்த தெவ்வன்-மிக உக்கிரங்கொண்டு (அவ்வாயுதத்தைப்) பிரயோகித்த பகைவனான சுதாயு, முடி துளங்கி-தலைசாய்ந்து, சோகம் மிக்கு-துன்பம் மிகுந்து, மண்மிசை விழுதல் - தரையிலே விழுந்திட்டதனை, கண்டு-பார்த்து,—மா கம் உற்ற அமரர்-பெரிய வானத்திற் பொருந்திய தேவர்கள், செம் பொன் மழை பொழிந்து - சிவந்த பொன்மயமான கற்பகமலர்மழையைச் சொரிந்து, வாழ்த்தினார்—;

சுதாயு அழியாத வரம்பெற்ற காலத்தில், தன் ஆயுதம் நிராயுதர்மேற் பட்டால்மாத்திரம் தான் இறந்திடும்படி விலக்கும் பெற்றவனாதலால், யாவுமறிந்த கண்ணபிரான், அருச்சுனனைத் தவறாமற்

கொல்லும்படி அவன்மேற் சுதாயு எறிந்த கதையைத் தன்மார்பில் ஏற்றுக்கொள்ள, கையிலாயுதமில்லாத அப்பெருமான்மேல் அப்படைக்கலம் பட்டமாத்திரத்திலே சுதாயு கீழ் விழுந்து இறக்க, அருச்சுனன் பிழைத்திட்டான்; இங்ஙனம் அடியவனைக் காத்தற்பொருட்டுச் சர்வஜ்ஞனாகிய கண்ணன் வரம்புகடந்து செய்த பெருங்கருணைத்திறத்தைக் கொண்டாடித் தேவர்கள் பூமாரிசொரிந்து வாழ்த்துக் கூறினரென்பதாம். தூரகாரி-வெகுதூரத்தில் இனி வருஞ் செய்கையை முன்னமே அறிந்து அதற்கு ஏற்ற பரிகாரஞ் செய்பவன்; இங்கே, தூரமென்றது, காலத்தின் சேய்மையை: வெகுகாலத்தின் முன்பு நடந்தவற்றை அறிந்து அவற்றிற்கேற்றபடி தொழில்செய்பவ னென்ற பொருளும், 'தூரகாரி' என்ற பெயரில் அடங்கும். 'ஐயன் மெய்யிலறையுமுன் தெவ்வனழிதல்'— விரைவுதோன்றக் காரணத்தின்முன் காரியம் நிகழ்ந்ததாகக் கூறும் மிகையுயர்வுநவிற்சியணி. (429)

33.—தேவர்கள் கண்ணனுக்குக் கூறிய வாழ்த்து.

வாழி வாழி குந்தி மைந்தன் வலவன் வாழி வாழியே
வாழி வாழி யவனி யுய்ய வந்த நாதன் வாழியே
வாழி வாழி காள மேக வண்ணன் வாழி வாழியே
வாழி வாழி வாசு தேவன் வாழி வாழி வாழியே.

(குறிப்புரை.) குந்தி மைந்தன் வலவன் - குந்திதேவியின் புத்திரனை அருச்சுனனது தேர்ப்பாகன்; அவனி உய்ய வந்த நாதன்-பூமிதேவி (பாரந்தீர்ந்து) வாழும்படி திருவவதரித்த தலைவன்; காளமேக வண்ணன்-கார் காலத்து நீலமேகம்போன்ற திருநிறமுடையவன். வாசுதேவன்-வசுதேவகுமாரன்; (எ - று.)

குந்திமைந்தன்வலவன், அவனியுய்யவந்தநாதன், காளமேகவண்ணன், வாசுதேவன் என்ற நான்கும் - ஒருபொருள்மேற் பல பெயராய்வந்து தனித்தனி ஓருவகை முடிக்குஞ் சொல்லைக் கொண்டன. மகிழ்ச்சி வரம்புகடந்ததனால், வாழியென்றசொல், "அசைநிலை பொருள்நிலை யிசைநிறைக்கு ஒருசொல், இரண்டு மூன்று நான்கு எல்லை முறையடுக்கும்" என்ற அடுக்கிலக்கணவரம்புங் கடந்து வந்த தென்க. (430)

வேறு.

34.—சுதாயு இறந்த காரணத்தை அருச்சுனன் கண்ணனை வினவல்.

என்றி யாவருந் துதிசெய விரகினு லெதிர்த்தகா வலன்றன்னைக்,
கொன்ற போதுதன் னுயிர்பெறு தனஞ்செயன் கொண்டல் வண்ணனைப்போற்றி, நின்றன் மேனியி லெறிகொடுங் கதைபட வெறிந்தவ னெடுவானிற், சென்ற மாயமெம் மான்றிருந்தவா றடியனேன் றெளியுமா றுரையென்றான்.

(இ - ள்.) என்று—, யாவர்உம் - எல்லோரும், துதி செய - தோத்திரம் பண்ணும்படி, விரகினல்-தந்திரமாக, எதிர்த்த காவலன் தன்னை கொன்றபோது - எதிர்த்துப் போர்செய்த சுதாயுஎன்னும் அரசனைக் (கண்ணன்) கொன்றருளியபொழுது, தன் உயிர்

பெறு தனஞ்சயன்-தனது உயிர் இறவாமற் பிழைக்கப்பெற்ற அருச்சுனன், கொண்டல் வண்ணனை போற்றி - காளமேகம் போன்ற திரு நிறமுடைய கண்ணபிரானைத் துதித்து, 'எறி கொடுங் கதை-வீசியெறிந்த கொடிய கதாயுதம், நின் தன் மேனியில்-உனது உடம்பில், பட-பட்ட அளவிலே, எறிந்தவன் - (அவ்வாயுதத்தைப்) பிரயோகித்தவனான சுதாயு, நெடு வானில் சென்ற - (இறந்து) பெரியதேவலோகத்திற்குப் போன, மாயம் ஒன்று - ஆச்சரியகரமான ஒருசெய்கை, இருந்த ஆறு - உண்டான காரணத்தை, அடியனேன் தெளியும் ஆறு உரை-உனது அடியவனாகிய யான் மனந் தெளியும்படி கூறியருள்வாய்,' என்றான்—; (எ - று.)

இதுமுதற் பதினைந்து கவிகள் - பெரும்பாலும் முதற்சீர் மாச்சீரும், ஈற்றுச்சீர் மாங்காய்ச்சீரும், மற்றவை விளச்சீர்களுமாகிய **அறுசீராசிரியவிருத்தங்கள்.** இவற்றில் இரண்டாஞ்சீர் கூவிளச்சீராகவே வரும். *(431)*

35.—**இதுவும் அடுத்த கவியும் ஒருதொடர்: சுதாயுசெய்தியைக் கண்ணன் கூறல்.**

பன்னவாதையென்றொருத்திதாய்தந்தையும்படுதிரைப்பரவைக்கு
மன்னவன்றரப்பெற்றனன்பலபடைமறையொடும்வலிகூரத்
துன்னுநாமமுஞ்சுதாயுமற்றொருவராற்றோற்றுயிரழிவில்லான்
முன்னிராயுதன்மிசையிவன்படையுறின்முடிவுறும்வரம்பெற்றான்.

(இ-ள்.) பன்னவாதை என்ற ஒருத்தி-பன்னவாதையென்று பெயர் சொல்லப்பட்ட ஒருத்தி, தாய் - (இவனுக்குத்) தாய்; தந்தை உம் - (இவனது) தகப்பனும், படு திரை பரவைக்கு மன் - மிக்க அலைகளையுடைய கடலுக்குத் தலைவனான வருணன்; பல படை மறையொடுஉம் - அநேகமான படைக்கலங்களை அவற்றிற்குஉரிய மந்திரத்தோடு, வலி - (தேக) பலத்தையும், கூர-மிகுதியாக, அவன் தர பெற்றனன் - அவ்வருணன் கொடுக்கப் பெற்றான் (இவன்); துன்னு நாமம்உம் - (இவனுக்குப்) பொருந்திய பெயரும், சுதாயு - சுதாயு என்பதாம்; மற்று ஒருவரால் தோற்று உயிர் அழிவு இல்லான்-வேறுஎவராலும் தோல்வியடைதலும் இறத்தலும் பெறாதவனான இவன்,— முன்-முன்பு, நிராயுதன்மிசை இவன் படைஉறின் முடிவுஉறும் வரம்பெற்றான் - (கையில்) ஆயுதமில்லாதவன்மேல் தனதுஆயுதம் எறியப்பட்டால் மாத்திரமே தான் இறக்கும்படியான வரத்தைப் பெற்றுள்ளான்: (எ - று.)

சுதாயு-ச்ருதாயுத: என்ற வடசொல்லின்திரிபு என்னலாம்: இவன்பெயர், வியாசபாரதத்தில் இங்ஙனே உள்ளது; இச்சொல் - பிரசித்தமான படைக்கல முடையான் என்று பொருள்படும். இவனது தந்தை, வருணன்: தாய், பர்ணாசா என்னும் மகாநதி. 'இம்மகன் மரணமில்லாதவனாயிருக்கும்படி வரமளிக்கவேண்டும்' என்று பர்ணாசைவருணனைவரங்கேட்க, அந்நீர்க்கடவுள் மனைவியை நோக்கி 'பகைவரால் வெல்லுதற்கரியனாம்படி இவனுக்கு வரங் கொடுக்கிறேன்: உலகத்திற்பிறந்தவரெவர்க்கும்எக்காலத்தும்மரணமில்லாதிருப்பது முறைமையன்று' என்றுசொல்லி, திவ்யமான

தொரு கதாயுதத்தை மந்திரபூர்வமாக மைந்தனுக்குக்கொடுத்து, 'இதுதவறுமற் பகையிழிக்க வல்லது: ஆனல், போர்செய்யாது நிற்ப வன்மேல் இது பிரயோகிக்கப்படின் அவனைக்கொல்லாமல் மீண்டு வந்து பிரயோகித்தவனையே கொன்றிடும்' என்று கூறியிருந்தான்; அங்ஙனமிருந்தும், காலம் சமீபித்ததனால் சுருதாயுதன் அவ்வரு ணன்கட்டளையைக் கருதாமற் போரிற் கோபத்தோடு கதையை வீச அதுபோர்செய்தலின்றிப் பாகனாய்நின்ற கண்ணனுடம்பிற்பட்டத னால்,அப்பரமனை யாதுஞ்செய்யலாற்றாது திரும்பிச்சென்று அவ னையே வதைத்துக் கீழ்விழுந்தது என்றும், பின்பு காலிங்கரானசுரு தாயு அச்யுதாயு என்றவ ரிருவரும் அவர்கள் புத்திரரான நியுதாயு தீர்க்காயு என்ற இருவரும் முறையே அருச்சுனனுடன் எதிர்த்து மாண்டனரென்றும் வியாசபாரதம் கூறுகின்றது. பி-ம் : பலபெரும் படையொடும். (432)

36. எறிந்த வெங்கதை கொன்றிடும்படைக்கலனெடுத்தவரு டற்பட்டா லறிந்துநானிடையேற்றலினவனுயிரழிந்ததென்றருள் செய்தான், பிறிந்தயோனிகளனைத்துத்துமாய்முதலுமாய்ப்பெருமித மனத்தோடு, செறிந்தவர்க்கொருசகாயனுயருந்துயர்தீர்த்திடுந்தேர்ப் பாகன்.

(இ - ள்.) எறிந்த வெம் கதை-(இவன்) பிரயோகித்த கொடிய கதாயுதம், படைக்கலன் எடுத்தவர் உடல் பட்டால் - (கையில்) ஆயுதம் ஏந்தியுள்ளவருடைய உடம்பிற் பட்டால், கொன்றிடும் - (அவர்களைத்) தவறுமற் கொன்றுவிடும்; (அப்படிப்பட்ட ஆயு தத்தை) நான் அறிந்து இடை ஏற்றலின் - (கையிற்படைக்கலமில் லாத) யான் (அவன் செய்தியை)உணர்ந்து நடுவில் ஏற்றுக்கொண்ட தனால், அவன் உயிர் அழிந்தது - அவனது உயிர் இறந்திட்டது, என்று—, அருள்செய்தான் - சொல்லியருளினான்: (யாவனெனில்) —பிறிந்த யோனிகள் அனைத்துஉம் ஆய்-(பலவாறுகப்) பிரிவுபட்ட பிறப்பு வகைகளையுடைய எல்லாச்சராசரங்களின் வடிவமாய், முதல்உம் ஆய் - (அவற்றிற்கெல்லாம்) மூலகாரணமுமாய், பெரு மிதம் மனத்தோடு - பெருந்தன்மையையுடைய மனத்துடனே, செறிந்தவர்க்கு ஒரு சகாயன் ஆய் - (தன்னை) அடைந்தவர்க்கு ஒரு துணைவனாய், அருந்துயர் தீர்த்திடும் - (அவர்களது) ஒழித்தற்கரிய துன்பத்தை ஒழித்திடுகிற, தேர்ப் பாகன் - (பார்த்த) சாரதியான கண்ணபிரான்; (எ - று.)

பிரி என்பது போலப் பிறி என ஒரு தனிவினை உள்ளது. 'யோனிகளனைத்துமாய்' என்றது-அநாதியாய்த் தொடர்ந்துவருகிற கருமத்துக்கு ஏற்றபடி பலவகைப் பிறப்புக்கொள்ளுகிற சகலஜீவாத் மாக்களுள்ளும் அந்தராத்மாவாய் நின்று அவற்றைக்கொண்டு தொழில்செய்பவனாய் என்றபடி. 'முதலுமாய்' என்றதில், அவற்றைப்படைத்தல் காத்தல் அழித்தல் செய்து அவற்றிற்கெல் லாந் தலைமைபூணுந்தன்மை தோன்றும். எம்பெருமான் சரண மடைந்தவரைப் பாதுகாக்குந்தன்மை, ஈற்றடியால் விளங்கும். கண்ணன், தன்னையடுத்த பாண்டவர்க்கு ஒப்பற்ற தனித்துணை

வனுய்நின்று அவர்க்கு நேரும் பலவகைத்துன்பங்களையும் தவறாமல் ஒழித்துவருதல் தோன்ற, 'செறிந்தவர்க் கொருசகாயனு யருந்துயர் தீர்த்திடுந்தேர்ப்பாகன்' என்றார்; 'தேர்ப்பாகன்' என்றதனால், கண்ணனது சௌலப்பியம் வெளியாம். பி - ம்: அறிந்தநான். பெருமித மறந்தீண்டுச். (433)

37.—பின்பு சதாயு அருச்சுனனை எதிர்த்து அழிதல்.

கதாயுதந்தனக்குரிய நாயகன்மிசைகதைபடச் சிதைவுற்றுச், சுதாயுவென்பவன் பலபெரும் படையுடன் றுறக்கமெய்திய பின்னர்ச், சதாயுவென்றவ னிளவன் மற்றவனினுஞ் சமர்புரிந்தவன்றானுங், கெதாயுவாயினன் கிரீடியோடெதிர்த்தவர் யாவரேகெடா துய்வார்.

(இ - ள்.) கதாயுதந்தனக்கு உரிய நாயகன்மிசை - கதாயுதத்துக்குஉரிய தலைவனான கண்ணபிரான்மேல், கதை பட - (தனது) கதாயுதம் பட்டதனால், சுதாயு என்பவன்—, சிதைவு உற்று - அழிவடைந்து, பல பெரும் படையுடன் - (மற்றும் அருச்சுனனாற் கொல்லப்பட்ட தனது) பெரிய பல சேனைவீரர்களுடனே, துறக்கம் எய்திய பின்னர்-வீரசுவர்க்கமடைந்த பின்பு,—சதாயு என்ற அவன் இளவல் - அவனது தம்பியான சதாயுஎன்பவன், அவனின்உம் - அந்தச்சுதாயுவினும் மிகுதியாக, சமர் புரிந்து - (அருச்சுனனோடு) போர்செய்து, அவன்தான்உம் - அவனும், கெத ஆயு ஆயினன் - கழிந்துபோன ஆயுளுடையவனானான் [இறந்தான் என்றபடி]; கிரீடியோடு எதிர்த்தவர் - அருச்சுனனோடு எதிரிட்டவருள், யாவர் ஏ - எவர்தாம், கெடாது உய்வார் - அழியாமற் பிழைப்பவர்? (எ - று.) —மற்று - அசை.

கண்ணன் கௌமோதகியென்ற சிறந்த கதைக்கு உடையவனாதலால், 'கதாயுதந்தனக்குஉரிய நாயகன்' எனப்பட்டான். சதாயு என்பது - சதஆயுஸ் எனப் பிரிந்து, மிக்கஆயுளுடையவனென்று பொருள்படும்; சதம் - நூறு, இங்கே, மிகுதி. 'சதாயு என்ற அவன் இளவல் அவனினும் சமர்புரிந்து****கெதாயுவாயினன்' என்றவிடத்து, 'அவன்தானும்' என்றது வேண்டுவதன்றாயினும், தமையன்போலவே தம்பியும் விரைவில் அழிந்தான் என்ற தன்மையை விளக்குதலால், தகுதிபற்றிவந்ததென்க. கதாயுஎன்பது, மோனைப் பொருத்தம்நோக்கி 'கெதாயு' எனத் திரிந்துநின்றது. தீர்க்கமான ஆயுளுடையவன் அற்பமான ஆயுளுடையவனானனென முரண் தோன்ற, 'சதாயு கெதாயுவாயினன்' என்றார். இது, அருச்சுனனது ஆற்றலை வியந்தது. (434)

38.—பின்பு ஸஹஸ்ரபாஹு என்பவன் அருச்சுனனை எதிர்த்தல்.

ஆயிரம்பதின்மடங்குதேரிபமதன்மும்மடங்கடல்வாசி
யாயிரஞ்சதமதனின்மும்மடங்குகாலாளுடனணியாக்கி
யாயிரம்புயத்தருச்சுனனிகரெனவாழியாற்றுணிப்புண்ட
வாயிரம்புயத்தவனெனவெதிர்த்தனனுடலாயிரவாகு.

(இ-ள்.) ஆயிரம்பதின்மடங்கு தேர்-பதிஞயிரம் தேர்களும், அதன் மும்மடங்கு இபம் - முப்பதிஞயிரம் யானைகளும், ஆயிரம் சதம் அடல் வாசி - நூறுயிரம் வலிய குதிரைகளும், அதனின் மும் மடங்கு காலாளுடன் - மூன்று லக்ஷம் காலாள்வீரர்களும் ஆகிய சேனையோடு, அணி ஆக்கி - அணிவகுத்துக் கொண்டு, ஆயிரம் புயத்து அருச்சுனன் நிகர் என-ஆயிரந் தோள்களையுடைய கார்த்த வீரியார்ச்சுனன் ஒப்பென்று சொல்லும்படியும், ஆழியால் துணிபுண்ட ஆயிரம் புயத்தவன் என - (கண்ணனது) சக்கராயுதத்தால் துணிக்கப்பட்ட ஆயிரந்தோள்களையுடைய வாணுசுரன்போலவும், ஆடல் ஆயிரவாகு-வெற்றியையுடைய ஸஹஸ்ரபாஹு என்பவன், எதிர்த்தனன் - (வந்து அருச்சுனனை) எதிர்த்தான்; (எ-று.)

ஆயிரவாகு - ஆயிரந்தோள்களையுடையவன்; பண்புத்தொகை யன்மொழி. ஸஹஸ்ரபாஹுவுக்குக் கார்த்தவீரியார்ச்சுனனும், பாணுசுரனும், ஆயிரந்தோள்களுடைமையோடு கொடுமையிலும் திருமாலால் அழிக்கப்படுதலிலும் உவமையென அறிக. இவன் விஷ்ணுவின் அம்சபேதமான அருச்சுனனுற் கண்ணபிரானிடம் பெற்றதொரு மந்திரத்தைக் கொண்டு தோளறுத்துத் தொலைக்கப் படுதல் காண்க.

அர்ஜுனன் என்ற வடசொல்-வெண்ணிறமுடையான் என்று பொருள்படும். இவன்-கிருதவீரிய மகாராஜனது புத்திர ஞதலால், கார்த்தவீரியார்ஜுந னெனப்படுவன். சந்திரவமிசத்திற் பிறந்த யயாதிமகாராசனது மூத்த குமாரனுகிய யதுவினது குலத்தவனுகிற கிருதவீரியனது குமாரனுன அருச்சுனனென்பவன், நாராயணும்ச மாய் அத்திரிகுமாரராய் விளங்குகிற தத்தாத்திரேய மகாமுனிவரை ஆராதித்து அவருடைய அநுக்கிரகத்திஞலே ஆயிரந்தோள் களுடைமை, போரில்வெற்றி, பூமியை முறைப்படிகாத்தல், பகைவர் களால் அவமானப்படாமை, சகலலோகங்களுங் கொண்டாடும்படி யான மகாபுருஷனுல் மரணம் முதலிய பலவரங்களைப் பெற்று, பல வேள்விகளையும் இயற்றி, மாகிஷ்மதி நகரத்திற் பலகாலம் அர சாண்டு வந்தான்; இவன் ஒரு காலத்தில் நருமதையாற்றிற் சலக்ரீடை செய்துகொண்டு மதுபானத்தால் மதித்திருக்கையில், திக்குவிசயஞ் செய்துவருகிற இராவணன் தன்னை எதிர்க்கக் கண்டு, அவனைத் தனது ஆற்றலால் எளிதிற் கட்டித் தனது பட்டணத்திற் கொண்டுபோய்ச் சிறைச்சாலையில்வைத்து, பின்பு அவனதுமூதாதை யாகிய புலஸ்தியமகாமுனிவரது வேண்டுகோளினுல் அவனைச் சிறைவிடுத்து, அம்முனிவரருளால் 'ராவணஜித்' என்கிற பெரும் பெயரைப் பெற்றவன். இவன் ஒருகாலத்திற் சேனையுடனே வனத் திற் சென்று வேட்டையாடிவந்து பரசுராமனது தந்தையானஜமதக் கினி மகாமுனிவரது ஆச்சிரமத்தை யடைந்து அவரநுமதியால் அங்கு விருந்துண்டு மகிழ்ந்து மீளுகையில், அவரிடமிருந்தஹோமதேனு அவர்க்குப் பல வளங்களையும் எளிதிற் சுரந்தளித்ததலைக் கண்டு அதனிடம் ஆசை கொண்டு அப்பசுவை அவரநுமதியில்லாமற் பலாத்காரமாகக் கவர்ந்துபோக, இதனை அறிந்த பரசுராமன் பெருங் கோபங்கொண்டு ஆயுதங்களுடனே சென்று கார்த்தவீரியார்ச்சுன

னுடன் கடும் போர்செய்து அவனைப் பதினொருஅக்ஷௌகிணி சேனை யுடனே நிலைகுலைத்து அவனது ஆயிரந்தோள்களையும் தலையையும் தனது கோடாலிப் படையால் வெட்டி வீழ்த்தி வெற்றிகொண்டா னென்பது வரலாறு; ஜமதக்நிமகாமுனிவரைக் கார்த்தவீரியன் யாதொரு காரணமுமின்றிக் கொன்றிட்டா னென்றும் நூல்களிற் கதை கூறப்படும்.

வாணாசுரன் வரலாறு:—பாணாசுரன் சிவபெருமானருளால் ஆயிரங் கைகளையும் நெருப்புமதிலையும் அளவிறந்த வலிமையையும் சிவபெரு மான் பரிவாரங்களோடு மாளிகைவாயிலிற் காவல்செய்திருத்தல் முதலிய வரங்களையும் பெற்றான். அந்தப் பாணாசுரனுடைய பெண் ணாகிய உஷையென்பவள், ஒருநாள் ஒருபுருஷனோடு தான் கூடிய தாகக் கனாக்கண்டு, அவனிடத்தில் மிக்க ஆசை பற்றியவளாய், தன் உயிர்த்தோழியான சித்திரரேகை மூலமாய்அந்தப் புருஷனைக் கிருஷ்ணனுடைய பௌத்திரனான அநிருத்தனென்று அறிந்து அத் தோழியினால் அநிருத்தனைத் தன் அந்தப்புரத்திலே கொணரப் பெற்று அவனோடு போகங்களை அநுபவித்துவர, இச்செய்தியை அந்தப் பாணன் காவலாளரால றிந்து தன் சேனையுடன்அநிருத்தனை எதிர்த்து மாயையினாற்பொருது நாகாஸ்திரத்தினாற் கட்டிப்போட் டிருந்தான். அப்போது நாரதமகாமுனிவனால் நடந்த வரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீ கிருஷ்ணபகவான், அநிருத்தனை மீட்டுவர எண்ணி, கருடன்மேல் ஏறிக்கொண்டு பலராமன் முதலானரோடு கூடப் பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளினார். அப் போது அப்பட்டணத்தின் சமீபத்திற் காவல் செய்துகொண்டிருந்த சிவபிரானது பிரமதகணங்கள் எதிர்த்துவர, க்ருஷ்ணன் அவர்களை யெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானாலேவப்பட்டதொரு ஜ்வர தேவதை பாணனைக் காப்பாற்றுதற்பொருட்டுத் தன்னோடு யுத்தஞ் செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தை யுண்டாக்கி இதன் சக்தியினாலே அதனைத் துரத்திவிட்டான். பாணாசுரனது கோட்டையைச் சூழ்ந்து கொண்டு காத்திருந்த அக்கினிதேவரைவரும் தன்னோடு எதிர்த்து வர, அவர்களையும் நாசஞ்செய்தான். அப்பால் பாணாசுரன் போர் தொடங்க, அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் சுப்பிரமணி யன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போர்புரிய, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்திரத்தைப் பிரயோகித்துச் சிவனை ஒன்றுஞ் செய்யாமற் கொட்டாவிவிட்டுக்கொண்டு சோர்வடைந்து போம்படிசெய்து, சுப்பிரமணியனையும் கணபதியையும் உங்காரங் களால் ஒறுத்து ஓட்டி, பின்னர், அநேகமாயிரஞ் சூரியர்க்குச் சம மான சுதரிசநமென்கிற தனது சக்கரத்தை யெடுத்துப்பிரயோகித்து, அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரைதாரையாய் உதிர மொழுக அறுத்து அவனுயிரையுஞ் சிதைப்பதாக விருக்கையில், பரமசிவன் அருகில்வந்து வணங்கிப் பலவாறு பிரார்த்தித்ததனால், அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளினா னென்பது. நான்குதோள் குறைவாகத் துணிக்கப்பட்டிருக்கவும், 'துணிப்புண்ட ஆயிரம்புயத்தவன்' என்றது, சுருங்கச்சொல்லல் என்னும் அழகுபடவாகும்; அன்றியும், அவை அருள் பற்றியே விடப்பட்டனவாதலும் அறிக. (435)

னுடன் கடும் போர்செய்து அவனைப் பதினொருஅக்ஷௌஹிணி சேனையுடனே நிலைகுலைத்து அவனது ஆயிரந்தோள்களையும் தலையையும் தனது கோடாலிப் படையால் வெட்டி வீழ்த்தி வெற்றிகொண்டானென்பது வரலாறு; ஜமதக்நிமகாமுனிவரைக் கார்த்தவீரியன் யாதொரு காரணமுமின்றிக் கொன்றிட்டானென்றும் நூல்களிற் கதை கூறப்படும்.

பாணாசுரன் வரலாறு:—பாணாசுரன் சிவபெருமானருளால் ஆயிரங் கைகளையும் நெருப்புமதிலையும் அளவிறந்த வலிமையையும் சிவபெருமான் பரிவாரங்களோடு மாளிகைவாயிலிற் காவல்செய்திருத்தல் முதலிய வரங்களையும் பெற்றான். அந்தப் பாணாசுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள், ஒருநாள் ஒருபுருஷனோடு தான் கூடியதாகக் கனாக்கண்டு, அவனிடத்தில் மிக்க ஆசை பற்றியவளாய், தன் உயிர்த்தோழியான சித்திரரேகை மூலமாய்அந்தப் புருஷனைக் கிருஷ்ணனுடைய பௌத்திரனான அநிருத்தனென்று அறிந்து அத்தோழியினால் அநிருத்தனைத் தன் அந்தப்புரத்திலே கொணரப்பெற்று அவனோடு போகங்களை அநுபவித்துவர, இச்செய்தியை அந்தப் பாணன் காவலாளராலறிந்து தன் சேனையுடன்அநிருத்தனை எதிர்த்து மாயையினாற்பொருது நாகாஸ்திரத்தினாற் கட்டிப்போட்டிருந்தான். அப்போது நாரதமகாமுனிவனால் நடந்த வரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீ கிருஷ்ணபகவான், அநிருத்தனை மீட்டுவர எண்ணி, கருடன்மேல் ஏறிக்கொண்டு பலராமன் முதலானாரோடு கூடப் பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளினார். அப்போது அப்பட்டணத்தின் சமீபத்திற் காவல் செய்துகொண்டிருந்த சிவபிரானது பிரமதகணங்கள் எதிர்த்துவர, க்ருஷ்ணன் அவர்களையெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானாலேவப்பட்டதொரு ஜ்வரதேவதை பாணனைக் காப்பாற்றுதற்பொருட்டுத் தன்னோடு யுத்தஞ்செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தை யுண்டாக்கி இதன் சக்தியினாலே அதனைத் துரத்திவிட்டான். பாணாசுரனது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்த அக்கினிதேவரைவரும் தன்னோடு எதிர்த்துவர, அவர்களையும் நாசஞ்செய்தான். அப்பால் பாணாசுரன் போர்தொடங்க, அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் சுப்பிரமணியன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போர்புரிய, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்திரத்தைப் பிரயோகித்துச் சிவனை ஒன்றுஞ் செய்யாமற் கொட்டாவிவிட்டுக்கொண்டு சோர்வடைந்து போம்படிசெய்து, சுப்பிரமணியனையும் கணபதியையும் உங்காரங்களால் ஓறுத்து ஓட்டி, பின்னர், அநேகமாயிரஞ் சூரியர்க்குச் சமமான சுதரிசநமென்கிற தனது சக்கரத்தை யெடுத்துப்பிரயோகித்து, அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரைதாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையுஞ் சிதைப்பதாக விருக்கையில், பரமசிவன் அருகில்வந்து வணங்கிப் பலவாறு பிரார்த்தித்ததனால், அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளினானென்பது. நான்குதோள் குறைவாகத் துணிக்கப்பட்டிருக்கவும், 'துணிப்புண்ட ஆயிரம்புயத்தவன்' என்றது, சுருங்கச்சொல்லல் என்னும் அழகுபடவாகும்; அன்றியும், அவை அருள் பற்றியே விடப்பட்டனவாதலும் அறிக. (435)

39.—ஸஹஸ்ரபாஹு அருச்சுனன்மேல் அம்பெய்தல்.

உரங்களாயிரம்பொலங்கிரியனையனவோரொருகுனிவிற்கள்
கரங்களாயிரங்கொடுவளைத்தாயிரங்கண்ணன்மைந்தனைநோக்கி
வரங்களாயிரமறையொடும்பெற்றவன்மதிவகிர்முகமான
சரங்களாயிரமாயிரமொருதொடைதனிலெழும்படியெய்தான்.

(இ - ள்.) ஆயிரம் - மிகப்பலவான, வரங்கள் - வரங்களையும், மறையொடுஉம் - (அஸ்திரங்களுக்கு உரிய) மந்திரங்களையும், பெற்றவன் - பெற்றவனான அந்த ஆயிரவாகு,—ஆயிரம் உரங்கள் பொலம் கிரி அனையன - மிகப்பலவான வலிமைகளையுடைய பொன் மயமான மகாமேருகிரியைப் போன்றனவான, ஓர் ஒரு குனி விற்கள்-வளையுமியல்பையுடைய விற்கள் ஒவ்வொன்றையும், கரங்கள் ஆயிரம் கொடு - (தனது) ஆயிரங்கைகளால், வளைத்து - வணக்கி நாணேற்றி,—ஆயிரம் கண்ணன் மைந்தனை நோக்கி-ஆயிரங்கண் களையுடையவனான இந்திரனதுகுமாரனாகிய அருச்சுனனைக்குறித்து, மதிவகிர் முகம் ஆன சரங்கள்-சந்திரனதுபிளப்புப்போன்ற நுனி யுடையனவான (அர்த்தசந்திர) பாணங்களை, ஒரு தொடைதனில் ஆயிரம் ஆயிரம் எழும்படி - தொடுக்குந்தரமொவ்வொன்றிலும் மிகப்பல ஆயிரக்கணக்காக மேற்செல்லும்படி, எய்தான்-பிரயோகித்தான்; (எ - று.)

ஆயிரங்கைகளுள் இடப்பக்கத்துள்ள ஐந்நூறுகைகளில் வில் வளைத்துப் பிடித்துக்கொண்டு வலப்பக்கத்துள்ள ஐந்நூறுகை களால் அம்பெய்தனனென்க; இது, அடுத்த கவியால் விளங்கும். மேருமலைபோன்ற சிறப்புடை விற்கள் என்பதற்கு, 'பொலங்கிரி யனையன விற்கள்' என்றார். பி-ம்: குனிவிற்செங். (436)

40.—அருச்சுனன் ஆயிரவாகுவின் அம்புகளை விலக்கல்.

எடுத்தபோதிலொன்றருங்குதைநாணிடையிசைத்தபோதொருபத்துத்
தொடுத்தபோதினூறுகைத்தபோதாயிரமெனவருஞ்சுடர்வாளி
யடுத்தபோர்முடிமன்னவன்விடும்விடுமநேகமாயிரமம்புந்
தடுத்தபோதொருதனுவுமைஞ்ஞூறுடற்றனுவுடனெதிர்நின்ற.

(இ - ள்.) எடுத்த போதில்-(தொடுக்கும்பொருட்டுக் கையில்) எடுத்த பொழுதில், ஒன்று-ஒன்றும், அருங் குதை நாணிடை - அருமையான வில்லின் நாணியிலே, இசைத்த போது - வைத்த பொழுதில், ஒரு பத்து-பத்தும், தொடுத்த போதில்-(வில்லினால்) தொடுத்தபொழுதில், நூறு-நூறும், உகைத்த போது-(எதிரியின் மேற்) செலுத்தியபொழுது, ஆயிரம் என-ஆயிரமுமாக இருக்கும் படி, அருஞ் சுடர் வாளி-பெறுதற்கரியனவும் ஒளியுள்ளனவுமான அம்புகளை, (அருச்சுனன் ஏவி அவற்றால்), போர் அடுத்த முடி மன்னவன் விடும் விடும் அநேகம் ஆயிரம் அம்புஉம் தடுத்தபோது -போரில்நெருங்கின கிரீடாதிபதியான ஸஹஸ்ரபாகுஎன்னும் அர சன் (தன்மேல்) மிகுதியாகப்பிரயோகித்த பல ஆயிரக்கணக்கான அம்புகளையெல்லாம் தடுத்தபொழுது, ஒரு தனுஉம் - (அருச்

சுனனுடைய) வில் ஒன்றுதானே, ஐஞ்ஞூறு அடல் தனுவுடன் எதிர் நின்ற(து)-வலிமையையுடைய (ஆயிரவாகுவினது) ஐந்நூறு விற்களுடனே எதிர்த்துநின்றது; (எ - று.)—பி - ம்: இசைந்த.

ஆயிரவாகு தனது பல கைகளாலும் அளவிறந்த அம்புகளை ஏவுகையில், அருச்சுனன் தனது இருகைகளாலேயே அவற்றிற் கெல்லாம்எதிராக அளவிறந்தஅம்புகளைச் சொரிந்து சலியாது போர்செய்தனனென்பதாம். இப்பாட்டின்முன்னிரண்டடி,எய்கிற அம்பு ஒவ்வொன்றே தெய்வத்தன்மையால் வரவரப் பலவாய் வளர்ந்து சென்று எதிரிடுதலை விளக்கியது. குதை என்னும் வில்லின் அடியின் பெயர், இங்குவில்லுக்குச் சினையாகுபெயராம்.

41.—அருச்சுனன் ஆயிரவாகுவின் தோள்களையெல்லாந் துணித்தல்.

அலிமுகந்தொழுமிளவல்வாணனைப்புயமழித்தமாமறையொன்று
வலிமுகங்கொடியுயர்த்தவன்செவியினிலுரைக்கமற்றதுபெற்றங்
குலிமுகஞ்செறிவரிசிலைகால்பொரக்குனித்துவன்பொடுதொட்ட
சிலிமுகங்களிற்றுணித்தனனுயிரஞ்சிகரவாகுவுஞ்சேர.

(இ-ள்.) அலி - (தமையனான) பலராமனை, முகம் தொழும் - முன் நின்று வணங்குந்தன்மையுள்ள, இளவல்- தம்பியான கண்ண பிரான், வாணனை புயம் அழித்த மா மறை ஒன்று-(முன்பு தான்) வாணாசுரனை(ஒருங்கே ஆயிரந்) தோள் துணித்தற்கு உபயோகித்த சிறந்ததொரு மந்திரத்தை, வலிமுகம் கொடி உயர்த்தவன் செவி யினில் உரைக்க - குரங்குவடிவத்தைக் கொடியிலே உயரஎடுத் துள்ளவனான அருச்சுனனது காதிலே (அப்பொழுது) உபதே சிக்க, மற்று - பின்பு [உடனே], (அருச்சுனன்), அது பெற்று - அந்த மந்திரத்தைத் தெரிந்துகொண்டு, அங்குலி முகம் செறி வரி சிலை - கைவிரல்களின் இடையிலே உறுதியாகப் பிடித்த கட்ட மைந்த காண்டீவவில்லை, கால் பொர குனித்து-நுனிகள் வளைந்து பொருந்தும்படி வளைத்து, வன்பொடு தொட்ட - வலிமையோடு பிரயோகித்த, சிலிமுகங்களின் - அம்புகளினால், ஆயிரம் சிகரம் வாகுஉம் - மலையுச்சிபோலுயர்ந்த வலிய (அவன்) ஆயிரந்தோள் களையும், சேர துணித்தனன்-ஒருங்கே துணித்திட்டான்; (எ -று.)

அலி = ஹலீ: வடசொல்: இது, பலராமன்பெயர்; ஹலம் என்னும் ஆயுதத்தையுடையவன்: ஹலம் - கலப்பை. பலராமன் கண்ணனுக்குத் தமையன்; திருமாலின் எட்டாம் அவதாரம்: இவனிடத்து ஆதிசேஷனது அம்சமுங் கலந்திருந்தது. வசுதேவ னுடைய பத்தினிகளுள் தேவகியின் கர்ப்பத்தில் (ஏழாவதுகரு வாக) ஆறுமாசமும், ரோகிணியின் கர்ப்பத்தில் ஆறுமாசமும் இருந்து பிறந்தவனிவன். இவனுக்குக் கலப்பையும் உலக்கையும் ஆயுதங்கள். தேவகியின் எட்டாவதுகருப்பத்தில் அவதரித்த வனும் திருமாலின் ஒன்பதாம் அவதாரமுமான கண்ணனுக்கு இவன் தமையனாதல் காண்க. முகந்தொழும் என்பது - தலையால் வணங்குமென்றும் பொருள்படும். (438)

சனுடைய)வின் ஒன்றுதானே, ஐஞ்ஞூறு அடல் தனுவுடன் எதிர் நின்ற(து)-வலிமையையுடைய (ஆயிரவாகுவினது) ஐந்நூறு விற்களுடனே எதிர்த்துநின்றது; (எ - று.)—பி - ம்: இசைந்த.

ஆயிரவாகு தனது பல கைகளாலும் அளவிறந்த அம்புகளை எய்கையில், அருச்சுனன் தனது இருகைகளாலேயே அவற்றிற் கெல்லாம் எதிராக அளவிறந்தஅம்புகளைச் சொரிந்து சலியாது போர்செய்தனனென்பதாம். இப்பாட்டின்முன்னிரண்டடி, எய்கிற அம்பு ஒவ்வொன்றே தெய்வத்தன்மையால் வரவரப் பலவாய் வளர்ந்து சென்று எதிரிடுதலை விளக்கியது. குதை என்னும் வில்லின் அடியின் பெயர், இங்குவில்லுக்குச் சினையாகுபெயராம்.

41.—அருச்சுனன் ஆயிரவாகுவின் தோள்களையெல்லாந் துணித்தல்.

அலிமுகந்தொழுமிளவல்வாணனைப்புயமழித்தமாமறையொன்று
வலிமுகங்கொடியுயர்த்தவன்செவியினிலுரைக்கமற்றதுபெற்றங்
குலிமுகஞ்செறிவரிசிலைகால்பொரக்குனித்துவன்பொடுதொட்ட
சிலிமுகங்களிற்றுணித்தனனாயிரஞ்சிகரவாகுவுஞ்சேர.

(இ-ள்.) அலி - (தமையனான) பலராமனை, முகம் தொழும் - முன் நின்று வணங்குந்தன்மையுள்ள, இளவல்- தம்பியான கண்ண பிரான், வாணனை புயம் அழித்த மா மறை ஒன்று-(முன்பு தான்) வாணாசுரனை(ஒருங்கே ஆயிரந்) தோள்துணித்தற்கு உபயோகித்த சிறந்ததொரு மந்திரத்தை, வலிமுகம் கொடி உயர்த்தவன் செவியினில் உரைக்க - குரங்குவடிவத்தைக் கொடியிலே உயரஎடுத் துள்ளவனான அருச்சுனனது காதிலே (அப்பொழுது) உபதேசிக்க, மற்று - பின்பு [உடனே], (அருச்சுனன்), அது பெற்று - அந்த மந்திரத்தைத் தெரிந்துகொண்டு, அங்குலி முகம் செறி வரி சிலை - கைவிரல்களின் இடையிலே உறுதியாகப் பிடித்த கட்ட மைந்த காண்டீவவில்லை, கால் பொர குனித்து-நுனிகள் வளைந்து பொருந்தும்படி வளைத்து, வன்பொடு தொட்ட - வலிமையோடு பிரயோகித்த, சிலிமுகங்களின் - அம்புகளினால், ஆயிரம் சிகரம் வாகுவும் - மலையுச்சிபோலுயர்ந்த வலிய (அவன்) ஆயிரந்தோள் களையும், சேர துணித்தனன்-ஒருங்கே துணித்திட்டான்; (எ - று.)

அலி = ஹலி: வடசொல்: இது, பலராமன்பெயர்; ஹலம் என்னும் ஆயுதத்தையுடையவன்: ஹலம் - கலப்பை. பலராமன் கண்ணனுக்குத் தமையன்; திருமாலின் எட்டாம் அவதாரம்: இவனிடத்து ஆதிசேஷனது அம்சமுங் கலந்திருந்தது. வசுதேவனுடைய பத்தினிகளுள் தேவகியின் கர்ப்பத்தில் (ஏழாவதுகருவாக) ஆறுமாசமும், ரோகிணியின் கர்ப்பத்தில் ஆறுமாசமும் இருந்து பிறந்தவனிவன். இவனுக்குக் கலப்பையும் உலக்கையும் ஆயுதங்கள். தேவகியின் எட்டாவதுகருப்பத்தில் அவதரித்தவனும் திருமாலின் ஒன்பதாம் அவதாரமுமான கண்ணனுக்கு இவன் தமையனாதல் காண்க. முகந் தொழும் என்பது - தலையால் வணங்குமென்றும் பொருள்படும். (438)

42.—துணிப்புண்ட கைகள் கீழ்விழுதல்.

மீதலந்தனக்கிறைவன்வச்சிரத்தினால்வெற்பினஞ்சிறகற்றுப்
பூதலந்தனில்விழுவபோல்விழுந்தனபுயங்களாயிரமும்போய்க்
காதலங்கனைதடம்படிந்தேகுதல்கண்டுகாமுகனாகிப்
பாதலம்புகுந்தின்பமெய்தியவிறற்பார்த்தன்வெங்கணையாலே.

(இ - ள்.) காதல் - விரும்பப்படுதற்குஉரிய, அங்கனை - அழகிய வளான உலூபி, தடம் படிந்து - நீர்நிலையிலே நீராடி, ஏகுதல் - செல்லுதலை, கண்டு - பார்த்து, காமுகன் ஆகி - (அவளிடத்து) ஆசைகொண்டவனாய், பாதலம் புகுந்து - (அவளுடன்) பாதாள லோகத்தைச் சேர்ந்து, இன்பம் எய்திய - (அவளோடு) சுகம்பெற்ற, விறல் பார்த்தன் - வலிமையையுடைய அருச்சுனனது, வெம் கணையால் - கொடிய அம்புகளினால்,—புயங்கள் ஆயிரம்உம் - (சகசிரவாகுவின்) ஆயிரந்தோள்களும்,—மீதலந்தனக்கு இறைவன் - மேலுலகமான சுவர்க்கத்துக்குத் தலைவனான இந்திரனது, வச்சிரத்தினால் - வச்சிராயுதத்தினால், வெற்பின் அம் சிறகு - மலைகளின் அழகிய இறகுகள், அற்று பூதலந்தனில் விழுவ போல் - அறுபட்டுப் பூமியில் விழுவனபோல, போய் விழுந்தன - துணிபட்டுக் கீழ்விழுந்திட்டன; (எ - று.)—பி - ம்: விழுந்தபோல்.

உவமையணி. இந்திரகுமாரனான அருச்சுனனுக்கு - இந்திரனும், அருச்சுனனது வலிய அம்புகட்கு - வலிய வச்சிராயுதமும், வலிய பெரிய ஆயிரவாகுவுக்கு - மலையும், அவன்தோள்கட்கு - மலையிறகுகளும் உவமையெனக்காண்க. வெற்புஇனம் சிறகற்று விழுவ போல் என எடுத்து உரைத்தால், மலைகள் தோள்களுக்கு உவமையாம். மீதலம் - சுவர்க்கம்.

அங்கனா - அழகிய அங்கமுடையாள்: வடசொல். (439)

43.—அருச்சுனனைத் தேவர்கள் கொண்டாடுதல்.

அன்றருச்சுனனாயிரம்புயங்களுமரிந்தனன்மழுவீரன்
இன்றருச்சுனனிவன்புயமரிந்தனனென்றிமையவரேத்தத்
துன்றருச்சுனநான்மறையுரனுடன்றொடரமுன்றவழ்ந்தோடிச்
சென்றருச்சுனமிரண்டுதைத்தருளினேன்செலுத்துதேரவன்சென்றான்.

(இ - ள்.) 'அன்று - அந்நாளில், அருச்சுனன் ஆயிரம் புயங்கள்உம் - கார்த்தவீரியார்ச்சுனனது ஆயிரம் தோள்களையும், மழு வீரன் - கோடாலிப்படையையுடைய மகாவீரனான பரசுராமன், அரிந்தனன் - அறுத்திட்டான்: (அதுபோலவே), இன்று - இந்நாளில், அருச்சுனன் - இந்த அருச்சுனன், இவன் புயம் அரிந்தனன் - இந்த ஆயிரவாகுவின் தோள்களை யறுத்திட்டான்', என்று - என்றுசொல்லி, இமையவர் - தேவர்கள், ஏத்த - புகழ,— துன்று - விடாதுநெருங்கிய, அருச்சுனம் - பரிசுத்தமான, நால் மறை - நான்கு வேதங்களும், உரனுடன் - உரனுடனே, தொடர - பின் தொடர்ந்து வர, முன் தவழ்ந்து ஓடி சென்று - முன்னே தவழ்ந்து கொண்டு விரைவாகப்போய், இரண்டு அருச்சுனம் உதைத்தருளி

னேன் - இரண்டு மருதமரங்களை உதைத்து அருள்செய்தவனான கண்ணபிரான், செலுத்து-(பாகனாயமைந்து) ஓட்டுகிற, தேரவன்-தேரையுடைய அருச்சுனன், சென்றான் - (அப்பாற்) போயினான்; (எ - று.)—ஏத்தச் சென்றான் என்க.

எடுத்துக்காட்டுவமையணி. மழுவீரன் - பரசுராமன். 'அன்றுஅருச்சுனன் ஆயிரம்புயங்களும் அரியப்பட்டனன்': இன்றுஅருச்சுனன் ஆயிரம் புயங்களையும் அரிந்தனன்' என்றுசொற்போக்கில் **தொடைமுரண்** தோன்றக் கூறியது, கவிசமத்காரம். வெண்ணிறத்தையுணர்த்தும்அர்ஜுநமென்ற வடசொல்-மூன்றாமடியில், இலக்கணையாய், சுத்தமென்றபொருளில் வந்தது. இனி, அருச்சுனன் என்ற வடசொல்திரிபு எதுகைநயத்துக்காக அருச்சுனமென விகாரப் பட்டதாகக்கொண்டு, அருச்சுனம் - சுவாமிபூசைக்கு உதவுகிற அல்லது பூசிக்கத்தக்க, மறை யென்று உரைத்தலும் ஒன்று: 'அசேதனமாகிய உரலோடு சகலஞானங்கட்கும் ஆதாரமான வேதங்களுந்தொடர' என்றதனால், திருமாலினருள்பெற்றால் அசேதநங்களும் சேதநங்களோடு ஒப்புமைபெறு மென்பது தோன்றும். (440)

44.—பின்பு பல அரசர் திரண்டு அருச்சுனனை எதிர்த்தல்.

கடிகைமுப்பதுஞ்சிந்துவுக்கரசனைக்காக்குமாறறைகூவி
யிடியிடித்தெனப்பல்லியமார்த்தெழவெழுகடற்படையோடும்
படிநடுக்குறப்பணிக்குலநெளித்திடப்பட்டவர்த்தனருள்ளார்
முடிதரித்தவரனைவருந்திரண்டொருமுனைபடவெதிர்சென்றார்.

(இ - ள்.) பட்டவர்த்தனர் உள்ளார் - (கிரீடமில்லாமல்) நெற்றிப்பட்டம் மாத்திரம் தரித்து அரசாளும் பட்டவர்த்தனர்களாக உள்ளவர்களும், முடி தரித்தவர் - கிரீடத்தைத்தரித்து அரசாளும் மகுடவர்த்தனர்களாக உள்ளவர்களுமாகிய, அனைவர் உம்-எல்லா அரசர்களும்,—திரண்டு-ஒருங்கு கூடி, கடிகைமுப்பது உம் - (அன்றைப்பகல்) நாழிகைமுப்பதும், சிந்துவுக்கு அரசனை - சிந்துதேசத்து அரசனாகிய சயத்திரதனை, காக்கும் ஆறு - (தாம்) பாதுகாக்கும்படி (நிச்சயித்து),—அறைகூவி - (அருச்சுனனை) வலியப் போர்க்கு அழைத்துக்கொண்டு,—பல் இயம் - அநேகவித வாத்தியங்கள், இடி இடித்து என-இடியிடித்தாற்போல, ஆர்த்து எழ-ஆரவாரித்து மிக முழங்க,—எழு கடல் படையோடுஉம் - ஏழுசமுத்திரங்கள்போன்ற சேனைகளுடனே,—படி நடுக்குஉற - (பாரமிகுதியாற்)பூமி நடுக்கமடையவும், பணி குலம் நெளித்திட - (மற்றும் அதனால் பூமியைத்தாங்குகிற) பாம்புகளின்கூட்டம் (சுமக்கமாட்டாது) தலையசைக்கவும், ஒரு முனை பட - ஓரேநோக்கமாக, எதிர் சென்றார் - அருச்சுனனெதிரில் வந்தார்கள்; (எ - று.)

பதினான்காநாட்பகல் முழுவதும் அருச்சுனன்கையிற்படாதபடி சயத்திரதனைத் தாம் பாதுகாப்பதாக மிகப்பல அரசர் ஒன்றுகூடித் தம் சேனைகளோடு பூமிநடுங்கும்படி அருச்சுனனுக்கு எதிரே சென்றாரென்க. ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேஷன்

நடுவிலும், அவனுக்குத் துணையாக அஷ்டமகாநாகங்கள் கிழக்கு முதலிய எட்டுத்திக்குக்களிலுமாகப் பூமியின்கீழிருந்து பூமியைத் தாங்குகின்றன வென்ப. பி - ம்: அதிர்தரவெழு. (441)

45.—அத்தனைபேரோடும் அருச்சுனனொருவன் பொருதல்.

பரிதியால்வளைப்புண்டசெம்பரிதியிற்பற்குனன்றனுவாங்கித்
தெரிசரங்களோரொருவருக்காயிரஞ்சிரமுதலடியீரு
நெரிதரும்படிதொடுத்துவெங்கொடிபரிநேமிதேர்பலகோடி
கரிகளுந்துணிபடப்படமலைந்தனன்கடிகையொன்றினின்மாதோ.

(இ - ள்.) பரிதியால்வளைப்புண்ட-ஊர்கோளாற் சூழப்பட்ட, செம் பரிதியின் - சிவந்த சூரியன்போல,(அரசர்பல பேராற் சூழப்பட்டு இடையில் நின்று), பற்குனன்-அருச்சுனன், தனு வாங்கி- வில்லை வளைத்து, தெரிசரங்கள்-ஆராய்ந்தெடுக்கப்பட்ட [சிறந்த] அம்புகளை, ஓர் ஒருவருக்கு ஆயிரம் - ஒவ்வொருத்தருக்குஆயிரம் வீதமாக, சிரம் முதல் அடி ஈறு ஆ நெரிதரும்படி - (அவர்களுடைய) தலைமுதல் கால் இறுதியாக எல்லாவுறுப்புக்களுஞ் சிதையும்படி, தொடுத்து - (அவர்கள்மேற்) பிரயோகித்து,—வெம்- பயங்கரமான, கொடி - துவசங்களும், பரி - குதிரைகளும், நேமி - தேர்ச்சக்கரங்களும், தேர் - தேர்களும், பல கோடி-அநேககோடிக் கணக்கான, கரிகள்உம்-யானைகளும், துணிபட பட-மிகுதியாகத் துண்டுபடும்படி, கடிகை ஒன்றினில் - ஒருநாழிகைப்பொழுதிலே, மலைந்தனன் - எதிர்த்துப்பொருதான்; (எ - று.)

மண்டலத்தாற் சூழப்பட்ட சூரியன்போல மிகப்பல அரசராற் சூழப்பட்ட அருச்சுனன் தான் ஒருவனாகவே அவ்வளவுபேரையும் எதிர்த்து வில்வளைத்து ஒவ்வொருத்தருக்கு ஆயிரமாகப் பாணப் பிரயோகஞ்செய்து அவர்களுடைய குதிரைதேர் யானைகளையும் சேனைகளையும் கொடி முதலிய இராசசின்னங்களையும் தலைமுதலிய உறுப்புக்களையும் சின்னபின்னமாக ஒருநாழிகைப்போதில் அழித்திட்டானென்க. வளைத்தவில்லுக்குப் பரிவேடம் உவமையென் பாருமுளர். பி - ம்: நேமியர்தேர்கோடி. (442)

46.—இரண்டுகவிகள்-அருச்சுனன்முன் பகைவர்களிரிந்தோடியமை கூறும்.

போரில்வெவ்விடாய்தணிவுறக்களத்தினிற்புறங்கொடுத்தவர்சோரி
நீரின்மூழ்கியுங்கழுகிடுகாவணநீழலாறியுஞ்சென்றார்
தேரில்வாசியிற்களிற்றில்வந்தவர்களிற்சேவடிசிவப்பேற
யாரியார்குதித்தோடுதலொழிந்தவரெறிபடைவீழ்த்திட்டே.

(இ - ள்.) களத்தினில் - அந்தப்போர்க்களத்திலே, புறங் கொடுத்தவர் - முதுகுகொடுத்த வீரர்கள், போரில் வெவ் விடாய் தணிவுற - போரில் (தங்கட்குஉண்டான) கொடியஇளைப்புத் தணிவடையும்படி, சோரி நீரில் மூழ்கிஉம் - இரத்தவெள்ளத்திலே முழுகியும், கழுகு இடு காவணம் நீழல் ஆறிஉம்-(அங்குப் பிணந் தின்னவந்த) கழுகுகள் (தாம் வானத்திலே இடைவிடாது பரவுதலால்) அமைத்த பந்தலின் நிழலிலே தாபந்தீர்ந்தும், சென்றார் -

போனார்கள்; தேரில் - தேர்களின்மேலும், வாசியில் - குதிரைகளின் மேலும், களிற்றில் - யானைகளின்மேலும், வந்தவர்களில்- எதிர்த்துவந்த வீரர்களில், எறிபடை விழ்த்திட்டு-(பகைவர்மேற்) பிரயோகித்தற்குஉரிய ஆயுதங்களைக் கீழேபோகட்டுவிட்டு, சே அடி சிவப்புஏற - (இயற்கையிற்) சிவந்தனவாகிய (தங்கள்) பாதங்கள் செந்நிறம் மிகும்படி, குதித்து ஓடுதல் ஒழிந்தவர் - (தம்தம் வாகனங்களினின்று கீழே) குதித்து ஓடுதலை நீங்கினவர்கள், யார் யார் - யாவர்தாம்? [குதித்து ஓடாதவர் எவருமில்லை யென்றபடி]; (எ - று.)

அருச்சுனனை யெதிர்த்தவரில் இறந்தவர் போக மிச்சமானவ ரனைவரும் அவனால் வலியழிக்கப்பட்டுத் தோற்று அவனெதிரில் நிற்கவும் ஆற்றாராய்ப் புறங்கொடுத்து விரைவில் ஓடிப்போய்உயிர் தப்பினரென்பதாம். அவன் முன்னிலையில் தம்தம் வாகனங்களின் மீது நின்றாலும் அவன் விடமாட்டானென்று அஞ்சி அவற்றி னின்று விரைவிற் குதித்து, கையில் ஆயுதங்களோடு கூடியிருந்தால் அவன் தம்மை அழிக்கக்கூடு மென்ற சங்கையினாலும் அவன்விஷயத்தி லுண்டான அச்சமிகுதியா லாகிய கைந்நடுக்கத்தாலும் படைக்கலங்களைக் கீழேபோகட்டு ஓடின ரென்க. அங்ஙனம் புறங்கொடுத்தவர்கள் இரத்தவெள்ளத்தில் மூழ்குதலும், கழுகுநிழலிற் பொருந்துதலையும்-விடாய்தணிதற்பொருட்டு நீரில் மூழ்குதலும், நிழலிற்பொருந்துதலுமாகக் கற்பித்தார்; **தற்குறிப் பேற்றவணி.** (443)

47. நின்றுபட்டனர்தனித்தனியமர்புரிநிருபர்முந்துறவோடிச்
சென்றுபட்டனர்சேனைமண்டலிகர்வெஞ்சினம்பொழிசிறுசெங்கட்
குன்றுபட்டனபட்டனநவகதிக்குரகதக்குலம்யாவு
மன்றுபட்டவர்க்குறையிடப்போதுமோவநேகநாளினும்பட்டார்.

(இ - ள்.) அமர் புரி நிருபர்-(அருச்சுனனுடன்) போர்செய்த அரசர்கள், தனி தனி-தனித்தனியே, நின்று பட்டனர்-எதிர்த்து நின்றநிலையில் இறந்தார்கள்; சேனை மண்டலிகர் - சேனைகளோடு கூடிய மண்டலீகர் என்னுஞ் சிற்றரசர்கள், முந்துற ஓடி சென்று- விரைவாக (ப் புறங்கொடுத்து) ஓடிப்போய், பட்டனர் - தோற்றார் கள்; வெம் சினம் பொழி-கொடியகோபத்தை மிகுதியாக வெளிக் காட்டுகிற, சிறு செம்கண்-சிறிய சிவந்தகண்களையுடைய, குன்று -மலைகள்போன்ற யானைகள், பட்டன-அழிந்தன; நவகதி-ஒன்பது வகை நடைகளையுடைய, குரகதம் குலம் யாஉம் - குதிரைகளின் கூட்டங்களெல்லாம், பட்டன-அழிந்தன;—அனேகம் நாளினஉம் பட்டார் - (இதற்குமுன்) பலபோர்நாட்களிலும் அழிந்தவரின் தொகை, அன்று பட்டவர்க்கு உறை இட போதும்ஓ-அப்பதினான் காம்போர்நாளில் அழிந்தவர்கட்குஉறையிடுதற்காவதுபோதுமோ? [போதா தென்றபடி]; (எ - று.)

உறையிடுதலாவது-பொருள்களைக் கணக்கிடும்போது ஞாபகத்தின் பொருட்டு ஒவ்வொரு பெருந்தொகைக்கு ஒன்றாக இடுவதோர் இலக்கக் குறிப்பு. இதற்குமுன் பதின்மூன்றுநாள்களிலும்

இறந்தவர்களது தொகை அன்றைநாளில் இறந்தவர்களது தொகைக்கு உறையிடுதற்கும் போதாது என்று, அன்று இறந்தவர்களது தொகைமிகுதியை விளக்கியவாறு. நவகதி-குரங்கு, வேங்கை, யானை, நாய், ஆடு, சிங்கம், நரி, சாபம், முயல் என்பவற்றின் கதி என்றலுமுண்டு. பட்டார்-பட்டவரின்தொகைக்கு, ஆகுபெயர்: அதனால், 'போதும்' என்ற செய்யுமென்முற்றைக்கொண்டது: இல்லாவிடின், போதுவர் என்று முற்றுவரவேண்டும். (444)

48.—அருச்சுனனது விற்போர்த்திறச்சிறப்பு.

அநேக மாயிரம் பேர்படக் கவந்தமொன் ருடுமக் கவந்தங்க
ளநேக மாயிர மாடவெஞ் சிலைமணி யசைந்தொரு குரலார்க்கு
மநேக நாழிகை யருச்சுனன் சிலைமணி யார்த்ததக் களம்பட்ட
வநேக மாயிரம் விருதரை யளவறிந் தார்கொலோ வுரைக்கிற்பார்.

(இ - ள்.) அநேகம் ஆயிரம் பேர் பட-(போரில்) பலஆயிரம் பேர்இறக்க, கவந்தம் ஒன்று ஆடும்-ஒருகவந்தம் (எழுந்துநின்று) கூத்தாடும்: அ கவந்தங்கள் அநேகம் ஆயிரம் ஆட-அத்தன்மையனவான கவந்தங்கள் பல ஆயிரம் எழுந்து கூத்தாட, வெம் சிலை மணி அசைந்து ஒரு குரல் ஆர்க்கும்-பயங்கரமான வில்லிற் கட்டியுள்ள மணி அசைந்து ஒருமுறை ஒலிக்கும்; அருச்சுனன் சிலை மணி - (அத்தன்மையுள்ள) அருச்சுனனது காண்டீவவில்லின் மணி, அநேக நாழிகை ஆர்த்தது - (அப்போது) பலநாழிகைப் பொழுது ஒலித்தது; (என்றால்),—அ களம் பட்ட-அந்தப் போர்க்களத்தில் (அன்று) இறந்த, அநேகம் ஆயிரம் விருதரை-பலஆயிரம் வீரர்களை, ஆர் கொல்-யார்தாம், அளவு அறிந்து உரைக்கிற்பார் -(இவ்வளவென்று) தொகையறிந்து சொல்லவல்லார்? [எவருமில்லை யென்றபடி]; (எ-று.)—ஓ-அசை.

இப்பாட்டிற்கூறிய மரபை "ஆனையாயிரந்தேர்பதினாயிர மடர்பரியொரு கோடி, சேனைகாவலராயிரம்பேர்படிற் செழுங்கவந்தமொன்றாடுங், கானமர்யிர மாயிர கோடிக்குக் கவின்மணி கணிலென்னும், ஏனையம்மணியேழரை நாழிகை யாடிய தினிதன்றே" என்று கம்பராமாயணத்திலும் காண்க. இது, வடநூல்களிலுங் கூறப்பட்டுள்ளது. கவந்தம்-கபந்தம் என்ற வடசொல்லின் திரிபு: இதற்கு-தொழிலுடன் கூடின தலையற்ற உடலென்று பொருள். மணி-அடிக்கும்மணி, கண்டை. மணியில் அடிக்கிற உறுப்பை 'நா' என்றல் மரபாதலின், அதன் ஒலியை 'குரல்' என்றார். சொற்பொருட்பின்வருநிலை. (445)

வேறு.

49.—படுகளச்சிறப்பு.

வெவ்வாசிநெ டுந்தேர்மிசை நிமிராவரி விற்கொண்
டிவ்வாறமர் புரிவேலையி லெழுசெங்குரு தியினு
லவ்வாடர வுடையானழி யர்யோதன மந்திச்
செவ்வானக மென்வந்துசி வப்பேறிய தெங்கும்.

(இ - ள்.) வெவ் வாசி-வேகமுள்ள குதிரைகள்பூண்ட, நெடுந் தேர் மிசை-பெரிய தேரின்மீது, நிமிரா வரி வில் கொண்டு-வளைவு மாறாத கட்டமைந்த வில்லை யேந்திக்கொண்டுநின்று, இ ஆறு-இப்படி, அமர் புரி வேலையில்-(அருச்சுனன்) போர்செய்தபொழுதில், எழு-மிக்குப்பெருகிய, செம் குருதியினால் - சிவந்தஇரத்தத்தால்,—அ ஆடு அரவுஉடையான் அழி ஆயோதனம் எங்குஉம்-படமெடுத்தாடுந்தன்மையுள்ள பாம்பின்வடிவத்தைக் கொடியிலுடையவனான அந்தத்துரியோதனனது அழிபட்ட போர்க்களம் முழுவதும்,—அந்தி செவ் வான் அகம் என-மாலைப்பொழுதிற் காணப்படுகிற செவ்வானம்போல, சிவப்பு வந்து ஏறியது - செந்நிறம்பரவிமிகப்பெற்றது; (எ-று.)

இதுமுதற் பதினேழுகவிகள்-பெரும்பாலும்ஈற்றுச்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் மாங்கனிச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (446)

50.—மத்தியானகால வருணனை.

முருகாரிருசிறைவண்டினமுளரிப்புதுமலர்விட்
டருகார்பொழினிழலாடணியலர்நாண்மலருறவே
யிருகாலமுமுக்கால்விடுகைம்மாரியிருக்கா
லொருகாலருமறையோர்விடுபதநண்ணினனுதயன்.

(இ - ள்.) முருகு ஆர்-தேனையுண்ணுந்தன்மையுள்ள, இரு சிறை வண்டு இனம்-இரண்டுஇறகுகளையுடைய வண்டுகளின் கூட்டம், புது முளரி மலர்விட்டு - புதிய [அன்றுமலர்ந்த] தாமரைப்பூக்களை விட்டு நீங்கி, அருகு ஆர் பொழில் நிழலாடு-சமீபத்திற் பொருந்திய சோலைகளின் நிழலிலேயுள்ள, அணி அலர் நாள் மலர் - அழகிய மலர்ந்த புதியபூக்களில், உற-சேரும்படி,—உதயன் - சூரியன்,—அரு மறையோர் - (அறிதற்கு) அரியவேதங்களையுணர்ந்த பிராமணர், இருக்கால்-வேதமந்திரத்தைக்கொண்டு [காயத்திரியுச்சாரணத்தோடு], இரு காலம்உம் முக்கால் விடு கை மாரி-(காலை மாலை என்ற) இரண்டுபொழுதிலும் மூன்றுமுறை கைகளால் எடுத்துவிடுகிற அருக்கியநீர்ப்பொழிவை, ஒருகால் விடு - ஒருமுறைசொரிகிற, பதம்-இடத்தை, நண்ணினன்-சேர்ந்தான் [உச்சியடைந்தான்]; (எ - று.)

காலையிலும்மாலையிலுஞ் செய்யும் சந்தியர்வந்தனங்களில் மூன்று முறையும், மாத்தியான்னிகத்தில்* ஒருமுறையும் காயத்திரிமந்திரங்கூறி அருக்கியம் விடுதல் மரபாதலால், 'உச்சமடைந்தான்' என்ற பொருளை இங்ஙனங் கூறினார்;இது, **பிறிதினவிற்சியணி.** சூரியோதயகாலத்திலே தாமரையில் மொய்த்து அதிலுள்ள தேனை வயிறுநிரம்பப் பருகிய வண்டுகள் அச்சூரியன் உச்சிவான

---

* இதற்குமாறுகச் சிலர் மாத்தியான்னிகத்தில் இருமுறை காயத்திரியர்க்கியப்பிரதானஞ்செய்தல் கல்பபேதவிதிபற்றியதாதல்வேண்டுமென அறிக.

மடைந்தபோது வெயில்மிக்கதனு லாகிய தாபத்தைப் பொறுக்க மாட்டாமல் அத்தாமரையைவிட்டுப் பக்கங்களிலுள்ள சோலைகளிலிருக்கிற மரங்களின் நிழலில் மலர்ந்த வேற்றுப்பூக்களை நாடியடைகின்றன என்று, அக்காலத்தின் வெயில்மிகுதியை முன்னிரண்டடி விளக்கும். 'முருகார்' என்பது, வண்டுக்கு அடைமொழி; முருகுஆர்தல் - நறுமணத்தை யுட்கொள்ளுதலும் அழகுநிரம்புதலும் இளமைபொருந்துதலும் ஆம். (447)

51.—அருச்சுனன் அங்கு ஒரு குளம் உண்டாக்கல்.

விரவார்முனையடுதேர்நுகவெவ்வாசிகள்புனலுண்
டுரவாவிடிலோடாவினியென்றையனுரைப்ப
வரவாபரணன்றந்தருளருமாமறைவருணச்
சரவாய்வரவெய்தானவணெழலுற்றதொர்தடமே.

(இ - ள்.) (அப்பொழுது),—ஐயன்- (யாவர்க்குந்) தலைவனான கண்ணன், (அருச்சுனனை நோக்கி), 'விரவார் முனை அடு - பகைவரது போரை அழிக்கவல்ல, தேர் - (நமது) தேரினது, நுகம் - நுகத்தடியிற் பூட்டப்பட்டுள்ள, வெவ் வாசிகள் - விரைந்து செல்லத்தக்க குதிரைகள், புனல் உண்டு உரவா விடில்- நீர்பருகி வலிமையடையாவிட்டால் [இளைப்பாறாவிட்டால்], இனி ஓடா - இனிமேல் ஓடமாட்டா,' என்று உரைப்ப - என்றுசொல்ல,— (உடனே அருச்சுனன்),—அரவு ஆபரணன் தந்தருள் அரு மா மறை-நாகங்களை ஆபரணமாகவுடைய சிவபிரான் (தனக்குக்) கொடுத்தருளிய (பிறர்க்கு) அருமையான சிறந்த உருத்திரமந்திரம், வருணம் சரவாய் வர - வாருணாஸ்திரத்திலே அமையும்படி, எய்தான் - பாணப்பிரயோகஞ் செய்தான்; (அம்மாத்திரத்து), அவண் - அங்கு, ஓர் தடம் - ஒரு தடாகம், எழல்உற்றது - உண்டாயிற்று; (எ - று.)—வருணச்சரம் - நீர்க்கடவுளாகிய வருணனைத் தெய்வமாகவுடைய அஸ்திரம். (448)

52.—இரண்டுகவிகள்-அக்குளத்தின் வருணனை.

ஆழம்புணரியினும்பெரிததினும்பெரிதகலஞ்
சூழெங்கணும்வண்டாமரைதுறையெங்கணுநீலங்
கீழெங்கணுநெடுவாளைவரால்பைங்கயல்கெண்டை
வாழுங்கரையருகெங்கணும்வளர்கின்னரமிதுனம்.

(இ - ள்.) ஆழம் - (அக்குளத்தின்) ஆழம், புணரியின் உம் பெரிது-கடலின் ஆழத்தினும் அதிகமானது; அகலம்-(அக்குளத்தின்) அகலமும், அதின் உம் பெரிது-கடலின் அகலத்தினும் அதிகமானது; சூழ் எங்கண் உம்-(அக்குளத்தில்) சுற்றிலுமுள்ள எவ்விடத்தும், வள் தாமரை-செழிப்பான தாமரைகளும்,—துறை எங்கண் உம்-(அக்குளத்தின் இறங்கு) துறைகளிலெல்லாம், நீலம்-கருங்குவளைகளும்,—கீழ் எங்கண் உம்-(அதன்) உள்ளிடம் முழுவதிலும், நெடு வாளை-நீண்ட வாளைமீன்களும், வரால்-வரால்மீன்

களும், பைங் கயல் - பசுநிறமான கயல்மீன்களும், கெண்டை - கெண்டைமீன்களும்,—கரை அருகு எங்கண் உம் - கரைப்பக்கங்களிலெல்லாம், வளர் இன்னர மிதுனம் - நன்றாகவளர்ந்த கின்னர மிதுனங்களும், வாழும்-(இனிமையாகத்) தங்கும்; (எ - று.)— பி - ம்: வீழுங்கரை.

இதனால், தெய்விகமர்கவுண்டான அத்தடாகத்தின் ஆழம் அகலம் நீர்வளச்சிறப்பு என்பவை விளங்கும். கின்னரமிதுனம் - கின்னரமென்னும் நீர்வாழ்பறவையின் ஆணும் பெண்ணுமான இரட்டை. எப்பொழுதும் ஆணும்பெண்ணுமாய் இரட்டைப்பட்டு நின்று கிந்நரமென்னும் வாத்தியங்கைக்கொண்டு பாடித் திரிவதொரு தேவசாதிக்கும் இப்பெயருண்டு; இவை, குதிரைமுகமும் மனிதவுடம்பும் உடையவை. முதலடி -உயர்வுநவிற்சியணி வகையால் அக்குளத்தின் ஆழமிகுதியையும் அகலமிகுதியையும்விளக்கியது.

53. ஒருபால்வளர்போதாநிரைகருநாரைகளொருபா
லொருபாலுளமகிழ்நேமிகளன்றிற்குலமொருபா
லொருபான்மடவன்னம்புனலரமங்கையரொருபா
லொருபாலிருபாலுந்தவழொளிநந்துறைபுளினம்.

(இ - ள்.) (மற்றும் அக்குளக்கரையில்), ஒரு பால் - ஒரு பக்கத்தில், வளர் போதா நிரை-நன்றாகவளர்ந்தபெருநாரைகளின் கூட்டமும், ஒரு பால்—, கரு நாரைகள்-கறுப்புநாரைகளும், ஒரு பால்—, உளம் மகிழ் நேமிகள்-(தம்மிற்கூடி) மனம் மகிழ்கிற சக்கரவாகப்பறவைகளும், ஒருபால்—, அன்றில் குலம்-கிரௌஞ்சமென்னும் பறவைகளின் கூட்டமும், ஒருபால்—, மட அன்னம்-இளமையான அன்னப்பறவைகளும், ஒருபால்—, புனல் அர மங்கையர்-நீரில்வாழும் தேவமகளிரும், ஒருபால்—, இருபால்உம் தவழ் ஒளி-இரண்டுபக்கங்களிலும் பரவிச்செல்கிற ஒளியையுடைய, நந்து-சங்குகள், உறை-தங்கப்பெற்ற, புளினம் - மணல்மேடுகளும், (உண்டு); (எ-று.)

வினைமுற்று, வருவிக்கப்பட்டது. சக்கரவாகப்பறவைகள் பகலில் ஆணும் பெண்ணுங் கூடிக் குலாவுந் தன்மையனவாதலால், 'உளம்மகிழ் நேமிகள்' எனப்பட்டன. நேமி-வடசொல். புனல் அர மங்கையர்-நீரரமகளிர் எனப்படுவர். சொற்பொருட்பின்வருநிலையணி.

54.—இரண்டுகவிகள்-குளகம்: கண்ணன் தேர்க்குதிரைகளை நீர்பருகுவித்தலைக் கூறும்.

தலமாமகளுந்தித்தடநிகரானதடங்கண்
டுலமாறுகொளிருதோள்வலியுடைவள்ளலுரைப்பக்
குலமாமணியனையான்விரைதேர்நின்றெதிர்குதியா
வலமானதுரங்கங்களைவள்வார்விசிநெகிழா.

(இ - ள்.) தலம் ஆம் மகள்-பூமியாகிய பெண்ணினது, உந்தி தடம் நிகர் ஆன-நாபியினிடத்துக்குஒப்பான, தடம்-அக்குளத்தை,

கண்டு-பார்த்து, உலம் மாறு கொள் இரு தோள் வலி உடை வள்ளல்-திரண்டகல் தூணோடு (தமக்கு ஒப்பாகா தென்று) பகைமை கொள்கிற இரண்டுதோள்களின் வலிமையையுடைய வரையாதருளுந் தன்மையுடையவனான அருச்சுனன், உரைப்ப - சொல்ல,— மா குலம் மணி அனையான்-பெரிய சிறந்த சாதி நீலரத்தினம் போன்றவனான கண்ணன், விரை தேர் நின்று எதிர் குதியா-வேகமாகச்செல்லு மியல்பினதான (தனது) தேரினின்று முன்னே குதித்து, வலம் ஆன துரங்கங்களை - வலிமையுடையனவான குதிரைகளை, வள் வார் விசி நெகிழா-தோற்கயிற்றாலாகிய கட்டுக்களை யவிழவிட்டு,—(எ - று.)—"வாரிபருக்கி" என அடுத்த கவியோடு தொடரும்.

உரைப்ப-இங்ஙனம் தனது அம்பின்திறத்தால் நீர்நிலையை யுண்டாக்கியவுடனே அருச்சுனன் கண்ணனைநோக்கி 'இனித் தேர்க்குதிரைகட்கு நீரூட்டி இளைப்பாற்றலாம்' என்று சொல்ல என்க. உலகத்தில் உபமானமாய்ப் பிரசித்தமாக வழங்குகிற குளத்தை உபமேயமாகவும், உபமேயமாய்ப் பிரசித்தமாகவழங்குகிற நாபியை உபமானமாகவும் மாற்றிக்கூறினது, **எதிர்நிலையணி.** திரண்டுருண்டு பருத்து நீண்டு நெய்ப்புடைய வடிவிலும் வலிமையிலுங் கற்றூணினும் மேம்பட்ட தோள் என்க. (*451*)

55. **குவளைப்பரிமளமேவருகுளிர்வாரிபருக்கிப்**
பவளத்துவர்வாயானிருபாதங்கைவிளக்கித்
தவளக்கிரியொருநாலெனமேன்மேலொளிர்தருபே
ரிவுளிக்குமிளைப்பாறவிளைப்பாறினனிப்பால்.

(இ - ள்.) குவளை-நீலோற்பலமலரினது, பரிமளம்-சுகந்தம், மேவரு-பொருந்திய, குளிர் வாரி-குளிர்ந்த (அக்குளத்தின்) நீரை, பருக்கி-(குதிரைகளைக்) குடிப்பித்து,—பவளம் துவர் வாயான் - பவழம்போலச் சிவந்த வாயையுடைய அக்கண்ணபிரான்தானும், இரு பாதம் கை விளக்கி-(தனது) இரண்டு திருவடிகளையும் திருக்கைகளையும் அலம்பிக்கொண்டு,— தவளம் கிரி ஒரு நால் எனமேல் மேல் ஒளிர் தரு-வெண்ணிறமான நான்கு (வெள்ளி) மலைகள் போல மிகுதியாக விளங்குதல்பொருந்திய, பேர் இவுளிக்குஉம்-பெரிய (நான்கு) குதிரைகட்கும், இளைப்பு ஆற-இளைப்புத் தணிய, இப்பால்-இப்பக்கத்தில், இளைப்பு ஆறினன்—; (எ - று.)

கண்ணன் குதிரைகளை நீர்குடிப்பித்துத் தானுங் கைகால்களைக் கழுவிக்கொண்டு அக்குதிரைகளினிளைப்பைப் தீர்த்துத் தானும் இளைப்பாறின னென்பதாம். சேனைகள் கைகலந்து போர் செய்யுமிடத்திற் பாண்டவர்பக்கத்தில் நிகழ்ந்த செய்கைகளை இதுவரையிற் கூறி, இனித் துரியோதனாதியர் பக்கத்தில் நடந்த செய்தியைக் கூறுவாராய், இப்பாட்டினிறுதியில் 'இப்பால்' என்றும், அடுத்த பாட்டின் முதலில் 'அப்பால்' என்றுங் கூறுகின்றார். பி-ம்: ஒளிதரு. போர். இவுளிக்குலம். (*452*)

56.— தோற்ற வீரர்கள் துரியோதனனிடம் முறையிடுதல்.

அப்பாலிவனுடனேபொருதனிலைத்தெதிர்சருகோ
டொப்பாயுளம்வெருவெய்தியுடைந்தோடினவீரர்
தப்பாரொருவருமின்றடுசமரந்தனில்விசயன்
கைப்பாய்கணைபொரநேர்ந்தவர்கழன்மன்னவவென்றார்.

(இ - ள்.) இவனுடனே பொருது-இந்த அருச்சுனனோடுபோர் செய்து, அனிலத்து எதிர் சருகோடு ஒப்பு ஆய்-காற்றின்முன் நேர்ந்த சருகோடு சமமாய் [காற்றிலகப்பட்ட சருகுபோல], உளம் வெருவு எய்தி உடைந்து ஓடிய-மனத்தில் அச்சமடைந்து உறுதி நிலைகெட்டுப் புறங்கொடுத்தோடின, வீரர்-வீரர்கள்,—அப்பால்-எதிர்ப்பக்கத்தில்,—(துரியோதனனைச் சேர்ந்து அவனை நோக்கி), 'கழல் மன்னவ-வீரக்கழலையணிந்த அரசனே! இன்று—, அடு சமரந்தனில்-(பகைவரை) அழிக்குந்தன்மையதான போரில், விசயன் கை பாய் கணை பொர-அருச்சுனனது கையினின்று விரைந்து வெளிவருகிற அம்புகள் தாக்குதலால், நேர்ந்தவர் ஒருவர்உம் தப்பார்-(அவனை) எதிர்த்தவருள் ஒருவரும் உயிர்தப்பிப்பிழையார்' என்றார்-என்றுசொன்னார்கள்; (எ-று.)—பி-ம்: பொர நொந்தவர் என்றும் படிக்கலாம். (453)

57.—துரியோதனன் துரோணனை யடுத்துக் குறைகூறுதல்.

துரியோதனனவர்சொல்லியசொற்றன்செவிசுடவே
யரியோடெதிர்பொரவஞ்சியவடல்வாரணமனையா
னெரியோடியபுரியென்னவிளைத்தாரணவேள்விப்
பெரியோனடியெய்திச்சிறுமையினாலிவைபேசும்.

(இ - ள்.) அவர்-அந்தவீரர்கள், சொல்லிய - அவ்வாறு சொன்ன, சொல்-பேச்சு, தன் செவி சுடஏ - தனது காதுகளை வருத்துதலாலே,—அரியோடு எதிர் பொர அஞ்சிய அடல் வாரணம் அனையான்-சிங்கத்தோடு எதிர்நின்று போர்செய்தற்குப் பயந்த வலிமையையுடைய யானையைப் போன்றவனாகிய துரியோதனன்—, எரி ஓடிய புரி என்ன இளைத்து-தீமிகுதியாகப்பற்றிய நகரம்போலச் சோர்ந்து,—ஆரணம் வேள்வி பெரியோன் அடி எய்தி-வேதவிதிப்படி யாகங்கள் செய்துள்ள பெரியோனான துரோணாசார்யனது பாதங்களைச் சேர்ந்து,—சிறுமையினால்-(தன் சேனையினது) எளிமைகாரணமாக, இவை பேசும்-இவ்வார்த்தைகளைச் சொல்வான்; (எ - று.)—அவற்றை அடுத்த மூன்றுகவிகளிற் காண்க.

மிகத்தீப்பற்றிய நகரம், மிகப்பொலிவழிதற்கு உவமம். எரியோடியபுரி-அநுமானால் எங்கும் தீப்பற்றவைக்கப்பட்ட இலங்கையென்றும், சிவபெருமானலெரிக்கப்பட்ட திரிபுரமென்றுமாம்; அன்றி, நெருப்புப்பற்றிய வைக்கோற்புரிபோல வெனின், உள்ளீடில்லாமையில் உவமமென்க. (454)

58.—இதுமுதல் மூன்றுகவிகள்-ஒருதொடர்; துரியோதனன் துரோணனைநோக்கிக் கூறியவார்த்தை.

அதிரேகவிறற்பற்குனனம்போடெதிரம்பிட்
டெதிரேறியவயமன்னரிலெம்மன்னர்பிழைத்தார்
கதிரேகிடுமுன்றுச்சளைகணவன்றலைகடிதிற்
பிதிரேறுவதல்லாததுபிழைப்பிப்பவரிலரால்.

(இ - ள்.) அதிரேகம்-மிகமேம்பட்ட, விறல்-பலபராக்கிரமங்களையுடைய, பற்குனன்-அருச்சுனனது, அம்போடு-அம்புகளுடன் மாறாக, எதிர் அம்பு இட்டு-எதிரம்புதொடுத்துக்கொண்டு, எதிர் ஏறிய-அவனெதிரிலே எதிர்த்துச்சென்ற, வய மன்னரில்-வலிமையுடைய அரசர்களில், எ மன்னர் பிழைத்தார்-எந்த அரசர்அழியாமற் பிழைத்தார்? (இங்ஙனம் ஆகுதலால்), கதிர் ஏகிடும் முன்-சூரியன் மறைந்துசெல்வதற்கு [அஸ்தமித்தற்கு] முன்னே, துச்சளை கணவன் தலை-(எமது தங்கையான) துச்சளையின் கொழுநனாகிய சயத்திரதனது தலை, கடிதின்-விரைவிலே, பிதிர் ஏறுவது அல்லது-(அருச்சுனன்செய்த சபதத்தின்படி அவனாற்) சிதறிப் பொடிபடுவதல்லாமல், அது பிழைப்பிப்பவர் இலர்-அங்ஙனமாகுதலைத் தவறச்செய்ய வல்லவர் எவருமில்லை; (எ - று.)

எமது உடன்பிறந்தவளான துச்சளை மங்கலநாணிழவாதபடி அவள் கணவனான சயத்திரதனை உயிர்காத்தல் அதியவசியமென்பது தோன்ற, 'துச்சளைகணவன்' என்றும், இதுவரையிலும் அருச்சுனனையெதிர்த்தவர்களில் யாரும் அழியாதுபிழைத்திலராதலால், இனியும் அவ்வாறேயாமென்பது தோன்ற 'பிழைப்பிப்பவரிலர்' என்றுங் கூறினான். (455)

59. காணாதவிடத்தாண்மையுறக்கூறுவர்கண்டா
லேணாடமர்முனைதன்னிலிமைப்போதெதிர்நில்லார்
நாணாதுமுன்வென்னிட்டிடுநஞ்சேனையடங்கச்
சேணாடுறுமின்றேயொருசெயல்கண்டிலமையா.

(இ - ள்.) (நம்சேனைவீரர்), காணாதஇடத்து-(அருச்சுனனைக்) காணாத இடத்திலே, ஆண்மை-(அவனைத் தாம் வெல்வதாகப்) பராக்கிரமவார்த்தைகளை, உற கூறுவர்-மிகுதியாகச் சொல்வார்கள்; கண்டால்-(அவனைஎதிர்வரப்) பார்த்தாலோ, ஏண் ஆடு அமர் முனை தன்னில்-வலிமையாற் செய்யும் போர்க்கு உரிய களத்தில், இமை போது எதிர் நில்லார்-ஒருமாத்திரைப் பொழுதேனும் எதிர்த்துநிற்கமாட்டார்கள்; (இங்ஙனம் ஆகுதலால்), நம்சேனை அடங்க-நமது சேனைமுழுவதும், நாணாது-வெட்கமில்லாமல், முன்-(அவனது) முன்னிலையில், வென் இட்டிடும்-முதுகுகொடுத்தோடுகின்றன; (அங்ஙனம் ஓடவே), இன்றுஏ சேண் நாடு உறும்-(சயத்திரதன்) இன்றைக்கே (அருச்சுனனாற் கொல்லப்பட்டுச்) சுவர்க்கலோகஞ் சேர்வான்; ஐயா-ஸ்வாமீ! ஒரு செயல் கண்டிலம்-(இதற்குப்பரிகாரமாக) ஒரு செய்கையையுங் கண்டோமில்லை; (எ - று.)

இப்பாட்டின் முன்னிரண்டடிகள் "சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ், சொல்லியவண்ணஞ் செயல்" என்றாற்போலக் கொள்க. 'சேனையீறும்' என்பதற்கு, 'சயத்திரதன்' என்ற எழுவாய் வருவிக்கப்பட்டது. (456)

60. குனிநாணுடைவரிவிற்படைவிசயற்கெதிர்குறுகித்
தனிநானவனுயிர்கொள்ளுதறவிர்கிற்குதலல்லான்
முனிநாயகவேறோர்விரகில்லைத்திருமுன்னே
யினிநாடியடும்போர்விரைவொடுகாணுதியென்றான்.

(இ - ள்,) முனி நாயக-முனிவர்கட்குத் தலைவனே! குனி-வளைக்கப்பட்டதும், நாண் உடை-நாணியை யுடையதுமாகிய, வரி வில் படை-கட்டமைந்த (காண்டீவ) வில்லாகிய ஆயுதத்தை யுடைய, விசயற்கு எதிர்-அருச்சுனனுக்கு எதிரிலே, நான்—, தனி-தனியே, குறுகி-சமீபித்து (ப் போர்செய்து), அவன் உயிர் கொள்ளுதல்-அவனது உயிரைக் கவர்தல், (அல்லது), தவிர்கிற்குதல்-(அவனால்) இறந்தொழிதல், அல்லால்-என்னும் இவையே யல்லாமல், வேறு ஓர் விரகு இல்லை-(இப்பொழுது செய்யத்தக்கது) வேறொருபாய மில்லை; (ஆகையால்), திரு முன்னே - உனது எதிரிலே, இனி-இனிமேல், நாடி-(நான்) முன்சென்று, அடும் - பகையழிக்கத் தொடங்கிச் செய்யப்போகிற, போர்-போரை, விரைவொடு காணுதி-விரைவிற் பார்ப்பாய், என்றான்—; (எ - று.)

சிறந்தவில்வீரனான அருச்சுனனை எதிர்தடுத்துச் சைந்தவனைப் பாதுகாப்பவர் எவருமில்லை யாதலால், இனிநானே தனியே அவன்முன் சென்று ஒருகைபார்த்துவிடுகிறேனென்கிறான் துரியோதனன். இதனால், சேனைத் தலைவனாகிய நீ அரசனாகிய நானே சென்று பொரும்படி விட்டுப் பகையழித்தலில் உபேக்ஷைசெய்துள்ளா யென்று நிஷ்டூரமாகக் கூறியவாறும். (457)

61.—இதுமுதல் ஐந்துகவிகள்-ஒருதொடர்: துரோணன் பலகூறிக் கவசமளித்ததைத் தெரிவிக்கும்.

முனியுந்தரணிபனோடுசின்மொழிநன்கினுரைக்குந்
துனிகொண்டுளமழியாதொழிதுணிவுற்றனைமுதலே
யினியஞ்சியிளைத்தெண்ணிடுமெண்ணந்தகவன்றால்
அனிகங்களழிந்தாலுநின்னுண்மைக்கழிவுண்டோ.

(இ - ள்.) (இங்ஙனந்துரியோதனன்சொன்னவற்றைக் கேட்டு), முனிஉம் - துரோணாசாரியனும், தரணிபனோடு - (துரியோதன) ராசனுடனே, சில்மொழி -சிலவார்த்தைகளை, நன்கின் உரைக்கும்-நன்றாகச் சொல்வான்:—(நீ), முதலே - முன்னமே, துனி கொண்டு உளம் அழியாது - (பகைவர்க்கு) அச்சங்கொண்டு மனஞ்சோர்தலில்லாமல், ஒழி துணிவு உற்றனை - (அதற்கு) மாறான துணிவையடைந்தாய்; இனி-இப்பொழுது, அஞ்சி - (பகைக்குப்) பயந்து, இளைத்து -மெலிந்து, எண்ணிடும்-சிந்திக்கிற, எண்ணம்-சிந்தனை, தகவு அன்று- தகுதியுடையதன்று; ஆல் - ஆதலால், அனிகங்கள்

அழிந்தால்உம் -(உனது) சேனைகள் அழிவடைந்தாலும், நின் ஆண்மைக்கு அழிவு உண்டுஓ-உனது பராக்கிரமத்துக்குஅழிவுஉண்டாகலாமோ? (எ-று.)— இப்பாட்டில், இரண்டாம்அடி முதல் 65 - ஆம் பாட்டின் மூன்றும் அடி வரையில் துரோணன்வார்த்தை.

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின், எண்ணுவ மென்பது இழுக்கு" என்றபடி நீ முன்னமே பகைவரது வல்லமையைக் கருதிச் சினந்தணிந்து சமாதானப்படாமல், உயிர்போவதானாலும் இராச்சியங்கொடுப்பதில்லையென்று கடுந்துணிபு கொண்டாய்; அங்ஙனந்துணிந்து போர்தொடங்கிவிட்டபின்பு அஞ்சுதலிலும் சோர்தலிலும் சிந்தித்தலிலும் பயனென்னை? சேனையழிந்தாலும் உனது தைரியங் குறையலாகாது என்றனன். (458)

62. உரனால்வருதேரொன்றினிலுற்றோரிருவரையு
நரநாரணரிவரென்பர்கண்ஞானத்தினுயர்ந்தோர்
அரனார்திருவருளான்முனையடல்வாளிகள்பலவும்
வரனாலுயர்மறையும்பிறர்மற்றார்நனிபெற்றார்.

(இ - ள்.) உரனால் வரு-வலிமையோடு வருகிற, தேர் ஒன்றினில் - ஒரு தேரிலே, உற்றோர் இருவரைஉம் - பொருந்தியவரான (அருச்சுனன் கிருஷ்ணன் என்ற) இருவரையும், ஞானத்தின் உயர்ந்தோர் - தத்துவஞானத்தாற்சிறந்த பெரியோர்கள், நர நாரணர் இவர் என்பர்கள்-'நரனும் நாராயணனுமே இவர்கள்' என்று சொல்வார்கள்; (அன்றியும் அவ்விருவர்போல), அரனார் திரு அருளால்-சிவபிரானது சிறந்த கருணையினால், முனை அடல் வாளிகள் பலஉம் - போரிற் பகையழித்தற்குஉரிய அம்புகள் பலவற்றையும், வரனால் உயர் மறைஉம் - வரமாகச்சிறந்த மந்திரங்களையும், பிறர் ஆர் நனி பெற்றார்-வேறு எவர் மிகுதியாகப் பெற்றவர்? [எவருமில்லை யென்றபடி]; (எ-று.)

வரனாலுயர்மறை-மிகவிரும்பித் தவம்முதலிய பெருமுயற்சி செய்து பெறப்படும் மந்திரம். 'மற்றார்நனிபெற்றார்'--பிராசம். மற்று -அசை; வினைமாற்றுமாம். பி-ம்: ஞாலத்தில். (459)

63. தவரோடவனின்றால்விதிதானுந்தரமல்லன்
எவரோமலையோடும்பொருதிருதோள்வலிபெற்றார்
உவரோதநிறத்தோனவன்விரைதேர்தனியூர்வா
னவரோடினியமர்வெல்லுதலாராயினுமரிதால்.

(இ - ள்.) அவன்-அந்த அருச்சுனன், தவரோடு நின்றால்-(காண்டீவ) வில்லுடன் எதிர்நின்றால், விதி தான்உம் தரம் அல்லன்-படைத்தற்கடவுளான பிரமனும் (அவனையெதிர்க்கத்) தகுதியுடையானல்லன்; மலையோடுஉம் பொருது - மலையுடனே தாக்கிப் போர்செய்து, இரு தோள் வலி பெற்றார் - தமது இரண்டுதோள்களின்வலிமையை அழியாமற்பெற்றவர்கள், எவர்ஓ - யார்தாமோ? [எவருமில்லை யென்றபடி]; (அதுபோலவே),— அவன் விரை தேர் தனி ஊர்வான் - அவ்வருச்சுனனது விரைந்துசெல்லுந் தேரை

ஒப்பில்லாதபடி செலுத்துபவன்,—உவர் ஓதம் நிறத்தோன் - உப்புச்சுவையையுடைய கருங்கடல் போலுந் திருநிறமுடையனான திருமால்; (ஆதலால்), இனி - இப்பொழுது, அவரோடு அமர் வெல்லுதல் - அவ்விருவருடன் போரிற் சயித்தல், ஆர் ஆயின் உம் அரிது - யாவர்க்காயினும் அருமையானதே; (எ - று.) பி-ம்: அவனுயர்தேர்நனி. (460)

64. அதிகம்பகைதமரோடுறலாகாதெனவரசர்க்
கெதிரன்றவையிடையேவசையேதேதுபுகன்றாய்
விதுரன்றனதுளநொந்தடல்வில்லுந்துணிசெய்தான்
மதியின்றிறனறிவோர்மொழிவழிவந்திலைமன்னே.

(இ - ள்.) 'தமரோடு - நெருங்கிய உறவினருடன், அதிகம் பகை உறல் ஆகாது - மிகுதியாகப் பகைமைகொள்ளுத லாகாது,' என - என்று (விதுரன் நீதி) போதிக்க, அன்று - அச்சமயத்தில், அவையிடையே - சபைநடுவிலே, அரசர்க்கு எதிர் - பல் அரசர்கள் முன்னிலையில், (அவனைக்குறித்து), ஏது ஏது வசை புகன்றாய் - என்ன என்ன நிந்தைமொழி கூறினாய்? [மிகப்பழித்தா யென்றபடி]: (அதனால்), விதுரன் - அவ்விதுரன், தனது உளம் நொந்து - தன்னுடைய மனம் வருந்தி, அடல் வில்உம் துணி செய்தான் - வலிமையையுடைய(தன்) வில்லையுந் துணித்துப்போகட்டான்; மதியின் திறன் அறிவோர் மொழிவழி வந்திலை - நல்லறிவின்வகைகளை யறிந்த பெரியோர் சொன்ன நல்வழியிலே (நீ) நடந்தாயில்லை; (எ - று.)—மன், ஓ - ஈற்றசை. பி-ம்: மன்னு.

கண்ணன் பாண்டவர்க்குத் தூதாய்வந்தமைபற்றி அவனையும், அவனுக்குத் தன் வீட்டில் இடங்கொடுத்து விருந்துசெய்து உபசரித்தமைபற்றியும் பாண்டவர்க்கு இராச்சியங்கொடுக்கும்படி பலவாறு நீதிபோதித்து வற்புறுத்தியமைபற்றியும் விதுரனையும் துரியோதனன் பலவாறு இராசசபையில் தூஷிக்க, விதுரன் கடுங்கோபங்கொண்டு 'பாதகனாகிய உன்பொருட்டுப் போர்செய்யேன்; இத்தனைநாளாய் உன்சோற்றையுண்டமைபற்றி, உனக்கு எதிராகப் பாண்டவரோடு சேர்ந்தும் பொரேன்' என்று சொல்லித் தனது வில்லை இரண்டு துண்டாக முறித்துப் போகட்டுவிட்டானென்க. விதுரன்-யமதருமராசனது அம்சமென்றும், பரமபாகவதர்களிலொருவனென்றும் நூல்கள் கூறும். இவன், அருச்சுனனையும் வீமனையும் ஒருங்கேயெதிர்க்கும் வல்லமையுடையானென்று மதிக்கப்படுவன். பாரதயுத்தம் நடந்த சமயத்தில் இவன் பலராமனுடன் தீர்த்தயாத்திரை சென்றிட்டனனென அறிக. எட்டாம்போர் நாளில் வீடுமனும் இக்கருத்துப்படக்கூறியமை கருதத்தக்கது. 'மதியின்திறனறிவோர் மொழிவழிவந்திலை' என்றது, பீஷ்மன் துரோணன் கிருபன் உலூகன் கண்ணன் முதலான நுண்ணறிவுடையோர் பலர் கூறிய நல்லறிவைச் சிறிதும் கைப்பற்றி நடந்திலனாதலால். (461)

65. மன்னுகவ மதியாவிறல் வயவன்றனை விசயன்
றன்னுலொரு பகலேயுயிர் தபுவித்திட லாமோ

மின்னார்வடி வேலாயிவை விதியின் செயலன்றோ
வென்னாவொரு கவசந்தனை யிவன்மெய்யினி லிட்டான்.

(இ - ள்.) (ஆயினும்), மன் ஆகவம் மதியா - பெரிய போரை ஒருபொருளாகக் கருதாத, விறல் - பராக்கிரமத்தையுடைய, வயவன் தனை - வீரனான சயத்திரதனை, விசயன் தன்னால் - அருச்சுனனால், ஒரு பகல்ஏ - இந்த ஒரு பகற்பொழுதினுள்ளே, உயிர் தபுவித்திடல் - உயிரழித்திடுதல், ஆம்ஓ - முடியுமோ? மின் ஆர் வடி வேலாய் - மின்னல்போன்ற ஒளிபொருந்தின கூர்மையான வேலாயுதத்தையுடையவனே! இவை விதியின் செயல் அன்றோ- (அருச்சுனனாற் சயத்திரதன் இன்றைப்பகலே கொல்லப்படுதலும் படாமையு மாகிய) இவை ஊழ்வினைப்பயனல்லவோ? என்னா-என்று சொல்லி, (துரோணன்), ஒரு கவசந்தனை - ஒருகவசத்தை, இவன் மெய்யினில் இட்டான் - இத்துரியோதனனுடம்பிலே பூட்டினான்;

'சயத்திரதனை அருச்சுனன் கொல்லலாகாதபடி பாதுகாக்க உறுதிகொண்டுள்ளோம்: ஆயினும், தெய்வச்செயல் வேறாயிருப்பின் யாம் என்ன செய்யலாம்?' என்பார், 'இவைவிதியின்செயலன்றோ' என்றானென்க. இக்கருத்துப்படவே முந்தினநாளிரவிலும் கூறியமை காண்க. பி - ம்: தவிர்வித்திடலாமோ. இனிவிதியின்செயலன்றோ. இவன்மேனியிலிட்டான். (462)

வேறு.

66.—துரோணன் துரியோதனனுக்கு அக்கவசத்தின் சிறப்பைக் கூறுதல்.

பங்க யாசனன் வாசவற் களித்தது வாசவன் பயில்போரி
லங்க ராவினுக் குதவிய தங்கரா வெனக்கரு ளியதிந்தத்
தொங்கன் மாமணிக் கவசமெவ் வீரருந் தொழத்தகு கழற்காலாய்
புங்கவாளியிற் படைகளி லொன்றினும் பொன்றிடா திதுவென்றான்.

(இ - ள்.) 'எ வீரர்உம் - எல்லாவீரர்களும், தொழ தகு - வணங்கத்தக்க, கழல் காலாய் - வீரக்கழலையணிந்த பாதத்தையுடையவனே! தொங்கல் - (வெற்றி) மாலைதரித்தற்குஉரியதும், மா மணி - சிறந்தஇரத்தினங்கள் பதித்ததுமான,இந்த கவசம்—, பங்கய ஆசனன் - (திருமாலின் நாபித்) தாமரைமலரை இருப்பிடமாகவுடையவனான பிரமன், வாசவற்கு - தேவேந்திரனுக்கு, அளித்தது - முன்பு கொடுத்தருளியது: (பின்பு), வாசவன் - அவ்விந்திரன், பயில் போரில் - இடைவிடாதுசெய்யும் போரின் முடிவில், அங்கராவினுக்கு உதவியது - அங்கிரசுக்குக் கொடுத்தது: (அதன்பின்பு), அங்கரா - அந்த அங்கிரசு, எனக்கு அருளியது - எனக்குக் கொடுத்தது: இது - இக்கவசம், புங்கம் வாளியில் - கூரிய அம்புகளிலும், படைகளில்-மற்றைஆயுதங்களிலும், ஒன்றின்உம் - ஒன்றினாலும், பொன்றிடாது - அழிந்திடாது,' என்றான் - என்று (அக்கவசத்தின் வரன்முறையையும் அழியா வலிமைச்சிறப்பையும் துரோணன் துரியோதனனுக்குக்) கூறினான்; (எ - று.)

முன்பு இந்திரன் முதலிய தேவர்கட்கும் விருத்திராசுரனுக்கும் நடந்த பெரும்போரில் அசுரனாற் சிதைவு அடைந்ததேவர்கள்

திருமாலின் கட்டளைப்படி பிரமனுடன் மந்தரமலையையடைந்து சிவபிரானைச் சரணம்புக, அப்பெருமான் தனது மேனியினின்று தோன்றிய தொரு சிறந்த கவசத்தை மந்திரபலத்துடனே அளித்தருள, எந்த ஆயுதத்தாலும் அழிக்கப்படாத அதனைத் தரித்துத் தேவேந்திரன் விருத்திரனை யெதிர்த்துப் பொருது கொன்றனனென்றும், அதன்பின் இந்திரன் அக்கவசத்தை அங்கிரசுக்குக் கொடுக்க, அங்கிரசு தன் குமாரனை பிருகஸ்பதிக்குத் தர, பிருகஸ்பதி அக்கிவேச்யமுனிவனுக்கு அருள, அம்முனிவன் தன் மாணாக்கனை துரோணனுக்கு ஈந்தருளின னென்றும், முதனூலில் விவரங் கூறப்பட்டுள்ளது. அங்கரா = அங்கிரா:. அங்கிரஸ் என்பவன் - தேவகுருவான பிருகஸ்பதியின் தந்தை.

இதுமுதற் பத்துக்கவிகள் - இச்சருக்கத்தின் 34-ஆம் கவி போன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள். (463)

67.—துரியோதனனும் மற்றும்பலரும் அருச்சுனனுடன் போர்க்குஎழுதல்.

இட்டபொற்பெருங்கவசமோடெழுந்தனனிராசராசனுமுள்ள
பட்டவர்த்தனர்மகுடவர்த்தனர்களும்பலபடைஞருங்கூடி
யெட்டிபத்தின்வெஞ்செவிகளுஞ்செவிடுறப்பல்லியமெழுந்தார்ப்ப
முட்டவிட்டனர்தனஞ்சயனின்றமாமுனையில்வேன்முனையொப்பார்.

(இ-ள்.) இட்ட - (துரோணன்) பூட்டின, பொன் பெருங் கவசமோடு - பொன்மயமான பெரிய கவசத்துடனே, இராசராசன் உம் - அரசர்கட்குஅரசனை துரியோதனமகாராசனும், எழுந்தனன் - (போர்க்குப்) புறப்பட்டான்; வேல் முனை ஒப்பார் - வேலாயுதத்தின் நுனிபோலக் கொடியவர்களாகிய, உள்ள - (அவன்சேனையில்) உள்ள, பட்டவர்த்தனர் - பட்டவர்த்தனர்களும், மகுடவர்த்தனர்களும்—, பல படைஞர்உம் - மற்றும் பல சேனைவீரர்களும், கூடி - ஒருங்குசேர்ந்து,—எட்டு இபத்தின் வெம் செவிகள்உம் - எட்டுத்திக்குயானைகளின் கொடிய காதுகளும், செவிடு உற -(மிக்கஒலியைக் கேட்டலாற்) செவிடாம்படி, பல் இயம் - பலவகைவாத்தியங்கள், எழுந்து ஆர்ப்ப - மிக்கு ஒலிக்க,—தனஞ்சயன் நின்ற மா முனையில் - அருச்சுனன் நின்றுள்ள பெரிய போர்க்களத்தினிடத்திலே, முட்ட விட்டனர் - சென்றுநெருங்கும்படி (தம் தம் வாகனங்களைச்) செலுத்தினார்கள்;

பலஅரசர்களை வென்று தலைமைபூண்டுநின்றதனால், 'ராஜராஜன்' என்று துரியோதனனுக்குஒருபெயர். பலபடைஞர்-மண்டலீகர், மந்திரிகள், தந்திரிகள, சாமந்தர் முதலிய வகுப்பினர். திக்குயானைகளின் செவிகளும் மிக்கஒலியதிர்ச்சியாற் புலனழிகின்றன எனவே, நிலவுலகத்து மற்றையபிராணிகள் செவிடுபடுதல் கூறவேண்டாதாயிற்று; இது, உயர்வுநவிற்சி. (464)

68.—இருகவிகள் - ஒருதொடர்: கௌரவசேனை அருச்சுனனுண்டாக்கிய தடாகத்தில் இளைப்பாறுதலைக் கூறும்.

சென்றசென்றவெஞ்சேனைகளிளைப்பறத்தெய்விகத்தினில்வந்த
மன்றலம்பெரும்பொய்கைநீர்பருகியப்பொய்கையின்வளநோக்கி

யென்றுமென்றுநாநுகர்புனலன்றுநல்லின்னமுதிதுவென்பார்
தென்றலந்தடஞ்சோலையிற்கரைதொறுஞ்சேர்ந்துதம்விடாய்தீர்வார்.

(இ - ள்.) சென்ற சென்ற-(இங்ஙனம்) மிகுதியாகப் புறப்பட்டுப்போன, வெம் சேனைகள்-கொடிய (துரியோதனனது) சேனையிலுள்ளார், இளைப்பு அற-(தமது) இளைப்புத்தணியும்படி, தெய்விகத்தினில் வந்த மன்றல் அம் பெரும் பொய்கை நீர் பருகி-(அருச்சுனன் எய்த அஸ்திரத்தினது) தெய்வத்தன்மையா லுண்டான பரிமளமுள்ள அழகிய பெரிய தடாகத்தின் நீரைக் குடித்து, அ பொய்கையின் வளம் நோக்கி-அக்குளத்தினது வளப்பத்தைப் பார்த்து, 'இது-இக்குளத்தின் நீர், என்றுஉம் என்றுஉம் நாம் நுகர் புனல் அன்று-இத்தனைகாலமாக நாள்தோறும் நாம் குடித்து வந்த நீர்போல்வதன்று; நல்இன் அமுது-சிறந்த இனிய அமிருதம் போல்வதாம்,' என்பார்-என்று வியந்து சொல்வார்கள்; (மற்றும்), கரை தொறுஉம்-(அத்தடாகத்தின்) கரைகளிலுள்ள, தென்றல் அம் தட சோலையில்-தென்றற்காற்று உலாவப் பெற்ற அழகிய பெரியசோலைகளில், சேர்ந்து-தங்கி, தம் விடாய் தீர்வார் - தங்கள் தாபந்தணியப்பெறுவார்கள்; (எ-று.)

'சேனைகள்' என்பது-சொல்லால் அஃறிணையாயினும், இங்கு உயர்திணைப்பொருளின்மேலதாதலால், 'என்பார்,' 'தீர்வார்' என்ற உயர்திணைப்பன்மைமுற்றுக்களைக் கொண்டது. (465)

69. மத்தவாரணங்கொண்டுசெந்தாமரைவனங்கலக்குறுவிப்பார்
தத்துபாய்பரிநறும்புனலருத்துவார்தாமுநீர்படிகிற்பார்
கைத்தலங்களிலளியினமெழுப்பிமென்காவிநாண்மலர்கொய்வார்
இத்தலந்தனிலிம்மலர்ப்பரிமளமில்லையென்றணிகிற்பார்.

(இ-ள்.) (மற்றும் அத்துரியோதனன்சேனையார்), மத்தம் வாரணம்கொண்டு-(தங்கள் தங்கள்) மதயானைகளால், செம் தாமரை வனம்-(அந்நீர்நிலையிலுள்ள) செந்தாமரைத் தொகுதியை, கலக்குறுவிப்பார்-கலக்குவிப்பார்கள்; தத்து பாய்பரி-தாவிவிரைந்துசெல்வனவானகுதிரைகட்கு, நறும்புனல்அருத்துவார் - சுகந்தமுள்ள அக்குளத்தினீரைக்குடிப்பிப்பார்கள்; தாமும் நீர்படிகிற்பார்-தாங்களும்அந்நீரில் மூழ்குவார்கள்; கைத்தலங்களில்-கைகளினல், அளி இனம் எழுப்பி-(மிகுதியாக மொய்த்துள்ள) வண்டின் கூட்டங்களை ஓட்டிவிட்டு, மெல் காவி நாள் மலர் கொய்வார்-மென்மையான நீலோற்பலத்தின் அன்றுமலர்ந்த பூக்களைப் பறிப்பார்கள்; 'இ மலர் பரிமளம்-இந்தப்பூக்களுக்குஉள்ள அவ்வளவு நறுமணம், இ தலந்தனில்-இவ்வுலகத்தில், இல்லை-(வேறு எதற்கும்)இல்லை,' என்று-என்று கொண்டாடி, அணிகிற்பார்-(அக்கருங்குவளைமலர்களைச்) சூட்டிக்கொள்வார்கள்; (எ - று.) (466)

70.—யாவரும் தன்னைச்சூழ்ந்ததை அருச்சுனன் காணுதல்.

இன்னவாறுதம்மசைவொழிந்தியாவருமிபரததுரகந்தோ
டன்னவாவியைவளைத்தனர்கடல்வளையாழிமால்வரையென்னத்

துன்னுமாமணித்தேரினின்றிழிந்துதன்சுவேதமாநீரூட்டு
மன்னுவார்கழன்மகபதிமதலையவ்வரூதினிக்கடல்கண்டான்.

(இ - ள்.) இன்ன ஆறு-இந்தப்படி, தம் அசைவு ஒழிந்து-தங்கள் இளைப்புத் தீர்ந்து, யாவர்உம்-துரியோதனசேனையாரெல்லாரும், இப ரத துரகத்தோடு-யானைதேர்குதிரைகளுடனே, கடல் வளை மால் ஆழி வரை என்ன-சமுத்திரத்தைச்சூழ்ந்துள்ளபெரிய சக்கரவாளமலை போல, அன்ன வாவியை வளைத்தனர் - அந்தக் குளத்தைச் சூழ்ந்துகொண்டார்கள்; துன்னும் மா மணி தேரினின்று-நிறைந்த சிறந்த இரத்தினங்கள் பதித்த (தனது) தேரிலிருந்து, இழிந்து-(அக்குளத்தில்) இறங்கி, தன் சுவேதம் மா நீர் ஊட்டும்-தனது வெள்ளைக்குதிரைகளை நீர்பருகுவிக்கிற, மன்னு வார் கழல் மகபதி மதலை-பெருமை பொருந்திய நீண்டவீரக்கழலையுடைய இந்திர குமாரனான அருச்சுனன், அ வரூதினி கடல் கண்டான்-அந்தச் சேனா சமுத்திரத்தைப் பார்த்தான்; (எ-று.)

'தன்சுவேதமாநீரூட்டும்' என்றது-ஏவுதற்கருத்தாவின் வினை தனது சாரதியான கண்ணனைக்கொண்டு தேர்க்குதிரைகட்கு நீரூட்டுகிற என்று கருத்துக்கொள்க. துரியோதனசேனையாரனைவரும் அக்குளத்தை விளைத்ததற்கு, கடல்வளை ஆழிமால்வரை உவமை. பி-ம்: இபதுரகதத்தோடும். (467)

71.—அருச்சுனன் தேரில் ஏறுமலே அவர்களுடன் போர்செய்யத்துணிதல்.

கண்டபோதுமுன்காண்டவமழித்தவன்கடவுள்வாவியினன்னீ
ருண்டவாசியைத்தேருடன்பிணித்துவில்லோரிமைப்பினில்வாங்கி
வண்டுழாய்மதுமாலையாய்வளைந்துமேல்வருவரூதினிதன்னை
யண்டரூர்புகவிடுத்தபின்றேரின்மேலாகுமாறருளென்றான்.

(இ - ள்.) கண்ட போது-(அந்தப்பகைவரது சேனைத்தொகுதியைப்) பார்த்தபொழுது,—முன் காண்டவம் அழித்தவன்-முன்பு காண்டவவனத்தை அழியச்செய்தவனான அருச்சுனன்,—(கண்ணனைநோக்கி),—'வன் துழாய் மது மாலையாய்-செழிப்பான திருத்துழாயினாலாகிய தேனையுடைய மாலையை யுடையவனே! கடவுள் வாவியின் நல் நீர்உண்ட வாசியை தேருடன் பிணித்து-தெய்வத்தன்மையுள்ள இந்தக்குளத்தின் நல்ல நீரைக் குடித்த குதிரைகளை (நீ) தேரிலே கட்டிவிட்டு,—வில் வாங்கி-(நான்) வில்லை வளைத்து, வளைந்து மேல் வரு வரூதினி தன்னை-சூழ்ந்து (நம்மேல்) நெருங்கிவருகிற இச்சேனையை, ஓர் இமைப்பினில்-ஒருமாத்திரைப் பொழுதினுள்ளே, அண்டர் ஊர் புக விடுத்த பின்-வீரசுவர்க்கஞ் சேரும்படி (கொன்று)செலுத்தியபின்பு, தேரின்மேல் ஆகும் ஆறு-தேரின் மேல் ஏறும்படி, அருள் - கருணைசெய்வாய்,' என்றான்-என்று சொன்னான்; (எ - று.)

அருச்சுனன் வரூதினி கண்டபொழுது, கீழ்நின்றவாறே பொருது அவற்றைத் தொலைத்துப் பின்பு தேரிலேற நினைத்துக் கண்ணனுக்கு அக்கருத்தைத் தெரிவித்து அநுமதிபெற்றானென்க. பி-ம்: கண்டபோது பின்கண்டிலனக்கடவுள்வாவியை.

72.—அருச்சுனன் அவ்வீரர் பலரை அழித்தல்.

**கன்றுசிந்தையன்கோபவெங்கனல்பொழிகண்ணினன்காலாளாய்
நின்றுதேரினுங்களிற்றினும்பரியினுநிரைநிரைதரங்கம்போற்
சென்றவீரரைத்தனித்தனிசரத்தினற்சிதையுடற்குன்றாகக்
கொன்றுகொன்றுசூழ்வரக்குவித்தனன்மணிக்குன்றுதானெனநின்றான்.**

(இ - ள்.) (என்றுசொல்லிப் பின்பு அருச்சுனன்), கன்று சிந்தையன் - கொதித்த மனமுடையவனும், கோபம் வெம் கனல் பொழி கண்ணினன் - வெவ்வியகோபாக்கினியைச் சொரிகிற கண்களையுடையவனுமாய், காலாள் ஆய் நின்று-(தேரிலேறாமலே) பதாதியாகக் கீழே நின்றுகொண்டு,—தேரின்உம்-தேர்களின்மேலும், களிற்றின்உம் - யானைகளின்மேலும், பரியின்உம் - குதிரைகளின் மேலும், நிரை நிரை - வரிசைவரிசையாக, தரங்கம் போல் - அலைகள்போல, சென்ற - (மேன்மேல்) வந்த, வீரரை - வீரர்களை, தனி தனி-தனியே தனியே, சரத்தினல் - (அவர்கள்மேலெய்த) அம்புகளினால், கொன்று கொன்று-மிகுதியாகக்கொன்று, சிதை உடல் குன்று ஆக - நொருங்கின (அவர்களுடைய) உடம்புகள் மலைகள் போலத் திரளும்படி, சூழ்வர குவித்தனன் - சுற்றிலும் குவித்து, மணி குன்று தான் என நின்றான் - நீலரத்தின மலையொன்றுபோலத் தான் (இடையிலே) நின்றிட்டான்; (எ - று.)

அலையுவமை - ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாய் அணியணியாக மேன்மேல் வருதற்கு. அருச்சுனனுக்கு நீலமலை நிறவுவமை. பி-ம்: சென்று சென்றடுவீரரைத் தனித்தனிசரத்தினற் சிரஞ்சிந்திக். (469)

73.—கிருபன் முதலியோர் அருச்சுனனோடு பொருதல்.

**தலைவனுமுனிகிருபனுங்கிருதனுந்துரகதத்தாமாவு
மலைவுறுமனத்தரசருஞ்சேனையுமுனைந்தணியணியாகச்
சிலைவலானெதிர்மிசைபடத்தேர்மிசைவிசையுறச்சிலைவாங்கி
வலையவாகுவின்வலியெலாங்காட்டினர்வரங்கொள்வாளிகள்வல்லார்.**

(இ - ள்.) (பின்பு), வரம் கொள் - மேன்மையைக்கொண்ட, வாளிகள் - அம்புகளைத் தொடுத்தலில், வல்லார் - வல்லவர்களாகிய, தலைவன் ஆம் முனி கிருபன்உம் - சிறந்த அந்தணனாகிய கிருபாசாரியனும், கிருதன்உம் - கிருதவர்மாவும், துரகதத்தாமா உம் - அசுவத்தாமனும், அலைவு உறு மனத்து அரசர்உம் - கலக்கமடையாத மனத்தையுடைய பல அரசர்களும், சேனைஉம் - அவர்கள்சேனைவீரர்களும், முனைந்து - ஊக்கங்கொண்டு, அணி அணி ஆக - வரிசை வரிசையாக, சிலைவலான் எதிர்-வில்லில்வல்லவனான அருச்சுனனுடைய எதிரிலே, தேர்மிசை - தேர்களின்மேல் (வந்து நின்று), மிசைபட -அவன்மேலே (அம்புகள்) படும்படி, விசைஉற-வேகமாக, சிலைவாங்கி - (தம்தம்) வில்லை வளைத்து, வலையம் வாகுவின் - வளையையணிந்த (தங்கள்) தோள்களின், வலி எலாம் - வலிமை முழுவதையும், காட்டினர்—; (எ - று.)

தங்களாலியன்றவளவும் கொடிய விற்போரைச்செய்தனரென்பதாம். வரங்கொள்வாளிகள் - (தேவர்களிடம்) வரமாகப்பெற்ற அஸ்திரங்களுமாம். (470)

74.—அந்தணபேரோடும் அருச்சுனனெருத்தன் பொருதல்.

கைதவன்குலக்கன்னிகேள்வனுமொருகணைக்கொருகணையாக
வெய்துவெங்கணையாவையும்விலக்கிமேலிரண்டுநாலெட்டம்பால்
வெய்தினேமியந்தேரொடுகொடிகளும்வில்லும்வாசியும்வீழக்
கொய்துகொய்துபல்பவுரிவந்தனன்விறற்குன்றவில்லியொடொப்பான்.

(இ - ள்.) (அப்பொழுது), விறல் குன்றம் வில்லியொடு ஒப்பான் - வலிமையையுடைய மேருமலையை வில்லாகவுடையவனான சிவபிரானோடு ஒப்பவனாகிய, கைதவன் குலம் கன்னி கேள்வன் உம் - பாண்டியனுடைய குலத்திலே பிறந்த (சித்திராங்கதை யென்ற) பெண்ணுக்குக்கணவனான அருச்சுனனும், ஒரு கணைக்கு ஒரு கணை ஆக எய்து - (அப்பகைவர்கள் தன்மேல் தொடுத்த) அம்பு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்றாக எதிரம்புதொடுத்து, வெம் கணை யாவை உம் விலக்கி - கொடிய அவர்களம்புகளையெல்லாம் (தன்மேற்படாதபடி) இடையிலே தடுத்திட்டு,—மேல் - பின்பு, இரண்டு நால் எட்டு அம்பால் - சிலசில அம்புகளினால், வெய்தின் - விரைவிலே, நேமி அம் தேரொடு-சக்கரவலிமையுள்ள அழகிய (அவர்களுடைய) தேர்களும், கொடிகள் உம்-தேர்த்துவசங்களும், வில் உம்-விற்களும், வாசி உம்-குதிரைகளும், வீழ-(துணிபட்டு) விழும்படி, கொய்து கொய்து - மிகுதியாகத்துணித்து, பல் பவுரி வந்தனன் - பலமுறை தான் சுழன்றுகொண்டு நின்றான்;

'இரண்டுநாலெட்டம்பு' என்ற தொடரைப் பண்புத்தொகையாகவும் உம்மைத்தொகையாகவும் கொண்டு விகற்பித்தால், அறுபத்துநாலென்றும் நாற்பத்தெட்டென்றும் முப்பத்துநாலென்றும் பதினாறென்றும் பதினாலென்றும் பலவாறு பொருள்படும். பி-ம்: வெய்தினெய்தவரவர்கொடிகளும். (471)

75.—பகைவரம்பு அருச்சுனன்மேலும், அருச்சுனனம்பு பகைவர் மேலும் வருதல்.

தேரி னின்றவர் பாரினின் றவன்மிசை விடுகணைத் திரண்மின்னுக்
காரி னின்றுபா தலமுற வுரகமேற் கனன்றுவீழ் வனபோன்ற
பாரி னின்றவன் றேரினின் றவர்மிசை விடுகணை பாதாலத்
தாரி னின்றுரு மையும்விழுங் குவமென வுரகமே றுவபோன்ற.

(இ - ள்.) தேரில் நின்றவர்-தேர்களில் நின்ற கிருபன் முதலியோர், பாரில் நின்றவன்மிசை - (தேரில் ஏறாமல்) தரையில்நின்ற அருச்சுனன் மேல், விடு - பிரயோகித்த, கணை திரள் - அம்புகளின்தொகுதிகள்,—காரினின்று-மேகங்களினின்று,பாதலம் உற - பாதாளலோகத்திலே பொருந்த, உரகம்மேல் - நாகங்களின்மேல், கனன்று வீழ்வன-கொதித்துக்கொண்டு விழுவனவாகிய,மின்னு-

மின்னல்களை [இடிகளை], போன்ற - ஒத்தன;—பாரில் நின்றவன்- தரையில் நின்றவனான அருச்சுனன், தேரில் நின்றவர் மிசை - தேர்களில் நின்றஅவ்வெதிரிகளின்மேல், விடு - பிரயோகித்த, கணை - அம்புகள்,—உருமைஉம் விழுங்குவம் என - இடியையும் விழுங்கி விடுவோமென்று, உரகம் - அந்நாகங்கள், பாதாலத்து ஊரினின்று - அந்தப்பாதாளலோகத்திலிருந்து, ஏறுவ-மேலேறு வனவற்றை, போன்ற-ஒத்தன; (எ - று.)

தேர்மீதுள்ள பகைவரால் எய்யப்பட்ட அம்புகள் காளமேகங் களினின்று மின்னல்கள் கீழுள்ளநாகசாதிமேல் உக்கிரமாக இடி வடிவமாய் விழுவனபோலக் கீழ்நின்ற அருச்சுனன்கணைகள் மேல் விழுந்திட, தேர்மேல்நின்ற அப்பகைவரது அம்புகளைத் தடுக்க அவர்கள்மீது உக்கிரமாய் விரைந்தெழுந்து மேற்சென்ற அருச் சுனனெய்த கொடியஅம்புகள் தம்மேல் விழும்இடிகளை விழுங்கி யழித்திடக்கருதி அந்நாகங்கள் பாதாளத்தினின்று மேலெழும்பிச் சென்றாற்போலுமென்றார்; **தற்குறிப்பேற்றவணி.** பி - ம்: உரகர். (472)

வேறு.

76.—பகைவரையழித்தபின், கண்ணன் சித்தஞ்செய்த தேரில் அருச்சுனன் ஏறுதல்.

சேணி லத்தின்மிசை நின்றமர்தொ டங்கினவர் தேர்க ளிற்றனத றிந்தனநெ டுந்துவச, நாணி யற்றனவொ டிந்தனத டஞ்சிலையு நாக முற்றவரொ ழிந்தனரி ரிந்தனர்க, ணீணி லத்தினிடை நின்றுசமர் வென்றவனு நேமி வச்ரமகு டம்புனை கொ டிஞ்சியுடை, யேணி லத்திவுளி முந்தமுனை யுந்திரத மேறி யிட்டனன்மு குந்தனுட னின்புறவே.

(இ - ள்.) சேண் நிலத்தின்மிசை நின்று-உயர்ந்த இடத்தின் மேல் [தேரின்மேல்] நின்று, அமர் தொடங்கினவர்-போர்தொடங் கின பகைவர்களுடைய, தேர்கள்—, இற்றன-முறிந்தன; நெடுந் துவசம்-நீண்ட கொடிகள், தறிந்தன-ஒடிந்தன; நாணி-வில்நாணி கள், அற்றன-அறுபட்டன; தட சிலைஉம்-பெரியவிற்களும், ஒடிந் தன-துண்டுபட்டன; நாகம் உற்றவர் ஒழிந்தனர்-(அப்பகைவர் களில் இறந்து) வீரசுவர்க்கஞ் சேர்ந்தவர்கள் நீங்கலானவர்கள், இரிந்தனர்கள்-அஞ்சிஓடிப்போனார்கள்; நீள் நிலத்தினிடைநின்று -நீண்ட தரையிடத்திலே நின்று, சமர் வென்றவன்உம்-போரில் வெற்றிகொண்டவனான அருச்சுனனும்,—நேமி-சக்கரங்களையும், வச்ரமகுடம் புனை கொடிஞ்சி - வச்சிரரத்தினமயமான கலசத்தைக் கொண்ட சிகரத்தையும், உடை - உடையதும், ஏண் நிலத்து இவுளி முந்த முனை உந்து - வலிய போர்க்களத்தினிடத்திலே குதிரைகள் முற்படஉக்கிரமாகச் செலுத்துகின்றதுமான, இரதம்- (தனது) தேரின்மேல், முகுந்தனுடன்-கண்ணபிரானுடனே, இன்பு உற - இனிமையாக, ஏறியிட்டனன் - ஏறினான்; (எ - று.)

இதுமுதற் பதினாறு கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் தேமாச்சீர்களும், மற்றையாறும் கூவிளங்காய்ச்

சீர்களு மாகிய எண்சீராசிரியச்சந்தவிருத்தங்கள். 'தான தத்ததன தந்த தன தந்ததன தான தத்ததன தந்ததன தந்ததன' என்பது, இவற்றிற்குச் சந்தக்குழிப்பாம். (473)

77.—அப்போது துரியோதனன் அருச்சுனனை எதிர்த்தல்.

ஏறியிட்டவன்விரைந்திரதமுங்கடவி யேகலுற்றபினியம்பலதழங்கியெழ
வேறுபட்டமருடைந்தவர்களுந்திருகி மேலிடச்சகுனியுந்தினகரன்சுதனு
மாறியிட்டரதகுஞ்சரதுரங்கமமு மாகவிப்படிபொரும்படையொடன்றுநனி
சூறியிட்டனன்வலம்புரியலங்கல்புனைதோளிலெப்புவனமுந்தனிசுமந்தவனே.

(இ - ள்.) ஏறியிட்டவன் - (இங்ஙனந்தேர்மேல்) ஏறின அருச்சுனன், இரதம்உம் விரைந்து கடவி - அத்தேரையும் (கண்ணபிரானைக்கொண்டு) விரைவாகச்செலுத்தி, ஏகல் உற்ற பின் - மேற்சென்றவுடனே,—வலம்புரி அலங்கல் புனை தோளில் எ புவனம்உம் தனிசுமந்தவன் - நந்தியாவர்த்தப் பூமாலையை (அடையாளமாகத்) தரித்ததோள்களிலே பூமிமுழுவதையுந் தனியே தாங்கினவனாகிய துரியோதனன்,—பல இயம் தழங்கி எழ - பலவகைவாத்தியங்கள் மிக்கு ஒலிக்கவும்,—வேறுபட்டு அமர் உடைந்தவர்கள்உம் திருகி மேல் இட - நிலைகலங்கிப் போரில் (முன்பு அருச்சுனன்முன்) தோற்றோடினவர்களும் திரும்பி முன்னிட்டுவரவும்,சகுனிஉம் தினகரன்சுதன் உம் ஆறியிட்ட ரத குஞ்சர துரங்கம்உம் ஆக-(மாமனாகிய) சகுனியும் சூரியபுத்திரனாகிய கர்ணனும் (தெய்வப்பொய்கையில் நீர் பருகி) இளைப்பாறின தேர்யானைகுதிரைகளுமாக,இப்படி பொரும் படையொடு-இவ்வாறு போர்செய்யவல்ல சேனையுடனே, அன்று-அப்பொழுது, நனி சூறியிட்டனன்-மிகவும் கோபாவேசங்கொண்டு வளைத்திட்டான்; (எ - று.)

அருச்சுனன் பகையழித்துக் கண்ணனுடன்தேரேறி அப்பாற்செல்லுமளவிலே, முன்பு துரோணனிடம் அழியாக்கவசம் பெற்ற துரியோதனன், அதனாற் செருக்கி, சகுனியையும் கர்ணனையும் சேனைகளையும் உடன்கொண்டு, தோற்று மீள்கிற தன்பக்கத்து வீரர்களையும் தைரியப்படுத்தி உற்சாகமுண்டாக்கி மீளவும் போர்க்கு எழச்செய்துகொண்டு, மிகஉக்கிரமாக அருச்சுனனையெதிர்த்துவந்தனனென்பதாம். 'சூறியிட்டனன்' என்பதற்கு-சுழல் காற்றுப்போலக்கொடுமையோடு வளைத்திட்டானென்றுபொருள்; சூறையென்பது சுழல்காற்றுதல் காண்க. 'தோளிலெப்புவனமுந் தனிசுமந்தவன்'-தோள்வலியாற் பூலோகமுழுவதையும்பொதுமை நீக்கித் தானே தனியாளாள்கின்றவன்: தேர்செலுத்தியதை 'ஏறியிட்டவன் விரைந்திரதமுங்கடவி' என்று அருச்சுனன்மேல் ஏற்றிக் கூறியது, ஏவுதற்கருத்தாவின் வினை. தேர்க்குதிரைகள் இளைப்பாறியதை 'ஆறியிட்ட ரதம்' எனத் தேர்களின்மேல் ஏற்றிக்கூறினர்; இது, ஒருபொருளின் வினையை மற்றொரு பொருளின்மேலேற்றிக்கூறின உபசாரவழக்கு. (474)

78.—அதுகண்டு அருச்சுனன் கண்ணனை வினவுதல்.

யோதனத்திலிவனென்கணெதிரின்றளவும் யோசனைக்குமிடைநின்றிலன் முனைந்துசமர், மோதுகைக்குநினைவுண்டுகொலெதிர்ந்துமிக மோகரித்துவருகின் றதுதெரிந்ததிலை, யாதுபெற்றனனெடுஞ்சிலைகொல்வெங்கணைகொ லேதமற்றகவ சங்கொலிரதங்கொலென, மாதவற்கிடைவணங்கியிதுவென்கொலென வாசவக் கடவுண்மைந்தனுரைதந்தனனே.

(இ - ள்.) 'இன்று அளவும் - இன்றைத்தினம் வரையிலும், இவன் - இத்துரியோதனன், யோதனத்தில் - யுத்தத்திலே, என் கண் எதிர் - எனது கண்ணுக்கு எதிரிலே, யோசனைக்கு உம் இடை நின்றிலன் - யோசனைத்தூரத்தினுள்ளும் நின்றானில்லை; (அப்படிப்பட்டவன் இப்பொழுது), எதிர்ந்து - (என்னை) எதிர்த்து, மிக மோகரித்து வருகின்றது - மிகவும் வீராவேசங்கொண்டுவருகிறசெயல், முனைந்து சமர் மோதுகைக்கு நினைவு உண்டுகொல் - உக்கிரங்கொண்டு தாக்கிப் போர்செய்தற்கு எண்ணமுண்டானதனாலேயோ? (வேறு எதனாலேயோ?) தெரிந்தது இலை - தெரியவில்லை; (அன்றியும்), நெடுஞ் சிலை கொல் - சிறந்த வில்லையோ, வெங் கணை கொல் - கொடிய அம்புகளையோ, ஏதம் அற்ற கவசம் கொல் - அழிவில்லாத கவசத்தையோ, இரதம் கொல் - (அப்படிப் பட்ட) தேரையோ, யாது பெற்றனன் - (இவற்றில்) எதனைப் பெற்றானோ?' என - என்று எண்ணி,—வாசவன் கடவுள் மைந்தன் - தேவேந்திரனது குமாரனான அருச்சுனன்,—மாதவற்கு இடை வணங்கி - கண்ணபிரானது முன்னிலையிலே தொழுது,—இது என்கொல் என உரைதந்தனன் - இது என்னகாரணத்தாலோ? என்று வினவினான்; (எ - று.)

அங்ஙனம் துரியோதனன் மிக்கயுத்தாவேசத்தோடு படையெடுத்து வந்ததனைக் கண்ட அருச்சுனன், கண்ணபிரானைத் தொழுது அதன்காரணத்தைக் கேட்டனனென்பதாம். (475)

79.—அதற்குக் கண்ணன் விடைகூறுதல்.

ஈசனப்பொழுதுணர்ந்தருளிவென்றிவரி யேறுவிற்குரியபற்குனனுடன்பழைய, வாசவற்கயன்வழங்குகவசந்துவச மாசுணற்கருளினன்கலசசம்பவனு, மாசுகத் தினிலொழிந்தபலதுங்கமுனை யாயுதத்தினிலழிந்திடுவதன்றதனை, நீசெகுத்திடுதி யென்றுதுரகங்களையு நேர்படக்கடவினன்கதிவிதம்படவே.

(இ - ள்.) ஈசன் - (யாவர்க்குந்) தலைவனான கண்ணபிரான்,— அப்பொழுது—, உணர்ந்தருளி - (நடந்தசெய்தியைத் தனது முற்றுணர்வினால்) அறிந்து,—வென்றி வரி ஏறு விற்கு உரிய பற்குனனுடன் - வெற்றியைத் தருகிற கட்டமைந்த சிறந்த (காண்டீவ) வில்லுக்கு உரிய அருச்சுனனுடனே,—'வாசவற்கு அயன் வழங்கு - தேவேந்திரனுக்குப் பிரமன் (முன்பு) கொடுத்த, பழைய கவசம் - பழமையானகவசத்தை, கலச சம்பவன் உம் - துரோண கும்பத்தினின்று தோன்றியவனான துரோணனும், துவசம் மாசுணற்கு - கொடியிற் பெரும்பாம்புவடிவமுடையவனான துரியோ

தனனுக்கு, அருளினன்-(இப்பொழுது) கொடுத்தான்; (அக்கவசம்), ஆசுகத்தினில் -அம்புகளினலும், ஒழிந்த பல துங்கம் முனை ஆயுதத்தினில் - மற்றும் பலவகையான சிறந்த கூரிய படைக்கலங்களினலும், அழிந்திடுவது அன்று-அழிவதன்று; அதனை-அக்கவசத்தை, நீ—, செகுத்திடுதி - அழித்திடுவாய்,' என்று-என்றுசொல்லி, துரகங்களைஉம் - (தேர்க்) குதிரைகளையும், நேர்பட-துரியோதனனெதிரிலே செல்லும்படி, கதி விதம் பட - (பலவகை) நடைவிகற்பம் பொருந்த, கடவினன் - செலுத்தினன்;

80.—அருச்சுனன் பகைவர்களின்மேல் அம்புமழைபொழிதல்.

கானகத்தினிடைமண்டியெரியங்கிதரு கார்முகத்தின்வலிகொண்டுமுனை வெஞ்சமரின், மேனடக்குமவர்தங்கண்மகுடங்களினு மேருவொத்துயர்புயங்களினு முந்தியினு, மானனத்தினுநுழைந்துருவவெம்பரிதி யாயிரக்கிரணமும்புடைபரந்த தென, வானகத்துவெளியின்றியணிபந்தரிட வாளிவிட்டனன்மனஞ்செய்துதனஞ் செயனே.

(இ-ள்.) (அப்பொழுது), தனஞ்செயன்-அருச்சுனன்,—மனம் செய்து - (கண்ணபிரான்கூறியதை) மனத்திலேகொண்டு,— கானகத்தினிடை மண்டி எரி அங்கி தரு கார்முகத்தின் வலி கொண்டு -(காண்டவ) வனத்திற் பற்றியெரியும் அக்கினிபகவான் (தனக்குக்) கொடுத்த (காண்டீவ) வில்லின்வலிமையால்,—முனை வெம் சமரில் மேல் நடக்குமவர்தங்கள் மகுடங்களின்உம் - ஊக்கத்தோடுசெய்கிற கொடிய போரில் தன்மேல் எதிர்த்துவருகிற பகைவீரர்களுடைய கிரீடங்களிலும்,மேரு ஒத்து உயர் புயங்களின்உம்-மேருமலையைப்போன்று உயர்ந்துள்ள தோள்களிலும், உந்தியின்உம்-நாபியிலும், ஆனனத்தின்உம்-முகத்திலும், நுழைந்து உருவ-தைத்து உட்புகுந்து அப்பாற்செல்லுமாறும்,—வெம் பரிதி ஆயிரம் கிரணம்உம் புடைபரந்தது என-உஷ்ணமான சூரியனது ஆயிரங்கிரணங்களும் எப்புறத்தும் பரவுவது போல, வானகத்து வெளி இன்றி அணி பந்தர் இட - ஆகாயத்திலே வெற்றிடமில்லாமல் நெருங்கியபந்தலிட்டாற்போல இடைவிடாதுசென்றுபரவும்படியும், வாளிவிட்டனன் - பாணங்களைப் பிரயோகித்தான்;

81.—அருச்சுனனம்புகளினற் பகைவர்சேனை சின்னபின்னப்படுதல்.

நாதெறித்தனதுரங்கமநெடுஞ்சிலைக ணணியற்றனவுடைந்தனதடந்திகிரி, பாதமற்றனமதங்கயவிதங்கள்பொரு பாகர்பட்டனர்மறிந்தனநெடுந்துவச, மோதுதற்கெதிர்முனைந்தவர்சிரங்கள்பொழி மூளையிற்களமடங்கலுநெகிழ்ந்தரச, ராதபத்திரமழிந்தனவிவன்றனுட னுர்தரத்தொடுசரந்தொடவியைந்தவரே.

(இ - ள்.) (அருச்சுனனெய்த அம்புகளினல்),—துரங்கமம்-குதிரைகள், நா தெறித்தன-நாக்குத் தெறித்துவிழப்பெற்றன; நெடுஞ் சிலைகள்-நீண்ட விற்கள், நாணி அற்றன-நாணறுபட்டன; தட திகிரி-பெரியதேர்ச் சக்கரங்கள், உடைந்தன-உடைபட்டன; மதங்கயம் விதங்கள்-யானைவருக்கங்கள், பாதம் அற்றன -கால்கள் அறுபட்டன; பொரு-போர்க்கு உரிய, பாகர்-யானைதேர்குதிரை

களைச் செலுத்துபவர்கள், பட்டனர்-இறந்தார்கள்; நெடுந் துவசம்-நீண்டகொடிகள், மறிந்தன - முறிந்துவிழுந்தன; மோதுதற்கு எதிர் முனைந்தவர் - தாக்கிப்போர்செய்தற்பொருட்டு அருச்சுனனெதிரில் உக்கிரமாக வந்தவர்களுடைய, சிரங்கள் - தலைகள், பொழி-(உடைபட்டு) வெளிச்சொரிந்த, மூளையின் - மூளைகளினால், களம் அடங்கலும்-போர்க்களம்முழுவதும், நெகிழ்ந்து-நெகிழ்ச்சிபெற, அரசர்-பகையரசர்களது, ஆதபத்திரம்-குடைகள், அழிந்தன —;—இவன் தனுடன் தரத்தொடு சரம்தொட இயைந்தவர் - இவ்வருச்சுனனுடன் வலிமையோடு (எதிர்த்து) அம்புதொடுக்கத் தொடங்கினவர்கள், ஆர்-யாவர்? [எவருமில்லை]; (எ - று.)

மதங்கஜம் என்பதற்கு-மதங்கமுனிவனிடத்தினின்றும்(ஆதிகாலத்தில்) உண்டானதென்று காரணப்பொருள். பி-ம்:—ஆர்சரத்தொடு, ஆதரத்தொடு. (478)

82.—அருச்சுனன்முன் பகைவீரர்பலர் தோற்றல்.

ஆரமர்க்கண்மிகநொந்திரவிமைந்தனெடி தாகுலத்தொடுமிரிந்தனன்விரிந்த மணி, வார்கழற்சகுனியுந்துணைவருந்தமுக மாறியிட்டனர்மறிந்தனர்கலிங்கர்பலர், சீருடைக்கிருதனுங்கிருபனும்பழைய சேதிவித்தகனுமஞ்சினரொடுங்கினர்கள்,பூரி பட்டிலனெருங்கியணிநின்றுபொரு பூபர்பட்டனரொழிந்தவர்புறந்தரவே.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) ஆர் அமர்க்கண்-அருமையான அப்போரிலே,—இரவி மைந்தன்-சூரியகுமாரனான கர்ணன், மிக நொந்து-மிகவும் வருந்தி, நெடிது ஆகுலத்தொடுஉம்-மிக்க கலக்கத்துடனே, இரிந்தனன்-தோற்றுஓடிப்போனான்; விரிந்த மணி-ஒளிவீசுகிற இரத்தினங்கள் பதித்த, வார் கழல்-நீண்ட வீரக்கழலையுடைய, சகுனியும்—, துணைவர்உம்-(அவனது) தம்பிமார்களும், தம் முகம் மாறியிட்டனர்-தமதுமுகம்மாறிப் புறங்கொடுத்திட்டார்கள்; கலிங்கர் பலர்-கலிங்கதேசத்து அரசர்பலரும், மறிந்தனர்-தோற்றுத்திரும்பினார்கள்; சீர் உடை-சிறப்பையுடைய, கிருதன்உம்-கிருதவர்மாவும், கிருபன்உம்-கிருபாசாரியனும், பழைய சேதி வித்தகன்உம்-பழமையான சேதிதேசத்து அரசனும், அஞ்சினர் ஒடுங்கினர்கள்-பயந்து ஓடுங்கினார்கள்; பூரி-பூரிசிரவாவென்பவன், பட்டிலன்-இறந்தானில்லை [உயிர்மாத்திரத்தோடு மீண்டானென்றபடி]; நெருங்கி அணி நின்று பொரு பூபர்-நெருக்கங்கொண்டு படைவகுப்பிலே நின்று போர்செய்த அரசர்களில், பட்டனர் ஒழிந்தவர்-இறந்தவர்கள்போகஎஞ்சியவரெல்லாம், புறம் தர-முதுகுகொடுக்க,—(எ-று.) —"தரணிமண்டலதுரந்தரன்முனைந்தனன்" என வருங்கவியோடு தொடரும்.

இரிந்தனன், முகம்மாறியிட்டனர், மறிந்தனர், அஞ்சினர்ஒடுங்கினர்கள், பட்டிலன், புறந்தர என்ற பல சொற்களில் தோற்றுச் செல்லுதலென்ற ஒருபொருளே வந்தது, பொருட்பின்வருநிலையணி. கலிங்கம் எழுவிதப்படுதலால், கலிங்கர்பலரென்றதென்பர். (479)

83.—துரியோதனன் அருச்சுனனை எதிர்த்தல்.

தேவருக்கரசனுந்துகனபந்திநிகர் தேரிடைப்பணிநெடுங்கொடிநுடங்கி யெழ, மாவுகைத்துவலவன்றிறலுடன்கடவ மாமுடிக்கண்மகுடந்திகழவன்றுபெறு, காவன்மெய்க்கவசமுந்தனிபுனைந்துசிலை கால்வளைத்தவிர்பெரும்பிறைமுகஞ்செய் கணை, தூவியுற்றெதிர்முனைந்தனனனந்தவொளி தோய்கழற்றரணிமண்டலதுரந் தரனே.

(இ - ள்.) அனந்தம் ஒளி தோய் - அளவில்லாத பிரகாசம் பொருந்திய, கழல்-வீரக்கழலையுடைய, தரணி மண்டல துரந்தரன் -பூமண்டலமுழுவதையும் அரசாள்பவனான துரியோதனன்,—தேவருக்கு அரசன் உந்து-தேவராசனான இந்திரன் தூண்டிச்செலுத்துகிற, கன பந்தி-மேகராசியை, நிகர்-ஒத்த [மிகவிரைந்துசெல்லுகிற], தேரிடை-தேரிலே, பணி நெடுங்கொடி-பாம்புவடிவமெழுதின உயர்ந்தகொடி, நுடங்கி எழ - அசைந்துவிளங்கவும்,—வலவன்-சாரதி, திறலுடன்-வல்லமையுடனே, மா உகைத்து-குதிரைகளைத் தூண்டி, கடவ-(தேர்) செலுத்தவும்,—மா முடிக்கண்-அழகிய தலையிலே, மகுடம் திகழ-கிரீடம் விளங்கவும்,—அன்றுபெறு -அன்றைத்தினத்தில் (துரோணாசாரியனிடத்தினின்று தான்) பெற்ற, மெய் காவல் கவசமும்-உடம்பைக்காத்தற்குஉரிய கவசத்தையும், தனி புனைந்து-ஒப்பில்லாதபடி தரித்துக்கொண்டு, சிலை கால் வளைத்து-(தனது) வில்லைக் கோடிகள் வளையச்செய்து, —அவிர்-விளங்குகிற, பெரு-பெரிய, பிறைமுகம்செய்கணை-அர்த்தசந்திரபாணங்களை, தூவி-மிகுதியாகப் பிரயோகித்துக்கொண்டு, எதிர் உற்று முனைந்தனன்-அருச்சுனனெதிரில் வந்து உக்கிரமாகப் போர்செய்தான்; (எ - று.)

இந்திரன் மேகவாகன னாதலால், 'தேவருக்கரச னுந்துகன பந்தி' என்றது. தேவராஜனால் வச்சிராயுதங்கொண்டு வலிய அடித்து விரைவிற் செலுத்தப்படுகிறமேகவர்க்கம்போலவிரைந்து செல்லுவது ராஜராஜனது தேரென்க. இனி, ஏழுதட்டிரதத்துக்குக் கனபந்தி உவமையென்னலுமாம். (480)

84.—அருச்சுனனம்புகளினுல் துரியோதனன்கவசம் பிளவுபடாமை.

கோமகக்குரிசின்முந்தவிடுமம்புபல கோறொடுத்தெதிர்விலங்கிவிசயன் றனது, தீமுகக்கணையனந்தநிலையொன்றின்முனை சேரவிட்டனன்விடும்பொழுதினந்தவிறன், மாமணிக்கவசமெங்குமுடனென்றியொரு மால்வரைப்புயலினுண்டுளிவிழுந்தபரி, சாமெனத்தலைமழுங்கியவையொன்றுமவ னுகமுற்றிலவசைந்திலனசஞ்சலனே.

(இ - ள்.) (இவ்வாறு), கோமகன் குரிசில் - (அரசர்கட்கெல்லாம்) அரசனான துரியோதனராசன், முந்த விடும் - முற்படச் செலுத்திய, அம்பு பல-அநேக பாணங்களை, விசயன்-அருச்சுனன், கோல் தொடுத்து -(தனது) அம்புகளைப் பிரயோகித்து, எதிர் விலங்கி - எதிரெதிரே தடுத்து, (மற்றும்), தனது தீ முகம் கணை அனந்தம் - நெருப்புப்போலக் கொடிய நுனியையுடைய தனது

83.—துரியோதனன் அருச்சுனனை எதிர்த்தல்.

தேவருக்கரசனுந்துகனபந்திநிகர் தேரிடைப்பணிநெடுங்கொடிநுடங்கி யெழ, மாவுகைத்துவலவன்றிறலுடன்கடவ மாமுடிக்கண்மகுடந்திகழவன்றுபெறு, காவன்மெய்க்கவசமுந்தனிபுனைந்துசிலை கால்வளைத்தவிர்பெரும்பிறைமுகச்செய் கணை, தூவியுற்றெதிர்முனைந்தனனனந்தவொளி தோய்கழற்றரணிமண்டலதுரந் தரனே.

(இ - ள்.) அனந்தம் ஒளி தோய் - அளவில்லாத பிரகாசம் பொருந்திய, கழல்-வீரக்கழலையுடைய, தரணி மண்டல துரந்தரன் -பூமண்டலமுழுவதையும் அரசாள்பவனான துரியோதனன்,—தேவருக்கு அரசன் உந்து-தேவராசனான இந்திரன் தூண்டிச்செலுத்துகிற, கன பந்தி-மேகராசியை, நிகர்-ஒத்த [மிகவிரைந்துசெல்லுகிற], தேரிடை-தேரிலே, பணி நெடுங்கொடி-பாம்புவடிவமெழுதின உயர்ந்தகொடி, நுடங்கி எழ - அசைந்துவிளங்கவும்,—வலவன்-சாரதி, திறலுடன்-வல்லமையுடனே, மா உகைத்து-குதிரைகளைத் தூண்டி, கடவ-(தேர்) செலுத்தவும்,—மா முடிக்கண்-அழகிய தலையிலே, மகுடம் திகழ-கிரீடம் விளங்கவும்,—அன்றுபெறு -அன்றைத்தினத்தில் (துரோணாசாரியனிடத்தினின்று தான்) பெற்ற, மெய் காவல் கவசம்உம்-உடம்பைக்காத்தற்குஉரிய கவசத்தையும், தனி புனைந்து-ஒப்பில்லாதபடி தரித்துக்கொண்டு, சிலை கால் வளைத்து-(தனது) வில்லைக் கோடிகள் வளையச்செய்து,—அவிர்-விளங்குகிற, பெரு-பெரிய,பிறைமுகம்செய்கணை-அர்த்தசந்திரபாணங்களை, தூவி-மிகுதியாகப் பிரயோகித்துக்கொண்டு, எதிர் உற்று முனைந்தனன்-அருச்சுனனெதிரில் வந்து உக்கிரமாகப் போர்செய்தான்; (எ - று.)

இந்திரன் மேகவாகன னாதலால், 'தேவருக்கரச னுந்துகன பந்தி' என்றது. தேவராஜனால் வச்சிராயுதங்கொண்டு வலிய அடித்து விரைவிற் செலுத்தப்படுகிறமேகவர்க்கம்போலவிரைந்து செல்லுவது ராஜராஜனது தேரென்க. இனி. எழுதட்டிரதத்துக்குக் கனபந்தி உவமையென்ன லுமாம். (480)

84.—அருச்சுனனம்புகளினால் துரியோதனன்கவசம் பிளவுபடாமை.

கோமகக்குரிசின்முந்தவிடுமம்புபல கோலெடுத்தெதிர்விலங்கிவிசயன் றனது, தீமுகக்கணையனந்தநிலையொன்றின்முனை சேரவிட்டனன்விடும்பொழுதி னந்தவிறன், மாமணிக்கவசமெங்குமுடனென்றியொரு மால்வரைப்புயலினுண்டுளி விழுந்தபடி, சாமெனத்தலைமழுங்கியவையொன்றுமவ னுகமுற்றிலவசைந்திலன சஞ்சலனே.

(இ - ள்.) (இவ்வாறு), கோமகன் குரிசில் - (அரசர்கட்கெல்லாம்) அரசனான துரியோதனராசன், முந்த விடும் - முற்படச் செலுத்திய, அம்பு பல-அநேக பாணங்களை, விசயன்-அருச்சுனன், கோல் தொடுத்து -(தனது) அம்புகளைப் பிரயோகித்து, எதிர் விலங்கி - எதிரெதிரே தடுத்து, (மற்றும்), தனது தீ முகம் கணை அனந்தம் - நெருப்புப்போலக் கொடிய நுனியையுடைய தனது

அநேகபாணங்களை, நிலைஒன்றில் - ஒரேசமயத்திலே, முனை சேர - எதிர்சென்று சேரும்படி, விட்டனன் -செலுத்தினன்; விடும்பொழுதின் - அங்ஙனஞ்செலுத்தியபொழுதில், அவை - அவ்வம்புகள், அந்த விறல் மாமணி கவசம் எங்கும் உடன் ஒன்றி-வலிமையுள்ளதும் சிறந்ததும்இரத்தினம்பதித்ததுமான (அந்தத்துரியோதனனது) கவசம்முழுவதிலும் ஒருசேரச் சென்று தாக்கி, ஒரு மால் வரை புயலின் நுண் துளி விழுந்த பரிசு ஆம் என - ஒரு பெரிய மலையின்மேல் மேகத்தின் சிறிய நீர்த்துளிகள் விழுந்ததைப்போல, தலைமழுங்கி- நுனி கூரழிந்து, ஒன்றுஉம் அவன் ஆகம் உற்றில - ஒன்றேனும்அவனுடம்பிற் படவில்லை; (ஆகவே), அசஞ்சலன் - (எதற்குஞ்)சலியாத இயல்புடையவனான துரியோதனன், அசைந்திலன் -சிறிதுஞ் சலித்தானில்லை; (எ - று.)

மலை காளமேகத்தின் சோனைமாரிக்குச்சிறிதுஞ்சலியாதவாறு போலவே, துரியோதனன் அருச்சுனனது பாணவர்ஷத்துக்குச் சிறிதுஞ்சலித்திலனென்க. விலங்கி = விலக்கி: சந்தம்நோக்கிய விகாரம். தன்வினை பிறவினையில் வந்ததுமாம்: இதனை, அந்தர் பாவிதணிச்' என்ப. (481)

85.—பின்பு அருச்சுனனெறிந்தவேற்படையை அசுவத்தாமன் துணித்தல்.

வீரன்விட்டனசரங்களவனெண்கவச மேலுறப்படுதலின்றிவிழுகின்றநிலை,
யோரிமைப்பினிலறிந்துகுமரன்கையயி லோடுரைக்கவுவமம்பெறுவிடங்கொளயி,
றேரினிற்பொலியநின்றிருகைகொண்டுநனி சீறிமெய்ப்படவெறிந்தனனெறிந்தள
வில், வார்சிலைக்குருவின்மைந்தனதுகண்டதனை வாளியிற்றுணிபடும்படிமலைந்
தனனே.

(இ - ள்.) வீரன் - சிறந்தவீரனான அருச்சுனன்,—விட்டன சரங்கள் - (தான்) தொடுத்தவையான அம்புகள், அவன் ஒள் கவசம் மேல் உற படுதல் இன்றி-அத்துரியோதனனது ஒளியுள்ள கவசத்தின்மேல் உட்செல்லும்படி படுதலில்லாமல், விழுகின்ற - தாக்கிக்கீழ்விழுந்திடுகின்ற, நிலை-தன்மையை, ஓர் இமைப்பினில்- ஒருநொடிப்பொழுதிலே, அறிந்து—,—குமரன் கை அயிலோடு உவமம் உரைக்க பெறு-முருகக்கடவுளின் கையிலுள்ள வேலாயுதத்தோடு (தன்னை) உவமைசொல்லும்படி (சிறப்புப்) பெற்ற, விடம்கொள் அயில் - விஷத்தையொத்த [கொடிய] வேலாயுதத்தை, தேரினில் பொலிய நின்று - (தனது) தேரிலே விளங்க நின்றுகொண்டு, இருகைகொண்டு-இரண்டுகைகளாலும்எடுத்து, நனி சீறி - (துரியோதனன்மேல்) மிகக்கோபித்து, மெய் பட - அவனுடம்பிலே படும்படி, எறிந்தனன் - வீசினன்; எறிந்த அளவில்-(அங்ஙனம்) வீசியவளவிலே,—வார் சிலை குருவின் மைந்தன்- நீண்ட வில்லுக்கு ஆசிரியனான துரோணனது புத்திரனாகிய அசுவத்தாமன், அது கண்டு - அங்ஙனம் எறிந்ததைப் பார்த்து, அதனை - அவ்வேலை, வாளியின் - (தனது) அம்புகளினால், துணி படும்படி - துண்டாகும்படி, மலைந்தனன் - எதிர்த்துப் போர்செய்தான்; (எ - று.)

சுப்பிரமணியன் கைவேல், சூரபதுமனைக் கொல்லுதற்கென்று சிவபெருமான் நிருமித்துக்கொடுத்தது. எறிந்தளவில் - தொகுத்தல். (482)

86.—பிறகு அருச்சுனன் சோர்ந்து மயங்குதல்.

வாகைநெட்டயிறுணிந்திடலும்வன்பினுடன் மானிரைத்திரதமுங்கடவிவந்து முத, லாகவத்தினிலுடைந்தவரடங்கமுனை யாயெதிர்த்தொருமுகப்படநெருங்கி மிக, மோகரித்துவருகின்றசெயல்கண்டமரர் மூவருக்கரியவன்கழல்பணிந்துபரி, தாகமுற்றமர்தொடங்கவுமறந்துகமழ் தாரருச்சுனனுயங்கினனநந்தரமே.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) வாகை - வெற்றியைத் தரவல்ல, நெடு - நீண்ட, அயில் - வேலாயுதம், துணிந்திடலும் - (இவ்வாறு) துண்டுபட்டவுடனே, முதல் ஆகவத்தினில் உடைந்தவர் அடங்க - முன்பு (தனக்குமுன்) போரில் தோற்றவரெல்லாரும், வன்பினுடன் மான் நிரைத்து இரதம்உம் கடவிவந்து-வலிமையுடன் குதிரைகளை ஒழுங்குபடுத்தித் தேரையுஞ் செலுத்திக்கொண்டுவந்து, முனை ஆய் எதிர்த்து - துணிவுகொண்டு (தன்னை) எதிர்த்து, ஒரு முகம் பட நெருங்கி -(தன்னைநோக்கி) ஒரேமுகமாகத் திரண்டு அடர்ந்து, மிக மோகரித்து வருகின்ற - மிகவும் உக்கிரங்கொண்டு வருகிற, செயல் - செய்கையை, கண்டு - பார்த்து,--கமழ் தார் அருச்சுனன் - மணம்வீசுகிற போர்மாலையையுடைய அருச்சுனன்,—பரிதாகம் உற்று - மிக்கவருத்தத்தை யடைந்து, அமர் தொடங்கஉம் மறந்து - போர்செய்தற்கும் மறந்து, அமரர் மூவருக்கு அரியவன் கழல் பணிந்து - மூன்றுமூர்த்திகட்கும் அருமையான ஸ்ரீமந்நாராயணனது திருவவதாரமாகிய கண்ணபிரானது திருவடிகளை நமஸ்கரித்து, உயங்கினன் - சோர்ந்துநின்றான்; அநந்தரம் - பின்பு,—(எ - று.)—''கண்ணன் வலம்புரி வாயில் வைத்தனன்'' என வருங்கவியோடு முடியும்.

அருச்சுனன் சோர்ந்து நின்றமைக்குக் காரணம்-தனது ஆயுதங்கள்பலவும் பயன்படாமையைக் கண்ட மனவெழுச்சிக்குறைவு. திருப்பாற்கடலிலெழுந்தருளியுள்ள திருமாலின் வியூகமூர்த்திகளாகிய வாசுதேவன் சங்கர்ஷணன் பிரத்யும்நன் அநிருத்தன் என்ற நால்வருள் பிரதானமூர்த்தியான வாசுதேவன்,பிரமவிஷ்ணுருத்திரரூபிகளாய்ப் படைத்தல் காத்தல் அழித்தல் தொழில்களைச் செய்யும் மற்றை மூவர்க்குங் காரணனாகி அவர்கட்கும் அரியவனாய்ச் சிறத்தல் பற்றியும், அவ்வாசுதேவனே இங்குக்கண்ணனாக அவதரித்தமைபற்றியும், 'மூவருக்கு அரியவன்' என்றார். மூவர் - **தொகைக்குறிப்பு.** முற்றும்மை விகாரத்தால் தொக்கது. 'பரிதாபம்' என்றாற்போல, 'பரிதாகம்' என்றார்; வடசொல்: இதில் பரி - மிகுதியை விளக்குவதோர் உபசர்க்கம். அமர்தொடங்கவும் என்ற சிறப்பும்மை - அமர்தொடங்குதலின் இன்றியமையாமையைக் காட்டும். பி-ம்:—மைந்தினுடன். (483)

87.—கண்ணன் அதுகண்டு சங்கநாதஞ்செய்தல்.

கோமணிக்குரலுகந்துபுறவின்கணுயர் கோவலர்க்குநடுநின்றுமுன்வளர்ந்த முகில், காமனுக்கினியதந்தைசமரம்பொருது காதன்மைத்துனனயர்ந்தநிலைகண்டு பல, தாமரைக்குளொருதிங்களெனவங்குலிகொ டாழ்தடக்கைகளிரண்டொருமுகம் பயில, மாமணிக்குழன்மணங்கமழ்செழும்பவள வாயில்வைத்தனனலந்திகழ் வலம்புரியே.

(இ - ள்.) கோ - பசுக்களினுடைய, மணி - (கழுத்திலே கட்டப்பட்டுள்ள அடிக்கும்) மணிகளின், குரல் - ஓசையை, உகந்து - விரும்பிக்கேட்டுக் கொண்டு, புறவின்கண் - முல்லைநிலத்திலே, உயர் கோவலர்க்கு நடு நின்று - சிறந்த இடையர்கட்கு நடுவிலே நின்று, முன் - முன்பு [இளமையில்], வளர்ந்த—, முகில் - மேகம் போன்றவனும், காமனுக்கு இனிய தந்தை-மன்மதனுக்குப் பிரியமுள்ள பிதாவுமான கண்ணன்,—காதல் மைத்துனன் சமரம் பொருது அயர்ந்த நிலை கண்டு - (தனது) அன்புக்குஇடமான மைத்துனனாகிய அருச்சுனன் போர்செய்து சோர்வடைந்த நிலைமையைப் பார்த்து,—பல தாமரைக்குள் ஒரு திங்கள் என - பல தாமரைமலர்களின் இடையிலே ஒருசந்திரன் (விளங்கினாற்)போல, —அங்குலி கொள் தாழ் தட கைகள் இரண்டு - விரல்களின் அழகைக் கொண்ட நீண்ட பெரிய (தனது) திருக்கைகளிரண்டும், ஒரு முகம் பயில-(தனது) ஒப்பற்றமுகத்திலேபொருந்த,(அக்கைகளில்), நலம் திகழ் வலம்புரி - சிறப்பு விளங்குகிற (பாஞ்சசன்னிய மென்னுந் தனது) வலம்புரிச்சங்கத்தை, மா மணி குழல் மணம் கமழ் செழும் பவளம் வாயில் வைத்தனன் - சிறந்த அழகிய வேய்ங்குழலின் பரிமளம் வீசப்பெற்ற செழிய பவழம்போல மிகச்சிவந்த (தனது) திருவாயிலே வைத்து ஊதினான்; (எ - று.)

அருச்சுனன் சோர்ந்து போரொழிந்ததைக் கண்டு, கண்ணபிரான், பகையழித்தற்பொருட்டும் அருச்சுனன்சோர்வை ஒழித்தற்பொருட்டும் தனது திவ்வியசங்கத்தை வாயில்வைத்து முழக்கத் தொடங்கினனென்க. செந்தாமரைமலர்கள்போன்ற தனது இரண்டுகைகளினாலும் செந்தாமரைமலர்போன்ற தனது வாயிலே வெள்ளியசங்கத்தை வைத்ததற்கு, பலதாமரைமலர்களினுள்ளே பொருந்திய வெண்டிங்கள் உவமை யெனக் காண்க. சந்திரன்சமீபித்தபொழுது தாமரைமலர் குவிதல்போலச் சங்கத்தை யெடுத்து வாயில்வைத்துக்கொண்டு ஊதுகையிற் கைகளும் வாயும் குவிதல் இயல்பு. குழலின் இனிய ஒலி வெளியெழுந்து விளங்கப்பெற்ற வாய் என்ற பொருளில் 'குழல்மணங்கமழ் வாய்' என்றது - ஒரு புலனின்தன்மையை மற்றொருபுலனின்மேல் ஏற்றிக்கூறின உபசாரவழக்காம். பசுக்கள் களிப்போடு தலையசைத்துக்கொண்டிருக்கையில் க்ருஷ்ணன் அவற்றினருகிற்செல்லும்பொழுது கழுத்திடு மணியோசையைக் கேட்டுத் திருவுளமகிழ்ந்தருள்வனென்பார், 'கோமணிக்குரலுகந்து' என்றார். புறவு-காடும் காடுசார்ந்தஇடமுமாகியமுல்லைநிலம். கண்ணபிரான் முல்லைநிலத்திலே கோகுலமெனப்படுகிற ஆயர்பாடியில் இடையர்கள் நடுவிலே வளர்ந்த

தனால், 'புறவின்கண் உயர்கோவலர்க்கு நடுநின்று முன்வளர்ந்த முகில்' என்றார். பி-ம்: வலம்புரிவலம்புரியே. (484)

88.—கண்ணனது சங்கநாதத்தாற் பகைவர்கள் மோகமடைதல்.

நாகர்பொற்றருவையம்புவியிலன்றுதரு நாதன்வச்சிரவலம்புரிமுழங்குகுரன், மேகமொக்குமெனவெண்டிரையெறிந்துபொரு வேலையொக்குமெனவெங்கணு மெழுந்தபொழு, தாகமுற்றுறநெகிழ்ந்துபுளகம்புரிய வாகவத்தெழுகடுஞ்சினமடிந் தவிய, மோகமுற்றனரெதிர்ந்துபொருமண்டலிகர் மோழைபட்டதுகொலண்ட முகடுஞ்சிறிதே.

(இ - ள்.) நாகர் - தேவர்களது, பொன் தருவை-பொன்மயமான பாரிஜாதவிருக்ஷத்தை, அன்று-முன்னொருகாலத்தில், அம் புவியில் தரு-அழகிய பூலோகத்திற் கொணர்ந்திட்ட, நாதன்-தலைவனான கண்ணபிரானது, வச்சிரம் வலம்புரி - வயிரம்போலுறுதியுள்ள சிறந்த சங்கம், முழங்கு - மிகஒலித்த, குரல் - ஓசை, மேகம் ஒக்கும் என-மேகத்தின் இடியோசையை யொக்குமென்று சொல்லும்படியாகவும், வெள் திரை எறிந்து பொரு வேலை ஒக்கும் என-வெண்ணிறமான அலைகளை வீசிமோதுகிற கடலின் ஆரவாரத்தை யொக்கு மென்று சொல்லும்படியாகவும், எங்கண் உம் எழுந்த பொழுது-எல்லாவிடங்களிலுஞ் சென்றுபரவினபொழுது,—எதிர்ந்து பொரு மண்டலிகர்-எதிர்த்துப்போர்செய்கிற பூமண்டலாதிபதிகளான அரசர்கள் (எல்லாரும்), ஆகம் முற்றுறநெகிழ்ந்து-உடம்புமுழுவதுந் தளர்ந்து, புளகம் புரிய - மயிர்ச்சிலிர்ப்புச் செய்யவும், ஆகவத்து எழு கடுஞ்சினம் - போர்செய்தலில் மிகுதியாகவுண்டான கொடிய கோபம், மடிந்து அவிய-குறைந்து ஒடுங்கவும், மோகம் உற்றனர்—; (அப்பொழுது), அண்டம் முகடு உம்-அண்டகோளத்தின் மேல்முகடும், சிறிது—, மோழை பட்டது கொல்-(சங்கின் பேரொலியாலாகிய அதிர்ச்சியினால்) வெடிப்படைந்தது போலும்; (எ - று.)

இப்பொழுது கண்ணன் பகைவர்களைத் தனது சங்கினொலியால்மயங்கி வழியச்செய்தமை, முன்பு தேவலோகத்தினின்று பாரிசாததருவைப்பூலோகத்துக்குக்கொணர்ந்தபொழுதுஎதிர்த்த தேவர்களைத் தனது சங்கநாதத்தினாலே பங்கப்படுத்தினமை போலுமென்பார், கண்ணபிரானுக்கு 'நாகர் பொற்றருவை யம்புவியிலன்றுதரு' என்ற அடைமொழிகொடுத்தார்; **கருத்துடையடைமொழியணி. வரலாறு.**—கண்ணன் நரகாசுரனை யழித்தபின்பு, அவனால் முன்பு கவர்ந்துபோகப்பட்ட (இந்திரன்தாயான அதிதிதேவியின்) குண்டலங்களை அவளுக்குக் கொடுக்கும்பொருட்டுச் சத்தியபாமையுடனே கருடன் தோளின்மேலே தேவலோகத்துக்குச் செல்ல அங்கு இந்திராணி சத்தியபாமைக்குச்சகலஉபசாரங்களைச் செய்தும், தேவர்க்கேயுரிய பாரிஜாதபுஷ்பம்மானுடப்பெண்ணாகிய இவளுக்குத் தகாதென்று சமர்ப்பிக்கவில்லை யாதலின், இவள் அதனைக் கண்டுவிருப்புற்றவளாய், சுவாமியைப்பார்த்து, 'பிராணநாயகனே! இந்தப் பாரிஜாததருவைத் துவாரகைக்குக்கொண்டு போகவேண்டும்' என்றதைக் கண்ணபிரான் திருச்செவிசாத்தி,

உடனே அந்தவிருட்சத்தை வேரோடுபெயர்த்துப் பெரியதிருவடியின் திருத்தோளின்மேல் வைத்தருளி, அப்பொழுது இந்திராணி தூண்டிவிட்டதனால் வந்து மறித்துப்போர்செய்த இந்திரனைச் சகலதேவசைனியங்களுடன் சங்கநாதத்தினாலே பங்கப்படுத்தி, பின்பு வணங்கின அவனது பிரார்த்தனைப்படியே பாரிஜாதமரத்தைத் துவாரகைக்குக் கொண்டுவந்து சத்தியபாமை வீட்டுப் புறங்கடைத்தோட்டத்தில் நாட்டியருளினனென்பதாம். (485)

89.—அப்பொழுது கண்ணன் அருச்சுனனுக்குச் சிறந்தவேல் தருதல்.

பானிறப்புரவியுந்தியிரதங்கடவு பாகன்மற்றவர்மயங்கியதுணர்ந்தருளி, மேனிலத்துநரகன்றனுயிர்கொண்டதொரு வேல்கொடுத்திதனில்வென்றிடுதியென்றளவில், வானவச்சிரன்மகன்கடிதுவந்துபெருவாழ்வுபெற்றனனெனும்பரிவினன்றனது, ஞானபத்தியொடெழுந்துவலம்வந்துதிரு நாண்மலர்ப்பதம்வணங்கியது கொண்டனனே.

(இ - ள்.) பால் நிறம்-பால்போல வெளுத்தநிறத்தையுடைய, புரவி-குதிரைகளை, உந்தி - தூண்டி, இரதம் - (அருச்சுனனது) தேரை, கடவு - செலுத்துகின்ற, பாகன் - சாரதியான கண்ணன், அவர் மயங்கியது உணர்ந்தருளி - அப்பகைவர்கள் மோகித்த தன்மையை அறிந்தருளி, மற்று-பின்பு, மேல் நிலத்து நரகன் தன் உயிர் கொண்டது ஒரு வேல் கொடுத்து - முன்னொருகாலத்திலே பூமிதேவிபுத்திரனான நரகாசுரனது உயிரைக்கொண்டதாகிய ஒரு வேலாயுதத்தை (அருச்சுனனுக்கு)க் கொடுத்து, இதனில் வென்றிடுதி என்ற அளவில்-(இதனால் துரியோதனனைச்) சயித்திடுவாயென்று அருளிச்செய்தவளவிலே,—வானம் வச்சிரன் மகன்-தேவலோகத்திலுள்ள வச்சிராயுதபாணியான இந்திரனது புத்திரனாகிய அருச்சுனன், கடிது - விரைவாக, உவந்து - சந்தோஷித்து, பெரு வாழ்வு பெற்றனன் எனும் பரிவினன்-பெரிய செல்வவாழ்க்கையைப் பெற்றிட்டேனென்ற அன்பையுடையவனாய், தனது ஞான பத்தியொடு - தன்னுடைய தத்துவஞானத்தோடும் பக்தியோடும், எழுந்து—, வலம் வந்து -(கண்ணபிரானைப்) பிரதட்சிணஞ்செய்துவந்து, திரு நாள் மலர் பதம்வணங்கி-அழகிய அன்று மலர்ந்ததாமரைமலர்போன்ற (அப்பெருமானது) திருவடிகளை நமஸ்கரித்து, அது கொண்டனன்-அந்த வேற்படையைப் பெற்றுக்கொண்டான்; (எ - று.)

நரகனைக்கொன்றகதை:—திருமால் வராகாவதாரஞ்செய்து பூமியைக் கோட்டாற்குத்தியெடுத்தபொழுது அத்திருமாலின் பரிசத்தாற் பூமிதேவிக்குக் குமாரனாய்ப் பிறந்தவனும், அசமயத்திற் சேர்ந்து பெறப்பட்டவனாதலால் அசுரத்தன்மைபூண்டவனுமான நரகனென்பவன், பிராக்ஜ்யோதிஷமென்னும்பட்டணத்திலிருந்துகொண்டு, சகலபிராணிகளையும் மிகஉபத்திரவித்து, தேவர் சித்தர் கந்தருவர் முதலானவர்களுடைய கன்னிகைகளையும் ராஜாக்களுடைய கன்னிகைகளையும் பலரைப் பலாத்காரமாய் அபகரித்துக் கொண்டுபோய்த் தான் மணம்புணர்வதாகக்கருதித் தன்மாளி

கையிற் சிறைவைத்து, வருணன் குடையையும் மந்தரகிரிச்சிகரமான இரத்தினபருவதத்தையும் தேவர்கள் தாயான அதிதிதேவியின் குண்டலங்களையுங் கவர்ந்து போனதுமன்றி, இந்திரனுடைய ஐராவதயானையையும் அடித்துக்கொண்டு போகச் சமயம்பார்த்திருக்க, அஞ்சி வந்து பணிந்து முறையிட்ட இந்திரனது வேண்டுகோளினால், கண்ணபிரான் கருடனை வரவழைத்து, பூமிதேவியம்சமான சத்தியபாமையுடன் தான் கருடன்மேலேறி, அந்நகரத்தை அடைந்து சக்கராயுதத்தைப் பிரயோகித்து, அவன்மந்திரியான முரன் முதலிய பல அசுரர்களையும் இறுதியில் அந்நரகாசுரனையும் அறுத்துத் தள்ளியழித்திட்டனனென்பதாம். சக்கரப்படையால் நரகன் தலையைத் துணித்ததாகப் பாகவதம் முதலிய பலநூல்களிலும் கூறியிருக்கவும், இங்கு 'நரகன்ற னுயிர்கொண்டதொரு வேல்' என்றது, புராணாந்தர கல்பாந்தர கதைப்போக்கைப்பற்றிய தென்க. என்றளவில் - தொகுத்தல். பி - ம்: உந்தும். உயிர்கொன்றது. மானவச்சிரன். பெற்றனம். (486)

90.—அருச்சுனன் துரியோதனன் கவசத்தை பறித்தல்.

மாறுபட் டிவனையின்றுயிர்கவர்ந்துவிடின் மாமருத்தின்மகன்வஞ்சினமழிந்து
விடு, மூறுபட்டுவெருவும்படியெறிந்தமரி னோடுவிப்பதுபெருந்தகைமையென்று
கொடு, நூறுபட்டமகவின்றலைவனெஞ்சமிக நோதகக்கடிதெறிந்தனனெறிந்தளவில்,
நீறுபட்டதுபெருங்கவசம்வந்தவழி நேர்படத்திருகினன்சமரினின்றிலனே.

(இ-ள்.) 'இவனை-இத்துரியோதனனை, மாறுபட்டு-எதிர்த்து, இன்று-இப்பொழுது, உயிர் கவர்ந்துவிடின் - கொன்றுவிட்டால், மா மருத்தின் மகன் வஞ்சினம் அழிந்துவிடும் - சிறந்த வாயுதேவனுக்குக் குமாரனான வீமனது சபதம் தவறிப்போய்விடும்; (ஆதலால், இவனைக் கொல்லாமல்), ஊறுபட்டு வெருவும்படி-(இவன்) விரணப்பட்டு அஞ்சும்படி, எறிந்து-(இந்த வேலாயுதத்தைஇவன் மேல்) வீசி, அமரின் ஓடுவிப்பது - போரிலே (இவனைப்) புறங்கொடுத்தோடும்படிசெய்வது, பெருந் தகைமை - மேலான செய்கையாம்,' என்று கொடு - என்று எண்ணிக்கொண்டு, (அருச்சுனன்), நூறு பட்ட மகவின் தலைவன் நெஞ்சம் மிக நோதக-நூறென்னுந்தொகை பொருந்திய (திருதராட்டிர) புத்திரருள் தலைவனான துரியோதனனது மனம் மிகவும் வருந்தும்படி, கடிது எறிந்தனன் - வேகமாக (வேற்படையை அவன்மேல்) வீசினான்; எறிந்த அளவில் - (அங்ஙனம்) வீசியவளவிலே, பெருங் கவசம் - சிறந்த அந்தக்கவசமானது, நீறுபட்டது - பொடியாய் விட்டது: (உடனே துரியோதனன்), வந்த வழி நேர்பட திருகினன்-தான் வந்தவழியே நேராகத் திரும்பிப்போய்விட்டான்; சமரில் நின்றிலன்-போரில் (சிறிதும்) எதிர்நின்றானில்லை; (எ - று.) (487)

91.—அருச்சுனன் அசுவத்தாமனுதியரை வென்று ஓட்டுதல்.

ஆறு பத்திருப தைம்பதுபெ ரும்பகழி யாக விட்டுவரி வன்சிலையும் வெம்
பரிவு, மேறு பைத்தலைநெ டுந்துவச மும்புதிய வேழுதட்டிரத முந்துணிசெய்
தங்கருகு, சீறு தற்குவரு திண்குருவின் மைந்தனொடு தேர ருக்கன்மக னுஞ்சகுனி

யும்பலரும். வீறு கெட்டிருப தங்கொடுவி ரைந்துசெல மீள விட்டனன்மு னெண் டிசையும் வென்றவனே.

(இ - ள்.) எண் திசைஉம் முன் வென்றவன் - எட்டுத்திக்கி லுள்ளாரையும் முன்பு சயித்தவனான அருச்சுனன்,—பெரும் பகழி-சிறந்த அம்புகளை, ஆறு பத்து-அறுபதும், இருபது - இரு பதும், ஐம்பது ஆக-ஐம்பதுமாக, விட்டு-செலுத்தி, (அவற்றால் துரியோதனனது), வரி வல் சிலைஉம்-கட்டமைந்த வலிய வில்லை யும், வெம் பரிஉம் - கொடிய குதிரைகளையும், பை தலை ஏறு நெடுந் துவசம்உம் - படத்தையுடைய தலையையுடைய பாம்பின் வடிவம் ஏறியிருக்கப்பெற்ற பெரிய கொடியையும், புதிய ஏழு தட்டு இரதம்உம்-ஏழுதட்டுக்களையுடையபுதுமையான தேரையும், துணிசெய்து - துண்டுபடுத்தி,—அங்கு-அப்பொழுது, அருகு - அவனருகிலே, சீறுதற்கு வரு-(தன்னோடு) கோபித்துப் பொரு தற்கு வந்த, திண் குருவின் மைந்தனொடு - வலிய துரோணாசாரி யனுக்குப் புத்திரனான அசுவத்தாமனும், தேர் அருக்கன் மகன் உம்-(சிறந்த) தேரையுடைய சூரியனுக்குப் புத்திரனான கர்ணனும், சகுனியும்—, பலர் உம்-மற்றும் பல அரசர்களும், வீறு கெட்டு- பராக்கிரமமழிந்து, இருபதம் கொடு விரைந்து செல - (தேரழிந்த தனால் தங்கள்) இரண்டு கால்களைக் கொண்டே வேகமாக ஓடிப் போம்படி, மீள-மறுபடியும், விட்டனன் - (அவர்கள்மேல் அம்பு களைச்) செலுத்தினான்; (எ - று.)

அருச்சுனன் துரியோதனனது கவசத்தைப்பிளந்து வலி யழித்ததனைக் கீழ்க்கவியிற் கூறி, இக்கவியில் அவனது வில் குதிரை கொடி தேர்களை அழித்து அவனுக்குத் துணைவராய்வந்த பலரையும் வென்று துரத்தினமையைக் கூறினார். இப்பாட்டில், துரியோதனனது வில் முதலியவற்றைத் துணித்ததாகக் கூறி னது, கீழ்ப்பாட்டிற் சொன்னபடி அவன் புறங்கொடுத்தோடு தற்கு முன்பு நிகழ்ந்த செய்கையை அநுவாதத்தாற் கூறியதாம்: அன்றி, வில் முதலியவற்றை அருச்சுனன் துணித்தவுடனே துரி யோதனன் மீண்டானென்ற செய்கையை **முறையிலுயர்வுநவிற்சியணி** பட 'முன்பு துரியோதனன் திருகினன் : பின்பு வில் முதலிய வற்றை அருச்சுனன் துணிசெய்தனன்' என்று கூறினரு மாம். பொருதலென்ற காரியத்தை, சீறுதல் என்ற காரணத்தினாற் குறித்தது, உபசாரவழக்கு. (488)

வேறு.

92.—மூன்றுகவிகள்-பலரும் அருச்சுனன்முன் அழிதலைக் கூறும்.

வேர்த்தெதிர் விசயன் வென்றக ளத்தி
லார்த்தெதிர் வந்தா ரார்கொல்பி ழைத்தார்
ஏத்திய பதினெண் பூமியி னெண்ணும்
பார்த்திவர் பற்பல் லாயிரர் பட்டார்.

(இ - ள்.) விசயன்-அருச்சுனன், வேர்த்து-கோபங்கொண்டு, எதிர் வென்ற-எதிர்த்துச் சயித்த, களத்தில்-போர்க்களத்திலே, ஆர்த்து எதிர் வந்தார்-ஆரவாரஞ்செய்துகொண்டு அவனெதிரில் வந்தவர், ஆர்கொல் பிழைத்தார்-யாவர் பிழைத்தவர்? ஏத்திய - சிறப்பித்துச்சொல்லப்படுகிற, பதினெண் பூமியின்-சிங்களம் முதலிய பதினெட்டுநாடுகளிலுமுள்ள, எண்ணும் - நன்குமதிக்கப்படுகிற, பார்த்திவர்-அரசர்கள், பல்பல் ஆயிரர்-பலபல ஆயிரம்பேர், பட்டார்-அழிந்தார்கள்; (எ - று.)

இது முதல் ஆறு கவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் மூன்றாஞ்சீரும் விளச்சீர்களும், மற்றையிரண்டும் மாச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (489)

93\. தம்பியருந்துச்சாதனன்முதலோ
ரம்பிலழிந்துதமாருயிருய்ந்தார்
எம்பெருமானன்றெரிகணையேவ
'வம்பரமுற்றதனைவருமுற்றார்.

(இ - ள்.) துச்சாதனன் முதலோர்-துச்சாசனன் முதலியவர்களான, தம்பியர்உம்—, அம்பில் அழிந்து-அருச்சுனனம்புகளால் வலியழிந்து, தம் ஆர் உயிர் உய்ந்தார்-(அரிதில் தப்பித்) தங்களுடைய அரிய உயிர் பிழைத்தார்கள்; அனைவர்உம் - மற்றும்எல்லாரும், எம்பெருமான் அன்று எரி கணை ஏவ அம்பரம் உற்றது உற்றார்-எமது தலைவனான திருமால் அந்நாளில் [முன்பு ஒருகாலத்தில்] ஆக்நேயாஸ்திரத்தைப் பிரயோகிக்க (அதனால்) கடல் பட்டபாட்டை யடைந்தார்கள்; (எ-று.)—திருமாலின் திருவவதாரமான இராமபிரான் இலங்கைக்குச் செல்லும்போது அடங்கியொழுகாத கடலின் செருக்கை யடக்குதற்கு ஆக்நேயாஸ்திரந் தொடுக்கத் தொடங்கவே கடலரசன் தவிப்படைந்து அடங்கியொடுங்கினனென்க. (490)

94\. மாரதர்வீழ்ந்தாரதிரதர்மாய்ந்தார்
சாரதிகளும்வன்றலைகளிழந்தார்
நாரதன்முதலோர்நாகரநேகர்
பாரதமின்றேபற்றறுமென்றார்.

(இ-ள்.) (அப்பொழுது அருச்சுனனா லழிக்கப்பட்டு), மாரதர்-மகாரத வீரர்கள், வீழ்ந்தார்-(இறந்து) கீழ்விழுந்தார்கள்; அதிரதர்-அதிரதவீரர்கள், மாய்ந்தார்-இறந்தார்கள்; சாரதிகள்உம்-தேர்ப்பாகர்களும், வல் தலைகள் இழந்தார்-வலிய (தம்தம்) தலைகளையிழந்தார்கள்; நாரதன் முதலோர் நாகர் அநேகர் - (வானத்தில் நின்று போர்விநோதம் பார்த்துக்கொண்டிருந்த) நாரதன் முதலிய தேவர்கள்பலரும், பாரதம் இன்றுஏ பற்று அறும் என்றார்-பாரதயுத்தம் இன்றைக்கே முற்றமுடிந்திடுமென்றுசொல்பவரானார்கள்.

பாரதம்-பரதவம்சத்தாருள் நிகழும் போர். வீழ்ந்தார், மாய்ந்தார், தலைகளிழந்தார்-பொருட்பின்வருநிலையணி. (491)

95.—கவிக்கூற்று: வேறுசெய்தி கூறத்தொடங்குவோமெனல்.

இந்தவயப்போரிம்முறைவென்று
பைந்துளவோனும்பார்த்தனுமாகச்
சிந்துமகீபற்றேடிமணித்தே
ருந்துறுமெல்லையுற்றதுரைப்பாம்.

(இ - ள்.) இந்த வய போர் - இந்தவலியபோரிலே, இ முறை வென்று - இந்தவிதமாய்(ப் பகைவரை)ச் சயித்து, பைந் துளவோன்உம் பார்த்தன்உம் ஆக - பசுநிறமான திருத்துழாய்மாலையையுடைய கண்ணனும் அருச்சுனனுமாக, (இவ்விருவரும்) சிந்து மகீபன் தேடி - சிந்துநாட்டரசனான சயத்திரதனைத் தேடிக்கொண்டு, மணி தேர் உந்துறும் எல்லை - மணிகள் கட்டிய தேரைச் செலுத்துமளவில், உற்றது - நடந்த வேறொரு செய்தியை, உரைப்பாம் - இனிச்சொல்வோம்; (எ - று.)—அதனை, மேல் 59 - கவிகளிற் காண்க. (492)

96.—கண்ணனது சங்கொலிகேட்டதும் தருமன் கலங்குதல்.

வள்ளல்குறித்தவலம்புரிநாதத்
தெள்ளமுதந்தன்செவியுறுபோழ்தின்
உள்ளணிநின்றமுரசமுயர்த்தோன்
றள்ளுறுநெஞ்சிற்சங்கையனானான்.

(இ - ள்.) வள்ளல் - (அடியார்கட்கு) வரையாமல் அருள்செய்யுந்தன்மையனான கண்ணபிரான், குறித்த - (முன்பு) ஊதிமுழக்கின, வலம்புரி - சிறந்த சங்கத்தினது, நாதம் - ஓசையாகிய, தெள் அமுதம் - தெளிவான அமிருதம், தன் செவி உறு போழ்தின் - தனது காதிற் பட்டவுடனே,—உள் அணி நின்ற முரசம் உயர்த்தோன் - உள்ளணி மத்தியில் நின்ற தருமபுத்திரன், தள்ளுறு நெஞ்சில் சங்கையன் ஆனான் - சஞ்சலப்படுந்தன்மையுள்ள (தன்) மனத்திற் சந்தேகங்கொண்டவனானான்; (எ - று.)

"அதிஸ்நேஹ: பாபஸங்கீ" என்றபடி அருச்சுனன்பக்கல் தனக்கு உள்ள மிக்க அன்பினால் 'அவனுக்கு என்ன தீங்கு வருமோ!' என்று தருமபுத்திரன் சங்கொலிகேட்டவளவிலே சங்கையுற்றனனென்க. அருச்சுனன் சபதத்தை நிறைவேற்றி உயிருய்தலைக்குறித்துத் தருமபுத்திரன் கவலைகொண்டிருக்குமளவிலே சங்கொலிகேட்டதனால் "புண்ணிற் புளிப்பெய்தாற்போல்" கலக்கத்தின்மேற் கலக்கமுற்றனனென்றுங் கொள்க. (493)

97.—தருமன் சாத்தகியை அருச்சுனனுக்குத் துணைசெல்லச் சொல்லுதல்.

தன்றுணை நின்ற சாத்தகி யைக்கூய்
வென்றிடு போரில் விசய னினைத்தா
லன்றிமு ழக்கா னதிர்வளை யையன்
சென்றறி குதிநீ யென்றுரை செய்தான்.

(இ - ள்.) (இங்ஙனம் சங்கைகொண்ட தருமபுத்திரன்),— தன் துணை நின்ற சாத்தகியை கூய் - தனக்குத்துணையாகநின்ற சாத்தகியை அழைத்து,—(அவனைநோக்கி),—'வென்றிடு போரில் -சயித்திடுதற்குரிய யுத்தத்திலே, விசயன் இளைத்தால் அன்றி - அருச்சுனன் இளைப்படைந்தா லல்லாமல், ஐயன் - தலைவனான கண்ணபிரான், அதிர்வளை முழக்கான்-அதிர்ச்சியுண்டாக்கவல்ல சங்கத்தை ஊதி ஒலிசெய்யமாட்டான்; (ஆதலால்), நீ—, சென்று- (அவர்களுள்ள இடத்துக்குப்) போய், அறிகுதி - (நிகழ்ந்தசெய்தியை) அறிவாய்,' என்று—, உரைசெய்தான் - சொன்னான்;

'அதிர்வளைமுழக்கான்' என்ற சொற்போக்கினால், வெற்றிக்கு அறிகுறியாகிற சங்கொலிக்கும், இளைப்புக்கு அறிகுறியாகிற சங்கொலிக்கும் வேறுபாடறிந்து கூறினானென்னலாம். யதுகுலத்தரசர்களில் வசுதேவனுக்கு உடன்பிறந்தமுறையாகிறவனும் சினியென்பவனது மகனுமான சத்தியகனதுகுமாரனாகிய சாத்யகி,பிராயத்திற் கண்ணனினும் இளையவனாதலால், கண்ணனுக்குத் தம்பிமுறையாவன். ஸாத்யகிஎன்னும் வடமொழித்தத்திதாந்த நாமம், திரிந்தது. இவன், அருச்சுனனிடம் வில்வித்தையைக் கற்றறிந்த மாணக்கனாதலால், ஆசிரியனாகிய அருச்சுனனிடத்தும் அதுசம்பந்தமாக மற்றைப்பாண்டவரிடத்தும் அன்போடு ஒழுகுவன் (494)

வேறு.

98.—அதற்குச் சாத்தகி இஷ்டத்தோடு உடன்படுதல்.

வன்கட் டிண்டோண் மன்பலர் நிற்க
வென்கட் டந்தா னின்னுரை யென்னு
மன்கட் டாரோன் மலரடி வீழ்ந்தான்
றன்கட் டாண்மைத் தன்முனொ டொப்பான்.

(இ-ள்.) 'வன்கண் - வலியதன்மையையும், திண் தோள் வலிய தோள்களையுமுடைய,மன் பலர்-அரசர்கள் பலர்,நிற்க-(தன் அருகிற்) காத்துக்கொண்டிருக்கவும், (தருமபுத்திரன் அவர்களில் ஒருவர்க்கும் இக்கட்டளையையிடாமல்), இன் உரை-இனிய(இவ்) வார்த்தையை, என்கண் தந்தான் - என்னிடத்திற் கூறினான்,' என்னு-என்றுஎண்ணி,(மகிழ்ச்சிகொண்டு),--தன் கட்டு ஆண்மை தன்முனொடுஒப்பான்-தனதுவலிய பராக்கிரமத்தில் தனதுதமையனான கண்ணபிரானோடு ஒப்பவனான அந்தச்சாத்தகி,—மன் கள் தாரோன் மலர் அடி வீழ்ந்தான் - மிகுதியான தேனுள்ள பூமாலையையுடைய தருமபுத்திரனது தாமரைபோன்ற பாதங்களில் நமஸ்கரித்தான்; (எ - று.)

இப்பொழுது நமஸ்கரித்தது, விடைபெற்றுச் செல்லுகையிற் செய்யும் உபசாரமென அறிக. என்கண் தந்தான் - தருதல்வினை தன்மைக்கு வந்தது. பி - ம்: இவ்வுரை.

இக்கவி - மூன்றுஞ்சீரொன்று விளச்சீரும், மற்றைமூன்றும் மாச்சீர்களுமாகிய அளவடிநான்கு கொண்ட கலிவிருத்தம். (495)

வேறு.

99.—சாத்தகி அருச்சுனனுற்றலைத் தருமனுக்குக் கூறுதல்.

கண்ணுற நில்லார் கடவுளர் முதலாம்
விண்ணவ ரேனும் விசயன் வெகுண்டான்
மண்ணிலெ திர்க்கு மன்னவர் யாரோ
தண்ணளி நெஞ்சுந் தருமமு மிக்கோய்.

இதுவும் அடுத்த கவியும்-ஒருதொடர்.

(இ - ள்.) 'தண் அளி நெஞ்சு உம்-குளிர்ந்த கருணையுள்ள மனமும், தருமம் உம் - அறச்செய்கையும், மிக்கோய் - மிகுந்த யுதிட்டிரனே! விசயன் வெகுண்டால்-அருச்சுனன் கோபங்கொண்டால், கடவுளர் முதல் ஆம் விண்ணவர் ஏன் உம் - தேவர்கள் முதலான வானுலகத்தவர்களேயாயினும், கண் உற நில்லார் - அவன் கண்ணுக்கு எதிராக நிற்கவும் மாட்டார்கள்; (அங்ஙனமிருக்க), மண்ணில் எதிர்க்கும் மன்னவர் யாரோ - இப்பூலோகத்தில் (அருச்சுனனை) எதிர்க்கவல்ல அரசர் எவரோ? [எவருமில்லை];

அருச்சுனனை எதிர்க்கவல்லார் தேவரிலுமில்லை யென்றதனால் மனிதரிலில்லை யென்பது எளிதிற் சாதிக்கப்பட்டமையால், இது - **தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி.** கடவுளரென்றது-தேவர்களைக் குறிப்பதென்றும், விண்ணவ ரென்றது - அவரினத்தவரான யக்ஷர் கந்தருவர் வித்தியாதரர் கிந்நரர் கிம்புருஷர்முதலிய கணங்களை யுளப்படுத்திய தென்றும் கொள்க; இனி, 'கடவுளர் முதலாம் விண்ணவர்' - திரிமூர்த்திகள் முதலான தேவர்கள் என்றுமாம். ஐந்துகவிகள், 92-ஆங் கவிபோன்ற **கலிவிருத்தங்கள்.**

100.—சாத்தகி தருமன்கட்டளைப்படி செல்லுதல்.

என்றறன்மைந்தனேவறலைக்கொண்
டன்றொருதேர்மேலதிரதரோடுஞ்
சென்றனன்வெய்திற்றேவகிமைந்தன்
றுன்றியசெருவிற்றூசிபிளந்தே.

(இ - ள்.) என்று-என்று (தருமபுத்திரனுக்குத் தைரியஞ்) சொல்லி,—தேவகிமைந்தன் - தேவகியின்மகனான சாத்தகி,— அறன் மைந்தன் ஏவல் தலைக்கொண்டு-தருமபுத்திரனதுகட்டளையைத் தலைமேற்கொண்டு,—அன்று-அப்பொழுது, ஒரு தேர்மேல் -ஒப்பற்றதொரு தேரின்மேலே, அதிரதரோடுஉம்-(பல) அதிரத வீரர்களுடனே,—துன்றிய செருவில் தூசி பிளந்து - நெருங்கிய போரிற் (பகைவரது) முற்படையை(த் தனது ஆயுதங்களினாற்) பிளந்து கொண்டு, வெய்தின் சென்றனன்-விரைவாகச்சென்றான்;

தேவகி - வசுதேவனது மனைவி; கண்ணனைப்பெற்ற தாய். சத்தியகனதுபுத்திரனான சாத்தகியை 'தேவகிமைந்தன்'என்றது- நற்குணநற்செய்கைகளிற் சிறந்த அத்தேவகி, தனது அருமைத் திருமகனான கண்ணனிடம் பேரன்புடையவனும் அவனுக்குத் தம்பிமுறையாகின்றவனுமான சாத்தகியினிடம் புத்திரவாஞ்சை

வைத்திருந்தன ளென்பதுபற்றி யென்க. இனி, தேவகிமைந்தன் கண்ணன் எனவேகொண்டு, சாத்தகிஎன எழுவாய் வருவிப் பினுமாம். (497)

101.—சாத்தகி கிருதவன்மனைத் தோற்பித்தல்.

விருதொடுமுந்தவிளங்கியகொற்றக்
கிருதனையாதிக்கேழலொடொப்பான்
ஒருதனுவுங்கொண்டூர்பரிமாவு
மிரதமும்வில்லுமிமைப்பிலழித்தான்.

(இ - ள்.) ஆதி கேழலொடு ஒப்பான் - ஆதிவராகமூர்த்தியோடு ஒப்பவனான சாத்தகி,—விருதொடு-பிருதாவளிகளுடனே, முந்த விளங்கிய-முற்பட [எதிரிலே] சிறப்பாகக்காணப்பட்ட, கொற்றம்-வெற்றியையுடைய, கிருதனை-கிருதவன்மாவை,—ஒரு தனுஉம் கொண்டு-தனது ஒருவில்மாத்திரத்தைக் கொண்டு,—ஊர் பரிமாஉம் இரதம்உம் வில்லுஉம் இமைப்பில் அழித்தான்-தேரை நடத்திக்கொண்டு விரைந்துசெல்லுகிற குதிரைகளும் தேரும் வில்லும் கண்ணிமைப்பொழுதிலே அழியச்செய்தான்;

'ஆதிக்கேழல்'-விஷ்ணுவின் அம்சமான வராகமூர்த்தி: அப் பெருமான் சிறிதும்சிரமமில்லாமற் பெரியஉலகமுழுவதையும் எளிதில்தாங்கும் வல்லமையுடையனா யிருப்பதுபோல எப்படிப் பட்ட பெரும்போரையும் அலட்சியமாகத் தாங்கும் ஆற்றலுடையவன் என்பார், 'ஆதிக்கேழலொடொப்பான்' என்றார். (498)

102.—பலரையும் அழித்துவந்த சாத்தகியைச் சலசந்தன் எதிர்த்தல்.

பன்மகநூருயிரவர்பரித்தே
ரன்மிகநூருயிரவரழிந்தார்
மன்மதவெங்கைமலைமிசைவீரன்
றன்முன்மலைந்தான்றார்ச்சலசந்தன்.

(இ - ள்.) பரி தேரன்-குதிரைகள்பூண்ட தேரையுடைய சாத்தகி, மிக - மேலிட்டுவருதலால்,— நூறு - பகையழிக்குந்தன்மையுள்ள, மக பல் ஆயிரவர்-பல ஆயிரக்கணக்கான கண்ணன்மக்களும், நூறுயிரவர் - லக்ஷக்கணக்கான மற்றைவீரர்களும், அழிந்தார் - சிதைந்தார்கள் ; (இங்ஙனம் சிதைகையில்), தார் சலசந்தன் - போர்மாலையையுடைய சலசந்தனென்னும் அரசன், மன் மதம் வெம் கை மலைமிசை-மிகுதியானமதத்தையும் கொடிய துதிக்கையையு முடைய மலைபோன்றயானையின்மேலே (வந்து), வீரன் தன் முன் மலைந்தான் - வீரனான அச்சாத்தகி முன்னே பொருதான்; (எ - று.)

கண்ணன்மக்களையே சாத்தகியின் மக்கள்போலக் கூறியது, தமையன் பிள்ளைகளிடம் அவனுக்குஉள்ள உரிமையினா லென்க. மன்மதவெங்கைமலை - பிறகுறிப்பு. பி - ம்: பன்முகநூறுயிரவர்.

103.—சலசந்தன் சாத்தகியின்முன் ஒடுங்குதல்.

தார்ச்சல சந்தன் சாத்தகி யென்னுங்
கார்ச்செல வாய கணைமழை யாலே

போர்ச்சல மில்லாப் புகர்மலை யோடு
மேற்சல மெய்தி வெங்கன லானான்.

(இ - ள்.) தார் - போர்மாலையையுடைய, சலசந்தன் - அந்தச் சலசந்தனானவன், — சாத்தகி என்னும் கார் செலவு ஆய - சாத்தகியென்கிற மேகத்தினின்று வெளிப்பட்டுவந்தனவான, கணை மழையால் - பாணவர்ஷத்தால், — போர் சலம் இல்லா புகர் மலையோடு - போரிற்கலங்குதலில்லாத முகச்செம்புள்ளிகளையுடைய மலைபோன்ற யானையுடனே, மேல் சலம் எய்தி - மிக்ககலக்கத்தையடைந்து, வெம் கனல் ஆனான் - வெவ்வியநெருப்புப்போன்றவனானான்; (எ - று.)

சலசந்தனிடத்து நெருப்பின் தன்மையையும், அவன்யானையினிடத்து மலையின் தன்மையையும், சாத்தகியினிடத்து மேகத்தின் தன்மையையும், அவன் பிரயோகிக்கிற அம்புத்தொகுதியினிடத்து அம்மேகம் சொரிகிற மழையின் தன்மையையும் ஏற்றிக்கூறினார்; உருவகவணி. 'மேற்சலமெய்து வெங்கனலானான்' என்றபாடம் மேலே நீர்வந்துவிழப்பெற்ற கடுநெருப்புப்போலாயினானென இனிதுபொருள்படும். (500)

வேறு.

104.—துரியோதனன் தம்பியர் நால்வரைச் சாத்தகி வெல்லுதல்.

நாட்ட மில்லா நரபதி மைந்த
ரீட்ட மாக வீரிரு வோர்கள்
கூட்டம் பெய்யக் கொடுமுனை வென்றான்
வேட்டம் போன வெங்களி றொப்பான்.

(இ - ள்.) நாட்டம் இல்லா நரபதி மைந்தர் - கண்களில்லாத அரசனான திருதராஷ்டிரனது புத்திரர்கள், ஈர்இருவோர்கள் - நாலுபேர், ஈட்டம் ஆக - ஒருதிரளாக (வந்து), கூட்டு அம்பு எய்ய - தொகுதியாகப் பாணங்களைப் பிரயோகிக்க, — வேட்டம் போன வெம் களிறு ஒப்பான் - வேட்டையாடச் சென்ற கொடிய ஆண்யானையைப் போன்றவனான சாத்தகி, கொடு முனை வென்றான் - கொடிய (அவர்கள்) போரைச் சயித்தான்; (எ - று.)

கூட்டு அம்பு எய் அ கொடு முனை என்று பிரித்து, தொகுதியான அம்புகளை யெய்கிற அந்தக் கொடியபோர்க்களத்து என்றுமாம். பி-ம்: நாட்டமிலாத. ஈட்டமதாக.

இதுவும், அடுத்தகவியும், 98 - ஆங்கவிபோன்ற கலிவிருத்தங்கள். (501)

105.—இங்ஙன்பொருதுசெல்லுஞ் சாத்தகியைத் துரோணன் பார்த்தல்.

யாரும் போரி லெளிவர வீரஞ்
சாருஞ் சாபந் தன்னொடு நேமித்
தேருந் தானுஞ் சென்றிடு வோனைக்
கூருஞ் சாபக் குருவெதிர் கண்டான்.

(இ - ள்.) யார்உம் போரில் எளிவர - (தன்னையெதிர்ப்பவர்) எல்லாரும் யுத்தத்தில் எளிமையடையும்படி, வீரம் சாரும் சாபந் தன்னொடு-போர்த்திறம் பொருந்திய வில்லுடனே, நேமி தேர்உம் தான்உம் சென்றிடுவோனை - சக்கரவலிமையுள்ள தேரும் தானுமாக (த் தடையறச்) செல்பவனான சாத்தகியை, கூரும் சாபம் குரு-மிக்கவில்வித்தையில்வல்ல துரோணாசாரியன், எதிர் கண்டான்—; (எ - று.)—பி-ம்: ஆரும்போரிலழிதர. (502)

வேறு.

106.—துரோணன் போர்க்குஅழைக்க, சாத்தகி மறுமொழிகூறல்.

ஏக லேகலென னுடனினி யமர்புரிந் தேகென்
ஆகு லம்படத் தகைந்தன னடற்சிலை யாசான்
மேக வண்ணனுக் கிளவலும் வேதிய ருடன்போர்
மோக ரிப்பது தகுதியன் றெனக்கென மொழிந்தான்.

(இ - ள்.) 'ஏகல் ஏகல்-போகாதே போகாதே; இனி - இப்பொழுது, என்னுடன் அமர் புரிந்து-என்னோடு போர் செய்தே, ஏகு-(பின்பு அப்பாற்) செல்,' என்று - என்றுசொல்லிக்கொண்டு, ஆகுலம் பட-ஆரவாரமுண்டாக, அடல் சிலை ஆசான்-வலிய வில்லாசிரியனான துரோணன், தகைந்தனன் - (சாத்தகியைத்) தடுத்தான்; (அப்பொழுது), மேகவண்ணனுக்கு இளவல்உம் - மேகம் போன்ற திருநிறமுடையனான கண்ணனுக்குத் தம்பியாகியசாத்தகியும், 'வேதியருடன் போர் மோகரிப்பது-பிராமணருடனே கொடுமையாகப்போர்செய்வது, எனக்கு தகுதி அன்று—,'என மொழிந்தான்-என்றுசொன்னான்; (எ-று.)

இங்ஙனம் உபசாரமாகக்கூறிய சாத்தகிவார்த்தையில், 'நீ உன்சாதிக்கு இயல்பில்உரியதல்லாத போர்த்தொழிலை மேற்கொண்டாயாயினும், க்ஷத்திரிய தருமந்தவறாதவனான யான் துணிவுடையேனல்லேன்' என்ற இகழ்ச்சியுந்தோன்றும்.

இதுமுதற் பதினைந்து கவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களும், மற்றைமூன்றும் விளச்சீர்களு மாகிய **கலிநிலைத்துறைகள்.** (503)

107.—இருவரும் பொருது இளைத்தல்.

இருவருந்தமதிருசிலையெதிரெதிர்குனித்தார்
இருவருங்கொடும்பகழியுமுறைமுறையெய்தார்
இருவருந்தமதேர்சிலையாவையுமிழந்தார்
இருவரும்பெரும்பொழுதமர்திளைத்தனரிளைத்தார்.

(இ-ள்.) இருவர்உம்-(துரோணன் சாத்தகி யென்ற) இரண்டு பேரும், தமது இரு சிலை - தம்வில்இரண்டையும், எதிர் எதிர் குனித்தார்-(ஒருவர்க்கொருவர்) எதிரிலே வளைத்தார்கள்; இருவர் உம்—, கொடும்பகழிஉம்-கொடிய அம்புகளையும், முறை முறை எய்தார் - (ஒருவர்மேல்ஒருவர்) மாறிமாறிப் பிரயோகித்தார்கள்;

இருவர்உம்—, தம் தேர் சிலை யாவைஉம் இழந்தார்-(தங்களுடைய) தேர் வில் முதலியனஎல்லாவற்றையும் (அப்போரில்எதிரம்புகளால்) இழந்தார்கள்; இருவரும்—, பெரும்பொழுது அமர் இளைத்தனர்-நெடு நேரம் இடைவிடாது போர்செய்து, இளைத்தார்—; (எ - று.)

துரோணன் விடாது போர்தொடங்கியதனாற் சாத்தகியும் எதிரம்பு தொடுக்கவேண்டியதாயிற்று. பி-ம்: பகழிகளெதிரெதிர். அமர்விளைத்தனர். (504)

108.—சாத்தகி இளைப்புத்தீர்ந்து அப்பாற்செல்லுதல்.

இளைத்துவேதியனிற்பமன்னவனிளைப்பாறி
யுளைத்தடம்பரித்தேருமற்றொன்றுமேல்கொண்டு
வளைத்தவில்லொடுமன்னணிகலக்கிமேல்வருவோன்
கிளைத்தபல்பெருங்கிரணனில்வயங்கொளிகிளர்ந்தான்.

(இ-ள்.) வேதியன்-முனிவனாகிய துரோணன், இளைத்து நிற்ப - சோர்ந்துநிற்கையில்,—மன்னவன் - அரசனாகிய சாத்தகி, இளைப்பு ஆறி - சோர்வுதீர்ந்து, உளை தட பரி தேர்உம் மற்று ஒன்று மேல்கொண்டு - பிடரிமயிரையுடைய பெரியகுதிரைகள் பூட்டிய வேறொருதேரி லேறி, வளைத்த வில்லொடுஉம்-(கையில்) வளைத்துப்பிடித்த (வேறொரு) வில்லுடனே, மன் அணி கலக்கி - பெரிய (பகைவர்)சேனையைக் கலங்கச்செய்துகொண்டு, மேல் வருவோன் - மேலிடத்து வருபவனாய்,—கிளைத்த பல் பெருங் கிரணனில் - நிறைந்துபெருகிய அநேகமான பெரியஒளிகளையுடைய சூரியன் போல, வயங்கு ஒளி கிளர்ந்தான் - (இயல்பிலே) விளங்குகிற தேககாந்தி மிக்குத் தோன்றினான்; (எ - று.)

கிரகணம் பிடிக்கப்பட்ட சூரியன் அதனினின்று மீண்டபின்பு மிக்குவிளங்கி இருளையழித்துக்கொண்டு மேற்செல்லுமாறுபோல, இளைப்படைந்த சாத்தகி அவ்விளைப்புத்தணிந்தவுடன் பகைவர் சேனையைக் கலக்கிக்கொண்டு விசேஷகாந்திவிளங்க மேற்சென்றனனென்று கருத்துக்கொள்க. (505)

109.—துச்சாசனன் சேனையுடன் சாத்தகியை யெதிர்த்துத் தோற்றல்.

யானைதேர்பரிவீரரீரொன்பதுநிலத்துத்
தானையோடுதுச்சாதனனடுத்தெதிர்தடுத்தான்
சோனைமேகமொத்திவன்பொழிதொடைகளாற்கலங்கிப்
பூனைபோலழிந்திருபதஞ்சிவந்திடப்போனான்.

(இ - ள்.) யானை-யானைகளும், தேர் - தேர்களும், பரி-குதிரைகளும், வீரர் - காலாள்வீரர்களும் ஆகிய, ஈர்ஒன்பது நிலத்து தானையோடு - பதினெட்டுத் தேயங்களினின்றும் வந்த சதுரங்க சேனைகளுடனே, துச்சாதனன்—, எதிர் அடுத்து -எதிரிலேவந்து நெருங்கி, தடுத்தான் - (சாத்தகியைத்) தடுத்து, சோனை மேகம் ஒத்து இவன் பொழி தொடைகளால் கலங்கி - விடாப்பெருமழை பொழியும் மேகம்போன்று இச்சாத்தகி சொரிந்த அம்புகளினால் மாறுநிலைகலங்கி, அழிந்து - தோற்று, இரு பதம் சிவந்திட -

(தனது) இரண்டுகால்களும் சிவக்க, பூனைபோல் போனான் - பூனை போல (ஒடுங்கித் தந்திரமாகத் தப்பியோடி)ச் சென்றான்;(எ - று.)

110.—சாத்தகி பலரையும் வென்று அருச்சுனனைச் சார்தல்.

இடையில்வந்துவந்தெதிர்த்தவர்யாரையுங்கடந்து
புடைவருந்தனதனீகினிநிழலெனப்போதத்
தடையறும்படிதருக்குடன்சார்பெரும்பருவ
விடைநடந்தெனநடந்தனன்விசயனின்றுழியே.

(இ - ள்.) (இங்ஙனந் துச்சாதனனை வென்ற சாத்தகி),— இடையில் வந்து வந்து எதிர்த்தவர் யாரைஉம் கடந்து - நடுவிலே மிகுதியாகவந்து எதிர்த்தவர்களெல்லாரையும் வென்று,—புடை வரும் தனது அனீகினி நிழல் என போத - பக்கங்களிலேவருகிற தனதுசேனை நிழல்போல விடாமல்தொடர்ந்துவர,—தடை அறும் படி - தடையில்லாமல், தருக்குடன் சார் பெரும் பருவம் விடை நடந்து என - களிப்போடு பொருந்திய சிறந்த காளைப்பருவத்தை யுடைய எருது சென்றாற்போல, விசயன் நின்ற உழிநடந்தனன் - அருச்சுனனுள்ள இடத்திற் சென்றான்; (எ - று.)—அநீகம் - குதிரைமுதலியவற்றின் கூட்டம்: அதனையுடையது அநீகிநீ. (507)

111, 112.—இவ்விரண்டுகவியும்-குளகம்: பின்பு தருமன் வீமனையும் ஏவுதலைத் தெரிவிக்கும்.

பின்னருங்கொடிமுரசுடைப்பெருந்தகைவருந்தி
முன்னநின்றவாயுவின்மகன்முகனுறநோக்கி
மன்னரெண்படுவருதினிவாரியினுப்ப
னென்னராயினரும்பியுமெம்பெருமானும்.

தகலருந்திறற்சாத்தகிதன்னையும்விடுத்தேம்
பகலுமேற்றிசைப்பட்டதுபாஞ்சசன்னியமும்
புகலுகின்றதுபோர்முகத்ததிர்குரல்பொம்ம
லிகல்வலம்படநீயுமங்கேகுதியென்றான்.

(இ - ள்.) (111) பின்னர்உம் - (சாத்தகியை யனுப்பின) பின்பும்,—கொடி முரசு உடை பெருந்தகை - துவசத்திலே முரசவாத்தியவடிவத்தையுடைய பெருமைக்குணமுள்ளவனான தருமபுத்திரன்,—வருந்தி - (அருச்சுனன்விஷயத்திலுண்டான சங்கையால் முன்போல) வருத்தமடைந்து,—முன்னம் நின்ற வாயுவின் மகன் முகன் உற நோக்கி - (தன்) எதிரில்நின்ற வாயுகுமாரனான வீமசேனனுடைய முகத்தை அன்புபொருந்தப் பார்த்து,—'மன்னர் எண் படு வருதினி வாரியின் நாப்பண் - அரசர்களுடைய பெருந்தொகைபெற்ற சேனையாகிய கடலின் நடுவிலே, உம்பிஉம் எம் பெருமான்உம் - உனதுதம்பியான அருச்சுனனும் எமது தலைவனான கண்ணபிரானும், என்னர் ஆயினர் - எத்தன்மையரானார்களோ? (112) தகல் அருந்திறல் சாத்தகி தன்னைஉம் விடுத்தேம்- தகுதியுள்ள அருமையான வலிமையையுடைய சாத்தகியையும் யாம் அனுப்பினோம்: பகல்உம் மேல் திசை பட்டது - சூரியனும்

மேற்குத்திக்கிற் சாயலுற்றது: பாஞ்சன்னியம்உம்- (கண்ணனது) சங்கமும், போர்முகத்து- யுத்தகளத்திலே, அதிர் குரல்-அதிர்ச்சி யுண்டாக்குகிற பெருமுழக்கத்தை, பொம்ம புகலுகின்றது-மிகுதி யாக ஒலிக்கின்றது; இகல் வலம் பட-போரில் வெற்றியுண்டாக, நீஉம் அங்கு ஏகுதி-நீயும் அவ்விடத்திற்குச் செல்வாய்',என்றான்- என்று கட்டளையிட்டான்; (எ-று.)

தருமபுத்திரன், சாத்தகியைத் துணையனுப்பினபின்பும், கண்ணனது பாஞ்சசன்னியமுழக்கம் கேட்கப்பட்டதனால், வீம னையும் அழைத்துத் துணைசெல்லச் சொல்லினனென்பதாம்.

112.—பாஞ்சஜந்யம் - வடசொல்: பஞ்சஜந னென்னும் அசுர னது எலும்பினா லாகிய தென்று இதற்குக் காரணப்பொருள்: சங்கினுருவந்தரித்துச் சமுத்திரசலத்திற் சஞ்சரித்துக்கொண்டி ருந்த பஞ்சஜந னென்ற அசுரன், மேல்கடலிற் பிரபாசதீர்த்தகட் டத்தில் ஒருகால் நீராடப்புக்க சாந்தீபினி முனிபுத்திரனைக் கவர்ந்துகொண்டுபோய்விட, பின்பு சாந்தீபினிமுனிவனிடம் சகல சாஸ்திரங்களையும் கற்ற கண்ணன் குருதட்சிணையாக அம்மகனை மீட்டுக்கொடுக்கப்புக்கபொழுது கடலிற் பிரவேசித்து அந்தப்பஞ்ச ஜநனைக்கொன்று அவனது எலும்பாகிய சங்கத்தைக்கைக்கொண் டன னென்க. (*508,509*)

113.—அவ்வேவலின்படி வீமன் செல்லுதல்.

சொன்னவார்த்தையும்பிற்படமுற்படத்தொழுது
தன்னொடொத்ததோள்வலியுடைத்தரணிபரநேகர்
மன்னுநால்வகைப்படையொடுந்திரண்டிருமருங்கும்
பின்னுமுன்னுமொய்த்துடன்வரப்போயினன்பெரியோன்.

(இ - ள்.) சொன்ன வார்த்தைஉம் பின் பட-(இங்ஙனம் தரும புத்திரன்) கட்டளை கூறின வார்த்தையும் பின்னும்படி, முற்பட - விரைவாக, பெரியோன்-வலிமையிற்பெரியவனான வீமன்,தொழுது- (தருமபுத்திரனை) வணங்கி (விடைபெற்று), —தன்னொடு ஒத்த தோள் வலி உடை தரணிபர் அநேகர்-தன்னோடு மனமொத்தவர் களும் புயபலத்தையுடையவர்களுமான அரசர்கள் பலர், மன்னும் நால் வகை படையொடுஉம் திரண்டு - மிகுதியான சதுரங்கசேனை களுடனே கூடி, இரு மருங்குஉம்-(தனது)இரண்டுபக்கங்களிலும், பின்உம் முன்உம்-(தனக்குப்) பின்னேயும்முன்னேயும், மொய்த்து- நெருங்கி, உடன் வர-கூடவர, போயினன்-சென்றான்; (எ-று.)

'சொன்னவார்த்தையும் பிற்பட முற்படத்தொழுது போயி னன்'— முறையிலுயர்வுநவிற்சியணி. முற்படத் தொழுது - (தருமபுத் திரனது) முன்னிலையிலே நமஸ்கரித்து என்றுங் கொள்ளலாம்.

114.—வீமன் பல்தேயத்துவீரர்களை வென்று செல்லுதல்.

கலிங்கர்மாகதர்மாளவர்கவுசலர்கடாரர்
தெலுங்கர்கன்னடர்யவனர்சோனகரொடுசீனர்
குலிங்கராரியர்பப்பரர்கொப்பளர்முதலோர்
விலங்கினார்களைவிண்ணுறவிலக்கிமேல்விரைந்தான்.

(குறிப்புரை.) கலிங்கரும்*** கொப்பளதேசத்தவரும் முதலானவர்களாய்க் குறுக்கிட்டவர்களை (இறந்து) வீரசுவர்க்கமடையும்படி ஒழித்துக்கொண்டு, (வீமன்), அப்பால் (வியூகத்தினுள்) விரைவாகச் சென்றான்; (எ-று.) (511)

115.—துரியோதனன்தம்பியர்பலர் வீமனை இடைஇடையே தடுத்தல்.

உரங்கவெங்கொடியுயர்த்தகாவலன்றனக்கிளையோர்
துரங்கமாதிகொள்பலபெருஞ்சேனையிற்சூழ்ந்தோர்
இரங்குமாழ்கடல்பேருகவிறுதியிலெறியுந்
தரங்கநேரெனவிடையிடைதனித்தனிதகைந்தார்.

(இ - ள்.) துரங்கம் ஆதி கொள் - குதிரைமுதலியவற்றைக் கொண்ட, பலபெருஞ் சேனையின்-பல பெரியசேனைகளினால், சூழ்ந்தோர்- சூழப்பட்டவர்களாகிய, வெம் உரங்கம் கொடி உயர்த்த காவலன் தனக்கு இளையோர்-பயங்கரமான பாம்புக்கொடியை உயரநிறுத்தின துரியோதனராசனது தம்பியர்,—இரங்கும் ஆழ் கடல் பேருகம் இறுதியில் எறியும் தரங்கம் நேர் என-ஒலிக்கின்ற ஆழ்ந்த கடல் மகாகற்பமுடிவுகாலத்தில் (உலகையழிக்குமாறு) வீசுகிற அலைகள் (தமக்கு) ஒப்பென்னும்படி, இடை இடை தனி தனி தகைந்தார் - (வீமசேனனை) நடுவிலே நடுவிலே தனித்தனியே தடுத்தார்கள்; (எ-று.)—உரங்கம்-உரகம் என்பதன் விகாரம். 'பேருகவிறுதி' என்பது-பிரமனது ஆயுளின்முடிவை; ஊழிக்காலத்துப்பொங்கியெழும் பெருங்கடலினலைகளை உவமை கூறியதனால், அவர்களுடைய சேனைப்பெருக்கம் விளங்கும். (512)

116.—அவர்கள் வீமன்மேற் படைக்கலம் வழங்குதல்.

முல்லைமல்லிகையுற்பலங்குமுதமாமுளரி
பல்லம்வாளயில்சூலமென்பனமுதற்பகழி
யெல்லையில்லனவிடையறுவகைதொடுத்தெதிர்ந்தார்
வில்விதங்களில்யாவையும்பயின்றகைவிறலோர்.

(இ - ள்.) வில் விதங்களில் - விற்போர் வகைகளிலே, யாவை உம் பயின்ற - எல்லாவற்றையும் பழகித்தேர்ந்த, கை விறலோர்- கைத்திறமையை யுடையவர்களான அத்துரியோதனனது தம்பிமார்,—முல்லை மல்லிகை உற்பலம் குமுதம் மா முளரி - முல்லை முதலியவற்றின் அரும்புபோன்ற முனையையுடைய அம்புகளும், பல்லம் - பல்லமென்னும் அம்புவிசேடங்களும், வாள் - வாளும், அயில் - வேலும், சூலம்-சூலமும், என்பன முதல்-என்கிற இவை முதலான, பகழி - ஆயுதங்களை, எல்லை இல்லன-அளவில்லாதனவாக, இடை அறு வகை தொடுத்து - இடைவிடாமல் மேன்மேற் பிரயோகித்துக்கொண்டு, எதிர்ந்தார் - (வீமனை) எதிரிட்டார்கள்;

'முல்லை' முதலியன-அந்தந்தஅரும்புபோலக் கூர்நுனியமைக்கப்பட்ட அம்புகளை யுணர்த்தின. முளரி—"தாமரைத்தலையவாளி" என்றார் கம்பரும்; இது - வடமொழியில் 'நாளீகாஸ்த்ரம்' எனவும், தமிழில் 'மொட்டம்பு' எனவும்படும். பகழி என்ற அம்

பின்பெயர் - இங்கு, ஆயுதமென்றமாத்திரமாய் நின்றது; சிறப்புப் பெயர், பொதுப்பொருளின்மேலது. (513)

117.—அவர்களில் விந்தனும் விந்தரனும் இறத்தல்.

விந்தன்விந்தரனிருவருமேலிடுமுனையிற்
றந்தம்வாசியும்தேர்விடுபாகருந்தாமு
மந்தரந்தனிற்றலைகள்போய்முகில்களையலைப்பச்
சிந்துசோரியம்பெருங்கடலலைத்திடச்சிதைந்தார்.

(இ - ள்.) விந்தன் விந்தரன் இருவர்உம் - (அத்துரியோதனன் தம்பிமாருள்) விந்தன் விந்தரன் என்ற இரண்டுபேரும்,— மேலிடு முனையில் - மிக்குச் செய்த போரில்,— தம் தம் வாசிஉம் தேர் விடு பாகர்உம் தாம்உம் - தம்தம்முடைய தேர்க்குதிரைகளும் தேர்செலுத்துஞ் சாரதிகளும் தேர்வீரர்களான தாமுமாக,— தலைகள் அந்தரந்தனில் போய் முகில்களை அலைப்ப - தலைகள் (துணிபட்டு மேலெழும்பிச் சிதறி) ஆகாயத்திற் சென்று மேகங்களைச் சிதறடிக்கவும், சிந்து சோரி அம் பெருங் கடல்அலைத்திட -(உடம்பினின்று) விழுகின்ற இரத்தம் அழகிய பெரியகடலை(ச் சென்று) கலக்கவும், சிதைந்தார் - அழிந்தார்கள்; (எ - று.)

விந்தன் விந்தரன் என்பவர்கள் செய்த போரில் வீமனால் தம்குதிரைகளும் பாகரும் அழியத் தாமும் அழிந்தன ரென்பதாம். 'இருவரும், வாசியும் பாகருந் தாமும் சிதைந்தார்' - மிகுதியினால் உயர்திணைமுடிபுகொண்ட திணைவழுவமைதி. இவர்கள்கொடுமை தோன்ற, தலைவேறு உடல்வேறான பின்பும் வானத்திற் சென்று மேகங்களை யலைத்தலையும் நெடுந்தூரஞ்சென்று கடலையலைத்தலையும் கூறினரென்க. பி - ம்: சோரிபோய். (514)

118.—அவர்களில் குண்டலபோசி முதலிய மூவர் இறத்தல்.

போர்க்குமுந்துறுதேரினன்குண்டலபோசி
தீர்க்கலோசனன்றிண்டிறற்சித்திரசேனன்
மார்க்கநேர்படவிலங்கிமாமறலிநேர்வரினுந்
தோற்கலாதவர்மூவருந்தம்முயிர்தோற்றார்.

(இ - ள்.) போர்க்கு முந்துறு தேரினன்-சண்டைக்குமுற்பட்டு வருகிற தேரையுடையவனான, குண்டலபோசி - குண்டலபோசியென்பவனும், தீர்க்கலோசனன் - தீர்க்கலோசனனென்பவனும், திண் திறல்-மிக்கவலிமையையுடைய, சித்திரசேனன்-சித்திரசேனனென்பவனும், (ஆகிய), மா மறலி நேர் வரின்உம் தோற்கலாதவர்-சிறந்த யமன் எதிர்த்து முன்வந்தாலும் தோல்வியடையாதவர்களான, மூவர்உம்-(துரியோதனன் தம்பிமார்) மூன்றுபேரும்,— மார்க்கம் நேர்பட விலங்கி-(வீமன்செல்லும்) வழியிலே எதிராகத் தடுத்து, தம் உயிர் தோற்றார்-தமதுஉயிரை யிழந்தார்கள்;(எ-று.)

தீர்க்கலோசனன்-நீண்ட கண்களையுடையவன்: சித்திரஸேநன் -வியக்கத்தக்க சேனையையுடையவன்: காரணப்பெயர். (515)

119.—அவர்களில் மற்றும் முப்பதுபேர் இறத்தல்.

சேரமுப்பதுகுமாரர்கள்சென்றமர்மலைந்தோ
ரோரொருத்தருக்கோரொருசாயகமுடற்றிச்
சூரன்மெய்த்துணைநோதகும்படியுடன்றொலைத்தான்
மாருதச்சுதன்வல்லவில்லாண்மையார்வல்லார்.

(இ - ள்.) சேர சென்று அமர் மலைந்தோர்-ஒருசேரஎதிர்வந்து போரை மிகுதியாகச்செய்தவர்களான, முப்பது குமாரர்கள்-(திருதராட்டிர)புத்திரர்முப்பதுபேர்களுள், ஓர் ஒருத்தருக்கு-ஒவ்வொருத்தருக்கும், ஓர் ஒரு சாயகம்-ஒவ்வோர் அம்பை, உடற்றி - வலிமையோடு எய்து, சூரன் மெய் துணை நோதகும்படி-சூரனான துரியோதனனது உடற்காவலாகவுள்ள அத்தம்பிமார்கள் வேதனைமிகும்படி, உடன் தொலைத்தான் - (அவர்களை) ஒருசேர அழித்தான்; மாருதன் சுதன் வல்ல வில் ஆண்மை வல்லார் யார்-வாயுகுமாரனான வீமன் தேர்ந்த விற்போர்த்திறத்தைத் தேர்ந்தவர் (வேறு) யார் உள்ளார்? (எ-று.)

'சூரன்மெய்த்துணைநோதகும்படி' என்பதற்கு-(அவர்கள்சூரியமண்டலத்தைப் பிளந்துகொண்டு வீரசுவர்க்கஞ்செல்லுதலால்) சூரியனுடைய உடம்பாகிய உறுப்பு நோவுமிகும்படி யென்றும் உரைக்கலாம். (516)

120.—கௌரவசேனை சிதைதல்.

ஆயு வற்றவர் சுயோதன னிளைஞரே ழைவர்
வாயு புத்திரன் வாளியா லாருயிர் மடியச்
சாய்த லுற்றது சடக்கெனத் தரணிபன் வியூகந்
தேயு வொத்திவன் சேறலுந் திமிரநே ரெனவே.

(இ - ள்.) (இவ்வாறு), சுயோதனன் இளைஞர் ஏழ்ஐவர்-துரியோதனனது தம்பிமார் முப்பத்தைந்துபேர், வாயுபுத்திரன் வாளியால் - வீமசேனனது பாணங்களால், ஆயு அற்றவர்-ஆயுளொழிந்தவர்களாய், ஆர் உயிர் மடிய - அரியஉயிரிறக்க,—இவன்-வீமன், தேயு ஒத்து - அக்கினிபோன்று, சேறலும் - கொடுமையாகச் சென்றவளவிலே,—தரணிபன் வியூகம் - துரியோதனராசனது படைவகுப்பு, திமிரம் நேர் எனவே - (அந்நெருப்பினொளியின்முன்பட்ட) இருள் (தனக்கு) உவமை யென்னும்படி, சடக்கென சாய்தல் உற்றது-விரைவாக அழிவடைந்தது; (எ - று.)—துரியோதனன் தம்பியர் முப்பத்தைவர் மடிய, வீமன்முன் பகைவரணி சிதறிற்றென்பதாம். 117-ஆம்பாடல் முதல் மூன்றுசெய்யுளில் முப்பத்தைந்துபேர் கூறப்பட்டிருத்தல் காண்க. (517)

வேறு.

121.—அதுகண்டு துரோணன் வீமனெதிரில் வருதல்.

ஏகு கின்றது கண்டுபெ ருங்கட லேழு மொண்டுவி ழுங்கிய திர்ந்தெழு
மேக மம்புபொ ழிந்தென வெங்கணும் வீசு மம்புவி ரைந்துவி ரைந்திட
யூக மின்றுபி ளந்துத னஞ்சய னேடி வன்புகு தந்திடி னம்படை
யாகு லம்படு மென்றுத டஞ்சிலை யாரி யன்சம ரந்தனின் முந்தவே.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) ஏகுகின்றது கண்டு - (இங்ஙனம் வீமன்) செல்லுகிறதைப் பார்த்து,—தட சிலை ஆரியன் - பெரிய வில்வித்தையில் ஆசிரியனான துரோணன்,—'பெரு கடல் ஏழ்உம் - பெரிய ஏழு கடல்களையும், மொண்டு விழுங்கி-நிரம்பமுகந்து உட்கொண்டு, அதிர்ந்து-ஆரவாரித்துக்கொண்டு, எழு - (வானத்தில்) எழுகிற, மேகம்—, அம்பு பொழிந்து என - நீரைப்பொழிந்தாற்போல, எங்கண்உம்-எல்லாவிடங்களிலும், வீசும் - வலிவாகப் பிரயோகிக்கிற, அம்பு - பாணங்கள், விரைந்து விரைந்திட - வெகுவேகமாகச் செல்ல, இவன் - இவ்வீமன், இன்று - இப்பொழுது, யூகம் - (நமது) படைவகுப்பை, பிளந்து - பிளந்திட்டு, தனஞ்சயனொடு புகுதந்திடின் - உட்புகுந்து அருச்சுனனுடன் சேர்ந்திட்டால், நம் படை ஆகுலம் படும்-நமதுசேனை கலக்கமடைந்துவிடும்,' என்று - என்றுஎண்ணி, சமரந்தனில் முந்த-போரில் (முன்) வர,—(எ-று.) —"அந்தணன் வந்தது கண்டு" என மேல் தொடரும்.

எதிர்ப்பவரையெல்லாம் அழித்துக்கொண்டு வீமன் வருதலால் துரோணன், இவன் அம்புசொரிந்து வியூகத்தைப் பேதித்துக்கொண்டு உட்பிரவேசித்து அருச்சுனனோடு சேர்ந்துவிட்டாற் பின்பு எவராலும் வெல்லலாகாதாதலால் நமதுசேனைக்குப் பெருங் கலக்கமுண்டாகுமென்று கருதி அங்ஙனஞ்செல்லாதபடி தடுத்தற்கு இடையில்வந்து எதிரிட்டனன் என்பதாம்.

இதுமுதல் ஒன்பதுகவிகள் - முதற்சீர் தேமாச்சீரும் மற்றை மூன்றும் கூவிளச்சீர்களுமாய் வந்தது அரையடியாகவும், அஃதிரட்டிகொண்டது ஓரடியாகவும், அவ்வடிநான்குகொண்டு, நேரசை முதலான அரையடிக்கு ஒற்றொழித்துப் பதினேரெழுத்துப் பெற்றுவந்த சந்தக்கலிப்பாக்கள். 'தான தந்தன தந்தன தந்தன தான தந்தன தந்தன தந்தன' என்பது, இவற்றிற்குச் சந்தக்குழிப்பாம். (518)

122.—வீமன்வணங்கவும் துரோணன் தணியாமற் போர்தொடங்குதல்.

ஆதியந்தணன்வந்ததுகண்டிகலானிலன்சினமின்றிநலம்பெறு
நீதியன்றுனுடன்சமருந்திடனீபெருங்குருநின்கழலென்றலை
மீதுகொண்டனனென்றுவணங்கவும்வேதியன்கைமிகுந்துபுகுந்தெதிர்
மோதியம்புதெரிந்தனன்வன்றிறன்மூரிவெஞ்சிலையுங்குனிகொண்டதே.

(இ - ள்.) ஆதி அந்தணன் - பெரிய பிராமணனான துரோணன், வந்தது - (தன்னெதிரில்) வந்ததை, கண்டு - பார்த்து, இகல் ஆனிலன் - வலிமையையுடைய வாயுகுமாரனான வீமன், சினம் இன்றி - கோபமில்லாமல், (அவனைநோக்கி), 'உனுடன் சமர் உந்திடல்-உன்னோடு (நான்) போர்செய்தல், நலம் பெறு நீதி அன்று - நன்மைபெறும்படியான நியாயமன்று: (ஏனெனில்),— நீ பெருங் குரு - நீ (எனக்குச்) சிறந்த ஆசாரியன்; (ஆதலால்), நின் கழல் என் தலைமீது கொண்டனன் - உனது திருவடிகளை எனது தலையின்மேற் கொண்டேன்', என்று - என்றுசொல்லி,

வணங்கவும் - நமஸ்கரிக்கவும்,—வேதியன் - பிராமணன், கை மிகுந்து - (மாறுபாடொழியாமல்) வரம்பு கடந்து, எதிர் புகுந்து மோதி - எதிரில்வந்து தடுத்து, அம்பு தெரிந்தனன் - (சிறந்த) பாணங்களை (எடுத்துவிடுதற்கு) ஆராய்வானாயினான்; (அப் பொழுது), வல் திறல் மூரி வெம்சிலையும்-மிக்கவலிமையையுடைய பழைய கொடிய (அவன்) கையில்லும், குனிகொண்டது - வளைந் தது; (எ - று.)

வீமசேனன் பணிமொழிகூறி வணங்கவும், துரோணன் கைமிஞ்சி அம்புகளைத் தேர்ந்தெடுத்தலும், வில்வளைத்தலுஞ் செய்தனனென்பதாம். ஆநிலன் - அநிலன்மகன்; வடமொழித் தத்திதாந்தநாமம். ஆதியந்தணன் - நால்வகைவருணத்துள்ளும் முதலதானபிராமணவருணத்தானெனினுமாம். 'சமர்செய் திடல்' என்றபாடம் சந்தத்துக்கொவ்வாது. பி-ம்: அம்புதெரிந்தன. (519)

123.—துரோணன்தேரை வீமன் எடுத்தெறிதல்.

வீரனொன்றுமொழிந்திலன்வந்துமுன்வீழ்சரங்கள்விலங்கிவயம்புனை
தேரினின்றுமிழிந்துநடந்தெதிர்சேரவந்துசெழுஞ்சிலையின்குரு
ஊருகின்றவயங்கிரதந்தனையோரிரண்டுகரங்கொடுவன்புடன்
வாரியுந்தவெறிந்தனன்வண்புயல்வானினின்றவரஞ்சியொதுங்கவே.

(இ - ள்.) வீரன் - வீரனாகிய வீமன்,—ஒன்றும் மொழிந்திலன்-(வாயினால்) ஒன்றுஞ் சொல்லாமல்,—வந்து முன் வீழ் சரங்கள் விலங்கி-எதிரிலே வந்து மேல்விழுகிற (துரோணனது) அம்புகளுக்கு(த் தந்திரமாக) விலகி, வயம் புனை தேரினின்றும் இழிந்து - வெற்றியைக்கொண்ட (தனது) தேரினின்று இறங்கி, நடந்து எதிர் சேர வந்து - நடந்துகொண்டு எதிரிலே நெருங்கி வந்து,—செழுஞ் சிலையின் குரு ஊருகின்ற வயங்கு இரதந்தனை - சிறந்த வில்லாசிரியனான துரோணன் ஏறிநடத்துகிற விளங்குகின்ற தேரை, ஓர் இரண்டு கரங்கொடு-(தனது) ஒப்பற்றஇரண்டு கைகளாலும், வன்புடன் வாரி - வலிமையோடு ஒருசேர எடுத்து, வள் புயல் வானில் நின்றவர் அஞ்சி ஒதுங்க - செழிப்பான மேகங்கள் சஞ்சரிக்கிற வானத்திலே நிற்கின்ற தேவர்கள் அஞ்சி விலகும்படி, உந்த எறிந்தனன் - மேல்நோக்க வீசினான்;(எ - று.)

கீழ்த் தான்கூறிய விநயவார்த்தை துரோணனால் அங்கீகரிக் கப்படாமல் அலட்சியஞ்செய்யப்பட்டதனால் மீளவும் ஒன்றுங் கூறத்தொடங்கினானில்லை யென்பதும், தொழில்செய்து திறங் காட்டுவதே தகுதியென்று கருதினானென்பதுந் தோன்ற, 'ஒன்று மொழிந்திலன்' என்றார். (520)

124.—தேரும் துரோணனும் சிதைதல்.

நாகவிந்தம்வளர்ந்துகிளர்ந்ததுநாகமொன்றியதென்றுநடுங்கிட
மேகபந்திகலங்கவெழுந்ததுமீளவும்புவியின்கண்விழுந்தது
பாகனங்கநெரிந்ததுநொந்ததுபார்முகந்துளைவிண்டனமண்டுருள்
வேகவெம்பரியுந்தலைசிந்தினவேதியன்றனதென்புமொடிந்ததே.

(இ - ள்.) 'விந்தம் நாகம்-விந்தியமலை, வளர்ந்து கிளர்ந்தது-வளர்ச்சிபெற்று மேலெழுந்ததாய், நாகம் ஒன்றியது - தேவலோகத்தைச் சார்ந்திட்டது,' என்று - என்று எண்ணி, நடுங்கிட - (தேவர்கள்) மிக அஞ்சும்படியாகவும், மேக பந்தி கலங்க - மேக வரிசை இடையிலே நிலைகுலையும்படியாகவும், அது-அந்தத்துரோணன்தேர், எழுந்து - மேற்சென்று, மீளஉம் - பின்பு, புவியின் கண் விழுந்தது - தரையிலே விழுந்திட்டது; (அப்பொழுது), பாகன் அங்கம் - சாரதியினுடைய உடம்பு, நெரிந்தது - நொருங்கிற்று; பார்முகம் - பாரினிடம், நொந்தது - வலிமைகுலைந்தது; மண்டு உருள் - வலிமைமிக்க தேர்ச்சக்கரங்கள், துளை விண்டன-துளைபிளந்தன; வேகம் வெம் பரிஉம்-வேகத்தையுடைய கொடிய குதிரைகளும், தலைசிந்தின-தலைசிதறின; வேதியன் தனது என்புஉம் - துரோணாசாரியனது எலும்பும், ஒடிந்தது - முறிந்தது; (எ - று.)—பி - ம்: வளர்ந்துவளர்ந்தகல். பாரமுந்துளை.

முன்னொருகாலத்தில் நாரதமாமுனிவன் விந்தியகிரியினிடஞ் சென்று 'மகாமேருமலை, மிகவுயர்ந்திருப்பதனாலும், சூரியன் முதலியகிரகங்கள் தன்னை வலம்வரப் பெறுதலாலும், தன்னிடந் தேவர்கள் பலர் வசிப்பதனாலும், மற்றும்பல காரணங்களினாலும், மிக்கசெருக்குக்கொண்டிருக்கின்றது' என்று கலகஞ்செய்ய, உடனே விந்தியமலை மேருமலையோடு மாறுபட்டு அதனினும் பெரியதாக வளர்ந்து வானத்தையளாவி அங்குச் சஞ்சரிக்கிற சூரியசந்திராதிகளுடைய கதியையுந் தடுத்து அப்பாற்செல்லவுந் தொடங்க, அதுகண்டு அஞ்சிய தேவர்கள் அகஸ்தியமகாமுனிவனைச்சரணமடைந்து அவனைக் கொண்டு, அம்மலையை அடக்கினார்களென்ற சரித்திரத்தைக் கருத்திற்கொண்டு, தேர் மேல்வருதலை நோக்கித் தேவர்கள் அவ்விந்தியமலை மீண்டும் வளர்ந்தெழுந்து வருகின்றதெனக் கருதி அஞ்சுகின்றனரென்றார். தேரைக்கண்டு விந்தியமலையென்று மாறுபாடாகவுணர்ந்ததாகக் கூறினது - மயக்கவணி. பார் - தேரின் பரப்புப்பலகை; "தேரின்பரப்பும் புவியும் பாரெனல்." (521)

125.—பலவீரர்கள் வீமனை வளைதல்.

வீழவிங்குமவன்றனைவென்றிவன் மேனடந்துழியெண்டிசையும்படை
சூழவந்துவளைந்தனரந்தக தூதர்தங்களினும்பெருவஞ்சகர்
ஏழுமண்டலமும்புதையும்பரி சேறுகின்றதரங்கநெடுங்கட
லூழியும்பெயர்கின்றதெனும்படி யோதைவிஞ்சவுடன்றுசினங்கொடே.

(இ - ள்.) இங்கு - இவ்வாறு, வீழ - கீழ்விழும்படி, அவன் தனைஉம் வென்று - அந்தத்துரோணனையும் சயித்து, இவன் - வீமன், மேல் நடந்த உழி - அப்பாற்சென்றபொழுது,—அந்தக தூதர்தங்களின்உம் பெரு வஞ்சகர்-யமதூதர்களைக்காட்டிலும் வலிமைமிக்க வஞ்சனையுடையவரான (அநேக) வீரர்கள்,—ஏழு மண்டலம்உம் - ஏழுதீவாகவுள்ள உலகமுழுதும், புதையும் பரிசு-அழுந்தும்படி, ஏறுகின்ற - பொங்கிமேலெழுகிற, தரங்கம்-அலை

களையுடைய, நெடுங் கடல் - பெரியகடலினால், ஊழிஉம் பெயர்கின்றது எனும் படி - கற்பம் மாறுகிறதென்று சொல்லும்படி, ஓதை விஞ்ச - ஆரவாரம் அதிகப்பட,—உடன்று - பகைத்து, சினம் கொடு - கோபங்கொண்டு, எண் திசைஉம்-எட்டுத்திக்குக்களிலும், படை சூழ - சேனைகள்சூழ, வந்து வளைந்தனர்-வந்து (வீமனைச்) சூழ்ந்துகொண்டார்கள்; -(எ-று.)

பிரளயப்பெருங்கடலின் பேரொலிக்கு ஒப்பான ஆரவாரத்தைச்செய்துகொண்டு கொடிய பலவீரர்கள் சேனைகளோடும் வீமனை ஒருங்குசூழ்ந்தன ரென்க. அந்தகன் - (பிராணிகட்கெல்லாம்) அழிவைச் செய்பவனென்று பொருள். கடலூழியும் - கடலும் ஊழியும் என்று கூறுவாரு முளர். (522)

126.—பூரியையும் அவந்திராசனையும் வீமன் வெல்லுதல்.

**காரிலைந்துமடங்குபுலம்பின காகளஞ்சுரிசங்குமுழங்கின
பேரிபம்பினகொம்புதழங்கின பேரியங்கள்பெயர்ந்துகறங்கின
பூரியும்பொருதஞ்சியவந்தியர் பூபனும்புறமன்றிடவெங்கணை
மாரிசிந்திமலைந்தனன்வெஞ்சின மாறமுன்பவனன்றிருமைந்தனே.**

(இ-ள்.) (அப்பொழுது),—காரில் ஐந்து மடங்கு - மேகங்களினும் ஐந்துபங்கு அதிகமாக, காகளம் - எக்காளமென்னும் ஊதுகருவி, புலம்பின - ஒலித்தன; சுரி சங்கு-உட்சுழிந்த சங்கவாத்தியங்கள், முழங்கின - ஒலித்தன; பேரி - பேரிகைகள், பம்பின-ஒலித்தன; கொம்பு - ஊதுகொம்புகள், தழங்கின - ஒலித்தன; பேர் இயங்கள் - பெரிய (மற்றும் பல) வாத்தியங்கள், பெயர்ந்து கறங்கின-கிளர்ந்துஒலித்தன; பூரிஉம் - பூரி என்னும் அரசனும், அவந்தியர் பூபன்உம்-அவந்திதேசத்தவரரசனும், பொருது-(தன்னுடன்) போர்செய்து, அஞ்சி - பயந்து, அன்று புறம் இட - அப்பொழுதே முதுகுகொடுக்கும்படி, பவனன் திரு மைந்தன்-வாயுவினது சிறந்தகுமாரனான வீமன், வெம் கணை மாரி சிந்தி- கொடிய அம்புமழையைப்பொழிந்து, வெம் சினம் மாற - (தனது) கடுங்கோபம் அடங்க, முன்-எதிர்நின்று, மலைந்தனன்-போர்செய்தான்;

பொருட்பின்வருநிலையணி. 'புலம்பல்' என்பது தொனித்தலென்னும் பொருளதாதலை ''முழங்கல் தழங்கல் கத்தல் புலம்பல்'' என்ற பிங்கலந்தையினாலும் உணர்க. பூபன்-பூமியைக் காப்பவன்; வடசொல். (523)

127.—வீமனுடன் கர்ணன் போர்செய்யத் தொடங்குதல்.

**மாசுணந்தலைநொந்துசுழன்றன மாதிரங்கண்மருண்டுகலங்கின
வீசுதெண்டிரையம்புவெதும்பின மேலையண்டமும்விண்டுபகிர்ந்தன
பூசலின்கணுடன்றுகழன்றவர் போர்தொடங்கநினைந்துபுகுந்தனர்
ஆசுகன்றிருமைந்தனுடன்சுட ராதபன்குமரன்சமர்முந்தவே.**

(இ - ள்.) ஆசுகன் திரு மைந்தனுடன் - வாயுவினது சிறந்த குமாரனான வீமனோடு, சுடர் ஆதபன் குமரன் - பிரகாசத்தை

யுடைய சூரியனது குமாரனுன கர்ணன், சமர் முந்தவ-போரில் எதிர்த்தவளவிலே,—பூசலின்கண் உடன்று கழன்றவர் - போரில் (வீமனேடு) எதிர்த்துத் தப்பியோடிப்போனவர்கள், போர் தொடங்க நினைந்து புகுந்தனர் - (வீமனுடன் மீண்டும்) போர் செய்ய எண்ணி வந்துசேர்ந்தார்கள்; (அவர்களின் அதிபாரத்தால்), மாசுணம்-(பூமியைத் தாங்குகிற ஆதிசேஷன் முதலிய) பெரும்பாம்புகள், தலை நொந்து சுழன்றன - தலைவருந்திச் சுழலலாயின; மாதிரங்கள் - திக்குக்கள், மருண்டு கலங்கின - (இது என்னே என்று) திகைத்துக் கலக்கமடைந்தன; வீசு தெள் திரை அம்பு-வீசுகின்ற தெளிவான அலைகளையுடைய கடல்கள், வெதும்பின - (இவர்களது உக்கிரத்தன்மையை நோக்கித் தாம்) தாபங்கொண்டன; மேலை அண்டம்உம்-அண்டகோளத்தின் மேலிடங்களும், விண்டு பகிர்ந்தன - (இவர்களது ஆரவாரத்தாலாகிய அதிர்ச்சியால்) வெடிபட்டுப் பிளவுற்றன; (எ - று.)—ஒருங்கு பலதொழில்களின் நிகழ்ச்சி கூறியது, கூட்டவணி யென்னும் ஸமுச்சயாலங்காரம். (524)

128.—வீமனும் கர்ணனும் பொருதல்.

கோபம் விஞ்சினர்விஞ்சைவரம்பெறு கூர்சரங்கடெரிந்தனர்கொண்டனர்
சாபமுங்குனிதந்தெதிருந்தினர் தாரைவெம்பரிதங்கிரதங்களும்
நீபமெங்குமலர்ந்தெனமண்டுசெந் நீர்பரந்திடநின்றுமுனைந்தெழு
பூபர்தங்களுடம்புசிவந்தனர் பூரமெங்குமலைந்துபுரண்டவே.

(இ - ள்.) (அவ்விருவரும்),—கோபம் விஞ்சினர் - கோபம் மிக்கவர்களாய்,—விஞ்சை வரம் பெறு - மந்திரபலத்துடனே வரமாகப்பெற்ற, கூர்சரங்கள் - கூரிய அம்புகளை, தெரிந்தனர் கொண்டனர் - ஆராய்ந்து எடுத்துக்கொண்டு, சாபம்உம் குனிதந்து-விற்களையும் வளைத்து, தாரை வெம் பரி தங்கு இரதங்கள் உம் - (பலவகை) நடைகளையுடைய கொடிய குதிரைகள் பூட்டிய (தங்கள்)தேர்களையும், எதிர் உந்தினர்-(ஒருவர்க்கொருவர்) எதிரிலே செலுத்தினார்கள்; நீபம் எங்கும் மலர்ந்து என-செங்கடப்ப மரங்கள் எவ்விடமும் மலர்ந்தாற்போல, மண்டு செம் நீர் பரந்திட -மிக்க இரத்தம் எங்கும்பரவ, நின்று முனைந்து எழு - நிலைநின்று போர்செய்து விளங்குகிற, பூபர்-(அவ்விரண்டு) அரசரும், தங்கள் உடம்பு சிவந்தனர்-(அவ்விரத்தப் பெருக்கினால்) தங்கள் உடம்பு செந்நிறமடையப்பெற்றார்கள்; (அவர்களுடம்பினின்று), பூரம்-(இரத்தப்) பெருக்குக்கள், எங்குஉம்-எவ்விடங்களிலும், அலைந்து-அலைவீசிக்கொண்டு, புரண்ட-வழிந்தோடின; (எ - று.)

தாரையெனினும், கதியெனும் ஒக்கும். (525)

129.—வீமனுற் கர்ணன் தேருடன் சிதைதல்.

மாரு தன்புதல் வன்ரெடு மம்பினின் மாவி ரண்டுமி ரண்டும்வி ழுந்தன
சோரும் வன்றுவ சந்தறி யுண்டது சூத னுந்தலை சிந்தினன் முந்திய
தேரு முந்துரு ளுந்துகள் கொண்டன சேம வெங்கவ சந்துளை விஞ்சிய
தார வெண்குடை யம்புலி யும்பிறை யானதஞ்சலி னெஞ்சும ழிந்ததே.

(இ - ள்.) (அப்பொழுது),—மாருதன் புதல்வன் தொடும் அம்பினில்-வாயுகுமாரனான வீமன் பிரயோகித்த பாணங்களினால், மா இரண்டுஉம் இரண்டுஉம் விழுந்தன - (கர்ணனது தேர்க்) குதிரைகள் நான்கும் இறந்துவிழுந்தன; சேரும் வல் துவசம் தறியுண்டது-அசைந்தாடுந்தன்மையுள்ள வலிய கொடி முறிபட்டது; சூதன்உம் தலை சிந்தினன்-தேர்ப்பாகனும் தலைசிதறினான்; முந்திய தேர்உம்-முற்பட்டுவந்த இரதமும், உந்து உருள்உம் - (அதனை) நடத்துகிற சக்கரங்களும், துகள் கொண்டன-பொடிபட்டன; சேமம் வெம் கவசம் - (உடம்புக்குப்) பாதுகாவலாகவுள்ள வலிய கவசம், துளை விஞ்சியது - துளைகள்மிகப்பெற்றது; ஆரம் வெள் குடை அம்புலிஉம்-முத்துமயமான ஒற்றைவெண்கொற்றக் குடையாகிய சந்திரமண்டலமும், பிறை ஆனது - (பிளவுபட்டுப்) பிறைச்சந்திரன்போலக் குறைவடிவாயிற்று; அஞ்சல் இல் நெஞ்சுஉம் அழிந்தது-(எதற்கும்) அஞ்சுதலில்லாத (அவனது) மனமும் மிகத்தளர்ந்தது; (எ-று.)—ஏ-ஈற்றசை; தேற்றமுமாம். (526)

வேறு.

130.—கர்ணனுக்கு அவன்மகன் தன்தேரைக் கொடுத்தல்.

அழிந்து கன்னனுங் கால்விசை யினிலிவ னம்பினுக் கெட்டாமல்
வழிந்து போதல்கண் டடல்விட சேனனவ் வள்ளலுக் கெதிரோடி
யிழிந்து தன்பெருந் தடமணித் தேரின்மே லேற்றலு மிவனேறிக்
கழிந்த நீர்க்கணை கோலுவான் போலவன் கண்ணெதி ருறச்சென்றான்.

(இ - ள்.) (இவ்வாறு), கன்னன்உம் - கர்ணனும், அழிந்து-(தேர்முதலியன) அழியப்பெற்று, கால் விசையினில் - கால்களின் வேகத்தால், இவன் அம்பினுக்கு எட்டாமல் வழிந்து போதல் - வீமனுடைய பாணங்களுக்கு இலக்காகாதபடி (வேகமாக) நழுவியோடிச் செல்லுதலை, கண்டு-பார்த்து, அடல் விடசேனன் - வலிமையையுடைய (அவன் மகனான) விருஷசேனனென்பவன், அவ்வள்ளலுக்கு எதிர் ஓடி-வண்மைக்குணமுடையவனான அக்கர்ணனுக்கு எதிரிலே விரைந்துசென்று, இழிந்து - (தன்தேரினின்று) இறங்கி, தன் பெருந் தட மணி தேரின்மேல் - பெருமையுள்ளதும் பெரியதுமான அழகிய தனது தேரின்மேல், ஏற்றலும்-(அவனை) ஏற்றிக்கொண்டவளவிலே, இவன்-கர்ணன், ஏறி-அத்தேரிலேறி, கழிந்த நீர்க்கு அணை கோலுவான் போல் - கடந்துசென்ற நீர்ப்பெருக்கைத் தடுப்பதற்கு அணைகட்டமுயல்பவன் போல, அவன் கண் எதிர் உற சென்றான்-அவ்வீமனது கண்களுக்கு எதிராக (மீண்டும்) சென்றான்; (எ - று.)

விடசேனன்-கர்ணனது குமாரன். பெருகிச்சென்றவெள்ளத்துக்குத் தடுத்துவைத்தற்பொருட்டு பின்பு அணைகோலுதலிற் சிறிதும்பயனில்லாமைபோல, மிக மேலிட்டுவந்திட்ட வீமனைக் கர்ணன் எதிர்த்தல் சிறிதும்பயன்படாது முடிதலால், 'கழிந்த நீர்க்கு அணைகோலுவான்போல் அவன் கண்ணெதிருறச்சென்றான்' என்றார்; கழிந்தநீர்க்கு அணைகோலுதல் - வடமொழியில் 'கதஜலஸேதுபந்தம்' எனப்படும்.

இதுமுதற் பதின்மூன்று கவிகள் கீழ்முப்பத்துநான்காங் கவி போன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள். (527)

131.—கர்ணன் தோற்கவே துரியோதனன் தம்பியரிருவரை உதவிபுரிய ஏவுதல்.

சென்றுமீளவும்வீமனோடெதிர்ந்துவெஞ்சிலையமர்புரிந்தந்தக்
குன்றுபோனெடுந்தேருநுண்டுகள்படக்குலைந்துவென்கொடுத்தோடக்
கன்றிநாகவெங்கொடியவன் கண்டுதன்கண்ணிகரிளையோரை
யொன்றிநீர்விரைந்துதவுமென்றிருவரையொருகணத்தினிலேவ.

இதுவும், அடுத்த கவியும்-குளகம்.

(இ - ள்.) (கர்ணன்), மீளஉம் சென்று - மறுபடியும் போய், வீமனோடு எதிர்ந்து - வீமனுடன் எதிரிட்டு, வெம் சிலை அமர் புரிந்து-கொடிய விற்போரைச்செய்து, அந்த குன்று போல் நெடுந் தேர்உம் நுண் துகள்பட-மலைபோன்ற பெரிய அந்தத்தேரும் (முந் தியதேர்போலவே) சிறுபொடிகளாய் விட, குலைந்து-நிலைகுலைந்து, வென் கொடுத்து ஓட-புறங்கொடுத்துஓடிப்போக,—வெம் நாகம் கொடியவன்-பயங்கரமான பாம்புக்கொடியையுடையவனாகிய துரி யோதனன், கண்டு-(அதனைப்) பார்த்து, கன்றி-கோபித்து, தன் கண் நிகர் இளையோரை இருவரை - தனதுகண்களைப்போன்ற அருமைத்தம்பியரிரண்டுபேரை, நீர் விரைந்து ஒன்றி உதவும் என்று-'நீங்கள்வேகமாகச்சென்று சேர்ந்து (கர்ணனுக்குத்)துணை செய்வீர்கள்' என்றுசொல்லி, ஒரு கணத்தினில் ஏவ-ஒருக்ஷணப் பொழுதிலே செலுத்த,—(எ - று.)—"இருவரும் கடிதுஉற்று சிலைவாங்கி அமர்புரிந்து உடல்சிதைந்து வானிடைச் சென்றார்" என வருங் கவியோடு முடியும். (528)

132.—அவ்விருவரும் வீமனாற் கொல்லப்படுதல்.

கன்னனைக்கடிதுற்றிருவருமதுகயிடவரெனத்தக்கோர்
மன்னருக்கரியனையவீமனுக்கெதிர்வரிசிலையுறவாங்கி
யந்நிலத்தினிலவனுடனெடும்பொழுதமர்புரிந்தவன்கையிற்
செந்நிறக்கொடும்பகழியாற்றம்முடல்சிதைந்துவானிடைச்சென்றார்.

(இ - ள்.) மது கயிடவர் என தக்கோர்-மது கைடபன் என்ற இரண்டு அசுரர்க ளென்று (ஒப்புமையாற்) சொல்லத்தக்கவர்க ளான, இருவர்உம்-(கொடிய வலிய அத்துரியோதனன் தம்பியர்) இரண்டுபேரும்,—கன்னனை கடிது உற்று - கர்ணனை விரைவாக அடுத்து,—மன்னருக்கு அரி அனைய வீமனுக்கு எதிர் - அரசர் கட்குச் சிங்கம்போன்ற வீமசேனனுக்கு எதிரிலே, வரி சிலை உற வாங்கி - கட்டமைந்த வில்லை நன்றாக வளைத்து, அ நிலத்தினில்- அவ்விடத்திலே, அவனுடன் - அவ்வீமனுடன், நெடும்பொழுது அமர்புரிந்து - வெகுநேரம் போர்செய்து, அவன் கையின் செம் நிறம் கொடும் பகழியால்- அவன் கையினாலேவப்பட்ட சிவந்தநிற முடைய கொடிய அம்புகளினால், தம் உடல் சிதைந்து - தங்களு டைய உடம்பு அழிபட்டு, வானிடை சென்றார் - வீரசுவர்க்கத் துக்குப் போனார்கள்; (எ - று.)

மகாபலசாலிகளான மதுகைடபரென்ற அசுரரிருவரும், ஆதி சிருஷ்டிகாலத்தில்தோன்றியவர்; இவர்கள் செருக்கிக்கடலிலிழிந்து திருமாலையெதிர்த்துப் பெரும்போர்புரிய இவர்களை அப்பெருமான் தனதுதுடைகளினால் இடுக்கிக் கீழேதள்ளிக் கால்களால் மிதித்துத் துவைத்துக் கொன்றான். (இவர்களது உடம்பினின்று வெளிப்பட்ட கொழுப்பினால் நனைந்தமைபற்றி, பூமிக்கு 'மேதினீ' என்று ஒருபெயர் வழங்கும்.) (529)

133.—பின்பு கர்ணன் வீமனைக்கொல்வதாகச் சபதஞ் செய்தல்.

தனதுகண்ணெதிரிருவருமழிந்தபின்றபனன்மைந்தனுநொந்து
கனதுரங்கமமுடுகுதேர்வயப்படைக்காவலன்முகநோக்கி
யுனதுதம்பியரிருவரைச்செற்றவன்முடித்தலையொடியேனேல்
எனதுபுன்றலையவன்கையிற்கொடுப்பனென்றேறினனொருதேர்மேல்.

(இ - ள்.) தனது கண் எதிர் - தன்னுடைய கண்களுக்கு எதிரிலே, இருவர்உம் அழிந்த பின் - (தனக்குத் துணையாகவந்த) அத்துரியோதனன் தம்பியரிரண்டுபேரும் (வீமனால்) இறந்தவுடனே, தபனன் மைந்தன்உம் - சூரியகுமாரனான கர்ணனும், நொந்து - வருந்தி, கன துரங்கமம் முடுகு தேர் வய படை காவலன் முகம் நோக்கி - சிறந்த குதிரைகள் விரைவாக நடத்தப்பெற்ற தேரையும் வலிய சேனைகளையுமுடைய துரியோதனராசனது முகத்தைப் பார்த்து, 'உனது தம்பியர் இருவரை செற்றவன் முடி தலை ஒடியேன்ஏல் - உன்னுடைய தம்பிமாரிரண்டுபேரை (என்முன்னிலையில்) அழித்திட்டவனான வீமனது கிரீடந் தரித்த தலையை (நான் இப்பொழுது) துணித்திடாமற் போவேனானால், எனது புன் தலை அவன் கையில் கொடுப்பன்-என்னுடைய அற்பமானதலையை அவ்வீமனது கையிலே யிழப்பேன்,' என்று-என்று சபதங் கூறி, ஒரு தேர்மேல் ஏறினான்—; (எ - று.)

இப்பொழுது நான் எதிர்த்துப்பொருது வீமனைக்கொல்வேன்: அங்ஙனம் இயலாதாயின், அவன்கையாற் கொல்லப்படுவேன்; இவ்விரண்டிலொன்று தவறேன் என்று பிரதிஜ்ஞைசெய்தனன் கர்ணனென்பதாம். அருச்சுனனையொழிந்த மற்றைப்பாண்டவர் நால்வரையுங்கொல்வதில்லை என்று தாய்க்கு வாக்குத்தத்தஞ் செய்துள்ளதற்கு மாறாகக் கர்ணன் இப்பொழுது வீமனைத்தான் கொல்வதாகச் சபதஞ்செய்வது, "எல்லாம், வெகுண்டார்முற்றோன்றாக்கெடும்" என்றபடி அனைத்தையும் மறக்கச்செய்கிற கோபாவேசத்தின்காரியம். (530)

134.—கர்ணன் போர்மூண்டு வீமனெதிரில் வீரவாதஞ்செய்தல்.

குனித்தசாபமுந்தொடுத்தசாயகங்களுங்குலவுமால்வரைத்தோளுந்
துனித்தநெஞ்சமுமுரிந்தனபுருவமுமெரிந்தகண்களுந்தோன்றப்
பனித்ததேரொடும்போருடன்றெழுதரும்பரிதியின்விரைந்தெய்தி
யினித்தராதலமுரககேதனற்கெனவிளவலோடிகல்செய்தான்.

(இ - ள்.) குனித்த சாபம்உம் - வளைத்த வில்லும், தொடுத்த சாயகங்கள்உம் - எய்கிற அம்புகளும், குலவு மால் வரை தோள்

உம் - (நெடுந்தூரம்) விளங்குகின்ற பெரிய மலைகள்போன்ற தோள்களும், துனித்த நெஞ்சம்உம்-கோபங்கொண்ட மனமும்,முரிந்தன புருவம்உம்-(கோபத்தால்) நெறித்தனவான புருவங்களும்,எரிந்த கண்கள்உம் - (கோபாவேசமிகுதியால்) தீப்பொறி பறக்கப்பெற்ற கண்களும், தோன்ற - காணப்பட, பனித்த தேரொடுஉம் - அசைந்துசெல்லுகிற தேருடனே, (கர்ணன்), போர் உடன்று எழுதரும் பரிதியின் - போர்செய்தற்கு உக்கிரங்கொண்டுபுறப்படுகிற சூரியன் போல, விரைந்து எய்தி - விரைவாக (வீமனை) அடைந்து,—இளவலோடு - (உண்மையில் தனது) தம்பியான அவனுடனே,—இனி தராதலம் உரககேதனற்கு -இனிமேல் நிலவுலகம் பாம்புக்கொடியனான துரியோதனனுக்கே (நிலைத்திடும்),' எல - என்று (யாவருஞ்) சொல்ல, இகல் செய்தான்—;

துரியோதனாதியரைக் கொல்வேனென்று சபதஞ்செய்துள்ளவனும் வலிமையிற் சிறந்தவனுமான உன்னை இப்பொழுது நான் கொல்வேன்; கொல்லவே, பின்பு அவர்களை வெல்லவல்லாரெவரும் இல்லையாதலால் துரியோதனனுக்கே இராச்சியம் நிலைபெற்றிடும் என்றபடி. 'போருடன் றெழுதரும் பரிதி'என்றது-தனக்குப் பகையாகிய இருளையெதிர்த்துத் தாக்கி யழித்தற்கு வெம்மையோடு உதிக்கிற சூரியனென்றபடி: (மந்தேகரென்னும் அரக்கர்களுடன்) போர்செய்து அவர்களையழித்துக்கொண்டு உதயஞ்செய்கிற சூரியன்போல வென்றலும் பொருந்தும். இனி, பனித்த கோளொடும் போருடன்றெழுதரும் என்ற பாடத்திற்கு - தான் அஞ்சுவதற்குக் காரணமான இராகுவென்னுங் கிரகத்துடனே உடன்றெழுதரும் என்று இல்பொருளுவமை யாக்குக. (531)

135.—வீமனும் கர்ணனும் எதிர்த்த நிலைமை.

ஆற்றையொத்தனகால்வழியளைபுகுமாமைதொட்டடன்மள்ளர்
சேற்றையொத்தனநித்திலமெடுத்தெறிசெல்வநீள்குருநாடன்
காற்றையொத்தனன்வலியினாற்சினத்தினாற்கதிரவன்றிருமைந்தன்
கூற்றையொத்தனன்பிறப்பிலேதுவக்குளோர்குணங்களுங்கொள்ளாரோ.

(இ - ள்.) ஆற்றை ஒத்தன கால் வழி - (பெருமையினாலும் நீர்மிகுதியினாலும்) ஆறுபோன்றனவாயுள்ள வாய்க்கால்களின் வழியாய், அளை புகும் - குழைசேற்றுக் கழனிகளிற் சேர்கிற, ஆமை தொட்டு - ஆமைகளைக்குறித்து, அடல் மள்ளர் - வலிமையையுடைய உழவர்கள், சேற்றை ஒத்தன நித்திலம் எடுத்து எறி- அச்சேற்றைச்சார்ந்துள்ளனவான முத்துக்களை யெடுத்து வீசியடிக்கிற, செல்வம் - செல்வச்சிறப்பு, நீள - மிக்க, குருநாடன் - குருநாட்டுக்கு உரியவனான வீமன்,—வலியினால் - தேகபலத்தால், காற்றை ஒத்தனன் - காற்றைப்போன்றான்: கதிரவன் திரு மைந்தன் - சூரியனது சிறந்த குமாரனான கர்ணன், சினத்தினால்-கோபத்தால், கூற்றை ஒத்தனன் - யமனைப்போன்றான்; பிறப்பில் துவக்கு உளோர் குணங்கள்உம் கொள்ளார் ஓ-பிறப்பிலே சம்பந்தமுள்ளவர்கள் (அச்சம்பந்த முடையார்க்கு உரிய) குணங்களையுங் கொள்ளமாட்டார்களோ? [தவறாமற் கொள்வரென்றபடி]; (எ-று.)

வீமன் வாயுகுமார னாதலால் தனதுதந்தையின் வலிமையைத் தான்கொண்டு அவன்போலானா னென்றும், கர்ணன் யமனுக்குத் தம்பியாதலால் தன் தமையனது கோபத்தைத் தான்கொண்டு அவன்போலானா னென்றும் சமத்காரமான கருத்து நிகழ, 'பிறப்பிலே துவக்குளோர் குணங்களுங் கொள்ளாரோ' என்றார். வீமனும் கர்ணனும் காற்றையும் யமனையும் போன்ற வேகத்தையும் கோபத்தையும் கொண்டிருந்தா ரென்ற சிறப்புப்பொருளை, 'பிறப்பிலே துவக்குளோர் குணங்களுங் கொள்ளாரோ' என்ற பொதுப் பொருள்கொண்டு சாதித்ததனால், **வேற்றுப்பொருள்வைப்பணி.** யமன் சூரியனுக்கு ஸம்ஜ்ஞை யென்னும் மனைவியினிடத்து முன்புபிறந்த மகனாதலாலும், கர்ணன் சூரியனுக்குக் குந்திதேவியினிடம் பின்பு பிறந்த புத்திரனாதலாலும், கர்ணனை 'யமனுக்குத் தம்பி' என்றது. கழனிகளிலே ஆமைகள் நீர்வளச்சிறப்பைநோக்கி அங்குச்சென்று வாழ்தற்பொருட்டு வாய்க்கால்களின் வழியாய் வந்துசேர, அது கண்ட உழவர்கள், உழுபடைகளில் அவை அகப்பட்டு அழிந்திடாவண்ணம் ஓட்டும்படி முத்துக்களை யெடுத்து எறிகின்றன ரென வர்ணனையின் போக்குக் காண்க. வீமனை 'குருநாடன்' என்றது, அப்பொழுது குருநாடுமுழுவதுக்கும் உரியவனாய் அரசாள்கிற துரியோதனனைக் கொன்று அந்நாட்டின் அரசாட்சியுரிமையைக் கைப்பற்றும் வல்லமை யுடைய னாதலால். நாட்டுக்குக்கொடுத்த அடைமொழியில், அந்நாட்டுவீரர் தமது தொழிலுக்கு இடையூறாக வருமுயிர்களைக் கையிலகப்பட்ட சிறந்த கருவிகளைக்கொண்டு விலக்கும் ஆற்றலுடையா ரென்ற கருத்துத் தோன்றுதல் காண்க. (532)

136.—வீமன் கர்ணனெதிரில் வீரவாதஞ்செய்தல்.

தேறல்வண்டிமிர்தெரியலான்றினபதிசிறுவனைமுகநோக்கி
யாறல்வெஞ்சமத்தென்னுடன்முனைந்தனைமுனைந்தனையாறனும்
வேறலென்கடனின்னைமன்னவையின்முன்விளம்பியவசனத்தாற்
கோறலெம்பிதன்கடனெனவரிசிலைகுனித்தனன்கொடித்தேரோன்.

(இ - ள்.) தேறல் வண்டு இமிர் தெரியலான்-தேனில் வண்டுகள் மொய்த்தொலிக்கப்பெற்ற மலர்மாலையையுடையவனாகிய, தினபதி சிறுவனை - பகற்பொழுதுக்குத் தலைவனான சூரியனது குமாரனாகிய கர்ணனை, முகம் நோக்கி-முகத்தைப்பார்த்து,—' (நீ), என்னுடன்—, ஆறு அல் வெம்சமத்து-நியாயவழியல்லாத கொடிய போரிலே, முனைந்தனை - வீராவேசங்கொண்டாய்; முனைந்தனை ஆனால் உம் - (அங்ஙனங்கொண்டு) போர்தொடங்கினையானாலும், நின்னை - உன்னை, வேறல் - வெல்லுதல்மாத்திரமே, என் கடன் - எனது கடமை; மன் அவையில் - ராஜசபையில், முன் விளம்பிய - முன்பு சொன்ன, வசனத்தால் - சபதவார்த்தைப்படி, கோறல் - (உன்னைக்) கொல்லுதல், எம்பிதன் கடன் - எனதுதம்பியின் கடமை,' என - என்றுசொல்லி, கொடி தேரோன்-(சிங்கக்) கொடிகட்டிய தேரையுடையவனான வீமன், வரி சிலை குனித்தனன்-கட்டமைந்த வில்லை வளைத்தான்; (எ - று.)

வீமன் வாயுகுமாரனாதலால் தனது தந்தையின் வலிமையைத் தான் கொண்டு அவன்போலானா னென்றும், கர்ணன் யமனுக்குத் தம்பியாதலால் தனது தமையனது கோபத்தைத் தான்கொண்டு அவன்போலானா னென்றும் சமத்காரமான கருத்து விளங்க, 'பிறப்பிலே துவக்குளோர் குணங்களுங் கொள்வாரோ' என்றார். வீமனும் கர்ணனும் காற்றையும் யமனையும் போன்ற வேகத்தையும் கோபத்தையும் கொண்டிருந்தா ரென்ற சிறப்புப்பொருளை, 'பிறப்பிலே துவக்குளோர் குணங்களுங் கொள்வாரோ' என்ற பொதுப்பொருள்கொண்டு சாதித்ததனால், **வேற்றுப்பொருள்வைப்பணி.** யமன் சூரியனுக்கு ஸம்ஜ்ஞை யென்னும் மனைவியினிடத்து முன்புபிறந்த மகனாதலாலும், கர்ணன் சூரியனுக்குக் குந்திதேவியினிடம் பின்பு பிறந்த புத்திரனாதலாலும், கர்ணனை 'யமனுக்குத் தம்பி' என்றது. கழனிகளிலே ஆமைகள் நீர்வளச்சிறப்பைநோக்கி அங்குச்சென்று வாழ்தற்பொருட்டு வாய்க்கால்களின் வழியாய் வந்துசேர, அது கண்ட உழவர்கள், உழுபடைகளில் அவை அகப்பட்டு அழிந்திடா வண்ணம் ஓட்டும்படி முத்துக்களை யெடுத்து எறிகின்றன ரென வர்ணனையின் போக்குக் காண்க. வீமனை 'குருநாடன்' என்றது, அப்பொழுது குருநாடுமுழுவதுக்கும் உரியவனாய் அரசாள்கிற துரியோதனனைக் கொன்று அந்நாட்டின் அரசாட்சியுரிமையைக் கைப்பற்றும் வல்லமை யுடையவனாதலால். நாட்டுக்குக்கொடுத்த அடைமொழியில், அந்நாட்டுவீரர் தமது தொழிலுக்கு இடையூறாக வருமுயிர்களைக் கையிலகப்பட்ட சிறந்த கருவிகளைக்கொண்டு விலக்கும் ஆற்றலுடையா ரென்ற கருத்துத் தோன்றுதல் காண்க. (532)

136.—வீமன் கர்ணனெதிரில் வீரவாதஞ்செய்தல்.

தேறல்வண்டிமிர்தெரியலான்றினபதிசிறுவனைமுகநோக்கி
யாறல்வெஞ்சமத்தென்னுடன்முனைந்தனைமுனைந்தனையாலும்
வேறலென்கடனின்னைமன்னவையின்முன்விளம்பியவசனத்தாற்
கோறலெம்பிதன்கடனெனவரிசிலைகுனித்தனன்கொடித்தேரோன்.

(இ - ள்.) தேறல் வண்டு இமிர் தெரியலான்-தேனில் வண்டுகள் மொய்த்தொலிக்கப்பெற்ற மலர்மாலையையுடையவனாகிய, தினபதி சிறுவனை - பகற்பொழுதுக்குத் தலைவனான சூரியனது குமாரனாகிய கர்ணனை, முகம் நோக்கி-முகத்தைப்பார்த்து,—' (நீ), என்னுடன்—, ஆறு அல் வெம்சமத்து-நியாயவழியல்லாத கொடிய போரிலே, முனைந்தனை - வீராவேசங்கொண்டாய்; முனைந்தனை ஆனால் உம் - (அங்ஙனங்கொண்டு) போர்தொடங்கினையானாலும், நின்னை - உன்னை, வேறல் - வெல்லுதல்மாத்திரமே, என் கடன் - எனது கடமை; மன் அவையில் - ராஜசபையில், முன் விளம்பிய - முன்பு சொன்ன, வசனத்தால் - சபதவார்த்தைப்படி, கோறல் - (உன்னைக்) கொல்லுதல், எம்பி தன் கடன் - எனது தம்பியின் கடமை,' என - என்றுசொல்லி, கொடி தேரோன்-(சிங்கக்) கொடி கட்டிய தேரையுடையவனான வீமன், வரி சிலை குனித்தனன்-கட்டமைந்த வில்லை வளைத்தான்; (எ - று.)

கர்ணன் எதிர்த்துவருகிற உக்கிரத்தன்மைபற்றி அவனைத் தான் கொல்லவேண்டுவது அவசியமாயினும், தனது தம்பியான அருச்சுனனது சபதத்தைப் பொய்யாக்காமைப்பொருட்டு அங்ஙன் கொல்லாது வெல்லுதல்மாத்திரஞ்செய்துஉயிரோடுவிடவேண்டியிருத்தலின், வீமன் இங்ஙன் கூறினன். இனி, வநவாசஅஜ்ஞாத வாசங் கடந்தபின்பு கொடுப்பதாக உறுதிகூறியுள்ள அரசாட்சியை அங்ஙனங்கொடாமலொழிந்து தொடங்கிச்செய்யும் போர் அக்கிரமப்போரே யாதலால், அதுபற்றி, 'ஆறல்வெஞ்சமம்' என்றதாகவுங் கொள்ளலாம். அருச்சுனன், துரியோதனனுடைய துஷ்டச்செயலுக்குப் பெருந்துணையாய் நின்ற கர்ணனைப் போரிற் கொல்வேனென்று சபதஞ் செய்துள்ளதனை, கீழ்ச் சூதுபோர்ச் சருக்கத்திற் காண்க. (533)

137.—அப்போரிற் கர்ணன் வீமனைத் தேரழித்தல்.

இலக்கமற்றவெங்கணைகளாலிருவருமெதிரெதிரமராடிக்
கலக்கமுற்றபின்றினகரன்மதலையக்காற்றின்மைந்தனைச்சீறி
யலக்கணுற்றிடப்பலபெருங்கணைதொடுத்தவன்விடுங்கணையாவும்
விலக்கிவச்சிரத்தேரும்வெம்புரவியும்விறற்றுவசமும்வீழ்த்தான்.

(இ-ள்.) இருவர்உம்-(வீமன் கர்ணன் என்ற) இரண்டுபேரும், இலக்கம் அற்றவெம் கணைகளால்-எண்ணிக்கையில்லாத கொடிய அம்புகளினால், எதிர் எதிர் அமர் ஆடி-ஒருவர்க்கொருவர் எதிரிலே போரை மிகுதியாகச்செய்து, கலக்கம் உற்றபின்-இளைப்படைந்த பின்பு, தினகரன் மதலை-கர்ணன், அ காற்றின் மைந்தனை-அவ் வீமனை, சீறி-மிகுதியாகக் கோபித்து, அலக்கண் உற்றிட-(அவன்) துன்பமடையும்படி, பல பெருங் கணை தொடுத்து-அநேகம்சிறந்த பாணங்களை(அவன்மேற்)பிரயோகித்து, அவன் விடும்கணை யாஉம் விலக்கி-அவன் (தன்மேல்)விடும் அம்புகளையெல்லாம் (தனது எதிரம்புகளினால்) தடுத்து, (அவ்வீமனுடைய), வச்சிரம் தேர்உம்-வச்சிரம்போல் உறுதியான தேரையும், வெம் புரவிஉம்-வேகமுள்ள குதிரைகளையும், விறல் துவசம்உம் - வெற்றிக்கு அறிகுறியான (சிங்கக்) கொடியையும், வீழ்த்தான்-பிளந்துதள்ளினன்; (எ-று.)

அலக்கண்-சஞ்சலப்பட்ட கண்களையுடைமை என்றகாரியத்தின் பெயர் காரணமான துன்பத்தின்மேல் நிற்கும்; அலம் - சஞ்சலம். (534)

138.—வேலெறிந்த கர்ணன்மேல் வீமன் கதைவீசுதல்.

காலினல்வருங்காலின்மைந்தனைக்கடுங்கதிரவன்றிருமைந்தன்
வேலினலடர்த்தெறிதலுமெறிந்தசெவ்வேலிருதுணியாகக்
கோலினலவன்றுணித்துமீளவுமழல்கொளுத்தியதொருதண்டு
நாலினன்முழமுடையதுகன்னன்மேலெறிந்தனனகைசெய்தான்.

(இ - ள்.) காலினல் வரும் - (தேரிழந்ததனால்) கால்களால் நடந்துமேல் வருகிற, காலின் மைந்தனை-வாயுபுத்திரனான வீமனை, கடுங் கதிரவன் திருமைந்தன் - உஷ்ணமான கிரணங்களையுடைய

வனாகிய சூரியனது புத்திரனான கர்ணன், வேலினால் அடர்த்து எறிதலும்-வேலாயுதத்தால் வலிமைகொண்டு வீசியடித்த வளவிலே,—அவன்-வீமன், எறிந்த செவ் வேல் இரு துணிஆக-(தன்மேல்) எறியப்பட்ட (அந்தச்) செவ்விய வேலாயுதம் இரண்டு துண்டாகப் பிளவுபடும்படி, கோலினால் துணித்து-(தானெய்த) அம்புகளினால் துண்டித்து, மீளஉம்-பின்பு, நாலின் நால் முழம் உடைய்து அழல் கொளுத்தியது ஒருதண்டு-பதினாறு முழமுள்ளதும் தீப்பற்றினாற்போல அழிப்பதுமாகிய ஒரு பெரிய கதாயுதத்தை, கன்னன்மேல் எறிந்தனன் - கர்ணன்மேற் பிரயோகித்து, நகைசெய்தான்-சிரித்தான்; (எ - று.)—'காலினால்வருங் காலின் மைந்தன்' என்றவிடத்துச் சொல்நயங் காண்க. பி - ம்: எறிந்த வேல்வேறிரு. கொளுத்தியென்றொரு தண்டு. (535)

139.—வீமன் கர்ணனை வென்றதைத் துரியோதனன் கண்டமை.

தேரவன்திருமைந்தனேறியதடந்தேரும்வாசியுஞ்சிந்தி
யூரவந்தவெம்பாகனுந்தலைபிளந்தோடலுற்றனன்பின்னும்
வீரனும்பெருவலியுடன்வருகெனவேறோர்தேர்மேற்கொள்ளத்
தூரநின்றவரிருவருமுடன்றமைசுயோதனன்கண்ணுற்றான்.

(இ-ள்.) தேரவன் திரு மைந்தன்-சிறந்ததேரையுடையவனான சூரியனது சிறந்தமகனாகிய கர்ணன், (வீமனெறிந்த கதையினால்), ஏறிய தடதேர்உம் வாசிஉம் சிந்தி-தானேறியுள்ள பெரியதேரும் அதன்குதிரைகளும் அழியப்பெற்று, ஊர வந்த வெம் பாகன்உம் தலை பிளந்து-(அத்தேரைச்) செலுத்துதற்கு அமைந்த கொடிய சாரதியும் தலைபிளக்கப்பெற்று, பின்உம் ஓடல் உற்றனன் - மீண்டும் ஓடத்தொடங்கினான்; (அப்பொழுது), வீரன்உம் - அவனை வென்றவனான வீமனும், பெரு வலியுடன் - மிக்கவலிமையுடனே, வருக என வேறு ஒர் தேர் மேற்கொள்ள - 'வருவதாக' என்று சொல்லி (உடனேவருவித்து) வேறொரு தேரின்மேல் ஏறிக்கொள்ள,—சுயோதனன்-துரியோதனன், தூரம் நின்றவர் இருவர் உம் உடன்றமை-தூரத்திலுள்ளவர்களான (அந்த வீமன் கர்ணன் என்ற) இரண்டுபேரும் போர்செய்து அடைந்த நிலையை, கண்ணுற்றான்-(அங்கிருந்து) பார்த்தான்; (எ - று.)

'தேரவன்திருமைந்தன்' என்பதற்கு - (திருதராட்டிரனது) தேர்ப்பாகனான அதிரதனென்பவன் எடுத்துவளர்த்த மகனாகிய கர்ணனென்றுமாம். (536)

140.—துன்முகன் வீமனால் இறத்தல்.

கண்டுதுன்முகனெனுந்தனியிளவலைக்கடிதினேவலுங்கங்குல்
வண்டுசெஞ்சுடர்வளையவந்திறந்தெனவலியவார்சிலைவாங்கிக்
கொண்டுதிண்டிறல்வாளியான்மலைமிசைக்கொண்டல்பெய்வதுபோல
மண்டுபோர்புரிந்தண்ணல்கைப்பகழியால்வானிமைப்பினிலுற்றான்.

(இ - ள்.) கண்டு - (அங்ஙனம்) பார்த்து, (துரியோதனன்), துன்முகன் எனும் தனி இளவலை-துர்முகனென்ற ஒப்பற்ற தனது

தம்பியை, கடிதின் ஏவலும்-விரைவாக (வீமன்மேற்) செலுத்திய வளவிலே, (அவன்), கங்குல் வண்டு செம் சுடர் வளைய வந்து இறந்து என - இராக்காலத்திற் பறப்பதொரு பூச்சி [விட்டில்] சிவந்தவிளக்கொளியைச் சூழவந்து அதிற்பட்டு இறந்தாற்போல, வலிய வார் சிலை வாங்கி கொண்டு-வலிமையுள்ள நீண்ட வில்லை வளைத்தெடுத்துக்கொண்டு (வந்து), மலைமிசை கொண்டல் பெய்வதுபோல - மலையின்மேற் காளமேகம் மழைபொழிவதுபோல, திண் திறல் வாளியால் மண்டு போர் புரிந்து-மிகவலிய அம்புகளினால் (வீமன்மேல்) மிக்கபோரைச்செய்து, அண்ணல் கை பகழியால்-சிறந்தவீரனான அவ்வீமனது கையாலெய்யப்பட்ட அம்புகளினால், இமைப்பினில்-கண்ணிமைப்பொழுதிலே, வான் உற்றான் -(இறந்து) வீரசுவர்க்கஞ்சேர்ந்தான்; (எ - று.)

துர்முகன் வீமனைவெற்றிகொள்ளவந்து அவனம்புக்கு இலக்காகித் தான் எளிதில் அழிந்தனனென்க. மலரில் வண்டுமொய்த்தல்போல, தீயில் விட்டில் மொய்த்தலால், அது 'வண்டு' எனப்பட்டது. (537)

141.—கர்ணன்எறிந்த தோமரம் வீமனால் துணிக்கப்படுதல்.

தாளினோடியகன்னன்மன்னவன்விடுதம்பிவீழ்தலும்வீமன்
றோளினோடிமண்மிசைபுதைதரவொருதோமரந்தனையேவ
வேளினோடிசைவீமன்மேலதுசெலும்வேலையின்விடவெவ்வாய்க்
கோளினோடியகுரிசில்கைக்கணையினாற்கோளழிந்ததுமன்னோ.

(இ - ள்.) தாளின் ஓடிய கன்னன் - (முன்பு) கால்களினால் விரைந்து ஓடிய கர்ணன், மன்னவன் விடு தம்பி வீழ்தலும் - துரியோதனனேவின அவன் தம்பியான துர்முகன் இறந்துவிழுந்தவளவிலே, (மீண்டும்வந்து), வீமன் தோளின் ஓடி மண்மிசை புதைதர-வீமனது தோளில் விரைந்து பாய்ந்து (பின்பு) தரையிற் புதைந்திடும்படி, ஒரு தோமரந்தனை ஏவ- ஒரு தோமராயுதத்தைப் பிரயோகிக்க,—அது—, வேளினோடு இசை வீமன்மேல் - முருகக்கடவுளோடு (உவமை) சொல்லப்படுகிற வீமசேனன்மேல், செலும் வேலையின்-செல்லும் பொழுது, விடம் வெம் வாய் கோளின் ஓடிய குரிசில் கை கணையினால் - விஷமுள்ள கொடிய வாயையுடைய (இராகுவென்னும்) கிரகம்போல (ப் பயங்கரமாய்) விரைந்துவந்த வீமன்கையம்பினால், கோள் அழிந்தது-வலிமை சிதைந்திட்டது; (எ - று.)—மன் ஓ-ஈற்றசை.

தோமரமென்று இருப்புலக்கைக்கும், கைவேலுக்கும், பேரீட்டிக்கும் நூல்களிற் பெயர் வழங்குகின்றது. பல பராக்கிரமங்கட்கு முருகக்கடவுளை உவமைகூறினர். (538)

142. —துரியோதனன்தம்பியர் அறுவரை வீமன் தொலைத்தல்.

மன்னர் மன்னவன் றம்பிய ரிருவரை மாருதி மிசையேவ
முன்னர் வந்தவ ரிருவரும் படப்பட முனைந்துபோர் மதியாமன்

மின்னி ருங்கணை விகருணன் முதலியோர் வீமன்மே லோரைவர்
பின்ன ருஞ்செல நால்வரைப் பிறைமுகக் கணையினற் பிளந்திட்டான்.

(இ - ள்.) (அதுகண்டு), மன்னர் மன்னவன்-ராஜராஜனான துரியோதனன், (மீண்டும்), தம்பியர் இருவரை-(தனது) தம்பிமார் இரண்டுபேரை, மாருதிமிசை ஏவ - வாயுபுத்திரனான வீமன்மேற் செலுத்த,—முன்னர் வந்தவர் இருவர்உம்-(ஒருவர்முன் ஒருவராக விரைவாக) எதிர்த்துவந்த அவ்விரண்டுபேரும், பட பட-உடனுக்குடனே இறக்க,—முனைந்து-கோபங்கொண்டு, போர் மதியாமல் - (வீமனோடு) பொருதலை (அரிதென்று)கருதாமல், மின் இருங்கணை விகருணன் முதலியோர் ஓர் ஐவர்-மின்னல்போல விளங்குகின்ற பெரியஅம்புகளையுடைய விகர்ணன் முதலிய (துரியோதனன் தம்பிமார்)ஐந்துபேர்,பின்னர்உம்-பின்பும், வீமன்மேல் செல-(துரியோதனனாலேவப்பட்டு) வீமன்மேல் எதிர்த்துச்செல்ல, (வீமன் உடனே), நால்வரை-(அவர்களில் விகர்ணனொழிந்த) நான்குபேரை, பிறை முகம் கணையினால் பிளந்திட்டான் - அர்த்தசந்திரபாணங்களினாற் பிளந்தழித்தான்; (எ - று.) (539)

வேறு.

143.—வீமன் விகர்ணனைநோக்கி 'உன்னுடன்போர்செய்யேன்' எனல்.

பகரு நால்வரும் பட்டபின் பைங்கழல்
விகரு ணன்பொர வெஞ்சிலை வாங்கலும்
புகலும் வஞ்சினம் பொய்க்கினு நின்னுட
னிகல்செய் யேனெம்பி யேகுகென் றனரோ.

(இ-ள்.) பகரும் - (கீழ்ச்) சொல்லப்பட்ட, நால்வர்உம் - (துரியோதனன் தம்பிமார்) நான்குபேரும், பட்டபின்-இறந்தபின்பு,பைங்கழல் விகருணன்-பசுமையான [பசும்பொன்மயமான] வீரக்கழலையுடைய விகர்ணனென்பவன், பொர - போர்செய்தற்பொருட்டு, வெம்சிலை-கொடிய வில்லை,வாங்கலும்-வளைத்தவளவிலே,--(வீமன் அவனை நோக்கி), 'எம்பி - எனது தம்பியே! புகலும் வஞ்சினம் பொய்க்கின்உம் - (நான்) சொன்ன சபதம் தவறுவதானாலும், நின்னுடன் இகல் செய்யேன் - உன்னோடு போர்செய்யமாட்டேன்; ஏகுக - (நீ) செல்வாயாக,' என்றான் - என்று சொன்னான்; (எ-று.)

வஞ்சினம் பொய்க்கினும்-"பாஞ்சாலிக்கு அரசவையிற்பழுதுரைத்தோனுடல்***, ***துணைவரொடுகுலமாளப்பொருவேன்யானே' என்று திரௌபதியைத் துகிலுரிந்தகாலத்திற்கூறின பிரதிஜ்ஞை தவறுவதானாலும் என்றபடி, துரியோதனன் தம்பியை வீமன் தன் தம்பியாக 'எம்பி' எனவிளித்தது, யோக்கியனான அவனிடத்தில் தனக்குஉள்ள அன்புமிகுதி பற்றியஉபசாரவழக்காம்; அன்றியும், துரியோதனன் வீமன்பிறந்ததினத்துக்கு முந்தினதினத்தின் இரவிலும், மற்றைத்தொண்ணூற்றொன்பதின்மரும் அதற்கு அடுத்த தினம் முதலாக ஒவ்வொருதினத்திலும் பிறந்தனரென்பது சரித்திரமாதலால், வீமன் தனதுபெரியதந்தையின் மக்களுள் இளையவனான விகர்ணனை எம்பியென்னத் தட்டில்லை. அரோ - ஈற்றசை.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள்-பெரும்பாலும் முதற்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிய **கலி விருத்தங்கள்.** *(540)*

144.—இரண்டுகவிகள்-ஒருதொடர்: மற்றும் வீமன் விகர்ணனை நோக்கிக் கூறுவன.

சுடுவுரைக்கனலன்னதுச்சாதனன்
வடுவுரைக்கவுமன்னுறைமன்றிடை
நடுவுரைக்குநன்னவுடையாயுனைக்
கொடுவுரைக்கணையேவினுங்கொல்லுமோ.

(இ-ள்.) கனல் அன்ன-நெருப்பையொத்த, சுடு உரை-கொடுஞ் சொற்களையுடைய, துச்சாதனன்—, மன் உறை மன்றுஇடை - அரசர்கள்தங்கியசபையின் நடுவிலே, வடு உரைக்கஉம்-நிந்தையான வார்த்தைகளைக்கூறவும், நடு உரைக்கும் - (அங்கு) நடுவு நிலைமையாகப் பேசிய, நல் நா உடையாய் - சிறந்த நாக்கையுடையவனே! கொடு உரை கணை ஏவின்உம்-கொடியசாபச்சொற்போலத் தவறாமல் அழிக்கவல்ல அம்புகளை (நான் உன்மேற்) பிரயோகித்தாலும், உனை கொல்லும்ஓ - (அவை) உன்னைக் கொல்லுமோ;

நான் கொடியஅம்புகளை உன்மேல் ஏவி உன்னைக் கொல்ல மாட்டேனென்ற பொருளை, துணிவுதோன்ற இங்ஙனம் அம்பின் மேல் வைத்துக் கூறினனென்க. முனிவரதுவாயினின்று வருங் கோபச்சொல் தவறாமல் அழிவுசெய்தலில் அம்புக்கு உவமைகூறப் படுதலை, "வைவனமுனிவர் சொல்லனைய வாளிகள்" எனக் கம்பராமயணத்திலுங் காண்க. சூதுபோர்ச்சருக்கத்தில் " தன்னேரில்லா நெறித்தருமன் தனைவென் றுரைக்கத் தக்கவெலாம்,முன்னே தோற்றுத் தங்களையு முறையேதோற்றுமுடிவுற்றான், சென்னேருரைக்குத்தான்பிறர்க்குத் தொண்டாய்விட்டுச்சுரிகுழலைப், பின்னே தோற்கவுரிமையினற் பெறுமோவென்று பேசீரே" என்பது, நிஷ்பக்ஷபாதமாக விகர்ணன்கூறிய நீதிமொழி. *(541)*

145. பாரறிந்தபழிக்குட்படாதநின்
னேரறிந்தும்பொரநெஞ்சியையுமோ
போரறிந்துபொருகவென்றனெடுஞ்
சீரறிந்தவர்செய்ந்நன்றிகொல்வரோ.

(இ - ள்.) பார் அறிந்த பழிக்கு - உலகத்தார் அறிந்த குற்றத்துக்கு, உள் படாத-உள்ளாகாத, நின்-உனது, நேர்-நீதிநெறியை, அறிந்துஉம் - தெரிந்திருந்தும், நெஞ்சு - (எனது) மனம், பொர இயையும்ஓ - (உன்னோடு) போர்செய்யச் சம்மதிக்குமோ? (ஆதலால்), அறிந்து போர் பொருக - (வேறு யாருடனாயினும்) ஆராய்ந்து போர்செய்வாயாக, என்றான் - என்று (விகர்ணனை நோக்கி வீமன்) கூறினான்; நெடுஞ் சீர் அறிந்தவர் செய் நன்றி கொல்வர்ஓ - சிறந்த நல்லொழுக்கமுறைமையை யுணர்ந்தவர் (தமக்குப் பிறர்) செய்த நன்மையை மறந்து அவர்க்குத் தீங்கு

செய்வரோ? [செய்யார் என்றபடி]; (எ - று.)—என்று வீமன் கூறினானென்க.

'துரியோதனன் முதலியோர்போ லன்றிச் சபையில் நியாயம் பேசின விகர்ணன் விஷயத்தில் வீமன் நன்றிமறவாமையோடிருந்தனனாதலாற்போர்செய்யே னென்றான்' என்ற சிறப்புப் பொருளை, சிறந்த நீதிமுறையை யுணர்ந்தவர் செய்ந்நன்றி சிதைப்பரோ என்ற பொதுப்பொருள்கொண்டு விளக்கியது - **வேற்றுப் பொருள்வைப்பணி**. பார்என்பது - உலகமென்பதுபோல உயர்ந்தோரைக்காட்டுமென்னலாம்; பாரறிந்தபழி-உலகோர் பழியென்றறிந்த குற்றமென்க. பி - ம்: பாரறிந்து. (542)

146.—விகர்ணன் போர்தொடங்குதல்.

வீமனிப்படிச்சொல்லவும்வேரியந்
தாமமுற்றதடவரைத்தோளினன்
மாமணிச்சிலைவாங்கியவ்வீமன்மேற்
றீமுகக்கணையுஞ்சிலசிந்தினன்.

(இ - ள்.) வீமன் இப்படி சொல்லவும்—, (கேளாமல்), வேரி அம் தாமம் உற்ற தட வரை தோளினன் - வாசனையுள்ள அழகிய (போர்) மாலைபொருந்திய பெரியமலைபோலுந் தோள்களையுடையவனான விகர்ணன்,—மா மணி சிலை வாங்கி-பெரிய சிறந்த வில்லை வளைத்து, அவ்வீமன்மேல்—,தீ முகம் கணைஉம் சில சிந்தினன்-நெருப்புப்போலக் கொடிய கூர்நுனியுள்ள சில பாணங்களையும் பிரயோகித்தான்; (எ-று.)—இச்செய்யுளில் 'சிலைவாங்கி' என்பது, கீழ் 143 - ஆஞ் செய்யுளில் "சிலைவாங்கலும்"என்றதன் அநுவாதமென்க. பி - ம்: சிந்தியே. (543)

147.—விகர்ணன் வீமனை வலியப் போர்க்கு அழைத்தல்.

எம்முனோர்களனைவருமுங்கையில்
வெம்முனைக்கணையால்விளிந்தேகவும்
உம்முன்யானொருவேனுமுய்வேன்கொலோ
வம்மின்வார்சிலைவாங்குகென்றோதினான்.

(இ - ள்.) 'எம் முனோர்கள் எனைவர்உம் - எமது தமையன்மார்களெல்லாரும், உம் கையில் - உமது கையினாலெய்யப்படுகிற, வெம் முனை கணையால் - கொடிய நுனியையுடைய அம்புகளினால், விளிந்து ஏகஉம் - இறந்துபோகவும், உம் முன் - உமது முன்னிலையில், யான் ஒருவேன் உம் உய்வேன் கொல் ஓ - நானொருத்தன்மாத்திரம் பிழைத்திருப்பேனோ? வம்மின் - (போர்க்கு) வருவீராக; வார் சிலை வாங்குக - நீண்ட வில்லை வளைப்பீராக', என்று ஓதினான்-என்று (வீமனைநோக்கி விகர்ணன்) சொன்னான்;

'எனைவரும் விளிந்தேகவும்' என்றது-பலர் வீமனால்இறந்ததனாலும், மற்றையோரும் இறப்பரென்ற துணிவினாலுமென்க. உம்கையில் என்பது முதலியன - தமையனை நோக்கித் தம்பி கூறிய உயர்வுப்பன்மை. (544)

148.—வீமன் போர்தொடங்குதல்.

மிகநகைத்தும்வெறுத்துந்திரிபுர
தகனனொத்தசமீரணன்மாமகன்
முகனுறச்சென்றுமூரிவில்வாங்கிமே
லிகனிறக்கணையேவினனென்பவே.

(இ-ள்.) திரிபுர தகனன் ஒத்த - திரிபுரமெரித்தவனை உருத்திரமூர்த்தியைப்போன்ற [பலபராக்கிரமங்களிற்சிறந்த], சமீரணன் மா மகன் - வாயுவின் சிறந்த புத்திரனாகிய வீமன், (அதுகேட்டு), மிக நகைத்துஉம் - மிகுதியாகச் சிரித்தும், வெறுத்துஉம் - வெறுப்புக்கொண்டும், முகன் உறசென்று - அவனெதிராகப்போய், மூரி வில் வாங்கி - வலியவில்லை வளைத்து, மேல் - அவன்மேல், இகல் நிறம் கணை - வலிமையையும் ஒளியையுமுடைய அம்புகளை, ஏவினன் - எய்தான்; (எ-று.) —நச்சினார்க்கினியர் 'என்ப' என்ற அசையைப் புறனடையாற் கொண்டுள்ளார். (545)

149.—இருவரும் பொருதல்.

ஏவினுலிவ்விருவரும்வெஞ்சம
மேவினார்மெய்ப்படாமல்விலக்கினார்
கூவினாரறைகூவிப்பொருதிளைத்
தோவினார்தமையேநிகரொத்துளார்.

(இ-ள்.) தமைஏ நிகர் ஒத்து உளார் - (வேறுஉவமையில்லாமல்) தங்களையே தாங்கள் உவமையாகப் பொருந்தியுள்ளவரான, இ இருவர்உம் -(வீமன் விகர்ணன் என்ற) இந்த இரண்டு பேரும்,—ஏவினால் - அம்புகளைக் கொண்டு, வெம் சமம் மேவினார் - கொடிய போர்செய்தற்குப் பொருந்தினார்கள்; மெய் படாமல் விலக்கினார் - (தங்களுள் எதிரி எய்யும் அம்புகளைத்) தம்மேற்படாதபடி (எதிரம்புகளால்) தடுத்தார்கள்; கூவினார் - (வீராவேசத்தால்) ஆரவாரஞ்செய்தார்கள்; அறை கூவி - வீரவாதங்கூறி, பொருது - போர்செய்து, இளைத்து - இளைப்படைந்து, ஓவினார் - (சிறிது பொழுது) போரொழிந்துநின்றார்கள்; (எ - று.) (546)

150-—விகர்ணன் வீமனைக் கவசமுதலியன அழித்தல்.

விகனன்விட்டகணைகளின்வீமன்மெய்
இகன்மணிக்கவசம்பிளந்தேறுதேர்
அகலரிக்கொடியற்றுக்கொடிஞ்சியுஞ்
சகலமுற்றுத்தனுவுமுரிந்ததே.

(இ - ள்.) விகனன் விட்ட கணைகளின் - விகர்ணன் எய்த அம்புகளினால், வீமன் மெய் - வீமனது உடம்பில் தரித்த, இகல் மணி கவசம் - வலியதும் இரத்தினம்பதித்ததுமான கவசம், பிளந்து - பிளந்திட,—ஏறு தேர் அகல் அரி கொடி அற்று - (அவ்வீமன்) ஏறியுள்ள தேரிற்கட்டிய பரந்த சிங்கவடிவமெழுதிய கொடியுந் துணிபட,—கொடிஞ்சிஉம் சகலம் உற்று -

தேர்மொட்டும் துண்டுபட,—தனுவும் - (அவனது) வில்லும், முரிந்தது; (எ - று.) (547)

151.—வீமன் விகர்ணனைத் தலைதுணித்தல்.

மின்னையொத்தவிறற்படைமாருதி
பின்னைவிட்டபிறை ரகவார்கணை
யன்னைசித்தமலமரப்பின்னவன்
றன்னைவெற்றிமகுடந்தடிந்ததே.

(இ - ள்.) மின்னை ஒத்த - மின்னலைப்போன்றுவிளங்குகிற, விறல்படை-வலிய ஆயுதங்களையுடைய, மாருதி-வீமன், பின்னை விட்ட-பின்பு தொடுத்த, வார் பிறை முகம் கணை-நீண்ட அர்த்த சந்திரபாணமானது,—பின்னவன் தன்னை-தம்பியான விகர்ணனை,—அன்னை சித்தம் அலமர-(அவனைப்பெற்ற) தாயின் [காந்தாரியின்] மனம் சோகிக்கும்படி, வெற்றி மகுடம் தடிந்தது - சிறந்த கிரீடத்தைத்தரித்த தலையைத் துணித்தது; (எ - று.)

மக்களிடம் தாய்க்குஉள்ள அன்பின் மிகுதிபற்றி, 'அன்னை சித்தமலமர' என்றது. 'வெற்றிமகுடம்' என்பது - அன்மொழித் தொகை; அடையடுத்த வாகுபெயருமாம். (548)

152.—வீமன் கர்ணன்முதலியோரை வென்று மேற்செல்லுதல்.

கோவிகன்னன்கொலைபடப்பற்பல
ராவிகன்னமறைகணையாலறப்
பாவிகன்னன்பதைக்கவென்றேகினன்
மேவிகன்னகம்போற்புயவீமனே.

(இ - ள்.) (இவ்வாறு), கோ விகன்னன் - விகர்ணராசன், கொலை பட-கொல்லப்படவும், பற்பலர் ஆவி - மற்றும்பல வீரர்களது உயிர், கன்னம் அறை கணையால்-காதளவும் நாணியையிழுத்து விடப்படுகிற அம்புகளினால், அற-(உடம்பினின்று)ஒழியவும், பாவி கன்னன் பதைக்க-தீவினையுடையவனான கர்ணன் துடிக்கவும்,வென்று-வெற்றிகொண்டு, மேவு இகல் நகம் போல் புயம் வீமன்-நிலைபெற்ற வலிய மலைபோன்ற தோள்களையுடைய வீமன், ஏகினன்-(அப்பாற்) சென்றான்; (எ - று.)

துரியோதனன் செய்யுங்கொடுமைகட்கெல்லாந் துணைநின்று தூண்டுகோலாகுதலால், 'பாவி கன்னன்' என்றது. மகாபாபிகளுடன் சேர்தலும் பாதகமாதல் காண்க; அன்றியும், அடுத்தடுத்துப் பலமுறை தோற்றல் பரிபவமேயாதலும் உணரத்தக்கது. கன்னம்-கனம்என்பதன் விரித்தலாகக்கொண்டு, கன்னம் அறை-மிகவும் மோதுகின்ற என்று பொருள் கூறுவாருமுளர். கன்னம் மறை என்று பிரித்து-காதுமறையுமாறு நாணி யிழுத்து விடப்படுகிற எனினுமாம். இச்செய்யுளில், திரிபு என்னுஞ் சொல்லணி காண்க; அது நோக்கியே, 'இகன்னகம்' எனத் தனிக்குறில் செறியாத லகரம் வரும் நத்திரிந்தபின் மாயாது திரிந்துநின்றது. (549)

153.—வீமன் முன்சென்ற சாத்தகியோடு சேர்தல்.

அன்றுசாதத்தலகைகளாடவே
சென்றுசாத்தகிதன்னுடன்சேர்ந்தனன்
துன்றுசாத்திரத்தின்படிசூழ்முனே
வென்றுசாத்தியவாகைகொள்வேலினன்.

(இ - ள்.) துன்று சாத்திரத்தின் படி-பொருந்திய நூல்முறைமைப்படி, சூழ் முனே வென்று-(பகைவர்) சூழ்ந்துசெய்த போரை(ப் பொருது) வென்று, சாத்திய-சூட்டிய, வாகை-(வெற்றிக்குஅறிகுறியான) வாகைப்பூமாலையை, கொள் - கொண்ட, வேலினன்-வேலாயுதத்தையுடையவனான வீமன்,—அன்று - அப்பொழுது, சாதத்து அலகைகள் ஆட-கூட்டமான பேய்கள் கூத்தாட, சென்று-மேற்சென்று, சாத்தகிதன்னுடன் சேர்ந்தனன்-சாத்தகியோடு சேர்ந்தான்; (எ - று.)—ஜாதம்-வடசொல்: இதற்குப்பூதமென்று பொருள்கொள்வாருமுளர். (550)

154.—சாத்தகியும் வீமனும் அருச்சுனனை யடுத்தல்.

அங்கி தன்னெ டனிலமுஞ் சேர்ந்தெனச்
சங்க பாணிதன் றம்பியும் வீமனும்
செங்க லங்கலஞ் சேற்றிடை மூழ்கிய
வெங்க ளத்து விசயனைக் கூடினர்.

(இ - ள்.) அங்கிதன்னொடு அனிலம்உம் சேர்ந்து என-நெருப்பும் காற்றும் சேர்ந்தாற் போல, சங்கபாணிதன் தம்பிஉம் வீமன்உம்-சங்கத்தைத் திருக்கையிலுடையவனான கண்ணபிரானது தம்பியாகிய சாத்தகியும் வீமனும், செம் கலங்கல் சேற்றிடை மூழ்கிய வெம் களத்து-சிவந்ததும் கலங்கலாகவுள்ளதுமான(இரத்தச்) சேற்றில் முழுகிய கொடிய போர்க்களத்தினிடையில் நின்ற, விசயனை-அருச்சுனனை, கூடினர்—; (எ-று.) அம்-அசை. (551)

வேறு.

155.—பகைவர்பலரும் மீண்டு மூவரையும் எதிர்த்தல்.

தேவரும் பரவு பாகன் செலுத்துதேர் விடலை யோடு
மூவருஞ் சுடர்கண் மூன்று மூண்டெனத் திரண்ட காலை
மேவருஞ் சமரின் முன்னம் வென்கொடுத் துடைந்த வேந்தர்
யாவருந் திருகி வந்தாங் கெதிரெதி ராகிச் சூழ்ந்தார்.

(இ - ள்.) (சாத்தகியும் வீமனும்), தேவர்உம் பரவு பாகன் செலுத்துதேர் விடலையோடு-தேவர்களுந் துதிக்கப்பெற்ற (கண்ணனாகிய) சாரதி செலுத்துகின்ற தேரையுடைய சிறந்தவீரனான அருச்சுனனோடு (சேர்ந்து), மூவர்உம் - இந்தமூன்றுபேரும், சுடர்கள் மூன்றுஉம் மூண்டுஎன-(சூரியன் சந்திரன் அக்கினி என்னும்) முச்சுடர்களும் கூடியெழுந்தாற்போல, திரண்ட காலை - ஒருங்குகூடியபொழுது,—மேவு அருஞ் சமரில் முன்னம் வென் கொடுத்து உடைந்த வேந்தர் யாவர்உம்-கிட்டுதற்கருமையான போரில் முன்

புறங்கொடுத்துத் தோற்றோடிய பகையரசர்களெல்லாரும், திருகி வந்து-திரும்பிவந்து, ஆங்கு எதிர் எதிர் ஆகி - அவ்விடத்தில் (அவர்கட்கு) எதிரிலே எதிரிலே பொருந்தி, சூழ்ந்தார்-;(எ-று.)— பி-ம்: அடர்ந்து சூழ்ந்தார்.

இதுமுதல் ஒன்பது கவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் நான் காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றையவை மாச்சீர்களுமாகிய அறுசீ ராசிரியவிருத்தங்கள். (552)

156.—சாத்தகியும் பூரிசிரவசும் பொருதல்.

சாத்தகிதானும்பூரிசவாவும்வெஞ்சாபம்வாங்கிக்
கோத்தனர்பகழிசென்றுகுறுகினதேருந்தேருஞ்
சேர்த்தனர்மலைந்தகாலைச்சிலைதுணிவுண்டுதேர்விட்
டேத்தருந்தடக்கைகொட்டியிருவருமல்லினின்றார்.

(இ - ள்.) (அப்பொழுது), சாத்தகிதான்உம் - சாத்தகியும், பூரிசவாஉம்-பூரிச்ரவஸ் என்பவனும், வெம் சாபம் வாங்கி-கொடிய வில்லை வளைத்து, பகழி கோத்தனர்-அம்பு தொடுத்தார்கள்; (அச் சமயத்தில்), தேர்உம் தேர்உம் - (அந்தஇரண்டுபேருடைய) தேர் களும், சென்று குறுகின - எதிர்த்துப்போய் நெருங்கின; சேர்த் தனர்-(இவ்வாறு தேர்களை) நெருங்கச்செலுத்தி, மலைந்த காலை - போர்செய்தபொழுது, இருவர்உம்- இரண்டுபேரும், சிலை துணி வுண்டு-வில் துணிபட்டு, (பின்பு), தேர் விட்டு - தேரைவிட்டு (இறங்கி), ஏதரும் தட கை கொட்டி - (இதுவரையில்) அம்பைத் தொடுத்த பெரிய (தங்கள்) கைகளைத் தட்டிக்கொண்டு, மல்லில் நின்றார்-மற்போர்செய்தலில் முயன்றுநின்றார்கள்; (எ-று.)—பி-ம்: மல்லினேர்ந்தார். (553)

157.—பூரிசிரவனைக் கொல்லும்படி கண்ணன் அருச்சுனனுக்குக் கூறுதல்.

மல்லினின்வென்றுவீழ்த்திமாயவன்றம்பிதன்னைக்
கொல்லுவான்முனைந்துமற்றைக்கோமகனடர்த்தலேக்கிக்
கல்லினின்மாரிகாத்தோன்கண்டுவில்விசயனோடுஞ்
சொல்லினன்பகைவன்றன்னைச்சுடர்முடிதுணித்தியென்றே.

(இ - ள்.) மாயவன் தம்பி தன்னை-கண்ணபிரானுடைய தம்பி யான சாத்தகியை, மற்றை கோமகன் - பகையரசனான பூரிசிரவன், மல்லினின் வென்று வீழ்த்தி-மற்போரினாற் சயித்துக் கீழே தள்ளி, கொல்லுவான் முனைந்து-(அவனைக்) கொல்ல முயன்று, அடர்த் தல்-வருத்துதலை, கல்லினில் மாரிகாத்தோன் - (கோவர்த்தன) மலையைக் கொண்டு மழையைத் தடுத்தவனான கண்ணன், கண்டு-பார்த்து, நோக்கி-ஆலோசித்து, வில் விசயனோடுஉம்-வில் வல்ல அருச்சுனனுடனே, பகைவன் தன்னை சுடர் முடி துணி த்தி என்று சொல்லினன்-'பகைவனை பூரிசிரவனை ஒளியையுடைய தலையைத் துணித்திடுவாய்' என்று சொல்லியருளினான்; (எ - று.) —இங்ஙனஞ் சொன்னது, சாத்தகியை உயிர்பிழைப்பிக்க வேறு வகையில்லாமையாலென்க. (554)

158.—அருச்சுனன் அரிதின் உடன்பட்டு அவனைத் தோள் துணித்தல்.

இருவருமுனைந்தபோரிலிளைத்தவற்குதவியாகப்
பொருவதுகடனன்றென்றுபோற்றியவிசயன்றன்னை
வெருவரமுனைந்துசீறிமீளவும்விளம்பமாயன்
றிருவுளமறிந்துதெவ்வன்றிண்புயந்துணியவெய்தான்.

(இ - ள்.) (அதுகேட்டு), 'இருவர்உம் முனைந்த போரில்-இரண்டு பேரும் தொந்தயுத்தமாகத் தொடங்கிச்செய்த போரில், இளைத்தவற்கு உதவி ஆக-இளைத்தவனுக்குச் சகாயமாக, பொருவது-(வேறொருவன்) போர்செய்வது, கடன் அன்று - முறைமையன்று', என்று-என்று மறுத்துச்சொல்லி, போற்றிய-வணங்கின, விசயன் தன்னை-அருச்சுனனை, மாயன் - மாயவனுன கண்ணன், வெருவர-(அவன்) அஞ்சும்படி, முனைந்து சீறி-மிகக் கோபித்து, மீளஉம் விளம்ப-மறுபடியுஞ் சொல்ல,—(அருச்சுனன்), திருஉளம் அறிந்து-(கண்ணபிரானுடைய) சிறந்த மனக்கருத்தையுணர்ந்து, தெவ்வன் திண் புயம் துணிய எய்தான்-பகைவனான பூரிசிரவனது வலியதோள் அறும்படி பாணம்பிரயோகித்தான்; (எ - று.)

மற்போரிற் பூரிசிரவன் சாத்தகியைக் கீழே தள்ளி அவன்மார்பின்மேலிருந்து உடைவாளை வலக்கையிலெடுத்துச் சாத்தகியின் தலையைத் துணித்தற்கு ஓச்சுமளவில், அங்ஙனமோச்சிய கையை அருச்சுனன் தோளளவுந் துணித்திட்டனனென்க. (555)

159.—சாத்தகி பூரிசிரவனைத் தலை துணிக்க, துரியோதனன் இகழ்தல்.

புயந்துணிவுண்டபூரிசவாவினைப்புரிந்துதள்ளிச்
சயம்புனைவாளிற்றும்பைத்தார்புனைதலையுங்கொய்து
வயம்புனைந்திளவனிற்பமன்னறமன்றிப்போரென்
றியம்பியவிராசராசற்கெதிர்மொழியியம்பலுற்றான்.

(இ - ள்.) புயம் துணிவுண்ட-(அருச்சுனனம்பினால்) தோளறுபட்ட, பூரிசவாவினை-பூரிசிரவனை, இளவல்-கண்ணன் தம்பியான சாத்தகி, புரிந்து தள்ளி - மகிழ்ச்சிகொண்டு கீழே தள்ளி, சயம் புனை வாளின்-வெற்றிகொண்ட (தனது) உடைவாளினால், தும்பை தார் புனை தலைஉம் கொய்து-தும்பைப்பூமாலையைத் தரித்த (அவனது) தலையையும் அறுத்து, வயம்புனைந்துநிற்ப-வெற்றிகொண்டு நிற்க,—(அதுகண்டு), 'இ போர்-இந்த யுத்தம், மன் அறம் அன்று -இராசதருமமன்று,' என்று இயம்பிய - என்றுசொன்ன, இராசராசற்கு-அரசர்க்கரசனான துரியோதனனுக்கு, எதிர் மொழி இயம்பல் உற்றான்-(கண்ணன்) விடைகூறத் தொடங்கினான்;(எ-று.)— அவ்விடையை, மேற்கவியிற் காண்க. (556)

160.—கண்ணன் துரியோதனனுக்கு ஏற்ற விடை கூறுதல்.

தென்னனீரபிமன்றன்னைநேரறவென்றபோரும்
முன்னமேசுவேதன்றன்னைவீடுமன்முடித்தபோரும்
மன்னறமுறைதவாமன்மலைந்தனிரென்றுநக்கான்
றன்னைவந்தடைந்தோர்க்குற்றதளர்வெலாமொழிக்குந்தாளான்.

(இ-ள்.) தன்னை வந்து அடைந்தோர்க்கு - வந்து தன்னைச் சரணமடைந்தவர்கட்கு, உற்ற தளர்வு எலாம் ஒழிக்கும் - நேர்ந்த துன்பங்களையெல்லாம் நீக்கியருளுகிற, தாளான் - திருவடியையுடையவனான கண்ணபிரான்,-(துரியோதனனைநோக்கி), - 'நென்னல்-நேற்று, அபிமன் தன்னை-அபிமந்யுவை,நீர்-நீங்கள், நேர் அற-தடையில்லாமல், வென்ற - சயித்த, போர்உம் - போரையும், முன்னம்ஏ - முதல் நாளிலேயே, சுவேதன் தன்னை- சுவேதனை, வீடுமன் முடித்த - பீஷ்மன் கொன்ற, போர்உம் - போரையும், மன் அறம் முறை தவாமல் மலைந்தனிர் - இராசதரும முறைமை தவறாமற்செய்தீர்கள்,' என்று—,நக்கான் - சிரித்தான்; (எ-று.)—நகுதல்—எள்ளல் பற்றியது. பி-ம். நேருற. (557)

161.—அருச்சுனன் வீமனுடனும் சாத்தகியுடனும் பகைவர்சேனையை நெருங்குதல்.

பின்னரும்விசயனிற்பப்பேணலார்பின்னிட்டோட
மன்னரின்மலைந்தோர்தம்மைவாளியால்வானிலேற்றி
முன்னவனோடுமந்தமுகில்வண்ணனிளவலோடுந்
தன்னுரைவழுவாவண்ணந்தரியலர்படையைச்சார்ந்தான்.

(இ-ள்.) பின்னர்உம் - பின்பும், விசயன் - அருச்சுனன், நிற்ப - (போரில்) நிலைநிற்றலால், பேணலர் - பகைவர்கள்,பின் இட்டுஓட - புறங்கொடுத்துஓடிப்போக,—(அவ்வருச்சுனன்),—மன்னரில் மலைந்தோர்தம்மை வாளியால் வானில் ஏற்றி - பகையரசர்களில் (புறங்கொடாது) எதிர்த்துப்போர்செய்தவர்களை (த் தனது) அம்புகளினால் வீரசுவர்க்கத்திற்செலுத்திக் கொண்டு, முன்னவனோடுஉம் - (தனது)முன்பிறந்தவனான வீமனுடனும், அந்த முகில் வண்ணன் இளவலோடுஉம் - காளமேகம்போலுந் திருநிறமுடையனான கண்ணபிரானது திருத்தம்பியாகிய அச் சாத்தகியுடனும், தன் உரை வழுவா வண்ணம் - தனது சபத வார்த்தை தவறாமல் நிறைவேறுதற்பொருட்டு, தரியலர் படையை சார்ந்தான் - பகைவர்களது உட்சேனையை நெருங்கினான்;

தன்னுரை வழுவாவண்ணம் - சயத்திரதனைக் கொல்லுதற்பொருட்டென்க. இங்கே, 'தரியலர்படை' என்றது, பின்னணிச் சேனை. (558)

162.—எதிரிகள் சயத்திரதனை நிலவறையுள் மறைத்துவைத்துப் பாதுகாத்தல்.

அருக்கனோர்கணத்திலத்தமடையுமவ்வளவுங்காக்கிற்
செருக்கிளர்விசயனின்றேதீயிடைவீழ்தறிண்ணம்
நெருக்குபுநின்மினென்றுநிலவறையதனிலந்த
மருக்கமழ்தொடையலானைவைத்தனர்மருவலாரே.

(இ-ள்.) 'அருக்கன் - சூரியன், ஓர் கணத்தில் - ஒருக்ஷணப்பொழுதிலே [மிகவிரைவிலே என்றபடி], அத்தம் அடையும் - அஸ்தகிரியை அடைவான் [அஸ்தமிப்பான்]; அ அளவுஉம் -

அதுவரையிலும், காக்கின் - (சயத்திரதனைப்) பாதுகாத்தால், செரு கிளர் விசயன் - போரிற் சிறந்த அருச்சுனன், இன்றுஏ - இன்றைத்தினமே, தீயிடை வீழ்தல் - அக்கினிப்பிரவேசஞ்செய்து இறத்தல், திண்ணம் - நிச்சயம்:(ஆதலால்), நெருக்குபு நின்மின்- (அச்சயத்திரதனுள்ள இடத்துக்கு அருச்சுனன் செல்லவொண்ணுதபடி இடைவிடாது)நெருக்கிக்கொண்டு நில்லுங்கள்', என்று- என்று சொல்லிக்கொண்டு, மருவலார் - பகைவர்கள், அந்த மரு கமழ் தொடையலானை - வாசனைவீசுகிற மாலையைத் தரித்தவனை அந்தச்சயத்திரதனை, நிலவறை யதனில்வைத்தனர்-நிலத்திலுண்டாக்கிய ஓரறையினுள்ளே (மறைத்து)வைத்தார்கள்;(எ-று.)

163.—சயத்திரதன் கட்புலனுகாமை.

நச்சனை யரவ மென்ன நடுங்கின னின்ற காலைத்
துச்சனை கணவன் றன்னைத் தோற்றமொன் ருனுங் காணுன்
பச்சனை முடைகொண் மேனிப் பாடிமா மகளிர் பைம்பொற்
கச்சனை புளக பாரக் கனதனங் கலந்த தோளான்.

(இ - ள்.) பசு அளை முடை கொள் - பசிய வெண்ணெய்க்கு உரிய முடைநாற்றத்தைக் கொண்ட, மேனி - உடம்பையுடைய, பாடி மா மகளிர்-திருவாய்ப்பாடியிலுள்ள அழகிய மகளிரது, பைம் பொன்-பசும் பொன்னணிகளையணிந்தவையும், கச்சு அளை- கஞ்சுகம்பொருந்தியவையும், புளகம் - (மகிழ்ச்சி மிகுதியாலாகிய) மயிர்ச்சிலிர்ப்பையுடையவையுமான, பாரம் கன தனம் - பருத்த வலிய தனங்களிலே, கலந்த - சேர்ந்த, தோளான் - தோள்களையுடையவனுன கண்ணபிரான்,—அளை நஞ்சு அரவம் என்ன நடுங்கினன் நின்ற காலை - வளையினுள்ளேபதுங்கிய விஷசர்ப்பம்போல (க்கொடிய சயத்திரதன் நிலவறையினுட் புக்கு) மிக அச்சங்கொண்டு நின்றபொழுது, துச்சளை கணவன்தன்னை தோற்றம் ஒன்ருன் உம் காணுன்-துச்சளையின்கணவனுன அவனை ஒருவகையாலும் வெளித்தோன்றக் காணுதவனுயினுன்; (எ-று.)

அஸ்தமிக்கிறசமயம் சமீபித்தவளவிலும் சயத்திரதன் கண்ணெதிரிலே காணப்படாமையாலும், அவனை வெளிப்படுத்தற்கு வேறொருவகையில்லாமையாலும், பாண்டவசகாயனுன கண்ணபிரான் மாயைசெய்யலுற்றன னென்பார், இது கூறினர். முந்தின நாட்போரிலே அபிமன்பக்கல் துரோகஞ்செய்த சயத்திரதன் அடுத்தநாட்போரில் அருச்சுனனுக்கு அஞ்சி வெளிப்படுதலின்றி நிலவறையினுள்ளேயே பதுங்கியிருத்தற்கு, உடனே தன்னைப் பிறர் நாடிக்கொல்வ ரென்னும் அச்சத்தால் ஏதேனும் ஒரு மறைவிடத்தினுள்ளேபுகுந்து வெளிப்படாது அஞ்சிக்கிடக்கும் தீண்டிய விஷநாகம் ஏற்ற உவமை. துச்சளை - துரியோதனுதியர் தங்கை. வெண்ணெய்க்குப் பசுமை-குளிர்ச்சியும், உருக்காமையும், புதுமையும். கண்ணன் திருவாய்ப்பாடியில் வளர்ந்த இளமைப் பருவத்தில் அங்குள்ள கோபஸ்திரீகள்பலரோடுங் கலந்து திருவிளையாடல்கொண்டருளின னென்பது பிரசித்தம். பாடி - முல்லை நிலத்து ஊர். பொன் - கருவியாகுபெயர். (560)

வேறு.

164.—கண்ணன் தனது திருவாழியாற் சூரியனை மறைத்தல்.

பாராழி யவலமறப் பாண்டவர்த மிடர்தீரப் பார்த்தன் வாழப்
பேராழி யணைதுயிலும் பெருமிதமு முடன்மறந்து பிறந்த மாயோன்
ஓராழி யெழுபரித்தே ருடையானை மாயையினு லொழிக்கத் தன்கைக்
கூராழி பணித்தலுமக் களம்போலச் சிவந்தனவக் குடபாலெங்கும்.

(இ - ள்.) ஆழி - கடல்சூழ்ந்த, பார் - பூமியினது, அவலம் - (அதிபாரத்தாலாகிய) துன்பம், அற - நீங்குதற்பொருட்டும், பாண்டவர் தம் இடர் தீர - பஞ்சபாண்டவரது துன்பம் தீர்தற் பொருட்டும், பார்த்தன் வாழ - அருச்சுனன் அழியாது வாழ்தற் பொருட்டும், பேர் ஆழி அணை துயிலும் பெருமிதம் உம் உடன் மறந்து பிறந்த-பெரிய திருப்பாற்கடலிலே ஆதிசேஷசயநத்திலே யோகநித்திரைசெய்தருள்கிற பெருந்தகைமை முழுவதையும் ஒருசேர விரைவிலே மறந்து (இங்குக் கண்ணனாகத்) திருவவதரித்த, மாயோன்-மாயையையுடையவனான திருமால், ஓர் ஆழி எழு பரி தேர் உடையானை - ஒற்றைச்சக்கரத்தையும் ஏழுகுதிரைகளையுங் கொண்ட தேரை யுடையவனான சூரியனை, மாயையினால் ஒழிக்க - வஞ்சனையால் மறைக்க (க் கருதி), தன் கை கூர் ஆழி பணித்தலும்-தனது திருக்கையிலேந்துதற்கு உரிய கூரிய சக்கராயுதத்துக்குக் கட்டளையிட்டவளவிலே, (அது சென்றுகரியதொரு வடிவு கொண்டுசூரியமண்டலத்தை மறைத்திட்டதனால்), அ குடபால் எங்கும் அ களம் போல சிவந்தன - மேற்குத்திக்கிடங்களெல்லாம் (செந்நீர் நிறைந்த) அப்போர்க்களம்போலச் செந்நிறமடைந்தன; [இயல்பான சூரியாஸ்தமநகாலத்திற்போலச் செவ்வானம் பெற்றன]; (எ - று.)

துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலநத்திற்காகவே அவதாரங் கொண்ட பேரருளாளனென்பது முன்னடிகளின் தேர்ந்த பொருள். அணையிலேதுயிலுதலும் பெருமிதமும் எனவுமாம். பெருமிதம் - பரத்துவம். பி - ம்: அறிதுயிலும்.

இதுமுதற் பத்தொன்பதுகவிகள்-பெரும்பாலும்முதல்நான்கு சீர் காய்ச்சீர்களும், மற்றையிரண்டும் மாச்சீர்களுமாகிய அறுசீராசிரியவிருத்தங்கள். (561)

165.—கௌரவசேனையார் மகிழ்ச்சியோடு சயத்திரதனை வெளிக்கொணர்தல்.

அயத்திரதமிடப்பசும்பொனுவதுபோ லருச்சுனனுரறிஞனுக
நயத்திரதமொழிக்கீதைநவின்றபிரான் மயக்கறியார்நாள்செய்வான்றன்
வயத்திரதமறைந்ததெனவலம்புரித்தா ரவன்சேனைமன்னர்யாருஞ்
செயத்திரதன்றனைக்கொண்டுசெருமுனையில் விசயனெதிர்சென்றுசேர்ந்தார்.

(இ - ள்.) அயத்து - இரும்பிலே, இரதம் இட - (ரசவாதத்துக்கு உரிய மகாமூலிகையினது) சாற்றைப் பிழிவதனால், பசும்

பொன் ஆவதுபோல் - (அது) பசும்பொன்னாக மாறுவதுபோல, அருச்சுனன் ஆர் அறிஞன் ஆக - (ஸாமாந்யஞானத்தோடு கூடியிருந்த) அருச்சுனன் (எளிதில்) நிறைந்த தத்துவஞான முள்ளவனாம்படி, நயத்து இரதம் மொழி கீதை நவின்ற-இனிமையான சுவையுள்ள சொற்களையுடைய கீதையை உபதேசித்தருளிய, பிரான்-பெருமையையுடைய கண்ணனது, மயக்கு - மாயையை, அறியார் - அறியாதவர்களாய்,—நாள் செய்வான் தன் இரதம் வயத்து மறைந்தது என - தினத்தைச் செய்பவனான சூரியனது தேர் இயல்பில் அஸ்தமித்திட்டதெனக் கருதி,—வலம்புரி தாரவன் சேனை மன்னர் யார்உம் - நஞ்சாவட்டைப் பூமாலையையுடையவனான துரியோதனனது சேனையிலுள்ள அரசர்களெல்லாரும், செயத்திரதன் தனை கொண்டு செருமுனையில் விசயன் எதிர் சென்று சேர்ந்தார் - சயத்திரதனை வெளிப்படுத்தி உடனழைத்துக்கொண்டு போர்க்களத்தில் அருச்சுனனெதிரிற் போய்ச் சேர்ந்தார்; (எ - று.)

இரதம் - ரஸகுளிகையுமாம். அருச்சுனனைச் சீர்திருத்தித் தன்வழிப்படுத்தி அவனைக்கொண்டு பகையழித்தலிற் கண்ணபிரானுக்குஉள்ள ஆதரமும், எப்படிப்பட்டதையும் எளிதில்மாற்ற வல்ல அப்பெருமானது ஸர்வசக்தியும், எளிதில் மெய்யுணர்வை இனிது புகட்டுகிற கீதையின் சிறப்புந் தோன்ற, 'அருச்சுனனாரறிஞனாக நயத்திரத மொழிக் கீதை நவின்ற பிரான்' என்றார்.

166.—கண்ணன் அருச்சுனனைநோக்கிச் சயத்திரதனைக் கொல்லச் செல்லுதல்.

எண்சிறந்தமகன்றலையைநிலத்திட்டான் றலைதுகளாகென்றுநாடித்
தண்சமந்தபஞ்சகமென்றொருமடுவி லிவன்றாதைதருப்பிக்கின்றான்
ஒண்சரங்கொடிவன்றலைமற்றவன்கரத்திற் போய்விழநீயுடற்றுகென்று
திண்சயங்கொள்விசயனுக்குச்சிந்துபதி தனைக்காட்டித்திருமால்சொன்னான்.

(இ - ள்.) 'எண் சிறந்த மகன் தலையை-வலிமைமிக்க (எனது) புத்திரனான சயத்திரதனது தலையை, நிலத்து இட்டான் - தரையிலே தள்ளியவனது, தலை—, துகள் ஆக - பொடியாய்விடக்கடவது,' என்று நாடி-என்று குறித்து வரம்வேண்டிப்பெற்று,(அதன்பின் இப்பொழுது), இவன் தாதை - இச்சயத்திரதனது தந்தையான வ்ருத்தக்ஷத்ரன், தண் சமந்த பஞ்சகம் என்ற ஒரு மடுவில் - குளிர்ந்த ஸ்யமந்தபஞ்சக மென்ற ஒப்பற்ற மடுவிலே, தருப்பிக்கின்றான் - (சந்தியாவந்தனந் தொடங்கி) அருக்கியசல மெடுத்து விடுகிறான்: அவன் கரத்தில் - அத்தந்தையின் கையிலே, இவன் தலை போய் விழ - இம்மைந்தனது தலை போய்விழும்படி, ஒள் சரம் கொண்டு-ஒளிபொருந்திய [சிறந்த] பாணங்களினால், நீ உடற்றுக-நீ பொருது அழிப்பாயாக,' என்று—, திண் சயம் கொள் விசயனுக்கு-வலிய வெற்றியைக்கொள்ளும் அருச்சுனனுக்கு, திருமால்-கண்ணபிரான், சிந்துபதி தனை காட்டி - சிந்துநாட்டரசனான அச்சைந்தவனைச் சுட்டிக்காண்பித்து, சொன்னான்—; (எ - று.)

இச்சயத்திரதன்து தந்தையான வ்ருத்தக்ஷத்ரன் அருமையாக இவனைப்பெற்றபின் இவனதுதலையைக் கீழே தள்ளுபவனது தலை பொடியாச் சிதறிவிடுமென்று ஆகாயவாணிவரமருளவும் பெற்று மகிழ்ந்து அப்பால்இவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவிட்டு வனம்புகுந்து ஸ்யமந்தபஞ்சக மென்ற மடுவின் கரையில் தன்மகனது ஆக்கம் முதலியவற்றைக் குறித்து அரியதவத்தைச் செய்துகொண்டிருக்கின்றான்; இவன் தலையை நீ நேரிற் கீழே தள்ளாமல் தக்கஅம்புகளை ஒன்றன்மேலொன்றுவிடாதுதொடுத்து அவற்றால் அத்தலையை உடம்பினின்றுவேறாக்கி அப்பாற் செலுத்தி, சூரியாஸ்தமநமாய்விட்டதென்று கருதி விரைவாக மாலைக்கடன்கழிக்கத்தொடங்கி அருக்கியசலமேந்தியுள்ள அத்தந்தையின் கையில் விழச்செய்வாயாயின், அவன் அத்தலையைத் தன்கையாற் கீழேயெறிந்து அதனால் தன் தலை வெடித்து இறப்பான்; உன் தலைக்கு அபாயமும் இலதாமென்று கண்ணன் அருச்சுனனுக்கு நல்லுபாய மறிவுறுத்தின னென்பதாம். பரசுராமன் இருபத்தோர்கால் அரசரைக் களையறுத்தபின் தருப்பிக்க அவர் குருதிகொண்டு நிருமித்த ஐந்துமடுக்கள் ஸ்யமந்த பஞ்சகமெனப்படும்: இது, குருக்ஷேத்திரத்திலுள்ளது. (563)

அருச்சுனன் முதலில் எரிபாய்வேனென்று சென்று கிருஷ்ணன் சினந்துசீறப் பிறகு கணைதொடுக்கக் கருதுதல்.

* **என்னுமொழிதனைக்கேட்டு காண்டீபமெடேன்கணையுமினித்தொடேன் யான், சொன்னமொழிபிழையேனென்றெதிர்நடந்தான் சுடரெரியிற்றோய்வே னென்ன, வன்னதுகேட்டாழிமாலதிகோபமுடன்சீறவதனாற்பார்த்தன், றன்ன சிலைதனையெடுத்துக் கணைதொடுக்க மதித்தான்சொற்றவறிலாதான்.**

(இ - ள்.) என்னும் மொழிதனை கேட்டு - என்று (ஸ்ரீக்ருஷ்ணன்) சொன்ன வார்த்தையைக்கேட்டபிறகு, (அருச்சுனன்), 'யான்—, இனி—, காண்டீபம் எடேன்-காண்டீவமென்னும் வில்லையெடுத்து, கணைஉம் தொடேன் - அம்பும் தொடுக்கமாட்டேன்: சொன்ன மொழி பிழையேன் - (சூரியாஸ்தமனத்திற்குள் சயத்திரதனைக் கொல்லாவிடின் அக்கினியிற்புகுவேன் என்று) பிரதிஜ்ஞைசெய்த சொல்லைத் தவறமாட்டேன்',என்று-என்று சொல்லி, எதிர் நடந்தான் - (அக்கினியுள்ள இடத்தைநோக்கி) எதிராக நடந்து, 'சுடர் எரியில் தோய்வேன்-சுவாலையுள்ள நெருப்பில் மூழ்குவேன்,' என்ன - என்றுஉறுதியாகஇருக்க,—அன்னது கேட்டு - அந்த(அருச்சுனன்) மொழியைக் கேட்டு, ஆழி மால் - சக்கராயுதத்தையுடைய க்ருஷ்ணன், அதிகோபமுடன் சீற—, அதனால்—, (பிறகு), பார்த்தன் - அருச்சுனன், சொல்தவறு இலாதான் - (க்ருஷ்ணன்சொன்ன)சொல்லைத் தட்டாதவனாய், தன்ன சிலைதனை எடுத்து-தன்வில்லை யெடுத்து, கணை தொடுக்க - (செயத்திரதன் மீது)அம்பு தொடுத்தற்கு, மதித்தான் - எண்ணினான்; (எ - று.)—ஆழிமால்-கருத்துடையடைமொழி.

---

* இச்செய்யுள் சங்கப்பிரதியிலுள்ளது.

167.—அருச்சுனன் சயத்திரதனைக் கொல்லுதல்.

வரத்தினின்முன்பெறுசாபம்வாங்கியருச்சுனன்சிந்துமகீபன்மௌலிச், சிரத்தினிலெய்தலுந்துணிந்ததொருசரத்தாற்றுணிதலுமச்சிரம்வீழாமற், சரத்தினைமேன்மேலேவித்தடத்திருந்துதருப்பித்ததாதைதன்பொற், கரத்திடையேவீழ்வித்தானவனதனைநிலத்திட்டக்கணத்தின்மாய்ந்தான்.

(இ - ள்.) (உடனே), *அருச்சுனன்*—, *வரத்தினில் முன்பெறு சாபம் வாங்கி* - வரமாக முந்தினநாளிற் (சிவபிரானிடம்) பெற்ற வில்லை யெடுத்து வளைத்து, *சிந்து மகீபன் மௌலி சிரத்தினில்* - சிந்துநாட்டரசனது கிரீடமணிந்த தலையின்மேல், *எய்தலும்*- (ஓரம்பை) எய்தமாத்திரத்திலே, *ஒரு சரத்தால்* - அந்த அம்பொன்றினால், *துணிந்தது* - (அந்தத்தலை) அறுபட்டது; *துணிதலும்* - (அங்ஙனம்) அறுபட்டவுடனே, *அ சிரம் வீழாமல்*-அத்தலை கீழ் விழுந்திடாதபடி, *சரத்தினை மேல் மேல்ஏவி*-அம்புகளை இடைவிடாமல் மேன்மேல்தொடுத்து,*தடத்து இருந்து தருப்பித்த தாதைதன் பொன் கரத்திடையே வீழ்வித்தான்*-ஸ்யமந்தபஞ்சக தடாகத்திலே பொருந்தி அருக்கிய ஜலமெடுத்து விடுகிற இவன் தந்தையான விருத்தக்ஷத்திரனது அழகிய கையிலே (அத்தலை) விழும்படி செய்தான்; (செய்யவே),*அவன் அதனை நிலத்து இட்டு அ கணத்தில் மாய்ந்தான்* - அத்தந்தை அத்தலையைக் கீழேபோகட்டு (அதனால்) அந்தக்ஷணத்திலே இறந்தான்; (எ - று.)

சயத்திரனது தலையை நேரில் நிலத்திலே தள்ளியவன் அருச்சுனனாகாமல் அவன் தந்தையே யானதனால், அவன் தலைவெடித்து இறந்தனனென்க. முன் - பதின்மூன்றாம்போர்நாளிரவில் என்றபடி. (564)

168.—சயத்திரதன் இறந்ததற்குத் துரியோதனன் மிக இரங்குதல்.

முன்பட்டானருக்கனெனவெளிப்பட்டான் வெளிப்பட்டுமுடிவிற்சிந்து, மன்பட்டான்மாமாயன்மாயமிதென் றறியாமன்மகன்போய்ப்பட்ட, பின்பட்டானவன்றந்தையினிப்பட்டா ரெவருமெனப்பிழைப்பட்டான்போ, லென்பட்டானரவுயர்த்தோனெரிப்பட்டான் விசயனெனவெண்ணிநின்றான்.

(இ - ள்.) *முன் அருக்கன் பட்டான் என*-எதிரிற் சூரியன் அஸ்தமித்தானென்ற காரணத்தால், *சிந்து மன்* - சிந்துதேசத்தரசனான சயத்திரதன், *வெளிப்பட்டான்* - (நிலவறையினின்று) வெளிவந்தான்: *வெளிப்பட்டு*-(அங்ஙனம்) வெளிவந்து, *முடிவில்* - இறுதியிலே, *பட்டான்* - (அருச்சுனனால்) இறந்திட்டான்; *மா மாயன் மாயம் இது என்று அறியாமல்*-மிக்கமாயையை யுடையவனான கண்ணபிரானது தந்திரமிதுவென்று உணராமல், - *மகன் போய் பட்ட பின் அவன் தந்தை பட்டான்*-(தன்)மகனான சயத்திரதன் இறந்துபோனபின்பு அவனது தந்தையான விருத்தக்ஷத்திரனும் இறந்தான்: *இனி* - இவர்கள் இறந்தபின், *எவர் உம் பட்டார்* - (நம்பக்கத்தவர்) யாவரும் இறந்தவரேயாவர், *என* -

என்றுசிந்தித்து, பிழைப்பட்டான் போல்-(குறித்த இலக்குத்) தவறியவன்போல, விசயன் எரி பட்டான் என எண்ணி நின்றான் அரவு உயர்த்தோன் என் பட்டான்-அருச்சுனன் அக்கினிப்பிரவேசஞ்செய்து இறந்தானென்று எண்ணி மகிழ்ந்துநின்றவனான துரியோதனன் என்ன வருத்தமடைந்தான்! [மிக வருந்தினான் என்றபடி]; (எ - று.)

முடிவில்-அப்பகலிற் பெரும்பான்மையும் மறைந்து தப்பி நின்று அதன் இறுதியிலே யென்க. 'இது' என்றது-தன்கையில் தன்மைந்தன் தலைவிழச் செய்ததை. 'மாயன் மாய மிதென் றறியாமல்' என்றது, 'அவன் தந்தை பட்டான்' என்பதனோடு இயையும். 'இனிப்பட்டாரெவரும்' என்றது, இனியாவரும் தவறாமல் அழிந்திடுவரென்ற துணிவினால். சூரியன் அஸ்தமிக்குமளவும் சயத்திரதன் அருச்சுனனுக்குப் புலப்படாமல் நின்றதனால், அருச்சுனன் சபதப்படி தீக்குதித்து இறந்திடுவது தவறாதென்று எண்ணித் துரியோதனன் களித்துநின்றான்: அந்த எண்ணம் தவறிப் போய் வேறுவகையாய் முடிந்தமைபற்றி, 'பிழைப்பட்டான் போல்' என்றார்; 'போல்'-ஒப்பில்போலி: (கையிற் கிடைத்த பொருள்) தவறப்பெற்றவன்போல மிக வருந்தினனென்க. (565)

169.—கண்ணன் திருவாழி விலகச் சூரியன் விளங்குதல்.

கன்னசவுபலர்முதலாங்காவலருஞ்சுயோதனனுங்கரந்தான்வெய்யோன்
சொன்னமொழிபிழைத்தான்வெஞ்சுவேததுரங்கமனென்றுதுள்ளியார்த்தார்
அன்னபொழுதெம்பெருமான்பணிகொண்டசுடராழியகற்றநோக்கி
னின்னமொருபனைத்தனைப்போழ்துண்டெனநின்றனனெழுபேரிவுளித்தேரோன்.

(இ - ள்.) கன்ன சவுபலர் முதல் ஆம் காவலர்உம்-கர்ணனும் சகுனியும் முதலான அரசர்களும், சுயோதனன்உம் - துரியோதனனும்,—'வெய்யோன் கரந்தான்-சூரியன் அஸ்தமித்தான்: (அதன் பின்பு சயத்திரதனைக் கொன்றதனால்), வெம் சுவேத துரங்கமன் சொன்ன மொழி பிழைத்தான்-கொடிய (நான்கு) வெள்ளைக்குதிரைகளையுடையவனான அருச்சுனன் (முந்தினநாட்) சொன்ன சபத வார்த்தை தவறினான்,' என்று-என்று எண்ணியும் சொல்லியும், துள்ளி ஆர்த்தார் - குதித்து ஆரவாரஞ்செய்தார்கள்; அன்ன பொழுது-அவ்வளவிலே, எம் பெருமான் - எமக்குத்தலைவனான கண்ணபிரான், பணி கொண்ட சுடர் ஆழி அகற்ற - (தனது) கட்டளையை நிறைவேற்றிய விளங்குகிற சக்கராயுதத்தை விலகச் செய்ய,—நோக்கின் -பார்க்குமிடத்து,—எழு பேர் இளிவுதேரோன் -ஏழு பெரிய குதிரைகளையுடைய தேரையுடையவனான சூரியன், இன்னம் ஒரு பனை தனை போழ்து உண்டுஎனநின்றனன் -(அஸ்தமிப்பதற்கு) இன்னமும் ஒருபனைமரத்தளவு இடங்கொண்ட பொழுது உண்டென்றுசொல்லும்படி நின்றான்; (எ-று.)—பனைத்தனைப்போழ்து - சூரியனிருக்குமிடத்துக்கும் அஸ்தமிக்கச்செல்ல வேண்டிய இடத்துக்கும் இடைப்பட்ட இடம் ஒருபெரியபனைமரம் எவ்வளவுநீளம் இருக்குமோ அவ்வளவுதூரம் என்க. (566)

170.—இதுவும், அடுத்தகவியும்-சேனையிலுள்ளார்வார்த்தை.

விரியோதநெடுங்கடலில்வீழ்வதன்முன் விரைந்துரகன்விழுங்கினனோ
வெரியோடிமகனிறக்குமெனமகவான் மறைக்கமுகிலேவினனோ
கரியோன்கைத்திகிரியினன்மறைத்தனனோ விருள்பரந்தகணக்கீதென்னோ
பெரியோர்கடிருவுள்ளம்பேதித்தா லெப்பொருளும்பேதியாதோ.

(இ - ள்.) விரி-பரவுகின்ற, ஓதம்-அலைகளையுடைய, நெடுங் கடலில்-பெரிய கடலிலே, வீழ்வதன்முன்-விழுந்துஅஸ்தமிப்பதன் முன்னே, (சூரியனை), உரகன் - பாம்புவடிவமான ராகு அல்லது கேது, விரைந்துவிழுங்கினனோ-விரைவாகவந்துவிழுங்கிப் பின்பு உமிழ்ந்தனனோ? (அன்றி), மகவான் - இந்திரன், மகன் எரி ஓடி இறக்கும் என்-தன்பிள்ளையான அருச்சுனன் அக்கினிப்பிரவேசஞ் செய்து இறப்பனே யென்பதைப் பற்றி, (அங்ஙனம் இறவாமைப் பொருட்டு), மறைக்க முகில் ஏவினனோ-(சூரியனை) மறைத்தற்கு மேகங்களைச் செலுத்தினனோ? (அல்லது), கரியோன்-கிருஷ்ணன், கை திகிரியினால் மறைத்தனனோ-(தன்) கைவசப்பட்ட சக்கரத்தைக்கொண்டு (சூரியனை) மறைத்திட்டானோ? இருள் பரந்த கணக்கு ஈது என்னோ-(சூரியன் உண்மையாகஅஸ்தமிப்பதற்குமுன்னமே இடையில்) இருள்பரவியவிதம் யாதுகாரணத்தா லானதோ? பெரியோர்கள் திரு உள்ளம் பேதித்தால எ பொருள் உம் பேதியாதுஓ-பெரியோர்களுடைய சிறந்த மனம் மாறினால் எந்தப்பொருளும் மாறுபடாதோ? (எ - று.)

ஈற்றடி-கண்ணன்முதலான மகான்களுடைய மனம் துரியோதனன் செய்த கொடுமையால் மாறுபட்டிருத்தலாற் பகலும் இரவாக மாறியதுபோலுமென்ற சிறப்புப்பொருளைப் பொதுப்பொருளால் விளக்கியவாறு: வேற்றுப்பொருள்வைப்பணி. (567)

171. உந்திரதத்தனிவலவனுபாயத்தால்வருணன்மகனுயிரைமாய்த்தான்
மந்திரமொன்றறிவித்துவயப்புயமாயிரத்தோனைமடிவித்திட்டான்
தந்திரமெய்ம்மயங்கிவிழத்தன்சங்கமுழக்கினன்றபனன்மாய
விந்திரசாலமுஞ்செய்தானிந்திரன்சேய்வெல்லாமல்யார்வெல்வாரே.

(இ - ள்.) இரதம் உந்து தனி வலவன் - (அருச்சுனனது) தேரைச் செலுத்துகின்ற ஒப்பற்ற சாரதியான கண்ணன், உபாயத்தால்-ஒரு தந்திரத்தால், வருணன் மகன் உயிரை மாய்த்தான்-வருணனதுகுமாரனான சுதாயுவின் உயிரைப்போக்கினான்;(பின்பு), மந்திரம் ஒன்று அறிவித்து-ஒருமந்திரத்தை (அருச்சுனனுக்கு) உபதேசித்து, வய புயம் ஆயிரத்தோனை மடிவித்திட்டான் - (அதனால் அருச்சுனன்) வலிய ஆயிரவாகுவைக் கொல்லும்படி செய்தான்; (அதன்பிறகு), தந்திரம்-பகைவர்சேனை, மெய் மயங்கிவிழ-உடம்பு (தெரியாமல்) மயக்கமடைந்து விழும்படி, தன் சங்கம் முழக்கினான்-தனது பாஞ்சசன்னியத்தை ஒலிப்பித்தான்; (இவையல்லாமல்), தபனன் மாய இந்திரசாலம்உம் செய்தான் - சூரியன் மறையும்படி பெருமாயையையுஞ்செய்தான்;(ஆதலால்), இந்திரன் சேய் வெல்லாமல் யார் வெல்வார் - (அக்கண்ணபிரானது உதவி

யைப் பலவாற்ருலுங் கொண்ட) அருச்சுனன் வெற்றிகொள்ளாமல் (வேறு) யார் (போரில்) வெற்றி கொள்வர்? (எ-று.)—*31, 32 35, 36, 41, 88, 164*-இக்கவிகள், இங்கு நோக்கத்தக்கன. *(568)*

172.—இதுவும், அடுத்த கவியும்-ஒருதொடர்: துரியோதனன் சிலகூறிச் சேனையோடுஞ் சென்று போர்தொடங்குதலைக் குறிக்கும்.

முடையெடுத்தநவநீதந்தொட்டுண்டுங் கட்டுண்டு முதனுளைக்
குடையெடுத்துமழைதடுத்தும்வஞ்சனைக்கோர் கொள்கலமாங்கொடியபாவி
படையெடுத்துவினைசெய்யேனெனப்புகன்ற மொழிதப்பிப்பகைத்தபோரி
னிடையெடுத்தநேமியினல்வெயின்மறைத்தானின்னமிவனென்செய்யானே.

(இ - ள்.) முடை எடுத்த - முடைநாற்றம் பொருந்திய, நவநீதம்-வெண்ணெயை, தொட்டு உண்டுஉம் - கையாலெடுத்துத் தின்றும், கட்டுண்டுஉம் - (அதற்காக ஆய்ச்சியரால்) கட்டப்பட்டும், முதல் நாள் - இளம்பிராயத்திலேயே, நாகம் குடை எடுத்து மழை தடுத்துஉம் - (கோவர்த்தந) மலையைக் குடையாக எடுத்துப் பிடித்து அதனுல் (இந்திரன் பெய்வித்த) மழையைத் தடுத்தும், வஞ்சனைக்கு ஓர் கொள்கலம் ஆம் - வஞ்சனைகட்கு ஓர் இருப்பிடமாகவுள்ள, கொடியபாவி-கொடும்பாவியான கண்ணன், படை எடுத்து வினை செய்யேன் என புகன்ற மொழி தப்பி - '(போரில்) ஆயுதமேந்தித் தொழில்செய்யேன்' என்று (என்னுடன்) சொன்ன சபதவார்த்தை தவறி, பகைத்த போரினிடை எடுத்த நேமியினுல் வெயில் மறைத்தான் - (ஒருவரோடொருவர்) பகைத்துச்செய்கிற போரின்நடுவிலே தான் ஏந்திய சக்கராயுதத்தைக்கொண்டு சூரியனை மறைத்திட்டான்; இன்னம் இவன் என் செய்யான்-இன்னமும் இந்தக்கண்ணன் எந்த அநீதிதான் செய்யமாட்டான்? (எ - று.)—பி-ம்: முன்னுள். எனசெய்வானே.

நவநீதம் என்ற வடசொல்லுக்கு-புதிய தயிரினின்று கடைந்தெடுக்கப்பட்டதென்று காரணப்பொருள் கூறுவர். கொள்கலம்-பாத்திரம். *(569)*

173. **ஒற்றைநெடுந்திகிரியினன்மறைவதன்மு னைவரையுமுடனேமோதிச், செற்றிடுதல்யான்படுதறிண்ணமெனச் சேனையொடுஞ்சென்றுசூழ்ந்தான், கொற்றவனதுரைகேட்டுக்கொடிநெடுந்தேர் நரபாலர்சபதங்கூறி, மற்றவரோடொருகணத்தில்வம்மினெனத்தனித்தனிபோய்மலைதலுற்ருர்.**

(இ - ள்.) 'ஒற்றை நெடுந் திகிரியினன் - பெரிய ஒற்றைத் தேராழியை யுடையவனுன சூரியன், மறைவதன் முன் - (இனி உண்மையாக) அஸ்தமிப்பதனமுன்னே, ஐவரைஉம் உடனே மோதி செற்றிடுதல் - பாண்டவரைந்துபேரையும் ஒருசேரத்தாக்கி (யான்) கொன்றிடுதலாவது, யான் படுதல் - (அங்ஙனம் அது கூடாவிட்டால் அவர்களால்) யான் இறத்தலாவது, திண்ணம் - (இரண்டில் ஒன்று) நிச்சயம்,' என - என்று வீரவாதஞ்செய்து கொண்டு, (துரியோதனன்), சேனையொடுஉம் சென்று சூழ்ந்

தான் - சேனையுடனே போய் (ப் பாண்டவரை)ச் சூழ்ந்துகொண்டான்; கொற்றவனது உரை கேட்டு - துரியோதனராசனது அந்த வார்த்தையைக் கேட்டு, கொடி நெடுந்தேர் நரபாலர் - கொடிகட்டிய உயர்ந்த தேரையுடைய அவன் சேனையரசர்களும், சபதம் கூறி - (தாம் தாம்) சபதவார்த்தை சொல்லிக்கொண்டு, ஒரு கணத்தில்-ஒரு கணப்பொழுதிலே, வம்மின் என - '(போர்க்கு) வாருங்கள்' என்றுசொல்லி அறைகூவிக்கொண்டு, மற்றவரோடு - எதிர்ப்பக்கத்தாருடனே, தனி தனி போய் மலைதல் உற்றார்-தனித்தனியே சென்று போர்செய்யத் தொடங்கினர்; (எ - று.)—திகிரி இனன் என்று பிரித்து, இனன் - சூரியன் எனினும் அமையும்; இநன் -வடசொல். பி - ம்: உடன்று. (570)

174.—இருதிறத்தவரும் போர்செய்தல்.

துருபதனுஞ்சாத்தகியுந்துரெளபதிமைந் தருமுடுகித்தொட்டசாபக்
குருவுடனேபோர்செய்தார்தம்பியருஞ் சுயோதனனுங்கொற்றவேந்த
ரொருபதினுயிரவரும்போய்வீமனுட னுடற்றியவனூர்ந்ததேரும்
வரிசிலையுமழித்தனர்பினவனும்வறுங் கரதலத்தால்வன்போர்செய்தான்.

(இ - ள்.) துருபதன்உம் - துருபதராசனும், சாத்தகியும்—, துரெளபதி மைந்தர்உம் - திரெளபதியின்குமாரர் ஐந்துபேரும், முடுகி - விரைந்து [அல்லது கோபம்மூண்டு], தொட்ட சாபம் குருவுடன் - பிடித்த வில்லையுடைய துரோணசாரியனுடன், போர் செய்தார்—; சுயோதனன்உம் - துரியோதனனும், தம்பியர்உம் - அவன் தம்பிமார் பலரும், கொற்றம் வேந்தர் ஒரு பதினுயிரவர் உம்-வெற்றியையுடைய துணையரசர் பதினுயிரம்பேரும், போய்—, வீமனுடன்—, உடற்றி-போர்செய்து, அவன் ஊர்ந்த தேர்உம் வரி சிலைஉம் அழித்தனர் - அவன் ஏறிய தேரையும் (அவனது) கட்டமைந்தவில்லையும் அழித்தார்கள்; பின் - பின்பு, அவன்உம் - அவ் வீமனும், வறுங் கரதலத்தால் வல் போர் செய்தான் - ஆயுதமில்லாத வெறுங்கைகளினுற் கொடும்போரைச் செய்யலானான்;

துரெளபதிமைந்தர்-திரெளபதியினிடம் பஞ்சபாண்டவர்க்கு முறையே பிறந்த விந்தன், சோமன், வீரகீர்த்தி, புண்டலன், சயசேனன் என்பவர்; இவர்பெயர் வேறுவகையாகவும் வழங்கும்: இவர்கள் உப்பாண்டவரென்றும், பஞ்சத்ரெளபதேயரென்றுங் கூறப்படுவர். (571)

175.—வீமன் வெறுங்கையாற் போர்செய்தல்.

பரியெடுத்துப்பரியெற்றிப்பரித்தேராற்றேரெற்றிப்பனைக்கைவேகக்
கரியெடுத்துக்கரியெற்றிக்காலனிகர்காலாளாற்காலாளெற்றிக்
கிரியெடுத்துவிரியாழிகடைந்தநடந்தோளிருடிகேசனென்ன
வரியெடுத்தகொடிவிடலைதோள்வலியாலுழக்கியரிநாதஞ்செய்தான்.

(இ - ள்.) அரி எடுத்த கொடி விடலை - சிங்கவடிவத்தைத் தரித்த கொடியையுடைய வீரனான வீமன்,—பரி எடுத்து பரி எற்றி - குதிரைகளை யெடுத்து (அவற்றால்) குதிரைகளை மோதியும், பரி தேரால் தேர் எற்றி-குதிரைகள் பூண்ட தேர்களை யெடுத்து (அவற்றால்) தேர்களைத் தாக்கியும், பனைகை வேகம் கரி எடுத்து கரி எற்றி-பனைமரம்போலுந் துதிக்கையையும் உக்கிரத் தன்மையையுமுடைய யானைகளை யெடுத்து (அவற்றால்) யானைகளைப் புடைத்தும், காலன் நிகர் காலாளால் காலாள் எற்றி - யமன்போன்ற காலாள்வீரரையெடுத்து (அவர்களாற்) காலாள் வீரரை யடித்தும்—, கிரி எடுத்து விரி ஆழி கடைந்த தட தோள் இருடிகேசன் என்ன - மந்தரமலையைக்கொண்டு பரவிய திருப்பாற்கடலைக் கடைந்த பெரிய தோள்களையுடைய திருமால்போல,—தோள் வலியால் உழக்கி-(தனது) தோள்களின் வலிமையாற் (கௌரவசேனைக்கடலைக்) கலக்கி,— அரிநாதம் செய்தான்-(வெற்றி தோன்றச்) சிங்கநாதஞ்செய்தான்; (எ - று.)

திருப்பாற்கடலைக்கடைந்த திருமால், பகைவர்சேனைக்கடலைக் கலக்குகிற வீமனுக்கு உவமை. இதில், மந்தரமலை வீமன்தோளுக்கு உவமையாதல் பெறப்படும். பி-ம்: கால்பணிப்பக்காலாளால்.

176 —துரியோதனன்தம்பியரிருவரை வீமன் கொல்லுதல்.

**நிருபர்தொழுங்கனைகழற்கானிலவேந்தன்றம்பியரினெடும்போதாக
விருவர்புறங்கொடாமலதிர்ந்தெதிர்ந்திருதோள்வலிகாட்டவிருவரோடு
மொருவரொருவரையறியாவண்ணமிவனொருவனுமேயுடன்றுசீறிப்
பொருதுபிருகனையும்விறற்சூசிதனையும்வானிற்போக்கினனே.**

(இ - ள்.) நிருபர்-அரசர்கள், தொழும்-வணங்குகிற, கனை கழல் கால்-ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த பாதத்தையுடைய, நிலம் வேந்தன்-பூமி முழுவதுக்கும் அரசனான துரியோதனனது, தம்பியரில்-தம்பிமார்களுள், இருவர்-இரண்டுபேர், நெடும் போது ஆக-வெகுநேரமாக, புறம்கொடாமல்-முதுகுகொடாமல், அதிர்ந்து எதிர்ந்து - ஆரவாரஞ்செய்துகொண்டு எதிரிட்டு, இரு தோள வலி காட்ட-(தங்கள்) இரண்டுதோள்களின் வலிமையை வெளிக் காட்ட,—இருவரோடும்-அந்த இரண்டுபேருடனும், இவன் ஒருவன் உம் ஏ-இந்த வீமனொருத்தன் தானே, உடன்று சீறி பொருது-மிகக்கோபித்துப் போர்செய்து, பிருகனை உம் விறல் சூசிதனை உம்-பிருகனென்பவனையும் பராக்கிரமத்தையுடைய சூசியென்பவனையும், ஒருவர் ஒருவரை அறியா வண்ணம் வானில் போக்கினன் - ஒருத்தர் மற்றொருத்தரை அறியாதபடி வீரசுவர்க்கத்திற் செலுத்தினான்; (எ-று.)

உறவுமுறைமை உடம்பைப்பற்றினதேயன்றி உயிரைப்பற்றினதன்றாதலின் உடம்பைவிட்டு உயிர் நீங்கினவளவிலே அத்தன்மை ஒழிகின்ற இயல்பு விளங்க, 'ஒருவர் ஒருவரை அறியா வண்ணம் வானிற்போக்கினன்' என்றார்: அன்றி, முன்பின்னாகாமற்

சமகாலத்திலே இருவரும் இறக்கும்படி அழித்தானென்ற கருத்துமாம். உடன்று சீறி-ஒருபொருட்பன்மொழி. (573)

177. கடோற்கசன்மகனை அசுவத்தாமன் கொல்லுதல்.

**இகலிடிம்பன்மருமகனுந்திருமகனுங்குருமகனேடெதிர்ந்துபல்கா
லகலிடஞ்செஞ்சேருகவமரருடனசுரரைப்போலமர்செய்காலைப்
பகலுடன்காரிருள்பகைத்தாற்பலிக்குமோவஞ்சனபன்மனையப்போதிற்
புகலிடம்பொன்னுலகாக்கிப்போக்கினனெருகணையாற்புரவித்தாமா.**

(இ-ள்.) இகல்-வலிமையையுடைய, இடிம்பன் மருமகன்உம்-இடிம்பனது உடன்பிறந்தவளின் புத்திரனான கடோற்கசனும், திரு மகன்உம்-(அக்கடோற்கசனது) சிறந்த புத்திரனான அஞ்சநபத்மனும், குரு மகனேடு-துரோணாசாரியனது புத்திரனான அசுவத்தாமனுடனே, பல் கால் எதிர்ந்து - பலமுறை எதிரிட்டு, அகல் இடம் செம் சேறு ஆக-பரந்த போர்க்களத்தினிடம் (இரத்தப் பெருக்கினால்) சிவந்தசேறாகும்படி, அமரருடன் அசுரரை போல் அமர் செய் காலை-தேவர்களுடன் அசுரர்கள் (போர்செய்தல்) போலப் போர் செய்தபொழுது,—பகலுடன் கார் இருள் பகைத்தால் பலிக்குமோ-சூரியனுடனே கரியஇருள் பகைமைகொண்டாற் பயன்படுமோ? [பயன் படாது]; (அவ்வாறே), அ போதில் - அப்பொழுது, புரவித்தாமா-அசுவத்தாமன், (தன்னேடு மாறுபட்டு எதிர்த்த), அஞ்சனபன்மனை—, ஒருகணையால்-ஓரம்பினால், புகல் இடம் பொன் உலகு ஆக்கி போக்கினன்-(அவன்) செல்லுதற்கு உரியஇடம் வீரசுவர்க்கமாம்படி செலுத்தினன்; (எ - று.)

இடிம்பன் மருமகன் - இடிம்பனது உடன்பிறந்தவளாகிய இடிம்பியினிடம் வீமசேனனுக்குப் பிறந்த கடோற்கசன். பூதேவனான அசுவத்தாமனுக்குத் தேவரும், அரக்கரான கடோற்கசனுக்கும் அவன்மகனுக்கும் அசுரரும் உவமைகூறப்பட்டனர். பின்னிரண்டடியில்-எடுத்துக்காட்டுவமையணி. 'மருமகனுந்திருமகனுங் குருமகனேடு'—பிராசம். (574)

178 —கடோற்கசனை அசுவத்தாமன் அடித்துவீழ்த்துதல்.

**மகன்பட்டசினங்கதுவவரையுறழ்தோட்கடோற்கசன்மாமலைகள்வீசி
யகன்பட்டநுதல்வேழமன்னன்மேலெறிந்தெறிந்திட்டார்த்தகாலைக்
குகன்பட்டந்தனக்குரியகோமுனிவன்மாமைந்தன்வீமன்கையிற்
பகன்பட்டபாடெல்லாம்படுத்தியொருகதாயுதத்தாற்படியில்வீழ்த்தான்.**

(இ - ள்.) (பின்பு), வரை உறழ் தோள் கடோற்கசன் - மலையையொத்த தோள்களையுடைய கடோற்கசன், மகன் பட்ட சினம் கதுவ - (தனது) புத்திரன் கொல்லப்பட்டதனாலாகிய கோபம் மிகமூள, அகல் பட்டம் நுதல் வேழம் அன்னன்மேல்-அகன்ற பட்டமணிந்த நெற்றியையுடைய யானைபோல வலியவனான அசுவத்தாமன்மேல், மா மலைகள் வீசி எறிந்து எறிந்திட்டு-பெரிய மலைகளையெடுத்து வேகமாக மிகுதியாய்எறிந்து, ஆர்த்த காலை - ஆரவாரித்தபொழுது,—குகன் பட்டந்தனக்கு

உரிய கோ முனிவன் மா மைந்தன்-முருகக்கடவுளின் பெருமை நிலைக்கு உரியவனும் சிறந்த அந்தணனான துரோணனது சிறந்த குமாரனுமான அசுவத்தாமன்,—வீமன் கையில் பகன் பட்ட பாடு எல்லாம் படுத்தி-வீமசேனனது கையிற் பகாசுரன் பட்ட பாடெல்லாம் (அக்கடோற்கசன்) படும்படி செய்து, ஒரு கதாயுதத்தால் படியில் வீழ்த்தான் - ஒருகதையினால் (அடித்து அவனை) நிலத்திலே தள்ளினான்; (எ - று.)

குகன்பட்டந்தனக்குரிய மைந்தன் எனஇயையும்; முருகக் கடவுள்போல அசுவத்தாமனும் சிவகுமாரனாகிய சிறப்புடையானென்பதாம். "உலாவருந்தனது தாதையொத்த வலியுடைய காளைகழ லுதையினால், விலாவொடிந்து தடமார்பொடிந்துமிடல் வெரிநொடிந்து படுவெம்பிணப், புலாலளைந்த விருகவு ளொடிந்து பொருபுய மொடிந்து கடையொத்தவாய், நிலாவெழுங்கொடிய வெயி றொடிந்து செயலின்றி வாணிருதனிற்கவே" என்ற செய்யுளினால், வீமன் கையிற் பகன் பட்ட பாடெல்லாம் அறிக. (575)

179.—கடோற்கசனைக் கொல்லும்படி துரியோதனன் வேண்டியதற்குக் கர்ணன் உடன்படாமை.

மோகித்துவிழுமரக்கன்மீண்டெழுந்து மோகரிக்கமுடிமகீபன்
வேகித்துக்கன்னனைப்பார்த்திவனுயிரை வீட்டுகெனவேகத்தண்டாற்
சோகித்துத்தளர்ந்தான்மேற்றொடேன்விசய னுயிருணவென்றொடையோசாலத்
தாகித்ததிப்பொழுதேகொன்றுனக்குக் கடன்ஞாலந்தருவேனென்றான்.

(இ - ள்.) மோகித்து விழும் - (இங்ஙனம்) மூர்ச்சித்துக் கீழ் விழுந்த, அரக்கன்-கடோற்கசன், மீண்டு எழுந்து மோகரிக்க-பின்பு மயக்கந் தெளிந்து ஆரவாரஞ்செய்ய,—(அதுகண்டு), முடி மகீபன் - கிரீடாதிபதியான துரியோதனன், வேகித்து - விரைவு கொண்டு, கன்னனை பார்த்து—, 'இவன்உயிரை வீட்டுக - இக்கடோற்கசனுயிரை (இப்பொழுது) ஒழிப்பாயாக,' என - என்று சொல்ல,—(அதற்குக் கர்ணன்),—'வேகம் தண்டால் சோகித்து தளர்ந்தான் மேல் - விசையுள்ள (அசுவத்தாமன்)கதையினால் வருந்தித் தளர்ச்சியுற்ற இவன்மேல், தொடேன் - (இப்பொழுது நான்) அம்புதொடுக்கமாட்டேன்: என் தொடை ஓ - எனது அம்போ, விசயன் உயிர் உண-அருச்சுனனது உயிரைக் கொள்ளுதற்கு,சால தாகித்தது-மிக வேட்கைகொண்டுள்ளது; (ஆதலால்), இப்பொழுதுஏ கொன்று உனக்கு கடல் ஞாலம் தருவேன் - இப்பொழுதே (அருச்சுனனைக்) கொன்று உனக்குக் கடல்சூழ்ந்த நிலவுலகம் முழுவதையும் (இடையூறின்றித் தனியேயுரியதாம்படி) கொடுப்பேன்,' என்றான் - என்று சொன்னான்; (எ-று.)—பி - ம்: தொடைபோய்ச். (576)

180.—கிருபாசாரியன் கர்ணனைப் பரிகசித்தல்.

கிருபனுடனிரவிமகன்புகன்றவுரை கேட்டருகேநின்றவிற்கைக்
பகிருன்மிகநகைத்தெதிரேகிட்டினன் முதுகிடுவைகிரீடிதன்னைப்
நிடபன்

பொருபகழிக்கிரையாகப்போக்குகின்றே னெனமொழிவைபோர்வல்லோர்க
ளுருவழியத்தம்வலிமையுரைப்பரோ வெனவுரைத்தானுரையான்மிக்கோன்.

(இ - ள்.) நிருபனுடன் - துரியோதனராசனுடனே, இரவி மகன் - சூரியகுமாரனான கர்ணன், புகன்ற - சொன்ன, உரை - அந்த வார்த்தையை, கேட்டு—, அருகே நின்ற - சமீபத்திலே நின்ற, உரையால் மிக்கோன் - புகழினாற் சிறந்தவனான, வில் கை கிருபன் - வில்லையேந்திய கையையுடைய கிருபாசாரியன், மிக நகைத்து - மிகுதியாகச் சிரித்து, (கர்ணனை நோக்கி), 'எதிரே கிட்டினால் முதுகு இடுவை - (அருச்சுனன்) எதிரிலே கிட்டினாற் புறங்கொடுப்பாய்; (அவன்கிட்டாதபொழுது), கிரீடிதன்னை பொரு பகழிக்கு இரை ஆக போக்குகின்றேன் என மொழிவை-அருச்சுனனைப் போர் செய்கிற அம்புக்கு உணவாம்படி ஒழிக்கின்றேனென்று வீரவாதங்கூறுவாய்; போர் வல்லோர்கள் உரு அழிய தம் வலிமை உரைப்பர்ஓ - போர்செய்தலில் வல்லமையுள்ளவர் (தமது) பெருமைகெடத் தம்வலிமையைத் தாமே எடுத்துச் சொல்லுவார்களோ?' என - என்று, உரைத்தான்—; (எ - று.)

இப்பாட்டின் இடையடிகளை இச்சருக்கத்து 59 - ஆம் பாட்டின் முதலிரண்டடிகளோடு ஒப்பிடுக. தற்புகழ்தல் தனது பெருமைக்குக் குறைவாதலால், 'உருவழியத் தம்வலிமையுரைப்பரோ' என்றான். (577)

181.—கர்ணன் அருச்சுனனை யெதிர்த்துத் தோற்றல்.

அம்மொழிதன்செவிசுடப்போயக்கணத்தேவிசயனுடனங்கராசன்
வெம்முனைசெய்போரழிந்துதேரழிந்துவென்னிட்டான்மீண்டுமீண்டும்
அம்முறையிற்பற்குனனாலாவியொழிந்தவரரசரனேககோடி
யெம்மொழிகொண்டுரைப்பரிதாலுரைக்கவெமக்காயிரநாவில்லைமாதோ.

(இ - ள்.) அ மொழி-கிருபாசாரியன் கூறிய அந்தவார்த்தை, தன் செவி சுட - தனது காதுகளை மிகவும் வருத்தியதனால், அ கணத்துஏ-அந்த க்ஷணத்திலேயே, அங்க ராசன் - அங்கதேசத்தரசனான கர்ணன்,—விசயனுடன் - அருச்சுனனுடனே, போய் - (போருக்குச்) சென்று, (விரைவிலே அருச்சுனனால்), வெம் முனை செய் போர் அழிந்து-கொடிய போர்க்களத்திற் செய்கிற (தனது) போர்த்திறம் அழிபட்டு, தேர் அழிந்து - தேர் அழிபட்டு, மீண்டுஉம் மீண்டுஉம் - பலமுறை, வென் இட்டான் - புறங்கொடுத்தான்; அ முறையில் - அச்சமயத்திலே, பற்குனனால் ஆவி ஒழிந்தவர் அரசர்-அருச்சுனனால் உயிரொழிந்தஅரசர்கள், அனேக கோடி - பலகோடிக்கணக்கினராவர்; (இப்படிப்பட்ட அருச்சுனனது போர்த்திறம்), எம் மொழிகொண்டு உரைப்பு அரிது-எமது வாக்கினாற் சொல்லுதற்கு அரியது; (ஏனெனில்,—) உரைக்க எமக்குஆயிரம் நா இல்லை - பேசுதற்கு எமக்கு ஆயிரம்நாக்கு இல்லை; (எ - று.)—ஆல், மாது ஓ - ஈற்றசைகள். ஆயிரம் நாக்கு இருந்தாலன்றி அது சொல்லமுடியாதென்பதாம். பின்னிரண்

டடிகள் அருச்சுனனுற் பலர்பட்டமைகூறுங் கவிக்கூற்று. பி - ம்: ராயன். ஆவி யழிந்தவர். (578)

182.—அசுவத்தாமனது போரும், சூரியாஸ்தனமும்.

அந்தமுனே தனின்மீண்டு மந்தணன்றன் றிருமதலே குந்தி போசன்
மைந்தரிரு வரையிரண்டு வடிக்கணேயான் மடிவித்தான் மாயோன் வன்கைச்
செந்திகிரித னிலடங்கி முடங்கியதன் கிரணத்தின் சிறுமை நாணி
யுந்துதிரைச் சிந்துவினி லோராழித் தேரோனு மொளித்திட் டானே.

(இ-ள்.) மீண்டுஉம் - பின்பும், அந்த முனே தனில் - அந்தப் போர்க்களத்திலே, அந்தணன் தன் திரு மதலே - துரோணுசாரியனது சிறந்த குமாரன் [அசுவத்தாமன்], குந்திபோசன் மைந்தர் இருவரை - குந்திபோசராசன் புத்திர ரிரண்டுபேரை, இரண்டு வடி கணேயால் - கூரிய இரண்டுஅம்புகளினுல், மடிவித்தான் - அழியச்செய்தான்; (அப்பொழுது), ஓர் ஆழி தேரோன்உம் - ஒற்றைச்சக்கரமுள்ள தேரையுடையவனுனசூரியனும்,—மாயோன் வல் கை செம் திகிரி தனில் அடங்கி முடங்கிய தன் கிரணத்தின சிறுமை நாணி - கண்ணபிரானது வலிய திருக்கையிலுள்ள சிவந்தசக்கரத்தினுள் அடங்கி மறைந்த தனது ஒளிகளின் எளிமையைக் குறித்து வெட்கப்பட்டு, உந்து திரை சிந்துவினில் ஒளித்திட்டான் - வீசுகின்ற அலேகளேயுடைய கடலிலே மறைந்திட்டான்; (எ - று.)

குந்திபோசன்-குந்தியின்வளர்த்த தந்தை. சூரியன் அஸ்தமித்தல் மேல்கடலில் மூழ்கிமறைதல்போலத்தோன்றுகிற இயல்பினிடத்து, தன்கிரணம் கண்ணன்கைச்சக்கரத்தினுள் அகப்பட்டு மறைபட்ட அவமானத்துக்கு வெள்கிக் கடலிலொளித்தானென்று கவி தானுக ஒரு காரணங்கற்பித்துக் கூறினமையால், ஏதுத்தற்குறிப் பேற்றவணி. பி - ம்: வண்கை. (579)

இனி, இராத்திரியுத்தம்.

வேறு.

183.—துரியோதனன் இரவிலும் போர்செய்யத் தொடங்குதல்.

இசையி னும்பெருக நன்றெ னத்தனதி யற்கை யான்மிக வளர்த்திடும்
வசையி னுங்கரிய விருள்ப ரந்துழிவ யங்கு தீபநெடு வாளினுல்
திசையி னும்பொருது மென்று தெவ்வர்முனே நேர்ந டந்தனனெ ருங்குகுன்
றசையி னும்புடவி யசையி னுஞ்சமரி லசைவி லாததனி யாண்மையான்.

(இ - ள்.) நெருங்கு குன்று அசையின்உம்-ஒன்றேடொன்று நெருங்கிய மலேகள் சலித்தாலும், புடவி அசையின்உம்-பூமி சலித்தாலும், சமரில் அசைவு இலாத - போரில் (தான்) சலித்தலில்லாத, தனி ஆண்மையான்-ஒப்பற்ற பராக்கிரமமுள்ளவனுன துரியோதனன்,-இசையின்உம் பெருக நன்று என தனது இயற்கையால் மிக வளர்த்திடும் வசையின்உம் கரிய இருள் பரந்தஉழி -

புகழைக்காட்டிலும் மிகவும் நல்லதென்று கருதித் தனது கொடிய இயல்பினால் மிகுதியாக(த்தான்)வளரச்செய்கிற பழியைக்காட்டிலுங் கருமையான இருட்டுப் பரவியபொழுது,—வயங்கு தீபம் நெடு வாளினால் நிசையின்உம் பொருதும் என்று - விளங்குகிற விளக்குக்களின் மிக்கஒளியினது உதவியால் இராத்திரியிலும் போர்செய்வோமென்று நிச்சயித்து, தெவ்வர்முனை நேர் நடந்தனன் - பகைவர் முன்னிலையிலே எதிர்த்துச்சென்றான்; (எ - று.)

கீர்த்தியை வெண்ணிறமுடையதென்றும், அபகீர்த்தியைக் கருநிறமுடையதென்றுங் கூறுதல், கவிமரபு. புகழின்பெருமையைச் சிறிதும் பாராட்டாது துரியோதனன் தான் மேன்மேல் ஈட்டுகிற பழியினுங் கருமையான இருளென்று, இருளின் கருநிறமிகுதியை எடுத்துக்கூறினர்.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், இரண்டு நான்கு ஆறாஞ் சீர்கள் கூவிளங்காய்ச்சீர்களும், ஏழாவது விளச்சீருமாகிய எழுசீராசிரியவிருத்தங்கள். (580)

184.—துரியோதனன் தன்சேனைமுழுவதும் நிறைய விளக்கெடுப்பித்தல்.

பகலிராவரவழைத்தனன்பகைவர்பாகனென்றுபடுபகலையவ்
வகலிராவினிலழைத்தனன்கொலெனவண்டகூடமுறவிருளறுத்
திகலிராகவொளியுமிழ்விளக்கினமெடுக்கவென்றுகடிதேவினன்
தகலிராததொர்மனத்தினன்வலியதனதனேர்தருதனத்தினன்.

(இ - ள்.) 'பகைவர் பாகன் - (தனக்குப்) பகைவர்களான பாண்டவர்கட்குஉரிய தேர்ப்பாகனான கண்ணன், பகல் இரா வர அழைத்தனன் - (சூரியனைச் சக்கரத்தால் மறைத்துப்) பகலிலே இரவை வரும்படி செய்தான், என்று - என்று எண்ணி, (அதற்கு மாறாக), படு பகலை - நடுப்பகற்பொழுதை, அ அகல் இராவினில்- அன்றைத்தினத்துநீண்ட இராத்திரியிலே, அழைத்தனன்கொல்- (இவன்) வரவழைத்தானோ?' என - என்று (காண்பவர்) கூறும்படி,—தகல் இராதது ஓர் மனத்தினன் - தக்கஉயர்குணமில்லாததொரு மனத்தையுடையவனும், வலிய தனதன் நேர் தரு தனத்தினன் - வலிமையுடைய குபேரன்போன்ற செல்வமுடையவனுமான துரியோதனன்,அண்டகூடம் உற இருள் அறுத்து இகல்-அண்டகோளத்தினிடம் முழுவதிலும் இருளை யொழித்து எதிர்க்கவல்ல, இராகம் ஒளி உமிழ் விளக்கு இனம் - சிவந்த ஒளியை வீசுகிற விளக்குக்களின் கூட்டத்தை, கடிது எடுக்க - விரைவில் ஏற்றுவீராக, என்று—, ஏவினன்-(ஏவலாளர்க்குக்) கட்டளையிட்டான;

சயத்திரதனைக்கொல்லுதற்பொருட்டுக் கண்ணன் பகலில் இரவை வருவித்தபடியால் அதற்குமாறாகத் துரியோதனன் இரவிற் பகலைவரச்செய்தானென்று பார்த்தவர் வியந்துரைக்கும்படி இருளென்பது சிறிதுமில்லாதவாறு சுடர்விளக்கெடுக்க வென்று கட்டளையிட்டா னென்க. **தற்குறிப்பேற்றவணி.** (581)

185.— தருமபுத்திரனும் தன்சேனைமுழுவதும் விளக்கெடுப்பித்தல்.

பொங்கியாடரவெழுந்தநேகவிதமானதென்றமரர்புகலுமா
றங்குவாளரவுயர்த்தகோனினைவறிந்தளப்பரியவாகவ
மெங்குமானைபரிதேர்கடோறுமொளிர்தீபகாகளமெடுக்கவே
சங்குதாரையெழநின்றனன்றருமன்மதலைதம்பியர்கடம்மொடும்.

(இ - ள்.) அங்கு - அப்பொழுது,— தருமன் மதலை - யமதரும ராச குமாரன்,—வாள் அரவு உயர்த்த கோன் நினைவு அறிந்து - கொடிய பாம்புவடிவத்தை(க் கொடியில்) உயரநிறுத்திய துரியோதனராசனது எண்ணத்தை அறிந்து,— ஆடு அரவு பொங்கி எழுந்து அநேகவிதம் ஆனது என்று அமரர் புகலும் ஆறு - பட மெடுத்தாடுந்தன்மையுள்ள ஆதிசேஷன் சிறிப் பாதாளத்தினின்று) மேலெழுந்து பலவகையாகத் தோன்றிய தென்று தேவர்கள் (ஒப்புமையாற்) சொல்லும்படி, அளப்பு அரிய ஆசவம் எங்கும் உம் ஆனை பரி தேர்கள்தோறும் ஒளிர் தீப காகளம் எடுக்க - அளவிடுதற்குஅருமையான [மிகப்பரந்த] போர்க்களம் முழுவதிலும் ஆனை குதிரை தேர்களென்னும் இவற்றிலெல்லாம் விளங்குகிற விளக்குக்கலங்களை அமைக்க(ச்சொல்லி),—சங்கு தாரை எழ - சங்கவாத்தியங்களும் தாரை யென்னும் ஊதுகருவிகளும் மிக ஒலிக்க, தம்பியர்கள் தம்மொடுஉம் - (வீமன் முதலிய) தம்பிமார்களுடனே, நின்றனன் - (போர்க்குச் சித்தனாய்) நின்றான்; (எ - று.)

போர்க்களத்திற் பலவிடத்தும் அநேகவிளக்குகள் விளங்குவது, தனது ஆயிரம்முடிகளிலுமுள்ள மாணிக்கங்களின் சோதி விளங்க ஆதிசேஷன் மேலெழுந்தாற்போன்றது என்று வருணித்தார்; **தற்குறிப்பேற்றவணி.** இத்தோற்றத்தின்சிறப்பு வானத்திலிருந்து போர்காண்கிற தேவர்கட்கே நன்கு விளங்கு மாதலால், 'அமரர்புகலுமாறு' எனப்பட்டது. சங்குதாரையெழுதல், போர் தொடங்குதற்கு அறிகுறி. (582)

186.—இரண்டுகவிகள்-இருதிறத்துவீரரும் தனித்தனி எதிர்த்துப் போர்தொடங்குதலைத் தெரிவிக்கும்.

கருதிவாகைபுனைவிசயன்மேல்விசயகன்னன்முந்தியமர்கடுகினுன்
கிருதவன்மனெனும்விருதன்மாமுரசகேதனன்றனெதிர்கிட்டினுன்
சுருதிமாமுனிதுரோணனும்பழையதிட்டத்துய்மனெடுதுன்னினுன்
பொருதுமாய்வனெனவீமனேடுயர்புயங்ககேதுமிகுபோர்செய்தான்.

(இ-ள்.) வாகை-வெற்றியையே, கருதி-(பிரதானமாக)எண்ணி, புனை-மேற்கொள்கிற, விசயன்மேல் - அருச்சுனன்மேல், விசய கன்னன்-வெற்றியையுடைய கர்ணன், முந்தி அமர் கடுகினுன் - முற்பட்டுவந்து போரை விரைவாகத்தொடங்கினுன்; கிருதவன்மன் எனும் விருதன்-கிருதவர்மாவென்றவீரன், மாமுரசகேதனன்தன் எதிர் கிட்டினுன் - பெரிய பேரிகை வடிவத்தையெழுதிய கொடியையுடையவனுன தருமபுத்திரனது எதிரிலேபோர்செய்யச் சமீபித்தான்; சுருதி மா முனி துரோணனஉம் - வேதம்வல்ல

185.— [illegible]

[illegible]

(இ - ள்.) அந்த - அப்பொழுது,— தருமன் மதலை - யமதரும ராச குமாரன்,— அரவு உயர்த்த கோன் நிலை அறிந்து - கொடிய பாம்புவடிவத்தைக் (கொடியில்) உயர்த்தின துரியோ தனராசனது எண்ணத்தை அறிந்து,— [illegible] பொங்கி எழுந்து அநேகவிதப் ஆனது என்று அமரர் புகலும் ஆறு - மெழுந்த சேடன் வையுள்ள ஆதிசேடன் சிறப்பு பாதாளத்தி னின்று) மேலெழுந்து வகைப்போலத் தோன்றிற்று என்று தேவர் கள் (ஒப்புமையாகச்) சொல்லும்படி, அளப்ப அரிய ஆசை எங்கு உம் ஆனை பரி தேர்கள் தேருடன் ஒளிர் தீப காசம் எங்க - அளவிடற்கு அருமையான மிகப்பரந்த போர்க்களம் முழுவதி லும் யானை குதிரை தேர்களென்னும் இவற்றின்மேலெல்லாம் விளங்கு கிற விளக்குக்களைக் கொண்டு அமைக(ச் சொல்லி),— சங்கு தாரை எழு - சங்கவாத்தியங்களும் தாரை யென்னும் ஊதுகருவிகளும் மிக ஒலிக்க, தம்பியர்கள் தம்மொடு உடம் - வீமன் முதலிய தம்பியர்க ளுடனே, நின்றனன் - (போர்க்குச் சித்தனாய் நின்றான்: எ - று.)

போர்க்களத்திற் பலவிடத்தும் அநேகவிளக்குகள் விளங்கு வது, தனது ஆயிரம்முடிகளிலுமுள்ள மாணிக்கங்களின் சோதி விளங்க ஆதிசேடன் மேலெழுந்தாற்போன்றது என்று வருணித் தார்; **தற்குறிப்பேற்றவணி.** இத்தோற்றத்தின்சிறப்பு வானத்தி லிருந்து போர்காண்கிற தேவர்கட்கே நன்கு விளங்குமாதலால், 'அமரர்புகலுமாறு' எனப்பட்டது. சங்குதாரையெழுதல், போர் தொடங்குதற்கு அறிகுறி. (582)

186.—இரண்டுசேனைகள்-இருதிறத்துவீரரும் தனித்தனி எதிர்த்துப் போர்தொடங்குதலைத் தெரிவிக்கும்.

கருதிவாகைபுனைவிசயன்மேல்விசயகன்னன்முந்தியமர்கடுகினன்
கிருதவன்மனெனும்விருதன்மாமுரசகேதனன்றனெதிர்கிட்டினன்
சுருதிமாமுனிதுரோணனும்பழையதிட்டத்துய்மனொடுதுன்னினன்
பொருதுமாய்வனெனவீமனோடுயர்புயங்ககேதுமிகுபோர்செய்தான்.

(இ-ள்.) வாகை-வெற்றியையே,கருதி-(பிரதானமாக)எண்ணி, புனை-மேற்கொள்கிற, விசயன்மேல் - அருச்சுனன்மேல், விசய கன்னன்-வெற்றியையுடைய கர்ணன், முந்தி அமர் கடுகினன் - முற்பட்டுவந்து போரை விரைவாகத்தொடங்கினன்; கிருதவன் மன் எனும் விருதன்-கிருதவர்மாவென்றவீரன், மாமுரசகேதனன் தன் எதிர் கிட்டினன் - பெரிய பேரிகை வடிவத்தையெழுதிய கொடியையுடையவனை தருமபுத்திரனது எதிரிலேபோர்செய்யச் சமீபித்தான்; சுருதி மா முனி துரோணன்உம் - வேதம்வல்ல

சிறந்த அந்தணனான துரோணாசாரியனும், பழைய திட்டத்துய்ம னோடு துன்னினான்-(தனக்குப்) பழம்பகையாகத் தோன்றியுள்ள வனான திட்டத்துய்மனுடன் (போர்க்கு) நெருங்கினான்; பொருது மாய்வன் என-போர்செய்து இறப்பேனென்று துணிந்து, வீம னோடு—, உயர் புயங்க கேது-உயர்ந்த பாம்புக் கொடியையுடை யனான துரியோதனன், மிகு போர் செய்தான்-மிக்க போரைச் செய் தான்; (எ - று.)—பொருட்பின்வருநிலையணி. பி-ம்: விசையன்மேல் விசையகன்னன். (583)

187. சல்லியன்பெருகுசல்லியத்தொடுசதானிகன்றனொடுபோர்செய்தான்
வல்லியம்புனைகடோற்கசன்றனொடுபோர்செய்தான்முனிவன்மைந்தனும்
எல்லியங்குசுடரினும்மணிச்சுடர்களெழுமடங்கொளியெறிக்கவும்
பல்லியம்பலமுழங்கவுந்தரணிபாலரிப்படிபகைக்கவே.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ - ள்.) சல்லியன்—, பெருகு சல்லியத்தொடு-மிக்க அம்பு களினால், சதானிகன்தனொடு போர் செய்தான் - சதாநீகனுடன் போர்செய்தான்; வல்லியம் புனை கடோற்கசன்தனொடு - புலியை யொத்த கடோற்கசனுடனே, முனிவன் மைந்தன்உம்-துரோணன் மகனான அசுவத்தாமனும், போர்செய்தான்—; எல் இயங்கு சுட ரின்உம்-பகலிலே பொருந்திவிளங்குகிற சூரியனது ஒளியைக் காட்டிலும், எழு மடங்கு-ஏழுபங்கு அதிகமாக, மணி சுடர்கள் - அழகிய விளக்குக்கள், ஒளி எறிக்கஉம்-ஒளியை வீசவும், பல் இயம் பல முழங்கஉம்- பலவகைப்பட்ட வாத்தியங்கள் பலவும் மிகஒலிக்கவும், தரணி பாலர்-அரசர்கள், இப்படி பகைக்க-இங்ங னம் மாறுபட்டு எதிர்க்க,—(எ - று.)—அருச்சுனன் கர்ணனைப் பிளந்தானென்று அடுத்த கவியோடு முடியும்.

ஶதாநீகனென்ற பெயர் - நூறுசேனையையுடையா னென்று பொருள்படும்; இவன், மத்ஸ்யதேசத்தரசனான விராடனது தம்பி: மகனென்பாருமுளர். ஒன்றன் கூட்டமும் பலவினீட்டமும் பற்றி, 'பல்லியம்பல' என்று இரண்டுபன்மை கூறினர். சல்லியத்தொடு, மூன்றனுருபு-கருவிப்பொருளது. (584)

188.—அருச்சுனன் கர்ணனை வெல்லுதல்.

எற்றருந்தபனனேகினானினியெனக்குவாசிகொடிநீடுதேர்
முற்றருங்கனலினொளியெழுந்ததெனமுரணழிந்திடமொழிந்துபோர்
விற்றருங்கணைகளால்விழப்பொருதுவெயிலவன்சுதனைமீளவும்
பிற்றரும்படிபிளந்தபினன்றனுசர்பின்னிடப்பொருதபெற்றியான்.

(இ - ள்.) தனுசர் பின் இட பொருத பெற்றியான் - (நிவாத கவசர் காலகேயர் என்னும்) அசுரர்கள் பிற்படும்படி (முன்பு)போர் செய்த பெருமையையுடையவனான அருச்சுனன்,—(கர்ணனைப் பார்த்து), 'எல் தரும் தபனன் ஏகினான் - (உனதுதந்தையான) ஒளியைவெளிவீசுகிற சூரியனே போய்விட்டான்: இனி - இப் பொழுது, எனக்கு வாசி கொடி நீடு தேர் முன் தரும் கனலின்

ஒளி எழுந்தது-எனக்கு (நான்குவெள்ளைக்) குதிரைகளும் குரங்குக்கொடியும் உயர்ந்ததேரும் முதலியவற்றை முன்புகொடுத்த அக்கினியின் ஒளி தோன்றிவிளங்கியது', என-என்று, முரண் அழிந்திட-(அவனது) உறுதிநிலை குலையும்படி, மொழிந்து - வீரவாதங்கூறி, வில் தரும் கணைகளால்-(தனது) வில்லினால் எய்யப்படும் அம்புகளால், விழ-(அவனது குதிரைகள் கொடி தேர்முதலியன) கீழ்விழும்படி, போர் பொருது-போர்செய்து, வெயிலவன் சுதனை-சூரியபுத்திரனான அக்கர்ணனை, மீளஉம்-மறுபடியும், பின் தரும்படி-புறங்கொடுக்கும்படி, பிளந்தனன்-(உடம்பைப்) பேதித்தான்; (எ - று.)—'இது உனக்கு வெற்றிக்காலமன்று, எனக்கே வெற்றிக்காலம்' என்றுசொல்லி அவன்மனநிலையைக் குலைத்தவாரும். பி - ம்: முரண்மிகுந்திட. (585)

189.—கிருதவன்மாவைத் தருமன் சயித்தல்.

ஒருதன்வாகுவலியாலும்வார்சிலையுதைத்தவாளிவலியாலுமொண்
குருதிபொங்கவடுதருமராசன்ரகுகுலவிராமனிகராயினன்
கிருதவன்மனெனவருநராதிபதிகெட்டுமாவிரதம்விட்டுவா
ணிருதர்சேகரனொடுவமையாயவனெடுங்களத்திலெதிர்நின்றிலன்.

(இ-ள்.) ஒரு தன் வாகு வலியால்உம்-ஒப்பற்ற தனதுதோள் வலிமையினாலும், வார் சிலை உதைத்த வாளி வலியால்உம்-நீண்ட வில்லினின்று செலுத்திய அம்புகளின் வலிமையினாலும், ஒள் குருதி பொங்க அடு-ஒள்ளிய இரத்தம் வெளிச்சொரியும்படி போர்செய்கிற, தருமராசன்-யுதிட்டிரன், ரகு குலம் இராமன் நிகர் ஆயினன்-ரகுவென்னும் அரசனது வம்சத்திலே திருவவதரித்த ஸ்ரீராமன்போலானான்; கிருதவன்மன் என வரும் நராதிபதி-கிருதவர்மாவென்று பேர்பெற்றுவந்த அரசன், கெட்டு-தோற்று, மா இரதம் விட்டு-பெரியதேரை விட்டு இழிந்து, வாள் நிருதர் சேகரனொடு உவமை ஆய்-கொடிய அரக்கர்தலைவனை இராவணனோடு ஒப்பாய், நெடுங்களத்தில் அவன் எதிர் நின்றிலன்-பெரியபோர்க்களத்திலே அத்தருமனெதிரிலே நிற்கமாட்டாதவனாய்ப் புறங்கொடுத்துச் சென்றான்; (எ-று.)

இராவணன் முதல்நாட்போரில் யாவையு மிழந்தமையும், அப்பொழுது இராமபிரான் அவனைக்கொல்லாமல் 'இன்றுபோய் நாளைவா' என்று விடுத்தமையும் பிரசித்தம். தருமபுத்திரனது அம்புக்கு ஆற்றாது கிருதவன்மன் சிலையொழிந்து நிலைதளர்ந்து சென்றானென்றும், அதுகண்ட தருமபுத்திரன் அவனைக்கொல்லாது கருணைசெய்தானென்றும், உவமையால்விளங்கும். பலராமனினும்வேறுபாடு தோன்ற, தசரதராமனை 'ரகுகுலராமன்' என்றார். ரகு-சூரியவம்சத்திற் பிரசித்திபெற்றஓரரசன்; இவன்குலத்தில் அவதரித்ததனால், ராமனுக்கு ராகவனென்று ஒருதிருநாமமும் வழங்கும். (586)

190.—கர்ணனை அருச்சுனன் மீளவும் வென்று துரத்துதல்.

வாளமாகவில்வணக்கியும்பர்பதிமைந்தன்வாளிரவிமைந்தனைக்
கோளமானகுடையிரதம்வாசிசிலைகொடிமுருக்கியமர்கொள்ளவே
மீளமீளவுமழிந்தழிந்தவனோர்வேலினலெறியவேலையுந்
தூளமாகவடிவாளியாலெதிர்துணித்துவன்பொடுதுரக்கவே.

இதுவும், அடுத்த கவியும் - குளகம்.

(இ-ள்.) வாளம் ஆக வில் வணக்கி-வட்டவடிவமாக வில்லை வளைத்து, உம்பர் பதி மைந்தன் - தேவராசனை இந்திரனது மகனுகிய அருச்சுனன், வாள் இரவி மைந்தனை - ஒளியுள்ள சூரியனது மகனை கர்ணனை, கோளம் ஆன குடை இரதம் வாசி சிலை கொடி முருக்கி அமர் கொள்ள - வட்டவடிவமான குடையும் தேரும் குதிரைகளும் வில்லும் கொடியும் என்பவற்றைஅழித்துப் போரில் வெற்றிகொள்ள,—அவன் - அக்கர்ணன், மீள மீளஉம் அழிந்து அழிந்து - பலமுறையுந் தோற்று, (பின்பு), ஓர் வேலினல் எறிய - ஒரு வேலாயுதத்தினல் வீசிமோத,—(அருச்சுனன்), வேலைஉம் - அவ்வேற்படையையும், தூளம் ஆக - பொடியாம்படி, வடி வாளியால் - கூரிய அம்புகளினல், எதிர் துணித்து-எதிரிலே துண்டித்து, வன்பொடு துரக்க-வலிமையோடு அக்(கர்ணனைத்) துரத்த,—(எ - று.)—"மத்திரத்தலைவன் மனம்முரிந்து ஓடினன்" எனவருங்கவியோடு தொடர்ந்துமுடியும். தூளம், அம் - சாரியை.

191.—சல்லியனைச் சதானிகனும், அசுவத்தாமனைக் கடோற்கசனும் வேறல்.

முன்சதாகதிமுருக்கமேருகிரிமுடிமுரிந்தெனமுரண்கொள்போர்
வன்சதானிகன்வளைத்தவிற்கணையின்மத்திரத்தலைவன்மனமுரிந்
தென்செய்தான்முடிவிலோடினன்விறலிடிம்பிமைந்தன்முனிமைந்தன்மேன்
மின்செய்தாரையயிலேவினனவன்விரைந்துதேரின்மிசைவீழவே.

(இ - ள்.) முன்-முன்னொரு காலத்தில், சதாகதி - வாயு தேவன், முருக்க-விசையாகத் தாக்கியதனல், மேரு கிரி-மகமேரு மலை, முடி முரிந்து என-சிகரம் ஒடிபட்டாற்போல, முரண் கொள் போர் வல் சதானிகன் வளைத்தவில்கணையின்-மாறுபாடுகொண்ட போரில் வலிய சதாநீகன் வணக்கிய வில்லினுலெய்த அம்பு படுதலால், மத்திரம் தலைவன்-மத்திரநாட்டரசனுன சல்லியன், மனம் முரிந்து-இதயம்சிதைந்து, முடிவில்-இறுதியில், என் செய்தான்-யாதுசெய்தான்? (எனில்), ஓடினன்-புறங்கொடுத்து ஓடிப்போய் விட்டான்; விறல் இடிம்பி மைந்தன்-வலிமையையுடைய இடிம்பி யின் புத்திரனுன கடோற்கசன், முனி மைந்தன்மேல் - துரோண குமாரனுன அசுவத்தாமன்மேல், மின் செய் தாரை அயில் - மின்னலையொத்து விளங்குகிற கூர்நுனியையுடைய வேலாயுதத்தை, அவன் விரைந்து தேரின் மிசை வீழ-அவன் விரைவிலே தேரின் மேல் மூர்ச்சித்துவிழும்படி, ஏவினன்-பிரயோகித்தான்; (எ - று.) ஏதற்குஞ்சலியாத சல்லியன் மனம் முரிந்ததற்கு, அசலமாகிய மேரு முடிமுரிந்தது உவமம். செய்-உவமவுருபு. (588)

192.—திட்டத்துய்மன் துரோணனைச் சபித்தல்.

தானைகாவலனுமுந்துறப்பொருதுதரணிமன்னன்விடுசமர்முகச்
சேனைகாவலனையோடவோடவொருதெய்வவாளிகொடுசீறினன்
ஆனைதேர்புரவியாளொடுற்றெதிரணிந்தமன்னவர்களனைவரு
மேனைமன்னவர்தமக்குடைந்துமுதுகிட்டுமன்னனருகெய்தினர்.

(இ - ள்.) தானை காவலன் உம் - பாண்டவசேனைத்தலைவனான திட்டத்துய்மனும், முந்துற பொருது - விரைவாகப் போர்செய்து, தரணிமன்னன் விடு சமர் முகம் சேனை காவலனை - பூமியையாளுகிற துரியோதனராசனால் ஏவப்பட்ட போரின் முன்னே நின்ற சேனைத்தலைவனான துரோணனை, ஓட ஓட - மிகுதியாய் ஓடும்படி, ஒரு தெய்வ வாளிகொடு சீறினன் - தெய்வத்தன்மையுள்ள ஓர் அம்பினால் [அஸ்திரத்தினால்] கோபித்து எதிர்த்தான்; (இங்ஙனமே), ஆனை தேர் புரவி ஆளொடு உற்று எதிர் அணிந்த மன்னவர்கள் அனைவர்உம் - யானையும் தேரும் குதிரையும் காலாளுமாகிய சதுரங்கசேனையுடனே பொருந்தி எதிரில் அணிவகுத்து நின்ற (துரியோதனன்பக்கத்து) அரசர்களெல்லாரும், ஏனை மன்னவர் தமக்கு உடைந்து முதுகு இட்டு-மற்றை [எதிர்ப்பக்கத்து] அரசர்கட்குத் தோற்றுப் புறங்கொடுத்து, மன்னன் அருகு எய்தினர்- துரியோதனராசனருகிலே (சென்று) சேர்ந்தார்கள்; ()

193.—அலாயுதனென்னும் அரக்கன் துரியோதனனிடம் வருதல்.

அன்னபோதினிலநேகநூறுபதினாயிரந்திறலரக்கரோ
டின்னவாறெனவுரைக்கவேநிகரிலாததிண்டிறலலாயுதன்
கன்னசௌபலர்தமக்குநண்பனிருள்கங்குலோர்வடிவுகொண்டனன்
மன்னர்யாவரும்வெருக்கொளச்சமரின்மன்னர்மன்னனடிமன்னினன்.

(இ - ள்.) அன்ன போதினில்-அப்பொழுது,—கன்ன சௌபலர் தமக்கு நண்பன் - கர்ணனுக்கும் சகுனிக்கும் சிநேகிதனும், இருள் கங்குல் ஓர் வடிவு கொண்டு அனன் - இருண்ட இராத்திரி தானே ஒருபுருஷவடிவத்தைக் கொண்டுவந்தாற் போன்றவனும் ஆகிய, இன்ன ஆறு என உரைக்க நிகர் இலாத திண் திறல் அலாயுதன் - இன்னதன்மையென்று சொல்லுதற்கு ஒருவமை பெறாத மிக்கவலிமையையுடைய அலாயுதனென்னும் அரக்கன், அநேகம் நூறு பதினாயிரம் திறல் அரக்கரோடு - அநேகம் பத்து லக்ஷக்கணக்கான வலியஇராக்கதர்களுடனே, மன்னர் யாவர்உம் வெரு கொள - அரசர்களெல்லாரும் அச்சங்கொள்ளும்படி, சமரில் - போர்க்களத்திலே, மன்னர் மன்னன் அடி மன்னினன் - இராசராசனான துரியோதனனது பாதத்திற் பொருந்தினான் [துரியோதனனை வணங்கினான் என்றபடி]; (எ- று.)

ஹலாயுதன் - வடசொல்; ஹல ஆயுதன் - கலப்பையைப் படைக்கலமாகவுடையவனென்று பொருள்படும். இருள்கங்குல் - வினைத்தொகை. இருள் கங்குல் ஓர்வடிவுகொண்டனன் - தற்குறிப்பேற்றவணி. (590)

194.—அலாயுதன் சபதஞ்செய்து வீமனை நெருங்குதல்.

இன்றி ராவிடியு முன்னர் வெஞ்சமமெ திர்ந்த பஞ்சவர்க ளெஞ்சிடக்
கொன்று பார்முழுது நின்ன தாகவுயர் வானுளோர் பதிகொ டுப்பன்யான்
என்று கோடிசப தம்பு கன்றெதிரெ டுத்த தீபமு மிருண்டிடச்
சென்று வீமனெடு கிட்டி னன்விசைகொ டேரி ரண்டுமுடன் முட்டவே.

(இ - ள்.) 'இன்று இரா விடியும் முன்னர் - இன்றையிராப் பொழுது கழிந்து சூரியனுதிக்குமுன்னே (இன்றையிரவிலேயே], வெம் சமம் எதிர்ந்த பஞ்சவர்கள் எஞ்சிட கொன்று - கொடிய போரில் எதிர்க்கிற பாண்டவர்கள் ஐவரும் அழியும்படி கொன்று, பார் முழுதுஉம் நின்னது ஆக - பூமண்டலம் முழுவதும் உன்னுடையதேயாகுமாறு, உயர் வான் உளோர் பதி கொடுப்பன் யான் - உயர்ந்த வானத்திலுள்ள தேவர்களது இடத்தை [வீரசுவர்க்கத்தை] (அவர்கட்கு இடமாக)க் கொடுப்பேன் யான்,' என்று - என்று இவ்வாறு, கோடி சபதம் புகன்று - மிகப்பல சபதவார்த்தைச் சொல்லி, எதிர் எடுத்த தீபம்உம் இருண்டிட சென்று- எதிரிலே ஏற்பட்டுள்ள விளக்குக்களின் ஒளியும் (தனதுகருமை மிகுதியால்) இருளடையும்படி போய், வீமனெடு—, விசை கொள் தேர் இரண்டுஉம் உடன் முட்ட - வேகங்கொண்ட தன்தேரும் அவன்தேருமாகிய இரண்டும் ஒன்றேடொன்று தாக்கும்படி, கிட்டினன் - சமீபித்தான்; (எ - று.)—பி - ம்: இராமுடியுமுன்னர்.

வேறு.

195.—அலாயுதனும் மற்றும்பல அரக்கர்களும் போர்தொடங்குதல்.

பணைத்திரு புயக்கிரி வளர மாற்றலர் பயப்பட வயப்படு பயமி னூற்றுவர்
துணைப்பெற மனச்சின முடுக நாக்கொடு சுழற்றுக ணெருப்பெழ நிருதர் பார்த்திவ
னிணைப்பிறை யெயிற்றிள நிலவினுற்செறி யிருட்கிழி தரப்பகை முனையி லேற்குமு
னணைத்திரு புறத்தினும் வருமி ராக்கத ரதிர்த்தன ரெதிர்த்தனரமரை நோக்கியே.

(இ - ள்.) நிருதர் பார்த்திவன் - அரக்கர்தலைவனான அலாயுதன், இருபுயம் கிரி - (தனது) இரண்டு தோள்களாகிய மலைகள், பணைத்து வளர - (யுத்தாவேசத்தாற்) புடைபருத்துப் பூரிக்கவும், மாற்றலர் பயப்பட - பகைவர்கள் அச்சமடையவும், வய படு பயம் இல் நூற்றுவர் - வலிமைமிக்கவர்களும் நற்பயனில்லாதவர்களுமான துரியோதனுதியர், துணை பெற-(தன்னுல்) உதவிபெறவும், மனம் சினம் முடுக - (தன்) மனத்திலே கோபம் அதிகப்படவும்,நா கொடு சுழற்று கண் - நாக்கிலும் கொடிய வட்டமிடுகிற கண்களிலும், நெருப்பு எழ-தீப்பொறி கிளம்பவும், இணை பிறை எயிறு இள நிலவினல்-இரண்டுஇளஞ்சந்திரன் போன்ற (தனது)கோரதந்தங்களின் இளநிலாப் போன்ற வெள்ளொளியால், செறி இருள் கிழிதர-அடர்ந்த இருள் பிளவுபடவும், பகை முனையில் ஏற்கும் முன் - பகைவர்களுடைய போர்க்களத்திலேசென்று எதிர்த்தற்கு முன்னே,—அணைத்து இரு புறத்தின் உம் வரும் இராக்கதர் - (அவனைச்) சார்ந்து இரண்டுபக்கங்களி

லும் நெருங்கி வருகிற ராக்ஷஸர்கள், அதிர்த்தனர் - ஆரவாரஞ் செய்துகொண்டு, அமரை நோக்கி எதிர்த்தனர் - போரைநோக்கி எதிர்த்துச் சென்றார்கள்; (எ - று,)

நாற்றுவர் - தொகைக்குறிப்பு; இங்கே, அவர்களில் இறந் தவரொழிந்தாரைக் குறித்தது.

இதுமுதற் பத்துக் கவிகள் - ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ் சீர்கள் கருவிளச்சீர்களும், மூன்று ஏழாஞ் சீர்கள் புளிமாச்சீர் களும், நான்கு எட்டாஞ் சீர்கள் கூவிளச்சீர்களு மாகிய கழிநெடி லடிநான்குகொண்ட எண்சீராசிரியச்சந்தவிருத்தங்கள். 'தனத்தன தனத் தன தனன தாத்தன தனத்தன தனத்தன தனன தாத்தன' என்பது, இவற்றுக்குச் சந்தக்குழிப்பாம். இவற்றில் வல்லோசை மிக்குவந்தது, வல்லிசைவண்ணம். (592)

196.—அரக்கர்நெருக்கிப் பொருதல்.

இருட்கிரியெனத்தகுகரியதோற்றமு மெயிற்றினிளிணப்பிணமுடைகொழுற்றமு
முருக்கலர்வெளுத்திடுமருணநாட்டமு முகிற்குரலிளைத்திடமுதிரும்வார்த்தையு
மருட்படுகருத்திடைகதுவுசீற்றமு மதக்கடகளிற்றதிமதமுமாய்ப்புடை
நெருக்கினர்தருக்கினர்விறனிசாச்சரர் நிமிர்த்தனர்வடிக்கணைசிலைகள்கோட்டியே.

(இ-ள்.) இருள் கிரி என தகு - இருள்மயமானதொருமலை யென்று சொல்லத்தக்க, கரிய தோற்றம்உம் - கருநிறமுள்ள வடிவமும், எயிற்றினில்-பற்களில், கொள் - கொண்ட, பிணம் நிணம் முடை நாற்றம்உம்-(தின்னப்பட்ட) பிணங்களின் கொழுப் புக்களினது துர்க்கந்தமும், முருக்கு அலர் வெளுத்திடும் அருணம் நாட்டம்உம்-முருக்கம்பூவும் வெண்ணிறமடையும்படியான சிவந்த கண்களும், முகில் குரல் இளைத்திட முதிரும் வார்த்தைஉம்- மேகங்களின் இடிமுழக்கமும் மெலிவடையும்படி (அதனினும்) உரத்த பேச்சும், மருள் படு கருத்திடை கதுவு சீற்றம்உம் - மயக் கம்பொருந்திய மனத்திலே மூண்டெழுகிற கோபமும், மதம் கடம் களிறு அதி மதம்உம் ஆய்-வலிமையுள்ள மதயானைபோன்ற மிக்க கொழுப்பு முடையவர்களாய், விறல்நிசாச்சரர்-வலிமையையுடைய அந்த அரக்கர்கள், புடை நெருக்கினர்-பக்கங்களில் (வந்து) நெரு ங்கிநின்று, தருக்கினர்-(போரில்) உற்சாகங் கொண்டவர்களாய், சிலைகள் கோட்டி-விற்களை வளைத்து, வடி கணை நிமிர்த்தனர் - கூரியஅம்புகளைப் பிரயோகித்தார்கள்; (எ - று.)

முருக்கலர் வெளுத்திடும் அருணநாட்டம் - வெண்ணிறத் தோடு செந்நிறத்துக்கு எவ்வளவு வேறுபாடு உண்டோ அவ் வளவு வேறுபாடுஉண்டு, பலாசம்பூவின் செந்நிறத்தோடு அரக்கர் கண்கள் கோபத்தாற் கொண்ட மிக்க செந்நிறத்துக்கு என்க. நிசாச்சரர்-சந்தம்பற்றியவிரித்தல். (593)

197.—அலாயுதனும் வீமனும் போர்தொடர்தல்.

அருக்கனைமறைத்தவர்கடவுதேர்த்தலை யருச்சுனன்முதற்பலதுணைவர்சாத்
தகி, செருக்குடையமைத்துனர்குமரர்காத்திடு செருக்களம்வெருக்கொளவலாயு

மாத்திரை, மருச்சுதன்வளைத்ததோர்தனுவினற்சில வடிக்கணைதொடுத்தலுமிரவு லாத்திரி துருத்தனும்வளைத்தனனெடியகாற்சிலை தொடுத்தனனிலக்கறுதொடைகள்வாய்க்கவே.

(இ-ள்.) அருக்கனை மறைத்தவர் - சூரியனைமறைத்தருளியவரான கண்ணபிரான், கடவு-செலுத்துகிற, தேர்த்தலை - தேரிலேயுள்ள, அருச்சுனன் முதல்-அருச்சுனன்முதலான, பல துணைவர்-பலதம்பிமார்களும், சாத்தகி-சாத்தகியும், செருக்கு உடைய மைத்துனர்-போர்க்களிப்பையுடைய (திட்டத்துய்மன்முதலிய தமது) மைத்துனன்மார்களும், குமரர்-(தமது) புத்திரரானஉபபாண்டவர் கடோற்கசன் முதலியோரும், காத்திடு-பாதுகாத்து வருகிற, செரு களம்-போர்க்களத்தை, வெரு கொள-அச்சங்கொள்ளும்படி, வளையும் மாத்திரை-(அலாயுதனும்பலஅரக்கர்களும்) சூழ்ந்தவளவிலே, — மருத்சுதன்-வாயுகுமாரனான வீமன், வளைத்தது ஓர் தனுவினால்-வணக்கின (தனது) ஒருவில்லினால், சில வடிகணை தொடுத்தலும்-கூரியசிலஅம்புகளைத் தொடுத்தவுடனே, இரவு உலா திரி துருத்தன் உம்-இராத்திரியில் உல்லாசமாகத் திரிகிற வஞ்சகனான அலாயுதனும், நெடிய சிலை கால் வளைத்தனன்-நீண்ட விற்கழுந்தைவளைத்து, இலக்கு அறு தொடைகள் - எண்ணிக்கையில்லாத அம்புகளை, வாய்க்க தொடுத்தனன்-பொருந்தப் பிரயோகித்தான்;

துணைவர்-தம்பியர்மூவர். தூர்த்த னென்ற வடசொல் விகாரப்பட்டது. வாய்க்க-பலிக்க; எதிரிகள்மேற்சென்றுதைத்துத் தவறாது பயன்பட என்க. (594)

198.—பின்பு வீமன் அலாயுதனது தேர்முதலியவற்றை யழித்தல்.

மருச்சுதன்வடிக்கணையமரர்மாற்றலன் வடிக்கணைதடுத்தும்வல்லிரதமாற்றியும்
விருப்புடன்விரித்தணிதுவசம்வீழ்த்தியும்விறற்பரிகளைத்துணிதுணிகளாக்கியு
முரத்தொடுசெலுத்தியவலவன்மாத்தலை யுருட்டியுமணிச்சிலையொடியநூக்கியு
மிருட்டொளியுடற்பலதுளைகளாக்கியு மிமைப்பொழுதினிற்றிறன்மடியமாய்த்தவே.

(இ - ள்.) மருத் சுதன் வடி கணை-வீமசேனனது கூரிய அம்புகள்,—அமரர் மாற்றலன் வடி கணை தடுத்துஉம் - தேவர்கட்குப் பகைவனான அவ்வரக்கனது கூரிய அம்புகளைத் தடுத்தும், வல் இரதம் மாற்றிஉம்-(அவன் ஏறியிருந்த) வலிய தேரை யொழித்தும், விருப்புடன் விரித்து அணி துவசம் வீழ்த்திஉம் - (அவன்) விருப்பத்தோடு விரித்துக்கட்டிய கொடியை அறுத்துத் தள்ளியும், விறல் பரிகளை துணிதுணிகள் ஆக்கிஉம்-வலிமையையுடைய குதிரைகளை வெட்டிப் பல துண்டுகளாகச்செய்தும், உரத்தொடு செலுத்திய வலவன் மா தலை உருட்டிஉம்-வலிமையோடு தேர் செலுத்தி வந்த சாரதியின் பெரிய தலையைப் புரளச்செய்தும், மணி சிலை ஒடிய நூக்கிஉம் - உறுதியான வில்லை ஒடிபடும்படி துணித்துத்தள்ளியும், இருட்டு ஒளி உடல் பல துளைகள் ஆக்கிஉம்-இருட்டுப்போன்ற கரிய ஒளியையுடைய உடம்பைப் பலதுளைகளாகச்செய்தும், இமைபொழுதினில் - ஒருமாத்திரைப் பொழு

திலே, திறல் மடிய மாய்த்த - (அவனது) வலிமை யொழியும்படி அழித்தன; (எ-று.)—பி-ம்: வல்வனுற்றலே. மாய்க்கவே. (595)

199.—அலாயுதனெறிந்த மலைகளை வீமன் பொடிபடுத்தல்.

நிலத்திடைகுதித்தனன்வடவைபோற்பெரு நெருப்பெழவிழித்தனனெடியமூச்சுடன்
வலத்துயரலப்படைநிசிசரோத்தமன் வரைத்திரளெடுத்தெதிர்முடுகியோச்சலு
முலப்புயநிமிர்த்தொருகதையினூற்றன துரத்துடனடித்தவைபொடிகளாக்கின
னிலக்கமில்சுரர்க்கிடமுதவுகோத்திர வெழிற்குவடொடித்தவனுதவுகூற்றமே.

(இ-ள்.) (அதன்பின்), வலத்து உயர் அலம் படை நிசிசர உத்தமன்-வலிமையில் மிக்க கலப்பைப் படைக்கலமுடைய அரக்கர் தலைவன் [அலாயுதன்], நெடிய மூச்சுடன்-பெரு மூச்சுடனே, நிலத்திடைகுதித்தனன் - (தேரினின்று) தரையிற் குதித்து, வடவை போல் பெருநெருப்பு எழ விழித்தனன்-படபாமுகாக்கினி போலப்பெருநெருப்புவெளிக்கிளம்பும்படி கோபத்தோடு உறுக்கிப் பார்த்து, வரை திரள் எடுத்து எதிர் முடுகி ஓச்சலும் - மலைக் கூட்டங்களையெடுத்து (வீமனுக்கு) எதிரில் விரைவாக வீசிய வளவிலே,—இலக்கம் இல் சுரர்க்கு இடம் உதவு-கணக்கில்லாத தேவர்கட்கு இருப்பிடமாகஉதவுகிற, கோத்திரம்-(மேரு) மலையினது, எழில் குவடு-வளர்ச்சியையுடைய (மூன்று) சிகரங்களை, ஒடித்தவன்-முறித்தவனான வாயுதேவன், உதவு-பெற்ற,கூற்றம்-யமன்போன்றவீமன்,— உலம்புயம் நிமிர்த்த ஒருகதையினால் - திரண்டகற்றூண்போன்ற(தனது)கையினால் உயரவெடுத்த ஒப்பற்றதொரு கதாயுதத்தைக்கொண்டு, தனது உரத்துடன் அடித்து-தனது முழுவலிமையோடுதாக்கி, அவை பொடிகள் ஆக்கினன் - அம்மலைகளைத்துகளாகச்செய்தான்; (எ-று.)

நிசிசரோத்தமன்-குணசந்தி. இடமுதவுதல் - இடங்கொடுத்தல். தேவர்கட்குச் சுவர்க்கம்போலவே மேருமலையும் ஓரிடமாம்; அன்றியும் அம்மலையின் சிகரங்களில் மூன்று திரிமூர்த்திகட்கு இடமா மென்றும் புராணங் கூறும். கோத்ரம்-பூமியைக்காப்பது: மலை. (596)

200.—கடோற்கசன் வீமனை விலக்கித் தான் அலாயுதனை யெதிர்த்தல்.

பரத்துவசனுக்குறவுரியகோத்திரி பரிச்சுடருடைப்பெயர்முனிகுலோத்தமன்
மரித்தனனெனத்தனியயில்கொடோச்சிய மணிச்சிறுபொருப்பினைநிகர்கடோற்கச
னெரித்தலையரக்கனொடெதிரியாய்ச்சம ரெனைத்தருமருச்சுதன்முனைதல்கீழ்த்தொழி
லுரத்துடன்மலைத்திவனுயிரைமாட்டுவ னுருத்தெனவுடற்றினனுறுதிதோற்றவே.

(இ-ள்.) பரத்துவசனுக்கு உற உரிய கோத்திரி-பரத்துவாச முனிவனுக்கு மிகவும் உரிய குலத்திற் பிறந்தவனாகிய, பரி சுடர் உடை பெயர் முனிகுல உத்தமன் - அசுவத்தாமாவென்னும் பெயரையுடைய முனிவர் கூட்டத்தலைவன், மரித்தனன் - இறந்தான், என-என்றுசொல்லும்படி, தனி அயில் கொடு ஓச்சிய-ஒப்பற்றவேலாயுதத்தைக்கொண்டு (அவனை) வீசி யெறிந்த, மணி சிறு பொருப்பினை நிகர் கடோற்கசன்-நீலமணிக்குன்றையொத்த

[கருநிறமுடைய] கடோற்கசனானவன்,—'எனை தரு மருத்சுதன்- என்னைப்பெற்ற தந்தையும் வாயுகுமாரனுமான வீமசேனன், எரி தலை அரக்கனொடு எதிரி ஆய் - நெருப்புப்போன்ற தலைமயிரை [செம்பட்ட மயிரை]யுடைய இவ்விராக்கதனுடனே சமமாய்நின்று எதிர்த்து, சமர் முனைதல்-போரை முயன்றுசெய்தல், கீழ்தொழில் -இழிவான செயலாம்: (ஆதலால்), உரத்துடன் மலைத்து இவன் உயிரை மாட்டுவன் - வலிமையோடு (நான்) எதிர்த்துப்பொருது இவனுயிரைமாள்விப்பேன்', என - என்றுசொல்லி, உருத்து - கோபங்கொண்டு, உறுதி தோற்ற-(தனது) பேருக்கம்புலப்படும் படி, உடற்றினன் - (அலாயுதனுடன்) எதிர்த்துப் பொருப வனானான்; (எ-று.)

அசுவத்தாமன் பரத்துவாசமுனிவனது புத்திரனானதுரோண னுடைய மகனாதலால், 'பரத்துவசனுக்குறவுரிய கோத்திரி' என்றார். உறவு உரிய என்று பிரித்து-உறவினால் உரிமைபெற்ற என்றலு மொன்று.பரத்துவசன் = பரத்வாஜன்; வடசொல். கோத்திரி - குலத்திற்பிறந்தவன். அஶ்வம் தாம என்ற வடசொற் கள் - முறையே குதிரையென்றும் ஒளியென்றும் பொருள் படுத லால், அசுவத்தாம னென்ற பெயரை 'பரிச்சுடருடைப்பெயர்' என்றார்; இது, லக்ஷிதலக்ஷணை. தலை-மயிர்க்கு,இலக்கணை. பி - ம்: உறுதிபோற்றவே. (597)

201.—அலாயுதனும் கடோற்கசனும் ஆரவாரித்தல்.

இடிக்குரலெனத்தலையுரகர்சாய்த்தன ரெதிர்க்குரலெழுப்பினகுலசிலோச்சயம்
வெடித்ததுமுகட்டுயர்கடகமேற்றலை விபத்தெனவிபத்திரள்வெருவுதாக்கின
துடித்தனரியக்கரொடமரர்தைத்தியர் துணுக்கெனவிமைத்தனர்திசைகள்காப்பவ
ரடிக்கடிபடித்துகள்பரவைதூர்த்தன வரக்கனுமரக்கனுமமரிலார்க்கவே.

(இ - ள்.) அரக்கன்உம் அரக்கன்உம் - இராக்கதராகிய அலா யுதனும் கடோற்கசனும், அமரில் - போரில், ஆர்க்க - ஆரவாரஞ் செய்ததனால்,—உரகர் - (கீழுலகத்துள்ள) சர்ப்பஜாதியார், இடி குரல்என - (அம்முழக்கத்தை) இடியோசையென்றுகருதி, தலை சாய்த்தனர்-அஞ்சியொடுங்கி(த் தமது) முடிசாய்த்து மூர்ச்சித் தார்கள்; குல சிலோச்சயம் - குலபருவதங்கள், எதிர் குரல் எழுப் பின - (அவ்வொலிக்கு) எதிரொலியை உண்டாக்கின; முகடு உயர் கடகம் மேல் தலை - மேலிடம் உயரப்பெற்ற அண்டகடாகத்தினது மேலிடம், வெடித்தது - பிளவுபட்டது; இபம் திரள் - (திக்கு) யானைகளின் கூட்டம், விபத்து என - ஆபத்து நேர்வதென்று எண்ணி, வெருவு தாக்கின - அச்சமிகப்பெற்றன: இயக்கரொடு அமரர் தைத்தியர் - யக்ஷர்களும் தேவர்களும் அசுரர்களும், துணுக்கென - திடுக்கிட்டு, துடித்தனர் - (உள்ளமும் உடலும்) பதைத்தார்கள்; திசைகள் காப்பவர் - திக்பாலகர்கள், இமைத் தனர் - (அச்சத்தால் தமது இமையாக்கண்களை)இமைத்தார்கள்; படி துகள்-பூமியிலுள்ள புழுதிகள், அடிக்கடி—,பரவைதூர்த்தன- (அதிர்ச்சிமிகுதியால் நிலத்தினின்று - எழும்பிக்) கடலிற்படிந்து அதனை நிறைத்தன; (எ - று.)

உயர்வுநவிற்சியணி. எதிர்க்குரல்-பிரதித்தொனி. சிலோச்சயம் = சிலா + உச்சயம்:கற்களின் கூட்டம் என்று மலையைக் காட்டும். குல பர்வதங்கள்-சிறந்த மலைகள்; இமயம்,ஏமகூடம்,கைலை, நிடதம்,நீலம்,மந்தரம், விந்தியம் என்பர்; கந்தமாதனமுங்கூட்டி எட்டெனவும்படும். இமைத்தல், அச்சக்குறி. திசைகள்காப்பவர்- இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என எண்மர்; இவர்களை, கிழக்கு முதலாக முறையே கொள்க. அமரராத்தியரென்றபாடத்திற்கு—அமரராகிய ஆதித்தியரென்க: ஆத்தியர் = ஆதித்யர் அல்லது ஆதித்தயர்என்பதன் திரிபு. (598)

202.—அலாயுதனும் கடோற்கசனும் பொருதல்.

சிரித்தனருருத்தனரணுவின்மோட்டுடல் சிறுத்தனர்பெருத்தனர்மதனினோக்கின
ரெரித்தனரிரித்தனர்ககனமேற்பட வெடுத்தனர்படுத்தனர்புடவிகீழ்ப்பட
முரித்தனகிரிக்கொடுமுடிகளாற்சினை முரித்தனமரத்தனதுணிகளாற்கடி
துரித்தனர்துவக்குரநெரியமேற்பழு வொடித்தனரிளைத்தனருருவம்வேர்க்கவே.

(இ - ள்.) (அவ்வரக்கரிருவரும்),—சிரித்தனர்-(வீரத்தெழுந்த வெகுளியாற்) சிரித்தார்கள்; உருத்தனர் - பெருஞ்சினங்கொண்டார்கள்; மோடு உடல் அணுவின் சிறுத்தனர் - (தமது) பெரிய உடம்பு அணுப்போலச் சிறுக்கும்படி குழைந்துகாட்டினார்கள்; பெருத்தனர்-(உடனே) பெரிய வடிவங்கொண்டு தோன்றினார்கள்; மதனின் நோக்கினர் - செருக்கோடு விழித்துப்பார்த்தார்கள்; எரித்தனர் - தீயெழுப்பினார்கள்; இரித்தனர் - அச்சமுண்டாக்கினார்கள்; ககனம் மேல் பட எடுத்தனர் - ஆகாயத்திற் படும்படி (கைப்படைகளை) உயர எடுத்தார்கள்; புடவி கீழ் பட படுத்தனர் - தரை கீழாம்படி (அவற்றால்) மோதினார்கள்; முரித்தன கிரி கொடி முடிகளால் - ஒடித்தெடுத்தனவான மலைகளின் சிகரங்களைக் கொண்டும், சினை முரித்தன மரத்தன துணிகளால் - கிளைகள் முறிக்கப்பட்டனவான மரங்களின் துண்டுகளைக்கொண்டும், (ஒருவரையொருவர் அடித்து), கடிது-விரைவாக, துவக்கு உரித்தனர்- (உடம்பின்) தோலை யுரித்து, உரம் நெரிய - மார்புநொருங்க,மேல் பிறகு, பழு ஒடித்தனர்-விலாவெலும்புகளை யொடித்தார்கள்; (அப்பால்),உருவம் வேர்க்க - உடம்பு வேர்வையடைய, இளைத்தனர் - சோர்வடைந்தார்கள்; (எ-று.)

'ககனமேற்பட எடுத்தனர் புடவிகீழ்ப்படப் படுத்தனர்'என்பதற்கு - (ஒருவரையொருவர்) சூரியனுக்கும் மேலாம்படி மிகஉயர எடுத்துத் தரைகுழிபடும்படி கீழேபோகட்டார்கள் என்றலும் ஒன்று. சிரித்தனர் உருத்தனர், அணுமோடு, சிறுத்தனர்பெருத்தனர், மேற்பட கீழ்ப்பட, எடுத்தனர் படுத்தனர்-தொடைமுரண். 'ககனம்', 'மேற்பழு' என்றஇடங்களில் 'அருக்கன்', 'வேபழு' என்ற பாடங்கள் சந்தத்திற்கு மாறுபடும். பி - ம்: மரத்தினதடிகளாற். (599)

203.—கடோற்கசன் அரக்கர்களுடன் அலாயுதனை அழித்தல்.

சிலைப்படையயிற்படைதெளியும்வாட்படை திறற்பலபடைக்கலவலிமை காட்டியும், வலப்படவளைத்துமல்வலிமைகாட்டியும் வயத்தொடுசயப்புயவலிமை காட்டியு,முலைப்படுகனற்சினமுதிர்கடோற்கச னுடற்றியவரக்கரையொருவர்போற் பொரு, தலப்படையரக்கனதுயிரைமாய்த்தன னடற்றொடைகளிற்றொடையடைசி வீழ்த்தியே.

(இ - ள்.) உலை படு கனல் - உலைக்களத்திற்பற்றி யெழுகிற நெருப்புப்போல, சினம் முதிர் - கோபம் மிக்க, கடோற்கசன்—,— சிலை படை - வில்லாகிய ஆயுதமும், அயில் படை-வேலாயுதமும், தெளியும் வாள் படை-தேர்ந்தெடுத்த வாளாயுதமும், திறல் பல படைக்கலம் - வலிமையையுடைய மற்றும் பல ஆயுதங்களும் என்பவற்றின்,வலிமை - பலத்தை, காட்டிஉம் - உபயோகித்தும், —வலம் பட வளைத்து - பலம் பொருந்த (ப் பகைவரை)க் கட்டி, மல் வலிமை காட்டிஉம் - மற்போரின் வலிமையை உபயோகித் தும்,—வயத்தொடு சயம் புயம் வலிமை காட்டிஉம் - பலத்தோடு வெற்றியைக்கொண்ட தோள்களின் திறமையை உபயோகித்தும், —உடற்றிய அரக்கரை-(தன்னோடு) போராடிய இராக்கதர்களை, ஒருவர்போல் பொருது - ஒருத்தரை (யெதிர்த்தாற்)போலவே (பலரையும்) எதிர்த்துப் போர்செய்து (அழித்து),—(பின்பு),அடல் தொடைகளின் தொடை அடைசி வீழ்த்தி - வலிமையையுடைய (தனது) தொடைகளால் (எதிரியின்) தொடைகளை நெருக்கி(அவ னை)க் கீழே தள்ளி, அலம் படை அரக்கனது உயிரை மாய்த்தனன்- அலாயுதனென்னும் அவ்வரக்கனது உயிரை யொழித்தான் ;

'தொடைகளின் தொடை அடைசி வீழ்த்தி' - (தனது)அம்பு களினால் (பகைவருடைய) அம்புகளை விலக்கித் தள்ளி யென்றும், வரிசைகளாக அம்புகளைச் செலுத்தி(ப் பகைவரை) வீழ்த்தி யென்றுமாம். படைக்கலவலிமைகாட்டியும், மல்வலிமைகாட்டியும் புயவலிமைகாட்டியும், பொருது, வீழ்த்தி மாய்த்தனன் என்க. ()

204.—தேவர்கள் பலரும் கடோற்கசனைப் புகழ்தல்.

புரத்தினை யெரித்தவர் கயிலை மாக்கிரி புயத்தினி லெடுத்திசை புனைப ராக்ரமன், வரத்தினில் வனத்திடை திரியு நாட்சில மனித்தரொ டெதிர்க்கவும் வயிரி யாய்த்தில, னுரத்துடன் மருச்சுத னுதவு ராக்கத னெருத்தனு மெனைப்பல ருடனு மேற்றெதிர், துரத்தலின் மரித்தன னிவனெ னுப்பலர் துதித்ததி சயித்த னர் சுரரும் வாழ்த்தியே.

(இ - ள்.) புரத்தினை எரித்தவர் - திரிபுரத்தை எரித்தழித் தவரான சிவபிரானது, கயிலை மா கிரி - பெரிய கைலாசபருவ தத்தை, புயத்தினில் எடுத்து - (தனது) கைகளினால் நிலை பெயர்த்து, இசை புனை - கீர்த்திபெற்ற, பராக்ரமன் - பராக்கிரம சாலியான இராவணன், வரத்தினில் - பலவரங்களைப்பெற்றிருந் தும், வனத்திடை திரியும் நாள் சில மனித்தரொடு எதிர்க்கஉம் வயிரி ஆய்த்திலன் - காட்டிற் சஞ்சரித்தகாலத்தில் இரண்டு

மனிதர்களுடனே எதிர்த்தற்கும் வீரமுள்ளவனுயினுனில்லை; (அங்ஙனமன்றி), மருத் சுதன் உதவு இராக்கதன் ஒருத்தன்உம்-வாயுகுமாரனான வீமன் பெற்ற அரக்கனுகிய கடோற்கசனொருத் தன்மாத்திரம், உரத்துடன் - வலிமையுடன், ஏற்று எதிர் துரத்த லின் - எதிர்த்து எதிரிலே தொடர்தலால், எனை பலருடன்உம் இவன் மரித்தனன் - மிகப்பல அரக்கரோடும் இவ்வலாயுதன் இறந்தான், என - என்று, பலர் சுரர்உம் - தேவர்கள்பலரும், துதித்து - புகழ்ந்து, வாழ்த்தி - (கடோற்கசனை) ஆசீர்வதித்து, அதிசயித்தனர் - வியந்தார்கள்; (எ - று.)

சிவபிரானது கைலாசகிரியைப் பெயர்த்தெடுத்துப் புகழ் கொண்டும் பலவரங்கள்பெற்றும் இராமலட்சுமணர்களாகிய இரண்டு மனித்தர்களுடனே எதிர்த்து வெல்லுதற்குத் திறமை யற்றவனுயொழிந்த ராக்ஷஸராஜனை இராவணனினும் இக் கடோற்கசனுகிய அரக்கன் தனியேபொருது அரக்கரநேகரைத் தொலைத்து அவர்கட்குத் தலைவனை அலாயுதனையுங் கொன்ற தனுல் மேம்பட்டவ னென்று வியந்து கொண்டாடின ரென்க. பலபராக்கிரமங்களிற்சிறந்த ராக்ஷஸசிரேஷ்டரான இராவண னுக்கும் கடோற்கசனுக்கும் வேறுபாடு தோன்றக் கூறினது, **வேற்றுமையணி.** 'வனத்திடை திரியுநாள் சிலமனித்தரொடெதிர்க் கவும் வயிரியாய்த்திலன்' என்றது-இராமலட்சுமணர் வனவாசஞ் செய்கையில் மாரீசனுடன்வந்த இராவணன் அவர்களைப்பொருது வென்று சீதையைக் கவர்ந்துசெல்லமாட்டாமல் வஞ்சனையாகத் தொழில்செய்தமைபற்றியென்க. ஆய்த்திலன்என்ற எதிர்மறை முற்றில், து - சாரியை. பி - ம்: புரக்குலம். (601)

வேறு.

205.—கடோற்கசன் பலவுருவங்கொண்டு பொருதல்.

அன்றுகங்குலிற் பலபதி னுயிர மரக்கரோ டலாயுதன் றன்னைக், கொன்று வெம்பணிக் கொடியவன் சேனையைக் குரங்குகொள் கோதைபோற் கலக்கி, யொன்று பத்துநூ றுயிரங் கோடியா முருவு கொண் டிவுளிதேர் களிருள், சென்றி மைப்பொழு தளவையில் யாவருந் தென்புலம் படருமா செற்றுன்.

(இ - ள்.) (கடோற்கசன்),—அன்றுகங்குலில்-அன்றைநாளிர விலே, பல பதினுயிரம் அரக்கரோடு அலாயுதன் தன்னை-அநேகம் பதினுயிரக்கணக்கான இராக்கதர்களுடனே அலாயுதனையும், கொன்று—, வெம் பணி கொடியவன் சேனையை - கொடியபாம்புக் கொடியையுடையவனுன துரியோதனனது சேனையை, குரங்கு கொள் கோதை போல் கலக்கி - குரங்கு கைக்கொண்ட பூமாலை யைப்போல நிலைகலங்கச்செய்து,—ஒன்று பத்து நூறு ஆயிரம் கோடி ஆம் உருவு கொண்டு - மிகப்பலவான வடிவங்கொண்டு,— சென்று-எதிர்த்துப்போய், இவுளி தேர் களிறு ஆள் - சதுரங்க சேனைகளும், யாவர்உம் - (அச்சேனைவீரர்)பலரும், இமைபொழுது அளவையில்-ஒருமாத்திரைப்பொழுதளவினுள்ளே, தென் புலம் படரும் ஆ-தென்திசையிலுள்ளதான யமலோகத்துச் சேரும்படி,

செற்றான் - அழித்தான்; (எ-று.)—குரங்குகொள் கோதை - உலகநவிற்சியணி.

இக்கவி-முதற்சீரும் ஏழாஞ்சீரும் மாச்சீர்களும், மற்றை யைந்தும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடிநான்குகொண்ட எழுசீ ராசிரியவிருத்தம். (602)

வேறு.

206.— கடோற்கசன் பலவகைமாயை செய்தல்.

சண்டமா ருதமா யெழுந்திடு மொருகாற் சலதியா யெழுந்திடு மொருகாற்
கொண்டலா யுதகம் பொழிந்திடு மொருகாற் குன்றமா யுயர்ந்திடு மொருகான்
மண்டுபா வகனு யெரிந்திடு மொருகால் வல்லிரு ளாய்வரு மொருகாற்
பண்டுதான் வல்ல மாயைகள் பலவும் பயிற்றினன் மாருதி பயந்தோன்.

(இ-ள்.) மாருதி பயந்தோன் - வாயுகுமாரனான வீமன் பெற்ற மகனாகிய கடோற்கசன், ஒரு கால் - ஒருமுறை, சண்டமாருதம் ஆய்-பெருங்காற்று வடிவமாய், எழுந்திடும் - மேல்வீசுவான்; ஒரு கால்—, சலதி ஆய் - கடல்வடிவமாய், எழுந்திடும் - பொங்கு வான்; ஒருகால்—, கொண்டல் ஆய்-காளமேகவடிவமாய், உதகம் பொழிந்திடும் - நீர்மழைபொழிவான்; ஒருகால்—, குன்றம் ஆய் - மலைவடிவமாய், உயர்ந்திடும் - உயர்ந்துகாணப்படுவான்; ஒரு கால் —, மண்டு பாவகன் ஆய் - மூண்டெழுகிற நெருப்பின்வடிவமாய், எரிந்திடும் - எரிந்து தோன்றுவான்; ஒருகால்—, வல் இருள் ஆய் வரும் - வலிய [அழித்தற்கரிய] இருளாய் அடர்ந்துவருவான்; (இவ்வாறு),பண்டு தான் வல்ல மாயைகள் பலஉம் பயிற்றினன் - முன்னந் தான் தேர்ந்துள்ள பலவகைமாயைகளையுஞ் செய்திட் டான்; (எ - று.)

இதுமுதல் இச்சருக்கம்முடியுமளவுமுள்ள பதினைந்துகவிகள் இரண்டு நான்கு ஏழாஞ் சீர்கள் மாச்சீர்களும், மற்றைநான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். (603)

207.—கவிக்கூற்று: அப்பொழுது உண்டான இரத்தப்பெருக்குமிகுதி.

இம்பர்வாளரக்கனிணத்தொடுபிணந்தின் றிடங்கொள்வாய்கொடுமடுத்தில னேற், றும்பிமாபரிமாவீரரென்றிவர்மெய் துணித்தலிற்சொரிந்தசெஞ்சோரி, யம்பு ராசிகளிலண்டகோளகையி லடங்குமோவண்டமும்பிளந்திட், டும்பர்வாரியையுங் கலக்குமேமிகவு முண்மைநாமுரைசெயும்பொழுதே.

(இ-ள்.) நாம் உண்மை உரைசெயும்பொழுது - நாம் மெய் யாகக் கூறுமளவில்,—இம்பர் - இப்போர்க்களத்தில், வாள் அரக்கன்-கொடிய அரக்கனான கடோற்கசன்,நிணத்தொடு பிணம் தின்று - கொழுப்புக்களுடனே பிணங்களைப்புசித்து, இடம் கொள் வாய்கொடு மடுத்திலன்ஏல் - பரந்தவாயினால் (குருதி யைக்) குடித்திடானாயின், தும்பிமா பரிமா வீரர் என்ற இவர்மெய் துணித்தலின் சொரிந்த செம் சோரி-யானை குதிரை வீரர்என்ற

இவர்களது உடம்பைத்துணித்தலாற் பெருகிய சிவந்த இரத்தம், அம்புராசிகளில் அண்டகோளகையில் அடங்கும்ஓ-கடல்களிலும் அண்டகோளம் முழுவதிலும் அடங்குமோ?(அடங்காமல்), அண்டம்உம் பிளந்திட்டு-அண்டகோளத்தையும்உடைத்துக்கொண்டு, உம்பர் வாரியைஉம் மிகஉம் கலக்கும்ஏ - வெளியிலுள்ள பெரும் புறக்கடலையும் மிகுதியாகச்சேர்ந்து கலங்கச்செய்யுமே; (எ-று.)

கடோற்கசன் தான் கொன்ற பிராணிகளின் உடலை உணவாகத்தின்று அவற்றின் இரத்தத்தை நீராகப்பருகின னென்ற உண்மையை இங்ஙனம் வெளியிட்டபடி. 'தும்பிமா பரிமா வீரர் என்ற இவர்மெய்' - இருதிணையுங் கலந்து சிறப்பினால் உயர்திணை முடிபைப்பெற்ற திணைவழுவமைதி. பி - ம்: அரக்கர் பிணத்தொடு திணர். (604)

208.—கடோற்கசனை வேலினாற்கொல்லும்படி துரியோதனன் கர்ணனோடுகூறல்.

கட்செவியெழுதுங்கொடியுடைக்கொடியோன் கன்னனைக்கடைக்கணித் தருளி, விட்சுரபதிவந்தன்றுனக்களித்த வேலினால்வீமன்மாமகனை, யுட்செறிசின மும்வலிமையுமுயிரு முடனழிந்தும்பரூர்புகுதப், புட்செறிதொடையாய்கொல் கெனவிரைவிற் புகைந்துநாப்பொறியெழப்புகன்றான்.

(இ - ள்.) கட்செவி எழுதும் கொடி உடை கொடியோன் - பாம்பின் வடிவமெழுதப்பெற்ற துவசத்தையுடைய துஷ்டனான துரியோதனன்,—கன்னனை கடைக்கணித்தருளி-கர்ணனை அன்போடு பார்த்து,—'புள் செறிதொடையாய் - வண்டுகளடர்ந்த மாலையையுடையவனே! விண் சுரபதி - சுவர்க்கத்தில் வாழ்கிற தேவேந்திரன், அன்று - அந்நாளில் [முன்பொருசமயத்தில்], வந்து—,உனக்கு—, அளித்த - கொடுத்தருளின, வேலினால்—, வீமன் மா மகனை - வீமனது சிறந்தபுத்திரனான இந்தக்கடோற்கசனை, உள் செறி சினம்உம் வலிமைஉம் உயிர்உம் உடன் அழிந்து உம்பர் ஊர் புகுத - மனத்தில் நிறைந்த கோபமும் தேகபலமும் உயிரும் ஒருசேர ஒழியப்பெற்றுத் தேவர்களதுவீரசுவர்க்கத்துச் சேரும்படி, கொல்க-கொல்வாயாக,' என-என்று, விரைவின் - விரைவாக, நா புகைந்து பொறி எழ புகன்றான் - நாக்குப் புகைகொண்டு தீப்பொறியெழும்படி கூறினான்; (எ-று.)

பாண்டவர்க்குத் தூதுசென்றபொழுது கண்ணன் ஏவியபடி இந்திரன் அந்தணவடிவங்கொண்டு சென்று கர்ணனை இரந்து அவனதுகவசகுண்டலங்களைப் பெற்றவுடன் சிறந்தொருவேற் படையை அவனுக்குக் கைம்மாறாகத் தந்தனனென அறிக. புள் - இங்கே, வண்டு. (605)

209.—அதற்குக் கர்ணன் உடன்படாமை.

புகன்றபோதருக்கன்புதல்வனுமாயப் போரிதுகங்குலிப்பொழுதே
யகன்றிடுமகன்றாலிவனுயிர்பிறிதோ ரம்பினாலகற்றுவித்திடலாம்

இகன்றபோர்முனையினனையிவ்வடிவே லெறிந்துநானிமையவர்க்கிறைவன்
மகன்றனுருயிர்கொன்றுனதுவெண்குடைக்கீழ் வைப்பனிவ்வையகமென்ருன்.

(இ - ள்.) புகன்றபோது-(இங்ஙனம் துரியோதனன்) சொன்ன பொழுது,—அருக்கன் புதல்வன்உம் - சூரியகுமாரனான கர்ண னும்,—(அத்துரியோதனனை நோக்கி),—'இது மாயம் போர்-(அரக்கனான கடோற்கசன் செய்யும்) இப்போர் மாயையினுற்செய் யும் போராம்; கங்குல்-(அரக்கர்க்குவலிமை மிகுங்காலமான) இராப் பொழுது, இப்பொழுதுஏ அகன்றிடும் - விரைவிலே நீங்கும்; அகன்ருல் - நீங்கிவிட்டால், (உடனே), இவன் உயிர் பிறிது ஓர் அம்பினுல் அகற்றுவித்திடல் ஆம் - இவனுடையஉயிரை வேருே ரம்பினுல் (எளிதில்) ஒழியச்செய்திடலாம்; நாளை-நாளைக்கு, இகன்ற போர் முனையில் - எதிர்த்துச்செய்யும் போரிடத்திலே, நான்—, இ வடி வேல் எறிந்து-கூரிய இந்த வேலாயுதத்தை வீசி, இமையவர்க்கு இறைவன்மகன்தன் ஆர்உயிர் கொன்று-தேவேந் திரனது புத்திரனான அருச்சுனனது அழித்தற்கரியஉயிரை யழித்து, இ வையகம் உனது வெள் குடை கீழ் வைப்பன்-இந் நிலவுலகமுழுவதையும் உன்னுடைய புகழுள்ள ஆளுகையின் கீழ் (த் தடையற) வைப்பேன்,' என்ருன் - என்றுசொன்னுன்;

அருச்சுனனைக் கொல்வதற் கென்று வைத்திருக்கிற வேலைக் கொண்டு இவ்வரக்கனைக் கொல்லேனென்று மறுத்தனனென்க. இந்தவேல் கடோற்கசனைத் தவருமற்கொல்ல வல்லதென்று சொல்லி இந்திரன்கொடுத்ததாகக் கிருட்டிணன் தூதுசருக்கத் தில்வந்துள்ளது;அங்கு, ''வெலற்கருந்திறல்விசயன்மேலொழித்து நீ...கடோற்கசக்காளை தன்னுயிரே,யிலக்குவந்தெதிர்மலைந்தபோது இதற்கு'' எனக் குறிப்பிட்டு இந்திரன் சொற்றதாகவே யுள்ளது. அங்ஙனிருந்தும், கர்ணன் அருச்சுனனை இலக்காக்கொண்டு பேசு வது அதற்கு முரணயாகும். இனி, 'விசயனையொழித்துநீ'என்று கூறியதாலேயே, அவனையும் இவ்வேல் தவருது கொல்லும் எனக் கொண்டு கூறினனுமாம். இது, மேல் கண்ணன் கூறுவதற்கும் பொருந்தும். கடோற்கசனது மாயப்போர் பகலில் அங்ஙனஞ் செல்லாதெனக் கொண்டு 'கங்குலகன்ருல் இவனுயிர் அகற்று வித்திடலாம்' என்ருன். (606)

210.—துரியோதனன்வற்புறுத்தக் கர்ணன்கடோற்கசன்மீது வேலெறிதல்.

என்றலுமரசன்யாமுமெம்படையு மிரவிடைப்பிழைக்கநீயிவனைக்
கொன்றுபோர்பொருதுசிலைவிசயனையுங் கொல்லுதியெனமனங்கொதித்துக்
கன்றலுமவ்வேலக்கணத்தவன்மேற் காலவெஞ்சூலமொத்தெறிந்தான்
தென்றலுநிலவுநிகரெனத்தன்னைச் சேர்ந்தவரிளைப்பெலாந்தீர்ப்பான்.

(இ - ள்.) என்றலும் - என்று (கர்ணன்) சொன்னவுடனே, அரசன் - துரியோதனன்,—'யாம்உம் எம் படைஉம் இரவிடை பிழைக்க-நாமும் நமது சேனையும் இவ்விரவிலேதப்பிப்பிழைத்திடு மாறு, நீ இவனை கொன்று - நீ (அவ்வேலினுல்) இவ்வரக்கனை (இப்பொழுது) கொன்று, போர் பொருது சிலை விசயனைஉம் கொல்லுதி - (பின்பு) போர்செய்து வில்லில்வல்ல அருச்சுனனை

யும் (வேறொராயுதத்தாற்) கொல்வாயாக,' என-என்று சொல்லி, மனம் கொதித்து கன்றலும்-மனம் மிக வெதும்பியவளவில்,— தென்றலும் நிலவும் நிகர் என தன்னை சேர்ந்தவர் இளைப்பு எலாம் தீர்ப்பான்-தென்றற்காற்றும் நிலாவும் ஒப்பாம்படி தன்னை யடுத்தவர்களுடைய இளைப்பு முழுவதையுங் களைபவனான கர்ணன், அ கணத்து - அந்தக்ஷணத்திலே, அ வேல்-அந்தவே லாயுதத்தை, அவன்மேல் - அந்தக்கடோற்கசன்மேல், காலன் வெம் சூலம் ஒத்து எறிந்தான் - யமனதுகொடிய சூலாயுதத்தை (யெறிந்தாற்) போல எறிந்தான்; (எ - று.)

'இப்பொழுது இவ்வேலினால் இவ்வரக்கனைக் கொன்று எம்மையும் எமது சேனையையும் பிழைப்பித்தாற் பின்பு அருச்சுனனை வேறுவகையாற் கொல்லலாம்' என்று கூறித் துரியோதனன் நிர்ப்பந்திக்க, கர்ணன் அங்ஙனே செய்தானென்க. தென்றலும் நிலவும் நிகரெனத்தன்னைச்சேர்ந்தவரிளைப்பெலாந் தீர்ப்பான் - கருத்துடையடைகொளியணி. (607)

211.—கடோற்கசன் இறத்தல்.

எறிந்தவேல்பகைவன்மார்பகந்துளைத்திட் டிந்திரனிடத்துமீண்டெய்த
மறிந்தமால்வரைபோலரக்கனுமுகம்பார் மருங்குறவிழுந்துயிர்மடிந்தான்
செறிந்தருகணைந்தசேனையும்பயந்தோர் சிந்தையுஞ்செயலறக்கலங்க
வறிந்தவர்க்கன்றியறியொணுவைய னவர்துயரகற்றுமாறுரைப்பான்.

(இ - ள்.) எறிந்த வேல் - (கர்ணன்) வீசிய வேற்படை, பகைவன் மார்பகம் துளைத்திட்டு - பகைவனான கடோற்கசனது மார்பினிடத்தை நன்றாகத்துளைத்து, இந்திரனிடத்து மீண்டு எய்த - (தனக்கு உரியவனான) இந்திரனிடத்திலே மீண்டுசென்று சேர,—அரக்கன்உம் - கடோற்கசனும், மறிந்த மால் வரை போல்- கவிழ்ந்துவிட்ட பெரிய மலைபோல, பார் மருங்கு முகம் உற விழுந்து-தரையிலே முகம்படும்படி கவிழ்ந்துவிழுந்து, உயிர்மடிந்தான்-இறந்தான்; (அப்பொழுது), செறிந்து அருகு அணைந்த சேனைஉம் - அடர்ந்து அருகிலடுத்துள்ள பாண்டவர்சேனையும், பயந்தோர் சிந்தைஉம் - (அவனது) தந்தையரான பாண்டவரது மனமும், செயல் அற கலங்க - செய்தொழிலொன்றுமில்லாதபடி கலக்கமடைய,—அறிந்தவர்க்கு அன்றி அறிய ஒணு ஐயன் - தத்துவஞானமுடையோர்க்கேயன்றி (மற்றையோர்க்கு) அறிய முடியாத கடவுளான கண்ணன், அவர் துயர் அகற்றும் ஆறு உரைப்பான் - அவர்களுடைய துன்பத்தைப்போக்கும் பொருட்டுச் சொல்வான்; (எ - று.) - அதனை அடுத்த இரண்டுகவிகளிற் காண்க. பெரியதாதையையும் சிறியதாதையரையுஞ் சேர்த்து 'பயந்தோர்' என்றது, உபசாரவழக்கின்பாற்படும். (608)

212.—இதுவும், அடுத்தகவியும்-ஒருதொடர்: கிருஷ்ணன் பாண்டவர்க்குச் சமாதானங்கூறலைத் தெரிவிக்கும்.

இந்தவேல்கவசகுண்டலங்கவர்நாளிரவிமைந்தனுக்குத்
தந்தவேலிதனையாவர்மேல்விடினுந்தரிப்பறத்தேறுமவன்வரத்தால்

உந்தவேலமரில்விசயன்மேற்றொடுக்குமுரகவம்பினுக்குயிருய்ந்தா
லந்தவேலையினமற்றெறிவதற்கிருந்தானுற்றலாற்கூற்றினுங்கொடியோன்.

(இ - ள்.) இந்த வேல்-இவ்வேற்படை, இந்திரன் கவச குண்டலம் கவர் நாள் இரவி மைந்தனுக்கு தந்த வேல்-இந்திரன் (கர்ணனது) கவசகுண்டலங்களை இரந்துபெற்றகாலத்தில் அவனுக்குக் கொடுத்த வேலாம்: இதனை-இவவாயுதத்தை, யாவர்மேல் விடின் உம் - யார்மேற் பிரயோகித்தாலும், (இது), அவன் வரத்தால்-அவ்விந்திரனது வரத்தினால், தரிப்பு அற தெறும் - (அவர்களைத்) தாங்கமுடியாதபடி கொல்லும்; ஆற்றலால் கூற்றின்உம் கொடியோன்-வலிமையால் யமனினுங் கொடியவனான கர்ணன், அமரில் விசயன்மேல் தொடுக்கும் உரகம் அம்பினுக்கு உயிர் உய்ந்தால் - போரில் (தான் இனி) அருச்சுனன்மேற் பிரயோகிக்கும் நாகாஸ்திரத்துக்கு (அவ்வருச்சுனன்) உயிர் தப்பிப் பிழைப்பானாயின், அந்தவேலையில் - அச்சமயத்தில், மற்று-பிறகு, உந்த வேல் - இந்தவேற்படையை, எறிவதற்கு இருந்தான் - (அவன்மேற்) பிரயோகித்தற்கு எண்ணியிருந்தான்; (எ - று.)

வரத்தால் தொடுக்கும் என இயைத்து, அக்கர்ணன் தான் குந்திக்குஅளித்த வரத்தினால் அருச்சுனன்மீது போரில் (ஒருமுறையே) பிரயோகிக்கும் நாகாஸ்திரத்துக்கு என்றலு மொன்று. 'ஆற்றலாற்கூற்றினுங்கொடியோன்' என்றது-கர்ணன் இவ்வேற்படையைக் கைக்கொண்டிருப்பனாயின் அருச்சுனனைத்தவறாது அழிக்கவல்லனென்றவாறு; ஒருகால் கூற்றுவனுக்கு உயிர் தப்பினும் கர்ணனுக்கு உயிர்தப்புதலரிதென்க. (609)

213. அலப்படையவனுமநேகமாயிரம்பே ரரக்கரும்விளியுமறாடர்த்தோ
னுலப்படையவுந்தானுய்பவுமரச னுரைத்தலாலோச்சினனிவன்மேல்
வலப்படமுனையிலின்றுமக்கவனி வழங்கினன்கன்னனேயென்றான்
குலப்படவரவின்முடியின்மேனடித்த கூத்துடைக்கோவியர்கூத்தன்.

(இ - ள்.) 'அலம் படையவன்உம் - அலாயுதனும், அநேகம் ஆயிரம் பேர் அரக்கர்உம்-(மற்றும்) பல ஆயிரக்கணக்கான பெரிய இராக்கதர்களும், விளியும் ஆறு - இறக்கும்படி, அடர்த்தோன் - பொருது அழித்தவனான கடோற்கசன், உலப்பு அடையஉம் - அழிவையடையும்படியும், தான் உய்யஉம்-தான் பிழைத்திடும்படியும், அரசன்-துரியோதனன்,உரைத்தலால்- சொன்னதனால்,(கர்ணன்), இவன்மேல் ஓச்சினன் - (அவ்வேற்படையை) இந்தக் கடோற்கசன்மேல் வீசியெறிந்தான்; (ஆதலால்), முனையில்- போரில், வலம் பட - வெற்றியுண்டாக, உமக்கு - உங்கட்கு, கன்னன்ஏ - கர்ணன் தானே, இன்று - இன்றைக்கு, அவனி வழங்கினன் - இராச்சியத்தைக் கொடுத்தவனாயினான்', என்றான்-என்று சொல்லியருளினான்: (யாவனெனில்),—குலம் படம் அரவின் முடியின்மேல் நடித்த கூத்து உடை - சிறந்த படத்தையுடைய (காளியனென்னும்) பாம்பினது தலையின்மேல் ஆடிய நடனத்தையுடைய, கோவியர் கூத்தன் - கோபஸ்திரீகளோடு கூத்தாடியவனாகிய கண்ணபிரான்; (எ-று.)

அருச்சுனன் நாகாஸ்திரத்துக்குத் தப்பியுய்வானாயின் அப்பொழுது அவன்மேல் இந்தவேலை எறிவானானால் அவன் தவறாமல் இறந்திடுவனாதலால், அங்ஙனஞ்செய்யாமல் இப்பொழுதே போக்கியமைபற்றி, உமக்குக் கர்ணனே போரில் வெற்றியும் அரசும் இன்று. கொடுத்தவனாவனென்று கண்ணன் அருளிச்செய்தான். அவனிவழங்குதற்குக் கர்ணன் பரம்பரைக் காரணமென்றவாறு. இந்த உண்மையை வெளியிட்டது, பாண்டவரது புத்திரசோகத்தைத் தீர்க்கும்பொருட்டென்க. கண்ணன் திருவாய்ப்பாடியில் ஆய்ச்சியரோடு கலந்து குரவைக்கூத்து குடக்கூத்து முதலிய நடனங்களைத் திருவிளையாட்டாக நிகழ்த்தி அவர்கள் மனத்தை மகிழ்வித்துத் தானும் திருவுள்ளமுவந்தமை பற்றி, 'கோவியர் கூத்தன்' என்றார். கண்ணனை 'அரவின் முடியின்மேல் நடித்த கூத்துடைக்கோவியர்கூத்தன்' எனக் குறித்ததனால், கர்ணன் வேலை யெறிந்து கடோற்கசனைக்கொன்றவளவிலே அருச்சுனன் பிழைத்ததற்காக மிகமகிழ்ந்து கூத்தாடினனென்று வியாசபாரதத்திற்கூறிய செய்திகுறிப்பித்தவாறு. பி-ம். கோரரக்கர். 'நலப்படை வடிவேல்விசயனைச் செகுக்கு நால்வருமழிவதுதிண்ண, மலப்படாதரவக்கொடியவனுரையாலந்தவேலோச்சினனிவன்மேல்' என்று சிலபிரதிகளில் முன்னிரண்டடிகள். (610)

214.—அதுகேட்டுப் பாண்டவர் தேறி மகிழ்தல்.

தருமனுமருத்துமடன்மருத்துவருந்தந்தவர்மருத்துவான்மகனைப்
பெருமையும்வலியுநல்வினைப்பயத்தாற்பெற்றனமெனவுறத்தழுவி
யருமையினளித்தமகவுடைச்சோகமாற்றியங்குவகையரானார்
கருமமுமுலகத்தியற்கையுமுணர்ந்தோர்கலங்குதலுறுவரோகலங்கார்.

(இ - ள்.) தருமன்உம் - யமதருமராசனும், மருத்துஉம்-வாயுதேவனும், அடல் மருத்துவர்உம் - வல்லமையுள்ள தேவவைத்தியரான அசுவினீதேவர்களும், தந்தவர்-பெற்றகுமாரராகிய தருமனும் வீமனும் நகுலசகதேவரும், அங்கு - (கண்ணன்வார்த்தையைக்கேட்ட) அப்பொழுது, பெருமைஉம் வலிஉம் நல்வினை பயத்தால் பெற்றனம் என - கௌரவத்தையும் வலிமையையும் புண்ணியப்பயனாகப்பெற்றோமென்று எண்ணி, மருத்துவான்மகனை உற தழுவி-இந்திரகுமாரனான அருச்சுனனை நன்றாகத்தழுவிக்கொண்டு, அருமையின் அளித்த மகவுடை சோகம் ஆற்றி - அருமையாகத்தாம் பெற்ற புத்திரனான கடோற்கசனது சம்பந்தமான விசனத்தை யொழித்து, உவகையர் ஆனார்- மகிழ்ச்சியுடையவரானார்கள்: கருமம்உம் உலகத்து இயற்கைஉம்உணர்ந்தோர்-வினைப்பயனையும் உலகநடத்தையின் தன்மையையும் அறிந்தவர்கள், கலங்குதல் உறுவர்ஓ - கலக்கமடைவார்களோ? கலங்கார்—; (எ-று.)

ஈற்றடியிற்கூறிய பொதுப்பொருளைக்கொண்டு மற்றையடிகளிற் கூறிய சிறப்புப்பொருளை விளங்கவைத்ததனால், **வேற்றுப்**

பொருள்வைப்பணி. மற்றைப் பாண்டவரது பெருமைக்கும் வலிமைக்கும் அருச்சுனன் முக்கியகாரணமென்பதுபற்றி, அவன்பிழைக்கப் பெற்றதனை, மற்றவர் 'பெருமையும் வலியும் நல்வினைப்பயத்தாற் பெற்றனம்' என்று பாராட்டினர். (611)

215.—துரோணன் பலஅரசரோடு விராடனையும் துருபதனையும் தலைதுணித்தல்.

இராவணன்படுபோர்க்களமெனக்கிடந்த விந்தவெங்களத்திடைமீண்டு
மராவுயர்துவசனுணையால்வரிவில்லாரியனனீகினியுடன்போய்
விராடனும்யாகசேனனுமுதலாம்வேந்தரோடெதிர்ந்தமர்மலைந்து
தராதிபர்பலரோடவ்விருவரையுஞ்சரங்களாற்சிரங்களைத்தடிந்தான்.

(இ - ள்.) இராவணன் படு போர் களம் என கிடந்த - இராவணன் இறந்துவிழுந்தயுத்தகளம்போலிருந்த [மிகப்பலஅரக்கர் இறந்துவிழப்பெற்ற], இந்த வெம் களத்திடை - இந்தக்கொடிய போர்க்களத்திலே, மீண்டும் -, அரா உயர் துவசன் ஆணையால் - பாம்புவடிவத்தை உயரநிறுத்தியகொடியையுடையவனை துரியோதனனது கட்டளையினுல், வரி வில் ஆரியன் - கட்டமைந்த வில்வித்தையில்தேர்ந்த ஆசாரியனை துரோணன், அனீகினியுடன் போய்-சேனையுடனே சென்று, விராடன்உம் யாகசேனன்உம்முதல் ஆம் வேந்தரோடு எதிர்ந்து அமர் மலைந்து - விராடனும் துருபதனும் முதலான அரசர்களுடனே எதிர்த்துப் போர்செய்து, தராதிபர் பலரோடு அ இருவரைஉம் - பல அரசர்களுடனே அந்த இரண்டுபேரையும், சரங்களால் சிரங்களை தடிந்தான் - அம்புகளினுல் தலைகளைத் துணித்தான்; (எ-று.) (612)

216.—திட்டத்துய்மன் 'மறுநாள் துரோணனைக் கொல்வேன்' எனல்.

துருபதன்மடிந்தவெல்லையிற்றிட்டத் துய்மனும்வெகுண்டுளஞ்சுடப்போ
யிருபதமரசர்முடிகமழ்முனியை யேன்றுவஞ்சினமெடுத்துரைத்தான்
பொருபகைமுனையிலெந்தையையென்முன் பொன்றுவித்தனையுனைநாளை
நிருபர்தமெதிரேநின்மகன்காண நீடுயிரகற்றுவனென்றே.

(இ - ள்.) துருபதன் மடிந்த எல்லையில் - துருபதராசன் இறந்தவளவிலே,—திட்டத்துய்மன்உம் - (அவன்மகனுன)த்ருஷ்டத்யும்நனும்,—வெகுண்டு-கோபித்து, உளம் சுட-மனந்தபிக்க, போய்-சென்று,—இரு பதம் அரசர் முடிகமழ் முனியை ஏன்று-இரண்டுபாதங்களிலும் அரசர்களது முடியின் மணம் வீசப்பெற்ற துரோணுசாரியனை யெதிர்த்து,—'பொரு பகை முனையில்-போர்செய்கிற பகைவர்களுடைய முன்னிலையிலே, எந்தையை - எமது தந்தையான துருபதனை, என் முன் - எனது எதிரிலே, பொன்றுவித்தனை - அழித்தாய்; (ஆதலால்), உனை - உன்னை, நாளை - நாளைக்கு, நிருபர் தம் எதிரே-அரசர்கள் முன்னிலையிலே, நின் மகன் காண- உனது புத்திரனை அசுவத்தாமன் பார்க்க [அவனெதிரிலே], நீடு உயிர் அகற்றுவன் - நெடுநாள் வாழுந்தன்மையதான உயிரை ஒழிப்பேன்,' என்று—, வஞ்சினம் எடுத்து உரைத்தான் - சபதவார்த்தைகளை யெடுத்துச்சொன்னுன்; (எ - று.)

217.—அருச்சுனன் வைரங்கொண்டு துரோணனை வெல்லுதல்.

மாமனைமகுடந்துணித்தனனெவரும் வணங்குதாண்முனியெனவயிர்த்துக்
காமனையழகுங்கந்தனைவிறலுங் கவர்ந்தவெங்கார்முகவீரன்
சோமனைவகிர்செய்தனையவெம்முனைய தொடைகளாற்சுரும்புசூழ்கமலத்
தாமனைமுதுகுகண்டனன்முன்னந் தயித்தியர்முதுகிடத்தக்கோன்.

(இ - ள்.) எவர் உம் வணங்கு தாள் முனி-யாவரும் வணங்கும் பாதங்களையுடைய துரோணாசாரியன், மாமனை மகுடம் துணித்தனன் - (தங்கள்) மனைவிதந்தையான துருபதனைத் தலைதுணித்திட்டான், என - என்று, வயிர்த்து-வைரங்கொண்டு,—காமனை அழகுஉம் கந்தனை விறல்உம் கவர்ந்த வெம்கார்முகம் வீரன் - மன்மதனது அழகையும் சுப்பிரமணியனது பராக்கிரமத்தையும் தனதாகக்கொண்ட கொடிய காண்டீவவில்லையுடைய வீரனும், முன்னம் தயித்தியர் முதுகு இட தக்கோன் - முன்பு (நிவாதகவசர் காலகேயர் என்னும்) அசுரர்கள் முதுகிடும்படி செய்தவனுமான அருச்சுனன்,—சோமனை வகிர் செய்து அனைய வெம்முனைய தொடைகளால்-சந்திரனைப் பிளவுசெய்தாற்போன்ற கொடியகூர் நுனியையுடைய அம்புகளினால் [அர்த்தசந்திரபாணங்களால்], சுரும்புசூழ் கமலம் தாமனை முதுகு கண்டனன்-வண்டுகள் சூழ்ந்துமொய்க்கப்பெற்ற தாமரைமலர்மாலையையுடையவனான அந்தத்துரோணாசாரியனை முதுகிடும்படி வென்றான்; (எ - று.) (614)

218.—துரியோதனன் சாத்தகியினால் வெல்லப்படுதல்.

பூத்தகிக்குலமுமால்வரைக்குலமும்புகரிபக்குலங்களும்புகழக்
காத்தகிலமுந்தன்குடைநிழற்படுத்துங்காவலர்நீதியைக்கடந்தோன்
சேத்தகில்புழுகுசந்தனங்கமழுந்திருப்புயத்தணிதருந்திருத்தார்ச்
சாத்தகிமுனைச்சென்றம்முனைக்காற்றுதரியெதிர்கரியெனத்தளர்ந்தான்.

(இ - ள்.) அகி குலம்உம் - மகாநாகங்களின் வர்க்கமும், மால் வரை குலம்உம் - பெரிய குலபருவதங்களின் வர்க்கமும், புகர் இபம் குலங்கள்உம் - (உத்தமவிலக்கணமாகிய) செம்புள்ளிகளையுடைய திக்கஜங்களின் வர்க்கங்களும், பூத்து புகழ - பொலிவுபெற்றுக் கொண்டாடும்படி, அகிலம்உம் - உலக முழுவதையும், காத்து - பாதுகாத்து, தன்குடை நிழல் படுத்தும் - தனது வெண்கொற்றக்குடையின் நிழலிலே பொருந்தச்செய்கிற [தனதுதனியரசாட்சியின்கீழ்ப்படுத்துகிற], காவலர்-அரசரது, நீதியை-நீதிவரம்பை, கடந்தோன் - கடந்தொழுகியவனான துரியோதனன்,—சேத்து அகில்-செந்நிறமுடைய அகில்தேய்வையும், புழுகு சந்தனம்-கஸ்தூரிப்புழுகு கலந்த கலவைச் சந்தனக்குழம்பும், கமழும்-பரிமளிக்கப்பெற்ற, திரு புயத்து -அழகிய தோள்களில், அணிதரும்-தரித்த, திரு தார் - அழகிய மாலையையுடைய, சாத்தகி - சாத்தகியினது, முனை - எதிரிலே, சென்று-போய், அ முனைக்கு ஆற்றுது - அவனதுபோருக்கு ஈடுகொடுக்கமாட்டாமல், அரி எதிர் கரி என தளர்ந்தான் சிங்கத்தையெதிர்த்த யானைபோல மிகத்தளர்ச்சியடைந்தான்; - (எ - று.)

சூதுபோரிற் பாண்டவரை வென்றமை, திரௌபதியைத் துகிலுரியத் தொடங்கியமை, வநவாச அஜ்ஞாதவாசங்களைக் கடந்த பின்பும் பாண்டவர்க்கு அரசுஇல்லையென்றமை முதலிய பல அக்கிரமங்களையுடைமைபற்றி, 'காவலர்நீதியைக் கடந்தோன்' என்றார். சேத்து-செந்நிறம். அரியெதிர்கரி-இல்பொருளுவமை. பி - ம்: படுத்துக். எதிர்க்கரியென. (615)

219.—கௌரவர் தோற்றுச்செல்லுதல்.

அனைவருமொருவர்போலுடைந்தவனியாளுடையரசனோடமரிற்
றுனைவருதடந்தேர்துரகதங்களிறுமுதலியயாவையுந்தோற்று
நினைவருவிறலோர்தனித்தனிநெருக்கிநின்றுழிநின்றுழித்துரக்க
வனைவருங்கழற்கால்கொப்புளமரும்பவாசறைப்பாசறையடைந்தார்.

(இ - ள்.) நினைவு அரு விறலோர் அனைவர்உம்-மனத்தினால் நினைத்தற்கும் அருமையான பராக்கிரமத்தையுடைய பாண்டவர் பக்கத்தவரெல்லாரும், தனி தனி நெருக்கி-தனியே தனியே [ஒவ்வொருவரும்] எதிர்த்து வந்து தாக்கி, நின்றஉழி நின்றஉழி துரக்க-நின்றநின்ற இடங்கள்தோறுந் துரத்துதலால்,—அமரில்-போரிலே, அவனி ஆள் உடை அரசனோடு அனைவர்உம் ஒருவர் போல் உடைந்து-பூமியை யாளுதலுடைய் துரியோதனராசனுடன் கௌரவர்பக்கத்தவரெல்லாரும் ஒருத்தர்போலவே தோற்று, துனைவரு தட தேர்-விரைந்துவருகிற பெரியதேர்களும், துரகதம்-குதிரைகளும், களிறு - யானைகளும், முதலிய - முதலாகவுள்ள, யாவைஉம்-எல்லாச் சிறப்புக்களையும், தோற்று-இழந்து,—கழல் கால் கொப்புளம் அரும்ப-வீரக்கழலையணிந்த பாதங்களிலே கொப்புளமுண்டாக, ஆசறை-முடிவிலே, பாசறை அடைந்தார்-(தமது) படைவீட்டைச் சேர்ந்தார்கள்; (எ - று.)

ஆசறை-'ஐ' விகுதிபெ[ற்ற] தொழிற்பெயர்; ஆசறுதி-முடிவு. வனைவரும் கழல் கால் என்று எடுத்து - அணிந்த வீரக்கழலையுடைய கால் என்று உரைப்பினுமாம்; இவ்வுரைக்கு, வாசறை பாசறை என்று எடுத்து, வாசஞ்செய்யுமிடமான படைவீடு என்க; வாசறை-வாசவறை யென்பதன்விகாரம். பி - ம்: ஆசறுபாசறை.

220.—மறுநாட் சூரியனுதித்தல்.

முற்பொழுதொருபொற் றிகிரியான் மறைந்த தாழ்வற மூளெரி முகத்தி
லற்பொழு தடைந்த வாயிரஞ் சுடரு மநேகநா ளுயிரஞ் சுடராய்
நற்பொழு திதுவென் றியாவரும் வியப்ப நாகரா லயம்வலம் புரிந்து
பிற்பொழு தவற்றைக் கவர்ந்துசென் றுதயப் பிறங்கலிற் பிறங்கினன்பெரியோன்.

(இ - ள்.) பெரியோன்-தேவர்களில் முதல்வனான சூரியன்,—ஒரு பொன் திகிரியால் முன் பொழுது மறைந்த தாழ்வு அற-ஒப்பற்ற பொன்னிறமான [அல்லது அழகிய] திருவாழியால் முந்தின நாளில் (தான்) மறைபட்டதனாலாகிய குறைவு நீங்க, மூள் எரி முகத்தில் அல் பொழுது அடைந்த ஆயிரம் சுடர்உம் அநேகம்

நூறு ஆயிரம் சுடர் ஆய் - பற்றியெழுந்தன்மையுள்ள அக்கினியினிடத்திலே இராக்காலத்திற் சேர்ந்த (தனது) ஆயிரங்கிரணங்களும் பல நூருயிரக்கணக்கான விளக்கொளிகளாய்(மிக்கவிளங்கி நின்று),—நாகர் ஆலயம் வலம் புரிந்து - தேவர்கட்குத்தங்குமிடமான மகாமேருகிரியைப் பிரதட்சிணஞ் செய்துகொண்டு,—பின் பொழுது-பின்பு, அவற்றை கவர்ந்து சென்று - அவ்வொளிகளையெல்லாம் மீளவுங் கவர்ந்துகொண்டு வந்து,—நல்பொழுது இது என்று யாவர்உம் வியப்ப-இது நல்லகாலமென்று எல்லாரும் கொண்டாடும்படி, உதயம் பிறங்கலில்பிறங்கினன்-உதயபருவதத்திலே விளங்கினன்; (எ - று.) பி-ம்: அனேகமாயிரஞ்சுடராய.

சூரியன் அஸ்தமிக்கிற பொழுதில் தனதுகிரணங்களை அக்கினியினிடம் வைத்துவிட்டுச் சென்று பின்பு உதிக்கையில் அக்கிரணங்களை அக்கினியினின்றும் மீட்டுக்கொள்கின்றன னென்பது, நூற்கொள்கை. அங்ஙனம் அக்கினியினிடத்தில் வைக்கப்பட்ட சூரியகிரணங்கள் அன்றைநாளிரவில் மிகப் பல்விளக்கொளிகளாய் விளங்கினமையை, சூரியன் சக்கரத்தால் தான் மறைபட்ட குறைதீரத் தனது ஆயிரங்கிரணங்களையும் அவ்விரவிற் பல நூருயிரங் கிரணங்களாக வளரச்செய்து நின்றதாகக் கற்பித்துக் கூறினர்; **தற்குறிப்பேற்றவணி.** அந்நாளிரவிற் போர்நிகழ்கையில் தேர்தோறும் ஐவைந்தும், யானைதோறும் மும்மூன்றும், குதிரைதோறும் ஒவ்வொன்றுமாகச் சேனைகளிற் பெரிய தீபங்கள் ஏற்றியமைக்கப்பட்டன வென்று முதனூலிற்கூறியுள்ளதனல், 'அநேக நூருயிரஞ் சுடர்' எனப்பட்டது. (617)

பதினன்காம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

பதினைந்தாம்போர்ச்சருக்கம்.

1.—தெய்வ வணக்கம்.

சித்த சித்தொ டீச னென்று செப்பு கின்ற மூவகைத்
தத்து வத்தின் முடிவு கண்ட சதுர்ம றைப்பு ரோகிதன்
கொத்த விழ்த்த சோலை மன்னு குருகை யாதி நெஞ்சிலே
வைத்த முத்தி நாத னன்றி வான நாட்ர் முதல்வர்யார்.

(இ - ள்.) சித்து - சித்தும், அசித்தொடு-அசித்தும், ஈசன் - ஈசுவரனும், என்று செப்புகின்ற-என்றுசொல்லப்படுகிற,மூவகை தத்துவத்தின் - மூன்றுவகைப்பட்டதத்துவப் பொருள்களின், முடிவு-தேர்ந்தநிலையை, கண்ட-அறிந்த, சதுர் மறை புரோகிதன்-நான்குவேதங்களும்வல்ல ஆசிரியரும், கொத்து அவிழ்த்தசோலை மன்னு குருகை ஆதி - பூங்கொத்துக்கள் மலரப்பெற்ற சோலைகள் பொருந்திய திருக்குருகூரி லவதரித்த தலைவருமான நம்மாழ்வாரால், நெஞ்சிலே வைத்த - மனத்திலே வைத்துத்தியானிக்கப் பெற்ற, முத்தி நாதன் அன்றி-பரமபதத்துக்குத் தலைவனை

ஸ்ரீமந்நாராயணனே யல்லாமல், வானநாடர் முதல்வர் - தேவர்கட்குத் தலைவராகவுள்ளவர், யார் - யாவர் (உளர்)? [எவருமில்லையென்றபடி]; (எ - று.)

சித் அசித் ஈஸ்வரன் என்ற மூன்றுவகைத் தத்துவங்களைக் கொண்ட சித்தாந்தத்தை உள்ளபடி யுணர்ந்தவரும், நான்கு வேதங்களின்பொருளில் வல்லவரும், ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைதமார்க்கப் பிரவர்த்தனத்துக்குப் பிரதாந ஆசாரியராகவுள்ளவரும், திருக்குருகூரென்கிற திருநகரில் திருவவதரித்த பிரபந்நஜநகூடஸ்தருமான நம்மாழ்வாரால் மனத்திலே கொண்டு தியானிக்கப்படுகிற பரமபதநாதனான திருமாலே தேவர்க்கெல்லாந் தலைவனும் முந்தினவனுமாவ னென்பதாம். சித்-ஆத்மா. அசித்-ஜடம். ஈசன்-முழுமுதற்கடவுள். ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத சித்தாந்தத்துக்கு உரிய இந்த மூன்று தத்துவங்களின் தன்மையை, தத்வத்ரயம், ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலிய நூல்களிற் பரக்கக் காண்க. ருக் யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்ற நான்கு வேதங்களின் தேர்ந்தபொருளையும் முறையே திருவிருத்தம் திருவாசிரியம் திருவாய்மொழி பெரியதிருவந்தாதி யென்ற நான்கு திவ்வியப் பிரபந்தங்களாகத் திருவாய்மலர்ந்தருளியமை தோன்ற, 'சதுர்மறைப்புரோகிதன்' என்றார். புரோகிதன் - வைதிககாரியங்களை முன்னிருந்து நடத்துபவன்.

இதுமுதற் பதினொரு கவிகள் - கீழ்ச்சருக்கத்தின் 12 - ஆங் கவிபோன்ற எழுசீராசிரியவிருத்தங்கள். (618)

2.—இருதிறத்தவரும் போர்க்கு எழுதல்.

எடுத்ததீபவொளியுமேனையிருளுமேகவேழுமாத்
தொடுத்ததேரருக்கர்சோதிதொழுதுதங்கடொழில்கழித்
தெடுத்தகோபமூளநின்றிரண்டுசேனையரசரும்
கடுத்துளங்கறுத்துவெய்யகண்சிவந்துகடுகினர்.

(இ - ள்.) எடுத்த தீபம் ஒளிஉம் - ஏற்றியவிளக்குக்களின் பிரகாசமும், ஏனை இருள்உம் - (அதற்கு) மாறான இருளும், ஏக - நீங்கிச்செல்ல [சூரியனுதிக்க],—இரண்டு சேனை அரசர்உம்-இருதிறத்துச்சேனை அரசர்களும்,—ஏழு மா தொடுத்த தேர் அருக்கர் சோதி தொழுது-ஏழுகுதிரைகள் பூட்டிய தேரையுடைய சூரியபகவானது ஒளியை வணங்கி, தங்கள் தொழில் கழித்து-(மற்றும் உதயகாலத்தில்)தாங்கள் கடமையாகச்செய்தற்கு உரிய கருமங்களைச் செய்துமுடித்து, எடுத்த கோபம் மூள நின்று-மிக்ககோபம் பற்றி யெழ நின்று, உளம் கடுத்து கறுத்து - மனம் மாறுபட்டுச் சினந்து, வெய்ய கண் சிவந்து - (அதனால்) கொடியகண்கள் செந்நிறமடையப்பெற்று, கடுகினர்-(போர்க்கு) விரைந்துசென்றார்கள்;

உளங் கறுத்து, கண் சிவந்து - முரண்தொடை. ஏனை யிருள் - விளக்கொளி செல்லாத இடங்களில் தங்கிய இருள். எடுத்ததீபவொளியு மேனை யிருளுமேக - உடனிகழ்ச்சியணி. (619)

3.—கண்ணன் அருச்சுனன்முதலியோருடன் போர்க்களஞ்சேர்தல்.

நாலுசாபநிலையும்வல்லநரனும்வீமனகுலனு
நாலுபாகமானசேனைநாதனுஞ்சிரங்களா
நாலுகூறுசெய்துதானுநரனுமுந்தநடவினா
னாலுவேதமுடிவினுக்குமாதியானநாரணன்.

(இ - ள்.) நாலு வேதம்முடிவினுக்குஉம் ஆதி ஆன நாரணன்-நான்கு வேதங்களின் தேர்ந்தகொள்கைகட்கெல்லாம் விஷயமான முதற்கடவுளாகிய திருமாலின் திருவவதாரமான கண்ணபிரான்,—சாபம் நாலு நிலைஉம் வல்ல- வில்வளைத்துஅம்பு தொடுப்பார்க்கு உரிய நான்குவகை நிலைகளுந்தேர்ந்த, நரன்உம் - அருச்சுனனும், வீமன் - வீமனும், நகுலனும்—, நாலுபாகம் ஆன சேனைநாதன்உம்-தேர் யானை குதிரை காலாளென்று நான்கு பகுதியாகிய சேனைக்குத் தலைவனான திட்டத்துய்மனும், சிரங்கள் ஆ - தலைகளாக [தலைமையாக], நாலு கூறு செய்து - (தம்பக்கத்துச் சேனையை) நான்கு பங்காகப் பிரித்து, தான்உம் நரன்உம் முந்த நடவினான் - (அவற்றைத்) தானும் அருச்சுனனுமாக முற்படச்செலுத்தினான்; (எ - று.)—பி - ம்: வீமநகுலரும். (620)

4.—வாலவீமனும் சோமதத்தனும் அருச்சுனனால் அழிதல்.

வாலவீமனென்றுபார்மதித்தவாண்மைமன்னனுஞ்
சூலபாசபாணிதன்னொடொத்தசோமதத்தனு
மாலகாலமெனவுருத்தடர்த்தபோரின்முந்துறக்
காலனூரிலேகினார்கிரீடியேவுகணைகளால்.

(இ - ள்.) வாலவீமன் என்று - வாலவீமனென்று பெயர் சொல்லப்பட்டு, பார் மதித்த - நிலவுலகத்தாரால் கொண்டாடப்பட்ட, ஆண்மை - பராக்கிரமத்தையுடைய, மன்னன்உம்- அரசனும், — சூலபாசபாணிதன்னொடு ஒத்த - சூலாயுதத்தையும் பாசமென்னு மாயுதத்தையும் கையிலுடைய யமனோடு சமனான, சோமதத்தன்உம்-சோமதத்தனென்ற அரசனும், —ஆலகாலம் என உருத்து அடர்த்த போரில்-ஆலாகலவிஷம் போலக் கோபித்து நெருக்கிச்செய்த போரிலே, முந்துற-முற்பட, கிரீடி ஏவு கணைகளால்-அருச்சுனன் செலுத்திய அம்புகளினால், காலன் ஊரில் ஏகினார்-யமலோகத்திற் சேர்ந்தார்கள்; (எ - று.)— வாண்மை எனப் பிரிப்பின்-ஆயுதத் திறமை யென்க. பாசம் - கயிற்று வடிவமான ஆயுதம். சோமதத்தன் - பூரிசிரவாவின் தந்தை. (621)

5.—அருச்சுனனது போர்த்திறம்.

என்முனென்முனென்றுமன்னர்யாரும்யாருமிகலவே
முன்முனின்றியாவரோடுமூரிவில்வணக்கினான்
வின்முனென்னவில்லுமில்லைவெஞ்சமத்துமற்றிவன்
றன்முனென்னவீரரில்லையெனவருந்தனஞ்சயன்.

(இ-ள்.) என்முன் என்முன் என்று-எனக்குமுன்னே (போர் செய்யவேண்டும்) எனக்குமுன்னே(போர்செய்யவேண்டும்) என்று, மன்னர் யார்உம் யார்உம் இகலஏ - பகையரசர்கள்யாவரும் மாறு பட்டுநின்ற வளவிலே, முன் முன் நின்று-ஒவ்வொருவரெதிரிலும் நின்று, யாவரோடுஉம்-அவர்களெல்லாரோடும், மூரி வில் வணக்கினான்-வலிய வில்லை வளைத்துப் பொருதான்: (யாவனெனில்),— 'வில்முன் எண்ண வில்உம் இல்லை-(இவனது காண்டிவ) வில்லின் முன் (ஒருபொருளாக) மதிக்கப்படுதற்கு வேறொரு வில்லும் இல்லை: வெம் சமத்து-கொடிய போரில், இவன்தன் முன் எண்ண - இவனெதிரில் நன்குமதிக்கப்படுதற்கு, மற்றுவீரர்இல்லை - வேறொரு வீரரும் இல்லை', என - என்றுசொல்லும்படி, வரும் - (சிறப்புடையவனாய்) வருகிற, தனஞ்சயன்-அருச்சுனன்; (எ - று.) —பி - ம்: நவிலவே.

இனி, 'வில்முன் எண்ண வில்லும் இல்லை' என்பதற்கு - இவனது வில்லுக்கு மேலாக முதலில்வைத்து விரல்மடக்கி யெண்ணுதற்கு வேறொரு வில்லுமில்லை யென்று உரைப்பினும் அமையும்; 'இவன்றன்முனெண்ண வீரரில்லை,' என்பதற்கும் இங்ஙனமே கொள்க. முன்முன் இன்றி யாவரோடும் எனப் பிரித்து, (அவர்களை ஒருபொருளாக மதித்திலனாதலால் அவர்கள்விருப்பின்படி) ஒவ்வொருவர்முன்புந் தனித்தனி போர்புரியாமல் ஏக காலத்தில் அனைவரோடும் வில்லைவளைத்துப் போர்செய்தான் என்றுமாம். (622)

6.—துரோணனது போர்த்திறம்.

ஈரிரண்டுமுகமும்வந்தெதிர்ந்தவீரர்சேனைக
ளீரிரண்டும்வேறுவேறுபட்டுவென்னிடப்புடைத்
தீரிரண்டோர்தொடையில்வாளியேவியேவியிகல்செய்தா
னீரிரண்டுமைஃிரண்டுமானவிஞ்சையெய்தினன்.

(இ - ள்.) ஈர் இரண்டுஉம் ஐ இரண்டுஉம் ஆன விஞ்சை எய்தினன் - பதினான்குவகையான வித்தைகளை யடைந்துள்ளவனாகிய துரோணன்,—ஈரிரண்டு முகம்உம் வந்து எதிர்ந்த-நான்கு பக்கங்களிலும் வந்து எதிரிட்ட, வீரர் சேனைகள் ஈரிரண்டுஉம் - பாண்டவரது சேனைகள் நான்கும், வேறு வேறுபட்டு வென் இட- சின்னபின்னமாகிப் புறங்கொடுக்கும்படி, புடைத்து-மோதி, ஓர் தொடையில் ஈரிரண்டு வாளி ஏவி ஏவி-தொடுக்குந்தரமொவ்வொன்றிலும் நந்நான்குபாணங்களைச் செலுத்தி, இகல் செய்தான்-போர் செய்தான்; (எ - று.)

இச்செய்யுளின் இறுதியடியிற் குறிக்கப்பட்டவன் துரோணனென்பது மேற்கூறியது கொண்டு உணரப்படும். **பதினான்குவித்தைகள்-வேதம் நான்கு**, சிக்ஷை வியாகரணம் சந்தஸ் நிருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் என்ற **வேதாந்தங்கள்ஆறு**, மீமாம்சை தர்க்கம் புராணம் தர்மசாஸ்திரம்என்ற **உபாங்கம்** நான்கு என இவை. ஈண்டு, வாரணு

வதச்சருக்கம் "ஈரேழ்விஞ்சைத்திறனுமீன்றோன்றன்பாலெய்தி, நீரேழென்னயாவு நிறைந்தகேள்வி நெஞ்சன்" [33] என்றது நினைக்கத்தக்கது. நாற்புறத்துஞ் சூழ்ந்த நால்வகைச் சேனைக்கும் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு அம்பாக நான்கு அம்புகள் ஒவ்வொருமுறையிலுஞ் செலுத்தப்பட்டன வென்க. (623)

7.—குந்திபோசன் துரோணனுடன் எதிர்த்தல்.

புந்திகூர்துரோணனுக்கியாவரும்புறந்தரக்
குந்திபோசனெண்ணிலாயிரங்குறித்ததேர்களோ
டுந்திமீளமுடுகியந்தமுனிவனோடுடன்றபோ
தந்திவானமொத்ததம்மவமர்புரிந்தவாகவம்.

(இ - ள்.) புந்தி கூர் துரோணனுக்கு-ஞானம் மிக்க துரோணு சாரியனுக்கு, யாவர்உம் புறம் தர-எல்லாரும் (இப்படி) முதுகு கொடுக்க,—குந்தி போசன்—, எண் இல் ஆயிரம் குறித்த தேர்களோடு-கணக்கில்லாத [மிகப் பல] ஆயிரங்களாகக் குறிக்கப் பட்ட தேர்களுடனே, மீள உந்தி-மறுபடி சென்று, முடுகி-விரைந்து, அந்த முனிவனோடு-அந்தத் துரோணாசாரியனுடனே, உடன்ற போது-பகைத்து எதிர்த்த பொழுது,—அமர் புரிந்த ஆகவம் - போர்செய்த அந்தயுத்தகளம், அந்தி வானம் ஒத்தது-(இரத்தப் பெருக்கினால்) மாலைச்செவ்வானம் போன்றது; (எ-று.)—ஒருதரம் புறங்கொடுத்தமைபற்றி, 'மீளவுந்தி' என்றார். பி - ம்: அவர்புரிந்த வாகவம். அம்ம என்பது - ஆகவம் செவ்வான்போன்றமையைப் பற்றிய வியப்புக்குறிக்கும். (624)

8.—சல்லியன் நகுலனோடும், மாளவன் சாத்தகியோடும் பொருதல்.

குருவொடுற்றடர்ந்துகுந்திபோசன்விற்குனிக்கவே
வருசமத்துமத்திரன்றன்மருகனோடுமுடுகினான்
முரண்மிகுத்தகோபவங்கிமூளவந்தமாளவன்
கருநிறத்தனந்தசாயியிளவலோடுகடுகினான்.

(இ - ள்.) குருவொடு உற்று அடர்ந்து - (கௌரவபாண்டவர்க்கு) வில்லாசிரியனான துரோணனுடனே யெதிர்த்துப் பொருது நெருங்கி, குந்திபோசன்—, வில் குனிக்க - வில்வளைத்துப் போர் செய்ய,—வரு சமத்து-எதிர்த்துவருகிற போரில், மத்திரன் - மத்திரநாட்டரசனான சல்லியன், தன் மருகனோடு - தன் உடன் பிறந்தவள்மகனான நகுலனுடனே, முடுகினான்-விரைந்து போர் செய்தான்; முரண் மிகுத்த கோபம் அங்கி மூளவந்த - பகைமையை மிகுவிக்கிற கோபாக்கினி பற்றியெழ (எதிர்த்து) வந்த, மாளவன் - மாளவநாட்டரசனான இந்திரவர்மா, கரு நிறத்து அனந்த சாயி இளவலோடு - கரிய திருநிறமுடையனாய் ஆதிசேஷனிற் பள்ளி கொள்பவனான திருமாலின் [கண்ணபிரானது] தம்பியாகிய சாத்தகியுடன், கடுகினான்-விரைந்து போர்செய்தான்; (எ- று.)—மாளவன் பெயர், மேல் 19 - ஆங் கவியால் விளங்கும்.

9.—மற்றும்பலர் மற்றும்பலரோடு எதிர்த்தல்.

முனிவன்மைந்தனிந்திரன்றன்மைந்தனோடுமுடுகினன்
றினகரன்றன்மதலைகாலின்மைந்தனோடுசீறினன்
றனுவின்விஞ்சுதென்னனோடுசகுனிபோர்தொடங்கினு
னினியகண்டமுஞ்சிதைக்குமிறுதிகாலமென்னவே.

(இ-ள்.) 'இனி - இப்பொழுது, அகண்டம்உம் சிதைக்கும் இறுதி காலம் - உலகமுழுவதையும் அழிக்கின்ற கற்பாந்தகாலம்,' என்ன - என்று (யாவரும்) எண்ணும்படி,—முனிவன் மைந்தன் - துரோணபுத்திரனான அசுவத்தாமன், இந்திரன் தன் மைந்தனோடு - அருச்சுனனுடன், முடுகினன் - விரைந்து பொருதான்; தினகரன் தன் மதலை - கர்ணன், காலின் மைந்தனோடு - வாயுபுத்திரனான வீமனுடன், சீறினன் - கோபித்துப் பொருதான்; தனுவின் விஞ்சு தென்னனோடு - வில்தொழிலிலேமிக்க (சித்திரவாகனன்) பாண்டியனுடன், சகுனி போர்தொடங்கினன்—; (எ-று.)—'இறுதிக்காலம்' என வலிமிகாதது, செய்யுளோசைநயத்தின் பொருட்டு. பி - ம்: செறுக்கும். (626)

10.—கௌரவசேனை வெல்லுதல்.

எந்தவெந்தமன்னர்தம்மிலிருவராகியமர்செய்தா
ரந்தவந்தவீரர்செய்தவாண்மைசொல்லுமளவதோ
முந்தமுந்தவென்றுவென்றுமோகரித்ததெவ்வர்தாம்
வந்தவந்தவழிமடங்கநின்றதவ்வருதினி.

(இ - ள்.) எந்த எந்த மன்னர் - எந்தெந்த அரசர்கள், தம்மில் இருவர் ஆகி அமர் செய்தார்-(கீழ்க் கூறியபடி) தமக்குள் இரண்டிரண்டுபேராய்ப் போர்செய்தார்களோ, அந்த அந்த வீரர் - அந்தந்த வீரர்கள், செய்த—, ஆண்மை-பராக்கிரமச்செயல், சொல்லும் அளவதுஓ-சொல்லுந் தரமுள்ளதோ? [அன்றென்றபடி]; முந்த முந்த வென்று வென்று மோகரித்த தெவ்வர்-முன்னே முன்னே [பலநாட்களில்]மிகுதியாகச் சயித்து ஆரவாரித்த பகைவர்களாகிய பாண்டவசேனையார், தாம் வந்த வந்த வழி மடங்க-தாம் தாம் வந்த வந்த வழியே மீண்டு புறமிட, அ வருதினி-அந்தக்கௌரவசேனை, நின்றது - (வெற்றிகொண்டு) நின்றது; (எ-று.) (627)

11.—பாண்டவசேனை தோற்றல்.

தேயு வாளி வருணன் வாளி தேவர் வாளி திண்மைகூர்
வாயு வாளி முதல னைத்து வாளி யாலு மலைதலா
லாயு நூன்மு னிக்கு டைந்த தன்பு மிக்க தந்தையுந்
தாயு மாகி மண்பு ரந்த தருமன் விட்ட தானையே.

(இ - ள்.) தேயு வாளி-ஆக்நேயாஸ்திரமும், வருணன் வாளி -வாருணாஸ்திரமும், திண்மை கூர் வாயு வாளி-வலிமைமிக்க வாயவ்யாஸ்திரமும், தேவர் வாளி-(மற்றும்பல) தேவர்களின் அஸ்திரமும், முதல்-முதலான, அனைத்து வாளியால்உம்-எல்லா அஸ்

திரங்களினாலும், மலைதலால்-(துரோணன்) போர்செய்ததனால்,— அன்பு மிக்க தந்தைஉம் தாய்உம் ஆகி-மிக்க அன்புள்ள தந்தையும் தாயும் போன்று, மண் புரந்த-இராச்சியத்தை யாண்ட, தருமன்-யுதிஷ்டிரன், விட்ட-செலுத்தின, தானை-சேனை,—ஆயும் நூல் முனிக்கு-தேர்ந்தெடுத்த [சிறந்த] சாஸ்திரங்களில் வல்ல (அந்தத்) துரோணாசாரியனுக்கு, உடைந்தது-தோற்று நிலைகுலைந்தது; (எ - று.) (628)

வேறு.

12.—அச்சமயத்தில் முனிவர்பலர் துரோணனிடம் வருதல்.

குருவுமக் குருகு லேசன் கொற்றவெஞ் சேனை தானும்
பொருகளங் கொண்டு வாகை புனைந்தவ னின்ற போதில்
ஒருவரை யொருவ ரொவ்வா வும்பர்மா முனிவர் யாருந்
துருவனு முவமை சாலாத் துரோணனை வந்து சூழ்ந்தார்.

(இ-ள்.) குருஉம் - துரோணாசாரியனும், அ குருகுல ஈசன் கொற்றம் வெம் சேனை தான்உம் - குருகுலத்துக்குத்தலைவனான துரியோதனனது வெற்றியையுடைய கொடிய அச்சேனையும், பொரு களம் கொண்டு-போர் செய்யுங்களத்தைவெற்றிகொண்டு, வாகை புனைந்து அவண் நின்ற போதில் - (அவ்வெற்றிக்கு அறிகுறியாக) வாகைப்பூமாலையைத்தரித்து அப்போர்க்களத்து நின்ற பொழுதில்,—ஒருவரை ஒருவர் ஒவ்வா - ஒருத்தர்க்கு மற்றொருத்தரை உவமை சொல்லக்கூடாத [ஒப்பிலாத], மா உம்பர் முனிவர் யார்உம்-சிறந்த தேவவிருடிகள் பலரும், துருவன்உம் உவமை சாலா துரோணனை-துருவனும் உவமையாகப் பொருந்தாத [மிக்க சிறப்பையுடைய] அந்தத் துரோணாசாரியனை, வந்து சூழ்ந்தார்- (இம்மண்ணுலகில்) வந்து சூழ்ந்தார்கள்; (எ-று.)

இவர்கள் சூக்ஷ்மரூபங்கொண்டு வந்தன ரென்று முதனூலால் அறிக. **துருவன்**-சுவாயம்புவமனுவின் மகனான உத்தாநபாதனுக்குச் சுநீதியென்னும் மூத்தமனைவியினிடம் பிறந்த குமாரன்; இவன், தன் மாற்றாந்தாயான சுருசியாலும் அவளுக்கு வசப்பட்ட தன் தந்தையாலும் இளமையிலே உபேக்ஷிக்கப்பட்டு நகரத்தை விட்டு நீங்கி வனம்புகுந்து சப்தருஷிகளிடம் மந்திரோபதேசம் பெற்று ஸ்ரீமகாவிஷ்ணுவை இடைவிடாது தியானித்து, அப்பெருமானருளால், மூன்றுலோகங்களுக்கும் மேற்பட்டதும் சகல கிரகநக்ஷத்திரங்களுக்கும் ஆதாரமானதும் அவர்களுடைய ஸ்தானங்கட்கெல்லாம் அதியுந்நதமுமான திவ்வியபதவியை யடைந்து வாழ்கின்றன னென்பது, **வரலாறு.** அப்படிப்பட்ட துருவனும் உபமானமாகக் கூறுதற்கேற்காத மேம்பாடுள்ளவன் என்று துரோணனைச் சிறப்பித்துக்கூறினார். நிலவுலகமுழுவதும் ஆளும் அரசர்களான கௌரவபாண்டவராதியோர்க்குக் குருவாய்ச் சிறந்த துரோணனது நிலைமை - உலகத்தவரனைவரது நிலைமையினும் மேம்படுதலும், துருவன் கிரகநக்ஷத்ரங்களைச் செலுத்துந் திறத்

தினும் மேலாகத் துரோணன்சேனைகளைச்செலுத்துகிறவனுதலுங் காண்க. பி - ம்: புனைந்துதாம். உவமைசாலத்.

இதுமுதற் பதினெட்டுக் கவிகள்-கீழ்ச்சருக்கத்தின் 155-ஆங் கவிபோன்ற அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள். (629)

13.—அம்முனிவர்கள் துரோணனை நோக்கிப் பேசத்தொடங்கல்.

மகத்தியன்மரீசியாதியெழுவருமலயச்சார
லகத்தியன்முதலாவுள்ளவனைவரும்வருதல்கண்டு
செகத்தினினிறைந்தகேள்விச்சிலைமுனியெதிர்சென்றேத்தி
முகத்தினலிறைஞ்சிநிற்பமொழிந்தனர்மொழிகள்வல்லார்.

(இ - ள்.) மகத் இயல் - பெருமையாகிய தன்மையையுடைய, மரீசி ஆதி - மரீசி முதலிய, எழுவர்உம் - ஏழுபேரும் [ஸப்தருஷிகளும்], மலயம் சாரல் அகத்தியன் முதல் ஆ உள்ள - பொதியமலையின்சாரலிலே வாழ்கின்ற அகத்தியன் முதலாகவுள்ள, அனைவர்உம் - எல்லாவிருடிகளும், வருதல் - (தன்னிடம்) வருதலை, கண்டு - பார்த்து,—செகத்தினில் நிறைந்த கேள்வி சிலை முனி - உலகத்தில் நிரம்பிய நூற்கேள்விகளையுடைய வில்வித்தைவல்ல அந்தணனான துரோணாசாரியன், எதிர் சென்று ஏத்தி - (அவர்களை) எதிர்கொண்டு சென்று துதித்து, முகத்தினல் இறைஞ்சி நிற்ப - தலைவணங்கி நமஸ்கரித்து நிற்க,—மொழிகள் வல்லார் - பேச்சுக்களில் வல்லவர்களான அம்முனிவர்கள், மொழிந்தனர் - (துரோணனைநோக்கிச் சில) சொன்னார்கள்; (எ-று.)—அவற்றை, அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

மஹத் - மகிமை, வடசொல்: மரீசியாதி யெழுவர் - மரீசி, வசிஷ்டர், அத்திரி, விசுவாமித்திரர், கௌதமர், ஜமதக்நி, பரத்துவாசர் என்பவர்; இதனை முதனூலால் அறிக. இது, ஒருவகைச் சப்தருஷிக்கிரமம். அகஸ்தியமுனிவர் வடதிசைநீங்கித் தென்திசை வந்து பொதியமலையில் வாழ்ந்தன ரென்பது பிரசித்தம். மகத்து இயல்எனப்பிரித்து - யாகவுரிமையை யுடைய என்றுமாம்.

14.— இதுவும், அடுத்தகவியும்-ஒருதொடர்: முனிவர்கள் துரோணனுக்குச் செய்யும் உபதேசம்.

மறைகெழுநூலுந்தேசுமாசிலாத்தவமுஞான
முறைவருமுணர்வுமல்லான்முனிவரர்க்குறுதியுண்டோ
துறைகெழுகலைகள்வல்லாய்துன்னலர்ச்செருக்கும்போரு
நிறைதருவலியும்வாழ்வுநிருபர்தம்மியற்கையன்றே.

(இ - ள்.) துறை கெழு கலைகள் வல்லாய் - (பற்பல) பொருட்டுறைகள் விளங்கப்பெற்ற சாஸ்திரங்களில் வல்லவனே! மறை கெழு நூல்உம் - வேதங்களும் (அவற்றின்பொருள்) விளங்கப்பெற்ற சாஸ்திரங்களும், தேசுஉம்-பிரமதேஜசும், மாசு இலா தவம் உம் - குற்றமில்லாத தபசும், ஞானம் முறைவரும் உணர்வுஉம் - ஞானநூல்களின்படியே உண்டாகின்ற மெய்யறிவும், அல்லால் -

என்னும் இவையே யல்லாமல், முனி வரர்க்கு - சிறந்தஇருடி கட்கு, உறுதி உண்டுஓ - நன்மைதருவது வேறுஉண்டோ? துன்னலர் செகுக்கும் போர்உம் -பகைவர்களையழிக்கின்ற போரும், நிறைதரு வலிஉம்-நிறைந்தபலமும், வாழ்வுஉம் - செல்வவாழ்க்கையும், நிருபர் தம் இயற்கை அன்றுஓ - அரசர்கட்கு உரிய இயல்பன்றோ? (எ - று.)

அந்தணனாகிய நீ அரசர்க்குரியபோரையும் வலிமையையுஞ் செல்வவாழ்க்கையையுங் கைவிட்டு,முனிவரர்க்குஉரியவேதசாஸ்திரங்கள்முதலியவற்றைக் கைக்கொள்வாயாக என்றபடி. (631)

15\. தொடுகணைவில்லும்வாளுந்துரகமுங்களிறுந்தேரும்
விடுகவெஞ்சினமும்வேண்டாவிண்ணுலகெய்தல்வேண்டுங்
கடுகநின்னிதயந்தன்னிற்கலக்கமற்றுணர்விெனென்று
படுகவென்றுரிமைதோன்றப்பகர்ந்தனர்பவமிலாதார்.

(இ - ள்.) தொடு கணை வில்உம் - தொடுக்கின்ற அம்புகளையுடைய வில்லையும், வாள்உம் - வாளையும், துரகம்உம் - குதிரையையும், களிறுஉம் - யானையையும், தேர்உம் - தேரையும், வெம் சினம்உம் - கொடிய கோபத்தையும், விடுக - விட்டிடுவாயாக: வேண்டா - (இவை) வேண்டுவதில்லை: விண் உலகு எய்தல் வேண்டும் - மேலுலகத்தை யடைதல்வேண்டும்: (ஆதலால்), கடுக - விரைவாக, நின் இதயந்தன்னில் கலக்கம்அற்று - உனது மனத்திலுள்ள சஞ்சலம் ஒழிந்து, உணர்வின் ஒன்று படுக - ஒப்பற்ற பரதத்வஞானத்தில் ஒன்றுபட்டுநிற்பாயாக, என்று—, உரிமை தோன்ற - (தமக்கு அவனிடமுள்ள) உரிய அன்பு வெளியாகுமாறு,பகர்ந்தனர் - சொன்னார்கள்; பவம் இலாதார் - பிறப்பில்லாதவரான அம்முனிவர்கள்; (எ-று.)

உரிமைதோன்ற - ஸ்வாதந்திரியமாக வென்க; அவனுக்கு உரியகடமை அவனுக்குப் புலனாகுமாறு என்றலு மொன்று. (632)

16.—அப்போது துரோணன் கடும்போரொழிந்து பொறுமை மேற்கொளல்.

ஆனபோதாசானெஞ்சிலருமறையந்தத்துள்ள
ஞானமும்பிறந்துபோரிலாசையுநடத்தலின்றித்
தூநலந்திகழுஞ்சோதிச்சோமியமடைந்துநின்றான்
யானமும்விமானமல்லாலிரதமேல்விருப்பிலாதான்.

(இ - ள்.) ஆன போது - இங்ஙனம் முனிவர்கள் உபதேசித்த பொழுது, ஆசான் -துரோணாசாரியன்,—அரு மறை அந்தத்து உள்ள ஞானம்உம் நெஞ்சில் பிறந்து - (அறிதற்கு)அரிய வேதாந்தத்தி லமைந்துள்ள தத்துவஞானமும் மனத்தில் தோன்றப் பெற்று, போரில் ஆசைஉம் நடத்தல் இன்றி - போர்செய்தலில் விருப்பமும் செல்லுதலில்லாமல், யானம்உம் விமானம் அல்லால் இரதம்மேல் விருப்பு இலாதான்-வாகனங்களுள்ளும் (வானத்திற் சஞ்சரிப்பதான) விமானத்தின்மேலே (விருப்பஞ்) செல்வது அல்

லாமல் தேரின்மேல் விருப்பமில்லாதவனாய், தூ நலம் திகழும் சோதி சோமியம் - பரிசுத்தமான நற்குணங்கள் விளங்கப்பெற்ற பரஞ்சோதியாகிய கடவுளை யடைதற்குரியசாந் தகுணவமைதியை, அடைந்து நின்றான்—; (எ - று.)

அரசர்க்குரிய தேரின்மேல் ஏறிநிற்றலை ஒரு சிறப்பாகக்கொள்ளாமல், புண்ணியப்பயனால் விமானம் வந்துதோன்ற அதன்மேலேறி வானுலகஞ் சேர்தலிலேயே கருத்தைச் செலுத்தினனென்க. சோதி-சோதிவடிவமாகிய கடவுள். சோமியம்=ஸௌம்யம்: சாந்தகுணம். (633)

17.—துரோணனைக்கொல்ல இதுவே சமய மென்று கண்ணன் கருதுதல்.

கோடையால்வற்றிமீண்டுங்கொண்டலானிறைந்ததெண்ணீ
ரோடையாமென்னநின்றோன்முன்னரேயுரைத்தவார்த்தை
மாடையாலிந்த்ரநீலமணிவரைவளைத்தாலன்ன
வாடையானறிந்துசொற்றவவதியீதென்றுகொண்டான்.

(இ - ள்.) கோடையால் - கோடைக்காலத்து முதிர்ந்த வெயிலினால், வற்றி - நீர் வறண்டு, மீண்டுஉம் - மறுபடியும், கொண்டலால் நிறைந்த - மேகம் மழை பெய்ததனால் நிரம்பிய, தெள் நீர் - தெளிவான நீரையுடைய, ஓடை ஆம் என்ன - நீரோடைபோல, நின்றோன் -(அகம்நிரம்பித் தணிந்து) நின்றவனான துரோணன், முன்னர்ஏ - முன்னமே [முதல்நாட்போர்த் தொடக்கத்திலேயே], உரைத்த - சொன்ன, வார்த்தை - பேச்சை, இந்த்ரநீலமணி வரை மாடையால் வளைத்தால் அன்ன ஆடையான் - இந்திர நீலரத்தினமயமான தொரு மலை பொன்னினாற் சூழப்பட்டாற்போன்ற பொற்பட்டாடையையுடையவனான கண்ணபிரான், — அறிந்து - ஞாபகத்திற் கொண்டு, சொற்ற அவதி ஈது என்று கொண்டான் - (அவன்) சொன்ன சமயம் இதுவே யென்று திருவுள்ளம்பற்றினான்;(எ-று.)

மனம் ஒழுக்கநிலையில் நிற்றற்குஉரிய தத்துவஞானத்தை இதுவரையிலுங்கொள்ளாதிருந்த நிலைக்கு ஓடை கோடையால் வற்றிய தன்மையையும், இப்பொழுது முனிவர்களின் இதோபதேசத்தால் அந்தமெய்யுணர்வு நிரம்பப்பெற்ற நிலைக்கு அவ்வோடை கொண்டலால் தெண்ணீர்நிறைந்த தன்மையையும் உவமைகூறினார். கோடைக்காலம் - முதுவேனிற்பருவம்; க்ரீஷ்மருது: ஆனிஆடிமாதங்கள். முன்னரே யுரைத்த வார்த்தை— முதற்போர்ச்சருக்கச்செய்யுட்கள் 14, 15 காண்க. பி - ம்: கோறற்கவதி. (634)

18.—கண்ணன் திட்டத்துய்மனைத் துரோணன்மேலேவித் தருமனோடு பேசல்.

கடல்வடிம்பலம்நின்றகைதவன்றன்னோடேோதிச்
சுடுகனலளித்ததிட்டத்துய்மனையவன்மேலேவி
வடுவுரைமறந்துஞ்சொல்லாமன்னறன்மைந்தனோடும்
அடியவரிடுக்கண்டீர்ப்பானுமுறையருளிச்செய்வான்.

(இ - ள்.) அடியவர் இடுக்கண் தீர்ப்பான்-(தனது) அடியார்களுடைய துன்பங்களைப்போக்கியருள்பவனான கண்ணபிரான்,—

கடல் வடிம்பு அலம்ப நின்ற-கடலானது (தன்) கால்விளிம்பை அலம்பும்படி(ஓங்கி)நின்ற, கைதவன் தன்னோடு-பாண்டியனுடனே, ஓதி-சொல்லி, சுடு கனல் அளித்த திட்டத்துய்மனை - சுடுகின்ற நெருப்பினாற் பெறப்பட்ட த்ருஷ்டத்யும்நனை, அவன்மேல் ஏவி - துரோணன்மேற் (போர்க்குச்) செலுத்தி,—வடு உரைமறந்தும் சொல்லா மன் அறன் மைந்தனோடும்-குற்றமாகிய வார்த்தைகளை மறந்துங்கூறாத பெருமையையுடைய தருமபுத்திரனுடனே, ஆம் முறை-தக்கபடி, அருளிச்செய்வான் - (சிலவார்த்தைகளைக்) கூறியருள்வான்; (எ - று.)—அவற்றை, அடுத்த இரண்டுகவிகளிற் காண்க.

திட்டத்துய்மன் அப்பொழுது அருகிலில்லாமல் தூரத்திலிருந்ததனால், கண்ணன் பாண்டியனுடன்சொல்லி, அவன் மூலமாக, துரோணனைப் பொருது கொல்லுதற்கேற்ற சமய மிதுவேயென்ற செய்தியைத் திட்டத்துய்மனுக்குத் தெரிவிக்கவைத்து, தருமபுத்திரனுடனே சிலகூறலாயின னென்பதாம். அடியவரிடுக் கண்டீர்ப்பான்-கருத்துடையடைகொளியணி.

முன்னொருகாலத்தில் மதுரையையழித்தற்குவந்த கடலை உக்கிரகுமாரபாண்டியன் ஸ்ரீசோமசுந்தரக்கடவுள்அருளிய வேலையெறிந்து வற்றச்செய்து அக்கடல் தன்னுடையகாலின் விளிம்பை அலம்பும்படி உயர்ந்துநின்றமையால், அவனுக்குக்கடல்வடிம்பலம்பநின்ற பாண்டியனென்றுபெயராயிற்று. இந்தச் சரித்திரம், திருவிளையாடற்புராணங்களிற் கூறப்பட்டுள்ளது. "அடியிற் றன்னளவரசர்க்குணர்த்தி, வடிவேலெறிந்தவான்பகைபொருது, பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக், குமரிக்கோடுங்கொடுங்கடல் கொள்ள," "ஆழிவடிம்பலம்பநின்றானும்" என்பனவும் காண்க. (அவன் பெயர் மதுரைக்காஞ்சியிலும், புறநானூற்றிலும் 'நெடியோன்' என்றசொல்லாற்குறிக்கப்பட்டுள்ளது.) அப்பாண்டியனது தன்மையை இங்கே அருச்சுனனுக்குப்பெண்கொடுத்த சித்திரவாகனன்மேலேற்றி, 'கடல்வடிம்பலம்பநின்றகைதவன்' என்றார். இங்ஙனம் ஒருகுலத்தரசருள் ஒருவர்க்குஉரிய தன்மையை மற்றொருவர்மேலேற்றி உபசாரவழக்காகக் கூறுவது ஒருவகைக்கவி மரபு.

'சுடுகனலளித்த திட்டத்துய்மன்' என்றதன் விவரம் :—அங்கிவேசமுனிவனிடத்தில் துரோணாசாரியனுடன் வில்வித்தையைக்கற்றுவந்தபொழுது 'எனக்கு இராச்சியங்கிடைத்தபின்னர்ப் பாதி உனக்குப் பங்கிட்டுக்கொடுப்பேன்' என்று அவனுக்கு வாக்குதத்தஞ்செய்திருந்த பாஞ்சாலராசனான துருபதன், பின்பு ஒருகாலத்தில் அத்துரோணன் தன்குழந்தைக்குப் பாலுக்காகப் பசுவேண்டுமென்று சென்று கேட்டபொழுது, முகமறியாதவன்போல 'நீயார்?' என்று வினவிச் சிலபரிகாசவார்த்தைகளைச் சொல்லிச் சபையிற் பங்கப்படுத்த, அப்பொழுது அவன் 'என்மாணாக்கனைக்கொண்டு உன்னை வென்று கட்டிக்கொணரச்செய்து உன் அரசையுங் கைக்கொள்வேன்' என்று சபதஞ்செய்துவந்து, பின்பு அங்ஙனமே அருச்சுன

னைக்கொண்டு பங்கப்படுத்தி அந்தப்பிரதிஜ்ஞையை நிறைவேற்றி விட, அவ்யாகசேனன் துரோணன்மீது மிகக் கறுக் கொண்டு அவனைக் கொல்லும்பொருட்டு ஒருபுத்திரனும் அருச்சுனனது பல பராக்கிரமங்களைக்கண்டு மகிழ்ந்து அவனுக்குமணஞ்செய்து கொடுக்கும்பொருட்டு ஒருபுத்திரியும் உதித்தல்வேண்டு மென்று புத்திரகாமயாகஞ் செய்விக்க, அவ்வோமத் தீயினின்று திட்டத் துய்மனும் திரௌபதியும் தோன்றின ரென்பதாம். (635)

19.—இதுவும், அடுத்த கவியும்-ஒருதொடர்: துரோணனைக் கொல்லும் வகையைக் கண்ணன் தருமனுக்குக் கூறல்.

மந்தரமனையபொற்றோண்மாருதிமாளவக்கோ
னிந்திரவன்மாமேற்சென்றெரிகணைதொடுத்தபோரி
லந்தரமடைந்ததையவச்சுவத்தாமாவென்னுஞ்
சிந்துரமதனைவேறோர்திசைக்களிறொப்பதன்றே.

(இ - ள்.) ஐய - ஐயனே! மந்தரம் அனைய - மந்தரமலையை யொத்த, பொன் தோள் - அழகிய தோள்களையுடைய, மாருதி - வீமசேனன், மாளவம் கோன் இந்திரவன்மா மேல் சென்று - மாளவதேசத்தரசனாகிய இந்திரவர்மாவென்பவன் மேல் எதிர்த்துப்போய், எரி கணை தொடுத்த - ஜ்வலிக்கின்ற அம்புகளைச் செலுத்திச் செய்த, போரில்—, அச்சுவத்தாமா என்னும் சிந்துரம்-அசுவத்தாமா வென்னும் பெயருள்ள (அவ்விந்திரவர்மாவின் பட்டத்து) யானையானது, அந்தரம் அடைந்தது - (இறந்து) மேலுலகடைந்தது; வேறு ஓர் திசை களிறு அதனை ஒப்பது அன்று - (அவ்யானைக்கு அதுவே உவமையாவதன்றி) வேறாகிய திக்குயானையொன்றும் அதற்குஒப்பாகமாட்டாது; (எ - று.)—பி-ம்: அதனைவெற்றித், வலத்தாலந்தத். (636)

20. மதலைபேரெடுத்துப்போரின்மடிந்தவாறுரைத்தபோதே
விதலையனாகிப்பின்னைவில்லெடான்வீதறிண்ண
முதலமர்தன்னிலந்தமுனிவரன்மொழிந்தமாற்ற
நுதலுதிநீயேசென்றுநுவலுதிவிரைவினென்றான்.

(இ - ள்.) மதலை பேர் எடுத்து- துரோணன் மகனான அசுவத்தாமாவென்ற பேரை யெடுத்து, போரில் மடிந்த ஆறு உரைத்த போதுஏ-போரில் இறந்ததாகக் கூறியபொழுதே, (துரோணன்), விதலையன் ஆகி - மனச்சஞ்சலமுடையவனாய், பின்னை - பின்பு, வில் எடான் - வில்லையெடுத்துப் போர்செய்யாமல், வீதல் - இறத்தல், திண்ணம் - நிச்சயம்; முதல் அமர் தன்னில்-முதல்நாட் போரில், அந்த முனிவரன் - சிறந்த முனிவனான அந்தத்துரோணன், மொழிந்த - சொன்ன, மாற்றம் - வார்த்தையை, நுதலுதி-கருதுவாயாக: நீஏ சென்று விரைவின் நுவலுதி - நீயே (துரோணன்முன்) சென்று விரைவில் (அங்ஙனம்) கூறுவாய், என்றான் - என்று (கண்ணன் தருமனை நோக்கிச்) சொன்னான்; (எ - று.)

இந்திரவர்மாவின் அசுவத்தாமாவென்னும்யானை இறந்த உண்மையைத் துரோணபுத்திரனான அசுவத்தாமா இறந்ததாகத்

தோன்றும்படி நீ துரோணனுக்குக் கூறி அதனால் அவன் மனம் வருந்திப் போரொழிந்து இறக்கும்படி செய்திடவேண்டு மென்று கண்ணன் தருமனுக்குக் கூறினன். (637)

21.— அதற்குத் தருமன் உடன்படாமை.

வையினல்விளங்குநேமிவலம்புரிவயங்குசெம்பொற்
கையினனந்தணனன்கையறல்புகன்றகாலை
மெய்யினல்வகுத்ததன்னமெய்யுடைவேந்தன்கேட்டுப்
பொய்யினலாள்வதிந்தப்புவிகொலோவென்றுநக்கான்.

(இ - ள்.) வையினல் விளங்கும் நேமி-கூர்மையோடு விளங்குகின்ற சக்கரமும், வலம்புரி - சங்கமும், வயங்கு - விளங்கப்பெற்ற, செம் பொன் கையினன் - சிவந்த அழகிய திருக்கைகளையுடையவனான கண்ணன், அந்தணன் கையறல் புகன்ற காலை - (இங்ஙனம்) துரோணன் செயலற்று ஒழியும்வகையைச் சொன்னபொழுது,—மெய்யினல் வகுத்தது அன்ன மெய் உடை வேந்தன்- சத்தியத்தினாலமைக்கப்பட்டது போன்ற உடம்பையுடைய தருமராசன், கேட்டு—, பொய்யினல் ஆள்வது இந்த புவி கொல்லோ என்று-இந்தப்பூமியைப் பொய்கூறி அதனாற் பெற்று ஆளுவது தகுதியோ? என்றுகூறி, நக்கான் - சிரித்தான்; (எ - று.)—'மெய்யினல்வகுத்ததன்னமெய்' என்றது, தற்குறிப்பேற்றவணி. (638)

22.—இதுவும், தருமன்வார்த்தை: பொய்ம்மையின் தீப்பயன்.

அண்ணியகிளையுமில்லுமரும்பெருமகவுமன்புந்
திண்ணியசீருமிக்கசெல்வமுந்திறலுந்தேசு
மெண்ணியபொருள்கள்யாவுமியற்றியதவமுமேனைப்
புண்ணியமனைத்துஞ்சேரப்பொய்ம்மையாற்பொன்றுமன்றே.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) இல் உம் - மனைவாழ்க்கைத்துணையும் [தாரமும்], அரும்பெரு மக உம் - அரிய பெரிய சந்தானமும், அண்ணிய கிளை உம்-நெருங்கிய மற்றைப் பந்துவர்க்கமும், அன்பும்—, திண்ணிய சீர் உம் - உறுதியுள்ள அழியாத புகழும், மிக்க செல்வமும்—, திறல்உம்-வலிமையும், தேசுஉம்-ஒளியும், எண்ணிய பொருள்கள் யாஉம்-மற்றும் எண்ணப்படும் பொருள்கள் யாவையும், இயற்றிய தவம்உம்-செய்த தவமும், ஏனை புண்ணியம் அனைத்துஉம்-மற்றைப்புண்ணியங்கள் யாவையும், சேர - ஒருசேர, பொய்ம்மையால் - பொய்சொல்லுதலினால், பொன்றும்அன்றே - அழிந்துவிடுமன்றோ! (எ - று.)—அன்றே - தேற்றம்; பொய்கூறிய அப்பொழுதே யெனினுமாம். பி-ம்: மனமுங்கேள்விச்செல்வமுநிதியுங்.

23.—அதற்குக் கண்ணன் சமாதானங்கூறத் தொடங்குதல்.

என்றுகொண்டினங்கொள்கோவினிடர்கெடவெழிலியேழுங்
குன்றுகொண்டடர்த்தமாயன்கூறவுமறுத்துக்கூறக்

கன்றுகொண்டெறிந்துவெள்ளிற்கனிநனியுதிர்த்துவஞ்சம்
வென்றுகொண்டவனுமீளவிளம்புவனென்பமாதோ.

(இ - ள்.) என்று கொண்டு - இவ்வாறு, இனம் கொள் - கூட்டமாகத்திரளுதலைக் கொண்ட, கோவின் - பசுக்களின், இடர்-துன்பம், கெட-நீங்கும்படி, எழிலி ஏழ்உம் - ஏழுமேகங்களையும், குன்று கொண்டு அடர்த்த-(கோவர்த்தன) மலையைக் கொண்டு வலியஎதிர்த்துத்தடுத்துவிட்ட, மாயன் - அற்புதசக்தியையுடையவனான கண்ணபிரான் தானே, கூறஉம் - சொல்லவும், மறுத்து கூற - (தருமன் அதனைத்) தடுத்துச்சொல்லவே,— கன்றுகொண்டு எறிந்து - கன்றினால் வீசி, வெள்ளில் கனி நனி உதிர்த்து - விளாமரத்தின் பழத்தை மிகுதியாய் உதிரச்செய்து, வஞ்சம் வென்று கொண்டவன்உம் - (அவற்றின்) வஞ்சனையைச் சயித்துக் கொண்டவனாகிய கண்ணனும், மீள விளம்புவன் - மறுபடி கூறுவான்; (எ - று.)—அதனை, அடுத்த இரண்டுகவிகளிற் காண்க. என்ப, மாது ஓ - ஈற்றசைகள். 'என்று கொண்டு' என்பதில்,கொண்டு-அசை; இனி, என்று எண்ணிக்கொண்டு என்றலுமாம். (640)

24.—இரண்டுகவிகள்-ஒருதொடர்: தருமனுக்குக் கூறுஞ் சமாதானத்தைத் தெரிவிக்கும்.

உம்மையின்மறுமைதன்னிலுறுபயனிரண்டும்பார்க்கின்
இம்மையில்விளங்கும்யார்க்குமவரவரியற்கையாலே
மெய்ம்மையேயொருவர்க்குற்றவிபத்தினைமீட்குமாகிற்
பொய்ம்மையுமெய்ம்மைபோலப்புண்ணியம்பயக்குமாதோ.

(இ - ள்.) உம்மையில்-கழிந்த பிறப்பிலும், மறுமை தன்னில்-வரும்பிறப்பிலும், உறு - பொருந்திய, பயன் இரண்டுஉம்-வினைப்பயன்கள் இரண்டும்,— பார்க்கின் - ஆராயுமிடத்து, இம்மையில் அவர் அவர் இயற்கையாலே - இப்பிறப்பிற்காணப்படுகிற அவரவரதுதன்மைகளினாலே, யார்க்குஉம் - எல்லார்க்கும், விளங்கும்—; ஒருவர்க்கு உற்ற விபத்தினை-ஒருவர்க்கு மிக்க ஆபத்தை, பொய்ம்மைஉம் - அசத்தியமும், மெய்ம்மைஏ மீட்கும் ஆகில் - உண்மையாகவே போக்குமானால், மெய்ம்மைபோல - சத்தியம்போலவே, புண்ணியம்பயக்கும்-நல்வினைப்பயனைத் தரும்; (எ-று.)—மாதோ-ஈற்றசை.

இப்பிறப்பில் ஒருவர் அநுபவிக்கிற இன்பதுன்பங்களினால் முற்பிறப்பில் அவர்செய்த நல்வினை தீவினைகளை ஊகித்தறியலாமென்பதும், இப் பிறப்பில் ஒருவர்செய்யும்நல்வினை தீவினைகளைக் கொண்டு வருபிறப்பில் அவர்அடையும் இன்பதுன்பங்களை ஊகித்தறியலா மென்பதும் முன்னிரண்டடிகளின் கருத்து. பின்னிரண்டடியினால், பெரிய ஆபத்துக்காலத்தில் அதனை நீக்கும் பொருட்டுப் பொய்கூறலா மென்று வற்புறுத்தியபடி. "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்" என்றதுங் காண்க. இதனால்,அசுவத்தாமா இறந்தானென்பது ஒருவகையாற்

பொய்யாயினும் நன்மைபயத்தலால் மெய்போன்றதே யென்று கூறியவாறு. (641)

25. **வல்லவரனந்தகோடிமறைகளின்படியேயாய்ந்து**
சொல்லியவுறங்கள்யாவுநின்னிடைத்தொக்கவாற்ருற்
புல்லியபொய்யொன்றென்னும்பொருபெருநெருப்புக்கீர
மில்லைநீயொன்றுமெண்ணுதியம்புதியிதனையென்ருன்.

(இ-ள்.) வல்லவர்-அறிந்த பெரியோர்கள், அனந்த கோடி மறைகளின்படியே - அளவிறந்த கோடிக்கணக்கான வேத வாக்கியங்களிற் கூறியபடியே, ஆய்ந்து-ஆராய்ந்து, சொல்லிய-சொன்ன, அறங்கள் யாஉம் - தருமங்களெல்லாம், நின்னிடை தொக்க ஆற்ருல்-உன்னிடத்துக் கூடியுள்ளபடியால், புல்லிய பொய் ஒன்று -(இப்பொழுது நேர்கிற) இந்த ஒருபொய்யானது, என் ஆம் -(உனக்கு) யாது தீங்கு தருவதாம்? பொரு பெரு நெருப்புக்கு ஈரம் இல்லை - மூண்டெழுந்த மிக்க நெருப்புக்கு ஈரத்தாலாகும் அபாயம் இல்லை; (ஆகவே), நீ ஒன்றுஉம் எண்ணுது-நீ யாதொன்றையுஞ் சிந்தியாமல், இதனை இயம்புதி - இப் பொய் யொன்றைக் கூறக்கடவாய், என்ருன்-என்று (கண்ணன் தருமனுக்குக்) கூறினன்; (எ-று.) பி - ம்: தொக்கவாறு.

'நான் கூறுவது நம்முடையபக்கத்தார்க்கு நன்மைதருவதாலும் எதிர்ப்பக்கத்தார்க்குத் தீமையை விளைத்தலால் இது பொய்யேயன்ரே!' என்று தருமனுக்குத் தோன்றுஞ் சங்கையை, இதனுற்பரிகரிக்கின்ருன் ஸ்ரீக்ருஷ்ணனென்க. அசுவத்தாமா இறந்தமைகூறுதல், நிகழாததுகூறலன்றி நிகழ்ந்ததனையே மாறுபாடாக்கூறுத லாதலால், 'புல்லியபொய்' எனப்பட்டது. பொரு நெருப்பு - எல்லாவற்றையும் எரித்துவிடத்தக்க நெருப்பு எனினுமாம். 'பெருநெருப்புக்கு ஈரமில்லை' என்பது, பழமொழி. பெரியோர் கூறிய அறங்கள் யாவும் நின்னிடத்து ஒருங்கேஅமைந்துள்ளதனுல், இச்சிறு பொய்யினுற் சிறிதும் தவறுண்டாகாது: பெருநெருப்புக்குச் சிறியஈரத்தினுற் சிறிதுங் கெடுதியில்லாதவாறுபோல என்ருன்; எடுத்துக்காட்டுவமையணி. (642)

26.—தருமன் துரோணனருகிற் பிழையறக் கூறத்தொடங்குதல்.

போரறமலைந்துவென்றுபோதத்தாற்பவங்களேழும்
வேரறவெல்லநிற்பான்வீடுறநின்றவெல்லை
வாரறவயமாவோட்டிவயங்குதேர்கடவிச்சென்று
பேரறன்மைந்தனுவிற்பிழையறப்பேசுவானே.

(இ - ள்.) போர் அற மலைந்து-போரை மிகுதியாகச் செய்து, வென்று - வெற்றிகொண்டு, (பின்பு), போதத்தால் - தத்துவ ஞானத்தினல், பவங்கள் ஏழ்உம் வேர் அற வெல்ல - எழுவகைப் பிறப்புக்களையும் வேரோடறும்படி சயித்திட, நிற்பான் -சித்தனய் நிற்பவனுன துரோணன், வீடு உற நின்ற எல்லை-முத்தியடையும் படி நின்ற இடத்திலே,—பேர் அறன் மைந்தன் - பெருமையை

யுடைய தருமபுத்திரன், வார் அற வயமா ஓட்டி வயங்கு தேர் கடவி சென்று - (குதிரைகளைக் கட்டிய) தோற்கயிறு அறுபடும்படி வலிய குதிரைகளை விசையாகத்தூண்டி விளங்குகிற (தனது) தேரை நடத்திக்கொண்டுபோய், நாவின் - (தனது) நாவினால், பிழை அற பேசுவான் - தவறு இல்லையாகச் சொல்பவனானான்; (எ - று.)—அதனை, அடுத்த கவியிற்காண்க.

அசுவத்தாமா இறந்தானென்று தான் கூறுவதை முழுப்பொய்யாகவன்றிச் சிலேடைவகையாற் சமத்காரமாக அக்கருத்து நிகழக் கூறுதலால் 'பிழையறப் பேசுவான்' என்றார்; அத்தன்மையை, அடுத்த கவியிற் காண்க. (643)

27.—தருமன் பிழையறக் கூறும் வகை.

அத்தனேயடுவல்லாண்மையச்சுவத்தாமாவென்னு
மத்தவாரணத்துக்கையோமாருதிசிங்கமானு
னெத்தனைகோடிச்சேனையிக்களத்திறந்ததிந்த
வித்தகன்மலைந்துசெற்றவிரகையென்சொல்வதென்றான்.

(இ - ள்.) 'அத்தனே-தலைவனே! அடு வல் ஆண்மை-(பகையை) அழிக்குங் கொடிய வலிமையையுடைய, அச்சுவத்தாமா என்னும்-அசுவத்தாமாவென்கிற, மத்த வாரணத்துக்கு-மதங்கொண்ட யானைக்கு, மாருதி-வீமசேனன், சிங்கம் ஆனான்-சிங்கம்போலாயினான்; ஐயோ—! எத்தனை கோடி சேனை - எத்தனைகோடிக்கணக்கான சேனை, இ களத்து இறந்தது-இந்தப்போர்க்களத்திலே (அசுவத்தாமனால்) இறந்திட்டது; இந்த வித்தகன் - இந்தச் சதுரப்பாடுடையவன் [வீமன்], மலைந்து செற்ற - (அவ்வசுவத்தாமாவைப்) பொருது அழித்த, விரகை-தந்திரத்தை, என் சொல்வது - என்னவென்று சொல்லமுடிவது!' என்றான்-என்று (துரோணனைநோக்கிச்) சொன்னான், (தருமன்); (எ-று.)

அசுவத்தாமா வென்ற யானையை வீமன் சிங்கம்போல அழித்தான் என்றும், அசுவத்தாமாவாகிய யானையை வீமனாகிய சிங்கம் அழித்திட்டது என்றும் கவர்பொருள்படக் கூறிய நயமறிக. பி-ம்: அத்தனேயெனும் வல்லாண்மை. (644)

28.—அதுகேட்டுத் துரோணன் படைக்கலம் கைவிட்டுநிற்றல்.

தீதிலானுரைத்தமாற்றஞ்செவிப்படுமளவினெஞ்சிற்
கோதிலானெடுத்தவில்லுங்கொடியவெங்கணையும்வீழ்த்திப்
போதிலானிறந்தான்போலும்புதல்வனென்றினைதலின்றி
யேதிலான்போலநின்றான்யார்கணும்பந்தமில்லான்.

(இ - ள்.) தீது இலான்-குற்றமற்றவனான தருமன், உரைத்த-சொன்ன, மாற்றம்-வார்த்தை, செவி படும் அளவில்-காதிற்பட்டவளவிலே,—நெஞ்சில் கோது இலான்-மனத்திற் குற்றமில்லாதவனான துரோணன்,—எடுத்த வில்உம் கொடிய வெம் கணைஉம் வீழ்த்தி-(தான்) கையிலேந்தியுள்ள வில்லையும் மிகக்கொடிய அம்பு

களையும் கீழேபோகட்டு,—'புதல்வன்-(தனது) மகனான அசுவத்தாமன், போது இலான் இறந்தான் போலும் - ஆயுட்பொழுதில்லாதவனாய் இறந்துவிட்டான்போலும்', என்று - என்றுஎண்ணி, இனைதல் இன்றி-வருந்துதலில்லாமல், யார்கண்உம் பந்தம் இல்லான்-எவரிடத்தும் ஆசைப்பாசபந்தம் இல்லாமல் நின்ற அந்தத் துரோணன், ஏதிலான் போல நின்றான்-அயலான்போல நின்றான்;

பிறப்புக்குஏதுவான அவா முனிவருபதேசத்தால் அற்றமைபற்றி, 'இனைதலின்றியேதிலான்போலநின்றான் யார்கணும் பந்தமில்லான்' என்றார். (645)

29.—அச்சமயத்தில் திட்டத்துய்மன் துரோணன்தலையைத் துணித்தல்.

முள்ளிய னாளக் கோயின் முனிநடுத் தலையை முன்னங்
கிள்ளிய பினாக பாணி கிரீசனோ டொத்த வீரன்
றுள்ளிய பரித்தேர்த் திட்டத் துய்மன தம்பு சென்று
தள்ளிய தப்போ தந்தத் தவமுனி தலையை யந்தோ.

(இ - ள்.) முள் இயல் நாளம் கோயில்-முட்கள் பொருந்திய தண்டையுடைய தாமரையைத்தங்குமிடமாகவுடைய, முனி - அந்தணனான பிரமனது, நடு தலையை-(ஐந்துதலைகளுள்) நடுவிலுள்ள தலையை, முன்னம் கிள்ளிய-முன்பு கிள்ளியெடுத்த, பினாகபாணி கிரீசனொடு-பினாகமென்னும் வில்லைக் கையிலுடையவனான சிவபிரானுடனே, ஒத்த--,வீரன்-வீரனாகிய,துள்ளிய பரி தேர் திட்டத்துய்மனது துள்ளியோடுகிற குதிரைகள் பூண்டதேரையுடைய திட்டத்துய்மனுடைய, அம்பு—, சென்று-போய், அப்போது—, அந்த தவம் முனி தலையை-தவத்தையுடைய முனிவனான அந்தத் துரோணனது தலையை, தள்ளியது - துணித்துக் கீழே தள்ளிற்று; அந்தோ-ஐயோ! (எ-று.)—'அந்தோ'-கவி கூறிய இரக்கச்சொல்.

துரோணன் சோர்ந்துநின்ற நிலையில் திட்டத்துய்மன் அவன் தலையைத் துணித்தது அக்கிரம மென்னுங் கருத்துப்பட, பிரமனைச் சிவன் நிஷ்காரணமாகத் தலைகிள்ளியதனை உவமைகூறினரென்பர். முள்ளியனாளம் - தாமரைக்கு, அன்மொழித்தொகை.

வேறு.

30.—துரோணன் இறந்ததனை அசுவத்தாமன் காணுதல்.

பட்டனன் வாச பதிநிகர் சேனா பதியென்னக்
கெட்டது நாக கேதனன் வீரங் கிளர்சேனை
தொட்டவில் லாண்மைத் துரகத தாமா வெதிரோடிக்
கட்டழல் வேள்வித் தாதையி றந்த களங்கண்டான்.

(இ - ள்.) வாசபதி நிகர்-பிருகஸ்பதியை யொத்த, சேனாபதி-(கௌரவ)சேனைத்தலைவனான துரோணன், பட்டனன்-இறந்தான், என்ன-என்று அறிந்தவளவிலே,—நாககேதனன் வீரம் கிளர்

சேனை-பாம்புக்கொடியனான துரியோதனனது பராக்கிரமம் மிக்க சேனை, கெட்டது-நிலைகுலைந்தது;(உடனே),தொட்ட வில்ஆண்மை துரகதத்தாமா - (கையிற்) பிடித்த வில்லின் வலிமையையுடைய அசுவத்தாமன், எதிர் ஓடி-முன்னே ஓடிச்சென்று, கட்டு அழல் வேள்வி தாதை இறந்த களம் கண்டான்-நியமந்தவறாத வைதிகாக்கினியில் யாகஞ்செய்தலையுடைய (தனது) தந்தையான துரோணன் இறந்துகிடந்த போர்க்களத்தைப் பார்த்தான்; (எ -று.)

வாசபதி = வாசஸ்பதி: சொல்லுக்கு[கல்விக்கு]த் தலைவனென்பது பொருள். பிருகஸ்பதி தேவர்கட்குக் குருவாதல்பற்றி, கௌரவர்க்குக் குருவான துரோணனுக்கு அவனை உவமைகூறினார்; கல்வித்திறத்தை விளக்குதற்கு உவமைகூறினரென்றுங் கொள்ளலாம். பி-ம்: தந்தை.

இதுமுதல் நான்குகவிகள்-முதற்சீர் விளச்சீர் அல்லது மாச்சீரும், இரண்டு நான்காஞ் சீர்கள் மாச்சீர்களும், மூன்றாஞ்சீர் விளச்சீரும், ஐந்தாவது மாங்காய்ச்சீருமாகிய நெடிலடி நான்கு கொண்ட கலிநிலைத்துறைகள். (647)

31.—அசுவத்தாமன் பித்ருசோகத்தால் வருந்துதல்.

கண்டான்வீழ்ந்தானம்முனிபாதங்கமழ்சென்னி
கொண்டான்மோதிக்கண்பொழிநீரிற்குளித்திட்டான்
வண்டார்சோரமண்ணுடல்கூரவன்னஞ்ச
முண்டார்போலவெண்ணமழிந்தானுளநொந்தான்.

(இ - ள்.) (அசுவத்தாமன்), - கண்டான் - (தந்தையிறந்துகிடத்தலைப்) பார்த்தான்; வீழ்ந்தான் - கீழேவிழுந்தான்; அ முனி பாதம் கமழ் சென்னிகொண்டான் -அந்தத்துரோணாசாரியனது திருவடிகளை நறுமணமுள்ள (தனது) சிரசின்மேற் கொண்டான்; மோதி - (தன்னைத் தானே) தாக்கிக்கொண்டு, கண் பொழி நீரில் குளித்திட்டான் - கண்களினின்று பெருகுகிற நீரிலே முழுகினான்; வள் தார் சோர - செழிப்புள்ள (தனது) போர்மாலை கீழேசரியவும், உடல் மண் கூர - உடம்பிற் புழுதி மிகப்படியவும் (பெற்று), வல் நஞ்சம் உண்டார் போல எண்ணம் அழிந்தான் - கொடிய விஷத்தை யுட்கொண்டவர்போல நினைப்பற்றான்; உளம் நொந்தான்—; (எ - று.)

தன்மைநவிற்சியணி: 'நஞ்சையுண்டார்போல' என்ற **உவமையை அங்கமாகப் பெற்றுவந்தது**. 'வண்டார்சோர,' 'மண்ணுடல்கூர' என்ற அடைமொழிகளை 'வீழ்ந்தான்' என்றதனோடு இயைத்தலும் அமையும். கமழ்சென்னி-போர்ப்பூமாலை சூடியதனால் வாசனைவீசுகிறமுடி யென்க. மோதிக்குளித்திட்டான் என இயையும்; மோதிப் பொழி என்று இயைத்து, அலைமோதிக்கொண்டு கண்களினின்று மிகுதியாகச்சொரிகிற நீரி லெனினுமாம். வல்நஞ்ச முண்டார் போல வென்பதற்கு - சிவபிரான்போல வென்றலுமொன்று; சிவகுமாரனுக்குச் சிவபிரானோடு உவமை ஏற்கும். (648)

32.—இதுமுதல் மூன்றுகவிகள்-ஒருதொடர்: அசுவத்தாமன் புலம்பலைத் தெரிவிக்கும்.

வன்பின்மிக்கவீடுமனுன்னைமன்னுகென்
றன்பினிப்பாராளவுமன்றேயருள்செய்தான்
முன்பினெண்ணவுவமையிலாதாய்முடிவாயோ
வுன்பின்வந்தேனுன்னையொழிந்துமுய்வேனே.

(இ - ள்.) வன்பில் மிக்க வீடுமன்-வலிமையில் மிக்க பீஷ்மன், உன்னை—, மன் ஆகு என்று - 'அரசனுவாய்' என்றுசொல்லி, அன்பின் இ பார் ஆளஉம் - அன்போடு இந்தவுலகத்தை யாளும் படியாகவும், அன்றே - அக்காலத்திலே, அருள்செய்தான் - கருணையோடு கூறியுள்ளான்; முன்பின் எண்ண உவமை இலாதாய் - முன்னும் பின்னும் (உன்னோடு ஒரு நிகராகவைத்து) எண்ணுதற்கு ஓரொப்புமையில்லாதவனை நீ, முடிவாய்ஓ - இறந்திடுவாயோ? உன் பின் வந்தேன் -உனக்குப் பின்பிறந்தவனை நான், உன்னை ஒழிந்துஉம் உய்வேன்ஓ - உன்னை யொழியப்பெற்றும் உயிர் வாழ்வேனோ? (எ - று.)

துரோணன் வீடுமனிடம் வந்து சேர்ந்தபொழுது அவன் இவனைக் கௌரவபாண்டவர்க்குப் பிரதானவில்லாசிரியனாக்கி அவனுக்கு இராசபட்டத்தையும் அரசர்க்கு உரிய குடை கொடி தேர் முதலிய அங்கங்களையும் தந்தன னென்பதை "முனி நீயையா இதற்கு முன்ன மின்று முதலா, இனி யிவ்வுலகுக் கரசாயெம்மி லொருவனாகிக், குனிவில் வலியா லமருங் கோடியென்று கொடுத்தான், பனிவெண்குடையு மிருபர்க்குரிய வரிசை பலவும்" என்பதனாலும் அறிக. (649)

33. **வில்லாய் நீவெம் போர்முனை வெல்லும் விறலாய்நீ**
சொல்லாய் நீதொல் வேதிய ருட்குந் தொழிலாய்நீ
வல்லார் வல்ல கலைகள னைத்தும் வல்லானே
யெல்லா மின்றே பொன்றின வுன்னோ டெந்தாயே.

(இ - ள்.)வில்லாய் நீ-வில்வல்லமையுடையாய் நீ; வெம் போர் முனை வெல்லும் விறலாய் நீ - கொடிய போர்க்களத்திற் பகை வெல்லுந் திறமையுடையாய் நீ; சொல்லாய் நீ - சொல்திறமுடையாய் நீ; தொல் வேதியர் உட்கும் தொழிலாய் நீ - பழமையான அந்தணர்களும் அஞ்சும்படியான வைதிகத் தொழிலுடையாய் நீ; வல்லார் வல்ல கலைகள் அனைத்துஉம் வல்லானே - (ஒவ்வொரு சாஸ்திரத்தில்)வல்லமையுடையார் பலர் தேர்ந்துள்ள சாஸ்திரங்களெல்லாவற்றையும் (ஒருங்கே தனியே) தேர்ந்தவனே! எந்தாயே-எனது தந்தையே! எல்லாம் - (கீழ்க்கூறிய விற்றிறம் முதலிய) யாவும், இன்றே-இன்றைக்கே, உன்னோடு-உன்னுடனே, பொன்றின - அழிந்தனவாம்; (எ - று.)—எந்தாயே-எமது தாய்போன்றவனே! எனினுமாம்.

வைதிக லௌகிக தருமங்களெல்லாவற்றுக்கும் துரோணன் ஒரு நிதிபோன்றவ னென்பது, இதில் விளங்கும். சொல்லாய்-

சாபாநுக்கிரகச் சொற்களையுடையாயெனினுமாம்; புகழையுடையாய்என்றலு மொன்று. (650)

வேறு.

34. கற்கொண்டு கன்மழைமுன் றடுத்த கண்ணன் கற்கறித்துப் பன்முறித் துக் கழறத் தானு, முற்கொண்ட விரதமறந் தியாருங்கேட்ப முரசுயர்த்தோன் பொய்சொன்னுன் முடிவி லந்தச், சொற்கொண்டு வெறுங்கையனு மளவிற் றிட்டத் துய்மனென நின்றகுருத் துரோகி கொன்றுன், விற்கொண்டு பொர நினைந்தா லிவனே யல்ல விண்ணவர்க்கு மெந்தைதனை வெல்ல லாமோ.

(இ - ள்.) கல் கொண்டு-(கோவர்த்தன) மலையைக் கொண்டு, கல்மழை முன் தடுத்த - கல்மழையை முன்பு தடுத்த, கண்ணன் —, கல்கறித்து பல் முறித்து-கல்லைக்கடித்தாற்போலப் பற்களைக் கடித்துக்கொண்டு, கழற-சொல்லவே, முரசு உயர்த்தோன் தான்உம் - முரசக்கொடியை உயர நிறுத்தியவனுன தருமபுத்திரனும், முன் கொண்ட விரதம் மறந்து - பழமையாக(த்தான்)கொண்டுள்ள(சத்தியமேபேசுதலாகிய)விரதத்தைத் தவறி, யார்உம் கேட்ப-எல்லாருங்கேட்கும்படி[வெளிப்படையாக],பொய் சொன்னுன் ;முடிவில்-முடிவிலே[அதன்பின்பு என்றபடி], அந்த சொல் கொண்டு வெறுங்கையன் ஆம் அளவில் - அந்தவார்த்தையை உண்மையாகக்கொண்டு (என்தந்தை படைக்கலமொழிந்து) வறுங்கையனுகுமளவில், திட்டத்துய்மன் என நின்ற குருத்துரோகி - த்ருஷ்டத்யும்நனென்று பெயர்கூறப்பட்டுநின்ற குருத்துரோகியானவன், கொன்றுன்-(அவனைக்) கொன்றிட்டான்; (இங்ஙனமன்றி), வில் கொண்டு பொர நினைந்தால்-(என் தந்தை) வில்லைக் கையிற்கொண்டு போர்செய்ய எண்ணினுல், இவன்ஏ அல்ல-இந்தத்திட்டத்துய்மனே யல்லன்: விண்ணவர்க்குஉம் - தேவர்கட்கும், எந்தைதனை வெல்லல் ஆம்ஓ - என் தந்தையை வெல்லுதல் இயலுமோ? [இயலாதென்றபடி]; (எ-று.)—என்று அசுவத்தாமன் புலம்பினுன்.

கற்கொண்டுகன்மழைதடுத்தகண்ணன்—'கன் மாரியாகையாலே, கல்லையெடுத்து ரக்ஷித்தான்; நீர் மாரியாகில், கடலையெடுத்து ரக்ஷிக்குங்காணும் என்று பட்டர் அருளிச்செய்வர்; இத்தால், இன்னத்தைக்கொண்டு இன்னகார்யஞ் செய்யக்கடவோ மென்னும் நியதி யில்லை:ஸர்வசக்த னென்கை'என்ற வியாக்கியாந வாக்கியம் இங்கு அறியத்தக்கது. 'கற்கொண்டு' என்றது-அந்தமலைமுழுவதையும் ஒருகல்லை யெடுத்தாற்போல அநாயாஸமாக எளிதில் எடுத்தமை தோன்றுதற்கு. வற்புறுத்தித் தருமனைப் பொய் கூறச் சொல்லினனென்பது, 'கற்கறித்துப் பன் முறித்துக் கழற' என்பதனுல் விளங்கும். 'கற்கறித்துப் பன் முறித்து' - தொகையுவமையணி. குருவைக் கொன்றதனுல்,திட்டத் துய்மன் 'குருத்துரோகி'எனப்பட்டான். பி-ம்: காத்தகள்வன்கட்டுரைத்தமொழிப்படியே கருதார்போரின்.

இதுமுதல் எட்டுக்கவிகள்-பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்

சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரியவிருத்தங்கள். (651)

35.—அசுவத்தாமன் எதிர்ப்பக்கத்தவரனைவரையுங் கொல்வேனென்று தொடங்குதல்.

இப்புதல்வன்றிருத்தாதைபாடுநோக்கி யிவ்வகையேயிரங்குதலுமிராசராச, னப்புதல்வன்றன்னையெடுத்தாற்றித்தேற்றி யம்புயக்கணருவிதுடைத்தளிசெய் காலை, யெப்புதல்வருடனும்விறற்குந்திமைந்தரியாவரையுஞ்சென்னிதுணித்தியாக சேனன், மெய்ப்புதல்வன்றனையுமறமலைவனென்று வில்வளைத்தான்சொல்வளையா வேதநாவான்.

(இ - ள்.) இ புதல்வன்-துரோணபுத்திரனான இந்த அசுவத்தாமன், திரு தாதை பாடு நோக்கி-(தனது) மேலான தந்தையின் அழிவைக்குறித்து, இ வகைஏ இரங்குதலும் - இவ்வாறே சோகித்தவளவிலே,—இராசராசன்-அரசர்க்கரசனான துரியோதனன், அ புதல்வன் தன்னை - அந்தத்துரோணபுத்திரனை, எடுத்து—, ஆற்றி - ஆறுதல்கூறி, தேற்றி - சமாதானப்படுத்தி, அம்புயம் கண் அருவி துடைத்து - தாமரைமலர்போன்ற அவன்கண்களினின்று இடையறாதுபெருகும் நீர்ப்பெருக்கைத் துடைத்து, அளி செய் காலை-அன்பு காட்டியபொழுது,—சொல் வளையா வேதம் நாவான்-சொல்தவறாத வேதம்வல்லநாக்கையுடையவனான அசுவத்தாமன்,—'எ புதல்வருடன்உம் - இராசகுமாரரெல்லாருடனே, விறல் குந்தி மைந்தர் யாவரைஉம் - வெற்றியையுடைய குந்திபுத்திரரெல்லாரையும் [பாண்டவரைவரையும்], சென்னி துணித்து - தலையறுத்து, யாகசேனன் மெய் புதல்வன் தனைஉம் அற மலைவல்-துருபதனது சிறந்த புத்திரனான திட்டத்துய்மனையும் உயிர்நீங்கக் கொல்வேன்', என்று-என்று சபதஞ்செய்து, வில் வளைத்தான்; (எ - று.)—'சொல்வளையா' என்பதற்கு-எவராலும் இகழ்ந்து சொல்லுதற்குக்கூடாத என்றும் உரைக்கலாம். பி - ம்: தனைச்சேர. (652)

36.—கண்ணன் கட்டளையால் அனைவரும் படைக்கலமும் வாகனமும் ஒழிதல்.

பாகசாதனன்மதலைதெய்வப்பாகன் பாகடருநெடும்பனைக்கைப்பகட்டின் மேலான், மேகமேனியன்விரைவிற்றங்கள்சேனை வேந்தையெலாஞ்சென்றெப்திவில் வாள்வேலும், வாகனதியுமகற்றிநின்மினென்ன மாருதிமைந்தனையொழிந்தோர்மண்ணின்மீது, யோகஞானியராகியனைத்துளோரு மொருவரைப்போனிராயுதராயொடுங்கிநின்றார்.

(இ - ள்.) மேகம் மேனியன்-மேகம்போலக்கரிய திருமேனியையுடையவனும், பாகசாதனன் மதலை தெய்வம் பாகன் - இந்திரனுடைய குமாரனான அருச்சுனனது தெய்வத்தன்மையுள்ள தேர்ப்பாகனுமாகிய கண்ணன், பாகு அடரும் நெடும் பனை கை பகட்டின் மேலான்-பாகனைக்கொல்லுந் தன்மையதும் நீண்ட பனைமரம்போன்ற துதிக்கையையுடையதுமான ஓர் ஆண்யானையின்

மேல் ஏறினவனாய், விரைவில் தங்கள் சேனை வேந்தை எலாம் சென்று எய்தி - சீக்கிரத்தில் தங்கள் சேனையிலுள்ள அரசர்களை யெல்லாம் போய்ச்சேர்ந்து, வில் வாள் வேல்உம் வாகன ஆதி உம் அகற்றி நின்மின் என்ன - 'வில்முதலிய ஆயுதங்களையும் வாகனம் முதலியவற்றையும் நீக்கிவிட்டு நில்லுங்கள்' என்று சொல்ல,—மாருதி மைந்தனை ஒழிந்தோர் அனைத்துளோர்உம் - வாயுபுத்திரனான வீமசேனனாகிய வீரனொருத்தனை யொழிந்த மற்றுள்ளாரெல்லாரும், யோகம் ஞானியர் ஆகி - யோகப்பயிற்சியாற் பெறுதற்கு உரிய தத்துவஞானத்தைக் கொண்டவர்களைப் போன்று, ஒருவரை போல் நிராயுதர் ஆய் - ஒருத்தரைப்போலவே படைக்கலமில்லாதவர்களாய், மண்ணின்மீது ஒடுங்கி நின்றார் - (வாகனங்களினின்று இறங்கி) வெறுந்தரையிலே (போர்ச்செயலற்று) ஒடுங்கிநின்றார்கள்; (எ - று.)

மாருதியென்பது -வாயுபுத்திரனென்னும் பொருளதாதலால், மைந்தனென்பதற்கு - வீர னெனப்பட்டது. யோகஞானங்களையுடையவர் திரிகரணமுமொடுங்கிநிற்றல் இயல்புஆதலால், அவர்கள்போன்று இவர்கள் ஒடுங்கி நின்றாரென்றார். (653)

37.—அசுவத்தாமனது நாராயணாஸ்திரத்தை யாவரும் வணங்குதல்.

மாற்றரியமறையொடுநாராயணன்றன் வாளிதொடுத்தலுமந்தவாளியூழிக், காற்றெரியொடெழுந்ததெனக்கார்கோண்மொண்டுகாரேழுமதிர்ந்ததெனக்கனன்று பொங்கி, யேற்றரிபோற்குழாங்கொண்டவயவர்தம்மை யெய்தியபோதனைவருந் தம்மிதயமொன்றிச், சாற்றரியவுணர்வினராயேத்தியேத்தித் தாடோய்செங் கரமுகுளந்தலைவைத்தாரே.

(இ - ள்.) மாற்று அரிய மறையொடு-விலக்குதற்கு அருமையான மந்திரப்பிரயோகத்துடனே, நாராயணன் தன் வாளி தொடுத்தலும்-(அசுவத்தாமன்) நாராயணாஸ்திரத்தை ஏவிய வளவிலே,— அந்த வாளி-அந்த அஸ்திரமானது,—ஊழி காற்று எரியொடு எழுந்தது என-கற்பாந்த காலத்துப் பெருங்காற்று நெருப்புடனே கிளர்ந்து வீசியது போலவும், கார்கோள் மொண்டு கார் ஏழ்உம் அதிர்ந்தது என-சமுத்திரசலத்தை நிரம்ப எடுத்துப் பருகி மேகங்களேழும் இடிமுழங்கியது போலவும், கனன்று பொங்கி - உக்கிரங்கொண்டு எழுந்து, ஏறு அரி போல் குழாம் கொண்ட வயவர் தம்மை எய்திய போது - ஆண்சிங்கங்கள்போலத் திரண்டுள்ள (பாண்டவசேனை) வீரர்களைச் சேர்ந்தபொழுது,—அனைவர்உம் - அவ்வீரரெல்லாரும், தம் இதயம் ஒன்றி-தங்கள் மனத்தில் ஒற்றுமைப்பட்டு, சாற்று அரிய உணர்வினர் ஆய் - சொல்லுதற்கும் அரிய தத்துவஞானத்தையுடையவர்களாய், ஏத்தி ஏத்தி - மிகுதியாகத் துதித்து, தாள் தோய் செம் கரம் முகுளம் தலை வைத்தார்-முழங்காலையளாவிய சிவந்த (தங்களுடைய) கைகளைக் குவித்துத் தலைமேல் வைத்துக்கொண்டு வணங்கினார்கள்; (எ-று.)

நாராயணாஸ்திரம் மந்திரபலத்துடனே எதிர்ப்பக்கத்தவரனைவரையு மழித்தற்கு வர, யாவரும் கைகள் அரும்புகள்போலக்குவி

யத் தலைமேல்வைத்தன ரென்க. மாற்றரிய மறை-வேறு எந்த மந்திராஸ்திரபலத்தினாலுந்தடுக்க முடியாத பேராற்றலையுடைய மந்திர மென்றபடி. (654)

38.—நாராயணாஸ்திரம் அனைவரையும் நீங்கி வீமன்மேற் செல்லுதல்.

பாருருவித்திசையுருவியண்டகூடம் பாதலத்தினுடனுருவிப்பரந்துசீறி
யோரொருவருடலின்மிசைமயிர்க்காறோறுமோரொருவெங்கணையாய்வந்துற்றகாலை
நேரொருவர்மலையாமற்றருமன்சேனை நிருபரெலாநிராயுதராய்நிற்றல்கண்டு [லோ.
போருருவமுனிமைந்தன்றொடுத்தவாளி பொருபடைகொண்மாருதிமேற்போனதா

(இ-ள்.) முனி மைந்தன் - துரோணபுத்திரனான அசுவத்தாமன், போர் உருவ-போரிலே (பகைவர்மேல்) ஊடுருவிச்செல்லும்படி, தொடுத்த-பிரயோகித்த, வாளி-அந்த நாராயணாஸ்திரமானது, பார் உருவி-பூமியைத்துளைத்தும், திசை உருவி - திக்குகளைத் துளைத்தும், பாதலத்தினுடன் அண்டகூடம் உருவி-பாதாளலோகத்துடனே அண்டகோளத்தின்முகட்டையும் துளைத்தும், பரந்து -பரவி, சீறி-கோபங்கொண்டு, ஓர் ஒருவர் உடலின்மிசை மயிர்க்கால் தோறும் ஓர் ஒரு வெம் கணை ஆய்-ஒவ்வொருவரது உடம்பிலுமுள்ள மயிர்க்காலொவ்வொன்றுக்குமொவ்வொருகொடிய அம்பாய்ப் பெருகி, வந்து உற்ற காலை-வந்து அடுத்தபொழுது,— தருமன் சேனை நிருபர் எலாம்-யுதிட்டிரனது சேனையிலுள்ள அரசர்களெல்லாரும், நேர் ஒருவர் மலையாமல்-எதிரில் ஒருவரும் போர் செய்யாமல், நிராயுதர் ஆய் நிற்றல்-(கையிற்) படையெடாதவராய் வணங்கிநிற்பதை, கண்டு-பார்த்து, (அந்தத்தெய்வ அஸ்திரம்), பொரு படை கொள் மாருதி மேல் போனது - போர்க்குரிய ஆயுதத்தை யேந்தியுள்ள வீமசேனன்மேற் சென்றிட்டது; (எ-று.)— ஆல்-ஈற்றசை. ஓ-வியப்பிடைச்சொல்; தவறுமலழிக்கவல்ல நாராயணாஸ்திரத்துக்கு அவரனைவருந் தப்பியுய்ய, அது வீமன்மேல் மாத்திரம் சென்றமையா லாகிய வியப்புப்பற்றி வந்தது.

அந்தச்சிறந்த அஸ்திரத்துக்கு, படையெடாதவர்மேற் புக்குத் தொழில் செய்யாமை இயல் பென்க. போர் உருவம் முனிமைந்தன் - போரிற் பெருமிதத்தோற்றமுடைய அசுவத்தாமன்; யுத்தமே ஒருருவங்கொண்டுவந்தாற் போன்ற துரோணனது குமாரனான அசுவத்தாம னென்றலுமாம். (655)

39.—வீமன் அந்த அஸ்திரத்தை யெதிர்த்தல்.

காற்றின்மதலையுந்தனதுதடந்தேருந்திக் கண்சிவந்துமனங்கருகிக்கால்வில் வாங்கிக்,கூற்றமெனவெதிர்சென்றுமுனிவன்மைந்தன் கொடுங்கணையைமதியாமற் கடுங்கணுளன், வேற்றுருவங்கொடுகனலிமுதலாவுள்ள விண்ணவர்தம்பகழிகளாய் மேன்மேல்வந்த, மாற்றரியபகழிகளையொன்றுக்கொன்று மாறானபகழிகளான் மாற்றினனே.

(இ-ள்.) (பின்பு), காற்றின் மதலைஉம்-வாயுபுத்திரனான வீமனும், தனது தட தேர் உந்தி-தன்னுடைய பெரிய தேரைச் செலுத்தி, கண் சிவந்து மனம் கருகி-(கோபத்தாற்) கண்கள் சிவந்து மனம் வெதும்பி, வில்கால் வாங்கி-தநுர்த்தண்டத்தை வளைத்து,

கூற்றம் என எதிர் சென்று-யமன்போல எதிரிலே சென்று, முனிவன் மைந்தன் கொடுங் கணையை மதியாமல்-துரோணபுத்திரனை அசுவத்தாமனது கொடிய அந்த அஸ்திரத்தை லக்ஷியஞ்செய்யாமல், கடுங்கண் ஆளன்-அஞ்சாத வலிமையுடையவனாய், வேறு உருவம் கொடு கனலி முதல் ஆ உள்ள விண்ணவர் தம் பகழிகள் ஆய் மேல் மேல் வந்த மாற்று அரிய பகழிகளை - வெவ்வேறுவடிவங்கொண்டு அக்கினி முதலாகவுள்ள தேவர்களது அஸ்திரங்களாய்ப் பரிணமித்து மேன்மேல் வந்த விலக்குதற்கரிய அம்புகளை, ஒன்றுக்கு ஒன்று மாறு ஆன பகழிகளால் - (அவற்றில்) ஒவ்வொன்றுக்கும் பகையான எதிரம்புகளினால், மாற்றினான் - விலக்கினான்; (எ-று.)—மாற்றுதல்-தடுத்தல். (656)

40.—நாராயணாஸ்திரம் வீமனாற்பலவாறு தடுக்கப்படுதல்.

மூச்சினாலடியுண்டுங்கடுங்கட்கோப முதுகனலாலெரியுண்டுமுனைகொள்வாளி
யோச்சினாலொடியுண்டுங்குனித்தவிற்கா லுதையினாலுதையுண்டுநெடுநாணோசை
வீச்சினாலறையுண்டுங்கடகவாகு வெற்பினாலிடியுண்டும்வெகுளிகூரும்
பேச்சினால்வெருவுண்டும்படாததுண்டோ பேரனிலன்மகனாலப்பெருமன்வாளி.

(இ-ள்.) மூச்சினால்-(வீமசேனனது) மூச்சுக்காற்றினால், அடியுண்டுஉம்-அடிபட்டும்,—கடுங் கண் கோபம் முது கனலால் - பயங்கரமான அவன்கண்களினின்று வெளிப்பட்ட முதிர்ந்த கோபாக்கினியினால், எரியுண்டுஉம் - எரிபட்டும்,—முனை கொள் வாளி ஓச்சினால் - கூர்மையைக்கொண்ட அம்பின் பிரயோகத்தால், ஒடியுண்டுஉம்-ஒடிபட்டும்,—குனித்த வில்கால் உதையினால்-வளைத்த விற்கழுந்தின் மோதுதலால், உதையுண்டுஉம்-தாக்கப்பட்டும்,—நெடு நாண் ஓசை வீச்சினால்-நீண்ட நாணியின் ஓசையினது வேகத்தால், அறையுண்டுஉம்-அடிபட்டும்,—கடகம் வாகு வெற்பினால்-கடகமென்னும் வளையை யணிந்ததோள்களாகியமலைகளினால், இடியுண்டுஉம்-இடிக்கப்பட்டும்,—வெகுளி கூரும் பேச்சினால்- கோபம் மிக்க வீரவார்த்தையால், வெருவுண்டுஉம்- அச்சங்கொண்டும்,—பேர் அனிலன் மகனால் - பெரிய வாயுபுத்திரனான அவ்வீமனால், அ பெருமன் வாளி - அந்தநாராயணாஸ்திரம், படாதது உண்டுஓ - படாதபாடு உண்டோ? (எ-று.)—இங்ஙன் அந்தஅஸ்திரம்பட்டது திருமாலின் அருளினாலென்க. (657)

41.—கண்ணன் வீமனையும் அந்த அஸ்திரத்துக்குத் தப்புவித்தல்.

தாள்வலியா லெனைப்பலபல் வினைசெய் தாலுந் தப்பவொணா விதிபோலத் தடந்தோள் வீமன், றோள்வலியால் விலக்கவுமத் தொடைபோய் வாசத் தொடை மிடைமார் பகமணுகச் சுராரி தோள்கள், வாள்வலியா லிரிந்தபிரான் கையில் வில்லும் வாளியும்வா கனமுமுடன் மாற்று வித்தா,னாள்வலியார் தமைச்சிலராற்கொல்லலாமோ நாரணன்சா யகமிகவு நாணிற் றன்றே.

(இ-ள்.) தாள் வலியால் - முயற்சியின் வலிமையினால், எனை பல பல்வினை செய்தால்உம்-எத்துணைப் பலபலவாகிய தொழில்களை எதிராகச்செய்தாலும், தப்ப ஒணா - தப்பமுடியாத, விதி

போல - ஊழ்வினைபோல,— தட தோள் வீமன் தோள் வலியால் விலக்கஉம் - பெரியதோள்களையுடைய வீமன் (தனது) புஜபலத்தால் தடுக்கவும்,(தடைப்படாமல்), அதொடைபோய்-அந்த அம்பு சென்று,வாசம் தொடைமிடை மார்பு அகம் அணுக-பரிமளத்தையுடைய போர்மாலை நிறைந்த(அவனது) மார்பினிடத்தைச்சேர,— சுர அரி தோள்கள் வாள் வலியால் அரிந்த பிரான் - தேவர்க்குப் பகைவனை வாணசுரனது தோள்களை ஆயுதத்தின் வலிமையால் அறுத்திட்ட கண்ணபிரான்,கையில் வில்உம் வாளிஉம் வாகனம் உம் உடன் மாற்றுவித்தான் -(வீமனது) கையிலுள்ள வில்லையும் அம்பையும் (அவனது) வாகனத்தையும் உடனே நீக்குவித்தான்; (அதனால்), நாரணன் சாயகம் மிகஉம் நாணிற்று - (அந்த) நாராயணாஸ்திரம் (அவனைக்கொல்லுதற்கு) மிகவும் வெள்கிப்போயிற்று: நாள் வலியார் தமை சிலரால் கொல்லல் ஆம்ஓ - ஆயுள் வலிமையுடையாரை எவராலேனுங் கொல்லமுடியுமோ? (எ - று.)

வீமனை நாராயணாஸ்திரம் கண்ணன்செய்வித்த தந்திரத்தாற் கொல்லாமலொழிந்த தென்ற சிறப்புப்பொருளை 'நாள்வலியார் தமைச் சிலராற்கொல்லலாமோ' என்ற பொதுப்பொருள்கொண்டு விளக்கினர்: **வேற்றுப்பொருள்வைப்பணி.** அன்றே-ஈற்றசை: தேற்றமுமாம். (658)

வேறு.

42.—அசுவத்தாமன் பாசுபதமெடுக்கத் தொடங்கியபொழுது வியாசன் வருதல்.

விட்ட வெம்பகழி நாணி மீளுதலும் வில்லின் வேதமுணர் முனிமகன்
வட்ட வெஞ்சிலையின் மீது பாசுபத வாளி வைப்பதும னஞ்செயா
முட்ட வன்பினொடு நின்ற காலையில் வியாத னென்றுரைகொள் முனிவரன்
றொட்ட தண்டுமிதி யடியு மாகியுயர் சுருதி வாய்மையொடு தோன்றினன்.

(இ - ள்.) விட்ட வெம் பகழி-(அசுவத்தாமன்) பிரயோகித்த கொடிய நாராயணாஸ்திரம், நாணி - வெட்கப்பட்டு, மீளுதலும் - திரும்பியவுடனே,—வில்லின் வேதம் உணர் முனி மகன் - தநுர் வேதத்தையறிந்த துரோணாசாரியனது புத்திரனை அசுவத்தாமன், வட்டம் வெம் சிலையின்மீது - வட்டமாக வளைக்கப்பட்ட கொடிய வில்லின்மேல், பாசுபதம் வாளி வைப்பது - பாசுபதாஸ்திரத்தை வைத்துத் தொடுப்பதாக, மனம் செயா - எண்ணி, முட்ட வன்பினொடு நின்ற காலையில்-மிகக் கொடுமையோடு நின்ற பொழுதில்,—வியாதன் என்று உரை கொள் முனிவரன் - வியாசனென்று புகழ்பெற்ற சிறந்தஇருடி, தொட்ட தண்டுஉம் மிதியடி உம் ஆகி - கையிலேந்திய பிரமதண்டமும் (பாதத்தில் தரித்த) பாதுகையுமுடையவனாய், உயர் சுருதி வாய்மையொடு - சிறந்த வேதவாக்கியங்களுடனே [வேதவாக்கியங்களை உச்சரித்துக் கொண்டு], தோன்றினன் - (அங்கு) எழுந்தருளினன்; (எ - று.)

பாசுபதம் - பசுபதியை[சிவபிரானை)த்தெய்வமாகவுடையது. மிதியடி - அடியினால் [கால்களினால்] மிதிக்கப்படுவதுஎனப் பொருள்படுங் காரணக்குறி.

இதுமுதல் இச்சருக்கமுடியுமளவுமுள்ள ஒன்பது கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், இரண்டு நான்கு ஆறுஞ்சீர்கள் கூவிளங்காய்ச்சீர்களும், ஏழாவது விளச்சீருமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள். (659)

43.—வியாசன் அசுவத்தாமனுக்குச் சமாதானங் கூறுதல்.

நின்றசாபமுனிமைந்தன்வந்தமுனிநிருபனைப்பரமனிகரெனச்
சென்றுகைதொழுதுபரசிடப்பரிவுதீர்கருத்தினெடுசெப்பினன்
அன்றுபோரிலழியாகசேனன்மகனழலினூடுவருசாபமும்
வென்றிவாகைபுனைவிசயனேடுகருமேகவண்ணன்வருவிதியுமே.

(இ - ள்.) நின்ற சாபம் முனி மைந்தன் - போரில்நின்ற வில்லுக்கு உரிய துரோணனது புத்திரனான அசுவத்தாமன், வந்த முனி நிருபனை - (அங்கு) வந்துசேர்ந்த முனிவர்தலைவனான வியாசனை, பரமன் நிகர் என - யாவரிலுஞ்சிறந்த கடவுளோடு ஒப்பாக (எண்ணி), சென்று கைதொழுது - (எதிர்கொண்டு) அருகிற் சென்று கைகூப்பிவணங்கி, பரசிட - துதிக்க,—(அம்முனிவன்),—பரிவு தீர் கருத்தினொடு - (அசுவத்தாமனது) துன்பத்தை நீக்குங் கருத்துடனே,—அன்று போரில் அழி யாகசேனன் மகன் அழலினூடு வரு சாபம்உம் - அக்காலத்திற் போரிலே (துரோணசிஷ்யனான அருச்சுனனுக்குத்) தோற்ற துருபதனது புத்திரனாகிய திட்டத்துய்மன் யாகாக்கினியினின்று வந்த வரத்தையும், வென்றி வாகை புனை விசயனேடு கரு மேகவண்ணன் வரு விதிஉம் - வெற்றிக்கு அறிகுறியான வாகைப்பூமாலையைச்சூடிய அருச்சுனனுடன் காளமேகவண்ணனான கண்ணபிரான் திருவவதரித்த முறைமையையும், செப்பினன் - (அவனுக்கு) எடுத்துக்கூறியருளினான்;

தவறுமைபற்றியும், துரோணனுக்குத் தீங்காய் முடிதல்பற்றியும், திட்டத்துய்மன் வரத்தோடு பிறந்தமை 'சாபம்' எனப்பட்டது. நான்காமடியிற் குறித்த செய்தி, பூமிபாரந்தீர்த்தற்குநரநாராயணர் கிருஷ்ணார்ச்சுனராய்த் தோன்றியமையாகும். (660)

44.—வியாசன் அசுவத்தாமனுக்குச் செய்யும் உபதேசம்.

வரத்தினுலுனதுதந்தைபோரினின்மடிந்ததன்றியொருவயவர்தஞ்
சரத்தினுலவனைவெல்லவல்லவர்தராதலத்தின்மிசையில்லையால்
உரத்தினுல்விறன்மயூரவாகனனையொத்தவீரவினியுள்ளுறச்
சிரத்தினுலரனையடிவணங்கியிடர்தீருமாறுநனிசிந்தியாய்.

இதுவும், அடுத்த கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) உரத்தினுல்-வலிமையினுல், விறல் மயூர வாகனனை ஒத்த-பராக்கிரமமுள்ளவனான மயில்வாகனமுடைய சுப்பிரமணியனைப் போன்ற, வீர-வீரனே! உனதுதந்தை - உனது பிதாவான துரோணன், வரத்தினுல்-(துருபதன்பெற்ற) வரத்தினுல், போரினில் மடிந்தது அன்றி-போரில் இறந்ததே யல்லாமல், தம் சரத்

தினால் அவனை வெல்ல வல்லவர்-தமது அம்பினால் அத்துரோணனைச் சயிக்க வல்லமையுடையவர், ஒரு வயவர்-ஒருவீரரும், தராதலத்தின்மிசை இல்லை-இந்நிலவுலகத்தில் இல்லை: இனி—, உள் உற-மனப்பூர்வமாக, சிரத்தினால்-(உனது) தலையினால், அரனை அடி வணங்கி-சிவபிரானைத் திருவடிதொழுது, இடர் தீரும் ஆறு-பிறவித்துன்பம் நீங்கும்படி, நனி சிந்தியாய் - மிகவும் தியானிப்பாயாக; (எ-று.)

இனி, வரத்தினால்-துரோணன்தான் அளித்த வரத்தினால்: போர்த்தொடக்கத்திலே பாண்டவரை முன்னிட்டுக்கொண்டுவந்து தன்னைப்புகழ்ந்து தன்னைக்கொல்லும் வகையைக் கூறுமாறு தன்னையேவேண்டிய கண்ணனுக்குத் துரோணன் தானே சொல்லிக்கொடுத்த உபாயத்தின்படி யெனினுமாம். (661)

45.—வியாசன் உபதேசித்து மீள, சூரியன் அஸ்தமித்தல்.

ஒன்றவைம்புலனைவென்றுநீடுதவமுரிமையிற்புரிதியுற்பவம்
பொன்றவென்றுறுதிகூறியன்பொடுபுகுந்ததெய்வமுனிபோதலு
மன்றவென்றுமிவர்செற்றதிற்சதமடங்குசெற்றனர்களின்றெனு
நின்றவென்றும்வெளிநிற்றலஞ்சிநெடுநீலவேலையின்மறைந்ததே.

(இ - ள்.) 'உற்பவம் பொன்ற-பிறப்பு ஒழியும்படி, ஐம் புலனை -ஐந்து பொறிகளின் ஆசையையும், ஒன்ற-ஒருசேர, வென்று - சயித்து [அடக்கி], நீடு தவம்-மிக்க தவத்தை, உரிமையின்-உரிய ஒழுக்கத்துடனே, புரிதி-செய்வாயாக', என்று—, உறுதி கூறி - உறுதிமொழிசொல்லி [உபதேசித்து], அன்பொடு புகுந்த தெய்வம் முனி-அன்போடுவந்த தெய்வத்தன்மையுள்ள வியாசமுனிவன், போதலும்-சென்றவளவிலே,—என்றும் இவர் செற்றதின் -எந்நாளிலும் இவர்கள் அழித்தவளவினும், இன்று-இன்றைக்கு, சதமடங்கு-நூறுமடங்கு அதிகமாய், மன்ற-நிச்சயமாக, செற்றனர்கள்-அழித்தார்கள், எனு-என்று எண்ணி, வெளி நிற்றல் அஞ்சி-வெளியிலேநிற்பதற்குப் பயந்து, நின்ற என்றும் நெடு நீலம் வேலையில் மறைந்தது - (வானத்தில்) நின்ற சூரியமண்டலமும் பெரிய நீலநிறமுள்ள (மேல்) கடலில் மறைந்திட்டது; (எ - று.)
—ஏதுத்தற்குறிப்பேற்றவணி. (662)

46.—இருதிறத்தவரும் படைவீட்டை யடைதல்.

இருள்பரந்ததினியமையுமிற்றையமரென்றுதுன்றுகழலிட்டதா
ளருள்பரந்தவிழியறனின்மைந்தனெடுசேனைபாசறையடைந்தபின்
உருள்பரந்தரததுரககுஞ்சரபதாதியோடுகடிதோடினான்
மருள்பரந்தனிநெஞ்சனாகியடன்மன்னர்மன்னனெனுமன்னனே.

(இ - ள்.) இருள் பரந்தது-இருட்டுப் பரவிவிட்டது: இற்றை அமர் இனி அமையும்-இன்றைத்தினத்துப்போர் இவ்வளவோடு போதும், என்று-என்று நிச்சயித்து, துன்று கழல் இட்ட தாள் அருள் பரந்த விழி அறனின் மைந்தனெடு-பொருந்தியவீரக்கழலையணிந்த பாதத்தையும் கருணை பெருகுகின்ற கண்களையுமுடைய

தருமபுத்திரனுடனே, சேனை-(அவனுடைய) சேனையும், பாசறை அடைந்த பின்-படைவீட்டை யடைந்த பின்பு,—அடல் மன்னர் மன்னன் எனும் மன்னன்-வலிமையையுடைய இராசராசனென்று பெயர் பெற்ற துரியோதனராசன், மருள் பரந்த தனி நெஞ்சன் ஆகி-(துரோணவதத்தால்) மயக்கம்மிக்க தனித்த மனமுடைய வனாய், உருள் பரந்த ரததுரக குஞ்சர பதாதியோடு-சக்கரங்களால் விரைந்துசெல்லுகின்ற தேர்களும் குதிரைகளும் யானைகளும் காலாள்களுமாகிய சதுரங்கசேனையுடனே, கடிது ஓடினான் - விரைவாக ஓடிப்போனான்; (எ - று.) பி-ம்: மைந்தனடு. பரந்திரத. (663)

47, 48.—இரண்டுகவிகள் ஒருதொடர்: துரியோதனன் சஞ்சயனைத் தந்தையிடம் அனுப்புதலைத் தெரிவிக்கும்.

தனதுபாசறையிலானவக்குரிசில்சஞ்சயன்றனையழைத்துநீ
நினதுகாதலுயிரனையவெந்தைதனைநிசிதனிற்கடிதினெய்தியே
புனைதுழாய்மவுலிவிரகினான்முரசுயர்த்தபூபனுரைபொய்த்ததும்
எனதுவாழ்வுவலிவென்றிதேசுறுதியாவுமாமுனியிறந்ததும்.

தனஞ்சயன்றலைதுணிக்கநின்றவரிசாபகோபமுதிர்சாயகத்
தினஞ்செய்நாதனருள்செல்வமாமதலைசேனைநாதனினியாவதும்
இனஞ்செய்வண்டுமுரலுமமார்பனெடியயபிமேனிகழ்வயாவையு
மனஞ்செய்திவ்விரவுபுலருமுன்கடிதின்வருகவென்றனன்வணங்கியே.

(இ-ள்.) (47) தனது பாசறையில் ஆன - தன்னுடைய படைவீட்டிற் சேர்ந்த, அ குரிசில்-அந்தத்துரியோதனராசன்,—சஞ்சயன் தனை அழைத்து - சஞ்சயமுனிவனை வரவழைத்து,—(48) வணங்கி -நமஸ்கரித்து,—(அவனைநோக்கி), —(47) 'நீ—,—நினது காதல் உயிர் அனைய எந்தை தனை-உன்னுடைய அன்புக்கிடமான உயிரையொத்த [பிராணசிநேகிதனான] என்தந்தையை, நிசிதனில் - இவ்விரவிலே, கடிதின் எய்தி - விரைவாய் அடைந்து,—புனை துழாய் மவுலி - தரித்த துளசிமாலையையுடைய முடியையுடையவனான கண்ணனது, விரகினால் தந்திரத்தால், முரசு உயர்த்த பூபன் உரைபொய்த்ததுஉம் - முரசக்கொடியை உயரவெடுத்த யுதிட்டிரராசன் பொய்பேசியதையும்,—எனது வாழ்வு வலி வென்றி தேசு உறுதி யாஉம் ஆம் முனி-என்னுடையசெல்வவாழ்க்கையும் வலிமையும் வெற்றியும் ஒளியும் தைரியமும் ஆகிய எல்லாவற்றி னுருவமுமாயிருந்த துரோணன், இறந்ததுஉம் - இறந்ததையும்,—(48) தனஞ்சயன் தலை துணிக்க நின்ற - அருச்சுனனது தலைதுணித்தற்குத் துணிந்துநின்ற, வரி சாபம் கோபம் முதிர் சாயகம் - கட்டமைந்த வில்லையும் கறு மிக்க நாகாஸ்திரத்தையுமுடைய, தினம் செய் நாதன் அருள் செல்வம் மா மதலை - பகலைச்செய்கின்ற தலைவனான சூரியன் பெற்ற சிறந்த செல்வப்பிள்ளையாகிய கர்ணன், இனி சேனாநாதன் ஆவதுஉம் - இனிமேல்(எனக்குச்)சேனைத்தலைவனாவதையும்,—இனம் செய் வண்டு

முரல் தாமம் மார்பனொடு - திரளாகச்சேர்கின்ற வண்டுகள் மொய்த்தொலிக்கப்பெற்ற மாலையைத்தரித்த மார்பையுடைய வனான அத்தந்தையுடனே, இயம்பி - சொல்லி,—மேல் நிகழ்வ யாவைஉம் மனம் செய்து - இனி நடக்கவேண்டியவையெல்லா வற்றையும் ஆலோசித்துக்கொண்டு,—இ இரவு புலரும் முன் கடிதின் வருக - இவ்விராத்திரி கழிந்து விடிவதற்கு முன்னமே விரைவில் மீண்டுவருவாயாக', என்றனன் - என்றுசொன்னான்;

49.—சஞ்சயன் திருதராட்டிரனிடஞ் சென்று மீளுதல்.

அந்தவந்தணனுமந்தனோடிவையனைத்துமோதியபினந்தனுஞ்
சிந்தைநொந்தழுதிரங்கியாவும்வினைசெய்திரங்குவதுதீதெனு
மந்தணம்பெருகவெண்ணிமீளவிடவந்துநள்ளிருளின்மைந்தனுக்
குந்தைதந்தவுரையிதுவெனப்புரையிலுரைபுரோகிதனுமுரைசெய்தான்.

(இ - ள்.) அந்த அந்தணன்உம் - அந்தச்சஞ்சயமுனிவனும், அந்தனோடு-(பிறவிக்) குருடனான திருதராட்டிரனுடன், இவை அனைத்து உம் ஓதியபின் - (சென்று) இவை யெல்லாவற்றையுஞ் சொன்னபின்பு,—அந்தன்உம்- திருதராட்டிரனும், சிந்தைநொந்து அழுது இரங்கி-மனம்வருந்திப் புலம்பிச்சோகித்து, வினை யாஉம் செய்து இரங்குவது தீது எனு-தொழில்களை யெல்லாஞ் செய்து விட்டு(ப் பின்பு) அநுதபிப்பது தீயது என்று கருதி, பெருக மந்தணம் எண்ணி - மிகுதியாக மந்திராலோசனைசெய்து, மீள விட-(அச்சஞ்சயனைத்) திரும்ப அனுப்ப,—புரோகிதன்உம் - புரோகிதனான அச்சஞ்சயமுனிவனும்,நள் இருளில்-நடுராத்திரியிலே,வந்து-மீண்டுவந்து, மைந்தனுக்கு-திருதராட்டிரபுத்திரனான துரியோதனனுக்கு, உந்தை தந்த உரை இது என புரை இல் உரை உரை செய்தான் - உன்தந்தை சொல்லியனுப்பிய வார்த்தை இது வென்று குற்றமில்லாத (சில) வார்த்தைகளைச்சொன்னான்;(எ-று.)

ஒருகாரியத்தைச் செய்யத்தொடங்குமுன் அதைப்பற்றித் தீரவிசாரிக்கவேண்டுமே யன்றிச் செய்தபின்பு அதைக்குறித்துக் கழிவிரக்கமாக வருந்துவது தகுதியற்றது என்பது, இரண்டா மடியின் கருத்து; "எற்றென்றிரங்குவசெய்யற்கசெய்வானேன், மற்றன்னசெய்யாமை நன்று" என்பது, திருக்குறள். பி- ம்: புரோகிதனுமோதினான். (666)

50.—மறுநாட் சூரியோதய வருணனை.

புதல்வ னைதிற லிங்கர் பூபனிருள் புலரு முன்பொருப டைக்குமா
முதல்வ னுமெனம கிழ்ந்து வாளிரவி முந்து தேர்கடவி யுந்தினன்
அதல மாதியுல கேழு மாளுடைய வரவின் மாமணிய னைத்தும்வந்
துதய மால்வரையி னுச்சி யுற்றதுகொ லென்ன மேதினியு ரைக்கவே.

(இ - ள்.) 'இருள் புலரும் முன் - இருட்பொழுது கழிந்து விடிவதற்கு முன்னமே [விடிந்தவளவிலே யென்றபடி],புதல்வன்

ஆன திறல் அங்கர் பூபன் - (தனது) மகனை வலிய அங்கநாட்டார்க்கு அரசனாகிய கர்ணன், பொரு படைக்கு மா முதல்வன் ஆம்- போர்செய்கின்ற (கௌரவ) சேனைக்குச் சிறந்த தலைவனாவன்', என-என்றுஎண்ணி, மகிழ்ந்து-மகிழ்ச்சிகொண்டு,—வாள் இரவி- ஒளியையுடைய சூரியன்,—'அதலம் ஆதி உலகு ஏழ்உம் ஆள் உடைய - அதலம் முதலிய கீழேழுலகங்களையும் ஆளுதலுடைய, அரவின்-சர்ப்பராசனான ஆதிசேஷனது, மாமணி அனைத்துஉம்- சிறந்த மாணிக்கமெல்லாம், மால் உதயம் வரையின் உச்சி-பெரிய உதயகிரியின் சிகரத்திலே, வந்து உற்றது கொல் - வந்துசேர்ந்ததோ?' என்ன - என்று, மேதினி - நிலவுலகத்தவர், உரைக்க - சொல்லும்படி,—முந்து தேர் கடவி உந்தினன்-சிறந்த தேரை (த் தனதுபாகனான அருணன்மூலமாக) நடத்திக்கொண்டு தோன்றினன்; (எ - று.)

பயன்தற்குறிப்பேற்றவணி. பின்னிரண்டடி, சூரியனது ஒளிக்கு ஆதிசேஷனது மாணிக்கங்களின் ஒளியை உவமை கூறிய வாறு. (667)

பதினைந்தாம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

துரோண பருவம்

முற்றுப்பெற்றது.

செய்யுள் முதற்குறிப்பகராதி

---

*இந்த உடுக்குறியிட்டுள்ள பாடல்கள் முன்பு அச்சிட்ட பிரதிகளில் மாத்திரம் காணப்படுவன. எட்டுப்பிரதிகளுள் எதனிலும் இல்லாதன.

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	13	விநாசமூ	விநாசமு
36	26	க்துப்பு	கதுப்பு
69	6	சக்ரனென,	சக்ரனென.
87	16	ளாணமை	ளாண்மை
117	15	மதலையை	மதலையை,
,,	38	தேஸே	தேசே
129	4	துசன்	துவசன்
130	32	தறிந்தர்ன்,	தறிந்தான்.
131	4	கவிககள்	கவிகள்
133	42	தகுவர்	பி - ம்: தகுவர்
151	19	கருதி	சுருதி
154	24	அபிமனேச்	அபிமனே
156	5	சுடால	சுடாலம்
,,	28	விழுந்த தன்மை	விழுந்தன்மை
162	19	ஓம்பற்ற	ஒப்பற்ற
179	44	தவன	தவன்
189	34	மூதலவன்	முதல்வன்
196	41	இரண்டடித்	இரண்டிடத்
201	16	குறிப்	குறிப்புப்
207	7	விஞவி	வினவி
,,	31	திரிபுரத்தைசிரி	திரிபுரத்தைச்சிரி
213	22	( ) கருணையோடு	(கருணையோடு)
255	17	அம்புமாம	அம்புமாம்
256	7	ஓர்	ஓர்
261	3	யிழிக்க	யழிக்க
278	8	வேரூர்	வேரூர்
365	19	செர்ன்ஞன்	சொன்ஞன்
367	25	மறாடர்	மாறடர்
381	39	பலம்நினற	பலம்பநின்ற
393	1	பதிந்னே	பதினேந்

மற்றும் பிழைகள் காணப்படின் திருத்திக் கொள்ளவும்.

எட்டாவது

கன்ன பருவம்.

இந்தத்தொடர்க்கும் வீட்டுமபருவம் என்பதற்குப் பொருள் கூறியவாற்றை ஒட்டிப்பொருள் உரைத்துக்கொள்க. கன்னன் - கர்ணனென்பதன் சிதைவு.

பதினாறும்போர்ச்சருக்கம்.

1.—தெய்வவணக்கம்.

மாதுல னாகியு மேதில னாகிய வஞ்சன் கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலைபொழி பாலொடு போதர வுண்ட புயல்வண்ணா
மாதவ யாதவ வாசவ கேசவ மாயா வாயா மதுசூதா
வாதியு மந்தமு மாகிய நின்புக ழல்லா துரையே னடியேனே.

(இ - ள்.) மாதுலன் ஆகிஉம் - மாமனாக இருந்தும், ஏதிலன் ஆகிய - பகைவனான, வஞ்சன் - வஞ்சனையையுடையவனாகிய, கஞ்சன் - கம்சன், வர விட்ட-செல்லும்படி ஏவியனுப்பிய, பூதனை தன்-பூதனையென்பவளது, உயிர் - பிராணன், முலை பொழி பாலொடு - அவள்முலையினின்று பெருகிய பாலுடனே, போதர - (உடம்பைவிட்டு) நீங்கும்படி, உண்ட-முலையுண்ட, புயல் வண்ணா- மேகம்போலுங் கரிய திருநிறமுடையவனே! மா தவ - இலக்குமி கணவனே! யாதவ - யதுகுலத்தில் திருவவதரித்தவனே! வாசவ- உபேந்திரனானவனே! கேசவ - பிரமனையும் உருத்திரனையும் அங்கத்திற்கொண்டவனே! மாயா - மாயையையுடையவனே! ஆயா- இடையர்குலத்தில் வளர்ந்தவனே! மது சூதா - மதுவென்னும் அசுரனை அழித்தவனே! ஆதி உம் அந்தம் உம் ஆகிய - (எல்லாப் பொருள்கட்கும்) முதலும் ஈறுமான, நின்-உனது, புகழ் அல்லாது- கீர்த்தியையே (எப்பொழுதுஞ் சொல்லுவேனே) யல்லாமல், (வேறொன்றையும்), அடியேன் - (உனது) அடியவனாகிய யான், உரையேன் - (ஒருபொழுதுஞ்) சொல்லேன்; (எ - று.)

இந்திரனைக்காத்தற்பொருட்டு அவன் வேண்டுகோளினால் அவனுக்குத் தம்பியாகத் திருவவதரித்து விரோதிநிரஸநஞ் செய்து அவனருகில் எழுந்தருளியிருக்கின்ற உபேந்திரமூர்த்தியை 'வாசவ' என இந்திரன்பெயராற் கூறினர்; இனி, வாசவ- இந்திரஸ்வரூபியானவனே என்றேனும், எல்லா ஐசுவரியமும் உடையவனே என்றேனும் பொருள் கூறலாம். க்ஷத்திரியஜாதியிலே சிறந்த சந்திரவமிசத்திற் பேர்பெற்ற யதுகுலத்திற் பிறந்திருந்தும் இடையர் சாதியிற்சேர்ந்து வளர்ந்து கன்று மேய்த்து ஒருத்தி கட்டவும் ஒருத்தி குட்டவுந் தன்னைக் காட்டிக்கொடுத்த சௌலப்பியகுணத்தின் மிகுதி விளங்க, 'ஆயா' என்றார். 'யாதவ, ஆயா' என்னுஞ் சொற்களினால் வசுதேவகுமாரனாய்த் தேவகி திருவயிற்றிலுதித்து நந்தகோபர்மனையில் யசோதையின் மகனாய் வளர்ந்

தருளிய கண்ணனது தன்மை கூறப்பட்டதனால், சூரியபுத்திரனைக் குந்திவயிற்றிலுதித்துத் தேர்ப்பாகன்மனையில் ராதைமகனாய் வளர்ந்த கன்னனது போரைக் கூறுகின்ற இப்பருவத்துக்கு இக்காப்புச்செய்யுள் மிகப்பொருந்துமாறு உய்த்துணர்க. பி - ம்: ஏதிலனாகியும்.

இதுமுதற் பதினொருகவிகள் - பெரும்பாலும் முதல்நான்குசீர் விளச்சீர்களும், ஐந்து ஆறாஞ் சீர்கள் மாச்சீர்களும், ஈற்றுச்சீரொன்று மாங்காய்ச்சீருமாகிய கழிநெடிலடிநான்கு கொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள். (1)

2.—துரியோதனன் கர்ணனைச் சேனாபதியாக்கிப் போர்க்களஞ்சேர்தல்.

கங்கைமகன்சிலையின்குருவென்பவர்காதிமலைந்தேகையற்றார்
இங்கினியென்னுயிர்நண்பனையல்லதுவெல்லவல்லோரிலரென்றே
யங்கர் பிரானைவருதினியின்பதியாகென்றருள்செய்தவனோடும்
வெங்களமுற்றனனஞ்சுமிழுங்கொடிவேகநாகவிறலோனே.

(இ - ள்.) நஞ்சு உமிழும் - விஷத்தைக் கக்குகின்ற, வேகம் - சினமிகுதியுள்ள, நாகம் - சர்ப்பத்தின் வடிவத்தை யெழுதிய, கொடி - துவசத்தையுடைய, விறலோன் - வலிமையையுடையவனான துரியோதனன்,—'கங்கை மகன் - கங்கையின் புத்திரனாகிய பீஷ்மனும், சிலையின் குரு - வில்லாசிரியனாகிய துரோணனும், என்பவர் - என்று சிறப்பித்துச்சொல்லப்படுகின்ற வீரர்கள், காதி மலைந்துஏ - (தம்மால் ஆனமட்டும் பகைவரைக்) கொன்று போர்செய்தே, கையற்றார் - செயலொழிந்துஅழிந்தனர்; இனி - இனிமேல், இங்கு - இப்போரில், வெல்ல வல்லோர் - (பகைவரைச்)சயிக்க வல்லவர், என் உயிர் நண்பனை அல்லது - எனது உயிரோடொத்த சிநேகிதனாகிய கர்ணனையேயல்லாமல், இலர் - (வேறுஎவரும்) இல்லை,' என்றுஏ - என்று துணிந்தே,—அங்கர் பிரானை - அங்கதேசத்தார்க்கு அரசனாகிய கர்ணனை, வருதினியின் பதி ஆக என்று - 'சேனைக்குத் தலைவனாகுக' என்று, அருள் செய்து - அருளோடு சொல்லி,—அவனோடுஉம் - அக்கர்ணனுடனே,—வெம் களம் - கொடிய போர்க்களத்தை, உற்றனன் - அடைந்தான்; (எ - று.)

பீஷ்மதுரோணாதியர் தொலைந்தபின்பும் போர்செய்யுந்துணிவு சிறிதும் ஒழிந்திலனாதலால், 'விறலோன்' என்றார். (2)

3.—பாண்டவர் போர்க்களஞ் சேர்தல்.

சொற்றவறாததுரோணனைமௌலிதுணித்ததிட்டத்துய்மன்னுங்
கொற்றவரைவருமற்றுளபூபரும்வைனதேயக்கொடியோனும்
உற்றெழுகசரததுரகபதாதிகளானசேனையுடனேசென்
றிற்றையருஞ்சமம்வெல்லுதலெங்கடனென்றுதுன்றியெதிர்கொண்டார்.

(இ - ள்.) சொல் தவறாத - வார்த்தைதப்பாத, துரோணனை - துரோணாசார்யனை, மௌலி துணித்த - தலையறுத்திட்ட, திட்டத்

துய்மன்உம்-த்ருஷ்டத்யும்நனும், கொற்றவர் ஐவர்உம் - வெற்றியையுடைய பஞ்சபாண்டவர்களும், மற்று உள பூபர்உம் -, மற்றுமுள்ள அரசர்களும், வைனதேயன் கொடியோன்உம் - கருடத்துவசத்தையுடையவனான கிருஷ்ணனும்,—உற்று எழு-திரண்டு புறப்படுகின்ற, கச ரத துரக பதாதிகள் ஆன - யானைகளும் தேர்களும் குதிரைகளும் காலாள்களுமாகிய (நான்கு அங்கங்களையுடைய) சேனையுடனே - சேனையோடு, சென்று - (போர்க்களத்துக்குப்) போய்,—'இற்றை அருஞ் சமம் - இன்றைத்தினத்து அரிய யுத்தத்தில், வெல்லுதல்-(பகைவரைச்) சயித்தல், எம் கடன்-எமது கடமை,' என்று-என்று எண்ணிக்கொண்டு, துன்றி-நெருங்கி, எதிர்கொண்டார்-(பகைவர் சேனையை) எதிர்த்தார்கள்; (எ - று.)

'சொற்றவருத துரோணன்' என்றது - சபதஞ்செய்தபடி அருச்சுனனைக்கொண்டு துருபதனை வென்று கட்டிக்கொணரச் செய்ததனாலும், முதல்நாள்போரிற் க்ருஷ்ணன் முன்னிலையிற் சொன்னபடி அசுவத்தாமன் இறந்தமைகேட்டுச் செயலொழிந்து திருஷ்டத்யும்நனாற் கொல்லப்பட இறந்ததனாலும். இனி, அருள் கொண்டு கூறினாலும் வெகுண்டு கூறினாலும் அந்தந்தப் பயன்களைத் தந்தே விடுகின்ற நிறைமொழிகளை யுடைமையாலென்றுமாம். (3)

4.—கர்ணன் தன்சேனையை மகரவியூகமாக வகுத்தல்.

கற்கியும்வண்டினமொய்க்கமதம்பொழிகரியுந்தேருங்காலாளும்
பொற்கொடியுங்குடைவர்க்கமுமாலையுமுன்னுளரென்னும்பூபாலர்
நிற்குநிலந்தொறுநிற்குநிலந்தொறுநின்றுநின்றுவினைசெய்ய
மற்கெழுதிண்புயவர்க்கன்மகன்பெருமகரயூகம்வகுத்தானே.

(இ - ள்.) மல் கெழு-மற்போரில் வல்ல, திண் புயம் - வலிய தோள்களையுடைய, அர்க்கன் மகன்-சூரியகுமாரனாகிய கர்ணன்,— கற்கிஉம்-குதிரைகளும், வண்டு இனம் மொய்க்க மதம் பொழி கரிஉம் - வண்டுக்கூட்டம் மொய்க்கும்படி மதநீரைச் சொரிகின்ற யானைகளும், தேர்உம்-இரதங்களும், காலாள்உம் - பதாதிகளும், பொன் கொடிஉம்-பொற்காம்பையுடைய துவசங்களும், குடை வர்க்கம்உம்-குடைவரிசைகளும், மாலைஉம்-(போர்க்கு உரிய) மாலைகளும், முன்-முதலியவற்றை, உளர்-உடையவர், என்னும்-என்று சொல்லப்படுகின்ற, பூபாலர்-அரசர்கள், நிற்கும் நிலம்தொறுஉம் நிற்கும் நிலம்தொறுஉம்-(தாம் தாம்) நிற்பதற்குஉரிய இடங்கள் தோறும், நின்றுநின்று—, வினை செய்ய-போர்த்தொழிலைச் செய்யும்படி, பெரு மகரயூகம் வகுத்தான் - பெரிய மகரவியூகமாக (த் சேனையை) அணிவகுத்தான்; (எ - று.)

பொன்-அதனாலாகிய காம்புக்குக் கருவியாகுபெயர். மகரத்தின் வாயிடத்திலே கர்ணனும், கண்களிலே சகுனியும் உலூகனும், சிரசிலே அசுவத்தாமனும், கழுத்திலே துரியோதனன் தம்பிமாரனைவரும், இடையிலே பெருஞ்சேனைசூழ்ந்த துரியோதனனும்,

முன் இடக்காலிலே நாராயணகோபாலரோடு கூடிய கிருதவர்மா வும், வலக்காலிலே திரிகர்த்தரோடுந் தென்னாட்டாரோடுங் கூடின கிருபனும், பின் இடக்காலிலே தன் பெருஞ் சேனையுடன் சல்லிய னும், வலக்காலிலே ஆயிரந்தேரோடும் முந்நூறுயானையுடனும் சுசேனனும், வாலிலே பெருஞ்சேனைசூழ் தசித்திர சித்திரசேனரும் நின்றனரென்று வியாசபாரதத்திற்கூறப்பட்டுள்ளது. பி-ம்: ஒன்ற ரெண்ணும் பூபாலர். (4)

5.—கௌரவசேனை பாண்டவசேனையோடு போர்தொடங்குதல்.

பானுவின்மைந்தன்முனைந்துமகீபதிமைந்தன்சேனுபதியானன்
போனவருஞ்சமர்போகதனித்தனிபொருதுவேறும்போரென்றே
சேனையின்மன்னவர்யாவரும்வெம்பரிமாவின்மேலுந்தேர்மேலும்
யானையின்மேலுமிருந்தவரவ்வவர்தம்மொடம்மவிகலுற்றார்.

(இ-ள்.) வெம் பரிமாவின் மேல்உம்-கொடிய குதிரைகளின் மேலும்,தேர்மேலும்—,யானையின்மேலும்—, இருந்தவர்-இருந்தவ ராகிய, சேனையின மன்னவர் யாவர்உம் - (துரியோதன) சேனையி லுள்ள அரசர்கள் எல்லாரும்,— 'பானுவின் மைந்தன்-சூரிய புத் திரனாகிய கர்ணன், முனைந்து - மிகமுயன்று, மகீபதி மைந்தன் சேனுபதி ஆனான்-(இன்றைக்குத்) திருதராஷ்டிரன்மகனான துரி யோதனனது சேனைக்குத் தலைவனாயினான்: போன அருஞ் சமர் போக-இத்தனைநாளாய்க் கழிந்த அரிய போர் கழிக: (இனி), தனி தனி போர் பொருது-தனித்தனியே போர்செய்து, வேறும் - (பகை வரை) வெல்வோம்,' என்று-என்றுதுணிந்து,—அ அவர் தம்மோடு -அவ்வவ்வாறு குதிரைமுதலியவற்றின்மேலிருந்த எதிரிகளுடனே, இகல்உற்றார்-போர்தொடங்கினார்கள்;(எ-று.)—அம்ம-உக்கிரமாகப் போர்தொடங்கிய தன்மையை விளக்கவந்த வியப்பிடைச்சொல். வேறும்-தன்மைப்பன்மை வினைமுற்று, வெல்-பகுதி. (5)

6.—திட்டத்துய்மன் சக்கரவியூகம் வகுக்க, வீமன் யானைமேலேறுதல்.

நாமமிரண்டொடுபத்துடைநாயகனவிலவெஞ்சேனையினாதன்
மாமருகொற்றவரூதினிவேலையைமருவாரஞ்சிவெருவெய்த
நேமிவியூகமதாகவகுத்திடைநின்றுபோர்செய்நிலயத்தில்
வீமன்வயம்புனைதேரினைவிட்டொருவெம்போர்வேழமேல்கொண்டான்.

(இ-ள்.) நாமம் இரண்டொடு பத்து உடை - பன்னிரண்டு திருநாமங்களையுடைய, நாயகன்-(யாவர்க்குந்)தலைவனாகியகிருஷ்ண பகவான், நவில-சொல்ல, (அச்சொல்லின்படி), வெம் சேனையின் நாதன்-(பாண்டவரது) கொடிய சேனைக்குத் தலைவனான திட்டத் துய்மன், மா மரு - பெருமைபொருந்திய, கொற்றம் - வெற்றியை யுடைய, வரூதினி-(தன்) சேனையாகிற, வேலையை-கடலை, மருவார் அஞ்சி வெருவு எய்த-பகைவர்கள் (கண்டு) அச்சமுற்றுக் கலக்க மடையும்படி, நேமி வியூகமது ஆக - சக்கரவியூகமாக, வகுத்து- அணிவகுத்து, இடை நின்று-நடுவில் நின்று, போர் செய்-யுத்தஞ்

செய்கின்ற, நிலயத்தில் - இடத்தில்,—வீமன்-வீமசேனன்,-வயம் புனை தேரினை விட்டு-(தான் ஏறியிருந்த) வெற்றியைக்கொண்ட தேரை விட்டு இறங்கி, வெம்போர் - கொடிய போரைச் செய்ய வல்ல, ஒரு வேழம் மேல்கொண்டான் - ஒருயானையின்மேல் ஏறிக் கொண்டான்; (எ-று.)

நாமமிரண்டொடுபத்துடைநாயகன்-துவாதசநாமமுடையவன்: அந்நாமங்களாவன-கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விஷ்ணு, மதுசூதநன், திரிவிக்கிரமன், வாமநன், ஸ்ரீதரன், இருடீகேசன், பதுமநாபன், தாமோதரன் என்பன. சக்ரவ்யூஹம் - சக்கரம்போல வடிவமமையும்படி சேனையை வகுப்பது. பதினாறும் போர்நாளிற் பாண்டவசேனை அர்த்தசந்திர வியூகமாக வகுக்கப் பட்டதென வடமொழிப்பாரதத்தில் உள்ளது. (6)

7.—இதுமுதல் நான்கு கவிகள்-ஒருதொடர்: அந்தயானையின் வருணனை.

அடிக்கைகனத்துமதம்பொழியாழியினளவும்புகராலழகெய்தி
மடிக்கினுமண்ணுறுகையதுசெந்நிறவாயதுதேயாமதிதன்னை
யொடித்திருபக்கமும்வைத்தெனமகரிகையொன்றியொன்றியொன்னார்மெய்
யிடிக்கிமருப்பதுபுன்னையினுண்மலரென்னுஞ்சீரதிருகண்ணும்.

(இ - ள்.) அடிக்கை கனத்து - கையின் அடி பருத்து, மதம் பொழி ஆழியின் அளவுஉம்-மதசலத்தைச்சொரிகின்ற நுனிக்கை வரையிலும், புகரால்-செம்புள்ளிகளினால், அழகு எய்தி-பொலிவு பெற்று, மடிக்கின் உம் மண் உறு-மடக்கினாலும் நிலத்தளவுந் தாழ்ந்துதொங்குகின்ற, கையது-துதிக்கையையுடையது; செம் நிறம் வாயது-சிவந்த நிறத்தையுடைய வாயையுடையது; தேயா மதி தன்னை - குறையாத [பூர்ண] சந்திரனை, ஒடித்து - இரண்டு துண்டாக்கி, இரு பக்கம்உம் - இரண்டுபக்கங்களிலும், வைத்து என - வைத்தாற்போல, மகரிகை ஒன்றி - பூண்பொருந்தி,ஒன்னார் மெய் - பகைவரது உடம்பை, ஒன்றி இடிக்கும் - தாக்கிக் குத்துகின்ற, மருப்பது-தந்தங்களை யுடையது; இரு கண்உம் - இரண்டு கண்களும், புன்னையின் நாள் மலர் என்னும்-புன்னைமரத்தின் புதிய பூ வென்று உவமை கூறப்படுகின்ற, சீரது - தன்மையை யுடையது; (எ - று.)—மேற் பத்தாம்பாட்டில் வரும் 'அவ்வேழம்' என்பது இதுமுதல் மூன்று கவிகட்கும் எழுவாயாம். (7)

8. திலகமுமோடையுமிலகுறுநெற்றியதாலவட்டச்செவியாலே
பலதிசைமாருதமுய்ப்பதுசெம்புகர்பட்டின்றொழிலிற்பயில்கிற்ப
துல்கினைமேல்கொளுமவனதெனக்களியூறியதாலங்குலமொத்துக்
குல்வியமத்தகமொத்தகழுத்திலுயர்ந்ததம்பொற்குவடென்ன.

(இ - ள்.) திலகம்உம் - (சிந்தூரத்) திலகமும், ஓடைஉம் - பட்டமும், இலகு உறு - விளங்கப்பெற்ற, நெற்றியது - நெற்றியையுடையது; ஆலவட்டம் செவியால்-பெருவிசிறிபோன்ற காதுகளினால், மாருதம்-காற்றை, பல திசை - பலதிக்குக்களிலும், உய்ப்பது - வீசுவது; செம் புகர்-(உத்தம இலக்கணமாகிய)சிவந்த புள்ளிகள், பட்டின் தொழிலின் - செம்பட்டினாற் செய்த சித்திர

வேலைபோல, பயில்கிற்பது - பொருந்தப்பெற்றது; உலகினை மேல் கொளுமவனது என-(மூன்று) உலகங்களையும் அரசாளுகின்ற தேவேந்திரனது ஐராவதயானைபோல, களி ஊறியது - மதக்களிப்புப் பொருந்தியது; அங்குலம் ஒத்து - (உத்தம கஜலக்ஷணத்தின் படி) அங்குலங்கள் அமைந்து, குலவிய-விளங்குகின்ற, மத்தகம்-தலையானது, ஒத்த கழுத்தில்-(அதற்குத்)தக்க கழுத்தில், அம் பொன் குவடுஎன்ன - அழகிய பொன்மயமான (மேருமலையின்) சிகரம்போல, உயர்ந்தது - உயர்ந்திருக்கப்பெற்றது; (எ - று.)—

ஆலவட்டம் - தாலவ்ருந்தமென்பதன் சிதைவு. ஆல்-ஈற்றசை. பி - ம்: அவனிது. (8)

9. உரத்தினின்முச்சுழியுடையதுதாள்வலிகற்றூணெப்பென்றுரைசெய்யுந்
தரத்ததுவெண்ணெய்நிறத்தநகத்ததுதண்ணந்துளவனிலையொத்த
திரத்தினதாமைகிடந்தவெனும்புறவடியதங்கந்திண்ணென்றே
யுரத்ததுநல்லுதரத்ததிளங்கமுகொத்ததம்மவாலதி.

(இ - ள்.) உரத்தினில் - மார்பில், முச்சுழி உடையது-(உத்தம இலக்கணமாகிய) மூன்று சுழிகளை யுடையது; தாள் - கால்கள், வலி - வலிமையினால், கல் தூண் ஒப்பு என்று-கற்கம்பத்துக்கு ஒப்பானவை யென்று, உரை செய்யும்-சொல்லத்தக்க, தரத்தது - தன்மையையுடையது; வெண்ணெய் நிறத்த - வெண்ணெய் போலும் வெண்ணிறத்தையுடைய, நகத்தது-நகங்களையுடையது; தண் அம் துளவன் - குளிர்ந்த அழகிய திருத்துழாய்மாலையை யுடைய திருமாலினது, நிலை - வடிவத்தை, ஒத்த - போன்ற, திரத்தினது - (கருநிறத்) தன்மையையுடையது; ஆமை கிடந்தஎனும்-ஆமைகள் கீழே கிடந்தன வெனத்தக்க, புறம் அடியது - புறங்கால்களையுடையது; அங்கம் திண்ணென்று உரத்தது - உடம்பு திண்ணென்று வலிமையையுடையது; நல்உதரத்தது - அழகிய வயிற்றையுடையது; வாலதி-வால், இளங் கமுகுஒத்தது-இளமையான பாக்குமரத்தை ஒத்திருக்கப்பெற்றது; (எ - று.)—அம்ம-அசை; சிறப்புப் பற்றிய வியப்பிடைச்சொல்லுமாம். (9)

10. தூணும்விலங்குமுறிப்பதுபாகுபரிக்கோல்யாவுந்தூரத்தே
காணினும்நின்றுகொதிப்பதுதன்னிழல்கண்டுசீறுங்கருத்தது
நீணடமுதலியதொழிலொருநாலுநிரந்ததுமேருநிகரென்னச்
சேணுயர்போதரவெழுமுழமுடையதுதெவ்வரஞ்சுமவ்வேழம்.

(இ - ள்.) தூண்உம் விலங்குஉம் முறிப்பது - கட்டுத்தறியை ஒடித்து (க் கட்டிய) இருப்புச்சங்கிலியை அறுத்துவிடத்தக்கது; பாகு - பாகனும், பரிக்கோல் - அங்குசமும் (முதலிய), யாஉம்-எல்லாவற்றையும், தூரத்து காணின்உம் - வெகுதூரத்திற் கண்டாலும், நின்று-(அஞ்சாமல்) நின்று, கொதிப்பது-மனம்வெதும்புந்தன்மையையுடையது; தன் நிழல் கண்டு - தனதுநிழலைப் பார்த்து, சீறும் - (வேறொருயானை யென்றெண்ணிக்) கோபிக்கின்ற, கருத்தது - எண்ணமுடையது; நீள் - நீண்ட [மேன்மையான], நடம் முதலிய - நடனம் முதலான, தொழில் ஒருநால்உம் -

நான்குதொழில்களும், நிரந்தது - நிரம்பப்பெற்றது; மேரு நிகர் என்ன - மகாமேருமலைக்குச் சமமென்னும்படி, சேண் உயர் போதர - மிக்க உயர்ச்சி பெற, எழு முழம் உடையது-ஏழுமுழம் உயரமுடையது; தெவ்வர் அஞ்சும் - பகைவர்கள் (கண்டு)அஞ்சும் படியான, அ வேழம்-அந்த (வீமனேறிய) யானை; (எ - று.)— தொழில்நான்கு-நடனம், துரிதகதி, மந்தகதி, ஓட்டம் என்பன. பி-ம்: நிரந்து. நீணடை முதலிய தொழில்களி யாவு நிரம்பி. சேணுயர் பேரளவுடையதிறத்தது. (10)

11.— மூன்றுகவிகள் - வீமனும் கேமதூர்த்தியும் யானைமீதிருந்து பொருதலைக் கூறும்.

ஆசில ருந்திற லாசுகன் மைந்தனு மாண்மைக் கெண்ணு மடல் வீரன்
காசிந ரேசனு மேழுயர் வெம்மத மாரி சிந்துங் கரிமேலோர்
தூசியின் முந்தமு னைந்துமு னைந்திரு தோலுந் தோலும் போர்செய்ய
வாசவ ரோரிரு வோரிரு கார்மிசை மலைவ தென்ன மலைவுற்றார்.

(இ - ள்.) ஆசு இல்-குற்றம்இல்லாத, அருந் திறல்-அருமையான வலிமையையுடைய, ஆசுகன் மைந்தன்உம்-வாயுகுமாரனான வீமனும், ஆண்மைக்கு எண்ணும்-பராக்கிரமத்தில் மதிக்கப்படுகின்ற, அடல் வீரன் - வலிய வீரத்தன்மையுடையவனாகிய, காசி நரேசன்உம்-காசிநகரத்தரசனான கேமதூர்த்தியும்,—ஏழ் உயர் வெம் மதம் மாரி சிந்தும் கரி மேலோர்-ஏழுமுழம் உயர்ந்ததும் வெவ்விய மதநீர்மழையைச் சொரிகின்றதுமான (தம்தம்) யானையின்மேலேறியவர்களாய்,—தூசியின் - முற்சேனையிலே, முந்த - முன்னே, முனைந்து-விரைந்துசென்று, இருதோல்உம் தோல்உம்-(தங்கள்) யானைகளிரண்டும், முனைந்து - கோபங்கொண்டு, போர் செய்ய - (ஒன்றோடொன்று) யுத்தஞ்செய்யாநிற்க,—வாசவர் ஓர் இருவோர்-இரண்டு இந்திரர், இரு கார்மிசை - (தம்வாகனமாகிய) மேகம் இரண்டன்மேல் (ஏறிக்கொண்டு), மலைவது என்ன - (தம்மிற்) போர்செய்வதுபோல, மலைவு உற்றார் - (ஒருவரோடொருவர்) போர்செய்யத் தொடங்கினர்; (எ - று,)

இந்திரர்-வீமசேனனுக்கும் கேமதூர்த்திக்கும், இந்திரனுக்கு வாகனமாகிய மேகம்-அவரேறிய கரியயானைக்கும் உவமை. வாசவரிருவர் தம்மில்மலைதல், இல்பொருளுவமை. திறலுக்கு ஆசு - தோல்வி. ஏழ்-ஏழுமுழத்துக்கு எண்ணலளவையாகுபெயர். பி-ம்: ஏழுயரேழ்மதமாரி. (11)

வேறு.

12. அங்குசம் வார்த்தை வன்று ளடைவினிற் பயிற்றி யேனை
வெங்கதி நடையோ டோட்டம் விதமுற விரைவிற் காட்டி
யங்கசா ரியினு னன்னூ லறிஞர்கொண் டாட வூர்ந்து
செங்கையிற் சிலையுங் கோலித் தீவிழித் துடன்று சேர்ந்தார்.

(இ - ள்.) (அவ்விருவரும்),— அங்குசம் - மாவெட்டியும், வார்த்தை-வாய்ச்சொல்லும், வல் தாள்-வலிய கால்வைப்புக்களும் (ஆகிய இவற்றால்), அடைவினில் பயிற்றி-முறைப்படி பழக்கி,—

ஏனை-பின்னும், வெம் கதி-துரிதமானநடையையும், நடையோடு-மந்தமான நடையையும், ஓட்டம் - ஓட்டத்தையும், விதம்உற-பலவகைப்பட, விரைவின்-விரைவாக, காட்டி-காண்பித்து,—அங்க சாரியினுல்-உடம்பினது வலசாரி இடசாரியாகச்செல்லுந்தன்மையைக் கண்டு, நல் நூல் அறிஞர் கொண்டாட-நல்ல யானை நூலை அறிந்தவர்கள் மெச்சும்படி, ஊர்ந்து - (தம்தம்யானைகளைச்) செலுத்திக்கொண்டு,—செம் கையில் - சிவந்த கையிலே, சிலைஉம் கோலிவில்லையும் வளைத்து, தீ விழித்து - நெருப்புப்பொறிசிந்த விழித்துப்பார்த்து, உடன்று - பெருங்கோபங்கொண்டு, சேர்ந்தார் - (தம்மில்) நெருங்கினுர்கள்; (எ - று.)

இதுமுதல் எட்டுக்கவிகள் - பதினுன்காம்போர்ச்சருக்கத்தின் *155*-ஆங்கவி போன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (*12*)

13. கோடுகைம்முதலாவொன்பதுறுப்பினுங்கோறல்வல்ல
நீடுயர்மாவுமாவுநெருப்பெழமுனைந்துசீற
ஆடவர்தாமுமெண்ணிலம்புமாமழைகளேவிச்
சேடனுமமரர்கோவும்வெருக்கொளச்செருச்செய்தாரே.

(இ - ள்.) கோடு-தந்தங்களும், கை-துதிக்கையும், முதல் ஆ-முதலாக, ஒன்பது உறுப்பின்உம்-ஒன்பது அவயவங்களாலும், கோறல் வல்ல-(பகைவரைக்) கொல்லுதலில் வல்ல, நீடு உயர்-மிக உயர்ந்த, மாஉம் மாஉம்-(அந்த) இரண்டு யானைகளும், நெருப்பு எழ - நெருப்புப்பொறி சிதறும்படி, முனைந்து சீற-உக்கிரமாகக் கோபியாநிற்க,—ஆடவர் தாம்உம்-ஆண்மையையுடையவர்களான வீமசேனனும் கேமதூர்த்தியும்,—எண் இல் - கணக்கில்லாத, அம்பு மா மழைகள்-பெரிய பாணவர்ஷங்களை, ஏவி-சொரிந்துகொண்டு,—சேடன்உம் - (கீழுலகத்திலுள்ள) ஆதிசேஷனும், அமரர் கோஉம் - (மேலுலகத்திலுள்ள) தேவேந்திரனும், வெருகொள-அச்சங் கொள்ளும்படி, செரு செய்தார்-போர்செய்தார்கள்; (எ - று.)—ஒன்பது உறுப்பு-கால்கள் நான்கு, துதிக்கை ஒன்று, தந்தம் இரண்டு, மஸ்தகம் ஒன்று, வால் ஒன்று என்பன. (*13*)

14.—வீமன் கேமதூர்த்தியின் வேலையும் யானையையும் துணித்தல்.

ஆசுகன்குமரன்வல்விலாசுகம்பொருமலஞ்சிக்
காசிபன்கேமதூர்த்திகாயயிலொன்றுவாங்கி
வீசியக்காளைமார்பினெறிதலும்வீமனேவொன்
றேசிலவ்வேலுந்தெவ்வன்யானையுந்துணியவெய்தான்.

(இ - ள்.) ஆசுகன் குமரன்-வாயுகுமாரனுன வீமனது, வல் வில்-வலிய வில்லினுலெய்யப்படுகின்ற, ஆசுகம்-அம்புகளை, பொருமல்-பொறுக்கமாட்டாமல், காசிபன் கேமதூர்த்தி-காசிநகரத்தை ஆள்கின்றவனுகிய கேமதூர்த்தியென்பவன், அஞ்சி-பயந்து, காய் அயில் ஒன்று வாங்கி-(பகைவர்களைக்) கொல்லும்படியான ஒரு வேலாயுதத்தை எடுத்து, அ காளை மார்பின் வீசி எறிதலும்-இளவெருதுபோன்ற அவ்வீமனதுமார்பிலே வேகமாய் எறிந்தவளவிலே,—வீமன்—,—ஏசு இல் அ வேல்உம்-குற்றமில்லாத அந்த

வேலாயுதமும், தெவ்வன் யானைஉம்-பகைவனுன அக்காசீராசனது யானையும், துணிய - துண்டுபட்டுவிழும்படி, ஏ ஒன்று - ஒரு பாணத்தை, எய்தான்-பிரயோகித்தான்; (எ - று.)—கேமதூர்த்தி -க்ஷேமதூர்த்தி. (14)

15.—கேமதூர்த்தி வீமனதுயானையை அடித்துத்தள்ளுதல்.

கேமனக்கரியினின்றுங்கிரியினின்றிழியுமாளி
யாமெனத்தரணியெய்தியடல்வயிர்த்தண்டொன்றேந்தி
வீமனன்றூர்ந்தவெங்கைவெற்பினைப்புடைத்துவீழ்த்தான்
பூமருதாரினுனும்பூவின்மேற்சுரும்பிற்பாய்ந்தான்.

(இ - ள்.) கேமன்-கேமதூர்த்தி,—அ கரியினின்றுஉம்-அந்த யானையினின்றும், கிரியினின்று இழியும் ஆளி ஆம் என - மலையினின்று இறங்குகின்ற சிங்கம்போல, தரணி எய்தி-தரையில் இறங்கிவந்து,—அடல் வயிர் தண்டு ஒன்று ஏந்தி-மிக்க வலிமையையுடைய கதாயுதமொன்றை எடுத்து அதனால், வீமன் அன்று ஊர்ந்த - வீமசேனன் அப்பொழுது ஏறிநின்ற, வெம் கை வெற்பினை - வெவ்விய துதிக்கையையுடைய மலைபோன்றதான யானையை, புடைத்து - அடித்து, வீழ்த்தான் - கொன்று கீழே தள்ளினான்; பூ மரு தாரினான்உம் - மலர்களால் தொடுக்கப்பட்ட போர் மாலையையுடையவனான வீமசேனனும்,—பூவின்மேல் சுரும்பின் - மலரிற்பாய்கிற வண்டுபோல, (பூவின்மேல்) பாய்ந்தான் - தரையிற் குதித்தான்; (எ - று.)—பூ - இரட்டுறமொழிதல். (15)

16.—வீமனும் கேமதூர்த்தியும் கதாயுத்தஞ்செய்தல்.

கரியமர்க்கொருவரானவிருவருங்காலினின்று
பரியவக்கதைப்போர்வல்லபார்த்திவர்பலருங்காணக்
கிரியொடுகிரிசெய்பூசலிதுவெனக்கிளக்குமாறு
புரிவிலார்பொருதபோர்மற்றியாவரேபுகலவல்லார்.

(இ - ள்.) கரி அமர்க்கு - யானைமேலேறிச்செய்யும் போரில், ஒருவர் ஆன - ஒப்பற்றவராகிய, இருவர்உம் - இரண்டுபேரும் [வீமனும் கேமனும்], காலின் நின்று - (யானையில்லாமையால் பூமியிற்) கால்களால் நின்றுகொண்டு, பரிய அ கதை போர் வல்ல பார்த்திவர் பலர்உம் காண - பருத்த கதாயுதத்தாற்செய்கின்ற அந்த யுத்தத்தில் வல்ல அரசர்களெல்லாரும் (வியந்து) காணும்படி,—கிரியொடு கிரி செய் பூசல் இது என கிளக்கும் ஆறு-மலையும் மலையும் (தம்மிற் பகைத்துச்) செய்கின்ற போர் இது வென்று (ஒப்புமையாற்) சொல்லுமாறு, புரிவு இலார் - (வேறு ஓர்) எண்ணமும் இல்லாமல், பொருத - செய்த, போர் - யுத்தத்தை,யாவர் ஏ புகல வல்லார் - எவர்தாம் (இத் தன்மையதென்று) சொல்ல வல்லவர்? (எ - று.)—புரிவு - (போரைத்தவிர்த்து வேறொன்றில்) விருப்புமாம். மற்று - அசை. (16)

17.—வீமன் கேமதூர்த்தியைக் கொல்லுதல்.

தண்டொடுதண்டமேந்திச்சாரிகைபலவுங்காட்டி
கொண்டலின்முழக்கீதென்னக்குரைகடலொலியீதென்னக்
கண்டவர்க்கன்றிக்கேட்டார்க்குரைப்பருங்கணக்கிற்றாக்கிக்
கொண்டுவன்காயமொன்றாற்கேமனைவீமன்கொன்றான்.

(இ - ள்.) (அவ்வீரரிருவரும்),—தண்டொடு தண்டம் ஏந்தி - (தம் தம்) கதாயுதத்தையெடுத்துக்கொண்டு, சாரிகை பலஉம் காட்டி - (வலசாரி இடசாரிமுதலிய) பலவகை நடைவிகற்பங்களையுஞ் செய்துகாண்பித்து, கொண்டலின் முழக்கு ஈது என்ன - மேகத்தின் இடியோசை இதுவென்று சொல்லவும், குரை கடல் ஒலி ஈது என்ன-ஒலிக்கின்ற கடலின் ஓசை இது வென்னவும், (பெருமுழக்கமுண்டாக), கண்டவர்க்கு அன்றி கேட்டார்க்குஉரைப்பு அருங் கணக்கின் - (பிரதியக்ஷயமாகப்) பார்த்தவர்கட்கேயல்லாமல் (புறத்திருந்து) கேட்டவர்கட்கும் (இத்தன்மையதென்று) சொல்லுதற்கு அரிய தன்மையாக, தாக்கிக்கொண்டு - தாக்கிப் போர்செய்துகொண்டிருந்து,—(பின்பு அப்போரில்), வீமன்—,வல் காயம் ஒன்றால் - வலிய கதையின்வீச்சு ஒன்றினால், கேமனை கொன்றான்—; (எ - று.)—காயம், காய் - பகுதி. (17)

18.—கர்ணன், கேமனிறந்ததனால் நிலைகுலைந்த சேனையை ஒழுங்குபடுத்துதல்.

எறிந்ததண்டமரிற்கேமனிறந்தனனென்றபோழ்தின்
முறிந்ததுவேலைஞாலமுழுதுடைநிருபன்சேனை
யறிந்தெதிரூன்றிவென்றியாண்டகைக்கன்னன்மீளப்
பிறிந்தபல்லணியுமொன்றப்பேரணியாக்கிநின்றான்.

(இ - ள்.) எறிந்த தண்டு அமரில் - வீசியடித்துச் செய்த கதாயுத்தத்தில், கேமன் இறந்தனன்—, என்ற போழ்தில்-என்ற மாத்திரத்திலே, —வேலை ஞாலம் முழுது உடை - கடல்சூழ்ந்த நிலவுலகம்முழுவதையும் (தனதாக) உடைய, நிருபன் - துரியோதனராசனது, சேனை—, முறிந்தது - வலிகெட்டு நிலைகெட்டது; வென்றி - வெற்றியையும், ஆண் தகை-ஆண்மைக்குணத்தையுமுடைய, கன்னன் - கர்ணன்,—அறிந்து - (அதனை) அறிந்து, எதிர் ஊன்றி - எதிரிற் சென்று தைரியப்படுத்தி,—பிறிந்த-(சிதறுண்டு தனித்தனி) பிரிந்துபோன, பல் அணிஉம் - பல வகைச்சேனைகளும், மீள - திரும்பவும், ஒன்ற-ஒருங்குதிரள, பேர் அணி ஆக்கி நின்றான் - பெரியவகுப்பாகப் படைவகுத்து நின்றான்; (எ - று.) (18)

19.—பாண்டவசேனை கௌரவசேனையை எதிர்த்தல்.

பேரணி கலஞ்சேர் மார்பன் பேரணி யாக்கி நின்ற
போரணி மிக்க சேனைப் பொலிவுகண் டொலிகொள் வண்டார்
தாரணி யலங்கன் மௌலித் தருமன்மா மதலை சேனை
யோரணி யாகக் கூடி யுடன்றெதிர் நடந்த தன்றே.

(இ-ள்.) பேர் அணிகலம் சேர் மார்பன்-பெரிய ஆபரணங்கள் பொருந்திய மார்பினையுடைய கர்ணனால், பேர் அணி ஆக்கி நின்ற-பெரியவகுப்பாகப்பகுக்கப்பட்டுநின்ற, போர் அணி மிக்க சேனை-யுத்தத்தையே (தனக்கு) அலங்காரமாகக்கொண்ட மிகுந்த சேனையினது, பொலிவு - விளக்கத்தை, கண்டு-பார்த்து,—ஒலி கொள் வண்டு ஆர் - ஒலித்தலைக்கொண்ட வண்டுகள் மொய்க்கின்ற, தார் அணி அலங்கல் - மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையைச் சூடிய, மௌலி - முடியினையுடைய, தருமன் மா மதலை - சிறந்த தருமபுத்திரனது, சேனை—,—ஓர் அணி ஆக கூடி - ஒருதிரளாகச்சேர்ந்து, உடன்று - கோபித்து, எதிர் நடந்தது - எதிரே சென்றது; (எ - று.)

பேரணிகலஞ்சேர்மார்பன்-வீரர்க்குச்சிறந்த ஆபரணமெனப் படுகின்ற போரிற்படும் பெரும்புண்கள் பொருந்திய மார்பையுடையா னெனினுமாம். (19)

வேறு.

இதுமுதல் நான்குகவிகளால், சதுரங்கங்களை வருணிக்கின்றார்.

20.—யானைவருணனை.

மகரிகையுமிரு பணைகளும் விரிநுதன் மருவு கலனொடு மினலென வொளிவிட
விகலி யளிமுர லிருகவு ளினுமுட னிழியு மதமழை குமிழிக ளெழவெழ
வகல முடையன முதுகிரு புடையினு மணியு மணிகண கணவென வதிர்தரு
ககன முகிலென வுயர்வடி வுடையன கதியின் விததியின் முடுகின கரிகளே.

(இ-ள்.) மகரிகைஉம்-பூண்களும், இரு பணைகள்உம்-(அவற்றை அணிந்த) இரண்டுதந்தங்களும், விரி நுதல் மருவு கலனொடு - பரந்த நெற்றியிலே அணிந்த (பட்டம்முதலிய) ஆபரணங்களுடனே, மினல் என-மின்னல்போல, ஒளி விட-ஒளியை வீசவும்,— அளி-வண்டுகள், இகலி-நெருங்கி [மாறுபட்டு] (மொய்த்து), முரல்-ரீங்காரஞ்செய்தற்கு இடமான, இரு கவுள்இன்உம்-இரண்டு கன்னங்களினின்றும், உடன் இழியும் - ஒருங்குபெருகுகின்ற, மதம் மழை-மதநீர்வெள்ளம், குமிழிகள் எழ எழ-குமிழிகள் மிகுதியாக உண்டாகப்பெறவும்,— அகலம்உடையன-பரப்பையுடையனவாகிய, முதுகு இருபுடையின்உம்-முதுகின் இரண்டுபக்கங்களிலும், அணியும்-அணியப்பட்டுள்ள, மணி-மணிகள், கணகண என-கணகண என்று ஒலிக்கவும்,—அதிர் தரு ககனம் முகில் என - இடிமுழங்குகின்ற வானத்திற்செல்லும் மேகங்கள்போல,—உயர் வடிவு உடையன கரிகள்-உயர்ந்த உருவத்தையுடையனவாகிய யானைகள்,—கதியின் விததியின்-பலவகை நடைவிகற்பங்களோடு, முடுகின-விரைந்துசென்றன; (எ - று.)

கரிய யானைகள்-காளமேகத்துக்கும், தந்தங்களும் ஆபரணங்களும்-மின்னலுக்கும், மதமழை-நீர்மழைக்கும், மணியோசை-இடியோசைக்கும் உவமை. இவற்றில், ஈற்றெழுத்துஒழிய மற்றை உயிரெழுத்தனைத்தும் குற்றெழுத்தாகவே வந்தது, குறுஞ்சீர்வண்ணம். விததி-வடசொல்.

இதுமுதற் பதின்மூன்று கவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் ஐந்தாஞ் சீரும்புளிமாச்சீர்களும், மற்றை ஆறும்கருவிளஞ்சீர்களு மாகிய எண்சீராசிரியச்சந்தவிருத்தங்கள். 'தனன தனதன தனதன தனதன தனன தனதன தனதன தனதன' என்பது, இவற்றிச் குச் சந்தக்குழிப்பாம். (20)

21.—தேர்வருணனை.

நிறனின்மிகுவனநவமணிகளினிய னெடியகொடுமுடிநிகர்வனமகுடமு
மறையுமருவியையுவமைகொள்சவரமு மடவிநிகரெனவசைவுறுதுவசமு
முறையினறைகமழ்தொடைபடுமலர்களு முடுகுமிடனுடைமுழைகளுமுடையன
விறகர்கொடுபலமலைதிரிவனவெனவிகலியிசைபெறநடவினவிரதமே.

(இ - ள்.) நிறனில் மிகுவன - (தம்தமக்கு உரிய) நிறங்களிற் சிறந்தனவான, நவ மணிகளின் - ஒன்பதுவகை இரத்தினங்களைக் கொண்டு, இயல் - செய்யப்பட்ட, நெடிய - உயர்ந்த, கொடுமுடி நிகர்வன - மலைச்சிகரத்தை ஒப்பனவாகிய, மகுடம்உம் - முடியை யும்,—அறையும் - ஒலிக்கின்ற, அருவியை - மலைநீர்ப்பெருக்கை, உவமை கொள் - (தனக்கு) உவமையாகக் கொண்ட, சவரம்உம் - சாமரையையும்,—அடவி நிகர் என-காடு உவமை யென்னும்படி, அசைவுறு - அசைந்தாடுகின்ற, துவசம்உம்-கொடியையும்,— முறையின் - ஒழுங்காக, நறை கமழ்-வாசனை வீசுகின்ற, தொடை படு - (மாலையாகத்)தொடுக்கப்பெற்ற, மலர்கள்உம்-பூக்களையும்,— முடுகும் இடன் உடை - நெருங்கிய இடத்தையுடைய, முழைகள் உம் - குகைபோன்ற மறைவிடங்களையும், உடையன - உடையனவை யாகிய, இரதம் - தேர்கள்,—இறகர் கொடு திரிவன - (இந்திரனால் வெட்டப்படுவதற்குமுன்பு தம்தமக்கு உள்ள) சிறகுகளாற் சஞ் சரிப்பனவாகிய, பல மலை என-பலமலைகள்போல, இகலி-நெருங்கி, இசை பெற - ஒலி பெறும்படி, நடவின - ஓடின; (எ-று.)

தேரின்உச்சி - மலையின் சிகரத்தையும், அதன் சவரம் - மலை யருவியையும், அதன் துவசம்-மலையிலுள்ள வனத்தையும், தொங்கவிடப்பட்டுள்ள மாலையின்மலர்கள்-மலையிலுள்ள மலர்களை யும், தேரில் மறைவாகவுள்ள உள்ளிடங்களுட் சில - மலைக் குகைகளையும் ஒத்தலால், விரைந்தோடுகின்ற தேர்கள் - இறகு களைக்கொண்டு திரிகின்ற மலைகளை யொத்தன வென்க: தற்குறிப் பேற்றவணி. சவரம் = சாமரம். பி - ம்: விசைபெற. (21)

22.—குதிரைவருணனை.

அடலில்வலிமையில்விரைவினிலுயர்வன வகிலபுவனமுநொடியினில்வருவன
பொடியின்மிசைவெளிதுகடரவிடுவன புணரியிடையலையலையொடுபொருவன
விடவிபடுபடைமடிதரநிமிர்வன விரியுநறுமலர்கமழ்முகவுயிரன
படியிலொருபடிநிலையறுகதியன பவனமெனநனிபரவினபரிகளே.

(இ - ள்.) அடலில் - பொருதலிலும், வலிமையில் - பலத்தி லும், விரைவினில் - வேகத்திலும், உயர்வன - மிகுந்தவையும்,—

அகிலபுவனம்உம் - எல்லாவுலகங்களிலும், நொடியினில் - ஒரு மாத்திரைப் பொழுதிலே, வருவன - (சென்றுதிரிந்து) வரத்தக்கவையும்,—பொடியின் - (பூமியினின்று எழுப்பப்படுகிற) புழுதிகளினால், மிசை வெளி - மேலுள்ள ஆகாயவெளியெல்லாம், துகள் தர - புழுதிமயமாம்படி, விடுவன - (அப்புழுதிகளைக்) கிளப்பிவிடுபவையும்,—புணரியிடை - கடலிலே, அலை - அலைகின்ற, அலையொடு - அலைவரிசைகளோடு, பொருவன-ஒத்திருப்பவையும்,— விடவி படு - மரம்போல அடர்ந்திருக்கின்ற,படை-சேனை, மடிதர- அழியும்படி, நிமிர்வன - கம்பீரமாகச்செல்பவையும்,—விரியும் - மலர்ந்த, நறு - வாசனைவீசுகின்ற, மலர் - பூக்கள்போல, கமழ் - நல்வாசனைவீசுகின்ற, முகம் உயிரன - முகத்தினின்று வருகின்ற சுவாசத்தையுடையவையும்,—படியில் - பூமியில், ஒரு படி நிலை அறு - ஒரேதன்மையாக நிலைத்தலில்லாத, கதியன - (பலவகை) நடையையுடையவையுமாகிய, பரிகள்-குதிரைகள்,—பவனம் என- காற்றுப்போல, நனி - மிகுதியாய், பரவின - பரந்துசென்றன;

இப்பாட்டிலுள்ள விசேஷணங்களெல்லாம் - உபமேயமாகிய குதிரைக்கும், உபமானமாகிய காற்றுக்கும் பொது. காற்றுக்குச் சேரும்பொழுது, புணரியிடை அலை அலையொடு பொருவன- கடலில் அலைகின்ற அலைகளோடு பொருந்துவன என்றும், விடவி படு படை மடிதர நிமிர்வன - மரங்களின் அடர்ந்த தொகுதி சாயும்படி வீசுவன என்றும், விரியும் நறு மலர் கமழ் முகம் உயிரன-(கந்தவகனுதலால்) மலர்ந்த நல்ல மலர்களின் மணம் வீசுகின்ற முன்காற்றையுடையன என்றும், படியில் ஒருபடி நிலை அறு கதியன- (சதாகதியாதலால்)பூமியில் ஒருவகை நிலையில்லாத சஞ்சாரத்தையுடையன என்றும் பொருள். சிலேடையை அங்கமாகக்கொண்டு வந்த உவமையணி. விடவி=விடபீ: வடமொழி: விடபம்-மரக்கிளை. உயர்ந்தசாதியசுவங்களின் சுவாசத்தில் நல்ல மணம் வீசும். பி.-ம்: அடல்கொள். வெளிபுதைதரவிடுவன. மிடலிலடுபடை. (22)

23—காலாள் வருணனை.

அரியவிலையனவணிகலனடையவு மறலின்முழுகினவருநவமணியென
வரிவின்முதலியபலபடைகளுமுடல் வலியசெலவுறுபவனசகுலமென
நெரியவருவனவகைபடுமிடலணி நிமிரவெழுவனநிரைகெழுதிரையென
விரிவினளவறுசலநிதிநிகரென வெகுளிமிகுகதிகடுகினர்விருதரே.

(இ - ள்.) அரிய விலையன-(மதித்தற்கு) அருமையான [மிக்க] விலையையுடையவையாகிய, அணி கலன் அடையஉம்-(தாம்) அணிந்துள்ள ஆபரணங்களெல்லாம், அறலின் முழுகின-நீரிற் பொருந்திய, அரு நவமணி என-(கிடைப்பதற்கு) அரிய நவரத்தினம்போலிருப்பவும்,—வரி வில்முதலிய-கட்டமைந்த வில் முதலான, பல படைகள்உம்-பலவகை ஆயுதங்களும், உடல் வலிய செலவு உறு-உடம்பினுல் வலிந்துசெல்லுதல் பொருந்திய, பவனசகுலம் என-நீர்ப்பாம்புகூட்டம்போலிருப்பவும்,— நெரிய வருவன-

நெருங்கிவருவனவாகிய, வகை படு-பலவகைப்பட்ட,மிடல்-வலிமை யையுடைய, அணி-வரிசைகள், நிமிர எழுவன-உயர்ந்து எழுவன வாகிய, நிரை கெழு திரை என-ஒழுங்குபொருந்திய அலைகள்போ லிருப்பவும்,— விருதர் - காலாள்வீரர்கள்,— விரிவின்-பரப்பிலே, அளவு அறு - ஓரளவில்லாத, சலநிதி-கடல், நிகர் என-உவமை யென்னும்படி,வெகுளி மிகுகதி கடுகினர்-கோபம்மிக்கநடையுடனே விரைந்துசென்றனர்; (எ - று.)

பவனசம்-பவநாஸம் என்பதன் விகாரம்; காற்றை யுண்பது என்று பொருள். (23)

24.—வாத்தியகோஷ வருணனை.

முரசுகரடிகைகிணைதுடிபெருமர முருடுபடுபறைமுதலியகருவிக
ளரசவரிவளைகொடுவயிரெழுகுழ லரவவிருதுகண்முதலியகருவிக
ளுரைசெய்கருவிகண்முழுவதுமெழுவகை யுலகமுடிவுறவுகவிறுதியிலெழு
கரைசெய்கடலெனவெறிவளியெனமிசை கனலியுருமெறிகனமெனவதிரவே.

இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்.

(இ - ள்.) முரசு-பேரிகையும், கரடிகை—, கிணை—, துடி—, பெருமரம்—, முருடு—, படு-(என்று) சொல்லப்படுகின்ற, பறை - பறைகளும், முதலிய-முதலான,கருவிகள்-அடிக்கப்படுகின்ற வாத் தியங்களும்,—அரச(ர்)வரி வளை - அரசர்கட்குஉரிய கோடுகளமை ந்த சங்குகளும், கொடு வயிர்-வளைந்த ஊதுகொம்புகளும், எழு குழல்-ஒலியெழுகின்ற வேய்ங்குழல்களும், அரவம் விருதுகள்- ஓசையையுடைய வெற்றிக்கு அடையாளமான சின்னங்களும்,முத லிய-முதலான, கருவிகள்-ஊதுகருவிகளும்,—உரை செய்-மற்றுஞ் சொல்லப்படுகின்ற, கருவிகள்-வாத்தியங்களும்,— முழுவதுஉம்- ஆகிய இவையெல்லாம்,— எழு வகை உலகம் முடிவுற-ஏழுவகை யுலகங்களும் அழியும்படி, உகம் இறுதியில்-யுகாந்த [பிரளய] காலத்தில், எழு-மேற்பொங்கிவருகின்ற, கரை செய்-ஒலித்தலைச் செய்கிற, கடல் என-கடல்போலவும், எறி வளி என - வீசுகின்ற பெருங் காற்றுப்போலவும், மிசை கனலி உரும் எறி கனம் என - ஆகாயத்தின்மேற் பரந்து இடி யிடிக்கின்ற மேகம்போலவும், அதிர-ஒலிக்க,—(எ - று.)—இக்கவியில் 'அதிர' என்ற செயவெ னெச்சமும், மேற்கவியில் 'நடவ' என்ற செயவெனெச்சமும்' அதன் மேற்கவியிலுள்ள 'பருகின' என்னும் முற்றைக் கொண்டு முடியும்.

கரடிகை முதலியன-பறைகளின் பேதங்கள். பெருமரம்- பெரியமரத்தினாலாகிய தெனக் காரணப்பெயர். (24)

25.—இருதிறத்துச்சேனையும் ஒன்றோடொன்று எதிர்த்தல்.

எறியுமுரசமுமெரிவிழியுரகமு மெழுதுகொடியுடையவரிருபடையினும்
வெறிகொண்மதமலைகளுமதமலைகளும் விசயமிகுவனவிரதமுமிரதமு
நெறிகொணவகதியிவுளியுமிவுளியுநிருதர்குலநிகர்விருதரும்விருதரு
நறியதொடைமுடிநிருபருநிருபருநடலையமரிடையடலுடனடவவே.

(இ - ள்.) எறியும் முரசம்உம்-அடிக்கப்படுகிற வாத்தியமான பேரிகையின் உருவத்தையும், எரி விழி உரகம் உம் - நெருப்புப் போன்ற கண்களையுடைய பாம்பின் உருவத்தையும், எழுது - (முறையே) எழுதியுள்ள, கொடி உடையவர் - துவசத்தையுடையவர்களான தருமபுத்திரன் துரியோதனன் என்னுமிவரது, இரு படையின்உம் - சேனையிரண்டிலும்,—வெறி கொள்-பெருங்கோபத்தைக்கொண்ட, மதம் மலைகள்உம் மதம் மலைகள்உம் - மதங்கொண்ட மலைபோன்ற யானைகளும் யானைகளும்,—விசயம் மிகுவன - வெற்றி மிகுவனவாகிய, இரதம்உம் இரதம்உம் - தேர்களும் தேர்களும்,—நெறி கொள் - முறைமையைக் கொண்ட, நவ கதி - ஒன்பதுவகை நடைகளையுடைய, இவுளிஉம் இவுளிஉம் - குதிரைகளும் குதிரைகளும்,—நிருதர் குலம் நிகர் - அரக்கர்கூட்டத்தை யொத்த, விருதர்உம் விருதர்உம் - காலாள் வீரர்களும் காலாள்வீரர்களும்,—நறிய தொடை - நறுமணமுள்ள மாலைகளைத் தரித்த, முடி நிருபர்உம் நிருபர்உம் - கிரீடாதிபதிகளான அரசர்களும் அரசர்களும், நடலை அமரிடை - நடுக்கத்தைத்தருகின்ற போரில், அடலுடன்-வலிமையோடு, நடவ - எதிர்த்துச்செல்ல,—

26.—கன்னனும் நகுலனும் குதிரைமேலேறிப் பொருதல்.

இரவிமதலையுமிரவிதன்மதலைய ரிருவர்மதலையுமிருவருமெதிரெதிர்
புரவிமிசைவிசைபடவலமிடநிகழ் புரிவினுடனமர்பொருபலகதிகளி
னரவினதிபதிமுடிகெழுசுடிகையி னருணமணிவெயிலவனியிலெழநனி
பரவியிருள்வரநிரைநிரையெழுதுகள் பகல்செயொளிவெயில்பருகினசெருகியே.

(இ - ள்.) இரவி மதலைஉம் - சூரியகுமாரனான கர்ணனும், இரவி தன் மதலையர் இருவர் மதலை உம்-சூரியபுத்திரராகிய அசுவினீ தேவரென்னும் இரட்டையரது குமாரனான நகுலனும், இருவர் உம்-இவ்விரண்டுபேரும், எதிர் எதிர் - எதிர்க்கு எதிராக, புரவி மிசை - குதிரைகளின்மேல் (ஏறிக்கொண்டு), விசை பட-வேகமாக, வலம் இடம்-வலமும் இடமுமாக, நிகழ் - செல்லுகின்ற, புரிவினுடன் - சாரிகளுடனே, அமர் பொரு - போர்செய்கின்ற, பல கதிகளின்-பலவகை நடைகளால் (பூமியின் துகளெல்லாம் மேலெழுப்பப் படுதலால்),— அரவின் அதிபதி - (பூமியைத்தாங்குகின்ற) சர்ப்பராசனான ஆதிசேஷனது, முடி கெழு - தலையிற்பொருந்திய, சுடிகையின்-உச்சிக்கொண்டையிலேயுள்ள, அருணம் மணி-செந்நிறமுள்ள மாணிக்கத்தினது, வெயில் - சூரியகாந்திபோன்றஒளி, அவனியில் - பூமியிலே, எழ - விளங்காநிற்க,—நனி பரவி - மிகுதியாய்ப் பரந்து, இருள் வர - இருட்டுவரும்படி, நிரை நிரை-கூட்டங்கூட்டமாக, எழு - மேலெழுகின்ற, துகள்-புழுதிகள்,—பகல் செய்-பகலைச்செய்கின்ற, ஒளி - ஒளியையுடைய, வெயில் - சூரியகிரணங்களை, செருகி-மறைத்து, பருகின - மூடின; (எ - று.)

துகள் வெயிலைமறைத்தாலும், மணிவெயில் அவனியிலெழுந்ததென்க: உயர்வுநவிற்சியணி. வலமிட நிகழ்புரிவு-வலசாரியும், இடசாரியும். அசுவினீதேவர் - தேவவைத்தியர்; இவர் -

பெண்குதிரை வடிவங்கொண்டு வனத்தில் ஒளித்திருந்த சமிஜ்ஞையென்னும் மனைவியினிடத்துக் குதிரை வடிவமாய்ச்சேர்ந்த சூரியனுக்குப் பிறந்த பிள்ளைகள். (26)

27.—அவர்கள் குதிரைகளின் வருணனை.

அசைவிலொடையடிகசைகுசையுரநினை வறியுமுணர்வினவளமையுமுடையன
வசையில்சுழியனபழுதறுவடிவின வருணமொழிகுரன்மனவலிமிகுவன
விசைகொள்பலகதியினும்விரைவுறுவன விபுதர்குலபதிவிடுபரிநிகர்வன
விசைகளொருபதுதிசைகளுமெழுதிய விறைவரிருவருமிசைகொளுமிவுளியே.

(இ - ள்.) இசைகள் - (தமது) கீர்த்திகளை, ஒரு பது திசைகள் உம்-பத்துத் திக்குக்களிலும், எழுதிய -எழுதிநாட்டிய, இறைவர் இருவர் உம் - அரசர்கள் இருவரும் [கர்ணனும் நகுலனும்], மிசைகொளும் - ஏறியுள்ள, இவுளி - குதிரைகள்,—அசைவு இல்- சோர்தல் இல்லாத, தொடை அடி-(தம்மேல் ஏறியவரது) தொடைகளின் அடிகளாலும், கசை - சவுக்கின் அடிகளாலும், குசை உரம்- கடிவாளத்தையிழுக்கும் வலிமையாலும், நினைவு - அவர்களெண்ணத்தை, அறியும் - தெரிந்துகொள்ளுகின்ற, உணர்வின - நல்லறிவையுடையவை; வளமைஉம் உடையன - வளர்ச்சியையும் உடையவை; வசை இல் சுழியன-குற்றமில்லாத சுழிகளை யுடையவை; பழுது அறு வடிவின - குற்றமில்லாத வடிவத்தை யுடையவை; வருணம் - நிறமும், மொழி குரல் - கனைக்கின்ற ஒலியும், மனம் வலி - மனத்தின் ஊக்கமும், மிகுவன - சிறந்துள்ளவை; விசை கொள் - வலிமைகொண்ட, பல கதியின்உம் - பலவகை நடைகளிலும், விரைவு உறுவன - வேகம்பொருந்துபவை; விபுதர் குலபதி - தேவர்கூட்டத்துக்குத் தலைவனான இந்திரன், விடு - செலுத்துகின்ற, பரி - (உச்சைச்சிரவ மென்னும் வெள்ளைக்) குதிரையை, நிகர்வன - ஒத்திருப்பவை; (எ - று.)

குற்றமுள்ள சுழிகள்-சந்திரம், அண்டாவர்த்தம், கௌவகம், காகாவர்த்தம், முன்வளையம், கேதாரி, கேசாவர்த்தம், பட்டடை என்பன. குற்றமற்றசுழி - கழுத்தில்வலமாகச் - சுழிந்திருக்குந் தேவமணி முதலியன. (27)

28.—கர்ணநகுலரது போர்.

முடியுமொருகவிகையுமிருகவரியு முதிருமெரிவிடமுரணரவெழுதிய
கொடியுமுடையவனெலுவலுமுரசுயர் கொடியிலெழுதியகுருபதியிளவலு
நெடியவரிசிலைநிலைபெறவளையவு நிமிரவிடுகணைநிரைநிரைமுடுகவு
மிடியிலெழுமடியதிர்குரல்விளையவு மிவுளியமர்கடிதிகலொடுபுரியவே.

இதுமுதல் ஐந்துகவிகள் - குளகம்.

(இ - ள்.) முடிஉம்-கிரீடத்தையும், ஒரு கவிகைஉம்-ஒற்றை (வெண்கொற்ற)க்குடையையும், இரு கவரிஉம் - இரண்டு சாமரங்களையும், முதிரும் எரி விடம் முரண் அரவு எழுதிய கொடிஉம் - மிக்க வெதும்புகின்ற விஷத்தையுடைய கோபிக்கிற பாம்பின்

வடிவத்தை யெழுதியுள்ள துவசத்தையும், உடையவன்-உடையவனை துரியோதனனுடைய, எலுவல்உம்-தோழனுகிய கர்ணனும்,—முரசு - முரசத்தின் வடிவத்தை, உயர் கொடியில் - உயர்ந்த துவசத்தில், எழுதிய—, குரு பதி - குருகுலத்துக்குத் தலைவனை தருமபுத்திரனது, இளவல்உம் - தம்பியாகிய நகுலனும்,—நெடிய வரி சிலை-நீண்ட கட்டமைந்த (தமது) வில், நிலை பெற வளையஉம்-நிலையாக வளைந்திருக்கவும்,—நிமிர விடு கணை - வேகமாய் எய்யப்படுகின்ற (தமது) அம்புகள், நிரை நிரை முடுகஉம் - வரிசை வரிசையாக விரைந்து செல்லவும்,—இடியில் - இடியோசையைக் காட்டிலும், எழு மடி - ஏழுமடங்கு அதிகமாக, அதிர் குரல் - ஆரவாரிக்கின்ற ஓசை, விளையஉம் - உண்டாகவும்,—இவுளி அமர் - குதிரைமேலிருந்து செய்யும் போரை, கடிது இகலொடு - மிக்க வலிமையுடனே; புரிய - செய்ய,—(எ - று.)

எலுவல் - கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுட் சீதநாட்டுத் திசைச்சொல்; பெண்பால் - இகுளை. முடியும் இருகவிகையும் இருக்வரியும் கொடியும் - அரசர்க்கு உரிய அங்கங்கள். (28)

29.—கர்ணனது குதிரைமுதலியன அழிதல்.

நகுலன்விடுகணைவிதரணகுணபதி நடவுகுரகதநடைபயில்குரமற
விகலும்வரிசிலைநடுவறவடமற விடுகவசமறவெழுதருமிருபுய
சிகரிபுதையவுமுரமுழுகவுநுத றிலகமெனவொளிதிகழவுமலைதலின்
மகிழ்வுசினமெனுமிருகுணமுடன்மன மறுகநிலனிடைவலனுறவிழியவே.

(இ-ள்.) நகுலன்—,—விடு கணை - (தான்) எய்கின்ற அம்புகளினால், விதரண குண பதி நடவு-தானகுணத்துக்குத் தலைவனை கர்ணன் ஏறிச்செலுத்துகின்ற, குரகதம் - குதிரையின், நடை பயில் குரம் - கதிகளைப் பயின்ற குளம்புகள் [கால்கள்], அற - அறுபடவும்,—இகலும் - போர்செய்கின்ற, வரி - கட்டமைந்த, சிலை-(அக்கர்ணனது) வில், நடு அற-நடுவில் அற்றுப்போகவும்,—வடம் அற-(அவன்மார்பிலணிந்துள்ள) ஆரங்கள் அறுபடவும்,—இடு கவசம் அற - அவன் தரித்துள்ள கவசம் அற்றுப்போகவும்,—எழுதரும் இரு புய சிகரி - ஓங்கிவளர்ந்த மலை போன்ற இரண்டு தோள்களில், புதையஉம் - அழுந்தவும்,—உரம் - மார்பில், முழுகஉம் - உட்புகவும்,—நுதல்-நெற்றியில், திலகம் என-சிந்தூரத் திலகம்போல, ஒளி திகழஉம் - (இரத்தத்தால்) சிவந்த ஒளி விளங்கவும்,—மலைதலின் - போர் செய்ததனல்,—(கர்ணன்),—மகிழ்வு சினம் எனும் இரு குணமுடன் - களிப்பும் கோபமும் என்கிற இரண்டு குணத்தோடும், மனம் மறுக - மனஞ்சுழல, நிலனிடை-பூமியில், வலன் உற - வலிமைபொருந்த, இழிய - இறங்க,—

எழு தரும்-இருப்புத்தூணை யொத்த, தோளுமாம். மகிழ்வு-சிறந்தவீரனேடு தனக்குப்போர்நேர்ந்ததனலும், தன் தம்பியாகிய அவனது போர்த்திறத்தைக் கண்டதனலுமெனக. (29)

30.—கர்ணன் தேரிலேற நகுலனும் தேரிலேறுதல்.

இழியுமளவையின்வினையுடைவலவனொ ரிரதம்விரைவொடுகொடுவரவிரிகதிர்
பொழியுமிளவெயிலிரவி முனுதவிய புதல்வன்விறலொடுபுகுதலுமுயர்பரி
யொழியநகுலனுமொருதனிரதமிசையுபரிசரரெனவுரனொடுபுகுதர
விழியின்மணிநிகர்வலவனும்வலவனும்விசையகுரகதம்விசையொடுகடவவே.

(இ - ள்.) இழியும் அளவையின் -(கர்ணன் குதிரையினின்று) இறங்கியமாத்திரத்தில்,—வினை உடை வலவன் - (தனக்கு உரிய வனான அக்கர்ணனது) தேர்த்தொழிலிலே வல்ல சாரதி, ஓர் இரதம்-ஒருதேரை, விரைவொடு - வேகத்தோடு, கொடு வர - கொண்டுவரவே,—விரி கதிர் பொழியும் இள வெயில் - மிக்ககிர ணங்களைச்சொரிகிற இளமையான வெயிலையுடைய, இரவி முன் உதவிய புதல்வன் - சூரியன் முன்னே பெற்ற குமாரனாகிய அக் கர்ணன், விறலொடு புகுதலும் - வலிமையோடு (அத்தேரில்) ஏறியவளவில்,—நகுலனும்—, உயர் பரி ஒழிய - உயர்ந்த (தன்) குதிரை நீங்கும்படி, (அதனைவிட்டு) [தான் ஏறியிருந்த குதிரை யை விட்டு என்றபடி], ஒரு தன் இரதம்மிசை-தனது ஒரு தேரின் மேல், உபரிசரர் என - மேலே [ஆகாயத்தில்] சஞ்சரிக்கிற தேவர் கள்போல, உரனொடு - வலிமையோடு, புகுதர - ஏறிநிற்க,—விழி யின் மணி நிகர் - (அவரவர்க்குக்) கண்ணின் கருமணி போன்ற [மிக அருமையான], வலவன்உம் வலவன்உம் - தேர்ப்பாகரிரு வரும், விசைய குரகதம்-வெற்றியையுடைய (தேர்க்) குதிரைகளை, விசையொடு - வேகத்தோடு, கடவ- செலுத்த,—(எ - று.)—உபரி சரர் எனப் பன்மையாற் கூறினது, கர்ணனுக்கும் உவமையாதற் பொருட்டென்க. (30)

31.—கர்ணனும் நகுலனும் பொருதல்.

கடவுமிரதமுமிரதமுமுருள்கதி கடுகவருதலுமிருவருமிருசிலை
யடரவளைவுறநொடியினிலெயிறுடை யயில்கொள்பகழிகளளவில்சிதறினர்
புடவியுறவகல்வெளிமுழுவதுமிவர் பொழியுமழையெழுபுயன்மழையெனவிழ
வுடலமுருகுருதியினனையினரரு குதவிசெயவருதரணிபருருளவே.

(இ - ள்.) கடவும் - (அப்பாகர்களாற்) செலுத்தப்படுகின்ற, இரதம்உம் இரதம்உம் - அத்தேரிரண்டும், உருள் - சக்கரங்க ளால், கதி கடுக - நடைவிரைவுபெற, வருதலும்-வந்தவளவில்,— இருவர்உம் - கன்னனும் நகுலனும், இரு சிலை - (தம்) வில் இரண்டும், அடர வளைவு உற - நன்றாக வளைவு பெற (வளைத்து), எயிறு உடை - பற்களையுடைய, அயில் கொள் - கூர்மையைக் கொண்ட, அளவு இல் - அளவில்லாதவையாகிய, பகழிகள் - அம்புகளை, நொடியினில்-ஒருமாத்திரைப்பொழுதிலே, சிதறினர் - சிந்தினார்கள்: இவர் - இவர்கள், அகல் வெளி முழுவதுஉம் - பரந்த ஆகாயத்தினிடம் முழுதிலும், பொழியும்-சொரிகிற,மழை- பாணவருஷம், புடவி உற-பூமியிலேநிறையும்படி, எழு புயல் மழை என-ஏழுமேகங்களின் மழைபோல, விழ - விழுவதனால்,—உதவி செய் அருகு வரு தரணிபர் - (அவ்விருவர்க்கும் பேரில்) துணை

செய்தற்காக அருகில்வந்த அரசர்கள், உடலம் உகு குருதியின் நனையினர்-உடம்புமுழுவதும் பெருகுகிற இரத்தத்தினால் நனைந்தவர்களாய், உருள - (கீழேவிழுந்து) புரள,—(எ - று.)

நகுலனுக்கு உதவிசெய்தற்காக அருகில்வந்த இராசாக்கள் கர்ணனது அம்புமழையினாலும், கர்ணனுக்குஉதவிசெய்தற்காக அருகில்வந்த அரசர்கள் நகுலனது அம்புமழையினாலும் புண்பட்டுக் குருதியில் நனைந்து கீழ்விழுந்து உருளலானாரென்க. பி. ம்: உயர்கதி. கடுகி. (31)

32.—கர்ணநகுலரது தேர்முதலியன அழிதல்.

இருவர் பரிகளு முரனுற முழுகின விருவர் வலவரும் விழவெரி கதுவின
விருவ ரிரதமு மழியமுன் முடுகின விருவர் துவசமு மறவிசை கடுகின
விருவர் சிலைகளு நடுவற மருவின விருவர் கவசமு மிடையிடை கெழுமின
விருவர் கவிகையு மறிதர வருடின விருவ ருடலமு மெழுதின கணைகளே.

(இ - ள்.) கணைகள் - (கர்ணனும் நகுலனும் தம்மில் ஒருவர்க்கொருவர் எதிராக எய்த) அம்புகள்,-இருவர் பரிகள்உம் - இருவர் தேர்க்குதிரைகளின் உடம்பிலும், உரன் உற - வலிமைபொருந்த, முழுகின - செருகின; இருவர் வலவர்உம் - இருவர்தேர்ப்பாகரும், விழ-இறந்துகீழ்விழும்படி, எரி கதுவின - நெருப்புப்போலப் பற்றின; இருவர் இரதம்உம் - இருவர் தேரும், அழிய - அழியும்படி, முன் முடுகின - விரைந்து ஊடுருவின; இருவர் துவசம்உம் - இருவர்கொடிகளும், அற - அறும்படி, விசை கடுகின - வேகமாய்ச் சென்றன; இருவர் சிலைகள்உம் - இருவர்விற்களும், நடு அற - நடுவில்அற்றுப் போம்படி, மருவின - பொருந்தின; இருவர் கவசம் உம் - இருவர்கவசங்களிலும், இடை இடை - இடையிடையே, கெழுமின - தைத்தன; இருவர் கவிகைஉம் - இருவர்குடைகளும், மறிதர - சாயும்படி, வருடின - தடவின; இருவர் உடலம்உம் - இருவருடம்பிலும், எழுதின-கிளறின; (எ - று.)--உரன்உற-மார்பிற் பொருந்த எனினுமாம். 28-ஆம் பாடல் முதல் செயவெனெச்சங்களை அடுக்கி, இச்செய்யுளில் 'எழுதின' என்றுமுடிக்க. (32)

வேறு.

33.—கர்ணனும் நகுலனும் வேறுதேரேறிக் கடும்போர்தொடங்குதல்.

கன்ன னும்பரி நகுல னுந்தம காலி னின்றிடவே
பின்ன ரும்பொரு பாகர் தந்தபி றங்கு தேர்மிசையார்
முன்ன ரம்புதொ டுத்த போரினு மும்ம டங்குபொர
மன்னர் யாருமதிக்கு மாறுதொ டங்கி னரமரே.

(இ - ள்.) கன்னனும்—, பரி-குதிரைத்தொழிலில் வல்ல, நகுலனும்-,-(தேரழிந்து), தம காலின்-தம்முடைய கால்களினால், நின்றிட-கீழேநிற்க, (அதுநோக்கி), பின்னர்உம்-மறுபடியும், பொரு பாகர்-போரில் வல்லதேர்ப்பாகர், தந்த-கொணர்ந்த, பிறங்கு தேர் மிசையார்-விளங்குகிற தேரின்மேல் ஏறினவர்களாய்,— முன்னர் - முன்னே, அம்புதொடுத்த-பாணங்களை எய்துசெய்த,போரின்உம்-யுத்தத்தைக்காட்டிலும், மும்மடங்கு - மூன்றுபங்குஅதிகமாக,

பொர-போர்செய்ய (எண்ணி),—மன்னர் யார்உம் மதிக்கும் ஆறு-(கண்ட கேட்ட) அரசர்களெல்லாரும் நன்கு மதிக்கும்படி, அமர் தொடங்கினர்- போர்தொடங்கினர்கள்; (எ - று.)

இதுமுதற் பதினாறு கவிகள்-பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், இரண்டுநான்காஞ் சீர்கள் விளச்சீர்களும், ஈற்றுச்சீரொன்று காய்ச்சீருமாகிய அறுசீராசிரியவிருத்தங்கள்.

34.—கர்ணன் நகுலனை வென்று உயிரோடுவிடுதல்.

அல்லிநாண்முகையம்புயங்களலர்த்துநாதன்மகன்
சொல்லினலுயராயுள்வேதியர்சுதனையின்றமரிற்
கொல்லினநாதவறுங்கொலென்றொருகோலினலழியா
வில்லினலழியாநடக்கெனமீளவிட்டனனே.

(இ-ள்.) அல்லி-அகவிதழ்களையுடைய, நாள்-புதிய, முகை அம்புயங்கள் [அம்புயம்முகைகள்] - தாமரையரும்புகளை, அலர்த்தும்-மலரச்செய்கின்ற, நாதன்-தலைவனான சூரியனுடைய, மகன் - குமாரனான கர்ணன்,— 'சொல்லினால் உயர்-புகழினாற் சிறந்த, ஆயுள் வேதியர் சுதனை-வைத்திய சாஸ்திரம்வல்லவர்களான அசுவினீதேவரது குமாரனான நகுலனை, இன்று - இப்பொழுது, அமரில் - யுத்தத்தில், கொல்லின் - (நான்) கொன்றால், நா தவறும் - (முன்புகொல்லேனென்று குந்திக்குச்சொன்ன எனது) நாக்குத் தவறிப்போம்,' என்று-என்றுஎண்ணி,—ஒரு கோலினால் - அம்பு ஒன்றைக்கொண்டு, அழியா வில்லினால்-அழியாத வில்லினாலே, அழியா- தோற்கச்செய்து,—நடக்க என-'(நீ உயிருடன்) செல்வாயாக' என்று (தனது பெருமிதந் தோன்றச்) சொல்லி, மீள-திரும்பும்படி, விட்டனன்-; (எ-று.)

ஆயுர்வேதமாவது வியாதியின் காரணம்குறிமுதலியவற்றை அறிந்து மந்திரம் ஔஷதம் முதலியவற்றால் சிகிச்சை செய்யும்படி ஆயுள் ஆரோக்கியம் முதலியவற்றைச் சொல்லும் வைத்திய நூல். 'அமரில்கொல்லின் நாதவறும்' என்றது - பாண்டவர்க்கு இராச்சியங்கேட்கும்பொருட்டுத் ,துரியோதனனிடம் தூதுவந்த கிருஷ்ணனது சொல்லின்படி குந்தி கர்ணனிடம் வந்து, தான் அவன்தாயென்பதையும் பாண்டவர் அவன்சகோதரரென்பதையும் தெரிவித்துப் பாண்டவர்பக்கஞ் சேரவேண்டுமென்று சொல்லியதற்குக் கர்ணன் இணங்கானாக, பின்னர்க் குந்தி அருச்சுனன் மீது நாகாஸ்திரத்தை இரண்டாம்முறை விடாமலிருக்கவும், மற்றைத்தம்பிமாரைக் கொல்லாமலிருக்கவும் வேண்டுமென்றுகேட்ட வரங்களிரண்டனையும் கர்ணன் கொடுத்தனனாதலின். நா-சொல்லுக்கு, இலக்கணை. கொல் - அசைநிலை. பி-ம்: வில்லினணழியா. (34)

35.—மகதராசனையும் விடதரனையும் கர்ணன் கொல்லுதல்.

நின்றமாநகுலற்குவன்றுணையாகிநின்றிடலான்
மன்றன்மாலைவிசாலமார்பினன்மகதபூபனையும்

வென்றிவேன்முருகற்குநேர்புகல்விடதரன்றனையுங்
கொன்றுவாசவன்மைந்தன்மாமுனைகுறுகவேகினனே.

(இ - ள்.) (கர்ணன்),—நின்ற - (முதுகுகாட்டி) நின்ற, மா நகுலற்கு-குதிரைத்தொழிலில்வல்ல நகுலனுக்கு, வல் துணை ஆகி-வலிய உதவியாகி, நின்றிடலால் - நின்றதனால்,—மன்றல் மாலை-வாசனையையுடைய போர் மாலையைத்தரித்த, விசாலம் மார்பினன்-அகன்ற மார்பினையுடையவனான, மகத பூபனை உம் - மகததேசத்தரசனையும்,—வென்றி வேல் முருகற்கு-வெற்றியைத்தருகிற வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியக்கடவுளுக்கு, நேர் புகல்-(பல பராக்கிரமங்களில்) ஒப்பாகச் சொல்லப்படுகின்ற, விடதரன் தனை உம் - விடதரனென்பவனையும், கொன்று—, — வாசவன் மைந்தன் - இந்திரகுமாரனான அருச்சுனனது, மா முனை - சிறந்த போர்செய்யுமிடத்திற்கு, குறுக - சமீபமாக, ஏகினன் - சென்றான்; (எ - று.) பி - ம்: புகழ். (35)

36.—கர்ணனும் அருச்சுனனும் போர்செய்தல்.

மடங்கன்மேலெழுமதமுமேலிடவருபணைக்கரிபோல்
விடங்கொள்சாயகவில்லிசென்றுதன்விற்குனித்தடுபோர்
தொடங்குமுன்பலர்வில்லெடுத்தவர்சொல்லும்வில்லியவன்
றிடங்கொண்மார்பினிலம்பிரண்டுதெரிந்துவிட்டனனே.

(இ - ள்.) விடம் கொள் - (தவறாது பகையழித்தலில்) விஷம் போன்ற, சாயகம் - அம்புகளையெய்கின்ற, வில்லி - (காலப்ருஷ்டம் என்னும்) வில்லையுடையவனான கர்ணன்,—மடங்கல்மேல் - சிங்கத்தின்மேல், எழு மதம் உம் மேலிட-ஏழுவகைமதமும் மிக, வரு-(போர்க்கு) வருகிற, பணை கரிபோல்-பருத்தயானைபோல, சென்று-(அருச்சுனனுக்கு எதிரிற்) போய், தன் வில் குனித்து - தனது வில்லை வளைத்து, அடு போர் - கொல்லுகின்றபோரை, தொடங்கும் முன் - தொடங்குமுன்னமே,—வில் எடுத்தவர் பலர் சொல்லும் வில்லி - விற்பிடித்த வீரரெல்லாராலும் (சிறப்பித்துச்) சொல்லப்படுகின்ற (காண்டீவமென்னும்) வில்லையுடையவனான அருச்சுனன்,—அவன் - அக்கர்ணனது, திடம் கொள் மார்பினில் - வலிமையைக்கொண்ட மார்பில், அம்பு இரண்டு - இரண்டு பாணங்களை, தெரிந்து விட்டனன் - தேர்ந்தெடுத்து எய்தான்; (எ - று.)

மடங்கல் மேல் வரு கரி - இல்பொருளுவமம். இவ்வுவமையால், அருச்சுனனது உயர்வும், கர்ணனது இழிவும் விளங்கும். ஒரு பெரியயானை மதம் மிகுதலால் தன் நிலையையுஞ் சிங்கத்தின் நிலையையும் மறந்து சிங்கத்துடன் போர்செய்தற்கு வந்தாற்போலும் இது என்க. விடங்கொள் சாயகம் - நஞ்சுதீற்றிய அம்புமாம். (36)

37.—கர்ணன் கிருஷ்ணார்ச்சுனரை வெல்லமாட்டாமல் விலகுதல்.

அருணவெங்கதிராயிரத்தவனன்பினனுதவுங்
கருணனுஞ்சில்பகழியோரிருகண்ணர்மார்பில்விடா

வருணமும்பெயரும்பிறிந்திலர்மனனுமொன்றெனவே
தருணவாணிலவெழநகைத்துரைதந்துபோயினனே.

(இ - ள்.) அருணம் - செந்நிறமான, வெம் கதிர் ஆயிரத்தவன் - வெவ்விய ஆயிரங்கிரணங்களையுடையவனாகிய சூரியன், அன்பினால் உதவும்-அன்போடு பெற்ற (மகனான), கருணன்உம் - கர்ணனும்,—சில பகழி - சில அம்புகளை, ஓர் இரு கண்ணர் மார்பில் - ஒப்பில்லாத இரண்டுகிருஷ்ணரது[கிருஷ்ண அருச்சுனரது] மார்புகளில், விடா - செலுத்தி,—(அவையொன்றும் பயன்படாமையால்),—'(இவ்விருவரும்), வருணம்உம் - நிறமும், பெயர்உம்- பேரும், பிறிந்திலர் - வேறுபட்டிலர்; மனன்உம் ஒன்று - (அவை மாத்திரமன்றி இவர்கட்கு) மனமும் ஒன்றே', என - என்று, வாள் தருணம் நிலவு எழ - ஒளியையுடைய இளமையான சந்திரகாந்தி போன்ற பற்களின் வெள்ளொளி வெளித்தோன்றும்படி, நகைத்து - சிரித்து, உரைதந்து - சொல்லிக்கொண்டு, போயினன் - (அப்பாற்) செல்பவனானான்; (எ - று.)

கரியோனென்னும்பொருளதாகிய 'க்ருஷ்ணன்' என்றும் வடமொழி பிராகிருதமாய், கண்ணனெனச் சிதைந்துவந்தது. கண்ணபிரான் அருச்சுனன்என்ற இருவர்க்கும் 'கிருஷ்ணன்' என்று பெயராதலாலும், இருவரும் கருநிறமுடையவராதலாலும், 'ஓரிரு கண்ணர்' என்றும், 'வருணமும் பெயரும் பிறிந்திலர்' என்றும் கூறியது. (37)

38.—அருச்சுனன் கர்ணனை 'நாளைவா' என்று விடுதல்.

அன்றுபோர்புரிசேனையின்பதியானவீரனைநீ
யின்றுபோயினிநாளைவாவெனவினிதியம்பினனால்
வென்றிகூர்வரிவின்மையாலடல்வெவ்வரக்கரைமுன்
கொன்றகாளையையொத்தபேரிசைகொண்டவாண்மையினான்.

(இ - ள்.) அன்று - அப்பொழுது, போர்புரி - யுத்தஞ்செய்த, சேனையின் பதி ஆன - (கௌரவ) சேனைத்தலைவனான, வீரனை- வீரனாகிய கர்ணனை நோக்கி, 'நீ இன்று போய் - நீ இன்றைக்குப் (போர்செய்யாமல் உயிரோடு மீண்டு) போய், இனி - பின்பு, நாளை வா - நாளைக்கு (ப் போர்க்கு) வருவாயாக', என - என்று, இனிது இயம்பினன் - இனிமையாகச் சொன்னான்: (யாவனெனில்,—) வென்றி கூர்-வெற்றிமிகுந்த, வரி-கட்டமைந்த, வின்மையால் - வில்லின் தொழிலால், அடல் வெம் அரக்கரை - வலிமையையுடைய கொடிய இராக்கதரை, முன்-முன்னே [திரேதாயுகத்தில்], கொன்ற—, காளையை - வீரனாகிய ஸ்ரீராமபிரானை, ஒத்த—, பேர் இசை கொண்ட-மிக்க புகழைக் கொண்ட, ஆண்மையினான்-பராக்கிரமமுள்ள அருச்சுனன்; (எ - று.)

ஸ்ரீராமன் முதல்நாட்போரிலே இராவணனை 'இன்றுபோய் நாளை நின் சேனையோடு வா' என்றுகூறி விட்டாற்போல, அருச்சுனனும் தளர்ச்சியுற்ற கர்ணனைநோக்கி, 'இன்றுபோய்ப்போர்க்கு நாளை வா' என்று இனிது இயம்பி உயிரோடு விட்டதனால், இங்கு

இராமனை உவமைகூறினர்; இங்ஙனம் விட்டது, தழிஞ்சி என்னும் புறப்பொருள்துறை. (38)

39.—சாத்தகியும் சல்லியனும் தம்மிற்பொருதல்.

அல்லியம்புயமனையகண்ணினனனுசனுங்குனிவிற்
சல்லியன்பெயரெனவிளங்கியதானைமன்னவனும்
பல்லியங்கடுவைப்பநீடுபணைப்பகட்டுடனே
வல்லியம்பொருமாறெனப்பொரமாறிலாரொருபால்.

ஐந்துகவிகள்—ஒருதொடர்.

(இ - ள்.) மாறு இலார் - ஒப்பற்றவராகிய,—அல்லி அம்புயம் அனைய கண்ணினன் அனுசன்உம் - அகவிதழ்களையுடைய செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடையவனான கண்ணபிரானது தம்பியாகிய சாத்தகியும்,—குனி வில்-வளைத்த வில்லையுடைய, சல்லியன் பெயர் என விளங்கிய - சல்லியனென்று பேர் விளங்கப்பெற்ற, தானை மன்னவன்உம் - சேனைகளையுடைய அரசனும்,—பல் இயங்கள் துவைப்ப - பலவகைவாத்தியங்கள் முழங்க,—நீடு பணை பகட்டுடனே - உயர்ந்த பருத்த ஆண்யானையுடனே, வல்லியம் - புலி, பொரும் ஆறு என - போர்செய்யும் விதம்போல், ஒரு பால் - ஒரு பக்கத்தில், பொர-போர்செய்ய,—(எ - று.)—செயவெனெச்சங்கள் அடுக்கி, 43-ஆங் கவியில் முடியும். பணை-தந்தமுமாம். அநுஜன் - பின் பிறந்தவன்; முன் பிறந்தவன் 'அக்ரஜந்' எனப்படுவன். யானை புலிகளை உவமை கூறியதனால், இவ்விருவரும் தம்மிற் சமபலமுடையவரென்றவாறும். (39)

40.—சாலுவனும் சேரனும் தம்மிற்பொருதல்.

மாரனுக்கிளையாமலம்பையைமாதவத்துவிடுந்
தீரனுக்குமோராழிகொண்டுசெலுத்துதேருடைவெஞ்
சூரனுக்கெதிராகிமேனிதுலங்குசேரனெனும்
வீரனுக்குமிகுத்தபேரமர்விளையவேறொருபால்.

(இ - ள்.) மாரனுக்கு-மன்மதனுக்கு, இளையாமல் - தோற்காமல் [வசப்படாமல்], அம்பையை-அம்பையென்பவளை, மா தவத்து விடும்-சிறந்த தவவொழுக்கத்திலே செலுத்திவிட்ட, தீரனுக்குஉம்-தைரியசாலியான சாலுவனுக்கும்,—ஓர் ஆழிகொண்டு - ஒரு சக்கரத்தால், செலுத்து-செலுத்தப்படுகிற, தேர் உடை - தேரையுடைய, வெம்-வெவ்விய, சூரனுக்கு - சூரியனுக்கு, எதிர் ஆகி - ஒப்பாகி, மேனி துலங்கு-உடம்பு விளங்குகின்ற, சேரன் எனும் வீரனுக்குஉம் - சேரநாட்டரசனென்கிற வீரனுக்கும், வேறு ஒரு பால்-மற்றொருபக்கத்தில், மிகுத்த பேர் அமர்-சிறந்தபெரும்போர், விளைய-நடக்க,—(எ-று.)

மாரன்-(பிராணிகளை ஆசைநோயால்) மரணவேதனைப்படுத்துபவன். அம்பை-காசிராசனது பெண்கள் மூவரில் ஒருத்தி; சுயம்

வர்ங் கோடித்த பொழுது, பீஷ்மன் காசிராசன் புத்திரிகளாகிய கன்னியர் மூவரையும் தன் தேரின்மேல் ஏற்றிக்கொண்டு செல்லுகையில், சுயம்வரத்துக்கு வந்திருந்த மற்ற அரசர்யாவரும் சினந்து திரண்டுவந்து போர்செய்து தோற்றுப் பரிபவப்பட்டுப் பின்னிட, அவர்களுட் சிறிது போரில் முன்னிட்ட சாலுவனிடத்து அம்பை மனத்தைச் செலுத்த அதனையறிந்த வீடுமனால் அனுப்பப்பட்டுச் சாலுவனிடஞ் சென்றுசேர, அவன் 'பகைவர் கவர்ந்துபோன உன்னை யான் தொடேன்' என்று மணம்மறுத்துவிட, பின்னர் இருவராலும் கைவிடப்பட்ட அவள் தவஞ்செய்து வரம்பெற்று வீடுமனைக் கொல்லுதற்குச் சிகண்டியாகப்பிறந்தாளென்பது முன்னடியிற் குறித்த கதை. ஒராழி-காலரூபமான ஏகசக்கரம். 'ஒர் வாளி கொண்டு செலுத்து தேருடை வெஞ், சூரனுக்கெதிராக மேனி துளக்கமெய்திய தோள்,' என்னும் பாடத்துக்கு-அருச்சுனனுக்கும் அவனுக்கு எதிரிற் சென்று உடம்புநடுக்கமடைந்த தோள் வலிமையுடைய, கர்ணனுக்கும் (மீண்டும்) பெரும்போர்விளைய எனப் பொருள்கொள்க. (40)

41.—பாண்டியனும் சகுனியும் தம்மிற் பொருதல்.

முழுதுணர்ந்தருண்முனிவரன்புகன்மும்மைவண்டமிழும்
பழுதறும்படிதெளிஞரேறியபலகையொன்றுடையான்
வழுதியுந்தனிமதிநெடுங்குடைமன்னன்மாதுலனும்
பொழுதுசென்றிடுமளவும்வெஞ்சமர்புரியவேறொருபால்.

(இ - ள்.) முழுது உணர்ந்தருள் - எல்லாவற்றையும் அறிந்தருளிய, முனி வரன்-முனிவர்களிற் சிறந்தவனான அகத்தியமகாமுனிவன், புகல்-எடுத்துச்சொன்ன, மும்மை வள் தமிழ்உம்-(இயல் இசை நாடகம் என்னும்) மூன்றுவகைச் சிறந்த தமிழையும், பழுது அறும்படி-குற்றமில்லாமல், தெளிஞர்-அறிந்தவர்களான தெய்வப் புலவர்கள், ஏறிய-ஏறிவீற்றிருத்தற்கு இடமான, பலகை ஒன்று உடையான்-ஒப்பற்ற சங்கப்பலகையையுடையவனாகிய, வழுதிஉம்-பாண்டியராசனும்,—தனி மதி நெடுங் குடை - ஒப்பற்ற பூர்ணசந்திரன்போன்ற பெரிய குடையையுடைய, மன்னன் - துரியோதனராசனது, மாதுலன்உம்-மாமனாகிய சகுனியும்,—பொழுது சென்றிடும் அளவுஉம்-பகற்பொழுது கழியுமட்டும், வேறு ஒருபால்-மற்றொருபக்கத்தில், வெம் சமர-கொடிய யுத்தத்தை, புரிய - செய்ய;

பூர்வத்தில் மகாமுனிவர்களெல்லாருஞ் சேர்ந்து ஸம்ஸ்கிருத பாஷையை அபிவிருத்திசெய்து காசியில் வடமொழிச்சங்கம்ஒன்று ஏற்படுத்த, அச்சங்கப்புலவர்களுள் ஒருவராகிய அகத்தியனார் மற்றைப் புலவர்களோடு பலகாலுந் தருக்கஞ்செய்துவந்து ஒருநாள் அவர்களோடு மாறுகொண்டு அவர்களிறுமாப்பை அடக்குதற்பொருட்டுச் சிவபெருமானிடஞ்சென்று தமகருத்தை வெளியிட, உடனே பரமசிவன் தமிழ்ப்பாஷைபைஉபதேசிக்க, தத்க்ஷணமே தக்ஷிணத்திலுள்ள பொதியமலைக்கு வந்து தனிவாசஞ்செய்து இலக்கண நூல்களை இயற்றி, அவற்றைத் தம் முதல்மாணாக்கராகிய தொல்காப்பியர் முதலிய பன்னிருவர்க்குங் கற்பித்தருளி

மூவகைத்தமிழையுந்தழைத்தோங்கிப் பரவச் செய்ததனால், 'முனிவரன்புகல் தமிழ்' எனப்பட்டது. மும்மை-எண்ணின்மேல் நின்றது. பழுது-ஐயந் திரிபுகள். பலகை - இரண்டுசாணளவிற்குச் சதுரமாயிருக்கின்றதொரு சிறுபலகையாயிருந்து, சரசுவதியமிசமாயுள்ள மெய்ப்புலவர் எத்தனைபேர் வந்தாலும் ஒவ்வொருமுழமாக வளர்ந்து அவர்க்கு ஏற இடங்கொடுக்கும் பீடம்; இப்பலகை -மற்றைப்புலவர்கட்குந் தமக்குங்கல்வித்திறத்திலுள்ள வேறுபாட்டை வெளியிடத்தக்க கருவியொன்றைத் தந்தருளவேண்டுமென வேண்டிய சங்கப்புலவர்களின்பொருட்டாகத் தென்மதுரைச் சோமசுந்தரக் கடவுளாற் கொடுத்தருளப்பட்டது. (41)

42.—துச்சாதனனும் சகதேவனும் தம்மிற் பொருதல்.

குரவர்சொற்கண்மறுத்துவன்பொடுகொண்டபாருடையா
னரவுயர்த்தவனுக்கனந்தரமானதம்பியுடன்
கரவுசற்றுமிலாதசிந்தையன்வாயுவேககதிப்
புரவிவித்தகனிளவல்சென்றமர்புரியவேறொருபால்.

(இ-ள்.) குரவர்-பெரியோர்களுடைய, சொற்கள்-நல்வார்த்தைகளை, மறுத்து-(கேட்டு நடவாமல்) விலக்கி, வன்பொடு-பலாத்காரமாக, கொண்ட - (பாண்டவரிடத்தினின்று) பறித்துக்கொண்ட, பார் உடையான்-பூமியையுடையவனாகிய, அரவு உயர்த்தவனுக்கு-பாம்பைக் கொடியில் உயர எடுத்தவனான துரியோதனனுக்கு, அனந்தரம் ஆன தம்பியுடன் - பின்னே பிறந்த [அடுத்த தம்பியாகிய] துச்சாசனனுடனே,—கரவு சற்றும் இலாத சிந்தையன்-கபடம் சிறிதும் இல்லாத நல்மனம் உடையவனாகிய, வாயு வேக கதி புரவி வித்தகன் இளவல் - காற்றின் வேகம்போல விரைந்த நடையையுடைய குதிரைகளைப் பயிற்றுந் தொழிலில் வல்லவனாகிய நகுலனது தம்பியான சகதேவன்,—வேறு ஒரு பால் - மற்றொருபுறத்தில், சென்று - போய், அமர் புரிய - போர்செய்ய, —(எ - று.)—'குரவர்' என்றது - உலூக முனிவன், பீஷ்மன், துரோணன், கிருபன், விதுரன், கண்ணன் முதலியோரை. அநந்தரம் - வடசொல். (42)

43.— அசுவத்தாமனும் வீமனும் தம்மிற் போர்தொடங்குதல்.

வேரியம்புயன்வேதம்யாவையும்வில்லின்வேதமும்வல்
லாரியன்றருகடவுண்மைந்தனுமனிலன்மைந்தனுமே
தூரியம்பலகோடிகோடிதுவைப்பவெஞ்சமரே
காரியம்பிறிதில்லையென்றுகலந்துமோதினரே.

(இ - ள்.) வேரி அம்புயன் - வாசனையையுடைய (திருமாலின் திருநாபித்) தாமரைமலரில் தோன்றியவனான பிரமதேவனால் வெளியிடப்பட்ட, வேதம் யாவைஉம்-(இருக்கு முதலிய) வேதங்களெல்லாவற்றையும், வில்லின் வேதம்உம் - தநுர்வேதத்தையும், வல் - வல்ல, ஆரியன் - துரோணாசாரியனால், தரு-வளர்க்கப்பட்ட, கடவுள் மைந்தன்உம் - பரமசிவனது குமாரனான அசுவத்தாம

னும்,—அனிலன் மைந்தன் உம் - வாயுகுமாரனை வீமனும்,—தூரியம் பல கோடி கோடி - அநேககோடிக்கணக்காகிய வாத்தியங்கள், துவைப்ப - ஒலிக்க,—வெம் சமர்ஏ காரியம்-கொடிய போரே செய்தொழில்: பிறிது இல்லை - வேறொருதொழிலில்லை, என்று - என்று எண்ணி, கலந்து மோதினர் - கைகலந்து போர்செய்தார்கள்; (எ - று.)—வில்லின்வேதமாவது-வில்முதலிய ஆயுதங்களிற் பயிலும் வகைகளையும் சத்துருவை வெல்லுதற்குரிய மந்திரம் முதலிய பிரயோகங்களையும் அறிவிக்கிற ஆயுதசாஸ்திரம். (43)

44.—அசுவத்தாமன் வீமனைத் தேரழித்தல்.

சுரருலோகமகிழ்ந்தணைந்ததுரோணன்மாமகன்மேல்
வருசதாகதிமகனைநாலிருவாளியேவிவெகுண்
டிரதநேமிகுலைந்துசூதனொடிவுளிநாலும்விழப்
பொருதுசீறினன்முற்பயந்தபுராரியேயனையான்.

(இ - ள்.) முன் பயந்த - முன்னே (தன்னைப்) பெற்ற, புராரிஏ - திரிபுர சங்காரஞ்செய்த பரமசிவனையே, அனையான்-ஒத்தவனாகிய, சுரர் உலோகம் மகிழ்ந்து அணைந்த துரோணன் மா மகன்-(இறந்து) தேவலோகத்தை மகிழ்ச்சியோடுஅடைந்த துரோணனது சிறந்த குமாரனாகிய அசுவத்தாமன்,மேல் வரு-தன்மேல்எதிர்த்துவருகிற, சதா கதி மகனை-வாயுகுமாரனை வீமனை (ப் பார்த்து), வெகுண்டு-கோபித்து, நால் இரு வாளி ஏவி - எட்டுப்பாணங்களைப் பிரயோகித்து,—இரதம் நேமி குலைந்து - (அவனது) தேர்ச் சக்கரங்கள் அழிந்து, சூதனொடு - பாகனும், இவுளி நால்உம் - நான்கு குதிரைகளும், விழ - விழும்படி, பொருது - போர்செய்து, சீறினன் - கர்ச்சித்தான்; (எ - று.)—இனி, அசுவத்தாமனென்னும்பெயர்பற்றி, 'மாமகன்' என்றுருமாம்: மா - குதிரை. (44)

45.—வீமன் அசுவத்தாமனை வெல்லுதல்.

மீளமற்றொருதேரிலேறியவீமன்வெஞ்சினமேன்
மூளமற்புயகிரிதடித்திடமூரிவில்வளையா
வாளமொப்பெனமற்றவன்கொடிவாசிபாகொடுதேர்
தூளமுற்றிடமுதுகிடும்படிதொட்டனன்கணையே.

(இ - ள்.) மீள - பின்பு, மற்று ஒரு தேரில்ஏறிய—, வீமன்—, —வெம் சினம் - கடுங்கோபம், மேல் மூள - மேல்மேலுண்டாக,—மல் புய கிரி - மற்போரில்வல்ல மலைகள்போன்ற தோள்கள், தடித்திட - (கோபாவேசத்தாற்) புடைபருக்க,—மூரி வில் - வலிமையையுடைய [அல்லது பெரிய] வில்லை, வாளம் ஒப்பு என - சக்கரவாளகிரி உவமை யென்னும்படி, வளையா-(வட்டமாக) நன்கு வளைத்து, —அவன் - அந்த அசுவத்தாமனது, கொடி - துவசமும், வாசி - குதிரைகளும், பாகொடு - சாரதியும், தேர் - தேரும், தூளம் உற்றிட - பொடியாய்விடவும், முதுகு இடும்படி - (அவன்) புறங்கொடுத்துப்போம்படியாகவும், கணை - அம்புகளை, தொட்டனன் - தொடுத்தான்; (எ - று.)—வாளம் = சக்கரவாளம்: இது, ஏழுதீவு

களையுஞ்சூழ்ந்த ஏழுகடல்கட்கும் அப்புறத்தில் வட்டவடிவாகச் சுற்றியிருப்ப தொரு மலை. (45)

46.—கைகயனும் சுருதகீர்த்தியும் பொர, கிருதவர்மாவோடு பொருது சிகண்டி தோற்றல்.

கருதிவாய்த்ததுபோரெனுமெய்களித்தகைகயனுஞ்
சுருதகீர்த்தியுமுடன்மலைந்துதொடங்கினரொருபாற்
கிருதபார்த்திவனுடன்மலைந்துசிகண்டிகெட்டனன்மா
விரதமேற்கொடியாடைவீழ்தரவேகினனொருபால்.

(இ - ள்.) 'போர் - (சிறந்த) யுத்தம், வாய்த்தது - நேர்ந்தது', எனு-என்று, கருதி - எண்ணி, மெய் களித்த - மனங்களிக்கப் பெற்ற, கைகயன்உம்-கேகய நாட்டரசனும், சுருதகீர்த்திஉம் - சுருதகீர்த்தியென்பவனும், உடன் மலைந்து - ஒருவரோடொருவர் எதிர்த்து, ஒரு பால் - ஒருபக்கத்தில், தொடங்கினர் - (போர்) தொடங்கினர்கள்; சிகண்டி—, ஒரு பால் - மற்றொருபக்கத்தில், கிருத பார்த்திவனுடன் - கிருதவர்மாவென்னும் அரசனோடு, மலைந்து - போர் செய்து,—மா இரதம்மேல் - பெரிய தேரின்மேற் கட்டப்பட்டுள்ள, கொடிஆடை - கொடிச்சீலை, வீழ்தர - (அறுபட்டுக்) கீழேவிழும்படி, கெட்டனன் - தோற்று, ஏகினன்-போனான்;

'கருதிவாய்த்தது போரெனுமெய்களித்த' என்ற அடைமொழியைச் சுருதகீர்த்திக்கும் இயைக்க. கைகயன்பெயர்-விந்தன்; இவன், கௌரவர்பக்கத்தான். ஸ்ருதகீர்த்தியென்பதற்கு-பிரசித்தமான கீர்த்தியை யுடையவன் என்றுபொருள்; இவன், அருச்சுனனுக்குத் திரௌபதியிடம்பிறந்தவன். கொடியாடை-த்வஜபடம்.

47.—திட்டத்துய்மன் கிருபனை யெதிர்த்துத் தோற்றல்.

தருமபூபதிசேனையின்பதிசாபவாசிரியன்
கிருபனோடுமலைந்துவெஞ்சமர்கெட்டுநீடிரதம்
புரவிபாகுதரித்ததிண்சிலைபொன்றவன்றுயிரோ
டரிதுபோயினன்வேள்வியாகுதியங்கிவாய்வருவோன்.

(இ - ள்.) ஆகுதி-நெய்ம்முதலியவற்றைவிட்டு ஓமஞ் செய்யப்பட்ட, வேள்வி அங்கிவாய் - யாகத்தீயினிடத்தில், வருவோன் - தோன்றினவனாகிய, தருமபூபதி சேனையின் பதி - தருமராசனது சேனைக்குத் தலைவனான திட்டத்துய்மன்,-சாபஆசிரியன்-(கௌரவ பாண்டவர்க்கு முதல்) வில்லாசிரியனான, கிருபனோடு - கிருபாசாரியனுடனே, வெம் சமர் மலைந்து-கொடிய போரைச் செய்து,—நீடு இரதம்-உயர்ந்த தேரும், புரவி-குதிரைகளும், பாகு - சாரதியும், தரித்த திண் சிலை-பிடித்த வலிய வில்லும், பொன்ற-அழியும்படி, கெட்டு-தோற்று,—அன்று-அப்பொழுது, உயிரோடு அரிது போயினன் - அருமையாகத்தப்பி (ப்பிழைத்து) உயிருடன் போனான்; (ஏ - று.)—வருவோன்-காலவழுவமைதி. (47)

48.—கவிக்கூற்று: படுகளச்சிறப்பின் கூறற்கருமை.

திங்க ளைத்தலை யாக மன்னவர் செப்பு மாமரபோர்
தங்க ளிற்பகை யாகி வானவர் தான வர்க்கெதிரா
யெங்க ளுக்கெழு பார டங்கலு மென்று போர்புரியும்
வெங்க ளத்தினி யற்கை யெங்ஙன்வி யந்து கூறுவதே.

(இ - ள்.) திங்களை-சந்திரனை, தலை ஆக - ஆதிபுருஷனாக, மன்னவர்-அரசர்களெல்லாரும், செப்பு-சொல்லுகின்ற, மா மரபோர்-சிறந்த குலத்தில் தோன்றியவர்களான பாண்டவரும் துரியோதனாதியரும், தங்களில் பகை ஆகி-தமக்குள் [ஒருவர்க்கொருவர்] பகைவராகி, வானவர் தானவர்க்கு எதிர் ஆய்-தேவ அசுரர்கட்குச் சமானமாய், 'எழு பார் அடங்கலும் - ஏழுதீவுகளாயுள்ள இப்பூமிமுழுதும், எங்களுக்கு - எங்களுக்கே (உரியது),' என்று-என்று (தனித்தனி) சொல்லிக்கொண்டு, போர் புரியும்-போர்செய்கிற, வெம் களத்தின்-கொடிய யுத்தகளத்தினது, இயற்கை-இயல்பை, வியந்து கூறுவது-புகழ்ந்து சொல்வது, எங்ஙன்-எவ்வாறு? (எ-று.)—அப்போர்க்களத்தின் இயல்பை வருணித்துச் சொல்லுதல் எம்போலியர்க்கு அரியது ஆயினும் ஒருவாறு சொல்வேனென அவையடக்கங் கூறுமுகத்தால் தோற்றுவாய் செய்தவாறும்.

எழு பார்-ஜம்பு, பிலக்ஷம், குசம், கிரௌஞ்சம், சாகம், சால்மலி, புஷ்கரம் என்பன. (48)

வேறு.

49.—இதுமுதற் பதினைந்து கவிகள் - படுகளச்சிறப்பு.

இற்றகை கால்செறி களமுழு துங்கழு கிட்டன காவணமே
யுற்றது கொள்ளல கைக்குலம் வெங்கள முரைபெரு காவணமே
வெற்றுடன் மன்னர்ச ரிந்தகு டைக்கண்வி ரிந்தன சாமரமே
கொற்றமி கும்பறை யோசைய ழிந்துகு லைந்தன சாமரமே.

(இ - ள்.) இற்ற-அறுபட்ட, கை கால்-கைகளுங் கால்களும், செறி-நிரம்ப விழுந்து கிடக்கப் பெற்ற, களம் முழுதுஉம் - போர்க்களம் முழுவதிலும், கழுகு-(அவற்றைத் தின்னவந்த) கழுகு என்னும் பறவைகள், (மேலே இடைவிடாமல் நெருங்கிப்பரவி), காவணம் இட்டன-பந்தல் போகட்டன; கொள்-(அக்கைகால்களைத் தின்ன) எடுத்துக்கொள்ளுகிற, அலகை குலம்-பேய்க்கூட்டமானது, உரை பெருகா வணம்-சொல்லுக்கு அடங்காதபடி, வெம் களம்-பயங்கரமான அப்போர்க்களத்தை, உற்றது - அடைந்தது; வெறு உடல் மன்னர்-வெறுமையாகிய [அதாவது உயிர் நீங்கிய] உடம்பாய்க் கிடக்கிற அரசரது, சரிந்த குடைக்கண் - முறிந்துகீழ் விழுந்த குடைகளிலே, சாமரம்-சாமரங்கள், விரிந்தன - பரவலாக விழுந்துகிடந்தன; கொற்றம் மிகும் - வெற்றிமிகுதிக்கு அறிகுறியான, பறை-பேரிகைகள், ஓசை அழிந்து குலைந்தன - (தோலும் வாரும் இற்றதனால்) ஒலியிழந்து அழிந்தவை, சா மரமே - பட்ட மரம் மாத்திரமாய் நின்றன; (எ- று.)

உரைபெருகா வ(ண்)ணம்-சொல்லினும் பொருள் மிகும்படி என்றவாறு. சாமரம்-சமரமென்னும் மானின் சம்பந்தமானது: வடமொழித்தத்திதாந்த நாமம். சா மரம்-வினைத்தொகை. இரண்டாம் அடிக்கு, அலகைக்குலம் - பேய்க்கூட்டம். உற்று-வந்து, அது கொள்-அவ்வுறுப்பைக் கொள்ளுகிற, வெம் களம்-கொடிய போர்க்களம், (பேரிரைச்சலால்), உரை பெருகு ஆவணம் - ஆரவாரம் மிக்க கடைத்தெருவையே போன்றது என்றும் [ஆபணம் - வடசொல்], நான்காம் அடிக்கு, சாமரம்-போர்க்களத்தில் [ஸமரமென் பதன் விகாரம்], கொற்றம் மிகும் பறைகள் ஓசையழிந்து குலைந்தனவென்றும் உரைக்கலாம். இவ்விரண்டடிகளுள் ஈற்றில் எழுத்துக்கள் தனித்தனி ஒத்துவந்தது-மடக்கு. மேலுஞ் சிலபாடல்களில் இது காண்க.

இதுமுதற் பதினைந்து கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று கூவிளங்காய்ச்சீரும் மற்றைஐந்தும் விளச்சீர்களுமாகிய அறுசீராசிரியவிருத்தங்கள். (49)

50. மின்புயல்வாய்விரிகின்றனவொத்தனவிரிநுதலோடைகளே
யென்புறவீறிவிழுங்கடதாரையினயினேவோடைகளே
முன்புடைவாலதிசெற்றதுவெம்புகர்முகமுழுகுஞ்சரமே
வன்புடைமால்வரைமறிவனபோலமறிந்தனகுஞ்சரமே.

(இ - ள்.) விரி நுதல் - (யானைகளின்) விசாலமான நெற்றியிலே (கட்டப்பட்டுள்ள), ஓடைகள் - பட்டங்களானவை,—புயல் வாய் விரிகின்றன-மேகம் வாய்திறந்து வெளிவிடுவனவாகிய, மின் -மின்னலை, ஒத்தன-ஒத்துவிளங்கின; என்பு - எலும்பினின்றும், உற வீறி விழும்-மிகவும் அதிகமாய்ப் பெருகுகிற, கட தாரையின்- (யானைகளின்) மதசலப் பெருக்கினால், ஓடைகள் ஏயின-நீரோடைகள் உண்டாயின; முன் புடை-முன்பக்கத்தில், வெம் புகர் முகம்- வெவ்விய புள்ளிகளையுடைய (அவ்யானைகளின்) முகத்தில், முழுகும் - தைக்கின்ற, சரம் - அம்பானது, (ஊடுருவிச்சென்று), வாலதி - வாலை, செற்றது - துணித்தது; வன்பு உடை-வலிமையையுடைய, மால் வரை - பெரிய மலைகள், மறிவன போல- விழுந்து கிடப்பவைபோல, குஞ்சரம் - யானைகள், மறிந்தன - இறந்துவீழ்ந்து கிடந்தன; (எ - று).

புயல் - யானைக்கும், மின் - அதன் பட்டத்துக்கும் உவமை. பார்வைக்கு வாயைத் திறந்துவிடுவதுபோலக் காணப்படுதலால், 'மின் புயல் வாய்விரிகின்றன' என்றார்; "கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல்" என்றார் நாலடியாரிலும். முன்பு உடை - வலிமையையுடைய, வாலதியென்றுமாம். பி - ம்: இன்புறவீறி, என்புறவூறி. (50)

51. பட்டமணிந்தநுதற்கிடையேவிழுதும்பிகள்பட்டனவே
தொட்டியுடன்பொருசமர்முனைசீரியதும்பிகள்பட்டனவே
வெட்டியறன்புதல்வன்றன்வரூதினிவென்றுகளித்தனவே
யிட்டகுமண்டையபேய்பிணமிக்கனவென்றுகளித்தனவே.

(இ - ள்.) பட்டம் அணிந்த - பட்டத்தைத் தரித்த, நுதற்கு இடைஏ - (யானைகளின்) நெற்றியின் நடுவிலே, விழ - (மதநீரை யுண்ணுதற்கு வந்து) விழுந்துமொய்க்கின்ற, தும்பிகள் - வண்டுகள், பட்டன - அதிகப்பட்டன; பொரு சமர் முனை - போர் செய்கிற யுத்தகளத்தில், சீறிய - கோபித்து நின்ற, தும்பிகள் - யானைகள், தொட்டியுடன் - அம்பாரியுடனே, பட்டன - இறந்து விழுந்தன; அறன் புதல்வன் தன் - தருமபுத்திரனது, வரூதினி - சேனைகள், வெட்டி - (பகைவர்சேனைகளைத்) துணித்து, வென்று- சயங்கொண்டு, களித்தன-(மகிழ்ச்சியாற்) களிப்படைந்தன; பேய்- பேய்கள், இட்டகுமண்டைய-(வயிறு நிறைதலால்) தெவிட்டுதல் பொருந்தினவாகி, பிணம் மிக்கன என்று—, உகளித்தன - (மகிழ்ந்து) குதித்தன; (எ - று.)

முதலடியில், தும்பிகள் பட்டன எனப் பிரித்து, வண்டுகள் (மாலைகளின்) மதுவில் அகப்பட்டன வெனினுமாம்: பட்டன - ஒலித்தன என்பாருமுளர். தொட்டியென்பதைத் தோட்டி யென்பதன் குறுக்க லெனக்கொண்டால், அங்குசமெனப்பொருள்படும். இட்டகுமண்டைய = குமண்டையிட்டன: குமண்டையிடுதல் - உண்டது அதிகமாகித் தெவிட்டல்; குமட்டலெனவழங்குதலுங் காண்க. (51)

52. பழுதறவீழ்படைமன்னவர்பேருடல்பற்பலவம்பினவே
பொழிகுருதிப்புனன்மூழ்கினர்மேனிபுலாலினவம்பினவே
தழல்விழிவாரணவீரர்முடித்தலைதடிவனசக்கரமே
யழலுமிழ்வாள்கள்சுழற்றினமீளவுமாவனசக்கரமே.

(இ - ள்.) பழுது அற - பழிப்பில்லாதபடி, வீழ் - (போரில் இறந்து கீழே) விழுந்துகிடக்கிற, படை மன்னவர்-ஆயுதங்களையுடைய அரசர்களது, பேர் உடல்- பெரிய உடம்புகள், பல் பல அம்பின - மிகப்பல அம்புகளை யுடையன [மிகவும் அம்புகள் தைக்கப்பெற்றன]; பொழி - பெருகுகின்ற, குருதி புனல் -இரத்த வெள்ளத்தில், மூழ்கினர்-முழுகிக்கிடக்கின்றவரது, மேனி -உடம்புகள், புலாலின வம்பின - புலால்நாற்றமுடையன; சக்கரம்-சக்கராயுதங்கள்,—தழல் விழி - (கோபமிகுதியால்) தீப்பொறியைச் சிந்துகிற கண்களையுடைய, வாரணம் வீரர் - யானைமேல் வந்த வீரர்களுடைய, முடிதலை - கிரீடந்தரித்த தலைகளை, தடிவன - அறுப்பன; வனசம் கரம் - (அவ்வீரர்களுடைய) தாமரைமலர் போலுங் கைகள், மீளஉம் - தலையற்ற பின்பும், அழல் உமிழ் வாள்கள் - நெருப்புப்பொறியைச் சிந்துகிற வாள்களை, சுழற்றின—; ஆ - ஆச்சரியம்! (எ - று.)

போர்க்குவந்த வீரர்க்குப் புண்பட்டு இறத்தல் சிறப்பு ஆதலால், 'பழுதற வீழ் மன்னவர்' என்றார். 'படைமன்னவர்' என்றது இறந்தபின்பும் ஆயுதம்பிடித்த பிடியை நழுவவிடாதஅவர்களுறுதியை விளக்கிற்று. புலாலின என்ற குறிப்புப்பெயரெச்சம், வம்பு என்னும் பெயரைக் கொண்டது. புலாலின வம்பு-ஊனின் சம்பந்த

மான துர்க்கந்தம். வந ஜம்=நீரிற் பிறப்பது: வநம் - நீர். பி - ம்: வாளிகள் சுற்றின. (52)

53. முழுகியவாளிகள்குழுமியவீரர்முகத்தனவெண்ணிலவே
விழிவழிதீயெழமுறுவல்பரப்பவிரித்தனவெண்ணிலவே
யுழைமழைவீழ்வனபலபடையெங்குமுமிழ்ந்தனவெவ்வெயிலே
யழிவில்வரூதினிசூழ்வெயிலுக்கெதிராவனவெவ்வெயிலே.

(இ - ள்.) குழுமிய - கூட்டமாகத் திரண்டுவந்த, வீரர்-வீரர்களது, முகத்தன - முகத்திற்பொருந்தியவையாகிய, முழுகிய வாளிகள் - தைத்த பாணங்கள், எண் இல - கணக்கில்லாதவையாம்; விழி வழி-(வீரர்களுடைய) கண்களினின்றும், தீ எழ - கோபத்தால் நெருப்புப்பொறி பறக்க, முறுவல் - (அவர்களுடைய) புன்சிரிப்புக்கள், வெள் நிலவு - வெண்மையான நிலாப்போன்ற ஒளியை, பரப்ப - அதிகமாக, விரித்தன - வெளிவீசின; உழை - பக்கங்களில், மழை - மழைபோல, வீழ்வன - விழுவனவாகிய, பலபடை - அநேக ஆயுதங்கள், எங்குஉம்-எவ்விடத்தும், வெவ் வெயில்-வெவ்விய வெயில்போலும் ஒளியை, உமிழ்ந்தன-வீசின; அழிவு இல் - அழிதலில்லாத, வரூதினி - சேனையின், சூழ்வு-சூழ்தலாகிய, எயிலுக்கு - மதிலுக்கு, ஏ எயில்-எந்தமதில்கள்தாம், எதிர் ஆவன - ஒப்பாவன? (எ - று.)

எறிவன, எய்வன, வெட்டுவன, குத்துவன என்ற எல்லாவற்றையுந் தொகுத்து 'பலபடை' என்றார். மழைவீழ்வன - மழையையொப்பனவாகிய என்பாருமுளர். நான்காமடிக்கு - சேனைகள் மதிலினும் உறுதியாகச் சிறிதும் இடைவிடாமற் சுற்றிலும் நின்றன வென்று கருத்து. (53)

54. சரமழைகாவலர்தங்கண்மனேவனசம்புகமேயினவே
யிரைகவர்புள்ளினெடுள்ளுறவாவனசம்புகமேயினவே
வரைசிறகற்றுவிழுந்தனவென்னமறிந்தனவாரணமே
யருகுநடிப்பனவலகைகள்பாடுவயாமளவாரணமே.

(இ - ள்.) சரம் மழை - பாணவருஷங்கள், காவலர் தங்கள் - அரசர்களது, மனே வனசம்-இருதய கமலம், புக- ஒடுங்கும்படியாக, மேயின-பொருந்தின; ஏயின - (அங்குப்பிணந்தின்ன) வந்தனவாகிய, சம்புகம் - நரிகள், இரை கவர் புள்ளினொடு-(தசையாகிய) உணவைக் கொள்ளுகிற(கழுகு பருந்து முதலிய) பறவைகளுடன், உள் உறவு ஆவன - மனங்கலந்த சிநேகமாவன; சிறகு அற்று விழுந்தன - (இந்திரனால்) இறகறுக்கப்பட்டு விழுந்தவையாகிய, வரை என்ன - மலைகள்போல, வாரணம் - யானைகள், மறிந்தன - விழுந்துகிடந்தன; அருகு - பக்கங்களில், நடிப்பன-கூத்தாடுபவையாகிய, அலகைகள் - பேய்கள், யாமளம் ஆரணம் - யாமளவேதத்தை, பாடுவ - பாடுவன; (எ - று.)

முதலடி - உருவகவணி; வீரரது உள்ளத்தாமரை ஒடுங்கும்படி அம்புமழை மேயின வென்க. சம்புகம் - ஜம்புகம்: வடசொல். (54)

55. செயிருடையாடவர்சோரிபரந்துசிவந்ததுபாரிடமே
வயிறுபெருங்குருதிச்சுனையாகவளர்ந்தனபாரிடமே
பயில்மறைத்தனபாறுபருந்தொடுபலகழுகந்தரமே
யெயிறுடைவாளிதுணிப்பவிழுந்தனவெத்தனைகந்தரமே.

(இ - ள்.) செயிர் உடை-வலிமையையுடைய, ஆடவர்-வீரர்களது, சோரி-இரத்தம், பரந்து-பரவியதனால், பார் இடம்-பூமியினிடம் (முழுவதும்), சிவந்தது-செந்நிறமாயிற்று; பாரிடம்-பூதகணம், வயிறு- (தம்) வயிறுகள், பெருங் குருதி சுனை ஆக-பெரிய இரத்தம் நிரம்பிய சுனையை ஒத்திருக்க [வயிறுநிரம்ப இரத்தத்தைக் குடித்து], வளர்ந்தன—; பாறு - பாறு என்னும் பறவைகளும், பருந்தொடு - பருந்துகளும், பல கழுகு - பலவகைப்பட்ட கழுக்களும், பயில - (தாம்) சஞ்சரித்தலால், அந்தரம் - ஆகாய வெளியை, மறைத்தன—; எயிறு உடை-பற்களையுடைய, வாளி-அம்புகள், துணிப்ப-துண்டித்தலினால், விழுந்தன - கீழ்விழுந்தவையாகிய, கந்தரம் - கழுத்துக்கள், எத்தனை - எத்தனையோ?

செயிர் உடை ஆடவர்-(பகைவர்களது)வலிமையை உடைக்கிற [அழிக்கிற]வீர ரென்றுமாம்: (பகைவரால்) வலியழிந்த வீரருமாம். பாரிடம்=பார்ஷதம்: வளர்ந்ததுஎன்ற பாடத்திற்கு, 'பாரிடம்' சாதியொருமை. பாறு-பருந்தின்சாதிபேதம். எயிறு-அம்புமுனை.

56. உம்பலனேகமிளம்பிடியென்னவொடிந்தனகோடுகளே
செம்புனல்யாறிருபக்கமும்வீழ்குறைசெய்தனகோடுகளே
தும்பிகளாலறையுண்டனகொற்றவர்சூழ்மனவம்புயமே
வெம்புகர்வாளிலழிந்தனமால்வரைவிதமனவம்புயமே.

(இ - ள்.) உம்பல் அனேகம்-பல ஆண்யானைகள், இளம் பிடி என்ன-இளமையான பெண்யானைகள்போல, கோடுகள் ஒடிந்தன-தந்தங்கள் ஒடியப்பெற்றன; செம் புனல் யாறு-சிவந்த இரத்த வெள்ளமாகிய நதிக்கு, இரு பக்கம்உம்-இரண்டு பக்கங்களிலும், வீழ் குறை-(துணிபட்டு) விழுந்துகிடக்கின்ற உடற்குறைகள், கோடுகள் செய்தன-கரைகளமைத்தாற்போலிருந்தன; கொற்றவர்-வெற்றியையுடைய அரசர்களது, சூழ்-(பல எண்ணங்களை) எண்ணுகிற, மனம் அம்புயம் - இருதய கமலங்கள், தும்பிகளால் - யானைகளால், அறையுண்டன - அழிக்கப்பட்டன; மால் வரை விதம் அன-பெரிய மலைகளின்வகையை யொத்த, அம் புயம் - அழகியதோள்கள், வெம் - கொடிய, புகர்-பளபளப்புள்ள, வாளில் - வாள்களால், அழிந்தன—; (எ - று.)

பெண்யானைகட்குப் பெரும்பாலுந் தந்தங்கள் முளையாவென்க. தாமரையைக் கலக்குதல் யானையின் இயற்கையாதலால், 'தும்பிகளால் அறையுண்டன மனவம்புயம்' என்றார்; இதில், வண்டுகளால் தாமரை மொய்க்கப்பட்டன வென்னும் பொருளுந் தொனிக்கும். (56)

57. தாள்வலியாடவர்சிரமுருளும்படிதைத்தனசாயகமே
யாழ்குருதித்தடமொத்தனவவரவரவ்வுடல்சாயகமே

யேழ்புயல்வானமிருண்டிடவெங்குமெழுந்தவிருந்துகளே
வீழ்பசியாலுழல்பேயொடுபாரிடமிக்கவிருந்துகளே.

(இ - ள்.) தாள்-முயற்சியையும், வலி-வலிமையையுமுடைய, ஆடவர் - வீரர்களது, சிரம் - தலைகள், உருளும்படி - கீழ்விழுந்து புரளும்படி, சாயகம்-அம்புகள், தைத்தன—; அவர் அவர்-அவ்வவ்வீரர்களது, அ உடல் - அந்தந்த உடம்புகள், சாய்-விழுந்திடக்கிற, அகம் - இடங்கள்,—ஆழ் குருதி தடம் ஒத்தன - ஆழமாகிய இரத்தம் நிரம்பிய குளத்தைப் போன்றன; ஏழ் புயல்-ஏழு மேகங்களையுடைய, வானம் - ஆகாயமெல்லாம், இருண்டிட - இருளடையும்படி, எங்குஉம் - எல்லாவிடத்தும், இருந் துகள் - மிகுதியான புழுதிகள், எழுந்த - கிளம்பின; வீழ் பசியால் - (உணவை) விரும்புகின்ற பசியினுல், உழல் - வருந்துகிற, பேயொடு - பேய்களும், பாரிடம் - பூதங்களும், விருந்துகள் மிக்க - விருந்துகளாகி மிகுந்தன; (எ - று.)

தாள்வலியாடவர் - காலாள் வீரருமாம். விருந்துகள்மிக்க - அங்கு உள்ள இறைச்சியைத்தின்று இரத்தத்தைக்குடித்துப் பசிதாகங்கள் தீருமாறு பேயும் பூதமும்மிகுதியாகவந்து திரண்டன வென்க. 'தாள்வலி' இனவெதுகை. (57)

58. செய்கடலாமெனவந்துசிவந்தகவந்தமலைந்தனவே
கைகொடுகால்கொடுதம்மின்வெகுண்டுகவந்தமலைந்தனவே
ஐவகையானகதிக்குரநாலுமழிந்தனவாசிகளே
மெய்வகையாலிவைகூரெறிகோலெறிவீரர்கைவாசிகளே.

(இ - ள்.) சிவந்த கவந்தம் - செந்நிறமான இரத்தம், செய் கடல் ஆம் என - சிவந்ததொரு கடல்போல, வந்து அலைந்தன - பெருகி அலையெறிந்தன; கவந்தம் - தலையற்ற உடம்புகள், வெகுண்டு - கோபித்து, தம்மின்- தமக்குள்ளே, கைகொடு கால்கொடு - கைகளாலும் கால்களாலும், மலைந்தன-போர்செய்தன; வாசிகள் - குதிரைகள், ஐ வகை ஆன கதி - ஐந்துவகைப்பட்ட நடைகளையுடைய, குரம் நால்உம் - நான்கு குளம்புகளும், அழிந்தன - அழியப்பெற்றன; இவை - இவையெல்லாம், மெய் வகையால்-உண்மையாக, கூர் எறி கோல் எறி வீரர் கை வாசிகள் - கூர்மை விளங்குகிற அம்புகளை எறிகின்ற வீரர்களுடைய கைகளின் சித்திகளாம்; (எ - று.)

செய்கடல்-புதிதாகச் செய்யப்பட்டதொரு கடலுமாம். சிவந்த கவந்தம்-செந்நீர்; கபந்தம்-நீர்: வடசொல். கோபத்தோடு விரைந்து போர்செய்து நின்ற வீரர்களின் உடம்புகள் தலையறுபட்ட பின்பு பதைபதைத்துக் கைகால்கள் துடிப்பனவற்றை - கைகளாலுங் கால்களாலும் போர்செய்வனவாகக் குறித்தார்; தற்குறிப்பேற்றம். கவந்தம்-நீரும் தலையற்றஉடலுமாதலை "காரறல் புவன நாரங் கனவிரதங் கவந்தம்" என்னும் நிகண்டினுலும் அறிக. (58)

59. தாரைகளொற்றைகள்வங்கியநீள்வயிர்சங்கமுழக்கினவே
யோரிமையிற்சிலயானைதுரங்கமசங்கமுழக்கினவே

சேரவளைத்தவிலொன்றொருகோடிசிலீமுகமேவினவே
வீரருயிர்ப்புடல்விட்டரமங்கையர்மெய்ம்முகமேவினவே.

(இ - ள்.) தாரைகள் - தாரையென்னும் வாத்தியங்களும், ஒற்றைகள் - ஒற்றையென்னும் ஊதுகொம்புகளும், வங்கியம் - வேய்ங்குழல்களும், நீள்வயிர்-நீண்டவயிரென்னும் ஊதுகொம்புகளும், சங்கம்-சங்கங்களும், முழக்கின - மிகஒலிசெய்தன; ஓர் இமையில் - ஓரிமைப்பொழுதினுள்ளே, சில யானை—, துரங்கம சங்கம்-குதிரைக்கூட்டங்களை, உழக்கின-கலக்கின; வளைத்த வில் ஒன்று-வளைத்துப்பிடித்த ஒவ்வொருவில்லும், ஒரு கோடி சிலீமுகம்-ஒருகோடி அம்புகளை, சேர-ஒருசேர, ஏவின - பிரயோகித்தன; வீரர்-வீரர்களது, உயிர்ப்பு - உயிர், உடல் விட்டு-உடம்பை விட்டு, அரமங்கையர்-தெய்வப்பெண்களது, மெய் முகம்-உடம்பினிடத்தை, மேவின - அடைந்தன; (எ - று.)

வங்கியம்-வம்ஶம் என்ற வடசொற் சிதைவு; மூங்கிலின் பெயர்-சினையாகுபெயராய், அதனாலாகிய புள்ளாங்குழலைக் குறித்தது. முதலடியில், சங்கம்-ஶங்கம்: இரண்டாமடியில், சங்கம்-ஸங்கம். யுத்தகளத்திற் புறங்கொடாது எதிர்நின்று போர்செய்து இறந்தவர் உடனே வீரசுவர்க்கத்தை அடைந்து அங்குள்ள தெய்வமகளிரது உடம்பைத் தழுவி இன்பமனுபவித்தலால், 'வீரருயிர்ப் புடல் விட்டரமங்கையர் மெய்ம்முக மேவின' என்றார்.

60. **பொருகடலொத்தபெருங்குருதிக்கடல்போதவிரைந்தனவே**
விரைவுறுதேவர்விமானம்விசும்பிடைபோதவிரைந்தனவே
கருமுகின்முட்டினபட்டவர்கட்கனல்காலுமரும்புகையே
சுரிகையொடற்றுவிழுந்தனமங்கையர்துனியிலரும்புகையே.

(இ ள்.) பொரு-அலைமோதுகிற, கடல்-கடல்களை, ஒத்த—, பெருங்குருதி கடல்-பெரிய இரத்தவெள்ளங்கள், போத இரைந்தன-மிகவும்ஒலித்தன; விரைவு உறு-(போரைக்காணுதற்கு)விரைதல் பொருந்திய, தேவர்-தேவர்களது, விமானம்-(வாகனமாகிய) விமானங்கள், விசும்பிடை போத-ஆகாயமார்க்கத்தில் வருதற்கு, விரைந்தன-விரைவுபட்டன; பட்டவர்-இறந்தவீரரது, கண்-கண்களினின்று தோன்றுகிற, கனல் - கோபத்தீ, காலும் - வெளியில் விடுகிற, அரும் புகை-(அளவிடுதற்கு) அருமையான புகைகள், கரு முகில்-கரிய மேகங்களை, முட்டின-அளாவிப்பரந்தன; மங்கையர்-மாதர்களது, துனியில்-ஊடல்மிகுதியில், அரும்பு - (அவ்வூடலைத் தீர்த்தற் பொருட்டு அவர்களைத்தொழுது) கூப்புகிற, கை-கைகள், சுரிகையொடு-உடைவாளுடனே, அற்று - அறுந்து, விழுந்தன—; (எ - று.)

இன்சொல்முதலிய வேறுஉபாயங்களினால் தணிக்கக்கூடிய நிலையைக் கடந்த பெரும்புலவியில், ஆடவர், எவரையும் வசப்படுத்துமியல்பினதான வணக்கத்தை மேற்கொண்டு அவ்வூடலைத் தணிவிக்க முயல்வரென்பதையறிக. "மனைவியுயர்வுங் கிழவோன்பணிவு நினையுங்காலைப் புலவியுளுரிய" என்றது தொல்காப்

பியம். 'அரும்பு' என்ற சொல்லின் ஆற்றலால், கைகள் தாமரை மலர்போன்றன வென்பது தொனிக்கும். (60)

61. கடகரியேனமொடொத்தனவம்பொடுபோனகரத்தனவே
புடவியின்மீதுறைநிறைமதியம்பலபோனகரத்தனவே
படுதிறல்வேலவர்கண்மணிசென்றுபறித்தனவாயசமே
யடுபணையானையின்வெங்குடர்சென்றுபிடுங்கினவாயசமே.

(இ-ள்.) புடவியின்மீது-பூமியில், உறை-வந்துதங்கிய, நிறை மதியம் பல போல்-(பதினாறுகலைகளும்) நிரம்பிய பல பூர்ணசந்திரர்போன்ற, நகரத்தன - நகங்களையுடையனவாகிய, கட கரி-மதயானைகள், அம்பொடு - (பகைவர் எய்த) அம்பினால், போன கரத்தன-அற்றுவிழுந்த துதிக்கையை யுடையனவாகி, ஏனமொடு ஒத்தன-பன்றிகளொடு ஒத்திருந்தன; வாயசம்-காக்கைகள், படு-இறந்துபோன, திறல் வேலவர்-வலிய வேலாயுதத்தையுடைய வீரர்களது, கண் மணி-கண்களின் கருவிழிகளை, சென்று பறித்தன-போய்க் குத்தியெடுத்தன; ஆயசம் - ஆயுதங்கள், அடு - (பகைவரைக்) கொல்லுகிற, பணை-பருத்த, யானையின்—, வெம் குடர்-கொடிய குடலை, சென்று பிடுங்கின—; (எ - று.)—ஆயஸம்-இரும்பினா லாகியது எனப் பொருள்படுங் காரணக்குறி; வட மொழித்தத்திதாந்தநாமம். நகரம்-உகிர்: வடசொல், (61)

62. அணிதொடைதேன்மதுகரநிரைசாலவருந்தவிளைத்தனவே
மணிமுடிபாரமுறப்பலநாகம்வருந்தவிளைத்தனவே
கணைபலவீரர்முகத்தனதோளனகண்ணனமார்வனவே
நிணமொடுமூளைநெடுங்குடர்பூதநிரைக்கணமார்வனவே.

(இ-ள்.) அணி-(வீரர்கள்) அணிந்துள்ள, தொடை-மாலைகள், மதுகரம் நிரை அருந்த-வண்டுகளின் கூட்டம் குடிக்கும்படி, தேன் -தேனை, சால-மிகுதியாக, விளைத்தன-உண்டாக்கின; பல நாகம்-(கீழிருந்துபூமியைத் தாங்குகிற) சர்ப்பங்களெல்லாம், மணி முடி - மாணிக்கத்தையுடைய (தம்) தலைகளின்மேல், பாரம் உற - சுமை அதிகப்படுதலால், வருந்த இளைத்தன-வருத்தமுண்டாக மெலிந்தன; பல கணை-பல அம்புகள், வீரர்-வீரர்களது, முகத்தன-முகத்தில் தைத்தனவும், தோளன-தோள்களில் அழுந்தினவும், கண்ணன-கண்களிடத்தனவும், மார்வன - மார்பிற்பாய்ந்தனவுமாயின; பூதம் கணம் நிரை - பூதகணங்களின் கூட்டம், நிணமொடு - கொழுப்பையும், மூளை - மூளையையும், நெடுங் குடர் - நீண்ட குடல்களையும், ஆர்வன-உண்பன; (எ - று.)—ஒன்றன்கூட்டம், பலவினீட்டம் என இரண்டுவகை உளவாதல் பற்றி, 'பூதநிரைக்கணம்' என்றார். (62)

63. ஆவமொ டொத்தன வாடவர் நெஞ்சுக ளாகிய போதகமே
பூவல யத்துட லாருயிர் வானிடை புக்கன போதகமே
மேவுந ரிக்குவி ழைந்தன வெங்கரி வீழ்தலை யோதனமே
நாவல ருக்குமு ரைப்பரி தந்தந னந்தலை யோதனமே.

(இ - ள்.) ஆடவர்-வீரர்களுடைய, நெஞ்சுகள் ஆகிய போது அகம் - இருதயகமலங்களினிடங்கள், (பகைவரெய்த அம்புகள் மிகுதியாக உள்தைக்கப்பெற்றதனால்), ஆவமொடு - அம்பறுத் தூணிகளோடு, ஒத்தன—; போதகம் - யானைகள், பூ வலயத்து- பூமண்டலத்தில், உடல்-உடம்பும், வானிடை-சுவர்க்கத்தில், ஆர் உயிர் - அருமையான உயிரும், புக்கன - போகப்பெற்றன; வெம - கொடிய, கரி - யானைகளின், வீழ் தலை - அறுந்துவிழுந்த தலைக ளாகிற, ஓதனம் - உணவுகள், மேவும் நரிக்கு - விரும்பிவருகிற நரிகளுக்கு, விழைந்தன - விருப்பமாயின; அந்த—, நனந் தலை - அகன்ற இடத்தையுடைய, யோதனம் - யுத்தகளத்தின்சிறப்பு, நாவலருக்கும் உரைப்பு அரிது - புலவர்கட்கும் சொல்லுதற்கு அரியது; (எ - று.)

"வெங்களத்தினியற்கை யெங்ஙன் வியந்துகூறுவதே" என்று தொடக்கத்தில் அருமைகூறியவர், ஈற்றிலும் 'நாவலருக்குமுரைப் பரி தந்த நனந்தலை யோதனமே' என அருமைகூறி முடித்தார். யோதனம்-இருமடியாகுபெயர். (63)

வேறு.

64.—சஞ்சத்தகரும் நாராயணகோபாலரும் அருச்சுனனையெதிர்த்தல்.

பேராண்மைசெய் சேனுபதி பின்னிட்டிடு முன்னே
தேராண்மையும் வில்லாண்மையு முடையானெதிர் செல்லத்
தாரார்அகல் வரைமார்பினர் சஞ்சத்தகர் தாமு
நாராயண கோபாலரு மணியாகந டந்தார்.

(இ - ள்.) பேர் ஆண்மை செய் - சிறந்த வீரத்தொழில்களைச் செய்கிற, சேனுபதி - (பாண்டவ) சேநாபதியான திட்டத்துய்மன், பின்னிட்டிடு முன்னே - (கிருபனோடு பொருது) புறங்கொடுக்கு முன்னே,—தேர் ஆண்மைஉம் வில் ஆண்மைஉம் உடையான் - தேர்செலுத்துந்திறமையையும் விற்போர்த்திறமையையும் (ஒருங்கே) உடையவனான அருச்சுனன், எதிர்செல்ல-எதிரிற்போக,— தார் ஆர் - போர்மாலைபொருந்திய, அகல் - பரந்த, வரை - மலை போன்ற, மார்பினர் - மார்பையுடையவர்களாகிய, சஞ்சத்தகர் தாம் உம்-ஸம்சப்தகர் என்னும் வீரர்களும், நாராயணகோபாலரும்—, அணி ஆக - ஒழுங்காக, நடந்தார் - (அவ்வருச்சுனனெதிரே) சென்றார்கள்; (எ - று.)

பாண்டவசேனுபதி பின்னிட்டமையை, கீழ் 47 - ஆம்கவியிற் காண்க; இது, அதன்தொடர்ச்சி: (இடையிற் பதினாறுகவிகள்- போர்க்களவருணனை.) அருச்சுனன் தேராண்மையுடையனாதலை, உத்தரகோக்கிரகணகாலத்தில் உத்தரனுக்குத் தேரூர்ந்ததனால் அறிக. வரை மார்பினர் - (உத்தமஇலக்கணமாகிய மூன்று) இரேகைகளையுடைய மார்புடையவ ரென்றுமாம். சஞ்சத்தகருள்ளும் நாராயணகோபாலருள்ளுங் கீழ்நாட்போர்களில் இறந்தவர்போக மிச்சப்பட்டவர் இன்று போர்க்கு வந்தனர்: அது, மேல் 68 - ஆம் கவியில் விளங்கும். அணி - வரிசை.

இதுமுதல் எட்டுக் கவிகள்-பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் மாங்கனிச்சீரு மாகிய கலிவிருத்தங்கள்.

65.—சத்தியசேனன் கண்ணனுக்கு ஊறுசெய்தல்.

சட்கோணநெடுந்தேர்மிசைவருசத்தியசேனன்
புட்கோவெழுதியசீர்பெறுபொன்னங்கொடிவலவன்
றுட்கோடுளமறுகும்படிசுடுதோமரமொன்ருன்
முட்கோலுடன்வடமுஞ்சிதைவுறமோதினன்முரணல்.

(இ - ள்.) சட் கோணம் - ஆறு மூலைகளையுடைய, நெடுந் தேர்மிசை - பெரிய தேரில், வரு - வருகிற, சத்தியசேனன்—, சுடு தோமரம் ஒன்ருல் - (பகைவரை) அழிக்கவல்லதொரு தோமர மென்கிற ஆயுதத்தால், புள் கோ-பறவைகட்கு அரசனுகிய கருடனை, எழுதிய—, சீர் பெறு - சிறப்புப் பெற்ற, பொன் அம் கொடி - பொற்காம்பிட்ட அழகிய துவசத்தையுடைய, வலவன் - (அருச்சுனனது) சாரதியாகிய கண்ணன், துட்கோடு-அச்சத் துடனே, உளம் மறுகும்படி-மனங்கலங்குமாறும், (அக்கண்ணன் கைகளிற்பிடித்துள்ள), முள் கோலுடன் - (தேர்க்குதிரைகளைக் குத்தியோட்டுகிற) இருப்புமுள்ளை முனையிலுடைய கோலும், வடம்உம்-(குதிரைகளைவலிய இழுத்தற்கும் தளரவிடுதற்கு முரிய வார்க்) கயிறும், சிதைவு உற - அழிவை யடையும்படியும்,முரணல்- வலிமையோடு, மோதினன்—; (எ - று.)—சட் - ஷட் - ஆறு. ஸத்யஸேநன்-உண்மையான சேனையுடையான்; இவனைக்கர்ணன் புத்திரனென்பர் ஒருசாரார். தோமரம் - தண்டாயுதமென்பர்.

66.—கண்ணன் எதிரிகவின்மேல் தேரை விசையாகச் செலுத்துதல்.

புடையுண்டுளமுருகிப்புயல்போல்வண்ணனகைத்துத்
தொடையுண்டமலர்த்தும்பைசுமக்குந்திரடோளா
ருடையுண்டதொர்கடலாமெனவோடும்படியவர்மேற்
றடையுண்டதடந்தேரினைவிட்டான்முனைதரவே.

(இ - ள்.) புயல் போல் வண்ணன் - மேகம்போலுந் திருநிற முடையவனான கண்ணன்,—புடையுண்டு - (அத்தோமரத்தால்) அடிபட்டு, உளம் உருகி-மனம் தளர்ந்து, நகைத்து-(கோபத்தாற்) சிரித்து,—தொடை உண்ட மலர் தும்பை - மாலையாகத் தொடுக்கப்பட்ட தும்பை மலர்களை, சுமக்கும் - தரிக்கின்ற, திரள் தோளார்-திரண்ட தோள்களையுடையவர்களான அவ்வீரரெல்லாம், உடையுண்டது ஒர் கடல்ஆம் என- கரையுடைபட்டதொரு கடல் போல, ஓடும்படி—, அவர்மேல்—, தடையுண்ட தட தேரினை- (கீழே சிறிது) தடைப்பட்ட பெரிய (தனது) தேரை, முனைதர - விரைந்து செல்லும்படி, விட்டான்—; (எ - று.)—தடை உண்ட- தடையை இல்லையாக்கின, தேர் என்றுமாம்: (எங்கும்) தடையில் லாத தேரென்க. (66)

67.—அருச்சுனன் சித்திரசேனனையும் மந்திரபாலனையுங் கொல்லல்.

சென்ருடமர்புரிசேனையுடன்சித்திரசேனன்
வன்ருள்வலிமிகுமந்திரபாலன்றனைவானோர்

தன்றாதையளிக்கும்பலசரத்தால்விழமோதிக்
கொன்றான்மிடல்வழுவாதகுரக்குக்கொடியுடையோன்.

(இ-ள்.) மிடல் வழுவாத-வீரந் தவறாத, குரங்கு கொடி உடையோன்-அநுமத்துவசத்தையுடையவனான அருச்சுனன்,--சென்று-எதிர்வந்து, ஆடு அமர் புரி-மோதுகிற யுத்தத்தைச் செய்கின்ற, சேனையுடன்—,சித்திரசேனன்-சித்திரசேனனையும், வல் தாள் வலி மிகு மந்திரபாலன் தனை-வலிய முயற்சியும் வலிமையும் மிக்க மந்திர பாலனையும்,—வானோர்-தேவர்களுள், தன் தாதை-தனது தந்தையாகிய இந்திரன், அளிக்கும்-கொடுத்தருளிய, பல சரத்தால்-பல அம்புகளினால், விழ மோதி கொன்றான்—; (எ - று.)

சித்திரஸேநன்-பலவகைப்பட்ட சேனைகளை யுடையவன். மந்திரபாலன்-ஆலோசனையாற் காப்பவன். சித்திரசேனனாகிய மந்திர பாலனென்று கூறி, இருவருமொருவரேயென்பாரு முளர். இந்திரன் அளித்த பலசரம்-ஐந்திராஸ்திரம் முதலியன வென்க; பாசுபதம் பெற்றபின்பு அருச்சுனனைத் தேவலோகத்துக்கு அழைத்துப் போனபொழுது இந்திரன் அவனுக்குப் பல அஸ்திரசஸ்திரங்களைத் தந்தருளினான். (67)

68.—அருச்சுனன், சஞ்சத்தக நாராயணகோபாலர்களைத் தொலைத்தல்.

முன்னாண்முதனானாலினுமுனைதோறுமுருக்கித்
தன்னாலுயிர்கவராதவர்சஞ்சத்தகர்யாரு
நன்னாரணகோபாலருநாகங்குடியேறப்
பொன்னாண்வரிசிலைகோலினன்மாலோனுயிர்போல்வான்.

(இ - ள்.) மாலோன் உயிர் போல்வான்-கிருஷ்ணபகவானுக்கு உயிர்போல்பவனான அருச்சுனன்,—முன் நாள் முதல் - முதல்நாள் முதலாகிய, நால் நாலின் உம்-பதினாறு நாட்களிலும், முனைதோறு உம்-போர்களிலெல்லாம், முருக்கி-கொன்று, தன்னால் உயிர் கவராதவர் - தன்னால் உயிர்கொள்ளப் படாதவராகிய, சஞ்சத்தகர் யார் உம்-சம்சப்தகர் எல்லாரும், நல்-நல்ல, நாரணகோபாலர் உம்-நாராயண கோபாலர்களும், நாகம்-வீரசுவர்க்கத்தில், குடி ஏற—, பொன் நாண்-அழகியநாணியையுடைய, வரி சிலை - கட்டமைந்த வில்லை, கோலினன்-வளைத்தான்; (எ - று.)

"மம்ப்ராணாஹி பாண்டவா:" எனக் கண்ணன் தானே கூறியுள்ளதற்கு ஏற்ப, 'மாலோனுயிர்போல்வான்' என்றார். இங்கே இவ்வாறு கூறியது, மைந்தரிடத்தினும் அருச்சுனனிடத்துக் கண்ணனுக்கு அன்பு மிகுதி யென்பதைவிளக்கும் பொருட்டு. பி - ம்: முனைதோறுமுடற்றித். (68)

69.—துரியோதனன்சேனையார் புறங்கொடுத்தல்.

சஞ்சத்தகர்கண்ணன்றருதனயோர்பலரடைவே
யெஞ்சப்பொருதனன்வெஞ்சிலையிமையோர்பதிமகனென்
றஞ்சிக்களமுழுதுங்கழுதாடக்குறையாடக்
குஞ்சத்தொடுகுடைவீழ்தரமுதுகிட்டனர்கூடார்.

(இ - ள்.) 'வெம் சிலை-கொடிய வில்லையுடைய, இமையோர் பதிமகன்-தேவராஜனுன இந்திரனது குமாரனுகிய அருச்சுனன்,— சஞ்சத்தகர்-சம்சப்தகரும், கண்ணன் தரு தனயோர்-கிருஷ்ணன் பெற்ற பிள்ளைகளாகிய நாராயணகோபாலர்களும்,பலர்-எல்லாரும், அடைவே-ஒருங்கே, எஞ்ச-அழியும்படி, பொருதனன் - போர்செய் தான்,' என்று-என்றகாரணத்தால்,--கூடார்-பகைவர்கள்,--அஞ்சி -அச்சமுற்று, களம்முழுதுஉம்—, கழுது ஆட-பேய்கள் கூத்தாட வும், குறை ஆட-உடற்குறைகள் கூத்தாடவும்,—குஞ்சத்தொடு- குஞ்சங்களும், குடை-குடைகளும், வீழ்தர-விழும்படி (போகட்டு), முதுகு இட்டனர்—; (எ - று.)—குஞ்சம்-அழகிய மயிராற்செய்யப் பட்ட ஓர்வகை அலங்காரத்தூக்கு. இது, ராஜசின்னம். பி - ம்: கழுகாட. (69)

70.—துரியோதனன் பகைவர்மேல் வருதல்.

முதுகிட்டவர்துரியோதனன்முன்வீழ்தலுநூறைம்
பதுகற்கியுநாலாயிரம்விகடப்பொருபகடு
மதுகைப்படுதேராயிரமுங்கொண்டெதிர்வந்தா
னெதிர்கைப்படவொருமன்னருமில்லாவமர்வல்லான்.

(இ-ள்.) முதுகு இட்டவர்-(அருச்சுனனுக்குப்) புறங்கொடுத்த வீரர்கள், துரியோதனன் முன்-துரியோதனனுக்கு எதிரில், வீழ் தலும்-விழுந்தவுடனே,—எதிர்கை பட-(தன்னை) எதிர்த்தல் செய் தற்கு, ஒரு மன்னர்உம் இல்லா-ஓரரசரையும் (இதுவரை) பெற்றி ராத, அமர் வல்லான்-போரில்வல்லவனுன அத்துரியோதனன்,— நூறு ஐம்பது கற்கிஉம் - ஐயாயிரங் குதிரைகளையும், விகடம் பொரு நால் ஆயிரம்பகடுஉம்-விசேஷ மதத்தையுடைய போர் செய்கின்ற நாலாயிரம் யானைகளையும், மதுகை படு-வலிமைபொருந் திய, தேர் ஆயிரமும்—, கொண்டு-உடன்கொண்டு, எதிர்வந் தான்—; (எ-று.)—எதிர்கைப்பட-ஒப்பாகவென்றுமாம். விகடம்- பெருமையுமாம். பி-ம்: முனைவீழ்தலும். (70)

71.—தருமன் துரியோதனனை எதிர்த்தல்.

குருமித்துந டக்கின்றன னிவனேடுகொ டுங்கா
ருருமிற்பொரு குவமென்றுள முகளித்தெழ முனைமேல்
நிருமித்துந டந்தான்மனு நீதிக்கொரு நிலையான்
றருமத்தின துயிரென்றுரை தக்கோர்சொல மிக்கோன்.

(இ - ள்.) 'குருமித்து - ஆரவாரித்து, நடக்கின்றனன்- (போர்க்கு) வருகின்றான்: (ஆதலால்), இவனேடு - இத்துரியோ தனனேடு, கார் கொடு உருமின்-மேகத்தில் தோன்றுகிற கொடிய இடிபோல, பொருகுவம் - போர்செய்வோம்,' என்று - என்று எண்ணி, உளம்-மனம், உகளித்து எழ-(உற்சாகத்தாற்)குதித்துக் கிளர,—மனு நீதிக்கு ஒரு நிலையான்-மனு(வினால் தருமசாஸ்திரத் திற்சொல்லப்பட்ட நல்ல) நீதிகட்கெல்லாம் ஓர் இருப்பிடமாக வுள்ளவனும், தருமத்தினது உயிர் என்று தக்கோர் உரை சொல

மிக்கோன் - தருமத்துக்கு உயிர்போல இன்றியமையாதவனென்று பெரியோர் புகழ்ந்துசொல்லும்படி சிறந்தவனுமாகிய யுதிட்டிரன்,—முனைமேல்-(சேனையின்) முற்பக்கத்தில், நிருமித்து -(யாவரையுங்) கட்டளையிட்டுக்கொண்டு, நடந்தான்—;(எ - று.)—இ - ம்: உகளித்தெழு. மேன்மேல். (71)

வேறு.

72.—சேனைகள் நெருங்குதலும், வாத்தியகோஷமும்.

துனைவெங்க போல் விகட கடகரி துரகம்ப தாதி யிரத மளவில
வேனநின்ற சேனை முடுகி யயில்சிலை யெறிதுங்க வாளொ டிகலி யெழவெதிர்
குனிசங்கு தாரை வயிர்கள் முதலிய குணில்கொண்டு சாடு பறைகண் முதலிய
தனிதங்கொண் மேக மெனவு மலைபொரு தமரங்கொள் வேலை யெனவு மதிரவே.

இதுமுதல் ஐந்துகவிகள் - குளகம்.

(இ - ள்.) துனை - விரைந்துசெல்லுகின்றவையும், வெம் கபோலம் - வெவ்விய கன்னங்களையுடையவையும், விகடம் - களிமயக்கங்கொண்டவையுமான, கட கரி-மதயானைகளும், துரகம்-குதிரைகளும், பதாதி - காலாள்களும், இரதம் - தேர்களும், அளவு இல - அளவில்லாதன, என - என்று சொல்லும்படி, நின்ற—, சேனை - இரண்டுசேனைகளும், முடுகி-விரைந்து, அயில்-வேலும், சிலை - வில்லும், எறி துங்கம் வாளொடு - (பகைவர்களைத்) துணிக்கிற சிறந்த வாளும் ஆகிய இவற்றுடனே, இகலி எழ - பகைமை கொண்டு முன்வரவும்,—வெதிர் - வேய்ங்குழல்களும், குனி சங்கு - வளைந்த சங்குகளும், தாரை-தாரைகளும், வயிர்கள் - ஊதுகொம்புகளும், முதலிய - முதலான ஊதுகிற வாச்சியங்களும், குணில் கொண்டு சாடு-குறுந்தடியினால் அடிக்கப்படுகிற, பறைகள் முதலிய - பேரிகைமுதலான வாச்சியங்களும், தனிதம் கொள் மேகம் எனஉம் - இடிமுழக்கத்தைக்கொண்ட மேகம்போலவும், அலை பொரு தமரம் கொள் வேலை எனஉம்-அலைகள் மோதுகிற ஆரவாரத்தைக் கொண்ட கடல்போலவும், அதிர-மிக ஒலிக்கவும்,—(எ - று.)—செயவெனெச்சங்கள்அடுக்கி, 76-ஆஞ் செய்யுளில் "முழுகின" என்ற முற்றோடு முடியும். 'முதலிய' - வினையாலணையும்பெயர்.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள்-முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் புளிமாங்காய்ச்சீர்களும், இரண்டு ஆறாஞ் சீர்கள் தேமாச்சீர்களும், மூன்று ஏழாஞ்சீர்கள் புளிமாச்சீர்களும், நான்கு எட்டாஞ்சீர்கள் கருவிளச் சீர்களுமாகிய எண்சீராசிரியச் சந்த விருத்தங்கள். 'தனதந்த தான தன்ன தனதன தனதந்த தான தனன தனதன' எனச் சந்தக்குழிப்புக் காண்க. (72)

73.— தூளிவருணனை.

கதிகொண்ட சேனை நடவவெழுதுகள் ககனஞ்சுலாவியனிலகதியுற
முதிரண்டதூரகிரணமிருளெழ முகில்பஞ்சபூதவடிவுபெறவிய

னதிவண்டலாகவமரருறைதரு நகரம்பொன்வீதிபுழுதியெழமுழு
மதியங்கமாசுகழியநிரைநிரைவளரண்டகூட முகடுமதிரவே.

(இ-ள்.) கதி கொண்ட - (பலவகை) நடைகளைக்கொண்ட, சேனை - இரண்டு சேனைகளும், நடவ-முன் நடப்பதனுல், எழு- (பூமியினின்று) கிளம்புகிற, துகள் - புழுதி, ககனம் - ஆகாயமார்க் கத்தில், சுலாவி - சுழன்று, அனில கதி உற - காற்றின் வேகத் தைப் பொருந்த, (அதனுல்), முதிர் - (ஒலி) மிகுந்த, அண்ட சூர கிரணம் - ஆகாயத்திலுள்ள சூரியனது கிரணங்கள், இருள் எழ- இருட்சியைப் பொருந்தவும்,—முகில்-மேகம், பஞ்ச பூதம் வடிவு பெற - ஐம்பூதங்களின் வடிவத்தை அடையவும்,—வியத் நதி- ஆகாச கங்காநதி, வண்டல் ஆக-சேருகவும்,—அமரர் உறைதரு நகரம் - அமராவதி பட்டணம், பொன் வீதி - பொன்மயமான தெருக்களில், புழுதி எழ - மண்தூளி யெழும்பப்பெறவும்,—முழு மதி-பூர்ணசந்திரன், அங்கம் மாசு கழிய - தன்னுடலிலுள்ள களங்கம் மிகப்பெறவும்,—நிரை நிரை - அடுக்கு அடுக்காக, வளர் அண்ட கூடம் - (மேன்மேல்) வளர்ந்திருக்கிற உருண்டைவடிவ மான அண்டத்தின், முகடுஉம் - மேல்முகடும், அதிர - அதிர்ச்சி யடையவும்,—(எ - று.)—பி-ம்: மதியங்கண்மாசு. பிதிரவே.

'முகில் பஞ்சபூதவடிவுபெற' - ஐம்பெரும்பூதங்களுள் நீர் தீ காற்று வானம் என்னும் நான்குபூதங்களின் சம்பந்தத்தை இயல் பாகவேயுடைய மேகங்கள் இப்புழுதிகளின்சேர்க்கையால் நிலத் தின் சம்பந்தத்தையும் அடையவென்றபடி. சுவர்க்கலோகத்து ராஜதானியான அமராவதி பொன்னகரமாதலால், 'பொன்வீதி' எனப்பட்டது. வியத்+நதீ=வியந்நதீ: வடமொழித்தொடர்:அது, வியனதியெனத் திரிந்தது: வியத் - ஆகாயம். கழிய, கழி - உரிச் சொல். (73)

74.—நால்வகைச்சேனைவீரரும் ஒருவரோடொருவர் எதிர்த்தல்.

குதிகொண்டவாசிவயவர்பலரொடு குதிகொண்டவாசிவயவர்குறுகினர்
துதிவெங்கைவேழமறவர்பலரொடு துதிவெங்கைவேழமறவர்துதையின
ரதிர்சண்டவேகவிரதர்பலரொடு மதிர்சண்டவேகவிரதரணுகினர்
பொதிவெம்பதாதிவிருதர்பலரொடு பொதிவெம்பதாதிவிருதர்பொதுளவே.

(இ - ள்.) குதி கொண்ட-குதித்தலைக்கொண்ட, வாசி-குதிரை களின் மேலேறிய, வயவர் பலரொடு - பலவீரர்களுடனே, குதி கொண்ட வாசி வயவர்—, குறுகினர் - நெருங்கவும்,—வெம் - வெவ்விய, துதி கை - துதிக்கையையுடைய, வேழம் - யானைக ளின்மேலேறிய, மறவர் பலரொடு-வீரர்கள் பலருடனே, துதிவெம் கை வேழம் மறவர்—,துதையினர் - நெருங்கவும்,—அதிர் - ஒலிக் கின்ற, சண்ட வேகம் - மிக்க வேகத்தையுடைய, இரதர் பலரொடு உம்-தேர்களின்மேலேறிய வீரர்கள் அநேகருடனே, அதிர் சண்ட வேக இரதர்—, அணுகினர் - நெருங்கவும்,—பொதி - (வலி) மிகுந்த, வெம்-கொடிய, பதாதி விருதர் பலரொடு-பல காலாள் வீரர்களுடனே, பொதி வெம்பதாதி விருதர்—, பொதுள - நெருங் கவும்,—(எ - று.)

வயவர், மறவர், விருதர் என்பவற்றிற்கு - வெற்றியை யுடையவரென்று பொருள்: பொருட்பின்வருநிலையணி. (74)

75.—பாகர் தேர்செலுத்துந் திறமும், யுதிட்டிர துரியோதனரது அம்புமழைமிகுதியும்.

புரிசெம்பொனேமிவிசையொடிருகிரி பொருவன்புபோலநவமணியினொளி
விரிதந்தசோதிபடலமிகுவன மிசைகொண்டதேர்கள்கடவவலவர்க
ளெரிசெங்கணுகவரசுமுரசமு மெழுதும்பதாகைநிருபரிருவரு
முரிதந்தசாபமுடுகுபகழியின் முகிறங்குவானமுழுதுமறையவே.

(இ - ள்.) செம் பொன் புரி - சிவந்த பொன்னினாற் செய்யப் பட்ட, நேமி - சக்கரங்களின், விசையொடு - வேகத்துடனே, இரு கிரி - இரண்டு மலைகள், பொரு - போர்செய்கின்ற, வன்பு போல- வலிமைபோல, நவமணியின் ஒளி - (இழைக்கப்பட்டுள்ள) நவரத் தினங்களின் காந்தி, விரிதந்த - பரவப்பெற்ற, சோதி படலம் மிகுவன-ஒளிக்கூட்டம் மிகுவனவாகிய, மிசை கொண்ட தேர்கள்- (தாம்) ஏறியுள்ள தேர்களை, வலவர்கள் - சாரதிகள், கடவ - செலுத்தாநிற்கவும்,—எரி - (கோபத்தால்) எரிகிற, செம் கண்- சிவந்த கண்களையுடைய, நாகம் அரசுஉம் - மகாநாகத்தையும், முரசம்உம் - முரசத்தையும், எழுதும் - (முறையே) எழுதியுள்ள, பதாகை - கொடிகளையுடைய, நிருபர் இருவர்உம்- (துரியோத னன் யுதிட்டிரன் ஆகிய) அரசர்கள் இரண்டு பேரும், முரிதந்த - வளைத்த, சாபம் - விற்களினால், முடுகு - விரைவாகஎய்யப்படுகிற, பகழியின் - அம்புகளால், முகில் தங்கு வானம் முழுதுஉம்—, மறைய - மறைவடையாநிற்கவும்; —(எ - று.)—நேமிவிசையொடு இருகிரிபொருதல் - இல்பொருளுவமம். சிறந்ததை 'அரசு' என்றல், மரபு. (75)

76.—தருமனம்புகளினால் துரியோதனன்மார்பிற் குருதிசொரிதல்.

அறன்மைந்தன்வாளியடையநயனமி லவன்மைந்தன்வாளிவிலகவிரகுடை
விறன்மைந்தன்வாளியடையவிரகிலி விடுபுங்கவாளிவிலகமுறைமுறை
மறமும்பொருதசினமுமிருபுய வலியுந்தவாமலரிதுபொருதபி
னிறமொன்றுமேழுபகழிமுழுகின நிருபன்றன்மார்புகுருதிபொழியவே.

(இ - ள்.) அறன் மைந்தன் - தருமபுத்திரனது, வாளி-அம்பு கள், அடைய - (எதிரிற்) சேர்தலால், நயனம் இலவன் மைந்தன்- பிறவிக்குருடனான திருதராட்டிரனது குமாரனாகிய துரியோதன னது, வாளி - அம்புகள், விலக - தடைப்பட்டுநீங்கவும்,—விரகு உடை விறல் மைந்தன் - வஞ்சனையினாற் பெறும் வெற்றியை யுடைய வீரனான துரியோதனனது, வாளி - அம்புகள், அடைய - எதிர்தலால், விரகு இலி விடு புங்க வாளி - வஞ்சனையில்லாத யுதிட்டிரன் எய்கிற சிறந்த பாணங்கள், விலக-தடைப்படவும்,— முறை முறை - முறைமுறையே [மாறிமாறி], மறம்உம் - பராக்கிர மமும், பொருத சினம்உம் - அடங்காத கோபமும், இரு புயம் வலிஉம் - இரண்டு தோள்களின் வலிமையும், தவாமல் - அழி

யாமல், அரிது-அருமையாக, பொருத பின்-போர்செய்தபின்பு,— நிறம் ஒன்றும் - ஒளிபொருந்திய, ஏழுபகழி - (தருமபுத்திரன் எய்த) ஏழம்புகள், நிருபன் தன்மார்பு-துரியோதனனது மார்பில், குருதி பொழிய - இரத்தம் வழியும்படி, முழுகின—; (எ - று.) —முழுகுதல் - நெடுந்தூரம் பாய்தல். (76)

77.—துரியோதனனம்புகளினால் தருமன்மார்பிற் குருதிசோரிதல்.

விரிகின்றநீலகிரியிலிளவெயில் விழுகின்றதாரையனையவழகொடு
சொரிகின்றசோரியுடையமகிபதி சுளிவின்றிமீளவொருகைந்நொடியினின்
முரிகின்றநீடுபுருவநிகரென முனைகின்றசாபமுரியவிரைவொடு
தெரிகின்றகோல்கண்முழுகியறனரு டிருமைந்தன்மார்புகுருதிபொழியவே.

இதுமுதல் மூன்றுகவிகள் - குளகம்.

(இ - ள்.) விரிகின்ற - பரந்த, நீலகிரியில் - நீலநிறமாகிய மலையில், இளவெயில்-இளஞ்சூரியகிரணம், விழுகின்ற—, தாரை - ஒழுங்கை, அனைய - ஒத்த, அழகொடு-அழகுடனே, சொரிகின்ற சோரி உடைய - (மார்பில்) வழிகிற இரத்தத்தையுடைய, மகிபதி- (துரியோதன) ராசன், சுளிவு இன்றி - வாட்டமில்லாமல், மீள - திரும்பவும், ஒரு கை நொடியினில் - ஒருகைந் நொடிப்பொழுதிற் குள்ளே, முரிகின்ற நீடு புருவம் நிகர் என - நெறிகின்ற நீண்ட புருவம் ஒப்பென்னும்படி, முனைகின்ற சாபம் முரிய-பொருகின்ற வில் வளைவுற, (அதில்), விரைவொடு தெரிகின்ற - வேகத்தோடு ஆராய்ந்து விடுகிற, கோல்கள் - அம்புகள், முழுகி - அழுந்துதலால், அறன் அருள் திரு மைந்தன் மார்பு - தருமராசன் பெற்ற சிறந்த குமாரனாகிய யுதிட்டிரனது மார்பிலே, குருதி பொழிய - இரத்தம் வழியாநிற்க;—(எ - று.)

நீலகிரி - இந்திரநீலரத்தினமயமான மலை: இது - கருநிற முடைய துரியோதனனது வலிய பரந்த மார்புக்கும், அதில் விழுந்துவிளங்குகிற இளவெயில் - மார்பிற் பெருகிவழிகிற செந் நீர்க்கும் உவமை. புருவங்கள் கோபத்தால் நெறிப்படைதல் - அம்பையெய்யும்போது வில் அசைவுறுதற்கு உவமை. முழுகி= முழுக. (77)

78.—தருமன் துரியோதனனது தேர்முதலியவற்றை யழித்தல்.

மருமங்கள்சோரிவடியவிருவரு மலைகின்றபோதின்மதுகைநிலையொடு
தருமன்குமாரனகைகொடவனிபர் தலைவன்குமாரனுரகதுவசமு
மருமந்ததேரும்விசயவலவனு மடல்கொண்டுபாய்புரவியுமழிவுற
வுருமஞ்சநாணியெறியுமொலியெழ வொளிவிஞ்சுநாலுபகழியுதையவே.

(இ - ள்.) மருமங்கள் - மார்புகள், சோரி வடிய - இரத்தம் வழியும்படி, இருவரும்—, மலைகின்ற போதில்—,—தருமன் குமாரன்-தருமபுத்திரன், மதுகை நிலையொடு-வலிமையான நிலையோடு (நின்று), நகை கொடு-(கோபத்தாற்) சிரித்துக்கொண்டு,—அவனிபர் தலைவன் குமாரன்-அரசர்க்கு அரசனான திருதராட்டிரனது புத்திரனாகிய துரியோதனனது, உரக துவசம் உம்-பாம்புக் கொடி

யும், அருமந்த தேர்உம்-(கிடைத்தற்கு) அரிய அமிருதம்போன்ற [மிகச் சிறந்த] தேரும், விசயம் வலவன்உம்-வெற்றியைத்தருகிற சாரதியும், அடல் கொண்டு பாய் புரவிஉம்-வலிமைகொண்டு பாய்கிற குதிரைகளும், (ஆகிய நான்கும்), அழிவுஉற - அழிவடையும்படி,—நாணி எறியும் ஒலி - வில்நாணி தெறிப்பதனாலுண்டாகிய ஓசை, உரும் அஞ்ச-இடியும் அச்சமுறுமாறு, எழ - உண்டாக, ஒளி விஞ்சு நாலு பகழி-ஒளிமிக்கநான்கு அம்புகளை, உதைய-செலுத்த,—(எ - று.)—நிலை-விற்போர்செய்வார்க்கு உரிய நிலை. அருமந்த=அருமருந்தன்ன: மரூஉ. (78)

79.—துரியோதனன் வீசிய வேற்படையைத் தருமன் துணித்தல்.

இழிதந்துமீளவிமயமனையதொ ரிரதங்கடாவியெதிரியுரனிடை
யழிதந்துமீளவயில்கொண்முனையதொ ரயில்கொண்டுவீசியெறியுமளவையின்
மொழிதந்தவேலின்முனையுமொடிவுற முரிவுண்டுகீறிவழியில்விழவெதிர்
பொழிதந்ததாலொர்பகழியறனருள் புதல்வன்கைவாகைபுனையும்வரிவிலே.

(இ - ள்.) (துரியோதனன்), இழிதந்து - (தேரினின்று) இறங்கி, மீள-மறுபடியும், இமயம் அனையது ஓர் இரதம் - இமயமலைபோன்றதொரு பெருந்தேரை, கடாவி-ஏறிநடத்திக்கொண்டு, எதிரி-பகைவன், உரன் இடை - மார்பினிடம், அழிதந்து-அழியப்பெற்று, மீள-திரும்பிப்போம்படி, அயில் கொள் முனையது ஓர் அயில்-கூர்மையைக்கொண்ட நுனியையுடையதாகிய ஒருவேலாயுதத்தை, கொண்டு-கையிலெடுத்து, வீசி எறியும் அளவையில்-வேகமாய் எறிகிற சமயத்தில்,—அறன் அருள் புதல்வன்-தருமக்கடவுள்பெற்ற புத்திரனது, கை-கையிலுள்ள, வாகை புனையும்-வாகைப்பூமாலையைச் சூடிய, வரி வில்-கட்டமைந்த வில்லானது,—மொழிதந்த-(கீழ்ச்) சொல்லப்பட்ட, வேலின்-வேலினது, முனைஉம்-நுனியும், ஒடிவு உற-ஒடியவும், முரிவுஉண்டு - (அவ்வேலும்) பிளந்து, கீறி-(இரண்டு) துண்டாகி, வழியில் விழ-இடைவழியில் விழவும், ஓர் பகழி-ஓர் அம்பை, எதிர்-எதிரே, பொழிதந்தது - பிரயோகித்தது; (எ - று.)—பி-ம்: அளவினின். (79)

80.—தருமன் துரியோதனனைத் தோற்கடித்தல்.

பிளவுண்டுவேல்விழுதலின்மகிபதி பிழைகொண்டவேழமனையமெலிவி ன
னுளநொந்துநாணியுருளுமிரதமு முடைதந்துபோருமொழியும்வகைசில
கிளரம்புவீசியொருபவளமுது கிரிநின்றதாகுமெனமுனிலைபெறு
வளமைந்தன்வாய்மையுரைசெய்தனன்மிசை வருமும்பர்யாருமிதயமகிழவே.

(இ - ள்.) வேல்—, பிளவுண்டு - பிளக்கப்பட்டு, விழுதலின்-கீழே விழுந்துபோனதனால், பிழை கொண்ட வேழம் அனைய மெலிவினன்-(தன்குறிப்புத்) தவறுதலைக்கொண்ட யானையைப்போன்ற வாட்டத்தையுடையவனாகிய, மகிபதி - அத்துரியோதனராசன், (பின்னும்), உளம் நொந்து-மனம்வருந்தி, நாணி-வெள்கி, உருள்உம் இரதம்உம் உடைதந்து-சக்கரங்களுந் தேரும் உடையப்பெற்று, போர்உம் ஒழியும் வகை-போரும் நீங்கும்படியாக, கிளர்

சில அம்பு வீசி-விளங்குகிற சில அம்புகளைப் பிரயோகித்து, ஒரு பவள முதுகிரி நின்றது ஆகும் என-பவழமயமானதொரு பழைய [பெரிய] மலை நின்றதை ஒக்கு மென்னும்படி, முன்-எதிரே, நிலை பெறு-நிலையாக நின்ற, வளம் மைந்தன்-வெற்றியையுடைய வீர ஞன யுதிட்டிரன்,—மிசை வரும்-மேலே [ஆகாயத்தில்] (போர் காண)வந்த, உம்பர் யார்உம்-தேவர்க ளெல்லாரும், இதயம் மகிழ- மனம் மகிழும்படி, வாய்மை - (சில) மெய்வார்த்தைகளை, உரை செய்தனன் - (துரியோதனனை நோக்கிச்) சொல்லுவானானான்; (எ - று.)—அவற்றை, மேல் இரண்டுகவிகளிற் கூறுகின்றார். பிழை கொண்ட வேழம்-தவறி(ப் படுகுழியிலே) அகப்பட்டுக் கொண்ட யானை யென்றலுமாம். பவளமலையை உவமை கூறிய தனால் தருமன் செந்நிறத்தவ னென்க. (80)

81.— இதுவும், அடுத்தகவியும் - ஒருதொடர்: தருமன் துரியோதனனை இகழ்தலைத் தெரிவிக்கும்.

> அளிதங்குமாலையரசரவையிலு னதிவஞ்சமாமனவனிகவர்வுற
> வெளிவந்தசூதுபொருதவிரகரி தெளிதின்றுபூசலெனமுன்விரவினை
> யொளிவிஞ்சுதேருமுடையபடைகளு முடையுண்டுநீயுமுறுதிதவறினை
> தெளிவென்பதாசுமிலதுன்மனமுறு செருவென்றதூரமமையுமமையுமே.

(இ - ள்.) 'அளி தங்கு-வண்டுகள் மொய்க்கின்ற, மாலை - மாலைகளைத்தரித்த, அரசர்-அரசர்களது, அவையில்-சபையிலே, உன் அதி வஞ்சம் மாமன்-உன்னுடைய மிக்க வஞ்சனையையுடைய மாமனாகிய சகுனி, அவனி கவர்வுற - (எங்கள்) இராச்சியத்தைப் பறித்துக்கொள்ளும்படி, எளி வந்த சூது பொருத-எளிமைபொருந் திய சூதாட்டத்தை யாடின, விரகு-தந்திரம், அரிது-(செய்தற்கு) அருமையானது: இன்று - இப்பொழுது, பூசல் - போர்செய்தல், எளிது-(செய்தற்கு) எளியது,' என-என்று எண்ணி, முன் -எதிரில், விரவினை-(போர்க்கு) வந்து நின்றாய்போலும்; ஒளி விஞ்சு தேர்உம் -ஒளிமிக்க இரதமும், உடைய படைகள்உம்-உடையனவான ஆயு தங்களும், உடையுண்டு - அழிபட்டு, நீயும்—, உறுதி தவறினை -(மனத்தின்) வலிமைநிலை தவறினாய்; உன் மனம்—, தெளிவு என்பது-தெளிவான அறிவென்பதை, ஆசுஉம் இலது - சிறிதும் உடையதன்று; உறு செரு வென்ற-மிக்க போரிலே (நீ பகைவ ரைச்) சயித்த, வீரம்-வீரத்தன்மை, அமையும் அமையும்-போதும் போதும்; (எ - று.)

'சூதுபோர் அரியதேயன்றி மோதுபோர் அரியதன்று: மிக வெளியது' என்று எண்ணினை யாதலின், எதிர்த்துவந்தாய்; அங் ஙனம் எண்ணமற் சூதுபோரினும் மோதுபோர் அரிய தென்று எண்ணினையாயின் சூதுபோர்க்கே அயலாரையேவின நீ இம்மோது போர்க்கு வந்திராய் என்றபடி. அமையும் அமையும் - அடுக்கு, இகழ்ச்சி. (81)

82. அனிலன்குமாரனரசரசனியெ னனுசன்சொல்வாய்மைபழுதுபடுமென
வுனையின்றுகோறலொழிவதலதுநி னுரமென்கொலாகுமெனதுகணையெதிர்

புனைதும்பைமாலைசருகுபடவெழு பொடிமண்டவோடிமறைகவிரைவுட
னினியெங்களாண்மையுரைசெய்தெதுபய னெதிர்வந்துநாளையணிகவிகலியே.

(இ - ள்.) அனிலன் குமாரன் - வாயுபுத்திரனும், அரசர் அசனி - பகையரசர்க்கு இடிபோன்றவனும், என் அனுசன் - எனது தம்பியுமாகிய வீமன், சொல் வாய்மை - (முன்னே) சபதஞ் செய்த வார்த்தை, பழுது படும் - (உன்னை நான் கொன்றால்) தவறிப்போகும், என - என்று எண்ணி, உனை -, இன்று —, கோறல் ஒழிவது அலது - கொல்லுதலைச் செய்யாதொழிவ தல்லாமல், நின் உரம் - உனது வலிமை, எனது கணை எதிர் - என் அம்புகளுக்கு எதிரில், என் கொல் ஆகும் - என்ன தன்மையதாம்? புனை தும்பை மாலை - அணிந்துள்ள தும்பைப்பூமாலை, சருகு பட - சருகாக உலர்ந்துபோம்படி, எழு பொடி மண்ட - (கால்களின்விசையால்) கிளப்பப்படுகிற புழுதி மிகுமாறு, விரைவுடன் - வேகத்தோடு, ஓடி மறைக - (என்கண்ணெதிரில்நில்லாமல்) ஓடிச்சென்றுமறைந்து போவாயாக; இனி எங்கள் ஆண்மை உரைசெய்து எது பயன்—? நாளை - நாளைக்கு, இகலி - வலிமைகொண்டு, எதிர் வந்து அணிக - எதிரில் அணிவகுத்துப் போர்க்கு வருவாயாக; (எ - று.)—என்று தருமபுத்திரன் துரியோதனனைநோக்கிக் கூறினனென்க. தழிஞ்சியென்னும் புறத்துறை போலவந்தது, இது.

சொல்வாய்மை - துரியோதனாதியர் நூற்றுவரையும் யான் ஒருவனே பொருது கொல்வேனென்று திரௌபதியைத் துகிலுரிந்த காலத்துக் கூறிய பிரதிஜ்ஞை. 'ஆண்மை யுரைசெய் தெது பயன்'—அது யாவர்க்கும் நிச்சயமாகத் தெரிந்ததே யென்க. (82)

83.—கதையெறிந்த துரியோதனன்மேல் தருமன் வேலெறிதல்.

முதிர்குந்தி போசன் மகடன் மகனிவை மொழிதந்த போழ்து பெருக முறுவல்செய், ததிருஞ்சு யோதனனுமொ ருயர்கதை யவன் மன்றன் மார்பி னுரனொடெறிதர, வெதிர்சென்று நீதி நிருப னுறுமவ னெறிதண்டு கூறு படவு மெறிபவன், விதிருண்டு பாரில் விழவு மொருதனி விறலுந்து வேல்கொ டுருவ வெறியவே.

இரண்டுகவிகள் - குளகம்.

(இ - ள்.) போசன் மகள் குந்திதன் முதிர் மகன் - போஜதேசத்து அரசனாகியகுந்திபோஜனென்பவனது மகளான குந்தியின் மூத்தகுமாரனாகிய யுதிட்டிரன், இவை மொழிதந்த போழ்து—, பெருக முறுவல் செய்து - மிகச்சிரித்து, அதிரும் - சிங்கநாதஞ் செய்கிற, சுயோதனன் உம் - துரியோதனனும், ஓர் உயர் கதை - ஒரு பெரிய கதாயுதத்தை, அவன் மன்றல் மார்பின் - அத்தருமனது வாசனையையுடைய மார்பிலே, உரனொடு எறிதர—, எதிர் சென்று - எதிரிற்போய், உறும் - வருகிற, அவன் எறி தண்டு - அவனெறிந்த கதாயுதம், கூறு படஉம் - பிளவுபடும்படியாகவும்,— எறிபவன் - (கதையை) எறிந்த அவன், விதிருண்டு - நடுக்கமடைந்து, பாரில் விழஉம்—, நீதி நிருபன் - நியாயத்தையுடைய தருமபுத்திரன்,—தனி - ஒப்பில்லாத, விறல் உந்து - வலிமையோடு

எறியத்தக்க, ஒரு வேல் கொடு - ஒரு வேலாயுதத்தை எடுத்து, உருவ - ஊடுருவும்படி, எறிய-வீச,—(எ - று.) —"வேந்தர் வேந்தன் வீழ்ந்தனன்" என மேலே முடியும்.

குந்தி - வசுதேவருடன் பிறந்தவள்; கிருஷ்ணனுக்கு அத்தை: (இவளைத் தந்தையான சூரன் தனது நண்பனும் பிள்ளையில்லாதவனுமான குந்தியென்பவனுக்குத் தத்துக்கொடுத்ததனால், இவளுக்குக் குந்தியென்று பெயர்;) பிருதை யென்பது, இவளது இயற்பெயர். பி - ம்: புனையுநிருபனும். (83)

வேறு.

84.—துரியோதனன் கீழ்விழக் கர்ணன் அவனையடுத்தல்.

சூழ்ந்தது விதிகொல் பாகுந் துரகமுந் தேரும் வீழ
வீழ்ந்தனன் வேந்தர் வேந்தன் மெய்தவா வேந்தன் வேலாற்
றாழ்ந்தது நமது கொற்ற மெனநடுத் தரிப்பொன் றின்றி
யாழ்ந்தபைங் கடலோ டொப்பா னடுத்தன னங்கர் கோமான்.

(இ - ள்.) ஆழ்ந்த பைங் கடலோடு ஒப்பான்-ஆழமான பசிய கடலோடு ஒப்பவனாகிய, அங்கர் கோமான் - அங்கதேசத்தார்க்கு அரசனான கர்ணன்,—'வேந்தர் வேந்தன் - ராஜராஜனான துரியோதனன், பாகு உம் துரகம் உம் தேர் உம் வீழ - சாரதியும் குதிரைகளும் தேரும் (முன்னமே) அழிய, மெய் தவா வேந்தன் வேலால்-சத்தியந் தவறாத யுதிட்டிரராசனது வேலினால், வீழ்ந்தனன் - தரையில் (பிறகு) விழுந்தான்; விதி சூழ்ந்தது கொல் - ஊழ்வினை (அவனைமுடித்தற்குச்) சுற்றிக்கொண்டதோ? நமது—, கொற்றம் - வெற்றி, தாழ்ந்தது - தாழ்வடைந்தது', என - என்று எண்ணி, நடு தரிப்பு ஒன்று இன்றி - மனம் நிலைநிற்றல் சிறிதும் இல்லாமல் [மனங்கலங்கி], அடுத்தனன் - (துரியோதனனருகில்) வந்து சேர்ந்தான்; (எ - று.)

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவுமுள்ள எட்டுக் கவிகள்-பதினான்காம்போர்ச்சருக்கத்தின் 155-ஆங்கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (84)

85.—அசுவத்தாமன் துரியோதனனை அடுத்தல்.

முற்படுதினத்திற்றந்தைமுடிந்தமெய்வருத்தத்தோடு
கற்படுபுண்ணின்மீளத்தடிபடுகணக்கிற்றாக
வெற்படுதடந்தோள்வேந்தன்வீழ்ந்தனனென்றுவெய்தி
னெற்படுபரிதியென்னத்தோன்றினனிவுளித்தாமா.

(இ - ள்.) இவுளித்தாமா - அசுவத்தாமன்,—முன படு தினத்தில்-முந்தினநாளையுத்தத்தில், தந்தை முடிந்த - (தன்) பிதாவாகிய துரோணன் இறந்ததனாலுண்டான, மெய் வருத்தத்தோடு - மனவருத்தத்துடன், கல்படு புண்ணின் மீள தடி படு கணக்கிற்று ஆக - கல்பட்டதனாலாகிய விரணத்திலே மற்றும் தடியடிபட்ட தன்மையதாம்படி, வெற்பு அடு தட தோள்வேந்தன்

வீழ்ந்தனன் - மலையையொத்த பெரிய தோள்களையுடைய அரசன் (இன்று) கீழ் வீழ்ந்தான், என்று-என்று எண்ணி வருந்தி, வெய்தின் - உக்கிரமாக, எல் படு பரிதி என்ன-பகலில் தோன்றுகிற சூரியன்போல, தோன்றினன்-(அங்கே) வந்தான்; (எ - று.)

மெய்-மனத்துக்கு முதலாகுபெயர். வருத்தத்தின்மேல் வருத்தத்திற்குக் கற்படுபுண்ணில் மீளத் தடிபடுதல் உவமம். (85)

86.—கிருபாசாரியன் துரியோதனனை அடுத்தல்.

வேட்டவெங்களிறோடொப்பான்மேதினிக்கரசன்விற்போர்ப்
பூட்டரும்புரவித்தேரும்பொன்றியபுலனுமாகி
யோட்டமிறுனையான்கைவேலினாலுடைந்தமாற்றங்
கேட்டனனவர்க்குமுன்னேகிருபவாசிரியன்வந்தான்.

(இ - ள்.) வேட்டம் வெம் களிறோடு ஒப்பான் - வேட்டைத்தொழிலிற் பொருந்திய கொடிய ஆண்யானையோடு ஒப்பவனாகிய, மேதினிக்கு அரசன்-பூமிக்கு அரசனான துரியோதனன், வில்போர்-வில்லைக்கொண்டு செய்யும் போரில், பூட்டு அரும் புரவி தேர் உம்-(கட்டிப்) பூட்டுதற்கு அரிய குதிரைகள் பூட்டியதேரும், பொன்றிய புலன் உம் ஆகி-அழிந்த அறிவும் உடையவனாய், ஓட்டம் இல் தானையான் கை வேலினால் - (புறங்கொடுத்து) ஓடுதலில்லாத சேனையையுடையவனான யுதிட்டிரனது கையினாலெறியப்பட்ட வேலினால், உடைந்த-அழிந்த, மாற்றம்-செய்கையை, கேட்டனன்-கேட்டவனாகி, கிருப ஆசிரியன்-கிருபாசாரியன், அவர்க்குமுன்னே வந்தான்-கீழ்க் கூறிய கர்ண அசுவத்தாமர்களுக்கு முன்னே ஓடி வந்தான்; (எ - று.)

வேட்டவெங்களிறு, அடங்காத சீற்றத்துக்கு உவமை. வேட்ட வெங்களிறு-வேட்டையிற்பிடிபட்ட களிறுமாம். வில்-வேல் முதலியமற்றை ஆயுதங்கட்கும் உபலக்ஷணம். (86)

87.— சல்லியன் துரியோதனனை அடுத்தல்.

காப்புடையொற்றைநேமிக்காவலன்றாமமார்பி
னாப்புகல்வாய்மையான்றனாண்மலச்செங்கைவைவேல்
கோப்புறவீழுமுன்னர்க்கொதித்தெழுமனத்தனாகித்
தாப்புலிபாய்ந்ததென்னச்சல்லியன்றானும்வந்தான்.

(இ - ள்.) காப்பு உடை - காத்தல்தொழிலையுடைய, ஒற்றை நேமி-ஒப்பற்ற ஆஜ்ஞாசக்கரத்தைக்கொண்ட, காவலன்-துரியோதனராசனது, தாமம் மார்பில்-(நஞ்சாவட்டைப்பூ) மாலையையுடைய மார்பிலே, நா புகல் வாய்மையான் தன் - நாவினாற்சொல்லப்படுகின்ற சத்தியத்தையே யுடையவனான யுதிட்டிரனது, நாள் மலர் செம் கை-அன்றலர்ந்த செந்தாமரைமலர்போன்ற சிவந்த கையினாலெறியப்பட்ட, வை வேல்-கூர்மையான வேல், கோப்பு உற-கோத்தல்பொருந்த, வீழும் முன்னர்-விழும்முன்னமே, கொதித்து எழும் மனத்தன் ஆகி-கோபித்து எழுகிற மனத்தையுடையவனாய்,

சல்லியன் தான்உம்-சல்லியனும், தா புலி பாய்ந்தது என்ன-வலிய புலி பாய்ந்ததுபோல, வந்தான் - விரைந்துவந்தான்; (எ - று.)— ஒற்றைநேமி-ஏகசக்கராதிபத்தியம். வீழுமுன்னர் வந்தான் - விரைவை விளக்கும். (87)

88.—அருச்சுனன் முதலியோர் தருமனை யடுத்தல்.

எப்பெருஞ்சேனையோடுமெக்குலவேந்தும்வந்து
தப்பருங்கொற்றவேற்கைத்தருமனைவளைந்தகாலை
யப்பெருந்தானைதன்னிலருச்சுனனுதியான
வொப்பருந்தரணிபாலரிவற்கும்வந்துதவினரே.

(இ-ள்.) எ குலம் வேந்துஉம் - உயர்குலத்தில் தோன்றிய எல்லாவரசரும், எ பெருஞ் சேனையோடுஉம்-பெரிய எல்லாச்சேனைகளுடனும், வந்து—, தப்பு அருங் கொற்றம் வேல் கை - தவறுதலில்லாத வெற்றியைத்தருகிற வேற்படையை யெறிந்த கையையுடைய, தருமனை—, வளைந்த காலை - சூழ்ந்த பொழுதில்,—அ பெருந் தானை தன்னில்-அந்தப் பெரிய பாண்டவசேனையிலுள்ள, அருச்சுனன் ஆதி ஆன - அருச்சுனன் முதலான, ஒப்பு அருந் தரணி பாலர்-உவமையில்லாத அரசர்கள், இவற்குஉம் வந்து உதவினர்-இத்தருமனுக்கும் வந்து துணையானார்கள்; (எ - று.) (88)

89.—பின்பு நிகழ்ந்த போரிற் கௌரவர் புறமிடுதல்.

இருபடையரசுந்தம்மிலீரிரண்டங்கமாகி
வருபடைகொண்டுநின்றுவல்லவாபூசருக்கிப்
பொருமரவுடைப்பதாகைப்பூபதிதனையுங்கொண்டாங்
கொருபடைகைக்கொளாமலொன்னலருடைந்துபோனர்.

(இ - ள்.) இரு படை அரசுஉம்-ஆயுதங்களில்வல்ல (கௌரவர் பாண்டவர் என்னும்) இருதிறத்தரசர்களும், ஈர் இரண்டு அங்கம் ஆகி வரு படை கொண்டு-(யானை தேர் குதிரை காலாள் என்னும்) நான்கு அங்கமாகி வருகின்ற சேனையை யுடன்கொண்டு, நின்று-எதிர்த்துநின்று, வல்ல ஆ-(தாம் தாம்) வல்லபடி, தம்மில் -தமக்குள், பூசல் தாக்கி - போரை மோதிச்செய்து,—(பின்பு),— ஆங்கு-அப்போரில், ஒன்னலர் - பகைவர் [கௌரவசேனையார்], உடைந்து-தோற்று, பொரும் அரவு உடை பதாகை பூபதி தனைஉம் கொண்டு - (பிராணிகளைத்) தீண்டியழிக்குந்தன்மையதான பாம்பின் வடிவத்தையெழுதிய கொடியையுடைய துரியோதனராசனையும் எடுத்துக்கொண்டு, ஒரு படை கை கொளாமல் - ஓர் ஆயுதத்தையுங் கையிற் கொள்ளாமல் [எல்லாவாயுதங்களையும் இழந்து], போனர்-ஓடிப்போனார்; (எ - று.)—பி. - ம்: தாக்கப் பொருபணி. (89)

90.—பாண்டவசேனையார் வெற்றியொடு மீளுதல்.

நாகையாப்புகழான்பெண்ணைநதிவளஞ்சுரக்குநாடன்
வாகையாற்பொலிதிண்டோளான்மாகதக்கொங்கர்கோமான்

பாகையாட்கொண்டான்செங்கைப்பரிசுபெற்றவர்நெஞ்சென்ன
வோகையாற்செருக்கிமீண்டாருதிட்டிரன்சேனையுள்ளார்.

(இ-ள்.) உதிட்டிரன் சேனை உள்ளார் - தருமனது சேனையி லுள்ள வீரர்கள்,—நா கையா புகழான்—நாவுக்குக் கைக்காத [மிகஇனிய] கீர்த்தியையுடையவனும், பெண்ணை நதி வளம் சுரக்கும் நாடன்-பெண்ணையாற்றின் நீர்வளம் மிக்க திருமுனைப் பாடிநாட்டை யுடையவனும், வாகையால் பொலி திண் தோளான்- வெற்றிமாலையால் விளங்குகின்ற வலிய தோள்களையுடையவனும், மாகதம் கொங்கர் கோமான் - மாகதக்கொங்குநாட்டிற்குத் தலைவ னும் ஆகிய,பாகை-வக்கபாகையென்னும் நகரத்தில் அரசாளுகிற, ஆட்கொண்டான் - வரபதியாட்கொண்டா னென்னும் மன்னவ னது, செம் கை - சிவந்த இரண்டு கைகளினாலும் கொடுக்கப்படு கிற, பரிசு - வெகுமானத்தை, பெற்றவர் - பெற்ற புலவர்களது, நெஞ்சு என்ன-மனம்போல, ஓகையால் செருக்கி - மகிழ்ச்சியினாற் களித்து, மீண்டார் - திரும்பி (த் தம் படைவீட்டுக்கு)ச் சென் றார்கள்; (எ - று.)

வெறுப்பைத் தராத புகழின் இனிமைமிகுதியை நன்கு விளக்குதற்கு, 'நா கையாப்புகழ்' என்றது. மாகதக்கொங்கு என்பது - நடுநாட்டைக்குறிக்கு மென்பர். பாகை=வக்கபாகை: முதற்குறைவிகாரம். ஆட்கொண்டான் - பெயர். பி-ம்: பெற்றவர் கள்போல. (90)

91.—அன்றைச் சூரியாஸ்தமனமும், மறுநாட் சூரியோதயமும்.

அருக்கனுந் தருமன் மைந்த னுண்மையு நிலையுங் கண்டு
வெருக்கொளு நிருப ரென்ன மேற்றிசை வேலை மூழ்கிச்
சுருக்கமில் கங்குற் காலஞ் சென்றபின் சுதன்மே லன்பு
பெருக்கவுண் டாக மீண்டுங் குணகடல் பிறந்திட் டானே.

(இ - ள்.) அருக்கன் உம் - சூரியனும்,—தருமன் மைந்தன் - தருமபுத்திரனது, ஆண்மைஉம் - பராக்கிரமத்தையும், நிலைஉம்- போர்நிலைமையையும, கண்டு - பார்த்து, வெரு கொளும்-அச்சங் கொள்ளுகிற, நிருபர் என்ன - அரசர்கள் (ஓடியொளித்தல்)போல, மேல் திசை வேலை - மேற்குத்திக்கிலுள்ள கடலில், மூழ்கி - முழுகிமறைந்து [அஸ்தமித்து],—சுருக்கம் இல் - சுருங்குதலில் லாத, கங்குல் காலம் - இராப்பொழுது, சென்றபின் - கழிந்த பின்பு,—சுதன்மேல் அன்பு பெருக்க உண்டாக-(தன்) குமாரனை கர்ணனிடத்து அன்பு மிகுதியாக உண்டாக, (அதனால் அவனைக் காணுதற்கு வந்தவன் போல), மீண்டுஉம் - மறுபடியும், குண கடல் பிறந்திட்டான் - கிழக்குக்கடலில் உதித்தான்; (எ - று.)

முதலிரண்டடி-உவமையணி. பின்னிரண்டடியில் சூரியன்உதித் தற்குச் சுதன்மேலன்புபெருக்கஉண்டாதலைக் காரணமாகக் கற் பித்ததனால், ஏதுத்தற்குறிப்பேற்றவணி. (91)

பதினாறும்போர்ச்சருக்கம் முற்றிற்று.

பதினேழாம்போர்ச்சருக்கம்.

1.—கடவுள் வணக்கம்.

**ஈரொரு பிறப்பி னுருசிறு குறளா யாவருந் தேவரும் வியப்பக்
காரொரு வடிவு கொண்டெனச் சென்று காவல்கூர் மாவலி யளித்த
நீரொரு கரத்தில் வீழுமுன் றரங்க நீனிற மகரநீ ருடுத்த
பாரொரு கணத்தி லளவிடுங் கமல பாதனூர் நாதனூர் நமக்கே.**

(இ - ள்.) தேவர்உம்-தேவர்களும், யாவர்உம்-மற்ற எல்லாரும், வியப்ப-(கண்டு) அதிசயிக்கும்படி, கார் ஒரு வடிவு கொண்டு என - கரிய மேகம் ஒரு புருஷவுருவத்தை எடுத்துச் சென்றாற் போல, ஈர் ஒரு பிறப்பின் - இரண்டு வகைப்பட்ட ஒப்பற்ற பிறப்புக்களையுடைய, ஒரு சிறு குறள் ஆய் - சிறியதொரு வாமன மூர்த்தியாய், சென்று - போய், காவல் கூர் - (மூவுலகங்களையுங்) காத்தல்தொழில் மிகுந்த, மாவலி - மகாபலிசக்கரவர்த்தி, அளித்த - தாரைவார்த்துக்கொடுத்த, நீர் - தானஜலம், ஒரு கரத்தில் - ஒரு [வலது] திருக்கையில், வீழும் முன் - விழுவதற்கு முன்னே [மிகவிரைவி லென்றபடி], தரங்கம் - அலைகளையுடைய, நீல் நிறம் - நீலநிறத்தை யுடைய, மகரம் - சுறாமீன்களையுடைய, நீர் - கடலினால், உடுத்த - சூழப்பட்ட, பார் - பூமியை, ஒரு கணத்தில் - ஒரு க்ஷணப்பொழுதிலே, அளவிடும்-அளந்தருளிய, கமல பாதனூர் - செந்தாமரைமலர்போலுந்திருவடிகளையுடைய எம்பெருமான் தான், நமக்கு நாதனூர்-நமக்குத் தலைவராவர்; (எ-று.)

ஈரொருபிறப்பு - தேகவுற்பத்தியாகிய ஒரு பிறப்பும், உபநயந ஸம்ஸ்காரத்தா லாகிய தொருபிறப்பும் ஆக இரண்டுபிறப்பு; இதனால், பிராமணர்க்குத் தென்மொழியில் 'இருபிறப்பாளர்' என்றும், வடமொழியில் 'த்விஜர்' என்றும் பெயர். பதினேழா நாட்போரில் மாலைப்பொழுதிற் கன்னன் உயிரிழத்தற்கு முன்பு கண்ணன் ஒருபிராமணவுருவங்கொண்டு அவனிடஞ் சென்று அவன் செய்துள்ள புண்ணியமனைத்தையுந் தாரைநீருடன் தானம் வாங்குவதனால், அவ்வரலாற்றைக் கூறுகிற இச்சருக்கத்துக் கடவுள் வாழ்த்தில், அக்கருத்துத் தோன்ற, அதனோடொத்த மாவலிபக்கல்தானம்வடி நிலம் பெற்றவரலாற்றை எடுத்துக்கூறினார்; அங்கும் "அங்கையாலேற்றான்... மூவுலகமுமுடன் கவர்ந்தோன்" (241) என்று கூறுவதுங் காண்க.

இதுமுதற்பதினாறுகவிகள் - பெரும்பாலும் இரண்டு நான்கு ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றவை விளச்சீர்களுமாகிய எழுசீராசிரியவிருத்தங்கள். (92)

2. —முன்னையநாள்தோற்ற அரசர்பலரும் களங்குறுகுதல்.

**அற்றைவெஞ்சமரிலமர்முனைந்தாற்றுதழிந்துபோமவனிபர்பலரு
மற்றைநாளலகில்புவனமுமின்றேமடியுமென்றனைவருமயங்க
வொற்றைவெண்சங்கும்பல்வகைப்பறையுமோதவான்கடலெனவொலிப்பக்
கற்றைவெண்கவரிகால்பொரத்தனிப்பொற்கவிகைநீழலிற்களங்கலந்தார்.**

(இ - ள்.) அற்றை வெம் சமரில் - அன்றைநாள் [பதினாறு நாள்] கொடிய யுத்தத்தில், அமர் முனைந்து - போர்செய்து, ஆற்றாது - முன் நிற்கமாட்டாமல், அழிந்து போம் - தோற்றுப் போன, அவனிபர் பலர்உம் - அரசர்களெல்லாரும், மற்றைநாள் - பதினேழாநாளில், அலகு இல் புவனம்உம் - அளவில்லாத பூமி முழுவதும், இன்றுஏ - இன்றைத்தினமே, மடியும் - அழிந்துபோம், என்று —, அனைவர்உம் - எல்லாரும், மயங்க - பிரமிக்கும்படி, ஒற்றை வெண் சங்குஉம் - ஒப்பற்ற வெள்ளிய சங்கங்களும், பல்வகை பறைஉம் —, ஓதம் வான் கடல் என - அலைகளையுடைய பெரிய கடல் போல, ஒலிப்ப - ஒலிக்கவும், கற்றை வெண் கவரி - தொகுதியாகிய வெண்சாமரங்கள், கால் பொர - காற்றை வீசவும், தனி பொன் கவிகை நீழலில் - ஒப்பற்ற பொற்காம்பிட்ட குடைகளின் நிழலிலே, களம் கலந்தார் - போர்க்களத்தை அடைந்தார்; (எ - று.)—ஒற்றை - ஒருகுழற்கருவி யென்றுருமுளர். (93)

3.—கர்ணன் துரியோதனனோடு போர்க்களஞ் சேர்தல்.

எண்ணிருதினத்திற்பட்டபல்படையுமீண்டுமீண்டெழுந்தனவென்னும்
வண்ணமோரளவில்வாசியுந்தேருமதசயிலமும்பதாதிகளும்
விண்ணுமண்ணகமுந்தெரிவுறுவழக்கின் வெங்களமுழுவதுங்கஞல
வண்ணலந்தடக்கைக்கெதிரிலாவண்மையாண்டகையரசுடனடைந்தான்.

(இ - ள்.) 'எண் இரு தினத்தில் - கீழ்ப்பதினாறுநாள்களில், பட்ட - (போரில்) இறந்த, பல் படைஉம் - பலசேனைகளும், ஈண்டு - இவ்விடத்தில், மீண்டு - திரும்பவும், எழுந்தன - பிழைத்துவந்தன,' என்னும் வண்ணம் - என்றுசொல்லும்படி, ஓர் அளவு இல் - ஒரு அளவு இல்லாத, வாசிஉம் - குதிரைகளும், தேரும் —, மத சயிலம்உம் - மதத்தையுடைய மலைபோன்ற யானைகளும், பதாதிகளும் —, விண் உம் மண் அகம்உம் தெரிவுறுவழக்கின் - வானுலகத்தவராலும் நிலவுலகத்தவராலும் [யாவராலும்] (இத்தன்மையதென்று) அறியக்கூடாத தன்மையாக, வெம் களம் முழுவதுஉம் - கொடிய போர்க்களம் முழுவதிலும், கஞல - நெருங்க, — அண்ணல் அம் தட கைக்கு - பெருமையையுடைய அழகிய பெரிய கைகளுக்கு, எதிர் இலா - ஒப்பில்லாத, வண்மை - தானத்தையுடைய, ஆண்தகை - ஆண்மைக் குணமுடைய கர்ணன், அரசுடன் - துரியோதனனோடு, அடைந்தான் - (போர்க்களத்தைச்) சேர்ந்தான்; (எ - று.)—பி-ம்: என்ன.

4.—கன்னனிருந்த பொலிவுகண்டு யாவருங் களித்தல்.

சென்னியின்மகுடமணிவெயிலெறிப்பத்திருக்குழைமணிவெயிலெறிப்ப
மன்னியபொலம்பூண்மணிவெயிலெறிப்ப வனைகழன்மணிவெயிலெறிப்பத்
தன்னைமுன்பயந்தோன்றன்னினும்வடிவந் தயங்குசெஞ்சுடர்வெயிலெறிப்பக்
கன்னனன்றிருந்தவழகினையாரே கண்டுகண்களிப்புறுதொழிந்தார்.

(இ - ள்.) சென்னியில் - தலையில்தரித்த, மகுடம் - கிரீடத்திற் பதித்த, மணி - இரத்தினங்கள், வெயில் எறிப்ப - சூரியகாந்தி போன்ற ஒளியை வீசவும், திரு குழை - அழகிய குண்டலத்தி

விளைத்த, மணி—, வெயில் எறிப்ப—, மன்னிய-(மற்றை அவயவங்களிற்) பொருந்திய, பொலம் பூண் - பொன்னாபரணங்களிலுள்ள, மணி—, வெயில் எறிப்ப—, வனை கழல்-(காலிற்) கட்டிய வீரகண்டையிற்பொருந்திய, மணி—, வெயில் எறிப்ப—, தன்னை முன் பயந்தோன் தன்னின்உம்-தன்னை முன்னே பெற்ற சூரியனிலும் (அதிகமாக), வடிவம் தயங்கு செம் சுடர் - (தன்) உடம்பில் விளங்குகிற சிவந்த ஒளி, வெயில் எறிப்ப—, கன்னன் அன்று இருந்த அழகினை—, கண்டு—, கண்களிப்பு உறாது ஒழிந்தார் - கண்கள் களிப்படையாமற் போனவர், யாரே-எவர் தாம்? [எவருமில்லை; எல்லோரும் அன்றைக்குக் கர்ணன் போரில் வந்திருந்த அழகைநோக்கிக் கண்களித்தன ரென்றபடி]; (எ-று.)—சொற்பொருட்பின்வருநிலையணி. (95)

5.—யுதிஷ்டிரன் தம்பிமார்முதலியோரோடு போர்க்களத்தில்வந்துநிற்றல்.

ஒருங்களப்பரியபதாகினிக்குழாமுமுயிர்க்குயிரானதம்பியரும்
அருங்களக்கனிகொள்வண்ணனுந்தானுமறனருளறனுடையரசன்
பெருங்களப்பரப்பினணிபெறவணிந்துபேருலகுய்யுமாறிருண்ட
கருங்களத்தவனைக்காசினித்தேர்மேற்கண்டெனக்காணுமாநின்றான்.

(இ - ள்.) அறன் அருள்-தருமக்கடவுள் பெற்ற, அறன் உடை அரசன் - தருமங்களையுடைய யுதிட்டிரராஜன், ஒருங்கு அளப்பு அரிய-(தனித்தனி கூறுகூறாக அளவிடலாமேயன்றி) ஒருசேர [முழுவதும்] அளவிடுதற்கு அரிய, பதாகினி குழாம்உம் -சேனைக்கூட்டமும், உயிர்க்கு உயிர் ஆன தம்பியர்உம்-உயிரினுஞ் சிறந்த (வீமன்முதலிய) தம்பிமார்கள் நால்வரும், அரு களகனி கொள் வண்ணன்உம் தான்உம்-அரிய களாப்பழத்தை உவமையாகக் கொண்ட கருநிறமுடைய கண்ணனுந் தானுமாக, பெரு களம் பரப்பின்-பெரிய போர்க்களத்தின் பரந்தஇடத்திலே, அணி பெற அணிந்து-அழகாகச் சென்று சேர்ந்து, பேர் உலகு உய்யும் ஆறு-பெரிய உலகத்தவர் பிழைக்கும்படி, இருண்ட-(விடமுண்டு) கறுத்த, கரு களத்தவனை-நீலகண்டத்தையுடைய உருத்திரமூர்த்தியை, காசினி தேர்மேல்-பூமியாகிய தேரின்மேல், கண்டு என-கண்டாற்போல, காணும் ஆ-(தன்னைக்) காணும்படி, நின்றான் - (ஒரு தேரின்மேல்) நின்றான்; (எ - று.) (96)

6.—'இன்று கர்ணன் இறப்பானே?' என்று யுதிஷ்டிரன் வினவல்.

நின்றவன்குரிசிலருச்சுனன்றேர்மேனின்றருணீலமேனியனை
மன்றலந்துளபமாலைமாதவனைவழிபடுமவர்க்குவான்றுணையைத்
தன்றடங்கண்ணோடிதயமுந்தரும்பத்தாளிணைமுடியுறவணங்கி
யின்றைவெஞ்சமரிலிரவிதன்சேய்வானெய்துமோவியம்புதியென்றான்.

(இ - ள்.) நின்ற-இவ்வாறு நின்ற, அ குரிசில் - வீரனாகிய அத்தருமன்,—அருச்சுனன் தேர்மேல் நின்றருள்-அருச்சுனனது தேரில் (பாகனாக) எழுந்தருளிய, நீலம் மேனியனை-நீலநிறமுடைய திருமேனியை யுடையவனும், மன்றல்-வாசனையையுடைய, அம்-

அழகிய, துளபம் மாலை-திருத்துழாய்மாலையையுடைய, மர்தவனை -இலக்குமிக்குக் கணவனும், வழிபடுமவர்க்கு-(தன்னை) வணங்கும் அடியார்களுக்கு, வான் துணையை-சிறந்த துணைவனுமாகிய கண்ணனை, தன் தடகண்ணோடு - தனது பெரிய கண்களும், இதயம்-மனமும், முத்து அரும்ப-ஆனந்தக்கண்ணீர்விட்டுப் புளகிக்கும்படி, தாள் இணை-(அவனது) உபயதிருவடிகள், முடி உற-(தன்) தலையின்மேற் பொருந்துமாறு, வணங்கி - நமஸ்கரித்து, 'இன்றை வெம் சமரில்-இன்றைக்குச்செய்யுங் கொடிய யுத்தத்தில்,இரவி தன் சேய்-சூரியகுமாரனானகர்ணன், வான்எய்தும்ஓ-சுவர்க்கத்தை அடைவானோ? இயம்புதி-சொல்வாயாக,' என்றான்-என்றுவினவினான்; (எ - று.)

தன் அடியார்க்கு மற்றைத்துன்பங்களைப்போக்கி இன்பமளித்துத் துணைசெய்தல்மாத்திரமே யன்றிப் பிறவித்துன்பங்களையும் ஒழித்து வீட்டுலகத்துப் பேரின்பத்தையும் அருளுஞ் சிறப்புத் தோன்ற, 'வான் துணை' என்றார். கண் முத்தரும்புதல் - ஆனந்தத்தாற் கண்ணீர் துளித்தல். இதயம்முத்தரும்புதல்-ஆனந்தத்தால் மனஞ்சிலிர்த்தல். (97)

7.—ஸ்ரீகிருஷ்ணன், கர்ணசுயோதனரின் இறுதிநாள்களைத் தெரிவித்தல்.

இத்தினமிரவிசிறுவனும்விசயனேவினலிறந்திடுநாளைத்
தத்தினபுரவித்தேர்ச்சுயோதனனுஞ்சமீரணன்றனயனன்மடியும்
அத்தினபுரியுமீரிருகடல்சூழவனியுநின்னவாமென்றான்
சித்தினதுருவாயகண்டமுந்தானுஞ்செய்யகட்கருணையந்திருமால்.

(இ - ள்.) சித்தினது உரு ஆய்-ஞானசொரூபியாய், அகண்டம்உம் தான் ஆம் - எல்லாப்பொருள்களுந் தானாகிய, செய்ய கண்-சிவந்த திருக்கண்களையும், கருணை - திருவருளையும், அம்-அழகையுமுடைய, திரு மால்-இலக்குமிக்குநாயகனான கண்ணன், 'இ தினம்-இன்றைக்கு, இரவி சிறுவன்உம் - சூரியகுமாரனும், விசயன் ஏவினால்-அருச்சுனன் பாணங்களால், இறந்திடும் - இறப்பான்; நாளை-நாளைக்கு, தத்தின புரவி-பாய்கிற குதிரைகளைப் பூட்டிய, தேர்-தேரையுடைய, சுயோதனன்உம்-துரியோதனனும், சமீரணன் தனயனால்-வாயுகுமாரனான வீமனால், மடியும் - இறப்பான்; (பின்பு), அத்தினபுரியும்—, ஈர் இரு கடல் சூழ் அவனிஉம்-நான்கு திக்குக்களிலுள்ள கடல்களாற் சூழப்பட்ட பூமிமுழுவதும், நின்ன ஆம் - உன்னுடையவையேயாய்விடும்,' என்றான் - என்று உத்தரஞ் சொல்லினான்; (எ - று.)

(சந்திரகுலத்துத்தோன்றிய) ஹஸ்தி என்னும் அரசனால் உண்டாக்கப்பட்டமைபற்றியும், யானைகளை மிகுதியாக உடைமை பற்றியும், இவர்கள் இராஜதானிக்கு 'ஹஸ்திநாபுரி'என்று பெயர்.

8.—எட்டுக்கவிகள்-யுதிஷ்டிரன் ஸ்ரீக்ருஷ்ணன் செயலைப் பாராட்டுதலைக் கூறும்.

செங்கண்மாலுரைத்தவின்சொலாரமுதஞ் செவிப்படச்சிந்தனைதெளிவுற்
றெங்கண்மானமுந்தொல்லாண்மையும்புகழும் நீயலால்யார்நிலையிடுவார்

வெங்கண்மாசுணத்தோன்வஞ்சனைக்கடலின் வீழ்ந்தழுந்தாவகையெடுத்தின்றங்கண்மாநிலமுந்தந்தனையெனப்பேரறத்தின்மாமகனிவையுரைப்பான்.

(இ - ள்.) பேர் அறத்தின் மா மகன்-பெரிய தருமக்கடவுளின் சிறந்த குமாரன், செங் கண் மால் உரைத்த-சிவந்த திருக்கண்களையுடைய கண்ணபிரான் சொல்லியருளிய, இன் சொல்-இனிய சொல்லாகிய, ஆர் அமுதம்-(பெறுதற்கு) அரிய அமிர்தம், செவி பட-காதுகளிற் பட்டமாத்திரத்தில், சிந்தனை தெளிவுற்று-மனந் தெளியப்பெற்று, (அவனைநோக்கி), 'எங்கள் மானம்உம் - எங்களது மானத்தையும், தொல் ஆண்மைஉம் - தொன்றுதொட்டுள்ள பராக்கிரமத்தையும், புகழ்உம்-கீர்த்தியையும், நீ அலால்-நீயேயல்லாமல், யார்-வேறுயாவர், நிலையிடுவார் - நிலைநிறுத்துபவர்? [எவருமில்லை]: வெம் கண் மாசுணத்தோன்-வெவ்விய கண்களையுடைய பாம்புக்கொடியையுடைய துரியோதனனது, வஞ்சனை கடலின்-வஞ்சனையாகிய கடலிலே, வீழ்ந்து அழுந்தா வகை - விழுந்து அமிழ்ந்துபோகாதபடி, எடுத்து - (எங்களைக்) காத்து, இன்று-இப்பொழுது, அம் கண் மா நிலம்உம்-அழகிய இடத்தையுடைய பெரிய இராச்சியத்தையும், தந்தனை-கொடுத்தாய்,' என -என்றுசொல்லி, இவை-இன்னும் இப்படிப்பட்ட தோத்திரங்களை, உரைப்பான்-சொல்லுவானானன்; (எ - று.)—அவை மேல் ஏழுகவிகளாற் கூறுகின்றார்.

அமிர்தமுண்டதனால் மரணமயக்கமொழிந்து தெளிவடைதல் போல், தருமபுத்திரனுக்கு இச்சொல்லைக்கேட்டதனால் அச்சம் நீங்கி அறிவு தெளிந்தது. (99)

9. பொங்கழற்சிந்தைச்சுயோதனன்கங்கைப் புனல்விளையாட்டிடைப்புதைத்த, வெங்கழுமுனையில்விழாமலோரளியாய் வீமனுக்காருயிரளித்தாய், பைங்கழலரசரவையினில்யாமும் பார்த்திருந்தலமரப்பயந்த, நுங்கழலனையாளுணமுந்துகிலு நோக்கினைகாக்குநாயகனே.

ஏழுகவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) காக்கும் நாயகனே - காத்தல்தொழிலுக்குஉரிய தலைவனே! பொங்கு அழல் சிந்தை - மேல்மேல்மிகுகிற கோபத்தீயையுடைய மனத்தையுடைய, சுயோதனன்—, கங்கை புனல் விளையாட்டிடை-கங்காநதியின் நீரில் விளையாடுமிடத்தில், புதைத்த-நாட்டிவைத்த, வெம் கழு முனையில்-கொடிய கழுமரத்தின் நுனியில், விழாமல்-விழுந்து இறவாமல், ஓர் அளி ஆய்-ஒப்பற்ற வண்டின் வடிவாகி, வீமனுக்கு—, ஆர் உயிர் அளித்தாய்-அரிய உயிரைக் காத்தருளினாய்; பைங் கழல் அரசர் - பசிய வீரக்கழலையுடைய அரசர்களது, அவையினில் - சபையில், யாம் உம் பார்த்திருந்து அலமர-கணவராகிய நாங்கள்ஐவரும் பார்த்துக்கொண்டிருந்து (என்செய்வதென்று) மனஞ்சுழலாநிற்க, பயந்த-அஞ்சின, நுங்கு அழல் அனையாள் - (எல்லாவற்றையும்) விழுங்குகின்ற அக்கினியைப்போன்ற திரௌபதியினது, நாணம்

உம்-வெட்கத்தையும், துகில் உம் - ஆடையையும், நோக்கினே-(போகாதபடி) கடாட்சித்தருளினாய்; (எ - று.)

சேர்ந்த இடத்தைச் சுட்டு அழித்தல்பற்றி, கோபத்தை அழலென்றார். 'நுங்கழலனையாள்' என்றதனால், அவமதிக்கத்தக்கவளல்ல ளென்றபடி; இனி, நும் கழல் அனையாள் என்று பிரித்து-உமது திருவடிபோன்றவ ளெனினுமாம்; என்றது, பக்திமிகுதிபற்றி. அலமர, அலமா-பகுதி. (100)

10. கானகமருங்கின்மேவலன்பணியாற்கடும்பசியுடன்வருங்கடவுண்
மானவமுனிவன்றுபமுஞ்சாபவருத்தமுமுருவகையொழித்தாய்
யானொருபொருளாத்தூதுசென்றருளி யெதிரிலாவிதுரன்வெஞ்சிலையும்
பானுவின்மதலைகவசமுமகற்றிப்பரிந்துபல்வினைகளும்புரிந்தாய்.

(இ - ள்.) கானகம் மருங்கில்-காட்டினிடத்தில், மேவலன் பணியால் - பகைவனாகிய துரியோதனனது சொல்லினால், கடு பசியுடன் - மிகுந்த பசியுடனே, வரும் - வந்த, கடவுள்-தெய்வத் தன்மையையுடைய, மானவ முனிவன் - மனிதவிருடியாகிய துருவாசரது, தாபம் உம் - பசித்துன்பமும், சாபம் வருத்தம் உம்-சபித்தலாலுண்டாகுந் துன்பமும், உரு வகை-உள்ளனவாகாதபடி, ஒழித்தாய் - போக்கினாய்; யான் ஒரு பொருள் ஆ - (பொருளல்லாத) என்னை ஒரு பொருளாக (மதித்து), தூது சென்று அருளி-(எங்களுக்காகத்துரியோதனனிடம்) தூதனாகப்போயருளி, எதிர் இலா - ஒப்பில்லாத, விதுரன் - விதுரனது, வெம் சிலைஉம் - கொடிய வில்லையும், பானுவின் மதலை - சூரியகுமாரனது, கவசம் உம் - கவசத்தையும், அகற்றி - ஒழித்து, பரிந்து - இரங்கி, பல் வினைகள்உம் - (இன்னும்) பலதொழில்களையும், புரிந்தாய்—;

துருவாசருக்குத்தெய்வத்தன்மை - சபிக்கச்சபிக்கத் தவங்குறைவுபடாமல் மேன்மேல்வளரப்பெறுவதொருவரம். முன்னிரண்டடிகளிற்குறித்தவரலாறு:—பாண்டவர்கள் வனவாசஞ்செய்கையில் துருவாசமுனிவர் ஒருநாள் பலமுனிவர்களோடுந்துரியோதனன் அரண்மனைக்குச் சென்று, அறுசுவை யமைந்த அருவிருந்துண்டு, 'உனக்கு வேண்டும் வரம் பெறுவாய்' என்ன, அவன் செல்வச்செருக்கினாலும் பாண்டவரை இம்முனிவர் சாபத்துக்கு உட்படுத்தவேண்டுமென்னுங் கருத்தினாலும் 'இன்றைக்கு எமதுமனையில் அமுதுசெய்ததுபோல வ நாளைக்குப் பாண்டவர்பக்கல் சென்று அமுது செய்யவேண்டுவதே எனக்குத் தரும் வரம்' என்ன, அப்படியே அம்முனிவர் பல முனிவர்களோடும் மற்றைநாள் மத்தியானமானபொழுது பாண்டவரிருந்த ஆச்சிரமத்தில் வந்து சேர்ந்து, 'இன்றைக்கு எங்களுக்கு நல்லுணவு இடவேண்டும்' என்று சொல்ல, அதற்குமுன்னமே பலமுனிவர்களோடும் வேண்டியவாறு உண்டு சூரியனருளின அக்ஷயபாண்டத்தைக் கழுவிக் கவிழ்த்துவிட்ட பாண்டவர்கள் அம்முனிவர்களை நீராடி வரச்சொல்லி அனுப்பிவிட்டு இதற்கு என்செய்வதென்றுஎல்லோரும் மனங்கலங்கிக் கிருஷ்ணபகவானைத் தியானிக்க, அவர் உடனே

அங்கு எழுந்தருளிப் பாண்டத்தைக் கொண்டுவரச்சொல்லி அதிலுள்ளதொரு சோற்றுப்பருக்கையைத் தாம் உண்ட மாத்திரத்தில், அம்முனிவர்யாவரும் வயிறுநிரம்பிப் பசிதணிந்து தெவிட்டித் தேக்கெறிந்து மனமிகமகிழ்ந்து இவர்களுக்கு ஆசீர்வாதஞ் செய்துவிட்டுப் போயின ரென்பது. கண்ணன் தூதுசென்றபொழுது இந்திரனை வரவழைத்து, 'கர்ணன் தன்னுடன்பிறந்த கவசகுண்டலங்களோடும் இருந்தால் அவனைக்கொல்லுதல்எவர்க்கும் முடியாது: அருச்சுனன்சபதம்பொய்த்துவிடும்; அவன் அருச்சுனனைக் கொன்றுவிடுவான்; ஆதலின், நீ ஒருமுனிவடிவங் கொண்டு சென்று கேட்டவற்றையெல்லாங்கொடுக்கிற அவனிடத்துக் கவசகுண்டலங்களை இரந்து வாங்கிவருவாய்' என்று சொல்ல,அங்ஙனமே அவன் ஒரு விருத்த வேதியனுருவத்தோடு சென்று இரந்து அவற்றைப்பெற்றுவந்தானென்ப. 'பல்வினைகள்' என்றது - அசுவத்தாமனிடந் துரியோதனுதியர்க்கு உள்ளநம்பிக்கையை உபாயத்தால் ஒழித்ததும், கர்ணனை நாகாஸ்திரத்தை இரண்டாமுறை அருச்சுனன்மீது விடாதபடிகுந்தியைக்கொண்டு வரங்கேட்பித்ததும் முதலியன. மானவமுனிவன் - முன்கோபமுடைய முனியுமாம். (101)

11. களப்பலிநாககன்னிகைபுதல்வன் கருதலான்றனக்குநேர்ந்திடவுங்
கிளப்பருந்திதியைமயக்கிவான்மதியங் கிளரொளியருக்கனைக்கேட்ப
வளப்படுந்திதியைமுந்துறவெமக்கே வழங்கிடும்படிமதிகொளுத்தி
யுளப்பொலிவுடனேவிசயனுக்கருளா லுருளுடைக்கொடிகொடேரூர்ந்தாய்.

(இ - ள்.) நாக கன்னிகை புதல்வன் - நாககன்னிகையாகிய உலூபியின் புத்திரனான இராவான், கருதலான் தனக்கு - பகைவனாகிய துரியோதனனுக்கு, களம் பலி - போர்க்களத்திற் பலிகொடுக்கப்படுதற்கு, நேர்ந்திடஉம்-சம்மதித்திருக்கவும், கிளப்பு அரு திதியை - மாற்றுதற்கு அரிய திதியை, மயக்கி - மாற்றி, வான் - ஆகாயத்தில், மதியம் - சந்திரன், கிளர் ஒளி அருக்கனை-விளங்குகிற ஒளியையுடைய சூரியனை, கேட்ப-சேரும்படி, வளம் படும்-மேன்மைப்பட்ட, திதியை - அமாவாசையை, முந்துற - முற்படும்படிசெய்து, எமக்கு ஏ - எங்களுக்கே, வழங்கிடும்படி - (அவன் தன்னைப் பலியாகக்) கொடுக்கும்படி, மதி கொளுத்தி - (அவனுக்கு) அறிவை உண்டாக்கி, உளம் பொலிவுடன் - மனமகிழ்ச்சியோடு, விசயனுக்கு-அருச்சுனனுக்கு, அருளால்-கருணையினல், உருள் உடை கொடி கொள் தேர் - சக்கரங்களையுடைய துவசத்தைக்கொண்ட தேரை, ஊர்ந்தாய் - ஓட்டினுய்; (எ-று.) பி - ம்: திதியின்.

அமாவாசையாவது - சூரியனுஞ் சந்திரனும் கூடும்நாள்: கிருஷ்ணபக்ஷத்துப் பதினைந்தாந்திதி. கேட்டல் - சேர்ந்துநண்பாதல்; இதற்கு இப்பொருள், கேண்மையென்பதன் சம்பந்தமாக வந்தது:இனி,வானத்திற் சந்திரன் சூரியனை 'இது என்ன'வென்று கேட்கும்படி யென்றுமாம். (102)

12. **அஞ்சியோவன்றியருள்கொலோவறியேனாகவத்தடுதொழின்மறந்த**
வெஞ்சிலைவிசயற்குள்ளவாறுணர்த்திமீளவும்பொரும்படிவிதித்தாய்
வஞ்சினமறந்துநேமியுந்தரித்துவலம்புரிகுறித்துமூதாதை
துஞ்சிடவமரிற்சிகண்டிசெய்தவத்தின்றொடர்பயன்வழாவகைதுரந்தாய்.

(இ - ள்.) அஞ்சி ஓ - (பகைவர்கட்குப்) பயந்ததனாலோ, அன்றி - அல்லாமல், அருள்கொல்ஓ- (உயிர்களிடத்துக்) கருணையினாலோ, அறியேன்-(இரண்டில் ஒன்று காரணமென்று நிச்சயமாகத்) தெரிந்திலேன்; ஆகவத்து - போர்க்களத்தில், அடு தொழில் - போர்செய்யுந் தொழிலை, மறந்த - விட்ட, வெம் சிலை விசயற்கு - கொடிய வில்லையுடைய அருச்சுனனுக்கு, உள்ள ஆறு உணர்த்தி - தத்துவங்களை உபதேசித்து [ஸ்ரீகீதையை அருளிச்செய்து], மீளஉம்-மறுபடி, பொரும்படி - போர்செய்யும் படி, விதித்தாய் - நியமித்தாய்; வஞ்சினம்மறந்து-(முன்சொன்ன) பிரதிஜ்ஞையையும் மறந்துவிட்டு, நேமிஉம் தரித்து -சக்கராயுதத்தையும் எடுத்து, வலம்புரிகுறித்து-சங்கநாதமுஞ்செய்து, அமரில்-யுத்தத்தில், மூதாதை - பெரிய பாட்டனாராகிய பீஷ்மர், துஞ்சிட-இறக்கும்படி, சிகண்டி செய் தவத்தின் தொடர் பயன் - சிகண்டி (முற்பிறப்பிற்) செய்திருந்த தவத்தினது (இப்பிறப்பில்) தொடருகிறபிரயோஜனம், வழா வகை-தவறாதபடி, துரந்தாய்-நடத்தினாய்;

முதல்நாட்போரில் எதிர்வந்துநின்ற வீரர்களெல்லாம் பாட்டனும் அண்ணன் தம்பிமாரும் மாமனும் உறவினரும் கல்விபயிற்றிய ஆசிரியரும் மனங்கலந்த நண்பர்களுமாகவே யிருக்கக் கண்டு போர்புரியேனென்று காண்டீபங் கைநெகிழத்தேர்த்தட்டின்மீதே திகைத்துக்கிடந்த அருச்சுனனுக்குக் கண்ணன் தத்துவோபதேசஞ்செய்து தனதுவிசுவரூபங்காட்டி, அவனதுமயக்கத்தை ஓட்டி, அவனைப்போர்புரியுமாறு உடன்படுத்தினான். வஞ்சினம் - படைத்துணையாக அழைத்த துரியோதனனுக்குப் படையெடுத்துப் போர்செய்யேனென்று வாக்குத்தத்தஞ்செய்தது. நேமியெடுத்தது-மூன்றாநாட்போரில் பீஷ்மர் பாண்டவசேனையையெல்லாம் பாணவருஷத்தால் அழித்துப் போர்செய்யவும் அருச்சுனன் எதிரிற்பொராமல் மறந்துநின்றபொழுது. வீடுமன் அழிந்த பொழுதிலும் மற்றுஞ் சிலபொழுதிலும் கண்ணன் சங்கநாதஞ்செய்துநின்றார்; அவ்வொலியாற் பகைவர் சேனைகள் நடுங்கி ஒடுங்கின.

13. **ஒருபகல்விசயன்மார்வமூடுருவ வொழுகுவெங்கடத்தொருத்தலின் மேல், வருபகதத்தனெறிந்தவேலுன்றன் வண்டுழாய்மார்பகத்தேற்றாய், பொருபகையரசர்பலர்படவபிமன் பொன்றியபொழுதுசெந்தழலி, னிருபனைமுனியால் விழாவகைவிலக்கிநிசியில்வெங்கயிலையுங்கண்டாய்.**

(இ-ள்.) ஒழுகு - பெருகுகிற, வெம் - வெவ்விய, கடத்து - மதஜலத்தையுடைய, ஒருத்தலின்மேல் - யானையின்மேல் (ஏறி), வரு-(போர்க்கு) வந்த, பகதத்தன் - பகதத்தனென்னும் அரசன், ஒரு பகல் - ஒருநாள், [பன்னிரண்டாம்போர்நாள்], விசயன்-அருச்சுனனது, மார்வம் - மார்பை, ஊடுருவ - துளைக்கும்படி, எறிந்த - வீசின, வேல் - வேலை, உன்தன் - உன்னுடைய, வண் துழாய்

மார்பு அகத்து-செழிப்பான திருத்துழாய்மாலையையுடைய மார்பி னிடத்தே, ஏற்றாய் - ஏற்றுக்கொண்டாய்; பொரு பகை அரசர் பலர் பட - போர்செய்கிற பலவகையரசர்கள் இறக்கும்படி, (கொன்று), அபிமன் - அபிமந்யு, பொன்றிய பொழுது - இறந்த காலத்தில், (அருச்சுனன்), செம் தழலின் - செம்மையான அக் கினியில், விழா வகை - விழாதபடி, நிருபனை - அருச்சுனனை, முனியால் - முனிவரைக்கொண்டு,விலக்கி-தடுத்து, — நிசியில் - இராத்திரியில், வெம்-விரும்பப்படுகிற, கயிலைஉம்-கைலாசத்தை யும், கண்டாய் - (போய்ப்) பார்த்துவந்தாய்; (எ - று.)

நிருபதமுனியால் என்ற பாடத்திற்கு வஞ்சனையற்ற முனிவ னாலென்க. உபதா என்றசொல்-ஒருவரைச்சோதித்த லென்ற பொருளுடையதாதலால், நிருபதன் - சோதனை வேண்டாதவன [வஞ்சனையற்றவன்] என்ற கருத்தது. நிருபதன் + முனிவன் = நிருபதமுனிவன்: "சிலவிகாரமாமுயர் திணை." அரசர்பலர்-துன் முகன் உருமித்திரன் இலக்கணகுமாரன் துச்சனி முதலோர்.(104)

14. வருணன்மாமதலைவாசவன்மதலைமார்பினிலெறிந்தவெங்கதையைக்
கருணையான்மருமம்புதையவேற்றந்தக்காளைகையறும்படிகண்டாய்
தருணவாணிருபர்மயங்கிவீழ்தரவெண்சங்கமுமுழக்கிநேமியினு
லருணனாதபத்தைமறைத்திரவழைத்தாங்கபிமனுக்கரும்பழிகொண்டாய்.

(இ - ள்.) வருணன் மா மதலை - வருணனது சிறந்த குமரா னாகிய சுதாயுவென்பவன், வாசவன் மதலை மார்பினில்-இந்திர குமாரனான அருச்சுனனது மார்பில்,எறிந்த-வீசிய, வெம்-கொடிய, கதையை-கதாயுதத்தை, மருமம் - (தன்) மார்பில், புதைய-அழுந் தும்படி, கருணையால் - அருளினால், ஏற்று - ஏற்றுக்கொண்டு, அந்த காளை - அந்த வீரன், கையறும்படி - இறக்கும்படி, கண் டாய் - செய்தாய்; தருணம் வாள் நிருபர் - யௌவனபருவத்தை யுடையராகிய ஆயுதங்களையுடைய அரசர்கள், மயங்கி வீழ்தர - மயங்கிவிழும்படி, வெண் சங்கம்உம் முழக்கி - வெள்ளிய சங்கத் தையும் ஊதி, நேமியினால்-சக்கரத்தினால், அருணன் ஆதபத்தை மறைத்து-சூரியனது வெயிலை மறையச்செய்து, இரவு அழைத்து- இராத்திரியை வரும்படிசெய்து, ஆங்கு-அப்பொழுது, அபிம னுக்கு அரு பழி கொண்டாய் - அபிமந்யுவைக் கொன்ற அரிய பழிக்குப் பழிவாங்கினாய்; (எ - று.) (105)

15. ஏவருஞ்சாபபண்டிதன்புதல்வ னேவியவேவினால்யாங்கள்
வீவருந்தன்மையறிந்துவாகனமும் விறற்படைகளுமொழித்திட்டாய்
மூவருமொருவராகிநின்றருளு மூர்த்தியேபார்த்திவர்பலருந்
தேவருமுணரார்நின்செயலெனமால் சேவடிகளின்முடிசேர்த்தான்.

(இ - ள்.) ஏ வரு-அம்புகள்வெளிப்படுகிற, சாபம் பண்டிதன் புதல்வன்-வில்வித்தையில் வல்ல துரோணனதுபுத்திரனாகிய அசுவத்தாமன், ஏவிய - பிரயோகித்த, ஏவினால் - நாராயணாஸ்தி ரத்தினால், யாங்கள் - நாங்கள், வீவரும் - இறக்கும்படியான, தன்மை - தன்மையை, அறிந்து - தெரிந்து, வாகனம்உம் -

(எங்கள்) வாகனங்களையும், விறல் படைகள்உம் - வெற்றியைத் தருகிற ஆயுதங்களையும், ஒழித்திட்டாய் - விட்டிருக்கச்செய்தாய்; மூவர்உம் ஒருவர் ஆகி நின்றருளும் மூர்த்தியே-திரிமூர்த்திகளும் ஒருமூர்த்தியாகிநின் றருளுகிறவடிவத்தையுடையவனே! பார்த்திவர் பலர்உம் - அரசர்கள் பலரும், தேவர்உம் - தேவர்களும், நின் செயல்-உனது திருவிளையாட்டை, உணரார்-அறியார்கள், என - என்று துதித்து, மால் சே அடிகளில் - கண்ணனது சிவந்ததிருவடிகளில், முடிசேர்த்தான் -(தன்) தலையை வைத்து வணங்கினுன்; (யுதிஷ்டிரன்); (எ - று.)—ஏவரும் எனப் பிரித்து-அஸ்திர சஸ்திரங்கள் கைவந்த என்றும், யாங்கள் ஏவரும் எனக்கூட்டி - நாங்களெல்லோருமென்றும் உரையிடலாம். பி - ம்: வேலினுல்.

16.--கிருஷ்ணன் யுதிஷ்டிரனுக்குஅபயமளித்து த்ருஷ்டத்யும்நனைக்கொண்டு அணிவகுத்தல்.

கண்ணனுங் கருணைக் கண்ணனை யிறைஞ்சிக் கைகளாற் றழுவியை விருநீ
ரெண்ணரு மமரி லிறக்கிலீ ரஞ்ச லென்றுப சாரமு மியம்பிப்
பண்ணுறுந் தடந்தேர்ச் சேனையின் பதியைப் பார்த்தணி வகுக்கெனப் பணித்தான்
அண்ணலந் திட்டத் துய்மனுந் தெவ்வ ரஞ்சிடும் படியணி வகுத்தான்.

(இ - ள்.) கண்ணன்உம்-கிருஷ்ணனும், கருணை கண்ணனை-அருள்சுரக்கிற கண்களையுடைய தருமனை, இறைஞ்சி - வணங்கி, கைகளால் தழுவி—, 'நீர் ஐவிர்உம்-நீங்கள் ஐந்துபேரும், எண் அரும் அமரில்-எண்ணுதற்கும் அரிய போரில், இறக்கிலீர்-இறக்கமாட்டீர்கள்; அஞ்சல்-பயப்படவேண்டாம்,' என்று—, உபசாரம் உம் இயம்பி - உபசாரமான வார்த்தைகளையுஞ் சொல்லி, பண் உறும்-அலங்காரம் அமைந்த, தட தேர் - பெரியதேரையுடைய, சேனையின் பதியை பார்த்து-சேனைத்தலைவனை திட்டத்துய்மனை நோக்கி, அணி வகுக்க என- அணிவகுப்பாயாக வென்று, பணித்தான்-கட்டளையிட்டான்; அண்ணல் - பெருந்தன்மையையுடைய, அம்-அழகிய, திட்டத்துய்மன்உம் - அச்சேனுபதியும், தெவ்வர் அஞ்சிடும்படி-பகைவர்கள் பயப்படும்படி, அணி வகுத்தான்—; (எ - று.)—பி - ம்: பண்ணமர்தடந்தேர்ச்.

கண்ணன் தருமனை எதிர்வணங்கினது, ராஜமரியாதைக்கு. அஞ்சல்-அல்லீற்று எதிர்மறைவியங்கோள்முற்று. வகுக்கென-தொகுத்தல். (107)

வேறு.

17.—ஐந்துகவிகள்-கர்ணன்வார்த்தை: சல்லியன்பாகனுனல்தான் தன்னுயிரிருக்கும்வரையில்முனைந்து பொருது வெல்வதாக உறுதிகூறுதலைத் தெரிவிக்கும்.

ஐவர்பதா கினிவெள்ள மணிந்த வாகண் டடுவிறற்கோ னெடுவிற்கை யங்கர் கோமான், பைவருமா சுணக்கொடியோன் றன்னைநோக்கிப் பரித்தடந்தேர் நர பாலர் பலருங் கேட்கக், கைவருபல் படைக்குமொரு வீர ரொவ்வாக் கட்

டாண்மை யரசேயிக் களத்தி லின்றே, கொய்வருதார்ப் புயப்பகைவர் சிரங்க ளெல்லாங் குறையுடலங் கூத்தாடக் கொய்வே னென்றான்.

(இ - ள்.) ஐவர் - பாண்டவர்களது, பதாகினி வெள்ளம் - சேனைத்திரள், அணிந்த ஆ(று) - அணிவகுக்கப்பட்டுநின்ற விதத்தை, அடு விறல் கோல்-(பகைவர்களைக்) கொல்லுகின்ற வெற்றியையுடைய அம்புகளைச் சொரிகின்ற, நெடுவில் - நீண்ட வில்லேந்திய, கை-கையையுடைய, அங்கர்கோமான்-அங்க தேசத் தார்க்கு அரசனான கர்ணன், கண்டு-பார்த்து, பை வரும் - படம் பொருந்திய, மாசுணம் கொடியோன் தன்னை நோக்கி-பாம்புக்கொடி யுடைய துரியோதனனைநோக்கி, பரி தட தேர்-குதிரைகள்பூட்டிய பெரியதேரையுடைய, நரபாலர் பலர் உம் - மனிதர்களைக்காக்கிற அரசர்கள்யாவரும், கேட்க-கேட்கும்படி, 'கை வரு பல் படைக்கு உம்-கைதேர்ந்த பல ஆயுதங்களுக்கும், ஒரு வீரர் ஒவ்வா-ஒருவீர ரும் ஒப்பாகாத, கட்டு ஆண்மை - உறுதியான பராக்கிரமத்தை யுடைய, அரசே-அரசனே! இ களத்தில்-இந்தப் போர்க்களத்தில், இன்று ஏ-இன்றைக்கே, கொய்வரு தார் - பறித்துத்தொடுக்கப் பட்ட மாலைகளையுடைய, புயம்-தோள்களையுடைய, பகைவர்-பகை வர்களது, சிரங்கள் எல்லாம்-தலைகளை யெல்லாம், குறை உடலம் கூத்தாட-கவந்தங்கள் குதிக்கும்படி, கொய்வேன் - அறுப்பேன்,' என்றான்-என்று சொன்னான்; (எ - று.)—பி-ம்: தார்போர்ப்.

பதினாறுகவிகள்-பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ் சீர்கள் காய்ச்சீர்களும், மற்றையவை மாச்சீர்களுமாகிய எண்சீரா சிரியவிருத்தங்கள். (108)

18. கார்ப்பாகசாதனன்றன்மகனுக்கெல்லாக் கலகமுஞ்செய்வஞ்சனையே கற்றகள்வன், றேர்ப்பாகனாய்நின்றானவனுக்கொப்பார் தேவருலகினுமில்லைதிசைக ளெல்லா, மார்ப்பாகமோதிவருங்கவனமாநெஞ் சறிவானும்போரில்விரகறிவிப்பா னும், போர்ப்பாகாய்த்தேர்கடவுசெயல்வல்லானும் புனைதாமச்சல்லியனேபுவியி லென்றான்.

(இ - ள்.) கார்-மேகங்களைவாகனமாகவுடைய, பாகசாதனன் தன்-இந்திரனது, மகனுக்கு-குமாரனான அருச்சுனனுக்கு, எல்லா கலகம்உம் செய்-கலகங்களை யெல்லாஞ் செய்கின்ற, வஞ்சனைஏ கற்ற-வஞ்சகங்களையே பழகிய, கள்வன் - திருட்டுத்தனமுடைய கண்ணன், தேர் பாகன் ஆய் நின்றான்—; அவனுக்கு ஒப்பார் தேவர் உலகின்உம் இல்லை—; திசைகள் எல்லாம்-எல்லாத்திக்கு களிலும், ஆர்ப்பு ஆக - ஆரவாரம் உண்டாம்படி, மோதி வரும் - எதிர்த்துவருகிற, கவனம் மா-நடைகளையுடைய குதிரைகளின், நெஞ்சு-மனத்தை, அறிவான்உம்-அறிபவனும், போரில்—, விரகு அறிவிப்பான்உம்-(சமயத்துக்குஏற்ற) உபாயங்களைத் தெரிவிப்ப வனும், போர் பாகு ஆய்-போருக்கு உரிய சாரதியாய், தேர் கடவு செயல் வல்லான்உம்-தேர்செலுத்துந் தொழிலில்வல்லவனுமாகிய, புனை தாமம் சல்லியன்ஏ-அணிந்த போர்மாலையையுடைய சல்லி யன்தானே, புவியில்-இவ்வுலகத்தில் (அவனுக்கு ஒப்பான்), என் றான்—; (எ - று.)—கவனம்-கமநம்; வடசொற்றிரிபு. (109)

19. அவனின்றென்மணிநெடுந்தேர்கடவுமாகி லருச்சுனனுக்கடலாழியவ னேயன்றிச், சிவன்வந்துதேர்விடினுங்கோல்வேனந்தத்தேர்நின்றாரிருவரையுஞ் செங்கோல்வேந்தே, பவனன்சேய்முதலானதுணைவரோரோர் பகழிமுனைதனக் காற்றார்பரவையாடைப், புவனங்களனைத்தையுநின்குடைக்கீழாக்கிப் புரிதிறல் வாகையுநினக்கேபுனைவிப்பேனே.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அவன்-அச்சல்லியன், இன்று-இன்றைக்கு, என்-எனது, மணி நெடு தேர் - (அடிக்கும்) மணிகள் கட்டிய பெரிய தேரை, கடவும் ஆகில்-செலுத்துவனானால், அருச்சுனனுக்கு—, அடல் ஆழியவன் ஏ அன்றி-வலிய சக்கரத்தையுடைய (காத்தற் றொழிற்கடவுளாகிய) திருமாலேயல்லாமல், சிவன்வந்துதேர்விடின் உம்-(அழித்தற்றொழிற்கடவுளாகிய) சிவன் சாரதியாக வந்துதேர் செலுத்தினாலும், அந்த தேர் நின்றார் இருவரைஉம் - அத்தேரில் நின்ற கிருஷ்ணஅருச்சுனர் இரண்டுபேர்களையும், கொல்வேன்—; செங்கோல் வேந்தே-நீதிதவறாத அரசாட்சியையுடைய அரசனே! பவனன் சேய்முதல் ஆன துணைவர்-(மற்றை) வாயுமகனான வீமன் முதலிய சகோதரர்கள், ஓர் ஓர் பகழி முனைதனக்கு-ஒவ்வொரு அம்பின் நுனிக்கேனும், ஆற்றார்-போதமாட்டார்; பரவை ஆடை-கடலைச் சேலையாகவுடைய, புவனங்கள் அனைத்தைஉம் - பூமிகள் முழுவதையும், நின் குடைக்கீழ் ஆக்கி - உனது ஆளுகையின் கீழ் ஆகச்செய்து, புரி திறல் வாகைஉம் - செய்த வல்லமையைக் குறிக்கிற வெற்றிமாலையையும், நினக்கு ஏ புனைவிப்பேன்-உனக்கே சூட்டுவேன்; (எ-று.)—மணி-அழகியவென்றும், நவரத்தினங்க ளும்பதித்த வென்றுமாம். (110)

20. நஞ்சோற்றம்பெறநுகர்வுற்றிருண்டகண்டர் நற்றொண்டர்வடிவமென நண்ணும்வெண்ணீற், றஞ்சோற்றுமடற்கைதைகமழுங்கான லகன்குருநாட்டரி யேறேயானின்றீம்பால், வெஞ்சோற்றோடினிதருந்தியமுதருந்தும் விண்ணவர் போலிந்நெடுநாள்விழைந்துவாழ்ந்தேன், செஞ்சோற்றுக்கடனின்றேகழியேனாகிற் றிண்டோள்கள்வளர்த்ததனாற்செயல்வேறுண்டோ.

(இ-ள்.) நஞ்சு - விஷத்தை, சோற்றம் பெற-உணவாகப் பொருந்தும்படி, நுகர்வுற்று - அமுதுசெய்து, இருண்ட - (அதனால்) கறுத்த, கண்டர் - கழுத்தையுடையபரமசிவனது, நல் தொண்டர் - நல்ல அடியார்களது, வடிவம் என-உடம்பு(திருநீறு பொருந்துவது)போல, நண்ணும் - பொருந்திய, வெள் - வெண்மையான, நீறு - நீற்றையுடைய, அம்-அழகிய, சோறு-சொற்றியையும், மடல் - மடல்களையுமுடைய, கைதை-தாழைகள்,கமழும்-வாசனை வீசுகிற, கானல் - கடற்கரைச்சோலைகளையுடைய, அகல் குருநாடு - பரந்த குருநாட்டிலே வாழுகிற, அரி ஏறே - (பகைவர் களுக்கு) ஆண்சிங்கம் போன்றவனே! ஆனின் தீம் பால் - பசுவினது இனிய பாலை, வெம் சோற்றோடு-சுடுகின்ற சோற்றுடனே, அமுது அருந்தும் விண்ணவர்போல் - அமிர்தத்தை யுண்ணுகிற தேவர்கள்போல, இ நெடு நாள் - இவ்வளவு பல காலமும்,

விழைந்து - விரும்பி, இனிது - இனிமையாக, அருந்தி - (உன்னிடம்) உண்டு, வாழ்ந்தேன்—; செம் சோறு கடன் - (நீ எனக்குச்) செவ்வையாகப்போகட்டுவந்த சோற்றுக்குப் பிரதியுபகாரமாகச் செய்யவேண்டுங்கடமையை, இன்று ஏ கழியேன் ஆகில் - இன்றைக்கே கழிக்காமற்போய்விடுவேனானல், திண் தோள்கள் வளர்த்ததனுல்-வலிய தோள்களை வளர்த்ததனாலே, வேறு செயல் உண்டோ - வேறுபயனுளதோ? (எ - று.)

நஞ்சு சோற்றம் என்பது-'நஞ்சோற்றம்' என விகாரமாயிற்று; சோற்றம், அம் - சாரியை. இனி, இத்தொடரை - நஞ்சு ஓர் தம்பெற என்று பிரித்து - நஞ்சினது ஆரவாரமானது அடங்க என்று பொருள் கூறுவாருமுளர். 'நஞ்சேற்றம்' என்ற பாடத்துக்கு - விஷத்தைப் பெருமைபெற உண்டு என்க. நீறு - பூஞ்சுண்ணம். சோறு - வயிரமற்ற சொற்றி. அக்காலத்திற்குருநாட்டின் எல்லை கடல்மட்டும் இருந்ததுபோலும். ஈற்றடியில் 'அவிப்பலி' என்ற புறத்துறைப் பொருள் காணலாம். "வெள்வா ளமருட் செஞ்சோ றல்லது, உள்ளா மைந்த ருயிர்ப்பலி கொடுத்தன்று" என்பது கொளு. (*111*)

21. ஓரூருமொருகுலமுமில்லாவென்னை யுங்கள்குலத்துள்ளோரிலொருவனாக்கித், தேரூருமவர்மனைக்கேவளர்ந்தவென்னைச் செம்பொன்மணிமுடிசூட்டியம்புராசி,நீரூரும்புவிபாலர்பலரும்போற்ற நின்னினுஞ்சீர்பெறவைத்தாய்நினக்கேயன்றி, யேரூருங்கதிர்முடியாயுற்றபோரில் யார்க்கினியென்னுயிரளிப்பதியம்புவாயே.

(இ - ள்.) ஓர் ஊரும் ஒரு குலமும் இல்லா என்னை—, உங்கள் குலத்து உள்ளோரில் ஒருவன் ஆக்கி - உங்கள் குலத்தவரில் ஒருவனாகப் பாவித்து, தேர் ஊருமவர் மனைக்கு ஏ - தேரைநடத்துகிற பாகரது மனையில்தானே, வளர்ந்த என்னை—, செம்பொன் மணி முடி சூட்டி - செம்பொன்னினாற் செய்து நவரத்தினமுமிழைத்தகிரீடத்தைத்தரிப்பித்து,அம்புராசி நீர் ஊரும் புவிபாலர் பலர்உம் போற்ற-கடல்நீராற் சூழப்பட்டபூமியைஆளுகிற அரசர்களெல்லாம் புகழும்படி, நின்னின்உம் சீர் பெற - உன்னினும் மிகச் சிறப்புப்பெறுமாறு, வைத்தாய்—; நினக்கு ஏ அன்றி - (இத்தனை உபகாரமுஞ்செய்த) உனக்கேயல்லாமல், ஏர் ஊரும் கதிர் முடியாய்-அழகுபொருந்திய ஒளியையுடைய கிரீடத்தையுடையவனே! உற்ற போரில் - நேர்ந்த யுத்தத்தில், இனி—, யார்க்கு என் உயிர் அளிப்பது—! இயம்புவாய் - சொல்; (எ - று.)—என்று கர்ணன் கூறினான். மனைக்கு-உருபுமயக்கம். அம்புராசி - நீர்த்தொகுதியையுடையது. (*112*)

22.—துரியோதனன் சல்லியனை ஒருவரம்வேண்டுமென இறைஞ்சுதல்.

கன்னனிவையெடுத்துரைப்பமகிழ்ந்துகேட்டுக் காந்தாரன்றிருக்குலத்துக் கன்னியீன்ற, மன்னர்பிரானிமைப்பொழுதிற்பழுதிலாத மத்திரராசனையெய்திமதுபசாலந், தென்னதெனவெனமுரலுஞ்செவ்விமாலைத் திருத்தோளாயானென்று செப்பினலவ், வின்னுரைகேட்டொருவரநீநல்கல்வேண்டு மென்னுணையெனக்கரங்கொண்டிறைஞ்சினனே.

(இ - ள்.) கன்னன் இவை எடுத்து உரைப்ப—, காந்தாரன் திரு குலத்து கன்னி ஈன்ற-காந்தாரநாட்டரசனது மேன்மையான குலத்தில்தோன்றிய பெண்ணாகிய காந்தாரி பெற்ற, மன்னர் பிரான் - அரசர்க்கரசனான துரியோதனன், மகிழ்ந்து கேட்டு—, இமைப்பொழுதில்—, பழுது இலாத மத்திரராசனை எய்தி-ஒரு குறைவுமில்லாத மத்திரதேசத்தரசனான சல்லியனை அடைந்து, 'மதுப சாலம் - வண்டுகளின் கூட்டம், தென்ன தென என முரலும் - தென்னதெனவென்று இசைபாடுகிற, செவ்வி மாலை-அழகிய மாலையையணிந்த, திருத்தோளாய் - அழகிய தோள்களையுடையவனே! யான் ஒன்று செப்பினால் - நான் ஒருவார்த்தை சொன்னால், அ இன் உரை கேட்டு - அவ்வினியவார்த்தையைக் காதுகொடுத்துக் கேட்டு, நீ—, ஒரு வரம் - ஒருவரத்தை, நல்கல் வேண்டும்-(எனக்குக்) கொடுத்தல் வேண்டும்; என் ஆணை - என் மேல் ஆணை,' என-என்றுசொல்லி, கரங்கொண்டு - கைகளால், இறைஞ்சினான் - தொழுதான்; (எ - று.)—தென்னதெனவென-இசைக்குறிப்பு. (113)

23.— வரங்கொடுக்கச் சல்லியனிசைய, துரியோதனன் கண்ணனைப்போல் நீ எங்களைக் காக்கவேணு மெனல்.

செறுத்தவர்தம்பெருவாழ்வுமுயிருமாற்றிச் சேர்ந்தவர்கள்புரிந்தபெருந்தீமையெல்லாம், பொறுத்துலகமுழுதாளுந்திகிரியோயான் பொருளாகவொருவரநீபுகலுவாயேன், மறுத்துரையேனுரைத்தருளென்றுரைத்தானந்த மத்திரபூபனுமிவனுமருவலாரைக், கறுத்த மழைமுகில்வெளுக்கக்கருகுமேனிக் கண்ணனைப்போலெங்களைநீகாத்தியென்றான்.

(இ - ள்.) அந்த மத்திர பூபன்உம் - மத்திரதேசத்தரசனான அச்சல்லியனும், (அதுகேட்டுத் துரியோதனனைநோக்கி), 'செறுத்தவர் தம்-பகைத்தவர்களது, பெருவாழ்வுஉம்-பெரிய எல்லாவாழ்க்கைகளையும், உயிர்உம்-உயிரையும், மாற்றி-ஒழித்து, சேர்ந்தவர்கள் புரிந்த-(தன்னை) அடைந்தவர்கள் செய்த, பெரு தீமை எல்லாம்-பெரியதீங்குகள்முழுவதையும், பொறுத்து—, உலகம் முழுது ஆளும்-உலகமுழுவதையும் அரசாளுகின்ற, திகிரியோய் - ஆஞ்ஞாசக்கரமுடையவனே! நீ—, யான் பொருள் ஆக-பொருளல்லாத என்னை ஒரு பொருளாக மதித்து, ஒரு வரம்—, புகலுவாய்எல்-கேட்பையானால், மறுத்து உரையேன் - (அதை நான்) தடுத்துச் சொல்லேன்: உரைத்தருள் - (அவ்வரம்இன்னதென்று) சொல்லியருளுவாய்,' என்று உரைத்தான்-; இவன்உம்-துரியோதனனும், (உடனே), 'மருவலாரை-பகைவர்களாகிய பாண்டவர்களை, கறுத்த மழை முகில் வெளுக்க-மழைபெய்கிற காளமேகமும் வெளுப்பென்னும்படி, கருகும் மேனி-மிகக்கறுத்த திருமேனியையுடைய, கண்ணனைப்போல்-கிருஷ்ணன்காப்பதுபோல, எங்களை—, நீ—, காத்தி -காப்பாய்', என்றான்— ; (எ - று.)—சிறுபிழைசில பொறுத்தல் அரிதன்றாதலால், 'பெருந்தீமையெல்லாம் பொறுத்து' என்றான்.

24.—அதுகேட்ட சல்லியனது வார்த்தை.

வாவுமாமணிநெடுந்தேரரசர்க்கெல்லாம் வாய்ப்பானநீயெனையும்புரப்பதன்றி, யேவுமாதொழில்புரிந்துன்குடைக்கீழ்வைகு மென்போல்வாருனைப்புரத்தலிசைவ தொன்றோ, தேவுமாய்மானுடமாய்மற்றுமுற்றுஞ்செப்புகின்றபலகோடிசராசரங்கள், யாவுமாய்விளையாடுமாதிமூர்த்தி யாதவனுக்கியானெதிரோவெதிரிலாதாய்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) எதிர்இலாதாய்-ஒப்பில்லாதவனே! வாவும் - தாவுகின்ற, மா-குதிரைகள்பூட்டிய, மணி-மணிகள்கட்டிய, நெடு-பெரிய, தேர்-தேரையுடைய, அரசர்க்குஎல்லாம்—, வாய்ப்புஆன-பொருந்தின காவலாகிய, நீ—, எனைஉம்-என்னையும், புரப்பதுஅன்றி-காப்பதல்லாமல், ஏவும்ஆ(று)-(நீ) ஏவினபடி, தொழில் புரிந்து-குற்றேவல்செய்து, உன் குடைக்கீழ்வைகும் - உன் ஆளுகையின்கீழ்த் தங்குகிற, என்போல்வார்-என்னைப்போல்பவர், உனை புரத்தல்- உன்னைக் காத்தல், இசைவது ஒன்றுஓ-பொருந்துவதொரு காரியமோ? தேஉம் ஆய்-சகலதேவஜாதியுமாய், மானுடம் ஆய்-மனிதஜாதியுமாகி, மற்றுஉம்-இன்னும், முற்றுஉம் செப்புகின்ற-முழுவதுஞ்சொல்லுகிற, பல கோடி-அநேககோடியாகிய, சர அசரங்கள் யாஉம் ஆய்-அசையும்பொருளும் அசையாப்பொருளுமாகிய எல்லாமாகி, விளையாடும்-விளையாடுகின்ற, ஆதி மூர்த்தி - (எல்லாவற்றுக்கும்) முதன்மை வடிவமாகிய, யாதவனுக்கு - யதுகுலத்தில் தோன்றிய கண்ணபிரானுக்கு, யான்—, எதிர்ஓ-ஒப்பாவேனோ?

நீ சாரத்தியஞ்செய்து எம்மைக் காக்கவேண்டுமென்று துரியோதனன் குறிப்பாகவுணர்த்தினதனால் அதனையுணராது, சல்லியன், பாண்டவரைக் கண்ணன்காப்பதுபோல், அரசரையும்பாதுகாக்கின்ற உன்னைப்பாதுகாப்பது என்னால் இயலுவதொருசெயலோ? என்று மறுத்துரைத்தான். (115)

25.—'கர்ணனுக்குச் சாரத்தியஞ்செய்க' என்று துரியோதனன் வினவிய சல்லியனிடம் தன்கருத்தை வெளிப்படையாகத் தெரிவித்தல்.

நேர்செலுத்துந்தனிச்செங்கோலுடையாயாது நினைவுனக்கென்றவன்வினவ நிருபன்றானுந், தார்செலுத்தும்பெருஞ்சேனைசூழநின்ற சல்லியனைமுகநோக்கித் தனஞ்சயற்குத், தேர்செலுத்துமுகுந்தனைப்போனீயுமின்று தேரிரவிமகன்றிண்டேர் செலுத்தினல்லாற், போர்செலுத்தியைவரையும்வென்றுவாகை புனைதனமக்கரிதென்றுபோற்றினனே.

(இ - ள்.) 'நேர் செலுத்தும்-நேராக நடத்துகின்ற, தனி-ஒப்பற்ற, செங்கோல் உடையாய்-அரசாட்சிமுறையை யுடையவனே! உனக்கு—, நினைவு-எண்ணம், யாது-என்ன?' என்று—, அவன் வினவ-அச்சல்லியன்கேட்க, நிருபன் தான்உம்-துரியோதனனும், தார் செலுத்தும்-ஒழுங்காக நடத்தப்படுகிற, பெரு சேனை—, சூழ -(தன்னைச்) சூழும்படி, நின்ற-(இடையில்) நின்ற, சல்லியனை முகம் நோக்கி-சல்லியன்முகத்தைப் பார்த்து, 'தனஞ்சயற்கு-அருச்சுனனுக்கு, தேர் செலுத்தும் - தேரோட்டுகின்ற, முகுந்தனைபோல் -

கிருஷ்ணனைப்போல், நீயும்—, இன்று—, தேர் இரவிமகன்-தேரை யுடைய சூரியனது குமாரனாகிய கர்ணனுக்கு, திண் தேர் - வலிய தேரை, செலுத்தின் அல்லால்-ஓட்டினாலல்லாமல், போர்செலுத்தி யுத்தத்தைநடத்தி, ஐவரைஉம்-பஞ்சபாண்டவரையும், வென்று-ஜயித்து, வாகை புனைதல்-வெற்றிமாலையைச் சூடுதல், நமக்கு—, அரிது-அரியது,' என்று—, போற்றினான் - புகழ்ந்துகூறினான்; (எ - று.)—முகுந்தன்-(தன் அடியார்களுக்கு) முத்தியின்பத்தையும் இவ்வுலகவின்பத்தையுங் கொடுப்பவன்; மு-முத்தி, கு-பூமி. (116)

26.—சல்லியன் துரியோதனன்சொல்லைக் கண்டித்துக் கூறுதல்.

புல்லியசொன்மதியாமலென்னைநோக்கிப் புகன்றனையாற்புனமேயும்புல் வாய்க்கென்றும், வல்லியமாப்பணித்ததொழில்புரியினன்றே மத்திரத்தான்கன்ன னுக்குவலவனாவான், சொல்லியநாவென்படுமற்றொருவன்சொன்னாற் சுயோதனனாத லிற்பொறுத்தேன்சொன்னதென்று, சல்லியன்மாமனங்கொதித்துப்புருவங்கோட் டித் தடங்கண்ணுமிகச்சிவந்தான்றறுகணனே.

(இ - ள்.) தறுகணன்-அஞ்சாமையை யுடையவனாகிய, சல்லியன்—, (அதுகேட்டு), மா மனம் கொதித்து-சிறந்தமனம் மிகக்கோபித்து, புருவம் கோட்டி-(அதனால்) புருவத்தை நெறித்து, (துரியோதனனைநோக்கி), 'மதியாமல் - (நீ சிறிதும்) ஆலோசியாமல், என்னைநோக்கி—, புல்லியசொல்-அற்பத்தன்மையையுடையசொற்களை, புகன்றனை-சொன்னாய்; என்றுஉம் - எப்பொழுதும், புனம் மேயும்-வனத்தில் மேய்கிற, புல்வாய்க்கு - புல்லைத் தின்னுகிற வாயையுடைய மானுக்கு, வல்லியம் மா - புலியாகிய விலங்கு, பணித்த தொழில்-கட்டளையிட்ட செய்கையை, புரியின் அன்றே-செய்தாலல்லவோ, மத்திரத்தான்-மத்திரநாட்டரசனான சல்லியன், கன்னனுக்கு—, வலவன் ஆவான்-சாரதியாவான்; மற்று ஒருவன் சொன்னால் - (உன்னைத்தவிர) வேறொருத்தன் (இந்தவார்த்தையைச்) சொல்வானாகில், சொல்லிய நா என் படும்-சொன்ன அந்த நாக்கு என்ன பாடுபடும்? சுயோதனன் ஆதலின் - (சொன்னவன்) துரியோதனனாதலால், சொன்னது பொறுத்தேன்—, என்று-என்றுசொல்லி, தட கண் உம் மிக சிவந்தான்-பெரிய கண்களும் (கோபத்தால்) மிகச் சிவக்கப்பெற்றான்; (எ - று.)

'மத்திரத்தான் வலவனாவான்', 'சுயோதனனாதலிற் பொறுத்தேன்' என்பன-தன்மைமுன்னிலைகளைப் படர்க்கையாகக் கூறிய இடவழுவமைதி. (117)

27.—இதுவும் அது.

சதுர்விதத்தேர்வீரருக்குந்தடந்தேரூருஞ் சாரதிதன்தனயனுக்குந்தடந்தே ரூர்தன், மதுமலர்த்தார்வலம்புரியாயிழிவன்றேநீ மதித்தவிறற்கன்னனுக்குமெனக்கு மிப்போ, தெதிர்மலைக்குஞ்சேனைதன்னையிருகூறாக்கி யிகல்புரிந்தாலென்கூற்றை யிரியவென்றக், கதிரளித்தோன்கூற்றினையுமழித்திலேனேற் கடவுவன்றேரவற் கென்றுகனன்றுசொன்னான்.

(இ - ள்.) 'மது மலர் தார் வலம்புரியாய்-தேனையுடைய நஞ்சாவட்டை மலர்களாலாகிய மாலையையுடையவனே! சதுர்விதம் தேர்

வீரருக்குஉம்-(அதிரதர் மகாரதர் சமரதர் அர்த்தரதர் என்று) நால்வகைப்பட்ட ரதாதிபதிகளுக்கும், தட தேர் ஊரும் - பெரிய தேரைச் செலுத்துகிற, சாரதிதன்-பாகனது, தனயனுக்கு - மகனுக்கு, தட தேர் ஊர்தல்-பெரிய தேரை ஓட்டுதல்,இழிவுஅன்றோ -அவமானந்தருவதன்றோ? நீ மதித்த விறல்-நீ கௌரவித்த வெற்றியையுடைய,கன்னனுக்கும்—, எனக்கும்—,இப்பொழுது—,எதிர் மலைக்கும்-எதிரிற் போர்செய்கிற, சேனைதன்னை-(பகைவர்) சேனையை, இரு கூறு ஆக்கி-இரண்டுபாகமாகப் பிரித்துக் கொண்டு, இகல் புரிந்தால்-போர் செய்தால், என் கூற்றை-எனக்கு ஏற்படும் பாகத்தை, இரிய-ஒழியும்படி, வென்று-ஜயித்து, அ கதிர் அளித்தோன் கூற்றினைஉம்-அச்சூரியகுமாரனுக்கு ஏற்படும் பாகத்தையும், அழித்திலேன்ஏல்-(அவனுக்குமுன்) அழியாமற்போவேனேயானால், அவற்கு-அவனுக்கு, தேர் கடவுவன்-தேரைஓட்டுவேன்', என்று—, கனன்று-கோபித்து, சொன்னான்—; (எ-று.)--நீ மதித்த விறல் என்றது-பிறர் அவன்வலிமையை மதியாமை தோன்றநின்றது. (118)

28.—இரண்டுகவிகள்-ஒருதொடர்: துரியோதனன் சமாதானப்படுத்திச் சில சொல்லச் சல்லியன் கர்ணனுக்குப் பாகனாதற்கு இசைதலைத் தெரிவிக்கும்.

செங்கோலமலரிலிருந்தனைத்துமீன்ற திசைமுகன்றானறம்வளர்க்குஞ்செல்வப் பாவை, பங்கோனுக்காதிமறைப்புரவிபூண்ட படிக்கொடித்தேர்கடவுதனிப்பாகனானன், பொங்கோதப்பாற்கடலானிவனென்றியாரும் புகல்கின்றவசுதேவன்புதல்வன்வந்து, வெங்கோபவிசயனுக்குச்சூதனானன்விசையனுமன்றுத்தரன்றேர் விசையினூர்ந்தான்.

(இ - ள்.) செம்-செம்மையான, கோலம் - அழகிய, மலரில் - (திருமாலின் திருவுந்தித்தாமரைப்) பூவில், இருந்து—, அனைத்துஉம்ஈன்ற-எல்லாவற்றையும்படைத்த, திசைமுகன்-நான்கு திக்குகளிலும் முகங்களையுடைய பிரமன், அறம் வளர்க்கும் - முப்பத்திரண்டு தருமங்களையும் வளரச்செய்கிற, செல்வம்-செல்வத்தையுடைய, பாவை-சித்திரபிரதிமைபோலும் உமாதேவியை, பங்கோனுக்கு-(தனது) இடப்பக்கத்திற் கொண்ட பரமசிவனுக்கு, ஆதி-பழமையான, மறை-வேதங்களாகிய, புரவி-குதிரைகளை, பூண்ட-பூட்டப்பட்டுள்ள, படி-பூமியாகிய, கொடி தேர்-துவசத்தையுடைய தேரை, கடவு-ஓட்டுகின்ற, தனி பாகன் ஆனான்-ஒப்பற்ற சாரதியாயினான்; பொங்கு-(அலைகள்) பொங்குகிற, ஓதம்-வெள்ளத்தையுடைய, பாற்கடலான் - திருப்பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீமந்நாராயணன், இவன் என்று—, யாரும் புகல்கின்ற-யாவருஞ் சொல்லுகிற, வசுதேவன் புதல்வன் - வசுதேவனது குமாரனாகிய கண்ணன்,வந்து—, வெம் கோபம் விசயனுக்கு-கொடியகோபத்தையுடைய அருச்சுனனுக்கு, சூதன் ஆனான்-சாரதியானான்; விசையன்உம்-அருச்சுனனும், அன்று - அவ்வுத்தரகோக்கிரகணகாலத்தில், உத்தரன் தேர்-உத்தரகுமாரனதுதேரை, விசையின் ஊர்ந்தான்-வேகமாய்ச் செலுத்தினான்; (எ - று.)—பாவை-உவமவாகுபெயர். அயன் அரனுக்குத்தேரூர்ந்தது, திரிபுரசங்காரகாலத்தில்.

அறம் வளர்க்குஞ் செல்வப்பாவை—ஆதிபருவத்து அருச்சுனன் றீர்த்தயாத்திரைச் சருக்கத்து 13-ஆம் பாடலுரை காண்க. (119)

29. பூந்தராதலமுழுதுமதித்தவாண்மைப் போர்வேந்தேயுனைப்போலப் புகழேபூண்டு, வேந்தராயமர்க்களத்திலதிசயித்த வீரரானவர்க்கிதுதான்மேம்பா டன்றே,மாந்தராயெக்கலையும்வல்லார்க்கன்றிவாசிநெடுந்தேரூரவருமோவென்றன், றேந்தராவெழுதியபொற்கொடியோன்சொல்லி யிறைஞ்சுதலுமுடன்பட்டானென் செய்வானே.

(இ - ள்.) பூ தராதலம் முழுதுஉம்-அழகாகிய பூமியினிடத்தி லுள்ளவர் எல்லாராலும், மதித்த - மதிக்கப்பட்ட, ஆண்மை - பராக்கிரமத்தையுடைய, போர் வேந்தே - போர்த்தொழிலில்வல்ல அரசனே! உனை போல - உன்னைப்போல, புகழ்ஏ பூண்டு-கீர்த்தி யையே மேற்கொண்டு, வேந்தர் ஆய் - அரசர்களாகி, அமர் களத் தில் - போர்க்களத்திலே, அதிசயித்த-மிகச்சிறந்த, வீரர் ஆனவர்க்கு - வீரர்களுக்கு, இது - இவ்வாறுதேரூர்வது, மேம்பாடு அன்றே - ஒருபெருமையன்றே? மாந்தர் ஆய் - மனிதர்களாகி, எ கலைஉம் வல்லார்க்கு அன்றி - எல்லாக்கல்விகளிலும் வல்லவர்க ளுக்கே யல்லாமல், (மற்றவர்க்கு), வாசி நெடு தேர் ஊர வருமோ - குதிரைகள்கட்டிய பெரிய தேரை ஓட்டத்தெரியுமோ? என்று என்று—, ஏந்து அரா எழுதிய பொன்கொடியோன்- படமெடுத்த நாகத்தை எழுதின அழகிய கொடியையுடைய துரியோதனன், சொல்லி - (பலவார்த்தைகள்) பேசி, இறைஞ்சுதலும்-வணங்கின வளவில், உடன்பட்டான் - (சல்லியன் கன்னனுக்குத் தேரோட் டச்) சம்மதித்தான்; என் செய்வான் - (இவ்வளவுபெரியவன் சொன்னாற்சம்மதியாமல் வேறு) யாது செய்வான்? (எ-று.)— மாந்தராய் எக்கலையும் வல்லார்க்கு என்பதை - எக்கலையும் வல்லா ராகிய மாந்தர்க்கு என மாற்றிப்பொருள்கொள்க. (120)

30.—அதுதெரிந்த துரியோதனன்சேனை மகிழ்ந்தார்த்தல்.

மகபதிதன்மகனுக்குவசுதேவன்றன் மகன்பாகனானதுபோல்வயங்குசோதிப், பகலவன்றன்மகனுக்குநிகரிலாண்மைப் பல்விதப்போர்ச்சல்லியன்றேர்ப்பாகனா னான், புகலரியதும்பையுடன்வெற்றிவாகை புனைந்திடுமிக்கணத்தில்வலம்புரித்தார் வேந்த,னகலுததியுடையாடையவனிமுற்று மவனதினியெனவார்த்ததரசன்சேனை.

(இ-ள்.) 'மகபதி தன் மகனுக்கு - இந்திரகுமாரனான அருச் சுனனுக்கு, வசுதேவன் தன் மகன் - வசுதேவபுத்திரனான கிருஷ் ணன், பாகன் ஆனதுபோல்—, வயங்கு சோதி பகலவன் தன் மகனுக்கு - விளங்குகிற ஒளியையுடைய சூரியகுமாரனான கன்ன னுக்கு, நிகர் இல் ஆண்மை - ஒப்பற்ற பராக்கிரமத்தையும், பல் விதம் போர் - பலவகைப்பட்ட போர்களையுமுடைய, சல்லியன்—, தேர் பாகன் ஆனான்—; வலம்புரி தார் வேந்தன் - நஞ்சாவட்டை மாலையையுடைய துரியோதனன், இ கணத்தில் - இந்தக்ஷணத் திலே, புகல் அரிய தும்பையுடன்-(தான் அணிந்துள்ள) சொல்லு தற்கரிய தும்பைப்பூமாலையுடனே, வெற்றி வாகை புனைந்திடும் - சயத்துக்கு அடையாளமான வாகைப்பூமாலையையுஞ் சூடுவான்;

அகல் உததி - பரந்த கடலை, உடை ஆடை - உடுக்கப்படுகிற சேலையாகவுடைய, அவனி முற்றுஉம் - பூமிமுழுவதும், இனி—, அவனது - அத்துரியோதனனதேயாம்,' என - என்று சொல்லிக் கொண்டு, அரசன் சேனை - துரியோதனனதுசேனை, ஆர்த்தது - ஆரவாரித்தது; (எ - று.)—"அதிரப், பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர், செருவென்றது வாகை யாம்." (121)

31.—சல்லியன் கர்ணனுக்குப் பாகனாயமர்தல்.

பெற்றிழந்தகவசமுங்குண்டலமுமீளப் பெற்றனன்போலடலருக்கன்பெற்ற பிள்ளை, மற்றையணிவிரன்முடக்கவிணையிலாத மத்திரபூபனைத்தழுவிமணித்தே ரேற்றப், பற்றலர்நெஞ்சலமருமாறவனும்பாகர் படிவங்கொண்டமர்க்கமைந்தபரிகள் பூட்டி,யுற்றவடிக்கயிறுடனேயுளவுகோல்கொண் டூர்ந்தனனலருணனுக்கேயுவமை சால்வான்.

(இ - ள்.) அடல் அருக்கன் பெற்ற பிள்ளை - வலிமையை யுடைய சூரியன் பெற்ற குமாரனாகிய கர்ணன், பெற்று - (இயல் பாக உடம்புடனே) பெற்று, இழந்த-(இந்திரனுக்குத் தானஞ் செய்து) இழந்துபோன, கவசம்உம் குண்டலம்உம்-கவசத்தை யுங் குண்டலங்களையும், மீள பெற்றனன் போல் - திரும்பவும் கிடைக்கப்பெற்றவன்போல (மகிழ்ந்து), மற்றை அணி விரல் முடக்க இணை இலாத - (இவனை எண்ணியவிரலுக்குப்பின் இவ னோடொக்க எண்ணி) வேறொரு அழகிய விரலை மடக்குவதற்கு உவமைபெறாத, மத்திரபூபனை - மத்திரநாட்டரசனான சல்லியனை, தழுவி - அணைத்துக்கொண்டு, மணி தேர் ஏற்ற-மணிகள்கட்டிய தேரின்மேல் ஏறச்செய்ய,—அருணனுக்குஏ உவமை சால்வான்- (சூரியன்பாகனான) அருணனுக்கே உபமானமாகப் பொருந்துந் தன்மையையுடைய, அவன்உம்-அச்சல்லியனும், பற்றலர் நெஞ்சு அலமரும் ஆறு-பகைவர்கள் மனஞ் சுழலும்படி, பாகர் வடிவம் கொண்டு-சாரதிகளுக்குரிய வேஷத்தைத் தரித்துக்கொண்டு, அமர்க்கு அமைந்த பரிகள் பூட்டி-போர்த்தொழிலுக்குப் பொருந் திய குதிரைகளை(த் தேரிற்) பிணைத்து,உற்ற வடிக்கயிறுடனே - பொருந்திய குதிரைவாய்க்கயிற்றையும், உளவுகோல் - குதிரை யோட்டுங் கோலையும், கொண்டு - (கைகளிற்) பிடித்துக்கொண்டு, ஊர்ந்தனன் - தேரூர்ந்தான்; (எ- று.)

மற்றையணிவிரல்முடக்க இணையிலாத பூபன் என்றது - சிறந்தவீரர்களை எண்ணத்தொடங்கிச் சல்லியனொருத்தனென்று முதலிற் கைவிரலொன்றை மடக்கினபின்பு இவனோடொத்தவீரர் வேறெவரும் இல்லையாதலால் மற்றொருவிரலை மடக்கி யெண்ணு வதற்கு உவமைபெறாதவன் என்றபடி. அணிவிரல்-பவித்திரவிரல் [இரண்டாவது விரல்] என்றுமாம். (122)

32.—கர்ணன் அணிவகுத்து நிற்றல்.

பணிநிறுத்தி யெழினுறுபொற் பதாகை யானைப் படாதொழிதம் பியரோடும் பார்க்க வன்போ, லணிநிறுத்திக் கிருபனையு மடுபோர் செய்யு மரசரையு மிரு

மருங்கு மணிக ளாக்கி, நுணிநிறுத்திச் சகுனிமுத லானோர் தம்மை நுவலருநா ளுடுக்கோளி னடுவண்வான மணிநிறுத்தி வைத்ததெனப் பவள மேரு வரைநின்ற தெனநின்றான் வண்மை வல்லான்.

(இ-ள்.) வண்மை வல்லான் - தானத்தில் வல்ல கர்ணன்,— பார்க்கவன்போல் - (அசுரசேனாபதியாகிய) சுக்கிரன்போல, பணி நிறுத்தி எழில் உறு பொன் பதாகையானை-பாம்பை யெழுதி அழகுபொருந்திய பொற்கொடியையுடைய துரியோதனனை, படாது ஒழி தம்பியரோடுஉம் - (பதினாறுநாட்களிலும்) இறவா தொழிந்த தம்பிமார்களுடனே, அணி நிறுத்தி - (படைவகுப்பில்) ஒழுங்காக நிற்கச்செய்து, கிருபனையும்—, அடு போர் செய்யும் அரசரைஉம் - கொல்லுகின்ற போரைச்செய்யும் மற்றை அரசர்களையும், இரு மருங்குஉம் - இரண்டுபக்கங்களிலும், அணிகள் ஆக்கி-வரிசைகளாக நிறுத்தி, சகுனி முதலானோர் தம்மை-சகுனி முதலிய சிலவீரர்களை, நுணி நிறுத்தி - (படைவகுப்பின்) நுனியிலே நிற்கச்செய்து, நுவல் அரு - (கணக்கிட்டுச்) சொல்லுதற்கு அரிய, நாள் - (இருபத்தேழு) நக்ஷத்திரங்களும், உடு - மற்றைத் தாரகைகளும், கோளின் - கிரகங்களும் ஆகிய இவற்றின், நடுவண் - நடுவிலே, வானமணி - ஆகாயத்தில் இரத்தினம்போல விளங்குகிற சூரியனை, நிறுத்தி வைத்தது என - நிறுத்திவைத்ததுபோலவும், பவளம் மேரு வரை நின்றது என - மேருமலை போலப் பெரியதொரு பவழமயமான மலை நின்றதுபோலவும், நின்றான் - (சேனைமுகத்து விளக்கமாகவும் கம்பீரமாகவும்) நின்றான்; (எ - று.)—பி - ம்:—கிருபகிருதரையும்பல்போர். (123)

வேறு.

33.—போர்க்களத்திற் கன்னன் தானஞ்செய்தல்.

கோவல்சூழ் பெண்ணை நாடன் கொங்கர்கோன் பாகை வேந்தன்
பாவலர் மானங் காத்தான் பங்கயச் செங்கை யென்ன
மேவல ரெமரென் னுமல் வெங்களந் தன்னி னின்ற
காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனக மாரி.

(இ - ள்.) கோவல் சூழ - திருக்கோவலூரைச் சூழ்ந்த, பெண்ணை - பெண்ணையாறுபாய்கிற, நாடன் - திருமுனைப்பாடி நாட்டையுடையவனும், கொங்கர் கோன் - கொங்கநாட்டார்க்குத் தலைவனும், பாகை வேந்தன் - வக்கபாகையென்னும் நகரத்துக்கு அரசனும், பாவலர் மானம் காத்தான் - கவிகளுக்கு (வேண்டியவற்றை யெல்லாங் கொடுத்து அவர்கள்) மானத்தை (அழியாமற்) காப்பாற்றினவனுமாகிய வரபதியாட்கொண்டானது, பங்கயம் செம் கை என்ன - செந்தாமரைமலர்போலுஞ் சிவந்த கைபோல, வெம் களம் தன்னில் நின்ற - கொடிய போர்க்களத்தில் நின்ற, காவலன் கன்னன்-காத்தலில்வல்ல கர்ணனது,கையும்—,மேவலர் எமர் என்னுமல்-(இவர் எமக்குப்) பகைவர் (இவர்) எம்மைச் சேர்ந்தவர் என்று பேதம் பாராட்டாமல் [யாவர்க்கும் ஒருதன்மையாக], கனகம் மாரி - பொன்மழையை, பொழிந்தது-சொரிந்தது; (எ - று.)—கோவல்-நடுநாட்டிலுள்ள திருமாலின் திருப்பதிகளி

ரண்டனுள் ஒன்று: சைவர் திருக்கோவல்வீரட்டத்தைக்குறிப்பது இது என்பர். நடுநாடு - மாகதக்கொங்குநாடு எனப்படு மென்ப. அணியிலக்கண நுண்மையறியாதார், கர்ணன்கை தானம் வழங்கியது இங்கு வர்ணியமென்பது தெரியாமையால் பிரசித்த உவமமான கர்ணன்கையை உவமேயமாக்கியது விபரீதவுவமையணியென்பர். பி - ம்: பகைஞர் வேந்தன்.

இதுமுதல் இருபதுகவிகள்-கீழ்ச்சருக்கத்துப் பன்னிரண்டாங் கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (124)

34.—தானதிகள்செய்தபின் கர்ணன் சல்லியனிடங் கூறுதல்.

அந்தணர்பரிசின்மாக்க ளவனிபர்முதலோர்யார்க்குஞ்
சிந்தைகள்களிக்கத்தான தியாகமுஞ்சிறப்புநல்கிக்
கந்தனேர்வதனமாகி யவதரித்தன்னகன்னன்
சந்தணிகுவவுத்தோளான் சல்லியன்றனக்குச்சொல்வான்.

(இ - ள்.) கந்தன் - (தேவசேனாபதியாகிய ஆறுமுகங்களையுடைய) சுப்பிரமணியன், ஓர் வதனம் ஆகி அவதரித்து அன்ன - ஒரு முகமுடையவனாகிப் பிறந்தாற்போன்ற, கன்னன்—, அந்தணர் - பிராமணர்களும், பரிசில்-வெகுமதியைப் பெறுதற்குரிய, மாக்கள் - மற்றைமனிதர்களும், அவனிபர் - அரசர்களும், முதலோர் யார்க்குஉம் - முதலிய எல்லார்க்கும், சிந்தைகள் களிக்க - மனங்கள் களிப்படையும்படி, தான தியாகம்உம் சிறப்புஉம் நல்கி- (முறையே) தானங்களையுந் தியாகங்களையும் வரிசைகளையுங் கொடுத்து, சந்து அணி - சந்தனம்பூசிய, குவவு தோளான்-திரட்சியையுடைய தோள்களையுடையவனாகிய, சல்லியன் தனக்கு—, சொல்வான்—; (எ - று.)—அது மேல் இரண்டுகவிகளாற் கூறுகின்றார். பி-ம்: அந்தணப்.

கந்தனுக்குங் கன்னனுக்கும் வேறுபாடு முகத்தின் எண்ணிக்கையிலே யன்றி வேறு குணவிசேஷங்களில் இல்லையென்பது மூன்றாமடிக்குக் கருத்து. சந்து - வடசொற்றிரிபு. குவவு - உரிச்சொல். (125)

35.—இரண்டுகவிகள்-ஒருதொடர்: சல்லியன்பாகனானமையைக் கர்ணன் பாராட்டிக்கூறுதலைத் தெரிவிக்கும்.

மேகவாகனன்பாற்பெற்ற வெயிலவனியமதங்கி
யாகியமுனிவற்கீந்த வரும்பெருஞ்சாபம்பெற்றேன்
நாகவெம்பகழிபெற்றே னரணற்கொத்தவுன்னைப்
பாகனுமாகப்பெற்றேன் பாக்கியம்பலித்தவாறே.

(இ - ள்.) மேகவாகனன்பால் - மேகங்களைவாகனமாகவுடைய இந்திரனிடத்து, பெற்ற—, வெயிலவன்-வெயிலையுடைய சூரியன், இயமதங்கிஆகிய முனிவற்கு - ஜமதக்நிமுனிவனுக்கு, ஈந்த - கொடுத்த, அரு பெருசாபம் - அரிய பெரிய வில்லை, பெற்றேன் - (பரசுராமரிடத்தினின்று யான்) அடைந்தேன்; நாகம் வெம் பகழி-

கொடிய நாகாஸ்திரத்தை, பெற்றேன்—; நாரணற்கு ஒத்த-கிருஷ்ணனுக்கு ஒப்பான, உன்னை—, பாகன்உம் ஆக பெற்றேன் - சாரதியாகவும் அடைந்தேன்; பாக்கியம் பலித்த ஆறு ஏ-(எனது) நல்வினை பயன்பட்ட விதம் அதிசயிக்கத்தக்கதே; (எ - று.)

ஈற்றேகாரம், வியப்புப்பொருள்பட நின்றது. இயமதங்கி = ஜமதக்நி: பரசுராமன் தந்தை. வடசொற்சிதைவு. இந்தவில்லுக்கு விஜயம் என்றுபெயர்; இது, இந்திரன்பொருட்டு விசுவகர்மா நிருமித்தது. இதைக்கொண்டு முன்னே இந்திரன் பலஅசுரர்களையும், பரசுராமர் பல அரசர்களையும் வென்றார்; இதனாலேயாற் பகைவர்கள் பலர் மூர்ச்சிப்பர். (126)

36. எனக்கெதிர்விசயனல்லதில்லையவ்விசயனென்பான்
றனக்கெதிரென்னையன்றித்தரணிபர்யாருமில்லை
மனக்குநேரானதோழன்மகிதலமுழுதுமெய்தக்
கனக்குரற்களிற்றேயின்றுகாண்டியென்னுண்மையென்றான்.

(இ - ள்.) கனம் குரல் களிற்றாய் - பருத்த குரலையுடைய யானைச் சேனையையுடையவனே! எனக்கு—, எதிர் - சமானம், விசயன் அல்லது இல்லை - அருச்சுனனையல்லாமல்(வேறெவரும்) இல்லை; அ விசயன் என்பான் தனக்கு-அந்த அருச்சுனனுக்கு, எதிர்—, என்னை அன்றி—, தரணிபர் யார்உம்- பூமியை ஆளுகிற அரசரெவரும், இல்லை—; மனக்கு நேர் ஆன தோழன் - மனத்திற்குஒத்த நண்பனான துரியோதனன், மகிதலம் முழுதும் எய்த-பூமிமுழுவதையும் அடையும்படி, இன்று - இன்றைக்கு, என் ஆண்மை-எனது பராக்கிரமத்தை, காண்டி-பார்ப்பாயாக, என்றான் -என்று(கர்ணன்)கூறினான்; (எ-று.)—உபமேயோபமாலங்காரம். (127)

37.—மூன்றுகவிகள் - ஒருதொடர்: சல்லியன் கர்ணனது செருக்கடங்கப்பேசுதல்.

என்றலுமத்திரசேனனிளநகைசெய்துநீநின்
வென்றியும்வலியுங்கற்றவின்மையும்விளம்பவேண்டாம்
ஒன்றொடொன்றிரண்டுதேருமுருளுடனுருள்கள்கோத்துச்
சென்றெதிர்முனைந்தபோதுன்சேவகந்தெரியுமாதோ.

(இ-ள்.) என்றலும் - என்று (கன்னன்) சொன்னவளவில்—, மத்திரராசன்-மத்திரநாட்டரசனான சல்லியன், இள நகை செய்து-புன்சிரிப்புச் செய்து, நீ—, நின் - உனது, வென்றிஉம் - ஜயத்தையும், வலிஉம் - பலத்தையும், கற்ற வின்மைஉம் - பயின்ற விற்றொழிலையும், விளம்ப வேண்டாம்-(எனக்குச்) சொல்லவேண்டாம்; இரண்டு தேரும்—, ஒன்றொடு ஒன்று—, உருளுடன் உருள்கள் கோத்து-சக்கரங்களோடு சக்கரங்கள்நெருங்கப்பெற்று, எதிர்சென்று - எதிரிற்போய், முனைந்த போது - போர்செய்த பொழுது, உன் சேவகம் தெரியும்-உனது வீரம் விளங்கும்; (எ - று.)—கன்னனை இகழ்தல் காரணமாக இளநகை பிறந்தது. இரண்டுதேர் - கர்ணார்ச்சுனர் தேர்கள். (128)

38. ஒருவரையொருவரொவ்வாவுரனுடைவீரர்நீங்கள்
இருவரும்பொரும்போர்தோறும்யாங்களும்பாங்காய்நின்றேம்
வெருவரன்மறந்துமில்லாவிசயனையொருபோதத்துந்
திருவரும்வண்மையோய்நீசெயித்திடக்கண்டிலேமால்.

(இ - ள்.) திரு வரும் வண்மையோய் - செல்வம் பொருந்திய தானத்தையுடையவனே! ஒருவரை ஒருவர் ஒவ்வா - ஒருத்தரை யொருத்தர் ஒத்திராத, உரன் உடை - வலிமையையுடைய, வீரர்- வீரர்களாகிய, நீங்கள் இருவரும்—, பொரும் போர் தோறுஉம் - போர்செய்யும்பொழுதெல்லாம், யாங்கள்உம்—, பாங்கு ஆய் நின்றேம்-பக்கத்திற் பொருந்தியிருந்தோம்:வெருவரல் மறந்துஉம் இல்லா - மறந்தும் அஞ்சுதலில்லாத, விசயனை - அருச்சுனனை, ஒருபோதத்துஉம் - ஒருபொழுதிலும், நீ—,செயித்திட - வெல்ல, கண்டிலேம் - பார்த்தோமில்லை; (எ-று.)

முதலடி - இருவருஞ் சிறந்தவீர ரென்னும் பொருளோடு, அருச்சுனனுக்குக் கன்னன் ஒப்பாகானென்னுங் கருத்துந் தோன்றநின்றது. (129)

39. வயிர்த்திருவோருஞ்சொன்னவஞ்சினமுடிக்குமாறு
செயிர்த்திடுமிற்றைப்பூசறெரியுமோதெரிந்ததில்லை
அயிர்த்தனமென்றுதேரூராண்டகையுரைப்பநீட
வுயிர்த்தனனாகிமீளவுத்தரமுரைக்கலுற்றான்.

(இ - ள்.) இருவோர்உம் - (நீங்கள்) இருவரும், வயிர்த்து - விரோதங்கொண்டு, சொன்ன—, வஞ்சினம் - சபதத்தை, முடிக்கும் ஆறு - நிறைவேற்றும்படி, செயிர்த்திடும் - கோபித்துச் செய்யப்போகிற, இற்றை பூசல் - இன்றைப்போரின்முடிவு, தெரியும்ஓ-(இப்பொழுது) அறியப்படுமோ? தெரிந்தது இல்லை—; அயிர்த்தனம் - சந்தேகித்தோம், என்று—, தேர் ஊர் ஆண் தகை - தேரோட்டுகிற ஆண்மைக்குணமுடைய சல்லியன், உரைப்ப-சொல்ல, (கன்னன்), நீட உயிர்த்தனன் ஆகி - (கோபத்தால்) மிகப் பெருமூச்சுவிட்டவனாய், மீள - திரும்பவும், உத்தரம் உரைக்கல்உற்றான் - மறுமொழி சொல்லத்தொடங்கினான்; (எ - று.)—அது மேற்கவியிற் காண்க.

பாண்டவருங் கௌரவருங் கிருபரிடத்துந் துரோணனிடத்துந் தாம் தாம் கற்ற படைத்தொழிலைப் பலபெரியோர் முன்னிலையில் அரங்கேற்றுகிற பொழுது, கன்னன் எழுந்து தன் திறமையைக்காட்டி, அருச்சுனனைப் போருக்கு அழைக்க, அவன் 'அரசகுமாரனாகிய எனக்குத் தேர்ப்பாகனது அபிமானபுத்திரனாகியஉன்னோடு போர்செய்தல் பொருந்தாது'என்று தோன்றுமாறுசொல்ல, அப்பொழுது கன்னன் மிகக்கோபித்து 'என்னைப்பழுதுசொன்ன உன்முகத்தைக் கொய்து அரங்கபூசை செய்கிறேன்'என்று சபதஞ் செய்தான்; திரௌபதியைத் துகிலுரிந்தகாலத்து அருச்சுனன் 'யான் கர்ணனைக் கொல்வேன்' என்று சபதஞ்செய்தான். (130)

40.—சல்லியனைக் கர்ணன் கடிந்துகூறுதல்.

இந்திரன்மகனுக்கென்னையெதிரிலையென்றுநின்ற
தந்திரபாலர்முன்னர்ச்சல்லியவிகழ்தல்வேண்டா
மந்திரவாசித்திண்டேர்வல்லையேலூர்வதன்றி
வெந்திறல்விளைக்கும்வெம்போர்வினைக்குநீயார்கொலென்றான்.

(இ - ள்.) சல்லிய - சல்லியனே! இந்திரன் மகனுக்கு - அருச்சுனனுக்கு, எதிர் இலை என்று - (யான்) சமானனல்லனென்று, நின்ற தந்திரபாலர் முன்னர் - (சுற்றிலும்) நின்ற சேனைத்தலைவர்களுக்கு எதிரில், என்னை—, இகழ்தல் வேண்டா—; வல்லைஏல் - (நீ) வல்லவனானால், மந்திரம் வாசி திண் தேர் - சாலையிற் கட்டப்படுகிற குதிரைகள்பூட்டிய வலிய தேரை, ஊர்வது அன்றி - ஓட்டுவதல்லாமல், வெம் திறல் விளைக்கும் - கொடிய வலிமையினாற் செய்யப்படுகிற, வெம் போர் வினைக்கு - பயங்கரமான போர்த்தொழிலைப்பற்றிப்பேசுதற்கு, நீ யார் என்றான்—; (எ - று.)—மந்திரம் - மந்துரா என்னும் வடசொற்றிரிபு. (131)

41.—இரண்டுகவிகள்-சல்லியகர்ணர் மாறுபாடுகொண்டு தம்மில் வாள்கொண்டெழத் துரியோதனன் விலக்குதலைத் தெரிவிக்கும்.

வலியுடைத்தேரோன்சொன்னவாசகம்வலவன்கேட்டுக்
கலியுடைத்தடந்தேர்விட்டுக்காலினின்றுடைவாள்வீசி
ஒலியுடைப்புரவித்திண்டேருனக்குநானூருவேனோ
எலியுடைப்பூசல்பூனைக்கெதிர்ப்படினென்படாதோ.

(இ - ள்.) வலி உடை தேரோன் - வலிமையையுடைய தேரையுடைய கர்ணன், சொன்ன—,வாசகம்-வார்த்தையை, கேட்டு—, வலவன்-(அவன்) பாகனான சல்லியன்,—கலி உடை - ஆரவாரத்தையுடைய, தட தேர்-பெரிய தேரை, விட்டு - விட்டு(க் கீழ் இறங்கி), காலின் நின்று-கால்களால்(தரையில்) நின்றுகொண்டு, உடை வாள் வீசி - உடுப்பிற்கட்டுங் கைவாளை எடுத்துச் சுழற்றிக்கொண்டு, (அவனைநோக்கி), 'ஒலி உடை - ஓசையையுடைய, புரவி திண் தேர் - குதிரைகளைப்பூட்டிய வலிய தேரை, (இனி), உனக்கு நான் ஊருவேனோ—? எலி உடை பூசல் - எலியினது ஆரவாரம், பூனைக்கு எதிர்ப்படின் - பூனைக்கு எதிரேவந்தால், என் படாதோ- என்னபாடுபடாதோ?' (என்றுசொன்னான்); (எ - று.)—எலியின் ஆரவாரமெல்லாம் பூனைக்குமுன்னே இருந்தவிடந்தெரியாமல் அழிந்துவிடுவதுபோல, உன்செருக்குமுழுவதும் என்வலிமைக்கு முன் அழிந்துவிடு மென்றபடி. பி-ம்: வலியுடைத்தோளான். வாள் வாங்கி. (132)

42. உருவுருமென்னச்சீறியுடன்றபினுதயன்காதன்
மருவுறுமைந்தன்றானும்வாளொடுமண்ணிற்குதி
யிருவருமிரண்டுகாயமிகலுமுனூரககேது
வெருவருஞ்சிந்தையோடுவெய்திற்போய்விலக்கினனே.

(இ - ள்.) (என்று சல்லியன் சொல்லி), உரு உரும் என்ன - அச்சந்தருகின்ற இடிபோல, சீறி உடன்றபின் - கோபித்துப் பகைத்தவுடனே, உதயன் - சூரியனது, காதல் மருவுறும் - அன்புபொருந்திய, மைந்தன் தானும் - குமாரனான கர்ணனும், வாளொடு - (தன்) வாளாயுதத்துடனே, மண்ணில் தாவி - தரையிற் குதித்து, இருவரும்—, இரண்டு காயம் இகலும்முன் - இரண்டு தழும்புபடும்படி போர்செய்தற்கு முன்னமே,—உரககேது - பாம்பைக் கொடியிலுடைய துரியோதனன்,—வெருவரும் சிந்தையோடு - அஞ்சுகின்ற மனத்துடனே, வெய்தின் - விரைவாக, போய்—, விலக்கினான் - தடுத்தான்; (எ - று.)—காயம் - இலக்கு என்பாருமுளர். (133)

43.—துரியோதனன் சமாதானப்படுத்தி இருவரையும் தேரிலேற்றிப் போரை நடத்தச் சொல்லுதல்.

மூளும்வெஞ்சினத்தைமாற்றிமுரணுறுத்தவர்கடம்மை
மீளவுந்தேரிலேற்றிவெஞ்சமர்விளைமினென்றான்
மாளவும்பாண்டுமைந்தர்வையகமுழுதுந்தானே
யாளவுங்கருதியெல்லாவரசையுமழிக்குநீரான்.

(இ - ள்.) பாண்டு மைந்தர் மாளஉம் - பாண்டவர் இறக்கவும், வையகம் முழுதுஉம் தானே ஆளஉம் - பூமிமுழுவதையுந் தானொருவனாகவே அரசாட்சிசெய்யவும், கருதி - எண்ணி, எல்லா அரசைஉம் - அரசர்கள்யாவரையும், அழிக்கும் - அழியச்செய்கிற, நீரான் - தன்மையையுடைய துரியோதனன்,—மூளும் - பொங்குகிற, வெம் சினத்தை - (அவர்கள்) கொடிய கோபத்தை, மாற்றி - நீக்கி, முரண் உறுத்தவர்கள் தம்மை - (தமக்குள்) மாறுபாடு கொண்ட கர்ணசல்லியரை, மீளஉம் தேரில் ஏற்றி - மறுபடியும் (கர்ணனது) தேரின்மேலேறச்செய்து, வெம் சமர் விளைமின் என்றான் - (பாண்டவசேனையோடு) கொடிய போரைச் செய்யுங்கள் என்று சொன்னான்; (எ - று.) —சல்லியனையுங்கூட்டி 'சமர்விளைமின்' என்றது, பாகனையின்றிப் போர்செய்தல் கூடாதாதலின்.

44.—கிருதவன்மன்முதலியோர் கர்ணனைக் காத்துநிற்றல்.

வனைகழற்கிருதவன்மன்வரிசிலைக்கிருபன்றானே
தனைநிகர்சகுனிதாமாச்சாலுவன்றிகத்தராசன்
இனையபொற்றடந்தேர்வேந்தர்யாவருமெண்ணில்சேனைக்
கனைகடலோடுசூழ்ந்துகன்னனைக்காத்துநின்றார்.

(இ - ள்.) வனை கழல் - கட்டிய வீரக்கழலையுடைய, கிருதவன்மன் - கிருதவர்மாவும், வரி சிலை - கட்டமைந்த வில்லையுடைய, கிருபன் - கிருபாசாரியனும், தானே தனை நிகர் - (வேறுஉவமையில்லாமையால்) தன்னைத் தானே ஒத்த, சகுனி - சகுனியும், தாமா - அசுவத்தாமாவும், சாலுவன் - சாலுவனும், திகத்தராசன் - திரிகர்த்தநாட்டரசனும், இனைய - இப்படிப்பட்ட, பொன் தடம் தேர் - அழகிய பெரிய தேரையுடைய, வேந்தர் யாவர்உம் -

அரசர்கள் எல்லாரும், எண் இல் சேனை - அளவில்லாத சேனையாகிய, கனைகடலோடு-ஒலிக்கின்ற கடலுடனே, சூழ்ந்து-(துணையாகச்)சுற்றிக்கொண்டு, கன்னனை—, காத்துநின்றார் - காவல் செய்து நின்றார்கள்; (எ - று.)—சாலுவன் திகத்தராசன் - திரிகர்த்தராஜனாகிய சாலுவனென்பாருமுளர். பி-ம்: தேர்வீரர். (135)

45.—அப்போது துரியோதனன் போர்வென்றேமென்று மகிழ்ந்து கூறலுறுதல்.

நின்றவக்கன்னன்றன்னைநெஞ்சுறமகிழ்ந்துநோக்கி
வென்றனம்பூசலின்றேவிசயனுந்தாதைதன்பாற்
சென்றிடுமென்றுதேறிச்செப்பினன்சிற்சின்மாற்ற
மன்றலஞ்சுரும்புமாறுவலம்புரிமாலையானே.

(இ - ள்.) மன்றல் - வாசனையையுடைய, அம்-அழகிய, சுரும்பு-வண்டுகள், மாறு - நீங்காமல்மொய்க்கின்ற, வலம்புரிமாலையான் - நஞ்சாவட்டைமாலையையுடைய துரியோதனன், நின்ற-(எதிரில்) நின்ற, அ கன்னன் தன்னைநோக்கி—, நெஞ்சுஉற மகிழ்ந்து-மனம்மிகக்களித்து,' இன்றே-இன்றைக்கே, பூசல் வென்றனம் - போரிற் (பகைவரைச்) செயித்தோம்; விசயன்உம்-அருச்சுனனும், தாதைதன்பால் - (தன்) தகப்பனாகிய இந்திரனிடத்து, சென்றிடும் - போய்விடுவான் [இறப்பான்],' என்று தேறி-என்று நிச்சயித்து, சில் சில் மாற்றம் - சிலசிலவார்த்தைகளை, செப்பினன்-சொல்வானானன்; (எ - று.)—அது மேல் ஏழுகவிகளாற் கூறுகின்றார். (136)

46.— ஏழுகவிகள்-சல்லியகர்ணர்கட்குத் துரியோதனன் முகமன்கூறியதைத் தெரிவிக்கும்.

சதமகன்மகன்றேர்ப்பாகன்றன்வயிற்கேண்மைவிஞ்சி
விதுரனுமமர்செய்யாமல்வெஞ்சிலையிறுத்துப்பின்னும்
யதுகுலத்தலைவனானவிராமனுந்தானும்பாரின்
நதிமுதற்றீர்த்தம்யாவுமாடுவானயந்துபோனான்.

எட்டுக்கவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) சதமகன்மகன்-இந்திரகுமாரனான அருச்சுனனது, தேர் பாகன் தன்வயின் - சாரதியான கண்ணனிடத்து,கேண்மை விஞ்சி-நேசம்மிகுந்து, விதுரனும்—, அமர் செய்யாமல்—, வெம் சிலை இறுத்து-கொடிய வில்லை முறித்துப்போகட,—பின்னும் - பின்பு, யது குலம் தலைவன் ஆன-யதுவின் குலத்துக்குத் தலைவனாகிய, இராமன்உம் தான்உம் - பலராமனுந் தானும், (அவ்விதுரனுடன்), பாரின் - பூமியிலுள்ள, நதி முதல் தீர்த்தம் யாஉம் - ஆறுகள்முதலிய புண்ணியதீர்த்தங்களெல்லாவற்றிலும், ஆடுவான் - நீராடும் பொருட்டு, நயந்து-விரும்பி, போனான்-யாத்திரை போய்விட்டான்; (எ - று.) —முதல் மூன்று கவிகள்முன்னிகழ்ந்தவற்றைக் கூறும்.

பலராமன் - க்ருஷ்ணனுக்குத் தமையன்; வசுதேவர்மனைவியான ரோகிணிவயிற்றில்பிறந்தவன்; இவன் துரியோதனனிடம்

அன்புடையவனுதலாலும் கண்ணனுக்குவிரோதமாகுமேயென்று கருதியதனாலும் துரியோதனன்பக்கத்தும் பாண்டவர்பக்கத்தும் சேராமல் தீர்த்தயாத்திரைசென்றான். யது என்பவன்-சந்திர குலத்துத் தோன்றிய யயாதியின் மக்களில்ஒருவன். (137)

47. **கங்கைதன்வயிற்றிற்றேன்றித் தாதைதன்காதறீர்ப்பான்**
எங்களுக்கரசும்வாழ்வுமிருநிலமுழுதுந்தந்து
வெங்களத்துதயன்போலவீடுமன்களத்தையெல்லாஞ்
செங்களப்படுத்திமீண்டுந்தேவரிலொருவனானான்.

(இ - ள்.) வீடுமன்-பீஷ்மன், கங்கைதன் வயிற்றில்தோன்றி-கங்கையின் வயிற்றினின்றும் பிறந்து, தாதைதன் காதல் தீர்ப்பான்-(தன்) தகப்பனது ஆசையை முடிக்கும்பொருட்டு, எங்களுக்கு—, அரசுஉம்-இராச்சியத்தையும், வாழ்வுஉம்-செல்வவாழ்க்கையையும், இரு நிலம் முழுதுஉம் - பெரியபூமிமுழுவதையும், தந்து - கொடுத்து, வெம் களத்து - விரும்பப்படுகிற பூமிமுழுவதையும், உதயன் போல-சூரியன்போல, களத்தை எல்லாம்-போர்க்களம் முழுவதையும், செம் களம் படுத்தி - (இரத்தவெள்ளத்தால்) சிவந்தகளமாகச்செய்து, மீண்டும் - பின்பு, தேவரில் ஒருவன் ஆனான்-தேவர்களுள் ஒருத்தனாயினான்; (எ - று.)

'எங்களுக்கு' என்றது-தனது பாட்டன்மாராகிய விசித்திரவீரியனையுஞ் சித்திராங்கதனையுங் கருதி. சூரியன் தன்சிவந்தகிரணங்களினால் உலகமுழுவதையுஞ் செம்மையாக்குவதுபோல, இவ்வீடுமர் தமதுகை அம்பினாற் கொல்லப்படுகிற பகைவர்களின் செந்நீரால் களமுழுவதுஞ் செம்மையாம்படி பொருது பத்தாநாட்போரில்அழிந்தாரென்றவாறு.மீண்டும்-முன்போலவேயென்றபடி.(138)

48. **கரிமுகக்கடவுளன்னகடும்பரித்தாமாவென்னுங்**
குரைகழற்றுணைத்தாட்சிங்கக்குருளையைப்பயந்ததாதை
யருமறைக்கயனையொப்பானடற்சிலைக்கரனையொப்பான்
றிருவருட்கரியையொப்பான்றிருத்தகுவீடுசேர்ந்தான்.

(இ-ள்.) கரி முகம் கடவுள் அன்ன - யானைமுகக்கடவுளாகிய விநாயகனைப் போன்ற, கடு பரித்தாமா என்னும் - வலிய அசுவத்தாம னென்கிற, குரை கழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையுடைய, துணை தாள் - இரண்டுகால்களையுடைய, சிங்கம் குருளையை - சிங்கக்குட்டியை, பயந்த-பெற்ற, தாதை-தந்தையும், அரு மறைக்கு - அரிய வேதங்களுக்கு, அயனை ஒப்பான் - பிரமனை ஒப்பவரும், அடல்சிலைக்கு - வலிய வில்வித்தைக்கு, அரனை ஒப்பான் - உருத்திரனை ஒப்பவரும், திரு அருட்கு - மேலான கருணைக்கு, அரியை ஒப்பான் - விஷ்ணுவை ஒப்பவரும் ஆகிய துரோணர், திரு தகு வீடுசேர்ந்தான் - மேன்மைபொருந்திய முத்தியுலகத்தை அடைந்தார்; (எ - று.) (139)

49. **சாயலாற்சிறந்ததோகைச்சாமளத்தடம்புள்ளூர்திச்**
சேயலாற்றேவர்வாழ்வுதேவருக்கியாவரீந்தார்

நீயலாற்சமரிலென்னைநிலையிடற்குரியாருண்டோ
தோயலாற்பயந்தகாதற்சூரனையனையசூரா.

(இ - ள்.) தோயலால் பயந்த-(தான்) புணர்ந்ததனாற்பெற்ற, காதல் சூரனை - அன்புடைய சூரியனை, அனைய - ஒத்த, சூரா - வீரனே! சாயலால் சிறந்த - மென்மையால் மிகுந்த, தோகை - தோகையையுடைய, சாமளம் - கறுத்த, தட - பெரிய, புள் - மயிலாகிய பறவையை, ஊர்தி-வாகனமாகவுடைய, சேய் அலால்- சுப்பிரமணியக்கடவுளேயல்லாமல், தேவர் வாழ்வு - தேவர்களின் வாழ்க்கையை, தேவருக்கு—, யாவர் ஈந்தார்-வேறியாவர் கொடுத்தார்? (அவ்வாறே), சமரில் - போரில், என்னை—, நிலையிடற்கு - நிலைபெறச்செய்வதற்கு, உரியார் - உரியவர்கள், நீ அலால் உண்டோ - நீயல்லாமல் (வேறுயாராயினும்) உளரோ? (எ - று.) —இனி, நீயே வெற்றியளிக்க வல்லாயென்று கர்ணனைநோக்கி கூறியது, இது. "சாயன் மென்மை" என்பது காண்க. (140)

50. மித்திரரென்றுநோக்காதென்னுடன்விளைந்தநண்பான்
மத்திரநிருபன்மைந்தன்வந்தெனக்குதவியானான்
குத்திரனல்லன்செம்மைக்கொள்கையன்மறையின்மிக்க
வத்திரசாபம்வல்லானிவனொடாரமர்செய்கிற்பார்.

(இ - ள்.) மத்திர நிருபன் மைந்தன் - மத்திரநாட்டரசகுமாரனாகிய சல்லியன், என்னுடன் விளைந்த நண்பால்-என்னோடு உண்டான சிநேகத்தால், மித்திரர் என்று நோக்காது-(தனக்குப் பாண்டவர்கள்) உறவினரென்று பாராமல், எனக்கு வந்து உதவி ஆனான்—; (இவன்), குத்திரன் அல்லன்-வஞ்சகனல்லன்; செம்மை கொள்கையன்-நல்லொழுக்கமுடையான்; மறையின் மிக்க-மந்திரங்களாற் சிறந்த, அத்திரம் - அஸ்திரங்களோடு கூடிய, சாபம்-வில் தொழிலில், வல்லான் - சமர்த்தன்; இவனொடு ஆர் அமர் செய்கிற்பார் - இவனுடன் எவர் போர்செய்யவல்லவர்? (எ - று.)— இது, சல்லியன் சிறப்புக்கூறியது. (141)

51. என்மொழிமறுமலின்றுன்னிரதசாரதியுமானான்
நன்மொழியன்றிவேறுநவைமொழிநவிறறேற்றான்
தன்மொழியுறுதியாவுந்தருமெனக்கைக்கொளாமற்
புன்மொழியாடிநும்மிற்புலப்பதுபுன்மையன்றோ.

(இ-ள்.) (இன்னும் அவன்), என் மொழி மறுமல் - என்வார்த்தையைத் தடுக்காமல், இன்று உன் இரத சாரதியும் ஆனான்—; நல் மொழி அன்றி - நல்ல வார்த்தைகளையே யல்லாமல், வேறு நவை மொழி - (அவற்றிற்கு) வேறாகிய கெட்ட வார்த்தைகளை, நவிறல் தேற்றான்-சொல்லுதல் அறியான்; தன் மொழி-அவன்வார்த்தை, உறுதி யாஉம் தரும் என - நன்மைகளையெல்லாங் கொடுக்கும் என்று, கைக்கொளாமல் - (எண்ணி) அங்கீகரியாமல், புல் மொழி ஆடி - இழிவான பேச்சுக்களைப் பேசிக்கொண்டு, நும்மில்புலப்பது -உங்களுக்குள் விரோதப்படுவது, புன்மை அன்றோ-இழிவன்றோ? (எ - று.)—அச்சல்லியன் நட்புரிமையினாற் பாகனாக, நீவிர் புலத்

தல் கூடாதென்று கர்ணனிடம் கூறினது, இது. தேற்றுனென்னும் பிறவினை, இங்குத் தேருனெனத் தன்வினைப்பொருள்பட்டு நின்றது. (142)

52. **இதயமும் வலியுந் தேயத் தியற்கையும் வினையும் பற்பல்**
கதிகளு முணர்ந்து பூணுங் கவனமாத் தெரிந்து பூட்டி
யெதிரிதன் விசயங் கூற லிடிக்குநண் பாதல் வெம்போர்
முதிரிடங் கால மெண்ணல் சூதர்க்கு முறைமை கண்டாய்.

(இ - ள்.) இதயம்உம் - (குதிரைகளின்) மனத்தையும், வலிஉம் - வலிமையையும், தேயத்து இயற்கைஉம் - (அவை பிறந்த) நாடுகளின் தன்மையையும், வினைஉம் - (அவற்றிற்கு ஏற்ற) தொழில்களையும், பற் பல் கதிகள்உம் - பலபலவகைப்பட்ட நடைகளையும், உணர்ந்து - அறிந்து, பூணும் - பூட்டுதற்குரிய, கவனம் மா - விரைந்தோடுதலையுடைய குதிரைகளை, தெரிந்து-ஆராய்ந்து, பூட்டி - (தேரில்) அணைத்து,—எதிரி தன் விசயம் கூறல் - பகைவனது விசேஷஜயத்தைச் சொல்லுதலும், இடிக்கும் நண்பு ஆதல்-(சொல்லவேண்டிய நன்மைகளை) நெருக்கிச்சொல்லுகின்ற சிநேகிதனாதலும், வெம் போர் - கொடிய போர்த்தொழிலுக்கு, முதிர் - சிறந்த, இடம் - இடத்தையும், காலம் - காலத்தையும், எண்ணல்-ஆலோசித்தலும், சூதர்க்கு-சாரதிகளுக்கு, முறைமை-கடமையாம்: கண்டாய்-அறிவாய்; (எ-று.)--என்றது, அருச்சுனன் வெற்றியைச் சல்லியன் சிறப்பித்துச்சொன்னதற்கு நீ கோபங் கொள்ளுதல் முறைமையன்றென்று குறிப்பித்தபடி. (143)

வேறு.

53.—இங்ஙன் துரியோதனன் பேசிநிற்கையில், பாண்டவர்பக்கத்தார் தம்தேரைக் கர்ணன்நின்றவிடத்துச் செலுத்தல்.

என்ன மன்னர்மன் னவன்மு கம்புகுந் திருவ ருக்குநல் லுரையெ டுத்துரைத், தந்நி லத்திலே நிற்க வல்விரைந் தறன்ம கன்படைக் கதிப னென்றுமுன், சொன்ன திண்டிறற் றுருபதேயனுஞ் சோம கேசரா யுள்ள சூரருங், கன்னனின்றவம் முனையி னெஞ்சினுங் கடுகு தங்கடேர் கடவி னர்களே.

(இ - ள்.) என்ன - என்று, மன்னர் மன்னவன் - இராசராசனான துரியோதனன், முகம் புகுந்து - எதிரிற் சென்று, இருவருக்கும்—, நல் உரை எடுத்து உரைத்து - நல்ல வார்த்தைகளை எடுத்துச்சொல்லி, அ நிலத்திலே நிற்க - அந்த இடத்திலே நின்றுகொண்டிருக்க,—(அப்பொழுது), அறன் மகன் படைக்கு அதிபன் என்று - தருமபுத்திரனது சேனைக்குத் தலைவனென்று, முன் சொன்ன - முன்னே சொல்லப்பட்ட, திண் திறல்-மிகுந்தவலிமையையுடைய, துருபதேயன்உம்-துருபதராஜகுமாரனான திட்டத்துய்மனும், சோமக ஈசர் ஆய் உள்ள சூரர்உம் - சோமககுலத்துக்குத் தலைவராயுள்ள வீரர்களும், கன்னன் நின்ற அ முனையில் - கர்ணன் நின்ற அப்போர்க்களத்தினிடத்தில், நெஞ்சின்உம் கடுகு - மனோவேகத்தைக்காட்டிலும் விரைந்துசெல்கிற, தங்கள் தேர் - தங்களது தேர்களை, வல் விரைந்து - மிகவும் வேகமாக, கடவினர்கள் - செலுத்தினார்கள்; (எ - று.)

வல்வீரைந்து, திண்டிறல்-ஒருபொருட்பன்மொழிகள். சோமக னென்பது - திட்டத்துய்மன் மூதாதையின் பெயர்.

இதுமுதல் பத்துக்கவிகள்-பெரும்பாலும் ஒன்றுமூன்றுஐந்து ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றையவை கூவிளச்சீர்களுமாகிய எண்சீராசிரியவிருத்தங்கள். (144)

54.—இருதிறத்தாரும் அதிசயிக்கப் பொருதல்.

சென்றவீரருஞ்சிலைகள்கால்பொரத்திண்சிலீமுகஞ்சேரவேவினர்
நின்றவீரருந்தனுவளைத்துமேனெடியசாயகநிமிரவீசினர்
ஒன்றமாநிலம்பொன்றமீதெழுந்தோதமூர்வதொத்தும்பரஞ்சினர்
அன்றையாகவந்தனினிகழ்ந்தபோராரையாரையென்றதிசயிப்பதே.

(இ - ள்.) சென்ற வீரர்உம் - வந்த சோமகவீரர்களும், சிலைகள் கால் பொர - விற்களின் கோடிகள் வளையும்படி (வளைத்து), திண் சிலீமுகம் - வலிய அம்புகளை, சேர - ஒருசேர, ஏவினர்-எய்தார்கள்; நின்ற வீரர்உம்-(எதிரில்) நின்ற கிருதவன்மன் முதலிய வீரர்களும், தனு வளைத்து - வில்லை வணக்கி, மேல் - அவர்கள் மேல், நெடிய சாயகம்-பெரிய அம்புகளை, நிமிர-நெருங்கும்படி, வீசினர்-பிரயோகித்தார்கள்; ஒன்ற - ஒருசேர, மா நிலம் - பெரிய பூமி முழுவதும், பொன்ற-அழியும்படி, ஓதம்-கடல்வெள்ளம், மீது எழுந்து ஊர்வது ஒத்து - மேலேபொங்கிவருங்காலத்திற்போல, உம்பர் அஞ்சினர்-தேவர்கள் பயந்தார்கள்; அன்றை-அன்றைக்கு, ஆகவந்தனில்-போர்க்களத்தில், நிகழ்ந்த-நடந்த, போர்-யுத்தத்தில், ஆரை ஆரை என்று - யார்யாரையென்று, அதிசயிப்பது-வியந்து புகழ்வது? (எ - று.) (145)

55.—பலவீரரிறத்தல்.

ஏறுதேரழிந்திவுளிமாவழிந்தேவுபாகழிந்தெண்ணிலெண்ணிலார்
நூறுநூறுகோனுழையமெய்யெலாநொந்துதுஞ்சினர்முந்துபோர்செய்தார்
வேறுவேறுபல்கோடிவீரர்கண்மேருவொப்பதோர்வில்வளைத்திடச்
சூறைமாருதம்போல்விபாகரன்சுதனடாவுதேர்சூழவந்ததே.

(இ - ள்.) முந்து போர் செய்தார் - முன்னே போர்செய்தவர்களாகிய, எண்ணில் எண்ணிலார் - கணக்குக்கொண்டு எண்ண முடியாத (இரண்டுசேனையிலுமுள்ள) ரதாதிபர்கள், நூறு நூறு கோல் நுழைய-பலபல பாணங்கள்வந்து தைப்பதனால், ஏறு தேர் அழிந்து-(தாம்) ஏறிய தேர்கள் அழியப்பெற்று, இவுளிமா அழிந்து-(அவற்றிற்பூட்டிய)குதிரைகள் அழியப்பெற்று,ஏவு பாகு அழிந்து - (அவற்றைச்) செலுத்துகிற சாரதி அழியப்பெற்று, மெய் எலாம்நொந்து - உடம்புமுழுவதும் வருந்தி, துஞ்சினர் -இறந்தார்கள்; வேறு வேறு பல் கோடி வீரர்கள்-வெவ்வேறு பலகோடிசூரர்கள், மேரு ஒப்பது ஓர் வில்வளைத்திட-மகாமேருகிரியைப் போல்வதொரு (பெரு வல்) வில்லை (த்தனித்தனி) வளைத்துப்போர்செய்ய, விபாகரன் சுதன் நடாவு தேர் - சூரிய குமாரனான கன்னன் ஏறிய தேர், சூறை மாருதம்போல்-சுழல்பெருங்காற்றுப்போல, சூழ வந்தது - சுற்றிச்சுற்றிவந்தது; (எ - று.)

எண்ணிலார் - (பிறரை) ஒருபொருளாக எண்ணுதலில்லாத வருமாம். வில்லுக்கு மேருவை உவமை கூறுவது, திரிபுரசங்கார காலத்துப் பரமசிவனுக்கு அது வில்லானதனால். (146)

56.—திட்டத்துய்மன் கர்ணனால்தோற்றுத் தேரோடுஓடல்.

முட்டவந்துதம்பின்கொடாமன்மேன் முன்கொடுத்துமாமுனைகொள்வாளியிற்
பட்டொழிந்தவவ்விருவர்சேனையின் பதிகளுஞ்சயம்படவுடற்றினர்
விட்டபாணம்வந்திருவராகமும்வெளியடைக்கவேவில்வளைத்தபின்
றிட்டத்துய்மனுங்கன்னனுக்கழிந்தேறுதேருடன்றேறியோடினன்.

(இ - ள்.) பட்டு ஒழிந்த - இறந்தவர்களொழிந்த, அ இருவர் சேனையின் - பாண்டவ கௌரவ சேனைகளுக்கு, பதிகள் உம் - தலைவரான திட்டத்துய்மனுங் கன்னனும், முட்ட வந்து - நெருங்க வந்து, தம் பின் கொடாமல் - தமது முதுகைக்கொடாமல், முன் கொடுத்து - மார்பை (அம்புகளுக்கு இலக்காகக்) கொடுத்துக் கொண்டு, மா முனை கொள் வாளியின் - சிறந்த நுனியைக்கொண்ட அம்புகளினால், சயம் பட - வெற்றி உண்டாம்படி, மேல் - மேன் மேலே, உடற்றினர் - போர்செய்தார்கள்; விட்ட பாணம் - (ஒருவர்மேல் ஒருவர்) விட்ட அம்புகள், வந்து—, இருவர் ஆகம் உம் - இருவருடம்பு முழுவதையும், வெளி அடைக்க ஏ - மேலேமறைக்கும்படி, வில் வளைத்தபின் - வில்லைவளைத்துப் போர்செய்தபின்பு, (அப்போரில்), திட்டத்துய்மனும்—, கன்னனுக்கு—, அழிந்து - தோற்று, ஏறு தேருடன் - தானேறிய தேருடனே, தேறி ஓடினன் - உயிர்தப்பி ஓடிப்போனான்; (எ - று.)—ஏறுதேருடன் அழிந்து என இயைப்பினுமாம். பி - ம்: கன்னனுக்கிடைந்து. (147)

57.—தருமன்கட்டளையால் வீமன் கர்ணன்மேற் செல்லல்.

சோமகேசரிற்பட்டொழிந்தவெஞ் சூரர்தம்முடன்றுரோணசூதனன்
காமபாணமேயெனவிலக்கருங்கணைகண்மெய்யுறக்கைகழன்றபின்
றாமமார்முடித்தம்முனேவலிற்றன்னையொத்ததோள்வீரர்தம்மொடும்
வீமசேனன்மற்றவரைவென்றபோர்விசயகன்னன்மேல்வெய்தினெய்தினன்.

(இ - ள்.) காம பாணம் ஏ என - மன்மதபாணங்களேபோல, விலக்க அரு - தடுத்தற்கு அரிய, கணைகள் - (கன்னன்விட்ட) அம்புகள், மெய் உற - (தம்) உடம்பில் தைத்தலினால், துரோண சூதனன் - துரோணரைக் கொன்றவனாகிய திட்டத்துய்மன், சோமகேசரில் - சோமககுலத்தலைவர்களுள், பட்டு ஒழிந்த - இறந்தவர்கள்போக மிகுந்த, வெம் சூரர் தம்முடன் - கொடிய வீரர்களுடனே, கை கழன்றபின் - ஓடிப்போனபின்பு,—தாமம் ஆர் முடி - பூமாலைபொருந்திய முடியையுடைய, தம்முன் - தன் தமையனான தருமனது, ஏவலின் - கட்டளையினால், வீமசேனன்—, தன்னை ஒத்த தோள் வீரர்தம்மொடு உம் - தனக்குச்சமானமான புஜபலத்தையுடையவீரர்களோடு, அவரை வென்ற போர் - திட்டத்துய்மன் முதலியோரைச் சயித்த யுத்தத்தையுடைய, விசய கன்னன்மேல் - விசேஷ ஜயத்தையுடைய கர்ணன்மேல், வெய்தின் எய்தினன் - உக்கிரமாகச் சென்றான்; (எ - று.)

ஓடிப்போகுமிடத்தில் 'வெஞ்சூரர்' என்றும், 'துரோண சூதனன்' என்றும் கூறியது - இகழ்ச்சி: கன்னன்சிறப்பைக் குறித்தற்காகவுமாம். விசயசேனன்மேல் என்றபாடத்திற்கு-விசேஷஜயத்தையுடைய சேனையையுடைய கர்ணன்மேலென்க.

58.—ஐந்துகவிகள் - வீமகர்ணர்கள் கடும்போர் புரிய முடிவில் வீமன் வென்று கர்ணனுயிரைவிடுத்துச் செல்லலைக் கூறும்.

காலினல்வருங்காளைமைந்தனுங்கதிரினல் வருங்காளைமைந்தனு
மாலினல்வருங்களிறுவாசிமா மன்னுதேரெனும்வாகனத்தினர்
வேலினலெறிந்தமருடற்றியும் வெய்யவாளினல்வெட்டிமுட்டியுங்
கோலினலெறிந்துருவவெற்றிவிற் கோலியுங்களங்குறுகினர்களே.

(இ - ள்.) காலினல் வரும் - வாயுவினற் பிறந்த, காளை மைந்தன்உம் - இளவெருதுபோன்ற வீரனன வீமனும், கதிரினல் வரும் - சூரியனற் பிறந்த, காளை மைந்தன்உம் - கர்ணனும், மாலினல் வரும் களிறு - மதமயக்கத்தோடு வருகிற யானையும், வாசி-குதிரையும், மா மன்னு தேர்-பெருமை பொருந்திய தேரும், எனும் வாகனத்தினர்-என்கிற வாகனங்களையுடைய இரண்டுசேனை வீரர்களும், வேலினல் எறிந்து அமர் உடற்றிஉம்-வேலால் வீசிப் போர்செய்தும், வெய்ய வாளினல் வெட்டி முட்டிஉம் - கொடிய வாளால் துணித்து மோதியும், வில் கோலி - வில்லை வளைத்து, கோலினல் எறிந்து-அம்புகளால் எய்து,உருவ-துளைக்கும்படி, எற்றிஉம் - தாக்கியும், களம் குறுகினர்கள் - போர்க்களத்தை அடைந்தார்கள்; (எ - று.)

இனி, இக்கவிக்கு - வாயுகுமாரனன வீமனது மகனகிய சுருதசேனனென்பவனும் சூரியகுமாரனன கர்ணனது மகனகிய விருஷசேனனென்பவனும் யானை குதிரை தேர் என்னும்வாகனங்களின்மேல் ஏறினவர்களாய், (முறையே) வேலினலும் வாளினலும் வில்லினலும் பொருது களங்குறுகினர்களென்று உரைத்து, மேலைக்கவியின் முதலடிக்கு-வீமனும் கன்னனுந் தத்தம் மக்களது போர்த்திறத்தைக் கண்டு கண்டு களித்து என்று உரைப்பினுமாம். (149)

59. **மைந்தர்போர்விதங்கண்டுகண்டுதார் மருவுமம்புயத்திருவருங்களித்**
துந்துமாநெடுந்தேரிரண்டும்வந் துள்ளமானதேரொத்துலாவவே
அந்தரம்புதைந்தும்பராரெலா மஞ்சியோடுமாறப்புமாரியுஞ்
சிந்தவெண்டிசாமுகமுமண்டமுஞ் செவிடுபட்டிடச்சிலைவணக்கினர்.

(இ - ள்.) தார் மருவும் - போர்மாலை பொருந்திய, அம் புயத்து-அழகிய தோள்களையுடைய, இருவர்உம் - கன்னனும் வீமனும்,—மைந்தர்-(தம்முடன் வந்த) வீரர்களது, போர் விதம்-போர்செய்யும் வகைகளை, கண்டு கண்டு-பார்த்துப்பார்த்து, களித்து - (தாம்)மகிழ்ந்து, உந்தும் மா நெடு தேர் இரண்டுஉம்-செலுத்தப்படுகிற பெரிய உயர்ந்த (தமது) இரண்டுதேர்களும், உள்ளம் ஆனதேர் ஒத்து - (தத்தம்) மனோரதத்தைப் போன்று,

வந்து உலர்வ - உலாவிவராநிற்க,—உம்பரார் எலாம்-மேலுள்ள தேவர்களெல்லாம், அஞ்சி ஓடும் ஆறு - பயந்து ஓடும்படி, அப்பு மாரிஉம்-பாணவருஷமும், அந்தரம் புதைந்து-ஆகாயத்தை மறைத்து, சிந்த - சிந்தவும், எண் திசாமுகம்உம் - எட்டுத் திக்குக்களினிடத்திலுள்ளவர்களும், அண்டம்உம்-அண்டகோள முழுவதிலுள்ளவர்களும், செவிடு பட்டிட-(நாணொலிமிகுதியால்) செவிடாம்படியும், சிலை வணக்கினர் - வில்லை வளைத்தார்கள்; (எ - று.)—உள்ளமான தேர் - மனோரதமென்ற வடசொல்லின் மொழிபெயர்ப்பு; விருப்பமென்பது பொருள். (150)

60. **செல்வணக்கிமேல்கீழெனும்பெருந் திசையிரண்டினுந்திகழும்விற்கள் போல், வில்வணக்கியவ்விருவரும்பொரும் வெஞ்சமத்தில்வீமனையுரத்தினு, மல் வணக்குதோளினுமிலக்கிலா வாளியேவினனொளியாகவே, கல்வணக்கிமுப்புர மெரித்தமுக் கண்ணினன்வலக்கண்ணளித்துளான்.**

(இ - ள்.) செல் வணக்கி - மேகங்களில் வளைவாகத்தோன்றி, மேல் கீழ்எனும் பெரு திசை இரண்டின்உம்-மேற்கு கிழக்கு என்கிற பெரியஇரண்டு திக்குகளிலும், திகழும் - விளங்குகிற, விற்கள்போல் - இந்திரதனுசுகளைப் போல, வில் வணக்கி - (தத்தம்) வில்லை வளைத்து, அ இருவர்உம் - கன்னனும் வீமனும், பொரும - போர்செய்கிற, வெம் சமத்தில் - கொடிய யுத்தத்தில், கல் வணக்கி - மேருமலையை (வில்லாக) வளைத்து, முப்புரம் எரித்த-திரிபுரங்களைத் தகித்த, முக் கண்ணினன் - மூன்றாவது [நெற்றிக்] கண்ணையுடைய உருத்திரனது, வலம் கண் - வலது கண்ணாகிய சூரியனால், அளித்துளான் - பெறப்பட்டவனாகிய கர்ணன், வீமனை - வீமனது, உரத்தின்உம் - மார்பிலும், மல் வணக்கு தோளின்உம் - மல்லுத்தொழிலைப் பயின்ற தோள்களிலும், ஒளி ஆக - ஒழுங்காக, இலக்கு இலா வாளி - எதிரில்லாத அம்புகளை, ஏவினன் - பிரயோகித்தான்; (எ - று.)

மல் வணக்கு தோள் - விராடநகரத்தில் எல்லாமல்லரையும் வென்று வந்தானொரு மல்லனைத் தோற்பித்த தோளென்றுமாம். கல்-இலக்கணையால் மேருவை உணர்த்திற்று. இறைவனுக்குக் கண்மூன்றும் முச்சுடராதலால், இங்ஙனங் கூறினர். (151)

61. **வலக்கணானசெஞ்சுடரிடக்கணும் வாகுவுந்துடித்தாகுலத்துடன்**
கலக்கணீர்பொழிந்தினையும்வேலையிற் கனற்படும்புணிற்றடிபடுங்கணக்
கிலக்கணந்தவாவிமன்வாளியீ ரிரண்டுநாலிரண்டெண்ணிரண்டினு
லலக்கணெய்தவெய்தனனுதாரிதன் னணிகணீடுதோளாகமெங்குமே.

(இ - ள்.) வலக்கண் ஆன - (இறைவனது) வலக்கண்ணாகிய, செம்சுடர் - சிவந்த கிரணங்களையுடைய சூரியன், இடக் கண்உம் வாகுஉம் துடித்து - இடக்கண்ணும் இடத்தோளுந் துடிக்கப் பெற்ற, ஆகுலத்துடன் - கவலையுடனே, கலம் க(ண்)ணீர் பொழிந்து-மிகுந்த கண்ணீரைச் சொரிந்து, இனையும் வேலையில்-வருந்தும்பொழுதில், கனல் படும் புணில் தடி படும் கணக்கு -

நெருப்பினாலாகிய புண்ணிலே தடியடிபட்டதன்மையாக, இலக்கணம் தவா வீமன்-(உத்தமவீர)லக்ஷணங்களிற் சிறிதுங்குறையாத வீமன், உதாரிதன் - உதாரகுணமுடைய கர்ணனது, அணிகள் நீடு - ஆபரணங்கள் மிகுந்த, தோள் - தோள்களிலும், ஆகம் எங்கும் - உடம்புமுழுவதிலும், அலக்கண் எய்த - துன்பமடையும்படி, ஈர் இரண்டு - நான்கும், நால் இரண்டு - எட்டும், எண் இரண்டு - பதினாறுமாகிய, வாளியினால்-அம்புகளால், எய்தனன்-எய்தான்; (எ - று.)

செஞ்சுடர் - அன்மொழித்தொகை. குமாரனாகிய கர்ணனுக்கு இன்று மரணம் நேரிடப்போவதனால், அதற்கு முற்குறியாகச் சூரியனுக்கு இடக்கண்ணுந் தோளுந் துடிக்க, அதுகருதி அவன் வருந்தினான். சூரியன் அத்தீயகுறியால் மனவருத்தப்படும் பொழுது வீமன் கர்ணன்மீது பலபாணங்களைப் பிரயோகித்து அவன்வருத்தத்தை மிகச்செய்தலால், 'கனற்படும்புணிற்றடிபடுங் கணக்கு' என உவமைகூறினார். பி - ம்: கற்படும்புணிற். (152)

62. வேத மாகிநின் றவனை யெய்தபோர் வில்லி முன்னவன் சல்லி யன் றனோடோதி னானிவற் கெம்பி வஞ்சின மொழியு மென்று கொண் டுயிர்வ ழங்கி னேன், சூத னாகிநீ வந்து தேர்விடுந் தொலைவி லாதபோர் வலியை யன்றியே, யாது கூறலாம் வன்மை வின்மைதான் யாதெ னாவிமைப் போதி லேகினான்.

(இ - ள்.) வேதம் ஆகி நின்றவனை-வேதங்களின் சொரூபியாகிய பரமசிவனை, எய்த - அம்பெய்துபொருத, போர் வில்லி - விற்போரையுடைய அருச்சுனனது, முன்னவன் - முன்னே பிறந்தவனாகிய வீமன், 'இவற்கு-இக்கர்ணனுக்கு, எம்பி வஞ்சினம் ஒழியும் என்று கொண்டு-(யான் இவனைக் கொன்றால்) எனது தம்பியாகிய அருச்சுனனது சபதந் தவறுமே யென்று எண்ணி, உயிர் வழங்கினேன்-உயிரைக்கொடுத்தேன்; நீ—, சூதன் ஆகி - சாரதியாகி, வந்து—, தேர் விடும் - தேரோட்டுவதனாலாய, தொலைவு இலாத-அழிதலில்லாத, போர் வலியை அன்றிஏ-போரின் வலிமையையேயல்லாமல், வன்மை-(அக்கர்ணனது)வலிமையைக்குறித்து, யாது கூறலாம்-என்ன சொல்லலாம்? வின்மை தான்-விற்போர்த்திறமைதான், யாது-ஏது?' என-என்று இகழ்ச்சியாக, சல்லியன் தனோடு ஓதினான்-சல்லியனுடன்சொல்லியவனாய், இமைப்போதில் -ஒருமாத்திரைப்பொழுதிலே, ஏகினான் - (அப்பாற்) சென்றான்;

பாசுபதம்பெறத் தவநிலை நின்ற அருச்சுனனை அழிக்கத் துரியோதனனேவலாற் பன்றியாய்வந்த மூகாசுரன்மேல் வேடவடிவாய் வந்த சிவபெருமான் அம்பெய்ய, அது பிளக்குமுன்னே அருச்சுனன் அம்பொன்று எய்து வராகத்தைவிழுத்த, அதுகாரணமாக அவ்விருவர்க்கும் உண்டான போரில், பரமசிவனை அருச்சுனன் அம்பெய்தும் விற்கழுந்தால் முடியில் அடித்தும் எதிர்த்தானென்க. (153)

வேறு.

63.—இதுவும் மேலைக்கவியும்-ஒருதொடர்:
விடசேனன் சாத்தகியோடு பொருது தேர்முதலியன இழந்தமை கூறும்.

அங்கர் குலநர பாலனும் வாழ்வுடை யங்கர் களுமுனை சாய்தர வூழியின்
மங்கு னிகர்பல கோல்விடு வீமனு மைந்த ரனைவரு மாறடு காலையில்
வெங்கை வரிசிலை கால்பொர யாரினும் விஞ்சு திறல்விட சேனனெ னுவரு
செங்க ணவன்வசு தேவன்மு னுளருள் சிங்க வரசிளை யானொடு சீறியே.

(இ - ள்.) அங்கர் குல நர பாலன் உம்-அங்கதேசத்திலுள்ளார் கூட்டத்துக்குத் தலைவனான கர்ணனும், வாழ்வு உடை அங்கர்கள் உம்-வாழ்தலையுடைய அவ்வங்கதேசத்துவீரர்களும், முனை-போர்க் களத்தில், சாய் தர-வலியழியும்படி, ஊழியின் மங்குல் நிகர்-யுகாந்த காலத்து (விடாப்பெருமழைபொழிகின்ற) மேகம்போன்ற, பல கோல் விடு-பலஅம்புகளை விடுகின்ற, வீமனும்—, மைந்தர் அனை வர்உம்-வீரர்களெல்லோரும், மாறு அடுகாலையில் - பகைவர்களை அழிக்கின்ற பொழுதில்,—யாரின்உம் விஞ்சு திறல்-எல்லோரினும் மிக்க பராக்கிரமத்தையுடைய, விடசேனன் என வரு-விருஷசேன னென்னும் பேர்பெற்றுவந்த, செம்கணவன்-(கோபத்தாற்)சிவந்த கண்களையுடைய வீரன், வசுதேவன் முன் நாள் அருள்-வசுதேவர் முன்னே பெற்ற, சிங்க அரசு-சிறந்த சிங்கம்போன்ற கண்ணனது, இளையானொடு-தம்பியாகிய சாத்தகியுடனே, வெம் கை - கொடிய கைபிற்பிடித்த, வரி சிலை-கட்டமைந்த வில், கால் பொர-கோடிகள் வளைய (வளைத்து), சீறி-கோபித்து,—(எ-று.)—'சீறி' என்பது, மேற்கவியில் "ஏவலும்" எனமுடியும்.

அங்கர்கள் என்பதற்கு-சதுரங்கசேனைவீரரென்றும் பொருள் கொள்ளலாம். மைந்தர் அனைவர்-பாண்டவர்மக்களாகிய பிரதிவிந் தியன் சுருதசேனன் சுருதகீர்த்தி புண்டலன் செபசனன் என்பவ ரெல்லாருமாம்.

இதுமுதல் ஆறுகவிகள்-பெரும்பாலும் முதல் ஐந்தாஞ் சீர் கள் தேமாச்சீர்களும், இரண்டு ஆறாஞ் சீர்கள் கருவிளச்சீர்களும், மற்றைநான்குங் கூவிளச்சீர்களு மாகிய **எண்சீராசிரியச்சந்தவிருத்தங் கள்.** 'தந்த தனதன தானன தானன தந்த தனதன தானன தானன' என்பது இவற்றின் சந்தக்குழிப்பாம். (154)

64. திண்சிலையினெடுநாணொலியோடணி சிஞ்சிதமுமெழமாலிளையோனிணை
வண்புயமும்வியன்மார்பமுமூடுற வன்புபெறுபலவாளிகளேவலு
நண்பொடவனிவனேறியதேர்கொடி நன்புரவிகுடைபாகிவைசூழ்தர
வொண்பிறையின்முகமானசிலீமுக மொன்பதுதையினன்வாகுவுமார்புமே.

(இ - ள்.) திண் சிலையின்-வலிய வில்லிலேற்றிய, நெடு நாண் ஒலியோடு-நீண்ட நாணியின் ஒலியுடன், அணி சிஞ்சிதம்உம்-அழ கிய ஆபரணங்களின்ஒலியும், எழ-உண்டாம்படி, மால்இளையோன் -கிருஷ்ணன்தம்பியான சாத்தகியினது, இணை-(ஒன்றோடொன்று) ஒத்த, வண் புயம்உம்-அழகிய தோள்களிலும், வியன்மார்பம்உம்-

அகன்ற மார்பிலும், ஊடுஉற-துளைக்கும்படி, வன்பு பெறு பல வாளிகள்-வலிமைபெற்ற பல பாணங்களை, ஏவலும்-(விடசேனன்) ஏவினவளவில், நண்பொடு-இவனோடு ஒப்ப, அவன் - சாத்தகி, இவன் ஏறிய-விடசேனன் ஏறின, தேர்-தேரும், கொடி-கொடியும், நல் புரவி-சிறந்த குதிரைகளும், குடை-குடையும், பாகு-பாகனும், இவை-ஆகிய இவையெல்லாம், வீழ்தர-விழும்படியாகவும், வாகு உம் மார்பு உம் - தோள்களிலும் மார்பிலும், ஒண் பிறையின் முகம் ஆன - ஒளிபொருந்திய பிறைச்சந்திரன்போன்ற நுனியையுடைய, சிலீமுகம் ஒன்பது-ஒன்பதுபாணங்களை, உதையினன் - தொடுத்தான்; (எ - று.)—ஶிஞ்ஜிதம்-அசைகின்ற ஆபரணங்களினுலெழும்ஒலி: வடசொல். (155)

65.— சோழனும் மாகதனும் யானைமீதிருந்து பொருதல்.

குன்றினருவிகள்போன்மததாரைகள்கொண்டகடதடவாரணமாமிசை
சென்றுசிலகணையேவினரோரிரு சிந்துகிரணதிவாகரராமென
வின்றுவயலுழுவீர்புதுநீர்வரு மென்றுவரிமணலேகுறிகூறிட
வன்றுவருகுடகாவிரிநாடனு மம்பொன்வரிகழன்மாகதர்கோவுமே.

(இ - ள்.) 'வயல் உழுவீர்-கழனிகளை உழுது பயிர்செய்பவர்களே! இன்று புது நீர் வரும்-இன்றைக்குப் புதுவெள்ளம் வரும்', என்று--, வரிமணல்ஏ-அடர்ந்தமணல்களே, குறிகூறிட-(முன்னே) குறிசொல்ல, அன்றுவரு-அன்றைக்கே (தவறாமல்வெள்ளம்) வரப்பெறுகின்ற, குட காவிரி - மேற்கிலுற்பத்தியாகிற காவேரிநதி பாய்கின்ற, நாடன்உம் - நாட்டையுடைய சோழனும், அம் பொன் வரி கழல் - அழகிய பொன்னினாலாகிய கட்டப்பட்டவீரக்கழலையுடைய, மாகதர் கோஉம்-மகதநாட்டார்க்குத் தலைவனானசாதேவனென்பவனும், குன்றின் அருவிகள்போல்-மலையினின்று பெருகுகிற நீரருவிகள்போல,மததாரைகள்கொண்ட-மதநீர்ப்பெருக்கைக் கொண்ட, கட தடம்-கபோலங்களினிடத்தையுடைய, வாரணம் மாமிசை - யானையாகிய விலங்கின்மேலேறி, சென்று-போய், சிந்து கிரணம்-வீசுகிற கிரணங்களையுடைய, ஓர் இரு திவாகரர் ஆம் என - இரண்டு சூரியர்கள்போல, சில கணை ஏவினர் - சிலபாணங்களைப் பிரயோகித்தார்கள்; (எ - று.)

குன்று - யானைக்கும், அருவி - மதத்துக்கும், திவாகரர் - வீமசாதேவர்க்கும், கிரணம் - அம்புக்கும் உவமை. இரு திவாகரர் - இல்பொருளுவமை. காவிரி - வடசொற்றிரிபு; கவேரமென்னும் மலையினின்று உண்டான தென்றும், கவேரனென்னும் அரசனது மகளென்றும் பொருள். மகதராஜன் பெயர், மேல் 69 - ஆங் கவியால் விளங்கும். கீழ்ப் படையெழுச்சிச்சருக்கத்தில் பாண்டவர்பக்கத்தும், கௌரவர்பக்கத்தும் மகததேசத்தரசர் துணையாய் வந்தனர் என்று கூறியிருத்தலால், இங்குக் கூறியவன் மகததேசத்து அரசர்களுள் துரியோதனனதியர்பக்கஞ் சேர்ந்த சாதேவனென்பவனென்றும், கீழ்ச்சருக்கத்தில் 35-ஆம் கவியிற் கூறியவன் பாண்டவர் பக்கஞ் சேர்ந்தானொரு மகதநாட்டரசனென்றும் அறிக. (156)

66.—இதுவும் மேலைக்கவியும்-ஒருதொடர்: இருவரும்பொருகையில் சோழன் மாகதனுயிரைக் கவர்தலைக் கூறும்.

கங்கைநதியிடைவேயொடுபாகுடர் கம்பநிகளமதாசலநீருண
வங்கமறிகடல்சூழெழுபார்வலம் வந்தமனுகுலசோழனைமாகத
னங்கனையரிளமாமுலைதோய்புய மந்திவெயினிகர்சோரியின்மூழ்குற
வெங்கணழலுதிராவதிராவெதிர் மின்கொலெனவிணைவாளிகளேவவே.

(இ - ள்.) வேயொடு - மூங்கிற்கோலையும், பாகு - பாகனையும், கம்பம் - கட்டுத்தறியையும், நிகளம் - சங்கிலியையும், அடர்-அழிக்கவல்ல, மத அசலம் - மதத்தையுடைய மலைபோன்ற (தனது) பட்டத்துயானை, கங்கை நதியிடை - கங்காநதியில், நீர் உண - நீரைக் குடிக்கும்படி, வங்கம் மறி கடல் சூழ்-மரக்கலங்களையுடைய அலையலைக்கின்ற கடல்களாற் சூழப்பட்ட, எழு பார் - ஏழுதீவுகளையும், வலம்வந்த - (தடையின்றிப்) பிரதட்சிணமாகவந்த, மனு குல சோழனை - மனுவின்குலத்திற்தோன்றிய சோழராஜனை, மாகதன் - மகததேசத்தரசன், எதிர் - எதிர்ந்து, அங்கனையர் - பெண்களது, இள மா முலை - இளைய பருத்த தனங்கள், தோய்-புணரப்பெற்ற, புயம் - தோள்கள், அந்தி வெயில் நிகர் - சாயங்காலத்து வெயிலையொத்த, சோரியின் - செந்நீரிலே, மூழ்குற - முழுகும்படி, வெம் கண் அழல் உதிரா-கொடிய கண்கள் நெருப்புப்பொறி சிந்தும்படி சீறி, அதிரா - கர்ச்சித்து, மின் கொல் என - மின்னலோ வென்னும்படி, இணை வாளிகள் - இரண்டு அம்புகளை, ஏவ - விட,— (எ - று.)—"சிலைகோலி உயிர்கொண்டுதிருகினன்" எனமேற்கவியோடுமுடிக்க.மநு-சூரியன்மகன். வங்கம் - மரக்கலம்; அலையுமாம்.

67. வஞ்சிமதுரைபுகாருடையான்வட மண்டலிகர்திறைவாரியநேரியன்
விஞ்சிமுனைதொறும்வாளசுரேசரை வென்றபொழுதடல்வானவர்கோனரு
ணஞ்சுபொழியெரிகாலொருகோல்கொடு நம்பர்சிலைமலைபோலவனேறிய
குஞ்சரமும்விழமாகதர்கோனுயிர் கொண்டுதிருகினன்வார்சிலைகோலியே.

(இ - ள்.) வஞ்சி - கருவூரும், மதுரை - மதுரையும், புகார் - காவிரிப்பூம்பட்டினமும்(என்னுந் தமிழ்நாட்டு மூன்று இராசதானிகளையும்), உடையான் - (தன் ஆளுகையின கீழ்) உடையவனாகிய, வட மண்டலிகர் -வடக்குத்தேசத்தரசர்கள் (கொணர்ந்து கொடுக்கிற), திறை - வரிகளை (யெல்லாம்), வாரிய - கொள்ளுகிற, நேரியன் - சோழன், வார் சிலை கோலி - நீண்ட வில்லை வளைத்து, முனை தொறும் - பலபலபோர்களில், வாள் அசுர ஈசரை-வாளேந்தாங்கிய அசுரராசர்களை, விஞ்சி - மிகுதியாக, வென்ற பொழுது - (இந்திரனுக்குத் துணையாகிச்)சயித்தகாலத்தில்,அடல் வானவர்கோன் அருள் - வலிமையையுடைய தேவராஜனாகிய இந்திரன் தந்தருளிய, நஞ்சுபொழி - விஷத்தைக் கக்குகிற, எரி கால் - நெருப்பை வீசுகிற,ஒருகோல் கொடு-ஒரு அம்பினால், நம்பர் சிலை மலைபோல்-சிவபெருமானுக்கு வில்லாகிய மேருமலை போன்ற, அவன் ஏறிய குஞ்சரம்உம்- அவன் ஏறிவந்தயானையும், விழ - விழும்படி, மாகதர் கோன் உயிர் கொண்டு - அம்மகதராசனது உயிரைக் கவர்ந்து கொண்டு [அவனைக் கொன்று], திருகினன் - மீண்டான்; (எ-று.)

சேரநாட்டுக்கு வஞ்சியும், பாண்டியநாட்டுக்கு மதுரையும், சோழநாட்டுக்குப் புகாரும் இராசதானி யென்க. இத்தமிழ்நாடு மூன்றும் முன் ஒருகாலத்துச் சோழனுடைகைக்கு உட்பட்டிருந்தன போலும். நேரியன் - நேரியென்னும் மலையையுடையவன். (158)

68.—சோழன் சிறப்பு.

அண்டர் குலபதி யாம்விடை வாகன னம்பொ னடிமலர் நாறிடு சேகர
னெண்டி சையுமனு நீதிசெய் கோலின னெங்கு மொருகுடை யாலிடு நீழலன்
மண்டு கிரணசி காமணி மோலியன் வண்டு மதுநுகர் தாதகி மாலையன்
மிண்டு முதுபுலி யேறுப தாகையன் வென்றி வளவனை யார்நிகர் வீரரே.

(இ-ள்.) அண்டர்குல பதி ஆம் - தேவர்கூட்டத்துக்குத் தலைவனாகிய, விடை வாகனன் - விருஷபத்தை வாகனமாகவுடைய பரமசிவனது, அம் பொன் அடி மலர்-அழகிய பொன்போல் அரிய திருவடித்தாமரை மலர்கள், நாறிடு - மணக்கப்பெற்ற, சேகரன் - முடியையுடையவனும், எண் திசைஉம்-எட்டுத்திக்குகளிலும், மனு நீதி செய்-மநுதரும சாஸ்திர நீதியின்படி நடத்துகின்ற, கோலினன்-செங்கோலையுடையவனும், எங்குஉம் - எவ்விடத்திலும், ஒரு குடையால்-ஒற்றைக்குடையினால், இடும்-செய்கிற, நீழலன்-நிழலையுடையவனும், மண்டுகிரணம்-மிகுந்த ஒளியையுடைய, சிகாமணி-முடியிலணியும்மணியையணிந்த, மோலியன் - தலையையுடையவனும், வண்டுமது நுகர்-வண்டுகள்தேனுண்ணப்பெற்ற, தாதகி மாலையன் - ஆத்திப்பூமாலையையுடையவனும், மிண்டு முது புலி ஏறு-வலிமிகுந்த பெரிய புலிபொருந்திய, பதாகையன்-கொடியையுடையவனுமாகிய, வென்றி வளவனை - வெற்றியையுடைய சோழனை, நிகர்வீரர் - ஒக்கின்ற வீரர், யார்-? (எ - று.)

பரமசிவனதுதிருவடிகளில் தன்முடிபடும்படி காலந்தோறுஞ் சாஷ்டாங்கமாக விழுந்து தண்டனிடுபவ னென்பது, முதலடிக்குக் கருத்து. இனி, முதலடிக்கு அண்டர்குலபதி ஆம்-இந்திரனாகிய, விடை-இடபத்தை, வாகனன்-வாகனமாகக் கொண்டவன் எனினுமாம். சூரியவமிசத்தரசனொருவனுக்குத் தேவேந்திரன் விடபவாகனமாகியிருந்தானென்பது கதை; அவ்வரசன்பெயர்ககுத்ஸ்தனென்பது. அம் பொன்-அழகியமாற்றரசர்பொன்முடியிலேயுள்ள, மலர்—,அடியில் நாறுகின்ற, சேகரன் - குலசேகர னெனினுமாம். பி - ம்: அம்பொன்முடிமலர் நாறிடுதாளினன். (159)

வேறு.

69.—மாகதன் விழவே, சேனை முதுகிடல்.

யாதேவ லென்று பலமன் னருமீண்ட விப்பார்
மீதேவல் கொள்ளும் விறற்சென் னிகைவில்லின் வன்பான்
மோதேவு பட்டு முகமா றிமகதர் கோமான்
சாதேவன் வீழ முதுகிட் டதுதானை வெள்ளம்.

(இ - ள்.) பல மன்னர்உம் - பலதேசத்து அரசர்களும், யாது ஏவல் என்று - (எங்களுக்குக் கட்டளையிடுங்) குற்றேவல் என்ன வென்று வினவி, ஈண்ட - திரளும்படி, இ பார்மீது - இந்தப்பூமியில், ஏவல் கொள்ளும் - ஆணை செலுத்துகிற, விறல் - வெற்றியை யுடைய, சென்னி - சோழனது, கை வில்லின் - கையிற்பிடித்த வில்லினது, வன்பால் - வலிமையால், மோது - எய்யப்பட்ட, ஏவு - அம்பு, பட்டு - தைத்தலினால், மகதர் கோமான் சாதேவன் - மகததேசத்தார்க்குஅரசனாகிய சகதேவனென்பவன், முகம் மாறி - தலைதுணிக்கப்பட்டு, வீழ - கீழேவிழ, தானை வெள்ளம் - (துரியோதனாதியரின்) சேனைக்கூட்டம், முதுகிட்டது - புறங் கொடுத்தது; (எ - று.)

எல்லார்க்குந்தலைவனாதலால், சென்னியென்றுபெயர்போலும்; சென்னி - தலை. சாதேவன் - வடசொற்றிரிபு; இவன், சராசந்தன் மகன்.

இதுமுதற் பதினாறு கவிகள் - பெரும்பாலும் வெண்டளை பெற்ற ஐஞ்சீரால் வந்த கொச்சகக்கலிப்பாக்கள். (160)

70.—இதுவும் மேலைக்கவியும் - ஒருதொடர்: அருச்சுனன் கனன்றுபொருது அசுவத்தாமனை வென்று பதாதியாக்கிப்போக்கல்.

புறமிட்டதானைநிலைகண்டுபொருதுசோதி
நிறமிட்டவிற்கைத்துரோணன்மகனெஞ்சுகன்றி
மறமிட்டவாளிபலதூவிவருதனோக்கி
யறமிட்டசிந்தையரசன்றனனுசர்தம்மில்.

(இ - ள்.) புறம் இட்ட - முதுகுகொடுத்த, தானை - (தமது) சேனையின், நிலை கண்டு - நிலைமையைப்பார்த்து, சோதி நிறம் இட்ட - ஒளியின்தன்மை பொருந்திய, வில் - வில்லேந்திய, கை - கையையுடைய, துரோணன் மகன் - அசுவத்தாமன், பொருது - பொறுக்காமல், நெஞ்சு கன்றி - மனம் வெதும்பி, மறம் இட்ட - வலிமைபொருந்திய, வாளி பல - பல அம்புகளை, தூவி வருதல் - சிந்திவருதலை, நோக்கி - பார்த்து,— அறம் இட்ட சிந்தை - தருமம் பொருந்திய மனத்தையுடைய, அரசன்தன் - யுதிட்டிரனது, அனுசர்தம்மில் - தம்பிமார்களுள்,—(எ - று.)—"நிற்பான்" என மேற்கவியோடு இயையும். (161)

71. இன்றேமுடிப்பன்வினையென்றிரண்டிந்திரநீலக்
குன்றேநிகர்ப்பத்திருமாலொடுங்கூடிநிற்பான்
சென்றேயதிரப்பரித்தாமனைச்செங்கையம்பால்
வென்றேயிமைப்பின்வெறுங்காலினின்மீளவிட்டான்.

(இ - ள்.) 'இன்றே - இன்றைக்கே, வினை - போர்த்தொழிலை, முடிப்பன் - முடிப்பேன்,' என்று - என்று எண்ணி, இரண்டு இந்திர நீலம் குன்றுஏ நிகர்ப்ப - இந்திரநீலரத்தினமயமான இரண்டுமலைகளையே ஒக்கும்படி, திருமாலொடுஉம் கூடிநிற்பான் - கண்ணனுடன் கூடி நிற்பவனாகிய அருச்சுனன்,— அதிர - ஆரவாரமுண்

டாகும்படி, சென்று-(எதிரிற்)போய், பரித்தாமனை - அவ்வசுவத்தாமாவை, செம் கை அம்பால் - சிவந்த கைகளினால் விடப்படுகிற அம்புகளால், வென்று - ஜயித்து, இமைப்பின் - நொடிப்பொழுதினுள்ளே, வெறு காலினின் மீள - (தேரின்றிக்கே) வெறுங்கால்களால் திரும்பிப்போம்படி, விட்டான் - (உயிரோடு) அனுப்பினன்;

72.—துரியோதனன்தம்பி சுதக்கணன் கனன்றுவருதல்.

துரியோதனன்றனிளையோரிற்சுதக்கணப்பேர்ப்
பெரியோன்முறிந்தபெருஞ்சேனையின்பின்புநின்றோன்
பரியோடுமான்றேர்ப்பரப்போடும்பதாதியோடுங்
கரியோடுமூழிக்கனலென்னகனன்றுவந்தான்.

(இ - ள்.) துரியோதனன் தன் இளையோரில் - துரியோதனன் தம்பிமாருள், சுதக்கணன் பேர் - சுதக்கணன் என்னும் பெயரையுடைய, பெரியோன்-மகாவீரன், முறிந்த பெரு சேனையின் பின்பு நின்றோன்-நிலைகெட்ட (தமது) பெரிய சேனைக்குப் பின்னே நின்றவன், பரியோடுஉம்-குதிரைகளுடனும், மான் தேர் பரப்போடுஉம் - குதிரைகளைப்பூட்டிய தேர்களின் கூட்டத்தோடும், பதாதியோடுஉம்-காலாள்களுடனும், கரியோடுஉம்-யானைகளுடனும், ஊழி கனல் என்ன - யுகாந்தகாலத்து அக்கினிபோல, கனன்று வந்தான் - கோபித்து வந்தான்; (எ - று.)—செய்யுளோசையின்பொருட்டு 'என்ன கனன்று' என இயல்பாய்வந்தது. (163)

73.—நகுலன் அவனை யோட்டுதல்.

முகிலின்சிலையிற்சிலைகோலிமுனைகொளம்பு
பெகிலந்தொடுத்துவருகாளையைப்பெட்பினேக்கி
நகுலன்சிறிதுநகைசெய்துநகைசெய்வாளி
யகிலந்தொடுத்தாங்கவன்றன்னையுமஞ்சுவித்தான்.

(இ - ள்.) முகிலின் சிலையின்-மேகத்தில் தோன்றுகிறஇந்திரவில்லைப்போல, சிலை கோலி-வில்லை வளைத்து, முனை கொள் அம்பு -கூர்மைகொண்ட அம்புகளை, பெகிலம் தொடுத்து வரு-பலவாகப் பிரயோகித்துவருகிற, காளையை-அச்சுதக்கணனை, நகுலன்—, பெட்பின் நோக்கி-போர்விருப்பத்தோடு பார்த்து, சிறிது நகை செய்து-புன்சிரிப்புச்செய்து, நகை செய் வாளி அகிலம்-ஒளிசெய்கிற அம்புகள் அநேகத்தை, தொடுத்து-(அவனம்புகளுக்குஎதிரே)தொடுத்து விலக்கி, ஆங்கு-அப்பொழுதே, அவன் தன்னைஉம் அஞ்சுவித்தான்-அவனையும் பயந்து ஓடச்செய்தான்; (எ - று.)—பெகிலம்-பஹுளம் என்னும் வடமொழித்திரிபு. (164)

74.—கர்ணன் சேனைசூழ முனைந்துவருதல்.

மட்டுப்படாமல்வருதெவ்வர்மலையினின்றே
தட்டுப்படாதின்றெமரானவர்தானையென்னுப்
பட்டுப்படாதவடிவேனரபாலர்சூழ
முட்டுப்படாதமுரட்கன்னன்முனைந்துசென்றான்.

(இ-ள்.) 'மட்டு படாமல்-அளவுபடாமல், வரு-வருகிற, தெவ்வர்-பகைவர்கள், மலையின்-(இப்படி) போர்செய்தால், எமர் ஆனவர் தானை-எம்முடையவர்கள்சேனை, இன்று-இன்றைக்கு, நின்று தட்டுப்படாது-நிலைநின்று காணப்படாது,' என்று-என்று எண்ணி, பட்டு படாத-(முன்போர்களில்) இறந்து ஒழியாத, வடி வேல் நரபாலர் - கூர்மையையுடைய வேலையுடைய மனிதர்களைக்காக்கிற அரசர்கள், சூழ-சுற்றிலும்வரும்படி,முட்டு படாத முரண் கன்னன் -தடைப்படாத வலிமையுடைய கர்ணன், முனைந்து சென்றான் - விரைந்து (எதிரிற்) போனான்; (எ - று.)—பட்டு படாத - ஆயுதம் பட்டிறவாத எனினுமாம். (165)

75.—இரண்டுகவிகள்-ஒருதொடர்: பலமன்னவர் சேனையோடு தருமன் எதிர்த்துச்செல்ல, இருவரும் பொருதலைக் கூறும்.

பாஞ்சாலரியற்கேகரிற்பலபாடைமாக்க
ளாஞ்சார்பினில்வந்தடைந்தோர்களினன்றுபோரின்
மாஞ்சாரொழிந்தபலமன்னருஞ்சூழவண்டு
பூஞ்சாறருந்துநறுந்தாமம்புனைந்ததோளான்.

(இ - ள்.) பாஞ்சாலரின்-பாஞ்சாலதேசத்தாருள்ளும், கேகயரின்-கேகயநாட்டாருள்ளும், ஆம் சார்பினில் வந்து - தக்க துணையாக வந்து, அடைந்தோர்கள்-சேர்ந்தவர்களாகிய, பல பாடைமாக்களின்-பலபாஷைகள் பேசுகிற (வேறுபலதேயத்து) மனிதருள்ளும்,போரில் மாஞ்சார் ஒழிந்த-போரில் இறந்தவர்கள்போகமிகுந்த, பல மன்னரும்—, சூழ-சுற்றிலும்வரும்படி, அன்று-அப்பொழுது, வண்டு பூ சாறு அருந்தும்-வண்டுகள் மலர்களின் தேனை யுண்ணுகிற, நறு தாமம்-மணக்கின்றமாலையை, புனைந்த-தரித்த,தோளான் -தோள்களையுடையவனாகிய,—(எ - று.)—" தருமன்மைந்தன்" என மேற்கவியோடு இயையும். மாஞ்சார்-மாய்ந்தார் என்பதன் இடைப்போலி. பி - ம்: நறுந்தார்கள். (166)

76. மன்னன்றருமன்றிருமைந்தன்மலையவந்த
கன்னன்கருத்துங்கடுஞ்சேனையுங்கண்டுமேற்போய்ப்
பொன்னம்பொருப்போரிரண்டென்னவெம்பூசல்செய்தார்
இன்னந்தமக்குத்தமையன்றியெதிரிலாதார்.

(இ - ள்.) மன்னன் தருமன் திரு மைந்தன் - தருமராசனது சிறந்த புத்திரனாகிய யுதிட்டிரன்,மலையவந்த-போர்செய்தற்குவந்த, கன்னன்-கர்ணனது, கருத்துஉம்-எண்ணத்தையும், கடு சேனைஉம்-மிகுந்த சேனையையும், கண்டு-பார்த்து, மேல் போய் - அவன் மேல் எதிர்த்துச்செல்ல,-தமக்கு தமை அன்றி-தங்களுக்குத் தங்களையே யல்லாமல், இன்னம் எதிர் இலாதார்-வேறு உவமையில்லாத தருமனும் கர்ணனும், அம் பொன் பொருப்பு ஓர் இரண்டு என்ன - அழகிய பொன்மயமான இரண்டு மேருமலைகள்போலச் (சிறிதுஞ் சலனமில்லாமல்), வெம் பூசல் செய்தார்-கொடிய யுத்தத்தைச் செய்தார்கள்;(எ-று.)—போய்-போக. (167)

77.—இருபக்கத்தும் பலர் மடிதல்.

உதையன்புதல்வன்பெருஞ்சேனையுதிட்டிரன்கைக்
குதையம்பில்வீழ்ந்தாரினையோரெனக்கூறறேற்றார்
இதையம்பழுதிலிவன்சேனையவன்கையம்பா
லுதையுண்டுவீழ்ந்தாருரைத்தாலுமுரைக்கலாற்ரு.

(இ - ள்.) உதையன் புதல்வன்-சூரியபுத்திரனுன கர்ணனது, பெருசேனை-பெரிய சேனையில், உதிட்டிரன்-தருமனது, கை-கையினு லெய்யப்பட்ட, குதைஅம்பின்-கட்டமைந்த அம்புகளினுல், வீழ்ந் தார்-இறந்துவிழுந்தவர்கள், -இனையோர் என-இத்தனைபேரென்று, கூறல் தேற்ருர்-சொல்லுதற்கு அறியப்படார் [அளவிறந்தவரென் றபடி]: இதையம் பழுது இல்-மனத்திற் சிறிதுங் குற்றமில்லாத, இவன்-தருமனது, சேனை-சேனையில், அவன் கை அம்பால் - அத் தக்கர்ணன் கையினுல்தொடுத்த அம்புகளினுல், உதையுண்டு - எய்யப்பட்டு, வீழ்ந்தார்-இறந்து விழுந்தவர்களை, உரைத்தால் உம்-(கணக்கிட்டுச்) சொல்லத்தொடங்கினுலும், உரைக்கல்-சொல் லுதல், ஆற்ரு-முடியாது; (எ - று.) (168)

78.—கர்ணனும் தருமனும் விற்போர்புரிதல்.

பொற்பூசலென்னவிருசேனையும்போயுமீண்டு
மற்பூசல்செய்யவொளிசெய்யுமம்மன்னர்தம்மின்
முற்பூசலம்பிற்பிளந்தண்டமுகடுவிள்ள
விற்பூசலெய்திப்புரிந்தார்வில்லின்வேதம்வல்லார்.

(இ - ள்.) பொற்பு ஊசல் என்ன - அழகிய ஊஞ்சல்போல, இருசேனைஉம் - இரண்டுபக்கத்துச் சேனைகளும், போய்உம் - பின்னிட்டும், மீண்டு - திரும்பிமுன்னிட்டு, மல்பூசல் செய்ய-வலிய போரைச் செய்யாநிற்க,—வில்லின் வேதம் வல்லார் - தநுர்வே தத்தில் வல்லவராகிய, ஒளிசெய்யும் - (சேனைக்கு) விளக்கத்தைச் செய்கிற, அ மன்னர் - கன்ன னுந்தருமனும், முன் - விரைந்து விடப்படுகிற, பூசல் - ஆரவாரத்தையுடைய, அம்பின் - அம்புகளி னுல், அண்டம் முகடு - அண்டகோளத்தின் மேல்முகடும், பிளந்து விள்ள - பிளவுபட்டு வெடிக்கும்படி, தம்மில் - தமக்குள், வில் பூசல் - விற்போரை, எய்தி புரிந்தார் - பொருந்திச் செய்தார்; (எ-று.)—பொற்பு - பொலிவு: உரிச்சொல்; "பொறபேபொலிவு."

79.—இருவர் போரையும் தேவரும் வாழ்த்துதல்.

கொலையம்புமாளாமணியாவமுங்கொண்டசெங்கைச்
சிலையுங்கிரிகளிரண்டென்னத்திரண்டதோளு
நிலையுங்குறிப்புஞ்சிறுநாணெலிநின்றவாறு
மலையுந்திறலும்புகழ்ந்தண்டரும்வாழ்த்தினரே.

(இ-ள்.) (அவ்விருவீரர்களது), கொலை அம்பு-(பகைவரைக்) கொல்லுதலையுடைய அம்புகள், மாளா - குறைதலில்லாத, மணி ஆவம்உம் - அழகிய அம்புப்புட்டில்களையும், செம் கை - சிவந்த கையில், கொண்ட - பிடித்த, சிலைஉம் - விற்களையும், கிரிகள்

இரண்டு என்ன - இரண்டுமலைகள்போல (வலிய), திரண்ட தோள்உம்-திரட்சியாகவுள்ள தோள்களையும், நிலைஉம்-(போருக்கு நின்ற) நிலையையும், குறிப்புஉம்-(அம்புஎய்தற்கு) லட்சியம்பார்த்தலையும், சிறு நாண் ஒலி - சிறிய நாணியின் ஓசை, நின்ற ஆறு உம்-பொருந்திய விதத்தையும், மலையும் திறல்உம்-போர்செய்யும் வன்மையையும்(பார்த்து), அண்டர்உம் - தேவர்களும், புகழ்ந்து - துதித்து, வாழ்த்தினர் - (கண்ணெச்சில்படாம லிருக்கவென்று) ஆசீர்வாதமுஞ் செய்தார்கள்; (எ - று.)—'தேவரும் புகழ்ந்து வாழ்த்தினர்' எனவே, மனிதர் புகழ்ந்து வாழ்த்தினமை தானே பெறப்படும். (170)

80.– கர்ணன் தருமன்மார்பிலும் தோளிலும் அம்புஎய்தல்.

தாழங்குறித்துக்கரைசெய்யுந்தரங்கவேலை
யாழம்புராசியெழுபார்தனியாளநிற்போன்
சூழம்பொன்மாலைத்துணைத்தோள்களினெட்டுமார்பி
னேழம்புமெய்தானிருள்காயுமிரவிமைந்தன்.

(இ - ள்.) தாழும் - தாழைமரங்கள், குறித்து - வரிசையாகத் தோன்றி, கரை செய்யும் - (சுற்றிலுங்) கரையைச் செய்கிற, தரங்கம் வேலை - நீர் அலைகளையுடைய, ஆழ் - ஆழமான, அம்புராசி - கடல்களாற் சூழப்பட்ட, எழுபார் - ஏழுதீவுகளையும், தனி ஆள - தனியே அரசாளுதற்கு, நிற்போன் - நிற்பவனாகிய தருமனது, அம் பொன் மாலை சூழ் - அழகிய பொன்மயமான ஆரங்கள் பொருந்திய, துணை தோள்களின் - இரண்டு தோள்களிலும், எட்டுஉம் - எட்டுஅம்புகளையும், மார்பின் - மார்பிலே, எழ் அம்பு உம் -ஏழம்புகளையும், இருள் காயும் இரவி மைந்தன் - இருளையழிக்கிற சூரியனது மகனான கர்ணன், எய்தான்—; (எ - று.)

தாழம் - ஐயீற்றுமரப்பெயர் ஈறுகெட்டு அம்முச்சாரியை பெற்றது. தாழம் என்பதைத் தொழிற்பெயராகக் கொண்டு, தாழம் - தாழ்தலை [சாந்தமாதலை], குறித்து - எண்ணி, கரை செய்யும் - கரையிற் செல்லுகிற, தரங்கம் என்பாருமுளர். 'தாழங் குரித்து' என்னும் பாடத்திற்கு, தாழ் - தாழைகள், அங்குரித்து- முளைத்துஎன்க. பி - ம்: இறைவன். (171)

81.—தருமன் அம்பெய்து கர்ணனது புயங்கீறிச் சிலையும் வீழ்த்தல்.

தன்றோளுமார்புஞ்சரமூழ்கவெஞ்சாபம்வாங்கி
நின்றோனைவாய்மைநிலைநின்றநிருபரேறும்
வன்றோளுறநாண்வலித்தோரிருவாளியேவிச்
சென்றேரிமைப்பிற்புயங்கீறிச்சிலையும்வீழ்த்தான்.

(இ - ள்.) தன் தோள்உம்-தனது தோள்களிலும், மார்புஉம்- மார்பிலும், சரம் மூழ்க - அம்புகள் அழுந்தும்படி, வெம் சாபம் வாங்கி நின்றோனை - கொடிய வில்லை வளைத்துநின்ற கர்ணனை, வாய்மை நிலை நின்ற - சத்தியத்தில் தவறாமல் நிலையாய் நின்ற, நிருபர் ஏறுஉம் - அரசர்களுக்கு ஆண்சிங்கம்போன்ற தருமனும்,

சென்று - (எதிரிற்) போய், வல் தோள் உற-வலிய தோளிற் படும் படி, நாண் வலித்து - நாணியை இழுத்து, ஓர் இரு வாளி ஏவி - ஒப்பற்ற இரண்டுபாணங்களைப் பிரயோகித்து, ஓர் இமைப்பின் - ஒரு கணப்பொழுதினுள்ளே, புயம் கீறி - தோள்களைப் பிளந்து, சிலைஉம் வீழ்த்தான்-வில்லையுந் துணித்துத்தள்ளினன்; (எ - று.) பி - ம்: திருபரேறு. (172)

82.—கர்ணன் வேறுவில் கொண்டு பலரையுங்கொல்லக் குருதியாறு பெருகல்.

வேறோர்வரிவில்வெயிலோன்மகன்வெய்தின்வாங்கி
நூறேடுநூறுதொடுத்தேவுநுதிகொளம்பாற்
கூறோரிரண்டுபடயாரையுங்கொன்றபோழ்தி
னூறோடிவிட்டதடையாருடலற்றசோரி.

(இ - ள்.) வெயிலோன் மகன் - சூரியகுமாரனான கர்ணன், வேறு ஓர் வரி வில் - வேறொரு கட்டமைந்த வில்லை, வெய்தின் வாங்கி - விரைவாக எடுத்துவளைத்து, நூறோடு நூறு - பலநூற்றுக்கணக்காக, தொடுத்து ஏவும் - தொடுத்து விடுகிற, நுதி கொள் அம்பால் - கூர்மையைக்கொண்ட அம்புகளினால், கூறு ஓர் இரண்டு பட - (உடல்வேறு உயிர்வேறாக) இரண்டுகூறு படும்படி, யாரைஉம்-எல்லோரையும், [பலரையும் என்றபடி], கொன்ற போழ்தின்—,அடையார்-பகைவரது, உடல்-உடம்பினின்றும், அற்ற-வெளிப்பட்ட, சோரி-இரத்தம், ஆறுஓடிவிட்டது - ஆறாகிப்பெருகிவிட்டது; (எ - று.) (173)

83.—தம்பிமாருடன்சேர்ந்து பொருத த்ருஷ்டத்யும்நன் தேரோடு வில்லையும் இழத்தல்.

சாதேவன்றண்டதரன்றண்டகன்சித்ரதேவன்
றீதேதுமில்லாத்திறற்சாத்தகிசித்ரகீர்த்தி
தாதேறுதார்த்தம்பியரோடிகற்றண்டநாதன்
மீதேறுதேருந்தகர்ந்தொண்சுடர்வில்லுமற்றான்.

(இ - ள்.) சாதேவன்—, தண்டதரன்—, தண்டகன்—, சித்ரதேவன்—, தீது ஏதுஉம் இல்லா திறல் - குற்றஞ் சிறிதுமில்லாத வல்லமையையுடைய, சாத்தகி—, சித்ரகீர்த்தி—, (என்னும் பெயரையுடைய), தாது ஏறு தார்-பூந்தாதுகள் பொருந்திய போர்மாலையையுடைய, தம்பியரோடு - (தன்) தம்பிமார்களுடன், இகல் தண்டம் நாதன் - வலிமையையுடைய (பாண்டவ) சேனைக்குத் தலைவனான திட்டத்துய்மன், (கர்ணனெய்த அம்புகளால்), மீது ஏறு தேர்உம் தகர்ந்து - (தான்) மேலே ஏறிய தேரும் பிளந்து, ஒண் சுடர் வில்உம் அற்றான்-மிக்கஒளியையுடைய வில்லுந் துணிபட்டான்;

தம்பிமார்களுந் தேர்தகர்ந்து வில்லுமற்றாரென்பதாம். ஒண் சுடர் - ஒருபொருட்பன்மொழி. திறலுக்குத் தீது - தோல்வி. இங்கேகூறிய சாதேவன்முதலிய அறுவர் - தண்டநாதனென்று பேர்பெற்ற ஒருவனுக்குத் தம்பிமாரென்றும், தண்டநாதன் அண்ணனென்றும், இவர்கள்யாவரும் ஒருபக்கத்து வீமனால்

தோற்று ரென்றும் இப்பாட்டிற்குப் பொருள் கூறினருமுளர்; இஃது பொருத்தமாகத் தோன்றவில்லை. (174)

84.—சேனைநாதன் தளர்ந்ததுகண்டு தருமன் பொரலுறுதல்.

முன்சேனை யோடும் வலியுற்று முனைந்து கொற்ற
மன்சேனை நாதன் பொழிவா ளிமழையின் மூழ்கித்
தன்சேனை நாதன்மு தல்யாவ ருந்தளர்தல் கண்டு
நன்சேனை நாலு முடன்சூ ழநடக்க லுற்றான்.

(இ-ள்.) முன்-முன்னே, சேனையோடுஉம் -சேனையுடனே, வலி உற்று முனைந்து-வலிமைபொருந்திப் போர்செய்து, (பின்பு), கொற்றம் மன் சேனைநாதன் - வெற்றியையுடைய துரியோதனராஜனது சேனைக்குத் தலைவனான கர்ணன், பொழி-சொரிகிற, வாளி மழையின் - பாணவருஷத்திலே, மூழ்கி-முழுகி, தன் சேனை நாதன்முதல் யாவர்உம்-தனது சேனைத் தலைவன் [திட்டத்துய்மன்] முதலிய யாவரும், தளர்தல் - சோர்வடைதலை, கண்டு-பார்த்து, (தருமபுத்திரன்), நன் சேனை நாலும் உடன் சூழ - நல்ல நால்வகைச் சேனைகளுந் தன்னுடன் சுற்றிலும் வரும்படி, நடக்கல் உற்றான் - எதிர்செல்பவனானான்; (எ - று.)—பி-ம்: யாருந். (175)

வேறு.

85.—கிருபன்முதலியோர்மீதுஅம்புஎய்து கொண்டு தருமன் கர்ணனைக் குறுகுதல்.

கிருபனென் றெண்டிசையும் வரிசிலைக் குரைசெய்முனி கிருதவன் மன்சிந்தை விரகுடைச் சகுனியெனு, நிருபரங் கங்கடொறு நிரையினிற் றுளையுருவ நெடிய வம் பைம்பதறு பதுபடப் படமுடுகி, முரண்மிகுந் திண்கடவுண் முரசுடைக் கொடிகொளணி முகிலின்வந்தண்டர்குல முதல்வனத் தனுவினெடு, தரணியின் கண்சமர மலைவதொத் திரதமிசை தருமன்மைந் தன்பரிதி புதல்வனைக் குறுகினனே.

(இ - ள்.) கிருபன் என்று-கிருபாசாரியனென்று, எண் திசை உம்-எட்டுத்திக்குகளிலும், வரி சிலைக்கு - கட்டமைந்த வில்லின் தொழிலுக்கு, உரை செய்-சிறப்பித்துச்சொல்லப்படுகிற, முனி - முனிவனும், கிருதவன்மன் -கிருதவர்மாவும், சிந்தை விரகு உடை-மனத்தில் வஞ்சனையையுடைய, சகுனி-சகுனியும்,எனும்-என்கிற, நிருபர்-அரசர்களது, அங்கங்கள்தொறுஉம்-உடம்புகள்தோறும், நிரையினில்-வரிசையாக, துளை உருவ - துளைத்துச்செல்லும்படி, நெடிய அம்பு-நீண்ட அம்புகள், ஐம்பது அறுபது படப்பட - ஐம்பதும் அறுபதுமாகப் பொருந்தும்படி, முடுகி - விரைவாக எய்து கொண்டு,—அணி முகிலின் - அழகிய மேகமாகிய வாகனத்தின் மேல் (ஏறி), அண்டர் குலம் முதல்வன் - தேவர் கூட்டத்துக்குத் தலைவனான இந்திரன், அ தனுவினொடு-அவ்விந்திர வில்லுடனே, தரணியின்கண்-பூமியில், வந்து—, சமரம் மலைவது - போர்செய்வதை, ஒத்து—, முரண் மிகும்-போர்த்தொழில் மிகுந்த, திண்-வலிய, கடவுள்-தெய்வத்தன்மையையுடைய, முரசு உடை கொடி கொள் - முரசத்தின் வடிவத்தையுடைய துவசத்தைக்கொண்ட, தருமன் மைந்தன்-யுதிட்டிரன், இரதம்மிசை-தேரின்மேலே, பரிதி புதல்வனை-சூரியபுத்திரனானகர்ணனை, குறுகினன் - சமீபித்தான்;

முகிலுக்குக் கடவுட்டன்மை-உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாதல். 'இருதவன் மன்கருது' என்று பாடமிருப்பின், செய்யுளோசையினிதாகிச் சந்த விருத்த மென்னலாமெனத்தோன்றுகின்றது. முடுகி, ஒத்து, குறுகினன் என்க.

இதுமுதல் ஆறுகவிகள்-பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்து ஏழாஞ்சீர்கள் கருவிளச்சீர்களும், இரண்டு ஆறுஞ்சீர்கள் கூவிளங்காய்ச்சீர்களும், நான்கு எட்டாஞ்சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களுமாகிய **எண்சீராசிரியவிருத்தங்கள்.** இதுமுதற் பத்துக்கவிகள் அந்தாதித்தொடையுடையன. (176)

86.—தருமன் கர்ணனுடன் பொருதமை.

தருமன்மைந்தன்பரிதிபுதல்வனைக்குறுகியிருசரமவன்செங்கைவரிசிலைதுணித்திடவுமெதி, ரிருசரந்துன்றியுயர்கொடியறுத்திடவுமுடனிருசரஞ்சென்றுதனியிரதமொட்டிடறிடவு, மொருசரம்பொங்குதிறல்வலவன்மெய்ப்புதைதரவுமொருசரந்திண்கவனதுரகதத்துரனுறவும், வரமிகுந்துங்கதனுவினைவளைத்தெரிகொள்சிலவடிசரங்கொண்டவனதிருபுயத்தெழுதினனே.

(இ - ள்.) தருமன் மைந்தன்—, பரிதி புதல்வனை குறுகி—, இரு சரம்-இரண்டு அம்புகள், அவன்-அக்கர்ணனது, செம் கை - சிவந்த கையிற்பிடித்த, வரிசிலை-கட்டமைந்த வில்லை, துணித்திட உம்-துண்டாக்கவும், இரு சரம்—, எதிர் துன்றி-எதிரே நெருங்கி, உயர் கொடி-உயர்ந்த துவசத்தை, அறுத்திடவும்—, இரு சரம்—, உடன்சென்று-விரைந்துபோய், தனி-ஒப்பில்லாத, இரதம்மொட்டு -தேரின் கொடிஞ்சி யென்னும் உறுப்பை, இடறிடஉம்-தள்ளிவிடவும், ஒரு சரம்-ஓர் அம்பு, பொங்கு திறல் - மிகுந்த வல்லமையையுடைய, வலவன்-பாகனை சல்லியனது, மெய்-உடம்பில், புதைதரஉம்-நன்றாகத்தைக்கவும், ஒருசரம்—, திண்-வலிய, கவனம்-விரைந்துசெல்லுதலையுடைய, துரகதத்து-குதிரைகளின், உரன் - மார்பில், உறஉம்-பொருந்தவும், வரம் மிகும்-சிறப்பு மிகுந்த, துங்க தனுவினை-உயர்ந்த வில்லை, வளைத்து—, எரி கொள் - நெருப்பை (உவமையாக)க் கொண்ட,சில வடி சரம் கொண்டு-சில கூரிய அம்புகளால்,அவனது இரு புயத்து - அவனுடைய இரண்டு தோள்களிலும், எழுதினன்-கிளறினன்; (எ-று.)—துர கதம்-விரைந்து செல்வது:காரணக்குறி.மொட்டு-குமிழ்வடிவான கூம்பு என்பாருமுளர்.

87.—தருமன் வடகலிங்கர் முதலியோரையோட்டிப் பலரையும் விண்புகச் செய்தமை.

வடிசரங்கொண்டவனதிருபுயத்தெழுதியபின் வடகலிங்கங்குகுரமகதமொட்டியமுதல், படிதொறுந்தங்கள்குடைநிழல்பரப்பியவரசர் பலருடன்பைம்பொன்முடிமகுடவர்த்தனர்பலரு, மிடிமுழங்குங்குரலினதிபத்தொடுபிலணி விழிபுயங்கங்களெனவொருவருக்கொருவர்நடை, யடிதளர்ந்தஞ்சலியுமுதுகுமிட்டவரொழியவடையவன்றும்பர்பதிகுடிபுகப்பொருதனனே.

(இ - ள்.) வடி சரம் கொண்டு அவனது இரு புயத்து எழுதிய பின்—, வட கலிங்கம் - வடக்கே யுள்ள கலிங்கதேசமும், குகுரம் - குகுரதேசமும், மகதம் - மகததேசமும், ஒட்டியம்-ஒட்டியதேசமும்,

முதல - முதலாகிய, படி தொறுஉம் - நாடுகள்தோறும், தங்கள் - தங்களது, குடை நிழல் பரப்பிய-வெண்கொற்றக்குடையின் நிழலைப் பரவச்செய்து அரசாண்ட, அரசர் பலருடன் - பல அரசர்களும், பைம் பொன் முடி - பசும்பொன்னாலாகிய கிரீடத்தை யுடைய, மகுடவர்த்தனர் பலர்உம்-முடி தரிக்கும் பல அரசர்களும் (ஆகிய இவர்களுள்), இடி முழங்கும் குரலின் - இடியிடிக்கிற ஓசையினால், அதி பயத்தொடு - மிகுந்த அச்சத்துடனே, பிலனில் இழி - வளைகளிலே இறங்குகிற, புயங்கங்கள் என-பாம்புகள்போல (த் தேரிலிருந்து நிலத்தில் இறங்கி), ஒருவருக்கு ஒருவர் - ஒருத்தருக்கொருத்தர் (முற்பட்டு), நடை அடி தளர்ந்து - (அச்சத்தாற்) கால்நடைசோர்ந்து, அஞ்சலிஉம் - கைகூப்பித்தொழுதலையும், முதுகுஉம் - முதுகுகாட்டுதலையும், இட்டவர் ஒழிய - செய்தவர்கள் தவிர, அடைய - மற்றையோரெல்லாம், அன்று - அன்றைத் தினத்தில், உம்பர் பதி குடி புக - தேவலோகத்திற் குடிபோம்படி [இறந்து சுவர்க்கமடையும்படி], பொருதனன் - போர்செய்தான் (தருமன்); (எ - று.)—முதல - குறிப்புப்பெயரெச்சம். (178)

88.—தருமனுடைய சங்கநாதம்.

அடையவன்றும்பர்பதிகுடிபுகப்பொருதுதன தணிகொள்சங்கம்பவளவித ழின்வைத்தருளுதலு, முடையுமண்டந்திசைகள்செவிடுபட்டிடுமமர ருலகுபொன் றும்பணிகள்பிலமுமுற்றுறவிடியு, மிடைவழங்குந்தரணிவளர்சனத்தொடுமடியு மெனமுழங்கும்பெரியவரவமெக்கடலுமெழு, கடையுகங்கண்டவடவையின்முகத் தெரிகனலி கதுவமண்டும்பவனனொலியினிற்கடுகியதே.

(இ - ள்.) அடைய அன்று உம்பர் பதி குடி புக பொருது—, தனது—, அணி கொள் சங்கம் - அழகைக் கொண்ட சங்கத்தை, பவளம் இதழின் - பவழம்போற் சிவந்த வாயில், வைத்தருளுதலும் - (தருமன்)வைத்து ஊதின வளவில், அண்டம் உடையும் - அண்டகோளம் வெடிக்கும்; திசைகள் செவிடு பட்டிடும்-திக்குகள் செவிடாய்விடும்; அமரர் உலகு பொன்றும் - (மேலுள்ள) தேவலோகம் அழியும்; பணிகள் பிலம்உம் - (கீழுள்ள) நாகலோகமும், முற்றுற இடியும் - முழுவதும் இடிபடும்; இடை வழங்கும் தரணி- (அவ்விரண்டுஉலகங்களுக்கும்) இடையிலேபொருந்திய பூமி, வளர் சனத்தொடு - பொருந்திய ஜனத்துடனே, மடியும்-இறக்கும், என- என்னும்படி, முழங்கும் - ஒலிக்கிற, பெரிய அரவம் - பேரோசை, எ கடல்உம் எழு - எல்லாக்கடல்களும்பொங்குகிற, கடையுகம் - யுகாந்தகாலத்தில், கண்ட-(வெளியிற்) காணப்பட்ட, வடவையின் முகத்து - படபா என்னும் பெண்குதிரையின் முகத்திலே, எரி - எரிகிற, கனலி - நெருப்பு, கதுவ - பற்றும்படி, மண்டும் - மிகுந்து வீசுகிற, பவனன் - காற்றின், ஒலியினில் - ஓசையைக்காட்டிலும், கடுகியது - மிகுந்தது; (எ - று.) (179)

89.—சல்லியன் சாரத்தியஞ்செய்யக் கர்ணன்சங்கமுழக்கித் தருமன் இருந்த இடத்து வருதல்.

கதுவமண்டும்பவனனொலியினிற்கடுகியணி கவசமுங்குண்டலமுமகபதிக் கருள்குரிசில், சதுர்முகங்கொண்டதொருகனகமொட்டிரதமொடு சதுர்விதந்தங்கு

கதியிவுளியொப்பறவடைசி, மதுபமொன்றும்புதியதெரியன்மத்திரநிருப வலவனுந் தும்பொழுதிலகனின்மிக்கெழுமடியு, மதிரவெங்குந்தனதுவளைமுழக்கினினயர வற னின்மைந்தன்சமரமுனைமுகத்தணுகினனே.

(இ-ள்.) அணி கவசம்உம்-அழகிய கவசத்தையும், குண்டலம் உம்-குண்டலங்களையும், மகபதிக்கு-இந்திரனுக்கு,அருள்-கொடுத் தருளிய,குரிசில்-பெருமையிற்சிறந்த கர்ணன்,சதுர் முகம் கொண் டது -நான்கு பக்கங்களையும் (ஒருதன்மையாகக்) கொண்டதாகிய, கனகம் மொட்டு-பொற்கொடிஞ்சியையுடைய, ஒரு இரதமொடு - ஒப்பற்ற தேருடனே, சதுர் விதம் தங்கு கதி இவுளி-நான்குவகை பொருந்திய நடையையுடைய குதிரைகளை, ஒப்பு அற-ஒப்பில்லாத படி, அடைசி-பூட்டி, மதுபம் ஒன்றும் - வண்டுகள் பொருந்திய, புதிய தெரியல்-அன்றலர்ந்த பூமாலையையுடைய, மத்திர நிருபன் வலவன் - மத்திரதேசத்தரசனாகிய சாரதி, உந்தும் பொழுதில்- செலுத்தும்பொழுது, தனது வளை முழக்கினின்-தன் சங்கத்தின் நாதத்தால், அதனின்-கீழ்ச்சொன்ன தருமனது சங்கநாதத்தைக் காட்டிலும், எழு மடிஉம் மிக்கு - ஏழுமடங்கு அதிகமாய், அதிர- பேரொலிஉண்டாகவும், எங்குஉம்-எல்லா இடமும், அயர-திகைக் கவும், கதுவ மண்டும் பவனன் ஒலியினில் - (நெருப்புப்) பற்றும் படி நெருங்குகிற காற்றினோசையினும், கடுகி-உக்கிரமாக, அற னின் மைந்தன் - தருமபுத்திரனது, சமரம் முனை முகத்து-போர் செய்யுமிடத்தின்முன்னே, அணுகினன்-சமீபித்தான்; (எ - று.)

90.—கர்ணன் தருமனுடைய புயம் முதலியவற்றிலும் தேருறுப்புக்களிலும் கடுமையாக அம்பெய்தமை.

அறனின்மைந் தன்சமர முனைமுகத் தணுகியவ னகலமுந் திண்புயமும் வடிசுடர்ப் பகழிபல, வுறவுமஞ் சங்கண்முடி யுருளையற் றிரதநடு வுடையவுந் துங்கவரி சிலைகுணத் துடனறவு, மறம்விளங் கும்பரிக டுணிகள்பட் டிடவும்விறல் வலவனங் கஞ்சிதறி யுரனினுற் றன முதுகு, பறியவுந் தண்டுமுர செழுதுபொற் றுகிலினெடு பறியவுஞ் சண்டதனு வுறவளைத் தனனிவனே.

(இ - ள்.) அறனின் மைந்தன் சமரம் முனை முகத்து அணுகி —, அவன் அகலம்உம் - அத்தருமன்மார்பிலும், திண் புயம் உம்-வலிய தோள்களிலும், வடி சுடர் பகழி பல - கூர்மையான ஒளியையுடைய அநேகம் அம்புகள், உறஉம் - பொருந்தவும்,— அஞ்சங்கள்-அச்சுக்களும், முடி-மேல்முகடும், உருளை - சக்கரங்க ளும், அற்று-அழிந்து, இரதம் நடு உடையஉம்-தேரின் நடுவிடம் பிளக்கவும்,— துங்கம் வரி சிலை - சிறந்த கட்டமைந்த வில்,குணத் துடன் - நாணியோடும், அறஉம் - அறுபடவும், மறம் விளங்கும் பரிகள் - வலிமையோடு விளங்குகிற குதிரைகள், துணிகள் பட் டிடஉம்-பலதுண்டுகள்பட்டுப்போகவும், விறல் வலவன்-வலிமை யையுடைய சாரதியினது, அங்கம்-உடம்பை, சிதறி-துளைத்து, உரனில் உற்றன-மார்பில் தைத்த அம்புகள், முதுகு பறியஉம்- முதுகில் வழியாய் நீங்கவும், தண்டு-துவசதண்டம், முரசு எழுது

பொன் துகிலினொடு - முரசத்தை யெழுதிய அழகிய கொடிச்சீலையுடனே, பறியஉம் - ஒடிபடவும், இவன் - கர்ணன், சண்ட தனு - உக்கிரமான வில்லை, உற வளைத்தனன் - நன்றாக வளைத்தான்; (எ - று.)—அஞ்சம் - அக்ஷம் என்னும் வடமொழித் திரிபு. (181)

வேறு.

91.—தருமனும் அசுவத்தாமன் முதலியோர் சிறப்பித்துரைக்கத் திறம்பட அம்பெய்தமை.

இவனுமவ னைப்புயமு முரமுமுழு கத்துவச மிடியமணி மொட்டிரத மொடிய வரி விற்றுணிய, நவநடைவ யப்புரவி விறல்வலவன் மெய்ப்புதைய நகுசரநி ரைத்தொருவி னடுவுறவ ணக்கினபி, னவனுமிவ னைப்பிறகு பொருதுமுன்மலைத்த படி யடையவும ழித்தனனிவ் வடன்மிகுக ளத்திலென, வுபநிடத வித்துமுத லவனிபரெ னைப்பலரு முரமுமவர் கற்றகலை யுறுதியுமு ரைத்தனரே.

(இ - ள்.) இவன்உம் - கர்ணனும், அவனை - தருமனை, புயம்உம் உரம்உம் முழுக - தோள்களிலும் மார்பிலுந் தைக்கவும், துவசம் இடிய - கொடி விழவும், மணி மொட்டு இரதம் - நவரத்தினங்களிழைத்த கொடிஞ்சியையுடைய தேர், ஒடிய - ஒடியவும், வரி வில் துணிய - கட்டமைந்த வில் துணிபடவும், நவ நடை வய புரவி - ஒன்பதுவகை நடைகளையுடைய வலிமையையுடைய குதிரைகளும், விறல் வலவன் - வெற்றியைத்தருகிற சாரதியும், (ஆகிய இவற்றினது), மெய் - உடம்பில், புதைய - அழுந்தவும், நகு சரம் - விளங்குகிற அம்புகளை, நிரைத்து - வரிசையாகத் தொடுத்து, ஒரு வில் - ஒருவில்லை, நடு உற - நடுவிலே பொருந்த, வணக்கினபின் - வளைத்தஉடனே,—அவன்உம் - தருமனும், இவனை - கர்ணனை, பிறகு பொருது - பின்பு போர்செய்து, முன் மலைத்தபடி அடையஉம் - முன்னே போர்செய்து (அவன் தன்னை) அழித்தபடியெல்லாம், இ அடல் மிகு களத்தில் - இவ்வலிமைபொருந்திய போர்க்களத்தில், அழித்தனன் - அழித்தான், என - என்று, உபநிடத வித்து முதல் - வேதாந்தத்தை அறிந்த அசுவத்தாமன் முதலிய, அவனிபர் எனைப் பலர்உம் - பூமியைக்காக்கிற அரசர்களெல்லாரும், உரம்உம் - அவர்கள் வலிமையையும், அவர் கற்ற கலை உறுதிஉம் - அவர்கள் பயின்ற வில்வித்தையின் வல்லமையையும், உரைத்தனர் - (சிறப்பித்துச்) சொன்னார்கள்; (எ - று.)—உபநிடதம் - உபநிஷதம். உபநிடதவித்து - கிருஷ்ணனுமாம். கர்ணனால் தேரழிய வேறோரிரதமிசைத் தருமன் ஏறிவந்தனனென்பதை மேற்கவியில் அநுவாதமுகத்தாற் கூறுவர்.

இதுமுதல் நான்குகவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்து ஏழாஞ்சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களும், மற்றை நான்குங் கூவிளங்காய்ச்சீர்களுமாகிய **எண்சீராசிரியச்சந்தவிருத்தங்கள்.** 'தனதனன தத்தனன தனதனன தத்தனன தனதனன தத்தனன தனதனன தத்தனன' என்பது, இவற்றிற்குச்சந்தக்குழிப்பு. (182)

92.—மீண்டும் பொரத்தொடங்கிய தருமன் கர்ணனால் சோர்ந்து முதுகுகொடுத்தல்.

உறுதியுடன்மற்றொரதமிசைகொளுமுதிட்டிரனு மொருகையில்வயச்சிலையு மொருகையில்வடிக்கணையும், விறலினொடெடுத்தெதிர்செல்பொழுதருண்மிகுத்த மொழி வெயிலவனளித்தருளும்விதரணகுணக்குரிசின், மறமுறவிடுத்தகணைபொடி யுறவியற்றியவன் மதுமலருரத்தைவழிவழிதுளை படுத்துதலி, னெறிபடைவிடுத்திரத மிசையுறவிளைத்துமுது கிடவறன்மகற்கிரவிமகனிவையுரைத்தனனே.

(இ - ள்.) உறுதியுடன்-வலிமையோடு, மற்று ஓர் ரதம் மிசை கொளும்-வேறொரு தேரின்மேல் ஏறிக்கொண்ட, உதிட்டிரன்உம்- தருமனும், ஒரு கையில்-இடக்கையில், வயம் சிலைஉம் - வெற்றியைத்தருகிற வில்லையும், ஒரு கையில்-வலக்கையில், வடி கணை உம்-கூர்மையான அம்புகளையும், விறலினொடு எடுத்து - பராக்கிரமத்தோடு எடுத்துக்கொண்டு, எதிர் செல்பொழுது-எதிரிற் செல்கிறபொழுதில், அருள் மிகுத்த மொழி-கருணை மிகுந்துதோன்றுகிற இன்சொற்களையுடைய, வெயிலவன் அளித்தருளும்-சூரியபகவான் பெற்றருளிய, விதரணம் குணம் குரிசில் - தானகுணத்தையுடைய வீரனான கர்ணன், மறம் உற விடுத்த-(அத்தருமன்) வலிமைபொருந்த விட்ட, கணை-அம்புகளை, பொடி உற இயற்றி-(தன் கணைகளாற்) பொடியாம்படி செய்து, அவன் மது மலர் உரத்தை- அத்தருமனது தேனையுடைய பூமாலைகளைத் தரித்த மார்பை, வழி வழி துளைபடுத்துதலின்-இடந்தோறுந் துளைதுளையாகச்செய்ததனால், (தருமன்), உற இளைத்து-மிகச்சோர்ந்து, இரதமிசை-தேரின் மேல், எறி படை-(பகைவர்மேல்) எறிகிற ஆயுதங்களை, விடுத்து- போகட்டுவிட்டு, முதுகு இட-முதுகு கொடுக்க, (அப்பொழுது), அறன் மகற்கு-தருமபுத்திரனுக்கு, இரவி மகன்-கர்ணன், இவை உரைத்தனன்-இவ்வார்த்தைகளைச் சொல்வானானான்; (எ - று.)— அது மேற்கவியிற் கூறுகின்றார்.

ஒருரதம்-ஓரதம் எனத் தொகுத்தல் விகாரம். தானத்துக்கு இன்சொல் முக்கியமாக வேண்டுவதாதலின், 'அருண்மிகுத்த மொழி விதரண குணக்குரிசில்' என்றார்; "இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக" என்பர். (183)

93.— கர்ணன் நீ புறமிடுதல் தகாதெனல்.

உரையுடையைகற்றகலையுணர்வுடையைதக்கமதி யுளமுடையைமிக்ககிளை யுறவுடையைசத்யகுண, வரையுடையையெத்திசையும்வழுவறவளர்த்தபுகழ் வரிசைகொளறத்தினைஞர்வழிபடுமதிப்புடையை, தரைமுழுதுமுத்தநிலவுமிழ்குடை நிழற்றவொரு தனிநனிபுரக்குமுயர்தலைமைபெறுகிற்றிபகை, கரையழியவுற்றபொழுதுயிர்கொடுபுறக்கிடுதல் கடனலவுனக்குநிலைகருதியணிநிற்றியெனா.

இதுவும் மேலைக்கவியும்-ஒருதொடர்.

(இ - ள்.) 'உரை உடையை-புகழை யுடையவனாயிருக்கிறாய், கலை கற்ற உணர்வு உடையை-(படிக்கத்தக்க) நூல்களைப் படித்ததனாலுண்டாகிய நல்லறிவை யுடையாய்; தக்க மதி உளம் உடை

யை-தகுந்த இயற்கையறிவோடுகூடிய மனத்தையுடையாய்; மிக்க கிளை உறவு உடையை-மிகுந்த சிநேகிதர்களையும் பந்துக்களையுமுடையாய்; சத்ய குணம் வரை உடையை-உண்மைக்குணத்தின் அளவையுடையாய்; எ திசைஉம்-எல்லாத்திக்குக்களிலும், வழு அற-பழிப்பில்லாமல், வளர்த்த-வளரச்செய்த, புகழ் வரிசை-கீர்த்தியின் மேன்மையை, கொள்-கொண்ட, அறத்து இளைஞர்-தருமநெறிதவறாத தம்பிமார், வழிபடும்-கீழ்ப்பட்டு நடக்கிற, மதிப்பு உடையை-கௌரவத்தை யுடையாய்; நிலவு உமிழ்-சந்திரகாந்தியைப்போன்ற காந்தியை வீசுகிற, முத்தம் குடை-முத்துக்களாலாகிய குடை, நிழற்ற-நிழலைச்செய்யும்படி, தரைமுழுதுஉம்-பூமிமுழுவதையும், ஒருதனி-ஒப்பில்லாமல் தானொருவனாகவே, நனி புரக்கும்-நன்றாக அரசாளுகிற, உயர் தலைமை-உயர்ந்த அதிகாரத்தை, பெறுகிற்றி-பெறவிருக்கிறாய்; (இப்படிப்பட்ட நீ), பகை-பகைவர்கள், கரை அழிய-எல்லையில்லாதபடி, உற்றபொழுது-வந்துநெருங்கியபொழுதில், உயிர் கொடு புறக்கிடுதல்-(மானத்தைக் காத்துக்கொள்ளாமல்) உயிரைக் (காத்துக்) கொண்டு முதுகுகொடுத்தல், உனக்கு—, கடன் அல-முறைமையல்ல; (ஆதலால்), நிலை கருதி-(புறங்கொடாமல்) நிலைபெறுதலை எண்ணி, அணிநிற்றி-சேனையில் நிலைநிற்பாயாக', என-என்று (கர்ணன்) சொல்ல,—(எ - று.)— ''மதித்து'' என மேற்கவியோடு தொடரும். *(184)*

94.—கர்ணன்சொல்லைமதித்துத் தருமன்நிற்க, வீமன் தருமனையடுத்தல்.

கருதியணிநிற்றியெனவுறுதிசமரத்துரைசெய் கருணனைமதித்துமிகுகருணையவனிற்பளவில், விருதர்தலையற்றுருளவிருதர்மதவத்திகளின் விரிதலைகளற்றுருளவிறலிவுளிமெய்த்துணிய, விரதம்வயிரச்சுருளைமுடிகொடலையற்றுருளவிருபுறமுமிட்டவிறலொருகதைகொடெற்றியெதிர், பொருசமர்முருக்கிவருபுரையில்பவனக்கடவுள் புதல்வனெரிமைப்பொழுதின்முதல்வனையடுத்தனனே.

(இ-ள்.)'கருதி-ஆலோசித்து, அணி-படைவகுப்பில், நிற்றி-நிலைநிற்பாய்', என-என்று, உறுதி-உறுதியானவார்த்தைகளை, சமரத்து-போரில், உரைசெய்-சொன்ன, கருணனை-கர்ணனை, மதித்து-நன்குமதித்து, மிகு கருணையவன்-மிகுந்த அருளையுடைய தருமன், நிற்பு அளவில்-நிற்கிற சமயத்தில்,—விருதர்-காலாள்வீரர்களது, தலை-தலைகள், அற்று-அறுபட்டு, உருள-புரளவும், விருதர்-வீரர்களது மதம் அத்திகளின்-மதயானைகளின், விரி தலைகள்-பரந்த தலைகள், அற்று உருள-அறுபட்டுப் புரளவும், விறல் இவுளி-வலிமையையுடைய குதிரைகளின், மெய்-உடம்பு, துணிய-அறுபடவும், இரதம்-தேர்களின், வயிர் அச்சு-வயிரம்பொருந்திய அச்சும், உருளை-சக்கரங்களும், முடி கொள் தலை-கலசத்தைக் கொண்ட மேல்முகடுகளும், அற்று உருள-அறுபட்டுப்புரளவும்,—விறல்இட்ட-வெற்றிபொருந்திய, ஒரு கதை கொடு-ஒப்பற்ற (தனது சத்துருகாதினியென்னும்) கதாயுதத்தைக்கொண்டு, இரு புறம்உம்-இரண்டுபக்கங்களிலும், எற்றி-தாக்கி, எதிர் பொரு சமர்-எதிர்த்துச்செய்கிற போரில், முருக்கி வரு-(பகைவர் சேனையை) அழித்துவருகிற, புரை இல்-குற்றமில்லாத, பவனக்கடவுள் புதல்வன்-வாயுதே

வனது புத்திரனை வீமன், ஓர் இமைப்பொழுதில் - ஒரு நொடிப் பொழுதுள்ளே, முதல்வனை-தமையனை தருமனை, அடுத்தனன்-சமீபித்தான்; (எ - று.)—வயிர்-வயிரம் என்பது விகாரப்பட்டது.

வேறு.

95.—வீமன் வந்திட்டது கண்டு, சல்லியன், வீமனைவேற லரிதெனல்.

முதல்வன்வென் னிடுதல் கண்டு முடியுடை வேந்த ரோடும்
விதலையில் வயிர நெஞ்சின் வீமன்வந் துறலுங் காலின்
புதல்வனைப் பொருது வேற லரிதெனப் பொலம்பொற் றேரோன்
மதலையை நோக்கிப் பாகன் வன்பகை தோன்றச் சொன்னான்.

(இ - ள்.) முதல்வன் - தருமன், வென் இடுதல்-புறங்கொடுத்தலை, விதலை இல் - (அச்சத்தால்) நடுங்குதலில்லாத, வயிரம் - உறுதியையுடைய, நெஞ்சின் - மனத்தையுடைய, வீமன்—, கண்டு —, முடி உடை வேந்தரோடுஉம் - கிரீடத்தையுடைய அரசர்களோடும், வந்து உறலும்-வந்து சேர்ந்தவுடனே,—பொலம் பொன் தேரோன் - அழகிய பொன்னிறமான தேரையுடைய சூரியனது, மதலையை நோக்கி - குமாரனை கர்ணனைப்பார்த்து, பாகன்-சல்லியன், 'காலின் புதல்வனை-வாயுபுத்திரனை வீமனை, பொருது - போர்செய்து, வேறல் - வெல்லுதல், அரிது-அருமையானது,' என-என்று, வன் பகை தோன்ற - பகையின்வலிமை தோன்றும்படி, சொன்னான்—; (எ - று.)—'காலின் புதல்வன்' என்றது, தந்தையாகிய வாயுவைப்போலவே மைந்தனாகிய வீமனுந் தடுத்தற்கரிய வலிமையையுடையவனென்றற்கு.

இது முதல் இருபத்தைந்து கவிகள் - கீழ்ச்சருக்கத்தில் 12-ஆம் கவிபோன்ற அறுசீராசிரியவிருத்தங்கள். (186)

96.—கர்ணன் வீரவாதம்.

காமனேயென்னநின்றகன்னன்விற்கையில்வாங்கி
வீமனேயாகவென்றிவிசயனேயாகவெற்றித்
தாமனேகாண்டியிற்றைச்சமரிலென்றழல்வாயொற்றைத்
தூமநேர்பகழிக்காற்றார்தூண்டுதியிரதமென்றான்.

(இ - ள்.) காமன்ஏ என்ன நின்ற-மன்மதனேபோல நின்ற, கன்னன்—, வில்கையில் வாங்கி - வில்லைக் கையில் எடுத்துக்கொண்டு, (சல்லியனைநோக்கி), 'வெற்றி தாமனே - ஜயமாலையையுடையவனே! 'வீமன்ஏ ஆக - வீமன் தானாவது, வென்றி விசயன்ஏ ஆக-வெற்றியையுடைய அருச்சுனன் தானாவது,என் - எனது, தழல் வாய்- நெருப்புப்போன்ற முனையையுடைய, தூமம் நேர்-புகைகிளம்பப்பெற்ற, ஒற்றை பகழிக்கு - ஒருபாணத்துக்கு, ஆற்றார் - முன்நிற்கமாட்டார்கள்; இற்றை சமரில்-இன்றையுத்தத்தில், காண்டி-பார்ப்பாய்; இரதம்-தேரை, தூண்டுதி-செலுத்துவாய்', என்றான் - என்று சொன்னான்; (எ - று.)

காமன் - ஒப்புயர்வில்லாத கட்டழகுக்கும், விலக்குதற்கரிய அம்பெய்தற்கும் உவமை. ஆக என்னுஞ் சொல் இரண்டும், விகற்பப்பொருளில்வந்த இடைச்சொற்கள். (187)

97.—இரண்டுகவிகள்-வீமன் கர்ணனோடு பொருது அவனை மூர்ச்சித்துவிழச்செய்ததைக் கூறும்.

என்னுமுன்மருத்தின்மைந்தனிரதமேல்வரிவில்வாங்கிக்
கன்னனதுரையும்வில்லுங்கணத்திடைச்சிதைந்துவீழ
முன்னொருவாளிதொட்டானெதிரியுமுரண்விலொன்றாற்
பன்னிருவாளிமீளிமார்பிடைப்பரப்பினனே.

(இ - ள்.) என்னும் முன்-என்று (கர்ணன்) சொல்லுவதற்கு முன்னே, மருத்தின் மைந்தன் - வாயுபுத்திரனான வீமன், இரதம் மேல்-தேரின்மேலே, வரி வில் வாங்கி - கட்டமைந்த வில்லை வளைத்து, கன்னனது உரைஉம்-கர்ணனது பேச்சும், வில்லும்—, கணத்திடை-க்ஷணப்பொழுதினுள்ளே, சிதைந்து வீழ-கெட்டழியும்படி, முன் - முன்னே, ஒரு வாளி - ஓரம்பை, தொட்டான் - தொடுத்தான்; எதிரி உம் - பகைவனான கர்ணனும், முரண்வில் ஒன்றால் - வலிமையையுடைய வேறொரு வில்லினால், பன்னிரு வாளி - பன்னிரண்டு அம்புகளை, மீளி மார்பிடை - வலிய வீமன் மார்பிலே, பரப்பினன் - பரவச்செய்தான்; (எ - று.)—உரை சிதைந்துவீழ்தல் - கீழ்ச் சல்லியனோடு சொல்லிய வார்த்தை பயன்படாமற்போதல். உரையும்வில்லுஞ்சிதைந்துவீழ - உடனவிற்சியணி. (188)

98. பாய்ந்தவப்பாணந்தன்னைப்பாணியாற்றிமிர்ந்துவீமன்
காய்ந்தவாளனையதாரைக்கடுங்கொடும்பகழியொன்றா
லேய்ந்ததேரருக்கன்மைந்தனிதயத்தமுழ்குவித்தான்
வேய்ந்ததாரவனுந்தேரின்மிசையயர்வுற்றுவீழ்ந்தான்.

(இ - ள்.) வீமன்—, பாய்ந்த அ பாணம் தன்னை - (தன் மார்பிற்) பாய்ந்த அப்பன்னிரண்டுபாணத்தை, பாணியால் திமிர்ந்து-கையாற் பொடியாக்கிவிட்டு, காய்ந்த வாள் அனைய - (பகைவரைக்) கொல்லுகிற வாள்போன்ற, தாரை - நுனியையுடைய, கடு கொடு பகழி ஒன்றால் - விரைந்து செல்லுகிற கொடியதொரு பாணத்தால், தேர் ஏய்ந்த அருக்கன் மைந்தன்- தேரிற் பொருந்திய சூரியகுமாரனது, இதயத்து-நெஞ்சில், மூழ்குவித்தான்- அழுந்தச்செய்தான்; வேய்ந்த தாரவன்உம் - அணிந்த மாலையையுடைய கர்ணனும், தேரின்மிசை - தேரின்மேல், அயர்வு உற்று- மூர்ச்சையடைந்து, வீழ்ந்தான் - விழுந்தான்; (எ - று.) (189)

99.—சல்லியனாற்றேறிய கர்ணன் சூழ்ந்த படைவீரரைத் துணித்திடல்.

வீழ்தலுமன்னர்மன்னன்வெம்படைவென்னிட்டோட
வாழ்வறவீழ்ந்தோன்றன்னைமத்திரத்தலைவன்றேற்ற
வேழ்பரித்தேரோன்மைந்தனெழுந்துபின்சாபம்வாங்கி
சூழ்படைவீரர்யாருந்துஞ்சிடத்துணித்திட்டானே.

(இ - ள்.) வீழ்தலும் - (கர்ணன்) விழுந்தவளவில், மன்னர் மன்னன் - ராஜராஜனான துரியோதனனது, வெம் படை- கொடிய சேனை, வென் இட்டு ஓட - புறங்கொடுத்து ஓடிப்போக, வாழ்வு அற வீழ்ந்தோன் தன்னை - ஜீவித்தல்அறும்படி

[மூர்ச்சித்து] விழுந்த கர்ணனை, மத்திரம் தலைவன் - மத்திர நாட்டரசனுனை சல்லியன், தேற்ற-மூர்ச்சைதெளியச்செய்ய,-ஏழ் பரி தேரோன் மைந்தன் - ஏழுகுதிரையையுடைய தேரையுடைய சூரியனது மகனுன கர்ணன், பின்-பின்பு, எழுந்து-எழுந்திருந்து, சாபம் வாங்கி - வில்லைவளைத்து, சூழ் படை வீரர் யாரும்-சூழ்ந்த சேனையிலுள்ள வீரர்களெல்லாம், துஞ்சிட - இறக்கும்படி, துணித்திட்டான் - பிளந்துவிட்டான்; (எ - று.) (190)

100.—கர்ணனம்பால் மிகப்பலவீரரும் சிங்கசேனன்முதலிய பாஞ்சாலரேழுவரும் மாய்தல்.

கைத்தலவண்மைவேந்தன்கார்முகம்பொழிந்தவம்பா
லெத்தனைநிருபர்மாய்ந்தாரெண்ணுதற்கியாவர்வல்லார்
பத்திகொள்சாதுரங்கப்படைஞர்பாஞ்சாலர்தம்மிற்
செத்தனரெழுவர்சிங்கசேனனையுள்ளிட்டாரே.

(இ - ள்.) கைத்தலம் - கைகளினுற் செய்கிற, வண்மை - தானத்தையுடைய, வேந்தன் - கர்ணனது, கார்முகம் - வில், பொழிந்த - சொரிந்த, அம்பால் - அம்புகளினுல், எத்தனை நிருபர் மாய்ந்தார் - எத்தனை அரசர்கள் இறந்தார்கள்? எண்ணுதற்கு யாவர் வல்லார் - (இறந்தவர்களைக்) கணக்கிடவல்லவர்கள் யாவர்? பத்தி கொள் - வரிசையைக்கொண்ட, சாதுரங்கம் படைஞர் - சதுரங்கசேனையையுடையவர்களாகிய, பாஞ்சாலர்தம்மில் - பாஞ்சாலநாட்டரசர்களுள், சிங்கசேனனை உள்ளிட்டார்-ஸிம்ஹசேனனுட்பட்டவர்களாகிய, எழுவர் - ஏழுபேர், செத்தனர்—;(எ-று.) —எழுவர் - சிங்கசேனனும், 83 - ஆம் கவியிற்கூறிய அறுவரும் எனத்தோன்றுகின்றது. (191)

101.—வீமனும் சேனையோடுபுறக்கிட அருச்சுனன் அங்குவந்து சேர்தல்.

சேனையுமுரிந்துவீமசேனனுமுதுகிட்டோடக்
கானமர்துளவோன்கண்டுகடும்பரிநெடுந்தேர்தூண்ட
யானைமேற்சிங்கஞ்செல்வதென்னவந்தெய்தியிட்டான்
வானவர்க்கரசன்மைந்தன்மைந்துடைவரிவில்லோனே.

(இ - ள்.) சேனையும்—, முரிந்து-அழிந்து, வீமசேனனும் முதுகிட்டுஓட—, கான் அமர் துளவோன் - காட்டிற்பொருந்திய திருத்துழாய்மாலையையுடைய கண்ணன், கண்டு—, கடு பரி நெடு தேர் தூண்ட-விரைந்தோடுகிற குதிரைகளைப் பூட்டிய பெரிய தேரை ஓட்ட, வானவர்க்கு அரசன் மைந்தன் - தேவேந்திரனது குமாரனும், மைந்து உடை வரி வில்லோன் - வலிமையையுடைய கட்டமைந்த வில்லையுடையவனுமாகிய அருச்சுனன், யானைமேல் —, சிங்கம்—, செல்வது என்ன - (போருக்குப்) போவதுபோல, வந்து எய்தியிட்டான்-(கர்ணன்மேல்) வந்துசேர்ந்தான்; (எ - று.)

102.—அருச்சுனகர்ணரின் அம்புகள் வானத்தைமூடுதல்.

சென்றவன்சேனைதன்னினிருபருஞ்செருச்செய்கிற்பா
னின்றவன்சேனைதன்னினிருபருநேர்ந்தகாலை

யென்றவன்மதலையேவுமிமையவர்தெவ்வையோட
வென்றவனேவுந்தம்மில்விசும்பினைவேய்ந்தவாலோ.

(இ - ள்.) சென்றவன் சேனை தன்னில் - (போருக்குச்) சென்ற அருச்சுனன் சேனையிலுள்ள, நிருபர்உம் - அரசர்களும், செரு செய்கிற்பான் நின்றவன் - போர்செய்யும்பொருட்டு நின்ற சர்ணனது, சேனை தன்னில் நிருபரும்—, நேர்ந்த காலை - எதிர்த்த பொழுது, என்றவன் மதலை ஏஉம் - சூரியகுமாரனது பாணங்களும், இமையவர் தெவ்வை ஓட வென்றவன் - தேவர்களுக்குப் பகைவர்களான (நிவாதகவசர் காலகேயர் முதலிய) அசுரர்களை ஓடும்படி சயித்த அருச்சுனனது, ஏஉம் - அம்புகளும், தம்மில் - தமக்குள் (நெருங்கி), விசும்பினை வேய்ந்த - ஆகாயத்தை மறைத்தன; (எ - று.)

என்றவன், அவன் - பகுதிப்பொருள்விகுதி. (193)

103.—கர்ணனுக்கு உதவியாக வந்து அசுவத்தாமா க்ருஷ்ணர்ச்சுனர்மேல் அம்புமழைபொழிதல்.

இரவிதன்மதலைக்காகவிமைத்தகண்விழிக்குமுன்னர்ப்
புரவியந்தாமாவென்னும்பூசுரன்றேரிற்றேன்றி
யரவணைச்செல்வன்மெய்யுமருச்சுனன்மெய்யுஞ்செக்கர்
விரவியவானமென்னவெஞ்சரம்புதைவித்தானே.

(இ - ள்.) இரவி தன் மதலைக்கு ஆக - கர்ணனுக்கு உதவியாக, இமைத்த கண் விழிக்கும் முன்னர் - மூடினகண் திறப்பதற்குமுன்னே [மிகவிரைவில்என்றபடி], அம்புரவித்தாமா என்னும் பூசுரன் - அழகிய அசுவத்தாமா என்னும் பிராமணன், தேரில் தோன்றி-தேர்மேல்வந்து, அரவு அணை செல்வன் மெய் உம்-ஆதிசேஷனைச் சயனமாகவுடைய எல்லாஐசுவரியங்களுக்குந் தலைவனான கண்ணனது உடம்பும், அருச்சுனன் மெய்உம் - அருச்சுனனுடம்பும், செக்கர் விரவிய வானம் என்ன - செம்மேகங்கள் பொருந்திய கரிய ஆகாயம்போலாம்படி, வெம் சரம் புதைவித்தான்-கொடிய அம்புகளைத் தைக்கச்செய்தான்; (எ-று.)

பூசுரன் - (பிரமதேஜசினாற்) பூமியில் தேவன்போல விளங்குபவன். செம்மேகம் பொருந்திய கருவானம் - இரத்தத்தாற்சிவந்த கரியதிருமேனிகளுக்கு உவமை. (194)

104.-மூன்றுகவிகள்-கடுமையாகப்பொருகையில்அருச்சுனன்அசுவத்தாமனை மூர்ச்சிப்பிக்க, துச்சாதனன் தேரோடும்அவனைக்கொண்டுபோதல்.

விசையனும்வெகுளுற்றந்தவேதியன்வில்லுந்தேரு
மசைவுறமுடுகியெய்தானவனுமற்றிவனைவேறோர்
குசையுடைப்புரவித்தேருங்குனிவருஞ்சிலையுங்கொண்டு
திசையினையருக்கன்போலநிலைதளர்ந்திடுவித்தானே.

(இ - ள்.) விசையன்உம் - அருச்சுனனும்,—வெகுள் உற்று - கோபங்கொண்டு, அந்த வேதியன்-அந்தப்பிராமணகுலத்தானாகிய

அசுவத்தாமனது, வில்லும் தேரும்—, அசைவு உற - அழிதலை அடையும்படி, முடுகி எய்தான் - உக்கிரமாக அம்பெய்தான்; அவன் உம்-அசுவத்தாமனும், இவனை - அருச்சுனனை,வேறுஓர்—, குசை உடை புரவி தேர் உம் -கடிவாளத்தையுடைய குதிரைகளைப் பூட்டிய தேரையும், குனி வரும் சிலை உம் - வளைதல் பொருந்திய வில்லையும், கொண்டு—, நிசையினை அருக்கன் போல -இராத்திரியைச் சூரியன் (அழிப்பது)போல,நிலை தளர்ந்திடுவித்தான்-உறுதி நிலை தளரச்செய்தான்; (எ - று.) (195)

105. தளர்ந்தவத்தளர்ச்சிகண்டுதனஞ்சயன்றன்னைத்தேற்றிக்
கிளர்ந்தடர்புரவித்தாமாகேவலனல்லனையா
பிளந்திடிங்கிவனையென்னப்பிறைமுகப்பகழியொன்று
லுளம்புகத்தொடுத்தான்பாகனுரைமுடிவதன்முனம்மா.

(இ - ள்.) தளர்ந்த அ தளர்ச்சி கண்டு - (அருச்சுனன்) நிலை தளர்ந்த அந்தத் தளருகையைப் பார்த்து, (கண்ணன்), தனஞ்சயன் தன்னை தேற்றி - அருச்சுனனைத் தைரியப்படுத்தி, 'ஐயா - தலைவனே! கிளர்ந்து அடர் புரவித்தாமா - மிக்குப் போர்செய்கிற அசுவத்தாமன், கேவலன் அல்லன்-அலட்சியமாக வெல்லத்தக்கவனல்லன்; இங்கு - இப்பொழுது, இவனை—, பிளந்திடு -(மார்பில் அம்பெய்து) பிளப்பாயாக', என்ன - என்றுசொல்ல,— (அருச்சுனன்), பாகன் உரை முடிவதன்முன்-கண்ணன் வார்த்தை முடிவதற்குமுன்னமே, பிறை முகம் பகழி ஒன்றால் -அர்த்தசந்திரபாணமொன்றினால், உளம் புக - நெஞ்சில் தைக்கும்படி, தொடுத்தான்-எய்தான்; (எ - று.)

அம்மா - ஈற்றசை. ஐயா-பாகன் எசமானனை அழைப்பதோர் சொல்வழக்காடு. (196)

106. எய்தவப்பகழியொன்றாலீசன்மாமதலைமாழ்கி
வெய்துயிர்த்திரதமீதுவீழ்ந்தனன்வீழ்ந்தோன்றன்னைக்
கைதவச்செயலினுன்றுச்சாதனன்கண்டுமுன்னைச்
செய்தவப்பயன்போல்வந்துதேரொடுங்கொண்டுபோனுன்.

(இ - ள்.) எய்த அ பகழி ஒன்றால்-(அருச்சுனன்)எய்த அந்த ஒருபாணத்தினால், ஈசன் மா மதலை - பரமசிவனது சிறந்த குமாரனை அசுவத்தாமா, மாழ்கி-மயங்கி, வெய்து உயிர்த்து-வெப்பமாகப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு, இரதம் மீது-தேரின்மேல், வீழ்ந்தனன்—; வீழ்ந்தோன் தன்னை - விழுந்த அவனை, கைதவம்செயலினன் - வஞ்சனைச்செய்கையையுடையவனாகிய, துச்சாதனன்—, கண்டு—, முன்னை செய் தவம் பயன்போல் - முற்பிறப்பிற்செய்த நல்வினையின் பலன் (பிற்பிறப்பில் வந்து உதவுவது)போல, வந்து-(உதவியாக) வந்து, தேரொடுஉம் கொண்டு போனன் - தேரோடும் உடன்கொண்டுசென்றான்; (எ - று.) (197)

107.—நான்குகவிகள்-அசுவத்தாமன் மீண்டுவந்து பொர, சித்திரவாகன பாண்டியன் அவனோடு கடும்போர்செய்தலைக் காட்டும்.

போனவப்புரவித்தாமாபுரிந்துபோர்தொடங்குமெல்லைச்
சேனைகனன்கினேடுஞ்சித்திரவாகனென்னு

மீனவன்வழுதிமாறன்வெண்மதிமரபில்வந்தோன்
வானவர்முதல்வன்சென்னிவரிவளையுடைத்துமீண்டோன்.

இதுவும் மேலைக்கவியும்-ஒருதொடர்.

(இ - ள்.) போன-(இவ்வாறு அழிந்து) போன, அ புரவித் தாமா-அந்த அசுவத்தாமன், புரிந்து - (மீண்டும்வந்து) விரும்பி, போர் தொடங்கும் எல்லை-யுத்தத்தை ஆரம்பிக்கும் பொழுதில், வெண் மதி மரபில் வந்தோன் - வெண்ணிறமுள்ள சந்திரனது குலத்திற்பிறந்தவனும், வானவர் முதல்வன் - தேவேந்திரனது, சென்னி-முடியை, வரி வளை-கோடுள்ள வளையினால், உடைத்து- உடையச் செய்து (வென்று), மீண்டோன் - திரும்பினவனும், மீனவன்-மீனக்கொடியையுடையவனும், மாறன்-(பகைவர்களுக்கு) மாறாகஇருப்பவனும் ஆகிய, சித்திரவாகன் என்னும் வழுதி - சித்திரவாகனன் என்னும்பாண்டியன், சேனைகள் நான்கினோடு உம்-நால்வகைச்சேனைகளுடனே,—(எ - று.)—"சென்று" என மேற்கவியோடு இயையும்.

சித்திரவாகன் = சித்திரவாகனன்: பலவகை வாகனங்களை யுடையவன்; இவன்மகளாகிய சித்திராங்கதையென்பவளை அருச்சுனன் தீர்த்தயாத்திரைசென்றபொழுது மணஞ்செய்துகொண்டானாதலால், இவன், அருச்சுனனுக்கு மாமனாவன். மலயத்துவச பாண்டியன்மகளாகிய தடாதகைப்பிராட்டியைச்சுந்தரபாண்டிய வடிவமாகி மணம்புரிந்துகொண்ட சிவபெருமான், அவளிடம் தமக்குப்பிறந்த குமாரனாகிய உக்கிரபாண்டியனுக்கு முடிசூட்டி, அவனுக்குப் பகையாகுங் கடலையும் இந்திரனையும் மேருவையும் வெல்லுமாறு, வேலும் வளையுஞ் செண்டும் அளித்துப்போயினர்; பின்னர் அவன், தன்னகர்மேற்பொங்கியெழுந்த ஏழுகடல்களையும் வேலெறிந்துவற்றச்செய்து வென்றான்; ஒருகாலத்தில் தன்நாட்டிற் பொதியமலையில் மேய்ந்திருந்த மேகங்களைப் பிடித்துத் தளை செய்து, அதுகேட்டுத் தன்னை எதிர்த்து யுத்தஞ்செய்த தேவேந்திரன்மீது வளையையெறிந்து மகுடபங்கப்படுத்திச்சயித்தான்; மற்றொருகால் தன்நாட்டிற் பஞ்சம் நேரிட்டபொழுது மேருகிரியை யடைந்து நிதிதேடி அது இருக்குமிடந்தெரியாமல் அதன்மேற் செண்டைவீசி, அதற்கு ஆற்றாமல் அம்மலையரசன் எதிரில்வந்து கொடுத்த பொருள்களையெல்லாம் பெற்றுவந்தானென்பது, **கதை.** சித்திரவாகனனும் உக்கிரகுமாரனும் ஒரேகுலத்தவராதலால், உபசாரவழக்காக இங்ஙனங் கூறினர். (198)

108. சென்றெதிருன்றிவெவ்வேற்சேயனான்றேரின்மேலும்
வன்றிறல்வலவன்மேலும்வாம்பரிமாவின்மேலுந்
துன்றியகணைகளேவித்தொடுசிலைதுணித்துவீழ்த்தா
னன்றவன்செய்தவீரமரசரிலார்செய்தாரே.

(இ - ள்.) எதிர் சென்று - எதிரிற் போய், ஊன்றி - தாக்கி, வெம் வேல் சேய் அனான்-கொடிய வேலையுடைய முருகக்கடவுளைப் போன்ற அசுவத்தாமனது, தேரின்மேலும்—, வன் திறல்-மிகுந்த

வல்லமையையுடைய, வலவன் மேல்உம்-சாரதிமேலும், வாம் பரி மாவின் மேல்உம்-தாவிப் பாய்கிற குதிரைகளின்மேலும், துன்றிய கணைகள் ஏவி-அடர்ந்த அம்புகளை எய்து, தொடு சிலை-(கையிற்) பிடித்த வில்லை, துணித்து வீழ்த்தான்-அறுத்துத் தள்ளினன்; அன்று-அன்றைக்கு, அவன்-அப்பாண்டியன், செய்த—, வீரம் - வீரத்தன்மையை, அரசரில் ஆர் செய்தார்-அரசர்களுள் வேறுயார் செய்தவர்? (எ - று.)—எவரும் இல ரென்றபடி. (199)

109. **வேறொருதேர்மேற்கொண்டுவிதிதருமரபினோனுஞ்**
சீறிவெங்கணைகணூறுதெரிந்தொருசிலையும்வாங்கிக்
கூறியசெஞ்சொலேடுகுறித்தெதிர்கொண்டவைகை
யாறுடையவனையஞ்சவருஞ்சமருடற்றினனே.

(இ - ள்.) *விதி தரு மரபினோன்உம் - பிரமனது குலத்தில் தோன்றிய அசுவத்தாமனும்,— சீறி-கோபித்து, வேறு ஒரு தேர் மேற்கொண்டு-வேறொரு தேரின்மீது ஏறி, வெம் கணைகள் நூறு தெரிந்து-கொடிய நூறு அம்புகளை ஆராய்ந்துஎடுத்துக்கொண்டு, ஒரு சிலைஉம் வாங்கி-ஒருவில்லையும் வளைத்து, கூறிய செம் சொல் ஏடு-சொன்ன சிறந்த சொற்களை [தேவாரச்செய்யுளை] எழுதிய ஏடு, குறித்து எதிர் கொண்ட - எதிர்நோக்கிச் சென்ற, வைகை ஆறு உடையவனை-வையைநதியை(த் தனது நாட்டில்) உடைய பாண்டியனை, அஞ்ச-அஞ்சும்படி, அரு சமர் உடற்றினன் - அரிய போரைச் செய்தான்; (எ - று.)*

விதிமரபினோன் - பிராஹ்மணன். **ஏடுஎதிர்கொண்ட வைகையென் பதிலடங்கிய கதை:**—*திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சமணர்களை வென்று சைவமதத்தை நிலைநிறுத்தும்பொருட்டுப் பாண்டிய நாட்டுக்குச் சென்றபொழுது, சமணர்கள் நாயனார் முன்னிலையில் 'நாம் இருதிறத்தேமும் நமது சமய சித்தாந்தத்தை யெழுதிய ஏட்டை ஓடுகின்ற வையையாற்றிலே இடுவோம்: எதிர்ந்துசெல் லும் ஏடே மெய்ப்பொருளையுடையது' என்று சொல்ல, நாயனாரும் அப்படியே செய்வோமென்று "வாழ்கவந்தணர்" என்னும் பாசுரத் தை ஏட்டில் எழுதி அவ்வேட்டைத் தமதுகையினால் வைகைநதி யில் இட, அவ்வேடு நதியிலே எதிர்ந்து நீரைக் கிழித்துக்கொண்டு சென்ற தென்பது,* **கதை;** *எண்ணாயிரஞ் சமணமுனிவர்கள் தனித் தனி ஒவ்வொரு வெண்பாவைப் பாடி ஏட்டிலெழுதித் தத்தமது பீடத்தின்கீழ் வைத்துவிட்டுப் போய்விட, பாண்டியன் அவற்றை யெடுத்து வைகையாற்றில் எறிந்துவிடும்படிஏவ, அவ்வாறு எடுத் தெறியப்பட்ட அவற்றுள் நானூறுபாடல்கள் நீர் செல்லுமுறை யிற்சென்று கடலிற்சேராமல் எதிரேறிச்சென்றன: அவையே நாலடி நானூறு என்னும் ஒருகதையும் உண்டு.* (200)

110. **அந்தணனேவையெல்லாமவனிபனவ்வவ்வம்பான்**
முந்துறவிலக்கித்தங்கண்மூவகைத்தமிழும்போலச்
சிந்தையிற்குளிக்குமாறுசிலீமுகமூன்றுவிட்டான்
றந்தையைமுதுகுகண்டோன்றனயனுக்கிளைக்குமோதான்.

(இ - ள்.) அந்தணன் ஏவை எல்லாம்-பிராமணனாகிய அசுவத்தாமனது அம்புகளையெல்லாம், அவனிபன்-க்ஷத்திரியனாகிய பாண்டியன், அஅ அம்பால்-(தான் எய்த) அந்தந்த அம்புகளினால், முந்துற விலக்கி-முன்னே தடுத்து, தங்கள் மூவகை தமிழ்உம்போல-தாங்கள் வளர்த்த (இயல் இசை நாடகம் என்னும்) மூன்றுவகைப்பட்ட தமிழைப்போல, சிந்தையில் குளிக்கும் ஆறு - மனத்தில் (நன்றாய்ப்) பதியும்படி, சிலீமுகம் மூன்று விட்டான்-மூன்று அம்புகளை எய்தான்; தந்தையை முதுகு கண்டோன்-தகப்பனைப் புறங்கொடுக்கச்செய்த பாண்டியன், தனயனுக்கு இளைக்கும்ஓ-பிள்ளைக்கு இளைப்பானோ? (எ - று.)—தான்-ஈற்றசை.

பாண்டியன் அசுவத்தாமனை வென்றானென்னுஞ் சிறப்புப்பொருளை 'தந்தையைவென்றவன் மைந்தனுக்கு இளைப்பனோ?' என்னும் பொதுப்பொருளாற் சாதிக்கவைத்ததனால், **வேற்றுப்பொருள்வைப்பணி.** 'தந்தையை முதுகு கண்டோன் தனயனுக்கு இளைக்குமோ' என்றது-பாண்டியன் பரமசிவனைப் புறங்கொடுக்க அடித்தவனாதலாலும், **அசுவத்தாமன் சிவகுமாரனாதலாலும்.** அரிமர்த்தன பாண்டியன்மீது கோபத்தாற் சிவபெருமான் வையையாற்றை அவன் நகர்மேல் ஏவ, அந்நதி மதுரையை அழிக்குமாறு பெருகிவர, அந்நகரத்தார் யாவரும் அரசன்கட்டளைப்படி கூலியாள்வைத்துக் கரைகோலுகையில், பிட்டுவிற்றுண்ணும் வந்தியென்னும் மலட்டுக்கிழவிக்குத் தன்கருணையினால் வேலையாளாக வந்து அமர்ந்த சோமசுந்தரக்கடவுள் வேலையைச் செவ்வையாகச்செய்யாமல் அழிம்பு செய்ய, அதுகேட்டுக் கடுங்கோபங்கொண்ட பாண்டியன் அவனைத் தன்கைப்பொற்பிரம்பால் முதுகில் வீசி அடிக்க, அப்பெருமான் அந்தர்த்தானமாயினனென்பது, **கதை.** (201)

111.—பாண்டியன் மாற்றாரது சேனைக்கடலை வற்றுவித்தல்.

காலினுற்றுகைத்துவேலைக்கனைகடலேழுமுன்னாள்
வேலினாற்சுவற்றுங்கொற்றவெங்கயல்விலோதவீரன்
மாலினாற்பொருகைவேழம்வாசிதேர்பதாதிமாயக்
கோலினாற்சுவற்றினனக்குறுகலர்சேனைவெள்ளம்.

(இ - ள்.) முன் நாள்-முற்காலத்தில், வேலை-அலைகளையுடைய, கனை-ஒலிக்கிற கடல் ஏழ்உம்-ஏழுகடல்களையும், காலினால்-(தன்) கால்களினால், துகைத்து-மிதித்து, வேலினால் - வேலாயுதத்தால், சுவற்றும்-வற்றச்செய்த, கொற்றம்-வெற்றிக்கு அடையாளமான, வெம்-கொடிய, கயல் விலோதம்-மீனக்கொடியையுடைய, வீரன்-வீரத்தன்மையையுடைய பாண்டியன், மாலினால் பொரு - மதமயக்கத்தோடு போர்செய்கிற, கை-துதிக்கையையுடைய, வேழம்-யானைகளும், வாசி-குதிரைகளும், தேர்-தேர்களும், பதாதி - காலாள்களும், மாய-அழியும்படி, கோலினால்-அம்பினால், குறுகலர் - பகைவர்களுடைய, சேனை-சேனையாகிற, அ வெள்ளம்-அக்கடலை, சுவற்றினான்-வற்றச்செய்தான்; (எ-று.)

பாண்டியன் முன்னே வேலெறிந்து சமுத்திரத்தை வற்றுவித்ததுபோல, இப்பொழுது அம்பெய்து சேனாசமுத்திரத்தை

வற்றுவித்தா னென்னும் உவமையணி தொனிக்கின்றது. 'காலினூற் றுகைத்து' என்றது-மதுரையை அழிக்கப் பொங்கிவந்த சமுத்திரம் தன்கால்வடிம்பலம்பப் பாண்டியன் நின்றமையைக் குறிக்கும்; 'காலினூற் றுகைத்த' என்னும் பாடத்துக்கு-காற்றினால் மோதப் பட்டுவந்த கடலென்க. (202)

112.—ஏழுகவிகள்-அசுவத்தாமனோடு பொருது பாண்டியன் வீழ்ந்திடுதலைக் கூறும்.

சங்கரனருளால்வந்தசதுர்மறைக்குமரன்மீளப்
பொங்கழற்கடவுளென்னப்பொருசிலைவெய்தின்வாங்கி
மங்குல்போற்பொழியும்வாளிமழையினாலழிந்ததந்தோ
செங்கயனெடும்பதாகைத்தென்னவன்செம்பொற்றேரே.

(இ - ள்.) சங்கரன் - சிவபிரானது, அருளால்-கருணையினால், வந்த - பிறந்த, சதுர் மறை குமரன் - நான்குவேதங்களும்வல்ல அசுவத்தாமன், மீள-மறுபடியும், பொங்கு அழல் கடவுள் என்ன-பற்றியெரிகிற அக்கினிதேவன்போல், வெய்தின் - பயங்கரமாக, பொரு சிலை - போர்செய்தற்குரிய வில்லை, வாங்கி - வளைத்து, மங்குல் போல் - மேகம்போல, பொழியும்-சொரிகிற, வாளி மழையினால்-பாணவர்ஷத்தால், செம் கயல்-செவ்வியமீனை எழுதிய, நெடு பதாகை - பெரிய கொடியையுடைய, தென்னவன் - பாண்டியனது, செம் பொன் தேர்-சிவந்த பொன்னினாலாகிய தேர், அழிந்தது—; (எ - று.) (203)

113. சிங்கவேறனையானந்தத்தேரினின்றிழிந்துமுன்னந்
தங்கண்மால்வரையில்வைகுந்தமிழ்முனிதன்னைப்போலப்
பொங்குவெண்டரங்கமுந்நீர்ப்புணரிகளேழுஞ்சேர
வெங்கையால்வாருங்கொற்றவேழமாமேற்கொண்டானே.

(இ - ள்.) சிங்கம் ஏறு அனையான்-ஆண்சிங்கத்தைப்போன்ற பாண்டியன், அந்த தேரினின்று இழிந்து—, முன்னம் - முன்னே, தங்கள் மால் வரையில் வைகும் தமிழ் முனி தன்னை போல-தங்கள் நாட்டிலுள்ள பெரிய பொதியமலையில் வாழ்கிற தமிழைப் பரவச் செய்த அகத்தியமுனிவர் (கடலைக்குடித்தது) போல, பொங்கு வெண் தரங்கம் - (மேல்மேற்) பொங்குகிற வெண்மையான அலைகளையுடைய, முந் நீர் - மூன்றுதன்மையையுடைய, புணரிகள் ஏழ் உம்-ஏழுகடல்களையும், சேர-ஒருசேர, வெம் கையால்-வெப்பத்தையுடைய துதிக்கையால், வாரும் - முகந்துகொள்ளவல்ல, கொற்றம் - வெற்றியையுடைய, வேழம் மா மேற்கொண்டான் - யானையாகிய விலங்கின் மேல் ஏறிக்கொண்டான்; (எ - று.)

இந்திரன்முதலிய தேவர்கள் தம்பகைவனாகிய விருத்திராசுரன் மற்றும் பலஅசுரர்களுடனே கடலில் ஒளித்துக்கொண்டபோது, அகத்தியமகாமுனிவரை வந்து பிரார்த்திக்க, அவர் அக்கடலினீரைத் தமது ஒருகையால் முற்றும் முகந்து பருகியருளி, உடனே ஒளித்திருந்த அவ்வசுரனை இந்திரன் கொன்ற பின்,

அவர்கள் வேண்டுகோளின்படிமீண்டும்உமிழ்ந்தனரென்பதுகதை; நீர்மையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் 'நீர்' என நின்றது: முந்நீர்-மூன்று நீர்மையை [தன்மையை] யுடையதுஎனக் கடலுக்குப் பண்புத்தொகையன்மொழி: மூன்றுதன்மைகள் - பூமியைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்பன; நீரினின்று நிலம் பிறந்ததென வேதம் ஓதுதலாற் படைத்தலும், நீரின்றி உலகம் பிழையாதாதலின் காத்தலும், இறுதியில் நீரினால் மூடப்பட்டு உலகம் அழிதலால் அழித்தலும் ஆக முத்தொழில்களுங் கடலுக்கு உரியனவாயின. 'முந்நீரினுள்புக்குமூவாக் கடம்பெறிந்தான்' என்றவிடத்து அடியார்க்குநல்லாருரை காண்க. (204)

114\. மலையினிற்பிறந்தவாரமணங்கமழ்வடிவிற்றங்க
ளலையினிற்பிறந்தவாரமழகுறவணிந்தகோமான்
கொலையினிற்சிறந்தகோட்டுக்குஞ்சரங்கொண்டுமீண்டுஞ்
சிலையினிற்குருவின்மைந்தன்றேரொடுஞ்செருச்செய்தானே.

(இ - ள்.) (தங்கள்) மலையினில் பிறந்த-தங்கள் நாட்டிலுள்ள மலயபருவதத்தி லுண்டான, ஆரம்-சந்தனத்தின், மணம் கமழ் - வாசனைவீசுகிற, வடிவில்-உடம்பிலே, தங்கள் அலையினின்-தங்கள் கடலிலே, பிறந்த-தோன்றின, ஆரம்-முத்துக்களினாலாயமாலையை, அழகுஉற-அழகுபொருந்தும்படி, அணிந்த - தரித்த, கோமான்-பாண்டியராசன், கொலையினில்சிறந்த-கொல்லுதற்றொழிலிலேமிகுந்த, கோடு-தந்தங்களையுடைய, குஞ்சரம் கொண்டு - யானைமேல் ஏறிக்கொண்டு, மீண்டும்-மறுபடியும், சிலையினில் - வில்லினால், குருவின் மைந்தன் தேரொடுஉம்-துரோண புத்திரனது [அசுவத்தாமனது] தேருடனே, செரு செய்தான் - போர்செய்தான்; (205)

115\. மோதிமத்தாரைமாருக்கைம்முகமுகுத்தசெக்கர்ச்
சோதிமத்தகவெங்குன்றின்றழைசெவித்துளங்குகாற்றாற்
சாதிமைத்துரோணன்மைந்தன்றனித்தடந்தேரிற்கொற்ற
வோதிமப்பதாகையாடையப்புறத்தொதுங்கிற்றம்மா.

(இ - ள்.) மோதி மத் தாரை மாறு - (மேன்மேற்) பெருகி மத நீர்ப்பெருக்கு இடையறாத, கை முகம் உகுத்த செக்கர் சோதி - துதிக்கையையுடைய முகத்தினின்று வெளிப்படுத்துக்கொண்டிருக்கிற (புள்ளிகளின்) சிவந்த ஒளியையும், மத்தகம் - மஸ்தகத்தையுமுடைய, வெம் குன்றின் - கொடிய மலைபோன்ற (பாண்டியனேறிய) யானையின், தழை செவி துளங்கு காற்றால் - தழைந்த காதுகள் அசைதலாலுண்டாகிய காற்றினால், சாதிமை துரோணன் மைந்தன் - உயர்குடிப்பிறப்பையுடைய அசுவத்தாமனது, தனி தட தேரில்-ஒப்பற்ற பெரிய தேரிலுள்ள, கொற்றம் - வெற்றிக்கு அடையாளமான, ஓதிமம் - அன்னத்தின்வடிவத்தை எழுதிய, பதாகை ஆடை-கொடிச்சீலை, அப்புறத்து ஒதுங்கிற்று-பின் ஒதுங்கியது; (எ-று.)—இதனால், பாண்டியன் யானையின் உயர்ச்சியும் வலிமையுந் தொனிக்கின்றது. அம்மா - வியப்பு.

மததாரை-மத்தாரையென விகாரமாயிற்று. மதநீர் வெம்மையுடையதெனக் கூறப்படுவதனால், மோது - மோதுகின்ற, இமத்தாரை-குளிர்ந்த மததாரை யென்று கூறுவது பொருந்தாதெனத் தோன்றுகின்றது. (206)

116. கூற்றெனக்கொண்டலென்னக்குரைகடலென்னச்சூறைக்
காற்றெனக்கொடியகோபக்கடும்பெருங்கரடமாவி
னூற்றெழுமதங்களேழுமொழுகிமண்ணுடைந்துதாழுஞ்
சேற்றிடைப்புதைந்ததந்தச்சேயனுன்றேரின்காலே

(இ - ள்.) கூற்று என-யமன்போலவும், கொண்டல் என்ன-நீர்கொண்ட மேகம்போலவும், குரை கடல் என்ன-ஒலிக்கிற கடல் போலவும், சூறை காற்று என - சுழல்பெருங்காற்றுப்போலவும், கொடிய-கொடுந்தன்மையையுடைய, கோபம்-(அடங்காத) கோபத்தையுடைய, கடு-விரைவையுடைய, பெரு-பெரிய, கரடம்-கன்னங்களையுடைய, மாவின்-(பாண்டியனது) யானையினின்றும், ஊற்று எழும்-ஊற்றெடுத்துப் பெருகுகிற, மதங்கள் ஏழ்உம்-எழுவகை மதங்களும், ஒழுகி-பொழிவதனால், மண் உடைந்து-மண்கரைந்து, தாழும்-ஆழமாகவுண்டாகிய, சேற்றிடை-சேற்றிலே, அந்த சேய் அனுன் தேரின் கால்-முருகக்கடவுளைப்போன்ற அந்த அசுவத்தாமனது தேர்ச்சக்கரம், புதைந்தது-அழுந்திற்று; (எ - று.)

117. மறையவன்செம்பொற்றேரைவளைந்துமண்டலங்களோட்டிப்
பிறைமுகக்கணையாலந்தண்பிறைக்குலவழுதியெய்ய
நிறைவறப்புரவித்தாமாநேருறவிலக்கித்தன்கை
யறைசிறைப்பகழியொன்ருலானையைவீழ்வித்தானே.

(இ - ள்.) அம் தண் பிறை குலம்-அழகிய குளிர்ந்த சந்திரனது மரபில் தோன்றிய, வழுதி-பாண்டியன், மறையவன் செம்பொன் தேரை-வேதம்வல்ல அசுவத்தாமனதுசெம்பொன்மயமான தேரை, வளைந்து-சூழ்ந்து, மண்டலங்கள் ஓட்டி-(யானையை) மண்டலகதிகளாகச் செலுத்தி, பிறை முகம் கணையால்-அர்த்தசந்திர பாணங்களால், எய்ய—, புரவித்தாமா—, (அவ்வம்புகளையெல்லாம்), நிறைவு அற - (வந்து) நிறைதலில்லையாம்படி, நேர் உற-எதிரிலே பொருந்த, விலக்கி - (தன் அம்புகளால்) தடுத்து, தன் கை அறை-தனது கையினால் வலிவாக விடப்பட்ட, சிறை-இறகுகளையுடைய, பகழி ஒன்ருல்-ஒருபாணத்தால், ஆனையை—, வீழ்வித்தான் - கீழே கொன்றுதள்ளினன்; (எ - று.) (208)

118. பாண்டியன்கைவில்லோடும்பதாதியாய்ப்பகழிசிந்தி
யீண்டியவிவுளித்தாமனிருதடந்தோளுமார்பும்
வேண்டியவாறுசோரிவீழ்தரப்பொருதபின்னர்த்
தூண்டியதுரோணன்மைந்தன்ருடையொன்ருற்ருனும்வீழ்ந்தான்.

(இ-ள்.) பாண்டியன்—, கை வில்லோடுஉம் - கையிற்பிடித்த வில்லுடனே, பதாதி ஆய்-(வாகனமில்லாமற்) காலாளாகி, பகழி சிந்தி-அம்புகளைப் பெய்து,—ஈண்டிய இவுளித்தாமன்-நெருங்கின அசுவத்தாமனது, இரு தட தோள்உம் - இரண்டு பெரிய தோள்

களிலும்,மார்புஉம்-மார்பிலும்,வேண்டிய ஆறு-வேண்டியபடியெல்லாம் [மிகஅதிகமாக என்றபடி], சோரிவீழ்தர-இரத்தம் பெருகும்படி, பொருத பின்னர்-போர்செய்தபின்பு, துரோணன் மைந்தன் தூண்டிய-அசுவத்தாமன் பிரயோகித்த, தொடை ஒன்றால்-அம்பொன்றினால், தான்உம் வீழ்ந்தான்-தானும் இறந்துவிழுந்தான்; (எ - று.)—வேண்டியவாறு பொருதபின்ன ரென்று இயைப்பினுமாம். (209)

119.—பாண்டியன்இறக்கவே பாண்டவசேனையார் வென்னிட, மற்றையோர் கடுமையாகப் பொருதல்.

பட்டனன் முனிவன் கையிற் பஞ்சவ னென்று வேந்தர்
கெட்டனர் முரசந் தீட்டுங் கேதனன் சேனை யுள்ளார்
தொட்டனர் வரிவில் வாளி தொடுத்தன ரடுத்து மேன்மேல்
விட்டனர் வேந்தர் வேந்தன் சேனையில் வேந்த ருள்ளார்.

(இ - ள்.) 'முனிவன் கையின் - அசுவத்தாமனதுகையால், பஞ்சவன் - பாண்டியன், பட்டனன் - இறந்தான்,' என்று—, முரசம் தீட்டும் கேதனன் சேனை யுள்ளார் - முரசத்தை யெழுதிய கொடியையுடைய தருமனது சேனையிலுள்ளவர்களான, வேந்தர்-அரசர்கள், கெட்டனர் - வலியழிந்தார்; வேந்தர் வேந்தன் சேனையில் உள்ளார் - துரியோதனனது சேனையிலுள்ளவரான, வேந்தர்-அரசர்கள், (பாண்டியனிறந்தானென்றுகளித்து), வரி வில்தொட்டனர்-கட்டமைந்த வில்லை எடுத்து, வாளி தொடுத்தனர்-பாணங்களைத் தொடுத்து, மேல் மேல் அடுத்து விட்டனர் - மேலே மேலே நெருங்கி விட்டார்கள்; (எ - று.)

'பட்டனன் முனிவன்கையிற்பஞ்சவனென்று' என்னுங் காரணத்தைப் பின்வாக்கியத்தோடுங் கூட்டுக. கெட்டனர் - காணுமலோடினரென்றுமாம். (210)

வேறு.

120.—அசுவத்தாமன்முன் சோழன் நேர்ன்றுதல்.

விற்கையா ரியன்மகன் விசும்பின் வீழ்தரு
முற்கையா மெனவிடு மொளிகொள் வாளியாற்
கொற்கையா னிறந்தபின் கோழி யானெனுஞ்
சொற்கையா மனுகுலத் தோன்ற றோன்றினன்.

(இ - ள்.) வில் கை - வில்லேந்திய கையையுடைய, ஆரியன் மகன்-ஆசாரியபுத்திரனான அசுவத்தாமா, விசும்பின் வீழ்தரும் உற்கை ஆம் என - ஆகாயத்தினின்று விழுகிற எரிகொள்ளி போல, விடும்-விட்ட, ஒளி கொள் வாளியால் - ஒளியைக்கொண்ட அம்பினால், கொற்கையான் - கொற்கையென்னும் ஊரையுடைய பாண்டியன், இறந்தபின்—,—கோழியான் எனும்-சோழனென்கிற, சொல் கையா - சொல் வெறுக்காத, மனு குலம் தோன்றல்-மனு மரபில் தோன்றிய அரசன், தோன்றினன் - வந்தான்; (எ-று.)

கோழி - உறையூர்; முற்காலத்து ஒருகோழி நிலமுக்கியத்தால் யானையோடுபொருது அதனைப் போர்தொலைத்தல் கண்டு அந்நிலத்திற் செய்த நகராதலின், கோழியென்று உறையூருக்குப் பெயராயிற்று. இதனைச் சிலப்பதிகாரவுரையால் அறிக: (நாடுகாண்காதை - வரிகள் 247 - 248 உரை); இதை இராசதானியாக உடையவன், சோழன்; கீழ் 'நாகையாப் புகழான்' என்றதுபோல,இங்கு'சொற்கையா மனுகுலத்தோன்றல்'என்றார்.

இதுமுதற் பதினைந்துகவிகள் - மூன்றுஞ்சீரொன்று மாச்சீரும் மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய **கலிவிருத்தங்கள்.** (211)

121.—இதுமுதல் மூன்றுகவிகள்-சோழன் அசுவத்தாமனை இகழ்ந்து கூறியன தெரிவிக்கும்.

தேரின்மேனின்றுநீசிறுகட்செம்புகர்க்
காரின்மேல்வீரனைக்கனையிற்காய்வதே
பாரின்மேலார்கொலிப்பாதகஞ்செய்தார்
நீரின்மேலெழுத்தெனநிலையிலாண்மையாய்.

நான்குகவிகள்—ஒருதொடர்.

(இ-ள்.) நீரின்மேல் எழுத்து என - நீரிலெழுதிய எழுத்துப்போல, நிலை இல்-சிறிதும் நிலைபெறுதலில்லாத, ஆண்மையாய்-பராக்கிரமமுடையவனே! நீ—, தேரின்மேல் நின்று-தேரின்மேல் இருந்துகொண்டு, சிறுகண்-சிறிய கண்களையும், செம்புகர்-சிவந்த புள்ளிகளையுமுடைய, காரின்மேல்-மேகம்போன்ற யானையின்மேலிருந்த, வீரனை - வீரனாகிய பாண்டியனை, கணையின் காய்வதுஏ - அம்பினாற் கொல்லுவது தகுதியோ? பாரின்மேல் - பூமியில், ஆர்-(உன்னைத்தவிர) வேறுயார், இ பாதகம் செய்தார் - இப்பாவத் தொழிலைச் செய்தவர்? [எவரும் இலர்]; (எ - று.)—கொல்-அசை.

தேரின்மேலுள்ளவன் யானைமேலுள்ளவனைப் பொருது கொல்லுதல், அதருமயுத்தம். கார் - உவமவாகுபெயர். எழுத்து-எழுதப்படுவது எனச் செயப்படுபொருள்விகுதிபுணர்ந்துகெட்டு விகாரப்பட்ட பெயர்.பி - ம்: எழுத்தன. (212)

122. **ஆர்ப்பனமறைமொழிந்தனைவர்பாவமுந்**
தீர்ப்பனவேள்விகள்செய்வதன்றியே
கூர்ப்பனபலபடைகொண்டுபோர்செயப்
பார்ப்பனமாக்களும்பாரின்வல்லரோ.

(இ - ள்.) ஆர்ப்பன - ஆரவாரிப்பனவாகிய, மறை-வேதமந்திரங்களை, மொழிந்து - சொல்லி, அனைவர் பாவம்உம் தீர்ப்பன - எல்லோர் தீவினைகளையும் ஒழிப்பனவாகிய, வேள்விகள்-யாகங்களை, செய்வது அன்றிஏ - செய்யவல்லவரேயல்லாமல், (அதைவிட்டு),—கூர்ப்பன பல படை கொண்டு - கூர்மையையுடையனவாகிய பல ஆயுதங்களால், போர் செய-போர்செய்வதற்கு, பார்ப்பனமாக்கள்உம் - பிராமணர்களும், பாரின்-பூமியில், வல்லரோ—?

பார்ப்பனமாக்கள் - பார்ப்பாராகிய மனிதர் என் இருபெய ரொட்டு. (213)

123. தாதையைக்கொன்றவெஞ்சாபவீரனைக்
கோதைவிற்கணைகளாற்கொன்றிலாதநீ
யூதைமுற்சருகுபோலோடலல்லதை
மோதயிற்படைகொடுமுனையவல்லையோ.

(இ - ள்.) தாதையை - (உன்) தந்தையாகிய துரோணனை, கொன்ற—, வெம் சாபம் வீரனை - கொடிய வில்லையுடைய திட்டத் துய்மனை, கோதை வில் கணைகளால் - நாணியையுடைய வில்லினு லெய்யப்படுகிற அம்புகளால், கொன்றிலாத - கொல்லமாட்டாத, நீ—, ஊதை முன் சருகுபோல் - பெருங்காற்றுக்குமுன்னே உலர்ந்த இலைபோல், ஓடல் அல்லதை - ஓடிப்போவதே யல்லாமல், மோது அயில் படைகொடு - தாக்குதற்கு உரிய கூர்மையான ஆயுதங்க ளால், முனைய வல்லை ஓ - போர்செய்ய வல்லவனோ? (எ - று.)— அல்லதை, ஐ - சாரியை. (214)

124.—ஆறுகவிகள்-அசுவத்தாமனும் சோழனும் கடுமையாகப் பொருதலைக் கூறும்.

என்றுசின்மொழிமொழிந்திவுளித்தாமன்மேற்
துன்றுவில்வளைத்தனன்சோழபூபதி
குன்றுடன்குன்றமர்குறிக்குமாறுபோற்
சென்றுசென்றடுத்தனதேருந்தேருமே.

(இ - ள்.) என்று—, சில் மொழி மொழிந்து - சிலவார்த்தை களைச் சொல்லி, இவுளித்தாமன்மேல் - அசுவத்தாமன்மேலே, சோழ பூபதி-சோழநாட்டரசன், துன்று வில் வளைத்தனன்-வலிய வில்லை வளைத்தான்; குன்றுடன் குன்று அமர் குறிக்கும் ஆறு போல் - மலையோடு மலை போர் தொடங்கும்விதம்போல, தேர்உம் தேர்உம் - இரண்டுதேர்களும், சென்று சென்று அடுத்தன - விரைந்துபோய் நெருங்கின; (எ-று.) (215)

125. இருவர்செங்கரங்களுமிரண்டுகால்களு
முரனுறப்பிணித்தநாணோசைவீசவும்
மருவுபொற்றோளுறவலியின்வாங்கவும்
விரைவுடன்வளைந்தனவில்லும்வில்லுமே.

(இ - ள்.) இருவர் செம் கரங்கள்உம் - இவ்விருவர்களது சிவந்த கைகளாலும், இரண்டு கால்கள்உம் - இருகோடிகளிலும், உரன் உற பிணித்த - வலிமைபொருந்தப் பூட்டப்பட்ட, நாண் - நாணியின், ஓசை - ஒலி, வீசஉம் - மிகும்படியாகவும்,—மருவு பொன் தோள் உற - பொருந்திய அழகிய தோள்களிற் படும்படி, வலியின் வாங்கஉம் - வலிமையோடு (நாணியை) இழுக்கும்படி யாகவும்,—விரைவுடன் - வேகத்தோடு,வில்உம் வில்உம்-இரண்டு விற்களும், வளைந்தன—; (எ - று.)—தோள் உற - தோள்வலிமை பொருந்த என்னவுமாம். (216)

126. **புகலருமறையவன்புராரியாதியாந்**
திகழொளியிமையவர்சிறப்பினீந்தன
விகன்முனைமுனையுறவெதிர்ந்துதள்ளவே
யகல்வெளிபுதைத்தனவம்புமம்புமே.

(இ - ள்.) புகல் அரு - (சிறப்பித்துச்) சொல்லுதற்கு அரிய, மறையவன் - அசுவத்தாமன், புராரி ஆதி ஆம் - சிவன்முதலான, திகழ் ஒளி இமையவர் - விளங்குகிற ஒளியையுடைய தேவர்கள், சிறப்பின் ஈந்தன - சிறப்பாகக் கொடுத்த அஸ்திரங்களை, இகல் முனை - போர்க்களத்தில், முனை எதிர்ந்து உற - முன்னே எதிர்ந்து செல்லும்படி, தள்ள - பிரயோகிக்க,— அம்புஉம் அம்புஉம் - (இருவர்) அம்புகளும், அகல் வெளி புதைத்தன - பரந்த ஆகாயவெளியை மறைத்தன; (எ - று.)— மிக அடர்த்தியாகப் பரவின. ஈந்தனவாகிய அம்பும் அம்பும் என்று இயைத்து உரைப்பாருமுளர். (217)

127. **சுரருலகெய்தியதுரோணன்மைந்தனை**
யிருகணைபுயத்தினுமிரண்டுமார்பினு
மொருகணைநுதலினுமுருவவேவினன்
மருவிரிதாதகிவாசமாலையான்.

(இ - ள்.) மரு விரி - தேனொழுகுகிற, வாசம் - வாசனையுடைய, தாதகி மாலையான் - ஆத்திப்பூமாலையையுடைய சோழன்,— சுரர் உலகு எய்திய - (இறந்து) தேவலோகத்தை அடைந்த, துரோணன் - துரோணரது, மைந்தனை - புத்திரனை அசுவத்தாமனை, இரு கணை - இரண்டு அம்புகள், புயத்தின்உம் - தோள்களிலும், இரண்டு - இரண்டு அம்புகள், மார்பின்உம் - மார்பிலும், ஒரு கணை - ஓரம்பு, நுதலின்உம் - நெற்றியிலும், உருவ - துளைக்கும்படி, ஏவினன் - எய்தான்; (எ - று.) (218)

128. **பிறைமுடிச்சடையவன்பிள்ளைவள்ளுகிர்**
விறலுடைப்புலிக்கொடிவீரன்மெய்யெலாம்
புறவினுக்கரிந்தநாட்போலமேல்விடுந்
திறலுடைவாளியாற்சிவப்பித்தானரோ.

(இ - ள்.) பிறை முடி சடையவன் - இளஞ்சந்திரனை யணிந்த திருமுடியிலுள்ள (கபர்த்தமென்னுஞ்) சடையையுடையஉருத்திரனது, பிள்ளை - மகனான அசுவத்தாமன், வள் உகிர் - கூர்மையான நகங்களையும், விறல் உடை - வெற்றியையுமுடைய, புலி - புலியையெழுதிய, கொடி - கொடியையுடைய, வீரன் - வீரனாகிய சோழனது, மெய் எலாம் - உடம்பு முழுவதையும், மேல் விடும் - மேலே பெய்கிற, திறல் உடை - வலிமையை யுடைய, வாளியால் - அம்புகளினால், புறவினுக்கு அரிந்த நாள் போல - புறாவைக் காக்கும் பொருட்டு அறுத்துக்கொடுத்த காலத்திலேபோல, சிவப்பித்தான் - சிவக்கச்செய்தான்; (எ - று.)— அரோ - ஈற்றசை.

பிள்ளை - இளமைப்பெயர்; "தவழ்பவை தாமு மவற்றோ ரன்ன" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தில் 'தாமும்' என்றதனால், இது உயர்திணைக்கும் உரியதாதல் கொள்ளப்படும். சோழ

னுஞ் சிபியும் சூரியகுலத்தவராதலால், இங்ஙனம் அபேதமாகக் கூறினர். புற-குறியதன் கீழ் ஆ, குறுகிற்று. (219)

129. துளவணிமுடியவன்றுள்ளுகன்றினல்
விளவினையெறிந்தெனவீரவேலினல்
வளவனும்வெகுண்டுபின்மயூரவாகன
னிளவலையெறிந்தனனெவருமஞ்சவே.

(இ - ள்.) துளவு அணி முடியவன்-திருத்துழாயை யணிந்த திருமுடியையுடைய கண்ணன், துள்ளு கன்றினல் - துள்ளுகிற கன்றை வீசி அதனுல், விளவினை எறிந்து என - விளாமரத்தை எறிந்தாற்போல, வளவனும்-சோழனும், பின்-பின்பு, வெகுண்டு-கோபித்து, வீரம் வேலினல் - வீரத்தன்மையையுடைய வேலால், எவர்உம் அஞ்ச-எல்லோரும் பயப்படும்படி, மயூர வாகனன் இளவலை-மயில்வாகனமுடைய முருகக்கடவுளது தம்பியான அசுவத்தாமனை, எறிந்தனன்—; (எ - று.)—சிவன்மகனுதலால், 'மயூரவாகன னிளவல்' என்றூர். (220)

130.—சோழன்வேலால் அசுவத்தாமன் கலங்கிவிழ, சகுனி முதலியவேந்தர் அவன்வருத்தம் மாற்றுதல்.

உருத்திரன்ருதுவினுற்பவித்தவக்
கருத்துடைமுனிவன்மெய்கலங்கிவீழ்தலுந்
திருத்தகுசகுனியுஞ்சிற்சில்வேந்தரும்
வருத்தமோடெடுத்தவன்வருத்தமாற்றினர்.

(இ - ள்.) உருத்திரன் தாதுவின் - உருத்திரமூர்த்தியினது சுக்கிலத்தினுல், உற்பவித்த-பிறந்த, கருத்து உடை-(வெல்லும்) எண்ணத்தையுடைய, அ முனிவன்-அந்த அசுவத்தாமன், மெய் கலங்கி வீழ்தலும்-உடம்பு கலக்கமடைந்து [மூர்ச்சித்து] விழுந்தவளவில்,—திரு தகு-செல்வம்பொருந்திய, சகுனியும்—, சில் சில் வேந்தர்உம்-(மற்றுஞ்) சிலசில அரசர்களும், வருத்தமோடு - மனவருத்தத்துடனே, எடுத்து - (அவனை) எடுத்துவைத்துக் கொண்டு, அவன் வருத்தம் மாற்றினர் - அவனதுவருத்தத்தை நீக்கினர்; (எ - று.)

உருத்திரன்-(பகைவர்களை) அழச்செய்பவன். உத்பவித்த-உற்பவித்த; தகரம் றகரமாயிற்று. கருத்து உடை முனிவன் - நெஞ்சம்பிளந்த முனிவனென்றுமாம். திரு-சூதாட்டத்திற் பிறரை வெல்வதனுல் வரும் பொருள். ஆற்றினர் என்றும் பதம்பிரிக்கலாம். (221)

131.—நான்குகவிகள்-அசுவத்தாமனுடனே மன்னர்பலர்வந்து சோழனுடன்பொருது அழிந்தமை கூறும்.

அவனெடுமீளவந்தபயன்றன்னெடு
கவனமான்றேருடைக்காவன்மன்னவர்
சிவனெடுமமர்பொருந்தெவ்வரென்னவே
துவனிசெய்முரசெழத்துன்றுபோர்செய்தார்.

(இ - ள்.) கவனம் - நடைகளையுடைய, மான் - குதிரைகளைப் பூட்டிய, தேர் உடை - தேர்களையுடைய, காவல் மன்னவர் - (இராச்சியத்தைக்) காத்தற்றொழிலையுடைய அரசர்கள், அவனொடு - அசுவத்தாமனுடனே, மீள - திரும்பவும், வந்து—, சிவனொடுஉம் அமர் பொரும் - சிவனோடுபோர்செய்கிற, தெவ்வர்என்ன - பகைவர்களாகிய அசுரர்கள்போல, துவனி செய் முரசு எழ - ஒலியைச் செய்கிற முரசவாத்தியங்கள் முழங்கும்படி, அபயன் தன்னொடு - சோழனுடனே, துன்று போர் - நெருங்கினபோரை, செய்தார்—; (எ - று.)

அபயன் என்பதற்கு - தன்னைச்சரணமடைந்தவர்களை அஞ்ச வேண்டாமென்று அபயமளித்துக் காப்பவனென்று பொருள் போலும். சிவனொடுபொரும் பகைவர், சோழனோடுபொருது முன் னிற்கமாட்டாமைக்குஉவமை. (222)

132. துன்மருடணன்மகன்சுவாகுதுன்முகன்
வின்மகன்சுவாதுவாள்வெயில்விபாகரன்
றன்மகன்றிருமகன்சங்கனென்பவர்
மன்மகார்பலரொடுமடிந்துவீழவே.

இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) துன்மருடணன் மகன் - துன்மருடணனது புத்திரனாகிய, சுவாகு - சுவாகுவும், துன்முகன் வில் மகன் - துன்முகனது ஒளியையுடைய புத்திரனாகிய, சுவாது - சுவாதுவும், வாள் வெயில் - ஒளியையுடைய கிரணங்களையுடைய, விபாகரன் தன் - சூரியனது, மகன் - குமாரனாகியகர்ணனது, திருமகன் - அழகிய புத்திரனாகிய, சங்கன் - சங்கனும், என்பவர் - என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவராகிய, மன் மகார் - இராசகுமாரர்கள், பலரொடுஉம் - (மற்றும்) பலவீரர்களுடனே, மடிந்துவீழ - இறந்து கீழே விழும்படி,—(எ - று.) —"ஏற்ற" என்க. சுவாகு = சுபாகு: அழகியதோளுடையவன். துன்மருடணன் துன்முகன்என்று துரியோதனன் தம்பிமார்கள். பி - ம்: துன்மருடன். (223)

133. பண்ணகவிசையளிபாடுதண்டலைக்
கண்ணகன்காவிரிநாடன்கைக்கணை
மண்ணகநெருக்குறமலைந்தமன்னரை
விண்ணகமிடனறவிரைவினேற்றவே.

(இ - ள்.) பண் அகம் - சுரங்களைத் தம்மிடத்திலுடைய, இசை - சங்கீதப்பாடல்களை, அளி - வண்டுகள், பாடு - பாடுதற்கு இடமான, தண்டலை - சோலைகளையுடைய, கண் அகல் - இடமகன்ற, காவிரி - காவேரிநதிபாய்கிற, நாடன் - நாட்டையுடையசோழனது, கை கணை - கையினலெய்யப்பட்ட அம்புகள், மண் அகம் நெருக்கு உற - பூமியில் நெருக்க முண்டாம்படி, மலைந்த - (திரண்டுவந்து) போர்செய்த, மன்னரை - அரசர்களை, விண் அகம் இடன் அற - வீரசுவர்க்கத்தில் இடம் இல்லையாம்படி, விரைவின் - சீக்கிரமாக, ஏற்ற - ஏறச்செய்ய [கொல்ல],—(எ - று.)—"மீள" என்க.

இனி, பண் நகஎனப்பிரித்து - பண்கள்விளங்கும்படி வண்டுகள் இசை பாடுகிற சோலை யென்றுமாம்; நக - செயவெனெச்சம். நெருக்கு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். மண்ணகம், விண்ணகம் - அகம், ஏழனுருபு. தண்டலை - தண் தலை:குளிர்ந்த இடத்தையுடையது: பண்புத்தொகையன்மொழி. (224)

134. முன்னிய சிலைமறை முனிவன் மைந்தனுந்
தன்னிக ரிலாவிறற் சகுனி யாதியாய்த்
துன்னிய நிருபருந் தொல்ல மர்க்குநீ
சென்னியென் றவன்புகழ் செப்பி மீளவே.

(இ - ள்.) சிலை மறை - தனுர்வேதத்தை, முன்னிய-அறிந்த, முனிவன் மைந்தன்உம் - துரோணகுமாரனான அசுவத்தாமனும், தன் நிகர் இலா-(சூதாட்டத்தில்) தனக்கு ஒப்பில்லாத, விறல் - வெற்றியையுடைய, சகுனி ஆதி ஆய்-சகுனி முதலாக, துன்னிய- நெருங்கிவந்த, நிருபர்உம் - அரசர்களும், 'தொல் அமர்க்கு - பழைய போருக்கு, நீ—, சென்னி-தலையாவாய்,' என்று—, அவன் புகழ் - அச்சோழனது கீர்த்தியை, செப்பி - சொல்லி, மீள - திரும்பிப்போய்விட,—(எ - று.)—"அடுத்தார்" என மேலிற்கவியோடு முடியும். 'சென்னி' என்பது சோழனைக்காட்டுவதோர் சொல்: அதற்குக் காரணங் கற்பித்ததுபோற்கூறியிருக்கும் நயம் பாராட்டத்தக்கது. (225)

வேறு.

135.—அப்போது துச்சாதனனும் அவன் தம்பிமார் ஒன்பதின்மரும் வீமனெதிரேயடுத்தல்.

சோனை மேகம் பொழிவதுபோற் றுச்சா தனனுந் தம்பியரும்
வானு டேற வழிதேடி வருவார் போல வெருவாமன்
மேனாண் மொழிந்த வஞ்சினங்கண் முடிப்பா னின்றவீமனெதி
ரானு வாளி மழைதூவி யடல்வெஞ் சிலையோ டடுத்தாரே.

(இ - ள்.) துச்சாதனனும்—, தம்பியர்உம் - அவன் தம்பிமார்களொன்பதுபேரும், வெருவாமல் - அஞ்சாமல், அடல் வெம் சிலையோடு - வலிய கொடிய வில்லுடனே, சோனை மேகம் பொழிவது போல் - விடாப்பெருமழையை மேகம் பெய்கின்றதுபோல, ஆனு வாளி மழை தூவி - நீங்காத பாணவருஷத்தைச் சொரிந்துகொண்டு, மேல் நாள் மொழிந்த வஞ்சினங்கள் - முற்காலத்திற் சொன்ன சபதங்களை, முடிப்பான் நின்ற - நிறைவேற்றும்பொருட்டு நின்ற, வீமன் எதிர் - வீமனுக்கு எதிரில், வான் நாடு ஏற வழி தேடி வருவார்போல - வீரசுவர்க்கம்அடைவதற்கு வழியைத் தேடி வருபவர்போல, அடுத்தார்-வந்துசேர்ந்தார்கள்; (எ - று.)--தம்பியர் ஒன்பதின்மர் என்பது - மேல் 140 - ஆங் கவியால் விளங்கும். மேனாள் - திரௌபதியைத் துகிலுரிந்த காலத்தில்.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள்-மூன்றுஞ்சீரும் ஆறுஞ்சீருங் காய்ச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய அறுசீராசிரிய விருத்தங்கள். (226)

136.—துச்சாதனனைக்கண்டு வீமன் சில கூறலுறல்.

உருத்தின்றரசரைவரையு முடனேகொல்வனெனவெண்ணிக்
கருத்தின்படியேவிரைந்தோடுங்கவனப்புரவிக்காற்றேரிற்
செருத்திண்பணைகண்முழங்கவருசெங்கோன்மன்னற்கிளையோனை
மருத்தின்புதல்வன்கண்டுமழைமுகில்போலெதிர்வாய்மலர்ந்தானே.

(இ - ள்.) உருத்து - கோபித்து, 'இன்று - இன்றைக்கு, அரசர் ஐவரைஉம் - பஞ்சபாண்டவர்களையும், உடனே - விரைவிலே, கொல்வன் - கொல்வேன்,' என - என்று, எண்ணி- நினைத்து, கருத்தின்படிஏ விரைந்து ஓடும் - (தன்) எண்ணத்தின் படியே வேகமாயோடுகிற, கவனம் புரவி - கதிகளையுடைய குதிரைகளைப் பூட்டிய, கால் - சக்கரங்களையுடைய, தேரில்-தேரின் மேல் (ஏறி), செரு திண் பணைகள் - போருக்குரிய வலிய வாச்சியங்கள் முழங்க - பேரொலிசெய்யும்படி, வரு-வருகிற, செங்கோல் மன்னற்கு-நீதிதவறாத அரசாட்சியையுடைய துரியோதனனுக்கு, இளையோனை - அடுத்ததம்பியாகிய துச்சாதனனை, மருத்தின் புதல்வன்-வாயுகுமாரனான வீமன், கண்டு-நோக்கி, மழை முகில் போல் - மழைபொழிகின்ற மேகம் (இடிமுழங்குவது) போல, எதிர்-எதிரில், வாய் மலர்ந்தான் -வாய் திறந்து (சிலவார்த்தைகளைச்) சொல்வானானன்; (எ-று.)— அவற்றை மேல் மூன்று கவிகளிற் காண்க.

கருத்தின்படி-மனோவேகமாக வென்றுமாம். கொடுங்கோன் மன்னனாகிய துரியோதனனை 'செங்கோன்மன்னன்' என்றது, இகழ்ச்சி. (227)

137.—மூன்றுகவிகள்-ஒருதொடர்: வீமன் துச்சாதனனையழிக்கப் போவதாக வீரவாதங்கூறியதைத் தெரிவிக்கும்.

துச்சாதனனேயுனைப்போலுஞ்சூரருளரோசூரரெலா
மெச்சாநின்றார்வேத்தவையின்மேனாணீசெய்விறலாண்மை
யச்சாரிரதப்போர்க்குமுனக்கார்வேறெதிருண்டம்மவிரைந்
திச்சாபோகமாகவிருந்தின்றேமறலிக்கிடுநாளே.

(இ - ள்.) துச்சாதனனே—! அம்ம - கேட்பாயாக; உனைபோலும் சூரர் உளர்ஓ-உன்னை யொக்கும் வீரர்கள் வேறு உண்டோ? மேல் நாள்-முற்காலத்தில், வேந்து அவையில் - இராசசபையில், நீ—, செய்-செய்த, விறல் ஆண்மை-வெற்றியோடு கூடிய பராக்கிரமத்தை, சூரர் எலாம்-வீரர்கள்யாவரும், மெச்சாநின்றார்- (இப்பொழுதும்) கொண்டாடுகிறார்கள்; அச்சு ஆர் இரதம் போர்க்குஉம்-இரிசுகள் பொருந்திய தேரின்மேல் ஏறிச்செய்கிற போரிலும், உனக்கு—, எதிர்-ஒப்பு, வேறு ஆர் உண்டு-வேறே யாவர் இருக்கிறார்கள்? விரைந்து-சீக்கிரமாக, இச்சா போகம் ஆக - இஷ்டப்படியே புசிக்கும்படி, மறலிக்கு-யமனுக்கு, விருந்து இடும் நாள்- (உன்னை) விருந்துணவாக அமைக்கிறநாள், இன்றே - இன்றைக்குத்தானே? (எ - று.)

முன்னிரண்டடிகள்-இகழ்ச்சிகுறிக்கும். ஆண்மையென்றது, திரௌபதியின் துகிலை உரிந்ததை. அச்சு-அக்ஷமென்னும் வடமொழித்திரிபு. அம்ம - இடைச்சொல்: "அம்ம கேட்பிக்கும்". விருந்து-புதுமை; இப்பண்புப்பெயர், புதிதாய்வந்தவர்க்கு இடும் உணவுக்கு இருமடியாகுபெயர். (228)

138. இன்றேவுன்றன்சென்னிதுணித்திழிசெம்புனலிற்குளித்திடுநா
ளின்றேவழலினுற்பவித்தாளிருளாரளகமுடித்திடுநா
ளின்றேதாகங்கெடநாவுக்கிசைந்ததண்ணீர்பருகிடுநா
ளின்றேவுரைத்தவஞ்சினங்களெல்லாம்பயன்பெற்றிடுநாளே.

(இ - ள்.) உன் தன் சென்னி துணித்து - உன் தலையை அறுத்து, இழி செம் புனலில்-(அதனினின்று) வழிகிற இரத்தத்தில், குளித்திடும் நாள்-(யான்) மூழ்கும் தினம், இன்றுஓ - இன்றைக்குத்தானோ? அழலின் உற்பவித்தாள் - அக்கினியிற்பிறந்த திரௌபதி, இருள் ஆர் அளகம் - இருளையொத்த [மிகக்கரிய] (தனது) கூந்தன்மயிரை, முடித்திடும் நாள்-எடுத்து முடிக்குந் தினம், இன்றோ—? தாகம் கெட-தண்ணீர்வேட்கை கெடும்படி, நாவுக்கு இசைந்த தண் நீர் - நாக்குக்குப்பொருந்திய குளிர்ந்த நீரை, பருகிடும் நாள்-(நான் கையால் அள்ளி எடுத்துக்) குடிக்கிற தினம், இன்றோ—? உரைத்த வஞ்சினங்கள் எல்லாம் - (நாங்கள்) சொன்ன சபதங்களெல்லாம், பயன் பெற்றிடும் நாள் - பலனடையுந் தினம், இன்றோ—? (எ - று.)

திரௌபதி, துரியோதனன் துச்சாதனனைக்கொண்டு கூந்தலைப்பிடித்திழுத்துச் சபையிற்கொணர்ந்து துகிலுரிந்துந் தன்மடிமேலுட்காரென்று சொல்லியும் தன்னைப்பங்கப்படுத்தினபொழுது, துரியோதனுதியர் நூற்றுவரையுங் கொன்று அவர்களிரத்தத்தில் நனைத்தாலன்றி விரித்தகூந்தலை எடுத்துமுடித்து அலங்கரிப்பதில்லையென்று சபதஞ்செய்தாள். யாகசேனமகாராசன் செய்வித்த புத்திரகாமயாகத்தில் அருச்சுனனை மணஞ்செய்து கொள்ளும்பொருட்டுத் தீயினின்றுந் திரௌபதி பிறந்தாள். (229)

139. வென்றேயவனிமுழுதாளும்வீரோதயனின்றம்முனையுங்
கொன்றேநாளையமரரெதிர்கொள்ளக்கடிதின்வரவிடுவ
னின்றேநீபோயிடம்பிடிப்பாயெண்ணுவெண்ணமெண்ணிமன்றி
லன்றேகலகம்விளைத்தென்றுமழியாவரசையழித்தோனே.

(இ - ள்.) எண்ணு எண்ணம் எண்ணி - நினைக்கத்தகாத நினைப்பைநினைத்து, மன்றில் - சபையிலே, அன்று - அந்நாளில், கலகம் விளைத்து - சூதுபோரை உண்டாக்கி, என்றும் அழியா அரசை - எந்நாளும் அழியாத (எங்கள்) அரசாட்சியை, அழித்தோனே - அழியச்செய்தவனே! வென்று - வெற்றிகொண்டு, அவனி முழுது - பூமிமுழுவதையும், ஆளும் - அரசாளுகிற, வீர உதயன் - வீரத்தன்மையின் தோற்றத்தையுடையவனாகிய, நின் தம்முனைஉம் - உனது தமையனான துரியோதனனையும், நாளை - நாளைக்கே, கொன்று—, அமரர் எதிர் கொள்ள - தேவர்கள் எதிர்

கொண்டு அழைத்துப்போம்படி, கடிதின் - விரைவிலே, வர விடுவன் - வரும்படி அனுப்புவேன்; (ஆதலால்), நீ—, இன்றே போய் இடம் பிடிப்பாய் - இன்றைக்கே சென்று(சுவர்க்கத்தில்) இடம் அமைத்து வைப்பாயாக; (எ - று.)

எதிர்கொண்டு அழைத்துப்போதல், மரியாதை. துரியோதனன் கலகம் விளைத்ததற்கும் அதனால் தருமனரசாட்சியை அழியச்செய்ததற்குந் துச்சாதனன் முக்கியமான துணைவனாயிருந்ததனால், இவன் தொழிலாகக்கூறப்பட்டன; இனி, கலகம்-திரௌபதியைத்துகிலுரிதலாகக் கொண்டு, கலகத்தைச்செய்து அது காரணமாக எந்நாளும் அழியாத உங்களரசாட்சியை அழிக்கத் தொடங்கினவனே யென்றுமாம். (230)

140.—துச்சாதனன் ஊமன்போலிருக்க, அவன்தம்பிமார்கள் அம்புதொடுத்தல்.

வீமன்கருத்தோடிவைமொழியவேறுத்தரமற்றொன்றின்றி
யூமன்றனைப்போலவனிற்கவுடனேயிளையோரொன்பதின்மர்
நாமம்பெறுகோலோரொருவர்நாலாகநடந்தவழி
தூமங்கிளரவொருகணத்திற்றொடுத்தாரெதிர்வந்தடுத்தாரே.

(இ - ள்.) வீமன்—, கருத்தோடு இவை மொழிய - (கொடிய) எண்ணத்தோடு இப்பேச்சுக்களைச் சொல்ல,—அவன் - துச்சாதனன், வேறு உத்தரம் மற்று ஒன்று இன்றி - (அவ்வார்த்தைகளுக்கு) எதிராகியவிடை வேறொன்று மில்லாமல், ஊமன்தனை போல் நிற்க - ஊமையானவனைப்போல (வாளா) நிற்க, உடனே—, இளையோர் ஒன்பதின்மர் - அவன் தம்பிமார் ஒன்பது பேர், நாமம் பெறு கோல் - (தங்கள்) பேரை எழுதப்பெற்ற அம்புகளை, ஒருவர் நால் நால் ஆக - ஒவ்வொருவர் நான்கு நான்கு வீழுக்காடு, நடந்த வழி தூமம் கிளர - சென்றவழியிலே புகை கிளம்பும்படி [மிக உக்கிரமாக என்றபடி], ஒரு கணத்தில்-ஒருக்ஷணப்பொழுதினுள்ளே, தொடுத்தார் - தொடுத்துக்கொண்டு, எதிர் வந்து அடுத்தார்-எதிரில் வந்து நெருங்கினார்கள்; (எ - று.)

ஊமன் - பேசுதலில்லாதவன். நாமம் பெறு கோல் - அச்சந் தருதலைப்பெற்ற அம்புமாம்; நாம் - அச்சம், உரிச்சொல்: அம் - சாரியை. (231)

141.—ஒன்பதின்மரும் வீமனம்பால் மாளுதல்.

தொடுத்தார்தொடுத்தகணையனைத்துஞ்சூரன்றானுந்தன்கணையாற்
றடுத்தான்மீளவோரொருவர்க்கோரோர்பகழிதனுவாங்கி
விடுத்தானவருமிரதமிசைவீழ்ந்தார்வீழ்ந்தவீரரைவந்
தடுத்தார்விரைவிலகல்வானத்தழகார்காதலரம்பையரே.

(இ - ள்.) தொடுத்தார் - (அவர்கள் அம்பு)தொடுத்தார்கள்; தொடுத்த—, கணை அனைத்துஉம் - அம்புகளை யெல்லாம், சூரன் தான்உம் - வீமனும், தன்கணையால் - தன் அம்புகளினால், தடுத்

தான் - விலக்கினன்; மீள - திரும்பவும், ஓர்ஒருவர்க்கு ஓர்ஓர் பகழி - ஒவ்வொருவருக்கு ஒவ்வொருஅம்பு விழுக்காடு, தனு வாங்கி - வில்லைவளைத்து, (ஒன்பது அம்புகளை), விடுத்தான் - விட்டான்; அவர்உம்-அவ்வொன்பதுபேரும், இரதம்மிசை வீழ்ந்தார் - தேரின்மேல் இறந்து விழுந்தார்கள்; வீழ்ந்த வீரரை-(அங்ஙனம்) விழுந்த வீரர்களை, அகல் வானத்து - பரந்த தேவலோகத்துள்ள, அழகு ஆர் - அழகு நிரம்பிய, காதல்-விருப்பத்தையுடைய, அரம்பையர்-தெய்வப்பெண்கள்,விரைவில்-சீக்கிரத்தில், வந்து அடுத்தார் - வந்துகூடினர்; (எ - று.)

போரில் இறந்த வீரரது உயிர்கள் உடனே வீரசுவர்க்கத்தை அடைந்தன வென்றபடி. அரம்பை - ரம்பா: வடசொற்றிரிபு: அரம்பை யென்பவள் தெய்வமகளிர்க்குட் சிறந்தவ ளாதலால், அவர்களுக்கு அரம்பையரென்று பெயர் வழங்கிற்று. (232)

142.—நான்குகவிகள்-துச்சாதனனும் வீமனும் விற்போர்புரிதலைக்கூறும்

உயிர்க்காருயிராந்தம்பியர்களோரொன்பதின்மர்வீமன்கைச்
செயிர்க்காய்கணையாற்சிரந்துணிந்துதேர்மேல்வீழச்சினங்கதுவிப்
பயிர்க்காமாரிபொழிந்துவருபருவப்புயல்போற்பாவனனை
மயிர்க்காறொறுமம்பினஞ்சொருகமன்னற்கிளையோன்மலைந்தானே.

(இ - ள்.) உயிர்க்கு ஆர் உயிர் ஆம் - உயிருக்கும் அரிய உயிராகிய [மிக அருமையான], தம்பியர்கள் ஓர் ஒன்பதின்மர் - தம்பிமார்கள் ஒன்பதுபேர், வீமன் கை - வீமன்கையினலெய்த, செயிர் காய் கணையால் - வலிமையோடு கொல்லுகிற அம்புகளால், சிரம் துணிந்து - தலை அறுபட்டு, தேர் மேல் வீழ - தேரில் இறந்து விழுந்ததனல், சினம் கதுவி - கோபம் மூண்டு, மன்னற்கு இளையோன் - துரியோதனன் தம்பியான துச்சாதனன், பயிர்க்கு ஆ (க) மாரி பொழிந்துவரு-பயிர் செழிக்கும்படி மழை சொரிந்து வருகிற, பருவம் புயல் போல்-கார்காலத்து மேகம்போல, மயிர் கால்தொறு உம்-ஒவ்வொரு உரோமத்துவாரத்திலும், அம்பு இனம் சொருக - பாணங்களின் கூட்டத்தைத் தைக்குமாறு, பாவனனை-வாயுகுமாரனன் வீமனை, மலைந்தான் - பொருதான்; (எ - று.)—பாவனன் - பவனன்மகன்: தத்திதாந்தம். பி-ம்: சொருகி. (233)

143. **தன்மேலுரககேதனனுக்கிளையோன்றொடுத்தசரங்களெல்லாங்**
கன்மேன்மேகத்துளியென்னக்காய்ந்தானவற்றைக்கடிதுதறி
மன்மேற்கொண்டபுயமுறவில்வாங்கிக்கொடும்போர்வாளிபல
மென்மேலெய்தானெதிர்ப்பட்டால்விடுமோபின்னைவிறல்வீமன்.

(இ - ள்.) விறல் வீமன் - வெற்றியையுடைய வீமன்,— காய்ந்தான் - கோபித்து,—உரக கேதனனுக்கு இளையோன் - பாம்புக்கொடியையுடைய துரியோதனனுக்குத் தம்பியாகிய துச்சாதனன், தன் மேல் தொடுத்த—, சரங்கள் எல்லாம் - அம்புகளனைத்தும், கல் மேல் மேகம் துளி என்ன - கல்லின்மேல் விழுந்த மேகத்தின் மழைநீர்த்துளிகள்போல(சீ சிதறிப்போம்படி),

அவற்றை கடிது உதறி - அவ்வம்புகளை விரைவாக உதறிவிட்டு, மல் மேல் கொண்ட புயம் உற - மற்போரை மேன்மையாகக் கொண்ட தோளின்வலிமை பொருந்த, வில் வாங்கி - வில்லை வளைத்து, கொடு போர் வாளி பல-கொடிய போருக்கு உரிய பல அம்புகளை, மென்மேல் எய்தான் - மேல்மேலே தொடுத்தான்; எதிர்ப்பட்டால்-(பகைவன்)எதிரிரே வந்துஅகப்பட்டால், பின்னை-பின்பு, விடும்ஓ - (வீமன்) விடுவானோ? (எ - று.)—பொதுப் பொருளும் சிறப்புப்பொருளுமாக வராமையால், இது, **வேற்றுப் பொருள்வைப்பணியாகாது.** (234)

144. **தூவாநின்றவேவனைத்துந்துச்சாதனன்றன்றொடைபிழையா**
வேவால்விலக்கியேழுகணையெய்தானெய்தகணையேழு
மாவானவற்றின்றலைநான்குமடங்கற்கொடியுமணித்தேரு
மேவாநிருபன்மலர்த்தடக்கைவில்லுந்துணித்துவீழ்த்தனவே.

(இ-ள்-) தூவா நின்ற-(வீமன்) பொழிகிற, ஏ அனைத்துஉம்-அம்புகளை யெல்லாம், துச்சாதனன்—, தன் - தனது, தொடை பிழையா - தொடுத்த இலக்குத் தவறாத, ஏவால்-அம்புகளினால், விலக்கி - தடுத்து, ஏழு கணை எய்தான் - ஏழம்புகளைத் தொடுத்தான்; எய்த கணை ஏழ்உம்-தொடுத்த அந்த ஏழம்புகளும், மேவா நிருபன் - (தம்மோடு மனம்) பொருந்தாத [பகைவனாகிய] வீமராஜனது, மாவானவற்றின் - (நான்கு) தேர்க்குதிரைகளின், தலை நான்குஉம்-தலைகள்நான்கையும், மடங்கல் கொடிஉம்-சிங்கக்கொடியையும், மணி தேர்உம் - அழகிய தேரையும், மலர் தட கை வில் உம் - தாமரைமலர் போன்ற பெரிய கையிற் பிடித்த தனுசையும், (ஆக ஏழுபொருளையும்), துணித்து-அறுத்து, வீழ்த்தன-தள்ளி விட்டன; (எ - று.)—பி-ம்: துணிய. (235)

145. **இத்தேரழியவேறொருதேரேறிப்பரவையிடைச்சுழன்ற**
மத்தேயனையசிலைவாங்கிமன்னற்கிளையவயமீளி
யத்தேரழியக்கொடிவலவன்வயமாவனைத்துமற்றுவிழப்
பத்தேயெய்தாங்கிணைவாளிபகைவன்புயத்திற்படவெய்தான்.

(இ - ள்.) மன்னற்கு இளைய வயம் மீளி - தருமராஜனுக்கு அடுத்த தம்பியாகிய வலிமையையுடைய வீரனாகிய வீமன், இ தேர் அழிய-இந்தத் தேர் அழிந்ததனால், வேறு ஒரு தேர் ஏறி—, பரவை இடை சுழன்ற மத்துஏ அனைய - பாற்கடலிற் சுழன்று கொண்டிருந்த மத்தாகிய மந்தரமலையையே போன்ற, சிலை வாங்கி -(வேறொரு) வில்லை எடுத்து வளைத்து, அ தேர் அழிய - அத்துச்சாசனனேறிய தேர் அழியவும், கொடி-கொடியும், வலவன்-சாரதியும், வயம் மா அனைத்துஉம்-வலிமையையுடைய தேர்க்குதிரைகளெல்லாமும், அற்று விழ-அறுபட்டு விழவும், பத்துஎய்து-பத்து அம்புகளைத் தொடுத்து, ஆங்கே-அப்பொழுதே, இணை வாளி - இரண்டு அம்புகளை, பகைவன் புயத்தில் பட-பகைவனான அவனது தோளிரண்டிலும் படும்படி, எய்தான்—; (எ - று.)—மந்தரம் பாற்கடலைக் கலக்கியதுபோல வில் போர்க்கடலைக் கலக்குத

லால், உவமை. மத்து-மந்தம் என்னும் வடமொழித் திரிபு. பி-ம்: மத்தேயனையான். (236)

146.—ஐந்துகலிகள்-அவ்விருவரும் கதாயுத்தம்புரிந்தமை கூறும்.

காரிற் கரிய குழறீண்டிக் கலையன் றுரிந்த கழற்காளை
பாரிற் குதித்தோ ரதிபாரப் பைம்பொற் கதையாற் பாவனன்றன்
றேரிற் புடைக்கத் தேர்சிதைந்து சிந்திற் றவனுஞ் சிலைமாற்றிப்
போரிற் சிறந்த தண்டமுடன் புவிமேற் பாய்ந்தான் புலிபோல்வான்.

(இ - ள்.) காரின்கரிய-மேகம்போலக்கறுத்த, குழல்-(திரௌபதியின்) கூந்தலை, தீண்டி-தொட்டு(ப்பிடித்துஇழுத்துக்கொண்டுவந்து), அன்று -அக்காலத்தில், கலை உரிந்த - (அவள்) துகிலை அவிழ்த்த, கழல் காளை-வீரக் கழலையுடைய வீரனாகிய துச்சாசனன், பாரில் குதித்து-(தேர்அழிந்ததனால்) தரையிற் குதித்து, ஓர்-ஒரு, அதி பாரம்-மிக்க கனம்பொருந்திய, பைம்பொன் கதையால்-பசும்பொன்னாலாகிய கதாயுதத்தால், பாவனன் தன் தேரில் புடைக்க - வாயுகுமாரனான வீமனது தேர்மேல்அடிக்க, தேர் சிதைந்து சிந்திற்று-அத்தேர் அழிந்துசிதறியது; புலி போல்வான் -புலியையொக்கும் வீரனாகிய, அவன்உம்-வீமனும், சிலை மாற்றி-வில்லைவிட்டு, போரிற் சிறந்த தண்டமுடன்-போரில் (தனக்குச்) சிறந்த கதாயுதத்துடனே, புவி மேல் பாய்ந்தான்-பூமியிற் குதித்தான்; (எ - று.)—புவி என்பது-வடமொழியில் ஏழாம்வேற்றுமை.

வேறு.

147. **இருவ ரும்புயங் களினப்பி யொத்தின ரிகல்பு ரிந்துதண் டிறுகப்பிடித்தனர், மருவி யொன்றொடொன் றனல்கக்க மொத்தினர் வலமி டங்கொண்மண் டலமுற்ப யிற்றின,ரருகு சென்றுசென் றடிவைத்த டுத்தன ரகல நின்றுநின் றோரிமைப்பின் முட்டினர், திருகு வெஞ்சினத் திடியொத்து ரப்பினர் திசையின் மண்டிபக் கிரிசத்த மிட்டவே.**

(இ - ள்.) இருவர்உம்-வீமனுந் துச்சாதனனும், புயங்களின்-தோள்களில், அப்பி ஒத்தினர் - நன்றாகத் தட்டினார்கள்; இகல் புரிந்து-பராக்கிரமத்தை மேற்கொண்டு, தண்டு-கதையை, இறுக பிடித்தனர்-அழுந்தப் பிடித்தார்கள்; ஒன்றொடு ஒன்று மருவி-ஒன்றோடொன்று சேர்ந்து, அனல்கக்க - நெருப்புப்பொறியைச் சிந்தும்படி, மொத்தினர்-தாக்கினார்கள்; வலம் இடம் கொள் மண்டலம்-வலசாரியும் இடசாரியுமாக மண்டலகதியை, முன் பயிற்றினர்-முன்னே பழக்கினார்கள்; அருகு சென்று சென்று - கிட்டப்போய்ப் போய், அடி வைத்து-கால்களைவைத்துக்கொண்டு, அடுத்தனர்-நெருங்கினார்கள்; அகல நின்று நின்று-தூரத்திலே நின்று நின்று, ஓர் இமைப்பின் முட்டினர் - ஒருநொடிப்பொழுதுள்ளே நெருங்கினார்கள்; திருகு வெம் சினத்து - மாறுபடுகிற கொடிய கோபத்தால், இடி ஒத்து உரப்பினர்-இடிபோல அதட்டினார்கள்; (அவ்வதிர்ச்சியால்), திசையில் மண்டு - எட்டுத்திக்குக்களிலும் பொருந்திய, இபம் கிரி-மலைபோன்ற (அஷ்ட) திக்கஜங்கள், சத்

தம்இட்ட-வீரிட்டன; (எ-று.)—'கிரிசிந்தியிட்டவே' என்ற பாடம் சந்தத்துக்கு மாறுபடும்.

இதுமுதற் பத்துக்கவிகள்-பெரும்பாலும் ஒன்று ஐந்தாஞ் சீர்கள் புளிமாச்சீர்களும், இரண்டு நான்கு ஆறு எட்டாஞ்சீர்கள் கூவிளச்சீர்களும், மூன்று ஏழாஞ்சீர்கள் - புளிமாங்காய்ச்சீர்களு மாகிய **எண்சீராசிரியச்சந்தவிருத்தங்கள்.** 'தனன தந்தன தனதத்த தத்தன தனன தந்தன தனதத்த தந்தன' என இவற்றிற்குச் சந்தக்குழிப்புக் காண்க. (238)

148. **வெகுளிகொண்டுகொண்டெதிர்கொக்கரித்தனர் விசையுடன்கிளர்ந் துயரக்குதித்தன,ருகவைவிஞ்சவெங்கதையைச்சுழற்றின ருயர்விசும்பெறிந்தொரு கைப்பிடித்தனர், முகமலர்ந்துநின்றதிரச்சிரித்தனர் முதிரவஞ்சினம்பலகட் டுரைத்தனர், மகிபர்கண்டகண்டவர்சித்தமுட்கிட வரையிரண்டுவெஞ்சமர்கற்ப தொக்கவே.**

(இ-ள்.) மகிபர் கண்ட கண்டவர்-பார்த்த பார்த்த அரசர்க ளெல்லாம், சித்தம் உட்கிட-மனந் திடுக்கிடும்படி, வரை இரண்டு-இரண்டு மலைகள், வெம் சமர் கற்பது ஒக்க-கொடிய போரைப் பழகுவதை ஒக்கும்படி, (இருவரும்), வெகுளி கொண்டு கொண்டு -கோபத்தை மிகுதியாகக் கொண்டு, எதிர்கொக்கரித்தனர்-எதிரே கர்ச்சித்தார்கள்; விசையுடன்-வேகத்தோடு, உயர கிளர்ந்து குதித்தனர்-மேலே எழும்பிக் குதித்தார்கள்; உகவை விஞ்ச - களிப்பு மிக, வெம் கதையை சுழற்றினர்-கொடிய கதாயுதத்தைச்சுழற்றி, உயர் விசும்பு எறிந்து-உயர்ந்த ஆகாயத்தில் வீசி, ஒரு கை பிடித்தனர்-ஒருகையால் (மீளவும்) ஏந்திப்பிடித்தார்கள்; முகம் மலர்ந்து நின்று - முகமலர்ச்சிபெற்று நின்று, அதிர-அதிரும்படி, சிரித்தனர் - சிரித்தார்கள்; முதிர - மிகுதியாக, வஞ்சினம் பல - பல சபதங்களை, கட்டுஉரைத்தனர் - உறுதியாகச் சொன்னார்கள்; (எ-று.) உகத்தலுக்கும்,முகமலர்தலுக்குங்காரணம் - ஒத்த வீரனோடு போர்நேர்ந்தமை. ஒருவர் செய்வதை மற்றவருஞ் செய்வதால், 'கற்பதொக்க' என்றார். பி—ம்: விசையுடன் சினந்து. (239)

149. **இகலிவெங்கொடுங்கதையொத்துமொத்தொலி யிடியின்வெங் கொடுங்குரலொத்தொலித்தன, மகிதலம்பிளந்ததுசர்ப்பவர்க்கமும் வயிறழன்றுநஞ் சுகள்கக்கியிட்டன, திகிரியந்தடங்கிரிபக்குநெக்கது செவிடுகொண்டயர்ந்தது திக்கயக்குல, முகடுவிண்டதண்டமுமப்புறத்துற முகில்களும்பெருங்குகைபுக் கொளித்தவே.**

(இ-ள்.) இகலி - (இருவரும்) பகைத்து, வெம் கொடு கதை - மிகவுங் கொடிய கதாயுதத்தால், ஒத்து மொத்து ஒலி - ஒருங்கே தாக்குதலினாலுண்டாகிற ஓசை, இடியின் வெம்கொடுகுரல்ஒத்து-மிகவுங் கொடிய இடியின் முழக்கத்தைப் போன்று, ஒலித்தன—; (அதனால்), மகி தலம் பிளந்தது-பூமியிடம் பிளவுபட்டது; சர்ப்ப வர்க்கம்உம் - (பாதாளத்திலுள்ள) பாம்புக்கூட்டங்களும், வயிறு அழன்று - (அச்சத்தால்) வயிறு வெதும்பி, நஞ்சுகள் கக்கியிட்டன-விஷங்களை வெளியிற் கக்கின; அம் திகிரி தட கிரி-அழகிய

பெரிய சக்கரவாளமலை, பக்கு நெக்கது - பிளவுபட்டுச்சிதைந்தது, திக் கயம் குலம்-திக்கஜங்களின் கூட்டம், செவிடு கொண்டு அயர்ந்தது - செவிடாகித் தளர்ந்தது; அப்புறத்து அண்டம்உம் உற - (இவ்வண்டத்துக்கு) அப்பாலுள்ள அண்டங்களு முட்பட, முகடு விண்டது - மேல்முகடு பிளந்தது; முகில்கள்உம் - மேகங்களும், பெரு குகை புக்கு ஒளித்த-(அஞ்சிப்) பெரிய மலைக்குகைகளிற் போய் மறைந்தன; (எ - று.)—வெங்கொடு - ஒருபொருட் பன்மொழி. கிகிரியங்கிரி, அம் - சாரியையாகவுமாம். அப்புறத்து அண்டம்-பகிரண்டம். (240)

150. விழிகளுஞ்சிவந்தனநெற்றியிற்பொறி வெயர்வுவந்தரும்பினவிப்பி முத்தென, மொழிகளுங்கிளம்பினநெட்டிடிப்பென முரிமுரிந்தவண்புருவச்சிலைத் துணை, யெழிலுடன்பரந்திறுகத்தடித்தன விமயமந்தரங்களொடொத்தபொற்புய, மழியுமங்கமென்றொருசற்றிளைத்தில ரமரிலன்றருங்கதையிட்டடிக்கவே.

(இ - ள்.) விழிகள்உம் - (இருவர்) கண்களும், (கோபத்தால்), சிவந்தன—; இப்பி முத்து என - சிப்பியினின்றுந்தோன்றுகிற முத்துக்கள் போல, நெற்றியில் - நெற்றியிலே, வெயர்வு பொறி - வேர்வைநீர்த்துளிகள், வந்து அரும்பின - வந்து தோன்றின; நெடு இடிப்புஎன -பெரிய இடிபோல, மொழிகள்உம் கிளம்பின - வீரவாதச் சொற்களும் உண்டாயின; வண் புருவம் சிலை துணை - அழகிய விற்போன்ற இரண்டுபுருவங்களும், முரி முரிந்த-மிக நெறிப்புற்றன; இமய மந்தரங்களொடு ஒத்த - இமயமலையோடும் மந்தரமலையோடுஞ் சமமான, பொன் புயம் - அழகிய தோள்கள், எழிலுடன் பரந்து - அழகுடனே பரவி, இறுக தடித்தன - நன்றாகப் பருத்தன; அமரில் - போரில், அன்று - அப்பொழுது, அரு கதை இட்டு அடிக்க - அரிய கதாயுதத்தைக்கொண்டு அடிக்கப்படுதலால், அங்கம் அழியும் என்று - உடம்பு சிதையுமென்று, ஒரு சற்று இளைத்திலர் - (ஒருவரும்) மிகச்சிறிதும் இளைத்தாரில்லை; (எ - று.)—மலையரசனுதலால் இமயமும், கடலைக் கலக்கியதாதலால் மந்தரமும் உவமை கூறப்பட்டன. (241)

151.—ஐந்துகவிகள்-இருவரும் பின்பு முட்டியுத்தந்தொடங்க வீமன் துச்சாதனனையழித்தமைகூறும்.

எதிர்மலைந்தவெஞ்சமரிப்படிக்கிவ ரிரிதலின்றிமொய்ம்புறவுத்தரிக்கவு, முதர நெஞ்சுரம்புயமெய்க்கழுத்தென வுரைசெயங்கமொன்றினுமுற்றுறைத்தில, கதைகளும்பிளந்தொடிபட்டெடுத்தன கரதலங்களுங்கருகிச்சிவந்தன, முதிர்சினங் கொளுந்தலின்முற்றும்விட்டிவர் முரணுடன்றொடங்கினர்முட்டியுத்தமே.

(இ - ள்.) இவர் - வீமனுந் துச்சாதனனும், எதிர் மலைந்த - எதிர்த்துச் செய்த, வெம் சமர்-கொடிய யுத்தத்தில், இப்படிக்கு - இவ்வாறு, இரிதல் இன்றி - நிலைகெடுதலில்லாமல், மொய்ம்பு உற - வலிமை பொருந்த, உத்தரிக்கஉம் - தாக்கிப்போர்செய்யவும், —உதரம் - வயிறும், நெஞ்சு - நெஞ்சும், உரம் - மார்பும், புயம் - தோள்களும், கழுத்து - கழுத்தும், என - என்று, உரை

செய் - சொல்லப்படுகிற, மெய் அங்கம் ஒன்றின்உம் - உடம்பின் உறுப்பு ஒன்றிலும், உற்று உறைத்தில - (கதைகள்) போய்ப் படவில்லை; கதைகளும்—, பிளந்து ஒடிபட்டு - பிளவுபட்டுஒடிந்து, எடுத்தன கர தலங்கள்உம் - (அக்கதைகளை) எடுத்தனவாகிய கைகளி னிடங்களும், கருகிசிவந்தன - கறுத்துச்சிவந்துவிட்டன; இவர் - இவர்கள், முதிர் சினம் கொளுந்தலின் - மிகுந்த கோபம் மூண்டதனால், முற்றுஉம் விட்டு - ஆயுதங்களையெல்லாம்ஒழித்து விட்டு, முட்டி யுத்தம்-முட்டியினாற்செய்கிற போரை, முரணுடன்-வலிமையோடு, தொடங்கினர்—; (எ-று.)—முஷ்டியுத்தம் - கைக் குத்துப்போர். பி - ம்: விட்டிலர். (242)

152. விரல்களைந்தையுஞ்செறியக்குவித்தொளி மிகுநகம்புதைந்திடவுட் புதைத்திரு, கரதலங்களுஞ்சிகரப்பொருப்பிடைகரியகொண்டன்மண்டுருமொத் திடித்திட,வருளுடன்சிறந்தறனுற்றகொற்றவனனுசனுந்தயங்குரகத்தனிக்கொடி, நிருபர்தம்பெருந்தகைமுற்கனிட்டனு நினைவுடன்கலந்தெதிர்குத்தியிட்டபின்.

இதுமுதல் நான்குகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) அருளுடன் - கருணையுடனே, சிறந்த அறன் - மேலான தருமமும், உற்ற - பொருந்திய, கொற்றவன் - வெற்றி யையுடைய யுதிட்டிரனது, அனுசன்உம் - உடன்பிறந்தவனாகிய வீமனும், தயங்கு-விளங்குகிற, தனி - ஒப்பற்ற, உரகம் கொடி - பாம்புக்கொடியையுடைய, நிருபர்தம் பெருந் தகை -அரசர்களுக் கெல்லாம் அரசனாகிய துரியோதனனது, முன் கனிட்டன்உம் - முதல்தம்பியாகிய துச்சாசனனும், நினைவு உடன் கலந்து-(தாம் தாம்வெல்லவேண்டுமென்ற) எண்ணத்துடனே (ஒருவரோடொரு வர்) கைகலந்து, விரல்கள் ஐந்தைஉம் செறிய குவித்து - ஐந்து விரல்களையும் ஒரு சேர நெருங்கும்படி மடக்கி, ஒளி மிகு நகம் புதைந்திட-ஒளிமிகுந்த நகம் பதியும்படி, உள் புதைத்து-நான்குவிரல்களினிடையே கட்டைவிரலை வைத்து, இரு கர தலங்கள்உம்-இரண்டுகைகளி னிடங்களாலும், சிகரம் பொருப் பிடை-சிகரங்களையுடைய மலையிலே, கரிய கொண்டல் - கறுத்த [நீர்கொண்ட] மேகம், மண்டு-கர்ச்சிக்கிற, உரும் ஒத்து-இடியைப் போன்று, இடித்திட-இடிக்கும்படி, எதிர் குத்தியிட்டபின்-எதிரே குத்தின பின்பு,—(எ - று.)—"தகர்த்து***கலக்கி" என்க.

சிறந்தறன் - அகரம் தொகுத்தல். அருள் அறத்திற்குக் காரணமாதலால், 'அருளுடன் சிறந்தறனுற்ற கொற்றவன்' என்றார். (243)

153. அனிலன்மைந்தனென்றுரைபெற்றகொற்றவ னரசன்முந்துதம்பியை மத்தகத்திடை, கனல்கொளுந்தமுந்ததிரத்தகர்த்திருகவுணெரிந்துவண்செவியுட் கரக்கவு, முனைசிதைந்துரம்பெறுபற்றெறிக்கவு மொழிகளுந்தளர்ந்தனமுற்ருளிக் கவு, மினலினுஞ்சிவந்தொளிபெற்றவற்புத விழிபிதுஙகவும்பெருகக்கலக்கியே.

(இ - ள்.) அனிலன் மைந்தன் என்று - வாயுகுமாரனென்று, உரைபெற்ற-பேர்பெற்ற, கொற்றவன்-வெற்றியையுடைய வீமன்,

அரசன் முந்து தம்பியை-துரியோதனனது முதல்தம்பியான துச்சாதனனை, மத்தகத்து இடை-தலையிலே, கனல்கொளுந்த-நெருப்புப்பொறி சிந்தவும், அதிர-அதிர்ச்சியடையவும், முந்து-முன்னே, தகர்த்து-குத்தி,—இருகவுள்-இரண்டுகன்னங்களும், நெரிந்து-நொருங்கி, வண் செவிஉள் கரக்கஉம்-அழகிய காதுகள் உள்ளே மறையவும், முனை சிதைந்து-நுனி ஒடிந்து, உரம்பெறுபல்தெறிக்கஉம்-வலிமைபெற்ற பற்கள் சிந்தவும், மொழிகள்உம்-சொற்களும், தளர்ந்தன-தளர்ச்சிபெற்றனவாகி, முற்றுஒளிக்கஉம் - முழுவதும் இல்லையாகி மறையவும், மினலின்உம் - மின்னலைக்காட்டிலும், சிவந்து-செம்மையாகி, ஒளி பெற்ற-ஒளியைப் பொருந்திய, அற்புதம் விழி-வியக்கத்தகுந்த கண்கள், பிதுங்கஉம்-வெளியிற் புறப்பட்டு விடவும், பெருக கலக்கி - மிகுதியாகக் கலங்கச்செய்து,—(எ - று.)—"திருப்பி" என்க. பி - ம்: கொளுந்தவந்து. ஒளிமிக்க.

154. **பதயுகங்களங்குலிதொட்டுறுப்புளபலவுமென்புடன்றசைபற்றுவிட்டற, விதவிதம்படும்புடைபட்டிடிப்புறவிசிநரம்புசந்துகளிற்றெறித்திட, மதுகையந்தடம்புயவெற்பறப்பலவரையுடன்பொருந்தியநற்கழுத்தற, முதுகிலுங்கவின் பெறவுற்பவித்தெனமுகனையும்புறந்திருகத்திருப்பியே.**

(இ - ள்.) பத யுகங்கள்-இரண்டு கால்களும், அங்குலி-விரல்களும், தொட்டு-தொடங்கி, உறுப்பு உள பலஉம் - உள்ள பல அவயவங்களும், என்புடன் தசை பற்று விட்டு - எலும்போடு சதைக்கு உள்ள சம்பந்த மொழிந்து, அற-அழியவும்,—வித விதம் படும் புடை பட்டு-பலவகைப்பட்ட குத்துப்பட்டு, இடிப்பு உற - இடிபடுதலால், விசி நரம்பு-கட்டுப்பட்ட நரம்பு, சந்துகளில்தெறித்திட-சந்துகளிலே சிந்திவிடவும்,—மதுகை - வலிமையையுடைய, அம்-அழகிய, தட-பெரிய, புயம் வெற்பு-மலைகள்போன்ற தோள்கள், அற-அறுபடவும்,—பல வரையுடன் பொருந்திய-பல இரேகைகளோடு கூடின, நல் கழுத்து-அழகிய கழுத்தும், அற - அறுபடவும், (முட்டியினுற் குத்தியபின்), முதுகிலும் கவின்பெற உற்பவித்து என-(முகம்) பின்புறத்திலும் அழகுபொருந்தத் தோன்றினுற்போல, முகனைஉம்-முகத்தையும், புறம்திருக-பின்னே திரும்பும்படி, திருப்பி—,—(எ - று.)—"பற்றியிட்டு...இழுத்து...ஒளிசிறந்தனன்" என்க. நல் கழுத்து - உத்தமவிலக்கணமமைந்த கழுத்து என்றுமாம். (245)

155. மயிரைவன்கரங்கொடுறப்பிடித்தெதிர் வரவிழுந்திடும்படிபற்றியிட்டுட,லயிர்படுங்கடுந்தரையிற்றுகட்பட வடியிரண்டினுஞ்சரியத்துகைத்தெழு,செயிருடன்பெருந்தொடைதொட்டிழுத்தணிதிகழுரம்பகுந்தவுணக்குலத்திறை, யுயிர்கவர்ந்தசிங்கமொடொப்புறத்தனதொளிசிறந்தனன்கடிதுக்கிரத்தொடே.

(இ - ள்.) கடிது உக்கிரத்தொடு-மிகுதியான கோபத்தோடு, மயிரை—, வல் கரம் கொடு உற பிடித்து-வலிய கைகளால் உறுதியாகப் பிடித்து, எதிர் வர விழுந்திடும்படி - எதிரிலே பொருந்த விழும்படி, பற்றி இட்டு - இழுத்துத்தள்ளி, உடல் - உடம்பை, அயிர் படும் கடு தரையில்-மணல்கள்பொருந்திய வலிய பூமியிலே,

துகள் பட-புழுதி படும்படி, அடி இரண்டின் உம் - இரண்டு கால்களாலும், சரிய துகைத்து-அழுந்த மிதித்து, எழு செயிருடன் - உண்டாகிற கோபாவேசத்துடனே, பெரு தொடை தொட்டு இழுத்து-பெரிய தொடைகளைப் பிடித்து இழுத்து, அணி திகழ் உரம் பகுந்து-அழகு விளங்குகிற மார்பைப் பிளந்து, அவுணர் குலத்து இறை-அசுரர்கூட்டத்துக்குத் தலைவனான இரணியனது, உயிர்-உயிரை, கவர்ந்த-கொள்ளைகொண்ட, சிங்கமொடு - நரசிங்க மூர்த்தியோடு, ஒப்பு உற-ஒக்கும்படி, தனது ஒளி சிறந்தனன் - தன்னுடைய ஒளி மிகுந்தான்; (எ - று.)—பி-ம்: மயிர்கரங்கள் கொண்டிறுகப்பிடித்து. (246)

156.—துச்சாதனன்குருதிப்புனலில் வீமன் நீராடுதல்.

உகிரெனும்பெரும்பெயர்பெற்றசொட்டைகளுருவியெங்கணும்புதைபட்டுரத்தலம்
வகிரவுங்கொடுங்குடர்வட்டமற்றுகுவயிறுதொங்கவுங்கிழிவித்தபிற்செறி
துகிருடைந்தசெம்பவரொத்தநெட்டுடல்சொரிதருஞ்செழுங்குருதிப்பெருக்கிடை
பகிரதன்றருங்கடவுட்டுறைப்புனல்படியுமும்பர்தம்பரிசிற்குளிக்கவே.

இதுவும் மேற்கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) உகிர் எனும் பெரு பெயர் பெற்ற - நகமென்னும் பெரிய பெயரைப் பெற்ற, சொட்டைகள் - ஆயுதங்கள், உருவி - ஊடுருவி, எங்கண் உம்-(உடம்பு) முழுவதும், புதைபட்டு-அழுந்துதலால், உரம் தலம் வகிர உம் - மார்பினிடம் பிளவுபடவும்,—கொடு குடர் வட்டம் அற்று - கொடிய குடலின் சுற்று அறுபட்டு, உகு வயிறு தொங்க உம் - விழுகிற வயிறு தொங்கும்படியாகவும், கிழிவித்தபின் - கிழியச்செய்தபின்பு, செறி துகிர் உடைந்த செம் பவர் ஒத்த - சிறந்த பவழம் பிளந்த இடத்துள்ள சிவந்த நிறத்தைப் போன்ற, நெடு உடல் சொரிதரும் செழு குருதி பெருக்கிடை - பெரிய உடம்பினின்று வழிகிற செழுமையான இரத்த வெள்ளத்தில், பகிரதன் தரும்கடவுள் துறை புனல் - பகீரதனாற் (பூலோகத்துக்குக்) கொணரப்பட்ட தெய்வத்தன்மையையுடைய ஆகாசகங்காநதியின் நீர்த்துறையில், படியும் - நீராடுகிற, உம்பர் தம் பரிசின் - தேவர்களின் தன்மைபோல, குளிக்க - (அருவருப்பில்லாமல் மனமகிழ்ச்சியோடு விரும்பி) நீராடுமாறு,—(எ-று.)—"தருமனுக்கிளையோன்...ஏற்றுதலும்" என்க. பி-ம்: துகிர்பரந்த.

பகீரதன் - சூரியகுலத்துப் பேர்பெற்ற ஓர் அரசன்; இவன், கபிலமகாமுனிவரதுகோபத்தீக்கு இரையாய்ச் சாம்பரான தமது மூதாதையராகியசகரபுத்திரரறுபதினாயிரவரையும் நற்கதிபெறச் செய்யும்பொருட்டுப் பலவாயிரம் வருஷகாலம்பெருந்தவஞ்செய்து தேவலோகத்துஉள்ள கங்காநதியைப் பூமிக்குக் கொணர்ந்து அங்கிருந்து பாதாளத்துக்கு அழைத்துக்கொண்டு போய் அதன் நீரினால் அவர்கள்சாம்பலை நனைத்தானென்பது, கதை. (247)

வேறு.

157.—அப்போது துரியோதனன்சேனை வென்னிடல்.

மன்னற் கிளையோனை வாட்டரும னுக்கிளையோன்
றுன்னிப் பிளந்து சுரருலக மேற்றுதலுங்
கன்னற்கு மற்றுள்ள காவலர்க்கு நில்லாமல்
வென்னிட்ட தம்மன்னன் வீரப் பெருஞ்சேனை.

(இ - ள்.) மன்னற்கு இளையோனை-துரியோதனன் தம்பியை, வாள் தருமனுக்கு இளையோன் - ஒளியையுடைய தருமனது தம்பி, துன்னி - நெருங்கி, பிளந்து—, சுரர் உலகம் ஏற்றுதலும் - தேவலோகத்தை யடையச் செய்தவளவில்,—அ மன்னன் - அத் துரியோதனனது, வீரம் பெருசேனை-வீரத்தன்மையையுடைய பெரிய சேனையானது, கன்னற்குஉம் - (சேனாபதியான) கர்ணனுக்கும், மற்று உள்ள காவலர்க்குஉம் - மற்றுமுள்ள அரசர்களுக்கும், நில்லாமல் - (தடுக்கவுந்) தடைப்பட்டுநிற்காமல், வென் இட்டது - முதுகுகொடுத்து ஓடிற்று; (எ - று.)

இதுமுதல் இருபத்தொருகவிகள்-பெரும்பாலும் வெண்டளையால் வந்த நாற்சீர் நான்கடிக்கொச்சகக்கலிப்பாக்கள். (248)

158.—வீமன் துச்சாதனனைக் கொன்றது கண்டு க்ருஷ்ணார்ச்சுனர் முதலோர் உடன்கூடுதல்.

வண்டாரவாரமருதநறும்பூந்துளபத்
தண்டார்முடியோனும்விற்கைத்தனஞ்சயனுங்
கண்டாரவர்முதலாங்காவலருங்கைகலந்தார்
வெண்டாரகைபரந்தவிண்ணொத்ததாகவமே.

(இ - ள்.) வண்டு ஆரவாரம் அருத - வண்டுகளின் பேரொலி நீங்காத, நறு - வாசனைவீசுகிற, பூ - அழகிய, தண் - குளிர்ந்த, துளபம் - திருத்துழாயினாலாகிய, தார் - மாலையையுடைய, முடியோன்உம் - முடியையுடையகண்ணனும், வில் கை தனஞ்சயன் உம்-வில்லைப்பிடித்த கையையுடையஅருச்சுனனும், அவர் முதல் ஆம் காவலர்உம் - அவர்முதலிய அரசர்களும், கண்டார் -(வீமன் துச்சாதனனைக் கொன்றதைப்)பார்த்து, கைகலந்தார்-உடன் கூடினாராக, ஆகவம்-(பாண்டவசேனை நின்ற)போர்க்களம்,வெண் தாரகை பரந்த விண் - வெண்மையான நட்சத்திரங்கள் பரவிய ஆகாயத்தை, ஒத்தது—; (எ - று.)

கைகலந்தார் என்பது முற்றெச்சமாய், கைகலக்க வென்னும் பொருள் தந்து நின்றது; இதனை முற்றாகவேகொண்டு பொருளுரைத்தால், ஏகவாக்கியமாகாது பின்னவாக்கியமாகும். (249)

159.—வீமன் திரௌபதி கூந்தலைப்பற்றிவை இவையென்று மீண்டுந் துச்சாதனன் கைவிரல்பத்தையுந் துணித்தல்.

வேகமிகுஞ்செந்தீயின்மேனுளவதரித்த
தோகைகுழலுந்துகிலிமுடன்றெட்டனவென்

ஆகமுறப்பிளந்தவாண்டகைமீண்டவ்வீரன்
பாகமுறுகைவிரல்கள்பத்துந்துணித்தானே.

(இ - ள்.) ஆகம் உற பிறந்த - துச்சாசனனுடம்பை நன்றாகக் கீண்ட, ஆண் தகை - ஆண்மைக்குணமுள்ள வீமன், அ வீரன் - வீரனாகிய அத்துச்சாசனனது, பாகம் உறு கை விரல்கள் பத்து உம்-கூருகப்பொருந்திய கைகளின் பத்துவிரல்களையும், '(இவை), வேகம் மிகும் செம் தீயில் - உக்கிரத்தன்மை மிகுந்த செம்மையாகிய நெருப்பில், மேல் நாள் அவதரித்த - முன்னே பிறந்த, தோகை-மயில்போலுஞ் சாயலையுடைய திரௌபதியின், குழல் உம் - கூந்தலையும், துகில்உம் - சேலையையும், உடன் தொட்டன- ஒருங்கேதொட்ட குற்றமுடையவையாம்,' என்று-என்றுஎண்ணி, மீண்டு-மறுபடியும், துணித்தான் - தனித்தனி அறுத்தான்;

160.—துச்சாதனனிரத்தத்தை வீமன் குடிக்கப்புகக் கிருஷ்ணன் தடுத்தல்.

தண்ணீர்நிகரெனத்துச்சாதனன்றன்மெய்யிலிழி
புண்ணீர்பருகப்புகுவோனையாவருக்குங்
கண்ணீர்வரத்தடுத்தான்காணுங்காலெத்திறத்தும்
வெண்ணீர்மையில்லாதமேகந்தனைப்போல்வான்.

(இ - ள்.) காணுங்கால்-பார்க்குமிடத்தில், எ திறத்துஉம்- எல்லாவகையாலும், வெண் நீர்மை இல்லாத மேகந்தனை போல்வான் - வெண்ணிறமில்லாத [மிகக்கரிய] மேகத்தை ஒப்பவனாகிய கண்ணபிரான், துச்சாதனன் தன் மெய்யில் இழி புண்நீர்-துச்சாதனனுடம்பிலிருந்து வழிகிற இரத்தத்தை, தண் நீர் நிகர் என - குளிர்ந்த நீரை ஒக்கு மென்னும்படி, பருக புகுவோனை - குடிக்கத் தொடங்குகிற வீமனை, யாவருக்குஉம் கண் நீர் வர-எல்லோர்க்கும் (இரக்கத்தால் கண்களில்) நீர்வருவதை நோக்கி, தடுத்தான் - (குடிக்கவேண்டாமென்று) தடைசெய்தான்; (எ - று.)

கருநிறத்தாலும் கைம்மாறு கருதாது கருணைமழைபொழிதலாலும் காத்தற்றொழிலாலும் குளிர்ச்சியினாலும் ஒத்திருத்தலால், 'எத்திறத்தும் மேகந்தனைப் போல்வான்' என்றான். (251)

161.—துச்சாதனன்குருதியைக் கொப்பளித்து என்எண்ணம்முற்றியதென்று வீமன் கூத்தாடுதல்.

குடியாமலக்குருதிகொப்பளித்துவாகை
முடியாநின்றென்னெண்ணமுற்றினனென்றாங்கட்
படியாளுஞ்செங்கோன்மைப்பார்த்திவருக்கெல்லாங்
கொடியார்மடங்கலெனக்கூத்தாடிநின்றார்த்தான்.

(இ - ள்.) (வீமன்),—குடியாமல் அ குருதி கொப்பளித்து - (வாயிற்கொண்ட)அவ்விரத்தத்தை(க் கண்ணன்வார்த்தையினால்) பருகாமல் உமிழ்ந்துவிட்டு, வாகை முடியாநின்று - வெற்றிமாலையைச் சூட்டிக்கொண்டு நின்று, ஆங்கண் - அவ்விடத்திலுள்ள,

படி ஆளும் செங்கோன்மை-பூமியை ஆளுகிற அரசாட்சிமுறையின் தன்மையையுடைய, பார்த்திவருக்கு எல்லாம்-அரசர்களிடத்தெல்லாம், என் எண்ணம் முற்றினன் என்று-எனது நினைப்பை நிறைவேற்றினேனென்று சொல்லி, கொடி ஆர் மடங்கல் என-(தன்) கொடியிற் பொருந்திய சிங்கம்போல, கூத்தாடி நின்று ஆர்த்தான்-கூத்தாடிக்கொண்டு ஆரவாரித்து நின்றான்; (எ - று.)(252)

162.— துச்சாதனன் ஒன்பதுதம்பிமாரோடும் இறந்தமையை வீமன் கூறிச்செருக்குதல்.

துன்பமுறுந்துன்னீதித்துச்சாதனன்போர்செய்
தொன்பதின்மர்தம்பியரோடும்பரூர்புக்கானென்
றன்புடையதம்முனடிவீழ்ந்தகங்கரித்தான்
வன்புடையதாதையினுமிக்கவலியோனே.

(இ - ள்.) வன்பு உடைய - வலிமையையுடைய, தாதையின் உம்-தன் தந்தையாகிய வாயுவைப்பார்க்கிலும், மிக்க வலியோன்-மிகுந்த வலிமையையுடைய வீமன், 'துன்பம் உறும் - (பிறர்க்குத்) துன்பத்தைத் தருகிற, துன் னீதி - கெட்ட நியாயங்களையுடைய, துச்சாதனன்—, போர்செய்து—, ஒன்பதின்பர் தம்பியரோடு-ஒன்பதுபேர் தம்பிமாருடனே, உம்பர் ஊர்புக்கான் - தேவலோகத்தை அடைந்தான்,' என்று-என்றுசொல்லி, அன்பு உடைய தம் முன்-அன்பையுடைய தமையனாகிய தருமனது, அடி வீழ்ந்து-திருவடிகளில் (வந்து) விழுந்து [நமஸ்கரித்து], அகங்கரித்தான் - செருக்குக்கொண்டுகளித்தான்; (எ - று.)—துன்னீதி - அநியாயம்: துர்நீதியென்பதன்விகாரம்; சுநீதிஎன்பதன் எதிர்மொழி. (253)

163.—பாண்டவசேனை தருக்கியிருப்பதுகண்டும் கர்ணன் தன்சேனையோடு எதிர்க்காமல் வாளாவிருத்தல்.

பாண்டவர்கள்சேனைமதிகண்டபௌவமெனக்
காண்டவமன்றுண்டகனல்போனனிதருக்கி
மூண்டநிலைகண்டுமுதுகிடுதன்சேனையுடன்
மீண்டுமெதிரூன்றாமல்வெய்யோன்மகனின்றான்.

(இ - ள்.) வெய்யோன் மகன்-வெப்பத்தையுடைய சூரியனது குமாரனான கர்ணன், பாண்டவர்கள் சேனை—, மதி கண்ட பௌவம் என-பூர்ணசந்திரனைப் பார்த்த கடல்போலவும், அன்று காண்டவம் உண்ட கனல்போல்-அந்நாளிற் காண்டவவனத்தை உணவாகக்கொண்ட அக்கினிபோலவும், நனி தருக்கி-மிகவுஞ் செருக்குக்கொண்டு, மூண்ட நிலை-மேல்வந்த விதத்தை, கண்டுஉம் - பார்த்தும், முதுகு இடு-புறங்கொடுத்துப்போகிற, தன் சேனையுடன் - தனது சேனையுடனே, மீண்டுஉம் எதிர் ஊன்றாமல்-மீளவும் எதிரே சென்று போர்செய்யாமல், நின்றான்-வாளாவிருந்தான்; (எ - று.)

164.—வாளாவிருந்ததற்குக் கர்ணனைப்பழித்துக்கூறிச் சல்லியன் தேரைச் செலுத்துதல்.

மேல்கொண்டுபாண்டவர்தம்வெஞ்சேனைசூழ்ந்திடவு
மால்கொண்டவர்போலமாண்டாயெனக்கழறிக்
கால்கொண்டதிண்டேர்கடாவினன்கையுளவு
கோல்கொண்டான்கன்னனுமக்கூற்றுக்கெதிர்கூறும்.

(இ - ள்.) கை உளவுகோல் கொண்டான் - கையிற் குதிரை யோட்டுங் கோலைக்கொண்ட சாரதியாகிய சல்லியன்,—(கன்னனை நோக்கி), 'வெம்-கொடிய, பாண்டவர் தம் சேனை—, மேல்கொண்டு-மேலேவந்து, சூழ்ந்திட உம்-சுற்றிக்கொள்ளவும், (எதிர்செல்லாமல்), மால் கொண்டவர் போல - மயக்கங்கொண்டவர்கள்போல, மாண்டாய்-(வலி) அழிந்தாய்', என கழறி-என்று இடித்துச்சொல்லி,—கால் கொண்ட திண் தேர் - சக்கரங்களைக்கொண்ட வலிய தேரை, கடாவினன்-செலுத்தினன்; கன்னனும்—, அ கூற்றுக்கு எதிர் கூறும்-அச்சல்லியனது வார்த்தைக்கு உத்தரஞ்சொல்லுவானாயி னன்; (எ - று.)—அதை மேற்கவியிற் கூறுகின்றார். கூற்று-கூறப் படுவது: சொல். மாண்டாய், மாள்-பகுதி. (255)

165.—கர்ணன் 'துச்சாதனனிறந்த சோகத்தாலிருந்த நிலை இது' என்று சமாதானங் கூறுதல்.

வேந்தனனையவிறற்றம்பிவீமன்கை
மாய்ந்தநிலைகண்டுமனந்தளர்ந்ததல்லாது
கூர்ந்ததிறன்மந்திரத்தார்கோவேவெருவுமோ
பாந்தளெதிர்செல்லப்பறவைக்கரசென்றான்.

(இ - ள்.) 'கூர்ந்த திறல்-மிகுந்தவலிமையையுடைய, மத்திரத் தார் கோவே-மத்திரநாட்டார்க்கு அரசனான சல்லியனே! வேந்தன் அனைய-துரியோதனனைப்போன்ற, விறல் தம்பி-வலிமையையுடைய அவன் தம்பியாகிய துச்சாதனன், வீமன் கை-வீமனது கையினால், மாய்ந்த நிலை - இறந்தநிலையை, கண்டு-பார்த்து, மனம் தளர்ந்தது அல்லாது - (யான்) மனத்தளர்ச்சிபெற்றதே யல்லாமல், பற வைக்கு அரசு-பக்ஷிராஜனான கருடன், பாந்தள் எதிர் செல்ல - பாம்புக்கு எதிரேபோவதற்கு, வெருவும்ஓ-அஞ்சுமோ?' என்றான்- என்றுசொன்னான்; (எ - று.)

யான் பகைவர் முன்னே செல்லுதற்குச் சிறிதும் அஞ்ச மாட்டே னென்பது தோன்ற நின்றமையால், பின்னிரண்டடி **பிறிதுமொழிதல்** *என்னும் அணி.* (256)

166.—கர்ணன் முதுகிட்டோரையும் துரியோதனனையும் பேரணியாக்கிப் பகைவரை எதிர்த்தல்.

முன்னமமரின்முதுகிட்டமன்னரையு
மன்னவர்கண்மன்னனையும்வன்பேரணியாக்கிப்

பொன்னசலம்போலும்புனைபொற்கொடிநெடுந்தேர்க்
கன்னனெதிரூன்றினன்காயுங்கனல்போல்வான்.

(இ-ள்.) (என்றுசொல்லி), காயும் கனல் போல்வான் - கொதிக்கிற நெருப்புப்போன்ற கோபமுள்ளவனாகிய, பொன் அசலம் போலும் - பொன்மலையாகியமேருபோன்ற, புனை-அழகிய, பொன்-பொன்னாலாகிய, கொடி நெடு தேர் - கொடியையுடைய பெரியதேரையுடைய, கன்னன்—,—முன்னம்-முன்னே, அமரில்-போரில், முதுகு இட்ட-புறங்கொடுத்த, மன்னரைஉம்-அரசர்களை யும், மன்னவர்கள் மன்னனைஉம் - இராசராசனான துரியோதனனை யும், வல் பேர் அணி ஆக்கி - வலிய பெரிய படையாக வகுத்து, எதிர் ஊன்றினன் - எதிர்த்துச் சென்றான்; (எ - று.) (257)

167.—த்ருஷ்டத்யும்நனும் தம்பக்கத்தவரை அணிவகுத்து எதிரே செல்லுதல்.

சேனாபதியானதேர்த்துருபதேயனும்வான்
மீனாமெனப்பரந்தவேந்தருடனேதனக்குத்
தானாண்மைக்கொப்பாந்தருமனையுஞ்சேனையையு
மாநாகமுட்கவகுத்தாங்கெதிர்நடந்தான்.

(இ - ள்.) சேனா பதி ஆன-(பாண்டவ)சேனைத்தலைவனான, தேர் துருபதேயன்உம் - தேரையுடைய துருபதராஜகுமாரனான திட்டத்துய்மனும், ஆங்கு-அப்பொழுது, வான் மீன் ஆம் என பரந்த - ஆகாயத்தில் விளங்குகிற நட்சத்திரங்கள்போலப்பரவிய, வேந்தருடனே-அரசர்களோடு, தனக்கு தான் ஆண்மைக்கு ஒப்பு ஆம்-பராக்கிரமத்தில் தனக்குத் தானே உவமையாகிய, தருமனை உம்-உதிட்டிரனையும், சேனையையும்—, மா நாகம் உட்க - (உலகத்தைத் தாங்குகிற) மகாநாகங்களும் (பாரமிகுதியால்) அஞ்சும்படி, வகுத்து - படைவகுத்து, எதிர் நடந்தான்-எதிரே சென்றான்; (எ - று.)—மின்னுவது மீன் எனக் காரணப்பெயர். (258)

168.—பறையோசைமிகுதியும் ஆபரணங்களினொளி மிகுதியும்.

பொன்னார்முரசமுதற்போர்வெம்பணையாலும்
வின்னாணொலியாலும்விண்ணோர்செவிடுபடப்
பன்னாமபேதப்படையொளியாலும்பலபூண்
மின்னாலுங்கண்கள்வெறியோடிவிட்டனவே.

(இ-ள்.) பொன் ஆர் - அழகுபொருந்திய, முரசம் முதல் - பேரிகை முதலான, போர் வெம் பணையால்உம் - போருக்குரிய கொடிய வாச்சியங்களின் பேரொலியாலும், வில் நாண் ஒலியால் உம் - வில்லின் நாணியின் டங்காரத்தொனி மிகுதியாலும், விண்ணோர் - தேவர்களும், செவிடுபட - செவிடாய்விட,—பல் நாம பேதம் படை ஒளியால்உம் -பலவகைப்பட்ட பெயர்களையுடைய ஆயுதங்களின் ஒளியினாலும், பல பூண் மின்னால்உம்-பலவகை ஆபரணங்களின் ஒளியாலும், கண்கள் வெறியோடிவிட்டன - (தேவர்கள்) கண்களுந் திகைப்படைந்துவிட்டன; (எ - று.)

'விண்ணோர்' என்பதைக் கண்களோடுங் கூட்டுக. விண்ணுலகத்தவர் தன்மை கூறவே, மண்ணுலகத்தவர் தன்மை தானே பெறப்படும். வெறியோடி விடுதல்-ஒளிமிகுதியால் ஒளியிழத்தல்.

169.—ஐந்துகவிகள்-கர்ணன்மகனான விடசேனன் நகுலனுடன்பொருது அவனை மூர்ச்சித்துவிழச்செய்ததைக் கூறும்.

யாமினியிலெவ்வுயிர்க்குமேற்றதுயின்மாற்றுவோன்
மாமதலைகோமதலைமான்றேர்விடசேன
னுமமணித்தேர்மேனகுலன்மேற்சென்றுசில
தாமமுனைவாளிதழற்பொறிபோற்சிந்தினனே.

(இ - ள்.) யாமினியில்-இராத்திரியில், எ உயிர்க்குஉம்-எல்லாவுயிர்களுக்கும், ஏற்ற - பொருந்திய, துயில் - தூக்கத்தை, மாற்றுவோன் - (தான் உதித்து) ஒழிப்பவனாகிய சூரியனது, மா மதலை-சிறந்த குமாரனான கர்ணனது, கோ மதலை - தலைமையான புத்திரனாகிய, மான் தேர் விடசேனன் - குதிரைகளைப்பூட்டிய தேரையுடைய விருஷசேனனென்பவன்,—நாம மணிதேர்மேல் - அச்சத்தைத்தருகிற மணிகளைக்கட்டிய தேரின்மேல், சென்று - போய், நகுலன்மேல்—, தாமம்-ஒளியையும், முனை-கூர்மையையுமுடைய, சில வாளி - சில அம்புகளை, தழல் பொறி போல் - நெருப்புப் பொறிகளைப்போல, சிந்தினன் - இறைத்தான்; (எ - று.)—யாமினி-(மூன்று)யாமங்களை யுடையது எனக் காரணப்பெயர்.

170. வெம்புரவித்திண்டேர்விசயற்கிளையோனுஞ்
செம்பதுமக்கையிற்சிலைநாணொலியெழுப்பிக்
கம்பமதமால்யானைக்கன்னன்மகனேவியகூ
ரம்படையவம்பாலறுத்தறுத்துவீழ்த்தினனே.

(இ - ள்.) வெம் புரவி - கொடிய குதிரைகளைப் பூட்டிய, திண் தேர் - வலிய தேரையுடைய, விசயற்கு இளையோன்உம் - அருச்சுனன் தம்பியாகிய நகுலனும், செம் பதுமம் கையில் - செந்தாமரைமலர்போன்ற கையிற்பிடித்த, சிலை - வில்லினது, நாண் - நாணியின், ஒலி-தொனியை, எழுப்பி-உண்டாகச்செய்து, கம்பம்-கம்பத்திற் கட்டப்படுகிற,மதம் மால்-மதமயக்கத்தையுடைய,யானை -யானைபோன்ற, கன்னன் மகன்-(கர்ணனது) குமாரனான விடசேனன், ஏவிய-தொடுத்த, கூர் அம்பு அடைய - கூர்மையையுடைய அம்புகளை யெல்லாம், அம்பால்-(தன்) அம்புகளினால், அறுத்து அறுத்து வீழ்த்தினன்-துணித்துத்துணித்துக் கீழே தள்ளினான்;

171. அண்டர்பெருமானுக்கம்பொற்கவசமுடன்
குண்டலமுமீந்தோன்குமரன்கொடுங்கணையான்
மண்டுகனலருந்தவன்காண்டவமெரித்த
திண்டிறலோன்றம்பிதடந்தேர்க்கால்களையழித்தான்.

(இ - ள்.) அண்டர்பெருமானுக்கு-தேவர்களுக்குத்தலைவனான இந்திரனுக்கு, அம் பொன் கவசமுடன்-அழகிய பொன்னாலாகிய கவசத்தோடு, குண்டலம்உம்-குண்டலங்களையும், ஈந்தோன்-தானஞ்

செய்த கர்ணனது, குமரன் - குமாரனாகிய விருஷசேனன், கொடு கணையால்-(தனது) கொடுமையான அம்புகளால், மண்டு கனல் அருந்த-எரிகின்ற நெருப்பு உண்ணும்படி, வல் காண்டவம்-வலிய காண்டவவனத்தை, எரித்த-தகிக்கச்செய்த, திண் திறலோன் - வலிய பராக்கிரமத்தையுடைய அருச்சுனனது, தம்பி - தம்பியான நகுலனுடைய, தட தேர் கால்களை-பெரிய தேரின் சக்கரங்களை, அழித்தான்-அழியச்செய்தான்; (எ-று.) (262)

172. மற்றொருதேரேறிமருத்துவர்தம்மைந்தனுமக்
கொற்றநெடுங்கச்சைக்கொடியோன்றிருமைந்தன்
வெற்றிவிலோதனமும்வெஞ்சாபமுமுடனே
யற்றுவிழவெய்தானவனாண்மைக்காரெதிரே.

(இ - ள்.) மருத்துவர் தம் மைந்தன்உம்-அசுவினீதேவர்களது மகனான நகுலனும், மற்று ஒரு தேர் ஏறி-வேறொருதேரில் ஏறிக் கொண்டு, கொற்றம்-வெற்றிக்கு அடையாளமான, நெடு - நீண்ட, கச்சை கொடியோன்-கச்சையினுருவத்தை யெழுதிய கொடியை யுடைய கர்ணனது, அ திரு மைந்தன் - மேன்மையான மகனாகிய அவ்விடசேனனது, வெற்றி விலோதனம்உம்-ஜயத்துக்கு அடையாளமான கொடியும், வெம் சாபம்உம்-கொடியவில்லும், உடனே அற்று விழ-விரைவிலே அறுபட்டு விழும்படி, எய்தான்-அம்பெய் தான்; அவன் ஆண்மைக்கு ஆர் எதிர்-அந்நகுலனது பராக்கிரமத் திற்கு எவர் தாம் எதிராவார்? (எ - று.)—எவரும் எதிராகாரென் றபடி.

மருத்துவர்-மருந்தை அறிந்தவர்: வைத்தியர் என்றபடி; இவர், தேவ வைத்தியர். கச்சை-கக்ஷ்யா: யானையின் வயிற்றிற் கட்டுங் கயிறு. (263)

173. மீண்டவனும்வேறொருவின்மேருவெனவாங்கிப்
பாண்டவனைவீழும்படியெய்தான்வீழ்ந்தோனை
மூண்டவனற்செங்கண்முரண்வீமன்கொண்டேகக்
காண்டவநீறாக்கினான்கண்டானவன்போரே.

(இ - ள்.) அவன்உம்-விடசேனனும், மீண்டு-மீளவும், வேறு ஒரு வில்-மற்றொரு வில்லை, மேரு என - மேருமலையைப்போல, வாங்கி-எடுத்து வளைத்து, பாண்டவனை-நகுலனை, வீழும்படி-(மூர்ச் சித்துக் கீழே) விழும்படி, எய்தான்-அம்பெய்தான்; வீழ்ந்தோனை- (அங்ஙனம்) விழுந்த நகுலனை, அனல் மூண்ட - நெருப்புப்பொறி எழும்பப்பெற்ற, செம் கண்-(கோபத்தாற்) சிவந்த கண்களையும், முரண்-வலிமையையு முடைய, வீமன்—, கொண்டு ஏக-எடுத்துக் கொண்டு போக, (அப்பொழுது), காண்டவம் நீறு ஆக்கினான் - காண்டவவனத்தைச் சாம்பலாக்கின அருச்சுனன், அவன் போர்- அவ்விடசேனனது போரை, கண்டான்—; (எ - று.)

பாண்டவன் - பொதுப்பெயர் இங்குச் சிறப்பாய் நின்றது.

174.—விடசேனனது ஆண்மைகண்டு அருச்சுனன் அவனைக் கொல்லுமாறு செல்லுதல்.

நன்றாண்டிகழ்மதியாநாகம்பருமத்தா
வன்றூண்டிரைமதியாவண்டர்க்கமுதளித்தோன்
முன்றூண்டியதேரிற்சென்ருன்முனைவாளி
மின்றூண்டில்வீசிவிடசேனமீன்படுப்பான்.

(இ - ள்.) திகழ் மதி-விளங்குகிற சந்திரன், நல் தூண் ஆ- நல்லதூணாகவும், நாகம்-(மந்தர மென்னும்) மலை, பரு மத்து ஆ - பருத்த மத்தாகவும், திரை-அலைகளையுடைய பாற்கடலை, மதியா-கடைந்து, அன்று-அந்நாளில், அண்டர்க்கு-தேவர்களுக்கு, அமுது -அமிர்தத்தை, ஊண்-உணவாக, அளித்தோன் - கொடுத்தருளின கண்ணன், முன் தூண்டிய-முன்னே நின்று செலுத்தப்பெற்ற, தேரில்-தேரிலே, (அருச்சுனனாகிய வலைஞன்), முனை வாளி-கூர்மையையுடைய அம்பாகிய, மின் தூண்டில் - விளங்குகிற தூண்டிலை, வீசி-எறிந்து, விடசேனன் மீன்-விடசேனனாகிய மீனை, படுப்பான்-அகப்படுத்திக் கொல்லும்பொருட்டு, சென்ருன்—; (எ - று.)

"மத்து மந்தரம் வாசுகி கடைகயி றடைதூண், மெத்து சந்திரன்" என்ருர், கம்பரும். தூண்டில் - மீன்பிடிக்குங் கருவியிலொன்று. விடசேனமீன்-உயர்திணையீறு விகாரமாயிற்று. அம்பைத் தூண்டிலாகவும் விடசேனனைமீனாகவும் உருவகப்படுத்தினதற்கு ஏற்ப, அருச்சுனனை 'வலைஞன்' என்னுமையால், ஏகதேசவுருவகவணி. ஊண் திரை யென்றேஎடுத்து - உணவுக்குரியபாற்கடற்றிரை யெனினுமாம். மீனைக் கூறியது துள்ளுந்தன்மைக்கேற்ப.

175.—விடசேனன் கடுமையாகப் பொருதல்.

தம்பிபடுந்துன்பந்தமையனையுங்காண்பனென
வெம்பியெதிர்சென்றுவிடசேனன்வில்வாங்கிப்
பம்பிவருகொடித்தேர்ப்பார்த்தனையும்பாகனையு
மம்பின்மறைத்தானடலேறரியனையான்.

(இ - ள்.) அடல் - வலிமையையுடைய, அரி ஏறு - ஆண்சிங்கத்தை, அனையான் - ஒத்தவனாகிய, விடசேனன்—, 'தம்பி படும் துன்பம் - தம்பியாகிய நகுலன் அடைந்த துன்பத்தை, தமையனை உம் காண்பன்-தமையனாகிய அருச்சுனனையும் அடையும்படி செய்வேன்', என - என்றுஎண்ணி, வெம்பி - கோபித்து, எதிர் சென்று - எதிரே போய், வில் வாங்கி - வில்லை வளைத்து,—பம்பி வரு - நெருங்கி வருகிற, கொடி தேர் - அனுமக்கொடியைக் கொண்ட தேரையுடைய, பார்த்தனை உம் - அருச்சுனனையும், பாகனை உம் - அவன் சாரதியான கண்ணனையும், அம்பின் - அம்புகளினால், மறைத்தான்—; (எ - று.)

கீழ் நகுலனை மூர்ச்சித்து விழும்படி செய்ததுபோலவே இப்போது அருச்சுனனையும் விழச்செய்வேன் என்பது முதலடிக்குக்

கருத்து. பார்த்தன் - பிரதையின்மகன்; பிரதை - குந்தி: இது, இங்கே அருச்சுனனுக்குக் காரணவிடுகுறிப்பெயர். (266)

176.—அருச்சுனன் விடசேனனை அம்பினாலறுத்திடுதல்.

வின்னாணும்விற்பிடித்தவெவ்விரலும்வின்னடுவு
முன்னானதும்பைமுடித்தோன்முடித்தலையும்
பின்னாகவாங்கும்பிறையம்பும்பேரமரி
லொன்னார்முனைதடிந்தோனோரம்பினாலறுத்தான்.

(இ - ள்.) பேர் அமரில் - பெரிய யுத்தத்தில், ஒன்னார் - பகைவர்களது, முனை - போரை, தடிந்தோன் - அழித்தவனாகிய அருச்சுனன்,—முன் ஆன - எதிரிலே வந்த, தும்பை முடித்தோன் - (போர்மாலையாகிய) தும்பையைச்சூடின விடசேனனது, பின் ஆக வாங்கும் பிறை அம்புஉம் - (தான்) பின்னிடும்படி எடுத்துவிடுகிற அர்த்தசந்திரபாணங்களையும், வில் நாண்உம் - வில்லின் நாணியையும், வில் பிடித்த வெம் விரல்உம் - வில்லைப்பிடித்தகொடிய விரலையும், வில் நடுஉம் - வில்லின் நடுவிடத்தையும், முடி தலைஉம் - கிரீடத்தையுடையதலையையும், ஓர் அம்பினால் அறுத்தான்—; (எ - று.) (267)

177.—விடசேனன் வீழவே
எஞ்சியவர் கர்ணன் தேர்க்காலைச் சூழ்தல்.

வீழ்ந்தான் விடசேனன் வீரரெல்லாம் வெஞ்சமரிற்
றாழ்ந்தார் புறங்கொடுத்தார் தந்தைதடந் தேர்க்காலைச்
சூழ்ந்தார் சிலவீரர் தோலா தெதிர்நடந்து
வாழ்ந்தார் சுரராகி வான்மாதர் மெய்கலந்தே.

(இ - ள்.) விடசேனன்—, வீழ்ந்தான் - இறந்துவிழுந்தான்; (அதனால்), வீரர்எல்லாம் - கௌரவசேனைவீரர்யாவரும், வெம் சமரில் - கொடிய போரில், தாழ்ந்தார் - தோற்று, புறம் கொடுத்தார் - முதுகிட்டுப் போய், தந்தை தட தேர் காலை - (தமது சேனாபதியாகிய) அவன்தந்தையான கர்ணனது பெரிய தேரின் சக்கரத்தை, சூழ்ந்தார் - சுற்றிக்கொண்டார்கள்; சிலவீரர்—, தோலாது-தோற்காமல், எதிர் நடந்து - எதிரே சென்று பொருது, சுரர் ஆகி - தேவர்களாய், வான் மாதர் மெய் கலந்து-தேவலோகத்துப் பெண்களது உடம்பைத் தழுவி, வாழ்ந்தார் - (வீரசுவர்க்கத்தில்) வாழ்ந்தார்கள்; (எ - று.)—பி - ம்: வேந்தரெலாம். (268)

வேறு.

178.—கர்ணன்புத்திரசோகத்தால் மூர்ச்சித்துவிழ, சல்லியன்தேற்றுதலும்
அசுவத்தாமன் துரியோதனனிடைச் செல்லுதலும்.

சாய்ந்த னன்களத் தருச்சுனன் சரத்தினாற் றனயனென் றவற்றந்த
வேந்த னுங்கருத் தழிந்துதன் றேர்மிசை வீழ்ந்தன னவன்பொற்றே
ரூர்ந்த சல்லியன் றேற்றினன் பற்பல வுரைகளா லவ்வெல்லைப்
பாந்த ளங்கொடிப் பார்த்திவ னின்றுழிச் சென்றனன் பரித்தாமன்.

(இ - ள்.) அருச்சுனன் சரத்தினல்-அருச்சுனனது பாணங்களால், தனயன் - தன்மகனான விடசேனன், களத்து - போர்க்களத்தில், சாய்ந்தனன் - இறந்துவீழ்ந்தான், என்று—, அவன் தந்த வேந்தன்உம் - அவனைப் பெற்ற அரசனான கர்ணனும், கருத்து அழிந்து - மனஞ் சிதைந்து, தன் தேர்மிசை வீழ்ந்தனன் - தனது தேரில் மூர்ச்சித்துவிழுந்தான்; அவன் பொன் தேர் ஊர்ந்த - அவனது அழகிய தேரை ஓட்டுகிற, சல்லியன்—, பல் பல உரைகளால் - பலபலவார்த்தைகளினால், தேற்றினன் - (அவனைச்) சமாதானப் படுத்தினான்; அ எல்லை - அப்பொழுது, பரித்தாமன் - அசுவத்தாமா, பாந்தள் அம் கொடி - அழகிய பாம்புக்கொடியையுடைய, பார்த்திவன் - துரியோதனன், நின்ற உழி - நின்றவிடத்துக்கு, சென்றனன் - போனான்; (எ - று.)—அவற் றந்த-ஐயுருபு உயர் திணையில்தொக விகாரமாயிற்று. நின்றுழி-விகாரம்.

இதுமுதற் பதின்மூன்றுகவிகள் - பெரும்பாலும் முதற்சீர் மாச்சீரும், ஈற்றுச்சீர் காய்ச்சீரும், மற்றைநான்கும் விளச்சீர்களு மாகிய அறுசீராசிரியவிருத்தங்கள். (269)

179.—இதுமுதல் மூன்றுகவிகள்-பலரும்இறந்தமையால் இப்போதாவதுசமாதானப்பட்டு வாழ்வது உத்தமமெனத் துரியோதனனிடம் அசுவத்தாமன் கூறுதலைத் தெரிவிக்கும்.

தப்பருஞ்சமர்விளைத்தனிர்நீயுமத்தருமன்மைந்தனுமென்றே
மெய்ப்பெரும்புகழ்புனைகுருகுலத்திடைவீடுமன்முதலான
வெப்பெருந்திறற்குரவருங்கிளைஞருமேனைமன்னரும்யாரு
மொப்பரும்பெருஞ்சாதுரங்கத்துடனுடன்றுயிர்மாய்ந்தாரே.

(இ - ள்.) நீயும்—, அ தருமன் மைந்தன்உம் - அத்தருமபுத்திரனும், தப்பு அரு சமர் - ஒழிதலில்லாத போரை, விளைத்தனிர் - செய்யத்தொடங்கினீர்கள், என்றே - என்கிறகாரணத்தினாலேயே, மெய் பெரும் புகழ் - உண்மையான பெரிய கீர்த்தியை, புனை - பொருந்திய, குருகுலத்திடை-குருவம்சத்தில் தோன்றிய, வீடுமன் முதல் ஆன - பீஷ்மர் முதலாகிய, பெரு திறல் - மிக்க வல்லமையையுடைய, எ குரவர்உம் - எல்லாப் பெரியோர்களும், கிளைஞர்உம் - பந்துக்களும், ஏனை மன்னர்உம் - மற்றை அரசர்களும், யார்உம் - எல்லோரும், ஒப்பு அரு - உவமையில்லாத, பெரு - பெரிய, சாதுரங்கத்துடன் - சதுரங்கசேனையோடும், உடன்று - போர்செய்து, உயிர்மாய்ந்தார் - உயிர்நீங்கினார்; (எ - று.) (270)

180. வளையிலாதனமங்கலவிழவுநல்வரம்பிலாமரபுந்தொல்
விளைவிலாவரும்புலமுமுத்தீயிலாவேதியர்மனைவாழ்வுந்
துளையிலாமணிமுத்துமந்தண்புனற்றுறையிலாவளநாடுங்
கிளையிலாவரசியற்கையுநன்றெனக்கேட்டறிகுவதுண்டோ.

(இ - ள்.) வளை இலாதன-சங்கினொலி யில்லாதனவாகிய, மங்கலவிழவு உம் - மங்கலச்சடங்குகளும், நல் வரம்பு இலா - நல்லொழுக்கமில்லாத, மரபு உம் - குலமும், தொல் விளைவு இலா - தொன்றுதொட்டுவருகிற விளைதலில்லாத, அரு புலம்உம் -

அரிய கழனியும், முத்தீ இலா-மூன்று அக்கினியில்லாத,வேதியர் மனை வாழ்வுஉம் - பிராமணர்களது இல்வாழ்க்கையும், துளை இலா - துவாரமில்லாத, மணி முத்துஉம்-அழகிய முத்தும், அம் தண் புனல் துறை இலா-அழகிய குளிர்ந்த நீர்த்துறை யில்லாத, வளம் நாடுஉம் - அழகிய தேசமும், கிளை இலா - பந்துக்க ளில்லாத, அரசு இயற்கைஉம் - அரசாட்சியின் தன்மையும், நன்று என - (தனித்தனி) நல்ல தென்று, கேட்டு அறிகுவது உண்டோ—? (எ - று.)—கேட்டு அறிவதில்லை யென்றபடி.

வளை - மற்ற மங்கலவாத்தியங்களுக்கும் உபலட்சணம். முத்தீ - ஆகவநீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்நி என்பன. புனல்துறை - ஆறு முதலியன; "ஆறில்லா ஊருக் கழகுபாழ்" என்றார், ஔவையாரும். வளையில்லாத மங்கல விழவு முதலியன போலக் கிளையில்லாத அரசியற்கை நன்றன் றென்றபடி; ஆதலால் பந்துக்களெல்லாம் இறத்தற்குக் காரணமான போரை இவ்வளவோடாவது நிறுத்தவேண்டு மென்றான். மங்கலவிழவுஎன்பதை-உம்மைத்தொகையாகக் கொண்டு, சங்கொலியில்லாத மங்கலகாரியமுந் திருவிழாவும் என்றும் உரைக்கலாம். மணி முத்து-நவரத்நங்களிலொன்றாகிய முத்துமாம். (271)

181. தும்பிமாபரிமாவுளதேருளசுருங்கினசுருங்காம
னும்பிமார்களிலிருந்தவர்தம்மொடுநுவலரும்பலகேள்வித்
தம்பிமாரொடுநும்முனாகியவிறற்றருமன்மாமகனோடும்
பம்பிமாநிலம்புரப்பதேகடனெனப்பார்த்திவற்குரைசெய்தான்.

(இ - ள்.) சுருங்கின - (அழிந்தவைபோகக்) குறைந்தவையாகிய, தும்பி மா - யானைகளும், பரி மா - குதிரைகளும், உள - உள்ளன; தேர் உள - தேர்கள் உள்ளன: நும்பிமார்களில் - உன் தம்பியருள்ளே, சுருங்காமல் இருந்தவர்தம்மொடுஉம் - அழியாமல் மிகுந்தவர்களுடனும், நுவல் அரு-சொல்லுதற்கு அரிய, பல கேள்வி - பலவகை நூற்கேள்விகளையுடைய, தம்பிமாரொடுஉம்-வீமன் முதலிய தருமன் தம்பிமார்களுடனும், நும்முன் ஆகிய-உங்கள் தமையனான, விறல் தருமன் மா மகனோடுஉம்-வெற்றியையுடைய சிறந்த தருமபுத்திரனோடும், பம்பி-சேர்ந்து [சமாதானமாகி], மா நிலம் - பெரியபூமியை, புரப்பதுஏ-காப்பதுவே, கடன் - முறைமையாம், என - என்று, பார்த்திவற்கு -துரியோதனனுக்கு, உரைசெய்தான்-சொன்னான், (அசுவத்தாமன்; (எ - று.) (272)

182.—எனக்குவீரியமேபயனெனத் துரியோதனன் மறுமொழி கூறல்.

ஆரியன்றிருமகனிவையுரைசெயவரசனுமவைகேட்டுக்
காரியம்புகல்வதுபுவியாட்சியிற்கருத்துடையவர்க்கன்றோ
சூரியங்கறங்கமரிடையுடல்விழச்சுரருலகுயிரெய்த
வீரியம்பெறலெனக்கினிபயனெனவிளம்பினன்விறல்வேலோன்.

(இ - ள்.) ஆரியன் - துரோணாசாரியரது, திரு மகன் - சிறந்த குமாரனான அசுவத்தாமன், இவை உரை செய - இவ்வார்த்தைகளைச் சொல்ல, விறல் வேலோன்-வெற்றியைத்தரும்வேலையுடை

யவனாகிய, அரசன்உம்-துரியோதனனும், அவை கேட்டு - அவ் வார்த்தைகளைச் செவியுற்று, (அவனை நோக்கி), 'காரியம் புகல்வது - (நீ) சொல்லுந்தொழில், புவி ஆட்சியில் கருத்து உடையவர்க்கு அன்றஒ - பூமியை அரசாளுதலில் எண்ணமுடையவர்களுக்கன்றோ (செய்யத்தக்கது)? தூரியம் கறங்கு - வாச்சியங்கள் முழங்குகின்ற, அமரிடை - போர்க்களத்தில், உடல் விழ - உடம்பு விழவும், உயிர்—, சுரர் உலகு எய்த - தேவலோகத்தையடையவும், வீரியம் பெறல் - வீரத்தனத்தைப் பெறுதல், எனக்கு—, இனி - இனிமேல், பயன்-அடையப்படும்பிரயோஜனமாம்', என - என்று, விளம்பினன் - சொன்னான்; (எ - று.) (273)

183.—துரியோதனன் அசுவத்தாமனோடு பின்பு இனியவார்த்தைகூறிக் கர்ணனைச்சோகம்மாற்றி அருச்சுனனுயிரைக் கொள்ளுமாறுகூறுதல்.

முனிமகன்புகல்கட்டுரைமறுத்தபின்முனிவுருவகைபோருக்
கினிமைகொண்டசொற்பலமொழிந்தவனொடுமிரப்பவருள்ளங்கைக்
கனியெனுங்கொடைக்கன்னனைத்தழீஇயவன்கண்ணுகு புனன்மாற்றிப்
பனிநெடுங்குடைப்பார்த்திவனுவன்றனன்பார்த்தனதுயிர்கொள்வான்.

(இ - ள்.) பனி நெடு குடை - குளிர்ந்த பெரிய(ஒற்றைவெண்கொற்றக்) குடையையுடைய, பார்த்திவன் - துரியோதனன்,—முனி மகன் புகல்-துரோணகுமாரன் சொன்ன, கட்டுரை-உறுதி வார்த்தையை, மறுத்தபின்-தடுத்தபின்பு,—முனிவு உரு வகை - (தன்வார்த்தையைத் தடுத்தானென்று அவனுக்குக்) கோபம் உண்டாகாதபடி, போருக்கு - போர்செய்யும் பொருட்டு, இனிமை கொண்ட சொல் பல - (கேட்டற்கு) இனிப்புப் பொருந்திய பல வார்த்தைகளை, அவனொடுஉம்மொழிந்து - அவனோடு சொல்லி, இரப்பவர் உள்ளங்கை கனி எனும் - யாசகர்களுடைய அகங்கையிலுள்ள பழம் போலச் சித்தமான, கொடை-தானத்தையுடைய, கன்னனை - கர்ணனை, தழீஇ - தழுவிக்கொண்டு, அவன் கண் உகு புனல் மாற்றி - (புத்திரசோகத்தால்) அவன்கண்களினின்று பெருகுகிற நீரைத் துடைத்து, பார்த்தனது உயிர் கொள்வான்- அருச்சுனனது உயிரைக் கொள்ளும்படி, நுவன்றனன் - சொன்னான்; (எ - று.)

இனி, இரப்பவருள்ளங்கைக் கனியெனும் கொடை என்பதற்கு - யாசகர்களது உள்ளங்கைக்குச் சுரங்கம்போன்ற [நிதிதருகின்ற] கொடையென்றுமாம்; கனி - சுரங்கம். (274)

184.—இரண்டுகவிகள்-துரியோதனனும் சல்லிய அசுவத்தாமருங்கேட்கக் கர்ணன் தான் கலங்காது அருச்சுனன்தலையைக் கொய்வேனெனல்.

மலைகலங்கினுமாதிரங்கலங்கினுமாதிரங்களில்விண்ணோர்
நிலைகலங்கினுநெடுங்கடல்கலங்கினுநிலங்கலங்கினுஞ்சேடன்
றலைகலங்கினும்பேரவைமுன்றினுந்தளர்விலாதவர்கற்ற
கலைகலங்கினும்போர்முகத்தென்மனங்கலங்குமோகலங்காதே.

(இ - ள்.) மலை—, கலங்கினஉம் - சலித்தாலும், மாதிரம் - திக்குக்கள், கலங்கினும்—, மாதிரங்களில் விண்ணோர் - திக்குக்களிலுள்ள தேவர்கள், நிலை கலங்கினஉம் - (தாம்தாம் நிற்கும்) நிலை கலங்கினாலும், நெடு கடல் - பெரிய கடல், கலங்கினஉம்—, நிலம் - பூமி, கலங்கினஉம்—, சேடன் தலை - (பூமியைத் தாங்குகிற) ஆதிசேஷனது தலை, கலங்கினும்—, பேர் அவை மூன்றின்உம் - பெரிய மூன்றுவகைச் சபைகளிலும், தளர்வு இலாதவர் - அஞ்சுதலில்லாத புலவர்கள், கற்ற - படித்த, கலை - கல்வி, கலங்கினும்—, என் மனம்—, போர்முகத்து - போர்க்களத்தில், கலங்குமோ-சலிக்குமோ? கலங்காதே - சலியாதன்றோ? (எ - று.)—ஈற்றேகாரம் - தேற்றம்.

மாதிரங்களில்விண்ணோர் - அஷ்டதிக்பாலகர். தம்மினும் உயர்ந்தோர் ஒத்தோர் தாழ்ந்தோர் என்னும் முத்திறத்தவருறைதலால், அவை மூன்றாயின; "உயர்ந்தோரொத்தவர் தாழ்ந்தோர் மருவு மூன்றவையு மாராய்ந்து" என்றதுங்காண்க. கலங்காமையை வற்புறுத்தும்பொருட்டு, 'கலங்குமோ கலங்காதே' என உடன்பாட்டுமுகத்தானும் எதிர்மறைமுகத்தானுங் கூறினர். (275)

185. என்மகன்றலையென்னெதிர்துணியவம்பேவியபுருகூதன்
றன்மகன்றலைதுணிப்பனிக்கணத்திலோர்சாயகந்தனிலென்று
மன்மகன்றனக்கிரதமூர்மத்திரன்மகன்றனக்குயர்வேள்வி
வின்மகன்றனக்குளமகிழ்ந்துரைத்தனன்வெயிலவன்மகனம்மா.

(இ - ள்.) என் மகன் தலை - என் குமாரனது தலை, என் எதிர் துணிய - என்எதிரே அறுபடும்படி, அம்பு ஏவிய - பாணத்தைப் பிரயோகித்த, புருகூதன் தன் மகன் - இந்திரகுமாரனை அருச்சுனனது, தலை - தலையை, ஓர் சாயகந்தனில் - ஒருஅம்பினால், இ கணத்தில் - இந்தக்ஷணத்தில்தானே, துணிப்பன் - அறுப்பேன், என்று—, மன் மகன் தனக்கு - திருதராஷ்டிரராஜகுமாரனை துரியோதனனுக்கும், இரதம் ஊர் - (தனக்குத்) தேரோட்டுகிற, மத்திரன் மகன்தனக்கு - மத்திரராஜ குமாரனை சல்லியனுக்கும், உயர் வேள்வி - சிறந்த யாகங்களுக்குரிய, வில் - வில்வித்தையில் வல்ல, மகன்தனக்கு-அசுவத்தாமனுக்கும், உளம் மகிழ்ந்து-மனங்களித்து, உரைத்தனன்-சொன்னான், வெயிலவன் மகன்-வெயிலையுடைய சூரியனது மகனான கர்ணன்; (எ - று.)—பி - ம்: மத்திரமகிபதிக்கு. 'மகன்' என்னுஞ் சொற்பிரயோகத்தை நோக்குங்கால், இப்பாடபேதம் சிறப்புடைத்தன்று. (276)

186.—பேரொலி சேனைநெருக்கம் மேலெழுதூளி இவற்றின் வருணனை.

சுரிமுகங்களிற்பேரியங்களிலெழுதுவனியாற்பகிரண்ட
நெரியுமென்றயனஞ்சினன்சேனையினெருக்கினுலெனைத்துள்ள
கிரிகளுஞ்சரிந்திடுமெனவஞ்சினன்கிரிசனுங்கிளராழி
யரியுமஞ்சினன்றூளியாலிலைகடலடையவற்றிடுமென்றே.

(இ - ள்.) (அப்பொழுது), சுரி முகங்களில் - சுழிந்த முகத்தையுடைய சங்குகளினின்றும், பேரியங்களில்-முரசங்களினின்றும், எழு-உண்டாகிய, துவனியால் - ஒலியினால், பகிரண்டம்-வெளியி

லுள்ள அண்டங்களெல்லாமும், நெரியும்-அதிர்ந்து நொருங்கும், என்று - என்று எண்ணி, அயன் - (படைத்தற்கடவுளான) பிரமன், அஞ்சினன்-பயந்தான்; சேனையின் நெருக்கினுல் - சேனைகளின் நெருக்கத்தாலுண்டான பாரத்தால், எனைத்து உள்ள கிரிகள் உம் - உள்ள மலைகளெல்லாம், சரிந்திடும் - சாய்ந்துவிடும், என - என்று எண்ணி, கிரிசன் உம் - (கைலாச)மலையில்வாசஞ்செய்கிற சிவனும், அஞ்சினன்—; கிளர் ஆழி - விளங்குகிற கடலிற்பள்ளி கொள்கிற, அரி உம் - விஷ்ணுவும், தூளியால்-புழுதியினுல், அலை கடல் அடைய-அலைகின்ற கடல்களெல்லாம், வற்றிடும் - வற்றிப் போம், என்று-என்றுஎண்ணி, அஞ்சினன்-; (எ - று.)

பேரியங்கள், அம் - சாரியை; இனி, பேர் இயங்கள் எனப் பிரித்து - பெரிய வாச்சியங்களென்றுமாம். வெளியண்டங்கள் நெரியுமெனவே, இவ்வண்டம்நெரிதல்சொல்லாமலேபெறப்படும்.

187.—நான்குகவிகள்-இருதிறத்துச் சேனையும் நெருங்குதலைக்கூறும்.

பரியுடன்பரிநெருங்கினநெருங்கினபடை யுடன்படைமத்தக்
கரியுடன்கரிநெருங்கினநெருங்கினகடவுதேருடன்றேரும்
விரிநெடுங்குடைகுடையொடுநெருங்கினவிலோதமும்விலோதத்தோ
டரியெறிந்திடநெருங்கினவாடையுமாடையுமலமந்தே.

(இ - ள்.) பரியுடன் - குதிரைகளோடு, பரி நெருங்கின—; படையுடன் - காலாட்சேனையோடு, படை நெருங்கின—; மத்தம் கரியுடன் - மதம்பிடித்த யானைகளோடு, கரி நெருங்கின—; கடவு தேருடன் - செலுத்தப்படுகிற தேர்களோடு, தேரும்நெருங்கின--; விரி நெடு குடை - பரந்த நீண்ட குடைகள், குடையொடு நெருங்கின—;அரிஎறிந்திட-காற்று வீசுதலினுல், ஆடைஉம்-ஆடைஉம் அலமந்து - சீலைகளுஞ் சீலைகளும் அசையப்பெற்று, விலோதம் உம்-துவசங்களும்,விலோதத்தோடு-துவசங்களோடு, நெருங்கின-;

188. பரியில்வீரரும்பரியில்வீரரும்வயப்படையெறிந்தனர் கொற்றக்
கரியில்வீரருங்கரியில்வீரருமமர்கடுகினர்காற்றேராங்
கிரியில்வீரருங்கிரியில்வீரருமெதிர்கிடைத்தனர்பதசாரித்
தெரியல்வீரருந்தெரியல்வீரருமுடன்செருப்புரிந்தனரன்றே.

(இ - ள்.) அன்று - அப்பொழுது, பரியில் வீரர்உம்-குதிரைகளின்மேல் ஏறிய வீரர்களும், பரியில் வீரரும்—, (ஒருவர்மேலொருவர்), வயம் படை எறிந்தனர் - வெற்றியைத் தருகிற ஆயுதங்களை எறிந்தார்கள்; கொற்றம் - வெற்றியையுடைய, கரியில் வீரர் உம்-யானைகளின்மேல் ஏறிய வீரர்களும், கரியில் வீரரும்—, அமர் கடுகினர் - போரில் விரைந்தார்கள்; கால் தேர் ஆம்-சக்கரங்களையுடைய தேர்களாகிய, கிரியில் - மலைகளின்மேலேறிய, வீரரும்—, கிரியில்வீரரும்—, எதிர் கிடைத்தனர் - எதிரேகிட்டினுர்கள்; பதசாரி - கால்களால் நடக்கிற, தெரியல் - போர்மாலையையுடைய, வீரரும்—, தெரியல் வீரரும்—, உடன்-ஒருவரோடொருவர், செருபுரிந்தனர் - போர் செய்தார்கள்; (எ - று.)—அன்றே - ஈற்றசை யாகவுமாம். பி - ம்: பலசெருப். (279)

189. எடுத்தவேல்களும்வேல்களுமுனைந்தனவிலக்குறக்கொடும்பாணந்
தொடுத்தசாபமுஞ்சாபமும்வளைந்தனதொடியுடைக்கரசாலத்
தடுத்தவாளமும்வாளமும்பொருதனவங்குலிகளிற்சுற்றி
விடுத்தநேமியுநேமியுந்துணித்தனவீரர்சென்னிகள்வீழ.

(இ - ள்.) எடுத்த-(கையில்) எடுத்த, வேல்களும் வேல்களும்—, முனைந்தன - போர்செய்தன; இலக்கு உற-லட்சியத்திலே பொருந்தும்படி, கொடு பாணம்-கொடிய அம்புகளை, தொடுத்த—, சாபம்உம் - விற்களும், சாபமும்—, வளைந்தன—; தொடி உடை-தொடியென்னும் ஆபரணத்தையுடைய, கர சாலத்து - கைக ளின் கூட்டத்தில், அடுத்த-பொருந்திய, வாளம்உம்-வாள்களும், வாளமும்—, பொருதன - போர்செய்தன; அங்குலிகளின் - விரல் களினால், சுற்றி விடுத்த-சுழற்றிவிட்ட, நேமிஉம் - சக்கரங்களும், நேமியும்—, வீரர் சென்னிகள் வீழ-வீரர்களது தலைகள் விழும்படி, துணித்தன-அறுத்தன; (எ - று.)—இலக்கு-குறிப்பிட்டபொருள். பி - ம்: கரசாலம். (280)

190. அறன்ம கன்பெருஞ் சேனையி னிருபரு மரவவெங் கொடியாடை
மறன்ம கன்கொடுஞ் சேனையி னிருபரும் வஞ்சினம் பலகூறித்
திறன்மி குந்ததஞ் சேனையொ டெதிரெதிர் சென்றுசென்றிடந்தோறு
முறமலைந்தன ரொருவருக் கொருவர்தோ ளுரமும்வீ ரமுமொத்தோர்.

(இ - ள்.) ஒருவருக்கு ஒருவர்-ஒருத்தரோடொருத்தர், தோள் உரம்உம்-புஜபலத்திலும், வீரம்உம்-பராக்கிரமத்திலும், ஒத்தோர் -ஒத்தவர்களாகிய, அறன் மகன் பெரு சேனையில்நிருபர்உம்-தரும புத்திரனது பெரியசேனையிலுள்ள அரசர்களும், வெம் அரவம் - கொடிய பாம்பை யெழுதிய, கொடிஆடை-கொடிச்சீலையையுடைய, மறன் மகன்-அதருமத்தையுடைய துரியோதனனது, கொடுசேனை யில்-கொடிய சேனையிலுள்ள, நிருபர்உம்-அரசர்களும், வஞ்சினம் பல கூறி-பல சபதங்களைச் சொல்லிக்கொண்டு, திறல் மிகுந்த தம் சேனையொடு-வலிமை மிகுந்த தமது சேனையுடனே, எதிர் எதிர் சென்று சென்று-எதிரே எதிரே போய்ப் போய், இடம் தோறுஉம் -இடங்கள்தோறும், உற மலைந்தனர் - நன்றாகப் போர்செய்தார் கள்;(எ - று.)—மறன் மகன்-அதருமமுடைய திருதராட்டிரனது மகனுமாம். (281)

வேறு.

191.—அருச்சுனன் தம்பிமார்முதலானாரோடு வருதல்.

இளைஞ ரும்பெருஞ் சேனையு மிருபுடை நடக்கக்
கிளைஞர் யாவரு நேமியங் கிரியெனச் சூழ
விளையும் வெஞ்சின வீமன்முன் போதர விசயன்
வளைநெ டுஞ்சிலை கணைமழை பொழிந்திட வந்தான்.

(இ - ள்.) விசயன்-அருச்சுனன்,—இளைஞர்உம்-தம்பிமாரான நகுல சகதேவரும், பெரு சேனைஉம்-பெரிய சேனைகளும், இருபுடை

நடக்க-இரண்டு பக்கங்களிலுஞ் செல்லவும், கிளைஞர் யாவர்உம் - பந்துக்கள் எல்லாரும், நேமி அம் கிரி என-அழகிய சக்கரவாளமலை போல, சூழ-சுற்றிலும்வரவும், விளையும் வெம் சினம் - மேன்மேற் பொங்குகிற கொடிய கோபத்தையுடைய, வீமன்—, முன் போதர -முன்னே செல்லவும், வளை நெடு சிலை-வளைந்த நீண்ட வில், கணை மழை பொழிந்திட-அம்பு மழையைச் சொரியவும், வந்தான்—;

இதுமுதல் மூன்று கவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் ஈற்றுச் சீரும் மாச்சீர்களும், மற்ற மூன்றும் விளச்சீர்களு மாகிய **கலிநிலைத் துறைகள்.** (282)

192.—கர்ணனும் அசுவத்தாமா முதலோர்சூழ எதிர்செல்லுதல்.

கிரிசன்மைந்தனுங்கிருபனுங்கிருதவன்மாவும்
வரிபொலங்கழற்சகுனியுமுதலியமறவோ
ரெரியும்வெங்கனற்கண்ணினரெயிலெனச்சூழத்
தெரியும்வாளிவன்சிலையுடைக்கன்னனுஞ்சென்றான்.

(இ - ள்.) கிரிசன் மைந்தன் உம்-சிவகுமாரனான அசுவத்தாம னும், கிருபனும்—, கிருதவன்மாவும்—, வரி பொலம்கழல்-கட்டப் பட்ட பொன்னாலாகிய வீரக்கழலையுடைய, சகுனியும்—, முதலிய-, மறவோர்-வீரர்கள், எரியும் வெம் கனல்-எரிகின்ற கொடிய நெருப் புப்போலக் கோபத்தாற் சிவந்த, கண்ணினர்-கண்களையுடையவர் களாய், எயில் என-மதில்போல, சூழ-சுற்றிலும் வரும்படி, வாளி தெரியும்-அம்புகளை ஆராய்ந்து தொடுக்கின்ற, வல் சிலை உடை-வலிய வில்லையுடைய, கன்னனும்—, சென்றான்-(எதிரிற்)போனான்; (எ - று.)—கண்ணினர் - குறிப்பு முற்றெச்சம். கிரீசன் என்பது போல், கிரிசன் என்றும் வடசொல்உண்டு. (283)

193.—ஏழுகவிகள்-அருச்சுனனும் கர்ணனும் மிகக்கடுமையாகப் பொருதமை கூறும்.

மல்வ ளைத்ததோள் வலியர்கள் வலனுறத் தத்தம்
வில்வ ளைத்தனர் விசையுடன் சிலீ முகந் திகிரிக்
கல்வ ளைத்தபார் தனக்கிடு காவணம் போலச்
சொல்வ ளைத்திலர் தொடுத்தனர் தும்பையந் தொடையார்.

(இ - ள்.) தும்பை அம் தொடையார் - அழகிய தும்பைப்பூ மாலையையுடையவர்களாகிய, மல் வளைத்த தோள் வலியர்கள் - மற்போரை மிகப் பயின்றதோள்களின் வலிமையையுடைய அருச் சுனனும் கர்ணனும்,—வலன் உற-பலம்பொருந்த, தத்தம் வில் வளைத்தனர்- தம் தமது வில்லை வளைத்து, சொல் வளைத்திலர் - சொல்லொன்றுஞ் சொல்லாமல், திகிரி கல்வளைத்த-சக்கரவாளகிரி யாற் சூழப்பட்டுள்ள, பார் தனக்கு - பூமி முழுவதுக்கும், இடு காவணம் போல-மேலேபோகட்ட பந்தலை யொக்கும்படி, சிலீமுகம்- அம்புகளை, விசையுடன்-வேகத்தோடு, தொடுத்தனர்—; (எ-று.)

வேறு.

194. மருவ ருஞ்சுருதி கூறுநிலை நாலும் வழுவா
திருவ ருஞ்சிலைவ ணக்கியது மெய்த விரகு
மொருவ ருஞ்சிறிது ணர்ந்திலரு காந்த மெனவே
வெருவ ருஞ்செயலில் விஞ்சினர்கள் விஞ்சை யருமே.

(இ - ள்.) இருவர்உம் - கர்ணனும் அருச்சுனனும், மருவு அரு - பயிலுதற்கு அருமையான, சுருதி - தனுர்வேதத்தில், கூறும் - சொல்லப்படுகிற, நிலைநால்உம் - ஆலீடம் முதலிய நால் வகைநிலைகளும், வழுவாது-தவறாமல் (நின்று), சிலை வணக்கியது உம் - வில்லைவளைத்ததையும், எய்த விரகுஉம் - (அம்பு) எய்த பக்குவத்தையும், ஒருவர்உம் சிறிதுஉணர்ந்திலர்-எவருங்கொஞ்ச மேனும் அறிந்தாரில்லை; விஞ்சையர்உம் - (மேலுலகத்துள்ள) வித்தியாதரர்களும், உகாந்தம் என - யுகமுடிவுகாலமென்று எண்ணி, வெருவரும் செயலில் விஞ்சினர்கள் - பயப்படுந்தொழி லில் மிகுந்தார்கள்; (எ - று.)

சுருதியென்பதற்கு - (எழுதப்படாமல் ஆசாரியசிஷ்யபரம் பரையாக்க்) கேட்கப்பட்டுவருவதென்று பொருள். விஞ்சையர் - பதினெட்டுத்தேவகணங்களுள் ஒருவகையார்.

இதுமுதல் ஒன்பதுகவிகள்-பெரும்பாலும் இரண்டு மூன்றுஞ் சீர்கள் கூவிளங்காய்ச்சீரும், மற்றவை மாச்சீர்களுமாகிய **கலிநிலைத் துறைகள்.** (285)

195. ஒன்றேடொன்றுமுனையோடுமுனையுற்றுறவிழு
மொன்றேடொன்றுபிளவோடவிசையோடுபுதையு
மொன்றேடொன்றுதுணிபட்டிடவொடிக்குமுடனே
யொன்றேடொன்றிறகுகவ்வுமெதிரோடுகணையே.

(இ - ள்.) எதிர் ஓடு கணை - எதிரேசெல்லுகிற அம்புகள், ஒன்றேடு ஒன்று—, முனையோடு முனைஉற்று - நுனியோடு நுனி பொருந்தி, உற விழும்-மிகுதியாகவிழும்; ஒன்றேடொன்று—, பிளவு ஓட - பிளவுபடும்படி, விசையோடு புதையும் - வேகத்தோடு தாக்கும்; ஒன்றேடொன்று—, துணி பட்டிட - துண்டுபடும்படி, ஒடிக்கும்—; உடனே - விரைவாக, ஒன்றேடொன்று—, இறகு கவ்வும்-(அம்புகளின்) இறகுகளைப் பறிக்கும்; (எ - று.) (286)

196. இடம்புரிந்திடில்வலம்புரியுமெண்ணின்முறையால்
வலம்புரிந்திடிடம்புரியுமண்டலமுமாய்
நடம்புரிந்துபவுரிக்கதிநடத்துமெதிரே
சலம்புரிந்ததிரமுட்டுமிருசந்தனமுமே.

(இ - ள்.) எதிரே—, சலம் புரிந்து - போர்செய்து, அதிர - அதிர்ச்சி யுண்டாம்படி, முட்டும் - (ஒன்றேடொன்று) தாக்குகிற, இரு சந்தனம்உம்- இரண்டுதேர்களும், எண்ணில் - ஆலோசிக்கு மிடத்து, முறையால் - முறையே, இடம் புரிந்திடில் - (ஒன்று)

இடப்பக்கமாக வந்தால், வலம் புரியும்-(மற்றொன்று) வலப்பக்கமாக வரும்:—வலம் புரிந்திடில் - (அது) வலப்பக்கத்திலே வந்தால், இடம் புரியும்-(இது) இடப்பக்கமாக வரும்: (இங்ஙனன்றி), மண்டலம்உம் - (இரண்டுஞ்) சுற்றிச்சுற்றிவருதலும், ஆய்- ஆகி, நடம் புரிந்து - கூத்தாடிக்கொண்டு, பவுரி கதி நடத்தும்-(தானே) சுற்றிவருதலாகிய பவுரியென்னுங் கதியை நடத்திக்காட்டும்;

சலம்புரிந்து - அசைதலைச் செய்து என்றுமாம். சந்தனம் = ஸ்யந்தநம். (287)

197. ஆசுபோமிவுளிமாகடவியாழியிரத
மூசுபோரிலொருவர்க்கொருவர்முந்தவிடலால்
வாசுதேவனையுமத்திரமகீபதியையுந்
தேசுவேறுதெரிகிற்றிலர்கடேவர்களுமே.

(இ - ள்.) ஆசு போம்-விரைந்துசெல்கிற, இவுளி மா-குதிரைகளை, கடவி - ஓட்டி, ஆழி இரதம் - சக்கரங்களையுடைய தேரை, மூசு போரில் - நெருங்கிய யுத்தத்தில், ஒருவர்க்கு ஒருவர் முந்த விடலால்-ஒருத்தருக்கொருத்தர் முன்னே செலுத்துதலால்,— வாசுதேவனைஉம் - வசுதேவபுத்திரனாகிய கண்ணனையும், மத்திர மகீபதியைஉம் - மத்திரநாட்டரசனான சல்லியனையும், தேவர்களும்—, தேசு வேறு தெரிகிற்றிலர்கள் - வேறுஒளியாற் காண வில்லை; (எ - று.)—இருவரையுஞ் சமமாகவே யறிந்தன ரென்றபடி. ஆசு-வடமொழி அவ்வயம். இனி, ஆசு போம்-குற்றம் நீங்கிய வென்றுமாம். (288)

198. மறமுமொத்தவழுவற்றசுழியொத்தவலிகூர்
புறமுமொத்தகதிபற்பலவுமொத்தபுகல்வா
ணிறமுமொத்தவுயரம்பருமைநீளமெனுமெய்த்
திறமுமொத்தவிருதேரில்வருதிண்பரியுமே.

(இ - ள்.) இரு தேரில் வரு - இரண்டுதேரிலும் பூட்டப்பட்ட, திண்பரிஉம்-வலிய குதிரைகளெல்லாம், — மறம்உம்-வலிமையிலும், ஒத்த - (ஒன்றோடொன்று) ஒத்திருந்தன; வழு அற்ற-குற்றமில்லாத, சுழி - (நல்லிலக்கணமாகிய) சுழிகளிலும், ஒத்த—; வலி கூர்-வலிமைமிகுந்த, புறம்உம்-முதுகும், ஒத்த—; கதி பல் பல உம் - பலவகைப்பட்ட நடைகளிலும், ஒத்த—; புகல் - (சிறப்பித்துச்)சொல்லப்படுகிற, வாள் - ஒளியையுடைய, நிறம்உம் - வருணத்திலும், ஒத்த—; உயரம் பருமை நீளம் எனும் - உயர்ச்சியும் பருமனும் நீட்சியு மென்கிற, மெய் திறம்உம் - உடம்பின் தன்மைகளிலும், ஒத்த—; (எ - று.) (289)

199. நிலையிரண்டினுறநின்றநிமலற்குநிகர்வோர்
மலையிரண்டினைவனைத்தெதிர்மலைந்ததெனவே
யலையிரண்டெனவதிர்ந்துபொருமவ்விருவர்கைச்
சிலையிரண்டுநிமிராதுகணைசிந்தினர்களே.

(இ - ள்.) நிலை இரண்டில் - இரண்டு நிலைமைகளில், உற - ஒருசேர, நின்ற—, நிமலற்கு - குற்றமற்ற சிவபிரானுக்கு,

நிகர்வோர் - சமானமானவராகிய, அலை இரண்டு என - இரண்டு கடல்கள்போல, அதிர்ந்து-ஆரவாரித்து,பொரும்-போர்செய்கிற, அ இருவர்-அந்த அருச்சுனனும் கர்ணனும்,—மலை இரண்டினை வளைத்து-இரண்டுமலைகளை (வில்லாக) வணக்கிக் கொண்டு, எதிர் மலைந்தது எனவு-எதிரிற் போர்செய்ததுபோலவே, கை சிலை இரண்டுஉம் நிமிராது-கையிற்பிடித்த இரண்டுவிற்களும் (வளைவு) நிமிராமல், கணை சிந்தினர்கள்-அம்புகளைச் சொரிந்தார்கள்; (எ-று.)

பரமசிவன் ஒரேகாலத்தில் இரண்டுவடிவமெடுத்துநின்று இரண்டுமேருமலைகளைக் கையில் வில்லாக எடுத்துக்கொண்டு போர்செய்தாற்போன்றனர் என்பது, கருத்து. நிமலர்என்றபாடத்திற்கு— திருமாலும் உருத்திரமூர்த்தியும் என்க: தேவர்கள் தார தமியமறிய இருவரையும் போர்மூட்டிவிட, பொருதன ரென்று வரலாறு ராமாயணத்திலுள்ளது. (290)

200.—இரண்டுகவிகள்-அருச்சுனன் கடுமையாக அம்புவிட, கர்ணன் அவற்றைத் தறித்தமை கூறும்.

தேவதத்தமுமுழக்கியுயர்தேவர்பலரா
லாவமெத்தும்வகைபெற்றபலவம்புதெரியா
மூவர்தத்தம்வடிவாமுதல்வன்மெய்ப்புதல்வன்மேற்
பூவின்மொய்த்தவறுகாலினிரைபோல்விடவே.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (அருச்சுனன்),—தேவதத்தம்உம்முழக்கி-தேவதத்தமென்னும் (தனது) சங்கத்தை யெடுத்து நாதஞ்செய்து, உயர் தேவர் பலரால்-சிறந்த பல தேவர்களால், ஆவம் மெத்தும் வகை-தூணி நிரம்பும்படி, பெற்ற—, பல அம்பு - அநேகபாணங்களை, தெரியா-ஆராய்ந்து எடுத்து, மூவர் தத்தம் வடிவு ஆம் முதல்வன்-திரிமூர்த்திகளது சொரூபியாகிய சூரியபகவானது,-மெய் புதல்வன் மேல்-உண்மையானபுத்திரனாகியகர்ணன்மேலே, பூவின்மொய்த்த -மலரிலே மொய்க்கிற, அறுகாலின் நிரைபோல-வண்டுகளின் கூட்டத்தை யொக்கும்படி [சாரத்தை உறிஞ்சும்படி], விட - பிரயோகிக்க,—(எ-று.) "அங்கர்பெருமான் ... தறியா" என இயையும்.

தேவதத்தமென்னுஞ் சங்கம், அருச்சுனனுக்கு அக்கினிதேவனாற் காண்டவதகனகாலத்தில் அளிக்கப்பட்டது. சூரியன் திரிமூர்த்திகளின் சொரூபியென்று ஸ்ரீராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் ஆதித்யஹ்ருதயத்திலும், பிறநூல்களிலுங் கூறப்பட்டுள்ளது. மூன்றும் அடிக்கு-திரிமூர்த்திசொரூபியாகிய ஸ்ரீமந்நாராயணனது திருமேனியின் முக்கிய அவயவமாகிய வலக்கண்வடிவமான சூரியனது குமாரனென்றும் உரைக்கலாம்; அவ்வுரையில், மெய் என்பது-அதனுறுப்புக்களுட் சிறந்த கண்ணுக்கு முதலாகுபெயர். இனி, முச்சுடர்களின் வடிவமாகிய சூரியபகவானது உடம்பின் சேர்க்கையாற்பிறந்த புதல்வ னென்றும் பொருள்கொள்ளலாம். அறுகால்-ஆறாகிய கால்களையுடையது; பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. (291)

201. பரிதியன்பொடுவழங்கியபராபரமெனும்
பெருவலம்புரிகுறித்துவிறலங்கர்பெருமான்
வரிநெடுஞ்சிலைவலாரிதிருமைந்தன்விடுதிண்
சரமடங்கவவர்தந்தசரமெய்துதறியா.

(இ - ள்.) விறல் அங்கர் பெருமான்-வலிமையையுடைய அங்க நாட்டார்க்கு அரசனான கர்ணன், அன்பொடு—, பரிதி - சூரியன், வழங்கிய-(தனக்குக்) கொடுத்தருளின, பராபரம் எனும் - பராபரமென்னும் பெயரையுடைய, பெரு வலம் புரி-பெரியவலம்புரிச்சங்கத்தை, குறித்து-ஊதி, வரி நெடு சிலை-கட்டமைந்த பெரிய வில்லையுடைய, வலாரி திரு மைந்தன்-இந்திரனது சிறந்த மகனான அருச்சுனன், விடு-(தன்மேல்) விடுகிற, திண்-வலிய, சரம் அடங்க-அம்புகளை யெல்லாம், அவர் தந்த சரம் எய்து - அச்சூரியன் கொடுத்த அம்புகளைப் பிரயோகித்து, தறியா - துணித்து,—(எ - று.)— "கதிர்க்கணை விதங்கள்கொடு***தேர் இயக்கமற்றிட ஓர் கூடமியற்றினன்" என மேற்கவியில் முடியும்.

வலாரி-பலாரி; பல அரி: பலன் என்னும் அசுரனை அழித்தவன். பி-ம்: அமர்தந்த. (292)

202.—கர்ணன் பலவகைகளாற் சரகூடமுண்டாக்க, கிருஷ்ணனும் தன் மாயையால் சரகூட முண்டாக்கல்.

வயக்க திர்க்கணைவி தங்கள்கொடு மாயன் விடுதே
ரியக்க மற்றிடவி யற்றினனோர் கூட மிவனுந்
தியக்க முற்றிடம யக்கிநெடு மால்செய் விரகா
லுயக்க மிக்கசர கூடமுள தாய தவணும்.

(இ - ள்.) இவன் உம்-கர்ணனும், வய - வலிமையையுடைய, கதிர்-ஒளியையுடைய, கணை விதங்கள் கொடு-அம்புகளின் வகைகளால், மாயன் விடு தேர்-கண்ணன் செலுத்துகிற (அருச்சுனன்) தேர், இயக்கம் அற்றிட-செல்லுதல் இல்லையாம்படி, ஓர் கூடம்-ஒருமறைவை, இயற்றினன்-உண்டாக்கினான்; நெடு மால்-(திரிவிக்கிரமனாய்) நீண்ட கண்ணன், தியக்கம் உற்றிட - கலக்கமுண்டாம்படி, மயக்கி-மயங்கப்பண்ணி, செய்-செய்த, விரகால்-மாயையினால், மயக்கம் மிக்க-வருத்தம் மிகுந்த, சர கூடம்-அம்புக் கூடு, அவண் உம்-அவ்விடத்திலும் [கர்ணன்பக்கத்திலும்], உளது ஆயது-உண்டாயிற்று; (எ - று.)—சரகூடம் - அம்புகளால் தொடுக்கும் பின்னற்செறிவு. (293)

வேறு.

203.—சரகூடத்தினுட்பட்ட கர்ணன் செயலற்று நிற்க, அருச்சுனனும் அங்ஙன் நிற்கவே, கிருஷ்ணன் வினுதல்.

மாயா சரகூ டமறைத் திடலால் வலையுட் படுவீ ரமடங் கலெனச்
சாயா பதிமைந் தனுநின் றனன்மெய் தளர்வுற் றனனின் றதனஞ் சயனு
மேயா விதுவென் கொன்முனைந் துபொரா தெழுதோ வியமா யினையென் றுவிறற்
காயா மலர்வண் ணன்விளம் புதலுங் கவிவெங் கொடியோ னிருகை குவியா.

இதுமுதல் மூன்றுகவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) மாயா சரகூடம்-(கிருஷ்ணன்) மாயையாலாகிய அம்புக்கூடு, மறைத்திடலால் - (முழுவதும்) மறைத்துவிட்டதனால், சாயா பதி மைந்தன்உம்-சாயாதேவியின் கணவனான சூரியனது குமாரனாகிய கர்ணனும், வலை உள்படு-வலையினுள்ளே அகப்பட்டுக்கொண்ட,வீரம் மடங்கல்என - வீரத்தன்மையையுடைய சிங்கம் போல,நின்றனன்-(ஒன்றுஞ் செய்யமாட்டாமல்வாளா) நின்றான்; நின்ற தனஞ்சயன்உம்-(எதிரில்) நின்ற அருச்சுனனும், மெய் தளர்வுற்றனன்-(ஒன்றுஞ்செய்யாது) உடம்பு தளர்ச்சியடைந்தான்;(அது நோக்கி), விறல்-வெற்றியையுடைய, காயா மலர் வண்ணன்-காயாம்பூப்போன்ற (கரிய திருமேனி) நிறத்தையுடைய கண்ணன், (அருச்சுனனை நோக்கி), 'ஏயா-தகாத, இது - இவ்வாறுநிற்பது, என்கொல்-என்ன? முனைந்து பொராது - விரைந்து போர்செய்யாமல், எழுது ஓவியம் ஆயினை - எழுதுசித்திரம்போல (அசைவற்று) நின்றுவிட்டாய்,' என்று—, விளம்புதலும் - சொன்னவளவில்,— வெம் கவி கொடியோன்-(பகைவர்க்குப்) பயங்கரமான அனுமத்துவசத்தையுடைய அருச்சுனன், இருகைகுவியா-இரண்டுகைகளையுங் கூப்பி [அஞ்சலிசெய்துகொண்டு],—(எ - று.)—அடுத்தகவியில் ''என்றலுமே'' என்பதனோடு தொடரும். சாயை - சூரியன் மனைவிகளுள் ஒருத்தி. கபி-கவி எனத் திரிந்தது.

இதுமுதற் பதினெட்டுக்கவிகள்-பெரும்பாலும் எல்லாச்சீர்களும் மாச்சீர்களாகிய எண்சீராசிரியவிருத்தங்கள். (294)

204.—கர்ணன் தருமபுத்திரன்போல் தோன்றுவதனால் இனி என்னாற் பொர முடியாதென்று அருச்சுனன்சொல்ல, க்ருஷ்ணன் தேரைத் திருப்பிவிடுதல்.

வன்போர்புரிவெங்கணையங்கர்பிரான் மறனாலுயர்பேரறனார்குமரன்
றன்போலவிளங்கினனாதலினென் றனுவுங்குனியாதுசரங்கள்செலா
வன்போடியதுள்ளமெனக்கினிமே லவனோடமர்செய்தலுமிங்கரிதால்
வென்போகுவனென்றலுமேயிறைவன்விசையோடிரதத்தினைமீளவிடா.

(இ - ள்.) 'வல் போர் புரி - வலிய போரைச் செய்கிற, வெம் கணை - கொடிய அம்புகளையுடைய, அங்கர் பிரான் - அங்கநாட்டார்க்கு அரசனான கர்ணன், மறனால் உயர்-வலிமையினாற்சிறந்த, பேர் - பெரிய, அறனார் குமரன்தன் போல்-தருமபுத்திரன்போல, விளங்கினன் - (எனக்குக்) காணப்பட்டான்; ஆதலின்-ஆதலால், என் தனுஉம்-எனது வில்லும், குனியாது - வளையாது; சரங்கள் - அம்புகளும்,செலா-(அவன்மேற்)செல்லா; உள்ளம்-மனம், அன்பு ஓடியது - (அவன்மேல்) அன்புசெல்லப்பெற்றது; தனக்கு—,இனிமேல்—, இங்கு-இவ்விடத்தில், அவனோடு—, அமர்செய்தல்உம்-போர்செய்தலும், அரிது - அருமையானது; ஆல் - ஆதலால், வென் போகுவன்-முதுகுகாட்டிப்போவேன்,' என்றலுமே - என்று சொன்னமாத்திரத்தில்,— இறைவன் - கண்ணன், விசையோடு - வேகத்தோடு, இரதத்தினை - தேரை, மீளவிடா-திரும்ப விட்டு,—

(எ - று.)—"முரசக்கொடி மன்னவன் முன்புசெல" என அடுத்த கவியில் தொடரும்.

அறன் - அறம் என்னும் பகுதியின்மேல் அன்விகுதிபெற்று வந்த ஆண்பாற்பெயர்; 'ஆர்' விகுதி உயர்வுகுறிக்கவந்தது. அன்பாவது-மனைவியும், புத்திரரும் முதலிய உறவினரிடத்துக் காதலுடையவனாதல். இறைவன் - (எல்லாப்பொருள்களிலும் அந்தர்யாமியாய்த்) தங்குகின்றவன்; இறுத்தல்-தங்குதல். (295)

205.—அப்போது, இன்னும் கர்ணனைக் கொல்லாமைக்காக அருச்சுனன்வில்லைத் தருமன் பழித்துரைத்தல்.

முகில்வண்ணனும்வாசவன்மாமகனு முரசக்கொடிமன்னவன்முன்புசெலப்
பகலின்பதிமைந்தனையின்னமுமிப் பகல்சாய்வதன்முன்புபடுத்திலையா
லிகலெங்ஙன்முடித்திடுநின்கையில்வில்லிதுவென்னவிலென்றுதிருத்தமையன்
புகலுஞ்சொலவன்செவியிற்புகவே புண்மேலயிலுற்றதுபோன்றதுவே.

(இ - ள்.) முகில் வண்ணன்உம் - மேகம்போன்ற நிறத்தையுடைய கண்ணனும், வாசவன் மா மகன்உம் - சிறந்த இந்திரகுமாரனை அருச்சுனனும், முரசம் கொடி மன்னவன் முன்பு-முரசையெழுதிய கொடியையுடைய தருமனுக்கெதிரில், செல-போக,— திரு தமையன்-(அருச்சுனனது) மேலான தமையனை அத்தருமன், 'இன்னமும்—, இ பகல் சாய்வதன் முன்பு - இந்தப்பகற்பொழுது கழிதற்குமுன்னே, பகலின் பதி மைந்தனை - பகற்பொழுதுக்குத் தலைவனை சூரியனதுமகனை கர்ணனை, படுத்திலை-கொன்றாயில்லை; நின் கையில் வில்-உனது கையிற்பிடித்த வில், இகல்-பகையை, எங்ஙன்- எவ்வாறு, முடித்திடும்-அழித்துவிடும்? இது என்ன வில்—?' என்று—, புகலும் - (அலட்சியமாகச்) சொன்ன, சொல் - வார்த்தை, அவன் செவியில் புகா - அருச்சுனனது காதில் நுழையவே, புண்மேல் அயில் உற்றது போன்றது - புண்ணில் வேல் நுழைந்தது போன்றது; (எ-று.)—மிகவருத்தம் உண்டாக்கிற்று என்றபடி. புண்-கர்ணனைத் தருமனைக் கண்டதனாலுண்டான தளர்ச்சிக்கும், அதன்மேல் வேல் பொருந்துதல்-தருமன்வார்த்தை செவியுற்றதற்கும் உவமை யென அறிக. (296)

206.—தன்சபதப்படி வில்லைப்பழித்த தருமனைக் கொல்வேனென்று வந்த அருச்சுனனைக் கிருஷ்ணன் தடுத்தல்.

கூரார்முனைவாளிகொளிச்சிலையைக் குறையென்னெதிர்கூறினரம்புவிமேல்
யாராயினுமாவிசெகுத்திடுமா லிதுவஞ்சினமாதலினிப்பொழுதே
தாரார்புயவென்றியுதிட்டிரனைத் தலைகொள்வனெனத்தனுவுங்குனியா
வாராமுன்விலக்கியருச்சுனனை வருகென்றுதழீஇமதுசூதனனே.

இதுமுதல் மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) (அருச்சுனன்), 'கூர் ஆர் - கூர்மை பொருந்திய, முனை - நுனியையுடைய, வாளி - அம்புகளை, கொள் - கொண்ட, இ சிலையை - இந்த வில்லை, அம் புவிமேல் - அழகிய பூமியில், என் எதிர் - என் எதிரிலே, குறை கூறினர்-குறைவாக வார்த்தை

சொன்னவர்கள், யார் ஆயின்உம் - எவரேயானாலும், ஆவி செகுத்திடும் - அவருயிரை (இவ்வில்) அழித்துவிடும்; இது—, வஞ்சினம் - (என து) சபதமாம்; ஆதலின்—,இப்பொழுதே—,தார் ஆர் புயம்-மாலைபொருந்திய தோள்களையும், வென்றி-வெற்றியையுமுடைய, யுதிட்டிரனை-தருமனை, தலைகொள்வன் - தலைதுணிப்பேன்,' என-என்றுசொல்லி, தனுஉம் குனியா-வில்லையும் வளைத்து, வாராமுன் - வருவதற்குமுன்னமே [மிகவிரைவிலே], மதுசூதனன்-கண்ணன், அருச்சுனனை—, விலக்கி - தடுத்து, வருக என்று-வருவாயாக வென்றுசொல்லி (அருகேயழைத்து), தழீஇ-தழுவிக்கொண்டு,—(எ - று.)—"என்னுவுரைசெய்தலும்" என்று 208-ஆங் கவியில் வருவதனோடு தொடரும். (297)

207.—பெரியோரைப் புன்மொழிகூறுதல் தலையறுத்ததனோடு ஒக்குமென்று கண்ணன் கூறுதல்.

குரவோர்களைநீயெனினுங்கொலையிற் கொடிதென்றுயர்கேள்வியர்கூறுவரா*, லுரவோனையுமம்முறைகொன்றதனோ டொக்குஞ்சிலபுன்சொலுரைத்திடுவா, யிரவோர்தமதின்முகம்வண்மையினு லிதயத்தொடுகண்டுமகிழ்ந்துபெரும், பரவோதநெடுங்கடல்சூழ்புவியிற் பரிதாபமொழித்தபனிக்குடையோய்.

(இ - ள்.) இரவோர்தமது - இரக்கின்ற யாசகர்களது, இன்முகம்-இனிய முகத்தை, வண்மையினால்-ஈகைக்குணத்தால், இதயத்தொடு-நல்மனத்தோடு, கண்டு-பார்த்து, மகிழ்ந்து - களித்து, பெரு-பெரிய, பரவு-பரவிய, ஓதம்-அலைகளையுடைய, நெடு-நீண்ட, கடல்-கடலினால், சூழ்-சூழப்பட்டுள்ள, புவியில்-பூமியில் (உள்ளவர்களது), பரிதாபம்-வருத்தமாகியவெப்பத்தை, ஒழித்த-போக்கின, பனி குடையோய்-(நல்லஆளுகையாகிய) குளிர்ந்தகுடையையுடையவனே! 'குரவோர்களை-ஐம்பெருங்குரவர்களை, நீ எனின்உம் - (மரியாதைபற்றிப் பன்மையாகக் கூருமல்) நீ என்று (இகழ்ச்சியாக ஒருமையாற்) கூறினாலும், (அது), கொலையின் - (அவர்களைக்) கொல்லுதலைக்காட்டிலும், கொடிது - கொடுமையையுடையது,' என்று—, உயர் கேள்வியர்-சிறந்த நூற்கேள்விகளையுடைய பெரியோர்கள், கூறுவர்-சொல்லுவார்கள்: ஆல்-ஆதலால், அ முறை-அந்தக்கிரமப்படி, உரவோனைஉம்-வலிமையையுடைய யுதிட்டிரனையும், கொன்றதனோடு ஒக்கும்-கொன்றதோடு ஒப்பாகிற, சில புன் சொல்-சில இழிவான சொற்களை, உரைத்திடுவாய் - சொல்லிவிடுவாயாக; (எ - று.)

'பெரியோர்களைக் குறித்துச் சிறிது இகழ்ந்து பேசினாலும் அவர்களைக் கொலைசெய்ததோ டொப்பா மென்று சான்றோர்சொல்வார்; ஆதலால், இப்பொழுது நீ தருமனை நோக்கிச் சிலஇழிசொற்

---

*The plural of this pronoun 'நீ' is not contained in the Behuistan Tablets-the singular having been used instead of the plural in addressing inferiors—என்று கால்டுவெல் கூறியது, முதலடியில் நினைக்கத்தக்கது.

கள் சொல்வர்யாக; சொன்னால் அவனைக் கொன்றதனோ டொப்பாம்; ஆகவே, உன்வில்லைப் பழித்தவரைக் கொல்வே னென்ற உனதுசபதம் நிறைவேறினதாகும்' என்று உபாயங் கூறி, அருச்சுனன் தருமனைக் கொல்வதைக் கண்ணபிரான் தடுத்தருளினான். குரவோர்-ஈற்றயல் அகரம் ஓவாயிற்று. குரவராவார்-அரசன், குரு, தாய், தந்தை, தமையன்என்ற ஐவரும். தாயைநீக்கி அரசன், போதகாசிரியன், வமிசகுரு, தந்தை, தமையன் என்பாரு முளர். உரவு-தேகபலம், புத்திபலம், மனோபலம், ஆயுதபலம், சேனாபலம் முதலியவற்றோடு, தெய்வபலமும். இல்முகம் எனப் பிரித்து-இல்லாமை [வறுமை] தோன்றுகிற முக மென்றுமாம். "கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தல் எஞ்ஞான்றும்" என்றவாறு லோபிகள் இரப்பவரதுமுகத்தைக் காணாதபடி தலைகவிழ்ந்து கொள்வ ரா்தலால், 'இரவோர்தம தின்முகம் வண்மையினா லிதயத்தொடு கண்டு' என அவனது தானகுணத்தை வெளியிட்டார். (298)

208.—அருச்சுனன் தருமனைப் புன்மொழிகூற, அவன்பேசாது துறப்பேனென்று கானகஞ்செல்லத் தொடங்கல்.

என்னவுரைசெய்தலுமஞ்சியிளைத் திருகைகொடிறைஞ்சிநராதிபனைத்
தன்னாவிசையாதனசிற்சிலசொற் றளர்வோடெதிர்நின்றுதனஞ்சயனுஞ்
சொன்னானறன்மாமகனோருரையுஞ் சொல்லாமலினித்துறவெய்துவனென்
றுன்னாவிரைவோடிரதத்தினிழிந் துயர்கானடைவானுணர்வுற்றனனே.

(இ - ள்.) என்னா-என்று, உரைசெய்தலும்-(கண்ணன்) அருளிச்செய்தவளவில்,—தனஞ்சயன்உம்-அருச்சுனனும், அஞ்சி—, இளைத்து-சோர்ந்து, இரு கைகொடு இறைஞ்சி-இரண்டுகைகளாலும் (அவனைத்) தொழுது, நர அதிபனை-மனிதர்க்குத் தலைவனான தருமனை நோக்கி, எதிர் நின்று-எதிரிலே நின்று, தளர்வோடு-மனத்தளர்ச்சியுடனே, தன் நா இசையாதன-தனது நாவினாற் சொல்லுதற்குப் பொருந்தாதவையாகிய, சிற் சில சொல் - சிலசில பழிப்பான வார்த்தைகளை, சொன்னான்—; அறன் மா மகன்-சிறந்த தருமபுத்திரன், ஓர் உரைஉம்-ஒருவார்த்தையையும்,சொல்லாமல்—, 'இனி துறவுஎய்துவன் - இப்பொழுது துறவறத்தை அடைவேன்,' என்று—, உன்னா-எண்ணி, விரைவோடு - வேகத்தோடு, இரதத்தின்-தேரினின்றும், இழிந்து- இறங்கி, உயர்கான் அடைவான்-சிறந்த காட்டை அடையும்பொருட்டு, உணர்வு உற்றனன்-ஆலோசித்தவனானான்; (எ - று.)

இங்கே, இனி-இப்பொழுது என்னும்பொருளைத்தந்தது. துறவு-சன்னியாசம். கானுக்கு உயர்வு-தவஞ்செய்வதற்கு வாய்ப்பான இடமாயிருத்தல். (299)

209.—இதுவும் மேலைக்கவியும்-ஒருதொடர்: க்ருஷ்ணார்ச்சுனர் தருமன்காலில்விழுந்து கோபம்மாற்றிக் கர்ணனுயிரைக் கொல்வோமென்று விடைபெற்றுச் செல்லுதலைக்கூறும்.

நரநாரணர்சென்றுதராபதிதா ளணிவினத்தில்விழுந்தொருநாயகமா
வரனுமவனைப்புனைதேர்மிசையேவைத்துத்துனிமாறிடுமாறுரைசெய்

தரனுமெனநீயணிநின்றிடயா மனலம்பெனவோடியிமைப்பிடைமுப்
புரமேயகமாயதயித்தியரிற் பொருவோனுயிர்கைக்கொடுபோதுவமே.

(இ - ள்.) நர நாரணர் - அருச்சுனனும் கண்ணனும், சென்று - போய், தரா பதி - பூமிக்குத் தலைவனை தருமனது, தாள் நளினத்தில் - தாமரைமலர்போன்ற திருவடிகளில், விழுந்து - வீழ்ந்து நமஸ்கரித்து, ஒரு நாயகம் ஆ - ஏகாதிபத்தியமாக, வரன் ஆம் அவனை - (யாவர்க்கும்) தலைவனாகப் போகிற அத்தருமனை, புனை தேர் மிசை ஏ - அழகிய தேரின்மேலேயே, வைத்து - இறங்கிப்போகாதபடி நிறுத்தி, துனி மாறிடும் ஆறு - கோபம் நீங்கிவிடும்படி, உரை செய்து - (சில இன்சொற்கள்) சொல்லி, (பின்பு), நீ—, அரன் ஆம் என - சிவபெருமான் போல, அணி நின்றிட - சேனையிலே நின்றுகொண்டிருக்க,—யாம் - நாங்கள், அனல் அம்பு என - நெருப்பை முனையாகவுடைய (விஷ்ணுவாகிய) பாணம்போல, இமைப்பு இடை - இமைப்பொழுதுள்ளே, ஓடி - விரைந்துசென்று, முப் புரம் ஏ அகம் ஆய - மூன்று பட்டணங்களையுமே (தமக்கு) இடமாகக் கொண்ட, தயித்தியரின் - அசுரர்கள் போல, பொருவோன் - போர் செய்கிற கர்ணனது, உயிர் - உயிரை, கைக்கொடு - பறித்துக் கொண்டு [அவனைக் கொன்று], போதுவம் - வருவோம். (300)

210. **விடைகொண்டனமென்றுவணங்கிநிலா மதியம்பகலேயொளிவிட்ட தெனக், குடைகொண்டுநிழற்றவிரண்டருகுங் குளிர்சாமரமாருதமாறுபோரப், புடைகொண்டுமகீபர்திரண்டுவரப் புனைதேர்மதமாபுரவித்திரள்கைப், படைகொண்ட பதாகினிமுன்பின்வரும் படியேகினர்மாதவபற்குனரே.**

(இ - ள்.) விடை கொண்டனம் - உத்தரவு பெற்றுக்கொள்ளுகிறோம், என்று - என்றுசொல்லி, வணங்கி - நமஸ்கரித்துவிட்டு, நிலா மதியம் - நிலாவையுடைய பூர்ணசந்திரன், பகல் ஏ - பகற்பொழுதில்தானே, ஒளிவிட்டது என - ஒளியை வீசியதுபோல, குடை - ஒற்றைவெண்கொற்றக் குடை, கொண்டு நிழற்ற - நிழலைச் செய்துகொண்டிருக்கவும், இரண்டு அருகு உம் - இரண்டுபக்கங்களிலும், சாமரம் - சாமரைகள், குளிர் மாருதம் மாறு போர - குளிர்ந்த காற்றை மாறிமாறி வீசவும், மகிபர் - பூமியைக்காக்கிற அரசர்கள், புடைகொண்டு - எல்லாப்பக்கங்களிலுஞ் சூழ்ந்துகொண்டு, திரண்டு வர - கூட்டமாகி வரவும், புனை தேர் - அழகிய தேர்களும், மதம் மா - மதயானைகளும், புரவி - குதிரைகளும், திரள் கை - திரண்ட கைகளையுடைய, படை - காலாட்கூட்டமும், கொண்ட - (ஆகிய நான்கு அங்கங்களைக்) கொண்ட, பதாகினி - சேனை, முன் பின் வரும்படி - முன்னும் பின்னும் வரவும், மாதவ பற்குனர் - கண்ணனும் அருச்சுனனும், ஏகினர் - சென்றார்கள்; (எ - று.)

விடைகொண்டனம் - விரைவுபற்றிய காலவழுவமைதி. இனி குடைகொண்டு - குடையால், நிழற்ற - (பிடிப்பவன்) நிழலைச்செய்ய என்றுமாம். திரள்கைப்படையெனவே, காலாளாயிற்று. புரவித் திரள் - குதிரைக்கூட்டமும், கைப்படை கொண்ட பதாகினி - கைகளில் ஆயுதங்களைக்கொண்ட காலாட்சேனையும் என்றுமாம்.

211.—போர்க்களத்தில் பலவகையோசை யுண்டாதல்.

வெங்கோதைநெடுஞ்சிலையின்சிறுநாண்விசையோதையும்வெவ்விருதோதை யும்வெண், சங்கோதையும்வண்பணையோதையுநால்வகையாகியதானைநெடுங் கடலின், பொங்கோதையுமண்டமுடைந்திடவப்புறமுற்றகலாதுசெவிப்படமற், றிங்கோதையெழுந்ததறிந்திலராலிமையாவிழியோர்முதல்யாவருமே.

(இ - ள்.) வெம் - கொடிய, கோதை - வெற்றிமாலையையு டைய, நெடு சிலையின் - நீண்ட வில்லின், சிறு நாண்-சிறிய நாணி யினது, விசை ஓதைஉம் - வேகத்தாலுண்டாகிய ஒலியும், வெம் விருது ஓதைஉம் - கொடிய வெற்றிக்குஅடையாளமான சின்னங் களின் ஒலியும், வெண் சங்கு ஓதைஉம் - வெண்மையான சங்கத் தின் ஒலியும், வண் பணை ஓதைஉம்-பெரிய பறைகளின்ஒலியும், நால் வகை ஆகிய தானை நெடு கடலின் - பெரியகடல்போன்ற சதுரங்கசேனையின், பொங்கு ஓதைஉம்-மிகுந்த ஒலியும்,அண்டம் உடைந்திட-அண்டகோளம் (அதிர்ச்சியால்) உடைந்துவிடும்படி, அப்புறம் உற்று-அப்பாலுள்ள பகிரண்டங்களிலுஞ் சென்று, அகலாது - நீங்காமல், செவி பட - காதுகளிற் கேட்கப்பட, இமையா விழியோர் முதல் யாவர்உம் - இமையாத கண்களை யுடைய தேவர் முதலிய எல்லோரும், இங்கு ஓதை எழுந்தது - இப்போர்க்களத்தில் உண்டான ஒலியென்று, அறிந்திலர்-தெரிந் தாரில்லை; (எ - று.)—வேறு என்ன பேரொலியோ வென்று சங்கித்து அஞ்சினர் என்றபடி. விருதோதை - விருதுகூறுகிற ஓசையுமாம். மற்று-அசை. (302)

212.—மாயாசரகூடத்தையறுத்துக் கர்ணன் வீமனோடுபொருவதுகண்டு அருச்சுனன் அங்குச் சேர்தல்.

தாமங்களின்வைப்பருள்காளையுமச் சரகூடமறுத்தணிதானையொடும்
வீமன்றனொடும்பொருகின்றமைதன்விழிகண்டுகளித்திடவில்விசயன்
காமன்றனைநீறெழவென்றநுதற் கண்போலெரிகின்றகருத்துடனே
மாமந்தரவெற்பனதேர்கடவும் வலவன்றனொடாகவமன்னினனே.

(இ-ள்.) வில்விசயன் - காண்டீவத்தையுடையஅருச்சுனன்,— தாமங்களின் வைப்பு-ஒளிகளுக்கு இருப்பிடமான சூரியன்,அருள்- பெற்றருளிய, காளைஉம் - கர்ணனும், அ சர கூடம் அறுத்து - (கண்ணன்மாயையாலாகிய) அந்த அம்புக்கூட்டை அறுத்துத் தள்ளிவிட்டு, அணி தானையொடுஉம்-அழகிய சேனையுடனும், வீமன்தனொடுஉம்-வீமசேனனுடனும், பொருகின்றமை - போர் செய்கிறதை, தன் விழி - தனது கண்கள், கண்டு - பார்த்து, களித்திட - மகிழாநிற்க, காமன்தனை நீறு எழ வென்ற-மன்மத னைச் சாம்பராம்படி யெரித்து வெற்றிகொண்ட,நுதல் கண்போல்- (பரமசிவனது) நெற்றிக்கண்போல, எரிகின்ற - (கோபத்தால்) தபிக்கிற, கருத்துடனே - மனத்துடனே, மா மந்தர வெற்பு அன- பெரிய மந்தரமலையைப் போன்ற, தேர்-தேரை, கடவும்-செலுத்து கிற, வலவன்தனொடு - சாரதியாகிய கண்ணனோடு, ஆகவம் - போர்க்களத்தை, மன்னினன் - அடைந்தான்; (எ - று.)

ஆயிரங்கிரணங்களை யுடைமையாலும், மற்றைச்சுடர்களாகிய சந்திர அக்கினிகளுக்கு ஒளிகளைக் கொடுத்துவாங்குந் தன்மையையுடைமையாலும், தாமநிதியென்று சூரியனுக்குப் பெயர்.

213.—அருச்சுனன் ஆக்கினேயாஸ்திரத்தை விடுதல்.

**அங்கிக்கதிர்தந்தகொடுஞ்சிலைநா ணரவக்கணையஞ்சவெறிந்துமிகச்
சங்கித்தடலங்கியளித்ததனிச் சரமேவினன்வந்துதனஞ்சயனும்
பொங்கிக்கனல்சாலமெழுந்ததெனப் புகையும்படிபோயகல்வானதியின்
கங்கிற்பொறிவிட்டதுதாரகையின்கணமென்னவெழுந்ததுகாய்கனலே.**

(இ - ள்.) தனஞ்சயன்உம் - அருச்சுனனும், வந்து—, அங்கி கதிர் தந்த - அக்கினியென்னுஞ் சுடர் அளித்த, கொடு சிலை - கொடிய கர்ண்டீவமென்னும் வில்லின், நாண் - நாணியை, அரவம் கணை-(கர்ணனது) நாகாஸ்திரம், மிக சங்கித்து - (இடியோசையோ வென்று) மிகவுஞ் சந்தேகித்து, அஞ்ச - பயப்படும்படி, எறிந்து - (கைவிரலால்) தெறித்து, அடல் - வலிமையையுடைய, அங்கி அளித்த-அங்கி அருளிய, தனி சரம்-ஒப்பில்லாத ஆக்கினேயாஸ்திரத்தை, ஏவினன் - பிரயோகித்தான்; எழுந்தது - (அதில் நின்றும்) உண்டானதாகிய, காய் கனல் - எரிகின்ற நெருப்பு,— கனல் சாலம்-(பிரளயகாலத்து) நெருப்புத்திரள், பொங்கி எழுந்தது என-பற்றி மேலேகிளர்ந்ததென்னுமாறு, புகையும்படி-புகையுண்டாகும்படி, போய் - மேலெழுந்துசென்று, அகல் வான் நதியின் கங்கில்-பரந்த ஆகாசகங்கையின் கரையில், தாரகையின் கணம் என்ன - நட்சத்திரங்களின் கூட்டத்தைப்போல, பொறிவிட்டது - பொறிகளைச் சிதறியது; (எ - று.) பி-ம்:எறிந்தது காய். (304)

214.—இதுவும் மேலைக்கவியும்-ஒருதொடர்: வாருணாஸ்திரத்தால் கர்ணன் ஆக்நேயாஸ்திரத்தை யவித்தலைக் கூறும்.

**இணையின்றியெழுந்துசுடுங்கனலாலிரதங்களும்வேன்முதலெப்படையும்
கணையுஞ்சிலையுங்கவனப்பரியுங்கரியுங்கரியானமைகண்டியமன்
றுணைவன்றுணைவாகுவளர்ந்திடவுந்துணைவார்புருவங்கடுடித்திடவும்
பணைவெங்குரல்கன்றிமுழங்கிடவும்பவ்வத்தரசன்றருபாணமெடா.**

(இ - ள்.) இணை இன்றி - ஒப்பில்லாமல், எழுந்து - மேல்மேல் வளர்ந்து, சுடும் - எரிக்கின்ற, கனலால் - அக்கினியினால், இரதங்கள்உம் - தேர்களும், வேல் முதல் எ படைஉம் - வேல் முதலிய எல்லா வாயுதங்களும், கணைஉம் - அம்புகளும், சிலைஉம் - வில்லும், கவனம் பரிஉம் - நடைகளையுடைய குதிரைகளும், கரிஉம்- யானைகளும், கரி ஆனமை - (எரிந்து) கரியாய்விட்டதை, இயமன் துணைவன் -யமனதுதம்பியான கர்ணன், கண்டு—, (வீராவேசத்தால்), துணை வாகு வளர்ந்திடஉம் - ஒன்றோடொன்றொத்த [இரண்டு] தோள்களும் ஓங்கியிடவும், துணை வார் புருவங்கள் - நீண்ட இரண்டு புருவங்களும், துடித்திடஉம் - துடிக்கவும், பணை வெம் குரல் - பருத்த கொடிய சிங்கநாதஞ்செய்யும் ஒலி, கன்றி முழங்கிடஉம் - சினந்து ஒலிக்கவும், பவ்வத்து அரசன் தரு - கட

லுக்கு அரசனுகிய வருணன் அளித்த, பாணம் - வாருணாஸ்திரத்தை, எடா - எடுத்து,—(எ-று.)—''விடும்'' என்பதனோடு தொடரும். யமனுங் கர்ணனுஞ் சூரியன்மக்களாதலால், 'இயமன் துணைவன்' என்றார். பணை வெம் தூல் - வாச்சியங்களின் பயங்கரமான தொனியுமாம். (305)

215. பவ்வம்புனல்வற்றமுகந்துவலம் படவம்பரமூடுருவப்பரவா, வெவ் வம்புதமேழுமுடன்பொழியும் வெள்ளம்புரைவெள்ளமிகச்சொரியச், செவ்வம் பரமொத்தகளத்தினிடைச் செய்யோன்மகன்வன்பொடுசீறிவிடு, மவ்வம்புநொடிப் பொழுதத்தறவோ னனுசன்றழலம்பையவித்ததுவே.

(இ - ள்.) பவ்வம் - கடல், புனல் வற்ற - நீர் வறளும்படி, முகந்து - (நீரை) மொண்டுகொண்டு, வலம் பட - வலமாக, அம்பரம் ஊடு - ஆகாயத்தில், உருவ - ஒழுங்காக, பரவா-பரவி, வெம் அம்புதம் ஏழ் உம் - கொடிய சப்தமேகங்களும், உடன் - ஒருசேர, பொழியும் - (பிரளயகாலத்துச்) சொரிகிற, வெள்ளம் - நீர்வெள்ளத்தை, புரை - ஒத்த, வெள்ளம்-வெள்ளத்தை, மிக-மிகுதியாக, சொரிய - பொழியும்படி, செம் அம்பரம் ஒத்த - (இரத்தத்தால்) செவ்வானம்போலச்சிவந்த, களத்தின் இடை-போர்க்களத்திலே, செய்யோன் மகன்-செந்நிறமுடைய சூரியனது குமாரனுன கர்ணன், வன்பொடு - வலிமையோடு, சீறி - கோபித்து, விடும்-பிரயோகித்த, அ அம்பு - அந்த வாருணாஸ்திரம், நொடிப்பொழுதத்து - கைந்நொடிப்பொழுதுள்ளே, அறவோன் அனுசன் - தருமன் தம்பியான அருச்சுனனது, தழல் அம்பை - ஆக்கினேயாஸ்திரத்தை, அவித்தது - தணியச்செய்தது; (எ - று.)—பி-ம்:—களத்திடையிச்.

''பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு, கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி'' என்றார், முல்லைப்பாட்டிலும். அம்புதம் - நீரைக்கொடுப்பது. தழலம்பு - அக்கினியைத் தெய்வமாகவுடைய அஸ்திரம். (306)

216.—இரண்டுகவிகள்-அருச்சுனன்விட்ட அஸ்திரங்களைக் கர்ணன் மாற்றுஅஸ்திரங்களாற் போக்கினமை கூறும்.

**வாயுக்கணையேவினன்வானவர்கோன் மைந்தன்றிகழ்பேரொளிவான்மணியின்
சேயுற்றுரகேசன்வழங்கியதிண் டிறல்வெங்கணையொன்றுதெரிந்தனனு
லாயுப்புறமிட்டுவிடப்பொருவோ னரிவெங்கணையங்குமலைந்திடுவோன்
வீயுற்பலமாமுனைவெங்கணைமேல் வீசிப்பொருமுன்புவிழுங்கியதே.**

(இ - ள்.) வானவர் கோன் மைந்தன் - தேவராஜகுமாரனுன அருச்சுனன், வாயு கணை - வாயவ்யாஸ்திரத்தை, ஏவினன் - தொடுத்தான்; திகழ் பேர் ஒளி - விளங்குகிற பெரிய ஒளியையுடைய, வான் மணியின் - ஆகாயத்துக்கு இரத்தினம்போன்ற சூரியனது, சேய் - புத்திரனுன கர்ணன், உற்று - பொருந்தி, உரகஈசன் வழங்கிய - சர்ப்பங்களுக்குத் தலைவனுகிய ஆதிசேஷன் தந்த, திண் திறல் - மிகுந்த வலிமையுடைய, வெம் கணை ஒன்று - கொடிய ஒப்பற்ற சர்ப்பாஸ்திரத்தை, தெரிந்தனன் - ஆராய்ந்து

தொடுத்தான்; ஆயு புறம் இட்டுவிட -ஆயுள் ஒழியும்படி, பொருவோன்-போர்செய்பவனாகிய கன்னனது, அரி வெம் கணை-கொடிய சர்ப்பாஸ்திரம், அங்கு-அவ்விடத்து,மலைந்திடுவோன்-எதிர்த்துப் போர்செய்கிற அருச்சுனனது, உற்பலம் வீ - கருங்குவளைமலர் போன்ற கூர்மையான, மா முனை-சிறந்த நுனியையுடைய, வெம் கணை-கொடிய வாயவ்யாஸ்திரத்தை, மேல் வீசி பொரும் முன்பு - மேலேவிரைந்துதொடுக்கும் முன்னே, விழுங்கியது -உட்கொண்டு அடக்கிற்று; (எ-று.)—பி- ம்: அவ்வெங்கணை.

ஆகாயத்துக்கு அழகையும் விளக்கத்தையுஞ் செய்தலால், ககனமணியென்று சூரியனுக்குப் பெயர். சர்ப்பம் காற்றை உணவாகவுட்கொள்ளுதலால், வாயுஅஸ்திரத்துக்கு சர்ப்பஅஸ்திரம் மாறாகும். உற்பலம்-உத்பலம். அரி = ஹரி: பாம்பு. (307)

217. என்னம்புதனக்கெதிரில்லையெனு விருளம்பினையேவினன்வில்விசயன்
கன்னன்கலையெட்டுடனெட்டுடைவெண் கதிரம்புதொடுத்தெதிர்கன்றினனுன்
முன்னம்புசிதைந்துசிதைந்தழியா முகமாறியிமைத்துவிழிக்குமுனே
பின்னம்புதொடர்ந்துசெலச்சேலவே பிலமூழ்கியதென்னபெரும்பிழையோ.

(இ - ள்.) வில் விசயன் - வில்லில்வல்ல அருச்சுனன், என் அம்பு தனக்கு எதிர் இல்லை எனு - எனது இந்த அம்புக்கு எதிரில்லையென்று எண்ணி, இருள் அம்பினை-அந்தகாராஸ்திரத்தை, ஏவினன்—; கன்னன்—, கலை எட்டுடன் எட்டு உடை-பதினாறு கலைகளையுடைய, வெண் கதிர் அம்பு - வெண்மையாகிய ஒளியையுடைய பூர்ணசந்திராஸ்திரத்தை, எதிர் தொடுத்து - (அதற்குப்) பிரதியாகப் பிரயோகித்து, கன்றினன்-கோபித்தான்; பின் அம்பு - பின்புவிட்ட கர்ணன் அஸ்திரம், தொடர்ந்து செல செல-தொடர்ந்து விரைந்து செல்லுதலால், முன் அம்பு-முன்புவிட்ட(அருச்சுனன்)அஸ்திரம், இமைத்து விழிக்கும் முனே - (கண்ணை) மூடித்திறக்கும்முன்னே, சிதைந்து சிதைந்து - கெட்டுக் கெட்டு, அழியா முகம் மாறி - (முன் ஒருபோதும் அழியாத தன்) முகம் மாறுபட்டு, பிலம் மூழ்கியது என்ன - பாதாளத்துள்ளே மறைந்தாற்போல (மறைந்து விட்டது); பெரு பிழையோ - (இங்ஙன் போனதும்) தப்பித்துக்கொண்டதாமோ? (எ-று.)

கலை - சந்திரன்பங்கு. எட்டுடன் எட்டு - எட்டோடு கூடிய எட்டு. வெண்கதிர் - அன்மொழித்தொகை. (308)

218.—அருச்சுனனெய்தஅஸ்திரங்களோடு கர்ணனெய்தஅஸ்திரங்கள் முட்டிக்கொண்டு தடுத்தல்.

மகவானருள்வாளிதொடுத்தனனம் மகவான்மகன்வாசிகளேழுடைவெம்
பகவானருள்வாளிதொடுத்தனனப் பகவானருடியாகபராயணனுந்
தகவாளியிரண்டுமுடன்கதுவித் தாழாதுயராதுசமம்பெறவே
முகவாய்கள்பிளந்தனமற்றுளபோர்முனைவாளியுமிப்படிமுட்டினவே.

(இ - ள்.) மகவான் அருள் வாளி -இந்திரனருளிய ஐந்திராஸ்திரத்தை, அ மகவான் மகன் - அவ்விந்திரன் மைந்தனான அருச்

சுனன், தொடுத்தனன்—; வாசிகள் ஏழ் உடை - ஏழுகுதிரையை யுடைய, வெம் பகவான் - வெவ்விய சூரியன், அருள் - அருளிய, வாளி-சூரியாஸ்திரத்தை, அ பகவான் அருள் - அச்சூரியன் பெற்ற, தியாக பராயணன் உம் - தான குணத்துக்கு மேலான இருப்பிடமாகிய கர்ணனும், தொடுத்தனன்—; வாளி இரண்டு உம் - அவ்விரண்டு அஸ்திரங்களும், தக - தகுதியாக, உடன் - ஒன்றோடொன்று, கதுவி - பொருந்தி, தாழாது - (ஒன்று) தாழ் வடையாமலும், உயராது - (ஒன்று) உயர்வடையாமலும், சமம் பெற - ஒப்புமைபொருந்த, முகம்வாய்கள் பிளந்தன - முனைகள் பிளவுபட்டன; மற்று உள - இன்னும்உள்ள, போர் - போருக் குரிய, முனை வாளிஉம் - கூர்மையையுடைய அஸ்திரங்களும், இப்படி முட்டின-இவ்வாறு ஒன்றோடொன்று எதிர்தடுத்தன;

நிறைந்த மகிமை, தைரியம், கீர்த்தி, சம்பத்து, ஞானம், வைராக்கியம் என்கிற இந்த ஆறுக்கும் பகமென்றுபெயர்; அதை யுடையவன், பகவான். பர அயந என்ற இரண்டுஞ் சேர்ந்த பொழுது, பராயணன் என்று வடநூல்விதிப்படி னகரம் ணகர மாயிற்று. (309)

219.—பிரமாஸ்திரத்தைக் கர்ணன் ருத்திராஸ்திரத்தாலடக்க, இருவரும் சற்றுவாளாவிருத்தல்.

உரமந்தரவெற்பினுமிக்கபுயத் துரவோனுளம்வெஞ்சினமூறியெழப்
பிரமன்கணையேவுதலுஞ்சமனுர் பின்னேன்முடுகிப்பிறைமாமவுலிப்
பரமன்கணையேவினனக்கணையப் பகவன்கணைநீறுபடுத்துதலிற்
சரமங்கவைவேறுதொடுத்திலர்கைத் தனுவுங்குனிவித்திலர்தார்முடியோர்.

(இ - ள்.) உரம் - வலிமையையுடைய, மந்தரம் வெற்பின் உம். மந்தரமலையைக்காட்டிலும், மிக்க - மிகுந்த, புயத்து உரவோன் - தோள்களின் வலிமையுடைய அருச்சுனன், உளம்-மனத்தில், வெம் சினம் - கொடியகோபம், ஊறி எழ - மேல்மேல் அதிகப்பட, பிரமன்கணை - பிரமாஸ்திரத்தை, ஏவுதலும் - தொடுத்த வளவில், —சமனுர் பின்னேன் - யமனுக்குப் பின்னே பிறந்த கர்ணன், —முடுகி-விரைந்து, பிறை மா மவுலி பரமன் கணை- பிறைச்சந்திரனைச் சூடிய பெரிய முடியையுடைய சிறந்த ருத்தி ரனது அஸ்திரத்தை, ஏவினன் - தொடுத்தான்; அ கணை-அந்த ருத்திராஸ்திரம், அ பகவன் கணை-அந்தப்பிரமாஸ்திரத்தை, நீறு படுத்துதலின்-சாம்பலாக்கிவிட்டதனால், அங்கு - அப்பொழுது, தார் முடியோர் - மாலையைச்சூடிய மயிர்முடியையுடைய அவ்விரு வரும், சரம் அவை வேறு - வேறுஅம்புகளை, தொடுத்திலர் - தொடுத்தாரில்லை; கை தனு உம் - கையிலுள்ளவில்லையும், குனி வித்திலர் - வளைத்தாரில்லை; (எ - று.)

சமன் - யமன்என்பதன் சிதைவு; ஸமன்என்பதன் திரிபு எனினுமாம்: யாவரிடத்தும் பக்ஷபாதமின்றி நடுவுநிலைமையாக இருப்பவன் என்க. (310)

220.—படுகளச்சிறப்பு.

இவ்வா றிமையோர் கள்வரங் களினு லிருவோர் களுமெய் தியமா மறைகூர்
வெவ்வா ளிகளோ டியுடற் றுதலால் வெஞ்சே னையடங் கமடங் கியபின்
மைவா னளகந் திசைவாண் முகமா மலையா முலைவா ரிதிவண் டுகிலஞ்
செவ்வா றுபடுத் தலின்மே தினியா டிருமே னியணிந் ததுசெவ் வணியே.

(இ - ள்.) இ ஆறு - இவ்விதமாக, இருவோர்கள்உம் - கர்ணனும் அருச்சுனனும், இமையோர்கள் வரங்களினுல் - தேவர்கள் கொடுத்தருளிய வரங்களால், எய்திய - பெற்ற, மா மறை கூர் - சிறந்த மந்திரங்கள் பொருந்திய, வெம் வாளிகள் - கொடிய அஸ்திரங்கள், ஓடி உடற்றுதலால் - விரைந்து சென்று அழித்தலால், வெம் சேனை - கொடிய இரண்டுசேனைகளும், அடங்க - எல்லாம், மடங்கிய பின் - அழிந்தபின்பு, மை வான் அளகம் - கறுத்த ஆகாயமாகிய கூந்தலையும், திசை ஆம் வாள் முகம் - திக்குக்களாகிய ஒளியையுடைய முகத்தையும், மலை ஆம் முலை - மலையாகிய தனங்களையும், வாரிதி வண் துகிலம் - கடலாகிய அழகிய ஆடையையும், செம் ஆறு - சிவந்த ரத்தப்பெருக்கு, படுத்தலின் - செம்மையாக்கியதனுல், மேதினியாள் - பூமிதேவியினது, திரு மேனி - அழகிய உடம்பு, செம் அணி - செந்நிறமுள்ள அலங்காரத்தை, அணிந்தது - தரித்தாற்போன்றது; (எ - று.)

மை வான் - மேகங்களையுடைய வானமுமாம். துகிலம், அம் - சாரியை. "காரார் வரைக்கொங்கைக் கண்ணுர் கடலுடுக்கைச், சீரார் சுடர்ச்சுட்டிச் செங்கலுழிப் பேராற்றுப், பேரார மார்பிற் பெருமா மழைக்கூந்தல், நீரார வேலி நிலமங்கை", "வானியங்கு தாரகைமீன், என்னு மலர்ப்பிணைய லேய்ந்த மழைக்கூந்தல், தென்ன னுயர்பொருப்புந் தெய்வ வடமலையும், என்னுமிவையே முலையா வடிவமைந்த, அன்ன நடைய அணங்கு" என்றார் பெரியோரும். (311)

வேறு.

221.—மூன்றுகவிகள்-கர்ணன் அருச்சுனன்கழுத்தையே யிலக்காகக் கொண்டு நாகாஸ்திரத்தை எய்தமைகூறும்.

மகபதி மைந்தனை மீளவுந் தினகரன் மகனுயிர் கொண்டிட வேணுமென் றுறுசின, மிகமிக வன்சிலை கோலியொண் கிரிபல மிடைவனம் வெந்திட வோடி யந் தரமிசை, புகைகது வும்படி சீறிவெம் பொறிவிடு புரிதழன் மண்டிய நாளி லம் பெனவரு, மிகலுடை வெம்பகு வாய்களைந் துடையதொ ரெழில்கொள்பு யங்களை யேவவென் றுசவியே.

இதுவும் மேற்கவியும் - ஒருதொடர்.

(இ - ள்.) தினகரன் மகன் - சூரியகுமாரனுன கர்ணன், மீளஉம் - பின்பு, மகபதி மைந்தனை - இந்திரகுமாரனுன அருச்சுனனை, உயிர் கொண்டிட வேணும் என்று - கொல்லவேண்டுமென்று, உறு சினம் - பெருங்கோபம், மிக மிக - மேன்மேல் அதிகப்பட,

வல் சிலை கோலி-வலிய வில்லை வளைத்து, வெம் பொறி விடு-வெவ்விய பொறிகளைச் சிந்துகிற, புரி தழல்-விரும்பிய அக்கினி, ஒள் கிரி பல - ஒளியையுடைய பல மலைகள், மிடை - நெருங்கப்பெற்ற, வனம் - காண்டவ வனம், வெந்திட - எரிந்துபோம்படி, அந்தர மிசை - ஆகாயத்தில், ஓடி - விரைந்து சென்று புகை கதுவும்படி-புகை நெருங்கும்படி, சீறி - கோபித்து, மண்டிய நாளில் - பற்றிய காலத்தில், அம்பு என வரும் - (அருச்சுனனைக் கொல்லும்பொருட்டு) அஸ்திரமாக வந்த, இகல் உடை - வலிமையையுடைய, வெம் பகு வாய்கள் - கொடிய திறந்த வாய்கள், ஐந்து உடையது-ஐந்தையுடையதாகிய, ஓர்-ஒரு, எழில் கொள்-அழகைக்கொண்ட, புயங்கனை - நாகாஸ்திரத்தை, ஏவ என்று - விடவேண்டுமென்று, உசவி - சொல்லி,—(எ - று.)—"பரிவுடனருளி வணங்கியெடா விடும்பொழுதினில்" எனமேற்கவியிற் றொடரும்.

இதுமுதல் ஏழுகவிகள் - பெரும்பாலும் ஒன்று நான்கு ஐந்து எட்டாஞ்சீர்கள் கருவிளச்சீர்களும், மற்றைநான்கும் கூவிளச்சீர்களுமாகிய **எண்சீராசிரியச்சந்தவிருத்தங்கள்.** 'தனதன தந்தன தானன தனதன தனதன தந்தன தானன தனதன' என்பது, இவற்றுக்குச் சந்தக்குழிப்பு. (312)

222. **பரிமளசந்தனதீபமுங்கமழ்புகை பனிமலருங்கொடுபூசையும்பரிவுட, னருளிவணங்கியெடாவிடும்பொழுதினி லடல்வலவன்சிலகூறினன்பரிவொடு, விரிதுளபம்புனைமாயன்வஞ்சனையுளன் விசயனகன்றடமார்பகம்புதைதர, வுரகநெடுங்கணையேவுகென்றிடவவ னுறுதிநினைந்திலனாதபன்குமரனே.**

(இ - ள்.) பரிமள சந்தனம் தீபம்உம் - வாசனையையுடைய சந்தனத்தையும் விளக்கையும், கமழ் புகை - வாசனைவீசுகிற தூபத்தையும், பனி மலர்உம்-குளிர்ச்சியையுடைய பூக்களையும், கொடு - கொண்டு, பூசைஉம் - பூஜையையும், பரிவுடன் - அன்போடு, அருளி - செய்து, வணங்கி-நமஸ்கரித்து, எடா - எடுத்து, விடும் பொழுதினில்-விடுகிற சமயத்தில்,—அடல் வலவன்- வலிமையையுடைய பாகனான சல்லியன், பரிவொடு - அன்போடு, சில கூறினன் - சில வார்த்தைகளைச் சொல்பவனாகி, 'விரி துளபம் புனை - மலர்ந்த திருத்துழாயை யணிந்த, மாயன் - கண்ணன், வஞ்சனை உளன் - வஞ்சனைக்குண முள்ளவன்; (ஆதலால்), விசயன் - அருச்சுனனது, அகல் தட மார்பு அகம் - விசாலமான பெரிய மார்பினிடத்தில், புதைதர - அழுந்தும்படி [மார்பை இலக்காகக்கொண்ட], உரகம் நெடு கணை - பெரிய நாகாஸ்திரத்தை, ஏவுக-பிரயோகிப்பாயாக,' என்றிட-என்றுசொல்ல,—ஆதபன் குமரன்-சூரிய குமாரனான கர்ணன், அவன் உறுதி - அச்சல்லியன் சொன்ன நன்மையை, நினைந்திலன் - எண்ணிலனில்லை; (எ - று.) (313)

223. **மழுவுறுசெங்கையிராமனெனன்பவனருள் வரிசிலைகொண்டணிநாணிதன்செவியொடு, தழுவுறமண்டலமாய்வளைந்திடமுதுதறுகணெடுஞ்சினமூளும்வெங்கணையினை, யெழிலிமதங்கயவாகனன்றனயனதெழில்பெறுகந்தரமேதுணித்**

திடும்வகை, யழலெழுநெஞ்சொடுநாடிநின்றுதையின னளிமுரல்பங்கயநாயகன் குமரனே.

(இ - ள்.) அளி முரல்-வண்டுகள் ஒலிக்கின்ற, பங்கயம்-தாமரைக்கு, நாயகன் - தலைவனான சூரியனது, குமரன் - குமாரனான கர்ணன்,—மழு உறு - பரசு என்னும் ஆயுதம் பொருந்திய, செம் கை - சிவந்த கையையுடைய, இராமன் என்பவன் - பார்க்கவராமனென்பவர், அருள் - கொடுத்தருளிய, வரி சிலை - கட்டமைந்த வில்லை, கொண்டு - (கையிற்) பிடித்து, அணி நாணி - அழகிய நாண், தன் செவியொடு - தனது காதுகளோடு, தழுவுற-பொருந்தவும்,—மண்டலம் ஆய் - வட்டவடிவமாய், வளைந்திட - (வில்) வளையவும், தறுகண்-அஞ்சாமையையுடைய, முது நெடு சினம் மூளும்-பழைய பெருங்கோபம் மிகுந்த, வெம் கணையினை - கொடிய நாகாஸ்திரத்தை, எழிலிமதங்கயம் வாகனன்-மேகமாகியயானையை வாகனமாகவுடைய இந்திரனுக்கு, தனயனது - குமாரனான அருச்சுனனுடைய, எழில் பெறு-அழகைப் பெற்ற, கந்தரம்ஏ-கழுத்தே, துணிந்திடும் வகை - அறுபடும்படி, அழல் எழும் நெஞ்சொடு - வெப்பம்பொருந்திய மனத்துடனே, நாடி நின்று-இலக்குப் பார்த்து நின்று, உதையினன் - பிரயோகித்தான்; (எ - று.)

மழுவுறு கை யிராமன் - பரசுராமன்; இவர், ஸ்ரீமகாவிஷ்ணுவினது ஆறும்அவதாரம்: இவரிடத்துக் கர்ணன் பிராமணவடிவமாச்சென்று தநுர்வேதம் பயின்றான். முது சினம்-தன்தாயை அருச்சுனன் கொன்றதனாலாகியது. கந்தரமே, ஏகாரம்-பிரிநிலையோடு தேற்றம். சூரியனைக் கண்டமாத்திரத்தில் தாமரைமலர்தலால், தாமரையாகிற பெண்ணுக்குச் சூரியனைக் கணவனென்பது, மரபு. (*314*)

224.—அந்தநாகக்கணை அருச்சுனனுடைய கிரீடத்தைத் தாக்கித் தள்ளுதல்.

வலவனெனுந்திருமாலதன்றுனைகெழு வரவையறிந்தணிதேரின்வன்றிகிரிக
ளிலகியவங்குலியாறிரண்டவனியி னிடைபுதையும்படிதாழநின்றிடுதலி
னலர்கதிர்தந்தருள்காளையம்பெனவிடு மரவுதனஞ்சயன்மார்பையுங்களனையும்
விலகியவன்றனதாதையன்றுதவியவெயின்மகுடந்தனைமோதிவந்திடறவே.

இதுவும் மேலைக்கவியும்-ஒருதொடர்.

(இ - ள்.) வலவன் எனும் - அருச்சுனசாரதி யெனப்படுகிற, திருமால்-கண்ணன், அதன் - அந்நாகாஸ்திரத்தின், துனை கெழு - உக்கிரம் [வேகம்] மிகுந்த, வரவை - வருகையை, அறிந்து - தெரிந்து, அணி தேரின் - அழகிய (தமது) தேரினது, வல் திகிரிகள் - வலிய சக்கரங்கள், இலகிய-விளங்கிய, அங்குலி ஆறு இரண்டு - பன்னிரண்டு அங்குலம், அவனியினிடை - பூமியில், புதையும்படி - அழுந்தும்படி, தாழ நின்றிடுதலின் - அழுத்திநின்றதனால், அலர் கதிர் தந்தருள் காளை - விளங்குகிற கிரணங்களையுடைய சூரியன் பெற்றருளிய பிள்ளையான கர்ணன், அம்பு என விடும் - அஸ்திரமாகத் தொடுத்த, அரவு - நாகம், தனஞ்

சயன் - அருச்சுனனது, மார்பையும்—, களனேஉம் - கழுத்தையும், விலகி-நீங்கி, அவன்தன தாதை-அவனது தந்தையான இந்திரன், அன்று - அந்நாளில், உதவிய - கொடுத்த, வெயில் மகுடம் தனை-சூரியனொளிபோன்ற ஒளியையுடைய கிரீடத்தை, மோதி வந்து இடற-வந்து தாக்கித் தள்ள,—(எ-று.)—"உதையினன்" என மேலேக்கவியில் முடியும். அங்குலி - விரற்கிடை. தன, அ - ஆறனுருபு. (315)

225.—பின்பு கணையானநாகத்தை அருச்சுனன் இரண்டுதுண்டாக்கிவிடுதல்.

இடறியதிண்பணிவாளிபின்பறிதலு மெதிர்பொரவெஞ்சிலேகோலிநின்றவனணி, பிடரினுமுண்டுகோல்பார்வையென்றிடவலி பெறநிலேநின்றிருதோள்களும் பரிவுற, வடவியின்வெந்துதன்வால்குறைந்திடவிடு மயின்முகவெங்கணையாலதன் பெருமைகொ, ளுடலிரண்டுடலாய்விழுந்தலமர வுதையினனும்பர்பிரானருள் குரிசிலே.

(இ - ள்.) உம்பர்பிரான் - தேவராஜனுன இந்திரன், அருள்பெற்ற, குரிசில் - பெருமையிற்சிறந்த அருச்சுனன், எதிர் பொர - எதிரே போர்செய்தற்கு, வெம் சிலே-கொடிய வில்லே, கோலி நின்றவன் - வளேத்துநின்றவன், திண் - வலிய, இடறிய - (தன் கிரீடத்தைத்) தள்ளின, பணி வாளி - நாகாஸ்திரம், பின் பறிதலும் - பின்னல் நீங்கினவளவில், அணி பிடரின்உம் - அழகியபின்புறத்தும், 'பார்வை உண்டு கொல் - கண் உளதோ?' என்றிட - என்னும்படி, வலி பெற - வலிமை பொருந்த, நிலே நின்று - நிலேயிலே நின்று, இரு தோள்கள்உம் பரிவு உற - இரண்டு தோள்களும் மகிழ்ச்சியாற் பூரிக்க, அடவியின் - காண்டவவனத்தில், வெந்து - எரிந்து, தன் வால் குறைந்திட - அதன் வால் அறுபடும்படி, விடும் - விட்ட, அயில் முகம் வெம் கணையால் - கூர்மையையுடைய நுனியையுடைய கொடிய அம்பினுல், அதன் - அந்நாகத்தின், பருமை கொள் - பருத்தலேக் கொண்ட, உடலம் - உடம்பு, இரண்டு உடல் ஆய் - இரண்டு துண்டாகி, விழுந்து-கீழ்வீழ்ந்து, அலமர-வருந்தும்படி, உதையினன்-எய்தான்; (எ - று.)

பறிதல் - கடந்து ஓடுதல், பெயர்ந்து வழுவுதல். பின்பு அறிதலும் என்றும் பிரித்து உரைக்கலாம். (316)

226.—அழிகிறநாகம் மீண்டும் அருச்சுனன்மீதுவிடுமாறு வேண்ட, கர்ணன் மறுத்திடல்.

பிறகுபுரிந்தெழில்கூர்தனஞ்சயன்விடு பிறைமுகவெங்கணையாலழிந்திடுபணி, திறலுடன்முன்றுணிசேருமைந்தலேயொடு திரியவும்வந்தெனேயேவுகென்றலறவு, முறவொடுகுந்திவழாவரம்பெறுதலி னுரைவழுவும்பெரிதாகுலம்புரியினு, மறுகணேயொன்றுதொடேன்முனிந்தினியென வரிகழலங்கர்குலாதிபன்புகலவே.

இதுவும், மேலேக்கவியும்-ஒருதொடர்.

(இ - ள்.) பிறகு - (கிரீடத்தைஇடறின)பின்பு, எழில் கூர் - அழகுமிகுந்த, தனஞ்சயன் - அருச்சுனன், புரிந்து - விரும்பி,

விடு - விட்ட, பிறைமுகம் வெம் கணையால் - கொடிய அர்த்த சந்திரபாணத்தால், அழிந்திடு-அழிகிற, பணி-நாகம், திறலுடன்-வலிமையுடனே, முன் துணி சேரும் ஐந்தலையொடு - முன்னே துணிபட்ட ஐந்துதலைகளோடு, திரியஉம் வந்து-மீளவும் வந்து, எனை ஏவுக என்று - என்னை (இன்னொருமுறை) விடுவாயாக வென்று, அலறஉம் - கதறிச் சொல்லவும்,—வரி கழல் - கட்டிய வீரக்கழலையுடைய, அங்கர் குல அதிபன் - அங்க நாட்டார்கூட்டத்துக்குத் தலைவனான கர்ணன், 'குந்தி-பாண்டவர் தாய், உறவொடு - (தாய்) முறைமையோடு, வழா வரம் பெறுதலின்-தவறவொண்ணாத வரத்தை(என்னிடம்)பெற்றதனால், உரை வழுவும்-(மறுபடி உன்னைவிட்டால்) என்வார்த்தை பொய்க்கும்; (ஆதலால்), பெரிது ஆகுலம் புரியின்உம் - மிகுந்த வருத்தத்தைச் செய்தாலும், இனி-இனிமேல், மறு கணை ஒன்று-மற்றொருதரம் நாகாஸ்திரத்தை, முனிந்து-கோபித்து, தொடேன்-தொடுக்கமாட்டேன்,' என-என்று, புகல -சொல்லிவிட,—(எ-று.) —''உரகம்***நொந்து உரைசெய்து மறலியிடந்தனிலானது'' என்க. ஐந்தலை-ஐந்து ஈறுகெட்டது; [நன்-உயிர்-38.] (317)

227.—கர்ணனை நொந்துகொண்டு அந்நாகம் இறத்தல்.

எரியிடை வெந்துடல் வாலுமுன் றறிதலி னிடரற வுய்ந்திட நீ பெரும்புகலெனை, விரைவொடு வந்தெனை வாளிகொண் டிடுகென விசயனை வென்றிடு மாறுளங் கருதவு, மொருதனி வெஞ்சிலை கால்வளைந் திலதுகொ லொருபடி யும்பிழை போனதுன் றொடையென, வரிகழ லங்கர்பி ரானைநொந் துரைசெய்து மறலியிடந்தனி லானதன் றுரகமே.

(இ - ள்.) உரகம்-அந்நாகம், 'எரியிடை-நெருப்பிலே, உடல் வெந்து-உடம்பு எரிந்து,வால்உம்முன் தறிதலின்-வாலும் முன்னே (அருச்சுனன் கணையால்) அறுபட்டதனால், இடர் அற-துன்பமில்லாமல், உய்ந்திட-(யான்) பிழைக்கும்பொருட்டு, நீ பெரு புகல் என-நீ பெரிய புகலிடமென்று எண்ணி,-விரைவொடுவந்து-வேகத்தோடு (உன்னிடம்) வந்து, எனை வாளி கொண்டு இடுக என - என்னை அஸ்திரமாகக்கொள்ளுவாயாகவென்றுசொல்ல, விசயனை வென்றிடும் ஆறு-அருச்சுனனைச் சயிக்கும்படி, உளம் கருதஉம்-(நீயும்) மனத்தில்நினைக்கவும், ஒரு தனிவெம் சிலை-ஒப்பற்றதொரு கொடிய வில், கால் வளைந்திலது கொல்-(செவ்வையாகக்) கோடி வளையவில்லையோ? உன் தொடை-நீ தொடுத்த இலக்கு, ஒரு படி உம்-(எய்த) ஒருதரத்திலும், பிழைபோனது - தவறிப்போய்விட்டது,' என-என்று, வரி கழல் அங்கர் பிரானை-கட்டியவீரக்கழலையுடைய அங்கதேசத்தார்க்கரசனான கர்ணனை நோக்கி, நொந்து உரைசெய்து-வருத்தத்தோடு சொல்லிவிட்டு, அன்று-அப்பொழுதே, மறலி இடந்தனில்-யமனிடத்தில், ஆனது-சென்றது; [இறந்ததென்றபடி]; (எ - று.) (318)

வேறு.

228.—நாகாஸ்திரத்துக்கு அருச்சுனன்தப்பினமைக்குப் பாண்டவபக்கத்துமன்னர் பெருமகிழ்வுறல்.

**நாகாயு தந்தப்பி நரனுய்ந்த பொழுதத்து நாகக்கொடிச்
சேகான நெஞ்சத்த வன்சேனை யிற்றன்செ ருச்சேனையிற்
பாகார்க டாயானை நரபாலர் மகிழ்வோடு பரிவெய்தினு
ரேகாத சந்தன்னி லெக்கோளு நிகரென்ன விகலின்றியே.**

(இ - ள்.) நாகாயுதம் தப்பி-நாகாஸ்திரம் தவறி, நரன் உய்ந்த பொழுதத்து-அருச்சுனன் பிழைத்தபொழுதில், நாகம் கொடி - சர்ப்பத்துவசத்தையுடைய, சேகு ஆன நெஞ்சத்தவன்-(சிறிதும் இரக்கமில்லாமல்) வயிரம் பொருந்திய மனத்தையுடைய துரியோதனனது, சேனையில்-சேனையிலும், தன் - அருச்சுனனது, செரு சேனையில்-போர்வல்ல சேனையிலுமுள்ள, பாகு ஆர் கடாம் யானை-பாகன்பொருந்திய மதயானைக்கு ஒப்பான, நரபாலர்-அரசர்களெல்லாம், ஏகாதசந்தன்னில்-பதினோராமிடத்தில், எகோள்உம்-எல்லாக்கிரகங்களும், நிகர் என்ன-ஒத்திருப்பதுபோல, இகல்இன்றி-மாறுபாடில்லாமல், மகிழ்வோடு-களிப்போடு, பரிவு-துன்பத்தை, எய்தினார்-அடைந்தார்கள்; (எ - று.)

துரியோதனன்சேனையில் நரபாலர்பரிவும் அருச்சுனன் செருச்சேனையில் நரபாலர் மகிழ்வும் ஒருநிகராக எய்தினரென்று எதிர்நிரனிறை. பரிவெய்தினர்-ஆச்சரியப்பட்டாரென்பாருமுளர். கடாம்-ஆண்பெயராகவுமாம். ஏகாதசம்-ஒன்றோடுகூடிய பத்து. எல்லாக்கிரகங்கட்கும் பதினோராமிடம் மிக்க பயனைக் கொடுக்கக்கூடிய இடமென்பது, சோதிடநூற்கொள்கை.

இதுமுதல் எட்டுக் கவிகள்-ஈற்றுச்சீ ரொன்று மாங்கனிச்சீரும், மற்றைநான்குங் காய்ச்சீர்களு மாகிய கலிநிலைத்துறைகள். (319)

229.—சல்லியன் மனம்நொந்து கர்ணனைச் சில கூறலுறுதல்.

**அருமார்பிலக்காகவெய்யென்னவெய்யாவகங்காரமும்
வருமாசுணந்தன்னைமறுகாலுமேவாமன்மறைசெய்ததும்
பொருமாறுநினைவற்றதுங்கண்டுநரனொத்தபோர்மீளியைத்
திருமாலொடொப்பானுமுளநொந்துநொந்தம்மசிலகூறுவான்.**

(இ - ள்.) திருமாலொடு ஒப்பான்உம் - கண்ணனோடு ஒத்த சல்லியனும்,—அரு மார்பு இலக்கு ஆக - (அழித்தற்கு) அரிய (அருச்சுனன்) மார்புலட்சியமாக, எய்-(அம்பு) எய்வாய், என்ன - என்று (தான்) சொல்ல, எய்யா - (அவ்வாறு கர்ணன் அம்பு) தொடுக்காத, அகங்காரம்உம்-நான் என்னுஞ்செருக்கையும், வரு மாசுணந்தன்னை-மீண்டுவந்த நாகத்தை, மறு கால்உம் ஏவாமல்-மற்றொருதரமுந்தொடுக்காமல், மறை செய்ததுஉம்-மறுத்தல் செய்ததையும், பொரும் ஆறு-போர்செய்யும்படி, நினைவு அற்றதுஉம்-(கர்ணன்) நினைப்பில்லாமற்போனதையும், கண்டு-

பார்த்து, உளம் நொந்து நொந்து -மனம் மிகவருந்தி, நரன் ஒத்த போர் மீளியை - அருச்சுனனைப்போன்ற போரில்வல்ல வீரனான கர்ணனைநோக்கி, சில கூறுவான் - சிலவார்த்தை சொல்லுவானானான்; (எ - று.)—அதுமேற்கவியிற் கூறுகிறார். (320)

230.-இரண்டுகவிகள்-'இனிச் சாரத்தியஞ் செய்யேன்: உன்னால் வெல்லலும் ஆகாது' என்று அத்தேரைவிட்டுச் சல்லியன்தன்தேரி லேறிக்கொள்ளுதலைக் கூறும்.

என்னாலுமரிதித்தடந்தேர்விரைந்தூர்தலினியென்றுமற்
றுன்னாலுமரிதந்தவிசயன்றனுயிர்கொள்ளலுன்னித்தபோர்
பன்னாகதுவசற்குமரிதாலுனைக்கொண்டுபாராளுமா
றென்னாவிழிந்தானவன்றேரின்மிசைநின்றுமிசைநின்றுளான்.

(இ-ள்.) இசை நின்றுளான்-கீர்த்தி நிலைபெற்றுள்ளவனாகிய சல்லியன்,—'இ தட தேர்-இந்தப் பெரிய தேரை, விரைந்து ஊர்தல்-வேகமாகச் செலுத்துதல், என்னாலும்—, அரிது-(செய்தற்கு) அருமையானது; மற்று-மேலும், இனி என்றும்-இனிமேல் எப்பொழுதும், உன்னித்த போர்-முயன்றுசெய்கிற போரில், அந்த விசயன் தன் உயிர் கொள்ளல்-அந்த அருச்சுனனைக் கொல்லுதல், உன்னாலும்—, அரிது-அருமையானது; பன்னாக துவசற்கு உம் - பாம்புக்கொடியையுடைய துரியோதனனுக்கும், உனைகொண்டு-உன்னை (த் துணையாகவைத்து) க்கொண்டு, பார் ஆளும் ஆறு-பூமியை அரசாளும்விதம், அரிது-அருமையானது,' என்னா-என்று சொல்லி, அவன் தேரின் மிசை நின்றும் - அந்தக் கர்ணனது தேரின்மேனின்று, இழிந்தான்-இறங்கினான்; (எ - று.)—பன்னாகம்-பந்நகம் என்பதன் விகாரம். (321)

231. என்றேயெழிற்குந்திவயினல்குதனியாளியிகலேறனன்
வன்றேர்செலுத்திப்பெரும்போர்முடிப்பிக்கவருசல்லியன்
றென்றேரிசைச்சேவ்விநறைநாறுமலர்விட்டசிறைவண்டெனத்
தன்றேருமேல்கொண்டுதனிவில்லுமீளத்தரித்தானரோ.

(இ - ள்.) எழில்-அழகையுடைய, குந்தி வயின் - குந்திதேவியினிடத்தில், நல்கு-பிறந்த, தனி-ஒப்பில்லாத, இகல்-வலிமையையுடைய, யாளி ஏறு-ஆண் சிங்கத்தை, அனன்-ஒத்தவனாகிய கர்ணனுக்கு, வன் தேர் செலுத்தி-வலிய தேரை ஓட்டி, பெரு போர் முடிப்பிக்க வரு-பெரிய யுத்தத்தை முடியச்செய்ய வந்த, சல்லியன்—,—என்று-என்றுசொல்லி, செவ்வி-அழகையுடைய, நறை நாறும்-வாசனை வீசுகிற, மலர்-பூவை, விட்ட-விட்டு (அப்பாற்) சென்ற, தென் தேர்-தேனை ஆராய்ந்து உண்கிற, இசை - இசைப்பாட்டையுடைய, சிறை வண்டு என-சிறகுகளை யுடைய வண்டு போல, தன் தேரு மேல்கொண்டு-(கர்ணன்தேரைவிட்டுத்)தனது தேரின்மேல் ஏறிக்கொண்டு, தனி வில்உம்-ஒப்பற்றதனதுவில்லையும், மீள-திரும்பவும், தரித்தான்-(கையிற்) பிடித்தான்; (எ - று.)

தென்-தேன் என்பதன் விகாரம். முன்னே தருமன்வேண்டிக் கொண்டபடி சல்லியன் அடிக்கடி இகழ்ந்துபேசிக் கர்ணனது

தைரியத்தைக் குறையச்செய்பவனாதலால், அவனை இங்ஙனங் கூறினார். தேரு, உ-சாரியை. தேரும் என்று பிரிப்பினுமாம்.(322)

232.— கர்ணன் பரசுராமன்சாபத்தை நினைத்தல்.

கதவாசிநடையற்றுவலியற்றுவரிவிற்கொள்கணையாவையும்
விதவாழிநிலனுற்றுவிரைதேருமெய்வன்புமெலிவுற்றபின்
புதவாமன்மழுவாளியுரைசெய்தசாபத்தையுறவுன்னினு
னதவாமுரட்போர்தனக்கஞ்சுமோவென்றுமடலங்கர்கோன்.

(இ - ள்.) அடல்-வலிமையையுடைய, அங்கர் கோன் - அங்க நாட்டார் அரசனான கர்ணன், கதம் வாசி-வலியையுடைய குதிரைகள், நடை அற்று-நடத்தலில்லையாகி, வரிவில் கொள்-கட்டமைந்த வில்லில் தொடுக்கப்படுகிற, கணை யாவை உம்-அம்புகளெல்லாம், வலி அற்று-பலமில்லாதனவாகி, விரை தேர் உம் - வேகமாகச் செல்லுகிற இரதமும், விதம் ஆழி நிலன் உற்று - பலவகையாகிய சக்கரங்கள் பூமியிற் புதையப்பெற்று, மெய்வன்பு உம் மெலிவு உற்ற பின்பு-தேகபலமுங் குறைவடைந்தபின்பு, மழுவாளி-கோடாலிப்படையையுடைய பரசுராமன், உதவாமல் - (அஸ்திரசஸ்திரங்களெல்லாஞ் சமயத்திற்குப்) பயன்படாமற்போம்படி, உரை செய்த-சொன்ன, சாபத்தை-சபிப்பை, உற-செவ்வையாக, உன்னினன்-எண்ணினன்; அதவா-அச்சாபமில்லாவிட்டால், (கர்ணன்), என்றுஉம்-எப்பொழுதும், முரண் போர்தனக்கு - வலிமையையுடைய யுத்தத்துக்கு, அஞ்சும்ஓ-பயப்படுவானோ? (எ - று.)—அஞ்சமாட்டான் என்றபடி.

மழு ஆளி-மழுவை ஆளுபவன். கர்ணன் இளம்பிராயத்திற் பிராமணவடிவங்கொண்டு பரசுராமரிடஞ்சென்று வில்வித்தையைக் கற்றுக் கைதேர்ந்து வருகையில், ஒருநாள் அவர் இவன்மடியின்மேல் தந்தலையைவைத்துக்கொண்டு சாய்ந்து சயனித்திருக்க, அப்பொழுது இவனால் தன்மைந்தனாகிய அருச்சுனனுக்குப் பின்பு இடையூறு நேருமென்று கருதிய தேவேந்திரன் ஒருவண்டுவடிவங் கொண்டு சென்று அவன் தொடையைத் துளைத்துப் புண்படுத்த, இரத்தம் பெருகிவழியவுங் குருவின் நித்திரைக்குப் பங்கம் வருவிக்கக்கூடாதென்று எண்ணிக் கர்ணன் அரிதிற்பொறுத்துக்கொண்டு வருந்தாதிருக்க, உடனே துயிலுணர்ந்த அவ்விராமன் அதனை நோக்கி அந்தணனுக்கு இத்தகையபொறுமை யிராதென்றெண்ணி,'நீயார்? உண்மையைக் கூறுவாய்'என்ன, இவனும் மறைக்கமாட்டாமல் 'க்ஷத்திரியசாதியானான அதிரதனென்னுந் தேர்ப்பாகன் வளர்த்த மகன்யான்'என்ன, இருபத்தொருமுறை பூமிமுழுதுஞ் சுற்றிவந்து க்ஷத்திரியர்கள் பலரையும் வேரறுத்த அப்பார்க்கவர் கடுங்கோபங்கொண்டு, 'யான் உனக்குக் கற்றுக் கொடுத்த கல்வியனைத்துந் தக்கசமயத்தில் உதவாதபடி மறந்து போய் விடக்கடவது' என்று சாபங்கொடுத்தார். கர்ணன் அரசாண்டுவருகையில், ஒருநாள் தேரின்மீதேறி வீதியில் விரைந்து செல்லுகையில், ஒரு முனிவரது பசுவின் கன்று தேர்ச்சக்கரத்தின்கீழ் அகப்பட்டு நசுங்கி இறந்துபோய்விட, அம்முனிவர் மிக

வருந்தி எத்தனை சமாதானப்படுத்தியுங்கேளாமல் போர்க்களத்தில் உன் உடல் பகைவரம்பினால் இங்ஙனஞ் சிதைந்து உனது தேர்ச் சக்கரம் நிலத்தில் அழுந்திவிடக்கடவதென்று சபித்தார். அதவா -வடமொழி அவ்வியயம். (323)

233.—இதுவும் மேலைக்கவியும்-ஒருதொடர்: கர்ணன்வேறுதேரேறி அருச்சுனன்மீது பல அம்புகள்விட, கர்ணன்வலி குறைவதைக் கிருஷ்ணன் அருச்சுனனுக்குக்கூறிக்கொடுத்தமை கூறும்.

இயற்கைப்பெருங்கொற்றவலியன்றியார்யாரிடத்தும்பெறுஞ்
செயற்கைப்படைத்திண்மைகைவந்திலாவெய்யசெய்யோன்மகன்
வெயர்க்கத்தனுதல்கண்சிவப்பேறமனம்வெம்பமண்மீதிழிந்
தயர்க்கச்சபித்தோனைவந்தித்துவேறோரடற்றேரின்மேல்.

(இ-ள்.) இயற்கை-இயல்பாகவுள்ள, பெரு-பெரிய, கொற்றம்-வெற்றிக்குக்காரணமான, வலி அன்றி-பலத்தைமாத்திரமேயல்லாமல், யார் யாரிடத்துஉம் பெறும் - பலபேரிடத்தினின்றும் பெறுகிற, செயற்கை - செயற்கையாக வுள்ள, படை திண்மை - ஆயுதங்களின் வலிமை, கை வந்திலா - சித்தியாகப் பெறாத, வெய்ய - வெம்மையையுடைய, செய்யோன்மகன்-செம்மைநிறத்தையுடைய சூரியனது குமாரனான கர்ணன், (கோபத்தால்), தன் - தனது, நுதல்-நெற்றி, வெயர்க்க-வேர்வையடையவும், கண்-கண்கள், சிவப்பு ஏற-செம்மைநிறத்தை மிகுதியாகப் பெறவும், மனம் வெம்ப-நெஞ்சுகொதிக்கவும், மண்மீது இழிந்து -(தேரினின்றும்) பூமியில் இறங்கி, அயர்க்க சபித்தோனை - (யாவையும்) மறக்கும்படி சபித்த பரசுராமரை, வந்தித்து - (திக்குநோக்கி) நமஸ்கரித்து, வேறு ஓர் அடல் தேரின்மேல் - வேறொரு வலிமையையுடைய தேரில்,—(எ-று.) "ஏறி" என்க. (324)

234. ஏறித்தன்வலவன்செலுத்தத்தடக்கையிலிகல்வில்லுடன்
சீறிக்கொடுஞ்சாயகங்கோடிமுகிலூர்திசேய்மேல்விடக்
காறிக்கனன்றக்கடுந்தேர்செலுத்துங்கரும்பாகனார்
கூறிக்கொடுத்தாரருக்கன்குமரன்வன்மைகுறைகின்றதே.

(இ-ள்.) ஏறி -ஏறிக்கொண்டு, தன் வலவன் - தனது சாரதி, செலுத்த-(அத்தேரைச்) செலுத்தாநிற்க,—தட கையில் - பெரிய கையிலே (பிடித்த), இகல்வில்லுடன் - வலிமையையுடைய வில்லோடு, சீறி - கோபித்து (ச்சென்று), கொடு சாயகம் கோடி - கொடியகோடிபாணங்களை, முகில்ஊர் திசேய்மேல்- மேகங்களாகிய வாகனத்தையுடைய இந்திரனதுபுத்திரனாகிய அருச்சுனன்மேல், விட-பிரயோகிக்க,—காறி கனன்று-மிகவுங்கோபித்து, அ கடு தேர் செலுத்தும்-அந்த விரைந்த தேரை ஓட்டுகிற, கரு - கருநிறத்தையுடைய, பாகனார்-சாரதியாகிய கண்ணபிரான், அருக்கன் குமரன் - சூரியகுமாரனான கர்ணன், வன்மை குறைகின்றது - பலங்குறைகிறதை, கூறிக்கொடுத்தார்-(அருச்சுனனுக்குச்)சொல்லிக்கொடுத்தார்; (எ - று.)

முனிலூர்தி-பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. காறிக்கனன்று-ஒருபொருட்பன்மொழி. (325)

235.—அருச்சுனன் கர்ணன்பிராணவாயுவையொடுக்கப் பாணந்தொடுத்தல்.

குறையற்ற தன்வில்லை மகவற்கு மாரன்கு னித்தாசுகஞ்
சிறையற்ற கிரிபோல நிற்கின்ற தினகாரி சிறுவன்றன்மெய்
மறையத்தொ டுத்தானு யிர்க்கால் விப்பான்ம யிர்க்காறொறுங்
கறையற்ற மதிபோல நிலவீனு முத்தக்க ழற்காலினன்.

(இ - ள்.) கறை அற்ற-களங்கமில்லாத, மதி போல - பூர்ண சந்திரன்போல, நிலவு ஈனும் - வெண்காந்தியை வீசுகிற, முத்தம் கழல்-முத்துக்களாலாகிய வீரக்கழலையணிந்த, காலினன் - பாதத்தையுடையவனாகிய, மகவற்குமாரன் - இந்திரபுத்திரனான அருச்சுனன்,—குறை அற்ற-ஒருகுறையும் இல்லாத, தன் வில்லை - தனது காண்டீவத்தை, குனித்து - வளைத்து, சிறை அற்ற கிரி போல நிற்கின்ற-இறகுகளறுபட்ட மலைபோல (வலிகுறைந்து) நிற்கிற, தினகாரி சிறுவன் தன் - சூரியகுமாரனான கர்ணனது, மெய் - உடம்பு, மறைய - மறையும்படி, மயிர் கால் தொறுஉம்-உரோமத்துவாரங்கள்தோறும், உயிர் கால் அவிப்பான் - பிராணவாயுவை யழிக்கும்பொருட்டு, ஆசுகம் - பாணங்களை, தொடுத்தான் - எய்தான்; (எ - று.)

மகவற்குமாரன் - விகாரம். தினகாரி - நாளைச் செய்பவன். சிறையற்ற கிரி - கர்ணன்சாரதியாகிய சல்லியனை இழந்ததற்கு உவமையாகவுமாம். (326)

வேறு.

236.—உடம்பெல்லாங்குருதிவழியவும் கர்ணன்வில் அம்புகளை ஓவாதுபொழிதல்.

எத்தலங் களினு மீகையா லோகை வாகையா லெதிரிலா வீரன்
மெய்த்தல முழுதுந் திறந்துகு குருதி வெயில்வன் கரங்கள்போ லுகுப்பக்
கொத்தல ரலங்கன் மகுடமுங் கவச குண்டலங் களுமுருக் குலைந்துங்
கைத்தல மறந்த தில்லைவிற் குனிப்புங் கடுங்கணை தொடுத்திடுங் கணக்கும்.

(இ - ள்.) ஈகையால் - தானத்தினாலும், ஓகை வாகையால் - களிப்புக்குக்காரணமான வெற்றியாலும், எ தலங்களின்உம் - எல்லாவிடங்களிலும், எதிர் இலா-(தனக்கு) ஒப்புப்பெறாத, வீரன் - வீரனாகிய கர்ணனது, மெய் தலம் முழுதும்உம்-உடம்பினிட முழுவதும், திறந்து - துளையுண்டாகி, உகு - (அத்துளைகளினின்றும்) பெருகுகிற, குருதி - இரத்தம், வெயிலவன் கரங்கள் போல - சூரியனது கிரணங்கள்போல, உகுப்ப - சொரியவும், கொத்து அலர் - பூங்கொத்துகள் அலரப்பெற்ற, அலங்கல்-வெற்றிமாலையைச்சூடிய, மகுடம்உம் - கிரீடமும், கவச குண்டலங்கள்உம் - கவசமுங் குண்டலங்களும், உரு குலைந்துஉம் - வடிவமழிந்தபின்

பும், கைத்தலம்-(அவனது) கையினிடங்கள், வில் குனிப்புஉம் - வில்லைவளைத்தலையும், கடு கணை தொடுத்திடும் கணக்குஉம் - கொடிய அம்புகளை எய்யுந் தன்மையையும், மறந்தது இல்லை—; (எ - று.)—பி - ம்: போல்விரிய.

இரத்தத்திற்குச் சூரியகிரணம், செம்மை நிறத்தால் உவமை. மகுடம் உருக்குலைந்தது, இப்பொழுது: கவசகுண்டலங்கள்உருக்குலைந்தது, முன்னே இந்திரனுக்குக் கொடுத்தபொழுது. அதனையும் இங்கே எடுத்துக்கூறியது, அது இவன்வலி குறைவதற்கு முக்கியகாரணமாதலின்.

இதுமுதற்பத்துக்கவிகள்-இச்சருக்கத்தின்முதற்கவிபோன்ற எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள். (327)

237.—சூரியாஸ்தமனமாவதற்கு இரண்டுவிற்கிடையிருக்கப் போரை நிறுத்துவித்து ஸ்ரீக்ருஷ்ணன் வேதியனாய்க் கர்ணனிடஞ்செல்லல்.

அத்தவெற்பிரண்டுவிற்கிடையெனப்போயாதபன்சாய்தல்கண்டருளி
முத்தருக்கெல்லாமூலமாய்வேதமுதற்கொழுந்தாகியமுதல்வன்
சித்திரச்சிலைக்கைவிசயனைச்செருநீயொழிகெனத்தேர்மிசைநிறுத்தி
மெய்த்தவப்படிவவேதியனாகிவெயிலவன்புதல்வனையடைந்தான்.

(இ - ள்.) அத்த வெற்பு - அஸ்தகிரி, இரண்டு விற்கிடை என - இரண்டு விற்கிடைத்தூரத்தி லுள்ளதென்னு மிடத்தில், ஆதபன் - சூரியன், போய் - சென்று, சாய்தல் - விழுதலை, முத்தருக்கு எல்லாம் - முத்தியுலகத்தையடைந்தவர் யாவர்க்கும், மூலம் ஆய் - முதற்கடவுளாகி, வேதம் முதல் கொழுந்து ஆகிய - வேதங்களின் சிறந்த கொழுந்தாகிய, முதல்வன் - தலைவனாகிய கண்ணன், கண்டருளி - பார்த்தருளி,—சித்திரம் சிலை கை - அழகிய வில்லேந்திய கையையுடைய, விசயனை - அருச்சுனனை (நோக்கி), நீ செரு ஒழிக என - நீ (சற்றே) போரை நிறுத்துவாயாக வென்று சொல்லி, தேர் மிசை நிறுத்தி - தேரின்மேல் (அவனை) நிற்கச்செய்துவிட்டு, மெய் தவம் படிவம் - உண்மையாகிய தவவேஷத்தையுடைய, வேதியன் ஆகி - பிராமண வடிவமாய், வெயிலவன் புதல்வனை - கர்ணனை, அடைந்தான்—; (எ-று.)

அத்தம் = அஸ்தம், வடசொற்றிரிபு. விற்கிடை-வில் கிடக்குமவ்வளவு தூரம். 'வேதமுதற்கொழுந்தாகிய'என்றது-வேதாந்தங்களிற் சிறப்பாக எடுத்துப் பிரதிபாதிக்கப்படுகிற என்றபடி. (328)

238.—'உனக்குஇயைந்ததை எனக்குத்தருக' என்று வேஷதாரியான கிருஷ்ணன் கேட்டல்.

தாண்டியதரங்கக்கருங்கடலுடுத்த தரணியிற்றளர்ந்தவர்தமக்கு
வேண்டியதருதிநீயெனக்கேட்டேன் மேருவினிடைத்தவம்பூண்டேன்
ஈண்டியவறுமைப்பெருந்துயருழந்தே னியைந்ததொன்றிக்கணத்தளிப்பாய்
தூண்டியகவனத்துரகதத்தடந்தேர்ச் சுடர்தரத்தோன்றியதோன்றல்.

இரண்டுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) தூண்டிய-(அருணனால்)செலுத்தப்படுகிற, கவனம் துரகதம்-கதிகளையுடைய குதிரையைப் பூட்டிய, தட தேர்-பெரிய தேரையுடைய, சுடர்-முச்சுடர்களுட் சிறந்த சூரியன், தர - பெற, தோன்றிய-பிறந்த, தோன்றல்-வீரனே! மேருவினிடை-மகாமேரு கிரியினிடத்தில், தவம் பூண்டேன்-தவத்தைச் செய்துகொண் டிருந்தவனும், ஈண்டிய-மிகுந்த, வறுமை-தரித்திரத்தால், பெரு துயர் உழந்தேன்-பெரிய துன்பத்தை அனுபவித்தவனுமாகிய யான், தாண்டிய-மோதுகிற, தரங்கம்-அலைகளையுடைய, கருகடல் -கரிய கடலினால், உடுத்த-சூழப்பட்ட, தரணியில்-பூமியில், தளர்ந் தவர் தமக்கு-(வறுமையால்) தளர்ச்சியை யடைந்தவர்களுக்கு, நீ—, வேண்டிய-(அவர்கள்) வேண்டின பொருள்களை, தருதி - கொடுக்கிறாய், என-என்று, கேட்டேன்-கேள்விப்பட்டு வந்தேன்; (எனக்கு), இயைந்தது ஒன்று-கொடுக்கக்கூடியதொரு பொருளை, இ கணத்து-இப்பொழுதே, அளிப்பாய்-கொடுப்பாயாக; (எ - று.) —தோன்றால்-தோன்றல் என்பதன் விளி. (329)

239.—வேஷதாரி கர்ணனைப் புண்ணியமெல்லாம் தரக் கேட்டல்.

என்றுகொண்டந்தவந்தணனுரைப்ப விருசெவிக்கமுதெனக்கேட்டு
வென்றிகொள்விசயன்விசயவெங்கணையான்மெய்தளர்ந்திரதமேல்விழுவோன்
நன்றெனநகைத்துத்தரத்தகுபொருணீ நவில்கெனநான்மறையவனு
மொன்றியபடிநின்புண்ணியமனைத்துமுதவுகென்றலுமுளமகிழ்ந்தான்.

(இ - ள்.) அந்த அந்தணன்-அந்தப் பிராமணன், என்று கொண்டு உரைப்ப-என்றுசொல்ல, (அவ்வார்த்தையை), வென்றி கொள்-வெற்றியைக்கொண்ட, விசயன்-அருச்சுனனது, விசயம் - விசேஷஜயத்தைத் தருகிற, வெம் கணையால்-கொடிய பாணங்க ளினால், மெய் தளர்ந்து-உடம்பு தளரப்பெற்று, இரதம்மேல் விழு வோன்-தேரின்மேல் விழும் நிலைமையிலுள்ளவனாகிய கர்ணன், இரு செவிக்கு அமுது என - இரண்டு காதுகளுக்கும் அமிருத மென்னும்படி [மிக இனிப்பாக], கேட்டு-செவியுற்று, நன்று என -நல்லதென்றுசொல்லி, நகைத்து-சிரித்து, தர தகு பொருள் - (உனக்குக்) கொடுக்கத்தக்க பொருளை, நீ நவில்க என-நீ சொல்லு வாயாக என்று சொல்ல,—நால் மறையவன்உம்-நான்குவேதங்களை யும் அறிந்த அப்பிராமணனும், 'நின் புண்ணியம் அனைத்துஉம்- நீ செய்துள்ள நல்வினை முழுவதையும், ஒன்றியபடி-உள்ளபடியே, உதவுக-கொடுப்பாயாக,' என்றலும் - என்று சொன்னவளவில், உளம் மகிழ்ந்தான்-(கர்ணன்) மனங்களித்தான்; (எ - று.)

நன்று என்றது - நீ சொன்னபடியே தருவேனென்று தனது உடன்பாட்டைத் தெரிவித்தபடி. (330)

240.—இரண்டுகவிகள்-ஒருதொடர்: கர்ணன் மனவுவப்போடுதன்புண்ணிய மனைத்தையுந் தாரைவார்த்துக்கொடுக்க அவ்வேதியன் பெற்றமை கூறும்.

ஆவியோநிலையிற்கலங்கியதியாக்கையகத்ததோபுறத்ததோவறியேன் -
பாவியேன்வேண்டும்பொருளெலாநயக்கும்பக்குவந்தன்னில்வந்திலையால்

ஓவிலாதியான்செய்புண்ணியமனைத்துமுதவினேன்கொள்கநீயுனக்குப் பூவில்வாழயனுநிகரலனென்றூற்புண்ணியமிதனினும்பெரிதோ.

(இ- ள்.) ஆவி ஓ-உயிரோவென்றால், நிலையின் கலங்கியது - தான் நிற்குமிடத்தில் நின்றும் எழுந்தது; (அவ்வுயிர்) யாக்கை அகத்ததுஓ-(இப்பொழுது) உடம்பினுள்ளே உள்ளதோ? புறத்ததுஓ-(அன்றிஉடம்புக்கு)வெளியேசென்றதோ? அறியேன்-அறிகிறேனில்லை; பாவியேன் - தீவினையையுடைய யான், வேண்டும் பொருள் எலாம்-(வேண்டுவார்)வேண்டும் பொருள்களையெல்லாம், நயக்கும்- விரும்பிக்கொடுக்கின்ற, பக்குவந்தன்னில் - சமயத்தில், வந்திலை-(நீ) வந்தாயில்லை; யான் செய் புண்ணியம் அனைத்துஉம்- யான் செய்துள்ள நல்வினையையெல்லாம், ஓவுஇலாது-(ஒன்றும்) ஒழிதல் இல்லையாம்படி, உதவினேன் - கொடுத்தேன்; நீ கொள்க- நீ பெற்றுக்கொள்வாயாக; உனக்கு—, பூவில் வாழ் அயன்உம்- (திருமாலின் திருவுந்தித்)தாமரைமலரில் வாழ்கிற பிரமனும்,நிகர் அலன் என்றால் - ஒப்பாகான் என்று சொன்னால், புண்ணியம்- (என்) நல்வினை, இதனின்உம் பெரிதுஓ-(உனக்குத்தானஞ்செய்யும்) இத்தொழிலினுஞ் சிறந்ததோ? (எ - று.)—அன்றென்றபடி.

முதலடியில் முன் ஓகாரம் - உயர்வுசிறப்பு; பின் ஓகாரம் இரண்டும் - ஐயம். இன்னுங் கேட்ட கேட்டவற்றையெல்லாங் கொடுக்கும் ஆற்றல் இப்பொழுது இல்லையாதலால், 'பாவியேன்'' என்று தன்னைத்தானே வெறுத்துக்கொண்டான். (331)

241. **என்னமுன்மொழிந்துகரங்குவித்திறைஞ்சவிறைஞ்சலர்க்கெழிலியேறனையான், கன்னனையுவகைக்கருத்தினுனோக்கிக்கைப்புனலுடன்றருகென்ன, வன்னவனிதயத்தம்பின்வாயம்பாலளித்தலுமங்கையாலேற்றான், முன்னமோரவுணன்செங்கைநீரேற்றுமூவுலகமுமுடன்கவர்ந்தோன்.**

(இ - ள்.) (கர்ணன்), என்ன - என்று, முன் - முன்னே, மொழிந்து - சொல்லி, கரம் குவித்து-கைகளைக்கூப்பி, இறைஞ்ச - வணங்க,—இறைஞ்சலர்க்கு எழிலி ஏறு அனையான் - (தன்னை) வணங்காத பகைவர்களுக்கு மேகத்தில் தோன்றுகிற பேரிடியை யொப்பவனாகியகண்ணன், கன்னனை—, உவகை கருத்தினால் - மகிழ்ச்சியோடு கூடியஎண்ணத்தோடு, நோக்கி - பார்த்து, கை புனலுடன் தருக என்ன-கையினால் தாரைவார்க்கப்படுகிறநீரோடு தானஞ்செய்வாயென்று சொல்ல, அன்னவன் - அக்கர்ணன், இதயத்து அம்பின் வாய் அம்பால் - (தன்) நெஞ்சில் தைத்த அம்பின்வழியேவெளிவருகிற செந்நீரால், அளித்தலும் - தாரைவார்த்துக்கொடுத்தவளவில்,—முன்னம்-முன்னே [வாமனாவதாரத்தில்], ஓர் அவுணன்-ஒரு அசுரனது [ஒப்பற்ற மகாபலி சக்கரவர்த்தியின்], செம் கை - சிவந்த கையினால் தத்தஞ்செய்யப்பட்ட, நீர் - தான ஜலத்தை, ஏற்று-(கையில்) பெற்று, மூ உலகம்உம்-மூன்று லோகங்களையும், உடன்-ஒருசேர, கவர்ந்தோன் - (அவனிடத்தினின்றும்) பறித்துத் தன்வசப்படுத்திக் கொண்டவனாகிய கண்ணன், அங்கையால் - தன் அகங்கையினால், ஏற்றான் - (அந்நீரை) ஏற்றுக்கொண்டான்; (எ - று.) (332)

242.—வேதியன் நீ வேண்டும்வரங்கேளென்ன, இனிப்பிறப்பினும் இரப்பார்க்கு இல்லையென்னுமையைக் கர்ணன்வேண்டுதல்.

மல்லலந்தொடையனிருபனைமுனிவன்மகிழ்ந்துநீவேண்டியவரங்கள்
சொல்லுகவுனக்குத்தருதுமென்றுரைப்பச் சூரன்மாமதலையுஞ்சொல்வான்
அல்லல்வெவ்வினையாலின்னமுற்பவமுண் டாயினுமேலெழுபிறப்பு
மில்லையென்றிரப்போர்க்கில்லையென்றுரையா விதயநீயளித்தருளென்முன்.

(இ - ள்.) முனிவன் - பிராமணன், மகிழ்ந்து-சந்தோஷித்து, மல்லல்-வளப்பத்தையுடைய, அம் - அழகிய, தொடையல்-மாலையைச் சூடிய, நிருபனை - கர்ணராஜனை நோக்கி, 'நீ வேண்டிய வரங்கள் - நீ விரும்பின வரங்களை, சொல்லுக - சொல்லுவாயாக; உனக்கு—, தருதும் - கொடுப்போம்,' என்று உரைப்ப-என்று சொல்ல,—சூரன் மா மதலைஉம் - சிறந்த சூரியபுத்திரனான கர்ணனும், சொல்வான்-உத்தரஞ் சொல்பவனாய்,—'அல்லல் - பிறவித் துன்பங்களுக்குக் காரணமான, வெம் வினையால் - கொடிய கருமத்தினால், இன்னம் - இன்னமும், உற்பவம் - பிறப்பு, உண்டாயின்உம்-உண்டானாலும், ஏழ் எழு பிறப்புஉம்- எழுமையையுடைய ஏழுவகைச் சன்மங்களிலும், இல்லை என்று இரப்போர்க்கு-(வறுமையால்) ஒரு பொருளும் இல்லையென்று சொல்லி யாசிப்பவர்களுக்கு, இல்லை என்று உரையா-(வைத்துக்கொண்டே நீ கேட்கும் பொருள் இப்பொழுது என்னிடம்)இல்லையென்று சொல்லி லோபஞ்செய்யாத, இதயம்-நல்லமனத்தை, நீ—, அளித்தருள் - (எனக்குக்) கொடுத்தருள்வாயாக', என்முன்-என்று சொன்னான்.

243.—வேண்டியவரத்தைக் கொடுத்து முத்தியையும் பெறுமாறு ஸ்ரீக்ருஷ்ணன்வரம் அளித்தல்.

மைத்துனனுரைத்தவாய்மைகேட்டையன் மனமலருகந்துகந்தவனைக்
கைத்தலமலரான்மார்புறத்தழுவிக் கண்மலர்க்கருணைநீராட்டி
யெத்தனைபிறவியெடுக்கினுமவற்று ளீகையுஞ்செல்வமுமெய்தி
முத்தியும்பெறுதிமுடிவிலென்றுரைத்தான்மூவருமொருவனுமூர்த்தி.

(இ - ள்.) மூவர்உம் ஒருவன் ஆம் மூர்த்தி - திரிமூர்த்திகளும் ஒருமூர்த்தியான வடிவமுடையவனாகிய, ஐயன்-பிராமணன்,— மைத்துனன் -(தனது) அத்தைபிள்ளையாகிய கர்ணன், உரைத்த- சொன்ன, வாய்மை - உண்மையானவார்த்தையை, கேட்டு—, மனம் மலர் உகந்து உகந்து - இருதயகமலம் மிகவும் மகிழ்ந்து, கைத் தலம் மலரால் - பூப்போல் மெல்லிய(தனது)கைகளினிடங்களால், மார்பு உற-மார்பிலே அழுந்தும்படி, அவனை-அக்கர்ணனை, தழுவி - ஆலிங்கனஞ்செய்துகொண்டு,—கண் மலர் - செந்தாமரைமலர்போலுங் கண்களினின்றுந் தோன்றுகிற, கருணை நீர் - அருளாகிய நீர் வெள்ளத்தால், ஆட்டி - ஸ்நானஞ்செய்வித்து,— (அவனைநோக்கி 'நீ), எத்தனை பிறவி எடுக்கின்உம்-எத்தனை ஜன்மமெடுத்துப் பிறந்தாலும், அவற்றுள் - அப்பிறப்புக்களுள், ஈகைஉம் - தானஞ்செய்தலையும், செல்வம்உம்-செல்வத்தையும், எய்தி- அடைந்து, முடிவில் - (அப்பிறப்புக்களின்) முடிவிலே, முத்திஉம்-

மோக்ஷத்தையும், பெறுதி - பெறுவாய்,' என்று உரைத்தான் - என்று சொன்னன்; (எ - று.)

தந்தையாகிய வசுதேவருக்கு உடன்பிறந்தவளாதலால், குந்தி கண்ணனுக்கு அத்தையாவள்; அவள்மகனுதலால், கன்னன் கண்ணனுக்கும்மைத்துனனுயினன்: அத்தைமைந்தனை 'மைத்துனன்' என்பது, முற்காலத்துவழக்கம்போலும். பிரமனதுவடிவமாய் உலகங்களைப் படைத்தலுந் தானுனநிலையில் நின்று காத்தலும் உருத்திரசொரூபியாகி அழித்தலுஞ் செய்யுந் திருமாலின் அவதாரவிசேஷமாகிய கண்ணனென்று, 'மூவருமொருவனுமூர்த்தி' என்பதற்குக் கருத்து. (334)

244.—கர்ணன் கண்களிப்ப, வேதியன் நிசவடிவத்தைக்காட்டுதல்.

போற்றியகன்னன்கண்டுகண்களிப்பப்புணரிமொண்டெழுந்தகார்முகிலை
மாற்றியவடிவும்பஞ்சவாயுதமும் வயங்குகைத்தலங்களுமாகிக்
கூற்றுறழ்கராவின்வாயினின்றழைத்த குஞ்சரராசன்முனன்று
தோற்றியபடியேதோற்றினுன்முடிவுந் தோற்றமுமிலாதபைந்துளவோன்.

(இ - ள்.) முடிவுஉம் தோற்றம்உம் இலாத - இறத்தலும் பிறத்தலு மில்லாத [நித்தியமாகிய], பைந் துளவோன் - பசிய திருத்துழாய்மாலையையுடைய கண்ணன், போற்றிய கன்னன்-(தன்னைத்) துதித்த கர்ணன், கண்டு - சேவித்து, கண் களிப்ப - கண்கள் களிப்படையும்படி, புணரி மொண்டு எழுந்த கார் முகிலை - கடல் நீரை (வயிறுநிரம்ப) முகந்துகொண்டு (ஆகாயத்தில்) எழும்பிய கார்காலத்துக் காளமேகத்தை, மாற்றிய - (தனக்கு ஒப்பாகாதென்று) நீக்கின [மிகக்கரிய], வடிவுஉம் - திருமேனியும், பஞ்ச ஆயுதம்உம் வயங்கு - ஐம்படைகளும் விளங்குகிற, கைத் தலங்கள் உம் - திருக்கையிடங்களும், ஆகி—, கூற்று உறழ் - யமனை ஒத்த [மிகக்கொடிய], கராவின்-முதலையினது, வாயின்-வாயிலே, நின்று - அகப்பட்டுக்கொண்டு, அழைத்த - கூப்பிட்ட, குஞ்சர ராசன் முன் - கஜேந்திராழ்வான்முன்னே, அன்று - அந்நாளில், தோற்றியபடியே - எழுந்தருளிவந்தபடியே, தோற்றினுன் - சேவை கொடுத்தான்; (எ - று.)

பஞ்ச வாயுதம் - சங்கம், சக்கரம், கதை, வாள், வில் என்பன; இவற்றிற்கு முறையே பாஞ்சசன்னியம், சுதரிசனம், கௌமோதகீ, நந்தகம், சார்ங்கம் என்று பெயர். (335)

245.—கர்ணன்நாராயணனைக் காணப்பெற்றேனென்று அகமிகமகிழ்தல்.

அமரரா னவரு மமரயோ னிகளு மமரருக் கதிபனு னவனுங்
கமலநான் முகனு முனிவருங் கண்டு கனகநாண் மலர்கொடு பணிந்தார்
சமரமா முனையிற் றனஞ்சயன் கணையாற் சாய்ந்துயிர் வீடவுஞ் செங்க
ணமலநா ரணனைக் காணவும் பெற்றே னென்றுதன் னகமிக மகிழ்ந்தான்.

(இ - ள்.) அமரரானவர்உம் - தேவர்களும், அமர யோனிகள் உம் - மற்ற தேவஜாதியிலுள்ளவர்களும், அமரருக்கு அதிபனுன

வன்உம் - தேவராஜனுன இந்திரனும், கமலம் நான்முகன்உம் - தாமரைமலரில்தோன்றிய நான்குமுகங்களையுடைய பிரமனும், முனிவர்உம் - முனிவர்களும், கண்டு-(அக்காட்சியைத்)தரிசித்து, கனகம் நாள் மலர் கொடு - பொன்மயமாகிய அன்று மலர்ந்த (கல்பகவிருக்ஷங்களின்) பூக்களைக்கொண்டு, பணிந்தார் - வணங்கி அருச்சித்தார்கள்; (கர்ணன்), சமரம் மா முனையில்-பெரியபோர்க்களத்தில், தனஞ்சயன் கணையால்-(மகாவீரனுகிய) அருச்சுனனது அம்புகளினுல், சாய்ந்து - (உடம்பு கீழே) விழுந்து, உயிர் வீடஉம்-உயிர் நீங்கவும், செம் கண் - சிவந்த திருக்கண்களையுடைய, அமலன் நாரணனை - குற்றமற்ற ஸ்ரீமந்நாராயணனை, காணஉம்-தரிசிக்கவும், பெற்றேன்—, என்று-என்று எண்ணி, தன் அகம் மிக மகிழ்ந்தான் - தன்மனம் மிகக்களித்தான்; (எ - று.)

அமரயோனிகள் - சித்தர், கருடர், கின்னரர், கிம்புருடர், கந்தருவர், இயக்கர், விஞ்சையர், உரகர் முதலிய தேவகணங்கள். வீட - விட என்பதன் நீட்டல். தன்னியல்பிலே ஒருகுற்றமுஞ் சிறிதுமில்லாமை மாத்திரமேயன்றித் தனக்குச் சரீரமாகிய சராசரங்களின் சம்பந்தத்தா லாகிய குற்றமுஞ்சிறிதுந் தட்டாதவனென்பது விளங்க, 'அமல நாரணன்' என்ருர். (336)

வேறு.

246.—இதுமுதல்நான்குகவிகள்-நாராயணனைக் காணப்பெற்று மகிழ்ந்த கர்ணன்வார்த்தை.

அருந்தழன்மா மகம்புரிந்துங் கடவுட் கங்கை யாதியாம்பு னல்படிந்து மனல யோகத், திருந்துமணி மலர்தூவிப் பூசை நேர்ந்து மெங்குமா கியவுன்னை யிதயத் துள்ளே, திருந்தநிலை பெறக்கண்டும் போக மெல்லாஞ் சிறுகியனைத் துயிருக்குஞ் செய்ய வொண்ணுப், பெருந்தவங்கண் மிகப்பயின்றும் பெறுதற் கெட்டாப் பெரும்பயனின் றிருவருளாற் பெறப் பெற்றேனே.

ஆறுகவிகள்-ஒருதொடர்.

(இ - ள்.) அரு - அரிய, தழல்-அக்கினியில், மா மகம்-சிறந்த யாகங்களை, புரிந்துஉம் - செய்தும், கடவுள்-தெய்வத்தன்மையையுடைய, கங்கை ஆதி ஆம் - கங்கைமுதலான, புனல் - புண்ணிய தீர்த்தங்களில், படிந்துஉம் - நீராடியும், அனல யோகத்து இருந்துஉம் - பஞ்சாக்கினிமத்தியில் நின்று செய்கிற அஷ்டாங்கயோகானுஷ்டான நிலைமையிற் பொருந்தியும், அணி மலர் தூவி-அழகிய பூக்களையிட்டு அருச்சித்து, பூசை நேர்ந்துஉம் - பூசை செய்தும், எங்குஉம் ஆகிய உன்னை-எல்லாவிடத்தும் அந்தர்யாமியாகவுள்ள உன்னை, இதயத்துள்ளே-(தம்) மனத்தினுள்ளே, திருந்த-திருத்தமாக, நிலைபெற-வந்துநிலைபெற்று வீற்றிருக்க, கண்டுஉம்-தரிசித்தும், போகம் எல்லாம் சிறுகி - இன்பமெல்லாங்குறைந்து, அனைத்து உயிருக்குஉம் - எல்லாவுயிர்களுக்கும், செய்ய ஒண்ணு-செய்தற்கருமையான, பெரு தவங்கள் - பெரிய தபசுகளை, மிக பயின்றுஉம் - மிகுதியாகச்செய்தும், பெறுதற்கு எட்டா - பெறு

வதற்குக் கிடைக்காத, பெரு பயன் - பெரிய (மோட்சமாகிய) பிரயோஜனத்தை, நின் திரு அருளால்-உனது மேன்மையான கருணையினால், பெற பெற்றேன் - (இனி) அடையப்பெற்றேன்; (எ - று.)

கங்கைக்குத் தெய்வத்தன்மை - தன்னில் ஒருகால் மூழ்கியவருக்குங் கருமமனைத்தையும் போக்கி நற்கதியளித்தல். அனிலயோக மென்னும் பாடத்துக்கு - வேறொன்றையுமுண்ணுமற் காற்றையே யுண்டு செய்யும் யோகமென்க.

இதுமுதற் பன்னிரண்டு கவிகள் - இச்சருக்கத்தின் பதினேழாங் கவிபோன்ற **எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தங்கள்.** (337)

247. **நீலநெடுங்கிரியுமழைமுகிலும்பவ்வநெடுநீருங்காயாவுநிகர்க்குமிந்தக், கோலமும்வெங்கதைவாளஞ்சங்குநேமி கோதண்டமெனும்படையுங்குழைத்தவாச, மாலைநறுந்துழாய்மார்புந்திரண்டதோளுமணிக்கழுத்துஞ் செவ்விதழும்வாரிசாதக், காலமலரெனமலர்ந்தமுகமுஞ்சோதிக் கதிர்முடியுமிம்மையிலேகண்ணுற்றேனே.**

(இ - ள்.) நீலம் - நீலரத்தினமயமாகிய, நெடு கிரிஉம்-பெரிய மலையையும், மழை முகில்உம் - மழைபொழிகிற காளமேகத்தையும், பவ்வம் நெடு நீர்உம் - கடலின் மிகுந்த நீரையும், காயாஉம் - காயாமலரையும், நிகர்க்கும்-ஒக்கின்ற,- இந்த—, கோலம்உம் - (உனது) திருமேனியையும், வெம்-(பகைவர்க்குக்) கொடிய, கதை-கதையும், வாளம் - வாளும், சங்கு - சங்கமும், நேமி - சக்கரமும், கோதண்டம் - வில்லும், எனும் - என்கிற, படைஉம் - பஞ்சாயுதங்களையும், குழைத்த - தளிர்த்த, வாசம்-வாசனையையுடைய, நறு - நல்ல, துழாய் மாலை - திருத்துழாய்மாலையையணிந்த, மார்புஉம்-திருமார்பையும், திரண்ட தோள்உம்-திரட்சியாகவுள்ள தோள்களையும், மணிகழுத்துஉம் - அழகிய திருக்கழுத்தையும், செம் இதழ்உம்-சிவந்த திருவதரத்தையும், காலம் - (தக்க) பருவத்தில் மலர்ந்த, வாரிசாதம் மலர் என - தாமரைப்பூப்போல, மலர்ந்த - மலர்ந்துள்ள, முகம்உம் - திருமுகத்தையும், சோதி கதிர் முடிஉம் - மிகுந்த ஒளியையுடைய திருமுடியையும், இம்மையில்ஏ - இப்பிறப்பில்தானே, கண்ணுற்றேன் - (பிரதியக்ஷமாகத்) தரிசிக்கப்பெற்றேன்; (எ - று.)—வாரிஜாதம் - நீரிற் பிறப்பது. சோதிகதிர் - ஒரு பொருட்பன்மொழி. பி - ம்: குழையுங் காதும். காலை. (338)

248. **தருமன்மகன்முதலானவரிபகாதற் றம்பியரோடமர்மலைந்துதறுகணுண்மைச், செருவிலெனதுயிரனையதோழற்காகச் செஞ்சோற்றுக்கடன்கழித்தேன்றேவர்கோவுக், குரைபெறுநற்கவசமுங்குண்டலமுமீந்தே னுற்றபெருநல்வினைப்பேறுனக்கேதந்தேன், மருதிடைமுன்றவழ்ந்தருளுஞ்செங்கண்மாலே மாதவத்தாலொருதமியன்வாழ்ந்தவாறே.**

(இ - ள்.) முன் - முன்னே [கிருஷ்ணாவதாரத்தில் இளம்பிராயத்தில்], மருது இடை - இரட்டை மருதமரங்களினிடையே, தவழ்ந்தருளும்-தவழ்ந்துசென்றருளிய, செம் கண் மாலே-சிவந்த திருக்கண்களையுடைய திருமாலென்னுந் திருநாமமுடையவனே!

தறுகண் - அஞ்சாமையோடுகூடிய, ஆண்மை - பராக்கிரமத்துக்கு இடமான, செருவில் - போர்க்களத்தில், எனது உயிர் அனைய தோழற்கு ஆக - என்னுடைய உயிரையொத்த நண்பனாகிய துரியோதனன் பொருட்டாக, தருமன் மகன் முதல் ஆன - தருமபுத்திரன் முதலிய, அரிய - (பெறுதற்கு) அருமையான, காதல் - அன்பையுடைய, தம்பியரோடு - தம்பிமார்களுடனே, அமர் மலைந்து - போர்செய்து, செம் சோறு கடன் கழித்தேன் - (அவன் எனக்குச்) செவ்வையாகப் போகட்டுவந்த சோற்றுக்குப் பிரதியுபகாரஞ்செய்துவிட்டேன்; தேவர் கோவுக்கு - தேவேந்திரனுக்கு, உரைபெறு - உயர்ச்சிபெற்ற, நல் கவசம் உம் - நல்ல கவசத்தையும், குண்டலம் உம் - குண்டலங்களையும், ஈந்தேன் - தானஞ்செய்தேன்; உற்ற பெரு நல்வினை பேறு - பொருந்திய பெரிய புண்ணியமாகிய பயனை, உனக்கே —, தந்தேன் - கொடுத்தேன்; ஒருதமியன் - (உன்னையன்றி) வேறு துணையுங் கதியுமில்லாத ஒப்பற்ற யானொருத்தன், மா தவத்தால் - (முற்பிறப்பிற் செய்த) சிறந்த தவத்தின் பயனால், வாழ்ந்த ஆறு ஏ - இப்படிப்பட்ட பெருவாழ்வையடைந்த விதம் வியக்கத்தக்கதே; (எ - று.) (339)

249. வான்பெற்றநதிகமழ்தாள்வணங்கப்பெற்றேன் மதிபெற்றதிருவுளத்தான்மதிக்கப்பெற்றேன், றேன்பெற்றதுழாயலங்கற்களபமார்புந் திருப்புயமுந்தைவந்துதீண்டப்பெற்றே, னூன்பெற்றபகழியினாலழிந்துவீழ்ந்து முணர்வுடனின்றிருநாமமுரைக்கப்பெற்றேன், யான்பெற்றபெருந்தவப்பேறென்னையன்றியிருநிலத்திற்பிறந்தோரில்யார்பெற்றாரே.

(இ - ள்.) வான் பெற்ற - ஆகாயத்திற் பொருந்திய, நதி - தேவகங்காநதி, கமழ் - தோன்றின, தாள் - (உனது) திருவடிகளை, வணங்கப்பெற்றேன் - நமஸ்கரிக்கப்பெற்றேன்; மதி பெற்ற - சந்திரனை யுண்டாக்கின, திரு உளத்தால் - மேன்மையான (உனது) மனத்தினால், மதிக்கப்பெற்றேன் - கௌரவிக்கப்பெற்றேன்; தேன் பெற்ற - தேனையுடைத்தான, துழாய் - திருத்துழாயினாலாகிய, அலங்கல் - மாலையையும், களபம் - கலவைச் சந்தனத்தையும் அணிந்த, மார்பு உம் - (உனது) திருமார்பும், திரு புயம் உம் - திருத்தோள்களும், தைவந்து தீண்டப்பெற்றேன் - (என்மேல்) தடவி ஸ்பரிசிக்கப்பெற்றேன்; ஊன் பெற்ற - (பகைவர் உடம்பின்) தசையை (நுனியிலேபொருந்த)ப் பெற்ற, பகழியினால் - (அருச்சுனன்) பாணத்தினால், அழிந்து - வலிகெட்டு, வீழ்ந்து உம் - கீழேவிழுந்த பின்பும், உணர்வுடன் - நல்லறிவோடு, நின் திரு நாமம் - உனது சிறந்த பெயர்களை, உரைக்கப்பெற்றேன் - சொல்லப்பெற்றேன்; யான் பெற்ற - நான் அடைந்த, பெரு தவம் பேறு - பெரிய தவத்தினாற் பெறுதற்குரிய பாக்கியத்தை, என்னை அன்றி - என்னையல்லாமல், இரு நிலத்தில் பிறந்தோரில் - பெரிய நிலவுலகத்திற் பிறந்தவர்களுள், யார் - வேறு யார், பெற்றார் —? (எ - று.)

திருமால் உலகமளந்தகாலத்தில் மேலே சத்தியலோகத்திலே சென்ற அவரது திருவடியைப் பிரமன் தன்கைக் கமண்டல தீர்த்தத்தாற் கழுவிவிளக்க அந்த ஸ்ரீபாததீர்த்தமே கங்காநதி

யாகப் பெருகியதாதலால் 'வான்பெற்ற நதிகமழ்தாள்' என்றும், திருமாலின் திருவுள்ளத்தினின்றுஞ்சந்திரன்தோன்றினனென்று வேதத்திற் கூறப்படுதலால் 'மதிபெற்ற திருவுளம்' என்றுங் கூறினன். (340)

250.—இதுவும் மேலைக்கவியும் - கவசகுண்டலம் வாங்கச்செய்தமை முதலியன என்செயலே என்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணன் தன் பாகுதொழிலுக்குச் செல்லுதலைத் தெரிவிக்கும்.

என்றுமகிழ்வுறவணங்குமெல்லிமைந்த னின்புறவண்புறவினிலானிரையின் பின்போய்க், கன்றுகொடுவிளவெறிந்தகண்ணன்றானுங்கன்னனுக்குக்கட்டுரைப் பான்கடவுணாத, னன்றுனதுகவசமுங்குண்டலமும்வாங்கவழைத்தேனுங்குந்தி யைக்கொண்டரவவாளி, யொன்றொழியத்தொடாதவரங்கொள்வித்தேனு முற் பவத்தினுண்மையுனக்குணர்வித்தேனும்.

(இ - ள்.) என்று - என்றுசொல்லிப்புகழ்ந்து, மகிழ்வு உற - களிப்பு மிக, வணங்கும் - நமஸ்கரிக்கிற, எல்லி மைந்தன்-சூரிய குமாரனான கர்ணன், இன்பு உற - இன்பமடைய, வண் புறவினில் - வளப்பத்தையுடைய முல்லை நிலத்திலே, ஆன் நிரையின் பின் போய்-பசுக்கூட்டத்தை மேய்த்துக்கொண்டு அதன்பின்னே சென்று, கன்று கொடு விள எறிந்த - கன்றினால் விளாமரத்தை வீசியடித்த, கண்ணன் தான்உம்-கிருஷ்ணனும், கன்னனுக்கு—, கட்டுரைப்பான்-உறுதியாகச்சொல்பவனாய்,— கடவுள் நாதன்-தேவேந்திரன், அன்று - அந்நாளில், உனது—, கவசம்உம் - கவசத்தையும், குண்டலம்உம்-குண்டலங்களையும், வாங்க-தான மாகப்பெறும்படி, அழைத்தேன்உம்-(அவனை) வரவழைத்தவனும்,—அரவம் வாளி - நாகாஸ்திரத்தை, ஒன்று ஒழிய - ஒருதரமேதவிர (மறுபடியும்), தொடாத - (அருச்சுனன்மேற்) பிரயோகிக்க வொட்டாத, வரம் - வரத்தை, (குந்தியைக்கொண்டு)—, கொள்வித்தேன்உம் - பெறச்செய்தவனும், உற்பவத்தின் உண்மை - (உன்) பிறப்பின் நிச்சயத்தை, உனக்கு—, உணர்வித்தேன்உம் - அறிவித்தவனும்,—(எ - று.)

எல்லி - ஒளியையுடையவன்; எல் - ஒளி. கண்ணன் பாண்டவதூதனாய் அத்தினபுரிக்குச் சென்றபொழுது கர்ணனுக்குத் தானே நேராகவுங் குந்தியைக்கொண்டும் பிறப்பை உணர்த்தினன்.

251. தக்ககன்றன்மகவானவுரகவாளி தனஞ்சயனைச்சதியாமற்சாய்வித் தேனு, மெய்க்கருணைநின்பொருட்டால்யானேயென்று மீண்டும்போய்த்தேர்வல வன்விசயற்கானு, னெக்கடலுமெக்கிரியுமெல்லாமன்னு மிமையோருமானுடரு மெல்லாமாகி, மைக்கணிளங்கோவியர்நுண்டுகிலுநாணும் வரிவளையுமடநெஞ்சும் வாங்குமாலே.

(இ - ள்.) தக்ககன்தன் - தக்ஷகனது, மகவு ஆன - பிள்ளையாகிய, உரகம் வாளி - நாகாஸ்திரம், தனஞ்சயனை - அருச்சுனனை, சதியாமல் - அழிக்காதபடி, சாய்வித்தேன்உம்- (அவன்தேரை நிலத்தில்)அழுந்தச்செய்தவனும், நின் பொருட்டு - உனக்காக,

மெய் கருணை - உண்மையான அருளையுடைய, யானே-நான்தான், என்று - என்றுசொல்லி, போய்—,மீண்டும் - மறுபடியும், விசயற்கு - அருச்சுனனுக்கு, தேர் வலவன் ஆனான் - தேர்ப்பாகனாய் விட்டான்; (யாரெனில்), எ கடல்உம்-எல்லாக்கடல்களும், எ கிரிஉம்-எல்லா மலைகளும், எல்லா மண்உம்-எல்லாவுலகங்களும், இமையோர்உம் - தேவர்களும், மானுடர்உம்-மனிதர்களும், எல்லாம்-மற்றஎல்லாச்சராசரங்களின் வடிவங்களும், ஆகி—, மை கண் - மையிட்டகண்களையுடைய, இள கோவியர் - இளம்பருவத்தையுடைய இடைப்பெண்களது, நுண் - மெல்லிய, துகில் உம்-சேலைகளையும், நாண்உம் - வெட்கத்தையும், வரி வளைஉம் - அழகிய வளைகளையும், மடநெஞ்சுஉம்-மடமைக்குணத்தையுடைய மனத்தையும், வாங்கும்-கவர்ந்த, மால் - திருமால்; (எ - று.)

சாய்வித்தேன் - அந்த அஸ்திரத்தை அழியச்செய்தேன் என்றுமாம். கோவியர் - பசுக்களைக்காப்பவன்என்னும் பொருளதாகிய கோபன்என்பதன் பெண்பாலான கோபீ என்பதன் விகாரமாகிய கோவிஎன்பதன்பன்மை. கண்ணன் இளமையில் ஒருநாள் குளத்தில்நீராடிக்கொண்டிருந்த இடைப்பெண்களதுதுகில்களை விளையாட்டாக்கவர்ந்துகொண்டுபோய் ஒளித்தார். கண்ணன் விஷயத்திற் கொண்ட காமநோயா லுண்டான விரகவேதனையால் கோபஸ்திரீகளுக்கெல்லாந் துகில் நெகிழ்ந்துபோகின்றதனாலும், நாணம் அழிதலாலும், வேதனைமிகுதியால் உடம்புமெலிதல் பற்றிக் கைவளைகள் கழன்று விழுந்துவிடுதலாலும், அவர்கள் நெஞ்சு தன்வசமன்றிக் கிருஷ்ணவசமாதலாலும், இங்ஙனங் கூறினார். நாண், மடம் என்பன - பெண்களுக்கு உரிய முக்கிய குணங்கள். நாண் - தமக்கு ஒவ்வாத கருமங்களைச் செய்ய வெள்குதல்; மடம்-அறிந்தும் அறியாதுபோலிருக்குந் தன்மை. மூன்றுமடியால் எம்பெருமானது ஜகச்சரீரகத்வத்தையும், நான்காமடியால்செளலப்பியத்தையும் வெளியிட்டார். (342)

252.—கிருஷ்ணன்சொற்படி அருச்சுனனெய்த அம்பாற் கர்ணன் வீழ்தல்.

பகலவன்தன்மதலையைநீபகலோன்மேல்பாற் பவ்வத்திற்படுவதன்முன்படுத்தியென்ன, விகல்விசயனுறுதியுறவஞ்சரீக மெனுமம்பாலவனிதயமிலக்கமாக, வகலுலகில்வீரரெலாமதிக்கவெய்தா னந்தவாசுகமுருவியப்பாலோடித், தகலுடையார்மொழிபோலத்தரணியூடு தப்பாமற்குளித்ததவன்ருனும்வீழ்ந்தான்.

(இ-ள்.) (கண்ணன் அருச்சுனனை நோக்கி), 'நீ—, பகலோன்-பகலைச் செய்பவனாகிய சூரியன், மேல் பால் பவ்வத்தில் படுவதன் முன்-மேற்குத்திக்குக்கடலில் விழுந்து அஸ்தமிக்கு முன்னமே, பகலவன் தன் மதலையை-(அச்)சூரியபுத்திரனை கர்ணனை, படுத்தி-கொல்வாய்', என்ன-என்றுசொல்ல,--இகல் விசயன்-பராக்கிரமத்தையுடைய அருச்சுனன்,—உறுதி உற-வலிமைபொருந்த, அஞ்சரீகம் எனும் அம்பால்-அஞ்சரீகம் என்னும் பெயரையுடைய அம்பினால், அவன் இதயம் இலக்கம் ஆக-அவனது மார்பு இலக்காக, அகல் உலகில் வீரர்எலாம்-பரந்த உலகங்களிலுள்ள வீரர்கள்யாவரும், மதிக்க-(தன்னைக்) கௌரவிக்கும்படி, எய்தான்—; அந்த

ஆசுகம்-அந்த அம்பு, தகல்உடையார் மொழிபோல-(ஞானஒழுக்கங்களினால்)தகுதியையுடையமுனிவரது சாபஅனுக்கிரகவார்த்தைகள்போல, தப்பாமல்-(சிறிதும்) தவறுதபடி, உருவி - (மார்பைத்) துளைத்துக்கொண்டு, அப்பால்ஓடி - பின்னே விரைந்துசென்று, தாணியூடு-பூமியிலே, குளித்தது-விழுந்து அழுந்திற்று; அவன்தான் உம்-கர்ணனும், வீழ்ந்தான்-கீழேவிழுந்தான்;(எ - று.) (343)

253.—கர்ணன் நிலைமை.

கருடனதுதிருத்தோளிற்கண்டகோலங் கண்ணினுநெஞ்சினுநிற்கக்கருணையாதி, புருடனதுதிருநாமந்தனதுநாவிற் போகாமனனிவிளங்கப்புதைந்துவாளி வருடமுடல்குளிர்விக்கச்செம்பொற்றேர்மேன் மன்னரெலாம்புடைசூழவையங்காக்குங், குருடன்மகனருகிருந்துசோகங்கூரக் குற்றுயிரினுடன்கிடந்தான்கொடையான்மிக்கோன்.

(இ - ள்.) கருடனது - பெரியதிருவடியின், திரு தோளில் - அழகிய தோள்களின்மேல், கண்ட - காணப்பட்ட, கருணை - அருளையுடைய, ஆதிபுருடனது - (யாவர்க்கும்) முதல்வனும் புருஷோத்தமனுமாகிய எம்பெருமானது, கோலம் - திவ்வியசொரூபம், கண்ணின் உம் - (தனது) கண்களிலும், நெஞ்சின் உம் - மனத்திலும், நிற்க - நிலைபெற்றிருக்கவும், திருநாமம்-(அக்கடவுளது) சிறந்த பெயர், தனது நாவில் - தன்நாக்கில்நின்றும், போகாமல்-நீங்கிப்போகாதபடி, நனி விளங்க - நன்றாகவிளங்கவும், வாளி வருடம்-பாணவருஷம், புதைந்து - மேலேஅழுந்தி, உடல் - உடம்பை, குளிர்விக்க - குளிரச்செய்யவும், மன்னர் எலாம் - அரசர்கள்யாவரும், புடைசூழ - பக்கங்களிற் சூழ்ந்து நிற்கவும், வையம் காக்கும் - பூமியை அரசாளுகிற, குருடன் மகன் - பிறவிக்குருடனாகிய திருதராட்டிரனது மைந்தனான துரியோதனன், அருகு இருந்து - பக்கத்திலே யிருந்து, சோகம் கூர - துன்பம் மிகவும், கொடையால் மிக்கோன் - தானத்தால்மிகுந்தவனான கர்ணன், செம் பொன் தேர்மேல் - சிவந்தபொன்னாலாகிய தேரில், குறு உயிரினுடன் - குறைப்பிராணனோடு, கிடந்தான் - விழுந்திருந்தான்; (எ-று.)

வீரர்களெல்லாருஞ் சிறந்தபுண்களை விரும்புவராதலால், 'வாளி வருடமுடல் குளிர்விக்க' என்றார். (344)

254.—கர்ணன் குற்றுயிருடனிருப்பதை அசரீரியாலறிந்து குந்திதேவி கதறிக்கொண்டு களங்குறுகுதல்.

முந்தியெதிர்பொரும்விசயன்றொடுத்தகோலான் முடிசாய்ந்தின்றைவருக்கு முன்னோன்வீழ்ந்தா, னந்திபடுவதன்முன்னேயாவிபோமென்றசரீரியெடுத்துரைப்ப வன்னையான, குந்திதனதுளமுருகக்கண்ணீர்சோரக் குழல்சரியப்போர்க்களத்துக் கோகோவென்று, வந்திருகைதலைப்புடைத்துத்தலைநாளீன்ற மகவின்மேல்வீழ்ந்தழுதாண்மன்னோமன்னோ.

(இ - ள்.) 'முந்தி - முன்னேநின்று, எதிர் பொரும் - எதிர்த்துப்போர் செய்கிற, விசயன் - அருச்சுனன், தொடுத்த - எய்த,

கோலால் - அம்பினால், ஐவருக்குஉம் முன்னோன் - பஞ்சபாண்டவர்க்குந் தமையனான கர்ணன், இன்று - இன்றைக்கு, முடி சாய்ந்து - தலைசாய்ந்து, வீழ்ந்தான்—;' அந்திபடுவதன் முன்னே - மாலைப்பொழுது கழிவதற்குமுன்பே, ஆவி போம் - உயிர் நீங்கும்,' என்று—, அசரீரி - உடம்பில்லாத (தெய்வத்தன்மையையுடைய) ஆகாசவாணி, எடுத்து உரைப்ப-உரத்துச்சொல்ல,—அன்னை ஆன-அவன் தாயாகிய, குந்தி—, தனது உளம் உருக - தன்மனங் கரையவும், கண் நீர் சோர - கண்களினின்று நீர் பெருகவும், குழல் சரிய - கூந்தல் அவிழவும், கோ கோ என்று - கோகோவென்று அரற்றிக்கொண்டு, போர்க்களத்து - யுத்தகளத்தில், வந்து—, இரு கை தலை புடைத்து - இரண்டுகைகளாலுந்தலையிலே அடித்துக்கொண்டு, தலை நாள் ஈன்ற மகவின்மேல் - முன்னாளில் [கன்னிகையாயிருக்கும்பொழுது] பெற்ற பிள்ளையாகிய கர்ணன் மேல், வீழ்ந்து அழுதாள்—; (எ - று.)—கோ கோ வெனல்-சோகக் குறிப்பு. மன்னோ மன்னோ - ஈற்றசை: இதுவும் சோகக்குறிப் பென்னலாம். (345)

255.—இதுவும் மேலைக்கவியும் - குந்திவார்த்தை.

என்றேயென்றாதையுழைக்கன்னிமாடத் தெழிலிரவிதிருவருளாலீன்றேனீன்ற, வன்றேபொற்பெட்டகத்திற்கங்கையாற்றி லாமுறையாலுனைவிடுத்தேனருளிலாதேன், வென்றேமண்கவர்தருமன்மதலைக்காவி மித்திரனானதுகேட்டுன்வீரங்கேட்டு, நன்றேயென்றவப்பயனென்றுன்னிவாழ்ந்தே னாகமுநீயரசாளநடக்கின்றாயோ.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) என்றே - எப்பொழுதே, என் தாதை உழை - எனது தந்தையின் மனையில், கன்னிமாடத்து-கன்னிகாமாடத்தில், எழில் இரவி திரு அருளால் - அழகையுடைய சூரியனது மேலான கருணையினால், ஈன்றேன் -(உன்னைப்)பெற்றேனோ,ஈன்ற அன்றே-பெற்றஅப்பொழுதே, உனை-உன்னை, அருள் இலாதேன்-தயையில்லாத யான், பொன் பெட்டகத்தில் - அழகினையுடைய பெட்டியில் (வைத்து), கங்கை ஆற்றில் - கங்காநதியில், ஆம் முறையால்-செல்லும்படி, விடுத்தேன்-விட்டுவிட்டேன்; (பின்பு), வென்று ஏ - (பாண்டவரைச் சூதினாற்) சயித்தே, மண் கவர் தரு - அவர்களிராச்சியத்தைப் பறித்துக்கொண்ட, மன் மதலைக்கு - இராசபுத்திரனான துரியோதனனுக்கு, ஆவி மித்திரன் ஆனது - (நீ) பிராணசிநேகிதனானதை, கேட்டு - கேள்விப்பட்டும், உன் வீரம் - உனது வீரத்தனத்தை, கேட்டு - கேள்விப்பட்டும், என் தவம் பயன் - எனது (முற்பிறப்பிற்செய்த) தவத்தின்பலன், நன்றே என்று - நல்லதே யென்று, உன்னி - எண்ணி, வாழ்ந்தேன் - மகிழ்ச்சியோடிருந்தேன்; நீ—, (இப்பொழுது), நாகம்உம் அரசாள - (இவ்வுலகத்தில் அரசாண்டதேயன்றிச்)சுவர்க்கலோகத்திலும் அரசாளும்பொருட்டு, நடக்கின்றாய்ஓ - செல்லுகிறாயோ? (எ - று.)

கன்னிமாடம் - கலியாணமாகாத பெண்கள் வசித்தற்கு ஏற்படுத்திய இடம். பெட்டகம்-பேடகம் என்னும் வடமொழித்திரிபு. கண்ணன் சொல்லக்கேட்டதனால், 'கேட்டு' என்றாள். (346)

256. ஓரஞ்சுபேருளராலறந்தவாத வுதிட்டிரனுதியருரகக்கொடியோனுதி, யீரஞ்சுபதின்மருளர்தம்பிமார்க ளிங்கிதங்களறிந்தடைவேயேவல்செய்யப், பாரஞ்சுமொருகுடைக்கீழ்நீயேயாளும் பதமடைந்தும்விதிவலியாற்பயன்பெருமற், காரஞ்சுகரதலத்தாயந்தோவந்தோ கடவுளர்தம்மாயையினுற்கழிவுற்ருயே.

(இ - ள்.) கார் அஞ்சு கரதலத்தாய் - (கைம்மாறுகருதாமற் பேருதவிசெய்தலால்) மேகமும் அஞ்சுகின்ற கைகளின் இடத்தையுடையவனே! (உனக்கு) அறம் தவாத-தருமநிலை தவருத, உதிட்டிரன் ஆதியர்-தருமபுத்திரன் முதலியவர்களாகிய, ஓர் அஞ்சு பேர்-ஒப்பற்ற ஐந்துபெயர் (தம்பிமார்கள்), உளர்-இருக்கின்றனர்; உரகம்கொடியோன் ஆதி-பாம்புக்கொடியையுடைய துரியோதனன் முதலான, ஈர் அஞ்சு பதின்மர் - நூறுபெயர், தம்பிமார்கள்—, உளர்—; (இவர்களெல்லாம்), இங்கிதங்கள்-(உன்) குறிப்புக்களை, அறிந்து - தெரிந்து, அடைவே - முறைப்படி, ஏவல் செய்ய - (நீ) ஏவின தொழில்களைச் செய்யும்படி, பார் - பூமிமுழுவதையும், அஞ்சும் -(யாவரும்) அஞ்சும்படியான, ஒரு குடைக்கீழ் - ஒப்பற்ற குடையின்கீழே, நீஏ - நீ ஒருவனுகவே, ஆளும் - அரசாளும்படியான, பதம்-நிலைமையை, அடைந்துஉம்-அடைந்திருந்தும், விதி வலியால்-(முற்பிறப்பிற்செய்த) ஊழ்வினையின் பலத்தினுல், பயன் பெருமல்-பயனை அடையாமல், கடவுளர் தம் மாயையினுல்-தேவர்களின் வஞ்சனையால், கழிவுற்ருய்-மரணமடைந்தாய்; அந்தோ அந்தோ-ஐயோ! ஐயோ! (எ - று.)—ஏகாரம்-இரக்கம்.

தம்பிமார்களென்பது, முன்வாக்கியத்திலுங் கூட்டப்பட்டது. ஈரஞ்சுபதின்மர் - பண்புத்தொகைப் பன்மொழித்தொடர். இங்கிதம் அறிதல்-ஒருவன் மனக்கருத்தை முகம் கண் புருவம் முதலியவற்றின் குறிப்பினுல் அறிந்துகொள்ளுதல். ஆளும் பதம் என்றது - இந்நூற்றைவருக்கும் மூத்தவனுய்ப்பிறந்ததை. ஒரு குலத்தில் மூத்தவனுக்கே அரசாட்சி உரியதென்பது நீதிநூல்துணிபாதலால், இங்ஙனங் கூறியது. பயன்பெறுதல்-சக்கரவர்த்தியாதல். கடவுளர் - இந்திரன் திருமால்முதலியவர். (347)

257.– குந்தியின் அன்பின்செயல்.

என்றென்றே யமர்க்களத்தி னின்ற வேந்தர் யாவருங்கேட் டதிசயிப்ப வேங்கி யேங்கி, யன்றன்போ டெடுத்தணைத்து முலைக்க ணூற லமுதூட்டி நேய முட னணித்நா வின்ற, கன்றெஞ்ச வினைந்தினைந்து மறுகா நின்ற கபிலையைப்போ லென்பட்டாள் கலாபம் வீசிக், குன்றெங்கு மிளஞ்சாயன் மயில்க ளாடுங் குருநாடன் றிருத்தேவி குந்தி தேவி.

(இ - ள்.) குன்று எங்குஉம் -மலையில் எவ்விடத்தும், இள - இளமையாகிய, சாயல் - மென்மையையுடைய, மயில்கள்—, கலாபம் வீசி-தோகையை விரித்துக்கொண்டு, ஆடும் - கூத்தாடுகிற,

குரு நாடன் - குருநாட்டையுடைய பாண்டுவினது, திரு தேவி - மேலானமனைவியாகிய, குந்திதேவி-குந்தியென்னும் ராஜபத்தினி, என்று என்று - என்றுஇவ்வாறு பலசொல்லி, அமர் களத்தில் நின்ற வேந்தர் யாவர்உம் - போர்க்களத்தில் நின்ற அரசரெல்லாரும், கேட்டு அதிசயிப்ப-செவியுற்று (இது என்னவென்று) வியக்கும்படி, ஏங்கி ஏங்கி - மிகப்புலம்பி, அன்று - அப்பொழுது, அன்போடு - அன்புடனே, எடுத்து அணைத்து - (கைகளால்) எடுத்துத் தழுவிக்கொண்டு, முலைக்கண் ஊறல் அமுது ஊட்டி - தனங்களிற் சுரக்கிற பாலை உண்பித்து, நேயமுடன் - அன்போடு, அணித்து ஆ - சமீபகாலத்தில், ஈன்ற - பெற்ற, கன்று—, எஞ்ச - இறக்க, இனைந்து இனைந்து - மிகவருந்தி, மறுகாநின்ற - கலங்குகிற, கபிலையை போல் - பசுவைப்போல, என் பட்டாள் - என்னவருத்தப் பட்டாள்!! [மிகவும் வருந்தினள் என்றபடி]; (எ-று.)

அதிசயித்தல் - கர்ணனுக்குக் குந்தி தாயென்று எவருக்கும் இதுவரையிலுந் தெரியாததனாலென்க. மிக்க அன்பினால் தனங்களிற் பால் சுரந்தது. குந்தி இங்ஙனஞ்செய்தது-முன் கர்ணனிடஞ் சென்று நாகாஸ்திரத்தை அருச்சுனன்மீது இரண்டாமுறை விடாதபடியும் மற்றைத்தம்பிமார்களைக் கொல்லாதபடியும் இரண்டு வரங்கேட்டு வாங்கினபொழுது, அவனும் இவளை 'யான் போர்க்களத்தில் இறக்கும்போது யாவரும் அறிய எனக்கு முலைப் பாலூட்டி யான் உமதுபிள்ளை யென்பதைப் புலப்படுத்தவேண்டும்' என்றும், போர்முடியுமட்டும் பஞ்சபாண்டவரு முட்பட எவர்க்கும் நான உமக்கு மகனென்பதைப் புலப்படுத்தாதிருத்தல் வேண்டு மென்றும், இரண்டுவரங்கேட்டுவாங்கினதலால்.(348)

வேறு.

258.—கர்ணனுயிர் விண்ணுலகஞ் சேர்தல்.

அன்னைமடி யினுங்கரத்து முடல்கிடப்ப வங்கர்பிரா னுயி தாதை
தன்னைமரு வுறத்தழுவித் தானமுறக் கிளர்ந்ததவண் டடுமாறுமன்
மின்னைவலி யுறநீட்டி யண்டமுக டசையாமல் விண்ணோர் தச்சன்
பொன்னையழ கெழப்பூசி யொளிபிறங்க நாட்டியதோர் பொற்றா ணொத்தே.

(இ - ள்.) அன்னை - தாயாகிய குந்தியின், மடியின்உம்-மடியிலும், கரத்துஉம் - கைகளிலும், உடல் - அவனுடம்பு, இடப்ப - பொருந்தியிருக்க,— அங்கர் பிரான்-அங்கநாட்டார்க்குத்தலைவனான கர்ணனது, ஆவி-உயிர், அவண் தடுமாறுமல் - அங்கே அலையாதபடி, விண்ணோர் தச்சன் - தேவர்களது சிற்பியான விசுவகர்மா, அண்டம் முகடு அசையாமல் - அண்டகோளத்தின் மேல்முகடு சலியாதபடி, மின்னை - மின்னலை, வலி உற - வலிமை பொருந்த, நீட்டி - நீளவடிவமாக்கி, பொன்னை அழகு எழ பூசி - (அதன்மேற்) பொன்னை அழகு உண்டாம்படி பூசி, ஒளி பிறங்க - ஒளி விளங்கும்படி, நாட்டியது - நேராக நிறுத்தியதாகிய, ஓர் - ஒரு, பொன் தூண் - அழகிய கம்பத்தை, ஒத்து - போன்று [ஒளிவடிவமாகி],

தாதை தன்னை மருவுற தழுவி - தந்தையாகிய சூரியனைச் சேருமாறு பொருந்தி, தானம் உற - மேலுலகத்து உயர்ந்தபதவியிலே சேர, கிளர்ந்தது - எழுந்துவிளங்கிற்று; (எ-று.)

இடையிலே சூரியமண்டலத்தைப் பேதித்துக்கொண்டு அதன் வழியே சென்று சுவர்க்கஞ்சேர வேண்டுதலால், 'ஆவி தாதை தன்னை மருவுறத்தழுவித் தானமுறக் கிளர்ந்தது' என்றார். தச்சன் - தக்ஷன் என்னும் வடமொழித்திரிபு. பின் இரண்டடி - தற்குறிப்பேற்றவணி.

இதுமுதற் பன்னிரண்டுகவிகள் - கடையிருசீரும் மாச்சீரும், மற்றை நான்குங் காய்ச்சீருமாகிய அறுசீராசிரியவிருத்தங்கள். (349)

259.—துரியோதனன்சேனை வற்றியதைப் பற்றிய கவிக்கூற்று.

மருத்துதவவருசண்டமருத்தாலுமருத்துவான்வழங்குஞ்சோதி
யுருத்திகழுங்கரியசுடருருத்தெழுவெங்கனலாலுமுகாந்தந்தன்னி
னிருத்தமிடும்பெரும்பவ்வநெடுநீத்தம்வறப்பதுபோனிருபன்சேனைப்
பெருத்தகடல்சுவறியவப்பெருமைதனையெப்படிநாம்பேசுமாறே.

(இ - ள்.) மருத்து-வாயுபகவான், உதவ-அருள்செய்ததனால், வரு-பிறந்த, சண்ட மருத்தால்உம்-கடுங்காற்றுப்போன்ற வீமனாலும், மருத்துவான் வழங்கும்-இந்திரன்பெற்றருளின, சோதி உரு திகழும்-ஒளியோடு கூடிய வடிவம் விளங்கப்பெற்ற, கரிய சுடர்-கருத்த நிறத்தையுடைய, உருத்து எழு - பற்றியெரிகிற, வெம்-கொடிய, கனலால்உம்-நெருப்புப்போன்ற அருச்சுனனாலும், உகாந்தம் தன்னில்-யுகமுடிவு காலத்தில், நிருத்தம் இடும் - (பொங்கியெழுதலால்) கூத்தாடுகிற, பெரு பவ்வம்-பெரியகடலின், நெடு நீத்தம்-மிகுந்த நீர்வெள்ளம், வறப்பதுபோல் - வறந்து போவது போல, நிருபன் சேனை பெருத்த கடல் - துரியோதனனது சேனையாகிய பெரிய கடல், சுவறிய-வறந்துபோன, அ பெருமைதனை - அந்தப்பெருங்காரியத்தை, நாம்—, பேசும் ஆறு - சொல்லும் விதம், எப்படி-எவ்வாறோ? [பேசுதற்கு அரிதென்றபடி]; (எ-று.)

யுகாந்தகாலத்திற் காற்றும் நெருப்புஞ் சேர்ந்து கடலை வறளச்செய்வதுபோல இப்பொழுது வீமஅருச்சுனர்கள் சேர்ந்து துரியோதனன் சேனையாகியகடலைவறளச்செய்தனரென்பது, கருத்து. மருத்துவான்-தேவர்களையுடையவன்; மருத்-தேவர். அருச்சுனனது நிறங் கருமையாதலால், 'கரிய சுடருருத்தெழுவெங்கனல்' என்றார். (350)

260.—இதுவும் மேற்கவியும்-துரியோதனன் புலம்பலைத் தெரிக்கும்.

அணையார்தம்படைக்கடலினருநிலைக்குக்கரையேறலானகோலப்
புணையாயெத்திறங்களினும்பகிராமலுற்றதெலாம்புகலத்தக்க
துணையாயென்னுயிர்க்குயிராந்தோழனுமாகியவுன்னைத்தோற்றேனுகில்
இணையாருமிலாவரசேயாரைக்கொண்டரசாளவிருக்கின்றேனே.

மூன்றுகவிகள் - ஒருதொடர்.

(இ - ள்.) இணை யார் உம் இலா - ஒப்பு எவரும் இல்லாத, அரசே-அரசனே! அணையார் தம் - (நம்மோடு) சேராத பகைவர்களது, படை கடலின்-சேனையாகியசமுத்திரத்தின், அரு நிலைக்கு-(கடப்பதற்கு) அரிய பரப்புக்கு, கரை ஏறல் ஆன - அக்கரையை அடைவதற்குப் பொருந்திய, கோலம்-அழகிய, புணை ஆய்-தெப்பமாகி, எ திறங்களின் உம்-எல்லாவகைகளிலும், உற்றது எலாம்-நேர்ந்த இன்பதுன்பங்களெல்லாவற்றையும், பகிராமல்-பேதமில்லாமல், புகல தக்க-சொல்லுதற்குத்தகுந்த, துணை ஆய் - துணைவனாகி, என் உயிர்க்கு உயிர் ஆம்-எனது உயிருக்கும் உயிராகிய [மிகஅருமையான], தோழன் உம் ஆகிய-நண்பனுமான, உன்னை —, தோற்றேன் ஆகில்-இழந்த பின்பு, யாரை கொண்டு அரசு ஆள - வேறு யாரைத் துணையாகவைத்துக்கொண்டு இராச்சியத்தை ஆளும்பொருட்டு, இருக்கின்றேன்-(யான்) வாழ்ந்திருக்கிறேன்? (எ - று.) (351)

261. சூழ்வேலையுலகாளுஞ்சூழ்ச்சியுமிப்பெருஞ்செல்வத்துவக்குநெஞ்சால்
வீழ்வேனேவமராடவீமனெடுந்தலைநாளில்விளைந்தசெற்றந்
தாழ்வேனேவுனையொழிந்துந்தம்பியரையொழிந்துமினித்தனித்துநானே
வாழ்வேனேவாழ்வேயென்மனவலியேவருகின்றேன்வருகின்றேனே.

(இ-ள்.) வாழ்வே-(எனது) எல்லாவாழ்க்கைகளுக்குங் காரணமானவனே! என் மனம்வலியே - என் மனத்தின் வலிமைக்குக் காரணமானவனே! உனை ஒழிந்துஉம் - உன்னை இழந்தும், தம்பியரை ஒழிந்துஉம்-தம்பிமார்களை இழந்தும், இனி - இனிமேல், வேலை சூழ்-கடலாற்சூழப்பட்ட, உலகு - நிலவுலகமுழுவதையும், ஆளும்-அரசாளுகிற, சூழ்ச்சிஉம்-ஆலோசனையையும், இ பெருஞ் செல்வம் துவக்குஉம் - இந்த அரசப் பெருஞ்செல்வத்திலுள்ள பிணிப்பையும், நெஞ்சால்-(என்) மனத்தினால், வீழ்வேன் ஓ-விரும்புவேனோ? [விரும்பமாட்டேனென்றபடி]; (ஆயினும்),வீமனெடு-வீமனுடனே, அமர் ஆட-போர்புரியும்படி, தலைநாளில் விளைந்த-இளமைக் காலத்தில்தானே முதிர்ந்துதோன்றிய, செற்றம்-பகைமை, தாழ்வேன் ஓ-தாழப்பெறுவேனோ? [நான் உயிரோடிருக்கும் வரையில் அந்தச்செற்றம் என்னைவிட்டு நீங்காது என்றபடி]: இனி —, நானே தனித்து வாழ்வேன் ஓ—? [வாழேனென்றபடி]: (ஆதலால்), வருகின்றேன் வருகின்றேன்-(நானும் உன்னுடனே) வந்துவிடுகின்றேன் வந்துவிடுகின்றேன்; (எ - று.)—ஏகாரம்-இரங்கற்பொருளது. அடுக்கு, அவலம்பற்றியது.

இனி, செற்றம் நீங்கப்பொருது என்னுயிரைமாய்த்து வீரசுவர்க்கஞ் சேர்வதே தகுதியென்பது கருத்து. (352)

262.—சூரியன் அஸ்தமித்தல்.

எனக்கொண்டுசுயோதனன்பேரிரக்கமுடனழுதரற்றவிருந்தவேந்தர்
மனக்கொண்டவருத்தமுடன்வலியிழந்தோமெனக்கலுழவானினெங்கு

மினக்கொண்டன்முழங்குவபோலந்தரதுந்துபிமுழங்கவிமையோராரர்ப்பக்
கனக்கொண்டகதிர்புதல்வன்பாடறிந்துமூழ்கியதாற்கடலினூடே.

(இ - ள்.) எனக்கொண்டு-என்று, சுயோதனன் - துரியோதனன், பேர் இரக்கமுடன்-மிக்க வருத்தத்தோடு, அழுது அரற்ற-கண்ணீர் விட்டுக் கதறவும்,—இருந்த வேந்தர்-உடனிருந்த அரசர்கள், மனம் கொண்ட வருத்தமுடன் - (தம்) மனத்துக்கொண்ட வருத்தத்துடன், 'வலி இழந்தோம் - வலிமையை யிழந்துவிட்டோம்,' என கலுழ-என்றுவருந்தவும்,—வானின்-ஆகாயத்திலே, எங்குஉம்-எப்புறத்தும், இனம் கொண்டல் முழங்குவ போல் - தொகுதியாகியமேகங்கள் இடிப்பனபோல, அந்தரதுந்துபிமுழங்க -வானப்பறை ஒலிக்கவும்,—இமையோர் ஆர்ப்ப - தேவர்கள் ஆரவாரிக்கவும்,—கனம் கொண்ட கதிர் - தொகுதியாக [ஆயிரமென்னுங் கணக்குப்பட]க் கொண்டுள்ள கிரணங்களையுடைய சூரியன், புதல்வன் பாடு - (தன்) புத்திரனான கர்ணனுடைய இறப்பை, அறிந்து—, கடலினூடு-மேல்கடலில், மூழ்கியது—;

சூரியன் அஸ்தமித்ததைத் தன்புதல்வனிறந்ததற்காகக் கடலில் மூழ்கியதாகக் கற்பித்தார்: ஏதுத்தற்குறிப்பேற்றவணி. வீரசுவர்க்கத்திற்கு விருந்தாகக் கர்ணனுயிர்வருவதுபற்றி, வானப்பறைமுழங்கத் தேவர்க ளார்த்தன ரென்க. 'கதிர் மூழ்கியது' என அஃறிணையாகக்கூறியது, தேவர்களை இருதிணையாலுங் கூறலா மாதலால். ஆல்-ஈற்றசை. பி-ம்: கனற்கொண்டகதிர்.

263.—கிருஷ்ணனை வினவிச் செய்தியறிந்து பாண்டவர் கர்ணனைக்கிட்டுதல்.

பேரறத்தின்மகன்முதலாம்பிள்ளைகளைவருந்தம்மைப்பெற்றபாவை
யார்கயற்கண்பு ல்சொரியவழுகின்றகுரலினைக்கேட்டாழியானை
யோரிமைப்பில்வினவியிடவுள்ளபடியுரைத்ததற்பினுருமேறுண்ட
கூரெயிற்றுநாகம்போற்குலைகுலைந்துதம்முனைப்போய்க்குறுகினரே.

(இ - ள்.) பேர் அறத்தின் மகன் முதல் ஆம் பிள்ளைகள் ஐவர் உம் - பெருமைபெற்ற தருமபுத்திரன் முதலாகிய குந்திபுத்திரரைவரும்,—தம்மை பெற்ற பாவை ஆர் கயல் கண் புனல்சொரிய அழுகின்ற குரலினை கேட்டு - தம்மைப்பெற்ற பாவைபோன்றவளான குந்திதேவி நிரம்பிய கயல்போன்றகண்களினின்று நீர் வடிய அழுகின்ற குரலைச் செவியேற்று, ஆழியானை வினவியிட-(இதற்குக்காரணம்என்? என்று) ஸ்ரீக்ருஷ்ணனை வினவ,—(அப்பிரானும்), ஓர் இமைப்பில் உள்ளபடி உரைத்ததன்பின்—,—(அது கேட்ட பாண்டவர்), உரும் ஏறு உண்ட கூர் எயிறு நாகம்போல் குலைகுலைந்து-பேரிடியைச் செவியேற்ற கூர்மையான பற்களையுடைய நாகம் நடுநடுங்குவதுபோல நடுநடுங்கி, போய்-(தாமிருந்த இடத்தினின்றுஞ்) சென்று, தம்முனை-தமது அண்ணனை கர்ணனை, குறுகினர்—; (எ - று.) (354)

264.— ஐந்துகவிகள்-பாண்டவரின் புலம்புதலைத் தெரிவிக்கும்.

**கன்னியிளம்பருவத்திலரியமாவெனுங்கடவுள்காதல்கூர
மன்னியமந்திரமெமக்குமின்றளவுமுரைத்திலையான்மறந்தாய்கொல்லோ
பின்னியசெஞ்சடைக்குழலாயீதென்னபேரறிவுபெற்றதாயி
னன்னியநன்றாயிருந்ததிப்படியேபிழைப்பிப்பதறிந்திலேமே.**

(இ - ள்.) கன்னி இளம் பருவத்தில் - கன்னிகையாயிருந்த இளமைப்பருவத்தில்தானே, அரியமா எனும் கடவுள் - சூரியனென்று சொல்லப்படுகின்ற தேவன், காதல் கூர - (உன்னிடத்துக்) காதல்மிகும்படி, மன்னிய-(உன்னிடத்து வந்து)பொருந்திய, மந்திரம்-மந்திரத்தைப்பற்றி, இன்று அளவும்—, எமக்கும்—, உரைத்திலை - (நீ) சொல்லாதிருந்திட்டாய்; மறந்தாய்கொல்ஓ-(அதனை) மறந்திட்டாயோ? பின்னிய செஞ்சடைக் குழலாய் - சடையாய்த் திரித்தமயிர்முடியுடையவளே! இது-(இங்ஙன் பெற்றபிள்ளைகட்கும் செய்தி தெரியாதபடிமறைத்துவைத்த) இச்செய்கை, என்ன பேர் அறிவு - என்னபேரறிவுடைமையாம்? பெற்ற தாயின்-பெற்ற தாயைக் கர்ட்டிலும், அன்னியம்-வேறுபட்டசுற்றமே, நன்று ஆய் இருந்தது—; இப்படி பிழைப்பிப்பது-இப்படி தவறுசெய்யச் செய்வதை, அறிந்திலேம் - (வேறெங்கும்) கண்டிலேம்; (எ - று.) —ஏகாரம் - இரக்கம். இது, தருமன்புலம்பல். குந்தியைநோக்கிக் கூறியது.

குந்திதேவி பெற்றதாயாக இராமல் வேறு சுற்றமாக இருந்தால், பிள்ளைகட்குச் செய்தியை மறைத்தாளென்ற பழிப்பு வராதாகையால், 'பெற்றதாயினும் அன்னியம் நன்றாயிருந்தது' என்றதென்னலாம். பிழைப்பித்தல்-அண்ணனை கர்ணனைக் கொல்லுமாறு செய்வித்தமை. (355)

**265. ஊற்றிருந்தவிழியினளாயுனைப்பயந்தாண் மனமறுகவுயிராய்நின்ற
காற்றிருந்தவிடந்தேடிக்கணைபலவுமுடல்குளிப்பக் கன்னாவின்று
கூற்றிருந்தபதிதேடிக்குடியிருக்க நடந்தனையோகொற்றவேந்தாய்
வீற்றிருந்திங்கைவேமுமடிவருடப் புவியாளவிதியிலாதாய்.**

(இ - ள்.) கன்னா - கர்ணனே! ஊற்று இருந்த விழியினள் ஆய் - ஊற்றிருக்கின்றதென்று கருதுமாறு நீர்சுரக்கின்ற கண்களையுடையவளாய், உனை பயந்தாள் - உன்னைப்பெற்ற தாய், மனம் மறுக-சோகத்தினால் மனஞ்சுழல, உயிர் ஆய் நின்றகாற்று இருந்த இடம் தேடி கணை பலஉம் உடல் குளிப்ப-உயிரென்று சொல்லப்பட்ட காற்றானது தங்கியிருந்த இடத்தைத்தேடி மிகப் பலஅம்புகள் உடலில்மூழ்க,—இன்று—, கூற்று இருந்த பதி தேடி குடி இருக்க நடந்தனைஓ - யமனிருக்கின்ற இடத்தைத் தேடி அங்கே குடிபோகலாமென்று கருதிச் சென்றிட்டாயோ? கொற்றம் வேந்து ஆய் வீறு இங்கு இருந்து-வெற்றிபொருந்திய அரசனாகிப் பெருஞ்சிறப்புடனே இங்கே தங்கியிருந்து, ஐவேம் உம் - நாங்கள் ஐந்துபேரும், அடிவருட - (உனது) பாதங்களைத்

தடவிப் பணிசெய்யாநிற்க, புவி ஆள-பூமியையாளும்படி, விதி-ஊழ்வினையை, இலாதாய்-இல்லாதவனே! (எ - று.)—இது, வீமன்புலம்பல்.

பாண்டவர் ஐவரினும் மூத்தவனாதலால் இந்தக்கர்ணனே ஐவரும் பணிசெய்யத் தான் அரசனாகி ஆளவேண்டும் முறையிருந்தும் அங்ஙனமின்றி இறந்து கிடந்தது பற்றி 'ஆளவிதியிலாதாய்' என்றது. (356)

266. ஊன்றொடுத்தவயவாளியெத்தனையாயிரந்தொடுத்தேனுரகத்தானீ
தான்றொடுத்தகடுங்கணைக்குத்தப்பினேனெனமகிழ்ந்தேன்சஞ்சரீகந்
தேன்றொடுத்தமலரலங்கற்றினநாதன்சேயேநின்றிருமார்பத்தில்
யான்றொடுத்தநெடும்பகழியெனைக்கெடுப்பதறிந்திலேனென்செய்தேனே.

(இ - ள்.) சஞ்சரீகம் தேன் தொடுத்த - வண்டுகளாற் சேர்க்கப்படும் தேன் நிரம்பிய, மலர் - மலர்கொண்டுதொடுக்கப் பெற்ற, அலங்கல் - வெற்றிமாலையணிதற்குரிய, தினநாதன் சேயே - சூரியபுத்திரனான கர்ணனே! ஊன்தொடுத்த வய வாளி - (பகைவரின்) மாமிசம்பொருந்திய வெற்றியுள்ள அம்புகளை, (உன் மீது), எத்தனை ஆயிரம் தொடுத்தேன்—? (அன்றியும்), நீதான் உரகத்தால்தொடுத்த கடுங்கணைக்கு தப்பினேன் எனமகிழ்ந்தேன் -நீ நாகாஸ்திரத்தைதவைத்து விட்ட கொடிய அம்புக்குத் தப்பினே னென்று அகமகிழ்ந்தேன்: நின் திரு மார்பத்தில் - உன்னுடைய அழகிய மார்பிலே, யான்தொடுத்த நெடும்பகழி-யான்(இலக்காகக் குறித்து) விடுத்த கொடிய அம்புகள், எனை கெடுப்பது அறிந்திலேன்-எனக்கே தீமைசெய்வதாவதனை (அப்போது) அறியாமற் போய்விட்டேன்! என்செய்தேன் ஏ-(நான்) என்னகாரியஞ் செய்திட்டேன்!! (எ - று.)—தன்பாணம் தன் அண்ணனையே கொன்றதனால், 'எனைக் கெடுப்பதறிந்திலேன்' என்றான். இது, அருச்சுனன் புலம்பல். (357)

267. யாயுரைத்ததல்லாதுவேறுரைத்தசரீரியென்னுந்தேவின்
வாயுரைத்ததின்றளவுங்கேட்டிலேங்கேட்டனமேல்வாட்டமுண்டோ
பேயுரைத்துத்தாலாட்டமுலைப்பாலோடுயிருண்டபித்தாவிண்டை
நீயுரைத்தபிறகறிந்தோமெம்முனையின்றெமைக்கொண்டேநேர்செய்தாயே.

(இ - ள்.) பேய் உரைத்து-பேய்ச்சி (தாயென்று தன்னைச்) சொல்லிக்கொண்டு, தாலாட்ட—, முலைப்பாலோடு - முலைப்பாலுடனே, உயிர் உண்ட - (அவளது) உயிரையுறிஞ்சியுண்டிட்ட, பித்தா-பித்தன்போன்றிருந்தவனே! யாய் உரைத்தது அல்லாது -(இப்போது எமது தாய்) சொன்னதல்லாமல், வேறு உரைத்தது-வேறொருத்தர் சொன்னதையாவது, அசரீரிஎன்னும் தேவின் வாய் உரைத்தது-அசரீரியாகியதெய்வத்தின் வாயினாற்சொல்லியதையாவது, இன்றுஅளவுஉம்-இன்றைவரையிலும், கேட்டிலேம்-(கர்ணன் குந்திக்கு மூத்தபுதல்வனென்பதுகுறித்துக்) கேட்டோமில்லை: கேட்டனம் ஏல்-முன்னமே(இதனைக்) கேட்டுஅறிந்தோமே

யானல், (அதற்குஏற்ப நடந்திருப்போம்: ஆகையால் அப்போது), வாட்டம் உண்டுஓ-(எங்களுக்குத் துயரத்தினுல் இப்போது உண்டாகும்) தளர்ச்சி நேர்ந்திருக்குமோ? ஈண்டை - இப்போது, நீ உரைத்த பிறகு-நீ சொன்னபிறகே, அறிந்தோம் - (கர்ணன் எங்கட்கு அண்ணன்: குந்திக்குமூத்தபுதல்வன் என்று) அறிந்திட்டோம்: எம்முனை-எமது அண்ணனுன கர்ணனை, எமை கொண்டு ஏ-(அவனது தம்பிமாரான) எங்களைக்கொண்டே, இன்று—, நேர் செய்தாய் ஏ-உயிரழியச்செய்து விட்டாயே; (எ - று.)—பித்தன்-செய்யவேண்டுவன தவிரவேண்டுவனதெரியாதவன்: பேய்ச்சியைத் தாய்போலக்கருதி முலையுண்டதனுல் இங்ஙன் கூறியது. இது, நகுலன்புலம்பல். பி-ம்: அல்லாதவெமருரைத்தது. (358)

268. **ஆடகனைப்புதல்வனைக்கொண்டழிப்பித்தாயிலங்கைநகர்க்கரசையன்று, விடணனைப்பகையாக்கிக்கிளையுடனேவீழ்வித்தாய்வேலைசூழ்ந்த, நாடறியப்புகுந்தெமக்குநாயகமாங்கன்னனையுநரன்கையம்பா, லீடழியப்பொருவித்தாயிமையோர்கள்வல்லவிரகியார்வல்லாரே.**

(இ - ள்.) ஆடகனை-இரணியாசுரனை, புதல்வனை கொண்டு-(அவனது) புத்திரனுன பிரகலாதனைக்கொண்டு, அழிப்பித்தாய்--; இலங்கை நகர்க்கு அரசை - இலங்காபுரிக்குத்தலைவனுன இராவணனை, அன்று-முற்காலத்தில், வீடணனை-(அவன் தம்பியாகிய) விபீஷணனுக்கு, பகை ஆக்கி-பகைவனுகச் செய்து, கிளையுடனே-பந்துவர்க்கத்துடனே, வீழ்வித்தாய் - இறந்துவிழச்செய்தாய்; வேலை சூழ்ந்த-கடலாற்சூழப்பட்ட, நாடு - உலகத்திலுள்ளார், அறிய-அறியும்படி, புகுந்து-வந்து, எமக்கு நாயகம் ஆம்-எங்கட்கு எல்லாம் தலைமை பூணவேண்டிய, கன்னனை உம் - கர்ணனையும், நரன் கை அம்பால்-அருச்சுனனது கையம்பினுல், ஈடு அழிய - வலிமை குன்றியிறக்க, பொருவித்தாய் - போர்செய்யுமாறு புரிந்தாய்: இமையோர்கள் வல்ல விரகு-தேவர்களின்வல்லமைபெற்ற உபாயத்தை, வல்லார்-அறியவல்லார், யார்ஏ-யாவர்தாம்? (எ-று.) —இது, சகதேவன்புலம்பல்.

புதல்வன் தம்பி இவர்களைக்கொண்டே திருமால் தந்தையையும் அண்ணனையும் கொல்வித்தா னென்கிற சிறப்புப்பொருளை, 'இமையோர்கள் வல்ல விரகியார் வல்லாரே' என்ற பொதுப்பொருள்கொண்டு சமர்த்தித்தது-வேற்றுப்பொருள்வைப்பணி. (359)

269.—கர்ணனைக்குறித்துப் புலம்பியபின் பாண்டவர் பாசறை சேர, சகுனிமுதலியோர் துரியோதனனைக்கொண்டு பாசறைசேர்தல்.

இவ்வகையேதிருத்தமையனிணையடிக்கீழ்வீழ்ந்தலறியாயுந்தாங்க
ளைவரும்போய்த்தம்பாடிவீடடைந்தாராகுலத்தாலழிந்தநெஞ்சார்
பைவருமாசுணத்துவசப்பார்த்திவனைக்கொண்டேதம்பாடிபுக்கார்
தைவருதிண்சிலைத்தடக்கைச்சகுனிதனைமுதலானதரணிபாலர்.

(இ - ள்.) இ வகைஏ-இவ்விதமாக, திரு தமையன் - சிறந்த அண்ணனான கர்ணனது, இணை அடிக்கீழ்-உபயபாதங்களின்கீழ், வீழ்ந்து—, அலறி-வாய்விட்டுக்கதறி, யாய்உம்-தாயும், தாங்கள் ஐவர்உம் - (பாண்டவராகிய) தாங்கள்ஐந்துபேரும், ஆகுலத்தால்-துயரினால், அழிந்த-வருந்திய, நெஞ்சார்-நெஞ்சையுடையவர்களாய், போய்—, தம் பாடி வீடு - தமதுபடைவீட்டை, அடைந்தார்—; தைவரு திண் சிலை - தீண்டியெய்தற்கு உரிய வலிய வில்லை யேந்திய, தட கை - பெரியகையையுடைய, சகுனிதனை - சகுனியை, முதல் ஆன - முதலாகவுடைய, தரணிபாலர் - அரசர், பைவரு - படமெடுத்தலையுடைய, மாசுணம்-பாம்பின்வடிவத்தை, துவசம்-கொடியிலேகொண்டுள்ள, பார்த்திவனை - துரியோதனராசனை, கொண்டு-தம்முடனழைத்துக்கொண்டு, தம்பாடி-தமது பாசறையை, புக்கார்-போய்ச்சேர்ந்தார்கள்; (எ - று.) (360)

பதினேழாம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

கன்னபருவம் முற்றுப்பெற்றது.

வீட்டுமதுரோணகன்னபருவங்களின்

அபிதான சூசிகை யகராதி.

அங்கரா-துரோணனுக்குக் கவசமளித்தவன்,* 14 - 66

அச்சுவசேனன் - காண்டவதகன காலத்தில் தாய் வாயிலிருந்து வால்தறிந்த நாகம்; இது, சர்ணனை யடைந்துதன்னைவாளியாகக்கொள்ளுமாறு வேண்டிற்று: 17 - 227

அச்சுவத்தாமா - துரோணன்மகன் - 13 - 256, இவன் சிவனருளாற் பிறந்தான், 13-26: பரத்துவாசன்குலத்துப் பிறந்தவன், 14-200: கடோற்கசன்மகனை அஞ்சனபன்மனைக் கொன்றான், 14-177: பலரும் இறந்தது கண்டு, இப்போதாவதுசமாதானப்பட்டு வாழ்வது நலமென்று துரியோதனனுக்கு உபதேசித்தான், 17 - 179 - முதல் 181 - வரை.

அசோதை - கிருஷ்ணனைவளர்த்த தாய், 3 - 1,

அஞ்சனபன்மன்-கடோற்கசன்மகன்: இவனை அசுவத்தாமாகொன்றான்; (இவன்பெயர் அஞ்சனபர்வா, என்றுமுதனூலிலுள்ளது,) 14-177,

அநுவிந்தன் - அவந்தியரசைச்சேர்ந்தவனென்ப; துரியோதனன் பக்கத்தான், 14 - 20,

அபயன் - துரியோதனன்தம்பி, வீமனாற் கொல்லப்பட்டான், 8 - 6.

அபிமன் - அருச்சுனன் புதல்வனை இவன் தனிவீரன், 6 - 24: நீலவண்ணன்மருகன், 12 - 37, சிவபக்தன், 11 - 21, 22: மன்மதனுக்கு அத்தைமகன், 13-85: சக்ராயூகத்தைப் பிளக்கவல்லான், 13 - 18: க்ருஷ்ணனிடத்து வைஷ்ணவாஸ்திரத்தை உபதேசமாகப் பெற்றான், 13 - 24: பலவீரரைக்கொன்றதனோடு சகுனிமகனொருத்தனைக்கொன்றான், 13-29 தன்முகனை முடிதறியச் செய்தான், 13 - 72: சகுனிமைந்தரெழுவரோடு, துணைவரையும் ஆவிமாய்த்தான், 13 - 99. இவன் தேர் கோங்குமரக் கொடியையுடைய தென்பர், 13-104: தேர்ச்சக்கரத்தைச் சக்கரப்படையாகக் கொண்டான், 13-115. சயத்திரதனாற் சிவபிரானளித்த கதாயுதத்தாற் கொலையுண்டான், 13 - 129.

அம்பை - பரசுராமனசெய்தபோரில் வீடுமன் வென்றதனால் அவ்வீடுமன்மீதுகோபித்தாள்: பின்னர் வீடுமனைக்கொல்லச்சிகண்டியாய்ப்பிறந்தாள், 1 - 10, 10 - 31.

அருச்சுனன், 11-41: இந்திரன் புதல்வன், 2-1: உலூபியின் காமுகன், 14-42: கருநிறமுடையவன்; 10-18; நரனாயும்இலக்குவனாயும்நின்றவன், 1 - 6, 7. இவனுக்கு க்ருஷ்ணன் கீதையை உபதேசஞ்செய்தான்: 1 -2-முதல் 7-வரை: நிவாதகவச காலகேயர்களை வதைத்தவன், 2 - 28: வெள்ளைக் குதிரையுடையவன், 9 - 28: காண்டவ வனத்தைஅக்கினிதேவனுண்ணக்கொடுத்தவன், 10 - 22: 13-91, இவனுக்குச் சில பதாகை இவுளி தேர் இவை செழுங்கனலளித்தன: 10 - 9: இவனுடைய இரதத்துவசத்துமீது அநுமான் கூத்தாடுவன், 5 - 4: இவனுடைய பெயர்களுட் சில:— பார்த்தன், 3-29: தனஞ்சயன், 3-29: விசயன் 5 - 4: நரன், 7-7: 14 62: கிரீடி 12 - 10: பற்குனன், 13 - 104; சயந்தன் மாபெருந்துணைவன், 9-5: சிவபூசைசெய்தேஉண்பவன்,

---

* இரண்டாகப்பதிப்பித்த எண்களுள் முதலது சருக்கத்தின் எண்ணும், மற்றையது செய்யுட்களின் எண்ணுமாம்.

13 - 194: கருடன்கையிலிருந்த வண்ணம்கயிலையையடைந்தான், 13 - 199: செயத்திரதனை இவன் வெல்லச்சிவனருளால்தோன்றிய அந்தணன் முட்டிமுதலியன பயிற்றினன், 13-122: வருணச்சரத்தால் தடமுண்டாக்கினன், 14 - 51: க்ருஷ்ணனிடம் ஒருவேலைப்பெற்றுத் துரோணன் துரியோதனனுக்கு ஈந்த கவசத்தைப் பிளந்தான், 14 - 90: சமந்தபஞ்சகமடுவில் அருக்கியம் விடுந் தந்தையின் கையில் சயத்திரதன் தலையைக்கொய்து வீழ்த்தியவன், 14-167: கர்ணனைக்ருஷ்ணன்மொழிப்படியே அஞ்சரீகமெனுமம்பால் வீழ்த்தினன், 17 - 252: க்ருஷ்ணன் இவனுக்குச்சாரதி, 10-27: இவன் உத்தானுக்குத் தேரூர்ந்தான், 17 - 28: வேதமாகின்றவனை யெய்தபோர்வில்லி, 17-62.

அலம்புசன் - பகாசுரன் தம்பியான அரக்கன்: 8-19, 21: பலவடிவங்கொண்டு நின்ற இராவானைத் தான்கருடவடிவமாகிநின்றழுங்கச்செய்து, வாளோச்சிக் கொன்றான், 8-23: இந்த அலம்புசனை வீமன் கூர்வேலாற் கொன்றான், 9 - 24.

அலாயுதன் - கன்ன சௌபலர்க்கு கண்பனை அரக்கன்: அனேகவாயிர வரக்கரை உடன்கொண்டவன்: 14 - 193: இவனை அரக்கருடன் கடோற்கசன்மாய்த்தான் 14 - 203.

அனுதியக்கன் - துரியோதனன் தம்பியருள் ஒருத்தன், 8 - 30, [8-6.

ஆதித்தகேது-துரியோதனன் தம்பி

ஆயிரவாகு-பேர்க்குத் தக்கபடி ஆயிரங்கைகள் பெற்றிருந்த இவன் ஆயிரம்வரங்கள் மறையுடன்பெற்றவன்: வாணனைப்புயமழித்த மந்திரத்தை ஸ்ரீக்ருஷ்ணனிடம்பெற்றுப் பின் இவன்கைகளையெல்லாம் அருச்சுனனழித்தான், 14-41.

இடிம்பன்-கடோற்கசனுக்கு மாமன், 13 - 239.

இடிம்பி-வீமன் மனைவியான அரக்கி: கடோற்கசன் தாய், 14 - 191.

இந்திரவர்மா - மாளவநாட்டரசன்: இவன்யானை அசுவத்தாமா என்பது: 15 - 19.

இலக்கணகுமாரன் - துரியோதனன் புதல்வன், 11 - 20: இவனை அபிமன்யு கொன்றான், 13 - 90.

இராவான்-அருச்சுனனுக்கு நாகன்னிகையிடம் பிறந்தவன், 8-18, 20: 13 - 162: களப்பலியாக்கப்பட்டவன், 8 - 19, 20, 17-11: பலவுருவங்கொண்டு பொருதான், 9 - 21: அலம்புசனாற் கொல்லப்பட்டான், 8 - 23

உத்தமௌசா- பாஞ்சாலனைக்ஷத்திரியன்: பாண்டவர்பக்கத்தான்: 12-14: 14-9: உத்தமபானுஎனப்பட்டவன் இவனாகஇருக்கலாம், 4-29.

உத்தரன் - 1 - 39: விராடகுமாரன், 1-74: சிவேதன் தம்பி, 1 - 48: இவன் சல்லியனாற் கொல்லப்பட்டான், 1 - 40.

உத்தரை - உத்தரனுக்குஉடன் பிறந்தாள்: அபிமன்யு பார்யை.

உதாமன்-ஓர்பாஞ்சாலராசனென்பர் பாண்டவர் பக்கத்தவன்: 14-9.

உதிஷ்டிரன் = யுதிஷ்டிரன்: தருமபுத்திரனைப் பார்க்க.

உருமித்திரன் - சல்லியன் (முதற்) புதல்வன், 13 - 73: அபிமனாற் கொல்லப்பட்டான், 13 - 76.

உலூபி - இராவானுக்குத் தாயான நாககன்னிகை; அருச்சுனனால் மணக்கப்பட்டாள், 17 - 11.

கங்கை-வீடுமனைப்பெற்றவள்: 3-4.

கடோற்கசன் - வீமசேனன் மகன்: 3 - 7, 8: இடிம்பிமகன், 14 - 191: இடிம்பன் மருமகன், 13 - 239: மாயப்போரால் பகதத்தனை வென்றான்; 4 - 33 - முதல் 36-வரை: துரியோதனனிடம்தைரியமாகத்தூதுசெய்திசொல்லியவன்

13-226 - முதல் - 241 - வரை: அலாயுதனைப்பல அரக்கரோடுங் கொன்றான், 14 - 203: மாயையாற் பொருதான் - 14 - 205, 206: துரியோதனன் வற்புறுத்தியதனால் இந்திரன் தந்த வேலையேவிக் கர்ணனாற் கொல்லப்பட்டான், 14-210, 211.

கர்ணன் [கன்னன்] - சூரியன்புதல்வன்: 11-3: 16 - 36: துஷ்டசதுஷ்டரில் ஒருவன், 8-13: யமனுக்குத் தம்பி, 17-214: தேரூருமவர் மனையில் வளர்ந்தவன், 16-21: அதிரதரிற் சேர்க்காமையால் வீடுமன் இறக்குமளவும் போர்புரியாதவன், 8 - 14: 9 - 14: முன்போதில்தொடங்கி வண்மையைப் பின்போதி லொழிபவன், 9 - 2: தானஞ் செய்வதிற் பேர்போனவன், 10-51: அங்கதேசத்தார்க்கதிபதி, 10 - 50: வளர்ந்த பின் பிறப்புணர்ந்தவன், 12-38: இவன் கையில் நாகாஸ்திரம் உள்ளது, 13-103: பதினாறுநாள் சேனாதிபதியாக்கப் பட்டான், 16-2: மகதராசனையும் விடதரனையும் கொன்றான், 16 - 35: மேகவாகனன் வில்லை இயமதங்கிமுனிவர்பாற் பெற்றான், 17-35: கவசகுண்டலங்களை மகபதிக்கு அருளியவன்: 17-89: தருமனை நோக்கி 'நீ புறக்கிடுதல் தகாது, என்றான்' 17-93: கச்சைக் கொடியோன், 17-172: சூரியன் பாரபரமென்னும் வலம்புரியை இவனுக்கு ஈந்தான், 17-201: பரசுராமனிடம் சாபம்பெற்றான், 17-232: புண்ணியத்தைத் தந்திட்டு க்ருஷ்ணனிடம் எப்பிறவியிலும் இரப்பார்க்கு இல்லையென்னாமையைவரமாகப்பெற்றான்: 17-242, 243; அருச்சுனனால் உயிர்மாய்ந்தான், 17 - 252: க்ருஷ்ணபகவானால் இறுதியில் நிச வடிவத்தொடு காட்சியளிக்கப்பெற்றான், 17-244.

கனகத்துவசன் - துரியோதனன் தம்பி, 8-30

காந்தாரி - துரியோதனாதியர் நூற்றுவருக்குத் தாய்: 4-39: 17 - 22 கண்ணறை மன்னன்றேவி, 4 - 41: இவள் வருந்தியது, 4 - 40.

கிருட்டிணன் - வசுதேவனுக்கும் தேவகிக்கும் பிறந்தவன்: 14 - 100: 17-28; நந்தன்மனையில் யசோதைபால் வளர்ந்தவன், 3-1: மல்லரையடர்த்தான், 3-4: ப்ரதிஜ்ஞை செய்ததற்கு மாறாக ஆழியெடுத்தான்: 3-14: எப்போதும் பாண்டவர்க்குச் சகாயம்செய்பவன், 13-202; சிவனும் தானும் ஒருத்தரேயென்றவன், 13-195: நாராயணனவதாரம், 14-62: அருச்சுனனுயங்கியபோது சங்கநாதஞ் செய்தான், 14-87: இவன்சங்கம் பாஞ்சசன்னியமெனப்படும், 14 - 112: சக்கராயுதத்தாற் சூரியனை மறைத்தான், 14 - 164: கீதையுபதேசித்து அருச்சுனன் தன்மையை மாற்றினவன், 14-165: கடோற்கசனிறந்தபோதுபாண்டவரைத் தேற்றினான், 14 - 212, 213: துரோணனைக் கொல்ல உபாயங்கூறினான்: 15, 19, 20: அசுவத்தாமாவின் நாராயணாஸ்திரத்துக்குப் பாண்டவர்யாவரையும் தப்புவித்தான்: 15-37: 41: கருடக்கொடியுடையான், 16-3: கர்ணசுயோதனரி னிறுதிநாளைத் தெரிவித்தான், 17 - 7: இவன் பாண்டவர்க்குச் செய்த உதவிகள், 17-9-முதல்15-வரை: தான் ஒட்டியதேரைப் பன்னிரண்டங்குலம் புதையவிரலையூன்றிக்கர்ணனெய்தநாகாஸ்திரத்தை அருச்சுனன்கிரீடத்தைத் தாக்குமாறுபுரிந்தான், 17-224: அந்தணவேடம் பூண்டு கன்னன் புண்ணியத்தையெல்லாம்பெற்றான், 17-240.

கிருதவன்மன், 11 - 31: 13 - 28: 14 - 186: 17 - 85.

கிருபமுனி-13 - 28: 14 - 180: சாப வாசிரியன், 16 - 47: 17 - 85.
குண்டலன் - துரியோதனன் தம்பி யருள் ஒருவன், வீமனுற்கொல்லப் பட்டான், 8-30. ஓரரசன்.12-9.
குண்டலதாரன்-துரியோதனன் தம்பி, 8-30
குண்டலபேரசி- துரியோதனன் தம்பியருள் ஒருவன், 14-118.
குந்தி - பாண்டவர்தாய், 16 - 83: இவள் நாகாஸ்திரத்தைஇரண்டா முறை அருச்சுனன்மீது விடாத படி கர்ணனிடம் வரம்பெற்றுள்: 17 - 226.
குந்திபோசன் - குந்தியை வளர்த்த தந்தை: இவனுடைய புத்திரரிருவரை அசுவத்தாமன் கொன்றுன், 14 - 182.
கேமதூர்த்தி - காசி நகரரசன்; வேழப்போர் வல்லான், 16-11, 14: கதாயுதப்போரில் வீமன் கொன்றுன், 16-17 கேமன் என்றும் வழங்கப்பட்டுள்ளான், 16 - 18.
கைகயன் - இவன் பெயர் விந்தனென்ப, 16 - 46.
சக்கரதேவன் - வட கலிங்க மன்னன்: யானைப்போர்புரிபவன், 2 - 12: பொருது வீமனுல் சேனையோடு அழிந்தான், 2-21.
சகதேவன் [சாதேவன்] - இரட்டையரான அசுவினிதேவரின் புதல்வன். நகுலனுக்குத் தம்பி; 11-8. காவுசற்றுமிலாதசிந்தையன், 16-42.
சகுனி - சுபலன் மகன், 12 9. துரியோதனன் மாமன், 12 - 10, சூதாடுவதில் வல்லவன், 12-72: துஷ்டசதுஷ்டரில்ஒருவன்,8-13
சங்கன் - கர்ணன் மகன். சோழனு லிறந்தான்; 17 - 132.
சஞ்சத்தகர் - திகத்தராசன் முதலானவர், 11 - 40, அருச்சுனன் இவரைக் கொன்றுன், 12 - 55. 16 - 68.
சஞ்சயன் - திருதராட்டிரனுக்கு நண்பன். போரில் நிகழ்வதை நாடோறும் அந்தத் திருதராட்டிரனிடம் சொல்லி வருபவன், 10 - 47. 15 - 47.
சத்தியகேது - ஒருபாஞ்சால ராசன் 12 - 14.
சத்தியசேனன் - துரியோதனன் பக்கத்தான். கர்ணன் புதல்வனென்பர் ஒரு சாரார், 16 - 65.
சதாயு - சுதாயுவின் தம்பி. அருச்சுனனை யெதிர்த்து இறந்தான், 14 - 37.
சதானீகன் - விராடனுக்குத் தம்பி, 9 - 35. இவன் வீடுமனம்பினுல் இறந்தான், 9 - 38. இப்பெயர் கொண்ட வேறோரரசன் சல்லியனை வென்றுன், 14-191.
சந்தனு-வீடுமன் தந்தை, 3-11.
சயத்திரதன் - துச்சளை கணவன், 14 - 58. சிந்து தேசத்திற்குத் தலைவன், 11-24, வலி, அழகு இவற்றுடன் கூடியவன். சிவபிரானை ஞானத் தெளிவோடு வணங்குபவன், 13.46. சிவபெருமானிடம்கொன்றைமாலை பெற்றவன், 13 - 47. அப்பிரானிடம் தண்டாயுதமும் பெற்றவன், 13 - 48. வீமனும்அபிமனும்இவனிட்ட கொன்றைமாலையைக்கடவாது நின்றனர், 13 - 49, 50. சயத்திரதன் திறம், 13 - 235.
சல்லியன் - மத்திரத்தரசு,1-49; வில் வீரன், 13-73, தேர்ப்பாகில்வல்லான், 17 - 18, கன்னனுக்குப் பாகனுக இசைந்தான், 17-29, கர்ணன் செருக் கடங்கப் பேசுபவன், 17 - 37, 38, 39. இவன் சிறப்பு - 17 - 50. இறுதியில் சல்லியன் சாரத்தியுஞ் செய்ய மறுத்த காரணங்கள், 17-230, 231.
சலசந்தன் - துரியோதனன் பக்கத்தான்; சார்த்தகியை யெதிர்த்து அவன்முன் ஒடுங்கினுன்,14-103.

சலாசந்தன் - துரியோதனன் தம்பி: வீமனாற்கொல்லப்பட்டான்,4-28.

சாந்தகி - கிருஷ்ணனுக்குத் தம்பி முறையான், 5-14: 14-98. திட்டத்துய்மன் தம்பியரிலொருவன், 17-83.

சாதேவன் - சராசந்தன்மகனென்பர். இவன் துரியோதனனுதியர் பக்கத்தான்: மாகதர்கோமான்: சோழனாற் கொல்லப்பட்டான், 17-67. 16-ஆம் (போர்ச்சருக்கத்து 35-இல் கூறிய மகதபூபன் பாண்டவர் பக்கத்தான்: அவனைக்கர்ணன் கொன்றான்.) திருஷ்டத்யும்நன் தம்பி, 17-83.

சாலுவன் - அம்பையை மாதவத்து விடுத்ததீரன், 16-40. கன்னனைக் காத்தான்: (இந்தச்சாலுவன்அம்பையை மாதவத்து விடுத்தவனோ? வேறோ?விளங்கவில்லை;) 17-44.

சிகண்டி - யாகசேனன் குமாரன்; 1-11: 10-32: அம்பையேஇவ்வாறு பிறந்தாள், 1-10: திட்டத்துய்மனிளவல்,9-34: வீடுமனை வென்றவன், 11-18.

சிங்கசேனன் - பாஞ்சால ரெழுவரிலொருவன்; கர்ணனம்பால் மாய்ந்தான்: 17-100.

சித்திரசேனன் - துரியோதனனுக்குத் தம்பி, 14-118.

சித்திரவாகனபாண்டியன் - அசுவத்தாமனம்பினாலிறந்தான், 17-118.

சித்ரகீர்த்தி, சித்ரதேவன் - இவர்கள் திட்டத்துய்மன்தம்பியர், 17-83.

சிவேதன் - சுவேதனைப் பார்க்க.

சுதக்கணன்-துரியோதனன் தம்பியருள்ஒருவன்; வீமனாற் கொல்லப்பட்டான்: 4-28: 17-72. துரியோதனன்பக்கத்தவனான ஒருத்தன், 14-20.

சுதாயு - காம்போசராசன் மகன் என்ப: 14-20: இவன் பன்னவாதைக்கு வருணதேவனிடம்பிறந்தவன்: இவன் நிராயுதன்மேற் படையெறிந்தால் முடிவுறும்வரம் பெற்றவன்: அருச்சுனனைக் கொல்லுமாறு இவன் கதாயுதமெறிந்தானாக, அதனை ஸ்ரீகிருஷ்ணன் தன்மார்பி லேற்க, அப்பிரான் நிராயுதனாதலால், இவன் உயிர் நீங்கினான், 14-31, 35, 36.

சுந்தரன்-துரியோதனன்தம்பி: 8-6.

சுபத்திரை-க்ருஷ்ணன் தங்கை:அருச்சுனன் பார்யை: அபிமனுக்குத் தாய்.

சுபலன்-சகுனியின் தந்தை.

சுருதகீர்த்தி - அருச்சுனனுக்குத் திரௌபதியிடம் பிறந்தவனென்ப, 16-46.

சுவாகு-துன்மருடணன் மகன்:சோழனால் மடிந்தான், 17-132.

சுவாது-துன்முகன் மகன்: சோழனால் மடிந்தான், 17-132.

சுவேதன்-உத்தரன்தமையன்: சிவபெருமானிடத்து வில் முதலியன பெற்றவன். 1-48: விராடபுத்திரன், 1-56: வசுக்களுக்குப் பகையாய் அவர்கள்சாபத்தால் மயிலாயிருந்து பிறகு சாபமோசனம் பெற்றவன், 1-64: வீடுமன் வஞ்சனையால் இவனைக் கொன்றான்: 1-65,66,67,68:இவன்முதல்நாட் போரிற்சேனாபதியாயிருந்தான், 1-73.

சூசி-துரியோதனன் தம்பி, 14-176.

சூரன்-வசுதேவன் தந்தை, 1-14.

செயன்-சகுனி தனயரில் ஒருவன்: இவன் அருச்சுனனம்பால் மாண்டான், 12-69.

சேரன், 16-40.

சேனாவிந்து - துரியோதனன் தம்பி: வீமனாற்கொல்லப்பட்டான்,4-28

சோமகன்-திட்டத்துய்மன் மூதாதையென்ப, 17-53.

சோமதத்தன், 11-18: இவன் பூரிசிரவாவின் தந்தை போலும்: இவனை அருச்சுனன் கொன்றான், 15-4.

தண்டகன், தண்டதரன் - இவர்கள் திட்டத்துய்மன் தம்பியர்,15-83.

தருமபுத்திரன் - சத்தியமேபேசுபவன், 8 - 15: யுதிட்டிரனென்று இவனுக்குப் பெயர், 8-20: வஞ்சனை சிறிதும் இல்லாதவன், 9-11: ஆபத்துக்காலத்தில் க்ருஷ்ணனை நினைப்பவன், 12-54: எல்லாரோடும் நண்பு பூண்டு ஒழுகுபவனுதலால், அஜாதசத்ரு என்று இவனுக்குப் பெயர்: வேள்வி கேள்விமுதலியவற்ருல்மிக்கோன் 13-137: அருச்சுனன் தன்நாவின் இசையாதபுன்சொல்லை மொழிய, இவன் கர்னடையக் கருத, க்ருஷ்ணர்ச்சுனர் பணிந்துஇவனது அக்கருத்தை மாற்றினர், 17-209.

திட்டத்துய்மன் [த்ருஷ்டத்யும்நன்]- துருபதகுமாரன், 2 - 9: கனலாலளிக்கப்பட்டவன், 15-18: இரண்டாம்நாள்முதல்பாண்டவர்பக்கத்துச் சேனைநாதன், 2-2: பாஞ்சாலரிற் சேர்ந்தவன், 9 - 30: துரோணனைக்கொன்றவன், 15-25.

திம்மவாகு - துரியோதனன் தம்பி, 6-30.

திரிகர்த்தராசன்-சஞ்சத்தகரிற் சேர்ந்தவன்: 11-40.

திருதராட்டிரன்-துரியோதனன்தந்தையான இவன் பிறவிக்குருடன், 10-48: 14-104.

திரௌபதி-துரௌபதி: பஞ்சபாண்டவர் மனைவி. இவட்குப் பஞ்சபாண்டவர்க்குப் பிறந்த ஐங்குமாரருண்டு, 14-174.

தீர்க்கநயனன்-துரியோதனன் தம்பி, 8 - 30: தீர்க்கலோசன னென்பானும் இவனே போலும், 14-118.

துச்சளை - துரியோதனன் தங்கை: சயத்திரதன் மனைவி, 14-58.

துச்சனி - துச்சாதனன் புதல்வன், 13-108.

துச்சாதனன், 5-9: துரியோதனனுக்கு அடுத்த தம்பி: துஷ்டசதுஷ்டரில் ஒருவன், 8-13.

துரியோதனன் [சுயோதனன்] - காந்தாரியின் புதல்வன், 17-22: வலம்புரித்தாரான், 1-42: அரவக்கொடியுடையான், 1 - 29: பரதகண்டமுழுதும் ஆள்பவன், 8-4: இராசராச னெனப்படுபவன்: 13 - 92: நீதிநெறி தவறியவன்: திரௌபதியின் துகிலை யுரிவித்தவன்: 8-12: துஷ்ட சதுஷ்டரில் ஒருவன், 8-13: 13 - 136. இவன் பாண்டவர்திறத்துச் செய்த கொடுமைகள், 13 - 243, 244: அருச்சுனன் தன் பக்கத்தாரைப் பெருவாரியாக அழிப்பது கண்டு முறையிட்டுத் துரோணனிடத்திருந்து அரிய கவசமொன்று பெற்றுன், 14-79: இசையினும் நன்றென வசையைப் பெருக வளர்ப்பவன், 14-183: 14-ஆம் நாளில் இரவிலும் போர் புரிந்தான், 14-183. குரவர்சொல்லை மறுத்துப் பார்கொண்டவன், 16-42: இவனுக்குக் காரியம் பெரிதன்று, வீரியமே பெரிது, 17-182.

துருபதன்-சிகண்டி திட்டத்துய்மன் இவர்கட்குத் தந்தை: யாக சேன னென்றும் பெயருண்டு, 11-17: துரியோதனன் மொழிப்படி துரோணனுற் கொலையுண்டான்; 14-215.

துரோணன்-வில்லாசிரியன், 6 - 7: வீடுமனுற் பாராள்க என்றுஅருள் செய்யப் பெற்றவன், 15 - 32: வேதக் கொடியோன்: 10 - 51: கலசத்தினின்று பிறந்தவன், 12-26: 14-76: அருச்சுனனுற்றலைக் கண்டு அஞ்சி முறையிட்ட துரியோதனனுக்குப் பங்கயர்சனன் தொடங்கி வந்த கவசத்தை இவன் கொடுத்தான், 14-66: துரியோதனனுணையால்விராடனையும் துருபதனையும் கொன்றுன், 14-215

துன்மருடணன் - துரியோதனன் தம்பி 13 - 253.

விந்தரன் - பாண்டவர் பக்கத்தான், 1-37: துரியோதனன் தம்பியருள் ஒருவன், 14-117.

விந்தன்-அவந்தியரசைச் சேர்ந்தவனென்ப: 14-20. துரியோதனன் தம்பியருள் ஒருவன், 14-117.

விந்துபூரி, 13-40.

வியாசன்-திருதராட்டிரன் முதலியோர் பிறத்தற்குக் காரணமான இவன் வேதத்தை யொழுங்குபடுத்தினவன், 13-169: 15-42: அபிமந்யு இறந்தபோது பாண்டவர்க்குத் தத்துவமுபதேசிக்கின்றான், 13-170 முதல் 174வரை: நாராயணாஸ்திரத்துக்குப் பாண்டவர்பக்கத்தவர் தப்பி விடவே, பாசுபதம் தொடுக்க அச்சுவத்தாமன் எண்ணியபோது, தோன்றி, அவனுக்கு உபதேசஞ் செய்தான், 15-44.

விராடன் - மச்சர்கோன்: உத்தரனுக்கும் சுவேதனுக்குந்தந்தை: 1-76: 11-16: 12-28: துரோணனாற்கொலையுண்டான்: 14-216.

வீடுமன்-சந்தனுமைந்தன், 3-11: பாகீரதிமைந்தன், 1-9: பனைக்கொடியோன், 1-38: கௌரவர்க்கு முதலா முதல்வன், 9-31: முதற்பத்துநாளில்துரியோதனனுதியர் படைத்தலைவனா யிருந்தான், 2-29: துரியோதனனுக்கு ஆவிதரும் மருந்து ஒருகால் கொடுத்தான், 3-10: தருமத்தையே போகமாகக் கொண்டவன்: 6-4: வசுவின் அமிச மானவன், 7-7: 10-24: பெண்ணாசை யொழித்தவன், 9-32: தேவவிரதனென்று ஒருபெயர் படைத்தவன்: 10-11: தந்தையின்பமெய்தத்தவமேயின்பமாகச்சிந்தைதெளிந்தவன் 10-41: பிதாவின்மேலன்பினால் உலகம் தம்பியர்க்குஉதவியவன், 8-8: இடித்து உறுதி கூறுபவன், 8-12: சிகண்டிமேல் வில் வளையாதவன், 9-33: சிகண்டியெய்த பாணத்தை யுள்ளிட்டு அருச்சுனனெய்ய இவன் நொந்துஅம்பு அணையிற் சாய்ந்தனன், 10-34. முதல் 36 வரை; உத்தராயணம் வரும்வரையோகத்தினால்உயிரை நிறுவினான்: 10-38: வேண்டிய போது உயிரைவிடும்படி தந்தையால் வரம்பெற்றான்; 10-38.

வீமசேனன், வாயு குமாரன்: 1-38: கனகவரைபோல் வருமன்னன், 8-28. சிங்கக் கொடியுடையான், சித்திரசேனன்முதலியயோரை வென்றான்: 3-8: அளகேசனை வென்றவன், 5-8: கதாயுதத்தை வரத்தினாற் பெற்றவன், 6-16: அனுமான் இவன் அண்ணன், 2-14: நூற்றுவரை அமரில்மகுடந் துணிப்பேனென்றுசபதஞ் செய்தான், 9-7: இடிம்பனை வென்றவன், 13-58: துச்சாதனனை வீரவாதங்கூறியவன்: 17-137 to 139. இவன் வேத்தவையிற் செய்த வஞ்சினங்கள், 17. 138: முட்டி யுத்தத்தில் துச்சாதனனையழித்தான், 17-154: அவன் குருதியில் நீராடினான், 17-156.

வீமவாகு - துரியோதனன் தம்பி: வீமனாற் கொல்லப்பட்டான். 14-28.

வீரவாசி - துரியோதனன் தம்பி, 8-6.

வீட்டுமதுரோணகன்ன பருவங்களின்

அரும்பதவகராதி முதலியன.

அகத்தியன் கடலைக் கையிலொடுக்கியது, 13.14
அகத்தியன் தமிழீந்த கதை, 16-41
அகலிகைச் சாபந் தீர்த்த கதை, 4-1
அச்சுதன், 3.17
அஞ்சங்கள்-அச்சுக்கள், 17-90
அதிபாவம், 12-88
அதிரதர் முதலிய நால்வகைத் தேர் வீரர், 13-6
அந்தரம்-இடம், உபாயம், ஆகாயம், 9.22
அம்பையைத் தவத்துவிட்ட கதை, 16.40
அயர்வு-மனக்கவற்சி, 12.63
அயிர்-மணல், 17.155
அரசர் முதலியோர் போர் முதலிய வற்றிற்கு அஞ்சார்: இது, தீவக வணி: 8 - 11
அரசியலறன், 13-46
அரவாபரணனென்பதி லடங்கிய கதை, 2.26
அரியோமெனுமறை, 13-109
அருச்சுனம், 14-43
அருச்சுனன் செய்த சபதம், 13.179 முதல் 184 வரை.
அருச்சுனன் போர்த்திறம், 13.48
அருச்சுனனிளைத்த போது கிருஷ்ணன் சங்கநாதஞ் செய்வானென்பது, 14-97
அருச்சுனனுக்கும் இராமனுக்குஞ் சிலேடை, 10-8
அருணன் பாதமின்றித் தோன்றிய கதை, 1-25
அலங்கல்-ஒளி செய்தல், 1.71
அளகையாளும்மன், 11-4
அற்பகவிலாத தமாருலகு, 9-27
அறம்-தீங்கு, 8-32
அறிஞர் ஆன்மாவை யறிந்தவர், 1.3
அனு-இனம், 11-37
ஆசறை, 14.219
ஆண்டலைப்புள், 3-27
ஆதபன்-சூரியன், 1-25
ஆம்-குறிப்புப் பொருளது, 13.131
ஆயசம் -இரும்பினாலியன்ற ஆயுதம், 16.61
ஆயுள்வேதியர், 16.34
ஆர்-சக்கரத்தினுறுப்பு, 1-45
ஆறுசமயம், 9.1
இடம்பிடித்தல், 8.5: 17.139
இந்திராணி - இந்திரன் என்பதன் பெண்பால், 13.167
இமையோர், 9-1
இரண முகம்-போர் முனை, 1.52
இரணியனை யழித்த கதை, 3.18
இராகுமுடியிழந்த கதை, 1.25
இளந்தலை-இழிவு, 1.59
இளை-மேகம், சுற்றுவேலி: 13-85
ஈமந்தொறுஞ் சென்றுநடமாடு கழலையன், 5.13
ஈரொரு பிறப்பு, 17.1
உகம் - கற்பாந்த காலம், 3.3
உகளித்தல்-கிளர்தல், 1-69
உச்சாசனம்-கொலை, 5-9
உடுபதியுந் தினபதியும் படிவாய்ப் பொருதல், 5-17
உதவி யார்க்கும் புரிதலில் பொய்கைக் கரையும் நிழல்பரப்புந் தேமாங்கனிமரமும் உவமை, 1.16
உந்தி-உருளை, 13-12
உயக்கம்-தளர்ச்சி, 13-191
உருள்-சக்கரம், சக்கரங்கோத்த மரம் 1.45
உற்கை, 2.9: 13.69
உற்பலவாளி, 13.11
உறையிடுதல், 14.47
ஊறு, 13.69
எஞ்சுதல்-இறத்தல், (மங்கலவழக்கு), [1.74
எலி வேந்தர், 8-18
எலுவல், 16-28
எழுதீவு, 12-24
எண்-வளைவு, 5.15
ஏமம்-களிப்பு, 4-3
ஐம்பெரும்பூதத்தா லுடலம் இயன்றன, 1.5

தென்-தேன் என்பதன் விகாரம், 13-253
தென்பாடி-யமபுரம், 8-37
தேர் வருணனை, 12-19
தேரின்மேனின்று களிற்றுவீரனைப் பொரலாகாது, 17-121
தொட்டி-அம்பாரி, 16-51
தோல்-கேடகம், 5-17
தோள்மடுத்து-தோளிலெடுத்து, 6-10
தோளுமார்பு மிடனுறத் தடித்தல், 13-156
நபமுகில்-13-39
நம்பன்-கடவுள், 1-5
நரகனைக் கொன்ற கதை, 14-89
நரன், 1-6
நவகதி, 13, 119: 14-47: 16-28
நவநடை = நவகதி, 17-91
நளின நாயகன்-சூரியன், 4-2
நளினபதி-திருமால், 5-14
நறை-தேன், 1-52
நாகர்-சுவர்க்கலோகத்தார், பாதாள லோகத்தார், 1-36
நாரணன், 1-6
நாவிரண்டு-சில என்னும்பொருட்டு, 11-28
நாழிகை-காலம், 3-7
நிகரன்ன, 6-23
நிகளம்-சங்கிலி, 17-66
நித்திலப் பெட்டி × வேழநுதல், 8-34
நிருபதமுனிவன், 17-13
நிலை நான்கு; ஐந்து என்றலு முண்டு: இவை, விற்பிடித்தெய்வார்க்கு உரியன; 5-11
நுங்குதல்-விழுங்குதல், 17-9
நுணி = நுனி-17-32
பகழி-ஆயுதம், 14-116
பகைகளாறு, 13-94
பங்கெலா மரகதமாம் பவள நிறப் பொருப்பு, 12-142
பங்கேருகத்தோன், 9-35
பஞ்சகதி, 4-30: 13-119
பஞ்சசயனம், 10-2
பஞ்சரம்-அம்பாரி, 3-25
பஞ்சவர்-பாண்டவர், 7-3
பட்டவர்த்தனர், 1-22
படங்கு-கூடாரம், 1-73
படை-வில்லென்ற பொருளில் வந்தது, 3-7
பதாதி-சேனை: சிறப்புப் பெயர் பொதுப் பொருளது, 2-6
பதிட்டிதம், 12-19
பதினான்கு வித்தை, 15-6
பமரம்-வண்டு, 3-27
பரசுராமன் போர், 13-14
பராகம்-தூளி, 2-4
பரிதி-பரிவேடம், சூரியன், 1-46
பரிதியைச் செறி பரிதி × வீமனைச் சூழ்தரு மன்னர், 1-46
பருமம்-யானைக்குச் செய்யும் அலங்காரம், 10-23
பல்வகைக்கதி, 13-119
பவ்வம்-கடல், 2-3
பவமானன் முருக்கு முக்குவடு × வீமனால் சிதைந்த கைதவப்படை மன்னர், 1-48
பவர்-நெருங்குதல், 5-8
பவனசம்-பாம்பு, 16-23
பளகம்-மலை, 2-5
பற்பம்-தாமரை, 9-13
பன்னகம், 13-162
பாகனையமர்வதுமேன்மையென்பது, 17-28
பாசடைப்பதுமம்போல விளங்கு மேனி, 13-154
பாஞ்சசன்னியம், 14-112
பாடி-படைவீடு, 1-73
பாடி நகர், 2-31
பாண்டியன், 7-3
பார்-தேரின்பரப்புப்பலகை, 14-124
பாரதம்-பரதவமிசத்தவருள்நிகழ்ந்த போர், 14-94
பாவி-கொடியான், 1-40
பிதாமகன்-பாட்டன், 1-12
பிறிதினவிற்சி, 14-50
புங்கப்படை, 12-71
புரசை-யானைக்கழுத்திடுகயிறு, 1-18
புரிவு-எண்ணம், 16-16: சாரிகை, 16-26

சில அருந்தொடர்கள்.

படையெடுப்பது அமரிற்சாகாதுய்ந்தனரோடற்கன்றே, 8-10

இருந்தனம் படைத்தமாக்க ளின்பமு மறனு மஞ்சார்...அரசருமடு போரஞ்சார், 8 - 11

வடமீன்போல்வாடன்னிருகண்ணீரின்னமிவைகொலோ தருவதம்மா, 8 - 12

உரககன்னிமைந்தன் எண்ணிலாயிரமுருவமாகி இருபுடையினும் போர் வேந்த ரெலிகள்போலேங்கியுருண்டுபோக வெம்பூசல் செய்தான், 8 - 18

தந்தம்பறியுண் டெதிர்சீறிய தந்தியென்ன, 8 - 26

மற்றோர்பிறப்பிற்றெரியாது இப்பிறப்பின் முடிக்கமாட்டேமால், 11-38

அனேகமாயிரம் பேர்படக் கவந்தமொன்றாடும்...அனேக நாழிகை யருச்சுனன்சிலைமணி யார்த்தது அக்களம்பட்ட, அனேகமாயிரம்விருதரையளவறிந்தார்கொலோ வுரைக்கிற்பார், 11 - 48

கெடுமோகருடனுரகர்க்குக் கிரிவெஞ்சரபந் தனையரிகள் அடுமோ சக்ரபாணியுட னமருந்துவரோ வசுரேசர்: வீமன்பெருடலிற் பகைவர்பகழி பருப்பதஞ்சேர்மழை போற் பாறின, 12 - 75

வல்லானெறிந்த பம்பரம், 12 - 76

மறையந்தணர்க்கென்னகட்டாண்மையுண்டு, 12 - 84

நன்றல்லவீரத்திலோரஞ்சொலுவது, 12 - 86

மாவிந்தைகிரிகன்னிகரி: தன்மைக்கு நிலையான தருமற்கு நிகர்யார் தனித்தெண்ண, 12 - 90

முனிவருடன் பொரவல்லவர் யார்புவிமேல், 13 - 14

விபினமிசைத் தீயொடனிலமும் விரவுமியல்பு, 13 - 39

சுடரெதிருலவு விட்டில், 13 - 87

அவனிதலத்து விதியைவெல்லும் வகையார்வல்லார், 13-131

அன்னநெடுந்துவசனிவற்காயுமிகக் கொடுத்திலனே யந்தோவந்தோ, 13 - 133

எட்டானைத்தம்பமுடன் சயத்தம்பம் நாட்டியபேரிறைவன், 13 - 135

உனைக்கொண்டே தெவ்வரை வென்றுலகாளச் சிந்தித்தேன், 13 - 138

வீதலும் பிழைத்தருனும் விதிவழியன்றி நம்மா, லாதலுமழிவு முண்டோ—13 - 151

என்னுயிர்க்கிறுதியுண்டோ, 13 - 162

தேற்றினுமகப்பரிவு தேறலரிதன்றே, 13 - 174

புத்திரரிலாவிடர் பொறுத்திடலுமாமோ, 13 - 175

பணிவுறு புண்ணிய பாவமுற்றுவ துணிவுறத் தெரியுமோ, 13 - 249

உரைத்தவா செயலப்பதுமாசனன்றனக்கு மாகுமோ, 13.250

சரற்புயலானது தனிதஞ்செய்யுமோ, 13 - 254

ஐவ்கைவியூகம் அணிகளைந்தைந்தாலாகியது, 14 - 7
இரவியைக்கண்டமின்மினிக்குலம், 14 - 11
சேறிலாதசெறுவில்வித்துசெந்நெல், 14 - 29
காணுதவிடத் தாண்மையுறக் கூறுவர் கண்டால்...இமைப் போரெதிர் நில்லார், 14 - 59
துணிவுற்றனே முதலே இனி, யஞ்சியினைத்தெண்ணிடு மெண்ணந் தகவன்ருல், 14 - 61
எவரோ மலையோடும் பொருதிருதோள் வலிபெற்ருர், 14 - 63
அதிகம் பகை தமரோடுற லாகாது, 14 - 64
மால்வரைப் புயலினுண்டுளி விழுந்தபரிசு, 14 - 84
பிறப்பிலே துவக்குளோர் குணங்களுங்கொள்ளாரோ,14-135
சீரறிந்தவர் செய்ந்நன் றிகொல்வரோ, 14 - 145
பகலுடன்காரிருட் பகைத்தாற்பலிக்குமோ, 14 - 177
கருமமு முலகத்தியற்கையுமுணர்ந்தோர் கலங்குதலுறுவரோ கலங்கார், 14 - 214
அரியெதிர்கரி, 14 - 219
துருவனு முவமைசாலாத் துரோணன், 15 - 12
பொய்யினு லாள்வ திந்தப் புவிகொலோ, 15 - 21
விபத்தினை மீட்குமாகிற் பொய்ம்மையும் மெய்ம்மை போலப் புண்ணியம் பயக்கும், 15 - 24
பெருநெருப்புக் கீரமில்லை, 15 - 25
யாவும் வினைசெய்திரங்குவது திது, 15 - 49
கற்படு புண்ணில் தடிபடு கணக்கிற்ருக, 16 - 85
பெரியோர்கடிருவுள்ளம் பேதித்தா லெப்பொருளும்பேதியாதோ, 16-171
புல்வாய்க் கென்றும் வல்லியமாப் பணித்ததொழில் புரியி, னன்ரு மத்திரத்தான் கன்னனுக்கு வலவனுவான், 17 - 26
எக்கலையும் வல்லார்க்கன்றி வாசிநெடுந் தேரூரவருமோ, 17-29
எலியுடைப்பூசல் பூனைக்கெதிர்படி னென்படாதோ, 17 - 41
தந்தையை முதுகுகண்டோன் தனயனுக்கு இளைக்குமோ, 17 - 110
கொற்கையானிறந்தபின் கோழியானெனுஞ் சொற்கையாமனுகுலத்தோன்றல், 17 - 120.
போர்செயப்பார்ப்பனமாக்களும் பாரில் வல்லரோ, 17 - 122
கன்மேன்மேகத்துளியென்னஉதறி, 17 - 143
கிளையிலாவரசியற்கை நன்றெனக்கேட்டறிவ துண்டோ 17 - 180
குரவோர்களை நீ யெனினும் கொலையிற்கொடிதென்று கூறுவர், 17 - 207

கன்னபருவச்

செய்யுள் முதற்குறிப்பகராதி

கன்னபருவம் — பிழைத்திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	8	விடட	விட்ட
16	14	திரைகள்	திசைகள்
18	7	குரகர்தம்	குரகதம்
25	14	வுயிர்த்த	வுயர்த்த
37	28	போலுந்திரு	போலுங்கரு
59	30	மழுங்கி	மயங்கி
69	16	பிள்ளை	பிள்ளை
72	31	வளவில்—,	வளவில்,—
73	9	இருவரும்,—	இருவரும்—,
76	32	போகட—,	போகட,—
90	16	குதிரை	குதிரை
174	5	மகிழ்ந்துவேண்டிய	மகிழ்ந்துநீவேண்டிய

பக்கம்-32, வரி 27-இல், 'செம்புனல் யாறு-' என்றதன் பின், "சிவந்த இரத்தவெள்ளமாகிய நதிக்கு, இருபக்கம்உம் -" எனக் கூட்டிக்கொள்ளவும்.

மற்றும் பிழைகள் காணப்படினும் திருத்திக் கொள்ளவும்.

இதனடியிற் குறித்துள்ள புத்தகங்கள் வை. மு. நரசிம்மன், (வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர் குமாரர்) வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர் கம்பெனி, 17, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5 என்ற விலாசத்திற் கிடைக்கும்:—

வை. மு. கோ. பதிப்புகள்.

கம்பராமாயணம்:—

பாலகாண்டம்	**உரையுடன்**	...	9—00
அயோத்தியா காண்டம்	,,	...	9—00
ஆரணிய காண்டம்	,,	...	9—00
கிட்கிந்தா காண்டம்	,,	...	9—00
சுந்தர காண்டம்	,,	...	9—00
யுத்த காண்டம் 1-வது வால்யூம்	,,	...	9—00
,, 2-வது ,,	,,	...	10—00
உத்தர காண்டம் ,,	,,	...	(அச்சில்)

வில்லிபாரதம் :—

ஆதிபருவம்	**உரையுடன்**	...	4—50
சபாபருவம்	,,	...	4—50
ஆரணிய பருவம்	,,	...	4—50
விராட பருவம்	,,	...	2—50
உத்தியோக பருவம்	,,	...	4—50
வீட்டும துரோண கன்ன பருவங்கள்	,,	...	9—00
சல்லிய சௌப்திக பருவங்கள்	,,	...	3—00
கன்ன பருவம் மட்டும்	,,	...	3—00

திருக்குறள் :—

மூன்றுபாலும் (புதிய பதிப்பு)	....	10—00
அறத்துப்பால் பரிமேலழகருரையுடனும் அதற்குக் குறிப்புரையுடனும்	...	3—00
பொருட்பாலும் காமத்துப்பாலும் ,,	...	6—00

(பரிமேலழகருரைக்கு எழுதியுள்ள குறிப்புரைகள் கற்போர்க்குப் பரிமேலழகரின் உரைக்கருத்துக்களை ஐயந் திரிபுஅற விளக்குவதோடு அவர்களைச் சிறந்த புலவராக்கும்.)

பத்துப்பாட்டு - ஆராய்ச்சியுரையுடன் ... 9—00

(இவ்வுரை நச்சினார்க்கினியருரை நயத்தைத் தெளிவுறுத்துவதுடன் கற்போர்க்கு ஆராய்ச்சித் திறனையும் ஊக்குவிக்கும்.)

பத்துப்பாட்டில் தனியே கிடைக்கும் பகுதிகள் :—

திருமுருகாற்றுப்படை	ஆராய்ச்சியுரையுடன்	...	0—62
பட்டினப்பாலை	,,	...	0—75
பொருநராற்றுப்படை	,,	...	0—75

தண்டியலங்காரம் :—

தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் முழுவதும்) மூலம், பழைய வுரை, குறிப்புரையுடன்		...	3—50

அஷ்டப்ரபந்தம் - உரையுடன்

திருவரங்கத்துமாலை, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, ஸ்ரீரங்கநாயகரூசல் முதலியன (ஒரே பகுதியில்)			6—00
திருவரங்கக்கலம்பகம்	உரையுடன்	...	1—50
திருவரங்கத்தந்தாதி	,,	...	1—00
திருவேங்கடத்தந்தாதி	,,	...	1—25
திருவேங்கடமாலை	,,	...	1—00

கம்பர் இயற்றிய புத்தகங்கள் :—

சடகோபரந்தாதி	உரையுடன்	...	2—00
சரசுவதி யந்தாதி	,,	...	0—50
ஏரெழுபது	,,	...	1—00
சிலையெழுபது	,,	...	0—75

இதர புத்தகங்கள் :—

திருப்பாவை தமிழ்நடை	உரையுடன்	...	0—50
நன்னூற்காண்டிகையுரை	,,	...	3—50
மதுரைக்கலம்பகம்	,,	...	1—50
அழகர்கலம்பகம்	,,	...	0—62
ஆழ்வார்கள் சரித்திரம், பட்டர் வைபவம், பிள்ளைலோகாசாரியர் வைபவம்		...	2—00
சந்திராபீடசரிதம்		...	0—37

சிலப்பதிகாரம் :—

காட்சிக்காதை	உரையுடன்	...	0—60
நாடுகாண்காதை	,,	...	0—50

மணிமேகலை :—

பாத்திரம்பெற்ற காதை	உரையுடன்	...	0—25
மலர்வனம்புக்க காதை	,,	...	0—25

—: o :—